THE KUPPUSWAMY SASTRI RESEARCH INSTITUTE,
64, R H, ROAD MADRAS-4
3வ2006

கம்பராமாயணம்

மூன்றுவது

ஆரணிய காண்டம்

திருவல்லிக் கேணி

வை. மு. சடகோபராமானுஜாசார்யரும்

சே. கிருஷ்ணமாசார்யரும்

இயற்றிய

உரையுடன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரால்

சென்னை

ஆர். ஜி. அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது

விலை ரூ. 4—0—0

1936.

இப் புத்தகத்தில் அடங்கியவை:—

ஆரணிய காண்டம்

	முகவுரை	iii
	பிழைத் திருத்தம்	vii
1.	விராதன் வதைப் படலம்	2
2.	சரபங்கன்பிறப்பு நீங்குபடலம்	48
3.	அகத்தியப் படலம்	75
4.	சடாயுகாண் படலம்	108
5.	சூர்ப்பணகைப் படலம்	134
6.	கரன்வதைப் படலம்	242
7.	மாரீசன்வதைப் படலம்	349
8.	சடாயு வுயிர்நீத்த படலம்	531
9.	அயோமுகிப் படலம்	672
10.	கவந்தப் படலம்	728
11.	சவரிபிறப்பு நீங்குபடலம்	762

முகவுரை

உலகில் ஒருபொருளுக்குவற்றமுண்டாவது, அப்பொருளினிடத்துள்ள குணங்கண்டாகும்: மலருக்கும் மணிக்கும் மதிப்புண்டாவது, மணம் ஒளி முதலிய குணங் கண்டன்றே? ஆகவே, குணத்தினால்தான் மதிப்பு உலகி லுண்டாவதுஎன்பதைத் திண்ணமாய்க்கூறலாமன்றே? அங்ஙனமே ஒருகாவி யத்துக்கு மதிப்புண்டாவது கவியின்திறமையினால் என்றாலும், உத்தமரீயக வேப்பெற்றிருப்பது பொன்மலர்ஸாற்றமுடையதுபோல் யாவராலும் அந்தக் காப்பியம் போற்றிச் சிரமேற்கொள்வதற்குக் காரணமாகும்.

இவ்வுண்மையைக் கண்டறிந்த கல்வியிற்பெரியராகிய கம்பர் தமதுவாக்குப் பயன்பெறவேணுமென்ற கருத்தினாலேயே ஸ்ரீராமபிரானைக் கதாநாயகனாகப்பெற்ற இந்த இராமாயணகாப்பியத்தைப் பாடினார். வடமொழியில் மகாகவியாகியஒருவர் "பூர்வர்பலரும்இராமசரிதத்தைப்பாடியுள்ளாரென்று இந்த ராமசரிதையை விட்டிடுவோமென்றால், இராமபிரானைப்போல் இவ்வளவு குணங்களோடு உலகில் துலங்கியவர் வேறுயாவர்? இங்ஙனுள்ளவனைக் கதாநாயகனாகக் கொள்ளாவிட்டால்,கவிக்குவேண்டிய குணகவுரவத்தைக்கொண்டு ஆழ்ந்து இனித்துவிளங்குகின்ற சப்தபிரமத்தைக் கொண்ட கவிஞர் தம்வாக்கைஎங்ஙன்உதவுவார்கள்?"என்று இந்தஇராமபிரானையல்லது பாடத்தக்கார் வேறெவருமில்லையெனக் கூறியுள்ளனர்: நஞ்சடகோபரும் "கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்று அருளிச்செய்தனர்.

ஒருசாரார் தமதுசமயத்திலுள்ள ஊற்றத்தினால் வேகசரிதையைப்பழித்துக்கூறியதையொப்ப இராமசரிதையையும் தாழ்த்திக்கூறினரென்றாலும், அங்ஙன்கூறியதற்குக் காரணம் அவர்களுடையமதாபிமானமேயன்றி, இராமபிரானிடத்துள்ள குணங்களிற் குறைகண்டன்று என்பது, வெள்ளிடைமலையாகும்.

இவ்வாறுகுணபூர்த்தியுள்ள இராமபிரானைக் கதாநாயகனாகக்கொண்ட இந்தக்காப்பியத்தில் இராமபிரானைப் பரம்பொருளாகவைத்துப் பேசியவை தவிர, மனிதனாகவேகொண்டு பேசிய இடங்களில் பலகுணங்கட்கும் உரிய நிலையாகப்பேசியவற்றுள் முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை இரண்டு: அவைவருமாறு:தசரதசக்கரவர்த்தி தனக்குமூப்புமேலிட்டதைக் கண்டு இராச்சியத்தில் இராமபிரானுக்குப் பட்டங்கட்டலாமென்றுகருதிச் சபைகூட்டித் தன்கருத்தைத் தெரிவித்தானாக, அவையோர், இராமபிரான் தலைவனாகவருவதிற்பெருமகிழ்வுகாட்டி "அத்தன்று" என, சக்கரவர்த்தி "இப்பொம்மல்வாசகம் உகவையின் மொழிந்ததோ? உள்ளகோக்கியோ? தகவெனநினைந்தது எத்தன்மையால்?"என்று இவ்வகைவினவ,வேத்தவையோர்"தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர், ஞானமுநல்லவர்ப் பேணுநன்மையும், மானவ! எவையு நின்மகற்குவகுமால், ஈண்மில் செல்வம் வந்தியைகவென்னவே," "பூனைய வாநெடுங் கரப்பருமையானையாய்!...மன்னுயிர்க்கு, எவையவாறன்பின னிராம

னீண்டவற்கு; அனையவாறன்பினவவையும்''என்றுமறுமொழிகூறியதுஒன்று; மற்றொன்று, சூர்ப்பணகைவாசகம்: அதுவருமாறு:—பஞ்சவடியில் சூர்ப்பணகை இராமலட்சுமணரைக் கண்டுகாதலித்துத் தன்கருத்துநிறைவுறுதற்குத் தடை சீதையேயென்றுகருதி, அன்னஞ்சேக் கவர்ந்துசெல்லமுயல, அப்போது இலக்குமணனுல் அன்னள் அங்கபங்கஞ்செய்யப்பெற்றுக் கதறிக்கொண்டு சென்று ஜநஸ்தாநத்தில் தன்னுடைய பாதுகாவலின்பொருட்டுப் பெருஞ் சேனையோடுஇருந்த கரன்காலில் வீழ்ந்து செய்திதெரிவிக்கையில் இராம லட்சுமணரைப்பற்றி ''இருவர் மானிடர் தாபதரேந்திய, வரிவில்வாட்கையர் மன்மதன்மேனியர், தருமதீரர் தயரதன்காதலர்,செருவினேருநிருதரைத்தேடு வார்,''''ஒன்றுநோக்கலர், வென்றிவேற்கை நிருதரை வேரறக்,கொன்று நீக்கு துமென்றுணர்கொள்கையார்''என்றும், கரவதத்தின்பிறகு கதறிக்கொண்டு இலங்கைபுக்கு இராவணன் பாதங்களில்வீழ்ந்து செய்திதெரிவிக்கையில்''கா னிடையடைந்து புவிகாவல்புரிகின்றூர், மீனுடைநெடுங்கொடியிலே னனே யர் மேல்சீழ், ஊனுடையுடம்புடைமையோ ருவமையொவ்வா, மானிடர்,'' ''மன்மதனேயொப்பர் மணிமேனி வடமேரு,தன்னெழிலழிப்பர் திரடோளின் வலிதன்னுல்,...உலகேழின், நன்மதனழிப்பரொரிமைப்பி னனிவில்லான்,'' ''வந்தனே முனித்தலேவர்பாலுடையர் வானத், திந்துவின்முகத்த றெறிநீரிலை முகாளக், கந்தமலரைப் பொருவுகண்ணர் கழல்கையர், அந்தமிறவத்தொழில ராரவரை யொப்பர்,'' ''வற்கலேயர் வார்கழலர் மார்பினணிநூலர்,விற்கலேயர் வேதமுறைநாவர்தளிர்மெய்யர்,'' ''மாரருளரே யிருவரோருலகின்வாழ்வர், வீரருளரேயவரின் வில்லதனின் வல்லார், ஆரொருவரன்னவரை யொப்பவர் களேய, ஓரொருவரே யிறைவர் மூவரையுமொப்பார்'' என்றும் வருவது. இவ்வண், நண்பினரும் மாற்றரும் பெருமைபுகழ்ந்து பேசுமாறு ஒருகதாநாய கன் உள்ளானென்றல், அந்தச்சரிதை அறம்பொருளின்பம்வீடு என்னும் நாற் பொருளையும் பயக்கத்தக்கதென்றல், அந்தச்சரிதையினும் அந்தக்கதாநாயக னினும் மேம்பட்டன உண்டோ? இல்லவேயில்லையன்றே?

இத்தகைய சிறப்புடன் கதாநாயகனேப் படைத்துள்ளதும் வேதோபப் பிரஹ்மணமான இதிஹாஸத்துட் சிறந்ததுமான இப்பெருங்காப்பியம், அடைக்கலமடைந்தோரைப் பாதுகாப்பவன் திருமா லென்றபொருளே ஆங் காங்குத் தெரிவிக்கின்ற தென்பர்: அதற்குவப்ப, ஆரணியகாண்டத்தின் தொடக்கத்தில் அரக்கரால்நலிவுண்ட தண்டகாரணியவாசிகளான இருடி யர் ஸ்ரீராமபிரான் அங்குவந்துள்ளதையறிந்து அப்பிராளே யுபசரித்து அரக்க ரால் தமக்குநேர்ந்த இடரைத் தெரிவித்து, 'அருளுடைவீர நின்னபயம் யாம்' என்று அபயம் வேண்ட, ஸ்ரீராமபிரானும் ''ஆரதத்தினுடன்றிகின்றூர் அவர் வேரறுப்பன்: வெருவன்மின்நீர்'' என்று அபயமளித்திருத்தல் காண்க. (இப்பொருள் இவ்விராமாயணத்தில் பாலகாண்டந்தொடங்கி யுத்தகாண்ட மீறுகவுள்ள எல்லாக்காண்டங்களிலும் கூறப்பட்டுள்ளதென்பது, யுத்த காண்ட முகவுரையில் விரித்துக் காட்டப்படும்.)

இனி, இக்காண்டத்திற் கூறப்படுகின்ற பிராட்டியினதுபிரிவு தேவர் களின் சிறையை விடுவித்தற்குக் காரணமாவதுபோலவே தன்கொழுனுக்கு ஏற்ப இவள் அபயமளித்தலேக் கொண்டுள்ளதுமாகும்: இவ்வுண்மையை, ''பிராட்டி முற்படப்பிரிந்தது, தன்னுடையக்ருபையை வெளியிடுகைக்காக'' என்ற ஸ்ரீவசனபூஷண வாக்கியமும், ''ஸர்வேஸ்வரனுடைய தத்தத்அவதார

ஸஜாதீயமான [1]விக்ரஹபரிக்ரஹம் பண்ணிவந் தவதரிக்குமவளாகையாலே... அவன்சக்ரவர்த்தித்திருமகனுனவாறே [2]தத்தனுரூபமாகத் தானும் ஜநகராஜன் திருமகளானபிராட்டி தண்டகாரணியத்திலே யெழுந்தருளிபிருக்கச் செய்தே ராவணன் பிரித்தா னென்று ஒருவ்யாஜத்தாலே [3]ப்ரதமம் பெருமாளைப் பிரிந்து லங்கைக்கு எழுந்தருளிற்று - 'தேவ்யாகாருண்யரூபயா' என்று [4]தத் குணஸாரத்வத்தாலே காருண்யத்தாலுகச் சொல்லும்படியான பரமக்ருபை யைப் ப்ரகாரீப்பிக்கைக்காக வென்கை:எங்ஙனேயென்னில்:--தேவஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருக்கையாலும், அவ்விருப்பிலே தன்னே அல்லும் பகலும் [5]தர்ஜநபர்த்ஸநம்பண்ணி யருவித் தின்ற க்ரூராகூ விகள் ராவணன்[6]பராஜிதனுகவும் பெருமாள் [7]விஜயியாகவும் த்ரிஜடை ஸ்வப் நம் கண்டத்தாலே [8]பீதபீதைகளாய் நடுங்குகிற தசையிலே, 'பவேயம் ஸரணம்ஹிவ: [உங்கட்குச் சரணமாவேன்] என்று—நீங்கள் நோவுபடும் ஸமயத்துக்கு நான் இருந்தேனே! நீங்கள் அஞ்சவேண்டா' என்று அபயப்ரதானம் பண்ணுகையாலும், அது [9]உக்திமாத்திரமாய்ப்போகாமே ராவணவதாநந்தரம் தனக்கு ஸோபனஞ் சொல்லவந்த திருவடி [அனுமான்] 'இவர்களே [ராகூவிகளே]ச் சித்ரவதம்பண்ணும்படி காட்டித்தரவேணும்' என்ன, அவனேடே [அந்தஅனுமானுடனே] மன்றுடி...அவர்கள்குற்றத்தைக் குணமாக உபபாதித்தும்,...பிறர்நோவுகண்டு பொறுத்திருக்கத் தக்க நெஞ்சுரம் தனக்கு இல்லாமையைமுன்னிட்டு அவனுக்கும் இரங்கியல்லது நிற்கவொண்ணுதபடி உபதேசித்தும், இப்படி ஒருநிலைநின்று தான் [10]அடியிற்பண்ணின ப்ரதிஜ்ஞாநுகுணமாக [11]ஆர்த்ராபராதைகளே ரட்சிக்கையாலும் தன்னுடையக்ரு பையைவெளியிட்டாளிறே" என்ற அதன் வ்யாக்யாநமும் தெரிவிக்கும்.

இங்ஙன் இராமாயணத்திற் பிரதிபாதிக்கப்படுகின்ற தலைமைப்பொருளான சரணாகதபரித்ராணம் [அடைக்கலமடைந்தோரைப்பாதுகாத்தல்]என்ற குணம் கதாநாயகனிடம்இருப்பதை வெளிப்படையாக முதன்முதலிற் காட்டுவதாகும், இவ்வாரணியகாண்டம்.

இங்ஙனுள்ள இக்காண்டத்திற்கு உரை, எனது ஆசிரியன்மாரும் [6]உரையெழுதுவதிற் பெரும்பெயர்பெற்று என்றும் புகழ்மேம்பிஞலுலகியிர்த்திருப்ப

---

[1]விக்ரஹபரிக்ரஹம்-திருமேனியைக்கொள்கை. [2]தத்தனுரூபமாக-அதற்கு ஏற்ப. [3]ப்ரதமம் - முதலில். [4] 'தத்குணஸாரத்வாத் தத்வ்யபதேஸ:' என்பது ப்ரஹ்மஸூத்ரம். அந்தக்குணமே முக்கியாமிசமாய் மிக்கிருத்தலால் அந்தக் குணமாகவேகூறுவது: இதற்கு உதாரணம் - ஆன்மா உணர்வையே முக்கியாமிசமாய் மிக்குக்கொண்டிருத்தலால் அந்தஆன்மாவை 'உணர்வு' என்றே கூறுவதுபோல்வது. [5]தர்ஜநபர்த்ஸநம் - அதட்டுதலும் மருட்டுதலும். [6]பராஜிதன் - வெல்லப்பட்டவன். [7]விஜயி - வென்றவன். [8]பீதபீதைகள் - மிகவும்அஞ்சினவர்கள். [9]உக்திமாத்ரம் - (அநுஷ்டானத்துக்குவராமல்) பேச்சளவோடுநிற்பது. [10]அடியிற்பண்ணின ப்ரதிஜ்ஞாநுகுணம் - த்ரிஜடையின் ஸ்வப்நத்தைக்கேட்டு ராகூவிகள் மிகவும் அஞ்சிநடுங்கியபோது தன்னே மிகவும் கலிகிற அந்தராகூவிகளிடத்துக் கருணைகொண்டு அவர்களைநோக்கி 'உங்கட்குவதேனும் தீங்குநேருவதாகவற்படின் உங்கட்கு நான் ரட்சகையாவேன்'என்று பொருள்கொண்ட'பவேயம்ஸரணம்ஹிவ:'என்றபிரதிஜ்ஞையைமுந்நிச்செய்துகொடுத்ததற்குஏற்ப. [11]ஆர்த்ராபராதைகள்-(தங்கட்குத்தீங்குநேர்தற்கு) முந்திய க்ஷணம்வரையில் தன்நிலைத்துக் குற்றம்புரிந்தவர்கள்.

வர்களுமாகிய காலஞ்சென்ற ஸ்ரீ.உ.வே. வை. மு. கடகோபராமானுஜாசார்ய ஸ்வாமீ ஸ்ரீ. உ. வே. சே. கிருஷ்ணமாசார்யஸ்வாமி என்பவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.

ஆயினும், அடியேன் பாலகாண்டம் அயோத்தியாகாண்டம் சுந்தரகாண்டம் யுத்தகாண்டம்என்ற இந்தக்காண்டங்களைப்போலவே இந்தக்காண்டத்தையும் பதிப்பிக்க எண்ணமுடையனானேன். அதற்குஏற்பப் பலபிரதிகளைக் கொண்டு இந்தகாண்டத்தையும் ஒப்புநோக்கிக் கூடியவரையிற் சிறந்தபாடத்தைக் கைக்கொண்டு அதற்குத்தக உரைபையும் ஆங்காங்குத்திருத்தியமைத்துள்ளேன். அன்றியும், அரும்பதவகராதி செய்யுண்முதற்குறிப்பகராதி என்பவற்றையும் இறுதியிற் சேர்த்துள்ளேன். இவ்வுரையில் இக்காண்டத்தாற் கற்போர் அறியலாகும்நீதிகள் ஆங்காங்குக் காட்டப்பட்டுள்ளன. அன்றியும், பதினெண்கீழ்க்கணக்கு எட்டுத்தொகை பத்துப்பாட்டுமுதலிய பண்டைக்காலநூல்களின் சொற்பொருள்களின் கருத்துக்கள் வந்துள்ள ஒற்றுமைப்பகுதிமுதலியனவும் ஆங்காங்குக் காட்டப்பட்டுள்ளன. ஸ்ரீவான்மீகமுனிவரியற்றிய இராமாயணக்கதைப்போக்குக்கும் இந்நூலிற்கூறியகதைப்போக்குக்கும் வேற்றுமையுள்ளவிடத்து அவையும் ஆங்காங்குக்காட்டப்பட்டுள்ளன. இந்தப்பதிப்பில் சீர்பிரித்தசெய்யுளும் பதவுரையும் அமைந்திருப்பதோடு பாடலிற்கூறியுள்ள விடயம் விளங்குமாறு எல்லாச்செய்யுட்குந் தலைப்புகருத்து பதசாரம் தொனிப்பொருள் ஆங்காங்குக்கூறற்குரிய இலக்கணக்குறிப்புக்கள் அணிகள் புராணகதைகள் பிரதிபேதங்கள் யாப்பிலக்கணம் என்பனவும் காட்டப்பட்டுள்ளன.

இந்தப்பதிப்பிற் பலவகையான திருத்தமான பாடங்களும் இதுவரையில் அச்சில் வெளிவராத பாடல்களும் வெளிவந்துள்ளன: இவ்வன்வருதற்குக் காரணம் - எனது உத்தியோகசாலையில் தலைவராயுள்ள திருவாளர் S. வையாபுரிப்பிள்ளை B. A, B. L என்பவர். அவர்கள் தாம் பல ஏட்டுப்பிரதிகளை யொப்புநோக்கிப் பல பாடபேதங்களைக்குறித்துவைத்திருந்த தமது புத்தகத்தைத் தந்ததோடு சிலஏட்டுப்பிரதிகளையும் தந்தனர்: ஆகையால், இவர்கள்செய்த உதவிக்காக யானும் இப்பதிப்பாற் பயனை நுகர்வோரும் இவர்கள்திறத்து நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இப்பதிப்பில் அடியேனுடைய திரிபுணர்ச்சி சோர்வு அறியாமை முதலியவற்றுற் காணப்படுங் குற்றங்குறைகளை விவேகிகள் பொறுப்பதன்றித் தாம் கண்ட அக்குறைவுகளையேனும் அடியேனுக்குப்புலப்படாத அரியபெரிய விஷயங்களையேனும் எடுத்துத் தெரிவிப்பராயின், அப்பெரியாரிடத்துப் பெருமகிழ்வோடு நன்றிபாராட்டி அவ்விஷயங்களைச் சமயம்வாய்க்கும்போது தமிழுலகிற்குப் பயன்படுமாறுஞ் செய்வேன்.

இந்த ஆரணியகாண்டத்தைப் பதிப்பிக்குமாறு விருப்பையுண்டாக்கித் தோன்றுத்துணையாய்நின்று அவ்விருப்பை நிறைவேறுமாறு திருவருள் புரிந்த ஸ்ரீராமபிரானது திருவடித்தாமரைகளை என்றும் கருத்திற்கொண்டு வணங்குவேன்.

திருவல்லிக்கேணி.
8-2-36.

இங்ஙனம்
வை - மு கோபாலக்கிருஷ்ணன்.

பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
10	30	தனது	விராதனது
31	16	பிரமதேவனது உருவமாகி,	விரிஞ்சனென்று ஒருபெயர் வழங்கும்படி,
55	34	இனி,	இனி, விளம்புவென்பதை
59	9	மத்த	மதத்
65	34	திறத்துலகந்	[5]திறத்துலகந்
76	7	குழலுக்கு	சூழலுக்கு
78	18	[2]வெகுளியை[1]	வெகுளியை[2]
,,	19	ராண்டுறை	ராண்[3]டுறை
,,	35	மையின்,	யின்,
100	7	[1]ராமூலவை	ரா[1]மூலவை
114	24	ஈற்றலே.	ஈற்றசை
117	33	சாடாயு	சடாயு
148	3	மன்மதன்,	அந்தமன்மதன்,
158	21	பார்த்தப்	பார்த்த
168	36	,அழகியஇவ்வடிவும்,	(அழகியஇவ்வடிவம்),
177	6, 7	தெ[4]ன்பால் வ	[4]தென்பா ல
179	3	விரும்பிற்	விருப்பிற்
186	15	வெளிப்பட்ட	வெளிப்பட
195	16	கூறுகிற	கூவுகிற
200	24	காலாக்கினி	காமாக்கினி
212	19	"புவி	"புலி
218	19	கடவேளே	[4]கடவேளே
224	10	[1]கெவண்டனை	[1]வெகுண்டனை
227	10	அறுப்பட்	அறுபட்
236	36	லரம்:	லாம்:
238	6	கிளை[6]	[6]கிளை
,,	33	யென்றுருங்	யென்றுணருங்
243	22	வீற்றிருந்து	வீற்றிருந்த
251	14	கொன்டு	கொண்டு
,,	15	தொர்டந்து	தொடர்ந்து
254	8	னீட்ட	னீடட
257	13	நான்கு...வருணனை	
258	34	சூரியனுவமையும்,	சூரியனும்,
259	•14	நிலயிற்	நிலையில்
269	10	மனமுடையவர்கள்	மனமுமுடையவர்கள்
270	9	துணுக்கும்	துணுக்கம்
286	12	பிறங்கியது	பிறங்கினது
299	35	முன்னிய	முன்னைய
311	12	[1]அருதற்...யறுத்து	அஞ்சுதற்...யறுத்த
352	5	பத்தொரு	பது
371	29	வாயில்	வாயிலில்
395	21	நாஸீ	நாவிகா
412	30	வீசுக்கிற	வீசுகிற

416	32	புடைய,	புடைய
428	4	பேரணி.	பேறணி.
431	9	முண் [2]	[2]முன்
432	4	என்பதும்	என் றுகருதினமையும்
435	31	விழும்	-நிலாஎன்பதை
454	16	பண்டித	பண்படி
455	19	தால்,	தாய்,
473	21	வந்த	தந்த
480	34	றென்றல்	னென்றல் [ருதல்,—
,,	38	கொண்டு,	கொண்டு, மலர்தான் - பொ
487	1	எஅள	சஅள
492	35	கட்டைத்	சட்டை
,,	38	ணுருவமன்றே.	பெண்ணுருவம்.
494	39	[1]இமைப்பினின்	இமைப்பின்.
495	18	அராவணன்	இராவணன்
500	26	என்றும்	என்று
502	33	ரேவிய	[4]ரேவிய
526	2	யாயு [3]	[3]யாயு
551	10	வழகுச்	வழகு
,,	20	ணது	ணனது
566	1	சுருசு	நுசுசு
574	2	கூறத்	கூறுந்
577	24	[2]யன்றே	[2]யன்றே
583	32	பதற்சு	பதற்கு
598	20	[1]ஆக	[2]ஆக
603	2	பக்தி	பங்க்தி
605	29, 30	கண்ணின்,...இன் - சாரியை.	
614	10	[1]பல்லுகிறற்.	பல்லுகிராற்.
631	34	-என்று	-என்றும்
645	32		[2]மழைநிற
656	27	ராக்க	ரரக்க
689	7	தொகை,	தொகை
693	5	யறிந்து	யறிதுந்[1]
,,	6	மலை[1]	மலை
695	30	துள்ளதா	துள்ளதுமா
703	32	கண்கள்	கண்கள்
706	3	மோகனை	[1]மோகனை
719	18	றிளம்பான்	றுறும்பனி
,,	30	றும்பனி	றிளம்பான்
724	15	விடிவு	விடிய
734	22	சமுதிர	சமுத்திர
758	20	அயனை	அனைய
761	30	கெய்து	செய்து

மற்றுங் காணப்படினுந் திருத்திக்கொள்க.

கம்பராமாயணம்

மூன்றாவது

ஆரணிய காண்டம்

இவ்வடமொழித்தொடர்மொழி - இரண்டனுருபும் பொருளு முடன் தொக்கதொகை. ஆரண்யம் - அரண்யசம்பந்தமானது; அரணியம் - காடு. காண்டம் - கூட்டம்; இப்பொதுப்பெயர் - இங்கு, சரித்திரத்தின் ஒருபாகத்தை யுணர்த்துஞ் செய்யுட்களின் கூட்ட மென்று சிறப்பாகக்கொள்ளப் பட்டு, ஒருபெரும்பிரிவுக்குப் பெயராக வழங்கியது. ஸ்ரீராமலக்ஷ்மணர் திருவயோத்தியினின்று புறப்பட்டுக் கங்காநதியைத்தாண்டியது முதல் நடந்தவையெல்லாம் ஆரணியசம்பந்தமான சரித்திரமே யாயினும். ஸ்ரீபரதாழ்வான் திருவயோத்தியிலிருந்து சித்திரகூடத்திற்குவருவதுமுதலிய ஆரண்ய சம்பந்தமான கதைகள் இடையே கூறப்படுதலால், அவை அயோத்தியா காண்டத்தின்பாற்பட்டு, பின் தண்டகாரணியத்திற் பிரவேசித்ததுமுதல் நிகழ்ந்தவையே ஆரணியகாண்டத்தின்பாற் பட்டனவென்க.

இக்காண்டம், விராதன்வதைப்படலம் முதலாகச் சவரிபிறப்புநீங்கு படலம் ஈறாக ௧௪ - படலங்களை யுடையது.

கீழ், பாலகாண்டத்தில், வக்ஷ்யமாணதர்மாநுஷ்டாநோபயோகமாக, ராமாயணபுருஷர்களுக்கு மஹாகுலப்ரஸூதத்வம், மஹாகுருக்ருபாலப்த தநுர்வேதரஹஸ்யத்வம், தத்ஸம்வாதபூத தாடகாதாடகேயாதி நிரஸம், ஹரதநுர்ப்பங்கம், வைஷ்ணவகாபபரிக்ரஹம் முதலிய குணங்களும், தர்ம பத்நீயோகமும் ஸவிஸ்தாரமாச் சொல்லப்பட்டன; அயோத்தியாகாண்டத்தில், அவர்களால் அநுஷ்டிக்கப்பட்ட பித்ருவசநபரிபாலநம் முதலிய ஸாமாந்யதர்மங்களும், பகவச்சேஷத்வம், பாரதந்த்ரியம், பாகவதாபீமாக நிஷ்டை முதலிய விசேஷ தர்மங்களும் சொல்லப்பட்டன: இக்காண்டத்தில் நிகமாந்தஸம்ரக்ஷணரூபமான ஸாமாந்யதர்மமும், மோக்ஷப்ரதத்வரூபமான பரதத்வநிர்ணயமும் சொலப்படுகின்றன. இனி, பாலகாண்டத்தில், பரப்ரஹ்ம த்தினது ஜகத்காரணத்வம், மஹாபுருஷத்வம், அசிந்த்யவைபவம், ஸர்வ ஸ்மாத்பரத்வம் முதலிய திருக்கல்யாணகுணங்களும்; அயோத்தியாகாண்ட த்தில் நிரஸ்தஸமஸ்தாவித்யத்வம், நித்யாகந்தபரிபூர்ணத்வம், நிகிலாந்தர் யாமித்வம், நிரதிசயௌஜ்ஜ்வல்யம், நிருபமதர்மப்ரவர்த்தகத்வம் முதலிய குணகணங்களும் கூறப்பட்டன வென்றும், இக்காண்டத்தில் ஸஜ்ஜநஸம் ரக்ஷணரூபமான தர்மவிஸேஷஞ் சொல்லப்படுகின்ற தென்றுஞ் சொல்வர். இன்னும் இம்மஹாகாவ்யத்திலுள்ள ரஹஸ்யங்களை வீரிப்பிற் பெருகும்.

க - ஆவது விராதன்வதைப்படலம்.

விராதனதுவதையைப்பற்றிக் தெரிவிக்கும்படலமென்றுவிரியும். விராதன் - ஓரரக்கன்; இவன். முன்னே தும்புரு என்னும் பெயருள்ள கந்தருவனாகஇருந்து குபேரனதுசாபத்தாற் பின்பு ராக்ஷஸனாகி வனத்தில் திரிந்து வருபவன்: விராதனென்னும் வடசொல்லுக்கு - மிகுதியாய் அபராதஞ்செய்பவனென்று பொருள். வதை - வதமென்னும் வடமொழித்திரிபு. கூட்டமென்றுபொருளுள்ள படலமென்ற குறுசமவடசொல் - காண்டத்திற்கு உட்பட்ட சிறுபிரிவைக் சுட்டுதற்காற் காட்டிற்று.

இப்படலம். பரதாழ்வான் சித்திரகூடத்தினின்றும் அயோத்திக்குச் சென்றபின்பு, ஸ்ரீராமபிரான், இவ்விடத்திலிருந்தால் அயோத்தியிலுள்ளார் அடிக்கடிவருவார்க ளென்று நினைத்து இளையபெருமாளோடும் பிராட்டியோடுந் தண்டகாரண்யத்திற்குச் செல்லும் வரையில். அத்திரிமஹாரிஷியினது ஆச்சிரமஞ் சென்று, அவர்பத்தினியாகிய அநசூயை பிறைக்கு அணிகலனும் பட்டாடைகளும் அளித்து அவர் களிக்கப்பெற்று, தண்டகாவனம்புகுந்தவிடத்து. விராதனென்று பெயர்பெற்ற அரக்கனொருவன் சீதையைத் தூக்கிச்செல்லக் கண்டு ஸ்ரீராமலட்சுமணர் சென் றெதிர்க்க. அவன் அவளைவிட்டு இவர்களிருவரையுந் தூக்கிக்கொண்டு செல்ல, இவர்கள் அவனது தோள்களைத் துணித்து அவனைப் பள்ளம்வெட்டிப் புதைத்துக் கொன்றுவிட்ட கதையைக் கூறுகின்றது.

க.—கடவுள்வாழ்த்து.

பேதி யாதுநிமிர் பேத வுருவம் [1]பிறழ்கிலா
வோதி யோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
[2]வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் [3]தெரிகிலா
வாதி [4]நாத ரவரெம் மறிவினுக் [5]கறிவரோ.

அலைகடனடுவணேரனந்தன்மிசை மலியுயன ரிழிதுயில் வளருமாமுகிலாய்ப் பரமபுருடனுகிய மன்னலர் துளவினனேனு, சுரர்தமக்காக்கடல்கொள் காவலன் சுரதன் மகளையாய், நிம்மாண்சுதைக் கோபுரையாய், ஸ்ரீராமனுகித் திருவவதரித்தருளனனே. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், ஈடு மெடுப்பு மில்லாத இவ்வுத்தமகாவியகன் விஷயமாகச் செய்யப்புக்க இப்பெருங்காப்பியத்திற்கு அவையே வாழ்த்துல் வேண்டுகலின், காண்டந்தோறும் அவர்விஷயமாகவே கடவுள்வாழ்த்துக் கூறத் துணிந்து, பாலகாண்டத்தில் ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களைச் சொல்லுகின்ற முறையாலே மூன்று கவிகளாற் கூறி, அயோத்தியாகாண்டத்தில் இக்காப்பியத்தலைவராகிய ஸ்ரீராமபிரான் ஜகச்சரீரகனனவர்வேஸ்வர னென்று கூறி, ஆரணியகாண்டத்தில் இக்கவியால், அவ்வெம்பெருமான் வேதமுதலிய நூல்களாலும் பிரமன்முதலிய பெரியோர்களாலும் உணர்தற்கரிய பரவஸ்து வென்கிறார்.

(இதன்பொருள்.) பேதியாது - (தத்தந்தன்மை) வேறுபடாமல், நிமிர் - தோன்றிவளர்கின்ற, பேதம் உருவம் - பலவேறுவகைப்பட்ட வடிவங்களினின்றும், பிறழ்கிலா - வேறுகாமலும்,—ஓதி ஓதி - பலமுறை பாராயணஞ்செய்து, உணரும் தொறும் - (தம்பொருளே) ஆராய்ந்தறியும் பொழுதெல்லாம், உணர்ச்சி-மெய்யுணர்வை, உதவும்-மேன்மேற்கொடுக்கின்ற, வேதம் - வேதங்களாலும், வேதியர் - அவ்வேதங்களேயுணர்ந்த அந்தணர்களாலும், விரிஞ்சன் முதலோர் - பிரமன்முதலிய தேவர்களாலும், தெரிகிலா-ஆராய்ந்தறியப்படாமலும்நின்ற, ஆதிநாதர் அவர் - (எல்லாப்பொருட்கும்) முதல்நிலைவராகிய ஸ்ரீராமபிரான், எம் அறிவினுக்கு - எமது அறிவுக்கு, அறிவு-அறியப்படுபொருள்; (என்றவாறு.)

பேதியாதுநிமிர்கலாவது - அனலின் வெம்மையும் நிழலின் தண்மையும் போல அவ்வவற்றின்தன்மை அவ்வப்பொருள்களினின்றும் வேறுபடாதிருத்தல். பேதவுருவம் என்றது - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்று சொல்லப்பட்ட சராசரரூபமாயிருக்கிற எண்பத்துநான்குநூறாயிரம் யோனிபேதங்களே. உருவம்பிறழ்கிலாமையாவது - எல்லாப்பொருள்களுள்ளும் உடலுக்குள் உயிர்போல உயிருள்ளும் உயிராய் அந்தர்யாமியாய் உளனாதல். மெய்யுணர்வாவது - பிறப்புவீடுகளேயும் அவற்றின்காரணங்களேயும் விபரீதஜ்ஞானங்களானன்றி உண்மையாய் ஞானத்தினே வடநூலார் தத்துவஞானமென்பர். வேதமென்பதற்கு - செய்யவேண்டிய விதிகளேயுந் தவிர்வேண்டிய விலக்குக்களேயும் அறிவிப்பதென்பது பொருள். வேதியர் - வேதங்களேப் பழுதறக்கற்று அவற்றிற்குத்தக அவைசொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்பவர். வேதங்களோ ஓதுதலும் ஓதுவித்தலும் பார்ப்பாரது தொழிலே யாதலால், வேதியரென்பது அந்தணரையேயென அறிக. திருமாலினது திருவுந்திக்கமலமலரினின்றுந் தோன்றி உலகங்களேயெல்லாம் படைக்குங் கடவுளாதலால், விரிஞ்சனே முதலாகக் கூறினர். ஆதிநாதர் - ஆதியாகிய நிலைவர்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஆதிநாதனென்றது - மும்மூர்த்திகளுள்ளும் முதன்மூர்த்தியாகிய ஸ்ரீமந்நாராயணனது எழாவதுதிருவவதாரமாகிய ஸ்ரீராமபிரானே; "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்" எனப் பெரியாரும் பணிந்தார்.

இங்ஙனம்வண்ணங்கியத்தினுள்எடுத்தகருமம் இனிதுமுடியுமென்றுகருத்து.

இனி, 'பேதியாதுநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா' என்பதற்கு, தாம்மேலே படாமல்நிருத்திக்கொண்டே தெருட்கிய வேற்றுமைப்பட்ட உருவங்களிற்சிறுமும் வேறுபடாத தென்றும் பொருள்கொள்ளலாம்; அப்பொருளில் தாம் பலவகைப்பட்ட சேதநாசேதனங்களோடு கலந்திருக்கையில் அவற்றின்தன்மை தம்மிடத்தேபட்டித் தத்தன்மைவேறுபடாமலே யிருப்பவ ரென்றுகருத்து; 'பேதியாது' என்னும் வினையெச்சம், 'பிறழ்கிலா' என்னும் பெயரெச்சவினை கொண்டது. "யாவையுமெவ்வுருத்தாஞ் யவரவர் சமயந்தோறுந்,

தோய்விலன் புலனேந்துக்குஞ் சொலப்படா வுணர்வின் மூர்த்தி, யாவிசே ருயிரி னுள்ளால் யாதுமோர் பற்றிலாத், பாவனையதனைக் கூடி லவனையுங் கூடலாமே" என்னும் பாசுரத்தின் விசேஷார்த்தங்கள் இங்கே விசாரித் தறியத்தகும்: மேற்படலத்தில் "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடர்" என்னுமிடத்தும் இக்கருத்தமைந்திருத்தல் காண்க. 'ஏதி யோதியுணருஞ்சுருதிமுணர்ச்சியுதவும்' என்பதற்கு, தமது திருநாமங்களைப் பலமுறை உச்சரித்துத் தியானஞ்செய்யும்பொழுதல்லாத் தத்துவஞானம் தைக் கொடுக்குமென்று உரைத்து, ஆதிநாதரோடு கூட்டுதலுமாம்.

இனி, [2]வேதவேதியர் என்னும் பாடத்திற்கு - வேதங்களால் அறியப் படுபவ ரென்று பொருளாய், வேதவேதியரும் விரிஞ்சன்முதலோரும் மிகுரி கிலா ஆதிநாதரு மாகிய அவ ரென்க. 'அறிவோ' என்பதனை அறிவர் எ னப் பிரித்து, ஓகாரத்தை எதிர்மறையாகக் கொண்டு, வேதங்கட்கும் வேதியர்க்கும் விரிஞ்சன் முதலோர்க்கும் அறியப்படாத வடிவள். சின்னஞ் பல்பிணிச் சிற்றறிவினையுடைய சிறியேமாகிய எமது அறிவிற்கு அறியப் படுவரோ? என்னும் பொருள்கொள்ளலுமாம்.

துறை - கடவுள்வாழ்த்து; "வாழ்த்தியல் வகைய வற்றிற்கு முரித் தே" என்றதனால் 'வகை' என்ற ஒருசொல்லாண்ட அறுமுறைவாழ்த்தன் றித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி "உடற்பற்றுக் பொருளினும் வேற்று மையுடையது" என்றதனால், முன்னிலைபன்றியும் வடிவோவாழ்த்துதலின், இக்கவி கடவுள்வாழ்த்தெனப்பெயர்பெற்றது; [அறுமுறைவாழ்த்துக்களுள் வாழ்த்தப்படும் பொருள்களாவன:—முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அ சரும், மழையும், மாமுமாம்.]

பிறழ்கிலா - மெய்ந்நிலை என்ற ஈறுதொட்டு எதிர்மறைப் பெயரெச்சக் கள் அடுக்கி ஆதிநாத ரென்னும் வினைமுதற்பெயர் கொண்டன; "மூவா முதலா வுலகம்" என்பதிற்போல. 'எம்' என்னுந் தன்மைப்பன்மை, ஈண்டு ஒருவரைக்கூறும் பன்மை; துணி. உலகத்தாரையுந் தன்னெதிர்கூட்டிக் கூறினு மெனினு மமையும். எம்மறிவிலுக் கறி வொன்றது - "பத்துடை படியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்றவாறு பக்குவமாகிய எமக்கு அறியப்படுமல னென்றபடி. அறியப்படுபொருளை 'அறிவு' என்றது, ஆகு பெயர். அரோ - ஈற்றசை. **பி - மீ:**—[1]பிறழ்கிலாது. [3]வெளியிடா. [4]தேவர். [5]அறிவரே.

இதுமுதல் காப்புத்தேருகுலிகள்-கிடிலடிதான்குகொண்ட **கலித்துறை;** *இவற்றை அளவடிதான்குகொண்ட* **கலிவிருத்தமாக** *அலகிடினும்குழுக்காது.*

2.—இராமன்முதலியோர் அத்திரிபுரிவனது ஆசிரமஞ் சேர்தல்.

[1]மூத்தி ருத்தியவ் விருந்தணைய மொய்ந்த கையொடுஞ்
சித்தி ரக்குனி சிலைக்குமரர் சென்ற ணுகினை
ரத்தி ரிப்பெய ரருந்தவ [2]னிருந்த வமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழி [3]றுவன்ற பழுவம்.

(இ - ள்.) சித்திரம் - அழகிய, குனி சிலை - வளைந்த வில்லினையுடைய, குமரர் - ஸ்ரீராம லக்ஷ்மணர்கள்,—முத்து - முத்துக்களே, இருத்தி - ஒழுங்காய்ப் பதித்துவைக்க, அவ் - அம்முத்துக்கள், இருந்து அனைய - இருந்தாற் போன்ற, மொய் நகையொடும் - செருக்கியபற்களையுடைய சிரிப்பாட்டியுடனே,—அத்திரிப் பெயர்-அத்திரியென்னுந் திருநாமத்தையுடைய, அருந்தவன் - பிறராற்செய்தற்கரிய தவத்தினையுடைய மகாமுனிவன், இருத்த - எழுந்தருளியிருந்த, அமைதி - நடுவாகிய, பத்திரம் பழு மரம் பொழில் - இலைகளையுடைய பழுத்த மரங்களையுடைய சோலைகள், துவன்ற - நெருங்கிய, பழுவம் - வனத்தை, சென்று அணுகினார் - போய்க்கிட்டினார்கள்; (எ-று.)

சித்திரம்அழகு முதலியனபற்றிப் பல்லுக்கு முத்து உவமையாயிற்று. இருத்தி. இருத்த வென்னுஞ் செயவெனெச்சத்தின் விகாரம்; இருத்தியென்னும் வேறு வினைமுதல்வினை கொண்டு முடிந்தது. அவ் - சுட்டடியாகப்பிறந்த அஃறிணைப்பன்மைப்பெயர்; இனி, [1]முத்திருத்தியிருத்தினை என்று பாடங் கொண்டு, இருத்திய - இருத்தியனவாகிய, முத்துக்கள் இருந்த வன்மையை யுபசரித்து வென்றார். அவ் இருத்தினை எனப் பிரித்து அகரத்தைச் சாரியையாகக் கொண்டு, இருத்திஇருத்தினை எனக் கூட்டியும் உரைக்கலாம்; அன்றியும், அகரத்தைச் சுட்டாகக்கொண்டு அம்மையாய்த்தகை யென்றுரைல். அக்குமரன்முதல் கூட்டியும் ஒன்று. இருத்தினை என்பதனை இருத்தலினை என்பதன் நிரிபாகவாயினும், இருத்தினை என்பதன் விகாரமாகவாயினுங் கொள்க. மொய்த்தகை - வினைத்திறனைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வில்லுக்குச் சித்திரமாவது - குமரர்களது கையோடு சேர்ந்து சேர்ந்திருந்தான அழகு; ("காஞ்சகசித்ரகாரமுகிலை" என்றார் ஸ்ரீ வால்மீகி பகவானும்.) குமரர் - குமரர் என்பதன் குறுக்கல். தவமாவது-மனம் பொறிவழி போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கல் முதலாயின. பழுமம் - ஆலமரமுமாம். பழுவம் - ஆச்சிரமம். இனி, பத்திரம் - மங்கலகரமான, பழுவம் - சோலை யெனினுமாம். பத்ரம் - சுபம். துவன்ற, துவல்-பகுதி. பி-பீ:—[1]முத்திருத்தியினைத்திகழும். [2]அமைந்த. [3]துவன்று.

உ.—ஸ்ராமன் முதலியோர் அத்திரிமுனிவனை வணங்குதல்.

திக்கு முஞ்செறி [1]பரந்தெரிய நின்ற திரள்பொற்
கைக்கு றுங்கண்மலி மேற்குமரர் காம முதலா
முக்கு றும்பற வெறிந்த வினை[2]வான் முனிவனைப்
புக்கி றைஞ்சின [3]ரருந்தவ னுவக்கு புகலும்.

(இ - ள்.) திக்கு - திக்குக்களிற்பொருந்திய, செம் பரம்-மிகுந்த பரப்பை, தெரிய நின்ற - (ஞாயிறளவென்று) அறியுமாறு நின்றிலங்கிய, திரள் பொன் கை - திரண்ட அழகிய தூணிக்கையையும், குறுங் கண் - சிறிய கண்களையுமுடைய, மலை - யானைகளை, மேல் - மேன்மேற்கொண்ட, குமரர் - ராம லக்ஷ்மணர்கள்,—புக்கு-(அவ்வாச்சிரமத்தினுட்) பிரவேசித்து,—காமம் முதல் ஆம் முக் குறும்பு - காம முதலிய மூன்று குற்றங்களையும், அற - முற்றும்

திக்கும்பட்டி, எறிந்த - கடிந்த, வினை - தவவினையையுடைய, வால் - தூய் மையையுடைய, முனிவனை - அவ்வத்திரிமகாமுனிவனை. இறைஞ்சினர் - வணங்கினார்கள்; (வணங்க), அருந் தவன் - அம்முனிவன், உவந்து - மன மகிழ்ந்து, புகலும் - சொல்லுவான்; (எ - று.)

திக்குறு மலை - திக்கஜம். கைக்குறுக்கண் மலையெனவே. யானையென்ற தாயிற்று. முக்குறும்பு-காம வெகுளி மயக்கங்கள்; அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிதுவேண்டு மென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லும் ஆசையும், அது பற்றி அதன்மறுதலைக்கட்செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம்நீக் தென்றார்; தமிழ்நூலார் அவற்றுள், அகங்காரம் அவிச்சைக்கண்ணும், அவா வுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலால். குற்றம் மூன்றென்பர்: "காமம் வெகுளி மயக்க மிவைமூன்று, ஞமன் கெடக் கெடுங்காப்" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும். ஏடையாரு பத்தியாகங்களின் முன்னர் இக்குற்றங்களெல்லாம் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்திப்போலு மாதலின், அம்மிகுதி தோன்ற, 'அறவெறிந்த' என்றார். மூக்குறும்பு - விதியாமதம் தனமதம் குலமதம் என்றலும் ஒன்று. குறும்பு என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. வான் முனிவன் எனப்பிரிக்க. பெரியமுனிவ னென்றுமாம். [2]வாண்முனிவன் என்னும் பாடத்திற்கு, சாமமுதலிய குற்றங் களாகிய குறுநிலமன்னர்குழாத்தைத் தூரவே துரத்தியதால் தவவினையாகிய வாட்படையையுடைய முனியர சனன்க. மூக்குறும்பறவெறிந்த வினை வான்முனிவனே' என்ற தொடர்ச்சொற்பொருளால். அதிகிலமன்பதன்பொருளைப் பெறலை யார்: [அதிநி-மூன்றுஇல்லாதவன்.] அருந் தவனென்னும்பெயர், சொல்லுக னென்குறிப்பால் அவனென்னுஞ் சுட்டுப்பெயர்மாத்திரை யாயிற்று; மேல் வருனவற்றிற்கெல்லாம் இஃதே ஒக்கும். புகலும்-செய்யுமென்முற்று ஆண்பாலிற் சென்றது. பி-ம்: —[1]மரம். [2]அறிந்தவன், அருந்தவனும். (கூ)

சு.—அத்திரிமுனிவன் கூறிய முகமன்.

குமரர் நீரிவ ணடைந்ததவு கொள்கை யெளிதோ
வமரர் யாவரொடு மெவ்வுலகும் [1]வந்த தலதோ
வெமரின் யார்தவ [2]முயன்றனர் களென்று ருகினன்
றமரெ லாம்வர வுகந் [3]தனைய தன்மை முனிவன்.

(இ - ள்.) தமர் எலாம் - சுற்றத்தார் யாவரும், வர - (தம்பக்கல் ஒரு ங்கே) வந்துசேர, (அதனால்), உகந்து அனைய தன்மை - மகிழ்ந்தாற்போன்ற தன்மையையுடைய, முனிவன் - அம்முனிவன்,—(ஸ்ரீராமலக்ஷ்மணரை நோக்கி),—குமார் - சக்கரவர்த்திக் திருமகர்காள்! நீர் - நீங்கள், இவண் - இவ்விடத்தில், அடைந்து உதவு கொள்கை - வந்துகாட்சிகொடுத்தருளலை, எளிதோ - கிடைப்பதற்குளதியதோ? (இல்லை), அமரர் யாவரொடும் - எல்லாத்தேவர்களுடனும், எ உலகும் - எல்லாவுலகங்களும், வந்து அல வோ - வந்ததன்மையே யன்றோ? எமரின் - எங்களில், தவம் முயன்றனர்

கள் - (இங்ஙனம் பிரிவிர் வாப் பெறுவதற்கேற்ற) தவத்தைச் செய்தவர்கள். யார் - யாவரோ?' என்று - என்றுசொல்லி, உருகினன் - மனமுருகினனன்.

அமரர் என்பதற்கு - மரணமில்லாதவரென்பது அவயவப்பொருள். இஃது, 'எமரின் யார்தவ முயன்றனர்கள்' என்பதற்கு - இப்பேறற்கரும் பேறுபெற்ற எம்மைப்போல கல்லினேசெய்தவர் எவரென்றுமாம். 'குமரர் சீர் வணைடைத்துதவு கொள்கை பெரிதோ' என்றதனால் அடியவர்க் கெளிவருதலும், 'அமரர்யாவரொடு மெல்லலுற்றதலோ' என்றதனால் சுகலசேதநாசேதநங்களுள்ளும் அந்தர்யாமியாயிருத்தலும், 'எமரின் யார் தவமுயன்றனர்கள்' என்றதனால் இத்தகைய வத்பெருமானைச் சேரப்பெறுவதினும் பெரும்பேறு பிறிதில்லை யென்பதுங் குறிப்பிக்கப்பட்டன. **பீ-ம்:**—[1]வந்தவளவில். [2]முயன்றவர்கள். [3]அனேபரான. (ச)

டு.—சீதை அநசூயையினிடத்து ஆபரணம்முதலியன பெற, முவரும் நண்டகவனம்போதல்.

அன்ன மாமுனியொ டன்றவ னுறைந்த வனரும்
பன்னி கற்பி னன சூயை பணியா லணிகலன்
றுன்னு தூசினெடு சந்திவை சுமந்த சனகன்
பொன்னெ டேகி யுயர்தண் டகவனம் புகுகலும்.

பதினேந்து கலிகள் - ஒருவிகாடர்.

(இ - ள்.) (மாமலக்மணர்), அன்ன மா முனியொடு - ஒத்தமகா முனிவனுடன், அன்று - அற்றைநாளில், அவண்-அவ்வாச்சிரமத்தில், உறைந்த-தங்கியிருந்து,--அவன்-அம்முனிவனது, அரும் பன்னி- அரியபத்தினியாகிய, கற்பின்-கற்புநிலைமையினிடமாக, அனசூயை-அநசூயையென்பவளது, பணியால் - கட்டளையின்படி, (அவளாலளிக்கப்பட்ட), அணிகலன் - அழகியஆபரணங்களும், துன்னு தூசினெடு - பொருந்திய வஸ்திரங்களும், சுமந்த - தரித்த, சனகன் பொன்னெடு - ஜாதகிப்பிராட்டியுடனே, ஏகி - (மற்றைநாள் அவ்வாச்சிரமத்தினின்று புறப்பட்டுச்) சென்று, உயர் தண்டக வனம் - சிறந்த தண்டகாரணியத்தை, புகுதலும் - பிரவேசித்தவுடனே,—(எ - று.)—"ஈசன்வந்து எதிர்லிலங்கினன் விராதனெனுமசு...கொடுக்கி காழிலினன்" (கக) என்று முடியும்.

முனி என்பதற்கு - பகவத்தியான முடையவ னென்றும், தத்துவஞான முடையவ னென்றும், நிரிகாலஞான முடையவ னென்றும் பொருள். பன்னி - பத்னீ என்னும் வடசொல்லின் சிதைவு. கற்பு - பாதிவிரத்தியம்; அஃதாவது - தன்கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்: அது, கொண்டானிற்சிறந்ததுதவம் றென்றெனவும், அவனே றின்னவாறு குற்றேவல்செய்து நீ வழிபட்டொழுகெனவும் திருமுதுகுரவர் அங்கியங் கடவுள் அறிகாரியாக மந்திரவகையாற் கற்பித்தலானும், அத்தகணார்நிறத்துஞ் சான்றோர்கேளத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம்

தலைமகன் கற்பிக்கலானுங் கற்பாயிற்று. 'கற்பினனகுயை' என்றதனால், பிராட்டிக்கு அருகுயை பாதிவிரத்தியதருமம முபதேசிக்குதாக வால்மீகத்திற் கூறிய விருத்தாந்தம் குறிப்பிக்கப்பட்டது. அகுயையன்பதற்கு-அழுக்காறில்லாதவளென்பது பொருள். சந்து-சந்தகமென்பதன் சிதைவு. 'திவை' என்றதனால், புஷ்பம் முதலியன கொள்க. கலனணிதலும், தூசு உடுத்தலும், சுந்துபூசுதலும் அடங்க. 'சுமந்த' என்னும் பொதுவினையாற் கூறினார்; இனி, அணிகலன்முதலியன பிராட்டியினது திருமேனியழகை மிகுக்காது அதனைமறைத்துப் பாரமாய்விற்றலின். 'சுமந்த' எனக்கூறினு மெனினுமாம். சனகன் பொன் - ஜநகராஜனின்மகள்: பொன் - திலகத்தால்; பெருமாள் ஸ்ரீராமனுகத் திருவவதரித்தருளினபொழுது பிராட்டி கீழ்யாகத் திருவவதரித்தமைபற்றி, 'பொன்' என்றார்.

தண்டகவனம் என்னும் பெயர்க்காரணம்:—குரியகுலத்து மநுநக்கவர்த்தியினது குமாரனை திக்ஷ்வாகுமஹாராஜனுடைய மக்கள் தூற்றுவருள் கடைப்பட்டவனும், மூடனும் மூர்க்கனும் துஷ்டனுமாய்த் தண்டனைக்கு உரிய னென்ற காரணங்கருதி எதிர்காலவண்ணச்சிலையுடைய குரைதையால் 'தண்டன்' என்று பெயரிடப்பட்டவனும், தண்டகனென்று வழங்கப்படுவனுமாகிய சூரசன் விந்தியமலைக்கும் கைலைமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன்னாட்டிக்கு உரியதாகக்கொண்டு, மதுமத்தமென்கிறபட்டணத்தை யமைத்து அங்குஅரசாண்டுவருகையில், ஒருகாள் தனது புரோகிதனை சுக்கிராசாரியனது ஆச்சிரமத்திலுட் சென்று அவன்மகளாகிய அரசை யென்பாளைக் காதலித்து வலியக்கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த, அப்பார்க்கவன் சினந்து 'எழுகாள்களில் அவன்குடும்பத்தோடும் சேனைமுதலிய பரிவாரத்தோடும்அழிந்துபோக, அவனதுநாடு மண்மழையால் பாதிருரு ஜீவஜந்துவுமில்லாமற் பாழாகக்கடவது' என்று சபிக்க. அப்படியே அந்நாடும் அவ்வரசனும் எழுகாள் மண்மழையால் அழிந்துபோய்விட. அவ்விடம். பின்பு காடாகித் தண்டகாரணியமெனப்பெயர்பெற்ற தென்பதாம்.

கூ.—இதுமுதற்பதினான்குகவிகள் - விராதனதுவநுமையைக் கூறும்.

எட்டோ டெட்டு மத[1]மா கரியிரட்டி [2]யரிமா
வட்ட வெங்கண்வரை யாளி பதினாறு [3]வகையின்
கிட்ட விட்டிடை [4]கிடந்தன செறிந்த வொருகைத்
தொட்ட முத்தலை யயிற்[5]றொகை மிடற்க ழுவொடே.

(இ - ள்.) எட்டொடு எட்டு மதம் மா - பதினாறு மதயானைகளும். கரி இரட்டி அரி மா - அவ்யானைகளினும் இரண்டுமடங்காகிய [முப்பத்திரண்டு] சிங்கங்களும், வட்டம் வெம் கண் - வட்டவடிவமாகிய கொடிய கண்களையுடைய, வரை - மலையிலேயுள்ள, பதினாறு யாளி - பதினாறுயாளிகளும், வகையின் - ஒழுங்காக, கிட்ட இட்டு - நெருங்கக் கோக்கப்பட்டு, இடை கிடந்தன செறிந்த - இடையே பொருந்தினவாகி நெருங்கியிருக்கப்பெற்ற, ஒரு கை தொட்ட - ஒருகையாற் பிடித்த, முத் தலை - மூன்று தலைகளையும்,

அயில் தொகை - மிக்க கூர்மையையும், மிடல் - வலிமையையு முடைய, கழுவொடு - சூலாயுதத்துடனே.—(எ - து.)—ஏகாரம் - ஈற்றசை.

தான் புகுத்தற்காக யானைமுதலியவற்றைத் தனது பெரிய இருப்புச் சூலத்திற்கோத்துக் கையிற்பிடித்துக்கொண்டிருக்கிறு னென்பதாம். 'தொட்ட' என்னுஞ் சொல்லாற்றலால். அலட்சியமாக எளிதிற் பிடித்துவந்தா னென்பது குறிக்கப்படுகின்றது. ' கரி - கரத்தையுடையது; கரம் -, கை: இங்கே துதிக்கை; இது. இங்குச் சுட்டுமாத்திரையாயிற்று. கீழ்க்கூறிய கரி யினு மிரட்டி யென்றதனால், மூப்பத்திரண்டாதல் பெறப்பட்டது. இரட்டி - இரண்டாலேயுடையது; இ - வினைமுதற்பொருள்விகுதி. அரிமா-அரியாகிய மாவென இருபெயரொட்டுப்பண்புத்தொகை. அரி - ஹரி யென்பதன் விகாரம்; சிங்கம்: யானைமுதலிய பெரிய விலங்குகளையும் அழிக்கவல்ல தென்பது பொருள். இனி, எட்டொடு பெருக்கிய எட்டெனக் கொண்டு அறுபத்து நான்கு மதம்பிடித்த பெரிய யானைகளையும். அவற்றினு மிட்டியாகிய நூற்றிருபத்தெட்டுச் சிங்கங்களையு மென்றுமாம். யாளி - துதிக்கையுடையதும் யானையைக் கொல்வதும் சிங்கம்போல்வது மாகிய தொரு மிருகம். தொகை மிட லென்றும் கூட்டலாம். **பி-ம்:**—[1]மால். [2]வயமா. [3]வலிபற். [4]செறிக்கன கிடந்தது. [5]தொழில். (கூ)

எ. செஞ்சு டர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்த செனிய
னஞ்சு [1]வெற்புருவு பெற்றிடை நடந்த தெனமா
மஞ்சு [2]சுற்றிய வயங்குகிரி [3]வாத விசையிற்
பஞ்சு பட்டது படப்படி யின்மேன் முடுகியே.

(இ - ள்.) செஞ்சுடர் - சிவந்த ஒளியையுடைய. செறி மயிர் சுருள் - மிகுந்த சுருட்டைமயிர்கள். செறிந்த - செருக்கியிருக்கப்பெற்ற. செனியன் - தலையையுடையனாகிய.—நஞ்சு - விடமானது. வெற்பு உருவு பெற்று - மலையின் வடிவத்தைக்கொண்டு. இடை நடந்தது என - வானத்தினிடைபே நடந்து வந்தது போல.—மா மஞ்சு சுற்றிய வயங்குகிரி - கரியபெரிய மேகங் கள் சூழ்ந்து தற்பெற்ற விளங்குகின்ற மலைகள். (கால்களின் நடைவேகத் தால்). வாத விசையின் - காற்றின்விசையில். பஞ்சு பட்டது படப் - பஞ்சு அடைந்த நிலைமையை அடைபுப்படி. படியின்மேல் - பூமியின்மேல்; முடுகி - விரைந்து நடந்து.—(எ - து.)

நஞ்சுவெற்புருவுபெற்றிடைநடந்ததென - **இல்பொருளுவமை;** இதனை. வடநூலார் அபூதோபமை யென்பர். என முடுகி என இயையும். 'முடுகி' என்ற வினையெச்சத்திற்கு மேல் கக - ஆஞ் செய்யுளில் வரும் 'விராதனை ஹமக்கோரவெங்கணுருமேறனகொடுக்கொழிவினுன்' என்பது - எழுவாய்: 'விலங்கினன்' - பயனிலை. மா-இரட்டுறமொழிதல். **பி-ம்:**—[1]கட்டுருவு. தொட் டுருவு. [2]கட்டிய. [3]பாத. (எ)

அ. புண்டு ளங்கிய கண்க [1]ளனல்பொங்க மழைசூழ்
**விண்டு ளங்கிட விலங்கல்கள் குலுங்க வெயிலுங்

கண்டு ளங் [2]கதிர் [3]குறைந்திட நெடுங்க டல் [1]சுலா
மண்டு ளங்க வயவந்தகன் மனந்த ளரவே.

(இ - ள்.) புண் துளங்கியன கண்கள் - புண்கள்போலச் சிவந்து ஒளி செய்கின்றனவாகிய (தன்) கண்களினின்று, அனல் பொங்க - நெருப்புப் பொறி பறக்க,—(அதனால்), மழை சூழ் விண் - மேகங்கள் சூழ்ந்த ஆகாயம், துளங்கிட - நடுங்கவும்,—விலங்கல்கள் - மலைகள். குலுங்க - அசையவும்,—வெயில் கதிரும்-வெயிலாகிய கிரணங்களையுடைய சூரியனும், கண்டு-பார்த்து, உளம் குறைந்திட - மனமழியவும்,—நெடுங் கடல் சுவறாம் - பெரியகடல் சூழ்ந்த, மண் - பூமி, துளங்க - நடுங்கவும்,—கய அந்தகன் - பகைமையையுடைய யமனும். மனம் தளர் - மனந் தளர்ச்சியடையவும்.—(எ - று.)

உம்மை - உயர்வு சிறப்பு. கதிர் - கதிரையுடைய சூரியனுக்கு ஆகுபெயர். அந்தகன் - எல்லாப்பிராணிகளுக்கும் முடிவைக்செய்பவன். **பி-ம்:**—[1]கனல். [2]கதி. [3]குழைந்திட [4]சுலாய், குலாம் (அ)

கூ. [1]புக்கு வாளரி முழங்கு செவியின் பொறியுறப்
பக்க மின்னு மணிமேரு சிகரங் சூழைபடச்
செக்கர் வான்மழை [2]நிகர்த்த வெதிர்ந்ற்ற [3]செருவத்
துக்க வீர ருதிரத்தி ளெளிர்செச் சையிளெடே.

(இ - ள்.) வாள் அரி-ஒளியையுடைய சிங்கங்கள். புக்கு-பிரவேசித்து. முழங்கு - பேரொலிசெய்கின்ற. செவியின் பொறி - காதுகளில். உற - பொருந்த, பக்கம் மின்னும் - எல்லாப்பக்கங்களிலும் ஒளிவிட்டு விளங்குகின்ற. மணி மேரு சிகரம் - அழகிய மகாமேருமலையினது முகடு, சூழைபட - சூண்டலமாகியிருக்க,—வான் செக்கர் மழை நிகர்த்த - ஆகாயத்தே காணப்படுகின்ற செவ்வானத்தையொத்த, எதிர் உற்ற செருவத்து உக்க வீரர் உதிரத்தின் ஒளிர்-எதிர்த்துச்செய்த போரிலே இறந்துவிழுந்த வீரர்களது ரத்தத்தால் விளங்குகின்ற. செச்சையிளெடு - செஞ்சந்தனக்குழம்புப் பூச்சுடனே,-(எ-று.)—'மாலே தோள் பொலிய' (கo) என்க.

இனி, முழங்குகின்ற வாளரிகள் செவியின்பொறி புக்கு உற வென்றுமாம். விராதனதுசெயிகளைக் குகையென மயங்கியதனால், சிங்கங்கள் புக்கு முழங்குவனவாயினவென்க. கனது கரியமேனிலே பூசப்பட்ட சிவந்த சந்துப்பூச்சு. கரிய ஆகாயத்தே காணப்படுகின்ற செவ்வானத்தையொக்குமாறு அறிக. 'வாளரிமுழங்கு' என்னும்அடைமொழியை மேருவிற்குங்கூட்டுதலும் ஒன்று. உதிரம், செச்சை-சுரோணிதம். சர்ச்சா என்னும் வடசொற்களின் விகாரம். சர்ச்சா - பூச்சு. **பி-ம்:**—[1]புக்க. [2]நிகர்க்க. [3]செருவத்தி. (கூ)

கo. படையொ டாடவர்கள் [1]பாய்புரவி மால்க ளிறுதேர்
நடைய வாளரிகள் கோளுழுவை நண்ணி யவெலா
மடைய வாரி[2]யர வாலசை யனேக வித[3]வந்
தொடையன் மாலே துயல்வந் தலவுதோள் பொலியவே.

(இ - ள்.) படையொடு ஆடவர்கள் - ஆயுதங்களோடுகூடிய வீரர்களையும், பாய் புரவி - தாவிப்பாய்கின்ற குதிரைகளையும், மால் களிறு - பெரிய மதயானைகளையும், தேர் - தேர்களையும், கடைய வாள் அரிகள் - கடையினையுடைய ஒள்ளிய சிங்கங்களையும், கோள் உழுவை - (இரையைக்) கொள்ளுதலையே [கொல்லுதலையே] தொழிலாகவுடைய புலிகளையும், நண்ணிய எலாம் - மற்றும் அகப்பட்டவையெல்லாவற்றையும், அடைய வாரி-முழுவதும் வாரிக் கொண்டுவந்து, (அவற்றை). அவால் - மலைப்பாம்பால், அசை - கட்டிய, அனேக விசும் - பலகைகளாகிய, அம் பிதாடையல் மாலை - அழகிய தொடுக்கப்பட்ட மாலைகள், தாயல்வந்து-மெதுவாகி யசைந்து, உலவு-விசாலமாகவுள்ள, தோள் - தோள்களில், பிதாலிய - விளங்க.---(எ - று.)

மால் - குரட்டுறுமியாற்றல். பெருமிதமுடையாளுக்குச் சிங்கவேறு கையான் உவமையாகக் கூறப்படுதலின், 'கடையவாளரி' என்றார். கோள்-கொல்லுதலுமாம். **பி-ம்:**—[1]மால்களிறு பாய்புரவி. [2]அவ்வன்முடி. [3]வன்.

கக. குன்று துன்றின வெனக்குமுறு கோப மதகமா
வென்றி [1]ணென்றிடை யடுக்கின தடக்கை யுதவப்
பின்று கின்ற பிலனிற் பெரிய வாயி ணெருபான்
மென்று தின்று விளியாது விரியும் பசியொடே.

(இ - ள்.) குன்று துன்றின எனமலைகள்செருங்கியவைபோல, இடை அடுக்கின - (தன்)வி ல்லினிடையே அடுக்கிவைக்கப்பட்டனவாகிய, குமுறு கோபம் மதம் மா - முழங்குகின்ற கோபத்தையுடைய மதயானைகளை, ஒன்றின் ஒன்று - ஒன்றன்பின் ஒன்றாக, தட கை - பெரிய கைகள், உதவ - வகுத்துத்தக்கவண்ணம், (அவற்றையெல்லாம்). பின்றுகின்ற பிலனின் பெரிய வாயின் - (சில்லச்சில்லப்) பின்னிடுகின்ற குகைபோன்ற பெரிய வாயில், ஒருபால் - ஒருபக்கத்தில், மென்று தின்று - மென்றுதின்றுகொண்டிருந்தும், விளியாது - அடங்காமல், விரியும் - (மேன்மேல்) மிகுகின்ற, பசியொடு - பசியுடன்.---(எ - று.)

'குன்று துன்றின' என்பதற்கு, 'இடையடுக்கின' என்பதற்குக் கீழ் கூ - ஆம்பாட்டிற்கூறியபடி குலத்தினிலடுக்கி மேல் கோக்கப்பட்ட என்னும் பொருள்கூறலாம். பின்றுதல்-செல்லச்செல்லும் பிதாலியாதிருத்தல். 'வாயினெருபால்' என்பதனால், இவையனைத்தும் அவன் கடைவாய்க்கும் போதா வென்றபடி. **பி-ம்:**—[1]ன்றினிடை. (கக)

கஉ. பன்ன காதிபர் பலுமணி பறித்த வைபகுத்
[1]தென்ன [2]விண்ணவர் விமான மிடை[3]யிட் டரவிடைத்
துன்னு கோளினெடு தாரகை தொடுத்த துழனிச்
சன்ன வீர மிடைமின்னு தடமார்பி னெடுமே.

(இ - ள்.) பன்னகாதிபர் - சிறந்த பெரும்பாம்புகளின், பலுமணி - படங்களிலுள்ள மணிகளை, பறித்து - பிடுங்கிக் கொண்டுவந்து, அவை-அவற்றை, பகுத்து என்ன - பிரித்துப் பதித்தாற்போல, அரவிடை - மலைப்பாம்பு

களின் உடலிலே. விண்ணவர் விமானம் - தேவர்களது விமானங்களையும், துன்னு கோளினெடு - விளங்குகின்ற நவக்கிரகங்களையும், தாரகை - நட்சத்திரங்களையும், இடை இட்டு - இடையிடையே மாற்றிமாற்றிவைத்து, தொடுத்த - தொடுக்கப்பட்ட, தூழனி - ஒலியையுடைய, சுன்னவீரம் - வெற்றி மாலைகள். இடை மின்னு - இடையே விளங்குகின்ற, நெடு மார்பினெடும் - விசாலமான மார்புடனே,—(எ - து.)—மார்பினெடும் (கஉ) பகியோடு (கக) எதிர்விலங்கினன் (ககூ) என்க.

தேவர்களின்விமானங்களையும் நட்சத்திரங்களையும் கொண்டு மேல்பாம்பிற் கோத்து வீராதன் அணிந்துகொண்டிருந்த வெற்றிமாலே, மாணிக்கஹாரத்தை யொத்திருந்த தென்க. பன்னகாதிபர் - பன்னகங்களுக்குத் தலைவர்: இத்தொடர் - வாசுகி. அநந்தன். தட்சன். சங்கபாலன், குளிகன், பதுமன், மஹாபதுமன், கார்க்கோடகன் என்ற அஷ்ட மஹாநாகங்களைக் குறிக்கு மென்னலாம். பக்ஷமென்பதற்கு-கால்களால் நடவாதிதென்று பொருள்; மார்பினு லூர்வதென்று கருத்து: வடமொழிப் புணர்ச்சி. தீர்க்கசந்தி. இச்செய்யுட்குப் பலர் பலவாறு உரைகூறுவரேனும் அவையொன்றும் நன்குபொருந்தா. **பி-மீ:**—[1]இன்ன. [2]வானவர். [3]விட்டு.

கஉ. பம்பு செக்க [1]ரெரியொக்கு மயிர்ப்பக்க மெரியக்
கும்ப முற்ற வுயர்நெற் றியின்விசித் தொளிகுலா
மும்ப ருக்கரசன் மால்[3]கரியி னேடை [3]யெயிறின்
கிம்பு ரிப்பெரிய தோள்வ ளேயொடுங் கிளரவே.

(இ - ள்.) பம்பு-பரவிய, செக்கர்-செவ்வானத்தையும், எரி-நெருப்பையும், ஒக்கும் - (நிறத்தால்) ஒக்கின்ற, மயிர் - செம்மயிர்கள், பக்கம் - பக்கங்களில், எரிய - விளங்கவும்,—கும்பம் உற்ற-பானையை யொத்த, உயர் நெற்றியின் - உயர்ந்த (தனது) நெற்றியிலே, விசித்து - கட்டப்பட்டு, ஒளி குலாம்-ஒளி வீசுகின்ற, உம்பருக்கு அரசன் மால் கரியின் - தேவேந்திரனுடைய பெரிய ஐராவதத்தினது, ஓடை - நெற்றிப்பட்டம், எயிறின் கிம்புரி - (அவ்யானையினது) தந்தத்தி லணியப்பட்ட பூண்களாகிய, பெரிய தோள்வளையொடும் - பெரிய வாகுவலயத்துடனே, கிளர - விளங்கவும்,—(எ - து.)

வீராதனுக்கு ஐராவதத்தினுடை நெற்றிப்பட்டமும். அதன்கிம்புரி வாகுவலயமு மாயின வென்க. உற்ற-உவமவுருபு: "வாளுற்ற கண்ணுள்," "செப்புற்ற கொங்கை" என்னுமிடங்களிற் போல். கும்பம் உற்ற - பானை போலவுள்ளமஸ்தகம் பொருந்திய என்றுமாம். உம்பருக்கரசன்-தேவராஜன். 'எயிற்றின்' என்பது, சந்தவின்பம்நோக்கி இரட்டாது நின்றது. **பி-மீ:**—[1]என, ஒளி. [2]களிறின். [3]எயிறுண். (கஉ)

ககூ. தங்கு திண்கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடுமை [1]யெண்பது புழுங்கி யெழுமா
[2]மங்கு பாதகம் விடங்கனல் [3]வயங்கி நிமிரக்
[1]கங்கு பூசிவரு கின்றகலி கால மெனவே.

(இ - ள்.) தங்கு-பொருந்திய, திண் - வலிய, கரிய காளிமை - மிக்க கறுப்பு, தழைந்து தவழ - செழித்துப் பொருந்தவும்,—பொங்கு - பொங்குகின்ற, வெம் - வெவ்விய, கொடுமை என்பது - கொடுமையென்கிற தீக்குணம், புழுங்கி எழ - கோபித்து வளரவும்,—(அவற்றினால்), மா மங்கு பாதகம்-மிக்கதொடிய பாவமும், விடம் - விஷமும், கனல் - நெருப்பும், வயங்கு நிமிர - விளங்கி ஓங்க, கங்கு பூசி வருகின்ற - இருளைப் பூசிக்கொண்டு வருகிற, கலிகாலம் என - கலிகாலமென்று சொல்லவும்,—(எ - று.)

கலிகாலத்தின் நிறத்தைக் கருமையாக்கூறுவது கவிமர பாதலால், 'கங்குபூசி வருகின்ற கலிகாலம்' என்றார். கலிகாலமென நிமிர என மாற்றி உரைப்பினுமாம். பி-ம்:—[1]வஞ்சனை. [2]மங்குல். [3]வயங்குதிமிரம். [4]கங்குல.

கடு. செற்ற வாளு ழுவைவன் செறியதட் [1]டிருகுறச்
சுற்றி [2]வாரண [3]வுரித்தொகுதி கீவி தொடரக்
கொற்ற மேவு திசையா னைமணிக் குலமுடைக்
கற்றை மாசுணம் விரித்து வரிகச் சொளிரவே.

(இ - ள்.) செற்ற - (தான்) கொன்ற, வாள் உழுவை - கொடிய புலியினது, தல் - கவிய, செறி - நெருங்கிய, அதள் - தோல், திருகுற - (உடற்பாகமாக) முறுக்கியிருக்கவும், வாரணம் உரி தொகுதி - யானையின் தோற் கூட்டம், கீவி தொட - அரைவஸ்திரமாகப் பொருந்த, சுற்றி - உடுத்துக் கொண்டு,—கொற்றம் மேவு - வெற்றிபொருந்திய, திசை யானையின் - திக்கஜங்களின், மணி குலம் - மணிகளது கூட்டத்தை, உடை - கோக்கப் பட்டுடைய, கற்றை மாசுணம் - திரண்ட மலைப்பாம்பை, விரித்து—, (அத்தனல்), வரி - (அந்தஅரையாடையின்மேல்) கட்டிய, கச்சு - இடைக்கச்சு, ஒளிர - விளங்கவும்,—(எ - று.)

செற்ற வாரணம் என்க. இனி, செற்றம் - கோபத்தையுடைய, வாளுழுவையென்றுமாம். இடையாடைமுடியை யுணர்த்தும் கீவி என்னும் வடசொல்-இங்கு இலக்கணையாய் ஆடைமாத்திரத்தை உணர்த்திற்று. நிகை = திரளா; வடமொழித்திரிபு. பி - ம்:—[1]திருகுற. [2]மாசுணம். [3]விரித்தவுரி. (கடு)

கசு. [1]செங்க ணங்கவர வின்பொரு வில்செம் மணிவிராய்
வெங்க [2]ணங்க வலயங்களும் [3]விலங்க விரவிச்
சங்க ணங்கிய சலஞ்சல மலம்பு தவளக்
கங்க ணங்களு மிலங்கிய கரம்பி றழுவே.

(இ - ள்.) செங் கண் அங்கம் அவிர் - சிவந்த கண்களோடும் (மண்ட) உடலையுமுடைய சர்ப்பங்களது, பொருவுஇல் - ஒப்பில்லாத, செம் மணி - சிவந்த மாணிக்கங்களே, விராய்-பொருத்திச்செய்யப்பட்டு, வெங்கண் - வெவ்விய தன்மையையுடைய, அங்கம் வலயங்களும் - அங்கத்திலே அணிதற்கு உரியவளைகளும்,-விலங்க-விளங்குமாறு, விரவி-பொருந்தி, சங்கு அணங்கிய-சங்குகள் வருந்திப்பெற்ற, சலஞ்சலம் - சலஞ்சலமென்னுஞ் சங்கவகைகளினை

லியன்ற, அலம்பு-ஒலிக்கின்ற, தவளம் கங்கணங்களும்-வெண்மையாகிய கைவளைகளும், இலங்கிய-விளங்குகின்ற, கரம்-கைகளில், பிறழ-விளங்கவும்—,—

வெங்கண் அங்க வலயம் - கொடியகண்களையுடைய அங்கத்திலணியும் வளை யென்றுமாம். சலஞ்சலம் - வலம்புரி ஆயிரஞ் சூழ்ந்த சங்கு. இனி. அணங்கிய சலஞ்சலச் சங்கென்று கூட்டி, அழகிய சலஞ்சலமென்னுஞ் சங்கு என்றுமாம். பி-ம்:—[1]செங்கணங்கரமெனும். [2]அங்கை. [3]இலங்கவணிய. (கசு)

கள. முந்து வெள்ளிமலை பொன்னின் மலையோடு முரணப்
[1]பந்தி னுந்துகழல் பாடுபட வூடி படர்வோன்
வந்து மண்ணினிடை யோரெனினும் வானி [2]னிடையோர்
சிந்தை யுள்ளும் விழியுள்ளு முளனென்ற திறலோன்.

(இ - ள்.) முந்து வெள்ளி மலை - சிறந்த கைலாசபருவதத்தையும். பொன்னின் மலையோடு - மகாமேருபருவதத்தையும். முரண - ஒன்றோ டொன்று மாறுபடும்படி. பந்தின் [1]பந்து-பந்துகளாக முன்னேதள்ளலில்லை. கழல் - கால்களால். பாடு பட - கம்பீரமாக. ஊடு படர்வோன் - நடையே செல்லுகின்ற தன்மையையுடையவனும்.—வந்து மண்ணினிடையோன் எனினும் - பூமியிலே வந்து சஞ்சரிப்பவனாயினும். வானின் [2]னிடையோர் - வானினிடத்திலுள்ள தேவர்களது. சிந்தையுள்ளும் - மனத்திலும், விழியுள்ளும் - கண்களிலும். உளன் - உள்ளவன், என்ற - என்று சொல்லப்படுகின்ற, திறலோன் - வலிமையையுடையவனும்.—(எ - து.)

பருமையின் ஊருக்குமிடமாதலால். 'முந்துவெள்ளிமலை' என்றார். பாடுபட - வருத்தமுண்டாக வென்றுமாம். இனி. வெள்ளிமலையும் பொன்மலையும் மாறுபட ஆடுகின்ற பந்தின்தன்மையையும் வீசியெறிகின்ற கழற்காயின்தன்மையையும் அடைய வென்றுமாம். விரைவினால் மேற் உண்டான மிக்க அச்சத்தால் தேவர்கள் எப்பொழுதும் அவனை இடைவிடாது நினைப்பதனாலும், கண்களுக்கு எதிரில் அவனுருவந் தோன்றுவது போலக் காணுதலாலும், 'வானினிடையோர் சிந்தையுள்ளும் விழியுள்ளு முளனென்ற திறலோன்' என்றார். பின்னிரண்டடி - முரண்விளைத்தழிவணி. வான் - சுவர்க்கலோகத்துக்கு இலக்கணை. பி - ம்:—[1]பந்துமுந்து. [2]இமையோர். (கள)

கஅ. பூத மத்தனையு மோர்வடிவு [1]கொண்ட புதிதென்
றோத வொத்த வுருவத்த னுருமொத்த குரலன்
காத வித்தய னளித்த கடையிட்ட கணிதப்
[2]பாத லக்க மத[3]வெற்பிடை படைத்த வலியான்.

(இ - ள்.) 'பூதம் அத்தனையும் - எல்லாப்பிராணிகளும், புதிது-புதுமையாய், ஓர் வடிவு கொண்ட - ஒரே உருவத்தை எடுத்து இவ்வாறு வந்தன,' என்று ஓத ஒத்த - என்று சொல்லத்தக்க, உருவத்தன் - வடிவத்தையுடையவனும்,—உரும் ஒத்த குரலன் - இடியோசையையொத்த குரலோசையை

யுடையவனும்,—அயன் - பிரமதேவன், காதலித்து-(தான்செய்ததவத்திற்கு) மகிழ்ந்து, அளித்த - கொடுத்த, கடை இட்ட - கடையிலே வைத்த, பாதம் - காலென்னுங் கணக்கையுடைய, லக்கம் கணிதம் - லக்ஷமென்னுங் கணக்காகிய, மத வெற்பு - மதயானைகள், இடை படைத்த - தங்களிடத்தே உடைத்தான, வலியான் - பலத்தையுடையவனுமான;—(எ - று.)—திறலோன் (கஎ) வலியோனை (கஅ) தொழிலினன் (கக) என்க.

பூதம் - பஞ்சபூதங்களாகவுங் கொள்ளலாம். அயன் - அஜன்: ஸ்ரீமகாவிஷ்ணுவினின்றுந் தோன்றியவ னென்பது பொருள்; கடையிட்ட பாதலக்கக்கணித மெனவே, ஸபாதலக்ஷம்; ஒன்றேகால்லக்ஷம்: லட்சத்து இருபத்தையாயிரம்; மேல், கடாய உயிர்ச்சத படலத்திலும் "அறைகடையிட்ட முக்கோடி" என்பர். பிரமதேவனதுவரத்தால் விராதன் லட்சத்திருபத்தையாயிரம் யானைபலம் பெற்றனனென்க. **பி-ம்:** [1]மிகாண்டு. [2]பாகலத்த. [3]வெற்பலை.

கக. சார வந்[1]தெதிர் [2]விலங்கினன் மரங்க டரையிற்
போ வன்கிரி பிளந்தக வளர்ந்தி கல்பெரு
வீர வெஞ்சிலையி னோரொதிர் விராத னெனுமக்
கோர வெங்க ணுருமே றனகொதிந் தொழிலினன்.

(இ - ள்.) விராதன் எனும் - விராதனென்கிற, அக்கோரம் வெங்கண் - அச்சத்தை யுண்டாக்குகின்ற வெவ்விய கண்களையும், உரும் ஏறு அன கொடுந் தொழிலினன் - ஆணிடி [பேரிடி] போன்ற கொடிய தொழிலினையுமுடையவன்,—(வருகின்ற வேகத்தால்). மரங்கள்—, தரையின் பே - டிடைவிட்டுப் பெயர்ந்து...வல் கிரி - வலிய மலைகள், பிளந்து உக - பிளந்து சிதறவும்,—வளர்ந்து - வளர்ச்சியையுடையனாகி, இகல் பெரு வீரம் வெஞ் சிலையினோர் - போரைப் பெருத்த வீரத்தன்மையையுடைய வெவ்விய வில்லினையுடைய ஸ்ரீராமலக்ஷ்மணர்களது, எதிர் - முன்னே, சார வந்து - கிட்டவந்து,- எதிர் விலங்கினன்-எதிராக [குறுக்கே] நின்றனன்; (எ - று.)

எட்டாஞ்செய்யுள்தொடங்கி வந்த 'தனது'முதலிய செயவெனெச்சங்கள்-அடுக்கி, இச்செய்யுளிலுள்ள 'சார வந்தெதிர்விலங்கினன்' என்பதனோடு தொடரும். தொழிலினன் (கக) கழுவொடே (சு) முடுகி(எ), வளர்ந்து எதிர்சார வந்து விலங்கினன் என்க. "தினவுறு முழவுத் தோளினன்" என்றற்போல, 'இகல்பெரு வீரவெஞ்சிலையினோர்' என்றார். **பி-ம்:**—[1]அயல். [2]லிலங்கின.

ஐ.—விராதன் சீதையை எடுத்துச்சொல்லுதல்.

நில்லு நில்லுமென வந்து நிணமுண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறு மின்னு பருவாய் முழைதிறக்
தல்லி புல்லுடலி ரன்ன மனையாளை யொருகைச்
சொல்லு மெல்லியின் முகந்துயர் விசும்பு தொடர.

இதுமுதற் பதினேட்டுக்கலிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நிணம் உண்ட - மாமிசத்தைப் புசித்த, நெடு வெள் பல்லும் - நீண்ட வெள்ளிய பற்களும், வல் எயிறும் - வலிய கோரப்பற்களும், மின்னு-

விளங்குகின்ற, முழை பகு வாய் - மலைக்குகைபோன்று பிளவுபட்டவாயை, திறந்து—, நில்லும் நில்லும் என - (அவர்களை) 'நில்லுங்கள் நில்லுங்கள்' என்றுசொல்லிக்கொண்டு, வந்து—, அல்லி புல்லும் மலர் - இதழ்கள்நெருங்கிய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற, அன்னம்-திருமகளாகிய, மனையாளை - (ஸ்ரீராமனது) மனைவியான சீதையை, சொல்லும் எல்லையின்-ஒருவார்த்தை சொல்லும்பொழுதில் [கணப்பொழுதி லென்றபடி]. ஒரு கை - ஒருகையால். முகந்து - எடுத்துக்கொண்டு, உயர் விசும்பு - உயர்ந்த ஆகாசமார்க்கத்தில். தொடர்-செல்லாநிற்க,—(எ-று.)—'அதுகண்டு' என மேற்கவியிற்கூடரும்.

நில்லும் நில்லும் - வெகுளியின்கண் அடுக்கிவந்தது. அன்னம்போன்ற நடையையுடைமையின், 'அன்னம்' என்றார்; உவமவாகுபெயர். மலரன்ன மெனவே, திருமக ளென்றகாயிற்று. அன்னம் அனையாள் எனப் பிரித்து-தாமரையிலுள்ள அன்னம்போன்றவ ளெனவுமாம். சொல்லுமெல்லையின் என்பதற்கு - தான் நில்லு நில்லுமென்று சொல்லுஞ் சொல் முடிவதற்கு முன்பே யென்றுமாம். (20)

உக.—ராமலக்ஷ்மணர் விராதன்போக்கைத் தடுத்துக்கூறுதல்.

காளை மைந்தரது கண்டு கதம்வந்து [1]கதுவத்
தோளின் வெஞ்சிலை யிடங்கொடு தொடர்ந்து சுடர்வாய்
வாளி தங்கிய வலங்கை யவர்வஞ்சனை [2]யடா
[3]மீளு கெங்ஙகறி யென்பது விளம் பவனும்.

(இ - ள்.) காளை மைந்தர் - இளவெருதுபோன்ற அவ்விராமலக்ஷ்மணர்கள்.—அது கண்டு - அதனைப் பார்த்து, கதம் வந்து கதுவ - கோபம் பிறந்து வளர,—தோளின் வெம் சிலை - தோளிலே தரித்திருந்த வெல்லிய வில்லை, இடம் கொடு - இடக்கையிலே பிடித்துக்கொண்டு, சுடர் வாய் வாளி தங்கிய - ஒளியோடுகூடிய நுனியினையுடைய அம்பு பொருந்திய, வல கையவர் - வலதுகையை யுடையவர்களாய், [யுத்சன்னத்தராய்], தொடர்ந்து - (அவ்வரக்கனைப்) பின்தொடர்ந்து 'அடா—! வஞ்சனை - வஞ்சனையால், எங்கு அகறி - எங்கே நீங்கிச்செல்கிறாய்? மீளுக-திரும்புவாயாக,' என்பது - என்கிற வார்த்தையை, விளம்ப - சொல்ல,—அவனும் - அவ்வரக்கனும்,—(எ - று.)—'புகல' (உஉ) என்க.

காளை - காம்பீரியத்துக்கும், வலிமைக்கும், நடைக்கும் உவமை. அடா - இழிபுணர்த்துவதோர் ஆண்பால்விளி. பி-ம்:—[1]கதுவி. [2]எடா. [3]மீன்கி. (உ-ங)

உஉ.—விராதனது சேருக்குமொழி.

ஆதி நான்முகன் வரத்தி னெனதாவி யகலே
னேதி யாவதுவு மின்றி யுலகியாவு மிகலிற்
சாதி யாதனவு மில்லை யுயிர்த்தந் தனை[1]னடா
[2]போதிர் மாதிவளை யுந்தி யினிதென்று புகல.

(இ - ள்.) 'ஆதி ஈன்முகன் வரத்தின் - முதன்மையாகிய பிரமதேவன் கொடுத்த வரத்தினாலே, எனது ஆவி அகலேன் - எனது உயிர் நீக்கப்பெறேன்; உலகு யாவும் - எல்லா உலகத்தவரும், இகலினும் - எதிர்த்துப்போர் செய்தாலும், எதி யாவதுவும் இன்றி - ஆயுதமொன்றும் இல்லாமலே, சாதியாதனை - (என்னால்) வெல்லக்கூடாதனை, இல்லை - (அவற்றில் எவையும்) இல்லை; அடா—! உயிர் தக்கனன் - (உங்கட்கு) உயிரை (யான்) கொடுத்தேன்; மாது இவளை உந்தி - இப்பெண்ணை (என்னிடத்தில் விட்டு, இனிது போதிர் - சுகமாய்ப் போய்சேருங்கள்', என்று புகல - என்றுசொல்ல,—

(ஏ - று.)—'தெரியா...படைத்தபொழுது' (உரு) என்க.

எதி - ஹேதியென்னும் வடசொல்லின் விகாரம். உலகு - லோகமென்னும் வடசொல்லின் திரிபு; இது. இங்கே ஆகுபெயர். உலகியாவும்-குற்றியலிகரம். உம்மை மாறுக. அடா போதிர் - ஒருமைபன்மைமயக்கம். காதலென்னும் பொருளதாகிய மாதென்னும் உரிச்சொல், ஈறுகுறைந்து, ஆகுபெயராய்ப் பெண்ணை உணர்த்திற்று. பி-ம்:—[1]எடா. [2]போதி.

இனி, 'ஆதி - முதல்வனே! ஈன்—. முகன் - (உங்களுக்கு) எதிரிலே. வரத்தின் - வருதலினால், எனது ஆவி அகலேன் - எனதுஉயிர் நீடித்திருக்கப்பெறேன்; உலகு யாவும் - உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளிடத்திலும், எதி யாவதுவும் இன்றி - ஆயுதமொன்று மில்லாமலே [நிராயுதமாக], இகலின் - பகைமைகொண்டு, சாதியாதனவும் - (யான்) செய்யாதகிருத்தியங்களும், இல்லை—; அடா - (இவ்வாறுசெய்தது எனக்குத் தகாதனவேயாம்; உயிர்த்தனன் - (எனது) உயிரைக்கொடுத்துவிடுகின்றேன்; [வீர் என்னைக் கொன்றபின்பு]. மாது இவளை - இப்பெண்ணை [சீதையை], உந்தி - அழைத்துக்கொண்டு, இனிது போதிர் - சுகமாகப்போவீர்களாக,' என்றுபுகல—, என இச்செய்யுள் அமைக்கலமாகப்பொருள்பட்டு, விராதன் இறப்பதை முன்னமே தெரிவிக்குமெனக் கூறுவர். (உஉ)

உரு.—இராமபிரான் நாணேலியேழுப்புதல்.

வீர னுஞ்சிறிது [1]வெண்முறு வல்வெண் ணிலவுகப்
போர றிந்தில னிவன்றனது பொற்பு [2]முரணுந்
தீரு மெஞ்சியென நெஞ்சி னுறுகிந்தை [3]தெரியாப்
பார வெஞ்சிலையி னாணெலி பண்டைத்த பொழுதே.

(இ - ள்.) வீரனும்-ஸ்ரீராமசந்திரனும்,—சிறிது வெள் முறுவல்-வெண்மையான புன்சிரிப்பாகிய, வெள் நிலவு - வெள்ளிய நிலா, உக - தோன்ற, [புன்சிரிப்புச்சிலம்பு]. 'போர் அறிந்திலன் - (இவன்) யுத்தத்தின் தன்மை அறிந்தானிலன்; இவன் தனது - இவனது, பொற்பும் - பொலிவும், முரணும் - வலிமையும், எஞ்சி தீரும் - குறைந்து அழிந்துவிடும்', என - என்று, நெஞ்சின் உறு சிந்தை தெரியா - (தன்) மனத்திற் பொருந்திய கருத்தால் ஆலோசித்து அறிந்து,—பாரம் வெம் சிலையின் - பாரமாகிய வெவ்விய

(கோதண்டமென்னும்) வில்லில், நாண் ஒலி - நாணின் ஓசையை, படைத்த பொழுது - உண்டாக்கியகாலத்தில்,—(எ - று.)—'உற' (உச) என்க.

முறுவலே கிலவென்றதற்கு ஏற்ப, வீரனென்பதற்கு ஸ்ரீராமசந்திரனென்று உரைக்கப்பட்டது. இனி, நாஞ்ஞலிகேட்டவர்கள் இவ்வரக்கனது பொற்பும் முரணும் எஞ்சித்தீருமென்னும்படி நாஞ்ஞலிபடைத்தபொழுது என்றுமாம். பி-ம்:—[1]மெல். [2]ரணும். [3]நிரிபப். (உ-ங்)

உசு.—நாஞ்ஞலியின் வருணனை.

இலைகொள் வேலட லிராம னெழுமேக வுருவன்
சிலைகொ ணிணைடிய தேரதை யொலியேறு [1]திரைநீர்
மலைக ணீடுதல நாகர்பிலம் வான [2]முதலா
முலக மேழு முருமே றெனவொலித் தூறவே.

(இ - ள்.) எழு மேகம் - (காற்காலத்தே மழைபொழிவதற்கு) எழுகின்ற நீலமேகத்தின் நிறம்போன்ற திருநிறமுடையவனும், இலை கொள் வேல் - அரசிலைவடிவுத்தைக் கொண்ட வேலினையும், அடல் - வலியையுமுடைய, இராமன் - ஸ்ரீராமனது, சிலை - கோதண்டத்தில், கொள் - ஏறிட்ட, நாண் - நாணியாகிய, கெடிய தேரை - நீண்ட கயற்றின், ஒலி எறு-மிக்க ஓலியானது,—திரை நீர் - அலைகளையுடைய கடல் சூழ்ந்த, மலைகள் நீடு - மலைகள் உயர்ந்திருக்கப்பெற்ற, தலம் - பூலோகமும், நாகர் பிலம் - சர்ப்ப ஜாதியாரது பாதாளலோகமும், வானம் - சுவர்க்கலோகமும், முதல் ஆம் - முதலாகிய, உலகம் ஏழும் - ஏழுலகங்களிலும், உரும் ஏறு என - இடியேறுபோல, ஒலித்து ஊற - பேரொலிசெய்யாநிற்க,—(எ - று.)—'அழலா' (உநி) என்க.

காத்தற்றொழிலன்றி அழித்தற்றொழில்பூண்ட முக்கட்கடவுட்குச் சூலவேல் படையாதலானும், முருகற்கு வேல் படையாதலானும், சான்றோர் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறலானும், வேலைக் கூறி, அதனல் ஏனைப்படைகளெல்லாம் பெறவைத்தார். உரு - நிறமாதல் "உருவேயட்டையும் வடிவு நிறமும்" என்பதனுல் அறிக. 'நிலை நாகர்பிலம் வானம்' என்றதனுல், சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூவுலகங்களைக் கூறி, மற்றையவற்றையெல்லாம் 'முதலாம்' என்றதனுல் பெறவைத்தார். உலகமேழ் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜநலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்னும் மேலுலகேழும்; அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்னும் கீழுலகேழுமாம். 'நாகர்' என்பதற்கு - தேவரென்றும் பொருள் கூறி, வானத்தோடுங்கூட்டலாம். இனி, வில்நாணினது ஒலி, ஏறு - சென்று போந்து, உலகமேழும், ஒலித்து ஊற - பிரதித்வனிசெய்ய என்றுமாம். பி-ம்:—[1]திசை. [2]முதலா.

உஞ். —விராதன் சீதையை விட்டிட்டுச் சினந்துபோர,
இராமபிரான் உடன்போந்தலை இனிப்பத்துக்கவிகளிற் கூறுகின்றார்.

வஞ்ச கக்கொடிய பூசை [1]நெடுவாயின் மறுகும்
பஞ்ச ரக்கினி யெனக்கதறு பாவை யைவிடா

நெஞ்சு ளுக்கின னெனச்சிறிது நின்று நினையர்
வஞ்ச னக்கிரி யனைனெதி ரரக்க னழலா.

(இ - ள்.) அரக்கன் - அவ்விராதன்,—வஞ்சகம் கொடிய பூசை நெடு வாயில் - வஞ்சனைத்தன்மையையுடையதாகிய கொடுந்தன்மையையுடைய பூனையின் பெரிய வாயிலே, மறுகும் - (அகப்பட்டு மனங்) குழம்புகின்ற, பஞ்சரம் கிளி என - கூட்டிலுள்ள கிளிபோல, கதறு - அழுது கூக்குரலிடு கின்ற, பாவையை - சீதையை, விடா - கீழே விட்டு, நெஞ்சு உளுக்கினன் என - மனஞ்சிதைத்தவன் போல, சிறிது நின்று நினையா - சற்றே நின்று ஆலோசித்து, அஞ்சனம் கிரி அனைன் எதிர் - மைம்மலை போன்ற அந்த ஸ்ரீராமனுக்கு எதிரில் (வந்து) நின்று), அழலா - கோபித்து,—(எ - று.)—'எறிய' (உக) என்க.

பூசை - இல்லுறை பூனை. பஞ்சரம் - பறவைகளை வைத்து வளர்க்கும் கூடு. பஞ்சரக்கிளி - கூட்டில் வைத்துப் பலகாலாகப் பாலூட்டி இன்மொழி பயிற்றி வளர்க்கப்பட்ட கிளி. ஒருவாற்றானுந் தப்பிப்பிழைத்துச் செல்ல நெறியறியாத மெல்லியகிளி யென்பது விளக்க, பஞ்சரக்கிளியை உவமை கூறினர். பாவை - சித்திரப்பாவை; அதுபோன்றவளுக்கு உவமவாகு பெயர். அஞ்சனக்கிரி - கிறத்துக்கும், துளக்கலாகாத வலிமைக்கும், கம்பீரமான தோற்றத்துக்கும் உவமை. அரக்கன் - ராக்ஷஸ் என்னும் வட சொல்லின் விகாரம். பி - மீ:—[1]வரு. (உந)

உசு. பேய்முக பிணி யறப்பகைஞர் பெட்பி னுதிரந்
தோய்முக த்தது கனத்தது சுடர்க்கு திரையின்
[1]வாய்முக த்திடை நிமிர்ந்து வடவேலை பருகுந்
தீமுக த்திரி சிகைப்படை திரித்தெ றியவே.

(இ - ள்.) பேய்முகம் பிணி - பேய்களினிடத்தேயுள்ள (பசியாகிய) நோய், அறநீங்க, பகைஞர்-பகைவர்களது, உதிரம் - இரத்தத்திலே, பெட் பின்-விருப்பத்தோடு, தோய் - தோய்ந்த, முகத்தது-நுனியையுடையதும்,—கனத்தது - பாரமுடையதும்,—வட(வை) குதிரையின் - படபையென்னும் பெண்குதிரையினது, வாய்முகத்திடை-வாயினிடையே, நிமிர்ந்து-தோன்றி வளர்ந்து, வேலை பருகும் - கடல்நீரைக் குடிக்கின்ற, சுடர் தீ - ஒளியினை யுடைய நெருப்புப்போன்ற நெருப்பை, முகம் - நுனிமுகத்திலேயுடைய, திரி சிகை - மூன்று நுனிகளேயுடையதுமாகிய, படை - சூலாயுதத்தை, திரித்து - சுழற்றி, எறிய - (ஸ்ரீராமன்மேற்) பிரயோகிக்க,—(எ - று.)—'வரலும், இராமன்வாளிவிட' (உஎ) எனத்தொடரும்.

விராதனெறிந்த சூலாயுதம், பகைவருடலிலே குத்தி அவ்வுடலைப் பேய் கள் பகிரீங்கி வயிரமுத்தினும்படி அவர்களைக்கொல்வதனால் உதிரந் தோய்ந்த முகத்தையுடைய தென்க: இனி, இவனிடத்தேயுள்ள பசிப்பிணி யாகிய பேய் அறும்படி யென்றுமாம். பகைவரைக் கொல்லுந் தொழிலிலே

அரக்கனுக்குஉள்ள விருப்பத்தை அவன்படைமே லேற்றி, 'பெட்பினுதிர்த் தோய் முகத்தது' என்றார். இனி, பெட்பின் உதிர்ம்-விரும்பப்படும் இரத்தமெனினுமாம். கடலினிடையே யுள்ள தொரு பெண்குதிரையின் முகத்தினின்றுந் தோன்றுகின்ற தீ, அக்கடல்நீரை மழைமுதலியவற்றால் மிகாதபடி வற்றச்செய்யு மென்க. வட(வைக்)குதிரையென மாறுக. படபா என்னும் வட சொல்லின் விகாரமாகிய வடவையென்பது, ஈறு குறைந்து வட என நின்றது: இனி, வடவை வடகடலின்புறத்திலுள்ளதனால் இவ்வாறு கூறப்பட்டதென்றலுமொன்று. அன்றி, வட வேலை - வடசமுத்திரம்: இனி, வட்டமாகிய கடலென்றுமாம். வேலை வேலா என்ற வடசொல்லின் திரிபு; கரையின் பெயர் கடலுக்கு இலக்கணையாய். பின்பு அது அதன் நீர்க்கு ஆயிற்று. சூலத்திலே தோன்றுகின்ற அக்கினிச்சுவாலை பகைவராகிய கடலை வற்றச்செய்தலால், அதற்குவடவைத்தீயை உவமைகூறினர். திரிசிகை - வட சொற்றிரிபு. திரிசிகைப்படை - முத்தலைச்சூலம். பீ - மீ:—[1]வாய்முகத்துற. (உசு)

உஎ. திசையும் வானவரு நின்ற திசைமாவு முலகு
மசையு மாலமென வண்ணவயின் [1]மின்னி வரலும்
வசையின் மேருமுதன் மால்வரைக ளோரின் வலிசால்
விசைய வார்சிலை யிராம னெருவாளி விடவே.

(இ - ள்.) அன்ன அயில் - அத்தச்சூலாயுதமானது;—திசையும் - எட்டுத்திக்குக்களும். வானவரும் - (அத்திக்குக்களிலுள்ள) அஷ்டதிக்பாலகர்களும். திசை நின்ற மாவும் - அத்திக்குக்களிலே நின்ற அஷ்டதிக்கஜங்களும். உலகும் - எல்லாவுலகங்களும். அசையும் - கலக்குதற்குக் காரணமான. ஆலம் என - ஹாலாஹலமென்னும் விஷத்தைப்போல. மின்னி-மின்னிக்கொண்டு. வரலும் - வந்துவளவில்.—இராமன்—. வசை இல் - குற்றமில்லாத. மேரு (இன்) - மகாமேருபர்வதம் போலவும். முதல் மால் வரைகள் ஏழின் - சிறந்த பெரிய ஸப்தகுலபர்வதங்கள்போலவும். வலி சால்-வலிமைமிகுந்த. விசையம் - வெற்றியைத் தருகின்ற. வார் - நீண்ட. சிலை-கோதண்டத்தில், ஒரு வாளி விட-ஒப்பற்ற ஓரம்பைத் தொடுத்துவிட,—(எ - று.) 'அற்றகண்டமவையாசையின தந்தமுற' (உஅ) என்க.

திசை வானவர் - இந்திரன், அக்நி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். திசைமா - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதீகம்; இவற்றிற்கு முறையே பிடிகள் - அப்பிரமை, கபிலை, பிங்களை, அநுபமை, தாமிரபருணி, சுப்பிரதந்தி, அஞ்சனை, அஞ்சநாவதி. 'மா' - விலங்கின் பொதுப்பெயர் சிறப்பாய் யானைக்கு வந்தது. முன்னும் பின்னும் 'திசையும்,' 'திசைமாவும்' எனக் கூறியதனால், அவற்றிற்குஏற்ப. நடுநின்ற 'வானவர்' என்பதற்கு-திசைக்காவல ரென்று உரைக்கப்பட்டது; அவர்களைக் கூறவே, ஏனைய வானவரும் அடங்குவர். ஆலம் - ஹாலாஹலமென்பதன் விகாரம். வரைகளேழ் - கயிலை,

இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நிலகிரி. 'இன்' உருபை மேருவோடும் கூட்டுக. இனி, மால் வரைகளேழினும் முதன்மையதாகிய வகையில்லாத மேருவினும் வலிகான்ற சிலை பென்றுமாம். விஜயம் - விசய மெனத் திரிந்து, எதுகைநோக்கிப் போலியாயிற்று. ஒரு-இட்டுறமொழிதல். **பி - மீ:**—[1]மின்ன. (உஎ)

உஅ. இற்ற தின்முடிவ் வாக்கர்குல மென்று பகலே
வெற்ற விண்ணினிடை நின்று நெடுமீன் விழுவபோற்
சுற்ற மைந்த சுடரெஃகம திரண்டு துணியா
வற்ற கண்டமவை யாசையின தந்த முறவே.

(இ - ள்.) 'இது அரக்கர் குலம் - இவ்விராக்கதக்கூட்டம், இன்முடு - இற்றைநாளுடனே, இற்றது - முடிந்தது' என்று - என்றுகுறிப்பித்து, பகலே - பகற்காலத்திலே, வெற்ற விண்ணினிடைநின்று - வெறுமையாகிய ஆகாயத்தினிடத்தினின்றும், நெடு மீன் - பெரிய நக்ஷத்திரங்கள், விழுவ போல்-விழுவனபோல;—சுற்று அமைந்த சுடர் - சுற்றிலும்பொருந்திய ஒளியினையுடைய, எஃகம்அது-அந்தச்சூலமானது, இரண்டு துணி ஆ-இருதுண்டாக, அற்ற - அறுந்துவிழுந்த, கண்டம்அவை-துண்டங்கள், ஆசையினது அந்தம் - திக்குக்களின் எல்லையை, உற-அடைய;—(எ - று)—கண்டு, **விடலும்** (உக) என்க.

பகலிலே நக்ஷத்திரம் விழுதல், பின்னே கழுந் தீமையைக் குறிப்பித்தற்குமுன்னே தோன்றும் உற்பாதம். இற்றது - விரைவினாலுந் தெளிவினாலும் வந்த காலவழுவமைதி. மீன் - மின்னுதலையுடையதெனக் காரணப் பெயர். எஃகு - கருவியாகுபெயர்; அம் - சாரியை. அது, அவை-பகுதிப் பொருள்விகுதி. துணி-துணிபட்டபொருள். கண்டம், ஆஸ்ர என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. ஆசையினதந்த முறுதல்-இருபுறத்திலும் நெடுந்தூரம் போய் விழுதல். (உஅ)

உக. சூரொ டுங்கயி றுணிந்திறுதல் கண்டு சிறிதும்
போ[1]ரொ டுங்கலன் மறங்கொடு புழுங்கி நிருதன்
பாரொ டுங்குறு கரங்கொடு பருப்ப தமெலாம்
வேரொ டுங்கடி தெடுத்[2]தெதிர் விசைத்து விடலும்.

(இ - ள்.) நிருதன் - அவ்வரக்கன்,—சூர் ஒடுங்கு அயில் - தேவர்களும் அடங்குதற்குக் காரணமான (தனது) சூலாயுதம், துணிந்து இறுதல் - துணிபட்டு விழுந்ததனை, கண்டு - பார்த்தும், போர் சிறிதும் ஒடுங்கலன் - போர் செய்தலிற் சற்றுந் தளர்ச்சியில்லாதவனாய்,—மறம் கொடு - கௌரியத்தைக் கொண்டு, புழுங்கி - கோபித்து, பார் ஒடுங்குறு கரம் கொடு - பூமியும் ஒடுக்கமடையும்படியான [மிகவும்நீண்ட] (தனது) கைகளால், பருப்பதம் எலாம் - மலைகள் பலவற்றையும், வேரொடும் - வேரோடு, கடிது எடுத்து - விரைவாகப் பிடுங்கி யெடுத்து, எதிர் - (இராமனுக்கு) எதிரே,

விசைத்து விடலும் - வேகமாய் எறிந்தவளவில்;—(எ - று.)—'கடவலான் உடல்ஊறுபடலும்' (கூ0) என்க.

இச்சூலத்தைக் கொண்டு தேவர்களையெல்லாம் அடக்கி வென்று வந்தனன்; 'சூரொடுங் கயில்' என்றார். 'சூரும்' 'நண்டும்' என்ற சிறப்பும்மைகள் விகாரத்தால் தொக்கன. பாரொடுங்குறு கரம் - நிலவுலகத்தவர் அஞ்சி யொடுங்குதற்குக் காரணமான கர மென்றுமாம். பருப்பதம் - பர்வதம். **பி - ம்**—[1]ஒடுங்கிலன். [2]அவன். (உக)

கூ0. வட்ட [1]மிட்ட கிரியற்றுக வயங்கு வயிரக்
கட்[2]ட மைந்த கதிர்வாளி யெதிரே கடவலான்
விட்ட விட்ட[3]மலைமீள வவன்[4]மெய்யின் விசையாற்
பட்ட பட்டவிட மெங்கு முடலூறு படலும்.

(இ - ள்.) வட்டம்இட்ட-(விசாதனால் எறியப்பட்டுத் தன்னைச்) சூழ்ந்து வருகின்ற; கிரி - மலைகள்; அற்று உக-பிளவுபட்டு விழும்படி.—(இராமன்.) வயங்கு - விளங்குகின்ற, வயிரம் கட்டு அமைந்த - உறுதியாகிய கட்டுப் பொருந்திய; கதிர் வாளி - கூர்மையையுடைய பாணங்களை; எதிரே கடவலான்-(அம்மலைகளுக்கு) எதிராக எய்தனனால்,—விட்ட விட்ட மலை-(அவன்) மேன்மேல்விட்ட மலைகளெல்லாம். மீள - திரும்பவும், அவன் மெய்யின் - அவ்வரக்கனுடலில், விசையால் - வேகத்தோடு. பட்ட பட்ட இடம் எங்கும்-பட்டபட்ட இடங்களி லெல்லாம். உடல் - உடம்பு; ஊறுபடலும்-காயப்பட்ட வளவில்;—(எ - று.)—'எற்றவடலும்' (கூக) என்க.

உக கடவலான் மீள ஊறுபடலும என இயையும. வட்டம=சுருக்கும். கிரி, மலை - சாதியொருமை. வயிரக்கட்டு - வச்சிரத்தாலாகிய கட்டுமாம். கட்டு - புங்கம். வயிரக்கட்டமைதல் - மிக்க வலிமை பொருந்துதலுமாம். கதிர் - ஒளியுமாம். **பி-ம்:**—[1]இட்டுமிளிர்நெற்றியின். [2]அமைத்த். [3]வலை. [4]மெய்யில். (கூ0)

கூக. ஓம ராமரை யொருங்கு முணர்வோ ருணர்வுறு
நாம ராமவரை நல்லற நிறுத்த நணுகித்
தாம ராவணை துறந்து தரைநின்ற வரையோர்
மாம ராமர மிறுத்தது கொடெற்ற வரலும்.

(இ - ள்.) ஓர் மா மராமரம் இறுத்து - ஒரு பெரிய மராமரத்தை வேரோடு பிடுங்கி; அதுகொடு-அதனால்;—(அவ்வரக்கன்),—ஒருங்கும் உணர் வோர் - முற்றும் அறிந்த தத்துவஞானிகள், உணர்வுறும் - அறிந்துதியானிக் கின்ற; நாமர் ஆம் அவரை - திருநாமங்களையுடையவரும், நல் அறம் நிறுத்த - நல்ல தருமத்தை நிலைநிறுத்துதற்காக, தாம்—, அரா அணை துறந்து - ஆதி சேஷசயனத்தை விட்டு, தரை நணுகி நின்றவரை-பூமியில் வந்து திருவவதரித் தவருமாகிய; ஓம் அ ராமரை-பிரணவமந்திரத்தின் பொருளாகிய அந்த ஸ்ரீராம

ரை, எற்ற-மோத, வாலும்-வங்கவளையில்,—(எ - று.)—'விழுத்தி. அழுத்த' (உஉ) என்க.

அகரச்சுட்டு - பிரசித்தியைக்காட்டும். இனி. ஓமமென்பதனை ஹோம மென்பதன்விகாரமாக்கொண்டு, யாகத்தின் ஸ்வரூபமும். சாதனமும், அங்க மும். விஷயமும். பயனும். செய்பவரும். செய்விப்பவரும். நிறைவேற்றுபவ ரும். பெற்றுக்கொள்பவரும். முலவருமாகிய இராம னென்று கொள்ளலாம். துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்து மறத்தைவீட்டி அறத்தைநாட்டத் திருவவதரித்தனனல், 'கல்லறநிறுத்த கணுகிநின்றவர்' என்றார். 'தாமரை வாணுதறந்து' என்றதனால். அத்திருவவதாரமூர்த்தியான் இலேயபெருமாளாய்த் திருவவதரித்துச் சிறிதும் இடைவிட்டுப்பிரியாது கூடவிருக்கும் நிலைமை ஒருவாறு குறிப்பிக்கப்பட்டது. அடிதோறும் முதலெழுத்துத்தவி - இரண்டு முதலிய சில எழுத்துக்கள் ஒன்றின்று பொருள்வேறுபட்டுவந்தனல். இச்செய்யுள் - தீரிபுஎன்னுஞ் சொல்லணியாம். (உக)

உஉ. ஏறு சேவக னிரண்டினெ டிரண்டு கணையால்
வேறு வேறுதுணி செய்தது [1]விழுத்தி விசையான்
மாறு மாறுநிமிர் தோளிடையு மார்பி னிடையு
மாறு மாறுமயில் வெங்கணை யழுத்த வவனும்.

(இ - ள்.) ஏறு சேவகன் - உயர்ந்த [மகர] வீரஞ்கிய ஸ்ரீராமன். இரண் டினெடு இரண்டு கணையால்-நான்குபாணங்களால். அது - அம்மராமரத்தை, வேறு வேறு துணிசெய்து - வெவ்வேறுகத் துணிபடச்செய்து. விழுத்தி - கள்ளிவிட்டு. நிமிர் தோளிடையும் - (அனைகு) உயர்ந்த தோள்களிலும். மார்பினிடையும் - மார்பிலும். மாறு மாறு-மாற்றிமாற்றி. விசையால்-வேகத் தோடு. ஆறும் ஆறும் - அவ்வாறுகிய. அயில் வெங் கணை - கூரிய வெவ்விப அம்புகளை. அழுத்த-அழுத்தச்செய்ய.—அவனும்-அவ்வாறுகனும். (எ - று.)—'உதற' என்க.

இனி. ஏறுபோலுஞ் சேவகனென வுரைப்பின், கடையாலும் வீரத்தா லும் காம்பீரியத்தாலுஞ் சிங்கமே நிறைப்போன்றவ னென்க: "ஏறுசேவக னார்க்கு" என்றார் கம்மாழ்வாரும். பி-ம்:—[1]விழுத்து. (உஉ)

ஊ. மொய்த்த முட்டன தூடற்றலை [1]தொளைப்ப முடுகிக்
[2]கைத்த லத்தி னிமிரக் கடிதுகன்றி விசிறு
மெய்த்த மெய்ப்பெரிய கேழ லெனவெங்கும் விசையிற்
றைத்த [3]வக்கணை தெறிப்பமெய் சிலிர்த்து தறவே.

(இ - ள்.) மொய்த்த - (மிகுதியாக) செருங்கிய. முள்-கூரிய அம்புகள். தனது உடல்தலை - தன்னுடலினிடத்தே. தொளைப்ப - தொளைசெய்தனல். முடுகி - விரைந்து. கடிது கன்றி - மிகவும் மனம்வெதும்பி. கைத்தலத்தின் எங்கும் - (தன்) தோள்முழுவதும். விசையின் - வேகத்தோடு. தைத்த—. அக்கணை - அவ்வம்புகள். நிமிர் தெறிப்ப - நிமிர்ந்து தெறிக்கும்படி. விசிறும்-

வீசியுதறுகின்ற. எய்த்த-மூட்களைக்கொண்ட, மெய்-உடம்பையுடைய, பெரிய-, கேழல் என-முள்ளம்பன்றி போல, மெய்-(தன்) உடம்பை. சிலிர்த்துஉதை—. —(எ - று.)—'இராமன் கணைவிட உணர்வுசோர்வுறுதலும்' என்க.

முள் - கூரிய அம்புக்கு இலக்கணை. எய்த்த - 'எய்' என்ற பெயர்ப் பகுதியினடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இனி, நெருங்கிய முள் களது உடலிலிருந்து தொளைத்து வருத்துதலால் மிகக்கோபித்து விரைந்து உதறுகின்ற இளைத்தஉடம்பையுடைய பெரியகேழல்போல. தனதுதோளிலே ராமபாணங்கள் மிகுதியாகத் தைக்கக் கடிதுகன்றித் தைத்த அக்கணை விசை யின் எங்குந்தெறிப்ப மெய்சிலிர்த்து உதற என அநுவயித்துப் பொருள் கூறவுமாம். பி-ம்:—[1]முளைத்த. [2]கைத்தவற்றின். [3]வென். (உஎ)

கூச. எரியின் வார்கணை யிராமன்விட வெங்கு நிலையா
துருவி யோடமற மோடு தல்செயா வுணர்வி னு
னருவி பாயும்வரை போற்குருதி யாறு பெருகிச்
சொரிய வேகவலி கெட்டுணர்வு சோர்வு றுதலும்.

(இ - ள்.) (பின்னும்), இராமன்—, எரியின் வார் கணை-நெருப்புப்போ ன்ற நீண்டஅம்புகளை, விடப்பி-யோகிக்க, (அவ்வம்புகள்), எங்கும் நிலையாது-எங்குந் தடைப்பட்டு நிற்காமல், உருவி ஓட-ஊடுருவிச்செல்லாநிற்க,—மறம் ஓடுதல் செயா உணர்வினுன்-கொடுந்தன்மையிற் காத அறிவினையுடைய அவ் வரக்கன், வரை பாயும் அருவி போல்-மலையினின்றும் பாய்கிற நீருவி போல, குருதி ஆறு - இரத்தவாறு, பெருகி சொரிய - (தன்னுடலினின்றும்) பெருகி வழிவதனால், வேகம் வலி கெட்டு-(தனது) உக்கிரமான பல மழிந்து, உணர்வு சோர்வுறுதலும் - அறிவழிந்து [மூர்ச்சித்து] அளவில்—(எ - று.)— 'துணித்துமென தோளிருவரேற' (கூஞ) என்க. வேகவலி - வேகமும் வலியு மென்றுமாம். (கூச)

கூஞ.—ராமலக்ஷ்மணர் விராதன்கையை வெட்டுமாறு அவன் தோளிலேறுதல்.

மெய்வ ரத்தினன் மிடற்படை விடப்ப டுகிலன்
செய்யு மற்றுமிக லென்று சினவா ளருவிவன்
கைது ணித்துமென முந்து கடுகிப் படர்புயத்
[1]தெய்வின் மற்பொருவு தோளிருவ ரேற நிருதன்.

(இ - ள்) மெய்வ ரத்தினன் - மெலிதலில்லாத. மல் பொருவு - மற்போர் செ ய்வதில் வல்ல, தோள் - தோள்களையுடைய. இருவர் - அவ்விராமலட்சுமண ர், '(இவ்வரக்கன்). மெய் வரத்தினன் - மெய்யான வரத்தையுடையவன்; மிடல் படை விட - வலிய ஆயுதங்களைப் பிரயோகிப்பதனால், படுகிலன் - இறவான்: மற்றும் இகல் செய்யும்-மீளவும் போர்செய்வான்', என்று-என்று ஆலோசித்து,—சினம்-கோபத்தோடு, வாள்-வாளை, உருவி—, 'வல்லை துணித்தும்-(இவனது) வலிய கைகளை வெட்டிவிடுவோம்', என-என்று, முந்து

கடுகி - மிகவும் விரைந்து, படர் புயத்து - பெரிய (அவனது) தோள்களில், ஏற—, —நிருதன் - அவ்வரக்கன், —(எ - று.)—'குருதியான் எழுந்தனன்' (கூசு) என்க.

உடையாரது சினத்தை வாளின்மே லேற்றி. சினவா ளென்ற ரெனி னும் அமையும். பி - ம்:—[1]எய்தி. (கூரு)

கூசு.—விராதன் ராமலக்ஷ்மணரைத் தூக்கிக்கோண்டு செல்லுதல்:

உண்டெ ழுந்தவுணர் வவ்வயி னுணர்ந்து முடுகித்
தண்டெ ழுந்தணைய தோள்கொடு சுமந்து தழுவிப்
பண்டெ ழுந்தனது வன்கதி [1]பதிற்றின் முடுகிக்
கொண்டெ ழுந்தனன் விழுந்தழி கொழுங்கு ருதியான்.

(இ - ள்.) விழுந்து அழி கொழுங் குருதியான் - பெருகிவழிகின்ற மிக்க இரத்தத்தையுடையவனாகி,— அவ் வயின் - அப்பொழுது, உண்டு எழுந்த உணர்வு - மீண்டும் உளதாகித் தோன்றிய அறிவினால், உணர்ந்து - (ராம லக்ஷ்மணர்களைத் தன்மேலுள்ளவர்களாக) அறிந்து, முடுகி - (மனம்)விரைந்து, தண்டு எழுந்துஅனைய தோள் கொடு - உயர்ந்த தண்டாயுதத்தைப் போன்ற (தனது) தோள்களால், தழுவி சுமந்து கொண்டு - சேர்த்துப்பிடித்துத் தாங்கிக்கொண்டு, பண்டு எழும் - முன்னே உள்ள, தனது—, வல் கதி - வலிய நடை, பதிற்றின் - (முன்னிலும்) பதின்மடங்கு அதிகமாக, முடுகி - விரைந்து, எழுந்தனன் - எழும்பியவனாய்,—(எ - று.)—'நிரிந்தனன்' (கூஎ) என முடியும்.

'உண்டு' என்ற குறிப்புமுற்று, இங்கே வினையெச்சப்பொருள்பட்டுநின் றது. தண்டு - தண்டமென்பதன் விகாரம். எழுந்துஅனைய என்ற இவ்விரு சொல்லும் இணைந்து நின்று உவமவருபார்த்தன்மையையே பெற்றுநின்ற தென்க. பி - ம்:—[1]பயிற்றல்கடுகி. (கூசு)

கூஎ.—இரண்டுகவிகள்-அப்போதைய விராதனது தோற்றங் கூறும்.

முந்து வான்முக டுறக்கடி தது முட்டி முடுகிச்
சிந்து சோரியொடு சாரிகை திரிந்த னனரோ
வந்து மேருவினை நாடொறும் வலஞ்செய் [1]தழல்வேவ
ரிந்து சூரி யரையொத் திருவரும்பொ லியவே.

(இ - ள்.) மேருவினை - மகாமேருவை, நாள்தொறும் - தினந்தோறும், வலம் செய்து உழல்வோர் - பிரதக்ஷிணஞ்செய்து சஞ்சரிப்பவர்களாகிய, இந்து சூரியரை ஒத்து - சந்திரசூரியர்களைப் போன்று, இருவரும் பொலிய - இராமலக்ஷ்மண ரிருவரும் (தனது இருதோள்களிலும்) விளங்கும்படி,— முந்து வான் முகடு உற-உயர்ந்த வானத்தின் உச்சியைஅளாவுமாறு,முட்டி—, சிந்து-வழிகின்ற, சோரியொடு-ரத்தத்துடனே, கடிது முடுகி-மிகவும் விரை ந்து, சாரிகைதிரிந்தனன்-வட்டமாய்ச்சுற்றினனே; (எ-று.)—அரோ-ஈற்றசை.

மேருமலை - சிந்து சோரியொடு திரிகின்ற அரக்கனுக்கும். சந்திர சூரியர்கள் - இராம லக்ஷ்மணர்களுக்கும் உவமை. கலேறிறைதலாற் சந்திரனும், பிரதாபத்தாற் சூரியனும் உவமை யென்க. வந்து - அசை; இது புறனடையாற் கொள்க: அன்றி, வலஞ்செய்துவந்து என்று கூட்டியுரைத்தலு மாம். சாரிகை - மண்டலாகாரமான கதி. பி - ம்:—[1]உழலும். (கூள)

கூஉ. சுவண வண்ணமெ ஞெடு கண்ணன் [1]மிசைகொள்ள விசைதோ
யவண விண்ணிடை [2]நிமிர்ந்து படர்கின் றவனறஞ்
[3]சிவண தன்னசிறை [4]முன்னவரொ டேகு [5]செலவுத்
[6]துவண வண்ணமெனு மன்னவ னீயுமொத் தனனரோ.

(இ - ள்.) சுவணம் வண்ணமெஞெடு - பொன்போன்ற நிறத்தையுடைய லக்ஷ்மணனுடன். கண்ணன் - ஸ்ரீராமன். மிசைகொள்ள - (அக்கினிராத்தை யுடையதோளில்) எறியிருக்க. விசை தோய்-வேகம் பொருந்தி, அவண் - அவ்விடத்தினின்றும். அ விண்ணிடை-அந்த ஆகாயத்தில். நிமிர்ந்து-எழும்பி, படர்கின்றவன் - செல்லுகின்ற அவ்வரக்கன்.—அறம் சிவணது அன்ன - தருமம் வடிவெடுத்ததனை யொத்த. சிறை - (தன்) சிறகுகளில். முன்னவரொடு-பலராமகிருஷ்ணர்களோடு, ஏகு - செல்லுகின்ற. செலவத்து - வேகத்தையுடைய, உவணன் அண்ணல் எனும் - கருட வண்ணனென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற. மன்னவனையும் - பசுபாஜனையும். ஒத்தனன்—; (எ-று.)

சுவணவண்ணன்-ஸ்வர்ணவர்ண னென்பதன் சிதைவு. இஃதெபெருமாளது நிறம் பொன்னிறமாதல் "கடல்கரு முகிலொளி கமலமு தலரா, வடவரை யுடன்வரு செயலென மறையுந், தடவுரு வறிவரு தகைமுத லவனும், புடைவரு மிளவலு மெனநிகர் புகல்வார்." "வில்லேர்துமெனிற்செய்பொற், பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்க, ளிருவர்"என்னும்பால காண்டச் செய்யுள்களானு முணர்க. கண்ணன்-கரியோனென்னும் பொருளதாகிய க்ருஷ்ணனென்னும் வடமொழி பிராகிருதமாய்க் சிதைந்ததுவுமாகது; இது, இங்கே அவதாரப்பெயரன்றிக்கேவத்த காரணப்பெயர். 'தோய்ந்து' என்னும் வினையெச்சம், விகுதி முதலியன கெட்டு, தோய்வன கின்றது; "வரிப்புனைபந்து" என்பதில் 'வரி' என்பதுபோல. அவண. அ-அசையுமாம். தோயம் வ(ண்)ணம் விண்ணிடை என எடுத்து - கடலின் நிறமாகவுள்ள ஆகாயத்திலே யெனினுமாம். தோயம் - வடசொல்: நீர். வண்ணம் - வர்ணம். பெரியதிருவடி கருமசுவரூபியாதலால், 'அறஞ்சிவணதன்னசிறை' என்றார். திருவடி பலராமக்ருஷ்ணர்களைத் தன்தோள்களில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றது, பாணசுரவிஜயகாலத்திலென அறிக. திருமாலினது அம்சமாகிய ஸ்ரீராமனுக்குக் கிருஷ்ணனும் ஆதிசேஷனது அம்சமாகிய லக்ஷ்மணனுக்குப் பலராமனும் உவமை. முன்னவதாரமாகிய ராம லக்ஷ்மணர்களுக்குப் பின்னவதாரமாகிய பலராம க்ருஷ்ணர்களே உவமை கூறியது, பின்னிட்டவரான கவியின் கூற்றுதலி னென்க. இதனைக் கால பேதவழுவா மென்று கொண்டு வேறுவகையாகப் பொருள்கூறி இச்செய்யு

ளின் பொலிவை யழிக்கத் தொடங்குதல் தவறு. உவணன் - ஸுபர்ண னென்பதன் சிதைவு; அழகிய சிறகுடையவ னென்று பொருள். அண்ணல் - பெருமையிற் சிறந்தவன். பி - மீ:—[1]உறைதோளன். [2]எழுந்து. [3]சிவண. [4]மன்னவரொடு. [5]செயல்வந்து. [6]உவணனென்னு நெடுமன்னவனும். (கூஅ)

கூகூ.—இரண்டு கவிகள்-விராதனுல்தூக்கிக்கொண்டுசெல்லப்பெறும் ராம லக்ஷ்மணரைக்கண்ட சீதையின் சோகத்தைக் கூறும்.

மாத யாவுடைய தன்கணவன் வஞ்சன் [1]விஞ்சையிற்
போத லோடு மலமந்தனள் புலர்ந்து பொடியிற்
கோதை யோடுமொசி கொம்பென வீழுந்த னள்குலச்
சீதை சேவல்பிடி யுண்ட சிறையன்ன மினையாள்.

(இ - ள்.) குலம் சீதை - உயர்குலத்தில் தோன்றிய சீதையானவள்:— மா தயா உடைய - மிக்கஅருளினையுடைய, தன் கணவன் - தனதுகாயக னுகிய இராமன், வஞ்சன் விஞ்சையின் - வஞ்சகனுகிய விராதனது கொடுந் தொழிலால், போதலோடும் - (ஆகாயமார்க்கமாய்த் தன்னைவிட்டுச்) செல் கின்றவளவில்,—அலமந்தனள் - மனங்கலங்கியவளாகி, புலர்ந்து - வாட்ட மடைந்து, சேவல் பிடியுண்ட - (தன்)ஆணன்னம் (பிறரால்) பிடிக்கப்பட்ட, சிறை அன்னம் - சிறகுகளையுடைய பெண்ணன்னத்தை, அனையாள் - ஒத் தவளாகி, ஒசி கொம்பு என - துவண்டு வீழுகின்ற பூங்கொம்புபோல, கோ தையோடும் - (தன்) கூந்தலுடனே, பொடியில்-புழுதியில், வீழுந்தனள்—.

தன்கூந்தல் புழுதியிற் புரள வீழுந்தனளென்பார், 'பொடியிற்கோதை யோடும் வீழுந்தனள்' என்றார். குலம் - நிமிகுலம். குலச்சீதையென்றது - ஆசாரப்பிரதானையென்றற்கு. ஜநகமகாராஜன் யாகசாலை அமைப்பதற்காகப் பூமியை உழுதபோது கலப்பையுழுபடைச்சாலில் அகப்பட்டதனுல், சீதை யெனப் பெயர்; சீதை - உழுபடைச்சால்: சீதா என்பதன் திரிபு; இதனுல், அயோநிஜத்வம் கூறப்படுகின்றது. "சேவற் பெயர்க்கொடை சிறகொடு கிவணு. மாயிருந்தூவி மயிலலங்கடையே" என்றதனுல், ஆணன்னத்தைச் சேவ லென்றார். பி - மீ:—[1]வலியிற். (கூக)

சக. பின்னை யேது முதவுந்துணை பெருளு ரைபெறுண்
மின்னை யேயிடை நடங்கிட விரைந்து [1]தொடரா
வன்னை யேயனைய வன்பி னறவோர்க டமைவிட்
டென்னை யேதுகரி யென்றன ளெழுந்து வீழுவாள்.

(இ - ள்.) (அங்ஙனம் வீழுந்தவள்):—எழுந்து - (மீண்டும்) எழுந்திரு ந்து, உதவும் துணை - (தன் துன்பத்தை நீக்கி) உதவிசெய்கின்ற துணை, பின்னை ஏதும் பெருள் - மற்றையெதுவும் பெருதவளாய், உரை பெருள் - ஒருசொல்லையும் பெருதவளாகி, மின்னை ஏய் இடை - மின்னலையொக்கி ன்ற இடை, நடங்கிட - துவள, விரைந்து—, தொடரா - (அவ்வரக்கனைப் பின்) தொடர்ந்துசென்று,—(அவனை நோக்கி), 'அன்னையே அனைய - (உல கத்துக்கெல்லாந்) தாயையேபோன்ற, அன்பின் - அன்பினையுடைய, அற

வோர்கள்தமை-தருமசுவரூபிகளாகிய சக்கரவர்த்தித்திருமகர்களே, விட்டு—, என்னையே நுகர்தி - என்னையே புசிப்பாயாக', என்றனள் - என்று கூறி, (மீண்டும்), விழுவாள்—; (எ - று.)

இதனால், பிராட்டியினது கற்புநிலையின் உறுதி விளங்கும். 'உரைபெ ருள்' என்பதற்கு - ஒருவார்த்தைசொல்வதற்கும் நாவெழாதவளா யென்ரு யினும், தனக்குத் தேற்றரவுகூறும்வார்த்தையைப் பெறுதவளா யென்ருயி னும் கருத்துக்கொள்க. பி - ம்:—[1]தொடர்வாள். [2]உணவுகொள்கென. (சஎ)

சக.—சீதையின்துயரத்தை லக்ஷ்மணன் இராமனிடங் கூறுதல்.

அழுது வாய்குழறி யாருயி ரழுங்கி யலையா
வெழுது பாவை யனையா னிலையுணர்ந் திளையவன்
றெழுது தேவி துயர்கூர விளையாட றெழிலோ
பழுது வாழியென வூழி [1]முதல்வன் பகர்வுறும்.

(இ - ள்.) அழுது—, வாய் குழறி - வாய்குளறி, அரு உயிர் அழுங்கி - அரிய உயிர் தளரப்பெற்று, அலையா - வருந்தி, எழுது பாவை அனையாள் - எழுதிய சித்திரப்பிரதிமையைப் போன்று அசையாது விழுந்துகிடக்கின்ற அச்சீதையினது, நிலை - நிலைமையை, உணர்ந்து - அறிந்து,—இளையவன் - இளையபெருமாள்,—தொழுது - (இராமனை) அஞ்சலிசெய்து, 'தேவி துயர் கூர - பிராட்டி மிக்க வருத்தமடைய, விளையாடல் - விளையாடுவது, தொழி லோ - செய்தற்குரிய நற்காரியமோ? பழுது - குற்றமாகும்,' என - என்று விண்ணப்பஞ்செய்ய,—ஊழி முதல்வன் - காலத்துக்கு முதல்வனுகிய இரா மன், பகர்வுறும் - சொல்லுவான்; (எ - று.)—அதனே மேற்காண்க.

எழுதுபாவை - மனத்திற்குத் திருப்தியுண்டாகுமளவும் அவித்தவித்து எழுதப்படுகின்ற சித்திரப்பாவைபோல மிக்கஅழகுடையா ளென்பதாம். இனி, எழுதுபாவை, அசையாதுநிற்றற்கு உவமை; இதனுல், பிராட்டி துயர் மிகுதியால் மூர்ச்சையடைந்தன ளென்க. 'இளையவனுணர்ந்து' என்றதனுல், மூத்தவன் வழிச்செலவின்கணுள்ள கருத்தாற் சானகியதுநிலையை உணர்ந் தில னென்பது குறிப்பிக்கப்படுகின்றது. வாழி - முன்னிலையசை. ஆதியந்த மில்லாமல் நித்தியனுயிருப்பதனுல், 'ஊழிமுதல்வன்' என்ருர்; இனி, உலகுக்கட்கு முதல்வ னென்றுமாம். பி - ம்:—[1]ஒருவன். (சக)

சஉ.—இராமபிரான் விராதனைக் காலினுல் தள்ளுதல்

ஏக நின்ற நெறியெல்லை கடி[1] தேறி யினிதிற்
[2]போக னன்றென நினைந்த னனிவன் பொருவி லோய்
[3]சாக வின்று பொருளன் றெனநகுத் தகைமையோன்
வேக வெங்கழலி னுந்தலும் விராதன் [3]விழுவே,

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'பொருவு இலோய் - ஒப்பில்லாதவனே! ஏக நின்ற - (நாம்) போகவேண்டிய, நெறி எல்லை - வழியினதெல்லையை, கடிது - விரைவிலே,

இனிதின் - இனிமையாக, ஏறி போகல் - (இவன்மேல்) ஏறிச்செல்லுதல், நன்று என - நல்லதென்று, நினைந்தனன் - எண்ணினேன்; இன்று - இப் பொழுது, இவன் சாகல் - இவன் இறப்பது, பொருள் அன்று - ஒருபெரிய காரியமன்று,' என-என்று அருளிச்செய்து, (இராமபிரான்)—நகும் தகைமை யோன் - புன்சிரிப்புச்செய்கின்ற தன்மையையுடையவனுப், வெம் கழலின்- (தனது) வலியபாதத்தால், வேகம் - வேகத்தோடு, உந்தலும் - தள்ளினவள விலே, விராதன்—, விழ - கீழே விழாநிற்க,—(எ - று.)—'தோளிரண்டும் வாள்கொடுதுணித்து' (சஉ) என்க.

நடந்துசெல்லும்வருத்தமின்றி யென்பார், 'இனிதின்' என்றார். பொரு வில்லோய்-போர்செய்கின்ற வில்லினையுடையோ யெனினுமாம். வெங் கழல்- விரும்பப்படுகின்ற கழ லென்றுமாம். பி - ம்:—[1]ஏகி, எய்தி. [2]போகை. [3]சாகை. [4]வீழலும். (சஉ)

சஙு.—இராமலட்சுமணர் விராதனதுதோளை வெட்டிச் செல்ல, அவன் அவர்களைத் தொடர்தல்.

தோளி ரண்டும் வடிவாள்கொடு துணித்து விசையான்
மீளி மொய்ம்பினர் குதித்தலும் வெகுண்டு புருவத்
தேளி ரண்டு நெரியச் சினவு செங்க ணரவக்
கோளி ரண்டு சுடருங் தொடர்வதிற் குறுகலும்.

(இ - ள்.) மீளி மொய்ம்பினர் - வலியதோள்களையுடைய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், விசையால் - வேகத்தோடு, வெகுண்டு - கோபித்து, வடி வாள் கொடு - கூர்மையான வாளாயுதத்தால், தோள் இரண்டும் - (விராதனது) இரண்டு தோள்களையும், துணித்து - அறுத்துத்தள்ளிவிட்டு, குதித்தலும் - தாவிச்செல்லுதலும்,—(அவ்விராதன்), புருவம் தேள் இரண்டும் நெரிய - தேள்போலும் (தனது) புருவங்களிரண்டும், நெரியும்படி (வெகுண்டு), சினவு- கோபிக்கின்ற, செங் கண் - சிவந்தகண்களையுடைய, அரவம் கோள்-பாம்பா கிய இராகுவென்னுங் கிரகம், இரண்டு சுடரும்-சூரியசந்திரர்களிருவரையும், தொடர்வதின் - (ஒரேகாலத்திற் பிடிப்பதற்காகப்) பின்தொடர்வதுபோல, குறுகலும்-(அவ்விராமலக்ஷ்மணர்களைத் தொடர்ந்து) வந்தவளவில்;—(எ-று.) —'எனலும்' (சஎ) என்க.

இராமன் வலத்தோளையும், இலக்குமணன் இடத்தோளையுமாகத் துணித்தன ரென்க. கிரகண காலங்களிற் சூரியசந்திரர்களை மறைக்குஞ்சாயையை இராகுகேதுக்களென்னும் பாம்புகளாகக் கூறும் புராணவழக்குப்பற்றி, 'அரவக்கோள்' என்றார். அரவக்கோள் இரண்டு சுடரையும் ஒருங்கு தொடர்வது, இல்பொருளுவமை. (சங)

சஎ.—இராமன் விராதனை மரணிப்புதைக்கவேணு மென்றல்.

புண்ணி டைப்பொழி [1]புதுப்புனல் [2]பரந்து விழவும்
விண்ணி டைப்படர்தல் விட்டெழு விகற்ப நினையா

வெண்[3]ணீ டைக்குரிசி லெண்ணி யிளையோ யிவணையிம்
மண்ணீ டைக்கடிது பொத்துதல் வழக்கெ னலுமேம.

(இ - ள்.) புண்ணிடை - விரணங்களினின்றும், பொழி - வழிகின்ற, புது புனல்-புதியரக்தநீரானது, பரந்து விழவும்-பரவிவழிந்து கொண்டிருக்கவும், (அவ்வரக்கன்), விண்ணிடை படர்தல் விட்டு - (உயிர்) மேலுலகத்திற் குப்போகாமல் [இறவாமல்], எழு - எழுகின்ற, விகற்பம் - மாறுபாட்டை, கினையா - கினைத்து,—எண் இடை குரிசில் - (யாவர்) மனத்திலும் எழுந்த ருளியிருத்தலையுடைய ஸ்ரீராமன், எண்ணி - (அவன்சாகாத்தன்மையை) ஆலோசித்து, 'இளையோய் - தம்பீ! இவனை-இவ்விராக்ஷனை, இ மண்ணிடை-இப்பூமியில், கடிது-விரைவாக, பொத்துதல்-புதைத்தல், வழக்கு - முறைமை,' எனலும்-என்றுசொன்ன வளவில்,—(எ-று.)—'வகிர்ந்த' (சரு) என்க.

இனி, புண்ணிடைப்பொழி புதுப்புனல் [ரக்தம்] பரந்துவழியவும் அவன் ஆகாயமார்க்கத்திற் செல்லுதலை விட்டுப் பூமியில் தொடர்ந்து வருகின்ற மாறுபா டென்றுமாம். விகற்பம் - விகல்பம். ''ஸர்வஸ்யாகாரமஹ ஹ்ருஜ்ஜிஸந்நிவிஷ்டஃ[எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நான் தங்கியுள்ளேன்]'' என்று அருளிச்செய்ததற்குஏற்ப, 'எண்ணிடைக்குரிசில்' என்றார். குரிசில்-பெருமையிற் சிறந்தோன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். பி - ம்:—[1]கறைப், உயிர்ப். [2]பொலிந்துவரவும். [3]உடை. (சுச)

சரு.—இராமன் விராதனை லக்ஷ்மணன் வேட்டியதழியில் தள்ளுதல்.

மதநல் யானையி னானிலம் வகிர்ந்த குழிவாய்
நதமு லாவுகளி நீர்வயி னழுந்த நவைதீர்
[2]கதழ்வ மாய்நறுநெ யுண்டுலகி லன்பர் கருதிற்
றுதவு சேவடி யினுலமல னுந்து தலுமேம.

(இ - ள்.) மத நல்யானை அனையான்-சிறந்தமதயானைபோன்ற லக்ஷ்மணன், நிலம் - பூமியில், வகிர்ந்த-வெட்டியெடுத்த, குழிவாய்-குழியில், நதம் உலாவும் களி நீர்வயின்-ஆற்றினது ஓடுகின்ற மிக்கநீரில், அழுந்த-அழுந்தும்படி,—அமலன்-குற்றமில்லாத ஸ்ரீராமபிரான், நவை தீர் கதழ்வம் ஆய்-குற்றமில்லாத யாகாக்கினிகொரூபமாகி, நறு நெய் உண்டு - நல்லநெய்யைப் பருகி, உலகில் - உலகத்திலுள்ள, அன்பர் - பக்தர்கள், கருதிற்று - எண்ணிய வரங்களை, உதவு - கொடுக்கின்ற, சேவடியினால் - (தனது) சிவந்த திருவடிகளால், உந்துதலும்-(அவ்வரக்கனைத்) தள்ளியவளவில்,—(எ-று.)—'உணர்ந்து உடல் விட்டு விண்ணிடை விளங்கினன்' (சசு) என்க.

நதம் - மேற்குநோக்கிச் செல்லும் ஆறு; இது இங்கே நதியென்றேனும், நருமதையென்றேனுங் கொள்க. கதழ்வமென்பது - உக்கிரமுள்ளது என்றகாரணம்பற்றி அக்கினியைக் காட்டிற்று. [2]அதவமாய்என்ற பாடத்திற்கு - துடுப்பாயென்க: அதவம் - யாகாக்கினியில் நெய்யைச்சொரியுமாறு அத்திக்கட்டையாற் செய்த அகப்பை; அதவு - அத்தி; அம் - சாரியை. எம்

பெருமான் தானே யாகத்திற்குச் சாதனமாகிய பொருள்களின் வடிவாயு மிருத்தலால், இவ்வாறு கூறினனென்க. அமலன் - பிரகிருதிசம்பந்த மில் லாதவன். பி - ம்:—[1]னளிர். (சந்)

சசு.—விராதன் சாபம்நீங்கி விண்ணில் தோன்றுதல்.

பட்ட தன்மையு முணர்ந்து படர்சாப [1]மிடமுன்
கட்ட வன்பிறவி தந்த கடையான வுடலூன்
[2]விட்டு விண்ணிடை விளங்கினன் விரிஞ்ச னெனவோர்
முட்டை தந்ததனில் வந்தமுதன் முன்ன வனினே.

(இ - ள்.) (அன்வயக்கம்).—முன் படர் சாபம் இட - முன்னே (குபேரன்)பெரிய சாபத்தைக் கொடுத்தலால் (வந்த). வல் பிறவி கட்டம் தந்த - வலிய பிறவித் துன்பங்களைக் கொடுத்த, கடை ஆன - இழிவாகிய, உடல் - ராக்ஷஸசரீரம், விட்டு - நீங்கப்பெற்று,—பட்ட தன்மையும் உணர்ந்து - முன்னே நடந்த தன்மையையும் அறிந்து, விண்ணிடை-ஆகாயத்தினிடத்தே. —ஓர் முட்டைதந்ததனில்-ஒப்பற்ற அண்டத்தைப் படைத்ததில், விரிஞ்சன் என - பிரமதேவனது உருவமாகி, வந்த-(படைக்குந்தொழிலைச் செய்யுமாறு) வந்த. முதல் முன்னவனின் - புராணபுருஷனாகிய பிரமன்போல,—விளங்கினன் - (முன்னுள்ள சுந்தரராகசரீரத்தோடு) பிரகாசித்தான்; (எ - று.)

சாபம்நீங்கினவுடன் முற்பிறவியுணர்ச்சியோடு முன்னையசுந்தரவு சரீரத்தைப்பெற்றுப் பிரமதேவன்போல விளங்கினனென்க. பரம்பொருளாகியநிருமால் ஆதியில் நீரைப்படைத்து அதில் தன்னுடையசங்கற்பத்தால் அண்டத்தைப்படைத்து அதற்குள்ளே மற்றை ஸ்ருஷ்டிகளைச் செய்யுமாறு பிரமதேவனைப்படைத்தலைக்கின்றனென்பது. நூற்கொள்கை: "ஈஸ்வரன் ...ஓரண்டமாகிஅதுக்குள்ளேசதுர்முகனைஸ்ருஷ்டித்தருளும்" என்னுந்தத்வத்ரயத்தில்அருளிச்செய்திருத்தல்முதலிய காண்க. விரிஞ்சனெனவந்த என்க. விரிஞ்சன் - அன்னப்பறவையால்தாங்கப்பெறுபவனென்று அவயவப்பொருள்தரும் வடசொல். பிரமதேவன் பிதாமஹனென்றும் புராணபுருஷனென்றும்கூறப்படுவதனால், அவனை 'முகன்முன்னவன்' என்றார். பட்ட தன்மை யுணர்தல் - பூர்வ ஜந்ம ஞானம். உம்மை - எச்சப் பொருளது. படர்சாப மிட்ட வரலாறு மேலே காண்க. கட்டம் - கஷ்டம். பிறவித் துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாம்; இவை, முறையே, ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிக மென்னப்படும். பி-ம்:—[1]விட. [2]விட்ட.()

சஎ.—விராதன் தத்துவஞானத்தால் ஸ்ரீராமனைப் புகழத்தொடங்குதல்.

பொறியி னொன்றி யயல்சென்று திரிபுந்தி [1]யுணரா
நெறியி னொன்றி நிலைநின்ற நினையுண் டதனினும்
பிறிவி லன்புதனி பண்டுடைய பெற்றி தனினு
மறிவு வந்ததவ நம்பினை யறிந்து பகர்வான்.

(இ-ள்.) (அவன்),—பொறியின் ஒன்றி-பஞ்சேந்திரியங்கட்குவசப்பட்டு, அயல் சென்று - விஷயாந்தரங்களிலேபோய், திரி - அலைகின்ற, புந்தி-புத்தி யினால், உணரா - உணரமுடியாத, நெறியின் - நல்வழியிலே, ஒன்றி - பொருந்தி, நிலைகின்ற - நிலைபெற்றுநின்ற, நினைவு - எண்ணம், உண்டதனினும் - உண்டாகியதனாலும்,—பிறிவு இல் - நீங்குதலில்லாத, தனி-ஒப்பற்ற, அன்பு - பக்தியை, பண்டு - பழமையாய், உடைய - உடைத்தான, பெற்றி தனினும் - தன்மையினாலும்,—அறிவு - தத்துவஞானம், வந்து உதவ-வந்து கூட, (அதனால்), நம்பனை - இராமநம்பியை, அறிந்து - (ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சமென்று) தெரிந்து, பகர்வான் - துதிப்பான்; (எ - று.)

விராதனுக்குத் தத்துவஞானந் தோன்றியதற்கு இரண்டு காரணங்கள் கூறினர். பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி. அயல் - அயற்புலங்களுக்கு ஆகுபெயர். புந்தி - வடகொல் விகாரம். **பி - ம்:**—[1]உணர்வான். (எ)

வேறு.

சுஅ.—இதுமுதற் பதினான்குகவிகள் - விராத ஸ்தோத்ரம்.

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தன[1]நின்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
வோதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றுறுவ்வாப்
பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ.

பதினைந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வேதங்கள் - எல்லாவேதங்களாலும், அறைகின்ற - துதிக்கப்படுகின்ற, இவை - இந்த, நின் பாதங்கள் - உனது திருவடிகளே, உலகு எங்கும்-உலகமுழுவதும், விரிந்தன என்னின்-பரந்தனவென்றால், படிவங்கள் - மற்றைத் திருவவயவங்கள், எப்படியோ - எத்தன்மையனவோ? ஓதம் கொள் - குளிர்ச்சியைக் கொண்ட, கடல் அன்றி - கடலில்மாத்திரமேயல்லாமல், ஒன்றினோடு ஒன்று ஒவ்வா - ஒன்றோடொன்று (சம்மில்) ஒத்திராத, பூதங்கள் தொறும் - மற்றைப் பூதங்களிலும், உறைந்தால் - (நீ) வாசஞ் செய்தால், அவை - அப்பூதங்கள், உன்னை—. பொறுக்குமோ - தாங்கவல்லனவோ? [வல்லனவல்ல]; (எ - று.)

வேதங்களிற் கூறப்படுவதெல்லாம் எம்பெருமானது திருவடிகளின் பெருமையே யாதலால், 'வேதங்களறைகின்ற' என்றான்: அறைகின்ற பாதங்களெனக் கூட்டுக. இனி, வேதங்கள் (சிலம்புபோல்) ஒலிக்கின்ற பாதங்களென்றுமாம். தனது அருகி லிருத்தல்பற்றி, 'இவை' என்று சுட்டினான். 'உலகெங்கும் விரிந்தன' என்றது, திரிவிக்கிரமாவதாரகதையையுட்கொண்டு. 'படிவங்க ளெப்படியோ' என்றது - உனதுதிருமேனி இத்தன்மைத்தென்று உத்தேசித்துஅறிய முடியா தென்றபடி. ஓதம் - வெள்ளமும், ஆலியுமாம். பூதங்கள் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. நிலம் - நிலையாயிருத்தலும், கந்தமுண்டையதாதலும்; நீர் - பாய்ந்தோடுதலும், குளிர்ந்த

பரிசமுடையதாதலும்; தீ - மேல்நோக்கி யெரிதலும், சுடும் பரிசமுடைய தாதலும்; காற்று - பத்துத்திசைகளிலும் வீசுதலும், உருவமின்றிப் பரிச முடையதாதலும்; விசும்பு - எங்கும் பரவியிருத்தலும், சப்தகுணமுடைய தாதலுமாகிய தன்மைவேறுபாடுகளைப்பற்றி, 'ஒன்றினோடொன்றெவ்வாப் பூதங்கள்' என்றார். 'அவை உன்னைப் பொறுக்கவல்லனவல்ல' என்றது, அவற்றையும் நீயே தாங்குகிறாயென்பது தோன்றற்கு. 'பூதம்' என்கிற சொல்லாற்றலால், விநோதமாகக் காட்டப்படுஞ் சடைப்பூதங்களி னீட் புகுந்த மனிதனே அவற்றைத் தாங்கிச் செலுத்துதல்போல, ஐம்பெரும் பூதங்களி னுள்ளுறைகின்ற நீயே அவற்றைத் தாங்குகிறா யென்பது தோன்றுமாறு காண்க. 'ஒதங்கொள் கடலன்றி' எனக் கடலிலுறைதலைத் தனி யே எடுத்துக் கூறியது - திருப்பாற்கடலில் திருவரங்கத்தாழ்வான்மேல் திருக் கண்வளர்தலும், பிரளயகாலத்துப்பெருங்கடலில் ஆலிலைமேற் பள்ளிகொண் டருளுதலு மாகிய விசேஷத்தன்மைபை நோக்கி. 'வேதங்க ளாறைகின்ற' என்றதனால் ஸகல வேதப் பிரதிபாத்யனாதலும், 'உலகெங்கும் விரிந்தன' என்றதனால் ஸர்வவியாபியாதலும், 'பாதங்களிவை' என்றதனால் பத்துடை யடியவர்க்கெளியவ னாதலும், 'படிவத்தளப்படியோ' என்றதனால் மன மொழிமெய்களுக்கு எட்டாதவ னாதலும், 'ஒதங்கொள்கடலன்றி' என்ற தனால் வியூகநிலைமையும், 'பூதங்களிடறுமுறைத்தால்' என்றதனால் ஸர்வாந் தர்யாமி யாதலும், 'அவை யுன்னைப் பொறுக்குமோ' என்றதனால் அனைத் துக்கும் ஆதார மாதலும், ஸர்வ சக்தித்வமும் கூறப்பட்டன.

ஓகாரம் இரண்டனுள் முன்னது - ஐயத்தின்பாற்படும்; பின்னையது- எதிர்மறை. தொறும்-எஞ்சாமைப் பொருளதாகிய எழாம்வேற்றுமைப்பொரு ளுணர்த்தின்ற இடைச்சொல். பி - பீ:—[1]உன்.

இதுமுதற் பதினெருகவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர்களுங் காய்ச் சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட **தரவுகொச்சகங்கள்.** (சஅ)

சஈ. [1]கடித்துமிர் கராங்கவ்வக் கையெடுத்து மெய்கலங்கி
யுடித்ததிசை யனைத்தினுஞ்சென் றெறிகொள்ள வுறுதுயரா
லடித்தபெருந் தணிமூலத் தரும்[2]பரமே பரமேயென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்.

(இ - ள்.) ஒரு வாரணம் - ஒரு யானையானது [ஒப்பற்ற கஜேந்திராழ் வான்],—கடுத்து - கோபித்து, மிமிர் - (தண்ணிலத்திலிருத்தலால் வலிமைச் செருக்கினால்) மிமிர்ந்த, கராம் - முதலையானது, கவ்வ - (தன்காலைத்) கவ் விக்கொள்ள, உறு துயரால் - அதனாலுண்டாகிய துன்பத்தினால், மெய் கலங்கி - உடல்கலக்கமுற்று, கை - (தன்) துதிக்கையை, எடுத்து - உயரத் தூக்கிக்கொண்டு, உடுத்த திசை அனைத்தினும் - சூழ்ந்த திக்குக்களெல்லா வற்றிலும், சென்று ஒலி கொள்ள - ஒலி போய்ப் பரவும்படி,—'அடுத்த - (யாவர்க்கும் ரக்ஷகனுகப்) பொருந்திய, பெரு - பெருமையையுடைய, தனி - ஒப்பில்லாத, மூலத்து - ஆதிகாரணமாகிய, அரு - அரிய, பரமே பரமே -

பரம்பொருளே! பரம்பொருளே!' என்று—. எடுத்து அழைப்ப-குரலெடுத்து அழைக்க, நீயோ - நீயன்றோ, அன்று - அப்பொழுதே, என் என்றாய் - எனென்று அங்கே எழுந்தருளி அதனைக் காத்தாய்; (எ - று.)

ஒருதிரியக்காலே ஒருதிரியக்குக் வந்த நோவையும் பொருமே அரை குலையத் தலைகுலைய மடுக்கரைக்கேவந்து உதவின மகாகுணத்திலே ஈடுபட்டு இவ்வாறு கூறினன். முதலை கோபித்தது, தனக்கு இருப்பிடமாகிய மடுவை யானை வந்து கலக்கினதனு லென்க. கராம் - க்ராஹம்: உறுதுயர் - ஆயிர மாண்டு முதலைவாயிலகப்பட்டு ஆஹாராதிகளில்லாமையால் மிக்க துன்பமு மாம். பரம் - எல்லாவற்றினுஞ் சிறந்தபொருள். பரமே பரமே-அன்புபுகுதி பற்றிவந்த அடுக்கு. முற்பிறப்பிற் செய்த பூஜாபலத்தினுல் விஷ்ணுபக்தி மாறுதிருந்த மேன்மை பற்றி, 'ஒருவாரணம்' என்றார். ஈடுபா. ஏகா ம் - வினுவகையால் நிச்சயப்பொருளே உணர்த்திற்று.

வாரண மழைத்த வரலாறு:—பாண்டியநாட்டில் இருந்தும்ம னென்று ஓரரசன் மிக்க விஷ்ணுபக்தியுடையவனு யிருந்தான். அவன் ஒருநாள் விஷ்ணுபூஜை செய்கையில் அ ஸ்தியமகாமுனிவன் அங்குவந்தருள. அவ ற்கு அவன் உபசாரஞ் செய்யாதிருக்க, முனிவன் கோபித்து 'நீ யானையாகக் கடவை' என்றுசபித்தனன்; அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனுயினும், முன்செய்த விஷ்ணுபக்தியின் மகிமைபால். அப்பொழு தும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு விஷ்ணுவை அருச்சித்துப் பூசைசெய்துவந்தான். அங்ஙனஞ் செய்யுநாட்களில் ஒருநாள், பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அர்க்கனைக்காகப் பூப்பறிக்கப் போய்இறங்கியபொழுது, அங்கே முன் சாபவிமோசனம் சொல்லியிருந்து கொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அகஞ்சி கோபங்கொண்ட அவனது சாபத்தாற் பெரியமுதலையாய்க்கிடந்த ஹூஹூ என்னுங்கந்தருவன் அவ்யானையின்காலைக் கவ்விக்கொள்ள. அதைவிடுவித்துக்கொள்ளமுடியாமற் கஜேந்திரன் ஆதிமூலமே யென்று கூவியழைக்க, உட னே திருமால் ஸ்ரீகருடவாகனாரூடனுய் அங்குவந்தருளித் தம்திருவாழியாழ் வானைப் பிரயோகித்து, முதலையைத்துணித்து, அதன்வாயினின்றும் விடுவித் துக் கஜேந்திரனுக்கு மோக்ஷமளித்துப்போக, ஹூஹூவும் சாபவிமோசன மாகித் தன்னுலகஞ்சேர்ந்தன னென்பதாம். **பி - ரை:**—[1]கடுத்தகாலுக்குவ சிமிர். [2]பொருளே. (எ)

ரூ0. புறங்[1]காண வகங்காணப் பொதுமுகத்தி னருணீக்க
மிறங்காத தாமரைக்க ணெம்[2]பெருமா அனியம்புகியா
லறங்காத்தற் குனக்கொருவ ராருமொரு தூணையின்றிக்
கறங்காகு மெனத்திரிய நீயேயோ [3]கடவாய்கான்.

(இ - ள்.) புறம் காண - புறத்தவர்கள் காணவும், அகம் காண - அகத் தவர்கள் காணவும், (இவ்விருதிறத்தவர்கள்பக்கலிலும்), பொது முகத்தின்-பக்ஷபாதமில்லாமல் [நடுவுநிலைமையாக], அருள் கோக்கம் இறங்காத - இரு

பையோடுகூடிய சடாகூடம் நிங்காத, தாமரை கண் - செந்தாமரைமலர் போலுந் திருக்கண்களையுடைய, எம்பெருமான் - எங்கள் தலைவனே!— அறம் காத்தற்கு - தருமத்தைக்காப்பதற்கு, உனக்கு ஒருவர் ஆரும் ஒரு துணை இன்றி - உனக்குப் பிறரொருத்தரும் சிறிதுந் துணையில்லாமல், கற ங்கு என - காற்றுமடிபோல, நிரிய - அலையுமாறு, ஈயேயோ - தீதானே, கடவாய் - கடையையுடையனுமிருக்கிறாய்? நுவம்புநி-சொல்வாயாக; (எ - று.)

அகத்தவர் - பரமபதத்திலேயுள்ள நித்தியர்களும், முக்தர்களும். புறத் தவர் - மற்றையுலகங்களிலுள்ள பத்தர்கள். அருளாவது - தொடர்புபற் றுது நுவல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இனி, 'இறங்காத' என்பதனைச் சிலேடையாகக்கொண்டு, புறத்தவர்களாகிய தன் னடியவல்லாதாரைக் காணவும், அகத்தவர்களாகியதன்னடியாரைக் காணவும் இவ்விருவர்நிறத்தும் பொதுப்பட அருணோக்கமிறங்காத கண்க ளென்று உரைத்து, புறத்தவர்களிடத்தித் அருணோக்கம்பொருந்தாத வெனவும், அகத் தவர்களிடத்திற அருணோக்கம் நிங்காத வெனவுங் கருத்துக்கொள்ளினும் அமையும். அன்றியும், புறமாகிய ஊனக்கண்ணுங் காணவும், அகமாகிய ஞானக்கண்ணுங் காணவுமென்னு மிகவுள்ளலாம். மலர்ச்சியுங் குளிர்ச்சியுங் கண்டோரை நெகிழ்வித்தலும் பற்றி, கண்களுக்குத் தாமரைமலர் உவமை. இ - ம்:—[1]காணுங்கண்ணுங் [2]பொருண்முகத்தினருணோக்கி. [3]பெருமான். [4]கடவாயே. (கூ0)

நுக. துறப்பதித தொழிலகத் [1]தீதான்றினீனுர் தீதான்றியக்கான்
மறப்பதோ தம்மையது வன்[2]றுகின் மற்றவர்போற்
[3]பிறப்பதோ வெவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
விறப்பதித பிறப்பதித வெனும்விளையாட் [4]டினிதுகந்தோய்.

(து - ள்.) துறப்பதித - நீத்தலும், பிறப்பதித - பிறத்தலும், எனும் - என்கின்ற, விளையாட்டு - திருவிளையாட்டை, இனிது - இனிமையாக, உகந் தோய் - திருவுள்ளமுவந்து செய்தருள்கின்றவனே! எவர்க்கும் - யாவர்க் கும், தாம் பெற்ற பதம் - தாம் முன்னையடைந்த நிலையை, பெறல் - மீண் டும் அடைதல், அரிதோ - அரியதோ? (அன்று ஆகலின்), துறப்பதித் தொழில் ஆக தோன்றினீனுர் - துறத்தலையே தொழிலாகக்கொண்டு தோன்றி முற்றத்துறந்த முனிவர்கள், தோன்றியக்கால் - (தமது விருப்பத்தால் வே றொரு தாழ்ந்த பிறவியை யெடுத்துப்) பிறந்தால், தம்மை மறப்பரோ - தமது முன்னைய உயர்ந்த நிலைமையை மறப்பார்களோ? [மறவார்]; அது அன்று ஆகில் - அதுவுமல்லாமல், மற்றவர் போல் பிறப்பரோ - துறவாத அவர்களைப்போலவே (கெடுபாடில்லாமற்) பிறப்பார்களோ?[பிறவார்];(எ-று.)

எனவே, அகர்மவஸ்யனுப் அபர்யுமுமார்கள் முனிவர்க ளதிபதியா கிய நீ உன் கேவலகிருபையாலே ஸர்வாத்ம ஸம்ஷுணர்த்தமாகக் கர்ம வஸ்யர் பிறக்குந் தண்ணிய பிறவிகளில் பிறக்கும்போழுது, அம்முனிவர்க ளைப்போல உன்ஸ்வரூபமழியாதபடி அதில் தோய்வின்றிக்கே வந்துபோகா

மல். அடியறிவார் 'நீதான் ஸ்ரீமந்நாராயணன்' என்றுணர்த்தினலும் 'எனக்கு அவை தெரியாதுகாண்; என்னை மனிதனுக நினைக்கிறேன்' என்று சூழ்த்துக்கொடுக்கும்படியே, அதுக்கு அவ்வரு கறியாதானுய்க் கொண்டு தன் நீலையை மறந்து. புரையற அவற்றேடு ஸஜாதிய னென்னலாம்படி திருவவதரிக்கிறு யென்று கருத்து. இங்கே "உயிரளிப்பா, னெந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்." "ஒருவாறெருவன் புகாவா - றுருமாறு, மாயவர்" என்னும் பெரியார்பாசுரங்களின் விசேஷார்த்தங்கள் விசாரித்து அறியத்தகும். இனி, துறப்பதே தொழிலாகத் தோன்றிய முனிவர்கள் நீ தோன்றினுல் உன்னைச் சரணமடைதலேயன்றி மறப்பர்களோ? அங்ஙனம் மறவாதிருத்தலின் மேலும் பரமபதத்தை யடைதலே யன்றி மற்றவர்களேப்போல நீண்டும் இவ்வுலகிற் பிறப்பெடுப்பர்களோ? இங்ஙனம் நினது பரமபதத்தை யடைதல் அம்முனிவர்களுக்குமாத்திரமேயன்றி நின்திருவடியடைந்த யாவர்க்கும் அரிதன் றென்று கருத்துப்படப் பொருள் கூறலுமாம். தன் இச்சாமாத்திரத்தால் உண்டாதலால், 'லீலையாட்டு' என்றார். இறப்பதே, பிறப்பதே, ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன. பி - ம்:—[1]தொன்மையோர். [2]ஆகி. [3]பிறப்பதேலவர்க்கும். [4]உவந்தனேயே. (நுக)

நுஉ. பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் [1]புணைபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் றகைமூர்த்தி நீயாகி
[2]னினிநின்ற முதற்றேவ ரென்கொண்டென் செய்வாரே.

(இ - ள்.) (உன்னை), பனி நின்ற - அச்சந் தரும்படி நின்ற, பிறவி பெருங்கடல் - பிறப்பாகிய பெரிய கடலை, கடக்கும் - கடந்துத் தாண்டுதற்கு உரிய, புணை பற்றி-புணையாகக் கொண்டு, நனி நின்ற சமயத்தோர் எல்லாரும்-மிகுதியாய் நின்ற எல்லாச் சமயங்களி லுள்ளவர்களும், நன்று என்ன - நல்லதென்றுசொல்லும்படி, நீ—, தனி நின்ற-ஒப்பற்று நின்ற, தத்துவத்தின் தகை மூர்த்தி ஆகின் - பெரிய தத்துவஸ்வரூபியாஞல், இனி-பின்பு, நின்ற முதல் தேவர் - (அவ்வச்சமயங்களுக்குத்) தலைவராய் நின்ற தேவர்கள், என் கொண்டு - என்ன பெருமையைக் கொண்டு, என் செய்வார்-என்ன காரியங்களைச் செய்வார்கள்? (எ - று.)

பல சமயத்தோரும் தத்தந் தெய்வமே நன் றென்று கொண்டு தத்தம் இஷ்டதெய்வங்களுக்குச்செய்யும் வழிபாடுகளே யெல்லாம் நீயே பெற்றுக் கொண்டு அவரவர்க்குத் தக்கபடி பயன்களே அளிக்கின்றுயாதலால் அவ்வத் தேவர்களால் யாதுபய னென்பதாம்; "நும்மின்கவிகொண்டு நுந்தும்மிட்டா தெய்வமேத்தினும். செம்மின்சுடர்முடியென்றிருமாலுக்குச்சேருமே", "யாம் கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற்கடவுளர்க்கு, மாங்கடவுணீயென்ரு லஃதனக்கு வியப்பாமோ" என்பன இங்குக் கருதத்தக்கவை. 'பனிநின்ற' என்னும் அடையைக் கடலுக்குக் கூட்டும்போது, குளிர்ச்சிபொருந்திய வென்க. காரண காரியத்தொடர்ச்சியாய்க் கலையின்றி வருதலால் 'பிறவிக்கடல்'

என்றும், சகரர் கல்லின குழியை நிரப்புதற்கு 'பெருங்கடல்' என்றுங் கூறினன். பெரும்பிறவிக்கடல் கடத்தல் - பிறவியறுத்தல். சமயம் - மதம். 'ஆகின்' என்னும் எதிர்கால வினையெச்சம். துணிவுப்பொருளே உணர்த்திற்று.

பி - மீ:—[1]படி. [2]னனி. (நிஉ)

நிஈ. ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றெழிந்த மன்னுயிர்க்கு
நீ[1]யாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் [2]யாவரே தருமத்தின் றனிமூர்த்தி.

(இ - ள்) தனி - ஒப்பில்லாத. தருமத்தின்மூர்த்தி - தருமஸ்வரூபியே! ஓயாத - (படைப்புத்தொழிலில்) ஓய்வில்லாத, மலர் அயனே - தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனே. முதல்ஆக - ஆதியாக, உளர்ஆகி - உள்ளவர்களாகி, மாயாத - அழியாத, வானவர்க்கும் - தேவர்களுக்கும், ஒழிந்த - (அத்தேவர்கள்) போகவான. மற்று மன் உயிர்க்கும் - மற்றை இலேபிறுடைய உயிர்களுக்கும், முதல் தாதை - முதலாகிய தந்தை, நீ ஆகின் - நீயானால்,— நெறி முறையால் - உலகவழக்கத்தின்படி, ஈன்று எடுத்த - (அவர்களைப்) பெற்று வளர்த்த, தாயாவார் - (முதல்) தாயாகுபவர், யாவரே - (வேறு) எவரோ? (எ - று.)

சுற்பங்களிலெல்லாம் ஒவ்வொரு பிரமனுதலால், பிரமதேவர் அனேகரென்பதுபற்றி, 'ஓயாத மலரயன்' என்றனுமாம். திருமாலினது திருவுந்திக் கமலமலரில் தோன்றிய தனாலும், 'மலரயன்' என்றன். 'அயனே முதலாக' என்றதனால், அயனே முதலி லுண்டானவ னென்பதும், மற் றெல்லாவுயிர்களுக்கும் அயனே காரண னென்பதுங் கூறப்பட்டன. அமரரானதனால், 'மாயாத வானவர்' எனப்பட்டனர்; உடம்பழிவினும் உயிர் அழியாது வேறுடம்பெடுத்துநிற்கு மாதலால். 'மன்னுயிர்' எனப்பட்டது. பிதாமகனுகிய பிரமனையும் படைத்தவ னதலால், 'முதல்தாதை' என்றன். முதலிலன்பதனைத் தரவென்பதனோடுங் கூட்டுக. 'தாயாவார் யாவரே' என்றது - ஒருவருமில்லை. சிவ வென்றபடி; மேல் "உலகின்முழு" என்பதுங் காண்க. இதனால், வேறு துணையில்லாமலே சராசரங்களனைத்தையும் படைத்துக்காக்கின்ற அகடிதகடனாசாமர்த்தியம் கூறப்பட்டது. இனி, நின் தேவியாகிய திருமகளே லோகமாதாவென்றுங் கருத்துக் கொள்ளலாம்.

பி - மீ:—[1]ஆதி. [2]யாவரோ. (நிஈ)

நிஉ. நீ[1]யாதி பரம்பரமு நின்னவே யுலகங்க
ளாயாத சமயமுநின் [2]னடியவே யயலில்லை
தீயாரி ணெளித்தியால் வெளிதின்றுற் றீங்குண்டோ
வீயாத பெரு[3]மாயை வீளையாட்டும் வேண்டுமோ.

(இ - ள்.) ஆதி பரம்பரமும் - முதன்மையாகிய மேலானகடவுளும், நீயே; உலகங்கள் - எல்லாவுலகங்களும், நின்னவே - உனக்குச் சிற்ப்

பட்டவையே; ஆயாத சமயமும் - ஆராய்ந்தறிதற்கரிய எல்லா மதங்களும், நீ அடியவே - உன் திருவடியைப் பற்றியவையே; அயல் இல்லை - வேறு இல்லை; (அங்ஙனமிருக்கவும்), தீயாரின் ஒளித்தி - வஞ்சகர்களைப்போல ஒளிக்கின்றாய்; வெளி நின்றால் - (அங்ஙனம் ஒளியாது) வெளிப்பட்டு நின்றால், தீங்கு உண்டோ - (உனக்குத்) தீமை உண்டோ? மீயாத - அழியாத, பெரு மாயை விளையாட்டும் - பெரிய மாயையாகிய விளையாட்டும், (உனக்கு)[1] வேண்டுமோ—? (எ - று.)

பராத்பரமென்றது, பரம்பரமென வந்தது; சிறந்ததினுஞ்சிறந்ததென்பது பொருள். நின்னவே - உன் ஸ்வரூபமானவையே யென்றுமாம். வானத்தினின்றும் பெய்கின்ற மழைநீர் எல்லாம் கடலையே கலக்குமாறுபோல, எல்லாத் தேவர்களைக் குறித்துஞ் செய்கின்ற வந்தனைவழிபாடுகளெல்லாம் ஸர்வேச்வரனையே சேருதலால், 'ஆயாத்சமயமு நின்னடியவே' என்றார். 'தீயாரின்' என்னும் உபமானத்திற் பழிப்பினூற் புகழ்ச்சி தோன்றுமாறு காண்க; இனி, தீயவர்க்கு ஒளிக்கிறாயெனவுமாம். இதனால், ஈச்வரனது மாயையின் மகிமை கூறப்பட்டது. பி-ம்:—[1]ஆகிப்பயிற்பிரமம். [2]அடியனவே. [3]மாயவிளையாட்டும். (நிசை)

நூறு. தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
யாயு [1]மறியு முலகின்மு யாகினைய
நீயறிதி யெப்பொருளு மையுன்னை நிலையறிய
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்.

(இ - ள்.) ஐய - தலைவனே! வாராதே வா வல்லாய் - (அடியவர்க்கு) வருதற்கரியாரைப்போலேயிருந்தே அறைகளிலையாய் வரத்தக்க வல்லமையுடையோனே! (உலகத்தில்), தாய்தன்னை அறியாத கன்று இல்லை - (தன்னைப்பெற்ற) தாயைத் தெரிந்துகொள்ளாத கன்றுகளில்லை; (அவ்வாறே), தன் கன்றை யாயும் அறியும் - தன்கன்றுகளைத் தாய்களும் அறிந்துகொள்ளும்; (அங்ஙனமிருக்க), உலகின் தாய் ஆகின் - (நீ) எல்லாவுலகத்திற்குந் தாயாவதால், நீ எப்பொருளும் அறிதி - நீ எல்லாப்பொருள்களையும் அறிகிறாய்; அவை உன்னை நிலை அறியா - அப்பொருள்களெல்லாம் உன்னை இத்தன்மையதான நிலையுடையவனென்று அறியமாட்டா; மாயை இது - இம்மாயை, என்கொல் - யாதோ? (எ - று.)

தாயும் கன்றையறியவேணும்; கன்றும் தாயை யறியவேணும்: இவ்வாறிருக்க, தாயாகிய நீ மாத்திரம் எல்லாவுலகத்துயிர்களையும் அறிந்திருக்க, கன்றுகிய உலகத்துயிர்கள் உன்னையறியாமலிருப்பது என்னவியப்போ? என்பது கருத்து. "பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய் நாடிக்கோடலே" என்றார் நாலடியாரிலும். எவனொருவன் கடவுளின் தன்மை நம்மாலறியமுடியாத தென நினைக்கின்றானோ அவனல்தான் நன்கறியப்பட்டவனாவா யென்று 'வாராதேவரவல்லாய்' என்பதற்குக்கருத்து: கடவுளின்தன்மை மனோவாக்குகளுக்கு எட்டாதாதலால், அதனை அவ்வாறு

உணர்ந்தவனே உண்மையுணர்ந்தவனென்க: "வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே" என்னுர் பெரியாரும். இனி, இத்தப் பிரகிருதியிற் சம்பந்தப்படாமலே இதனுட்புகுந்து நடக்கவல்லா யென்றும், ஊனக் கண்ணுக்கு வந்து தோன்றுமலே ஞானக்கண்ணுக்கு வந்துதோன்றவல்லா யென்றும், பரமபதத்தினின்றும் நீங்காமலிருந்தே இங்கே திருவவதரிக்க வல்லா யென்றும், கர்மவசமாய்ப் பிறக்கும்பிறவிபோலாகாமே அருள்புற்றி யுளதாகின்ற இச்சாமாத்திரத்தால் அவதரிக்கவல்லா யென்றும் பொருள் கொள்ளலாம். **பி-மீ:**—[1]அறிவுறுமவ்வுலகின்னுப்.

(ஙஙி)

ருசு. பன்னலா மென்றுலகம் பலபலவு [1]நினையுமா
[2]லுன்னலாற் பெருந்தெய்வ முயர்ந்துளோ ரொழுக்கன்றே
யன்னலுர் தியைமுதலா மந்தணர்மாட் டருந்தெய்வ
நின்னலா லில்லாமை நெறிநின்றூர் நினையாரோ.

(தி - ள்.) உலகம் - உலகத்திலுள்ள சாதாரண ஜனங்கள், பன்னல்லும் என்று - துதிக்கலாமென்று, பல பலவும் - பலபல தெய்வங்களையும், நினையும் - நினைப்பர்; (என்றலும்;) உன் அலால் - உன்னை யல்லாமல், பெருந் தெய்வம் - வேறு சிறந்த தெய்வம் (உண்டென்னுதல்), உயர்ந்துளோர் ஒழுக்கு அன்றே - உயர்ந்தோர்களது ஒழுக்க மன்றே; நெறி நின்றூர் - நல்லொழுக்கத்திலிருந்த அப்பரியோர்கள், அன்னம் ஊர்தியை முதல்-ஆம் - அன்னப்பறவையை வாகனமாகவுடையவனான பிரமன் முதலாகிய, அந்தணர்மாட்டு - அந்தணர்களால் ஆராதிக்கத்தக்க, அருந் தெய்வம்-அரிய கடவுள், நின் அலால் இல்லாமை - உன்னை யன்றி வேறில்லாமையை, நினையாரோ - ஆராய்ந்து அறியமாட்டார்களோ? (எ - று.)

"தெய்வம்பல வென்றுலகம்பல வைதேர்பொழுதில், பொய்வம்பல வென்றுமெய்யும் புல்லோர்கட்குப் போதல்லோ, நுவ்வம் பலனுமவனே யென்றேறி புணர்வர் நெஞ்சே, கொய்வம்பலர்கொரியுஞ் சோலைமாமலைக் கொண்டலேயே" என்ற கலிப்பகுதியும் இக்கருத்துக்கொண்டதே. 'உண்டென்னுதல்' என்பது, சொல்லெச்சம். உயர்ந்துளோர், நெறிநின்றூர் - தத்துவ ஞானிகள். அந்தணர் - அழகிய தட்பத்தினை [அருளினை] யுடையார்: அன்றிக்கே, அந்தத்தையணவியவர் என வேதார்த்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பவருமாம். இனி, உன்னையல்லாமல் வேறு பெருந்தெய்வத்தைத் தேர்ந்தறியலா மென்று உலகம் பலபலவற்றையும் நினைக்கும்; அது உயர்ந்துளோர் ஒழுக்கன் றெனவுமாம். இதனால், பிரமன் முதலிய தேவர்க்குத் தேவனுந் தன்மை கூறப்பட்டது. **பி-மீ:**—[1]நினையலுமற்று, நினையலுமாறு. [2]உன்னலாம்.

(ஙஙஙி)

ருள. பொருவரிய சமயங்கள் [1]புகல்கின்ற புத்தேளிர்
[2]ரிருவினையு மூடையார்போ [3]லிருந்தவகின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப நினக்கென்னே செயற்பால
வொருவினையு மில்லார்போ லுறங்குதியா லுலகங்காவாய்

(இ - ள்.) திரு உறையும் அணி மார்ப - திருமகள் வீற்றிருக்கின்ற அழகிய மார்பினையுடையவனே! உறங்காதாய் - தூங்காதவனே!—பொருவு அரிய - ஒப்பில்லாத, சமயங்கள் - பலமதங்களி லுள்ளவர்களும், புகல்கின்ற-(தத்தங்தெய்வமென்று சிறப்பித்துச்) சொல்லுகின்ற, புத்தேளிர்-தேவர்கள், இரு வினையும் உடையார்போல் - (நல்வினை தீவினையென்னும்) இரண்டு வினைகளையு முடையவர்களைப்போல, இருக் கவம் - பெரியதவத்தை, நின்று இயற்றுவார் - செய்துநிற்பார்கள்; நினக்கு - உனக்கு, செயல்பால - செய்யத்தக்க வினைகள், என்னை-என்ன இருக்கின்றன? [ஒன்றுமில்லை]; (ஆகையால்), ஒரு வினையும் இல்லார்போல் - வினையொன்று மில்லாதவர்களைப் போல, உறங்குதி - நித்திரை செய்தருளுகிறாய்; (எ - று.)

சமயம் - ஆகுபெயர். தீவினையைப்போல நல்வினையும் பிறத்தற்குஏது வாதலான், 'இருவினையுமுடையார்போல்' என்றார்; இந் நல்வினை தீவினை யிரண்டும். ஒருவனுக்குத் தத்துவஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற் கண், பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாமென்க; "இருள்சேர் இருவினையுஞ் சேரா" என்றார் நாயனாரும். உம்மை-முற்றும்மை. 'போல்' இரண்டும் - ஒப்பில்போலி. மணி மார்ப வென்றும் பிரிக்கலாம்: இனி, திருவும், கௌஸ்துபமணியும் பொருந்திய மார்பினையுடையா யென்றுமாம். 'உறங்காதாய்' என்றதற்கு-மற்றவர்களைப்போலத் தூங்காமல் யோகநித்திரைசெய்தருளுகின்றவனே யென்றும், அழிவில்லாதவனேயென்றுங் கருத்துக்கொள்க. 'ஒருவினையு மில்லார்போ லுறங்குதி' என்றதனால், படைத்தல்முதலிய தொழிலெல்லாம் உன்னுடையனவே யென்பது குறிப்பிக்கப்பட்டது. திருமால் இவ்வுலகத்தைக் காத்தற்பொருட்டே யோகநித்திரைசெய்கின்றனனாதலால், 'ஒருவினையுமில்லார்போலுறங்குதியாலுறங்காதாய்' என்றார்; "உறங்குவான்போல் யோகுசெய்த பெருமானே" என்றார் ஆழ்வாரும். **பி-ம்:**—[1]அறைகின்ற. [2]அரு. [3]அருந்தவம். (நிவ)

இரு. அரவாகிச் சுமத்தியா [1]லணியெயிற்றி னேந்துதியா
[2]லொருவாயின் விழுங்குதியா லோரடியா லொளித்தியால்
திருவான [3]நிலமகளே யிஃதறிந்தாற் சீறுளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்.

(இ - ள்.) திரு ஆன நிலமகளே - அழகான பூமிப்பிராட்டியை, அரவு ஆகி - ஆதிசேஷனது உருவமாகி, சுமத்தி - தாங்கியருளுகின்றாய்; அணி எயிற்றின் - அழகிய கோட்டினால், ஏந்துதி - (ஸ்ரீவராகாவதாரமாய்) எடுத்தருளுகின்றாய்; ஒரு வாயின் விழுங்குதி - (பிரளயகாலத்திலே) ஒரு வாயில்விழுங்கியருளுகிறாய்; ஓர் அடியால் ஒளித்தி - (திரிவிக்கிரமாவதாரத்தில்) ஒருதிருவடியால் அளந்து மறைத்தருளுகின்றாய்; இஃது - இங்ஙனம் அவளிடத்தே அன்புகொண்டு உதவுதலை, அறிந்தால் - தெரிந்தால், மரு ஆரும்-வாசனைவீசுகின்ற, துழாய் அலங்கல் - திருத்துழாய்மாலையையுடைய, மணி மார்பின் - அழகிய திருமார்பில், வைகுவாள் - தங்குகின்ற பெரிய பிராட்டி, சீறுளோ - ஊடல்கொள்ளாளோ? (எ - று.)

அரவாகிச் சுமத்தலே, ஸ்ரீபகவத்கீதையிற் கண்ணன் "நாகங்களில் அநந்தனுகின்றேன் யானே" எனக் கூறியவாற்றானு முணர்க. மரு வாரும் - தேனெழுகுகின்ற என்றுமாம். "பாரிடத்து பாரையுண்டு பாருமிழ்த்து பார ளந்து பாரையாண்ட, பேராளன்" என்றார் பெரியாரும். துழாய்=துளசீ. பி-மீ:—[1]அரில். [2]ஒருகாமல். [3]நிலமகளையது. (நிஅ)

நிகூ. நெய்பைத்தான் சிறிதுணர்ந்து நீவிதிக்க மன்னுயிர்க
ளுய்யத்தா ஞகாதோ வனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் [1]வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
வையத்தாற் சிறிதையங் [2]தவிர்த்தாரு முளரையா.

(இ - ள்.) ஐயா - தேவனே! நீ விதிக்க மன் உயிர்கள் - நீ உண்டாக்கி பியமித்த நிலைபொருந்திய உயிர்கள், மெய்மை - (நீயே பரத்துவமென்னும்) உண்மையை, சிறிது உணர்ந்து - கிஞ்சித்து அறிந்து, உய்ய ஆகாதோ - உஜ்ஜீவித்தலாகாதோ? உனக்கு என்ன குறை உண்டோ - (அங்ஙனம் உஜ்ஜீவிப்பதனுல்) உனக்கு யாதாயினுங் குறை உளதாமோ? மழுவாளிக்கு - பரசிவனுக்கு, அன்று - அக்காலத்தில் [பிரமகபாலத்தைக் கையிலேந்திப் பிக்ஷாடனஞ்செய்தபொழுது], அளித்த - (அக்கபாலம்நிறைந்து கையைவிட்டு நீங்கும்படி நீ) இட்டருளிய, ஐயத்தால் - பிச்சையினுல், சிறிது ஐயம் தவிர்த்தாரும் - சிறிதுகாலம் நீங்கினவர்களும், வையத்தார் - பூலகத்தவருள்ளும், வானத்தார் - வானுலகத்தவருள்ளும், உளர் - உண்டு: (எ - று.)

"பேசரின்றசிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும், காயகனவேனை கபாலமன்மோக்கத்துக் கண்டுகொண்மின்" என்றது, இங்கே காணத்தக்கது. மழு ஆளி - மழுவை ஆளுகையுடையவன்; அன்றிக்கே, மழு வாளி - மழுவாகிய ஆயுதத்தை யுடையவன்: மழு - எரியிருப்பாயுதம். ஐயமாவது - பலகாலையாய உணர்வு; இங்கே யாசோ பரத்துவ மென்பது. தான் - அசை. பி - மீ:—[1]வானகத்தார், [2]நிலைனிக்காரும்.

மழுவாளிக்கு ஐயமளித்ததை:—பரமசிவன், தன்னைப்போலவே பிரம னும் ஸ்ருஷ்டி-முடையனுயிருப்பது பலரும் பார்த்து பயங்குறும் இடமா யிருக்கின்ற தெனக் கருதி அவனது சிரங்களிலொன்றைக் கிள்ளியிட, அக் கபாலம் அப்படியே அவன்கையிலொட்டிக்கொள்ளுதலும், இதற்கென்செய் வதென்று அலமர, தேவர்களும் முனிவர்களும் நிஷ்பாபனுகிற்போலப் பிக்ஷை யெடுக்கவேண்டும்; என்றைக்கு இக்கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையை விட்டகலும்' என்று உரைக்க, அங்ஙனமே சிவபிரான் பலகா லம் பலதலங்களினுஞ்சென்று பிக்ஷை யேற்றுக்கொண்டு வருந்தி திரிந்த தும் அக்கபாலம் நிறைந்து நீங்காதாக, ஒருநாள் ஸ்ரீமகாவிஷ்ணுவை அடை ந்து எற்றபோது, அவர் 'அக்ஷயம்' என்று நிக்ஷேபிட, உடனே அது நிறை ந்து கையைவிட்டகன்றது என்பதாம். (நிக)

சுo. அண்ணமா யருமறைக ளறைந்தாய்நீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா ரெல்லாரு [1]முடிந்தாரோ

பின்னமா யொன்றுதல் [2]பிரிக்தேயோ பிரியாதோ
என்னமா மாயமிவை யேனமாய் மண்ணிடந்தாய்.

(இ - ள்.) ஏனம் ஆய் மண் இடந்தாய் - பூதேவராகரூபியாய்ப் பூமியைக் கோட்டாற்குத்தி யெடுத்தருளியவனே! நீ—, அன்னம்ஆய் - ஹம்ஸஸ்வரூபியாய், அரு மறைகள் - அறுத்தற்கரிய வேதங்களை, அறைந்தாய் - (பிரமதேவனுக்கு) உபதேசித்தாய்; அவை-அவற்றை, முன்னம்-முன்னே, உன்னை ஓதுவித்தார் - உனக்குக் கற்பித்தவர், ஆர் - யார்? எல்லாரும்-(அவர்கள்) அனைவரும், முடிந்தாரோ - (இப்பொழுது) மடிந்து திரும்பாதவர்களோ? (பரமாத்மாவாகிய நீ), பின்னம்ஆய் ஒன்றுஆதல்-(சேதனாசேதனங்களினின்றும்) வேறுகியும்ஒன்றுகியு மிருத்தல். பிரிந்தேயோ-(அவ்வாறும்) பிரிந்து நின்றோ?பிரியாதோ - பிரியாமலிருந்தோ? இவை - (வேறும் ஒன்றுமாயிருக்கிற) இந்தன்மைகள், என்ன மா மாயம் - என்ன பெரிய மாயை? (எ - று.)

பிரமனுக்கு வேதங்களை முதலில் ஹம்ஸரூபியா யிருந்து உபதேசித்தருளினதனால், 'அன்னமா யருமறைகளறைந்தாய்' என்றார்; திருமால் தனக்குச் சேதனாசேதனங்களெல்லாம் சரீரமாகத்தாண்டுள்ளானாகலால், சரீரசரீரிகளைப் பேதமாகவும் அபேதமாகவும் கூறும் மதபின்படியே இச்சேதனாசேதனங்களினின்று வேறுபடுகியும் கூறப்படுவன்: இதனால், விசிஷ்டாத்வைதஸ்தாபகாசாரியத்தை வெளியிட்டபடி. ஆரென்பது-ஈண்டு இன்மைகுறித்தின்றது. பி - ம்:—[1]முடிந்தாரே. [2]பிரிந்தாயோபிரியாயோ.

ஏனமாய் மண்ணிடந்த கதை:—முன் ஒருகாலத்திற் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனை, திருமால், வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று, பூமியைக் கோட்டாற் குத்தி யெடுத்துக் கொண்டுவந்து விரித்தருளின னென்பதாம். (கூ)

கூக. *ஒப்பிறையும் [1]பெறலரிய [2]வொருவாமுன் னுவந்துறையு*
மப் [3]புறையு றெந்தடியே னருந்தவத்தா [4]லணுகுறலா
லிப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையுந்
[5]துப்புறழு நீர்த்தசுடர்த் திருவடியாற் றுடைத்தாய்நீ.

(இ - ள்.) இறையும் ஒப்பு பெறல் அரிய - சிறிதும் உவமைபெறுவதற்கரிய [ஒப்பில்லாத]. ஒருவா - தனிநாயகனே!—நீ—, முன் - முன்னே, உவந்து - (திருவுள்ளம்) உகந்து, உறையும் - பள்ளிகொள்கின்ற, அப்பு உறையுள் - திருப்பாற்கடலாகிய திருப்பிடத்தை, துறந்து - விட்டு, அடியேன் அருந் தவத்தால் - அடியவனுகிய எனது (முன்னேசெய்த) அரிய தவத்தினால், அணுகுறலால் - (இங்கே) எழுந்தருளியதனால்,—இ பிறவி கடல் - இந்தப் பிறப்பாகிய கடலை, கடந்தேன் - தாண்டினேன்; இனி பிறவேன் - இனிமேல் (யான்) பிறப்பேனல்லேன்; இரு வினையும் - (இப்பிறவிக்குக்காரணமாகிய எனது) இரண்டுவினைகளையும், துப்பு உறழும் நீர்த்த - பவழம்போன்ற [சிவந்த] திருநிறத்தையுடைய, சுடர் - ஒளியினையுடைய, திருவடியால் - (உன்) திருவடிகளால், துடைத்தாய் - போக்கியருளினாய்; (எ - று.)

ஓப்பில்லாமை கூறியதனால், உயர்வில்லாமை தானே பெறப்படும். "பனிக்கடலிற் பள்ளிகோளைப்பழகவிட்டோடிவந்தென், மனக்கடலில் வாழ வல்ல மாயமனுளரம்மீ", "பறவையேறுபரம்புருடா நியென்னைக் கைக் கொண்டபின், பிறவியென்னுங் கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்ற பெரியாழ்வாருளிச்செயலை அடியொற்றியது; இச்செய்யுள். அப்பு-கடலுக்கு ஆகுபெயர். துப்புறழும் பூத்த-தூப்புமைபொருந்திய நன்மையையுடைய வென்றுமாம். ஸ்ரீராமலக்ஷ்மணர்களோத் தோள்மேல் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போனபொழுதும், ஸ்ரீராமன் காலாலுதைத்துப் பள்ளத்தில் தள்ளியபொழுதும் திருவடிகள் தன்மேற்பட்ட பாக்கியத்தை வியந்து, 'திருவடி பால் துடைத்தாய்' என்றான். பி - மீ:—[1]பிறிதறியாய். [2]ஒருவினை. [3]பொறையும். [4]அணுகுதலால். [5]நீப்பறிந்தேயும். (சுக)

மே வு.

'உரிசரிதஞ்சோல்' என்று இராமன் விராதனை வினவுதல்.

சுஉ. இற்றெ லாமி யம்பினு, னிற்ற லோடு நீயிவ்வா
றுற்ற வாறு ணர்த்தெனு, வெற்றி யாண்மி ளம்பினான்.

(இ - ள்.) (அத்தேவசரீரங்கொண்ட விராதன்):—இற்று எலாம் - இத் தன்மையவெல்லாவற்றையும், இயம்பினுன் நிற்றலோடும் - சொல்லித் துதித்து நின்றவளவில்,—வெற்றியான் - வெற்றியையுடைய ஸ்ரீராமன், (அவனை நோக்கி); நீ இவ் ஆறு உற்ற ஆறு - நீ இக்கானம் பொருந்திய வரலாற்றை, உணர்த்து - தெரியச்சொல்வாய்,' எனு - என்று; விளம்பினான் - சொன்னான்.

இற்றெலாம் - ஒருமைப்பன்மைமயக்கம். வெற்றி - விராதன்வதை.

இதுமுதற் பன்னிரண்டுகவிகள் - பெரும்பாலும் முதலிரண்டுசீர்கள் மூச்சீர்களும். மற்றையிரண்டு விளச்சீருமாகிய கிடந்தடிநான்கு கொண்ட வஞ்சிவிருத்தங்கள்; குறளடிபோன்வந்தனவாக அலகிடினுமாம். (சுஉ)

சுஊ.—விராதன் தன் வரலாறு கூறத்தொடங்கல்.

கள்ள மாய வாழ்வெலாம், விள்ள ஞானம் வீசுதான்
வள்ளல் வாழி கேளெனு, வுள்ள வாறு ணர்த்தினான்.

(இ - ள்.) (அதற்கு விராதன்): கள்ளம் ஆய - பொய்யாகிய, வாழ்வு எலாம் - (இவ்வுலக) வாழ்க்கைகளெல்லாம், விள்ள - நீங்கும்படி, ஞானம் - தத்துவஞானத்தை, வீசு - உண்டாக்குகின்ற, தான் - திருவடிகளையுடைய, வள்ளல் - வள்ளபாது கொடுப்பவனே!—வாழி - வாழ்வாயாக; கேள் - (இதனைக்) கேள்', எனு - என்று; உள்ள ஆறு - நடந்த வரலாற்றை, உணர்த்தினான் - தெரிவித்தான்; (எ - று.)—அது மேல் எழுகவிகளிற் கூறுகின்றார்.

இனி, 'கள்ளமாயவாழ்வு' என்பதற்கு - குற்றம்பொருந்திய சாபத்தால் வந்த ராக்ஷஸசரீரமென்றும் உரைக்கலாம். வீசுதல் - ஈதல். தன்சாபத்தைப் போக்கி அறியாமையைநீக்கி ஞானத்தையுண்டாக்கிய உபகாரத்தை நோக்கி, 'வள்ளல் வாழி' என்றான். (சுஉ)

சுசு.—ஏழுக்விகள் - விராதன் தன்வரலாறு கூறுதலைத் தெரிவிக்கும்.

ஆட ரம்பை நீ[1]டரங், கூடு நின்று பாடலா
[2]லூடல் வந்து கூட[3]விக், கூடு வந்து கூடினேன்.

எட்டுக் கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஆடு அரம்பை - நர்த்தனஞ் செய்கின்ற ரம்பை யென்னுந் தெய்வப்பெண், நீடு அரங்கு ஊடு - பெரிய நடனசபையில், நின்று - வந்து நின்று, பாடலால் - பாடுதலினாலே, (அப்பொழுது அவளிடத்தே யான் வேட்கையுற்று), ஊடல் வந்து கூட - ஊடுதலுண்டாகி (அவளோடு) புணர்ந்ததனால், இ கூடு வந்து கூடினேன் - இவ்விராக்கத சரீரத்திலே வந்து சேர்ந்தேன்; (எ - று.)

'ஆடரம்பை பாடலால்' என்றதனால், ஆட்டத்தோடே கூடிய பாட்டைப் பாடினா ளென்க. ஊடலாற் கூடலின்பஞ் சிறத்தலால், 'ஊடல் வந்துகூட' என்றான்; "ஊடுதல் காமத்திற்கின்ப மத்தற்கின்பம், கூடி முயங்கப் பெறின்" என்றார், நாயனாரும். கூடு - பறவைக் கூடு; இங்கே அது போன்ற உடலுக்கு உவமவாகுபெயர். பி-ம்:—[1]அரங்கின். [2]ஊடு. [3]வெய்ய.

சுடு. இம்ப ருற்றி தெய்தினேன், வெம்பு வில்கை வீரனேர்
தும்பு ருத்த னுழிவா, முழம்ப ரத்து ளென்பரே.

(இ - ள்.) வெம்பு வில் - வெப்பம்பொருந்திய வில்லினை யேந்திய, கை - திருக்கையையுடைய, வீர - வீரனே!—இம்பர் உற்று - இவ்வுலகத்தே (இவ்வாறு) பிறந்து, இது எய்தினேன் - இந்நிலைமையை அடைந்தேன்; பேர் - (எனது) பெயர், ஊழி வாழ் - வெகுகாலம் (அழியாமல்) வாழ்தற்குக் காரணமான, அம்பரத்துள் - தேவலோகத்தில், தும்புருத்தன் என்பர் - தும்புருத்த னென்று சொல்வார்கள்; (எ - று.)

கோதண்டத்தின் வெப்பத்தைத் தான் நேரே கண்டு அனுபவித்தமை தோன்ற, 'வெம்புவில்' என்றான். தும்புருத்தன் என்பதில், தன்-சாரியை யென்னலாம். வானுலகத்தவர் அமரரென்னும்படி நெடுங்காலம் மரணமின்றி வாழ்பவ ராதலால், 'ஊழிவாழம்பரத்துள்' என்றான். அம்பரம்-ஆகுபெயர். அச்சிட்டுள்ளபிரதிகளில் இச்செய்யுள், பின்னிரண்டடிகளில் 'தும்புருத்தனதன்சூழ், அம்பரத்துளேனரோ' என்ற பாடத்தோடு "கள்ளமாய" (சுசு) என்ற பாடலுக்குப்பின்னிருக்க, இதற்குப்பின் "ஆடரம்பை" (சுச) என்றபாடல் காணப்படுகின்றது. (சுடு)

சுசு. கரக்க வந்த காம நோய், துரக்க வந்த தோமினு
லிரக்க மின்றி [1]யேயினு, ரரக்கன் மைந்த னுயினேன்.

(இ - ள்.) கரக்க - (அறிவை) மறைக்கும்படி, வந்த - மிகுதியாயுண்டாகிய, காமம் நோய் - காமவியாதி, துரக்க - தொடர்தலால், வந்த - உளதான, தோமினால் - குற்றத்தினால், இரக்கம் இன்றி - சிறிதும் இரங்குதலில்லாமல், எயினர் - (வானவர் என்னை சாகஸனஞ்செய்யும்படி) சபித்தார்; (ஆதலால்

யான்), அரக்கன் மைந்தன் ஆயினேன் - ராக்ஷஸகுலத்தில்தோன்றிய மகனேனே; (எ - று.)

'இம்பருற்றிதெய்தினேன்' என்று கீழ்க்கூறியதை விவரிக்கின்றான். தான் சேர்ந்தவிடத்தே மிக்க வருத்தத்தை உண்டாக்குதலால், காமத்தை 'நோய்' என்றான். சாபம்கொடுத்தது குபேரனென்பது, முதனூலால் விளங்கும்:அத்தற்குஏற்ப''இம்பருற்று''(சுந்)என்ற பாடலில்'தும்புருத்தனதன் சூழ்' என்ற பாடம் அமைந்துள்ளது. தோம்=தோஷம். பி-ம்:—[1]ஏவினன். (சுசு)

சுஎ. வலஞ்செய் திந்த வானெலா, நலிஞ்சு [1]தின்னு நாமவேல்
பொலிஞ்ச வென்றி பூணுமக், கிலிஞ்சன் மைந்த னுயினேன்.

(இ - ள்.) இந்த வான் எலாம் - இவ்வானுலகத்தி லுள்ளார் யாவரையும், வலம்செய்து - சுற்றிவந்து, நலிஞ்ச தின்னும் - வருத்தப்படுத்தித் தின்கின்ற, நாம வேல் - அச்சத்தைஞ்சுருகின்ற வேலாயுதம், பொலிஞ்ச - விளங்கிய, வென்றி பூணும் - ஜயத்தையே மேற்கொள்ளுகின்ற, அ கிலிஞ்சன்- அப்படிப்பட்ட கிலிஞ்சனென்னும் அரக்கனது, மைந்தன் ஆயினேன் - மகனுகப் பிறந்தேன்; (எ - று.)

'அரக்கன்மைந்தனாயினேன்' என்று கீழ்க்கூறியதை இதனால் விவரிக்கின்றான். வான் - ஆகுபெயர். நலிஞ்சு, பொலிஞ்ச என்பவை-நலிந்து, பொலிந்து என்பதற்றின் போலி. நாம்என்பது - அச்சமுணர்த்தும் உரிச்சொல்; ''பே நா முருமென வரூஉங்கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள'' என்பதனு லறிக: அ - அசை. இனி, நாமமெனக் கொண்டு, அதிசயத்தை விளக்கின்ற வேலென்றுமாம். 'அக்கிலிஞ்சன்', அகரச்சுட்டு - அவனதுகொடுமையின் பிரசித்தியைக் காட்டும். பி-ம்:—[1]தின்ன. (சுஎ)

சுஅ. [1]அன்ன மாய மோயினு, ரின்ன ,ரு மீகையா
னின்ன தாளி னீங்குமென், [2]றுன்னு மெற்கு ணர்த்தினர்.

(இ - ள்.) உன்னும் எற்கு-(இச்சாபம் எவ்வாறுநீங்குமென்று) நினைத்து வருந்துகின்ற எனக்கு, அன்ன மாயம் ஏயினர் - அவ்வாறான விசித்திரசாபத்தை (எனக்குத்) தந்தவர், இன்னல் தீரும் ஈகையான் - (இரப்பவர்களது) வறுமைத்துன்பம் நீங்குதற்குக் காரணமான தானத்தை யுடையோனுகிய, இன்ன-உன்னுடைய, தாளின்-திருவடிகளின் பரிசத்தால், நீங்கும்—, என்று—, உணர்த்தினர்—; (எ - று.)

எற்கு - அகரச்சாரியை யின்றி வந்தது. இரண்டாமடியில் 'ஈகையால்' என்றும் பிரிக்கலாம். [2]உணர்த்தினன் என்ற பாடத்திற்கு - இன்னல்தீரும் ஈகையான் - குபேரன்என்னலாம். பி - மீ:—[1]அன்னயக்கனுகியாய். [2]உன்னலால். (சுஅ)

இந்தப்பாடலையடுத்து ஏட்டுப்பிரதி பலவற்றிற் காணப்படும் பாடல் வருமாறு:—

* வெம்பு விற்கை வீரனீ, அம்பரத்து நாதனுல்
தும்புருத்தன் வாய்மையா, லிம்பருற்ற தீதரோ.

கூகூ. அன்று மூல மாதியா, யின்று காறு மேழையே
னன்று தீது நாடலேன், [1]றின்று நீய தேடினேன்.

(இ - ள்.) ஆதியாய் - முதல்வனே! ஏழையேன் - அறிவில்லாத யான், அன்று மூலம் - அந்நாள்முதலாக, இன்று காறும் - இந்நாள்வரையிலும், நன்று தீது நாடலேன் - நல்லதின்னது தீயதின்ன தென்று ஆராயாதவனாய், நின்று - (அகப்பட்ட பிராணிகளேயெல்லாம் கொன்று) நின்று, நீய - தீவினைகளேயே, தேடினேன் - சம்பாதித்துக்கொண்டேன்; (எ - று.)

காமநோயால் அறிவிழந்து அம்பையைக் கூடி அரக்கனைக் கோத்தலைப் பற்றிய அநுதாபத் தோன்ற, 'ஏழையேன்' என்கிறான். **பி-ம்:**—[1]ன்றுதீய தேடினேன். (கூகூ)

எ0. தூண்ட நின்ற தொன்மைதான், வேண்ட நின்ற வேதநூல்
பூண்ட நின்பொ லங்கொடா, டுண்ட வின்று தேறினேன்.

(இ - ள்.) தூண்ட நின்ற - (தன்னை ஓதியுணர்த்துவார்க்கு நல்லறிவைத்) தூண்டும்படி நின்றனவும், தொன்மை தான் வேண்ட நின்ற - பழமையாகத் தான் (எல்லாராலும்) வேண்டப்பட்டு இன்றியமையாது நின்றனவுமாகிய, வேதம் நூல் - வேதங்களே, பூண்ட - மேற்கொண்ட, நின் - உனது, பொலம் கொள் - பொற்கழலே யணிந்த, தாள் - திருவடிகள், தீண்ட - மேற்படுதலால், இன்று—, தேறினேன் - துன்பத் தீர்ந்தேன்; (எ - று.)

தூண்டுதல்-உண்டாக்கிவளர்த்தல். தூண்டநின்ற வேண்டநின்ற வேத மென்க. வேதநூல் - வேதமாகிய நூலென இருபெயரொட்டுப் பண்புத் தொகை; உம்மைத்தொகையாய், வேதங்களும் அவற்றோடொப்பச் சொல்லப்படுகின்ற மற்றைச் சாஸ்திரங்களு மென்றுமாம். வேதநூல் பூணுதல் - எல்லா நூல்களாலும் புகழப்படுதல். இனி, முதலடிக்கு - முன்னேசெய்து நின்ற பழமையாகிய எனதுநல்வினை நான் தூண்டியதனுலென்று உரைத்து, 'தீண்ட' என்பதனேடு கூட்டலுமாம். (எ0)

எக.—விராதன் தன்னுலகத்தைச் சேர்தல்.

[1]தெறுத்து வந்த தீதெலா, மறுத்த வன்னை யாதனே
ஞெறுத்த தன்மை யூழியாய், பொறுத்தி யென்று போயினன்.

(இ - ள்.) ஊழியாய்—! தெறுத்து - (உயிர்களே) அழித்ததனுல், வந்த - (எனக்கு) நேர்ந்த, தீதுஎலாம் - தீவினையெல்லாம், அறுத்த - போக்கியருளிய, உன்னை—, ஆதனேன் - அறிவுகேடனுகிய யான், ஒறுத்த - (பலவாறு) வருத்திய, தன்மை - குற்றத்தை, பொறுத்தி - பொறுத்தருளுவா

---

* நூற்செய்யுள் இன்றியமையாத்தன்று ஆதலாற் பொருளெழுதப் படவில்லை.

யாக, என்று-என்று பிரார்த்தித்து, போயினன் - (விடைபெற்றுத் தண்ணல : தன்) சென்றான்; (எ - று.)

இனி, என்னை யழித்துநின்று என்பாற் பொருந்திய தீமையை யெல்லாம் போக்கிய உன்னை யென்றுமாம். தீதெலாம் - ஒருமைபன்மைமயக்கம். 'ஊழியாய்' என்பதற்குக் கீழ் 'ஊழிமுதல்வன்' என்றவிடத்து உரைத்தாங்கு உரைக்க. பி - மீ:—[1]திறத்தின்.

(எக)

எஉ.—இராமன்முதலிய முவரும் அப்பாற்செல்லுதல்.

தேவு காதல் சிரியோ, னெனி போயினனெனைப்
பூவு லாவு பூவையோ, டேவ லாரு மேகினர்.

(இ - ள்.) தேவு காதல் சிரியோன் - தேவர்களே வருத்துதலையே (தனக்குச்) சிறப்பாகவுடைய அவ்வரக்கன். ஆவி போயினன் எனை - உயிர் நீங்கினனென்று மகிழ்ந்து,—ஆ வலருட் - அம்பில் வல்லவர்களாகிய அவ் விராம லக்ஷ்மணர்களும்,— பூ உலாவு பூவைபோடு - காமனை மலரில் வீற்றிருக்கின்ற பிராட்டியுடனே, ஏகினர் - (அப்பாற்) சென்றார்கள்; (எ - று.)

இனி, 'பூவுலாவு' என்பதற்கு - பொலிவு பொருந்திய வென்று உரைத்து, முன் விராதன்வதை யிழந்த பொலிவை இப்பொழுது அவன்வதையால் மீண்டும் பெற்ற ஜாகிபோ டென்றுமாம். 'ஏவலர்' என்பதற்கு - எல்லா வுலகங்களும் அடிமையாகக் கொண்டு ஆணைசெலுத்துகின்றவர்க ளென்றும், தாய்தந்தையர்களின் ஏவலின்படி நின்றவர்க ளென்றும் பொருள் கொள்ளலாம். பூவை - காகணவாப்புள்: அதுபோன்ற மொழியாளுக்கு உவமையாகுபெயர்.

(எஉ)

எங.—இராமன்முதலியோர் பகலில் ஒருதபோவனத்துத் தங்குதல்.

கைகொள் கால வேலினர், மெய்கொள் வேத மெய்யர்வாழ்
மொய்கொள் சோலை முன்னினர், வைக ருனும் [1]வைகினர்.

(இ - ள்.) கை கொள் - கையிலே கொண்ட, கால வேலினர் - யமன் போன்ற வேலினையுடைய அவ்வீரர்கள்,—மெய் கொள் வேதம் மெய்யர் - மெய்ம்மையாகிய வேதம் ஓதுவே வடிவாக வுடைய முனிவர்கள், வாழ்-வாழ்கின்ற, மொய் கொள் - நெருங்குதலைக்கொண்ட, சோலை - சோலையை, முன்னினர் - கிட்டினவர்களாய்,—வைகல் யாவும் - பகல்முழுவதும், வைகினர்- (அங்கே) தங்கினார்கள்; (எ - று.)

பகைவருயிரைக் கவர்தலால், வேலிற்குக் காலனை ஒப்பிட்டார். காலத்தை வரையறைசெய்தலாற் காலனெனப்பெயர். 'வேதமெய்யர்' என்பதற்கு, வேதவிதிப்படி நித்திய நைமித்திக கருமங்களிற் சிறிதும் வழுவாது ஒழுகுபவ ரென்பது கருத்து. பி-மீ:—[1]வைகினன்.

(எசு)

விராதன்வதைப்படலம் முற்றிற்று.

உ-ஆவது சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்.

சரபங்கனென்னும் முனிவன் ஸ்ரீராமனது அருளாற் பிறப்பு நீங்கிப் பரம பதமடைந்த கதையைச் சொல்லுஞ் சிறிய பிரிவென்பதாம். 'சரபங்கன்' என்பதற்கு-(மன்மத) பாணங்களைப் பங்கப்படுத்தினவன் [வென்றவன்] என்பது பொருள்; முக்குற்றங்களுள்ளும் முதலதாகிய காமத்தை ஒழித்தவனென்பது கருத்து; காமத்தை யொழித்தவனெனவே, மற்றைய வெகுளி மயக்கங்களே யொழித்தமை தானே பெறப்படும்; பிறப்புநீங்குதலெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். **சரபங்கர் பிறப்புநீங்கு படலம்** என்று பிரதிபேதம்.

இப்படலம், ஸ்ரீராமன் விராதனது சாபத்தீர்த்தபின்னர்ச் சரபங்கனது ஆச்சிரமத்தருகிற் சென்றபோது, பிரமனது கட்டளையால் அம்முனிவனைச் சுத்தியலோகத்திற்கு அழைத்துப்போக வந்திருந்த தேவேந்திரன் இராமனைக் கண்டு துதித்துப்போக, பின்பு இராமபிரான், முனிவனைச் சேர இராம பிரானது சேவைக்குக் காத்திருந்த அம்முனிவன் அப்பிரான் எழுந்தருளினவுடனே சேவித்து அப்பிரானதெதிரிலேயே அக்கினிப்பிரவேசஞ்செய்து ஊனுட லொழித்து வானுலகடைந்த வரலாற்றைக் கூறுகின்றது.

வேறு.

க.—இராமர்முதலியோர் மாலையில் சரபங்கமுனிவனதுஆச்சிரமஞ்சேர்தல்.

குரவங் குவிகோங் கலர்கொம் பிஞைடு
மிரவங் கணுறும் பொழு[1]தே கினரார்
சரவங் கனிருந் துதவங் கருது
மரவங் கிளர்கோங்[2]கொளிர்வா சவனம்.

(இ - ள்.) இரவு - அன்றை இராத்திரியானது, உறும் பொழுது - வருங்காலத்தில் [மாலைப்பொழுதில்],—(ஸ்ரீராமலட்சுமணர்கள்),—குரவம் - குராவரும்பும், குவி கோங்கு - குவிந்த கோங்கரும்பும், அலர் - (கன்மயிர்முடியில்) மலரப்பெற்ற, கொம்பினெடும் - பூங்கொம்புபோன்ற சிகையுடனே,—அங்கண் - அவ்விடத்தினின்றும், சரவங்கன்-சரபங்கனென்னும் முனிவன், இருந்து—, தவம் கருதும் - தவத்தைச் செய்கின்ற, மரவம் கிளர் - கோங்கமரங்கள் உயர்ந்து வளர்ந்திருக்கப்பெற்றதும், கோங்கு ஒளிர் - கோங்கமரங்கள் விளங்கப்பெற்றதுமாகிய, வாசம் வனம் - வாசனையையுடைய ஆச்சிரமத்திற்கு, எகினர் - சென்றார்கள்; (எ - று.)

குரவம் - குராமரம். குரவம், கோங்கு என்பன - முதலாகுபெயர்கள். கொம்பு - உவமவாகுபெயர். வாசவனம் - வாஸஸ்தானமாகிய சோலையுமாம்.

பி-ம்:—[1]எய்தினரால். [2]இள. சிலபிரதிகளில் 'சரவங்கனிருந்து தவஞ்செய்வனத், தரவங்கிளர்வெஞ்சிலையாண்டகையார்' என்று பின்னிரண்டடிகள்.

இதுமுதல் இருபத்தைந்து கவிகள்-பெரும்பாலும் நான்குசீரும் மாச்சீர்களாகிய அளவடி நான்குகொண்ட **கலிவிருத்தங்கள்.** இப்பாடல்களே முச்சீரடி வஞ்சிவிருத்தமாக அலகிடுவாரு முண்டு. (எச)

உ.—அப்போது இந்திரன் அங்கு வந்திருத்தல்.

செவ்வே லவர்சென் றனர்[1]சே ரலுறு
மவ்வே லயினெய் தினர்[2]ஞ யிரமாந்
தவ்வா திரவும் பொலிதா மரையின்
வெவ்வே றலர்கண் ணினன்விண் ணவர்கோன்.

பதின்மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) செம் வேலவர்-சிவந்த வேலினையுடைய அவ்வீரர்கள், சென்றனர் சேர்ந்தாலும் - (அம்முனிவனது ஆச்சிரமத்துக்குச்) சென்று சேர்கின்ற, அ வேலையின் - அப்பொழுதில்,—இரவும் - இராத்திரி காலத்தும், தவ்வாது - குவியாமல், பொலி - மலர்ந்து விளங்குகின்ற, தாமரையின் - செந்தாமரைமலர்களைப்போல, வெவ் வேறு அலர் - தனித்தனியே விளங்குகின்ற, ஆயிரம் ஆம் கண்ணினன்-ஆயிரங்கண்களையுடையவனுகிய, விண்ணவர் கோன் - தேவேந்திரன், எய்தினன் - (அங்கே) வந்திருந்தான்; (எ - று.)

பகைவரது இரத்தத் தோய்த்திருத்தலின், 'செவ்வேல்' என்றார்; வேலிற்குச் செம்மை - கூர்மையாகவுந் தோன்றலாம். இமையாதகண்களாதலால், குவியாததாமரைகள் உவமை கூறப்பட்டன; **இல்போருவமை:** தேவர்கள் கண்ணிமைப்பதில்லை என்பது தொன்மரபு. வெவ்வேறு - வேறுவேறு என்பதன் மரூஉ. **பி - ம்:**—[1]சேறலுறும், சேர்தலுறும். [2]ஆயிரமும். (எஞ்)

ஊ.—பதினெருகவிகள் - இந்திரனது வருணனை.

அன்னச் செலவிற் படிமே லயல்சூழ்
பொன்னிற் பொலிவா ரணிபூ [1]ணெளிமேன்
மின்னிற் செறிகற் றைவிரிந் தனபோற்
பின்னிச் சுடரும் பிறழ்பே ரொளியான்.

(இ - ள்.) (அவ்விந்திரன்),—அயல் படிமேல்-(தனது) அருகிடங்களில், சூழ் - சுற்றிலுமிருக்கின்ற, அன்னம் செலவின் - அன்னம்போன்ற நடையினையுடைய, பொன்னின் பொலிவார் - திருமகள்போல விளங்குகின்ற தெய்வப்பெண்கள், அணி - (தனது உடம்பில்) அணிக்க, பூண் - ஆபரணங்களின், ஒளிமேல் - ஒளியின் மேலே, மின்னின் செறி கற்றை விரிந்தன போல் - மின்னல்களின் மிகுந்துள்ள கூட்டம் பரவியதைபோல, பின்னி சுடரும் - கலந்துவிளங்குகின்ற, பிறழ் பேர் ஒளியான் - மிகுந்த பிரகாசகாந்தியையுடையவன்; (எ - று.)

தெய்வமகளிரால்அணியப்பெற்ற ஆபரணங்களின் காந்தியினும் மேற்பட்டு விளங்குகின்ற சரீரகாந்தியையுடையா னென்பதாம். இனி, தன்னருகி லிருக்கின்ற தெய்வப்பெண்கள் தாந்தாம் அணிந்துகொண்டிருக்கின்ற ஆபரணங்களி னொளியின்மேற் கலந்து விளங்குகிற தன்னொளியையுடையா னென்றுமாம். **பி-ம்:**—[1]மூலையார். (எச)

ச. வானிற் பொலி[1]தோ கையர்கண் மலர்[2]வண்
காணிற் படர்கட் களிவண் டொடு [3]கார்
மேனித் திருநா ரதன்வீ ணையிசைத்
தேனிற் [4]பொலியுஞ் செவிவண் டுடையான்.

(இ - ள்.) கார் மேனி-கறுத்த (தனது) உடம்பிலே,—வானின் பொலி தோகையர் - தேவலோகத்துப் பொருந்தி விளங்குகின்ற தெய்வமகளிரது. கண் - கண்களாகிய, மலர் வள் காணில் - வளப்பம்பொருந்திய புஷ்பக் காட்டில், படர் - சூழ்ந்துமொய்க்கின்ற, கண் - (தன்) கண்களாகிய, களி வண்டொடு - களிக்கின்ற வண்டுகளுடனே,—திரு நாரதன் - ஸ்ரீநாரதமகா முனிவனது, வீணை - (மஹதியென்னும்) யாழினது, இசை - பாட்டாகிய, தேனின் - தேனைப் பருகி பதஞல். பொலியும்-விளங்குகின்ற, செவி வண்டு-செவிகளாகிய வண்டுகளேயுடைய, உடையான் - உடையவன்; (எ - று.)

வண்டுகள் மலர்வனத்தில் மொய்த்தல்போலத் தன்னைச்சூழ்ந்து வருகின்ற அமரமகளிரின் கண்களைத் தன்அருள்நிறைந்தகண்களாற் பார்த்துக் களித்தும், வண்டுகள் தேனைப் பருகிக்களித்தல்போல நாரதனது வீணைபிசைபைக் கேட்டுக்களித்து மிருத்தனன் இந்திர னென்பதாம். கார்மேனி (பிலே) கண் வண்டொடு செவிவண்டு உடையான் என இயையும். தோகையர்-மயில்போலுஞ் சாயலையுடையார். மலர்த்தொகுதியை 'மலர்க்கான்' என்றார். மலர் - தாமரையும், கருங்குவளையும். நாரத னென்பதற்கு - ஆத்துமஞானத்தைஉபதேசிப்பவ னென்றும். நாரங்களுக்கு உள்ள ஒற்றுமையைப் பிளப்பவ னென்றும் பொருளாம். **பி-ம்:**—[1]கோதையர். [2]வாழ். வான். [3]கார். [4]படியும்.(எஎ)

நூ. [1]அனேயின் றுறையையம் பதொடைம்ப துநூல்
[2]வினேயின் றொகைவேள் வி[3]நிரப் பியமா
முனேவன் முதுதே வரின்மூ வ[4]ரலார்
புனேயும் முடிதுன் றுபொலங் கழலான்.

(இ - ள்.) நூல் - சாஸ்திரங்களாற் சொல்லப்படுகின்ற, அனேயின் துறை - அக்கினியினிடத்தே செய்யவேண்டிய, வினேயின் தொகை - தொழில்களது கூட்டத்தையுடைய, ஐம்பதொடு ஐம்பது வேள்வி - நூறு அசுவமேதயாகங்களே, நிரப்பிய - குறைவில்லாமல் நிறைவேற்றிய, மா - பெரிய, முனேவன் - முன்னவன்; முது தேவரின் - பழமையாகிய தேவர்களுள், மூவர் அலார் - திரிமூர்த்திகளல்லாத மற்றைத்தேவர்களெல்லாம், புனேயும் - தரித்துக்கொண்டிருக்கிற, முடி - கிரீடங்கள், துன்று - நெருங்குகின்ற, பொலம் கழலான்-பொன்னுலாகிய வீரக்கழலேயுடையவன்; (எ-று.)

நூறுஅசுவமேதயாகஞ்செய்தவனே இந்திரபதவியைப் பெறுவா னென்ற கொள்கை, இங்கு அறியத்தக்கது. எதுகைநோக்கி, அனலென்பது அனேயெனத் திரிந்து நின்றது; துறை - ஏழனுருபு. வினே - யாகத்திற்கு அங்கமாகிய பிரவர்க்கியம், அவபிருதம் முதலிய தொழில்கள். முன்னேனே

முனிவனென்பது, ஒருசொல்விழுக்காடாம். மூவர்-பிரம விஷ்ணு ருத்திரர் கள். திரிமூர்த்திகட்கு அடுத்தபடியிலிருப்பவன் இந்திர னென்றவாறு.தேவர் களெல்லாம் தத்தம்முடி இவனடியிலே படுமாறு காலில்விழுந்து வணங்குத லால், 'முடிதுன்றுபொலங்கழலான்' என்றார். பி - ம்:—[1]அனலின். [2]நீனை வின்படி. [3]நிரம்பிய. [4]அலால். (எ.அ)

கூ. செம்மா மலரா ணிகர்தே வியொடு
மும்மா மதவெண் ணிறமுன் னுயர்தாள்
வெம்மா மிசையான் விரிவெள் ளிவிளங்
கம்மா மலையண் ணலையே யணையான்.

(இ - ள்.) செம் மா மலர் ஆள் நிகர் தேவியொடும் - சிவந்த பெரிய தாம ரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளைப் போன்ற (தன்) மனைவியாகிய சசி தேவியுடனே, மும் மா மதம் - மிக்க மூன்று மதங்களையும், வெள் நிறம் - வெள்ளைநிறத்தையும், முன் உயர் தாள் - முன்னே உயர்ந்த (முன்) கால்களை யும், வெம் - வெய்பத்தையுமுடைய, மா மிசையான் - ஐராவதத்தின்மேல் ஏறிவருகிறவன்; (அங்ஙனம் ஏறி வரும்பொழுது), விரி - ஒளி வீசுகின்ற, வெள்ளி - வெள்ளிமயமாய், விளங்கு - விளங்குகின்ற, அ மா மலை - அந் தப் பெரிய கைலாசகிரியில் (பார்வதிதேவியோடு வீற்றிருக்கின்ற), அண் ணலையே - பரமசிவனையே, அணையான் - ஒத்திருப்பவன்; (எ - று.)

வெண்ணிறமான ஐராவதயானைமேன்மேல் சசிதேவியோடுவீற்றிருக் குந் தேவேந்திரனுக்கு, வெள்ளிமயமான கைலாசகிரியில் பார்வதியுடன் வீற்றிருக்கும் பரமசிவனை உவமை கூறினர். மும்மதம்-தூதிக்கைமதம், கர்ண மதம், பீஜமதம். யானைக்கு மதம்பிடித்திருக்கும்போது உடல் வெப்பமா யிருக்கு மாதலால், 'வெம் மா' என்றார்; இனி, வெம்மை - கொடுமையும், அழகுமாம். (எக)

எ. தானின் றயனின் றெளிர்தண் கதிரோன்
யானின் றதெனென் றெளியெஞ் சிடமா
வானின் றபெரும் பதம்வந் துருவாய்
மேனின் றெனநின் றெளிர்வெண் குடையான்.

(ஆ-ள்.) அயல் நின்று ஒளிர் - வெளியிடங்களிலெல்லாஞ்சென்றுபரவி விளங்குகின்ற, தண் கதிரோன் - குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன், இன்று யான் நின்றது என் என்று - 'இந்நாளில் யான் (இவ்வுலகில்) விளங்கிநிற்றலாற் பய னென்னே?' என்று எண்ணி, ஒளி எஞ்சிட-ஒளிகுறை யும்படி,—மா வான் நின்ற - உயர்ந்தமேலுலகத்தே பொருந்திய, பெரும்பதம்- பெரிய சுவர்க்கந்தானே, உரு ஆய் வந்து - குடையின்வடிவமெடுத்துவந்து; மேல் நின்றுஎன - தன்மேலே பொருந்தினற்போல,நின்று-பொருந்தி,ஒளிர்- விளங்குகின்ற, வெள் குடையான்-வெள்ளைக்குடையையுடையவன்; (எ-று.)

சந்திரனினும் வெள்ளியது குடையென்பது, முன்னிரண்டடிகளின் கருத்து: **தோடார்புயரீவுநவிற்சியணி.** பின்னிரண்டடிகளில் இன்பம்பயத் தல்பற்றி, சுவர்க்கமே குடையாகவந்ததுபோலு மென்றது; **தற்குறிப்பேற்ற வணி.** எஞ்சிட ஒளிர் என இயையும். **பி-ம்:**—[1]நின்றன. (அ0)

அ. திசைகட் டியமால் கரிதெட் டமதப்
பசைகட் டினகிட் டினபற் பலபோர்
விசை[1]கட் டழிதா னவர்[2]விட் டிகல்பே
ரிசைகட் டியவொத் திவர்சா மரையான்.

(இ-ள்.) திசை கட்டிய - திக்குக்களிற் கட்டப்பட்ட, மால் கரி - பெரிய அஷ்டதிக்கஜங்களின், தெட்ட - தெளிவான, மதம் பசை - மதநீர்ப்பசை யோடு, கட்டின - சம்பந்தமுடையனவாய், கிட்டின - எதிர்த்துநெருங்கிய, பற் பல போர் - பலபலயுத்தங்களில், விசை கட்டு அழி - (தத்தம்) வலியும் உறுதிநிலையும் அழிந்து தோற்றுப்போன, தானவர் விட்டு-அசுரர்களினின்று நீக்கி, இகல் பேர் இசை - வலிமையினுலான மிக்க கீர்த்தியை, கட்டிய ஒத்து - (தனியே) கட்டியவற்றைப் போன்று, இவர் - வீசிவிளங்குகின்ற, சாமரையான் - வெண்சாமரையையுடையவன்; (எ - று.)

தேவாசுரயுத்தங்களில் அஷ்டதிக்கஜங்களும் மீத்தவர்பக்கல் வந்துன்று போர்செய்ய மாதலால், இவ்வாறு கூறினர். தானவர் - தநு என்பவளிடத் துப் பிறந்தவர். புகழை வெண்ணிறத்தென வருணித்தல், கவிமரபு. சாமரை - சமரமென்னும் மானினது வாலின்மயிராற் செய்யப்பட்டதொரு ராஜசிந்நம். **பி-ம்:**—[1]கட்டின. [2]விட்டவர்; விட்டகல். (அக)

கூ. [1]தீர்விற் றிரிசெங் கதிர்தங் குவமீதா
[2]ரூருற் றதெனப் பொலியொண் முடியான்
போர்வித் தகனே மிபொறுத் தவன்மா
மார்விற் றிருவிற் பொலிமா லியனன்.

(இ - ள்.) ஓர் - ஒப்பில்லாத, ஊர் - பரிவேடத்தை, உற்றது - பொருந்தியதாகிய, தீர்வு இல் திரி செம் கதிர் - ஒழிவில்லாது திரிகின்ற சிவந்த கிரணங்களோடுகூடிய சூரியன், தங்குவது என-(வந்து) தங்கியதுபோல, பொலிவிளங்குகின்ற, ஒள் முடியான் - ஒளியுள்ள கிரீடத்தையுடையவன்; போர் வித்தகன் - யுத்தத்தில் மிக்க வல்லமையுடையவன்; நேமி பொறுத்தவன் - திருவாழியேந்தியருளிய திருமாலினது, மா மார்வில் - விசாலமான திரு மார்பில்வீற்றிருக்கின்ற, திருவின் - திருமகளைப்போல, பொலி - விளங்கு கின்ற, மாலியனன் - இரத்தினவாரத்தையுடையவன்; (எ - று.)

சூரியன்-கிரீடத்துக்கும், பரிவேடம் - அக்கிரீடத்தைச்சூழ்ந்து கட்டப் பட்ட பட்டத்துக்கும் உவமை. ஊர் - சூரிய சந்திரரைச்சுற்றித் தோன்றும் வட்டம். இனி, செங்கதிர் தங்குவதாகிய ஓர் ஊரென - சூரியலோகம்போல என்றுமாம். போர்வித்தகனுகிய நேமிபொறுத்தவ னென இயைத்தலு

மொன்று. பின்னிரண்டடிகட்கு - திருமாலின்மார்பிலே திருவோடு விளங்குகின்ற வனமாலைபோன்ற பாரிஜாதமாலையையுடையா னெனினு மாம். பி-ம்:—[1]தோரில். [2]ஊரிற்றது, ஊறிற்றது. (அ2)

கo. செற்றிக் கதிரிற் பொலிசெம் மணியின்
கற்றைச் சுடர்விட் டெரிகஞ் சுகியான்
வெற்றித் திருவின் குளிர்வெண் ணகைபோற்
சுற்றிக் [1]கிளருஞ் [2]சுடர்தோள் வளையான்.

(இ - ள்.) செற்றி - பதிக்கப்பட்டு, கதிரின்-சூரியனைப்போல, பொலி - விளங்குகின்ற, செம் மணியின்-சிவந்த இரத்தினங்களினது, சுடர் கற்றை - ஒளியின்கூட்டம், விட்டு எரி - விட்டுவிளங்குகின்ற, கஞ்சுகியான்-கஞ்சத்தை யுடையவன்; வெற்றி திருவின் - ஜயலட்சுமியினது, குளிர் வெள் நகை போல் - குளிர்ந்த வெள்ளிய புன்சிரிப்புப்போல, சுற்றி கிளரும் - சுற்றி லும் விளங்குகின்ற, சுடர் தோள்வளையான் - பிரகாசிக்கின்ற வாகுவலயத் தையுடையவன்; (எ - று.)

கஞ்சுகம், கஞ்சுகியென ஈறுதிரிந்தது; புவகம் - புவனி என்றாற்போல. சுற்றி-தோளைச்சுற்றியென்றேனும், சுற்றுப்பக்கங்களிலென்றேனுங்கொள்க. கதிர் - ஆகுபெயர். பி - ம்:—[1]சுடரும். [2]கிளர். (அ3)

கக. பல்லா யிரமா மணிபா டமுறுங்
தொல்லா ணிகால் சுடரின் றொகைதா
மெல்லா முடனு யெழலா [1]னெருதன்
வில்லா லொளிர்மே கமெனப் பொலிவான்.

(இ - ள்.) பல் ஆயிரம் மா மணி - பலவாயிரம் பெரிய இரத்தினங்கள், பாடம் உறும் - பளபளக்கின்ற, தொல் ஆர் - பழமையாகப் பொருந்திய, அணி - ஆபரணங்கள், கால் - வெளிவீசுகின்ற, சுடரின் தொகை - ஒளியின் கூட்டம், எல்லாம்—, உடன் ஆய் - ஒருங்குகூடி, எழலான் - வெளியே விளங்குதலால், தன் ஒரு வில்லால் ஒளிர் மேகம் என - (தனது) ஒப்பற்ற வில்லோடு [இந்திரசாபத்தோடு] விளங்குகின்ற காளமேகம்போல, பொலி வான் - விளங்குபவன்; (எ - று.)—தாம் - அசை.

'வில்லால்', ஆல்-உடனிகழ்ச்சிப்பொருளது. கருமேகம் - இந்திரனது மேனிக்கும், இந்திரவில்-அந்தனிடத்தே நவமணிகளுமிழைத்துப் பலநிறங்களு முடையவாய்விளங்குகின்ற ஆபரணங்களின் காந்திக்கும் உவமை. பி-ம்:— [1]அயலே. (அச)

கஉ. மாஞ் வுலகந் தனின்மன் றல்பொருந்
தேஞ் றுலஞ் செறிதொங் கலினுன்
றீமே ஞெகடித் துயர்[1]வென் றியவாம்
வாஞ் டியர்கண் ணெஞ்சுவ ஞடையான்.

(இ - ள்.) மாலு - (ஒன்றேடொன்று) ஒத்திராத, உலகந்தனில்-பல வுலகங்களிலும் (செல்லும்படி), மன்றல் பொரும் - வாசனை வீசு கின்ற, தேன் நாறு - தேனெழுகுகின்ற, நலம் செறி - அழகு மிக்க, தொங்கலினன் - பூமாலையை யுடையவன்; மீனேடு கடித்து - மீன் வகைக ளோடு ஒத்து, உயர் வென்றிய ஆம் - சிறந்த வெற்றியை யுடையனவாகி ன்ற, வான் நாடியர் - தேவலோகத்துமகளிரது, கள் எனும் - கண்களாகிய, வாள் உடையான் - வாள்களைத் தன்மேலுடையவன்; (எ - று.)

ஊர்வசி முதலிய தேவமகளிரனைவரும் தேவேந்திரனது மேனியழகை யே எப்பொழுதும் இமையாதுநோக்குதலால், 'வானுடியர் கண்ணெனும் வாளுடையான்' என்றார்: இனி, வானுடியர்கண்ணே வென உவமைகூறத் தக்க உடைவாளைத் தன்னிடையி லுடையா னெனினுமமையும். மாலு வுலக மென்பதற்கு - தனக்குஒப்பில்லாத உலக மென, தேவலோகமென் றும் உரைக்கலாம். பொருந்திதாங்கல், நாறுதிதாங்கல். செறிதிதாங்கலென இயையும். கண்களுக்கு வெற்றி - ஆடவர்களை மயக்கித் தம்வயப்படுத்துதல். **பி-ம்:**—[1]வென்றியவா. (அரு)

கஉ. வெல்வா [1]ணசையால் [2]விசையால் விடுநா
லெல்வான் சுடர்மா லியிரா வணன்மே
னெல்வா லு[3]மறு தகிறும் [4]பிறழா
வல்வாய் மடியா வயிரப் படையான்.

(இ - ள்.) எல் - சூரியன்போன்ற, வான் சுடர் - மிக்க ஒளியைவீசு கின்ற, மாலை - வெற்றித்தொகுதியையுடைய, இராவணன்மேல்—, வெல் வான் நசையால் - சயிக்கவேண்டு மென்னும் விருப்பத்தால், விசை யால் - வேகத்தோடு, விடு நாள் - பிரயோகித்தபொழுதும், நெல் வாலும் அறுத-நெல்லின் வாலினளவும் [சிறிதும்] தான் அறுத்து, பிறம் பிறழா-(தன்) முன்னையொளியும் மாறுத, வல் வாய் மடியா - (தன்) வலிய தனிக்கூர்மை யும்மடங்காத, வயிரம் படையான் - வச்சிராயுதத்தை யுடையவன்; (எ - று.)

'எல் வான் சுடர் மாலை' என்னும் அடைமொழி - வலை யெடுத்தல், திக்குவீசயஞ்செய்தல் முதலிய அனைதுபோராற்றலை உணர்த்தும். எல்வான் சுடர்மாலை - இந்திரனுமாமிடன்பாருமூளர். இராவணன் - பரத்துரிஷ்ரை யாலே நாட்டை இருந்தேதேருடியாகக் கூப்பிடும்படி பண்ணினவன்; அன்றி க்கே, தான் கைலாசாதிகளை எடுத்து நெருக்குண்டு கூப்பிடுமவன்: இதனால், தனக்கும் பிறர்க்கும் ஹிதமறியாத துஷ்டஸ்வபாவனென்கை. நெல் வால் - மிக்கசிறுமைக்குக்காட்டியதொரு அளவை. வால்-பின்நுனி. அறுத பிறழாத மடியாத படை யென்க. **பி-ம்:**—[1]நசையின். [2]விசையின். [3]அறுது. [4]பிறிதாய்.

கச.—சரபங்கன் இந்திரனையேதிர்கோண்டு வந்த காரணம் வினவல்.

நின்ற னெதிர்நின் றநெடுந் தவனுஞ்
சென்ற னெதிர்கொண் டுசிறப் [1]படையா

வென்ரு னிவணெய் தியவா றெனலும்
பொன்ரு தபொலங் கழலோன் புகலும்.

(இ - ள்.) (இத்தகைய தேவேந்திரன்), நின்ரான் - (சரபங்கனுச்சிரமத் திற்குச்) சென்று நின்ரான்; எதிர் நின்ற - அங்கு எதிரேநின்று கண்ட. நெடுந் தவனும் - மிக்கதவத்தையுடைய அம்முனிவனும், சென்ரான் எதிர் கொண்டு - எதிரேவந்துஎளவளாவி யழைத்துப்போய், சிறப்பு அமையா - சிறப்பான மரியாதைகளைச் செய்து, 'இவண் எய்திய ஆறு - (நீ) இங்கே வந்ததற்குக் காரணம், என் - என்ன?' எனலும்-என்று வினவியவளவில்,— பொன்ரு தபொலம் கழலோன் - அழியாத பொற்கழலையுடைய அவ்விந்தி ரன், புகலும் - சொல்லுவான்; (எ - று.)—வது மேற்கூறுகின்ரார்.

எதிர்கொண்டு சென்ரு னெனன்றுங் மாற்றலாம். பொன்ரு த கழலென்க. மூன்ரு வதுபாடன்முதல் பன்னிரண்டாம்பாடல்வரையிலுள்ள ஒளியான் உடையான் முதலியவைகள் இரண்டாம்பாடலிலுள்ள விண்ணவர்கோன் என்பதற்கு விசேடணமாகி, அது 'நின்ரான்' என்று இக்கப்பாடலிலுள்ள வினைமுற்றுக்கு எழுவாயாம். பி-ம்:—[1]அயர்வான். (அள)

கரு.—இதுவும் அடுத்த கவியும் - இந்திரன் பிரமதேவனது கட்டளையைத் தெரிவித்தல் கூறும்.

நின்னை [1]லியைநீ திநெடுந் தவமின்
[2]றென்னை னும்விளம் பரிதென் றுணர்வா
னங்கான் முகனின் னியமழைத் தனனுற்
பொன்னுர் சடைமா தவமோ தியரால்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பொன் ஆர் சடை மா தவ-பொன்போன்ற சடையையுடைய மிக்க தவமுடையீரே!—அ ரான்முகன் - ரான்குமுகங்களையுடைய அப் பிரமதேவன், 'நின்னால் இயை - உன்னுற் செய்யப்பட்ட, நீதி நெடுந் தவம் - முறைமைதவருத பெரிய தவமானது, என்னனும் - சிறிதும், விளம்ப அரிது - சொல்லுதற்கு அரிது' என்று உணர்வான் - என்று அறிபவனுய், நின்னை அழைத்தனன்-உன்னை(த் தன் உலகத்திற்கு வரும்படி) கட்டளையிட் டான்; ஆல்-ஆதலால், இன்று - இப்பொழுது போதுதி - ஈவருவாயாக.

சரபங்கமுனிவன் தவம் ரான்குமுகங்களையுடைய பிரமனலுஞ் சொல்லு தற்கு அரிதென்பதாம்: எனவே, மற்றையோர் அறிந்து சொல்லவெண் ணுமை அருத்தாபத்தியால் விளங்கும். என்னனும்-எவ்வளவுகிறிது மென்க. விளம்பரிது - தொகுத்தல்; இனி, முதனிலைத்தொழிற்பெயராகக் கொண்டு, விளம்புதற்குஅரிதென்றுமாம். பி - ம்:—[1]இயல். [2]என்னலும். (அக)

**கசு. எந்தா யுலகியா வையுமெவ் வுயிருந்
தந்தா னுறையுந் தெறிதந் தனனு**

னந்தாத [1]பெருந் தவகா டதுநீ
வந்தா யெனினின் னெதிரே வருவான்.

(இ - ள்.) எந்தாய் - எம்பெரியோனே! கந்தாத பெருந் தவ - கெடுதல் இல்லாத மிக்க தவமுடையோனே!—உலகு யாவையும் - எல்லாவுலகங்களையும், எ உயிரும் - (சராசரங்களாகிய) எல்லாவுயிர்களையும், தந்தான்-படைத்தவனுகிய பிரமதேவன், உறையும் - (தான்) வாசஞ்செய்கின்ற, நெறி - பதவியை, தந்தனன் - (உனக்குக்) கொடுத்தான்; நீ—, நாடு அது - அந்தாட்டுக்கு, வந்தாய் எனின் - வருவையாஞல், நின் எதிரே வருவான் - உன்னை (அழைத்துப்போதற்கு அவன்) எதிர்கொண்டுவருவான்; (எ - று.)

பெருந்தவநாடு-பெரியதவத்தா லடையப்படும் நாடெனவுமாம். வந்தாய்-காலவழுவமைதி. **பி-ம்:**—[1]பெரும்பதநாடதனில், பெரும்பதநாடதரீ. (அக)

கஎ.—முனிவன் இந்திரனதுமோழியைத் தடுத்துக்கூறத் தொடங்குதல்.

எலலா வுலகிற குழுயாந தமையான
சொல்லா வகைநீ யுணர்[1]தொன் மையையா
[2]னல்லா யுடனே நடநீ யெனலு
மல்லே னெனவா லறிவா னறைவான்.

(இ - ள்.) கல்லாய் - கல்லாதவமுடையோனே! (அப்பிரமலோகம்), எல்லா உலகிற்கும் உயர்ந்தமை - எல்லாவுலகங்களினுஞ் சிறந்திருத்தலை, யான் சொல்லா வகை - யான் உணர்த்தவேண்டாமலே, நீ—, உணர் - அறிகின்ற, தொன்மையை - பழமைபுடையனுயிருக்கிறாய்; ஆல் - ஆகையால், நீ—, உடனே நட - உடனே வருவாயாக; எனலும் - என்று (இந்திரன்) சொன்ன வளவில்,—வால் அறிவான்-தத்துவஞானத்தையுடைய அம்முனிவன், அல்லேன் என - (அதற்கு) உடன்படேனென்று, அறைவான்-சொல்லுவான்; (எ - று.)—அது மேற்கூறுகின்றார். **பி - ம்:**—[1]தொன்மையையாய். [2]கல்லாஞடனே. (கூ)

கஅ.—முன்றுகவிகள் - சரபங்கழினிவனதுமறுமோழி.

சொற்பொங் குபெரும் புகழோய் தொழின்மாய்
சிற்பங் களின்வீ வன[1]சேர் குவினே
யற்பங் கருதித னெனருந் தவமோ
கற்பம் பல[2]சென் றதுகா ணுதியால்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) சொல் பொங்கு - (எல்லாராலுஞ்) சொல்லப்பட்டு விளங்குகின்ற, பெரும் புகழோய் - மிக்க புகழையுடையவனே!—தொழில் மாய் சிற்பங்களின் - செயலழியத்தக்க சித்திரங்களைப்போல, வீவன - (நாளடைவில்) அழிகின்ற உலகங்களை, சேர்குவினே - (யான்) அடைவேனேஞ? அற்

பம் கருதேன்-(அவ்வாறு) அல்பமான பதவிகளை (யான்) மனத்தாலும் நினையேன்; என் அருந் தவமோ - எனதுஅரியதவமோ, கற்பம் பல சென்றது - அநேக கல்பகாலங்கள் கழியப்பெற்றது: காணுதி - (நீ) அறிவாய்; (எ-று.)

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படுமாதலால் அவையிரண்டும் அடங்க, 'சொற்பொருள் பெரும்புகழ்' என்றான்; இனி, சொல்லுக்கு அடங்காத புகழினதுமாம். சிந்தி-தே லோகள் பார்வைக்குழகியனவாயினும் காளடைவில் உருக்குலைந்து அழிவனபோல, மேனெஞ்சில் சிறந்தனபோலத் தோன்றினும் காளடைவில் அழிதலை யடைய லோக மென்பார். 'தொழின் மாய்சிற்பங்களின்வீவன' என்றார். சிற்பம். அற்பம். கற்பம் - வடமொழி: பிராகிருதபிரளயத்திற் பிரமலோகமும் அழியுமென்க. **பி-ம்:**—[1]கேர்கு கெனினே. கேர்குவெனே. [2]கென்றான. (கச)

கக. சொற்றுந் தரமன் றிதுசூழ் கழலாய்
பெற்றும் [1]பெறுகில் லதொர்பெற் றியதே
மற்றென் பல[2]சொல் லிவண்வந் தவர
முற்றும் பகரு னு[3]முடித் தனனால்.

(இ - ள்.) சூழ் கழலாய் - சுற்றிய கழலுடையானே! இது - இவ்வார்த்தை, சொற்றும் தரம் அன்று - (என்னிடத்திற்) சொல்லத்தக்கதன்று; பெற்றும் பெறுகில்லது ஓர் பெற்றியதே - (அப்பிரமலோகம்) பெற்றாலும் பெறுதற்கொப்பான தன்மையையுடையதே; மற்று பல சொல் என் - வேறு பலவார்த்தை சொல்லிப் பயனென்னை? (யான்). இவண் வந்து - இவ்விடத்திற்பொருந்தி, நவம் முற்றும் பகல் காணும் - நவம்பூர்ணமாகவேண்டிய மிக்ககாலமும். முடித்தனன் - (தவஞ்செய்து) முடித்தேன்; (எ - று.)

பிரமலோகம்புக்கவர்க்கும் மீண்டும் பிறப்புண்டாதலால், 'பெற்றும் பெறுகில்லதொர்பெற்றியது' என்றான். மோக்ஷலோகம் பெறுதற்குரிய மிக்க தவஞ் செய்தே னென்பதாம். எ - தேற்றம். இவண் வந்து - தவ வென அரசரீருக்கி, ஸர்வேச்வரன் தானே இவ்விடத்தில்வந்து பரமபதத்தை அளிக்கும்படி தவம்முடித்தேனென்றுமாம். **பி - ம்:**—[1]பெறலாயது. [2]நிவண் வந்தனனால். [3]முடித்துளனால். (கஉ)

உ0. [1]சிறுகா லிலாயி லிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
வுறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவென்வா னுடையாய்.

(இ - ள்.) வான் உடையாய் - தேவலோகத்தை யுடையவனே! சிறு காலை இலா - சிறிய காலவரையறை யில்லாமலும், இலையோ திரியா - இலைமை வேறுபடாமலும், குறுகா நெடுகா - சுருங்குதலும் வளர்தலு மில்லாமலும், குணம் வேறுபடா - குணம் மாறுபடாமலும்,—உறு கால் - பெரிய காற்றினால், கிளர் பூதம் எலாம் - விளங்குகின்ற எல்லாப் பூதங்களும். உகினும்-

அழிந்தாலும், (அக்காலத்திலும்), மறுகா - அழியாமலுமுள்ள, நெறி - பக்தி யை [பரமபதத்தை], எய்துவென் - (யான்) அடைவேன்; (எ - று.)

நிமிஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம், நாள், மாதம், வரு ஷம், யுகம் முதலிய காலவரையறை பரமபதத்திலில்லை யாதலால் 'சிறு காலையிலா' என்றும், இளமை முதுமை முதலிய பருவவகைகள் அங்குள்ளார் க்கு இல்லாமையால் 'நிலையோதிரிபா' என்றும், கன்னடைவிலாதல் கால வகத்தாலாதல் சுருக்கமும் பெருக்கமு மில்லை யாதலால் 'குறுகா நெடுகா' என்றும், மூக்குணங்களும் மாறிமாறிவராது சுத்தசத்துவகுணமயமாகவே யிருத்தலால் 'குணம் வேறுபடா' என்றும், ஸ்ரீமஹாவிஷ்ணுவினது திரு முகத்தினின்றும் ஒருமூச்சுக்காற்று உண்டாகி நூறுண்டளவும் வீசிக்கொண் டிருந்து அனைத்தையும் அழிக்கின்ற அப்பிரளயகாலத்திலும் அழிவில்லாது நித்தியமாயிருத்தலால் 'உறுகால் கிளர்பூதமெலாமுகினும் மறுகாநெறி' என் றார் கூறினர். 'சிறுகா'முதலிய சுறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சங் கள், 'நெறி' என்பதனோடு இயையும். பி-ம்:—[1]சிறுகாபெருகா. (கூ)

உக.—சரபங்கனுச்சிரமஞ்சார்ந்த இராமன்முதலியோர் அங்கே யாதுவிரோடமென ஆராய்தல்.

என்றின னிளிளம் பிடிமெல் லியின்வாய்
வன்றிண் சிலைவீ ரரும்வந் தணுகா
வொன்றுங் கிளர்பூ தையினு [1]ணர்வார்
நின்றென் னெனகொலின் னதெனு நினைவார்.

(இ - ள்.) என்று இன்ன விளம்பிடும் எல்லையின்வாய் - (சரபங்கமுனி வன்) என்று இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி முடித்தபொழுது, வல் வலிய, திண் - கட்டமைந்த, சிலை-வில்லினையுடைய, வீரரும்-அவ்விராமலக் ஷ்மணர்களும், வந்து அணுகா - (அவ்வாச்சிரமத்தை) வந்துகிட்டி,—ஒன்றும் - (அங்கே) பொருந்திய, கிளர் பூதையினுல் - மிக்கஆரவாரத்தால், உணர்வார்- (அதன்காரணத்தை) அறிபவராய், நின்று-(அங்குச்சற்றே நின்று, இன்னது என்னை எனு - இதுஎன்னவென்று, நினைவார் - ஆலோசிப்பாராஞர்;(எ-று.)

வல்சிலை திண்வீரர்எனக்கூட்டி-வலிய சிலையையுடைய திண்ணிய வீர ரென்றுமாம். கொல் - அசைநிலை. பி-ம்:—[1]உணர்வானின்று. (கச)

உஉ.—இந்திரன்வந்துள்ளாதை யூகித்தல்.

கொம்[1]பொத் தனகா லொளிர்கோள் வயிரக்
கம்பக் கரிநின் றதுகண் டனமா
லிம்பர்த் தலைமா தவர்பா [2]லிவணு
மும்பர்க் கரசெய் தினனென் றுணரா.

மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) ஒளிர் - விளங்குகின்ற, கோள் - கோட்பாட்டையுடைய, வயிரம் - வைரக்கற்களிழைத்த பூணினையுடைய, ஒத்தன - (கம்பில் ஒன்றே

டொன்று) ஒத்தனவாகிய, நால் கொம்பு - நான்கு தந்தங்களையுடைய, கம்பம் கரி - கட்டுத்தறியிற்கட்டப்படுகின்ற ஐராவதயானை, கின்றது - கின்றதனை, கண்டனம் - (நாம்) பார்த்தோம்: ஆல் - ஆதலால், இம்பர்த்தலை - இவ்விட த்திலுள்ள, மாதவர்பால்-சரபங்கமுனிவனிடத்தில், இவன் உம்பர்க்கு அரசு- இத்தேவேந்திரன், எய்தினன் ஆம் - வந்தானவன், என்று உணரா - என்று அறிந்து,—(எ - று.)—'நிறுவா' (உரு) என்க.

கோட்பாடு - ஒளிகொண்டிருக்குந் தன்மை. வயிரம்-கிம்புரிக்குக் கருவி யாகுபெயர். இனி, வயிரம் பொருந்திய கொம்பென்றுமாம். கம்பக்கரி - மத்த தாலே கம்பத்தினின்றும்விடவொண்ணாதபடிநிற்கும் யானை; அன்றிக்கே, கண்டாரெல்லாம் நடுங்கும்படி மதிப்பையுடைய யானை யென்றுமாம்: கம்பம்- நடுக்கம். அருகிலிருத்தல்பற்றி 'இவன்' எனச் சுட்டினார். பி - மீ:—[1]ஒத் தொளிர். [2]இவண். (கூடு)

உக.—இராமன் தனியே அச்சோலையிற் சேர்தல்.

மர[1]னே யனையா ளொடுமைந் தனையப்
பூநேர் பொழிலின் புறனே நிறுவா
வானே றெனவா ளரியே றிதெனத்
தானே யவகன் பொழில்சா ருதலும்.

(இ - ள்.) (ஸ்ரீராமன்), மானே அனையாளொடு - பெண்மான்போன்ற பார்வையையுடைய சீதையுடனே, மைத்தனை - லக்ஷ்மணனையும், அ பூ நேர் பொழிலின் புறமே - மலர்கள்நிறைந்த அச்சோலைக்கு வெளியிலே, நிறுவா - நிறுத்திவிட்டு,—ஆன் ஏறு என - ருஷபம்போலவும், ஆள்அரி ஏறு இது என- வலிமையுள்ள ஆண்சிங்கம்போலவும், தானே - தான்மாத்திரமே, அ அகல் பொழில் - விசாலமான அந்தச்சோலையை, சாருதலும் - சேர்ந்தவளவில்,— (எ - று.)—'கண்டான்' (உச) என முடியும்.

பெருமித்தத்துக்கும், காம்பீரியத்துக்கும், வலிமைக்கும், நடைக்கும் - ஆனேறும், அரியேறும் உவமை. பி-மீ:—[1]நேர். [2]மைத்தனையும். (கஉ)

உஉ.—இந்திரன் இராமபிரானைக் காணுதல்.

[1]கண்டா மலையா யிரமுங் கதுவக்
கண்டா மரைபோற் கருஞா யிறெனக்
கண்டா னிமையோ ரிறைகா கினியின்
கண்டா னருநான் மறையின் கனியை.

(இ - ள்.) இமையோர் இறை-தேவராசனாகிய இந்திரன்;—காகினியின் கண் - அவ்விடத்தில், அரு - (காணுதற்கு) அரிய, நால் மறை இன் கனியை- நான்குவேதங்களின் இனிய பலமாகிய ஸ்ரீராமனை;—தாமரைபோல் கண் - தாமரைமலர்போலும் கண்களையுடைய, கரு ஞாயிறு என - கரிய சூரிய னைக் கண்டாற்போல, கண் அவை ஆயிரமும் கதுவ - (தனது) ஆயிரங்கண் களும் பொருந்த, கண்டான்-பார்த்தான்; (எ-று.)—தான்; தாம்-அசைகள்.

ஸ்ரீராமனது திருநிறம் கருமை யாதலால், கருஞாயிற்றை உவமைகூறி னர். இரண்டாமடிக்கு-தன்கண்கள் தாமரை போன்றனவாகவும், ஸ்ரீராமன் அவற்றை அலர்த்துஞ் சூரியன்போலாகவுமென்றும் உரைக்கலாம். காசினி - காஸ்யபீ என்னும் வடசொல்லின் சிதைவு; பரசுராமனுக் கசிய முனிவற்குக் கொடுக்கப்பட்டதனால், பூமிக்கு இப்பெயர். எல்லா வேதங்களாலும் புகழப் படுதலால், 'தான்மறையின் கனி' என்றார். கனியென்றது - அப்போதே நுகர்லாம்படி பக்குவபலமா யிருப்ப னென்றபடி; "அமுதும்பொதியின் சுவைக்கு, கரும்பீனைக் கனிவைச் சென்று நாடி" என்றார் பெரியாரும். **பி - ம்.**—[1]கண்டான். (கூஏ)

உடு.—இந்திரன் ஸ்ராமபிரானை வணங்குதல்.

காணு மனநெரு் துகவன் றனனு
லாணு கணியந் தணர்கா யகனை
நாணு ளும்[1]வணங் கியநன் முடியாற்
றாணு கியதோள் கொடவற் றொழுவான்.

(இ - ள்.) (இந்திரன்). காணு - (அல்வாறு) பார்த்து, மனம் நெரு்து - மனம் வருந்தி, கவன்றனன் - கலங்கப்பட்டவனும்,—ஆண் நாதனை - புரு ஷோத்தமனும், அந்தணர் நாயகனை - முனிவர்களுக்கெலாமுமாகிய ஸ்ரீமந்நா ராயணனை, நாள் நாளும் - எந்நாளும், வணங்கிய - வணங்குகின்ற, கல் முடி யால் - (தனது) அழகிய தலையாலும், தாண் ஆகிய தோள் கொடு - தூண்க ளுக்குஒப்பான கைகளாலும், அவன் - (அந்த நாராயணனது திருவவதா மாகிய) ஸ்ரீராமனை, தொழுவான் - வணங்கி அஞ்சலிசெய்வான்; (எ - று.)

மனநெரு்து கவலுதல், அம்மகாவிஷ்ணுவே தம்மனோ காப்பதற்காக இவ்வாறு திருவவதரித்து வனத்தில் நிற்கின்றனரே யென்னுங் கருத்தினா லென்க. ஆள்நாதனை என்னும் பிரிக்கலாம். **பி-ம்:**—[1]வணங்கினன். (கூஅ)

வே று.

உசு.—இந்திரன் ஸ்ராமபிரானைத் துதிக்கத் தொடங்குதல்.

துவசமார் தொல்லமருட் டுன்னுரைச் செற்றுஞ் சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள் கற்பித்துந், திவசமா நல்லறத்தின் செக்நெறியி னுய்த்துந் திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள், கவசமா யாருயிராய்[1]த் தவமாய்க் கண்ணுய்க் கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணு, வவசமாய்ச் சிந்தையழிந் தயலே நின்று னறியாதான் போல வறிந்தவெலாஞ் சொல்வான்.

(இ - ள்.) துவசம் ஆர்-வெற்றிக்கொடிகள் நிறைந்த, தொல் அமருள் - பழமையாகிய யுத்தங்களில், துன்னுரை - பகைவர்களை, செற்றும் - கொன் றும்,—சுருதி பெருங் கடலின் - பெரியகடல்போன்ற வேதங்களின், சொல் பொருள் - பதங்களோடும் அருத்தங்களோடும், கற்பித்தும் - உபதேசித்தும்,—

திவசம்ஆ - நாள்தோறும். கல் அறத்தின் - நல்லதருமத்தினது. செம் நெறியின் - சன்மார்க்கத்தில். உய்த்தும் - கொண்டுசெலுத்தியும்.—திரு-செல்வத்தை. அளித்தும் - கொடுத்தருளியும்.—வீடு-பரமபதத்தை. அளித்தும்—: —சிங்காமை - அழியாதபடி. தங்கள் - (தேவரான) தங்களுக்கு. கவசம் ஆய் - கவசமாகியும். அரு உயிர்ஆய் - அரிய உயிராகியும். தவம் ஆய் - தவமாகியும். கண்ணாய் - கண்ணுமாகியும். கண்டஇலா ஞானம்ஆய் - முடிவில்லாத தத்துவ ஞானமாகியும். காப்பானை - காக்கின்ற நாமபரனை. காண - கண்டு. (இந்திரன்). அவசம் ஆய் - பரவசமாகி. சிந்தை அழிந்து - அயலே என்றனன்- (அவனது) பக்கத்தில் என்றான் ஞெகி.—அறியாதான் போல - (அவனது மகிமைகளை தன்னுட்) தெரியாதவன் போலவே. அறிந்த எலாம் - (தான்) அறிந்த அவனதுமகிமைகளை யெல்லாம். சொல்வான் - கூறித் துதி செய்வான்; (எ - று.)

தேவராசபுத்திரர்களிற் பலமுறையுஞ் சென்று பொருது தீமதியிலொழுகுகின்ற அசுரர் மூவலியோரை அழித்து வல்லுச் செல்லுகின்ற தேவர்களைக் காத்தருளுதலால் 'தவசமாதிகொல்லமருட் டுன்னுரைச் செற்று' என்றும். இவர் களையும் அவற்றின் பொருளையும் ஆதியில் நான்முகஸ்ருஷ்டியாய்ப் பிரமதேவனுக்கு உபதேசித்தருளினதனால் 'சுருதிப்பெருங்கடலின் சொற்பொருள் கற்பித்து' என்றும். தருமத்தினின்றும் வழுவி அதருமத்தை அநுஷ்டிக்குங்காலத்தில் அப்பாழுதைக்கப்பொழுது அதேகதிருவகாரங்கள் செய்து புருடத்தை மேலுலோபாதபடி நிறுத்துதலால் 'திவசமா கல்லறத்தின்செலுத்தி' என்றும். தன்திருவடி படைத்தவர்களுக்கு நிம்மை மறுமை வீடென்னும் மூன்றிலும் அளவில்லாத சிறந்த இன்பங்களைத் தருவதால் 'திருவளித்தும் வீடளித்தும்' என்றும். பிரளயகாலத்தில் ஆணத்தையுங் கன்மபிறவுள் அடங்காதபடி அடக்கிவைத்துக் காத்தலால் 'சிங்காமை நிற்கள் கவசமாய்' என்றும். அந்தர்யாமியாய் எல்லாப் பொருள்களுள்ளும் மறைந்திருத்தலால் 'அரூபமாய்' என்றும். ஈசுவரனை அடைவதற்குந் தத்துவஞானமும் அந்த ஞானத்தைப் பெறுதற்கு விவேகமும் அதற்குமுன்னும் முறையே ஒன்றற்கொன்று இன்றியமையாத காரணமாதலால் அவையெல்லாம் 'கண்ணுமாய்' என்றும். முத்தொழிலிலும் அளித்தற்றொழிற்குரிய கடவுளது அவதாரமாதலால் 'காப்பான்' என்றுங் கூறினர். அவசமாய் - தன்வசமல்லாமல். அவசமாதலும் சிந்தையழிதலும். பக்திமிகுதியாலுளவான மெய்ப்பாடுகளென்க. இனி, அறியாதான்போல அயலேயென்ற வினை பற்றி, பக்திமிகுதியால் ஒன்றுமறியாத பித்தனைப் போலப் பக்கத்திற் சுற்றிச்சென்று பின்னெளிந்து அறிந்தவெலாஞ் சொல்வா னென்றும்; என்றவினைபற்றியும் இரண்டனுருபு தொக்கதாகக்கொண்டு. ஸர்வஜ்ஞத்வமுடையனாயினுந் தான்கொண்டஅவதாரத்திற்கு இணங்க யாதொன்றுந்தெரியாதவனைப்போல அருகிலேயென்ற இராமனை நோக்கி இந்திரன் தானறிந்தவையெல்லாஞ் சொல்லினான்றும் உவப்பிலுமமைவும்.

துவசம் - த்வஜமென்னும் வடசொல்லின் விகாரம். 'ப்ருதி' என்பதற்கு, கேட்கப்பட்டு வருவதென்று பொருள்; வேதம் எழுதாக்கிளவி யாதலால், இப்பெயர் பெற்றது. அவ்வேதங்கள் தாம் அகந்மா யிருத்தலால், அவற்றிற்குப் பெருங்கடலே உவமை கூறினர். திரு - இவ்வுலகங்களில் டைகின்ற அஷ்டைச்வர்யங்கள். கடைமில்லாமை - தாழ்வில்லாமையுமாம்.

பி - மீ:—[1]மெய்த்துவமாய்.

இதுமுதல் ஆறுகவிகள் - மாச்சீரும் விளச்சீரும் காய்ச்சீரும் விரவிவந்த கழிநெடிலடி நான்குகொண்ட **எண்சீராசிரியவிருத்தங்கள்.** (கூ)

உ.—இதுமுதல்ஐந்துகவிகள் - நிந்திரனதுதோத்திரம்.

[1]தோய்ந்தும் பொருளனைத்துந் [2]தோயாது நின்ற [3]சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி, நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லா நிலயமே வேதநெறி முறையி னேடி, யாய்ந்த வுணர்வி னுணர்வே [4]பகையா லலைப்புண் டடியே மடிபோற்ற வந்தா, ளிரந்த வரமுகவ வெய்தினேமே யெந்தா யிருநிலத்த வோவின் னினையடித் தாமரைதாம்.

ஆறுகவிகள் - ஒருமொடை.

(இ - ள்.) பொருள் அனைத்தும் - எல்லாப் பொருள்களிலும். தோய்ந்தும் - (அத்தர்யாமியாய்க்) கலந்திருந்தும், தோயாது நின்ற - (அவற்றின் குண தோஷங்களில் தான்) சம்பந்தப்படாமலே நின்ற, சுடரே - சோதியுருவமே! தொடக்கு அறுத்தோர் - பற்றுக்களை முற்றத்துறந்த முனிவர்களுக்கு, சுற்றமே-உறவானவனே! பற்றி நீந்த அரிய - (ஒன்றைப்) பிணையாகக்கொண்டு கடப்பதற்கு அரிதாகிய, நெடுங் கருணைக்கு எல்லாம் நிலயமே - மிக்கஅருளுக்கெல்லாம் இருப்பிடமானவனே! [திருப்பாசாகமே!] வேதம் நெறி முறையின் - வேதங்களிற்கூறிய வழிகளின் முறைமையால், தேடி - தேடி, ஆய்ந்த - ஆராய்ந்தறிந்த, உணர்வின் - தத்துவஞானத்திற்கு, உணர்வே - அறியப்படும் பொருளே! எந்தாய் - எமக்குந் தாயுந் தந்தையுமானவனே!—அடியேம் - அடியவர்களாகிய யாங்கள், பகையால்-பகைவர்களால், அலைப்புண்டு - துன்பப்படுத்தப்பட்டு, அடி போற்ற - (உன்) திருவடிகளை (வந்து) துதிக்க, அ காள் - அப்பொழுது, சுந்த - தந்தருளிய, வரம் - வரத்தின்படி, உதவ-உதவிசெய்தற்கு, எந்தினேமே-(இப்பொழுது)எழுந்தருளினையே! நின் இணை அடி தாமரை-உனது இரண்டு திருவடித்தாமரைகள், இரு நிலத்தவோ - இப்பெரிய பூமியிற் பொருந்தத்தக்கனவோ? (எ - று.)

அகத்திலுள்ள அஜ்ஞானவிருளைப் போக்கி ஞானவொளியைத் தருதலால் 'சுடர்' என்றும், முனிவர்களைக் காப்பதற்கு மனிதனுருவந் திருவவதரித்து அவர்கள்பக்கற் சேர்ந்தருளல் 'தொடக்கறுத்தோர் சுற்றம்' என்றும் கூறினன். தொடக்கறுத்தல் - தானல்லாத உடம்பை யானென்றும் தன்னுடையபில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச்

செய்தற்கு ஏதுவாகிய அறியாமையை ஆசிரியர்பாற் பெற்ற உறுதி மொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யாவனென்னதன்மை தெளிந்து விடுதல். கருணைக்கு நிந்தவரியதிலய மென்றதனால், அவனது கருணைக்கு அளவில்லை யென்றதாயிற்று. பகை - பண்பாகுபெயர். பிரமன் முதலிய மற்றைத் தேவர்களையும் உளப்படுத்தி, 'அடியேம்' என்றான். அக்காள் - தேவர்கள் மேருமலைமீதிருந்து பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரமனைப் பிரார்த்தித்த காலம். ஈற்றடி - "வருந்தல் வருகுகர். தந்தலை யறுத்திடர் தணிப்பென்," "தகரதன் மதலையா வருதும்." "வலையொடுதிகிரியும் * * * பாயலும், இளையர்களென வடிபரவ வெகுளாம். கோமதிலயோத்தியில் வருதும்" என்றது. பி - மீ:—[1]தோய்ந்து. [2]தோயாதின்று. தோயாததொரு. [3]தொல்சுடரே. [4]வெம்பகையால். வினையால். (கஂஂ)

உஅ. மேவாதவரில்லை மேவினரு மில்லை வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை, [1]மூவாமை யில்லை மூத்தமையு மில்லை முதலிடையோ டீறில்லை முன்னெடு பின்னில்லை, தேவாவிங் [2]கிவ்வோ [3]நின்னென்ன நிலையென்றுற் சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ணீவெக், [4]காவா தொழியிற் பரிபெரிதோ வன்றேற் கருங்கடலிற் [5]கண்வளராய் கைம்மாறு முண்டோ.

(இ - ள்.) தேவா - தேவனே! கருங் கடலில் - கருநிறமுடைத்தாகிய திருப்பாற்கடலில், கண் வளராய் - நிருக்கண்வளர்ந்தருளுகின்றவனே!—(உனக்கு), மேவாதவர் - பகைவர், இல்லை—; மேவினரும் - சுண்பர்களும், இல்லை—; வெளியோடு - ஒளியும், இருள் - இருளும், இல்லை—; மேல் கீழும் - மேலும் கீழும், இல்லை—; மூவாமை - இளமை, இல்லை—; மூத்தமையும் - முதுமையும், இல்லை—; முதல் இடையோடு ஈறு - ஆதியும் மத்தியமும் அந்தமும், இல்லை—; முன்னெடு பின் - முன்னும் பின்னும், இல்லை—; நின் ஒன்று நிலை-நின்னிடம்பொருந்தியநிலைமை, இங்கு இவ்வோ என்றல்-இங்கு (க்கூறிய) இவைகளே யென்றல். சிலை ஏந்தி - கோதண்டத்தைக் கையிலேந்தி, சே அடிகள் தோய - சிவந்த திருவடிகள் தோயும்படி, வந்து - நடந்துவந்து, எம்மை - எங்களை, காவாது ஒழியின் - காவாமற் போனால், பழி பெரிதோ - பெரும்பழி உளதாமோ? அன்றுஎல் - அதுவன்றுயின், கைம் மாறும் - பிரதியுபகாரமும், உண்டோ - உளதோ? [இல்லை யென்றபடி].

பகைகண்பொடில்லாஞகிய நீ அசுரர்களையழித்து எம்மைக்காப்பது, நின்னைச் சரணமடைந்தவர்களைக் காவாது கைவிட்டாற் பெரும்பழியுளதாமென்னுங் கருத்தாலோ? அன்றிக்கே, எம்மிடத்துப் பிரதியுபகாரம்பெறலாமென்னுங் கருத்தாலோ? ஒன்றுமுமன் றென்பதாம்; அடைந்தார்க்குஅளித்தல் இறைவனுக்கு இயல்பென்க. நிந்தியனுதலால், "மூவாமையில்லை மூத்தமையுமில்லை முதலிடையோ டீறில்லை' என்றான். இங்கு வந்துஎன்றும் கூட்டலாம்.

திருப்பாற்கடல் வெளுத்த நிறத்தாயினும் திருமாலினது திருமேனியின் நிழலிட்டாலே கறுத்த நிறத்த தாதலால், 'கருங்கடல்' என்றான்; "நீலக் கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான்." "கருந்திண் மாகடற் கண்டுயின்றவன்", "நீலக்கடல் கடைந்தாய்" என்றார் பெரியாரும். இனி, கடல்களேழாறும் கண்வளர்ந்தருளு மென்று ஒரு பிரமாணமெடுத்தியுண்டாகையாலே, "உவர்க்கும் கருங்கடல் நிறுள்ளான்" என்கிறபடியே, 'கருங்கடல்' என்று இந்த லவணசமுத்திரத் தண்ணீரே கோல்விற் றருகவுமாம். இனி, பிரளயகாலத்துக் கடலுமாம். அன்றிக்கே, கருமை-பெருமையாய்ப் பெருங்கட லென்றுமாம். வளாய் - கெப்புளாய் மறையாகாது வழக்காய் உடன்பாடுணர்த்திற்று; இது "வேண்டுவனம்பி" என்னுஞ் சிக்காணிச் செய்யுளில் 'வில்லவன்' என்பதற்கு 'சுச்சினுர்க்கினியருரைத்த உரைபான் மினாகும்; அன்றிக்கே, எதிர்மறையாகவே கொண்டு, பனிக் கடலிற் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்து நிற்குந் திருவடிகளினை யென்றுமாம். சேவடிகள் கோல வெண்பது, பக்தியதிசயத்தை விளக்குகின்றது; மேற்கலியில் 'தாமரைக்கைகோல' என்பதும் நிற்கருத்தேபற்றியென்க. **பி - மீ:**—[1]ஆலகாலமை [2]துதிவோ. [3]கின்றீர். [4]காலாதுந் தியாழிப்பட்பெரிதாவண்டோ. [5]கண்வளர்ந்தனன். (40க)

உகூ. காழி நகைதீ [1]ருலகமெலா மாக நளினத்து நீதந்த நான்முகனுர் தாமே, யூழி பலபலவு நின்றளந்தா [2]லொன்று முலவாப் பெருங்[3]குணத்த வுத்தமனே மேனு, டாழி கரையாகத் தண்டயிர் நீராகத் தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ, வாழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா யவுணர்க்கடா [4]கின்னடிமை யல்லாமை யுண்டோ.

(இ - ள்.) [1]—நளினத்து - (உனது) திருவுந்திக்காமரையில். தந்த - தோற்றுவித்த, நான்முகனுர் தாமே - பிரமதேவனே, நகை சிர் உலகம் எலாம் - குற்றமற்ற உலகங்களெல்லாம். ஊழி ஆக - அளவுகருவியாகக் கொண்டு, ஊழி பல பலவும் - அதிக கல்பகாலமும். நின்று - ஒழியாமலிருந்து, அளந்தால் - (உனது திருக்கலியாணகுணங்களைக் காணியாகியாக்கொண்டு) அளவிட்டாலும். ஒன்றும் உலவா - (அவற்றுள்) சிறிதும் முடியாத, பெருங் குணத்த - மிக்க திருக்கலியாணகுணங்களோடையை, உத்தமனே - புருஷோத்தமனே! (நீ), மேல் நாள்-முற்காலத்தில், கரை காழி ஆக - பூமியே தரிர்த்தாழியாகவும், சீர் தண் பரிர் ஆக-திருப்பாற்கடலே குளிர்ந்த தயிராகவும், நெடு வரையே மத்து ஆக - பெரிய மந்தரமலையே கடைகிற மத்தாகவும் (கொண்டு), தாமரை கை நோவ - (உனது) தாமரைமலர்க்கு ஒப்பான திருக்கைகள் நோகும்படி, ஆழி கடைந்து - கடலைக்கடைந்து, அமுதம் - (அதினின்றும் எடுத்த) அமிருதத்தை, எங்களுக்கே - (தேவர்களாகிய) எங்களுக்குமாத்திரமே, ஈந்தாய் - கொடுத்தருளினாய்; அவுணர்கள்-

(கடைகையில் எங்களோடு பாடுபட்ட) அசுரர்கள், நின் அடிமை அல்லாமை-உனது அடியவராகாமை, உண்டோ - உளதோ? (எ - று.)

யாவருக் தனக்கடியார்களே யாயினுக் துஷ்டர்களே சிக்கிரகித்துச் சிஷ்டர்களேப் பரிபாலஞ் செய்யுக் தன்மைய ஞகலால், அசுரர்களுக்கு அழுக லீயாமல், அமரர்களுக்கே ஈக்தா னென்க. பகவானது கலியாண குணங்களேக் தாணியாகியாகவும், பலதாயிரம் அண்டங்களேயும் அளவு கருவியாகவும், பிரமனே அளவுகாரனுகவும் உருவகப்படுத்தினுன். அவற்றின் அளப்பருமையைக்குறிக்கற்கு. உலகங்களே காழி யென்றதற்கு எற்பக் குண ங்களேக் தானியாகியென்னுமை. **ககதேரவுருவகம்.** பிச்சைபாவுகருவியன் றென்றற்கு, 'கலை தீருலகு' என்றுன். பிரமனுலும் அளவிடலரிய பெருக் குணங்களேபுடையாயென்றது. தன்மைக்குஞ் சாபியிற்றேன்றி உலகினேத் தும் படைக்கும் பிரமனுக்குஞ் சிறிதும்அளப்பரிய அகக்தகலியாணகுணக் கள் எங்களாற் சிறிதேனும் அறியக்கணவோ வென்ற கருத்து. 'சிற்' என்பதற்கு, சுத்தப்பிரகாசிப் பாலெனப் பொருள்கொள்ளப்பட்டது. உலகு - உயர்க்தவுருமம். மத்து=மத்தம்: வடசொல். எக்களுக்கே, ஏகா ரம் - பிரிநிலே. அடிமை - பண்பாகுபெயர்.

அமரர்களும் அசுரர்களுக் தனது சமமத்தின்படி மக்கடபருவதத்தை மத்தாகவும் வாசுகியைக் கடைகயிறுகவுக் கொண்டு திருப்பாற்கடலேக் கடையும்போது எம்பெருமான் தேவர்களே வாசுகிவின்வாலேப்பிடிக்கும் படியாகவும் அசுரர்களேத் தலேயைப்பிடிக்கும்படியாகவும் நியமித்துத் தானும் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள்பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத்தரித்து அசுரர்கள்பக்கத்திலேயும் நின்று வாசுகியினுடைய வாலேயுக் தலேயையும் பிடித்து வலமு மிடமுமாக இழுத்துக் கடைந்தரு ளினதனுல் 'தாமரைக்கைகோவ ஆழிகடைந்து' என்றும். அப்போல் அமிருத பூர்ணமான கமண்டலத்தைக் கையி லெடுத்துக்கொண்டு அந்த க்ஷீரஸமுத் திரத்திலிருந்து உதித்த தன்வக்திரியின் கையிலிருந்த அமிருதகலசத்தைத் தைத்தியர்கள் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொண்டபோது ஜகன்மோகனகர மான ஒரு ஸ்த்ரீரூபத்தைத் தரித்து அசுரர்களே வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுக்குப் பிரஸாதித்தனுல். **'அழுத மேங்களுக்கே யீந்தாய்'** என்றும் கூறினுன். பி - ம்:—[1]உலகெலாம். [2]என்றும். [3]குணத் திரம். [4]உனக்கு. (கo2)

கூo. ஒன்[1]றுகி மூலத் தருவம் பல[2]வாகி [3]யுணர்வு முயிரும் றிறைதாகி யூழி, சென்ற சறுங்காலத் [4]தந்நிலேய தாகித் திறத்துலகந் தானுகிச் [5]செஞ்செவே நின்ற, நன்ருய ஞானத் தனிக்கொழுக்தே நங்க ணவைதீர்க்கு நாயகமே நல்வினேய நோக்கி, நின்ருரைக் காத்தி [7]யயற்பேரைக் காய்தி [6]நிலேயில்லாத் தீவினேயு நீதந்த தன்றே.

(இ - ள்.) மூலத்து - ஆதிகாலத்தில், ஒன்று ஆகி - ஒன்றேயாகி பிருக் து, (பின்பு), உருவம் பல ஆகி - பலவேறு ரூபக்களாய், உணர்வும் உயிரும்

பிறிது (உம்) ஆகி - அறிவும் உயிரும் உடலுமாகி, ஊழி சென்று ஆசறும் காலத்து - மகாப்பிரளயமுண்டாகி முடியுங்காலத்தில், அந் நிலையது ஆகி - அப்பொழுதுள்ள தன்மையாகி, திறத்து உலகம் ஆகி - (மீண்டும்படைக்கும் பொழுது) பலதிறப்பட்ட உலகங்களுமாய், செஞ்செவே நின்ற - மிகவுஞ் செவ்வையாய் நின்ற, நன்று ஆய ஞானம் - நல்ல தத்துவஞானத்தினது, தனி கொழுந்தே - ஒப்பற்ற கொழுந்தே! நங்கள் நவை தீர்க்கும் - எங்கள் குறைகளைப் போக்குகின்ற, நாயகமே-தலைமைப்பொருளே! (நீ), நல்வினையே நோக்கி நின்றனை - புண்ணியத்தையே கருதி(த் தருமங்களைச்செய்து) நிற்பவர்களை, காத்தி - காக்கின்றாய்; அவல் பேரை - பாபத்தையே கருதி அதருமங்களைச் செய்துநிற்பவர்களை, காப்தி - சிக்கிரதிக்கின்றாய்; நிலை இல்லா தீவினையும் - நிலையில்லாதபாவமும், நீ நக்கது அன்றே-நீ உண்டாக்கிய தன்றோ? (எ - று.)

"கொல்லலு ஞெனன்றே யாகித் துறைதொறும் பார்க்கு சூழ்ச்சிப், பல் பெருஞ் சமயஞ் சொல்லும் பொருள்" என்றார் பாலகாண்டத்தும். அயோத்தியாகாண்டத்தில் "வானினின் றிழிந்து வரம்பிகந்த மாபு தத்தின் வைப் பெங்கு, மூனு முயிரு முணர்வும்போ லுள்ளநும் புறனு முளனென்ப" என்ற தற்குஏற்பப் பிறிதென்பதற்கு உடலென்றுரைத்து, எண்ணும்மை பின்னுங் கூட்டப்பட்டது. ஆசறுதல்-முடிதல்; ஒருசொல். நிலையில்லாத்தீவினை-தோற்றமுடைய பொருள்கள் யாவும் நிலையுதலிலவாய்த் தன்மையை யுணராமையால் உளவாகுந் தீவினைகள். தக்கதென்றார், சாதிபொருமையால். தீவினையுந் தான் தந்தேயாயினும் அவரவர்செய்வினைக்குத் தக்கபடி அளித்தலும் அழித்தலும் ஈசுவரனது இயற்கை யென்க. பி - ம்:—[1]ஆகும். [2]ஆய். [3]உணர்வாகியுயிராகிப். உரையாயபிராய்ப். [5]அன்னிலையதாகி. [5]தீர்த்து. [6]செவ்வேதானின்ற. [7]அலலாலை. [8]நிலையாத. (கூஎசு)

நூக. வல்லி வரம் பில்லாத மாயவினை தன்னுன் [1]மயங்கினரோ டெய்தி மதிமயங்கி மேனு, நல்லி யிறையவனீ யாதியெனப் பேதுற் [2]றலமருவே முன்னை யறப்பய னுண்டாக, வெல்லி [3]வலயங்க [4]ணின் னுழையென் றங்கா ளெரிமோவாஅத் தீண்டி யெழுவ ரெனநின்ற, தொல்லி [5]முதன்முனிவர் சூளுற்ற போதே தொகைநின்ற வையந் துடைத்திலேயோ வெந்தாய்.

(இ - ள்.) எந்தாய்—! மேல்நாள் - முன்னெருகாலத்தில், வரம்பு இல்லாத - அளவில்லாத, மாயவினைதன்னுள் - மாயையின் சூழ்ச்சிகளால், நீ இறையவன் அல்லை (என)-நீ பரதத்துவமல்லாயென்றும்,(நீ இறைவன்) ஆதி என - நீயே பரதத்துவமாகிறாயென்றும், பேதுற்று - (இரண்டிலொன்றைத் துணியமாட்டாமற்) பேதப்பட்டு, மயங்கினரோடு - மதிமயங்கிக்கிடந்த பல தேவர்களுடனும் முனிவர்களுடனும், எய்தி - அடைந்து, மதி மயங்கி - அறிவுதிகைத்து, அலமருவேம் முன்னை - கடுமாறுகின்ற எங்களுக்கெதிரில், அ நாள் - அப்பொழுது, அறம் பயன் உண்டாக - (முன்செய்த) நல்வினை

யின் பலனுண்டாதலால், வல்லே - விரைவாக, எழுவர் என நின்ற தொல்லை முதல் முனிவர் - எழுபேரென்றுசிறப்பித்துச்சொல்லும்படிநின்ற பழைய பெரிய முனிவர்கள், எரியோனை - பரமசிவனை, தீண்டி - சேர்ந்து (மீண்டு வந்து), 'எல்லை வலயங்கள் - எல்லாவுலகங்களது எல்லையும், நின்னுழை - உன்னிடத்தே (தோன்றி வளர்த்துவருபவை) [நீயே பரதத்துவம்],' என்று—, சூள்உற்றபோதே - சித்தாந்தஞ்செய்தகாலத்தே, தொகை நின்ற ஐயம்-(மிகுதியாய்த்) தொக்குநின்ற சந்தேகத்தை, துடைத்திலையோ-(ந்) தீர்த்தாயல்லையோ? (எ - று.)

மாயவினை - ராஜஸ தாமஸ புராணங்களில் தேவதார்த்தங்களேயே பரதேவதையாகச் சொல்லியமை; இறைவன்றி - **மத்திமதீபம்.** பேது - **பேதம்:** விகாரம். கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி நெருப்புப்போல எரியும்மேனிநிறத்தை யுடைத்தாயிருத்தலால், 'எரியோன்' என்றார்; "தழனிற வண்ணன்" என்றார் பெரியாரும்: 'எரியோனைத் தீண்டி' எனவே, இனம் பற்றிப் பிரமனைத்தீண்டியென்பதுங் கொள்க. எழுவர் முனிவர் - ஸப்தருஷிகள்; அத்திரி, பிருகு. குத்ஸர். வஸிஷ்டர். கௌதமர். காஸ்யபர், ஆங்கிரஸர். முனிவர்குளுற்றது - பிருகுமுனிவர்மூலமாகப் பரதத்துவத்தை நிச்சயித்தது.

இச்செய்யுளிற்நறித்தசெய்திவருமாறு:—முன்னொருகாலத்தில் முனிவர் தேவர்முதலிய யாவரும் கூடி மேருமலையின்சிகரத்தைச் சேர்ந்து பரதத்துவநிர்ணயஞ்செய்ய தொடங்கினபொழுது, மும்தொழிற்கும் உரியராய அயன் அரி அரன் என்னும் மூர்த்திகள் மூவருள்ளும் பரதத்துவம் இன்னதென்று அறியாது ஐயமுற்று ராஜஸ தாமஸ புராணங்களிற் கூறியுள்ள கோட்பாடுகளால் மயங்கிமாறுபட்டு, ஸப்தருஷிகளைச் சரணமடைந்து வினவ, அவர்களுள்தலைமைபெற்ற பிருகுமாமுனிவன், 'மூக்குணங்களுள்ளும் சத்துவகுணத்தையே யுடையவன் யாவனோ, அவனே பரதத்துவம்; அவனை இன்னனென்று சென்று அறிந்துவந்து சொல்வேன்' என்று, முதலிற் கைலாசகிரிக்குச்சென்று, கோயில்வாயிலைச்சேர்ந்து ஆங்குள்ளநந்திதேவரால் தடுக்கப்பட்டு எழுநாள்கழிந்தபின்னர்ச் சிவன் உமாதேவியோடு சம்போகஞ்செய்து கொண்டிருக்குந் தன்மையை அறிந்து 'தாமஸகுணத்தாற் காமமுற்று என்னை வினவிச் சற்காரியாதிருந்த அக்கடவுட்கு இருகுறியுந் துணிந்து விழுக்கடவது' என்று சபித்துப்போக, அவ்வளவிற் கலவிப்பெருங்கடல் கடந்துவந்த முக்கட்கடவுள் நந்தியால் கிழக்குத்து உணர்ந்து அம்முனிவனை மீளஅழைத்து அவன் சினந் தீர்க்கும் பொருட்டுத் தன்னுடன்பிறந்தவனென்னுங் கருத்தால் ஆலிங்கனஞ்செய்ய அணுகியபொழுது, அம்முனிவன், 'அசுசியான நீ என்னைத் தொடாதே' என்று தடுக்க, உமாபதி மிகச்சினந்து தனதுநெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணைவிழித்து அம்முனியை அழிக்கப்பார்த்த வளவில், அவன் அஞ்சாது தன்பாதத்தின்பெருவிரலிலுள்ள கண்ணை விழித்து அதனினின்று எழுந்த அழலால் அவ்வழலை அடக்கிவிட்டு 'நீ பிராமணியதெய்வமாகாது போதி' என்று மீளவுஞ் சபித்திட்டு, சத்தியலோகஞ்சேர்ந்து

பிரமனே யடைந்து வணங்க, அவன் ராஜகுணத்தால் தந்தையைத் தனயன் வணங்குதல் தக்கதே யென நினைந்து பிரதிவந்தனமுஞ் செய்யாதிருக்க, முனிவன் பெற்றதந்தை யென்பதையு மெண்ணாமல் 'உனக்கு ஆலயபிரதிஷ்டை இன்றுமுதல் இல்லையாகுக' என்று சாபங்கொடுத்து, ஸ்ரீவைகுண்டஞ்சென்று கோயில்சேர்ந்து வாயில்காவலர் அஞ்சிநிற்க உள்ளேபுக்குத் திருவனந்தாழ்வான்மேலே திருமகளும் நிலமகளும் திருவடிவருடப் பள்ளிகொண்டிருக்கும் பரமனே மார்பிலுதைக்க, அப்பெருமான் மக்கள் மேல்விழுந்தாயுகப்பதுபோல மனம் மகிழ்ந்து அக்கணத்தினிற் கடிதெழுந்து 'ஐய! என்பொருட்டாக இன்று உமது மெல்லியபாதம் நொந்ததோ? உமது திருவடித்தாமரை பட்டதனால், என்மார்வம் திருநிலவெற்றது; நுமதுவரவை யான் அறியாதுபடுத்திருந்ததனைப் பொறுப்பீர்' எனப் பலவாறு முகமனியம்ப, முனிவன் அப்பரமன் திருவடிகளில் விழுந்து தண்டனிட்டுக் கைகூப்பிக்கொண்டு, 'சுத்தஸாத்துவிக குணசுவரூபியாகிய பரதத்துவத்தை அறியும்பொருட்டு யான் செய்த இப்பெரும்பிழையைப் பொறுத்தருள்க' என்று பிரார்த்தித்து, மேரு சேர்ந்து, தன்வருகையையே எதிர்பார்த்திருந்த யாவர்க்கும் 'ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம்' என்று சித்தாந்தஞ்செய்து பகர, ஆங்குள்ளவர் யாவரும் அவ்வெம்பெருமானையே பிரார்த்தித்துப் போயின ரென்பதாம். பி - ம்:—[1]மயக்கினர்களோடே. [2]அலமருவோர். [3]உலகங்கள். [4]எம்முழை. [5]மறை. (கூசு)

வேறு.

கூ.—இந்திரன் விடைபெற்றுத் தன்னகரஞ் சார்தல்.

இன்னன பலநினைந் தெத்தினை னியம்பாத்
தன்னுத லிடையுள தெனைநனி துணிவான்
றன்னிகர் முனிவனைத் [1]தரவி டையென்னப்
பொன்னெளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான்.

(இ - ள்.) பொன் ஒளிர் - பொன் மயமாகி விளங்குகின்ற, நெடு முடி - நீண்ட கிரீடத்தையுடைய, புரந்தரன் - தேவேந்திரன், இன்னன பல - இத்தன்மையவாகிய பலவற்றை, நினைந்து - (மனத்தில்) தியானித்து, இய ம்பா - (வாயினுற்) சொல்லி, எத்தினன் - துதிசெய்தவனுய்,—[2]இடை - நடுவிலே, தன்னுதல் - பொருந்துவ தொரு விசேஷம், உளது - இருக்கின் றது,' என - என்று, நனி துணிவான் - நன்றாக நிச்சயிப்பவனுய்,—தன்னிகர் முனிவனை - தனக்குத்தானேஒப்பாகிய சரபங்கனை நோக்கி, விடை தர - '(யான் போவதற்கு) உத்தரவு கொடுப்பீராக', என்ன - என்று கேட்டு (உத் தரவு பெற்றுக்கொண்டு), போனான் - (தேவலோகத்திற்குச்) சென்றான்.

தன்னுத லிடையுள தென்றது - இராமபிரான் அங்கு எழுந்தருளிய தனுல், அப்போது அங்குநடக்கப்போவதனைச் சிந்தித்து. தர - அகரவீற்று வியங்கோள். இராமனிடத்து விடைபெற்றமை, அருத்தாபத்தியாற் கொள்க.

புரந்தரன் - (பகைவரது) நகரங்களை அல்லது உடல்களை அழிப்பவன். பி - ம்:—[1]தவிருதி.

இதுமுதற் பதின்மூன்றுகவிகள் - பெரும்பாலும் முதல் மூன்றுசீர் விளச்சீர்களும், ஈற்றுச்சீ ரொன்று மாச்சீருமாகிய அளவடிநான்குகொண்ட **கலிவிருத்தங்கள்.** (கஅஇ)

கூக.—சரபங்கமுனிவன் இராமபிரானை வரவேற்று அன்புகோள்ளுதல்.

போனவ னகநிலை புலமையி னுணர்வான்
வானவர் தலைவனை வரவெதிர் கொண்டா
னனைவ னடிதொழ வருள்[1]வர வழுதான்
[2]ரனுடை யிடவகை தழுவின னுழைவான்.

(இ - ள்.) (பின்பு சரபங்கன்),—போனவன்-போன தேவேந்திரனது, அகம் நிலை - மனத்தின்நிலைமையை, புலமையின் - (தனது) ஞானக்கண் ணால், உணர்வான் - அறிபவனாகி,— வானவர் தலைவனை - தேவாதிதேவ னாகிய ஸ்ரீராமனை, வர எதிர்கொண்டான் - எழுந்தருளும்பொழுது எதிர் கொண்டு வந்து அளவளாவினன்: (அப்பொழுது), ஆனவன் - அந்த இரா மன், அடி தொழ - (முனிவனது) திருவடிகளில் விழுந்து வணங்க,—தான் உடை இடம்வகை - தான் உடைமையாகக்கருதுகின்ற (பரமபத மாகிய) வருத்தலத்தை, தழுவினன் துழைவான் - தழுவிச்சேரப்போகின்றவனாய், அருள் வர - அன்பு மேன்மேலும் பெருகுதலால், அழுதான்—; (எ - று.)

இராமபிரானைத் தரிசித்தற்காகவே காத்திருப்பதனால் அப்பிரானைத் தரி சித்த முனிவனை 'எதிர்கொண்டான் தானுடையிடவகைதழுவினனுழைவான்' என்றார். வானவர் - நித்தியமுக்தர்களுமாம். அருள்-இலக்கணையாய் அன்பிற் காயிற்று; இனி, இராமனுக்கு அருளுண்டாகுமாறு அழுதா னென்றுமாம்: ஈண்டு அழுகை - உவகைக் கலுழ்ச்சி. பி - ம்:—[1]புரிமுனிவன், நனிபுரி வான். [2]தானடவிட. (கஅசு)

கூச.—இராமன் ஸ்ரீதாலக்ஷ்மணரோடு அங்குச்சென்று மகிழ்ந்திருத்தல்.

ஏழையு மிளவலும் வருகென வினிதா
வாழிய வவரொடும் [1]வந்தனன் [2]மகிழ்வா
லூழியின் முதன்முனி [3]யுறையுளை யணுகா
வாழியில் [4]விழிதுயி லவனென மகிழ்வான்.

(இ - ள்.) (சரபங்கன் இராமனைநோக்கி), 'இனிதுஆ வாழிய - நன்றுய் வாழ்க; ஏழையும் இளவலும் வருக - சீதையும் லக்ஷ்மணனும் வருவார்களாக,' என - என்று சொல்ல,—(இராமன்), அவரொடும் - அவர்களுடனே, வந்த னன் - வந்தவனாய்,—மகிழ்வால் - சந்தோஷமாக, ஊழியின்முதல் முனி - பலயுகங்களுக்குமுன்னே தொடங்கியுள்ள அம்முனிவனது, உறையுளை - ஆச்சிரமத்தை, அணுகா - சேர்ந்து, ஆழியில் விழி துயிலவன் என - திருப் பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளுகின்றவன் போல, மகிழ்வான் - களிப் பாலுயினான்; (எ - று.)

ஆழியில் விழிதுயிலவ னென மகிழ்வா னென்றது - அவ்வாச்சிரமத்தைத் திருப்பாற்கடல்போலெண்ணி மகிழ்ந்தா னென்றபடி. இனி, [3]உறையுளேயணுக என்னும் பாடத்திற்கு - இராமன் சரபங்கனுச்சிரமத்தைச் சேர, அம்முனிவன் கூரோரத்தியில் யோகநித்திரைசெய்தருளுகின்ற எம்பெருமா னென்றுஎண்ணி மகிழ்ந்தன னென்க. பி-ம்:—[1]வள்ளலும். [2]மகிழா. [3]உறையுளினுறைவான். [4]அறிதுயிலெனவகம். (கoஎ)

கூ. — இராமன் முதலியோர் நீதிமொழியைக்கேட்டுக்கொண்டு அவ்விரவில் அவ்வாச்சிரமத்தில் தங்குதல்.

அவ்வயி னழகனும் வைகின னறிஞன்
செவ்விய [1]வறவுரை செவிவயி [2]னுதவ
கவ்வியின் விழியவ ளொடுகனி யிருளோக்
கவ்விய நிசியொரு கடையுறு மளவின்.

(இ - ள்.) அவ் வயின் - அவ்விடத்தில், அறிஞன் - தத்துவஞானியாகிய அம்முனிவன், செவ்விய அறம் உரை - நல்ல தருமவார்த்தைகளை, செவி வயின் - (தன்) காதுகளில், உதவ - கூற (க்கேட்டுக்கொண்டு);—அழகனும் - இராமனும், கவ்வியின் விழியவ ளொடு - பெண்மான்போன்ற பார்வையையுடைய சீதையுடன், இருளோ கனி கவ்விய - இருளோ மிகுதியும் உடையதான, நிசி - இராத்திரியானது, ஒரு கடை உறும் அளவின் - ஒருமுடிவை அடையுமளவும் [இராத்திரி கழியுமளவும்], வைகினன் - தங்கியிருந்தான்; (எ - று.)

சீதையைக் கூறியது, லக்ஷ்மணனுக்கும் உபலட்சணம். பி - ம்:—[1]அறிவுரை. [2]நுகர. (கoஅ)

கூ. — தரியோதய வருணனை.

விலகிடு நிழலினன் வெயில்விரி யயில்வா
ளிலகிடு சுடரவ [1]னிசையன திசைமேதா
யலகிட [2]லரியத னவிர்கர நிரையா
லுலகிடு நிறையிரு ணுறையினை [3]யுரிவான்.

(இ - ள்.) (அப்பொழுது), விலகிடு நிழலினன் - வீசுகின்ற சாயையையுடையவனும், இலகிடு சுடரவன் - விளங்குகின்ற ஒளியினையுடையவனுமாகிய சூரியன், இசையன - (ஒன்றோடொன்று) இணங்கி நிற்பனவாகிய, திசை - எல்லாத் திக்குகளிலும், தோய் - பரவுகின்ற, அலகு இடல் அரிய - எண்ணி அளவிடுதற்கு அருமையான, அவிர் - விளங்குகின்ற, தன் - தனது, கரம் நிரையால் - கிரணங்களாகிய கைகளது கூட்டத்தால், விரி - பரப்புகின்ற, வெயில் - வெயிலாகிய, அயில் வாள் - கூர்மையான வாளைக்கொண்டு, உலகு இடு - உலகங்களை மூடிய, நிறை இருள் - நிறைந்த இருட்டாகிய, உறையினை - போர்வையை, உரிவான் - கழற்றுவானைபோனன்; (எ - று.)

சூரியன் தன்கிரணங்களால் இருள் நீங்குமாறு உதித்தன னென்பதாம். உருவகவணியை அங்கமாகக்கொண்டுவந்த **வுதித்தநற்றுறிப்பேற்றவணி.** இன னென்பதை இரண்டு சொல்லாகக் கொண்டு, நிழலேயுடையவ,

இனன் - சூரியனென்றுமாம். உலகைமூடிய இருளைப் போக்குதற்கு வெயிலும், அதனைப் பரப்புதற்குக் கிரணமும் கருவியாதலால், அவற்றை முறையே உறையும், வாளும், கையுமாக உருவகப்படுத்தினர். இசை அன எனப் பிரித்து-இராமனதுபுகழை ஒக்கின்ற வென்றும் கொள்ளலாம். ஆயிரங்கிரணங்களாதலால், 'அலகிடலரிய கரம்' என்றார். சிலேடைபற்றி, கரமென் பதற்கு - கிரணமாகிய கை யெனப்பட்டது. பி-ம்:—[1]இசையென. [2]அரிதெனும். [3]உரியர். (கூக)

கூ.எ.—முனிவன் அக்நிப்ரவேசஞ்செய்யச் சித்தஞ்செய்கை இராமனை விடைகேட்டல்.

ஆயிடை யறிஞனு மவனெதி [1]ரழுவத்
[2]தீயிடை நுழைவதொர் தெளிவினை [3]யுடையா
னீவிடை தருகென நிறுவின னெறியாற்
காயெரி வரன்முறை கடிதினி னிடுவான்.

(இ - ள்.) ஆயிடை - அப்பொழுது, அழுவம் தீயிடை-மிகுந்த அக்கினியில், நுழைவது - பிரவேசிப்பதாகிய, ஓர் தெளிவினை - ஒப்பற்றதொரு தெளிந்த அறிவை, உடையான் - உடையவனுகிய, அறிஞனும் - சரபங்கனும்,-அவன்எதிர் - அவ்விராமபிரானுக்கு எதிராக, காய் எரி-சொலிக்கின்ற நெருப்பை, வரன்முறை நெறியால் - சாஸ்திரவிதியின் முறைமைப்படி, கடிதினின் - சீக்கிரத்தில், இடுவான்-வளர்ப்பவனுகி,—(இராமனைநோக்கி), 'நீ—, விடை தருக - விடைகொடுக்கவேண்டும்.' என-என்று, நிறுவினன்-கேட்டான்; (எ - று.)

'இடுவான்' என்பதனை வினையெச்சமாகக்கொண்டு, இடுதற்கு விடை தருக வென்றும் கூட்டலாம். பி - ம்:—[1]தழுவத். [2]தீயினை. [3]உடையேன். ()

கூ.அ.—இராமன் வினவ, முனிவன் அதற்குக் காரணங்கூறல்.

வரிசிலை யுழவனு மறையுழ வனைநீ
புரிதொழி லெனையது புகலுதி யெனலுக்
திருமக டலைவசெய் [1]திருவினை [2]யுறயா
னெரிபுக நினைகுவெ னருள்கென விறைவன்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வரி சிலை உழவனும் - கட்டமைந்த வில்லில் வல்ல இராமனும், மறை உழவனை - வேதம்வல்ல சரபங்கனைநோக்கி, 'நீ புரி தொழில் - நீ செய்ய விரும்பிய செய்கை, எனையது - எத்தன்மையது? புகலுதி - சொல்வாயாக,' எனலும்-என்றுகேட்டவளவில்,—(அம்முனிவன்), 'திருமகள்தலைவ-இலக்குமி கேள்வனே! யான்—, செய் திருவினை - செம்மையாகிய மோக்ஷலக்ஷ்மியை, உற - அடையும்படி, எரி புக - அக்நிப்ரவேசஞ்செய்ய, நினைகுவென் - நினைப்பவனுகின்றேன்; அருள்க - (நீ) கிருபை செய்வாயாக', என-என்று சொல்ல,—இறைவன்-இராமன்,—(எ-று.)—'எனலும்' (கூக) என்க.

"வில்லேருழவர்", "சொல்லேருழவர்" என்றாற்போல, 'சிலையுழவன்', 'மறையுழவன்' என்றார்; சிலையை ஏராகவுடைய உழவன், மறையை ஏராக வுடைய உழவ னெனப் பொருள் கொள்க: உழவன்-உழுபவன். பி - மீ:—[1]இரு. [2]அற. (ககக)

கூகூ.—அப்போது அக்நிப்ரவேசஞ் செய்யுங்காரணத்தை இராமன் விளவ, முனிவன் கூறத்தொடங்குதல்.

யான்வரு மமைதியி னிதுசெய லெவனே
மான்வரு தனியுரி மார்பினை யெனலும்
மீன்வரு கொடியவன் விறலடு மறவோ
னூன்[1]விடு [2]மூவகையி னுரைகனி [3]பகர்வான்.

(இ - ள்.) 'மான் வரு-மானினிடத்தினின்று உரிக்கப்பட்ட, தனி உரி - ஒப்பில்லாத தோலினைத் தரித்த, மார்பினை - மார்பையுடைய முனிவனே! யான் வரும் அமைதியின் - நான் வருகின்ற பொழுதில், இது செயல் - (நீ) இக்காரியத்தைச் செய்தல், எவன் - என்னை?' எனலும் - என்றுகேட்ட வளவில்,—மீன் வரு கொடியவன் - மீனினதுவடிவம் எழுதப்பட்ட கொடி யினையுடைய மன்மதனது, விறல் - வெற்றியை, அடு - பங்கப்படுத்திய, மற வோன் - மனவுறுதியையுடைய அம்முனிவன், ஊன்விடும்-உடலைவிடுவதனு லுண்டாகும், தனி உவகையின் - மிக்க களிப்பினால், உரை பகர்வான் - உத்தரஞ் சொல்லுவான்; (எ - று.)—அது மேற்கூறுகின்றார்.

"நூலே கரக முக்கோல் மணையே, யாயுங் காலை யந்தணர்க் குரிய" என்னுஞ் சூத்திரத்தில் 'ஆயுங்காலை' என்றதனால், மான்தோல் கூறினர். மானுரி வரு தனிமார்பென்றுங் கூட்டலாம். சரபங்க னென்னும்பெயரது பொருள் விளங்க, 'மீன்வருகொடியவன் விறலடு மறவோன்' என்றார். எவனை, ஓகாரம் - அசை. பி - மீ:—[1]வரும். [2]உவகையன். [3]புரிவான். (ககஉ)

கூ0.—இரண்டுகவிகள் - சரபங்கமுனிவனது மறுமொழி.

ஆயிர முகமுள தவ[1]மயர் குவெனு
னீயிவண் வருதிகொ லெனு[2]நினை வுடையேன்
போயின விருவினை [3]புகலுறு விதியான்
மேயினை யினியொரு வினையிலை விறலோய்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) விறலோய் - வெற்றியையுடையானே! ஆயிரம் முகம் உள - பலவகைப் பட்டனவான, தவம் - தவங்களை, அயர்குவென் - செய்து வரு கின்றவனுகிய, நான்—, நீ இவண் வருதி எனும் - நீ இவ்விடத்தில் எழுந் தருளுவாயென்னும், நினைவு உடையேன் - நிச்சயமான எண்ணமுடையவ னுகிக் காத்திருக்கின்றேன்; இரு வினை - (எனது) இரண்டுவினைகளும், போயின - கழிந்தன; புகலுறு விதியால் - சம்பவிக்கவேண்டிய முறையின்

படி, மேயினை - (நீயும் இப்பொழுது) எழுந்தருளினாய்; இனி ஒரு வினை இலை - இனி (இங்கே எனக்கு) ஒரு காரியமும் இல்லை; (எ - று.)

கொல் - அசை. புகலுறுவிதி - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற விதியுமாம். பி - மீ:—[1]முயல்குவென்யான். [2]நிலை. [3]புரவல. (ககஉ)

சக. இந்திர [1]னருளின னிறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலரய னுலகந்
தந்தன னெனவது சாரல னுரவோ
யந்தமி லுபாய்பத மடைதலை முயல்வேன்.

(இ - ள்.) உரவோய் - வலிமையையுடையவனே! இந்திரன்—, வந்தனன் - வந்து, 'மலர் அயன் - தாமரையில்தோன்றிய பிரமன், உலகம் தந்தனன் - (தனது) சத்தியலோகத்தை (உனக்குக்) கொடுத்தான்; (ஆகையால்), இறுதி செய் பகல்ஆ - (லோகங்கள்) அழிகின்ற காலம்வரையும், மருவுதி - (அங்குவந்து) தங்குவாயாக,' என - என்று, அருளினன் - சொன்னான்; (அங்ஙனஞ் சொல்லவும்),—அந்தம் இல் - அழிவில்லாத, உயர் பதம் - பரமபதத்தை, அடைதலை - அடைவதற்கு, முயல்வேன் - முயற்சி செய்பவனாகிய யான், அது சாரலன் - அப்பதவியை யடைந்தேனில்லை; (எ - று.)

'இறுதிசெய் பகலா' என்பதற்கு-நேற்றுமாலைப்பொழுதிலென்று உரைத்து, 'வந்தனன்' என்பதனோடு கூட்டவுமாம். 'உரவோய்' என்பதில் உரமென்பதற்கு - இரட்டுறமொழிதலால் உடலின்வலிமை யென்றும், அறிவின் வலிமை யென்றுங் கொள்க. அடைதலை-உருபுமயக்கம்; ஐ - சாரியையுமாம். பி - மீ:—[1]நாளினதிறுதிகள்பகர. (ககச)

சஉ.—இராமனிடத்து விடைபெற்றுச் சரபங்கமுனிவன் மனைவியோடு தீக்குதித்து மோக்ஷஞ்சேர்தல்.

ஆதலி [1]னிதுபெற வருளென வுரையாக்
காதலி யவளொடு கதழெரி முழுகிப்
போதலை மருவின னெருநெறி புகலா
வேதமு மறிவரு மிகுபொரு ளுணர்வோன்.

(இ - ள்.) புகலா - (எவராலுஞ்) சொல்லப்படாத, வேதமும் - வேதங்களும், அறிவு அரு - அறிதற்கு அரிய, மிகு பொருள் - பரதத்துவத்தை, உணர்வோன் - அறிபவனாகிய சரபங்கன்,—'ஆதலின் - ஆகையால், இதுபெற - இப்பரமபதத்தை அடையும்படி, அருள் - அருள்செய்', என - என்று, உரையா - சொல்லி,—(உடனே), காதலியவளொடு - (தன்) மனைவியுடன், கதழ் எரி முழுகி - உக்கிரமான அக்கினியிலே பிரவேசித்து, ஒரு நெறி - ஒப்பற்ற பரமபதத்திற்கு, போதலை மருவினன் - போய்ச் சேர்ந்தார்; (எ - று.)

தனக்கு அணித் தாதலாலும், கீழிற்கவியிற் கூறியதனாலும், 'இது' எனச் சுட்டினான். எவராலுஞ் செய்யப்படாது அபௌருஷேயமாய் நித்தியமாகிய தென்றற்கு, 'புகலாவேதம்' என்றார். மிகுபொருள் - மன மொழி மெய்களுக்கு எட்டாத பரம்பொருள். பி-மீ:—[1]அது. (ககடி)

சஉ.—இதுவும் அது.

தேவரு முனிவரு முறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலரயன் முதலோ
ரேவரு [1]முடிவினி லிருவினை யொருவிப்
போவது கருதுமவ் வருநெறி புக்கான்.

(இ - ள்.) உறுவது தெரிவோர் - (பின்னே) வருவதை (முன்னே) அறிபவர்களாகிய, மா வரும் - பெருமை பொருந்திய, நறு விரை-நல்ல வாசனையையுடைய, மலர் - தாமரைமலரில் தோன்றிய, அயன் - பிரமனே, முதலோர் - முதலாகவுடையவராகிய, தேவரும் - தேவர்களும், முனிவரும் - முனிவர்களும், எவரும் - மற்றையெல்லாரும், இரு வினை - இரண்டு வினைகளையும், ஒருவி - நீக்கி, முடிவினில் - முடிவாக, போவது - போய்அடையுமாறு, கருதும் - எண்ணும்படியான, அ அரு நெறி - பெறுதற்குஅரிய அப் பரமபதத்தை, புக்கான் - போய்ச்சேர்ந்தான், (சரபங்கன்;) (எ - று.)

உறுவது தெரிவோர் - புரோஞானியர்; இது, தேவர்க்கும் முனிவர்க்கும் அடை. உறுவது - சாதியொருமை; இது, பூர்வஞானத்துக்கும் உபலக்ஷணம். கீழ்க்கவியில், 'ஒருநெறி' என்றதன் பெருமையை இக்கவியில் விளக்கினர். **பி-ம்:**—[1]அறிவினில். (ககக)

சஊ.—கவிக்கூற்று: சரபங்கழனிவனது பேறு.

அண்டமு மகிலமு மறிவரு நெறியா
லுண்டவ னெருபெய ருணர்குரு ருறுபே
றெண்[1]டவ [2]நெடிதெனி னிறுதியி [3]லவனைக்
கண்டவ ருறுபொருள் கருதுவ தெளிதே.

(இ - ள்.) 'அண்டமும் - எல்லாவண்டங்களையும், அகிலமும்-(அவ்வண்டங்களுக்குட்பட்ட) சராசரங்களனைத்தையும், அறிவு அரு நெறியால் - அறியவொண்ணாதபடியாக, உண்டவன்-(பிரளயகாலத்தில்)வயிற்றில்வைத்து அடக்கியருளிய இராமனது, ஒரு பெயர் - (ஆயிரத் திருநாமங்களுள்) ஒரு திருநாமத்தை, உணர்குநர் - அறிபவர், உறு பேறு - அடைகின்ற பாக்கியம், எண் தவ நெடிது - நினைப்பிற்கும் எட்டாது மிகவும்பெரியது,' எனின் - என்றால், இறுதியில் - அந்திமகாலத்தில், அவனை - அந்த எம்பெருமானை, கண்டவர் - (கண்ணுக் கெதிராகச்) சேவித்தவர், உறு பொருள் - அடைகின்ற பதவி, கருதுவது எளிதே - நினைப்பதற்கு எளியதோ? (எ-று.)

இக்கவி - **தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.** அந்திமகாலத்து ராமஸாக்ஷாத்காரத்தைப்பெற்ற பாக்கியம் சொல்லவொண்ணாப் பெருமை வாய்ந்த தென்றவாறு. "வைகலந்த மூவிலேவே லீசற்கும் வாசவற்கும் வாசப்பூமேன், மெய்கலந்த நால்வேத வீரிஞ்சனுக்கு மேலா வீற்றிருப்பர் மாதோ, பைகலந்தபாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட் பள்ளி கொள்ளுங், கைகலந்த நேமியான் றிருநாமத் தொருநாமங் கற்றூர்தாமே" எனப் பின்னுள்ளாரும் கூறியது காண்க. **பி-ம்:**—[1]ந்ப. [2]நெடிதுயிர். [3]இவனை. (ககஎ)

சரபங்கன்பிறப்புநீங்கு படலம் முற்றிற்று.

ங - ஆவது அகத்தியப்படலம்.

அகஸ்தியமுனிவன்பக்கல் ஸ்ரீராமன் ஸீதாலக்ஷ்மணர்களோடு எழுந்தருளியதை உணர்த்தும் படலம். அகத்தியன்-அகஸ்த்யன்; இச்சொல்லுக்கு-(விந்திய) பருவதத்தை (வளரவொண்ணாது தடுத்து) அடக்கியவ னென்று பொருள்: அகம் - மலை; சலியாதது.

இப்படலம், ஸ்ரீராமன் சரபங்கமுனிவனுக்குப் பரமபதமளித்தபின்னர்த் தன்மனைவியோடுந் தம்பியோடும் வாலகில்லியர் தன்னைக்கண்டுமகிழ அகஸ்தியனது ஆச்ரமஞ் சென்று, முன் வருணனிடத்திற் கொடுத்திருந்த வில்லும் தூணீரமும் வாளும் தண்டும் அவன் தரப் பெற்றுக்கொண்ட வரலாற்றைக் கூறுகின்றது.

வேறு.

க.—இராமன்முதலியமூவரும் சரபங்கர்ச்சிரமத்தினின்றும்அப்பாற்செல்லுதல்.

அனையவ னிறுதியி [1]னமைதி நோக்கலி
னினியவ [2]ரின்னலா னிரங்கு நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதன துறையுணின் றரிதிற் போயினர்.

(இ - ள்.) இனியவர்-இனிமையைத் தருகின்றவர்களாகிய, குனி வரு - வளைவு பொருந்திய, திண் சிலை - வலிய வில்லினையுடைய, குமரர் - ஸ்ரீராம லக்ஷ்மணர்கள்,—அனையவன் - அந்தச் சரபங்கமுனிவனது, இறுதியின்-அந்திமகாலத்தின், அமைதி-தன்மையை [அக்கினிப்பிரவேசமானதை], நோக்கலின் - கண்டதனால், இன்னலான் - வருத்தத்தோடு, இரங்கு நெஞ்சினர் - பரிதபிக்கின்ற மனமுடையவர்களாய்,—கொம்பொடும் - பிராட்டியுடனே, புனிதனது உறையுள்நின்று - பரிசுத்தனுகிய அம்முனிவனது ஆச்ரமத்தினின்று, அரிதின் - அருமையாக, போயினர்-(அப்பாற்) போனார்கள்; (எ-று.)

கொம்பு - சீதைக்கு உவமையாகுபெயர்; மெல்லிதாய் ஒல்கியொசிதலில் உவமை. பி - ம்.—[1]அமைவு. [2]இன்னலார்.

இதுமுதற் பதினேறு கலிகள் - மூன்றரைநாழிகை ஒன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். ()

உ.—ஸ்ரீராமன்முதலியமூவரும் நீங்கியவழிகள்.

மலைகளு மரங்களு மணிக்கற் பாறையு
மலைபுன னதிகளு மருவிச் சாரலு
மிலைசெறி பழுவமு மினிய சூழலு
நிலைமிகு தடங்களு மினிது நீங்கினர்.

(இ - ள்.) மலைகளும் - பருவதங்களையும், மரங்களும் - விருக்ஷங்களையும், மணிகல் பாறையும் - அழகிய கருங்கற்பாறைகளையும், அலை புனல்

நதிகளும் - அலைகின்ற நீரையுடைய ஆறுகளையும், அருவி சாரலும் - நீரருவிகள்பாய்கின்ற மலைப்பக்கங்களையும், இலை செறி பழுவமும் - தழைகள்அடர்ந்த சோலைகளையும், இனிய சூழலும் - இனிப்பான இடங்களையும், நிலை மிகு தடங்களும்-ஆழம் மிகுந்த தடாகங்களையும், இனிது-இனிமையாக, (இராமன்முதலியமூவரும்), நீங்கினர் - கடந்து சென்றார்கள்; (எ - று.)

சூழலுக்கு இனிமை-கண்ணுக்கு இனிமையும், வசித்தற்கு இனிமையும். சூழல் - ஆச்சிரமங்கள். நிலை - பரப்புமாம். (ககசு)

கூ.—தண்டகாரணியத்து இருடியர் அப்போது இராமனைத் தரிசித்தல்.

[1]பண்டைய வயன்றரு பாலகில்லரு
முண்டரு மோனரு முதலி னோர்களத்
தண்டக வனத்துறை தவத்து ளோர் [2]கடாங்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார்.

(இ - ள்.) பண்டைய - பழமையாகிய, அயன் - பிரமதேவன், தரு - பெற்றருளிய, பாலகில்லரும் - வாலகில்லியரென்பவர்களும், முண்டரும் - மழித்த தலையை யுடையவர்களும், மோனரும் - மௌனவிரத முடையவர்களும், முதலினோர்கள் - முதலியவர்களாகிய, அ தண்டகவனத்து உறை - அத்தண்டகாரணியத்தில் வசிக்கின்ற, தவத்து உளோர்கள் - முனிவர்கள், இராமனை—, கண்டனர் - (எதிரில் வந்து) கண்டவர்களாய், களிக்கும் சிந்தையார் - மகிழ்கின்ற மனமுடையவராஞர்கள்; (எ - று.)

பாலகில்லர், மோனர் - வடசொற்றிரிபு. வாலகில்யர் - பகவானது மயிரினின்றுந் தோன்றினவர்.பி-ம்:—[1]பண்டயன் பயந்தருள்.[2]எலாம்.(கஉ0)

கூ.—இதுமுதல்நான்குகவிகள் - தண்டகாரணியத்துமுனிவர்களின் மகிழ்ச்சி கூறும்.

[1]கனல்வரு கடுஞ்சினத் தரக்கர் காயவோர்
வினைபிறி தின்மையின் வெதும்பு கின்றன
[2]ரனல்வரு கானகத் தமுத ளாவிய
[3]புனல்வர வுயிர்வரு முலவை போல்கின்றூர்.

(இ - ள்.) கனல் வரு - தீப்போற்சொலிக்கின்ற, கடுஞ்சினத்து - மிக்க கோபத்தை யுடைய, அரக்கர் - ராக்ஷஸர்கள், காய - கோபிப்பதனால், ஓர் வினை பிறிது இன்மையின் - (அவர்களை அழிக்கவல்ல) உபாயம் வேறொன்றும் இல்லாமையால், வெதும்புகின்றனர் - வாடுகின்ற அம்முனிவர்கள்,—(ஸ்ரீராமனது வரவால்), அனல்வரு கானகத்து-தீப்பற்றியெரியுங் காட்டில், அமுது அளாவிய புனல் - அமிருதத்தின் தன்மைபொருந்திய நீர்ப்பெருக்கு, வர - வருதலால், உயிர் வரும் - (அழியாது) பிழைத்துச் செழிக்கின்ற, உலவை - உலர்ந்த மரங்களை, போல்கின்றூர் - ஒக்கின்றவராஞர்கள்; (எ - று.)

தண்டகாரணியவாசிகளான முனிவர்களுக்குக் காட்டிலுள்ள உலர்ந்தமரங்களும், ராக்ஷஸர்களுக்கு நெருப்பும், அவர்களுடைய கோபத்துக்கு

நெருப்பினது வெப்பமும், ராமனதுவருகைக்குக் குளிர்ந்தநீர்வருகையும், முனிவர்கள் களித்து மகிழ்ந்ததற்கு உலர்ந்த மரங்கள் தளிர்த்துச் செழித்த லும் உவமை. பி - ம்:—[1]கனை. [2]அனை. [3]புனை. (கஉக)

ரூ. ஆய்வரும் பெருவலி யரக்கர் நாமமே
வாய்வெரீஇ யலமரு மறுக்க நீங்கினர்
தீவரு வனத்திடை யிட்டுத் தீர்ந்ததோர்
தாய்வர நோக்கிய கன்றின் றன்மையார்.

(இ - ள்.) ஆய் வரும் - மேன்மேல் மிக்குவளர்கின்ற, பெரு வலி - அதிகமான பலத்தையுடைய, அரக்கர் - ராக்ஷஸர்களது, நாமமே - பெயர் களேயே, வாய் வெரீஇ - வாய்குழறச் சொல்லி, அலமரும் - வருந்துகின்ற, மறுக்கம் - மனக்குழப்பத்தை, நீங்கினர் - நீங்கப்பெற்ற அம்முனிவர்கள்,— தீ வரு வனத்திடை - நெருப்புப்பற்றியெரியுங் காட்டில், இட்டு தீர்ந்தது - விட்டு நீங்கியதாகிய, ஓர் தாய் - ஒப்பற்ற (தன்) தாய்ப்பசுவானது, வர - (மீண்டு) வர, நோக்கிய - கண்ட, கன்றின் - கன்றினது, தன்மையார் - தன்மையையுடையவரானர்கள்; (எ - று.)

முன்னிரண்டடி, முனிவர்கள் ராக்ஷஸரிடத்துக்கொண்டிருந்த அச்ச மிகுதியை விளக்கும். ஆய்வு அரு எனப் பிரிப்பினுமாம். முனிவர்கள் தாய் கண்ட கன்றுபோலக் களித்தார்க ளென்றபடி. (கஉஉ)

சு. [1]கரக்கருங் கடுந்தொழி லரக்கர் காய்தலிற்
[2]பொரற்கிட மின்மையிற் புழுங்கிச் [3]சோருநர்
[4]ரரக்கரென் கடலிடை யாழ்கின் றுரொரு
[5]மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினர்.

(இ - ள்.) கரக்க அரு - (எவராலும்) மறுத்தற்குஅரிய, கடுந்தொழில் - கொடியசெய்கைகளையுடைய, அரக்கர் - ராக்ஷஸர்கள், காய்தலின் - கோபித் துவருத்துவதனால், பொரற்கு இடம் இன்மையின் - (அவர்களைப்) போர் செய்துவெல்வதற்கு (இதுவரையில்) உபாய மில்லாமையால், புழுங்கி சோருநர் - மனமவிந்து தளர்கின்ற அம்முனிவர்கள்,—அரக்கர் என் கடலிடை - ராக்ஷஸர்களாகிய கடலின்நடுவே, ஆழ்கின்றார் - அமிழ்கின்றவர்கள்,—ஒரு மரக்கலம் பெற்றனை - (அங்ஙனம்ஆழாது கரைசேருமாறு) ஒருகப்பலைப் பெற்றாற்போல, (இராமபிரானைக் கண்டு), மறுக்கம் நீங்கினர் - மனக்கலக் கம் நீங்கப்பெற்றார்கள்; (எ - று.)

இனி, கரக்கருங்கொடுந்தொழில்-வெளிப்படையாச்செய்கின்ற கொடுந் தொழிலுமாம். உருவகத்தை அங்கமாகக்கொண்டுவந்த உவமையணி. பி-ம்:—[1]காக்கரும். [2]போக்கிடம். [3]சோர்குநர். [4]ஆக்கரு. [5]மாக்கலம். (கஉங)

எ. தெரிஞ்சுற நோக்கினர் செய்த செய்தவ
மருஞ்சிறப் புதிவரல் லறிவு கைதர

விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெந்துயர்ப்
பெருஞ்சிறை வீடுபெற் றணைய பெற்றியார்.

(இ - ள்.) தெரிஞ்சுஉற - நன்றாய்த் தெரியும்படி, நோக்கினர்-(ஸ்ரீராமனைக்)கண்ட அம்முனிவர்கள்,—செய்த-(தாம் வருந்திச்) செய்த, செய் தவம்-சிறந்த தவமானது, அருஞ் சிறப்பு உதவ - பெறுதற்கரிய சிறப்பைக் கொடுக்க, (அதனாலுண்டான), நல் அறிவு - தத்துவஞானமானது, கைதர-தூண்டி செய்வதனால்,—விரிஞ்சுஉற பற்றிய-பரவி நின்று (தம்மைச்)சூழ்ந்த, வெம் - கொடிய, பிறவி துயர் - பிறவித் துன்பங்களாகிய, பெருஞ் சிறை - பெரிய சிறைச்சாலையினின்று, வீடு பெற்றுஅனைய - விடுதலையடைந்து மோக்ஷம் பெற்றாற்போன்ற, பெற்றியார்-தன்மையையுடையவ ராஞர்கள்; (எ-று.)—பரமாநந்த மடைந்தன ரென்றபடி.

தெரிஞ்சுற நோக்குதல்-ஸ்ரீராமனை ஸ்ரீமகாவிஷ்ணுவினது திருவவதார மாக நன்றாய்அறிந்து காணுதல். (கஉச)

அ.—முனிவர்கள் ராக்ஷஸர்களை யடக்கினதன் காரணம்.

வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
பூண்டுள ராயினும் பொறையி [1]ஞற்றலான்
மூண்டெழு [2]வெகுளியை [3]முதலி னீக்கினர்
ஆண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ.

(இ - ள்.) (அம்முனிவர்கள்), வேண்டினர்க்கு - விரும்பிச் செய்தவர்களுக்கு, வேண்டின - (அவர்தாம்) வேண்டிய பயன்களை, அளிக்கும்-(வேண்டியவாறே பெறும்படி) கொடுக்கின்ற, மெய் தவம் - உண்மையான தவத்தை, பூண்டு உளர் ஆயினும் - மேற்கொண்டுள்ளவர்களாஞலும், பொறையின் ஆற்றலால் - பொறுமையின் வல்லமையால், மூண்டு எழு வெகுளியை - மேன்மேல் மிக்குவருகின்ற கோபத்தை, முதலின் நீக்கினர்-வேரோடு களைந்தார்கள்; (ஆதலால்), ஆண்டு உறை அரக்கரால் - அவ்வனத்திலே வசிக்கின்ற ராக்ஷசர்களால், அலைப்புண்டார் - வருத்தப்பட்டார்கள்; (எ-று.)

கூடாவொழுக்கமாகிய பொய்த்தவத்தினின்றும் நீக்குதற்கு 'மெய்த் தவம்' என்றார். பொறையாவது - காரணம்பற்றியாதல் மடமையாஞதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தல். இதனால், நிறைமொழி மாந்தராகிய அம்முனிவர் தம் தவவலிமையால் அவ்வரக்கரை வெகுண்டு சபித்து அழியாமைக்குக் காரணங் கூறப்பட்டது. வேண்டின - பெயர். "வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய் தவ, மீண்டுமுயலப்படும்" என்றார் நாயனாரும். பி-ம்:—[1]ஆற்றலார். [2]மூறை மையின். [3]ஊறைந்து. (கஉடு)

கூ.—இராமபிரான் வணங்க, முனிவர்கள் வாழ்த்தல்.

எழுந்தன செய்தின நிருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றவக் குரிசில் வீரனைப்

பொழிந்தெழு காதலிற் பொருந்தி ஞரவன்
றெழுந்தொறுந் தொழுந்தொறு மாசி சொல்லுவார்.

(இ - ள்.) (அம்முனிவர்கள்), எழுந்தனர் - புறப்பட்டு, எய்தினர் - வந்து,—இருண்ட மேகத்தின் கொழுந்து என - கறுத்த மேகத்தினது கொழுந்து போல, நின்ற - (அவ்விடத்தில்) இருந்த, அ சுரிசில் வீரனே - வீரனாகிய அந்த ஸ்ரீராமனே,—பொழிந்து எழு காதலின் - (மேலோங்கிப்) பொங்கி யெழுகின்ற அன்போடு, பொருந்தினர் - அடைந்தார்கள்; (அப் பொழுது), அவன் - அந்த ஸ்ரீராமன், தொழும்தொறும் தொழும்தொறும் - (தம்மைத் தனித்தனியே) வணங்குந்தோறும் வணங்குந்தோறும், ஆசி சொல் லுவார் - ஆசீர்வாதஞ் செய்பவரானார்கள்; (எ - று.)

காலதாமசஞ்செய்யாது ஸ்ரீராமனெழுந்தருளினசெய்தி கேள்வியுற்ற வுடனே வந்தமை தோன்ற 'எழுந்தனரெய்தினர்' என்றும், நீருண்டு அப் பொழுதுதான் புதிதாய்த் திரண்ட நீலமேக மென்பார் 'இருண்ட மேகத் தின் கொழுந்து' என்றுங் கூறினர். காளமேகத்தை உவமை கூறியது - கருநிறத்திற்கும், கைம்மாறுகருதாது கருணை செய்தற்கும். ஸ்ரீராமன் திருமாலினது திருவவதார மாதலால் தேவரும் முனிவரும் யாவரும் வணங் குந் தன்மையனாயினும், இப்பொழுது தான்கொண்ட மானுடத்திருக்கோலத் துக்கு இணங்க, முனிவரை வணங்கின னென அறிக. ஆசி - ஆசீர்ஸ் என் னும் வடமொழியின் திரிபு. (கஉசு)

கo.—முனிவர்கள் அங்கு இராமனுக்காக ஒருசாலையமைத்துஅளித்துப் பிறகு தூறைவேண்ட வருதல்.

இனியதோர் சாலைகொண் [1]டேகி யிவ்வயி
னனி[2]யுறை யென்[3]றவற் [4]கமைய நல்கித்தாந்
தனியிடஞ் [5]சார்ந்தனர் தங்கி மாதவ
ரனைவரு மெய்தின ரல்லல் சொல்லுவான்.

(இ - ள்.) (பின்பு), மாதவர் அனைவரும் - அம்முனிவர்கள்யாவரும்,— இனியது ஓர் சாலை - வசித்தற்கு இனியதாகிய ஒருபர்ணசாலைக்கு, கொண்டு எகி - (ஸ்ரீராமனை) அழைத்துக்கொண்டுபோய், இவ் வயின் நனி உறை என்று - 'இவ்விடத்திற் சுகமாக வசித்திரு' என்று சொல்லி, அவற்கு-அந்த ஸ்ரீராமனுக்கு, அமைய - பொருந்தும்படி, நல்கி - (நன்றாக) உபசரித்து,— தாம் - தாங்கள், தனி இடம் சார்ந்தனர் - தனியான வேறிடத்தைச் சேர்ந் தவர்களாய், தங்கி-தங்கியிருந்து,—(பின்பு), அல்லல் சொல்லுவான்-(அரக் கர்களாலுண்டாகின்ற தமது) துன்பத்தைச் சொல்லுதற்பொருட்டு, எய்தி னர்-(ஸ்ரீராமனை மீண்டும்) அடைந்தார்கள்; (எ - று.)

தமது துன்பம் இராமபிரான் மனத்திலுறுத்துவதற்காகவும், அனைவரும் துன்பமுற்றவரே யென அறிவித்தற்காகவும் அனைவரும் எய்தின ரென்க. நனி உறை - பல்நாள் வாசஞ்செய் யென்றுமாம். அமையம் நல்கி எனப்

பிரித்து, இருப்பிடந்தென்றும், இலப்பாறுதற்கு அவகாசங்கொடுத்தென்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]எய்தி. [2]உறைக. [3]அகம். [4]பைய. [5]எய்தினர். ()

கக.—இதுமுதல் நான்குகவிகள் - முனிவர்கள் இராமபிரானிடத்து அரக்கரால்நேர்ந்த துன்பமனத்தையும் எடுத்துக்கூறுதலைத் தெரிவிக்கும்.

எய்திய முனிவரை யிறைஞ்சி [1]யேத்துவந்
தையனு மிருந்தன [2]னருளென் னென்றலும்
வையகங் காவலன் [3]மதலை வந்ததேர்
வெய்யவெங் [4]கடுந்துயர் விளைவு கேளெனை.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஐயனும் - ஸ்ரீராமனும், எய்திய முனிவரை-அவ்வாறு (தன்னை)அடைந்த முனிவர்களை, இறைஞ்சி - வணங்கி, ஏத்து உவந்து-(அவர்களைத்) துதித்தலை மகிழ்ந்துசெய்து, இருந்தனன் - வீற்றிருந்து, அருள் என்-'(எனக்கு இப்பொழுது) கட்டளை என்ன?' என்றலும் - என்று கேட்டவளவில்,—(அவர்கள்), 'வையகம் காவலன் மதலை - உலகங்களைக்காத்தல்வல்ல தசரதசக்கரவர்த்தியது திருமகனே! வந்தது - (இப்பொழுது) நேரிட்டதாகிய, ஓர் - ஒரு, வெய்ய வெங் கொடுந் தொழில் - மிகவும் அதிகொடுமையான செய்கைகளின், விளைவு - பெருக்கத்தை, கேள் - (நீ) கேட்டருள்', எனை - என்று,—(எ - று.)—'என்னை' (கசு) என்பதனைத்தொகுத்துமுடியும்.

ஏத்துஉவந்து - அவர்களாற் செய்யப்பட்ட தோத்திரத்துக்குத் தான் மகிழ்ந்து என்றுமாம். மதலை-அண்மைவிளி. வெய்யவெங்கொடு-ஒருபொருட் பன்மொழிகள்; மன மொழி மெய்க ளென்னுந் திரிகரணங்கள்பற்றி, மூன்று கூறினருமாம். பி-ம்:—[1]ஏத்திவந்து. [2]அருளும். [3]மைந்த. [4]கொடுந்தொழில்.()

கஉ. இரக்கமென் றிருபொரு ளிலாத நெஞ்சின
ரரக்கரென் றுளர்சில ரறத்தி னீங்கினர்
நெருக்கவும் யாம்படர் நெறிய லாநெறி
துரக்கவு மருந்தவத் துறையு ணீங்கினேம்.

(இ - ள்.) இரக்கம் என்ற ஒருபொருள் - இரங்குதலென்று சொல்லப்பட்ட ஒரு செய்கை, இலாத - (ஒரு சிறிதும்) இல்லாத, நெஞ்சினர் - மனமுடையவர்களும், அறத்தின் நீங்கினர் - தருமத்தினின்றும் நீங்கினவர்களுமாகி, அரக்கர் என்று - ராக்ஷசரென்று சொல்லப்பட்டு, சிலர் உளர் - சிலர் இருக்கின்றனர்; (அவர்கள்), நெருக்கவும் - (எங்களை) வருத்தப்படுத்துவதனாலும், யாம் படர் நெறி அலா - நாங்கள் ஒழுகுதற்குரிய நல்லொழுக்கமல்லாத, நெறி - தீயொழுக்கத்தில், துரக்கவும்-செலுத்துவதனாலும், அருந்தவம் துறையுள்-அரியதவத்தினது வழியினின்றும், நீங்கினேம்-விலகினேம்.

அரக்கர் அறத்தின் நீங்கினர்; யாம் தவத்துறையுள் நீங்கினேம் என்ற விடத்து ஒருநயங் காண்க. என்றிரு - தொகுத்தல். வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறு

வகைப்பொரு ளொன்றுற்போல, ஈண்டுத் தொழில் பொரு ளொனப்பட்டது; "ஒனத்தைப் பொருளென்று கொண்டவன்" என நாயனூர் குணத்தைப் பொருளாகக்கூறியது காண்க. துறையுள் - உருபுமயக்கம். இனி, தவத்து உறையுள் எனப் பிரித்து, தவஞ்செய்யுமிடமாகிய ஆச்சிரமங்களினின்று மென்று உரைத்தல், சிறப்பின்மையும் மோனத்தொடைக்குப் பொருந்தாமையும் உணர்க. (கஉக)

கங. வல்லியம் பலதிரி வனத்து மானென
வெல்லியும் பகலுநொந் திரங்கி யாற்றலெஞ்
சொல்லிய வறநெறித் துறையு நீங்கினெம்
வில்லியன் மொய்ம்பினுய் வீடு [1]காண்குமோ.

(இ - ள்.) வில் இயல் மொய்ம்பினுய் - கோதண்டம் பொருந்திய புயத்தையுடையவனே! பல வல்லியம் - அநேகம் புலிகள், திரி-திரிகின்ற, வனத்து - காட்டிலுள்ள, மான் என - மான்போல, எல்லியும் பகலும் - இரவும் பகலும், நொந்து இரங்கி - மனநொந்துவருந்தி, ஆற்றலெம் - (அவர்கள் செய்யுங் கொடுமைகளைப்) பொறுக்கமாட்டாதவர்களா யிருக்கின்றேம்; சொல்லிய - (நூல்களிற்) சொல்லப்பட்ட, அறம் நெறி துறையும் - தரும மார்க்கத்தின் வகைகளினின்றும், நீங்கினெம் - வழுவினேம்; வீடு காண்குமோ - (இனி இத்தத்துன்பங்களினின்று) விடுபடுதலை அடைவேமோ? (எ - று.)

புலி - அரக்கர்க்கும், மான் - முனிவர்க்கும் உவமை. நீ அரக்கரைக் கொல்லுங்கருவியை யுடையா யென்பது. 'வில்லியல்மொய்ம்பினுய்' என்றதன் குறிப்பு. துன்பமிகுதியைக் குறிப்பித்தற்கு, 'வீடுகாண்குமோ' என்றார்; அறநெறியினின்று வழுவினமையால் பரமபதத்தை எங்ஙனம் அடைவோமென்று கூறினருமாம். பி - ம்:—[1]காண்டுமோ. (கஉ0)

கச. மாதவத் [1]தொழுகலெ மறைகள் யாவையு
மோதலெ மோதுவார்க் குதவ லாற்றலெ
மூதெரி வளர்க்கிலெ முறையி னீங்கினே
மாதலி னந்தண ரேயு மாகிலேம்.

(இ - ள்.) மா தவத்து-பெருமைபொருந்திய தவநெறியில், ஒழுகலெம் - ஒழுகுகின்றேமில்லை; மறைகள் யாவையும் - வேதங்களெல்லாவற்றையும், ஓதலெம் - ஓதுகின்றேமில்லை; ஓதுவார்க்கு - ஓதுகின்றவர்களுக்கு, உதவல் ஆற்றலெம் - உதவிசெய்கின்றேமில்லை [ஓதுவிக்கின்றேமில்லை]; முதுவரி-பழமையாகிய வேள்வித் தீயை, வளர்க்கிலெம் - வளர்க்கின்றேமில்லை; (இத்தன்மையராகி), முறையின்-உரிய ஒழுக்கத்தினின்றும், நீங்கினேம்—; ஆதலின்—, அந்தணர்எயும் ஆகிலேம் - பிராமணராயும் ஆகின்றேமில்லை.

அந்தணர்க்குரிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், தவஞ் செய்தல் முதலிய செய்கைக ளொன்றும் தம்மிடத்துஇல்லை யாதலால், இங்

ஙனங் கூறினர். எரி வளர்த்தல் - வேள்விசெய்தல்; அது, தொன்றுதொட்டு அந்தணர் செய்துவருஞ் செய்கை யென்பது தோன்றவும், வேள்வித் தீயை எஞ்ஞான்றும் அவியாது வளர்த்துக்கொண்டேயிருக்க வேண்டுதலாலும், 'ஆதெரி' என்றார். மற்றைகளென்றெழியாது யாவையு மென்றது, அவற்றின் அங்கங்களும் உபாங்கங்களும் அடங்குதற்கு. "மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்பவாகலின், 'முறையினீங்கினே மாதலி, னந்தணரேயுமாகிலேம்' என்றார். பி - ம்:—[1]ஒழுகிலெம். (கஙக)

இங்கே சிலபிரதிகளில் மிகையாகச் சிலபாடல்கள் காணப்படுகின்றன: அவை **வருமாறு:**—

1. அருந்திற லுலகொரு மூன்று மாணையிற்
புரந்திடுந் தசமுகத் தொருவன் பொன்றிலாப்
பெருந்தவஞ் செய்தவன் பெற்ற மாட்சியால்
வருந்தினெம் கெடும்பகல் வரத யாமெலாம்.

2. தேவர்க டமைத்தினந் துரந்து மற்றவர்
தேவியர் தமைச்சிறைப் படுத்தித் திக்கெலாம்
கூவிடத் தடிந்தவர் செல்வங் கொண்டபோர்
மாவலித் தசமுகன் வலத்துக் கியார்வலார்.

3. அவன்வலி படைத்துமற் றரக்கர் யாவரும்
சிவன்முதன் மூவரைத் தேவர் சித்தரைப்
புவனியின் முனிவரை மற்றும் புங்கவ
ரெவரையுந் துரந்தன ரிறைவ வின்னுமே.

4. ஆயிர கோடியென் றுரைக்கு மண்டமேன்
மேயபோ ரரக்கரே மேவ லல்லதைத்
தூயசீ ரமரரென் றுரைக்குந் தொல்கணத்
தாயவ ரெங்ஙனென் றறிந்தி லோமையா.

5. வெள்ளியங் கிரியிடை விமலன் மேலைநாட்
கள்ளிய வரக்கரைக் கடிகி லேனெனு
வொள்ளிய வரமவர்க் குதவி னுன்கடற்
பள்ளிகொள் பவன்பொரு தினைத்த பான்மையான்.

6. நான்முக னவர்க்குநன் மொழிகள் பேசியே
தானுறு செய்வினைத் தலேயி னிற்கின்றுன்
வானில்வெஞ் சுடர்முதல் வயங்கு கோளெலா
மேன்மையி லருஞ்சிறைப் பட்டு மீண்டுளார்.

கரு.—இதுவும் அடுத்த கவியும்-முனிவர்கள் இராமபிரானிடத்து 'நீயே ரக்ஷகன்' என்றலைத் தெரிவிக்கும்.

இந்திர னெனினவ னரக்க ரேயின
சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையா
னெந்தைமற் றியாருள ரிடுக்க ணீக்குவார்
வந்தனை யாஞ்செய்த தவத்தின் மாட்சியால்.

(இ - ள்.) இந்திரன் எனின் - தேவேந்திரனே வென்றால், அவன்—, அரக்கர் ஏயின - ராக்ஷசர் கட்டளையிட்ட தொழில்களை, சிந்தையின் - மனத்திலும், சென்னியின் - சிரசிலும், கொள்ளும்-கொள்ளுகின்ற, செய்கையான்-தொழிலையுடையவனையிருக்கின்றான்; (ஆகையால்), எந்தை-எமது தலைவனே! இடுக்கண் நீக்குவார் - (எங்கள்) துன்பங்களைப் போக்குகின்றவர், மற்று யார் உளர் - (உன்னையன்றி) வேறு எவரிருக்கின்றனர்? [ஒருவருமில்லை]; யாம் செய்த—, தவத்தின் மாட்சியால் - தவத்தின் பெருமையால், வந்தனை - (நீ எங்களைக் காத்தற்கு இங்கே) எழுந்தருளினாய்; (எ - று.)

இதனால், முனிவர்கள் தமது அநந்யகதித்வத்தை வெளியிட்டனரென்க. இந்திரனெனி னென்பது, அவன்சிறப்பைக் குறித்துநின்றது. எயின - ஏவின; பெயர். சிந்தையிற் கொள்ளுதல் - அதுவே கருத்தாயிருத்தல். சென்னியிற்கொள்ளுதல்-தலைமேற்கொண்டு வணக்கத்தோடுசெய்தல்.

கசு. உருளுடை நேமியா [1]லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
[2]விருளிடை வைகினே மிரவி தோன்றினு
மருளுடை வீரநின் னபயம் யாமென்றார்.

(இ - ள்.) உருள் உடை - (உலகமுழுவதும்) உருளுதலை [செல்லுதலை] யுடைய, நேமியால் - ஆஜ்ஞாசக்கரத்தினால், உலகை - உலகமுழுவதையும், ஓம்பிய - காத்த, பொருள் உடை - எல்லாச்செல்வங்களையுமுடைய, மன்னவன் - தசரதசக்கரவர்த்தியினது, புதல்வ - திருமகனே! போக்கு இலா - நீங்குதலில்லாத, இருளிடை - (துன்பமாகிய) இருளிலே, வைகினேம் - தங்கினேம் (யாம்); இரவி தோன்றினும் - (அவ்விருளைப் போக்குதற்குச்) சூரியன்போல (நீ இங்கே) எழுந்தருளினாய்; அருள் உடை வீர - கருணையுடைய வீரனே! யாம்—, நின் அபயம் - உனக்கு அடைக்கலம், என்றார் - என்று (முனிவர்கள் ஸ்ரீராமன்சன்னிதியில்) விண்ணப்பஞ்செய்தார்கள்; (எ - று.)

இதனால், முனிவர்கள் இராமபிரானிடத்துச் சரணாகதி செய்கின்றனர். ஆணையைச் சக்கரமென்றல், செய்யுள்வழக்கு. 'உலகையோம்பிய மன்னவன் புதல்வ' என்றது, எங்களைக்காப்பது உனக்குக்கடமை யெனக் குறிப்பித்தவாறு. துன்பத்தை இருளாக்கூறுவது, கவிசமயம். இரவி - ரவி; ரவ்விற்கு இகரம் மொழிமுதலாகி வந்தது. 'அருளுடை வீர' என்றதனால், விஷ்டபரிபாலநத்திற்கு வேண்டிய அருளுடைமையும், துஷ்டநிக்ரஹத்

திற்கு வேண்டிய வீரமுடைமையுங் கூறப்பட்டன. அபயம் - பயப்படாதே யென்று சொல்லிக் காக்கத்தக்க பொருள். பி - ம்:—[1]உயிர்கள். [2]இரு ளுடைவைகலேம். (கஙஉ)

வேறு.

கஎ. —இதுமுதல்ஆறுகவிகள் - இராமபிரான் ராக்ஷஸரைக்கோல்வதாக வாக்களித்து அம்முனிவரீக்கு அபயமளித்தலைத் தெரிவிக்கும்.

புகல்பு குந்திலரேற் புறத்தண் டத்தி
னைகல்வ [1]ரேனுமென் னம்பொடும் வீழ்வரால்
தகவி றுன்பந் [2]தவிருதிர் நீரெனுப்
பகல வன்குல மைந்தன் பணிக்கின்றான்.

(இ - ள்.) (அவ்வார்த்தையைக்கேட்டு), பகலவன் குலம் மைந்தன் - சூரியகுலத்தில்தோன்றிய ஸ்ரீராமன், '(அவ்வரக்கர்கள்), புகல் புகுந்திலர் எல் - (இனித் தீமைசெய்வதில்லை யென்றுசொல்லி) அடைக்கல மடையா மற்போவாராஞல், புறத்து அண்டத்தின் அகல்வர் ஏனும் - (இவ்வண்டத் தைவிட்டு) அப்பாலுள்ள வேறுஅண்டங்களில் ஓடிப்போவாராஞலும், என் அம்பொடும் - எனதுபாணத்தோடும், வீழ்வர் - கீழேவிழுந்திறப்பர்; ஆல் - ஆகையால், நீர் - நீங்கள், தகவு இல் துன்பம் - தகுதியில்லாத இத்துன் பத்தை, தவிருதிர் - நீங்குங்கள்', எனு - என்றுசொல்லி, பணிக்கின்றான் - (பின்னும்) சொல்லுகின்றான்; (எ - று.)

'அம்பொடும் வீழ்வர்' என்னுமிடத்து அம்பினதுவீழ்ச்சியாகிய காரண த்திற்கும், அரக்கர்களின் வீழ்ச்சியாகிய காரியத்திற்கும் ஒரு காலத்தில் உண்டாகுகை கூறப்பட்டதனால், **முறையிலுயர்வுநவிற்சியணி;** இதனை வடநூலார் அக்ரமாதிஸயோக்தி யென்பர்: இது காரியவிரைவைத் தெரிவி ப்பதாம். ''ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்'' என்பதிற்போல 'ஒடு' உருபைக் கருவிப்பொருளில் வந்ததாக்கொண்டு, அம்பினல் வீழ்வ ரென்று மாம். சாதுக்களும் மிக்கபெரியோர்களுமாகிய உங்கட்கு இவ்வாறுவருத் தம்வருதல் தக்கதன்றென்பான் 'தகவில்துன்பம்' என்றான். பகலவன் - தன்சேர்க்கையாற் பகலைச் செய்பவன். பி-ம்:—[1]என்னினும். [2]தவிருமின்.

இதுமுதற் பத்தொன்பதுகவிகள் - பெரும்பாலும் மூதற்சீர் மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிவந்த அளவடிகான்குகொண்ட **கலிவிருத் தங்கள்.** (கஙச)

கஏ. வேந்தன் வீயவும் யாய்[1]துயர் மேவவு
மேந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவும் யான்வனம்
போந்த தென்னுடைப் புண்ணியத் தாலென்றான்.

(இ - ள்.) 'வேந்தன் வீயவும் - சக்கரவர்த்தி [தசரதன்] இறப்பவும், யாய் துயர் மேவவும் - தாய் [கௌசலை] துன்பமடையவும், எந்தல் எம்பி

வருந்தவும் - பெருமையையுடைய என்தம்பி [பரதன்] வருத்தமடையவும், என் நகர் மாந்தர் - எனது நகரத்தில் [அயோத்தியில்] உள்ளஜநங்கள், வல் துயர் கூரவும் - வலிய துன்பத்தை மிகுதியாக அடையவும், யான் வனம் போந்தது - நான் காட்டிற்குப் புறப்பட்டுவந்தது, என்னுடை புண்ணியத் தால் - எனது நல்வினையா லாகும்', என்றான்—; (எ - று.)

வேந்தன் வீதல், புத்திரசோகத்தால். பரதன்வருந்துதல், இராச்சிய பாரந் தாங்கற்குஅருமையால். மூத்தமகனுகிய தனக்கே உரிய தாதலால் 'என்னகர்' என்றும், முனிவர்களுக்குப் பகைதீர்த்து உதவிசெய்யப் பெற்றதனுல் 'போந்த தென்னுடைப் புண்ணியத்தால்' என்றுங் கூறினுன்: வனம்போந்ததிலுள்ள குற்றத்தில் குணமிருப்பதாகக்கூறியதிதில் அநுஜ் ஞாலங்காரமெனப்படும் வேண்டலணி தோன்றும். பி-ம்:—[1]வரம். (கஉ)

கக. அறந்த வாநெறி யந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலை யேனெனி
னிறந்து போகினு நன்றிது வல்லது
பிறந்தி யான்பெறும் பேறென்பதி யாவதோ.

(இ - ள்.) அறம் நெறி - தருமமார்க்கத்தினின்றும், தவா - (சிறிதும்) நீங்காத, அந்தணர் - முனிவர்களது, தன்மையை - பெருமையை, மறந்த - மறந்து (அவர்கட்கு) வருத்தத்தைச் செய்கின்ற, புல்லர் - அற்பர்களாகிய அவ்வரக்கர்களது, வலி - பலத்தை, தொலையேன் எனின் - அடியோடு அழி யாமற் போவேனுனுல், இறந்து போகினும் - (அவ்வரக்கர்களாலே யான்) இறந்துபோனுலும், நன்று - நல்லதே; இது அல்லது - இதனேயல்லாமல், யான்—, பிறந்து - (இவ்வுலகில் மானுடஜந்மமெடுத்துத்) தோன்றி, பெ றும் - அடைகின்ற, பேறு என்பது - பாக்கிய மென்று சொல்லப்படுவது, யாவதோ - வேறு எதுவோ? [ஒன்றுமில்லை]; (எ - று.)—இதனுல், இராம பிரான் தனதுஅவதாரம் துஷ்டநிக்கிரகஞ்செய்து சிஷ்டபரிபாலனஞ்செய் தற்பொருட்டே யெனக் குறிப்பாகத் தெரிவித்தன னென்க. (கஉ)

உ0. நிவந்த வேதியர் [1]நீவிருந் தியவர்
கவந்த பந்தக் களிநடங் [2]கண்டிட
வமைந்த வில்லு மருங்கணைத் தூணியுஞ்
சுமந்த தோளும் பொறைத்துயர் தீருமால்.

(இ - ள்.) நிவந்த - உயர்ந்த, வேதியர் - வேதமுணர்ந்த அந்தணர்க ளாகிய, நீவிரும் - நீங்களும், தியவர் - துஷ்டர்களாகிய அவ்வரக்கர்களது, கவந்தம் பந்தம் - தலையற்ற உடற்குறைகளது கூட்டங்கள் ஆடுகின்ற, நடம் - கூத்தை, களி - களிப்போடு, கண்டிட - காணும்படியாக,—அமைந்த வில் லும்-கட்டமைந்த வில்லையும், அருங் கணை தூணியும் - தடுத்தற்கரிய அம்பு களையுடைய தூணீரங்களையும், சுமந்த - தாங்கிக்கொண்டிருக்கின்ற, தோ ளும் - (என்னுடைய) தோள்களும், பொறை துயர் - (அவற்றைச்)சுமப்பதா லாகிய துன்பத்தை, தீரும் - நீங்கப்பெறும்; (எ - று.)

தோள்கள் வில்லுந்தாணியுந் தாங்குதற்குப் பயன் போரிற் பகைவரை வெல்லுதலே யாதலால், 'தோளும் பொறைத்துயர் தீரும்' என்றார். தோளு மென்ற உம்மை-பூமியும் பாரநீங்கும், நீவிருந் துன்பநீங்குவி ரெனக் குறிப் பித்தது. நீவிரு மென்ற உம்மை; மற்றை யாவரையுந் தழுவியது. உம் தீய வர் எனப்பிரித்து, உமக்குத் தீமையைச்செய்கின்றவ ரென்றுமாம். கவர் தம் - கபந்தம். பந்தம்-ப்ருந்தம்என்ற வடசொல்லின் திரிபு. கணைத்தூணி - அம்புப்புட்டில். தூணி - வடசொற்சிதைவு. **பி-ம்:**—[1]நீரிரும். [2] காண்டிரால்.

உக. ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
[1]யாவர்க் கானு மெளியவர்க் காயினுஞ்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாருவார்.

(இ - ள்.) ஆவுக்கு ஆயினும் - பசுக்களைக் காப்பதற்காஞலும், அந் தணர்க்கு ஆயினும் - பிராமணர்களைக் காப்பதற்காஞலும், எளியவர்க்கு ஆயினும் - ஏழைகளைக் காப்பதற்காஞலும், யாவர்க்கு ஆனும் - (இன்னும் மற்றை) எவர்களைக் காப்பதற்காஞலும், சாவ பெற்றவரே - (உதவிசெய்து) இறக்கப்பெற்றவர்கள் தாமே, தகை வான் உறை - பெரிய சுவர்க்கலோகத் திலே வசிக்கின்ற, தேவர்க்கும்—, தொழும் - வணங்குகின்ற, தேவர்கள் ஆகுவார்—; (எ - று.)

உதவிசெய்வதால் இறந்தவர் தேவர்களுள்ளுஞ் சிறந்த தேவ ரென்ற படி. எளியவர் - வலிமையுஞ் செல்வமு மில்லாதவர். **பி-ம்:**—[1]ஏவர்க்கேயும்.

உஉ. சூர மறுத்தவ னுஞ்சுடர் நேமியு
மூர மறுத்த வொருவனு [1]மோம்பினு
மார றத்திறை டன்றிநின் றாரவர்
வேர றுப்பென் வெருவன்மி னீரென்றான்.

(இ - ள்.) சூர் அறுத்தவனும் - சூரபதுமனென்னும் அசுரனை அழித்த சுப்பிரமணியனும், சுடர் நேமியும் - விளங்குகின்ற சக்கராயுதத்தையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவும், ஊர் அறுத்த ஒருவனும் - திரிபுரங்களை எரித்தழித்த பரமசிவனும், ஓம்பினும் - (துணையாக வந்து) காத்தாலும், ஆர் அறத்தி ஞெடு அன்றி நின்றார் அவர் - எவ்வரக்கர்கள் தருமத்தோடு பொருந்தாமல் அதருமத்தோடு பொருந்திநின்றார்களோ அவர்களை, வேர் அறுப்பென் - வேரோடு அழியச்செய்வேன்; நீர் வெருவன்மின் - நீங்கள் பயப்படாதே யுங்கள், என்றான்—; (எ - று.)

இதனால் அபயப்பிரதானஞ் செய்தானென்க. சூர் - ஸுரர்: வடசொற் சிதைவு. திரிமூர்த்திகளுள்ளும் பிரமன் அந்தணனுகி வைதிகதிஷ்டையில் இருப்பவ னுதலால், அவனைநீக்கி, போரில்வல்லவனுந் தேவசேநாபதியுமாகிய சுப்பிரமணியனைச் சேர்த்தன ரென்க. இராமபிரான் தான் திருமாலின்வடிவ மாயினும் மனிதனுகத் திருவவதரித்ததற்கு ஏற்ப, அத்தெய்வத்தன்மையை

மறைத்து, நாராயணமூர்த்தியை 'சுடர்நேமி' எனப் படர்க்கையாகப் பிறன் போலக் கூறினன். நேமி - சக்கரபாணிக்கு ஆகுபெயர்; அன்றிக்கே, சுடர் நேமி - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையுமாம். 'ஓம்பி னும்' என்றது, ஓம்பாமையே கருதிற்று. பி-ம்:—[1]காப்பினும். (கஙூ)

உங.—இராமபிரானிடத்து அபயம்பெற்ற முனிவர்களின் மகிழ்ச்சி.

உரைத்த வாசகங் கேட்டுவந் [1]தோங்கிட
விரைத்த காதல ரேகிய வின்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
நிருத்த மாடினர் நின்று விளம்புவார்.

(இ - ள்.) உரைத்த வாசகம் - (இவ்வாறு ஸ்ரீராமன்) சொன்ன வார்த் தையை, (அம்முனிவர்கள்), கேட்டு—, உவந்து - மகிழ்ந்து, ஓங்கிட இரை த்த காதலர் - அதிகமாகப் பொங்கியெழுந்த அன்பினை யுடையவர்களும், ஏகிய இன்னலர் - நீங்கிய துன்பத்தையுடையவர்களும், திரித்த கோலினர்- (கையால்) திரித்த தண்டத்தை யுடையவர்களும், தே மறை பாடினர் - இனிப்பான வேதங்களைப் பாடினவர்களும், நிருத்தம் ஆடினர் - கூத்தா டினவர்களுமாகி, நின்று—, விளம்புவார் - சொல்லுவார்கள்; (எ - று.)

ஏகிய இன்னலர், திரித்த கோலினர் என்பவற்றை "அருங் கேடன்," "சென்றுசேர்கல்லாப்புள்ளபுள்ளி, லென்றூழ்வியன்குளம்" என்பனபோலக் கொள்க; இனி, இன்ன லேகியவர், கோல்திரித்தவ ரென விகுதிபிரித் துக் கூட்டுவாரு முண்டு. "தூலே கரக முக்கோல் மீனையே, யாயுங் காலை யந்தணர்க் குரிய" என்பதனுல், கோல் கூறினர். கோல்திரித்தல் முதலிய மூன்றும், ஆநந்தக்குறிப்பு. தே மறை - தெய்வத்தன்மையையுடைய வேத மென்றுமாம். நிருத்தம் ந்ருத்தம். பி-ம்:—[1]ஓங்கிய. (கசஂ)

உச.—முனிவர்கள் இராமனைப் புகழ்தல்.

தோன்ற னீமுனி யிற்புவ னத்தொகை
மூன்று போல்வன முப்பது கோடிவந்
தேன்ற போது மெதிரல வென்றலிற்
[1]சான்று வேதந் தவம்பெரு ஞானமே.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தோன்றல் - தலைவனே! நீ முனியின் - நீ கோபிப்பாயா னுல், மூன்று போல்வன - இந்தத் திரிலோகங்களையும் போல்வனவாகிய, முப்பது கோடி புவனம் தொகை - முப்பதுகோடி லோகங்களுடைய கூட் டங்கள், வந்து-(ஒரேகாலத்தில் ஒருங்கே சேர்ந்து) வந்து, என்ற போதும் - எதிர்த்தாலும், (அவை), எதிர் அல - (உனக்கு) ஈடல்ல, என்றலின் - என்ற தன்மையில், வேதம் - வேதங்களும், தவம் - (எங்களுடைய) தவங்களும், பெரு ஞானம் - தத்துவஞானமும், சான்று - சாட்சியாகும்; (எ - று.)

நீ போர்செய்வதற்கு முன்பே அவர்கள்மீது கோபிக்கின்ற கோபமே அவர்களை அடியற அழிக்க அமையு மென்றற்கு, 'நீ முனியின்' எனப்பட்டது. பகவானது பெருமையையே வேதங்கள் ஒதுவதுபற்றியும், தவவலிமையாலும் அதனு லுண்டாகின்ற தத்துவஞானத்தாலுந் தாம் அதனை அறிவதுபற்றியும், 'சான்று வேதந் தவம் பெருஞானம்' என்றார். பெருஞானம் - ஐயந்திரிபில்லாத உண்மையுணர்வு. தோன்றல் - அண்மைவிளி. புவனம் மூன்று - சுவர்க்க மத்திய பாதாளங்கள். 'மூப்பதுகோடி' என்றது, மிகப் பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு. பி - மீ:—[1]சான்றலோ வெந்தைகப். (கசஅ)

உரை.—முனிவரீர்காதுவேண்டுகோளின்படி ஸ்ரீராமன் அங்குத் தங்கியிருத்தல்.

[1]அன்ன தாகலி னேயின வாண்டெலா
மின்னல் காத்திங் கினிதுறை வாயெனச்
சொன்ன மாதவர் பாதந் தொழுதுயர்
மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினன்.

(இ - ள்.) அன்னது ஆகலின் - (நின்மகிமை) அத்தன்மையதாதலால், ஏயின ஆண்டுஎலாம் - (நீ வனத்திலே யிருக்கும்படி) ஏற்படுத்திய வருஷங்களெல்லாம், இன்னல் காத்து - (எங்களுக்குத்) துன்பம்வாராமற் காத்துக் கொண்டு, இங்கு - இவ்வாச்சிரமத்தில், இனிது உறைவாய் - சுகமாக வசிப்பாய், என - என்று, சொன்ன—, மா தவர்-முனிவர்களது, பாதம்-திருவடிகளை, தொழுது - வணங்கி, உயர் மன்னர் மன்னவன் மைந்தனும் - சிறந்த சக்கரவர்த்தித்திருமகனும், வைகினன் - (அவ்விடத்திலே) தங்கியிருந்தான்.

'இன்னல் காத்து' என்பது, "சூற்றமே காக்க பொருளாக" என்பதுபோல நின்றது. 'உயர்' என்பதனை மன்னர்க்குஆதல், மன்னவற்கு ஆதல், மைந்தற்குஆதல் கூட்டுக. பி-மீ:—[1]அன்னைகாதலின். (கசஉ)

உரை.—இராமன்முதலிய முவரும் முனிவராச்சிரமங்களிற் பத்துவருடம் கழித்துப் பின்பு அவர்களனுமதிப்படி அகத்தியாச்சிரமத்துக்குப் புறப்படுதல்.

[1]ஐந்து மைந்து மமைதியி னுண்டவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை யெண்ணி யகத்தியற் சேர்கென
விந்து நன்னுத றன்னெடு மேகினர்.

(இ - ள்.) மைந்தர் - ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், அவண் - அவ்விடத்தில் [முனிவர்களிஞ்சிரமமண்டலத்தில்], ஐந்தும் ஐந்தும் ஆண்டு - பத்துவருஷகாலம், தீது இலர் - ஒருதுன்பமு மில்லாமல், அமைதியின் - சுகமாக, வைகினர் - தங்கியிருந்தார்கள்; (பின்பு), மா தவர் - அம்முனிவர்கள், சிந்தை எண்ணி - மனத்திலுல் ஆலோசித்து, அகத்தியன் சேர்க என - 'அகத்திய முனிவரைச் சேர்வீராக' என்று சொல்ல,—(அவ்வாறே), இந்து நல் நுதல்

தன்னெடும் - பிறைச்சந்திரன்போன்ற அழகிய நெற்றியையுடைய சீதை யுடனே, ஏகினர் - புறப்பட்டார்கள்; (எ - று.)

ஒவ்வொரு ஆச்சிரமத்திலுஞ் சிலசிலகாலாக முனிவர்க ளாச்சிரமங் கள்தோறுந் தங்கியிருக்கப் பத்துவருஷங்கள் கழிந்தன வென்க. முக்கால முணர்ந்த முனிவர்கள் மேல் இராவணவதநிமித்தம் இராமபிரான் அகத்திய னிடத்து வில்முதலியன பெறவேண்டியிருத்தலின்'சிங்கையெண்ணி அகத்தி யற்சேர்க' என்றனர். பி - மீ:—[1]ஐந்தொடு. (கசஈ)

உஎ —அம்முவரும் சுதீக்ஷ்ணனது ஆச்சிரமஞ்சேர்தல்.

விடர கங்களும் வேய்செறி கானமும்
படருஞ் சின்னெறி பைப்பைய நீங்கினர்
சுடரு மேனிச் [1]சுதீக்கண னென்னுமவ்
விடரி லானுறை சோலிசென் றெய்தினர்.

(இ - ள்.) (பறப்பட்ட அவர்கள்), விடர் அகங்களும் - வெடிப்புள்ள இடங்களிலும், வேய் செறி கானமும் - மூங்கில்கள் நிறைந்த காடுகளிலும், படரும் - செல்லுகின்ற, சில் நெறி - சிறிய வழிகளை, பைப்பைய - மெல்ல மெல்ல, நீங்கினர் - கடந்தவர்களாய்,—சுடரும் மேனி-விளங்குகின்ற மேனி யையுடைய, சுதீக்ஷணன் என்னும் - ஸுதீக்ஷ்ணனென்கிற, அ விடர் இலான்-பிறவிநோய்களில் [1] அம்முனிவன், உறை-தங்கியிருக்கின்ற, சோலை - சோலையில், சென்று எய்தினர் - போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.)

சுடர்தல் - பிரமதேஜஸாக [1]விளங்குதல். சுதீக்ஷணன் - விசாரம்; மிகவும்நல்லதான தவமுடையவனால், ஸுதீக்ஷ்ணனெனப் பெயர். தவத் தால் நோய்முதலானவற்றை யறுத்தும் அறவே, பிறவித் துன்பங்கள் காரணமாகவே [1]விடரிலான்' என்றார்; இனி, தம்பொறிக ளால்உலகநூலும் வருத்தமும்[1] முதலினென்னலாம். காட்டின்தன்மை, விடர கங்களும் வேய்செறிகானமும் படருஞ்சின்னெறியும் என்று விசேடிப்பர். வேய் - மற்றை முன்னோர்களுக்கும் பலகணம். சின்னெறி - சின்மையாகிய நெறி; சின்மை - சிறியதாயிருத்தன்மை. பைப்பைய - பைப்பைபவென்னும் அடுக் கின் விகாரம். பி - மீ:—[1]சுதீக்ஷணனென்பான்முடன். (கசஉ)

உஅ.—ராமலக்ஷ்மணர்கள் சுதீக்ஷ்ணனை வணங்க, அம்முனிவன் வரவேற்றல்.

அருக்க னன்ன புகரிவீ யவ்வழிச்
செருக்கில் சிந்தைய [1]சேவடி தாழ்தலு
மிருக்க வீண்டென் றினியன கூறினன்
மருக்கொள் சோலையின் மைக்தரும் வைகினர்.

(இ - ள்.) செருக்கு இல் சிந்தையர் - கர்வமில்லாத மனத்தையுடைய ராமலக்ஷ்மணர்கள், அவ்வழி - அங்குள்ள ஆச்சிரமத்தில் (சென்று), அருக்

கன் அன்ன முனிவனை - சூரியனையொத்து விளங்குகின்ற அம்முனிவனை, சேவடி தாழ்தலும் - சிவந்ததிருவடிகளில்வீழ்ந்து வணங்கியவளவில்,—; (அம்முனிவன்), ஈண்டு இருக்க என்று-'இவ்விடத்தில் தங்குவீர்களாக'என்று, இனியன கூறினன்-இனியஉபசாரவார்த்தைகளைச் சொன்னன்; (சொல்ல), மைந்தரும் - அவ்வீரர்களும், மரு கொள் சோலையில் - (மிக்க) வாசனையைக் கொண்ட அச்சோலையில், வைகினர் - தங்கினர்கள்; (எ - று.)

அருக்கன்-பேரொளியிலும். அஞ்ஞானமனவிருளகற்றுதலிலும்உவமை.()

உகூ.—சுதீக்ணனது முகமன்.

வைகும் வைகலின் மாதவன் [1]மைந்தர்பாற்
செய்கை [2]யாவையுஞ் செய்திவட் செல்வநீ
யெய்த யான்செய்த தெத்தவ மென்றன
னீய னும்மவற் கன்பினன் கூறுவான்.

(இ - ள்.) வைகும் வைகலின் - (அங்ஙனந்) தங்கியிருக்கும்பொழுது, மாதவன் - அம்முனிவன், மைந்தர்பால்-ஸ்ரீராமலக்ஷ்மணரிடத்தில், செய்கை யாவையும்-செய்யவேண்டிய உபசாரங்களெல்லாவற்றையும், செய்து—, 'செல்வ - செல்வமுடையோனே! நீ—, இவண் எய்த - இவ்விடத்தில் எழுந்தருளும்படி, யான் செய்தது—, எ தவம் - எத்தன்மைய தவமோ?' என்றனன்-என்று சொன்னன்; (அப்பொழுது), ஐயனும் - ஸ்ரீராமனும், அவற்கு - அம்முனிவனுக்கு, அன்பினன்-அன்பையுடையவனாகி, கூறுவான்—;(எ - று.)— அது மேற் கூறுகின்றார்.

செல்வன் - அரசச்செல்வத்துக்குரியவன்: இம்மை மறுமை வீடுகளில் அடையும் பாக்கியங்களைத் தன்அடியார்க்குத் தருபவன். பி-ம்:—[1]மைந்தன். [2]யாவதும். (கசசு)

உ0.—இராமபிரான் எதிராக அம்முனிவனைப் போற்றுதல்.

சொன்ன நான்முகன் றன்வழித் தோன்றினர்
முன்னை யோரு ளுயர்தவ முற்றினு
ருன்னின் யாருள ருன்னரு ளெய்திய
வென்னின் யாருள [1]ரிப்புவி மீதென்றான்.

(இ - ள்.) இ புவிமீது - இந்தப்பூமியின்மேல், 'சொன்ன - சிறப்பாகச் சொல்லப்படுகின்ற, நான்முகன்தன் - பிரமதேவனது, வழி - வம்சத்தில், தோன்றினர் - பிறந்தவர்களாகிய, முன்னையோருள் - முதன்மையான முனிவர்களுக்குள், உயர் தவம் முற்றினர்-சிறந்த தவத்தை முற்றச்செய்தவர்கள், உன்னின் - உன்னைப்போல, யார்உளர் - வேறு எவரிருக்கின்றனர்? உன் அருள்-உன்னுடைய கிருபையை, எய்திய - அடைந்த, என்னின்-எஞ்ஞான் போல, (மேம்பட்டவர்), யார்உளர் - வேறுஎவரிருக்கின்றனர்?' என்றான்—.

பிராமணரென்பதன் பொருள்பற்றி, 'நான்முகன்வழித் தோன்றினர்' என்றான். ஒப்புயர்வில்லாத தவமுடைய உனது கருணையைப் பெற்றே னாதலால், என்னினும் பேறுபெற்றவர் எவரு மில்லை யென்பதாம். உன் னின் - ஆலோசித்தா லென்றுமாம். பி - மீ:—[1]இற்பிறந்தார். (கசஎ)

ஈக.—முனிவன் தன்தவத்தைக் கையுறையாக ஏந்துமாறு இராமனை வேண்டுதல்.

உவமை நீங்கிய தோன்ற லுரைக்கெதிர்
நவமை [1]நீங்கிய நற்றவன் சொல்லுவா
னவமி லாவிருந் [2]தாகிபென் னுலமை
தவமெ லாங் [3]கொள்க தக்கிணை யாவென்றான்.

(இ - ள்.) நவமை நீங்கிய நல் தவன் - புதுமையில்லாத [பழைய] சிறந்த தவத்தையுடையவனான அம்முனிவன், உவமை நீங்கிய தோன்றல் - ஒப்பில்லாத ஸ்ரீராமனது, உரைக்கு - வார்த்தைக்கு, எதிர் சொல்லுவான் - உத்தரஞ் சொல்லுபவனாய், '(நீ), அவம் இலா விருந்து ஆகி - வீண்போகாத விருந்தினனாகி, என்னுல் அமை தவம் எலாம் - என்னாற் செய்யப்பட்ட தவங்களையெல்லாம், தக்கிணை ஆ - தக்ஷிணையாக, கொள்க - பெற்றுக் கொள்வாயாக', என்றான்—; (எ - று.)

தனதுநற்செயலேப்பகவானுக்கு அர்ப்பணஞ்செய்தல் பெரியோர்களின் தன்மையா மென்று அறிக. இங்ஙனம் தான்செய்தநற்செயலேப் பகவானுக்கு அர்ப்பணஞ்செய்தல், ஸாத்விகத்யாகமெனப்படும். நவமை - வடசொல்லடி யாகவந்த பண்புப்பெயர். அவமிலா விருந்து - தக்க விருந்து. தருதி-ஞான வொழுக்கங்களான் உயர்தல். தக்கிணை = தக்ஷிணை: காணிக்கை; வடசொற்றி ரிபு. பி - மீ:—[1]தோன்றிய. [2]ஆக. [3]கொளத்தக்கனையால். (கசஅ)

ஈஉ.—இராமபிரான் அகஸ்தியாச்சிரமஞ் செல்லவேண்டுமெனல்.

மறைவ லானெதிர் வள்ளலுங் கூறுவா
னிறைவ நின்னரு ளெத்தவத் திற்கெளி
தறைவ தீண்[1]டுண் டகத்தியற் காண்பதோர்
குறைகி டந்த தினியெனக் கூறினான்.

(இ - ள்.) வள்ளலும் - ஸ்ரீராமனும், மறை வலான்-அம்முனிவனுக்கு, எதிர் கூறுவான் - உத்தரஞ் சொல்லுபவனாய், 'இறைவ - தலைவனே! நின் அருள் - உன் கருணை, எ தவத்திற்கு - எப்படிப்பட்ட (உயர்ந்த) தவத்திற்கு, எளிது-தாழ்ந்தது?' (என்றுசொல்லி,அத்தவத்தைஏற்றுக்கொண்டபின்பு),— 'ஈண்டு - இப்பொழுது, அறைவது - சொல்லவேண்டுவது, உண்டு - (ஒரு பொருள்) உண்டு; (அது என்னவென்றால்), இனி—, அகத்தியன் காண்பது-. அகஸ்தியமுனிவனைக் காணவேண்டுவதாகிய, ஓர் குறை - ஒரு குறைவு, டெர்தது - (என்மனத்தில்) உள்ளது,' என - என்று, கூறினான்—; (எ - று.)

நின்னருள் எத்தவத்திற்குளளிது - நினதருளே எல்லாத்தவத்திற்கும் உயர்ந்த தென்பதாம். முனிவர்த்தலைவனுதலால், 'இறைவ' என்றான். குறை-செய்யவேண்டிய காரியம்: இன்றியமையாத செயலுமாம். பி - ம்:—[1]ஒன்று.

கூக.—இதுவும் அடுத்த கவியும் - முனிவன் அவ்வேண்டுகையை உடன்பட்டுக் கூறுதலைத் தெரிவிக்கும்.

நல்ல தேநினைந் தாயது நானுமுன்
சொல்லு வான்றுணி கின்றது தோன்றலீ
[1]செல்க வாண்டவற் சேருதி சேர்ந்தபி
னில்லை நின்வயி [2]னெய்தலில் லாதவே.

இதுமுதல்மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (பின்னும் சுதீட்சணமுனிவன் கூறுவான்):—தோன்றல் - தலைவனே! நீ—, நல்லதே நினைந்தாய்-நல்லகாரியத்தையே ஆலோசித்தாய்; அது - அக்காரியம், நானும்—, முன் - முன்னமே, சொல்லுவான் துணி கின்றது - சொல்லும்படி நிச்சயித்தது; ஆண்டு செல்க அவன் சேருதி - அவ்விடத்திற் சென்று அம்முனிவனைச் சேர்வாயாக; சேர்ந்த பின்—, நின்வயின்-உன்னிடத்தில், எய்தல் இல்லாத-அடையாத பேறுகள், இல்லை - ஒன்றுமில்லை; (எ - று.)

உனக்குச் சகலபாக்கியங்களும் உண்டாகு மென்பதாம். முன் துணி கின்றது - இயல்பிலுல்வந்த காலவழுவமைதி. செல்கவென்னும் முற்றே சென்றுஎனப் பொருள்தந்தது; முற்றெச்சம். பி-ம்:—[1]செல்லுகாண்டு, செல்தியாண்டு. [2]எய்தகில்லாதவே. (கடுo)

கூச. அன்றி யுன்நின் வரவினை யாதரித்
தின்று காறுநின் றேமுறு மாலவற்
சென்று [1]சேருதி சேருதல் செவ்வியோய்
நன்று தேவர்க்கும் யாவர்க்கு [2]நன்றெனை.

(இ - ள்.) அன்றியும்-அதுவல்லாமலும், (அம்முனிவன்),நின் வரவினை-உனது வருகையை, ஆதரித்து - விரும்பி, இன்று காறும் - இந்நாள்வரையிலும், நின்று - (எதிர்பார்த்து) நின்று, ஏமுறும் - (நீ இப்போது சென்று சேர்தலால்) களிப்புறுவன்; ஆல் - ஆகையால், செவ்வியோய் - எல்லா நன்மைகளையுமுடையோனே! அவன் - அம்முனிவனை, சென்று சேருதி - போய்ச்சேர்வாயாக; சேருதல்—, தேவர்க்கும் - தேவர்களுக்கும், நன்று - நல்லது; யாவர்க்கும் - மற்றையெல்லோருக்கும், நன்று-நல்லது, எனை-என்று சொல்லி,—(எ - று.)—கூறி (நடி) என்க.

அங்குச்சென்றுசேர்ந்து அநேகம் அஸ்திரசஸ்திரங்களை அம்முனிவன் பாற் பெற்று அவற்றைக்கொண்டு மேல் ராவணதிராக்ஷஸவதஞ் செய்து, அரக்கர்களால் அனேகதுலகங்களுக்கும்உண்டாயிருந்த அருந்துயரை யொழித்

தருளுவதனை இம்முனிவன் தன்ஞானத்தால் அறிந்தன ஞதலால், 'தேவர்க்கும் யாவர்க்கும் நன்று' என்றார். தேவர்களதுபிரார்த்தனையால், திருவவதரித்தமைபற்றி, தேவரை முன்னர்க் கூறினர். பி-ம்:—[1]சேருதல்செய்குதி, சேருதல்சேருதி. [2]நன்றரோ. (கஙிக)

கூடு.—இராமன்முதலியோர் அகஸ்தி[1]பழனிவனுச்சிரமத்துக்குச் செல்லுதல்.

வழியுங் கூறி [1]வரம்பக லாசிகண்
மொழியு மாதவன் மொய்ம்மலர்த் தாடொழாப்
பிழியுந் தேனிற் பிறங்கரு வித்திரள்
பொழியுஞ் [2]சோலை விரைவினிற் போயினர்.

(இ - ள்.) வழியும் கூறி - (அவ்வாச்சிரமத்துக்குப் போகும்) வழியையுஞ் சொல்லி, வரம்பு அகல் ஆசிகள் - அளவில்லாத ஆசீர்வாதங்களையும், மொழியும் - சொல்லுகின்ற, மா தவன்-அம்முனிவனது, மொய் மலர் தாள்-(வண்டுகள்) மொய்க்கின்ற தாமரைமலர்போலுந் திருவடிகளை, தொழா - (ராமலக்ஷ்மணர்கள்) வணங்கி,—(பின்பு), பிழியும்-வடிகின்ற, தேனின் - தேனினது, பிறங்கு - விளங்குகின்ற, அருவி திரள்-அருவித்தொகுதியை, பொழியும் - சொரிகின்ற, சோலை - (அகத்தியன் எழுந்தருளியிருக்கின்ற) சோலைக்கு, விரைவினின் - சீக்கிரமாக, போயினர்—; (எ - று)—பி-ம்:—[1]வரம்பிலது. [2]சாரல். (கஙிஉ)

வே று.

கூசு.—அகத்தியமுனிவன் இராமலட்சுமணர்களை எதிர்கொள்ளுதல்.

ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தா
னீண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர தன்சரண் வழங்கவெதிர் வந்தா
னீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான்.

(இ - ள்.) நீண்ட தமிழால் - பெரியதிராவிடபாஷையால், உலகை - உலகமுழுவதையும், நேமியின்-சக்கரபாணியாகிய திருமாலைப்போல, அளந்தான் - அளந்த அகத்தியமுனிவன்,—ஆண் தகையர் - ஆண்மைக்குணமுள்ள அவ்விராமலக்ஷ்மணர்கள், அவ்வயின்-அவ்விடத்தில் [அப்பொழுது], அடைந்தமை - சேர்ந்ததனை, அறிந்தான் - அறிந்தவனுகி,—ஈண்டு உவகை வேலை - மேன்மேலெழுகின்ற மகிழ்ச்சியாகிய கடல், துணை ஏழ் உலகம் - ஈரேழு [பதினான்கு] லோகங்களையும், எய்த - அடையும்படி,—மாண்ட வர தன் - மாட்சிமைப்பட்ட வரங்களைத் கொடுத்தருளுகின்ற ஸ்ரீராமனை, சரண் வழங்க - (ராவணநிராகரணவதத்திற்காகச்) சரணமடைய, எதிர் வந்தான் - எதிரில் வந்தான்; (எ - று.)

தகை - தகுதி; சற்குணம்: இது தொழிலடியாப் பிறந்ததாயினும் பொருளாற் பண்புப்பெயர். அவ்வயின்-இரட்டுறமொழிதல். இராமபிரானை அகத்தியனெதிர்கொள்வது இராவணனியின் சங்காரத்துக்குப் பரம்பரை

யாகக் காரணமாவதனால், பதினொன்குலகமும் உவகையெய்துவதாயின: இனி, 'உவகைவேலை தூணியேழுலகமெய்த'என்றது, ஆநந்தம் அளவில்லாது அதிசயிக்க வென்றபடி. 'வரதன் சரண்வழங்க' என்பதற்கு - ஸ்ரீராமன் தன் பாதங்களில்விழுந்து வணங்கும்படி யென்றுமாம்.

த்ரவிடமென்பது, தமிழெனத்திரிந்தது; தனிமைப்பொருள்குறித்த தமியென்னும் வினையடியாப்பிறந்து வினைமுதற்பொருண்மையுணர்த்திய விகுதி குன்றித் தனக்கு இணையில்லாப்பாஷையெனப் பொருள்பயப்ப தென்பாரும், செவிக்கினிமைபயத்தலான் மதுரமென்னும் பொருட்பே றுடைத்தாகித் தமிழெனவழங்கிய தென்பாரும் உளர். பரமசிவன் தானே அகத்தியற்குஅருளிய தாதலாலும், சிறந்த தொண்டர் பலர் கடவுளைத் துதித்ததெல்லாம் இப்பாஷையினுலே யாதலாலும், வடமொழியோடொப் புமை இப்பாஷைக்கேயன்றிப் பிறபாஷைகளுக்கு இன்மையானும், 'மீண்ட தமிழ்' எனப்பட்டது. பரமசிவனுலே இலக்கணமுபதேசிக்கப்பெற்றுத் தமி ழைத் தென்றிசைக்கண்ணே விருத்திசெய்தனுல். அகஸ்தியனை 'தமிழா லுலகை யளந்தான்' என்றுன். தமிழால் உலகை அளத்தல்-தமிழ்ப்பாஷை யை உலகமுழுவதும் பரவச்செய்தல்.நேமி-ஆகுபெயர்; இன்-உவமப்பொருவு. திருமாலுவமை - உலகமளத்தற்கு.

இதுமுதல் இருபத்துநான்கு கவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளங்காய்ச்சீர்களுமாகிய அளவடிநான்குகொ ண்ட கலிவிருத்தங்கள். (கடுஉ)

கூஎ.—இதுமுதல் ஐந்துகவிகள் - அகஸ்தியனினுவனது சிறப்பைத் தெரிவிக்கும்.

பண்டவுணர் மூழ்கினர் படார்களென வாலே
ரெண்டவ வெமக்கருள் கெனக்குறை [1]யிரந்தார்
கண்டொருகை வாரினன்[2]மு கந்துகட லெல்லா
முண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலு முமிழ்ந்தான்.

பத்துக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அவ்வகஸ்தியன்),—வாலேர்-தேவர்கள், பண்டு-முன்னொரு காலத்தில், 'அவுணர்-அசுரர்கள், மூழ்கினர்-(கடலில்) அமிழ்ந்து மறைந்தார் கள்; (ஆகையால்), படார்கள்-அழியமாட்டார்கள்,' என - என்று எண்ணி, 'எண் தவ-(யாவராலும்) மதிக்கப்படுகின்ற தவமுடையானே! எமக்கு - எங் களுக்கு, அருள்க-அருள்செய்வாயாக', என-என்று, குறைஇரந்தார் - (தமது) குறையை (ச்சொல்லி) இரந்தவர்களாக,—கண்டு - (அவர்களைப்) பார்த்து, (இரங்கி), கடல் எல்லாம்-சமுத்திர முழுவதனையும், ஒரு கை - (தனது) ஒருகையில், வாரினன் முகந்து - வாரிமொண்டெடுத்து, உண்டு - குடித்து, பின் - பின்பு, 'அவர்கள் - அத்தேவர்கள், உமிழ்க - உமிழ்ந்தருளுவாயாக,' என்றலும் - என்று பிரார்த்தித்தவளவில், உமிழ்ந்தான் - (மீண்டும்) உமிழ்ந்தவன்; (எ - று.)

இந்திரன் முதலிய தேவர்கள் தம்பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும்பலஅசுரர்களுடனே கடலில் ஒளித்துக்கொண்டபோது அகத்தியமகாமுனிவனே வந்து பிரார்த்திக்க, அம்முனிவன் அக்கடலினீரைத் தனதுஒருகையால் முற்றும்முகந்து பருகியருளி, உடனே ஒளித்திருந்த அவ்வசுரனே இந்திரன் கொன்றபின், அவன் வேண்டுகோளின்படி மீண்டும் உமிழ்ந்தனனென்க. **பி - மீ:**—[1]இரந்தார்க் கண்டு, இரப்பக்கண்டு. [2]முகந்த. (கடிசை)

கூ.அ. தூயகட னீரடிசி லுண்டது துரந்தா
ஞய[1]வ தலாலமரு மெய்யுடைய வன்ஞன்
மாயவினை வாளவுணன் [2]வாதவிதன் வன்மைக்
காயமினி துண்டுலகி ஞரிடர் களைந்தான்.

(இ - ள்.) அமரும் - குறுகிக் கிடக்கின்ற, மெய் உடைய - திருமேனியையுடைய, அன்ஞன் - அம்முனிவன்,—தூய - பரிசுத்தமாகிய, கடல் நீர் - கடலின் நீரை, அடிசில் உண்டு - உணவாகப் பருகி, அது துரந்தான் - அகனே மீண்டும் உமிழ்ந்தவன்; ஆய அது அலால்-(அங்ஙனஞ்) செய்த அந்தக் காரியமாத்திரமே யன்றி, மாயம் வினை - வஞ்சகச் செய்கையையுடைய, வாள் அவுணன் - வாள்போலுங் கொடியஅசுரனாகிய, வாதவிதன் - வாதாபி யென்பவனது, வன்மை காயம் - வலிமையாகியஉடலை, இனிது உண்டு - (தான்) இனிமையாகப்புசித்து, உலகின்-உலகத்தவரது, அருஇடர்-(போக்குதற்கு) அரிய துன்பத்தை, களைந்தான்-போக்கியருளினனன்; (எ - று.)

கீழிற்கவியிற் கூறிய கதையை மீண்டும் ஈண்டுச் சுருக்கிக்கூறியது, அவன்பெருமையை நன்குவிளக்குதற்கு. உண்டலென்பது-உண்பனதின்பனவெனப் பிரித்துக் கூறும்வழிச் சிறப்புவினையும், பசிப்பிணி தீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப்படு மாதலிற் பொதுவினையுமா மாதலால், 'நீரடிசிலுண்டு' என்றார். குறுமுனி யென்பதன் பொருள் விளங்க, 'அமரு மெய்யுடைய வன்ஞன்' எனப்பட்டது. வாதவி=வாதாபி. **பி - மீ:**—[1]அதனால். [2]மாயவன்.

வாதவிதன்காயமினிதுண்ட வரலாறு:—சகோதரர்களாகிய இல்வலன் வாதாபி என்னும் அசுரரிருவர் இருந்தனர்; அவர்களுள் மூத்தவனாகிய இல்வலன் நாள்தோறும் பார்ப்பனவடிவம்பூண்டு சிராத்தமென்று ஒருவ்யாஜம் வைத்துப் பிராமணர்களை வரவழைத்து ஆட்டின்வடிவங்கொண்ட இளையவனாகிய வாதாபியைக் கொன்று அவனுடையஇறைச்சியை அம்முனிவர்களுக்கு விருந்திட்டு அவர்கள்உண்டபின்பு 'வாதாபி! வெளியே வா' என்று உரக்கக் கூப்பிட் டழைக்க, அவன் இறந்தவர்களை யெழுப்பும் மிருதசஞ்சீவி யென்னும் மந்திரத்தினது வல்லமையால் அம்முனிவர்களது வயிற்றைக் கிழித்துக்கொண்டு உயிரோடு வெளியில்வர, பின்பு இருவரும் இறந்த அம்முனிவர்களது ஊனைத் தின்று ஜீவித்து வந்தனர்: இங்ஙனம் அவர்களால் அநேகம் முனிவர்கள் அழிக்கப்பட்டவளவில், முனிவரெல்லாம் அகஸ்திய மஹர்ஷியைச் சரணமடைய,அவ்விருடி தான் ஒருநாள் அங்ஙனமே சென்று வாதாபியினிறைச்சியை உண்டவுடனே இல்வலன் வழக்கப்படி அழைக்கும்

போது 'வாதாபீ! ஜீர்ணமடைவாயாக' என்று சொல்லித் தன்தவவலிமையால் அவனை அழிக்க, பின்னர் அதுநோக்கி, அளவிறந்த கோபங்கொண்டு தன் மேலெதிர்த்துவந்த இல்வலனையும் தன்கண்களால் தீப்புறப்படச் சினந்து விழித்து நோக்கி அழித்தருளின னென்பதாம். (கநிஞ)

நஉ. யோகமுறு பேருயிர்க டாமுலைவு ரு¹ம
²லேகுநெறி யாதென மிதித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் ³விந்தமெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்ரு ன்.

(இ - ள்.) (மற்றும் அம்முனிவன்),—யோகம் உறு பெரு உயிர்கள் - யோகமார்க்கத்தில் நிலைநிற்கின்ற பெரிய முனிவர்கள், உலைவு உறுமல் - துன்பமடையாதபடி, ஏகும் நெறி - (சூரியசந்திராதிகிரகங்களும் நக்ஷத்திரங்களுஞ்) செல்லுகின்ற வழி, யாது என - எதுவென்றுசொல்லி(த் தம்மை)ப் பிரார்த்திக்க, அடியின் மிதித்து ஏறி-கால்களால் மிதித்துமேலேஏறி, மேகம் நெடு மாலை தவழ் - பெரிய மேகங்களின் வரிசை தவழ்கின்ற, விந்தம்எனும் - விந்தியமென்கிற, விண் தோய் நாகம்அது - ஆகாயத்தை அளாவிவளர்ந்த மலையானது, நாகம் உற - பாதாளத்தை யடைந்து அழுந்தும்படி, நாகம் என - யானைபோல, நின்ரு ன் - (கம்பீரமான தோற்றத்தோடு) நின்றான்; (எ - று.)

நாகம்-மலையால்; அது மலையும் பாம்பும் யானையுமாதல். "நாகம்விண் குடங்கு புன்னை நற்றாக மலை பாம்பி யானை" என்பதனு லறிக. 'நாக முற' என்றதில், நாகம்-அளவைவகுக்கின்ற லோகத்திற்கு ஆகுபெயர். வாள்கா மடி - சோழிய சிவருடிலையணி. நம்-அசை. பி ரீ:—¹மதி. ²ஏ. ³விந்தை.

அகஸ்தியர் விந்தமலை நாகாமடைய நின்ற கதை:—முன் ஒருகாலத் தில் விந்தமலை மேருமுதலிய எல்லாமலைகளினும் தான் உயர்ந்திருக்கவேண்டு மென்று சூரியன் முதலான கிரகங்களை ஆகாயமார்க்கமாகவும் நக்ஷத்திரங்களை வடக்கு நோக்கியும் செல்லுகின்ற வழிமையல்லாம் மாறுபடுத்திவிட்டது, தேவர் முனிவர் முதலியோரையெல்லாம் அஞ்சிவிடுவித்து தான் மாத்திரம் அவர்களுக்கு அஞ்சாதிருக்கின்ற தன்னைக் கண்டு வணங்கிநின்ற அம்மலையை 'இனி யான் உன்னை வளர்ந்து தென் திசைக்குச் சென்று மீண்டுவருமளவும் இவ்வாறே முடிவுபடாதிரு' என்று சொல்லி அடக்கியருளி, அம்மலையின்மேலேறி அப்பாற் சென்றன னென் பதாம். (கநிசு)

சஅ. மூசரவு சூடுமுத லோ¹னுரையின் மூவா
மாதி²றவ மேகென ³வடாதுதிசை மேலு
⁴ணீசமுறு ⁵வானிலொரு மா⁶மலய மேரு
வீசனிக ராயுகமு நீடுபொரு விருந்தான்.

(இ - ள்.) (அன்றியும் அம்முனிவன்),—மேல் நாள் - முன் ஒருகாலத் தில், வடாது திசை-வடக்குத்திக்கானது, நீசம் உற - தாழ்வையடைய,—

(அதுநோக்கி), மூசு அரவு சூடு முதலோன்-நெருங்கிய சர்ப்பங்களை (ஆபரண மாக)த் தரித்த சிவன், 'மூவா - மூப்படையாத [மேன்மேல் வளர்கின்ற], மாசு இல் தவ - குற்றமில்லாத தவத்தையுடையவனே! ஏகு - (தென்றிசைக் கண்) செல்வாய்,' என - என்று கட்டளையிட,— உரையின் - அவ்வார்த்தை யின்படி, வானின் நெடு - ஆகாயத்தையளாவி யுயர்ந்த, மா மலயம் - பெரிய பொதியமலையை, நேரா - சேர்ந்து, ஈசன் நிகர் ஆய்-பரமசிவனுக்கு ஒப்பாய், உலகு சீர் பெற - உலகமுழுவதுஞ் சமநிலையை யடையும்படி, இருந்தான் - (அங்குத்) தங்கியிருந்தவன்; (எ - று.)

முன்னொருகாலத்தில், பரமசிவன் முதலிய தேவர்யாவரும் கூடி 'யாம் சேர இருத்தலால் வடதிசைதாழ்ந்து தென்திசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனேரே தெற்கில் இருத்தற்கு உரியர்' என்று அவனை வேண்டிக்கொள்ள, அவனும் தென்திசைக்கட் போந்து, இருதிசையும்ஒப்ப நிலைபரம் பெற்று நடுவுநிலைமை யடையும்படி பொதியிலின்கண் இருந்தருளின னென்பதாம். மும்மூர்த்திகளுள் ஒருமூர்த்தி யாதலால் சிவனை 'முதலோன்' என்றும், கைலாசத்தின்கட் பரமசிவனொடொப்பப் பொதியிலின்கண் அகத்தியன்வீற்றிருந்ததனால் 'ஈசனிகராய்' என்றுங் கூறினர். இனி, 'வடாதுதிசைசமுற' என்பதற்கு-வடதிசை தாழ்வடைந்து தென்திசை சிறப்புறும்படி யென்று உரைத்து, இருந்தானென்பதோடு கூட்டவுமாம். **பி-ம்:**—[1]உறையும், [2]தவனேவலில், [3]வடாதுலகம், [4]பீசை, [5]நேமிநெடு, [6]மலையைமேவி. (கநிஎ)

சக. உழக்குமறை நாலினு [1]முயர்ந்துலக மோதும்
வழுக்கினு [2]மதிக்கவியி னும்[3]மரபி னுடி.
நிழற்[4]பொலி கணிச்சிமணி நெற்றி[5]யுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

(இ - ள்.) (மேலும் அம்முனிவன்),—நிழல் பொலி - ஒளி விளங்குகின்ற, கணிச்சி - மழுவாயுதத்தையும், மணி நெற்றி - அழகிய நெற்றியிலே, (தழல்) உமிழ் - நெருப்பை வெளிப்படுத்துகின்ற, செம் கண் - சிவந்த கண்ணையுமுடைய, தழல் புரை - நெருப்பை ஒக்கின்ற, சுடர் - தேஜோரூபியாகிய, கடவுள் - பரமசிவன், தந்த - உபதேசித்தருளிய, தமிழ் - தமிழிலக்கணங்களை, உழக்கும் மறை நாலினும் - வருந்திப் பழகுகின்ற நான்கு வேதங்களினும், உயர்ந்து - மேம்பட்டு, உலகம் ஓதும் வழக்கினும் - நல்லாசிரியர்கூறுகின்ற வழக்கைக்கொண்டும், கலியினும் - செய்யுள்வழக்கைக் கொண்டும், மதி - (தனது) அறிவால், மரபின் - முறைப்பட, நாடி - (நன்றாக) ஆராய்ந்து, தந்தான் - (தென்னாட்டவர்க்குத்) தந்தருளியவன்; (எ - று.)

சிறந்த தொண்டர்களெல்லாம் கடவுளைத் துதித்த தமிழ்வேதங்கள் ஸ்திரீசூத்திரர்க்கும் உரியனவாகி யாவர்க்கும் அறிதற்கெளியனவாய் வடமொழிவேதத்தினுஞ் சிறப்புறுதலால், 'உழக்குமறைநாலினுமுயர்ந்து' என்றார். **பி - ம்:**—[1]உணர்ந்து. [2]மதிக்கவினினும், மதிக்கவையினும். [3]பரி

வின். [4]பொழி. [5]உரு. மரபின் நாடுதல் - அவ்விலக்கணங்களெல்லாஞ் சில்வாழ்நாட்பல்பிணிச் சிற்றறிவினோர்க்கு அறியலாகுமாறு அமைத்தல்.

தழற்புரைகடவுள்தந்த தமிழ் தந்தான்என்பதிலடங்கியகதை:--பூர்வத்தில் மகாமுனிவர்களெல்லாம் சேர்ந்து ஸம்ஸ்கிருதபாஷையை அபிவிருத்தி செய்து காசியில் வடமொழிச்சங்கமொன்று ஏற்படுத்த, அச்சங்கப்புலவருள் ஒருவனுகிய அகத்தியன், மற்றைப் புலவர்களோடு பலகாலுந் தருக்கஞ் செய்துகொண்டுவந்து ஒருநாள் அவர்களோடு மாறுகொண்டு, அவர்களிறு மாப்பை அடக்கும் பொருட்டுச் சிவபெருமானிடஞ் சென்று தன்கருத்தை வெளியிட்டுச் சற்றுநேரம் பேசிக்கொண்டிருக்கையில், தான் நின்ற மண்டப முழுவதுந் திவ்வியபரிமள மொன்றுவீச, அகத்தியன் பரமசிவனை நோக்கி 'சுவாமீ! இவ்வாசனை ஏது?' என்று வினவ, பரமசிவன் அவனை அம்மண்டபத்தின் ஓர் மூலைக்கு அழைத்துக்கொண்டுபோய், குகியலாய்ப் போகட்டிருந்த சிலஏட்டுப்பிரதிகளைக் காட்டவே, அவற்றைக் கண்டமாத்திரத்தில் மதுரமென்று அருத்தங்கொள்ளும் 'தமிழ்' என்னும் இன்பமான பெயரைச் சொல்ல, உடனே பரமசிவன் அப்பாஷைக்கு ஆதாரவிதிகள் இவ்வேட்டுப் பிரதிகளிலுள்ளனவென்று எடுத்துக்கொடுத்து உபதேசிக்க, தக்ஷணமே தக்ஷிணத்திலுள்ள பொதியமலைக்குப் போய்த் தனிவாசஞ்செய்து அவ்விதிகளைக்கொண்டு, பேரகத்தியம், சிற்றகத்திய மென்னும் இலக்கணநூல்களை இயற்றி, அவற்றைத் தம் மாணாக்கராகிய தொல்காப்பியன் முதலிய பன்னிருவர்க்குங் கற்பித்தருளித் தமிழ்ப்பாஷையைத் தழைத்தோங்கச் செய்தானென்பது. (கருஅ)

கூஉ.—இதுமுதல்நான்குகவிகள் - அகத்தியன் இராமபிரான்வருவதற்கு மகிழ்தல்.

விண்ணினி னிலத்தினில் விகற்ப வுலகிற்பே
ரெண்ணினி லிருக்கினி லிருக்குமென யாரு
முண்ணினை [1]கருத்தினை யுறப்பெறுவெ னுலென்
கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான்.

(இ - ன்.) (அப்படிப்பட்டஅகத்தியன்),—'விண்ணினில் - தேவலோகத்திலும், நிலத்தினில் - பூலோகத்திலும், விகற்பம் உலகில் - மற்றும் பல உலகங்களிலும், பேர் எண்ணினில் - (அவ்வுலகங்களிலுள்ளவர்களுடைய) பெரிய உள்ளத்திலும், இருக்கினில் - வேதங்களிலும், இருக்கும் - (எப்பொழுதும்) உள்ளதாகும், என - என்று, யாரும் - யாவரும், உள் நினை - உள்ளத்திலே நினைக்கின்ற, கருத்தினை-கருதப்படும் பொருளை [ஸ்ரீராமனை], என் கண்ணினில் - எனது கண்களால், உற பெறுவென் - இன்று பார்க்கப்பெறுவேன்,' என கொடு - என்றுஎண்ணி, களிப்புஉறும் - ஆநந்தமடைகின்ற, மனத்தான் - மனத்தையுடையவனுனன்; (எ - று.)

'விகற்ப வுலகு' என்றது, அதலம் முதலியவற்றை. எல்லாப்பொருள்களுள்ளும் அந்தர்யாமியா யிருத்தலாலும், அன்பால் நினைவாரது உள்ளக்

கமலத்தின்கண் அவர்கினைந்த வடிவோடு விரைந்துசென்று வீற்றிருத்தலா லும், சகலவேதப்பிரதிபாத்தியமான வஸ்துவாதலாலும், இவ்வாறு கூறினர். பி - மீ:—[1]கருத்தனே. (கஞ்சு)

சஉ. இரைத்தமறை நான்கினெ டியைந்தபிற யாவு
நிரைத்த[1]நெடு ஞானநிமிர் [3]கல்லினெடு நாளிட்
[3]டரைத்து[4]மய னுலு[5]மறி யாத[6]பொரு ணேர்நின்
[7]றுரைக்குதவு மாலெனு முணர்ச்சியி னுவப்பான்.

(இ - ள்.) (அன்றியும் அகத்திபன்), 'இரைத்த - உச்சாரணஞ்செய்கின்ற, மறை நான்கினெடு - நான்குவேதங்களையும், இயைந்த - (அவற்றோடு) பொருந்திய, பிற யாவும் - மற்றையெல்லாநூல்களையும், நிரைத்த - முறையே பயின்றதனு லுண்டான, நெடு ஞானம் - சிறந்த அறிவாகிய, நிமிர் கல்லில் - உயர்ந்த அம்மியில், இட்டு - வைத்து, நெடு நாள் - பலநாள், அரைத்தும்—[ஆராய்ந்தும்], அயனுலும் - பிரமதேவனுலும், அறியாத - அறியப்படாத, பொருள் - பரம்பொருள் [ஸ்ரீராமன்], (இன்று), நேர் நின்று - எதிரில் நின்று, உரைக்க - பேசும்படி, உதவும் - அருள்செய்வான்', எனும் - என்கின்ற, உணர்ச்சியின் - அறிவால், உவப்பான் - மகிழ்பவனுனன்; (எ - று.)

பிரமன் முதலிய தேவர்களுக்கும், வேதம் முதலிய நூல்களுக்கும்அறிய எட்டாத பொரு ளென்பதாம். 'இயைந்த பிறயாவும்' என்றது - அவ்வேதங்களின்பொருளே அறியக் கருவியாகிய மீமாம்சை, புராணம், நியாயம், தருமசாஸ்திரம் முதலியவற்றை. இனி, மறைமுதலிய நூல்களாகிய குழவியைக்கொண்டு தன்ஞானமாகிய கல்லில் அரைத்து மென்றுமாம். உரைக்குதவும் - தொருத்தல்; உரைக்கு உதவும் எனப்பிரித்து, உரையாடுவதற்கு உதவு மென்றுமாம். பி - மீ:—[1]நெறி. [2]கல்வி. [3]உரைத்தும். [4]அயனுரும். [5]உணராத. [6]பொருளோவின்று. [7]உரைத்துதவும். (கசு0)

சஎ. உய்ந்தன நிமைப்பில [1]ருயிர்த்தனர் தவத்தோ
ரந்தண [2]ரறத்தினெறி நின்றனர்க ளானு
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவ னெனத்தனி வலிப்பான்.

(இ - ள்.) (அவ்வகத்தியமுனிவன்),—'ஆனு - நீங்காத, வெம் திறல் - கொடிய வலிமையையுடைய, அரக்கர் - ராக்ஷசர்களாகிய, விடம்-நஞ்சினது, வேர் - வேரை, முதல் - அடியோடு, அறுப்பான்-அறுத்தற்கு, மருத்துவன் - வைத்தியன் [ஸ்ரீராமன்], வந்தனன்—; (ஆகையால்), இனி), இமைப்பு இலர் - தேவர்கள், உய்ந்தனர் - பிழைத்தார்கள்; தவத்தோர் - தூறவறத்தவரான முனிவர்கள், உயிர்த்தனர் - உயிர்பெற்றார்கள்; அந்தணர் - (இல்லறத்தவரான) பிராமணர்கள், அறத்தின் நெறி - தருமமார்க்கத்தில், நின்றனர்கள் - நின்றார்கள்,' என - என்று, தனி-ஒப்பில்லாமல் [நன்றாகவென்றபடி], வலிப்பான் - துணிபவனுனன்; (எ - று.)

உய்த்தனர் முதலிய இறந்தகாலவினைமுற்றுக்கள் - தெளிவு பற்றி வந்த காலவழுவமைதி. 'வேரறுப்பான்' என்றதற்குஏற்ப, விடம்-நச்சுமர மென்னலாம். மருத்துவன் - மருந்தின் தன்மை யறிந்து கொடுப்பவன். பி - மீ:—[1]உயிர்த்தனர். [2]மனத்துயரகன்றதெனநோலை, அறத்தினெறி நின்றனர்களாஞர். (கசுக)

சரு. ஏனையுயி [1]ராமுலவை யாவுமிடை வேவித்
தூனுக ரரக்க[2]ருரு மைச்சுடு சினத்தின்
[3]கானவ னலிக்கடி தவித்தல களிப்பான்
வானமழை வந்ததென முந்துறு மனத்தான்.

(இ - ள்.) (பின்னும் அம்முனிவன்),—'ஏனை உயிர் ஆம் உலவை யாவும் - மற்றைஉயிர்களாகிய மரங்கள் எல்லாவற்றையும், இடை வேவித்து-உள்ளவிடத்தில்தானே வேகச்செய்து, ஊன் நுகர் - (அவற்றின்) உடலைப் புசிக்கின்ற, அரக்கர் - ராக்ஷசர்களது, உருமை சுடு - இடியையுஞ் சுடுகின்ற, சினத்தின் - கோபமாகிய, கானம் அனலை-காட்டுத்தீயை, கடிது-விரைவாக, அவித்து - அழித்து, உலகு அளிப்பான் - உயிர்களைக் காப்பதற்கு, வானம் மழை - ஆகாயத்தே தோன்றுகின்ற மேகம் [ஸ்ரீராமன்], வந்தது—', என - என்று, முந்துறும் - (அவனைப் பார்த்தற்குத் தன்னினும் விரைந்து) முற்படு கின்ற, மனத்தான் - மனத்தையுடையவன்; (எ - று.)

அஃறிணைப்பொருளுள் தாவரத்தையும் எரித்துவிடச்செய்வது அரக்க ரின் சினமென்பான் 'உலவை யாவுமிடைவேவித்து உருமைச்சுடுசினத்தி னரக்கர்' என்றான். இனி உருமைச்சுடுகின்ற சினத்தோடு பொருந்திய அரக்கராகிய கானலியெனக் கூட்டவுமாம். உலவை-மரம். பிராணிகளைப் போல உயிருள்ளமை நன்கு புலப்படாமையால், 'ஏனையுயிராமுலவை' என் றார். பி-மீ:—[1]முதல. [2]வெருவ. [3]ஆன. (கசுஉ)

சசு.—அகத்தியழிவன் இராமனைக்கண்டு கண்களால் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்துநிற்றல்.

கண்டன னிராமனை வரக்கருணை கூரப்
புண்டரிக வாணயன நீர்பொழிய நின்ரு
ணெண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரி கொணர்ந்தான்.

(இ - ள்.) எண் திசையும் - எட்டுத்திக்குக்களும், ஏழ் உலகும் - ஏழுல கங்களும், எ உயிரும் - (அவற்றிலுள்ள) எல்லாவுயிர்களும், உய்ய - நற்கதி யடையும்படி, குண்டிகையினில் - (தனது) கமண்டலத்தில், பொருவு இல் - ஒப்பில்லாத, காவிரி - காவேரிநதியை, கொணர்ந்தான் - கொண்டுவந்த அம் முனிவன்,—இராமனை - ஸ்ரீராமனை, வர - எழுந்தருள, கண்டனன் - பார்த் தவனும்,—கருணை கூர - அன்புமிகுதலால், புண்டரிகம் வாள் நயனம் -

தாமரைமலர்போன்ற ஒளியினையுடைய கண்கள், நீர் பொழிய - ஆகந்தக் கண்ணீரைச் சொரியும்படி, நின்றான்—; (எ - று.)

நயநத்துக்குத் தாமரையை ஒப்பிட்டதற்குஏற்ப, அதனினின்றும் பெருகுகின்ற கண்ணீர்க்குத் தாமரையினின்றும் பெருகுகின்ற தேனை ஒப்பிடுக. ஏழுலகு - எழுவகைத்தீவையுடைய பூமியென்றல் ஏற்கும். காவிரி - வடசொல்விகாரம்; கவேரமென்னும் மலையினின்று உண்டானதென்றும், கவேரனென்னும் அரசனது மகளென்றும் பொருள்.

அகத்தியன்காவிரிநதிகொணர்ந்த வரலாறு:—அகத்தியன் தென்திசைக்கட் போகின்றபொழுது கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக் கமண்டலத்திற்கொண்டு குடகுமலைச்சாரலில் வைத்துவிட்டுச் சலகாரியத்திற்குச் செல்லாநிற்க, ஆங்கொரு காகம் வந்து அதனை உருட்டிவிட, அது வே பெருநதியாய்ப் பெருகிற் றென்பதாம். (கசுஉ)

சுஎ.—இராமன் வணங்க, அகத்தியன் முகமன்கூறுதல்.

நின்றவனை [1]வந்தெடி யோனடி பணிந்தா
னன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணு
னன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தா
னென்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்.

(சு) - ள்.) நின்றவனை - (அங்ஙனம்) எதிரில் வந்துநின்ற அகத்தியனை, வந்த நெடியோன் - (அங்கே) வந்த ஸ்ரீராமன், அடி பணிந்தான் - திருவடிகளில் விழுந்து வணங்கினனன்; அன்று - அப்பொழுது, என்றும் உள - எந்நாளும் உள்ளதாகிய, தென் தமிழ் - இனிய தமிழின் இலக்கணங்களை, இயம்பி - சொல்லி, இசை கொண்டான் - கீர்த்தியைப் பெற்றவனாகிய, அவனும் - அம்முனிவனும், அன்பொடு - அன்பினால், தழீஇ - தழுவிக்கொண்டு, அழுத கண்ணன் - (ஆநந்தக்கண்ணீர்விட்டு) அழுத கண்களையுடையவனாய், வரவு நன்று - '(உன்) வருகை நன்று பிருந்தது', என்று—, பல நல் உரை - அநேகம் நல்ல உபசார வார்த்தைகளை, பகர்ந்தான் - சொன்னான்; (எ - று.)

தேவர்களைக்காத்தற்குக் குறள்மாணியாய் முன் மாவலிபக்கல் மூவடி மண்வேண்டி உலகனைத்தும் ஈரடியாலொடுக்கித் திரிவிக்கிரமனாய்த் திருவவதரித்த திருமாலே இப்பொழுது சக்கரவர்த்தித்திருமகனாய்த் தோன்றினனென்பது விளங்க, 'வந்த நெடியோன்' என்றார்; இனி, திருக்கலியாணகுணகணங்களால் யாவரினும்உயர்ந்தோனென்றுமாம். தென் தமிழ்-தெற்குத்திக்கில் மிக்குவழங்குந் தமிழென்றுமாம். 'என்று முளதென்றமிழியம்பி யிசைகொண்டான்' என்றதனால், பாணினிபகவான் வடமொழிக்கு இலக்கணநூலுண்டாக்கியதுபோல அகத்தியன் தமிழிற்கு இலக்கணநூலுண்டாக்கினனே யன்றிப் பாஷையை உண்டாக்கினனில்லை யென்பது விளங்குகின்றது; அன்றியும், இந்நூலாசிரியர் வடமொழியில் வேதம் நித்தியமாக விரும்பினதைக் கொள்ளுங் கொள்கைக்குஒப்பத் தமிழ்வேதமாகியதிருவாய்

மொழி நித்தியமென்றுகொள்கின்ற கொள்கையின ராதலால், தமிழ்மொழியும் என்றுமுளதென்றார்: "ஆகஸ்த்யமும் அநாதி" என்றார், அழகியமணவாளப் பெருமாள்நாயனரும். பி - மீ:—[1]வந்து. (கசுச)

சஅ.—அந்தணர்கள் உபசரிக்க, அகத்தியன் இராமனைத் தனதுஆச்சிரமத்தினிற்துஅழைத்துக்கொண்டுசெல்லுதல்.

வேதியர்கள் [1]வேதமொழி வேறுபல கூறிக்
காதன்மிக நின்[2]றெழில் கமண்டலுவி னன்னீர்
மாதவர்கள் வீசிநெடு மாமலர்க டேவப்
போதுமண நாறுகுளிர் சோலைகொடு புக்கான்.

(இ - ள்.) மாதவர்கள் - மிக்க தவமுடையவர்களாகிய, வேதியர்கள் - அந்தணர்கள், காதல் மிக - அன்புமிகுதலால், நின்று - வந்து சூழ்ந்துநின்று, வேதம் மொழி வேறு பல - பலவேறுவகைப்பட்ட வேதவாக்கியங்களை, கூறி - சொல்லி, எழில் கமண்டலுவின் - (தமது) அழகிய கமண்டலங்களிலுள்ள, நல் நீர் - நல்ல நீரை, வீசி - தெளித்து, நெடு மா மலர்கள் - மிக்க அழகிய புஷ்பங்களை, தூவ - மேலேசிந்தாநிற்க,—(அகத்தியன் ஸ்ரீராமனை), போது மணம் நாறு - புஷ்பங்களின் வாசனை வீசுகின்ற, குளிர் சோலை - குளிர்ந்த (தனது) சோலைக்குள், கொடு புக்கான் - அழைத்துக் கொண்டு சென்றான்; (எ - று.)

கமண்டலுவி னன்னீர் வீசுதல்-தமதுகமண்டலங்களிற் புண்ணியதீர்த்தங் கொணர்ந்து வேதமந்திரத்தாற் புரோக்ஷித்தல். மலர்கள்தூவுதல்-புஷ்பவர்ஷம். பி - மீ:—[1]வேறுபலவேதமொழிகூற. [2]ஒளிர்.

சஆ.—இதுமுதலீழன்றுகவிகள் - அகத்தியனும் இராமனும் அளவளாவுதலைத் தெரிவிக்கும்.

[1]பொருந்த வமலன் பொழிலகத் தினிதுபுக்கான்
விருந்தவ னமைத்தபின் விரும்பினன் விரும்பி
யிருந்தவ [2]மிழைத்தவென தில்லிடையின் வந்தெ
னருந்தவ முடித்தனை யருட்கரச வென்றான்.

(இ - ள்.) அமலன் - ஸ்ரீராமன், பொழிலகத்து-(அகத்தியனது) சோலைக்குள், பொருந்த - (மனம்) பொருத்தமுற, இனிது-இனிமையாய், புக்கான் - பிரவேசித்தவனுய்,—அவன் - அம்முனிவன், விருந்து அமைத்தபின் - விருந்திட்டு உபசரித்தபின்பு, விரும்பினன் - (அங்கே) மகிழ்ந்திருந்தான்; (அப்பொழுது அம்முனிவன்), விரும்பி - மகிழ்ந்து, (ஸ்ரீராமனை நோக்கி), 'அருட்கு அரச - கருணைக்குத் தலைவனே! (நீ), இருந் தவம் இழைத்த - மிக்க தவத்தைச் செய்த, எனது - என்னுடைய, இல்லிடையின்-வீட்டில், வந்து - எழுந்தருளி, என் அருந் தவம்-எனது அரிய தவத்தை, முடித்தனை - நிறைவேற்றினாய்,' என்றான்—; (எ - று.)

நீ இங்ஙனம் எழுந்தருளியது யான் முற்பிறப்புக்களிலும் இப்பிறப்பி லுஞ் செய்த தவத்தா லென்றும், யான்செய்துவருந் தவம் இப்பொழுது நீ எழுந்தருளியபின்பே ஈடேறிற் றென்றுங் கூறினமும். இனி, விரும்பின னகிப் புக்கா னென்றுமாம். விருந்து - புதுமை; புதிதாய் வந்தவர்க்குச் செய் யும் உபசாரத்துக்கு இருமடியாகுபெயர். பி-மீ:—[1]பொருந்தவன்மலர்ப் [2]இயற்றும். (கசுசு)

ரூ0. என்றமுனி யைத்தொழு திராம னிமையோரு
நின்றதவ [1]மூற்று நெடியோரி னெடியோரு
முன்றனருள் [2]பெற்றிலர்க ளுன்னருள் சுமந்தேன்
வென்றன னனைத்துலகு [3]மேலினிதெ னென்றான்.

(இ - ள்.) என்ற முனியை - என்று கூறிய அகத்தியனே, இராமன்—, தொழுது—, 'இமையோரும் - தேவர்களும், நின்ற தவம் - (தமக்குச் செய்ய வேண்டுவதாகப்) பொருந்திநின்ற தவத்தை, முற்றும் - முடியச்செய்த, நெடியோரின் - பெரியோர்களுள்ளும், நெடியோரும் - பெரியோர்களாகிய மகாமுனிவர்களும், உன் தன் அருள் - உன்னுடைய கருணையை, பெற்றிலர் கள் - (எளிதிற்) பெற்றார்களில்லை; உன் அருள் - (அத்தன்மையதாகிய) உனது கருணையை, சுமந்தேன் - (யான் இன்று) பெற்றேன்; (ஆகையால்), அனைத்து உலகும் - சகல லோகங்களையும், வென்றனன் - சயித்தவனு வேன்; மேல் இனிது என் - இனிப் பெறவேண்டிக் குறையாகக் கிடந்த ணன்மை யாது உளது? [ஒன்றுமில்லை],' என்றான்—; (எ - று.)

பெறற்கரிய உன்னருளைப் பெற்றதனால், எல்லாவுலகத்தவரினுஞ் சிறந்தவனானே னென்று இராமன் கூறின னென்க. 'மேலினிதென்' என் றது, நின்னருளாற்பெறுதபேறு எதுவுமில்லை யென்றபடி. பி-மீ:—[1]மூற்றி. [2]பெற்றவர்கள். [3]மேலினியென். (கசுஎ)

ரூக. தண்டக வனத்துறைதி யென்றுரை தாக்கொண்
டுண்டுவர வித்திசை யெனப்பெரி துவந்தே
னெண்டகு குணத்தினை யெனக்கொடியர் சென்னி
துண்டமதி வைத்தவனை யொத்தமுனி சொல்லும்.

(இ - ள்.) உயர் சென்னி - உயர்ந்த தலையில், துண்டம் மதி - பிறைச் சந்திரனை, கொடு வைத்தவனை - கொண்டு வைத்தருளிய பரமசிவனை, ஒத்த- போன்ற, முனி - அம் முனிவன்,—(ஸ்ரீராமனை நோக்கி), 'எண்தகு குணத் தினை - (யாவராலுந்) தியாநஞ் செய்யப்படுகின்ற திருக்கலியாணகுணங் களை யுடையவனே! (நீ), தண்டக வனத்து-தண்டகாரணியத்தில், உறைதி- எழுந்தருளி யிருக்கிறாய், என்று உரைதர - என்று சொல்ல, (கேட்டு), கொண்டு - அதுகொண்டு, இ திசை - இந்தஇடத்திற்கு, வரவு-(உனது) வரு கை, உண்டு - உளதாகும், என - என்று, பெரிது உவந்தேன்-மிகவும் மகிழ்ந்

திருந்தேன்,' என - என்று சொல்லி, சொல்லும் - (மீண்டுஞ்) சொல்வான்; (எ - று.)—அதனை அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

நீ அவ்வாறே எழுந்தருளினை யென்பது,குறிப்பெச்சம். இனி, எண்டகு குணத்தினை யென்பதற்கு, அபஹதபாப்மத்வம் [வினைத்தொடர்பின்மை], விஜரத்வம் [மூப்பின்மை] விம்ருத்யுத்வம் [மரணமின்மை], விசோகத்வம் [துயரின்மை], விஜிகித்ஸத்வம்[உணவுநசையின்மை], அபிபாஸத்வம் [நீர்வேட்கையின்மை], ஸத்யகாமத்வம் [விரும்பியதைத் தவறுதுபெறுந் தன்மை], ஸத்யஸங்கல்பத்வம் [தவருமல்நிறைவேறுங்கருத்துடைமை] என்னும் எண்வகைப்பட்ட குணங்களே யுடையா யென்றும், வாத்சலியம், சுவாமித்வம், சௌசீல்யம், சௌலப்பியம், ஜ்ஞானம், ஶக்தி, ப்ராப்தி, பூர்த்திஎன்னும் எண்வகைப்பட்ட குணங்களேயுடையா யென்றுமாம். (கசுஅ)

நூ.—இதுவும் அடுத்த கவியும் - அகத்தியன் இராமனை நோக்கியே இருக்கவேணு மென்றலைத் தெரிவிக்கும்.

ஈண்டுறைதி யையவினி யிவ்வயி [1]னிருந்தால்
வேண்டியன மாதவம் விரும்பின முடிப்பாய்
தூண்டுசின வாணிருதர் தோன்றியுள ரென்றன்
மாண்டுக மலைந்தெமர் மனத்துயர் [2]துடைப்பாய்.

(இ - ள்.) ஐய - தலைவனே! (நீ), இனி—, ஈண்டு உறைதி-இங்கு வசித்தருள்வாயாக; இ வயின் - இவ்விடத்தில், இருந்தால்—,—வேண்டியன - இன்றியமையாதனவும், விரும்பின - (நாங்கள்) விரும்பியவையுமாகிய, மாதவம் - பெரிய தவங்களே, முடிப்பாய்-நிறைவேற்றுவாய்; தூண்டு சினம் - வளர்கின்ற கோபத்தையுடைய, வாள் நிருதர் - கொடிய அரக்கர், தோன்றி உளர் என்றல் - வருவார்களாயின், (அவர்களே), மாண்டு உக - இறந்து அழியும்படி, மலைந்து - போர்செய்து, எமர் - எங்களது, மனம் துயர் - மனத்திலுள்ள கிலேசத்தை, துடைப்பாய் - தீர்ப்பாய்; (எ - று.)—மற்றைமுனிவர்களேயும் உளப்படுத்தி, 'எமர்' என்றான். பி-ம்:—[1]உறைந்தால். [2]முடிப்பாய்.

நூ. வாழுமறை வாழுமனு நீதியறம் வாழுந்
தாழுமிமை யோருயர்வர் தானவர்க டாழ்வா
ராழியுழ வன்புதல்வ வையமிலை மெய்யே
யேழுலகும் வாழுமினி யிங்குறைதி யென்றான்.

(இ - ள்.) ஆழி உழவன் புதல்வ - சக்கரவர்த்தித்திருமகனே!—மறை - வேதங்கள், வாழும் - வாழ்வுபெறும்; மனு நீதி-(அவ்வேதங்களோ டொப்பச் சொல்லப்படுகின்ற) மநுமுதலியவர்களாற் செய்யப்பட்ட நீதிநூல்கள், வாழும்—; அறம் - (அந்நீதிநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியனவொழித்தலுமாகிய) தருமங்கள், வாழும்—; (அதனால்), தாழும் இமையோர் - (அரக்கர்களால்) தாழ்வடைகிற தேவர்கள், உயர்வர் - உயர்வடைவார்கள்; (அவர்கள் உயர), தானவர்கள் - (உயர்வடைகிற) அசுரர்கள், தாழ்வார் - தாழ்

வடைவார்கள்; (இதில்), ஐயம் இலை - (சிறிதுஞ்) சந்தேகமில்லை; மெய்யே - உண்மையேயாகும்; (இதுவுமன்றி), ஏழ் உலகும் வாழும்—; (ஆகையால்), இனி இங்கு உறைதி—, என்றான்—; (எ - று.)

வாழும் மறை யென எடுத்து, நித்தியமாகிய வேத மெனினுமாம். பதினெட்டு நீதிநூல்களுள்ளும் மநு மிகச் சிறந்த தாதலால், மநுநீதி யென்றார். நீதிஅறம் - நீதிநூல்களுட்கூறப்பட்டுள்ள தரும மெனினுமாம். 'தாழுமிமையோர்' என்றதற்கேற்ப, உயருந் தானவ ரெனப்பட்டது. தானவர்க்கும் அரக்கர்க்கும் வேற்றுமை உள தாயினும், தேவர்கட்குப் பகைவராகும் பொதுமை பற்றி, அபேதமாக் கூறினர். ஆழியுழவன் - ஆஜ்ஞாசக்கரமாகிய ஏரால் உலகமுழுதையும் உழுபவன். (கஎ0)

சிலஎட்டுப் பிரதிகளில் இங்கே காணப்படுஞ் செய்யுள்கள் வருமாறு:—

1. என்றுபினு மாதவ னெடுத்தினி துரைப்பா
னன்றமரர் நாதனை யருஞ்சிறையில் வைத்தே
வென்றிதரு வேற்றச முகப்பதக ஞதி
வன்றிற லரக்கர் வலிமைக்கு நிகரியாரே.

2. ஆயவர்க டங்கள் தலம் வேரற மலிந்தே
தூயதவ வாணரொடு தொல்லமரர் தம்மை
நீதனி புரந்திடுத னின்கடன தென்றான்
நாயகனு நன்றென வவற்கு நவில்கின்றான்.

நிசை.—அதற்கு இராமன் தன்கருத்தைத் தெரிவித்தல்.

செருக்[1]கடை யரக்கர்புரி தீமைசிதை [2]வெய்திக்
தருக்கழி தரக்கடிது கொல்வது சமைந்தேன்
வருக்கமறை யோயவர் வருந்திசையின் முந்துற்
றிருக்கைநல [3]நிற்கருளெ னென்றன னிராமன்.

(இ-ள்.) (அப்பொழுது), இராமன்—, (அம்முனிவனை நோக்கி), 'வருக்கம் மறையோய் - கூட்டமாகிய வேதங்களை யுடையவனே! செருக்கு அடை - கர்வத்தையடைந்த, அரக்கர் - ராக்ஷஸர்கள், புரி - செய்கின்ற, தீமை - கொடுமை யெல்லாம், சிதைவு எய்தி - அழிதலையடைந்து, தருக்கு அழிதர - (அவர்கள்) களிப்பு அழியும்படி, கடிது - விரைவிலே, கொல்வது - கொல்வதாக, சமைந்தேன் - சித்தமாயிருக்கின்றேன்; (ஆகையால்), அவர் வரும் திசையின் - அவர்கள் வருந் (தெற்குத்)திக்கில், முந்துற்று இருக்கை - முற்பட்டுச் சென்றிருத்தல், நலம் - நன்மை, (என்று எனக்குத் தோன்றுகின்றது); நிற்கு - உனக்கு, அருள் என் - விருப்பமென்ன?' என்றனன்—.

செருக்கடை, கடை - ஏழனுருபாய், யுத்தகளத்தி லென்றுமாம். வேதங்கள் அநந்தமாதலால், 'வருக்கமறை' என்றார். ராக்ஷஸராஜதானியாகிய லங்கையும், கரதூஷணரியருள்ள ஜநஸ்தாநமும் தெற்கிலுள்ளன வாத

லால், தென்திசை, 'அவர்வருந்திசை' எனப்பட்டது. பி - மீ:—[1]உடை. [2]எய்த. [3]என்றனனெனக்கடிதிராமன். (களக)

ருரு —இதுவும்அதீத்தகவியும் - அகத்தியன் இராமனுக்கு வில்முதலியன அளித்தலைத் தெரிவிக்கும்.

விழுமியது சொற்றலே யிவ் வில்லிதிவண் மேனாண்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட விருப்ப திதுதன்னே வடிவாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அதுகேட்ட அகத்தியன்),'விழுமியது சொற்றனே-சிறப்பான வார்த்தை சொன்னாய்; இவண் - இவ்விடத்திலுள்ள, இ வில் இது - இந்த வில், மேல் நாள் - முற்காலத்தில், முழு முதல்வன் - ஸ்ரீமகாவிஷ்ணு, வைத்து உளது - வைத்துக்கொண்டிருந்தது; மூவுலகும் - திரிலோகமும், யானும்—, வழிபட-வணங்கிப்பூசைசெய்யும்படி, இருப்பது—; இதுதன்னை - இவ்வில்லை, வடி வாளி குழு - கூர்மையான அம்புகளின் கூட்டம், வழுவு இல் - குறைபடாத தன்மையையுடைய, புட்டிலொடு - (இரண்டு) தூணீரங்களுடன், கோடி - கொள்வாய்', என-என்று சொல்லி, நல்கி-கொடுத்து.—(எ - று.)—'நல்கா' என மேற்கவியோடு தொடரும்.

வாளிக்குழு வழுவில் புட்டில் - அக்ஷயதூணீரம். விசுவகருமாவினால் நிருமிக்கப்பட்டு விஷ்ணுவினிடத்தே தங்கிப் பின்பு பரசுராமன்பால் வந்து சேர்ந்த வில், அவனால் ஸ்ரீராமனுக்குக் கொடுக்கப்பட்டு, ஸ்ரீராமனால் வருண னிடத்தே காக்கும்படி வைக்கப்பட்டதனை, அவ்வருணன், இப்பொழுது கராதிராக்ஷஸவதம் நெருங்கிற்றென்று கருதி, ஸ்ரீராமனுக்குச் சமர்ப்பிக்கும் படி அகஸ்தியனிடங் கொணர்ந்து கொடுத்திருந்தன னென அறிக. (களஉ)

ருசு. இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டா
லொப்பு[1]வர விற்றென வுரைப்[2]பரிய வாளும்
வெப்புருவு பெற்றவரன் மேருவரை [3]வில்லா
முப்புர மெரித்ததனி [4]மொய்க்கணையு நல்கா.

(இ - ள்.) இ புவனம் முற்றும் - இவ்வுலகமுழுவதையும், ஒரு தட்டினிடை இட்டால் - ஒருதராசுதட்டில் வைத்துநிறுத்தாலும், ஒப்பு வரவிற்று என உரைப்பு அரிய - (இதனைவைத்த தட்டுக்கு) ஒப்பாக வருதலேயுடைய தென்று சொல்லுதற்கரிய, வாளும் - வாளையும், வெப்பு உருவு பெற்ற - அனற்பிழம்பினுருவம் பொருந்திய, அரன் - பரமசிவன், மேரு வரை - மகாமேருமலையை, வில் ஆ - வில்லாகக் கொண்டு, மூப் புரம் எரித்த - திரி புரங்களே எரித்தழித்த, தனி - ஒப்பில்லாத, மொய் கணையும் - வலிய அம் பையும் [வைஷ்ணவசரத்தையும்], நல்கா - கொடுத்து,—(எ - று.)—'என் றான்' என ஐம்பத்தொன்பதாங் கவியில்முடியும்.

அரன்-ஹரன்: பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஹரிப்பவன்; ஹரித்தல்-அழித்தல்: அன்றிக்கே, தொண்டர்களது துன்பங்களைத் துடைப்பவன். முப்புரம்-இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதிலையுடைய பட்டணம். பி-ம்:—[1]வரவற்றென. [2]அரியதொவ்வா. [3]வில்லான், வில்லாய். [4]மொய்கணை. (களஉ)

ருஎ.—ழன்றுகவிகள்-பஞ்சவடியிலிருக்குமாறு அகத்தியன் விடைகொடுத்து அனுப்ப ராமாதியர் செல்லுதலைத் தெரிவிக்கும்.

ஓங்குமர ஞெங்கிமலை யோங்கிமண லோங்கிப்
பூங்[1]குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்க[2]ருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச.

(இ-ள்.) மஞ்ச-மைந்தனே!—ஓங்கு மரன் ஓங்கி-உயர்ந்த மரங்கள் வளரப்பெற்றும், மலை ஓங்கி-மலைகள் உயரப்பெற்றும், மணல் ஓங்கி-மணற்குன்றுகள் உயரப்பெற்றும், பூ குலை குலாவு-பூங்கொத்துக்கள் விளங்குகின்ற, குளிர் சோலை-குளிர்ந்த சோலைகள், புடை விம்மி-பக்கங்களில் விளங்கப்பெற்றும், தூங்கு திரை-மிக்க அலைகளையுடைய, யாறு தவழ்-ஆறுகள் பாயப்பெற்று முள்ள, சூழலது-சுற்றிடங்களையுடையதாகிய, ஓர் குன்றின்-ஒருமலையின், பாங்கர்-அருகில், பஞ்சவடி-பஞ்சவடியென்கிற, உறையுள்-வாஸஸ்தானமொன்று, உளது-உள்ளது; (எ-று.)

முதலடி-சொற்பொருட்பின்வருநிலையணி. பூங்குலை-உம்மைத்தொகையாய், பூக்களும் பழக்குலைகளு மென்றுமாம். யாறு-கோதாவரி முதலியன. பஞ்சவடி-ஐந்து ஆலமரங்களின் தொகுதி; அதனையுடைய இடத்திற்கு ஆகுபெயர்; அது, அக்கண்டகோதாவரிக் கரையில் நாசிகாத்திரியம்பகத்துக்குச் சமீபத்திலுள்ளது. பி-ம்:—[1]குவை. [2]உளகானுறையுள். (களச)

ருஅ. கன்னியிள வாழைகனி [1]யீவகதிர் வாலின்
செந்நெலுள தேனெழுகு போதுமுள தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள போதா
வன்னமுள பொன்னிவளொ டன்பின்விளை யாட.

(இ-ள்.) (அவ்விடத்தில்), கனி ஈவ-பழங்களைத் தருவனவாகிய, கன்னி இள வாழை-மிகவும் இளமையான வாழைமரங்களும், கதிர்-கதிர்களையும், வாலின்-வாலியமுடைய, செந்நெல்-செந்நெற்பயிர்களும், உள-உள்ளன; தேன் ஒழுகு போதும்-தேன் வழிகின்ற மலர்களும், உள-உள்ளன; தெய்வம்-தெய்வத்தன்மையையுடைய, பொன்னி எனல் ஆய-காவிரியென்று சொல்லத்தக்க, புனல் ஆறும்-நீர்வெள்ளத்தையுடைய நதிகளும், உள-உள்ளன; பொன் இவளொடு-இச்சீதையுடன், அன்பின் விளையாட-அன்போடு விளையாடுதற்கு, போதா-பெருநாரைகளும், அன்னம்-ஹம்ஸங்களும், உள-உள்ளன; (எ-று.)

இது, இராம்பிரான் வகிக்குமாறுசொல்லும் பஞ்சவடியின்தன்மை கூறியது. கன்னி. யிளை - ஒருபொருட்பன்மொழி. இனி, வாலின் கதிர், எனமாற்றி - அணில்வால்போன்ற கதிருள்ளசெந்நெற்பயிரென்றுமாம். பொன் - இலக்குமி. பி-ம்:—[1]மீறு. (களடு)

ருக. ஏகியினி யவ்வயி னிருந்துறைமி னென்ரான்
மேகநிற [1]வண்ணனும் வணங்கிவிடை கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பிபரி விற்பின்
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனன்.

(ஓ - ள்.) இனி—: அ வயின்-அவ்விடத்தில், ஏகி - சென்று, இருந்து உறைமின் - தங்கியிருங்கள், என்ரான் - என்று (அகத்தியன்) சொன்னான்; மேகம் நிறம் வண்ணனும் - மேகம் போன்ற (கரு) நிறத்தையும் (கைம்மாறு கருதாதுகொடுக்குந் தன்மையையுமுடைய இராமனும், வணங்கி—, விடை கொண்டான்-(அம்முனிவன்பக்கல்) அநுமதி பெற்றுக்கொண்டு, பாகு அனைய சொல்லியொடு - வெல்லப்பாகைப்போன்ற இன்சொல்லினையுடைய சீதை யுடன், தம்பி - லக்ஷ்மணனும், பரிவின் - அன்போடு, பின் போக - பின்னே வரவும்,—முனி சிந்தை - அம்முனிவனது மனம், தொட-பின்தொடரவும், கடிது - விரைவாக, போனன் - (அப்பாற்) சென்றான்; (எ - று.)—(அகத்தி யன்) (டுடு) நல்கி, (டுசு) நல்கா, (டுரு) என்றான் என முடிபு காண்க. பி-ம்:—[1]அண்ணலும். (களசு)

அகத்தியப்படலம் முற்றிற்று.

ச - ஆவது சடாயு காண் படலம்.

சடாயு - ஜடாயு; இச்சொல்லுக்கு - பலமயிர்கள சேர்த்துத் திரித்த ஜடைபோன்ற ஆயுளுள்ளவ னென்று பொருள்: மிக்கஆயுளுள்ளவ னென்று கருத்து; இனி, இதற்கு - இறகில்உயிரையுடையவ னென்றும், ஜடையை யுடையவ னென்றுங் கூறுவாரு முளர். இவன், அருணனதுபுத்திரன்; சம்பாதி யினது தம்பி; இவன் தசரதசக்கரவர்த்திக்குத் தமையன்முறையாதல்பற்றி, இவற்கு வைஷ்ணவசம்பிரதாயத்தில் 'பெரியவுடையார்' என்று திருநாமம். 'சடாயுகாண்' என்பதற்கு - இரட்டுறமொழிதலால்' ஜடாயு ராமலக்ஷ்மண ரைக் காண்கிறவென்றும், ராமலக்ஷ்மணர்கள் ஜடாயுவைக் காண்கிற வென் றும் விரித்து உரைக்க. சிலபிரதிகளில்இப்படலத்திற்குச் சடாயுப்படலம் என்று பெயர் காணப்படுகின்றது.

இப்படலம், தசரதசக்கரவர்த்திக்குப் பல உதவிகள்செய்து உயிர்த்தோழ னைவனும் கழுகுக்கரசு மாகிய சடாயு என்பவனை இராமலட்சுமணர் காண, அவன் அம்முறைபற்றி இவர்களைப் புத்திரராகவேபாவித்துப் பாதுகாக்க, பஞ்சவடியைச்சேர்ந்த வரலாற்றைக் கூறுகின்றது.

வேறு.

க.—இராமன் முதலிய மூவரும் சடாயுவைக் காணுதல்.

நடந்தனர் காவதம் பலவு நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையிற்
றொடர்ந்தன துவன்றின சூழல் யாவையுங்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே.

(இ - ள்) (இராமன்முதலிய மூவரும்),—காவதம் பலவும்-பலகாதவழி தூரம், நடந்தனர் - நடந்தவர்களாய்,—கிடந்தன - (ஆங்காங்குப்) பொருந்தியவைகளாகிய, நல் நதி - சிறந்த ஆறுகளேயும், நின்றன - நிலைகின்றவையாகிய, கிரிகள் - மலைகளேயும், தொடர்ந்தன - ஒன்றேடொன்று தொடர்ந்தனவும், துவன்றின - நெருங்கியவையு மாகிய, சூழல் யாவையும் - மற்றைக் காட்டினிடங்களேயும், கேண்மையின் - முறைமையால், கடந்தனர் - தாண்டிச்சென்று,—(அங்கு), கழுகின் வேந்தை - கழுகுகளுக் கரசனுகிய சடாயுவை, கண்டனர் - கண்டார்கள்; (எ - று.)

காவதம் - விகாரம். புண்ணியதீர்த்த மாதலால், 'நன்னதி' என்றார். இனி, கேண்மையிற்றொடர்ந்தன வென்பதற்கு - நட்புக்கொண்டாற்போல ஒன்றையொன்று தொடர்ந்துள்ள பலஇடங்களேயு மென்றுமாம்.

இதுமுதல் இருபதுகவிகள் - கீழ்ப்படலத்தின் முதற்கவி போன்ற **கலி விருத்தங்கள்.** (களஎ)

உ.—இதுமுதல் ஏழுகவிகள் - சடாயுவின் வருணனை.

உருக்கிய சுவணமொத் துதயத் துச்சிசே
[1]ரருக்கனிவ் வகலிடத் தலங்கு திக்கெலாந்
தெரிப்புறு [2]செறிசுடர்ச் [3]சிகையி னுற்சிறை
விரித்திருந் தனனென விளங்கு வான்றனே.

எட்டுக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உருக்கிய—, சுவணம் - பொன்னே, ஒத்து - போன்று, உதயத்து - உதயகிரியினது, உச்சி - சிகரத்தை, சேர் - சேர்ந்து உதித்த, அருக்கன் - இளஞ்சூரியன், இ அகல் இடத்து - இந்த அகன்ற பூமியில், அலங்கு திக்கு எலாம் - பொருந்திய எல்லாத்திசைகளேயும், தெரிப்புறு - விளங்கச் செய்கின்ற, செறி சுடர் - நெருங்கிய (தனது) கிரணங்களின், சிகையினுல் - ஒளியினுல், சிறை - சிறகுகளே, விரித்து இருந்தனன் என - விரித்துக் கொண்டிருந்தான்போல, விளங்குவான்தனே - விளங்குபவனும்,—(எ - று.)

வடநூலார் உதயமென்றே அம்மலேக்குப் பெயர் கூறுவர். அருக்கன் = அர்க்கன். ஜடாயுவுக்குப் பாலசூரியனும் அவனது விரிந்தசிறகுக்குப் பரந்த கிரணமும் உவமை. இவன் அங்கு ஒருமலேயினுச்சியில் தங்கியிருந்ததனுல், உதயத்துச்சிசேரருக்கனே உவமை கூறினர்;

முணர்க. சிலபிரதிகளில் இந்தப்பாடல் அடுத்தபாடலுக்குப்பின் காணப்படுகின்றது. பி - மீ:—[1]அருக்கனினிழல்படை. [2]தெரி. [3]நெறியினுற்றிசை. ().

கூ. மூந்தொரு கருமலை முகட்டு முன்றிலிற்
சந்திர ஞெளியொடு தழுவச் சார்த்திய
வந்தமில் கணிகட லமரர் நாட்டிய
மந்தர [1]கிரியென வயங்கு வான்றனே.

(இ - ள்.) மூந்து - (தங்களுக்கு)முன்னே, ஒரு கரு மலை-ஒருபெரியமலையினது, முகடு முன்றிலின் - உச்சியினிடத்திலே,—அமரர்-தேவர்கள், அந்தம்இல்-அளவில்லாத, கணே கடல்-ஒலிக்கின்ற திருப்பாற்கடலில், சந்திரன் ஒளியொடு - சந்திரனது பிரகாசத்தோடு, தழுவ - பொருந்தும்படி, சார்த்திய நாட்டிய - சேர்த்து நிறுத்திவைத்த, மந்தரகிரி என - மந்தரமலைபோல, வயங்குவான்தனே - விளங்குபவனும்,—(எ - று.)

முன்றில் - இல்லுக்கு முன்னுகிய இடம்; இலக்கணப்போலி: இது, இங்கே முன்னிட மென்னுமாத்திரை யாயிற்று. முன்றிலின் வயங்குவா னெனக் கூட்டுக. அமரரும் அசுரரும் அமுதமெழப் பாற்கடல்கடைந்த காலத்துச் சந்திரனே அடைதாணுகக் கொண்டதனுல், 'சந்திர ஞெளியொடு தழுவச்சார்த்திய மந்தரம்' எனப்பட்டது; சார்த்திய கிரி, நாட்டியகிரியென்க. மந்தரகிரி ஜடாயுவுக்கும், சந்திரஞெளி அவனதுஒளிக்கும்உவமை. பி - மீ:—[1]மலே. (கஎசு)

ச. [1]மானிற விசும்பெழின் மறையத் தன்மணிக்
காணிறச் சேயொளி கதுவக் கண்ணக
னீனிற [2]வரையினிற் பவள நீள் [3]கொடி
போனிறம் [4]பொலிந்தெனப் பொலிகின் றுன்றனே.

(இ - ள்.) கண் அகல் - இடமகன்ற, நீல் நிறம் - நீலநிறத்தையுடைய, வரையினில் - அம்மலைமேலே,—மால் நிறம் விசும்பு - கருநிறத்தையுடைய ஆகாயத்தினது, எழில்-நிறம், மறைய-(தன்நிறத்தால்) மறையவும்,—பவளம் நீள் கொடி - நீண்டபவழக்கொடி, போன் நிறம் பொலிந்து என - (தனது) அழகியநிறத்தோடு விளங்கினுற்போல, தன் - தனது, மணி கால் - அழகிய கால்களின், நிறம் - நிறத்தினது, சேய் ஒளி - சிவந்தஒளி, கதுவ - பொருந்தவும்,—பொலிகின்றுன்றனே - விளங்குகின்றவனும்,—(எ - று.)

இக்கவியை "நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன், முணிறத்தாற் பொய்கைத்தலஞ் சிவப்ப - மாணிறத்தான், முன்னப்புட் டோன்று முளரித் தலேவைகு, மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு" என்பதனேடு ஒப்பிடுக. சேய் - செம்மையென்னும்பண்புப்பெயரின் விகாரம். நீல் - கடைக்குறை. வரையினிற் பொலிகின்று னென்க. பவளம் - ப்ரவாள மென்னும் வடமொழியின் சிதைவு. பொன்னிறம் - போனிறமென, எதுகைநோக்கிய விகாரம்; "போனிறப் புத்திசேனன் பொன்னணி பகழி சிந்தி" என்னுஞ்

சிந்தாமணியிற் போல. இனி, பவழக்கொடி பொன்னினிடத்தே நிறம் விளங்கினுற்போலத் தன்பொன்மேனியிடத்தே சிவந்தகாலினெளி பொருந்த வென்றுமாம். பி-ம்:—[1]வான். [2]வரையினே. [3]திரி. [4]பொலிந்திட. (கஅ0)

ரு. [1]தூய்மைய னிருங்கலே துணிந்த கேள்வியன்
வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மைய
[2]ஞய்மையின் மந்திரத் தறிஞ ஞமெனச்
[3]சேய்மையி னேக்குறு சிறுக ணுன்றனே.

(இ - ள்.) தூய்மையன் - பரிசுத்தியையுடையவனும்,—இருங் கலே துணிந்த கேள்வியன் - மிக்ககல்வியையுந் தெளிந்தகேள்வியையுமுடைய வனும்,—வாய்மையன் - சத்தியத்தையுடையவனும்,—மறு இலன் - குற்ற மில்லாதவனும்,—மதியின் கூர்மையன் - அறிவின் நுட்பத்தை யுடையவ னும்,—ஆய்மையின் - ஆராய்ச்சியையுடைய, மந்திரத்து - ஆலோசனையால், அறிஞன் ஆம் என - அறிபவனேப்போல, சேய்மையின் நோக்குறு - மிக்க தூரத்திலுள்ளவற்றையுங் காண்கின்ற, சிறு கணுன்தனே - சிறிய கண்களே யுடையவனுனவனும்,—(எ - று.)

கல்வியாவது - கற்றற்குரிய நூல்களேக் கற்றல். கேள்வியாவது - கேட்கப்படும் நூற்பொருள்களேக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்; கற்றவழி அதனினுய அறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனேஉண்டாக் குதலானும், இது, கல்வியின்பின் வைக்கப்பட்டது. வாய்மையாவது - மெய் யினது தன்மை. மறுவாவது - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்கள். மதியாவது - கல்விகேள்விகளி னுய அறிவோடு உண்மையறிவு. உபமானத்தில் 'சேய்மையின்நோக்குறுசிறு கண்' என்பதற்கு - காலமிடையிட்டவற்றையும் தேயமிடையிட்டவற்றையும் அறிகின்ற நுண்ணறி வென்க. ஆம் - அசை. பி - ம்:—[1]தூயவன். [2]ஆய்வுறு. [3]சேயினின். (கஅக)

சு. வீட்டிவா ளவுணரை விருந்து கூற்றினே
யூட்டிவீழ் மிச்சிரு னுண்டு நாடொறுந்
தீட்டிமே லிந்திரன் சிறுகண் யானேயின்
றேட்டிபோற் றேய்ந்தொளிர் துண்டத் தான்றனே.

(இ - ள்.) வாள் அவுணரை - கொடிய அசுரர்களே, வீட்டி - (உடலும் உயிரும் வெவ்வேருக) விடுவித்து [கொன்று],—கூற்றினே-யமனே, விருந்து ஊட்டி - (அவ்வசுரர்களதுஉயிரை) விருந்திட்டு உண்பித்து,—வீழ் மிச்சில்- கீழ்விழுந்து மிகுதியாய்நின்ற உடலே, தான் உண்டு—, நாள் தொறும் - தின ந்தோறும், தீட்டி - தீட்டப்பட்டு,—மேல் இந்திரன்-மேன்மையுள்ள தேவேந் திரனது, சிறுகண் யானேயின் - சிறிய கண்களேயுடைய (ஐராவதமென்னும்) யானேயினது, தோட்டிபோல் - அங்குசம்போல, தேய்ந்து ஒளிர் - தேய்ந்து விளங்குகின்ற, துண்டத்தான்தனே - மூக்கையுடையவனும்,—(எ - று.)

மிச்சில் - ஒழிபொருள். தண்டம் - பறவை மூக்கு. மேல் - ஆகுபெயரு மாம். தீட்டித் தேய்ந்தொளிர் தண்டமென்க. (கஅஉ)

எ. கோளிரு நான்கிலை டொன்று கூடிய
வாளுறு திகிரிபோ லாரத் தான்றனை
[1]நீளுறு மேருவி னெற்றி முற்றிய
வாளிர வியிற்பொலி மௌலி யான்றனை.

(இ - ள்.) இரு நான்கிலைடு ஒன்று கூடிய கோள் - நவக்கிரகங்களையும், ஆளுறு - ஆளுதலையுடைய, திகிரிபோல் - சிம்சுமாரசக்கரம்போன்ற, ஆரத்தான்றனை - நவரத்தினமாலையையுடையவனும்,—நீள் உறு - உயர்ந்த, மேருவின் - மேருமலையினது, நெற்றி - உச்சியில், முற்றிய - பொருந்திய, வாள் இரவியின் - ஒளியினையுடைய சூரியன்போல, பொலி-விளங்குகின்ற, மௌலியான்றனை - கிரீடத்தையுடையவனும்,—(எ - று.)

ஆரத்திற்குத் திருவுசக்கரமும், அவ்வாரத்திற்பதித்துள்ள நவமணிகளுக்கு அச்சக்கரத்தின்கண்ணேயுள்ள நவக்கிரகங்களும் உவமை. ஆரம் - ஹாரம். நவக்கிரகங்கள் - சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்கிரன், சனி, ராகு, கேது. நவமணிகள் - கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம். ஆளுறு திகிரி - திருவுவ் தான் நடுவிலேயிருந்து சுற்றிக்கொண்டு காற்றின் வடிவமான கயிறுகளிலுலே கட்டப்பட்டநவக்கிரகங்களையுஞ் சுற்றித்திருப்புகின்ற சக்கரம். சடாயுவினது உருவத்துக்கு மேருவும், சிரசுக்குச் சிகரமும் கிரீடத்துக்குச் சூரியனும் உவமை. கழுகுக்கரசு ஆதலால், முடியும் ஆரமும் கூறினர். பி - ம்:—[1]நீளுயர்மேனியின். (கஅங)

அ. சொற்பங்க முறநிமி ரிசையின் சும்மையை
யற்பங்க முறவரு மருணன் செம்மலைச்
சிற்பங்கொள் [1]பகலெனக் கடிது சென்று[2]தீர்
கற்பங்க ளெனைப்பல கண்டு ளான்றனை.

(இ - ள்.) சொல் பங்கம்உற - சொற்கள் தோல்வியடையும்படி, நிமிர்-வளர்கின்ற, இசையின் சும்மையை - கீர்த்தியின்மிகுதியையுடையவனும்,—அல் பங்கம் உற-இருள் அழிவையடையும்படி, வரும்-உதிக்கின்ற,அருணன்-அருணனது, செம்மலை - புத்திரனும்,—கற்பங்கள் எனை பல - அனேககல்பகாலங்களை, கடிது சென்று தீர் சிற்பம் கொள் பகல் என - விரைவிற் கழிந்துபோகின்ற சிறுமையைக்கொண்ட நாள்களைப்போல, கண்டுளான்றனை - கண்டிருப்பவனும்,—(எ - று.)

சொல்லச்சொல்ல முடியாது மேன்மேல்வளர்கின்ற புகழென்றற்கு, 'சொற்பங்கமுற நிமிரிசை' என்றார். அருணன் - சூரியசாரதி. இரண்டாம் பாடல்முதல் இந்தப்பாடல்வரையிலுமுள்ள விளங்குவான்றனை....கண்டுளான்றனை என்ற இரண்டாம்வேற்றுமைவிரிகள் மேற்பாடலிலுள்ள வீரனை என்பதற்கு அடைமொழிகள்: இனி, முதற்பாடலிலுள்ள 'கழுகின்வேந்தை' என்பதற்கு அடைமொழியாகக் கூட்டுதலுமொன்று. பி - ம்:—[1]கடலென.[2]எதிர்.()

கூ.—ராமலக்ஷ்மணர் சடாயுவையணுகிச் சந்தேகித்தல்.

ஓங்குயர் நெடுவரை யொன்றி னின்றது
தாங்கல திருநிலந் தாழ்ந்து தாழ்வுற
வீங்கிய [1]வலியினி லிருந்த வீரனை
யாங்கவ ரணுகின ரயிர்க்குஞ் சிந்தையார்.

(இ - ள்.) ஓங்கு உயர் நெடு வரை ஒன்றில் - மிகவும் உயர்ந்த பெரிய தொருமலையில், நின்று - பொருந்தி, அது தாங்கலது - அம்மலை (தன்னைத்) தாங்கமாட்டாமல், இரு நிலம் தாழ்ந்து - பெரியநிலத்திற்குள்ளே புதைந்து, தாழ்வுற - கீழ்மையடையும்படி, வீங்கிய வலியினில் - மிக்கபலத்தோடு, இருந்த—, வீரனை - வீரத்தன்மையையுடையவனுமாகிய அச்சடாயுவை, அவர் - அவ்விராமலக்ஷ்மணர்கள், ஆங்கு - அவ்விடத்தில், அணுகினர் - சமீபித்து, அயிர்க்கும் சிந்தையார்-சந்தேகிக்கின்ற மனமுடையவராஞர்கள்; (எ - று.)—பி - ம்:—[1]வலியினன். (கஅடு)

கo.—இதுவும் அது.

இறுதியைத் தன்வயி னியற்ற வெய்கினு
னறிவிலி யரக்கனு மல்ல னுமெனி
[1]னெறுழ்வலிக் கலுழனே யென்ன வுன்னியச்
செறிகழல் வீரருஞ் செயிர்த்து நோக்கினர்.

(இ - ள்.) அ செறி கழல் வீரரும் - நெருங்கிய வீரக்கழலையணிந்த அவ் விராமலக்ஷ்மணர்களும்,—'(இவன்), தன்வயின் - தன்மூலமாக, இறுதியை-அழிவை, இயற்ற - (எமக்குச்)செய்ய (எண்ணி), எய்தினன் - (பறவையுரு வங்கொண்டு) வந்தவனை, அறிவு இலி அரக்கன் ஆம் - அறிவில்லாதவ னுகிய ராக்ஷசனுவன்; அல்லன் ஆம் எனின் - அவ்வாறல்லாமற் போனுல், எறுழ் வலி கலுழனே (ஆம்) - மிக்கவலியினையுடைய கருடனேயாவன்', என்னஉன்னி - என்றுஎண்ணி, செயிர்த்து - சந்தேகப்பட்டு, நோக்கினர் - பார்த்தார்கள்; (எ - று.)

இது, வடிவுபற்றி வந்த ஐயநிலையுவமையணி. 'அயிர்க்குஞ்சிந்தையார்' என்றுகீழ்க்கூறியதை, இதனுல் விவரிக்கின்றன ரென்க. தன்வயின்இறுதி யையியற்றஎன்பதற்கு - தனக்குத் தானே முடிவை உண்டாக்கிக்கொள்ள வென்றுமாம். எறுழ் - உரிச்சொல்; "எறுழ் வலியாகும்." எறுழ்வலி - ஒரு பொருட் பன்மொழி. கலுழன் - வடசொற் சிதைவு. வீரரும், உம்மை - எதிரதுதழுவியது. பி-ம்:—[1]உறு. (கஅசு)

கக.—இதுமுதல் ஐந்துகவிகள் - சடாயு ராமலக்ஷ்மணரைச் சந்தேகித்தலைத் தெரிவிக்கும்.

வணிகழல் வரிசிலை மதகை மைந்தரை
யணியவன் முனுங்கண் டயிர்த்து நோக்கினன்

வினையறு நோன்பின ரல்லர் வில்லினர்
புனைசடை முடியினர் புலவ ரோவெனை.

(இ - ள்.) அனையவன் தானும்-அச்சடாயு தானும்,—வினை கழல் - கட்டிய வீரக்கழலையும், வரி சிலை-கட்டமைந்த வில்லையும், மதுகை - வலியையுமுடைய, மைந்தரை - அக்குமாரர்களை, கண்டு - பார்த்து,—'புனை சடை முடியினர் - தரித்த சடையோடுகூடிய முடியினையுடைய இவர்கள், வினை அறு நோன்பினர் - இருவினையும்அறுதற்குக்காரணமான தவத்தினையுடைய முனிவர்க ளென்றாலோ, வில்லினர்-வில்லையுடையர்; (ஆதலால்),அல்லர்—; புலவரோ - தேவர்களோ?' எனு - என்று, அயிர்த்து - ஐயமுற்று, நோக்கினன்—; (எ - று.)—அனையவன்றானும், உம்மை - இறந்தது தழுவியது. புலவர் - அறிவுடையவர்; விபுதரென்னும் வடசொல்லின்மொழிபெயர்ப்பு.

கஉ. *புரந்தரன் முதலிய புலவர் யாரையு*
நிரந்தர நோக்குவெ னேமி யானுமவ்
வரந்தரு மிறைவனு மழுவ லாளனுங்
கரந்திலர் என்னையா னென்றுங் காண்பெனால்.

ஐந்தகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) புரந்தரன் முதலிய-இந்திரன் முதலான, புலவர் யாரையும் - தேவர்கள் யாவரையும், நிரந்தரம் - இடைவிடாமல் [எப்பொழுதும்], நோக்குவென் - பார்ப்பேன்; நேமியானும் - சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவும், அவரம் தரும் இறைவனும் - விரும்பிய வரங்களைக் கொடுக்கின்ற அப்பிரமனும், மழு வலாளனும்-மழுவாயுதத்தையுடைய சிவனும்,என்னை - எனக்கு, கரந்திலர் - ஒளிக்கமாட்டார்கள்; யான்—, என்றும் - எப்பொழுதும், காண்பென் - (அவர்களைப்) பார்ப்பேன்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

"தான்முகனை நாராயணன் படைத்தா னென்முகனுந், தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்" என்றதை யொட்டி முறைப்பட வைத்தார். என்னை - உருபுமயக்கம் நிரந்தரம் - வடசொல். (கஅஅ)

கஙூ. *காமனென் பவனையுங் கண்ணி னேக்கினேன்*
ரூமரைச் செங்கணித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழற் பொடியி னேடுமொப்
பாமென வறிகிலெ னர்கொ லாமிவர்.

(இ - ள்.) காமன் என்பவனையும் - மன்மதனென்று (அழகிற் சிறப்பித்துச்) சொல்லப்படுகின்றவனையும், கண்ணின் நோக்கினேன் - கண்களாற் பார்த்திருக்கின்றேன்; தாமரை செம் கண் - தாமரைமலர்போலுஞ் சிவந்த கண்களையும், தட கை-பெரிய கைகளையுமுடைய, இ வீரர்கள் - இந்த வீரர்களின், பூ மரு பொலம் கழல் - தாமரைமலர்போன்ற அழகிய பாதங்களது, பொடியினோடும்-தூளியோடும், ஒப்பு ஆம் என-(அவன்) ஒப்பாவானென்று,

RESEARCH INSTITUTE,
64, R. H. ROAD, MADRAS-4

அறிகிலென் - அறிகின்றேனில்லை; இவர் - இவ்வீரர்கள், ஆர் கொல் ஆம் - யாவராவரோ? (எ - று.)

கண்ணினென வேண்டாது கூறினர், அங்களுகிய அவனைக் காணற்கு அருமை விளக்குதற்கு. ஒப்பாமென அறிகிலே னென்றது - ஒப்பாக மாட்டானென்று அறிவே னென்றபடி. இவை யிரண்டுகவிகளாலும், புலவ ரன்றெனத் தெளிந்தமை கூறப்பட்டது. பி-ம்:—[1]ஒப்பானலன்வருபவர்.

கச. உலகொரு மூன்றுந்தம் முடைமை யாக்குறு
மலகறு மிலக்கண மமைந்த மெய்யினர்
மலர்மகட் குவமையா லோடும் வந்தவிச்
சிலைவலி வீரரைத் [1]தெரிகி லேனெனை.

(இ - ள்.) உலகு ஒரு மூன்றும் - மூன்றுலோகங்களையும், தம் உடைமை ஆக்குறும் - தமக்கு உரியபொருளாகச் செய்யவல்ல, அலகு அறும் - அளவில்லாத, இலக்கணம் - உத்தமபுருஷலக்ஷணங்கள், அமைந்த - பொருந்திய, மெய்யினர் - மேனியையுடையவர்களாய்,—மலர்மகட்கு உவமையா லோடும் - தாமரைமலரில் தோன்றிய திருமகளுக்கும் உபமான மாகச் சொல்லத்தக்க ஒரு பெண்ணுடனே, வந்த—, இ சிலை வலி வீரரை - வில் லின்வலிமையையுடைய இவ்வீரர்களை, தெரிகிலேன் - (இன்னரென்று) அறியேன், எனை - என்றகருதி,—(எ - று.)—'எனப் பலநினைப்பினமனத்து ளெண்ணுவான்' என்று கசு-ஆங் கவியோடு தொடரும்.

உலகொருமூன்றுந் தம்முடைமையாக்குறு மிலக்கணம்-சக்கரவர்த்திக்கு உரிய லக்ஷணங்கள். அலகறும் - குற்றமற்ற வென்றுமாம். எல்லாப்பெண்களுக்கும் உபமானமாகச் சொல்லப்படுகின்ற சிறப்பினையுடைய திருமகளுக்கும் உபமானமாகச்சொல்லத்தக்க அழகினையுடையவ ளெனவே, ஒப்புயர் வில்லாதவ ளென்றதாயிற்று. பி-ம்:—[1]தெரிக்கிலேனெனை. (ககo)

கடு. கருமலை செம்மலை யனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தா
மருமைசெய் குணத்தினென் றுணைவ ளழியா
ளிருவரு [1]மொத்து ளாரரோ.

(இ - ள்.) கரு மலை செம் மலை அனைய-நீலமலையையுஞ் சிவந்தமலையையும் போன்ற, காட்சியர் - தோற்றத்தையுடையவர்களும்,—திரு மகிழ் மார்பினர்-ஜயலக்ஷ்மி மகிழ்ந்து வீற்றிருக்கின்ற மார்பினையுடையவர்களுமாகிய, செம் கண் - சிவந்த கண்களையுடைய, வீரர் இருவரும் - இவ்விரண்டுவீரரும், அருமை செய் குணத்தின்-பெறுதற்கரிய நற்குணங்களையுடைய, என் துணைவன் - எனதுசிநேகிதனுகிய, ஆழியான் ஒருவனை - தசரதசக்கரவர்த்தியை, ஒத்து போன்று, உளார்-இருக்கின்றனர்; (எ-று.)—தாம், அரோ-அசைகள்.

இதனால், தசரதனுமக்கள்போலுமென ஒருவாறு ஊகித்தானுயிற்று. பி-ம்:—[1]ஒத்தவாறரோ. (ககக)

க்சு.—ஜடாயு ராமலக்ஷ்மணரை நீவிர் யாவ ரேன் வினவல்.

எனப்பல [1]நினைப்பின மனத்து ளெண்ணுவான்
சினப்படை [2]வீரர்மேற் செல்லு மன்பினன்
கனப்படை வரிசிலைக் [3]காளை யீர்கள்யார்
மனப்பட வெனக்குரை வழங்கு வீரென்றான்.

(இ - ள்.) என - என்று, பல நினைப்பின - பல எண்ணங்களை, மனத்துள்எண்ணுவான்-மனத்தில் நினைப்பவனுகியும்,—சினம் படை வீரர்மேல் - கோபத்தையுடைய ஆயுதங்களையுடைய அவ்வீரர்களிடத்தில், செல்லும்-செல்லுகின்ற,அன்பினன்-அன்பையுடையவனுகிய மிருந்து,—'கனம்-சிறப்பையுடைய, வரி சிலை படை - கட்டமைந்த விற்படையையுடைய, காளையீர்கள்-காளைபோல்கின்ற நீங்கள், யார் - யாவர்? மனம் பட - மனத்திற்பதியும்படி, எனக்கு—, உரை வழங்குவீர் - உத்தரஞ்சொல்லுங்கள்', என்றான்-; (எ-று.)

நினைப்புஇனம் எனப்பிரித்து, நினைப்புக்களின் கூட்டமென்றுமாம். பி-ம்:—[1]நினைப்பினன். [2]வீரரைத்தெளியும். [3]கரத்தர் நீங்கள், காளைநீர்கள். ()

கஎ.—இராமலட்சுமணர்கள் தம்மைத் தெரிவித்தல்.

வினவிய காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையாற்
கனைகட லெடுநிலங் காவ லாழியான்
வினைகழற் றயரதன் மைந்தர் யாமென்றார்.

(இ - ள்.) வினவிய காலையின்-(என்றுஜடாயு) கேட்டபொழுது,—புனை மலர் தாரவர் - சூடிய பூமாலையையுடைய அவர்கள்,—மெய்ம்மை அல்லது புகல்கிலாமையால் - சத்தியமல்லது (வேருென்றைச்) சொல்ல அறியாமையால்,—'யாம்—, கனை கடல் எடு நிலம் காவல் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பெரிய உலகமுழுவதையுங் காத்தலையுடைய, ஆழியான்-ஆஞ்ஞாசக்கரத்தையுடையவனுகிய, வினை கழல் தயரதன் - தரித்த வீரக்கழலையுடையதசரதசக்கரவர்த்தியினது, மைந்தர்-புத்திரர்கள்,' என்றார்—; (எ-று.)

ஜடாயுவை இன்னனென்று அறியாது ஐயுற்றிருந்தும் உண்மையே கூறியதனுல், 'மெய்ம்மையல்லது புகல்கிலாமையால்' என்றார். தயரதன் = தசரதன்;இது,தச ரதன் எனப்பிரித்து,பத்துத்திக்குகளிலுஞ்செல்லவல்ல தேருடையவ னென்று பொருள் கொள்ளப்படும்: இதனுல், எங்குந் தடையின்றிச் செல்லவல்லவ னென்றதாயிற்று; இது, இந்திரனைச் சிறையிட்ட சம்பராசுரனை வதைக்கும்பொருட்டு அவன் சென்றஇடமெல்லாஞ்சென்றமையால் விளங்கியது: இச்சொல்லுக்கு, தச - பட்சி, ரத - வாகனம் என்று பொருள்கொள்ளின், கருடவாகனனுன திருமாலுக்குப் பெயராகும்; தெய்வப்பெயரை மனிதருக்கிடுவது பரிசுத்திகரமென்கிற காரணத்தால், இவ்வரசனுக்கு இப்பெயரிட்டு வழங்கிய தென்று சொல்லலாம். (ககஙூ)

கஅ.—அதனைக்கேட்ட சடாயு தசரதனது கேஷமத்தை வினவுதல்.

உரைத்தலும் பொங்கிய வுவகை வேலையன்
றரைத்தலே யிழிந்தவர்த் தழுவு காதலன்
விரைத்தடந் [1]தாரினிர் வேந்தர் வேந்தன்றன்
வரைத்தடந் தோளிணை வலிய வோவென்றான்.

(இ-ள்.) உரைத்தலும்-(என்று அவர்கள்) சொன்னவளவில்,—ஜடாயு), பொங்கிய - கிளர்ந்த, உவகை வேலையன் - களிப்பாகிய கடலையுடையவனாகி,—தரைத்தலே - பூமியில், இழிந்து - (அம்மலைசிகரத்திலின்றும்) இழிந்து, அவர் தழுவு காதலன் - அவர்களைத் தழுவுகின்ற அன்பினையுடையனாகி (வந்து), 'விரை தட தாரினிர் - வாசனையுடைய பெரிய மாலையையுடையவர்களே! வேந்தர் வேந்தன்தன் - அச்சக்கரவர்த்தியினது, வரை தட தோள் இணை - மலைபோன்ற விசாலமான இரண்டுபுயங்களும், வலியவோ - வலியுள்ளனவாயிருக்கின்றனவா?' என்றான்—; (எ - று.)

'தோளிணை வலியவோ' என்றது, அவன் கேஷமமாக இருக்கின்றனனோ? என்றபடி. பி - ம்:—[1]தாரினன். (ககஉ)

கக.—தசரதன் இறந்ததை இராமன்தெரிவிக்க, சடாயு மூர்ச்சித்தல்.

மறக்கமுற் றுதன வாய்மை காத்தவன்
றுறக்கமுற் றுனென [1]விராமன் சொல்லலு
மிறக்கமுற் றுனென வேக்க மெய்தினு
னுறக்கமுற் றுனென வுணர்வு நீங்கினான்.

(இ - ள்.) 'அவன் - அச்சக்கரவர்த்தி, மறக்க முற்றுதன - மறக்கக் கூடாததையாகிய, வாய்மை - சத்தியத்தை, காத்து - (தவறுமற்) பாதுகாத்து, துறக்கம் உற்றான் - சுவர்க்கலோகத்தை அடைந்தான்,'என-என்று, இராமன்—,—சொல்லலும் - சொன்னவுடனே,—(ஜடாயு), இறக்கம் உற்றான் என-(தனது உயிர்நண்பன்) மரணமடைந்தானென்னுங்காரணத்தால், எக்கம் எய்தினன் - துன்பமடைந்தவனாய்,—உறக்கம் உற்றான் என - தூக்கமடைந்தவன்போல, உணர்வு நீங்கினன்-அறிவுநீங்கப்பெற்றான் [மூர்ச்சித்து விழுந்தான்]; (எ - று.)

மறத்தல் - மறந்து தவறுதல். வரங்களிரண்டாதலால், 'முற்றுதன' எனப் பன்மையாற் கூறினர். இனி, மூன்றும்அடிக்கு - மரணத்தையடைந்தவன்போல எங்கியென்றுமாம். பி - ம்:—[1]முன்னம். (ககடு)

உ0.—ராமலக்ஷ்மணரால் தேற்றப்பட்ட சடாயு புலம்பத்தொடங்குதல்.

தழுவின னெடுத்தனர் தடக்கை யாண்முகங்
கழுவின ரிருவருங் கண்ணி னீரினால்
வழுவிய வின்னுயிர் வந்த மன்னனு
மழிவுறு நெஞ்சின னரற்றி னன்சோ.

(இ - ள்.) இருவரும் - ஸ்ரீராமலக்ஷ்மணரிரண்டுபேரும், தடகையால் - (தங்களது) பெரிய கைகளால், தழுவினர் எடுத்தனர் - (கீழேவிழுந்த சடாயுவை) தழுவியெடுத்து, கண்ணின் நீரினுல்-(தங்கள்) கண்களினின்றும் பெருகுகின்ற நீரினுல், முகம்-(அவனது) முகத்தை, கழுவினர்-கழுவினர்களாக,—வழுவிய இன் உயிர் வந்த - நீங்கிப்போன இனிய (தனது) உயிர் மீண்டும் வரப்பெற்ற [மூர்ச்சைதெளிந்து எழுந்த], மன்னனும் - அச் சடாயுவும், அழிவு உறும் நெஞ்சினன் - அழிவடைகின்ற மனத்தையுடையவனுய், அரற்றினுன் - புலம்புவானுயினுன்; (எ - று.)—அது மேற்கூறுகின்றார்.

தடக்கை - முழந்தாளளவும் நீண்ட கை. கண்ணினீர் - சோகத்தால்.

வேறு.

உக.—இதுமுதல்ஏழின்றுகவிகள் - சடாயு தசரதனைக்குறித்துப் புலம்புதலைத் தெரிவிக்கும்.

பரவலருங் கொடைக்குநின்றன் [1]பணிக்குடைக்கும் பொறைக்
குநெடும் பண்பு தோற்ற, கரவலருங் கற்பகமு முடுபதியுங் கடலிட
முங் களித்து வாழப், புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
மெய்க்கணியே புகழின் வாழ்வே, யிரவலரு நல்லறமும் யானுமினி
யென்படநீத் தேகினையே.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) புரவலர்தம் புரவலனே - அரசர்க்கரசனே! பொய் பகையே - பொய்ம்மைக்குப் பகையானவனே! மெய்க்கு அணியே - உண்மைக்கு அலங்காரமானவனே! புகழின் வாழ்வே - கீர்த்திக்கு வாழ்ந்திருக்குமிடமாக இருப்பவனே!—நின்தன் - உனது, பரவல் அரு - புகழ்தற்கு அரிய, கொடைக்கும் - தானத்திற்கும், பணி குடைக்கும் - குளிர்ச்சிபொருந்திய வெண்கொற்றக்குடைக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், நெடும் பண்பு தோற்ற - சிறந்த (தன்) குணம் தோல்வியடைந்த, கரவல் அரு கற்பகமும் - (இரப்பவர்க்கு) ஒளித்தலில்லாத கற்பகவிருக்ஷங்களும், உடுபதியும் - சந்திரனும், கடல் இடமும் - கடலாற்சூழப்பட்ட பூமியும், களித்து வாழ - களிப்படைந்து வாழும்படி, இரவலரும்-யாசகர்களும், நல் அறமும் - நல்ல தருமமும், யானும்—, இனி—, என் பட - என்னதுன்பத்தை அநுபவிக்க, நீத்து - (எங்களை) விட்டு, ஏகினையே - (நீ) போனையே? (எ - று.)

நிரனிறையாய்க் கொடைக்குத் தோற்ற கற்பகமும், குடைக்குத் தோற்ற உடுபதியும், பொறைக்குத் தோற்ற கடலிடமு மெனக் கூட்டுக. கைம் மாறுகருதாது வேண்டியார் வேண்டிய வேண்டியாங்கு ஈதலாற் கொடைக்குக் கற்பகமும், வட்டவடிவாலும் வெண்மைநிறத்தாலுங் குளிர்ச்சியினுலுங் குடைக்குப் பூர்ணசந்திரனும், தன்னை அகழ்வாரையும் வீழாமல் தாங்குமதுபோலத் தம்மைஇகழ்வாரையும் பொறுத்தலாற் பொறைக்குப் பூமியும் உவமை கூறப்படும். மிக்க காவலுள்ள இந்திரனது நந்தனவனத்தில்

இரப்பவர்க்கு வந்தடைந்து ஏற்றற்குஅரியதாய் ஒருபால் ஒளித்துக்கிடந்து அருமையாய்த் தன்பக்கல்வந்துஏற்றவர்களுக்கு ஏற்றபின்பே ஏற்றவளவே கொடுக்கின்ற கற்பகதரு - அயோத்தியாபுரியில் யாவர்க்கும் வந்தடை தற்குஎளியனுய் விளங்கியிருந்து ஏழைகள்பக்கல் தான்சென்று அவர்கேட் டற்குமுன்பே விரும்பியவளவினும் மிகுதியாய் வெறுப்பக்கொடுப்பா னொரு சக்கரவர்த்தியது கொடைக்கும், தேய்தலும் வளர்தலு மூடைத்தாய் மறு வினையுடைய சந்திரன் - தேய்தலும் வளர்தலு மின்றி எந்நாளும் ஒருநிலேயா யிருக்கின்ற களங்கமற்ற அவனதுகுடைக்கும், தனக்குத் தீங்குசெய்தாரை யுந் தாங்கி எல்லாவற்றையும் பொறுக்கின்ற பூமி - அப்பூமியையும் எளிதில் தோள்களால் தாங்குகின்ற அவனது பொறுமைக்குந் தோற்றன வென்க. (“மண்ணிடை யுயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றித், தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவு, மண்ணறன் குடைமதி யமையு மாதலான், மண்ணிடை மதியினே மிகையி தென்னவே” என்றார் பாலகாண்டத்தும்.) தசரதனது கொடைமுதலியன கற்பகம்முதலியவற்றினும் மேம்பட்டனவாமென்றவாறு.

அரசர்க்கரசனுய் உலகனேத்தையும் ஆண்டும், ஒருபொய்சொல்லுதற்கு அஞ்சிக் கைகேயி சூழ்வினேபின்படி ஸ்ரீராமனேப்பிரிந்து வாய்மைகாத்துப் புத்திரசோகத்தால் நிலேயில்லாத பூதவுடம்பை விட்டு, நிலேயான புகழுடம் பைப்பெற்றதனுல். ‘புரவலர்தம்புரவலனே பொய்ப்பகையே மெய்க்கணியே புகழின்வாழ்வே’என்றார். கொடை, குடை,பொறை என மூன்னர்க் கூறின தற்குவற்பம்.‘இரவலரு நல்லறமும் யானும்’ என்றார்; தினதுகொடையால் இனிதுவாழ்ந்துவந்த இரவலரும், குடையால் நன்குநடந்துவந்த நல்லறமும், பொறையால் மிக்கநட்புப் பெற்றுவந்த யானும் என்க. “ஒருவர் பொறை, இருவர்நட்பு” என்பவாதலின், நட்புக்குப் பொறை காரணமாகக் கூறப்பட் டது. யானென்றது, உலகத்தாரையும் உள்ளிட்டுநின்றது. ‘என்பட’ என் றது. இனி எங்களே ஆதரிப்பாரில்லே யென்பதுகொண்டு. எங்களேவிட்டுப் போக உனக்கு மனந் துணிந்ததோ வென்றற்கு, ‘நீத்தேகினேயே’ என்றார். இனி, பரவு அலரும், கரவு அலரும் எனப்பிரித்து - புகழ்விரிந்த, கரத்த லுண்டாகிய வென்றும் உரைக்கலாம். நெடும்பண்பு - ஒப்புயர்வில்லாத பெருமை. உடுபதி-நக்ஷத்திரங்களுக்குத் தலேவன். களித்துவாழ்தல் - இனித் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமையால். வாழவென்னும் வினேயெச் சம், எங்கினு யென்பதனேடு முடியும். புரவலர்,இரவலர்-புரத்தலில் வல்லவர், இரத்தலில் வல்லவர்; அன்றிக்கே, புரத்தலேயுடையவர், இரத்தலேயுடை யவர்: புரத்தல்-காத்தல், இரத்தல்-ஏற்றல். ஏகாரம்-இரக்கம். பீ-மீ:—[1]தனி.

இதுமுதற் பன்னிரண்டுகவிகள் - பெரும்பாலும் முதல்நான்குசீரும் காய்ச்சீர்களும், மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடிநான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (ககஉ)

உஉ. அலங்கார மென[1]வுலகுயி ரளிக்குந் தனிக்குடையா யாழி சூழ்ந்த, நிலங்காவ [2]லிதுகிடக்க [3]நிலேயாத நிலேயுடைமே னேய

நெஞ்சி, னலங்காண நடந்தனை[4]யோ நாயகனே தீவினையே[5]னண்பி னின்றும், விலங்கானே ஞகலினுல் விலங்கினே னின்னுமுயிர். [6]விட்டி லேனுல்.

(இ - ள்.) நாயகனே - அரசனே! உலகுக்கு - உலகங்களுக்கு, அலங் காரம் என - அழகைத் தருவதென்று சொல்லும்படி (இருந்து), உயிர் அளிக் கும் - உயிர்களைப் பாதுகாக்கின்ற, தனி குடையாய் - ஒப்பற்ற வெண் கொற்றக்குடையை யுடையவனே! (நீ), ஆழி சூழ்ந்த - கடலாற் சூழப்பட்ட, நிலம் - பூமண்டலத்தினது, காவல்இது-காத்தல்செய்தலாகிய இத்தொழில், கிடக்க - நிற்கவும், (அதனைவிட்டு),—நிலையாத - நிலையில்லாத [சஞ்சல மான], நிலை உடையேன் - நிலைமையுடைய எனது, நேயம் நெஞ்சின் - அன்புள்ள மனத்தினது, நலம் - நன்மையை, காண - பரிசோதித்தறியும் பொருட்டு, நடந்தனையோ - (இவ்வுலகம் விட்டுப்) போயினையோ? தீவினை யேன் - பாவத்தொழில்களையுடைய நான், விலங்கு ஆனேன் ஆகலினுல் - விலங்காயிருக்கின்றே ஞகையால், நண்பினின்றும் - சிநேகதருமத்தினின் றும், விலங்கினேன் - தவறினவனுகி, இன்னும் - இன்னமும் [உன்மரணத் தைக் கேட்டறிந்த பின்னும்], உயிர் விட்டிலேன்—; (எ - று.)

விதிவலியாற் சக்கரவர்த்தி இறந்ததைச் சடாயு தன்மனநிலையைப் பரி சோதிக்கும்படி இறந்ததாகக் காரணங்கற்பித்துக் கூறியதனுல், இது - **ஏதுத் தற்குறிப்பேற்றவணி.** விலங்கு - குறுக்காக நடப்பதென்னும் பொருள தாகிய 'திர்யக்' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. காரணவிடுகுறி வகையால் விலங்கான யான் இப்பொழுது உனது நண்பினின்றும் விலங்கி னதனுற் காரணக்குறியாலும் விலங்கானே னென்றதாம்; **பிரிநிலைநவிற்சி யணி.** இன்னுமுயிர்விட்டிலே னென்றதனுல், விலங்கல்லேனுயின், உடனே உயிர்விட்டிருப்பே னென்றதாயிற்று. நிலையாத நிலை - உறுதிப்பாடில்லாத மனநிலையும், நின்றவிடத்தில்நில்லாது எப்பொழுதுந்திரிந்து கொண்டே யிருக்கிற தேகநிலையும். [1]அமுதளிக்கும்என்றபாடத்துக்கு, கீழ்க்கவியிற் குடையைச் சந்திரனேடு ஒப்பிட்டதற்குஏற்ப, இவ்வாறுகூறியதென்க: இங்கே, அமுதளித்தல் - அருள்வைத்துக் காத்தல்: இனி, அமுதம்போ லினிய நிழலைக் கொடுக்கின்ற ஏகதத்ரமென்றுமாம். நிலங்காவலிதுகிடக்க வென்றது - என்மனநிலையைச் சோதிப்பதற்காக நிலங்காத்தலாகிய பெரிய காரியத்தையும் உபேக்ஷித்தாயென்றபடி. நடந்தனை - மங்கலவழக்கு; கீழ்க் கவியில் எகினனென்பதும் அது. தீவினை-உயிர்நண்பனை இழப்பதற்குஏற்ற பாவம். நண்பில் நின்றும்-நட்பிலே நிலைநின்றிருந்தும் என்றுமாம். பி - ம்:— [2]அது. [3]நினையாத. [4]என்னுயகனே. [5]நம்பியின்று. [6]விட்டிலேனே. (ககூஅ)

உரு. தயிருடைக்கு மத்தென்ன வுலகைநிலை சம்பரனைத் தடி ந்த [1]வந்நா, ளயிர்கிடக்குங் கடல் [2]வலயத் தவரறிய நீயுட[3]னு ணினி யென்று, செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய் செப்பினுய் [4]திறம்பா நின்சொ, லுயிர்கிடக்க வுடலினிசும் பேற்றினு ருணர்[5]விற ந்த கூற்றி னரே.

(இ - ள்.) செயிர் கிடத்தல் செய்யாத - குற்றமானது (சிறிதும்) இருத்தலேச்செய்யாத [இல்லாத], திரு மனத்தாய் - பரிசுத்தமான மனத்தையுடையவனே! தயிர் உடைக்கும் மத்து என்ன - தயிர்க்கட்டியை யுடைத்துச் சிதறவடிக்கின்ற மத்துப்போல, உலகை நலி - உலகங்களே வருத்திச் சிதறவடிக்கின்ற, சம்பரனே - சம்பராசுரனே, தடிந்த அ நாள்-வென்ற அக்காலத்தில்,—அயிர் கிடக்கும் கடல் வலயத்தவர் - நுண்மணல்கள்பொருந்திய கடலாற்சூழப்பட்ட பூமியிலுள்ளாரெல்லாரும், அறிய - அறியும்படி,—நீ உடல் (என்று) - உன்னே உடம்பாகவும், நான் ஆவி என்று - என்னே உயிராகவும், செப்பினுப் - சொன்னுப்; நின் சொல் - உன்வார்த்தைகள், திறம் பா - மாறுபடாவாம்; (அங்ஙனமாகவும்), உணர்வு இறத்த - பகுத்தறிவில்லாத, கூற்றினுர் - யமனர், உயிர் கிடக்க - உயிர் (இப்பூமியில்) இருக்க, உடலை - சரீரத்தை, விசும்பு எற்றினுரே - சுவர்க்கத்திற் கொண்டுபோனுரே!

உலகத்துக்குத் தயிரும், சம்பரனுக்கு மத்தும் உவமை. இந்திரனுடன் போர்செய்து வென்று பொன்னுலகத்தை அபகரித்துக்கொண்ட சம்பரனென்னும் அசுரனே, அவனிடந்தோற்றுவந்து தன்னிடங்குறைகூறிய இந்திரனதுவேண்டுகோளால், தசரதசக்கரவர்த்தி பொரச்சென்று கைகேசி சாரத்தியஞ்செய்யவும் ஜடாயு துணைசெய்யவும் பொருது வென்றனனென்பதாம். வலயம்-வட்டம்; கடலென்றகுறிப்பினுற் பூமியை உணர்த்தும். ஜடாயு தன்னே உயிரென்றது - தான் தசரதனிடத்துவைத்திருந்தஅன்பின் மிகுதியைவிளக்குதற்பொருட்டு: தன்னே உயர்த்திக்கூறவேணுமென்ற கருத்தினுலன்று. உடலேவைத்து உயிரைக் கொண்டுபோகும் வழக்கத்திற்கு மாருக, உயிரைவைத்து உடலே எடுத்துப்போனுரென்ற புன்மைகருதி, கூற்றினுரை 'உணர்விறந்தவர்' என்றார். கூற்றினுரென்று பன்மையாற்கூறினதும், இகழ்ச்சியே; ஒருவனேச்சொல்லும் பன்மைச்சொல் உயர்த்துச்சொல்லுஞ்சொல்லன்றேவெனின்,—'தாம்வந்தார் தொண்டனுர்' என்புழிப்போல உயர்சொல் தானே குறிப்புநிலேயால் இழிபுவினக்கிற்றென்பது. இனி, தவறுத னினது சொல்லும் உயிரும் இங்குத் தங்கியிருக்க அறிவில்லாத யமனர் உடலொன்றையுமே கொண்டுபோனுரென்றுமாம். பி-ம்:—[1]ஞாளாய். [2]வலயத்தயல். [3]தான். யான். [4]திறம்பாய். [5]உடைய. (ககக)

உச.—சடாயு தன்வம்சாவளியைக் கூறத்தொடங்குதல்.

எழுவதோ நிசைபெருக விப்பொழுதே யொப்பரிய வெரியுந் தீயின், [1]விழுவதே நிற்கமட மெல்லியலார் தம்மைப்போ னிலத்தின் மேல்வீழ்ந், [2]தழுவதே யானென்னு [3]வறிவுற்று னெனவெழுந் தாங் கவரை நோக்கி, முழுவதே [4]மூலகுடையான் [5]மைந்தன்மீர் கேண்மினென முறையிற் [6]சொல்வான்.

(இ - ள்.) 'யான்—, எழுவது - உண்டாவதாகிய, ஓர் இசை-ஒப்பற்ற கீர்த்தி, பெருக - வளரும்படி, இப்பொழுதே—, ஒப்பு அரிய - ஒப்பில்லாத,

எரியும் தீயின்-எரிகின்றநெருப்பில்,விழுவதே நிற்க-விழுவதுவேயொழிய,—மடம் மெல்லியலார்தம்மை போல் - பேதைமையையுடைய பெண்களைப் போல, நிலத்தின்மேல் வீழ்ந்து-பூமியின்மீது விழுந்து, அழுவதே-அழுவது தகுமோ?' என்னு-என்று, அறிவுற்றான் என-அறிந்தவன்போல, (அழுதலைத் தவிர்த்து), எழுந்து - எழுந்திருந்து- ஆங்கு-அப்பொழுது, அவரை நோக்கி - அவ்விராமலட்சுமணர்களைப் பார்த்து, 'முழுவது ஏழ் உலகு உடையான் - ஏழுலகங்கள் முழுவதையும் உரியபொருளாகவுடைய [சக்கரவர்த்தியான] தசரதனது, மைந்தன்மீர் - குமாரர்களே! கேண்மின் - கேளுங்கள்,' என - என்று, முறையின்-முறைமையாக, சொல்வான்—; (எ - று.)

அன்பர் இறந்தகாலத்து மண்ணில்விழுந்து புரண்டுஅழுதல், பெண்களுக்கு இயற்கை. **பி-ம்:**—[1]விழுவதோ. [2]அழுவதோ. [3]அழிவுற்றான்னென்ன வெழுந்தவரை. [4]உலகுடைய. [5]மைந்தர்காள், முன்பினீர். [6]சொன்னன்.(உ00)

உரு.—இதுமுதல் ஆறுகவிகள் - ஒருதோடீர்: சடாயு தனதுவம்சாவளியைக் கூறியமையைத் தெரிவிக்கும்.

தக்கன்[1]மனை வயிற்றுதித்தா ரைம்பதின்மர் தடங்கொங்கைத் தைய லாருட், டொக்கபதின் மூவரையக் காசிபனும் புணர்ந்தனனத் தோகை மாருண், மிக்கவதி திப்பெயராண் [2]மூப்பத்து மூக்கோடி விண்ணே ரீந்தாண், மைக்கருங்கட் டிதியென்பா ளதினிரட்டி யசுரர்தமை வயிறு வாய்த்தாள்.

(இ - ள்.) தக்கன் - தக்ஷப்பிரஜாபதியினது, மனை-மனைவியின், வயிறு-வயிற்றில், உதித்தார்-தோன்றியவர்களான, ஐம்பதின்மர்-ஐம்பதுபேராகிய, தட கொங்கை தையலாருள் - பெரிய தனங்களையுடைய மகளிர்களுள், தொக்க - ஒருவகுப்பாகச்சேர்ந்த, பதின்மூவரை - பதின்மூன்றுபெண்களை, அ காசிபனும் - அந்தக் காசியபப்பிரஜாபதியும், புணர்ந்தனன் - மணந்து கூடினனன்; அ தோகைமாருள் - அந்தப் பெண்களுள், மிக்க - சிறந்த, அதிதி பெயராள் - அதிதியென்னும் பெயரையுடைய பெண், மூப்பத்துமூக்கோடி விண்ணோர் - மூப்பத்துமூன்றுகோடி தேவர்களை, ஈந்தாள் - பெற்றனள்; மை கருங் கண் - மை யிட்ட கரிய கண்களையுடைய, திதி என்பாள் - திதியென்பவள், அதின் இரட்டி அசுரர்தமை - அத்தொகையினும் இரண்டுமடங்காகிய [அறுபத்தாறுகோடி] அசுரர்களை, வயிறு வாய்த்தாள்-பெற்றனள்;(எ-று.)

தக்கன்=தக்ஷன். தையலார் - அழகினையுடையவர்; தையல் - அழகு. காசிபன் - காஸ்யபன். தோகைமார் - மயில்போலுஞ்சாயலையுடையார். அசுரரென்பதற்கு - அமிருதம்பெறுதவர்க ளென்றும், தேவர்களுக்குப் பகைவர்க ளென்றும், பகைவருயிரைக் கவர்பவ ரென்றும் பொருள் கொள்ளத்தகும். வயிறுவாய்த்தல் - கருப்பமாதல். **பி - ம்:**—[1]நனி. [2]மூக்கோடிசுர ருடன்விண்டுவையும், மூக்கோடிசுரர்விண்டுவையும். (உ0க)

உசு. தானவரே முதலோரைத் தனுப்பயந்தாண் மதியென் பாண் [1]மனிதர் தம்மோ, டானவரு டங்களவை யடைவடைவே பயந்தனளாற் சுரபி யென்பா, டேனுவுடன் [2]சராசரமற் றுளவாய பிறபயந்தா டெரிக்குங் காலை,மானமுடைக் குரோதவசை கழுதை மரை [3]யொட்டகமும் வயிறு வாய்த்தாள்.

(இ - ள்.) தனு - தனுவென்பவள், தானவரே முதலோரை - தானவர் முதலியவர்களை, பயந்தாள் - பெற்றாள்; மதி என்பாள் - மதியென்பவள், மனிதர்தம்மோடு - மனுஷ்யர்களோடு, ஆன - பொருந்திய, வருடங்கள் அவை - வர்ஷங்களையும், அடைவு அடைவே - முறைமுறையாக, பயந்தனள் - பெற்றாள்; சுரபி என்பாள் - சுரபியென்பவள், தேனுவுடன் - பசுக்களுடனே, மற்று உள ஆய பிற சரஅசரம் - இன்னுமுள்ளனவாகிய பிறசராசரங்களையும், பயந்தாள் - பெற்றாள்; தெரிக்கும் காலை - தெரியச்சொல்லுமிடத்து, மானம் உடை - மானத்தையுடைய, குரோதவசை - குரோதவசையென்பவள், கழுதை - கழுதைகளையும், மரை - மான்களையும், ஒட்டகமும் - ஒட்டகங்களையும், வயிறுவாய்த்தாள் - பெற்றாள்; (எ - று.)—ஆல் - அசை.

[1]மனிதர்தம் மூடானவருணங்களவயவத்தடைவே பயந்தனள் என்ற பாடத்துக்கு—மனிதர்தம்மூடுஆன வருணங்கள் அவயவத்துஅடைவே பயந்தனளென்றது-பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரரென்னும் வருணங்களாகப் பிரிக்கப்பட்ட மனிதர்களை முறையே முகத்தினின்றும், தோள்களினின்றும், தொடைகளினின்றும், பாதங்களினின்றும் பெற்றாளென்றபடி. வருடங்கள் - வர்ஷங்கட்கு அபிமானிகளான தேவதைகளென்க. மானம் - ஈனம்; இது, மற்றைப் பெண்குணங்களுக்கும் உபலக்ஷணம். குரோதவசை-கோபத்துக்கு வசப்பட்டவள். பி - ம்:—[2]கந்தருவமற்றுள்ள. [3]ஒட்டைபிற. ()

உஎ. மழைபுரையுங் குழல்விநதை [2]வானிடிமி னருணனுடன் [4]வயிநதேயன், றழைபுரையுஞ் சிறைக்கூகை பாறுமுதற் பெரும் பறவை தம்மை யீன்றாள், ளிழைபுரையுந் தாம்பிரையூர்க் குருவிசிவல் காடை [4]முதல் பிறவு மீன்றாள், கழையெனுமக் கொடிபயந்தாள் கொடியுடனே செடிமுதலாக் கண்ட வெல்லாம்.

(இ - ள்.) மழை புரையும் - மேகத்தையொக்கின்ற, குழல் - கூந்தலையுடைய, விநதை - விநதையென்பவள், வான் - மேகத்தேதோன்றுகின்ற, இடி - இடியும், மின் - மின்னலும், அருணனுடன் - அருணனும் (ஆகிய இவற்றுடன்), வயிநதேயன் - கருடனும், தழை புரையும் சிறை - தழைகளையொக்கின்ற சிறகுகளையுடைய, கூகை - கோட்டானும், பாறு - பருந்தும், முதல் - முதலான, பெரும் பறவைதம்மை - பெரிய பறவைகளை, ஈன்றாள் - பெற்றாள்; இழை புரையும் - (மகளிர்க்கு) ஆபரணத்தையொக்கின்ற[மகளிர்க்குட் சிறந்த], தாம்பிரை - தாமிரையென்பவள், ஊர்க்குருவி - ஊர்க்குருவிகளையும், சிவல் - கௌதாரிகளையும், காடை - காடைகளையும்,

முதல் - முதலிய, பிறவும் - பிறபலவற்றையும், ஈன்ருள் - பெற்ருள்; கழை எனும் அ கொடி-கழையென்னும் பெயரையுடைய அந்தப் பூங்கொடிபோன் றவள், கொடியுடனே செடி முதல்ஆ - கொடியுஞ் செடியும் முதலாக, கண்ட எல்லாம் - காணப்படுகின்றவற்றையெல்லாம், பயந்தாள்-பெற்ருள்.

வயிரதேயன் = வைரதேயன்; விரதையின் மக னென்று பொருள். கூகை-கூக மென்னும் வடசொல்லின் சிதைவு; கூவென்று ஒலிசெய்கின்ற தென்று பொருள். தாம்பிரை - வடசொற்றிரிபு. கொடி - உவமவாகுபெயர்; மேற்கவியில் 'மின்' என்பதும் அது. பி - மீ:—[1]புரைபூங். [2]வனி. [3]வயினன் மற்றை. [4]பல. தாம்பிரையென்று வருமிடங்களில் 'தாம்பிரை' என்று காணப்படுகின்றது. (உ0ச)

உஅ. வெருட்டியெழுங் கண[1]பணத்தின் வியாளமெலாங் கத் துருவா மின்னு மீன்ருண், [2]மருட்டிகழு மொருதலேய புயங்கமெ லாஞ் சுதையென்னு மாது தந்தா, ளருட்டையெனும் [3]வல்லிதந் தா ளோந்தி[4]யுடும் பணில்கண்முத லாய வெல்லாங், [5]தெருட்டிடுமா தினேயீந்தாள் செலசரமா கிய[6]பலவுக் தெரிக்குங் காலே.

(இ - ள்.) தெரிக்கும் காலே - ஆராய்ந்துசொல்லுமிடத்து,—கத்துரு ஆம் - கத்துருவென்பவளாகிய, மின்னும் - மின்னல்போன்றவளும், வெருட்டி எழும் - (பிறரை) அச்சமுறுத்தியெடுக்கின்ற, கணம் பணத்தின்-கூட்டமாகிய படங்களேயுடைய, வியாளம் எல்லாம் - சர்ப்பங்களேயெல் லாம், ஈன்ருள் - பெற்ருள்; சுதை என்னும் மாது - சுதையென்னும் பெண், மருள் திகழும் - அச்சத்தைச்செய்து விளங்குகின்ற, ஒரு தலேய - ஒருதலேயையுடைய, புயங்கம் எலாம் - நாகங்களேயெல்லாம், தந்தாள் - பெற்ருள்; அருட்டை எனும் - அரிஷ்டையென்கின்ற, வல்லி - கொடி போன்றபெண், ஓந்தி - ஓணனும், உடும்பு - உடும்பும், அணில்கள் - அணிற்பிள்ளேகளும், முதல் ஆய எல்லாம் - முதலானவற்றை யெல்லாம், தந்தாள்-பெற்ருள்;இனே-இனேயென்கின்ற,தெருட்டிடும் மாது-(கண்டவர்கள் மனத்தைத்) தெளிவிக்கின்ற பெண், செல சரம் ஆகிய பலவும் நீர்வாழ்வன வாகிய பலவற்றையும், ஈந்தாள் - பெற்ருள்; (எ - று.)

கணபணம் - இருதலே, ஐந்தலே, எழுதலே, ஒன்பதுதலே, ஆயிரந்தலே முதலியன. புயங்கம் - புஜங்கம்; வக்கிரமாகச் செல்வது: அன்றிக்கே, கால்களால் நடவாது மார்பினுல்நகர்வது. செலசரம் - ஜலசரம்; ஜலத்திற் சஞ்சரிப்பன: மீன்முதலியன. பி-மீ:—[1]பணப்பை. [2]மருட்டிகெழு. [3]அவ ளளித்தாள். [4]உடும்பவைமுதலவன்ன. [5]தெருட்டிருமாதினேழை. [6]பிறவும்.(உ0ச)

உக. அதிதிதிதி தனுவருட்டை சுதைதகழையே சுரபியணி விரதை யான்ற, மதியினே கத்துருவுடனே சுரோதவசை தாம்பிரை யா மடரு லார்கள், விதிமுறையே யினையனேத்தும் பயந்தனர்கள் விரதைசுத னருணன் மென்றேட், புதுமதிசேர் நுதலரம்பை தனேப் புணர வுதித்தனம்யாம் [1]புவனி மீதே.

(இ-ள்.) அதிதி—, திதி—, தனு—, அருட்கட்—, சுதை—, கழை—, சுரபி—, அணி - அழகிய, விநதை—, ஆன்ற - சிறந்த, மதி—, இளை—, கத்துரு—, உடனே-ஆகிய இவர்களுடனே, குரோதவசை—, தாம்பிரை—, ஆம் - ஆகிய, மடம் நலார்கள்-அழகியபெண்கள், விதி முறையே - முறைப் படியே, இவை அனைத்தும் - இவை யெல்லாவற்றையும், பயந்தனர்கள் - பெற்றார்கள்; (அவர்களுக்குள்), விநதை சுதன் - விநதையின் மகனுகிய, அருணன்—, மெல் தோள் - மெல்லிய தோள்களையும், புது மதி சேர் நுதல் - இளம்பிறையை யொக்கின்ற நெற்றியையுமுடைய, அரம்பையனை - ரம்பை யென்னுந் தெய்வப்பெண்ணை, புணர - சேர, யாம்—, புவனியிலே-இவ்வுலக த்திலே, உதித்தனம் - தோன்றினேம்; (எ - று.)

தன்தமையனுகிய சம்பாதியையும் உளப்படுத்தி, 'யாம்'என்றான். "புண் டரிக மலரதன்மேற் புவனியெல்லாம் படைத்தவனே" என்பது முதலாகப் பெரியாரும் பணித்தலால், புவனியென்பதும் பூமிக்கு ஒருபெயர்; இனி, புவனத்தின்விகார மென்றலும் ஒன்று. பி-ம்:—[1]புவியின். (உ0டு)

க.0. அருணன்றன் புதல்வனியா னவன்படரு மூலகெல் லாம் [1]படர்வே னுழி, [2]யிருண்மொய்ம்பு கெடத்துரந்த தயரதற்கின் னுயிர்த்துணைவ னிமையோ ரோடும், வருணங்கள் [3]வகுத்திட்ட காலத்தே வந்துதித்தேன் கழுகின் [4]மன்னன், றருணங்கொள் பே ரொளியீர் சம்பாதி [5]பின்னர்வரு சடாயு வென்றான்.

(இ - ள்.) தருணம் கொள் - இளமையைக்கொண்ட [மேன்மேல் வள ருந்தன்மையையுடைய], பேர் ஒளியீர் - மிக்கஒளியினை யுடையவர்களே! யான்—, அருணன்தன் புதல்வன் - அருணனது புத்திரன்; அவன் பட ரும் - அவன் செல்லுகின்ற, உலகு எல்லாம் - உலகங்களிலெல்லாம், படர் வேன் - செல்லுந்தன்மையை யுடையேன்; ஆழி - ஆஞ்ஞாசக்கரத்தை, இருள் மொய்ம்பு கெட - (பகைவர்களாகிய) இருளின்வலிமை கெடும்படி, துரந்த - (உலகமுழுவதுஞ்) செலுத்திய, தயரதற்கு—, இன் உயிர் துணை வன் - இனிய பிராணசினேகிதன்; இமையோரோடும் - தேவர்களுடனே, வருணங்கள் - மற்றைச்சாதிகளையும், வகுத்திட்ட காலத்தே - வகைப்படுத் திய காலத்திலே, வந்து உதித்தேன் - வந்து தோன்றியவன்; கழுகின் மன் னன் - கழுகுகளுக்கு அரசன்; சம்பாதி பின்னர் வரு - சம்பாதியென்பவ னது பின்னே தோன்றிய, சடாயு - ஜடாயுவென்னும் பெயருடையேன், என்றான்—; (எ - று.)

ஒளியை மறைப்பது பற்றி, பகைவரை 'இருள் 'என்றான். தருணம் - யௌவநம். இனி, யௌவனத்தையும் ஒளியையு முடையீ ரென்றுமாம். சம்பாதி யென்பதற்கு, நன்றுய்ப்பறத்தலுடையவ னென்றுபொருள். பி-ம்:— [1]அடைவேன். [2]இருணன்கு. [3]விதித்திட்ட. [4]வேந்தன். [5]உடன்பிறந்த. (உ0சு)

க.க.—சடாயுவின்வரலாற்றைக் கேட்ட ராமலக்ஷ்மணர் மகிழ்தல்.

ஆண்டவனீ தரைசெய்ய வஞ்சனித்த மலர்க்கையா ரன்பி னேறு, மூண்டபெருந் [1]தானபத்தான் முறைமுறையி னிறைமலர்க்

கண் மொய்த்த [2]நீரார், பூண்டபெரும் புகழ்நிறுவித் தம்பொருட்டாற் [3]பொன்னுலகம் புக்க தாதை, மீண்டனன்வந் தானவனைக் கண்டனரே யொத்தனரவ் விலங்கற் றோளார்.

(இ - ள்.) அவன் - அச்சடாயு, ஆண்டு - அப்பொழுது, ஈது - இவ்வார்த்தையை, உரைசெய்ய-சொல்லியவளவில்,— அ விலங்கல் தோளார் - மலைபோலுந் தோள்களையுடைய அவ்விராமலக்ஷ்மணர்கள், அஞ்சலித்த - கூப்பிய, மலர் கையார் - தாமரைமலர்போலுங் கைகளையுடையவர்களாய்,— அன்பினெடும் - அன்புடனே, மூண்ட - வளர்ச்சிபெற்ற, பெருந் துன்பத்தால் - மிக்க வருத்தத்தினால், முறை முறையின் - முறைமையாக முறைமையாக [மேன்மேலும்], நிறை - நிறைந்த, மலர் கண் - தாமரைமலர்போலுங் கண்களில், மொய்த்த - மிகுதியாய்த்தோன்றிய, நீரார் - கண்ணீரையுடையவராய்,—பூண்ட - மேற்கொண்ட, பெரும் புகழ் - மிக்ககீர்த்தியை, நிறுவி - (இவ்வுலகத்தில்) நிலைநிறுத்தி, தம்பொருட்டால் - தமக்காக, பொன் உலகம் - தேவலோகத்தை, புக்க - அடைந்த, தாதை - (தமது) தந்தையாகிய தசரதன், மீண்டனன் வந்தான் அவனை-திரும்பிவந்தவனை, கண்டனரே-பார்த்தவர்களையே, ஒத்தனர் - போன்றார்கள் [மிக மகிழ்ந்தார்கள்]; (எ - று.)

அன்பினெடு அஞ்சலித்த வென்றுங் கூட்டலாம். வாய்மைகாத்தற் பொருட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களை வனத்திற்குஅனுப்பிப் பின்னர்ப் புத்திர சோகத்தால் இறந்தமைபற்றி, 'புகழ்நிறுவித் தம்பொருட்டாற் பொன்னுல கம்புக்க தாதை' என்றார். பி - ம்:—[1]துன்பத்தார். [2]நீரால். [3]மேல். (உ0எ)

கஉ.—சடாயு தான் அக்கினிபிரவேசஞ்செய்வதாக அன்புமொழிகூறுதல்.

மருவினிய குணத்தவரை [1]வருசிறகா லுறத்தழுவி [2]மக்காணீரே, யுரியகடன் வினையேற்கு முதவுவீ ருடலிரண்டுக் குயிரொன் [3]றுனன், பிரியவுந்தான் பிரியாதே யினிதிருக்கு முடற் [4]பொறையாம் [5]பீழை பாரா, தெரியதனி னின்றேபுக் கிறவேனே லித்துயர மறவே னென்றான்.

(இ - ள்.) (பின்னர்ச் சடாயு),—மருவு இனிய - கலப்பதற்கு இனியதான, குணத்தவரை - திருக்கலியாணகுணங்களையுடைய அவ்வீரர்களை, வரு சிறகால் - (தன்) வளர்ந்துவருகின்ற சிறகுகளால், உற தழுவி - நன்றாய்த் தழுவிக்கொண்டு, 'மக்காள் - பிள்ளைகளே! நீரே - நீங்களே, வினையேற்கும் - தீவினையையுடைய எனக்கும், உரிய கடன்-(இறந்தபின்பு) செய்தற்குஉரிய கடமைகளை, உதவுவீர் - செய்யுங்கள்; உடல்இரண்டுக்கு-இரண்டு உடம்புக்கு, உயிர் ஒன்று ஆனான் - ஒருயிராகிய தசரதன், பிரியவும் - பிரிந்துபோகவும், தான் பிரியாதே-தான் நீங்காமல், இனிது இருக்கும்-இனிமையாகஇருக்கின்ற, உடல் பொறை ஆம்-தேகபாரமாகிய, பீழை - துன்பத்தருவதனை, பாராது - பாராமல், எரிஅதனின் - அக்கினியில், இன்றே-இன்று தானே, புக்கு - பிரவேசித்து, இறவேன்எல் - இறவாமற்போவேனுனல், இ துயரம் - இத்துன்பத்தை, மறவேன் - மறக்கமாட்டேன்', என்றான்—.

நண்பனிறந்த துன்பம் இலதாம்படி யானும் எரியில் வீழ்ந்து இறப்பே னென்பதாம். நண்புரிமையை நன்குசெய்யாமைபற்றி, உடலை 'பொறை' என்றான். பிழை-பீடா என்னும் வடமொழியின்சிதைவு. பி - ம்:—[1]இரு. [2]மக்கள். [3]அன்னன். [4]பொறையால். [5]பிழைப்பாராரோ. (உ0அ)

வே று.

ஈங்.—இதுமுதல் நான்குகவிகள் - ராமலக்ஷ்மணர் கண்ணீர்பெருகநின்று சடாயுவை இறவாதிருக்குமாறு வேண்டுதலைத் தெரிவிக்கும்.

என்று சைத்த வெருவை யரசனைத்
துன்று தாரவர் நோக்கித் தொழுதுக
ணொன்று முத்த முறை [1]முறை யாயுக
ணின்று மற்றின்ன நீர்மை நிகழ்த்தினர்.

(இ - ள்.) என்று உரைத்த - என்று சொன்ன, எருவை அரசனை-கழுகுக்குஅரசனுகிய சடாயுவை, நோக்கி—, துன்று தாரவர் - நெருங்கிய மாலையையுடைய அவ்வீரர்கள், தொழுது - வணங்கி,—கண் - கண்களில், ஒன்றும் - பொருந்திய, முத்தம்-முத்துப்போன்ற ஜலம், முறை முறையாய் உகமேன்மேலுஞ் சிந்தும்படி, நின்று—,—இன்ன-இவ்வார்த்தைகளை, நீர்மை - அன்போடு, நிகழ்த்தினர்-சொன்னர்கள்; (எ - று.)—அதுமேற்கூறுகின்றார்.

முத்தம் - உவமவாகுபெயர். மற்று - அசை. [1]உறையாயுக என்னும் பாடத்துக்கு - மழைத்தாரைபோலப் பொழிய வென்க. இச்செய்யுள் அச்சிட்ட பிரதிகளிலிருப்பினும் பலஏட்டுப்பிரதிகளிலில்லை.

இதுமுதற் பதினறுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடிகான்குகொண்ட கலிவிருத்தங்கள். (உ0ஈ)

ஊச. உய்விடத் துதவற் குரியா னுந்தன்
மெய்[1]வி டக்கரு தாதுவிண் ணேறினு
னிவ்வி டத்தினி லெம்பெரு மாஅனைமைக்
கைவி டிற்பிறி னார்களை கண்ணுளார்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உய்விடத்து - பிழைக்கவேண்டும்பொழுது [துன்பம் நேருங் காலத்தில்], உதவற்கு உரியானும் - (எங்களைக்) காப்பாற்றித் துணைசெய்தற்குஉரிய சக்கரவர்த்தியும், தன் மெய் விட கருதாது - தனக்குஉரிய சத்தியத்தைக் கைவிட எண்ணுமல், விண் ஏறினன் - தேவலோகமடைந்தான்; இ இடத்தினில் - இப்பொழுது, எம்பெருமாஅன் - எமதுதலைவனே! எமை-எங்களை, கைவிடின் -(நீயும்) கைவிட்டுப்போனால், பிறை - பின்பு, நமக்கண் உளார் - (எங்களுக்குப்) பற்றுக்கோடாக உள்ளவர், யார் - (வேறு) யாவர்?

எம்பெருமாஅன், அளபெடை - விளியுருபு. பி-ம்:—[1]விடற்கரிதாகி.

கூடு. [1]தாயு நீங்கருந் [2]தந்தையுந் [3]றண்ணகர்
வாயி னீங்கி வனம்புகுந் தெய்திய
[4]நோயு நீங்கிய நுண்ணிய வெங்களே
நீயு நீங்குதி யோநெறி நீங்கலாய்.

(இ - ள்.) நெறி நீங்கலாய் - அறநெறியினின்றுந் தவறுதவனே! (நாங்கள்), நீங்க அரு - பிரிதற்கரிய, தாயும் - தாயையும், தந்தையும் - தந்தையையும், நீங்கி—,—தண்ணகர் வாயின் - குளிர்ந்த நகரத்தினின்றும், வனம் புகுந்து - காட்டைச் சேர்ந்ததனால், எய்திய - அடைந்த, நோயும்-வருத்தத்தையும், நீங்கிய - (உன்னைக்கண்டதனற்) போக்கிய, நுண்ணிய-எளியரான, எங்களே—, நீயும் - (எம்துயர்நீங்கக் காரணமான) நீயும், நீங்குதியோ - விட்டுப் பிரியக்கடவையோ? (எ - று.)

தாய்தந்தையரை விட்டுப்பிரிந்து வனமெய்தியதனற் பெருவருத்தம் எங்கட்குஉளவாக, உன்னைக் கண்டதனால் அவ்வருத்தம் நீங்கினேம்: அப்படிப்பட்ட நீ எம்மைவிட்டுப்பிரிந்து செல்லல் தக்கதன்றென்றனனென்க. நீங்கரு - மத்திமதீபம். நீங்குதியோ - நீங்குவது தகுமோ வென்றவாறு. பி-ம்:—[1]தாயின். [2]தந்தையின். [3]தன். [4]நோயினீங்கினெநுன்னினென்,நோயு நீங்கியநுண்ணிய. (உகக)

கூசு.—'நீங்கள் உமதுநகரஞ்சேர்ந்தபின்பு இறப்பேன்' என்று சடாயு கூறுதல்.

[1]என்று [2]சொல்ல [3]விருந்தழி நெஞ்சினன்
நின்ற வீரரை நோக்கி நினைந்தவ
னன்ற தென்னி னயோத்தியி [4]னீயன்மீர்
சென்ற பின்னவற் சேர்குவென் யானென்றான்.

(இ - ள்.) என்று சொல்ல - என்று (ராமலட்சுமணர்) சொல்ல, இருந்து அழி நெஞ்சினன் - அழிந்தவண்ணமிருக்கின்ற மனத்தையுடையனாகி, நின்ற—,வீரரை - ராமலக்ஷ்மணரை, நோக்கி - பார்த்து,—அவன் - அந்தச் சடாயு, நினைந்து - (அவர்களது நிலையை) ஆலோசித்து, 'ஐயன்மீர்-பிள்ளைகளே! அது அன்று என்னின்-(இப்பொழுதே யான் இறக்கின்ற) அச்செயல் (உங்களுக்கு) உடன்பாடன்றுகுமாயின், அயோத்தியின் சென்றபின் - (நீங்கள்) அயோத்தியாபுரியிற்போய்ச் சேர்ந்தபின்பு, யான்—, அவன் சேர்குவென் - அந்தத் தசரதசக்கரவர்த்தியை அடைவேன் [இறப்பேன்]', என்றான்—; (எ - று.)

அயோத்தி - அயோத்யா என்னும் வடசொல்லின் திரிபு; சண்டையிடுதற்குக்கூடாததென்பது பொருள்: அகழி, மதில், ஆயுதம், சேனை முதலியவற்றால் தக்க காவலுடைய தென்பது கருத்து; இதனால், அந்நகரத்தையாண்ட சக்கரவர்த்திகளது வீரத்தன்மை தொனிக்கின்றது. பி - ம்:—[1]என்ற. [2]சொல்லர். [3]இறந்தழிநெஞ்சினர் [4]ஐயீர். (உகஉ)

கூ எ.—இதுவும் அடுத்த கவியும் - சடாயு ராமலக்ஷ்மணர்களை வனத்திற்றுவந்த காரணம் விளவுதலைத் தெரிவிக்கும்.

வேந்தன் விண்ணடைந் தானெனின் வீரர்நீ
ரேந்து ஞால மினிதளி யாதிவட்
போந்த தென்னே புகுந்தவென் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீரென்றான்.

(இ - ள்.) 'வேந்தன் - சக்கரவர்த்தி, விண் அடைந்தான் எனின் - சுவர்க்கத்தை யடைந்தானாயின், வீரர் நீர் - வீரர்களாகிய நீங்கள், ஏந்து ஞாலம் - தாங்குதற்கு [ஆளுதற்கு] உரிய இராச்சியத்தை, இனிது அளியாது - இனிமையாய்க் காவல்செய்யாமல், இவண் - இவ்விடத்தில் [வனத்தில்], போந்தது - வந்தது, என்னே - என்னகாரணத்தால்? என் புந்தி-எனது அறிவு, போய் காந்துகின்றது - (நீங்கள் இவ்வாறு வனத்தில்வந்துவருந்துவதனால்) மிகவும் வெதும்புகின்றது; (ஆகையால்), புகுந்த - நடந்தவரலாறுகளை, கட்டுரையீர் - உறுதியாய்ச் சொல்லுங்கள்,' என்றான்—; (எ - று.) (உகஈ)

கூ உ. தேவர் தானவர் திண்டிற ஞகர்வே
றேவ ராக விடரிழைத் தாரெனிற்
பூவ ராவு பொலங்[1]கறை வேலினீர்
[2]சாவ ராக்கித் தருவெ னரசென்றான்.

(இ - ள்.) 'பூ அராவு-(இலைவடிவமாக இருக்குமாறு) அராவிக்கூர்மை செய்யப்பட்ட, பொலம்-அழகிய, கறை-உதிரக்கறையையுடைய, வேலினீர்-வேலையுடையவர்களே!—திண் திறல்-மிக்க வலிமையையுடைய, தேவர்(ஆக)-தேவர்களாயினும், தானவர் (ஆக) - அசுரர்களாயினும், நாகர்(ஆக) - பாதாள லோகவாசிகளாயினும், வேறு எவர் ஆக - வேறு எவராயினும், இடர் இழைத்தார் எனின் - (உங்களுக்குத்) துன்பத்தைச் செய்திருப்பாராஞல், சாவர் ஆக்கி - (அவர்களை) இறந்தவராகச்செய்து [கொன்று], அரசு - இராச்சியத்தை, தருவென் - (உங்களுக்குக்) கொடுப்பேன்,' என்றான்—; (எ - று.)

வேறேவ ரென்றது - நிலவுலகத்தவரை. விகற்பப்பொருளதாகிய ஆகவென்பது, பிறவிடத்துஞ் சென்று இயைந்தது. பி-ம்:-[1]கதிர். [2]சாவது.(உகச)

இராமன் தூறிப்பிக்க, லக்ஷ்மணன் வரலாறு கூறுதல்.

கூ ஊ. தாதை கூறலுத் தம்பியை நோக்கினன்
சீதை கேள்வ னவனுந்தன் சிற்றவை
மாத ராவ்வந்த செய்கை வரம்பிலா
வோத வேலை யொழிவின் றுணர்த்தினன்.

(இ - ள்.) தாதை-சடாயு, கூறலும் - (இவ்வாறு) சொன்னவளவில்,—சீதை கேள்வன் - ஸீதாபதியாகிய ஸ்ரீராமன், தம்பியை - லக்ஷ்மணனை, நோக்கினன் - (குறிப்பாய்ப்) பார்த்தருளினன்; அவனும் - அவ்விலக்குமணனும்,

தன் சிற்றவை மாதரால் - தன்சிறியதாயாகிய கைகேயியால், வந்த - உண்டான, செய்கை - காரியமாகிய, வரம்பு இலா - அளவில்லாத, ஒதம் வேலை - பெரிய கடலை, ஒழிவு இன்று - சிறிதுந்தவிர்தலில்லாமல், உணர்த்தினன் - தெரியச் சொன்னன்; (எ - று.)

தசரதற்குப் பிராணசிநேகிதனுதல்பற்றி, சடாயு, ஸ்ரீராமனுக்குத் தந்தைமுறையாவன். "நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற், கண்ணல்லதில்லைபிற"என்றவாறு குறிப்பறிதற்கு நுண்கருவி நோக்க மாதலின், ஸ்ரீராமன் ஜடாயுவுக்கு நடந்தவிருத்தாந்தத்தை முழுவதும்கூறும்படி நோக்காற் குறிப்பித்ததனை இங்கிதஜ்ஞனுகிய லக்ஷ்மணன் அறிந்து அவ்வாறே கூறினனென்பது. அவை=அவ்வை - ஔவை: தாய். பி-ம்:—[1]ஒழிவின்.

கூ.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: சடாயு இராமனைப் புகழ்ந்து கொண்டாடுதலைத் தெரிவிக்கும்.

உந்தை யுண்மைய னுக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
யெந்தை வல்ல தியாவர் வல்லாரெனை.

(இ - ள்.) (பின்னர்ச் சடாயு ஸ்ரீராமனைநோக்கி): 'உந்தை - உன்தந்தையை, உண்மையன் ஆக்கி - சத்தியமுடையவனுகச்செய்து, உன் சிற்றவை - உன்சிறியதாய், தந்த - சொன்ன, சொல்லை-வார்த்தையை, தலை கொண்டு - தலைமேற்கொண்டு, (அங்ஙனமே), தாரணி - பூமியை, வந்த - உடன்பிறந்த, தம்பிக்கு - பரதனுக்கு, உதவிய - கொடுத்த, வள்ளலே - ஈகைத்தன்மையுடையவனே! எந்தை - என்னப்பனுகிய நீ, வல்லது - வல்லவனுகிச்செய்த காரியத்தை, வல்லார் - செய்யவல்லவர், யாவர் - வேறு எவர்?' எனு-என்று, (எ - று.)—'புல்லி மோந்து' என அடுத்தகவியோடு தொடரும்.

தாரணி-தூரணி யென்பதன் விகாரம். எந்தை - முன்னிலைப் படர்க்கை. இனி, எந்தையென்பதனை அண்மைவிளியாக்கொண்டு, நீவல்லது யாவர் வல்லாரெனவுமாம். (உகசு)

சக. அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்தகண் ணீரினன்
வல்லை மைந்தவம் மன்னையு மென்னையு
மெல்லை யில்புக ழெய்துவித் தாயென்றான்.

(இ - ள்.) அல்லி - இதழ்களையுடைய, தாமரை - செந்தாமரைமலர் போன்ற, கண்ணினை-கண்களையுடைய ஸ்ரீராமனை, அன்பு உறமிக்கஅன்பினுல், புல்லி - தழுவிக்கொண்டு, மோந்து - உச்சிமோந்து, பொழிந்த கண்ணீரினன் - சொரிந்த ஆனந்தக்கண்ணீரையுடையவனுய்,—'வல்லை - வல்லவனுகிய, மைந்த - குமாரனே! (நீ), அ மன்னையும் - அச்சக்கரவர்த்தியையும்,

என்னையும்—, எல்லே இல் புகழ் - அளவில்லாத கீர்த்தியை, எய்துவித்தாய்-அடையச்செய்தாய்,' என்றான்—; (எ - று.)

தாமரை கண்களுக்கும், அல்லி அக்கண்களின் இமைக்கும் உவமை. வல்லே - விரைவிலே யென்றுமாம். (உகஎ)

சுஉ —சடாயு சீதையை யாவளென வினவுதல்.

பின்ன ரும்மப் பெரியவன் பெய்வளை
யன்ன மன்ன [1]வணங்கினை நோக்கினன்
மன்னர் மன்னவன் மைந்தவிவ் வாணுதல்
லின்ன ளென்ன வியம்புதி யாலென்றான்.

(இ - ள்.) அ பெரியவன்-அச்சடாயு, பின்னரும்-பின்பும், பெய் வளை-அணிந்த வளையல்களையுடைய, அன்னம் அன்ன - அன்னப்பேடு போன்ற, அணங்கினை - சீதையை, நோக்கினன் - பார்த்தவனும், 'மன்னர் மன்னவன் மைந்த - சக்கரவர்த்தித்திருமகனே! இ வாள் நுதல் - இப்பெண், இன்னள் என்ன - இன்னளென்று, இயம்புதி - சொல்வாய்', என்றான்—; (எ - று.)

வாணுதல்-ஒளியினையுடைய நெற்றியுடையவள்; அன்மொழித்தொகை. பி-ம்:—[1]நடையவணங்கினை. (உகஅ)

சுக.—இளையபெருமாள் தம்வாலாறுகளை முற்றிலுங் கூறுதல்.

அல்[1]லி றுத்தன தாடகை யாதியா
வில்[2]லி றுத்த திடை யென மேலைநாட்
புல்[3]லி றுத்த தியாவும் புகன்றுதன்
சொல்லி றுத்தனன் றோன்றல்பின் றோன்றினான்.

(இ - ள்.) தோன்றல் பின் தோன்றினான் - ஸ்ரீராமபிரானுக்குப் பின்னே திருவவதரித்த இளையபெருமாள்,—மேலை நாள் - முன்னாளில், அல் இறுத்து அன - இருள் ஒருவடிவ்மெடுத்துவந்தாற்போன்ற, தாடகை - தாடகையை(க் கொன்றது), ஆதிஆ - முதலாக, வில் இறுத்தது - (ஜநகராஜன் கொடுத்த) சிவன்வில்லை முறித்தது, இடை என - நடுவாக, புல் இறுத்தது - வனத்தைஅடைந்தது, (ஈறாக), யாவும் - எல்லாவற்றையும், புகன்று - சொல்லி, தன் சொல் - தன்வார்த்தையை, இறுத்தனன்-முடித்தான்; (எ - று.)

'கொன்றது' எனவும், 'ஈறாக' எனவும் வருவிக்க. இனி, இறுத்தென் பதனைத் தாடகை யென்பதனோடுங் கூட்டி, தாடகையை அழித்தது முதலாக வென்றுமாம். தாடகை - மலைகளில் திரிபவள். இனி, புல்லிறுத்த தென்பதற்கு, சக்கரவர்த்திக்குச் சரமகைங்கரியஞ்செய்த தென்று உரைப் பினும் அமையும். பி-ம்:—[1]இறுத்தவன். [2]இறுத்தங்கரிவையை. [3]இறுத்தன.

சுசு—சடாயு 'நீவிர் யான்காக்க இங்கே வைதுமின்' என்றல்.

கேட்[1]டு வந்த [2]கிளரொளி மௌலியான்
றோட்ட லங்கலி னீர்துறந் தீர்வள
நாட்டி [3]னீவிரு [4]நன்னுத றுணுமிக்
காட்டில் வைகுதிர் காக்குவென் யானென்றான்.

(இ - ள்.) கேட்டு - அதுகேட்டு, உவந்த - மகிழ்ந்தவனை, கிளர் ஒளி மௌலியான் - ஒளிவிளங்குகின்ற முடியையுடைய அச்சடாயு,—'தோடு அலங்கலினீர் - பூவிதழையுடைய மாலையை யுடையவர்களே, வளம்நாட்டின் - வளப்பத்தையுடைய நாட்டினின்றும், துறந்தீர்-விட்டு நீங்கிவந்தவர்களாகிய, நீவிரும் - நீங்களும், நல்நுதல்தானும் - அழகிய நெற்றியையுடைய சீதையும், இ காட்டில்—, வைகுதிர் - தங்கியிருங்கள்; யான்—, காக்கு வென் - காப்பேன்,' என்றான்—; (எ - று.)—பி-ம்:—[1]உவந்தனன். [2]கேழ் கிளர். [3]நீரினி, நீவிரிந். [4]நன்னுதலோடும், நண்ணுதல்காறும். (உஉ0)

சரு.—இராமனது மறுமொழி.

இறைவ வெண்ணி யகத்திய னீர்[1]துள
தறையு நன்மணி யாற்றி னகன்கரைத்
[2]துறையி னுண்டொரு சூழலச் சூழல்புக்
குறைது மென்றன னுள்ளத் துறைகுவான்.

(இ - ள்.) உள்ளத்து உறைகுவான் - (யாவரது) உள்ளக்கமலத்திலும் உறைகின்ற ஸ்ரீராமன்,—(சடாயுவை நோக்கி),—'இறைவ-தலைவனே! அகத்தியன் - அகத்தியமுனிவன், எண்ணி - (வாசஞ்செய்தற்குத் தக்கஇட மென்று) ஆலோசித்து, ஈந்து உளது - (வசிக்கும்படி) சொல்லியருளியதாகிய,—அறையும் - ஒலிக்கின்ற, நல் - சிறந்த, மணி - அழகிய, யாற்றின் - (கோதாவரி)நதியினது, அகல் - பரந்த, கரைதுறையின்-கரையினிடத்தில், ஒரு சூழல் - ஓர் இடம், உண்டு—; அ சூழல் - அவ்விடத்தில், புக்கு உறைதும் - போய் வசிப்போம்,' என்றனன்—; (எ - று.)

கழுகுகளுக்கு அரசனுதலாலும், தமக்குத் தந்தைமுறை யாதலாலும், ஸ்ரீராமன், சடாயுவை 'இறைவ' என்றான். அறையும் நன்மணி யாறு-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற நல்லமுத்துப்போலத்தெளிந்த நீருள்ள ஆறு என்றுமாம். பி-ம்:—[1]உள. [2]துறையுள். (உஉக)

சசு.—சடாயு அதற்குடன்பட்டு அவ்விடத்தை அவர்கட்குக் காட்டுதல்.

பெரிது நன்றப் பெருந்துறை வைகிநீர்
[1]புரிதிர் மாதவம் போதுமின் யானது
தெரிவு றுத்துவ[2]னென்றவர்[3]திண்சிறை
விரியு நீழலின் [4]மேவவிண் சென்றனன்.

(இ - ள்.) (பின்னர்ச் சடாயு),—'அ பெருந் துறை - அந்தப் பெருமை பொருந்திய இடம், பெரிதும் நன்று - மிகவும் நல்லது; நீர் - நீங்கள், வைகி-(அங்குத்தானே) தங்கி, மா தவம் புரிதிர் - சிறந்த அறத்தைச் செய்யுங்கள்; போதுமின்-வாருங்கள்; யான்—, அது-அவ்விடத்தை, தெரிவுறுத்துவென் - (உங்களுக்குக்) காண்பிப்பேன்', என்று-என்றுசொல்லி,—அவர்-அவ்விராமலக்ஷ்மணர்கள், திண் சிறை - (தனது) வலிய சிறகுகளின், விரியும் நீழலில்-

பரந்த நிழலில், மேவ - பொருந்தி வரும்படி, விண் - ஆகாயமார்க்கத்தே, சென்றனன் - பறந்துபோனன்; (எ - று.)

அவர்களுக்கு நிழலுண்டாகும்படி ஆகாயத்திற் பறந்துபோயினனென்ப தாம். பி-ம்:—[1]புரியும். [2]என்றனன். [3]தன். [4]செல்ல. (உஉஉ)

சஎ.—சடாயு காட்ட, அவர்கள் பஞ்சவடி சேர்தல்.

ஆய சூழ லறிய வுணர்த்தியத்
தூய [1]சிந்தைய தோமில் [2]குணத்தினன்
போய பின்னைப் பொருசிலை வீரரு
மேய சோலை யினிதுசென் றெய்தினர்.

(இ - ள்.) தூய சிந்தைய - பரிசுத்தமான மனத்தையுடைய, அ தோம் இல் குணத்தினன் - குற்றமற்ற குணங்களையுடைய அச்சடாயு, ஆய சூழல்-அப்பஞ்சவடியை, அறிய உணர்த்தி - தெரியும்படி காட்டி, போய பின்னே - போனபின்பு—பொரு சிலை வீரரும் - போர்செய்கின்றவில்லையுடைய அவ் வீரர்களும், ஏய சோலை-பொருந்திய அச்சோலையில், இனிது - இனிமை யாக, சென்று எய்தினர் - போய்ச் சேர்ந்தார்கள்; (எ-று.)—பி-ம்:—[1]சிந்தை யத். [2]குணத்தவன். (உஉங)

சஅ.—சடாயு அவர்களைப் பாதுகாத்துவருதல்.

வார்ப்பொற் கொங்கை மருகியை மக்களை
[1]யேற்பச் சிந்தனை யிட்டவ் வரக்கர்தஞ்
சீர்ப்பைச் சிக்கறத் தேறினன் சேக்கையிற்
பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான்.

(இ - ள்.) அ அரக்கர்தம் - அங்குள்ள ராக்ஷசர்களது, சீர்ப்பை - சிறப் பை, சிக்கு அற - ஐயமில்லாமல், தேறினன் - நன்றுயறிந்த அச்சடாயு,—ஏற்ப - தக்கபடியாக, சிந்தனையிட்டு - ஆலோசித்து,—வார் - கச்சணிந்த, பொன் கொங்கை - அழகிய தனங்களை யுடைய, மருகியை - (தம்) மரு மகளாகிய சீதையையும், மக்களை - புத்திரர்களாகிய ராமலக்ஷ்மணர்களை யும்,—சேக்கையில் - கூட்டிலுள்ள, பார்ப்பை - (தம்) குஞ்சுகளை, பார்க் கும் - பாதுகாத்துவருகின்ற, பறவையின்-பறவைபோல, பார்க்கின்றான் - பாதுகாத்துவருகின்றவனானான்; (எ - று.)

பொற்கொங்கை - பொன்போலுஞ் சுணங்குபரந்த கொங்கையென்று மாம். சீர்ப்பு - மாயம்முதலியன. பார்ப்பு - இளமைப்பெயர்; "பார்ப்பும் பிள் ளையும் பறப்பவற் றிளமை" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

இப்படலத்திற் கூறிய சிருஷ்டிக்கிரமம் முதனூலாகிய வால்மீகத்து க்கு மாறுபடுமேயாயினும், இதிகாசாந்தர புராணாந்தரங்களிலேயாதல் கல் பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளல்வேண்டும். மேல்வருவனவற் றிற்கும் இங்ஙனமே காண்க. பி-ம்:—[1]ஏர்ப்ப. (உஉச)

சடாயுகாண்படலம் முற்றிற்று.

நி - ஆவது சூர்ப்பணகைப்படலம்.

இத்தொடர்மொழி - சூர்ப்பணகையினது செய்தியை யுணர்த்தும் பாகமென இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகையாக விரியும். சூர்ப்பண கை யென்ற சொல் - இலக்கணையால், அவளதுசெய்தியை உணர்த்திய தீதன்க. இனி, சூர்ப்பணகையினது சம்பந்தமான படல மென்று ஆறும் வேற்றுமைத்தொகையாக விரித்து, விஷயமாகவுடைமையே இங்கு ஆறும் வேற்றுமைப்பொருளாகிய சம்பந்த மெனக்கொண்டு, சூர்ப்பணகையைப் பற்றிக் கூறுகிற பாக மென்று கருத்துரைப்பினு மாம். சூர்ப்பணகை - ஸூர்ப்பணகா என்ற வடசொல் ஈறுதிரிந்தது; "ஆவீறு ஐயும்": [நன் - பத - உ0.] இது, சூர்ப்பம் நகம் எனப் பிரித்து, மூறம்போன்ற (வடிவ முடைய) நக முள்ளவ ளென்று ஏதுப்பொருள்படும். அன்றி, சூர்ப்பம் - இரத்தம்நிறைந்த பாத்திரம்; அதனால், நகா - (யாகம்முதலிய நற்கருமங்க ளைக்) கெடுப்பவள் என்றுமாம். இரத்தத்தைப் பாத்திரங்களிற்கொண்டுவந்து மேற்சொரிந்து அதனால் வேள்வியை அபரிசுத்தமாக்கி அழிப்ப ளென்று கருத்து. இது, அவளுக்கு வடிவம்பற்றி வைக்கப்பட்ட காரணக்குறியாகிய இயற்பெயர். இது, பெய ராதலால், வடமொழிவிதிப்படி, சூர்ப்பணகா என நிலைமொழியில் ரகாரம்வர வருமொழியில் நகாரம் ணகாரமாயிற்று; ராமாயணம், நாராயணன் என்பவற்றிற்போல: அங்ஙனமாகாமல் சூர்ப்பநகா என்று நிற்கும்போது பெயராகாது தன்மைகுறிக்கிற மாத்திரமாம். இப் பெயர், சிறுபான்மை 'சூர்ப்பநகி' என்றும் வழங்கும்: அப்பொழுது, ஈயீறு இகரமான தென்க; அதுவும், பெயராகாது காரணமாத்திரமாய்நிற்பதே. 'சூர்ப்பணகீ' என்பது, வடநூலிலக்கணவிதிப்படி வழுவாம். சிலஎட்டுப் பிரதிகளில் முதலொன்பதுபாடல்கள் **பஞ்சவடிப்படலம்** என்றும், அதற்கு மேல் **சூர்ப்பநகிழக்கரிபடலம்** அல்லது **சூர்ப்பணகைப்படலம்** என்றும் உள்ளன.

சூர்ப்பணகை - இராவணனுடைய தங்கை; பிரமபுத்திரனாகிய புலஸ் தியமுனிவனுடைய குமாரனான விசிரவசினது இரண்டாம் மனைவியாகிய கேகசியின் வயிற்றில் இராவணகும்பகர்ணர்களுக்குப் பின் விபீஷணனுக்கு முன் பிறந்தவள். இவளே, இராவணன், காலகையென்பவளுடைய மக்க ளாகிய காலகேயருளொருவனான வித்யுஜ்ஜிஹ்வனென்பானுக்கு மணஞ் செய்துவைத்திருந்தான்; பின்பு இராவணன் திக்குவிசயஞ்செய்துவருகிற பொழுது, அசுமநகரத்திற் பிரவேசித்து அங்கிருந்த காலகேயரைப் போர் செய்து அழிக்கையில், வித்யுஜ்ஜிஹ்வனும் இராவணனாற் கொல்லப்பட்டத னால், கணவனையிழந்த சூர்ப்பணகை இராவணன்காலில் விழுந்து மிகப் புலம்பிப் பலவாறு முறையிட, அவன் அவளை வெகுசமாதானங்கூறிக் கோபந்தணித்து, தண்டகாரணியத்தில் ஜநஸ்தாநமென்றவிடத்து ஓரிராக்ஷிய முண்டாக்கி அதில் அவளை மேன்மையோடிருக்கச் சொல்லி, தூஷணனென்

னுஞ்சேனுதிபதிக்கு உட்பட்டதொரு பெருஞ்சேனையையும், தனது தாயி னுடன்பிறந்தவள்மகனுன கரனையும், அவளுக்கு உதவியாக இருந்து அவ ளிட்டகட்டளைப்படி நடக்குமாறு நியமித்து, அங்கு அவள் யதேச்சையாகத் திரியுமாறு அனுப்பிவிட்டான்.

அங்ஙனமே அவ்விடத்திற் குடியேறி அங்குள்ளவனவாசிகளை வருத்திக் கொண்டு உல்லாசமாகத் திரியுந்தன்மையுள்ள இவள், ஸ்ரீராமலக்ஷ்மணர் சீதையோடு கோதாவரிநதிதீரத்திற் பஞ்சவடியாச்சிரமத்தில் வசித்துவருகிற பொழுது ஒருநாள் இராமபிரானது திருமேனியழகைக் கண்டு பெருங்காதல் கொண்டு அழகியவடிவமெடுத்து அருகில்வந்து தன்னைக்கூடும்படி பலவகை யால் வேண்டவும், அதற்கு அப்பெருமான் உடன்படாது பலகூறி மறுத்திட் டதனுல் மிகவருந்திமீண்டு, 'ஒப்புயர்வில்லாதசௌந்தரியமுடைய மானவி உடனிருத்தலால், அவளுள்ளவளவும் என்னை இவன் விரும்பான்; அவளை வஞ்சனையால் எடுத்துப்போய் மறைத்துவைத்துவிடின், நான் இவனுடன் கூடிவாழக்கூடும்' என்று எண்ணி மறுநாளுதயத்தில் வந்து இராமன் காலைக் கடன்கழித்தற்கு நீர்நிலைநோக்கிச் சென்ற சமயம் பார்த்துச் சீதையைப் பிடிக்கத்தொடர்கையில், அப்பிராட்டிக்குக்காவலாக அருகிற் சோலையிலிருந்த இலக்குமணன் கண்டுவிரைந்துவந்து இவளதுகூந்தலை ஒரு கையாற்பற்றிக் கொண்டு மற்றொருகையால் உடைவாளையெடுத்து அதனுல் இவளது மூக்கை யுங் காதுகளையும் மூலைகளையும் அறுத்து, பெண்கொலை செய்தல்தகுதியன் றென்ற கருத்தினுல் இவளைக் கொல்லாமல் உயிரோடு விட்டிட, பின்பு இவள், பெருங்குரல் பாய்ச்சிக் கதறியழுது, மீண்டும் இராமனை நோக்கித் தன்னை மணஞ்செய்துகொள்ளவாவது தம்பிக்கு மணஞ்செய்விக்கவாவது வேண்டு மென்று மிகவும்வேண்டியும் சிறிதும்பயன்பெறுமல், அவர்களால் வெருட்டப்பட்டு, 'உங்களையழிக்கக் கரனைக் கொண்டுவருகிறேன்' என்று அவர்கள்மீது கறுக்கொண்டு சென்றன ளென்பது, இப்படலத்தின் **கதை.**

வேறு.

க.—இராமலக்குமணரும் சீதையும் கோதாவரிநதியைக் காணுதல்.

புவியினுக் கணியா யன்ற பொரு[1]டந்து புலத்திற் ருகி
யவியகத் தறைக டாங்கி யைந்தினை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ருழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை [2]வீரர் கண்டார்.

(இ - ள்.) புவியினுக்கு அணி ஆய்-பூமிக்கு (ஓர்) அலங்காரமாய், ஆன்ற பொருள் தந்து - சிறந்த பொருள்களைக் கொடுத்து, புலத்திற்று ஆகி-அறிவி னிடத்ததாய் [வயல்களுக்கு உரியதாய்], அவி அகம் துறைகள் தாங்கி - அமைந்த அகப்பொருளிலக்கணத்துறைவகைகளை யுடையதாய் [வெப்பந் தணியத்தக்க இடத்தையுடைய நீராடுதுறைகளை யுடையதாய்], ஐந் தினை நெறி அளாவி - ஐந்துதினைகளின் இலக்கணத்தைத் தழுவி· [ஐவகைநிலங்

களின் வழியைச் சேர்ந்து], சுவி உற தெளிந்து - செவ்வையாகத்தெளிந்து, தண் என்ற ஒழுக்கமும் தழுவி - குளிர்ச்சியான நல்லொழுக்கத்தையுங் கொண்டு [குளிர்ச்சியாய்ப் பெருகுந்தன்மையை யுடையதாய்], சான்றோர் கவி என கிடந்த - பெரியோர்செய்த செய்யுள்போலப் பொருந்தியுள்ள, கோதாவரியினை - கோதாவரிநதியை,—வீரர் - பராக்கிரமமுடையவரான ஸ்ரீராமலக்ஷ்மணர், கண்டார் - பார்த்தனர்; (எ - று.)

கோதாவரிநதிக்குச் சான்றோர்செய்யுளைச் சிலேடைமூலமாக உவமை கூறியதனால், இச்செய்யுள் - **சிலேடையணியை** அங்கமாகக்கொண்ட **உவமையணி**; இது, **உறுப்புறுப்பிக்கலவையணி** யெனப்படும்; வடநூலார் ஸங்கராலங்காரத்தின்பாற் படுத்துவர்.

சான்றோர்செய்யுளுக்கு:—புலியினுக்கு அணியாதல் - பலவகையலங்காரங்களையுமுடையதாய் உலகத்தில் உயர்ந்தோர்பலராலுங் கொண்டாடப்படுதல்; ஆன்றபொருள்தருதல் - சிறந்த அறம் பொருளின்பம் வீடென்னும் உறுதிப்பொருள்களின் திறத்தை யுணர்த்துதலும், செம்பொருள் இலக்ஷணப்பொருள் குறிப்புப்பொருள் என்னும் மூவகைப்பொருள்களையுங் குறித்தலுமாம்; புலத்திற்றுதல் - தன்னைக்கற்போர்க்கு நுண்ணறிவை விளைப்பதும், அறிவைக்கொண்டு ஆராய்ச்சிசெய்யச்செய்ய நன்கு புலப்படும் ஆழ்ந்த பொருளுள்ளது மாய் அறிவுக்கு உரியதாதல்; அவியகத்துறைகள் தூங்குதல்-எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி யென்னும் தமிழிலக்கணமைந்தனுள் பொருளின்பகுதியாகிய அகம் புறம் என்னும் இரண்டில் அகப்பொருளின் பாகுபாடுகளாகிய களவு கற்பு என்னும் ஒழுக்கங்களின் தன்மைகளைக் கூறுதல்;) புறப்பொருள்துறைகளைத்தாங்குதலும் செய்யுட்கு இலக்கணமாயினும், புறப்பொருளினும் அகப்பொருள் கேட்போர் மனத்துக்கு மகிழ்ச்சி விளைப்பதாய்ச் சிறத்தலால், அதுவே பிரதானமாக எடுத்துக்காட்டப்பட்டது; இச்சிறப்பு விளங்க, அதற்கு, 'அவி' என்னும் அடைமொழி கொடுத்தன ரென்க. அவி என்பதற்கு - (மனத்துயரத்தை) மாற்றுவிக்கிற என்றும் பொருள் கொள்ளலாம். (அகமாவது - ஒத்தஅன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட்கூடுகின்றகாலத்துப் பிறந்து அக்கூட்டத்தின்பின்னர் அவ்விருவராலும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப்புலனுக இவ்வாறுஇருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துஉணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம். இன்பம்பற்றி அகத்தேகிடமும் ஒழுக்கத்தை 'அகம்' என்றது - ஆகுபெயர்: அகம் - உள், மனம். நவரசங்களுள் முதலதான சிருங்காரரசமாகிய அகப்பொருளைக் கூறினது, மற்றை ரசங்களாகிய புறப்பொருள்கட்கும் உபலக்ஷணம். 'வடநூலுட் போசராசனும், சுவைபலவென்று கூறுவார் கூறுக: யாம்கூறுவது இன்பச்சுவையொன்றனையுமே யென இதனையே மிகுத்துக் கூறினன்' என்ற பரிமேலழகருரையாலும், அகப்பொருளின்தலைமையை அறிக.) ஐந்திணைநெறியளாவுதல் - குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மருதம் என்னும் ஐவகைநிலங்களுக்கும் முறையே உரியனவெனப்

படுகிற புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும் ஐவகை யொழுக்கங்களேயும், அவற்றிற்கு அங்கமானவற்றையும் உரைத்தல்; சவி யுறத்தெளிதல் - **மயங்கவைத்த**லென்னுங் குற்றத்திற்குச் சிறிதுமிடமின்றி **விளங்கவைத்த**லென்னும் அழகுக்கு முழுவதும்இடமாய் நன்றாகப் பொருள் விளங்குதல்; தண்ணென்ற ஒழுக்கந் தழுவுதல் - தீயொழுக்கத்தையுணர்த்தா மல் நல்லொழுக்கத்தை யுணர்த்துதல்; அன்றி. மெல்லென்ற ஓசையோடு கட்டறச்செல்லுஞ் சிறந்தநடையை யுடைமையுமாம்.

கோதாவரிக்கு:—புவியினுக்கு அணியாதல் - பூமியில் அழகியதொரு பெருநதியாதல்: அன்றி, பூமியாகிய பெண்ணுக்கு ஒரு முத்தாரம்போ லிருத் தலுமாம்; ("விலகிவில்லுமிழ் விரிகதிர் மணிபல வரன்றிப், பொலன்முகட் டுயர் பொன்னெடுங் குன்றின்வீ ழருவி, குலவுதெண்டிரைக் குரைகட லுடுத்த பார்மடந்தை, அலர்மூலத்தலைத் துயல்வரு மாரமொத் தனளால்" எனக் காண்க.) ஆன்றபொருள்தருதல் - சிறந்த மேலபடுபொருள்கள் முத லியவற்றை அடித்துக்கொண்டுவருதல்: அன்றி, தனதுவளத்தால் நாட்டுக் குச் செழுமையையுண்டாக்கி விளைவுப்பொருள் பலவற்றையும் விளைத்தலு மாம்: புண்ணியநதி யாதலால், தன்னில்மூழ்குவார்க்குத் தீவினைதீர்த்து நல் வினைப்பயனுகிய அறம்பொருளின்பங்களேயும் வீட்டையுங் கொடுத்தலுமாம்; புலத்திற்றழுதல் - விளைநிலத்தின் வளச்செழுமைக்கு உதவுதல்: அன்றி, வெள்ளப்பெருக்கினுலும் வாய்க்கால்வழியாகவும் எங்கும் பரவி நிறைதலு மாம்; அலியகத்துறைகள் காங்குதல் - இறக்குதீர்த்துறைகள்பலவற்றைஆங் காங்கு உடைத்தாதல்; ஐந்திணைநெறியளாவுதல் - ஐவகைநிலங்களின் வழி யாகச்செல்லுதல்; (மலேயும் மலேசார்ந்தஇடமும் - குறிஞ்சியும், காடும் காடு சார்ந்தஇடமும் - முல்லேயும், நாடும் நாடுசார்ந்தஇடமும் - மருதமும், கடலும் கடல்சார்ந்த இடமும் - நெய்தலும், நீரும் நிழலுமில்லாத வெற்றிடம்-பாலேயு மாமெனக் காண்க.) சவியுறத்தெளிதல் - மிக்க ஆழத்திலுள்ளபொருளும் கட் புலனும்படி மிகத்தெளிந்திருத்தல்; தண்ணென்றழுக்கந் தழுவுதல் ஜீவநதி யாதலால், குளிர்ந்த நீர்ப்பெருக்கை என்றும் இடையறுமலுடையதாதல்.

'வீரர் கண்டார்' எனச் சிறப்புடையஆடவர்மேல் வைத்துக்கூறினது, சீதை கண்டதற்கும் உபலக்ஷணம். சவி என்ற வடசொல்லுக்கு - ஒளி யென்று பொருள். கவியென்னும் வடசொல், கவருஞ்செய்பவனைக் குறிக் கும்; இது, தமிழில், செய்தான்பெயர் செய்யப்பட்டதன் மேல் நிற்கும் கருத்தாவாகுபெயராய், செய்புலேயும் உணர்த்தும். **பி - ம்:**—[1]தருந்திறத்த தாகி. [2]தெரியக்.

இதுமுதல் ஏழு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரியவிருத்தங்கள்.** இவற்றில், மூன்று ஆருஞ் சீர்கள், தேமாச்சீர்களாகவே நிற்கும். (உஉ)

உ.—இரண்டுகவிகள் - கோதாவரிவருணனை.

வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாச
[1]மூண்டுறை குவளை யொண்க ணெருங்குற நோக்கி [2]யூழிற்
றெண்டிரைக் கரத்தின் வாரித் [3]திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி [4]பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு.

(இ - ள்.) கடவுள் யாறு - தெய்வத்தன்மையையுடைய அந்த நதியானது,—வண்டு உறை கமலம் - வண்டுகள் மொய்க்கப்பெற்ற செந்தாமரை மலராகிய, செவ்வி வாள் முகம் - அழகிய ஒள்ளிய முகம், பொலிய-மலர்ந்து விளங்க,—வாசம் உண்டு உறை குவளை-பரிமளத்தை உட்கொண்டு தங்குகிற நீலோற்பலமலர்களாகிய, ஒள் கண் - ஒளியுள்ள கண்களால், ஒருங்கு உற நோக்கி-ஒரேவிதமாகப் பார்த்து,—ஊழின் தெள் திரை கரத்தின்-முறையே ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாகவருகிற தெளிவான அலைகளாகிய கைகளால், திரு மலர் - சிறந்த பூக்களை, வாரி தூவி - மிகுதியாக எடுத்துச் சொரிந்து,—(இத்தன்மையால்), செல்வர் கண்டு அடி பணிவது என்ன - செல்வப்பிள்ளைகளாகிய இராமன்முதலிய மூவரையும் பார்த்து அவர்கள் பாதத்தில் வணங்குவதுபோல, பொலிந்தது - விளங்கிற்று; (எ - று.)

இராமன்முதலியோர் அவ்விடம்வருகையில், அந்நதி தாமரை மலரக் குவளைகள் நிமிர்ந்துவிளங்க அலைகளாற் பலவகைப்பூக்களைச் சிதறிக்கொண்டு வீரைவாகத்தணிந்துவருகிற தன்மை, அளவிறந்த மகிமையையுடைய அவர்களதுவருகையை அறிந்து முகமலர்ச்சிபெற்றுத் தன்கண்களால் அவர்கள்வரவையே எதிர்நோக்கிக்கொண்டு விரைவாக அருகில்வந்து அவர்கள்திருவடிகளிற் பலவகைப்பூக்களைத் தன்கைகளால் எடுத்துஇட்டு அருச்சித்து வணங்குவதுபோ லிருந்தது என்பதாம். நான்காமடியில்வருகிற **தம்தரிப்பேற்ற வணிக்கு, முதல்மூன்றடிகளிலுள்ள உருவகம்** அங்கமாய் நின்றதனால், இதுவும் - **உறுப்புறுப்பீக்கலவையணியாம்.** வடிவத்தில் கைக்கு அலை உவமையென்க; "சேந்தொளி விரியுந் தெண்டிரையெனு நிமிர்கையால், ஏந்தின ளொருதானே யேற்றின ளினிதப்பால்" எனக் கீழ்க் கங்கைப்படலத்திலும் அலை கையெனப்பட்டவாறு காண்க.

ஒருங்குற நோக்குதல் - ஒருமுகமாகப் பார்த்தல். இனி, ஊழின் தூவி என இயைத்து, (பெரியோர்களுக்குச் செய்யவேண்டும்) முறைப்படி அருச்சித்து என்றுங் கொள்ளலாம். வாரித் திருமல ரென எடுத்து - சிறந்த நீர்ப் பூக்க ளென்றலும் ஒன்று. பி - ம்:—[1]உண்டுறுகுவளையுண். [2]கோதில். [3]செழு. பணிவனென்ன. (உஉசு)

ங.: [1]எழுவுறு காத லாலிங் கிரைத்திரைத் தேங்கி [2]யேங்கிப்
[3]பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி
யழுவது மொத்த தாலவ் வலங்குநீ ராறு மன்னோ.

(இ - ள்.) அ அலங்கு நீர் ஆறு - அசைந்துபெருகுகிற நீரையுடைய அந்தக்கோதாவரிநதி,—வழு இலா வாய்மை மைந்தர் வனத்து உறை வருத்தம் நோக்கி - தவறுதலில்லாத மெய்ம்மைமொழியையுடைய அத்தசரதகுமாரர்கள் காட்டிலே வந்து வசிக்கிற வருத்தந்தருஞ்செய்கையைப் பார்த்து,எழுவுறு காதலால் - (அவர்களிடத்து) மிகுதியாய் மேலெழுகிற அன்பினால், ஏங்கி ஏங்கி - மிகஇரங்கி, பழுவம் நாள் குவளை செவ்வி கண் பனி பரந்து சோர - தொகுதியாகவுள்ள அன்றுமலர்ந்த நீலோற்பலமலர்களாகிய அழகிய கண்களினின்று (தேனுகிய) நீர்த்துளி பரவி வழிய, இரைத்து இரைத்து அழுவது ஒத்தது - கதறிக்கதறிப் புலம்புவதையும் போன்றது; (எ - று.)—ஆல், மன், ஓ - ஈற்றசைகள். இங்கு - அசை.

மலர்ந்த கருங்குவளைமலர்களினின்றுதேன்வழிய மிக்கஆரவாரஞ்செய்து கொண்டு பெருகுகின்ற அந்நதியை நோக்கினால், அது, சக்கரவர்த்தியினது செல்வக்குமாரர் வனத்தில்வசிக்கிற துயரச்செய்தியைப் பார்த்து அவர்களிடத்துத் தான் மிகுதியாகக்கொண்டுள்ள அன்பினால் மிகவிசனப்பட்டுக் கண்ணீர்பெருகக் கதறியழுவதுபோன்றதென்பதாம்; **தற்குறிப்பேற்றவணிக்கு** இரண்டாமடியிலுள்ள **உருவகம்** அங்கமாய் நின்ற தென்க. குவளையைக் கண் என்றதற்கு ஏற்ப, பனி தேனெனக் கொள்ளப்பட்டது; **ஏகதேசஉருவகம்.** இனி, இராமலக்ஷ்மணர் கோதாவரிநதியைச் சார்ந்த காலம் பனிக்காலத்துக்குச் சிறிதுமுந்தின தாதலால், பனி யென்பதற்கு - பனிநீர்த்துளி யென்றே கொள்ளினுமாம்.

கொடியவடான இராக்கதரை வேரறுத்துத் துயர்தீர்த்திடுகிறே மென்று தாம் தண்டகாரணியத்து முனிசனங்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்த தனை நிறைவேற்றுதற்குச் சமயம்பார்த்துநிற்பவ ரென்பது தோன்ற, 'வழுவிலாவாய்மைமைந்தர்' என்றார்; இனி, தமதுதந்தை கைகேயிக்கு இரண்டு வரங்கொடுத்திருந்த வார்த்தையின் சத்தியத் தவறுமற் பாதுகாத்தற்பொருட்டு வனம்புகுந்த மைந்தரெனினுமாம். பழுவம் - காடு; இங்குத் தொகுதி யெண்ணும் பொருளின்மேல் நின்றது. பி-ம்:—[1]எழுவுகாதலின்வந்தென்ன, எழுவுறுகாதலாரின். [2]ஏங்கப். [3]குழுவநாட்.. (உஉஎ)

சு.—இதுமுதல் ழுன்றுகவிகள் - இராமனும் சீதையும் அந்நதியின்வாங்கலைக் காணுதலைத் தெரிவிக்கும்.

நாளங்கொ ணளினப் பள்ளி நயனங்க ளனைய [1]நேமி
வாளங்க ளுறைவ கண்டு மங்கைதன் கொங்கை [2]நோக்கு
நீளங்கொள் சிலையோன் மற்றை நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் [3]மனம்வைத் தன்ன சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

(இ - ள்.) நீளம் கொள் சிலையோன் - நீட்சியைக்கொண்ட வில்லையுடைய இராமன்,—நாளம் கொள் நளினம் பள்ளி - காம்பைக்கொண்ட தாமரைமலராகிய படுக்கையில், நயனங்கள் அனைய நேமிவாளங்கள் உறைவ-

கண்கள்போல இரட்டையாகவுள்ள சக்கரவாகப்பறவைகள் தங்குவனவற்றை, கண்டு - பார்த்து, (உடனே), மங்கைதன் கொங்கை நோக்கும் - இளம்பருவமுடைய சீதையினது தனங்களைப் பார்த்தருள்வான்; நேர் இழை - தகுதியான ஆபரணங்களை யணிந்துள்ள சீதை, நெடிய நம்பி தோளின்கண் மனம் வைத்து - பெருமைக்குணமுள்ள இராமனது தோள்களினிடத்துத் தன்மனத்தைச் செலுத்திக்கொண்டு, அன்ன சுடர் மணி கூடங்கள் கண்டாள் - அத்தோள்களையொத்த விளங்குகிற இரத்தினங்களையுடைய (அந்தக்கரையின்) மணற்குன்றுகளைப் பார்த்தாள்; (எ - று.)---மற்று - வினைமாற்றுப்பொருளில் வந்தது; ஐ - சாரியை: ஐயீற்றுடைக்குற்றியலுகரம்.

அந்தியிலுள்ள தாமரைமலர்களைப் படுக்குமிடமாகக் கொண்டு அவற்றில்தங்கியுள்ள ஆணும்பெண்ணுமாகிய இரட்டைப்பட்ட சக்கரவாகப்பறவைகளை நோக்குகையில், இராமனுக்கு, அவற்றையொத்த சீதையின் நெருங்கிய இணைக்கொங்கை ஞாபகத்துக்கு வந்ததனால், இராமன் உடனே அவற்றை நோக்குவானாயினனென்றும்; அவ்வாற்றங்கரையிலுள்ள மணற்குன்றுகளை நோக்குகையில், சீதைக்கு அவற்றையொத்த இராமனது உயர்ந்த தோள்கள் ஞாபகத்துக்கு வந்ததனால், சீதை அத்தோள்களை நினைத்துக் கொண்டே அம்மணல்மேடுகளை உற்றுநோக்கினளென்றும் உணர்க. ஒருபொருளைக்கண்டு ஒப்புமையினால் மற்றொருபொருளை நினைத்தல் கூறப்பட்டமையின், இது - நினைப்பணி; வடநூலார் ஸ்மிருதிமதலங்கார மென்பர்.

சக்கரவாகப்பறவை கொங்கைக்கு உவமைபாதலை, "தழைசிறைநேமிப் புட்கொலோ கமலமுகைகொலோ என்கொல் சாற்றுவதே" என்ற கைடதத்திலுங் காண்க. சக்கரவாகம் - பகல்முழுவதும் ஆணும்பெண்ணுங் கலந்திருந்து இரவிற் பிரிந்து வருந்துந் தன்மையதாகிய ஒருவகைப்பறவை. கொங்கைக்குச் சக்கரவாகவுவமை - வடிவத்திற்கும், தோளுக்கு மணற்குன்று உவமை - உயர்ச்சிக்கு மென்க. மகளிர்க்குத் தனமும் ஆடவர்க்குத் தோளும் வேட்கையினைக்குஞ் சிறந்த உறுப்புக்களாதலால், அவற்றை இங்கு ஒருங்கே கூறினர். சக்கரவாகங்களுக்குக் கண்களை உவமைகூறியது, இரட்டையாய் ஒன்றையொன்றுநெருங்கி இணையொத்துள்ளன வென்பதை விளக்குதற்கு; இனி, அரியஅன்பினால் ஒன்றுக்கொன்று கண்போலவுள்ள என்றுரைக்கலாம்.

இங்கே, நேரிழை யென்றது, அத்திரிமுனிவனது பத்தினியான அநசூயையால் அன்போடு கொடுக்கப்பட்ட பலவகை ஆபரணங்களை அணிந்துள்ளவள் என்றவாறு; அத்தன்மை, கீழ் விராதன்வதைப்படலத்தில் விளங்கும். 'நெடியநம்பி' என்றது - தேவாதிதேவ னென்றும், திரிவிக்கிரமாவதாரஞ் செய்தவ னென்றும், புருஷோத்தம னென்றும், லக்ஷ்மணனுக்குத் தமையனான இராமனென்றும் கருத்துப்படும். வட்டவடிவையுணர்த்துகிற நேமி வாளம் என்ற சொற்கள் - ஒருபொருட்பன்மொழியாகத் தொடர்ந்துநின்று,

அவற்றின் பரியாயநாமமாகிய சக்கரமென்ற சொல்லாற் பெயர்குறிக்கப் படுகிற சக்கரவாகப்பறவையை உணர்த்தின வென்க. மணல்மேட்டுக்கு, மணி - ஆற்றுவெள்ளத்தாற் கொணர்ந்து ஒதுக்கப்பட்டவை. தோள்கள் இரத்தினபரணங்களே யணிதற்கு உரியனவாதல்பற்றி, அவற்றிற்கு உவமை யாகிய தடங்களுக்கு 'சுடர்மணி' என்ற அடைமொழிகொடுத்தார். பி - மீ:— [1]மேனி. [2]நோக்கி. [3]நயனம்வைத்தாள். (உஉ அ)

டு. ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

(இ - ள்.) ஓதிமம் - அன்னப்பறவை; ஒதுங்க-விலகிச்செல்ல, கண்ட-பார்த்த, உத்தமன் - புருஷோத்தமனான இராமன்;—உழையள் ஆகும் சீதைதன் நடையை நோக்கி - அருகிலுள்ளவளான சீதையினது நடையைப் பார்த்து, சிறியது ஓர் முறுவல் செய்தான் - ஒரு புன்சிரிப்பைச் செய்தான்; ஆண்டு வந்து நீர் உண்டு மீளும் போதகம் நடப்ப - அவ்விடத்தில் வந்து நீரைப்பருகி மீளுகிற ஆண்யானை (விலகி) நடக்க, மாதவள் தானும் - (அதனைப்பார்த்த) அச்சீதையும், நோக்கி - (அருகிலுள்ள இராமனதுநடை யைப்) பார்த்து; புதியது ஓர்முறுவல் பூத்தாள்-ஒரு புன்சிரிப்புச் செய்தாள்.

இராமனும் சீதையும் அந்நதியினருகில் உல்லாசமாகச் சஞ்சரிக்கும் பொழுது, இராமன் அங்கு அன்னப்பறவை ஒதுங்கிநடத்தலைக் கண்டு, அதனைச் சீதையின்நடை ஞாபகத்துக்குவரப்பெற்று, உடனே அவள்நடையை உற்றுப்பார்த்து, அது அன்னநடையினுஞ் சிறந்திருத்தலை யுணர்ந்து இப் படிப்பட்ட நடையழகில் தான் ஒப்பாகமாட்டாமைபற்றியே அன்னம் இவள் முன் நிற்க லாற்றாது நாணி விலகிச்செல்கின்ற தெனக் கருதி, அவ்வன்ன நடையின்எளிமைபற்றிய இகழ்ச்சியினாலும், சீதைநடையின்சிறப்புப்பற்றிய மகிழ்ச்சியினாலும், சிறிது சிரித்திட்டனன்: அங்ஙனமே, சீதையும், அங்கு வந்து நீர்பருகிய யானை மீண்டுசெல்லும் நடையைக் கண்டு, அதனைல் இராம னதுநடை ஞாபகத்துக்குவரப்பெற்று, உடனே அவன்நடையை உற்றுப் பார்த்து, அது யானைநடையினுஞ் சிறந்திருத்தலை யுணர்ந்து, இப்படிப்பட்ட நடையழகில் தான் ஒப்பாகமாட்டாமைபற்றியே யானை இவன்முன் நிற்க லாற்றாது நாணி அப்பாற் செல்கின்ற தெனக் கருதி, அவ்யானைநடையின் எளிமைபற்றிய இகழ்ச்சியினாலும், இராமன்நடையின் சிறப்புப்பற்றிய மகிழ்ச்சியினாலும், சிறிதுசிரித்திட்டனள் என்பதாம். இதில், ஏதுத்தற்குறிப் பேற்றவணியோடு கீழ்க்கூறிய நீலப்பணி தொனிக்குமாறு அறிக.

உண்ணலென்பது - உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பிரித்துக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அங்ஙனம்வேறுபாடுகருதாதவிடத் துப் பதார்த்தங்களிலே உட்கொள்ளப்படும் பொருளெல்லாம் உணவெனப்

படுதலின் பொதுவினையு மாகுதலால், 'கீருண்டு'என்றார். பத்துப்பிராய த்து யானைக்குட்டிக்குப் போத மென்று பெயர்; அது, கப்பிரத்தியயம் பெற்று, போதகமென நின்றது. நான்காமடியில் 'புதியது' என்பது, இர ண்டாமடியில் 'சிறியது' என்றதற்கு ஈடாக நின்றதனால், அதனை அதன்பரி யாயமாகக் கொண்டு, புதியதோர்முறுவல்-இளநகை யெனப்பட்டது. (உஉக)

,சு. வில்லிய றடக்கை வீரன் வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக [1]ணுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்கு [2]னோக்க
[3]வெல்லியங் குவளைக் கானத் திடையிடை [4]மலர்ந்து நின்ற
வல்லியங் கமலங் கண்டா [5]ளண்ணறன் வடிவு கண்டாள்.

(இ - ள்.) வில் இயல் தட கை வீரன்-வித்பொருந்திய பெரிய [நீண்ட] கையையுடைய வீரனை இராமன், வீங்கு நீர் ஆற்றின் பாங்கர்-மிக்க நீரை யுடைய அந்நதியினிடத்திலே, வல்லிகள் நுடங்க - (வஞ்சிமுதலிய) நீர்க் கொடிகள் அசைய, கண்டான்-பார்த்து, மங்கைதன் மருங்குல் நோக்க - (அதனற்) சீதையினது (துவளுகிற) இடை (ஞாபகத்துக்குவந்துபற்றி அத னைப்) பார்க்க,—(அச்சீதை), எல்லி அம் குவளை கானத்து இடை இடை மலர்ந்து நின்ற அல்லி அம் கமலம் கண்டாள் - இருள்போலக்கறுத்த அழ கிய குவளைமலர்த்தொகுதியின் இடையிடையே மலர்ந்துநின்ற அகவிதழ் களையுடைய அழகிய செந்தாமரைமலர்களைப் பார்த்து, அண்ணல்தன் வடிவு கண்டாள் - (அதனால்) இராமனது (கரிய) திருமேனி (ஞாபகத்துக்குவர அதனைப்) பார்த்தாள்; (எ - று.)

இராமன் கொடியைக்கண்டு ஒப்புமையினால் சீதையின்இடையையும், சீதை நீலோற்பலமலர்க்குழாத்தின் இடையிடையே மலர்ந்துள்ள தாமரை மலர்களைக்கண்டு இராமனதுவடிவத்தையும் நினைத்து உற்றுநோக்கியதாகக் கூறியதனால், இதிலும் கீழ்க்கவிகளிற் போல நினைப்பணி தொனித்தல் காண்க. கருங்குவளைமலர்த்தொகுதியின் நடுவிடங்களில் மலர்ந்துநின்ற செந்தாமரைமலர்கள், இராமபிரானது கரியதிருமேனியில் விளங்குகிற கண் கை கால் முகம் வாய் முதலிய திருவவயவங்களைப் போலு மென்க. வில் இயல் - வில்தொழிலிற் பயின்ற எனினுமாம். தடக்கை - ஆஜாநுபாஹு. பி-ம்:—[1]நுடக்கம். [2]நோக்கி. [3]எல்லுயர், எல்லியல். [4]அலர்ந்து. [5]அண்ணல் கண்ணவனும். (உஉ0)

எ.—இராமன்முதலியோர் பஞ்சவடி சேர்ந்து தங்குதல்.

அனையதோர் [1]தன்மை யாலவ் வருவிநீ ராற்றின் பாங்கர்ப்
[2]பனிதரு படிவப் பஞ்ச வடியெனும் [3]பருவச் சோலைத்
தனியிட மதனை நண்ணித் தம்பியாற் சமைக்கப் பட்ட
[4]வினியபூஞ் சாலை யெய்தி [5]யிருந்தன னிராம னிப்பால்.

(இ - ள்.) இராமன்—,—அனையது ஓர் தன்மையால் - அப்படிப்பட்ட தொரு தன்மையினால் [அவ்வாறு அந்நதியின் வளங்களைப் பார்த்துக்

கொண்டே],—அ அருவி நீர் ஆற்றின் பாங்கர்-அருவியாகப்பெருகிய நீரை யுடைய அந்தநதியின் அருகிலுள்ள, பனி தரு படிவம் பஞ்சவடி எனும் பருவம் சோலை தனி இடம்அதனை-குளிர்ச்சியைச்செய்கிற தன்மையையுடைய பஞ்சவடியென்கிற காலத்தில்மலருஞ்சோலையாகிய ஏகாந்தமான [ஒப்பற்ற] இடத்தை, நண்ணி - சேர்ந்து, தம்பியால் சமைக்கப்பட்ட இனிய பூ சாலை எய்தி - (அங்கு) இலக்குமணனற்செய்யப்பட்ட இனிமையான அழகியபர்ண சாலையை யடைந்து, இருந்தனன் - (அங்கு) வசித்திருந்தான்; இப்பால்- இதன்பின்பு,—(எ-று.)—'(சூர்ப்பணகை) எய்தினள்' என மேற் பக்தாங்கவி யோடு தொடர்ந்து முடியும்.

பர்வம் ஸாலா என்னும் வடசொற்கள் திரிந்தன. பி - ம்:—[1]தன்மை யான. [2]பனிவருங்குன்றில். [3]பழுவச். [4]இனியன. (உக)

வே று.

அ.—இரண்டுகவிகள் - சூர்ப்பணகையின் தன்மை.

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு 'மொய்ம்பினுள்
மேலைநா ²ளுயிரொடும் பிறந்து தான்வினை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனள்.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) நீலம் மா மணி நிறம் நிருதர் வேந்தனை - சிறந்த நீலரத்தினம் போன்ற கருநிறத்தையுடைய இராக்கதர்க்கு அரசனான இராவணனை, மூலம் நாசம் பெற - வேரோடு [குலத்தோடு] அழிவை யடையும்படி, முடிக்கும் - இனிஅழிக்கப்போகிற, மொய்ம்பினுள் - வலிமையையுடையவளும்,—மேலை நாள் - முற்காலத்திலே [பிறந்தபொழுதே], உயிரொடும் பிறந்து - உயிரோடுகூடவே தோன்றி, தான் வினை காலம் ஓர்ந்து - தான் (வெளிப்பட்டுப்) பயன்வினைத்தற்குஉரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, உடன் உறை - அவ்வுயிரோடுகூடவே தங்குகிற, கடிய நோய் அனுள் - கொடிய வியாதியை ஒத்தவளும்,—(எ - று.)—ஆகிய சூர்ப்பணகை யென்க.

இவள் பின்பு இராமனை வலியப்புணர விரும்பும் விருப்பமும், அதற்குத் தடையென்று தன்னுற்கருதப்பட்ட சீதையைப் பலாத்காரமாக எடுத்துக் கொண்டுபோகத்துணியுந் துணிவும் ஆகிய இவளதுவலிமைமிருதியே பின்பு இராவணன் இராமனுக்குப்பகையாய்க் குலத்தோடுஅழிதற்கு மூலகாரண மாதலால் 'நிருதர்வேந்தனை மூலநாசம்பெற முடிக்கும் மொய்ம்பினுள்' என்றார்: "உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா, வுடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்றபடி இராவணனுக்கு உடன்பிறந்தவளாயிருந்தும் அவன் அழியும்படியான காரியத்தை ஒருகாலத்தில் தொடங்கிய இவள் ஒருயிர் உடம்போடுகூடிப்பிறக்கும்பொழுது அப்பிராணியுடனே தானும் பிறந்து உடனிருந்துகொண்டே பின்பு ஒருகாலத்தில் அப்பிராணியையே

கொல்லுமாறு வெளிப்படுகிற பயங்கரமான தொரு வியாதிபோல்வளென் பார் 'மேலோகா ளுயிரொடும்பிறந்து தான்வினைகாலமோர்ந்து உடனுறை, கடிய நோயளுள்' என்றார்: "உந்தருநிலையதாகியுடனுறையுயிர்கடம்மை, யந்தகற்களிக்குநோய்போலரக்கி" என்பர் கரன்வதைப்படலத்தும். **பி-ம்:**— [1]முன்பிளுள். [2]உடன்பிறந்துயிரின்வேவினைக்.

இதுமுதல் இருபத்துமூன்றுகவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடிநான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்.** (உஉ)

கூ. செம்பரா கம்[1]படச் செறிந்த கூந்தலாள்
[2]வெம்பரா குத்[3]தனி [4]வீளுந்த மெய்யினு
ளும்பரா னவர்க்குமொண் டவர்க்கு போதநீ
ரிம்பரா னவர்க்குமோ [5]ரிறுதி யீட்டுவாள்.

(இ - ள்.) செம்பு அராகம் பட - தாமிரத்தினது செந்நிறம் போன்ற செந்நிறம் (தன்னிடத்திலே) பொருந்த, செறிந்த - அடர்ந்த, கூந்தலாள் - கூலமயிரை யுடையவளும்,—ராகு வெம்ப - ராகுவென்னுங் கொடியகிரகம் (ஒப்பாகமாட்டாமல்) வாடும்படி, தனி வீளுந்த-ஒப்பில்லாமல் வளர்ந்துள்ள, மெய்யினுள் - உடம்பையுடையவளும்,—உம்பர்ஆனவர்க்கும் - மேலிடத்திலுள்ள தேவர்களுக்கும், ஒள் தவர்க்கும் - சிறந்த தவத்தையுடைய முனிவர்களுக்கும், ஓதம் நீர் இம்பர் ஆனவர்க்கும் - கடலின் நீர்சூழ்ந்த இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கும், ஓர் இறுதி ஈட்டுவாள் - ஒருஅழிவை ஒருங்கேசெய்ய வல்லவளும்,—(எ - று.)—ஆகிய சூர்ப்பணகை யென்க.

செம்பராகம் படச் செறிந்த கூந்தலாள் - செம்பட்டமயிருடையவள்: இனி, செம்பினது செந்நிறம் (முன்நிற்கமாட்டாமல்) அழியும்படி (அதனினும் மிகச்சிவந்ததாய்) அடர்ந்த கூந்த லுடையவள் என்றும் உரைக்கலாம். அராகம் - ராக மென்னும் வடசொல், ரகரத்துக்கு அகரம் மொழிமுதலாகி முன்வரப்பெற்றது. இனி, 'செம் பராகம் படச்செறிந்த கூந்தலாள்' என்று பிரித்து - சிவந்த புழுதியின்நிறம் பொருந்த அடர்ந்த கூந்த லுடையா ளென்றலுமாம்; பராகம்-புழுதி: வடசொல். திருமாலே வஞ்சித்து அவனிடமுள்ள அமிருதத்தைப் பெற்று உண்டு இன்பமடையக்கருதின ராகுபோல இவள் திருமாலின்திருவவதாரமான இராமனே வஞ்சித்து அவனதுஅதராமிருதத்தைப் பெற்றுப் பருகி இன்பமனுபவிக்கக் கருதியவ ளாதலாலும், அவ்வஞ்சனையையுணர்ந்த திருமாலால் அங்கபங்கமடைந்த ராகுபோல இவளும் அவ்வஞ்சனையை யுணர்ந்த இலேயபெருமாளால் அங்கபங்கமடைபவ ளாதலாலும், இராகு சூரியசந்திரரைப்பிடித்துவருத்துதல்போல இவள் ராமலக்ஷ்மணரைப் பீடித்து வருத்த வருபவ ளாதலாலும், கரும்பாம்புவடிவமான ராகுபோலப் பயங்கரமான கொடியகரியவடிவத்தையுடைய ளாதலாலும், இவளுக்கு இராகுவோடு ஒப்புமை ஏற்கும்; அத்தன்மைகளில் இராகுவினும் இவளுக்குக் கொடுமைமிகுதி கூறுவார், 'ராகுவெம்பத் தனிவீளுந்த மெய்யி-

ஞள்' என்றார். இனி, ராகு வெம்ப-இராகு (இவள்தன்மையை) விரும்பும்படி யென்றும்உரைக்கலாம்; "வெம்புஞ்சுடர்" என்றற்போல. ராஹு-வடசொல்; நவக்கிரகங்களுள் ஒன்று. எல்லாவுலகத்தாரையும் அழிக்கவல்லவ ளென்பது, பின்னிரண்டடியின் கருத்து. தேவர்களினும் மனிதர்களினும் முனிவர்களுக்கு உள்ள தனிச்சிறப்புத் தோன்ற, அவரை உம்பரிலும் இம்பரிலும் அடக்காமல் தனியேகூறின ரென்க. பி-ம்:—[1]பெற. [2]வெம்பராகம். [3]பெற. [4]விளைந்துவீங்கலால். [5]உறுதி. (உஙஉ)

கo.—சூர்ப்பணகை இராமனிருந்தஇடத்துக்கு வருதல்.

வெய்யதோர் காரண முண்மை மேவினாள்
வைகலுந் தமியளவ் வனத்து வைகுவா
[1]ணெய்தினிவ் வுலகெலா நுழையு நோன்மையா
ளெய்தின ளிராகவ னிருந்த சூழல்வாய்.

(இ - ள்.) வெய்யது ஓர் காரணம் உண்மை மேவினாள் - கொடிய தொருகாரணமிருத்தலைப் பொருந்தியவளாய், (அதனால்), தமியள் அ வனத்து வைகலும் வைகுவாள்-தனியளாய் அந்தக்காட்டில் நாள்தோறும் வசிப்ப வளும்,—இ உலகு எலாம் நொய்தின் நுழையும் நோன்மையாள் - இவ்வுலக முழுவதிலும் விரைவாக [அல்லது எளிதிலே] புகுந்துசெல்லத்தக்க வலிமை யுடையவளுமாகிய சூர்ப்பணகை, இராகவன் இருந்த சூழல்வாய் எய்தினள் - இராமபிரான் தங்கியிருந்த ஆச்சிரமத்தினிடம் வந்துசேர்ந்தாள்; (எ - று.)

'வெய்யதோர் காரண முண்மை மேவினாள், வைகலுந் தமியள் அவ்வன த்து வைகுவாள்' என்றது-தனதுகணவனான வித்யுஜ்ஜிஹ்வனென்னும் அசுர னைத் தனதுதமையனான இராவணன் திக்குவிசயகாலத்துக் காலகேயரை வெல்லுகையிற் கொல்ல, அதனால் தான் கைம்மையை யடைந்து இரா வணனே வெகுவாக நிந்தித்து அவன் வேண்டுகோளினால் கரன் முதலிய இராக்கதவீரர்பலரது துணைமையோடு தண்டகாரணியத்தில் ஜநஸ்தான மென்னுமிடத்தை யடைந்து தனக்குவேண்டியபொழுதெல்லாம் யதேச் சையாக அவ்வனமுழுவதுந் தனியே திரிந்துவருந் தன்மையுடையா ளென் றவாறு: அன்றி, (முனிசனங்களைத் தான் வருத்தவேண்டு மென்னும்) கொ டியதொரு நிமித்தம்பற்றி எந்நாளும் அக்காடுமுழுவதுந் தனியே உலாவுபவ ளெனினுமாம். இனி, வெய்யதோர்காரணமுண்மை மேவினாளாய் இராகவ னிருந்த சூழல்வாய் எய்தினள் என்று இயைத்து - (இராவணனதி இராக்கதர் குலத்தோடுந் தொலையும்படியான) கொடியதொரு ஊழ்வினை அடுக்கப்பெற் றவளாய் அதனால் அவள் அப்போது இராமனிருந்த இடம் வந்தாள் எனி னும் அமையும். இனி, 'வெய்யதோர்காரணம்' என்றது-பெருமாள் பிராட்டி யைப் பிரியும்படியான தொரு காரணம் என்றுங் கொள்ளலாம். பி - ம்:— [1]நொய்தினின். (உஙச)

கக்.—தூர்ப்பணகை இராமனைக் காணுதல்.

எண்[1]டகு மிமையவ ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலிரா
ளண்டசத் தருந்துயி றுறந்த வையனைக்
கண்டன டன்கிளைக் கிறுதி காட்டுவாள்.

(இ - ள்.) மேலை நாள் - முன்னொருகாலத்தில், எண் தகும் - (யாவராலும்) நன்குமதிக்கத்தக்க, இமையவர் - தேவர்கள், 'அரக்கர் எங்கள் மேல் விண்டனர் - இராக்கதர்கள் எங்கள்மேற் பகைத்தார்கள்; விலக்குதி - (அவர்களாலாகிற துன்பங்களைத்) தீர்த்தருள்வாய்', என்ன - என்று பிரார்த்திக்க, (அதனால்), அண்டசத்து அருந்துயில் துறந்த - ஆதிசேஷனிடத்து அருமையான யோகநித்திரைகொள்ளுந்தன்மையை நீங்கித் தசரதகுமாரனாய்த் திருவவதரித்த, ஐயனை-மேன்மையையுடையனான ஸ்ரீராமனை, தன் கிளைக்கு இறுதி காட்டுவாள் - தன்சுற்றத்துக்கு அழிவை அடைவிப்பவளான சூர்ப்பணகை, கண்டனள் - பார்த்தாள்; (எ - று.)

இராவணதி இராக்கதரின் உபத்திரவம் பொறுக்கமாட்டாத தேவர்களின் வேண்டுகோளால் திருப்பாற்கடல்நாதனான திருமால் இராமனாய்த் திருவவதரித்தன னென்ற சரித்திரம் பிரசித்தம்; கீழ்ப் பாலகாண்டத்தில் திருவவதாரப்படலத்திலும் விவரிக்கப்பட்டது. சர்ப்பங்களுக்குத்தலைவனான ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன் திருமாலுக்குப் படுக்கையாதலை "புல்கும், அணையாந் திருமாற்கு அரவு" என்ற பொய்கையார் பாசுரத்தாலும் அறிக. மூலகாரணமானவடிவம் அங்கு நிற்கவும் 'அண்டசத்து அருந்துயில் துறந்த' என்றது, "பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என், மனக்கடலில் வாழவல்ல மாய மணாளநம்பீ" என்றாற்போலக் கவிகள் உபசரித்துக் கூறுவதொரு வழக்காம். அண்டஜ மென்னும் வடசொல்லுக்கு - மூட்டையினின்று தோன்றின தென்று உறுப்புப்பொருள்; இது - இங்கே, பாம்புக்குக் காரணப்பெயர். யாதொருநினைப்புமின்றி மெய்ம்மறந்து பரவசப்பட்டுத் தூங்குந் தூக்கமே யன்றி எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும்விதத்தைஆலோசித்துக்கொண்டே செய்யும் அறிதுயில் திருமாலொருவற்குஒழியப் பிறரெவர்க்கும் இல்லை யாதலால், அதனை, அருந்துயி லென்றார்.

காட்டுவாள் என்பதை முற்றெச்சமாகக்கொண்டு - தன் இனத்துக்கெல்லாம் அழிவை அடைவிப்பவளாய் இராமனைக்கண்டாள் எனக் கொள்ளுதல், நேராம்; இவள் இராமனைக்கண்டது, உடனே அவனிடம் காதல்கொள்ளுதற்கும்,முடிவில் இராக்கதகுலநாசத்துக்கும் ஏதுவாதல் காண்க.பி-ம்:—[1] தரு.

கஉ.—இரண்டுகவிகள் - தூர்ப்பணகை பொதுவாக இராமனதுதிருமேனியழகில் ஈடுபடுதலைக்கூறும்.

சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததா
லிந்திரற் காயிர நயன மீசற்கு

முந்திய மலர்க்கணேர் மூன்று நான்குதோ
ளுந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள்.

(இ - ள்.) சிந்தையின் உறைபவற்கு - (யாவரது) மனத்திலுந் தங்குப வனுகிய மன்மதனுக்கு, உருவம் தீர்த்தது - வடிவமில்லே: இந்திரற்கு - தே வேந்திரனுக்கு, ஆயிரம் நயனம் - ஆயிரங் கண்கள் (உண்டு); ஈசற்கு - சிவ பிரானுக்கு, முந்திய மலர் கண் ஓர் மூன்று - சிறந்த தாமரைமலர்போலுங் கண்கள் மூன்றும்: உந்தியின் உலகு அளித்தாற்கு - (தனது) திருநாபி யினின்று உலகங்களே உண்டாக்கியருளின திருமாலுக்கு, நான்கு தோள்- தோள்கள் நான்காம், என்று உன்னுவாள் - என்று நினேப்பாள்; (எ - று.)—

இராமனதுதிருமேனியின் திவ்வியசௌந்தரியத்தைக் கண்ட சூர்ப்ப ணகை, மிகவியப்புக்கொண்டு, 'இவன் மன்மதனேவென்றுல், மன்மதனுக்கு வடிவ மில்லேயே: அங்கனன்றே அவன்? இவனதுவடிவம் கட்புலனுகக் காணப்படுகின்றதே; ஆதலால், இவன் மன்மதனல்லன். அன்றி, இவன் தேவராசனுன இந்திரனே வெனின், அவனுக்கு உடம்புமுழுவதும் ஆயிரங் கண்கள் இருக்கவேண்டுமே: இவனுக்கு இரண்டுகண்கள்தாமே உள்ளன; ஆதலால், இவன் இந்திரனல்லன். இனி, இவன் சிவபிரானே வென்றுல், அவனுக்கு முகக்கண் இரண்டும் நெற்றிக்கண் ஒன்று மாக மூன்று கண்கள் இருக்குமே: அங்கனம் இவனுக்கு இல்லாமையால், அவனல்லன். மற்றுத் திருமாலோவெனின், அவனுக்கு நான்குதோள்கள் இருத்தல் வேண்டுமே: இவனுக்கு இரண்டுதோள்கள்தாமே உள்ளன; ஆதலால், அவனுமல்லன்' என்று ஐயமுந்தெளிவுந்தோன்றச் சிந்தித்தனள் என்பதாம். ஒருபொருளேக் கண்டு இதுவோ அதுவோ என்று பலவாறுகருதுகிற ஐயவணி யென்கிற சந்தேகாலங்காரம் இதில் உள்ளவாறு காண்க. ஆல் - ஈற்றசை.

சிந்தையின்உறைபவன் - (எல்லாப்பிராணிகளின்) உள்ளத்திலும் காம ரூபியாகத் தோன்றுபவ னுதலால், மன்மதனுக்கு 'சித்தஜன்' என்று வட மொழியில் ஒருபெயர் வழங்குதல் காண்க. அவனுக்கு உருவந்தீர்ந்த வர லாறு, அடுத்தபாட்டின்கீழ் உரைக்கப்படும். இந்திரனுக்கு ஆயிரங்கண்கள், கௌதமமுனிவனது சாபஅநுக்கிரகங்களா லாகியவை. பிரளயக்கடலிற் பள்ளிகொண்டுள்ள திருமாலினது திருநாபியில் தோன்றின தாமரைமலர் பிரளயம் நீங்குமளவில் மலர்ந்திட அதனினின்று சிருஷ்டிகர்த்தாவான பிர மனும் உலகங்களும் தோன்றுதலால், 'உந்தியினுலகளித்தான்' என்றுள். ()

கஙூ. கற்றையஞ் சடையவன் கண்ணிற காயதலா
லிற்றவ னன்றுதொட் டின்று காறுந்தா
னற்றவ மியற்றியவ் வகங்க னல்லுருப்
[1]பெற்றன னெனைப் பெயர்த்து மெண்ணுவாள்.

(இ - ள்.) கற்றை அம் சடையவன் - தொகுதியான அழகிய சடையை யுடைய சிவபிரான், கண்ணின் - நெற்றிக்கண்ணினுல்; காய்தலால் - கோ

பித்து விழித்துப்பார்த்ததனால், இற்றவன்-அழிந்தவனும், அ அநங்கன் - அதனால் அங்கமில்லாதவனு மான மன்மதன், அன்று தொட்டு இன்று காறும் -' அந்நாள்முதல்இந்நாளளவும், தான்—, நல் தவம் இயற்றி-சிறந்த தவத்தைச் செய்து, (அதனால்), நல் உரு பெற்றனன் ஆம்-முன்னினும் அழகிய வடிவத்தைப் பெற்றுன்போலும், என - என்று, பெயர்த்தும் எண்ணுவாள் - மீண்டும் நினைப்பாள்; (எ - று.)

பரமசிவனது நெற்றிக்கண்ணின் நெருப்பினால் எரிபட்டு உடம்பொழிந்து அரூபியான மன்மதன் வெகுகாலமாய்ப் பெருந்தவஞ்செய்து அத்தவத்தின் வலிமையால் அதிசுந்தரமானவடிவம்பெற்று இங்ஙனம் வந்திட்டானென்று எண்ணினள் என்பதாம். இது, தற்குறிப்பேற்றவணி: ஆம்என்பது, இதற்கு உருபாய் நின்றது. பி - ம்:—[1]பெற்றவன்.

மன்மதன் அநங்கனான கதை:—முன்னொருகாலத்திற் கைலாசகிரியிற் சிவபிரான், சனகர்முதலிய நால்வர்க்கு யோகநிலையை உணர்த்துதலினிமித்தம் தான் யோகஞ்செய்துகொண்டிருக்கையில், தேவர்களேவலால் தன்மீது மலரம்புகளை யெய்து தனதுதவத்தைக் கெடுக்க முயன்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழித்து அதன்நெருப்புக்கு இரையாய் உடம்புளரிந்து சாம்பலாய்ப் போம்படி செய்தன னென்பதாம். அநங்கன்-வடசொல்; ந + அங்க + அன். (உ.ஏ)

கச.—இராமனது கையழகில் ஈடுபாடு.

தரங்களி னமைந்துதாழ்ந் [1]தழகின் சார்பின
மரங்களு நிகர்க்கல மலையும் புல்லிய
வுரங்களி னுயர்திசை [2]யோம்பு மானையின்
கரங்களே யிவன்மணிக் [3]கரமென் றுன்னுவாள்.

(இ - ள்.) இவன் மணி கரம் - இவனது அழகிய திருக்கைகள், தரங்களின் அமைந்து-(சாமுத்திரிகைநூல்களிற் கூறிய) உத்தமவிலக்கணங்களின்படி பொருந்தி, தாழ்ந்து - (முழந்தாளளவும்) நீண்டு, அழகின் சார்பின - அழகுக்கு ஒருதங்குமிடமாகவுள்ளன; (ஆதலால்), மரங்களும் நிகர்க்கல - (இவற்றை) மரங்களும் ஒப்பனவல்ல; மலையும் புல்லிய-(இவற்றுக்குஉவமையாந்தன்மையில்) மலைகளும் எளியனவாய்விடும்; (ஆதலால், இக்கைகள்), உரங்களின் உயர் திசை ஓம்பும் ஆனையின் கரங்களே - வலிமைகளால் மிக்கதிக்கைத்தாங்கும் யானைகளின் துதிக்கைகளேயாம், என்று உன்னுவாள் - என்று நினைப்பாள்; (எ - று.)

செழித்துப் பருத்து வளர்ந்து உருண்டு நீண்ட் தன்மையில் மரத்தையும், அழித்தற்குஅரிய வலிமையில் மலையையும் வீரர்கைக்கு உவமைகூறுதல் சாதாரணவழக்காயினும், இவன்கைகள் அத்தன்மைகளில் அவற்றினும் மிகமேம்பட்டிருத்தலால்,அவை இவற்றிற்கு உவமையாகுந்தகுதி யுடையன வல்ல; சகலலக்ஷணங்களும் நிரம்பி மிகஅழகியனவாகவுள்ள இவன்கைகள்

வடிவொப்புமையால் திக்கஜங்களின் துதிக்கைகளே போலு மென்று எண் ணினள் என்பதாம். இரண்டாமடியை முதலடி சாதித்தது, **தொடர்நிலைச் செய்யுட்குறியணி:** காவ்யலிங்காலங்காரம். பின்னிரண்டடிகளில் உபமே யத்தை உபமானமாகவே கூறினது, **காட்சியணி;** நிதர்ஸநாலங்காரம்.

மரங்கள் - வேண்டுவார்க்கு வேண்டுவனகொடுக்குங் கல்பகவிருக்ஷங் களுமாம். மணிக்கரம் - நீலமணிபோலும் நிறமுடைய கை யென்றும், 'இர த்தினபரணமணிதற்குஏற்ற கை யென்றுங் கொள்ளலாம். 'மலையும்புல்லிய' என்றதில் - மலைகள் புற்களே யுடையன; (ஆதலால், நிகராகா) என்ற பொ ருளுந் தோன்றும். **பி - மீ:**—[1]உயர்ந்ததாலமா, உயர்ந்துதாலமா, உயர்ந்த தானமார். [2]ஓங்கும். [3]கையென்று. (உஅ)

கடு.—இராமனது தோள்முதல் நிகர்.

விண்மலை வல்லவன் வீரத் [1]தோளொடுங்
கண்மலை நிகர்க்கில கனிந்த நீலத்தி
னண்மலை [2]யல்லது நாம மேருவும்
பொன்மலை யாதலாற் பொருவ லாதென்பாள்.

(இ - ள்.) வில் மலை வல்லவன் - வில்லினைப் போர்செய்யவல்லவனை இவனது, வீரம் தோளொடும் - பகைவெல்லும்வல்லமையுடைய தோள்களு டனே, கல் மலை நிகர்க்கில - கல்மயமான சாதாரணமலைகள் சமமாகமாட் டா; கனிந்த நிலத்தின் நல் மலை அல்லது - முதிர்ந்த [மிகச்சிறந்த] நீலரத் தினமயமான அழகிய மலைகள் (இவற்றுக்கு ஒப்பாகக்கூடுமே) அல்லாமல், நாமம் மேருவும்-பிரசித்தமான மேருமலையும், பொன் மலை ஆதலால் பொரு வலாது - செம்பொன்மயமான மலையாதலால் ஒப்பாகமாட்டாது, என் பாள் - என்று எண்ணுவாள்; (எ - று.)

கன்மலையும் பொன்மலையும் இவன்தோளுக்கு நிகராகா; நீலமணிமலை யே நிகராதற்கு ஏற்றது என்று எண்ணினள் என்பதாம். முதலடியில், மலையென்பதை மலைய என்னுஞ் செயவெனெச்சத்தின் தொகுத்த லென் றுவது, வினைப்பகுதியே வினையெச்சப்பொருள்பட்டதென்றுவது, மலைத் லெனப் பொருள்படும் முதனிலைத்தொழிற்பெய ரென்றுவது கொள்க. இனி, மலை வில் வல்லவன் என மாற்றி, மலைபோன்ற வலியபெரிய வில் லில் வல்லவ னென்றலும் ஒன்று. அன்றி, மேருமலையின் அம்சமான சிவதநுசை முறித்தலில் வல்லவனென்றலும் பொருந்தும். **பி-மீ:**—[1]தோணெ டும். [2]அன்றது. (உக)

கசு.—இராமனது மார்பினழகில் நிகர்.

[1]தாளுயர் தாமகரத் [2]தளங்க டம்மொடுங்
[3]கேளுயர் நாட்டத்துக் கிரியின் றோற்றத்தான்
றோளொடு [4]தோள்செலத் தொடர்ந்து [5]நோக்குறி
னீளிய வல்லக [6]ணெடிது மார்[7]பென்பாள்.

(இ - ள்.) தாள் உயர் - நாளத்தோடுகூடி உயர்ந்த, தாமரை - செந்தா மரைமலரினது, தளங்கள்தம்மொடும் - இதழ்களுடனே, கேள் உயர் - ஒத் றுமை [ஒப்புமை] மிக்க, நாட்டத்து-கண்களேயும், கிரியின் தோற்றத்தான் - மலேபோலச் சிறந்து தோன்றுகிற காட்சியையு முடையவனுன இவனது, தோளொடு தோள் செல - ஒருதோளோடு மற்ருெருதோளே அளாவ, தொ டர்ந்து நோக்குறின்-தொடர்ச்சியாகப் பார்க்குமிடத்து, கண் நீளிய அல்ல - (எமது) கண்கள் நீண்டனவல்ல; மார்பு நெடிது - மார்பு விசாலமுள்ளது, என்பாள் - என்றுஎண்ணுவாள்; (எ - று.)

தோள்களிரண்டுக்கும் நடுவிலுள்ள இட மாதலால் புஜாந்தர மென்று வழங்கப்படுகிற மார்பினது பரப்புமுழுவதையும் [இக்கோடியோடு அக்கோடி யளவும்] ஒருங்கே நோக்கத் தொடங்கினுல், இயல்பில் எவ்வளவுதூரம் கண் பார்வை ஏகுகாலத்திற்செல்லக்கூடுமோ அவ்வளவினும் மார்பின் எல்லே மிகப்பரந்துள்ளதனுல், அங்ஙனம்பார்த்தற்குஇயல்வதில்லேயென்று, உத்தம விலக்கணப்படி அதிவிசாலமாகவுள்ள இராமனதுமார்பின்தன்மையைக் கருதின னென்பதாம். தாமரையிதழையும் மலேயையும் உவமைகூறியதனுல் முன்னிரண்டடியில் **உவமையணி**யும், நீட்சியைக் கண்ணினிடத்து ஒழித்து மார்பினிடத்துப் பொருத்தியதனுல் பின்னிரண்டடியில் **ஒழிப்பணி**யும் இரு த்தல் காண்க. பதிக்கப்பட்டாத வாடாமல ரென்றற்கு, 'தாளுயர் தாமரை' எனப்பட்டது. பி - மீ:—[1]தாளுறு. [2]தடங்கள். [3]கேளுறு. [4]தோளிணே. [5]பார்க்கவும், நோக்குற. [6]நெடிய. [7]என்றுள். (உசo)

கo.—இராமனது திருமுகமண்டலத்தில் ஈடுபாடு.

அதிகநின் றெளிருமிவ் வழகன் [1]வாண்முகம்
பொதியவிழ் தாமரைப் [2]பூவை யொப்பதோ
கதிர்மதி யாமெனிற் கலேக டேயுமம்
மதியெனின் [3]மதிக்குமோர் மறுவுண் [4]டென்பரால்.

(இ - ள்.) அதிகம் நின்று ஒளிரும் - மிகுதியாய் நிலேபெற்று [ஒரேவித மாக] விளங்குகிற, இ அழகன் வாள் முகம் - சுந்தரமூர்த்தியான இவனது ஒளியுள்ள முகம், பொதி அவிழ் தாமரை பூவை ஒப்பது ஓ - முறுக்கு விரிந்த தாமரைமலரை ஒக்குமோ? [அதனே உவமையாகக் கொள்ளாது என்றபடி]: கதிர் மதி ஆம் எனின் - ஒளியையுடைய சந்திரனென்று உவமை சொல்வோமென்றுல், கலேகள் தேயும் - (அச்சந்திரனுக்குக்) கலேகள் நாள் தோறும் தேய்ந்துவிடும்; (அன்றி), அ மதி எனின் - அந்த [பதினுறுகலேயும் நிரம்பிய] பூர்ணசந்திர னென்று ஒப்புமைகூறுவோமென்றுல், மதிக்கும் ஓர் மறு உண்டு என்பர்-அச்சந்திரமண்டலத்துக்கும் களங்கமொன்று உள்ளதென் றுயாவரும் பிரசித்தமாக இகழ்ந்து கூறுவர், (என்றுஎண்ணினுள்); (எ-று.)—ஆல் - ஈற்றசை.

முன்பின்பாடல்களே நோக்கி 'என்றுஎண்ணினுள்' என்பது வருவித்து முடிக்கப்பட்டது. அன்றி, பின்பாட்டிலுள்ள 'என்கின்றுள்' என்பதையே

இதற்கும் பயனிலேயாகக் கூட்டி முடிப்பினும் அமையும். இனி, 'என்ப ளால் என்று பாடங்கொண்டு, என்று எண்ணுவாள் என்று உரைத்தல் பொருத்தமாம்.

உலகத்திற் சாதாரணமாகச்சொல்லுகிறபடி இவன்முகத்திற்குச் சந்திரன் உவமை யென்றால், அச்சந்திரனுக்கு நாளடைவிற் கலைகள் குறைதலும் வளர்தலும் இயல்பாதலால், அது, என்றும் ஒருபடியாகவிளங்குகிற அல்லது நாளடைவில் ஒளிவளர்தலேமாத்திரமே பெறுகிற இவன்முகத்திற்கு ஈடாகாது; இனி, கலைநிறைந்த பூர்ணசந்திரனே உவமை யென்றால், நீங்காத களங்கத்தோடு கூடிய அதுவும், மாசுமறுவற்ற இவன்முகத்துக்கு ஒப்பாக அமையாது; இப்படி என்றும்மலர்ந்து மாசற வாடாதுவிளங்குகிற முகம் அச்சந்திரனுற் குவிதலேயும் அவனுக்குஎதிரான சூரியனால் மலர்தலேயும் மாறிமாறிப்பெறுகிற தாமரைமலர்க்கு ஒப்பென்பது தகுதியோ? என்றனள் என்பதாம்.

கலைகள்தேயும், மறுவுண்டு என உபமேயத்திலும் உபமானத்துக்கு உள்ள வேற்றுமையை விளக்கினது - **வேற்றுமையணி**யும், இப்படி சந்திரனேயே கழித்து அதனால் தாமரை நிகராகாமையைத் தண்டாபூதிகாரியாயங்கொண்டு சாதித்தது - **தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி**யுமாம். **பி - மீ:**—[1]ஆண். [2]பூத்தபொங்கிருங். [3]அதற்கொரு, அதற்குமொர். (உசக)

கஅ.—இராமனது தவவடிவத்தில் ஈடுபாடு.

எவன்செய [1]வினியவிவ் வழகை யெய்திஞை
னவஞ்[2]செயத் திருவுடம் [3]பலச நோக்கின்ரு
னவஞ்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
றவஞ்செயத் தவஞ்செய்த தவமெ னென்கின்ரூள்.

(இ - ள்.) இனிய இ அழகை எய்திஞேன் - இனிமையான இப்படிப்பட்ட (நிறைந்த) அழகை அடைந்த இவன், எவன் செய - யாதுசெய்தற்காக, அவம் செய - (இவ்வழகு) வீண்பட, திரு உடம்பு அலச - அழகிய உடம்பு வருந்த, நோக்கின்ரூன் - தவஞ்செய்கிறூன்? நவம் செய தகைய - (பார்க்குந்தோறும்) புதுமைவிளைக்கத்தக்க, இ நளினம் நாட்டத்தான் - தாமரைமலர்கள்போலுங் கண்களையுடைய இவன், தவம் செய - தவஞ் செய்யும்படி, தவம் செய்த தவம் என் - அத்தவந்தான்செய்த தவம் யாதோ? என்கின்ரூள் - என்று எண்ணுகிறூள்; (எ - று.)

மரவுரியுடையுஞ் சடைமுடியுமாக வுள்ள இராமனதுதவவேடத்திற் கருத்தைச் செலுத்தின சூர்ப்பணகை, 'எல்லாப்பொருள்களினுஞ் சிறந்த இத்திவ்வியசௌந்தரியத்தைப் பெற்ற இவன், இதனினுஞ்சிறந்தபொருள் எதுவும் உலகத்தில் இல்லே யாதலால், யாதுபெறும்பொருட்டு இவ்வழகை வீணுக்கித் திருமேனிவருந்தத் தவஞ்செய்கின்றனனோ? அதுநிற்க, இப்புருஷோத்தமன் தவத்தையேற்றுக்கொள்ளும்படி அத்தவந்தான் யாதுதவஞ்

செய்து இவனே யடைந்ததோ?' என்று சிந்தித்தனள் என்பதாம். எவன் செய நோற்கின்றான் என்று இயையும். எவன் - விஞ்வடியாப்பிறந்த அஃறிணைப்பொதுக்குறிப்புவினை முற்றுவிணையும் பெயர். நளினநாட்டத்தான் - புண்டரீகாக்ஷன். பி-ம்:—[1]இனியவன். [2]செய்து. [3]அசைய. 'அவன், நவன், தவன்' என மூன்றடிகளிலும் போலியாகப்படிப்பாருமுண்டு. (உசஉ)

கசூ.—இராமனது திருவடியழகில் ஈடுபாடு.

உடுத்தநீ ராடைய ஞருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவ
னடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன போலுமிப் புல்லென் றுன்னுவாள்.

(இ - ள்.) உடுத்த நீர் ஆடையள் - தான் உடுத்துக்கொண்டுள்ள [எப் புறத்துஞ்சூழ்ந்த] கடலாகிய சேலையையுடையவளும், உருவம் செவ்வியள் - வடிவத்தின் அழகை யுடையவளும், பிடி தரு நடையினள்-பெண்யானையின் நடையையொத்த நடையையுடையவளு மாகிய பூமிதேவியினது, பெண்மை-பெண்தன்மை, நன்று-நன்றாயிருந்தது; இ புல் - (பூமியில்முளைத்துக்காணப் படுகிற) இந்தப் புற்கள்,—இவன் அடித்தலம் தீண்டலின் அவனிக்கு அம் மயிர் பொடித்தன போலும் - இவனது திருவடிகள் பரிசித்தலால் அப்பூமி தேவிக்கு அழகியமயிர்கள் சிலிர்த்தனவற்றை ஒக்கும். என்று உன்னுவாள் - என்று நினைப்பாள்; (எ - று.)

பூமியில் தோன்றியுள்ள புற்கள்யாவும், இவ்வாண்மகனது சீர்பாதங்கள் பூமிதேவியின்மீது பட்டமாத்திரத்தில் அவள் மிக்கமகிழ்ச்சியை யடைந்து இவனிடங் காதல்விஞ்சி உடம்புமுழுவதும் புளகமடைய அங்ஙனஞ்சிலிர்ப் புற்ற மயிர்களே யென்றும், இப்படி புருஷோத்தமனது திருவடி தன்மீது படப்பெற்று ஆநந்தமடைந்த பூமிதேவியின் பாக்கியமே பாக்கிய மென்றும் எண்ணுவள் என்பதாம். தற்குறிப்பேற்றவணி. 'பெண்மை நன்று' என்று, பூமிதேவி பெண்ணுய்ப்பிறந்த பயனைப் பெற்றமையைப் பாராட்டியதனால், உலகத்திற்பெண்பிறப்பெடுத்தலின்பயன் இப்படிப்பட்டவனது திருவடிதீண் டப்பெறுதலே யென்று தான் அதனிடத்துவிருப்பங்கொண்டமை தோன் றும். பூமியைச்சூழ்ந்துள்ள கடலைப் பூமியாகியபெண்உடுக்கும் ஆடையென் றல், கவிமரபு. பூமிதேவி என்பது, பூலோகத்துக்கு உரிய பெண்தெய்வத்தை யாதலால், அவள், 'உருவச்செவ்வியள்' என்றும், 'பிடித்தருநடையினள்' என்றும் விசேடிக்கப்பட்டாள். பி - ம்:—[1]நிகர்க்குமால். (உசஙு)

உ0.—இராமனது திருமேனியொளியில் ஈடுபாடு.

[1]வாணிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
[2]காணல னேகொலோ கதிரி ஞயகன்
சே[3]ணெலாம் புல்லொளி செலுத்திச் [4]சிந்தையி
ணைல்ன மீமிசை [5]நடக்கின் றனென்றுள்.

(இ - ள்.) வாள் நிலை மருங்குலான்-உடைவாள் நிலைபெற்ற இடையை யுடைய இவனது, வயங்கு சோதியை-(திருமேனியில்) விளங்குகிற திவ்விய காந்தியை, கதிரின் நாயகன் - ஒளிக்குத்தலிவனுன சூரியன், காணலனே கொலோ - பார்த்திலனேபோலும்: (ஆகையினலேயே), சிந்தையில் நாண லன் - மனத்தில் வெட்கப்படாதவனுய், சேண் எலாம் புல் ஒளி செலுத்தி நெடுந்தூரத்தளவும் அற்பமான தனது ஒளியைச் செல்லவிட்டுக்கொண்டு, மீமிசை நடக்கின்றனன்-மிக மேலே [வானத்திற்] செல்லுகிறன், என்றனள்—.

இவனது ஒளிமிகுதியைக் கண்டுள்ளானுயின் சூரியன் மிகவெள்கி ஒளித்தலே யொழிய இங்ஙனம் முன்நின்று தனது அற்பமான ஒளியை வீசிக்கொண்டு நடவானென்று எண்ணின னென்பதாம். முச்சுடருள் மற் றையிருசுடராகிய சந்திர அக்கினியர் போலப் பதினெறு எழு கிரணங்களே யுடையனுகாமல் சூரியன் அவற்றிற்கெல்லாம் ஒளியைக் கொடுத்துவரும் ஆயிரங்கிரணங்களே யுடைமையால், 'கதிரின்நாயகன்' எனப்பட்டான். **பி-ம்:**--[1]வாணிலாமுறுவலன், வாணிலாமருங்கிறன். [2]காணலானேகொலோ, காணலனேகொலாம். [3]உலாம். [4]சிந்தையுள். [5]நடக்குமென்கின்றனன்.

சிலபிரதிகளில் "நாறிய" (உச), "நற்கலே" (உ2), "தொடையமை" (உரு), "வாணிலே" (உ0), "குப்புறற்கு" (உக) என்ற முறையிற் பாடல்கள்.

உக—.இராமனது அதரசௌந்தரியத்தில் ஈடுபோடு.

குப்புறற் கரியமாக் குன்றை வென்றுய
ரிப்பெருந் தோளவ னிதழுக் [1]கேற்பதோ
ரொப்பென வுலகமே [2]லுரைக்க வொண்ணுமோ
துப்பினிற் றுப்புடை [3]யாதைச் சொல்லுகேன்.

(இ - ள்.) குப்புறற்கு அரிய - கடத்தற்கு அருமையான, மா குன்றை - பெரிய மலையை, வென்று - (தமக்குஒப்பாகாதபடி) சயித்து, உயர் - (அதனி னும்) உயர்ந்துள்ள, இ பெரு தோளவன்-பெரியதோள்களேயுடையஇவனது, இதழுக்கு - அதரத்துக்கு, உலகமேல் - உலகத்தில், (ஒருபொருளே), எற்பது ஓர் ஒப்பு என-தகுதியானதோர் உவமைப்பொருளென்று, உரைக்க - சொல் வதற்கு, ஒண்ணுமோ - கூடுமோ? [கூடாது]: (ஏனெனில்),—துப்பினில் துப்பு உடை - பவழத்தினும் வலிமையுடைய [மேம்பட்ட], யாதை - எதை, சொல்லுகேன் - சொல்லுவேன்; (எ - று.)—யாதைச்சொல்லுகேன் - எதை யுஞ்சொல்லவல்லேனல்லேன். 'என்றனள்' என வருவித்துமுடிக்க.

உலகத்திற் சாதாரணமாக அதரத்திற்குச் செம்மைபற்றிப் பவழம் சிறந்த உவமையாக எடுத்துக்காட்டப்படுகிறது; அப்பவழத்தை மிகச்சிறந்துள்ள இவனிதழுக்கு ஒப்பாகக்கூறுவதோ தகாது: அதனினும் மேலாக எதுவும் காணப்படவில்லே: ஆகையால் இவ்வுலகத்தில் இராமனிதழுக்கு உவமை யாகும் பொருள் எதுவுமில்லேயென்பதாம். இதழுக்குஉவமையாகும் துப்பினை இராமனிதழுக்கு ஒப்பாகாது என மறுத்துக்கூறினமையால் இது - எதிர்

நிலையணி: இதனால், இவ்வதரம் ஒப்பற்றதென்று கூறியவாறு. [2]உரைக்கி னுள்ளமே துப்பெனில் எனப்பாடங்கொண்டு, உரைக்கின் - (எவ் வேனும் பவழத்தை உவமை) கூறினால், உள்ளமே துப்புளனில் - மனமே காரியுமிழ்வாயென்னவேண்டியிருத்தலின் என்று உரைப்பாரு முளர்: அவ் வுரைக்கு—பவழத்துக்கு 'துப்பு' என வழங்குகிற தொரு இடுகுறிப் பெயர் க்கு, இவனதரத்துக்கு ஒப்பாகாமல் இகழ்ந்து துப்பப்படுதலால் 'துப்பு' என்று பெயர்வந்த தென்று ஒருகாரணத்தைக் கற்பித்துக்கொண்டு அத னால் 'இதழுக்கேற்பதோர்ஒப்பென வுலகமே லுரைக்கின் உள்ளமே துப் பெனில்' எனக் கூறிய தென்க; இதில், பிரிநிலைநவிற்சியணியெனப்படுகிற நிருத்தியலங்காரம் தோன்றுகின்றது: அதனிலக்கணம்-பெயர்களுக்கு உறுப் பாற்றலால் வேறொருகாரணப்பொருளைக் கற்பித்து உரைத்தல்: இனி, இப்பாடத்துக்கே இவனுடைய அதரத்துக்கு ஏற்றதோர் ஒப்பென்று உலகத் தில் (யாதாயினும் ஒருபொருளை ஒருவர்) கூறினால் அங்ஙனங்கூறத்துணி ந்த அவர்மனமே கடுமையான தெனப்படுமாதலால், இதனினும் மேன்மை யுடைய எதனைச் சொல்வேன்? என்றும் பொருள்கூறலாம். பி - றி:—[1]ஒப்ப தோர். [2]உரைக்கலொண்ணுமேல், உரைக்கவொண்ணுமேல், உரைக்கிலெண் ணுமோ. [3]யாரை. (உசாநி)

22.—இராமனது இடையழகில் ஈடுபாடு.

நற்கலை மதியுற வயங்கு நம்பித
[1]னெற்கலை திருவரை யெய்தி யேமுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள்.

(இ - ள்.) நல் கலை மதி உற - சிறந்த கலைகள் நிரம்பிய பூர்ணசந்திரன் போல, வயங்கும்-விளங்குகிற, நம்பி தன்-இவ்வாண்மகனது, எல் கலை திரு அரை - சூரியனும் (இதன்ஒளிமிகுதியை நோக்கி) நிலைகுலையும்படியான [மிக்க ஒளியையுடைய] அழகிய இடையை, எய்தி - சேர்ந்து, ஏம் உற-களிப் படைதற்கு, வற்கலை நோற்றன-மரவுரியாடைகள் தவஞ்செய்துள்ளன; மாசு இலா மணி பொன் கலை நோற்றில போலும் - குற்றமில்லாத அழகியபொன் மயமான பீதாம்பரங்கள் தவஞ்செய்தில போலும், என்றாள் - என்று எண்ணினாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இவன் தனது திருவரையில் மரவுரியாடையை உடுத்துள்ளதை நோ க்கி, 'இவனதுஇடையைச்சேர்ந்து பேராநந்தம்பெறுதற்கு மரவுரியாடை செய்த தவம் பொற்பட்டாடை செய்யவில்லைபோலும்; அதனாலேயே, இவன் பொற்பட்டாடையை உடுத்திடாது மரவுரியை உடுத்துள்ளான்' என்று எண்ணினனென்பதாம்: மிக்க தவஞ் செய்திருந்தா லன்றி உத்தம னை இவனைச் சேர்தல் கூடா தென்று கருதியமை வெளியாம். முதன்மூன் றடிகள்-தோடார்புயர்வுநவிற்சியணி. நீரிபு என்னுஞ் சொல்லணியுங் காண்க. முதலடியில், கலை - சந்திரன்பங்கு; நான்காமடியில், கலை - ஆடை; இரண்டாமடியில், கலையென்னும் விஷேப்பகுதி - காரியப்பொ ளில் வந்த

வினைத்தொகை. இனி, [1]எற்கலேத்திருவரை என்ற பாடத்துக்கு - சூரியன் போன்ற ஒளியையுடைய திருவரையென்க. வற்கலை - வல்கலாஎன்னும் வடசொல்லின் திரிபு; இது, பூர்ஜமென்னும்ஒருவகைமரத்தினின்றும் உரித்து எடுக்கப்படும் பட்டையா லமைவது. (உசசு)

உக.—இராமனது முடியழகில் ஈடுபோடு.

தொடையமை நெடுமழைத் தொங்க லாமெனக்
கடைகுழன் றிடைநெறி கரிய குஞ்சியைச்
சடையெனப் [1]புனைந்தில னென்னிற் றையலா
ருடையுயி [2]ருடையுமென் றுன்னிநிற் கின்றுள்.

(இ - ள்.) தொடை அமை நெடு மழை தொங்கல் ஆம் என - ஒழுங்காகத்தொடர்ச்சிப்பட்டுப் பொருந்திய நீண்ட மேகக்கூறுகளின் கீழிறங்கிய வரிசையா மென்று உவமைசொல்லும்படி, கடை குழன்று இடை நெறி கரிய - நுனிசுருண்டு இடையிடையே நெறிப்புக்கொண்டு கரியதாகவுள்ள, குஞ்சியை - (தனது) தலைமயிர்முடியை, சடை என புனைந்திலன் என்னில்- (இவன்) சடையாகத் தரித்திராஞயின், தையலாருடை உயிர் உடையும் - (உலகத்திலுள்ள) மகளிருடைய உயிர்கள் அழிந்திடும், என்று—, உன்னி நிற்கின்றுள் - சிந்தித்துத்திகைத்து நிற்பவளாஞள்; (எ - று.)

அலங்கரித்துமுடிக்கப்படாமற் சடையாகக் கட்டப்பட்டுள்ள நிலையில் தன்மனத்தையுருக்குகிற இக்கேசத்தி னழகு அலங்கரித்துமுடிக்கப்படுமிடத்து மகளிரனைவருயிரையும் ஒழித்திடு மென்றனள் என்க. கேசம் சடையாக்கப்பட்டமைக்குக் காரணங்கற்பித்துக்கூறியது, **ஏதுத்தற்குறிப்பேற்ற வணி.** பி - ம்:—[1]கரந்திலன். [2]யாவையுமுடையுமாலென்றுள். (உசள)

உச.—இராமனது முழுமெய்யழகில் ஈடுபோடு.

நாறிய நகையணி நல்ல புல்லினு
லேறிய [1]செவ்விமே லியற்று மோவெனு
மாறகன் முழுமணிக் கரசின் மாட்சிதான்
வேறொரு மணியினுல் விளங்கு மோ[2]வென்றுள்.

(இ - ள்.) 'நாறிய நகை - வெளித்தோன்றுகிற ஒளியையுடைய, நல்ல அணி - சிறந்தனவாகிய ஆபரணங்கள், புல்லினுல் - (இவன்திருமேனியின் மீது) சேர்ந்தால், (அவை இத்திருமேனிக்கு), ஏறிய செவ்வி-மிக்க அழகை, மேல் இயற்றுமோ-பின்னும் செய்யக்கூடுமோ?'எனு-என்று சொல்லி,—'மாறு அகல் முழுமணிக்கு அரசின் மாட்சி தான் - ஒப்பில்லாத நல்லிலக்கணம் நிரம்பின சிறந்த இரத்தினத்தின் அழகு, வேறு ஒரு மணியினுல் விளங்குமோ - வேறேர் இரத்தினத்தைத் தன்மீது அணிவதனுல் (முன்னினும் மேலாகப்) பிரகாசிக்குமோ? [பிரகாசிக்கமாட்டாதன்றே]?' என்றுள் - என்னும் எண்ணினுள்; (எ - று.)

'இயல்பில்மிகச்சிறந்து வெகுஅழகிதாய் விளங்குகிற முழுமணிக்கு அழகமைகுவித்தற்கு வேறெருமணி வேண்டாமைபோல இயல்பில் அழகின் முடிவெல்லையை யடைந்துள்ளவனுக்கு அழகுசெய்ய அணிகலம் வேண்டுவதில்லை' என்று நிச்சயித்தனள் என்பதாம். முன்னிரண்டடியோடு பின்னிரண்டடி பிம்பப்பிரதிபிம்பபாவத்தோன்ற இயைவதனால், இது - **எடுத்துக் காட்டுவமையணி.** இங்கு, "முற்ற, முழுமணிப்பூணுக்குப் பூண் வேண்டாயாரே, அழகுக் கழகு செய்வார்" என்பது அறியத்தக்கது. 'செவ்வியின்' என்பதில், இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. **பி - ம்:**—[1]செவ்வியன், செவ்வியின். [2]என்றுள். (உசஅ)

உடு.—இராமன்திருமேனியின் நல்லிலக்கணவமைதியில் ஈடுபாடு.

கரந்தில னிலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் [1]பழிப்புற் றனரோ
[2]விரந்திவ னிணைபடிப் பொடியு [3]மேற்கிலார்
புரந்தர னுலகெலாம் புரக்கின் றனென்றுள்.

(இ - ள்.) இவன் - இவனது, இணை அடி-ஒன்றோடொன்றுஒத்த திருவடிகளின், பொடியும் - துகளுக்கும், இரந்து ஏற்கிலா - (தான் ஈடாக) வேண்டியும் அங்ஙனம்ஈடாகப்பெறாத, புரந்தரன் - இந்திரன், உலகு எலாம் புரக்கின்றனன் - எல்லாவுலகங்களையும் ஆளுகின்றனன்; (ஆதலால்), இலக்கணம் - உத்தமவிலக்கணங்களெல்லாம், கரந்திலன் - ஒளித்திடாமல் [மிச்சமில்லாமல் என்றபடி], எடுத்து காட்டிய - (இவனுடம்பில்) உண்டாகி விளங்கச்செய்த, பரம் தரு நான்முகன் - மேன்மைபொருந்தின பிரமதேவன், பழிப்பு உற்றனன் - நிந்தனையடைந்தான், என்றுள்-என்றுஎண்ணினஞள்;(எ-று.)

உத்தமவிலக்கணவமைதியில் இவனது கால்துகளுக்கும் ஒப்பாதற்கு ஏலாத இந்திரன் சகலலோகங்களையும் ஆண்டுகொண்டிருக்க, உத்தமவிலக்கணம்முழுவதும் நிரம்பப்பெற்றுள்ள இவன் ஓராட்சியுமின்றி வனத்தில் வசிக்கின்றனனாதலால், சாமுத்திரிகலக்ஷணத்துக்குஏற்ப அவரவர்பயன் பெறுமாறு படைத்தல்தொழில்செய்தலே மேற்கொண்ட பிரமன் இவ்விஷயத்தில் தவறிப் பழிக்கத்தக்கவனாயினன் என்பதாம். இனி, முதலடிக்கு - சாமுத்திரிகலக்ஷணங்களை ஒளித்திடாமற் பயனேநோடிவிளக்கிய என்று பொருள் கொள்ளுதலும் ஒன்று. இந்திரன் தேவலோகத்தரசாட்சிக்குமாத்திரமேயன்றி மூவுலகத்தரசாட்சிக்கும் உரியவனென்பது, நூல்துணிபு. இலக்கணம் - லக்ஷணம். 'பரந்தருநான்முகன்' என்பதற்கு - மேலானகடவுளாகிய திருமாலாற் பெறப்பட்ட பிரமனென்றலுமாம். **பி - ம்:**—[1]பழியுற்றனன். [2]இருந்தவன். [3]ஒக்கிலாய். (உசக)

உசு.—சூர்ப்பணகை இராமனிடம் வேட்கைவிஞ்சிக் கலங்குதல்.

நீத்தமும் பரவையுங் குறுக நெஞ்சிடைக்
கோத்தவன் புணர்வினை [1]குளிப்ப மீக்கொள

[2]வேத்தவும் [3]புரியவொன் றீக லான்பொருள்
காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினாள்.

(இ - ள்.) கீர்த்தியும் பரவையும் குறுக-ஆற்றுப்பெருக்கும் கடல்வெள்ள மும் சிறியதென்னும்படி, நெஞ்சிடை கோத்த - (இங்ஙனம் பலவாறுசிந்தித் துத் தன்) மனத்திலே தொடர்ச்சியாகக் கொண்ட, அன்பு - அன்பின் பெருக்கு, உணர்வு இடை குளிப்ப மீ கொள - அறிவு தன்னுள்ளே மூழ்கும் படி அதிகப்பட,—எத்தஉம்-(தன்னேத்) துதிக்கவும், புரிய ஒன்று ஈகலான்- (ஏத்தினவன்) விரும்பும்படி ஒருசிறிதுபொருளேயுங் கொடுத்திடாதவனுய், பொருள் காத்தவன் - அப்பொருளேப் பாதுகாத்துவரும் லோபியினது, புகழ் என - கீர்த்தி (வரவரக்குறைதல்)போல, தேயும் - வரவரக்குறைகிற, கற்பினாள் - கற்புநிலைமையையுடையவளாயினள், (சூர்ப்பணகை); (எ - று.) —கற்பினாள் என்பதைக் குறிப்புமுற்றெச்சமாகக்கொண்டு, வருங்கவியோடு குளகமாக்கி, தேயுங் கற்பினளாய் ஓவியம்போன்றனள் என்று இயைத்து முடிப்பினும் அமையும்.

கீழ்க்கூறியபடி சூர்ப்பணகை இராமனதுசௌந்தரியத்தைக்குறித்துப் பலவாறு மேல்மேல்எண்ணி ஆற்றுப்பெருக்கினளவினும் கடலினளவினும் மிகுதியாக அவன்பக்கல் ஆசைவெள்ளத்தைக்கொண்டதனல், அறிவழிந்து கற்பொழிந்தனள் என்பதாம். வறியவனுகவன்றிச் செல்வமுடையவனுயிருந் தும் தானதருமங்களிற் பொருட்செலவுசெய்யாமல் அப்பொருளேப் பாது காத்துவருகிற லோபியின் புகழ் தேய்தல், கற்புத்தேய்தற்கு உவமை. கற்பு - கல்லின்தன்மை. உறுதிப்பாடு என்னலுமாம். முன்னிரண்டடி-**உயர் வுநவிற்சியணி;** பின்னிரண்டடி - **உவமையணி.** [2]ஏத்தறம் என்று பாட மாயின், ஏத்து அறம் எனப் பிரித்து, சிறப்பித்துச்சொல்லப்படுகிற தரும மென்று பொருள்படும். **பி-மீ:**—[1]குளித்து, குளிக்க. [2]ஏத்தவும். [3]பரிவின். ()

உஎ.—அப்பொழுதைய சூர்ப்பணகையின் நிலைமை.

வான்றனில் [1]வரைந்தோர் மாத ரோவியம்
போன்றனள் [2]புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்
[3]தோன்றறன் சுடர்மணித் தோளி னூட்டங்க
[1]ளூன்றினள் பறிக்கவோ ரூற்றம் பெற்றிலள்.

(இ - ள்.) வான்றனில் வரைந்தது ஓர் மாதர் ஓவியம் போன்றனள் - ஆகாயத்தி லெழுதப்பட்ட தொரு பெண்வடிவமான சித்திரத்தையொத்து [நிகைத்துநின்று], புலர்ந்தனள் - மனம்வாடி, புழுங்கு நெஞ்சினள் - (காம தாபத்தால்) வெதும்பின மனமுடையவளாய்,—தோன்றல் தன் சுடர் மணி தோளில் - இராமபிரானது விளங்குகிற அழகிய திருத்தோளில், நாட்டங் கள் ஊன்றினள் - (தன்) கண்களேப் பதியவைத்தவளாய்,—பறிக்க ஓர் ஊற் றம் பெற்றிலள் - (அவற்றை) மீட்டுவாங்குதற்கு ஏற்றதொரு வலிமையைப் பெறுதவளாயினள், (சூர்ப்பணகை); (எ - று.)

சித்திரப்பாவைபோலத் திகைத்துநின்று மெலிந்து மனந்தவித்து இராமன் தோள்களில்வைத்த கண்பார்வையை வாங்கமாட்டாது காதல்கைம்மிக்கனளென்பதாம். இவளுக்குஉபமானமாகக்கூறிய ஓவியத்தை 'வான்தனில் வரைந்தது' என்ற அடைமொழி கொடுத்துக் கூறியதனால், இவள் ஆகாய வழியாக வந்தன ளென்பது விளங்கும்; மேல் ஈ0 - ஆம் பாட்டில் ''பொங் கொளிவிசும்பினிற் பொலியத் தோன்றினள்'' என்பதுமுதலாகக் கூறப்படு கின்றவுங் காண்க. இங்கே, இவளுக்குச் சித்திரப்பாவை - செயலறுதல்மாத்திரத்துக்கு உவமம்; மிக்கஅழகுடைமைக்கு ஒப்பன்று: இவள் இச்சமயத்தில் தன்னுடைய இயற்கைக்கோலரூபத்துடனேயே யிருந்தன ளாதலால்; அத்தன்மை, மேல் உக-ஆம் பாடலால் தெளியப்படும். ஊற்றம் - ஊன்றுகோல், பற்றுக்கோடு; இங்கே, வன்மை யென்ற பொருளில் இலக்கணை. முதலடி-இல்போருவமை. பி-ம்:—[1]வளர்ந்ததோர். [2]கின்றனள். [3]தோன்றல. [4]ஊன்றின. (உடுக)

உஅ.—சூர்ப்பணகை இராமனைச் சேரத்துணிந்து அவனேதிரிசெல்ல வழிதேடல்.

நின்றன [1]ளிருந்தவ னெடிய மார்பக
மொன்றுவெ னன்றெனி னமுத [2]முண்ணினும்
பொன்றுவென் போக்கினி யரிது [3]போன்மெனச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை [4]தேடுவாள்.

(இ - ள்.) நின்றனள் - (இராமனது தோளைப் பார்த்தப்படியே) நின்ற அச்சூர்ப்பணகை,—'இருந்தவன் - இங்குஉள்ளவனுடைய இவனது, நெடிய மார்பு அகம் - பரந்த மார்பினிடத்தை, ஒன்றுவென் - (நான்) சேர்ந்துதழுவு வேன்: அன்று எனின் - அங்ஙனந்தழுவக்கிடைத்திடாதாயின், அமுதம் உண்ணினும் பொன்றுவென்-(சாவாமருந்தாகிய) தேவாமிருதத்தை உண்டாலும் பிழையாம லிறப்பேன்: இனி போக்கு அரிது போன்றும் - இனிமேல் (எனக்கு) வேறுவிதம்இல்லைபோலும்', எனா - என்றுஎண்ணி, எதிர் சென்று நிற்பது ஓர்செய்கை தேடுவாள்-அவனெதிரில் தான்போய்நிற்கும்படியான தோருபாயத்தை ஆராய்பவளானாள்; (எ - று.)

இவனே நாயகனாப்பெறுவிட்டால் உயிரைபிழப்பேனென்று துணிந்து அவனெதிரிற்போய் நிற்றற்குரிய உபாயத்தை ஆலோசித்தனளென்பதாம். 'மார்பகமொன்றுவென், அன்றெனின் அமுதமுண்கினும் பொன்றுவென்' என்றதனால், இராமனதுசேர்க்கையாலாகும் இன்பத்தைத் தேவாமிருதத்தினும் மிகஇனியதும் விசேடப்பயன்தருவதுமாகக் கருதியமை தோன்றும். பி - ம்:—[1]ன்றவன். [2]உண்கினும். [3]போல். [4]தேடுவான். (உடுஉ)

உக.—சூர்ப்பணகை அழகியவடிவங்கொள்ளக் கருதுதல்.

எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
லயிறுடை யா[1]ளென மறுக்கு மாதலாற்

குயிறொடர் குதலையோர் கொவ்வைச் [2]செவ்விவாய்
மயிறொட ரியலியாய் மருவ னன்றெனை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) 'எயிறு உடை அரக்கி-கோரப்பற்களையுடைய இந்த ராக்ஷஸி, எ உயிரும் இட்டது ஓர் வயிறு உடையாள் - எல்லாப்பிராணிகளையும் போகட்ட தொரு வயிற்றையுடையவள்', என-என்று எண்ணி வெறுத்து, மறுக்கும் - (என்னை இவன் ஏற்றுக்கொள்ளாமல்) மறுக்கக்கூடும்: ஆதலால்—,— குயில் தொடர் குதலை - குயில்கூவுதலை யொத்த மழலைச்சொற்களையும், கொவ்வை செவ்வி வாய் - கொவ்வைப்பழம்போலச் சிவந்த அழகிய அதரத்தையு முடைய, ஓர் மயில் தொடர் இயலி ஆய் - மயிலின்சாயலையொத்தசாயலுள்ள ஓர் அழகிய மங்கைவடிவங் கொண்டு, மருவல் - (நான் இவனருகிற்) செல்லுதல், நன்று-நல்லது, எனை - என்று எண்ணி,—(எ - று.)—'பாவியா ஆய்ந்தனள் தோன்றினாள்' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

இவன் என்னைக் கொடியஅரக்கியென் றெண்ணித் தள்ளிவிடவொண்ணுதபடி நான் நல்ல சுந்தரமான ரூப மெடுத்துச் செல்லவேண்டு மென்று எண்ணினள் என்பதாம்.

எவ்வுயிருமிட்டதோர் வயிறுடையாள் - பலவகைப்பிராணிகளையும் மிகுதியாகத் தின்பவ ளென்றபடி. குதலையும் மழலையும் ஒருபொருளன வென்பது ஒருசாரார்துணிபு; பரிமேலழகர்கருத்தும் இதுவே: மற்றொரு சாரார் குதலை எழுத்துவடிவுபெறுத தென்றும், மழலை - எழுத்துவடிவு பெற்றுச்சொல்வடிவுபெறுத தென்றும் வேறுபாடு கூறுவர். பீ-ம்:—[1]எனின். [2]வாயினள். [3]வருகை. (உருக)

கூ.o.—சூர்ப்பணகை மந்திரபலத்தால் அழகியவடிவுபெறுதல்.

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
வங்கையி னயமகந் திரத்தை யாய்ந்தன
டிங்களிற் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினாள்.

(இ - ள்.) பங்கயம் செல்வியை - செந்தாமரைமலரில்வாழ்கிற செல்வத்துக்கு உரிய தெய்வமான திருமகளை, மனத்து பாவியா - (தன்) மனத்திலே தியானித்து, அம் கையின் ஆய மந்திரத்தை ஆய்ந்தனள் - தனது அகங்கை வசப்பட்டுள்ள (அவ்விலக்குமிவிஷயமான) மந்திரத்தை ஜபித்து, (அதன்மகிமையால்), திங்களின் சிறந்து ஒளிர் முகத்தள் - சந்திரனினும் மேம்பட்டு விளங்குகிற முகமுடையவளும், செவ்வியள் - அழகியவளு மாய், பொங்கு ஒளி விசும்பினில் பொலிய-மிக்க (தன்உடம்பின்) ஒளி ஆகாயத்தில்விளங்க, தோன்றினாள் - வடிவம்மாறினாளுர்; (எ - று.)

திருமகள் மந்திரத்தைத் தியானத்தோடு உச்சரித்து மிக்க அழகு பெற்றனள் என்பதாம். மிகஅழகிய வடிவமுள்ள திருமகளை நினைத்துக்கொண்டு,

விரும்பியவடிவம் பெறுதற்கேற்ற மந்திரத்தை உருவிட்டதனால், நினைத்த படி அழகிய வடிவம்பெற்ரு ளென்றுங் கொள்ளலாம். மந்த்ரம் - வடசொல்: "நிறைமொழிமாந்த ராணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திர மென்ப" என்ற தொல்காப்பியத்தால், மந்திரத்தின் தன்மையை அறிக. (உரிச)

வே று.

o கஙக.—முன்றுகவிகள் - சூர்ப்பணகை இராமனெதிரில் வருதலைத் தெரிவிக்கும்.

பஞ்சி[1]யொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்ச[2]நிமிர் [3]சிறடி பெயர்ப்பாள்
யஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென [4]மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

(இ - ள்.) பஞ்சி - செம்பஞ்சும், ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம்-விளக்கம் மிக்க செழித்த தளிர்களும், அனுங்க - (செம்மையிலும் மென்மையிலும் தமக்கு ஒப்பாகாமல்) வருந்தும்படி, செம் செவிய கஞ்சம் நிமிர் - சிவந்த அழகுள்ள தாமரைமலர்போலத் தோன்றுகிற, சிறு அடி-(தன்) சிறியபாதங்களை, பெயர்ப்பாள் - எடுத்துவைப்பவளாய்,—அம் சொல் இள மஞ்ஞை என-அழகிய சொல்லையுடைய இளமையான மயில்போலவும், அன்னம் என-அன்னப் பேடைபோலவும், மின்னும் வஞ்சி என - விளங்குகிற வஞ்சிக்கொடிபோலவும், நஞ்சம் என-விஷம்போலவும், வஞ்சம் மகள் - வஞ்சனையுடையவளான சூர்ப்பணகை, வந்தாள்—; (எ - று.)

வஞ்சியான சூர்ப்பணகை உத்தமலக்கணம்நிரம்பிய மிகஅழகியவடிவங்கொண்டு வந்தனள் என்பதாம். பஞ்சி யெனினும், பஞ்சு எனினும் ஒக்கும். இனி, முதலடிக்கு - செம்பஞ்சுக்குழம்பூட்டப்பட்டு மிகவிளங்குகிற தளிரும் ஒப்பாகாது வருந்தும்படி யென்றும் உரைக்கலாம்.

மயில் - சாயற்கும், அன்னம் - நடைக்கும், வஞ்சி-மெல்லியதாய் ஒல்கி ஒசியும் வடிவத்துக்கும், நஞ்சு - கொடுமைக்கும் உவமை. மயிலைச்சாயற்கே யன்றி நடைக்கும் உவமையாக்கொள்ளுதல் உண்டு: "மயில்கண்டன்னமட நடைமகளிர்" எனவும், "மயிலெனப் போந்து" எனவும் திருமுருகாற்றுப் படையினும், திருக்கோவையாரினும் வருதல்காண்க. நஞ்சை உவமைகொள்ளுமிடத்து, "மெய்பொடிப்பச், சிங்கி குளிர்ந்துங் கொலும்"என்பது அறியத்தக்கது. பலஉவமைகள் தொடர்ச்சியாக வந்ததனால், இப்பாட்டு-மாலையுவமையணி [மாலோபமாலங்காரம்]. பி - மீ:—[1]ஒளி. [2]நிகர். [3]சிறடியளாகி. [4]மின்னு.

இதுமுதல் எட்டுக்கவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று தேமாச்சிருட, மற்றைமூன்றும் கூவிளங்காய்ச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட கலிழுதேவிருந்தங்கள். (உரிஇ)

க.உ. பொன்னெழுகு [1]பூவிலுறை பூவையெழில் பூவை
பின்[2]னெழில்கொள் வாளிணை பிறழ்ந்தொளிர் [3]முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலேத்தட மணித்தேர்
[4]மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) பொன் ஒழுகு - பொன்னிறமான தாதுகள் சிந்தப்பெற்ற, பூவில் - செந்தாமரைமலரில், உறை - தங்குகிற, பூவை - மகளான இலக்குமியினது, எழில் - அழகும், பூவை (எழில்) - கிளியினது அழகும், பின் - (தனக்குமுன்) பிற்படும்படியான, எழில் - சிறந்தஅழகை, கொள் - கொண்ட, வாள் இணை பிறழ்ந்து ஒளிர் முகத்தாள் - இரண்டுவாள்கள் ஒளிவீசி விளங்கப்பெற்ற முகத்தையுடைய சூர்ப்பணகை,—இழிவ தன்மை இது - (தான் வானத்தினின்று) இறங்கிவருவதாகிய இத்தன்மை, கன்னி எழில் - கலியாணமாகாத இளம்பெண்ணின் வடிவத்தையும், கலே தட மணி தேர் - மேகலாபரணத்தையணிந்த பெரிய அழகிய தேரையும், கொண்டது-(தான்) கொண்டதாகிய, மின் - ஒருமின்னற்கொடி, விண் இழிவது - வானத்தினின்று இறங்குவதுபோலும், என்ன - என்று (கண்டோர் உவமை) கூறும்படி, (எ - று.)—'வந்தாள்' என வருங் கவியோடு முடியும்.

சூர்ப்பணகை, இளம்பெண்வடிவத்தையும் மேகலாபரணத்தாற் சூழப்பட்ட அல்குலேயுங் கொண்ட தொரு மின்னல் வானத்தினின்று இறங்கிவந்தாற்போலத் தான் வானத்தினின்று இறங்கிவந்தனள் என்பதாம். பொன், பூவை, வாளிணை, தேர் - உவமையாகுபெயர்கள். 'பொன்னெழுகுபூவிலுறைபூவை' என்பதற்கு - பொன்மயமாய்ப் பொருந்திய தாமரைமலரில் வாழ்கிற திருமக ளென்றுங் கொள்ளலாம்: இனி, பொன் ஒழுகு - அழகு மிக்கு வழிகிற எனினுமாம்.

வாளிணை, கலேத்தடமணித்தேர் என உபமேயங்களே உபமானச்சொற்களாற் குறித்தது, **உருவகவுயர்வுநவிற்சியணி.** பின்னிரண்டடியிற் கூறியது, **இல்பொருளுவமை.** கலே - மேகலா என்னும் வடசொல்லின் விகாரம்; மேகலே - எட்டுக்கோவையுள்ள இடையணி: இது, பிறவும் பலவாறு உரைக்கப்படும். பி - மீ:—[1]பூவினதுபூவொடொளிர். [2]இயல். [3]முகத்தோர். [4]மின்னழிவிறன்மையது, மின்னிழிவிறன்மையிது. (உருசு)

க.ஊ. கானினுயர் கற்பக மூயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்றுவிளே காம[1]நிறை வாசத்
தேனின்மொழி [2]யுற்றினிய செவ்விநனி [3]கொண்டோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.

(இ - ள்.) கானின் உயர் - பரிமளத்தினும் சிறந்த, கற்பகம் உயிர்த்த கதிர் வல்லி - கற்பகவிருக்ஷத்தாற் பெறப்பட்ட பிரகாசமுள்ளதொரு பூங்கொடி [காமவல்லி], மேனி நனி பெற்று - ஒருபெண்வடிவம் (நன்முக)

அமையப் பெற்று, வீஎ காமம் நிறை - மேன்மேல்வீஎகிற காமவொழுக் கம்நிறைந்து, வாசம் சேனின் மொழி - நறுமணமுள்ள தேன்போன்ற சொற் களையும், உற்று - அடைந்து, இனிய செவ்வி நனி கொண்டு-கண்ணுக்கினிய அழகை மிகுதியாகப் பெற்று, ஓர் மானின் வீழி பெற்று-ஒப்பற்ற மான்பார் வைபோன்ற பார்வையைப் பெற்று, மயில் வந்தது ஆன - மயில்போலுஞ் சாயலும் நடையும் கொண்டு வந்தாற்போல, வந்தாள்—; (எ - று.)

தேவலோகத்தில் கற்பகவிருக்ஷத்தைச் சார்ந்து அதன்மேற்படர்கிற காமவல்லியென்னுந் தெய்வப்பூங்கொடி, பெண்வடிவத்தையும் நிரம்ப இன் பந்தருந்தன்மையையும் இன்சொற்களையும் மிக்கஅழகையும் மான்பார்வை யையும் மயில்நடையையும் மயிற்சாயலையுமுடையதாய் வந்தாற்போல வந்தனள் சூர்ப்பணகை என்பதாம். **தற்குறிப்பேற்றவணி.** 'கானினுயர்' என்றது, வல்லிக்கும் அடைமொழியாகலாம்: உத்தமசாதி மகளிரது உடம்பு இயற்கையில் நறுமணமுடையதென்பது நூற்கொள்கை யாதலால், அதற்கு உபமானமாகிய வல்லிக்கு 'கானினுயர்' என்ற அடைமொழி கொடுத்தனரென்க. காமநிறைந்தமொழியைச் சூர்ப்பணகைபேசுதலே மேற் காண்க.
பி - மீ:—[1]நெறி. [2]ஒத்து. [3]பெற்றோர். (உருஎ)

உ. ஈ.—இரண்டுகவிகள்-இராமன் சூர்ப்பணகையைப் பார்த்தலைக் கூறும்.

நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னுக்
கோமகனு மத்திசை [1]குறித்ததிர் விழித்தான்.

(இ - ள்.) நூபுரமும் - (அவளது) காற்சிலம்பும், மேகலையும் - இடை யணியும், நூலும் - நூலிற்கோத்த ஆரங்களும், அறல் ஒதி பூ முரலும் வண் டும் - கருமணல்போன்ற கூந்தலிற் சூடிய மலர்களில் மொய்த்துஒலிக்கிற வண்டுகளும், இவை - என்னும் இவைகள், பூசல் இடும் - ஆரவாரஞ்செய் கிற, ஓசை—, ஒரு தையல் வரும் என்னு உரைசெய்கின்றது - ஒருபெண் (இங்கே) வருவ ளென்று சொல்லுகிறதாக,—கோமகனும் - சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமனும், அ திசை குறித்து எதிர் விழித்தான்-அவ்வோசை வருகிற திக்கைக் குறிப்பிட்டு எதிரே நோக்கினன்; (எ - று.)—தாம்-அசை.

சூர்ப்பணகி வருகிறபொழுது, அவளது சிலம்பு மேகலை ஆரம் முதலிய ஆபரணங்கள் ஒலித்தலாலும் அவள்கூந்தலிற்சூடியுள்ளமலர்களில் மிகுதியாக மொய்க்கிற வண்டுகள் ஆரவாரித்தலாலும் உண்டான ஓசை இராமன் செவி யிற்பட்டமாத்திரத்தில், அவ்வொலியின்குறிப்பால் யாரோ ஒருமகள் இங்கு வருகிறா ளென்று அறிந்து, அப்பெருமான், அவ்வொலிவரும்வழியிற் கண் செலுத்தினன் என்பதாம்.

நூல் - ஆகுபெயர். உரைசெய்தல் - குறிப்பித்த லென்றமாத்திரமாய் நின்றது: இது, பேசாததைப் பேசுவதுபோலச் சொன்ன மரபுவழுவமைதி.
பி - மீ:—[1]குறித்தனன். (உருஅ)

ரூ. [1]விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்கவரு [2]போழ்த்தத்
தெண்ணருளி யேழைமை துடைத்தெழு [3]மெய்ஞ் ஞானக்
[4]கண்ணருள்செய் கண்ணனிரு கண்ணினெதிர் கண்டான்.

(இ - ள்.) விண் - தேவலோகம், அருள - கொடுக்க, வந்தது - (அங்கு நின்று) வந்ததான, ஒரு மெல் அமுதம் என்ன - ஒப்பற்ற இனிய அமிருதம் போல, (அவள்), வண்ணம் முலை கொண்டு இடை வணங்க வரு போழ்த்தது - அழகிய தனங்களையுடையளாய் (அவற்றின் பாரத்தால்) இடைதுவளும் படி அடுத்துவருகிற சமயத்தில்,—எண் அருளி ஏழைமை துடைத்து எழு மெய் ஞானம் கண் அருள் செய் கண்ணன்-(தனது) திருவுள்ளத்தில் அருள் கொண்டு (அதனால் அடியார்களது) அறியாமையைப் போக்கி (அவர்களுக்கு) மேன்மேல்வளர்கிற தத்துவஞானமாகிய கண்ணைக் கொடுத்தருளுகிற திரு மாலின் திருவவதாரமான இராமபிரான், இரு கண்ணின் எதிர் கண்டான் - (தனது) இரண்டுகண்களாலும் (அவளை) எதிரிலே பார்த்தான்; (எ - று.)

தேவலோகத்திலிருந்து அமிருதம் வருகின்றவரைபோல இன்பவடிவங் கொண்டவளான அவள் வானத்தினின்றிறங்கிவருஞ்சமயத்தில், இராமன் அவளைக் கண்ணெதிரிற் கண்டனனென்பதாம்; **தற்குறிப்பேற்றவணி.**

'எண்ணருளி யேழைமைதுடைத்து எழுமெய்ஞ்ஞானக்கண்ணருள்செய் கண்ணன்' என்றதனால், திருமால் இயல்பாகியகருணைகொண்டு அடியார்களுக்குத் தவிர்க்கவேண்டியதைத்தவிர்த்து அளிக்கவேண்டியதை அளித்தருளுந் தன்மை விளங்கும். இனி, ஏழைமைதுடைத்து - வறுமையை நீக்கிச் சகல ஐசுவரியங்களையுந் தந்து என்றுமாம். தற்காலத்தில் எதிரிலேயுள்ளபொரு ளேமாத்திரமே காணும் ஊனக்கண்ணினும், காலமிடையிட்டவற்றையும்தேய மிடையிட்டவற்றையும் அறியத்தக்க ஞானக்கண்ணுக்கு உள்ள சிறப்புத் தோன்ற, 'எழுமெய்ஞ்ஞானக்கண்' எனப்பட்டது. **பி - ம்:**—[1]விண்ணவர் ருந்தவரும். [2]மானே. [3]விஞ்ஞானக். [4]கண்ணருளு. (உருக)

ரூ. —இராமன் அவளைக் கண்டு வியத்தல்.

பேருழைய நாகருல கிற்பிறிதின் வானிற்
பாருழையி னில்லதொரு மெல்லுருவு பாரா
வாருழைய டங்குமழ கிற்[1]கவதி யுண்டோ
நேரிழையர் யாவ[1]ரிவர் நேரென நினைந்தான்.

(இ - ள்.) பேர் உழைய பெரிய இடத்தையுடைய, நாகர் உலகில் - சர்ப்பசாதியாரது லோகமாகிய பாதாளத்திலும், வானில் - தேவலோகத்தி லும், பிறிதின் பார் உழையின் - மற்றொன்றாகிய பூலோகத்தினிடத்திலும், இல்லது - இல்லாததாகிய, ஒரு - ஒப்பற்ற, மெல் உருவு - மென்மையான அப்பெண்வடிவத்தை, பாரா - பார்த்து,—(இராமன்),—'ஆர்-(இவர்) யாவர்? உழை அடங்கும் அழகிற்கு அவதி உண்டோ - இவரிடத்தில் தங்கிய அழகு

க்கு ஓர் எல்லே உள்ளதோ? [இல்லே யென்றபடி]; நேர் இழையர் - தக்கஆப ரணங்களேயணிந்த மகளிருள், யாவர் இவர் நேர் - எவர் இவர்க்கு ஒப்பாவர்? [எவருமில்லே யென்றபடி]', என - என்று, நினேந்தான் - எண்ணினன்.

மூன்றுலோகத்திலும் எப்பொழுதுமில்லாத இப்படிப்பட்ட அழகிய வடிவத்தைப் பார்த்து, ஸ்ரீராமன், இப்பேரழகுடையார் யாவரென்றும், இவ ழகுக்கு எல்லேயில்லே யென்றும், அழகில் இவரோடொப்பார் எவருமில ரென்றும் கருதினன் என்பதாம்.

நேரிழையர் - ஏற்ற ஆடையை யுடையவருமாம்; இழையென்னும் நூலின்பெயர் - ஆடைக்குக் கருவியாகுபெய ரென்க. புதிதாகக் கண்ட ஒரு பெண்ணேக்குறித்து 'இவள்' என ஒருமையாக் கருதுதலினும் 'இவர்' எனப் பன்மையாகக் கருதுதல் பெருந்தகைமைக்குச் சிறப்பாதலால், 'இவர்நே ரென நினேந்தான்' எனப்பட்டது. பி - ம்:—[1]அமைதி. [2]ஆவள். (உசுo)

க.எ. —சூர்ப்பணகை இராமனருகில் வந்து வணங்கிநிற்றல்.

அவ்வயினவ் வாசைத [1]னகத்துடைய வன்னுள்
செவ்விமுக முன்னியடி செங்கையி னிறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசி[2]யயல் பாரா
நவ்வியி னெதுங்கியிறை நாணியய னின்றுள்.

(ஓ - ள்.) அ வயின் - அவ்விடத்து [அப்பொழுது], அ ஆசை தன் அகத்து உடைய அன்னுள் - அப்படிப்பட்ட [கீழ்க்கூறிய] மிக்ககாதலுத் தன்மனத்திலேயுடைய அச்சூர்ப்பணகை, செவ்வி முகம் முன்னி - (இராம னது) அழகிய முகத்தை நோக்கி, அடி செம் கையின் இறைஞ்சா - (அவ னது) திருவடிகளேச் சிவந்த (தன்) கைகளால் தொழுது, வெவ்விய நெடுங் கண் அயில் வீசி அயல் பாரா-கொடிய நீண்ட (தன்) கண்களாகிய வேல்களே வீசிப் பக்கங்களிற் பார்த்துக்கொண்டு, நவ்வியின் ஒதுங்கி-(மருண்ட) மான் போல ஒருபுறத்தில் விலகி, இறை நாணி - சிறிது நாணங்காட்டி, அயல் நின்றுள் - அருகில் நின்றுள்; (எ - று.)

நெடுங்கணயில் - உருவகம். நவ்வியினெதுங்கி - உவமை. நவ்வியின் பாரா என இயைக்கவும் அமையும். 'செவ்வி முகம் முன்னி' என்பதற்கு - தனது அழகிய முகத்தை முன்னெடுத்து என்றலும் ஒன்று. பி - ம்:—[1]மன த்து. [2]வியவாரா. (உசுக)

இதுமுதற் பத்தொன்பது பாடல்களில், இராமனுக்கும் சூர்ப்பண கைக்கும் நடந்த சம்பாஷணை விவரிக்கப்படுகிறது.

கஅ.—இராமன் சூர்ப்பணகையை நோக்கி வினவல்.

தீதில்வர வாகதிரு நின்வரவு [1]சேயோய்
போதவுள தெம்முழையொர் புண்ணிய[2]ம தன்றே
வேதபதி யேதுபெயர் யாவருற வென்றன்
மேதமுதல் மெய்தையல டன்னிலை விரிப்பாள்.

(இ - ள்.) வேதம் முதல் - வேதங்களிற் சித்தாந்தஞ்செய்யப்பட்ட முதற்கடவுளான ஸ்ரீராமன், (அவளைநோக்கி), 'திரு-திருமகள்போன்றவளே! சேயோய் - செந்நிறமுடையவளே! [அல்லது செம்மைக்குணமுடையவளே!] நின் வரவு-உனது வருகை, தீதுஇல் வரவு ஆக-தீங்கில்லாத நல்வரவாயிருக்கக்கடவது; போதக-(நீ இவ்விடத்தில்) வரும்படி, எம்உழை உளது - எம்மிடத்தில் உள்ளது, ஓர் புண்ணியம்அது அன்றே - ஒப்பற்ற நல்வினையன்றே? பதி எது-(உனது) ஊர் எது? பெயர் எது - (உன்) பேர்யாது? உறவு யாவர்? - உனக்கு உறவினர் யாவர்? என்றான் - என்றுவினவினான்: பேதைஅவள் - இளமைகொண்டஅவள், தன் நிலை விரிப்பாள் - தனது தன்மையை விளக்குபவளாளாள்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

'வேதமுதல்' என்பதற்கு - வேதங்களை ஆதியில் வெளியிட்ட கடவுளென்றும், வேதப்பொருளையுணர்த்து தலைவனென்றும் பொருள்கூறலாம். யாவுமறிந்தவனான இராமன் தான்கொண்ட மானுடவவதாரத்துக்கு ஏற்றபடி ஒன்றுமறியாதவன்போலப் பாவித்துக் கபடமில்லாமல் அக்கொடியாளைத் தோற்றத்தின்படி நல்லாளாக நிச்சயித்து நல்லவரவுகொண்டாடி உபசரித்து வினவ, அவ்வறிவிலாள் தன்வஞ்சனையால் அப்பெருமானைத் தன்வசப்படுத்தத்தொடங்கிப் பேசலுற்றன ளென்பது தோன்ற, இராமனை 'வேதமுதல்' என்றும், சூர்ப்பணகையை 'பேதையவள்' என்றும் இங்கே கவி குறித்தனரென்க. 'தீதில்வரவாக' என்பது - சிறந்தவர்வருகையைக்கொண்டாடுமிடத்து வடமொழியில் வழங்குகிற 'ஸ்வாகதம்' என்பதன் பொருள் கொண்டது. சேயோய் போக - சேய்மையிலுள்ளவளான நீ இங்குவர என்றலும் ஒன்று. பி - பீ:—[1]செய்யோய். [2]இது. (உகூஉ)

வேறு.

கூகூ—சூர்ப்பணகை இராமனுக்குத் தன்னைத் தெரிவித்தல்.

பூவிலோன் புதல்வன் மைந்தன் [1]புதல்வி*மூப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னான செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாங் [2]தொலைத்து வெள்ளி மலையெடுத் துலக மூன்றுங்
காவலோன் [3]பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள்.

(இ - ள்.) '(நான்),—பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி-தாமரைமலரில் தோன்றிய பிரமனது புத்திரனான புலஸ்தியப்பிரஜாபதியினுடைய குமாரனாகிய விச்சிரவசு என்னும் முனிவனது பெண்: மூப்புரங்கள் செற்ற - மூன்றுபட்டணங்களை யழித்த, சேவலோன் - விருஷபத்தை ஏறிநடத்துதல்வல்ல சிவபிரானது, துணைவன் ஆன - நண்பனாகிய, செம்கையோன் - சிவந்தகைகளையுடைய குபேரனது, தங்கை—: திக்கின் மா எலாம் தொலைத்து - திக்கஜங்களையெல்லாம் வலியழித்து, வெள்ளி மலை எடுத்து - வெள்ளிமயமான கைலாசமலையை(க் கைகளாற்) பெயர்த்துஎடுத்து, உலகம் மூன்றும் காவலோன் - மூன்றுலகங்களையுங் காத்தலில் வல்ல இராவணனது,

பின்னை - பின்பிறந்தவள்: காமவல்லி ஆம் கன்னி - காமவல்லியென்றுசொல்லப்படுகிற பெண்', என்றுள் - என்று சொன்னாள்; (எ - று.)

இப்பாடலினால், சூர்ப்பணகை தனதுகுலப்பெருமையையும் உடன் பிறந்தோர்திறமையையும் கூறித் தன்னை உயர்த்தினாள்.

படைப்புத்தொழிலில் தனக்குத்துணைவராம்படி பிரமதேவனால் ஆதி காலத்தில் உண்டாக்கப்பட்ட உபப்பிரமர்கள் ஒன்பதின்மருள் ஒருவனாகிய புலஸ்திய னென்னும் முனிவன் திருணபிந்துவென்னும் ராஜரிஷியின் மகளே மணஞ்செய்துகொண்டு அவளிடம் விச்சிரவசு என்னும் மகனைப் பெற்றான்: அக்குமாரன், பரத்துவாசமுனிபுத்திரியை விவாகஞ்செய்துகொண்டு அவளிடம் ஒருமகனை உண்டாக்க, அவன், பின்பு பெருந்தவஞ்செய்து, இந்திரன் யமன் வருணன் என்பவரோடு சமானலோகபாலகனும் வடதிசையை ஆள்பவனும் செல்வத்துக்குத் தலைவனுமாய்க் குபேரனென்று பிரசித்தி பெற்றான்; பின் ஒருகாலத்தில் சுமாலியென்னும் இராக்கதன் தன்மகளான கேகசிக்குக் குபேரனது சிறப்பைக் காட்டி 'இப்படிப்பட்டவனைப் பெற்ற விச்சிரவமுனிவனை யும் சேர்ந்து நன்மக்களைப் பெறுவாய்' என்று செலுத்த, அங்ஙனமே அவள் மாலைப்பொழுதில் அம்முனிவனிடஞ் சென்று தன் கருத்தைக்குறிப்பித்துப் பிரார்த்திக்க, முனிவன் அவளை அங்கீகரித்து 'நீ ஆசுரவேளையில் வந்ததனால், கொடிய பிள்ளைகள் உன்னிடம் உண்டாவர்' என்று அருளிச்செய்ய, அதுகேட்ட அவள் மீண்டும் வெகுவாக வேண்ட, அவன், 'கடையில் உதிப்பவன் நன்மகனாவான்' என்று அனுக்கிரகித்தனன்; அவ்வாறே அவளிடம் இராவணன் கும்பகர்ணன் சூர்ப்பணகை விபீஷணன் என்பவர் முறையே தோன்றினரென வரலாறு காண்க: இது, மேல் உத்தரகாண்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

'பூவிலோன்' என்பதில், இல் - சாரியை; "தவமும், அரசிலாரில்வழியில்லை" என்றவிடத்துப்போல. இனி, பூ இலோன் - தாமரை மலரை இடமாகவுடையவ னென்றும் கொள்ளலாம்; இல் - இடம். சே - எருது. குபேரன், ஒருகாலத்தில் இமயமலைச்சாரலிலிருந்து நெடுநாள் பெருந்தவஞ்செய்து சிவதரிசனத்தைப்பெற்று அப்பெருமானருளால் அக்கடவுளுக்கு நண்பனாயினமைபற்றி, 'சேவலோன்தூணவனை செங்கையோன்' எனப்பட்டான். குபேரன் தானத்திற்சிறந்தவனென்பதை, 'தநதன்' என்ற அவன்பெயராலும் உணர்க. காமவல்லி - கற்பகத்திற்படர்கொடி; வேண்டுவார்க்கு வேண்டியபொருள்களைத் தருவது. தான் காமவல்லிபோல் அழகியவளாயும் இன்பந்தருபவளாயு மிருத்தலால் தன்னை யாவரும் அப்பெயராலழைக்குவ ரென்பது தோன்ற, 'காமவல்லியாங் கன்னி' என்றாள்.

மும்புரம் - பொன் வெள்ளி இரும்பு என்னும் இவற்றாலாகிய மதிலையுடைய மூன்றுபட்டணம். சிவபிரான் திரிபுரமெரித்த வரலாறு:—தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுன்மாலி தாரகாட்சன் கமலாட்சன் என்னும் மூவரும் மிகத்தவஞ்செய்து மயனென்பவனால் சுவர்க்க மர்த்திய பாதாள

மென்ற மூன்றிடங்களிலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும் பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மை யுடைய மூன்றுபட்டணங்களைப் பெற்று, மற்றும்பல அசுரர்களோடு அந்தக ரங்களுடனே தாம்நினைத்த இடங்களிற் பறந்துசென்று பலஇடங்களையும் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திரசூரியரைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்குவேதங்களைக் குதிரைக ளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசே ஷனை நாணாகவும், விஷ்ணுவை வாயுவாகியசிறகமைந்து அக்கினியை முனை யாகவுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தனஞ்சென்று போர்செய்பயத்தனித் துப் புன்சிரிப்புச் செய்து அவ்வசுரனைவரையும் பட்டணங்களோடு எரித் தருளின னென்பதாம்.

இராவணன் திக்குவிசயகாலத்தில் ஐராவதம்முதலியதிக்கஜங்களைஎதிர் த்து அவற்றின்தந்தங்களைஒடித்து அவற்றை வலிதொலைத்தன னென்க.

இராவணன் கைலை பெயர்த்தது:—இராவணன் திக்குவிசயஞ்செய்கை யில் குபேரனைவு எதிர்த்துப் பொருது அவனை வென்று அவனது புஷ்பக விமானத்தைப் பறித்து அதன்மேலேறிக்கொண்டு கைலாசமலைக்குமேலாக ஆகாசமார்க்கத்திலே விரைந்து மீண்டுவருகையில், அம்மலையின் மகிமை யால் விமானம் தடைப்பட்டுநிற்க, அதற்குக் காரணம் இன்னதென்று அறி யாது திகைக்கையில், நந்தி எதிரில்வந்து 'சிவபிரானுக்குத் தங்குமிடமான திருக்கயிலாயத்தின் பெருமை இது' என்று சொல்லவும், கேளாமல் கு முகன் தனதுபிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடு பறித்து எடுத்து அப்பால்எறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல் வேனென்று கூறி விமானத்தினின்றும்இறங்கித் தனதுஇருபதுகைகளை யும்அம்மலையின்கீழ்க்கொடுத்து அதனைப் பெயர்த்துஅசைத்தனனென்பது.

பி-ம்:—[1]பாலை. [2]தொலைய. [3]தங்கை.

இதுமுதல் முப்பத்துமூன்று கவிகள் - இப்படலத்தின் முதற்கவி போன்ற **அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.** (உகஅ)

சுo.—இராமன் சங்கித்து மீண்டும்வினவல்.

அவ்வுரை கேட்ட வீர னையுறு மனத்தான் [1]செய்கை
செவ்விதன் றறித லாருஞ் [2]சிறிதினென் [3]றுணராச் செங்கண்
வெவ்வுரு வமைந்தான் றங்கை யென்பது மெய்ம்மை யாயி
னிவ்வுரு [4]வியைந்த தன்மை யியம்புதி [5]யியல்பினென்றான்.

(இ - ள்.) அ உரை கேட்ட வீரன்-(சூர்ப்பணகைசொன்ன) அத்தவார்த் தையைச் செவியுற்ற இராமன்,—ஐயுறு மனத்தான் - (அரக்கிக்கு இப்படிப் பட்டஅழகு எங்ஙனம் அமைவது என்று) சந்தேகங்கொண்டமனத்தையுடை

யவனுப்,—'செய்கை செவ்வியது அன்று - (இவளது) செயல் களங்கமற்ற தன்று; சிறிதின் அறிதல் ஆகும் - சிறிதுவிசாரித்துஅறிதல் தகுதி', என்று, உணரா-என்றுஎண்ணி,—(அவளைநோக்கி),—'செம் கண் வெவ் உரு அமைத் தோள் தங்கை என்றது மெய்ம்மை ஆயின் - (எப்பொழுதுங் கோபத்தாற்) சிவந்த கண்களையுடைய பயங்கரமான வடிவத்தைப் பொருந்தின இராவண னது தங்கை நீயென்றது உண்மையானால், இ உரு இயைந்த தன்மை யியல்பின் இயம்புதி - இந்தஅழகியவடிவம்பொருந்தியவிதத்தை உள்ளபடி கூறுவாய்,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

அச்சொல்லைக்கேட்டு, ஸ்ரீராமன், ஐயப்பட்டு, 'விகாரவுருவமுள்ள அரக்கனது தங்கை நீயென்பது உண்மையானால், இக்கல்லுருவம் உனக்கு எப்படிக் கிடைத்தது? உண்மையாகச் சொல்'என்று வினவினன் என்பதாம். செய்கை யென்பதற்கு - உடம்பென்று உரைப்பாரு முளர்; தொழிலாகுபெய ராகிய காரணக்குறி. செவ்வியது - செம்மையானது. செவ்வித்தன்று - மாயை யாலமைந்ததுபோலு மென்றபடி. இங்கே, 'செங்கண்' என்றது, கொள்ளிக் கண் கொடுங்கண் குருதிக்கண் என்றாற்போல விகாரத்தன்மையைக் காட் டும். 'சிறிதின் அறிதலாகும்' என்பதற்கு-சிறிதுபொழுதில் அறியலாமென்று உரைத்தலு மொன்று. பி-ம்:—[1]செல்கை. [2]சிறியள். [3]உணரச். [4]அமைந்த. [5]விரைவின். (உகச)

சுக.—அதற்கு அவர் விடைகூறுதல்.

தூயவன் பணியா முன்னஞ் சொல்லுவாள் சோர்வி லாளம்
மாயவல் லரக்க ரோடு வாழ்வினை [1]மதிக்க லாதே
ஞ்யவுறு மனத்தே னாகி யறத்தலை நிற்ப தானேன்
தீவினை தீய தோற்றுத் தேவரிற் பெற்ற தென்றாள்.

(இ - ள்.) தூயவன் பணியா முன்னம் - பரிசுத்தகுணமுள்ள இராமன் இங்ஙனஞ்சொல்லுதற்குமுன்னே [சொன்னவுடனே விரைவில் என்றபடி], சோர்வு இலாள் சொல்லுவாள் - (ஏற்றவிடைகூறுதற்குச் சிறிதும்)பின்வாங் குதலில்லாமல் உத்தரஞ்சொல்பவளாய்,—'அ மாயம் வல் அரக்கரோடு வாழ் வினை மதிக்கலாதேன்-மாயையையும் கொடுமையையு முடைய (இராவணன் முதலிய) அவ்விராக்கதர்களுடனே கூடிவாழ்தலைத் தகுதியென்றுஎண்ணுத வளாய், ஆய்வு உறு மனத்தேன் ஆகி - (நல்லவைதீயவைகளை) ஆராய்ந்து பகுத்தறிபும்விவேகம் பொருந்திய மனத்தையுடையவளாய், அறம் தலைநிற் பது ஆனேன்-தருமத்தையே மேற்கொண்டு அவ்வழியில் நிற்குந் தன்மையை யுடையவளான நான், தீவினை தீய தோற்று - பாவங்க ளொழியும்படி தவஞ் செய்து, தேவரின் பெற்றது - தேவர்களுடைய அநுக்கிரகத்தால் அடைந் தது, அழகியஇவ்வடிவம், என்றாள் - என்றுசொன்னாள்; (எ - று.)

இப்பாட்டினால், சூர்ப்பணகை தனது தீக்குணமின்மையையும், தீயோர் சேர்க்கையொழிந்தமையையும், விவேகமுடைமையையும், அறநெறியொழு

குதலையும், தவமுடையளான மையையும், தேவாதுக்கிரகம்பெற்றமையையும் வெளியிட்டனள்.

வஞ்சகமுள்ள இராக்கதரோடு வாழ்தலை நீக்கி நல்வழிநிற்கத்தொடங்கித் தவஞ்செய்து தேவர்களிடத்தினின்று இந்நல்லுருவம்பெற்றேனென்றனளென்பதாம். தூயவன்பணியாமுன்னஞ் சொல்லுவாள் - **மீகையுயர்வு வெற்சியணீ.** 'தேவரிற்பெற்றது' என்பது - தேவர்போலப்பெற்ற தென்றும் பொருள்படும். 'பெற்றது' என்பதற்கு எழுவாய், முன்பாட்டிலுள்ள 'இவ்வுரு' என்பதே. **பி - ம்:**—[1]மதிக்கிலாதேன். (உசுடி)

சுஉ.—இராமன் மீண்டும் வினவல்.

இமையவர் தலைவ னேயு மெளிமையி னேவல் செய்யு
மமைதியி னுலக மூன்று மாள்பவன் றங்கை யாயிற்
சுமையுறு செல்வத் தோடுந் தோன்றலை துணையு மின்றித்
[1]தமியைநீ வருதற் கொத்த தன்மையென் றையல் லென்றான்.

(இ - ள்.) 'தையல் - அழகிபவளே! நீ—, இமையவர் தலைவன்ஏவும் எளிமையின் ஏவல் செய்யும் அமைதியின் உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை ஆயின் - தேவர்களுக்குஅரசனை இந்திரனும் எளியகுற்றேவல்செய்யத்தக்க தன்மையோடு எல்லாவுலகங்களையும் அரசாளுகிற இராவணனது தங்கை யானல், —சுமை உறு செல்வத்தோடும் தோன்றலை - மிகுதிபொருந்திய செல்வச்சிறப்புக்களோடு வாராமல், துணையும் இன்றி தமியை வருதற்கு - துணையொருவருமில்லாமல் தனியளாய் இங்குவருவதற்கு, ஒத்த தன்மை - பொருந்தினகாரணம், என்-யாது?' என்றான்-என்றுவினவினேனென்,(இராமன்).

நீ மூவுலகத்தையும் ஆள்பவனுக்குத் தங்கையானல் தாதிமார் முதலிய பலவகை விபவத்தோடுங் கூடி வரக்கூடுமே: அங்ஙனமின்றி, துணையுமில்லாமல் தனித்துவருவதற்கு எது என்? என்று கேட்டனனென்பதாம். **பி-ம்:**—[1]தமியணீ. (உசுசு)

சுக.—அதற்கு அவள் விடைகூறுதல்.

வீரனஃ துரைத்த லோடு மெய்யிலாள் விமல யானச்
சீரிய ரல்லார் மாட்டுச் [1]சேர்கிலென் றேவர் பாலு
மாரிய முனிவர் பாலு மடைந்தனெ னிறைவ வீண்டோர்
காரிய முண்மை நின்னைக் காணிய வந்தே னென்றாள்.

(இ - ள்.) வீரன்-இராமன், அஃது உரைத்தலோடும் - அவ்வார்த்தையைக் கூறியவளவிலே, மெய் இலாள் - உண்மையில்லாதவளான சூர்ப்பணகை,—(அப்பெருமானேநோக்கி), 'விமல - குற்றமில்லாதவனே! இறைவ-லனே! யான்—, அ சீரியர் அல்லார்மாட்டு சேர்கிலென் - நற்குண நற்செய்கையுடையரல்லாத (இராவணன்முதலிய) அவ்வரக்கரிடத்துச் சேரா-ல், தேவர்பாலும் ஆரியர் முனிவர்பாலும் அடைந்தனென் - தேவர்கள்

பக்கலிலும் சிறந்தமுனிவர்கள்பக்கலிலும் சேர்ந்துள்ளேன்; ஈண்டு - இவ் விடத்தில் [உன்னிடத்தில்], ஓர் காரியம் உண்மை - (எனக்கு) ஒருகாரியம் ஆகவேண்டியிருத்தலால், நின்னை காணிய வந்தேன் - உன்னைக் காணும் பொருட்டு (இங்கு) வந்தேன்', என்ருள் - என்றுசொன்னுள்; (எ - று.)

யான் இராவணன்தங்கையாயினும் அவ்விராவணன் முதலிய கொடிய அரக்கரோடுகூடி வாழப் பிரியமில்லாமல் அறவெறியொழுக்கங்கொண்டு நல் லோரான தேவரிடத்தும் முனிவரிடத்தும் சார்ந்திட்டதனுல், எனக்கு இரா வணன் தங்கைக்கு உரிய ஆடம்பர மில்லை; நின்னிடத்தில் எனக்கு அத் தங்கமா யாகவேண்டிய காரிய மிருப்பதனுல், தூணையின்றித் தனியேவந்தே னென்றனனென்பதாம்.

'சீரியரல்லார்மாட்டுச் சேர்கிலென் தேவர்பாலு மாரியமுனிவர்பாலு மடைந்தனென்' என்று பொய்யாகக் கற்பித்துக்கூறியமைபற்றி, 'மெய் யிலாள்' என்ருர். ஆரிய - சிறந்தவனே! என விளியாகவுங் கொள்ளலாம். பி - ம்:—[1]சேரலேன். (உசுஎ)

சுசு.—இராமன் அவளை வந்த காரியமென் னென்றல்.

அன்னவ ளுரைத்த லோடு மையனு மறிதற் கொவ்வா
நன்னுதன் மகளிர் சிந்தை நன்னெறிப் பால வல்ல
பின்னிது தெரியு [1]மென்னைப் பெய்வளைத் தோளி யென்ப
[2]லென்னகா ரியத்தை சொல்லஃ [3]தியையுமே விழைப்ப லென்ரூன்.

(இ - ள்.) அன்னவள் உரைத்தலோடும் - அவள் (அப்படி) சொன்ன வுடனே, ஐயனும் - இராமனும், 'நல் நுதல் மகளிர் சிந்தை - அழகிய நெற்றி யையுடைய மாதரது மனக்கருத்துக்கள், அறிதற்கு ஒவ்வா - எளிதில்அறிய முடியாதனை; (அன்றியும்), நல் நெறி பால அல்ல - நல்ல வழியில் உரிமை கொண்டுநிற்பனவு மல்ல; இது - இவள்மனக்கருத்து, பின் தெரியும் பின்பு தெரியக்கூடும்,' என்னு-என்று எண்ணி,—(அவளை நோக்கி ,—'பெய் வளை தோளி - அணிந்த வளையல்களையுடைய தோள்களையுடையவளே! என்பால் என்ன காரியத்தை - என்னிடத்து (நீ) என்னகாரியமுடையாய்? சொல் - சொலவாய்; அஃது - அக்காரியத்தை, இயையுமஎல் இழைப்பல் - செய்யக் கூடுமானுற் செய்துதொடுப்பேன்,' என்ருன் - என்றுசொன்னுன்; (எ - று.)

மாதருள்ளம் ஆழ்ந்த தாதலால் அறிதற்கு அரி தென்றும், அது தீவழி யிலுஞ் செல்லத்தக்கதென்றும் எண்ணி, அவளைநோக்கி, 'வந்தகாரியஞ் சொல்: தகுமானுற் செய்வேன்' என்றனனென்பதாம். 'அகத்திலழகு முகத் தில் தெரியும்'என்ற உலகமொழியின்படி மகளிர்முகத்தினழகைக்கொண்டே அவர்மனத்திலழகும் உள்ளதென்றுகொள்ளற்பாற்றன்றென்பது தோன்ற, 'அறிதற்கொவ்வா நன்னுதல்மகளிர்சிந்தை' எனப்பட்டது. பி - ம்:—[1]என் பான். [2]என்னை. [3]இசையுமேலிசைப்பென். (உசுஅ)

சரு.—அவள் தன்கருத்தை வெளியிடுதல்.

தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
[1]தாமென லாவ தன்று லருவ்குல மகளிர்க் கம்மா
வேமுறு முயிர்க்கு நோவே னென்செய்கேன் யாருமில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி யென்றாள்.

(இ - ள்.) தாம் உறு காமம் தன்மை - தாங்கள் அடைந்துள்ள சிற்றின்ப விருப்பத்தின்தன்மையை, தாங்களே உரைப்பது என்பது-தாங்களே சொல்வது, அருங் குலம் மகளிர்க்கு - அருமையான உயர்குடியிற்பிறந்த மாதர்க்கு, ஆம் எனல் ஆவது அன்று - தகுதியெனத்தக்கதன்று; (ஆயினும்), ஏம்உறும் உயிர்க்கும் நோவேன் - எல்லாவின்பத்தையும் அடையத்தக்க உயிரோடு கூடிவாழ்தற்கும் (வகையில்லாமல்) வருந்துபவளும், யாரும் இல்லேன் - வேறொருவருந்துணையில்லாதவளு மாகிய யான், என் செய்கேன் - (என் காமத்தை யானே சொல்லாது) வேறு யாது செய்வேன்? [ஆதலாற் சொல்வேன் என்றபடி.]: காமன் என்ற ஒருவன் செய்யும் வன்மையை காத்தி - மன்மதனென்ற ஒருத்தன் (என்னைச்)செய்கிற கொடுமையைத் தடுத்து என்னைப்பாதுகாத்தருள்வாய், என்றாள் - என்று கூறினாள்; (எ - று.)—ஆல்-ஈற்றசை. அம்மா - தனதுகாமமிகுதியைப்பற்றிவந்த வியப்பிடைச்சொல்.

தமதுகாமத்தின் தன்மையைத் தாமேசொல்வது குலமகளிர்க்கு அடுப்பதன்று; ஆயினும், யான், அக்காமமிகுதியால் மரணவேதனை யடையும்படியான நிலையைப் பெற்றதனாலும், என்கருத்தைத்தெரிவித்து நிறைவேற்றுதற்கு ஏற்ற பாங்கிமார் முதலிய துணை ஒருவரும் எனக்கு இல்லாமையாலும், யானே என்காமத்தை உன்னிடம் இப்பொழுது வெளியிட்டுக்கூறவேண்; அதாவது - உன்விஷயத்தில் மன்மதனால்எனக்குஉண்டான வேதனையைப்போக்கிக் காத்திடவேண்டு மென்றனளென்பதாம். "கன்னியருற்ற நோய்கண்ணனார்க்குமஃ, திந்ன தென்றுரையலர் நாணின்" என்ற சிந்தாமணி இச்செய்யுளின் முன்னிரண்டடிகளிற் காணத்தக்கது; ஏம் - ஏம மென்பதன் விகாரம். பி - ம்:—[1]ஆமெனிலாவதென்றாள். (உசுக)

சசு.—அதுகேட்ட இராமன் அவள்தன்மையை நிச்சயித்தல்.

சேணுறு நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேணுற [1]மிளிர்ந்து நாலு விதம்புரண் டிருண்ட வாட்கட்
பூணியல் கொங்கை யன்ன ளம்மொழி புகற லோடு
நாணில ளாய ளெய்ய னல்லளு மல்ல [2]ளென்றான்.

(இ - ள்.) சேண் உற - நெடுந்தூரத்திலே பொருந்த, நீண்டு - நீண்டு சென்று, மீண்டு - (தடைப்பட்டு அப்பாற்செல்ல இடம்பெறாமல்) திரும்பி, செவ் அரி சிதறி - (உத்தமவிலக்கணமாகிய) சிவந்த ரேகைகள் சிதறப்பெற்று, வெவ்வேறு ஏண் உற மிளிர்ந்து - வேறுவேறுவகையான நிலைமைகள் தோன்றப்பிறழ்ந்து, நாலுவிதம் புரண்டு-பலவாறு சுழன்று, இருண்ட-கறுத்துள்ள,

வாள் கண் - வாள்போன்ற [கூரிய கொடிய] கண்களையும், பூண் இயல் கொங்கை - ஆபரணங்கள் பொருந்தின தனங்களையு முடைய, அன்னாள் - அவள், அ மொழி புகறலோடும் - அத்தவார்த்தையைச் சொன்னவுடனே,--ஐயன்-இராமன்,—'(இவள்), நாண் இலள்-வெட்கமில்லாதவள்; நொய்யள் - இழிகுணமுடையவள்; நல்லளும் அல்லள் - சிறிதுநற்குணமுடையவளுமல்லள்,' என்றான் - என்றுஎண்ணினான்; (எ - று.)

சூர்ப்பணகை அங்ஙனஞ்சொல்லக்கேட்டவுடன், இராமன், இவள் நாணமில்லாத கீழ்மகளென்று கருதின னென்பதாம். நாற்புறத்தும் மூக்கு புருவம் காது கபோலம் என்னும் அவயவங்களின்தடை யில்லாமலிருப்பின் முகமுழுதுங்கண்கள்பரந்திடுமென்றகருத்து, 'சேணுறநீண்டுமீண்டு' என்ற தில்அமையும்.காண்பார்க்கு இன்பமும் துன்பமுந்தோன்ற நோக்குகிற அன்பு நோக்கு குறிப்புநோக்கு முதலிய பலவகைப்பார்வை வேறுபாடுக ளெல்லாம், 'வெவ்வேறுஎணுறமினிர்ந்து நாஞவிதம்புரண்டு' என்றதனால் விளக்கப்பட்டன. பி - மீ:—[1]மிளர்ந்து. [2]என்பாள். (உஎ0)

சஎ.—சூர்ப்பணகை மீட்டும் தன்கருத்தைச் சொல்லத்தொடங்குதல்.

பேசல னிருந்த வள்ள லுள்ளத்தின் பெற்றி யோராள்
பூசல்வண் டரற்றுங் கூந்தற் பொய்ம்மகள் புகன்ற வெண்க
ணூசைகண் டருளிற் றுண்டோ வன்றென வுண்டோ வென்னு
[1]மூசலா லுலாவு கின்றாண் மீட்டுமோ ருரையைச் [2]சொல்வாள்.

(இ - ள்.) (இவ்வாறு எண்ணி), பேசலன் இருந்த - (யாதொன்றும்) பேசாமல் மௌனமாயிருந்த, வள்ளல் - வண்மைக்குணமுடைய இராமனது, உள்ளத்தின் பெற்றி - மனத்தின் தன்மையை, ஓராள் - அறியாதவளாய்,—பூசல் வண்டு அரற்றும் கூந்தல் பொய் மகள் (ஒன்றோடொன்று) மோதுகிற வண்டுகள்இருங்கிமொய்த்து ஆரவாரிக்கப்பெற்றகூந்தலையுடைய பொய்ம்மைக்குணமுள்ள அச்சூர்ப்பணகை,—புகன்ற என்கண் ஆசை கண்டு அருளிற்று உண்டோ அன்று எனல் உண்டோ என்னும் ஊசலால் உலாவுகின்றாள் - (உட்கருத்தைச்) சொன்ன என்னிடத்து இவன் ஆசை கொண்டருளினமை உண்டோ? அன்றென்று மறுத்துவிடுத லுண்டோ? என்று தடுமாறுகிற கருத்தினால் அலைகின்றவளாய்,—மீட்டும் ஓர் உரையை சொல்வாள் - மறுபடியும் ஒருவார்த்தையைக் கூறுபவளானாள்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

தான் கருத்தை வெளியிட்டமை கேட்டு இராமன் ஒன்றும் உத்தரங் கூறாது சும்மாஇருத்தலால், அவள், இவனுக்கு என்னிடத்து ஆசைஉண்டோ இன்றோ என்று அறியமாட்டாது மனந்தடுமாறி அலைந்து, மறுபடி தன்கருத்தை வேறுவகையாற் சொல்லத்தொடங்கினள் என்பதாம். பி - மீ:—[1]ஊசலில். [2]சொன்னாள். (ஙஎக)

சஅ.—சூர்ப்பணகை தன்கருத்தை வேறுவகையால் வெளியிடுதல்.

எழுதரு மேனி யாயீண் டெய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவ ரேவற் செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடு மிளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலு மென்றாள்.

(இ - ள்.) 'எழுது அரு மேனியாய் - (சித்திரத்தில்) எழுதுதற்கும் அரு மையான வடிவழகுடையவனே!—ஈண்டு எய்தியது அறிந்திலாதேன்.(நீ) இவ் விடத்திற் சேர்ந்துள்ளதன்மையை அறியாதவளாய், (நான்), முழுது உணர் முனிவர் ஏவல் செய் தொழில் முறையின் முற்றி-எல்லாவற்றையும் அறிந்த முனிவர்களின் ஏவுதலைக்கொண்ட செய்பத்தக்க தொழிலை முறைமைப்படி முடியச் செய்துகொண்டிருந்ததனால், பழுது அறு பெண்மையோடும் இளமை யும் பயன் இன்று ஏக - (எனது) குற்றமில்லாத பெண்தன்மையும் இளமை யும் பயனில்லாமற் செல்ல, பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்- ஒவ்வொருநாளும் அதன் ஒவ்வொருசிறுபொழுதும் வீணுக்கழிந்துவிட்டன போலும்,' என்றாள் - என்று சொன்னாள்; (எ - று.)

நீ இங்கிருப்பது தெரியாமையால் நான் ஆங்காங்கு முனிவர்களுக்குப் பணிவிடைசெய்து பொழுதுபோக்கிக்கொண்டிருந்தேன்: அதனால் எனது பெண்ணலமும் யௌவநமும் பயனில்லனவாக நாளும்பொழுதுங்கழிந்தன என்றாள்; என்றது, நீ இங்கிருக்கின்றமை தெரிந்திருந்தால் முன்னமே நான் வந்து உன்னைக்கூடி அதனால் என்பெண்மையும் இளமையும் பயன்படக் கழிந்தநாள்களின் ஒவ்வொருகணத்தையும்: சரியாக உபயோகப்படுத்தி இன்ப நுகர்ந்திருக்கக்கூடும் என்றவாறு. (உஎஉ)

சஉ.—இராமரீ, பார்ப்பனமாதை அரசரி மணம்புரியலாகா தென்றல்.

நிந்தனை யரக்கி நீதி நிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே வள்ள[1]லு மனத்துட் கொண்டான்
சுந்தரி [2]மரபிற் கொத்த தொன்மையின் றுணிவிற் றன்று
லந்தணர் பாவை நீயா னரசரில் வந்தே னென்றாள்.

(இ - ள்.) (அதுகேட்டு), வள்ளலும் - இராமனும், 'நிந்தனை அரக்கி - பழிக்கப்படுத்தன்மையுள்ள இந்த ராக்ஷஸி, நீதி நிலை இலாள் - நியாயவழியில் நிற்குந்தன்மையில்லாதவள்; (அன்றியும்), மற்று வினை எண்ணி வந்தனள் ஆகும்-நீதிக்குமாறான தீத்தொழிலைக் கருதி வந்தவளாவாள்', என்றே மனத் துள் கொண்டான் - என்று திருவுள்ளத்தில் நிச்சயித்துக்கொண்டவனும்,— (அவளோநோக்கி), 'சுந்தரி - அழகியவளே! மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிற்று அன்று - (நீ விரும்பிக்கூறிய சேர்க்கை) சாதிமுறைமைக்குஏற்ற தொன்றுதொட்ட ஒழுக்கத்தின் உறுதியுடைய தன்று; (எனினில்,—நீ—, அந்தணர் பாவை - பிராமணசாதிமகள்: யான்—, அரசரில் வந்தேன் - க்ஷத் திரியசாதியிற் பிறந்தவன்,' என்றாள் - என்றுசொன்னாள்; (எ - று.).

அதுகேட்டவுடனே, இராமன், இவள் நற்குணஞ்சிறிதுமில்லாமல் தீக் குணம்பரிதுமுடையவ ளென்று நிச்சயித்து, அவளைத் தக்கதண்டனைசெ. ல்லி மறுத்து அனுப்பிவிடத் தொடங்கி, பிராமணகன்னிகையான உன்னை க்ஷத்திரியசாதியனை நான் மணஞ்செய்துகொள்ளுதல் தகா தென்றுகூறின னென்பதாம். ஒவ்வொருசாதியாரும் தன்சாதிமகளிரை மணஞ்செய்தல் உத்தம மென்றும், அவ்வனமன்றியின் தனதுசாதிக்குக் கீழ்ப்பட்ட சாதி மகளிரை யன்றி மேற்பட்டசாதிமகளிரை மணஞ்செய்தலாகா தென்றும், தருமசாஸ்திரக்கொள்கை. ஸுந்தரீ - வடசொல். பி - ம்:—[1]உண்டாட்டங். [2]மணத்துக்கொத்ததன்மையின்றுணிபிற்று. (உளங்)

(க0 —அதற்குச் சூர்ப்பணகை சமாதானங்கூறுதல்.

ஆரண மறையோ னெந்தை யருந்தவத்திற் கற்பி னெம்மோய்
தாரணி புரந்த [1]சால கடங்கடர் மரபின் றையல்
போரணி பொலங்கொள் வேலாய் பொருந்தலே யிகழ்தற் கொத்த
காரண மிது[2]வே யாயி னென்னுயிர் காண்பெ னென்றாள்.

(இ - ள்.) [1]போர் அணி பொலம் கொள் வேலாய்-யுத்தஞ்செய்தலையே ஆபரணமாகக்கொண்ட அழகுள்ள வேலாயுதத்தையுடையவனே! எந்தை - எங்கள்தந்தை, ஆரணம் மறையோன் - வேதத்துக்குரிய அந்தணன்; அருந் தவத்தின் கற்பின் எம் மோய் - அருந்தவினதுதற்புதிலைமையையொத்த கற்பு நிலைமையுடைய எங்கள்தாய், தாரணி புரந்த சாலகடங்கடர் மரபின் தையல் - பூமியைபரசாண்ட சாலகடங்கடரென்னும் இராக்கதராசரது குலத்திற் பிறந்த பெண்: (ஆதலால், பொருந்தலே இகழ்தற்கு ஒத்த காரணம் இதுவே ஆயின் - (நீ என்னைத்) கூடுதலே மறுத்தற்கு ஏற்ற காரணம் இதுவேயா மாதலால், என் உயிர் காண்பென் - எனது உயிரை யான் பிழைத்திடக்காண் பேன் [ஒழிகிறஉயிரைப் பெற்றிடுவேன் என்றபடி]', என்றாள்—; (எ - று.)

எனதுதந்தை அந்தணனுயினும் தாய் அரசர்குலத்தவ ளாதலால் அவ ளிடத்துப்பிறந்த என்னை நீ மணஞ்செய்யத் தடையில்லை யென்றனளென் பதாம்; என்றது, விவாகஞ்செய்துகொண்டவர்களான பிராமணனுக்கும் க்ஷத்திரிபஸ்திரீக்கும் பிறந்தவர்கள் அநுலோமசாதியாருள் பிராமணரை யொத்த க்ஷத்திரிய ரென்றும், தந்தையின்சாதி உயர்ந்ததாயினும் தாயின் சாதி தாழ்ந்ததாகையால் இவர்கள் தந்தையின்சாதியைச்சேராதவர்களாய்த் தாயின்சாதியைக்காட்டிலும் சிறிதுமேன்மையான தனிச்சாதியா ராகின்றன ரென்றும், இவர்கள் தாய்வம்சத்துத்தருமங்களே அநுஷ்டிக்கத்தக்கவர்க ளாகையால் இவர்களே க்ஷத்திரியர் மணஞ்செய்துகொள்ளலா மென்றும் நூற் கொள்கை யாதலால் என்னை மணக்கலாமென்றவாறும். 'பொருந்தலே யிகழ் தற்கொத்த காரணம் இதுவேயாயின் என்னுயிர்காண்பென்' என்றது - க்ஷத் திரியஸ்திரீ நீ என்னைப் பிராமணசாதிக் கன்னிகையென்றுஎண்ணி என் மணத்துக்கு இயையே னென்பையாலும், நான் உண்மையில் அப்படிப் பட்டவளன்றிப் பிராமணனுக்கும் க்ஷத்திரியஸ்திரீக்கும் பிறந்த உயர்ந்த க்ஷத்

திரியகன்னிகையே யாதலால், அத்தன்மையையெளியிடுமிடத்து நீ தடை சொல்லாது மணஞ்செய்யக்கூடு மாதலின், உன்னைச் சேராமையாலாகிய விரகதாபத்தின் மிகுதியாலுண்டாகிற மரணவேதனையை ஒழிக்கு யான் இச் சயமாய்ப் பிழைத்திடுவே னென்றபடி.

'ஆரணம்' என்ற அடைமொழி வந்தவனால், 'மறையோன்' என்றது - காரணங்கருதாமல் வெறுஞ் சாதிப்பெயர்மாத்திரமாய் நின்றது; அன்றியும், தன் தந்தையினது 'விஸ்ரவஸ்' என்னும் பெயரின் பொருள்பற்றி, **'ஆரண மறையோன்' என்றதாகவுங் கொள்க: அவ்வரலாறு வருமாறு:**—பிரமபுத்திரரான புலஸ்தியமுனிவன் மேருமலைச்சாரலில் தவத்தோடு வேதாத்தியயஞ் செய்துகொண்டிருக்கையில் அவ்விடம் மிக இனியதாயிருந்ததுபற்றி மங்கையர்பலர் அங்கு வந்து நாள்தோறும் விளையாட, அது தனதுதவத்துக்கு இடையூறுமிருந்தவனால், அம்முனிவன் 'இன்றுமுதல் யாவளாயினும் எண்கண்ணெதிரில் நிற்பளாயின், அவள் உடனே கருவுறக்கடவள்'என்று சபிக்க, திருணபிந்து வென்னும் இராசருஷியின் மகள் அச்சாபத்தையறியாது அங்குவந்து, வேதமோதிக்கொண்டிருந்த அம்முனிவனது முன்னே நின்றதனாற் கருவுற்று, பின்பு தந்தையால் அம்முனிவனுக்கே மணஞ்செய்விக்கப்பட்டுப் பணிவிடைசெய்துகொண்டிருக்கையில், அம்முனிவன் 'நான் வேதமோதிக்கொண்டிருக்கையில் நீ வந்து அத்தனிமேகட்டையிற் கருவுற்றாயே யாதலால், உன்னிடம் பிறக்கும் பிள்ளைக்கு 'விஸ்ரவஸ்' என்று பெயராகக்கடவது' என்று அருளிச்செய்ய, பிறந்த குமாரன் அங்ஙனமே பெயர்பெற்று, வேதாத்தியயனத்தில் ஊக்கமுடையவனாயிருந்தன னென்பதாம். பொருத்தமே யென்பதை முற்றெச்சமாக் கொண்டு, நீ மனமிணங்காமல் இகழ்வதற்கு என உரைக்கவும் அமையும். அருந்ததி - வசிஷ்டமுனிவனது மனைவி; கற்புடையார்பலரினும் இவளுக்கு மேன்மை என்னவெனின்,—சுகுத்திரரிலிலும் கணவனைப் பிரியாதிருக்கை.

'காலகடங்கடரீமரபு' எனப்பட்ட வரலாறு:—ராக்ஷசகுலத்திற்பிறந்த ஹேதியென்பவனது மகனான வித்யுத்கேச னென்பவன், சந்தியையின் மகளான சாலகடங்கடையென்பவளை விவாகஞ்செய்துகொண்டு சுகேசனைப் பெற, அவனது மக்களான மாலியவான், சுமாலி, மாலி யென்பவருள் சுமாலியின் மகள், இராவணன் முதலியோரது தாயான கேகசி யென்க. இங்ஙக்குறித்த சாலகடங்கடை, பிள்ளைபெற்றவுடன் அக்கேயே விட்டிட்டுக் கணவனுடன் சென்றிட, யாருமில்லாமல் அழுதுகொண்டிருந்த அக்குழந்தையைப் பார்வதீபரமேசுவரர் கண்டெடுத்து அக்குழந்தைக்கு அப்பொழுதே தாய்க்குச் சமமான பருவ முண்டாம்படி அனுக்கிரகித்து நீண்ட ஆயுளையும் வானத்திற் பறந்துசெல்லத்தக்கதொரு ரதத்தையுங் கொடுத்து, இனி இராக்கதமகளிர்க்கு விரைவிற்கருவுறுதலும், உடனே மகப்பெறுதலும், பிறந்தமகவு உடனே தாயோடொத்தபருவமடைதலு மாகிய வரத்தையும் அளித்துச்செல்ல, அவ்வரப்பயன்களைப் பிற்றின அரக்கர்யாவரும் பெற்றுச்

சிறப்புற்றன ரென்பதாம். சாலகடங்கடையின் வழி தோன்றியவர் - சால கடங்கடர். இக்குலத்தவர் தொன்றுதொட்டு அரசாட்சியே செய்துவந்ததனால், அவரை 'சூத்திரபென்று குறித்து 'தாரணிபுரந்த சாலகடங்கடர்மரபின் தைபல்' என்று தன்னைக் கூறி, அதனால், கீழ் இராமன்கூறின ஆட்சேபத்தை மறுத்தனளென்க. பி - மீ:—[1]சாலகடங்கர்தம். [2]மெய். (உஎச)

• நிக —இராமன், அரக்கரை மனிதர் மணஞ்செய்யலாகா தென்றல்.

அருத்திய [1]ளனைய கூற வகத்[2]தறு நகையின் வெள்ளைக்
குருத்[3]தெழு கின்ற நீலக் கொண்டலுண் டாட்டங் கொண்டான்
வருத்தநீங் கரக்கர் தம்மின் [4]மானுயர் மணத்த [5]னங்கை
பொருத்தமன் றென்று சாலப் புலமையோர் புகல்வ தொன்றும்.

(இ - ள்.) அருத்தியள்-ஆசையுள்ளவளான சூர்ப்பணகை, அனைய கூற-அவ்வார்த்தைகளைச் சொல்ல,—அகத்து உறு நகையின் வெள்ளை குருத்து எழுகின்ற நீலம் கொண்டல் - உள்ளே பொருந்தின சிரிப்பினது வெண்மையான இளவெளி வெளித்தோன்றப்பெற்ற நீலகிறமுள்ள மேகம்போன்ற இராமன்,—உண்டாட்டம் கொண்டான் - விளையாட்டுக்கொண்டவனும்,—'நங்கை - மகளிரிற்சிறந்தவளே! வருத்தம் நீங்கு அரக்கர் தம்மின் - துன்பமில்லாத இராக்கதரோடு, மானுயர் மணத்தல் - (பலதன்பங்கட்குமிடமான) மனிதர் விவாகஞ்செய்து கொள்ளுதல், பொருத்தம் அன்று - இயைபன்று, என்று—, புலமையோர் - அறிவுடையோர், சால புகல்வ - மிகுதியாகக் கூறுவார்கள்,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

அரக்கியாகிய உன்னை மனிதனுகிய நான் மணத்தற்கு இசையேனென்றவாறு. 'மநுஷ்யராக்ஷசகணங்கள் ஒருவரோடொருவர் மணஞ்செய்துகொள்ளக்கூடாது' என்ற கணப்பொருத்தநிலையும் இங்குக் காணத்தக்கது. சிரிப்பை அதிகமாக வெளிப்படுத்தாமல் தனதுமேன்மைத்தன்மைக்கு ஏற்றபடி உள்ளடக்கியுள்ளமை தோன்ற, 'அகத்துறுநகை' எனப்பட்டது; இங்கே, நகைப்புக்குக் காரணம், அவளதுபேதைமையை நோக்கியது. இரப்போன்என்றுபொருளுள்ள அர்த்தீஎன்னும்வடசொல்லின் திரிபாகிய அருத்தியென்பது-தமிழில்,வேண்டுதலென்று பொருள்படும். குருத்து-இளங்கொழுந்து; இளவெளிக்கு, இலக்கணை. நீலக்கொண்டல்-இராமனுக்கு உவமவாகுபெயர். சிற்றம்கொண்டு ஒருவகையாய் மறுத்துத்துரத்திவிடாமல் உடன்படல் மறுத்தல் என்னும் இருதன்மையையும் உடையவன்போல விநோதமாக வெவ்வேறுகாரணங்களே ஒன்றன்பின்ஒன்றுகக்கூறிப் பேச்சை வளர்த்திச் சாந்தமானவழியில் மறுக்கின்றமைபற்றி, 'உண்டாட்டங்கொண்டான்' என்றார். மானுயர் - மாநுஷ என்னும் வடசொல்லின் திரிபு; (காசியபமுனிவனது மனைவிமார்களுள்) மநுவன்பவளிடம்பிறந்தவரென்பது, இதன் காரணப்பொருள். அரக்கர்க்கு 'வருத்தநீங்கு' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதற்கு எதிராக, மானுயர்க்கு 'வருத்தமுள்ள' என்ற அடை

மொழி வருவித்துக்கொள்க. பி-ம்:—[1]அன்ன. [2]எழு. [3]எழுகின்றதென்னச். [4]மானுடர். [5]நங்காய். (உஎடு)

நே உ.—அதற்கு அவள் சமாதானங் கூறல்.

[1]பராவரு விக்கி யாதர் பன்னியான் [2]பவத்தை [3]யோரா
திராவணன் றங்கை யென்ற தேழைமைப் பால தென்பால்
வராவணை யமல னன்னு யறிவித்தேன் முன்னந் தேவர்ப்
[5]பராவினி னீங்கி னேனப் பழிபடு பிறவி யென்றாள்.

(இ - ள்.) 'யான்—.—(இப்போது), பராவு அரு - சொல்லுதற்கு அருமையான, வித்தியாதர் பன்னி - வித்தியாதரப்பெண்ணேனென்: பவத்தை ஓராது - (இப்போதுள்ள பிறவியை) ஆராயாமல், என்பால் - என்னிடத்து, இராவணன் தங்கை என்றது - இராவணனது தங்கை யென்றே கருதியது, ஏழைமை பாலது - தகுதியில்லாமையின்பாற்படுவது; அரா அணை அமலன் அன்னுப் - ஆதிசேஷனுகியசயனத்தையுடைய குற்றமற்ற திருமாலே யொத்தவனே! அ பழி படு பிறவி - பழிக்கப்படுகிற அவ்விராக்கதசன்மத்தை, தேவர் பராவினின் நீங்கினேன் - தேவர்களே வணங்கித்துதித்தலால் நீங்கிவிட்டேன்; (இதனை), முன்னம் அறிவித்தேன் - முன்னமே தெரிவித்திருக்கிறேன்', என்றாள்-என்று சொன்னாள்; (எ - று.)

இப்போது நான் வித்தியாதரப்பெண்ணுகிவிட்டேன்; இதனையாராயாமல் இராவணனதுதங்கை யென்று சொன்னதுகொண்டு பிறந்த பிறவியைக் கருதி என்னே மணம்மறுத்தல் தகுதியன்று; யான் கீழ்க்கூறியபடி தேவர்களுக்கு மிக்க வழிபாடு செய்த பயனுல் அவர்கள் அநுக்கிரகிக்க எனக்கு அரக்கத்தன்மை ஒழிந்திட்ட தென முன்னமே கூறினேனன்றே என்றனளென்பதாம்.'அறிவித்தேன் முன்னம்' என்றது, கீழ் சுக-ஆங்கவியிற் கூறியதைக் குறிக்கும். வித்தியாதர் - வித்தியாதரரென்பதன்திரிபு. பன்னி - பத்மீ: னவியென்று பொருளுள்ள இது பெண்ணென்ற மாத்திரமாய்நின்றது. பவத்தையோரா திராவணன்றங்கையென்ற தேழைமைப் பாலதென்பால் ன்பதற்கு - நான்இப்போதுள்ளபிறவியையே கூறுது என்பிறவியை குறித்து இராவணன் தங்கையென்றது என்னிடத்துள்ள அறிவில்லாத்தன்மையாலாமென்று உரைப்பினுமாம். பி - ம்:—[1]பராவருஞ்சித்தையாரும்பத்தியின். [2]பயத்தை. [3]ஓரேன். [4]என்னு. [5]பராவினேயு. (உஎசு)

நே உ.—இராமன், உரியவர்கோடாமல் மணஞ்செய்யே னென்றல்.

ஒருவனே வுலக மூன்றிற் கோங்கொரு தலைவ னுங்கி
லொருவனே குபே [1]னின்னே டுடன்பிறந் தவர்க ளன்னுர்
தருவமேற் கோடு மன்றேற் றமியையே நிடத்துச் சார
வெருவுவெ னங்கை யென்றுன் [2]வேதத்தி னறிவை வென்றான்.

(இ - ள்.) 'நங்கை - மகளிரிற் சிறந்தவளே! ஊங்கில் - ஊன்றிநோக்கு, நின்னெடு உடன் பிறந்தவர்கள்-உனதுடன்பிறந்தவர்களில்,ஒரு

ஒனே - ஒருத்தனே; உலகம் மூன்றிற்கு ஒங்கு ஒரு தலைவன் - மூவகையுல கத்துக்கும் உயர்ந்த ஒருதனிநாயகனான இராவணன்: ஒருவனே - மற்றொரு வனே, குபேரன் - (திக்குப்பாலகனான) குபேரன்: அன்னார் - அவர்களில் ஒருவர், தருவர்எல் - (உன்னை எமக்குக்) கொடுப்பாராஞல், கோடும்-மணஞ் செய்துகொள்வோம்; அன்று எல் - அங்ஙன மன்றுயின், தமியை - தனிய ளாய்வந்த நீ, வேறு இடத்து சார - வேறிடஞ் செல்வாயாக: வெருவுவென் - (அவர்கள் வலிமையை நோக்கித் தனியே உன்னோடு பேசுதற்கும்) அஞ்சு வேன்,' என்றன்-என்றுகூறினன்; (யாவனெனில்),—வேதத்தின் அறிவை வென்றன் - வேதங்களின் அறிவைக் கடந்துள்ளவனான ஸ்ரீராமன்; (எ-று.)

உனதுதமையன்மாரில் ஒருத்தன் திரிலோகாதிபதி; மற்றொருத்தன் ஒருதிக்குப்பாலகன்; அப்படிப்பட்டசிறப்புடையவர் உன்னைக் கன்னிகாதா னஞ்செய்துகொடுத்தால் யாம் ஏற்றுக்கொள்வோம்; அங்ஙனமன்றி, தனியே வந்த உன்னுடன் பேசுதல்மாத்திரமுந் தகுதியன்று; இதனை யறிந்தால் பேராற்றலையுடைய அவர்கள் என்செய்வரோ வென்று அச்சமுறுகிறேன்; ஆதலால், நீ விரைவில் வேறிடஞ்செல்வா யென்றனன் என்பதாம். இங்ங னங் கூறினது, அவள்மனத்தைச் சோதித்தற்காகவும், தனதுசாதகுணத் துக்குஏற்றபடி கடுமையாகக்கூறமல் நல்லவார்த்தையாகவே கூறி மறுத் தற்காகவு மென்க. 'வேதத்தி னறிவை வென்றன்' என்றதற்கு-யாவுமுணர் த்தும் வேதங்களாலும் தனது குணஞ்செயல்கள் உள்ளபடி முழுது மறியப் படாதவனென்று கருத்து; இத்தன்மை, வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது. பிறப்புமுறைப்படி குபேரனை முன்னும் இராவணனைப் பின்னுமாகக் கூற மல் இராவணனை முன்னே வைத்தது, அவனுக்கு அடுத்த தமைய னுதலா லும், ஒருதாய்வயிற்றிற்பிறந்த உரிமையுடைமையாலு மென்க. ஒருதலைவன்-ஏகாதிபதி. ஊங்கில் - ஊங்கு என்னும் வினைப்பகுதியடியாப்பிறந்த செயி னென்னும்வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; இனி, அவ்விடத்தில் என்றும் பொருள்கொள்ளலாம்.

'தமியைவேறிடத்துச்சார வெருவுவென்' என்பதற்கு-அவர்களிடத்தை விட்டு வேறிடமாகியஇவ்விடத்துக்கு நீ தனியாய்வந்ததைக்குறித்து அஞ்சு வேன் எனப் பொருள்கொள்ளுதலும் ஒன்று. குபேரன் என்ற பெயர்-குற்சிதமான [விகாரப்பட்ட] உடம்புடையவ னென்று பொருள்படும்: பேரம்-உடம்பு. இவன், இமயகிரிச்சாரலில் தவஞ்செய்துகொண்டிருக்கையில், அங்கு எழுந்தருளிய சிவபிரானது பக்கத்தில் நின்ற உமாதேவியின்மேல் இடக்கண்ணைச் செலுத்தி, அவ்வபசாரத்தால் அந்தக்கண் பசந்து ஒளிமழுங் கப்பெற்று ஏகாக்ஷிபிங்களனென்னும்பெயரைப் பெற்றன னென்பது, உத் தரகாண்ட வரலாறு. பி-ம்:--[1]நின்னின். [2]மீட்டவளினையசொன்னாள். (உஎஎ)

நுசு.—இதுவும், அடுத்தகவியும்-அதற்குச் சூர்ப்பணகைகூறிய மறுமொழி.

காந்தர்ப்ப மென்ப தண்டாற் காதலிற் கலந்த [1]சிந்தை
மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்ட

மேந்தற்பொற் [2]ரேளி ஞயிஃ தியைந்தபி னெனக்கு மூத்த
வேந்தர்க்கும் [3]விரும்பிற் ரூதும் வேறுமோ ருரையுண் டென்ரூள்.

(இ - ள்) 'ஏந்தல் பொன் தோளினாய் - மலைபோன்ற அழகிய தோள் களையுடையவனே! காதலின் கலந்த சிந்தை - வேட்கையால் ஒற்றுமைப் பட்ட மனத்தையுடைய, மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் - ஆடவர்க்கும் மகளிர்க்கும், மறைகளே வகுத்த கூட்டம் - வேதங்களே விதித்த சேர்க்கை, காந்தர்ப்பம் என்பது உண்டு ஆல் - காந்தர்வமென்பது ஒரு விவாகவகை உள்ளதன்ரோ? இஃது இயைந்த பின் - இச்சேர்க்கை (நமக்கு) நிகழ்ந்த பின்பு, (அது), எனக்கு மூத்த வேந்தர்க்கும் - எனது தமையன்மாராகிய அவ்வரசர்களுக்கும், விருப்பிற்று ஆகும் - விருப்பமுள்ளதாம்; (அன்றியும்), வேறும்ஓர்உரைஉண்டு - மற்றுஞ்சொல்லவேண்டுவதொரு வார்த்தையுண்டு,' என்ரூள் - என்று சொன்னாள்; (எ - று.)—வேறுமோருரை யின்ன தென் பதை அடுத்த கவியிற் காண்க. ஆல் - தேற்றம்.

ஒருவர்மேலொருவர் அன்புகொண்டு கருத்துஒருமித்த ஆடவரும் மக ளிரும் பெரியோர் தமக்குமணஞ்செய்விக்கவேண்டாமல் தாமே தம்மிற் கூடு மாறு காந்தருவ மென்னும் விவாகம் வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளதன்ரோ? அத்தப்படி நாம் மணந்தால், அது, பின்பு அறியப்படுமிடத்து, என்தமை யன்மார்களுக்குஞ் சம்மதமேயாம் என்றன ளென்பதாம்.

காந்தர்வம் - எட்டுவகைவிவாகங்களுள் ஒன்று. அவையாவன - பிரமம், தைவம், பிராஜாபத்தியம், ஆர்ஷம், ஆசுரம், காந்தர்வம், இராக்கதம், பைசா சம் என்பன; அவற்றுள், காந்தர்வமாவது - ஒத்த அன்பினராய தலைமகனுந் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தம்மில்தாமே கூடுங் கூட்டம்; இதற்கு, 'யாழோர் கூட்டம்' என்று தமிழிற் பெயர்: இது, நல்வினைப்பய னால் தனியே ஒருவரையொருவர் சந்தித்துக் கூடுகிற கந்தர்வர்களின் வழக் கத்தைத் தழுவிய தாதலால், காந்தருவ மென்று பெயர்பெறும். தொல்காப் பிய நச்சினார்க்கினியத்தில், 'உலகத்து மன்றலாவது - குரவர்கொடுப்பதற்கு முன்னர் ஒருவற்கும் ஒருத்திக்கும் கண்ணும் மனமுந் தம்மூள்இயைவதே என வேதமுங் கூறிற்று', 'இனிக்கந்தருவமாவது-கந்தருவகுமாரருங் கன்னி யருந் தம்மூள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்ததுபோல, தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது. ''அதிர்ப்பில் பைம் பூணுநுமாடவருந் தம்மூள், எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக், கந்திருவர் கண்ட கலப்பு'' என இதனுள் உணர்க' என்ற வாக்கியங்கள் இங்கு அறியத்தக்கன. காந்தர்ப்பம் - வடசொல் திரிபு. ஏந்தல் - உயர்ச்சி; அதனையுடைய மலைக்குத் தொழிலாகுபெயர். பி - ம்:— [1]மார்க்கம். [2]தோளினாயவிசைந்த. [3]விருப்புமுற்றும். (உஎஅ)

ரூரு: முனிவரோ டையர் முன்னே முதிர்பகை முறைமை நோக்கார்
தனியையீ யாத லான்மற் றவரொடுத் தழுவற் கொத்த

வினையமீ தல்ல தில்லே விண்ணுநின் னுட்சி யாக்கி
[1]யினியரா யன்னர் வந்துன் னேவலி னிற்ப ரென்றாள்.

(இ - ள்.) '(எனது தமையன்மார்), முன்னே முனிவரோடு முதிர் பகை உடையர்-முன்னமே முனிவர்களுடன் முற்றினபகைமையை யுடைய வர்; (அன்றியும், அவர்கள்', முறைமை நோக்கார்-(பகைவரைக்கெடுத்தலில்) நீதிமுறைமையையும்பார்க்கமாட்டார்கள்: ஆதலால்—, தனியை நீ - (துணை யில்லாமல்) தனிப்பட்டவனுயுள்ள நீ, அவரொடும் தழுவற்கு - அவர்களுடன் சந்தியாதற்கு, ஒத்த - ஏற்றதான, வினையம் - தொழில், ஈது அல்லது இல்லே - இதுவல்லது வேறில்லே: (இதனே நீ நிறைவேற்றுவையாஞல்), அன்னர் - அவர்கள், இனியர் ஆய்-(உன்னிடத்து) இனிய அன்புடையராய், விண்ணும் நின் ஆட்சி ஆக்கி - (இவ்வுலகத்தையேயன்றித்) தேவலோகத்தை யும் உனது ஆளுகையி லாகச்செய்து, உன் ஏவலில் வந்து நிற்பர் - (தாங்க ளும்) உனதுகட்டளேயின்கீழ்வந்து அடங்கிநிற்பார்கள்,' என்ருள் - என்றுஞ் சொன்னுள்; (எ - று.)—மற்று - அசை; வினேமாற்றுமாம்.

நீ என்தமையன்மாரால் யாதொருதுன்பமும் அடையாதிருக்கவேண்டு வையாயின், என்னேமணப்பதே இப்போதுசெய்யவேண்டியகாரிய மென் றன ளென்பதாம். பி - ம்:—[1]இனியவர்மகிழ்ந்து. (உஎக)

ருசூ.—அதுகேட்டு இராமன் பரிகசித்தல்.

[1]நிருதர்த மருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னே
டொருவருஞ் [2]செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே னென்றே
திருநகர் தீர்ந்த [3]பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னு
வரிசிலே [4]வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான்.

(இ - ள்.) 'நிருதர்தம் அருளும் பெற்றேன் - இராக்கதரது கருணையை யும் அடைந்தேன்; நின் நலம் பெற்றேன் - உனது இன்பத்தையும் அடைந் தேன்; நின்னேடு - உன்னுடன், ஒருவு அருஞ் செல்வத்து-நீங்குத லில்லாத [நிலேயான] செல்வவாழ்க்கையில், யாண்டும் உறையவும் பெற்றேன் - எந் நாளுங் கூடிவாழவும் பெற்றேன்; திரு நகர் தீர்ந்த பின்னர் - சிறந்த அயோ த்தியாநகரத்தை விட்டு நீங்கினபின்பு, செய் தவம் பயந்தது - முன்பு செய்த தவம் (எனக்குப்) பயன்பட்டது, ஒன்றே - ஒருவகையோ? [அன்று: பல வாறுபயன்பட்டது என்றபடி]', என்னு - என்றுசொல்லி, வரி சிலே வடித்த தோளான் - கட்டமைந்த வில்லில் தேர்ந்த புயவலிமையையுடைய இராமன், வாள் எயிறு இலங்க நக்கான்-ஒளியுள்ள பற்கள் விளங்கச் சிரித்தான்;(எ-று.)

உன்னே மணஞ்செய்துகொண்டு அதனுல் அரக்கரருளேப்பெற்று உன் னுடன் நெடுநாள் பெருஞ்செல்வவாழ்க்கையனுபவிக்கும்படி எனதுமுன் னேயதவம் இப்பொழுது மிகுதியாகப்பலித்த தென்று எதிர்மறையிலக்கணே யாற் பரிகாசமாகக்கூறி ஸ்ரீராமன் இகழ்ச்சிநகைசெய்தனனென்க. பி-ம்:— [1]நிருதனது. [2]காலமெல்லாம். [3]வேர்த்தன். [4]வடிவுத். (உஅo)

நிஎ.—அச்சமயத்திற் சீதை அங்கு வருதல்.

விண்ணிடை யிம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க் கெல்லாங்
கண்ணிடை யொளியின் பாங்கர்க் கடிகமழ் [1]சாலை நின்றும்
பெண்[2]ணிடை யரசி தேவர் [3]பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே [4]போல்வாள் வந்தாள்.

(இ - ள்.) பெண்ணிடை அரசி-மகளிரினத்தில் தலேவியாயுள்ளவளும், மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் - பூமியினின்று இரத்தினம்போலத் தோன்றிய வஞ்சிக்கொடிபோல்மெல்லியவடிவமுடையவளுமான சீதை,—பின்னர் - பின்பு, கடி கமழ் சாலைநின்றும் - பரிமளம் வீசுகிற பர்ணசாலையினின்று, இம்பர் நாகர் விண்ணிடை விரிஞ்சனே முதலோர்க்கு எல்லாம் கண் இடை ஒளியின் பாங்கர் - இவ்வுலகத்தாரும் கீழுலகத்தாரும் மேலுலகத்திலுள்ள பிரமன்முதலிய தேவர்களும் ஆகிய எல்லோர்க்கும் கண்கூசும்படியான ஒளிவடிவமுள்ள இராமமூர்த்தியினருகில், தேவர் பெற்ற நல் வரத்தால் வந்தாள் - தேவர்கள்பெற்ற நல்லதவப்பயனால் வந்து சேர்ந்தாள்; (எ - று.)

இங்ஙனஞ் சூர்ப்பணகைக்கும் இராமனுக்கும் சம்பாஷணைநடத்தலும், பிராட்டி பர்ணசாலையினின்று புறப்பட்டு இராமபிரானருகில் வந்திட்டனளென்பதாம். 'விண்ணிடையிம்பர்நாகர் விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாங் கண்ணிடையொளி'-இராமபிரானது திருமேனியின்திவ்வியகாந்தியைச் சிறப்பித்து, அவனுக்கு ஒருபெயர் கூறினர். இனி, கண் இடை ஒளி - திரிலோகத்தாரும் கண்ணிடையிலே வைத்துக் காக்கத்தக்க ஒளிவடிவமானவ னென்று உரைத்தலு மொன்று. அன்றி, கண் இடை ஒளியின் - யாவருங் கண்டு கண் கூசும்படியான ஒளியோடு, பாங்கர் கடி கமழ் சாலைநின்றும் - அருகிலுள்ள பர்ணசாலையினின்று,வந்தாள் என உரைப்பினும் அமையும். தழைக்குடிசைக்குப் பரிமளம் - சுற்றிலுமுள்ள செடிகொடிமரங்களின் மலர்களா லாகியது. மணியுவமை-சிறப்புக்கும், ஒளிக்கும், மண்ணிடைத்தோன்றுதற்கு மென்க. 'தேவர்பெற்ற நல்வரத்தால் வந்தாள்' என்றது - இவள் இப்பொழுது வந்தமை, இவளழகைச் சூர்ப்பணகை கண்டு வியந்து இவள் அருகிலுள்ளவளவும் தன்னை இவன்விரும்பா னென்று துணிந்து இவளையெடுத்துப்போகுமளவில் இலக்குமணன் வந்து அவளை அங்கபங்கஞ்செய்ய, அது, முறையே இராவணநாசத்துக்கு மூலமாய், அரக்கர்களாலாகிய துயரத்தைத் தேவர்கள் தீர்தற்கு ஏதுவாய் முடிவதனு லென்க. இனி, தேவர் பெற்ற நல்வரத்தாற் பின்னர் மண்ணிடை மணியின் வந்த வஞ்சியேபோல்வாள் என்று இயைத்து - (தேவர்கள் பாற்கடல் கடைதலால் முன்பு அதனினின்று திருமகளாய்த் தோன்றியது போலப்) பின்பு தேவர்கள் நல்லவரம்பெற்றதனாற் பூமியினின்று தோன்றிய மெல்லியலாள் என்றுரைத்தலும் அமையும்; திருமால் தேவர்க்கு வரமளித்தவாறே இராமனாகத் திருவவதரித்ததற்கு ஏற்ப, திருமகள் சீதையாகத் திருவவதரித்ததனாலும், தேவர்கள் இராவணனியராற்

பட்ட துன்பத் தீர்த்தற்குப் பெருமாளினும் பிராட்டி முற்பட்டகாரண மாகுமாலும், 'தேவர்பெற்றநல்வரத்தால் பின்னர்மண்ணிடைவந்தாள்' என்ற, தென்க. பி - டீ:—[1]சோலிகின்று. [2]உடை. [3]பெற்றுயர், பெற்றுடை. [4]போல.

ருஅ.—சூர்ப்பணகை பிராட்டியைக் காணுதல்.

ஊன்சுட வுணங்கு பேழ்வா யுணர்விலி யுருவ நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்க னோக்கி
மீன்சுடர் விண்ணு மண்ணும் விரிந்தபோ ரரக்க ரென்னுங்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்.

(இ - ள்.) ஊன் சுட உணங்கு பேழ் வாய் - தசையைப் பதஞ்செய்து தின்னுதற்குப் பதைக்கிற திறந்த வாயையுடைய, உணர்வு இலி-அறிவில்லாத வளான சூர்ப்பணகை,—உருவம் நாறும் வான் சுடர் சோதி வெள்ளம் வந்து இடை வயங்கல் நோக்கி-(பிராட்டியின்) வடிவத்தினின்று வெளியிலே தோன்றுகிற மிக்கபளபளப்பையுடைய ஒளியின்மிகுதி வந்து இடையிலே விளங்குதலை (முதலிற்) பார்த்து,—(உடனே), மீன் சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும் கான் சுட முளைத்த கற்பின் கனலியை கண்ணின் கண்டாள் - நக்ஷத்திரங்கள் விளங்குமிடமான ஆகாயத்திலும் பூமியிலும் [எவ்வுலகத்திலும்] பரவியுள்ள போர்செய்யவல்ல இராக்கதராகிய காட்டை எரித்தழித்தற்குத் தோன்றிய பதிவிரதாதருமமாகிய அக்கினிச்சுவாலையையுடைய அச்சீதையைக் கண்களாலேகண்டாள்.

தூரத்திற் சீதை வரும்பொழுதே அவளதுதிருமேனியின் மிக்கதிவ்விய ஒளி முன்புவந்து தனக்கும் இராமனுக்கும் மத்தியிலே (மின்னலினொளி விளங்கினாற்போல) விளங்க, அவ்வொளியைச் சூர்ப்பணகை முன்பு கண்டு பின்பு அவ்வொளிக்கு இடமான சானகியைக் கண்ணுற்றனளென்பதாம்.

சீதையின்கற்பு இராக்கதநாசத்துக்குக் காரணமாதல், பிரசித்தம். 'ஊன்சுட வுணங்கு பேழ்வாய்' என்றது, ஊனைத்தின்று ஊனைப்பெருக்குத்தலையே எப்பொழுதும் உரியதொழிலாகக் கொண்டவளென அரக்கியின் இழிவைப் புலப்படுத்தும். தசையின் அசுத்தத்தையும், கொலைப்பாவத்தின் கொடுமையையும், தன்னுயிர்போலபிறவுயிரையும் பாவிக்கவேண்டுமென்ற நீதியையும் உணராமைபற்றி, 'உணர்விலி' எனப்பட்டாள்; அன்றியும், தனது மிக்க கீழ்மையையும் இராமனது மிக்கமேன்மையையும் சிறிதும் அறியாமல் அவனைத் தனக்கு ஆசைநாயகனாகக் கொள்ளக் கருதி மேன்மேல் முயல்பவளை உணர்விலி யென்னத் தட்டில்லை யென்க. (உஅ)

ருக.—சீதையை அரக்கி தீருமகனோவென்று ஐயுறல்.

மருவொன்று [1]கூந்த லாளை வனத்திவன் கொண்டு வாரா
னுருவிங்கு துடைய ராக மற்றையோர் யாரு மில்லை
யரவிந்த மலரு ணீங்கி யடியிணை படியிற் றோயத்
திருவிங்கு [2]வருவாள் கொல்லோ வென்றரக் கிகைத்து நின்றாள்.

(இ - ள்.) மரு ஒன்று கூந்தலாளை - பரிமளம் பொருந்திய கூந்தலையுடைய தன்மனையாளை, இவன்—, வனத்து கொண்டு வாரான் - காட்டில் அழைத்துக்கொண்டுவந்திருக்கமாட்டான்; இது உரு உடையர் ஆக - இப்படிப்பட்ட வடிவழகுள்ளவராக, மற்றையோர் யாரும் - வேறுஎந்தமகளிரும், இங்கு - இவ்விடத்தில், இல்லை—; திரு - இலக்குமி, அரவிந்தம் மலருள் நீங்கி - (தனக்குத்தங்குமிடமான) செந்தாமரைமலரினின்று நீங்கி, அடி இணை படியில் தோய - உபயபாதமும் நிலத்திலே பதிய, இங்கு வருவாளோ கொல் ஓ - இங்கு வருபவளாயினளோ? என்று - என்று எண்ணி, அகம் நிகைத்து நின்றுள் - மனம்பிரமித்துநின்றுள்; (எ - று.)

இராசகுமாரனாகிய இவன் அருமையான தன்மனையாளைக் கொடிய இக்காட்டில் அழைத்துக்கொண்டுவாரான்; ஆதலால், இவள் இவன்மனைவியாயிருக்கமாட்டாள்; வேறு வனமகளிரிலொருத்தியோ இவளெனின், இங்கு இப்படிப்பட்ட பேரழகுடையா ரெவரு மில்லை; ஆதலால், தாமரை மலரை விட்டுநீங்கிக் கால்நிலந்தோய நடந்துவருந் திருமகளேபோலும் இவளென்று கருதி அவளழகைநோக்கித் திகைத்தன ளென்பதாம். பி-ம்:— [1]கூந்தலாரை. [2]வருவதென்னே. சிலபிரதிகளில் "பண்புற" (சு ০), "பொருதிறத்தானை" (சுக), மருவொன்று(ருக) என்றமுறையிற் பாடலுள்ளன.(உ அங-)

சு ০.—அரக்கி பிராட்டியினழகை வியத்தல்.

பண்புற [1]நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லா
லெண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றுள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்று லென்படும் பிறருக் கென்றுள்.

(இ - ள்.) பண்பு உற - தகுதியாக, நெடிது நோக்கி - (பிராட்டிவடிவத்தை) முழுவதும்பார்த்து,—'படைக்குநர் சிறுமை அல்லால் - சிருஷ்டிப்பவரது வேலைத்திறக்குறைவே யல்லாமல், எண் பிறங்கு அழகிற்கு எல்லை இல்லை ஆம் - (யாவரது மனத்திலும் நீங்காது தங்கும்படியான) அழகுக்கு ஒருவரையறை யில்லை', என்று நின்றுள்-என்றுஎண்ணி நின்றுள்; (மற்றும்), 'கண்ட - (இவளைப்) பார்த்த, பெண் பிறந்தேனுக்கு - பெண்ணுப்பிறந்துள்ளவளான எனக்கே, கண் - கண்கள், பிற பொருளில் செல்லா - வேறுபொருள்களிற் செல்லமாட்டா: கருத்து எனின் - மனமோ வென்றால், அஃதே - (அதுவும்) அத்திறத்தே [பிறபொருளிற் செல்லாது], என்றால்—, பிறருக்கு - (இவற்றைக்கண்ட) ஆடவர்க்கு, என் படும் - (கண்ணும் கருத்தும்) என்னபாடுபடுமோ?' என்றுள் - என்றுங்கருதினள்; (எ - று.)

பிராட்டியின் திருமேனிமுழுவதையும் நன்றுகப்பார்த்து, அவளது வரம்பிலழகிற் கருத்தூன்றி, 'உலகத்தில் அழகுக்கு ஒருவரையறை காண்பது, அவ்வவ்வடிவத்தைப் படைக்கிற கடவுளின் தொழிற்குறைவினாலே யன்றி, அழகென்னும் பொருளுக்கு எல்லையில்லை' என்று சித்தாந்தஞ்செய்

தனள்; அன்றியும், 'சிறந்த மகளிரழகைக் கண்ட ஆடவர்க்குக் கண்ணுங் கருத்தும் அவ்வடிவத்தை விட்டுநீங்காமல் அதிலேயே பதிந்தழுந்துதல், உலக வியற்கை: அங்ஙனமன்றி, இவளழகு பெண்பாலாகிய எனக்கே கண்ணுங் கருத்தும் வெளிச்செல்லவொண்ணாதபடி வியப்பைத் தருகின்றது: இது, ஆடவர்க்கு எவ்வாறு இருக்குமோ?' என்று அதிசயித்தலுஞ் செய்தனளென்பதாம். சீதாதேவியின்வரம்புகடந்துள்ள திவ்வியசௌந்தரியம் கண்டவுளிருந் தாமுறும்படி மிக்குள்ள தன்மை, இதிற் கொண்டாடப்பட்டது; "கஞ்சத்துக்களிக்குமின்றேன் கவர்ந்துணும் வண்டுபோல, அஞ்சொற்கள் கிள்ளாக்கெல்லா மருளினுளழகைமாந்தித், தஞ்சொற்கள் குழறித்தத்தங்தகைதமு மாறிநின்றார், மஞ்சர்க்கு மாதர்க்கு மனமென்பதொன்றேயன்றே", "இழைகுலா முலையினுள்ள யிடையுவா மதியி னேக்கி, மழைகுலா வோதி நல்லார் களிமயக்குற்று நின்றார், உழைகுலாநயனத்தார் மாட்டு ஒன்றுமன்றே விரும்பற் கொத்தது, அழகெலா மொருங்கே கண்டால் யாவரே யாற்றவல்லார்" எனக் கீழ்ப் பாலகாண்டத்திற் கூறியன காண்க. 'பெண்பிறந்தேனுக்கு இங்ஙனமானால், பிறர்க்கு என்னுகும்' என்றது, **தோடார்நிலச்சேய்புட் பொருட்பேறணி**யென்னுங் காவ்யார்த்தாபத்தியலங்காரம். **பி - ம்:—** [1]நோக்கிமீண்டு. (உஅச)

கூக.—சீதாராமாது அழகோற்றுமையை அராக்கி மதிந்தல்.

பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருதமற் றினிவே றில்லை கமலத்துக் கடவு [1]டானே
யொருதிறத் துணா நோக்கி யுருவினுக் குலக மூன்றி
னிருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பிவ ரிருவ ரென்றாள்.

(இ - ள்.) (சூர்ப்பணகை),—பொரு திறத்தானை நோக்கி - போர்செய்யும்வல்லமையையுடைய இராமனைப் பார்த்து, பூவையை நோக்கி - இளிபோன்ற சீதையையும் பார்த்து, நின்றாள் - (ஆச்சரியப்பட்டு) நின்று,—'இனி வேறு கருத இல்லை - இனிமேல் வேறுவகை எண்ணவேண்டுவதில்லை; கமலத்து கடவுள் தானே - தாமரைமலரில் தோன்றிய பிரமனே ஒரு திறத்து உணர நோக்கி - ஒருதன்மையாக [ஒருங்கே முழுவதும்] நன்றாகப் பார்த்து, உலகம் மூன்றின் இரு திறத்தார்க்கும் உருவினுக்கு செய்த வரம்பு-மூவுலகத்திலுமுள்ள (ஆடவர் மகளிரென்னும்) இருவகைப்பட்டோர்க்கும் அழகின் முடிவெல்லையாகச் செய்யப்பட்டவர், இவர் இருவர் - இவ்விருவரும்', என்றாள் - என்றுஎண்ணினாள்; (எ - று.)—மற்று-அசை; வினைமாற்றுமாம்.

அழகின்சிறப்பில் ஒருவரையொருவர் ஒத்தவரும் தமக்கு ஆண்பெண்களில் வேறுஉவமைபெறுதவரு மான இராமன் சீதை யென்னும் இருவரையும் ஒருசேரநோக்கிய சூர்ப்பணகை, படைத்தற்கடவுளான பிரமன் மூவுலகத்திலுமுள்ள உயர்திணையாரினுவரது அழகையும் முற்றும் செவ்வையாக நோக்கி அவர்களெல்லோர்க்கும் மேலானஅழகுள்ள ஒருமைத்தனையும் மங்கையையும் படைக்கக்கருதி இவர்க்குமேல் எவருமில்லை யென்னும்படி அழ

இற்குமுடிவெல்லையாயிருக்குமாறு அமைத்த ஓர் உத்தமபுருஷனும் உத்தம ஸ்திரீயுமாவரிவ ரென்று நிச்சயித்தன ளென்பதாம். பி மீ:—[1]தானும்.(உஅடு)

கூஉ.—அரக்கி, சீதையைத் தன்னைப்போ லிடையில்வந்தவ ளென் றெண்ணுதல்.

பொன்னைப்போ [1]லொளிரு மேனிப் பூவை[2]ப்பூ வண்ணத் தானிம்
மின்னைப்போ லிடையா ளோடு [3]மேவுமெய் யுடைய னல்லன்
றன்னைப்போற் றகையோ ரில்லாத் தளிரைப்போ லடியி ஞளு
மென்னைப்போ லிடையே வந்தா ளிகழ்விப்பே னிவளே யென்ஞ.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) 'பொன்னை போல் ஒளிரும் மேனி - பொன்போல விளங்குகிற திருவுருவத்தையும், பூவை பூ வண்ணத்தான் - காயாமலர்போன்ற கரியதிருநிறத்தையு முடைய இவன், இ மின்னை போல் இடையாளோடு - மின்போல் நுண்ணிதாய்விளங்குகிற இடையையுடைய இவளுடனே, மேவு- சேர்ந்த, மெய் உடையன் அல்லன் - உடம்பையுடையவனல்லன் [இவளது கணவனல்லன்]; (மற்று), தன்னை போல் தகையோர் இல்லா - தன்னைப் போல அழகுடையவரை (வேறு) பெறுத [ஒப்பற்ற], தளிரை போல் அடியினளும்-தளிர்போல்(மெல்லிய சிவந்த)பாதங்களை யுடைய இவளும், என்னை போல் இடையே வந்தாள் - என்னைப்போல (இவனிடம் ஆசைகொண்டு) இடையிலே வந்தவளாவள்; இவளை—, இகழ்விப்பேன் - (இவனைக்கொண்டு) இகழும்படிசெய்வேன்', என்ஞ - என்றாளண்ணி. (எ - அ.)—'என்றாள்' என அடுத்த கவியில் முடியும்.

இவள் இவனுக்கு மனைவியல்ல ளென்றும், இவனிடத்துக் காதல்கொண்டு என்னைப்போலவே இவனைச் சேரும்பொருட்டு இடையில்வந்தவ ளென்றும், யான் இவனை வசப்படுத்தித் தழுவுதற்கு ஓர்எதிரிடையாகவந்த இவளிடத்து இவனுக்குத் தாழ்பிராயத்தையுண்டாக்கி இவன் இவளை இகழும்படி செய்விப்பே னென்றும் எண்ணின ளென்பதாம். பி - மீ:—[1]பொருவில். [2]போல். [3]உறைந்தவேடத்தன். (உஅசு)

கூஉ.—சூர்ப்பணகை இராமனிடம் சீதையைக்குறித்துப் பழித்தல்.

வருமிவண் மாயம் வல்லள் வஞ்சனை யரக்கி நெஞ்சந்
[1]தெரிவில டேறுந் தன்மை சிரியோய் [2]செயலிற் றன்ரு
[3]லுருவமு மெய்ய தன்ரு லுணுகர் வாழ்க்கை யாளை
வெருவினை னெய்தி டாமல் விலக்குதி வீர வென்ரூள்.

(இ - ள்.) 'சீரியோய் - நற்குணநற்செய்கையுடையவனே! வீர-வீரனே! வரும் இவள் - (இங்கு)வருகிற இவள், மாயம் வல்லள் - மாயையில் வல்லவள்; வஞ்சனை அரக்கி - வஞ்சனைக்குணமுள்ள ராக்ஷசியாவள்; நெஞ்சம் தெரிவு இலள் - மனம் அறிதற்குக் கூடாதவள்; தேறும் தன்மை - (இவளை

நல்லனென்று) தெளிதல், செயலிற்று அன்று - செய்யத்தக்கதன்மையுள்ள தன்று: (அன்றியும்), உருவமும் மெய்யது அன்று - (காணப்படுகிற இவளது) இவ்வடிவமும் உண்மையானதன்று: ஊன் நுகர் வாழ்க்கையாளே - தசையையுண்டு வாழுந் தொழிலுடைய இவளை, வெருவினென் - (கண்டு)பயந்தேன்; (இவளை), எய்திடாமல் விலக்குதி-அருகில் வரவொட்டாமல் தடுத்திடுவாய்', என்ருள் - என்றுசொன்னாள்; (எ - று.)—ஆல்இரண்டும்-அசை.

இங்ஙனம் தன்னுடைய தன்மைகளையெல்லாம் நற்குணம்மிக்க பிராட்டியின்மே லேற்றிக் கூறியதனால், சூர்ப்பணகையின் தீக்குணம் நன்குவிளங்குமாறு காண்க. **பி - ம்:**—[1]தெரிவிலதேறுந். [2]செயலிது. [3]உருவிது. (உஅள)

சூஅ.—அதுகேட்டு இராமன் பரிகாசமாகச் சிலகூறல்.

ஒள்ளிது னுணர்வு மின்னே யுன்னேயா ரொளிக்கு மீட்டார்
தெள்ளிய நலத்தி னுலுன் சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் லரக்கி போலா மிவளோடீ காண்டி யென்னு
வெள்ளிய முறுவன் முத்தம் வெளிப்பட்ட வீர னக்கான்.

(இ - ள்.) 'மின்னே - மின்னல்போல்விளங்குகிறவளே! உன் உணர்வு-உனது அறிவு, ஒள்ளிது-நன்றுகவுள்ளது; உன்னே ஒளிக்கும் ஈட்டார் யார்-உன்னை வஞ்சிக்கும் வல்லமையுள்ளவர் யார் (உளர்)? [எவருமில்லை யென்ற படி]; உன் சிந்தனை - உனது எண்ணம், தெள்ளிய நலத்தினுல் தெரிந்தது-தெளிந்த நற்குணமுள்ளதாகத் தெரிந்தது; அம்மா - ஆச்சரியம்! கள்ளம் வல் அரக்கி போல் ஆம் - (இவள் நீசொன்னபடி) வஞ்சனையுள்ள கொடிய ராக்ஷசியேபோலும்! இவளோ டீ காண்டி - இவளை நீ நன்றுகப்பார்ப்பாய்', என்னு - என்றுசொல்லி,—வெள்ளிய முத்தம் முறுவல் வெளிப்பட - வெண்மையான முத்துப்போன்ற பற்கள் வெளித்தெரியும்படி,—வீரன்-இராமன், நக்கான் - சிரித்தான்; (எ-று.)

அறிதற்கரிய வஞ்சனையுள்ள கொடுமாயக்கள்ளியின் சூழ்ச்சியை உள்ள படியறிந்தமையால் உன்அறிவு மிகச்சிறந்த தென்றும், உனக்குத்தெரியாத படி தம்தன்மையை ஒளிப்பதற்கு எவராலுமாகா தென்றும், வடித்தெடுத்த நற்குணங்களோடு கூடிய உனது கருத்து நீ கூறுஞ்சொற்களால் நன்றுகத் தெரிந்த தென்றும், 'இவள் அரக்கியேபோலும்: இவளைக் குறிக்கொண்டு நோக்கிடுவாய்'என்றும் சிலபரிகாசவார்த்தைகள்கூறிச் சிரித்திட்டன னென்பதாம். இப்பாட்டில் முதல்மூன்றடியில் வந்தன யாவும், எதிர்மறையிலக்கணையாகிய பிறகுறிப்பு; **வஞ்சப்புகழ்ச்சியணி.** (உஅஅ)

சூடு.—சூர்ப்பணகை சீதையை வெருட்டல்.

ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
வேயிடை தோளி ளுளும் வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை நிருதர்தம் பாவை யென்னைக்
காயெரி யனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) அ இடை - அச்சமயத்தில்,—அமுதின் வந்த - தேவாமிருதம் போல வந்தவளும், அருந்ததி கற்பின் - அருந்ததியின்கற்புப்போன்ற கற்பு நிலையையும், அம் சொல் - அழகிய சொற்களையும், வேய் இடை தோளினளும் - மூங்கில் (ஒப்பாகாமற்) பின்னிடும்படியான தோளழகையு முடைய வளுமாகிய சீதையும், வீரனை சேரும் வேலை - இராமனை அடுத்து நெருங்கும்பொழுது, காய் எரி அனைய கள்ளம் உள்ளத்தாள் - பற்றியெரிகிற நெருப்பை யொத்த [மிகக்கொடிய] வஞ்சனைக்கருத்துள்ள சூர்ப்பணகை, (பிராட்டியை நோக்கி), 'நிருதர்த்தம் பாவை - இராக்கதகுலத்திற்பிறந்த மகளே! நீ இடை வந்தது என்னை - (தானும் இவனும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கையில்) நீ நடுவிலே வந்தது யாதுபற்றி?' என்ன - என்றுசொல்லி, கதித்தலோடும்-அதட்டினவளவிலே,—(எ-று.)—'அன்னம் அஞ்சினள்' என அடுத்த கவியில் தொடர்ந்து முடியும்.

பிராட்டி இராமனதுசமீபத்திற் கிட்டும்பொழுது, சூர்ப்பணகை,அவளை 'அரக்கியாகிய நீ இங்கு வாராதே' என்று அதட்டின னென்பதாம். இராமன் கீழ்ப்பலகூறிப்பரிகசிக்கவும், அதனைத் தனதுஅறிவின்மையால் அறிந்து கொள்ளாமல் உண்மையிற் கூறுவதாகவே யெண்ணின ளாதலால், இங்ஙனஞ்செய்பவளாளுள். 'அமுதின்வந்த' என்பதற்கு-திருப்பாற்கடல்கடைந்த காலத்து அதனினின்று அமுதத்தோடுதோன்றிய என்றும் உரைக்கலாம்; சீதாபிராட்டி திருமகளினது திருவவதார மாதலால். பி-ம்:—[1]வேயுடைத். ()

சூசு.—சீதை அஞ்சி இராமனைத் தழுவுதல்.

அஞ்சினள் [1]வஞ்சி யன்ன மின்னிடை யலச வோடிப்
பஞ்சின்மெல் லடிக ணோவப் பதைத்தனள் பருவக் காலை
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் [2]வல்லி யென்னக்
குஞ்சர மனைய வீரன் குவவுத்தோ ளழுவிக் கொண்டாள்.

(இ - ள்.) அஞ்சினள் - (அரக்கிவெருட்டியதற்கு) பயந்தவளான சீதை, வஞ்சி அன்ன மின் இடை அலச - வஞ்சிக்கொடிபோல (நுண்ணியதாய்) விளங்குகிற இடை துவளவும், பஞ்சின் மெல் அடிகள் நோவ - பஞ்சுபோல மென்மையான பாதங்கள் நோகவும், பதைத்தனள் ஓடி - திடுக்கிட்டுஓடி வந்து, பருவம் காலம் மஞ்சு இடை வயங்கி தோன்றும் பவளத்தின் வல்லி என்ன - கார்காலத்தில் மழைபொழியவருகிற கரிய மேகத்தினிடையிலே விளங்கித்தோன்றுகிற பவழமயமானதொரு கொடிபோல, குஞ்சரம் அனைய வீரன் குவவு தோள் தழுவிக்கொண்டாள்-யானையையொத்த இராமபிரானது திரட்சியையுடைய தோள்களைத் தழுவியணைத்துக் கொண்டாள்.

சீதை மிகப்பயந்து மெல்லிய இடை அலைய மென்மையான கால்கள் நோவத் திடுக்கிட்டு ஓடிவந்து அடுத்து இராமனைத் தழுவிக்கொண்டன

ளென்பதாம். நீலமேகம் - இராமனது கரியதிருமேனிக்கும், பவழக்கொடி - சீதையினது சிவந்தமெல்லியதிருமேனிக்கும் உவமையாம். மேகத்திற்பவழக் கொடி, அது கடலின்நீரைப் பருகும்பொழுது அங்குநின்று சேர்ந்ததாம்; அன்றி, இல்பொருளுவமையுமாம். காலமஞ்சு-காளமேகம். பி - மீ:—[1]அஞ்சியன்னம். [2]வல்லியேபோல். (உகo)

சூஎ.—இராமன், சூர்ப்பணகையை 'அப்பாற்போ' என்றல்.

வலியெயிற் றவர்க ளோடு வரும்விளை யாட்டென் றாலும்
விலைவன தீமை யேயா மென்பதை [1]யுணர்ந்து வீர
னுலைவன வியற்றே லொல்லை யுன்னிலை யுணரு மாயி
னிலையவன் முனியு நங்கை யேகுதி விரைவி னென்றான்.

(இ - ள்.) 'வலை எயிற்றவர்களோடு - வலிய்த கோரதந்தங்களையுடைய அரக்கருடனே, விளையாட்டு வரும் என்றாலும் - விளையாட்டு நேர்வதானாலும், விலைவன தீமையே ஆம்-(அதனால்) உண்டாகும் பயன்கள் தீங்குகளேயாம்', என்பதை—, உணர்ந்து-ஆலோசித்து, வீரன் - இராமன், (சூர்ப்பணகையை நோக்கி),'உலைவன இயற்றேல்-துன்பத்தரும்படியான காரியங்களைச் செய்யாதே; இலைபவன் - (எனது) தம்பி [லக்ஷ்மணன்], உன் நிலை உணரும் ஆயின் - உனது நிலைமையை அறிவனாயின், ஒல்லை முனியும் - விரைவில் [உடனே] கோபிப்பான்; (ஆதலால் ; நங்கை - பெண்ணே! விரைவின் எகுதி - துரிதமாக அப்பாற்செல்வாய்,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)—பி - மீ:—[1]உணர்ந்த. (உகக)

சூஅ.—சூர்ப்பணகை மீண்டும் வார்த்தையாடுதல்.

பொற்புடை யரக்கி பூவிற் புனலினிற் பொருப்பில் வாழு
[1]மற்புடை யுள்ளத் தாரு மநங்கனு மமரர் மற்று
மெற்பெறத் தவஞ்செய் கின்ற ரென்னைநீ [2]யிகழ்வ தென்னை
நற்பொறை நெஞ்சி [3]னில்லாக் கள்வியை நச்சி யென்றாள்.

(இ - ள்.) பொற்பு உடை அரக்கி - அழகின்வளக்கமுடைய அந்த ராக்ஷசி,—(இராமனை நோக்கி)', பூவில் - தாமரைமலரிலும், புனலினில் - கடலிலும், பொருப்பில் - கைலாசகிரியிலும், வாழும் - வாழ்கின்ற, அன்பு உடை உள்ளத்தாரும்-(எல்லாவுயிர்களிடத்தும்) அன்பையுடைய மனமுள்ள அயன் அரி அர னென்பவரும், அநங்கனும் - (யாவரும்விரும்புங் கட்டழகுடைய) மன்மதனும், மற்று அமரரும் - மற்றுமுள்ள (இந்திராதி) தேவர்களும், என் பெற தவம் செய்கின்றார் - என்னே(த் தமக்குரியவளாக)ப் பெறும்பொருட்டுத் தவஞ்செய்கிறார்கள்; என்னை-(அப்படிப்பட்ட சிறப்புடைய) என்னை, நீ—, நல் பொறை நெஞ்சின் இல்லா கள்வியை நச்சி - நல்ல பொறுமைக்குணத்தை மனத்திலேஉடையஎல்லாத வஞ்சகியான இவளை விரும்பி, இகழ்வது - அலட்சியஞ்செய்வது, என்னை - என்னதகுதியுடைத்து?' என்றாள் - என்றுசொன்னாள்; (எ - று.)

பிரமனும் திருமாலும் சிவபிரானும் ஆகிய திரிமூர்த்திகளும், அழகின் தெய்வமான மன்மதனும், மிக்கசிறப்பையுடைய மற்றைத்தேவர்களும், என்னைக் காதலித்துப் பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்க, அவர்களை மதியாமல் உன்னை நன்குமதித்து வலிய வந்து அடைந்த என்னை நீ இகழ்ந்து, நற்குணமில்லாதவளும் வஞ்சனையுள்ளவளுமான இந்த அரக்கியை விரும்புவது தகுதியாமோ வென்று சொன்பதாம். பி - மீ:—[1]அற்புரை, அற்புதை. [2]இகழ்வதேயிக். [3]கல்லாக். (உகூ2)

சுகூ —இராமன் அரக்கியை வெறுத்து பர்ணசாலையினுட் செல்லுதல்.

தன்னெடுந் தொடர்வி லாதே மென்னவுந் தவிரா டானிக்
கன்னெடு மனத்தி சொல்லுங் கள்ளவா சகங்க ளென்னு
மின்னெடு [1]நடந்து செல்லு மேகம்போன் மிதிலே [2]வேந்தன்
பொன்னெடும் புனிதன் போயப் பூம்பொழிற் சாலை புக்கான்.

(இ - ள்.) 'இ கல் நெடு மனத்தி - கற்போல வலிய நீண்ட மனத்தையுடைய இவ்வரக்கி, தன்னெடும் தொடர்வு இலாதேம் என்னவும் தவிராள்- அவளோடு உறவுகொள்ளமாட்டோ மென்று நாம் மறுத்துச் சொல்லவும் (இவ்விடத்தைவிட்டு) நீங்குகிறாளில்லை; கள்ளம் வாசகங்கள் சொல்லும் - வஞ்சனைப்பேச்சுக்களேயே பேசுகிறாள்,' என்ன - என்று (அவளது தீயஇயல்பைக்) கருதி,—புனிதன் - பரிசுத்தகுணமுள்ள ஸ்ரீராமன்,—மின்னெடு நடந்து செல்லும் மேகம் போல் - மின்னலுடன் நடந்துசெல்லுகிற மேகம் போல, மிதிலே வேந்தன் பொன்னெடும் - மிதிலாநகரத்தரசனான சனகனது திருமகள்வடிவமான மகளாகிய சீதையுடனே, போய் - (அவ்விடம்விட்டுச்) சென்று, அ பூ பொழில் சாலை புக்கான் - அழகிய அச்சோலையி னிடையிலுள்ள பர்ணசாலையினுட் சென்றான்; (எ - று.)—தான் - அசை.

யாம் இவளோடு தொடர்ச்சிகொள்ளப் பிரியமுடையோமல்லோ மென்று பலமுறை பலவாறு சொன்னலும் இவள் அதுகேட்டு அப்பாற்சென்றிடாமல் தனதுதீக்குணத்துக்கு ஏற்றபடி வஞ்சனையான பேச்சுகளைப் பேசிக்கொண்டிருக்கிறாள்; ஆதலின், இக்கொடியவளுள்ள விடத்தை விட்டு நாம் சென்றிடுவோமென்றுஎண்ணி இராமபிரான் பிராட்டியுடனே பர்ணசாலையிற் பிரவேசித்தன னென்பதாம்.

நெடுமனம் - வரம்பில்லாது மேன்மேற் செல்லும் ஆசைக்கருத்துநீட்சியையுடைய மனம். மிதிலே - மிதி யென்னும் அரசனால் ஏற்படுத்தப்பட்ட நகரமென்று காரணப்பெயர்; நிமியென்னும் அரசனது குமாரனும் சனககுலத்தலைவனுமான அரசனுக்கு, மிதியென்று ஒருபெயர். திருமகளின் திருவவதார மாதலால், சானகி, 'பொன்' எனப்பட்டனள். பி-மீ:—[1]தொடர்ந்து. [2]வந்த. (உகூ3)

எ0.—அப்போழது சூர்ப்பணகை தவிக்குதல்.

புக்கபின் போய தென்னு முணர்வினள் [1]பொறையி னீங்கி
யுக்கதா முயிர லொன்று முயிர்த்தில லொடுங்கி நின்று

[2]டக்கிலன் தகுதி யாதுந் [3]தழுவிலன் சலமுங் [4]கொண்டான்
மைக்கருங் குழலி ணுண்மாட் [5]டன்பினில் வலிய [6]னென்பாள்.

(இ - ள்.) புக்க பின் - (இராமன் ஆச்சிரமத்தினுட்) சென்றிட்டபின்பு, (சூர்ப்பணகை), போயது என்னும் உணர்வினள் - போயிற்றெனப்பட்ட அறிவுடையவளாய் [அறிவுபரவசப்பட்டு], பொறையின் நீங்கி உக்கது ஆம் உயிரள் - உடம்பினின்று நீங்கிக் கழிந்ததான உயிருடையளாய் [மூர்ச்சை யடைந்து], ஒன்றும் உயிர்த்திலள் ஒடுங்கி நின்றுள் - சிறிதும் சுவாசம்விட வும்மாட்டாது ஒடுங்கிநின்று, (பின்பு சிறிதுதேறி), '(இவன்), மனத்துள் தக்கிலன்-மனத்தில் தகுதிக்குணமில்லாதவனும் [சாந்தகுணமில்லாதவனும்], யாதும் தழுவிலன்-(காமத்தால்தவிக்கின்ற எனதுதாபந்தீர்தற்கு) யாதொரு பற்றுக்கோட்டையும் செய்யாதவனுமாகி,சலமும் கொண்டான்- (என்பக்கல்) தணியாக்கோபமும் கொண்டுள்ளான்: மை கருங் குழலிளுள்மாட்டு அன்பி னில் வலியன்—மைபோலக்கரியகூந்தலையுடைய அம்மங்கையினிடத்து அன்புசெய்தலில் உறுதியுடையவன் (இவன்)', என்பாள் - என்று எண்ணு பவளானள்; (எ - று.)

இராமன் இப்படி உபேக்ஷித்துப் பர்ணசாலைக்குள்நுழைந்து மறைந்த வுடனே, சூர்ப்பணகை, அறிவு ஒழிய, உயிர்ப்பு அடங்க, செயல் ஒடுங்க, உயிர்போனற்போலச் சிறிதுபொழுதுமூர்ச்சித்துப் பின்பு தானேதெளிர்து மனத்திற் சிறிதுந் தகுதியின்றி என்கருத்தைநிறைவேற்ற வழியொன்றுஞ் செய்யாது என்னிடம் வயிரங்கொண்டு, என்னை அவன் இப்படி இகழ்ந்து புறத்தில் தனியேவிட்டு அவளை உடன்கொண்டு உள்ளேசென்றது யாவ ரினும் மிக்க அழகையுடைய அவளிடத்து மிக்கஅன்புகொண்டிருத்தலாலே யேயென்று கருதின னென்பதாம்.

'மைக்கருங்குழலிளுள்மாட்டு அன்பினில் வலியன்' என்று சீதையி னிடம் இராமன்கொண்டுள்ள அன்பின் மிகுதியிற் கருத்தூன்றினது - பின்பு இவள் பிராட்டியை எடுத்துப்போதற்குத் தோற்றுவாயாம்; அதனை மேல் கூ0-கூஉ ஆங் கவிகளிற் காண்க. மை - அஞ்சனம்; மேகமுமாம். காமவேதனை மிக்க இவளுக்கு அப்பொழுதுவலிமையழிவால் தன் உடம்பும் தாங்கமாட் டாததொரு பெரியபாரமாகத் தோன்றிய தென்பது தோன்ற, இங்கே உடம்பை வேறுபெயராற் குறியாமல் 'பொறை' என்ற சொல்லாற் குறித் தார். இனி, பொறை - (உயிரைப்) பொறுப்பது [தாங்குவது] என எதுப் பெயரு மாம். பி - மீ:—[1]பொறையுள். [2]தக்கிலண்மனத்துள்யாதும். [3]தழுவி லள். [4]கொண்டாள். [5]அன்னன். [6]என்றுள். (உகச)

எக —சூர்ப்பணகை அப்பாற்செல்லுதலும், சூரியன் அஸ்தமித்தலும்.

நின்றில ளவணைச் சேரு [1]நெறியினை நினைந்து போனு
னின்றிவ ணுகம் புல்லே னெனினுயி ரிழப்பெ னென்னுப்
பொன்றிணி [2]சரளச் சோலைப் பளிக்கறைப் பொதும்பர் புக்காள்
சென்றது பரிதி மேல்பாற் செக்கர்வந் திறுத்த தன்றே.

(இ - ள்.) (இங்ஙனம் வருந்தி), நின்றிலள் - (அங்கு) நில்லாமல், அவனே சேரும் நெறியினை நினைந்து போனாள் - அப்புருஷோத்தமனை(த் தான்) தழுவும் உபாயத்தைச் சிந்தித்துக்கொண்டே சென்று, இன்று இவன் ஆகம் புல்லேன் எனின் உயிர் இழப்பென் என்னை - இப்பொழுது இவன் தன் உடம்பைத் தழுவேனையின் எனது உயிரை இழந்துவிடுவேனென்றும் எண்ணி, பொன் நிணி சரளம் சோலை பனிங்கு அறை பொதும்பர் புக்காள் - பொற் பொடிபோன்ற பூந்தாதுகள் அடர்ந்த இனிய ஒரு சோலையிலுள்ள (தனது) பளிக்கறையின் உள்ளிடத்திலே நுழைந்திட்டாள்; (அப்பொழுது), பரிதி - சூரியன், மேல் பால் சென்றது - மேற்குத்திக்கிற் போய்ச் சேர்ந்தது [அஸ்தமித்தது]; செக்கர் வந்து இறுத்தது - (அத்திசையிற்) செவ்வானம் வந்து சேர்ந்தது; (எ - று.)

அப்பால் அங்கு நிற்றலிற் பயனில்லை யாதலால், அரக்கி, அவனைத் தவறுமற் சேர்தற்குச் செய்யவேண்டும் முயற்சியைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே சென்று, 'இவனை நான் சேராவிடின் காதல்நோய் மிகுதியால் எனக்கு மரணமே நேர்ந்திடும்' என்றுங் கருதி, அழகியதொரு சோலையினிடையில் தனக்கு இருப்பிடமாக அமைக்கப்பட்டுள்ள பளிக்கறையினுட் சென்றிட்டாளாக, அவ்வளவிற் சூரியன் அஸ்தமித்தான்: செவ்வானமும் பரவிற்று என்பதாம். அன்று, எ-ஈற்றசை. பி-ம்:—[1]நெறியென. [2]சாரதற்கீதப்.

வேறு.

எஉ —இதுமுதற் பதினேழுகவிகள்-சூர்ப்பணகையின் காமதாபவருணனை.

அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
மொழிந்த காமக் கடுங்கனன் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்றெரு வாளெயிற்
றிழிந்த கார்விட [1]மேறுவ தென்னவே.

(இ - ள்.) வழிந்த - (விஷம்) மிக்குவடியப்பெற்ற, நாகத்தின் - நல்ல பாம்பினது, வல் - வலிய, தெரு வே - தெருவாரமுள்ள, வாள் எயிறு - கூரிய கொடியபற்களினின்று, இழிந்த - (கடித்த வாயிற்) சொரிந்த, கார் விடம் - கரியவிஷம், ஏறுவது என்ன - (தலைக்கு) ஏறுவதுபோல,—அழிந்த சிந்தையள் ஆய் அயர்வாள்வயின் - ஒடுங்கியமனமுடையவளாய்த் தளர்பவளான அச்சூர்ப்பணகையினிடத்து, மொழிந்த காமம் கடுங் கனல் மூண்டது-(கீழ்ச்) சொல்லப்பட்ட காமமாகிய கொடிய தீ மிக்குஎறிற்று; (எ - று.)

நாகப்பாம்பின்விஷம் தலைக்கு ஏறி வருத்தத் தொடங்குதல்போல, அரக்கியைக் காமநோய் மீதூர்ந்து வருத்தலுற்ற தென்பதாம்; உவமையணி. 'மொழிந்தகாமக்கடுங்கனல்' என்பதற்கு - "ஊரு ளெழுந்த வருகெழு செந்தீக்கு, நீருட்குளித்து முயலாகும் - நீருட், குளிப்பினுங் காமஞ்சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்" என்றாற்போலச் சிறப்பித்துக்கூறப்படுகிற காமக்கொடுந்தீ யென்றும் உரைக்கலாம். 'கடுங்கனல்' என்றதும்,

தியினும் அதற்குஉள்ள கொடுமையைக் குறித்தற்கே. தொலையென்றது-விஷப்பையின்வாயினின்று பல்லினுள்ளால் விஷஞ்சொரியும் வழியை. நாகத்தின் விஷப்பற்கள்-காளி காளாத்திரி யமன் யமதூதி என நான்காம். பி-மீ:—[1]ஏறியது.

இதுமுதற்பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிவந்த அளவடி நான்குகொண்ட கலி விருத்தங்கள். (ககூ)

எங. தாட கைக்கொடி யாடட மார்பிடை
யாட வர்க்கர சன்னயி லம்புபோற்
பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
யோட வுட்கி யுயிருளைந் தாளரோ.

(இ - ள்.) தாடகை கொடியாள் - தாடகையென்னுங் கொடியவரக்கியினது; தட மார்பிடை - பெரிய மார்பில், ஆடவர்க்கு அரசன் - புருஷோத்தமனான இராமனது, அயில் அம்பு போல் - கூர்மையையுடைய பாணம் போல,—பாடவம் தொழில் மன்மதன் பாய் கணை - சாமர்த்தியமாகச்செய்யும் போர்த்தொழிலையுடைய மன்மதனது பாய்கின்றஅம்புகள், ஓட - (சூர்ப்பணகையின்மார்பில் தைத்து ஊடுருவி அப்பாற்) செல்ல, (அதனால் அவள்), உட்கி - அஞ்சி, உயிர் உளைந்தாள் - உயிர்வருந்தினாள்; (எ - று.)

தாடகைமார்பில் இராமபாணந் தைத்தாற்போலச் சூர்ப்பணகைநெஞ்சில் மன்மதபாணந் தைக்க, அவள் மிகவருந்தின ளென்க. "நினக்குமரவிற்றம் நீள்பசலை மாம்பூ, அனத்துணவுநீக்கும் அசோகு-வனத்திலுறு, முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம், கொல்லும் மதனம்பின் குணம்" என்றதனால், மன்மதனது ஐங்கணையையும், அவற்றின் செய்தொழிலையும் அறிக.

தாடகை-மலைகளிற்சஞ்சரிப்பவள்; இவள், சுகேதுவென்னும் யக்ஷனது மகள்; சுந்தனென்பவனது மனைவி; ஆயிரம்யானைவலிமை கொண்டவள்; கணவன் அகஸ்தியமகாமுனியின் கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பரானதை யறிந்த இவள், தன்புத்திரர்களான சுபாகுமாரீசர்களுடனே அம்முனிவனை எதிர்த்துச் சென்றபொழுது, அவனிட்ட சாபத்தால், தன்மக்களோடு இராக்கதத்தன்மை யடைந்தனள்: பின்பு முனிவர்களுடைய யாகாதிகளைக் கெடுக்கிறஇவர்களை அழித்துத் தன்வேள்வியைக்காக்கும்பொருட்டு விசுவாமித்திரமுனிவன் தசரதசக்ரவர்த்தியினிடம் அனுமதிபெற்று இளம்பிராயமுடைய இராமலக்குமணரை அழைத்துக்கொண்டு போனபொழுது, அம்முனிவனுச்சிரமத்துக்குச் செல்லும் வழியிடையிலே வந்து எதிர்த்த தாடகையை ஸ்ரீராமன் முனிவன் கட்டளைப்படி பெண்ணென்றுபாராதுபொருது கொன்றருளினனென்பது வரலாறு.

தாடகை - ஆவீறு ஐயான வடசொல். கொடியாள் - இராவணனது வெற்றிக்கொடிபோன்றவ ளென்றுமாம்; கொடி-துவசம்: "பொடி யுடைக் கானமெங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த, தடியுடை யெயிற்றுப் பேழ்

வாய்த் தாடகை தலேடோறு, முடியுடை யரக்கர் கர்நாள் முந்தி யுற்பாத ழாகப், படியிடை யற்றுவீழ்ந்த வெற்றியம்பதாகை யொத்தாள்" எனக் கீழ்ப் பாலகாண்டத்துக் கூறியதை உணர்க. பாடவம் - வடசொல்; படுத்தன்மை: திறமை. மந்மதன் என்ற வடசொல்லுக்கு-அறிவைக்கலக்குபவனென்பது, காரணப்பொருள். உயிர்உளைந்தாள் - வழுவமைதி. (உகஎ)

எச. கலி[1]யு வாமதியே கறி யாகவன்
[2]சிலியின் மாரனைத் தின்னு நிணைப்பிணை
மலைய மாருத மாகெடுங் காலவே
லுலைய மார்பிடை யூன்றிட வோயுமால்.

(இ - ள்.) கலி - பதினாறுகலைகளும்நிறைந்த, உவா மதியே - பௌர்ணமீசந்திரனே, கறி ஆக - கறியாக அமைய, வல் சிலையின் மாரனை - வலிய வில்லேபுடைய மன்மதனை, தின்னும்-(உணவாகக் கடித்துத்) தின்னவேண்டு மென்கிற, நினைப்பிளை - எண்ணமுடைய அவ்வரக்கி,—மலையம் மாருதம் ஆம்-பொதியமலையினின்று வருகிற (தென்றற்) காற்றுகிய, கெடுங் காலன் வேல் - நீண்ட யமனது சூலாயுதம், உலைய - வருத்தமுண்டாம்படி, மார் பிடை ஊன்றிட-மார்பிலே பாய்தலால், ஓயும்-செயலொடுங்குவாள்; (எ-து.)

மன்மதனுக்குத் துணையாய் நின்று குளிர்ந்த நிலவினைத் காமநோயை வளர்த்துத் தன்னைவருத்துகிற பூர்ணசந்திர னுள்பட அம்மன்மதனைப் பிடித்துத்தின்று ஒழித்துத் தனதுதாபந்தணியலா மென்று கருதி அதற்காக எழுமளவில், தெற்கிலுள்ள மலயபருவதத்தினின்று வருகிற இளங்காற்று மார்பில் வீசிக் காலவேல்பாய்ந்தாற்போல மிகவருத்துதலால், தன்வலிமை யொழிந்து ஒடுங்கின ளென்பதாம்; உருவகவணி. காமோத்தீபகப்பொருள்களிற் சிலவற்றை இவள் அழிக்கலுற்றபொழுது, அவற்றில் மற்றொன்றே தன் இனத்துக்காகப்பரிந்து எதிர்த்து இவளை வலிகெடுத்த தென்பது, இதில் தோன்றும். போரில் பகையரசனையேனும் அவன்பரிவாரங்களுள் சிலவற்றையேனும் அழிக்கத்தொடங்குவாரை மற்றையபரிவாரம் ஊக்கத்தோடு இடையிற்புக்கு அழித்திடுத் தன்மை, இங்குக்குறிக்கப்பட்ட தென்க. அடுத்த மூன்றுகவிகளிலும் இங்ஙனமே காண்க. சந்திரனேடுகூடிய மன்மதனை அழிக்கலுற்றபொழுது இவளை மந்தமாருதம் மேற்பாய்ந்து அழித்ததை, வெண்கொற்றக்குடையோடு கூடிய ஒருவீரனை யெதிர்த்து அழிக்கலுற்றபொழுது அவ்வெதிரியை அவ்வீரனதுதேர் மேற்பாய்ந்து அடக்கினற்போலக் கொள்ளலாம். "ஆலைக் கரும்பு சிலையங்கணை பூ நாண் சுரும்பு, மாலைகிளி புரவி **மாருதந் தேர்**—வேலை, கடிமுரசம் கங்குல் களிறு குயில் காளம், கொடி மகரம் **திங்கள் குடை**" என்றதனால், மன்மதனுகியஅரசனுக்குத் திங்கள் குடையும் மாருதம் தேருமாதலை யறிக. தேவர்களைத் தடையறப்பிடித்துத்தின்னுங் கொடிய வலிய அரக்கி யாதலாலும், தன்னை வருத்தவரும் கொடுவிலங்கு முதலிய உயிர்களையெல்லாம் பிடித்துத்தின்றொழித்து அவற்றாலாந் துயரைத் தீரும் இயல்பின ளாதலாலும், காமவேதனையால் மனந்திகைத்தலாலும், மதியை

யும் மாரனையுந் தின்ன எண்ணினா னென்க. அங்ஙனம் எண்ணின எண்ணத்தை நிறைவேற்றத்தொடங்கவொண்ணுதபடி வலிமை யொடுங்கின தன்மை, பின்னிரண்டடிகளால் விளங்கும். என்னைவருத்துதற்குத் துணையானவனையே யான் தின்னுமுணவிற்குத் துணையாகக்கொள்வே னென்று கறுக்கொண்டு கருதின னென்பது, 'மதியே கறியாக' என்ற ஏகாரத்தால் விளங்கும். 'வன்சிலை' என்றது, தொழிலாற்றல்பற்றி. உவா - இங்கே சுக்லபக்ஷத்துப் பௌர்ணமி. பி-பி:—[1]அவாம். [2]சிலைய. (உகூஅ)

எடு. அலைக்கு மாழி யடங்கிட வங்கையான்
மலைக்கு லங்களிற் றூர்க்கு மனத்தினு
ணிலைக்கும் வானி னெடுமதி நீணிலா
[1]மலைக்க நீங்கு [2]மிடுக்கினண் மாந்துவாள்.

(இ - ள்.) அலைக்கும் - (தன்னை) வருத்துகிற [அல்லது அலைவீசுகிற], ஆழி - கடல், அடங்கிட - இல்லாமலழியும்படி, அம் கையால்-(தனது) அகங்கைகளால், மலை குலங்களின் - மலைக்கூட்டங்களைக்கொண்டு, தூர்க்கும் - (அதனைத்) தூர்த்துவிடவேண்டுமென்னும், மனத்தினுள் - மனத்தையுடைய அரக்கி,—நிலைக்கும் வானில்-நிலைபெற்றவானத்திலேவிளங்குகிற, நெடுமதி-பெரியபூர்ணசந்திரனது, நீள் நிலா - நீண்டநிலாவொளி, மலைக்க - (தன்னை) எதிர்த்து அழித்தலால், நீங்கும் - நீங்கின, மிடுக்கினள் - வலிமையுடையவளாய், மாந்துவாள் - உள்ளழிவாள்; (எ - று.)

ஒலியினுற் காமத்தைவளர்த்துத் தன்னைவருத்துகிற கடலைத் தனது கைகளாற் பலமலைகளை யெடுத்து அதிற் போகட்டுத் தூர்த்து அழித்திட வேண்டுமென்று தன்வலிமைக்குஏற்பக்கருதுமளவில், சந்திரகாந்தி தன்மேற் பட்டு வருத்துதலால், வலிமையழிந்து வருந்துவ னென்பதாம். கடலினின்று தோன்றி அக்கடல் தன்னைக்கண்டமாத்திரத்திற் பொங்கிக்களிக்கும்படி அதற்கு மிக்கஉற்சாகத்தையுண்டாக்குகிற சந்திரனுக்கும் கடலுக்கும் பிள்ளையுந் தாயு மாகிற உறவுமுறைமை அமைதலான், தாயாகிய கடலை இவள்வருத்தத்துணிந்தவளவில், மகனுகியசந்திரன் இவளைவலியொடுக்கினு னென்ற கற்பனையும்அமையுமாறு, இப்பாட்டிற் கடலையும் மதியையும் அமைத்தனரென்க. பி - ம்:—[1]அலைக்கும், மலைக்கும். [2]மிடுக்கிலள். (உகூக)

எசு. பூவெ லாம்பொடி யாகவிப் [1]பூமியுட்
காவெ லா[2]மொடிப் பென்னெனக் காந்துவாள்
சேவ லோடுறை செந்தலை யன்றிலி
னுவி னுல்வலி [3]யெஞ்ச [4]டுங்குவாள்.

(இ - ள்.) 'பூ எலாம் - மலர்கள் யாவும், பொடி ஆக - தூளாம்படி, இப்பூமியுள் கா எலாம் - இவ்வுலகத்திலுள்ளசோலைகளெயெல்லாம், ஒடிப்பென்-முறித்துவிடுவேன்', என - என்று, காந்துவாள்-கோபதாபங் கொள்பவளான அவள், சேவலோடு உறை - ஆணுடனேகூடி வசிக்கிற, செம் தலை அன்றிலின்-

சிவந்த தலையையுடைய அன்றிற்பறவையினது, நாவினால்-வாய்க்குரலினால், வலி எஞ்ச - (தன்) வலிமை குறைய, நடுங்குவாள் - அஞ்சித்திடுக்கிடுவாள்.

அன்றிற்பறவை மரத்தில்வாழ்வ தாதலால், அந்தமரச்சாதி முழுவதை யும் அழிக்குமாறு கோபங்கொண்டவளே அன்றில் வலியழித்திட்ட தென்பது பற்றி, சோலையையும் அன்றிலையும் ஒருங்கே கூறினர். அன்றிலென்பது - ஓர்புள்; இது, எப்பொழுதும் ஆணும்பெண்ணுங் கூடியேயிருக்கும்; கணப்பொ ழுதுஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறுமல் ஒன் றையொன்று இரண்டுமூன்றுதரங் கத்திக்கூவி அதன்பின்புந் தன்துணை யைக்கூடாவிட்டால் உடனே இறந்துபடும்; 'எரிதகைந்தன்ன செந்தலை யன் றில், பிரியின் வாழாது" என்றதுங் காண்க. இதனை, வடநூலார் க்ரௌஞ்ச மென்று கூறுவர்; தமிழிற் குருகெனவும்படும்: இதனை, க்ரௌஞ்சபருவத த்தை 'அன்றிற்பெயர்க்கிரி' என்றும், 'குருகின்பெயர்மலை' என்றும் கூறு மாற்றால் அறிக. எப்பொழுதும் இணையாகவுள்ள அன்றிற்பறவையும், அது மாலைப்பொழுதிற் பார்வைகுறைந்து துணையையிழந்து நலிந்து எழுந்து பறந்து வருந்துவதும், அந்நலிவால் அது கூறுகிற குரலும், காமோத்தீபக மாய்க் காமுகரை வருத்து மென்பது, கவிமரபு. பகல்முழுவதும் புணர்ந் திருந்து இரவிற் பிரிந்து வருந்துவதாகிய சக்கரவாகப்பறவையும் அன்றி லெனப்படுவது உண்டு. சேவல்-ஆண்பாற்பெயர்; இது, பறவைக்குரியது. **பி - ம்:**—[1]பூமியிற். [2]பொடிப்பென். [3]எஞ்சி, அஞ்சி. [4]நடுங்கினாள். (கூ00)

எஎ. [1]அணவி நிங்களே நுங்க வராவினைக்
கொணர்வெ னேடி யெனக்கொதித் துன்னுவாள்
பணியின் மென்முலை மேற்பனி மாருதம்
புணர வாருயிர் வெந்து புழுங்குமால்.

(இ - ள்.) அணவு இல் - (தனக்கு) அநுகூலித்த லில்லாத, நிங்களே - சந்திரனே, நுங்க - விழுங்கும்பொருட்டு, அராவினை - (அதற்குப்பகையாகிய) பாம்பை, ஓடி கொணர்வென் - ஓடிப்போய்க் கொண்டுவருவேன், என - என்று, கொதித்து - கோபங்கொண்டு, உன்னுவாள் - நினைப்பவளான அவ ள்,—பணியின் மெல் முலைமேல் பனி மாருதம் புணர - பருமையையுடைய மெல்லிய (தனது) தனங்களின்மேற் குளிர்ந்தகாற்றுப் பட, ஆர் உயிர் வெ ந்து புழுங்கும் - அருமையான உயிர் தவிக்கப்பெற்று வெதும்புவாள்; (எ-று.)

கூடினோர்க்குக் குளிர்ந்த கிரணத்தால் உற்சாகத்தைவிளைத்து அநுகூல மாகவிருத்தல்போல வன்றிக் கூடாத தனக்குப் பிரதிகூலமாய் வருத்தத்தை மிகுவிக்கிற சந்திரனே முற்றும்விழுங்கிவிடுமாறு அதற்குப்பகையாகிய ராகு கேது என்னுங் கரும்பாம்பு செம்பாம்புகளே விரைவிற்சென்று அழைத்துக் கொண்டுவருவே னென்று கோபத்தோடு கருதுமளவில், குளிர்ந்தகாற்று உடம்பிற்பட்டு அவளுயிரைத் தவிக்கச்செய்த தென்பதாம். ஆதிசேஷனுக் கும் வாயுபகவானுக்கும் தமக்குள் யார் பலசாலியென்ற விவாத முண்டாய் நிகழ்ந்தபோரில் ஆதிசேஷனே வாயுவென்றிட்டன னென்ற வரலாறுபற்றி,

அவள் சந்திரனையழிக்கும்படி பாம்பைக் கொணர்தற்கு நினைத்தமாத்திரத்தில் அவனையழிக்கும்படியான காற்று அவளையழித்திட்ட தென்றன ரென்னலாம்; இங்ஙனம் அநிஷ்டம்நிகழ்ந்ததாகக் கூறுவது - **ததீயின்மையணி** யின்பாற்படும். அன்றி, சந்திரனையழித்தற்குப் பாம்பைக்கொணர நினைத்த வளவில், அதற்கு உணவாகிய காற்று, இவள் பாம்பைக்கொண்டுவந்தால் அது தனக்கும் அபாயகரமாய்முடியு மென்று தீர்க்காலோசனைசெய்து அதனைக்கொண்டுவரவொட்டாதபடி இவளை வலியழித்திட்ட தென்னலாம். 'பனிமாருதம்' என்றது, அதன் இயற்கைபற்றி; இவளுக்குக் குளிர்ந்திருந்த தென்பதுபற்றி யன்று. கிரகணகாலத்திற் சந்திரசூரியரைமறைக்கிற சாயாகிரகங்களாகிய இராகுகேதுக்களைப் பாம்புக ளென்றும், இராகுகேதுக்கள் சந்திரசூரியரை விழுங்குகின்றனரென்றுங் கூறுதல், கவிமரபு. **பி - மீ:**— [1]அணைவில். (கூ0க)

எஅ. கைக ளாற்றன் கதிரிளங் கொங்கைமே
லைய தண்பனி யள்ளின ளப்பிணங்
மொய்கொ ளுயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால்.

(இ - ள்.) (தன்வெப்பத்தைத் தணித்துக்கொள்ளும்பொருட்டு), கைகளால்-(தன்)கைகளால், தன் கதிர் இளங் கொங்கைமேல் - தனது ஒளியுள்ள இளமையான தனங்களின்மேல், ஐய தண் பனி - வியக்கத்தக்க குளிர்ந்த பனிக்கட்டியை, அள்ளினள் அப்பினள் - (அவள்) நிரம்பஎடுத்து அப்பிக்கொள்ள,—(அப்பனிக்கட்டி), மொய் கொள் தீயிடை வெந்து முருங்கிய வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்கும் - வலிமையைக்கொண்ட நெருப்பிலே வெந்து நிலைமாறிய வெவ்வியதொரு பாறையின்மேல் வைத்த வெண்ணெயை யொக்கும் [கரைந்து உருகும்]; (எ - று.)

அரக்கி தனது வெப்பத்தைத் தணிக்குமாறு மிகக்குளிர்ந்த பனிக்கட்டியைத் தன்கைகளால் அள்ளியெடுத்துத் தனங்களின்மேல் அப்பிக்கொள்ள, அது, அவளது மிக்கதாபத்தைத் தணிக்கமாட்டாமல் அவளுடம்பின் தாபத்தால் தான் தீப்பட்டுவேகிறபாறையிலிட்ட வெண்ணெய்போல நீராயுருகிற் றென்க. இனி, இப்பாட்டுக்கு - குளிர்ச்சிக்காகக் கைகளாற் பனிநீரை அள்ளிக் கொங்கைமேல் அப்பிக்கொள்ள, அது குளிர்ந்தபொருள்யாவும் காமுகர்க்குத் தாபந்தணிவிக்கமாட்டாமல் அத்தாபத்தையே மிகுவிக்கிற தன்மையின்படி மிகவருத்துதலால், நெருங்கியதீயில் வெந்தபாறையிலுள்ள வெண்ணெய்போல நெகிழ்ந்துகரைந்தன ளென்னலாம்: **ததீயின்மையணி.**

மொய்கொள் தீ - அவளது மிக்ககாமதாபத்துக்கும், தீயிடைவெந்து முருங்கிய வெய்யபாறை - காமாக்கினியில்வெந்தழிகிற அவளது வலிய கொங்கைக்கும், அப்பாறையில் இட்ட வெண்ணெய் - கொங்கையில் அள்ளியப்பிய பனிக்கட்டிக்கும் உவமையாம். வெப்பத்தாற் கரைதல்,பனிக்கட்டியின் இயல்பு. ஐய - வியப்பினை யுணர்த்தும் 'ஐ' என்னும் உரிச்சொல்லடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். (கூ0உ)

எக. அளிக்கு [1]மெய்யுயிர் கான்றழ லஞ்சினள்
குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை [2]வெங்க ணாங்கனை
யொளிக்க லாமிடம் யாதென வுன்னுமால்.

(இ - ள்.) அளிக்கும் - அன்போடு பாதுகாக்கப்படுகிற, மெய் - (தன்) உடம்பினின்று, உயிர் கான்று - பெருமூச்சு விட்டுக்கொண்டு, அழல் அஞ்சினள் - அக்காமத்தீக்கு அச்சங்கொண்டவளாய், குளிக்கும் - தான்மூழ்குகிற, நீரும் - தண்ணீரும், கொதித்து எழ - கொதிப்புக்கொண்டுபொங்க, (அது நோக்கி), கூசும்-மிக அஞ்சுவாள்; விளிக்கும்-பேரொலி செய்கிற, வேலையை-கடலுக்கும், வெம் கண் அநங்கனை - கொடியதன்மையையுடைய மன்மதனுக்கும், ஒளிக்கல் ஆம் - (தான் இலக்காகாமற்) பதுங்கிமறையத்தக்க, இடம்—, யாது - எது? என - என்று, உன்னும் - சிந்திப்பாள்; (எ - று.)

தன் உடம்பிற் சரியாய் மூச்சு வரவொட்டாமற் பெருமூச்செறியும்படி தாபிக்கிற காமதாபத்துக்கு அஞ்சி அதனைத் தணிக்கும்பொருட்டு அனலுக்கு எதிரிடையான குளிர்ந்த நீரிலே மூழ்க, உலகத்துத் தீயை அவிக்கவல்ல தான அந்நீரும் இந்தத்தீயை அவிக்கமாட்டாமல் இதன்வேப்பத்தால் தான் கொதித்து மேலெழக் கண்டு, யாதொன்றும் பரிகாரங்கிடைத்திடாமையால் மிக அஞ்சுவாள்; ஒலியால் வருத்துகிற கடலுக்கும் செயலால் வருத்துகிற மன்மதனுக்கும் வருத்துவதற்கு இலக்காகாமல் மறையும் இடமும் உண்டோ வென்று சிந்திப்பாள் என்பதாம். "ஊருளெழுந்த வுருகெழுசெந்தீக்கு, நீருட் குளித்து முயலாகு - நீருட், குளிப்பினும் காமஞ் சுடுமே" என்றது, அறியத்தக்கது. பி - ம்:—[1]என்னுயிரென்று, என்னுயிர்வென்று. [2]வெங்கணானங்கணைக்கு. (கூஎகூ)

ஆ0. வந்து கார்மழை தோன்றினு மாமணிக்
கந்து காணினுங் கைத்தலங் கூப்புமா
லிந்து காந்தத்தி னீர நெடுங்கலும்
வெந்து காந்த [1]வெதுப்புறு மேனியாள்.

(இ - ள்.) ஈரம் - குளிர்ச்சியான, நெடு - பெரிய, இந்து காந்தத்தின் கலும் - சந்திரகாந்தமாகிய கல்லும், வெந்து காந்த - வெந்துகருகும்படி, வெதுப்பு உறும் - மிகத்தபித்தலைக் கொண்ட, மேனியாள் - உடம்புடையவளான அவள்,—கார் மழை வந்து தோன்றினும் - காளமேகம் (கண்ணெதிரில்) வந்து காணப்பட்டாலும், மா மணி கந்து காணினும் - சிறந்தநீலரத்தினத்தாலாகிய தூண எதிரிற்கண்டாலும், கை தலம் கூப்பும்-(அவை இராமபிரானதுதிருமேனிக்குஞாபக மாதலால் அவற்றைநோக்கித்) தன்கைகளைக் கூப்பித் தொழுவாள்; (எ - று.)

குளிர்ந்த சந்திரகாந்தக்கல்லும் இவள்முன் நேர்ந்தால் தாபமடையும்படி உடம்பில் மிக்கவெப்பங்கொண்ட அவள், மழைபொழியுங் காளமேகம் வரும் பொழுது இராமனே தனக்கு அருள்செய்ய வந்ததாகவும் நீலமணித் தூண்க

லைக் காணும்பொழுது இவை இராமனது திருத்தோள்களே யென்றும். ஒப் புமையினாற் பாவித்துப் பேரன்போடு அவற்றைநோக்கித் தனது துயரத்தை, விரைவில்தீர்த்திடுமாறு அஞ்சலிசெய்திடுவ ளென்பதாம். "நன்றுபெய்யும் மழைகாணில் நாரணன்வந்தா னென் றுலும்", "கரும்பெரு மேகங்கள் காணில் கண்ணனென் றேறப் பறக்கும்" என்றுற்போன்றவை, இங்கு ஒப்புநோக்கத்தக்கன. கந்து - ஸ்கந்த மென்னும் வடசொல்லின் திரிபு. இந்துகாந்தம் - சந்திரனதுமுன்னிலையில் நீரையுமிழ்வதொருவகைக்கல். மணிக்கந்து-நீலமணித்திரளுமாம்; வடிவுக்கு உவமை. பி ம்:—[1]வெதும்புறு.()

அக. வாம மாமதி யும்பனி வாடையுங்
காம னுந்தனைக் கண்டுண ராவகை
நாம வாளெயிற் றோர்கத நாகம்[1]வாழ்
சேம மால்வரை யின்முழை சேருமால்.

(இ - ள்.) வாமம் மா மதியும் - அழகிய பெரிய சந்திரனும், பனி வாடை யும் - குளிர்ந்த காற்றும், காமனும் - மன்மதனும், தனை கண்டு உணரா வகை - (வருத்தும்பொருட்டுத்) தன்னைப்பார்த்தறியக் கூடாதபடி,—நாம - அச்சத்தைத்தருகிற, வாள் எயிறு - கூரிய கொடிய பற்களையுடைய, ஓர் - ஒரு, கதம் நாகம் - கோபத்தையுடைய பாம்பு, வாழ் - தங்குகிற, சேமம் மால் வரையின் முழை - மிகுதியாலவுள்ள பெரியதொரு மலையின் குகை யினுள், சேரும் - சேரத்தொடங்குவாள்; (எ - று.)

சந்திரமண்டலமும் மந்தமாருதமும் மன்மதனும் தன்னைவருத்தவொ ண்ணுதபடி அவர்கட்குப் பதுங்கி யொளிக்குமாறு, பெருங்கொடும்பாம்பு தங்குவதோர் அடக்கமான மலைக்குகையினுள் நுழையலுறுவாள் என்பதாம். இராகுகேதுவாகிய பாம்பு சந்திரனுக்குப் பகையாய் அவனை விழுங்குதல் பற்றியும், காற்றைப் பாம்பு உணவாகஉட்கொண்டிடவல்ல தாதல்பற்றியும் 'மதிக்கும் வாடைக்கும் அஞ்சி, நாகம்வாழ்முழைசேர்வாள்' என்று குறித் தன ரென்னலாம். மன்மதனு லுண்டாகுந் துன்பத்தினும் நாகப்பாம்பால் உண்டாகுந் துன்பம் மிக்கதன் றென்று கருதினமை, 'மன்மதனுக்கு அஞ்சு கிறவள் நாகம்வாழ்முழையிற் சேர்வள்' என்பதனால் தோன்றும். வாடை - வடக்கிற்செல்வ தெனத் தென்றலு மாம். பி-ம்:—[1]ஆய். (கூ0டு)

அஉ. அன்ன காலை யழன்[1]மிகு தென்றலு
[2]முன்னின் மும்மடி யாய்முலை வெந்துக
வின்ன வா[3]செய்வ தென்றறி யாதிளம்
பொன்னின் வார்தளி ரிற்புரண் டாளரோ.

(இ - ள்.) அன்ன காலை - அச்சமயத்தில், அழல் மிகு தென்றலும் - வெப்பம் மிக்க தென்றற்காற்றும், முன்னின் மும்மடி ஆய்-முன்புவருத்தின நிலைமையினும் மூன்றுமடங்கு அதிகமாக(வருத்த),—(அதனால்), முலைவெந்து உக - தனங்கள் தபித்து அனல்சொரிய,(அவள்), இன்ன ஆ செய்வது என்று

அறியாது - இன்னவகையாக (இதற்குப் பரிகாரஞ்) செய்வதென்று அறியாமல், இளம் பொன்னின் வார் தளிரில் புரண்டாள்-இளமையான பொன்னினிறமான மிக்க தளிர்களின்மேல் விழுந்து புரண்டாள்; (எ - று.)

காமுகர்க்குக்கொடிய தென்றற்காற்று முன்னிலும் பலமடங்குமிகுதியாக வருத்த, அதனைக் கொங்கைதபிக்கப்பெற்று அரக்கி இன்னபடிசெய்வதென்றறியாமல், குளிர்ந்த செந்நிறமான இளந்தளிர்களைப் பறித்துப் படுக்கையாகக் கீழேபரப்பிக்கொண்டு அதன்மேல் விழுந்து புரண்டன ளென்பதாம். அரோ-ஈற்றசை. பி-ம்:—[1]மிகுத்தேறவும். [2]முன்னமேனியளாய். [3]செய்வன். (கூ0சு)

அகூ. வீரன் மேனி வெளிப்பட [1]வெய்யவள்
கார்கொண் மேனியைக் கண்டன ளாமெனச்
சோரும் வெள்குந் துணுக்கெனு மவ்வுருப்
பேருங் [2]கால்வெம் பிணி[3]யிடைப் பேருமால்.

(இ - ள்.) வீரன் - இராமபிரானது, மேனி - திருமேனி, வெளிப்பட - (உருவெளித்தோற்றத்தால்) கட்புலனுப்த் தோன்ற,—வெய்யவள் - கொடிய அரக்கி,—கார் கொள் மேனியை கண்டனள் ஆம் என - நீலமேகத்தையொத்த இராமபிரான்திருமேனியை உண்மையாக எதிரிற்கண்டிட்டவள்போல, வெள்கும் - நாணமடைவாள்: சோரும் - (அதனால்) தளர்வாள்: துணுக்கெனும்-(கண்ணெதிர்ப்படுதற்கு அரியது எதிர்பாராமற் கண்ணெதிர்ப்பட்டதனால்) திடுக்கிடுவாள்; அ உரு - அந்த உருவெளித்தோற்றம், பேரும் கால் - நீங்கிவிட்டபொழுது, வெம் பிணியிடை பேரும் - கொடிய விரகநோயில் மீண்டும் அகப்படுவாள்; (எ - று.)

எப்பொழுதும்இடைவிடாமல் மனத்திலே நினைக்கப்படும் பொருள் அப்பாவனையின்மிகுதியாற் கண்ணுக்குஎதிரிலுள்ளவாறுபோலக் காணப்படும் இயல்பின்படி இராமன்வடிவத்தை உருவெளித்தோற்றத்திலே கண்டு சிறிதுதாபந்தணிந்து நாணிச் சோர்ந்து திடுக்கிடுமளவில், அப்பொய்த்தோற்றம் நீங்கியிட, மீண்டும் இவள் கண்ணிலான்பெற்றிழந்தானென மிக்க காமநோயால் அழிந்திடுவ ளென்பதாம். பி-ம்:—[1]வெய்தவன், வெய்தவண். [2]காமப். [3]இறைபோகலான். (கூ0எ)

அஙு. ஆகக் [1]கொங்கையி னீயனென் றஞ்சன
மேகத் தைத்தழு வும்மவை [2]வெந்தன
போகக் கண்டு புலம்புமப் புன்மையாண்
மோகத் துக்கொர் முடிவுமுண் டாங்கொலோ.

(இ - ள்.) அ புன்மையாள் - அற்பகுணமுள்ள அவ்வரக்கி,—அஞ்சன மேகத்தை - மைபோலக் கருநிறமாகவுள்ள காளமேகத்தை, ஐயன் என்று - (ஒப்புமையால்) இராமனென்றே கருதி, ஆகம் கொங்கையின் தழுவும் - (தனது) மார்பிலுள்ள தனங்களிற் பிடித்துத்தழுவுவாள்; (அப்பொழுது

இவளுடம்பின்வெப்பத்தால்), அவை வெந்தன போக - அம்மேகங்கள் வெந்தழிய, கண்டு - (அதனைப்) பார்த்து, புலம்பும் - அழுவாள்; மோகத்துக்கு - காமமயக்கத்துக்கு, ஓர் முடிவும் உண்டாம் கொல் ஓ - ஒருவரையறையு முண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

காளமேகங்களைக் கண்டு இராமபிரான்வடிவமென்றுநிச்சயித்து அவற்றைத் தன்மார்பில்தழுவுமளவில், அவை இவளதுஉடம்பின்தாபத்தால்வெந்தொழிய, இவள் இராமனுக்கே அபாயமுண்டாய்விட்ட தென்று எண்ணிப் புலம்பத்தொடங்குவளென்பதாம். மோகம் - மன்மதாவத்தையி னொன்று; அது - அழுங்கலும் மொழிபல பிதற்றலும். இறுதியடி முன்னடியிற்கூறிய வற்றைச் சமர்த்தித்தற்காகவந்த தாகுதலால், இச்செய்யுள்-**வேற்றுப்பொருள் வைப்பணி**யாம். கொங்கையின் ஆக எனமாற்றி, தனங்களிற்படும்படி யென்றும் பொருள்கொள்ளலாம். பி-ம்:— கொங்கையில். [2]வெந்துகும். ()

அடு. ஊழி வெங்கன லுற்றன ளொத்துமவ்
வேழை யாவி யிறந்தில ளென்பரா
லாழி யானை [1]யடைந்தனள் பின்னையும்
வாழ லாமெனு மாசை மருந்தினே.

(இ - ள்.) ஊழி வெம் கனல் உற்றனள் ஒத்தும் - பிரளயகாலத்துப் பரவுகிற கொடுந்தீயிலகப்பட்டவள்போல மிகத்தவித்தும்,—பின்னையும்-இன்னமும், ஆழியானை அடைந்தனள் வாழல் ஆம் எனும் ஆசை மருந்தினே - இராமபிரானைச்சேர்ந்து (தான்) வாழக்கூடு மென்கிற அவாவாகிய மருந்தினால், அ ஏழை-அந்தஅறிவிலாமகள், ஆவிஇறந்திலள்-உயிரொழிந்தாளில்லை.

சூர்ப்பணகை காலாக்கினியில் அகப்பட்டுக்கொண்டாற்போல மிக்க கொடிய காலாக்கினியில் அகப்பட்டு மரணவேதனையடைந்தும், இனியாயினும் எவ்வகைஉபாயத்தினாலாவது இராமனைத் தழுவி இன்பவாழ்க்கை பெறலா மென்னும் ஆசையே இந்நோய்க்கு ஒருபரிகாரமாய்ச் சஞ்சீவிமருந்துபோ லிருக்க, அதனால் உயிர்நீங்காது அரிதின் உயிர்தரித்திருந்தன ளென்பதாம். ஒருபொருளினிடத்து மிகஆசைகொண்டார்க்கு அதுதமக்குக் கிடைத்திடக்கூடு மென்ற எண்ணமே மேலிடுவதன்றிக் கிடைக்கமாட்டாதென்ற எண்ணம் தோன்றுவ தில்லையாதலால், இங்ஙனம் ஆசைகொண்டாள். கிடைத்தற்குஅரிய பொருளை அரியதென்று தெளியாது எளியதென்று எண்ணின அறிவின்மைபற்றி, அவளை 'ஏழை' என்றார். 'என்பர்' என்பது - அசை. ஆழியான் - கடல்போலக் கருநிறமுடையவன். ஆசை மருந்து - உருவகம். பி-ம்:—[1]அடைந்தவள். (கூ0கூ)

அசு. வஞ்ச னீக்கொடு மாயை வளர்க்குமென்
னெஞ்சு புக்கென [1]தார்வத்தை நீக்கெனு
மஞ்ச னக்கிரி யேய்ரு ளாயெனு
[2]நஞ்ச நக்கினள் போல நடுங்குவாள்.

(இ - ள்.) (இன்னும் அவள் இராமனை எதிரில் இருக்கிறதுபோலப் பாவித்து), 'வஞ்சனை கொடு மாயை வளர்க்கும் என் - வஞ்சனைக்கு இடமான கொடிய மாயையை மேன்மேற்செய்யவல்ல எனது, நெஞ்சு - மனத்தினுள், புக்கு - (நீ) பிரவேசித்து, எனது ஆர்வத்தை நீக்கு-எனதுகாதலைப் போக்குவாய்,' எனும் - என்று பிரார்த்திப்பாள்; 'அஞ்சனம் கிரியே - மைம் மலைபோன்றவனே! அருளாய்-(எளியேன்பக்கற்) கருணைசெய்வாய்,' எனும்-என்பாள்; (இங்ஙனம் காமநோயால்), நஞ்சம் நக்கினள்போல நடுங்குவாள் உவிஷத்தை நாவினால் நக்கி யுட்கொண்டவள்போல மிகவருந்துவாள்; (எ-று.)

அவள், மதிமயக்கினால், இராமனைத் தன்எதிரில்உள்ளானெகக் கருதி, அவனைநோக்கி 'கொடியவளான எனது மனத்தினுள் நீ சேர்ந்து அம்மனத்துள்ள காதலைத்தீர்த்தருளவேண்டும்' என்றுவேண்டி, அவ்வருத்தந்தீராமையால் நஞ்சுண்டவள்போலத் தவித்தன ளென்பதாம்.

யாவரையும் வருத்தும்படி வஞ்சகத்தையும் கொடிய மாயையையும் மிகுதியாகச்செய்யவல்ல எனது ஆற்றல் ஒழியுமாறு நீ உனது சாமர்த்தியத்தால் என்னை வருத்தினையென்பது தோன்ற, 'வஞ்சனைக்கொடுமாயை வளர்க்கும் என்' என்றாள்; அன்றி, இப்படிப்பட்ட அரியஆபத்து நேர்ந்திருக்கிற சமயத்தில் எனது தூர்க்குணங்களைப் பொருள்செய்யாமல் அருளவேண்டுமென்னுங் கருத்தாற் கூறினளு மாம். இராமனது கரியதிருமேனி இவளை மிகவருத்துதலால், அதனைக் காதலித்தற்கே 'நஞ்சநக்கினள்போல' என்று உவமைகூறியதாகவுங் கொள்ளலாம். பி - ம்:—[1]ஆவத்தை. [2]நஞ்சு. (கூகo)

அள. காவி யோகய லோவெனுங் கண்ணிணைத்
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்
[1]பாவி யேனையும் பார்க்குங்கொ லோவெனு
மாவி யோயினு [2]மாசையி னெய்வினாள்.

(இ - ள்.) ஆவி ஒயினும் ஆசையின் ஒய்வு இலாள் - உயிரொழிவதானலும் ஆசையினொழிவைப்பெறாத அவ்வரக்கி,—'காவியோ - நீலோற்பலமலரோ? கயலோ - கயல்மீனோ? எனும் - என்றுசந்தேகிக்கத்தக்க, கண் இணை - இரண்டு கண்களையு முடைய, தேவியோ - மனையாளோ, திருமங்கையின் செவ்வியாள்-இலக்குமியினும் அழகுடையாள்; (இப்படியிருக்க), பாவியேனையும் - தீவினையுடையவளான என்னையும், பார்க்கும் கொல் ஓ - (அவன் ஒரு பொருளாகமதித்துக்) கண்ணெடுத்துப் பார்த்திடுவனோ?' எனும் - என்று சிந்திப்பாள்; (எ - று.)

எப்படிப்பட்டவரையுந் தன்கண்ணழகால் வசப்படுத்தவல்லளாய் அருகிலுள்ளவள் திருமகளினும் அழகுடைய ளாதலால், அவன் அப்போழகிபக்கலிலே மிக்கஅன்புசெய்தலன்றிக் கொடியளானஎன்னையும் பொருள்செய்து நோக்குதலாவது செய்வனோ? என்று அருமைகருதிக்கவன்றன ளென்பதாம்.

ஈற்றடி - அவளது ஆசைமிகுதியைக் காட்டும். முதலடி - **ஐயவணி:** வடநூலார், ஸந்தேஹாலங்காரம் என்பர். கருமையிற் காவியும், பிறழ்ச்சியிற் கயலும், கண்ணுக்கு ஒப்பாம். **பி - மீ:**—[1]பாவியோங்களே. [2]ஆசையை.

அஅ. * மாண்ட கற்புடை யாண்மலர் [1]மாமக
ளீண்டி ருக்கு[2]நல் லாண்மக ளென்னுமால்
வேண்ட கிற்பி[3]ன னல்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றேதெறுங் காமமே.

(இ - ள்.) 'ஈண்டு - இவ்விடத்தில் [இவனருகில்]; இருக்கும் - இருக்கின்ற, நல்லாள் மகள் - அழகியவளான பெண், மாண்ட கற்பு உடையாள் - சிறந்த பதிவிரதாதருமத்தை யுடையவளான, மலர் மா மகள்-செந்தாமரை மலரில் வாழுந் திருமகளேயாவள்,' என்னும் - என்றுஎண்ணுவாள்; 'வேண்டகிற்பின் - (ஒருத்தரை) விரும்பிஆசைப்பட்டால் [அம்மாத்திரத்தில்]; தெறும் காமம் - (அகப்பட்டாரை) அழிப்பதாகிய ஆசைநோய், அனல் வர மெய்யிடை தீண்டகிற்பது அன்றே - நெருப்புப்போன்ற வெம்மையுண்டாக உடம்பிற்சேர்வதன்றே; (என்று எண்ணுவாள்); (எ - று.)—முன்வாக்கியத்திலுள்ள 'என்னும்' என்பதை, பின்வாக்கியத்திலும் எடுத்துக்கூட்டுக.

திருமால்போன்ற அவனது அருகிலுள்ளவள் திருமகளேயென்று எண்ணுவாளென்பது முன்னிரண்டடிகளிற்கூறியபொருள்:இதுகூறியது, அவன் தன்னைவிரும்பான்போலுமென்று குறிப்பிக்க. பின்னிரண்டடிகள் காமத்தினியல்புகூறியது. இதனால், சூர்ப்பணகை தன்காமதாபத்தைவிவரித்தாளாம்: இது - **பொதுப்போருளால்** சிறப்புப்பொருளேவிளக்கும் **பிறிதுமொழிதல்.** வடநூலார் அப்ரஸ்துதப்ரஶம்ஸாலங்காரமென்பர்.

இனி, 'மாண்டகற்புடையாள்' என்பதைச் சூர்ப்பணகையாக்கி, அழிந்த கற்புடையா ளென்றுரைத்து, 'என்னும்' என்ற முற்றுக்கு எழுவாயாக் கொள்ளினும் அமையும்; உசு - ஆம் பாட்டில் ''தேயுங்கற்பினுள்'' என்றமை காண்க. மா - இலக்குமி; வடசொல். இராமன் அடிக்கடி அருகில் எதிரில் தோன்றுதலால், 'ஈண்டு' என அண்மைப்பொருள்குறிக்கும் இகரச் சுட்டாற் குறித்தாள். தான்கொண்ட ஒருதலைக்காமமே இங்ஙனம் வருந்துதற்குக் காரணமா மென்பதைக் கருதின ளென்பது, பின்னிரண்டடியின் கருத்து.

[3]அல்லால் என்ற பாடத்துக்கு - விருப்பங்கொண்டாலன்றிக் கொடிய காமம் உடம்பில் தோன்றி வருத்துவதன்றே? என்று எண்ணினு ளென்க. அப்பொழுது, நான் அவனிடத்து விருப்பங்கொண்டதனால், என்னை இந்நோய் வருத்துகிறது; என்னிடத்து அவன் விருப்பங்கொள்ளாமையால், அவனை இந்நோய் வருத்துகிறதில்லை யென்ற உண்மையை நினைத்தன ளென்பது கருத்து. அன்றி, வேண்டுமென்றாலும் வேண்டாமென்றாலுங்

* இப்பாட்டு - அச்சிட்ட பிரதியொன்றிற் காணப்படவில்லை.

கொடியகாமம் உடம்பில்தோன்றி வருத்துமன்றே? என்று பொருள்கொண்டு, சூர்ப்பணகை பலவாறு வருந்தினளென்ற சிறப்புப்பொருளே விளக்குதற்குக் கவி கூறிய பொதுப்பொருளாக்கி, வேற்றுப்பொருள்வைப்பணியின்பாற் படுத்தலும் அமையும்; அன்றே - தேற்றம். பி - ம்:—1மார்பகம். 2நல்லான்.

அகூ.—மறுநாட் சூரியோதய வருணனை.

ஆன்ற காத லஃதுற வெய்துழி
மூன்று லோகமு மூடு மரக்கரா
மேன்ற காரிரு ணீக்க விராகவன்
றோன்றி னனென வெய்யவன் றோன்றினன்.

(இ - ள்.) (சூர்ப்பணகை),ஆன்ற காதல்-நிறைந்த காமநோயை, அஃது-அவ்வாறு, உற - மிகுதியாக, எய்துழி - அடைந்த சமயத்தில்,—மூன்றுலோகமும் மூடும் அரக்கர் ஆம் என்ற கார் இருள் நீக்க இராகவன் தோன்றினன் என - மூன்று உலகங்களிலும் நிறைந்துள்ள இராக்கதர்களாகிய பொருந்திய கரிய இருட்டை ஒழிப்பதற்கு இராமபிரான் உதித்தமைபோல, வெய்யவன் தோன்றினன் - சூரியன் உதித்தான்; (எ - று.)

அப்படி அவ்வரக்கி வரம்புகடந்த வேட்கைநோயை அடைந்துவருந்துமளவில், சூரியன்உதித்தன னென்பதாம். எங்கும்நிறைந்த கரியபயங்கரமான இருளை யொழிக்கத் தோன்றிய சூரியனுக்கு, எங்கும்நிறைந்த கரிய பயங்கரரான அரக்கரை யழிக்க அவதரித்த இராமபிரானே உவமைகூறினர்; **எதிர்நிலையணி.** (ஙகங)

வேறு.

கூ0.—இதுமுதல் மூன்று கவிகள்-ஒருதோடர். சூர்ப்பணகை சீதையை எடுத்துக்கொண்டுபோகத்தொடங்க,இலட்சுமணன்கண்டமையைக்கூறும்.

விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்டவெய்யாள்
படியி லாண்மருங் குள்ளள வெனையவன் பாரான்
கடிதி னேடினெ னெடுத்தொல்லைக் கரந்தவள் காதல்
வடிவி னனுடன் வாழ்வதே 1வாழ்வென மதியா.

(இ - ள்.) விடியல் காண்டலின் - பொழுது விடிந்ததைக் கண்டதனால், ஈண்டு தன் உயிர் கண்ட - (உடம்பைவிட்டுநீங்காமற்) கூடிய தனதுஉயிரைப் பார்த்த [உயிர்பிழைக்கப்பெற்ற],வெய்யாள்-கொடியவளான அரக்கி,—1படி இலாள் - ஒப்பில்லாதவளான தேவி, மருங்கு உள் அளவு-(தன்)பக்கத்தில் உள்ளவளவும், எனை - என்னை, அவன்—, பாரான் - கண்ணெடுத்துப் பார்க்கவும் மாட்டான்; (ஆதலால், நான்), கடிதின் ஓடினென் - விரைவாக ஓடிச்சென்று, எடுத்து - (அவளை) எடுத்துக்கொண்டுபோய், ஒல்லை - விரைவிலே, கரந்து - (எங்கேனும்) மறைத்துவைத்திவிட்டு, (பின்பு), அவன

காதல் வடிவினனுடன்-அவளது ஆசைவடிவமான அவனுடனே, வாழ்வதே-கூடிவாழ்வதே, வாழ்வு - சிறந்தவாழ்க்கையாம்,' என - என்று, மதியா - எண்ணி,—(எ-று.)—'வந்துநோக்கினள்' என அடுத்தகவியோடு தொடரும்.

இராப்பொழுதுகழிந்து சூரியோதயமானவளவிலே, சிறிதுதாபங்குறைந்து உயிர்தேறிய அக்கொடியவள், 'ஒப்பற்ற மனையாள் தன்அருகிலுள்ள மட்டும் என்னை அவன் சிறிதும் விரும்பா னுதலால், அவளை நான் விரைந்தோடி யெடுத்துப்போய் எவ்விடத்திலாயினும் மறைவாகவைத்துவிட்டால், பின் அவன் என்னுடன்கூடி இன்பமளிப்பன்: ஆதலால், அதுவே துரிதத்தில் நான்செய்யவேண்டிய தொழில்' என்று எண்ணின னென்பதாம்.

பகலில் இந்திரியங்கள் பலவேறுவகைப்பட்ட பொருள்களை நாடுதல் கூடு மாதலால், ஒருவாறு காதல்நோய் குறையப் பெறலாம்; இரவில் அங்ஙனமன்றி எல்லாப்பொருளுமடங்க இந்திரியங்களோடு மனம் பிரிந்தபொருளொன்றையே நாடுதலாலும், கலவிக்கு உரிய கால மாதலாலும், அதில் ஆசைநோயை ஆற்றுதல் அரிது: ஆதலால், இரவிற்பட்டதுன்பம் பகல்தொடங்கியவளவில் சிறிதுகுறைவுபட்ட தன்மை முதலடியில் விளங்கும். அவள் காதல் வடிவினன் - அவளிடத்து மிக்ககாதல்கொண்டு அதன் வசப்பட்டு அதன்மயமாய் நிற்பவன்; இனி, அவளாற் காதலிக்கப்பட்ட வடிவழகுடையானென்றுமாம். பி - ம்:—[1]மதியென.

இதுமுதற் பதினெருகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய நெடிலடி ஈரான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (ஈகசை)

கூக. வந்து நோக்கினள் வள்ளல்போ யொருமணித் [1]தடத்திற்
சந்தி [2]நோக்கின னிருந்தது கண்டன டம்பி
யிந்து நோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்த நோக்கிய சோலையி லிருந்தது காணுள்.

(இ - ள்.) வந்து நோக்கினள் - (அவர்களுள்ள பர்ணசாலையினிடம்) வந்துபார்த்து,—(அப்பொழுது), வள்ளல் - இராமன், போய்—, ஒரு மணி தடத்தில் - அழகிய தொரு கோதாவரியாற்றங்கரையிலே (சேர்ந்துவனுய்), சந்தி நோக்கினன் இருந்தது - சந்தியாவந்தனகாரியத்திற் கருத்துச்செலுத்திக்கொண்டிருந்ததை, கண்டனள் - பார்த்து,—தம்பி - (அவனது) தம்பியான லக்ஷ்மணன், இந்து நோக்கிய நுதலியை காத்து - சந்திரனை யொத்த நெற்றியையுடைய பிராட்டியைப் பாதுகாத்துக்கொண்டு, அயல் இருண்ட கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது - பக்கத்திலுள்ளதும் அடர்ச்சியால் இருட்சிபெற்றதும் பரிமளம் மேல்நோக்கிவீசப்பெற்றது மான சோலையில் இருந்ததை, காணுள்-பார்த்திடாதவளாய்,—(எ - று.)—'தோகையைத்தொடர்ந்தாள்' என அடுத்த கவியோடு முடியும்.

கீழ்க்கூறியபடி தீயசிந்தனைகொண்ட சூர்ப்பணகை இராமன் முதலிய மூவரும் இருந்த பர்ணசாலைக்கு வந்துபார்க்குமளவில், இராமன் விடியற்காலத்துச்சென்று கோதாவரிநதியின் ஒருதுறையில் நீராடி அங்குச் சந்தியாவந்தநம் சூரியநமஸ்காரம் முதலிய காலைக்கடமைகளைக் கழித்துக்கொண்டிருக்கக்கண்டு, சீதைக்குப்பாதுகாவலாய் இலக்குமணன் அவ்வாச்சிரமத்தினருகிலுள்ள இருண்ட சோலையி லிருத்தலை அச்சோலையின் இருட்சியாற் பாராது இங்கு யாவரு மில்லை யென்று எண்ணினாள் என்பதாம்.

ககச - ஆம் பாட்டில் "நின்றநந்தநீயகத்து நிறைதவத்தின் குறை முடித்து" என வருவதனால், இங்கே 'தடம்' என்பதற்கு - கோதாவரிநதியினிட மென்னவேண்டும். சந்தி - ஸந்த்யா; இது, அக்காலத்துக்கு உரிய கடமைகளைக் குறித்தது. இந்து, கந்தம் - வடசொற்கள். பி - ம்:—[1]தடத்தான். [2]நோக்கியே. (ஈகடு)

கூ௨. தனியி ருந்தனள் சமைந்ததென் [1]கருத்தெனத் தாழ்வுற்
றினியி ருந்தெனக் கெண்ணுவ தில்லென வெண்ணித்
துனியி ருந்தவன் மனத்தின டோகையைத் தொடர்ந்தாள்
கனியி ரும்பொழில் காத்தய லிருந்தவன் கண்டான்.

(ஐ - ள்.) 'தனி இருந்தனள்-(நான் வந்த இப்பொழுது) தனியளாயே இருந்திட்டாள்; (ஆதலால்), என் கருத்து சமைந்தது - எனது எண்ணம் பலித்தது,' என - எனவும்,—'இனி - இனிமேல், தாழ்வு உற்று இருந்து - காலதாமதமடைந்திருந்து, எண்ணுவது-ஆலோசிக்கவேண்டுவது, எனக்கு—, இல் - (யாதொன்றும்) இல்லை', என - எனவும், எண்ணு - எண்ணி, துனி இருந்த வல் மனத்தினள் - கறுத்தங்கிய கொடிய மனத்தையுடையவளாகிய அச்சூர்ப்பணகை, தோகையை தொடர்ந்தாள் - மயில்போலுஞ் சாயலுள்ள சீதையைப் பிடித்தற்குப் பின்தொடர்ந்தாள்; (அதனை), கனி இரும் பொழில் காத்து அயல் இருந்தவன் - பழங்களையுடைய பெரிய அச்சோலையிற் காவல் செய்துகொண்டு அருகிலிருந்த இலக்குமணன், கண்டான் - பார்த்திட்டான்.

நான் இவளையெடுத்துக்கொண்டு போகவேண்டு மென்று எண்ணங் கொண்டு வந்தபொழுது, இவள் கொழுநனைப்பிரிந்து வேறுஎவருந்துணையில்லாமல் தனியேயுள்ளா ளாதலால், எனதுஎண்ணம் ஈடேறிவிட்டது; இனி ஒன்றும் ஆலோசிக்கவேண்டுவதில்லை; தாமதஞ் சிறிதுஞ்செய்யலாகாது என்று எண்ணி உடனே அரக்கி பிராட்டியைத்தொடருமளவில், அவளுக்குப் பாதுகாவலாய் அருகிற்சோலையிலிருந்த இலக்குமணன் பார்த்திட்டா னென்பதாம். சமைந்தது - காலவழுவமைதி. பி - ம்:—[1]சிந்தனை. (ஈகசு)

கூ௩.—இதுவும் அடித்த கவியும்-தூகம்: இலக்குமணன் சூர்ப்பணகையை அங்கபங்கஞ்செய்தலைக் கூறும்.

நில்ல டீஇயெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்
வில்லெ டாதவள் [1]விரிகெரி யாமென விரிந்த

சில்ல லோதியைச் [2]செங்கையிற் றிருகுறப் பற்றி
[3]யொல்வ யிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி.

(இ - ள்.) (அத்தீச்செய்கையைக் கண்ட இலக்குமணன்),—(கோபங் கொண்டு), நில் அடீஇ என - 'அடீஇ! நில்' என்று அதட்டிச் சொல்லிக் கொண்டு, கடுகினன் - விரைவாக வந்து, பெண் என நினைந்தான் - 'பெண் கொலை பெரும்பாவம்' என்று எண்ணின ஞதலால், வில் எடாது - (அம் பெய்து அவளைக்கொல்லும்பொருட்டு) வில்லைக் கையிலெடுக்காமல், அவள் - அவளுடைய, வீங்கு எரி ஆம் என விரிந்த சில் அல் ஓதியை - நன்குபற்றி யெரிகிற நெருப்புப்போலப் பரந்துள்ள சிலஅல்லாத [மிகப்பலவாகிய] தலை மயிரை, செம் கையின்-(தனது) சிவந்த (இடக்) கையால், திருகு உற பற்றி முறுக்குண்டாகப் பிடித்துக்கொண்டு, ஒல் வயிறு உதைத்து - விரைவாக-வயிற்றிற் காலால் உதைத்து, ஒளி கிளர் சுற்று வாள் உருவி - ஒளிவிளங்கு கிற உடைவாளை (வலக்கையில்) உருவியெடுத்து,—(எ - று.)—'நூக்கி' என அடுத்த கவியோடு தொடரும்.

அரக்கி பிராட்டியைத் தொடர்தலைக் கண்டவுளவிற் கோபங்கொண்டு, இலக்குமணன் 'யாரடீ! தொடராதே, விலகிநில்' என்று சினமொழிகளைக் கூறிக்கொண்டே விரைவாக அருகில்வந்து, ஸ்த்ரீஹத்தி மகாபாதகமாத லால் அவளைவில்லம்புதொடுத்துக்கொல்லநினையாமல் அங்கபங்கஞ்செய்து உயிருடனே விட்டிடக்கருதி, அவளதுசிவந்ததலைமயிர்க்கற்றையை ஒருகை யால் முறுக்கிப்பிடித்துக்கொண்டு அவள்வலிமைகெடுமாறு அவள்வயிற்றில் ஒருதையுதைத்து மற்றொருகையால் உடைவாளையெடுத்துக்கொண்டனன். சுற்றுஎன்பது - அரையைச்சுற்றியுள்ளதான இடைக்கச்சைக் குறிக்க, சுற்று வாள் என்பது-அதிற்கட்டப்படும் உடைவாளுக்குக் காரணப்பெயராம்.பி-ம்:— [1]வயங்கு. [2]சிக்குறச்செங்கையாற். [3]ஒல்லையீர்த்துவைத்து. (கூகள)

கூச. [1]ஊக்கித் தாங்கிவிண் [2]படர்வெனென் றுருத்தெழு வாளை
நூக்கி நொய்தினின் வெய்திழை யேலென நுவலா
மூக்குங் காதும்[3]வெம் முரண்முலைக் கண்களு முறையாற்
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

(இ - ள்.) (அப்பொழுது), 'ஊக்கி-வலிமைகொண்டு, தாங்கி விண் படர் வென் - (இவளை) எடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கத்திற் சென்றிடுவேன்,' என்று - என்று எண்ணி, உருத்து எழுவாளை - கோபங்கொண்டு அங்ஙனஞ் செய்யத் தொடங்கும் அவளை, நொய்தினின் நூக்கி - எளிதில் [அலட்சிய மாக] விரைவிற் கீழேதள்ளி, வெய்து இழையேல் என நுவலா - ('இப்படிப் பட்ட) கொடுந்தொழிலை இனிச்செய்யாதே' என்று புத்திசொல்லிக்கொ ண்டே,—மூக்கும்-(அவளது)மூக்கையும், காதும்-காதுகளையும், வெம் முரண் முலை கண்களும்-கொடிய வலிய முலைக்காம்புகளையும், முறையால் போக்கி -

ஒன்றன்பின்ஒன்றுக அறுத்து, (அதன்பின்பு), போக்கிய சினத்தொடும் - தூணிந்த கோபத்துடனே [கோபந்தணித்து], புரி குழல் விட்டான் - (தன் கையிற்) சுற்றிப்பிடித்த அவள்தலேமயிரை விட்டிட்டான்; (எ - று.)

இங்ஙனம் இலக்குமணன் அவள்தலேமயிரைக் கையாற்பற்றிக்கொண்டு வாளே யெடுத்தபொழுது, அவள் இவனைத் தன்வலிமையால் தான்எடுத்துக் கொண்டு வானிற்சென்றிடுவதாகத் துணிந்து உக்கிரங்கொண்டு வலிமை யோடு அவ்வனஞ்செய்யத்தொடங்குமளவில், இலக்குமணன் அவளைத் தன் வலிமையால் எளிதிற் கீழேதள்ளி 'இனி இப்படிச்செய்யாதே செய்யாதே' என்று சொல்லிக்கொண்டு மூக்குமுதலிய சிலஉறுப்புக்களே யறுத்துப்பின்பு கோபமாறி அவள்மயிரைக் கைவிட்டன னென்பதாம். பி - ம்:—[1]ஊக்கத் தோக்கி, ஊக்கித்தாக்கி. [2]படர்வெம். [3]மென்முகிழ். (௩௪அ)

கூரு.—அவளது கதறலும், இரத்தப்பெருக்கும்.

அக்க ணத்தவள் வாய்திறந் தரற்றிய [1]வமலே
திக்க னேத்தினுஞ் [2]சென்றது தேவர்தஞ் செவியும்
புக்க துற்றது புகல்வதென் மூக்கெனும் புழையூ
டுக்க சோரியி னீரமுற் [3]றுருகிய துலகம்.

(இ - ள்.) அ கணத்து - அந்த க்ஷணத்திலே, அவள்—, வாய் திறந்து அரற்றிய - வாயைப் பெரிதாகத்திறந்துகொண்டு கதறின, அமலே - ஓசை, திக்கு அனேத்தினும் சென்றது - எல்லாத்திக்குக்களிலும் போய்ப் பரவிற்று; தேவர்தம் செவியும் புக்கது - (மேலுலகத்துள்ள) தேவர்களது காதுகளிலும் போய்நுழைந்தது; உற்றது புகல்வது என் - (மற்றும்) நடந்ததைப்பற்றிச் சொல்லவேண்டுவது யாது உளது? மூக்கு எனும் புழையூடு - (அவளது) மூக் கென்கிற துவாரத்தினின்று, உக்க - வழிந்த, சோரியின் நீரம் - இரத்தநீர், உற்று-மிக்குப்பாய்தலால், உலகம் உருகியது-நிலவுலகம் கரைந்தது;(எ - று.)

அப்பொழுது அவள்மிகவருந்திப் பேரிரைச்சலிட்ட ஓசை எட்டுத்திக்கு க்களிலும் போய் மேலுலகத்தாரது காதிலும்பட்ட தென்றால், இவ்வுலகில் அம்முழக்கம் மிக்கதென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுவதில்லேயன்றே? இதுநிற்க: அவளது அறுபட்ட மூக்கின் துவாரவழியாய்ப் பெருகின இரத்த வெள்ளம் பாய்தலால் மண்முழுவதுங் கரைந்திட்ட தென்பதாம்; **உயர்வு நவிற்சியணியும், செய்யுட்போருட்பேறணியும் சேர்ந்த சேர்வையணி.** பி - ம்:—[1]ஓசை. [2]நின்றது. [3]உருகிய (௩௪க)

கூசு.—சூர்ப்பணகையை அங்கபங்கப்படுத்தியதன் வருணனை.

கொலேது மித்துயர் கொடுங்கதிர் வாளினைக் கொடியாண்
முலேது மித்துயர் மூக்கினே நீக்கிய [1]முறைமை
மலேது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலேது மித்தற்கு நாட்கொண்ட [2]தொத்தேதோர் தன்மை.

(இ - ள்.) கொலை துமித்து - (சூர்ப்பணகையைக்) கொல்லுதலை யொழித்து [கொல்லாமல்], உயர் கொடுங் கதிர் வாளின் - சிறந்த கொடிய ஒளியுள்ள உடைவாளினால், அ கொடியாள் மூலை துமித்து-அந்தக்கொடியவளது கொங்கைகளை அறுத்து, உயர் மூக்கினை நீக்கிய - உயர்ந்த மூக்கையும் அறுத்திட்ட; முறைமை - செய்கை,—மலை துமித்து என - மலையைக் கொடுமுடி துணித்தாற்போல, இராவணன் மணி உடை மகுடம் தலை துமித்தற்கு - இராவணனது இரத்தினங்களையுடைய கிரீடத்தை யணிந்த தலைகளைத் துணிப்பதற்கு, நாள் கொண்டது ஓர் தன்மை ஒத்தது - நல்லநாள்கொண்டு தொடங்கிவைத்த தொரு தன்மையைப் போன்றது; (எ - று.)

இளையபெருமாள் சூர்ப்பணகையை அன்று உறுப்பறுத்திட்டசெயல், பின்பு இராமபிரான் அவள்தமையனதுதலைகளைத் துணித்தற்பொருட்டு நாட்கொண்டிட்ட தன்மை போன்ற தென்பதாம். **தற்குறிப்பேற்றவணி.** நாட்கொள்ளுதலாவது - ஒருகாரியத்தைச்செய்தற்கு எற்ற நாளையும் லக்கினத்தையும் அமைத்துக்கொண்டவர் யாதாயினும்ஒருகாரணத்தால் அன்றே அக்காரியத்தைச்செய்ய இயலாதாயின் அதற்கு அங்கமானதொரு காரியத்தை அம்முகூர்த்தவருமல் அதிலே தாமாவது தமதுபரிவாரத்தைக்கொண்டாவது தொடங்கிவைத்தல். முன்பு நாட்கொண்டு அங்கமானகாரியத்தைச் செய்தது, பின்பு பிரதானகாரியத்தைமுடிப்பதற்குக் காரணமாகுங் கொள்கையின்படி, சூர்ப்பணகையைக்கொல்லாம லுறுப்பறுத்துவிட்டது அவள் போய் இராவணனைக் கொண்டுவந்து மடித்தற்குக் காரணமாதல் காண்க. கொலைதுமித்து உயர் என எடுத்து-வாளுக்கு அடைமொழியாக்கி கொல்லுதலுண்டாம்படி (பகையை) வெட்டி மேம்பட்ட என்று வாளின்இயற்கையை விளக்கியதாகப் பொருள்கொள்ளுதலும் ஒன்று. கதிர் - கூர்மையுமாம். இங்கே, மூலையையும் மூக்கையுங் கூறியது - காதுக்கும் உபலக்ஷணம்; இது மேலுங் கொள்க. **பி-ம்:**—[1]மூத்தம், முகத்து. [2]ஒத்ததத். (கூ.உ.)

கூஎ.—இலக்குமணனால் தள்ளாப்பட்ட சூர்ப்பணகை எழுதல்.

அதிர மாநிலத் தடிபதைத் தரற்றிய வரக்கி
கதிர்கொள் காலவேற் கரன்முத னிருதர்[1]வெங் கதப்போ
ரெதிரி லாதவ ரிறுதியி னிமித்தமா வெழுந்தாண்
டுதிர மாரிபெய் கார்நிற மேகமொத் துயர்ந்தாள்.

(இ - ள்.) அதிர - அதிர்ச்சியுண்டாக, மா நிலத்து - பெரியதரையிலே கிடந்து, அடி பதைத்து - (மிக்கநோவினால்) கால்களை உதறிக்கொண்டு, அரற்றிய - கதறிய, அரக்கி—,—கதிர் கொள் - பிரகாசத்தைக்கொண்ட [அல்லது கூர்நுனிகொண்ட], காலன் வேல் - யமன்போலக்கொடிய வேலாயுதத்தையுடைய, கரன் முதல் - கரன்முதலான, வெம் கதம் போர் எதிர் இலாதவர் - கொடிய உக்கிரத்தோடு போர்செய்தலில் மாறில்லாதவராகிய, நிருதர் - இராக்கதரது, இறுதியின் நிமித்தம் ஆ - நாசத்தின்பொருட்டாக,

எழுந்து—, ஆண்டு - அவ்விடத்து, உதிரம் மாரி பெய் கார் நிறம் மேகம் ஒத்து - இரத்தமழையைச்சொரிகிற கறுத்தநிறமுள்ள மேகத்தைப் போன்று, உயர்ந்தாள் - உயர்ந்துதோன்றினாள்; (எ - று.)

இலக்குமணனால் தள்ளப்பட்டுக் கீழ்விழுந்து உறுப்பறுப்புண்டு அந் நோவு பொறுக்கமாட்டாமற் கால்களை உதறிக்கொண்டு நிலம்அதிரும்படி பேரிரைச்சலிட்ட அவள் பின்பு எழுந்து இரத்தஞ்சொரிய உயர்ந்த தோற் றம், அரக்கர்முழைவைத் தெரிவிக்குந் துர்நிமித்தமாகத் தோன்றி அவ்விடத்தில் இரத்தமழையைச் சொரிகிற கருமேகம் போன்றிருந்த தென்பதாம்; **தற்குறிப் பேற்றவணி.** மேகம் இரத்தமழைபொழிதல், ஓர் உற்பாதம். **பி ம்:**—[1]தங். ()

கூ௮.—இரண்டுகவிகள்-சூர்ப்பணகை பலவாறு துயருறுதலைத்தெரிவிக்கும்.

உயரும் விண்ணிடை மண்ணிடை விழுங்கிடந் துழைக்கு
மயருங் கைகுலைத் தலமரு மாருயிர் சோரும்
பெயரும் பெண்[1]பிறந் தேன்பட்ட [2]பிழையெனப் பிதற்றுந்
துயரு மஞ்சிமுன் றொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள்.

(இ - ள்.) துயரும் - துன்பமென்கின்ற குணந்தானும், அஞ்சி-பயந்து, முன் தொடர்ந்திலா - இதற்குமுன் சேரமாட்டாத, தொல் குடி - பழமை யான (அரக்கர்) குலத்தில், பிறந்தாள்-பிறந்தவளான அவள்,—விண்ணிடை உயரும் - வானத்தில் எழுவாள்; மண்ணிடை விழும்-(அதற்குஎற்ற வலிமை யில்லாமையால் உடனே) தரையில் விழுவாள்; கிடந்து உழைக்கும்-(அங்கே விழுந்து) கிடந்து மிகவருந்துவாள்; அயரும்-தளர்வாள்; கை குலைத்து அல மரும் - கைகளைப்பிசைந்துகொண்டு மனஞ்சுழல்வாள்; ஆர் உயிர் சோரும் - அரிய உயிர் சோர்வாள் [மூர்ச்சிப்பாள்]; பெயரும் - (அம்மூர்ச்சைதெளிந்து) எழுவாள்; பெண் பிறந்தேன் பட்ட பிழை என பிதற்றும்-பெண்ணைப்பிறந்த யான் அடைந்த பரிபவம் (என்னே!) என்று பலமுறை கூறுவாள்; (எ - று.)

இதுவரையிலும் ஒருநாளும் துன்பமென்பது தொடரப்பெறாத தொ ன்றுதொட்டுவருஞ் சிறந்த அரக்கர்குலத்திற் பிறந்த அவள், வானத்தை நோக்கி எழும்பத்தொடங்குவாள்: அங்ஙனம் எழுதற்கு ஆற்றலில்லாமற் கீழே விழுவாள்: அங்கே விழுந்துகிடந்து இட்டகாலிட்டகையாய் வருந்து வாள்; நிலைதளர்வாள்; இன்னதுசெய்வதென்றறியாது கைகளைப்பிசைந்து கொண்டு மூர்ச்சிப்பாள்; தானே அரிதில்தெளிந்தெழுவாள்: யான் பெண் பிறந்து என்னபாடுபட்டே னென்று வாய்பிதற்றுவா ளென்பதாம். அரக்கர் குலத்தவர் இதுவரை துன்பமடையாமைக்குக் காரணங் கற்பித்துக்கூறியது- **ஏதுத்தற்குறிப்பேற்றவணி.** துயர்அஞ்சுதல் - அஞ்சாதது அஞ்சுவதுபோலக் கற்பனைவகையாற் கூறப்பட்டது; மரபுவழுவமைதி. **பி - ம்:**—[1]பிறந்தி யான். [2]பழி. (கூ௨௨)

கூக. ஒற்று மூக்கினை யுலையுறு நீயென வுயிர்க்கு
மெற்றுங் கையினை நிலத்தினி லிணைத்தடங் கொங்கை

பற்றும் பார்க்குமெய் [1]வெயர்க்குந்தன் [2]பருவரன் மயக்காற்
சுற்று மோடும்போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும்.

(இ - ள்.) மூக்கினை - மூக்கை, ஒற்றும் - (கைகளால் அல்லது ஆடையினால்) ஒற்றிக்கொள்வாள்; உலை உறு தீ என - உலைக்களத்திற் பொருந்திய நெருப்புப்போல, உயிர்க்கும் - (வெவ்விதாகப்) பெருமூச்சுவிடுவாள்; நிலத்தினில் கையினை எற்றும் - தரையிற் கைகளை மோதுவாள்; இணை தட கொங்கை பற்றும் பார்க்கும் - பெரியஇரண்டுதனங்களையும் (கைகளாற்) பிடித்துப்பார்ப்பாள்; மெய் வெயர்க்கும் - உடம்பு வேர்ப்பாள்; தன் - தனது, பருவரல் மயக்கால் - துன்பத்தினாலான மதிமயக்கத்தினால், சுற்றும் ஓடும் - சுற்றிலும் ஓடுவாள்; போய் - (அங்ஙனஞ்) சென்று, சோரி நீர் சொரிதர - இரத்தம் பெருக, சோரும் - தளர்வாள்; (எ - று.)

பூமிக்கு 'அசலா' என்றும், 'ஸ்திரா' என்றும் வடமொழியில் வழங்குகிற பெயர்களின் பொருளோடு 'நிலம்' என்ற இதனை ஒப்பிடுக. பி - ம்:— [1]நோக்கும். [2]பருவலிக்காலாற். (கூஉக)

கஂ0.—அவள் தன்குலத்தாரைக் குறிப்பிட்டுப் புலம்பத்தொடங்குதல்.

ஊற்று மிக்கநீ ரருவியி னெழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துட் டிரிபவ டேலரு மிரியக்
கூற்று முட்குநந்தன் [1]குலத்தினோர் பெயரெலாங் கூறி
[2]யாற்று கிற்கிலள் பற்பல பன்னி நின் [3]றழைத்தாள்.

(இ - ள்.) ஊற்று மிக்க - (மேன்மேற்சுரக்கின்ற) ஊற்றினின்றுமிக்குப் பெருகிய, நீர் அருவியின் - நீர்ப்பெருக்குப்போல, ஒழுகிய - (தன்உடம்பினின்று மிக்கு) வழிந்த, குருதி - இரத்தத்தாலாகிய, சேறு வெள்ளத்துள் - மிக்க சேற்றினிடையிலே, திரிபவள் - அலைபவளாகிய அவள்;—ஆற்றுகிற்கிலள் - (துன்பம்)பொறுக்கமாட்டாதவளாய்,—தேவரும் இரிய - தேவர்களும் (தன்முழக்கங்கேட்டு) அஞ்சியோடும்படி, கூற்றும் உட்கும் தன் குலத்தினோர் பெயர் எலாம் கூறி - யமனும் அஞ்சும்படியான தனது குலத்தாரது பேரையெல்லாஞ் சொல்லி, பல பல பன்னி நின்று - மற்றும் பலபல பேச்சுக்களையும் எடுத்துச்சொல்லிக்கொண்டு, அழைத்தாள் - கூப்பிடுபவளானாள்; (எ - று.)—அதனை, அடுத்த பதின்மூன்றுகவிகளிற் காண்க.

ஊறுவது, ஊற்று. தேவரும் என்ற உம்மை - அவர்களது மேலுலகத்திலுள்ள தன்மையையும், கூற்றும் என்ற உம்மை - அவனது யாவரையும் அஞ்சுவிக்குந் தன்மையையும் புலப்படுத்தி உயர்வுசிறப்பாம். பி-பீ:—[1]சுற்றத்தார். [2]ஆற்றுகிற்றிலள். [3]அழுதாள். (கூஉச)

வேறு.

கஂக.—இனிப் பதின்மூன்றுகவிகள் - சூர்ப்பணகை புலம்பல்.

நிலை[1]யெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
ஒலியெடுத்துத் திரியு'மிது சிறிதன்றே தேவரெதிர்

தலையெடுத்து விழியாமைச் [3]சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ.

பதினென்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) *தழல் எடுத்தான்*-அனலைக் கையிலேந்தியுள்ள சிவபிரானது, *மலை* - கைலாசகிரியை, *எடுத்த* - (கைகளாற் பெயர்த்து மேல்) எடுத்த, *தனி மலையே*-ஒப்பற்ற மலைபோல்பவனே!—*நீ*—, *நெடு நிலத்து*-பெரிய இப் பூலோகத்தில், *நிலை எடுத்து இருக்க* - வாழ்க்கைநிலைகொண்டிருக்கையில், *தாபதர்கள்* - முனிவேடங்கொண்டவர், *சிலை எடுத்து திரியும்* - இது - (அச்ச மின்றிக் கையில்) வில்லேயேந்திக்கொண்டு சஞ்சரிப்பது, *சிறிது அன்றே* - (உன்பெருமைக்குக்) குறைவானதன்றே? *தேவர் எதிர் தலை எடுத்து விழி யாமை சமைப்பதே* - தேவர்கள் உன்எதிரில் தலையெடுத்துப்பார்க்கவொண் ணாதபடி செய்திடுதல்மாத்திரமேயோ (உன்செயல்)?இவை காண வாராயோ- (யான்பட்ட) இப்பாடுகளைப் பார்க்க வரமாட்டாயோ? (எ - று.)

தாருகவனத்துமுனிவர்களா லேவப்பட்டுத் தன்னைக் கொல்லுதற்கு வந்த பெருநெருப்பைத் தனது ஆற்றலால் வலியடக்கித் தனது கையொன் றில் ஏந்திய திவ்வியசக்தியுடைய ருத்திரமூர்த்தியின் வாசஸ்தானமான கயி லைமலையையும் நிலைபெயர்த்தெடுத்த பேராற்றலுடையவனே! நீ யாவரையும் வென்று எங்குந் தடையற ஆஜ்ஞைசெலுத்தி இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், உன்னைப்பொருள்செய்யாமல் உனக்கு எதிராகச் சில தவவேடத்தோர் படைக்கலமெடுத்துத் திரிவது, உனது மகாபராக்கிரமத்துக் கும் பெரும்புகழ்க்குங் குறைவன்றே? தேவர்களையெல்லாம் தலையெடுக்க வொட்டாமல் வென்று அடக்கிவிட்டமைமாத்திரமே அமைவதோ? இப்படிப் பட்ட சிறுபகைகளையுங் கவனிக்கவேண்டாவோ? என்ற வென்க.

மரவுரியும் சடைமுடியுமாகிய வேடமாத்திரத்தைக்கொண்டு, 'தாபதர் கள்' என்றுள். தாபதர்=தாபஸர்: இச்சொல், எளியவரென்ற பொருளி லும் பயில்வ துண்டு. 'தேவரெதிர் தலையெடுத்து விழியாமை சமைப்பதே' என்பதற்கு - தேவர்கள்முன்னிலையில் நான் தலையெடுத்து விழிக்கக்கூடாத படி என்ன இவர்கள் பங்கப்படுத்துவது தகுதியோ? என்றும் பொருள் கொள்ளலாம். *'விழியாமை சமைப்பதே'* என்ற இயல்பான பாடத்துக்கு - எதிர்மறைத்தொழிற்பெயர் இரண்டாம்வேற்றுமைத்தொகையில் விகாரத்தி யல்பாய் நின்றதென்க. மலையையெடுத்த பெருமலையே யென விளிப்பாள், *'தனிமலையே'* என்றுள். மலை - இராவணனுக்கு உவமையாகுபெயர்.

இதுமுதல் முப்பத்திரண்டு கவிகள்-பெரும்பாலும் நாற்சீருங் காய்ச்சீ ராய் வந்த அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். இவற்றை நாற்சீர் நான்கடித் தரவுகொச்சக மென்றலும் ஒன்று. பி - மீ:—[1]எடுத்தார். [2]அது. [3]சமைப்பதோ. (கூஉடு)

கஉஉ. புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படா[1]தென்ன
வொலியாழி யுலகுரைக்கு முரைபொய்யோ வுழியினுஞ்

சலியாத மூவர்க்குந் [2]தானவர்க்கும் வானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ.

(இ - ள்.) ஊழியினும் சலியாத - கற்பாந்தகாலத்திலும் நிலைகுலையாத, மூவர்க்கும் - திரிமூர்த்திகளுக்கும், தானவர்க்கும் - அசுரர்களுக்கும், வான வர்க்கும்-தேவர்களுக்கும், வலியானே-(மேம்பட்ட) வலிமையுடையவனே!— 'புலி தானே புறத்து ஆக - தாய்ப்புலி பின்னேயிருக்க, குட்டி கோள் படாது - அதன் குட்டி (எவராலும்) பிடித்து வருத்தமடைவிக்கப்படாது,' என்ன-என்று, ஒலி ஆழி உலகு உரைக்கும் - ஒலியையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலுள்ளார் கூறுகிற, உரை - வார்த்தை, பொய்யோ - பொய் யாமோ? யான் பட்ட வலி காண வாராயோ - நான் அடைந்த கொடுமை வைப் பார்க்க வரமாட்டாயோ? (எ - று.)

'புலிதானே புறத்தாகக் குட்டி கோட்படாது' என்ற வாக்கியம் - உப மானத்தால் உபமேயத்தை விளக்கும் **பிறிதுமொழிதல்** என்னும் அலங்கார மாம், வலிய பெரியோர் புறத்தேயிருக்க அவரைச்சார்ந்தோர் எவராலுந் துன்புறுத்தப்படார் என்ற உபமேயவாக்கியத்தை விளக்கும். பெரியதமைய ஞை நீ எனக்குப் புறங்காவலாகஇருக்கையில் உன்னுடைய செல்வத்தங்கை யான என்னை இவர் வருத்தியதனல். அவ்வுரைபொய்யாபிற்றே? என்றுள். இச்செய்யுளின் முதலடியில் "புலிபுறங்காக்குங் குருளைபோல" என்ற புறநானூறும், "குட்டிபைத்தின்னலாமோ கோட்புலி புறத்ததாக" என்ற சீவகசிந்தாமணியும் ஒப்புநோக்குதற்கு உரியன. **பி - ம்:**—[1]என்னும். [2]வான வர்க்குந்தானவர்க்கும். (ருஉசு)

கஅசு. ஆர்த்தானைக் கரசுந்தி யமரர்கணத் தொடுமட்டார்ந்த
போர்த்தானை யிந்திரனைப் பொருதவனைப் போர்தொலைத்து
வேர்த்தானை யுயிர்கொண்டு மீண்டானை வெரிந்பண்டு
பார்த்தானை யான்பட்ட பழி[1]வந்து பாராயோ.

(இ - ள்.) ஆர்த்து-ஆரவாரஞ்செய்துகொண்டு, ஆனைக்கு அரசு உந்தி - யானைகட்கரசனை ஐராவதத்தை எறிதடத்தி, அமரர் கணத்தொடும் - தேவர்கள்கூட்டத்துடனே, அடர்ந்த - வந்துநெருங்கிய, போர் தானை இந்தி ரனை - போர்செய்யவல்ல சேனைகளோடு கூடிய தேவேந்திரனை, பொருது - எதிர்த்துப்போர்செய்து, அவனை—, போர் தொலைத்து-யுத்தத்தில் வலிமை யழியச்செய்து, வேர்த்தானை உயிர் கொண்டு மீண்டானை - (அப்பொழுது அச்சத்தால்) உடம்புவியர்த்து உயிரைஅழியாமற்கொண்டு (போரினின்று) மீண்ட அவ்விந்திரனை, பண்டு - முன்பு, வெரிந் பார்த்தானை - முதுகுகண்ட வனே! யான் பட்ட பழி வந்து பாராயோ - நான் அடைந்த நிந்தனையை வந்துபார்க்கமாட்டாயோ? (எ - று.)

இச்செய்யுளிற்குறித்த வரலாறு:—இராவணன் திக்குவிசயஞ்செய்து எல்லாவுலகத்தவரையும் கீழ்ப்படுத்தத்தொடங்கி ஆங்காங்குச் சேனையோடு

சென்று பொருது சயித்துக்கொண்டே போகும்பொழுது சுவர்க்கலோகத்தை யடைந்து இந்திரனை யெதிர்க்க, அவன் தேவசேனையுடனே வந்து தனது வலிய பெரிய ஐராவதயானையின்மீது ஏறிக்கொண்டு இராவணனும்வியக்கும் படி உக்கிரமாக யுத்தஞ்செய்யுமளவில், இராவணன்மகனான மேகநாதன் மாயையில்மறைந்து ஆயுதமழை சொரிந்து இந்திரனைக் கலங்கச்செய்து அவன் அஞ்சி ஓடலுறுமளவில் அங்ஙனஞ்செல்லவொண்ணுதபடி மாயைப் பாசத்தால் அவனைப் பிணித்து வெற்றிகொண்டு மீண்டு இராவணனோடும் சேனையோடும் இலங்கைக்கு வந்து அவனைச் சிறையில் வைத்திருக்க, அச் செய்தியை உணர்ந்த பிரமதேவன் வானவர்சூழ அங்கு வந்து இராவணனைக் கண்டு 'இந்திரனைச்சயித்ததனால், உன்மகனுக்கு இந்திரஜித் என்று இனிப் பெயர்வழங்குக' என்று உபசாரவார்த்தைகூறி அம்மகனுக்கு வரமுமளித்து இந்திரனைச் சிறைமீட்டுக்கொண்டு சென்றன னென்பது.

இனி, 'இராவணனும் இராக்கதசேனையும் இந்திராதிதேவர்களால் மிக வருத்தமடைந்தகாலையில், மேகநாதன் மாயையாற் பொருது இந்திரனைச் சிறைபிடித்துக் கொண்டுவந்து இராவணனுக்குக் காட்ட, அவன் மிகமகிழ்ந்து 'இந்திரனைப்பிடித்தவாறே நீ தேர்மீது ஏறி இச்சேனையெல்லாம் புடைசூழ முந்தி இலங்கைக்குச் செல்; யான் உன்பின்னே வருகிறேன்' என்று சொல்லி அங்ஙனமே மகனைச் சிறப்பாக முன்செலுத்தித் தான் அவன்பின் னே சென்றனன்' என்று வால்மீகிராமாயணத்தின் உத்தரகாண்டத்திலுள் ளதனால், இப்பாட்டுக்கு - இந்திரனை எதிர்த்துத்தாக்கி அவனைப்போரழித்து, வேர் தானை உயிர்கொண்டு-(தனது)சிறந்தசேனையை உயிரிறவாதபடிசெய்து உடன்கொண்டு, மீண்டானை - (வெற்றியோடு போரினின்று) மீண்ட மேக நாதனே, பண்டு - முன்பு, வெரிந் பார்த்தானை - முதுகை நோக்கிக்கொண்டு (மகிழ்ச்சியோடு) பின்சென்ற இராவணனே! என்றும் உரைக்கலாம். இங் ஙனங்கொள்ளுதல், முன்பின்பாடல்களில் இராவணனைவிளித்துள்ளதனோ டும் பொருந்தும். வேர்த்தானை - அடிப்படை, மூலபலம். பீ - பீ:—[1]ஆர்த்த. [2]காணவாராயோ. (கூஉள)

கூஏ.காற்றினையும் புனலினையுங் கனலினையுங் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையுங் கோளினையும் பணிகொண்டற்
காற்றினைநீ யீண்டிருவர் [1]மானுடவர்க் காற்றாது [டாய்.
மாற்றினையோ வுன்வலத்தைச் சிவன்றடக்கை வாள்கொண்

(இ - ள்.) சிவன் தடகை வாள் கொண்டாய் - சிவபிரானது பெரிய கையாற் கொடுக்கப்பட்ட வாளாயுதத்தைப் பெற்றவனே! நீ—, காற்றினை யும் - காற்றின்தெய்வமாகிய வாயுவையும், புனலினையும் - நீரின்தெய்வமா கிய வருணனையும், கனலினையும் நெருப்பின்தெய்வமாகிய அக்கினியையும், கடுங்காலம் கூற்றினையும்-கொடியகாலத்தை வரையறைசெய்கிற யமனையும், விண்ணினையும் - சுவர்க்கத்தையும், கோளினையும் - நவக்கிரகங்களையும், பணிகொண்டற்கு - குற்றேவல்கொள்ளுதற்கு, ஆற்றினை - வல்லமையுடை

யனுனய்; (அப்படிப்பட்ட நீ), ஈண்டு இருவர் மானுடவர்க்கு ஆற்றுது - இங்குள்ள மனிதரிரண்டுபேர்க்கு எதிர்செய்யும் வலியில்லாமல், உன் வலத்தை மாற்றினையோ - உனது வலிமையை மாறச்செய்துவிட்டாயோ? (எ - று.)

இந்திரனுள்ளிட்ட திக்குப்பாலகரையும் சூரியன் முதலியகிரகங்களையும் வென்று கீழ்ப்படுத்தி அடிமையாக்கிக் குற்றேவல்செய்வித்துக்கொள்ள வல்லவனை நீ, எனக்கு இப்படி இடையூறுசெய்த இந்தமனிதரிருவர்க்கும் ஏற்ற தண்டனை செய்தற்கு வாராமல் நிற்கின்றனையே; உனது வலிமைக்கு ஏதேனுங் குறைவுஉண்டாயிற்றோ? என்று கதறினனென்க. **பி - ம்:**— [1]மானிடனுர்க்கு.

சிவன்தடக்கைவாள்கொண்ட வரலாறு:—இராவணன் கைலாசத்தைப் பெயர்த்தெடுக்கலுற்றபொழுது, அதன்மேலுள்ள சிவபிரான் தன்திருவடியின் பெருவிரலினுல் அம்மலையை அழுத்தியூன்ற, அதனுல் இராக்கதராசன் கைகள்நசுக்குண்டு பெயர்க்கமாட்டாமற் பேரிரைச்சலிட்டு மந்திரிகள் சொன்ன படி சாமவேதகானத்தால் அக்கடவுளை வெகுகாலந் தோத்திரஞ்செய்ய, பரமசிவன் மனமிரங்கி விரலைத்தளர்த்தி அவன்தோள்களை விடுவித்து ராவணனென்னும் பெயரையும் அவனதுவேண்டுகோளின்படி நீண்டஆயுளையும் சந்திரஹாஸமென்பதொரு சிறந்தவாளாயுதத்தையும் தந்தருளினர்; அவற்றை அவன் பெற்று மீண்டனனென்பது. (ஈஉஅ)

கoடு. உருப்[1]பொடியா மன்மதனை யொத்துளரே [2]யாயினுமுன்
செருப்படியிற் பொடியொவ்வா மானிடரைச் சீறுதியோ
[3]நெருப்படியிற் [4]பொடிசிதற [5]நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்[6]பிடியத் தோணிமிர்த்த [7]வலியோனே.

(இ - ள்.) அடியின் பொடி நெருப்பு சிதற - (கால்களை வலியப் பதியவைத்துநடக்கும்பொழுது) அக்கால்களினுலெழுப்பப்படுகிற தூகள் (உக்கிரத்தால்) நெருப்புப்பொறி சிந்தும்படி, (ஆங்காங்குச்சென்று), நிறைந்த மதம் திசை யானை மருப்பு ஒடிய - நிறைந்தமதத்தையுடைய திக்கஜங்களின் தந்தங்கள் ஒடியவும், பொருப்பு இடிய மலைகள் இடிந்திடவும், தோள்நிமிர்த்த - இருபதுதோள்களைச் செலுத்திய, வலியோனே - வலிமையையுடையவனே! உரு பொடியா மன்மதனை ஒத்து உளரே ஆயினும் - உருவம் நீருக்கப்பெறுத [உருவத்தோடுள்ள]மன்மதனைப்போன்றுள்ளவர்களேயானலும், உன் செருப்புஅடியில் பொடி ஒவ்வா - (பலபராக்கிரமங்களில்)உனது செருப்பினடியிலுள்ள தூகளுக்கும் ஒப்பாகமாட்டாத,மானிடரை-இம்மனிதரை, சீறுதியோ-நீ கோபிப்பாயோ? [மாட்டா யென்றபடி]; (எ - று.)

அதிர்ச்சியுண்டாம்படி உக்கிரகமாக விரைந்து சென்று திக்கஜங்களைத் தந்தபங்கஞ்செய்து வென்று அடங்காமிடுக்காற்குலமலைகளையும் முறித்துத் தள்ளின புயபலத்தையுடையவனை நீ, அழகில் மிகச்சிறந்தராயினும் ஆற்றலில் நீ காலிற்பூண்ட செருப்புக்களிலொட்டிக்கொண்டுள்ள தூகளுக்

கும் நிகராகமாட்டாத இவரைச் சீறியெதிர்த்தல் உன்பெருமைக்குக்குறை வென்றுகருதி இவர்கள்மீது சீற்றங்கொள்ளாதிருக்கிறும்போலும் என்பது கருத்து. செரு படியில் பொடி ஒவ்வா எனப்பிரித்து, போர்க்களத்தில் (உனக்குமுன்) அணுவுக்கும் நிகராகமாட்டாத என்று உரைத்தலும் உண்டு. பி-மீ:—[1]படிவம். [2]ஆனலும். [3]நெருப்பொடியப். [4]பொறி. [5]நிறைமதத்த. [6]ஒடிய. [7]வாளானே.

இச்செய்யுளைப்பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்குவதொரு விவரம் வருமாறு:—கம்பர் இராமாயணம் அரங்கேற்றுகையில், இப்பாடலை வாசிக்க, கேட்டு, அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களில் ஒருவர், கம்பநாடரை நோக்கி, 'என்காணும் ஸ்ரீஸர்வேசுரனுகிய ஸ்ரீசக்கரவர்த்தித்திருமகனுர்விஷயத்திலும் ஸ்ரீசுமித்திரைசிங்கத்தின்விஷயத்திலும் "செருப்படியிற் பொடி யொவ்வா மானிடர்" என்றுகூறி அபசாரப்படுகிறீர்?' என்று விஞவ, கம்பநாடரின் பக்கத்திலிருந்த அம்பிகாபதி அவருக்குத் தண்டன்சமர்ப்பித்து,'கும்பகர்ணன் இறந்த செய்தியை யறிந்த இராவணன் தன்னேக்கண்டோர் யாவரும் புலம்பியழத் தானும் அழுதா னென்று சொல்லுதல் அவனுடைய வீரத்துக்குக் குறைவா மென்று எண்ணித் தான் தேடிக்கொண்ட தீமையால் தன்னேயும் மற்றவர்களேயும் அழுவித்தான் என்னும் பொருள்பட "பண்டைத்தன் ஞமத்தின் காரணத்தைப் பாரித்தான்"என்று சொன்னவர் ஸ்ரீபகவான்விஷயத்திலும் அவரடியார்விஷயத்திலும் அபசாரப்படுவாரோ?' என்ன, ஸ்ரீமந்நாதமுனிகள், புன்னகைகொண்டு, அந்த ஸ்ரீவைஷ்ணவரை நோக்கி, 'கவிகூறுங்கூற்றன்றி அரக்கிகூற்றுகச்சொல்லிய "உன்செருப்படியிற் பொடியொவ்வாமானிடர்" என்றதற்கு - இராமலக்ஷ்மணர்கள் அவளிஷ்டப்படி நடவாமையாலும், மூக்குமுதலிய அவயவத்தைச் சேதித்தமையாலும், அவள்இப்படியே தூஷிப்பாளாகையால், இது ஒருகருத்தும்,செரு படி எனப்பிரித்து, உனது யுத்தபூமியில் ஒருதுகளுக்கும் ஒப்பாகாதமானுடரென வேறொருகருத்தும் படும்படி நிலேடையாகச்சொன்னது வித்துவசாமர்த்தியமே யல்லது அபசாரமன்று' என்று அருளிச்செய்தனர்; அதுகேட்டு யாவரும் ஆனந்தித்தார்கள். (கூஉக)

கஅசு. தேனுடைய நறுந்தெரியற் றேவரையுந் தெறுமாற்ற
ரூனுடைய விராவணற்குந் தம்பியர்க்குந் தவிர்ந்ததோசா
வூனுடைய வுடம்பினரா யெங்குலத்தோர்க் குணவாய
மானுடவர் மருங்கேகப் கொடுங்கினதோ வலியம்மா.

(இ - ள்.) தேன் உடைய - தேனேயுடைய, நறு - பரிமளமுள்ள, தெரியல் - (கற்பகப்பூ) மாலேயைத் தரித்த, தேவரையும் - தேவர்களேயும், தெறும் - அழிக்கிற, ஆற்றல் - வல்லமையை, உடைய—, இராவணற்கும்-இராவணனுக்கும், தம்பியர்க்கும் - (அவனது) தம்பிமார்க்கும், தவிர்ந்ததோ - (அப்படிப்பட்ட வலிமை இப்பொழுது) நீங்கிவிட்டதோ? ஊன் உடைய உடம்பினர் ஆய்-(வலிமையில்லாமல்) தசைமாத்திரத்தையுடையஉடம்பையுடை

யவர்களாய், எம்குலத்தோர்க்கு உணவு ஆய - எமதுகுலத்தார்க்கு [அரக்கர் க்கு] இரையாகவுள்ள, மானுடவர்மருங்கே - மனிதர்களிடத்தே, வலி - அவ் வலிமை, புக்கு ஒடுங்கினதோ-போய்ச்சேர்ந்திட்டதோ? அம்மா - ஆச்சரியம்!

உண்ணும்உயிராகிய அரக்கர்க்கு வலிமை தவிர்ந்ததென்றும், உண்ணப் படும்உயிராகிய மனிதர்க்கு வலிமைஅமைந்த தென்றும் வியந்தவாறு. (சுசுஐ)

கூஎ. மரனேயு நெடுங்[1]கானின் மறைந்துறையுந் தாபதர்க
ளுரனேயோ வடலரக்க [2]ரோய்வேயோ வுற்றெதிர்ந்தா
ரரனேயோ வயனேயோ வரியேயோ வெனுமாற்றற்
கரனேயோ யான்பட்ட கையறவு காணீயோ.

(இ - ள்.) உற்று எதிர்ந்தார் - நேர்ந்து எதிரிட்டவர், அரனேயோ அய னேயோ அரியேயோ எனும் - திரிமூர்த்திகளுள் ஒருவனே வென்று கருத த்தக்க, ஆற்றல் - வலிமையையுடைய, கரனேயோ-ஓ கரனே! மரன் எயும் - மரங்கள் நிறைந்த, நெடுங் கானில் - நீண்ட காட்டில், மறைந்து உறையும் - (ஒருபுறத்தில்) ஏகாந்தமாய் வசிக்கின்ற, தாபதர்கள் - தவவேடத்தோரது, உரனேயோ - வலிமையினாலேயோ, அடல் அரக்கர் ஓய்வேயோ - (இயற்கை யில்) வலிமையுள்ள அரக்கரது வலியழிவினாலேயோ, யான் பட்ட - நான் அடைந்த, கையறவு-துன்பத்தை, காணீயோ-(நீ வந்து)பார்க்கமாட்டாயோ?

சூலமும் சொல்லும் திகிரியும் என்பவற்றை முறையே தமக்கு உரிய படைக்கலமாகக் கொண்டு அவற்றாற் கொடியோரை யழித்துத் தம்தொழி லைத் தடையறநடத்துகிற அரனும் அயனும் அரியும் போல எதிர்ப்பவரைத் தடையின்றி அழிக்கிற திறமையையுடைய கரனே! மரங்களடர்ந்த பெரிய காட்டில் அப்பிரசித்தராய் ஓரிடத்திலிருக்கிற தவவேடத்தோர்க்கு வலிமை மிக்கதனாலோ, நாடுநகரங்களில் பிரசித்தராய் வசிக்கிற அரக்கர்க்கு வலிமை குறைந்ததனாலோ, அரக்கியான நான் மனிதனால் இப்பாடுபட்டேன்; அதனை வந்து கண்டு அதற்கேற்ற பரிகாரஞ் செய்யமாட்டாயோ?என்பதாம். பி-பீ:— [1]கானம். [2]கோவேயோ. (சுசுக)

கூஅ. இந்திரனு [1]மரனயனு மிமையவரும் பணிகேட்பச்
சுந்தரிபல் லாண்டிசைப்ப வுலகேழுந் தொழுதேத்தச்
சந்திரன்[2]போ னனிக்குடைக்கீழ் நீயிருக்குஞ் சவைநடுவே
வந்தடியே னுனது முகங்காட்ட வல்லேனே.

(இ - ள்.) இந்திரனும்—, அரன் அயனும் - சிவபிரானும் பிரமதேவ னும், இமையவரும் - மற்றைத்தேவர்களும், பணி கேட்ப - (நீ இடுங்) கட்ட ளைகளைக் கேட்டு அவற்றின்படியே குற்றேவல்செய்தொழுகவும், சுந்தரி - அழகியதேவமகளிர், பல்லாண்டு இசைப்ப - வாழ்த்துப்பாட்டுப் பாடவும், உலகு ஏழும் - ஏழுலோகங்களி லுள்ளாரும், தொழுது ஏத்த - வணங்கித் துதிக்கவும், சந்திரன் போல் தனி குடை கீழ் - பூர்ணசந்திரன்போலுள்ள ஒற்றைவெண்கொற்றக்குடையின்கீழ், நீ இருக்கும் - நீ வீற்றிருக்கிற, சவை

நடுவே - சபையின் மத்தியில், அடியேன்—, நாணுது - வெட்கமில்லாமல், வந்து—, முகம் காட்ட வல்லேனே - முகங்காட்டுந் தகுதியுடையேனே?

பல்வகைச்சிறப்புடனே நீ கொலுவீற்றிருக்கிற சபையில் இப்படி அங்க பங்கப்பட்ட நான் நாணமில்லாமல் எப்படிவந்து முகங்காட்டுவே னென்ப தாம். இங்கே, திருமாலைக் கூறுதது, தேவாதிதேவனுன அவ்வெம்பெருமான் இராவணனுக்குக் கீழ்ப்படிந்து நடவா னென்ற கருத்தினு லென்பர். சுந்தரி என்றது-சாதியொருமையாய், பலமகளிரைக் குறித்தது. தேவர்களை அடுத்து வந்ததனுல், 'சுந்தரி' என்ற சொல்லுக்கு-தேவமாதரென்று பொருள் கொள் ளப்பட்டது. பல்லாண்டு - அநேகவருஷகாலம் வாழவேண்டு மென்று வாழ்த் திப்பாடும் பாட்டுக்கு இலக்கணை. பி - மீ:—[1]மாலயனும், [2]பொற்குடை நிழற்றவிசைந்திருந்த. (நாநஉ)

கoகூ. உரனெரிந்து விழுவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்[1]கிடந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றே விவைபடவுங் கடவேனே
வரனிருந்த மலையெடுத்த [2]வண்ணுவோ வண்ணுவோ.

(இ - ள்.) அரன் இருந்த-சிவபிரான் வீற்றிருந்த, மலை-கைலாசகிரியை, எடுத்த - பெயர்த்துஎடுத்த, அண்ணுவோ அண்ணுவோ—! உரன் நெரிந்து விழ - வலிமை சிதைந்து கீழ்விழும்படி, என்னை உதைத்து உருட்டி-என்னை உதைத்துத்தள்ளி, மூக்கு அரிந்த - (எனது) மூக்கை யறுத்த, நரன்-ஒருமனி தன், இருந்து - அழியாமலிருந்து, தோள் பார்க்க - (தனதுவெற்றிதோன் றச் செருக்கோடு உற்சாகத்தால் தன்) தோளை(த் தான்) பார்த்துக்கொண் டிருக்க, நான்—, கிடந்து புலம்புவதோ - விழுந்துகிடந்து அழுவது தகுதி யோ? கரன் இருந்த வனம் அன்றே - கரன் (ஆட்சிசெய்து) தங்குகிற காடன்றே (இது)? இவை படவும் கடவேனே - (இவ்விடத்திலே) இத்துன் பங்களை (நான்) அடையவுந் தகுவேனு? (எ - று.)

இங்கே, 'உரனெரிந்துவிழ வென்னை யுதைத்துருட்டி'என்றதனுல், கீழ் கூ, கூச - ஆம் பாடல்களில் 'ஒல்வயிற்றுதைத்து, நூக்கி' என இயைத்தலே பொருத்தமாத லறிக. 'நரனிருந்து தோள்பார்க்க' என்றது - இங்ஙனஞ் செய்தவனை ஏற்ற தண்டனையாகத் தோளையறுத்து விழுத்தி அழித்திட வேண்டாவோ? என்பதாம். ஓகாரம் - எதிர்மறை. வேற்றிடத்திலேயாகா மல் இவ்விடத்திலேயே இப்பெரும்பரிபவமடைதல் மிக்கஇழிவாமென்பது, மூன்றுமடியின் கருத்து. பி - மீ:—[1]இருந்து. [2]ஐயாவோவையாவோ. (நாநங)

கக0. நசையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே [1]நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொசித்த
விசையாலே [2]நிறைந்தபுயத் திராவணவோ விராவணவோ.

(இ - ள்.) திசை யானை - திக்கஜங்கள், விசை கலங்க - கோபாவேசம் அடங்க, செரு செய்து - போர்செய்து, மருப்பு ஒசித்த - தந்தங்களை யொடி

த்த, இசையாலே நிறைந்த புயத்து - கீர்த்தியால் நிரம்பின தோள்களை யுடைய, இராவணவோ இராவணவோ—!—நசையாலே-ஆசையினால், மூக்கு இழந்து—, நாணம் இலா - வெட்கமில்லாமல் [நாணங்கெடும்படி], நான் பட்ட - நான் அடைந்த, வசையாலே - அவமானத்தாலாகிய பழியினாலே, நினது புகழ் - உனது கீர்த்தி, மாசு உண்டது ஆகாதோ - களங்கமடைந்ததாகமாட்டாதோ? (எ - று.)

உனதுதங்கையான நான் பட்ட பரிபவம் உன்புகழுக்குக்குறைவே யாதலால், இதற்குஎற்ற பரிகாரஞ்செய்வது உனது கடமையன்றோ? என்பதாம். இங்கே, 'நசையாலே' என்றதற்குக் கருத்து - மேற் படலத்தின் எ - ஆம் பாட்டுக்கும், மாரீசன்வதைப்படலத்தில் "இன்னவள்தன்னை யுன்பா லுய்ப்ப லென் றெடுக்கலுற்ற, என்னை" என்பதற்கும் ஏற்ப, இராவணன் பொருட்டாகச் சீதையை யெடுத்துக்கொண்டு போகவேண்டு மென்ற ஆசையினா லென்று கொள்ளவேண்டும்; இது, அவள் பொய்யாகக் கற்பித்துக் கூறுதல்: அன்றி, உள்ளபடி இராமனைச் சேரவேண்டுமென்ற ஆசையால் என்று கூறுதல் சிறப்பன்று; உண்மைகூறித் தன்குற்றத்தைத் தன்னினத்தார்க்கு உணர்த்தாளாதலால். பி-மீ:—[1]நின்புகழும். [2]எழுதுபெயர். (ஈஉச)

ககக. [1]கானமதி னிடையிருவர் [2]காதொடுமூக் குடனரிய
[3]மான்மதாற் பாவியே னிவண்மடியக் கடவேனே
தானவரைக் [5]கருவறுத்துச் [6]சதமகனைத் [7]தலையிலிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ.

(இ - ள்.) தானவரை - அசுரர்களை, கரு அறுத்து - குலத்தோடு அழித்து, சதமகனை - இந்திரனை, தலையில் இட்டு-விலங்கிட்டுச் சிறைப்படுத்தி, வானவரை பணிகொண்ட - தேவர்களைக் குற்றேவல்செய்யும் அடிமையாகக்கொண்ட, மருகாவோ மருகாவோ - மருமகனே மருமகனே!—கானமதினிடை - காட்டில், இருவர் - இரண்டுமனிதர், காதொடு மூக்கு உடன் அரிய - காதையும் மூக்கையும் ஒருங்கே அறுக்க, மானமதால் - (அதனாலாகிய) அவமானத்தால், பாவியேன் - தீவினையுடைய யான், இவண் மடிய கடவேனே - இவ்விடத்தில் அழிய்த்தகுவேனே? (எ - று.)

இது, இந்திரசித்தைநோக்கிக் கூறியது; அடுத்த பாட்டும் இப்படியே. இராவணன் திக்குவிசயஞ் செய்கையில் தேவர்கள் மனிதர்கள்மாத்திரமே யன்றி அசுரர்களும் பலர் அழிக்கப்பட்டன ரென்பதை உத்தரராமாயணங் கொண்டு உணரலாம். 'மானமதால்மடிய' என்பதற்கு - நான் மானமுள்ளவனாதலால் அம்மானக்கேடுநேர்ந்தபின் வெளிப்புறப்படாமல் இடத்திலிடத்தே அழிய என்பது கருத்து. சதமகன்-நூறு(அசுவமேத)யாகஞ்செய்தவன். மருமகன் - இங்கே, உடன்பிறந்தான்மகன். இலக்குமணன்செய்கை இராமனுக்கு உடன்பாடாதலால் அவனையுஞ் சேர்த்து, வேறுதுணையில ரென்றற்காக, 'இருவர்' என்றாள். பி - மீ:—[1]கானதனில். [2]காதோடுமூக்கரிய. [3]மானமிழந்தியானேதானிவைபடவும். [4]வல்லேனே. [5]துரிசறுத்து. [6]புரந்த

ரனேத். [7]தளையிட்டு சிலபிரதிகளில்"கல்லீரும்"(ககஉ), "கானமதின்"(ककக), "ஒருகாலத்து". (ककஉ) என்ற முறையிற் பாடல்கள்உள்ளன. (ஙஙடு)

ककஉ. ஒருகாலத் துலகேழு [1]முருத்தெரியத் தனுவொன்றும்
றிருகாத சினந்திருகித் திசை[2]யனைத்துஞ் செலநூறி
யிருகாலிற் புரந்தரனே யிருஞ்[3]சிறையி [4]னிடுவித்த
மருகாவோ மானிடவர் வலிகாண வாராயோ.

(இ - ள்.) ஒரு காலத்து - முன் ஒருகாலத்திலே, உலகு ஏழும் - ஏழு லோகங்களும், உருத்து எரிய - மிக்கு எரியும்படி, தனு ஒன்றும் - ஒருவில் லைக்கொண்டு, திருகாத சினம் திருகி - தணியாத கோபத்தால் மாறுபாடு கொண்டு, திசை அனைத்தும் செல நூறி - எல்லாத்திக்குக்களையும் முற்ற அழித்து, புரந்தரனே-இந்திரனே, இரு காலில் இருஞ் சிறையின் இடுவித்த - இரண்டுகாலிலும் (விலங்கிடுவித்துப்) பெரியசிறையில்வைத்த, மருகாவோ - ஓ மருகனே! மானிடவர் வலி காண வாராயோ - இம்மனிதரது வலிமை யைப் பார்ப்பதற்கு வரமாட்டாயோ? (எ - று.)

ஏகாலத்தில் சகலலோகங்களும் பற்றியெரியும்படி அழியாப்பெருங் கோபத்தீக்கொண்டு வில்வலிமையால்எல்லாத்திக்கிலுள்ளாரையும் அழித்து இந்திரனைச் சிறைகொண்ட உனக்கு மனிதரதுவலிமை ஒருபொருளன்று யினும் அதனை இத்தன்மைத்தென்று பரிசோதித்தற்காயினும் வரமாட்டா யோஎன்பதாம். பி-ம்:—[1]உருத்திரிய, உருத்தெரிக்க, உருத்தெதிர. [2]திசையே. [3]தளையில். [4]இட்டலைத்த. (ஙஙசு)

ककङ. கல்லீரும் படைத்தடக்கை யடற்கரதூ டணர்முதலா
வல்லீருஞ் சுடர்மணிப்பூ ணரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்லீரும் படைக்கும்ப கருணைப்போற் [1]குவலயத்து
ளெல்லீரு முறங்குதிரோ யா[2]னழைத்தல் கேளீரோ.

(இ - ள்.) கல் ஈரும் - (வலிய) கல்லையும் பிளக்கவல்ல, படை - ஆயுதங் களே யேந்திய, தட கை - பெரிய கைகளையுடைய, அடல் கர தூடணர் முதல் ஆ - வலிமையுள்ள கரனும் தூடணனும் முதலாக, அல் ஈரும் சுடர் மணி பூண் அரக்கர் குலத்து அவதரித்தீர் - இருளைப் பிளந்தழிக்கிற ஒளி யையுடைய இரத்தினபரணங்களைத் தரித்த இராக்கதரது குலத்தில் உயர் வாகத்தோன்றியவர்களே!—கொல் ஈரும் படை கும்பகருணனே போல் - கொல்லனால் அராவப்பட்ட [கூர்மையான] ஆயுதங்களையுடைய கும்பகர் ணன்போல, குவலயத்துள் - பூமியில், எல்லீரும் - நீங்களெல்லோரும், உறங் குதிரோ - தூங்குகிறீர்களோ? (அதனால்), யான் அழைத்தல் கேளீரோ - நான்கூப்பிடுகிற ஒலியைக் கேட்கின்றீரில்லையோ? (எ - று.)

கும்பகர்ணன் என்ற வடசொல்லுக்கு - குடம்போன்ற காதுடையவ னென்று பொருள்; இவன் இளமையில் மிக்கதவஞ்செய்கையில் இவனுக்கு வேண்டியவரங்கொடுத்தற்குப் பிரமதேவன் பிரதியக்ஷமாக, அக்கடவுளை

'யான் என்றும் அழியாது நித்யனுயிருக்கவேண்டும்' என்று வரங்கேட்கத் தொடங்கிய இவன், தேவர்கள்விருப்பத்தின்படி தன்னாவில் வந்துகின்ற சரசுவதீதேவியின் சூழ்ச்சியால் 'என்றும் யான் நித்திரையுள்ளவனு யிருக்க வேண்டும்' என்று வரங்கேட்க, அப்படியே அக்கடவுள் அநுக்கிரகித்ததனுல், இவன் என்றும் நெடுந்தூக்கமுடையவனுய்விட்டான் என்பது, வரலாறு. பி - மீ: —[1]கொடியீர்காள். [2]அழைப்ப. (நூஉ)

ககச.—அச்சமயத்தில் இராமன் அங்கு வருதல்.

என்றின்ன பலபன்னி யிகலரக்கி [1]யழுதிரங்கிப்
பொன்றுன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து நிறைதவத்தின் குறைமுடித்து
வன்றிண்கைச் சிலைநெடுந்தோண் மரகதத்தின் மலைவந்தான்.

(இ - ள்.) என்று—, இன்ன - இத்தன்மையனவான, பல - அநேக வார்த்தைகளை, பன்னி - அடுத்தடுத்துச்சொல்லி, இகல் அரக்கி-வலிய அந்த ராக்ஷி, அழுது - புலம்பி, இரங்கி - சோகித்து, பொன் துன்னும் படிஅக த்து - அழகுபொருந்திய அவ்வாச்சிரமபூமியினிடத்தில், புரள்கின்ற பொழு தகத்து - புரளுகிறபொழுதிலே,—வல் திண் கை சிலை - மிகவலியகையிற்பிடி த்த வில்லையும், நெடுந் தோள் - நீண்டதோள்களையு முடைய, மரகதத்தின் மலை - மரகதத்தின்மயமான மலைபோன்ற இராமபிரான், அந்த நதியகத்து நிறை தவத்தின் குறை முடித்து-அந்தக்கோதாவரியாற்றினிடத்திலே வேத விதிமுறைமைநிரம்பின நித்யகர்மமாகிய இன்றியமையாச்செய்கையைச் செய்துமுடித்து, நின்று - அங்குநின்று, வந்தான்—; (எ - று.)

சூர்ப்பணகை இவ்வாறு புலம்பிப் புரளுகிறவளவில் ஸ்ரீராமன் அந்தக் கோதாவரிநதியில் நித்தியக்கடமைகளையெல்லாம் முடித்துக்கொண்டு வந்து சேர்ந்தனன் என்பதாம். பி - மீ:—[1]அழைத்து. (நூஉ)

ககடு.—அரக்கி தான் பட்ட பாட்டை இராமனுக்கு உணர்த்தல்.

வந்தானை [1]முக நோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் [2]குருதியொடு செழுநிலத்தைச் சேறுக்கி
யந்தோவுன் றிருமேனிக் கன்பிழைத்த வன்பிழையா
லெந்தாயான் பட்டபடி யிதுகாணென் [3]றெதிர்விழுந்தாள்.

(இ - ள்.) (சூர்ப்பணகை), வந்தானை-(அங்ஙனம்)வந்த இராமனை, முகம் நோக்கி-முகத்தைப்பார்த்து, வயிறு அலைத்து-வயிற்றில்அடித்துக்கொண்டு,— மழை கண் நீர் - மழைபோலச்சொரிகிற கண்ணீரினலும், செம் தாரை குருதியொடு - சிவந்ததாரையாகப்பெருகுகிற இரத்தத்தினலும், செழு நில த்தை - அழகிய [பெரிய] அவ்விடத்தை, சேறு ஆக்கி - சேருகச்செய்துகொ ண்டு, (இராமனைநோக்கி), 'எந்தாய் - எனதுதலைவனே! அந்தோ - ஐயோ! உன் திருமேனிக்கு அன்பு இழைத்த வல் பிழையால் - உனது அழகியவடிவ

த்தினிடத்தில் ஆசைவைத்ததாகிய கொடியகுற்றத்தால், யான் பட்ட படி இது - நான்அடைந்த இந்தநிலைமையை, காண்—பார்ப்பாயாக,' என்று - என்றுசொல்லி, எதிர் விழுந்தாள் - இராமன்முன்னிலையில் விழுந்திட்டாள்.

உன்திருமேனிக்குத் தீங்குசெய்த வன்பிழையாளர் இங்ஙனம் பங்கப் படலாம், அன்புசெய்த யான் இங்ஙனம்படுதல் தகுதியோ வென்றன ளென் பதாம். பி - மீ:—[1]இடை. [2]குருதியொடுமிரு. [3]அடிவீழ்ந்தாள். (கூகூ)

ககசூ.—இராமன் நிகழ்ந்ததையுணர்ந்து அவளை நீயா ரென்றல்.

விரிந்தாய கூந்தலாள் வெய்யவினை யாதானும்
புரிந்தா[1]ளென் பதுதனது பொருவரிய திருமனத்தாற்
றெரிந்தானின் றிலையானே யிவளெடுஞ் செவியொடுமூக்
கரிந்தானென் பதுமுணர்ந்தா [2]னம்மனீ யாரென்றான்.

(இ - ள்.) விரிந்து ஆய கூந்தலாள் - விரிபட்டதாயுள்ள கூந்தலை யுடைய இவள், வெய்ய வினை யாதானும் புரிந்தாள்-கொடியதொழில்எதை யேனுஞ் செய்தவளாவள், என்பது-என்பதை, (இராமன்), தனது பொருவு அரிய திருமனத்தால் தெரிந்தான் - தன்னுடைய ஒப்பில்லாத சிறந்தமனத் தினுல் அறிந்துகொண்டு, இன்று இலையானே இவளை நெடுஞ் செவியொடு மூக்கு அரிந்தான் என்பதும் உணர்ந்தான் - இப்பொழுது இலக்குமணனே இவளை மீண்ட காதையும் மூக்கையும் அறுத்திட்டவனுவ னென்பதையும் அறிந்துகொண்டு, (அவ்வரக்கியைப்பார்த்து), அம்மனை - அம்மா! நீ யார் என் றான் - 'நீ யார்?' என்று வினவினான்; (எ - று.)

இவள் ஏதேனுந் தீங்கிழைத்திருப்பள்; அதற்காகவே இலக்குமணன் இவளைத் தலைவிரிகோலமாய்ப் புலம்பும்படி மூக்கையும் காதையும் அறுத் துத்தண்டித்திருப்ப னென்று நிகழ்ந்தசெய்தியை இராமன் தன்உணர்வால் ஊகித்தறிந்துகொண்டு, அவளைப்பார்த்து, 'நீ யார்?' என்று கேட்டனன் என்பதாம். இவள் நேற்று வந்தபொழுது கொண்டிருந்த மிகஅழகியவடிவத் துக்கும், இன்றைக்குக் காணப்படுகிற கோரவடிவத்துக்கும் சிறிதும் பொ ருத்தமில்லாமையால், இவளை முந்திவந்தவளென்று துணியாமல், வேறொ ருத்தியாகக்கருதி, நீயா ரென்று புதிதாக வினவின னென்க. பி - மீ:—[1]என் பதும். [2]அம்மனையோ, ஐயோநீ, அவளைநீ. (கூசஂ)

ககள.—அதற்கு அவள் தன்னை இன்னுனென்று உரைத்தல்.

அவ்வுரைகே[1]ட் டடலரக்கி யறியாயோ நீயென்னைத்
தெவ்[2]வுரையென் றேருலகு மில்லாத சீற்றத்தான்
வெவ்விலேவ லிராவண[3]னும் விண்ணுலக முத[4]லாக
வெவ்வுலகு முடையானுக் குடன்பிறந்தேன் யானென்றாள்.

(இ - ள்.) அ உரை கேட்டு - அந்தவார்த்தையைச் செவியுற்று,—அடல் அரக்கி - கொடிய அந்த ராக்ஷசி,—'நீ என்னை அறியாயோ-நீ என்னை அறிய

மாட்டாயோ? தெவ் என்ற உரை ஓர்உலகும் இல்லாத-(தனக்குப்) பகைமை யென்ற பேச்சும் உலகமொன்றிலும் இல்லையாம்படி செய்த, சீற்றத்தான் - கோபமுடையவனை, வெம் இலை வேல் இராவணன் ஆம் - கொடியஇலை வடிவமாக அமைந்த வேலாயுதத்தையுடைய இராவணனுகிய, விண் உலகம் முதல் ஆக எ உலகும் உடையானுக்கு - சுவர்க்கலோகம் முதலாக எல்லா வுலகங்களையும் தனக்குஉரிமையாகவுடையவனுக்கு, உடன் பிறந்தேன் யான் - கூடப்பிறந்தவளன்றே நான்?' என்றுள்-என்றுசொன்னாள்; (எ-று.)

'நான் நேற்றுவந்தவளே' என்பதைக் குறிப்பதற்கு, 'அறியாயோ நீ யென்னை' என்றுள். எவ்வுலகத்தும் சிறிதும் பகையற முற்றும் வென்றவ னென்பது, இரண்டாமடியின் கருத்து. பி - ம்:—[1]அவ். [2]உலகு. [3]இவ். [4]ஆய. (நூசக)

ககஅ —'வந்த காரியமென்?' என்ற இராமனுக்கு அவள் விடைகூறுதல்.

தாமிருந்த தகையரக்கர் புகலொழியத் தவ[1]மியற்ற
யாமிருந்த நெடுஞ்சூழற் கென்செயவந் தீரெனலும்
வே[2]மிருந்தை யெனக்கனலும் [3]வெங்காம வெம்பிணிக்கு
மாமருந்தே நெருநலினும் வந்திலெனே யானென்றாள்.

(இ - ள்.) 'தகை அரக்கர் தாம் இருந்த புகல் ஒழிய - பெருமையை யுடைய இராக்கதர்கள் இருந்த இடம் நீங்க [அவ்விடத்தைவிட்டு என்றபடி], தவம் இயற்ற யாம் இருந்த நெடுஞ் சூழற்கு என் செய வந்தீர்-தவஞ்செய்யும் பொருட்டு நாம் தங்கியிருந்த சேய்மையான இவ்விடத்துக்கு யாதுசெய்யும் பொருட்டு நீர் வந்தீர்?', எனலும்-என்று (ஸ்ரீராமன்) வினவியவளவிலே,— 'வேம் இருந்தை என கனலும்-நெருப்பில்வேகின்ற கரிபோலத் தபிக்கிற, வெம் காமம் வெம் பிணிக்கு - கொடிய காமமாகிய கொடியநோய்க்கு, மா மருந்தே - சிறந்த மருந்துபோன்றவனே! யான்—, நெருநலினும் வந்தி லெனே - நேற்றும் வந்தேனில்லையோ?' என்றாள் - என்றுஞ்சொன்னாள், (சூர்ப்பணகை); (எ - று.)

யான் இராவணன்தங்கை யென்று அவள்சொன்னதைக்கொண்டே இராமன் நேற்றுவந்தவளேயிவளென்று நிச்சயித்திடாமல், வடிவுவேறுபாட் டையே முக்கியமாகக்கொண்டு, இராவணனதுவேரூருதங்கையா யிருக் கலா மென்றுகருதிஞன்போல 'நீ உன்இனத்தாரான அரக்கர் சிறப்போடிருக் கிற இடத்தை விட்டு யாம் தவவேடங்கொண்டு தங்கியிருக்கிற நெடுந்தூரத் திலுள்ள இவ்விடத்துக்கு வந்தது என்னகாரணம்?' என்று நூதனமாகக் கேட்க, அவள், நேற்று வந்தவளே நானென்பதை வெளிப்படையாய்த் தெரி வித்தன ளென்பதாம். இங்கே தவமென்றது, தமது சாதிக்கு அடுத்த நா டாளுகையை விட்டு மரவுரியுஞ் சடைமுடியுந் தரித்து முனிவர்போல் காய் கனிகிழங்குகளைப்புசித்துக்கொண்டு வனத்தில் வசித்தலே. பி-ம்:—[1]புரியும். [2]இருந்திலென, இருந்தினென, இருந்தியென. [3]எரி. (நூசஉ)

ககக.—'முன் வந்தவனோ? நீ'என்ற இராமனுக்கு அவள் விடைதருதல்.

செங்கயல்போற் கருநெடுங்கட் டேமருதா மரையுறையு
நங்கையிவ ளெனநெருநை னடந்தவரோ நாமென்னக் [தா
கொங்கைகளுங் குழைக்காதுங் கொடிமூக்குங் [1]குறைத்தழித்
லங்கணர சேயொருவர்க் கழியாதோ வழகென்றாள்.

(இ - ள்.) 'செம் கயல் போல் - சிவந்த கயல்மீன்போலப் பிறழ்கிற, கரு நெடுங் கண் - கரிய நீண்ட கண்களையுடைய', தே மரு தாமரை உறையும் நங்கை - தேன் பொருந்தின தாமரைமலரில் வீற்றிருக்கிற மகளிரிற்சிறந்த வளான திருமகள், இவர்—, என - என்று (காண்பவர்) குறிக்கும்படி, நெரு நல் - நேற்று, நடந்தவரோ - வந்தவர்தாமோ? நாம் - நீர்,' என்ன - என்று (இராமன் சொல்ல,—(அதற்கு அரக்கி),'அம் கண் அரசே-அழகிய கண்களை யுடைய அரசனே! கொங்கைகளும் - தனங்களையும், குழை காதும் - குழை யென்னும்அணியை யணிந்த காதுகளையும், கொடி மூக்கும் - கொடிபோ ன்ற மூக்கையும், குறைத்து அழித்தால் - அறுத்துப் போக்கிவிட்டால், ஒரு வர்க்கு—, அழகு அழியாதோ—?' என்றாள் - என்றுசொன்னாள்; (எ - று.)

'இப்பொழுது குரூபியாகக்காணப்படுகிற நீ நேற்றுக் கண்டவர் திருமக ளென்னும்படி. கட்டழகியளாய் வந்தவனோ?' என்று இராமன் கேட்க, அவள், கொங்கை முதலிய உறுப்புக்களை அறுத்துத்தள்ளிவிட்டால் எத் தூணையழகியோர்க்கும் அவ்வழகு கெட்டிடமாட்டாதோ? என்றனள் என் பதாம். இங்கு, நாம் என்பது - "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்ற வாறு வந்தேதார் இடவழுவமைதி: "நாமரையாமத்தென்னை வந்து வைகி நயந்ததுவே"எனத் திருக்கோவையாரில் வருவதையும், அங்குப் பேராசிரியர் 'நாம்என்னும் முன்னிலையுளப்பாட்டுத்தன்மை, உயர்வுதோன்ற, முன்னிலைக் கண்வந்தது' என உரைத்தமையையும் உணர்க. இங்ஙனம்வருதல் உலக வழக்கத்திலும் உண்மை காண்க. மூக்குக்குக் கொடி உவமைகூறப்படுதல், "புலக்குண்டலப் புண்டரீகத்த போர்க்கண்டை வல்லியொன்றால், விலக் குண்டுலாகின்று வேல்விழிக்கின்றன" எனப் பெரியோர் பாசுரத்திலும் காணத்தக்கது. பி - ம்:—[1]குறைத்தழிந்தால். (ஙசஙக)

கஉ0.—இராமன் இலக்குமணனைநோக்கி 'இவள்பிழை என்?' என்றல்.

மூரன்முறு வலனிளைய மொய்ம்பினோன் முகநோக்கி
வீர[1]விரைந் தணியிவடன் விடுகாதுங் கொடிமூக்கு
மீரநினைந் திவளிழைத்த பிழையென்னென் [2]றிறைவினவச்
சூரனெடுந் தகையவனை யடிவணங்கிச் சொல்லுவான்.

(இ - ள்.) (அதுகேட்டு), இறை - (எல்லாவுயிர்களுக்கும்) தலைவனான இராமன், மூரல் முறுவலன் - பற்கள் சிறிதுவெளித்தோன்றக் கொண்ட சிரிப்புள்ளவனும், இளைய மொய்ம்பினோன் முகம் நோக்கி-இளையவீரனான இலக்குமணனது முகத்தைப் பார்த்து, 'வீர - வீரனே! (நீ), விரைந்தனை -

தரிதப்பட்டு, இவள்தன் விடு காதும் கொடி மூக்கும் ஈர - இவளுடைய தொங்குகிற காதையும் கொடிபோல நீண்ட மூக்கையும் அறுக்கும்படி, இவள் நினைந்து இழைத்த பிழை - இவள் எண்ணிச்செய்த குற்றம், என் - யாது?' என்று—,வினவ-கேட்க,—சூரன் நெடுந் தகை-சூரனுகிய பெருமைக் குணமுள்ள இலக்குமணன், அவனை அடி வணங்கி சொல்லுவான் - அவ் விராமனைத் திருவடிதொழுது விடைகூறுவான்; (எ-று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

மூரல் முறுவல் என்பவற்றை ஒருபொருட் பன்மொழி யெனினும் அமையும். பி - மீ:—[1]கெகுவண்டனை. [2]இலை. (உஅச)

கஉக.—இலக்குமணன் விடைகூறுதல்.

தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்[1]துளதோ குறித்தபொரு [2]ளறிந்திலனு
ணாட்டந்தா னெரியுமிழ நல்லாண்மேற் பொல்லாதா
ளோட்டந்தா ளரிதினிவ ணுடன்றெழுந்தா ளெனவுரைத்தான்.

(இ - ள்.) 'வாள் எயிற்றின் - கூரிய கொடிய பற்களால், தின்ன-தின் னுதற்கு, தேட்டம் தான்ஓ - (இரை) தேடுதலினாலோ? தீவினையோர் கூட் டம் தான் புறத்து உளதோ - கொடுந்தொழிலுடையோரது கூட்டம் பின் னேயிருக்க அதன் தூண்டுதலினாலோ?குறித்த பொருள் அறிந்திலன் (இவள்) செய்ய உத்தேசித்தகாரணத்தை (இன்னதென்று தானிவாக) அறிந்தே னில்லை; பொல்லாதாள் இவள் - தீயவளான இவள், நாட்டம் தான் எரி உமிழ - கண்கள் நெருப்புப்பொறியைச் சொரிய, அரிதின் - (பிறர்க்கு) அரு மையானவகையால், உடன்று எழுந்தாள் - கோபக்கொண்டு புறப்பட்டு, நல் லாள்மேல் ஓட்டந்தாள் - நற்குணமுடையவளான சானகியின்மேல் [சான கியை நோக்கி] ஓடிவந்தாள்,' என உரைத்தான் - என்றுசொன்னான், (இலக்குமணன்); (எ - று.)—ஆல்-தேற்றம்.

ஓட்டந்தந்தாள் என்பது, ஓட்டந்தா ளென விகாரப்பட்டது; "ஓட்டந் துபாய்ந்திடுகின்ற" எனத் திவ்வியப்பிரபந்தத்திலுங் காண்க. பி - மீ:— [1]உண்டோ. [2]உணர்ந்திலனல், அறிந்திலமால். (உசஙு)

கஉஉ.—அரக்கி தான் அங்ஙனஞ்சேய்ததற்குக் காரணங் காட்டுதல்.

ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை [1]நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கா லழலாதே மனமென்றுள்.

(இ - ள்.) ஏற்ற - கையிலேந்திய, வளை வரி சிலையோன் - வளைந்த கட் டமைந்த வில்லையுடைய இலக்குமணன், இயம்பாமுன் - (இங்ஙனஞ்) சொல்லாத முன்னே [சொன்னவுடன்மிகவிரைவிலே என்றபடி],

இகல் அரக்கி - கொடிய அந்த ராக்ஷியானவள்,—'சேற்ற வலை - சேற்றி லுள்ள (பெண்பாலாகிய) சங்கு, தன் கணவன் அருகு இருப்ப - தனது கணவனுகிய ஆண்தவளையின் அருகில் இயல்பாகவிருந்ததனால், சூல் தவளை - கருக்கொண்ட [புணர்ச்சிக்குரியதல்லாத] பெண்தவளை, சினம் திருகி - (தன்கணவன் அதனேடுகூடியதென்று) கோபத்தால் மாறுபாடுகொண்டு, நீர் உழக்கும் - நீரைக்கலக்கப்பெற்ற, துறை கெழு நீர் வளம் நாடா - இறங்குதுறைகள் பொருந்திய நீர்நிலைகளின் வளப்பத்தையுடைய நாட்டையுடையவனே!—மாற்றவளை கண்டக்கால்-சக்களத்தியைப் பார்த்தால், மனம் அழலாதோ - மனம் கோபங்கொள்ளாதோ?' என்றுள் - என்றுசொன்னுள்.

'சக்களத்தியைக்கண்டால் மகளிர்க்கு மனம் சினங்கொள்ளுதல் உலகவியல்பன்றே?'என்ற இப்பொதுப்பொருளினுல், தான் இராமனேக் கொழுகுகைக்கொள்ளுதற்கு மிக்கவிருப்பங்கொண்ட மாத்திரத்தில் தன்னே அவனுக்குரியமனேவியாகப்பாவித்து அவ்வுறவுமுறைமையால் அவன்மனேவியான சீதையைத் தனக்குச்சக்களத்தியாகத் துணிந்து அதுபற்றி அவள்மீது பகைமைகொண்டு அவளைத் தூற்றிவிடத் தொடர்ந்ததாகக் காரணம் விளித்துக்கூறின ளென்பது தெளிவாம்.

பருத்தறிவிற்குறைவுபட்டதோர் அஃறிணேயுயிர்தானும் தான் கலவிக்குரியதல்லாத நிலேயிலும் தன்கணவனருகில் தன்சாதியினுங் கீழ்ப்பட்ட அயற்பெண்பால் இருத்தலே நோக்கிப் பிணங்கும் நாட்டி லுள்ளவனுன நீ, என்போன்ற விவேகிகள் கலவிக்குரிய பருவத்தில் தன் கணவனருகில் ஏற்றமாற்றுளிருத்தலே நோக்கி மனம்பொருது அவளுக்குக் கேடுசூழக்கருதுதல் இயல்பே யென்பதை அறிதற்குரியா யென்பாள், இங்ஙனம் சந்தர்ப்பத்துக்குஏற்றவாறு நாட்டுவர்ணனேகூறி இராமனே விளித்தாள். "கதிர்க்கோட்டு நந்தின்சுரிமுகவேற்றை, நாகிளந்தவளேயொடு பகன்மணம்புகூஉம், நீர்நெகிழ் கழனி" என்ற புறப்பாட்டடிகள் இங்கு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கன. இராமன் கூத்திரியசாதியா னதலால், 'நாடா' என விளிக்கப்பட்டான். 'ஏற்ற வலை வரிசிலேயோன்'-பகையழிப்பதிற் கருத்தாயுள்ளவ னென்றபடி. இப்பாட்டு - தரிபு என்னுஞ் சொல்லணி. பி - மீ:—[1]துனி, வயல். (கூசசு)

கஉக.—இராமன் சூர்ப்பணகையை 'இங்குநில்லாம லோடிப்போ' எனல்.

பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை யொருங்கவிப்பான்
றேடிப்போந் தனமின்று தீமாற்றஞ் சிலவிளம்பி
வீடிப்போ காதேயிம் மெய்வனத்தை விட்டகல [பாள்.
வோடிப்போ வென் [1]றுரைப்ப வுரைகடந்காற் [2]கவளு[3]ரைப்

(இ - ள்.) 'பேடி போர் - பேடித்தன்மையுள்ள போரைச்செய்கிற, வல் அரக்கர் - கொடியஇராக்கதர்களது, பெருங் குலத்தை - பெரியவம்சத்தை, ஒருங்கு அவிப்பான் - ஒருசேர [முழுவதும்] அழிக்கும்பொருட்டு, தேடி போந்தனம் - (அவர்கள் எங்குஉள்ளா ரென்று) தேடிக்கொண்டு வந்துள்

ளோம்; (ஆதலால்), இன்று - இப்பொழுது, (நீ), தீ மாற்றம் சில விளம்பி - சில கொடுஞ்சொற்களைக் கூறி, வீடி போகாதே-அழிந்துபோய்விடாமல், இ மெய் வனத்தை விட்டு அகல ஓடிப்போ - சத்தியத்துக்குரிய இந்தக்காட்டை விட்டு விலகஓடிப்போய்விடு,' என்று உரைப்ப - என்றுசொல்ல, உரை கடந் தாற்கு - சொற்களைக்கடந்துள்ள இராமபிரானுக்கு, அவள் உரைப்பாள்-அவ் வாக்கி கூறுவாள்; (எ - று.)—அதனை, அடுத்தபதினெருகவிகளிற் காண்க.

தருமயுத்தஞ் செய்யாமல் நபும்சகர்போல மாயையில் மறைந்துநின்று அதருமயுத்தஞ்செய்கிற துஷ்டர்களான இராக்கதர்களுடைய கூட்டத்தை வேரோடுஅழிப்பதற்குச் சங்கற்பங்கொண்டே இங்குவந்துள்ளோம்; ஆத லால், பின்னும் எதேனுங் கடுஞ்சொற்களைக் கூறுவையானால் உன்னையுங் கொன்றிடுவோம்; ஆனதுபற்றி, உடனே ஓடிச்செல் என்று இராமன் அதட் டிப்பேச, தப்பி அவள் பலவாறு சமாதானங்கூறத்தொடங்கின னென்பதாம்.

வேதபுருஷன் முனிவர் தேவர் முதலிய யாவர்சொற்களுக்கும் எட்டா மல் வாசாமகோசரமாகவுள்ள நிலைமையை யுடையவ னென்பது, 'உரைகடந் தான்' என்பதன் பொருள். உரைகள் தந்தான் - வேதங்களை (ப் பிரமனுக்கு) உபதேசித்தவ னென்றலும் ஒன்று. **பி-ம்:**—[1]உரைத்த. [2]இலை. [3]உரைத்தாள்.

கஉச.—இரிப்பதினெருகவிகள் - தூரிப்பணகை பலவாறுகூறித் தன்னை மணஞ்செய்யுமாறு வேண்டுதலைத் தெரிவிக்கும்.

நரைதிரை[1]யென் றில்லாத நான்முகனே முதலமரர்
கரையிறந்தோ ரிராவணற்குக் [2]கரமிறுக்குங் குடியென்றால்
விரையுமிது நன்றன்று வேறுக யானுரைக்கு
முரையுளது நுமக்குறுதி யுணர்[3]வுளதே லென்றுரைப்பாள்.

(இ - ள்.) 'நரை (என்று) - மயிர் வெளுத்தலும், திரை என்று - தோல் சுருங்குதலும், (ஆகிய மூப்பின்குணங்கள்), இல்லாத—, நான்முகனே முதல்- பிரமன் முதலிய, கரை இறந்தோர் அமரர் - எல்லையில்லாத தேவர்யாவரும், இராவணற்கு கரம் இறுக்கும் குடி - இராவணனுக்குக் கப்பஞ்செலுத்துங் கீழ்ப்பட்ட குடியாவர், என்றால்—[ஆதலால் என்றபடி], விரையும் இது - (நீங்கள்) துரிதப்படுகிற இச்செய்கை, நன்று அன்று - நல்ல தன்று; (அன்றி யும்), நுமக்கு - உங்களுக்கு, உறுதி உணர்வு உளதுஎல் - நன்மைதருவதை அறிந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் உள்ளதானால், வேறு ஆக யான் உரைக்கும் - தனியாக யான் சொல்லவேண்டிய, உரை - வார்த்தை, உளது. இருக்கின்றது', என்று - என்றுசொல்லி, உரைப்பாள்-மற்றுஞ்சொல்வாள்.

பிணிபசிமூப்புத்துன்பில்லாத பிரமன் முதலிய தேவர்களெல்லோரும் இராவணனுக்குக் கீழ்ப்பட்டுக் குடியிருப்பவராய்க் கப்பஞ்செலுத்துபவரா தலால், சாதாரணமனிதராகிய நீங்கள் இப்படித்துரிதப்பட்டு அவன் தங்கை யாகிய என்னைப் பரிபவப்படுத்துவதும், அரக்கரைப்பற்றி அலட்சியமாகப் பேசுவதும் தகுதியல்ல; உங்களுக்கு நன்மையுடையவேண்டுமென்ற எண்ண

மிருந்தால் யான்சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பீராக என்றன ளென்பதாம். பி - ம்:—[1]ஒன்று. [2]கடன். [3]உளதே. (நூசஅ)

கஉடு. ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
நாக்கரியுந் தயமுகனுர் நாகரிக ரல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெல்லாம் [1]புல்லிடையி லுகுத்தீரே.

இதுமுதற் பத்துக்கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்) 'உங்கை - உமதுதங்கை, ஆக்கு அரிய மூக்கு அரியுண்டாள் - (மீளவும்) உண்டாக்கிக்கொள்ளமுடியாத மூக்கு அறுப்பட்டான்,' என்றுரை - என்று (நிகழ்ந்தசெய்தியைச்) சொன்னவரையும், நாக்குஅரியும்-(கோபித்து) நாக்கறுத்திடும்படியான, தயமுகனுர்-இராவணனுர், நாகரிகர் அல்லாமை - கண்ணோட்டமுடையவரல்லாமையால், மூக்குஅரிந்து நும் குலத்தை முதல் அரிந்தீர்-(என்னை) மூக்கறுத்து (அதனால்) உங்கள்குலத்தை வேரொடும்அறுத் திட்டீர்; இனி - இனிமேல், உமக்கு போக்கு அரிது - உங்களுக்கு உயிர் பிழைத்துப்போகும்விதம் இல்லை; இ அழகை எல்லாம் புல்இடையில் உகுத் தீரே - (பெறுதற்குஅரிய) இந்த உங்கள் சௌந்தரியமுழுவதையும் வீணுப்ப் புல்லிலே சொரிந்திட்டீர்களே! (எ - று.)—ஈற்றேகாரம் - இரக்கம்.

நான் உங்களால் மூக்கறுபட்ட இந்தஉண்மையானசெய்தியை யாரே னும் என்தமையனரிடம் போய்ச் சொன்னலும், அவர், என்னிடத்துள்ள மிக்க அன்பினலும், இப்படிப்பட்ட தீங்கு ஒருகாலும் நமது தங்கைக்கு நேர்ந்திரா தென்ற துணிவினலும், அசம்பவமான ஒருமொழிபைக் கற்பித் துக்கூறினரென்று பெருங்கோபங்கொண்டு அக்கூறினவரை நாக்கறுத்துத் தண்டித்திடுவார்; இப்படிப்பட்டதன்மையுடைய என்தமையனர் சிறிதும் கண்ணோட்டமில்லாதவ ராதலால், நான் உண்மையில் மூக்கறுபட்ட செய்தி யை அறிந்தால், உடனே வந்து உங்களைக் குலத்தோடுத் தொலைப்பாரே; இப்படி நீங்கள் அழியும்வழியை நீங்களே தேடியதனல், பெறுதற்கரிய அமி ருதம்பெற்றதைப் புல்லிலேசொரிந்து வீணுக்கினுற்போல உங்களுடைய நிறைந்தஅழகை நீங்கள் வீணேஇழந்திட்டீ ரென்றன ளென்பதாம்.

நாகரிகம் என்பது - கண்ணோட்டமென்னும் பொருளதாதலை, "பெயக் கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" என்ற திருக் குறளிலும் காண்க; அக்குறளினுரையில் பரிமேலழகர் 'நாகரிகமென்பது - கண்ணோட்டமாதல் "மூத்தை யிருந்து நட்டோர் தொடுப்பின், நஞ்சுமுண் பர் நனிநாகரிகர்" என்பதனலும்அறிக' என மேற்கோள் காட்டினமையும் உணரத்தக்கது: தயமுகன் = தமமுகன். தம்பியின்செயலைத் தமையனது உடன்பாடுபற்றி நிகழ்ந்ததாகக் கருதி, அவ்வொற்றுமையால் அவன்செய லைத் தமையன்மேலேற்றி இராமனைநோக்கி 'மூக்கரிந்து முதலரிந்தீர்' என் ருள். கஉஉ - ஆம் பாட்டில் "போக்கினீ ரென்னை" என்பதும் காண்க;

இதனை, இங்ஙனமே வருகிற பிறவிடத்துக்குங் கொள்க. அன்றியும், "ராமஸ்ய தக்ஷிணேஷு பாஹு"ஷு" என்றபடி இராமனுக்கு இலக்குமணன் வலக்கை போலிருத்தலால், இலக்குமணன்செயலே இராமன்மேல் ஏற்றிக்கூறும் வழக்கை நூல்களிற் பலவிடத்துங் காணலாம். பி - மீ:—[1]புல்லிடையே.

கஉசூ. வான்காப்போர் மண்காப்போர் மாநாகர் வாழுலகந்
தான்காப்போ ரினித்தங்க டலைகாத்து நின்றுங்க
ளூன்காக்க வுரியார்யா ரென்னையுயிர் நீர்[1]காக்கின்
யான் [2]காப்பெ னல்லாலவ் விராவணனு ருள[3]ரென்றூல்.

(இ - ள்.) என்னை நீர் உயிர் காக்கின் - (எனது வேட்கையைப் பூர்த்தி செய்து) என்னுயிரை நீர் அழியாமற் பாதுகாப்பீராஞல், யான் காப்பென் - நான் (உங்களே அவ்விராவணனிடத்தினின்று) உயிர்காத்திடுவேன்; அல்லால் - அங்ஙனமல்லாவிட்டால், இனி - இனிமேல், அ இராவணனுர் உளர் என்றூல் - (உங்களையழிக்க எனதுசமையனுரான) அந்தஇராவணனுர் இருக்கும்போது, வான் காப்போர் - மேலுலகத்தைப்பாதுகாக்கிற தேவர்களிலும், மண் காப்போர் - நிலவுலகத்தைப் பாதுகாக்கிற அரசர்களிலும், மா நாகர் வாழ் உலகம் தான் காப்போர் - பெரிய சர்ப்பசாதியார் வாழ்கிற கீழுலகத்தைப் பாதுகாக்கிறவர்களிலும், தங்கள் தலைகாத்து நின்று உங்கள் ஊன் காக்க உரியார் - தங்களுடைய தலையை(த்துணிபடாமற்) பாதுகாத்துக்கொண்டுநின்று உங்களுடையஉடம்பையும் அழியாமற்பாதுகாத்தற்குரியவர், யார் - எவர்உளர்? [யாரும்இல்லை யென்றபடி]; (எ - று.)—தான் - அசை.

சுவர்க்க மத்திய பாதாள மென்னும் மூவுலகத்திலு முள்ளவர் யாவரும் இராவணனுக்கு அஞ்சியொடுங்கியொழுகுபவரே யாதலால், அவன் சினங் கொள்ளுமிடத்து அவரவர் தம்தம் தலையைத் தாம் அழியாதபடி காத்துக் கொள்ளுதலே அரிது;ஆதலால், அவன் தங்கையானஎனக்கு இப்படித்தீங்கு செய்த நீங்கள் புகலிடமாக அவர்களில் எவரையடைந்தாலும் உங்களைப் பாதுகாக்கவல்லா ரில்லை; ஆனதுபற்றி, உம்மைக்கண்டு மோகங்கொண்டு மரணந்தமான காமவேதனை யுற்ற என்னை நீர் அங்கீகரித்து மகிழ்வித்து உயிர்காப்பீராயின், நான் உங்களுயிரை இராவணன் அழித்திடாதபடி செய்வேன்: அல்லாவிடில், உங்களைத் தவருமலழித்தற்கு அவனுள்ளான் என்றனனென்பதாம். பி - மீ:—[1]காத்தால். [2]காப்பதல்லாமல். [3]என்றூள். (கூடுo)

கஉஎ. காவற்றிண் கற்பமைந்தார் தம்[1]பெருமை தாங்கழறு
ராவற்பே ரன்பிஞ லறைகின்றே ஞ[2]மன்றே
தேவர்க்கும் வலியான்றன் றிருத்தங்கை யாளிவளீண்
[3]டேவர்க்கும் வலியாளென் றிளையானுக் கியம்பீரோ.

(இ - ள்.) காவல் - (தம்மைத் தாம் ஒழுக்கந்தவருமற்) பாதுகாத்துக் கொள்வதான, திண் - கலங்காதநிலைமையுள்ள, கற்பு - பதிவிரதாதருமம், அமைந்தார் - பொருந்தப்பெற்ற மகளிர், தம் பெருமை தாம் கழறுர் - தமது

பெருமையைத் தாமே எடுத்துச்சொல்லமாட்டார்; ஆயினும், (யான்),— ஆவல் பேர் அன்பினுல் - (உம்மிடத்து) மிக்கஆசைகொண்ட பெரிய அன்பினுல், அறைகின்றேன் ஆம் அன்றே - (என்பெருமையை யானே எடுத்துச்) சொல்லுகிறேனன்றோ? 'தேவர்க்கும் வலியான்தன் திரு தங்கையாள் இவள் - எல்லாத்தேவர்களைக்காட்டிலும் வலிமையுடையவனுன இராவண னது சிறந்ததங்கையாகிய இவள், ஈண்டு ஏவர்க்கும் வலியாள் - இவ்வுலகத் தில் யாவரினும் வலியவள்,' என்று—, இளையானுக்கு - (உமது) தம்பிக்கு, இயம்பீரோ - (எனது திறத்தை நீர்) சொல்லமாட்டீரோ? (எ - று.)

கற்பிற்சிறந்த மாதர் தற்புகழ்ச்சியாகத் தமதுசிறப்பைத் தாமேகூறு தற்கு உரியரல்லர்: அப்படிப்பட்டமாதரு ளொருத்தியாயினும், யான், உம்மி டத்து அளவுகடந்த ஆசை கொண்டுள்ளதனுல், அவ்வாசையைநிறைவேற்றிக் கொள்ளுதற்கு இன்றியமையாமைபற்றி வேற்றுமைகருதாமல் உமதுமுன் னிலையில்மாத்திரம் எனதுசிறப்பினியல்பை இப்பொழுது கூறுகின்றேன்; ஆகையால், எனதுசிறப்பை யான்சொல்லக்கேட்டிருந்த நீர்தாமே 'இளங் கன்று பயமறியாது' என்றபடி அதனேயறியாமல் என்னே இங்ஙனஞ்செய்த உமதுதம்பிக்கு 'அனேத்துலகையும்வென்றவனது தங்கையான இவள் யாவ ரினும் ஆற்றலுடையவள்' என்றுசொல்லி என்சிறப்பை உணர்த்தி அவனே அடக்கி அவனுக்கு என்னிடம் நன்குமதிப்பை உண்டாக்குவீர் என்ப தாம். ஆம், அன்று, ஏ - தேற்றம். பின்னிரண்டடிகளில் 'தேவர்க்குவலி யான்றன்றிருத்தங்கையா னிவளீங்கு, ஏவர்க்குவலியானுக்கிளையாளென்கி யம்பீரே' என்றபாடத்துக்கு - யானே தேவர்க்கும்வலியனுன இராவண னுடைய சிறந்ததங்கையாவேன்: இங்குள்ளஇவள் வலியானுன யாவனுக்குத் தங்கையென்று எனக்குச்சொல்லுங்க ளென்று பொருள் காண்க. பி - ம்:— [1]காவல். [2]அன்றே. [3]ஏவர்க்குவலியானுக்கிளையாணீரியம்பீரோ. (நூற்கை)

கஉஅ. மாப்போரிற் புறங்காப்பென் வான்சுமந்து செலவல்லேன்
றூப்போலக் கனிபலவுஞ் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென்னீர் கருதியது தருவேனிப்
பூப்போலு மெல்லியலாற் பொருள்[1]ளென்னே [3]புகல்வீரே.

(இ - ள்.) மா போரில் - பெரிய யுத்தங்களில், புறங்காப்பென் - (நான் உம்மைப்) பாதுகாத்திடுவேன்; வான் சுமந்து செல வல்லேன் - ஆகாயமார்க் கத்தில் (உம்மை) எடுத்துக்கொண்டுபோகவல்லேன் (யான்); தூ போல - மாமிசம்போல, சுவை உடைய - உருசியுடையனவான, கனி பலவும் - பழங் கள்பலவற்றையும், தர வல்லேன் - (உமக்குக்) கொணர்ந்துகொடுக்க வல்ல மையுடையேன்; (அன்றியும்), நீர் கருதியது தருவேன் - நீர் மனத்தில் விரும்பியதைக் கொணர்ந்து கொடுப்பேன்: காப்போரை கைத்து என் - (இங்ஙனம் பலவகையாலும்) பாதுகாத்தற்குஉரியவரை வெறுத்தலால் யாது பயன்? இ பூ போலும் மெல் இயலால் பொருள் என்னே - பூப்போலும்

மென்மையான தன்மையையுடையவளான இவளால் (உமக்குப்) பயன் யாதோ? புகல்வீர் - சொல்வீர்; (எ - று.)

நீர் விரும்பியதையெல்லாம் செய்துமுடித்தலிலும் உம்மைப் பலவகையா லும் பாதுகாத்தலிலும் வல்ல என்னை உபேக்ஷித்து, யாதொருவகையிலும் உதவமாட்டாதஇவளை விரும்பி உடன்வைத்துக்கொண்டுஉறைதலில் என்ன பயன்? சொல்வீ ரென்றனள் என்பதாம் 'இப் பூப்போலு மெல்லியல்'என் றதனால், குற்றமெடுத்துக்கூறத் தகுப்பட்டாரும் நல்லியல்பான மெல்லியல் பையன்றி வேறொன்றையும் எடுத்துக்காட்டவொண்ணுத பிராட்டியினது களங்கமின்மை வெளியாம்.பி-மீ:—[1]போல.[2]என்னை.[3]புகலீரால்,புகல்வீரால்.

கஉசு. குலத்தாலு நலத்தாலுங் குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலு மதியாலும் வடிவாலு [1]மடத்தாலு
நிலத்தாரும் விசும்பாரு நேரிழையா ரென்னைப்போற்
சொலத்தானிங் குரியாரைச் [2]சொல்லீரோ வல்லீரேல்.

(இ - ள்.) குலத்தாலும் - உயர்குலச்சிறப்பினாலும், நலத்தாலும் - மேன் மைகளாலும், குறித்தனவே கொணர் தக்க வலத்தாலும் - குறிப்பிட்டவற் றைக் கொண்டுவரத்தக்க வலிமையினாலும், மதியாலும் - அறிவினாலும், வடி வாலும் - வடிவழகினாலும், மடத்தாலும் - இளமையாலும், என்னை போல் சொல உரியார் - என்னைப்போன்றவளென்று சொல்லுதற்கு உரியவரான, நேர் இழையாரை - மகளிரை, நிலத்தாரும் விசும்பாரும் - மண்ணுலகத்தா ருள்ளும் விண்ணுலகத்தாருள்ளும், வல்லீர்எல் - வல்லமையுடையீராஞல், இங்கு - இப்பொழுது, சொல்லீரோ - சொல்வீரோ? (எ - று.)

குலம்முதலிய சிறப்புக்களால் நிலவுலகத்துமகளிருள்ளும் வானுலகத்து மகளிருள்ளும் எனக்குச் சமமாக வுள்ளவ ரில்லையெனத் தற்புகழ்ந்தவாறு. பி - மீ:—[1]மடப்பாலும். [2]சொல்லீரே. (கூடுங்)

கஙo. போக்கினீ ரென்னுயி ரோய்த்தென்னீர் [1]பொறுக்குவிரே
லாக்குவெனோர் கொடிவரையி னழகமைவெ னருள்[3]கூரும்
பாக்கியமுண் டெனினதனுற் பெண்மைக்கோர் [3]பழுதுண்டே
மேக்[4]குயரு நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றே.

(இ - ள்.) என் நாசி போக்கினீர் - எனதுமூக்கை அறுத்திட்டீர்; போ ய்த்து என் - (அதனால்) போனது என்ன? நீர் பொறுக்குவீர்எல் - நீர் (என் னை) எற்றுக்கொள்வீராஞல், ஓர் கொடி வரையின் ஆக்குவென் - ஒரு கொ டிப்பொழுதில் (அதனை) உண்டாக்கிக்கொள்வேன்; அழகு அமைவென் - அழகும் நிரம்பப்பெறுவேன்; அருள் கூரும் பாக்கியம் உண்டு எனின் - (உமது) கருணை மிகப்பெறுதலாகிய அதிருஷ்டம் உண்டாகுமானால், அத னால் பெண்மைக்கு ஓர் பழுது உண்டோ - மூக்கில்லாமையால் பெண்தன் மைக்கு ஒருகுற்றமுண்டோ? மேக்கு உயரும் நெடி மூக்கும் மடந்தையர்க்கு

மிகை அன்றே - அதிகமாக உயர்ந்துள்ள நீண்ட மூக்கும் மகளிர்க்குக் குற்ற மன்றே? (எ - று.)

நீர் என்மூக்கையறுத்ததனால் ஒன்றுங் கேடு இல்லை; நீர் என்னை அங்கீ கரிப்பீரர்னால் அதனை உண்டாக்கிக்கொண்டு அழகுறம்புவேன்; அங்ஙன மல்லாவிடினும் உம்மைப்போன்ற சிறந்தகாதலனது கருணை நல்வினைப்பய னுற் கைகூடிவிடுமானால் அது விசேஷமேயொழிய இந்தஒருறுப்புக்குறை மற்றைப்பெண்ணிலக்கணவமைதியாலாம் மேன்மையைத் தாழ்வுபடுத்த வல்லதாகுமோ? அன்றியும், அளவுக்குமேல் மூக்கு நீண்டிருக்காலும் மகளி ரிலக்கணத்துக்குக் குறைவன்றே? என்றனளென்பதாம். பி - ம்:—[1]போற் றுவிரேல், போக்கலிரேல், போக்குவிரேல். [2]கூடும். [3]பழிப்பு. [4]உயர்ந்த.(கூடுசெ)

கூக. விண்டாரே யல்லாரோ வேண்டாதார் [1]மனம்வேண்டி
ணுண்டாய காதலினென் னுயிரென்ப தமதன்றே
கண்டாரே காதலிக்குங் கட்[2]டழகும் விடமன்றே
கொண்டாரே கொண்டாடு முருப்பெற்றுற் கொள்ளீரோ.

(இ - ள்.) விண்டாரே அல்லாரோ - மனம்வேறுபட்டவரல்லரோ, வே ண்டாதார் - விரும்பப்படாதவர்? (அங்ஙனமன்றி), உண்டாய காதலின் - (உமது மனத்தில்) உண்டான அன்போடு, மனம் வேண்டின்-(உம்முடைய) மனம் விரும்பினுல், என் உயிர்என்பது உமது அன்றே-எனதுயிர் உமக்கே உரியதாமன்றே? கண்டாரே காதலிக்கும் கட்டழகும் - பார்த்தவர்யாவரும் (பார்த்தமாத்திரத்தில்) விரும்பும்படியான மிக்கழகும், விடம் அன்றே - விஷம்போலக் கொடியதன்றே? கொண்டாரே கொண்டாடும் உரு பெற் றுல் - மணஞ்செய்துகொண்டவர்மாத்திரமே கொண்டாடத்தக்க வடிவத்தை (நான்) பெற்றுல், கொள்ளீரோ - அங்கீகரிக்கமாட்டீரோ; (எ - று.)

மனம்ஒற்றுமைப்படாமல் வேற்றுமைப்பட்டிருப்பின் எவ்வளவுஅழகு டையாரும் விரும்பப்படாதவரேயாவர்; அங்ஙனமன்றி, மனம்ஒற்றுமைப் பட்டிருந்தால், வடிவழகிற் குறைவுபட்டாரும் உரியராகக் கொள்ளப்படுவர். ஆனதுபற்றி, உம்மிடத்து மிக்கதாதல்கொண்டுள்ள என்னிடத்து நீரும் கா தல்கொள்வீராயின், யான் உமக்கு உயிருமுட்பட உரியளாதற்குத் தட்டில் லை; அன்றியும், "பார்யா ரூபவதீ ஶத்ரூ:" என்றபடி மனைவி கட்டழகை யுடையவளாயிருத்தல், கொடுந்தீங்கு தருவதொன் றன்றே? அங்ஙனம்கண் டவரும் விரும்பும்படியன்றிக் கொண்ட நீர் விரும்புதற்குவேண்டியபடி நான் அழகியவடிவுகொண்டால், அவ்வளவுமாத்திரமே என்னை ஏற்றுக்கொள்ளு தற்குப் போதாதோ? என்றனளென்பதாம். பி-ம்:—[1]நான். [2]அழகு. (கூ(

கூக உ. சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
தவனு[1]மடுத் தொன்றுகி னின்றன்ன வுருவோனே
புவனமனைத் தையு[2]மொருதன் பூங்கணையா லுயிர்வாங்கு
மவனுமுனக் கிளையானே [3]விவனேபோ [4]லருளிலனுல்.

(இ - ள்.) சிவனும்—, மலர் திசைமுகனும் - தாமரைமலரில் தோன்றிய பிரமனும், திருமாலும் - ஸ்ரீமகாவிஷ்ணுவும், தெறு குலிசத்தவனும் - (பகை வரை) அழித்திடுகிற வச்சிராயுதத்தையுடைய இந்திரனும், அடுத்து - சேர்ந்து, ஒன்று ஆகி நின்று அன்ன - ஒருவடிவங்கொண்டு நின்றுற்போன்ற, உருவோனே - சிறந்தவடிவமுடையவனே!—புவனம் அனைத்தையும் - சகல லோகங்களிலுமுள்ள பிராணிகளையும், ஒரு தன் பூ கணையால் - ஒப்பற்ற தனது மலரம்புகளால், உயிர் வாங்கும் - மரணவேதனைப்படுத்துகிற, அவனும்-அம்மன்மதனும், உனக்கு இளையானே - உனக்குத் தம்பியோ? இவனே போல் அருள் இலன் - இந்தஉனதுதம்பிபோலவே (என்னிடம்) கருணையில்லாதவனு யிருக்கின்றான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

திரிமூர்த்திகளும் இந்திரனும் சேர்ந்து ஒருவடிவமாகி நின்றுற்போன்ற வடிவமுள்ளவனேயென விளித்தது-பராக்கிரமமும், ஒழுக்கமும், ஆட்சியும், பொலிவும் விளங்கப்பெற்ற தோற்றமுடையவனே யென்றபடி. இலக்குமணன் கண்ணேட்டமில்லாமல் தன்னைவருத்தியதுபோல மன்மதனும் மிக வருத்துகின்றன னென்பாள், 'அவனு முனக்கிளையானே'என்றாள். பி-ம்:— [1]எழுந்து. [2]பொருவன். [3]அவனேயோ, இவனேயோ. [4]அருளிலால். (உநிசு)

வேறு.

கஉஉ. பொன்னுருவப் பொருகழலீர் [1]புழைகாண மூக்கரிவான் பொருள்வே றுண்டோ, [2]வின்னுருவ மிதுகொண்டிங் கிருந் தொழியு நம்மருங்கே யேகா ளப்பாற், பின்னிவளே யயலொருவர் [3]பாராரென் றேயிரந்தீர் பிழைசெய் தீரோ, வன்னதனை யறிந்தன்றே வன்பிரட்டி [4]பூண்டதுகா னறிவி லேனே.

(இ - ள்.) பொன் உருவம் பொரு கழலீர் - பொன்மயமான அழகிய போர்க்குரிய வீரக்கழலுடையவர்களே!—'இன் உருவம் இது கொண்டு இங்கு நம் மருங்கே இருந்தொழியும் - (நாம் இவளை அங்கபங்கப்படுத்திவிட்டால்) இனிய இந்தவடிவத்தைக்கொண்டு இவ்விடத்தில் நமதுஅருகிலேயே எப்பொழுதும் இருந்துதீர்வாள்: அப்பால் ஏகாள் - (நம்மிடத்தைவிட்டு) அயலிற் செல்லமாட்டாள்; பின் இவளை அயல் ஒருவர் பாரார் - (அங்கபங்கமடைந்த) பின் இவளை வேறொருவரும் விரும்பிநோக்கார்,' என்றே - என்று எண்ணியே, அரிந்தீர் - அறுத்தீர்கள்; (ஆதலால்), பிழை செய்தீரோ - (எனக்கு நீங்கள்) துன்பஞ்செய்தீர்களோ? [அல்லீர் என்றபடி]; (இவ்வாறன்றி), புழை காண - பெருந்துளைபடும்படி, மூக்கு அரிவான் - (எனது) மூக்கையறுத்தற்கு, பொருள் வேறு உண்டோ - (நான் இப்பொழுது சொல்லுங் காரணமொன்றுமிழிய) வேறோர் உத்தேசம் உள்ளதோ? [இல்லையென்றபடி]; அன்னதனை அறிந்து அன்றே - அந்தஉட்கருத்தை அறிந்தல்லவா, நான்—, அன்பு இரட்டி பூண்டது-முன்னினும் இருமடங்காக அன்பு கொண்டது; அறிவுஇலேனே - (இல்லாவிட்டால் என்னுடம்பையறுத்த உம்மிடம் முன்னினும் மிக்கஅன்புகொள்ளுதற்கு நான்) அறிவில்லாதவனோ?

'இவள் இப்படிப்பட்ட குறையற்ற பேரழகுடனே யிருந்திட்டால் இவளே வேறுயாரேனும் பார்த்து ஆசைகொள்ளக்கூடும்; அங்ஙனமன்றி, சிறிதுகுறையுண்டாம்படி ஒருசார் அங்கபங்கப்படுத்திவிட்டால் எவரும் இவளே விரும்பா ராதலால், எங்குஞ்செல்லாமல் இங்கேயே நம்மிடத்தில் என்றும்நிலைத்திருப்பள்' என்ற கருத்தினுலேயே அறுத்தீர்; இப்படி என்னிடம் காதல்பற்றி இதுசெய்தீ ரொழியப் பிழைபாடாகச் செய்தீரல்லீர்; அவ்வுட்கருத்தை நான் குறிப்பாக உணர்ந்ததனுலேயே முன்னிலும்மிகுதியாக உம்மிடம் காதல்கொண்டேன்; அங்ஙனம் உட்கருத்தையறியாவிடின், துரோகஞ்செய்தவரிடம் அதிகபாசம் வைக்கும்படியான அவ்வளவுபுத்தியில் லாதவளோ நான்? என்றன ளென்பதாம். பி - ம்:—[1]பிழைகாணீர். [2]என்னுருவைக்கைக்கொண்டீர். [3]பாராராமென. [4]கொண்டது.

இதுமுதல் இப்படலம்முடியுமளவு முள்ள பதினெரு கவிகள் - பெரும்பாலும் முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும், மற்றிரண்டும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அயுசீராசிரியவிருத்தங்கள்**. இவற்றில் ஈற்றுச்சீர், தேமாச்சீராகவே நிற்கும். (உடுஎ)

கூடீ. வெப்பழியா நெடுவெகுளி வேலரக்க ரீதறிந்து வெகுண்டு நோக்கி, னப்பழியா லுலகனைத்து நும்பொருட்டா லழிந்தன வா மறத்தை நோக்கி, யொப்பழியச் [1]செய்கில்லா ரூயர்குலத்துத் [2]தோன்றினேரு ருணர்ந்து நோக்கி,யிப்பழியைத் துடைத்துதவி யினி திருத்தி ரென்னெடுமென் றிறைஞ்சி நின்ரூள்.

(இ - ள்.) வெப்பு அழியா - உக்கிரத்தன்மை நீங்காத, நெடு வெகுளி - பெருங்கோபமுடைய, வேல் அரக்கர் - ஆயுதப்பயிற்சியில் வல்லவரான இராக்கதர்கள், ஈது அறிந்து - (நீர்செய்த) இச்செய்தியை உணர்ந்து, வெகுண்டு நோக்கின் - கோபங்கொண்டு விழித்துப்பார்க்கின் (அம்மாத்திரத்தால்), அ பழியால் உலகு அனைத்தும் நும் பொருட்டால் அழிந்தன ஆம்-(நீர் எனக்குத்தீங்குசெய்ததாகிய) அந்தக்குற்றத்தால் உலகத்துயிர்களெல்லாம் உங்களுக்காக அழிந்தனவாய்விடும்;உயர் குலத்து தோன்றினேர்-உயர்ந்த குலத்திற் பிறந்தவர், அறத்தை நோக்கி - தருமத்தை ஆலோசித்து, ஒப்ப அழிய செய்கில்லார் - (தங்களுக்காக உலகமெல்லாம்) ஒருங்கே அழியச் செய்யமாட்டார்; நோக்கி உணர்ந்து - (அந்த முறைமையை நீரும்) ஆராய்ந்து அறிந்து, இப்பழியை துடைத்து - (உமக்குநேரக்கூடிய) இந்தப்பழியை இல்லே யாக்கி, உதவி - நன்மைசெய்து, என்னெடும் இனிது இருத்திர் - என்னுடனே இனிமையாகக் கூடி வாழ்ந்திருப்பீர், என்று - என்றுசொல்லி, இறைஞ்சி நின்ரூள் - (இராமனே) வணங்கிநின்ரூள், (சூர்ப்பணகை); (எ - று.)

சாதாரணமாகவே சினந்துபொரு மியல்புள்ள அரக்கர்கள், நீர் எனக்குச்செய்த பிழையைக் கேட்டறிந்து உம்மையழித்தற்பொருட்டுக் கோபித்துப்பார்ப்பாராயின், அப்பார்வையின்கொடுமையாலே உம்மோடு உலகமுழுவதும் அழிந்திடும்; இப்படி தமதுபிழையால் உலகமுழுதையும் அழியச்செய்

தல் உயர்குலத்தோர்க்கு உரிய தருமமாகாது; ஆதலால், பழிப்புக்கு இடமில் லாதபடி வாழ்ந்திருப்பீர் என்று இராமனைச் சூர்ப்பணகை நமஸ்கரித்தனள் என்பதாம். எனது அன்பிற்காக என்னுடன்சேராதிருப்பினும் உலகத்தின் துன்பமின்மைப்பொருட்டாகவாயினும் என்னுடன் சேர்வீர் என்றாள்.பி-ம்:-- [1]செய்கிலீர். [2]தோன்றினீர். (உருஅ)

கருடு.—இதுமுதல் முன்றுகவிகள்-இராமன் சூர்ப்பணகையை வெருட்டலைக் கூறும்.

நா[1]டறியாத் துயரிழைத்த நவையரக்கி நின்[2]னன்னை தன்னை கல்குந்,தாடகையை யுயிர்கவர்ந்த சரமிருந்த தன்றியுநான் றவமேமற் [3]கொண்டு, [4]தோடகைய துறுமலர்த்தா ரிகலரக்கர் குலந்தொலைப் பான் றோன்றி நின்றேன், போடகலப் புல்[5]லொழுக்கை வல்லரக்கி யென்றிறைவன் புகலும் பின்னும்.

(இ - ள்.) [1]வல் அரக்கி - கொடிய ராக்ஷசியே! நாடு அறியா துயர் இழைத்த - உலகத்திலுள்ள சகல பிராணிகளுக்கும் (இதுவரையிலும்) அனு பவித்திராத கொடுந்துன்பத்தைச் செய்த, நவை அரக்கி - குற்றமுள்ள ரா க்ஷசியாகிய, நின் அன்னைதன்னை நல்கும் தாடகையை - உனது தாயைப் பெற்றவளான தாடகையை, உயிர் கவர்ந்த-உயிரை (உடம்பினின்று) பறித்த [கொன்ற], சரம் - அம்பு, இருந்தது - (என்னிடம்) உள்ளது; அன்றியும் - அதுவல்லாமலும், நான்—, தவம் மேல்கொண்டு - தவத்தை மேற்கொண்டு, தோன் றகைய துறு மலர் தார் இகல் அரக்கர் - தோள்வலிமையுள்ளவர் களும் நெருங்கியபூமாலையையுடையவர்களும் பகைமைக்குணமுள்ளவர்களு மான இராக்கதரது, குலம் - வம்சத்தை, தொலைப்பான் - முற்றும் அழிக் கும்பொருட்டு, தோன்றி நின்றேன் - பிறந்துநின்றேன்; (ஆதலால்), புல் ஒழுக்கை - (உனது) அற்பநடத்தையை, அகல போடு - நீங்குமாறு விட்டிடு', என்று - என்று சொல்லி, இறைவன் - ஸ்ரீராமன், பின்னும் புகலும் - மீண்டுஞ் சொல்வான்; (எ - று.)—அதனை, அடுத்தஇரண்டுகவிகளிற் காண்க.

உலகத்துக்குப் பெருந்துன்பஞ்செய்த கொடிய ராக்ஷசியான தாட கையை அழித்த அம்பு என்னிடம் உள்ளதனாலும், தவவொழுக்கத்தை மேற் கொண்டு அதனை நெடுங்காலம் மிகுதியாகச்செய்து அதனாற் பெற்ற வரங் களின் பலத்தாற் செருக்கியுள்ள அரக்கரைக் குலத்தோடுதொலைத்தற்குப் பிறந்தவன் நானுதலாலும், நீ இத்தீயொழுக்கத்தை யொழித்து உடனே அப்பாற் செல்லாவிடின் உன்னைக் கொன்றிடுவே னென்று சொல்லி அச்ச முறுத்தினன் என்பதாம். இதனால், நான் பெண்கொலை செய்யமாட்டே னென்று கருதவேண்டா என்றும், மிக்கவலிமையுள்ள உன்னைக் கொல்ல வல்லேன் என்றும் வெளியிட்டவாறு. சுகேதுவின் மகளும் சுந்தனது மனை வியு மான தாடகை கணவனையிழந்தபின் மைத்தரான சுபாகுமாரீசரோடு அரக்கத்தன்மையையடைந்து இராவணனது மாதாமகனான சுமாலியைச் சார்கையில் சுபாகுமாரீசர் அவனுக்கு அபிமானபுத்திரராய்ப் பிற்காலத்தில்

இராவணனுக்கு மாதுலமுறைமையுண்டனர் என்ற வரலாறுபற்றி, இங்கே, சுபாகுமாரீசரது தாயான தாடகையை இராவணனதுதாயானகேகசியின் தாயென்று அன்புமிகுதியைக் காட்டும் ஒற்றுமைநயம்படக் கூறிய தென்க. பி-ம்:—[1]அயரத்;அறியத். [2]அவ்வைதெளவைநல்கா. [3]கொண்ட. [4]தோடசை யத். [5]ஒழுக்கின். (நூடுக)

கஉசூ. தரையளித்த தனிநேமித் தயரதன்றன் புதல்வரியாங் தாய்சொற் றுங்கி, விரையளித்த கான்புகுந்தேம் வேதியரு மாதவ ரும் வேண்ட[1]நீண்டு, கரையளித்தற் கரியபடைக் கடலரக்கர் குலந் தொலைத்துக் கண்டாய் பண்டை, வரையளித்த குலமாட நகர்[2]புகு வே மிவைதெரிய மனக்கொ ளென்றான்.

(இ - ள்.) யாம் - நாங்கள், தரை அளித்த தனி நேமி தயரதன் தன் புதல்வர் - நிலவுலகமுழுவதையும் அரசாண்ட ஏகசக்கராதிபத்தியத்தை யுடைய தசரதசக்கரவர்த்தியினது குமாரர்: தாய் சொல் தாங்கி - (எமது) தாய்மாருள் ஒருத்தியான கைகேயியின் கட்டளையை ஏற்றுக்கொண்டு, விரை அளித்த கான் புகுந்தேம் - பரிமளத்தைமிகுதியாகவீசுகிற காட்டிற் சேர்ந்தோம்; (இங்கு), வேதியரும் மா தவரும் வேண்ட - (தண்டகாரணியத் தில்வசிக்கின்ற) வேதத்துக்குரியரான பிராமணர்களும் பெருந்தவமுடைய ரான முனிவர்களும் வேண்டியதனால், நீண்டு கரை அளித்தற்கு அரிய படை கடல் அரக்கர் குலம் தொலைத்து கண்டாய் - மிகப்பரந்து எல்லே யமைத் தற்குஅருமையான சேனைசமுத்திரத்தையுடைய இராக்கதரது வம்சத்தை முற்றும் அழித்தபின்பே, பண்டை - பழமையான [தொன்றுதொட்டு எங்க ளுக்குஉரியதான], வரை அளித்த குலம் மாடம் நகர் - மலைகளே அன்போடு ஒப்பாகக்கொண்ட சிறந்தமாளிகைகளையுடைய அயோத்தியா நகரத்தில், புகுவேம் - சேர்வோம்; இவை - இவற்றை, தெரிய மனம் கொள் - விளங்க மனத்திற்கொள்வாய், என்றான்-என்று சொன்னான், (ஸ்ரீராமன்); (எ - று.)

நாங்கள் பூலோகமுழுவதையும் தனதுஓராணுகையின்கீழ் அரசாண்ட தசரதசக்கரவர்த்தியின் குமார ரென்றும், மாதிருவாக்கியபரிபாலநத்துக் காக வனம்புகுந்தோ மென்றும், அங்ஙனம் புக்கவிடத்திலே முனிவர்கள் பலரும் பிரார்த்தித்ததனால் அளவிடற்கரிய அரக்கர்குலத்தைத் தொலைத் தே எமதுநகர்க்கு மீள்வதாக யாம் சங்கற்பித்துள்ளோ மென்றும், இவ்விய ல்புகளெல்லாம் நன்றாகமனத்திற்கருதி நீ எமதுமுன்னிலையில் நில்லாது சென்று பிழைப்பா யென்றும் கூறினன் என்பதாம். கீழ் 'அரக்கர்குலக் தொலைப்பான் தோன்றிநின்றேன்' என்று தொகுத்துச்சுட்டியதை இங்கு வகுத்துக்காட்டியவாறு. பி - ம்:—[1]நின்ற. [2]புகுவதிது. (நூசு)

கஉ. மெறித்தாரை[1]செல்லாத நிருதரெதிர் நில்லாதே நெடிய தேவர், மறித்தாரீண்[2]டிவரிருவர் மானிடவ ரென்னுது வல்லி யாகின், வெறித்தாரை வேலரக்கர் விறலியக்கர் முதலினார்நீ மிடலோ

ரென்று, குறித்தாரை யாவரையுங் கொணருதியே னின்னெதிரே கோறு மென்றான்.

(இ - ள்.) 'நெறி தாரை செல்லாத - நல்லொழுக்கத்தின் வழியிலே நடவாத, நிருதர் - இராக்கதரது, எதிர் - எதிரில், நில்லாதே - நிற்கமாட்டாமல், நெடிய தேவர் - சிறந்த தேவர்களும், மறித்தார் - தோற்றழிந்தார்: ஈண்டு இவர் - இங்குள்ள இவர், இருவர் மானிடவர் - இரண்டு சாதாரண மனிதர்கள்,' என்னுது - என்று எளிதாகநினையாமல்,—வல்லே ஆகின் - நீ வல்லவளாஞல், வெறி தாரை வேல் அரக்கர் - கோபாவேசத்தையும் கூர் நுனியுடைய வேலாயுதத்தையுமுடைய இராக்கதருள்ளும், விறல் இயக்கர் முதலினர் - வலிமையையுடைய யக்ஷர் முதலியோரிலும், மிடலோர் என்று நீ குறித்தாரை யாவரையும் - வலிமையுடையோரென்று உன்ஞற் குறிக்கப் பட்டவ ரெல்லோரையும், கொணருதி எல் - அழைத்துக்கொண்டுவருவையாஞல், நின் எதிரே கோறும்-உனது முன்னிலையில்தானே(அவர்களையெல்லாம்) கொன்றிடுவோம், என்றான்-என்றுங் கூறினன், (இராமன்); (எ-று.)

'அரக்கரெதிரில் தேவர்களனைவருமே அழிந்தனர்; இம்மனித ரெவ்வளவு?' என்று அலட்சியமாக எண்ணுமென்பது, முன்னிரண்டடியின் பொருள். இயக்கர் முதலினரையுஞ் சேர்த்துச் சொன்னது. இவளது முதல் தமையனான குபேரன் யக்ஷர்களுக்கு அரசனுதல்பற்றி யென்க. பி - ம்:— [1]சொல்லாத. [2]இருவரிவர். (உசுக)

கஉஅ.—இதுமுதல்நான்குகவிகளும் - அரக்கி தன்னை மணஞ்செய்து கொள்ளுமாறு பின்னும் வற்புறுத்தலைத் தெரிவிக்கும்.

கொல்லலா மாயங்கள் குறித்தனவே கொள்ளலாங் கொற்ற முற்ற, வெல்லலா [1]மவரியற்றும் [2]வினையெல்லாங் கடக்கலா மேல் வாய் நீங்கிப்,பல்லெலா முறத்தோன்றும் பகுவாயா ளென்னுது பார்த்தி யாயி, னெல்லெலாஞ் சுரந்[3]தளிக்கு நீர்நாட கேளென்று நிருதி கூறும்.

(இ - ள்.) நெல் எலாம் சுரந்து அளிக்கும் நீர் நாட - நெல்முதலிய தானியங்களையெல்லாம் மேல்மேல் மிகுதியாகவிளைக்கின்ற நீர்வளமுள்ள நாட்டையுடையவனே! கேள் - (யான் சொல்வதைக்) கேட்பாயாக; மேல் வாய் நீங்கி - வாயின் மேலிடத்தை விட்டு, பல் எலாம் உற தோன்றும் - பற்களெல்லாம் நன்றாய் வெளித்தோன்றப்பெற்ற, பகு வாயாள் - பிறந்த பெரியவாயையுடையவள் (இவள்), என்னுது - என்று இகழாமல், பார்த்தி ஆயின் - (என்மீது) அன்புநோக்கம்வைப்பையாஞல்,—கொல்லல் ஆம் - (அரக்கராதியோரை) அழிக்கலாம்: மாயங்கள் குறித்தனவே கொள்ளல் ஆம்- (அவர்களுடைய) மாயைகளை உள்ளபடியே அறிந்துகொள்ளலாம்: கொற்றம் முற்ற வெல்லல் ஆம்-(அவர்களின்) வெற்றியை முழுவதுஞ் சயித்திடலாம்: அவர் இயற்றும் வினை எல்லாம் கடக்கல் ஆம் - அவர்கள் செய்யுங் கொடுந்

தொழில்கட்கெல்லாம் உள்ளாகாது தப்பலாம், என்று - என்றுசொல்லி, நிருதி-அரக்கியான சூர்ப்பணகை, கூறும்-(மீண்டுஞ்) சொல்வாள்; (எ-று.)— அதனை, அடுத்த மூன்றுகவிகளிற் காண்க.

மிக்கவலிமையுடையவளான என்னை விகாரரூபமுடைய ராக்ஷசியென்று அலட்சியஞ்செய்யாமல் அங்கீகரிப்பாயானால், எனதுஉதவியால் அரக்கரது மாயைகளையெல்லாம் அறிந்து அவர்கள்செய்யுங் கொடுஞ்சூழ்ச்சிகளுக்கெல்லாந் தப்பி அவர்களைக் கொல்லுதலும் வெல்லுதலுஞ் செய்திடலா மென்றனள் என்பதாம். இவ்வாக்குத்தத்தஞ்செய்தது நிறைவேறுதற்கும் என்னை மணத்தல் இனியஉபாயமா மென்று எடுத்துக்காட்டினள். பி-ம்:—[1]மற்றியற்றும். [2]வினையமெலாம். [3]உதவும். (ருகூஉ)

கருகூ. காம்பறியுந் தோளாளைக் கைவிடு வென்னினும்யான் மிகையோ கள்வ, ராம்பொறியி லடலரக்க ரவரோடே செரு[1]ச்செய் வானமைந்தீ ராயிற்,றும்பொறியிற் பலமாயந் தரும்[2]பொறிக ளறிந்த வற்றைத் தடுப்பெ னன்றே, பாம்பறியும் பாம்பினகா லெனமொ றியும் பழமொழியும் பார்க்கி லீரோ.

ஐந்துசுவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) காம்பு அறியும் தோளாளை-இளமூங்கிலையொத்த தோள்களையுடைய இவளை, கைவிடுவென்னினும் - விட்டிடமாட்டீராயினும், யான் மிகையோ - நான் மிகுதியோ? கள்வர் ஆம்-வஞ்சகர்களாகிய, பொறி இல் - நல்லறிவில்லாத, அடல் அரக்கரவரோடே - வலிய அந்த அரக்கர்களுடனே, செரு செய்வான் - போர்செய்தற்கு, அமைந்தீர் ஆயின் - சித்தராணீராஞல், பொறியின் - பஞ்சேந்திரியங்கள்போல, பல மாயம் தரும் - அனேகவஞ்சனைகளைச் செய்யவல்ல, பொறிகள்-(அவ்வரக்கர்களது) யந்திரங்களை, அறிந்து - (நான்) அறிந்திருத்தலால், அவற்றை தடுப்பென் அன்றே - அவற்றைத் தடுத்து உதவுவேனன்றே; பாம்பின கால் பாம்பு அறியும் என மொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ - 'பாம்பின்காலைப் பாம்பே அறியும்' என்று (உலகத்தார்யாவரும்) சொல்லுகிற தொன்றுதொட்ட வார்த்தையையேனும் பொருள்செய்கின்றீரில்லையோ? (எ - று.)

'பாம்பின்காலை பாம்பே அறியும்' என்ற முதுமொழியின்படி அரக்கரது சூழ்ச்சிகளை அரக்கியாகிய யானே நன்குஅறிவே ஞதலால், அரக்கரைக் கொல்லச் சங்கற்பித்த உமக்கு நான் நல்லதுணையாவேன்; ஆதலால், அவளை விட்டிடீராயினும் என்னையுங் கூடவே அங்கீகரிக்கலாகாதா?'என்றன ளென்பதாம். குறித்த இலக்குத் தவறுமல் மனத்தையியழுத்துத் தம்வசப்படுத்திக் கெடுக்கிற இந்திரியங்கள் அங்ஙனஞ்செய்யுங்கொடியயந்திரங்களுக்கு ஏற்ற உவமையாயிற்று. 'பாம்பின்காலைப்பாம்பேயறியும்' என்றுபழமொழி யுள்ளதனை "புலமிக்கவரைப்புலமை தெரிதல், புலமிக்கவர்க்கே புலனும் - நலமிக்க, பூம்புனலூர பொதுமக்கட்காகாதே, பாம்பறியும் பாம்பினகால்"என்ற பழமொழிச்செய்யுளாலும் அறிக. பாம்பின - ஆரும்வேற்றுமைவிரி. பி-ம்:— [1]மலைய. [2]பொறியின். (ருகூகூ)

கசஅ. உளங்[1]கோட லுணியிழைத்தா [2]ளுளளொருத்தி யென்னு
தியே னிருத ரோடுங், களங்கோடற் குரியசெருக் கண்ணியக்கா
லொருமூவேங் கலந்த [3]காலைக், குளங்கோடு [4]மென்றெய்திக் கொடி
யதிறல் வீரர்தமைக் கொன்ற பின்ன, ரிளங்கோவோ டெணியிருத்
தி [5]யிருகோளுஞ் சிறைவைத்தாற் கிளை[6]யா ளென்றே.

(இ - ள்.) உணை உளம் கோடல் இழைத்தாள் ஒருத்தி உளள் என்னுதி ஏல் - உன்னை மனத்திலேவிரும்பிக் கொழுநனாகக்கொள்ளுதலேச்செய்த ஒருத்தி உடனிருக்கிறா ளென்று கருதுவாயானால்,—திருதரோடும்-(எதிர்த்து வருகிற) அரக்கருடனே, களம்கோடற்கு உரிய செரு - போர்க்களத்தைச்சொந்தமாக்கிக்கொள்ளுதற்குரிய போரை, கண்ணியக்கால் - (நீ) செய்யநினைத்தால், (அப்போது), ஒரு மூவேம் கலந்த காலை-(நீங்களிரண்டு பேரும் நானுமருத்தியு மாகிய) நாம் மூன்றுபேரும் ஒருங்குசேர்ந்தபொழுது, 'குளம் கோடும் - (போர்க்களத்தை) இரத்தவெள்ளமாகச்செய்து வெற்றி கொள்வோம்,' என்றுஎய்தி - என்றுவந்துசேர்ந்து, கொடிய - கொடுமையைக் காட்டுபவரான, திறல் - வலிமையமைந்த, வீரர்தமை-அவ்வீராக்கதவீரரை, கொன்றபின்னர் - (நாம்) கொன்றபிறகு, இரு கோளும் சிறை வைத்தாற்கு இளையாள் என்று-(சூரியசந்திரரென்னும்) இரண்டுகிரகங்களையுஞ் சிறையிலே வைத்த இராவணனுக்கு இளையவளாகிய யான் (அவனுக்குப்) பின்னிடே னென்றுகொண்டு,இளங் கோவோடு-(உனது) தம்பியுடனே, எனை இருத்தி-என்னை (நீ) வாழவைப்பாய்; (எ - று.)

'மிக்கஅன்போடு என்னைக் காதலித்துள்ள மனைவியொருத்தி எனக்கு இருக்கையில் உன்னையுங் கூட அங்கீகரித்தல் தகுதியன்று'என்று நீ என்னை மணம் மறுப்பையானால், இராவணன்தங்கையான யான் வலிமையில் இராவணனினுங்குறைந்தவளல்ல ளென்பதை நாம் மூன்றுபேரும் ஒருங்குகூடி எளிதில் அரக்கரைவென்றிடுதலாலறிந்து உன்தம்பிக்காயினும் என்னைமணஞ் செய்விப்பாயென்றன ளென்பதாம். இரட்டுறமொழிதலால், 'இளையாள்' என்பதற்கு - உடன்பாட்டுக்குறிப்பு வினையாலணையும்பெயரும், எதிர்மறைத் தொனிலேமுற்று மாக இருபொருள் ஒருங்கே கொள்ளப்பட்டன. சூரியசந்திராதி தேவரனைவரையும் வென்று அவரவர்வசமில்லாதபடி தன்வசமாக்கிக் கீழ்ப்படுத்தியதுபற்றி,இராவணனை 'இருகோளுஞ்சிறைவைத்தான்'என்றது.

பி ம்:—[1]கோடற்கன்பு, கோடாத்துணை. [2]உன்பு. [3]போது. [4]என்றிதுவுமுறு கோளேயென்றுருங்குறிக்கோளில்லா. [5]இருத்தின். [6]இளையேனென்றுள். ()

கசக. பெருங்குலா வுறுநகர்க்கே யேகுநாள் வேண்டுமுருப்
பிடிப்பே னன்றே, லருங்கலா [1]முற்றிருந்தா னென்னினுமீங் கிளைய
வன்ரு னரிந்த நாசி, யொருங்கிலா விவளோடு [2]முறைவேனே வெ
ன்பானே லிறைவ வொன்று, மருங்கிலா தவளோடு மன்றே[3]நீ நெ
டுங்காலம் வாழ்ந்த தென்பாய்.

(இ - ள்.) பெருங் குலாவுறு நகர்க்கே எகும் நாள்-பெரிய கொண்டாட்டமிக்க நகரத்துக்கு (நீங்கள்) மீண்டுசெல்லுங்காலத்தில், வேண்டும் உரு பிடிப்பேன்-(எனது மாயாசக்தியால்) வேண்டியவடிவத்தைக் கொள்வேன்; அன்றேல் - அங்ஙனமல்லாவிடின்,—ஈங்கு - இப்பொழுது, இளையவன் - (உனது) தம்பி, அருங் கலாம் உற்று இருந்தான் என்னினும்-நீங்கிய கோபத்தையுடையனுயிருந்தானினும், அரிந்த நாசி ஒருங்கு இலா இவளோடும் உறைவேனே என்பானேல் - அறுபட்டமூக்குமுழுவதுமில்லாத இவளுடன் நான்கூடிவாழ்வேனேவென்று குறைகூறுவானுயின்,—இறைவ-தலைவனே! மருங்கு ஒன்றும் இலாதவளோடும் அன்றே நெடுங்காலம் வாழ்ந்து என் பாய் நீ-'இடைசிறிதும் இல்லாதவளோடன்றே வெகுகாலமாய் (நான்) கூடி வாழ்ந்துவருவதும்' என்று நீ (அவனுக்கு ஏற்ற சமாதானங் கூறுவாய்.

நகரத்துக்குச் செல்லவேண்டுங்காலத்தில் மாயையால் வேண்டியவடிவம்எடுத்துக்கொள்வேன்;அதுவன்றி, இப்பொழுது உன்தம்பி நீ கூறுதலால் என்னிடம் மாறுபாடுநீங்கி என்னே மணஞ்செய்தற்கு ஒருசார் உடன்படினும், 'மூக்கென்னும் ஓர்உறுப்பு முழுவதும் இல்லாதவளோடு நான் சேர்ந்துவாழ்வேனே?' என்று ஒருசார் தடைகூறுவானுயின், 'நான் இடையென்னும் ஒருறுப்பு முழுவதும்இல்லாதவளோடு நெடுங்காலமாய்க் கூடிவாழ்கிறேனே, நீ வாழத் தடையென்ன?'என்று தக்கவிடையளித்து அவனே உடன்படுத்துவா யென்றனள் என்பதாம். இங்குச் சீதையின் இடைநுட்பம் நன்குவிளங்கும். பின்னிரண்டடியால், சூர்ப்பணகையினது சமயோசிதமான கற்பனேச்சமத்காரரூபம் தோன்றும். **பி-ம்:**—[1]உற்றிருந்தாளென்னலுமாம். [2]உறைவதோ. [3]நாம். (கூகூடு)

கசஉ.—இதுவும், அடித்தகவியும் - இராமலக்குமணர் அவளைக் கொல்லுமாறு ஆலோசிக்க, சூர்ப்பணகை கரனைவரவழைப்பேனென்று சொல்லுதலைக் கூறும்.

என்றவண்மே லிளையவன்ரு னிலங்கிலைவேல் கடைக்கணியா
லிவளை யீண்டு,கொன்றுகளை யேமென்ரு னெடிதலைக்கு மருளென்
கொல் கோவே யென்ன, நன்றதுவே யாமன்றே போகாளே லாக
வென நாதன் கூற, வொன்றுபிவ ரெனக்கிரங்கா ருயிரிழப்பே னிற்
கினென வரக்கி யுன்ரு.

(இ - ள்.) என்றவள்மேல்-என்றுசொன்ன அச்சூர்ப்பணகையின்மேல், (கடுங்கோபங்கொண்டு), இளையவன்தான் - இலக்குமணன், இலங்கு இலை வேல் கடைக்கணியா-விளங்குகிற இலைவடிவமான வேலாயுதத்தைக் கடைக் கண்ணைப்பார்த்து, 'இவளை—, ஈண்டு-இப்பொழுதே, கொன்று களையேம் என்ரால் - கொன்றுஒழித்திடோமானால், நெடிது அலைக்கும் - மிகவும்வருத்துவாள்; கோவே-தலைவனே! அருள் என்கொல்-(உனது) கட்டளை யாதோ?' என்ன - என்று (இராமனை) நோக்கிச்சொல்ல,—(அதுகேட்டு), நாதன்-தலைவனுன இராமன், 'அதுவே நன்று ஆம் - (நீ சொன்னபடி செய்

யும்) அதுவே மிகநல்லதாம்; போகான்எல் - (இனியும் அப்பாற்) செல்லாளா யின், ஆக - அங்ஙனமேசெய்ய அமையும்,' என - என்று, கூற-சொல்ல,— (அத்தச்சம்பாஷணையைக் கேட்டு), அரக்கி - சூர்ப்பணகை, 'இவர் எனக்கு ஒன்றும் இரங்கார் - இவர் என்னிடத்திற் சிறிதும் இரக்கங்கொள்ளார்; (ஆத லால்), நிற்கின் உயிர் இழப்பேன் - (இன்னுஞ் சிறிதுபொழுது நான் இங்கு) நின்றால் (இவர்களால்) உயிரையிழந்திடுவேன்,'என-என்று, உன்ஞ-எண்ணி, (எ - று.)—'போனாள்' என வருங்கலியோடு முடியும். அன்றே - தேற்றம்.

[1]என்றனள் மேல் என்ற பாடத்துக்கு, என்றனள்-என்றுசொன்னாள்; மேல் - அதன்பின்பு என்று பொருள்கொள்க. ஒன்றும் - ஒருவகையாலும் என்றலுமாம். பி - மீ:—[1]என்றலுமே. [2]வாள். (உசுசு)

கசஎ. ஏற்றகெடுங் கொடிமூக்கு மிருகாது முலையிரண்டு மிழந்து
ம் வாழ,வாற்றுவனேவஞ்சனையாலுமையுள்ள பரிசறிவா னமைந்த தன்றே, காற்றினிலுங் கனலினிலுங் கடியானைக் கொடியானைக் கரினை யுங்கள், கூற்றுவனே யிப்பொழுதே கொணர்கின்றே னென்றுசலங் கொண்டு போனாள்.

(இ - ள்.) 'ஏற்ற - அழகியதாயமைந்த, நெடு - நீண்ட, கொடி மூக்கு - கொடிபோன்ற மூக்கையும், இரு காதும்-இரண்டுகாதுகளையும், முலைஇரண் டும் - இரண்டுமுலைகளையும், இழந்தும் - (உங்களால்) இழந்தபின்பும், வாழ ஆற்றுவனே - (உங்களுடன்கூடி) வாழ்ந்திருக்கப் பொறுப்பேனே? உமை உள்ள பரிசு அறிவான் வஞ்சனையால் அமைந்தது அன்றே - (நான் மீண்டு வந்துகூறியது முழுவதும்) உங்களியல்பை உள்ளபடி யறியும்பொருட்டு வஞ்சனையாகச் செய்ததன்றே? காற்றினிலும் கனலினிலும் கடியானை கொடியானை - காற்றைக்காட்டிலும் விரைவுள்ளவனும் நெருப்பைக்காட்டி லும் கொடுமையுள்ளவனு மான, கரனை—, உங்கள் கூற்றுவனை-உங்களுக்கு யமனுகும்படி, இப்பொழுதே கொணர்கின்றேன்-இப்பொழுதே அழைத்துக் கொண்டுவருகிறேன்', என்று-என்றுசொல்லி, சலம்கொண்டு - தனியாகமுற் றின வைரங் கொண்டு, போனாள்-(சூர்ப்பணகை) சென்றிட்டாள்; (எ - று.)

'காற்றினிலுங் கனலினிலும் கடியானைக் கொடியானை' என்பது - காற் றினிலுங்கடியானை, கூற்றினிலுங்கொடியானை என்று முறையே சென்று இயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள். (உசுஎ)

தகாதகாரியத்திற் பிறவேஇத்தவர்க்குத் தகுதண்டனை சான்றோராற் செய்யப்படு மென்பதும், அங்ஙனஞ்செய்யுமிடத்து இன்றியமையாதபொழு தன்றி மற்றையபொழுது சான்றோர் கொடியபெண்ணையுங் கொலைசெய் யத்துணியா ரென்பதும், பெண்கொலைதகுதியின்றென்ற காரணத்தால்மாத் திரமேயன்றிக் கரன்முதல் இராவணனீறாகக் கொடியஅரக்கரையெல்லாந் தொலைத்தற்கு ஒருதூதாகஅமைதற்பொருட்டும் சூர்ப்பணகையை அவர்கள் உயிரோடுவிட்டிட்டன ரென்பதும் விளையாட்டு வினையாய்முடியும் என்ப தும் முதலியன இப்படலத்தில் வெளியாம்.

இராமன் மனைவியோடும் தம்பியோடும் பஞ்சவடியில் வசிக்கையில், முன்பனிக்காலம் வந்தவளவிலே, சூர்ப்பணகை வந்துஅப்பெருமானழகைக் கண்டு காமமயக்கங்கொண்டு அடுத்து விஞவி இன்ஞனென்று அறிந்து கொண்டு தன்னே இன்ஞளென்று தெரிவித்துத் தன்வேட்கையை வெளிப் படையாகக்கூறித் தன்னே மணஞ்செய்துகொள்ளும்படி பலவித மாய்ச் சொல்ல, அதற்கு உடன்படாமல் இராமன் விளையாட்டாய் 'மனைவியுட னிருக்கிற என்னே நீ மணஞ்செய்துகொள்ளுதலில் விசேஷமில்லே; மனேயா ளுடன்கூடியிராத என்தம்பியை மணஞ்செய்துகொண்டு சக்களத்தியில்லா மல் வாழ்வாய்' என்று கூற, அங்ஙனமே அவள் இராமனேவிட்டு இலக்குமண னேயடைந்து, தன்னே மணஞ்செய்துகொள்ளவேண்டு மென்ன, அதற்கு அவ்விளேயநம்பி 'அடியவனுனஎனக்கு மனேவியாய் நீயும் அடியவளாவதிற் சிறப்புஎன்ன? தலேவனுன இராமனேயே கொழுஞுகப் பெறுவாய்' என்ன, அதுகேட்டு அவள் மீண்டும் இராமனேயடைந்து தன்னே மணஞ்செய்து கொள்ளுமாறு வற்புறுத்திக்கூறி 'இந்தமானுடமகளே இப்பொழுதே உண் டொழித்து மாற்றவளில்லாமல் உன்னுடன்கூடி வாழ்வேன்' என்று சொல் லிச் சீதையைப் பிடிக்கத் தொடர, அதுகண்டு கோபங்கொண்ட இராமன் தம்பியைநோக்கி 'கொடியவரோடு பரிகாசஞ்செய்தல் தக்கதன்று: இவளேத் தண்டிப்பாய்' என்றுநியமிக்க, இளேயபெருமாள் வாளேயெடுத்துக் காதையும் மூக்கையும் அறுத்திட, அவள் இரத்தம்பெருக்கிக்கொண்டு கதறியிரைச்ச லிட்டபடியே கரனேநோக்கிச் சென்றன ளென்று ஸ்ரீவால்மீகிராமாயணத் திற் வரலாறு கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் முதனூலோடு சிறிதுசிறிது வேறுபடுவது, ''முன்னேர் நூலின் முடிபொருங் கொத்துப், பின்னேன் வேண்டும் விகற்பங் கூறி, அழியா மரபினது வழிநூ லாகும்'' என்ற வழிநூலிலக்கணம்பற்றி இவ்வா சிரியராற் பிறநூல்மேற்கோள்கொண்டு அமைக்கப்பட்ட தென அறிக. இவ்வாறுவருவன பிறவற்றிற்கும் இங்ஙனமே கொள்க. இங்ஙனம்மாறுபட்ட இடத்து 'ஸ்ரீராமாயணத்தில் இல்லேயேயாகிலும், இதிகாசாந்தரபுராணஞ் களிலேயாதல் கல்பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளவேணும்' என ஆன்ருேர் அருளிச்செய்து அமைத்திருத்தல் உணரத்தக்கது. இதிகா சாந்தரமாகிய பாரதத்திலும், ஸ்காந்தம் கூர்மம் பாத்மம் முதலிய புராணங் களிலும் இராமசரித்திரம் சிற்சிலவிடத்து வேறுபடக்கூறியிருத்தல் காண்க.

சூர்ப்பணகைப்படலம் முற்றிற்று.

சூ—ஆவது கரன்வதைப்படலம்.

கரனது வதையைப்பற்றிக் கூறும் பாக மென்று பொருள். கரன் வதை யென்ற தொடர் - ஆறும்வேற்றுமைத்தொகை; இது இராமபிரான் கரனைக் கொன்றதை யுணர்த்துதலால், இங்கு ஆறனுருபு செயப்படுபொருளில் வந்த தென்க: முன்னும் பின்னும் இதுபோன்ற தொடர்மொழிகளையெல்லாம் இங்ஙனமே கொள்க. கரன் - கொடியவன்; வடசொல். வதை - கொலை; வதம் என்ற வடசொல் ஈறுதிரிந்தது. திரிசிரன்முதலியோரின் வதைசொல்லப்பட்டிருப்பினும் தலைமைபற்றிஇப்படலத்திற்குக் கரன்வதைப் படலமென்றுபெயராயிற்று. பலஏட்டுப்பிரதிகளில் முதல் கச ஏ - பாடல்கள் **திரிசிராவதைப்படலம்** எனவும், அவற்றிற்குமேல் உக - பாடல்கள் **தூடணன்வதைப்படலம்** எனவும், அவற்றிற்குமேற் படலம்முடியுமளவும் **கரன்வதைப்படலம்** எனவும் காணப்படுகின்றன.

கரன் - பூர்வீகராக்ஷசிரேஷ்டனான சுமாலியின்மகளும், இராவணன்தாயானகேகசியின்தங்கையும், இராவணனதுதந்தையான விசிரவமுனிவனையே கொழுநனாக அடைந்தவளும், இங்குக்காட்டிய இருமுறையாலும் இராவணனுக்குச்சிறியதாயு மாகிய கும்பீநசியின் குமாரன்; இராவணனுக்குத் தம்பி முறையில் நிற்பவன்; தண்டகாரணியத்திலே ஜநஸ்தானத்தில் சூர்ப்பணகைவசிப்பதற்கென்று ஏற்படுத்திய இராச்சியத்தில் அவளுக்குப் பாதுகாவலாகவும் அவள்இட்டகட்டளைப்படி நடப்பதற்காகவும் இராவணனால் நியமித்துவைக்கப்பட்ட பெரியஅரக்கர்சேனைக்கு முதற்றலைவன்.

இராமலக்குமணரிடத்துக் கறுக்கொண்டு சென்ற சூர்ப்பணகை கரன் காலில்விழுந்து புலம்பி முறையிட்டு 'வனத்தில்வந்த இரண்டுமனிதர்களுடன் நின்ற ஒருகட்டழகியை இராவணனுக்காக நான் எடுத்துச்செல்ல முயலுகையில் அவர்கள் என்னை இப்படி பங்கப்படுத்தினார்கள்' என்று சொல்ல, அதுகேட்டு அவன் சினந்து போருக்குஎழுகையில், பதினான்குஇராக்கதவீரர்கள் வந்து 'இத்தொழிலை எங்களுக்குக் கொடுத்திடு' என்றுசொல்லி அவனிடம்விடைபெற்றுச் சூர்ப்பணகை வழிகாட்டச் சென்று இராமனுடன் பொருது அழிய, அரக்கி மீண்டும்ஓடி நடந்ததைச்சொல்ல, கரன் மிகப்பெரியசேனையோடும் அறுபதுலக்ஷம்படைவீரர்களோடும் சேனைத்தலைவர் பதினால்வரோடும் தூஷணன் திரிசிரா என்னும் முக்கியசேனாதிபதிகளோடும் புறப்பட்டு, அப்பொழுது சம்பவித்த தீநிமித்தங்களை அகம்பனென்ற அறிவாளன் வந்து சொல்லித் தடுக்கவும் கேளாமல் செருக்கி விரைந்துவந்து போர்தொடங்குகையில், இராமன், பர்ணசாலையினின்று வெளிப்பட்டு, போர்க்கோலங்கொண்ட லக்ஷ்மணனை விலக்கிச் சீதைக்குக் காவலாக வைத்துவிட்டு, தான் தனியே யெதிர்த்துச்சென்று பெரும்போர்செய்து பலரையும் அழித்து, முடிவில் கரனைக்கொல்லும்பொருட்டு ஓரம்பு தொடுக்கத் தொடங்குகையில், இராமனது வில் முறிந்துவிடவே, இராமன் தன்கையைப் பின்னேநீட்டி வருணன்தந்த விஷ்ணுதனுசைப் பெற்று அதனை வளை

த்து நாணேற்றி அம்புதொடுத்து முன்னர்க் கரனது வலக்கையைத் துணித் துப் பின்பு கரனேயுந் துணித்து வெற்றிகொள்ள, அதுகண்டமாத்திரத்தில் அரக்கர்குலத்தையழிப்பவளான சூர்ப்பணகை இராவணனுக்குச் செய்தி கூறும்பொருட்டு இலங்கையைநோக்கி ஓடின ளென்பது, இப்படலத்தின் கதைச்சுருக்கம்.

க.—சூர்ப்பணகை சென்று கரன்காலில் விழுதல்.

இருந்த மாக்கரன் முளிணை யின்மிசைச்
சொரிந்த சோரியள் கூந்தல நிம்பெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேக மெனவிழுந் தாளரோ.

(இ - ள்.) சொரிந்த சோரியள் - பெருகுகிற இரத்தத்தையுடையவளும், கூந்தலள் - (விரிந்த) தலேமயிரையுடையவளும், தூம்பு என தெரிந்த மூக்கி னள் - மதகுபோலத் துவாரங்காணப்படுகிற மூக்கையுடையவளும், வாயி னள்-(பெரிய) வாயையுடையவளுமாகிய சூர்ப்பணகை,—மேல் செக்கர் விரி ந்த மேகம் என - மேலே செவ்வானம்படரப்பெற்ற மேகம்போல, இருந்த மா கரன் தாள் இணேயின் மிசை விழுந்தாள் - (ஜநஸ்தானத்தில்) இருந்த பெருமையுள்ள கரனுடைய இரண்டு கால்களின்மேல் விழுந்திட்டாள்;(எ-று.)

"கரனே யுங்கள் கூற்றுவனே யிப்போதே கொணர்கின்றேன்" என்று முதிர்ந்தவைரங்கொண்டு சென்ற சூர்ப்பணகை, அறுபட்டஉறுப்புக்களினி ன்று இரத்தம்பெருகத் தலேவிரிகோலத்தோடும் விகாரவடிவத்தோடும் பெரு வாய்திறந்து கதறிக்கொண்டு சபையில் வீற்றிருந்து கரனது கால்களில் விழு ந்தன ளென்பதாம். இவளது உடம்பின்மீது வழிகிற இரத்தப்பெருக்குக் கும் பரவிபசெம்பட்டமபிர்க்கும் செவ்வானத்தையும், கரியஉடம்புக்கு மேக த்தையும் உவமைகூறின ரென்க. 'சொரிந்த' என்பதைக் கூந்தலுக்கும், 'தூம்பெனத்தெரிந்த' என்பதை வாய்க்கும் அடைமொழியாக்கலாம். தூம்பு - நீர்வரும் பெருவழி. அரோ - ஈற்றசை. உவமையணி.

இதுமுதல் உக கவிகள் - கீழ்ப்படலத்தின் எஉ - ஆம் கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (ஈசுஅ)

உ.—சூர்ப்பணகை கதறுதலும், புரளுதலும்.

அழுங்கு நாளிதென் றந்தக ஞணேயாற்
றழங்கு பேரி யெனத்தனித் தேங்குவாண்
[1]முழங்கு மேக [2]முடித்தவெந் தீயினுற்
புழுங்கு நாக மெனப்புரண் டாளரோ.

(இ - ள்.) அழுங்கு நாள் இது என்று - (அவ்வரக்கர்கள்) அழிகிற தினம் இது என்று, அந்தகன் ஆணேயால் தழங்கு - யமனுடைய கட்டளே யால் (அடிக்கப்பட்டு) ஒலிக்கிற, பேரி என - முரசவாத்தியம் போல, தனி

த்து எங்குவாள்-தனியே(பேராரவாரம்படக்) கதறுபவளான சூர்ப்பணகை,— முழங்கு மேகம் முடித்த - ஆரவாரஞ்செய்கிற மேகம் வெளிப்படுத்திய, வெம் தீயினுல் - கொடிய நெருப்புமயமான இடியினுல், புழுங்கு - வெந்து வருந்துகிற, நாகம் என - பாம்புபோல, புரண்டாள்--; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இவள்கதறியழுகிற குரலோசை அங்குள்ள கரன் முதலிய அரக்கரை இராமபிரானுடன் உடனேபோர்செய்ய எழும்படி தூண்டி அவரனைவரும் அன்றைக்கே இறந்தொழிதற்குக் காரணமாவதுபற்றி, இராக்கதநாசகுசக மாக யமன் அறைவித்த பறையொலியை அக்கதறலுக்கு உவமைகூறினர்: **தன்மைத்தந்துறிப்பேற்றவணி.** இனி அழுங்குநாள் - (உலகத்துயிர்கள், அனைத்தும்) மடியும்ஊழிக்கால மென்பாரும் உளர். பின்னிரண்டடி-**உவமை யணி.** ஆணை - ஆஜ்ஞா: வடசொல். இடிக்குஅழிதல், நாகத்தின் இயல்பு. முடித்தல் - பிராணிகட்கு அபாயமுண்டாம்படி முதிரவெளியிடுதல். **பேரி** - வடசொல். **பி - மீ:**—[1]விழுங்கு. [2]இடித்த. (ஙசுக)

கூ.—கரன் சூர்ப்பணகையை 'இங்ஙனஞ்செய்தவர் யார்? என்றல்.

வாக்கிற் கொப்பப் புகைமுந்து வாயினு
ளேக்கிக் [1]கூசலர் நுன்னையித் தன்மையை
யாக்கிப் போனவ ரார்கொலென் றுனவன்
மூக்கிற் சோரி [2]முழீ இக்கொண்ட கண்ணினுள்.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அதுகண்டு), அவன் - கரன், வாக்கிற்கு ஒப்ப புகைமுந்து வாயினுன் - (பின்னே வெளிப்படுஞ்) சொல்லின் கடுமைக்குத் தகுதியாகப் புகை முந்திவெளிப்படுகிற வாயையுடையவனும், நோக்கி - (அத்தச்சூர்ப்பண கையைப்) பார்த்து, 'கூசலர் - கூச்சமில்லாதவர்களாய், நுன்னை இ தன் மையை ஆக்கி - உன்னைஇப்படிப்பட்ட தன்மையையுடையவளாகச் செய்து, போனவர் - சென்றவர், ஆர்கொல் - யாரோ?' என்றுன்-என்றுவினுவினன்: (அதுகேட்டு), மூக்கின் சோரி முழீஇக்கொண்ட கண்ணினுள்-மூக்கினின்று பெருகுகிற இரத்தத்தால் முழுகடிக்கப்பட்ட கண்களேயுடையவளான அச் சூர்ப்பணகை, (எ - று.)—'சொல்லினுள்'எனமேல் எ-ஆங்கவியோடுமுடியும்.

உள்ளிருந்து பற்றிமேலெழுகிற நெருப்புக்கு அறிகுறியாகப் புகை முந்தி மேற்கிளம்புதல்போலத் தான்சொல்லுங் கடுஞ்சொல்லின் அழற்சிக்கு ஏற் பக் கோபாக்கினியாலுண்டான புகை வெளிப்படும் வாயுடையா னென்பது, முதலடியின் கருத்து. நோக்கி என்று னென இயையும். நோக்கிக் கூசல ரென்று இயைத்து, உன்னைநோக்கியும் அஞ்சாமல் என்று உரைப்பாரும் உளர். நுன்-நிசைச்சொல். நுன்னை இத்தன்மையையாக்கி-இரண்டுசெயப்படு பொருள்வந்த வினை: வடமொழியில் த்விகர்மகர்த்தரிப்ரயோகமெனப்படும்: நுன்னை - உனக்குள்ள உருபுமயக்கமுமாம். இன்னுனென்னுமஅறியாமையின்,

'போனவர்' என்று பன்மையாற் கூறினன்; தூணியலாகாவிடத்துப் பன்மை யாற் கூறுதல், மரபு. முழீஇ - முழுகி என்னும் வினையெச்சம் விகாரப் பட்ட சொல்லிசையளபெடை. நான்காம்அடியினால், மூக்குமுழுவதும் அறு பட்டமை விளங்கும்; அன்றியும், புருவுகையில் மூக்கிற்சோரியிற்கண் முழு கிற்று. பி - மீ:—[1]கூசிடாது. [2]மொழிக். (கூஎ0)

ச.—இதுமுதல் நான்கு கவிகள் - சூர்ப்பணகை கூறும் விடை.

இருவர் மானிடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார்.

(இ - ள்.) இருவர் மானிடர் - இரண்டுமனிதர்கள், தாபதர்-முனிவேடம் கொண்டவர்கள்: ஏந்திய வரி வில் வாள் கையர் - தரித்த கட்டமைந்த வில்லையும் வாளையு முடைய கையையுடையவர்கள்: மன்மதன் மேனியர் - மன்மதன்போலும் அழகியவடிவமுடையவர்கள்: தருமம் நீரர் - தருமகுண முடையவர்கள்: தயரதன் காதலர் - தசரதசக்கரவர்த்தியினுடைய குமாரர் கள்: செருவில் நேரும் நிருதரை தேடுவார் - போரில் எதிர்ப்படும் அரக்க ரைத் தேடித்திரிபவர்கள்; (எ - று.)

மரவுரியுடுத்தமையும் சடைமுடிதரித்தமையும் பற்றி, 'தாபதர்' என் றார்; தவவேடம்பூண்டவ ரென்க. 'மன்மதன்மேனியர்', 'தருமநீரர்' என் றதனால், வைரங்கொண்டு கூறுங்காலத்தும் பாராட்டும்படி விஞ்சியிருந்த இராமலக்ஷ்மணர்களது சௌந்தரியாதிசயமும், சுகுணபூர்த்தியும் விளங்கும். 'நுண்ணி யித்தன்மையைபாக்கிப்போனவ ராரிகொல்'என்ற கரன்வினவிற்கு விடைகூறுமிடத்து 'மன்மதன்மேனியர்,' 'தருமநீரர்'என்னவேண்டுவதில்லை யாயினும், இவள், அவர்களிடத்துக்கொண்ட வேட்கையின்மிகுதியால் மயங் கி, தன்னைப்பங்கப்படுத்தினபின்பும் அவர்கள்பக்கல் மனத்தில் வைராக்கி யங்கொள்ளாமல், உடன்பிறந்தவன்முன்னிலையிற் சொல்வதுத் தவிர்வதும் உணராது,தன்மனத்தினுட்கிடந்த கருத்தைப் புலப்படுத்தி இங்ஙனங்கூறின ளென்க. இருவரிடத்தும் இவள் ஒருநிகராகக் காதல்கொண்டதனால், இருவ ரைப்பற்றியும் ஒருநிகராகவுதுத்துக்கூறினாள். 'தாபதர்' என்றதனால், அவர் களுக்குத் தவவேடமும் அழகியதாயிருந்த தென்றாளாம். 'வரிவில்வாட்கை யர்'என்றதனால், அவர்களது போர்த்திறத்தையும் பராக்கிரமத்தையுங் குறித் தாள். 'தயரதன்காதலர்' என்றதனால், அவர்களது இளமையை வெளி யிட்டவாறு. 'தாபதர் வரிவில்வாட்கையர்' என்ற சொற்சேர்க்கையால், நம் மால் எளிதிலழிபடும் வலியிலாநிலைமையுடைய தவத்தினரும் இங்ஙனஞ் செழிக்கலாயிற்றே யென்றவாறும். [இவ்விடத்து ஸ்ரீவால்மீகிராமாயணத்தி லுள்ள சுலோகங்களும், அவற்றின்வியாக்கியானங்களும் மிகஅழகியனவாம்.] இராமலட்சுமணர்கள் செருவில் நேரும் நிருதரைத் தேடுவதைக் கீழ்ப்படலத்

திற் கூறப்பட்ட அவரது சொல்லாலுஞ் செயலாலும் அறிந்தன ளென்க. மன்மதன்மேனியர் - தோளையுவமையணி. (ருஎக)

ரு. ஒன்று நோக்கல ருன்வலி யோங்கற
னின்று நோக்கி நிறுத்து [1]நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையார்.

(இ - ள்.) உன் வலி ஒன்றும் நோக்கலர் - உனது வலிமையைச் சிறி தும் பொருள்செய்கின்றிலர்: ஓங்கு அறன் நின்று நோக்கி நிறுத்தும் நினைப் பினர் - சிறந்த தருமவழியிலே (தாங்கள்) நின்று ஆராய்ந்து (அத்தருமத்தை உலகமெங்கும்) நிலைபெறச்செய்யுங் கருத்துடையவர்: வென்றி வேல் கை நிருதரை - வெற்றியைத்தரும் வேலேயேந்திய கையையுடைய அரக்கர்களை, வேர் அற கொன்று நீக்குதும் - அடிமோடுதொலையக் கொன்றொழிப்போம், என்று உணர் - என்று நிச்சயித்த, கொள்கையார் - கோட்பாடுடையவர்கள்.

அறமாகிய பயிரைச் செழிப்பிக்கும்பொருட்டு அதற்கு விரோதிகளான அரக்கராகிய களைகளே வேரோடு அறக் களையுந் துணிவின ரென்க. வேரற வம்சநாசமாகஎன்றபடி. உன் - எனக்கு உதவியாகவுள்ள உனது என்றவாறு. பி - ம்:—[1]நினைப்பினுல். (ருஎஉ)

சு. மண்ணி னேக்கரு வானினின் மற்றினி
லெண்ணி னேக்குறின் [1]யாவரு நேர்கிலாப்
பெண்ணி னேக்குடை யாளொரு பேதையென்
கண்ணி னேக்கி யுரைப்பருங் காட்சியாள்.

(இ - ள்.) ஒரு பேதை - (அவர்களுடன் உள்ள) ஓர் இள மகள்,—மண் ணில் - பூலோகத்திலும், நோக்கு அரு வானினில் - எளிதிற்காணவொண் ணுத மேலுலகத்திலும், மற்றினில் - மற்றவுலகமாகிய பாதாளத்திலும், எண் ணின் நோக்குறின் - (இவளுக்குஒப்பாவார் யாரென்று) ஆலோசனையாற் பார்க்குமிடத்து, யாவரும் நேர்கிலா - யாரும் உவமையாகமாட்டாத, பெண் ணின் நோக்கு உடையாள் - பெண்களுக்குரிய அழகு முழுவதுமுடைய வள்: என் கண்ணின் நோக்கி உரைப்பு அரு காட்சியாள் - எனதுகண்களாற் பார்த்து(வாயால்)வருணித்துச்சொல்லமுடியாத தோற்றமுடையவள்: (எ-று.)

பிராட்டியின் காணக்கண்கூசும்படியான திவ்வியகாந்தியின் மிகுதியும், எவ்வளவுகண்டாலும் முற்றுங் கண்டுதீர்க்கமுடியாத சௌந்தரியாதிசயமும், அவ்விரண்டும் வாசாமகோசரமாயிருக்குந்தன்மையும், ஈற்றடியில் வெளிப் படும். பெண்பாலான சூர்ப்பணகையே பெண்பாலான சீதையின் அழகில் ஈடுபட்டு இங்ஙனங்கூறியதனால், "பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுறு மூலையினுள்" என்றற்போலக் கண்ட மகளிருங் காதல்கொள்ளுங் கட்டழ குடையவள் பிராட்டி யென்பது தெற்றென விளங்கும். அன்றியும், தன் னுற்சக்களத்தியாகக்கருதி மாறுபாடுகொள்ளப்பட்ட ஒருமகளைக்குறித்துக்

கொடியஅரக்கி இங்ஙனங்கூறுதற்கு ஏற்ற காரணம் அவளது அழகுமிகுதி யேயாம். பி - மீ:—[1]யாவர்க்குநோக்கலாப். (ஈஎஈ)

எ. கண்டு [1]நோக்கருங் காரிகை யாடனைக்
கொண்டு போவ லிலங்கையர் கோக்கெனை
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்ட மாக்கினர் மூக்கெனச் சொல்லினாள்.

(இ - ள்.) கண்டு - (இத்தன்மையளாகிய அழகிய பெண்ணைப்) பார்த்து, 'நோக்கு அரு காரிகையாள்தனை - காணவொண்ணாத அழகுடைய இவளை, இலங்கையர் கோக்கு - இலங்காபுரியிலுள்ளார்க்கு அரசனுகிய இராவணனுக்காக, கொண்டு போவல்-எடுத்துக்கொண்டுபோவேன்,' எனு-என்று எண்ணி, விண்டு மேல் விழுந்தேனை - (மனம்) மாறுபட்டு அவள்மேற் பாய்ந்த என்னை, அவர் - அம்மனிதர்கள், வெகுண்டு - கோபித்து, மூக்கு துண்டம் ஆக்கினர் - மூக்கறுத்தார்கள், என - என்று, சொல்லினாள் - சொன்னாள்; (எ - று.)

மூக்கு - மற்றை யறுபட்ட உறுப்புக்களுக்கும் உபலக்ஷணம். மேல்விழுதல் - மிக்க பரபரப்போடு முயலுதல். பி-மீ:—[1]நோக்கியக். (ஈஎச)

அ.-அதுகேட்டுக் கரன்வேதண்டு சூர்ப்பணகையை மூக்கைக்காட்டேன்றல்.

கேட்ட னன்னுரை [1]கண்டிலன் கேடினர்
தோட்ட நுங்கிற் றொளை[1]யுறு மூக்கினைக்
காட்டெ னுவெழுந் தானெதிர் கண்டவர்
நாட்டந் தீய வுலகை நடுக்குவான்.

(இ - ள்.) எதிர் கண்டவர் நாட்டம் தீய - (தன்னைஎதிரிற்)பார்த்தவர்களது கண்கள் கருகிப்போய்விடும்படி, உலகை நடுக்குவான் - உலகத்திலுள்ள உயிர்களெல்லாம்(அச்சத்தால்)நடுங்கச்செய்பவனுகிய கரன்,—கண்டிலன்-(மூக்கறுபட்டதைமுதலில்) உற்றுநோக்கிற்றிலனுதலால், உரை கேட்டனன்-அவ்வார்த்தையைக் கேட்டவளவில், 'கேடினர்-கெடுங்காலமுடைய அம்மனிதர்களால், தோட்ட நுங்கின் தொளை உறும் - தோண்டப்பட்ட பனைநுங்கு போலத் துளைபொருந்திய, மூக்கினை - (உனது) மூக்கை, காட்டு - காண்பி,' எனு - என்றுசொல்லி, எழுந்தான் - எழுந்திருந்தான்; (எ - று.)

கீழ் மூன்றுங்கவியில் "கூசலர் நுன்னை யித்தன்மையை யாக்கிப்போன வ ரார்கொல்" என்றபொழுது,இவளுடம்பின்மேல் முழுவதும்பெருகிவழிகிற இரத்தவெள்ளத்தையும் தலைவிரிகோலத்தையும் விழுந்து புரண்டு கதறியழுதலையும் மாத்திரமே பொதுப்படக் கண்டு 'உன்னை இங்ஙனம் பரிபவப்படுத்தியவர் ஆர்?' என்று வினவின னென்றும், பின்பு சூர்ப்பணகைவார்த்தையைக் கேட்டதனால் விவரமறிந்து 'இரத்தப்பெருக்கில் மறைந்த அறுபட்ட மூக்கைக் காட்டு' என்று இங்ஙனம் கூறின னென்றும் உணர்க: எனவே, மாறுகொளக்கூறலென்னுங்குற்றத்துக்குஇடமின்றும். இனி,தொளையுறுமூக்கினை

நங்கின் தோட்ட கேடினர்க் காட்டு என்றுகொண்டுகூட்டி, துவாரம்பொருந்திய மூக்கை நுங்கைப்போலத் தோண்டிய நாசகாலமுடையாரைக் காட்டு என்றனனெனக்கொள்ளினுமாம். கண்டிலன் என்பதைத் தன்மையொருமை முற்றாகக் கொண்டு கண்டேனில்லே யெனக் கரன்வார்த்தையாக்கினுமாம். இங்ஙனம் தன்னைச்சேர்ந்தவளுக்குத் தீங்கியற்றியவர் தன்னால் உடனே யழிதல் தவறு தெனத் துணிந்த செருக்குடையா ளுதலால், 'கேடினர்' என்றான். தோட்ட என்றதில், தோள் - பகுதி; தொட்ட என்பதன் நீட்ட லெனக் கொண்டால், தொடு - பகுதியாம். பி-மீ:—[1]கண்டனன்நீண்டியத், கண்டனன்நீண்டிய. [2]அறு. (உஎடு)

கூ.—கரனுடைய கோபாவேசமும், வீரவாதமும்.

எழுந்து நின்றுல கேழு மெரிந்துகப்
பொழிந்த கோபக் [1]கனலுகப் பொங்குவான்
கழிந்து போயினர் மானிட ரென்னுங்கா
லழிந்த தோவிவ் வருப்பழி யென்னுமால்.

(இ - ள்.) எழுந்து நின்று - (இவ்வாறுசொல்லி) எழுந்துநின்று, உலகு எழும் எரிந்து உக - எழுவகையுலகங்களும் வெந்து பொடியாச்சிதறும்படி, பொழிந்த கோபம் கனல் உக-(தனதுகண்கள்)சொரிந்த கோபாக்கினி வெளிச்சிந்த, பொங்குவான் - மனங்கொதிப்பவனான கரன்,—'மானிடர் கழிந்து போயினர் என்னும் கால் - (இத்தீங்குசெய்த) மனிதர்கள் (என்னால்)இறந்து போனார்கள் என்னும்மாத்திரத்தில், இ அரு பழி அழிந்ததோ - இந்த அரிய பழிப்பு ஒழிந்ததாமோ? [ஆகாது],' என்னும் - என்றுசொல்வான்; (எ - று.)

தான் இப்பொழுது இராமலட்சுமணர்களே எதிர்த்து அழித்தல் நிச்சய மென்றும், அங்ஙனம் அவர்களே அழித்தல்மாத்திரமும் இந்தப் பெரும்பழி யொழிதற்குப் போதுமான பரிகார மாகா தென்றும் கூறின னென்க. உலகேழ் - மேலேழும், கீழேழும். எழுந்துநின்று பொங்குவான் என இயையும். ஆல் - ஈற்றசை. பி-மீ:—[1]கனலினிற். (உஎசு)

கo.—அவ்வாவிற் பதினான்குவீரர்கள் போருக்கு எழுதல்.

வருக தேரெனு மாத்திரை மாடுளோ
ரிருகை மால்வரை யேழினை டேழனை
யொருகை யாலுல கேந்து முரத்தினர்
தருக விப்பணி யெம்வயிற் றுனென்றார்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (இவ்வாறு கூறிய கரன்), தேர் வருக எனும் மாத்திரை - (எனது) தேர் வரக்கடவதென்று கட்டளையிடுமளவில்,—மாடு உளோர்-அவனருகிலிருப்பவர்களும், ஒரு கையால் உலகு ஏந்தும் உரத்தினர்-ஒருகையால் உலகமுழுவதையும் எடுத்துத்தாங்கும்வலிமையுள்ளவர்களும், இரு கை மால்

வரை எழினெடு எழ் அனர் - இரண்டு கைகளையுடைய பெரிய எழினெடு கூடிய ஏழு [பதினன்கு] மலைகளை யொத்தவருமான (பதினன்கு) சேனை வீரர்கள், (கரனை நோக்கி), இ பணி எம்வயின் தான் தருக என்னூர்-'இந்தப் போர்த்தொழிலை எம்மிடத்தே நியமித்தருள்வாயாக' என்று வேண்டினர்கள்.

மாத்திரை - மாத்ரா: வடசொல். இரண்டாம் அடியிற் கூறியது, இல்பொருளுவமை. இரண்டுகைகளையுடைய இவர்கள்வடிவம் உருவத்தாலும் வலிமையாலும் பெரிய மலைபோலுதலின், உபமானமாகிய மலைக்கு 'இருகை' என்ற அடைமொழி கொடுத்தார். தான் - பிரிநிலை. (உஎவ)

கக.—அவ்வரக்கர்களின் வருணனை.

சூலம் வாண்மழுத் தோமரஞ் சக்கரங்
கால பாசங் கதைபொருங் கையினர்
வேலை ஞாலம் வெருவுறு [1]மார்ப்பினர்
ரால காலந் திரண்டன்ன வாக்கையார்.

(இ - ள்.) (அவ்வரக்கர்கள்), சூலம் வாள் மழு தோமரம் சக்கரம் காலபாசம் கதை பொரும் கையினர் - சூலம் முதலிய ஆயுதங்களாற் போர் செய்யுங் கைகளையுடையவர்கள்: வேலை ஞாலம் வெருவுறும் ஆர்ப்பினர் - கடல்சூழ்ந்த உலகத்தின் உயிர்கள் அச்சமடையத்தக்க ஆரவாரமுடையவர்கள்: ஆலகாலம் திரண்டு அன்ன ஆக்கையார் - ஆலாகலவிஷம் (சில வடிவங்களாகத்) திரண்டாற்போன்ற உடம்பையுடையவர்கள்; (எ - று.)

கையினர், ஆர்ப்பினர், ஆக்கையார் என்ற மூன்று விசேஷணங்களையும் முந்தியகவியில் வந்த 'எழினெடேழனர்' என்ற விசேஷியத்தோடு சேர்த்துக் குளகமாகப் பொருள்காண்க. சூலம்-முத்தலைவேல். மழு - எரியிரும்புப்படை; கோடாலியுமாம். தோமரம் - இருப்புலக்கை; எறியீட்டியும், பேரீட்டியுமாம். காலபாசம் - யமனதுகையிலுள்ளதும் அவன் பிராணிகளை வலியக்கட்டியிழுக்குங் கயிற்றின்வடிவமானதுமாகிய பாசாயுத மென்க. ஹாலாஹலம்என்ற வடசொல், ஆலகாலமெனத் திரிந்தது; இது, கருநிறத்தோடு கொடுஞ்செயலுக்கு உவமையாம். பி - மீ:—[1]மார்பினர். (உஎஅ)

கஉ.—அவ்வரக்கர்கள் கரனை விலக்குதல்.

வெம்பு [1]கோபக் கனலர் விலக்கினர்
நம்பி [2]யெம்மடி மைத்தொழி னன்றெனு
வும்பர் [3]மேலின் றுருத்தனை போதியோ
விம்பர் மேலினி யா[4]முளை மோவென்றார்.

(இ - ள்.) வெம்பு கோபம் கனலர் - கொதிக்கிற கோபாக்கினியையுடைய அவ்வரக்கர்கள், (கரனை நோக்கி), 'நம்பி - சிறந்தஆண்மகனே! எம் அடிமை தொழில் நன்று - எங்களது அடிமைத்தொழில் நன்றாயிருந்தது', எனு - என்றுசொல்லி, 'இன்று - இப்பொழுது, உம்பர்மேல்-தேவர்கள்மேல்,

உருத்தனே போதி ஓ - கோபித்துச்செல்கின்றீரோ? (அன்றே; இப்படி நீ மனிதர்கள்மேற் போருக்குச் சென்றால்), இனி—, இம்பர்மேல் - இவ்வுலகத்தில், யாம் உளெம் ஓ - நாங்கள் ஜீவித்துள்ளோமாவோமோ?' என்றார் விலக்கினர் - என்றும் சொல்லிக், (கரனைப் போர்க்குச்செல்லாதபடி) தடுத்தார்கள்; (எ - று.)

நம்பி - அண்மைவிளி. 'எம் அடிமைத்தொழில் நன்று' என்றது - பிறகுறிப்பு: நாங்கள் உனக்கு அடியவர்களாய் நீயிட்டகட்டளையைத் தலைமேற் கொண்டு செய்தற்குக் காத்திருக்கையில், நீ எங்களுக்கு யாதொன்றும் கட்டளையிடாது நேரிற் போருக்குஎழுந்துவிட்டால் எங்கள் அடிமை யாதுபயன் படுவதாம்? என்றபடி. நீ தேவர்கள்மேற் போருக்குச் செல்வையாயின், அது எங்களாலாகா தென்று நீ எண்ணிச் சென்றதாக நினைக்கவுங்கூடும்: அன்றி, அது உனதுபெருமைக்குந் தகுதியாம்; அங்ஙனமன்றி, எளிய மனிதர்மேற் செல்லக் கண்ட யாம் இனிப் பிழைத்திருப்பதும் பயனின்று மென்றன ரென்க. 'இம்பர்மேலினியாமுளெமோ' என்ற வார்த்தை நிமித்தமாகப் பொருள்படுதலுங் காண்க. **பி-ம்:**—[1]வேலைக்கனலன்னவெம்மையார். [2]நம். [3]மேலும். [4]உளமென்கின்றீர். (நுஎக)

கஉ.—கரன் இணங்கி அவ்வரக்கர்க்குக் கட்டளையிடுதல்.

நன்று [1]சொல்லினிர் நானிச் சிறுர்கண்மேற்
சென்று போர்செயிற் றேவர் சிரிப்பரால்
கொன்று சோரி குடித்தவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடென்றான்.

(இ - ள்.) 'நன்று சொல்லினிர்-நன்றுகச்சொன்னீர்கள்; நான் இச் சிறுர்கள்மேல் சென்று போர் செயில் - நான் இச்சிறுமனிதர்கள்மேல் எதிர்த்துச்சென்று போர்செய்தால், தேவர் சிரிப்பர் - (அதுகண்டு) தேவர்கள் இகழ்ந்துசிரிப்பார்களே; கொன்று - (நீங்கள் சென்று அவர்களைக்) கொன்று, சோரி குடித்து - அவர்களிரத்தத்தைப் பருகி, அவர் கொள்கையை வென்று- அவர்கள் கோட்பாட்டைச் சயித்து, மெல்லியலோடு மீளுதிர் - (அவர்களிடத்துஉள்ள) மென்மையானதன்மையுள்ள பெண்ணினுடனே திரும்பிவாருங்கள்', என்றான் - என்று (கரன் அப்பதினான்குஇராக்கதவீரர்க்குக்) கட்டளையிட்டான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை; ஆதலால் என்பதன் விகாரமுமாம்.

நன்றுசொல்லினிர் - தக்கதையே சொன்னீர்க ளென்றபடி. நிலவுலகத்தில் நிகழும்போரை மேலே நின்று காணுதல் தேவர்களினியல்பாதலால், அவர்களையெடுத்துக்கூறினான்; அன்றியும், நமக்குப் பழம்பகைவராய்த் தோற்றொடுங்கிய தேவர்கள் நான் எனதுபெருமைக்குக்குறைவாக மானிடச்சிறுவர்மேற் சென்று பொருவதை நோக்கிப் பரிகசிப்ப ரென்றனுமாம். அவர் கொள்கை - கீழ் ஐந்தாங்கவியிற் கூறிய "நிருதரை வேரறக் கொன்று நீக்குது மென்று உணர் கொள்கை". **பி-ம்:**—[1]சொல்லுதிர்நானில். (நுஅஏ)

கச.—அவர்கள் இராமலக்குமணருள்ளவிடத்தை யடைதல்.

என்ன லோடும் விரும்பி யிறைஞ்சினர்
சொன்ன நாணிலி யந்தகன் றூதென
[1]வன்னள் பிற்படர் வாரென வாயினர்
மன்னன் காதலர் வைகிட நண்ணினர்.

(இ - ள்.) என்னலோடும் - என்று (கரன்) கட்டளையிட்டவளவிலே, (அப்பதினஞ்குபேரும்), விரும்பி இறைஞ்சினர் - மகிழ்ச்சிகொண்டு (அவனை) வணங்கி, சொன்ன நாண் இலி அந்தகன் தூது என அன்னள் பின் படர் வார் என ஆயினர் - (கீழ்ச்) செப்திகூறின வெட்கங்கெட்டவளான சூர்ப்பணகை யமனனுப்பியதூதுபோல முன்செல்ல அவள்பின்னேசெல்பவர்போல வாகி, மன்னன் காதலர் வைகு இடம் நண்ணினர் - தசரதசக்கரவர்த்தி குமாரர்கள் தங்கியுள்ள இடத்தைச் சேர்ந்தார்கள்; (எ - று.)

சூர்ப்பணகை வழிகாட்டிக்கொண்டு முன்னேசெல்ல அரக்கர்கள் அவள் பின்னேதொர்டந்துசெல்லுதற்கு, தம்மைப் பரலோகத்திற்கு அழைத்துப் போதற்பொருட்டு யமனனுப்பிய தூதன் முன்னேசெல்லப் பின்னே அவன் காட்டும்வழியிலே விடாது தொடர்ந்து செல்லுதலை உவமையாக்கிக் கூறினர். இவள் அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுபோதல் அவ்வரக்கர்க்கு நாசகரமாய் முடிவது விளங்க இங்ஙனம் கூறப்பட்ட தென்க. **தற்குறிப் பேற்றவணி.** 'சொன்னநாணிலி' என்பதைச் சொன்னம் நாண்இலி எனப் பிரித்து, சொர்ணமயமான மங்கலநாணில்லாத விதவையான சூர்ப்பணகை யென்று உரைப்பாருமுளர்; அப்பொழுது, சொன்னம் - ஸ்வர்ண மென்ற வடசொல் திரிந்தது. **பி-ம்:**—[1]அன்னதர்ப்படர்வார். (கஅக)

கடு.—சூர்ப்பணகை இராமனைச் சுட்டிக்காட்டல்.

தூமிலப் போர்[1]வல் லரக்கர்க்குச் [2]சுட்டினள்
ளமலத் தொல்பெய ராயிரத் தாழியா
னிமலப் பாத நினைவி னிருந்தவக்
கமலக் கண்ணனைக் கையினிற் காட்டினள்.

(இ - ள்.) அமலம் - குற்றமற்ற, தொல் பெயர் ஆயிரத்து-பழமையான ஆயிரந்திருநாமங்களையுடைய, ஆழியான் - சக்கரபாணியான திருமாலினது, நிமலம் பாதம் - குற்றமற்ற திருவடிகளின், நினைவின் - தியானத்திலே, இருந்த—, அ கமலம் கண்ணனை - செந்தாமரைமலர்போலுந் திருக்கண்க ளையுடைய அவ்விராமபிரானை, தூமிலம் போர் வல் அரக்கர்க்கு - பேராரவா ரத்தோடு போர்செய்யவல்ல அவ்விராக்கதர்க்கு, கையினில் சுட்டினள் காட் டினள் - (சூர்ப்பணகை) தன்கைவிரலாற் சுட்டிக்காண்பித்தாள்; (எ - று.)

திருமாலினதுதிருவவதாரவிசேஷமான ஸ்ரீராமன் தான் மானிடனுகப் பிறந்ததற்கு ஏற்பத் தனதுகுலதெய்வமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைத்

தியானஞ்செய்துகொண்டிருந்தனனென்க. இங்கே 'ஆழியான்' என்றது, ஸ்ரீரங்கநாதனை. ஆதியில் சத்தியலோகத்திற் பிரமதேவனது திருவாராதனத்திருவுருவமாயிருந்த ஸ்ரீரங்கநாதனைச் சூரியகுலத்து வைவச்சுவதமனுவின் குமாரனான இக்ஷ்வாகுமகாராசன் பிரமனைக்குறித்துப் பலகாலஞ்செய்த தவப்பேற்றால் திருவயோத்திக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டைசெய்து ஆராதனம்பண்ணிவந்தானென்றும், அந்தத்திருவரங்கநாயகனே இக்ஷ்வாகுமுதல் இராமபிரானீறுகவுள்ள இரவிகுலமன்னவரெல்லோர்க்குங் குலதெய்வமாகி விளங்கினனென்றும், அவ்வெம்பெருமானே இராமன் பின்பு விபீஷணனிடங்கொடுக்க அவ்வரக்கர்தலைவனற்கொணரப்பட்டு அவ்வெம்பிரான் உபயகாவேரிமத்தியில்வந்துசேர்ந்தருளினனென்றும் உணர்க. கீழ் அயோத்தியாகாண்டத்தில் கௌசல்யை இராமனதுநன்மைகளை உபதேசித்துக் குலதெய்வத்தை வணங்கச் சென்றமை கூறியபொழுது, "மின்னு நேமியன் மேவிட மேவினள்" என்றதற்கு ஏற்ப, இங்கு 'ஆழியான்' என்றார். "கோதறுதவத்துத் தங்குலத்துளோர் தொழும், ஆதியஞ்சோதியை யடிவணங்கினனன்" என்று பாலகாண்டத்திலும், "தன்திருவுள்ளத்துள்ளே தன்னையே நினையு மற்றக், குன்றிவர்தோளினன்", "ஐயனு மச்சொற் கேளா வாயிரமௌலியானைக், கைதொழுது" என்று அயோத்தியாகாண்டத்திலும் இராமன் அரங்கநாதனைத் தியானித்து வணங்கினமை கூறப்பட்டவாறு காண்க. பேர்ஆயிரம் - ஸஹஸ்ரநாமம். 'அமலப்பெயர்' என்றது, தன்னை உச்சரித்தாரது கருமங்களை யொழிக்குந் திருநாமமென்றவாறு. துமிலம் - போர்க்குழப்பமுமாம்; துமுல மென்னும் வடசொல்லின் திரிபு. **பி - மீ:—** [1]வில். [2]சுட்டியே. (ருஅஉ)

கசு.—அரக்கர்கள் வீரவாதத்தோடு இராமனைச் சூழ்தல்.

எற்று வாம்பிடித் [1]தேர்துது மென்குநர்
பற்று வாநெடும் பாசத்தி னென்குநர்
[2]மூற்று வாமிறை சொன்முறை யாலெனைச்
சுற்றி னர்வரை சூழ்ந்தன்ன தோற்றத்தார்.

(இ - ள்.) பிடித்து எற்றுவாம்-(இம்மனிதர்களைப்) பிடித்து மேலேஎறிவோம்: (பிடித்து) ஏந்துதும் - (இவர்களைக்) கையிலேபிடித்து ஏந்திக்கொள்வோம், என்குநர் - என்றுசொல்பவர்களும், நெடு பாசத்தின் - நீண்ட பாசாயுதத்தால், பற்றுவாம் - பிடித்துக்கட்டுவோம், என்குநர் - என்றுசொல்பவர்களுமாகி, (அவ்வரக்கர்கள்), இறை சொல் முறையால் முற்றுவாம் எனை - (நமது) தலைவனான கரன் சொன்ன முறைப்படி செய்துமுடிப்போமென்றுஞ் சொல்லி, வரை சூழ்ந்து அன்ன தோற்றத்தார் - மலைகள் சூழ்ந்துநின்றாற் போன்ற தோற்ற முடையவர்களாய், சுற்றினர் - (இராமலக்குமணர்களிடத்தைச்) சூழ்ந்துகொண்டார்கள்; (எ - று.)

பிடித்து - மத்திமதீபம். இறைசொல்முறை - கீழ்ப் பதின்மூன்றாங் கவியில் "கொன்றுசோரிகுடித்தவர்கொள்கையை, வென்று மீளுதிர்மெல்

லியலோடு" என்றது. நான்காமடி - **உவமையணி.** பி - ம்:—[1]என்குநர். [2]மூற்றுநாம். (கூஅசு)

கஎ.—இராமன் போருக்கு எழுதல்.

ஏத்து வாய்மை யிராம னிளவலிலக்
காத்தி தையலே யென்றுதன் கற்பகம்
பூத்த தன்ன பொருவி றடக்கையா
[1]லாத்த நாணி னருவரை வாங்கினன்.

(இ - ள்.) ஏத்து வாய்மை இராமன் - (யாவராலும்) கொண்டாடப்படுகிற சத்தியத்தையுடைய இராமபிரான், இளவலே - தம்பியான இலக்குமணனே (நோக்கி), தையலே காத்தி என்று - தன்மனைவியானசீதையைப் பாதுகாத்துக்கொண்டிருவென்று கட்டளையிட்டு,—கற்பகம் பூத்தது அன்ன - பொலிவுபெற்ற கற்பகவிருட்சம் போன்ற, பொருவு இல்-வேறுஒப்பில்லாத, தட - பெரிய, தன் கையால் - தன்னுடைய கையினல். ஆத்த நாணின் அருவரை வாங்கினன் - கட்டப்பட்டநாணியையுடைய அழித்தற்கரிய மலை போன்ற வில்லை யெடுத்துக்கொண்டான்; (எ - று.)

தண்டகாரணியவாசிகளான முனிவர்கள் இராக்கதருடைய உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் தன்னைவந்துசரணமடைந்தபொழுது அவர்களுக்குத் தான் அவ்வரக்கர்களையெல்லாம் வேரறுப்பதாக வாக்குத்தத்தஞ்செய்திருந்ததைப் பழுதுபடாதபடி நிறைவேற்றத் தொடங்கின ஞுதலால், 'ஏத்து வாய்மையிராமன்' என்றார். கற்பகம் - நினைத்தபொருள்களைத் தருதற்கு உவமை; பயனுவமை. ஆத்த - யாத்த என்பதன் மரூஉ. கற்பகம்பூத்த தன்னபொருவிறடக்கை - **உவமை.** 'அருவரை' என்றது, **உருவகம்.** வரை-உவமையாகுபெயர்; மூங்கி லெனக்கொண்டு வில்லுக்குக் கருவியாகுபெயரென்றலும் ஒன்று. வாங்கினன்-வளைத்தானுமாம். பி-ம்:—[1]ஆர்த்த. (கூஅசு)

கஅ.—இராமன் போர்செய்யத்தொடங்குதல்.

வாங்கி வாளொடு வாளிபெய் புட்டிலுந்
தாங்கித் தாமரைக் கண்ணனச் சாலையை
நீங்கி யிவ்வழி நேர்மி னடாவெனு
வீங்கு தோளன் மலைதலை மேயினன்.

(இ - ள்.) தாமரைக் கண்ணன் - செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடைய இராமபிரான், வாங்கி-(வில்லை) எடுத்துக்கொண்டு, வாளொடு - வாளாயுதத்துடனே, வாளி பெய் புட்டிலும் - அம்புகளை நிரம்பவைத்துள்ள (அம்பருத்) தூணியையும், தாங்கி-எடுத்துத்தரித்துக்கொண்டு, அசாலையை நீங்கி - (தான்எழுந்தருளியிருள்ள) அந்தப் பர்ணசாலையை விட்டுப்புறப்பட்டு, இவ்வழி நேர்மின் அடா எனு - 'இவ்விடம்வாருங்களடா' என்று (அவ்வரக்கரைநோக்கி) வீரவாதங்கூறி, வீங்கு தோளன் - (கோபாவேசத்தாற்) புடைபருத்த தோள்களையுடையவனுய், மலைதலை மேயினன் - போர்செய்தலைப் பொருந்தினன் [போர்செய்யத்தொடங்கினன்]; (எ - று.)

இக்கவியின் முதலில் 'வாங்கி'என்றது, கீழ்க்கவியிற்கூறியதன் அநுவாதம்; தொடர்ச்சிதோன்றக் கூறியது. வாளை இடையிலும், அம்புப்புட்டிலைத் தோட்புறத்திலும் தாங்கின னென்க. (ரு-அடு)

ககூ.—இராமன் அவ்வரக்கர்களைக் கைதுணித்தல்.

மழுவும் வாளும் வயங்கொளி முச்சிகைக்
கழுவுங் காலவெந் தீயன்ன காட்சியா
செழுவி னீட்டக் கையெழு நான்கையுந்
தழுவும் வாளிக ளாற்றலஞ் [1]சார்த்தினன்.

(இ - ள்.) காலம் வெம் தீ அன்ன - கொடிய பிரளயகாலாக்கினியை ஒத்திருக்கப்பெற்ற, காட்சியார் - தோற்றமுடையவர்களாகிய அவ்வரக்கர்கள் பதினல்வருடைய, மழுவும் - மழுவென்னும் ஆயுதத்தையும், வாளும்-வாளாயுதத்தையும், வயங்கு ஒளி-விளங்குகிற ஒளியையுடைய, மூ சிகை கழுவும்-மூத்தலேவேலும், (இவ்வாரூன படைக்கலங்களேயேந்திய), எழுவின் நீள் தட கை எழு நான்கையும் - தூண்போன்ற நீண்டபெரியகைக ளிருபத்தெட்டையும், தழுவும் வாளிகளால் - (குறித்த இலக்கைத் தவறுது) சாரும் அம்புகளால், தலம் சார்த்தினன் - (துணித்துத்) தரையில் தள்ளினன்; (எ-று.)—முன்னிரண்டடி-உவமையணி. பி-மீ:—[1]சேர்த்தினன். (ரு-அசு)

உ0.—இராமன் அவர்களைத் தலைதுணித்தல்.

மரங்கள் போனெடு வாளொடு தோள்விழ
[1]வுரங்க ளானடர்ந் தார்க்குர வோன்விடுஞ்
சரங்க ளோடின [2]தைக்க வவர்கடஞ்
சிரங்க ளோடின தீயவ ளோடினள்.

(இ - ள்.) நெடு வாளொடு - பெரிய ஆயுதங்களுடனே, தோள்-தங்கள் தோள்கள், மரங்கள் போல் விழ - மரங்கள்வெட்டுப்பட்டுவீழ்வதுபோலத் துணிபட்டுக்கீழ்விழுந்தபின்பும், உரங்களான் அடர்ந்தார்க்கு-மார்பின்வலிமை கொண்டு தாக்கிப்போர்செய்தற்கு நெருங்கிய அவ்வரக்கர்களின்பொருட்டு, உரவோன் விடும் - வலிமையையுடைய இராமபிரான் எய்த, சரங்கள் - அம்புகள், ஓடின தைக்க - விரைந்துசென்று பாய்தலால், அவர்களுடைய சிரங்கள் ஓடின - அவர்களுடைய தலைகள் துணிபட்டு அப்பாற்சென்றன; (அது கண்டு), தீயவள் ஓடினள் - கொடியவளான சூர்ப்பணகை ஓடலுற்றாள்; (எ - று.)—வாள் - இங்கே ஆயுதப்பொது. முதலடி-உவமை. பி-மீ:—[1]உரங்களோடடர்த்தார்க்கு. [2]தைத்தவரக்கர்தம். (ரு-அஎ)

உக.—சூர்ப்பணகை மீண்டோடிக் கரனுக்குச் செய்தீகூறல்.

ஒளிறு வேற்கரற் குற்ற துணர்த்தினள்
குளிறு கோபவெங் கோளரி மாவடக்
களிறெ லாம்படக் கைதலை மேலுறப்
பிளிறி யோடும் பிடியன்ன பெற்றியாள்.

(இ - ள்.) குளிறு - கர்ச்சிக்கிற, கோபம் - கோபத்தையுடைய, வெம் - கொடிய, கோள் - வலிமையையுடைய, அரிமா - சிங்கம், அட - கொன்றதஞ்ல், களிறு எலாம் - ஆண்யானைகளெல்லாம், பட - இறந்தொழிய, (அது கண்டு), கை தலைமேல் உற பிளிறி ஓடும் - துதிக்கை தலையின்மேற்பொருந்த வைத்துக்கொண்டு வீரிட்டு ஓடுகிற, பிடி - பெண்யானையை, அன்ன - ஒத்த, பெற்றியாள் - நிலைமையையுடையவளான சூர்ப்பணகை, ஒளிறு வேல் கரற்கு - விளங்குகிற வேலாயுதத்தையுடைய கரனுக்கு, உற்றது உணர்த்தினஞள் - நடந்தசெய்தியைத் தெரிவித்தாள்; (எ - று.)

அரிமா - இராமபிரானுக்கும், களிறு - அரக்கர்க்கும், பிடி - சூர்ப்பணகைக்கும் உவமை. தலைமேற்கைவைத்துப் பிளிறியோடுதல் - சூர்ப்பணகைக்கும் அமையும். **உவமையணி.** (ந அ)

ஐஐ.—அதுகேட்டுக் கரன் கோபித்தல்.

அங்க ரக்க ரவிந்[1]தழிந் தாரெனப்
பொங்க ரத்தம் விழிவழிப் போந்துக
வெங்க ரப்பெய ரோன்வெகுண் டான்விடைச்
சங்க ரற்குந் தடுப்பருந் தன்மையான்.

(இ - ள்.) விடை - விருஷபவாகனத்தையுடைய, சங்கரற்கும் - (அழித்தற்றொழிற்கடவுளான) சிவபிரானுக்கும், தடுப்பு அரு - தடுக்கமுடியாத, தன்மையான் - வலிமைநிலையையுடையவனுன, வெம் கரன் பெயரோன் - கொடிய கரனென்னும்பெயரையுடைய அரக்கன்,—அங்கு அரக்கர் அவிந்து அழிந்தார் என - அவ்விடத்தில் இராக்கதர்கள் இறந்தொழிந்தா ரென்று (சூர்ப்பணகை) சொல்ல(க்கேட்டு), பொங்கு அரத்தம் விழி வழி போந்து உக - உள்ளிருந்துபொங்குகிற இரத்தம் கண்களின்வழியாய் வெளிச்சிந்த, வெகுண்டான் - கோபித்தான்; (எ - று.)

இக்கவியின் முதலடி - மேற்க்கவியின் அநுவாதம். **பி-ம்:**—[1]ஒழிந்தார். ()

உக.—கரன் சேனைகளை யழைக்கச் சொல்லப் பறையறைதல்.

அழை[1]யென் றேவ வரக்கர்வன் போர்ப்படை
யுழைய ரோடி யொருகொடி [2]யோங்கன்மேன்
மழையென் மாமுர [3]சேற்றினர் வல்லியின்
முழையின் வாளரி யஞ்ச [4]முழக்குவார்.

(இ - ள்.) (வெகுண்ட கரன்),—வல் அரக்கர் போர் படை-போர்செய்ய வல்ல வலிய அரக்கச்சேனையை, அழை-வரவழைப்பாய், என்று ஏவ-என்று கட்டளையிட,—உழையர் - அருகிலுள்ள ஏவலாளர்கள், ஒரு கொடி - ஒரு கைந்கொடிப்பொழுதிலே, ஓடி - விரைந்துசென்று (சேனைகளுள்ள விடஞ் சேர்ந்து), ஓங்கல்மேல் - யானையின்மேல், மழை என் மா முரசு (பெரு முழக்கத்தால்) மேகமென்றுசொல்லத்தக்க பெரிய பேரிகைகளை, வல்லை

யின் - விரைவில், எற்றினர் - எற்றி,—முழையின் - மலைக்குகையில்வசிக்கிற, வாள் அரி - கொடிய சிங்கமும், அஞ்ச - அஞ்சும்படி, முழக்குவார் - ஒலியெழுப்புபவராஞர்; (எ - று.)

வெகுண்ட கரன் குற்றேவலாளருள் ஒருவனை நோக்கி 'அரக்கப் படையைபழைத்துவா' என்ன, அருகிருந்தோர் ஓடிச்சென்று யானைமீது முரசேற்றிப் பறையறைந்து அரக்கச்சேனைவருமாறு கரன்கட்டளையிட்டதைத் தெரிவித்தனரென்க. ஓங்கல் - உயர்ச்சி; மலைக்குத் தொழிலாகுபெயரும், அது யானைக்கு உவமவாகுபெயருமாம்: ஆகவே, இருமடியாகுபெயராம். பி - மீ:—[1]என்றேரெனக்காக்குவென்போர்படை. [2]உம்பல். [3]எற்றுதிர் வல்லென்றன். [4]முழங்குவான். (உகூ)

உச.—அரக்கர்சேனை தீரண்டெழுதல்.

பேரி யோசை பிறத்தலும் பெட்புறு
மாரி மேகம் வரம்பில வந்தெனத்
தேரின் சேனை [1]திரண்டது தேவர்த
மூரு நாக ருலகு முலர்த்தவே.

(இ-ள்.) பேரி ஓசை பிறத்தலும்-(அங்ஙனம்) பேரிகைகளின் ஒலி வெளிப்பட்ட மாத்திரத்தில்,—பெட்பு உறு மாரி மேகம் வரம்பு இல வந்து என - பருமை மிக்க மழைபொழியும் மேகங்கள் அளவற்றவை ஒருங்கு வந்தாற்போல, தேரின் சேனை - தேரையுடைய அரக்கச்சேனை, திரண்டது - ஒருங்குவந்து கூடிற்று: (அதனால்), தேவர்தம் ஊரும் நாகர் உலகும் உலர்த்த- தேவலோகமும் நாகலோகமும் வருந்தின; (எ - று.)

துஷ்டநிக்கிரகஞ்செய்து தங்களைப்பாதுகாத்தற்பொருட்டுத் திருவவதரித்துள்ள இராமபிரானுக்கு இதனால் யாதாகுமோ வென்று தேவர்களும், அளவற்றசேனைகள் ஒருங்குகூடியதனாலாகிய பாரமிகுதியைப்பொறுக்கமாட்டாமற் கீழுலகத்துச் சர்ப்பசாதியாரும் வருந்தின ரென்க. சேனைகள் ஆயுதங்களைச்சொரிதலேயும் பெருமுழக்கஞ்செய்தலேயுங் கருதிமம்மிக்கிருத்தலேயுங் கருதி மாரிமேகத்தை உவமைகூறினர். பெட்புறும் - (போர்செய்யும்) ஆசை மிக்க, சேனை எனினும் அமையும். மேலுலகமும் கீழுலகமும் வருந்தியமை கூறவே, அருத்தாபத்தியால் இவ்வுலகம் வருந்தியமை தானே பெறப்படும். வரம்பில - மிகப்பல என்றபடி. பி-மீ:—[1]திரண்டன. (நகூக)

உரு.—இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்: அரக்கர்சேனை போர்க்குஎழுதலின்வருணனையைத் தெரிவிக்கும்.

போர்ப்பெ ரும்[1]பணை பொம்மென் முழக்கமா
நீர்த்தரங்க மெடுத் தடங் [2]தேர்களா
வார்த்தெ ழுந்த திறுதியி னர்கலி
கார்க்க ருங்கடல் கால்கிளர்ந் தென்னவே.

(இ - ள்.) போர் பெரு பணை - போரைத்தெரிவிக்கிற பெரிய பேரிகை வாத்தியங்களின் ஒலி, பொம் என் முழக்கம் ஆ - பொம்மென்றொலிக்கிற கட்டலின் ஆரவாரம்போ லிருக்க,—நெடு தட தேர்கள் - நீண்ட பெரிய தேர் கள், நீர் தரங்கம் ஆ - கடல்நீரிலுள்ள அலைகள் போலிருக்க,—ஆர் கலி கார் கரு கடல் - நிறைந்த ஓசையையும் மேகம்போன்ற கருநிறத்தையு முடைய கடல், இறுதியின் - கற்பாந்தகாலத்திலே, கால் கிளர்ந்து என்ன - ஊழிக் காற்றினாற் பொங்கிமேலெழுந்தாற்போல, ஆர்த்து எழுந்தது-(அரக்கர்சேனை) ஆரவாரஞ்செய்துகொண்டு (போருக்கு எழுந்தது; (எ - று.)

பொம்மென்ல - சப்தானுகரணம்; ஒலிக்குறிப்பு. பணை - அதனிலிக்கு முதலாகுபெயர். உருவகத்தை அந்தமாகக்கொண்டு வந்த உவமையணி. பி - ம்:—[1]படை. [2]தோள்களா. (க.கஉ)

உசு. —நான்குகவிகள் - சேனையெழுதலின் வருணனை.

காடு துன்றி விசும்பு [1]கரந்தென
நீடி யெங்கு [2]நிமிர்ந்த நெடுங்கொடி
யோடு மெங்கள் பசியென் றுவந்தெழுந்
தாடு கின்ற வலகையி னுடனே.

(இ ள்.) காடு துன்றி விசும்பு கரந்து என - காடு அடர்ந்துமேலெழு ந்து ஆகாயத்தைமறைத்தாற்போல, எங்கும் நீடி நிமிர்ந்த - எவ்விடத்தும் நீண்டி உயர்ந்த, நெடு கொடி - பெரிய துவசங்கள், எங்கள் பசி ஓடும் என்று உவந்து எழுந்து ஆடுகின்ற அலகையின் ஆட 'எங்களுடைய பசி விரைவில் நீங்கிவிடும்' என்று மகிழ்ந்து எழுந்து கூத்தாடுகிற பேய்கள் போல அசைய வும்,—(எ-று.)—(சேனை) எழுந்தது என முன்கவியோடு முடிக்க.

இது, அச்சேனையிலுள்ள கொடிகளின் வருணனை. அக்கொடிகள் அடர் ந்து மேலோங்கிநின்று அசைதல் அத்தண்டகாரணியத்துள்ள மரக்கொகுதி கள் ஆகாயத்தையளாவி வளர்ந்துநின்று அசைதல் போன்றன வென்பது, முன்னிரண்டடியின் கருத்து. பின்னிரண்டடியில் அக்கொடிகளுக்குப் பேய் களை உவமைகூறினர். 'எங்கள்பசி யோடும்' என்றது, தாம்தின்னுதற்குரிய பிணங்கள் இனி நிகழவிருக்கும் பெரும் போரில் விரைவில் மிகுதியாக நேரு மென்ற கொள்கையால். தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கரக்கன. [2]நிரந்த.

உஎ. தறியி னீங்கிய தாழ்தடக் கைத்[1]துணைக்
[2]குறிகொ ளாமத வேழக் [3]குழுவனுர்
[4]செறியும் வாளொடு வாளிடை தேய்த்துகும்
பொறியிற் காணெங்கும் வெங்கனல் பொங்கவே.

(இ - ள்.) தறியின் நீங்கிய-(மதமிருதியாற்)கட்டுத்தறியினின்று வெளிப் பட்டவையும், குறி கொளா-(எவரையும்) ஒருபொருளாகமதியாதவையுமான, தாழ் தட கை துணை மத வேழம்-தாழ்ந்துதொங்குகிற பெரிய இரண்டு துதி

க்கையையுடைய மதயானைகளின், குழு-கூட்டத்தை, அஞர்-ஒத்தவர்களாகிய அரக்கர்களது, செறியும் வாளொடு வாள் - அடர்ந்தவாளாயுதங்கள் ஒன்றோடொன்று, இடை தேய்த்து-நடுவிலே உராய்தலால், உகும்-வெளிச்சிந்துகிற, பொறியின்-தீப்பொறிகளால், கான் எங்கும்-அக்காடுமுழுதும், வெம் கனல் பொங்க-கொடியநெருப்புப்பற்றியெழவும்,--(எ-று.)--சேனை)எழுந்ததுஎன உரு - ஆங் கவியோடு இயைக்க.

கட்டுக்குஅடங்காது வரம்புகடந்தவரும் செருக்கினால் எவரையும் பொருள் செய்யாதவருமாகிய கொழுத்த வலிய பெரியஅரக்கர்க்கு, தறியினீங்கிய குறிகொளாமதவேழக்குழு உவமையாயிற்று. இவ்வரக்கர்களுடைய இரண்டு கைகளும் திரண்டுருண்டுநீண்டவடிவத்தில் யானைத்துதிக்கைபோலுதலால், உபமானமாகியவேழத்துக்கு 'தாழ்கடக்கைத்தானை' என்றஅடைமொழியைக் கொடுத்து **இல்பொருளுவமை**யின்பாற்படுத்தினர். தன்னைக்கட்டியுள்ள தறியைக் கோபாவேசத்தால் முறித்துத்தள்ளிவிட்டுத் தடையின்றி வெளிச்செல்லுதல், மதயானையின் இயல்பு. **பி-ம்:**—[1]தனிக். [2]குறிகொண்மா. [3]குழுவினர். [4]செறியின். (நகூசை)

உஅ. முருடி ரண்டு [1]முழங்குறத் தாக்கொலி
யுருடி ரண்[2]டெழுந் தேரொலி யுட்புக
வருடி ரண்ட வருக்கன்றன் மேல்வழங்
கிருடி ரண்டுவந் [3]தீண்டிய தென்னவே.

(இ - ள்.) முருடு - முருடு என்னும் வாத்தியவிசேஷங்கள், இரண்டு - இரண்டுபக்கங்களிலும், முழங்குற - முழக்கமுண்டாம்படி, தாக்கு-அடிக்கப்படுதலாலாகிய, ஒலி-ஓசை, உருள் திரண்டு எழும் தேர் ஒலியுள் புக-சக்கரங்கள்உருளுதலால் மேல்வருகிற தேர்களின் ஆரவாரத்தினுள்ளே அடங்கவும்,--அருள் திரண்ட அருக்கன்தன்மேல்-கருணையே (ஒருருவாகத்) திரண்டு வடிவெடுத்தாற்போன்ற சூரியன்மேல், வழங்கு இருள் - (உலகத்துப்) பயில்கிற இருட்டு, திரண்டு வந்து ஈண்டியது என்ன-ஒருங்குசேர்ந்துவந்து நெருங்கியதுபோலவும்,-(எ-று.)--(சேனை)எழுந்ததுஎன உரு-ஆம்கவியோடுஇயையும்.

முருடு இருகட்பறை யாதலால் 'முரு டிரண்டுமுழங்குறத் தாக்கொலி' எனப்பட்டது. இரண்டு-இருபக்கத்துக்கு, எண்ணலளவையாகுபெயர். வாத்தியகோஷமும் தேராரவாரமும் ஐக்கியப்பட்டுஒலிக்க என்பது, முன்னிரண்டு அடிகளின்கருத்து. 'உருள்திரண்டெழும்'என்பதற்கு-சக்கரங்களுடன் கூட்டமாயெழுகிற என்றும் உரைக்கலாம். பின்னிரண்டடிகளில் சூரியகுலத்தவனுகிய இராமனுக்குச் சூரியனுவமையும், கருநிறமுடைய அரக்கரின் குழாத்துக்கு இருளின்திரட்சியும் உவமையாக நன்குபொருந்தும். சூரியன்மேல் இருள்திரண்டுவந்தீண்டுதல் **இல்பொருளுவமை**யெனக் கொள்க. இராமபிரானுக்குச் சூரியனையும் அவன்மேற் போர்க்குஎழுந்து நெருங்கிய அரக்கர் சேனைக்குச் சூரியன்மேல் வந்துநெருங்கும் இருளின்தொகுதியையும் உவமைகூறியதனால், இரவிமுன் இருள்போல இராமபிரான்முன் இவர்கள் எளிதில் அழியப்போகின்றமை பெறப்படும். இருளையொழித்தலும் மிக்கஒளியைத்

தருதலும் முதலிய சூரியனதுசெயல்கள் உலகத்துக்கு மிகவும் உபகாரமாக இருத்தலால், அவனை 'அருள்திரண்டவருக்கன்' என்றார்; மலர்தலை யுலகத் திருளெறிவிளக்கும், மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்,.....அருளும் பொருளு மாகித், திருவுல களிக்கும் பரிதி வானவனே" என்ற கல்லாடம் இங்குக்காணத்தக்கது. **பி மீ:**—[1]முழக்குமுழக்கொலி. [2]எழுந்தோரொலியுட். [3]ஈண்டெழுந்து. (ஈகூடு)

உக. தலையின் மாசுணந் தாங்கிய தாரணி
நிலைநி லாது முதுகை நெளிப்புற
வுலைவி லேழுல கத்தினு மோங்கிய
மலையெ லாமொரு மாடுதொக் கென்னவே.

(இ-ள்.) மாசுணம்-(ஆதிசேஷன்முதலிய) பெரும்பாம்புகளால், தலையில் தாங்கிய-தலைமேற்கொண்டு சுமக்கப்படுகிற, தாரணி-பூமி, நிலைநிலாது-(அதிக பாரத்தைப் பொறுக்கமுடியாமையாற் சலனமின்றி) ஒருநிலையிற்நிற்க மாட்டாமல், முதுகை நெளிப்புற - முதுகைநெளிக்கும்படி, உலைவுஇல் எழ் உலகத்திலும் ஓங்கிய மலை எலாம் ஒரு மாடு தொக்கு என்ன - அழிவில்லாத ஏழுலகங்களிலும் வளர்ந்துபொருந்திய மலைகளையாவும் ஓரிடத்தில்வந்து சேர்ந்தாற்போலவும், (எ-று.)—(சேனை) எழுந்தது என உரை-ஆங் கவியோடு முடியும்.

மலைகள்-அரக்கர்க்கு உவமை, வலியபெரியவடிவமுடைமையால்.முதுகு என்றது, மேற்புறத்தை. (ஈகூசு)

வே று.

ஈ.ழ.—மீக்க அரக்கவீரரின் வருணனை.

வல்லியக் குழாங்களோ மழையி னீட்டமோ
[1]வொல்லிபத் தொகுதியோ [2]வோங்கு மோங்கலோ
வல்லமற் றரிகளி [3]னனிக மேயெனப்
பல்பதி னுயிரம் படைக்கை வீரரே.

(இ-ள்.) வல்லியம் குழாங்களோ-புலிக்கூட்டங்களோ?மழையின் ஈட்ட மோ-மேகங்களின் திரட்சியோ? ஒல் இபம் தொகுதியோ - ஒலியையுடைய யானைகளின்கூட்டமோ?ஓங்கும் ஓங்கலோ-உயர்ந்தமலைகளோ? அல்ல-(இவை யாவும்) அல்ல: அரிகளின் அனிகமே-சிங்கங்களின் சேனையே, என-என்று சொல்லும்படி (வந்த), படை கை வீரர்-ஆயுதங்களையேந்தியகைகளையுடைய இராக்கதவீரர்களின் தொகை, பல் பதினுயிரம் - அநேகம்பதினுயிரக் கணக்காம்; (எ - று.)

இது-ஐயவணியும் மயக்கவணியும் விரவிவந்த கலவையணி; வட நூலில் 'சங்தேகசங்கரம்' எனப்படும். தரியத்துக்குப் புலியும், கரிய பெரிய வடிவத்துக்கும் ஆரவாரத்துக்கும் மேகமும், வலியபெரிய வடிவத்துக்கு யானையும் மலையும், பராக்கிரமத்துக்குச் சிங்கமும் உவமையாகும். ஒல் - ஒலிக்

குறிப்பு. என வென்பதன் பின் ஒருசொல் வருவிக்கப்பட்டது. பி-ம்:—[1]புல்லி பத், புல்லியற். [2]பொங்குமோங்கலோ, பொங்குலோகமோ. [3]அனிகமோ.

இதுமுதல் உசு - கவிகள் - கீழ்ப்படலத்தின் அ-ஆங்கவிபோன்ற கலி விருத்தங்கள். (நூகள)

நூக - நூஉ: இம்மூன்று கவிகளும் - தூளகம்:
தீரண்ட சதுரங்கசேனைகளின்வருணனை.

நூக. ஆளிகள் பூண்டன வரிகள் பூண்டன
மீளிகள் பூண்டன வேங்கை பூண்டன
ஞாளிகள் பூண்டன நரிகள் பூண்டன
கூளிகள் பூண்டன குதிரை பூண்டன.

நூஉ. ஏற்றின மார்த்தன வேன மார்த்தன
காற்றின மார்த்தன கழுதை யார்த்தன
தோற்றின மாத்திரத் துலகு சூழ்வரும்
பாற்றின மார்த்தன பணில மார்த்தன.

நூஙு. தேரினந் துவன்றின சிறுகட் செம்முகக்
காரின [1]நெருங்கின காலிற் [2]கால்வரு
தாரினங் குழுமின தடையில் [3]கூற்றன்ன
பேரினங் கடலெனப் பெயருங் காலையே.

இம்மூன்றுகவிகட்கு - ஒருங்கு உரையிடப்படும்.

(இ-ள்.) (நூங)தடை இல் கூற்று அன்ன-தடுக்கப்படாத யமனை யொத்த,பேர் இனம்-பெரிய அரக்கர்கூட்டம், கடல் என பெயரும் காலை-கடல்பொங்கிவந்தாற்போல வரும்பொழுதில், (நூக) ஆளிகள் பூண்டன-யாளிகள் பூட்டப்பட்டவையும், அரிகள் பூண்டன - சிங்கங்கள் பூட்டப்பட்டவையும், மீளிகள் பூண்டன-வலியயானைகள் பூட்டப்பட்டவையும், வேங்கை பூண்டன-புலிகள்பூட்டப்பட்டவையும், ஞாளிகள் பூண்டன - நாய்கள் பூட்டப்பட்டவையும், நரிகள் பூண்டன-நரிகள்பூட்டப்பட்டவையும், கூளிகள் பூண்டன - பூதங்கள் பூட்டப்பட்டவையும், குதிரை பூண்டன - குதிரைகள்பூட்டப்பட்டவையும், (நூஉ) ஏறு இனம் ஆர்த்தன - எருதுகளின்கூட்டம் கட்டப்பட்டவையும், ஏனம் ஆர்த்தன - பன்றிகள் கட்டப்பட்டவையும், காற்று இனம் ஆர்த்தன - காற்றுவடிவமானபேய்வகைகள் கட்டப்பட்டவையும், கழுதை ஆர்த்தன - கழுதைகள் கட்டப்பட்டவையும், பாறு இனம் ஆர்த்தன - பருந்துவகைகள் கட்டப்பட்டவையும், (ஆகிய), தோற்றின மாத்திரத்து உலகு சூழ்வரும்-புறப்பட்டமாத்திரத்தில் உலகத்தைச் சுற்றிவருந்தன்மையுள்ள, (நூங) தேர் இனம் - தேர்களின் கூட்டங்கள், துவன்றின - நெருங்கின: சிறு கண் செம்முகம் கார் இனம் - சிறியகண்களையும் சிவந்தமுகத்தையு முடைய மேகங்கள் போன்ற யானைகளின் கூட்டங்கள், நெருங்கின - அடர்ந்தன; காலின்-காற்றுப்போல, கால் வரு - கால்களால் விசைகொண்டுஓடிவருகிற, தார்

இனம்-குதிரைச்சேனைகளின்கூட்டங்கள், குழுமின - திரண்டன; (அப்பொழுது), பணிலம் ஆர்த்தன - சங்கவாத்தியங்கள் ஆரவாரித்தன; (எ - று.)

இங்ஙனம் ஒருதொடராகிய செய்யுள்களில் பொருள்கோளுக்குவேண்டியபடி சொற்களைத் துணித்துப் பலவிடத்திலும்எடுத்துக்கூட்டி அன்வயித்து உரைத்தல், தொல்காப்பியத்துக் கூறப்பட்ட செய்யுளுறுப்பு இருபத்தாறனுள் மாட்டென்னும் உறுப்பா மென அறிக.

கூக—ஆளி - மரூஉமொழி; துதிக்கையுடையதும் யானையைக் கொல்வதும் சிங்கம் போல்வதுமான ஒரு மிருகவிசேஷம். பூண்டன - பெயர். வலிமையுடைய தென்ற பொருளைத் தரும் மீளி யென்ற பெயர் - இங்கே சந்தர்ப்பத்தால், யானையைக் குறித்தது; இனி 'மீளிகள்பூண்டன' என்பதற்கு - வலிய ஆட்களைக் கட்டப்பெற்றவை யென்று உரைப்பாரும் உளர். பூண்டன எனச் சொல்லும் பொருளும் மீண்டும் பலமுறை வந்ததனால், **சோற்போருட்பின் வருநிலையணி;** அடுத்தகவியில் 'ஆர்த்தன' என வருதலும் அது.

கூஉ.—மூன்றுமதியால், தேர்களின் விரைவு விளங்கும். இனி, இதனைப் பாலுக்குஅடைமொழியாக்கி, புறப்பட்டமாத்திரத்தில் உலகமுழுவதையுஞ் சுற்றிவரவல்ல பருந்து என்றலும் ஒன்று. பாற்றினம் - பெரும்பருந்து, சிறுபருந்து முதலியன. இறுதியிலுள்ள'ஆர்த்தன' என்பது-முற்று; மற்றவையெல்லாம் - பெயர். பணிலமார்த்தன என்பதற்கு - சங்குகள்போல் ஒலித்தவை யெனப்பொருள்கொண்டு, தேருக்குஅடைமொழியாக்கினும் அமையும். **மூன்றுமதி - உயர்வுநவிற்சியணி.**

கூகூ.—கார் - உவமவாகுபெயர். யானை யென்பது விளங்க, 'சிறுகட் செம்முகக்கார்' என்றார்; இது பிறகுறிப்பின்பாற்படும். செம்முகம் - செம் புள்ளிகளையுடைய முகம். "தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகரு முடைத்தாய்" என்ற அரசயானையிலக்கணத்தால், சிறியகண்களும் செம்புள்ளிகளும் யானைக்கு உத்தமஇலக்கணமாதல் அறிக. காலின், இன் - ஒப்பு. தார் - குதிரைச்சேனை. 'தடையில்கூற்றன்ன பேரினம் கடலெனப் பெயருங்காலை' என்றதில், காலாட்சேனை அடங்கும் ஆகவே, நால்வகைச்சேனையுங் கூறியவாறும். துவன்றின, நெருங்கின, குழுமின, கடலெனப்பெயரும் என்றவற்றில் ஒருபொருளே மீண்டும் வந்ததனால், **பொருட்பின்வருநிலையணி.**

பி-மீ:—[1]துவன்றின. [2]காற்பரித். [3]கூற்றென. (கூகூஅ, கூகூக, சஂஂ)

கூச.—முன்றுகவிகள்-தூசகம்: ஆயுதவகைகள் நெருங்கியமையைக்கூறும்.

மழுக்களு மயில்களும் வயிர வாள்களு
மெழுக்களுந் தோமரத் தொகையு மீட்டியு
[1]முழுக்களு முசுண்டியுந் தண்டு முத்தலைக்
கழுக்களு முலக்கையுங் கால பாசமும்.

(இ - ள்.) மழுக்களும் - எரியிரும்புப்படைகளும், அயில்களும் - வேற் படைகளும், வயிரம் வாள்களும் - உறுதிபொருந்திய வாட்படைகளும், எழுத் களும் - வேலதடிகளும், தோமரம் தொகையும் - எறியீட்டிகளின் தொகுதி யும், ஈட்டியும் - பேரீட்டிகளும், முழுக்க அள்ளும்-(பகைவருடல்) முழுதை யுங் கவர்கிற, முசுண்டியும் - முசுண்டியென்னும் ஆயுதங்களும், தண்டும் - கதாயுதங்களும், முத்தலை கழுக்களும்-மூன்றுதலைகளையுடைய சூலங்களும், உலக்கையும் - உலக்கைகளும், கால பாசமும் - காலபாசங்களும், (எ - று.)

முழுக்களும் - முழுக்கஅள்ளும் என்பதன்தொகுத்தல். முசுண்டி - சிறுவாள். **பி-மீ:**—[1]முழுக்கலும். (சஅக)

ஈடு. குந்தமுங் குலிசமுங் கோலும் பாலமு
மந்தமில் சாபமுஞ் சரமு மாழியும்
வெந்தொழில் வலயமும் [1]விளங்கு [2]சங்கமும்
பந்தமுங் கப்பணப் படையும் பாசமும்.

(இ - ள்.) குந்தமும் - சிறியஈட்டிகளும், குலிசமும் - வச்சிராயுதங்க ளும், கோலும் - தடிகளும், பாலமும் - பிண்டிபாலமென்னும் முறுக்குத் தடிகளும், அந்தம் இல் - அளவில்லாத, சாபமும் - வில்களும், சரமும் - அம்புகளும், ஆழியும் - சக்கரங்களும், வெம் தொழில் வலயமும் - கொடிய தொழிலையுடைய வளையென்னும் ஆயுதங்களும், விளங்கு சங்கமும் - விளங் குகிற சங்குகளும், பந்தமும் - பந்தமென்னு மாயுதமும், கப்பணம் படை யும் - கப்பணமென்னும் ஆயுதங்களும், பாசமும் - கயிறுகளும், (எ - று.)

பாலம் - பிந்திபால மென்பதன் முதற்குறை விகாரம். வளை ஓராயுத மாதலைத் திருவிளையாடற்புராணத்து உக்கிரகுமாரனுக்கு வேல்வளைசெண்டு கொடுத்த படலத்தாலும், இந்திரன்முடிமேல் வளையெறிந்த படலத்தாலும் உணர்க. தனது பெருமுழக்கத்தாற் பகையை அஞ்சுவித்து அழித்தலால், சங்கும் ஆயுதத்தின்பாற்படும்; திருமாலின் பஞ்சாயுதங்களுள் பாஞ்சசன் னியமென்ற சங்கும் ஒன்றுதல் காண்க. பந்தம் - விலங்குபோலக் கட்டுப் படுத்துகின்ற ஓராயுதம்போலும். இனி, [2]சங்கனுபந்தமும் என்றபாடத்திற்கு- இடம்புரி வலம்புரி சலஞ்சலம் ஆதியசங்குகளின் இனங்களுமென்க. கப்ப ணம்-இரும்பால் யானைநெருஞ்சிமுள்ளாகப் பண்ணியது **பி-மீ:**—[1]விலங்கும். [2]சங்கமாம். (சஅஉ)

ஈடு. ஆதியி னருக்கனு மனலு [1]மஞ்சுறுஞ்
சோதிய [2]சோரியுந் தூவுந் துன்னிய
வேதிகண் மிடைந்தன விமைய வர்க்கெலாம்
வேதனை கொடுத்தன வாகை வேய்ந்தன.

(இ - ள்.) ஆதியின் - (மழு முதலாகப் பாசம் ஈறாகக் கீழ்இரண்டுதவிக ளிற்கூறியவை) முதலாகவுள்ள, அருக்கனும் அனலும் அஞ்சுறும் சோதிய - சூரியனும் அக்கினியும் அச்சமடையும்படியான ஒளியையுடையவையும், சோரி யும் தூவும் துன்னிய - (பகைவர்களுடைய) இரத்தமும் மாமிசமும் பொருந்

தப்பெற்றவையும், இமையவர்க்கு எலாம் வேதனை கொடுத்தன-தேவர்களுக் கெல்லாம் (முன்பு போரில்) துன்பத்தந்தவையும், வாகை வேய்ந்தன-(வெற் றிக்கு அறிகுறியான) வாகைப்பூமாலையைச் சூடியவையும், (ஆகிய), எதிகள்-ஆயுதங்கள், மிடைந்தன - நெருங்கின; (எ - று.)

தூ - தசை. ஹேதி - வடசொல். வாகை - இருமடியாகுபெயர். ஆதி யின் எதிகள் என இயையும். ஆதியின் அருக்கன் என எடுத்து, முருகற்சுட ராகிய தலைமைபெற்ற சூரிய னென்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]அஞ் சுறு. [2]உதிரமும். (சஂஙு)

கூ.எ.—சேனைத்தலைவர்கள்.

ஆயிர மாயிரங் களிற்றி னூற்றலர்
மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்
தீயெரி விழியினர் நிருதர் சேனையி
னையகர் பதின்மரோ டடுத்த நால்வரே.

(இ - ள்.) ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர் - மிகப்பல ஆயிரக்கணக் கான யானைகளின் வலிமையையுடையவர்களும், மாஇரு ஞாலத்தை விழுங்கும் வாயினர் - மிகப்பெரிய பூலோகத்தையும் உட்கொள்ளத்தக்க [மிகப்பெரிய] வாயையுடையவர்களும், தீ எரி விழியினர் - நெருப்பு மூண்டெரிகிற கண்க ளையுடையவர்களும் ஆகிய, பதின்மரோடு அடுத்த நால்வர் நிருதர்-பதினொன்று ராக்ஷசர்கள், சேனையின் நாயகர் - அச்சேனைக்குத்தலைவர்களாவர்; (எ - று.)

இரண்டாம்அடி - உயிர்வுநவிற்சியணி; மற்றவை - தன்மைநவிற்சி. மாயிரு-உரிச்சொற்புணர்ச்சியாதலின், பொதுவிதிக்கு விலக்காக யகரம் பெற் றது. பதின்மரோடு அடுத்த நால்வர் - பத்துப்பேரோடு சேர்ந்த நாலுபேர். ()

கூ.அ.—அச்சேனைகளின் முழுத்தொகை.

ஆறிரு டாயிர மமைந்த வாயிரங்
[1]கூறின வொருபடை குறித்த வப்படை
[2]யேறின வேழின திரட்டி யென்பரா
லூறின சேனையின் றொகுதி யுன்னுவார்.

(இ - ள்.) ஊறின சேனையின் தொகுதி உன்னுவார்-(வலிமையில்) ஊன் றிய சேனையின் தொகையை எண்ணிக்கணக்கிடுபவர்,—'கூறின ஒரு படை-கீழ்க்கூறப்பட்ட சேனைகளில் ஒன்றன் தொகை, ஆறிரண்டு ஆயிரம் அமைந்த ஆயிரம்-அறுபதுலட்சமாகும்; குறித்த அ படை - அவ்வாறுகணக்கிடப்பட்ட சேனைகள், ஏழினது இரட்டி ஏறின-ஏழின் இருமடங்காகப் பெருக்கப்பட்ட பதினொன்காகும்', என்பர்-என்று சொல்வார்கள்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

முதலடியை, ஆறிரண்டுபெருக்கிய ஆயிரத்தாற் பெருக்கிய ஆயிர மென்க. பி-ம்:—[1]கூறினது. [2]ஏறினது. (சஂஙு)

சுகூ.—இதுமுதல்எட்டுக்கவிகள் - ஒருதொடர்: சேனைவீரர்களின்வருணனை.

உரத்தின ருருமென [1]வுரறும் வாயினர்
கரத்தெறி படையினர் கமலத் தோன்றரும்
வரத்தினர் மலையென மழைது யின்றெழு
சிரத்தினர் தருக்கினர் செருக்குஞ் சிந்தையார்.

(இ - ள்.) (அச்சேனைவீரர்கள்),—உரத்தினர் - மிக்கபலமுடையவர்கள்: உரும் என உரறும் வாயினர் - இடிமுழக்கம்போலப் பேரொலிசெய்கிற வாயையுடையவர்கள்: கரத்து எறி படையினர் - கைகளால்வீசியெறிகிற ஆயுதங்களேயுடையவர்கள்: கமலத்தோன் தரும் வரத்தினர் - தாமரைமலரில்தோன்றிய பிரமதேவன் தந்த வரங்களேப் பெற்றவர்கள்: மலே என மழை துயின்று எழு சிரத்தினர் - மலேயென்றுஎண்ணி மேகங்கள் நெடும் பொழுதுதங்கி யெழப்பெற்ற தலேயையுடையவர்கள்: தருக்கினர் - கர்வமுடையவர்கள்: செருக்கும் சிந்தையார் - (எப்பொழுதும்) உற்சாகங்கொண்ட மனமுடையவர்கள்: (எ - று.)

மலேயென மழைதுயின்றெழு சிரத்தினர்-**மயக்கவணி.** இதனுல்,அவர்களது நெடுமை விளங்கும். தருக்கினர் - எப்பொழுதும் வாதுபேசுபவ ரென்றும், செருக்கும்-கர்வங்கொண்ட என்றும் உரைக்கலாம். தருக்கு=தர்க்கம்: வாதம். **பி-ம்:**—[1]உரற்றும். (சுகூ)

சுஅ. விண்ணள விடநிமிர்ந் துயர்ந்த மேனியர்
கண்[1]ணள விடவரு மார்பர் காலினுன்
மண்ணள விடுநெடு [2]வலத்தர் [3]வானவ
ரெண்ணள விடவருஞ் செருவென் [4]றேறினர்.

(இ - ள்.) விண் அளவு இட நிமிர்ந்து உயர்ந்த மேனியர் - ஆகாயத்தை அளவிடும்படி மிக ஓங்கிவளர்ந்த உடம்பையுடையவர்கள்: கண் அளவு இட அரு மார்பர் - கண்களால் அளவிடுதற்கு அருமையான [கண்பார்வையினெல்லேக்கு எட்டாதபடி பரந்துள்ள] மார்பையுடையவர்கள்: காலினுல் மண் அளவு இடு நெடு வலத்தர் - (தங்கள்)கால்களால் பூமிமுழுவதையும் அளவிடத்தக்க மிக்கவலிமையுடையவர்கள்: வானவர் - தேவர்களோடுநிகழ்ந்த, எண் அளவு இட அரு - எண்ணினுற் கணக்கிட முடியாத [மிகப்பல வான], செரு - போர்களில், வென்று - (அவர்களேச்) சயித்து, எறினர் - மேம்பாடடைந்தவர்கள்; (எ - று.)

முதலடியில், அளவிட - அளாவியிட எனினுமாம். வானவர்-தேவர்கள், எண் அளவிட-மனத்திலே கொண்டு மதிக்கும்படி, செரு வரும் - (இப்பொழுது) பெரும்போர் நேரும், என்று - என்றுஎண்ணி, எறினர்-(வீராவேசம்) மிகப்பெற்றவர்கள் என்று உரைத்தலும் ஒன்று. வலம்=பலம். **பி-ம்:**—[1]அளவிடல். [2]வரத்தர். [3]வாணிடை. [4]எய்தினர். (சுஎ)

சக. இந்திரன் முதலினோ ரெறிந்த மாப்படை
[1]சிந்தின தெறித்துசச் செறிந்த தோளினை
ரந்தக னடிதொழு தடங்கு மாணையார்
வெந்தழ லுருவுகொண் டனைய மேனியார்.

(இ - ள்.) இந்திரன் முதலினோர் - இந்திரன் முதலிய தேவர்கள், எறிந்த - வீசிய, மா படை - பெரிய [சிறந்த] ஆயுதங்கள், சிந்தின தெறித்து உக - (தம்மைச் சிறிதேனும் ஊறுபடுத்தமாட்டாமல் தம்மேற்பட்ட வளவில்) தெறித்துச்சிதறிப் பொடியாய்விழும்படி, செறிந்த - வலிமைமிக்க, தோளினர் - தோள்களையுடையவர்கள்: அந்தகன் அடி தொழுது அடங்கும் ஆணையார் - (பிராணிகளுக்கு) அழிவுவிளைப்பவனை யமனும் தங்கள் பாதங்களில் வணங்கிக் கீழ்ப்படியும்படி செய்யுங் கட்டளையுடையவர்கள்: வெம் தழல் உருவுகொண்டு அனைய மேனியார் - கொடியவெருப்பு அரக்கரின், வடிவத்தைக்கொண்டாற்போன்ற வடிவமுடையவர்கள்:(எ-று.)—பி-ம்:—[1]சிந்தினர்.

சஉ. சூலமும் பாசமுந் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெயிறுந் தாங்கினர்
ராலமும் வெளிதெனு நிறத்த [1]ராற்றலாற்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார்.

(இ - ள்.) சூலமும் - சூலாயுதத்தையும், பாசமும் - பாசாயுதத்தையும், தொடர்ந்த செம் மயிர் சாலமும் - அடர்ந்த செம்பட்டமயிர்த்திரளையும், தறு கணும் - கொடிய கண்களையும், எயிறும் - கோரதந்தங்களையும், தாங்கினர் - தரித்தவர்கள்: ஆலமும் வெளிது எனும் நிறத்தர் - விஷமும் (தங்கள்நிறத்துக்குமுன்) வெண்மையான தென்று சொல்லத்தக்க கருநிற முடையவர்கள்: ஆற்றலால் - (தமது) வலிமையால், காலனும் காலன் என்று அயிர்க்கும் - யமனும் (தன்னையழிப்பானெரு) யமனே வென்று (தங்களை நோக்கிச்) சந்தேகிக்கத்தக்க, காட்சியார் - தோற்ற முடையவர்கள்; (எ - று.)

தறுகண்-அஞ்சாமையுமாம். ஆலம்-வடசொல். பி-ம்:—[1]ஆகலால்.(சஉக)

சஙு. கழலினர் தாரினர் கவச மார்பினர்
நிழலுறு பூணினர் [1]நெறித்த நெற்றிய
ரழலுறு குஞ்சிப ரமரை வேட்டுவந்
[2]தெழலுறு மனத்தின [3]ரொருமை யெய்தினர்.

(இ - ள்.) கழலினர் - காலில்வீரக்கழலுடையவர்கள்: தாரினர்-வெற்றி மாலையை யுடையவர்கள்: கவசம் மார்பினர் - கவசத்தைத்தரித்த மார்பை புடையவர்கள்: நிழல் உறு பூணினர் - ஒளி மிக்க ஆபரணங்களையுடையவர்கள்: நெறித்த நெற்றியர் - மேல்நெறித்த நெற்றியையுடையவர்கள்: அழல் உறு குஞ்சியர் - நெருப்பையொத்த தலைமயிர்முடியையுடையவர்கள்: அம

சுசூ.—இதுமுதல்எட்டுக்கவிகள் - ஒருதொடர்: சேனைவீரர்களின்வருணனை.

உரத்தின ருருமென [1]வுரறும் வாயினர்
கரத்தெறி படையினர் கமலத் தோன்றரும்
வரத்தினர் மலையென மழைது யின்றெழு
சிரத்தினர் தருக்கினர் செருக்குஞ் சிந்தையார்.

(இ - ள்.) (அச்சேனைவீரர்கள்),—உரத்தினர் - மிக்கபலமுடையவர்கள்: உரும் என உரறும் வாயினர் - இடிமுழக்கம்போலப் பேரொலிசெய்கிற வாயையுடையவர்கள்: கரத்து எறி படையினர் - கைகளால்வீசியெறிகிற ஆயுதங்களையுடையவர்கள்: கமலத்தோன் தரும் வரத்தினர் - தாமரைமலரில்தோன்றிய பிரமதேவன் தந்த வரங்களைப் பெற்றவர்கள்: மலை என மழை துயின்று எழு சிரத்தினர் - மலையென்றுஎண்ணி மேகங்கள் நெடும் பொழுதுதங்கி யெழப்பெற்ற தலையையுடையவர்கள்: தருக்கினர் - கர்வமுடையவர்கள்: செருக்கும் சிந்தையார் - (எப்பொழுதும்) உற்சாகங்கொண்ட மனமுடையவர்கள்: (எ - று.)

மலையென மழைதுயின்றெழு சிரத்தினர்-**மயக்கவணி.** இதனால்,அவர்களது நெடுமை விளங்கும். தருக்கினர் - எப்பொழுதும் வாதுபேசுபவ ரென்றும், செருக்கும்-கர்வங்கொண்ட என்றும் உரைக்கலாம். தருக்கு=தர்க்கம்: வாதம். **பி-ம்:**—[1]உரற்றும். (சுஎ)

சுஅ. விண்ணள விடநிமிர்ந் துயர்ந்த மேனியர்
கண்[1]ணள விடவரு மார்பர் காலினுன்
மண்ணள விடுநெடு [2]வலத்தர் [3]வானவ
ரெண்ணள விடவருஞ் செருவெண் [4]றேறினர்.

(இ - ள்.) விண் அளவு இட நிமிர்ந்து உயர்ந்த மேனியர் - ஆகாயத்தை அளவிடும்படி மிக ஓங்கிவளர்ந்த உடம்பையுடையவர்கள்: கண் அளவு இட அரு மார்பர் - கண்களால் அளவிடுதற்கு அருமையான [கண்பார்வையினெல்லைக்கு எட்டாதபடி பரந்துள்ள] மார்பையுடையவர்கள்: காலினுல் மண் அளவு இடு நெடு வலத்தர் - (தங்கள்)கால்களால் பூமிமுழுவதையும் அளவிடத்தக்க மிக்கவலிமையுடையவர்கள்: வானவர் - தேவர்களோடுநிகழ்ந்த, எண் அளவு இட அரு - எண்ணினுற் கணக்கிட முடியாத [மிகப்பல வான], செரு - போர்களில், வென்று - (அவர்களைச்) சயித்து, எறினர் - மேம்பாடடைந்தவர்கள்; (எ - று.)

முதலடியில், அளவிட - அளாவியிட எனினுமாம். வானவர்-தேவர்கள், எண் அளவிட-மனத்திலே கொண்டு மதிக்கும்படி, செரு வரும் - (இப்பொழுது) பெரும்போர் நேரும், என்று - என்றுஎண்ணி, எறினர்-(வீராவேசம்) மிகப்பெற்றவர்கள் என்று உரைத்தலும் ஒன்று. வலம்=பலம். **பி-ம்:**—[1]அளவிடல். [2]வரத்தர். [3]வானிடை. [4]எய்தினர். (சுஎ)

சக. இந்திரன் முதலினே ரெறிந்த மாப்படை
[1]சிந்தின தெறித்துகச் செறிந்த தோளினே
ரந்தக னடிதொழு தடங்கு மாணையார்
வெந்தழ லுருவுகொண் டணைய மேனியார்.

(இ - ள்.) இந்திரன் முதலினோர் - இந்திரன் முதலிய தேவர்கள், எறிந்த - வீசிய, மா படை - பெரிய [சிறந்த] ஆயுதங்கள், சிந்தின தெறித்து உக - (தம்மைச் சிறிதேனும் ஊறுபடுத்தமாட்டாமல் நம்மேற்பட்ட வளவில்) தெறித்துச்சிதறிப் பொடியாய்விழும்படி, செறிந்த - வலிமைமிக்க, தோளினோர் - தோள்களையுடையவர்கள்: அந்தகன் அடி தொழுது அடங்கும் ஆணையார் - (பிராணிகளுக்கு) அழிவுவிளைப்பவனை யமனும் தங்கள் பாதங்களில் வணங்கிக் கீழ்ப்படியும்படி செய்யும் கட்டளையுடையவர்கள்: வெம் கழல் உருவுகொண்டு அனைய மேனியார் - கொடியசிலருப்பு அரக்கரின், வடிவத்தைக்கொண்டாற்போன்ற வடிவமுடையவர்கள்:(எ-று.)—பி-ம்:—[1]சிந்தினர்.

சஉ. சூலமும் பாசமுந் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெரிறுந் தாங்கினு
ராலமும் வெளிதெனு நிறத்த [1]ராற்றலார்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார்.

(இ - ள்.) சூலமும் - சூலாயுதத்தையும், பாசமும் - பாசாயுதத்தையும், தொடர்ந்த செம் மயிர் சாலமும் - அடர்ந்த செம்பட்டமயிர்த்திரளையும், தறு கணும் - கொடிய கண்களையும், எரிறும் - கோரதங்தங்களையும், தாங்கினர் - தரித்தவர்கள்: ஆலமும் வெளிது எனும் நிறத்தர் - விஷமும் (தங்கள்நிறத்துக்குமுன்) வெண்மையான தென்று சொல்லத்தக்க கருநிற முடையவர்கள்: ஆற்றலால் - (தமது) வலிமையால், காலனும் காலன் என்று அயிர்க்கும் - யமனும் (தன்னையழிப்பானொரு) யமனே வென்று (தங்களே நோக்கிச்) சந்தேகிக்கத்தக்க, காட்சியார் - தோற்ற முடையவர்கள்; (எ - று.)

தறுகண்-அஞ்சாமையுமாம். ஜாலம்-வடசொல். பி-ம்:—[1]ஆகலால்.(சஎக)

சஙு. கழலினர் தாரினர் கவச மார்பினர்
நிழலுறு பூணினர் [1]நெறித்த நெற்றிய
ரழலுறு குஞ்சிப ரமரை வேட்டுவர்
[2]தெழலுறு மனத்தின [3]ரொருமை யெய்தினர்.

(இ - ள்.) கழலினர் - காலில்வீரக்கழலுடையவர்கள்: தாரினர்-வெற்றி மாலையை யுடையவர்கள்: கவசம் மார்பினர் - கவசத்தைத்தரித்த மார்பை யுடையவர்கள்: நிழல் உறு பூணினர் - ஒளி மிக்க ஆபரணங்களையுடையவர்கள்: நெறித்த நெற்றியர் - மேல்நெறித்த நெற்றியையுடையவர்கள்: அழல் உறு குஞ்சியர் - நெருப்பையொத்த தலைமயிர்முடியையுடையவர்கள்: அம

ரை வேட்டு - போரை விரும்பி, உவந்து - உற்சாகங்கொண்டு, எழல் உறு - கிளர்ச்சியடைகிற, மனத்தினர் - மனத்தையுடையவர்கள்: ஒருமை எய்தினர் - (தமக்குள்) ஒற்றுமைபெற்றவர்கள்: (எ - று.)

மூன்றும்அடியில், உறு - உவமவுருபு. ஒருமையெய்தினர் - ஒரேபிடிவாதமுடையவ ரெனினுமாம்; தாம் பிடித்ததையே சாதிப்போ மென்னும் ஒன்றையே நோக்குபவ ரென்க. பி-மீ:—[1]நெறித்துப்பொங்கிய. [2]உழலுறு. [3]ஒருவரேயனர். (சகo)

சச. மருப்பிறு மதக்களிற் றமரர் மன்னனும்
விருப்புறு முகத்தெதிர் விழிக்கின் வெண்ணிடு
[1]மூருப்பெறு துலேவுறு முலக மூன்றினுஞ்
செருப்பெறுத் தினவுறு சிகரத் தோளினர்.

(இ - ள்.) இறு - (எளிதில்) ஒடிபடாத [மிகவலிய], மருப்பு - (நான்கு) தந்தங்களேயும், மதம் - மதசலத்தையுமுடைய, களிறு - (ஐராவதமென்னும்) ஆண்யானேயையுடைய, அமரர் மன்னனும் - தேவராசனன இந்திரனும், விருப்புறு முகத்து எதிர் விழிக்கின் - விருப்பில்லாமல் [தன்னடைவே] (தங்களுடைய) முகத்துக் கெதிரே விழிக்க நேர்பட்டாலும், (அப்போதே), வெண் இடும் - மூதுகுகொடுத்தோடுவான்; (அன்றியும் அவர்), உரு பெறுது-உருவத்தை (தாங்கள்) கொண்டு நிற்கமுடியாமல், உலேவு உறும் - அழிவடையுந்தன்மையவான, உலகம் மூன்றினும் - மூவகையுலகங்களிலும், செரு பெறு தினவு உறு-(தங்களேயெதிர்ப்பவர் எவரு மில்லாமையாற்) போரைப் பெறுமல் தினவுமிக்க, சிகரம் தோளினர் - மலேச்சிகரம்போலுந் தோள்களேயுடையவர்கள்: (எ - று.)

இவ்வரக்கவீரர்களேத் தான் போருக்கு எதிர்த்துவரும் நிலேயிலன்றிச் சாதாரணமானகாலத்திற் கண்ணுறப்பார்க்கநேரிடினும் அப்போதும் தேவேந்திரனும் இவர்களெதிரேநிற்கமாட்டாமல் அச்சம்மிக்கு முதுகு கொடுத்தோடுவானென்று இவர்களின் வீரக்கடுமையை வலியுறுத்தியன, மூன்றிரண்டடிகள். விழிக்கின் - கண்பார்வைக்கு இலக்காஞல்: கண்ணெடுத்துப்பார்த்தவளவில். இவர்களேக்காணுமிடத்து உலகமூன்றும் எதிர்நிற்க முடியாது அஞ்சியலேவுறுமென்க: உருப்பெறுதுலேவுறு முலக மூன்று என்பதற்கு - இவர்களுடலேத் தாங்கப்பெறுமல் வருத்தும் மூவகையுலகங்களெனினுமாம். பி-மீ:—[1]உருப்பொறு. (சகக)

சடு. குஞ்சரங் குதிரைபேய் குரங்கு கோளரி
வெஞ்சினக் கரடிநாய் வேங்கை யாளியென்
[1]றஞ்சுறக் கனல்புரை முகத்த ரார்கலி
நஞ்சுதாக் கெனப்புரை நயனத் தார்களும்.

(இ - ள்.) குஞ்சரம் - யானே, குதிரை—, பேய்—, குரங்கு—, கோள் அரி - வலிய சிங்கம், வெம் சினம் கரடி-கடுங்கோபமுடைய கரடி, நாய்—,

வேங்கை-புலி, யாளி—, என்று-என்கிற இவற்றின் முகவடிவமாய், அஞ்சுற-(தாண்பவர்) அஞ்சும்படி, கனல் புரை - நெருப்பையொத்த, முகத்தர் - முகத்தையுடையவர்கள்: ஆர்கலி நஞ்சு தொக்கு என புரை - பாற்கடலில் தோன்றிய விஷம் நிரண்டாற்போலொத்த, நயனத்தார்களும் - கண்களை யுடையவர்கள்: (எ - று.)—இறுதியி லுள்ள உம்மை - இறந்ததுதழுவியஎச் சப்பொருளது; அடுத்தகவியிலும் இப்படியே. பி - ம்:—[1]அஞ்சுத்தற்கு. (சகஉ)

சசு. எண்கைய ரெழுகைய ரேழு மெட்டுமாய்க்
கண்கனல் சொரிதரு முகத்தர் [1]காலினர்
[2]வண்கையின் வளைத்துயிர் வாரி [3]வாயினிட்
டுண்கையி னுவகைய ருலப்பி லார்களும்.

(இ - ள்.) எண் கையர் - எட்டுக்கைகளையுடையவர்கள்: எழு கையர் - எழுகைகளையுடையவர்கள்:எழும் எட்டும் ஆப்-எழும் எட்டும் என ஞ்தொகை யுடையனவாய்,கண் கனல் சொரிதரு - கண்களினின்று நெருப்புச்சொரிகிற, முகத்தர் - முகங்களையுடையவர்கள்: காலினர் - (வலிய) கால்களையுடைய வர்கள்: உயிர்-பிராணிகளை, வண் கையின் வளைத்து வாரி - பெரிய(துங்கள்) கைகளால் வாரியெடுத்து, வாயின் இட்டு-வாயிலேபோட்டுக்கொண்டு, உண் கையின் - புசிப்பதில், உவகையர் - விருப்பமுடையவர்கள்: உலப்பு இலார் களும் - அழிவில்லாதவர்கள்; (எ - று.)

ஏழும்எட்டுமான முக முடையவரென்க. சுகூ-ஆங்கவிமுதல் இச்செய் யுள்வரையிலும் சேனைவீரர்களின் தன்மைகூறியனவாம். பி-ம்:—[1]காலி னுல். [2]மண். [3]வாயிடுமுண்கையருலக்கையர். (சகஉ)

சஎ, சஅ.—இரண்டும் ஒருதொடர்: சேனைத்தலைவர்களின்சேனையில் துவசம் முதலியவற்றின் அடர்த்திகூறும்.

இயக்கரிற் பறித்தன வவுண ரிட்டன
மயக்குறுத் தமரரை வலியின் வாங்கின
துயக்கில்கந் தர்ப்பரைத் துரந்து வாரின
[1]நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின.

கொடிதழை [2]கவிகைவான் றெங்கல் [3]குஞ்சரம்
படியுறு பதாகைமீ விதானம் [4]பலவகை
யிடையிலா தெங்கணு மிசைய மீயிசை
மிடைதலி னுலகெலாம் வெயி[5]லி ழுந்தவே.

இரண்டுசெய்யுட்கும் ஒருங்கே பொருள் உரைக்கப்படும்.

(இ - ள்.) (சஎ) இயக்கரின் பறித்தன-யக்ஷர்களிடத்தினின்று வலியக் கவர்ந்தவையும், அவுணர் இட்டன - (தங்களுக்கு) அசுரர்கள் கொடுத்த வையும், அமரரை மயக்குறுத்து வலியின் வாங்கின - தேவர்களை (மாயை யால்) மயங்கச்செய்து (அவர்களிடத்தினின்று தாங்கள்)வலிமையாற்பெற்றுக் கொண்டவையும், துயக்கு இல் கந்தர்ப்பரை துரந்து வாரின - சோர்தலில்

லாத [வலிய] கந்தர்வர்களைத் துரத்தியோட்டி வலிய எடுத்துக்கொண்ட வையும், நயப்பு உறு சித்தரை நலிந்து வவ்வின - அன்புமிக்க சித்தர்களை வருத்திக்கவர்ந்தவையும் ஆகிய, (சஅ) கொடி - துவசங்களும், நுழை - மயிற்பீலிக்குடைகளும், கவிகை - குடைகளும், வான் தொங்கல் - உயர்ந்த குஞ்சங்களும், குஞ்சரம் படியுறு பதாகை - யானைகளின்மேல் அமைதல் பொருந்திய பெருங்கொடிகளும், மீ விதானம் - மேற்கட்டிகளும், பல் வகை - மற்றும்பலவகைஇராசசின்னங்களும், இடை இலாது எங்கணும் இசைய - இடைவெளியில்லாமல் எவ்விடத்தும்பொருந்த, மீமிசை மிடைத் லின் - ஆகாயத்தில் நெருங்குதலால், உலகு எலாம் வெயில் இழந்த - உலக ங்களெல்லாம் சூரியனொளியை இழப்பனவாயின; (எ - று.)

கந்தர்ப்பர் - வடசொற் சிதைவு. நயப்புஉறு - யாவராலும் அன்புசெய் யத்தக்க என்க. பி - மீ:—[1]லியப்புறுபடைக்கல விழுமம்பெற்றுளார்.

தொங்கல் - தொங்குவதாகிய குச்சுக்குத் தொழிலாகுபெயர். [3]குஞ்ச கம்என்ற பாடத்துக்கு - மயிர்க்குச்சு என்க. கொடிமுதலியன வுலகமுழு வதும் வெயில்புகாதபடி மறைத்து இருள்செய்தன வென்க. பல்வகையென் றது-சாமரம் ஆலவட்டம் முதலியவற்றை. பி - மீ:—[2]கவிகையின். [3]குஞ்ச மேல். [4]பன்மணிக் குடைமிளிர்சாமரைக் குழாங்கொண்டெங்கணும். [5]இழப் பவே. (சகச, சகடு)

சகூ —இரண்டுகவிகள் - ஒருதொடர்: சேனைத்தலைவரின் வருணனை.

எழுவரொ டெழுவ[1]ரா முலக மேழொடேழ்
தழுவிய வென்றியர் தலைவர் [2]தானையர்
மழுவினர் வாளினர் வயங்கு சூலத்த
ருழுவையொ டரியென [3]வுடற்றுஞ் சீற்றத்தார்.

(இ - ள்.) எழுவரொடு எழுவர் ஆம் தலைவர்-பதினலைவராகிய அச்சேனைத் தலைவர்கள், உலகம் ஏழொடு ஏழ் தழுவிய வென்றியர் - பதினலைவுலகங் களிலும் பொருந்திய வெற்றியை யுடையவர்கள்;—தானையர் - பெருஞ் சேனையுடையவர்கள்: மழுவினர் - மழுவையுடையவர்கள்: வாளினர்-வாளை யுடையவர்கள்: வயங்கு சூலத்தர்-விளங்குகிற சூலத்தையுடையவர்கள்: உழு வையொடு அரி என உடற்றும் சீற்றத்தார் - புலியும் சிங்கமும் போல(ப்பிற வுயிரை) வருத்தும் கோபமுடையவர்கள்; (எ - று.)

சகூ - ஆம் கவிமுதல் இக்கவியில் 'தலைவர்' என்றது வரையில்,சேனைத் தலைவர் பதினலவரது சிறப்புக்களைக்கூறி, 'தானையர்' என்றதுமுதல் அச்சே னைகளிலுள்ள வீரர்களின் தன்மைகளைக் கூறுகிறரென்றலுமொன்று. பி-மீ:—[1]ளின். [2]தானையின். [3]உற்றுஞ். (சகசு)

ருப. வில்லினர் வாளின [1]ரிதழின் மீதிடும்
டல்லினர் மேருவைப் பறிக்கு மாற்றலர்

புல்லினர் திசைதொறும் புரவித் தேரினர்
சொல்லின முடிக்குறுந் துணிவி னெஞ்சினர்.

(இ - ள்.) வில்லினர் - வில்லேபுடையவர்களும், வாளினர்-உடைவாளேயுடையவர்களும், இதழின்மீது இடும் பல்லினர் - உதட்டின்மேற் கடித்து வைத்த பற்களேயுடையவர்களும், மேருவை பறிக்கும் ஆற்றலர் - மகாமேருமலையையும் பறித்தெடுக்கவல்ல வல்லமையுடையவர்களும், புரவி தேரினர் - குதிரைகள்பூண்ட தேர்களேயுடையவர்களும், சொல்லின முடிக்குறும் துணிவின் நெஞ்சினர் - தாம்சொன்னவற்றைச் சொன்னபடியே செய்துமுடிக்கவல்ல தைரியமுள்ள மனமுடையவர்கள்: (அவர்கள்), திசை தொறும் புல்லினர் - எல்லாத்திக்குகளிலும் வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

கீழ்க்கவியில்வந்த'வாளினர்'என்றதனேடு கூறியதுகூறலாகாமைப்பொருட்டு இக்கவியில், வாள் - உடைவாளெனக் கொள்ளப்பட்டது. இதழின்மீதிடும்பல்லினராதல், கோபாவேசத்தால். சக-ஆம் கவியில் தானேபர் என்பதுமுதல் சேனைவீரரின் தன்மையைக்கூறுவதாகக்கொள்ளுமிடத்து, ஈற்றடிக்கு - தங்கள்தலைவர்கள்சொன்ன சட்டளைகளைத் தவறாமற்செய்து நிறைவேற்றுந் துணிவுள்ள மனமுடையர் என்று உரைக்கலாம். பி - மீ:— [1]இதழை. (சகஎ)

நுக.—சேனைப்பெருந்தலைவர்கள் சேனைகளுடன் வந்து கரனைச் சேர்தல்.

தூடணன் திரிசிரா தென்ற [1]லாதியர்
கோடணை முரசினங் குளிறு சேனைய
ராடவ ருயிர்கவ ரலங்கல் வேலினர்
பாடவ நிலையினர் பலருஞ் சுற்றினர்.

(இ - ள்.) ஆடவர் உயிர் கவர்-வீரர்களுடைய உயிரை (யுத்தம்பண்ணி) எடுக்கவல்ல, அலங்கல் வேலினர் - வெற்றிமாலையைத்தரித்த வேலாயுதமுடையவர்களும், பாடவம் நிலையினர் - நிறமையுள்ள நிலைமையையுடையவர்களு மாகிய, தூடணன் - தூஷணனும், திரிசி ரா தென்றல் - திரிசிரஸ் என்னும் வீரனும், ஆதியர் - முதலியவர்களான, பலரும் - சேனைத்தலைவர்கள்பலரும், கோடணை முரசு இனம் குளிறு சேனையர் - ஆரவாரத்தையுடைய பேரிகைவாத்தியங்கள் முழங்குகிற சேனைகளையுடையவர்களாய், சுற்றினர் - (வந்து கரனைச்) சூழ்ந்தார்கள்; (எ - று.)

தூஷணன் என்ற வடமொழிப்பெயர்-(யாவரையும்) தூஷிப்பவ னென்றும், திரிசிரா என்ற வடமொழிப்பெயர்-மூன்று தலேகளேயுடையவ னென்றும் பொருள்படும். தோன்றல் - பெருமையிற்சிறந்தவன்; ஆண்பாற்சிறப்புப்பெயர். கோடணை=கோஷணம்; வடசொல். பி-மீ:—[1]ஆதியாய்க். (சகஅ)

நுஉ.—இப்படிச் சேனை சூழக் கரன் போர்க்குப் புறப்படுதல்.

ஆன்றமை யெறிபடை யழுவத் தார்கலி
லான்றெடர் மேருவை வளைத்த தாமென

வூன்றின தேரின னுயர்ந்த தோளினன்
ரூன்றினன் [1]கரனமன் றுணுக்க மெய்ததே.

(இ - ள்.) ஆன்று அமை - நிறைந்துபொருந்திய, எறி படை-பகையழிக்கவல்ல சேனையாகிய, அழுவத்து ஆர்கலி - பரப்பையுடைய கடல், வான் தொடர் மேருவை - ஆகாயத்தை யளாவிய மேருமலையை, வளைத்தது ஆம் என - வளைத்துக்கொண்டதுபோல (த் தன்னைச்சூழ), ஊன்றின தேரினன்-நடுவில்நிலைப்பட்ட தேரையுடையவனும், உயர்ந்த தோளினன்-உயர்ந்ததோள் களையுடையவனுமான, கரன்—,—நமன் துணுக்கும் எய்த தோன்றினன் - யமனும் அச்சமடையப் புறப்பட்டான்; (எ - று.)

மேரு உவமையைக் கரனுக்காவது, அவனது தேருக்காவது கொள்க. உதவகத்தை அங்கமாகக்கொண்டு வந்த உவமையணி. பி-ம்:—[1]யாவரும். ()

ருசு.—சேனைசெல்லுதலால் மேலெழுந்த தூளியின் வருணனை.

அசும்புறு மதகரி புரவி யாடகத்
தசும்புறு [1]சயந்தன மரக்கர் [2]தாடர
விசும்புறு தூளியான் வெண்மை மேயின
[3]பசும்பரிப் பகலவன் பைம்பொற் றேரரோ.

(இ - ள்.) அசும்புறு - நீரூற்றையொத்த [இடைவிடாதுமேன்மேற் பெருகுகிற] மதம் - மதஜலத்தையுடைய, கரி - யானைகளும், புரவி-குதிரை களும், ஆடகம் தசும்புறு-பொன்னுலாகிய கலசம் பொருந்திய, சயந்தனம் - தேர்களும், அரக்கர் - இராக்கதர்களும், (ஆகியதால்வகைச்சேனைகளும்), தாள் தர - கால்களாலவைத்து நடத்தலால், விசும்பு உறு - (மேலெழுந்து) ஆகாயத்தையடைந்த, தூளியான்-புழுதிகளால்,—பசு பரி-(தேரிற்) பச்சைக் குதிரைகளைப்பூண்ட, பகலவன் - சூரியனுடைய, பைம் பொன் தேர் - பசும் பொன்னிறமான தேரும், வெண்மை மேயின(து)-(தனதுநிறம்மழுங்கி மாறு பட்டு) வெண்ணிறமடைந்தது; (எ - று.)—அரோ - ஈற்றசை.

ஹரடகம், ஸ்யந்தநம் என்ற வடசொற்கள் திரிந்தன. தேருக்குக் கால் என்றது, சக்கரத்தை. அரக்கரென்றது, பதாதிவீரரை. பகலவன் - பகற் பொழுதுக்குரியவன். [3]பசும்பரிபகலவன்என்ற இயல்பானபாடத்துக்கு - பகலவனுடைய பைம்பொற்றேரும் அத்தேரிற்பூட்டிய பசும்பரிகளும் வெண் மைமேயினவென்க. வெண்புழுதிமிகப்படிதலால் பொற்றேரும் பசும்பரியும் தம்முடையநிறம்மாறினவென்றது-பிறிதினீர்தணம்பெறலணியாம்: இதனால், மேலெழுந்த தூளியின்மிகுதிதோனிக்கும். பி-ம்:—[1]திணிபுயத்த. [2]தாடரு.

ருசு.—இதுவும் அது.

வனந்துகள படடன மலியின வானுயர்
கனந்துகள் பட்டன கடல்க ளீர்ந்தன
வினந்தொகு தூளியா லிசைப்ப தென்னினிச்
சினந்தொகு நெடுங்கடற் சேனை செல்லவே.

(இ-ள்.) சினம் தொகு-கோபம் மிக்க, நெடு கடல் சேனை-பெரிய கடல் போற்பரந்த இராக்கதச்சேனை, செல்ல - புறப்பட்டவளவில்,—இனம் தொகு தூளியால்-கூட்டமாகத்திரண்டெழுந்த புழுதியால்,—வானம் துகள் பட்டன-காடுகளெல்லாம் புழுதியடைந்தன; மலையின் வான் உயர் கனம் துகள் பட்டன - மலைகளின்மேலும் ஆகாயத்தின்மீதும் எழுந்துள்ள மேகங்கள் மாசடைந்தன; கடல்கள் தூர்ந்தன - சமுத்திரங்கள் தூர்ந்துபோயின; இனி இசைப்பது என் - இனிச்சொல்லவேண்டியது யாது? (எ - று.)

'இசைப்பதென்னினி' என்றது வியப்புக் குறிப்பெச்சம். உயர்வுநவிற்சி.

நிரு.—அரக்கர்களின் மிதுனி.

[1]நிலமிசை விசும்பிடை நெருக்க லானெடு
மலைமிசை மலையினம் வருவ போன்மலைத்
தலைமிசைத் தலைமிசைத் தாவிச் சென்றனர்
கொலைமிசை நஞ்செனக் கொதிக்கு நெஞ்சினர்.

(இ - ள்.) நிலமிசை-பூமியின்மீதும், விசும்பிடை-ஆகாயத்தின்மேலும், நெருக்கலால் - (இடைவெளியின்றி) நெருக்கமுண்டானதனால்,—கொலை மிசை நஞ்சு என கொதிக்கும் நெஞ்சினர் - கொல்லுதல்தொழிலில் விஷம் போல உக்கிரங்கொள்ளும் மனமுடைய அரக்கர்கள்,—நெடு மலைமிசை மலை இனம் வருவ போல் - உயர்ந்தமலைகளின்மேல் வேறுமலைக்கூட்டங்கள் ஏறி வருவனபோல, மலை தலைமிசை தலைமிசை தாவி சென்றனர்-மலைகளினுச்சி தோறும் (கால்வைத்துத்) தாண்டிக்கொண்டு சென்றார்கள்; (எ - று.)

பூமியிலும் ஆகாயத்திலும் சேனை அடர்த்து வெற்றிடமின்றிருக்கினதனால், பல அரக்கர்கள் மலைகளின்மேலேயேபாய்த்துடர்த்துகொண்டுபோயின ரென்பதாம். அவர்க்கு மலைமேல் மலைவருதலை இல்பொருளுவமைபாகக் கூறினர். வருவ - பெயர். பி - ம்:—[1] நிலை. (உஉ2)

வேறு.

நிசு.—அரக்கர் சேனை இராமனுடனாவிடம் சேர்தல்.

வந்தது சேணை வெள்ளம் வள்ளியோன் [1]மருங்கு [2]மாய
பந்த[3]மா [4]வினையை மாளப் [5]பற்றறு பெற்றி யோர்க்கு
முந்தரு நிலைய தாகி யுடனுறைந் துயிர்க டம்மை
யந்தகற் களிக்கு நோய்போ லரக்கிமுன் னகை வம்மா.

(இ - ள்.) மாயபந்தம் - மாயையின்தொடர்ச்சியாலாகிய, மா வினையை-பெரிய கருமங்களை, மாள - அழிக்கும்படி, பற்று அறு - உலகப்பற்றிலொழிந்த, பெற்றியோர்க்கும்-பெருமையுடையவர்களுக்கும், உந்து அரு நிலையது ஆகி - விலக்கமுடியாத நிலைமையுடையதாய், உடன் உறைந்து - உடம்புடனே பொருந்தி, உயிர்கள்தம்மை அந்தகற்கு அளிக்கும் - அந்தந்த உயிரை யமனுக்குக்கொடுக்கிற [கொன்றொழிக்கிற], நோய் போல் - வியாதிபோல, அரக்கி - சூர்ப்பணகை, முன் ஆக-முன்னேசெல்ல, சேனை வெள்ளம் - அவ்விராக்கத சேனைப்பெருக்கு, வள்ளியோன் மருங்கு வந்தது-வரையாதருளுந்தன்மைய

ஞனஇராமபிரானது அருகிலேவந்து சேர்ந்தது; (எ-று.)—அம்மா-ஈற்றசை; சேனையைப்பற்றிய வியப்பிடைச்சொல்லுமாம்.

அவித்யை யென்று ஒருபெயர்பெறும் அநாதியான மாயை கருமங்களுக்கெல்லாம் காரண மாதலால், 'மாயபக்தமாவினை' எனப்பட்டது. தானல்லாதவுடம்பை யானென்றுகருதி அதுமாகிய அதனிடத்துச் செய்யும் பற்றுகிய அகங்காரமும், தன்னுடு இயைபில்லாத பொருளை எனதென்று கருதிப் புறமாகியஅதனிடத்துச் செய்யும் பற்றுகிய மமகாரமும் ஆகிய அபிமானங்களை ஆசிரியரிடத்துக் கேட்ட உபதேசமொழிகளாலும், யோகப்பயிற்சியாலும் அவை யானெனதன்மை தெளிந்து முற்றவெழுத்தவர்க்குப் பிறப்புக்குக்காரணமான கருமங்கள் ஒழிதலால், 'வினையைமாளப்பற்றறுபெற்றியோர்' என்றார். கருமம் மூன்றுவகைப்படும்: சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமிய மென. சஞ்சிதம் - பிறப்பு அநாதியாய்வருதலின் உயிரால் அளவின்றி யீட்டப்பட்டவை. பிராரப்தம் - இப்பிறப்பில் அனுபவிக்குமாறு கொண்டவை. ஆகாமியம் - இனிவரும்பிறப்புக்களில் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தவை. தத்துவஞானத்தாற் பற்றற்று வீடுபெறும்நிலையையடைந்தார்க்கும் சஞ்சிதம் ஆகாம்ய மென்ற கருமங்கள்மாத்திரமே ஒழியும்; பிராரப்தகருமத்திலே பற்றறுதற்குமுன்கழித்ததுபோக மற்றது நீங்காமல் இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவதாயேநிற்கும் என்பதுதூல்துணிபு. 'முன்கிடந்ததுன்பக்கமும்மேல்வரக்கடவதுன்பங்களும்இலவாதல்மெய்புணர்வின் பயன்'; 'இவ்வாறுணே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றும்': 'முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவுநின்றவுடம்பும் அதுகொண்டவினைப்பயன்களும் நின்றமையின்' என்ற பரிமேலழகருரை வாக்கியங்களின் கருத்து இங்கு அறியத்தக்கது. இப்படிப்பட்ட பிராரப்தகருமமும், அதனுலாகிய நோயும் அதனுலாகும் மரணமும் தத்துவஞானிகளும் அனுபவித்தே தீரவேண்டியதா யிருத்தல் பற்றி, 'பற்றறுபெற்றியோர்க்கும் உற்றருநியதாகி உயிர்கள்தம்மை யுற்றகற்கு அளிக்கும்கோய்' என்றார். இராவணன்தங்கையான சூர்ப்பணகை தன்னுடன்பிறந்தமுறையில்நின்ற கரன் முதலியோர்க்கு நாசகாரணமாய் நிற்றல் பற்றி, 'உடனுறைத்துயிர்கடம்மை யுற்றகற்களிக்குநோய்போ லறுக்கி' என்றார்; கீழ்ப்படலத்திலும் "மேலைநாளுயிரொடும்பிறந்து தான்வினை, காலமோர்ந் துடனுறை கடியநோயனுள்" என்று கூறியவாறும் காண்க. இப்படிப்பட்ட சூர்ப்பணகை முன்னே வழிகாட்டிக்கொண்டுசெல்ல அரக்கர் சேனை பின்னேவந்த தென்பதாம். பக்தமாவினை - உயிரைக் கட்டுப்படுத்தும் பெரிய கருமமென்க. மாள=மாள்விக்க; பிறவினைப்பொருளில் வந்த தன்வினை. வினையை யென்பதில் ஐகாரத்தைச் சாரியை யென்று விலக்கி, வினை மாள - கருமம் ஒழிய என்றலுமொன்று. பி - மீ:—[1]மருங்கின். [2]மாயாபக்தம், மாயப்பக்தம். [3]ஆம். [4]வினையின். [5]பற்றியபயத்தினுர்க்கும்.

இதுமுதல் கச - கவிகள் - கீழ்ப்படலத்தின் முதற்கவி போன்ற **அறுசீராசிரியவிருத்தங்கள்.** (சஉஉ)

நுஎ. தூரியக் குரலின் [1]வானின் முகிற்கணந் தூணுக்கங் கொள்ள
வாசிலை யொலியி னஞ்சி [2]யுருமெலா மறுக்கங் கொள்ள
வார்கலி [3]யார்ப்பி னுட்கி [4]யசைவுற வரக்கர் சேனை
போர்[5]வனத் திருந்த வீர ருறைவிடம் புக்க தன்றே.

(இ - ள்.) தூரியக் குரலின் - வாத்தியங்களின் முழக்கத்தால், வானின் முகில் கணம் தூணுக்கம் கொள்ள - ஆகாயத்திலுள்ள மேகங்களின் கூட்டங்கள் அச்சமடையவும், வார் சிலை ஒலியின் - நீண்டவில்நாணின் ஓசையால், உரும் எலாம் அஞ்சி மறுக்கம் கொள்ள - இடிகளெல்லாம் பயந்தலக்கமடையவும், ஆர்ப்பின் - (கர்ச்சனை முதலிய) ஆரவாரத்தால், ஆர்கலி உட்கி அசைவுற - கடல் அஞ்சி நடுக்கமடையவும் - அரக்கர் சேனை - வனத்தை இருக்க போர் வீரர் உறைவிடம் புக்கது - அந்தக் காட்டிலிருந்த போரில்வல்ல வீரர்களான இராமலக்குமணர் வசிக்குமிடத்தை யடைந்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; அப்பொழுதே எனினுமாம். உயிர்வதுவிசியணி.

அசைவு - நிலைகிலுமாம். போர் வனத்தை இருந்த வீர ரென்றே எடுத்து, அரக்கர்போர்செய்யும் பொருட்டு வனத்திலிருக்கும் வீரர்க ளெனினுமாம். பி - ம்:—[1]கைவரன்முகில், [2] நுருமினா. [3]ஆர்ப்பை. [4]அசைவுற. [5]கருத்து. (நஙூ)

நூஅ.—அச்சேனையைக்கண்டு பறவைகளும் விலங்குகளும் அஞ்சியோடி வருதல்.

வாய்புலர்ந் தழிந்த மெய்யின் [1]வருந்தத்த வழியின் யாண்டு
மோய்வில நிரிந்து வீங்கு முயிர்ப்பின [2]வுலர்ந்த கண்ண
தியவர் சேனை வந்து [3]சேர்ந்தமை தெரியச் சென்று
வேய்தெரிந் துரைப்ப போன்ற புள்ளொடு விலங்கு மம்மா.

(இ - ள்.) புள்ளொடு விலங்கும் - (அவ்வனத்திலுள்ள) பறவைகளும் மிருகங்களும்,—வாய் புலர்ந்து அழிந்த - (அச்சேனையைக் கண்டு மிக அஞ்சியதனால்) வாய்உலர்ந்து மனமிலிகெட்டவையும், மெய்யின் வருந்தத்-உடம்பின்வருந்தமுடையவையும், வழியின் யாண்டும் தங்கு நில - நிலைவழியில் எவ்விடத்தும்நிலைப்பாதிற்றாகில்லாதவையும், நிமிர்ந்துவீங்கும்உயிர்ப்பின-மேல்நோக்கிமிக்குவருகிற பெருமூச்சுடையவையும், உலர்ந்த கண்ண-பார்வை மழுங்கிய கண்களையுடையவையுமாய், (ஓடிவந்து).—தியவர் சேனை வந்து சேர்ந்தமை - கொடிய அரக்கர்சேனை வந்து சேர்ந்த செய்தியை, அரிந்து - தாம் அறிந்து, சென்று - முன் வந்து, தெரிய உரைப்ப - (இராமலக்குமணர்) அறியும்படி செய்திகூறுபவரான, வேய்-ஒற்றர்களே, போன்ற - ஒத்தன; (எ - று.)—அம்மா - ஈற்றசை; விபப்பிடைச்சொல்லுமாம்.

பறவைகளும் விலங்குகளும் மிகஅஞ்சி மிலேகெட்டுத் தரிப்பின்றிவிரைந் தோடிவந்தமை அரக்கர்சேனைவருவதை அறிதற்குக் காரணமாகுதல் பற்றி, அவற்றை வந்துசெய்திகூறும் ஒற்றர் போன்றன வென்றார்; தன்மைநவிற்

குறிப்பேற்றவணி. வேய் - உயர்திணைப்பொருள்தரும் அஃறிணைச்சொல். **பி-ம்:**—[1]வருத்தத்தவ். [2]சேர்ந்தவை. (சஉடு)

நிகழ்ச்சி.—இங்ஙனம் அரக்கர்சேனை வருதலை இராமலக்குமணர் அறிதல்.

தூளியின் படலை வந்து தொடர்வுற மருமுந் [1]தூறுந்
தாளிடை யொடியு மோசை சடசட வொலிப்பக் கானத்
தாளியு மியாளி மஞ்சி யிரிதரு [2]மலக்க ணோக்கி
மீளிமொய்ம் பினருஞ் சேனை மேல்வந்த துளதென் றுன்னு.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) தூளியின் படலை - புழுதிகளின் கூட்டம், வந்து தொடர்வுற-(முன்னே) வந்துதொடரவும்,—மருமும் தூறும் - மரங்களும் புதர்களும், தாளிடை ஒடியும்-(அரக்கர்களது) கால்களில் அகப்பட்டு ஒடிபடுதலாலாகிய, ஓசை—, சடசட ஒலிப்ப - சடசடவென்று ஒலிக்கவும்,—கானத்து - காட்டிலுள்ள, ஆளியும்-யாளிகளும், அரியும்-சிங்கங்களும், அஞ்சி இரிதரும்-பயந்து ஓடுகிற, அலக்கண்-துன்பத்தை, நோக்கி-பார்த்து, (அதனால்), மீளி மொய்ம்பினரும்-வலியதோள்களையுடைய இராமலக்குமணர்களும், சேனை மேல்வந்தது உளது என்று உன்னு - அரக்கர்சேனை தம்மேல் எதிர்த்துவந்தமை யுண்டென்றுஎண்ணி,—(எ-று.)—'உன்னு' என்றசெய்யாஎன்னும்வாய்பாட்டுவினைச்சொ ஐ உன்ன வெனச் செயவெனெச்சமாகத்திரித்து, இருவரும் மேனத்தவளவில் முன்வந்த இலக்குமணனேசோக்கி இராமன் கூறலுற்று னென அடுத்த கவியோடுமுடிக்க.

மிக்கதுகளழுச்சியின் வரவைக் கண்டும், விருகுவகைகள் ஓடிபடுகிற ஓசையைக் கேட்டும், கொடுவிலங்குகள்அஞ்சியோடுங் குழப்பத்தைப்பார்த்தும் இராமலட்சுமணர் சேனையின்வரவை யறிந்தன ரென்க. இனி, தூளியின் படலை வந்து தொடர்தலையும், மருமும் தூறும் ஒடியும் ஓசை ஒலித்தலையும், ஆளியும் அரியும் அஞ்சிஇரிதற்குக் காரணமாக்கி யுரைப்பினும் அமையும். படலை=படலம்: சடசட - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு; இரட்டைக்கிளவி. அலக்கண் - சஞ்சலப்பட்டகண்; கண்கலக்கம். இச்செய்யுளின் பின் "மரன்படர்" (சுஉ) "மின்னின்ற" (சுஐ) "நெறிக்கொண்மாதவர்க்கு (சுக) என்றமுறையிற் பாடல்கள் சில எட்டுப்பிரதிகளிலுள்ளன. **பி - ம்:**—[1]தூரும். [2]அமலை. (சஉசு)

சுஐ.—இலக்குமணன் போர்க்குச் சித்தனை யெழுதல்.

மின்னின்ற சிலையன் வீரக் கவசத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையு நெஞ்ச
ினின்னின்று காண்டி யான்செய் நிலையென விரும்பி [1]நேரா
[2]முன்னின்ற பின்வந் தோனை நோக்கினன் மொழிய லுற்றான்.

(இ - ள்.) மின் னின்ற சிலையன்-மின்னலிலெளிபோன்ற ஒளிபொருந்திய வில்லையுடையவனும், வீரம் கவசத்தன் - அழியாவலிமையுடைய கவசத்

தையுடையவனும், விசித்த வாளன்-(இடையிற்) கட்டிய உடைவாளையுடைய வனும், பொன் நின்ற வடிம்பின் வாளி புட்டிலன் - அழகுபொருந்திய நீளியுள்ள அம்பைக்கொண்ட தூணியை யுடையவனும், புகையும் நெஞ் சன் - கோபத்தீமூண்ட மனமுடையவனுமாய், நில் நின்னு யான் செய் வேல காண்டி என - '(நீ போர்த்தொடங்காது) நில்: (அங்ஙனம்) நின்னு யான்செய் யும்போர்வேலைமையைக் காண்பாய்' என்று (இராமபிரானைநோக்கிச்) சொல்லி, விரும்பி - (போர்செய்ய) விருப்பங்கொண்டு, நேரா முன் நின்ற- (போர்க்குச்) சித்தமாகி,(தன்)முன்னே வந்துநின்ற, பின் வந்தானை நோக்கி னன் - (தனது)தம்பியான இலக்குமணனைப் பார்த்து, மொழிவல் உற்றான்- (இராமபிரான்) சொல்லத் தொடங்கினான்; (எ - று.) அதனை அடுத்த கவியிற் காண்க.

வனத்திற் கொடியவரக்கர்களாலும் மற்றும் துஷ்டஜந்துக்களாலும் தனதுதமையனுக்கும் அவரதுதேவியார்க்கும் என்றேனும் ஓர்தீங்கும் நேரு நேருமோ வென்று ஆசங்கித்து இலக்குமணன் எப்பொழுதும் காக்கிறைப் பட்டவனாய் வில்லெடுத்துத் தூணிதரித்துக் கவசந்தரித்து வாள்கட்டிப் போர் க்குச் சித்தனாய் நின்றவுடனே முன்னின்றவிதம் விளக்கும். கழற் பதினான்குஅரக்கர் எதிர்த்துவந்தபொழுது இராமன் தானே போர்செய்தது போல இப்பொழுதும் போர்தொடங்காமுன்பே விலக்கித் தான் போர்செய்யக் கருதி, 'நில் நின்னுகாண்டி யான்செய்திலே' என்றான். சேனா-(அரக்கரை) எதிர் த்து என்றுமாம். பின்வந்தோன் - பின்பிறந்தவன். 'மின்னின்றதிலேயான்' முதலியவற்றை இராமன்மேலேற்றி யுரைப்பின், மேல் கூ - ஆம் கவி கூறியதுகூறலென்னும் குற்றத்துக்கு இடமாய் முடியும். பொன்னின்ற வடிம்பு என்பதைப் புட்டிலுக்கு அடைமொழியாக்கி யுரைப்பினுமாம்.

பி-ம்:—[1]நோக்கி. [2]முன்னின்று. (சுஉள)

கூக.—இராமன் இலக்குமணனை போர்விலக்கிப்பேசுதல்.

நெறிக்கொண்மா தவர்க்கு முன்னே நேர்ந்தனை [1]னிருந்த ராவி
பறிக்குவென் யானை [2]யென்ற பழமொழி பழுது மூமே
வெறிக்கொள்பூங் குழலி னாளை வீரநீ வேண்டி னேன்யான்
குறிக்கொடு காத்தி [3]யிற்பின் கொல்வெனிக் குழுவை [4]யல்லை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) 'வீர - வீரனே! நெறி கொள் - சன்மார்க்கத்தைக் கடைப் பிடித்த, மா தவர்க்கு - பெருந்தவமுடைய முனிவர்களுக்கு, முன்னே நேர் ந்தனன்-முன்பு (யான்) உடன்பட்டு, யானை (நீ)தர் ஆவி பறிக்குவென் என்றது 'நானே அரக்கர்களுயிரைக் கவர்வேன்' என்று உறுதிகூறிய, பழமொ ழி - முன்னையவார்த்தை;பழுது உறுமே-வீண்படாதபடி, இ குழுவை இன் னே கொல்வென்-இவ்வரக்கர்கூட்டத்தை இப்பொழுதே நான் கொல்வேன்; வெறி கொள் பூ குழலினாள் - இயற்கைமணம்கொண்டதும் மலர்களாற்

சூடியதுமான கூந்தலையுடைய ஜானகியை, குறி கொடு நாத்தி - நீ கருக் துக்கொண்டு பாதுகாப்பாயாக: யான் வேண்டினேன் - நான் (உன்னை இது) வேண்டினேன்,' என்ன - என்று (இராமன் இலக்குமணனை நோக்கிச்) சொல்லி,—(எ - று.)—'புட்டில்கட்டிச் சாபமுந்தரித்தான்' என வரும் கவியோடுதொடரும்.

அரக்கர்க்கு அஞ்சிச் சரணமடைந்த தண்டகாரணிவாசிகளான முனிவர்க்கு இராமபிரான் அபயமளித்தமை கீழ் அகத்தியப்படலத்திற் பரக்கக் கூறப்பட்டது. அரக்கர்குழாத்தைஎதிர்த்தழிக்கும் ஆற்றல் தனக்குஇல்லை யென்று தமையன் கருதினதாகக் கொண்டு இலக்குமணன் வருத்தப்படாமைப்பொருட்டு, 'வீர' என விளித்ததோடு 'வேண்டினேன் யான்' என்றும் கூறினனென். குறிக்கொடு-பொருத்தல்; குறிக்கொள்ளுதல்-சாக்கிரதைப்படுத்தல், கவனித்தல். பி-ம்:—[1]அரக்கர். [2]என்னும். [3]இன்றே. [4]எல்லாம். (சஉக)

கூஉ.—இராமன் போர்க்கோலங்கொள்ளல்.

மரன்படர் கான மெங்கு மதர்பட வந்த சேனை
கரன்படை யென்ப தெண்ணிக் கருநிறக் கமலக் கண்ணன்
சரன்படர் புட்டில் கட்டிச் சாபமுந் தரித்தான் றள்ளா
வுரன்படர் தோளின் மீளாக் கவசமிட் டுடைவா ளார்த்தான்.

(இ - ள்.) மரன் படர் கானம் எங்கும்-மரங்கள் வளர்ந்த காடுமுழுவதும், அதர்பட-வழியாம்படி, வந்த —, சேனை —, கரன் படை-கரனுடையசேனை, என்பது எண்ணி - என்பதை நினைத்து,—கரு நிறம் கமலம் கண்ணன்-கரிய திருநிறத்தையும் செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையு முடைய இராமன்,—தள்ளா உரன் படர் தோளில் - பிற்காத வலிமை மிக்க தோளிலே, சரன் படர் புட்டில் கட்டி - அம்புகள் நிறைந்த தூணியைக் கட்டி, சாபமும் தரித்தான் - வில்லையும் ஏந்தி, மீளா கவசம் இட்டு - நீலைபெயர்க்கப்படாத கவசத்தைத் தரித்து, உடைவாள் ஆர்த்தான் - உடைவாளையும் (அரையில்) கட்டினனென்; (எ - று.)

கீழ்ச் சூர்ப்பணகை "காற்றினிலும் கனலினிலும் கடியானைக் கொடியானைக் கரனெ யுங்கள், கூற்றுவனை யிப்பொழுதே கொணர்கின்றேன்" என்று கூறிச் சென்றுள்ளா ளாதலால், வந்தசேனை கரன்சேனை யென்று கருதினனென். மரன், சரன், உரன் - போலி. அதர்பட - புழுதிபடிய என்றும், பொடிபட என்றும் உரைக்கலாம். மதர்படவந்த எனஎடுத்து - களிப்புமிகவந்த என்றுமொன்று. மீளாக்கவசம் - அபேத்யகவசம். (சஉக)

கூஎ.—மீன்மீம் இலக்குமணன் தன்னைப் போருக்கு அனுப்புமாறு வேண்டுதல்.

மீளருஞ் செருவின் விண்ணு மண்ணுமென் மேல்வந் தாலு
நாளுலந் தழிய [1]மன்றே நானுனக் குரைப்ப தென்னை

யாளியின் [2]றுப்பி ஞயிவ் வமரெனக் கருளி [3]நின்றென்
[4]ரோளினைத் தின்னு கின்ற சோம்பினைத் துடைத்தி யென்றான்.

(இ - ள்.) 'ஆளியின் துப்பினைப் - சிங்கம்போன்ற வலிமையுடையவனே! நீள் அருஞ்செருவில்-(வென்று) நீளுலகத்துள்ளாரெல்லாம் மண்ணும் - மேலுலகத்துயிர்களைத் தெவ்வுலகத்துப் பிடிக்கவும், மேன்மேல் வந்தாலும் - மேலேமேலே எதிர்த்துவந்தாலும், கான் உயர்த்து அடியும் அன்றே - (அவையாவும் என்முன்) ஆயுள்காள்ஒடுங்கி அழிந்திடுமன்றே! கான் உனக்கு உரைப்பது என்னை - இதைப்பற்றி நான் உனக்குச் சொல்லவேண்டுவது உண்டோ? இ அமர் எனக்கு அருளி என்று - இந்தப்போரை எனக்கு (நீ) கொடுத்து என்று, என் தோளினை நின்னுகின்ற சோம்பினை, துடைத்தி - எனது தோள்களோவருத்துகிற சோம்பலைப் போக்குவாய்' என்றான் - என்று (இலக்குமணன் இராமனைநோக்கிக்) கூறினான்; (எ - று.)

அடுத்தகவியின்முதலில் "என்றலு மிளையவன்" என்றது, முற்பாட்டிற்கு எழுவாய் இலக்குமண னென்று அறிக. கீழ் இராமபிரான் தன் கருத்தைவெளிப்படுத்தியும் மீண்டும் இலக்குமணன் முன்னர் கூறியதை இராமனுக்குத் திருமேனிக்காவல்செய்யும்பணியினைவிடுத்து தன்க்குரிய வரம்புகடந்துசினந்தமையை யெண்ணாதே. போர்செய்தலிலுள்ள ஊக்கமுமே இதற்குக் காரணமாகலாம். மன்னோ இராமன் விலக்கியதற்குக் காரணம் தனது போர்த்திறமையைக் குறைவாகமதித்ததாகலா மென்றுணர்ந்து, முன்னிரண்டடிகளில் தனது ஆற்றலை வெளிப்பட்டான். மேன்மேல் - விகாரம்; என்மேல் எனப் பிரித்தலும் ஒன்று. 'காலனைத்தடைப்பேன்' என்றது, உனக்குத்தெரிந்ததே யென வற்புறுத்தியவாறு. தின்று - போதொழிந்துதின்று என்றபடி. "எப்பெயரை வெம்முனையி லுயிர்கு மின்மையால், மெய்ப்பொரு தினைமுழுத் தோளினேன்" என்றற்போல, 'தோளினைத் தின்னுகின்ற சோம்பு' எனப்பட்டது. பி - மி: --[1]என்றே. [2]மோம்பினுய். [3]இன்று. [4]தோளிணைத்தினசின்வைகும். (சுகூ)

சூசு.--அதனை இராமன்மறுக்க இலக்குமணன் பிராட்டியைக் காத்துநிற்றல்.

[1]என்றலு மிளைய வீர [2]னிசைந்திலன் னிராம னீங்குங்
குன்றனை தோளி னாற்ற லுள்ளத்தி னுணரக் கொண்டா
னன்றியு மண்ண லாணை மறுக்கில னங்கை கூப்பி
நின்றன [3]னிருந்தான் கண்ணீர் நிலனுறப் புலம்பி னானால்.

(இ - ள்.) இளைய வீரன்-இலக்குமணன்; என்றலும் - என்றுசொன்னவுடன்,இராமன் இசைந்திலன்-(அதற்கு)இராமன் உடன்பட்டானில்லை;(ஆகலால் பின்பு இலக்குமணன்),எங்கும் குன்று அனை தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணர கொண்டான் - (இராமனது) உயர்ந்த மலையையொத்த தோள்களின் வலிமையை மனத்திலே அறிந்துகொண்டன னாலும்; அன்றியும் அண்ணல் ஆணை மறுக்கிலன்-அல்லாமலும் தமையனதுகட்டளையை மறுக்க

மாட்டாதவனுதலாலும், அம் கை கூப்பி நின்றனன் - அழகியகைகளைக்கூப் பித் தொழுதுநின்று, கண் நீர் நிலன் உற புலர்கின்ருள்பால் இருந்தான் - கண்களின்நீர் நிலத்திலேவழியும்படி வருந்துகிற பிராட்டிபக்கல் (பாதுகாவ லாக) இருந்தான்; (எ - று.)

[1]என்றனன் இலவபவீரன் என்றபாடத்திற்குக் கீழ்க்கவியிற்கூறியதன் அநுவாதமென்க.அரக்கர்கள் கொடியவரும் பெருந்தொகையினரும் ஆதலால், பெருமானுக்கு யாதாகுமோ வென்று, மாதர்க்கணிகலமாகிய பேதைமையால் பிராட்டி கண்ணீர்சிந்தத் துயருற்றன ளென்க; அன்றியும், பிரிவாற்ரு மையும் காரணமாகலாம். துணைபின்றித் தனியே மிகப்பலரோடு போர் செய்யஎழுந்த இராமன்விஷயத்திற் பிராட்டி கவலைப்பட்டதுபோல இலக் குமணன் கவலைப்படாமையின் காரணத்தை இரண்டாம்அடிவிளக்கும். அங்கை - அகங்கையுமாம். பீ-ம்:—[2]இசைத்தனன். [3]இருந்து. (சாஉக)

கூஎ.—இராமன் பர்ணசாலையின்று போரிக்குப் புறப்படுதல்.

குழையுறு மதியம் பூத்த கொம்பனாள் குழைந்து சோரத்
தழையுறு சாலை நின்றுந் தனிச்சிலை தரித்த மேரு
மழையென முழங்கு கின்ற வாளெயிற் றரக்கர் காண [ருன்.
முழையினின் றெழுந்து செல்லு மடங்கலின் முனிந்து சென்

(இ - ள்.) குழை உறு-காதணிகள்பொருந்தியதொரு, மதியம்-சந்திரனை, பூத்த - மலராகப்பெற்றதொரு, கொம்பு - பூங்கொம்பை, அனுள் - ஒத்தவ ளான சீதை, குழைந்து சோர-தளர்ந்து வருந்த,—தழை உறு சாலையின்றும்-பர்ணசாலையினின்று,—தனி சிலை தரித்த மேரு-ஒப்பற்றவில்லையேந்திய மகா மேருமலைபோன்ற ஸ்ரீராமன்,—மழை என முழங்குகின்ற வாள் எயிறு அரக் கர் காண - மேகங்கள்போல ஆரவாரிக்கின்ற கூரிய கோரத்தங்களையுடைய இராக்கதர்கள் பார்க்கும்படி,முழையினின்று எழுந்து செல்லும் மடங்கலின் மலைக்குகையினின்று எழுந்து வெளிச்செல்லுகிற ஆண்சிங்கம்போல, முனி ந்து சென்ருன் - கோபங்கொண்டு வெளியேவந்தான்; (எ - று.)

மேரு, சோர, காண, சாலையின்றும், மடங்கலின், சென்ரு னென்க. குழையுறு மதியம் பூத்த கொம்பு - இல்பொருளுவமை. குழையென்னும் அணியையணிந்த முகம் பூர்ணசந்திரமண்டலத்தையும், அழகிய மெல்லிய திருமேனி பூங்கொம்பையும் போலுதலால், இங்ஙனங்கூறினர். மதியம், அம் - சாரியை. மேரு - உவமையாகுபெயர். தழையுறுசாலை - தழையால் வேயப்பட்ட உறைவிடம். (சாஉ)

கூசு.—சூர்ப்பணகை கான்முதலிய அரக்கர்களுக்கு இராமனைச் சுட்டிக்காட்டல்.

மீதான்றிய தோன்ற றண்ணைச் சுட்டினள் காட்டிச் சொன்னுள்
வான்றெரு டூர்ந்தி றந்த வயங்குலெர் [1]தீப தென்னத்

தான்றொடர் குலத்தை யெல்லாந் தொலைக்குமா சமைந்து நின்ற
ளோன்றுவர் [2]தெதிர்த்த வீர னிவனிக ரிராம னென்ன.

(இ - ள்.) வான் தொடர் மூங்கில் தந்த - ஆகாயத்தை அளாவிவளர்ந்த மூங்கில்கள் (ஒன்றோடொன்று உராய்தலால்) உண்டாக்கிய, வயிற்று வெம் தீ அது என்ன-வினாக்குறிற கொடிய நெருப்புப் போல, தான் தொடர் குலத்தை எல்லாம் தொலைக்கும் ஆ சமைந்து நின்றாள் - தான்பிறந்தகுலம் முழுவதையும் அழிக்கும்படி பொருந்தி நின்ற சூர்ப்பணகை,—தோன்றிய தோன்றல் தன்னை சுட்டினள் காட்டி-வெளிப்புறப்பட்ட இராமபிரானைக் (கைவிரலால்) குறித்துக்காண்பித்து, என்று வந்து எதிர்த்த வீரன் இவன் நிகல் இராமன் என்ன சொன்னாள் - '(போர்க்கோலம்) பொருந்தி வந்து எதிர்ப்பட்ட இந்த வீரனே பகைமைகொண்ட இராமன்' என்று சொல்லினாள்; (எ - று.)

மூங்கினிடத்துப் பிறந்த நெருப்பு அந்த மூங்கிற்காட்டையெல்லாம் எரித்தழிப்பதுபோல அரக்கர்குலத்திற் பிறந்த சூர்ப்பணகை அவ்வரக்கர் குலத்தை யெல்லாம் அழிப்பதற்கு மூலகாரணமாய் நிற்றலின், இங்ஙனங் கூறினர். தீயது, அது-பகுதிப்பொருள்விகுதி. தொலைக்கும் மாச அமைந்து என்றுபிரித்து. அழித்தலாகிய குற்றம் பொருந்தின்றவள் என்று உரைத்தல். மோனைத்தொடைக்குச் சிறவாது. **பி - ம்:**—[1]தீயிது. [2]எதிர்த்த.(சுகூ)

சுஎ.—இராம[2]னைக்கண்ட கரன் நானேஇவனைவென்றெழிப்பே னெனல்.

கண்டனன் கனகத் தேர்மேற் கதிரவன் கலங்கி நீங்க
[1]விண்டனி னின்ற வென்றிக் கரனெனும் விலங்கற் றோளான்
மண்டமர் யானே செய்திம் மானிடன் வலியை நீக்கிக்
கொண்டனன் வாகை யென்று படைஞரைக் குறித்துச் சொன்னான்.

(இ - ள்.) கதிரவன் கலங்கி நீங்க - ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனும் அஞ்சிவிலகும்படி, கனகம் தேர்மேல் - பொன்னிழைத்த தேரின் மேல், விண்தனில் நின்ற - ஆகாயத்தையளாவிநின்ற, வென்றிக் கரன் எனும்-வெற்றியையுடைய கரனென்கிற, விலங்கல் தோளான் - மலைகள்போலுந் தோள்களையுடையனை வீரன்,—கண்டனன் - (இராமபிரானைக்)கண்டு,—படைஞரை குறித்து-(தனது) சேனைவீரரைநோக்கி, 'யானே-ஈரெழுலகினுமே, மண்டு அமர் செய்து - நெருங்கியபோரைச்செய்து, இ மானிடன் வலியை நீக்கி-இந்த மனிதனது வலிமையை யொழித்து, வாகை கொண்டனன் - வெற்றிமாலையையணிவேன்', என்று சொன்னான்—; (எ - று.)

விரைவினாலும், தெளிவினாலும், 'கொண்டனன்' என்று இறந்தகாலத்தாற் கூறினான்; காலவழுவமைதி. 'கனகத்தேர்மேல்' என்பதைக் கதிரவனுக்கும் கூட்டலாம்; கீழ் "பகலவன்பைம்பொற்றேர்" என்று வந்தமைகாண்க. 'விண்டனில்நின்ற' என்பதும், கதிரவனோடுசேர்தற்கு இயையும். இனி, விண்தனில் நின்ற-மேகம்போலநின்ற என்றலும் ஒன்று; விண் - மேகத்துக்கு இடவாகுபெயர். **பி-ம்:**—[1]விண்டனிநின்ற. (சுஎ)

சுஅ.—இதுவும் அது.

மானிட ஞெருவன் வந்த வலிகெழு சேனைக் கம்மா
கானிட மில்லை யென்னுங் கட்டுரை கலந்த காலை
யானுடை வென்றி யென்னும் யாவருங் கண்டு நிற்றி
நூனுடை யிவனை யானே யுண்குவெ னுயிரை யென்றான்.

(இ - ள்.) மானிடன் ஒருவன்-(எதிரியாய்நிற்கும்) மனிதனே ஒருத்தன்: வந்த வலி கெழு சேனைக்கு - (அவனுடன் போர்செய்தற்கு) வந்த வலிமை மிக்க அமைச்சேனைக்கோ, கான் இடம் இல்லை - காட்டில் (நிற்க) இடம் போதவில்லை: அம்மா - ஆச்சரியம்! என்னும் - என்று (உலகத்தார்) சொல்லுகிற, கட்டுரை - ஏற்றவார்த்தை, கலந்த காலை - உண்டானபொழுது, யான் உடை வென்றி என் ஆம் சான் கொண்டுள்ள வெற்றி யாதுபயனுடையதாம்? [பயனற்றதா மென்றபடி]; (ஆதலால்), யாவரும் கண்டு நிற்றிர் - நீங்களெல்லோரும் (போர்தொடங்காமற்) பார்த்துக்கொண்டு நில்லுங்கள்: யானே - நானொருவனே, நூன்உடை இவனை உயிரைஉண்குவென்-(சமக்கு) இறைச்சியுணவாகுந்தன்மையுடைய இம்மனிதனை உயிர்பருகுவேன், என்றான் - என்றுசொன்னான், (தான்); (எ - று.)

ஒருமனிதனேயிருப்பஎதிரக்கர் எதிர்த்தவென்றால் அதுஎனதுபுகழுக்குப் பழிப்பாம்; ஆதலால், நீங்கள்எல்லீரும்காண யானே இவனைக்கொன்று தின்பேன் என்றான். யாவரும் நிற்றிர் - முன்னிலைக்குப் படர்க்கைவந்த இட வழுவமைதி. இவனை உயிரை உண்குவென் - இரண்டுசெயப்படுபொருள் வந்த வினை. (சாடுநி)

சுகூ.—அப்போது அகம்பன் தீநிமித்தமுண்டானமையைக் கூறத்தொடங்குதல்.

அவ்வுரை கேட்டு வந்தா னகம்பனென் றமைந்த கல்விச்
செவ்வியா ஞெருவ னீய செப்புவென் செருவிற் சால
[1]வெவ்விய ராத னன்றே [2]வீரரி லாண்மை வீர
விவ்வயி னுளவாந் தீய நிமித்தமென் றியம்ப லுற்றான்.

(இ - ள்.) அகம்பன் என்று அமைந்த - அகம்பனென்று பேர்பொருந்திய, கல்வி செவ்வியான் ஒருவன் - கல்வியழகைப்பெற்ற ஓரரக்கன், அவ்வுரை கேட்டு வந்தான் - அந்தக்கரன்வார்த்தையைக் கேட்டவளவில் (கரனருகில்) வந்து,—'ஐய - தலைவனே! வீரரில் ஆண்மை வீர - வீரர்களுட்சிறந்த பராக்கிரமமுடைய மகாவீரனே! செப்புவென் - (யான் ஒன்று) சொல்லுவேன், (கேட்பாயாக):—செருவில் சால வெவ்வியர் ஆதல் நன்றே - போரில் மிகவும் உக்கிரமுள்ளவராதல் இயல்பில் நல்லதே; (ஆயினும்), இ வயின்-இவ்விடத்தில் [இப்பொழுது], தீய நிமித்தம் உள ஆம் - தூர்நிமித்தங்கள் உண்டாகின்றன', என்று - என்றுசொல்லி, இயம்பல் உற்றான் - (அந்தக்கொடிய

நிமித்தங்களை இன்னவையென்று விவரித்துக்) கூறத் தொடங்கினான்; (எ - று.)—அவற்றை அடுத்த மூன்றுகவிகளிற் காண்க.

அகம்பன் - (போரிற்) சலனமில்லாதவன். சால-உரிச்சொல். நிமித்தம்-பின்னே நிகழும் பயனை முன்னே அறிவிக்கும் குறி. பி-ம்: —[1]வெவ்வலியாதல். [2]வீரருள். (சஉசு)

வேறு.

எ0.—இதுமுதல் முன்றுகவிகள் - அரக்கர்பக்கலுண்டான நிமித்தங்களை அகம்பன் எடுத்துக் கூறுவன.

குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறிப்
பருதி வானவ னூர்வளைப் புண்டது பாராய்
கருது வீரகின் கொடிமிசைக் காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன புலம்புவ நிலம்படப் புரள்வ.

காண்குகவிகள் - ஒருதொடை.

(இ - ள்.) வீர-வீரனே! மேகங்கள்—குமுறி-முழக்கி, குருதி மா மழை சொரிந்தன - மிக்க இரத்தமழையைப் பொழிந்தன; பருதி வானவன் - சூரியனை, ஊர் வளைப்புண்டது - பரிவேடத்தை சூழ்ந்துகொண்டது; பாராய் - (இவற்றைப்) பார்ப்பாயாக; காக்கையின் கணங்கள் - காக்கைகளின் கூட்டங்கள், நின் கொடிமிசை - உனது துவசத்தின்மேல், பொருது வீழ்வன - சண்டைசெய்து விழுவனவாய், புலம்புவ-அழுதுகொண்டு, நிலம் பட புரள்வ-தரையில்விழுந்து புரளுகின்றன; கருது - (இதனை) மனத்திற்கொள்வாய்.

ஊர் - உரிமைகொள்; சூழ்ந்துநிற்கும்வட்டம். பருதிவானவன் - சூரியனுகிய தேவன். பருதி=பரிதி. பரிதிவானவன் ஊர் வளைப்புண்டது - சூரியன் பரிவேஷத்தாற்சூழப்பட்டது என்றும் உரைக்கலாம்; தேவரை அஃறிணையாலும் கூறலாமாதலால். காகம் என்ற வடசொல், காக்கை யெனத் திரிந்தது; கா என்று கத்துவது. கருது வீர என எடுத்து, மறுக்கத்தக்க வீரனே யெனினுமாம். "புண்டொடர் குருதியிற் பொழியும் போர் மழை" எனமேற் சுந்தரகாண்டத்திலும் வரும்.

இதுமுதல் கக - கவிகள் - கிழ்ப்படலத்தின் கூ - ஆம் கவி போன்ற கலிநிலைத்துறைகள். (சஎஅ)

எக. [1]வாளின் வாய்களை யீவனைக் கின்றன வயவர்
தோளு நாட்டமு மிடந்[2]துடிக் கின்றன தூங்கி
மீளி [3]மொய்ம்பரி னிவுளிவீழ் கின்றன விரவி
ஞாளி யோடுகின் றுளைக்கின்ற நரிக்குலம் பலவால்.

(இ-ள்.) வாளின் வாய்களை-வாளாயுதங்களின் வெட்டுவாய்களை, ஈவனைக்கின்றன - ஈக்கள் சூழ்கின்றன; வயவர் தோளும் நாட்டமும் - சேனைவீரர்களது தோள்களும் கண்களும், இடம் துடிக்கின்றன - இடப்பக்கம் துடிக்கின்றன; மீளி மொய்ம்பரின் இவுளி - வலிய தோள்களையுடைய சேனைத்தலை

வர்தது குதிரைகள், தூங்கி வீழ்கின்றன - (போருக்கு நின்ற நிலையில்) தூங்கிக் கீழ்விழுகின்றன; ஞாளியோடு - நாய்களுடன், நரி குலம் பல - பல நரிகளின் கூட்டங்கள், விரவி நின்று-கலந்து வந்து நின்று, உளைக்கின்ற-ஊளையிடுகின்றன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

வாய்-வெட்டுமிடம். உளைத்தல்-ஒலித்தல். வாள் - ஆயுதப்பொதுவினைக் கொண்டு, வாளின் வாய்களே-ஆயுதங்களின் நுனிகளே யென்று உரைத்தலும் ஒன்று. ஆடவர்க்கு இடக்துடித்தல், நிமித்தம். உளைக்கின்ற - முற்று. பி-மீ:—[1]வாளி. [2]துடிக்கின்றது. [3]மொய்ம்புடை. (சாஉ)

எஉ. பிடியெ லாமதம் பெய்திடப் பெருங்[1]கவுள் வேழ
[2]மொடியு மான்மருப் புலகமுங் கம்பிக்கு முயர்வா
னிடியும் வீழ்ந்திடு மெரிந்திடும் பெருந்திசை யெவர்க்கு
முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும்.

(இ - ள்.) பிடி எலாம் - பெண்யானைகளெல்லாம், மதம் பெய்திட - மதசலத்தைச் சொரிய, பெரு கவுள் வேழம் - பெரிய கதுப்பையுடைய ஆண்யானைகள், மருப்பு ஒடியும் - தந்தங்கள் ஒடியப்பெறும்; உலகமும் கம்பிக்கும் - பூமியும் கம்பமடையும்; உயர் வான் இடியும் வீழ்ந்திடும் - ஓங்கிய வானத்தினின்று இடிகளும் மேல்விழும்; பெரு திசை எரிந்திடும் - பெரிய திக்குக்கள் தாமே பற்றியெரியும்; எவர்க்கும் - (அரக்கர்) எல்லோர்க்கும், முடியின் மாலைகள் - தலைமேல்அணிந்த பூமாலைகள், புலாலொடு முழு முடை நாறும்-புலால்நாற்றத்தோடு மிக்க வேறுதுர்க்கந்தமும் வீசும்;(எ - று.)

பெண்யானைகளுக்கு இயல்பில் மதம் இல்லை: ஆதலின், அவை மதம் பெய்தல் நிமித்தமாம். ஒடியுமால் என்பதில், ஆல் - அசை; மால் மருப்பு என எடுத்து, பெரிய தந்தங்க ளென்றலுமொன்று. மேகமின்றி இடிவிழுதல், துர்நிமித்தம். "பிடிமதம் பிறந்தன", "தடியுடை முகிற்குல மின்றித் தாவில் வான், வெடிபட வதிருமால்", "மற்பகமலர்ந்தமேதாள்மைத்தர் சூடிய, கற்பக மாலையும் புலவு காலுமால்", "வாரண முறியுமால் வலத்தவாண்மருப்பு" என மேற்சுந்தரகாண்டத்தில் வருவன இங்கு உணரற்பாலன.பி-மீ:--[1]கவின். [2]ஒடியும்வாண்மருப்பு. (சாகூ)

எங.—நிமித்தங்களையெடுத்துக்காட்டிய அகம்பன் 'இராமனை அலட்சியஞ்செய்யலாகாது' என்றல்.

இனைய வாகலின் மானிட ஞெருவனென் றிவனை
நினைய லாவ[1]திங் கேழைமை நீயமர்க் கியன்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந் தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென் னுரையெனப் புகன்றான்.

(இ - ள்.) இனைய ஆகலின் - (நிமித்தங்கள்) இத்தன்மையனவாயிருத்தலால், மானிடன் ஒருவன் என்று இவனை இங்கு நினையல் ஆவது ஏழைமை-ஒரு மனிதனென்று இவனை இப்போது அலட்சியமாக நினைத்தல்

அறிவின்மையாம்;இ அமர்க்குஇயன்ற வினை எலாம் செய்து-இ போருக்குஏற் றுள்ள தொழில்களெல்லாவற்றையுஞ் செய்தாலும், வெல்லல் ஆம் தன்மை யின்அல்லன்-சயிக்கக்கூடியதன்மையையுடையவனல்லன்,(இவன்;புனையும் வாகையாய் - அணிந்த வெற்றிமாலையையுடையவனே! என் உரை பொறு த்தி - எனது இவ்வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்வாய், என - என்று, புகன்முன் - சொன்னன், (அகம்பன்); (எ - று.)

இப்போது நிகழ்ந்துள்ள தீமித்தத்தைப் பார்த்தால் ஆ அக்கரைக் கூட்டிப் பெரும்போர்த்தொழில் செய்தாலும் வெல்லலாகாதவன் இவ னென்று தோன்றுகின்றதென்று அகம்பன்கூறி விலக்கினன். இப்படி எதிரியின் திறமையை யெடுத்துக்கூறி விலக்கியதற்குக் கரன் கோபங்கொள் ளாமைப்பொருட்டு 'பொறுத்தி பென்னுரை' என மன்னிப்புக்கேட்டுக் கொண்டானென்க. செய்தும் என்ற உயர்வுசிறப்பும்மை தொக்கது. புனையும் என எதிர்காலத்தைக் கூறியதனால், இப்போரிலும் வெற்றிமாலை சூடுவா யெனக் குறிப்பாக வாழ்த்தினனுமாம். பி - ம்:—[1]ஒன்றன்றது தியாயின்று, ஒன்றன்றது தியோய்கின்று. (சசo)

எச.—அவ்வார்த்தையைக் கரன் பற்றுக்கோடாகொழிதல்.

உரைத்த வாசகங் கேட்டலு முலகெலா முலைபச்
சிரித்து [1]நன்றுநஞ் சேவகந் தேவரைத் தேப
வரைத்த வம்பிபா மலங்கெறிற் றோளமர் வேண்டி
யிரைத்து வீங்குவ மானிடற் கெளியவோ வென்றான்.

(இ - ள்.) உரைத்த வாசகம் கேட்டலும் - (இவ்வாறு அகம்பன்) சொன்ன வார்த்தையைக் கேட்டவளவில், (கரன்), உலகு எலாம் உலைப சிரித்து-உலகங்களெல்லாம் நடுங்கும்படி பெருஞ்சிரிப்புச்சிரித்து,—தேவரை தேப அரைத்த அம்பி ஆம் - தேவர்களைத் தேயும்படி அரைத்துத்தள்ளிய அம்பிக்கற்போன்றனவும், அமர் வேண்டி இரைத்து வீங்குவ-போரை விரும் பிப் பருத்துப் பூரிப்பனவுமான, அலங்கு எழில் தோள் - அசைத்துவிளங்கு கிற அழகையுடைய (நமது) தோள்கள், மானிடற்கு எளியவோ - ஒருமனி தனுக்கு எளிமைப்படுவனவோ? நம் சேவகம் நன்று - நமதுபராக்கிரமம் நன்முயிருந்தது! என்றான் - என்று கூறினன்; (எ - று.)

தான் முன்பு புஜவலிமையற்ற பலதேவர்களை அழித்தொழித்தமை பற்றி, 'தேவரைத் தேப அரைத்த அம்பிபாம் தோள்' என்றது. தேவர்கள் பலரை எளிதில்அழித்த நாமோ இம்மனிதனெருவனுக்கு அஞ்சுவதுஎன்று அகம்பன்கூறியதை யேளனஞ்செய்து கூறியவாறு. தோளாகிய அம்பிக்கு வலிமையைக் குழவியாகவும், தேவர்களை அரைக்கப்படுபொருளாகவும் கொள்க: ஏகதேசவுருகம். இனி தோளைக் குழவியாகக் கருதி, பராக்கி ரமம் அம்பி யெனப்பட்டதென்றலு மொன்று. கேட்டலும் சிரித்து என்று னென இயையும். பி - ம்:—[1]நின்றவென், நின்றுதன். (சசக)

எடு.—அரக்கர்சேனை இராமனைச் சூழ்தல்.

என்னு மாத்திரத் தெறிபடை யிடியென விடியா
மன்னர் மன்னவன் மதலையை [1]வளைந்தன [2]வனத்து
மின்னும் வாலுளை மடங்கலை [3]முனிந்தன வேழந்
துன்னி னுலெனைச் சுடுசினத் தரக்கர்தந் தொகுதி.

(இ - ள்.) என்னும் மாத்திரத்து - என்று (கரன்) சொல்லுமளவில்,—வனத்து - காட்டிலே, மின்னும் வால் உளை மடங்கலை - விளங்குகிற சுத்தமான பிடரிமயிரையுடைய ஆண்சிங்கமொன்றை, முனிந்தன வேழம் துன்னினுல் என - கோபங்கொண்டனவான பலயானைகள் சூழ்ந்துநெருங்கினாற்போல,--மன்னர் மன்னவன் மதலையை-தசரதசக்கரவர்த்திதிருமகனை இராமனை, சுடு சினத்து அரக்கர்தம் தொகுதி-வெவ்விய கோபத்தையுடைய இராக்கதர்களின் கூட்டங்கள், எறி படை இடி என இடியா - வீசுதற்கு உரிய ஆயுதங்களை ஒன்றோடொன்றுதாக்கி இடிமுழக்கம்போன்றமுழக்கத்தைச் செய்துகொண்டு, வளைந்தன - சூழ்ந்திட்டன; (எ - று.)

சிங்கத்தை யானைகள் வளைத்தல், இல்பொருளுவமம். இராமனிரு வனால் மிகப்பல அரக்கர்குழாம் எளிதில்அழிவதற்கு, இவ்வெப்புமைகூறினர். [2]வளைந்துஎன்ற பாடத்துக்கு - வளைந்துமின்னுகின்ற வாலியஉளை யென்க. பி - ம்:—[1]வளைந்தனர். [3]முனிந்திட. (நஅஉ)

எசு.—இனிஇருபதுகவிகள் - அரக்கர்சேனையை இராமபிரான் அழித்தலைக் கூறும்.

வளைந்த காலையில் [1]வளைந்ததவ் விராமன்கை வரியில்
விளைந்த போரையு மாவதும் விளம்புதும் விசையாற்
புளைந்த பாய்பரி புரண்டன புகர்முகப் பூட்கை
யுளைந்த மால்வரை யுருமிடி பிடவொடிந் தென்ன.

(இ - ள்.) வளைந்த காலையில் - (இவ்வனம் அரக்கர்சேனை இராமனைச்) சூழ்ந்தபொழுதில், அ இராமன் கை வரியில் வளைந்தது - அந்த இராமபிரானதுகையிலுள்ள கட்டமைந்த வில் (நாணியேற்றி அம்புதொடுக்கும்படி) வளைவுற்றது; விளைந்த போரையும் - (அப்பொழுது) உண்டான போர்த்தொழிலையும், ஆவதும் - அதன்முடிவையும், விளம்புதும் - கூறுவோம்; விசையால் - (இராமபாணங்களின்) வேகத்தால்,—பாய் பரி - பாயுந்தன்மைபனவான குதிரைகள், புளைந்த - துளைபட்டனவாய், புரண்டன - கீழ்விழுந்து புரண்டன; உரும் இடி பட - பேரிடிவிழுதலால், மால் வரை ஒடிந்து என்ன - பெரிய மலைகள் முறிபட்டாற்போல, புகர் முகம் பூட்கை - செம்புள்ளிகளையுடைய முகத்தையுடைய யானைகள், உளைந்த-வருந்திக்கீழ்விழுந்தன;(எ-று.)

'விளைந்தபோரையு மாவதும்விளம்புதும்'என்றது, கவிக்கூற்று. ஆவது-விளையும்பயன். புளைந்த - முற்றெச்சம்: புழைந்த என்பது எதுகைநோக்கி ழகரளகரப்போலிபெற்றதென்க. பூட்கை-புழைக்கை யென்பதன் மரூஉவாய்,

உட்டுலோயுள்ள துதிக்கையுடைய தெனக் காரணப்பொருள்படும் அன்மொழித் தொகையாகிய பெயராம். பி - மீ:—[1]வளைந்தன. (சசசுட)

எஎ. சூல மற்றன வற்றன சுடர்மழுத் தொகைவாண்
மூல மற்றன வற்றன முரட்டண்டு பிண்டி
பால மற்றன வற்றன பகழிவெம் பகுவாய்
வேலு மற்றன வற்றன வில்லொடு [1]பல்லம்.

(இ - ள்.) (இராமபாணங்களால் அரக்கர்களுடைய), சூலம் - சூலாயுதங்கள், அற்றன - அறுபட்டன; சுடர் மழு தொகை - அக்கினிச்சுவாலையுள்ள மழுவென்னும் ஆயுதங்களின் கூட்டங்கள். அற்றன—; வாள் - வாட்படைகள், மூலம் அற்றன - அடியோடு அறுபட்டன; முரண் தண்டு - வலிமையையுடைய கதாயுதங்கள், அற்றன—; பிண்டிபாலம் - பிண்டிபாலமென்னும் எறியாயுதங்கள், அற்றன—; பகழி - அம்புகள், அற்றன—; வெம் பகு வாய் வேலும் - கொடிய பிளக்கும் வாயையுடைய வேல்களும், அற்றன—; வில்லொடு பல்லம் - வில்களும் பல்லமென்னும் பாணவிசேடங்களும், அற்றன—; (எ - று.)

பல்லம் - வடசொல். பகுவாய் - பிறவினைவினைத்தொகை; பகுத்தல் - தான்படும்உடம்பைப் பிளத்தல். பி - மீ:—'பலவும். இப்பாடல் சிலபிரதிகளில் 'சூலமற்றன சுடர்மழுத்தொகைவாண் மூலமற்றன முசுண்டிக டெறித்த மாப்பிண்டி, பாலமற்றன தெறித்தனதண்டுபல்பலவாம், வேலுமற்றனதெறித்தன வில்லொடுபல்லம்' என்று காணப்படுகின்றது. (சசச)

எஅ. தொடித்து ணிந்தன தோளொடு தோமரந் துணிந்த
வடித்து ணிந்தன கடக்களி றச்சொடு நெடுந்[1]தேர்
கொடித்து ணிந்தன குரகதந் துணிந்தன குலமா
முடித்து ணிந்தன [2]துணிந்தன முளையொடு முசலம்.

(இ - ள்.) தொடி துணிந்தன - தொடியென்னுங்கைவளைகள் துணிபட்டன; தோளொடு தோமரம் துணிந்த - (பிடித்த) கைகளுடனே தோமரமென்னும் ஆயுதங்கள் துணிபட்டன; கடம் களிறு - மதயானைகள், அடி துணிந்தன - கால்கள் துணிபட்டன; அச்சொடு - அச்சுகளுடனே, நெடு தேர் - பெரிய தேர்களும், கொடி - தேர்த்துவசங்களும், துணிந்தன—; குரகதம் - குதிரைகள், துணிந்தன—; குலம் மா - கூட்டமாகிய (யாளிமுதலிய) விலங்குகள், முடி துணிந்தன - தலை துணிபட்டன; முசலம் - உலக்கைகள், முளையொடு துணிந்தன - அடியோடு துணிபட்டன; (எ - று.)

தொடிதுணிந்தன தோளொடு தோள் தொடியொடுதுணிந்தன எனினுமாம். அச்சு - இரசு; அகம் மென்னும் வடசொல்லின் சிதைவு. குரகதம்- (ஒற்றைத்) குளம்புகளால் விரைந்து செல்வது; வடசொல். முளையொடு என்பதற்கு - இருப்புமுளையாகிய படைகளும் என்றும், தண்டாயுதங்களும் என்றும் உரைக்கவுங்கூடும். பி - மீ:—[1]தேர்க். [2]முளையொடுதுணிந்தன. (சசடு)

எக. கருவி மாவொடு கார்மதக் கைம்மலைக் [1]கணத்தோ
டுருவி [2]மாதிரத் தோடின சுடுசர முதிர
மருவி [3]மாலியிற் பிறங்கின தவனியி லரக்கர்
திருவின் மார்பகந் திறந்தன துறந்தன சிரங்கள்.

(இ - ள்.) சுடு சரம் - (இராமபிரானது) வெவ்விய பாணங்கள்,—கருவி மாவொடு - கல்லணேபூண்ட குதிரைகளையும், கார் மதம் கை மலை கணத்தோடு - கருநிறத்தையும் மதசலத்தையும் துதிக்கையையுமுடைய மலைபோன்ற யானைகளின் கூட்டத்தையும், உருவி - ஊடுருவித்துளைத்து அப்பால் வெளிப்பட்டு, மாதிரத்து ஓடின - திசைகளில் விரைந்துசென்றன; உதிரம் - இரத்தம், அருவி மாலையின் - அருவியின்ஒழுக்குபோல, பிறங்கியது - விளங்கிற்று; அவனியில் - பூமியிலே, அரக்கர் - இராக்கதர்களது, திரு இல் மார்பு அகம் - பொலிவில்லாத மார்பினிடங்கள், திறந்தன - பிளவுபட்டன; சிரங்கள் - தலைகள், துறந்தன - துணிபட்டுஉடம்பைநீங்கின.

கருவியென்பது - குதிரைமேற்றவிசை யுணர்த்துதலை "கல்லணே யுப கரணங் கழறுங் கருவி" என்ற திவாகரத்தாலும் அறிக. 'கருவிமா' எனவே, குதிரையாயிற்று. கார் - மேகம்போன்ற என்றுமாம். மாவொடு, கணத்தோடு - மூன்றனுருபு இரண்டனுருபின் பொருளில் வந்ததனால், உருபுமயக்கம். திருவின் மார்பகம் எனஎடுத்து - வீரலக்ஷ்மியையுடைய மார்பென்றுவது, திரு இல் எனப்பிரித்து - வெற்றித்திருவுக்கு இடமான என்றுவது, திரு வில் என எடுத்து - மேலானஒளியையுடைய என்றுவது உரைக்கலாம்.

பி-ம்:—[1]கணத்தூடு. [2]மாரியொத்து. [3]மாரியிற்றேங்கின. (சசசு)

அ0. ஒன்று பத்துநூ றுயிரங் கோடியென் றுணரா
துன்று பத்திப விராகவன் சுடுசரந் துரப்பச்
சென்று [1]பத்திரத் தலையின மலைதிரண் டென்னக்
கொன்று பத்தியிற் குவித்தன பிணப்பெருங் குன்றம்.

(இ - ள்.) ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடி என்று உணரா - ஒன்று பத்து நூறு ஆயிரம் லக்ஷம் கோடி என்று கணக்கிட்டறியமுடியாதபடி, துன்று - நெருங்கிய, பத்திய - வரிசைப்பட்டனவாக, சுடு சரம் - வெவ்விய அம்புகளை, இராகவன் - ரகுகுலத்தில் அவதரித்தவனான ஸ்ரீராமன், துரப்பசெலுத்த, (அந்த அம்புகள்),—சென்று - (பகைவர்மேற்) சென்று (பொத்தி), கொன்று - (அவர்களைக்) கொன்று, பத்திரம் தலையின மலை-அம்புகளைத்தலையிற்கொண்ட (பல)மலைகள்,—திரண்டு என்ன-திரண்டாற்போல,பிணம்பெருகுன்றம் - பெரிய பிணக்குவியல்கள், பத்தியின் குவித்தன-வரிசையாகக் குவியும்படி செய்தன; (எ - று.)

அம்புபொத்தியபிணக்குன்றுகட்கு அம்புகள்பாய்ந்துள்ள மலைகள் உவமையாம். பத்திரம்அம்புஆதலை "பகழியுஞ்சரிகையும்பத்திரமென்ப" என்ற பிங்கலந்தையாலும் அறிக. [1]பத்திரத்தலையின என்றபாடத்திற்கு - மலை

களின்சிகரம் போலவும்என்றுஉரைத்து, தலைக்கு மலைச்சிகரமும், உடம்புக்கு மலையும் உவமை யென்க. நூறுயிரம் - இரட்டற்றொழிதல். பத்தி=பங்கி: வடசொல். (சஎள)

அக. காடு கொண்டகா ருலவைகள் [1]கதழெரி கதுவச்
சூடு கொண்டன வெனத்தொடர் குருதிக்குத் தோன்ற
வாடு கின்றன வறுகுறை யயிலம்பு விண்மே
லோடு கின்றன வுயிரையுந் தொடர்வன வொத்த.

(இ - ள்.) காடு கொண்ட கார் உலவைகள் - வனத்தில்அடர்த்தியாக வுள்ள பெரியமரக்கிளைகள், கதழ் எரி கதுவ - மூளுகிற நெருப்புப்பற்ற, சூடு கொண்டன என - எரிதலைப்பொருந்தினபோல, அறு குறை - தலையற்ற உடற்குறைகள், தொடர் குருதி நீ தோன்ற - வழிகிற இரத்தம் மேலே காணப்பட, ஆடுகின்றன - துடித்தசைகின்றன; விண்மேல் ஓடுகின்றன அயில் அம்பு - ஆகாயத்தின்மேல் விரைந்துசெல்கின்றனவான கூரிய இராம பாணங்கள், உயிரையும் தொடர்வன ஒத்த - (அரக்கருடம்பை யழித்தமாத் திரத்தோடு திருப்திப்படாமல் அவர்களது) உயிரையும் தொடர்பவை போன் றன; (எ - று.)

மரக்கிளை அரக்கருடற்குறைக்கும், அதன்மேல் தீப்பற்றியெரிதல் இரத் தம் பெருகிவழிதற்கும் உவமை. சூடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். **பி - ம்:—[1]**காயெரி. (சஅஅ)

அஉ. கைகள் வாளொடு [1]களம்படக் கழுத்தறக் கவச
மெய்கள் போழ்படத் தாள்விழ [2]மிகநெடு நிருதர்
செய்ய மாத்தலை [3]சிந்திடத் திசையுறச் சென்ற
தைய லார்நெடு விழியெனக் கொடியன சரங்கள்.

(இ - ள்.) தையலார் - மகளிரது, நெடு விழி என - நீண்ட கண்கள் போல, கொடியன - கொடுமையுடையனவான, சரங்கள்-இராமனம்புகள்,— மிக நெடு நிருதர்-மிகவும் ஒங்கிவளர்ந்த அரக்கர்களின், கைகள்—, வாளொடு-(ஏந்திய) வாட்படைகளுடனே, களம் பட-போர்க்களத்தில் துணிபட்டுவிழ, கழுத்து அற - கழுத்து அறுபட, கவசம் மெய்கள் போழ்பட - கவசத்தை யணிந்த உடம்புகள் பிளவுபட, தாள் விழ - கால்கள் அற்றுவிழ, செய்ய மா தலை சிந்திட - (அவர்களுடைய) சிவந்த [செம்பட்டமயிருள்ள] கரியதலை களைச் சிதறுமாறு (செய்து), திசை உற சென்ற - திக்குக்களின் எல்லையை அளாவ அப்பாற்சென்றன; (எ - று.)

கவசத்தையணிந்த உடம்பு பிளைபட்டமை கூறவே, கவசம் பிளவுபட் டமை (தண்டாபூபிகாந்யாயத்தால்) தானே பெறப்படும். 'செய்யமாத்தலை' என்பதை அசு - ஆரண்ய கவியில் வரும் "விரிந்த செம்மயிர்க் கருந்தலை" என் பதனோடு ஒப்பிடுக. இனி, மாத்தலை - பெருத்தலையுமாம். தையலார்விழிக் குக் கொடுமை, வேட்கைநோய்வினைத்து ஆடவரை வருத்துதல என அறிக:

இது, கூர்மைபற்றியும் சரத்துக்கு உவமையாம். பெரும்பாலும் உபமான மாகக்கூறப்படுகிற சரத்தை உபமேயமாகவும், உபமேயமாகக்கூறப்படும் மகளிர்விழியை உபமானமாகவும் மாற்றிவைத்துக் கூறியது, எதிர்நிலையணி [பிரதீபாலங்காரம்.] பி-ம்:—[1]க்ளப்பட. [2]வெருவிட. [3]சிந்தின. (சஅக)

அக. மாரி யாக்கிய வடிக்கணை வரைபுரை நிருக்கர்
பேரி யாக்கையின் பெருங்கரை வயின்றொறும் பிறங்க
வேரி யாக்கின யாறுக [1]ளியற்றின நிறையச்
சோரி யாக்கின போக்கின வனமெலுந் தொன்மை.

(இ - ள்.) மாரி ஆக்கிய - (இடைவிடாது சொரிதலால்) மழையின் தோற்றத்தைச் செய்கிற, வடி கணை - கூரிய இராமபாணங்கள் [அம்புமழைகள்],—வரை புரை - மலைபோலத்த, நிருக்கர் - அரக்கர்களது, பேர் யாக்கையின் - பெரிய உடம்புகளாகிய, பெரு கரை - பெரிய கரைகள், வயின் தொறும் - பக்கங்களிலெல்லாம், பிறங்க - விளங்க, (அவற்றினிடையில்), ஏரி ஆக்கின - ஏரிகளைச் செய்தன; யாறுகள் இயற்றின-நதிகளைச்செய்தன; நிறைய சோரி ஆக்கின-(அவை) நிறையும்படி இரத்தத்தைப் பெருகச்செய்தன; (இங்ஙனஞ்செய்தலால்), வனம் எலும் தொன்மை போக்கின - காடுகளென்கிற பழையநிலைமையை நீக்கிவிட்டன; (எ - று.)

இராமபாணங்கள் அவ்வனம்முழுவதையும் இரத்தவேரிகளாகவும், இரத்த நதிகளாகவும் மாற்றின என்பதாம். ஏரியாறுகளைச் செய்தற்கு உரிமை பற்றி, அம்பினிடத்து மழையின்தன்மையை ஏற்றிக்கூறினர். பி-ம்:—[1]ஆக்கினவிரைக்குஞ். (சடுஐ)

அச. அலை[1]மி தந்தன குருதியின் பெருங்கட லரக்கர்
தலைமி தந்தன நெடுந்தடி மிதந்தன தடக்கைம்
மலை[2]மி தந்தன வாம்பரி மிதந்தன வயப்போர்ச்
சிலைமி தந்தன கொடியொடு மிதந்தன தேர்கள்.

(இ - ள்.) (அப்பொழுது), குருதியின் பெரு கடல் - பெரிய இரத்தக் கடல்கள், அலை மிதந்தன - அலைகள் மிகுதியாகக் கிளரப்பெற்றன; (அவ்விரத்தக்கடல்களில்), அரக்கர் - இராக்கதர்களுடைய, தலை - தலைகள், மிதந்தன—; நெடு தடி - நீண்ட தசைகள், மிதந்தன—; தட கை மலை - பெரிய துதிக்கைகளையுடைய மலைகள் போன்ற யானைகள், மிதந்தன—; வாம் பரி - தாவிச்செல்லுங் குதிரைகள், மிதந்தன—; வய போர் சிலை-வலிய போருக்கு உரிய வில்கள், மிதந்தன—; கொடியொடு - துவசங்களுடனே, தேர்கள்—, மிதந்தன—; (எ - று)

தடி யென்பதற்கு - தண்டாயுத மென்று உரைப்பாரும் உளர். சொற் பொருட்பின்வருநிலையணி. பி - ம்:—[1]மிகுந்தன. [2]மிதந்தனவாய்ப். (சடுக)

அடு. ஆய காலியி னனல்விழித் தார்த்[1]திக லரக்கர்
தீய வார்கணை முதலிய [2]தெறுசினப் படைகண்

மேய மால்வரை யொன்றினை [3]வளைத்தன மேகந்
தூய தாரைகள் சொரிவன வாமெனச் சொரிந்தார்.

(இ - ள்.) ஆய காலையின் - அவ்வாறான அப்பொழுது,—இகல் அரக்கர் - வலிமையையுடைய இராக்கதர்கள் (பலர்),—அனல் விழித்து - நெருப்புப்பொறிபறக்கக் கோபத்தோடு விழித்துப்பார்த்து, ஆர்த்து - ஆரவாரஞ் செய்து,—மேய மால் வரை ஒன்றினை வளைத்தன மேகம் - நிலைபொருந்திய பெரிய மலையொன்றைச் சூழ்ந்தனவான மேகங்கள், தூய தாரைகள் சொரிவன என - வெண்மையான மழைத்தாரைகளைப் பொழிவனபோல,—தீய வார் கணை முதலிய தெறு கினம் படைகள் - கொடிய நீண்ட அம்பு முதலிய பகையழிக்கும் உக்கிரமுள்ள ஆயுதங்களை, சொரிந்தார் - (இராமன் மேற்) பொழிந்தார்கள்; (எ - று.)—ஆம் - அசை.

உவமையணி. பெரிய மலை - போரிற் கலியாது நின்ற இராமனுக்கும், அதைச்சூழ்ந்த மேகம் - இராமனைச்சூழ்ந்த கரியஅரக்கர்க்கும், மழைத்தாரைகள் - ஆயுதங்களுக்கும் உவமை. இக்குறிய உவமையால், மேகங்கள் திரண்டுசூழ்ந்து எவ்வளவுமழை பொழிந்தாலும் அது மலைக்கு யாதொரு தீங்கையுஞ் செய்யமாட்டாமைபோல, அரக்கர் திரண்டு சூழ்ந்து வீசிய ஆயுதங்கள் பெருமானுக்கு யாதொருறுபாடும் செய்யமாட்டாமை விளக்கும். ஆயுதங்களேயேற்கியவாது கினிஞ்சை ஆயுதங்களின்மே லேற்றி, 'தெறுகினப் படை' என்றார்; இது, உடையபாது குணத்தை உடைமையின்மேலேற்றிக் கூறின உபசாரவழக்கு. பி - மி:—[1]இரைத்து. [2]அதிகினப். கினத்து. [3]வளைத்தினம், வளைத்தன. (அநுஉ)

உசு. சொரிந்த பல்படை துணிபடத் துணிபடச் சரத்தா
லரிந்து [1]போந்தன சிந்திடத் திசைதிசை யகற்றி
நெரிந்து பார்மகண் [2]நெளிவுற வனமுமுற்று நிறைய
விரிந்த செம்பயிர்க் கருந்தலை மலையென [3]வீழ்த்தான்.

(இ - ள்.) (இராமபிரான்), சொரிந்த பல் படை - (தன்மேல் அரக்கர்) சொரிந்த பலவகையாயுதங்களையும், துணி பட துணி பட-பலவாறு துண்டு படும்படி, சரத்தால் - (தான் எய்யும்) அம்புகளால், அரிந்து - அறுத்துத்துள்ளி,—போந்தன - மற்றுமுமேல்நோக்கு ஆயுதங்களை, திசை திசை சிந்திட - எல்லாத்திக்குக்களிலும் சிதறும்படி, அகற்றி - (தனதுஅம்புகளால்) விலக்கி,—பார் மகள் நெரிந்து நெளிவு உற - பூமிதேவி நொருங்கி(த் தன் முதுகு [மேற்புறம்] அதிக பாரத்தால்) நெளியவும், வனம் முற்றும் நிறைய - காடு முழுவதும் நிரம்பவும், விரிந்த செம் பயிர் கரு தலை - பரந்த செம்பட்டமயிரையுடைய கரிய அரக்கர்தலைகள், மலை என வீழ்த்தான் - அறுத்துத்துள்ளிய மலைபோலக் குவித்தான்; (எ - று.)—முதலடியில், அதிக்கு-மிகுதிவிளக்கும். பி - மி:—[1]வெந்தன. [2]முதுகிற. [3]விழுந்த. (அநிஙு)

உள. கவந்த பர்த்தங்கள் களித்தன குளித்தகைம் மலைகள்
[1]சிவந்து பாய்ந்தவெங் குருதியிற் றிருகிய சினத்தா

னிவந்த வெந்தொழி னிருதர்த நெடுநிணந் தெவிட்டி
யுவந்த வன்கழு துயிர்சுமந் துளுக்கிய தும்பர்.

(இ - ள்.) (அப்பொழுது), கவந்த பந்தங்கள் - தலையற்ற உடற்குறை கள், களித்தன - கூத்தாடின; கைம்மலைகள் - யானைகள், சிவந்து பாய்ந்த வெம் குருதியில் - செந்நிறமாய்ப்பெருகிய கொடிய இரத்தத்தில், குளிக்க - முழுகின; வல் கழுது - வலிய பேய்கள், திருகிய கினத்தால் நிவந்த - மாறு பாடுகொண்ட கோபத்தால் மிக்க, வெம் தொழில் - கொடுந்தொழிலுடைய, நிருதர்தம் - அரக்கர்களுடைய, நெடு நிணம் - மிக்க கொழுப்பை, தெவிட்டி - தெவிட்டும்படி நிரம்பவுண்டு, உவந்த - மகிழ்ந்தன; உம்பர் - தேவலோகம், உயிர் சுமந்து உளுக்கியது - (இறந்து வீரசுவர்க்கமடைந்த) உயிர்களை மிகுதி யாகத்தாங்கி (அந்த அதிகபாரத்தைப் பொறுக்கமாட்டாமையால்) உடல் நெளித்தது; (எ - று.)

"அநேக மாயிரம் பேர்படக் கவந்தமொன் றாடும்" என்றபடி சேனை யில் மிகப்பெரியதொகை இறந்துபொழுது கவந்தம் எழுந்து கூத்தாடுதல் மர பாதலால், 'கவந்தபந்தங்கள் களித்தன' என்றார். கவந்தம்=கபந்தம்; வட சொற்றிரிபு; தொழிலுடன்கூடின தலையற்ற வுடல். கூத்தாடின என்ற பொருளில், 'களித்தன' என்றது, காரியப்பொருளைக் காரணச்சொல்லாற் கூறின உபசாரவழக்கு. உவந்த என்பதைப் பெயரெச்சமாக்கி, நிணந் தெவிட்டி உவந்த வன்கழுது - நிணத்தினிடத்து மிக்கதிருப்தியடைந்து மகிழ்ந்த வலியபேய்க்கணம், உயிர் சுமந்து - (அளவுவிஞ்சஉண்டதனால் மிக வயிறுபருத்த தமதுடம்பைச் சுமக்கமாட்டாமல்) பெருமூச்சு விட்டுக் கொண்டு, உம்பர் - ஆகாயத்தில், உளுக்கியது - அசைத்துசென்றது என்று உரைப்பாரு முளர்; அவ்வுரைக்கு, கழுது - சாதிப்பெயர். பி-ம்:—[1]சிவந்த ()

அஅ. மருட ருங்களி வஞ்சனை வலையெயிற் றரக்கர்
கருட னஞ்சுறு கண்மணி காகமுங் கவர்ந்த
விருட ரும்[1]புரத் திழுதையர் [2]பழுதுறற் கெளிதே
யருட ருந்திறத் தறனன்றி வலியதுண் டாமோ.

(இ - ள்.) மருள் தரும்-மாயையைச் செய்கின்ற, களி வஞ்சனை - களிப் பும் வஞ்சனையு முள்ள, வலை எயிறு அரக்கர் - வலைத்த கோரதந்தங்களை யுடைய இராக்கதர்களது, கருடன் அஞ்சுறு கண் மணி - (முன்பு) கருட னுங் காணஞ்சும்படியான கண்களின் கருவிழிகளை, காகமும் கவர்ந்த - (இப்பொழுது) காக்கைகளும் பறித்திட்டன; இருள் தரும் புரத்து இழு தையர் - இருளை யொத்த [மிகக்கரிய] உடம்பையுடைய வஞ்சகர்களிடத் தில், பழுது - அழிவு, உறற்கு எளிதே - வருதற்கு எளியதேயாம்; அருள் தரும் திறத்து - கருணையைச்செய்கின்றதன்மையையுடைய, அறன் அன்றி - தருமமே யல்லாமல், வலியது - வலிமையுடையது, உண்டாமோ - (உலகத் தில் வேறு) உள்ளதாமோ? (எ - று.)

"அறத்தினூங் கர்க்க மெவனே வுயிர்க்கு", "அறத்தினூங் காக்கமு மில்லையதனை,மறத்தலி னூங்கில்லை கேடு" என்றபடி உயிர்களுக்குத் தருமத் தினும் மிக்கநன்மைதருவதும் அதருமத்தினும் மிக்கதீதுதருவதும் வேறில்லை யாதலால், அதர்மிஷ்டரான அரக்கர்எளிதாக அழிவடைந்தனரென்க.அறமே வெல்லும்வலிமையுடையது என்ற இப் பொதுப்பொருளைக்கொண்டு வஞ்சக ரான கொடிய அரக்கர்களை மிகஎளிதில் தருமநெறிதவறுதலுனை இராம பிரான் அழித்திட்டா னென்ற சிறப்புப்பொருளைச் சாதித்தது - **வேற்றுப் பொருள்வைப்பணி.** பறவைகட்கு அரசனுலாலும், திருமாலுக்கு வாகன மாதலாலும், கருடனை யெடுத்துக் கூறினர்; கருடனென்றஇடத்து உயர்வு சிறப் புமை விகாரத்தால் தொக்கது. காகமும், உம்மை - இழிவுசிறப்பு. இழுதையர் - பொய்யரும், அறிவிலருமாம். "அறனு மருளுடையான் கண் ணதே" என்றபடி அறத்துக்கு அருள் இன்றியமையாததாதலால், 'அருள்தருந் திறத்து அறன்' எனப்பட்டது. **பி-ம்:**—[1]புறத்து. [2]பழுதுரைக்கு. (சடுடு)

வே று.

அக. பல்லாயிர மிருள்கீறிய பகலோனென வொளிரும்
வில்ல ளனை முனியாவெயி லயிலாமென விழியாக்
கல்லார்மழை கணமாமுகில் கடைநாள்[1]விழு வனபோ
லெல்லாமொரு தொடையாவுட னெய்தார்[2]வினை செய்தார்.

(இ - ள்.) (இங்ஙனம் அரக்கரையழித்து), பல் ஆயிரம் இருள் கீறிய பகலோன் என ஒளிரும் - மிகப்பலவாகிய இருள்களின் தொகுதியைக் கீண் டழித்த சூரியன்போல விளங்குகிற, வில்லாளனை - விற்போரில்மிகவல்லவ னை இராமபிரானை, (மற்றும்பலஅரக்கர்கள்),—முனியா-கோபித்து, வெயில் அயில் ஆம் என விழியா-ஒளியையுடைய வேலாயுதம்போலக் கூர்மையாகக் கண்விழித்துநோக்கி,—கணம் மா முகில் - கூட்டமாகிய கரியபெரியமேகங் கள், கடை நாள் - கற்பாந்தகாலத்தில், கல் ஆர் மழை - கற்களால் நிறைந்த மழையை, விழுவன போல் - சொரிவனபோல, எல்லாம் - எல்லா வகை அம்புகளையும், ஒரு தொடை ஆ - ஒரேதொடர்ச்சியாக, உடன் எய் தார் - ஒருங்கே (இராமன்மேல்) எய்து, வினை செய்தார் - போர்த்தொழி லைச் செய்தார்கள்; (எ - று.)

பல்லாயிரமிருள் - போரிலிறந்த பலவாயிரம் அரக்கர்களுக்கும், பக லோன் - இராமனுக்கும், கல்மழை - பாணவருஷத்துக்கும், மேகக்கூட் டம் - அரக்கர்குழாத்துக்கும் உவமை. எய்தார் என்ற வினையினால், 'எல் லாம்' என்றது, அம்புகளாயின. ஒருதொடையா - தொடுக்குந்தரமொன் றிலே செல்ல என்றபடி. கல்லார் என எடுத்து, தேர்ந்தஅறிவில்லாத அரக்க ரென்று உரைத்து, அதனை இப்பாட்டுக்கு எழுவாயாக்கலும் ஒன்று. **பி-ம்:**—[1]விடுவன. [2]படையெறிந்தார்.

இதுமுதற் பதினைந்து கவிகள் - ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் மாங்கனிச்சீருமாகிய அளவடிநான்கு கொண்ட கலிவிருத்தங்கள். ()

கூ0. எறிந்தாரென வெய்தாரென [1]நினைந்தாரென வெறிய
[2]வறிந்தாரென வறியாவகை யயில்வாளியி னறுத்தான்
செறிந்தாரையும் பிறிந்தாரையுஞ் செறுத்தாரையுஞ் [3]சினத்தா
லறிந்தாரையும் வலித்தாரைய மடித்தான்சிலை பிடித்தான். [ன்

(இ - ள்.) சிலை பிடித்தான் - வில்லேக்கையிலேந்தியவனான இராமபிரான், செறிந்தாரையும் - கூட்டங்கூட்டமாகத் திரண்டுவந்த அரக்கர்களேயும், பிறிந்தாரையும் - தனித்தனி எதிர்த்துவந்த அரக்கர்களேயும், செறுத்தாரையும் - மிகக்கோபித்துப்பகைத்த அரக்கர்களேயும், சினத்தால் மறிந்தாரையும் - (முன்பு தோற்றோடிப் பின்பு) கோபத்தால் மீண்டுவந்த அரக்கர்களேயும், வலித்தாரையும் - வலியப்போர்செய்த அரக்கர்களேயும். (ஆக அனேவரையும்);—எறிந்தார் என - (இன்னார் வேல்முதலிய ஆயுதங்களே) மேல்வீசிய வரென்றும், எய்தார் என - (இன்னார் பாணங்களேப்) பிரயோகித்தவ ரென்றும், நினேந்தார் என - (இன்னார் ஆயுதங்களே உபயோகிக்கக்) கருதினவ ரென்றும், எறிய அறிந்தார் என - (இன்னார் ஆயுதங்களே வீச) ஆராய்ந்து துணிந்தவ ரென்றும், அறியாவகை-அறியாதபடி,—அயில் வாளியின் அறுத்தான் - கூர்மையான (தனது) அம்புகளால் துணித்து; மடித்தான் - கொன் றொழித்தான்; (எ - று.)

இன்னஅரக்கர் இன்னவிதமாய் இன்னதுசெய்தாரென்று அறியலாகாத படி அவர்களேயெல்லாம் மிகவிரைவில் ஸ்ரீராமன் துணித்திட்டனனென்க. செறிந்தார் - தன்னேச்சூழ்ந்து நெருங்கிநின்றவரும். பிறிந்தார் - விலகித்தூரத் தில் நின்றவரும் என்றும் உரைக்கலாம். சினம்-'கோபத்தின்பின்னுகச் சிறிது பொழுது நிற்பது' எனப்படும். சினத்தால் மறிந்தார் என்பதற்கு - (ஓடுகிற வர்களேக்) கோபத்தினுலே தடுத்தவர்க ளென்றும், வலித்தார் என்பதற்கு - (பயந்தவர்களேப் போர்க்குவரும்படி) பிடித்திழுத்தவ ரென்றும் உரைப்பாரு முளர். பிறிந்தார்=பிரிந்தார். பி - ம்:—[1]எறியாநினேந்தனவும். [2]அறிந்தா னென. [3]திறத்தால். (சருஎ)

கூக. வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன [1]மிளிர்குண்டல வதனத்தன மிடல்வெங்
கானத்தன மலேயத்தன திசை[2]முற்றிய கரியின்
முனத்தன காகுத்தன சரமுந்திய சிரமே.

(இ - ள்.) மிளிர் குண்டலம் வதனத்தன - விளங்குகிற குண்டலமென் னும் காதணியையுடைய முகத்தையுடையனவான, காகுத்தன சரம் உந்திய-இராமபிரானுடைய அம்புகளால் அறுத்துத்தள்ளப்பட்ட, சிரம் - தலேகள்,—வானத்தன - மேகமண்டலத்திற் சென்று சேர்ந்தவையும், கடலின் புறம் வல யத்தன - கடலின் வெளிவட்டத்திற் சென்றுசேர்ந்தவையும், மதி சூழ்மீனத் தன-சந்திரனேச் சூழ்ந்துள்ள நக்ஷத்திரமண்டலத்திற் சென்றுசேர்ந்தவையும், மிடல் வெங் கானத்தன - வலியகொடிய காடுகளிற் சென்றுசேர்ந்தவையும், மலேயத்தன - மலேகளிற் சென்றுசேர்ந்தவையும், திசை முற்றிய கரியின்

தானத்தன - திக்குக்களின் எல்லையிலுள்ள (எட்டுத்திக்கு) யானையினிடத்திற் சென்றுசேர்ந்தவையு மாயின: (எ - று.)

எப்புறத்தும் நெடுந்தூரத்துக்கப்பாற் சென்று விழுந்தன என்பதாம். வானம் - சுவர்க்கலோகமுமாம். மீன் - விண்மீன்; மீன மென வடசொல்லாகவும் எடுக்கலாம். மீன் - வானத்தில் மின்னுவது என்றும், மீனம் - வானமாகிய கரிய பெரிய கடலிற் சஞ்சரிக்கும் மீன்போன்றவை யென்றும் காரணப் பொருள்படுமென்ப. [1]மிளிர்குண்டலமிதுனத்தன என்ற பாடத்திற்கு - குண்டலம்பூண்ட மிதுனராசியைச்சேர்ந்தனவும் என்றுரைத்து, 'மிதுனம்- மற்றையிராசிகளுக்கும் உபலக்ஷணம்; ஸ்திரீபுருஷர்களின் வடிவத்தோடு தம் பதியாய்ச் சேர்ந்துள்ள சிறப்பைக் கருதி, மிதுனராசியைத் தலைமையாக எடுத்துக்கூறினர்' என்க. இனி, மிளிர் குண்டலமிதுனத்தன என்பதற்கு - விளங்குகிற இரண்டு குண்டலங்களே புடையவையாகிய என்று உரைத்து, சிரத்துக்கு அடைமொழியாக்குதல், சேர். காருத்ஸ்தன்-வடசொல்; ஸ்துத்ஸ்த னென்னும் அரசனது குலத்திற் பிறந்தவன்; அ - ஆறனுருபு. பி - மீ:— [2]சுற்றிய. (சநிஅ)

கூஉ. மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடு[1]வேலையி னிடமேயின ரிடலோர்
புண்[2]மேலுகு குருதிப்[3]பொரு திரையாறுகள் பொங்கத்
திண்மேருவை நகுமார்பின யுருவித்திரி சரமே.

(இ - ள்.) புண் மேல் உகு - புண்பட்டவிடங்களினின்று பெருகுவன வான; குருதி - இரத்தமெள்ளங்களாகிய, பொரு திரை ஆறுகள் - மோதுகிற அலைகளையுடைய நதிகள். பொங்க - மிகும்படி, மிடலோர் - வலிமையையுடைய அரக்கர்களது, திண் மேருவை நகும் மார்பின - வலிய மகாமேருமலையையும் (தமதுவலிமைக்கு ஈடாகா தென்று) பரிகசிக்கின்ற மார்புகளை, உருவி - முழுவதுந்துளைத்து, திரி - அப்பாற்சென்ற, சரம் - இராமபாணங்கள்;—மண் மேலன-தரையில் விழுந்தவையும், மலை மேலன - மலைகளின்மேல் விழுந்தவையும், மழை மேலன-மேகங்களின்மேற் பட்டவையும், மதி தோய் விண் மேலன - சந்திரன் பொருந்திய ஆகாயத்தின்மேற் சென்றவையும், நெடு வேலையின் இடம்மேயின-பெரிய கடல்களினிடத்துச் சென்றவையு மாயின; (எ - று.)

இது, இராமனம்புகள் எதிரிகளுடலை ஊடுருவிச்சென்ற விசையின் மிகுதியை விளக்கும். நகு-ஒத்த என உவமவுருபுமாம். பி - மீ:—[1]வேலையின் மேல்கீழன. [2]மேலன. [3]பொழி. (சநிக)

கூஙு. பொலந்தாரின ரணவின்சிகை [1]பொழிகண்ணின [2]ரிமையோர்
வலந்தாங்கிய வடிவெம்படை விடுவார்சர மழையா
லுலந்தாருட [3]லடலோதுறக் குலவாவுட லுற்று
ரலந்தார்நிசி சரரானென [4]விமையாசெடுத் தார்த்தார்.

(இ - ள்.) பொலம் தாரினர் - அழகிய மாலையையுடையவர்களும்; அன்லின் சிகை பொழி கண்ணினர் - அக்கினிச்சுவாலையைச்சிந்துகிற கண்களையுடையவர்களும், வலம் தாங்கிய வடி வெம் இமையோர் படை விடுவார் - வலிமைகொண்ட கூரிய கொடிய தெய்வாஸ்திரங்களை (இராமன்மேல்) எறிபவர்களுமாகிய, நிசிசரர் - அரக்கர்கள், சரம் மழையால் அடலோ துறந்து அலந்தார் உடல் உலந்தார் - (இராமனது) பாணவர்ஷத்தால் தமதுவலிமை கெட்டுத்துன்புற்று உடலழிந்து [இறந்து], உலவா உடல் உற்றார் - (தாம் தாம்) அழியாத தேவசரீரத்தைப் பெற்றார்கள், என - என்று, இமையோர் - அழிவடைந்தா ரென்று (மகிழ்ந்து) தேவர்கள், எடுத்து ஆர்த்தார் - குரலெடுத்து ஆரவாரஞ்செய்தார்கள்; (எ - று.)

[1]இமையோடொடு மார்த்தார் என்றபாடத்துக்கு—போர்க்கோலங்கொண்டு வந்த கொடிய அரக்கர்கள் இராமன்மேற் படைக்கலங்களை யெறிந்த மாத்திரத்தில் அவனதுஅம்புகளால் துணிபட்டு இறக்க, தம்மூடம்பை விட்டு நீங்கிச் சென்றவராய், உடனே வீரசுவர்க்கத்துக்கு உரிய தேவசரீரத்தைப் பெற்று வானத்தின்மீது எழுந்துநின்று, தாம்தேவர்களாயினமைக்கு ஏற்ற குணம் செயல்களை உடனேயடைந்து, அங்குநின்று போர்கண்டு அரக்கழிவுக்குமகிழ்ந்த தேவர்கள் போலவே தாமும் அரக்கரழிவுக்குமகிழ்ந்துகளித்து ஆர்த்தனரென்பதாம்: இவ்வுரைக்கு அரக்கராயிருந்தவர் இறந்து ஒருநொடியில் தேவர்களாக மாறித் தாமே தமதுஅழிவுக்கு மகிழ்ந்தனரென்று சாதுரியமாகக் கூறினரென்க. ரிஷா என்ற வடசொல், சிகையெனத் திரிந்தது. வலம் - பலம். இனி, வலந்தாங்கியஎன்பதற்கு-வலக்கையிற்பிடித்தவென்று உரைப்பாரும் உளர். நிசிசரர் - இரவில் (மிக்கவலிமை கொண்டு) சஞ்சரிப்பவர். அடலோ, ஓ - தெரிநிலே. பி - மீ:—[1]பொதி. [2]எவரும். [3]கடலோடுற. (சகூ0)

கூச. ஈரற்செறி கமலத்தன விரதத்[1]திரள் புனினம்
வீரக்கரி முதலிக்குல மிதக்கின்றன [2]வுதிக்கும்
பாரக்குடர் மிடைபாசடை படர்கின்றன பலவான்
மூரித்திரை யுதிரக்[3]கடன் முழுகிக்கழு தெழுவே.

(இ - ள்.) ஈரல் - (இறந்தபிராணிகளின்) ஈரல்களாகிய, செறி கமலத்தன - நெருங்கிய தாமரைமலர்களையுடையவையும், இரதம் - தேர்களாகிய, திரள் புனினம் - திரண்டமணற்குன்றுகளையுடையவையும், வீரம் கரி-வலியயானைகளாகிய, முதலி குலம் - முதலிகளின்கூட்டம், மிதக்கின்றன - மிதக்கப்பெற்றவையும், பாரம் குடர் - கனத்த குடல்களாகிய, மிடை பாசடை - நெருங்கிய பசியதாமரையிலைகள், படர்கின்றன - மேலேபரவப்பெற்றவையுமாகிய, மூரி திரை உதிரம் கடல் பல - பெரிய அலைகளையுடைய இரத்தக்கடல்கள் அநேகம், கழுது முழுகி எழ - பேய்கள் முழுகிக்களம்பும்படி, உதிக்கும் - உண்டாயின; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

பெரியஇரத்தவெள்ளத்தைப் பேய்கள் நீராடியெழுதற்கிடமான தாமரைப்பொய்கை லென்று உருவகப்படுத்தி, அவற்றுக்குக் குடல்களைத் தாம

ரையிலேகளாகவும், ஈரல்களைத் தாமரைமலர்களாகவும், தோல்களை மணற்குன்றுகளாவும், யானைகளை முதலேகளாகவும் குறித்து வருணித்தார். ஈரல் - இதயத்தானம். பாசடை - பசுமையென்னும் பண்பு ஈறுபோய் ஆதிநீண்டது. பி - மீ:—[1]துறை [2]உதிர்க்கும். [3]குளம். (உகூ)

கூடு. அழைத்தார்சில [1]ரயர்ந்தார்சில [2]ரழிந்தார்சிலர் கழிந்தா
ருழைத்தார்சில ருயிர்த்தார்சில ருருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர் [3]கொலேவாய்
மழைத்தாரைகள் பாடப்பாரிடை மடிந்தார்சில [4]ருடைந்தார்.

(இ - ள்.) கொலே வாய் மழை தாரைகள் - (பகைவரைக்) கொல்லுந் தன்மையுடைய நுனியையுடைய (நிராமனது அம்பு) மழைப்பெருக்குகள், பட - மேல்விழுவதனால்,—சிலர் - (அதற்கார்களிற்) சிலபேர், அழைத்தார் - (தன்பம்பொறுக்கமாட்டாமல் ஐயா அப்பா என்று) கூப்பிட்டார்கள்; சிலர்—, அயர்ந்தார்-சோர்ந்தார்கள்; சிலர்—, அழிந்தார் - உருவழிந்தார்கள்; (சிலர்), கழிந்தார் - நெடுந்தூரம் விலகிச்சென்றார்கள்; சிலர்—, உழைத்தார் - மிகவருத்தப்பட்டார்கள்; சிலர்—, உயிர்த்தார் - பெருமூச்சுவிட்டார்கள்; சிலர்—, உருண்டார் - (தரையில்) உருண்டார்கள்; (சிலர்), புரண்டார் - (தரையிற்) புரண்டார்கள்; சிலர்—, குழை தாழ் திரை குருதி கடல் - குழை சேறுபெற்ற ஆழ்ந்த அலைகளேயுடைய இரத்தக்கடலில், குளித்தார் - முழுகினர்கள்; சிலர்—, பாரிடை மடிந்தார்-தரையிலேவிழுந்திறந்தார்கள்; (சிலர்), உடைந்தார் - உறுதிகெடைகட்டார்கள்; (எ - று.)

அழைத்தார் என்பதற்கு - தமக்குத்துணைசெய்தற்குப் பிறரையழைத்தார்க ளென்றும் உரைக்கலாம். 'குழைத்தாழ்' என்பதைக் குழைத்து ஆழ் எனப்பிரிப்பினும் அமையும். 'கொலேவாய்' என்ற அடைமொழியால், மழை-அம்புமழையாயிற்று. பி-மீ:—[1]ஆர்த்தார். [2]ஆழ்ந்தார். [3]குளிர்மர. [4]மருண்டார்.

கூசு.—பதினுன்குசேனைத்தலேவர் தம்சேனைகளோடு போரவருதல்.

உடைந்தார்களே நகைசெய்தன ருருடேரினை ருடனு
யடைந்தார்படைத் தலேவீரர்கள் பதினுல்வரு மயில்வாண்
மிடைந்தார்நெடுங் கடற்ருனேயர் மிடல்வில்லினர் விரிநீர்
கடைந்தார்வெரு வுறமீதெழு கடிவாமெனக் கொடியார்.

(இ - ள்.) விரி - பரந்த, நீர் - பாற்கடலே, கடைந்தார்-கடைந்த தேவாசுரர்கள், வெருவுற - அச்சமடையும்படி, மீது எழு - (அக்கடலினின்று) மேலெழுந்த, கடி ஆம் என - விஷம் போல, கொடியார் - கொடுமையுடையவர்களாகிய, படை தலே வீரர்கள் பதினுல்வரும் - சேனைத்தலேமைகொண்ட வீரர்கள் பதினுன்குபேரும்,—உடைந்தார்களே நகை செய்தனர் - (ஜீழ்) வலிமைகெட்டவர்களே இகழ்ந்துசிரித்துக்கொண்டு, உருள் தேரினர் - சக்கர வலிமைபெற்ற தேர்களில் ஏறியவர்களும், அயில் வாள் மிடைந்தார்-வேலும் வாளும் பொருந்தியவர்களும், நெடு கடல் தானேயர் - பெரிய கடல்போன்ற

சேனை சூழ்ந்தவர்களும், மிடல் வில்லினர் - வலியவில்லேந்தியவர்களுமாய், உடன்ஆய் அடைந்தார் - ஒருங்கே வந்து (இராமனுள்ளவிடத்தைச்) சேர்ந்தார்கள்; (எ - று.)

நீர் - பால் என்னும்பொருளில் வருதலை, "தாழி தரையாகத் தண்டயிர் நீராக" எனக் கீழ்ச் சரபங்கர்பிறப்புநீங்குபடலத்திலும் காண்க. (சகூ)

கூஎ.—இதுவும் அடுத்த கவியும்-இராமபிரானைச் சேனைத்தலைவர் பதினல்வரீ வளைத்தமையைக் கூறும்.

நாகத்தனி யொருவில்லியை நளிர்[1]முப்புரர் முன்ஞாண்
மாகத்திடை [2]வளைவுற்றன ரெனவள்ளலை மதியா
ராகத்தெழு கனல்கண்வழி [3]யுகவுற்றெதி ரழன்ஞாற்
[4]மேகத்தினை நிகர்வில்லியை வளைத்தார்செரு வினைத்தார்.

(இ - ள்.) நாகம் தனி ஒரு வில்லியை - (மேரு) மலையாகிய ஒப்பற்ற தொருவில்லையுடைய சிவபிரானை, முன் நாள்-முன்பு ஒருகாலத்தில், மாகத் திடை வளைவுற்றனர் - பெரியஆகாயத்திலே சூழ்ந்துகொண்டவர்களான, நளிர் முப்புரர் என - பெரிய திரிபுரத்தசுரர்கள்போல, (அச்சேனைத்தலை வர் பதினல்வரும்), வள்ளலை மதியார் - இராமபிரானை (ஒருபொருளாக) மதி யாதவர்களும், ஆகத்து எழு கனல் கண் வழி உக - (தமது) மனத்தினின்று எழுந்த கோபாக்கினி கண்களின்வழியாய்ச்சிந்தும்படி, எதிர் உற்று-எதிர்த்து வந்து, அழன்ஞாற் - கோபங்கொண்டவர்களுமாய், மேகத்தினை நிகர் வில் லியை வளைத்தார் - காளமேகத்தையொத்த வில்வீரனை அவ்விராமபிரானைச் சூழ்ந்துகொண்டு, செரு வினைத்தார் - போர்செய்தார்கள்; (எ - று.)

நாகம் - அசையாதது: அசலம். தனியென்பதை வில்லுக்குஅடைமொழி யாக்காமல் வில்லிக்கு அடைமொழியாக்கினும் அமையும்: வேறு துணையின் றித் தனித்துப் போர்க்குச்சென்ற வில்வீர னென்றபடி. இராமனுக்கு மேகம் - கருநிறத்திலும், அம்புமழைபொழிதலிலும், வில்லுடைமையிலும் உவமம். இனி, 'மேகத்தினைநிகர்' என்றதை வில்லுக்கு அடைமொழியாக்க லும் ஒன்று; அம்புமழைசொரியுங் கருவியாதலால். 'மேகத்தினைநிகர்வில்லி யை' என்றது, இரண்டாமடியில் வந்த 'வள்ளலை' என்பதை நோக்கிச் சுட் டுப்பொருளதாய் நின்றது. பி - ம்:—[1]மூப்புரம். [2]வளைவுற்றன. [3]புக. [4]மேகத் தனிநெடு. (சசுச)

கூஅ. எய்தார்பல ரெறிந்தார்பலர் [1]மழுவோச்சின ரெழுவாற்
பொய்தார்பலர் புடைத்தார்பலர் கிடைத்தார்பலர்[2]பொருப்பாப்
பெய்தார்மழை பிதிர்த்தா[3]ரெரி பிறைவாளெயிற் றரக்கர்
வைதார்பலர் தெழித்தார்பலர் மலையாமென வளைத்தார்.

(இ - ள்.) பிறை வாள் எயிறு - பிறைச்சந்திரன்போன்ற கூரியகோரதந் தங்களையுடைய, அரக்கர் - (சேனைகளுடன்வந்த) இராக்கதர்களில், பலர் - அநேகம்பேர், எய்தார் - (இராமன்மேல்) பாணப்பிரயோகஞ்செய்தார்கள்;

பலர்—, எறிந்தார்-(வேல்முதலியஆயுதங்களை) வீசினர்கள்; (பலர்), மழு ஒச்சினர்-மழுவென்னும்ஆயுதங்களைச் செலுத்தினர்கள்; பலர்—,எழுவால்-வாளைத்திகளால், பொய்தார்-வீளையாட்டாகப்போர்செய்தார்கள்; பலர்—, புடைத்தார் - (ஆயுதங்களைக்கொண்டு) அடித்தார்கள்; பலர்—, கிடைத்தார் - எதிர்த்துதெருங்கினர்கள்; (பலர்), பொருப்பு மழை ஆ பெய்தார் - மலைகளையெடுத்து மழைபோல மேற்சொரிந்தார்கள்; (பலர்), எரி பிதிர்த்தார் - நெருப்பைச் சொரிந்தார்கள்; பலர்—, வைதார் - வசைமொழிகூறினர்கள்; பலர்—, தெழித்தார் - அதட்டிஆரவாரித்தார்கள்; (இங்ஙனஞ்செய்து யாவரும்), மலை ஆம் என ஈண்டினார் - மலைகள்சூழ்ந்தாற்போல (இராமனைச்) சூழ்ந்தார்கள்.

பொப்தார் என்பது - வீளையாடினதொன்று பொருள்படுதலை, பொய்த லென்னும் வீளையாட்டுப்பெயர்கொண்டும் அறிக. **பி-ம்:**—[1]எழுவோச்சினர் மழுவால். [2]பொருப்பால். [3]எறி. (சகூடு)

கூகூ.—இதுமுதல் நான்குகவிகள் - பதினான்கு சேனைத்தலைவர்களின் சேனைகள் மாண்டமையைக் கூறும்.

தேர்பூண்டன விலங்கியாவையுஞ் சிலைபூண்டெழு [1]கணையாற்
பார்பூண்டன மதமாகரி [2]பலிபூண்டன பரிமாத்
தார்பூண்டன வுடல்பூண்டில தலைவெங்கதிர் [3]தழிவந்
தூர்பூண்டன பிரிந்தாலென விரிந்தாருயி ருலைந்தார்.

(இ - ள்.) சிலை பூண்டு எழு கணையால் - (இராமனது) வில்லில் தொடுக்கப்பட்டு வெளியெழுந்த அம்புகளால்,—தேர் பூண்டன விலங்கு யாவையும் - (அவ்வரக்கர்களது) தேர்களிற் பூட்டப்பட்ட (யாளிமுதலிய) மிருகங்களெல்லாம், பார் பூண்டன - (இறந்துவிழுந்து) தரையைச் சேர்ந்தன; மதம் மா கரி - மதம்பிடித்த பெரியயானைகள், பலி பூண்டன - பலியிடப்பட்டாற்போல் ஆயின [கொல்லப்பட்டன என்றபடி]; தார் பூண்டன பரி மா - கிண்கிணிமாலைகளையணிந்தனவான குதிரைகள், உடல் தலை பூண்டில - உடல்களில் தலைகள் பொருந்தப்பெற்றனவில்லை [தலைதுணித்து அழிந்தன]; (இங்ஙனம்ஆகவே அரக்கர்கள்), வெம் கதிர் தழிவந்து பூண்டன ஊர் பிரிந்தால் என - உஷ்ணமான கிரணமுடைய சூரியனே நெருங்கிவந்து சூழ்ந்தவையான பரிவேஷங்கள் விரைவில்நீங்கினாற்போல, இரிந்தார் - நீலைகெட்டு ஓடி, உயிர் உலைந்தார் - உயிர்நடுங்கினார்கள்; (எ - று.)

விலங்குயாவையும் - கீழ் ங்க, ஈஉ - ஆங் கவிகளிற் கூறியவை. பலி பூண்டன - பலியாகுந்தன்மையை யடைந்தன. பலி-கொல்லப்படும் இலக்கு. ''வெங்கதிர்தழிவந் தூர்பூண்டன பிரிந்தால்' என்றது, இராமனே இடைவிடாது சூழ்ந்த அரக்கர்கள் அப்பெருமானே யாதொன்றுஞ்செய்யமாட்டாது விரைவில் எளிமைப்பட்டு விலகிச்சென்றதை விளக்கும் உவமை. ஒருவர்பின் ஒருவராய்ப் பலவரிசைப்பட்டு அரக்கர்கள் சூழ்ந்துநின்றதை விளக்குதற்கு, 'ஊர்பூண்டன' என்று பன்மையாகப் பல ஊர்கோள்களை உவமைகூறினர்.

தழி - தழுவி யென்னும் வினையெச்சத்தின் மரூஉ; இதுவே, தழீஇ என அளபெடுக்கும்: "தமிழ்தழிய சாயலவர்" எனச் சிந்தாமணியில் தழிய என்னும் பெயரெச்சம் வந்தமையுங் காண்க. பி-ம்:—[1]கொலையால். [2]பல. [3]தழீஇ.

கoo. மால்[1]பொத்தின மறவோருடன் மழை[2]பொத்தின வழிசெம்
பால்பொத்தின நதியிற்கிளர் படி[3]பொத்தின படர்வான்
மேல்[1]பொத்தின குழுவிண்ணவர் விழிபொத்தினர் [4]விரைவெங்
கால்பொத்தினர் நமன்றூதுவர் கடிதுற்றுயிர் கவர்வார்.

(இ - ள்.) மால் பொத்தின - மயக்கம் நிறைந்த, மறவோர் - கொடிய அரக்கர்களது, உடல்-உடம்பில், மழை பொத்தின வழி - அம்புமழை துளைத்த வழிகளிலே, செம் பால் - இரத்தப்பெருக்குகள், பொத்தின - நிறைந்த வையாய், நதியின் - ஆறுகள்போல, கிளர் படி பொத்தின - விளங்குகிற பூமியை மறைத்தன; படர் வான்மேல் பொத்தின - பரந்தஆகாயத்தின்மேல் நிறைந்த, குழு விண்ணவர் - கூட்டமாகிய தேவர்கள், விழி பொத்தினர் - கண்களே மூடிக்கொண்டார்கள்; நமன் தூதுவர் - யமதூதர்கள், விரைவெம் கால் பொத்தினர் - விரைந்துவருகிற கொடிய காற்றை யொத்தவர்களாய், கடிது உற்று - விரைந்துவந்து, உயிர் கவர்வார் - அரக்கருயிரைக் கொள்பவரானார்கள்; (எ - று.)

பொத்துதல் - நிறைதல், மூடுதல். இது, நான்காமடியில், உவமவருபாய் நின்றது. மால் - இயற்கையிலுள்ள அவிவேகத்தோடு, இப்பொழுது போரிலாகிய தடுமாற்றமும். மழை - அம்புத்தொகுதிக்கு உவமையாகுபெயர். செம்பாலென்றது - இரத்தமாதலே, "குருதி செம்பால் புலால்நீர்" என்ற நிகண்டினாலும் அறிக. விண்ணவர் கண்மூடுதற்குக் காரணம், இராமபாணங்களின் உக்கிரத்தைப் பார்க்கமாட்டாமையும், அரக்கர் அழிகிறகோரத்தைப் பார்க்கக்கூசுதலும். இனி, 'விழிபொத்தினர்' என்பதற்கு-கண்கள் (ஆனந்தக் கண்ணீரால்) நிறைந்தார்கள் என்றுரைத்தலும் ஒன்று. 'விரைவெங்கால் பொத்தினர் கடிதுற்று' என்பதற்கு - விரைந்துசெல்லுந்தன்மையுள்ள கொடிய தமதுகால்களே அடித்துக்கொண்டு விரைந்துவந்துஎனவுரைப்பினுமாம்; கால்கள்விசையோடுஅடிபட ஓடிவந்து என்றவாறு. இனி, கடிதுற்று உயிர் கவர்வார் நமன்தூதுவர் விரைவெம்கால்பொத்தின ரென மாற்றி, விரைந்தோடிவந்து அரக்கருயிரைக் கவர்பவரான யமதூதர்கள் அங்ஙனம் மிக விரைந்துவருகிற தமதுகால்களே (வலிதீங்கப்)பிடித்துக்கொண்டார்களென்று உரைப்பாரு முளர். பி-ம்:—[1]பொத்திய. [2]ஒத்துடன். [3]ஒத்ததுபனி. [4]விடல்.()

கoக. பே[1]யேறின செருவேட்டெழு பித்தேறினர் பிலவாய்
நாயேறின [2]தலைமேனெடு கரியேறின வெரிகால்
வாயேறின வடிவாளியின் வானேறினர் வந்தார்
தீயேறிக லரி[3]யேறென முஞ்[3]லேறெனச் [4]செறிந்தார்.

(இ - ள்.) பேய் ஏறின - பேய்கள் மிக்குவருவதற்குக் காரணமான, செரு - போரை, வேட்டு - விரும்பி, எழு - உண்டான, பித்து - பைத்திய

குணம், ஏறினர் - மிக்கவர்களாகிய அரக்கர்களது, பிலம் வாய் - மலைக்குகை போல (உள்ளாழ்ந்துஅகன்ற) வாய்களின்மேல், நாய் ஏறின - நாய்கள்வந்து ஏறின; தலைமேல் - தலைகளின்மேல், நெடு நரி ஏறின பெரிய நரிகள் வந்து ஏறின; தீ ஏறு (என)-பெருநெருப்புப்போலவும், இகல் அரி ஏறு என-வலிய ஆண்சிங்கம்போலவும், முகில் ஏறு என - மேகத்தில்தோன்றும் பேரிடிபோலவும், வந்தார் செறிந்தார் - வந்துநெருங்கிய அரக்கர்கள், எரி கால் வாய் ஏறின வடி வாளியின் - நெருப்பை யுமிழ்கிற நுனியிலே மிக்க கூர்மையை யுடைய (இராம) பாணங்களால், வான் ஏறினர்-(போரில்இறந்து) வீரசுவர்க்கத்தின்மேல் ஏறிச்சென்றார்கள்; (எ - று.)

பேயேறின செரு - பேய்கள் பிணம்பிடுங்கித்தின்னவிரும்பி மிகுதியாக வரும்படி பிராணிகளுக்கு அழிவையுண்டாக்கும் போர். பித்து - இங்கே, வரம்புகடந்த ஆசை; அன்றி, மகாவீரனான இராமபிரானால் பலஅரக்கர் இறந்ததை அறிந்தபின்பும் அவனுடன் இவர்கள் போர்செய்யவிரும்பிய அறிவின்மை பித்துஎனப்பட்டதாகக் கொள்ளினுமாம். நாயும் நரியும், இறந்தவுடலைப் பிடுங்கித்தின்ன வந்தவை. பி-மீ:—[1]ஏறினர். [2]தலையேநெடு [3]ஏறினர். [4]செருவால்.

சிலபிரதிகளில் இப்பாடலின் இரண்டுமூன்று நான்காமடிகள் மூன்று நான்கு இரண்டாமடிகளாக வுள்ளன. (சசு அ)

கஉ. தலைசிந்தின விழிசிந்தின தழல்சிந்தின தரைமேன்
மலைசிந்தின படிசிந்தின வரிசிந்துர [1]மழைபோற்
சிலைசிந்தின கணைசிந்தின திசைசிந்தின [2]திசையூ
டுலைசிந்தின பொறிசிந்தின வுயிர்சிந்தின வுடலம்.

(இ - ள்.) தலை சிந்தின - (அரக்கர்களது) தலைகள் சிதறின; தழல் சிந்தின விழி சிந்தின - நெருப்புப்பொறிகளே வெளியுமிழ்ந்தவையான அவர்கள்கண்கள் சிதறின; தரைமேல் - பூமியிலே, மலை சிந்தின படி - மலைகள் சிதறிவிழுந்தாற்போல, வரி சிந்துரம் - (கல்லணை) கட்டிய யானைகள், சிந்தின - சிதறிவிழுந்தன; மழை போல் சிலை சிந்தின கணை - மேகம்போல (இராமனது) வில் வெளிவீசிய அம்புகள், திசை சிந்தின சிந்தின-எல்லாத்திக்குக்களிலுஞ் சிதறிவிழுந்தன; திசையூடு - அத்திக்குக்களிலெல்லாம், உலை சிந்தின பொறி சிந்தின உடலம் - உலைக்களத்தினின்று சிதறின நெருப்புப் பொறி போன்ற நெருப்புப்பொறிகளைச் சிதறியவையாகிய (அரக்கருடைய) உடம்புகள், உயிர் சிந்தின - உயிர்நீங்கின; (எ - று.)

'தழல்சிந்தின விழி', 'உலைசிந்தின பொறி சிந்தின வுடலம்' என்றது, முன்னியசிலைமையைக் கருதி; இனி, விழிசிந்தின - கண்கள் சிதறின: தழல் சிந்தின - (அக்கண்கள் கொடுமையாற் பின்னும்) நெருப்பையுமிழ்ந்தன என்றும், உயிர் சிந்தின உடலம் - உயிர்நீங்கியஉடம்புகள், உலை சிந்தின பொறி சிந்தின - (கொடுமையாற் பின்பும்) அனற்பொறிகளைச் சிதறின வென்றும் உரைப்பாரு முளர். மழை போல் சிலை கணை சிந்தின - மேகம்போல வில்

அம்புகளைச் சொரிந்தன; சிந்தின திசை - (அந்த அம்புகள்) சிதறிவிழுந்த திக்குக்கள், சிந்தின - (அந்தஅம்புகளின் வேகத்தால்) இடிந்துவிழுந்தன; திசையூடு - அத்திக்குக்களிலெல்லாம், உலை சிந்தின பொறி சிந்தின - உலைக்களத்துப்பொறிகள்போன்ற தீப்பொறிகள் சிதறின என்று உரைக்கவும் இடமுண்டு. பி - ம்:—[1]மலைபோல். [2]சிலையூடு. திசையோடு. (சசுங)

வே று.

கஅங.—சேனைத்தலைவர்கள் பதினெல்வர்தவிர மற்றையோர் இரத்தப்புனலில் முழ்கியமை.

[1]படைப்பெருந் தலைவரும் படைத்த தேர்களு
முடைத்தடம் படைகளு மொழிய வுற்றெதிர்
விடைத்தடர்ந் [2]தெதிர்ந்தவர் வீரன் வாளியான்
முடைத்தவெங் குருதியின் கடலின் மூழ்கினர்.

(இ-ள்.) படை பெரு தலைவரும்-பெரிய சேனைத்தலைவர்கள் பதினென்கு பேரும், படைத்த தேர்களும் - (அவர்கள்) கொண்ட இரதங்களும், உடை தட படைகளும் - அவர்களுடைய பெரிய ஆயுதங்களும், ஒழிய - என்னும் இவை நீங்கலாக,—எதிர் உற்று விடைத்து அடர்ந்து எதிர்ந்தவர் - (இராம பிரானுக்கு) எதிரில்வந்து பெருங்கோபங்கொண்டு நெருங்கியெதிர்ந்த அரக்கர்களெல்லோரும், வீரன் வாளியால் - வீரனான அவ்விராமனது அம்புகளால், (இறந்து), முடைத்த வெம் குருதியின் கடலில் மூழ்கினர்-துர்க்கந்த முள்ள கொடிய இரத்தக்கடலில் முழுகினார்கள்; (எ - று.)

வந்துஎதிர்த்த அரக்கர்களுள் சேனைத்தலைவர்கள்பதினெல்வர் தவிர மற்றையோரெல்லோரும் அழிந்தமையை இதிற் கூறினர். அப்பதினெல்வர் அழிதல், இனிக் கூறப்படும். முடைத்த - முடையென்னும் பெயரினடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். பி - ம்:—[1]படைத்தலைவருமவர். [2]எழுந்தவர்.

இதுமுதல் கூ-கவிகள்-கீழ்ப்படலத்தின் அ-ஆங்கவி போன்றவை.(சஎ0)

கஅச.—சேனைத்தலைவர் பதினெல்வரினீந்து இராமனைவளைத்தல்.

சுற்றுற நோக்கினர் தொடர்ந்த சேனையி
லற்றில தலையெனு மாக்கை கண்டிலர்
தெற்றின செயிறுக டிருகி னர்சின
முற்றின ரிராமனை [1]முடுகு தேரினர்.

(இ - ள்.) (படைத்தலைவர் பதினெல்வரும்),—சுற்றுற நோக்கினர் - (தம்மைச்) சுற்றிலும் எல்லாப்பக்கத்திலும் பார்த்து, தொடர்ந்த சேனையில் தலை அற்றில எனும் ஆக்கை கண்டிலர்-தொடர்ந்துவந்த(தமது)சேனைகளில் தலையற்றில்லை யென்று சொல்லப்படும் உடம்புகளே (ஒன்றேனுமில்லாதவர்களாய், சினம் திருகினர் - கோபம்மிகப்பெற்றவர்களாகி, எயிறுகள் தெற்றினர் - பற்களைக் கடித்துக்கொண்டு, முடுகு தேரினர் - விரைந்துசெல்லுந் தேரையுடையவர்களாய்,இராமனை முற்றினர்-இராமபிரானைச் சூழ்ந்தார்கள்;(எ-று.)

சேனையிலிருந்த பிராணிகளியாவும் தலையறுபட்டமை, இரண்டாம் அடியால் விளங்கும். பி-மீ:—[1]முழங்கு. (சஎக)

க0ந.—இதுமுதலிரண்டுகவிகள் - சேனைத்தலைவரீகள் பதினல்வரோடு ஸ்ரீராமன் பொருது அழித்தமையைத் தெரிவிக்கும்.

ஏழிரு தேரும்வந் திமைப்பின் முன்பிடைச்
சூழ்வன கணைகளிற் றுணிய நூறினு
ஞழியும் [1]புரவியு மாரு மற்றவை
யூழிவெங் காலெறி மீகங்க ளொத்தவ.

(இ - ள்.) வந்து இடை சூழ்வன - வந்து பக்கத்திலே சூழ்ந்தவையான, ஏழ் இரு தேரும் - பதினேழு தேர்களேயும், இமைப்பின் முன்பு - கண்ணிமைப்பொழுதினுள்ளே, துணிய - துணிபடும்படி, கணைகளின் - அம்புகளால், நூறினன் - (இராமன்) அழித்தான்; (அப்பொழுது), அற்றவை - துணிபட்டவையாகிய, ஆழியும் - தேர்ச்சக்கரங்களும், புரவியும் - குதிரைகளும், ஆளும் - சாரதிசனங்களும், ஊழி வெம் கால் எறி - ஊழிக்கால வெப்பங்கால் எறிதலால், ஒத்த - கல்பாந்தகாலத்திற் கொடுங்காற்றால் எடுத்துவீசப்படுகிற மலைகளைப் போன்றன; (எ - று.)

ஊழிக்காற்று - இராமபாணத்துக்கும், மலைகள் - வலியபெரியசக்கரம் முதலியவற்றுக்கும் உவமை. 'பாகு' என்பதுபோல, 'ஆள்' என்பது - உயர்திணைப்பொருளில் வந்த அஃறிணைச்சொ லென்றுவது, ஆள் என்ற உயர்திணைப்பெயர் சாதியையுணர்த்தி அஃறிணையின்பாற்பட்ட தென்றுவது கொண்டால், 'ஒத்த' என அஃறிணைமுற்று வந்தது வழாநிலையாம்; அன்றி, ஆழி புரவி என அஃறிணைச்சொல் இரண்டும், ஆள் என உயர்திணைச்சொல் ஒன்றுமாயிருத்தலால், மிகுதிபற்றி ஆள்என்ற உயர்திணைப்பெயர் ஒத்த என்ற அஃறிணைமுடிபைப் பெற்ற தென்று கொண்டால் திணைவழுவமைதியாம்; [நன் - பொது - உள.] மற்றவை என எடுத்து, கொடி கொடிஞ்சி அச்சு ஆணி முதலிய மற்றைத்தேருறுப்புக்களும் என்று உரைப்பாரு முளர். பி - மீ:—[1]ஆணியும். (சஎஉ)

க0ஙு. அழிந்தன தேரவ ரவனி கீண்டுக
விழிந்தனர் வரிசிலை யெடுத்த கையின
ரொழிந்திலர் சரங்களை யுருமி னேறெவர்
பொழிந்தனர் [1]மிகுகனல் பொடிக்குங் கண்ணினர்.

(இ - ள்.) அழிந்தன தேர்-(இவ்வாறு) தேர்கள் அழிந்தன; (அப்பொழுதே), அவர் - அப்பதினலுவரும், அவனி கீண்டு உக - பூமி பிளந்துவிடும்படி, இழிந்தனர் - கீழிறங்கி, வரி சிலை எடுத்த கையினர் - கட்டமைந்த வில்லை யேந்திய கையையுடையவர்களும், மிகு கனல் பொடிக்கும் கண்ணினர் - மிக்க நெருப்பை வெளிச்சிந்துகிற கண்களையுடையவர்களுமாகி, சரங்களை - அம்புகளை, உருமின் ஏறு என - பேரிடிகளென்னும்படி, ஒழிந்திலர் பொழிந்தனர் - இடைவிடாது சொரிந்தார்கள்; (எ - று.)

அழிந்தன தேரவர் என எடுத்து, அழிந்தனவான தேர்களையுடையவர்க ளென்றலும் ஒன்று. பி-மீ:—[1]பொழி. (சளகூ)

கo6ள. நூறிய சரமெலா நுறுங்க வாளியா
லீறுசெய் தவர்சிலை யேழொ டேழையு
மாறினெ டாறுமோ ரிரண்டு மம்பினுற்
கூறுசெய் தமர்த்தொழிற் கொதிப்பை நீக்கினான்.

(இ - ள்.) நூறிய சரம் எலாம் - (குறித்த இலக்கை) அழிக்குந்தன்மை யுள்ள (அவ்வரக்கர்களுடைய) அம்புகளேயெல்லாம், நுறுங்க - பொடியாம் படி, (இராமபிரான்), வாளியால் - (தனது) பாணங்களால், ஈறு செய்து - அழித்து,—அவர் சிலை ஏழொடு ஏழையும்-அவர்களுடைய வில்கள் பதினான் கையும், ஆறினெடு ஆறும் ஓர் இரண்டும் அம்பினால் - பதினாறு பாணங் களாக்கொண்டு, கூறு செய்து - துண்டித்து, அமர் தொழில் கொதிப்பை நீக்கினான் - போர்த்தொழிலில் (அவர்களுக்கு இருந்த) உக்கிரத்தை யொ ழித்தான்; (எ - று.) (சளச)

கo0ஆ. வில்லிழந் தனைவரும் வெகுளி மீக்கொளக்
கல்லுபர் நெடுவரை கடிதி னேந்தினர்
ரொல்லையி [1]னுருத்துயர் விசும்பி னேங்கிநின்
[2]றெல்லுபர் பொறியுக வெறிதன் மேயினர்.

(இ - ள்.) அனைவரும் - அப்படைத்தலைவரெல்லோரும், வில் இழந்து-வி்ற்களை யிழந்ததனால், வெகுளி மீ கொள - கோபம் அதிகப்பட, கல் உயர் நெடு வரை-கல்மயமாய் ஓங்கிய பெரிய மலைகளை, கடிதின் ஏந்தினர் - விரை வில் எடுத்துக்கொண்டு, ஒல்லையின் உருத்து உயர் விசும்பின் ஓங்கி நின்று - விரைவாகவுழுந்து ஓங்கியஆகாயத்தில் உயர்ந்துநின்றுகொண்டு, எல் உயர் பொறி உக - சூரியனுளிபோன்ற மிக்கநெருப்புப்பொறிகள் சிந்த, எறிதல் மேயினர் - (அந்த மலைகளை இராமன்மேல்) வீசியெறிந்தார்கள்; (எ - று.)

எல் உயர் பொறி உக-சூரியனது உயர்ந்த தேரும் பொடியாம்படி,உயர் விசும்பின் ஓங்கிநின்று-ஓங்கிய ஆகாயத்தின்மீது அம்மலைகளை உயரஎடுத்து நின்று, உருத்து - உக்கிரங்கொண்டு, ஒல்லையின் எறிதல் மேயினர் என்று உரைப்பாரு முளர். பி - மீ:—[1]உருத்தவர். [2]எல்லையில். (சளடு)

கo0க. கலிகளின் பெருங்கடல் கடந்த கல்வியா
னிலிகொள்வெம் பகழியே ழிரண்டு வாங்கினான்
கொலிகொள்வெஞ் சிலையொடு புருவம் கோட்டினான்
மலிகளுக் தலிகளும் விழுந்த [1]மண்ணினே.

(இ - ள்.) கலிகளின் பெரு கடல் கடந்த - சாஸ்திரங்களாகிய பெரிய கடல்களைத் தாண்டிய [முற்றுமுணர்ந்த], கல்வியான் - அறிவையுடைய ஸ்ரீ ராமன், கொலி கொள் வெம் சிலையொடு புருவம் கோட்டினான் - (பகைவ

ரைக்)கொல்லுதலேக்கொண்ட வெவ்வியன (தனது) வில்லுடன் புருவங்களையும் வளைத்து, இலை கொள் வெம் பகழி ஏழ் இரண்டு வாங்கினன் - இலைவடிவத் தைக்கொண்ட கொடிய பதினான்கு பாணங்களை எடுத்துவைத்தான்; (அவற் றால்), மலைகளும் - (அவ்வரக்கர்கள் எறிந்த) மலைகளும், தலைகளும் - (அவர் களுடைய) தலைகளும், மண்ணின் வீழ்த்த - (துணிபட்டுத்) தரையில் வீழ்த் திட்டன; (எ - று.)

சாஸ்திரங்களைக் கடல் என்றதற்கு ஏற்ப, அறிவைப் புணை யென்னுமை யால், **ஏகதேசஉருவகவணி.** "எண்ணில் நுண்ணூல் வாய்ந்தே கடந்தா னறி வென்னு மளக்கர்" எனப் பலகாண்டத்தில் வந்ததனேடு முதலடியை ஒப்பிடுக. கல்வி - அறிவுக்கு இலக்கணை. கொல் கொள் எனப் பதம்பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்குச் சிறவாது. மூன்றுமடியில், கோபத் தாற் புருவங்களை மேல்கெறித்தமை விளங்கும். சிலையொடுபுருவங்கோட்டி னான், மலைகளுந் தலைகளும் விழுந்த என **உடனவிற்சியபணியாகக்கூறிய** நயத்தால், புருவம் வில்போன்ற தென்றும், தலைகள் மலைகள்போன்றன வென்றும் தோன்றும். **பி - மீ:**—[1]மண்ணின்மேல். (சளசு)

கக0.—இனி, இருபத்தாறுகவிகள் - திரிசிராவென்னும் அரக்கன் சேனையுடன் வந்து ஸ்ரீராமனோடு பொருது அழிதலைக் கூறும்.

படைத்தலை[1]த் தலைவர்கள் படலும் பல்படை
புடைத்[2]தடர்ந் தெதிரழல் புரையுங் கண்ணினர்
கிடைத்தன ரரக்கர்கள் கீழு மேலு[3]மொய்ப்
தடைத்தனர் திசைகளே யமர ரஞ்சினர்.

(இ - ள்.) படை தலை தலைவர்கள் - சேனைகளுக்கு முதன்மைபெற்ற தலைவர்கள் பதினான்குபேரும், படலும் - இவ்வாறுஇறந்தவளவிலே,—அரக் கர்கள் - (வேறு) இராக்கதர்கள், பல் படை புடைத்து - பலஆயுதங்களை வீசிக்கொண்டு, அடர்ந்து - நெருங்கி, அழல் புரையும் கண்ணினர்-நெருப்பை யொத்த கண்களையுடையவர்களாய், எதிர் கிடைத்தனர்-இராமபிரானெதிரி லே கிட்டி, கீழும் மேலும் மொய்த்து - பூமியிலும் ஆகாயத்திலும் நெருங்கி நின்று, திசைகளை அடைத்தனர் - திக்குக்களை மறைத்தார்கள்;(அதுகண்டு), அமரர் அஞ்சினர் - தேவர்களும் பயந்தார்கள்; (எ - று.)

'படைத்தலைத் தலைவர்கள்' என்பதற்கு - சேனையில் தலைவராகவுள்ள வர்என்றும் பதவுரைகூறலாம்: தலை - ஏழனுருபு. **பி - மீ:**—[1]வீரர்கள். [2]அடர்த்தார்த்தெரிபுகையுங். [3]ஆய். (சளள)

கஙக. முழங்கின பெரும்பணை மூரி மால்கரி
முழங்கின வரிசிலை முடிகு நாணெலி
முழங்கின [1]சங்கொடு புரவி [2]முற்றுற
முழங்கின வரக்கர்த முகிலி னர்ப்பரோ.

(இ - ள்.) (அப்பொழுது), பெரு பணை - பெரிய போர்ப்பறைகளும், மூரி மால் கரி - வலிய பெரிய யானைகளும், முழங்கின-பேரொலிசெய்தன; வரி சிலை முடுகு நாண் ஒலி - கட்டமைந்த வில்களில் விரையப்பூட்டப்பட்ட நாணிகளின் ஓசைகள், முழங்கின - ஆரவாரித்தன; சங்கொடு புரவி - சங்க வாத்தியங்களும் குதிரைகளும், முழங்கின—; அரக்கர்தம் - இராக்கதர்க ளுடைய, முகிலின் ஆர்ப்பு-மேககர்ச்சனைபோன்ற கர்ச்சனையொலிகள், முற் றுற - எங்கும், முழங்கின—; (எ - று.)—அதோ - ஈற்றசை.

'அரக்கர்தம்' என்பதை 'பணை' முதலியவற்றுக்கும் கூட்டுக. பணை - பறைப்பொது; மூரசம் முதலியன. சங்கு - அரக்கர்கள் தமதுபோர்த்திறத் துக்கு அறிகுறியாக வாயில்வைத்து ஊதியசை. பி - ம்:—[1]சங்கொலி. [2]மொய்த்துற. (சஎஅ)

வே று.

ககஉ. வெம்படை நிருதர் வீச விண்ணிடை மிடைந்த வீர
னம்பிடை யறுக்கச் சிந்தி யற்றன [1]படுமென் றஞ்சி
யும்பரு மிரியல் போனு ருலகெலா முலைந்து சாய்ந்த
கம்பமி றிசையி னின்ற களிறுங்கண் ணிமைத்த வன்றே.

(இ - ள்.) 'நிருதர் வீச - அரக்கர்கள் வீசியெறிதலால், விண்ணிடை மிடைந்த - ஆகாயத்தில் நெருங்கியவையான, வெம் படை - கொடியஆயு தங்கள், வீரன் அம்பு இடை அறுக்க - இராமனது பாணங்கள் நடுவிலே துணித்தலால், அற்றன - துணிபட்டவையாய், சிந்தி - சிதறி, படும் - (நம் மேல் ஊறுண்டாக) விழக்கூடும்,' என்று - என்றுஎண்ணி, அஞ்சி - பயந்து, உம்பரும் - தேவர்களும், இரியல் போனர்-ஓடிப்போனர்கள்; உலகு எலாம் - உலகங்களெல்லாம், உலைந்து சாய்ந்த - நடுங்கித் தளர்ந்தன; கம்பம் இல் - நிலைபெயர்தலில்லாத, திசையில் நின்ற களிறும் - திக்குயானைகளும், கண் இமைத்த - (அச்சத்தாற்) கண்களே மூடிக்கொண்டன; (எ - று.)

கம்பம் - வடசொல். கண் இமைத்தல், அச்சத்தின் காரியம். பி - ம்:—[1]விழும்.

இது-கீழ்ப்படலத்தின் முதற்கவி போன்ற **அமலீராசிரியவிருத்தம்.** (சஎக)

வே று.

ககங. அத்தலைத் [1]தானை யளவி லாற்றலன்
முத்தலைக் குரிசில்[2]பொன் முடியன் முக்கணன்
கைத்தலைச் சூலமே யனைய காட்சியான்
வைத்தலைப் பகழியான் [3]மழைசெய் வில்லினன்.

(இ - ள்.) அ தலை தானையன் - சிறந்த அந்தச்சேனையையுடைய தலை வன், (யாதெனில்),—அளவு இல் ஆற்றலன் - அளவில்லாத வல்லமையை யுடையவனும், பொன் முடியன் - பொன்னிஞலாகிய கிரீடத்தையுடைய

வனும், வைத்தலை பகழியால் மழை செய் வில்லினன்-சூரிய நுனியையுடைய அம்புகளைக்கொண்டு மழைபொழிகிற வில்லையுடையவனும்,மூக்கனன் ல்கத் தலை சூலமே அனைய காட்சியான் - மூன்றுகண்களையுடைய சிவபிரானது கையினிடத்துள்ள சூலாயுதத்தையே போன்ற தோற்றமுடையவனுமாகிய, மூ தலை குரிசில்-மூன்று தலைகளையுடைய திரிசிரா வென்னும் வீரனும்; (எ-து.)

மூன்று தலைகளையுடைமைக்கும், அழித்தல்தொழில்செய்தற்கு மைக்கும்,சிவபிரானது சூலம் உவமை. பி-ம்:—1தானையின். 2போர்முடிவில்.3மலை.

இதுமுதல் உ0 - கவிகள் - கூற்றுப்படலத்தின் எட்டாங்கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (கஅ0)

ககச. அன்னவ னதிவுற வாழி யூழியி
தென்னவர் தெங்களு மிரைத்த 1சேனையுட்
டன்னிகர் வீரனுந் தமியன் வில்லினன்
றுன்னிரு னிடையதோர் விளக்கிற் றோன்றினான்.

(இ - ள்.) அன்னவன் - அத்தன்மையனான திரிசிரன், ஊழி ஆழி ஈது என்ன - பிரளயகாலத்துப்பெருங்கடல் இது வென்றுசொல்லும்படி, எங்களும் சுக்கு - எல்லாப்பக்கங்களிலும் வந்து, இரைத்த - ஆரவாரித்த, சேனையுள் - அரக்கர்சேனையின் மத்தியிலே, தமியன் வில்லினன்-தனியேயவில்லேயேந்தியிருந்தும், தன் நிகர் வீரனும்-தன்னைத் தானே யொத்த [வேறு உவமை பெறாத] வீரனை ஸ்ரீராமனும், தூண் இருள் இடையது ஓர் விளக்கின் தோன்றினான் - செருங்கிய இருளின் நடுவிலுள்ள தொரு விளக்குப்போல விளங்கினான்; (எ - து.)

இருள் - அரக்கர்சேனைக்கும், விளக்கு - இராமபிரானது திவ்வியகாந்தி பொருந்திய திருமேனிக்கும் உவமை. பி - ம்:—1சேனையும். (கஅக)

ககடு. 1ஒண்கொளி வாளின வுருமி னார்ப்பினன்
வீங்கிய 2கவசத்தன் வெய்ய கண்ணினன்
ஞங்கவ னணிக்கெதி ரணிக ளாகுமோர்
தாங்கிளை னிராமனுஞ் சரத்தின் றூணியால்.

(இ - ள்.) ஒண்கொளி வாளினன்-மிக்கஒளியையுடைய வாளாயுதத்தை யுடையவனும், உருமின் ஆர்ப்பினன்-இடிபோன்ற பேரொலியுடையவனும், வீங்கிய கவசத்தன் - பருத்தகவசத்தையுடையவனும், வெய்ய கண்ணினன் - கொடியபகண்களையுடையவனுமாகிய, ஆங்கு அவன் - அங்குவந்த அவ்வரக்க னது, அணிக்கு - படைவகுப்புக்களுக்கு, எதிர் அணிகள் ஆக - எதிர்ப்படை வகுப்புக்களாக, இராமனும்—, சரத்தின் தூணியால் - அம்புகளாகிய சேனை யால், தேர் தாங்கினன் - எதிரூன்றி நின்றான்; (எ - து.)

சதுரங்கங்களமைத்த திரிசிரனது படைவகுப்புக்கு எதிரில் இராமன் **அம்புகளைக்கொண்டு** படைவகுத்திட்டன னென்பது, பொருள். கரனது

சேனையில் எத்தனை யானை தேர் குதிரை காலாள்க ளுண்டோ அத்தனையம்பு களே இராமன் அவற்றின்மீது ஒழுங்காக எதிர்தொடுத்தன னென்றகருத்தை இங்ஙனம் வருணனைவகையாற் கூறினர். 'சரத்தின்தானை' என்றது; அம்புத்தொகுதியை. நேர்தாங்குதல் - எதிரில் நிலைப்படுத்தல். பி-ம்:— [1]ஒக்கிய. [2]வேகத்தன். (சஅஉ)

ககசூ. தாளிடை யற்றன [1]தலேபு மற்றன
தோளிடை யற்றன [2]தொடையு மற்றன
வாளிடை யற்றன மழுவு மற்றன
கோளிடை யற்றன [3]குடையு மற்றன.

(இ - ள்.) (அங்ஙனம் இராமன் ஒழுங்குபட எதிர்தொடுத்த அம்புக ளால்), தாள் - (அரக்கர்களது) கால்கள், இடை அற்றன - நடுவே அறுபட் டன; தலேயும் - தலேகளும், அற்றன—; தோள் - தோள்கள், இடை அற் றன—; தொடையும் - தொடையென்னும் உறுப்புக்களும், அற்றன—; வாள் - வாளாயுதங்கள், இடை அற்றன—; மழுவும் - மழுப்படைகளும், அற்றன—; கோள் - வலிமைகளும், இடை அற்றன—; குடையும் - குடை களும், அற்றன—; (எ - று.)

தொடை என்பதற்கு - அம்பென்றும், கோள் இடை என்றுஎடுத்து - வலிய இடைக ளென்றும் உரைப்பாரு முளர். பி - ம்—[1]தலேகள். [2]தொடை கள். [3]குடைகள். இவையன்றியும், இரண்டுமூன்றுமடிகள் சிலபிரதிகளில் மூன்று இரண்டாமடிகளாகவுள்ளன. (சஅந)

ககஎ. கொடியொடு [1]கொடுஞ்சினப் புரவிக் கூட்டறப்
[2]படியிடை படிந்தன [3]பருத்த தேர்பணே
நெடிய[4]வன் கடகரி புரண்ட [5]நெற்றியி
னிடியொடு முறிந்துவீழ் சிகர மென்னவே.

(இ - ள்.) கொடியொடு - துவசங்களும், கொடு சினம் புரவி கூட்டு - கொடிய கோபமுள்ள குதிரைகளின் தொடர்ச்சியும், அற - துணிபட்டொ ழிய,—பருத்த தேர் - பெரியதேர்கள், படியிடை படிந்தன - நிலத்திலே விழுந்தன; பணே நெடிய வல் கட கரி-பருத்த உயர்ந்த வலிய மதயானைகள், நெற்றியின் இடியொடு முறிந்து வீழ் சிகரம் என்ன - உச்சியில்இடிவிழுந்தது ஞல் ஒடிந்துவிழுகிற மலேச்சிகரங்கள்போல, புரண்ட - (கீழ்விழுந்து) புரண் டன; (எ - று.)—பி-ம்:—[1]கொடிஞ்சதப், கொடுஞ்சரப். [2]படியொடு. [3]பரு திக்தேர்ப். [4]வெங். [5]நெற்றிவீழ். (சஅச)

ககஅ. அற்றன சிரமென வறிக றேற்றலர்
கொற்றவெஞ் சிலேச்சரக் [1]கோத்து வாங்குவா
[2]ரிற்றவ ரிறுதவ ரெழுந்து விண்ணிணப்
[3]பற்றின மழையெனப் படைவ ழங்குவார்.

(இ - ள்.) இற்றவர் - தலையறுபட்ட அரக்கர்கள், சிரம் அற்றன என அறிதல் தேற்றலர் - (தங்கள்) தலைகள் அறுபட்டன வென்று அறியாதவர்களாய், கொற்றம் வெம் சிலை சரம் கோத்து வாங்குவார் - வெற்றியையுடைய கொடிய வில்லினின்று அம்புகளைத் தொடுத்து எய்வார்கள்; இருதவர்-தலையறுபடாதவர்கள், எழுந்து—. விண்ணினை பற்றின மழை என-ஆகாயத்தைக் கவிந்த மழைபோல, படை வழங்குவார்-ஆயுதங்களை வீசுவார்கள்; (எ - று.)

விரைந்துதொழில்செய்பவரது உடம்பு தலையறுபட்டபின்பும் சிறிதுபொழுது முன்னையதொழிலை விடாதுசெய்தல் இயல்பாதலின், இங்ஙனங் கூறினார்; "அடுசிலை பகழி தொடுத்து விடப்புகு மளவினி லயனிதிர் விட்டவர் வெட்டினர், உடல்சில விருதுணி பட்டன பட்டபின் ஒருதுணி கருது மிலக்கை யழிக்குமே" என்ற கலிங்கத்துப்பரணிச்செய்யுள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. வாங்குதல் - வில்நாணியை யிழுத்துவிடுதல். இப்பாட்டின் மூதலடியால், அரக்கர்களது தலைதெரியாத யுத்தாவேசம் விளங்கும். பி-ம்:— [1]கொடித்து. [2]இற்றனராளன. இற்றவர்தாளென. இற்றிலராளன. [3]பற்றினர். (சஅஙி)

ககக. கேடகத் [1]தடக்கையர் கிரியின் [2]றோற்றத்த
ராடகக் [3]கவசத்தர் கவந்த மாடிவ
பாடகத் தரம்பையர் மருளப் பல்வித
நாடகத் [4]தொழிலினை நடிப்ப வொத்தவே.

(இ - ள்.) கேடகம் தடக்கையர் - கேடகமென்னும் ஆயுதத்தை ஏந்திய பெரிய கையையுடையவர்களும், கிரியின் தோற்றத்தர் - மலைபோன்ற பெரியவடிவமுடையவர்களும், ஆடகம் கவசத்தர் - பொன்னினாலாகிய கவசத்தை யணிந்தவர்களும் ஆகிய வீரர்களுடைய, கவந்தம் - தலையற்றஉடற் குறைகள், ஆடுவ - துடித்துத் துள்ளுபவை,—பாடகத்து அரம்பையர் மருள - பாடகமென்னுங்காலணியை யணிந்த தேவமாதர்கள் மயங்கும்படி, பல் விதம் நாடகம் தொழிலினை நடிப்ப ஒத்த - பலவகை நடனத்தொழில்களை நடித்துக்காட்டுவன போன்றன; (எ - று.)

கண்டவர்அதிசயிக்கும்படி பலவாறு விசித்திரமாகக் கூத்தாடின என்பதாம். அரம்பையர் - ரம்பை முதலியோர். நாடகக்கணிகையராதலின், இவர்களை யெடுத்துக்கூறினர். பி-ம்:—[1]தடக்கைய. [2]தோற்றத்த. [3]கவசத்த. [4]தொழிலினாநந்தகத்தின. (சஅசு)

கஉo. கவரிவெண் குடையெனு [1]நுரைய கைம்மலைச்
[2]சுவறரு [3]சூறவமாழ் [4]சுழிய தண்டுறைப்
பவரினப் படுமணி குவிக்கும் பண்ணைய
வுவரியைப் புதுக்கின வுதிர யாறரோ.

(இ - ள்.) கவரி - சாமரங்களும், வெள் குடை - வெள்ளைக்குடைகளும், எனும் - என்கிற, நுரைய-நுரைகளையுடையவைபும், கைம்மலை - யானைகளார்

கிய, சுவல் தரு சுறவம் - உயர்ந்தமுதுகுகொண்ட சுறாமீன்கள், ஆழ்-முழுகப் பெற்ற, சுழிய - சுழிகளையுடையவையும், தண் துறை - குளிர்ந்த இறங்கு துறைகளிலே, பவர் இனம் படு மணி குவிக்கும்-நெருங்கிய பலவகைப்பட்ட இரத்தினங்களைக் கொண்டுகுவிக்கிற, பண்ணைய - சேணங்களாகிய படகு களையுடையனவும் ஆகிய, உதிரம் யாறு - இரத்தநதிகள், உவரியை புதுக் கின - கடலைப் புதியதாக்கின; (எ - று.)—அரோ - ஈற்றசை.

யாற்றுப்புதுவெள்ளம் விசையோடு சென்று கடலில் விழுந்து மிதந்தோர மளவும் கடலின்நிறத்தை வேறுபடுத்துவதுபோலவே இரத்தநதிகள் சென்று சேர்ந்து கருங்கடலைச் செந்நிறமாக்கின வென்பதாம்: கருங்கடலை வேறு நிற முண்டாகுமாறு உதிரயாறு செய்ததெனக்கூறியது - **பிறிதின்தகுமம்பெற லணியாம்.** உபமேயமாகிய சேணமும் உபமானமாகிய படகும் என இரு பொருளையும் 'பண்ணை' என்ற ஒருசொல்லே தந்தது - **சிலேடையுநவக வணியாம்.** சேணங்களில் நிரம்பப் பலவகை மிரத்தினங்களைப் பதித்திருத் தலையும், படகுகள் பலவகைமிரத்தினங்களைக் கொணர்ந்து சேர்த்தலையும் கருதி, 'பவரினம்படுமணிகுவிக்கும்' என்ற அடைமொழி கொடுத்தார். வெண்மையைக் கவரிக்குக் கூட்டுக. பி-ம்:—[1]நுரைசெய். [2]சுவரன. [3]கவந்த மாழ். [4]சுரிய. (சஅஎ)

கஉக. சண்டவெங் கடுங்கணை தடியத் தாஞ்சில
திண்டிறல் வலியெயிற் றரக்கர் தேவராய்
வண்டுழல் புரிகுழல் மடந்தை மாரொடும்
கண்டனர் [1]தம்முடைக் கவந்த நாடகம்.

(இ - ள்.) சண்டம் வெம் கடு கணை - மிகவுங்கொடிய இராமபாணங் கள், தடிய - கொல்லுதலால், தாம் சில திண் திறல் வலி எயிறு சில அரக்கர்-மிக்க வலிமையையும் வலிவான கோதற்றபற்களையு முடைய சில இராக்கதர்கள், தேவர் ஆய் - (இறந்தவுடனே வீரசுவர்க்கம்பெறுந்) தேவர்களாகி, வண்டு உழல் புரி குழல் மடந்தைமாரொடும் - வண்டுகள்சுழன்றுமொய்க்கத்தக்க அலங்கரித்த கூந்தலையுடைய தேவமாதர்களுடனே (கூடி), தம்முடை கவ ந்தம் நாடகம் கண்டனர் - தங்களுடைய தலையற்றஉடற்குறைகளின் கூத் தாட்டத்தைப் பார்த்தார்கள்; (எ - று.)—தாம் - அசை.

அரக்கரதுஉடல் இராமபாணத்தால் சின்னபின்னப்பட்டுத் துடித்துத் துள்ள உயிர் உடனே தேவசரீரமுற்று அரம்பையரோடுகூடி அவ்வுடம்புகளின் துள்ளலே விநோதமாகக்கண்டு வியந்தன என்பதாம்; இதில், விரைவில் தெய்வ யாக்கைபெற்றமை விளங்கும். திண் திறல்-ஒருபொருட்பன்மொழிகள். தேவர் களின்கூந்தலில் இயல்பில் வண்டு மொய்யா வாயினும், கூந்தலின் இயற்கை மணமும் அதிற்சூடப்பட்ட மலர்மாலைகளின் செயற்கைமணமும் நன்கு விளங்குதற்பொருட்டு, 'வண்டுழல்' என்ற அடைமொழி கொடுத்தார்; இனி, 'வண்டுஉழல்' என்பதற்கு - கைவளைகள்சுழலப்பெற்ற என்று உரைத்து, மடந்தைமார்க்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. பி-ம்:—[1]தம்முடன். (சஅஅ)

கஉஉ. ஆய்வளை மகளிரோ டமர ரீட்டத்தர்
தூயவெங் கடுங்கணை துணித்த தங்கடோள்
பேயொரு தலிகொளப் பிணங்கி [1]வாய்கவரி
னையொரு தலிகொள நகையுற் றுரைசெலர்.

(இ - ள்.) செலர் - சிலஅரக்கர்கள்,—அமரர் கூட்டத்தர் - (இராமபாணங்களாற் போரிலிறந்துவீணே) தேவர்களின் கூட்டத்திற் சேர்ந்தவர்களாய்,—ஆய் வளை மகளிரோடு-சிறந்தவளையல்களையுடைய தேவமாதர்களுடன்,—தூய வெம் கடு கணை துணித்த தங்கள் தோள் - சுத்தமான மிகக்கொடிய இராமபாணங்களால் துண்டிக்கப்பட்ட தங்கள்தோள்களை; பேய் ஒரு தலி கொள - பேய்கள் ஒருபக்கத்திலே கௌவிக்கொள்ள; பிணங்கி - (அவற்றோடு) மாறுபட்டு, நாய் - நாய்கள்; ஒரு தலி - மற்றொருபக்கத்திலே, வாய்களின் கௌள - வாயாற்கௌவியிழுக்க; (கண்டு). நகை உற்றுரை - பரிகசித்துரைகள்; (எ - று.)—பி - மீ:—[1]வாய்விடா; வாய்விட.

ஆட் வளை - பலவளைகளுள் தெரிக்கெடுத்த வளை. (கூஉக)

கஉங. தெரிகணை முழுக்கலிற் றிறந்த பார்பின
ரிருவினை கடந்துபோ யும்ப ரெய்தினர்
திருதர்தம் பெருமபடை செடிது நின்றவ
னெருவனென் றுள்ளத்தி [1]னுலைவுற் றுரைசெ

(இ - ள்.) தெரி கணை - (ஸ்ரீராமபிரான்) ஆராய்ந்து எடுத்துவிட்ட அம்புகள்; மூழ்கலின் - தைத்துப்பாய்தலால், திறந்த - பிளவுபட்ட. மார்பினர்-மார்பையுடையவர்களாய். இரு வினை கடந்து போய்-பெரிய போர்த் தொழிலை யொழித்துச் சென்று. உம்பர் எய்தினர் - மேலுலகடைந்தவரான, திருதர் - சில அரக்கர்கள்,—'தம் பெரு படை செடிது - தம்முடைய [அரக்கர்களுடைய] பெரியசேனையை மிகநீண்டது: நின்றவன்-(அதனிடையில்) நின்ற இராமபிரானே. ஒருவன் - ஒருத்தனேயவன்,' என்று - என்றெண்ணி, உள்ளத்தில் உலைவு உற்றுரை - மனத்தில் அச்சமடைந்தார்கள்; (எ - று.)—அதாவது - சுற்றலை.

கொடியவரக்கர்கள் இராமபாணம்பட்டவளவிலே இறந்து தேவர்களாயினமையால் அத்தேவர்களுக்கு உரிய குணஞ்செயல்களை உடனேகொண்டு, 'சேனையாகத்திரண்ட அரக்கர்களோ மிகப்பலர்; அவற்றுடன் எதிர்த்துப் போர்செய்யும் இராமனோ துணையின்றி ஒருவனாயுள்ளான்' என்று இராமபிரானது தனிமையைக் கருதி அஞ்சினரென்பதாம். இங்கு திருதர் இராமபிரானுக்காக உலைவுற்றதாகக் கூறியது - ததீயின்மையணியின்பாற்படும். இராமனிடத்து மிக்க அன்பையுடைய தேவர்களுக்கு அந்த அன்பின் மிகுதியாலுண்டாகுங் கவலை,அரக்கர்களுக்கு விரைவிலுண்டான நிறத்தை வியந்து கூறினர். 'இருவினைகடந்துபோ யும்பரெய்தினர்' என்பதற்கு - இருவகைக்

கருமங்களேயுங் கடந்து சென்று மோக்ஷலோகமடைந்தவர்க ளென்று உரைத்தல் மரபன்று. பி - மீ:—[1]உணர்வுற்றுரர்சிலர். (சுகo)

கஉஅ. கைக்[1]கரி யன்னவன் பகழி கண்டகர்
மெய்க்குலம் வேரொடுங் [2]துணித்து வீழ்த்தின
மைக்கரு மனத்தொரு வஞ்சன் [3]மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே.

(இ - ள்.) கை கரி அன்னவன் பகழி - துதிக்கையையுடைய யானேயைப் போன்ற இராமபிரானது அம்புகள், கண்டகர் மெய் குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின - மிக்கொடிய அரக்கர்களின் உடற்கூட்டங்களே அடியோடு அறுத்துத்தள்ளியவை,—மாண்பு இலன் - பெருந்தன்மையில்லாதவனுகிய, மை கரு மனத்து ஒரு வஞ்சன் - மைபோலக் கரிய மனத்தையுடைய ஒருவஞ்சகன், பொய் கரி கூறிய - (நித்தலத்திற்) பொய்ச்சாட்சி சொன்ன, கொடு சொல் - கொடிய சொற்களே, போன்ற-ஒத்தன; (எ - று.)

பொய்ச்சாட்சிமொழிகள் சொன்னவர்களது குலத்தை வேரோடு அறுத்தல் போல, இராமபாணங்கள் அரக்கர்குலத்தை வேரோடு அறுத்துத் தள்ளின என்பதாம். குலம் வேரொடுத் துணித்து வீழ்த்துதல்மாத்திரத்துக்கு இவ்வுவமை கூறியது. பலத்திலும் மேலானதோற்றத்திலும் நடையிலும் இராமனுக்கு யானே உவமையாதல் மாத்திரமேயன்றி, யானேத்துதிக்கை இராமனது திருத்தோளுக்குத் திரண்டுருண்டு நீண்ட வடிவில் ஒப்புமையாதலும்பற்றி, 'கைக்கரியன்னவன்' என யானேக்கு அடைமொழிகொடுத்துக் கூறினர். கை என்ற அடைமொழி அடுத்தலால், கரி யென்ற சொல் - காரணப்பொருளே நோக்காமல், யானேயென்னுமளவாய் வெறும்பெயர்மாத்திரமாய் நிற்கும். மைக்கருமனம் - மிக்களங்கமுடைய மன மென்றபடி; தீயசிந்தையையுடைமையைக் கரியதென்றல், மரபு; "அகக் குன்றி, மூக்கிற் கரியா ருடைத்து" என்ற திருக்குறளும், "சிற்றம்பல மாதரியாக், கூழின் மலிமனம் போன் றிருளாகின்ற கோகிலமே" என்ற திருக்கோவையாரும் இங்கு நோக்கத்தக்கன. பி-மீ:—[1]களிறனேயவன். [2]துடைத்து. [3]மாண்பிலா.

கஉடு. [1]அஞ்சிறை யறுபத மடைந்த கீடத்தைத்
தஞ்சென [2]தன்மய மாக்குந் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரை [3]வேரத்து வள்ளலுன்
செஞ்சர நாய்மையாற் றேவ ராக்கினன்.

(இ - ள்.) அம் சிறை அறுபதம் - அழகிய இறகுகளேயுடைய ஒருசாதி வண்டு [குளவி], தஞ்சு என அடைந்த கீடத்தை - அடைக்கலப்பொருளாகத் தான்கொண்ட புழுக்களே, தன் மயம் ஆக்கும் தன்மை போல் - தனது வடிவமாகச் செய்யுந் தன்மைபோல,—வள்ளல் - வரையாது அருள்செய்யுந் தன்மையையுடைய இராமபிரான், வஞ்சகத்து அரக்கரை வேரத்து - வஞ்சனேயையுடைய இராக்கதர்களே வேரத்துக்கொண்டு, செஞ் சரம் நாய்மை

யால் தேவர் ஆக்கினன் - சிறந்த தனது அம்புகளின் பரிசுத்தகுணத்தால் (அவர்களைத்) தேவராகும்படி செய்தான்; (எ - று.)—தான் - அசை.

குளவி புழுக்களைப் பிடித்துக் கொட்டித் தன்வடிவமாக்குதல்போல, தேவனான இராமன் அரக்கர்களையழித்துத் தேவர்களாக்கினனென்பதாம். குளவியென்னும் வண்டு புழுக்களைக் கொண்டுபோய்க் கூட்டில்வைத்து அவற்றின் தலையில் அடிக்கடி கொட்ட அவை குளவியையே நினைத்துக்கொண்டிருத்தலால் அதன்வடிவமாக மாறிச் சிறகுமுளைக்கப்பெற்றுப் பறந்து செல்லுந்தன்மையை யடையு மென்பர். அறுபதம் - ஆறுகால்களையுடைய தெனப் பண்புத்தொகையன்மொழியாகிய காரணக்குறியாம்; சினேயாகுபெயரென்பாருமுளர். கிடம் - வடசொல். நஞ்சு - தஞ்சமென்பதன்விகாரம். பி-ம்:—[1]அருத்தறுபகையறுத்தநீதியர். [2]தும். [3]வளைத்து. (ஈகஉ)

கஉசு. வலங்கொள்போர் மாணிடன் வலித்து கொன்றமை
யலங்கல்வே ளிராவணற் கறிவிப் பாமெனச்
சலங்கொள்[1]போ ரரக்கர்த முருக்க [2]டாங்கின
விலங்கையி [3]னுற்றவக் குருதி யாறரோ.

(இ - ள்.) 'வலம் கொள் போர் மாணிடன் - வலிமையைக்கொண்ட போரில்வல்ல ஒருமனிதன், வலித்து கொன்றமை - (அரக்கர்பலரை) வலியக் கொன்றிட்டதை, அலங்கல் வேல் இராவணற்கு அறிவிப்பாம் - வெற்றிமாலையையணிந்த வேற்படையையுடைய இராவணனுக்குத் தெரிவிப்போம்,' எனஎன்றுஎண்ணி,—அ குருதி யாறு-அங்குண்டான இரத்தநதிகள், சலம் கொள் போர் அரக்கர்தம் உருக்கள் தாங்கின - மாறுபாடுகொண்ட போரையுடைய இராக்கதர்களது உடல்களைக் கொண்டவையாய், இலங்கையின் உற்ற - இலங்கையிற் சேர்ந்தன; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இரத்தப்பெருக்குகள் மிக்கவிசையோடு தென்கடலிற் சேர்ந்து அதனிடையிலுள்ள இலங்காபுரியளவுஞ் சென்றமை, இராமனால் சேர்ந்த அரக்கர்குழாவை அங்குள்ள அரக்கர்கோமானான இராவணனுக்குத் தெரிவிக்கச் சென்றாற்போன்ற தென்பதாம். **தற்குறிப்பேற்றவணி.** அரக்கருடல்களை யடித்துக்கொண்டுவந்த இரத்தப்பெருக்கு, தன்னைக்கண்டவளவில் அரக்கர்குழாவை இராவணன் அறிந்துகொள்ளக் காரணமாய்க் கிடக்கு மென்க. **பி-ம்:**—[1]வேல். [2]தாங்கிப்போய். [3]ஈர்த்த. (ஈகஊ)

கஉஎ. [1]சூழ்ந்ததார் நெடும்படை பகழி சுற்றுறப்
போழ்ந்துயிர் குடித்தலிற் புரளப் பொங்கினன்
றாழ்ந்திலன் முத்தலைத் தலைவன் [2]சோரியி
னீழ்ந்ததே ரப்பரத் தோட்டி யார்க்கின்றான்.

(இ - ள்.) சூழ்ந்த - தன்னைச் சுற்றிலும்வந்த, தார் நெடு படை - அணிவகுப்பையுடைய பெரிய இராக்கதசேனைகளை. பகழி - இராமபாணங்கள், சுற்றுற போழ்ந்து - எப்புறத்தும் பிளந்து, உயிர் குடித்தலின்-கொன்றதனால், புரள - (அவை கீழ்விழுந்து) புரள,—(அதுகண்டு ; முத்தலைத் தலைவன் - திரிசிர னென்னும் படைத்தலைவன், பொங்கினன் - கோபம் மூண்டு,

தாழ்ந்திலன் - சிறிதுங் காலதாமதஞ் செய்யாமல். சோரியின் ஆழ்ந்த தேர் அம்பரத்து ஓட்டி - இரத்தத்திற் புதைந்த (தனது) தேரை ஆகாயத்திலே செலுத்தி. ஆர்க்கின்றான் - கர்ச்சனைசெய்கின்றவனாகி; (எ - று.)

நிலத்தில் மிக்கஇரத்தச்சேற்றில் தேர் புதைந்து மேற்செல்லமாட்டாமையின் அதனை ஆகாயமார்க்கத்தாற் செலுத்தின னென்க. தாழ்ந்திலனென்பதற்கு - பொறுக்கமாட்டாதவனா யென்றும் பொருள் கொள்ளலாம். தார் - போர்மாலையுமாம். அம்பரம் - வடசொல். உயிர்குடித்தல் - உயிர் கவர்தல். பி ம்:—[1]சூழ்ந்தன. [2]ஆணினைந்தது. (சகஎ)

கஉஅ. ஊன்றிய தேரின னுருமின் வெங்கணை
வான்றொடர் மழையென வாய்மை யாவர்க்குஞ்
சான்றென நின்றவத் தரும மன்னவன்
[1]றோன்றறன் றிருவுரு மறையத் தூவினன்.

(இ - ள்.) ஊன்றிய தேரினன் - (இராமனினிரில்) நிலைநிறுத்திய தேரையுடையவனும்,—(திரிசிரன்),—வாய்மை - தவமுதசக்தியுடைய, யாவர்க்கும் சான்று என - எல்லோர்க்கும் சாட்சியாக, நின்ற—, அத் தருமம்மன்னவன் - தருமமார்க்கத்தையுடைய அந்தத்தசரதசக்கரவர்த்தியினது, தோன்றல்தன் - குமாரனான இராமனது, திரு உரு - அழகிய திருமேனி, மறையமறையும்படி, உருமின் வெங் கணை - இடிபோன்ற கொடிய அம்புகளை, வான் தொடர் மழை என - வானத்திற் பொருந்திய மழைபோல, தூவினன் - மிகுதியாகச்சொரிந்தான்; (எ - று.)

கைகேயிக்குக் கேட்டஇரண்டுவரங்கொடுப்பதாகச் சம்பராசுரயுத்தத்தில் வாக்குத்தத்தஞ் செய்தி, ந்தமையைப் பின்பு தவறமாட்டாமல் அக்கைகேயியின்கொள்கைக்குக்குறுக்குச்சொல்ல அஞ்சி இராமனைப்பிரிந்து அப்புத்திரசோகத்தால் உயிர்நீத்துப் புகழை நிலைநிறுத்திய தசரதசக்கரவர்த்தி சத்தியத்தவறுமைக்கு யாவருங் கொண்டாடி யெடுத்துக்காட்டும் நல்ல திருஷ்டாந்தமாதலால், 'வாய்மை யாவர்க்குஞ் சான்றென நின்ற வத்தருமமன்னவன்' என்றார். தருமம் அன்னவன் என எடுத்து, தருமத்தின் சொரூபத்தை யொத்தவ னென்றும் உரைக்கலாம்; "இம்மாண் கதைக் கோ நிறைய இராம னென்னும், மெய்ம்மாண் கழலோற் றரு நல்லறமூர்த்தி யன்னான்" என்றார் நீப்ப் பாலகாண்டத்தும். பி - ம்:—[1]தோன்றினன். (சகஙு)

கஉக. தூவிய சரமெலாந் துணிய வெங்கணை
யேவின னிராமனு மேவி யேழிரு
[1]பூவியல் வாளியாற் பொலங்கொ டேரழித்
தாவிவெம் பாகனை [2]யழித்து மாற்றினன்.

(இ - ள்.) தூவிய சரம் எலாம் துணிய - (அத்திரிசிரன்) சொரிந்த அம்புகளெல்லாம் துணிபடும்படி, இராமனும்—, வெம் கணை ஏவினன் கொடிய பாணங்களைத் தொடுத்தான்; ஏவி - அங்ஙனந்தொடுத்து, பூ இயல் ஏழ் இரு

வாளியால் - பொலிவுகொண்ட பதினொன்கு பாணங்களால், பொலம் கொள் தேர் அழித்து - பொன்மயமாய்ப் பொருந்திய (அவன்) தேரை நாசப்படுத்தி, வெம் பாகனை ஆவி அழித்து மாற்றினன்-கொடிய (அவனது) சாரதியையும் உயிரழித்தொழித்தான்; (எ - று.)

'எவி' என்றது, அநுவாதம். மேவி எனப் பதம்பிரித்து, விரும்பி யென்று உரைப்பாரு முளர். ஆவியழித்து - கொன்று. மாற்றுதல் - அரக்க னைத் தேவனுக்குதவுமாம். 'பூவியல் வாளி' என்பதற்கு - (மன்மதனுக்குப் பாணமாய்க் குறித்தஇலக்கைவருத்துவதில் தவறுத) மலர்களியைந்த அம் புக ளென்று உரைப்பினும் அமையும். பி - மீ:—[1]பூமுகவாளியால், [2]அகற்றி.

கஈ0. அன்றியு மக்கணைத் தமர ரார்த்தெழப்
பொன்றெரி வடிம்புடைப் பொருவில் வாளியால்
வன்றொழி றீயவன் மகுட மாத்தலை
யொன்றொழித் திரண்டையு முருட்டி ஞனரோ.

(இ - ள்.) அன்றியும் - (கீழ்க்கூறியவை) யல்லாமலும், அ கணத்து - அந்த க்ஷணத்தில், அமரர் ஆர்த்து எழ - தேவர்கள் (மகிழ்ச்சியால்) ஆரவா ரஞ்செய்து கிளரும்படி,(இராமன்),பொன் தெரி வடிம்பு உடை பொருவு இல் வாளியால் - பொன்மயமாய் விளங்குகிற கூர்நுனியையுடைய ஒப்பில்லாத அம்புகளால், வல் தொழில் தீயவன் மகுடம் மா தலை - கொடுந்தொழில்களை யுடையதுஷ்டனை அத்திரிசிரனதுகிரீடமணிந்த பெரிய(மூன்று)தலைகளுள், ஒன்று ஒழித்து இரண்டையும் - ஒன்றுதவிர்த்து மற்றைய இரண்டையும், உருட்டினன் - (துணிபட்டுக்) கீழ்விழுத்துருளச்செய்தான்; (எ - று.)

பொன்று எரிவடிம்புஉடை எனப்பிரித்து-பகையழிதற்குக் காரணமான நெருப்பையுமிழும் நுனியையுடைய என்றலும் ஒன்று. (சகஎ)

கஈக. தேரழிந் தவ்வழித் திரிசி ராவெனும்
பேரழிந் ததனினு மறம்பி ழைத்திலன்
வாரழிந் துமிழ்சிலை [1]வான நாட்டுழிக்
காரிழிந் தாலெனக் [2]கணைகள் சிந்தினன்.

(இ - ள்.) அ வழி - அவ்விடத்து, தேர் அழித்து - (தனது) இரதமும் அழிந்து, திரிசிரா எனும் பேர் அழிந்ததனினும்-திரிசிரனென்ற தனது பெய ரின் பொருளும் அழிந்ததனாலும், மறம் பிழைத்திலன் - கொடுமை நீங்காத வனாய், (அவ்வரக்கன்),—வார் அழிந்து உமிழ் சிலை - நீட்சியொழிந்து [வளை ந்து] அம்புகளை வெளிவிடுந்தன்மையதான (தனது) வில்லினின்று, வான நாட்டுழி கார் இழிந்தால் என - ஆகாயத்தில் காளமேகம் இறங்கினாற்போல, கணைகள் சிந்தினன் - அம்புமழை பொழிந்தான்; (எ - று.)

வானத்தில்நின்று அம்புசொரிந்தமை தோன்ற, 'வானநாட்டுழிக் காரிழி ந்தாலெனக் கணைகள் சிந்தினன்' என்றார். இங்கு, 'வானநாடு' என்றது-அந் தரத்தை. தனது தேரும் மூன்றுதலைகளுள் இரண்டுதலைகளும் அழிந்ததனை

லும் அதைரியப்படாமல் என்பது, முன்னிரண்டடியின் கருத்து. திரிசிரா வெனும் பேர் அழிந்து-மூன்றுதலைகளையுடைமைபற்றிவந்த காரணப்பெயரா கிய திரிசிரனென்ற பெயர் இரண்டுதலைகள் போய்விட்டதனால் அமையப் பெறாமல் என்றவாறு;திரிசிரனுயிருந்தவன் ஏகசிரனுயின னென்க. திரிசிரா-த்ரிஸிராஃ என்ற வடசொல்லின் திரிபு. பி-ம்:—[1]வளைய. [2]கணைவழங்கினன்.

கஙூஉ. ஏற்றிய நுதலின னிருண்ட கார்மழை
தோற்றிய வில்லொடுந் தொடர மீமிசைக்
காற்றிடை [1]யழித்தெனக் கார்மு கத்தையு
மாற்றரும் பகழியா லறுத்து மாற்றினன்.

(இ - ள்.) ஏற்றிய நுதலினன்-(கோபத்தால்) நெறித்து நெற்றியின்மே லேற்றிய புருவத்தையுடையவனுய், (திரிசிரன்), இருண்ட கார் மழை தோற் றிய வில்லொடும்-இருட்சிபெற்ற கார்காலத்துமழையை (அம்புசொரிதலால்) உண்டாக்குகிற வில்லுடனே, தொடர - விடாதுநெருங்கிப் போர்செய்ய,— மீமிசை காற்று இடை அழித்து என - வானத்தின்மீது அடிக்கிற காற்று (மேகத்தை) இடையிலே சிதறியழித்தாற்போல (அழியும்படி), கார்முகத்தை யும் - (அவனுடைய) வில்லையும், மாற்று அரு பகழியால் அறுத்து மாற்றி னுன் - (எவராலும்) விலக்கவொண்ணுத (தனது) பாணங்களால் துணித் தொழித்தான், (இராமன்); (எ - று.)

'ஏற்றியநுதலினன்' என்ற தொடர், இராமனேக்குறிப்பதாகவுமாம்; கo௯ - ஆங் கவியில் "சிலேயொடு புருவங் கோட்டினுன்" என வந்தமை காண்க. இனி, வானத்தில் நின்ற திரிசிரனே நோக்கி உயரவடுத்த நெற்றியை யுடையவனுய் எனினும் அமையும். கார்முகம் - வடசொல்; (போர்த்) தொ ழிற்கு உரியதென்று காரணப்பொருள்படும். கர்மம் - தொழில். பி-ம்:— [1]அறுத்தென, அழிந்தென. (சகக)

வேறு.

கஙூக. வில்லி முந்தன னென்னினும் விழித்தவாண் முகத்தி
னெல்லி முந்தில னிழந்திலன் வெங்கத மிடிக்குஞ்
சொல்லி முந்திலன் றேள்வலி யிழந்திலன் சொரியுங்
கல்லி முந்தில னிழந்திலன் கறங்கெனத் திரிதல்.

(இ - ள்.)(அத்திரிசிரன்),—வில் இழந்தனன் என்னினும்-வில்லே யிழந் திட்டானுயினும், விழித்த வாள் முகத்தின் எல் இழந்திலன் - உறுக்கிப்பார்க் கின்ற பிரகாசமுள்ள (தனது)முகத்தின் ஒளியை யிழந்தானில்லே; வெம் கதம் இழந்திலன் - கொடிய கோபத்தை யிழந்தா னில்லே; இடிக்கும் சொல் இழந்திலன் - இடிமுழக்கம்போலக் கர்ச்சித்துக்கூறுகிற வீரவார்த் தைகளே யிழந்தானில்லே; தோள் வலி இழந்திலன் - தோள்களின் வலிமை யை யிழந்தானில்லே; சொரியும் கல் இழந்திலன் - (இராமன்மேல் எடுத்துச்) சொரியுங் கற்களே யிழந்தானில்லே; கறங்கு என திரிதல் இழந்திலன் - காற் றுமிபோலச் சுழலுந்தொழிலே யிழந்தானில்லே; (எ - று.)

வில்லொழிந்தபின்பும் அவன் அதைரியப்படாமல் வீரவாதம்பேசிக்கொண்டு தானொருவனே எப்புறத்துஞ் சுற்றிவந்து புஜபலத்தாற் சுற்றினையெடுத்த இராமன்மேற் சொரிந்தன வென்பதாம்; இதனால், அவனது மனோபலம் விளங்கும். **சொற்போருட்பின்வருநிலையணி.** "அகத்தி னழகு முகத்தில் தெரியும்" என்றபடி அவன்முகத்தி லொளியிழவாமை மனத்தில் துணி விழவாமையை அறியக்கிடத்தலே விளக்குவார், 'முகத்தினெல்லிழந்திலன்' என்றார். ஆண் முகம் எனப்பிரித்து, பராக்கிரமம்விளங்கும் முக மென்று உரைப்பாரு முளர். எல் - ஒளிருறுக்கும் இடைச்சொல்.

இதுமுதல் உக - கவிகள் - கீழ்ப்படலத்தின் கூ - ஆங் கவி போன்ற **கலிநிலைத்துறைகள்.** (நிறை)

கஙூ. ஆளி ரண்டு நூ றுளவென வந்தரத் தொருவன்
மூளி ரும்பெரு [1]மாயையின் செருமுயல் வானைத்
தாளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றடிந்து
தோளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றுணித்தான்.

(இ - ள்.) அந்தரத்து - ஆகாயத்திலே, ஒருவன் - (தான்) தமியனாய் நின்றுகொண்டே, மூள் இரு பெரு மாயையின் - தொடங்கிய மிகப்பெரிய மாயையினால், இரண்டு நூறு ஆள் உள வென - இருநூறுசனங்கள் உள்ளன போல, செரு முயல்வானை - போரைச் செய்கிற திரிசிரனே, (ஸ்ரீராமன்),— தாள் இரண்டையும் இரண்டு வெம் கணைகளால் தடிந்து - இரண்டுகால்களையுங் கொடிய இரண்டுஅம்புகளால் துண்டித்து,தோள் இரண்டையும் இரண்டு வெம் கணைகளால் துணித்தான் - இரண்டுதோள்களையுங் கொடிய இரண்டு அம்புகளால் துண்டித்தான்; (எ - று.)

தானொருவன் போர்செய்தலே இருநூறுபேர் போர்செய்தல் போலத் தோன்றும்படி பெருமாயையாற் கடும்போர்செய்த திரிசிரனே இராமன் பாணங்களால் மாயையையொழித்துத் தாளுந் தோளுந் துணித்தன னென்க. முயல்வானைத் தாளிரண்டையுந் தடிந்து தோளிரண்டையுந் துணித்தான் என்ற இது - இரண்டுசெயப்படுபொருள் வந்த வினை. ஆள் உள என்ற முடிபு வழாநிலையாதல், கஙு - ஆங் கவியிற் கூறியவாற்றால் விளங்கும். இருபெரு - ஒருபொருட்பன்மொழி. **பி-ம்:**—[1]மாயவெஞ். (நிறை)

கஙூ. அற்ற தாளொடு தோளினை யயிலெயி றிலங்கப்
பொற்றை மாமுழைப் புலாவுடை [1]வாயினன் புகுந்து
பற்ற வாதரிப் பான்றனை நோக்கினன் [2]பரியான் [ன்.
கொற்ற வார்[3]சரத் தொழிந்ததேர் சிரத்தையுங் குறைத்தா

(இ - ள்.) அற்ற தாளொடு தோளினன் - கால்களுங் கைகளும் அறுபட்டவனும், (அதன்பின்னும்), அயில் எயிறு இலங்க - கூரிய பற்கள் வெளிவிளங்க, பொற்றை மா முழை புலால் உடை வாயினன் - மலையின் பெரிய குகை போன்ற புலால்நாற்றமுடைய வாயைத் திறந்துகொண்டவனும், புகுந்து பற்ற ஆதரிப்பான்தனை-(தன்மேல்)விழுந்து(தன்னைக்) கவ்விக்கொள்ள

விருப்புற்றவனுன அத்திரிசிரனை, நோக்கினன் - பார்த்து, (இராமபிரான்), பரியான் - (சிறிதும்) இரக்கங்கொள்ளாதவனும், கொற்றம் வார் சரத்து ஒழிந்தது ஓர் சிரத்தையும் குறைத்தான் - வெற்றியைத்தருகிற நீண்ட அம்பினல்(முன்பு) துணிபடாது எஞ்சிநின்ற ஒருதலையையுந் துணித்தான்:(எ-று.)

நீராயுதனுய்க் கால்கைகளாகிய முக்கியஅவயவங்களும் போய் நின்ற நிலையிலும் அவன் கொடுமை யொழியாமல் இராமனைத் தான்விழுங்கிவிடக் கருதின ஞதலால், அவன்பக்கல் பெருமான் பரிவுகொண்டில னென்க. **பி - ம்:**—[1]வாயினிற். [2]பரிவான். [3]சிலச்சரங்கொடுதலையையும். (கூ02)

கஉகூ.—திரிசிரா மாண்டதும், தூஷணன் தடுக்கவும் நிருதர் அஞ்சியோடுதல்.

திரிசி ராவெனுஞ் சிகரமண் சேர்தலுஞ் [1]செறிந்த
நிருத ரோடினர் தூடணன் விலக்கவு நில்லார்
பரிதி வாளினர் கேடகத் தடக்கையர் பரந்த
குருதி நீரிடை வார்கழல் கொழுங்குடர் தொடக்க.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) திரிசிரா எனும் சிகரம் - திரிசிரனென்கிற மலைச்சிகரம், மண் சேர்தலும் - தரையில் விழுந்தவளவிலே,—பரிதி வாளினர் - சூரியன்போல் விளங்குகிற வாட்படையை யுடையவர்களும், கேடகம் தட கையர் - கேடகத்தைப் பிடித்த பெரியகைகளையுடையவர்களுமாய், செறிந்த-(முன்பு)அடர்ந்துநின்ற, நிருதர் - அரக்கர்கள், தூடணன் விலக்கவும் நில்லார் - தூஷணனென்ற சேனுதிபதி (ஓடன்மி னென்று தங்களை) மறுக்கவும் நில்லாதவர்களாய், ஓடினர் - ஓடினர்கள்; (அவர்களிற் சிலருடைய), வார் கழல் - நீண்ட கால்கள், பரந்த குருதி நீரிடை - பரவிய இரத்தவெள்ளத்திலே யுள்ள, கொழு குடர் - கொழுத்த குடல்களிலே, தொடக்க - மாட்டிக்கொள்ள,—(எ - று.)—(அதுகண்டு), "வானவர் கைபுடைத்து ஆர்த்தார்" என வரும் கவியோடு முடியும்.

போரில் நிற்கமாட்டாமல் மிக அஞ்சி ஓடிப்போகிற நிலையிலும் சிலர்க்கு அங்ஙனம் விரைந்துசெல்லவொண்ணுதபடி தற்செயலாய்த் தடைநேர்கிற ஊழ்வினையின் கொடுமை, ஈற்றடியில் விளங்கும்; அடுத்த நான்குகவிகளிலும் இது காண்க. கைகளிற் படைக்கலம் இருக்கையிலும் போர்க்குத் துணியாத அவர்களது ஆற்றலின்மையை விளக்குதற்கு, 'பரிதிவாளினர், கேடகத்தடக்கையர்' என்ற அடைமொழி கொடுத்தார். இனி, இச்செய்யுளைக் குளகமாகக்கொள்ளாமல், தூடணன்விலக்கவும் கொழுங்குடர்தொடக்க(உம்), நில்லார் (அரிதில்) ஓடின ரென்று உரைத்தலுமொன்று. **பி-ம்:**—[1]சிதறி. (கூ0ஈ)

கஉஎ.—ஓடின அரக்கர்கட்கு நேரீந்த நிலைமையை இதுமுதல் நான்குகவிகள் கூறும்.

கணத்தின் மேனின்ற வானவர் கைபுடைத் [1]தார்த்தார்
பணத்தின் மேனிலங் [2]குழியுறக் கால்கொடு [3]பறப்பார்

நிணத்தின் மேல்விழுந் தழுந்தினர் சிலர்சிலர் [1]நிவந்த
பிணத்தின் மேல்விழுந் [2]தருண்டன ருயிர்கொடு பிழைப்பார்.

(இ - ள்.) (அஞ்சியோடிய அரக்கர்களுடைய கால்கள் படுகளத்திற்கிட ந்த சுடல்களிலே சிக்கியதனைக் கண்டு), கணத்தின் மேல்நின்ற வானவர் கைபுடைத்து ஆர்த்தார் - கூட்டமாகத்திரண்டு வானத்தில்நின்ற தேவர்கள் (களிப்போடு பரிகசித்துக்) கைகொட்டி யாரவாரித்தார்கள்; சிலர் - மற்றும் சிலஅரக்கர்கள், பணத்தின் மேல் நிலம் குழி உற கால் கொடு பறப்பார் - (ஆதிசேஷனது) படங்களின்மேலுள்ள பூமி குழிபடும்படி(த்தங்கள்) கால்களைப் பதியவைத்துக்கொண்டு **வி**ரைந்தோடினவர்களாய், நிணத்தின்மேல் **வி**ழுந்து அழுந்தினர் - (அங்குக்கிடந்த) கொழுப்பில் வழுக்கி**வி**ழுந்து (அச்சேற்றில்) ஆழ்ந்தார்கள்; சிலர் - வேறுசிலஅரக்கர்கள், உயிர் கொடு பிழைப்பார்-உயிரை யழியாதபடி பாதுகாத்துக்கொண்டு பிழைத்தோடுபவர்களாய், நிவந்த பிணத்தின்மேல் **வி**ழுந்து உருண்டனர் - உயர்ந்த பிணங்களின்மேல் இடறி **வி**ழுந்து கீழ்ப்புரண்டார்கள்; (எ - று.)

மேல்நின்ற வானவர்-போர்காண வந்தவர். போன பாடலோடு இப்பா டலைக் குளகமாகக்கொள்ளாவிடின், இப்பாட்டின் முதலடியைப் பின் வரும் ஒவ்வொருவாக்கியத்தோடும் இயைத்துப் பொருள்கொள்க. **ப**ணம் - வடசொல். கீழிருந்து தாங்குகிற ஆதிசேஷனது முடியளவும் தரை குழிபடும்படி யென்பது, 'பணத்தின்மேல் நிலங் குழியுற'என்பதன் கருத்து: இது ஓடிச்செல்லும் அரக்கர்களின் உடற்பாரமிகுதியையும், செல்லுமிடை யின்மிகுதியையும் விளக்கும் **உ**யர்வுநவிற்சி. **பி-ம்:**—[1]ஆர்ப்ப. [2]குலவுற. [3]பதைத்தார். [4]நிற்ப. [5]அழுந்தினர். (நிற)

கஉ. வேய்ந்த வாளொடு வேலிடை [1]மிடைந்தன வெட்ட
வோய்ந்து [2]ளார்சில ருலந்தன ருதிரநீர் யாற்றிற்
பாய்ந்து கால்பறித் [3]தழுந்தினர் சிலர்சிலர் பயத்தா
னீந்தி னர்நெடுங் குருதியங் கடல்புக்கு நிலையார்.

(இ - ள்.) சிலர் - (அஞ்சிஓடுகிற) சில அரக்கர்கள், இடை-இடைவழியி லே, வேய்ந்த வாளொடு வேல் - (முன்பு இறத்துவிழுந்துகிடக்கிற அரக்கர் கள் கைகளிற்) கொண்டுள்ள வாள்களும் வேல்களும், மிடைந்தன வெட்ட - நெருங்கினவையாய்(த் தமதுகால்களை) ஊறுபடுத்துதலால், ஓய்ந்துளார் - தளர்ச்சியடைந்தார்கள்; சிலர்—, உலந்தனர் உதிரம் நீர் யாற்றில் - முந்தி யிறந்த அரக்கர்களது இரத்தநதியில், பாய்ந்து - இழிந்து, கால் பறித்து - கால்கள் இழுக்கப்பட்டு, அழுந்தினர் - முழுகிப்போனார்கள்; சிலர்—, பயத் தால் - அச்சத்தால், நெடு குருதி கடல் புக்கு - பெரிய இரத்தக்கடலில் இறங்கி, நீந்தினர் - நீந்திச்சென்றவர்களாய், நிலையார் - (அங்கு) நிலைகொள் ளாதவராளர்கள்; (எ - று.)—குருதியங்கடல், அம் - சாரியை.

வேய்தல்-அலங்காரமாகத்தரித்தல். அரக்கர்கள் கையிற்பிடித்த ஆயுதங் கள் போர்வெற்றிக்கு உதவாமற் கைகளுக்கு ஓரணிகலம் போலுதல் மாத்

திர மாயினமையால், 'வேய்ந்த வாளொடு வேல்' என்றார். ஓய்தல் - ஓட்ட மொழிதல். அச்சத்தால் இரத்தக்கடலில் இழிந்து நீந்திக்கொண்டே அதனைக் கடந்து அப்பாற் சென்றபினும் உயிர்பிழைக்கலா மென்று துணிந்து முயன்றவர் ஆழ்ந்த அப்பரப்பில் தாவரிக்கமாட்டாமல் கால் கையெய்த்திட்டனர் என்பது, இறுதிவாக்கியத்தின் கருத்து. உயிர் பிழைக்கத்தப்பியோடியவர் அதற்குமாறாக உயிரிழந்தமையைக் கூறியது - **ததுதியின்மையணி**யாம்; வடநூலார் விஷமாலங்காரமென்பர். **பி-ம்:**—[1]மிடைந்தனரோட்டம். [2]தாள். [3]ஒழுகினர். (நூ0நி)

கஉக. கச்சும் வாளுந்தங் காலொடார்ந் [1]தீர்வன காணு
ரச்ச மென்பதொன் றுருவு[2]கொண் டாலென வழிவா
ருச்ச வீரன்கைச் சுடுசர நிருதர்நெஞ் [3]சுருவத்
தச்சு நின்றன கண்டன ரவ்வழித் தவிர்ந்தார்.

(இ - ள்.) கச்சும் - (தமது) இடைக்கச்சும், வாளும் - (அதிற்செருகப் பட்டுள்ள) உடைவாளும், தம் கால் தொடர்ந்து ஈர்வன - (விரைந்தோடுகையில் நழுவிவிழுந்து) தங்கள் கால்களேச் சுற்றிக்கொண்டு அறுப்பவற்றை, காணுர் - அறியாதவர்களாய், (இராமபாணங்கள்தாம் தம்மைத் தடுத்துப்பிடித்து அறுக்கின்றன வென்றெண்ணி), அச்சம் என்பது ஒன்று உருவு கொண்டால் என அழிவார் - பயமென்கிற ஒருருவமே வடிவமெடுத்தாற்போல (மிகஅஞ்சி)மனமழியும் அரக்கர்கள்,—(அவ்விடத்தில்), நிருதர் நெஞ்சு உருவத்தச்சு நின்றன - (அங்குக்கிடக்கிற) அரக்கர்களது மார்புமுழுதுந் துளேபடும் படி தைத்துநின்றவையான, உச்ச வீரன் கை சுடு சரம் - சிறந்தவீரனான இராமனது கையினு லெய்யப்பட்ட வெவ்வியஅம்புகளே, கண்டனர்-பார்த்தவர்களாய், அ வழி தவிர்ந்தார்-அந்தவழியில் (தாம்செல்லுதலே) நீங்கினர்கள்.

தொடர்தல் கச்சுக்கும், ஈர்தல் வாளுக்குமாகக் கொண்டு **முறைநிரனிறைப்போந்துள்கோளாக்குக.** தச்சு-போலி. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்' என்றாற்போல, அதிகபயங்கொண்ட அரக்கர்களுக்குத் தமது கச்சும் வாளுமே பயகாரணமாயின; அதனேடு பிறர்மேல் தைத்து நின்ற அம்புகளே தம்மேல் தைக்கின்றாற்போல அச்சந்தந்தன வென்க. **பி-ம்:**—[1]ஈர்ப்பன. [2]கொண்டாம். [3]உருவித். பலவட்டுப்பிரதிகளில் ''மண்டியோடினர்'' என்ற அடுத்த பாடலுக்குப்பின் இச்செய்யுளிருக்க, இதனேடு திரிசிராவதைப்படலம் முடிகின்றது: இதற்குமேல் **தூடணன்வதைப்படலம்.**

கஉ0. மண்டி யோடினர் சிலர்நெடுங் கூடகரி [1]வயிற்றிற்
புண்டி றந்தமா முழையிடை வாளொடும் புகுவார்
தொண்டை நீங்கிய கவந்தத்தைத் தூணென நீயெம்மைக்
[2]கண்டி லேனெனப் புகலெனக் கைதலைக் [3]கொள்வார்.

(இ - ள்.) மண்டி ஓடினர் சிலர்-விசைகொண்டு ஓடிய சிலஅரக்கர்கள், நெடு கட கரி வயிற்றில் - பெரிய மதயானைகளின் வயிற்றில், புண் திறந்த-(இராமபாணத்தாலுண்டான) வீரணங்கள் வாய்விட்ட, மா முழையிடை -

பெரிய குகைகளில், வாளொடும் புகுவார்-(கையிலேந்திய)வாட்படையுடனே துழைந்துசெல்பவர்களாய்,-தோண்டை நீங்கிய கவந்தத்தை-(அருகில்நின்ற) தோண்டையறுபட்ட உடற்குறையை (நோக்கி, 'துணை-நண்பனே! நீ எம்மை கண்டிலேன் என புகல் - நீ எம்மைப்பார்த்திலே னென்று சொல்', என - என்று வேண்டி, கை தலை கொள்வார்-(தங்கள்) கைகளைத் தலைமேற் கொண்டு (அக்கவந்தத்தை) நமஸ்கரிப்பார்கள்; (எ - று.)

இராமபாணத்துக்குப் பயந்து மலைக்குகையில் ஒடியொளித்து உயிர் பிழைக்கக்கருதிச் செல்பவர் இடையில் பெரியயானையின் வயிற்றில் விழுங்கப் பட்டதனுலாகிய பெருந்துளையைக் கண்டு அதனையே மலைக்குகையென்றுமய ங்கி அதனுள்ளே யொளிக்கச் சென்றார்கள்; அங்ஙனஞ்செல்லுகையில், அரு கில்நின்ற தலையற்றவுடற்குறையை நோக்கி, இராமன் எம்மைத் தேடிவந் தால் நீ எங்களைக்கண்டிலே னென்று சொல் லென்று வேண்டிக் கைகூப்பி வணங்கின ரென்றதனுல், கவந்தத்துக்குக் காணுந்தன்மையும் பேசுந்தன் மையும் இல்லையென்ற இயல்பையும், அச்சமிகுதியாலாகிய மதிமயக்கத்தால் அறிந்தில ரென்பது போதரும். 'வாளொடும் புகுவார்' என்றது, அவர்களது போர்த்திறமையை நன்குவிளக்கும். பி-ம்:—[1]வயிற்றுப். [2]கண்டிலேமெனக் கழறெனக். [3]கொண்டார் (இ0எ)

கசக.—ஏடுகின்ற அரக்கர்களை விலக்கித்தேற்றித் தூடணன் கூறத்தொடங்குதல்.

அனைய ராகிய வரக்கரை [1]யாண்டொழிற் கமைந்த
வினைய நீங்கிய மனித்தரை வெருவன்மி [2]னென்னு
நினையு [3]நானுமக் குரைப்பது முண்டென நின்றே
துனையும் [1]வாட்பரித் தேரினன் றூடணன் சொன்னான்.

(இ - ள்.) அனையர் ஆகிய அரக்கரை - அத்தன்மையராய் அஞ்சியோடு கிற இராக்கதர்களை (நோக்கி),—துனையும் வாம் பரி தேரினன் தூடணன் - விரைந்த தாவிச்செல்லுங் குதிரைகள் பூண்ட தேரின்மே லேறியவனுன தூடணன்,—'ஆண் தொழிற்கு அமைந்த வினையம் நீங்கிய மனித்தரை-பராக் கிரமத்தொழிற்குப்பொருந்திய தந்திர மில்லாத இம்மனிதர்களுக்கு, வெரு வன்மின் - (நீங்கள்) அஞ்சவேண்டா, என்னு - என்றுசொல்லி, நினையும் நான் - ஆராயுந்தன்மையுள்ள நான், உமக்கு உரைப்பதும் உண்டு - உங்களுக் குச் சொல்லவேண்டிய விஷயமும்உள்ளது', என - என்று, நின்று சொன் னான் - நிலைநின்று கூறினான்; (எ - று.)

தூடணன் அரக்கரைச் சொன்னான் என இயையும். தங்களைப்போல மாயையால் வஞ்சகப்போர்செய்யாமல் கபடமின்றித் தருமயுத்தஞ்செய்தலே யே இராமலட்சுமணர்கட்கு ஒருகுறையாக்கி, 'ஆண்டொழிற்கமைந்த வினைய நீங்கிய மனித்தர்' என்றான். இலட்சுமணனும் சமயம்நோக்கிப் போர்க்கு வரக் கூடுமென்று மனித்தரெனப்பன்மையாற் கூறுகின்றான். மனித்தர்-விரித்தல். இனி, [1]ஆண்டொழிற்கமைந்த வினையநீங்கிய **மனத்தரை** என்ற பாடத்தைக்

கொண்டு - வீரத்திற்குஏற்ற செயலே நினைப்பது நீங்கிய மனத்தரான அரக்கரை என்று உரைத்தல், மிகப்பொருந்தும். 'உரைப்பதும் உண்டு' என்று தொடங்கி அவன்சொன்ன வார்த்தைகளே அடுத்த ஆறுகவிகளிற் காண்க. வாம்=வாவும். பி - ம்:—[2]என்ன. [3]நாஞென் றுரிப்புவதுண்டெனநின்றுன். [4]வார். (ஙிO அ)

கசஉ.—இதுமுதல் ஆறுகவிகள் - தூடணன் அரக்கர்க்குத் தைரியங்கூறுதலைத் தெரிவிக்கும்.

வச்சை யா[1]மெனும் பயமனத் துண்டென வாழுங்
கொச்சை மாந்தரைக் கோல்வளே மகளிருங் கூசார்
நிச்ச யம்மெனுங் [2]கவசந்தா னிலே[3]நிற்ப தன்றி
யச்ச மென்னுமீ தாருயிர்க் கருந்துணை யாமோ.

எழுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வச்சை ஆம் எனும் - பழிப்புக்குக் காரணமா மென்று சொல்லப்படுகிற, பயம் - அச்சம், மனத்து உண்டு என-(தங்கள்) மனத்திலே உள்ளதாக, வாழும்-உயிர்வாழ்கிற, கொச்சை மாந்தரை - இழிவையுடைய ஆடவர்களுக்கு, கோல் வளே மகளிரும் - அழகிய வளையல்களே யணிந்த மாதர்களும், கூசார் - அஞ்சமாட்டார்கள்; (அன்றியும்), நிச்சயம் எனும் - மனத்துணிவென்கிற, கவசம் தான்-கவசமே, நிலே நிற்பது அன்றி-(போரில் உயிரைப்பாதுகாத்து) நிற்கக்கூடியதல்லாமல், அச்சம் என்னும் ஈது - பயமென்கிற இக்குணம், ஆர் உயிர்க்கு அரு துணே ஆமோ-அரிய உயிருக்கு அருமையான காக்குந்துணேயாகுமோ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

பழிப்புக்குக் காரணமான பயத்தை மனத்துக்கொண்டு நாமும் பிழைத்திருக்கிறேமென்று சொல்லியவண்ணம் தாழ்மையுற்றிருக்கும் ஆடவர்களிடத்து மகளிருங் கூசாது அலட்சியங்கொள்வார்கள்: ஆகையால் அவ்வச்சத்தை விட்டு மனத்திடங்கொள்வது உயிர்க்குக் கவசம்போல அரணுவதன்றி அச்சமென்பது காக்கவல்ல துணேயாக ஒருபோதும் ஆகாதென்பதாம்; இவ்வுரைக்கு மாந்தரென்பது - ஆடவரென்ற பொருளில்வந்ததென்க. இனி, அரக்கரைக் கண்டு அஞ்சிப் பழிப்படைபவரான இழ்மையுள்ள மனிதர்களுக்கு அரக்கமாதர்களும் அஞ்சார்; அங்ஙனமாக, ஆடவராகிய நீங்கள் அஞ்சுவதென்னே யென்பது, முன்னிரண்டடியின் கருத்தாகக் கொள்வது முண்டு. வசையென்பது, எதுகைநோக்கி வச்சையென விரிந்தது. கோல் - கோல மென்பதன் விகாரம். உம் - இழிவுசிறப்பு. கவசம் - பகைவர்படைக் கலங்களால் உடம்புஊறடையாதபடி பாதுகாப்ப தாதலால், அவ்வனம் பாதுகாக்கும் போர்த்துணிவைக் கவசமாக உருவகப்படுத்தினுன். ஆருயிர்-இன்றியமையாமையால் எவ்வகையாலும் ஒம்பப்படும் உயிர். அருந்துணே - கிடைத்தற்கரிய துணே. "கூற்றுடன்று மேல்வரினுங் கூடியெதிர்நிற்கும், ஆற்றலதுவே படை" என்ற திருக்குறளினுலும், மனவலிமை இன்றியமையாச் சிறப்பினதாதல் அறிக. பி-ம்:—[1]எனப். [2]கவசத்தால். [3]நிற்குமன்றேல்.(ஙிO கு)

கசஈ. பூவ ராவுவேற் [1]புரந்தரன் றன்னெடு பொன்ரு
மூவ ரோடு[2]தா முன்னின்று மூட்டிய முனையி
லேவ ரோடின ரிராக்கதர் நுமக்கிடைத் தோற்றந்
தேவ ரோடுகற் றறிந்[3]துளி ராமெனத் திகைத்தீர்.

(இ-ள்.) பூ அரா வு வேல் பொலிவுபெற்றதும் கூர்மையாக மிக அரா வப் பட்டதுமான வேலாயுதத்தையுடைய, புரந்தரன் தன்னெடு - தேவேந்திர னுடனும், பொன்ரு மூவரோடு - அழிவில்லாத திரிமூர்த்திகளுடனும், முன் நின்று முட்டிய - முன்பு எதிர்நின்று தாக்கிய, முனையில் - போரில், எவர் இராக்கதர் தாம் ஓடினர் - எந்த அரக்கர் தாம் அஞ்சியோடினர்? [எவருமில்லை யென்றபடி]; நுமக்கு இடைந்து ஓடும் தேவரோடு - உங்களுக்கு அஞ்சியோடு கிற தேவர்களிடத்தில், கற்று அறிந்துளிர் ஆம் - (அஞ்சியோடுதலேப் பின்பு) பயின்று அறிந்தீர்போலும், என - என்றுசொல்லும்படி, திகைத்தீர் - (இப் பொழுது) அஞ்சி மதிமயங்கினீர்கள்; (எ - று)

மூவர் - தொகைக்குறிப்பு; அயன், அரி, அரன். தேவராசனுன இந்திர னேடும் முத்தொழில்செய்யும்முதற்கடவுளரான திரிமூர்த்திகளோடும் சேர்ந்த போர்களில் எதிலும் அரக்கரெவரும் அஞ்சியோடின தில்லையே; அப்படிப் பட்ட நீங்கள் உங்களுக்குஎதிரில் பலமுறைஅஞ்சியோடின தேவர்களேப் பார்த்துப்பார்த்து அத்தொழிலேக் கற்றுக்கொண்டீர்களோ?என்ரூன். இதனுல், இவனது செருக்கு நன்குவிளங்கும். 'பூவராவுவேற் புரந்தரன்' என்றும், 'பொன்ருமூவர்' என்றும் அடைமொழிகொடுத்துக் கூறினதனுல், அழிவில் லாத வச்சிராயுதத்தையுடைய இந்திரனுக்கும் அழிவில்லாமையையுடைய மும்மூர்த்திகளுக்கும் என்றும்அஞ்சாத உங்களுக்கு எளியமனிதரைக்கண்டு ஓடுதல் இயற்கைக்குணமாகாது செயற்கைக்குணமேயாம் என்ரூன். தேவ ரோடு என்றவிடத்து, மூன்றனுருபு ஏழனுருபின்பொருளில் வந்தது, உருபு மயக்கம்: இந்தச்சந்தர்ப்பத்தில் இப்படி மூன்றனுருபு ஏழனுருபின்பொரு ளில் வருதலே "வெருவரும்படி பலகலேவித்தகளும் வீடுமனுடன்கற்ரூர்," "கண்டு தான் அவன்றனேடு கற்பதற்கு உன்னினனனே" என்ற இடங்களி லுங் காண்க; (இம்மரபு தெலுங்கிலும் உண்டு.) பி-ம்:—[1]புரந்தரனேடுதான். [2]தான். [3]உளிரோமனத். (இகo)

கசஉ. இங்கொர் மானிடற் கித்தனே வீரர்க ளிடைந்தீ
ருங்கை வாளொடு [1]போய்விழுந் தூர்[2]புக லுற்றீர்
கொங்கை மார்பிடைக் [3]குளிப்புறக் [4]களிப்புற்றுங் கொழுங்க
ணங்கை மார்களைப் புல்லுதி ரோநல நுகர்வீர்.

(இ - ள்.) இங்கு ஓர் மானிடற்கு இத்தனே வீரர்கள் இடைந்தீர்-நீங்கள் இத்தனேபேராயிருந்தும் ஒருமனிதனுக்கு இங்குப்பின்னிட்டோடி, உம் கை வாளொடு போய் விழுந்து ஊர் புகல் உற்றீர் - உங்கள் கையிலுள்ள வாட் படையுடனே சென்று விரைந்து ஊரிற்புக்குஒளிக்கத்தொடங்கிய நீங்கள்,— கொங்கை மார்பிடை குளிப்புற - தனங்கள் மார்பிலே அழுந்தும்படி, களிப்பு

உற்று - களிப்புக் கொண்டு, உம் கொழு ஈண் நங்கைமார்களே - மதர்த்த கண்களையுடைய உங்கள்மனைவிமார்களே, புல்லுதிர் நலம் நுகர்வீரோ-தழுவி இன்பமனுபவிப்பீர்களோ? (எ - று.)

இத்தனைவீரர்களாயிருந்தும், கைப்படைக்கலத்தை யிழவாதிருந்தும், ஒருமனிதனுக்கு அஞ்சி யோடி யொளிக்கலுற்று ஆண்மையிழந்த நீங்கள் நாணமின்றி எங்ஙனம் உங்கள்மகளிரைச்சேர்வீ ரென இகழ்ந்தனன். அன்றியும், இதில் உங்கள் ஆண்மை எதிரியின் முன் நிலைநின்று பொருது வெல்லுதற்கு அமையாமல் மெல்லியலாரான மகளிரை அணைத்தல்மாத்திரத்துக்கே அமைந்ததுபோலு மென்றமையுந் தோன்றும்; ''வரைத்தடம்புயம் வளர்த்தது மகளிர்போர் பொரவோ''என்றது, இங்குக் கருதத்தக்கது. இந்தச்சந்தர்ப்பத்தில், 'வீரர்கள்' என்றது, இகழ்ச்சி; அன்றி, முன்பு பலபோர்களில் இந்திரன் முதலியோர்முன்னும் பின்னிடாதிருந்த நிலையைப் பற்றிக் கூறினதாகவுமாம். கைப்படைக்கலத்தை யிழப்பின் ஒருகால் பின்னிடைதலும்ஆம்; அதனையிழவாமலே பின்னிடைதல் மிக்கஇழிவா மென்பதை விளக்குவான், 'உங்கைவாளொடு போய்' என்றான். வீழ்ந்து என்றது, ஒருவர்மேல் ஒருவராகமுட்டி மேல்விழுந்து ஒடுதலே யுணர்த்தும். புல்லுதிர்என்ற முற்று-வினையெச்சப்பொருள்பட்டது. பி-மீ:-—[1]புகழ், புகல். [2]புகவிரைந்தீர். [3]குழிப்புற, குறிப்புற. [4]களிப்புறுங். (ருக)

கசடு. செம்பு காட்டிய கண்ணிணை பாலெனத் தெளிந்திர்
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
வம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க் கம்மா.

(இ - ள்.) செம்பு காட்டிய கண் இணை - (கோபத்தால் மிகச்சிவந்து) செம்பின் நிறத்தை வெளிக்காட்டிய கண்களிரண்டும், பால் என தெளிந்தீர்-(அக்கோபத்தை யிழந்ததனால்) பால்போல (வெளுத்துத்) தெளிந்திருக்கப் பெற்றவர்களே! குலம் மங்கையர்க்கு - நற்குலத்திற்பிறந்த உங்கள்மங்கைமார்க்கு, வெம்பு காட்டிடை நுழை தொறும் வெரிந் உற பாய்ந்த கொம்பு காட்டுதிரோ - கொடிய காடுகளினிடையிலே (நீங்கள்) நுழைந்து செல்லும் பொழுதெல்லாம் (உங்கள்) முதுகிலே நன்றாகப்பட்டுத்தாக்கிய மரக்கொம்புகளாலாகும் புண்ணைக் காட்டுவீர்களோ? (அன்றி), தட மார்பிடை குளித்த அம்பு காட்டுதிரோ - பெரிய மார்பிலே தைத்த அம்புகளாலாகும் வீரணத்தைக் காட்டுவீர்களோ? (யாதுசெய்வீர்)? (எ - று.)—அம்மா என்றது, பரிதாபத்தை விளக்கும்.

போர்க்குப் பிரயாணப்பட்டுவந்த நீங்கள் மீண்டுசென்று உங்கள்வெற்றியை எதிர்நோக்கும் மனைவிமார்க்கு அப்போரில் மார்பிற்பட்ட சிறந்தபுண்ணைக் காட்டி மகிழ்வித்தலன்றே சிறப்பு? அடர்ந்தவனத்தில் நுழைந்தோடுகையில் பின்புறத்திலே மரக்கொம்புபட்ட புண்ணைக் காட்டின் இகழ்ச்சிக்கு இடனுமன்றே? என்றான். 'விழுப்புண்-முகத்திலும் மார்பிலும் பட்ட புண்'

என்ற பரிமேலழகருரையாலும், புறங்கொடாத போரில் பகைவர்படைக்கலத் தாற் புண்படுதற்கு மார்பு சிறந்த இலக்காதல் அறிக. போர்த்திற மழிந்ததோடு நில்லாது அதற்குக்காரணமான கோபத்தையுஞ் சிறிதுங்கொள்ளா தொழிந்த குறையை யெடுத்துக் காட்டுவான், 'கண்ணிணை பாலெனத் தெளித்தீர்' என விளித்தான். செம்பு காட்டிய - செம்புருக்கை யொத்த. (ங்உ)

கசசு. ஏக்க மிங்கிதன் மேலு[1]முண் டோவிகன் மனித
னுக்கும் வெஞ்சமத் தாண்மையவ் வமர்க்கு [2]மிதாத்
தாக்க ருப்புய[3]த் துங்குலத் தலைமகன் றங்கை
மூக்கொ டன்றியும் [4]முதுகொடும் போம்[5]பழி முயன்றீர்.

(இ - ள்.) இகல் மனிதன் - பகைமையையுடைய இந்த மனிதனொரு வன், ஆக்கும் - செய்கிற, வெம் சமத்து ஆண்மை - கொடிய போர்த்திறமை, அ அமரர்க்கும் அரிது ஆ - (இந்திரன் முதலிய) அத்தேவர்கள் பலர்க்கும் இல்லாததென்று சொல்லும்படி,—தாக்கு அரு புயத்து உம் குலம் தலைமகன் தங்கை மூக்கொடு அன்றி-(எவராலும்) எதிர்த்துத்தாக்க வொண்ணாத தோள் வலிமையையுடைய உங்கள்குலத்துக்குத் தலைவனான இராவணனது தங்கை யாகிய சூர்ப்பணகையின் மூக்கு அறுபட்டுப் போனதனால் வந்த பழிப்பு மாத்திரத்தோடு நில்லாமல், உம் முதுகொடும் போம் பழி முயன்றீர் - நீங்கள் முதுகுகாட்டிச்செல்வதனாலு மாகும் பழிப்பை விலக்கத்தொடங்கிவிட் டீர்கள்; இங்கு இதன் மேலும் ஏக்கம் உண்டோ - இங்கு நிகழ்ந்த இதற்கு மேலும் ஓர் இரங்கத்தக்கசெயல் உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

சிறந்த தேவர் பல ரெதிரிற் பின்னிடாத நீங்கள் இத்தனிமனிதனெதி ரிற் பின்னிடுதலால், இவனுக்கு உள்ள யுத்தபராக்கிரமம் தேவர்களுக்கும் இல்லை யென்னும்படியாகிறது என்பது, இரண்டாமடியின் கருத்து. உங்கள் குலத் தலைவனது தங்கை அடைந்த பரிபவத்தை நீங்கள் போர்செய்து பகை யழித்தலால் ஒழிக்கவேண்டுவதாயிருக்க, அதுசெய்யாமல் அவ்வவமானத் தோடு நீங்கள் புறங்கொடுத்தோடுதலா லாகும் அவமானத்தையும் விலக்க லுற்றீர்களே யென்பது, பின்னிரண்டடியின் கருத்து. ஏக்கம்-விசனகரமான செய்தி. உம் - இழிவுசிறப்பு. அமரர்க்கும், உம் - உயர்வுசிறப்பு. முதுகொடும், உம் - இறந்தது தழுவிய எச்சம். அரிது என்பதில், அருமை - இன்மைமேல் நின்றது. தலைமகன் - தலைமைகொண்ட ஆடவன். [2]அரிதா தாக்கரும் என்ற இயல்பான பாடத்துக்கு - இத்தனிமனிதன் செய்யும் போர்த்திறம் தேவர் களுக்கும் இல்லாததா ? என்று பொருள். சமம் - ஸமரம்; வடசொல். **பி-ம:**—[1]உண்டே. [2]அரிதால். [3]நும். [4]முதலொடும். [5]படி. (ங்உங)

கசஎ. ஆர வாழ்க்கையின் வணிகரா யமைதிரோ வயில்வேல்
வீர வாட்[1]கொழு வெனமடித் துழுதிரோ [2]வெறிப்போர்த்
தீர வாழ்க்கையிற் [3]றேவரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையி செங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்.

(இ - ள்.) வெறி போர் - வீராவேசங்கொண்ட போரில், தீரம் வாழ்க் கையின் - தைரியத்தோடுகூடிய வாழ்வினுல், தேவரை செருவிடை பறித்த- தேவர்களிடத்தினின்று போரிலே பறித்துக்கொண்ட, வீரம் வாள் - வலிமையையுடைய வாட்படையை யேந்திய, கையிர் - கையையுடைய வர்களே! (இங்குப் போரில் தோற்றோடுதலால் க்ஷத்திரியதருமத்தை யிழந்த நீங்கள் இனி), ஆரம் வாழ்க்கையின் வணிகர் ஆய் அமைதிரோ - முத்து முதலிய பண்டங்களே விற்றுவாழும் வர்த்தகர்களாய் அமைவீர்களோ? (அன்றி), அயில் வேல் வீரம் வாள் கொழு என மடுத்து உழுதிரோ - கூர்மை யையுடைய வேலாயுதத்தையும் வலிமையையுடைய வாளாயுதத்தையும் உழு படையாகக்கொண்டு விளைநிலத்திலே ஊன்றவைத்து உழுது வாழ்வீர்க ளோ ? எங்ஙனம் வாழ்திரோ - எவ்வாறு வாழ்வீர்களோ ? விளம்பீர் - சொல்லுங்கள்; (எ - று.)

இப்படித் தோற்றோடி வெட்கங்கெட்ட உங்களுக்குப் போர்வீரராய் வாழ வகையில்லை; இனி நீங்கள் வாணிகவாழ்க்கைக்கு உரிய வைசியராகவோ, உழுதுண்டுவாழும் வேளாளராகவோ, வாழ்வதே அமைவது என்றன். 'ஆர வாழ்க்கையின் வணிகராய்' என்றதனுல், போரில் முன்னிடாத உங்கள்மார் பில் அணிக்துள்ள முத்தாரம்முதலியன பராக்கிரமச்செயலுக்கு விளக்கமா காமல் இனி வாணிகஞ்செய்தற்கு உரிய பொருள்களாகவே அமையுமென்பது தோன்றும். ஆரம் - ஹாரம்; இது, மற்றையஇரத்தினங்களுக்கும் உபலக்ஷ ணம். இனி, ஆரம் - சந்தனமுமாம். [1]கொடு வேன்மடுத்து என்ற பாடத் துக்கு - வேலி யென்ற கழனிப்பெயர் வேல் என விகாரப்பட்டதென்பர்: இனி,'அயில்வீரவாட்கொடு வேல்மடுத்து உழுதிரோ'-கிறவேலையும்வீரவாளே யும் (கொழுவாகக்)கொண்டு(நீண்ட)வேலிலே மாட்டிக் கலப்பையாக்கி அவற் றைக்கொண்டு உழுவீர்களோ வென்று உரைத்தலுமொன்று. இதனுல், தோற்றோடும் உங்கள் படைக்கலங்கள் இனிப் போர்க்கருவியாகா என்றன். [2]எறிபோர் என்ற பாடம் மோனைத்தொடைக்குச் சிறவாது. மூன்றுமடி யிற்கூறியது, முந்தியதிலையை. 'வீரவாட்கையி ரெங்ஙனம் வாழ்திரோ' என்றதனுல், நீங்கள் உங்கள்சாதிதருமத்தைக்கைவிட்டு இழிந்தசாதித் தொழிலே ஏற்று உயிர்வாழத் தொடங்கினுலும் நீங்கள் கையிற்படைகொண் டிருத்தல் அங்ஙனம் வாழ்வதற்கு அமைவதாகாதே யென்பது தோன்றும். கையிர் - விளி. ஓ - ஐயம். தீரம் - வடசொல். பறித்த - உயிர்பறித்த எனினுமாம். பீ-மீ:—[1]வெல். [2]தெவ்வரை. (நிகசை)

கசை.—ஓடும் அரக்கரைக்குறித்துக்கூறிய நாடணன் தன்சேனையோடு போரத்தொடங்க, ஸ்ரீராமன் அவனுடன் போர்செல்லல்.

என்று தானுந்தன் னெறிகடந் தேசினையு மிறைநீர்
நின்று காண்டிரென் னெடுஞ்சிலே வலியென நேராச்
சென்று தாக்கினன் றேவரு மருள்கொண்டு திகைத்தார்
நன்று காத்தியென் றிராமனு மெதிர்செல நடந்தான்.

(இ - ள்.) என்று - என்றுசொல்லி,—'நீர் - நீங்கள், இறை-சிறிதுபொழுது, நின்று - ஓடாதுநின்று, என் நெடு சிலை வலி - எனது நீண்ட வில்லின் வலிமையை, காண்டிர் - காண்பீராக,' என-என்றுஞ்சொல்லி,—தானும் தன் எறி கடல் சேனையும் - தானும் தனது அலையெறியுங்கடல்போற்பரந்த சேனையுமாக, தேர் ஆசென்று தாக்கினன் - (தூஷணன் இராமனுக்கு) எதிராக எதிர்த்துச்சென்று போர்செய்தான்;(அவ்வுக்கிரத்தைக்கண்டு, தேவரும் மருள் கொண்டு திசைத்தார் - தேவர்களும் மயக்கமடைந்து பிரமித்தார்கள்; (அப்பொழுது), இராமனும்—, நன்று காத்தி என்று - நன்றாக (உன்சேனைகளைக்) காத்துக்கொள்வாயென்றுசொல்லி, எதிர் செல நடந்தான் - (அவனுக்கு) எதிராக நடந்துசென்றான்; (எ - று.)

'நன்றுகாத்தி' என்றது, தனது பராக்கிரமத்தை விளக்கும் வீரவாதத்தின்பாற்படும். தானும் தன் சேனையும் தாக்கினன்-உயிர்நிலையும் அரணிலையும் விரவிவந்து சிறப்பினால் உயிர்நிலையொருமைமுடிபையே பெற்றுவந்த நிலைவழுவமைதி; [நன் - பொது - உஎ.] பி-ம்:—1செருநிலை. (நிகரி)

இத்தப்பாடலின்பின் சிலபிரதியில் ஒருபாடல் காணப்படுவது வருமாறு:—

நடந்து தன்னிரு கரத்தினி னலம்பெறுஞ் சிலையாய்த்
தொடர்ந்த நாணெலி யெழுப்பினன் றொகைப்படு மண்ட
மிடிந்த தென்னநின் றதிர்ந்ததவ் கிறைவனு மிமைப்பின்
மிடைந்த வெஞ்சர மழைவிடு தாரையின் விதைத்தான்.

கசூ.—இனித் தூஷணனது சேனை அழிந்தில ஆறுகவிகள் கூறும்.

ஊட றுப்புண்ட மொய்படைக் கையொடு முயர்ந்த
கோட றுப்புண்ட குஞ்சரங் 1கொடிஞ்சொடு கொடியின்
காட றுப்புண்ட 2காலிய றேர்கதிர்ச் சாலி
சூட றுப்புண்ட வெனக்கழுத் தறுப்புண்ட தூரகம்.

(இ - ள்.) (இராமபாணங்களால்), கை - (வீரர்களின்) கைகள், மொய் படையொடும் - வலியப்பிடித்த ஆயுதங்களுடனே, ஊடு அறுப்புண்ட-இடையிலே துணிபட்டன; குஞ்சரம் - யானைகள், உயர்ந்த கோடு அறுப்புண்ட - ஒங்கிவளர்ந்த தந்தங்கள் துணிபடப்பெற்றன; கால் இயல் தேர் - காற்றுப்போல விரைந்துசெல்லுந் தேர்கள், கொடிஞ்சொடு - கொடிஞ்சியென்னும் உறுப்புடனே, கொடியின் காடு - கொடிகளின் தொகுதியும், அறுப்புண்ட-துணிபடப் பெற்றன; தூரகம் - குதிரைகள், கதிர் சாலி சூடு அறுப்புண்ட என - கதிர்களோடுகூடிய செந்நெற்பயிர்கள் தலைப்புறம் அறுக்கப்பட்டன போல, கழுத்து அறுப்புண்ட - கழுத்தறுபட்டன; (எ - று.)

முதல்வாக்கியத்தில் பதாதியினழிவையும், இரண்டாம் வாக்கியத்தில் யானையினழிவையும், மூன்றும்வாக்கியத்தில் தேரினழிவையும், நான்காம் வாக்கியத்தில் குதிரையினழிவையும் ஆக நால்வகைப்படைகளினழிவை

நான்குவாக்கியங்களிலுந் கூறினர். இனி, குஞ்சரம்-யானைகள், ஊடு அறுப் புண்ட - இடையிலறுபட்ட, மொய் படை கையொடும் - வலிய (தண்டென் னும்)ஆயுதத்தைக் கொண்ட தூதிக்கையுடனே;உயர்ந்த கோடு அறுப்புண்ட - வளர்ந்த தந்தமும் அறுபட்டன வென்று உரைப்பாரும் உளர். "புரவிமுகஞ் செய்து செந்நெலோங்கி விளைகழனி" என்றபடி கதிர்முதிர்ச்சியால் தலை சாய்ந்த செந்நெற்பயிரும் குதிரையும் வடிவில் ஒத்தலால், கழுத்தறுப்புண்ட குதிரைகளுக்கு முடியறுப்புண்ட சாலிப்பயிர்கள் உவமையாம். உண்ட என வந்த ஐந்தனுள், நான்காவது - பெயர்; மற்றவை - முற்று. படைக்கை யொடும் என்றவிடத்து, கைப்படையொடும் என உருபுபிரித்துக் கூட்டப் பட்டது. கொடிஞ்சொடு=கொடிஞ்சியொடு. கொடிஞ்சி - தேர்ச்சிகரம்; அன்றி, கொடிஞ்சி யென்பது-தாமரைமலரின் வடிவமாகச் செய்து தேரின் முன்னிடத்து வைக்கப்படுவதோருறுப்பெனவும்படும். 'கொடிஞ்சு'என உகர வீறான பதமுண்டெனக்கொள்ளுதலுமொன்று. சாலி - ஸாலி என்ற வட சொல் திரிந்தது. பி-ம்:—[1]கொடுஞ்சொடு. [2]கால்வயத். (நிகசு)

கடுo. துருவி யோடின வுயிர்நிலை சுடுசரந் துரந்த
[1]கருவி யோடின கச்சையுங் கவசமுங் கழல
வருவி யோடின வென[3]வுறி குருதியா [3]றெழுக
வுருவி யோடின கேடகத் தட்டொடு முடலம்.

(இ - ள்.) துரந்த - (இராமபிரானுற்) செலுத்தப்பட்ட, சுடு சரம்-வெவ் விய அம்புகளாகிய, கருவி - படைக்கலங்களிற் சில, உயிர் நிலை துருவி ஓடின - (அரக்கருடம்பில்) உயிர்நின்ற மர்மஸ்தானங்களைத் தேடிக்கொண்டு விரைந்துசென்றன; (மற்றுஞ்சில அம்புகள்), கச்சையும் கவசமும் கழல - (அரக்கர்களுடைய) இடைக்கச்சும் உடற்கவசமும் விலகும்படி, ஓடின-விரை ந்துபாய்ந்தன; (வேறுசில அம்புகள்), அழி குருதி ஆறு அருவி ஓடின என ஒழுக - (அவர்களுடல்) சிதைந்ததனுலாகிய இரத்தநதிகள் மலையருவிகளோ டினபோல இடையறாது பெருகும்படி, கேடகம் தட்டொடும் உடலம் உருவி ஓடின - (அவர்களுடைய கையிற்பிடித்த) கேடகமென்னுந்தட்டையும் அவர் களுடம்பையும் முற்றுந்துளைத்து அப்பாற்சென்றன; (எ - று.)

'சுடுசரந்துரந்த கருவி' என்பது, மூன்றுவாக்கியத்துக்கும் எழுவாயாக இயைந்து முதனிலைத்தீவகத்தின்பாற்படும். கருவி - ஆயுதப்பொதுப்பெயர். பி-ம்:—[1]கருவியோடுவன். [2]இழி. [3]அலைப்ப. (நிகஎ)

கடுக. ஆய்ந்த கங்கபத் திரங்கள்புக் [1]கரக் கரதாவி
தோய்ந்த தோய்வில்லாப் பிறைமுகச் சரஞ்சிரந் துமித்த
காய்ந்த வெஞ்சர நிருதர்தங் கவசமார் புருவப்
பாய்ந்த வஞ்சக ரிதயமும் பிளந்தன பல்லம்.

(இ - ள்.) ஆய்ந்த - (இராமபிரானுல்) ஆராய்ந்து எடுத்துவிடப்பட்ட, கங்கபத்திரங்கள் - (சில) அம்புகள், புக்கு-(உடம்பினுள்) சென்று, அரக்கரது ஆவி தோய்ந்த-இராக்கதர்களது மார்பிலே அழுந்தின; பிறைமுகம் சரம் - (இராமன்எய்த) அர்த்தசந்திரபாணங்கள், தோய்வு இலா - (அரக்கருடம்

பினுட்சென்று) அழுந்திவிடுதலில்லாமல், சிரம் துமித்த - அவர்கள் தலைக ளைத்துணித்தன; காய்ந்த வெம் சரம் - (இராமனெய்த) மிகக்கொடிய (சில) பாணங்கள், நிருதர்தம் கவசம் மார்பு உருவ - அரக்கர்களது கவசத்தை யணிந்தமார்பு ஊடுருவும்படி, பாய்ந்த - நுழைந்தன; பல்லம் - (வேறுசில) அம்புகள், வஞ்சகர் இதயமும் பிளந்தன - வஞ்சனையையுடைய அரக்கர் களது நெஞ்சையும் பிளந்திட்டன; (எ - று.)

அம்பென்ற ஒருபொருளைக் குறிக்கிற கங்கபத்திரம், சரம், பல்லம்என்ற பலசொற்கள் வந்தகனால், பொருட்பின்வருநிலையணி. இனி, கங்கபத்திரம், பிறைமுகச்சரம் சரம், பல்லம் என்பன-அம்பின் வகைக ளென்றலும்ஒன்று. அரக்கர் நிருதர் வஞ்சகர் என்ற ஒருபொருட்பன்மொழிகள் வந்தும், பொருட்பின்வருநிலையணியின்பாற்படும். இனி, இப்பாட்டின் முன்னிரண் டடிகளுக்கு - சிலஅம்புகள் உயிர்நிலையில் தோய்கையில் சிலஅம்புகள் மேல் நோக்காய்த் தலையைத்துமித்தன வென்றும், பின்னிரண்டடிகளுக்கு - சில அம்புகள் மார்பை யுருவிப்பாய்கையில் சில அம்புகள் நெஞ்சைப்பிளந்தன வென்றும் கருத்துப்பட வுரைத்தலும் ஒன்று. கங்கபத்ரம் வடமொழிப் பெயர்; கழுகின் இறகுபோன்ற இறகையுடைய தென்றும், கழுகின்இறகி லொருகூற்றைத் தனக்கு இறகாகக் கட்டப்பட்ட தென்றும் காரணப்பொரு ளுரைப்பர். பிறைமுகச்சரம் - பிறைச்சந்திரன்போல நுனிவடிவம் அமை யப்பெற்ற அம்பு. காய்ந்த, வெம் - ஒருபொருட்பன்மொழி; இனி, காய்ந்த என்பதற்கு - வடித்த என்றும், சினந்த என்றும், கோபித்து எய்யப்பட்ட என்றும் பொருள்கூறவும் அமையும். இதயம்=ஹ்ருதயம். பி-ம்:—[1]அரக் கர்தமார்பில். (ருகஅ)

கருஉ. தூட ணண்விடு [1]சுடுசரம் யாவையுந் துணிய
மாடு நின்றவர் வழங்கிய படைகளு [2]மாற
வாடல் கொண்டன னளப்பரும் பெருவலி யரக்கர்
கூடி நின்றவக் குரைகடல் வறள்படக் குறைத்தான்.

(இ - ள்.) தூடணன் விடு சுடு சரம் யாவையும் துணிய - தூஷணன் எய்த வெவ்விய அம்புகளெல்லாந் துணிபடவும், மாடு நின்றவர் வழங்கிய படைகளும் மாற - அவனருகில் நின்ற அரக்கர்கள் பிரயோகித்த ஆயுதங்க ளும் ஒழியவும், ஆடல் கொண்டனன் - போர்செய்யுந் திருவிளையாடலைக் கொண்டவனும், (இராமன்), அளப்பு அரு பெரு வலி அரக்கர் கூடிநின்ற அ குரை கடல் வறள்பட குறைத்தான் - அளவிடுதற்கரிய பெரிய வலிமையை யுடைய இராக்கதர்கள் நிரண்டுநின்ற அந்த ஒலிக்கிற சேனைசமுத்திரம் வற் றிப்போம்படி அழித்தான்; (எ - று.)

மிகக்கொடிய அரக்கர் சேனையைத் தான் தனியாகவே விளையாட்டாக எளிதில் அழித்தா னென்பார், 'ஆடல்கொண்டனன் குறைத்தான்' என்றார்; இனி, ஆடல்கொண்டன னென்பது - இராமனுக்கு ஒருபெயராகவுமாம். "உலகம் யாவையுந் தாமுள வாக்கலு, நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா, வல

கிலா விளையாட்டுடையாரவர், தலைவ ரன்னவர்க்கே சரணங்களே'' என்று இந்நூற் கடவுள்வாழ்த்திற் கூறியபடி படைத்தல் காத்தல் அழித்தல்களைத் திருவிளையாட்டாகக்கொண்ட திருமாலின் அவதாரமூர்த்தி யென்க. அன்றி, திருவவதாரத்துக்கு ஏற்ப மனிதனுக நடித்தல்கொண்டவ னெனினும் அமையும். பி-ம்: —[1]சரமவை யாவையுந்துணித்த. [2]மாற்றி, மாற்ரு. (குகக)

கருக. ஆர்த்தெ ழுந்தனர் வானவ ரருவரை மரத்தோ
டார்த்தெ ழுந்தன குருதியின் பெருநதி யிராமன்
றூர்த்த செஞ்சரந் திசைதொறுந் திசைதொறுந் [1]தொடர்ந்து
போர்த்த வெஞ்சினத் தரக்கரைப் புரட்டின புவியில்.

(இ - ள்.) (*அதுகண்டு*), வானவர் - தேவர்கள், ஆர்த்து எழுந்தனர் - (மகிழ்ச்சியால்) ஆரவாரித்துக்கொண்டு கிளர்ந்தார்கள்; குருதியின் பெரு நதி - பெரிய இரத்தயாறுகள், அரு வரை மரத்தோடு ஈர்த்து எழுந்தன - அழித்தற்கரிய மலைகளையும் மரங்களையும் இழுத்துக்கொண்டு சென்றன; இராமன் தூர்த்த செம் சரம் - இராமபிரான் எய்து நிறைத்த செவ்விய அம்புகள், திசைதொறும் திசைதொறும் தொடர்ந்து - எல்லாத்திக்குக்களிலும் தொடர்ந்து சென்று, போர்த்த வெம் சினத்து அரக்கரை - (அத்திக்குக்களைத் தமது திரட்சியால்) மறைத்த கொடுங்கோபமுடைய இராக்கதர்களை, புவியில் புரட்டின - தரையிற் புரளும்படி செய்தன; (எ - று.)

செஞ்சரம் - வஞ்சவில்லாத நேரிய அன்பு; பகைவரிரத்தந்தோய்ந்து நுனிசிவந்த அம்பு: துஷ்டநிக்கிரகஞ்செய்து நன்மைபுரியும் அம்பு. பி-ம்:— [1]தொடர்ந்த. (குஉ0)

கருச. தோன்று மால்வரைத் தொகையெனத் துவன்றிய நிணச்[1]சே
ரூன்ற பாழ்வயிற் றலகையைப் புகல்வதெ னமர்வேட்
டேன்றி ஞரெலா [2]முலந்தன சொல்லி[3]யி லொழிந்தார்
கான்ற [4]வின்னுயிர் காலனுங் [5]கவர்ந்துமெய்ம் மறந்தான்.

(இ - ள்.) அமர் வேட்டு ஊன்றினர் எலாம் - போரை விரும்பி நிலை நின்ற அரக்கர்களெல்லோரும், ஒல்லையில்-விரைவில், உலந்தனர் ஒழிந்தார் - அழிந்தொழிந்தார்கள்: காலனும் - யமனும், கான்ற இன் உயிர் - (அவர்களுடம்பினின்று) வெளியெழுந்த இனியவுயிரை, கவர்ந்து-எடுத்துச்சென்று, மெய் மறந்தான் - (மிக்க சோர்வினல்) தேகம்பரவசப்பட்டான்; (என்றல்), நிணம் சேறு ஆன்ற-(அவ்வரக்கர்களுடைய) கொழுப்பின் குழம்பு நிறைந்த, பாழ் வயிறு - பாழ்த்த வயிற்றையுடைய, தோன்றும் மால் வரை தொகை என துவன்றிய அலகையை - உயர்ந்துகாணப்படுகிற பெரிய மலைகளின் தொகுதிபோல நெருங்கிய பேய்களைப்பற்றி, புகல்வது என் - சொல்ல வேண்டுவது என்ன? (எ - று.)

எதிர்த்த அரக்கரெல்லோரும் அழிந்தார்கள்: உயிர்க்கொலையையே தனது தொழிலாகவுடைய யமனும் அவர்களுயிரை இடைவிடாது

மிகுதியாகக் கவர்ந்துசெல்லும் வருத்தத்தினை லாகிய சோர்வால் உயிர் சோர்ந்தான் என்ற பொருளைச் சொல்லி, அதனால், அங்ஙனம் அளவின்றி மிகுந்த அவர்களின் நிணத்தை நிரம்பவுண்டு உடல்பருத்த பேய்க்கணம் மிகப் பல வென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுவதில்லை யென்ற மற்றொருபொருளைத் தண்டாபூபிகாந்யாயப்படி எளிதில் தோன்ற வைத்தலால், **தோடர் நீலச் செய்யுட்போருட்பேறணி;** வடநூலார் காவ்யார்த்தாபத்தியலங்காரமென்பர். வரைத்தொகை, பேய்க்கணத்துக்கு உவமம். துவன்றிய அலகை யென இயையும். பாழ் வயிறு - ஊனைத்தின்று ஊனைப்பெருக்குங் கொடு வயிறு. அலகை - சாதிப்பெயர். பி - மீ:—[1]சேற்று. [2]உலர்த்தனர். [3]வாய் மடிந்தார். [4]அவ்வுயிர். [5]வலித்துமெய்கவன்றார். (ஙூஉஈ)

கருநு.—இதுமுதல் முன்றுகவிகள் - அப்போது தூடணன் தேரைக் கடிதோட்டிப் பிணக்தவியலை யரிதிற்கடந்துவருதலைத் தெரிவித்தும்.

களிறு தேர்பரி கடுத்தவர் முடித்[1]தலை கவந்த
மொளிறு பல்படைத் தங்குலத் தரக்கர்த முடலம்
வெளிறு சேர்[2]நிணம் பிறங்கிய வடுக்கலின் [3]மீதாக்
குளிறுதேர்கடி தோட்டினன் றூடணன் கொதித்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), தூடணன்—, கொதித்தான்-கோபங்கொண்டவனும்,—களிறு - யானைகளும், தேர் - தேர்களும், பரி - குதிரைகளும், கடுத்தவர் - கோபித்தஇராக்கதவீரர்களுடைய, முடி தலை-கிரீடமணிந்த தலைகளும், கவந்தம் - (அவர்களுடைய) உடற்குறைகளும், ஒளிறு - விளங்குகிற, பல் படை - பலவகையாயுதங்களையுடைய, தம் குலத்து அரக்கர்தம் - தங்கள் குலத்தில் தோன்றிய சேனைத்தலைவர்களாகிய சிறந்த இராக்கதர்களது, உடலம் - உடம்புகளும், வெளிறு சேர் நிணம் - வெண்ணிறம்பொருந்திய (அவர்களுடைய) கொழுப்பும், (என்னும் இவை), பிறங்கிய - உயர்ந்து குவிந்ததனை லாகிய, அடுக்கலின் மீது ஆ-மலைகளின் மேலாக, குளிறு தேர் கடிது ஓட்டினன் - ஆரவாரஞ்செய்கிற தனது தேரை விரைவிற் செலுத்தினன்.

கடுத்தவர் என்றது, சதுரங்கங்களிலுமுள்ள வீரர்களை. தங்குலம் எனப் பன்மையாற்கூறினது, கரனையுந் திரிசிரனையும் கூட்டி. உடலம்என்றது - தலையோடுகூடிய வுடம்புகளை. அடுக்கல் - கற்களை அடுக்கினாற்போல இருப்பது. பி - மீ:—[1]தலைக். [2]பிணம். [3]மீதிற். (ஙூஉஉ)

கருசு. *அறங்[1]கொளாதவ ராக்கைக ளடுக்கிய வடுக்கல்*
[2]பிறங்கி நீண்டன கணிப்பில பெருங்கடு விசையாற்
கறங்கு போன்றுள தாயினும் பிணப்பெருங் [3]காட்டி
லிறங்கு மேறுமத் தேர்பட்ட தியாதென வுரைப்பாம்.

(இ - ள்.) அறம் கொளாதவர் - தருமத்தைக் கைக்கொள்ளாத அரக்கர்களுடைய, ஆக்கைகள் - உடம்புகள், அடுக்கிய - (ஒன்றன்மே லொன்றாக) குவிந்ததனை லாகிய, அடுக்கல் - மலைகள், பிறங்கி நீண்டன - உயர்ந்து

நீண்டுள்ளவை, கணிப்பு இல - எண்ணிக்கையில்லாதனவாம்; (ஆதலால்), பெரு கடு விசையால் கறங்கு போன்று உளது ஆயினும் - மிகவும் அதிகமான வேகத்தாற் காற்றடிபோலுள்ளதாலும், பிணம் பெரு காட்டில் - அந்தப் பெரிய பிணக்குவியல்களில், இறங்கும் ஏறும் - இறங்கியேறுகிற, அ தேர் - அந்த(த்தூஷணனது) இரதம், பட்டது - அடைந்த சங்கடத்தை, யாது என உரைப்பாம் - (நாம்) என்னவென்று சொல்லுவோம்? (எ - று.)

விரைந்துசெல்லுதற்குக் காற்றடி உவமம். அத்தேர் பிணப்பெருங்குவியலில் ஏறியிறங்குதலால் மிக்கபாடுபட்ட தென்பார், 'பட்டதியாதெனவுரைப்பாம்' என்றார். பி மீ:—[1]கொள்ளாதனவரக்கர்கள். [2]பிறங்க. [3]கட்டத்து. ()

கடுள. அரிதி [1]னெய்தின னையைந்து கொய்யுளைப் [2]பரிமா
வுருளு மாழிய தொருதனித் தேரின [3]னுலகத்
[4]திருளை நீக்கிய விந்துவிற் பொலிகின்ற விராமன்
றெருளும் வார்கணைக் கூற்றெதி ராவிசென் றென்ன.

(இ - ள்.) (தூஷணன்),—கொய் - கத்தரிக்கப்பட்ட, உளை - பிடரிமயிரையுடைய, ஐ ஐந்து பரிமா - இருபத்தைந்து குதிரைகளைப் பூட்டியதும், உருளும் ஆழியது-(எளிதில்) உருளுஞ் சக்கரமுடையதுமான, ஒரு தனி தேரினன் - ஒப்பில்லாத தனிப்பட்ட ஒருதேரையுடையவனும், உலகத்து - பூமியிலுள்ள, இருளை - இருட்டை, நீக்கிய - ஒழிக்கின்ற, இந்துவின் - சந்திரன் போல, பொலிகின்ற - விளங்குகிற, இராமன் - இராமனது, தெருளும் வார் கணை - தெளிவாகவிளங்குகிற நீண்ட அம்பாகிய, கூற்று எதிர் - யமனுக்கு எதிரிலே, ஆவி சென்று என்ன - உயிர் வலியச் சென்றாற்போல, அரிதின் எய்தினன் - வெகுசிரமப்பட்டு வந்து சேர்ந்தான்; (எ - று.)

இராமனுக்குச் சந்திரனுவமை, குளிர்ச்சியைத்தந்து உயிர்களை மகிழ்வித்தற்கு. குறித்தஇலக்கைத் தவறுதுஅழித்தல்பற்றி இராமபாணத்துக்குக் கூற்றுவன் ஒப்பாவன். இவன்சென்ற செலவு இராமபாணத்தால் இவன் உடனேயழிதற்குக் காரண மாதலால், 'கூற்றெதி ராவிசென் றென்ன' என உவமைகூறினர். ஐயைந்து-பண்புத்தொகை. பி - மீ:—[1]எய்தின. [2]பரியால். [3]மேகத்து, வேகத்து. [4]இருளுநீங்கிய. (இ உ)

கருஅ.—இதுமுதல் நான்குகவிகள் - தூடணன் இராமபிராணுடுபோருது தலையிழத்தலைக் கூறும்.

சென்ற தேரையுஞ் சிலையுடை மலையெனத் தேர்மே
னின்ற தூடணன் றன்னையு [1]நோக்கிய நிமல
னன்று கன்றுநின் னிலையென [2]வருளிறை நயந்தா
னென்ற காலத்தவ் வெய்யவன் பகழிமூன் றெய்தான்.

(இ - ள்.) சென்ற தேரையும் - (அங்ஙனம்வந்திரில்) வந்த தேரையும், சிலை உடை மலை என-வில்லை யேந்தியதொரு மலைபோல, தேர்மேல் நின்ற - அத் தேரின்மீது (வில்லேந்தி) நின்ற, தூடணன்தன்னையும் - தூஷணனை

யும், நோக்கிய - பார்த்த, நிமலன்-குற்றமற்றவனுன ஸ்ரீராமன்,—நின் நிலை நன்று நன்று என - 'உனது உறுதிநிலைமை மிக நன்றுயிருந்தது' என்று, அருள்-கருணையோடு, இறை நயந்தான்-(அவனைச்) சிறிதுமதித்தான்; என்ற காலத்து - ஆகிய அச்சமயத்தில், அ வெய்யவன்-அந்தக்கொடிய தூஷணன், பகழி மூன்று எய்தான் - மூன்று அம்புகளைத் தொடுத்தான்; (எ - று.)

நிலையுடைமை - இல்பொருளுவமம். நிமலன் - கருமத்தொடர்பு அற்றவன்; அடியார்களது கருமங்களையும் அழிப்பவன். நன்று நன்று - அடுக்கு, உவகைபற்றியது. அருளிறை என்பதற்கு - கருணைக்கடவுளென்று பொருள் கூறி, அதனை நிமலன் என்ற பெயர்க்கு விசேடணமாக்கினும் அமையும். பி - மீ:—[1]நெடியவனேக்கி. [2]அருளுரை. (குஉடு)

கடுகு. தூர வட்டவெண் டிசைகளைத் தனித்தனி சுமக்கும்
பார வெட்டினை டிரண்டினி னென்றபார் புரக்கப்
பேர விட்டவ [1]னுதலணி யோடையிற் [2]பிறழும்
வீர [3]பட்டத்திற் பட்டன விண்ணவர் வெருவ.

(இ - ள்.) தூரம் - நெடுந்தூரம் நீண்டனவும், வட்டம் - வட்டவடிவமாக அமைந்தனவுமாகிய, எண் திசைகளை - எட்டுத்திக்குக்களையும், தனி தனி சுமக்கும் - தனித்தனியே சுமக்கின்ற, பாரம் - சுமையையுடைய, எட்டினேடு - அவ்டதிக்கஜங்களோடுசேர்ந்த, இரண்டினின் - (பூமியைச் சுமக்கிற ஆதிசேஷன் ஆதிகூர்மம் என்ற) இரண்டனுள், ஒன்று - ஒன்றுகிய ஆதிசேஷனை [ஆதிசேஷாம்சமான பாதுகையை], பார் புரக்க - பூமியை அரசாளும்படி, பேர விட்டவன்-(அயோத்திக்குத்) திருப்பியனுப்பியவனுன ஸ்ரீராமனது, நுதல் - நெற்றியில், அணி-அணிந்துள்ள, ஓடையின் பிறழும் வீரபட்டத்தில் - (யானையின்) நெற்றிப்பட்டம்போல விளங்குகிற வீரபட்டிகையில், விண்ணவர் வெருவ பட்டன - தேவர்களும் அஞ்சும்படி (அந்தமூன்று அம்புகளும்) தாக்கின; (எ - று.)

இராமபிரானது நெற்றிப்பட்டத்துக்கு யானைநெற்றிப்பட்டத்தை உவமைகூறியதனுல், இராமன் யானேபோல்வா னென்பதும் விளங்கும். எட்டுத்திக்குக்களிலும் எட்டுயானைகளும் நடுவில் ஆதிசேஷனும் அதன்கீழ் ஆதிகூர்மமுமாக இவை பூமியின்கீழிருந்து அதனைத்தாங்குகின்றன வென்பது, நூற்கொள்கை. எம்பெருமானது திருவடிநிலை ஆதிசேஷனது வடிவமென்பதை, "சென்றுற் குடையாம் இருந்தாற் சிங்காதனமாம், நின்றுல் மரவடியாம் .....திருமாற்கு அரவு" என்பதனுல் அறிக. இனி எட்டுத்திக்குக்களேயுத்தாங்குகிற திக்கஜங்களோடு ஒப்ப உலகத்தைத் தாங்குகிற [பாதுகாக்கிற] தனது திவ்வியாயுதங்களாகிய சங்கசக்கரங்களில் ஒன்று [ஒன்றனம்சமான பரத னென்றபடி] பூமியையாளுமாறு தாம் விலகிவிட்ட இராமபிரானென்று உரைத்தலு முண்டு. பரத்சதுருக்கினர் சங்கசக்கராம்சமாதலே "வளேயொடு திகிரியும் வடவைதீதர, வீளேதரு கடுவுடை விரிகொள் பாய

லும், இளைஞர்க ளெனவடி பரவ வேகி நாம், வலிம்தி லயோத்தியில் வருது மென்றனன்" என்ற திருவவதாரப்படலச்செய்யுளால் உணர்க. இராமன் வனவாசஞ்சென்று சித்திரகூடத்தில் வசிக்கையில் அயோத்தியினின்றுவந்து பரதன் இராமனை ஊருக்கு மீண்டுவந்து முடிசூடியரசாளும்படி மிகவும் பிரார்த்திக்க, அப்பெருமான் அதற்குச் சம்மதியாமல் தனது பாதுகையைப் பரதனுக்குக் கொடுத்துச் சமாதானஞ்சொல்லி யனுப்பிவிட, அப்பரதாழ்வான் அத்திருவடிநிலையைத் திருவயோத்திக்குக் கொணர்ந்து சிங்காதனத்தில் எழுந்தருளப்பண்ணி அதற்கு முடிசூட்டி அதனையே அரசனுகப்பாவித்துத் தான் அதற்குக்கீழ்ப்படிந்து இராமன்மீண்டுவருமளவும் இராசாங்ககாரியம் பார்த்துவந்தனனுதலால், 'ஒன்று பார்புரக்கப் பேரவிட்டவன்' என்றார். நுதலணி பட்டத்தி லென இயையும். வீரபட்டம் - வெற்றிபெற்ற வீரர் அதற்கு அறிகுறியாக நெற்றியி லணியும் பொற்றகடு. எட்டு, இரண்டு-எண்ணலளவையாகுபெயர்கள். பி - மீ:—[1]கரிநுதல். [2]பிறங்கும். [3]பட்டிகை. ()

கசுo. எய்த காலமும் வலியு[1]நன் றெனநினைந் திராமன்
செய்த சேயொளி முறுவலன் கடுங்கணை தெரிந்தா
னெய்கி னங்கவ னெறிற்பரித் தேர்பட நூறிக்
கையின் வெஞ்சிலை யறுத்தொளிர் கவசமுங் கடிந்தான்.

(இ - ள்.) 'எய்த - (இவ்வரக்கன்) அம்பெய்த, காலமும்—, வலியும் - (இவனது) வலிமையும், நன்று-நல்லன',என-என்று,நினைந்து-எண்ணி,இராமன்—, செய்த சேய் ஒளி முறுவலன்-அழகிய ஒளியையுடைய புன்சிரிப்புச் செய்தவனும், கடு கணை தெரிந்தான்-கொடிய பாணங்களை ஆராய்ந்து தொடுத்து, (அவற்றுல்), அங்கு - அப்பொழுது, நொய்தின் - விரைவாக, அவன்-அந்தத் தூஷணனது, நெறில் பரி தேர் - விரைந்துசெல்லும் குதிரைகள் பூட்டிய தேரை, பட - அழியும்படி, நூறி - சிதைத்து, கையின் வெம் சிலை அறுத்து - அவன்கையிலிருந்த கொடியவில்லையுந் துணித்து, ஒளிர் கவசமும் கடிந்தான் - விளங்குகிற கவசத்தையும் அழித்தான்; (எ - று.)

தூடணனெய்த அம்புகள் தனதுவீரபட்டத்திற் பட்டமைபற்றி, எய்த காலமும் வலியும் நல்லன வென இவனை மதித்தவாறு. சேயொளி யென்பதில், செம்மை அழகின்மேலது: இனி, சிவந்தவாயினுள்ளாகச்செய்யும் சிறுசிரிப்பு 'சேயொளிமுறுவல்' எனப்பட்ட தென்றலு மொன்று. செய்த முறுவலன் = முறுவல்செய்தவன்; விருதிபிரித்துக்கூட்டல். நெறில் - உரிச்சொல். பி - மீ:—[1]நல்லென. (கூஉஎ)

கசுஉ. தேவ ரார்த்தெழ முனிவர்க டிசைதொறுஞ் சிலம்பு
மோவில் வாழ்த்தொலி [1]கார்க்கட னுழக்கென வோங்கக்
காவ டாவிது வல்லியே னியெனக் கணையொன்
றேவி னனவ னெயிறுடை நெடுந்தலை யிழந்தான்.

(இ - ள்.) தேவர் ஆர்த்து எழ - தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்துக் கிளரவும்,—முனிவர்கள் திசைதொறும் சிலம்பும் - இருடிகள் எல்லாத்திக்குக்

களிலும் நின்று ஆரவாரித்துக்கூறுகிற, ஓவ் இல் வாழ்த்து ஒலி - ஒழிவில் லாத ஆசீர்வாதத்தின் சத்தம், கார் கடல் முழக்கு என ஓங்க - கரியகடலின் ஆரவாரம்போல மிக்குவிளங்கவும்,—நீ வல்லேஎல் இது கா அடா என - 'நீ வல்லவனுவையாஞல் இந்த அம்பைக் காத்துக்கொள்ளடா' என்று வீர வாதங்கூறி,—கணை ஒன்று ஏவினுன் - (இராமன்) ஓர் அம்பைத் தொடுத் தான்; (அதனுல்), அவன் - அத்தூஷணன், எயிறு உடை நெடு தலை இழந் தான் - கோரதந்தங்களேயுடைய பெரிய தலேயை யிழந்தான்; (எ - று.)

[1]நாற்கடன்முழக்குஎன்ற பாடத்திற்கு-நாற்திசையிலும் நின்று நான்கு வேதங்களின் மந்திரங்களேக்கொண்டு ஆசீர்வாதங்கூறும் பேரொலிக்கு நாற் கடல்முழக்கு உவமைகூறப்பட்டதென்க. சிலபிரதிகளில், தூடணன்வதைப் படலம் இதனேடுமுடிய, மேல் கரன்வதைப்படலம் தொடங்குகின்றது. ()

வே று.

ககூ.—இனி, இருபத்துநான்குகவிகளாற் கரன் தனதுசேனையுடன் வந்து போர்செய்தலும் அழிதலுங் கூறுகிறர்.

தம்பிதலே யற்றபடி யுந்தய ரதன்சே
யம்புபடை யைத்துணி படுத்தது மறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்பு தலேகட்டிய [1]குலக்[2]கரி கடிப்பான்.

(இ - ள்.) கொம்பு - தந்தங்களே, தலே கட்டிய - முகத்தினிடத்தினின் றுறுதியாகக்கொண்ட, குலம் கரி - சிறந்தசாதியில் தோன்றிய திக்குயானே களே, கடுப்பான் - ஒப்பவனுகிய, வெம்பு படை வில் கை விசயம் கரன்-உக்கி ரங்கொண்ட பலவகையாயுதங்களேயும் வில்லேயும் ஏந்திய கைகளேயும் வெற் றியையுமுடைய கரன்,—தம்பி தலே அற்ற படியும் - (தனது) தம்பியான தூடணன் (இராமபாணத்தால்) தலே துணிபட்ட விதத்தையும், தயரதன் சேய் அம்பு படையை துணிபடுத்ததும் - தசரதனது குமாரனுன இராமனது பாணம் இராக்கதசேனேயைத் துண்டுபடுத்தியதையும், அறிந்தான் - அறிந்து, வெகுண்டான் - கோபித்தான்; (எ - று.)

கரனுக்கு உவமையாகக்கூறிய குலக்கரியை 'கொம்புதலேகட்டிய' என விசேடித்ததனுல், கரனது முகத்தில் வெளிப்பட்டுக்காணப்படுகிற கோரதந் தங்கள் யானேத்தந்தம்போல்வன என்பது விளங்கும். இனி, கொம்புதலேகட் டியஎன்பதற்கு - கொம்பினே முகத்தினிடத்துச் சேர்த்திக்கப்பெற்ற, கரியோடு ஒப்பானுகி வெகுண்டான்என்று உரைத்தல் சிறக்கும்:தந்தஞ்சேர்த்திக்கப்பெற்ற யானே வெகுளிமிகுமென்பதனே ''தேவகசாமிநிண்டோள், வரிக்கச்சிற் பிணிக் கப்பட்டான் மன்னனுலென்னக்கேட்டே, தருக்குடைவேழம்வாளார் ஞாட் பினுட்டகைமைசான்ற, மருப்புடனிழந்தமைதாத்தார் மன்னுயிர்த்தோழன் மாரே,'' ''தந்தம்பறியுண்டெதிர்சீறிய தந்தியென்ன'' என்ற இடங்களி லும் காண்க. இவ்வுரைக்குக் கட்டியஎன்பது - வேரோடுபிடுங்குதலென்று

பொருளுள்ள கள்ளென்னும் வினைப்பகுதியினடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சமென்க. **பி - ம்:**—[1]கொலை. [2]கரியொடொப்பான்.

இதுமுதல் கஉ - கவிகள் - கீழ்ப்படலத்து ங்ச - ஆங் கவிபோன்ற கீழி விருத்தங்கள். (ருஉக)

கசுங. அந்தகனு முட்கிட வரக்கர்கட லோடுஞ்
சிந்துரம் வய[1]ப்புரவி [2]தேர்திசை [3]பரப்பி
யிந்துவை வளைக்குமெழி லிக்குல மெனத்தான்
வந்துவரி வில்கைமத யானையை வளைத்தான்.

(இ - ள்.) (கோபங்கொண்ட கரன்), அந்தகனும் உட்கிட - யமனும் அஞ்சும்படி, அரக்கர் கடலோடும் - இராக்கதர்கூட்டத்துடனே, சிந்துரம் - யானைகளும், வய புரவி - வலிய குதிரைகளையும், தேர் - தேர்களையும், திசை பரப்பி - எல்லாத்திக்குக்களிலும் பரவிவரச்செய்து,—இந்துவை வளைக்கும் எழிலி குலம் என - சந்திரனைச் சூழ்கிற மேகங்களின் கூட்டம்போல, தான் வந்து—, வரி வில் கை மதம் யானையை வளைத்தான் - கட்டமைந்த வில்லையேந்திய கையையுடைய மதயானையைப்போன்ற இராமபிரானைச் சூழ்ந்துகொண்டான்; (எ - று.)

சந்திரன் - குளிர்ந்த அழகிய இராமபிரானுக்கும், மேகக்கூட்டம் - கரிய பெரிய அரக்கர்தொகுதிக்கும் உவமை. விந்துரம் - வடசொல். எழிலி-எழுச்சியையுடையது. கடல், யானை - உவமையாகுபெயர்கள். **பி - ம்:**—[1]கரிகள். [2]தேர்மிசை. [3]பரப்ப. (ருஉ0)

கசுஉ. அடங்கலில் கொடுந்தொழி லரக்கரவ் வனந்தன்
படங்[1]கிழி தரப்[2]படி தனிற்பல விதப்போர்
கடங்கலுழ் [3]தடங்களிறு தேர்பரி கடாவித்
தொடங்கினர் நெடுந்தகையும் வெங்கணை துரந்தான்.

(இ - ன்.) அடங்கல் இல் - அடங்குதலில்லாமல் மேன்மேல்வளர்கிற, கொடு தொழில்-தீச்செயல்களையுடைய, அரக்கர் - இராக்கதர்கள், அ அனந்தன் படம் கிழிதர - அந்த ஆதிசேஷனது படம் கிழிபடும்படி, படிதனில் - பூமியில், கடம் கலுழ் தட களிறு - மதநீர்பொழிகிற பெரியயானைகளையும், தேர் - தேர்களையும், பரி - குதிரைகளையும், கடாவி - மிகுதியாகச்செலுத்தி, பல விதம் போர் தொடங்கினர் - பலவகைப்பட்ட யுத்தத்தைச் செய்யத் தொடங்கினார்கள்; நெடு தகையும் - பெருமைக்குணமுள்ள இராமபிரானும், வெம் கணை துரந்தான் - கொடிய அம்புகளை விரைந்து எய்தான்; (எ - று.)

கீழ் மிகப்பலஅரக்கர் இராமனொருவனால் அழிந்ததைப் பிரதியக்ஷமாகக் கண்டும் தாம் அடங்காமல் போர்க்குஎழுந்தமைபற்றி, 'அடங்கலில் கொடுந் தொழிலரக்கர்' என்றது. 'அவ்வனந்தன்படங்கிழிதர' என்றது, ஓரிடத்தே ஒருங்கே திரண்ட பாரமிகுதிபற்றி. 'அவ்வனந்தன்—அகரச்சுட்டு, பிரசித்தி

யைக் காட்டும்; கீழிருந்து நிலவுலகத்தைத் தாங்கும் ஆதிசேஷனென்றபடி. அநந்தன் - பிரளயகாலத்திலும் அழிவில்லாதவன். அந்தம் - அழிவு. கடம் - கன்னம், வடசொல்: மதநீர்க்கு இடவாகுபெயர். நெடுந்தகை - பண்புத் தொகையன்மொழி. பி - டீ:—[1]கிழிவுற. [2]படிபடப், படிப்படப். [3]கருங். ()

கசுடு. துடித்தன கடக்கரி துடித்தன பரித்தேர்
துடித்தன முடித்தலை துடித்தன தொடித்தோ
டுடித்தன மணிக்குடர் துடித்தன தசைத்தோ
றுடித்தன கழற்றுணை துடித்தன விடத்தோள்.

(இ - ள்.) (இராமபாணங்களால்), கடம் கரி - மதயானைகள், துடித்தன - பதைத்துவிழுந்தன; பரி தேர் - குதிரைகள்பூண்ட தேர்கள், துடித்தன - துள்ளிக்கீழ்விழுந்தன; முடி தலை - கிரீடத்தையணிந்த தலைகள், துடித்தன - பதறிவிழுந்தன; தொடி தோள் - தொடியென்னும் வளையையணிந்த தோள்கள், துடித்தன—;மணி குடர்-சிறந்தகுடல்கள், துடித்தன—; தசை தோல் - தசையோடுசம்பந்தப்பட்ட தோல்கள், துடித்தன—; கழல் துணை - இரண்டுகால்களும், துடித்தன—; (அப்பொழுது பலஅரக்கர்க்கும்), இடம் தோள் துடித்தன - இடப்புறத்துத்தோள்கள் துடித்தன; (எ - று.)

தொடி - வீரவளை. தசை - சதை. ஆடவர்க்கு இடத்தோள் துடித்தல், நிமித்தம். தேருக்குத் துடித்தல், முறிந்துவிழுதல். **சொற்பொருட்பின் வருநிலையணி.** (ருஉ)

கசுசு. வாளின்வனம் வேலின்வனம் [1]வார்சிலை வனந்திண்
டோளின்வன [2]மென்றிவை துவன்றி நிருதப்பே
ராளின்வன நின்றதனை யம்பின்வன மென்னுங்
கோளின்[3]வன வன்குழுவி னிற்குறை படுத்தான்.

(இ - ள்.) வாளின் வனம் - வாட்படைகளின் தொகுதியும், வேலின் வனம் - வேற்படைகளின் தொகுதியும், வார் சிலை வனம் நீண்ட வில்படைகளின் தொகுதியும், திண் தோளின் வனம் - வலிய தோள்களின் தொகுதியும், என்ற இவை - என்ற இவைகள், துவன்றி - நெருங்கப்பெற்று, நிருதர் பேர் ஆளின் வனம் நின்றதனை-அரக்கர்களாகிய பெரியஆட்களின் தொகுதி எதிர்நின்றதை, (இராமன்), அம்பின் வனம் என்னும் - (தனது) பாணங்களின் தொகுதி யென்கிற, கோளின் வனம் வல் குழுவினில்-கொலைத்தொழிலையுடைய அழகிய வலிய கூட்டத்தால், குறைபடுத்தான்-துணித்திட்டான்.

வனம் என்றது, அடர்ந்த வலிய தொகுதியை. என்றிவை - தொகுத்தல். பி - மீ:—[1]வண். [2]அன்னவை. [3]மழுவின் குழுவிடை, வனமழைக் குழுவினிற். (ருஉ)

கசுஎ. தானுருவு கொண்டதரு மந்தெரி சரந்தான்
மீனுருவு மேருவை [1]விலங்குருவு மேலாம்
வானுருவு மண்ணுருவும் வாளுருவி வந்தா
ரூனுருவு மென்னுமி துணர்த்தவு மூரித்தோ.

(இ - ள்.) தான் உருவு கொண்ட தருமம் - தருமந்தானே ஒருபுருஷ வடிவங்கொண்டாற் போன்ற இராமமூர்த்தி, தெரி-ஆராய்ந்து எடுத்துஎய்த, சரம் - அம்பு, தான்—, மீன் உருவும் - நக்ஷத்திரங்களேயும் உருவிச்செல்லும்; மேருவை விலங்க உருவும் - மகாமேருமலையையும் குறுக்காக உருவிச்செல்லும்; மேல் ஆம் வான் உருவும் - மிகவுயரத்திலுள்ள மேலுலகத்தையும் உருவிச்செல்லும்; மண் உருவும் - பூமியையும் உருவிச்செல்லும்; (என்றால்), வாள் உருவி வந்தார் ஊன் உருவும் என்னும் இது - வாட்படைகளே உறை கழித்தெடுத்துவந்த அரக்கர்களது உடம்பை ஊடுருவிச்செல்லு மென்பது, உணர்த்தவும் உரித்தோ - கூறுதற்கும் உரியதோ? (எ - று.)

நக்ஷத்திரம் முதலியவற்றைத் தடையற முழுதுந் துளைத்துச்செல்ல வல்ல கூரிய விசையுள்ள இராமபாணம் அரக்கருடலைத் துளைத்ததென்பது தானே விளங்குமென்று தண்டாபூஷிகா நியாயங்கொண்டு சாதித்தலால், **தொடர்நிலைச் செய்யுட்பொருட் பேறணி.** தானுருவுகொண்ட தருமம்-தரும மூர்த்தியாகிய இராமன். மீன்-விண்மீன். விலங்குருவும்-தொகுத்தல். ஊன்-ஆகுபெயர். ஓ - எதிர்மறை. **பி-மீ:**—[1]விரைந்துருவும். (நுகூசு)

கசூஅ. அன்றிடை வளைந்தவர் குலங்களொ டடங்கச்
சென்றலை வுறும்படி தெரிந்துகணை சிந்த
மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
[1]கொன்றனர் நுகர்ந்தபொரு ளீர்கடிது [2]கொன்ற.

(இ - ள்.) அன்றிடை - அப்பொழுதில், வளைந்தவர் - (தன்னைச்) சூழ்ந்த அரக்கர்கள், குலங்களொடு - (தந்தமது) கூட்டங்களுடனே, அடங்க - எல்லோரும், உலைவு சென்று உறும்படி - அழிந்துபோம்படி, கணை தெரிந்து சிந்த - (இராமன்) அம்புகளே ஆராய்ந்தெடுத்துப் பிரயோகிக்க, (அந்த அம்புகள்), வலியோர்கள் எளியோரை மன்றிடை நலிந்து கொன்றனர் நுகர்ந்த பொருளின்-வலியவர்கள் எளியவர்களே வெளியிடத்திலே வருத்திக்கொன்று (அவர்களிடத்தினின்று கவர்ந்து தாம்) அனுபவித்த செல்வம் (அரை விரைவில் எளிதில் அழித்தல்) போல, கடிது கொன்ற - விரைவாகக் கொன்றன.

பின்னிரண்டடிகளிற் கூறிய உவமை, கடிது குலத்தோடு கொல்லுதல் மாத்திரத்துக்கு வந்தது. வலியார் எளியாரைத் துன்புறுத்திக் கவர்ந்த பொருள் அக்கவர்ந்தாரை வம்சநாசப்படுத்துதல், இயல்பு. நலிந்துகொல்லுதற்கு எளிய இடமாதல்பற்றி, மன்றை யெடுத்துக்கூறினர். இந்நூலாசிரியர் உவமை முதலிய அணிகள் மூலமாகவும் கற்போர்க்கு நல்லறிவு புகட்டுவரென்பது, அறியத்தக்கது. மன்றிடை: இடை - ஏழனுருபு. **பி - மீ:**—[1]கொன்றனன். [2]கொன்றான். (நுகூடு)

கசூக. கடுங்கர னெனப்பெயர் படைத்த கழல்வீர
னடங்கலு மரக்கரழி வுற்றிட வழன்மூ
ணெடுங்கலி னிணக்குருதி யோதமகி ணுள்ளா
னெடுங்கடலின் மந்தர மெனத்தமிய னின்றான்.

(இ - ள்.) அரக்கர் அடங்கலும் அழிவு உற்றிட - இராக்கதரெல்லோரும் அழிவடைய, அழன்ருன்-கோபங்கொண்டவனும், ஒடுங்கல் இல் நிணம் குருதி ஓதமதின் உள்ளான் - குறைதலில்லாமல் மேன்மேல் அதிகப்படுகிற கொழுப்போடுகூடிய இரத்தவெள்ளத்தி னிடையிலே யுள்ளவனை, கடுகரன் என பெயர் படைத்த கழல் வீரன் - கொடிய கரனென்று பேர்பெற்ற வீரக்கழலையுடைய வீரன், நெடு கடலில் மந்தரம் என-பெரிய கடலினிடையில் மந்தரமலைபோல, தமியன் நின்ருன் - தனித்தவனும் நின்ருன்; (எ-று.)

பாற்கடலைக் கடைகையில் அதனிடையில் மந்தரகிரி மத்தாய் நின்றது.

கஎ0. செங்கணெரி சிந்தவரி விற்பகழி சிந்தப்
பொங்குகுரு திப்புனரி யுட்புகையு நெஞ்சன்
கங்கமொடு காகமிடை யக்கடலி னேடும்
வங்கமென லாயதொரு தேரின்மிசை வந்தான்.

(இ - ள்.) புகையும் நெஞ்சன் - கோபாக்கினிமூளும் மனமுடைய அந்தக்கரன்,--செம் கண் எரி சிந்த-சிவந்தகண்கள் தீப்பொறியைச் சொரிய, வரி வில் பகழி சிந்த - கட்டமைந்த வில் அம்புகளைச் சொரிய,--பொங்கு குருதி புனரியுள் - மிகுகிற இரத்தக்கடலிலே,--கங்கமொடு காகம் மிடைய-கழுகுகளும் காக்கைகளும் நெருங்க,--கடலின் ஓடும் வங்கம் எனல் ஆயது ஒரு தேரின்மிசை - கடலிலே விரைந்துசெல்லுகிற மரக்கலமென்று உவமை சொல்லத்தக்கதொரு தேரின்மேல், வந்தான்—; (எ - று.)

கங்கம்-வடசொல். கங்கமொடு காகம் - அங்குப் பிணந்தின்ன வந்தவை; இது, கரன் வருகையில் நிகழ்ந்த தீநிமித்தமுமாம். இடைய எனப் பதம் பிரித்து, வருகிறவிசைபாற் கழுகுகளும் காக்கைகளும் விலக என்றலும் ஒன்று. (ருருஎ)

கஎக. செறுத்திறுதி யிற்புவனி தீயவெழு தீயின்
மறத்தின்வயி ரத்தொருவன் வந்தணுகு மூன்றைக்
கறுத்தமணி கண்டர்கட வுட்சிலை கரத்தா
லிறுத்தவனும் வெங்கணை தெரிந்தன னெதிர்ந்தான்.

(இ - ள்.) இறுதியில் - கற்பாந்தகாலத்திலே, புவனி தீய - உலகம் எரியும்படி, செறுத்து எழு - உக்கிரங்கொண்டு மேற்கிளர்கிற, தீயின் - ஊழித்தீப்போன்ற, மறத்தின் வயிரத்து ஒருவன் - கொடுமைமையும் பகைமையையுமுடைய தணித்தவனான அக்கரன், வந்து அணுகும் மூன்றை வந்து நெருங்குமூன்னே,—கறுத்த மணி கண்டர் கடவுள் சிலை கரத்தால் இறுத்தவனும் - (நஞ்சுண்டதனுற்) கருநிறங்கொண்ட நீலமணிபோலும் கழுத்தையுடைய சிவபிரானது தெய்வத்தன்மையுள்ள வில்லை (சீதாவிவாகத்தின் பொருட்டுக் கையால் ஒடித்திட்ட இராமபிரானும், வெம் கணை தெரிந்தனன் எதிர்ந்தான்-கொடிய அம்புகளை ஆராய்ந்தெடுத்து எதிர்சென்றனன்.

புவனி=புவனம்: ஈறுதிரிந்தது. சிவபிரான் தந்த வில் சனகமகாராஜாவினல் சீதாவிவாகத்துக்கு ஒருபந்தயமாக வைக்கப்பட்டிருந்த தென்பதும்,

அதனை இராமபிரான் எடுத்து வளைக்கலுறுங்கால் முந்தியே ஹரிஹரயுத்த காலத்திற் சிறிது இறுபட்டிருந்த அவ்வில் நன்குமுறிந்திட்ட தென்பதும், பாலகாண்டத்திற் பிரசித்தம். (நிகூஅ)

களஉ. தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வா
யாயிரம் வடிக்கணை யரக்கர்பதி யெய்தான்
தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வா
யாயிரம் வடிக்கணை யிராமனு மறுத்தான்.

(இ - ள்.) தீ உருவ - நெருப்புப்போற் கொடியவடிவமுடையவையும், கால் விசைய - காற்றுப்போல் வேகமுள்ளவையும், செவ்வியன - மற்றை யெல்லாவிலக்கணங்களும் அமைந்தனவு மான, வெம் வாய் வடி கணை ஆயி ரம் - கொடியவாயையுங் கூர்மையையுமுடைய ஆயிரம்அம்புகளே, அரக்கர் பதி எய்தான் - இராக்கதர் தலைவனை கரன் (இராமன்மேல்) தொடுத் தான்; தீ உருவ கால் விசைய செவ்வியன வெம் வாய் ஆயிரம் வடி கணை - அத்தன்மையனவான ஆயிரம்பாணங்களால், (அவற்றை), இராமனும் அறுத் தான் - இராமபிரானும் துணித்தான்; எ - று.)

உருவ-உரு என்னும் பெயரின்மேற் பிறந்த பலவின்பாற் குறிப்பு வினை யாலணையும்பெயர். (நிகூக)

களக. ஊழியெரி யிற்கொடிய பாய்பகழி யொன்பா
னேழுலகி னுக்குமொரு நாயகனு மெய்தான்
சூழ்சுடர் வடிக்கணை யவற்றெதிர் [1]தொடுத்தே
யாழிவரி விற்கரனு மன்னவை யறுத்தான்.

(இ - ள்.) ஏழ் உலகினுக்கும் ஒரு நாயகனும் - ஏழுவகைப்பட்ட உலகங் களுக் கெல்லாம் ஏகநாயகனை ஸ்ரீராமனும்,—ஊழி எரியின் கொடிய - கற்பாந்தகாலத்து உலகழிக்குந் தீபைக்காட்டிலுங் கொடுமை யுடையன வான, பாய் - ஊடுருவிச்செல்லவல்ல, பகழி ஒன்பான் - ஒன்பது பாணங் களை, எய்தான் - (கரன்மேல்) தொடுத்தான்; ஆழி வரி வில் கரனும - சக்கராகாரமாகவளைத்த கட்டமைத்த வில்லையுடைய கரனும், சுடர் சூழ் வடி கணை - அக்கினிச்சுவாலை சூழ்ந்த கூரிய (ஒன்பது) அம்புகளை, அவற்று எதிர் தொடுத்து - அந்த அம்புகளுக்கு எதிராகச்செலுத்தி, அன்னவை அறுத் தான் - அந்த அம்புகளைத் துணித்தான்; (எ - று.)

ஆழி - கடல்எனக் கொண்டால், கரனுக்கு உவமையாம். பி-ம்:— [1]தொடுத்தான். (நிசo)

களச. [1]கள்ளவமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தா
னுள்ளமுலை வுற்றமர தோடின ரொளித்தார்
வெள்ளெயி றிதழ்ப்[1]பிறழ வீரனும் வெகுண்டான்.

(இ - ள்.) (பின்பு கரன்), கல்வியின் - (தான் அறிந்த) வித்தையினால், கள்ளம் அமர் மாயம் வினை - வஞ்சனைப்போர்செய்யும் மாயத்தொழிலை,

விளைத்தான் - உண்டாக்கி, பகழி மாரியின் - (தான்தொடுத்த) அம்புமழையால், வள்ளல் உருவை மறைத்தான் - இராமபிரானது திருமேனியை மறையச்செய்தான்; (அதுகண்டு), அமரர் - தேவர்கள், உள்ளம் உலைவுற்று - மனம்ஒடுக்கமடைந்து, ஒடினர் ஒளித்தார் - ஓடியொளித்துக் கொண்டார்கள்; வெள் எயிறு இதழ் பிறழ - வெண்மையான பற்களே மூடுகின்ற அதரம் மாறித்தோன்ற [பற்களால் உதட்டைக் கடித்தவண்ணம்], வீரனும் - மகாவீரனான ஸ்ரீராமனும், வெகுண்டான் - கோபங்கொண்டான்; (எ - று.)

கல்வியென்றது, மந்திரபலத்தை. கள்ளவமர் மாயவினை - தனது உண்மையுரு மறைத்தும் வெவ்வேறுபலவுருவங்கொண்டும் நின்று பற்பல வகையாகச் செய்யும் போர். பி-ம்:—[1]கள்ளவினைமாயவமர். [2]பவள. (நிசக)

வேறு.

களடு. முடிப்பெ னின்றொரு மொய்கணை யாலெனைத்
தொடுத்து நின்றுயர் தோளுற வாங்கினன்
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
யிடிப்பி னேசை படக்கடி திற்றதே.

(இ - ள்.) 'இன்று - இப்பொழுது, ஒருமொய் கணையால்-வலியஅம்பு ஒன்றினாலே, முடிப்பென் - (இவனைத்) தொலைப்பேன்,' எனு - என்று நிருவுள்ளத்திற்கொண்டு, (ஸ்ரீராமன்), நின்று தொடுத்து-நிலைநின்று (ஓரம்பை வில்லில்) நிறுத்தி, உயர் தோள் உற வாங்கினன் - உயர்ந்த (தனது) தோளை யளாவும்படி (வில்நாணியை) வலியஇழுத்தான்; (அப்போது), பிடித்த திண் சிலை-(இராமன்) கையிற்பிடித்திருந்த வலிய வில்லானது, பேர் அகல் வானிடை இடிப்பின் ஓசை பட - அகன்ற பெரிய வானத்திலுண்டாகும் இடிமுழக்கம்போன்ற ஓசையுண்டாம்படி, கடிது இற்றது - விரைவாக ஒடிந்தது.

பேர் இடிப்பென இயைத்தலும் ஒன்று. இடிப்பினோசைபட என்பதற்கு - இடியினோசையடங்க என்று உரைத்தலு முண்டு.

இதுமுதல் இப்படலம் முடியுமளவும் கஅ - கவிகள் - கீழ்ப்படலத்தின் எஉ - ஆங் கவிபோன்ற கலிவிருத்தங்கள். (நிசஉ)

களசு. வெற்றி கூறிய வானவர் வீரன்வி
லிற்ற போது துணுக்கமுற் றேங்கினர்
[1]மற்றொர் வெஞ்சிலை யின்மை மனக்கொளா
வற்ற தாலெம் வலியென வஞ்சினர்.

(இ - ள்.) வெற்றி கூறிய வானவர் - (இராமபிரானது) சயத்தைச் சொல்லிக்கொண்டிருந்த தேவர்கள்,—வீரன் வில் இற்ற போது - இராம பிரானது வில் ஒடிந்தபொழுது,—மற்று ஓர் வெம் சிலை இன்மை மனம் கொளா-(அப்பெருமானுக்கு) வேறொரு கொடியவில் இல்லாமையை மனத்திலேகொண்டு,—எம் வலி அற்றது என அஞ்சினர் - 'எமதுவலிமை யொழிந்

தது' என்று அச்சங்கொண்டவர்களாய், துணுக்கம் உற்று எங்கினர் - நடுக்க மடைந்து வருந்தினர்கள்; (எ - று.)—ஆல் - அசை.

மற்றெருவெஞ்சிலையின்மை மனக்கொளா - சேமவில்லொன்று துணை யில்லாமையைக் கருதி. அரக்கரையழித்தது தம்மைப் பாதுகாத்தற்பொரு ட்டு அவதரித்த இராமமூர்த்தியின் வில் போரிடையில் ஒடிந்திட்டதனால், இராமன் வலிமைகுறைய அதனால் அரக்கர் அழிவின்றிச் செழித்திடுதல் தங்கள்வலிமையை யழித்தற்குக் காரணமாவதனால், 'எம்வலி யற்றது' என்று தேவர்கள் அஞ்சினர்கள். பி-மீ:—[1]மற்று. (நிசசு)

கஎஎ. *என்னு மாத்திரத் தேந்திய கார்முகஞ்*
சின்ன மென்றுந் தனிமையுஞ் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மன் மரபினுற்
பின்னு றத்தன் பெருங்கர நீட்டினான்.

(இ - ள்.) என்னும் மாத்திரத்து-ஆகிய இவ்வளவில் [வில்லொடிந்தமாத் திரத்தில்],—மன்னர் மன்னவன் செம்மல் - அரசர்களுக்குஅரசனான தச ரதசக்கரவர்த்தியின் குமாரனாகிய ஸ்ரீராமன், ஏந்திய கார்முகம் சின்னம் என்றும் - (தான்) கைப்பிடித்த வில் ஒடிபட்ட தென்பதையும், தனிமையும்- (தான்) தனித்திருக்குந்தன்மையையும், சிந்தியான் - கருதிக்கவலைப்படாத வனாய், மரபினால் - பழையசங்கேதத்தின்படி, தன் பெரு கரம் பின் உற நீட்டினான் - தனது பெரிய கையைப் பின்னேசெல்ல நீட்டினான்; (எ - று.)

சிந்தம் - வடசொல். தனிமை-வில்லாகிய துணையொன்றும் அற்றமை. இராமபிரான் முன்பு பரசுராமனிடத்தினின்று தான்பெற்ற விஷ்ணுதனு சைப் பரசுராமனை வென்றவுடனே வருணனிடத்திற்கொடுத்து அதனை நன்முகப்பாதுகாத்துவைத்திருக்கும்படியும், உரியசமயத்திற் கொண்டுவந்து கொடுக்கும்படியும் கட்டளையிட்டிருந்தனராதலின், அக்குறிப்பால் அவ் வில்லின்வரவுக்காகப் பின்னே கைநீட்டின னென்பார், 'மரபினுற் பின் னுறத் தன்பெருங்கர நீட்டினான்' என்றார். (நிசச)

கஎஅ. *கண்டு நின்று கருத்துணர்ந் தானென*
வண்டர் நாதன் றடக்கையி னத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுற்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன்.

(இ - ள்.) வருணன் - (வானத்தில்வந்து போர்நோக்கிநின்ற) வருண தேவன், கண்டு நின்று - (இராமன் பின்னே கையைநீட்டியதைப்)பார்த்து நின்று, கருத்து உணர்ந்தான் என - (அப்பெருமானது) திருவுள்ளத்தை அறிந்தவன்போல, பண்டு போர் மழுவாளியை பண்பினால் கொண்ட வில்லை முன்பு போருக்குவந்த பரசுராமனிடத்தினின்று (ஸ்ரீராமன்) உரிமையாற் கொண்ட விஷ்ணுதனுசை, அ துணை-அச்சமயத்தில், அண்டர் நாதன் தட கையின் கொடுத்தனன் - தேவர்களுக்குத்தலைவனான அவ்விராமமூர்த்தியின் பெரியகையிலே கொடுத்திட்டான்; (எ - று.)

கருத்துணர்ந்தர்னென-குறிப்பறிந்தவனுப் என்றபடி;எனவென்பது-ஒப்பில்போலி. மழுவாளி-மழுவையாள்பவன்; இ-கருத்தாப்பொருள்விகுதி: மழுவாளி எனக்கொண்டு, மழுவாகிய படைக்கலத்தையுடையவன் எனினுமாம்: வாள்-ஆயுதம், இ-பெயர்விகுதி. மழுவாளியை=மழுவாளியினிடத்து:வேற்றுமைமையக்கம். **வில்லின் வரலாறு:**—முன்னொருகாலத்தில் விசுவகர்மாவினால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டுவிற்களுள் ஒன்றைச் சிவபிரானும் மற்றொன்றைத்திருமாலும் எடுத்துக்கொண்டார்கள்; பின்பு ஒருகாலத்தில் அவ்விற்களுட் சிறந்தது இன்னதென்பதை அறிதற்கு விரும்பிய தேவர்களின் வேண்டுகோளாற் பிரமன் அரனுக்கும் அரிக்கும் போரை மூட்டிவிட, அங்ஙனமே அவர்கள் அவ்விற்களேக்கொண்டு பொருகையில், சிவபிரானது வில் சிறிது முறிபட்டது; அவ்வாறுற்ற வில்லேச் சிவபெருமான் ஜநககுலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட, அது வம்சபரம்பரையாய் ஜநகமகாராசனளவும் வந்து அவனுல் சீதாவிவாகத்துக்கு ஒருசுயம்வசுல்கமாக நியமிக்கப்பட்டு இராமபிரானுல் எடுத்துமுறிக்கப்பட்டது; இதுநிற்க, இருத வலிய வில்லே விஷ்ணு ருசிகமுனிவனிடம் கொடுத்துச் செல்ல, அது அவன்குமாரனை சமதக்கினியினிடத்தும், அவன்குமாரனை பரசுராமனிடத்தும் பரம்பரையாய் வந்தது;ஸ்ரீராமன் சீதாகல்யாணத்திற்காகச் சிவதனுசை முறித்தமை கேட்டுச் சினங்கொண்டு வந்த கூத்திரியகுலாந்தகனை பரசுராமன் 'இற்ற வில்லே இறுத்தது ஒருபெருமையன்று: இந்தவில்லே ஓடி, பார்ப்போம்'என்று சொல்லித் தன்கையிற் கொணர்ந்த அந்த விஷ்ணுதனுசை இராமன்கையிற் கொடுக்க, இராமன் அதனேவாங்கி எளிதில்வளைத்து நாணேற்றி அம்பு தொடுக்கலுற்று 'இதற்கு இலக்கு என்?' எனினுவி, பரசுராமன் வணங்கத்தோடு கூறியபடி அவனது தபோபலத்தை அம்பினுற் சிதைத்து அவனே வெற்றிகொண்டபின் அவ்வில்லே அங்குவந்து தன்னேக்கொண்டாடிய தேவர்களுன் வருணனிடத்திற் கொடுத்து அதனே நன்முகச் சேமித்து வைத்திருக்கச்சொல்ல, அதனே அந்த வருணன் நன்குபாதுகாத்துவைத்திருந்து இராமபிரான் வனவாசம்புக்குத் தண்டகாரணியத்தில் அகத்தியாச்சிரமத்துக்கு எழுந்தருளினபொழுது அகத்தியமுனிவர்மூலமாக அவ்வெம்பிரானுக்குச் சேர்ப்பிக்க, மீண்டும் இராமன் வருணனிடத்திலே கொடுத்து உரியசமயத்திற்கொணர்ந்துகொடுக்கும்படி கூறியருள, அங்ஙனமே அதனே வருணன் இப்பொழுது கொண்டுவந்து சமர்ப்பித்தன னென அறிக. (நிகழ்)

களகூ. கொடுத்த வில்லேபக் கொண்ட னிறத்தினு
னெடுத்து வாங்கி வலங்கொண் டிடக்கையிற்
பிடித்த போது நெறிபிழைத் தார்க்கெலாங்
[1]தூடித்த வாலிடக் [2]கண்ணெடுங் தோள்களே.

(இ - ள்.) கொடுத்த வில்லே - (வருணன்) கொடுத்த அந்தவில்லே, அகொண்டல் நிறத்தினுன் - நீர்கொண்ட மேகம் போன்ற கருநிறத்தையுடைய அந்த ஸ்ரீராமன், எடுத்து - ஏந்தி, வலம் கொண்டு வாங்கி - வலத்

கையால் வளைத்து, இடக்கையில் பிடித்த போது - இடக்கையிற் பிடித்த பொழுது,—நெறி பிழைத்தார்க்கு எலாம் - தருமவழிதப்பிய அரக்கரெல் லோர்க்கும், இடம் கண்ணெடும் (இடம்) தோள்கள் துடித்த-இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கொண்டல் - தொழிலாகுபெயர். வலம் - வலக்கைக்கு, ஆகுபெயர் இனி, வலம் கொண்டு வாங்கி எடுத்து - வலக்கையால் வாங்கி யெடுத்து எனினும் அமையும்; அன்றி, வலம் கொண்டு வாங்கி - வலிமை கொண்டு வளைத்து என்றலும் ஒன்று. இடமென்பதைத் தோளொடுங் கூட்டுக. ஆட வர்க்கு இடந்துடித்தல், தீநிமித்தம். பி-ம்:—[1]துடித்ததாம். [2]கண்ணெடு தோளுமே. (நிசசு)

கஅ0. ஏற்றி நாணிமை யாமு னெடுத்தது
கூற்றி ஞருங் [1]குனிக்கக் குனித்தெதி
ராற்றி ஞனவ ஞழியந் தேர்சர
நூற்றி ஞனுண் பொடிபட நூறினான்.

(இ - ள்.) (இவ்வாறு), இமையா முன்-கண்ணிமைப்பொழுதினுள்ளே, அது - அவ்வில்லை, எடுத்து - எந்தி, கூற்றினரும் குனிக்க குனித்து - யம னும் அஞ்சும்படி வளைத்து, நாண் ஏற்றி - நாணியைப்பூட்டி, சரம் நூற்றி னால் - நூறு பாணங்களால், எதிர் ஆற்றினன் அவன் ஆழி அம் தேர்-எதிர்த் தல் செய்தவனுன அந்தக்கரனது (வலிய) சக்கரம்பூண்ட அழகிய தேரை, நுண் பொடி பட நூறினான் - நுண்ணிய பொடிகளாம்படி அழித்தான்.

கூற்றினர், இன் - சாரியை; ஆர் - உயர்வுவிளக்கும் பலர்பால்விகுதி. நூறுதல் - நூறுதுண்டாக்குதலுமாம். பி-ம்:—[1]குணிக்க. (நிசஎ)

கஅக. எந்திரத் தடந்தே [1]ரிழந்தா னிழந்
தந்த ரத்திடை யார்த்[2]தெழுந் தம்பெலாஞ்
சுந்த ரத்தனி வில்லிதன் றோளெனு
மந்த ரத்தின் மழையின் வழங்கினான்.

(இ - ள்.) (கரன்), எந்திரம் தட தேர் இழந்தான் - (வலிய) சக்கரம் பூண்ட பெரிய (தனது) இரதம் இழக்கப்பெற்றான்; இழந்து - (அங்ஙனம் தேரை) இழந்ததனால், ஆர்த்து அந்தரத்திடை எழுந்து - ஆரவாரஞ்செய்து கொண்டு ஆகாயத்திலே கிளம்பி, சுந்தரம் தனி வில்லி தன் தோள் எனும் மந்தரத்தின் - அழகிய ஒப்பற்ற வில்லியுடைய இராமனது புயமென்கிற மந் தர மலையின்மீது, மழையின் - மழைபொழிந்தாற்போல, அம்பு எலாம் வழங் கினான் - (தனது) அம்புகளையெல்லாம் சொரிந்தான்; (எ - று.)

மந்தரம் பாற்கடலைக் கலக்கியமைபோல இராமன்தோள் அரக்கர்சேனைக் கடலைக் கலக்குவ தென்பார், 'தோளெனும் மந்தரத்தின்' என்றார். பாணங் கள் சிறிதும் இராமனது தோளுக்கு அழிவுண்டாக்காமையை 'மந்தரத்தின்

மழையின்' என்ற உவமை விளக்கும். எந்திரத்தோ-யந்திரம்போல விரைந்து செல்லுந் தேருமாம். பி - மீ:—[1]அழிந்தான். [2]எழும். (ருசஅ)

கஅஉ. தாங்கி நின்ற தயரத ராமனுந்
தூங்கு தூணி யிடைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்ற [1]வலக்கையை வாளியால்
வீங்கு தோளொடு [2]பார்மிசை வீழ்த்திஞன்.

(இ - ள்) தாங்கி நின்ற - (தனது எதிரம்புகளால் காயனம்புகளைத் தன் மேல் விழாதபடி) தடுத்து நின்ற, தயரத ராமனும் - தசரதசக்கரவர்த்தியின் திருமகனை ஸ்ரீராமனும்,—தூங்கு தூணியிடை சுடு செம் சரம் வாங்குகின்ற-(தோளில்) கட்டப்பட்ட அம்பருத்தூணியினின்று வெவ்விய சிவந்த அம்பு களை யெடுத்துவிடுகிற, வலம் கையை - (காலுடைய) வலக்கையை, வீங்கு தோளொடு - பருத்த தோளுடனே, வாளியால் பார்மிசை வீழ்த்திஞன் - ஓரம்பால் நிலத்தில் அற்றுவிழச்செய்தான்; (எ - று.)—பி - மீ:—[1]வலக்கை யொர். [2]பாரிடை. (ருசக)

கஅஊ. வலக்கை வீழ்தலு மற்றைக்கை யால்வெற்றி
யுலக்கை வானத் துருமென [1]வோச்சினு
னிலக்கு வற்குமுன் வந்த விராமனும்
விலக்கி ஞனெரு வெங்கதிர் வாளியால்.

(இ - ள்.) வலக்கை வீழ்தலும் - (தனது) வலக்கை துணிபட்டுவிழுந்த வுடனே, (தான்), மற்றை கையால் - இடக்கையினல், வெற்றி உலக்கை - வெற்றியைத்தரவல்லதோ ருலக்கையை, வானத்து உரும் என - மேகத் தின் இடியைப்போல, ஓச்சினுன் - உயரவடுத்து (இராமன்மேல்) வீசினுன்; (அதனை), இலக்குவற்குமுன் வந்த இராமனும் - லக்ஷ்மணனுக்குமுன்னே வந்த இராமபிரானும், ஒரு வெம் கதிர் வாளியால் - கொடிய ஒளியுள்ள அம்பொன்றினல், விலக்கினுன்—; (எ று.)

'இலக்குவற்குமுன்வந்த இராமன்' என்ற தொடர் இரட்டுறமொழித லென்னும் உத்தியால், லக்ஷ்மணனுக்கு முன்னே பிறந்தவனை இராம னென்ற பொருளோடு, போர்க்கோலங்கொண்டு போருக்கெழுந்த லக்ஷ்மண னைத் தடுத்து அவனுக்குமுன்னே வந்த இராம னென்ற பொருளையுங் கொடுக்கும். பி - மீ:—[1]வீசினுன். (ருஙo)

கஅ஋. விரா வருங்கடு வெள்ளெயி றிற்றபி
னராவ ழன்ற [1]தனையதன் ஞற்றலான்
மராம ரங்கையில் வாங்கிவந் தெய்தினு
னிராம னங்கொர் தனிக்கணை யேயினுன்.

(இ - ள்.) விராவரும் - பொருந்தியுள்ள, கடு-விஷத்தையுடைய, வெள் எயிறு - வெள்ளிய (தனது) பற்கள், இற்ற பின் - முறிபட்டபின்பு, அரா -

நாகப்பாம்பு, அழன்றது - சீறியதை, அனைய - ஒத்த, தன் ஆற்றலால் - தனது வல்லமையினால், (கரன்), மராமரம் கையில் வாங்கி வந்து எய்தினன் - ஒருமராமரத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு (இராமனருகில்வந்து) நெருங்கினன்: இராமன்—, அங்கு - அப்பொழுது, ஓர் தனி கணை எவினன் - ஒப்பற்ற ஓரம்பை (அவன்மேற்) செலுத்தினன்; (எ - று.)

வலக்கையும் உலக்கையும் ஒழிந்தபின்பும் கரன் சீறிவந்த வல்லமைக்கு, விஷப்பற்கள் முறிந்தபின்பு நாகப்பாம்பு சீறுதலே உவமைகூறினர். விராவரும் - ஒருசொல்: இனி, விராவு அரு எனப்பிரித்து, அருகில் நெருங்க வொண்ணாத, கடு-விஷ மெனினுமாம். ஆற்றலான் எனப்பிரித்து, வல்லமையுடைய கரனென்றலு மொன்று. பி-மீ:—[1]அனையதோராற்றலான். (நிந்க)

கழுரு வர[1]ம ரக்கன் படைத்தலின் [2]மாயையி
னுரமு டைத்தன்மை யாலுல கேழையும்
பர[1]மு ருக்கிய பாவத்தி னல்வலக்
கரமெ னக்கரன் கண்டமுற் றுனரோ.

(இ - ள்.) வரம் படைத்தலின் - வரங்கள் பெற்றுள்ளதனலும், மாயையின் - மாயைபுடைமையாலும், உரம் உடை தன்மையால் - தேக பலத்தையுடைய தன்மையினலும், அரக்கன் - இராக்கதராசனை இராவணன், உலகு ஏழையும் - ஏழுலகத்துயிர்களையும், பரம் முருக்கிய - மிகுதியாக அழித்ததனலான, பாவத்தினல்-தீவினையால், கரன்—, வலக்கரம் எனகண்டம் உற்றுன் - (கீழ்த் தனது) வலக்கை யறுபட்டாற்போல (இப்பொழுது தனது) கழுத்தறுபட்டான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

மிகப்பெரிய சேனைக்குத் தலைவனைப் அதிகபலபராக்கிரமசாலியாய் இராவணனுக்குத் தம்பிமுறையாய் நின்ற கரன் அழிந்தது அவ்விராவணனது மிக்கவருத்தத்துக்கும் வலிமைக்குறைவுக்கும் காரணமாதலைக் கொண்டு, வரபலமாயபலதேகபலங்களால் இராவணன் எல்லாவுலகத்தையும் நலிந்த தீவினையாற் கரன் அழிந்தா னென்றார். இனி, அரக்கனென்பது கரனையேயாக்கி யுரைப்பாரு முளர். [1]அரக்கர் எனப் பன்மையாகப் பாடங்கொண்டு, இராக்கதர்கள் செய்த பாவத்தாற் கரன் அழிந்தான் என்றலு மொன்று. கவி, சமத்காரத்தால், வேறுஉவமைதேடாது கண்டமற்றதற்குக் கையற்றதையே உவமைகூறினர்.வலக்கரமெனக் கரன் கண்டமுற்றுன்என்றதொடர்-கரன் கண்டமுற்றது இராவணனுக்கு வலக்கை கண்ட முற்றுற்போலு மென்ற பொருளையுந் தரும். பி - மீ:—[2]வாய்மையின். [3]உறுத்திய. (நிருக)

கசசு —தேவர்கள்மகிழ்ச்சிபெக்காட்ட, ஸ்ரீராமர் விளக்கமுற்றிருத்தல்.

ஆர்த்தெ ழுந்தன ராடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதி ரோன்றிசை
போர்த்த மென்பனி போக்கிய [1]தென்னவே.

(இ - ள்.) (அப்பொழுது), வானவர் - தேவர்கள், ஆர்த்து எழுந்தனர்- ஆரவாரஞ்செய்து எழுந்து, ஆடினர் பாடினர் - கூத்தாடிப் பாடி, தூய் மலர் தூர்த்து அமைந்தனர் - பரிசுத்தமான கற்பகமலர்களை (இராமன் மேல்) நிறையச்சொரிந்து பொருந்தினார்கள்; தீர்த்தனும் - பரிசுத்தமூர்த்தி யான இராமனும், கதிரோன் திசை போர்த்த மென் பனி போக்கியது என்ன - சூரியன் எல்லாத்திக்குக்களையும் மறைத்த மென்மையான பனியை நீக்கிவிளங்கியமைபோல, பொலிந்தான்-(பகையழித்து) விளங்கினான்;(எ-று.)

இராமன் சூழ்ந்தஅரக்கர்தொகுதியை எளிதில் விரைவில் அழித்தமை விளங்க, சூரியன் கவிந்தபனியைப் போக்குதலை உவமைகூறினர். அமைந் தனர் - திருப்திப்பட்டார்க ளென்றுமாம். பி-பீ:—போலவே. (நிருநஉ)

கஅஎ.—முனிவர்தழு, ஸ்ரீராமன் சீதையுள்ளா இடத்துச் சேர்தல்.

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
வினிய சிந்தை யிராமனு மேகினு
னனிக வெஞ்சமத் தாருயிர் போகத்தான்
றனியி ருந்த வுடலன்ன தையல்பால்.

(இ - ள்.) முனிவர் முறை முறை வந்து மொய்ப்புற - இருடிகள்பலர் மேன்மேல்வந்து நெருங்கிச்சூழ, இனிய சிந்தை இராமனும் - நல்ல நிரு வுள்ளத்தையுடைய ஸ்ரீராமனும், அனிகம் வெம் சமத்து ஆர் உயிர் போக தான் தனி இருந்த உடல் அன்ன தையல்பால் - (அரக்கரின்) சேனைகளோடு செய்யுங் கொடிய போரில் (தனது) அரியஉயிர் நீங்கிச்செல்லத் தான் தனியே யிருந்த உடம்பை யொத்த சீதாதேவியினிடத்து, எகினன் - சென்றான்.

இராமன் அரக்கரோடு போர்செய்தற்குப் பிரிந்துசெல்லத் தான் பர்ணசாலையில் தனியேயிருந்த சீதைக்கு, உயிர்போகத் தனியிருந்த உடம் பை உவமைகூறினர்; இதனால், பிராணநாயகனை இராமபிரானிடம் ஜாகிப்பிராட்டி வைத்திருந்த அன்புமிகுதி விளங்கும்: அன்றியும், இவ் வுவமை, பிராணநாயகனைப் பிரிந்ததுமுதல் சீதை இவனுக்கு என்னகுமோ வென்று கவலையாற் பொலிவிழந்திருந்தமையையும் புலப்படுத்தும். அநிகம் என்ற வடசொல், அனிக மெனத் திரிந்தது. (நிருநச)

கஅஅ.—இலட்சுமணனும் சீதையும் ஆனந்தக்கண்ணீருடன் ஸ்ரீராமன்திருவடிகளில் வணங்குதல்.

விண்ணி னீங்கிய [1]வெய்யவர் மேனியிற்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
வண்ணல் வீரனைத் தம்பியு மன்னமுங்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினர்.

(இ - ள்.) விண்ணில் நீங்கிய - (போரில் இறந்து) வீரசுவர்க்கம் போய்ச் சேர்ந்த, வெய்யவர் - கொடிய அரக்கர்களது, மேனியின் - உடம்பி

னின்று சொரிந்த, புண்ணின் நீரும் - இரத்தமும், பொடிகளும் - (அப்போர்க்களத்தேயுள்ள) தூசிகளும், போய் உக-நீங்கிவிடும்படி,—அண்ணல் வீரனே-பெருமையிற்சிறந்த வீரனான ஸ்ரீராமனே,—தம்பியும் அன்னமும் - இலக்குமணனும் சீதையும், கண்ணின் நீரினில் பாதம் கழுவினர் - (தங்கள்) கண்களின்நீரினால் திருவடிகளைக் கழுவினார்கள்; (எ - று.)

இராமன் மீண்டுவருகையில் லக்ஷ்மணனும் சீதையும் அப்பிரானது திருவடிகளில் விழுந்து வணங்கும்பொழுது அவர்கள்கண்களினின்று பெருகிய ஆனந்தக்கண்ணீர் அத்திருவடிகளில் வழிந்தமை, அரக்கரதுஇரத்தமும் போர்க்களப்புழுதியும் அத்திருவடிகளிற்பட்டிருந்ததனை நீர்கொண்டு கழுவுதல்போலு மென்றார்: **தற்குறிப்பேற்றவணி.** நீர்கொண்டு பாதங்கழுவுதல் - பாத்தியஞ்சமர்ப்பித்த லெனப்படும். வீரனேப் பாதங்கழுவினர் - இரண்டு செயப்படுபொருள்வந்த வினை; இனி, பாதங்கழுவினர் என்பதை ஒரு சொல்தன்மைப்படுத்துதலு மொன்று. அன்னம் - உவமவாகுபெயராம். **பி-மீ:**—[1]வெய்யவன். (நிநிஙி)

கசகூ.—வானவரேத்த ஸ்ரீராமர் வீற்றிருத்தல்.

மூத்த மொன்றின் முடிந்தவர் மொய்புணீர்
நீத்த மோடி நெடுந்திசை நேருறக்
கோத்த வேலைக் குரலென வானவ
ரேத்த வீர னினிதிருந் தானரோ.

(இ - ள்.) மூத்தம் ஒன்றில் - ஒருமுகூர்த்தகாலத்திலே, முடிந்தவர்-இறந்தஅந்தஅரக்கர்களது, மொய் புண் நீர் நீத்தம் - மிக்க இரத்தவெள்ளம், ஓடி—, நெடு திசை நேர் உற - நீண்டதிக்குக்களினெல்லையிற் சேர்ந்திட,—வீரன் - ஸ்ரீராமன், கோத்த வேலை குரல் என வானவர் ஏத்த - கோத்தாற் போன்ற [அலைகள் ஒழுங்குபடப்பெற்ற] கடலினது முழக்கம்போலத் தேவர்கள் துதிசெய்து ஆரவாரிக்க, இனிது இருந்தான் - இனிமையாக இருந்தான்.

தேவர்கள் துதித்தலா லெழுமொலி கடலொலித்தல்போலு மென்க. வானவரேத்தொலிக்கு முடிந்த அரக்கரின் புண்ணீர்நீத்தம் ஓடிக்கோத்த வேலையின்குரலே உவமைகூறினரென்றலும் ஒன்று. மூத்தம்=முஹூர்த்தம்: அது - இரண்டுநாழிகைப்பொழுது. அரோ - ஈற்றசை. (நிருசு)

கசகூ.—சூர்ப்பணகை கரனுடலைத் தழுவிப்புரளுதல்.

இங்கு நின்ற துரைத்து மிராவணன்
றங்கை தன்கை வயிறு தகர்த்தனள்
கங்கு லன்ன கரனைத் தழீஇநெடும்
பொங்கு வெங்குரு திப்புரண் டாளரோ.

(இ - ள்.) இங்கு-இவ்விடத்தில், நின்றது - (சொல்லாமல்) மிச்சமாய் நின்ற செய்தியை, உரைத்தும் - இனிச் சொல்வோம்: இராவணன் தங்கை-

RESEARCH INSTITUTE
R H ROAD. MADRAS-

சூர்ப்பணகை, தன் கை வயிறு தகர்த்தனள் - தனது கைகளால் வயிற்றில் அடித்துக்கொண்டு, கங்குல் அன்ன கரனே தழீஇ - (நிறத்தால்) இருளே யொத்த கரனைத் தழுவி, நெடு பொங்கு வெம் குருதி புரண்டாள் - நெடுந் தூரம்பரந்த மிக்கெழுகிற வெவ்விய இரத்தவெள்ளத்திலே விழுந்துபுரண் டாள்; (எ-று.)—அரோ - ஈற்றசை.

'இங்குநின்றதுரைத்தும்' என்றது, கவிக்கூற்று. இங்குக் கரன் என் றது, அவனது உயிர்நீத்த உடலே. (நிநிஎ)

ககூக.—சூர்ப்பணகை புலம்பிப்போதல்.

ஆக்கி னேன்மனத் தாசையவ் வாசையென்
மூக்கி னோடு முடிய முடிந்திலேன்
வாக்கி னுலுங்கள் வாழ்வையு நாளையும்
போக்கி னேன்கொடி யேனென்று போயினள்.

(இ - ள்.) மனத்து-என்மனத்திலே, ஆசை ஆக்கினேன் - (இராமன் விஷயமான) காதலே விளைத்தேன்; அ ஆசை - அந்த ஆசை, என் மூக்கி னோடு முடிய - எனது மூக்கறுபட்டமாத்திரத்தோடு ஒழிய, முடிந்திலேன் - (அவ்வளவில்) இறந்திடாத நான், வாக்கினுல் - (எனது) வாய்மொழியால், உங்கள் வாழ்வையும் நாளையும் போக்கினேன்-உங்களுடைய வாழ்க்கையை யும் ஆயுள்நாளையும் ஒழித்தேன்; கொடியேன்-(ஆதலின்) மிகவுங்கொடுமை யுடையேன், என்று - என்றுசொல்லிக்கொண்டு, போயினள்-சென்றாள்.

ககூ.—சூர்ப்பணகை விரைவில் இலங்கைசேர்தல்.

அலங்கல் வேற்கை யரக்கரை யாசறக்
குலங்கள் வேரறப் பான்குறித் [1]தாளுயிர்
[2]கலங்கு சூறைவன் போர்நெடுங் காலென
லிலங்கை மாநகர் நொய்திற்சென் றெய்தினுள்.

(இ - ள்.) அலங்கல் வேல் கை அரக்கரை - வெற்றிமாலையைத்தரித்த வேற்படையையேந்திய கையையுடைய (இலங்கைநகரத்து) அரக்கர்களையும், குலங்கள் ஆசற வேர் அறுப்பான் - குலங்களோடு ஒழியுமாறு வேரறுக்கும் பொருட்டு, குறித்தாள்-எண்ணினவளாய்,—(சூர்ப்பணகை),—உயிர் கலங்கு வல் போர் சூறை நெடு கால் என - (உலகத்து) உயிர்கள் கலங்கியழிதற்குக் காரணமான வலிய தாக்குதலைச் செய்கின்ற சுழல்பெருங்காற்றுப்போல, நொய்தின் சென்று இலங்கை மா நகர் எய்தினுள் - விரைவிற்சென்று பெரிய இலங்காபுரியை யடைந்தாள்; (எ - று.)

சூர்ப்பணகை இலங்கைக்குப் போய்ச் சீதையைத் தான் கவரத் தொடங் கியதுமுதல் கரன்முதலியோர் சேனையோடும் மாண்டமையீறான செய்தி யைக்கூறுதல் உடனே இராவணன் எழுந்துவந்து சீதையை யெடுத்துப் போதற்கும், அது இராவணனிராக்கத நாசத்துக்கும் காரணமாகுதல் பற்றி, இவள்சென்று செய்திகூறக் கருதுதலே மற்றை யரக்கரையும் அடி

யோடு அழிக்கக்கருதியதாக வருணனைவகையாற் கற்பித்து 'அரக்கரை யாசறக் குலங்கள்வேரறுப்பான் குறித்தாள்' என்றார்; **தற்குறிப்பேற்றவணி.**

பி-மீ:—[1]ஆழ்கடல். [2]கலங்குறைத்தெழுகாலெனக்காலித்போய், கலங்குறைத்தனபோனெடுங்காலென. (நுடுகூ)

பெரியகொடியபகைவர் எத்தனைபேர் ஒருங்கே பற்பலபோர்க்கருவிகளுடன்வந்து எதிர்ப்பினும் அவர்களையெல்லாம் ஒருபொருள் செய்யாமல் மிக இலேசாகஎண்ணித் தனக்கு ஒருதுணைவேண்டாமல் தான் தனியே யெதிர்த்துச்சென்று பொருது எளிதில்விரைவிற்கொன்று வென்றெழுக்கும் பேராற்றலையுடைய ஒப்புயர்வற்ற அஸஹாயசூரனான மகாவீரன் இராமபிரானென்பதும், தண்டகாரணியவாசிகளான முனிவர்களுக்கு அபயமளித்து வாக்குத்தத்தஞ்செய்த இராக்கதசங்காரத்தை நிறைவேற்றுவதில் இராமபிரான் கொண்டபேரூக்கமும்,வினைவலியும் தன்வலியும் மாற்றான்வலியும் துணைவலியும் சீர்தூக்கிப்பாராது மானத்தையே முக்கியமாகக் கொண்டு பகையை அலக்ஷ்யம்செய்து எதிர்த்தவர் சுத்தவீரனான அவ்வெதிரியால் நரகத்தின்முன் எலிக்குழாம்போல எளிதில் அழிவு ரென்பதும், தாமாகச் சிறிதும் ஆராய்தலின்றிப் பெண்பாலார்சொல்லைக் கேட்டு நடத்தல் பெருங்கேடுதரு மென்பதும், "உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா, உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்றவாறு காலங்கொடியதாயிருக்கையில் உடன்பிறந்த உறவினரே கொடுந்தீங்குக்குக் காரணமாவ ரென்பதும், விதி கொடியதாயிருக்கையில் அதற்கு அறிகுறியாகிற தீநிமித்தமும் பாராட்டப்படாது செருக்கே மிக்கிருக்கு மென்பதும், தூணைவீரராயிருப்பார் தமது தலைவனுக்குமுன்னே தாம் பகையை எதிர்த்துச்செல்லும் கடமையைச் செலுத்தற்கு உரியராவ ரென்பதும், எத்தூணைவல்லார்க்கும் ஒருசமயத்தில் சிறிதுஇடையூறு உண்டாவது உலகவியல்பே யென்பதும், அங்ஙனம்உண்டாகும் இடையூற்றுக்கு அறிவுடையார் சிறிதும் மனங்கலங்கா ரென்பதும், அங்ஙனம்மனங்கலங்காதார்க்குத் தெய்வகதியால் உடனே நன்மை நேரு மென்பதும் முதலியன இப்படலத்தில் வெளியாம்.

கரன் முதலியோரின் முற்பிறப்பு:—யாஜ்ஞவல்கியருடைய குமாரர்களும் லோகப்பிரசித்திபெற்றவருமாகிய சந்திரகாந்தன் மகாமேதன் விஜயன் என்ற மூன்று பிராமணரிஷிகளும் அவர்களுடைய சிஷ்யர்கள் பதினாயிரவரும் சிவசாபத்தால் கரன் தூஷணன் திரிசிரன் முதலிய அரக்கர்களாகப் பிறந்து இராமனாகிய திருமாலாற் கொல்லப்பட்டுச் சாபவிமோசன மடைந்தன ரென்ற வேறு சில பழைய நூல்களால் தெரிகிறது.

இப்படலத்துக்குப் பயன்:— ஸ்ரீராமபிரான் கரன் முதலியோரை வென்ற வரலாற்றைக் கேட்பவர் அவ்விராமனருளால் தீவினையினின்று நீங்குவார்கள்; குலத்தை விருத்திசெய்து புகழைவளர்க்கத்தக்க புதல்வரைப் பெறுவார்கள்; அவர்கட்குச் சிறைத்துன்பமும் கடன்தொல்லையும் ஒழியும் என்று ஸ்காந்தபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

கரன்வதைப்படலம் முற்றிற்று.

எ—ஆவது மாரீசன்வதைப்படலம்.

மாரீசனது வதையைப்பற்றிக் கூறும் பாக மென்று பொருள். மாரீசன் - மிக்கமாயையில்வல்ல ஓரரக்கன்; சுர்ச்சரனென்னும் யக்ஷனது புத்திர னென சுகேதுவின் மகளாகிய தாடகைக்கும், சுந்தனென்ற இயக்கர் தலைவ னுக்கும் குமாரன்; சுபாகுவின் உடன்பிறந்தவன். சிலபிரதிகளில் **சூர்ப்ப ணகை சூழ்ச்சிப்படலம்** என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தமாரீசனது தந்தையான சுந்தன் செருக்கினால் அகஸ்தியமுனிவ னது ஆச்சிரமஞ் சேர்ந்து அவன்மேல் மரங்களைப் பறித்து வீசி மற்றும்பல வாறு தீங்குசெய்து அம்முனிவனுடைய கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பலா னபின், தாயான தாடகை தன்மைந்தரிருவருடன் அம்முனிவனை யெதிர்த்து அவனதுசாபத்தால் மூவரும் அரக்கராயினர்; பின்பு சுபாகுமாரீசர் (தாட கையுடன்)இராவணனது தாயின்தந்தையான சுமாலியென்ற பழைய அரக்கனை யடுத்து 'உனக்கு நாங்கள் மக்கள்முறையாவோம்' என்று உறவுபூண்டு அத னால் இராவணனெடு மாமன்முறைமைபெற்று முனிவர்களுக்குத் தீங்கு செய்து திரிந்துகொண்டிருந்தார்கள்; இப்படி யிருக்கையில் விசுவாமித்திர முனிவன் தனதுயாகத்தைப் பாதுகாத்தற்பொருட்டுத் தசரதசக்கரவர்த்தியி னிடமிருந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களை அழைத்துச்செல்லும் வழியிடையே தாடகை வந்துஎதிர்த்து இராமனால் கொல்லப்பட்டு இறந்தபின், விசுவாமித் திரன் தொடங்கிய யாகத்தைச் சுபாகுமாரீசர்கள் மற்றும்பலஅரக்கருடன் வந்து அழிக்கத்தொடங்கியபொழுது, இராமபிரான் அற்புதங்களால் அரக்க ரைக்கொன்று ஓரஸ்திரத்தால் சுபாகுவை வதைத்து மற்றோரஸ்திரத்தால் மாரீசனைக் கடலிலே தள்ளிவிட்டான். இவ்வனம் தப்பிப்பிழைத்த இவன் சிலகாலம் கடற்கரையில் தவஞ்செய்துகொண்டிருந்து பின்பு இராமன் தண்டகாரணியம் புகுந்தபொழுது பழையவைரத்தால் வேறுஇரண்டு அரக்க ருடன் மான்வேடம்பூண்டு இராமனைத் தன்கொம்புகளால் முட்டிக் கொல்லக் கருதி நெருங்குகையில், இராமனெய்த அம்புகளால் கூடவந்த அரக்கர் இறக்க, இவன் தான் மாத்திரம் தப்பியோடியுய்ந்து இலங்கைசேர்ந்து தவ வேடம் பூண்டிருந்தான்.

சூர்ப்பணகையால் ராமலக்ஷ்மணரிடத்துப் பெருங்கோபமும் சீதாதேவி யினிடத்துப்பெருங்காதலும் மூட்டப்பட்ட இராவணன் தான் சீதையை வஞ்சனையாகக் கவர்ந்துவருதற்குத் துணையாக வரவேண்டு மென்று மாரீசனை வேண்ட,இராமனுற்றலை இருமுறையுணர்ந்த இவன் பலவாறுதடுத்தும் அவன் கேளாமல் மிக்கோபங்கொண்டதனால் அதற்கு அஞ்சி மாரீசன் மாயையாற் பொன்மானுருவங்கொண்டு சீதையினெதிரிற் சென்று உலாவுகையில், அவள் அதனைப் பிடித்துத்தரும்படி இராமனைப் பிரார்த்திக்க, இலக்குமணன் 'இது பொய்ம்மான்' என்று உண்மைகூறித் தடுக்கவும் கேளாமல் மீண்டும் பிராட்டி நிர்ப்பந்திக்கவே, இராமன் அதனைப் பிடித்தற்குத் தொடர்ந்துசென்றபோது

அது அவன்கையிலகப்படாமல் ஒட்டங்காட்டி அவனை நெடுந்தூரம் கொண்டு வந்து விட்டதையுணர்ந்து இராமன் மாயமானென்று துணிந்து அதன்மேல் அம்பெய்ய, மாரீசன் அம்புபட்டுவிழுகையில் தன்மெய்வடிவங்கொண்டு 'ஹா ஸீதா!லக்ஷ்மணா!'என்று இராமன்குரலாற் சத்தமிட்டு விழுந்திறக்க, இராம பிரான் தன்று குரல்போல இவன்கூறியசொற்களைக் கேட்டலால் சர்னகி வருந்துவளாதலின் யாதுநேருமோ வென்று கவலைப்பட்டுக்கொண்டே சிறி துந் தாமதியாமல் விரைவாக மீண்டுவருவானபினனென்பது, இப்படலத் தின் கதைசுருக்கம்.

க.—கவிக்கூற்று: இராவணன் கொலுவீற்றிருக்கும் நிலையை வருணிப்போமெனல்.

[1]இரைக்குநெடுங் கடலரக்க ரிறந்ததனை மறந்தனள்[2]போ லிரா மன் றுங்க, வரைப்புயத்தி னிடைக்கிடந்த பேராசை மனங்கவற்ற வாற்ரு ளாகித்,திரைப்பரவைப் பேரகழித் திண்ணகரிற் கடிதோடிச் சீதை தன்மை, யுரைப்பெனெனச் சூர்ப்பணக்க வரவிருந்தா னிரு ந்தபரி சுரைத்து மன்னே.

(இ - ள்.) சூர்ப்பணகை—, இரைக்கும் நெடுங் கடல் அரக்கர் இறந்த தனை மறந்தனள் போல் - ஆரவாரஞ்செய்கிற பெரிய கடல்போற் பரந்த (கரன் முதலிய) இராக்கதர்கள் இறந்தொழிந்த செய்தியை மறந்தாள்போல, இராமன் துங்கம் வரை புயத்தினிடை கிடந்த பேர் ஆசை மனம் கவற்ற - இராமபிரானது உயர்ந்த மலைகள்போன்ற தோள்களினிடத்து(த் தான் கொ ண்ட)மிக்கஆசை(தன்)மனத்தை வருத்துதலால், ஆற்ருள் ஆகி -(அத்துன்பத் தைப்) பொறுதவளாய்,—திரை பரவை பேர் அகழி திண் நகரில் கடிது ஓடி சீதை தன்மை உரைப்பென் என - அலைகளையுடைய கடலையே பெரியஅகழி யாகவுடைய வலிய இலங்கையில் விரைவாக ஓடிச்சென்று சேர்ந்து சீதையி னது வடிவழகினிபல்பை (இராவணனனுக்கு)க் கூறுவே னென்று கருதி, வர-வருகையில், இருந்தான் இருந்த பரிசு - அங்குள்ளவனன இராவணன் (சபையில்) வீற்றிருந்த நிலைமையை, உரைத்தும்-சொல்வோம்; (எ - று.)— அதனை அடுத்த உ - கவிகளிற் காண்க. மன் ஓ - ஈற்றசைகள்.

இராமபிரானிடத்துக்காதல் மனத்தைக்கவற்ற ஆற்ருதுநின்ற சூர்ப்ப ணகை, பின்பு சீதையின் அழகை இராவணனுக்கு எடுத்துச்சொல்லி அவள் மேல் அவனுக்கு ஆசைமூட்டி அவனைக்கொண்டு அவளைக்கவர்ந்துவரச்செய்து இங்ஙனம் தன்னை மானபங்கப்படுத்திய ராமலக்ஷ்மணர்க்குத் தான் பிரதி செய்து பின்னர்அவரைச் சேரவேண்டுமென்று எண்ணங்கொண்டு தண்டகா ரணியத்தினின்று வந்தபொழுது இலங்கையில் இராவணன் வீற்றிருந்த காட்சிச்சிறப்பை இனிக்கூறுவோ மென்கிறர். உடன்பிறந்த முறையில்நின்ற கரன்முதலிய வலியபெரிய அரக்கர்பலர் ஒருங்குஇறக்கவும் அதனலாகிய சோகம் மேலிடாமல், இராமனழகில் தான் ஈடு பட்டதனலான வேட்கை தோயே விஞ்சி அக்காமவேதனை மிகுதியைப் பொறுக்கமாட்டாமல், அவனைச்

சேர்தற்கு யாது உபாயஞ்செய்யலாமென்ற கவலையேகொண்டு தன்னை அவன் உபேக்ஷித்துப் பரிபவப்படுத்தியதையும் மறந்து,'ஒப்புயர்வில்லாத சௌந்தரிய மூடைய சீதை உடனிருத்தலால், அவளுள்ளளவும் என்னை இவன்விரும்பா னதலின்,எங்ஙனமேனும் அவளை அவனைவிட்டு அகற்றிவிடின் பின்பு இவன் என்னை மணக்கக்கூடும்' என்னும் எண்ணங் கொண்டிருந்தனள் சூர்ப்பணகை யென்பதை முன்னிரண்டடிகளில் விளக்கினர். நீரரண் நிலவரண் மலையரண் காட்டரண் என இயற்கையுஞ் செயற்கையுமான நால்வகையரண்களுள் எப் பொழுதும் வற்றுதலில்லாத நீரையுடைய பெரிய கடலே கடத்தற்கரிய நீரரணை இலங்கைக்கு இயல்பில் வாய்ந்துள்ள காவற்சிறப்பை விளக்குவார், 'நிரைப் பரவைப் பேரகழித்திண்ணகர்' என்றார். திண் என்ற அடைமொழி, மலை யரண் மதிலரண் சேனைக்காவல் முதலியவையும் அந்நகர்க்கு வலியனவாய் அமைந்துள்ள சிறப்பைத் தெரிவிக்கும்.

இனி, [1]இரைக்குநெடும் பணையரக்கர் என்ற பாடத்திற்கு - வீரவாதஞ் செய்கிற உயர்ந்தபருத்த அரக்கரென்னலாம். தோளுக்கு மலையுவமை - உயர்ந்த பெரிய தோற்றத்துக்கும், ஆயுதங்களால் அழித்தற்கரிய வலிமை க்கும். **பி-ம்:**—[1]இரைத்த. [2]போர்.

இதுமுதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் முதல்நான்குசீரும் காய்ச்சீர் களும், மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரியவிருத்தங்கள்.** (கூசு0)

2.—இதுமுதல் இருபத்திரண்டு கவிகள்-தாகம்: இராவணன் அரசுவீற்றிருத்தற்சிறப்பைக் கூறும்.

நிலையிலா வுலகினிடை [1]நிற்பனவு நடப்பனவு நெறியி னீங்க, மலரின்மே னான்முகற்கும் வகுப்[2]பரிது [3]நினைப்பதொரு வரம்[4]பிலாற்ற, லுலவிலா வகை[5]யுழந்த தருமமென [6]நினைந்தவெலா முதவுந் தச்சன், புலனெலாந் [7]தெரிப்பதொரு புனைமணி[8]மண் டபமதனிற் பொலிய மன்னே.

(இ - ள்.) நிலை இலா - நிலையில்லாததான, உலகினிடை - உலகத்தில், நிற்பனவும் - (இடம்விட்டுப் பெயராது) நிலைநிற்பனவான தாவரப்பொருள் களையும், நடப்பனவும்-(இடம்விட்டுப்பெயர்வனவான) ஜங்கமப்பொருள்களை யும், நெறியின் ஈங்க - ஒழுங்காகப் படைத்த, மலரின்மேல் நான்முகற்கும் - (திருமாலினது) திருநாபித்தாமரைமலரின்மேலுள்ள பிரமனுக்கும், வகு ப்பு அரிது - படைக்கமுடியாததும்,—நுனிப்பது ஒரு வரம்பு இல் ஆற்றல் - நுட்பமாக அறிகிற ஒப்பில்லாத அளவற்றவல்லமையால், உலவு இலா வகை உழந்த தருமம் என - (தனக்கும் பிறர்க்கும்) தீங்கில்லாத விதத்திலே முய ன்றுசெய்த தருமம் போல, நினைந்த எலாம் உதவும் - நினைத்த பொருள்களை யெல்லாம் நினைத்தபடியே உண்டாக்கவல்ல, தச்சன்-(விசுவகர்மாவென்னும்) தெய்வத்தச்சனது, புலன் எலாம்-சிற்பநூலறிவு முழுவதையும், தெரிப்பது- காட்டுவதுமான, ஒரு - ஒப்பற்ற, புனை மணி மண்டபமதனில்-அழகிய இரத்

தினங்களாற் செய்யப்பட்ட சபாமண்டபத்திலே,—பொலிய - (அம்மண்டபம் தான் வீற்றிருத்தலால்) அழகுபெறும்படி,—(எ - று.)

இக்கவியில் 'மண்டபமதனில்:' 'பொலிய' என்றவையும், அடுத்த இருபத்தொருகவிகளில் வரும் வினையெச்சங்களும் இருபத்து மூன்றாங் கவியில் வருகிற 'இருந்தனன்' என்ற வினைமுற்றைக் கொண்டு முடியும்.

நான்முகற்கும் வகுப்பரிது, தச்சன்புலனெலாந்தெரிப்பதுஎன்ற இரண்டும் மண்டபத்துக்கு அடைமொழி. உலகங்களேயும் அவ்வுலகத்திலுள்ள எல்லாப்பொருள்களேயும் படைத்த பிரமனாலும் இப்படிப்பட்டதொரு மண்டபத்தைப் படைக்கமுடியா தென்றும், முறைபிறழாது செய்யப்பட்ட அறம் வேண்டியபயன்களே வேண்டியபடியேதருவதுபோலத் தனது நிர்மாணசக்தியால் வேண்டியபொருள்களே வேண்டியபடியே நிருமிக்கவல்ல விசுவகர்மாவினது சிற்பநூல்தேர்ச்சியைத் தெரிவிக்கும்படி அதிக ஆச்சரியகரமான வேலைத்திறமமைந்ததென்றுங் கூறி மண்டபத்தின்மாட்சிமையைவெளியிட்டபடி. 'தச்சன் புலனெலாந் தெரிப்பது' என்பதற்கு, விசுவகர்மன் தனது புத்திவிசேஷங்களேயெல்லாங் காட்டுமாறு செய்த தென்று உரைத்தலுமொன்று. தச்சன் என்பதற்கு-அசுரத்தச்சனாகிய மயனென்று உரைப்பாருமூளர்; அதுபொருந்தாது: ஏனெனில்,—சுகேசனென்னும் அரக்கனது புத்திரர்களான சுமாலி முதலிய மூவர் பிரமனிடம் வரம்பெற்றபின் தேவசிற்பியான விசுவகர்மனையழைத்து 'எங்களுக்கு ஓரிருப்பிடம் சிறப்பாகஅமைக்க வேண்டும்' என்ன, அவன் 'தென்கடலில் திரிகூடமலேச்சார்பில் சுவேலமலையின்சிகர மொன்றில் இந்திரன்கட்டளைப்படி மிக்கசிறப்பாக என்னால் நிருமிக்கப்பட்ட இலங்கையையே உங்களுக்கு இடமாகக் கொள்ளுங்கள்' என்றுசொல்ல, அங்ஙனமே அவர்கள் இலங்கையில் வசித்தன ரென்றும், பிற்காலத்தில் அதுவே குபேரனுக்கும் அதன்பின் இராவணுதியர்க்கும் இடமாயிற் றென்றும் உத்தர ஸ்ரீராமாயணம் கூறுகின்றமை காண்க. மிகச்சிறந்த அம்மண்டபத்தில் வீற்றிருத்தலால் இராவணனுக்கு உண்டாகும் பொலிவோடு, இராவணன் வீற்றிருத்தலால் அம்மண்டபத்துக்குஉண்டாகிற பொலிவும், 'புனைமணி மண்டபமதனிற்பொலிய' என்ற தொடராற் பெறப்படும்.

நிற்பன-நிலையியற் பொருள்: அசரம்; மரம் மலை முதலியன. நடப்பன - இயங்கியற்பொருள்: சரம்; தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர் வாழ்வன. அடைமொழிகொடாது மலரெனக்கூறி, அதனால், மலர்களுட் சிறந்த தாமரையைக் குறித்தல், கவி மரபு. நுனிப்பது என்பது-ஆற்றலுக்கு அடைமொழி; நுனித்தல்-அதிசூட்சுமமாக அறிதல். ஆற்ற(லா)ல் என்பது 'உதவும்' என்ற பெயரெச்சத்தோடு இயையும்.உலகிலாவகையுழந்த தருமம்-தம்தமது வருணச்சிரமங்களுக்கு ஏற்பச்செய்த அற மென்க. தருமம்-இம்மை மறுமைவீடென்னும் மூன்றையுந்தருவதாதலே, "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங், காக்க மெவனோவுயிர்க்கு" என்ற திருக்குறளினாலும் அறிக.

நினைக்த - பெயர்; பெயரெச்சமுமாம். தச்சன் = தகுதன்: வடமொழி. பி-மீ:— [1]நின்றனவுந்திரிந்தனவும். [2]அரிய. [3]நுனிப்பதரு. [4]இலாத. [5]இழைத்த. [6]நினைந்தது. [7]தொரிந்தது. [8]மண்டபத்தினிழற். (நிசுரு)

ரு. [1]வண்டலங்கு நுதற்றிசைய வயக்களிற்றின் மருப்பொடிய வடர்த்த பொற்றோள், விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய பால் வரையின் விளங்க மீதிற், குண்டலங்கள் குலவரையை வலம்வருவா னிரவி[2]கொழுங் கதிர்சூழ் கற்றை, மண்டலங்கள் பன்னிரண்டு நாலி ந்தாய்ப் பொலிந்தவென வயங்க மன்னோ.

(இ - ள்.) வண்டு அலங்கு நுதல் திசைய வய களிற்றின்-வண்டுகள் மொய்க்கின்ற நெற்றியைக்கொண்டனவும் திக்குக்களிலுள்ளனவுமான வலிய [திக்கு] யானைகளின், மருப்பு ஒடிய - தந்தங்களும் முறியும்படி, அடர்த்த - வலிமையோடுதாக்கிய, பொன் தோள் - அழகியதோள்கள், விண் தலங்கள் உற வீங்கி - ஆகாயத்தினிடங்களெலாவும்படி பருத்து(உயர்ந்து), ஓங்கு மால் உதயம் வரையின்-உயர்ந்தபெரிய உதயபருவத்தம்போல, விளங்க-பிரகாசிக்கவும்,—நீதில் குண்டலங்கள் - அத்தோள்களின்மேல் (தொங்குகிற காதின்) குண்டலங்கள் (இருபதும்), கொழு கதிர் கற்றை சூழ் - செழுமை யான கிரணங்களின்தொகுதி சூழப்பெற்ற, இரவி மண்டலங்கள் பன்னிரண் டும்-சூரியமண்டலங்கள் பன்னிரண்டும், குலம் வரையை வலம் வருவான்-(எல்லாமலைகளினுஞ்) சிறந்ததான மேருவைச்சூழ, நால் ஐந்து ஆய் பொலி ந்த என - இருபதாய் விளங்கியனபோல, வயங்க-பிரகாசிக்கவும்,— (எ-று.)

தோள் வீங்கி விளங்க என்றும், குண்டலங்கள் வயங்க என்றும் இயை யும். ஒவ்வொருதோளும் உதயபருவத்தம்போல விளங்க என்பது, மூன் னிரண்டுஅடியின் பொருள்; **உவமையணி.** பின்னிரண்டு அடிகளில் இராவ ணனது நெடியபெரியவடிவத்துக்கு மகாமேருகிரியையும், அவனது குண் டலங்களுக்குச் சூரியமண்டலங்களையும் உவமைகூறுபவராய், துவாதசாதித் தர் இருபதுவடிவங்கொண்டு மேருமலையைச் சூழ்ந்தற்பொருட்டு நின்றுற் போல என வருணித்தார்; **தற்குறிப்பேற்றவணி.**

இராவணன் திக்குவிசயஞ்செய்த காலத்தில் ஐராவதம் முதலிய திக் கஜங்களே யெதிர்த்தபொழுது அவை கோபங்கொண்டு இவன்தோளில் தந் தங்களால் தாக்குகையில் மிக்கவலிமையுடைய இவன்தோள்களே ஊறுபடு த்தமாட்டாமல் அவை நுனிஒடிந்திட்டன வென்றும், பின்பு இராவணனும் போரில் அவற்றின் தந்தங்களே நன்றுகஒடித்திட்டா னென்றும் உணர்க. கன்னத்தினின்றுபெருகிய மதநீரைப்பருகுமாறு வண்டுகள் களிற்றின்நுத லில் அசைந்துமொய்க்குமென்க. திசைக்களிறு - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் என் பன; இவற்றைக் கிழக்குமுதலாக முறையேகொள்க. இவை, ஆண்யானைக ளாதலால், களிறெனப்பட்டன. 'விண்டலங்களுறவீங்கி' என்றதன் குறிப்

பால், அவன் தோள்வலிமையால் இந்திரன்முதலிய விண்ணுலகத்தவரை வென்ற சிறப்பும் தோன்றும்.

துவாதசாதித்தர் - தாதா, இந்திரன், அரியமா, மித்திரன், வருணன், அம்சுமான், பர்ஜந்யன், பகன், விவஸ்வான், பூஷா, விஷ்ணு, துவஷ்டா எனக் காண்க; இதற்கு வெவ்வேறுவகைகூறலு முண்டு: ஒவ்வொருமாதத் துக்கு ஒவ்வொருவராகச் சூரியர் பன்னிருவராவர். குலவரையை வலம்வரு வான் இரவி எனப்பிரித்து, மேருமலையைப் பிரதக்ஷிணமாகச் சுழ்கிற வானத் திற் சஞ்சரிக்குஞ் சூரிய னெனினும் அமையும். சந்திரனும் அக்கினியுமாகிய மற்றைச்சுடர்களுக்குக் கொடுத்துவாங்குந் தன்மையனவாய் நெடுந்தூரத்தும் மிகவிளங்கும் ஆயிரங்கிரணமாதலால், 'கொழுங்கதிர்க்கற்றை' எனப்பட்டன.

உதயவரை - சூரியன் முதலிய சுடர்கள் உதிக்கும் மலை. பொற்றோள் என்பதற்கு - பொன்னணியணிந்த தோளென்றும் பொருள்கொள்ளலாம்; பொன் - கருவியாகுபெயர். உதயமலையை யெடுத்துக்கூறினது, உதய காலத்தில் விளங்கும் அம்மலை இயற்கையாலும் அணிகலமணிதலாகிய செயற்கையாலும் ஒளிபெற்ற தோளுக்கு ஒப்பாகுதலால். இராவணனுக்கு முகம் பத்து ஆதலால், குண்டலம் இருபதாயின. பி-ம்:—[1]பண்டலங்கு நிசைக்களிற்றின் பணைமருப்பினிணையொடியப்படர்ந்த, பண்டலங்கல்... படர்ந்த. [2]கொடுங். சிலபிரதிகளில் இந்தச்செய்யுள் ''வாளுலா'' (நு) என்ற பாடலின்பின் காணப்படுகின்றது. (நுகூ)

ச. புலியினதை ஞடையானும் பொன்னுடை புனைந்தானும் பூவி னனு, நலியும்வலத் தாரல்லர் தேவரினிங் கியாவரினி நாட்ட லாவார், மெலியுமிடை தடிக்குமுலை வேயிளந்தோட் சேயரிக்கண் வென்றி மாதர், வலியநெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை வயங்க மன்னே.

(இ - ள்.) தேவரின்-தேவர்களுள், புலியின் அதள் உடையானும் - புலி யின் தோலை உடுக்கும்ஆடையாகவுடைய சிவபிரானும், பொன் ஆடை புனைந் தானும் - பொன்மயமான பீதாம்பரத்தைத் தரித்த திருமாலும், பூவினனும் - தாமரைமலரில்தோன்றிய பிரமனும்,நலியும் வலத்தார் அல்லர் - (இராவண னை) வருந்தச்செய்யும் வலிமையுடையவ ரல்லர்: (என்றால்), இங்கு-இவ்வுல கத்தில், இனி யாவர் நாட்டல் ஆவார்-வேறுஎவர் (இராவணனை வெல்பவரா கக்) குறித்தற்குரியவர்? [எவருமில்லை யென்றபடி]; (இங்ஙனம் எவரும் அவனை வணங்கச்செய்பவர்இல்லாததனால்),--மெலியும் இடை-மெல்லியதாய் ஒசிகிற இடையையும், தடிக்கும் முலை - மேன்மேற்பூரிக்கிற தனங்களையும், வேய் இள தோள் - இளமூங்கில்போன்ற இளமைவிளங்குந் தோள்களையும், சேய் அரி கண்-சிவந்த (உத்தமலக்ஷணமான) ரேகைகளையுடைய கண்களையும், வென்றி - (யாவரையும்) வெல்லுந்தன்மையையுமுடைய, மாதர் - மகளிரது, வலிய நெடு புலவியினும் - தணித்தற்குஅரிய நீண்டஊடலிலும், வணங்காத- தாழாத, மகுடம் நிரை-கிரீடங்களின் வரிசை, வயங்க-விளங்கவும்,—(எ-று.)

இராவணன் வணங்காமுடிய னென்பதை விளக்குதற்கு ஏற்ற காரணங் காட்டுவார், முன்னிரண்டடியில், திரிமூர்த்திகளும் அவனை வெல்லும் ஆற்றலிவு ராதலின் வேறெவரும் வெல்வாரில்லை யெனக்கூறினர். ஆதலால், இவன் யாவரையும் வணங்காளுயின னென்க. மிகவல்லவரான திரிமூர்த்திகளும் அவனை வெல்ல மாட்டாமைக்குக் காரணம், அவனதுவரபலம்; ஆனது பற்றியே, திருமாலும் மனிதனுகப்பிறக்கிதே அவனை வெல்ல வேண்டிற்று. அவனது வணங்காமுடியளுத்தன்மையி னுறுதியை விளக்குதற்கு, மகளிர் நெடும்பொழுது ஊடியகாலத்தில் அதனைத் தணிக்கற்கும் இவன் வணங்கா னென்று பின்னிரண்டடிகளிற் குறித்தார். ஆகவே, பிணங்கிய மகளிரும் இவனது பெருமைக்கு அஞ்சி இவன்சொல்லுக்கு இணங்குவரே யன்றி இவன் தம்மை வணங்கப் பாராரென்க. புலவியாவது - ஆடவரும் மகளிரும் இன்பநிலையில் அவ்வின்பத்தை மிகுவிக்கும் பொருட்டு ஒருவரோடொருவர் கோபித்தல்: இது, பிரணயகலக மெனப்படும். இங்கே 'நெடும் புலவி'என்றது, அவ்வூடலின் முதிர்ந்த நிலையை; அன்றி, அளவறிந்துகொள்ளாது நீளவிடுதலே யன்று. இன்சொல் முதலிய வேறுஉபாயங்களால் தணிக்கக்கூடிய நிலையைக் கடந்து காலில்விழுதலாகிய ஒருபாயத்தினுலேயே தணிக்கக்கூடிய நிலையை யடைந்த பெரும்புலவி யென்பதும், ''சில்லரிச் சிணிமென் தெய்வமலர்ச் சீறடியைத், தொல்லை மணிமுடிமேற் சூட்டினுன்-வல்லை, முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த, செழுநீல மாருச்சிவப்பு'' என்றபடி அப்புலவிக்காலத்தில் யாவரையும் வசப்படுத்தும் இயல்பினதான வணக்கத்தை ஆடவர் கொள்ளுதல் பெரும்பாலும் இயல்பென்பதும், அச்சிறப்புவிதியுமின்றி வணங்காமுடியனுய்நிற்பவன் இராவணனென்பதும்,'வலிய' என்றதனுலும், உயர்வுசிறப்பும்மையினுலும் நன்குவிளங்கும். இங்ஙனங்கூறியதனுல், வணக்கத்தினுலேயே சாதிக்கக்கூடிய காரியத்தையும் இராவணன் வேறுஉபாயங்களாற் சாதிக்குந் திறமுடையா னென்பது தொனிக்கும்.

மூன்றுமடியில் **'மெலியும்'**, **'நடிக்கும்'** என மாறுபட்டசொற்கள் வந்தது, **தொடைமுரணின்**பாற்படும். மெலியும் இடை - மற்றையவயவம் பருக்கப்பருக்கத் தான் சிறுக்கும் இடையென்க.'வென்றிமாதர்'என்றது,ஆடவரை அழகினுல் அடிமையாக்கிக்கொள்பவ ரென்றபடி; மகளிருட் சிறந்தகட்டழகுடைய உத்தமசாதிமாத ரென்றவாறுமாம்.

புலித்தோலுடுத்ததகதை:—ஒருகாலத்திற் பரமசிவன் தன்னேமதியாத தாருகவனத்து முனிவர்களது கருவத்தைப் பங்கஞ்செய்யவும் அவர்கள் மனைவிமாரின் கற்புநிலையைப் பரிசோதிக்கவுங் கருதித் தான் ஒருவிடசங்கமத்திருவுருவங்கொண்டு அவரில்லத்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ்செய்து, தன்னே நோக்கிக் காதல்கொண்ட அம்முனிபத்தினியரது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறுமற் கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்றுசெய்து, அவ்வேமத்தீயினின்றும் எழுந்த நாகங்கள் பூதங்கள் மான் புலி முயலகன் வெண்டலே முதலியவற்றையும் அவ்வேமத்தீயையும்

சிவனைக்கொன்றுவரும்படி ஏவ, சிவபெருமான், தன்மேற் பொங்கிவந்த நாகங்களே ஆபரணங்களாகவும், பூதங்களைத் தனது கணங்களாகவுங் கொண்டு, மானைக் கையில் ஏந்தி, புலியைத்தோலையுரித்து உடுத்து, முயலகனை முதுகிற் காலாலூன்றி, வெண்தலையைக் கையிற்பற்றிச் சடைமேலணிந்து, நெருப்பை ஒருகையிலேந்தி, இங்ஙனமே அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்துவிட்டன னென்பதாம். (நிகழ்ந)

நு. வாளுலா முழு[1]மணிகள் வயங்கொளியின் நிறைகவழங்க வயிரக் குன்றத், தோளெலாம் படிசுமந்த விடவரவின் படநிரையிற் றோன்ற வான்ற, நாளெலாம் புடைதயங்க நாமநீ [2]ரிலங்கையிற்றான் [3]வாரி யிட்ட, கோளெலாங் கிடந்தநெடுஞ் சிறை[4]யன்ன நிறையாரங் குலவ மன்னோ.

(இ - ள்.) வாள் உலாம்-ஒளிவீசப்பெற்ற, முழுமணிகள்-(ஆபரணங்களிலுள்ள) பெரிய இரத்தினங்கள், வயங்கு ஒளியின் தொகை வழங்க-விளங்குகிறஒளியின்தொகுதியை மிகுதியாகவீச, வயிரம் குன்றம் தோள் எலாம் - வச்சிரமயமான மலை போன்ற தோள்கள்யாவும், படி சுமந்த விடம் அரவின் படம் நிரையின் - பூமியைத் தாங்குகிற விஷத்தையுடைய சர்ப்பராசனுடைய படங்களின்வரிசைபோல, தோன்ற-விளங்கவும்,—ஆன்ற நாள் எலாம் புடை தயங்க - சிறப்பமைந்த நக்ஷத்திரங்கள் யாவும் பக்கங்களிலே விளங்கும்படி, நாம நீர் இலங்கையில்-அச்சத்தைத் தருகின்ற கடல் நீராற் சூழப்பட்ட இலங்காபுரியிலே, தான் வாரி இட்ட-(அவ்விராவணன்) தான் தொகுதியாகக்கொணர்ந்து அடைத்து வைத்த, கோள் எலாம் - கிரகங்களெல்லாம், கிடந்த - தங்கியிருந்த, நெடு சிறை - பெரிய சிறைச்சாலையை, அன்ன - ஒத்த, நிறை ஆரம் - நிறைந்த இரத்தினமாலை, குலவ - விளங்கவும்,—(எ - று.)

முன்னிரண்டடிகளில், கொடிய ராக்ஷசராசனுன இராவணனுக்குக் கடுமையுள்ள நாகராசனுன ஆதிசேஷனையும், அவனது பரந்தபெரியபல தோள்களுக்கு இவனது அகன்றபடங்களையும், தோள்களில் அணிந்த இரத்தினங்களுக்குப் படங்களிலுள்ள மாணிக்கங்களையும் உவமைகூறினர். பின்னிரண்டடிகளில், இராவணன் நக்ஷத்திரங்கள் பக்கங்களிற்பொருந்த நவக்கிரகங்களைப் பிடித்துக்கட்டிக் காவலில்வைத்த சிறைச்சாலை இடையிடையே நவரத்தினங்களும் அமைக்கப்பெற்று முத்துக்களாற் செய்யப்பட்ட உறுதியுள்ள வடத்துக்கு உவமைகூறப்பட்ட தெனக் காண்க. இராவணன் திக்குவிசயகாலத்தில் தேவர்களை வென்று அவர்களிற் பலரைச் சிறையிலிட்டனனென்பது பிரசித்தமாதலால், 'நாளெலாம்புடைதயங்க நாமநீரிலங்கையில்தான் வாரியிட்ட கோளெலாங் கிடந்த நெடுஞ்சிறை' எனப்பட்டது. முழுமணி - உத்தமலக்கணம்நிறைந்த இரத்தினம்; ஒளிநிரம்பிய இரத்தினம். மிக்கஉறுதிக்கு வயிரக்குன்றத்தை உவமைகூறினர். கோள்-சூரியன் முதலிய ஒன்பது. கோள்-க்ரஹ மென்ற வடசொல்லின் பொருள்கொண்

டது; (காலத்தை அளந்து) கொள்வதென்று பொருளுரைக்கப்படும். பீ-மீ:— [1]மதியின். [2]இலங்கையின்கண். [3]நலங்காட்டக். [4]அனேய. (டுகூசு)

வேறு.

சூ. ஆய்வரும் பெருவலி யரக்க ராதியோர்
நாயகர் நளிர்மணி மகுட நண்ணலாற்
றேய்வுறத் தேய்வுறப் பெயர்த்து செஞ்சுட
ராய்மணிப் பொலன்கழ லடிகின் றூர்ப்பவே.

(இ - ள்.) செம் சுடர்-சிவந்த ஒளியையுடைய, ஆய் மணி-சிறந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, பொலன் கழல்-பொன்னிழையாகிய வீரக்கழல்,— ஆய்வு அரு-(இவ்வளவினதென்று) ஆராய்வதற்கு அருமையான, பெரு வலி-மிக்கவலிமையையுடைய, அரக்கர் ஆதியோர் - இராக்கதர்முதலானவர்களுடைய, நாயகர் - தலைவர்களின், நளிர் மணி மகுடம் - பெருமையையுடைய இரத்தினகிரீடங்கள், நண்ணலால் - (அவர்கள் வந்து வணங்கும்பொழுதெல்லாம்) தன்மேல் வந்துபொருந்தப்பெறுதலால், தேய்வு உற தேய்வு உற-தேய்வடையுந்தோறும், பெயர்த்து-வேறுபட்டு [புதியஒளிமிகப்பெற்று என்றபடி], அடி நின்று ஆர்ப்ப - (தனது) பாதத்திலே பொருந்திஒலிக்கவும்,—(எ-று.)

இக்கவியை "கோவுடை மொடுமணி மகுட கோடியாற், சேவடியடைக்கு பொற்கழலுந் தேயுமால்" எனக் கீழ் அரசியற்படலத்தில் வந்ததனோடு ஒப்பிடுக. 'ஆய்வரும்பெருவலியரக்கர்' என்ற தொடர், அகத்தியப்படலத்து வந்துள்ளது. ஆதியோர் என்றது, அசுரர் யக்ஷர் அமரர் முதலியோரை. தேய்வுறத் தேய்வுற - அடிக்கு, தோறுப்பொருளது. ஆய் மணி - இரத்தின சாதியுள்தெரிந்தெடுத்த இரத்தினம்; (சிருங்குறளில் 'ஆய்மயில்' என்பதற்கு - பரிமேலழகர் இங்ஙனமே உரைகூறியுள்ளார்.) இரத்தின சாஸ்திரத்தின்படி குற்றமற்றுச் சிறந்த இரத்தின மென்க.

இதுமுதல் எட்டுக்கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட **கலி விருத்தங்கள்.** (டுகூடு)

எ. மூவகை யுலகினு முதல்வர் மூந்தையோ
ரோவல ருதவிய பரிசி னேங்கல்போற்
றேவரு மவுணரு முதலி னோர்திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே.

(இ - ள்.) மூ வகை உலகினும்-மூன்றுலகங்களிலும், முதல்வர் தலைவர்களாகவுள்ளவர்கள், மூந்தையோர் - முற்பட்டுவந்தவர்களாய், ஓவலர் உதவிய - ஒழியாதுகொண்டுசெலுத்திய, பரிசின்-காணிக்கைகளின், ஓங்கல் போல் - குவியல்போல,—தேவரும் அவுணரும் முதலினோர் - தேவர்களும் அசுரர்களும் முதலானவர்கள், திசை தூவிய - எல்லாத்திக்குக்களிலுமிருந்து மேற்சொரிந்த, நறு மலர் குப்பை - மணமுள்ள மலர்களின் குவியல்கள், துன்ன - நெருங்கிகிறையவும்,—(எ - று.)

தேவர்களும் அசுரர்களும் வாழ்த்துக்கூறி இராவணன்மேற் சொரிந்த புஷ்பவர்ஷத்துக்கு, எல்லாவுலகிலுமுள்ள அரசர்கள் அவன்முன் கொண்டு வந்து காணிக்கையாகச்செலுத்தும் ஸ்வர்ணபுஷ்பவர்ஷத்தை [பொருட்குவியலை] உவமைகூறினர். இனி, முன்னிரண்டுஅடிக்கு - மூன்றுலகங்களிலும் முதன்மைபெற்ற சிறந்த வள்ளல்கள் ஒப்வின்றிக்கொடுக்கும் கொடைப்பொருள்களின் தொகுதிபோலவென்று உரைத்தல் சிறப்பன்று. (நிசுசு)

அ. இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
யுன்னலர் கரதலஞ் சுமந்த வுச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்க
டுன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே.

(இ - ள்.) மின் அவிர் - மின்னல்போல ஒளிவிளங்குகிற, மணி முடி - இரத்தினகிரீடத்தையுடைய, விஞ்சை வேந்தர்கள் - வித்தியாதரராசர்கள்,—இன்ன போது இவ்வழி நோக்கும் என்பதை உன்னலர் - இன்னசமயத்தில் இப்பக்கத்தில் [தங்களை] (இராவணன்) பார்ப்ப னென்பதை அறியாதவர்களாய், கரதலம் சுமந்த உச்சியர் [உச்சி சுமந்த கரதலத்தர்] - (எப்பொழுதும் தங்கள்) தலைமேற்கூப்பிவைத்த (தங்கள்) கைகளேயுடையவர்களாய், துன்னினர்-சமீபித்து,முறை முறை - வரிசைவரிசையாக, துறையில்-சபாமண்டபத்தினிடங்களிலே, சுற்ற - சூழ்ந்துநிற்கவும்,—(எ - று.)

தாங்கள்வணங்குதலே இராவணன் பார்த்தல்மாத்திரத்தையே தாங்கள் பெறும் பெரும்பயனாகக் கருதி வித்தியாதரராசர்கள் அவனுடைய சபையில் அவன்முன்பே வந்து இடக்தோறும்நின்று எந்தக்கண்ணால் எப்பொழுது தம்மை அவன் பார்ப்பனேவென்று எதிர்பார்த்து எப்பொழுதும் சிரமேல் அஞ்சலிபந்தஞ்செய்தபடியே நிற்பார்க ளென்க. கரதலஞ் சுமந்த வுச்சியர்-விருதிபிரித்துக் கூட்டல். முடி - இடவாகுபெயர். (நிசுஎ)

கூ. மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினுக்
தங்களே யாமெனத் தாழுஞ் சென்னிய
ரங்கையு மூள்ளமுங் குவிந்த வாக்கையர்
சிங்கவே றெனத்திறற் சித்தர் சேரவே.

(இ - ள்.) மங்கையர்திறத்து ஒரு மாற்றம் கூறினும் - (குற்றேவல்) மகளிரைக்குறித்து யாதாயினுமொருகட்டளைமொழியை (இராவணன் அலட்சியமாக)க் கூறினலும், தங்களே ஆம் என-(அது) தங்களேக்குறித்துக் கூறியதாமென்று கருதி, தாழும் சென்னியர் - வணங்குகின்ற தலையையுடையவர்களும், அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர் - அகங்கைகளும் மனமும் குவியப்பெற்ற உடம்பையுடையவர்களுமாய்,--சிங்கம் ஏறுஎன திறல் சித்தர்-ஆண்சிங்கம்போல (மிக்க) பலபராக்கிரமமுடைய சித்தர்கள், சேர - அருகில் வந்து திரண்டுநிற்கவும்,—(எ - று.)

மகாபலசாலிகளான சித்தர்கள் ஏவல்மகளிர்போலாகி வணக்கவொடுக்கத்தோடு அமைத்துநிற்க வென்க. அங்கைகுவிதல் - கைகூப்பித்தொழுதல். உள்ளங்குவிதல் - பயபக்திவிசுவாசங்களால் மனம் அடங்கல்.

முன்னிரண்டுஅடிக்குச் சாதுரியமாகக் கூறப்படுவதொரு பொருள் வருமாறு:—மகளிரை முன்னிலைப்படுத்தி அழைக்கத்தொடங்கிய இராவணன் 'அடி!' என விளித்தனனேயினும், சித்தர்கள் தங்களை அடிக்கும்பொருட்டு அவன் 'அடி' என்று ஒருவனுக்குக் கட்டளையிட்டதாகக் கருதி, அஞ்சி, அங்ஙனம் அவன் அடிக்கச்சொல்லாதிருக்கும்பொருட்டுச் சரணாகதிசெய்பவராவ ரென்பது. மகடூஉவிளியிடைச்சொல்லாக அவன் 'அடி'எனக் கூறியதை இவர்கள் தமக்கு இயல்பாகவுள்ள அச்சத்தால் ஒருமையேவல்வினையாகக்கொண்டன ரென்க. (நூசுஅ)

கo. அன்னவ னமைச்சரை நோக்கி யாண்டொரு
நன்மொழி பகரினு நடுங்குஞ் நிந்தைய
ரென்னைகொல் பணியென விறைஞ்சு நின்றனர்
கின்னரர் பெரும்பயங் கிடந்த நெஞ்சினர்.

(இ - ள்.) அன்னவன்-அவ்விராவணன், அமைச்சரை நோக்கி-(தனது) மந்திரிகளைப் பார்த்து, ஆண்டு - அவ்விடத்து, ஒரு நல் மொழி பகரினும் - ஏதேனும் ஒருநல்வார்த்தையை (இரகசியமாக)ச்சொன்னலும், நடுங்கும் நிந்தையர் - (தங்களைத் தண்டிப்பதற்கு ஏதோகூறினனென்று) கலங்கும் மனமுடையவர்களாய், பெரு பயம் கிடந்த நெஞ்சினர் - மிக்கஅச்சம் நீங்காத தங்கிய மனத்தையுடையவர்களாகி, பணி என்னைகொல் என - அவன்கட்டளை யாதோ வென்று, கின்னரர் - கின்னரரென்னுந் தேவசாதியார், இறைஞ்சுகின்றனர் - வணங்குகின்றவர்களாகவும்,—(எ - று.)

'இறைஞ்சுகின்றனர்' என்ற வினைமுற்றுக்கு - வினையெச்சமாக இறைஞ்சுவினைப் பொருள்கொள்ளப்பட்டது; இறைஞ்சுகின்றவராய் எனப் பொருள்கொண்டு, கீழ்க்கவியில் வந்த "சேர"என்பதனோடாவது, மேற்கவியில் வரும் "சூழ" என்பதனோடாவது சேர்த்தலு மொன்று. கின்னரர் - குதிரைமுகமும் மனிதவுடலுமுடைய ஒருதேவசாதியார்; கின்னரமென்னும் வாத்தியத்தைக் கைக்கொண்டு இசைபாடித்திரிபவர். (நூசுக)

கக. [1]பிரகர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத தணணல்லக கணணி னோகக்ய
நரகின ராமென நடுங்கு நாவின
[2]ருரகர்க டம்மன முலைந்து சூழவே.

(இ - ள்.) பிரகரம் - (பாஞ்செய்தவர்களை) நன்றாகத்தண்டிக்கற்கு உரிய, நெடு திசை - பெரிய (தெற்குத்) திக்குக்குத் தலைவனனை, பெரு தண்டு ஏந்திய கரதலத்து-பெரிய காலதண்டத்தை யேந்திய கையையுடைய, அண்ணலை - பெருமையையுடைய யமனை, கண்ணின் நோக்கிய-கண்ணைதிரிலே கண்ட, நரகினர் என - நரகவாசிகள்போல, நடுங்கும் நாவினர் - (இராவணனைக் கண்டமாத்திரத்தில்) வாய்குளறுபவராய், தம் மனம் உலைந்து - தங்களுடைய மனம் சோர்ந்து, உரகர்கள் - நாகர்கள், சூழ - சூழ்ந்துநிற்கவும்,—(எ - று.)—ஆம் - அசை.

தென்திசைத்தலைவனுய்க் கொடியதண்டனைசெய்வதிற் கண்ணோட்ட மில்லாத யமனைத் தென்திசையையாளுகிற கொடியவனுன இராவணனுக்கு உவமைகூறினர். ப்ரஹர மென்ற வடசொல் அடித்த லென்று பொருள் படும்; இங்கே இலக்கணையாய்த் தண்டனைக்கு வந்தது. பாவிகள் தண்டனைப்படுந் திசை யெனவே, யமனுக்குரிய தென்திசை யாயிற்று. தருமத்தைக் காக்கும்பொருட்டே அதினின்று தவறுபவர்களை முறைப்படி தண்டிப்பவனுதலால், யமனை 'அண்ணல்' என்று சிறப்பித்துக்கூறினர். 'தண்டேந்திய கரதலத்து அண்ணல்' - தண்டதரன். நரகினர் - நரகலோகத்தில் தண்டனையனுபவிக்கிற பாவிகள். நடுங்குநாவினர் - தடுமாறும்மொழியையுடையவர். உரகர் - படமும் வாலுமுடையராய் மனிதவடிவமுந் தெய்வப்பிறப்புமானதொரு சர்ப்பசாதியார். இராவணன்சபையில் வந்துள்ள உரகர்களுக்கு நரகினரை உவமைகூறியதனுல், அவன்சபை நரகம்போலக் கொடியதாயுள்ள தென்பது தொனிக்கும். **பி-ம்:**—[1]பிரிதரநெடுந்திசை.[2]உரகருர். (நுஎ0)

கஉ. திசையுறு கரிகளைச் [1]செற்றுத் தேவனும்
வசையுறக் கைலையை மறித்து [2]வானெலா
[3]மசையுறப் [4]புரந்தர னடர்த்த தோள்களி
னிசையினைத் தும்புரு விசையி னேத்தவே.

(இ - ள்.) திசை உறு கரிகளை - திக்குக்களிற் பொருந்திய யானைகளை [திக்கஜங்களை], செற்று - வலியடக்கிவென்று, தேவனும் வசை உற-மகாதேவனுன சிவபிரானும் பழிப்படையும்படி, கைலையை மறித்து-கைலாசகிரியைப்பெயர்த்தெடுத்து, வான் எலாம் அசையுற - விண்ணுலகத்தாரெல்லாரும் நடுங்கும்படி, புரந்தரன் அடர்த்த-இந்திரனை நெருக்கிப்போர்செய்த, தோள்களின் - (இருபது) புயங்களினது, இசையினை - புகழை, தும்புரு-தும்புரு வென்னுங் கந்தருவமுனிவன், இசையின் ஏத்த - வீணையின்காதத்தோடு எடுத்துப்புகழவும்,—(எ - று.)

கைலையை யெடுத்தவரலாறு:—இராவணன் திக்குவிசயஞ்செய்கையிற் குபேரனோடு எதிர்த்துப் பொருது அவனை வென்று அவனது புஷ்பக விமானத்தைப் பறித்து அதன்மேலேறிக்கொண்டு கைலாசமலைக்குமேலாக ஆகாசமார்க்கத்திலே விரைந்து மீண்டுவருகையில், அம்மலையின் மகிமையால் விமானந் தடைப்பட்டுநிற்க, அதற்குக் காரணம் இன்னதென்று அறியாது திகைக்கையில், நந்தி எதிரில்வந்து 'சிவபிரானுக்குத் தங்குமிடமான திருக்கயிலாயத்தின் பெருமை இது' என்றுசொல்லவும், கேளாமல் தசமுகன், 'எனது பிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடு பறித்து எடுத்து அப்பால்எறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேன்'என்று கூறி விமானத்தினின்றுமிறங்கித் தனதிருபதுகைகளையும் அம்மலையின்கீழ்க்கொடுத்து அதனைப் பெயர்த்து அசைத்தனன் என்பதாம்.

கைலை - கைலாஸ மென்கிற வடசொல்லின் திரிபு. புரந்தரன் - வடசொல்; (பகைவர்களுடைய) நகரங்களை யழிப்பவன். தும்புரு - நாரதன்

போல இசைபாடுதலிற் சிறந்தவனும், கந்தருவர்களுக்குக் குருவுமான ஒரு முனிவன். இவனது வீணை கலாவதியென்று பெயர்பெறும். அசையுற - ஆசைய; உறு - துணைவினை. பி-ம்:—[1]செயித்துத் தேவரும். [2]வாழ்வெலாம். [3]நசையுற. [4]புரந்தரனடர்ந்த, புரந்தனநடந்த. (இஎக)

கஈ. சேணுயர் நெறிமுறை திறம்ப [1]லின்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் [2]பண்ணிடை
வீணையி னரம்பிடை [3]விளைத்த தேமறை
வாணியி னரதன் செவியின் வார்க்கவே.

(இ - ள்.) சேண் உயர் - மேலுலகத்திலே வழங்குவதாய்ச் சிறந்த, நெறி முறை - சங்கீதமார்க்கத்துக்கு உரிய விதியினெழுந்த, திறம்பல் இன்றியே - தவறுதலில்லாமல், பாணிகள் பணி செய - கைகள் (ஸ்வரஸ்தாகங்களிற் சென்று) உரியதொழில் செய்ய, வீணையின் நரம்பிடை விளைத்த - வீணையினது நரம்புகளிலே உண்டாக்கிய [தடவிவாசித்து எழுப்பிய], பழுது இல் பண்ணிடை - குற்றமில்லாத இராகத்தில், (அமைத்து), தேம் மறை - இனியவேதத்தை, நாரதன் - நாரதமகாமுனிவன், வாணியின் - சரசுவதிபோல, செவியின் வார்க்க - காதுகளிலே செலுத்தவும்,—(எ - று.)

இராவணன் கேட்டுமகிழும்படி தேவமுனிவனை நாரதன் சிறந்ததேவ காருமுறைமைப்படி கைகளால் யாழ்நரம்பை வருடி இசையெழுப்பி அவ்யாழிசைக்கு ஒப்ப ஸாமகீதம்பாட என்பது பொருள். நாரதனது இசைபாடற்சிறப்புக்குச் சரசுவதியை உவமைகூறினர்; அதன்குறிப்பால், அவளும் இராவணனுக்குப் பணிசெய்யுந்தன்மைய ளென்பது தொனிக்கும். எல்லாவேதங்களுள்ளும் ஸாமவேதம் சிறந்தலாலும், அது கடவுளின்சொரூபமாயும் கடவுளுக்கு மிகப்பிரியமானதாயு முள்ளதனாலும், செவிக்கினியஸ்வரங்களுடன் அமைதலாலும், 'தேமறை' எனப்பட்டது. இனி, தேமறை-காந்தருவவேதமெனப்படுகிற சங்கீதமேயாகவுமாம். வார்க்க என்ற வினைக்கு ஏற்ப, வேதத்தைத் தேனுகக் கொள்க. இனி, தேன் மறை எனப்பிரித்து, மறைத்தேன் என மொழிமாற்றி, வேதமாகிய தேனை யென்றலும் ஒன்று;தேன் + மறை = தேமறை: தேன்மொழி மெலிவர இறுதியழிந்தது; [நன்-மெய்-கஈ.] நாரதன் என்ற வடமொழிப்பெயர் - ஆத்துமஞானத்தை உபதேசிப்பவ னென்றும், மனிதர்களுக்குள்ள ஒற்றுமையைக் கெடுப்பவ னென்றும் காரணப்பொருள் படும்: நரன் - ஆத்மா, அதற்குரிய ஞானம்-நாரம், த-கொடுத்தல்; அல்லது நரர் - மனிதர், அவர்சம்பந்தமான ஒற்றுமை-நாரம், த - கெடுத்தல். இவர். பிரமனது மனத்தினின்று தோன்றிய குமாரர். இவரது வீணை மகதீ சரசுவதியின் வீணை கச்சபீ. 'பாணிகள்பணிசெய' - கைகள் தாளம்போடுதலாகிய தொழிலேச்செய்ய என்று உரைத்தல், சிறப்பன்று. பி-ம்:—[1]அன்றியே. [2]பண்ணடை, பண்ணிறை. [3]வீளைத்த. (இஎஉ)

வேறு.

கஉ. மேகமென் றுருத்தி [1]கொண்டு விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமுஞ் சுரந்த [2]தீந்தேம் புனலொடு மளாவி நவ்வித்

தோகையர் துகிலிற் [3]றோயு மென்பதோர் துணுக்கத் தோடுஞ்
சீகர மகர வேலைக் காவலன் சிந்த மன்னோ.

(இ - ள்.) மகரம் வேலை காவலன் - சுறுமீன்களையுடைய கடலுக்குத் தலைவனை வருணன்,—விண்ணவர் தருவும் - தேவர்களுடைய கற்பகவிரு க்ஷங்களின் மலர்களும்,விஞ்சை நாகமும்-வித்தியாதரலோகத்திலுள்ள சிறந்த மரங்களின் மலர்களும், சுரந்த-சொரிந்த, தீம் தேன்-இனிமையான தேனை, புனலொடும் அளாவி-நல்லநீருடன் கலந்து, (அதனை), மேகம் என் துருத்தி கொண்டு - மேகமென்கிற வீசுகுழலி லெடுத்துக்கொண்டு, நவ்வி தோகை யர் துகிலில் தோயும் என்பது ஓர் துணுக்கத்தோடும் - (சபையிலுள்ள இரா வணனைச் சார்ந்த) மானும் மயிலும் போன்ற மகளிரது ஆடையிற் படியு மென்ற ஓர்அச்சத்துடனே, சீகரம் சிந்த - சிறுதிவலைகளாகச் சிந்தவும்,—

வேலைக்காவலன் அளாவிக் கொண்டு துணுக்கத்தோடு சீகரம் சிந்த என்க. மெல் துருத்தி யெனப் பிரித்தும் உரைக்கலாம். மேகம், தரு, நாகம், ஸீகரம், மகரம், வேலை-வடசொற்கள். விஞ்சையென்பது-மாயவித்தையைத் தரிப்பவரான வித்தியாதரர்களுடைய உலகத்துக்கு இருமடியாகுபெயராம். நாகம்-நிலைபெயராத தெனக் காரணப்பொருள்படும். தரு, நாகம் என்றவை-முதலாகுபெயராய், இங்கு மலரைக் குறித்தன. தேன் + புனல் = தேம்புனல். மகரம் - கடலிலேயே வாழ்வ தொரு மீனின் சாதி. நாகம் என்பதற்கு - சுர புன்னைமர மென்று உரைப்பாரு முளர். மன், ஓ - ஈற்றசைகள். **பி ம்:**— [1]வீக்கி. [2]தீந்தேனறும்புனலோடளாவித். [3]தோய்க்கும்.

இதுவும், அடுத்த கவியும் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரியவிருத்தங்கள்.** (நிஎக)

கடு. நறைமலர்த் தாதுந் தேனு நளிநெடு மகுட கோடி
முறைமுறை யறையச் சிந்தி முரிந்தகு மணியு முத்துந்
தறையிடை யுகாத முன்னந் தாங்கினன் றழுவி வாங்கித்[னோ.
துறைதொறுந் தொடர்ந்து நின்று சமீரணன் றுடைப்ப மன்

(இ - ள்.) சமீரணன் - வாயுதேவன்,—நறை மலர் - நறுமணமுள்ள பூக்களினின்று சிந்துகிற, தாதும்-மகரந்தப்பொடிகளையும், தேனும் - தேனை யும், நளி நெடு மகுட கோடி - (அங்குவந்துள்ள அரசர்களுடைய) பெரிய நீண்ட கிரீடங்களின் கூட்டங்கள், முறை முறை அறைய - (நெருக்கத்தால்) ஒன்றோடொன்று தாக்குதலாலே, முரிந்து சிந்தி உகு-பின்னப்பட்டுச் சிதறிச் சிந்துகிற, மணியும் - இரத்தினங்களையும், முத்தும் - முத்துக்களையும், தறை யிடை உகாத முன்னம் - தரையிலே சிந்துதற்கு முன்னமே, தழுவி தாங்கி னன் வாங்கி-ஆங்காங்குச் சென்று ஏந்தி யெடுத்து, துறைதொறும் தொடர் ந்து நின்று - (தேவர்முதலியோர் வந்து கூடிய அம்மண்டபத்தின்) ஒவ்வோ ரிடத்திலும் (அவரவர்களைத்) தொடர்ந்துசென்று நின்று, துடைப்ப - (அவ்

விடங்களைச்) சுத்திசெய்து கொண்டிருக்கவும்,—(எ - று.) மன், ஓ - ஈற்ற சைகள்.

• சமீரணன் மலர்த்தாதும் மலர்த்தேனும் மகுடகோடி உகுமணியும் முத்தும் தழுவித் தாங்கினன் வாங்கித் தொடர்ந்துசென்று தூதைப்ப வென்க. நறை - நறுமை; 'ஐ' விகுதி பெற்ற பண்புப்பெயர். மணி - இங்கே, முத்து ஒழிந்த மற்றையஇரத்தினங்கள். தறை - தரா என்ற வடசொல் நிரிந்தது; அதற்கு - (பொருள்களைத்) தரிப்பது என்று பொருள். சமீரணன் என்ற வடமொழிப்பெயர் - நன்றாகச் சஞ்சரிப்பவனென்று பொருள்படும். இக் கவியால், அவ்விராவணசபையில் அகற்றத்தக்க குப்பையாய் நிற்பன மலர்த் தாது முதலியனவே யென்ற சிறப்பு விளங்கும். (நிளச)

வேறு.

கசு. மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
[1]தன்னெடுங் கஞ்சுகத் துகிலர் [2]சோர்விலர்
பொன்னெடு [3]வெள்ளியும் புரந்த ராதியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே.

(இ - ள்.) பொன்னெடு - (தேவகுருவான) பிருகஸ்பதியும், வெள்ளி யும் - (அசுரகுருவான) சுக்கிரனும்,—மின் உடை வேத்திரம் கையர் - மின் னல்போன்ற ஒளியையுடைய பொற்பிரம்பை யேந்திய கையையுடையவர்க ளும், மெய் புக தன் - உடம்புமுழுவதும் உட்புகும்படி அமைத்த, நெடு கஞ் சுகம் துகிலர்-நீண்ட ஆடையாலாகிய பெருஞ்சட்டையைத் தரித்தவர்களும், சோர்வு இலர் - (தொழில்செய்தலில்) தளர்ச்சியில்லாதவர்களுமாய், புரந்த ஆதியர்க்கு - இந்திரன் முதலியோர்க்கு, முறை முறை-(அவரவர்க்குத்) தக்க முறைப்படி, இருக்கை - ஆசனங்களை, இன் இயல் - இனிய தன்மையோடு, ஈய - கொடுக்கவும்,—(எ - று.)

பிருகஸ்பதியும் சுக்கிரனும் இராவணனுக்குச்சேவகர்களாய் அமர்ந்து அவன்கட்டளைப்படி அவன்சபைக்குவரும் இந்திரன்முதலானோர்க்கு அவரவர்க் குத்தக்கபடி உபசாரத்தோடு ஆசனங்கொடுத்துவர வென்க. அவர்கள், கொ ண்ட வேலைக்கு ஏற்பக் கையிற் பிரம்பையும் உடம்பில் முழுச்சட்டையையும் தொழிலிற்சோர்வின்மையையுந் தரித்ததனை, முன்னிரண்டடிகளில் விளக்கி னர். 'பொன்னெடு வெள்ளியும்' என்றதன்உண்மைப்பொருளைநோக்காது, இதனை 'இருக்கை' என்பதற்கு அடைமொழியாக்கிவிட்டு வேலையாட்கள் இந் திரன் முதலியோர்க்கு இனிமைபொருந்திய பொன்னினாலும் வெள்ளியினாலு மாகிய ஆசனங்களை வரிசைக்கிரமப்படி கொடுக்கவென்று உரைத்தல் சிற வாமை உணர்க. தேவகுருவான பிருகஸ்பதியோடு ஒப்ப அசுரகுருவான சுக்கி ரனையுங் கூறினதனால், கண்டகனான இராவணன் தேவர்களைப்போலவே அசுரர்களையும் பகைத்து வென்று அவர்கள்நிறத்திலுங் கொடியாலுஞ் நடந்து வந்தன னென்பது வெளியாம். இந்திரனால் ஆசனந்தந்து உபசரிக்கப்படுப வர் இந்திரனுக்கு ஆசனமளிக்கும்படியாயினது, இராவணனது கடக்கலாகாக

கட்டளையினுலென்க. நெடுங்கஞ்சுகம் - நீலையங்கி; குப்பாயமெனவும், மெய்ப் பையெனவும்படும். பொன், வெள்ளி என்பன - அவர்க்கு, நிறம்பற்றிவந்த பெயர்கள். 'மின்னுடைவேத்திரம்' எனவே, பொற்பிரம்பாயிற்று. பொன் னெடு என்பதில், ஒடு - எண்ணுப்பொருளது. புரந்தராதியர் - வடமொழி ப்புணர்ச்சி. வெள்ளி - வெண்ணிறமுடையவன்; இ-பெயர் விகுதி. பி - ம்:— [1]துன்னிடு. [2]சோர்விலாப். [3]வெள்ளியிற்.

இதுமுதல் இருபத்தைந்துகவிகள்-இப்படலத்தின் ஆறுங்கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (நுஎடு)

கஎ. சூலமே முதலிய துறந்து [1]சுற்றிய
சேலையாற் செய்யவாய் புதைத்துச் செங்கையன்
றோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாங்
காலன்வந் திசைக்கு[2]நாட் கடிகை கூறவே.

(இ - ள்.) காலன்-காலத்தையறிந்துகடக்கும் கடவுளான யமன்,—சூல மேமுதலிய துறந்து-சூலம் முதலிய (தனக்கு உரிய) ஆயுதங்களே விட்டிட்டு, சுற்றிய சேலையால் செய்ய வாய் புதைத்து-சுற்றியுள்ள ஆடையைக்கொண்டு (தன்னுடைய)சிவந்தவாயை மூடிக்கொண்டு, செம் கையன்-செவ்வியகையை யுடையவனுகி,—தோல் உடை நெடு பணை துவைக்கும் தோறு எலாம்-தோற் போர்வையையுடைய பெரிய பேரிகைவாத்தியங்கள் அடிக்கப்படுஞ் சமயங் களிலெல்லாம், வந்து-சித்தஞ்சுவந்து, இசைக்கும்-சொல்லுதற்குரிய, நாள் கடிகை - நாளின்நாழிகைக்கணக்கை, கூற - சொல்லவும்,—(எ - று.)

நாழிகைமுரசம் அறையவேண்டிய சமயங்களிலெல்லாம் தவறுமல் யமன் அச்சத்தால் ஆயுதங்களே அகற்றிவிட்டு ஆடையால் தன்வாயைப் புதைத்துக்கொண்டு வெகுமரியாதையோடு வந்து காலத்தைச் சரியாகக் கணக்கிட்டுச்சொல்லுதலாகிய தனது குற்றேவற்றொழிலே ஒழுங்காகநடத்த வென்க. 'அடக்கமென்பது - உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக் கம்; அவை - பணிந்தமொழியும் தணிந்தநடையும் தானேமடக்கலும் வாய்பு தைத்தலும் முதலாயின'என்ற நச்சினர்க்கினியருரைவாக்கியம் இங்குஅறியத் தக்கது. சூலம் - முத்தலைவேல். ஏ-அசைநிலை. முதலிய என்றதனுல், கால தண்டமும் காலபாசமும் பெறப்படும்.சேலை-சேலாஎன்ற வடசொல்திரிந்தது. கடிகை-கடிகா என்ற வடசொல் திரிந்தது. [1]சுற்றியசேலையாற் சிறிய வாய் புதைத்துச் செங்கையின்என்ற பாடத்துக்கு - அரையிற்சுற்றிய உத்தரீயத் துடன் செங்கையினுல் (தன்னுடைய) சிறியவாயைப்புதைத்தென்க. இங்கு 'சிறிய வாய்'என்றது,பணிந்தமொழியைக் காட்டுதற்கு.வாயைக்கூறியது மூக் கிற்கும்உபலட்சணம்: தன்னுடைய மூச்சுக்காற்றுப் பெரியோர்மேற் படாதிரு க்கவேணு மென்ற கருத்தினுல் வாயையும் மூக்கையுஞ்சேர்த்து ஆடையாற் சுற்றுதல் மரபு. படைக்கலமேந்துதல் தண்டனைசெய்தல்என்ற இவை நீங்கிய கைகளே யுடையானென்பார் 'செங்கையன்' என்றார். [2]நாள் கடி

கைகூட என்ற பாடத்துக்கு, நாளின்நிலையையும் நாழிகையின் கணக்கை யும் கூட வென்று உரைக்க. பி - மீ:—[1]சுற்றிய...புதைத்த. (இளசு)

கஉ. நயங்கிளர் நானநெய் யளாவி நந்தலில்
வியங்கருப் பூரமென் பஞ்சின் மீக்கொளீஇக்
கயங்களின் மரைமலர்க் காடு பூத்தென
வயங்கெரிக் [1]கடவுளும் விளக்க மாட்டவே.

(இ - ள்.) வயங்கு எரி கடவுளும் - விளங்குகிற அக்கினிதேவனும், நயம் கிளர் நானம் நெய் அளாவி - நன்மை மிக்க [சிறந்த] கஸ்தூரியுடைய நெய்யை(த் தகழியிற்)சேர்த்து, நந்தல் இல் - குறைவில்லாத [மிக்க], வியம்- சிறந்த, கருப்பூரம் - கர்ப்பூரத்திலும், மெல் பஞ்சின் மீ - மென்மையான பஞ் சுத் திரியிலும், கொளீஇ - பற்றவைத்து, கயங்களின் மரை மலர் காடு பூத்து என - குளங்களில் செந்தாமரைமலர்த்தொகுதி மலர்ந்தாற்போல, விளக் கம் மாட்ட - விளக்குக்களே யேற்றவும்,—(எ - று.)

நானம்நெய் என்பதற்கு - கஸ்தூரிகலந்த நெய்யென்று உரைப்பாரு முளர். கர்ப்பூரம் - வடசொல். கொளீஇ - கொளுத்தி: சொல்லிசையள பெடை. மரை - தாமரை யென்பதன் முதற்குறைவிகாரம். விளக்கம் - விளங்கச்செய்வது; அம் - கருத்தாப்பொருள் விகுதி. வியம் - உரிச்சொல். நீர்நிலை - சபைக்கும், செந்தாமரைமலர்க்காடு - விளக்கின்தொகுதிக்கும் உவமை. உம் - இறந்ததுதழுவிய எச்சம். பி-மீ:—[1]கடவுட்.. (இளஎ)

கஙு. அதிசய [1]மளிப்பதற் கருள றிந்துநற்
புதிதலர் கற்பகத் தருவும் பொய்யிலாக்
கதிர்நெடு மணிகளுங் கறவை யான்களு
நிதிகளு முறைமுறை நின்று நீட்டவே.

(இ - ள்.) நல் - சிறந்த, புதிது அலர்-(எப்பொழுதும்) புதுமையாக மல ருந் தன்மையுள்ள, கற்பகம் தருவும் - கற்பக விருக்ஷங்களும், பொய் இலா கதிர் நெடு மணிகளும் - தவறுத [உண்மையான] ஒளிகளேயுடைய சிறந்த (சிந்தாமணி முதலிய) தேவரத்தினங்களும், கறவை ஆன்களும் - கறக்குந் தன்மையனவான (காமதேநு முதலிய) பசுக்களும், நிதிகளும் - (சங்கநிதி முதலிய) நிதிகளும்,—அதிசயம் அளிப்பதற்கு - (இராவணன்மனத்துக்கு) வியப்பை யுண்டாக்கும்பொருட்டு, அருள் அறிந்து - அவன்கருணைசெய்யுஞ் சமயமறிந்து, முறை முறை நின்று நீட்ட-வரிசைவரிசையாய்நின்று (தங்கள் தன்மையை முன்னிட்டுக்) காண்பிக்கவும்,—(எ - று.)

ஜாலவித்தைசெய்வோர்பலர் ஒருபிரபுவை யடுத்து அவன்மனத்தை மகிழ்விக்கும்பொருட்டுச் சமயம் அறிந்து ஒவ்வொருவராய்வந்து முன்நின்று தந்தமதுதிறமையின்படி பலபொருள்களே உண்டாக்கிக் காட்டும் இயல்பு போல. வேண்டினபொருள்களே வேண்டினபடியெல்லாம் உண்டாக்குந்தன் மையுள்ள கல்பகவிருக்ஷம் காமதேநு சிந்தாமணி நவநிதி முதலிய தேவர்செல் வங்கள் இராவணனையடுத்துத் தம்விஷயத்தில் அவனுக்குக் கொண்டாட்டத்

தை யுண்டாக்கும்பொருட்டு அவன்கருணைகொள்ளுஞ் சமயம் அறிந்து ஒவ்வொன்றாய் வந்து முன்நின்று தந்தமதுதிறமையை வெளியிட்டுக்கொண்டு தலைகாட்டவென்பது கருத்து. இனி, 'அதிசயமளிப்பதற்கு' என்பதற்கு - அவன்சபையில் வருபவர்களுடைய பலவகைத்திறமைகளைக் கண்டு வியந்து அவர்களுக்குப் பரிசுகொடுக்கும்பொருட்டு என்று பொருள்கொண்டு, அதற்காகக் கல்பகவிருக்ஷம் முதலியன தந்தமக்குஇயன்ற பொருள்களைச் சமயமறிந்து கொடுத்துவர வென்று உரைத்தலு முண்டு; கற்பகவிருக்ஷம் முதலியன இராவணனெதிரில் நின்றுகொண்டு, அவன் யாரிடத்தில் அருள் கொண்டு எவர்க்கு எப்பொழுது என்னபொருள் கொடுக்கச்சொல்லிக் குறிப்பாகவேனும் வெளிப்படையாகவேனும் கட்டளையிடுவனே வென்று எதிர்பார்த்து அக்கட்டளைப்படி அந்தந்தப்பொருள்களை உண்டாக்கிக் கொடுத்துக்கொண்டிருக்க என்பது கருத்தாம். கற்பகதரு - சந்தானம் மந்தாரம் பாரிஜாதம் கல்பகம் அரிசந்தனம் என ஐந்தாம். தேவமணிகள் - சிந்தாமணியும், சூளாமணியும் எனப்படும். கறவையான் - "மறவியொன்றுமின்றி மனத்ததே சுரக்கும்பால, கறவையிற் கறக்குந் தம்மாற் காமுறப் பட்டவெல்லாம்" என்ற சிந்தாமணியின்படி மனத்தில் நினைத்த பொருள்களையெல்லாம் தருந்தன்மையுள்ள காமதேனுவென்க. காமதேனுபோலவே அதன் கன்றான நந்தினி முதலிய சந்ததியிலுள்ளனவும், வேண்டிய வேண்டியாங்கு ஈயுந்திறத்தன வாதலால், 'ஆன்கள்' எனப் பன்மையாற் கூறினர். நிதிகள் - சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என ஒன்பதாம். **பி-ம்:**—[1]அளிப்பவர்க்கருளிற்றந்ததால்.

உ9. குண்டல முதலிய குலங்கொள் பேரணி
மண்டிய பேரொளி [1]வயங்க வீசலா
லுண்டுகொ லிராவினி யுலக மேழினு
மெண்டிசை மருங்கினு மிருளின் றென்னவே.

(இ - ள்.) குண்டலம் முதலிய - குண்டலம் முதலான, குலம் கொள் பேர் அணி - சிறப்பைக்கொண்ட பெரிய ஆபரணங்கள், மண்டிய பேர் ஒளி- அடர்ந்த மிக்கஒளியை, வயங்க வீசலால் - (எங்கும்) விளங்கும்படி வீசுதலால்,—'இனிஉலகம் எழினும் இரவுஉண்டுகொல் - இனி எழுவகைலோகங்களிலும் இராத்திரியென்பது ஒன்று உண்டோ? எண் திசை மருங்கினும் இருள் இன்று - எட்டுத்திக்குப்பக்கங்களிலும் இருள் இல்லையே! என்ன - என்று (காண்பவர்) சொல்லும்படியாகவும்,—(எ - று)

குண்டலம்முதலிய அணிகள், இராவணன் தரித்துள்ளவை. குலம் என்பது - மேன்மையை யுணர்த்திற்று; 'குலகிரி' என்றவிடத்துப்போல. கொல் என்ற இடைச்சொல் - வினாப்பொருளில் வந்தது. உலகமேழ்-பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் மஹர்லோகம் ஜநலோகம் தபோலோகம் சத்தியலோகம் என்ற மேலேழும், அதலம் விதலம் சுதலம் தராதலம் ரஸாதலம் மகாதலம் பாதாளம் என்ற கீழேழும். **பி-ம்:**— வயங்கி. (டுஎக)

உக. கங்கையே முதலிய [1]கடவுட் கன்னியர்
கொங்கைகள் சுமந்திடை கொடியி னெல்கிடச்
செங்கையி னரிசியும் மலருஞ் சிந்தினர்
மங்கல முறை[2]முறை கூறி வாழ்த்தவே.

(இ - ள்.) கங்கையே முதலிய கடவுள் கன்னியர் - கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களுக்கு உரிய தேவதைகளாகிய மகளிர், கொங்கைகள் சுமந்து இடை கொடியின் ஒல்கிட-பருத்த தனங்களைச் சுமத்தலால் (தங்கள்) மெல்லிய இடை கொடிபோலத் துவளும்படி,(அருகில்வந்து), செம் கையின் அரிசியும் மலரும் சிந்தினர் - சிவந்த தங்கள்கைகளால் அக்ஷதைகளையும் புஷ்ப பங்களையும் (இராவணன்மேல்) தூவி, முறை முறை - அடிக்கடி, மங் கலம் கூறி வாழ்த்த-மங்களவாக்கியங்களைச் சொல்லி வாழ்த்தவும்,—(எ-று.)

. [1]தீர்த்தகன்னியர் என்றபாடத்துக்கு - நதிகளுக்குரிய பெண்தெய்வங் கள் என்க. சுமந்து - சுமக்க வென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. பி-ம்:—[2]மொழி. (நுஅ0)

உஉ. ஊருவிற் றோன்றிய [1]வுருப்ப சிப்பெயர்க்
[2]காரிகை யார்முதற் கலாப மஞ்ஞைபோல
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியி
னரிய ரருநட நடிப்ப நோக்கியே.

(இ - ள்.) ஊருவின் தோன்றிய - (நாராயணமுனிவனது) தொடையி னின்று பிறந்த, உருப்பசி பெயர் - ஊர்வசியென்று பெயர்கொண்ட, காரிகை யார் - பெண்ணே, முதல் - தொடக்கமான, நாரியர் - பெண்கள், கலாபம் மஞ்ஞைபோல் - தோகைபையுடைய மயில்கள்போல,—வார் விசி கருவி யோர் வகுத்த பாணியின் - தோற்கயிற்றுறுக்கட்டப்பட்ட இசைகருவிகளை யுடையவர்கள் வகைப்படுத்தி அமைத்த தாளவொழுங்கிற்கு ஏற்ப,—அரு நடம் நடிப்ப - அருமையானநடனத்தை ஆட, நோக்கி-(அதனைப்) பார்த்துக் கொண்டும்,—(எ-று.)

ஊர்வசிமுதலிய தேவமாதர் மயில்கள் ஆடுவதுபோலத் தாளவொற்று முறைபிறழாமற் கூத்தாடப் பார்த்து என்பது பொருள். நான்காமடியில் ஆரியர் எனப்பிரிப்பினுமாம்: ஆரியர் - வடநூலார்: அவர்க்குரிய நடனம், ஆரியக்கூத்து. இது, பலவகைக்கூத்துக்களுள் ஒன்றுதலை 'இரு வகைக்கூத்தாவன: வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக்கூத்து, தேசிக்கூத்து எனப்பலவகைய; இவை விரிந்தநூல் களிற் காண்க' என்ற சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லாருரையால் அறிக. வடநூலாராற் சிறப்பித்துக்கூறப்பட்ட இந்த ஆரியக்கூத்தினது உயர்வு தோன்ற, அதற்கு 'அரு' என்ற அடைமொழி கொடுத்தார். ஆர்யபாஷைக்கு உரிய தேவமாதராதலால்,ஊர்வசிமுதலியோர் ஆரியக்கூத்தை ஆடினரென்க. ஆரியக்கூத்தெனினும், பாவைக்கூத்தெனினும் ஒக்குமென்பர் ஒருசாரார்;

அது, அசுரர்மோகிக்கும்படி திருமகள் ஆடிய கூத்தாம். உருப்பசி=ஊர்வசீ. காரிகையார் - ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவி.

'வார்விசிக்கருவியோர்' என்றது, மத்தளக்காரரை. பாணியென்பது, தாளமென்றவாறு; "கொட்டும் அசையுந் தூக்கும் அளவும், ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்" என்ரு ராகலின். (இவற்றின் தொழில் வருமாறு:—கொட்டாவது - அமுக்குதல், அசையாவது - தாக்கியழுதல், தூக்காவது - தாக்கித்தூக்குதல், அளவாவது-தாக்கினஓசை நேரே மூன்றுமாத்திரைபெறு மளவும் வருத லெனக் கொள்க.) கலாபம் - வடசொல். மஞ்ஞை பெயர்த் திரிசொல்: இது - பால்பகாவஃறிணைப்பெயர். மயில் ஆடுங்காலத்துத் தோகையை விரித்து ஆடும் இயல்பு தோன்ற, 'கலாபமஞ்ஞை' என்ரார். ஊரு - வடசொல். [1]உயிர்ப்பெய்ஓவியம் என்ற பாடத்துக்கு-உயிர் அமைக்கப் பட்டதொரு சித்திரப்பாவைபோல் அழகியவளான ஊர்வசி என்னும் தேவ மாதென்க. ஊர்வசியென்ற பெயர் - தொடையினின்று பிறந்தவ ளென்று பொருள்படும். விஷ்ணுவின் அம்சமாய்க் குருவும் சிஷ்யனுமாகத் திருவவ தரித்த நாராயணன் நரன் என்ற முனிவர்கள் பதரிகாச்சிரமத்தில் தவஞ் செய்துகொண்டிருக்கையில், இந்திரனேவலால் அப்ஸரஸ்ஸ்திரீகள்பலர் அங் குவந்து தங்களுடைய மேனிமினுக்கினாலும் ஆடல்பாடலாதி வினோதங் களாலும் அவர்களுடைய தவத்துக்கு இடையூறு செய்யத்தொடங்க, அதனாற் சிறிதுங் கலங்காத அவர்களுள் நாராயணமுனிவர் அம்மகளிரை அவமா னப்படுத்தக்கருதித் தமது தொடையினின்று ஒரு கட்டழகியைச் சங்கற் பத்தால் உண்டாக்க, அவளுடைய ஒப்புயர்வற்ற சௌந்தரியத்தை நோக்கி அத்தேவமாதர்கள் மிகவெள்கி அவளையே தங்களுக்குத்தலைவியாகக்கொண்டு அவளுடன் தமது உலகஞ் சென்றன ரென்பது வரலாறு; அவளே ஊர்வசி. பி - ம்:—[2]காரினிற் செருக்கிய. (நிஅக)

உரு. இருந்தன [1]னுலகங்க ளிரண்டு மொன்றுந்த
னருந்தவ முடைமையி னளவி லாற்றலிற்
பொருந்திய விராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே.

(இ - ள்.) உலகங்கள் இரண்டும் ஒன்றும் - மூன்று உலகங்களும், தன் அரு தவம் உடைமையின்-(பிறராற்செய்தற்கு) அரிய தவத்தைத் தான் செய் துள்ளதனால், அளவு இல் ஆற்றலில் பொருந்திய - (தனது) வரம்பில் லாத வலிமையின்கீழ்ப் பொருந்தப்பெற்ற, இராவணன்—,—புருவம் கார் முகம் - புருவங்களாகிய வில்களையுடைய, கரு தட கண்ணியர் - கரியபெரிய கண்களையுடைய அநேகமாதர்களுடைய, கண்ணின் வெள்ளத்து-கண்களின் பார்வைமிகுதியிலே, இருந்தனன் - இருந்தான்; (எ - று.)

இராவணன் கோகர்ணச்சிரமத்தில் வெகுசிரமப்பட்டு அரியபெரியதவஞ் செய்யத்தொடங்கி ஆயிரம்வருஷத்துக்கு ஒருமுறை ஒவ்வொன்றாகத் தனது

பத்துத்தலைகளுள் ஒன்பதுதலைகளையும் ஓமஞ்செய்து தவம்முடித்துப் பிரமனிடத்தினின்று பெருவரம்பெற்ற மகாபலத்தால் அனைவரையும் வென்று மூவுலகத்தையும் அடக்கியாளுதல் தோன்ற, 'உலகங்களிரண்டுமொன்றும் தன் அருந்தவமுடைமையின் அளவிலாற்றலிற் பொருந்திய இராவணன்' என்றார்.

புருவத்துக்கு வில் உவமை, வளைந்த வடிவிற்கு. புருவத்தை வில் லென்றதற்கு ஏற்ப, கண்ணே அம்பாகக் கருதுக. வில்லினுற்பொருது வீரரை வெல்லுதல்போலத் தங்கள்புருவத்தினழகால் தாக்கி ஆடவரை வசப்படுத்துபவ ரென்பது தோன்ற, 'புருவக்கார்முகம்' என்ற அடைமொழி மகளிர்க்குக் கொடுக்கப்பட்டது. புருவம் - பிரூ: என்ற வடசொல்லின் சிதைவு. கார்முகம் என்ற வடசொல் - தொழிலில்வல்லதென்று பொருள்படும்; கர்மம் - தொழில்: அதனடியாகப்பிறந்த தத்திதாந்தநாமம், கார்முகம். கண்ணியர் என்பதில், இ என்ற பெண்பால்விகுதிமேல். அர் என்ற பலர் பால்விகுதி வந்தது. இராவணனைச் சார்ந்து சூழ்ந்துள்ள மகளிர் மிகப்பல ரென்பதும், அவர்களுடைய கண்களின்பரப்பும், அவற்றின் இடைவிடாத பார்வையும், அப்பார்வை இராவணனை வசப்படுத்துந் தன்மையும், 'கண்ணின்வெள்ளத்து' என்பதனால் விளங்கும். இவர்கள், இராவணனுக்கு அந்தரங்கமான மகளிர். வெள்ளத்து இருந்தனன் எனச் செய்யுளின் இறுதி மொழி முதல்மொழியோடு பொருளிற்பொருந்தியது, **பூட்டுவிற் பொருள் கோள்**; "எழுவா யிறுதி நிலைமொழி தம்முள், பொருள் நோக்குடையது பூட்டுவில்லாகும்."

இனி, கீழ்க் குளகமாகவந்த இருபத்திரண்டு செய்யுள்களுக்கும் முடிபு வருமாறு:—(அ) விஞ்சைவேந்தர்கள்சுற்ற, (க) சித்தர் சேர, (கஂ) கின்னரர் இறைஞ்சுகின்றனராக, (கக) உரகர்கள் சூழ, (கஉ) தும்புரு எத்த, (கங) நாரதன் வார்க்க, (கச) வேலைக்காவலன்சிந்த, (கடு) சமீரணன் துடைப்ப, (கசு) பொன்னெடு வெள்ளியும் இருக்கையீய, (கஎ) காலன் நாட்கடிகைகூற, (கஅ) எரிக்கடவுளும் விளக்கம்மாட்ட, (கசு) கற்பகதருமுதலியன கீட்ட, (உ0) என்ன, (உக) கடவுட்கன்னியர் வாழ்த்த, (உஉ) ஊருவிற்றோன்றிய காரிகையார் முதல் நாரியர் ஆட, நோக்கி,— உங) இராவணன், (ஙு) தோள் விளங்க, குண்டலங்கள் வயங்க, (ச) மகுடநிரை வயங்க, (டு) தோளெலாம்தோன்ற, ஆரம்குலவ, (சு) கழல்ஆர்ப்ப, (எ) மலர்க்குப்பை துன்ன, (உ) மண்டபமதனில்,பொலிய, (உஙு) வெள்ளத்து இருந்தனன் என ஒருவாக்கியமாக்கி,'சுற்ற' என்பது முதலியசெயவெனெச்சங்களையெல்லாம் வினைச்செவ்வெண்ணைவைத்து அவற்றின் இறுதியில் எண்ணும்மை விரித்துப் பொருளுணர்க.

மூன்றும்பாட்டின் முன்னிரண்டடி-குண்டலவருணனைக்கு அங்கமாகத் தோளை வருணித்தலும், ஐந்தாம்பாட்டின் முன்னிரண்டடி - ஆரமணிந்ததை வருணித்தற்குஅங்கமாகவந்த புயவருணனையும் ஆகிய வேறுபாடுடைமையால், கூறியதுகூற லென்னுங் குற்ற மாகாது. ஆறுங்கவி முதல் பதினேராங்கவி

வரையில் பதினெட்டுத்தேவகணங்களுட் சேர்ந்த பலவகையார் அவன்சபை யில் பணிவுகொண்டு நிற்றலைக்கூறினர். கஉ, கந - ஆங் கவிகளில், தேவமு னிவர்களான தும்புரு நாரதர் அவனை உபசரித்தல் கூறப்பட்டது. கச - ஆய் கவிமுதல் ஆறு கவிகளில் நீர்க்கடவுள் நீர்தெளித்தலும், காற்றின்கடவுள் சுப் பையொழித்தலும், ஆசனத்தில் வீற்றிருத்தற்குரியவர் ஆசனந்தருதலும், காலக்கடவுள் காலங்கூறலும், தீக்கடவுள் தீபமேற்றலும், ஐசுவரியங்கள் பொருள்தருதலும் ஆக அவரவர் தத்தமக்கு உரிய பணிவிடை பூண்டு ஒழுகு தல் கூறியவாறு காண்க. உ०-ஆங்கவியில், சூரியன் வேண்டாதபடி அநேக சூரியர் போல அவ்வரக்கன் விளங்குவா னென்பது வெளியாம். உஉ - ஆங் கவியில், இந்திரன்முன் நடித்தற்கு உரியவர் அவனென்ற இவன்முன் நடிக்கின்றன ரென்றவாறு. பி - மீ:—[1]உலகமீரேழுமெய்திய. (இஅ)

உச.—இதுவும், வருங்கவியும்-தூஉகம்: சூர்ப்பணகை இராவணராண்மனையின் வடகோபுரவாயிலில் வருதலைத் தெரிவிக்கும்.

தங்கையு மவ்வழித் தலையிற் றுங்கிய
செங்கையள் சோரியின் றுரை [1]சேந்திழி
கொங்கையண் [2]மூக்கிலள் குழையில் [3]காதிலண்
மங்குலி னெலிபடத் திறந்த வாயினள்.

(இ - ள்.) தங்கையும் - (அவ்விராவணனது) தங்கையான சூர்ப்பணகை யும், அ வழி-அவ்விடத்தில் [அப்பொழுது], தலையில் தாங்கிய செம் கையள்-தலைமேல்வைத்துக்கொண்ட சிவந்த கைகளை யுடையவளும், சோரியின் தாரை சேந்து இழி-இரத்தப்பெருக்கு செந்நிறமாய்ப் பெருகப்பெற்ற, கொங் கையள் - தனங்களையுடையவளும், மூக்கிலள்-மூக்கற்றவளும், குழை இல் காதிலள் - குழையென்னும் ஆபரண மில்லாத காதும் அறுபட்டவளும், மங் குலின் ஒலி பட திறந்த வாயினள்-மேகமுழக்கம் போன்ற முழக்கமுண்டாம் படி. திறந்து கதறுகிற வாயையுடையவளும்,—(எ - று.)

தங்கையும் என்ற உம்மை - கதைத்தொடர்ச்சியை விளக்குவதாய் இறந் தது தழுவிய எச்சமாம். தலைமேற் கைவைத்தல், சோகக்குறி. 'சோரியின் தாரைசேந்திழி' என்பதை, கொங்கை மூக்கு காது என்ற மூன்றுக்குங் கூட்டு தலுமாம்; "மூக்குங் காதும் வெம் முரண் முலைக்கண்களும் முறையாற், போக் கிப் போக்கியசினத்தொடும் புரிகுழல்விட்டான்" என்று சூர்ப்பணகைப்படல த்திற் கூறியதை யறிக. குழை-ஒருவகைக்காதணி. 'குழையில்காது' என்றது, சூர்ப்பணகை கணவனை யிழந்து அமங்கலியாய் மாங்கலியக்குறிகளுள் ஒன் றான காதணியை யிழந்திருந்த தன்மையைக் காட்டும். 'செங்கை' என்றது- மிக்கரிய விகாரரூபமுடைய அவளது கைகளின் இயற்கைச்செம்மையைக் காட்டவந்ததன்றிப் பெருகுகிற இரத்தத்தைத் துடைத்துத் துடைத்துக் கைகள் சிவந்துள்ள தன்மையைக் காட்ட வந்ததென அறிக. 'மங்குலினெலி பட' என்பதற்கு - மேகமுழக்கமும் கெட வென்று உரைப்பினும் அமையும்.

சேந்து - செம்மையென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினைத்தன்மையுற்று 'சே' என நிற்க, அதனின்று பிறந்த தெரிநிலைவினையெச்சம்; சிவந்து என் பதன் மரூஉ வென்றுங் கூறப்படும். பி-ம்:—[1]சேர்ந்திழி. [2]மூக்கினள். [3]காதி னள். (குஅஈ)

உடு. [1]முடையுடை வாயிலின் முறையிட் [2]டார்த்தெழு
கடையுகக் கடலொலி [3]காட்டிக் காந்துவாள்
குடதிசைச் செக்கரிற் சேந்த கூந்தலாள்
வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள்.

(இ - ள்.) முடை உடை வாயிலின் - முடைநாற்றத்தையுடைய தன் வாயினால்,முறையிட்டு ஆர்த்து-(தன்) குறையை யெடுத்து உரக்கக்கூறி, யுகம் கடை எழுகடல் ஒலிகாட்டி-யுகாந்த காலத்தில் வரம்புமீறிப்பொங்கிவருகின்ற கடலின் இரைச்சலைப் போன்ற இரைச்சலைச் செய்துகொண்டு, காந்துவாள் - மனந்தவிப்பவளும், குடதிசை செக்கரின் சேந்த கூந்தலாள்-மேற்குத்திசை யிற் காணப்படுகிற அந்திச்செவ்வானம் போலச் சிவந்து தோன்றுகிற விரிந்த கூந்தலை யுடையவளுமாய், வட திசைவாயிலின் வந்து தோன்றினாள்-(இராவ ணனரண்மனையின்)வடக்குப்பக்கத்து வாசலில்வந்து காணப்பட்டாள்; (எ-று.)

தண்டகாரணியத்தினின்று புறப்பட்ட சூர்ப்பணகை தன்குறையைக் கூறிமுறையிட்டு மனந்தவித்து தலைவிரிகோலத்தோடு இராவணனது அரண்மனையின் வடக்குவாசலில் வந்து சேர்ந்தன ளென்பதாம். இலங் கைக்கு வடக்கிலுள்ள தண்டகாரணியத்தினின்று வருபவ ளாதலால்,வடக்கு வாயிலில் வந்தனளென்க. ''இலங்கைமாநகர் நொய்திற்சென்றெய்தினாள்'' எனக் கீழ்ப்படலத்தின் இறுதியில் வந்ததனோடு இதற்குத் தொடர்ச்சி யுணர்க. சூர்ப்பணகைப்படலத்தில் ''விரிந்தாய கூந்தலாள்'' என்றும்,கரன்வதைப்பட லத்தில் ''சொரிந்தசோரியள் கூந்தலள்'' என்றும் கூறியபடி இலக்குமணன் தனது தலைமயிரைப் பற்றியதுமுதல் அவள் தலைவிரிகோலமாகவே யிருந்த தன்மையை மூன்றும் அடி காட்டும். [1]முடிமிடை வாயிலின் என்ற பாடத் திற்கு - பலஅரசர்களுடைய கிரீடங்கள் நெருங்கிய (இராவணனது) அரண் மனைவாயிலில் என்றும், சிகரங்கள் நெருங்கிய கோபுரவாயில் என்றும் உரை கூறலாம். தசையைத்தின்னும் வாயளென்பார் 'முடையுடைவாயில்' என் றார். கடையுகம் - முன்பின்னைத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை; கல் பாந்தகாலம்-பிரளயகாலம். செந்நிறமுடைமையின், செக்க ரென்று பெயர். பி-ம்:—[1]முடையுடைவாயினள். [2]ஆர்கலி. [3]காட்ட. (குஅச)

உசு.—இதுமுதற் பத்தொன்பது கவிகளில், அவளதுநிலையைக் கண்டு அரக்கர் துயருறுதலைக் கூறுகிறார்.

தோன்றலுந் தொன்னக ரரக்கர் தோகைய
ரேன்றெதிர் வயிறலைத் திரங்கி [1]யேங்கினர்
மூன்றுல குடையவன் றங்கை மூக்கில
டான்றனி யவள்வரத் தரிக்க வல்லரோ.

(இ - ள்.) தோன்றலும் - (இவ்வாறு சூர்ப்பணகை) வந்து காணப்பட்ட வளவிலே,—தொல் நகர் - பழைய அந்த இலங்காபுரியிலுள்ள, அரக்கர் தோகையர் - ராக்ஷஸஸ்திரீகள், என்று - எதிர்கொண்டு சென்று, எதிர் - அவளெதிரிலே, வயிறு அலைத்து - வயிற்றில் அடித்துக்கொண்டு, இரங்கி - சோகித்து, ஏங்கினர் - அழுதார்கள்; மூன்று உலகு உடையவன் தங்கை-மூன்று உலகங்களையுந் தன்னுடையனவாகப்பெற்ற இராவணனது தங்கை, மூக்கு இலள் - மூக்குஅற்றவளாய், தனியவள் வர - துணையொருவருமில்லாமல் தனியாய்வர, தரிக்க வல்லரோ - (கண்டு) சகிக்கமாட்டுவர்களோ? [மாட்டாரென்றபடி]; (எ - று.)—தான் - அசை; உயர்வுசிறப்புமாம்.

மூன்னிரண்டடியிற்கூறிய பொருளைப் பின்னிரண்டடிகளிற் கூறிய பொருள் சமர்த்தித்து நிற்றலால், இது - **தொடர்நிலைச்செய்யுட் குறியணியாம்**: சிறப்புப்பொருளே பொதுப்பொருள் சமர்த்தியாமையால், இது **வேற்றுப்பொருள் வைப்பணியாகாது**. மூன்றுலகுடையவன் - திரிலோகாதிபதி. மூக்கு-மற்றை அறுபட்ட உறுப்புக்களுக்கும் உபலக்ஷணம்;இங்ஙனமேமேலுங் காண்க. 'தனியவள்வரத் தரிக்கவல்லரோ' என்றதனால், தாதியர் தோழியர் செவிலியர் முதலிய பலவகையிலவத்தோடும் கூடி அவள் வரக்கூடிய வளே யன்றித் தனித்துவரத் தக்கவளல்ல ளென்பது விளங்கும்; "உலக மூன்று மாள்பவன் தங்கையாயின்,..., தமியை நீ வருதற்கொத்த தன்மையென் தையல்" என்று (கீழ்ச் சூர்ப்பணகைப்படலத்தில்) இராமன் சூர்ப்பணகையை வினவியதிலும் இக்கருத்து நிகழ்ந்தவாறு காண்க. தோன்றலும் - உம்விருதிபெற்ற இறந்தகால வினையெச்சம்; பிற்பொருள் காட்டும். இலங்கை இவ்விராவணுதியர்க்கேயன்றி முன்பு இவன்தமையனான குபேரனுக்கும், அதற்கும்முன்பு சுமாலி முதலிய பூர்விகராக்ஷசர்களுக்கும் இராசதானியாயிருந்ததனாலும், அதற்குமுன்னமே விசுவகருமாவினால் இந்திரனுக்கென்று நிருமிக்கப்பட்ட தாதலாலும், 'தொன்னகர்' எனப்பட்டது. தோகையர் - மயில்போலுஞ் சாயலையுடையவர். **பி-ம்:**—[1]தாங்கினர். (நிஅநி)

உஎ. பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கில
ரரக்கரு மிரைத்தன ரசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களே
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றூர்.

(இ - ள்.) அரக்கரும் - (அந்நகரிலுள்ள) ராக்ஷசர்களும், பொருக்கென நோக்கினர் - (அச்சூர்ப்பணகையைத்) திடீரென்று பார்த்தவர்களாய், புகல்வது ஓர்கிலர் - சொல்வது இன்ன தென்று அறியாமல் [ஒன்றுஞ்சொல்லத் தெரியாதவர்களாய்த் திகைத்து], அசனி ஆம் என இரைத்தனர் - இடிமுழக்கம்போலக் கதறிப்பேரொலிசெய்து, கரத்தொடு கரங்களே புடைத்து - கைகளோடு கைகளே மோதிக்கொண்டு, கண்களே நெருப்பு எழ விழித்து - தீப்பொறிபறக்க(ப் பெருங்கோபத்தோடு) கண்விழித்துப்பார்த்து, வாய் மடித்து-

வாயை மடித்துக்கொண்டு [உதட்டைக் கடித்துக்கொண்டு], நிற்கின்றார் - நிற்பவராஞர்கள்; (எ - று.)

• கீழ்க்கவியில் சூர்ப்பணகையைக்கண்ட அரக்கியரது நிலைமையைக் கூறி, இக்கவியில் அவளைக்கண்ட அரக்கரது நிலைமையைக் கூறினர். அரக்கரும், உம்-இறந்தது தழுவிய எச்சம். ஆம்-அசை. கரத்தொடு கரங்களைப் புடைத்து அசனியாமென இரைத்தனர் எனமாற்றி, கைகளோடு கைகளை அறைந்து அதனல் இடியென்று சொல்லும்படி பேரொலிசெய்தவர்களா யென்று உரைத்தலு மொன்று. (நிஅசு)

உஅ. இந்திரன் [1]மேலதோ வுலக மீன்றபே
ரந்தணன் [1]மேலதோ வாழி யானதோ
சந்திர மௌலிபாற் [2]றங்கு மேகொலோ
வந்தர [3]மிதுவென வழல்கின் றூர்சில.

(இ - ள்.) சில - சில அரக்கர்கள்,—இது அந்தரம் - இத்தீமை, இந்திரன் மேலதோ - தேவேந்திரனிடத்ததோ? உலகம் ஈன்ற பேர் அந்தணன் மேலதோ - உலகத்தைப்படைத்த பெருமையையுடைய பிரமனிடத்ததோ? ஆழியானதோ-சக்கராயுதத்தையுடைய திருமாலினிடத்ததோ?சந்திர மௌலி பால் தங்குமே கொலோ - சந்திரனைத்தரித்த முடியையுடைய சிவனிடத்தில் பொருந்துவதோ? என்று - என்றுசொல்லி,—அழல்கின்றூர் - மனங்கொதிக்கின்றவராஞர்கள்; (எ - று.)

இங்குக் குறித்த இந்திரன் முதலிய நால்வ ரன்றிப் பிறரெவரும் இராவணனுக்குச் சிறுதீங்குசெய்யவல்ல ரல்ல ரென்ற தணிவினுல் இங்ஙனம் கருதுவாராயினர். அந்தரம் - சூர்ப்பணகையை மூக்குமுதலியன அறுத்துத் தனியேதுரத்துதல்; அடுத்தகவியில் 'இது' என்பதும் அது. இந்த்ரன், சந்த்ர மௌலி - வடசொற்கள். சந்திரமௌலி - வேற்றுமைத்தொகையன்மொழி. அந்தணன் - அம் தண் அன் எனப்பிரித்து, அழகிய குளிர்ச்சியான அருளே யுடையா னென்று பொருள்படும். ஆழியான் என்பதற்கு - கடலிற்பள்ளி கொள்பவனென்றும், கடல்போலுங் கருநிறமுடையா னென்றும் பொருள் கொள்ளலாம். இக்கவியில் திரிமூர்த்திகளைத் தொழில்முறைப்படி வைத் துள்ளவாறு காண்க. உலகமீன்ற பேரந்தணன், ஆழியான், சந்திரமௌலி என்ற சொற்களாற் குறித்தது, அவரவரது ஆற்றலைக் காட்டுதற் கென்க. இந்திரனென்ற பெயரும்,மிக்கஐசுவரியமுடையவ னென்னுங் காரணப்பொருள் தருவதாதலால், அவனது சிறப்பைப் புலப்படுத்துவதாம்.

'சந்திரமௌலி'என்பதிற் பொதிந்ததகதை:—சந்திரன் தக்ஷமுனிவனது புத்திரிகளாகிய அசுவினிமுதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணஞ் செய்துகொண்டு அவர்களுள் உரோகிணி யென்பவளிடத்து மிகவுங்காதல்கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங்கூடிவாழ்ந்திருக்க,மற்றைமகளிரது வருத்தம் நோக்கி முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தால்

சந்திரன் பதினேந்துகலைகளுங் குறைத்து மற்றைக்கலை யொன்றையும் இழப் பதற்கு முன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத் தன்தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்து வரும்படி அநுக்கிரகித்தனன் என்பதாம். (குருவாகிய தனது மனைவியான தாரையைச் சந்திரன் கூடியமைபற்றிச் சினந்து பிருகஸ்பதி சபித்த சாபத் தால் அச்சந்திரன் கலைகள் குறைந்து சிவனைச் சரணமடைந்ததாகவுங் கதை கூறப்படும்.) திருப்பாற்கடல் கடைகையில் அதினின்று உண்டான பல பொருள்களுடனே விஷமும் சந்திரனும் தோன்ற, திருமால் அவற்றில் விஷத் தைச் சிவபிரானுக்குக் கொடுத்து உண்ணச்சொல்லி, அதனால் அப்பிரானுக்கு வெப்பம் உண்டாகாமல் தணிந்திருக்கும் பொருட்டு, உடனே சந்திரனையுங் கொடுக்க, அதனை அப்பெருமான் சிரமேற்கொண்டன னென்றும் வரலாறு கூறப்படும். பி - மீ:—[1]பாலதோ. [2]தங்குமேகொலிவ். [3]என்றுகின்று .(நிஅள)

உகூ. [1]செப்புறற் குரியவர் தெவ்வர் யாருளர்
மூப்புறத் துலகமு மடங்க மூடிய
விப்புறத் தண்டத்தோர்க் கிபைவ தன்றிது
வப்புறத் தண்டத்தோ [2]ராமென் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—செப்புறற்கு உரியவர் தெவ்வர் யார் உளர் - (இவ் வண்டத்தில் இன்னொரென்று) சொல்லப்படுதற்கு உரியவரான பகைவர் (இராவணனுக்கு) எவர் இருக்கின்றனர்? [எவருமில்லை]; (ஆதலால்), மூப் புறத்து உலகமும் அடங்க மூடிய இப் புறத்து அண்டத்தோர்க்கு இது இயை வது அன்று - மூன்றுவகையுலகங்களையும் உள்ளடங்கும்படி கவித்துள்ள இவ்வண்டகோளத்திலுள்ளார்க்கு இங்ஙனஞ்செய்தல் சாத்தியமன்று; (ஆத லின், மற்று இது செய்தவர்), அப்புறத்து அண்டத்தோர் ஆம் - வேறு அண் டத்தில் உள்ளவராதல்கூடும், என்றூர் - என்றுசொன்னார்கள்; (எ - று.)

அப்புறத்தண்டம் - பகிரண்டம், வெளியண்டம். ஆம் என்றது-இடைச் சொல்தன்மைப்பட்டு,ஊகித்தற்பொருளில்வந்தது; அசையெனினுமாம்.பி-மீ:- [1]செப்புதற்குரியன. [2]ஆர். சிலபிரதிகளில் "போரிலான்" (31) என்றபாடல் இங்கு இருக்க, அதன்பின் "செப்புறற்கு" என்ற இப்பாடல் உள்ளது. ()

ஙூ. என்னையே யிராவணன் றங்கை யென்றபி
னன்னையே யென்றடி வணங்க லன்றியே
யுன்னவே யொண்ணுமோ வொருவ ராலிவ
டன்னையே யிரிந்தன டானென் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—என்னையே-(இது) என்னஆச்சரியம்! இராவணன் தங்கை என்ற பின் - இராவணனுடைய தங்கை யென்று சொன்னபின்பு, அன்னையே என்று அடி வணங்கல் அன்றியே - (யாவரும்) 'எமதுதாயே!' என்று சொல்லி (வந்துஇவளுடைய) பாதங்களில் விழுந்து நமஸ்கரிப்பதே யல் லாமல், ஒருவரால் - (எவராயினும்) ஒருத்தரால், உன்னவே ஒண்ணுமோ -

(இவளுக்குத் தீங்கு செய்ய) நினைத்தற்காயினும் கூடுமோ? [கூடாதென்ற படி]; (ஆதலால்), இவள் தன்னையே தான் அரிந்தனள் - இச்சூர்ப்பணகை தன்னைத்தானே (மூக்கு முதலியன) அறுத்துக்கொண்டவளாதல் வேண்டும், என்றார் - என்று சொன்னார்கள்; (எ - று.)

இராவணன்தங்கை யென்றபின் - இவள் இராவணனது தங்கை யாதலால் என்றபடி. 'உன்னவே' என்ற இழிவு சிறப்பு ஏகாரத்தால், வாயாற் சொல்லுதற்கும் தொழிலாற்செய்தற்கும் ஆகா தென்பது தன்குவிளங்கும். ()

கூக. போரிலான் புரந்தர னேவல் [1]பூண்டன
னருலா நேமியா னுற்ற றோற்றுப்போய்
நீரினு [2]னெருப்பினுன் பொருப்பி னினினி
யார்கொலா மீதென வறைகின் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—புரந்தரன் - தேவேந்திரன், போர் இலான் - (இராவணனோடு) போர்செய்யமாட்டாதவனும், ஏவல் பூண்டனன்-(இவனுக்குக்) குற்றேவல்செய்தலே மேற்கொண்டிருக்கிறான்; ஆர் உலாம் நேமியான் - அரங்கள்விளங்குகிற சக்கராயுதத்தையுடைய திருமால், ஆற்றல் தோற்று போய் - வலிமையிழந்து சென்று, நீரினுன் - கடலில் வாழ்பவனும்; நெருப்பினுன் - நெருப்பைக் கையிலேந்தியவனான சிவன், பொருப்பினுன் - (இவனுக்கு அஞ்சி) மலையில் வாழ்பவனுமான்; (ஆகவே), ஈது இனி யார் கொல் - இது (செய்தவர்) வேறு யாவரோ? என - என்று, அறைகின்றார் - சொல்லுகின்றவராவார்கள்; (எ - று.)—ஆம் - அசை.

இந்திரன் போரில்தோற்று இராவணனுக்குஏவல்பூண்டமை பிரசித்தம். திருமாலும் சிவனும் இராவணனை எதிர்த்துத் தோற்று வலிமையொடுங்கினரென்று சரித்திரமில்லையாயினும் அவர்கள் இவனை யாதொன்றும் ஊறுபடுத்தாமல் ஆங்காங்கு அமைந்திருத்தலையே கொண்டு, இராவணனுக்கு அஞ்சிக் கடலிலும் மலையிலும் புக்கு ஒளித்து வாழ்வதாக, அரக்கர்கள், செருக்கினால் கற்பித்துக்கூறினார்கள். இது, **தற்குறிப்பேற்றத்**தின் பாற்படும். மற்றைய பகைவர்களையெல்லாம் எளிதில்அழிக்கவல்லதாய்க் கையிலுள்ள சக்கரமும், நெருப்பும் இவனை யாதொன்றுஞ்செய்யமாட்டா வென்பதைப் புலப்படுத்தற்கு, அவர்களைச்சிறப்பிப்பார்போல 'ஆருலாநேமியான்,' 'நெருப்பினுன்' என்றனர். சிவபிரான்கையில் நெருப்பு - தாருகவனத்து முனிவர்கள் அப்பிராணைக் கொல்லுமாறு அவன்மேற் செலுத்திய ஓமத்தீ. அன்றி, நெருப்பினுன் - நெருப்புக்கண்ணை நெற்றியிலுடையா னென்றும், அனற்பிழம்பு வடிவானவ னென்றும், தீப்போலச் செந்நிறமுடையா னென்றும், காலாக்கினி ருத்திரமூர்த்தி யென்றும் கொள்ளவும் இடமுண்டு. ஆர் - கூர்மை. இது செய்தவர் யாரென்னும் பொருளில், 'ஈதுயார்' என்றது, ஒருவகைச் சொல்விழுக்காடு. 'ஆற்றல் தோற்றுப்போய்' என்பதை, 'நெருப்பினுன் பொருப்பினுன்' என்பவற்றிற்குங் கூட்டுக. பி-மீ:—[1]பூண்டவன். [2]நெருப்பனுன். (நிகo)

கூஉ. சொற்பிறந் தார்க்கிது துணிப வொண்ணுமே
பிற்பிறந் தார்தமக் கியைவ செய்திலள்
கற்பிறந் தாளெனக் கரன்கொ லாமிவள்
[1]பொற்பறை யாக்கினன் [2]புகன்றென் றூர்சிலர்.

(இ - ள்.) சொல் பிறந்தார்க்கு - புகழ்ப்பெற (உயர்குடியிற்) பிறந்த மகளிர்க்கு, இது - இச்செயல் [கற்புஅழிதல்], துணிப ஒண்ணுமே - துணிந்து செய்யக்கூடியதோ? [அன்று என்றபடி]; (ஆதலால்), இல் பிறந்தார்தமக்கு இயைவ செய்திலள் இவள் கற்பு இறந்தாள் என புகன்று - 'நற்குடியிற் பிறந்தவர்க்குப் பொருந்திய செய்கைகளைச் செய்யாமல் இவள் கற்புநிலைகடந்தாள்' என்று கோபித்துச்சொல்லி, கரன்—, பொற்பு அறை ஆக்கினன் கொல் ஆம் - அழகு அழிந்தவளாகச் செய்தான்போலும், என்றூர் சிலர் - என்று சிலஅரக்கர் சொன்னார்கள்; (எ - று.)

உயர்குடிப்பிறந்தார்க்குக் கற்பழிதல் பெருங்குற்ற மாதலால், இவள் ஒருகால் கற்பழிந்தவளாக அதுகண்டு இவளுடன்பிறந்தவனான கரன் தானே இவளை வெறுத்துக்கித்து இவளுடைய முக்கியமான சிலவுறுப்புக்களைமறுத்து இவளழகைக் குலைத்திட்டவனுதல்கூடும் என்று சிலர் ஊகித்துக்கூறினார்களென்க; பிறர்இவளை இங்ஙனஞ்செய்யமுடியாதாதலின், இவளுக்குப்பாதுகாவலாக ஜநஸ்தாநத்தில் இராவணனைப் பெருஞ்சேனையோடுகியமித்துவைக்கப்பட்ட கரனென்ற இராக்கதவீரனே இதுசெய்தனனெ வெனக் கொண்டனரென்க. செய்புளாதலின், 'இது'எனச் சுட்டுப்பெயர் முன்வந்தது; [நன்-பொது - சூசு.] ஒண்ணுமே, ஏ - எதிர்மறை. இனி, முதலடிக்கு-புகழுண்டாகப்பெற்றார்க்கு இங்ஙனஞ்செய்தல் இயலுமோ வென்று உரைத்து, எத்துணைவல்லார்க்கும் இவளை இங்ஙனம் பரிபவப்படுத்தமுடியாதென்று கருத்துக்கொள்வாரும் உளர். இன்னும்,இன்னவரென்று குறிப்பிட்டுச்சொல்லத்தக்கவர்க்கு இதுசெய்யக்கூடுமோவென்று பதவுரைகூறி, உலகத்தில் இது எவர்க்குஞ்செய்யக்கூடியதன்று என்று கருத்துக்கொள்ளுதலும் ஒன்று. பி-ம்:—[1]பொற்பிறந்தாக்கினன், பொற்பிறந்தாளெனப்.[2]புகல்கின்றூர்.(கூஎ)

கூஊ. தத்துறு [1]சிந்தையர் தளருந் தேவரிற்
பித்துற [2]வல்லரே பிழைப்பில் சூழ்ச்சியார்
மூத்திறத் துலகையு முடிக்க வெண்ணுவா
ரித்திறம் [3]புணர்த்தன ரென்கின் றூர்சிலர்.

(இ - ள்.) தத்து உறு சிந்தையர் - தடுமாற்றம் பொருந்திய மனமுடையவர்களாய், தளரும் - சோர்வடைகிற, தேவரில் - தேவர்களுள், வல்லரே - வல்லமையுடைய சிலர்தாம், பித்து உற-பைத்தியம் மிகுதலால், பிழைப்பு இல் சூழ்ச்சியார்-(தாம்)பிழைத்துவாழ்தற்கு இடமில்லாத ஆலோசனையைக் கொண்டவர்களாய்,—மூ திறத்து உலகையும் முடிக்க எண்ணுவார்-(தம்மை மாத்திரமேயன்றி) மூவகைப்பட்ட உலகங்களையும் ஒழிக்கக்கருதியவர்களாய்,

இ திறம் புணர்த்தனர் - இங்ஙனஞ்செய்தவராதல்கூடும், என்கின்றூர் சிலர்- என்று சிலர் சொல்பவராளுர்கள்; (எ - று.)

தேவர்கள் இராவணனுக்குப் பயந்து பலவிதமான மனச்சஞ்சலத்தை யடையும்பொழுது, அவர்களில் திறமையுள்ள சிலர் அச்சஞ்சலத்தால் மிக்க பைத்தியங்கொண்டு அதனல் அறிவுதடுமாறி நல்லஆலோசனையையும் நல்ல தொழிலையும் விட்டுத் தங்கள்வல்லமையைத் தீயவழியிற்செலுத்துபவராய்த் தமக்கும் தமதுசெயல்காரணமாக உலகங்களுக்கும் உடனே அழிவுநேருமே யென்பதையுங் கருதாமல் தாமும் உலகங்களும் அழிந்திடுமாறு இங்ஙனம் அவனது தங்கையான இவளுக்குத் தீங்கு இழைத்திருக்கலா மென்று சிலர் ஊகித்தார்க ளென்க. இதில், பைத்தியம்பிடித்தாலன்றி இப்படி எவ ரும் செய்யா ரென்பதும், இப்படிச் செய்தாரை இராவணன் கோபித்து அழி யாது விடானென்பதும், அக்கோபாவேசமிருதியால் எல்லாவுலகங்களேயு மே அவன் அழித்திடக்கூடு மென்பதும் தோன்றும். வல்லரே, எ - உயர்வு சிறப்போடு, பிரிநிலே.

இனி, இக்கவிக்கு - தடுமாற்றம் பொருந்திய மனமுடையவர்களாய்ச் சோர்வடைந்திருக்கிற தேவர்களில் (யாராவது இவளுக்குத் தீங்கு செய்யும் படியான) பித்தகுணத்தை அடைய மாட்டுவரோ? [மாட்டார்]; ஆதலின், தவறுதலில்லாத ஆலோசனேயுடையவர்களும் மூன்று உலகத்தையும் அழிக்கக் கருதும் வல்லமையுடையவர்களுமாகிய பிறர்சிலரே இவ்வாறு செய்தனர்போலும் என்றும், தேவர்களில் தாம் பிழைக்கும் உபாயமற்றவர்களாய்ப் பித்தத்தையுடையவர் உண்டோ? [இல்லே]; மூன்று உலகத்தையும் அழிக்க நினேக்கின்றவர்கள் தாம் இவ்வாறு செய்தனர் என்றும் உரைப்பாரு முளர். இவ்வுரைகளுக்கு, எ - எதிர்மறை. அன்றியும், மனந்தடுமாறிச் சோர்கிற தேவர்கள்போல மயக்கமடையாதவர்களும் ஆலோசனே தவருதவர்களும் அரியபெரிய தொழில் செய்யும் நோக்கமுடையவர்களு மானவர்களே இக் காரியஞ்செய்தார்கள் என்று உரைத்தலும் உண்டு; இப்பொருளுக்கு, பித்து உற அல்லர் எனப்பிரித்து, தேற்றேகாரத்தை 'எண்ணுவார்' என்பதனேடு கூட்டவேண்டும். பி-ம்:—[1]சிந்தையாய்த். [2]வல்லரேல். [3]புணர்த்தவர். (நிகஉ)

ரூச. இனியொரு கற்பமுண் டென்னி னன்றியே
வனேகழல் [1]வயங்குவாள் வீரர் வல்லரோ
பனிவருங் கானிடைப் பழிப்பி னேன்புடை
[2]முனிவர்தம் வெகுளியின் முடிபென் றூர்சிலர்.

(இ - ள்.) இனி ஒரு கற்பம் உண்டு என்னின் அன்றியே - இனி வேறொருகற்பகாலம் உண்டாயினு லன்றி [இக்கற்பகாலத்தில்], வனே கழல் வயங்கு வாள் வீரர் வல்லரோ - தரித்த வீரக்கழலையும் விளங்குகிற ஆயுதத் தையு முடைய வீரர்கள் (இத்தொழில்செய்ய) வல்லமையுடையவர்களோ ? [அல்ல ரென்றபடி]; (ஆதலால், இது), பனி வரும் கானிடை - அச்சமுண் டாதற்கு இடமான காட்டில், பழிப்பு இல் நோன்பு உடை - குற்ற மில்லாத

தவவொழுக்கத்தை யுடைய, முனிவர்தம்-இருடிகளது, வெகுளியின்-கோபத்தின், முடிபு - பயனேயாம். என்றூர் சிலர் என்று சிலர் சொன்னார்கள்.

கற்பம்=கல்பம்: வடசொல்: காலத்தின் ஒரு பேரெல்லை; பிரமனது ஆயுட்காலம். இனி, மற்றொரு கற்பத்தில் எவரேனும் உண்டாயினால் எங்ஙனமாமோ? அறியோம்; இக்கற்பத்தில் எத்துணைச் சிறந்தவீரரும் இராவணனை யெதிர்க்கவல்லாரில்லை; ஆதலால், இது ஆற்றலாற் பெரியரான வீரரெவரும் செய்ததன்று; தவத்தாற் பெரியரான முனிவர்கோபித்துச் சபித்ததனாலாகியதே யென்றன ரென்க. முனிவர்கள் நிறைமொழிமாந்தரானதாலும், "குணமென்னுங் குன்றேறி நின்றூர் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" ஆதலாலும், ஐந்தவித்தாராற்றல் அளவிட வொண்ணாததாலும், அவர்களில் எவரேனும் சாபத்தால் இங்ஙனஞ் செய்திருக்கலாமென்று கொண்டார்கள். இராவணனது நீடித்த ஆயுளுடைமையைக் காட்டும்பொருட்டு, கற்பத்தை யெடுத்துக் கூறினர். பணிவரும் - பணிபெய்கிற எனினுமாம். நோன்பு - விரத அனுட்டானம். தவத்துக்குப் பழிப்பு-கூடாவொழுக்கம் முதலியன. முடிபு, வெகுளி - தொழிற்பெயர்கள். பி-மீ:— [1]வழங்கு. [2]முனிவரர். (நுகூங)

கூடூ. கரையறு திருநகர்க் கருங்க ணங்கைமார்
நிரைவளைத் [1]தளிர்க்கர நெரித்து நோக்கினர்
பிரையுறு பாலென நிலையிற் பின்றிய
வுரையின ரொருவர்மு னெருவ [2]ரோடினர்.

(இ - ள்.) கரை அறு திரு நகர் - எல்லையற்ற செல்வத்தையுடைய அவ்விலங்காபுரியிலுள்ள, கரு கண் நங்கைமார்-கரிய கண்களையுடைய இராக்கத மகளிர், நோக்கினர் - (சூர்ப்பணகையின் நிலையைப்) பார்த்தவர்களாய், நிரைவளை தளிர் கரம் நெரித்து - (விசனமிகுதியால் இன்னதுசெய்வதென்று அறியாமல்) வரிசைப்பட்ட [பல] வளையல்களை யணிந்த தளிர்போல மெல்லிய தங்கள் கைகளை நெரித்துக்கொண்டு, பிரை உறு பால் என நிலையின் பின்றிய உரையினர் - பிரையிடப்பெற்ற பால்போலத் தமது இயற்கைநிலைமையினின்று திரிந்த வார்த்தையை யுடையவர்களாய், ஒருவர் முன் ஒருவர் ஓடினர் - ஒருத்தருக்குமுன் ஒருத்தராய் ஓடிவந்தார்கள்; (எ - று.)

பிரையுறுதல் - சிறிது மோர் சேர்க்கப் பெறுதல். பி-மீ:—[1]தளிர்க்கைகள். [2]முந்தினர். (நுகூச)

கூசு. முழவினில் வீணையின் [1]முரனல் யாழினிற்
றழுவிய குழலினிற் சங்கிற் றுரையி
லெழுகுர லின்றியே யென்று மில்லதோ
ரழுகுரல் பிறந்ததவ் விலங்கைக் கன்றோ.

(இ - ள்.) முழவினில் - மத்தளத்தினின்றும், வீணையில் - வீணையினின்றும், முரல் - இனிது இசைக்கின்ற, நல் யாழினின் - சிறந்த யாழினின்றும்,

தழுவிய குழலினில்-(எல்லாப்பிராணிகளேயும்) தன்வசமாகச் செய்கின்ற புள் ளாங்குழலினின்றும், சங்கில் - சங்கவாத்தியத்தினின்றும், தாரையில்-எக்கா ளத்தினின்றும்; எழு - (நாள்தோறும்) உண்டாகிற, குரல் - மங்கலத்தொனி, இன்றியே-இல்லாமலே, என்றும் இல்லது ஓர் அழு குரல் - (இதுவரையில்) எந்நாளும் இல்லாத தோர் அழுகைச்சத்தமான்து, அன்று - அப்பொழுது, அ இலங்கைக்கு-அந்த இலங்காபுரியில், பிறந்தது - உண்டாயிற்று;(எ - று.) —அரோ - ஈற்றசை.

அவ்வூரில் எப்பொழுதும் ஆங்காங்கு உல்லாசமாக மத்தளம் முதலிய பலவகை மங்களவாத்தியங்களே முழக்கியெழுப்பும் இசையொலி யாவும் அப்பொழுது அடங்க, ஒருநாளு மில்லாத புதிய அழுகுர லொன்றே மிக்கதென்பதாம். வீணையும் யாழும் ஒருபொருட்பன்மொழியாக வழங்கி னும் அவை வேறுவேறு இசைக்கருவிப்பெயராக வழங்குதலும் உண்டு. இலங்கைக்கு - உருபுமயக்கம். எழுகுரல் - வீனைத்தொகை. இனி, பண்புத் தொகையாக ஸ ரி க ம ப த நி என்னும் எழுஸ்வரங்களின் வடிவமான தொனி யென்றுங் கூறுவாரும் உளர். பி-ம:—1முரளி. (நுகஉ)

ங.எ. கள்ளுடை வள்ளமுங் களித்த தும்பியு
முள்ளமு மொருவழிக் கிடக்க வோடினர்
வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினர்
தள்ளுறு மருங்கினர் தழீஇக்கொண் டேகினர்.

(இ - ள்.) வெள்ளமும் - கடலும், நாண் உற - (பரப்பில் ஒப்பாகாது) வெட்கமடையும்படி, விரிந்த - விசாலமாகவுள்ள, கண்ணினர் - கண்களேயு டையஇராக்கதமகளிர், கள் உடை வள்ளமும்-மதுவையுடையகிண்ணங்களும், களித்த தும்பியும் - (அம்மதுவையுண்டதனால்) களிப்புற்ற வண்டுகளும், உள் ளமும்-(அம்மதுவினிடத்து விருப்பமுடைய தமது)மனமும், ஒருவழி கிடக்க-ஒருபக்கத்திலே யிருக்க, ஓடினர் - ஓடிவந்து, தள்ளுறும் மருங்கினர் - (அங் ஙனம் ஓடிவருகையில் உண்டான சிரமத்தால்) துவண்ட இடையையுடைய வர்களாய், தழீஇ கொண்டு எகினர் - (ஒருவரை யொருவர்) ஆதாரமாகத்தழு விக்கொண்டு வருபவரானர்கள்; (எ - று.)

நிரம்பக் குடித்துக் களிமயக்கங் கொண்ட வண்டுகள் நீங்காது மொய்க் கப்பெற்ற கள்ளேச் சில இராக்கதமாதர்கள் மிக்க விருப்பத்தோடு உண்டு கொண்டிருக்கையில், சூர்ப்பணகையின் கதறுதலேச் செவியுற்றதனால், அதனே அங்ஙனமே விட்டு வெகுவிரைவாக ஓடிவருகையில் தமது இடை வருந்தவும் அவ்வருகையை விடாமல் ஒருவரையொருவர் ஆதாரமாகப் பற்றிக்கொண்டே விரைந்து வருவாராயின ரென்க. இதில், அவர்களுக்கு மதுவை விட்டுச் செல்ல மனம்வராமையும், சூர்ப்பணகைக்கு நேர்ந்த துன்பத்தை விசாரியாம லிருப்பதற்கு இயலாமையும், அங்ஙனம் விசாரிப்பதி லுள்ள ஊக்கத்தால் தமதுடல்மெலிவையும் பொருள்செய்யாமையும் தோன்றும்.'களித்த தும்பி' என்றதன் குறிப்பால், அவர்களுள்ளம் மதுபானஞ் செய்து களித்தில தென்

பது தோன்றும். மூன்றுமடி-அவர்களுடைய கண்களின் பரப்பை அதிசயோக்தியுகையால் வருணித்தவாறும்.

இனி இக்கவிக்கு, தள்ளுறு மருங்கினர்-இயற்கை மெலிவாலும் மற்றை யவயவங்களின் பாரத்தாலும் இருமருங்குஞ்சாயும் இடையையுடைய அரக்கர் மகளிர் கள்வைத்த கலமும் அதில் களிப்போடு மொய்த்துள்ள ஈக்களும் அதையுண்டு களித்த மனமும் ஓரிடத்தில் தங்க, யாற்றுவெள்ளமும் வெள்ளச் சோகநீர்பெருகப்பெற்ற கண்களையுடையவர்களாய், சூர்ப்பணகையைத் தழுவிக்கொண்டு சென்றார்க ளென்று பொருள்கூறுதலுமுண்டு; இப்பொருளில், 'களித்த'என்பதை, உள்ளத்துக்குங் கூட்டுக. இந்நிலையில் இவர்கள் அவளைத் தழுவியது உள்ளத்திற்கொண்டகளிமயக்காலென்க. (நிகசு)

கூஅ. நாந்தக [1]வுழவரை நாட்டுந் தண்டத்தர்
காந்திய மனத்தினர் புலவி கைம்மிகச்
சேந்தக [2]ணதிகமுஞ் சிவந்து நீருக
வேந்தனுக் கிளையவ டாளின் வீழ்ந்தனர்.

(இ - ள்.) (மற்றுஞ் சில மகளிர்),—நாந்தகம் உழவரை - வாளுழவரான (தங்கள்) கணவரிடத்து, நாட்டும் தண்டத்தர் - நிலைநிறுத்துந் தண்டனையுடையவர்களும், காந்திய மனத்தினர் - (அவர்கள்பால்) வெதும்பிய மனத்தையுடையவர்களுமாய், புலவி கைம்மிக - ஊடல் மிகவும் அதிகப்பட, சேந்த - (கோபத்தாற்) சிவந்துள்ள, கண் - (தங்கள்) கண்கள், அதிகமும் சிவந்து-மிகவுஞ்சிவக்கப்பெற்று, நீர் உக-நீரைச் சிந்த, வேந்தனுக்கு இளையவள் தாளின் வீழ்ந்தனர் - (தங்களுக்கு) அரசனுகிய இராவணனது தங்கையான சூர்ப்பணகையின் பாதங்களில் விழுந்து வணங்கினர்கள்; (எ - று.)

சிலமகளிர் தமதுகணவரோடு கூடும்பொழுது அக்கூடலின்பம் சிறத்தற் பொருட்டு ஊடல் கொள்ளலுற்று, தங்கள் பக்கல் அன்பின்மை செய்தனரா கச் சிலபிழைகளை அக்கணவர்மே லேற்றி மனஸ்தாபப்பட்டுக் கோபத்தாற் கண்சிவக்க அவ்வூடலை முதிரச்செய்து அவர்களைத் தாம் தண்டிக்கும்படி நின்ற நிலையில் சூர்ப்பணகையின் கதறலைக் கேட்டு அதனால் மனம்மாறி, அந்தப் பிரணயகலகத்தை அப்படியே விட்டு,கண்கலங்கி நீர்சொரிய ஓடிவந்து அவள்காலில் விழுந்து வணங்கின ரென்க. நாந்தகவுழவர் - வாளாகிய கலப் பையைக் கொண்டு பகைவருடலாகிய நிலத்தை யுழுது போராகிய பயிரைச் செய்து வெற்றியாகிய விளைவைப் பெறுபவ ரென்க. உழவரை-உருபுமயக்கம். கைம்மிக-எல்லைமிக. பி-ம்:—[1]உழவன்மேனுடு, உழவன்மேனுடுந். [2]மதிமுகஞ்.

கூகூ. பொற்றலை மரகதப் பூக [1]நோவுறச்
சுற்றிய மணி[2]வடந் [3]தூங்கு மூசலின்
முற்றிய [4]வாடலின் முனிவுற் றேங்கினர்
சிற்றிடை [5]யலமரத் தெருவு சேர்கின்றார்.

(இ - ள்.) (மற்றும் சில இராக்கதஸ்திரீகள்), பொன் தலை-பொன்னிற மான முதிர்ந்த காய்களை மேலிடத்திலுடைய, மரகதம் பூகம் - பச்சையிரத்

தினநிறமான பாக்குமரங்களில், நோவுற - வருந்தும்படி, சுற்றிய - கட்டப்பட்ட, மணி மடம் - நவரத்தினங்களிழைத்த மடங்களிலே, தூங்கும் - தொங்குகிற, ஊசலின் - ஊஞ்சலிலிருந்து, முற்றிய ஆடலின் - மிகுதியாக ஆடுதலில், முனிவுஉற்று - வெறுப்புக் கொண்டு, ஏங்கினர் - விசனமுற்ற வர்களாய், சிறு இடை அலமர - நுண்ணிய (தங்கள்) இடை துவண்டு வருந்த, தெருவு சேர்கின்றார் - தெருவில் வந்து சேர்கிறவராளுகள்; (எ - று.)

சிங்காரப்பூஞ்சோலையிற் பொன்னிறமான பழுக்காய்க்குலைகளையுடைய பசியபாக்குமரங்களிலே பொருந்தக் கட்டப்பட்டுள்ள இரத்தினம் பதித்த பொன்வடங்களில் மாட்டப்பட்ட ஊசலில் உட்கார்ந்து உல்லாசமாக விசையுடன் ஆடி நின்ற சிலமகளிர் சூர்ப்பணகையின் கதறலைக் கேட்டவுடன் அவ்வூஞ்சலாட்டத்தை வெறுத்தொழிந்து அவளை விசாரித்தற்காகத் தமது மெல்லியமேனி வருந்தச் சோகத்தோடு தெருவிற்கு வந்தார்க ளென்க. மரத்திற்கும் உயிருண்டென்ற கொள்கைபற்றி, 'பூகநோவுற' என்றது. 'பொற்றலைமரகதப்பூகம்' என்பதற்கு - பொன்னிஞலே மேலிடமும், மரகதரத்தினத்தினுலே மற்றையதுமாக அமைக்கப்பட்ட செயற்கைப் பாக்குமர மென்றுரைமுளர். பி - ம்:—[1]நோவுற. [2]வடத். [3]தூங்கல். [4]பாடலைமுனிவுற் றேகினர். [5]அலம்வர. (நகூஅ)

சஅ. எழுவென மலியென [1]வெழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர் [2]நெகிழத் தாமரை
முழுமுகத் திருகயன் முத்தி ஞலிகள்
[3]பொழிதரச் சில[4]ருளர் பொருமி [5]விம்முவார்.

(இ - ள்.) உளர் சிலர்-மற்று முள்ள சிலமகளிர்,—எழு என-தூண்போலவும், மலை என - மலைபோலவும், எழுந்த-வளர்ந்துள்ள, தோள்களை-(தமது கணவரது) புயங்களை, தழுவிய - கட்டியமைத்த [ஆலிங்கனஞ்செய்த], வளை தளிர் - வளையல்களை யணிந்த தளிர்போன்ற (தங்கள்) கைகள், நெகிழ-நெகிழ்ச்சியடையவும்,—தாமரை முழு முகத்து - தாமரைமலர் போன்ற அழகு நிறைந்த முகத்திலுள்ள, இரு கயல் - இரண்டுகயல்மீன்போன்ற கண்கள், முத்தின் ஆலிகள் பொழிதர-முத்துக்கள்போன்ற நீர்த்துளிகளைச் சிந்தவும், பொருமி விம்முவார் - விம்மிவிம்மி அழுபவராளுர்கள்; (எ - று.)

சிலமகளிர் கணவர்தோள்களை அன்போடு ஆலிங்கனஞ்செய்கையிற் சூர்ப்பணகையின் கதறலைக் கேட்டு அவ்வளவில் கணவரைத்தழுவி யணைத்த கைகளை நெகிழவிட்டுக் கண்கள் நீர் சொரிய மிகப்புலம்புவாராயின ரென்க. இங்ஙனங் கூறியதனுல், இராக்கத ஸ்திரீகளுக்குத் தங்களரசன்தங்கையான சூர்ப்பணகையினிடத்து உள்ள அன்பும் மரியாதையும் அச்சமும் தோன்றும். தளிர்-கைக்கும், கயல்-கண்ணுக்கும் உவமவாகுபெயர்; வளை, முகத்துஎன்ற அடைமொழிகள், தளிர் கயல் என்றவற்றின் பொருளைவிளக்க வந்தன; இவை, பிறகுறிப்பின்பாற்படும். 'முழுமுகத்து இருகயல்' என்பதற்கு-முகம்

முழுதும் பரவியுள்ள க்ண்க ளென்று பொருள்கொள்வாரும் உளர்.
பி-ம்:—[1]ஏந்து. [2]நெகிழ்ந்த. [3]பொலிதர. [4]உளம். [5]விம்மினர். (நிகூக)

வே று.

சக. நெய்ந்நிலைய வேலரச [1]னேருநரை யில்லா
னிந்நிலை யுணர்ந்தபொழு தெந்நிலைய னென்னு
மைந்நிலை நெடுங்கண் மழை வா[2]னிலைய தாகப்
பொய்ந்நிலை மருங்கினர் புலம்பினர் புரண்டார்.

(இ - ள்.) 'நேருநரை இல்லான் - (தன்னை) எதிர்ப்பவர் எவரையும் பெறுதவனை, நெய் நிலைய வேல் அரசன் - (பகைவரது) நிணம் தோயப் பெற்ற வேலாயுதத்தையுடைய (நமது) அரசனை இராவணன், இ நிலை உணர்ந்தபொழுது - (தன்தங்கையான சூர்ப்பணகைக்கு நேர்ந்த) இந்நிலை மையை அறியும்பொழுது, எ நிலையன்-எந்நிலைமையையுடையவனவனே?' என்னு - என்றுசொல்லிக்கொண்டு,—பொய் நிலை மருங்கினர்-பொய்யாகிய நிலைமையுள்ள இடையையுடைய சிலஇராக்கதமகளிர், மை நிலை நெடு கண் மழை வான் நிலையது ஆக-மைபிடப்பெற்ற நீண்ட (தங்கள்)கண்கள் (சொரி யும் நீர்ப்பெருக்கு) மேகத்தின் மழையின் தன்மையை யுடையதாம்படி, புலம்பினர் புரண்டார் - அழுது கீழ்விழுந்து புரண்டார்கள்; (எ - று.)

நமதுஅரசன் எவருமெதிர்ப்பவரில்லாத தனிவீரனன்றே? அப்படிப் பட்டவன் இப்படி ஒரு எதிரி நேர்ந்ததை அறிந்தால் எவ்வளவுகோபங் கொண்டு அவனே யாதுசெய்யமாட்டான்? என்றுசொல்லிக்கொண்டு சிலமக ளிர் கண்களினின்று தாரைதாரையாக நீர்பெருக அழுதுபுரண்டன ரென்க. உத்தமவிலக்கணத்தின்படி இடை மிகச்சிறுத்துள்ள தென்பதைக் கவிகள் அதிசயோக்தியாக இடையில்லையென்று வருணித்தல் இயல்பாதலால், பொய்த்தோற்றமுடைய இடையையுடையவ ரென்றார். பகைவர்நிணம் அவரையழித்தற்கு அவருடம்பில் வேல் தைத்தபோது அதில் ஒட்டிய தென்க. இனி, நெய்நிலைய வேல் - (பளபளப்பு முதலியவற்றிற்காக) நெய் தடவிய தன்மையையுடைய வேலெனினுமாம். மைந் நிலை என்பதற்கு - கரிய வடிவமுடைய என்றும் உரைக்கலாம். 'நேருநரையில்லான்' என் பதற்கு - தன்னையொப்பாரையில்லாதவனென உரைப்பாருமுளர். பி-ம்:— [1]நேருணகை. [2]நிலையவாக, நிலையமாக.

இதுமுதல் இருபத்திரண்டு கவிகள்-பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் காய்ச்சீர்களு மாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (சுஂஂ)

சஉ. மனந்தலை வருங்[1]கனவி னின்சுவை மறந்தார்
கனந்தலை வருங்குழல் [2]சரிந்து[3]கலை சோர
நனந்தலைய கொங்கைக டதும்பிட நடந்தா
ரனந்தரிள பங்கைய ரழுங்கியயர் கின்றார்.

(இ - ள்.) அனந்தர் - நித்திரைசெய்துகொண்டிருந்த, இள மங்கையர்-இளமைப்பருவமுடைய (சில) இராக்கதமகளிர்,—(சூர்ப்பணகையின் கதறல் கேட்டதனால்),மனம் தலை வரும் கனவின் இன் சுவை மறந்தார் மனத்தினிடத்தே தோன்றிய கனவிலேதோன்றிய இனிய இன்பத்தையும் மறந்தவர்களாய்,—கனம் தலை வரும் குழல் சரிந்து-மேகத்தின்தன்மை முக்கியமாக அமையப்பெற்ற (தங்கள்)கூந்தல் நிலைகுலையப்பெற்று, கலை சோர-ஆடை நெகிழ்ந்திடவும், நனம் தலைய கொங்கைகள் ததும்பிட - அகன்ற இடத்தையுடைய தனங்கள் அசையவும், நடந்தார் - வெளிச்சென்று, அழுங்கி அயர்கின்றார்-மனம்வருந்திச் சோர்கின்றவராளர்கள்; (எ - று.)

சிலமகளிர் நித்திரையில் கணவரோடு தாம் கூடிக்குலாவுவதாகக் கனவு கண்டுகொண்டு ஆனந்தமுற்றிருந்தபொழுது இவள்கதறலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் துயில்விழித்து அக்கனவின்பத்தை மறந்தொழிந்து தாம்நின்றநிலையின்படியே கூந்தல்அவிழ ஆடைநெகிழப் பருத்தகொங்கைகுலுங்க வெளிவந்து மிகச்சோகிப்பவராயின ரென்க. மனத்தலை யென்பது மனந்தலை யென மெலித்தல்விகாரப்பட்டது. இன்சுவை - சிருங்காரரசம்; இது-ஒன்பதுசுவைகளுள் முதலது. கரும்-வடசொல். இரண்டாமடியில், 'தலைவரும்' என்பதிலுள்ள தலையென்பதை உபசருக்கமாகக் கொள்ளுதல், தகுதி. கலை சோர - மேகலாபரணம் நெகிழ்ந்துவிழ என்றலு மொன்று; மேகலை - எட்டுக் சோவை யுள்ள இடையணி. அனந்த ரெனினும், அனந்தலெனினும் ஒக்கும்: இறுதிப்போலி. அனந்தர் என்பதற்கு - கட்குடிமயக்க மென்றும், மனந்தலை வரும் என்பதற்கு - தங்கள்மனத்தில் முதன்மையாக நினைக்கப்பட்டுவருகிற என்றும், கனம்தலைவரும் என்பதற்கு - நிறைவாகத் தலையிலுள்ள வென்றும் உரைப்பாரு முளர். பி-ம்:—[1]கணவர். [2]ஒசிந்து. [3]கடை. (சுஐக)

சுஎ. அங்கையி னரன்கயிலை கொண்டதிற லையன்
றங்கைநிலை யிங்கிதுகொ லென்று தளர்கின்றார்
கொங்கையிணை செங்கையின் மலைந்துகுலை கோதை
மங்கையர்க ணங்கை[1]யடி வந்துவிழு கின்றார்.

(இ - ள்.) குலை கோதை மங்கையர்கள் - (செய்தியறிந்து) அவிழ்ந்த கூந்தலை யுடையரான (சில) அரக்கர்மகளிர்,—'அரன்-சிவபிரானது, கயிலை - கைலாசகிரியை, அம் கையின் கொண்ட - (தனது) அகங்கையில் எடுத்த, திறல் - வல்லமையுடைய, ஐயன்-நமது அரசனான இராவணனது, தங்கை-தங்கையான சூர்ப்பணகையினுடைய, நிலை - நிலைமை, இங்கு இது கொல் - இப்பொழுது இங்ஙனமாயிற்றே?' என்று - என்றுசொல்லி, தளர்கின்றார்-வருந்துகின்றவர்களாய், கொங்கை இணை செம் கையின் மலைந்து - (தமது) இரண்டுதனங்களையுஞ் சிவந்த(தமது)கைகளால் மோதிக்கொண்டு, நங்கை - அந்தச்சூர்ப்பணகையின், அடி - பாதங்களிலே, வந்துவிழுகின்றார் - வந்து விழுகின்றவராளர்கள்; (எ - று.)

இங்குஎன்பதை அசையாக்கி, நிலை இது கொல் - நேர்ந்தநிலைமை இது வோ? என்றலு மொன்று. ஹரன் - வடசொல்: சங்காரக்கடவுள். பி - ம்:— [1]எதிர். (சுஐ)

சஅ. இலங்கையில் விலங்குமிவை யெய்தலில வென்றும்
வலங்கையி லிலங்குமயின் மன்னனுள னென்னு
நலங்கையி லகன்றதுசொ னம்மினென நைந்தார்
[1]கலங்கலி னலங்கணிணை வாரிகளுழ் கின்றார்.

(இ - ள்.) வலம் - வலியதாய், கையில் இலங்கும் - கையிலே விளங்குகிற, அயில்-வேற்படையுடைய, மன்னன் - நமதுஅரசனுகிய இராவணன்: உளன் என்னு - உள்ளானென்றகாரணத்தால், இலங்கையில் - இலங்கைநகரத்தில், விலங்கும் - மிருகங்களுங் கூட, என்றும் - எப்பொழுதும், இவை எய்தல்இல-இப்படிப்பட்டதுன்பங்களே அடைதலில்லையே; (அப்படியிருக்க இப்பொழுது), நலம்-நன்மை, நம்மின் கையில் அகன்றது கொல் - நம்மிடத்தினின்று கைவிட்டு நீங்கியதோ? என-என்றுசொல்லி, நைந்தார்-வருந்தினவர்களாய்: (சிலராகூசஸ்திரீகள்), நல் அம் கண் இணை-மிக அழகிய (தங்கள்) கண்களிரண்டும், கலங்கலின் - கலங்கல்நீர்போல, வாரி கலுழ்கின்றார் - நீர் பெருகப்பெற்றவராளார்கள்; (எ - று.)

நமதுஅரசனுணையால் விலங்குகளும் யாவராலும் யாதொரு தீங்கும் அடையாது நிற்கையில் அரசன்தங்கைக்கு இது நேர்ந்ததை நோக்குமிடத்து, அரக்கர்களைவிட்டு நன்மை நீங்கிய தெனத் தோன்றுகின்றது என்று சிலமகளிர்வருந்திக் கண்ணீருகுப்பாராயினர். இனி, கலங்கலின்-மனங்கலங்குதலால் என்றுமாம். இல - பலவின்பால் முற்று. வலம்-பலம்; இனி, வலங்கையில் என எடுத்து, வலக்கையில் என்று உரைப்பாரு முளர். அயில்-மற்றையாயுதங்களுக்கும் உபலக்ஷணம். இராவணனுக்கு மயன் தன்மகளான மண்டோதரியை மணஞ்செய்துகொடுத்தபொழுது அவனுக்கு அதியற்புதமானதும், தவத்தினுல் தான் வரமாகப்பெற்றதும், பகைவர்மீது பட்டால் வீண்படாததுமான ஒரு சிறந்த வேலாயுதத்தையும் கொடுக்க, அதனை இராவணன் மரியாதையோடுபெற்றன னெனவரலாறு உள்ளதனுல், 'வலங்கையிலிலங்கும் அயில் மன்னன்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டன னெனக் கொள்ளலாம். மன் - பெருமை; அதனையுடையவன், மன்னன். பி-ம்:— [1]கலங்கயினலங், கலங்கலினிலங், கலிங்கலில்கருங். (சுஐ)

சுரு.—சூர்ப்பணகை இராவணனடியில் விழுந்துபுரளுதல்.

என்றிணைய வன்றுய ரிலங்கைநக ரெய்த
நின்றவ ரிருந்தவ ரொடோடு நெறிதேடக்
[1]குன்றினடி வந்து[2]படி கொண்டலென மன்னன்
[3]பொன்றிணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள்.

(இ-ள்.) என்று இனைய வல் துயர்-என்று இத்தன்மையதானகொடிய துன்பத்தை, இலங்கை நகர் எய்த-இலங்காபுரியிலுள்ளா ரனைவரும் அடை

யும்படியாகவும், நின்றவர் இருந்தவரொடு ஓடு நெறி தேட - (அவ்விராவண னதுசபையில்) நின்றவர்களும் உட்கார்ந்திருந்தவர்களும் (திடுக்கிட்டு) ஓடிப் போகும்வழியை நாடும்படியாகவும், (சூர்ப்பணகை),குன்றின் அடி வந்து படி கொண்டல் என - மலையின் அடிவாரத்திலே வந்து படிகிற மேகம் போல, மன்னன் பொன் திணி கரு கழல் விழுந்தனள் புரண்டாள் - இராக்கதராச னான இராவணனது பொன்மயமாயமைந்த பெரிய வீரக்கழலே யணிந்த பாதத்தில் விழுந்து புரண்டாள்; (எ - று.)

குன்று-இராவணனுக்கும், அதன் அடி - இராவணனடிக்கும், கருமேகம் - சூர்ப்பணகைக்கும் உவமையாம். பொன்திணி கருங்கழல்-பாதத்துக்கு, அன்மொழித்தொகை. பி-ம்:—[1]குன்றினிடை. [2]படர். [3]பொன்றனிதருங்.

சசூ.—இது முதல் மூன்றுகவிகள் - அப்போழுது உலகத்திலுண்டான குழப்பத்தைக் கூறும்.

மூடின திருட்[1]படலை மூவுலகு முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குவை கௌித்தா
னோடின குலக்கிரி யருக்கனு மயிர்த்தா
னோடின திசைக்கரிக ளும்பரு மொளித்தார்.

(இ - ள்.) மூ உலகும் முற்ற-மூன்றுலகங்களிலும் முழுவதும், இருள் படலை மூடினது-இருளின் தொகுதி மூடிக்கொண்டது;சேடனும்-(கீழிருந்து பூமியைத்தாங்குகிற) ஆதிசேஷனும், வெரு கொடு - அச்சங்கொண்டு, சிரம் குவை கௌித்தான் - (தனது) தலைகளின் கூட்டத்தை கௌித்தான்; குலம் கிரி - குலபருவதங்களும், ஆடின - அசைவுகொண்டன; அருக்கனும்-சூரியனும், அயிர்த்தான் - ஒளிமழுங்கினன்; திசை கரிகள் - திக்கஜங்களும், ஓடின - (தமது இடம் விட்டுப் பெயர்ந்து) ஓடலுற்றன; உம்பரும் - தேவர்களும், ஒளித்தார் - (அஞ்சி) ஒளித்துக்கொள்பவராயினர்; (எ - று.)

அயிர்த்தான் என்பதற்கு-இது என்னை வென்று சங்கித்துத் திகைத்தானென்றும் பொருள்கொள்ளலாம். குலகிரிகள் - கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன. சேஷன் என்ற வடசொல் - (பிரளயகாலத்திலும் அழிவில்லாமல்) மிச்சமாய் நிற்பவனென்று காரணப்பொருள்படும். ஆயிரந்தலைகளாதலால், 'சிரக்குவை' என்றார். உம்ப ரென்னும் மேலிடத்தின் பெயர் - அங்குள்ளார்க்கு இடவாகுபெயராம்; இதன் எதிர்மொழி - இம்பர்: இவ்வுலகம்: (அம்ப ரென்ற பெயரும் உண்டு.) முதல்வாக்கியத்தால் - சந்திரன் நக்ஷத்திரம் அக்கினி முதலிய சுடர்கள்யாவும் இராவணன் கோபத்துக்கு அஞ்சி மறைந்திட்டன வென்றும், இரண்டாம்வாக்கியத்தால் - இராவணன் கோபித்து நிலத்திற் காலூன்றி யெழத்தொடங்கியதாலாகிய அதிர்ச்சியால் மிக்கதென்றும், மூன்றாம்வாக்கியத்தால் - எங்கும் அதிர்ச்சியிக்க தென்றும், நான்காம் வாக்கியத்தால்-சூரியன் அஸ்தமித்தா னென்றும், மற்றைய இரண்டு வாக்கியங்களால்-விலங்குக

ளோடு தேவர்களோடு வாசியற அச்சங்கொண்டன ரென்றும் பெறப்படும். படலை - படல மென்ற வடசொல் ஈறுதிரிந்தது. பி-ம்:—[1]படலம். (சுஐ)

சஎ. விரிந்த வலயங்கண் [1]மிடை தோள்படர மீதிட்
டெரிந்த நயனங்க [2]ளெயிறின்புற [3]மெரீப்ப
நெரிந்த புருவங்களிடை நெற்றியினே முற்றத்
திரிந்த புவனங்கள்வினே தேவரு [4]மயிர்த்தார்.

(இ - ள்.) விரிந்த - ஒளிவீசுகிற, வலயங்கள் - வளைகள், மிடை-நெருங்கப்பெற்ற, தோள் - (இராவணனுடைய) தோள்கள், படர - (கோபாவேசத்தால்) பூரிக்கவும்,—நயனங்கள்-(அவனுடைய) கண்கள், மீது இட்டு எரிந்த-(கோபமிகுதியால் நெருப்பு) மிகுதியாகப் பொங்கப்பெறவும்,—எயிறின் புறம் - பற்களின் வெளி, எரிப்ப - (வாயினின்று எழும் கோபாக்கினியால்) சுவாலவீசவும்,—நெரிந்த புருவங்கள் - (கோபத்தால்) நெறித்த புருவங்கள், இடைநெற்றியினே முற்ற - (மேலேறி) நடுநெற்றியைச் சேரவும்,—(அக் கோபநிலையைக்கண்டு), புவனங்கள் திரிந்த - உலகங்களெல்லாம் நிலைமாறிச் சுழலலுற்றன; தேவரும் - தேவர்களும், வினே அயிர்த்தார்-இன்னதொழில் செய்வ தென்று அறியாமல் திகைத்தார்கள்; (எ - று.)

வலயம், நயநம், புவநம் - வடசொற்கள். படர - புடைபருக்க. எரிந்த - எரிந்தனவாக; பலவின்பால் முற்றெச்சம். [4]அயர்த்தார் என்ற பாடத்துக்கு - தொழில் மறந்துசோர்ந்தன ரென்க. ஓசையின்பம்நோக்கி 'எயிற்றின்'எனத் தன்னெற்றிரட்டவில்லை. பி-ம்:—[1]மிகு. [2]எயிறன். [3]இமைப்ப, எறிப்ப. ()

சஅ. தென்றிசை நமன்றனெடு தேவர்குல மெல்லா
மின்[1]றிறுதி வந்தது நமக்கென [2]விருந்த
[3]நின்றுட னடுங்கி யுயிர்விம்மி நிலை[4]நில்லா
தொன்றுமுரை யாட[5]லில ரும்பரினெ டிம்பர்.

(இ - ள்.) தென் திசை நமன்தனெடு - தெற்குத்திக்குப்பாலகனான யமனுடன், தேவர் குலம் எல்லாம் - தேவர்களுடைய வகைகள் யாவும், இன்று நமக்கு இறுதி வந்தது என இருந்த - இப்பொழுது நமக்கு நாசம்நேர்ந்து விட்டதென்று கருதி ஒடுங்கி நின்றன; உம்பரினெடு - மேலுலகத்தவர்களும், இம்பர் - இவ்வுலகத்தவர்களும், நின்று உடல் நடுங்கி - திகைத்துநின்று(அச்சத்தால் தமது) உடல் நடுக்கங்கொண்டு, உயிர் விம்மி - பெருமூச்செறிந்து, நிலை நில்லாது - ஒருநிலையில் நிற்கமுடியாமல், ஒன்றும் உரையாடல் இலர்-யாதொன்றும்பேசுதலின்றி (மௌனமாய்) நின்றார்கள்; (எ - று.)

வந்தது என இறந்தகாலத்தாற் கூறினது, தெளிவும் விரைவுங் காட்டும்; காலவழுவமைதி. பி-ம்:—[1]உறுதி. [2]இருந்தார். [3]நின்றுயிர்நடுங்கி யுடல். [4]நில்லார், இல்லாது. [5]இலது. (சுஎ)

சகூ.—இராவணன் சூர்ப்பணகையை 'இது செய்தவர் யார்?' என்றல்.

மடித்தபில வாய்கடொறும் வந்துபுகை மூந்தத்
திடித்த தொடர் மீசைகள் சுறக்கொள வுயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்[2]கனல மேகத்
திடித்தவுரு மொத்துரறி யாவர்செய லென்றான்.

(இ - ள்.) மடித்த - (கோபத்தால்) உதடுமடிக்கப்பட்ட, பிலம் வாய்கள் தொறும் - பிலத்துவாரம்போல (ஆழ்ந்து அகன்று நீண்டுள்ள தனது) பத்து வாய்களிலும், புகை வந்து மூந்த-(கோபாக்கினியின்) புகை எழுந்து வெளிச் செல்லவும்,—துடித்த தொடர் மீசைகள்-(படபடவென்று) துடித்த (நெடுந் தூரமளவும்) தொடர்ச்சியுள்ள மீசைமயிர்கள், சுறு கொள-தீப்பற்றும்படி, உயிர்ப்ப - (கோபாக்கினியோடு) பெருமூச்சு வெளிப்படவும்,—கடித்த-(கோபத்தாற்) கடிக்கப்பட்ட, கதிர் வாள் எயிறு - கூர்மையும் ஒளியுமுள்ள பற்கள், மின் கனல - மின்னல்போன்ற ஒளியை வெளியிடவும்,—மேகத்து இடித்த உரும் ஒத்து உரறி - மேகத்தினின்றும் இடித்த இடியைப்போலப் பேரொலி செய்து, யாவர் செயல் என்றான் - 'இது யாருடைய செய்கை?' என்று வினவினான்; (எ - று.)

பிலம் - வடசொல்; மலைக்குகையுமாம். மிசையென்பது மீசையென விகாரப்பட்ட தென்றும், மிசையென்பது-மேலிடமாதலால் அது ஆகுபெயராய் வாயின்மேலுள்ள மயிரைக் குறிக்கு மென்றுங் கூறுவர். சுறுக்கொள = சுறுக்குக்கொள்ள. பி-ம்:—[1]சுடர். [2]கனல. (கூ0அ)

ஙo.—சூர்ப்பணகை விடைகூறுதல்.

காணிடை யடைந்துபுவி காவல்புரி கின்றார்
மீனுடை நெடுங்கொடியி னே[1]னையர் [2]மேல்கீ
ழானுடை யுடம்புடைமை யோருவமை [3]யொவ்வா
மானிடர் தடிந்தனர்கள் வாளுருவி யென்றாள்.

(இ - ள்.) புவி காவல் புரிகின்றார் - பூமியைப் பாதுகாக்கின்றவர்களும், மீன் உடை நெடு கொடியினை அனையர்-மீன்வடிவத்தையுடைய உயர்ந்த கொடியையுடைய மன்மதன் போன்றவர்களும், மேல் கீழ்-விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலுமுள்ள, ஊன் உடை உடம்பு உடைமையோர் - தசையையுடைய உடம்புடையவர்கள் (எவரும்), உவமை ஒவ்வா - (தமக்கு)ஒப்பாகப் பெறுதலர்களுமாகிய, மானிடர்-மனிதர்கள் (இருவர்), கானிடை அடைந்து - (நான் இருந்த)காட்டில் வந்து, வாள் உருவி தடிந்தனர்கள்-வாளாயுதத்தை உருவியெடுத்து (எனது உறுப்புக்களை) அறுத்திட்டார்கள், என்றாள்-என்றுசொன்னாள், (சூர்ப்பணகை); (எ - று.)

தனக்குத் தீங்கு செய்தவர்களை இன்னரென்று எடுத்துக்கூறுமிடத்தும் அவர்களுடைய அழகைப் பாராட்டிக்கூறுதற்குக் காரணம், இவள் அவர்க

ளிடத்துக்கொண்டுள்ள மிக்கவேட்கை சிறிதுந் தணியாமை; கீழ்க் கரனுடன் கூறுமிடத்தும் "மன்மதன் மேனியர்" என்றமை காண்க: அடுத்த இரு-ஆங் கவிகளும் நோக்கத்தக்கன. இருவரிடத்தும் இவள் ஒருங்கராகக் காதல் கொண்டதனால், இருவரைப்பற்றியும் ஒருங்கராக எடுத்துக்கூறுகிறாள். தன்னைத்தடிந்ததற்கு இராமனை ஏவுதற்கருத்தாவும், இலக்குமணனை இயற்றுதற்கருத்தாவுமாகக்கொண்டு, 'மானிடர் தடிந்தனர்கள்' எனப் பன்மையாற் கூறினள். பிராகிருதசரீரமுடையவர் எவரும் அவர்களுக்கு ஒப்பாகமாட்டார் என்பது, மூன்றுமடியின் கருத்து. 'புவிகாவல் புரிகின்றார்' என்றது-கூத்திரியரென்பதையும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்கிறவ ரென்பதையும், சக்கரவர்த்தி குமாரர்க ளென்பதையும் காட்டும். 'காணிடையடைந்து புவிகாவல் புரிகின்றார்' என்றேயெடுத்து, வனவாசம்வந்து பூமியைப் பரிபாலிப்பவரென்று கொள்ளவும் இடமுண்டு. புவி - வடசொல்; இது, அந்தப்பாஷையில் ஏழாம்வேற்றுமைவிரி; தமிழில் பெயர்மாத்திரமாய் நிற்கும். பி-ம்:—[1]முதல. [2]கீழ்மேல். [3]இல்லா. (சுஅக)

நிக.—இராவணன் கோபித்து 'நடந்ததை விவரமாகக் கூறு' எனறல்.

செய்தனர்கண் மானிட ரெனத்திசை யீனத்து
மெய்தநகை வந்ததெரி சிந்தின கணெல்லா
நொய்தவர் வலித்தொழி னுவன்ற[1]மொழி யொன்றோ
பொய்தவிர் பயத்தையொழி [2]புக்கபுக லென்றான்.

(இ - ள்.) மானிடர் செய்தனர்கள் என - (இவ்வாறு) மனிதர்கள் செய்தார்களென்று (சூர்ப்பணகை) சொன்னவளவிலே, (இராவணனுக்கு), திசை அனைத்தும் எய்த நகை வந்தது-எல்லாத்திக்குக்களிலும் (ஓசை) செல்லும்படி சிரிப்பு உண்டாயிற்று; கண் எல்லாம் எரி சிந்தின - (அவனுடைய) கண்கள் யாவும் நெருப்புப்பொறியை உமிழ்ந்தன; (இங்ஙனம் அலக்ஷ்யமும் கோபமும் அடைந்து தங்கையைநோக்கி), 'அவர் வலி தொழில்-அம்மனிதர்களுடைய வல்லமைச்செயல், நொய்து - அற்பமானதன்றோ? (ஆதலால்), நுவன்ற மொழி ஒன்றோ - (நீ) சொன்ன வார்த்தை உண்மையான தொரு வார்த்தை தானோ? பொய் தவிர் - பொய்கூறுவதை விட்டிடு; பயத்தை ஒழி - அச்சத்தை நீங்கு; புக்க புகல்-நடந்தசெய்திகளை(உள்ளபடி)சொல்', என்றான்-என்றுசொன்னான்.

மனிதர்கள் தன்னை மானபங்கஞ் செய்தார்க ளென்று சூர்ப்பணகை சொன்ன வார்த்தையைக் கேட்டவளவிலே, இராவணன், உலகமுழுவதும் பெருமுழக்க முண்டாம்படி அலக்ஷ்யமாகப் பெருஞ்சிரிப்புச்சிரித்துக் கண்கள் தீயுமிழப் பெருங்கோபங்கொண்டு 'மனிதர்கள் அற்பபலமுடையவராயிற்றே; ஆதலால், அவர்கள் இங்ஙனஞ்செய்ய இயலாதே; ஆனதுபற்றி, நீ சொன்னவார்த்தை நம்பத்தக்கதொன்றன்று; பொய்யாகக் கற்பித்துக் கூறுகின்றனைபோலும்; அன்றி, ஏதேனும் அச்சத்தால் வாய்குழறி ஒன்றுக்கு ஒன்றுகச் சொல்லுகின்றாயோ? அப்படிப்பட்ட பொய்யையும் அச்சத்தையும்விட்டு நிகழ்ந்த செய்

திகளை நிகழ்ந்தபடி உண்மையாகச்சொல்' என்று சூர்ப்பணகையைப் பார்த்துக் கூறின னென்பதாம்.

• 'செய்தனர்கள் மானிடர்' என்பது, அநுவாதம்; தொடர்ச்சியை விளக்கக் கூறியது; ஆதலின், கூறியதுகூற லன்று. நகை - முதனிலைத் தொழிற் பெயர். பி-ம்:—[1]பொருள். [2]உற்ற. (சுகo)

நூ2.—இதுமுதல் ஆறுகவிகள் ஒருதோடர்: சூர்ப்பணகை விவரமாகக் கூறும்விடை.

மன்மதனே யொப்பர் மணிமேனி வடமேரு
தன்[1]னெழி லழிப்பர் திரடோளின்வலி தன்னு
லென்னதனே யிப்பொழு [2]திசைப்ப துலகேழி
னன்மத னழிப்பரொ ரிமைப்பி னனி[3]வில்லான்.

(இ - ள்.)(நான் சொன்ன மனிதர்கள்),மணிமேனி-அழகிய(தங்கள்)வடிவத்தால், மன்மதனே ஒப்பர் - மன்மதனேப் போல்வார்கள்; திரள் தோளின் வலிதன்னால்-திரண்ட தோள்களின் வலிமையால்,வட மேருதன் எழில் அழிப்பர்-வடக்கிலுள்ள மகாமேருமலையின் வளர்ச்சியைக் கீழ்ப்படுத்துவார்கள்;வில்லான் - (தாங்கள் கைக்கொண்ட) வில்லின்வலிமையால், ஓர் இமைப்பின்-ஒரு மாத்திரைப்பொழுதிலே, ஈனி-மிகுதியாக, உலகு எழின் நல் மதன் அழிப்பர்-ஏழுலோகங்களிலுமுள்ள அனைவருடைய நல்லவலிமையையும் அழிக்கவல்லர்கள்; அதனை - அவர்கள்தன்மையை, இப்பொழுது இசைப்பது என் - இப்பொழுது சொல்வது எவ்வாறு?[சொல்லிமுடித்தற்கு அரிதென்றபடி]; (எ-று.)

அவர்களுடைய அழகும், இயற்கை வலிமையும், செயற்கை வலிமையும் இதிற் கூறப்பட்டன. அவர்களழகில் தான் மிகுதியாக ஈடுபட்டதனால், மீண்டும், கூறியதுகூறலாக, முதலில்,'மன்மதனே யொப்பர்' என்றாள்; அன்றி, அழகில் மன்மதன்போலிருப்பினும் ஆற்றலில் சிறந்தவரென்று காட்டுத்தற்கு அதனையெடுத்துக் கூறினுமாம். மன்மத னென்றவடசொல்-(பிராணிகளின்) மனத்தை (ஆசைதோயாற்) கலக்குபவ னென்று பொருள்படும். இங்கே, மன்மத னென்றது, சிவபிரானு லெரிக்கப்பட்டு அநங்கனுக்கு முன் அங்கத்தோடு கூடியிருந்த நிலைமையை பென்க. 'மேருதன்' என்பதில், தன் - சாரியை: ஆறனுருபாகக் கொள்வாரு முளர். எழில் - 'இல்' விகுதி பெற்ற தொழிற் பெயர். மதன் - மதமென்ற வடசொல்லின் போலி. இமைப்பு - மனிதர் இயல்பாக ஒருகாற் கண் இமைத்தற்கு வேண்டும் பொழுது; தொழிலாகு பெயர். பி ம்:—[1]மதன். [2]உரைப்பது. [3]வில்லால். (சுகக)

நூ. வந்தனே மூனித்தலைவர் பாலுடையர் வானத்
திந்துவின் முகத்த ரெறிநீரி லெழுநாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர் கழல்கைய
ரந்தமி றவத்தொழில ராரவரை யொப்பார். •

(இ - ள்.) (மற்றும் அவர்கள்), முனி தலைவர்பால் வந்தனை உடையர் - சிறந்த முனிவர்கள்பக்கல் வணக்க முடையவர்கள்; வானத்து இந்துவின் முகத்தர் - ஆகாயத்திலே விளங்குகிற சந்திரன்போன்ற முகமுடையவர்கள்; எறி நீரில் - (அலைகளை) வீசுகின்ற நீரிலே, எழு-தோன்றுகிற, நாளம்-உட்டுளையுள்ள தண்டோடு கூடிய, கந்தம் மலரை - நறுமணத்தையுடைய தாமரை மலரை, பொருவு - ஒத்த, கண்ணர் - கண்களையுடையவர்கள்; கழல் கையர் - (அப்படிப்பட்ட) பாதங்களையும் கைகளையு முடையவர்கள்; அந்தம் இல் தவம் தொழிலர் - எல்லையில்லாத தவத்துக்கு உரிய தொழிலையுடையவர்கள்; அவரை ஒப்பார் ஆர் - அவர்களுக்கு ஒப்பானவர் (உலகத்தில்) எவர் உளர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

'முனித்தலைவர்பால் வந்தனை யுடையர்' என்றதனால், அவர்கள் பிற ரெவரையும் வணங்கா ரென்பது கூறினாளாம். முகத்துக்குச் சந்திர னுவமை-குளிர்ந்தஒளியுடன் காண்பவர் மனத்தை மகிழ்வித்தற்கு. 'மலரைப்பொருவு' என்ற அடைமொழியை, கழல்கைகளுக்கும் கூட்டுக; "கைவண்ணந்தாமரை வாய் கமலம்போலும் கண்ணிணையு மரவிந்த மடியு மஃதே" என்று தலைவி வார்த்தையாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்தவாறும்அறிக. நீரினின்று பறிக்கப்பட்டு வாடிய தாகாமல் அங்குத் தோன்றி மலர்ந்தபடியே காம்புட னுள்ள தாமரைமல ரென்றற்கு, 'நீரிலெழு நாள மலர்' எனப்பட்டது. உபமானமாகிய மலருக்கு 'கந்தம்' என்ற அடைகொடுத்தது, உபமேயமாகிய ஸ்ரீகந்தனை எம்பெருமானுடைய திருவவயவங்களின் திவ்வியபரிமளத் தைத் தெரிவிக்கும். நாளம் - உட்டுளையுள்ள பூந்தண்டு. கழல் கை - அஃறி ணையும்மைத்தொகை, பன்மைவிகுதிபெறாது நின்றது; 'பிராணிகளின் உறுப் பையுணர்த்தும் உம்மைத்தொகை ஒருமையாகவே நிற்கும்' என்பது, வடநூ லார்க்கு ஒப்பமுடிந்தவாறும் உணர்க. மரவுரியுடுத்தமையும் சடைமுடிதரித் தமையும் பற்றி, 'அந்தமில்தவத்தொழிலர்' என்றார்; கீழ்க் கரனிடம் கூறு மிடத்தும் "இருவர் மானிடர் தாபத ரேந்திய, வரிவில் வாட்கையர் மன் மதன் மேனியர், தருமநீரர் தயரதன் காதலர், செருவில் நேரும் திருதரைத் தேடுவார்" என்றாரேறே. இனி, 'அந்தமில் தவத்தொழிலர்' என்பதற்கு-முனிவர்கள் வரம் பின்றிச் செய்யுந் தவத்துக்கு உதவுந் தொழிலுடையா ரென்றும் உரைக்கலாம். அவர்கட்கு ஒப்பார் இல்லை யெனவே, உயர்வார் இல்லை யென்பது அருத்தாபத்தியாற் பெறப்படும். (சுகஉ)

ருச. வற்கலையர் வார்கழலர் மார்பினணி நூலர்
விற்கலையர் [1]வேதமுறை நாவர் [2]தளிர் மெய்ய
ருற்கலைய ருண்ணியொர் [3]துகட்டுணையு முன்னர்
[4]சொற்கலை யெனத்தொலைவி நூணிகள் சுமந்தார்.

(இ - ள்.) (இன்னும் அவர்கள்), வற்கலையர் - மரவுரியாடை தரித்தவர் கள் : வார் கழலர்-நீண்ட வீரக்கழலையுடையவர்கள் : மார்பின் அணி நூலர்-மார்பிலே தரித்த அழகிய மூப்புரிநூலை யுடையவர்கள் : வில் கலையர் - வில்

வித்தையில் வல்லவர்கள்: வேதம் உறை நாவர் - வேதங்கள் விசிக்கின்ற நாவினை யுடையவர்கள்: தளிர் மெய்யர் - தளிர்போன்ற மேனியை யுடைய வர்கள் : உற்கு அலேயர் - உனக்கு அஞ்சாதவர்கள்; உன்னை ஓர் துகள் தூணை யும் உன்னர் - உன்னை ஒருசிறுபொடியளவாகவும் மதியாதவர்கள்; சொல் கலே என - சொற்களின் வடிவமாகவுள்ள சாஸ்திரங்களேப்போல, தொலேவு இல் தூணிகள் சுமந்தார் - அழிவில்லாத அம்பறுத்தூணிகளேத் தாங்கினவர் கள்; (எ - று.)

வற்கலே - வல்கலா என்ற வடசொல்லின் திரிபு. விற்கலே - தநுர் வேதம். கலே கலா என்ற வடசொல் திரிந்தது. வேதமுறை நாவர் - வேதங்களே ஓதியுணர்ந்தவ ரென்றவாறு. கரன்முதலிய அளவிறந்த அரக் கர்களே ஒரு சிறிது பொழுதில் அழித்ததனுல் 'வில்வித்தையில் தேர்ந்தவர் கள்' என்றுள். 'உற்கு அலேயர்: உன்னை யொர்துகள் தூணேயு முன்னர்' என்றது, அவர்கள் சொல்லாலும், செயலாலும் அறிந்தது; ''வல்லேயாகின் வெறித்தாரை வேலரக்கர் விறலியக்கர் முதலினர் நீமிடலோ ரென்று, குறித் தாரை யாவரையுங் கொணருதியே னின்னெதிரே நோறும்'' என்று இராம பிரான் கூறியதனே யுணர்க. செயல் - தன்னேப் பங்கஞ்செய்ததும், கரன் முதலியோரை வதைத்ததும். கரனுடன் கூறுமிடத்தும் ''ஒன்று நோக்கல ருன்வலி'' என்றுள். உற்கு - உனக்கு; அகரச்சாரியை தொக்கது. அலே யர் - அலேயா ரென்பதன் குறுக்கல்; அன்றி, எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்ட தென்றலும் இலக்கணநடைக்குப் பொருந்தும். துகள் - நூளி என்ற வடசொல்லின் சிதைவு. உம் - இழிவுசிறப்பு. 'சொற்கலேயெனத் தொலேவில் தூணிகள் சுமந்தார்' என்றது, சொற்கள் நிறைந்த சாஸ்திரங் களே மனத்தில் தரித்திருப்பதுபோல அம்புகள் நிறைந்த தூணிகளேத் தோளில் தரித்தவர்க ளென்றவாறு. எடுக்கஎடுக்க அம்புகள் குறைதலில் லாத அக்ஷய தூணீர மென்பதைக் காட்டுதற்கு 'தொலேவு இல் தூணி' என்றுள்; அதற்கு, பயிலப்பயிலச் சொற்கள் குறைதலில்லாத கலேயோடு உவமை பொருந்துமாறுணர்க. இனி, நான்காமடிக்கு - தநுர்வேதமுறை மைப்படி அம்பறுத்தூணி தரித்தவ ரென்று உரைத்தலு மொன்று. தூணி - தூணீர மென்ற வடசொல்லின் திரிபு. [1]வேதமுரைநாவர் என்ற பாடத் துக்கு - வேதங்களேக் கூறும்நாவையுடையவ ரென்க; திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் ''இவர் வாயினல்வேத மோதும் வேதியர்'' என்பது தலேவி வார்த்தையாத லுணர்க. 'வற்கலேயர்' என்றது, அவர்கட்கு மரவுரியுடை யும் ஓர் அழகாயிருந்தது என்று பாராட்டிக் கூறியவாறு. பி - ம்:—[2]நனி. [3]துகட்டனேயும். [4]சொற்கலேவென. (சுகஉ)

ருரு. ஆறு[1]புல னஞ்சின மரக்கரை யெனச்சென்
றேறுநெறி யந்தண ரியம்ப வுலகெல்லாம்

[2]வேறுமெனு நுங்கள்குலம் வேரொடு மடங்கக்
கோறுமென முந்தையொரு சூளுறவு கொண்டார்.

(இ - ள்.) எதும் நெறி அத்தணர் - உயர்ந்த ஒழுக்கத்தையுடைய முனிவர்கள், சென்று - (அம்மனிதர்களிடத்தில்) வந்து, 'ஆறு புலன் தவிவாழுக்கத்தால் தணிந்துள்ள (எங்கள்) புலன்களெல்லாவற்றாலும், அரக்கரை அஞ்சினம் - இராக்கதர்க்குப் பயந்துள்ளோம்,' என இயம்ப என்று சொல்லித்தங்கள் குறைகளை முறையிட, (அம்மனிதர்கள்), உலகு எல்லாம் வேறும் எனும் நுங்கள் குலம் வேரோடும் அடங்க கோறும் என முந்தை ஒரு சூளுறவு கொண்டார்-எல்லாவுலகங்களையும் வென்றிடுவோ மென்று சொல்லுகிற உங்களுடைய [அரக்கர்களுடைய] வமிசத்தை அடியோடு அழியும்படி கொன்றிடுவோம் என்று முன்பு ஒரு சபதத்தைச் செய்துள்ளவர்கள்; (எ - று.)

இராமலக்ஷ்மணர் தண்டகாரணியத்தில் வந்தபோது அவ்வனத்தில் வாழும் வாலகில்யர் முதலிய முனிவர்கள் அவர்களை எதிர்கொண்டு மிக்க களிப்போடு உபசரித்து "இரக்கமென் றொருபொரு ளிலாத நெஞ்சின, ரரக்கரென்றுளர்சில ரறத்தி னீங்கினர்" என்றுதொடங்கி இராக்கதருடைய உபத்திரவங்களை யெடுத்துச்சொல்லி "அருளுடை வீர நின்னபயம் யாம்" என்று சரணமடைய, அவர்களுக்குப் பெருமான் அபயமளித்து "ஆ ரறத்தினெ டன்றி நின்ரு ரவர், வேரறுப்பென்" என்று தாம் இராக்கத சங்காரஞ் செய்வதாகப் பிரதிஜ்ஞை கூறியமையை, அகத்தியப்படலத்திற் காணலாம். அதனை இவள் (கீழ்ச் சூர்ப்பணகைப்படலத்தில்) "வேதியரும் மாதவரும் வேண்ட நீண்டு, கரையளித்தற்கரிய படைக்கட லரக்கர் குலக் தொலைத்துக் கண்டாய் பண்டை, வரையளித்த குலமாட நகர்புகுவே மிவைதெரிய மனக்கொள்" என்று இராமன் கூறியதனால் அறிந்தாள்.

மெய்வாய்கண்மூக்குச்செவி யென்னும் ஐம்பொறிகளாலும் அவர்களுக்கு அஞ்சுவோமென்பார், 'புலனஞ்சினம்' என்றார். பொறியைப் புலனென்றது, உபசாரவழக்கின்பாற்படும். நாங்கள் ஐம்புலன்களை அடக்கிப் பொறுமையை மேற்கொண்டிருத்தலால் சாபங்கொடுத்து அவர்களைக்கொல்ல லாகா தென்பதைக் குறிப்பிப்பார், 'ஆறுபுலன்' என்றார்; இந்நுட்பம் "வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம், பூண்டுள ராயினும் பொறையி ஞற்றலான், மூண்டெழு வெகுளியை முதலி னீங்கினு, ராண்டுறை யரக்கரா லலைப் புண்டாரரோ" என்ற அகத்தியப்படலத்துச் செய்புளால் விளங்கும். ஆறு புலன் - வினைத்தொகை; ஆறு - வினைப்பகுதி. இனி, இதனை எண்ணுப் பெயராகக் கொண்டு, பண்புத்தொகையாக்கி, அறிவகை யுணர்வினாலும் அஞ்சினை மென்றலும் ஒன்று; "மக்கள்தாமே யாறறி வுயிரே" என்ற தொல் காப்பியத்தால், மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென் பதோ ரறிவு முடையராத லுணர்க. "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும், எச்ச மிலவே பொருள் வயினான" என்ற தொல்காப்பியங்கொண்டு 'அரக்கரை யஞ்சினம்' என்றது வழாநிலையாதல் உணர்க.

ஏறுநெறி-சன்மார்க்கம். ஏறுநெறியந்தணர்-முத்தியுலகிற்குஏறும் ஞான மார்க்கமுடையாருமாம்; தாம் மூழ்கியுள்ள துன்பக்கடலினின்று கரை யேறும் வழியை நாடுபவருமாம்; ''பிறவி வெந்துபர்ப், பெருஞ்சிறை வீடுபெற் றனைய பெற்றியார்'' என்றும், ''அரக்கரென் கடலிடை யாழ்கின்ருரொரு, மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினர்'' என்றும் அகத்தியப்படலத்தில்வந்த மை யுணர்க. அந்தணரென்ற காரணவிடுகுறிப் பெயர்-முனிவர்க்கே சிறத் தல், ''அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண் டொழுக லான்'' என்ற திருக்குறளினலும் அமையும்; இப்படி மிக்கதண்மை பூண்டு ஒழுகியதனலேயே அவர்கள் தாம் நேரில் அரக்கரை அழியாராயின ரென்பதை நன்குவிளக்குதற்கு, இங்கு 'அந்தணர்'என்ற பெயராற் குறித் தார். வேறும், கோறும் என்ற தன்மைப்பன்மைமுற்றுக்களில், வெல், கொல் - பகுதி. முக்தையென்றது, 'இயம்ப' என்பதனேடுஞ் சேரும். குலம் வேரொடு மடங்குதல்-வம்சநாசமாதல். பி-மீ:—[1]மனம். [2]வேறுமெனினுங்கள். ''மாரருளர்'' என்ற அடித்தபாடலுக்குப்பின் இப்பாடல் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (சுகச)

ஈகூ. மாரருள ரேயிருவ ரோ[1]ருலகின் வாழ்வார்
வீர[2]ருள ரேயவரின் வில்லதனின் வல்லா
ராரொருவ ரன்னவரை யொப்பவர்க ளேயா
வோரொருவ ரே[3]யிறைவர் மூவரையு மொப்பார்.

(இ - ள்.) ஐயா-ஐயனே! ஓர் உலகின் வாழ்வார் இருவர் மாரர் உளரே-ஒருலகத்தில் வாழ்கிற இரண்டுமன்மதர்கள் இருக்கிறார்களா?வில் அதனின் அவரின் வல்லார் வீரர் உளரே - வில்வித்தையில் அம்மனிதர்களேப்பார்க்கி லும் வல்லவர்களாகிய வீரர்கள் இருக்கிறார்களோ? [இல்லே யென்றபடி]; அன்னவரை ஒப்பவர்கள் ஒருவர் ஆர் - அவர்களுக்குச்சமானமாகும் ஒருவர் ஆர்? [எவருமில்லே யென்றபடி];ஓர் ஒருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்-அவர்களில் ஒவ்வொருவருமே எப்பொருட்குந் தலேவரான திரிமூர்த்திகளே யும் ஒப்பார்கள்; (எ - று.)

முதலடியால்,ஓருலகில் இரண்டு மன்மதர் உளராயின் அவர்கட்கு ஒரு படி யொப்பாவ ரென்றும், அவர்கள் ஒருலகில் ஒருங்குவாழும் மன்மதரிருவ ரென்று கருதத்தக்கவ ரென்றும் விளங்கும். உலகத்தில் இரண்டுமன்மதர் இல்லேயாதலால், அவர்கட்கு மன்மதனே ஈடென்பதும் இயைவதன்றுஎன்று தொனிக்குமாறும் உணர்க. திரிமூர்த்திகளுஞ் சேர்ந்து அவர்களில்ஒருவர்க்கு ஒப்பாஞல்ஆவரேயன்றி, ஒவ்வொருமூர்த்தியும் தனியே ஒப்பாதற்கு இயலா ரென்பது, ஈற்றடியின் தாற்பரியம். மார னென்ற வடமொழிப்பெயர் - (ஆடவரையும் மகளிரையும் ஆசைநோயால்) மரணவேதனைப்படுத்துபவ னென்று பொருள்படும். பி-மீ:—[1]உயிரின். [2]உளரோவவரின் வில்லின் வலி. [3]முதல்வர். (சுகடு)

நுஎ. தராவலய நேமியுழ வன்றயர தப்பேர்ப்
பராவரு நலத்தொருவன் மைந்தர்பழி யில்லார்
விராவரு வனத்தவன் விளம்ப வுறைகின்ற
ரிராமனு மிலக்குவனு மென்பர்பெய ரென்றாள்.

(இ - ள்.) (அவர்கள்), தரா வலயம் நேமி உழவன் - பூமண்டலம் முழுவதிலும் தனது) ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்தியவனை, தயரதன் பேர்-தசரத னென்னும் பெயரையுடைய, பராவு அரு நலத்து-புகழ்த்தற்கரிய நன்மையை யுடைய, ஒருவன் - ஓர் அரசனது, மைந்தர்-குமாரர்கள்: பழி இல்லார் - ஒரு பழிப்பும் இல்லாதவர்கள்: அவன் விளம்ப - (தந்தையான) அத்தசரதன் சொன்னதனால், விராவு அரு வனத்து - சேர்தற்கு அரிய காட்டில், உறை கின்றார் - வசிக்கின்றார்கள்; பெயர் இராமனும் இலக்குவனும் என்பர்-இராம லக்ஷ்மணரென்றுபெயர் கூறப்படுவார்கள், என்றாள் - என்றுசொன்னாள், (சூர்ப்பணகை); (எ - று.)

தன்னைப் பங்கஞ்செய்தவர்களைக் குறித்துக் கோபத்தோடு கூறுமிடத் தும் 'பழியில்லார்' என்றாள், தனது வேட்கை மிகுதியால்; அன்றியும், வைரங்கொண்டு கூறுவார்க்கும் குற்றங்குறிக்க வொண்ணுதபடி இராமலக்ஷ் மணர்களிடம் விஞ்சியிருந்த சுகுணபூர்த்தி விளங்கும். இனி,பழி என்பதற்கு-எதிரிகளுக்கு அஞ்சுத லென்றும், தந்தையின் கட்டளைப்படி நடவாமை யென்றும் கொள்ளலாம். தயரதன் கைகேயிக்கு முன்பு கொடுத்த இரண்டு வரங்களைத் தவறாட்டாது சத்தியத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும் நிலையில் அவன்கட்டளையாகச் சிறியதாயான கைகேயி கூறியதையே இங்கு 'அவன் விளம்ப' எனக் குறித்தது.

தயரதன், இலக்குவன்-தசரதன், லக்ஷ்மணன் என்ற வடசொற்களின் திரிபு. தசரதன் என்ற பெயர் - பத்துத்தேர்களை யுடையா னென்று பொருள்படும்; பத்துத்திக்குக்களிலுந் தடையறச்செல்லுந் தேரையுடையா னென்று கருத்து: போரில் ஓடிய சம்பராசுரனைத் தொடர்ந்து செல்லுகை யில் அவன் மாயையினாற் செல்லுந் திசையிலெல்லாம் இவனும் விடாது உடன்சென்றதனால் இத்தன்மை வெளியாயிற்று. லக்ஷ்மணன் என்ற பெயர்-உத்தமலக்ஷணங்கள் யாவும் நிறைந்தவ னென்றும், (இராமபிரானுக்கு எப் பொழுதும் பணிவிடைசெய்தலாகிய) ஐசுவரியத்தை யுடையவ னென்றும் காரணப்பொருள் படும். நேமியுழவன் - சக்கரவர்த்தி. மைந்து - இளமை, வலிமை, அழகு: அதனையுடையவர், மைந்தர். (சுகசு)

நுஅ.—இதுமுதல் நான்குகவிகள் - இராவணன் தன்னை வேறுத்தலைத் தெரிவிக்கும்.

மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளா
லரிந்தவரு மானிட [1]ரரிந்து முயிர்[2]வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் [3]வெள்கா
திருந்தன னிராவணனு மின்னுயிர்கொ டின்னும்.

ஐந்துகவிகள் - குளகம்.

(இ - ள்.) மருந்து அனைய தங்கை - அமிருதத்தை யொத்த (அரிய)தங்கையான சூர்ப்பணகையினது, மணி நாசி - அழகிய மூக்கை, வடி வாளால் அரிந்தவரும்-கூரியவாளினால் அறுத்தவர்களும், மானிடர்-(மிகளிளியவரான) மனிதர்களாம்; (அவர்கள்), அரிந்தும்-(அவ்வனம்)அறுத்தபின்பும், உயிர் வாழ்வார் - உயிர்பிழைத்திருப்பார்களாம்: இன்னும் - இங்ஙனமானபின்பும், இராவணனும்—, இறையும் வெள்காது - சிறிதும் வெட்கப்படாமல், விருந்து அனைய வாளொடும் - புதுமையின் வடிவம் போன்ற வாளாயுதத்துடனே, விழித்து-கண்விழித்துப் பார்த்துக்கொண்டு, இன் உயிர் கொடு இருந்தனன்-இனிய உயிரை வைத்துக்கொண்டு இருந்தனனும்; (எ - று.)

. தான் உயிரோடு கையும் படையுமாகக் கண்விழித்துக்கொண்டிருக்கையிலேயே இங்ஙனம் நேர்ந்திட்டதைக் குறித்து மிகஅதிசயித்து, இங்ஙனஞ் செய்தவர்களைக் கொல்லாது மானங்கெட்டு உயிர்வாழ்தலினும்இறத்தலே மேலாமென்று வெறுத்துக் கூறுகிறான் இராவணன். தனதுபெருமிதம் தோன்றத் தன்னைப் பிறன்போலப் படர்க்கையாக நிறுத்தி, 'இருந்தன னிராவணனும்' என்றான்; இது, தன்மைக்குப் படர்க்கைவந்த இடவழுவமைதி. மருந்தனைய - அருமருந்தன்ன. 'மருந்தனையதங்கை' என்றதனால், அவனுக்குத் தங்கையினிட முள்ள மிக்க அன்பு தோன்றும்; அன்றியும், வேறு தங்கையில்லாமல் இவள் ஒரு தங்கையே யாதலின், அவ்வருமைபற்றிக் கூறியதுமாம். நாசி - வடசொல். 'விருந்தனைய வாள்' என்றதனால், தனது வாட்படையின் மேன்மையை விளக்கியவாறு : அதன் உயர்வு, மேல் சுo - ஆங்கவியிற் கூறப்படும். இயல்பாகப் பலகண்கள்கொண்டு விழித்தலே, யாதொன்றுஞ்செய்ய அறியாது திகைத்து விழித்தல்போலக் குறித்து, 'விழித்து' என்றான்; மிக்க அலக்ஷ்யத்தால் 'மானிடரிந்தும் உயிர்வாழ்வார்' என்று எளிதுபடக் கூறினான். இவனுக்கு மனிதர்களிடத்திலுள்ள அலக்ஷ்யதாபுத்தி, இவன் பிரமனிடம் வரங்கேட்டுப் பெற்றபொழுது மனிதர்களை ஒரு பொருளாகக் குறியாமையாலும் வெளியாம். பி - மீ:— [1]அறிந்தும். [2]வாழ்வான். [3]வெள்கா. (சுகஎ)

ருகூ. கொற்றமது முற்றிவலி யாலரசு கொண்டே
னுற்றபயன் மற்றிது [1]கொலா முரையி றந்தேன்
முற்றவுல கத்துமுதல் வீரர்முடி யெல்லா
மற்ற[2]பொழு தத்திது பொருந்துமென லாமே.

(இ - ள்.) கொற்றம் அது முற்றி-(எங்கும்) வெற்றியே நிறைந்து, வலியால் - (எனது) வல்லமையால், அரசு கொண்டேன் - ஆளுகையைப் பெற்ற நான், உற்ற - அடைந்த, பயன்-பலன், இதுகொல்-இதுவோ? உரை இறந்தேன் - புகழ் (இதனால்) ஒழியப்பெற்றேன்; முற்ற உலகத்து முதல் வீரர் முடி எல்லாம் அற்ற பொழுதத்து - உலக முழுவதிலுமுள்ள சிறந்த வீரர்க

ஞுடைய தலைகள் யாவும் அறுபட்டாலும், இது பொருந்தும் எனல் ஆமே- இப்படியிழந்த மானம் மறுபடி. வந்து கிடைக்குமென்று சொல்லமுடியு மோ? (எ - து.)—மற்று - வினைமாற்று. ஆம் - அசை.

இதுகாரணமாக யான் அளவிறந்த கோபங் கொண்டு உலக முழுவதை யும் அழித்திட்டாலும் போன மானம் வருமோ என்பது, பின்னிரண்டடி யின் கருத்து. சிறந்த பல வீரர்களது தலைகளே யறுத்துப் பெற்ற புகழை இவளுறுப்பு அறுபட்ட ஒரு பழிப்பு அழிக்குமே யென வெறுத்தான். தனது பெருமிதமும் பிறரனைவரது எளிமையுங் தோன்ற, 'அறுத்த பொழுது' எனச் செயலெத் தன் மேலாக்காமல் 'அற்றபொழுது' என முடிமேலேற்றிக் கூறினான். 'இது' என்றது - சுரபேதத்தால், இதுவோ? என வினப்பொருள் தந்தது : இந்த இசைக்குறிப்பை, வடலூலார் 'காகு' என்பர். [1]ஒல்கா முறையிறந்தேன்' என்ற பாடத்துக்கு - தவறுத ஆணையைச் செலுத்தி னேன் என்று பொருள். வலிய பகை வென்று அரசுகொண்டு நீதி தவறி நடந்த எனக்கு எனது அநீதியால் நேர்ந்த பயன் இதுவென்று இரங்கலாக்கி யுரைத்தல், சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாது. பின்னிரண்டடிக்கு - உலகத் தில் எத்தனைவல்லாரது தலையும் அறுபடினும் அறுபடலாம்; சூர்ப்பணகை யின் மூக்கு அறுபடுதலாகிய இது நேரலாமோ? என்று பொருள் கொள்ளி னும் இழுக்காது. பொழுதத்து, அத்து - சாரியை, ஈற்று ஏகாரம் - வினை. பி - மீ:—[1]ஒல்காவுரை. [2]பொழுதிற்றது, பொழுதிற்றிது. (சுகஅ)

சுo. மூளுமுள தாயபழி யென்வயின் முடித்தோ
ராளு[1]முள வாமவர தாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கு
நாளுமுள தோளுமுள நானுமுளென் னன்றே.

(இ - ள்.) மூளும் - புதிதாக நேர்வதும், உளது ஆய-'என்றும்) நிலைத் திருப்பதுமான, பழி - அவமானத்தை, என்வயின் முடித்தோர் - என்பக்கல் செய்து முடித்தவர்களான, ஆளும் - மனிதர்களும், உளஆம் - இருக்கின்றன ராம்; அவரது ஆர் உயிரும் - அவர்களுடைய அருமையான உயிரும், உண்டு ஆம் - (இன்னும்) அழியாதிருக்கிறதாம்; வாளும் உளது -(என்கையில்) வாளா யுதமும் இருக்கின்றது; ஒதம் விடம் உண்டவன் வழங்கும் - (பாற்) கடலில் தோன்றிய விஷத்தை அமுதுசெய்த சிவபிரான் கொடுத்த, நாளும்-(எனது நெடிய) ஆயுள் நாள்களும், உள - இருக்கின்றன; தோளும் - தோள்களும், உள-இருக்கின்றன; நானும் உளென் அன்றே-நானும் இருக்கிறேனன்றே?

என்றும் அழியாது நிலைத்து நிற்பதாகிய நிந்தை தனக்கு நூதனமாக நேரும்படியான தீச்செயலைச் சிறிதும் அச்சமின்றிச் செய்தவர்கள் அழியாது நிற்கத் தான் சிறந்த பல உபகரணங்களோடு கூடி உயிர்வாழ்தலைக் குறித்து வெறுக்கிறான். 'ஒதவிடமுண்டவன் வழங்கும்' என்ற அடைமொழியை மத் தியமதீபமாக 'வாள்' என்பதனோடுங் கூட்டுக.

'வாளும் உளது' என்றது முதலியன அவையிருந்தும் பயன்படாமையை விளக்கக் கூறியன. முடித்தோர் ஆளும் உளவாம்-கோபித்து இழித்துக் கூறுதல் பற்றி வந்த திணைவழுவமைதி; [நன் - பொது - உ.அ.] ஒதனை எடுத்து வினையெச்சமாக்கி, அதற்கு - தேவர்கள் குறைகூறவென்றும், யாவரும் புகழ்ந்து கூற வென்றும் உரைத்தலும் பொருந்தும். பி - மீ:—[1]உளதாமவர்த்தம். (சுகக)

சுக. [1]பொத்துறவுடற் பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ தென்னீமன னேதளர லம்மா
வெத்துய ருனக்குள தினிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல வன்றே.

(இ - ள்.) மனனே-மனமே, உடல்-உடம்பில், பொத்துற-தைக்கும்படி, பழி புகுந்தது-பழி நேர்ந்துவிட்டதே, என - என்று, நாணி - வெட்கப்பட்டு, தத்துறுவது - (நீ) தவித்துத்தடுமாறுவது, என்னை - என்? இனி தளரல் - இனிமேல் (நீ) வருந்தாதே; பழி சுமக்க - அப்பழியைச் சுமப்பதற்கு, பத்து தலை பகுதி உள - (எனது) பத்துத்தலைவருக்கம் இருக்கின்றன; (அன்றியும்), தோள்கள் பல - அவற்றினும் பலவான தோள்களும் (இருக்கின்றன); (ஆதலால்),உனக்கு எ துயர் உளது-(பழிசுமத்தலாலாகிய) கிலேசம் உனக்கு எது இருக்கின்றது? [இல்லையேயென்றபடி]; (எ-று.)—அன்று, எ-ஈற்றசை.

இது, இராவணன் தன்மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறியது. அம்மா - வியப்பிடைச்சொல்; இனி: இதற்கு - யான்சொல்வதைக் கேளென்று பொருள் கொள்ளலுமாம். "அம்ம கேட்பிக்கும்" என்ற தொல்காப்பியத்தின்படி யான் கூறுகின்றதனைக் கேளென்று பொருள்பட்டு உரையசையாய் நிற்கும் 'அம்ம' என்னும் இடைச்சொல், "உரைப்பொருட் கிளவி கீட்டமும் வரையார்" என்பதனால் கீண்டு, "அம்மவென்னு மசைச்சொல் கீட்டம், அம்முறைப் பெயரொடு சிவணுதலினும், விளியொடு கொள்பதெளியுமோரே" என்பதனால் விளிபோடு கூடிநின்ற தென்று உணர்க; [நன் - உயிர் - கஎ, உரையையுங் காண்க.]

[1]புத்துறவுறப் பழிபுகுந்தது என்றபாடத்துக்கு - இதுவரையிலுந் தனக்கு யாதொரு பழிப்பும் நேராமையை வெளிபிட்டானென்க. 'சுமக்க' என்ற வினையின் ஆற்றலால், இப்பழியை இவன் பெருஞ்சுமையாகக் கருதியமை புலனும். இப்பழியை அலக்ஷ்யஞ்செய்யாமல் பெரிய தலைப்பாரமாகக் கொண்டு தோள்களிவியால் தீர்த்திடுவேன்; நீ வருந்தாதே யென்று நெஞ்சொடு கிளத்தலாகக் கூறித் தன்மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறித் தைரியப்படுத்தினனென அவனது பெருமித்தத்தை வெளிபிட்டவாறு. தோள்கள் இருபதாதலின், பல என்றான். தத்துறுவது - அலைவது. (சுஉ0)

சுஉ.—'கரன்முதலியோர் அவர்களைக் கொன்றிலரோ?'என்று இராவணன் வினவல்.

என்றுரை செயாநகை செயாவெரி விழிப்பான்
வன்றுணை யிலாவிருவர் மானிடரை வாளாற்

[1]கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானி
னின்றகர னேமுதலி னோர்நிருத ரென்றான்.

(இ - ள்) என்று உரைசெயா - என்று சொல்லி, நகை செயா-சிரித்து, எரி விழிப்பான் - தீப்புறப்படக் கண்விழிப்பவனான இராவணன், (சூர்ப்பண கையை நோக்கி), நெடியகுன்று உடைய கானில் நின்ற கரனே முதலினோர் நிருதர்-உயர்ந்த மலைகளையுடைய தண்டகாரணியத்தில் நிலைபெற்றுள்ள கரன் முதலியோராகிய அரக்கர்கள், வல் துணை இலா இருவர் மானிடரை - வலிய துணை யாதொன்றும்பெறாத அந்த இரண்டுமனிதர்களை, வாளால் கொன்றி லர்களா-ஆயுதங்களாற் கொன்றாரில்லையோ? என்றான்-என்று வினவினான்.

கீழ்ச் சூர்ப்பணகை இராமலட்சுமணர்களைப் பற்றியேயன்றி அவர்கள் துணைவலிமையைப்பற்றி யாதொன்றுங் கூறுமையால் அவர்கள் துணைவலி யில்லாரென்று அறிந்து, 'வன்துணையிலா விருவர் மானிடர்' என்றான். வாள் என்றது, ஆயுதப்பொதுவாய் நின்றது; (சிறப்புப்பெயர் பொதுப்பொருளே யும், பொதுப்பெயர் சிறப்புப்பொருளேயும் உணர்த்துவது, ஒருவகைப் பாஷை நடை.) இங்ஙகூறிய நகை, இகழ்ச்சிகாரணமாகப் பிறந்தது; வீரத்தைதழுந்த வெகுளிநகையும் எள்ளல்நகையில் அடங்கும். பி-ம்:—[1]கொன்றிலர்களால்.

வே று.

கூங.—அதற்குச் சூர்ப்பணகை விடை கூறத்தொடங்கல்.

அற்றவ னுரைத்த லோடு [1]மழுதிழி யருவிக் கண்ண
லெற்றிய வயிற்றள் பாரி னிடைவிழுந் தேங்கு கின்றாள்
சுற்றமூந் தொலைந்த [2]தைய நொய்தெனச் சுமந்த கைய
ளுற்றது தெரியும் வண்ண மொருவகை யுரைக்க லுற்றாள்.

(இ - ள்.) அற்று - அவ்வார்த்தையை [அவ்வாறு என்றபடி], அவன் உரைத்தலோடும் - இராவணன் சொன்னவளவிலே, (சூர்ப்பணகை), அழுது இழி அருவி கண்ணள் - அழுதலாற் பெருகுகிற மலையருவிபோல் இடைய ருத நீர்ப்பெருக்கையுடைய கண்களையுடையவளும், எற்றிய வயிற்றள் - (கைகளால்)மோதப்பட்ட வயிற்றையுடையவளும், பாரினிடை விழுந்து எங்கு கின்றாள் - தரையிலே விழுந்து அழுகிறவளுமாய், (அவனை நோக்கி), 'ஐய - ஐயனே! சுற்றமும் - அந்தப் பந்துவர்க்கமும், நொய்து-விரைவிலே [அல்லது எளிதாக], தொலைந்தது-'அவர்களால்) அழிந்து போய்விட்டது', என-என்று தொகுத்துக்கூறி, சுமந்த கையள் - தலைமேற் கொண்ட கையையுடையவ ளாய், உற்றது - (கரன்முதலிய அவர்களுக்கு) நேர்ந்த அழிவை, தெரியும் வண்ணம்-(இராவணனுக்குத்) தெரியும்படி, ஒரு வகை உரைக்கல் உற்றாள்- ஒருவாறு வருத்துக் கூறத் தொடங்கினாள்; (எ-று.)—அதனை, அடுத்தகவியிற் காண்க.

இராவணன் வினவியவுடனே சூர்ப்பணகை கண்ணீர் சோர வயிற்றி லடித்துக்கொண்டு தரையில் விழுந்து புரண்டு அழுது தலைமேற் கைவைத்துக்

கொண்டு செய்திகூறலாயின ளென்பதாம்; **தன்மைநவிற்சியணி.** அருவி-கண்ணீர்த்தாரைக்கு உவமையாகுபெயர். அழுது - காரணப்பொருளதான அழவென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. பி-ம்:—[1]அழுகழுது. [2]ஐயா வென்றனள்.

இதுமுதல் இருபத்தேழு கவிகள் - இப்படலத்தின் பதினைங்காங்கவி போன்ற **அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தங்கள்.** (கூஉஉ)

சுக.—**தூதுப்பணிகை செயீதிகூறல்.**

சொல்லென்றென் வாயிற் கேட்டார் தொடர்ந்தெழு சேனை யோடுங்
கல்லென்ற வொலியிற் [1]சென்றார் கரன்முதற் காளை வீர
ரெல்லொன்று கமலச் செங்க ணிராமனென் [2]றிசைத்த [3]வேந்தல்
வில்லொன்றிற் கடிகை [4]மூன்றி [5]லேறினர் விண்ணி லென்றாள்.

(இ - ள்.) கரன் முதல் காளை வீரர்-கரன்முதலிய இளவெருதுபோன்ற வலியவீரர்கள்,—சொல் என்று - (உனக்கு நேர்ந்த இடையூற்றைச்) சொல் லென்று (என்னை நோக்கிச்) சொல்லி,என் வாயில் கேட்டார்-(உடனே நான் சொல்ல) எனதுவார்த்தையாற் (செய்தியைக்) கேட்டறிந்தவர்களாய், (உட னே), தொடர்ந்து எழு சேனையோடும்-(விடாது) பின்தொடர்ந்து புறப்பட்ட சேனைகளுடனே, கல்லென்ற ஒலியின் சென்றார் - கல்லென்ற ஆரவாரத் தோடு (போர்க்குச்) சென்றவர்களாய், எல் ஒன்று கமலம் செங்கண் இரா மன் என்று இசைத்த ஏந்தல் வில் ஒன்றின் - சூரியகிரணம் படப்பெற்ற [நன்குமலர்ந்த] செந்தாமரைமலர்போன்ற சிவந்தகண்களையுடைய இராம னென்று பெயர்பெற்ற பெருமையிற்சிறந்தவனது ஒப்பற்ற தனிவில்லால், கடிகை மூன்றில் - மூன்று நாழிகைக்குள்ளே, விண்ணில் ஏறினர்-(இறந்து) வீரசுவர்க்க மடைந்தார்கள், என்றாள் - என்று சொன்னாள்; (எ - று.)

நடந்தசெய்தியையெல்லாம் கூறுபவள் 'கேட்டார் சேனையோடுஞ் சென் றார், விண்ணிலேறினர்' என்று இவ்வளவு மாத்திரத்தையே கூறி அவர்கள் போர்செய்தன ரென்பதைக் கூறாதது, சிறிதுபொழுதே நடந்த அப்போர் சுத்தவீரனான இராமனது முன்னிலையில் சிறப்புறுமையைக் காட்டும். அவர் கள்தங்கள் கடமையிற் சிறிதுந் தவறாமல் வெகுதுரிதமாகத் தொழில்செய்து முடிந்த விதத்தை விவரித்தாள். வாய் - சொல்லுக்குக் கருவியாகுபெயர். தொடர்ந்து எழு - ஒன்றன்பின் ஒன்றாக நெடுந்தூரம் தொடர்ச்சிப்பட்டெ ழுந்த எனினுமாம். மூன்றுமடியிலும், புண்டரீகாக்ஷனான இராமனது கண் ணழகிலே இவள் ஈடுபட்டமை தோன்றும். எல் ஒன்று கமலம்-ஒளிபொருந் திய தாமரை யென்றலும் ஒன்று. எல்என்னுஞ் சொல் - ஒளியை யுணர்த் துகையில் இடைச்சொ லென்பது இலக்கணநூலார் கொள்கை. 'வில் லொன்று'என்றதனால், அவன் அசகாயசூர னென்பது தோன்றும். கடிகை-இருபத்துநான்கு நிமிஷங் கொண்ட நேரம். போரிற் பின்னிடாது பகைவ ரால் இறந்தவர் வீரசுவர்க்கமடைவ ரென்பது நூற்கொள்கை யாதலால், 'விண்ணி லேறினர்' என்றாள். 'சொல்லென்று என்வாயிற் கேட்டார்'

என்பது, சொல்லென்ற ஒன்றை [ஒருசொல்லை] என்வாயாற் கேட்டமாத் திரத்திலென்னுங் கருத்துப்படவும் நிற்கும். [3]'வேந்தன்' என்ற பாடத்தினும் 'ஏந்தல்' என்ற பாடமே மோனைத்தொடைக்குச் சிறக்கும். பி ம்:— [1]சென்ற. [2]இயைந்த. [4]ஒன்றில். [5]ஏற்றினன். (சுஉ)

சுரு.—அதுகேட்டு இராவணன் சோகமும் கோபமும் ஒருங்குஅடைதல்.

தாருடைத் தாணை யோடுந் தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தா ரென்ற வுரைசெவி புகாத முன்னங்
காரிடை யுருமின் மாரி கனலொடு பிறக்கு மாபோ
னீரொடு நெருப்புக் கான்ற [1]நிறைநெடுங் கண்க ளெல்லாம்.

(இ - ள்.) தமியன் செய்த போரிடை-தனித்தவனுப் இராமன் செய்த யுத்தத்திலே, தம்பியர் - (தனது) தம்பிமார் [கரன் முதலியோர்], தாருடை தாணையோடும் - போர்மாலையையுடைய சேனையுடனே, மடிந்தார்-இறந்தார்கள், என்ற—, உரை - வார்த்தை, செவி புகாத முன்னம்-(இராவணனது) காதுகளில்நுழையாதமுன்பு [கேட்டமாத்திரத்திலேயென்றபடி],--காரிடை-மேகத்திலே, மாரி - மழை, உருமின் கனலொடு - இடிவடிவமான நெருப்புடனே, பிறக்கும் ஆ போல் - தோன்றும் விதம் போல, நிறை நெடு கண்கள் எல்லாம் - நிறைந்த பெரிய (அவனுடைய) கண்கள் யாவும், நீரொடு நெருப்பு கான்ற - நீரையும் நெருப்பையும் வெளிச்சொரிந்தன; (எ-று.)

அவன்கண்களினின்று சோகத்தால் நீர்சொரிய, கோபத்தால் நீயெழுந்தன என்பதாம்.கரிபஇராவணன்கண்களுக்கு மேகமும்,அவற்றின் நீர்த்தாரைக்கு மழைப்பெருக்கும், நெருப்பெழுச்சிக்கு இடிவீழ்ச்சியும் உவமையெனக் காண்க. தார் - இங்கே, போருக்குரிய தும்பைப்பூமாலை; இனி, வெற்றிமாலையும், முத்துற்றப்பொருபடையும், அணிவகுப்புமாம். கரன்போலவே தூஷணனும் திரிசிரனும் இராவணனுக்குத் தம்பிமுறையாவ ரென்றுணர்க. தமியன்-தனிவில்லாளி. 'புகாதமுன்னம்' என்றது, விரைவுகாட்டும்; இங்ஙனங்கூறுதல், முறையிலுபரிவுநவிற்சியணியின்பாற்படும். உருமின், இன் - சாரியை; மின்என எடுத்து மின்னலென்று உரைத்து, இடி மின்னல் நெருப்பு என்னும் மூன்றையும் விழித்தீக்கு உவமையாக வுரைப்பாருமுளர். கண்கள் பலவாதலின், 'நிறை' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. [1]நிரை என்ற பாடத்துக்கு, வரிசையான என்க. (சுஉச)

சுசு.—இராவணன் சூர்ப்பணகைபை 'நீ அவருக்குச்செய்ததுற்றமென்?' என்றல்.

ஆயிடை யெழுந்த சீற்றத் தழுந்திய துன்ப [1]மாழித்
தீயிடை யுருக்கு நெய்யிற் சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்ற [2]மென்னைகொ னின்னை யின்னே
வாயிடை யிதழு மூக்கும் [3]வலிந்தவர் கொய்ய வென்றான்.

(இ - ள்.) ஆயிடை-அவ்விடத்தில் [அப்பொழுது], எழுந்த - உண்டாகிய்க, சீற்றத்து - கோபத்திலே, அழுந்திய - உள்ளடங்கிய, துன்பம் - துயர

மானது, ஆழி தீயிடை உருக்கும் நெய்யின்-கடலிடையிலுள்ள தீயில் [படபா முகாக்கினியில்] சொரியப்பட்ட நெய்போல, சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய - கோபத்துக்கு வலிமையைச் செய்ய, (இராவணன் சூர்ப்பணகையைநோக்கி), 'அவர் - அம்மனிதர்கள், நின்னே-உன்னே, இன்னே - இவ்வாறு, வாயிடை இதழும் மூக்கும் வலித்து கொய்ய-காதின்மேலிடத்தையும் மூக்கையும் வலிய அறுக்குமாறு, நீ இடை இழைத்த குற்றம்-நீ அவர்களிடத்திற்செய்த பிழை, என்னைகொல் - யாதோ?' என்றான்-என்று வினவினன்; (எ - று.)

தீயில் நெய்யைச்சொரிந்தால் அந்நெய் அத்தீக்குள் அடங்கிவிட்டதாயினும் உள்ளிருந்தபடியே அத்தீக்கு நல்லஆதாரமாய் நின்று அதனை மிகுதியாக வளர்த்து விசேஷமாகச் சொலிக்கச் செய்தல் போல, அவனுக்கு உண்டான கோபத்திலே யடங்கிய சோகம் அக்கோபத்துக்குப் போஷகமாய் அதனை மேன்மேல் மிகுவிக்க என்பது, முன்னிரண் டடியின் கருத்து. **உவமையணி.** சீற்றத்து அழுந்திய துன்பம் - (இப்படலத்து முகற் கவியிற் கூறியபடி) தங்கைக்குக் காமத்திலே சோகம் அடங்கினற்போல, இங்கே தமையனுக்குக் கோபத்திலே சோகம் அடங்கிய தென்க. ஊற்றம் - ஊன்றுகோல்; ஆதாரம் என்றபடி. நின்னே இதழும் மூக்கும் கொய்ய - இரண்டுசெயப்படுபொருள்வந்த வினை. இன்னே - இடைச்சொல்; இப் பொழுதே யெனினுமாம். வலித்து - வலிமைகொண்டு என்றுமாம்.

ஓசைஉட்புகும் வழியாதலால், 'வாய்'என்றது, செவிக்குக் காரணக்குறி யாயிற்று. துவார மென்ற பொருளே யுணர்த்தும் 'வாய்' என்ற பொதுப் பெயர் - சிறப்பாய், இங்கு, நவத்துவாரங்களிற் சேர்ந்த காதை யுணர்த்திய தென்னலாம். "மெய் வாய் கண் மூக்குச் செவி யெனப்பேர்பெற்ற, ஐவாய வேட்கையவா"என்ற இடத்தில் பஞ்சஇந்திரியங்களையும் பொதுப்பட 'வாய்' என்ற சொல்லாற் குறித்தவாறு முணர்க. "செவி வாயா", "செவிக்குணவு" என்ற தொடர்கள்-செவியை வாயென்றதற்கு மேற்கோளாமாறும் காண்க. ஒருபொறி மற்றொருபொறியாகக் கூறப்பட்ட உபசாரவழக்கென்றலுமாம். வாய் என்ற சொல்லின் பொருத்தத்திற்கு ஏற்ப, செவியின் மேற்பகுதியை இதழெனக் குறித்தார். **பி-ம்:**—[1]மாறித். [2]என்னவர். [3]வலிந்தனர். (க உ)

கூஎ.—அதற்குச் சூர்ப்பணகை கூறும் விடை.

என்வயி னுற்ற குற்றம் யாவர்க்கு [1]மெழுதொ ணுத
[2]தன்மைய னிராம னுடுங் காமரை தவிரப் போந்தாண் [டாள்
மின்வயின் [3]மருங்குல் கொண்டாள் [4]வேய்வயின் மென்றோள் கொண்
பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினுற் புகுந்த தென்றாள்.

(இ - ள்.) என்வயின் உற்ற குற்றம்-என்னிடத்திற் பொருந்திய பிழை, (யாதெனின்),—யாவர்க்கும் எழுது ஒணாத தன்மையன்-எத்துணைவல்லார்க்கும் (சித்திரத்தில்) எழுதமுடியாத வடிவழகுடையவனை, இராமனேடும் - அவ்விராமனுடனே, காமரை தவிர போந்தாள் - (தனக்கு இருப்பிடமான)

செந்தாமரை மலர் நீங்க (அதைவிட்டு) வந்தவளும், மின்வயின் மருங்குல் கொண்டாள்-மின்னலினிடத்து இடையைப் பெற்றவளும், வேய்வயின் மெல் தோள் கொண்டாள் - மூங்கிலினிடத்து மெல்லிய தோளைப் பெற்றவளும், பொன்வயின் மேனி கொண்டாள்-பொன்னினிடத்து (த் தனது) உடம்பின் நிறத்தைப் பெற்றவளுமான ஒருத்தியின், பொருட்டினால் - நிமித்தமாக,புகுந்தது - (தான்) அருகிற்சென்ற மாத்திரமேயாம், என்னுள்-என்று சொன்னாள்.

அவனுடன் ஒருகட்டழகி வந்துள்ளாள்; அவள் காரணமாக நான் சமீபித்தமாத்திரமே இங்ஙனஞ் செய்ததற்கு ஏற்ற குற்றமாயிற்று என்று சூசுக்கமாகக் கூறினாள்; மேல் பதினெண்குகவிகளில் விவரமாகச் கூறுவள். 'தாமரைதவிரப் போந்தாள்' என்பதற்கு-திருமகள்போல்வாளென்றும்,'மின்வயின் மருங்குல் கொண்டாள்' என்பதற்கு - மின்னல்போன்ற இடையையுடையவளென்றும், 'வேய்வயின் மென்தோள் கொண்டாள்' என்பதற்கு - இளமூங்கில் போலுந் தோளுடையவளென்றும், 'பொன்வயின் மேனிகொண்டாள்' என்பதற்கு - பொன்போன்ற நிறங் கொண்டவ ளென்றும் கருத்து. வேறு வாய்பாட்டாற் கூறப்பட்டிருப்பினும் இது **உவமையணி**யேயாம். தான் இராமனது திருமேனியழகில் ஈடுபட்டதனால், 'யாவர்க்கு மெழுதொணாத தன்மையன்' என்றாள்; திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்காரும் தலைவி கூற்றாக "எழுதவரிய பெருமான்" என்றமை காண்க. மனத்திற்குத் திருப்தியுண்டாகுமளவும் அவித்து அவித்து எழுதக்கூடிய சித்திரத்தில் இயற்கையினுஞ் சிறப்பாக வடிவம் எழுதக்கூடும்: அதிலும் எழுதவொண்ணாத தென அழகின் மிகுதியை யெடுத்துக்காட்டியவாறு. 'பொன்வயின் மேனி கொண்டாள்' என்பதற்கு - பொன்மயமாய் வடிவமமையப் பெற்றவளென்றுங் கருத்துக்கொள்ளலாம். 'மின்வயின் மருங்குல் கொண்டாள், வேய்வயின் மென்தோள் கொண்டாள், பொன்வயின் மேனிகொண்டாள்'என்ற சொற்போக்கால், அவளுக்கு ஒவ்வொருவிஷயத்தில் ஒவ்வொன்று உவமையானலுண்டேயன்றி ஒருபொருளும் முற்றுவமையாகா தென்ற கருத்துப்போதரும். மின்னல்முதலியவற்றிலிருந்து சாரமான ஒவ்வொருபொருளையே கொண்டுள்ளா ளென்றதுமாம். 'புகுந்தது' என்பதற்கு - சம்பவித்தது என்று உரைத்தலு மொன்று. **பி-ம்:**—[1]எழுதவொண்ணு. [2]தன்மையள். [3]மருங்கு. [4]வேயினின். (கூஉசு)

கூஅ.—இராவணன் 'அவள் யார்?' என்ன, சூர்ப்பணகை விரித்துக் கூறலுறல்.

ஆர வளென்ன லோடு மரக்கியு மைய [1]வாழித்
தேர வல்குல் கொங்கை செம்பொன்செய் குலிகச் செப்புப்
பார வள் பாதந் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேர வள் சீதை யென்று வடிவெலாம் பேச லுற்றாள்.

(இ - ள்.) (அதுகேட்டு இராவணன்), அவள் ஆர் என்னலோடும் - அத்தப்பெண் யாரென்று வினவியவளவிலே, அரக்கியும்-சூர்ப்பணகையும், 'ஐய-

ஐயனே! அவள் அல்குல் - அவளுடைய அல்குலானது, ஆழி தேர் - சக்கரம் பூட்டப்படும் தேராகும்: கொங்கை - (அவளுடைய) தனங்கள், செம்பொன் சேய் குலிகம் செப்பு - செம்பொன்னினுற் செய்யப்பட்ட கலசங்களும் குங் கிலியத்தாலாகிய சிமிழ்களும் போலும்: பார் - பூமி, அவள் பாதம் தீண்ட பாக்கியம் படைத்தது-அவளுடைய திருவடி பரிசிக்கும்படி நல்வினைப்பயன் பெற்றது; அம்மா - ஆச்சரியம்! அவள் பேர் சீதை-அவளுடையபெயர் சீதை யென்பதாம்,' என்று-என்று சொல்லி, வடிவு எலாம் பேசல் உற்றாள்-(அப் பிராட்டியினது) வடிவழகையெல்லாம் எடுத்துச் சொல்லத்தொடங்கினாள்; (எ - று.)—அதனை, அடுத்த பன்னிரண்டுகவிகளிற் காண்க.

கீழ்க்கவி-தொகையும், இக்கவி-வகையும், அடுத்த கவிகள்-விரியுமென அறிக. குலிகம் - இருகுலிக மென்பதன் விகாரம். பொன்னும், குலிகமும், செந்நிறம்பற்றி யெடுக்கப்பட்டன. "குலிகச் செப்பெனக் கொம்மை வரு முலை" எனச் சிந்தாமணியிலும் குலிகச்செப்புக் கொங்கைக்கு உவமை கூறப் பட்டவாறு உணர்க. 'பாரவள் பாதந்தீண்டப்பாக்கியம் படைத்தது' என்பது-அவளுடைய அடி படப்பெறுதலும் அதிருஷ்டவிசேஷமே யென்ற பொருளை யுணர்த்துவதோடு, அவள் கால் நிலந்தோயாத இயல்பையுடைய தேவமாது போல்வா ளென்ற கருத்தையுந் தொனிப்பிக்கும். பாக்கியம் - வடசொல். அம்மா - வியப்பிடைச்சொல்; அவளுடைய தேகசௌந்தரியத்தை வியந்து கூறியவாறு. பி-ம்:—[1]ஆழ்ந்துதேரவடிரண்ட. (சுஉஎ)

சுகூ.—இதுமுதல் பன்னிரண்டு கவிகள்-சூர்ப்பணகை பலவாற்றும் சீதையை வருணித்தலைக் கூறும்.

காமர [1]முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் [2]நிரந்த கூந்தற் றேவர்க்கு மணங்கா மென்னத்
தாமரை யிருந்த [3]தையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை [4]வழங்க லென்ப தேழைமைப் பால [5]தன்றே.

இதுமுதற் பதின்மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) காமரம் முரலும் பாடல் - காமரமென்னும் பண்ணின் வடிவ மாக இனிது ஒலிக்கிற இசைப்பாட்டையும், கள் என கனிந்த இன் சொல் - தேன்போல் இரசம் நிறைந்த இனிய சொல்லையும், தே மலர் நிரந்த கூந்தல்-தேனையுடைய மலர்கள் நிறைந்த கூந்தலையுமுடையாள் (அவள்):தேவர்க்கும்-தேவமாதர்களுக்கும், அணங்கு ஆம்-கொண்டாடத்தக்கதொரு தேவமாதாம், என்ன-என்று சொல்லும்படி, தாமரை இருந்த-செந்தாமரைமலரில் வீற்றிருக் கிற, தையல்-அழகிய வடிவழகுடைய திருமகள், சேடி ஆம் தரமும் அல்லள்-(அவளுக்கு) ஏவல்செய்யும் மகளாதற்குந் தகுதியுடையவ ளாகாள்; (என் றால்);—யாம் உரை வழங்கல் என்பது-நாம் (அவளுடைய வடிவழகை) எடுத் துச்சொல்வோ மென்பது, ஏழைமை பாலது அன்றே-அறிவின்மையின்பாற் படுவதன்றோ? (எ - று.)—அன்றே - தேற்றம்.

தேவமாதர் யாவர்க்கும் தலேவியாய்ச் சிறக்கிற திருமகள் அவளுக்குத் தாதியாகத்தகுதியுடையவளுமாகாதபோது நான் அவளழகைஎப்படிச்சொல்லி முடிப்பேன்? என்று அக்கட்டழகின் கூறற்கருமையை விளக்குகிறாள்; ஆயினும், இயன்றவளவு சொல்வே னென்றவாறு. இங்குக் கூறப்படுஞ் சீதைவருணனேயாகிய பிரபந்தத்துக்கு இது அவையடக்கமாய் அமைந்தது. அங்ஙனமாகவே, யாம் எனக் கவிகளுக்குரிய இயற்கைத்தனித்தன்மைப்பன்மையாற் கூறினாள். எவராலுஞ் சொல்லலாகா தென்பதுபட 'யாம்' என உளப்பாட்டுத்தன்மைப்பன்மை கூறினாளுமாம். காமரம் - தேவகானத்துள் ஒருபண் விசேடம். கள்ளெனக்கனிந்த இன்சொல் - நாவுக்கு இனிமைதருந் தேன் போலச் செவிக்கு இனிமை விளேக்குஞ் சொல்லென்க; மதுபானஞ்செய்யுந் தன்மையுடைய அரக்கியாதலின், இனிமைக்குக் கள்ளே யெடுத்துக் கூறினா ளென்றலும் உண்டு. இனி, முதலடிக்கு - வண்டுகள்பாடும் இசைப்பாட்டும் தேனும்போல மிக இனிய சொல்லென்று பொருள் கூறுவாரு முளர்; காமரம் - வண்டு. பாடல் இன்சொல் கூந்தல் என்பவற்றை 'தாமரையிருந்த தையல்' என்பதற்கு அடையாக்குதலுமொன்று. 'தேவர்' என்றது, இங்கே, பெண்பாற்பன்மையாய் நின்றது. **பி-ம்:**—[1]பழுத்த. [2]நிறைந்த. செறிந்த. [3]நங்கை. [4]வழங்கும். [5]அன்றே. (சுஉஅ)

எo. மஞ்சொக்கு மளக வோதி மழையொக்கும் [1]வடித்த கூந்தல்
பஞ்சொக்கு மடிகள் செய்ய பவளத்தின் விரல்க [2]ளேய
வஞ்சொற்க ளமுதி னள்ளிக் கொண்டவள் வதன மைதீர்
கஞ்சத்தி னளவிற் றேனுங் கடலினும் பெரிய கண்கள்.

(இ - ள்.) ஐய - ஐயனே! அம் சொற்கள் - அழகிய வார்த்தைகளே, அமுதின் அள்ளிக்கொண்டவள் - அமிருதத்திலிருந்து முகந்தெடுத்துக் கொண்டவளான அம்மங்கையினது, அளகம் ஓதி - முன்னெற்றிமயிர், மஞ்சு ஒக்கும் - (வானத்திற்பரந்த) மேகத்தைப்போலும்: வடித்த கூந்தல் - வாரிவிடப்பட்ட கூந்தல், மழை ஒக்கும் - மழை பொழிதற்குக் காலிறங்கிய மேகம் போலும்; அடிகள் - பாதங்கள், பஞ்சு ஒக்கும் - செம்பஞ்சுபோலும்: விரல்கள்—,செய்ய பவளத்தின்-சிவந்த பவழம் போல (உள்ளன): வதனம்-முகம், மை தீர் கஞ்சத்தின் அளவிற்று ஏனும் - குற்றமற்ற தாமரைமலரின் அளவையுடையதாயிருந்தாலும், கண்கள்—,கடலினும் பெரிய-கடலேக்காட்டிலும்பெரியனவாம்.

'கடலினும் பெரிய கண்கள்' என்றது - **உயர்வுநவிற்சியணி**யும், மற்றவை - **உவமையணி**யுமாம். கண்கள் பெரியனவாயிருத்தல், உத்தமலக்ஷணம். 'அஞ்சொற்க ளமுதி னள்ளிக் கொண்டவள்' என்றது, சொல்லினிமையை விளக்க. அளகவோதி - அளகமாகிய ஓதியென இருபெயரொட்டு. அளகம் - முன்னெற்றிமயிர், ஓதி - பெண்மயிர்: இவை சிறப்புப்பெயரும் பொதுப்பெயருமாகத் தொடர்ந்தன. அளகம், கஞ்ஜம், வதநம் .. வடசொற்கள். பவளம், அமுது - ப்ரவாளம், அம்ருதம் என்ற வடசொற்களின் திதைவு. விரல்கள்என்பதன்பின் 'உள்ளன' என வினைமுற்று வருவிக்க.

சேற்றிலுண்டாதலும், சூரியனைக்கண்டவளவிலே மலர்தலும், அவனைக் காணுதவிடத்துக் குவிதலும், பனி மழைகளுக்கு அழிதலும் வரவரப் பரிமளம்ஒழிதலும், அடியில் முள்ளுடைமையும் முதலிய பலகுற்றங்குறைகள் தாமரைக்கு உள்ளனவாதலால், அவையனைத்தும் இல்லாததொரு தாமரையே அவள்முகத்துக்கு ஈடாகு மென்றற்கு, 'மைதீர்கஞ்சம்' என்றாள்; உபமானமேபிடித்துச் சீர்நிருத்திக்கொண்டு வரவேண்டிற்று, உபமேயத்தினுடைய வைலக்ஷண்யம். பி-ம்:—[1]வடிந்த. [2]ஆன, ஒக்கும். (சுஉக)

எக. ஈசனுர் கண்ணின் வெந்தா னென்னுமீ திழுதைச் [1]சொல்லிவ்
வாசநா ரோதி யாளைக் கண்டனன் [2]வவ்வ லாற்றுன்
பேசலாந் தகைமைத் [3]தல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
வாசையா லழிந்து [4]தேய்ந்தா னைநங்கனவ் வுருவ மம்மா.

(இ - ள்.) அநங்கன் - மன்மதன், ஈசனுர் கண்ணின் வெந்தான் - சிவபிரானது நெற்றிக்கண்ணினுல் எரிக்கப்பட்டுத் தீந்தொழிந்தான், என்னும் ஈது - என்றுசொல்லும் இது, இழுதை சொல் - பொய்ம்மொழியேயாம்: (பின்னே யென்னவெனின்),—இ வாசம் நாறு ஓதியாளை-இயற்கைநறுமணம் வீசுகிறகூந்தலேயுடைய இச்சீதையை, கண்டனன்-பார்த்து, வவ்வல் ஆற்றுன் - கவர்ந்துசெல்லமுடியாதவனுகி,—பேசல் ஆம் தகைமைத்து அல்லா பெரு பிணி பிணிப்ப-சொல்லிமுடிக்குந் தன்மைய தல்லாத மிக அதிகமான (காம)நோய் வருத்த, நீண்ட ஆசையால்-(இவள்பக்கல்)மிகுதியாகக்கொண்ட ஆசையினுலே, அ உருவம் அழிந்து தேய்ந்தான் - அழகிய தனதுவடிவம் மெலிந்து அழியப்பெற்றுன்; (எ - று.)—அம்மா-வியப்பிடைச்சொல்; சீதையின் அழகுமிகுதியை வியந்தது.

மன்மதன் அநங்கனுற்குக் காரணம், சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு இரையான தன்று; இவளழகில் ஈடுபட்டு இவளைக்கவர்ந்து சென்று நுகரமுடியாமல் மிக்க காமநோயுற்று அதனுலேயே உடம்பு மெலிந்தொழிந்தவாறும் என்றுள். இங்ஙனம் உண்மையானதன்மையை நீக்கி மற்றொருதன்மையை யேற்றிக்கூறியது, **ஒழிபணியாம்**; வடநூலார் அபநுதியலங்கார மென்பர்: "சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்" என இதனிலக்கணங் காண்க. யாவர்க்கும் வேட்கையைவிளைப்பவனும் யாவராலும் விரும்பப்படுபவனுமான மன்மதனும் இவளுடைய சௌந்தர்யாதிசயத்தில் ஆசைப்பட்டு இவளைப்பெறும்பாக்கியமின்றி வருந்தியொழிந்திட்டா னென வருணித்தவாறு. இதில், இவள் மன்மதன்மனைவியான ரதிதேவியினும் மேலான கட்டழகி யென்பதும், இவளாற் காதலிக்கப்பட்ட இராமபிரான் மன்மதனினும் மேலான திவ்வியசுந்தரமூர்த்தி யென்பதும் தொனிக்கும். [2]வல்ல வாற்றுற் பேசலாந் தகைமைத்தல்லாப் பெரும்பிணி என்றபாடத்திற்கு - **எவ்வளவு வல்லமைத்திறத்தினுலும் கூறலாகாதபடி வரம்புகடந்த வேதனை யென்க.**

முன்னொருகாலத்திற் கைலாசகிரியிற் சிவபிரான் சனகர் முதலிய நால்வர்க்கு யோகநிலையை உணர்த்துதலினிமித்தம் தான் யோகஞ் செய்துகொண்டிருக்கையில், தேவர்களேவலால் தன்மீது மலரம்புகளே யெய்து தனது தவத்தைக் கெடுக்க முயன்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழித்து அதன் நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து சாம்பலாய்ப்போம்படி செய்தன னென்பது கதை. "திங்கள் மேவுஞ் சடைத் தேவன்மேல் மாரவேள், இங்கு நின் றெய்யவும் எரிதரும் நுதல்விழிப், பொங்கு கோபஞ் சுடப் பூளை வீயன்னதன், அங்கம்வெந் தன்றுதொட் டநங்கனேயாயினன்" என்ற பாலகாண்டச்செய்யுளையுங் காண்க. அநங்கன் - வடசொல்: ந + அங்க + அன்; ந- எதிர்மறைகுறிப்பது, அங்கம் - உடம்பு, அன் - விகுதி: அங்க மில்லாதவ னென்று பொருள். பி-மீ:—[1]சொல்லால். [3]அல்லால். [4]வெந்தான். (சுஉ)

எஉ. தெவ்வுல கத்துங் காண்டி சிரத்தினிற் பணத்தி னோர்க
ளவ்வுல கத்துங் காண்டி யலைகட லுலகிற் காண்டி
வெவ்வுலை யுற்ற வேலை வாளினை வென்ற கண்ணு
[1]ளிவ்வுல கத்தா ளங்கம் யாவர்க்கு மெழுதொ ணாதாள்.

(இ - ள்.) தெவ் உலகத்தும் - (உனக்குப்) பகைவர்களாகவுள்ள தேவர்களுடைய லோகத்திலும், காண்டி - பார்: சிரத்தினில் பணத்தினோர்கள் - தலையிற் படத்தையுடையவர்களாகிய நாகர்களுடைய, அ உலகத்தும்-அந்தப் பாதாளலோகத்திலும், காண்டி - பார்; அலை கடல் உலகில்-அலைவீசப்பெற்ற கடலினாற் சூழப்பட்ட பூலோகத்திலும், காண்டி - பார்; [எங்கும் இப்படிப்பட்டவளொருத்தி கிடைக்கமாட்டாள் என்றபடி]; வெம் உலை உற்ற - வெவ்விய (கொல்லனது) உலைக்களத்தில் வடிக்கப்பட்ட, வேலை - வேற்படையையும், வாளினை - வாட்படையையும், வென்ற-வெற்றி கொண்ட, கண்ணுள்- கண்களையுடைய இவள்,இ உலகத்தாள்-இந்த உலகத்திலேயுள்ளவளாயினும், யாவர்க்கும் அங்கம் எழுது ஒணாதாள் - யாவர்க்கும் (சித்திரத்தில்) தீட்ட முடியாத வடிவமுடையவள்; (எ - று.)

வேலை வாளினை வென்ற கண்ணுள் - கூர்மையிலும், பளபளப்பிலும், வேதனையை விளைத்து ஆடவரை வருத்துதலிலும், வேற்படை வாட்படைகளினும் மேம்பட்ட கண்ணினையுடையா ளென்றபடி. இனி, வென்ற என்பதை உவமவுருபாகவுங் கொள்ளலாம். தெவ் - பண்பாகுபெயர். [1]எவ்வுலகத்தாள் என்று பாடங் கொண்டு, இவள் எந்த உலகத்துமாதோ வென்று உரைத்தலு மொன்று. தேவமாதுக்கும் நாககன்னிகைக்கும் மானுடமகளுக்கும் இத்தன்மைய அழகு கண்டதில்லை யென்பது கருத்து. முன்னிரண்டடியால்,இராவணனது சஞ்சாரம் எவ்வுலகத்துந் தடைப்படாமை தொனிப்பதை யுணர்க. (சுஉக)

எஊ. தோளையே சொல்லு கேனை சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனை [1]வல்லைவ வழுத்து கேனை

மீளவுந் [2]திகைப்ப தல்லாற் றனித்தனி விளம்ப லாற்றே
னாளேயே காண்டி யன்றே நானுனக் குரைப்ப தென்னே.

(இ - ள்.) தோளையே சொல்லுகேனே - (அவளுடைய) தோளழகையே எடுத்துச்சொல்லுவேனே? சுடர் முகத்து உலவுகின்ற வாளையே சொல்லுகேனே - ஒளியையுடைய அவள்முகத்திலே பிறழ்கிற வாள்போன்ற கண்களின் அழகையே எடுத்துச்சொல்வேனே? வல்லவை வழுத்துகேனே - மற்றும் சொல்லக்கூடிய அவயவங்களே எடுத்துச்சொல்வேனே?மீளவும் திகைப்பது அல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன் - (வருணித்துச்சொல்லத் தொடங்குந்தோறும்) மறுபடிமறுபடி (என்மனந்) திகைத்திடுகின்றதே யல்லாமல்(அவளுடையஅவயவங்களினழகைத்)தனித்தனியேயெடுத்துச்சொல்ல வல்லேனல்லேன்: நாளையே காண்டி அன்றே-(நீ)நாளைக்கே (அவளை நேரிற்) பார்த்திடுவாயன்றோ? (ஆதலால்), நான் உனக்கு உரைப்பது என்னே-நான் உனக்குச் சொல்லவேண்டுவதென்ன? [ஒன்றுமில்லை யென்றபடி]; (எ - று.)

பிரதியக்ஷமாகப் பார்த்தாற் பார்த்ததே யன்றி வருணித்துச்சொல்லி யுணர்த்தற்கு முடியாதது அவளழகு என்றவாறு. இங்ஙனம் ஒருபெண் தானே பிராட்டியின் சௌந்தரியத்தைக் குறித்துத் திகைப்பதாகக் கூறுவதனால், அவளுடைய திவ்விய சௌந்தரியாதிசயம் மிக்குவிளங்கும். 'மீளவும் திகைப்பது' என்றது-முந்தி அவளைத் தான் நேரிற்கண்டபொழுது திகைத்ததைக் குறிக்கும். ''திருவிங்கு வருவாள் கொல்லோ வென் றகந் திகைத்து நின்றாள்''; ''கண் பிறபொருளிற் செல்லா கருத்தெனினஃதே கண்ட,பெண் பிறந்தேனுக் கென்ற லென்படும் பிறருக் கென்றாள்'' என்று சூர்ப்பணகைப்படலத்திற் கூறியவாற்றால், முன்பு அவள் திகைத்தமை அறிக. தோளே யே, வாளையே என்ற பிரிநிலையேகாரங்களாலும், மீளவும் என்றதனாலும், ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச் சொல்லத் தொடங்கும்பொழுது முன் சொல்லியதன்குணம் முடிவுபெறுமையால் மீண்டும் அதனிடத்தே மனம் செல்லுதல் பற்றித் திகைப்புண்டாகிற தென்பதுந் தோன்றும். வல்லவை - சொல்ல வல்லவை; இனி, அல்லவையென எடுத்து, மற்றையவயவங்களே யென்றலும் நன்றாம். தான் அவளழகை இவ்வளவு எடுத்துக்கூறிய மாத்திரத்தால் காமுகனான இராவணன் அவளிடங் காதல்கொண்டு உடனே அவளை நாடிச்சென்றிடுவா னென்ற நிச்சயத்தால், 'நாளையே காண்டியன்றே' என்றாள்; பாம்பின்கால் பாம்பறியு மாதலின். அன்றே - தேற்றம். பி-ம்:— [1]அல்குலே. [2]தகைப்பது. (கூகூ)

எச. வில்லொக்கு நுதலென் றாலும் வேலொக்கும் விழியென் றாலும்,பல்லொக்கு முத்தென் றாலும் பவளத்தை யிதழென் றாலுஞ், சொல்லொக்கும் பொருளொவ் வாவாற் சொல்லலா முவமை யுண்டோ, நெல்லொக்கும் புல்லென் றாலு நேருரைத் தாக [1]வற்றே.

(இ - ள்.) நுதல் - (அவளுடைய) புருவம், வில் ஒக்கும் - வில்லேப்போலும், என்றாலும் - என்று சொன்னாலும், விழி - கண், வேல் ஒக்கும் - வேலே

ப்போலும், என்றலும்—, பல்—, முத்து ஒக்கும் - முத்தைப்போலும், என்றலும்—, இதழ் - (அவளுடைய) அதரம், பவளத்தை (ஒக்கும்) என்றலும்- பவழத்தைப்போலு மென்று சொன்னலும், சொல் ஒக்கும் - சொல்லிலமைந்திரம் ஒத்திருக்குமேபன்றி, பொருள் ஒவ்வா - பொருளமைதிகள் தகுதிப்பட்டிருக்கமாட்டா; ஆல் - ஆதலால், சொல்லல் ஆம் உவமை உண்டோ - (அவளவயவங்களுக்கு) எடுத்துச் சொல்லுதற் கேற்ற உபமானப்பொருள் (உலகத்தில்) உள்ளதோ? [இல்லை யென்றபடி]; நெல் புல் ஒக்கும் என்றலும் - நெல் புல்லே யொத்திருக்கு மென்றுசொன்னலும், சேர் உரைத்து ஆக வற்றே - (அது) தகுதியான வார்த்தையுடைய தாக வல்லதே; (எ - று.)

மிகச்சிறந்ததான நெல்லும் மிக எளியதான புல்லும் சமமென்று சொன்னலும், அவை இனமாதலின், ஒருகால் பொருத்த மென்னலாம்;அவளுடைய புருவமும் வில்லும், கண்ணும் வேலும், பல்லும் முத்தும், இதழும் பவளமும் ஒருங்கி ரென்றல் சிறிதும் பொருந்தாது என்பது கருத்து. நெல்லுக்கும் புல்லுக்கும் உயர்வுதாழ்வுகளில் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவினும் மிக்கவேறுபாடு உண்டு, அவளுடைய புருவம் முதலிய உபமேயப்பொருள்களுக்கும், வில்முதலிய உபமானப்பொருள்களுக்கும் என்பது தாற்பரியம். "உன்னே..... ..பொன்னேக் கரியாத்தபோது மொவ்வார்" என்றதனேடு ஒப்பிட்டுக் கருத்து உணர்க. ஈற்றேகாரம் - தேற்றம்; எதிர்மறையாகக் கொண்டு, நெல்புல்லேயொக்கு மென்று சொல்வார் சொல்லினும் அது தகுதியான மொழியாக வல்லதோ? அன்று என்று பொருளுரைப்பினும் அமையும். எப்பொழுதும் உபமேயப்பொருளினும் உபமானப்பொருள் சிறந்திருக்கவேண்டு மென்பது அலங்காரநூலார்துணிபு; அதற்கு மாறுக நெல் புல்லேயொக்கு மென்று இழிந்தபொருளே உவமையாக்கின், அது எழுவாய் பயனிலே செயப்படுபொருள்களின் பொருத்தமாகிய வாக்கியத்தின் அமைதிக்கு ஒத்துவருமாயினும் பொருளமைதிக்கு ஒவ்வாதவாறுபோலவே, 'வில் நுதலொக்கும்' என்பதுமுதலியனவும் சொல்லொக்கும் பொருள்ஒவ்வாது என்பது கருத்து. நுதல் - நெற்றியுமாம். ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். **பி-ம்:**—'வற்றே. (கூகூ.)

எடு. இந்திரன் சசியைப் பெற்ற னிருமூன்று வதனத் தோன்றன்
றந்தையு முமையைப் பெற்றன் முமரைச் செங்க ணனுஞ்
செந்திரு மகளேப் பெற்றன் சீதையைப் [1]பெற்ற னீயு
மந்தர [2]மவர்க்கே நன்மை யவர்க்கில்லே யுனக்கே யையா.

(இ - ள்.) ஐயா - ஐயனே! இந்திரன் - தேவேந்திரன், சசியை - இந்திராணியை, பெற்றன்-(தனக்கு உரியவளாக) அடைந்தான்;இரு மூன்று வதனத்தோன்தன் தந்தையும் - ஆறுமுகங்களேயுடைய குமாரக்கடவுளினது தந்தையான சிவபிரானும், உமையை - பார்வதியை, பெற்றன் - (தனக்கு உரியவளாக) அடைந்தான்; தாமரை செம் கணனும் - செந்தாமரை மலர் போலுஞ் சிவந்தகண்களே யுடையனான திருமாலும், செம் திரு மகளே - செந்

நிறமுடைய [அல்லது அழகிய] இலக்குமியை, பெற்றுன் - (தனக்கு உரிய வளாக) அடைந்தான்; (அவ்வாறே), நீயும்—,சீதையை—,பெற்றால்-(உனக்கு உரியவளாக)அடைந்தால், (பின்பு வாசி சோக்குமிடத்து), அவர்க்கே அந்தரம்-அவர்கட்கேகுறைவு ஆகும்: (மேலும்), அவர்க்கு நன்மை இல்லை - அவர் களுக்குமேன்மையில்லை: உனக்கே-உனக்கே (மேன்மை உள்ளது); (எ-று.)

இந்திராணி முதலியோரினும் சீதை மிக்கசிறப்புடையவ ளாதலின், அவர்களைப்பெற்றஇந்திரன்முதலியோரினும் இவளைப்பெற்ற நீ மேம்படுவா யென்பது கருத்து.சிறந்தஇலக்கணமுடைய மங்கையை உரிமையாகப்பெற்ற வன் அதனுலான பாக்கிய விசேஷத்தால் சகலஜசுவரியங்களையும் பெறுவ னென்பது நூற்கொள்கையாதலால், 'நன்மை உனக்கே' என்றுள். ''திருமக ளிவளைச்சேர்ந்தான் தெண்டிரை யாடை வேலி,யிருநில மகட்குஞ் செம்பொ னேமிக்கு மிறைவனுகும்''என்ற சிந்தாமணி இங்கு நோக்கத்தக்கது.மூவுலகத் திலும் பெறுதற்கரிய இவளை நீ பெற்றால் உனக்கே மேன்மை யென்பதாம். அந்தரம்-பேதம்,தாரதம்யம்:இங்கே,குறைவு.இலை-தொகுத்தல்.'நன்மையவர்க் கில்லையுனக்கே'என்றருர்ப்பணகையின் வார்த்தை-நன்மை அவர்களுக்கு,இல் லை உனக்கு என்றுபொருள்கொள்ள இடந்தந்து,இவனுக்குச் சீதையைப்பெற முயலுதலால்நேருந் தீங்குக்குச் சூசகமாகும் அமங்கலமொழியாக அவள்வாயில் வந்தமைந்து கொள்ளுதல்,சம்பிரதாயம். ஸஜீ-வடசொல்,இருமூன்று வதனம்-பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். பி-மீ:—[1]பெற்றுய். [2]பார்க்கின். ()

எசு. பாகத்தி லொருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னே
யாகத்தி லொருவன் வைத்தா னகண ணுவில் வைத்தான்
[1]மேகத்தின் மின்னே முன்னே வென்றநுண் ணிடையை நீயு
மாகத்தோள் வீர பெற்று லெங்ஙனம் வைத்து வாழ்கி.

(இ - ள்.) மா கம் தோள் வீர - பெரிய வானத்தை யளாவி ஓங்கியுள்ள தோள்களையுடைய வீரனே! ஒருவன் பாகத்தில் வைத்தான் - (திருமூர்த்திக ளுள்) ஒருவன் [சிவன்] (தன்மனைவியான உமையைத் தனது) இடப் பக்கத் தில் வைத்துக்கொண்டான்; ஒருவன்—[விஷ்ணு], பங்கயத்து இருந்த பொன்னை - செந்தாமரை மலரில் தங்குகிற இலக்குமியை, ஆகத்தில் வைத் தான்-(தனது) மார்பில் வைத்துக்கொண்டான்; அகண்ணன்—[பிரமன்], காவில் வைத்தான்-(தன்மனைவியான சரசுவதியைத் தனது) நாக்கில் வைத் துக்கொண்டுள்ளான்; நீயும்—, மேகத்தின் மின்னே முன்னே வென்ற நுண் இடையை - மேகத்தில் தோன்றுகிற மின்னலே முன்னமே வென்றிட்ட நுண்ணிய இடையையுடைய சீதையை, பெற்றால்—, எங்ஙனம் வைத்து வாழ்கி - எவ்விடத்தில் வைத்துக்கொண்டு வாழ்வாய்? (எ - று.)

அவள் தலைமேல் வைத்துக்கொள்ளத்தக்கவ ளென்பது, உட்கோள். 'எங்ஙனம் வைத்து வாழ்கி' என்பது, நீ எப்படி அவளை வைத்துக்கொண்டு வாழ்வாய்? [வாழமாட்டாய்] என்று அநிஷ்டமாகப் பொருள்படும்படி அமைந்

துள்ளதை அறிக. 'மேகத்தின்மின்னே முன்னேவென்ற நுண்ணிடை' என்ற பெயரை அடையடுத்த சினையாகுபெயராகக் கொள்ளுதல் இலக்கண நடைக்கு ஒத்ததாம். 'முன்னே' என்றதன் குறிப்பால், கரியதிருநிறமுடைய இராம பிரானைத் தழுவியுள்ள பொழுது இவள் காளமேகத்தைச சார்ந்த மின்னல் போன்றுள்ளா ளென்பது தோன்றும். மாகம் - மஹா கம் என்ற வடசொல்லின் திரிபு. இப்படலத்தின் மூன்றாங் கவியில் ''பொற்றேர்ள் வீண்டலங்க ளுற வீங்கி'' என்றதனோடு 'மாகத்தோள்' என்றதை ஒப்பிடுக. பி - ம்:— [1]மேகத்திற் பிறந்தமின்னே வென்ற நுண்ணிடை யினளே. (கூடு)

எஎ. பிள்ளைபோற் [1]பேச்சி னுளைப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வ மவளுக்கே கொடுத் தியைய
வள்ளலே யுனக்கு நல்லேன் மற்றுநின் மனையில் வாழுங் [றே.
கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங் கேடுசூழ் கின்றே னன்

(இ - ள்.) ஐய - ஐயனே! வள்ளலே - வரையாதருளுந் தன்மையையுடையவனே! பிள்ளை போல் பேச்சினுளை - இளங்குழந்தைபோல மழலைச் சொல்லாக இனிது பேசும் பேச்சுக்களையுடைய சீதையை, பெற்ற பின் - அடைந்தபின்பு, பிழைக்கல் ஆற்றாய்-(அவள் இஷ்டத்துக்குத்) தவறுசெய்ய மாட்டாய்; கொள்ளை போகின்ற செல்வம் - மிகவும் அதிகமாய்க்கிடக்கிற [அல்லது பலராலுங் கொள்ளையடித்துக் கொண்டுபோகப்படுகிற] (உனது) செல்வத்தை, அவளுக்கே கொடுத்தி - அவளுக்கே கொடுப்பாய்; (இங்ஙனம் நீ ஆகும்படி தூண்டுதலால்), உனக்கு நல்லேன் - உனக்கு (நான்) நல்லவளாகிறேன்: மற்று—, நின் மனையில் வாழும் கிள்ளை போல் மொழியார்க்கு எல்லாம் - உனது வீட்டில் வாழ்கிற கிளிமொழிபோலும் இன்மொழியையுடைய மகளிர் [மனைவிமார்] யாவர்க்கும், கேடு சூழ்கின்றேன் அன்றே - தீங்குசெய்கின்றேனன்றோ; (எ - று.)—அன்றே - தேற்றம்.

இப்பொழுது உனதுமனைவியர்பலராலுங் கொள்ளைகொள்ளையாகஅனுபவிக்கப்படுகிற செல்வங்களையெல்லாம் இனி நீ அவர்க்குக்கொடாமல் சீதைக்கேகொடுத்துப் பயன்பெற்றதாக்கிஆனந்தமடையும்படி உன்னைத் தூண்டுதலால், யான் உனக்கு நல்லது தேடுபவளாய், உன்மனைவிமார்க்குத் தீங்கு விளைக்கிறே னென்றனளென்பதாம். ஆசைப்பட்டவர்யாவரும் தடையின்றித்தாமேயெடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டுக் காவலின்றிப் பொருட்சாலைகளைத் திறந்துவைத்திருத்தலின் பலராலும் கொள்ளைகொண்டு போகப்படுகிற செல்வ மென்பது, 'கொள்ளைபோகின்ற செல்வம்' என்பதன் கருத்தாம். இப்படிப்பட்ட வள்ளன்மையுடைமைபற்றியே, வள்ளலே யென விளித்தாள்; மேல் ''இராமனைத் தருதி யென்பால்'' என்று தான் ஒன்றை வேண்டுகிறு ளாதலால், அதன்பொருட்டு, வள்ளலே யென விளித்தாளுமாம். அன்றியும், சிறந்த பெண்மணியான சீதைக்குப் பயன்படாமல் பிறர்க்குப் பயன்படுஞ்செல்வமெல்லாம் கொள்ளைபோகிற செல்வம் போல்வதேயென்ற கருத்தால் 'கொள்ளைபோகின்ற செல்வம்' என்று கூறினுளுமாம். 'மனையில்

வாழுங் கிள்ளைபோல் மொழியார்' எனவே, மனைவிய ரென்ற தாயிற்றா; அவர்களாவார் - மண்டோதரி முதலியோர். மற்று - இனிமாற்று.

• இக்கவியில், முதல்வாக்கியம் - சீதையைப்பெற்றபின் நீ பிழைக்கமாட்டாய், இறந்தொழிவா யென்றும், இரண்டாவது வாக்கியம் - பகைவராற் கொள்ளையடித்துக் கொண்டுபோகப்படுஞ் செல்வத்தை அவளுக்கே ஒப்பித்து விடுவா யென்றும், இறுதிவாக்கியம்-உன்மனைவியர்க்கெல்லாம் யான் தீமை விளைவிப்பவளாகிறே னென்றும் அசுபமாகப்பொருள்படும்படி அமைத்துள்ள வாற்றை யுணர்க. பி - மீ:—[1]பேசுவாளே. (கூகூ)

எஅ. தேர்தந்த வல்குற் சீதை தேவர்த முலகி னிம்பர்
வார்தந்த [1]கொங்கை யார்தம் வயிறுதந் தாளு மல்ல
டார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
[2]நீர்தந்த வவளை வெல்வா னிலந்தந்து நிரம்பிற் றன்றே.

(இ - ள்.) தேர் தந்த அல்குல் சீதை - தேர்போன்ற அல்குலையுடைய அச்சீதை, தேவர்தம் உலகின் - தேவலோகத்திலும், இம்பர்-இவ்வுலகத்திலு முள்ள, வார் தந்த கொங்கையார்தம் - கச்சிட்ட தனத்தையுடைய மகளிரது, வயிறு - வயிற்றினுல், தந்தாளும் அல்லள் - பெறப்பட்டவளுமல்ல; (மற்று அவளதுதோற்றம் எங்ஙனமெனின்,—) சங்கம் நீர்-சங்குபோல வெண்ணிற முடைய பாற்கடலானது, தருக்கினர் கடைய-செருக்கையுடைய தேவாசுரர் கள் கடைந்ததால், தார் தந்த கமலத்தாளை - மலர்ந்த செந்தாமரைமலரில் வாழ்கிற திருமகளை, தந்த(து) - கொடுத்தது: அவளை - அத்திருமகளை, வெல்வான் - வெல்லும்பொருட்டு, நிலம் - பூமி, தந்து நிரம்பிற்று - (இச் சீதையை) உண்டாக்கி நிறைவடைந்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்.

உலகத்துமகளிர்போலச் சீதை ஒரு பெண்ணின் வயிற்றினின்று பிறந் தவளல்லள்; பூமிதேவியிடத்தினின்று தானே தோன்றியவளென்று சீதை யின் அயோநிஜத்துவமாகிய மேன்மையை யெடுத்துக்கூறுவாள், கடல் கடைந்தகாலத்தில் அது மிகஅழகிய திருமகளைத் தர, அவளைவெல்லும்பொரு ட்டு நிலம், திருவுக்குத் திருவாகிய செல்வியாகும் இச்சீதையை உண்டாக்கித் தந்து மேன்மைபெற்றது என வருணனைவகையாற் கூறினாள்; **தற்குறிப் பேற்ற** பணி. தார் என்ற பூவின் பெயர் - இலக்கணையால், மலர்ச்சியாகிய அதன் தொழிலை யுணர்த்திற்று. 'தார்தந்த கமலத்தாள்' என்பதற்கு - மாலைதரப்பெற்ற திருமக ளென்றும், திருமாலுக்கு மணமாலையைச் சூட்டிய திருமகளென்றும் பொருள்கொள்ளலாம். ''வருணன் வைசயந்திமாலை வழ ங்கினன்'', ''அருவிலை முத்தின்கோவை யளித்தனள் வாக்கின் செல்வி'', ''தேனமர் நீலமாலை செழுந்தளிர்க்கரத்தினேந்தி, வானவர் தொழுது வாழ்த் த்த வரன்தனை நோக்கினாளால்,'' ''அலங்கல்சூட்டியருமறை முதலிமார்பின்'' என்ற பாகவதத்தால், பாற்கடலில் திருமகள்தோன்றுகையில் அவளுக்குச்

சமுத்திரராசன் ஒருதிவ்வியமாலையும் சரசுவதி முத்துமாலையையும், சமர்ப்பித்ததனையும், அவள் நீலமாலையைத் திருமாலுக்குச் சூட்டியதையும் அறிக.

முதலடியில், தத்த - உவமவுருபு. சங்கநீர்-உவமத்தொகை; இனி, சங்கு களையுடைய நீரென்றும், சங்கநிதியையுண்டாக்கிய நீரென்றும் பொருள் கொள்ளலாம். பி-ம்:—[1]முலையினர். [2]நீர்த்தத்ததனே. (சுஉ-எ)

எகூ. [1]மீன்கொண்ட கொடியி னர்க்கு விழாப்பரிந் துலக மேத்தத்
தேன்[1]கொண்ட நறுமென் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னு
மான் [2]கொண்டுண் டாட நீயுன் வாள்வலி யுலகங் காண
யான்[2]கொண்டுண் டாடும் வண்ணமிராமனைத் தருதியென்பால்.

(இ - ள்.) மீன் கொண்ட கொடியினர்க்கு-மீனைக்கொடியிலேயுடையவ னான காமனுக்கு, விழா மகிழ்ச்சி, பரிந்து-மிகுதலால், உலகம் - நிலவுலகத் தவர்கள், ஏத்த - புகழும்படி,—தேன் கொண்ட நறு மெல் கூந்தல் - வண்டு கள் (தமக்கு இடமாகக்) கொண்டுபயிலப்பெற்ற நறுமணமுள்ள மெல்லிய கூந்தலையும், சிறு இடை - சிறியஇடையையுமுடைய, சீதை என்னும் மான்-சீதையென்னும் பெண்ணை, நீ—, கொண்டு - (மனைவியாகக்) கொண்டு, உண்டாட-(அவளுடன்)கலந்து இன்பமனுபவிக்க,—உன் வாள் வலி உலகம் காண-உனது ஆயுதபலத்தை உலகத்தார் காணும்படி, யான் கொண்டு உண் டாடும் வண்ணம் இராமனை என்பால் தருதி - நான் (துணைபாகக்) கொண்டு இன்பமனுபவிக்கும்படி இராமனை (என்னிடம்) கொடுத்திடு; (எ - று.)

உனது வலிமையால் நீ சீதையையும் இராமனையும் கைவசப்படுத்திச் சீதையை உனக்கு உரியவளாக்கிக்கொண்டு இராமனை எனக்கு உரியவனுக்கு என வேண்டினாள். இவள் இராமனிடத்துக்கொண்ட வேட்கைமிகுதியை அவன் தன்னைப் பங்கப்படுத்தினபின்பும் ஒழியாமையால், உடன்பிறந்தவன் முன்னிலையிற்சொல்வதும் தவிர்வதும் உணராது தன்மனத்தினுட்கிடந்த கருத்தைப் புலப்படுத்தி இங்ஙனங் கூறினளென்க. சீதை கட்டழகியா யிருத்தலால், அவளால் மன்மதனுக்கு மகிழ்ச்சி மிகுமென்க. [1]மீன்கொண்டு டாடும் வேலை மேகலை யுலகம் என்ற பாடத்திற்கு - மீனைத் தன்னிடத்துக் கொண்டு அலை வீசுகிற கடலை மேகலாபரணமாகக் கொண்ட கடலென்க. பூமியைச் சூழ்ந்துள்ள கடலை, பூமியாகிய பெண் அணியும் இடையணி யென் றல், மரபு; வடநூலாரும் 'அப்தீமேகலா' என்று பூமிக்கு ஒருபெயர் கூறுவர். மான்-உவமவாகுபெயர். ஏத்தக் கொண்டு என இயையும். பி - ம்:— [2]கொண்டுடாடும். (சுஉ அ)

அ0. தருவது விதியே யென்றுற் றவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூட வற்றே
வொருபது முகமுங் கண்ணு முருவமு மார்புந் தோள்க
ளிருபதும் படைத்த செல்வ மெய்துவ தினிநீ யெந்தாய்.

(இ - ள்.) எந்தாய் - எனது ஐயனே! தருவது - (எவர்க்கும் எவற்றையும்) கொடுப்பது, விதியே - ஊழ்வினையே: என்றால்-ஆயினும், பெரிது தவம் உடையர் எனும் - மிக்க தவமுடையராயிருந்தாலும், (அவர்களுக்கும்), வருவது வரும் நாள் அன்றி வந்து கைகூட வற்றே-வரவேண்டுவதொரு பொருள் வருதற்குரிய காலத்திலே யல்லாமல் முன்புவந்து கைகூடவல்லதோ?[அன்று என்றபடி]: ஒருபது முகமும் - பத்துமுகங்களையும், இருபது கண்ணும் தோள்களும்-இருபது கண்களையுந் தோள்களையும், உருவமும்-அழகிய உருவத்தையும், மார்பும்-(அகலிய)மார்பையும், படைத்த - (நீ) அடைந்ததனாலாகிய, செல்வம்-சிறப்பை, நீ எய்துவது-நீ அடைவது, இனி-இனிமேல்தான்;(எ-று)

முற்பிறப்பிற்செய்த நல்வினையின் பயனால் நேர்தற்குரிய நன்மையும், எத்தணைப்பெருமுயற்சி செய்தபோதிலும், வருதற்குரியகாலத்திலன்றிமுந்தி வாராதாம்; ஆதலின், நீ மிக்க நல்லூழை யுடையனுய் ஒப்புயர்வற்ற வடிவமைதியோடுங் கூடிப் பெருந்தவஞ்செய்தனையாயினும் உனது அவயவசோபை வீண்படாதபடி உனக்குப்பெருநன்மை நேர்வது இனிச்சீதையைப்பெற்ற பின்பேயாம் என்று கூறினுள். இதற்குமுன் நீபெற்ற இன்பமெல்லாம் ஓரின்பமன்று; சீதையைப் பெற்றபின் நீ அடையும் இன்பமே இன்பம் என்றது, பின்னிரண்டடியில் விளங்கும். வரம்பில்லாத அழகுடைய சீதையின் நலத்தை நுகர்தற்கு ஒருமுகம் இருகண் இருதோள் போதா வாதலின், உனக்கு அமைந்துள்ள பத்துமுகம் இருபதுகண் இருபதுதோள் முதலியன அவளை நுகர்ந்தாலே பயன்பெற்றனவா மென்றுள். ''ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸமஃ'' என்பதனால், தமையனைத் தந்தையாக விளித்தாள். ''சிறுகா பெருகாமுறைபிறழ்ந்து வாரா, வுறுகாலத்து ஊற்றுகா வாமிடத்தே யாகும்'' ஆதலால், 'தருவது விதியே யென்றுல் தவம்பெரிதுடையரேனும் வருவது வருகாலன்றி வந்துகைகூடவற்றே' என்றுள். (கூஉ)

அக.—சூர்ப்பணகை 'இவளே யெடுக்கையில் இது செய்யப்பட்டேன்' என்றல்.

[1]அன்னவ டன்னே யுன்பா லுய்ப்பலென் றணுக லுற்ற, வென்னையவ் விராமன் றம்பி யிடைபுகுந் திலங்கு வாளான், முன்னை மூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வு முன்னின், சொன்னபி னுயிரை நீப்பான் றுணிந்தனெ னென்னச் சொன்னுள்.

(இ - ள்.) அன்னவள்தன்னை - அத்தன்மையுடையவளான சீதையை, உன்பால் உய்ப்பல் என்று-உன்னிடத்திற் கொண்டுசேர்ப்பே னென்று கருதி, அணுகல் உற்ற - சமீபித்த, என்னை—, அ இராமன் தம்பி - அந்த இராமனுடைய தம்பியான லக்ஷ்மணன், இடை புகுந்து - நடுவிலே வந்து அடுத்து,—இலங்கு வாளால் - விளங்குகிற வாட்படையால், முன்னை-முதலில், மூக்கு அரிந்து விட்டான் - (எனது) மூக்கை யறுத்துவிட்டான்; (அதனை யறுத்தபொழுதே), என் வாழ்வு முடிந்தது-எனது வாழ்க்கை முடிந்துபோய் விட்டது; (ஆயினும்), நின்முன் சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்த

னென்-(அச்செய்தியை) உனது முன்னிலையிற் சொன்னபின்பு என்உயிரை விடும்படி நிச்சயித்து இங்குவந்தேன், என்ன - என்று, சொன்னாள்—, (சூர்ப்பணகை); (எ - று.)

இராவணனுக்குத் தன்னிடத்தில் துரபிப்பிராய முண்டாகாமல் நல்ல எண்ணமே மிகுதற்பொருட்டும், அவர்களிடத்திற் கோபமுண்டாதற்பொருட் டும், இங்ஙனம் பொய்யாகக் காரணங்கற்பித்துக் கூறினாள். கீழ்க் கரனுடன் கூறுமிடத்தும் "கண்டுநோக்கருங் காரிகையாடனைக், கொண்டுபோவ லிலங் கையர்கோக் கெனு, விண்டுமேல்விழுந்தேனை வெகுண்டவர், துண்ட மாக்கி னர் மூக்கெனச் சொல்லினாள்" என்றமை காண்க. 'முன்னைமூக்கு' என்ப தற்கு-சிறந்தமூக் கென்றும், முற்பட்டுத்தோன்று முறுப்பாகிய மூக்கென் றும், 'முன்னின்' என்பதற்கு - ஆலோசிக்குமிடத்து என்றும், 'என்வாழ்வும் முடிந்தது' என எடுத்து - மூக்கு அறுபட்டபோதே எனது வாழ்க்கையும் அழிந்தது என்று உரைத்து, உன்னின் என்பதற்கு-உன்னிடத்தில் என்றும் உரைப்பாரு முளர். பி - மீ:—[1]இன்னவடன்னே ...எடுக்கலுற்ற. (சுசo)

அ2.—அதுகேட்டு இராவணன் மீக்க காமமடைதல்.

கோபமு மறனு மானக் கொதிப்புமென் றினைய வெல்லாம்
பாபநின் றிடத்து [1]நில்லாத் தன்மம்போற் பற்று விட்ட
தீபமொன் றொன்றை யுற்ரு லென்னலாஞ் செயலிற் புக்க
[2]தாபமுங் காம நோயு மாருயிர் கலந்த வன்றே.

(இ - ள்.) பாபம் நின்ற இடத்து-தீவினை நிலைத்த இடத்தில், நில்லா - நிற்கமாட்டாத, தன்மம் போல் - தருமம் போல, கோபமும் மறனும் மானம் கொதிப்பும் என்ற இனைய எல்லாம் - கோபமும் வீரமும் மானத்தாலாகிய மனக்கொதிப்பும் என்ற இவை யாவும், பற்று விட்ட - (காமம் மிக்க இராவ ணன் மனத்தில்) தொடர்பு ஒழிந்தன [நிலைப்படாவாயின]; தீபம் ஒன்று ஒன்றை உற்ரல் என்னல் ஆம் செயலின் - ஒருதீபம் மற்றொரு தீபத்தை யடைந்தாற் போன்றதென்று சொல்லத்தக்க தன்மையாக, புக்க - வந்து புகு ந்த, காமம் நோயும்—, தாபமும் - (அதனாலாகிய) தபிப்பும், ஆர் உயிர் கலந்த- (அவனுடைய) அரிய உயிரிற் சேர்ந்திட்டன; (எ - று.)

சூர்ப்பணகை உறுப்பறுபட்ட செய்தியை யுணர்ந்தவுடன் அவனுக்கு உண்டான கோபம் வீரம் மனக்கொதிப்பு என்றவை யாவும், சூர்ப்பணகை சீதைவிஷயத்தில் உண்டாக்கிய காமநோய் புகுந்தமாத்திரத்தில் ஒழிந்திட் டன: ஒன்றினின்று ஒன்று பற்றிப் பின்பு இரண்டுமாய் எரிகிற தீபங்கள் போல, காமமும் அதனாலான தாபமும் மிக்கு அவன்மனத்தோடு உயிரையும் வருத்தத்தொடங்கின என்பதாம். வீரரசமும் ரௌத்திரரசமும் சிருங்கார ரசத்தினுள் அடங்கிப்போன தன்மையை வெளியிட்டார். காமம் - சிற் றின்ப விருப்பம்; அதனை நோ யென்றார், வேதனை விளைத்தலால். மான மாவது - எப்பொழுதும் தம்நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால்

தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். அன்றே - தேற்றம். பி-ம்:— [1]நில்லாப்பெற்றிபோற். [2]காமமுநோயுமொன்றுயிருடன் கலந்த தன்றே. ()

அஉ.—இதுமுதல் ஐந்து கவிகள் இராவணனது காம வேதனையைக் கூறும்.

கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து [1]நின்ற
னுரனையு மறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
யரனையுங் கொண்ட காம னம்பினன் [2]முன்பு பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்.

(இ - ள்.) (அப்பொழுது இராவணன்), கேட்ட மங்கையை மறந்திலாதான்-(சூர்ப்பணகை சொல்லத் தான்) கேட்டுணர்ந்த சீதையாகிய பெண்ணை மாத்திரமேமறவாதவனும், கரனையும் மறந்தான்-(தம்பியாகிய) கரன் இறந்து போனதையும் மறந்திட்டான்; தங்கை மூக்கினை கடிந்து நின்றுன உரனையும் மறந்தான்-தங்கையினது மூக்கை யறுத்துநின்ற வீரனுடைய வலிமையையும் மறந்துவிட்டான்; உற்ற பழியையும் மறந்தான் - (அதனால் தனக்கு) நேர்ந்த பழிப்பையும் மறந்தொழிந்தான்; அரனையும் வெற்றி கொண்ட காமன் அம்பினால் - சிவபிரானையுஞ் சயித்த மன்மதனது பாணத்தால், முன்பு பெற்ற வரனையும் மறந்தான் - முன்பு (தான்) பெற்றுள்ள சிறந்தவரபலத்தையும் மறந்துபோனன்; (எ - று.)

காமனம்பினால் மறந்தா னென்று இயையும். சீதையாகிய ஒருபொருளை யொழிய மற்றவையனைத்தையும் காமத்தால் மறந்தன னென்பதாம். மன்மதன் சிவபிரானது தவத்துக்கு இடையூறுசெய்யத்தொடங்கி அப்பிரானால் எரிக்கப்பட்ட போதிலும், அப்பெருமான் பார்வதியை மணஞ்செய்யும்படியும், மற்றும் அவளைத் தனது உடம்பில் ஒருபகுதியிலே இடங்கொடுத்து வைத்திடும்படியும் செய்தமை பற்றி, 'வெற்றி யரனையுங் கொண்ட காமன்' என்றார். அவனுடைய அம்பு-தாமரைமலர், மாமலர், அசோகமலர், முல்லைமலர், நீலமலர் என்பன. இவற்றின் குணம் முறையே சித்தை, நிறவேறுபாடு, வெறுப்பு,படுக்கை,மரணவேதனை என்பவற்றை விளைத்தலாம். 'முன்பு பெற்ற வரனையும் மறந்தான்' என்பதற்கு - முன்பு தான்பெற்ற சாபத்தையும் மறந்தானென்று உரைப்பாரு முளர்; வேதவதியும் அரம்பையும் முதலியசிலர் இராவணனை 'இனி நீ ஒருத்தியை வலியக்கற்பழிக்கத் தொடங்கின் அழிந்திடுவாய்' என்று சபித்துள்ளா ராதலால், அதனையும் மறந்து சீதையை வலியக் கைக்கொள்ளக்கருதின னென்றவாறு. உரன், வரன்-போலி. கேட்ட மங்கை - கேட்கப்பட்ட மங்கை; செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளது. பி - ம்:—[1]நின்றார். [2]முன்னைப். (கூசஉ)

அஊ. சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானு [ன்ன
முற்றிரண் டொன்றுய் நின்று லொன்றொழித் தொன்றை யு
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
[1]கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ.

(இ - ள்.) சிறு இடை சீதை என்னும் நாமமும் - சிறிய இடையை யுடைய சீதை யென்கிற பெயரும், சிந்தைதானும்-(இவனது) மனமும், இர ண்டு-(ஆகிய) இரண்டு பொருள்களும், ஒன்று ஆய் உற்று நின்றால்-ஒன்றாய்ப் பொருந்தியிருந்தால், ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன-(அவற்றுள்) ஒன்றாகிய சீதையை நீக்கி மற்றொரு பொருளை நினைப்பதற்கு, மற்று ஒரு மனமும் உண் டோ - வேறொரு மனமும் உள்ளதோ? [இல்லை யென்றபடி]; (ஆதலால்), மறக்கல் ஆம் வழி மற்று யாதோ-(அவளை) மறக்கத்தக்க வழி வேறு எதுவோ? [எதுவுமில்லை யென்றபடி]; கற்றனர் - படித்தவர்களுக்கும், ஞானம்-தத்துவ ஞானம், இன்றுஎல் - இல்லையானால், காமத்தை கடக்கல் ஆமோ - (அவர்க ளால்) காமத்தை வெல்லமுடியுமோ? [முடியா தென்றபடி]; (எ - று.)

உள்ளது ஒருமனம்; அதுவோ சீதைபெயரோடு ஒற்றுமையடைந்து விட் டது; இப்படி அது லயப்பட்டிருக்கையில் வேறு பொருளை நினைக்க வேறு மனம் இல்லை யாதலால், அவன் சீதையையொழிய மற்றையெல்லாவற்றை யும் மறக்கும்படி யாயிற்று: சீதையைத்தான் மறந்து விடலாகாதோ வெனின்,—எவ்வளவு கற்றவர்க்கும் தத்துவஞானமில்லையாயின் காமத்தை வெல்லமுடியாதாதலால், அவன் மிகவுங்கற்றவனாயினும் மெய்யுணர்வு இல னாதலால், அவளை மறக்கமாட்டாதவனாயினன் என்பது, கருத்து. ஈற்றடி - பொதுப்பொருளாய் நின்று, இராவணன் சீதையை மறந்திடாமையாகிய சிறப்புப்பொருளை நன்கு விளக்குதலால், வேற்றுப்பொருள்வைப்பணி. நாமம், ஜ்ஞானம் - வடசொற்கள். ஞானமாவது - முத்திநிலையையும், மற் றைப் பிரபஞ்சநிலைகளையும் சந்தேக விபரீதங்களின்றி உள்ளபடியறிதல். இப்பாட்டின் ஈற்றடியை, பால காண்டத்தில் ''பெண்களால்பால் வைத்த தேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்'' என்றதனோடு ஒப்பிடுக. பி-ம்:— [1]கற்றறி. (சுசஊ)

அடு. மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்ன ணீண்ட
வெயிலுடை யிலங்கை [1]நாத னிதயமாஞ் சிறையில் வைத்தா
னயிலுடை யரக்க னுள்ள மவ்வழி மெல்ல மெல்ல [றன்றே.
வெயிலுடை நாளி லுற்ற வெண்ணெய்போல் வெதும்பிற்

(இ - ள்.) மயில் உடை சாயலாளை - மயிலின் சாயல்போன்ற சாயலு டைய சீதையை, நீண்ட எயில் உடை இலங்கை நாதன்-உயர்ந்தமதிற்காவலை யுடைய, இலங்கைக்குத் தலைவனான இராவணன், வஞ்சியா முன்னம்-வஞ் சித்துக்கவர்ந்துபோதற்கு முன்னமே, இதயம் ஆம் சிறையில் வைத்தான் - (தனது) மனமாகிய சிறைச்சாலையினிடத்தே அடக்கிவைத்தான்; (அதனால்), அயில் உடை அரக்கன் உள்ளம்-வேற்படையையுடைய இராவணனது மனம், அ வழி - அப்பொழுது [அல்லது அவ்விடத்து], வெயில் உடை நாளில் உற்ற வெண்ணெய் போல் - வெயிலையுடையபொழுதிற் பொருந்திய வெண்ணெய் போல, மெல்ல மெல்ல வெதும்பிற்று - படிப்படியாய் வெப்பங்கொண்டு உரு கிற்று; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

வஞ்சியாமுன்னம் - வஞ்சித்து எடுத்துச்சென்று இலங்கையில் அசோக வனத்திற் சிறைவைத்தற்கு முந்தியே என்றபடி. இதயமாஞ் சிறையில் வைத்தான் - தன்மனத்தில் நீங்காமற் கொண்டான் என்றபடி. வெயிலுடை நாளி லுற்ற வெண்ணெய்-நல்லவெயிலில் வைக்கப்பட்ட வெண்ணெய் என்ற படி. "சாயல் மென்மை" என்ற தொல்காப்பியத்தால், சாயலென்பது - மென்மைப்பொருளே யுணர்த்துவதோர் உரிச்சொல் என்றும், அது ஐம்பொறி யால் நுகரப்படும் ஐவகைமென்மைக்கும் பொதுவா மென்றும் உணர்க. 'மயி லுடைச்சாயலாள்' என்றவிடத்து, சாயல் - ஒளியாற் பிறந்த மென்மை. இதயம் - ஹ்ருதயம். பி - மீ:—[1]வேந்தன். (சுசச)

அசூ. விதியது வலியி ஞனு மேலுள [1]வினைவி ஞனுட்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி ஞனுங்
[2]கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

(இ - ள்.) விதியது வலியிஞனும்-ஊழ்வினையினுடைய வலிமையாலும், மேல் உள வினைவிஞனும் - இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களாலும், பதி உறு கேடு வந்து குறுகிய பயத்திஞனும் - அவ்விலங்கை நகரம் அடைய வேண்டிய தீமை வந்து சமீபித்துள்ளதன் பயஞலும்,—வெய்ய காமம் நோய்-கொடியகாமநோயானது, கல்வி நோக்கா மதியிலி மறைய செய்த தீமை போல்-வித்தையை உணராத அறிவிலா ஞெருவன் பிறர்காணுதிருக்குமாறு மறைவாகச்செய்த பொல்லாங்கு போல, கதி உறு பொறியின்-(புலன்நுகர்த லில்) வேகம்பொருந்திய (இராவணனுடைய) இந்திரியங்களிலே, வளர்ந்தது-வளர்ந்திட்டது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

கல்விஞானமில்லாத பேதை தீவினையை மறைவாகச் செய்தாலும் அது மறைபடாமல் தெய்வத்தால் அறியப்பட்டுப் புலனெய்விடுதல்போல, இராவண னது காமநோய் முதலில் மனத்தில் நிலைத்ததாயினும் பின்பு பஞ்ச இந்திரி யங்களிலும் பரவி வெளிப்படலாயிற்று என்பது, பின்னிரண்டடியின் கருத்து. இப்படி அவனுக்குக் கொடியகாமம் வளர்ந்ததற்குக் காரணத்தை, முன்னிரண்டடியால் விளக்கினர். விதி - இருவினைப்பயன் செய்தஉயிரை யே சென்று அடையும் நியதி. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழி ஞுந் தான் முந்துறும்" என்றதனுல், ஊழின் தவறுதலவிமையை யறிக. மேலுளவினைவு - தேவர்களுடைய பிரார்த்தனையின்படியும், எம்பெருமா னுடைய சங்கற்பத்தின்படியும், வேதவதியின் சாபத்தின்படியும், அநரண்ய னது சாபத்தின்படியும் சீதையைக் கவர்ந்ததன் நிமித்தம் இராவணன் இராம னுல் அழியவேண்டியமை. பதியுறு கேடு வந்து குறுகிய பயம்-நந்தியினது சாபத்தின்படி வானரரால் இலங்கையழியவேண்டியமை. 'கதியுறுபொறி யின்' என்பதற்கு - வேகம்பொருந்திய யந்திரம்போல என்று உரைப்பாரு முளர். கல்விகற்று அதன் அறிவால் விதிவிலக்குகளே நோக்குதலில்லாத

வனே தீவினைசெய்தல் பெரும்பான்மை யென்பது பட, 'கல்விநோக்கா மதி யிலிமறையச்செய்த தீமை' என்றார். பி-ம்:—[1]வினையினலும். [2]கதியது. ()

அஎ. பொன்மய மான நங்கை மனம்புக[1]ப் புன்மை பூண்ட
தன்மையோ வரக்கன் றன்னே யயர்த்ததோர் தகைமை யாலோ
மன்மதன் வாளி தூவி நலிவதோர் வலத்த ஞனுன்
வன்மையை மாற்று மாற்றல் காமத்தே [2]வதிந்த தன்றே.

(இ - ள்.) பொன் மயம் ஆன நங்கை - (மிக்கவொளியால்) பொன்மய மானவள்போ லுள்ள சீதை, மனம் புக - (தன்)மனத்திலே புகுந்ததனல், புன் மை பூண்ட தன்மையோ - (அவ்விராவணன்தான்) சிறுமையடைந்திட்டத ஞலோ? (அன்றி), அரக்கன்-அவ்விராவணன், தன்னே அயர்த்தது ஓர் தகை மையாலோ - தன்னே(த் தான்) மறந்ததொரு தன்மையினுலோ, மன்மதன் வாளி தூவி நலிவது ஓர் வலத்தன் ஆனுன்-மன்மதன் அம்புகளே மேலெய்து (அவ்விராவணனே) வருத்தத்தக்க வல்லமையுடையவ னுயினுன்; வன்மை யை மாற்றும் ஆற்றல் - எல்லாவல்லமையையும் நீக்கிவிடும்படியான திறமை, காமத்தே வதிந்தது அன்றே-காமத்தினிடத்திலே பொருந்தியதன்றே ?

பலவகை வலிமைகளேயும் மிகுதியாகப் பெற்றுள்ள இராவணனே மன் மதன் எளிய மலரம்புகளால் நலியுந் திறத்தவ னுனதற்கும், எல்லாத்தேவர்க ளும் இராவணனல் அச்சமுறுத்தப்பட்டு ஒடுங்கிக்கிடக்கையில் காமதேவன் அவனே வருத்துபவனுனதற்கும் காரணங் கூறுபவராய், 'பொன்மயமானஒரு மங்கையை விரும்பிய காரணத்தால் அவன் சிறுமைப்பட்டதனுலோ, அவளே யே நினைத்தலால் அவன் தன்னே மறந்திட்டதனுலோ, மன்மதன் அவனே வருத்தினன்' என்றார். இராவணன் இங்ஙனம் வலியொடுங்கினு னென்ற சிறப்புப்பொருளே உலகத்தில் எத்திறத்தோருடைய எத்தனேவலிமையை யும் அழிக்கத்தக்க சக்தி காமத்தினிடத்திலே குடிகொண்டதன்றே என்ற பொதுப்பொருள்கொண்டு விளக்கியதனல், வேற்றுப்பொருள்வைப்பணி. பி-ம்:—[1]மடமை. [2]வருத்தது. (சுசசு)

அஅ.—உடனே இராவணன் சபையைவிட்டுத் தன்மனேயினுள்ளே செல்லுதல்.

எழுந்தன னிருக்கை நின்றுண் டேழுல கத்து ளோரு
மொழிந்தன ராசி யோசை முழங்கின சங்க மெங்கும்
பொழிந்தன பூவின் மாரி போயினர் [1]புறத்தோ ரெல்லா
[2]மழிந்தழி சிந்தை யோடு மாடகக் கோயில் புக்கான்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, இருக்கைநின்று எழுந்தனன்-(இரா வணன் தான் வீற்றிருந்த) சிங்காசனத்தைவிட்டு எழுந்திருந்தான்; (அப்பொ ழுது), ஏழ் உலகத்து உளோரும் - ஏழுலோகங்களி லுள்ளவர்களும், ஆசி மொழிந்தனர்-வாழ்த்துக் கூறினர்கள்; சங்கம்-சங்கவாத்தியங்கள், எங்கும் -

எவ்விடத்திலும், ஓசை முழங்கின - பேரொலியுண்டாக ஒலித்தன; பூவின் மாரி - புஷ்பவருஷங்கள், பொழிந்தன - (அவன்மேற்) சொரிந்தன; புறத்தோர் எல்லாம் - பக்கங்களிலுள்ளார் யாவரும், போயினர்-விலகிச்சென்றார்கள்; (இராவணனும்), அழிந்து அழி சிந்தையோடும்-மேல்மேலழிகிற மனத்துடனே, ஆடகம் கோயில் புக்கான் - பொன்மயமான (தனது) மாளிகையினுட்புகுந்தான்; (எ - று.)

பல அரசர்கள் முதலியோர் கூடியுள்ள சபையிலே தனது காமநோய் வெளிப்படுதல் தனது இறைமைக்குணங்களுக்கு இழுக்கா மென்று கருதுதலாலும், இக்காமநோயைத் தணித்தற்கும் சீதையைப் பெறுதற்குஞ் செய்ய வேண்டிய முயற்சியைக் குறித்துத் தனியே ஆலோசித்தற்காகவும், இராவணன் உடனே சபையை நீங்கி மாளிகை சென்று சேர்ந்தா னென்க.

'புறத்தோரெல்லாம் போயினர்' என்பதற்கு - வெளியிலிருந்துவந்தவரெல்லோரும் தந்தமிடத்துக்குச் சென்றார்களென்றும் உரைக்கலாம். எல்லாம் என்பது - இருதிணைக்கும் பொது. ஆடகம் - ஹாடகம் என்ற வடசொல்லின் திரிபு; இது: நால்வகைப் பொன்களி லொன்று; மற்றவை - கிளிச்சிறை, ஜாதரூபம், ஜாம்பூநதம் என்பன. **பி-ம்:**—[1]புகுந்தோரெல்லாம். [2]அழிந்திழிந்தை. (சுசள)

அகஃ:—இனி ஆறுகவிகள் - இராவணனது காமநோய்முதிர்ச்சிகூறும்.

பூவினுல் வேய்ந்து செய்த பொங்குபே ரமளி[1]ப் பாங்கர்த்
தேவிமார் [2]குழுவு [3]நீங்கச் சேர்ந்தனன் சேர்த லோடு
நாவிநா றூறி நவ்வி நயனமுங் [4]குயமும் புக்குப்
[5]பாவியாக் கொடுத்த வெம்மை பயப்பயப் [6]பரந்த தன்றே.

(இ - ள்.) (தனது மாளிகைக்குச் சென்றவுடன் இராவணன்), தேவிமார் குழுவும் நீங்க - (தன்) மனைவிமாரது கூட்டமும் தன்னைச் சேர்தலில் லாதபடி, (தனியே), பூவினுல் வேய்ந்து செய்த பொங்கு பேர் அமளி பாங்கர் - மலர்களாலமைத்துச் செய்யப்பட்ட விளங்குகிற பெரிய படுக்கையினிடத்தில், சேர்ந்தனன் - சேர்ந்தான்; சேர்த லோடும் - (அங்ஙனம்) சேர்ந்தவுடனே, நாவி நாறு ஊறி நவ்வி-கஸ்தூரிப்புழுகு வாசனைவீசப்பெற்ற கூந்தலையுடைய மான்பேடுபோன்ற சீதையின், நயனமும் - கண்களும், குயமும்-தனங்களும், பாவியா - (அவனுல்) இடைவிடாது நினைக்கப்பட்டு,புக்கு-(அவன்மனத்தினுட்) புகுந்து, கொடுத்த - (அவனுக்குத்) தந்த, வெம்மை - தாபமானது, பய பய பரந்தது-வரவர அதிகப்பட்டது; (எ - று.)

தனது காமதாபம் பிறர்க்குப் புலனாகக்கூடா தென்ற நோக்கத்தோடு இராவணன் சென்றபொழுது வழக்கப்படி தன்னைத்தொடர்ந்து வந்த தன் மனைவியர்களையெல்லாம் தான் சீதையினிடத்துப் புதிதாகக்கொண்டமோகத்தின் மிகுதியால் உபேக்ஷித்து அவர்களை உடன்வரவேண்டாமென்று விலக்கி அவர்கள் சேர்க்கையொழிந்து தனியே தாபந்தீர்த்தற்பொருட்டு மலர்களைப்பர

ப்பி யடுக்கியமைக்கப்பட்ட படுக்கையைச் சேர்ந்தான்; அங்ஙனம் தனிமைப் பட்டவுடன் இயல்பாகக் காமதாபம் விஞ்சிய வகையைப் பின்னிரண்டடி களில் விளக்குகிறார்; இவன் தனிப்பட்டவுடன் சீதையின் கண்களேயும் தனங்களேயும் இடைவிடாது சிந்திக்கச்சிந்திக்க அவை இவன் மனத்திலூன் றித் தாபத்தை வீளேத்து அதனே வரவர மிகுவித்தன வென்க. [5]பாவியாற் கொடுத்த என்று பாடமோதி, தீச்செயலுடையவளான சூர்ப்பணகையினுல் மூட்டப்பட்ட என்று உரைப்பாரு முளர். 'ஈவிஞாறேறி' என்பதைச் சீதைக்கு அன்மொழித்தொகையாக்கி, கவ்விநயனம் - மான்விழிபோன்ற விழி யென்றலு மொன்று. பி-மீ:—[1]கொங்கைத். [2]வெள்ளம். [3]நீங்கிச். [4]மனமும். [5]பாவியாள். [6]பயந்ததன்றே. (சுசஅ)

வே று.

கூ0. நூக்க லாக லாத காத லூறு நூறு கோடியாப்
[1]பூக்க வாச வாடை வீசு சீத நீர்பொ திந்தமென்
சேக்கை வீக ரிந்து திக்க யங்க [2]ளெட்டும் வென்றதோ
ளாக்கை [3]தீய வுள்ள நைய வாவி வேவ தாயினன்.

(இ - ள்.) நூக்கல் ஆகலாத - தள்ளிவிலக்கமுடியாத, காதல் - காம வாசையானது, நூறு நூறு கோடி ஆ பூக்க - மிகப்பலமடங்காக வளர, (அத னுல்), வாசம் வாடை வீசு சீதம் நீர் பொதிந்த மெல் சேக்கை வீ - நறுமண முடைய இளங்காற்ருல் வீசப்பட்ட குளிர்ந்தபனிநீர் பொருந்தப்பெற்ற மெல் லிய படுக்கையாகவமைந்துள்ள மலர்கள், கரிந்து - கருகி, திக் கயங்கள் எட் டும் வென்ற தோள் ஆக்கை தீய - எட்டுத்திக்கியானேகளேயுஞ்சயித்த தோள் களேயுடைய (தனது)தேகம் தீந்துபோகவும், உள்ளம் நைய - மனம் அழுங்க வும், ஆவி வேவது ஆயினன் - (இராவணன் தனது) உயிரும் தவிக்கும்படி யானன்; (எ - று.)

நூக்கலாகலாத என்ற அடைமொழி, காமத்தினது விலக்குதற்கரிய இய ல்பை விளக்கும். நூறுநூறுகோடி என்றது, அளவிறந்தமையைக் குறித்தது. இராவணனுக்கு அஞ்சி வாயுதேவன் மந்தகதியாக வந்து அவனுக்கு உபசார மாக அவனது மலர்ப்படுக்கையின்மேற் குளிர்ந்த பனிநீரைத் தெளிக்கிற தன்மை, 'வாசவாடை வீசுசீதநீர்பொதி ந்த மென்சேக்கை' என்றதனுல் வெளியாம்; அப்படி செயற்கைக்குளிர்ச்சி பெற்று இயற்கையிலும் தேனினுற் குளிர்ந்துள்ள மலர்களும் அவனுடம்பு பட்டமாத்திரத்தில் அதன் காமதாபத் தாற்கருகின என்க. 'தோள் ஆக்கை' என்பதற்கு - தோளும் மற்றவுடம்பும் என்றும் பொருள்கொள்வர். வடதிசைக்காற்றையுணர்த்தும் வாடையென்ற சிறப்புப்பெயர் - இங்கே பொதுப்பெயர்த் தன்மைப்பட்டுக் காற்றுமாத்திர த்தை யுணர்த்திற் றென்க; இனி, வாடையென்பது-வடக்கிற்செல்வ தென்ன தென்றலுக்கு ஒரு ஏதுப்பெயருமாம். பி-மீ:—[1]பூக்கள். [2]எட்டை. [3]தேய.

இது முதல் ஆறுகவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய

விருத்தங்கள்; இப்படிப்பட்டவற்றைச் சந்தவிருத்தமென்பது சந்தப்போலி யாயிருத்தல்மாத்திரத்தைக்கொண்டே யென அறிக. குழிப்புக்கு ஒத்துவரு வனவே, சந்தவிருத்தமென்றற்குப் பொருத்தமுடையன. இனி, இவற்றை, முதலாறுசீர்களாயும் மூன்றுபெருஞ்சீர்களாகப்பிரித்துக் கலிவிருத்தமென்ன வேண்டுமென்பது, ஒருசாரார் கொள்கை.

[பாலகாண்டத்தில் கார்முகப்படலத்தில் பிராட்டியின் காமவேதனையை வருணித்தவிடத்தும்,நைடதத்தில் கைக்கிளைப்படலத்தில் தமயந்தியின் காம வேதனையை வருணித்தவிடத்தும் இவ்வகைவிருத்தமே உபயோகிக்கப் பட் டுள்ளமை ஊன்றியுணர்தற் பாலது.] (கசகஉ)

கூக. தாது கொண்ட சீத மேவு சந்து சந்த மென்றளிர்ப்
போது கொண் டெடுத்த போது பொங்கு தீம ருந்தினுல்
வேது கொண்ட தென்ன மேனி வெந்து லைந்து விம்முதீ
யூது வன்று ருத்தி போலு யிர்த்து யிர்த்து யங்கினுன்.

(இ - ள்.) சீதம் மேவு - குளிர்ச்சி பொருந்திய, சந்து-சந்தனத்தையும், சந்தம் மெல் தளிர் - அழகிய மென்மையான இளந்தளிர்களையும், தாது கொ ண்ட போது - மகரந்தப்பொடிகளைக் கொண்ட புஷ்பங்களையும், கொண்டு - எடுத்துகொண்டு, அடுத்த போது-(அகப்பரிவாரமகளிர் சைத்தியோபசாரஞ் செய்தற்குச் சமீபித்தபொழுது, (இராவணன்),பொங்கு தீ மருந்தினுல் வேது கொண்டது என்ன - மிகுகிற நெருப்பாகிய மருந்தைக்கொண்டு வேது பிடித் தாற் போல, மேனி வெந்து உலைந்து - உடம்பு தாபமடையப்பெற்று வருந்தி, விம்மு தீ ஊது வல் துருத்தி போல் - எழுந்துசொலிக்குந் தன்மையதான நெருப்பை யூதுகிறவலிய துருத்தி போல, உயிர்த்து உயிர்த்து - உஷ்ணமாக மேன் மேற் பெருமூச்சுவிட்டு, உயங்கினுன் - சோர்ந்தான்; (எ - று.)

இயல்பில் குளிர்ச்சிதரும் பொருள்கள் யாவும் காமநோயுற்றார்க்கு அத் தாபத்தை யடக்கமாட்டாமையோடு அதனை மிகுவிக்குந்தன்மையனவு மாகு தலால், சீதளோபசாரமாக எடுத்த சந்தனம் முதலியவற்றால் வேதுகொண் டாற்போல அதிகதாபமுற்றனனென்றார். சிலநோய்கள் நீங்குதற்பொருட்டு அனலேக்கொண்டு வேதுபிடிப்பது வைத்தியமுறைகளு ளொன்றுதலால், 'பொங்குதீ மருந்து' என்றார். வேது - வெய்து; வெம்மையென்னும் பண்படி யாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். விம்மு என்ப தைத் துருத்திக்கு அடைமொழியாக்கி, (காற்று உட்புகுதலால்) பூரித்துப் பருக்குந் தன்மையுள்ள வென்றும் உரைக்கலாம். துருத்தி உவமை, அதிக தாபத்தோடு பெருங்காற்றை வெளிவிடுதற்கென்க. பி - டீ:—[1]அவித்த. [2]வெந்து. (சுடுo)

கூஉ. தாவி யாது [1]தீதெ ணுது தைய லாளை மெய்யுறப்
பாவி யாத போதி லாத பாவி மாழை பானல்வேல்

கரி யான கண்ணி மேனி காண மூளு மாசையா
லாவி சால நொந்து நொந்த ழுங்கு வானு மாயினன்.

(இ - ள்.) தாவியாது - (சபலமான மனத்தை) ஒருநிலைப்படுத்தமாட்டா மலும், தீது எனுது - (பிறன்மனைநயத்தல்) தீயசெய லென்று கருதாமலும், தையலாளே மெய் உற பாவியாத போது இலாத - அழகிய சீதையை (த் தன்) மனத்திலே பொருந்தினைத்தல்செய்யாதசமயமில்லாத[எப்பொழுதும் மனத் தில்இடைவிடாதுநிந்திக்கிற],பாவி பாவத்தையுடையவனுனஇராவணன்,— மாழை பானல் வேல் காவி ஆன கண்ணி - மாவடு கருநெய்தல்மலர் வேலா யுதம் நீலோற்பலமலர் என்னும் இவை போன்ற கண்களையுடைய சீதையி னது, மேனி - உடம்பை, காண - பார்ப்பதற்கு, மூளும் - மேல்மேலெழுகிற, ஆசையால் - ஆசையினல், ஆவி சால நொந்து நொந்து-உயிர் மிகவும்வருந்தி, அழுங்குவானும் ஆயினன் - துன்பப்படுபவனுமாயினன்; (எ - று.)

கருங்குவளே, நீலோற்பலம், கருநெய்தல் என்பவை - ஒருபொருட்பன் மொழியாக வழங்குமாயினும் இம்மூவகையும் ஒன்றேடொன்று சிறிதுவேறு பாடுள்ள நீர்ப்பூக்களின் சாதிபேதமாக வழங்குதலும் உண்டாதலின், பானல் காவி என்ற இரண்டையும் ஒருங்கே கூறினர்; பாலகாண்டத்தில் "படர்பூங் குவளைகாண்மலரோ நீலோற்பலமோ பானலோ" என்றமை காண்க. மாம் பிஞ்சினுட்பிளவு, கண்ணுக்கு வடிவில்உவமை. யாது தீது எனுது தாவி என்று எடுத்து, யாது தீங்கு நேர்வதோ என்று அஞ்சாமல் அபேகை செலுத்தி என்றும், தா யாது தீது (யாது) எனுது என்று எடுத்து-இதனல் வரும்பழிப்பு எதுவோ? பாவமெதுவோ? என்று ஆராயாமலும் என உரைப் பாருமுளர். இரண்டாவது உரைக்கு, தா - குற்றம்: உரிச்சொல். பிரதான மான அகத்துறுப்பாதலால், மனம், 'மெய்' எனப்பட்டது. 'மெய்யுறப் பாவியாத போ திலாத' என்பதற்கு - உடம்பைத் தழுவும்படி [ஆலிங்கனஞ் செய்யும்படி] கருதாத சமய மில்லாத என்று உரைப்பினுமாம். பி-ம்:— [1]தீயெனுது. (சுருக)

கூஉ. பரங்கி டந்த மாதி ரஞ்[1]சு மந்த பாழி யானைபின்
கரங்கி டந்த கொம்பொ டிந்தி [2]ரங்க வென்ற காவலன்
மரங்கு டைந்த தும்பி போல நங்கன் [3]வாளி வந்துவந் [ன்.
துரங்[1]கு டைந்து நொந்து நொந்து ளைந்து ளைந்தெ தாங்கினு

(இ - ள்.) பரம் கிடந்த - பாரந்தங்கிய, மாதிரம் - திக்குக்களே, சுமந்த - தாங்கிய, பாழி-வலிமையையுடைய, யானையின்-யானைகளின் [திக்கஜங்களி னுடைய], கரம் - துதிக்கையினிடத்து, கிடந்த - பொருந்திய, கொம்பு - தந் தங்கள், ஒடிந்து - ஒடிய, (அதனல்), இரங்க-(அவ்யானைகள்) வருந்தும்படி, வென்ற-(அவற்றைச்) சயித்திட்ட, காவலன் - அரசனுகிய இராவணன்,— மரம் குடைந்த தும்பி போல - மரத்தைக்குடைகிற வண்டுபோல, அரங்கன் வாளி வந்து வந்து உரம் குடைந்து - மன்மதபாணங்கள் மேன்மேல்வந்து

(தனது) மார்பைத் துளைக்க (அதனால்), நொந்து நொந்து - மிகவும் காம நோயுற்று, உளைந்து உளைந்து - மிகவும் வருந்தி, ஒதுங்கினன் - ஒடுங்கினன்.

ஒடிந்து, குடைந்து - செயவெனெச்சத்தின் திரிபு. தும்பி - மன்மத பாணத்துக்கும், மரம் - வலிய இராவணன்மார்புக்கும் உவமையாய்நின்றது. மிகப்பெரிய வலியவடிவமுடைய பல திக்குயானைகளின் வலிய தந்தங்களை எளிதில் முறித்திட்ட வல்லமைசாலி உருவமில்லாதவனுன மன்மதனுருவ னது மெல்லிய மலரம்புகளுக்கு ஆற்றுமல் மிகவும்வருந்தின னென்பதாம். பரம் - வடசொல். பி-மீ:—[1]பரித்த. [2]அடங்க. [3]பாணம். [4]குடைந்துருங்க.()

கூஉ. கொன்றை துன்று கோதை யோடொர் கொம்பு வந்தெ னெஞ்
நின்ற தண்டு கண்ட தென்ற ழிந்த ழுங்கு நீர்மையான்[சிடை
மன்ற றங்க லங்கன் மாரன் வாளி போல மல்லிகைத்
தென்றல் வந்தெ திர்ந்த போது சீறு வாணு மாயினன்.

(இ - ள்.) கொன்றை துன்று - கொன்றைக்காயை யொத்த, கோதை யோடு - கூந்தலுடனே, ஒர் கொம்பு-ஒருபூங்கொம்பு [ஒருமங்கை], என் நெ ஞ்சிடை வந்து நின்றது - என்மனத்தினிடத்தில் வந்துதங்கிவிட்டது: கண் டது உண்டு - (அதனை நான்) பார்த்ததுஉண்டு, என்று - என்றுசொல்லிக் கொண்டு, அழிந்து-உறுதிநிலைகெட்டு, அழுங்கும்-வருந்துகிற, நீர்மையான் - தன்மையுடையவனுன இராவணன்,—மன்றல் தங்கு - வாசனைபொருந்திய, அலங்கல்-பூமாலையைத்தரித்த, மாரன்-மன்மதனுடைய, வாளி போல-அம்பு போல, மல்லிகை தென்றல் வந்து எதிர்ந்த போது - மல்லிகைப்பூவின் மணத்தோடுகூடிய தென்றற்காற்று வந்து தாக்கியபொழுது, சீறுவானும் ஆயினன் - (அதன்மேற்) கோபிப்பவனுமானன்; (எ - று.)

யாவர்க்கும் குளிர்ச்சியையும் இன்பத்தையும் விளைக்கின்ற தென்றற்கா ற்று காமநோயுற்ற இராவணனுக்கு மன்மதபாணம்போலவே தாபத்தையும் துன்பத்தையும் விளைத்து மிகவும் வருத்தவே, அவ்விராவணன் அக்காற்று மயமான வாயுதேவன்மேற் கோபிப்பவனுயின னென்பதாம். 'கொன்றை துன்று கோதையோடு' என்பதற்கு - கொன்றைக்காய்போன்ற கூந்தலிற் பொருந்திய புஷ்பசரத்துடனே என்று உரைப்பாரு முளர்; இவ்வுரைக்கு, கொன்றை -- உவமவாகுபெயர்; அன்றி, சரக்கொன்றை மலர்கள் சூடப்பட்டு நிறைந்த கூந்தலுடனே என்றும்,சரக்கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்டு, நிறைந்த மாலையுடனே என்றும் உரைத்தலு முண்டு. கொன்றை என்னும் மரத்தின் பெயர்—அதன்காயையும் மலரையும் குறிக்கும்பொழுது, முத லாகுபெயராம். கூந்தற்குக் கொன்றைக்காய் உவமைகூறப்படுதலை, ''கொண் டலுங் கூந்தற்பனையுங் கொன்றைக்காயு மிருளுந், தண்டலையுங் கார்மண லுஞ் சைவலமும்-வண்டினமும், தண்குழலை யொப்பாம்'' என்ற உபமான சங்கிரகத்தாலு மறிக. ''கொன்றையம்பூங்குழலாள்'' என்ற சிலப்பதிகார மும், 'கொன்றைப்பழம் போலுங்குழலையுடையவள், ''கொன்றைப்பழக்

குழற்கோதையர்'' என்றும் 'வாளையாபதியிலும்' என்ற அதன்உரையும் இங்கு உணரத்தக்கன. கொம்பு - உவமையாகுபெயர். (சுடுஙூ)

கூடு.—இராவணன் மாளிகையைவிட்டு ஒருசோலையை யடைதல்.

அன்ன காலை யங்கு நின்றெ ழுந்த ழுங்கு சிந்தையா
னின்ன வாறு செய்வெ னென்றெ [1]ணெண்ணி லாதி ரங்குவான்
பன்னு கோடி தீப மாலை பாலை யாழ்ப ழித்தசொற்
பொன்ன ரைய டிக்க வங்கொர் சோலை யூடு போயினான்.

(இ - ள்.) அழுங்கு சிந்தையான்-(இவ்வாறு) வருந்திய மனத்தையுடையவனான இராவணன், அன்ன காலை - அப்பொழுது. அங்குநின்றுஎழுந்து - அவ்விடத்தினின்று புறப்பட்டு, இன்ன ஆறு செய்வென் என்று ஓர் எண்ணிலாது இரங்குவான் - இன்னவிதம் செய்வேனென்று எண்ணும் ஓர் எண்ணமில்லாமல் தன்பப்படுபவனாகி, பாலை யாழ் பழித்த சொல் பொன் அனார் - பாலையாழின் இசையைப் பழித்த சொற்களையுடைய திருமகள்போன்ற அழகிய மாதர்கள்பலர், பன்னு கோடி தீபம் மாலை எடுக்க-சிறப்பித்துச் சொல்லத்தக்க மிகப்பல விளக்குகளை வரிசையாக முன்னே எடுத்துச்செல்ல, அங்கு ஓர் சோலையூடு போயினான் - அவ்விடத்தில் ஒரு சோலையினிடத்துச் சென்றான்; (எ - று.)

என்னபரிகாரம் செய்தால் இத்தாபம் தணியுமென்று சிந்திக்கையில் குளிர்ந்த சோலையினிடத்துச் சென்றால் தணியலா மெனக் கருதி அங்குச் செல்பவனானன். அம்மகளிர்சொல்லின் மிக்க இனிமைக்குமுன் யாழினிமை மிகுந்ததாழ்வையடையு மென்பது, 'யாழ்பழித்த சொல்'என்பதன் கருத்து. பொன்னனார் - ஒளி, நிறம், மேன்மை, அழகு இவற்றால் பொன் போன்றவ ரெனினுமாம். பாலையாழ் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்ற நால்வகைப்பண்களுள் பாலை என்னும் பண்ணுக்குச் சிறந்த யாழ்: அப்பண் - குரல் குரலாகப்பெற்ற செம்பாலையுள் பிறப்பது; இப்பாலையாழின் மாட்சியை இசைநூலால் அறிக; சிலப்பதிகாரவுரையிலுங் காணலாம். எண் - முதனிலைத் தொழிற்பெயர். பி - ம்:—[1]எண்ணிலான். (சுடுச)

வேறு.

கூசு.—அந்தச் சோலையின் வருணனை.

மாணிக்கம் பனசம் வாழை மரகதம் வயிரந் தேமா
வாணிப்பொன் வேங்கை கோங்க மரவிந்த ராகம் பூகஞ்
சேணுற்ற நீலஞ் சாலங் குருவிந்தந் [2]தென்னம் வெள்ளி
[3]பாணித்தண் பளிங்கு நாகம் பாடலம் பவள மன்னே.

(இ - ள்.) (அச்சோலையில்), பனசம் - பலாமரங்கள், மாணிக்கம் - மாணிக்கமயமாகவும், வாழை - வாழைமரங்கள், மரகதம்-மரகத ரத்தினமயமாகவும், தேமா - தேன்மாமரங்கள், வயிரம் - வயிரத்தின் மயமாகவும், வேங்

கை - வேங்கைமரங்கள், ஆணி பொன்-சிறந்தசாதிப்பொன் மயமாகவும், கோங்கம் - கோங்குமரங்கள், அரவிந்த ராகம் - பதுமராக ரத்தினமயமாகவும், பூகம் - பாக்குமரங்கள், சேண் உற்ற நீலம் - நெடுந்தூரம் ஒளியைச்செலுத்தும் நீலரத்தினமயமாகவும், சாலம் - ஆச்சாமரங்கள், குருவிந்தம் - குருவிந்த ரத்தினமயமாகவும், தென்னம் - தென்னமரங்கள், வெள்ளி - வெள்ளிமய மாகவும், நாகம் - புன்னைமரங்கள், பாணி தண் பளிங்கு - நீரோட்டமுள்ள ஸ்படிகரத்தின மயமாகவும், பாடலம் - பாதிரி மரங்கள், பவளம் - பவழ மயமாகவும், (இருந்தன); (எ - று.)—மன், ஓ- ஈற்றசை.

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப வினைமுற்று வருவித்து முடிக்கப்பட்டது. அங்கு உள்ளமரங்கள்யாவும் இரத்தினமயமாகவும் பொன்மயமாகவும் வெள்ளிமய மாகவு மிருந்தன என்பதாம். மாணிக்கம் - செந்நிறமுடைய ஒருரத்தினம். மரகதம் - பச்சைரத்தினம். ஆணிப்பொன் - மாற்றுயர்ந்த பொன். கோங்கம், அம் - சாரியை. அரவிந்தராகம் என்ற பெயர் - தாமரை மலர்போலச் செந்நிறமுடைய தெனப் பொருள்படும். தென்னம் - தென்னை என்றும் வழங்கும். பி-ம்:—[1]சேணுய்க்கும். [2]தெங்கு. [3]பாணித்தென்.

இதுமுதற் பதினேழு கவிகள் - இப்படலத்தின் பதினுன்காங்கவி போன்ற **அமுதசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள்.** (சுடுடு)

கூஎ.—இராணணன் அங்கு ஒருமண்டபத்தில் ஒருபடுக்கையிற் சேர்தல்.

வானுற நிவந்த செங்கேழ் மணிமரந் துவன்றி வான
மீனெடு மலர்க டப்மில் வேற்றுமை தெரிந்த றேற்றுத்[கோர்
தேனுகு சோலை நாப்பட் செம்பொன்மண் டபத்து [1]ளங்
பானிற வடலி சேர்ந்தான் பையுளுற் றுயங்கி ரைவான்.

(இ - ள்.) வான் உற நிவந்த - ஆகாயத்தையளாவ வளர்ந்த, செம்-அழகிய, கேழ் - ஒளியுள்ள, மணி மரம் - இரத்தினமயமான விருட்சங்கள், துவன்றி-நெருங்கப்பெற்று, வானம் மீனெடு மலர்கள் தம்மில் வேற்றுமை தெரிதல் தேற்று-ஆகாயத்தில் விளங்குகிற நக்ஷத்திரங்களுக்கும் (அம்மரங்களின்) மலர்களுக்கும் ஒன்றற்கொன்று வேறுபாடு அறியமுடியாத, தேன் உகு சோலை-தேனைச்சொரிகிற அத்தச்சோலையின், நாப்பண் - நடுவிலுள்ள, செம் பொன் மண்டபத்துள் - சிவந்த பொன்மயமான மண்டபத்தி லிருக்கிற, ஓர் பால் நிறம் அமளி-பால்போன்ற வெண்ணிறமுடைய ஒருபடுக்கையில், சேர்ந்தான்-சேர்ந்து, (இராவணன்), பையுள் உற்று - (காம)நோய் மிக்கு, உயங்கி-வருந்தி, கைவான் - தளர்பவனுனன்; (எ - று.)—ஆன்கு - அசை.

ஆகாயத்தை அளாவி ஓங்கி வளர்ந்துள்ள மரங்களின் மலர்கள் - வானத்தில் விளங்கும் நக்ஷத்திரங்கள் போன்றன என்பது, முன்னிரண்டடியின் கருத்து; உவமையணி. பி-ம்:—[1]ஆண்டோர். (கடுசு)

கூஅ.—அங்குப் பறவைகள் யாவும் இராவணனுக்கு அஞ்சி மௌனமா யிருத்தல்.

கனிகளின் மலரின் வந்த கள்ளுண்டு [1]களிகொ ளன்னம்
வனிதையர் மழலை யின்சொற் கிள்ளையுங் குயிலும் வண்டு

மினியன மிழற்று கின்ற யாவையு மிலங்கை வேந்தன்
மூனியுமென் றவிந்த வாய மூங்கையர் போன்ற வன்றே.

(இ - ள்.) கனிகளின் - பழங்களினின்றும், மலரின்-பூக்களினின்றும், வந்த - வெளிப்பட்ட, கள் - மதுவை, உண்டு - குடித்து, களி கொள் அன்னம் - மிக்க களிப்புக்கொண்ட பறவைகளும், வனிதையர்-மகளிரது, மழலை இன்சொல் - மழலைச்சொற்போல இனிய சொற்களையுடைய, கிள்ளையும் - கிளிகளும், குயிலும் - குயில்களும், வண்டும்-வண்டுகளும், இனியன மிழற்றுகின்ற யாவையும் - இனிமையானசொற்களைச் சொல்வனவான (நாகண வாய்ப் பறவை முதலிய மற்றும்) எல்லாப் பறவைகளும்,—இலங்கை வேந்தன் முனியும் என்று அவிந்த வாய - இலங்கை நகரத்துக்குத் தலைவனான இராவணன் கோபிப்பா னென்று பேச்சொழிந்த வாயையுடையவையாய், மூங்கையர் போன்ற-ஊமைகள் போலிருந்தன; (எ-று.)-அன்றே ஈற்றசை.

பழங்களின் ரசத்தையும் பூக்களின் தேனையும் உண்டு மதுபானஞ் செய்தாற் போலக் களிக்குந்தன்மையனவும் இனியகுரலே யுடையனவுமான பறவைகள் யாவும் அப்பொழுது இராவண பயத்தாற் குரலடங்கிக் கிடந்தன என்பதாம். கனிகளின், மலரின்—இன்-நீக்கம். இனிய சொல்லென்றற்கு, 'மழலை' என்றார். அன்றியும், 'மழலை எக்காலத்திற்குங் கூறுப' என்ற நச்சினார்க்கினிய ருரைவாக்கியமும் நோக்கத்தக்கது. ''கிள்ளைபோல் மொழியார்'' என்றாற்போலப் பெரும்பாலும் உபமானமாகச் சொல்லப்படுகிற கிளி மொழியை உபமேயமாகவும், உபமேயமாகக் கூறப்படுகிற மகளிரின்சொல்லை உபமானமாகவும் மாறுபடக் கூறியதனால், எதிரிநிலையணி. பி - ம்:—[1]களி களன்ன. (சுடுஎ)

கூகூ.—அவனுக்குதஞ்சிப் பனிக்காலம் நீங்க வசந்தகாலம் வருதல்.

பருவத்தால் வாடை வந்த பசும்பனி [1]யகங்க பாண
முருவிப்புக் கொளித்த புண்ணிற் குளித்தலு [2]மூலைந்து விம்மி
யிருதுத்தான் யாத டாவென் றியம்பின னியம்ப லோடும்
வெருவிப்போய்[3]சிசிர நீங்கி வேனில்வந் திறுத்த தன்றே.

(இ - ள்.) பருவத்தால் - அந்தப்பின் பனிக்காலத்துக்குரிய இயல்பின் படி, வாடை வந்த-வடதிசைக்காற்றேறுவந்த, பசு பனி - குளிர்ந்த பனியானது, அகங்க பாணம் உருவி புக்கு ஒளித்த புண்ணில் குளித்தலும் - மன்மத பாணம் ஊருருவித் தைத்துச்சென்று மறைந்ததனு லான புண்ணில் தாக்கின வுடனே, உலைந்து விம்மி - (இராவணன்) வருந்திக்கலங்கி, இருது தான் யாது அடா என்று இயம்பினன் - (இப்பொழுதுநடக்கும்) பருவந்தான் எது வடாவென்று கூறினன்; இயம்பலோடும் - (அங்ஙனங்) கூறியவளவில், சிசிரம்-பின்பனிக்காலமானது, வெருவி போய் நீங்கி-அஞ்சிச்சென்று நீங்க, வேனில் வந்து இறுத்தது - (அடுத்த பருவமாகிய) வேனிற்காலம் வந்து சேர்ந்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

என்றும் மாறுபடாதமுறைமையையுடைய காலத்தையும் மாற்றுவிக்குங் கொடிய ஆணையையுடையான் இராவண னென்பது, இதில் தொனிக்கும், மேல் கo8, கo2-ஆங் கவிகளிலும் இங்ஙனமே காண்க. ருது என்ற வட சொல், இருதுவெனத் திரிந்தது; அது, வசந்தருது [இளவேனிற்பருவம்]; க்ரீஷ்மருது [முதுவேனிற்பருவம்], வர்ஷருது [கார்ப்பருவம்], சரத்ருது [கூதிர்ப்பருவம்], ஹேமந்தருது [முன்பனிப்பருவம்], சிசிரருது [பின்பனிப் பருவம்] என ஆறுவகைப்படும். இவை முறையே சித்திரைமுதலாக இவ் விரண்டுமாதம் ஒவ்வொன்றும். காமவேதனையாலான தாபத்தைக் காலவியல் பாலாகிய தாபமோ வெனக் கருதிக் கோபத்தோடு அவன் காலம்எதுவென்று விசாரித்தமாத்திரத்தில் அப்பொழுதுள்ள பருவம் தனக்கு யாது நேருமோ வென்றுஅஞ்சி விலக, அடுத்த பருவம் வந்த தென்பதாம். பர்வம், அநுபவ ணம், ஸிஸிரம்-வடசொற்கள். பி-ம்:—[1]அநங்கன்வாளி. [2]உலர்த்து. [3]சீதம். ()

கoo.—அப்பருவத்தும் இராவணனது தாபம் தணிவுபேறமை.

வன்பணை மரமுந் [1]தீய மலைகளுங் குளிர வாழு
மென்பனி யெரிந்த தென்றுல் வேனிலே விளம்ப லாமோ
வன்பெனும் விடமுண் டாரை யீற்றலா மருந்து முண்டோ
வின்பமுந் துன்பந் தானு முள்ளத்தோ [2]டியைந்த வன்றே.

(இ - ள்.) வல் பணை மரமும் - வலிய கிளைகளையுடைய மரங்களும், தீய மலைகளும் - காட்டுத்தீயையுடைய மலைகளும், குளிர-குளிர்ச்சியடையும்படி, வாழும் - தங்கிய, மெல் பனி-மெல்லிய (சிசிரகாலத்துப்) பனிதானே, எரிந்தது என்றுல் - (இராவணனுக்கு) வெப்பந் கொண்டதாகத் தோன்றிற் றென்று சொன்னால், வேனிலே விளம்பல் ஆமோ-(இயல்பில்வெப்பமுடைய) வசந்தகாலத்து வெயிலைக்குறித்துச் சொல்லவேண்டுமோ? [வேண்டுவதில்லை யென்றபடி]; அன்பு எனும் விடம் உண்டாரை ஆற்றல் ஆம் மருந்தும் உண் டோ-காமமாகிய விஷத்தை உட்கொண்டவர்களை நோய்தணிக்கத்தக்கதொரு மருந்தும் உள்ளதோ? [இல்லை யென்றபடி]; இன்பமும் துன்பந்தானும் உள் ளத்தோடு இயைந்த அன்றே - இன்பமும் துன்பமு மென்ற இரண்டும் (அவ ரவரது) மனதிலேயோடு பொருந்தியவையன்றே? (எ - று.)

அப்பனிக்காலத்தினும் மிகுதியாக இவ்வெயிற்காலம் இராவணனுக்குச் சந்தாபகரமாயிற்று என்க. 'எல்லாப்பொருள்களுக்கும் மிக்ககுளிர்ச்சியை ச்செய்யும் இயல்பினதான பனியே அவனுக்கு எரிந்ததென்றுல், எல்லாப் பொருள்களுக்கும் தாபந்தருவதான வெயில் அவனுக்குத் தாபத்தை அதிகப் படுத்துமென்பது கூறுமலே விளங்குமன்றே?' என்பது, முன்னிரண்டடி யின் கருத்து. அவனுக்கு இயல்பில் வரவரத் தாபம்மிகுதலையே பனிக்கால த்தினும் வெயிற்காலம் தாபத்தை மிகுவிப்பதாகக் குறித்தார். காலம் முதலி யன சிலர்க்கு இன்பந்தருவனவாகவும், சிலர்க்குத் துன்பந்தருவனவாகவுந் தோன்றுவது அவரவர்மனத்தின் நிலைமைக்கு ஏற்றதாயுள்ளதனால், அந்த மனம் திருந்திஞலன்றி எதுவும் இன்பந்தருவதாகா தென்றும், வேட்கை

நோய்விஞ்ஞைர்க்குக் காலம் மாறுதல் அதற்குஒருபரிகாரமாகமாட்டா தென்றும் பின்னிரண்டடியின் கருத்து. முதலிரண்டடிகள்-**தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேரணி**. இவற்றிற்கூறிய பொதுப்பொருள், பின்பனிப்பருவத்தினும் இளவேனிற்பருவம் அவனுக்கு அதிக தாபத்தைத் தந்ததென்று சிறப்புப் பொருளை விளக்கியதனால், வேற்றுப்பொருள் வைப்பணியின்பாற்படும். அன்பை விஷமென்றது, அதனையுட்கொண்டவரை அதுதவறாது மிக வருத்துதலால். ஈற்றடி மூன்றுமடியைச் சமர்ப்பித்தது - **தொடர்நிலைச்செய்யுட்தொடர்நிலை**: இச்செய்யுளில் எள்ளும் பச்சரிசியும்போல மூன்றணிகள்சேர்ந்து வந்தது-சேர்வையணியாகும். **பி-ம்:**—[1]யாவும், தீயும். [2]இயைத்தது. (கடுங)

கஅக.—உடனே அவன் சரத்காலத்தைக் கொண்டுக் கட்டளையிடுதல்.

மாதிரத் திறுதி காறுந் தன்மனத் தெழுந்த மையல்
வேதனை வெப்பஞ் செய்ய வேனிலும் [1]வெதுப்புங் காலை
[2]யாதிதிங் கிதனின் முன்னைச் [3]சிசிரனன் [4]றிதனை நீக்கிக்
கூதிராம் பருவந் தன்னைக் கொணருதிர் விரைவி னென்றான்.

(இ - ள்.) தன் மனத்து எழுந்த மையல் வேதனை-அவன் மனத்திலுண்டாகி வளர்ந்த காமநோய், மாதிரத்து இறுதி காறும் - திக்குக்களின் முடிவெல்லை வரையிலும், வெப்பம் செய்ய-தாபத்தைச் செய்யும்படி, வேனிலும்-வசந்த காலமும், வெதுப்பும் காலை-(அவனை) எரிக்கத் தொடங்கியபொழுது, (அவன்), 'இங்கு இது யாது - இப்பொழுதுவந்த இது என்ன பருவம்? முன்னை சிசிரம் இதனின் நன்று-முற்றியிருந்த பின்பனிக்காலமே இக்காலத்தினும் நல்லதாயிருந்தது; (இனி), இதனை நீக்கி-இக்காலத்தை விலக்கி,கூதிராம் பருவந்தன்னை-(ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய) கூதிர்ப் பருவத்தை, விரைவின் கொணருதிர்-துரிதத்திற் கொண்டுவாருங்கள்', என்றான்-என்று (தனது குற்றேவலாளரை நோக்கிக்) கட்டளையிட்டான்; 'எ - று.)

வசந்தகாலம் காமோத்தீபகமாதலால், 'இதனின் முன்னைச்சிசிரம் நன்று' என்றான். மையல்வேதனை மோகத்துன்பம். அவனது தேகத்திலுண்டான தாபம் சுற்றிலும் நெடுந்தூரமளவும் வீசித் தபிக்க என்பது, 'மாதிரத்திறுதிகாறும் தன்மனத்தெழுந்த மையல் வேதனை வெப்பஞ்செய்ய' என்பதன் கருத்து. **பி-ம்:**—[1]வெதும்பும். [2]யாதும். [3]சீதம். [4]எளிதினீக்கி. ()

கஅஉ.—அதுவும் தபிக்கவே, அவன் எல்லாப் பருவத்தையும் ஒழிக்கக்கட்டளையிடுதல்.

கூதிர்வந் [1]தடைந்த காலைக் [2]கொதித்தன குவவுத் திண்டோள்
சீதமுஞ் சுடுமோ முன்னைச் [3]சிசிரமே காணி தென்ரு
ஞதியா யஞ்சு மன்றே யருளல [4]தியற்ற வென்ன
யாதுமிங் [5]கிருது வாகா தியாவையு மகற்று மென்றான்.

(இ - ள்.) கூதிர் வந்து அடைந்த காலை-(அவன்இட்ட கட்டளையின்படி குவலாளரால் கொணரப்பட்டுக்)கூதிர்ப்பருவம் வந்து சேர்ந்தபொழுது,குவவு

திண் தோள் - திரட்சியையுடைய வலிய (அவனது) தோள்கள், கொதித்தன - (முன்னிலும் அதிகமாகக்) கொதிப்புற்றன; (அதுகண்டு அவன்), 'சீதமும் சுடுமோ - குளிர்ச்சிக்காலமான கூதிர்ப்பருவமும் தாபந்தரவல்லதோ? [தீமாட்டா தென்றபடி]; (ஆகலால்), இது - இக்காலம், முன்னே சிசிரமே காண் - முதலில் இருந்த பின்பனிக்காலமேதான்,' என்முன்-என்று சொன்னான்: (அதற்கு எவலாளர்கள்), 'ஆதியாய்-எங்கள் தலைவனே! அருள் அலது இயற்ற-(நினது) கட்டளையல்லாததைச் செய்ய, அஞ்சும் அன்றே - (எங்கள் மனம்) அஞ்சுமன்றே?'என்ன-என்று சொல்ல,(பின்பு இராவணன்), 'இங்கு யாதும் இருது ஆகாது - இப்பொழுது யாதொருபருவமும் வேண்டுவதில்லை: யாவையும் அகற்றும் - எல்லாப்பருவங்களையும் விலக்கிவிடுங்கள்,'என்முன்-.

சுவாமீ! நினது ஆணை தப்பி நடப்போமல்லோம் யாம்; நீ அருளிய மொழியின்படியே கூதிர்ப்பருவத்தையே கொணர்ந்தோம் என்று அச்சத்தோடு அவ்வேவலாளர் கூற வென்பது. மூன்றுமடியின் கருத்து. அஞ்சும் என்பதற்கு - அஞ்சுவோமென்றும் பொருள்கொள்ளலாம்; அப்பொழுது, 'அஞ்சுதும்' என்பதன் விகாரம். பி-ம்:—[1]அடுத்த. [2]கொதித்தனன். [3]சீதமே. [4]இயற்றல். [5]இருதுமாகா. (சுசுக)

கoகூ.—இருதுவொன்றுமில்லாத அச்சமயத்துநிலைமையின் வருணனை.

என்னலு மிருது வெல்லா [1]மேகின யாவுந் தத்தம்
பன்னரும் பருவஞ் செய்யா [2]யோகிபோற் பற்று நீத்த
பின்னரு மூலக மெல்லாம் பிணிமுதற் பாசம் வீசித் [றே.
துன்னருந் [3]தவத்தி னெய்துந் துறக்கம்போற் றோன்றிற் றன்

(இ - ள்.) என்னலும் - என்று (இராவணன்) கட்டளையிட்டவுடனே, இருது எல்லாம்-எல்லா ருதுக்களும்,பன் அரு தம்தம் பருவம் யாவும் செய்யா-வருணித்துச்சொல்லுதற்கரிய தத்தமதுகாலத்துக்கு ஏற்ற செயல்களெவற்றையுஞ் செய்யாமல், யோகிபோல் பற்று நீத்த-யோகப்பயிற்சிசெய்பவன்போல (இப்பிரபஞ்ச) சம்பந்தத்தை விட்டவையாய்,ஏகின-விலகிச்சென்றன;பின்னரும் - பின்பு, உலகம் எல்லாம்-இவ்வுலகம் முழுவதும், தன் அரு தவத்தின் பிணி முதல் பாசம் வீசி எய்தும் துறக்கம் போல்-அடைதற்கரிய தவத்தைச் செய்துமுடித்தபயனல் நோய்முதலிய கருமபந்தங்களை முற்றும்ஒழித்து அடையப்படுகிற முத்தியுலகம் போல,தோன்றிற்று-(காலநிலைமாறுபடாது) தோன்றியது; (எ - று.)—அன்றே - தேற்றம்.

நிமிஷம் நாழிகை நாள் மாதம் ருது வருஷம் முதலிய காலபரிணாமம் முத்தியுலகத்தி லில்லாமையை "சிறுகாலேபிலா நிலேபா திரிபா, குறுகா நெடுகா குணம் வேறுபடா, உறுகால்களிர் பூதமெலா முதினும், மறுகாநெறி" என்று கீழ்க் கூறியதனலும் உணர்க. இராவணனது கட்டளையால் எல்லாப் பருவங்களும் நீங்கிவிடவே, அப்பொழுது நிலவுலகம், காலபரிணாமமில்லாத முத்தியுலகம் போன்ற தென்பதாம். அவன்கட்டளைக்கு அஞ்சி இலங்கையை

மாத்திரமே யன்றிப் பூலோகம் முழுவதையும் பருவங்கள்விட்டொழிந்தன வென்பது தோன்ற, 'உலகமெல்லாம்' என்றார். இதில், 'எல்லாம்' என்றது, பொருளின்பன்மை குறியாமல் ஒருபொருளின் பலவிடங் குறித்துநின்றதனால், 'தோன்றிற்று' என்ற ஒருமைமுற்றைக் கொண்டது; இதனை 'எஞ்சாமைப்பொருளதாய் வருவதோர் உரிச்சொல்' என்பாரும் உளர். உயிரைப் பந்தப்படுத்துதலால், கருமத்தொடர்பு 'பாசம்' எனப்பட்டது. பாசம்-கயிறு. 'பிணி முதல் பாசம் வீசி' என்பதற்கு - உயிரைப் பந்தப்படுத்துவதும் எல்லாக்கருமங்களுக்கும் மூலகாரணமாவதுமான இவ்வுலகத்து ஆசையை அறத்தொலைத்து என்றும் பொருள்கொள்ளலாம். யோகீ - வடசொல்; யமம் நியமம் முதலிய பல அங்கங்களுடன் தவஞ்செய்பவன். அவன் பொருட்பற்று ஒழியுமாறுபோல ருதுக்கள் தொழிற்பற்று அற்றன வென்க. துறக்கம் - சுவர்க்கமுமாம் **பி-ம்:**—[1]எகலும். [2]யோகியின். [3]தவத்திற்றோன்றும்.

கஅச.—எல்லர்ப்பருவமும் ஒழிந்தும் அவனதுதூபம் ஒழியாமை.

கூலத்தா ருலக மெல்லாங் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க
நீலத்தா ரரக்கன் மேனி நெய்யின்றி யெரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றே காமத்தாற் கனலும் வெந்தீச்
சீலத்தா [1]லவிப்ப தன்றிச் செய்யத்தா னுவ துண்டோ.

(இ - ள்.) கூலத்து ஆர் உலகம் எல்லாம்-(சுற்றிலும்) கடற்கரை யமையப்பெற்றுள்ள நிலவுலகம் முழுவதும், குளிர்ப்பொடு வெதுப்பும் நீங்க-குளிர்ச்சியும் வெப்பமும் நீங்கப்பெறவும், நீலத்து ஆர் அரக்கன் மேனி-நீலநிறமாகப் பொருந்திய இராவணனுடைய உடம்பு, நெய் இன்றி எரிந்தது-நெய்யில்லாமலே எரிந்திட்டது; காலத்தால் வருவது ஒன்றே - காலசம்பந்தத்தினால் மாத்திரம் ஆவதொரு காரிய முண்டோ? [இல்லை யென்றபடி]; காமத்தால் கனலும் வெம் தீ-காமத்தினால் (உடலில்) மூண்டெரிகிற கொடிய தீ, சீலத்தால் அவிப்பது அன்றி-நல்லொழுக்கவைதியால் தணிக்கலாமேயல்லாமல், செய்ய ஆவது தான் உண்டோ - (அதற்கு) வேறுபரிகாரம் செய்யக்கூடியதும் உண்டோ? [இல்லையென்றபடி]; (எ - று.)—அன்றே - தேற்றம்.

உலகத்தில் எல்லா விருதுக்களும் ஒருங்கே ஒழிந்ததனால் உலக முழுவதும் குளிர்ச்சியுந்தாபமுமில்லாது சமநிலைப்பட்டது; இராவணனுடம்போ அங்ஙனமாகாமல் நெய்யின்றி ஒருநெருப்பு மேன்மேற் பற்றியெரிந்தாற்போல மிகத்தவித்தது என்பது, முன்னிரண்டடியின் கருத்து. நெருப்பு எரிதற்கு நெய் ஒருபகரணமாதல்போல, உடம்புஎரிதற்குச் சிலகாலம் ஒருபகரணமாம்; அதன்சம்பந்தமில்லாதிருக்கையிலே இவனுடம்பு எரிந்ததுபற்றி, நெய்யின்றி யெரிந்த தென்றார். காமதாபம் இந்திரியநிக்கிரகத்தால் அடங்கவேண்டுமேயன்றி, வேறுவிதத்தால் அடங்குமியல்பினதன் றாதலால், காலம் நீங்கின மாத்திரத்தில் அது அடங்கிற்றின்று என்பது, பின்னிரண்டடியின் கருத்து. இதனைப் பொதுப்பொருளாக்கி வேற்றுப்பொருள்வைப்பணியின் பாற் படுத்த

லாம். நீலத்தார் என்பதை, நீலம் தார் எனப்பிரித்து, தார் அரக்கன்-வெற்றி மாலையையுடைய இராவணனது; நீலம்-நீல நிறமான உடம்பு என்று உரைப் பாருமுளர். நீலத்தார்-நீலோற்பலமலர்மாலையுமாம்.பி-மீ:—[1]அவிவது.(சுசுஙக)

கஙநி.—என்னசெயீதுநீ தாபந்தணியப்பெறுத இராவணன் 'சந்திரனைக்கொணர்க' என்றல்.

நாரமுண் டெழுந்த மேகந் தாமரை வளைய [1]நான
சாரமுண் டிருந்த சீத [2]சந்தனந் தளிர்மென் முகை
டாரமுண் [3]டெரிந்த சிந்தை யயர்கின்ற னயனின் முரை
யீரமுண் [4]டென்ப தோடி யிந்துவைக் [5]கொணர்மி னென்றான்.

(இ - ள்.) நாரம் உண்டு எழுந்த மேகம்-நீரை நிரம்ப உட்கொண்டு வெளி யெழுந்த மேகங்களும், தாமரை வளையம் - இளைய தாமரையி னுட்சுருள்க ளும், நானம் சாரம் உண்டு இருந்த சீதம் சந்தனம் - கஸ்தூரியின் சாரம் தன் னிடங் கலக்கக் கொண்டுள்ள குளிர்ந்த கலவைச் சந்தனக்குழம்பும், தளிர் - இளந்தளிர்களும், மெல் தாதோடு-மெல்லிய பூந்தாதுகளும், ஆரம் - முத்துக் களும், (என்னும் இவைகளை), உண்டு-(தனது) உடம்பின்மேற் பொருந்தப் பெற்று, (அதனால்), எரிந்த-உடல் வேவப் பெற்று, சிந்தை அயர்கின்றன்- மனந்தளர்கின்றவனை இராவணன், அயல் நின்றுரை-பக்கத்தில் நின்ற பரி சனங்களை (நோக்கி), 'ஈரம் உண்டு என்பர்-(சந்திரனுக்குக்) குளிர்ச்சியுண் டென்று சொல்வார்கள்: (ஆதலால்), ஓடி இந்துவை கொணர்மின் - ஓடிப் போய்ச் சந்திரனைக் கொண்டுவாரும்,' என்றான்-என்று கட்டளையிட்டான்.

நீர்கொண்ட காளமேகம் முதலிய சீதளப்பொருள்கள் பலவற்றை எவ லாளர் அவனுடம்பின்மேற் கொண்டுசேர்த்து அவனுக்கு மிக்கசைத்தியோப சாரத்தைச் செய்யவும், அவனது தாபந்தணியாமல் இக்குளிர்ச்சிப் பொருள் களின் சம்பந்தத்தால் மேன்மேல் அதிகப்பட்டுக் கொண்டேயிருக்க, அவன் அப்பொழுது குற்றேவலாளரை நோக்கி, சந்திரனுக்கு மிக்க குளிர்ச்சியுண் டென்று யாவருங் கூறுவதாதலின் எனது தாபசாந்தியின் பொருட்டு அவ னைப் பிடித்துவாருங்க ளென்று கட்டளையிட்டன னென்பதாம். இந்து - வடசொல்; இது, தனது சீதகிரணங்களால் நனைப்பதென்று காரணப் பொருள்படுவதாதலின், சந்தர்ப்பத்துக்கேற்ப இப்பெயராற் குறித்தார். முதலடியில், உண்டு என்றது - பருகியென்றபொருளில் வந்தது; உண்ணல் என்பது பொதுவினையாகவும் வழங்குதலால். [2]சந்தனத்தளிர் என்று பாட மோதி-சந்தனக்குழம்பில் தோய்த்தெடுக்கப்பட்ட தளிரென்று உரைப்பாரு முளர். தாது - மகரந்தப்பொடியும், மலரிதழுமாம். ஆரம் என்பதற்கு - பூமாலையென்றும் உரைப்பர். 'ஈரம் உண்டென்பர்' என்று பராமுகமாகக் கூறியதனால், சந்திரன் இவன் பக்கல் அச்சத்தால் தனதுதன்மை முழுவதை யும்என்றும்இவன் முன்னிலையில் காட்டிற்றிலனென்பதும்,இவன்இதுவரை யிற் சந்திரனது குளிர்ச்சியைப் பொருள்செய்யாமையும், இத்தனைப் பொருள்

களால் தணியாத தாபம் எளியஅவனுல் தணிவதென்பது துணிபன்றுயி னும், உலகத்தார் அவனைச் சீதாபிராணனென்று சிறப்பித்துக் கூறலால் அவன்றன்மையையும் பார்த்திடுவோம் என்பதும் தோன்றும்; இன்னும் அதனுல், இராவணனிடத்துள்ள அச்சத்தால் அக்காலத்தில் சந்திரனும் தாபங்கொண்டிருந்தா னென்பது தொனிக்குமாறு அறிக. வலியம்-இளங் கொழுந்து. பி - மீ:—[1]நாளை. [3]உண்டிருந்துஞ். [4]என்பவோடி. [5]கொணரும்.

கஅசூ.—ஏவலாளர் சந்திரனை யழைக்க அவன் வந்துசேருதல்.

வெஞ்சினத் தரக்க ணுண்ட வியனகர் மீது [1]போக
[2]நெஞ்சினி னைதுங்கு கின்ற நிறைமதி யோனை [3]நோக்கி
யஞ்சலை வருதி நின்னை யழைத்தன னரச னென்னச்
சஞ்சலந் துறந்து தானச் சந்திர னுதிக்க லுற்றான்.

(இ - ள்.) வெம் சினத்து-கொடியகோபத்தையுடைய, அரக்கன்-இராக் கதனனை இராவணன், ஆண்ட-அரசாளுதற்கிடமான, வியல் நகர்மீது-பெரிய அவ்விலங்காநகரியின்மேல், போக-போவதற்கு, நெஞ்சினின்-(அஞ்சுகின்ற) மனத்தோடு, ஒதுங்குகின்ற - (ஒருபுறத்தே) விலகிச்செல்லுகிற, நிறை மதி யோனை நோக்கி-பூர்ணசந்திரனைப் பார்த்து,(அவ்வேவலாளர்கள்), 'அஞ்சலை-பயப்படாதே: வருதி - வருவாயாக: அரசன் நின்னை அழைத்தனன்-(நமது) அரசன் உன்னை யழைத்திட்டான்', என்ன-என்றுசொல்ல, அச்சந்திரன்—, சஞ்சலம் துறந்து - மனத்தடுமாற்றந்தீர்ந்து, உதிக்கல் உற்றான் - (அவ்விலங் கைநகரத்தில்) தோன்றுபவனுனன்; (எ - று.)

நிறைமதியோன் - பதினுறுகலைகளும் நிறையப்பெற்ற சந்திரன். இது வரையிலுஞ் சந்திரன் இராவணனிடத்துள்ள அச்சத்தால்இலங்கைக்கு நேராக உயரத்திற்செல்லாமல் ஒருபுறமாக ஒதுங்கியே சென்றுவந்தன னென்பதை முதலிரண்டடிகளில் விளக்கினர். சந்திரன் என்ற பெயர்-உலகத்தைச் சந் தோஷப்படுத்துபவ னென்று அவயவப் பொருள்படும். பி - மீ:—[1]போதும். [2]நெஞ்சிலன். [3]நேடி. (கூசுடு)

கஅள.—சந்திரோதயவருணனை: சந்திரன் இராவணனை வருத்துதல்.

அயிருறக் கலந்த நன்னீ ராழியின் முழி [1]யிந்து
செயிருறச் [2]சேகித் தாண்டோர் தேய்வுவந் துற்ற போது
வயிரமுற் [3]றுடைந்த [4]செற்றோர் [5]வலியவர்ச் செல்லு மாபோ
லுயிர்தெறக் கால னென்பா னெனத்தன னுதயஞ்செய்தான்.

(இ - ள்.) வயிரம் உற்று - பகைமைகொண்டு, உடைந்த - (தம்மினும் வலிய பகைவருக்குத்) தோற்ற, செற்றோர் - (மனத்திற்) சீற்றமுள்ளவர், --ஆண்டு-(தாம் தோற்ற)அப்பகைவரிடத்தில்,ஓர் தேய்வு வந்து உற்றபோது-ஒரு மெலிவுவந்துசேர்ந்த சமயத்தில்,—செயிர் உற சேதித்து-தீமையுண்டாக (அவரை) இமிசித்து, வலியவர் செல்லும் ஆபோல் - வலியரான அவரை (வருத்துதற்பொருட்டு அவர்மீது)வருவதுபோல,—உயிர் தெற காலன் என்

பான் ஒத்தனன் - (இராவணனுடைய) உயிரை அழித்தற்கு யமனை யொத்தவனுய்,--ஆழி இந்து-வட்டவடிவமான சந்திரன்,—அயிர்உற கலந்த நல் நீர் ஆழிநின்று - நுண்மணல்கள் மிகப்பொருந்திய மிக்க நீரையுடைய கடலினின்று, உதயம் செய்தான் - வெளித்தோன்றினன்; (எ - று.)

பகைவன் தம்மினும் வலியனுயிருக்கையில் அவனுக்குத் தோற்றவர்கள் பின்பு ஒரு சமயத்தில் அவனைத் தாம் அழித்திடவேண்டுமென்று மனத்திற் கறுக்கொண்டுசென்று அத்தணியாக்கோபத்தோடு அஞ்சிப் பதுங்கிக் காலம் பார்த்திருந்து பின்னர் எப்பொழுதேனும் அவனுக்கு ஒரு பெருந்தீங்கு வந்து நேருஞ் சமயத்தில் அவனையழித்தற்காக அவனைநோக்கி மீண்டுவரும் இயல் பின்படி, முன்பு திக்குவிசயகாலத்தில் இராவணனுக்குத் தோற்று அஞ்சியொடுங்கிச்சென்ற சந்திரன் அவனுக்குச் சீதையின்மீதெழுந்த காதலாற் பெரிய சஞ்சலம் நேர்ந்த சமயத்தை நோக்கி அவனை யழித்தற்பொருட்டு முன்பு தான் மறைந்துநின்று கடலினின்று தன்வடிவமுழுதும் வெளித்தோன்ற மீண்டு வந்தாற்போன்று உதித்தனனென்பதாம்; **தற்குறிப்பேற்ற வணி.** சந்திரனுக்கு யமனை உவமைகூறியது, மிக்கதொடுமை விளைத்துத் தவருது அழித்திடவல்ல ஆற்றலுக் கென்க. சந்திரன் காமோத்தீபகப் பொருள்களுள் ஒன்றுதலால், இராவணனது ஒருதலைக்காமத்தை மிகுவித்து அவனைத் தவிக்கச்செய்தல்பற்றி, இங்ஙனங்கூறினர்; அடுத்த மூன்று கவிகளுக்கும் இதுகொள்க.

"நன்று பெரிதாகும்" என்ற தொல்காப்பியத்தை நோக்கி 'நன்னீர்' என்பதற்கு - மிக்க நீ ரென்று பொருள் கொள்ளப்பட்டது. காலன் - காலத்தை அறுதியிடுபவன். **பி-ம்:**—[1]நித்துச். [2]கலந்தாண்டோர். [3]உடைத்து. [4]சென்றோர். [5]வலியவற். (சுசுக)

கoஅ —இதுவும் அது.

பராவருங் கதிர்க ளெங்கும் பரப்பிமீப் படர்ந்து வானிற்
றராதலத் தெவரும் [1]பேணு வவனையே சலிக்கு நீரா
லராவணை துயிலு மண்ணல் காலமோர்ந் தற்ற நோக்கி
யிராவண னுயிர்மே லுய்த்த திகிரியு மென்ன லானன்.

(இ - ள்.) (அச்சந்திரன்),—பராவு அரு-புகழ்த்தற்கு அரிய[மிகவும்அதிகமான சிறப்பையுடைய], கதிர்கள்-(தனது) கிரணங்களை, எங்கும் பரப்பி-எவ்விடத்தும் பரவச்செய்துகொண்டு, மீ படர்ந்து - மேலே சென்று, வானில் தராதலத்து எவரும் பேணு அவனையே சலிக்கும் - விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் யாவராலும் விரும்பப்படாத அவ்விராவணனையே வருத்துகிற, நீரால்-தன்மையால்,—அரா அணை துயிலும் அண்ணல் காலம் ஓர்ந்து அற்றம் நோக்கிஇராவணன் உயிர்மேல் உய்த்த திகிரியும் என்னல் ஆனன்-ஆதிசேஷனுகிய படுக்கையிற் பள்ளிகொள்ளுந் திருமால் சமயம்பார்த்து

அழிக்கக்கருதி இராவணனது உயிரின்மேற் செலுத்திய சக்கராயுதத்தையும் உவமை கூறத்தக்கவனனன்; (எ - று.)

சந்திரன் அப்போது மிக்கஒளியோடு விளங்கி இராவணனுக்கு அதிக தாபம் விளைப்பவனனனனென்பது விளங்க, சந்திரமண்டலத்துக்குக் கோடி சூரியப்பிரகாசமான திருமாலின் திருவாழியை உவமைகூறினர். கடலினின்று வெளித்தோன்றி இலங்கைநகர்க்கு வந்து இராவணனுக்கு மரணவேகனையை விளைக்கிற வட்டவடிவுள்ள சந்திரனுக்கு, கடலில் யோகநித்திரை செய்யுங் கடவுளாற் செலுத்தப்பட்டு இராவணனை யழிக்கவருகிற வட்டவடிவுள்ள சக்கரத்தோடு உவமை பொருந்துமாறு அறிக. திருமாலுக்கு ஆபரணகோடியிலும் ஆயுதகோடியிலுமாக இரண்டிலும் அமைந்து அடியார்க்கெல்லாம் மிக்க அழகியதாய்த் தோன்றி அருள்செய்து கொடியாரையே அழிக்கிற திருவாழியை, உலகத்து உயிர்கட்கெல்லாம் தனது குளிர்ந்தகிரணங்களால் தண்மையையே தந்து இராவணனொருவனுக்கே மிக்கவெம்மையைச் செய்கிற சந்திரனுக்கு ஒப்புமை கூறிய நயம் உய்த்துணரற்பாலது; இக்கருத்து 'அவனையே சலிக்கும்' என்ற பிரிகிலையேகாரத்தாற் பெறப்படும். 'வானில் தராதலத்து எவரும்பேண்' என்ற அடைமொழி, அவனது அளவிறந்த கொடுமையை விளக்கிற்று. 'காலமோர்ந்து அற்றநோக்கி' என்பதற்கு - (அவனையழித்தற்கு உரிய) காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்து (அவனுக்கு இப்பொழுது சீதையின்மீதுகொண்ட காதல்காரணமாக நேர்ந்த துன்பத்தாலாகிய) மெலிவை உய்த்துநோக்கி யென்றும் பொருள்கூறலாம். உயிர்மேல் - உயிராகிய இலக்கின்மே லென்க. பி-ம்:—[1]பேண. (சுசுஎ)

கஅசு.—நிலாத்தோற்றம் இராவணனுக்கு மிக்கவெப்பம்விளைத்தல்.

அருகுறு பாலின் வேலை யமுதெலா மளைந்து வாரிப்
[1]பருகினன் பரந்து பாய்ந்த நிலாச்சுடர்ப் பனிமென் கற்றை
நெரியுறு புருவச் செங்க ணரக்கற்கு நெருப்பி னுப்ப
ணுருகிய வெள்ளி யள்ளி வீசினு லொத்த தன்றே.

(இ - ள்.) அருகு உறு-(தனது) அருகிற் பொருந்திய, பாலின் வேலை-பாற் கடலிலுள்ள, அமுது எலாம் - அமிருதம்முழுவதையும், அளைந்து வாரி பருகினன் பரந்து பாய்ந்த - (சந்திரன்) துழாவி மிகுதியாக எடுத்துக் குடித்துப் பரவிப்பாய்தலாலுற்ற, நிலா சுடர் பனி மெல் கற்றை-நிலாவாகிய ஒளியினது குளிர்ந்த மெல்லிய தொகுதியானது,—நெரியுறு புருவம் செம் கண் அரக்கற்கு - (எப்பொழுதுங் கோபத்தால்) நெறித்த புருவங்களையும் (அதனால்) சிவந்த கண்களையுமுடைய இராவணனுக்கு, நெருப்பின் ஊப்பண் உருகிய வெள்ளி அள்ளி வீசினால் ஒத்தது - தீக்குடுவே (வைக்கப்பட்டதனால்) உருகிய வெள்ளியினுருக்கைக் கைகளால்நிரம்பஎடுத்து இறைத்தாற் போன்றது; (எ-று.)—அன்றே-தேற்றம்; ஈற்றசையுமாம்.

உலகத்துக்கெல்லாந் தண்மையைச் செய்கின்ற சந்திரனது வெண்ணிறமான அமிருதகிரணம் இராவணனுக்குக் காமநோயை மிகுவித்து மிக்க

வெம்மை செய்தல்பற்றி, அது பரவுதற்கு, மிகச்சுடுகின்ற வெள்ளியுருக்கை வீசுதலே உவமை கூறினர். திருப்பாற்கடல் கடைந்த காலத்து அதனினின்று தோன்றிய சந்திரன் அப்பொழுது அக்கடலினின்று தன்னெடுத் தோன்றிய அமிருதத்தை மிகுதியாகப் பருகி அவ்வமிருதத்தையே குளிர்ந்த தனது நில வொளியாக வெளியிடுகின்றனன்போலு மென்பது, முன்னிரண்டடியின் கருத்து. 'அருகுறு' என்ற அடைமொழி, அமுதத்துக்கும் பாற்கடலுக்கும் பொருந்தும். பி-மீ:—[1]பருகின பரந்துவாய்ந்த. (சுசுஅ)

சுகo —இதுவும் அது.

[1]மின்னிலந் [2]திரிந்த தன்ன விழுநிலா மிதிலை சூழ்ந்த
செந்நெலங் கழனி நாடன் றிருமகள் செவ்வி கேளா
நன்னலந் தொலைந்து சோரு மரக்கனை நாளுந் தோலாத்
துன்னல னொருவன் பெற்ற புகழெனச் சுட்ட தன்றே.

(இ - ள்.) மின் நிலம் திரிந்தது அன்ன - மின்னல் நிலவுலகத்திலே உலாவியது போன்ற, விழு நிலா-சிறந்த சந்திரகிரணமானது,—மிதிலை சூழ்ந்த - மிதிலாநகரத்தைச் சூழ்ந்த, செந்நெல் அம் கழனி நாடன்-செந்நெற் பயிருள்ள அழகிய கழனிகளையுடைய விதேகதேசத்து அரசனான சனகமகாராசனது, திருமகள்-அழகிய குமாரியான சீதாபிராட்டியினது, செவ்வி-வடிவழகை, கேளா - (சூர்ப்பணகையின் சொல்லாற்) கேட்டறிந்து, (அவளிடங் கொண்ட காதலால்), நல் நலம் தொலைந்து சோரும் - (தனது) சிறந்த ஆற்றலொழிந்து தளர்கிற, அரக்கனை-இராக்கதனான இராவணனே, நாளும் தோலாத் துன்னலன் ஒருவன் பெற்ற புகழ் என சுட்டது - எந்நாளும் தோல்வியடையாத ஒருபகைவன் அடைந்த கீர்த்தி வருத்துவதுபோல வருத்திற்று; (எ - று.)—அன்றே - தேற்றம்; ஈற்றசையுமாம்.

என்றுந் தோல்வியடையாது வெற்றியுற்ற பகைவனது புகழ் ஒருவனுக்கு வருத்தந் தருதல்போல, சந்திரனது நிலா இராவணனுக்குத் துன்பம் விளைத்ததென்பதாம். 'நாளுந்தோலாத் துன்னலனொருவன்' என்றது, இராமபிரானெனக்கொள்ளினும் அமையும். 'மின்னிலந்திரிந்ததன்ன' என்றது, இல்பொருளுவமை; 'மின்னலந்திரிந்ததன்ன' என்று பாடமோதி, மின்னல் தனது நல்ல செந்நிறம்மாறி வெண்ணிறமாய் விளங்கினாற்போன்ற என்று உரைத்தலும் ஒன்று. விழு - விழும்: வினைத்தொகையாக, (சந்திரனிடத்தினின்று) வீழ்விழுகிற நிலவென்றலு மொன்று. நாடன் திருமகன் செவ்விகேளா என்ற பாடம் - சனகராசனது செல்வமான சீதையின் கணவனாகியஇராமனது சிறப்பைக் கேட்டுத் தனது நல்லமகிழ்ச்சி நீங்கித் தளர்கிற இராவணனே யென்று பொருள்படும்; புகழை வெண்ணிறமுடையதென வருணித்தல் கவிமரபாதலால், அது, நிலவிற்கு உவமைகூறப்பட்டது. பி - மீ:- [1]மின்னலம், மின்னெலாம். [2]திகழுஞ்சோதி. (சுசுக)

கஎக.—இராவணன் ஏவலாளரை நோக்கி 'சூரியனை ஏன் கொணர்ந்தீர்?' எனல்.

கருங்கழற் காலனஞ்சுங் காவலன் [1]கறுத்து நோக்கித்
தருங்கதிர்ச் சீத யாக்கைச் சந்திரற் றருதி ரென்ன
முருங்கிய [2]தணலின் மூரி விடத்தினை [3]முகக்குஞ் சீற்றத்
தருங்கதி ரருக்கன் றன்னை யாரழைத் தீர்க ளென்றான்.

(இ - ள்.) கரு கழல் காலன் அஞ்சும் காவலன் - பெருமை பொருந்திய வீரக்கழலை யணிந்த யமனும் அஞ்சும்படியான அரசனுடைய இராவணன், கறுத்து நோக்கி-(தனது குற்றேவலாளரைக் கோபித்து நோக்கி, 'தரும்-(இனிதாகக்) கொடுக்கிற, கதிர் - கிரணங்களையுடைய, சீதம் யாக்கை - குளிர்ந்த உடம்பையுடைய, சந்திரன் - சந்திரனை, தருதிர் - அழைத்துக்கொண்டு வாருங்கள், என்ன - என்று (யான்) சொல்ல, முருங்கிய தணலின் - (யாவும்) அழியும்படியான கொடுநெருப்புடனே, மூரி விடத்தினை - வலிய விஷத்தையும், முகக்கும்-மொண்டுகொண்டுள்ள, சீற்றத்து அரு கதிர் அருக்கன் தன்னை - கோபத்தையும் பொறுத்தற்கரிய (உஷ்ண) கிரணங்களையுமுடைய சூரியனை, யார் அழைத்தீர்கள்-(உம்மில்) எவர் அழைத்து வந்தவர்?' என்றான் - என்று வினவினன்; (எ - று.)

காவலன் என்றனன இயையும். தனக்கு மிக்கதாபத்தருதல்பற்றிச் சந்திரனையே சூரியனாக நினைத்து இங்ஙனம்வினவினன். அழைத்தீர்கள்-இன்னரென்று அறியாமையின், பன்மையாற் கூறப்பட்டது. பி - ம்:—[1]கருத்து. [2]கனலின், கனலை. [3]மொய்க்குஞ். (கூஎ0)

கஎஉ.—அதற்கு அவர்கள் 'இவன் சந்திரனே' என்றல்.

அவ்வழிச் சிலதர் நஞ்சி யாதியா யருளில் லாரை
இவ்வழித் தருது மென்ப தியம்பலா மியல்பிற் றன்றால்
செவ்வழிக் கதிரோ னென்றுந் தேரின்மே லன்றி வாரான்
வெவ்வழித் தெனினுந் திங்கள் விமானத்தின் மேல தென்றார்.

(இ - ள்.) அ வழி - (இராவணன் இங்ஙனம்கூறிய) அப்பொழுது, சிலதர் - ஏவலாளர்கள், அஞ்சி - பயந்து, 'ஆதியாய்-தலைவனே! அருள் இல்லாரை - (உன்னைற்) கட்டளையிடப்படாதவரை, இ வழி-இவ்விடத்து, தருதும்-(நாங்கள்) அழைத்துக்கொண்டு வருவோம், என்பது - என்ற இவ்வார்த்தை, இயம்பல் ஆம் இயல்பிற்று அன்று - சொல்லத்தக்க தன்மையுடையதன்று; செவ்வழி கதிரோன் - சிவந்ததன்மையுள்ள கிரணங்களையுடைய சூரியன், என்றும் எப்பொழுதும், தேரின்மேல் அன்றி வாரான் - தேரின்மேலேயே வருவான்; திங்கள்-சந்திரன், வெம் வழித்து எனினும் - (உனக்கு) வெவ்விய தன்மையதாயினும், விமானத்தின்மேலது-விமானத்தின்மேலே யிருக்கிறது,' என்றார் - என்று சொன்னார்கள்; (எ - று.)—ஆல் - அசை.

சூரியன் தேரிலேறிச் சஞ்சரித்தலும், சந்திரன் விமானத்திலேறிச் சஞ்சரித்தலும் ஆகிய வேறுபாட்டியற்கையை யெடுத்துக்காட்டி, இவன் விமானத்திலேறியுள்ளதனால், சூரியனல்லன், சந்திரனே யென்று விளக்கினார்க ளென்க. செவ்வழியென்ற அடைமொழி கொடுத்தும், சந்திரனுடு சூரியனுக்கு உள்ள வேற்றுமையை விளக்குவதாம். பின்னிரண்டடியிற் கூறியது, ஓர் நூற்கொள்கை. உன் கட்டளைக்குச் சிறிதேனும் மாறுக நாங்கள் நடக்க மாட்டோமென்பது, முன்னிரண்டடியின் கருத்து. 'அருளில்லாரை' என் பதற்கு - உனது அருளைப் பெறுதவரை யென்றும், தண்ணளியில்லாதாரை யென்றும் உரைப்பினும் அமையும். (சுவக)

வே று.

சுசுசு.—இராவணன், சந்திரனென்று அறிந்து அவனை வெறுக்கத்தொடங்கல்.

பணந்தா ழல்குற் [1]பனிமொழியார்க்கன்பு [2]பட்டார் படுங்காமக்,
குணந்தான் முன்ன மறியாதான் கொதியா நின்ரூன் மதியாலே,
தணந்தா மரையின்றனிப்பகைஞ னென்னுந் தன்மை யொருதா னே, யுணர்ந்தா னுணர்வுற் றவன்மேலிட் டு[3]யிர்தந் துய்க்க வுரை [4]செய்வான்.

(இ - ள்.) பணம் - பாம்பின்படத்தை, தாழ் - ஒத்த, அல்குல்-அல்குலை யும், பனி மொழியார்க்கு-குளிர்ந்த சொற்களையுமுடைய மகளிர்க்காக, அன்பு பட்டார் - ஆசைப்பட்டவர்கள், படும் - அடைகிற, காமம் - காமநோயினது, குணம் - தன்மையை, முன்னம் தான் அறியாதான் - இதற்குமுன்பு ஒருகா லும் தான் அனுபவித்தறியாதவனும், மதியாலே கொதியாநின்ரூன்-(இப்பொ ழுது) சந்திரனால் தவிக்கின்றவனுமான இராவணன், தண் அம் தாமரையின் தனி பகைஞன் என்னும் தன்மை ஒரு தானே உணர்ந்தான்-குளிர்ந்தஅழகிய தாமரைக்கு ஒப்பற்ற பகைவனான சந்திரனே(இவன்)என்கிற உண்மையியல் பை ஒப்பற்ற தானே யறிந்தான்; உணர்வுற்று - (அங்ஙனம்) அறிந்து, உயிர் தந்து உய்க்க - தனது உயிரைக் கொணர்ந்து கொடுத்து உதவும்படி, அவன் மேல் இட்டு உரை செய்வான்-அச்சந்திரன்மேல் வைத்துச் (சிலசொற்களைக்) கூறுபவனானன்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

இராவணன் இதுவரையிலும் தான்விரும்பிய மகளிரையெல்லாம் தடை யில்லாமல் அடைந்து அனுபவித்துவந்தனனாதலால், காமத்தாலாகும் வருத் தத்தைச் சிறிதும் அனுபவித்தறியாதவனென்பது, 'பணந்தா ழல்குற்பனி மொழியார்க்கன்புபட்டார் படுங்காமக்குணந்தான் முன்னமறியாதான்' என்ப தன் கருத்து. 'மதியாலே கொதியாநின்ரூன்'என்பதற்கு-தனது அறிவினால் தவிக்கின்றவனென்று உரைப்பினும் அமையும்; அப்பொழுது கருத்து - குளிர்ந்தசந்திரனால் மகிழ்ச்சியுறவேண்டியிருக்க அதற்குமாறாகத் தனது அறிவின்தடுமாற்றத்துக்கு ஏற்பத் தாபம்மிக்கு வருந்துபவனென்பதாம். தனக்கு வெப்பம்விளைத்தலே தோற்றிச் சந்திரனைச் சூரியனென்று முதலிற் கருதிய இராவணன் ஏவலாளர் (கீழ்க்கவியிற்) கூறிய அடைபாளத்தால்

மாத்திரமேயன்றி இவனைக் கண்டவளவிலே தாமரைகள் குவிகிற இயல்பைத் தானே பிரதியக்ஷமாகக்கண்டதனாலும் இவன் சூரியனல்லன் சந்திரனே யென்று அறிந்தா னென்பது விளங்க, 'தணந்தாமரைக்குத் தளிப்பதைஞ னென்னுந்தன்மை யொருதானே யுணர்ந்தான்' என்றார். தணம் - தொகுத்தல். அவன்மேலிட்டு உரைசெய்வான்' என்பது, அவனைநோக்கிக் கூறுவா னென்றவாறு. 'உயிர்தந்துயிக்க' என்பதற்கு - பெருமூச்சுவாங்க என்றும் உரைக்கலாம். அடுத்தகவியில் வருகிற "தேயாநின்றுய்" முதலிய வற்றிலும் இவ்வாறே. **பி-ம்:**—[1]பணி. [2]பட்ட. [3]உயிர்காத்துய்க்க, உய்த்துதுன்பம். [4]செய்தான்.

இதுமுதல் ஆறு கவிகள் - மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரியவிருத்தங்கள்.** (கூஎஉ)

ககச.—இதுவும், அடுத்த கவியும் - சந்திரோபாலம்பநம்.
(சந்திரனைப்பழித்தல்)

தேயா நின்றுப் மெய்வெளுத்தா யுள்ளங் கறுத்தாய் நிலைதிரிந்து
காயா நின்று மொருநீயுங் கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயா நின்ற மலர்வாளி [1]பறியா நின்று [2]ரின்மையா
லோயா நின்றே னுயிர்காத்தற் குரியார் [3]யாவ ருடுபதியே.

(இ - ள்.) உடுபதியே - நக்ஷத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனே! (நீ), (மெய்) தேயாநின்றுய்-உடம்புமெலிகின்றுய்; மெய் வெளுத்தாய்-உடல் வெண்மைப்பட்டாய்; உள்ளம் கறுத்தாய் - மனங்கருகினுப் [நடுவிடத்திற் களங்கமடைந்தாய்]: நிலை திரிந்து காயாநின்றுய்-(உனது தண்ணிய) இயற்கைநிலைமை மாறித் தபிக்கிறுய்; ஒரு நீயும் - தனியனான நீயும், (என்னைப் போலவே), கண்டார் சொல்ல கேட்டாயோ - (சீதையின் அழகைக்) கண்டவர்கள் (அதனையெடுத்துச்) சொல்லக் கேட்டு அவளிடங் காதல்கொண்டாயோ? பாயாநின்ற - தடையில்லாமல் (எனதுடம்பினுள்ளே) தைத்துச் செல்லுகிற, மலர் வாளி - (மன்மதனது) புஷ்பபாணங்களே, பறியாநின்றுர் - பிடுங்கியெடுத்துப் பாதுகாக்கின்றவர், இன்மையால் - (எவரும்) இல்லாமையால், ஓயாநின்றேன் - வலியோடுங்குகிற என்னுடைய, உயிர் - உயிரை, காத்தற்கு - பாதுகாத்தற்கு, உரியார் - உரியவர், யாவர் - இனி எவரோ? [எவருமிலர் என்றபடி]; (எ - று.)

என்னுல் விரும்பப்பட்டவர் வந்து என்னைக்கூடி எனது வேட்கை நோய்வருத்தத்தை நீக்காமையா லென்பது, மூன்றுமடியின் கருத்து. தண்கதிரோனுனை உன்னைக்கொண்டு எனதுதாபந் தணித்துக்கொள்ளலா மென்று கருதி உன்னை அழைத்தேன்; நீயும் என்போல வெப்பங்கொண்டிருத்தலால் இனி யாரால் என்வெப்பத்தைத் தணித்துக்கொண்டு உய்வே னென்பது, இச்செய்யுளின் தாற்பரியம். சந்திரனே! நீ என்னைப்போல உடல்

தேய்ந்தும் உடல்வெளுத்தும் அகம்கருகியும் இயற்கைமாறி உடல்சுட்டு முள்ள தன்மையை நோக்கின், நீயும் என்போலச் சீதையின் அழகைக்கண்டவர்சொல்லக் கேட்டு அவளிடம் வேட்கைகொண்டனைபோலும் என்பது, முன்னிரண்டடியின் கருத்து. "வையாய வெம்மேபோல் நாண்மதியே நீயிந்நாள், மையா னிருளகற்றுய் மாழாந்து தேம்புதியால், ஐயா யரவணைமே லாழிப் பெருமானர், மெய்வாசகங் கேட்டுன் மெய்ந்நீர்மை தோற்றுயே" என்றதனோடு இதனை ஒப்பிடுக. மெய்என்பது-மத்தியமதீபமாய், முன்நின்ற 'தேயாநின்றுய்' என்றதனோடும், பின்நிற்கும் 'வெளுத்தாய்' என்பதனோடும் தொடர்ந்தது. மெய்தேயாநின்றுய், மெய்வெளுத்தாய், உள்ளங்கறுத்தாய் - சினைவினை முதலொடுசார்த்திச் சொல்லப்பட்டது. மெய்தேய்தல் முதலியன - காமநோயுற்றுர்படும் அவத்தைகள். உள்ளங்கறுத்தாய் என்பதிற் சிலேடை காண்க. 'ஒருநீ' என்றது, கதியாய்நின்று காப்பாற்ற நீயென்றவாறு. 'நீயும்' என்ற உம்மையால், என்னைப்போல என்பது பெறப்பட்டது. நேரிற்கண்டவளான சூர்ப்பணகை சொல்லத் தான் கேட்டமை பற்றி, 'நீயுங் கண்டார்சொல்லக் கேட்டாயோ' என்றுன். நகூத்திரங்கள் யாவும் சந்திரனுக்கு மனைவிய ரென்பது புராணநூற்கொள்கை யாதலால், அவனுக்கு, உடுபதியென்று பெயராயிற்று. **பி-ம்:**—[1]பறிக்க, பரியா. [2]இல்லேயால். [3]ஆரே. (சுஎக)

சுகருு. ஆற்றுர் ராகிற் றம்மைக்கொண் டடங்கா ரோவென் ரூருயிர்க்குக், கூற்றுய் நின்ற குலச்சனகி குவளே மலர்ந்த தாமரைக்குத், தோற்றுர் யதனு னகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத் தொடங்கினுய், மாற்றூர் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றூமோ.

(இ - ள்.) என் ஆர் உயிர்க்கு கூற்று ஆய் நின்ற-எனது அருமையான உயிருக்கு யமனுய்நின்ற, குலம் சனகி-சிறந்த சீதையினது, குவளே மலர்ந்த தாமரைக்கு - இரண்டுகருங்குவளேமலர்கள் மலரப்பெற்ற ஒரு தாமரைபோன்றமுகத்துக்கு, தோற்றுய் - (நீ) தோல்வியடைந்தாய்; அதனுன்-ஆதலால், அகம் கரிந்தாய் - உள்ளங்கருகினுய்; மெலிந்தாய் - உடல்மெலிவடைந்தாய்; வெதும்ப தொடங்கினுய் - வெப்பமடையத் தொடங்கிவிட்டாய்; மாற்றூர் செல்வம் கண்டு - பகைவருடையசெல்வத்தைப்பார்த்து, அழிந்தால் - (இவ்வாறு) அழிவுற்றால், வெற்றி ஆக வற்று ஆமோ - சயம் உண்டாகவல்லதாகுமோ? ஆற்றூர் ஆகின் - (தாம் பகைவெல்ல) வல்லமையில்லாராயின், தம்மை கொண்டு அடங்காரோ - (அறிவுடையார்) தமதுஅறிவைக்கொண்டு தம்மிலே தாம் அடங்கிவிடாரோ? (எ - று.)

சந்திரனிடத்துள்ள தேய்தல்முதலிய பண்புகளே அவன்தான் சீதை விஷயமாகக் கொண்ட காதலால் நேர்ந்தன வென்று (கீழ்க்கவியிற்) கற்பித்துக்கூறியவன், இங்கு அதனே விட்டு, தனக்குப்பகையான ஒருதாமரைக்குத் தோற்றதனுல் நேர்ந்தவையென்று கற்பித்துக்கூறுகிறன். குவளேயைத் தன்னிடத்துக்கொண்ட தாமரைக்குத் திங்கள்தோற்றவாறு எங்ஙனனின்?—

குவளையையலர்த்தித் தாமரையைக் குவித்தல் திங்களின்இயல்பு: இந்தச் சானகியின்முகத்தாமரை குவளையைத் தன்னிடையிற் கொண்டதனால் தாமரையைக் குவித்தால் தான் அலர்த்தவேண்டிய குவளையும் குவியும்; குவளையையலர்த்தவேண்டின் தான் குவிக்கவேண்டிய தாமரையும் அலரும்: இங்ஙன் தான்செய்யவேண்டிய செயலே இந்தச் சானகியின் குவளையலர்த்த தாமரையிடத்துச்செய்ய வியலாமையாலாகு மென்பர்ஒருசாரார்.உண்ணிலுஞ் சிறந்தசீதையின் முகத்தாமரையை வெல்லும்ஆற்றல் இல்லாமையால் அதற் குத்தோற்ற நீ உனது அறிவையே கொண்டு உன்னை நீயே சாந்தப்படுத்திக் கொண்டு அமைந்திருத்தல் அழகேயன்றி அழுக்காறுகொண்டு அகங்கரிந்து புறம்மெலிந்து தபித்தலாற் பயனென்னே! இங்ஙனம் அழுக்காறு மிக்க மாத் திரத்தால் அதனைவெல்லும்வல்லமை உனக்கு வந்துவிடுமோ?என்று பழித்த வாறு. முகத்தினிடையேயுள்ள கண்கள் தாமரையிடையிலுள்ள குவளை போலுமென்று கூறப்படுவதனை ''தாமரைப்போதிற்பூத்த தண்ணறுங்குவ ளைப்பூப்போற், காமருமுகத்திற்பூத்த கருமழைத்தடங்கண்'', ''இனமலர்க் குவளைப்பொற்பூ, விழைதரு கமலவட்டத்திடைவிராய்ப் பூத்தேபோல்'' என்ற இடங்களிலுங் காண்க. 'என்னுருயிர்க்குக்கூற்றுய்ன்ற குலச்சனகி' என்றது, தனக்கு மரணகாரணமானவள் சீதையே யென்று, பின்நிகழும் நிகழ்ச்சிக்கு அறிகுறியாக முன்னர் அவன்வாயில்வந்த அமங்கலமொழியாகு மாற்றை ஊன்றியுணர்க. சனகி - ஜாநகி யென்றதன் விகாரம். குவளை யென்றது, உவமவாகுபெயராய், கண்களை யுணர்த்தும். இக்கவியில் 'அகங் கரிந்தாய்' என்பது சிலேடை. மாற்றூர்-மனம்மாறுபடுதலையுடையவர். வற்று-வல்லது; பண்படிக்குறிப்புமுற்று. (சுஎச)

கஉசுஉ.—இராவணன் சூரியனையும் பகலையும் வரவழைத்தல்.

என்னப் பன்னி யிட[1]ருறுவா னிரவோ டிவணைக் கொண்டகற்றி · முன்னைப் பகலும் பகலோனும் வருக வென்றான் மொழியாமு ன்னன்ற் கரிய வுடுபதியு மிரவு [2]மொழிந்த வொருகொடியிற் பன்னற் கரிய பகலவனும் பகலும் வந்து [3]பரந்தவால்.

(இ - ள்.) என்ன பன்னி - என்று பலவாறுசொல்லி, இடர் உறுவான்-துன்பம் அனுபவிப்பவனை இராவணன், (எவ்வாளரை நோக்கி), 'இர வோடு இவனை கொண்டு அகற்றி - இராப்பொழுதையும் இச்சந்திரனையும் கொண்டு நீக்கிவிட்டு, முன்னை பகலும் பகலோனும் வருக - அதற்குமுன்பிரு ந்த பகற்பொழுதும் அதற்குரியவனை சூரியனுமே (உங்களால் அழைக்கப் பட்டு) வந்திடுக,' என்றான் - என்றுகூறினான்; மொழியாமுன் - (அவ்வாறு) சொல்லு முன்னமே, உன்னற்கு அரிய உடுபதியும் இரவும் ஒழிந்த - நினைத் தற்கும் வேண்டாத [மிகவெறுக்கப்பட்ட] சந்திரனும் இராத்திரியும் நீங்கின; ஒருகொடியில் - உடனே ஒருகொடிப்பொழுதிலே, பன்னற்கு அரிய பகலவ னும் பகலும் வந்து பரந்த-புகழ்ந்துபேசுதற்கு அரிய [மிக்கசிறப்பையுடைய] சூரியனும் பகற்பொழுதும் வந்து பரவின; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

அகற்றி யென்னும் எச்சத்தை அகற்றவெனத் திரித்தலாவது, வருக வென்ற தன்வினையை வருவிக்கவெனப் பிறவினைப்பொருள் படுத்துதலாவது செய்யின், 'இரவோடு இவனைக் கொண்டகற்றி முன்னைப் பகலும் பகலோனும் வருக'என்ற முடிபு இலக்கணநடைக்கு ஒத்ததாம். பி-ம்:—[1]உழவா. [2]ஒளித்தது. [3]பரந்ததால். (சுவடி)

ககஎ.—இதுமுதற் பதினாறு கவிகள் - அவ்வுதயகால வருணனை.

இருக்கின் மொழியா ரெரிமுகத்தி னீந்த நெய்யி னெவிர்செம்பொ
னுருக்கி யனைய கதிர்பாய வனல்போல் [3]விரிந்த துயர்கமல
மருக்க னெய்த [4]வமைந்தடங்கி [5]வாழா வடாத பொருளெய்திச்
செருக்கி யிடையே திருவிழுந்த சிறியோர் போன்ற சேதாம்பல்.

(இ - ள்.) இருக்கின் மொழியார்-வேதமந்திரங்களையுணர்ந்த அந்தணர்கள், எரி முகத்தின் - அக்கினிமுகத்திலே, ஈந்த-சொரிந்த, நெய்யின்-நெய்யினால், அனல் போல் - அந்நெருப்பு (வளர்தல்) போல, அவிர் செம் பொன் உருக்கி அனைய கதிர் பாய-விளங்குகிற செம்பொன்னை உருக்கினாற் போன்ற சிவந்த சூரியகிரணங்கள் மேற்படுதலால், உயர் கமலம் விரிந்தது - சிறந்த செந்தாமரை மலர்ந்தது; சேதாம்பல் - செவ்வாம்பல் மலர்கள்,—அருக்கன் எய்த - சூரியன் வருதலால், அமைந்து அடங்கி - அடங்கியொடுங்கி, வாழா - வாழ்வுபெறாமல்,—அடாத பொருள் எய்தி செருக்கி இடையே திரு இழந்த சிறியோர் போன்ற - (தாம் அடைதற்குத்) தகாத [உயர்ந்த] பொருளை யடைந்து (அதனால்) செருக்குற்று மத்தியிலே அப்பொருளை யிழந்துவிட்ட அற்பர்களை யொத்தன; (எ - று.)

இராப்பொழுதுடன் சந்திரன்வரப் பெற்றதனால் மிக்கவிளக்க மடைந்த ஆம்பல்கள் இராவணன்கட்டளையால் அப்பொழுதுடன் சந்திரன் விரைவில் நீங்கியதனால் அவ்வொளியை இடையிலே யிழந்ததற்கு, சிறிதுசெய்துவிட்ட நல்லூழ்ப்பயனால் தமதுதகுதிக்கு மேம்பட்ட செல்வத்தை யடைந்து அதனால் மிக்கசெருக்குற்ற அற்பர்கள் அந்நல்லூழ் விரைவி லொழியவே அச் செல்வத்தையிழந்து ஒடுங்குதலை உவமை கூறினர். 'இருக்கின் மொழியார்' என்றது, யாகஞ்செய்விப்போரான ருத்விக்குகளை. அவர்கள் வேதமந்திரங்களைச்சொல்லி நெருப்பில் நெய சொரிதல் - சூரியகிரணம் பாய்தற்கும், அந்நெய்யால் யாககுண்டத்து ஓமாக்கினி வளர்ந்துவிளங்குதல் - நீர்நிலையில் தாமரை மலர்ந்து விளங்குதற்கும் உவமை. இருக்கு என்ற இது - நான்கு வேதங்களுள் ஒன்றற்குச் சிறப்புப்பெயராக வழங்குவ தன்றி, பொதுப்பட வேதமந்திரங்களைக் குறிப்பதாயும் நிற்கும். இனி, 'இருக்கின்மொழியார்' என்பதற்கு-வேதவாக்கியம்போலப் பயன்விளைத்தலில் தவறுத நிறைமொழியையுடைய அந்தண ரென்று பொருள்கூறினும் அமையும். தேவர்களெல்லாம், தந்தமக்குக் கொடுக்கும் அவிசு ஆகிய உணவை அக்கினியே முகமாகப் பெறுகின்றன ரென்ற வேதக்கருத்தைக்கொண்டு 'எரிமுகத்தின்' என்றார். பொருளெய்தியதனாற் செருக்கியமைபற்றி, 'சிறியோர்' எனப்பட்டனர்.

சேதாம்பல் - பண்புத்தொகை; பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன் நின்றமெய் திரிந்தது. 'அமைந்தடங்கிவாழா' என்பதற்கு - குணவமைதி கொண்டு அடக்கமுடையராய் வாழாமல் என்று பொருளுரைத்து, அதனை 'செருக்கி' என்பதனோடு கூட்டுதலு மொன்று. **பி-ம்:**—[1]மொழியால், மொழி யான். [2]எரி. [3]விரிந்த. [4]அவிந்து. [5]வாளாது. (சுஎசு)

ககஉ. நாணி நின்ற வொளிமழுங்கி நடுங்கா நின்ற வுடம்பினனுய்ச், சேணி னின்று புறஞ்சாய்ந்து கங்குற் ரூரம் பின்செல்லப், பூணின் வெய்யோ னொருதிசையே [5]புகுதப் போவான் புகழ்வேந்த, ராணை செல்ல நிலை[2]யழிந்த [3]வரசர் போன்ரு னல்லாண்டான்.

(இ - ள்.) பூணின் வெய்யோன் - (உலகத்துக்கு) ஓர் ஆபரணம்போல அலங்காரமாய் விளங்குகிற சூரியன், ஒரு திசையே புகுத-ஒருதிக்கிலே[கிழக் கிலே] வந்துசேர்ந்ததனுல், நாணி-(அவன்முன்னே நிற்க)வெள்கி,நின்ற ஒளி மழுங்கி-(தன்னிடத்து) உள்ள ஒளி மழுங்கப்பெற்று, நடுங்காநின்ற உடம்பி னன் ஆய்-தடுமாற்றமடைந்த உடம்பையுடையவனுய், சேணினின்று புறம் சாய்ந்து-நடுவானத்தினின்று ஒருபக்கமாகச் சாய்தலுற்று,கங்குல் தாரம் பின் செல்ல-இரவாகிய (தன்)மனைவி (தன்)பின்னேவர, போவான்-அப்பாற்செல் பவனுனை, அல் ஆண்டான்-இரவுக்குத் தலைவனுனை சந்திரன்,—புகழ் வேந்தர் ஆணை செல்ல நிலை அழிந்த அரசர் போன்ரூன் - கீர்த்தியையுடைய சிறந்த அரசரது கட்டளை தடையின்றிவர அதனுல் (தமது) நிலைமை கெட்டு ஓடிய அரசரை யொத்தான்; (எ - று.)

நாணமடைதலும், ஒளிமழுங்குதலும், உடம்புநடுங்குதலும், ஒருபுறத்தே சாய்தலும், தன்மனைவி தன்பின்னேவர நாட்டைவிட்டொழிதலும் ஆகிய பொதுத்தன்மை சந்திரனுக்கும் தோல்வியடைந்துசெல்லும் அரசர்க்கும் பொருந்துமாறு காண்க. சூரியனைப் புகழ்வேந்தராகவும், அவனதுகிரணத்தை அவரது ஆட்சியாகவும், சந்திரனை நிலையழிந்த அரசராகவும், அவன் வானத் தைவிட்டு அகலுதலை நாட்டைவிட்டு விலகுதலாகவும் கொள்க. ஆணை - ஆஜ்ஞை; இங்கே, வெற்றி யென்றவாறு. சந்திரன் இரவுக்குத் தலைவனுதலின், அவனுக்கு 'அல்லாண்டான்' என ஒருபெயர் கூறினர்; வடநூலார் அவனை 'நிஶாபதி' என்ற பெயராற் குறித்தலுங் காண்க: இரவை மனைவியா கக் கூறினதற்கும் இதுவே காரணம். இராவணன் கட்டளைப்படி இரவோடு சந்திரனும் ஒழிந்தமையை 'கங்குல்தாரம் பின்செல்லப் போவான்' என்ற தனுல் விளக்கினர். 'அல்லாண்டான்' என்றதனுல், இரவில் வானத்தை அர சாண்டவன் பகலில் அவ்வாட்சியை யிழந்தா னென்றவாறு. தாரம்-தாரா: என்ற வடசொல் ஈறுதிரிந்தது. **உவமையணி. பி-ம்:**—[1]போதப். [2]இழந்த. [3]அமைச்சன். (சுஎஎ)

வே று.

ககக. மணந்தபே ரன்பரை மலரின் சேக்கையுட்
[1]புணர்ந்தவ ரிடையொரு வெகுளி பொங்கலாற்

கணங்குழை மகளிர்கள் கங்கு னீங்கிட
வுணர்ந்திலர் கனவினு மூட நீர்ந்திலர்.

(இ - ள்.) மலர் இன் சேக்கையுள் - பூக்களைக் கொண்டு பரப்பப்பட்ட இனிய படுக்கையினிடத்திலே, மணந்த பேர் அன்பரை புணர்ந்துவர் - (தம்மைக்) கலியாணஞ்செய்துகொண்ட மிக்க அன்பையுடைய கணவரைத் தழுவிக் கூடியவர்களாகிய, கணம் குழை மகளிர்கள் - பலவாய்த்திரண்ட குழையென்னுங் காதணியையுடைய (அவ்விலங்கைநகரத்து இராக்கத) மகளிர்கள், இடை ஒரு வெகுளி பொங்கலால் - தங்கள் கூடலினிடையே (தங்கணவர் மீது தமக்கு) ஒருகோபம் மிக்கதனால், (ஊடல்கொண்டவர்களாய்),—கங்குல் நீங்கிட - இராப்பொழுது (இடையிலே) நீங்கியிட, உணர்ந்திலர் - (அதனை) அறியாதவர்களாகி, கனவினும் ஊடல் தீர்ந்திலர்-(தாம் கொண்ட ஊடலைக்) கனவிலும் நீங்கினரில்லை [சிறிதும் ஊடல்தணிந்திலர் என்றபடி]; (எ - று.)

இராப்பொழுது நடந்துவருகையில் நாழிகைமுடியச் செல்வதற்குமுன்னே இடையிலே இராவணனேவலால் திடீரென்று சூரியோதயமாயிற்றன்றே? அங்ஙனம் எதிர்பாராது வெகுவிரைவில் நேர்ந்த பகல்தொடக்கத்திலே அந்நகரத்துநிகழ்ந்த நிகழ்ச்சிகள், இதுமுதற் பதினொருகவிகளிற் பலவாறு காட்டப்படுகின்றன.

சிலராகூச ஸ்திரீகள் புஷ்பசயனத்திலே தமது பிராணநாயகரோடு கூடியிருந்தபொழுது அக்கூடலின்பஞ் சிறத்தற்பொருட்டு அக்கொழுநரிடத்து ஏதோவொருகுற்றத்தையேற்றி அதுகாரணமாக அவரோடு பிணங்கிநின்றார்கள்; அக்கணவர் வணங்கி இன்சொற்சொல்லி அப்புலவியைத் தீர்க்க முயலுதற்கும் அதனால் மகளிர் அந்தப் பிரணயகலகத்தை ஒழித்தற்கும் வேண்டிய பொழுது இல்லாதபடி திடீரென்று பொழுது விடிந்துவிட்டது; அங்ஙனம் விடிந்தபின்பும், அம்மகளிர்கள் தமதுகாமமோகத்தால் பொழுதுவிடிந்ததை யுணராமற் கலவியின்பம் மிகுதற்கு வேண்டுமளவு புலவியைக்கொண்டே நின்றார்க ளென்பதாம். அவர்கள் மிகச்சிறிதும் ஊடலொழிந்தில ரென்பதை நன்கு காட்டும்பொருட்டு, 'கனவினும் ஊடல் தீர்ந்திலர்' என்றார். இங்ஙனம் விரைவில் இரவு நீங்குவதை உணர்ந்திருப்பாராயின் உடனே ஊடல்தீர்ந்து கூடியிருப்ப ரென்க. இக்கவியில் 'உணர்ந்திலர்' என்பதுபோலவே மேல் கஉஉ-ஆங்கவியில் "உணர்ந்தில" என்பதும் பொருள்படுமாறு உணர்க.
பி-ம்:—[1]புணர்ந்திலர்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - இப்படலத்தின் ஆறுங்கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (கூஎஅ)

கஉ0. *தள்ளுறு முயிரினர் தலைவர் நீங்கலா*
னள்ளிர விடையுறு நடுக்க [1]நீங்கலர்
[2]கொள்ளையி னலர்தரு குவளை நாண்மலர்
கள் [3]ளுகு வனவெனக் கலுழுங் கண்ணினர்.

(இ - ள்.) (அந்நகரத்து மகளிர் சிலர்),—நள் இரவிடை-நடு இராத்திரியிலே, தலைவர் நீங்கலால்-தம்கணவர் (தம்மைவிட்டு) நீங்கியதனால், தள்ளுறும் உயிரினர் - (உடம்பைவிட்டு) நீங்கவிருக்கும் உயிரையுடையவர்களாய், உறு நடுக்கம் நீங்கலர்-(பிரிவாற்றுமையால்) நேர்ந்த மிக்கநடுக்கம் நீங்காதவர்களாய், கொள்ளையின் அலர்தரு குவளை நாள் மலர் கள் உகுவன என கலுழும் கண்ணினுர்-செழிப்பாக மலர்ந்த புதிய நீலோற்பலமலர் தேனைச் சிந்துவன போல அழுகைநீர்சிந்துகிற கண்களை யுடையவராளுர்கள்; (எ - று.)

மகளிர் கொழுநரோடு கூடியிருந்த கூடல்தொடக்கத்திலே எதிர்பாராது திடீரென்று பொழுது புலர்ந்திட்டது; அதனையறிந்து ஆடவர்கள் தாம் உதய காலத்தில் இராசசமுகத்துக்குச் செல்லவேண்டிய கடமையில் தவருமைப் பொருட்டுப் படுக்கைவிட்டு எழுந்து சென்றனர்; அங்ஙனம் வெகுவிரைவில் பிராணநாயகர் பிரிந்ததனுலான துன்பத்தை ஆற்றமாட்டாதவராய் அம்மகளிர்கள் மரணவத்தையை யடைந்து உள்ளமும் உடம்பும் நடுங்கப் பொழுது விடிந்த பின்பும் கண்ணீர்சிந்தி அழுதபடியே யிருந்தார்களென்பதாம். அவர்களின் கண்களுக்குக் குவளையும், கண்ணீருக்குத் தேனும் உவமை. கொள்ளையின் - மிகுதியாக எனினுமாம். **பி-ம்:**—[1]நீங்கினுர். [2]கொள்ளையிலாக்கருங், கொள்ளையினலர்க்கருங். [3]உகுவனமெனக். சில பிரதிகளில் "அணைமலர்" என்ற அடுத்த செய்யுளின்பின் இச்செய்யு ளுள்ளது. (சுவகூ)

கஉக. அணைமலர்ச் சேக்கையு [1]ளாட நீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோ
லிணைமலர்க் கைகளி னிறுக வின்னுயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர் - சிலமகளிர்கள்,—அணை மலர் சேக்கையுள்-பஞ்சுமெத்தையையும் மலர்ப்பள்ளியையுமுடைய சயனத்திலே, ஆடல்தீர்ந்தனர் - காமலீலைகளைச் செய்துமுடித்தவர்களாய்,-பணைகளை தழுவிய பவளவல்லி போல்-பருத்தமரக்கிளைகளைத் தழுவிப்படர்ந்த பவழக்கொடிபோல,இன் உயிர் துணைவரைஇணை மலர் கைகளின் இறுக தழுவினர்-(தமது)இனியபிராணநாயகரை மலர்போல்மெல்லிய (தமது) இரண்டுகைகளாலும் அழுந்தக் கட்டியணைத்துக் கொண்டு, துயில்கின்றூர் - (பொழுதுவிடிந்த பின்பும் உணராமல்) தூங்கிக் கொண்டிருந்தார்கள்; (எ - று.)

வைகறையிலே துயிலெழு மியல்புள்ள மகளிர்கள் இரவில் சிற்றின்பவிளையாடல்கள் முடிந்து துயில்கொண்டவளவிலே பொழுது புலர்ந்ததனுல் அதனையுணராமல் பின்னும் கணவரை ஆலிங்கனஞ்செய்தபடியே தூங்கிக் கொண்டிருந்தன ரென்பதாம். அரக்கர்புயங்களுக்கு மரக்கிளைகளும், அம்மகளிர்கைகளுக்குப் பவழக்கொடியும் உவமை; அன்றி, அரக்கர்க்கு மரக்கிளையும், அம்மகளிர்க்குப் பவழக்கொடியும் உவமை யெனினுமாம். உயிர்த்துணைவர்-உயிர்போன்ற துணைவ ரென உவமத்தொகை. **பி-ம்:**—[1]கூடல். (சுஅ0)

கஉஉ. அளியினங் [1]கடந்தொறு மார்ப்ப வாய்கதி
ரொளிபட [2]வுணர்ந்தில வுறங்கு கின்றன
தெளிவில வின்றுயில் [3]விளையுஞ் சேக்கையுட்
[4]களிகளே நிகர்த்தன களி[5]நல் யானையே.

(இ - ள்.) அளி இனம் - வண்டின்கூட்டங்கள், கடம் தொறும்-(தமது) கன்னங்களிலெல்லாம், ஆர்ப்ப-மொய்த்து ஆரவாரஞ்செய்யவும், ஆய் கதிர் ஒளி பட-சிறந்த சூரியனது காந்தி [வெயில்] (தம்மேற்) படவும், உணர்ந்தில உறங்குகின்றன - (பொழுதுவிடிந்ததை) அறியாதவையாய்த் தூங்குகின்றனவாண, களி நல் யானை-சிறந்த மதயானைகள்,—இன் துயில் விளையும் சேக்கையுள் தெளிவு இல களிகளே நிகர்த்தன - இனிமையான தூக்கம் நிகழ்தற்குரிய [மெத்தென்ற] படுக்கையிலே தெளிவில்லாமல் உறங்கிக்கிடக்கிற கட்குடித்த சனங்களே யொத்தன; (எ - று.)

மிகுதியாகக் கள்ளைக்குடித்த சனங்கள் அதனாலான மிக்கமயக்கத்தால் எத்துணையாரவாரத்தையும் உணராமல் பொழுதுவேறுபாட்டையும் அறியாமல் உறங்கிக்கிடத்தல்போல, மிக்கமதங்கொண்ட யானைகள் வண்டுகளினுரவாரத்தாலும் வெயில்தீதுஎறித்தலாலும் கண்விழியாமல் தூங்கிக்கொண்டிருந்தன என்பதாம்; இதற்குக்காரணம், சடக்கெனப் பொழுதுவிடிந்தமை. மதசலம் பாய்தற்குரிய இடமாதலால், கன்னத்தில் மொய்த்தன அந்நீர்பருகவந்த வண்டுக ளென்க. இழிவுபற்றி, 'தெளிவிலகளிகள்' என அஃறிணையாற் கூறினர். கதிர்-சூரியனுக்குச் சினையாகுபெயர். ஆய்கதிர்என்பதை அடையடுத்தவாகுபெய ரென்னலாம். வினைத்தொகையன்மொழியெனினும் இழுக்காது. களிகள் துயிலெழாமைக்கு, அக்கட்குடியின்மேல் வேறுகாரணமுங் காட்டுவாராய், 'இன்துயில்விளையுஞ் சேக்கையுள்' என்றார்; இனி, இதனை, யானைகளுக்குக் கூட்டினும் பொருந்தும். வண்டுகள் வாய்ப்பக்கங்களில் மொய்த்தல், குடியர்க்குங் கொள்ளலாம். பி-ம்:—[1]தடந். [2]உணர்கில. [3]விளைக்குஞ். [4]களியரை. [5]நலன்னமே. (சுஅக)

கஉங. விரிந்துறை [1]துறைதொறும் விளக்கம் யாவையு
[2]மெரிந்திழு தஃகல வொளியி ழுந்தன
வருந்துறை நிரம்பிய வுயிரி னன்பரைப்
பிரிந்துறை தருங்குலப் பேதை மாரினே.

(இ - ள்.) அரு துறை நிரம்பிய-அரிய கலவித்துறையில் தேர்ந்த, உயிரின் அன்பரை-(தமது) உயிர்போன்ற கொழுநரை, பிரிந்து—, உறைதரும்-வசிக்கிற, குலம் பேதைமாரின் - குலமாதர்போல,—விரிந்து உறை துறை தொறும் - விசாலமாயிருக்கிற (அந்நகரத்துமாளிகைகளின்) இடந்தோறுமுள்ள, விளக்கம் யாவையும் - விளக்குக்களெல்லாம், எரிந்து இழுது அஃகல - எரிந்து நெய்குறையாதனவாய், ஒளி இழந்தன-(தமது)காந்தியை இழந்துநின்றன; (எ - று.)

இராப்பொழுதுமுழுவதும் இடைவிடாது நன்றாய் எரிதற்குவேண்டிய அளவு நெய் நிரம்பச்சொரியப்பட்டுள்ள அந்நகரத்துத்தீபங்கள் யாவும் இடைப்பொழுதிலேயே சூரியன் உதித்ததனால் நெய்குறையாமலிருக்கையிலேயே ஒளியிழந்தன: அவற்றிற்கு, தமதுபிராணநாயகரைப் பிரிந்து வசிக்கிற குலமகளிர் மாங்கலியத்துடனே வேட்கைநிறைவேறாமல் ஒளியிழத்தலே உவமைகூறினர். எரிதற்குவேண்டிய உபகரணமான நெய் குறையாதிருக்கையிலும் விளக்குகள் பகல்வந்ததனால் ஒளிபையிழத்தலாகிய இயல்பு, இதில் விளக்கப்பட்டது. மூன்றுமடியில் 'அருந்துறை' என்றது, அகப்பொருள் துறைகளை. பி-ம்:—[1]உறை. [2]எரிந்துறநிழற்றலினொளியிழந்தவால். (சுஅஉ)

கஉச. புனைந்தித ழுரிஞ்சுறு பொழுது [1]புல்லியும்
வனைந்தில வைகறை மலரு மாமலர்
நனந்தலை யமளியிற் றுயிலு நங்கைமா
ரனந்தரி னெடுங்கணே டொத்த வாமரோ.

(இ - ள்.) வைகறை மலரும் மா மலர் - விடியற்காலத்திலே மலரும் இயல்பினவான சிறந்த (தாமரைமுதலிய) பூக்கள்,—புனைந்து இதழ் உரிஞ்சுறு பொழுது புல்லியும்-அழகியனவாய் இதழ்கள்விரிதற்குக் காரணமான சூரியோதயகாலம் நேர்ந்தும்,வனைந்தில-(மலர்ந்து) அழகுசெய்யாதனவாய்,—நனம் தலை அமளியில் துயிலும் நங்கைமார் - அகன்றஇடத்தையுடைய படுக்கையிலே தூங்குகிற மகளிரது, அனந்தரின் நெடுங் கணேடு - நித்திரையையுடைய நீண்ட கண்களுடன், ஒத்த - ஒத்திருந்தன; (எ - று.)—ஆம்-அசை; அரோ - ஈற்றசை.

இயல்பில் விடியற்காலத்திலே மலர்தற்குரிய தாமரைமுதலிய மலர்கள் நள்ளிரவிலே செயற்கையாற் பொழுதுபுலர்ந்தமைபற்றி மலர்ந்தனவில்லை; அவற்றுக்கு, அப்பொழுது சூரியோதயமானபின்பும் துயிலுணராத அந்நகரத்துமகளிரது மூடிய கண்களை உவமைகூறினர். பி-ம்:—[1]புக்ககம். (சுஅஊ)

கஉஞ. இச்சையிற் றுயில்வதற் கியாவர் கண்களு
நிச்சயம் பகலுந்த மிமைக [1]ணீக்கல
பிச்சையு மிடுதுமென் றுணர்வு பேணலா
வச்சையர் நெடுமனை [2]வாயி லானவே.

(இ ள்.) இச்சையில் துயில்வதற்கு - (தம்தமது) விருப்பத்தின்படி தூங்குதலால், யாவர் கண்களும்-(அந்நகரத்தில்) அனைவோருடையவிழிகளும், நிச்சயம் பகலும் தம் இமைகள் நீக்கல-உண்மையாகப் பகற்பொழுதான பின்பும் தமதுஇமைகளை விழியாதுநின்றன; (அவை), பிச்சையும் இடுதும் என்று உணர்வு பேணலா-(இரப்பவர்க்குப்) பிச்சையிடுவோமென்று எண்ணங்கொள்ளாத, வச்சையர் - உலோபிகளுடைய, நெடு மனை வாயில் ஆன - பெரிய மாளிகைகளின் தலைவாயில் போன்றன; (எ - று.)

யாசகர்க்குப்பிச்சையிடவிருப்பமில்லாத உலோபிகள் பகலிலும்தம்வீட்டு வாயிற்கதவடைத்திருத்தல், இயல்பு; அங்ஙனங் கதவுதிறவாத வாயில்கள்

போல அப்பொழுது அந்நகரத்தவரனைவரது கண்களும் பகற்பொழுதான பின்பும் இமைதிறவாதிருந்தன என்பதாம். பிச்சையும், உம்மை - இழிவு சிறப்பு: மிக்க பொருள் செலவுசெய்து பெரிய தானங்கள் செய்வோ மென்று கருதாமையையே யன்றிச் சிறிதுசிறிது பொருட்செலவுசெய்து பிச்சையிடு தற்குக் கருதாமையையுமுடைய மகாலோபிக ளென்க. துயில்வதற்கு - நான்கனுருபு மூன்றனுருபின்பொருளில் வந்ததனால், உருபுமயக்கம். இச்சா, நிஶ்சயம், பிக்ஷா என்ற வடசொற்கள் திரிந்தன. பகலும், உம்மை-இழிவு சிறப்பு: நெடுமனையென்றதனால், மிக்க செல்வமுடையவராயிருந்தே உலோ பஞ்செய்பவ ரென்பது விளங்கும். வாயில் - இல்வாய்: இலக்கணப்போலி. ஆன - உவமவுருபு. [1]நீக்கலர் என்று பாடமோதி, அந்நகரத்தவரனைவரும் மனம்போனபடி தூங்குமாறு பொழுது விடிந்தபின்புங் கண்விழித்திலர்; உதயகாலத்திற் பிச்சையிடுவோமென்ற எண்ணமுங் கொண்டிலர்; அவர்க ளுடைய வீட்டுவாயில்கள் லோபிகளுடைய வீட்டுவாயில்கள் போலத் திறக் கப்படாமலே அடைபட்டிருந்தன என்று பொருள் கொள்வாரு முளர். **பி-மீ:**—[2]வாயின்மானவே. (சுஅச)

கஉசூ. [1]நஞ்சுறு பிரிவினை நாளி னீளமோர்
நஞ்சுற விடுவதோர் தயாவு தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையி னுரென
நெஞ்சுறக் களித்தன நேமிப் புள்ளெலாம்.

(இ - ள்.) நாளின் நீளம்-பகற்பொழுதின் நீட்சி, ஓர் நஞ்சு உற-ஓர் ஆதாரமாக(நின்று), நஞ்சுஉறு பிரிவினை விடுவது - விஷத்தையொத்த (தமது) பிரிவை நீக்குவதாகிய, ஓர் தயாவு-ஒருதயையை, தாங்கலால்-(தாம்) பெற்ற தனால்,-நேமி புள் எலாம்-சக்கரவாகபக்ஷிகள்யாவும்,வெஞ் சிறை நீங்கிய வினை யினர் என - கொடியசிறைச்சாலையினின்று விடுபட்ட குற்றவாளிகள்போல, நெஞ்சு உற களித்தன-மனம் மிகவுங்களிக்கப்பெற்றன; (எ - று.)

ஆணும்பெண்ணுமாகிய சக்கரவாகப்பறவைகள் இரவில் ஒன்றையொ ன்று பிரிந்து வருந்துதலும், பகலில் ஒன்றோடொன்று கூடிக்குலாவி மகிழ் தலும் இயல்பு; இத்தகைய அப்பறவைகள், இரவு சிறிது பொழுதிலே கழி ந்து அதற்கு முன்னும் பின்னுமாகப் பகல் பெரிதும்வளர்ந்தமையைக் கண்டு மிகவும்மகிழ்ந்தன என்க. குற்றஞ்செய்து சிறைப்பட்டு வருந்துகிறவர்கள் அச்சிறையிலிருத்தற்கு வரையறையாக நியமிக்கப்பட்ட காலத்தின் இடை யிலே தற்செயலாக நேர்ந்த ஏதேனுமொரு காரணத்தாற் சிறைவிடுபட்டால் மகிழ்வுறுதல்போல, நாள்தோறுமுள்ள வழக்கப்படி இராப்பொழுதின் நாழி முப்பதும் ஒன்றையொன்று பிரிந்து வருந்தும் நிலைமையை யடைந்த சக் கரவாகப்பறவைகள் அவ்விரவின் இடையிலே எதிர்பாராமல்நேர்ந்த பகல்வர வால் பிரிவுத்துயரொழிந்து களிப்புற்றன என்றவாறு. 'நஞ்சுறுபிரிவு' என, பிரிவுத்துன்பத்தின் கொடுமையை விளக்கியபடி: இத்தொடர்க்கு-நைந்துறு கின்றபிரிவு என்று உரைப்பினுமாம். விடுவது-விடுவிப்பது: தன்வினை பிற

வினைப்பொருளில் வந்தது. [1]நஞ்சுறு பிரிவினிலுளினீன மோர்ந், தஞ்சுற நடுவதோரயர்வுந் தாங்கலால் என்ற பாடத்துக்கு நேமிப்புள்ளெலாம்,நஞ்சுறு பிரிவினின்று அஞ்சுதலாலேற்பட்ட ஓரயர்வுதாங்குதலோடு நடுவதான நாளி ன்னீளமோர்ந்து வினையிலுரெனக் களித்தன என்க. (சுஅடு)

கஉஎ. நாண்மதிக் கல்லது நடுவ ணெய்திய
வாணெயிற் [1]றிறக்கலா வலரிற் பாய்வன
மாண்வினைப் பயன்படா மாந்தர் வாயில்சேர்
பாணரிற் றளர்ந்தன [2]பாடற் றும்பியே.

(இ - ள்.) நாள் மதிக்கு அல்லது-புதிய [உதித்த] சந்திரனுக் கல்லாமல், நடுவண் எய்திய ஆணெயின்-இடையிலே நேர்ந்த (யாவருடைய) கட்டளையிலு லும், திறக்கலா - இதழ் விரிபாத, அலரில் - பூக்களில், பாய்வன-விரைந்து பாய்வனவான, பாடல் தும்பி - இசைப்பாட்டையுடைய வண்டுகள்,—மாண் வினை பயன் படா-மாட்சிமையுடைய தொழில்களில் தேர்தலில்லாத, மாந் தர் - மனிதர்களுடைய, வாயில்-வீட்டுவாயில்களில், சேர்-(சென்று) சேர்ந்த, பாணரின் - பாணர்கள் போல, தளர்ந்தன-(உள்ளேநுழைய இடம்பெறுது) சோர்ந்தன; (எ - று.)

இரவில் சந்திரனைக்கண்டவளவிலே மலர்ந்து அவனைக்காணுதவளவிலே குவியும் இயல்பினவான ஆம்பல்முதலிய சிலமலர்கள் அந்நள்ளிரவில் சந்தி ரன் விளங்கிய [2]பாழுது மலர்ந்துள்ளன வென்று கருதி அவற்றில் தாம் மொய்த்து உட்சென்று தேன்பருகிக் களிக்கலா மென்ற அவாவோடு இன் னிசை பாடிக்கொண்டு விரைந்துவந்த வண்டுகள்,அவ்வளவிலே திடீரென்று சந்திரன் நீங்கச் சூரியனுதித்ததனுல் அம்மலர்கள் தன்கு இதழ்மூடியமைபற்றி உட்சென்று பயன்கொள்ள இடம்பெறுவாயின; அவற்றிற்கு, சங்கீதத்தின் இனிமையை யுணர்ந்து கேட்டு மகிழ்ந்து பரிசுஅளிக்குந் தன்மைய ரல்லாத மந்தபுத்தியையுடைய அரவிகஜாங்களின் வீட்டுவாயிலில் ஆவலோடு இன் னிசை பாடிக்கொண்டு சென்றுசேர்ந்து உள்ளேபுக இடம்பெறுத சங்கீதபாட கர்களை உவமைகூறினர். பாணர் - இசைபாடிப்புகழ்வோர்; பாண்-பாட்டு. 'நடுவணெய்திய வாணெயிற்றிறக்கலா' என்பதற்கு-இடையில்நேர்ந்த இராவ ணனுணையாலும் இதழ்நெகிழாத என்று உரைப்பினும் அமையும். **பீ-மீ:**— [1]நீக்கலா. [2]பாடிறும்பியே. (சுஅசு)

கஉஅ. அருமணிச் சாளர மதனி னூடுபுக்
கெரிகதிர் நின்றுயி லெழுப்பி [1]யேற்றவு
மருளொடு தெருளுறு [2]நிலையர் மங்கையர்
தெருளுற மெய்ப்பொரு [3]டெளிந்து லாரினே.

(இ - ள்.) எரி கதிர் - வெம்மையாய்விளங்குகிற சூரியகிரணங்கள், அரு மணி சாளரம் அதனினூடு புக்கு-பெறுதற்கரிய இரத்தினங்களாலாகிய பல கணிகளின்வழியாய் உள்ளேநுழைந்து,இன் துயில் எழுப்பி ஏற்றவும்-இனிய

தூக்கத்தினின்று எழச்செய்து உணர்த்தவும், மங்கையர் - மகளிர், தெருள் உற மெய் பொருள் தெளிந்திலாரின்-உண்மைப்பொருளைத் தெளிவாக அறியாதவர்கள்போல, மருளொடு தெருள் உறு நிலையர்-மயக்கமும் தெளிவும் ஒருங்கே பொருந்திய நிலைமையை யுடையவராஞர்கள்; (எ - று.)

சாளரவழியாய் வெயில் உட்சென்று உறைத்தலால் பொழுதுவிடிந்ததென்று தெரிந்தும் தூக்கந்தெளிதற்கு வேண்டிய நாழிகை கழிந்திடாமையால் அந்நகரத்து மகளிர்கள் இடையிலே சற்றுவிழித்தலும் மீண்டும்சற்றுத்துயிலுதலுமாக நன்குவிழிப்புறுது கிடந்தனர். அவர்களுக்கு, பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீதவையங்களாலன்றி உண்மையாலுணர்த்தலாகிய தத்துவஞானத்தின் தேர்ச்சியை யடையாதவர்கள் மறுபிறப்பு இருவினைப்பயன் கடவுள் முதலியவற்றின் உண்மையில் தெளிதலும் மயங்குதலுமாய் அடிக்கடி மாறுபடுதலை உவமைகூறினர். **பி-ம்:**—[1]எய்தவும். [2]நிலைமை. [3]தெரிந்திலாரினே. (சுஅஎ)

கஉசுக. ஏவலின் வன்மையை யெண்ண [1]றேற்றலர்
நாவல ரியற்றிய [2]நாளி ணமநூல்
[3]காவலி னினிதுணர் கணித மாக்களுங்
கூவுறு கோழியுந் துயில்வு கொண்டவே.

(இ - ள்.) ஏவலின் வன்மையை எண்ணல் தேற்றலர்-(இராவணனது) கட்டளையின் வலிமையை ஆலோசித்து அறியாதவர்களான, நாவலர்-பண்டிதர்கள், இயற்றிய செய்த, நாமம்-பிரசித்திபெற்ற, நாளின் நூல் - நாட்களைப்பற்றிச் சொல்லுகிற சோதிட சாஸ்திரங்களை, காவலின்-பாதுகாப்போடு [சோர்வின்றிக் கருத்தூன்றுதலோடு], இனிது உணர் - நன்றாக உணர்ந்த, கணிதம் மாக்களும்-கணக்கில் தேர்ந்தவர்களும், (துயில்வு கொண்டனர்)-தூக்கங்கொண்டிருந்தார்கள்; கூவுறு கோழியும் - (வைகறையிற்) கூவுந்தன்மையனவான கோழிகளும், துயில்வுகொண்ட-தூக்கங்கொண்டிருந்தன; (எ-று.)

கிரகங்கள் நக்ஷத்திரங்கள் இவற்றின் சஞ்சாரம் முதலியவற்றைக் கொண்டு கணக்கிட்டு நாள்களின் காலவரையறைப்பகுதிகளை முற்றியே நன்கு ஆராய்ந்து உணரவல்ல சோதிடவித்துவான்களும், இப்படி ராக்ஷசராஜனை இராவணனது கட்டளையால் இலங்கையில் இரவினிடையிலே திடீரென்று பகல்நேர்தலை முற்றியறியாமையால் தாம்இயற்றிய சோதிடநூல்களில் இதைக்குறித்து யாதும் எழுதிவைத்தாரில்லை; ஆகவே, அந்நூல்களைக் கருத்தோடு முற்றக்கற்றுத் தேர்ந்த அவ்வூர்ச் சோதிடசாஸ்திரிகள் பொழுதுவிடிந்தபின்பும் இரவென்றே உறங்கிக்கிடந்தார்கள்; இயல்பாகப் பொழுதுபுலர்கையிற் கூவுந்தன்மையனவான கோழிகளும் எதிர்பாராதுநேர்ந்த சூரியோதய காலத்தையறிந்து கூவிற்றில வென்பதாம். நாவலர்-நாவின்தொழிலான கவனம் பிரசங்கம் போதனை என்பவற்றில் வல்லவர். கணிதமாக்கள்-காலக்கணக்கர். 'துயில்வுகொண்ட' என்ற முற்று, 'கணிதமாக்கள்' என்ற எழுவாய்க்கு ஏற்ற

படி உயர்திணையாக மாற்றிக் கூட்டப்பட்டது. கூவுறு, உறு - துணைவினை. தேற்றலர்-தேறலர்; தன்வினைப்பொருளில் வந்த பிறவினை. முதலடி - நாவலர்க்கு அடைமொழி; கணிதமாக்களுக்கு அடைமொழியாக்கினும் அமையும். [1]தேற்றலா. [2]நாழிநாமநூல். [3]காவலர்நுனித்துணர். (சுஅஅ)

கசo.—இராவணன் அப்பொழது சூரியனைச் சந்திரனென்றல்.

இனையன வுலகினி னிகழு [1]மெல்லையிற்
கனைகழ லரக்கனுங் கண்ணி னேக்கினை
னினைவுறு மனத்தையு நெருப்பிற் றீக்குமா
லனையவத் திங்களே யாகுமா லென்றான்.

(இ - ள்.) இனையன - இப்படிப்பட்ட தன்மைகள், உலகினில் நிகழும் எல்லையில் - உலகத்தில் நடக்குமளவிலே, கனை கழல் அரக்கனும் - ஒலிக்கிற வீரக்கழலையுடைய இராவணனும், கண்ணின் நோக்கினன் - (அச்சூரியனைக்) கண்களாற் பார்த்து,—'(இவன்), நினைவுறு மனத்தையும் நெருப்பின் தீக்கும்-(தன்னை)நினைக்கிறமனத்தையும் நெருப்புப்போல எரிக்கிறான்; ஆல்-ஆதலால், அனைய அ திங்களே ஆகும் - முன்னே எதிரில்வந்து எரித்த அச்சந்திரனேயாவன்,' என்றான்-என்று (ஏவலாளரைநோக்கிக்) கூறினான்; (எ - று.)

மூன்றுமடியினால், தனதுகிரணத்துக்கு இலக்காகிற உடம்பை மிகச்சுடுதல் நன்கு பெறப்படும். பி-மீ:—[1]எல்வையில். (சுஅக)

கசக.—ஏவலர் சிலர் 'இவன் சூரியனே' என்று உணர்த்தல்.

திங்களோ வன்றிது [1]செல்வ செங்கதிர்
பொங்குளைப் பச்சையம் புரவித் [2]தேரதால்
வெங்கதிர் சுடுவதே யன்றி மெய்யுறக்
தங்குதண் கதிர்சுடத் தகாதென் றுரைசிலர்.

(இ - ள்.) (இராவணன் இங்ஙனம் கூறியபொழுது), சிலர்-(அருகிலிருந்த) சிலபரிசனங்கள், (அவனை நோக்கி), 'செல்வ - எல்லாச்செல்வமுமுடையவனே! இது—, திங்களோ அன்று-சந்திரனன்று; செம் கதிர் - சிவந்தகிரணங்களையுடைய சூரியனே; பொங்கு உளை-உயரவளர்ந்துவிளங்குகிற பிடரிமயிரையுடைய, பச்சை அம் புரவி-அழகிய பச்சைக்குதிரைகள் பூண்ட, தேரது - தேரையுடையது (பார்);(அன்றியும்,) வெங்கதிர்-உஷ்ணமான கிரணங்களையுடைய சூரியன், மெய் உற சுடுவதே அன்றி - உடம்பிலுறைக்கும்படி சுடுவதேயல்லாமல், தங்கு தண் கதிர்-நிலைபெற்ற குளிர்ச்சிபொருந்திய கிரணங்களுள்ள சந்திரன், சுட தகாது - சுடத்தக்கதன்று', என்றார்-என்று (இயற்கையை யெடுத்துச்) சொன்னார்கள்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

முந்திவந்த சந்திரன் சுடவில்லை, இப்பொழுது வந்த இவனே சுடுகின்றனன்: ஆதலால், இவன் சூரியனே யென்று ரென்க. பச்சை-பண்புப்பெயர். சூரியன்தேர்க்குதிரை பசுமைநிறமுடைய தென்பது நூற்கொள்கை.பி மீ:—[1]செல்வச். [2]தேர்தொலாம். (சுகo)

வே று.

கஙஉ.—இராவணன் 'சூரியனையும் கடலோலியையும் விலக்கி இளம்பிறையைக் கொணர்க' என்றல்.

நீலச் சிகரக் கிரியன்னவ னின்ற வெய்யோ
னாலத்தினும் வெய்ய னகற்றி யரற்று கின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள்ளையைக் கூவுதிர் வல்லை யென்றான்.

(இ - ள்.) நீலம் சிகரம் கிரி அன்னவன் - சிகரங்களையுடைய நீலமலை போன்ற இராவணன், (ஏவலாளரை நோக்கி), 'நின்ற வெய்யோன் - எதிர் நின்ற இச்சூரியன், ஆலத்தினும் வெய்யன்-விடத்திலும் கொடியவன்: (ஆதலால், இவனை), அகற்றி - நீக்கிவிட்டு, அரற்றுகின்ற வேலை குரலை - ஆரவாரிக்கிற கடலினுலியையும், தவிர்க என்று விலக்கி - ஒழிகவென்று தடுத்து விட்டு, மாலை மேலை பிறை பிள்ளையை வல்லை கூவுதிர் - மாலைப்பொழுதில் மேற்குத்திக்கில் தோன்றுகிற இளம்பிறைச்சந்திரனை விரைவில் அழையுங்கள்,' என்றான் - என்று கட்டளையிட்டான்; (எ - று.)

பருத்து ஓங்கிய வடிவமும் பெரிய தலைகளும் தோள்களும் கருமை நிறமும் உடைமைபற்றி, 'நீலச்சிகரக்கிரியன்னவன்' என்றார். கடலொலி காமோத்தீபகப் பொருள்களு னொன்றுதலால், அதனையும் விலக்கச் சொன்னான். மாலைப்பிறைப்பிள்ளையைக் கூவுதிர் - மாலைப்பொழுதுடனே இளம் பிறையைக் கூப்பிடுங்க ளென்றவாறு; கஙசு - ஆங்கவியில் "பகலும் பகலோனும் வருக" என்றற்போலக் கொள்க.

இதுமுதல் மூப்பது கவிகள் - மாச்சீர்களும் மாங்கனிச்சீரும், விளச்சீரும் விரவிவந்த நெடிலடி நான்குகொண்ட கலிநிலைத்துறைகள். (சுகக)

கஙக.—உடனே இளம்பிறை தோன்றுதல்.

சொன்ன னிருதர்க்கிறை யம்மொழி சொல்ல லோடு
மந்நாளி னிரம்பிய வம்மதி யாண்டொர் [1]வேலை
முந்நாளி னிளம்பிறை யாகி முளைத்த தென்ற
லெந்நாளு மருந்தவ மன்றி யியற்ற லாமோ.

(இ - ள்.) நிருதர்க்கு இறை-அரக்கர்க்கு அரசனான இராவணன், சொன்னன் - (இங்ஙனம்) கூறினன்; அ மொழி சொல்லலோடும் - அவ்வார்த்தையைக் கூறியவளவிலே,—அ நாளில் நிரம்பிய அ மதி-அன்றைத்தினத்திலே (சிறிதுபொழுதுக்குமுன் பதினுறுகலைகளும்) நிறைந்துகாணப்பட்ட அந்தப் பூர்ணசந்திரன், ஆண்டு-அப்பொழுது, ஓர் வேலை-ஒருபுறத்திலே, முந்நாளின் இளம் பிறை ஆகி முளைத்தது-மூன்றும் பிறைச்சந்திரனுமாறித் தோன்றிற்று: என்றல்—, எ நாளும் அரு தவம் அன்றி இயற்றல் ஆமோ-எக்காலத்திலும் அருமையான தவமேயன்றி வேறொன்று செய்யத்தக்கதோ? (எ - று.)

இராவணன் முன்பு பலகாலம் வருந்திச்செய்த அரியபெரியதவத்தின் பயனுகப் பெற்ற வரத்தின்பலத்தால் அவன்கட்டளைப்படி பூர்ணசந்திரன் உடனே இளம்பிறையாக மாறித்தோன்றிய தென்பது கருத்து. "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ, மீண்டு முயலப் படும்" என்ற திருக்குறள், இக்கவியின் நான்காமடிக்கு மேற்கோளாகத் தக்கது. பௌர்ணமீ திதியிற் போலப் பூர்ணமாய்விளங்கிய சந்திரன் அதற்கு ஒருபகலுக்குப் பின் துவிதீயாதிதியிற்போல மூன்றாம்பிறையாக உடனே மாறிய அற்புதக் காட்சியின் அருமையைப் பாராட்டிக்கூறியவாறு இது. 'முந்நாள்' என்றது, அமாவாசைக்கு மூன்றாநாளான துவிதீயையை; அதிலேயே மூன்றாகலை யுள்ள பிறை காணப்படுவது. 'சொன்ன னிருதர்க்கிறை' என்றது, கீழ்க்கவி யிற் கூறியதன் அநுவாதம். வேலை-எல்லை. ஓர்வேலை யென்பதற்கு-மேல் கடலின்மீது என்று உரைத்தலு மொன்று. நான்காமடி - கவிக்கூற்றாய், தவப்பெருமையை உலகத்துக்கு உணர்த்தும். **பி-ம்:**—[1]சிலம். (கூகூ)

கஉச.—இதுமுதல் முன்றுகவிகள் - இராவணன் பிறையைப் பழித்தலைக்கூறும்.

குடபாலின் மூலைத்தது கண்ட குணங்க ளியான்
வடவாவன லன்றெனின் மண்பிடர் வைத்த பாம்பின்
விடவா ளெயிறன்றெனி னென்னை [1]வெகுண்டு மாலை
யடவா ளுருவிக்கொடு தோன்றிய தாகு மன்றே.

நான்குகவிகள்-ஒரு தொடர்.

(இ - ள்.) குட பாலில் மூலைத்தது கண்ட-மேற்குத்திக்கில் தோன்றிய அப்பிறைச்சந்திரனைப் பார்த்த, குணங்கள் தீயோன் - தீக்குணங்களையுடைய வனான இராவணன், (கூறுவான்:—) (இது), வடவா அனல்-படபாமுகாக் கினியாகும்; அன்று எனில் - அங்ஙனமன்றுயின், மண் பிடர் வைத்த பாம் பின் - பூமியைப் பிடரியின்மேற்கொண்டுசுமக்கிற ஆதிசேஷனது, விடம் வாள் எயிறு - விஷமுள்ள கூரிய பல்லாம்; அன்று எனின்-அங்ஙனமுமன்று னால், மாலை - மாலைப்பொழுது, என்னை வெகுண்டு - என்னைக்கோபித்து, அட - கொல்வதற்காக, வாள் உருவிக்கொடு தோன்றியது ஆகும் - உடை வாளை உருவியெடுத்துக்கொண்டு எதிரில்வந்து தோன்றியதாம்; (எ - று.)

தனக்குமிக்கவெப்பம்விளைத்து மிகக்கொடிதா யிருத்தல்பற்றி,பிறையை இங்ஙனம் சிலசமையாக விகற்பித்துக்கூறினனென். பிறையின் வளைந்தவடி விற்கு ஒப்பாதற்பொருட்டு, வாள் என்றதற்கு - உடைவாளென்று உரைக் கப்பட்டது. வடவா வனல்-படபாநலம் என்ற வடசொற்றொடரின் திரிபு: கடலிடையில் ஒருபெண்குதிரையின் முகத்தினின்று வெளித்தோன்றுவதா யமைந்துள்ள தீ; இது, கடல்நீரை மழைவெள்ள முதலியவற்றால் மிகாத படி உறிஞ்சிநிற்பது: பிரளயகாலத்தில் கடலினின்று வெளியெழுந்து உல கத்தை யெரித்தழிப்பது. படபா - பெண்குதிரை. மாலை வாளுருவிக்கொடு

தோன்றியதாகும் - மாலை உருவிக்கொடு தோன்றிய வாளாகும். பால்-பக்கம். மூளைத்தது - பெயர். குணங்கள் தீயோன் - குணக்கேடன். 'குணங்கள் தீயோன்' என்பதற்கு வினைமுற்றும், 'வடவாவனல்' என்பது முதலியவற்றுக்கு எழுவாயும் வருவிக்கப்பட்டன. பி-மீ:—[1]வெகுண்ட. (சுகூ)

கஉ. தாதுண் சடிலத்தலை வைத்தது தண்ட ரங்க
மோதுங் [1]கடலிற் கிடைமுந்து பிறந்த போதே
யோதுங் கடுவைத்தன் மிடற்றி னெளித்த தக்கோ
னீதுங் கடுவாமென வெண்ணிய வெண்ண மன்றே.

(இ - ள்.) தண் - குளிர்ச்சியான, தரங்கம் மோதும்-அலைகளை வீசுகிற, கடலிற்கு இடை - திருப்பாற்கடலின்நடுவினின்று, முந்து-முன்பு [கடைந்த காலத்தில்], பிறந்த போதே-தோன்றினபொழுதே, ஓதும் கடுவை தன் மிடற்றின் ஒளித்த தக்கோன்-(யாவராலும் கொடியதென்று) சொல்லப்படுகிற விஷத்தைத் தனதுகண்டத்தில் மறைத்துவைத்த பெரியோனாகிய சிவபிரான், தாது உண் சடிலத்தலை வைத்தது - (சூடிய கொன்றைமலர்களின்) மகரந்தப் பொடிகளைக் கொண்ட சடாபாரத்தையுடைய தனதுமுடியில் (உடனே பிறையையும்) வைத்துக்கொண்டதற்குக் காரணம், ஈதும் கடு ஆம் என எண்ணிய எண்ணம் அன்றே-இதுவும் விஷமாகுமென்று கருதிய கருத்தன்றோ? (எ-று.)

திருப்பாற்கடல்கடைந்தகாலத்தில் அதனினின்று கொடிய ஹாலாஹல விஷம் பிறைச்சந்திரன் முதலிய பலபொருள்கள் தோன்றியபொழுது அவ்விஷத்தைத் தேவர்கள்வேண்டுகோளால் தனதுகண்டத்தினுள்ளே மறைத்துவைத்துக்கொண்ட சிவபிரான் உடனே பிறைச்சந்திரனையும் தனதுசடாமகுடத்தில் வைத்துக்கொண்ட காரணம், இதுவும் ஒருவகைவிஷமாமென்று அப்பெருமான் எண்ணிய எண்ணமாதல்வேண்டுமென்றுணர். இதனால், தன்னை மிக வருத்துவதாகிய பிறை விஷத்தன்மையுடையதென்பதைக் காரணங்கொண்டு சாதித்தான். இது தற்காலத்திற் குளிர்ந்துபோலத் தோன்றுதலின் இதனையெடுத்துத் தரித்துக்கொள்ளும்படி தேவர்கள் வேண்டிற்றிலராயினும், இதுபிற்காலத்தில் விஷம்போலவே கொடியதா மென்று கருதின னென்பது, 'ஓதுங்கடு,' 'ஈதுங்கடுவாமென வெண்ணியவெண்ணம்' என்றவற்றில் விளங்கும். இது, **தந்துறிப்பேற்றவணி**யின்பாற்படும். பி-மீ:—[1]கடலிற்பட. (சுகூச)

கஊ. உரு[1]மொக்க [2]வுலைந்துயிர் நுங்கிய திங்க ளோடிக்
திருமிச் சிறு[3]பின் பிறைதீமை [4]குறைந்த தில்லை
கருமைக் கறைநெஞ்சினி னஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச் சிறுமைக்கொரு பெற்றி குறைந்த துண்டோ.

(இ - ள்.) உரும்ஒக்க - இடிபோல [மிகக்கொடிதாக], உலைந்து - சஞ்சரித்து [எதிர்வந்து], உயிர் நுங்கிய - (எனது) உயிரை விழுங்கிய, திங்களோடு - பூர்ணசந்திரனைக்காட்டிலும், திருமி சிறு - திரும்பி [தனதுபெரிய

வடிவம்வேறுபட்டுச்] சிறுத்துவந்த, மின் இ பிறை மின்னல்போல விளங்குகிற இந்த இளம்பிறையினிடத்தில், தீமை குறைந்தது இல்லை - கொடுமை சிறிதுங்குறையவில்லை; கருமை கறை நெஞ்சினில் - கொடிய கோபமுள்ள மனத்தையுடைய, நஞ்சு கலந்த பாம்பின் - விஷப்பாம்பினது, பெருமை - பெரிய உருவத்தைக் காட்டிலும், சிறுமைக்கு - சிறிய உருவத்துக்கு, ஒரு பெற்றி குறைந்தது உண்டோ - (கொடுமைக்) குணம் ஒரு சிறிதாயினும் குறைதலுளதோ? [இல்லை யன்றோ?] (எ - று.)

பெரும்பாம்பினிடத்தும் பாம்புக்குட்டியினிடத்தும் விஷம் ஒருதன்மையதாகவே யிருத்தல்போல, முன்புவந்த நிறைமதியிடத்தும் இப்பொழுது வந்த குறைமதியிடத்தும் என்னைச் சுடுந்தன்மை ஒரே விதமாகவே யுள்ளது என்றவாறு. **எடுத்துக்காட்டுவமையணி.** வடிவின்பெருமைக்கு ஏற்பக் கடுமைமிகுதலும், அதன் சிறுமைக்குஏற்பக் கடுமை குறைதலுமின்றி இரண்டிலும் கடுமை ஒருபடித்தாயிருத்தற்குத் திருஷ்டாந்தம் காட்டினன். திருமி என்ற இறந்தகால வினையெச்சத்தில், திரும் - பகுதி: திரும்பி யென்பதன் விகாரமென்றலும் உண்டு. சிறு - பண்டித, வினைத் தன்மைப்பட்டு, வினைத் தொகையாய் நின்றது. "கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப் பொருள" என்றதை ஆதாரமாகக் கொண்டு, கறையென்பதற்கு கோபமென்று உரைக்கப்பட்டது. மூன்றுமடிக்கு - கரியஅஞ்ஞானவிருளையுடைய மனம்போலக் கரியவிஷம் உள்ளே பொருந்தப்பெற்ற பாம்பென்று உரைகொள்ளினும் அமையும். அப் பொழுது, நெஞ்சினில் என்பதில், இன் சாரியையும், இல் ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபுமாம். **பி-பி:**—[1]ஒத்த. [2]வலத்துயிர். [3]மென். [4]குறைத்தது.()

கஙஎ.—இராவணன் பிறையை விலக்கி இருளைத்தருக என்றல்.

கன்னக் கனியும்மிரு டன்னையுங் காண்டு மன்றே
முன்னைக் கதிர்நன்றி தகற்றுதிர் [1]முன்பு சான்ற
வென்னைச் [2]சுடுமென்னினிவ் [3]வேழுல கத்தும் வாழ்வோர்
பின்னைச் சில[4]ருய்வரென் றங்கொரு பேச்சு முண்டோ.

(இ - ள்.) கன்னக்கனியும் இருள் தன்னையும் - மிகவும் முதிர்ந்துள்ள இருளின் தன்மையையும், (எப்படிப்பட்டதென்று), காண்டும் - பார்ப்போம்; முன்னை கதிர் நன்று - (இப்பிறையினும்) முன்புவந்த சூரியனே குளிர்ந்தது; இது முன்பு அகற்றுதிர் - இப்பிறையை விரைவாக நீக்கிவிடுங்கள்; சான்ற என்னை சுடும் என்னின் - (பலபராக்கிரமங்களில்) மேம்பட்ட என்னையே (இது) வருத்துவதென்றால், பின்னை - மற்று, இ ஏழ் உலகத்தும் வாழ்வோர் சிலர் உய்வர் என்று ஒரு பேச்சும் உண்டோ - இந்த ஏழு லகங்களிலும் வாழ்பவர்களிற் சிலர் (இதற்குத்) தப்பிப்பிழைப்பார்களென்று ஒருவார்த்தையும் உள்ளதாமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)—அன்று, ஏ, அங்கு - அசைகள்.

'இருள்தன்னையுங் காண்டும்' என்றதனால், இருளை வருவிக்கும்படிகட்டளைகூறியவாறு. கன்னக்கனியும் என்பதை, 'சின்னஞ்சிறுத்த, பென்னம்

பெருத்த, கன்னங்கறுத்த, செக்கச்சிவந்த, பண்ணப்பணைத்த' என்பன போலக்கொள்க; கணிதலின்மிகுதியைக் காட்டும். களியும்மிருள், மகர வொற்று - விரித்தல். இச்செய்யுள் - தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. பி-ம்:—[1]மொய்ம்பு. [2]சுடுமேயெனில். [3]எழுலகத்தில். [4]வாழ்வர். (சுகசு)

கஉ. அ.—இதுவும், அடுத்த கவியும் அந்தகாரவருணனை.

ஆண்டப் பிறைநீங்கலு மெய்திய தந்த காரந்
தீண்டற் [1]கெளிதாய்ப் பல[2]தேய்ப்பன தேய்க்க லாகி
வேண்டிற் [3]கரபத்திரத் தீர்த்து விழுத்த லாகிக்
காண்டற் [4]கினிதாய்ப் பலகந்து திரட்ட லாகி.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது (அல்லது இராவணன் கட்டளை யிட்டபடி), அ பிறை நீங்கலும் - அந்த இளஞ்சந்திரன் நீங்கியவுடனே,—அந்தகாரம் - இருளானது,—தீண்டற்கு எளிதுஆய் - பரிசிக்கக் கூடிய தாய், பல தேய்ப்பன தேய்க்கல் ஆகி - தேய்க்கப்படுதற்குரிய பல பொருள் களையும் (தன்னிடத்திலே) தேய்த்துக் கொள்ளத்தக்கதாய் [கற்போல வலிதாய்], வேண்டில் கரபத்திரத்து ஈர்த்து விழுத்தல் ஆகி - விருப்ப முண்டானால் வாளினால் அறுத்துத் தள்ளுதற்குரியதாய், காண்டற்கு இனிது ஆய் பல கந்து திரட்டல் ஆகி - பார்த்தற்கு இனியதாம்படி பல தூண்களா கத் திரட்டிவைக்கும்படியானதால், எய்தியது - வந்துசேர்ந்தது; (எ - று.)

மிகுதியாகவந்த இருள் மிகத்திண்ணியதா யிருந்ததென்பதை, பின் மூன்று அடிகளில் சிலவகையாக விளக்கிக்காட்டினர். அந்தகாரம், கரபத் ரம் - வடசொற்கள். கந்து - ஸ்கந்த மென்ற வடசொல்லின் திரிபு. கரபத்திரம் - கைவாள். திரட்டல் - கடைச்சல்பிடித்தல், திரண்டவடிவ மாக அமைத்தல். பி-ம்:—[1]அரிதாய்ப். [2]தேய்ப்பினுந் தேய்க்கலாகா. [3]கர பத்திரபத்தியினீர்ந்து வீழ்த்து. [4]அருஞ் சேணுயர். (சுகஎ)

கஉக. முருடீர்ந் திருட்டற் கெளி [1]தென்பதென் முற்றுமுற்றிப்
பொரு[2]டீங்கில் கேள்விச் சுடர்புக்கு வழங்க லின்றிக்
குருடீங்கி தென்னைக் குறிக்[3]கொண்டு கண்ணேட்டங் குன்றி
யருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்ப தவ்வந்த காரம்.

(இ - ள்.) முருடு ஈர்ந்து உருட்டற்கு எளிது என்பது என்-(கீழ்க்கூறிய வாறல்லாமலும் அவ்விருள்) விறகுகளாக வெட்டிப்புரட்டித் தள்ளப்படுதற்கு எளிதாயிருந்த தென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுவது என்னே! [அத் தன்மை சொல்லாமலே விளங்கும் என்றபடி]; (அன்றியும்), முற்றும்முற்றி- மிகவும்முதிர்ந்து, நீங்கு இல் பொருள் கேள்வி சுடர் புக்கு வழங்கல் இன்றி- குற்றமில்லாத பொருள்களையுடைய நூற்கேள்வியாகிய ஒளி உட்புகுந்து விள க்குதல் பெறாமல், ஈங்கு இது குருடு என்ன குறிக்கொண்டு-இவ்வுலகத்தில் இது குருடேயா மென்று பெயரிட்டுச் சொல்லப்பட்டு, கண்ணேட்டம் குன்றி-

தாட்சிணியமில்லாமல், அருள் தீர்ந்த-அருள்நீங்கிய, நெஞ்சின் - மனம்போல, அ அந்தகாரம்-அவ்விருள், கரிது என்பது-கரியதென்று சொல்லப்படுவதாம்.

கீழ்க்கவியில் "தீண்டற்கெளிதாய்" என்பது முதல் மூன்று அடிகளாற் கூறிய தன்மைகளோடு, விறகுகளாகப் பிளந்து தள்ளுதற்கும் கூடியதாயிருந்தது அத்திண்ணிய இருளென்பது, 'முருடுதீர்த்துருட்டற்கெளி தென்பதென்' என்ற முதல்வாக்கியத்தின் கருத்து. குற்றமற்ற நல்ல நூற்கேள்வி சிறிதும் உட்புகாமையால் ஞானவொளிபெறாமல் அஞ்ஞானவிருளே நிறைந்து அதனால் அகக்குருடென்று சொல்லப்பட்டு அருள்முதலிய நற்குணமில்லாமல் தன்னெஞ்சு பயின்றுரை அன்போடுகாணும் விருப்பத்தையும் உடையதாகாது இக்கொடுமையிற் பலகாலம் பயின்று வைரம்பற்றிய கீழ்மக்கள் மனம்போலக் கரியதாயிருந்தது அவ்விருளென்பது, பிந்தினவாக்கியத்தின் கருத்து. 'அருள்தீர்ந்த நெஞ்சிற்கரிதென்ப தவ்வந்தகாரம்' என்றவிடத்து, "புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி, மூக்கிற் கரியா ருடைத்து" என்ற திருக்குறளும், "யாழின்மொழிமங்கைபங்கன் சிற்றம்பல மாதரியாக், கூழின் மலி மனம் போன் றிருளாகின்ற கோகிலமே" என்ற திருக்கோவையாரும் நினைக்கத்தக்கன. கீழ்மக்கள் மனத்திற்குக் கருமை-அறியாமை, அல்லது தீயசிந்தனையாகிய களங்கத்தையுடைமை யென்றும், இருளுக்குக் கருமை - கறுத்திற மென்றுங் கொள்க.

குற்றமற்ற நல்ல நூற்கேள்வி ஞானவொளியைப்பரவச்செய்வதாதலால், அது, சுடரெனப்பட்டது. தாட்சிணியம், பிறர்மேற் கண் சென்றவிடத்து நிகழ்வதாதலால், கண்ணோட்டமென்னும் பெயரதாயிற்று. 'முற்று முற்றி' முதலாக உபமானத்துக்குக் கொடுத்த அடைமொழிகளே உபமேயத்துக்கும் கொண்டால், அவ்விருள் எங்கும்நிறைந்து மிகத்திண்ணிதாயிருத்தலும், விளக்கொளி முதலியனகொண்டு விலக்கப்படாமையும், குருட்டுத்தன்மையையுடைமையும், கண்பார்வைசெல்லுதற்கு இடங்கொடாமையும், கொடுமையையுடைமையும் ஆகிய தன்மை வெளியாம். என்பது-என்னப்படுவது; செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. 'நெஞ்சிற் கரிது' என்பதற்கு-அப்படிப்பட்ட நெஞ்சைக்காட்டிலுங் கரியதுஎனவும் பொருள்கொள்ளலாம். ஈங்கு - அசையுமாம்.

இனி, முதலடிக்கு - முரட்டுத்தன்மை பிளந்து தள்ளி யொழித்தற்கு எளியதோ? [அன்று]: அப்படிப்பட்ட முரட்டுத்தன்மையில் மிகவும் முதிர்ந்து என்று உரைத்து, அவ்வடி முழுவதையும் நெஞ்சிற்கு அடைமொழியாக்கி யுரைப்பினும் ஒருவாறு பொருந்தும். **பி மீ:**—[1]என்பது. [2]தீர்ந்தஞானச். [3]கொண்ட. (சுகூஅ)

கசஂ.—இதுவும், அடுத்த கவியும்-இராவணன் இருளைப் பழித்தல்.

விள்ளாது செறிந்திடை மேலுற [1]வீங்கி யெங்கு
[2]கள்ளா விருள் வந்தகன் ஞாலம் விழுங்க லோடு

[3]மெள்ளா தூலகியாவையும் யாவரும் [4]வீயு [5]மென்ப
துள்ளா துமிழ்ந்தான் விடமுண்ட வொருத்த னென்றான்.

(இ - ள்.) விள்ளாது-(தன்னிற்) பிரிவுபடாமல், இடை செறிந்து - பூமியினிடத்திலே பொருந்தி, மேல் உற வீங்கி - ஆகாயத்தையளாவ வளர்ந்து, எங்கும் கள்ளா - எவ்விடத்திலும் பற்றுக்கொள்ளாத, இருள்—, வந்து—, அகல் ஞாலம் - பரந்த உலக முழுவதையும்,விழுங்கலோடும் - விழுங்கியவளவிலே,—(இராவணன்);—'விடம் உண்ட ஒருத்தன்-விஷத்தை முன்பு உட்கொண்ட சிவபிரான், எள்ளாது - இகழாமலும், உலகு யாவையும் யாவரும் வீயும் என்பது உள்ளாது-(இதனுல்) உலகம் எல்லாவஃறிணைப் பொருள்களும் எல்லா வுயர்திணைப்பொருள்களும் அழியப்பெறும் என்பதை நினையாமலும், உமிழ்ந்தான் - (அவ்விஷத்தை) வெளி யுமிழ்ந்திட்டனன்', என்றான் - என்று கூறினான்; (எ - று.)

முன்னிரண்டடி-கவிக்கூற்று; பின்னிரண்டடி-இராவணன் வார்த்தை. [2]கள்ளாதிருளந்தகன் என்ற பாடத்திற்கு-கரிய இருள் உலகமுழுவதையும் உட்கொண்டதை, கரிய யமன் உலகமுழுவதையும் விழுங்கியதாக வருணித்தாரென்க; **உருவகவணி.** 'எங்கும் கள்ளா' என்பதன் கருத்து-யாதோரிடத்தையும் விட்டிடாத என்பதாம். எள்ளாது - இவ்விஷத்தினது மிக்க கொடுந்தன்மையை மனங்கொள்ளாமல் என்றபடி. சிவபிரான் தனது ஆற்றலால் தான் உண்ட விஷத்தின் கொடுமையைப் பாராட்டாமலும், அதனை நாம் வெளிப்படுத்தினுல் அதனுல் உலகத்து அனைத்துப் பொருளும் அழியுமென்று எண்ணுமலும் அதனை வெளியுமிழ அதுவே இங்ஙனம் மிகக் கொடியதாய் எங்கும் பரவியது போலு மென்பது, பின்னிரண்டடியின் கருத்து: **தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி-ம்:**—[1]ஓங்கி. [3]எள்ளா. [4]வீவது. [5]என்பவுள்ளா. (சுஉஉ)

கசக. வேலைத் தலைவந் தொருவன்வலி யால்வி ழுங்கு
மாலத்தி னடைங்குவ தன்றி றிந்து ணர்ந்தேன்
ஞாலத்தொடு விண்முதல் யாவையு நாவி னக்குங்
[1]காலக் கனல்கார் விடமுண்டு கறுத்த தன்றே.

இது முதல் ஆறு கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) இது—, வேலைத் தலை-(பாற்) கடலினிடத்தினின்று, வந்து-தோன்றி, ஒருவன் வலியால் விழுங்கும்-(சிவபிரானுகிய) ஒருவனுல் (தனது) வலிமைகொண்டு விழுங்கப்பட்ட, ஆலத்தின் - விஷத்திலே, அடங்குவது அன்று-சேர்ந்ததன்று; அறிந்து உணர்ந்தேன்-நன்முய் அறிந்துகொண்டேன்; (மற்று இது யாதென்முல்),—ஞாலத்தொடு-பூமியும், விண் - ஆகாயமும், முதல் - முதலிய, யாவையும்-எல்லா இடங்களையும், நாவின் நக்கும்-(தனது) நாவினுல் நக்கியெரிக்குந்தன்மையுள்ள, காலம் கனல் - ஊழிக்காலத்துத்தீ, கார் விடம் உண்டு கறுத்தது - கரியவிஷத்தை யுண்டு அதனுற் கருநிறமடைந்ததாகும்; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்.

இதுவும் - **தற்குறிப்பேற்றவணியே.** இருள் மிகப்பெரிய உலகங்களையெல்லாம் உட்கொண்டு வியாபித்துக் கொடுமை விளைத்தல்பற்றி, அதனை, அவ்வுலகங்களுளொன்றான பூமியின் ஒருசாருள்ள பாற்கடலினின்று ஒரு கால் தோன்றி உடனே சிவபிரானால் எளிதில்விழுங்கப்பட்ட விஷத்தின் பாற் படும் அளவின தன்று என்றான். அதன் மிக்க கொடுமையை விளக்குதற்குக் காலாக்கினியென்று கூறுபவனும், அது செந்நிறமுடையதன்றோ வென்று எழும் ஆக்ஷேபத்துக்கு இடங்கொடாமைப் பொருட்டு, 'கார்விட முண்டு கறுத்தது' என்றான். கனலுக்கு நாவென்பது, சுவாலையையாம்; அக்கினிக்கு உள்ள ஏழுசுவாலைகள், 'எழு நா' எனப்படும். நாவின் நக்குதல் - சுவாலையாற் பரிசித்தல். அறிந்து உணர்ந்தேன் - ஒருபொருட் பன்மொழி. **பி - ம்:**—[1]காலக்கடல். (எ००)

கசஉ.—இதுமுதல் ஐந்து கவிகள் - இராவணன் சீதையை உருவெளித் தோற்றத்திலே கண்டு கூறும் வார்த்தை.

அம்பும் மனலு [1]நுழையாக் கனவந்த காரத்
தும்பர் மழைகொண் டயலொப் பரிதாய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலங்கொண்டது திங்க டாங்கி
வெம்புந் தமியேன்முன் விளக்கெனத் தோன்று மன்றே.

(இ - ள்.) அம்பும் அனலும் நுழையா - பாணமும் அக்கினியும் உள்ளே சென்று பிளந்தொழிக்கமுடியாத, கனம் அந்தகாரத்து - நிணிந்த இவ்விருளில்,வெம்பும் தமியேன் முன்-(காமத்தால்)தவிக்கிற துணையற்ற எனது எதிரிலே, அயல் ஒப்பு அரிது ஆய துப்பின் கொம்பர்-(தனக்குத்தானேஒப்பாதலன்றி) வேறுஒப்புஇல்லாததாகிய ஒரு பவழக்கொம்பானது, உம்பர் மழை கொண்டு-(தன்) மீது காளமேகத்தைத் தாங்கி,குரும்பை குலம் கொண்டது-தெங்கினிளங்காயின் இரட்டையைக் கொண்டதாய், திங்கள் தாங்கி - ஒரு சந்திரனையுந் தரித்துக்கொண்டு, விளக்கு என தோன்றும் - விளக்குப்போல விளங்குகின்றது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

மனத்தில் இடைவிடாதுநினைக்கப்பட்ட பொருள் அத்தப்பாவனையின் மிகுதியாற் கண்ணுக்கு எதிரிற் காணப்பட்டாற்போலத் தோன்றுதல்,இயல்பு. சூர்ப்பணகையால் வருணித்துச் சொல்லப்பட்ட சீதையின் வடிவத்தை இடைவிடாது சிந்தித்துநின்ற இராவணன் அவ்வடிவத்தைக் கட்புலனுக்கக்கண்டு அதன் தன்மையை உபமானமுகத்தாற் கூறுகிறான். பவழக்கொம்பென்றது-சீதையின் சிவந்தநிறமுள்ள திருமேனியையும், காளமேகமென்றது-கரியகூந்தலையும், குரும்பைக்குலமென்றது-கொங்கைகளையும், திங்களென்றது-திருமுகமண்டலத்தையும், விளக்கென்றது - அத்திருவுருவத்தின் திவ்வியகாந்தியையு மெனக் காண்க. உபமானப்பொருளால்' உபமேயப் பொருளைப் பெறவைத்ததனால், இது **உருவகவுயர்வுநவிற்சியணியாம்.** மழை - உருவுவமை. துப்பின்கொம்பர் - உருவுவமையோடு, வடிவுவமை. குரும்பைக்குலம் - வடிவுவமை. திங்கள் - மெய்யுவமையோடு பயனுவமை, விளக்கு -

வினையுவமை. அயல் - அருகிலே, தோன்றும் என்றலும் ஒன்று. கொம்பு - கொடி. அம்பு - நீர் எனினுமாம். சிலபிரதிகளில் இச்செய்யுள் ''மருளுடு'' என்ற அடுத்த செய்யுளின் பின் உள்ளது. **பி-ம்:**—[1]நுழையாக்கையின். (எ ०க)

கசஊ. [1]மருளுடு வந்த மயக்கோமதி மற்று முண்டோ
[2]தெருளாதி தென்னை திணிமையிழைத் தாலு மொவ்வா
[3]விருளுடு டிருகுண்டலங் [4]கொண்டு மிருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே.

(இ - ள்.) மருளுடு வந்த மயக்கோ-(காம) மோகத்தால் (எனக்கு) நேர்ந்த மயக்கந்தானே? (அன்றி), மதி மற்றும் உண்டோ - (எனது) அறிவுதான் (பிறிது எக்காரணத்தாலேனும்) வேறுபிற்றோ? தெருளாது இது என்னை - யுயமறத்தெரிந்துகொள்ளுதற்கு அரிதாகிய இத்தோற்றமாயதோ? திணி மை இழைத்தாலும் ஒவ்வா-செறிந்த மையைக் குழைத்தாலும் ஒப்பாகமாட்டாத, இருளுடு - இப்பேரிருளிலே, ஓர் சுடர் மா மதி - ஒளிநிறைந்த பெரிய ஒரு பூர்ணசந்திரன், இரு குண்டலம் கொண்டும்-இரண்டு குண்டலங்களை அணிந்துகொண்டும், இருண்ட நீலம் சுருளோடும் - மிக்கக்கறுத்த கூந்தலோடும், வந்துதோன்றும் - (என்னெதிரில்) வந்து காணப்படுகின்றது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

'மதிமற்றுமுண்டோ' என்பதற்கு-வேறு ஒருவகைச்சந்திரன்தான் உலகத்திலுள்ளதோ? என்று உரைப்பினும் அமையும். சுருள்-பெண்மயிர்; நுனி சுருண்டுள்ளதெனக் காரணப்பொருள்படும். இருண்ட நீலம் - ஒருபொருட் பன்மொழி. 'சுடர்மாமதி' என்றது, திருமுகமண்டலத்தை. **பி-ம்:**—[1]மருளோடு. [2]தெருளாம், தெருளோம். [3]இருளோடு. [4]கொண்ட. (எ ०உ)

கச஋. புடைகொண்டெழு கொங்கையு மல்குலும் புல்கி நிற்கு
மிடைகண்டில மல்ல தெல்லா வுருவுந் தெரிந்தாம்
விடநுங்கிய கண்ணுடை யாரிவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராயென் மனத்தவ ராயி னுரே.

(இ - ள்.) புடை கொண்டு எழு - பக்கங்களில் பரவிப் பூரித்து வளர்ந்தெழுகிற, கொங்கையும் - தனங்களையும், அல்குலும் - அல்குலையும், புல்கி - சார்ந்து, நிற்கும் - (இடையில்) நிற்கிற, இடை - இடையென்னும் உறுப்பை, கண்டிலம் அல்லது - (யாம்) பார்த்திலோமே யல்லாமல், எல்லா உருவும் தெரிந்தாம் - மற்றையவயவங்களெல்லாவற்றையும் பார்த்தறிந்தோம்; விடம் நுங்கிய கண் உடையார் இவர் - விஷத்தை யுட்கொண்ட கண்களையுடையவரான இவர், மெல்ல மெல்ல—, மட மங்கையர் ஆய் - ஓர் இளமாதராய், என் மனத்தவர் ஆயினர் - என்மனத்திலுள்ளவராஞர்; (எ - று.)

பருத்த தனங்களையும் அல்குலையுங் கொண்டு நிற்கிற இடையென்னும் உறுப்பைமாத்திரங் கண்டிலோமே யன்றி, மற்றை யுருவம்முழுவதையுங்

கண்டோ மென்று உரைத்தவாறும்; இவ்வுரைக்கு, இடைகாணுமை - கட்புல னாகாத அதன்நுண்மையா லென்க. 'கொங்கையு மல்குலும் புல்கிநிற்கும்' என்ற அடைமொழி, மேலுங்கீழுமுள்ள அவயவங்களோக் கொண்டு நடுவறுப் பாகிய இடை உண்டென்று ஊகிக்கப்படு மென்ற கருத்தைப் புலப்படுத்தும். இனி, முதலிரண்டடிக்கு - காணப்பட்டவுருவம் சேலையுடுத்திருந்தமைபற்றி, 'புடைகொண்டெழுகொங்கையு மல்குலும் புல்கிநிற்குமிடை கண்டிலமல்லது எல்லாவுருவுந்தெரிந்தாம்' என்று னெனினுமாம்: இப்பொருளில் 'இடையும்' என்ற எண்ணும்மை, விகாரத்தால் தொக்கதென்க. சிற்சில உறுப்புக்களேமுன்பு வெளித்தோன்றினமையைக் கீழ்(இரண்டுகவிகளிற்)கூறி,முழுவடிவமுந் தோன்றியதை இங்குக் கூறுகின்று னதலின், 'மெல்லமெல்ல மடமங்கையராய்' என்றுன். 'என்மனத்தவராயினரே' என்றது, காணப்பட்ட வடிவம் என்மனத்தில் ஊன்றிப்பதிந்திட்ட தென்ற பொருளோடு, அவ்வடிவம் சூர்ப் பணகை சொன்ன அடையாளங்களின்படி யான் மனத்திற்பாவித்தவாறே யுள்ள தென்ற கருத்தையுங் கொள்ளும். அப்பெண்வடிவினிடத்தில் தான் கொண்ட மிக்கஆதரத்தால், 'கண்ணுடையாரிவர் மங்கையராய் மனத்தவரா யினர்' என உயர்வுப்பன்மையாற் கூறினன். 'விடநுங்கிய கண்ணுடையார்' என்றதனுல் கண்கள் கறுத்தவிழியை யுடைமையையும், தன்னே நோக்கி னழகாற் காமவேதனைக்குள்ளாக்கி வருத்துதலேயுங் குறித்தவாறு. 'விடநுங் கிய கண்' என்பதற்கு - விஷத்தையொத்த கண்ணென்று உரைப்பாரு முளர். (எ0கூ)

கசடு. பண்டே யுலகேழினு முள்ள படைக்க ணுரைக்
கண்டே[1]னிவர் [2]போல்வதொர் பெண்ணுருக் கண்டி லேனு
ணுண்டேயெனின் வேறினி யெங்கை [3]யுணர்த்தி நின்ற
வண்டேறு கோதை [4]மடவாரிவ ராகு மன்றே.

(இ - ள்.) பண்டே-முன்னமே [பலகாலமாக], உலகு ஏழினும் உள்ள படைக்கணுரை - எழுவகையுலகங்களிலுமுள்ள மகளிரனேவரையும், கண் டேன்-பார்த்துள்ளேன்; (அவர்களுள்ளே), இவர் போல்வது ஓர் பெண் உரு கண்டிலேன் - இவரதுவடிவம்போன்றதொரு பெண்வடிவத்தைப் பார்த்தே னில்லே; இனி வேறு உண்டே எனின் - (உலகத்துப்பெண்வடிவனைத்தினும்) வேறுபட்டதொரு பெண்வடிவம் இதோ உள்ளதே யென்றல், எங்கை உணர் த்தி நின்ற-என்தங்கையான சூர்ப்பணகை (எனக்குத்) தெரிவித்த, வண்டு ஏறு கோதை மடவார் - வண்டுகள் மொய்த்த கூந்தலையுடைய இளமங்கையர், இவர் - இவரே; (எ - று.)—ஆல், ஆகும்-அசை; அன்றே-தேற்றம்.

படைக்கணுர்-வேல் வாள் அம்பு என்ற ஆயுதங்கள்போலக் கூரிய கண் களே யுடையவர். உண்டே யென்பதில், ஏகாரம்-தேற்றம். 'வண்டேறு' என்ற அடைமொழி, கூந்தலின் இயற்கைமணத்தை யுணர்த்தும்; உத்தம சாதி மகளிர் கூந்தலில் இயற்கை நறுமணமுண்டென்றல், மரபு. எங்குந் தடையின்றிச் சஞ்சரிக்கும் ஆற்றலுடையவ னதலின், 'உலகேழினுமுள்ள

படைக்கணுரைக் கண்டேன்' என்றான். 'பண்டே' என்றதனால், இவன் நெடுங்காலமாக வாழ்த்துள்ளமை வெளிபாம். பி-ம்:—[1]இது. [2]போலொரு. [3]உணர்த்துகின்ற. [4]மடவாளிவளாகுமன்னே. (எ0ச)

கசசு.—இராவணன் ஏவலாளரைநோக்கி 'சூர்ப்பணகையை யழைத்த' என்றல்.

பூண்டிப் பிணியா னுறுகின்றது தான்[1]பொ ருதா
டேண்டிக் கொடுவந்தனள் மெய்வதெர் மாறு முண்டோ
காண்டற் கினியாருருக் கண்டவட் கேட்கு மாற்ற
லீண்டிப் பொழுதே விரைந்தெங்கையைக் கூவு கென்றான்.

(இ - ள்.) யான் - நான், இ பிணி-இப்படிப்பட்ட காமநோயை, பூண்டு-கொண்டு, உறுகின்றது - அடைகிறதுன்பத்தைக்குறித்து, (அச்சீதை), தான் பொருதாள் - (தான்) சகியாதவளாய், தேண்டி கொடு வந்தனள் - (இந்நோயைத்தணித்தற்கு என்னைத்) தேடிக்கொண்டு (இங்கு) வந்திட்டாள்; செய்வது ஓர் மாறும் உண்டோ-(இங்ஙனம் அவள்செய்த உபகாரத்துக்கு ஈடாகச்) செய்யத்தக்கதொரு பிரதியுபகாரமும் உள்ளதோ? [எதுவுமில்லையென்றபடி]; காண்டற்கு இனியாள்-பார்த்தற்கு இனியவளான அச்சீதையினது, உரு-உருவத்தை, கண்டவள் - கட்புலனுறப்பார்த்த சூர்ப்பணகையை, கேட்கும் ஆற்றல் - (இவ்வுருவம் அச்சீதைதானென்று யான்) கேட்டு ஐயந்தீரும்படி, இப்பொழுதே விரைந்து எங்கையை ஈண்டு கூவுக-இப்பொழுதே விரைவாக என்தங்கையை [சூர்ப்பணகையை] இங்கே கூப்பிடுங்கள், என்றான் - என்று [ஏவலாளரை நோக்கி இராவணன்] கட்டளையிட்டான்; (எ - று.)

முன்னிரண்டடியிற் கூறியதனால், இராவணன் வேண்டியபடி மனோராச்சியஞ்செய்தல் புலனும். அவ்வடிவத்தைச் சீதையென்றே ஒருசார்துணிந்தவன், நன்குதுணிதற்பொருட்டு, பிரதியகமாகக்கண்ட சூர்ப்பணகையை வருவித்து அவளால் உண்மையுணரத்தொடங்குகிறான். கண்டவட்கேட்கும்-உயர்திணையில் இரண்டனுருபு தொக்கது: இரண்டாம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப்பெயரீற்றுமெய் வலிவரத் திரிந்தது, "இயல்பின் விகாரம்." பி - ம்:—[1]பொருதான். (எ0டு)

கசஎ.—சூர்ப்பணகை இராவணனிடத்து வருதல்.

சென்று னெனலுங் கடிதேகினர் கூவு மெல்லை
வன்று ணிருதக்குலம் வேரற மாய்த்தல் [1]செய்வா
ளொன்றுத காமக் கனலுட்டெற லோடு நாகி
பொன்றுழ் குழை[2]தன்னெடும் போக்கினள்போய்ப் புகுந்தாள்.

(இ - ள்.) என்றான் எனலும்-இங்ஙனம் (இராவணன்) கட்டளையிட்டானென்றவுடனே, (ஏவலாளர்கள்), கடிது ஏகினர் கூவும் எல்லை-விரைவாகச் சென்று கூப்பிடுமளவிலே,—வல் தாள் திருதர் குலம் வேர் அற மாய்த்தல் செய்வாள் - வலியமுயற்சியையுடைய அரக்கர்கள்குலங்களை வேரோடு அறும்

படி அழிக்கஇருப்பவளும், நாசி பொன் தாழ்குழை தன்னொடும் போக்கினள்-மூக்கையும் பொன்னினுலாகியதொங்குகிற குழையென்னும்அணியையுடைய காதையும் இழந்தவளுமான சூர்ப்பணகை, ஒன்றுத காமம் கனல் உள் தெற லோடும்-பொருந்தாத காமாக்கினி(தன்)மனத்தைச் சுடுதலுடனே,போய் புகுந் தாள் - (இராவண னிருக்குமிடத்தில்) வந்து சேர்ந்தாள் ; (எ - று.)

ஒன்றுத காமம் - இராமன் விஷயமாகக் கொண்ட தகுதியல்லாத ஒரு தலைக்காமம். அதனைக் கன லென்றது, சேர்ந்த இடத்தை எரித்து அழித்த லால். தெறலோடும் போக்கின னென இயைத்து, காமக்கனல் உள்ளத்தை வருத்தியவுடனே அதனுல் மூக்கையுங் காதையு மிழந்தவள் என்று பொருள் படும். என்றுன் என்றது, கீழ்க்கவியிற் கூறியதன் அனுவாதம். வல் தாள்-வலிய கால்களுமாம். வேறமாய்த்தல் - நிர்மூலமாக்குதல்: சந்ததியுமறத் தொலைத்தல். 'பொன்தாழ்குழை' என்ற தொடர் - அன்மொழித்தொகை யாய், காதை யுணர்த்திற்று. பி - மீ:—[1]செய்வான். [2]கொங்கைகள். (எ०சு)

கசஅ.—இராவணன் சூர்ப்பணகையைநோக்கி 'இவள் சீதைதானு?' என வினவல்.

பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவ னேருற [1]நோக்கி [2]நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயினின்றென வந்தென் முன்ன
ரிந்நின்றவ ளாங்கொ லிபம்பிய சீதை யென்றுன்.

(இ - ள்.) நெய் நின்ற கூர் வாளவன் - (பகைவரது) நிணந் தோய்ந்து நின்ற கூரிய வாளாயுதத்தையுடைய இராவணன், பொய் நின்ற நெஞ்சின் கொடியாள் புகுந்தாளை நேர் உற நோக்கி - அங்குவந்து சேர்ந்தவளான பொய்நிலைத்த மனத்தையுடைய கொடியவளாகிய சூர்ப்பணகையை நேராகப் பார்த்து, 'நங்காய் - மகளிரிற் சிறந்தவளே! மை நின்ற வாள் கண் மயில் நின்று என என் முன்னர் வந்து இ நின்றவள் ஆம்கொல்-மை தீட்டப்பட்ட வாள்போலுங் கண்களையுடைய ஒரு மயில் வந்துநின்றாற்போல என்முன் னிலையிலே இதோவந்துநின்ற இவள்தானு, இயம்பிய சீதை - (நீ) சொன்ன சீதையென்பவள்', என்றுன் - என்று வினவினுன்; (எ - று.)

மயில்உவமை, சாயலுக்கு; நடைக்கு மென்பர். நெய்நின்ற - நெய்பூசப் பெற்ற எனினுமாம். நங்காய்-நங்கை யென்பதன் ஈறுதிரிந்த விளி. 'பொய்ந் நின்றநெஞ்சிற் கொடியாள்' என்பதற்கு - பொய்நிலைத்த மனத்தினுங் கொடுமையானவள் என உரைப்பினும் அமையும். பி மீ:—[1]நோக்கு. [2]நங்கை.

கசசூ.—அவள், தனது உருவெளித்தோற்றத்தின்படி இராம னென்றல்.

செந்தா மரைக்கண்ணெடுஞ் செங்கனி வாயி னெடுஞ்
சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைக ளோடு
மந்தா ரகலத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனுமவ் வல்வி பிராம னென்றுள்.

(இ - ள்.) 'செம் தாமரை கண்ணெடும் - செந்தாமரைமலர்போன்ற கண்களுடனும், செம் கனி வாயினெடும் - சிவந்துகொவ்வைப்பழம்போன்ற வாயினுடனும், சந்து ஆர் தட தோளொடும் - அழகுநிறைந்த பெரிய தோள்களுடனும், தாழ் தட கைகளோடும்-உத்தமலக்கணத்தின்படி (முழந்தாளளவுக்) தொங்குகிற பெரிய கைகளுடனும், அம் தார் அகலத்தொடும்-அழகிய மாலையையணிந்த மார்பினுடனும், அஞ்சனம் குன்றம் என்ன-ஒருமைம்மலைபோல, வந்தான்-வந்தவனுகிய, இவன்—, அவல் வில் இராமன் ஆகும்-வலிய வில்லையுடைய அந்த இராமனுவன்,' என்றுள்-என்றுசொன்னுள், (சூர்ப்பணகை).

இராவணன் சீதையை இடைவிடாது சிந்தித்தலால் அவள்வடிவை ஒருவெளித்தோற்றத்திலே கண்டாற்போல, சூர்ப்பணகை இராமனைத் தான் இடைவிடாது சிந்தித்தலால் அவன்வடிவைத் தனதுஉருவெளித்தோற்றத்திலே கண்டனளாதலால்;இங்ஙனங் கூறினளென்க. மனத்தின்பாவனைப்படி ஒருவர்க்குக் கட்புலனுகும் வடிவை மனத்தில் வேறுவிதமான பாவனையையுடைய பிறர் காணஇயலாமை கருதற்பாலது. இராமனிடம் தான்கொண்ட காதல் கைம்மிகுதலால்,தனதுதமையன்முன்னிலையிற் சொல்வன தவிர்வன அறியாது,அப்பெருமானழகைத் தான் ஈடுபட்டபடி வருணித்துக்கூறுகிறுள். இங்ஙன் இராவணசூர்ப்பணகையரின் காதலை நாடகங்களிற்போலக் கம்பர் விளித்திரப்பட அமைத்துக்கூறியது ரவிகர்களாற் பாராட்டுதற்குரியது. சந்து ஆர் - சந்தனக்குழம்புபூசப்பெற்ற என்றலு மொன்று. அகலம்-அகற்சி; பரந்த மார்புக்குத் தொழிலாகுபெயர். (எ0அ)

கரு0.—இராவணன் சூர்ப்பணகையை நோக்கி 'நமதுகாட்சி மாறுபடுவதேன்? என்றல்.

பெண்பா லுருநானிது கண்டது பேதை நீயீண்
டெண்பா லிலாததோ ராணுரு வென்றி யென்னே
கண்பா லுறுமாயை கவற்றுதல் கற்ற [1]நம்மை
மண்பா லவரேகொல் விளைப்பவர் மாயை யென்றன்.

(இ - ள்.) நான் கண்டது இது - நான் பார்த்த இவ்வுருவம்,பெண்பால் உரு-பெண்வடிவமாயிருக்கிறது;பேதை-பேதைமைக்குணமுடையவளே!நீ—, ஈண்டு-இப்பொழுது [இவ்விடத்தில்], எண்பாலும் இலாதது ஓர் ஆண் உரு என்றி - நினைவிலும் இல்லாததாகிய ஒரு ஆண்வடிவ மென்றுய்; என்னே - (இதற்குக்காரணம்) யாதோ? கண்பால் உறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை-கண்ணெதிரே மிக்க மாயச்செயலால் (பிறரை) மயக்குதலைப் பயின்ற நமக்கு, மண்பாலவரேகொல் மாயை விளைப்பவர்-மண்ணுலகத்தவரான மனிதர்களா மாயைசெய்பவர்? என்றன் - என்றுசொன்னன், (இராவணன்); (எ - று.)

பெண்பால், பால் - பகுப்பு. தான் கண்டதற்கு மாறுகக் கூறுதல்பற்றி, அவளைப் பேதையென விளித்தான்; அன்றியும், கண்டதைக் கண்டபடியே கூறுங் கபடமில்லாத்தன்மையுடையவளே யென்றவாறுமாம். பேதை - பண்

பாகுபெயர்; அண்மைவிளி. 'எண்பாலுமிலாதது' என்பதற்கு-எட்டுத்திக்கிலும் இல்லாத தென்று உரைத்தலும் பொருந்தும்; பால் - பக்கம். என்றி-இடைச் சொல்லடியாப்பிறந்த முன்னிலையொருமை யிறந்தகாலமுற்று. என்னே யென்றது-என்ன ஆச்சரிய மென வியந்துகூறியவாறுமாம். மாயைத்தோற்றம் கட்புலனுதற் காட்சியளவினதேயாகுதலால், 'கண்பாலுறுமாயை' எனப்பட்டது. கவற்றுதல்-பலவேறுவகைத் தோற்றம்விளைத்தல். கவற்று-கவல் என்பதன் பிறவினை; று - விகுதி. மண்பாலவரே கொல், ஏ - இழிவுசிறப்பு, கொல் - வினா. பி - ம்:—[1]எம்மை. (எ0கூ)

கருத.—சூர்ப்பணகை இராவணனை நோக்கி 'நீ கண்ட பெண்ணுரு உருவெளித்தோற்றமே' என்றல்.

ஊன்றும் முணர்வப் புறமொன்றினு மோட லின்றி
[1]யான்றும் முளதாநெடி தாசை கனற்ற நின்ரூய்க்
கேன்றுன் னெதிரே விழிநோக்கு மிடங்க டோறுந்
தோன்றும் மினையாளிது [2]தொன்னெறித் தாகு மென்ரூள்.

(இ - ள்.) ஊன்றும் உணர்வு-(சீதையினழகிலே)ஊன்றிப்பதிந்த அறிவு, அப்புறம் ஒன்றினும் ஓடல் இன்றி-வேறு ஒருவிஷயத்தினிடத்துஞ் செல்லுதலில்லாமல், ஆன்றும் உளது ஆம் நெடிது ஆசை கனற்ற-மிகவும் உண்டான பெரியகாமத்தீச் சுட, நின்ரூய்க்கு-நின்றஉனக்கு, உன் எதிரே விழி என்று நோக்கும் இடங்கள் தோறும் - உனது எதிரிலே கண்கள் பொருந்திப் பார்க்கிற இடங்களிலெல்லாம், அனையாள் தோன்றும்-அச்சீதை காணப்படுவாள்: இது-இவ்வாறு (காமுகர்க்குக்) காணப்படுதல், தொல் நெறித்து ஆகும் - பழமையான வழக்கமேயாம், என்ரூள்-என்றுசொன்னாள், (சூர்ப்பணகை); (எ-று.)

ஆன்றும் - மிக்கும்; இதற்கு, மிகவும் என எச்சத்திரிபாக உரைக்கப்பட்டது: இதில், ஆன் அல்லது ஆல்-பகுதி. 'கனற்ற' என்ற வினையை நோக்கி, ஆசை தீ யெனப்பட்டது. கனற்று-கனல் என்பதன் பிறவினை; று-விகுதி. நின்ரூய்க்கு-முன்னிலையொருமை யிறந்தகாலவினையாலணையும்பெயர்; நான் காம்வேற்றுமைவிரி. ஏன்று, ஏல்-பகுதி. என்று தோன்று மென இயைத்து, பொருந்திக் காணப்படுவா ளெனினுமாம். இராவணனுக்கு உற்சாகத்தை மூட்டும்பொருட்டு, 'தோன்றும் மினையாள்' என்றதாகவுங் கொள்ளலாம். தொன்னெறி-பண்புத்தொகை. பி - ம்:—[1]சான்றும்முளதானெடிதாசைதகைந்து. [2]தொன்னெறி. (எக0)

கருஉ.—'யான்கண்டது உருவெளித்தோற்றமேயாதுக; நீ இராமனைக்கண்டது என்னே?' என்று இராவணன் வினவ, அவள் ஏற்ற விடை கூறல்.

அன்ன தகுகூற வரக்கனு மன்ன தாக
நின்னுல விராமனைக் [1]காண்குறு நீரை னென்ரூ
னெந்காளவ னென்னை யிழத்தீர்வரு மின்னல் செய்தா
னந்நாண்முதல் யானு மயர்த்தில னுகு மென்ரூள்.

(இ-ள்.) அன்னுள்-அச்சூர்ப்பணகை, அது கூற-அவ்வாறு சொல்ல,—அரக்கனும் - இராவணனும்,—(அவளைநோக்கி),—'அன்னது ஆக-அவ்வாறே யாகுக; நின்னுல் அ இராமனை காண்குறும் நீர் என் - உன்னுல் அந்த இராமன் காணப்படுந்தன்மை யாதுகாரணம்பற்றியது?' என்றுன்-என்றுவினவினன்; (அதற்கு அவள்),—'எ நாள் அவன் என்னை இ தீர்வு அரும் இன்னல் செய்தான்-எந்தநாளில் அவ்விராமன் எனக்கு நீக்கமுடியாத இத்தீமையைச் செய்தானே, அ நாள் முதல்-அந்தநாள்முதலாக, யானும் அயர்த்திலன் - நானும் (அவனை) மறந்திலேன்', என்றுள் - என்றுசொன்னுள்; (எ - று.)

'இத் தீர்வருமின்னல்' என்றது, மூக்குமுதலியன அறுத்தலை. பின்னிரண்டடியால், சூர்ப்பணகை தான் இராமனிடங்கொண்ட காதலை இராவணனிடங் கூறுமல் வேறுகாரணங் கூறினுளென வெளியாம். அன்றி, இன்னதென்று குறிப்பிடாமல் 'இத்தீர்வருமின்னல்' எனச் சுட்டுமாத்திரத்தாற் கூறியதற்கு, உறுப்பறுத்தலை வெளிப்படைப் பொருளாகவும், வேட்கை விளைத்தலை உள்ளுறைப்பொருளாகவுங் கொள்ளுதலும் தகுதியாம். இராமனை யென்பதில், ஐ - அசை. தீர் - தீர்மை யென்ற பண்பினடி. ஆகும்-அசை. 'அவ்விராமன்' என்பது, 'அவிராமன்' எனத்தொக்கது, ஒசையின்பநோக்கி.

பி-ம்:—[1] தீர்மையென்றுன். (எகக)

கடுக.—சீதையைக் கவர்ந்து வருமாறு சூர்ப்பணகை இராவணனுக்குக் கூறுதல்.

ஆமாம தடுக்குமெ னுக்கையொ டாவி கையவே
மால்விணேயேற்கினி யென்விடி வாகு மென்னைக்
கோமா னுலகுக்கொரு நீகுறை கின்ற தென்னே
பூமாண் குழலாடனை வவ்வுதி போதி யென்றுள்.

(இ - ள்.) 'ஆம்ஆம் - உண்மைதான்; அது அடுக்கும்-(நீ சொல்லும்)அத்தன்மை பொருந்தும்: என் ஆக்கையொடு ஆவி கையவேம் - (இப்பொழுது) எனது உடம்பும் உயிரும் மெலியும்படி கவிக்கின்றன; மால் விணையேற்கு - (இங்ஙனம் வருந்தும்படி) வேட்கைச்செயலையுடைய எனக்கு, இனி விடிவு என் ஆகும் - இனி இவ்வருத்தக் தீரும் வகை யாதோ?' என்ன - என்று (இராவணன்) வினவ,—(சூர்ப்பணகை),—'உலகுக்கு ஒரு கோமான் நீ-உலகமுழுவதுக்கும் தனித்தலைவனுன நீ, குறைகின்றது என்னே-(இப்படி) சிறுமைப்படுவானேன்? (இப்பொழுதே நீ), பூ மாண் குழலாள்தனை வவ்வுதி - மலர்சூடிய மாட்சிமைப்பட்ட கூந்தலையுடையளான சீதையை யெடுத்து வருவாய்: போதி - செல்வாய்,' என்றுள் - என்று கூறினுள்; (எ - று.)

'மால்விணேயேற்கு' என்றது, பெரிய தீவினையையுடைய எனக்குஎனத் தன்னைத்தானே வெறுத்துக் கூறியதுமாம். மாண்குழல் - பண்புத்தொகை; கூந்தலுக்கு, மாட்சி-மென்மை, கருமை, நெய்ப்பு, நீட்சி, இயற்கை நறுமணம் இவற்றையுடைமை. (எகஉ)

கருச.—இராவணன் காமநோயால் மரணவேதனைப்படுதல்.

என்ரு ளகன்ரு ளவரக்கனு மீட ழிந்தா
னென்ரு னு [1]முணர்ந்திலனு [2]யிலந்து சோர்ந்தா
னின்ரு ருடங்கினர் நின்றுள நாளி னுலே
பொன்ரு தளனுயின [3]னத்துணை போனு மன்றே.

(இ - ள்.) என்ரள் - என்றுசொன்ன சூர்ப்பணகை, அகன்ரள்-விலகிச்சென்ரள்; அ அரக்கனும்-அந்த இராவணனும், ஈடு அழிந்தான்-வலிமையொழிந்து, ஒன்று ஆனும் உணர்ந்திலன் - ஒன்றையேனும் உணராதவனும் [சிறிது அறிவும் அற்றவனும்], ஆவி உலைந்து சோர்ந்தான்-உயிர்நிலை குலைந்து தளரப்பெற்ரன் [மூர்ச்சை போனன்]; நின்ரோரும் நடுங்கினர் - (அதுகண்டு) அருகில் நின்றவர்களும் நடுங்கினார்கள்; (அப்பொழுது அவன்), நின்றுள நாளினுலே - (கழிந்ததுபோகக் கழியவேண்டியதாய்) எஞ்சியுள்ள ஆயுள்நாளின் வலிமையொன்றினுலே, பொன்ரது உளன் ஆயினன் அ துணை - இறவாது பிழைத்திருந்தானத்தனை; (எ - று.)—போலும்-ஒப்பில்போலி; உரையசைப் பொருளதாய் நின்றது: வாக்கியாலங்கார மென்பர் வடநூலார். அன்றே - தேற்றம்; ஈற்றசையுமாம்.

அவரக்கன் - தொகுத்தல். அரக்கன் ஈடுஅழிந்தான், ஆவிசோர்ந்தான்-திணைவழுவமைதி. ஒன்ரனுமுணர்ந்திலன் - யாதொருவகையாலுந் தெளிவடையாதவனும் எனினுமாம். பி-ம்:—[1]உணர்ந்திலனுகி. [2]உலர்ந்து. [3]அத்தலே.

கருடு.—இராவணன் தனது வெப்பத்தீர்த்தற்பொருட்டுச் சந்திரகாந்தமண்டபஞ் செய்யச்சொல்லல்.

இறந்தார் [1]பிறந்தாரென வின்னுயிர் பெற்ற மன்னன்
மறந்தா னுணர்ந்தா [2]னவண் மாடுகின் ருரை நோக்கிக்
கறந்தாலென நீர்தரு சந்திர [3]காந்தத் தாலொர்
சிறந்தார் மணிமண்டபஞ் செய்கெனச் செப்பு கென்ரான்.

(இ - ள்.) இறந்தார் பிறந்தார் என-இறந்தவர் (மீண்டும்) உயிர்பெற்ற தொத்தாற்போல, இன் உயிர் பெற்ற-(மீண்டும்) இனிய உயிரைப்பெற்றெழுந்த, மன்னன்-அரக்கர் தலைவனுன இராவணன், மறம் தான் உணர்ந்தான்-(தனது) ஆற்றலைத் தான் கருதியவனும், அவண் மாடு நின்ரூரை நோக்கி - அவ்விடத்தில் அருகில்நின்ற ஏவலாளரைப் பார்த்து,—'கறந்தால் என நீர் தரு-கறந்தாற் போல [தாரைதாரையாக] நீரை வெளிச்சொரிகிற, சந்திரகாந்தத்தால்-சந்திரகாந்தக்கற்களாலே, சிறந்து ஆர் மணி ஓர் மண்டபம் செய்க-சிறப்படைந்து பொருந்தும் அழகிய ஒருமண்டபத்தைச் செய்யவேண்டும், என - என்று, செப்புக-(சிற்பிக்கு நீங்கள்) கூறுவீராக,' என்ரான் - என்று கட்டளையிட்டான்; (எ - று.)

'இறந்தார் பிறந்தா ரென வின்னுயிர்பெற்ற மன்னன்' என்றவிடத்து, 'பிழைத்தது புனர்ஜன்மம்' என்ற வழக்கை யுணர்க. 'மறந் தான் உணர்ந்தான்'

என்றது, இங்ஙனம் பெரிய கட்டளையிடுதற்கு ஏற்ற ஊக்க முண்டானதைக் காட்டும்; இனி, மறந்தான் உணர்ந்தான் என்பதற்கு-மீண்டும் தன்னேமறந்து [மதிமயங்கிப்] பின்பு தெளிந்து என வுரைத்தலும் அமையும். சந்திரகாந்தம்-சந்திரவொளியைக் கண்டவளவிலே நீரை யுமிழ்வதோர் இரத்தினம். பி-ம்:—[1]பிறந்தாலென. [2]அவன். [3]காந்தத்தாலே. (எகச)

கருசூ. —தெய்வத்தச்சன் சந்திரகாந்தமண்டப மியற்றல்.

வந்தா னெடுவா னுறை தச்சன் மனத்து ணர்ந்தான்
சிந்தா வினையன்றியுஞ் செய்வினை யானுஞ் செய்தா
னந்தாம நெடுந்தறி யாயிரத் தா[1]ல மைந்த
சந்தார் மணிமண்டபந் தாமரை யோனு நாண.

(இ - ள்.) நெடு வான் உறை தச்சன்-பெரிய மேலுலகத்திலே வசிக்கிற தேவசிற்பியான விசுவகர்மன், மனத்து உணர்ந்தான் - (இராவணன் கட்டளையை) மனத்திலறிந்து, வந்தான்-(உடனே அருகில்) வந்து, அம் தாமம் நெடு தறி ஆயிரத்தால் அமைந்த சந்து ஆர் மணி மண்டபம்-அழகிய ஒளியையுடைய நீண்ட ஆயிரந்தூண்களேக்கொண்டு அமைந்த அழகுமிக்க சந்திரகாந்தரத்தினமயமான மண்டபத்தை, தாமரையோனும் நாண - (படைத்தற் றொழிற்கடவுளான) பிரமனும் (கண்டு)வெட்கமடையும்படி, சிந்தா வினை அன்றியும் செய்வினையானும் செய்தான் - மனத்தின் தொழிலினல்மாத்திரமல்லாமல் கைத்தொழிலாலும் செய்து முடித்தான்; (எ - று.)

சிந்தாவினை - மாநஸகர்மம்; மனத்தால் நினேத்தவளவில் நிருமித்தல். தெய்வத்தன்மையுள்ள சிற்பியான விசுவகர்மன் வேண்டியஇடங்களே வேண்டியபடி நினேந்தமாத்திரத்தைக்கொண்டு நிருமித்தல், இயல்பு: அப்படிப்பட்ட வல்லமையுடையவன் இராவணன்கட்டளேக்கு அஞ்சி அதனேத் தலேமேற் கொள்வானுப் மெய்வருந்தக் கைத்தொழில்செய்தும் அம்மண்டபவேலேயை முடித்தானென்பது, இரண்டாமடியின் கருத்து. அவ்வடியிலுள்ள உம்மைகள் - ஒன்றையொன்றுநோக்கி எதிரதும் இறந்ததுந் தழுவிய எச்சப்பொருளன. தாமரையோனும், உம்மை - உயர்வுசிறப்பு. தறியாயிரத்தாலமைந்த மண்டபம் - ஆயிரக்கல்மண்டபம். நெடுவான் - நெடுந்தூரத்தில் [உயரத்தில்] இருக்கும் விண்ணுலக மெனினுமாம். இராவணன்கட்டளேயை அவனேவலர் வந்து தெரிவித்தற்குமுன்னமே அதனேத் தனது தெய்வத்தன்மையா லறிந்த மாத்திரத்தில் அச்சத்தோடு விரைந்துவந்தன னென்பது, முதலடியால் விளங்கும். சிந்தாவினே யென்பதில், சிந்தாவென்ற வடசொல் ஈறுதிரியாது நின்றது. இனி, சிந்தா என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு, சிந்தாவினே-குறைவற்றவேலேயை, மனத்து உணர்ந்தான்: அன்றியும் - மனத்தில் நினேத்தமாத்திரத்தா லல்லாமலும், செய்வினேயானும் - கைசெய்வினேயாலும், மண்டபம் செய்தான் - மண்டபமியற்றினனென்று உரைப்பாரு முளர். செய்வினே-வினேத்தொகை. தாமம் - ஒழுங்குமாம். பி - ம்:—[1]அமைத்தான். (எகஞ)

கருவ.—இதுவும் அது.

காந்தம் மழுதின்றுளி கால்வன காலமீனின்
வேந்தன் ஒளியன்றியு மேலொடு கீழ்விரித்தான்
பூந்தென்றல் புகுந்துறை சாளர மும்பு னைந்தா
னேந்தும் மணிக்கற்பகச் சீதளக் காவி னைத்தான்.

(இ - ள்.) காலம் மீனின் வேந்தன் ஒளி அன்றியும் - காலத்தைத்தெரி விப்பனவான நக்ஷத்திரங்களுக்குத் தலைவனென சந்திரனது பிரகாசத்தை வேண்டாமலும், அழுதின் துளி கால்வன - அமிருதம்போலினிய நீரின் துளிகளே வெளியுமிழ்வனவான, காந்தம் - சந்திரகாந்தக்கற்களே, மேலொடு கீழ் விரித்தான்-(அம்மண்டபத்தின்) மேலும் கீழும் பரப்பினன்; பூ தென்றல் புகுந்து உறை சாளரமும் புனைந்தான்-மலர்களின்பரிமளத்தையுடைய தென் றற்காற்று நுழைந்து உலாவத்தக்க பலகணிகளையும் அழகாகஅமைத்தான்; ஏந்தும் - (வேண்டுவார்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தற்குச் சித்த மாக) ஏந்தியுள்ள, மணி - அழகிய, கற்பகம் - கற்பகவிருக்ஷங்களாலாகிய, சீதளம் - குளிர்ந்த, கா - சோலையொன்றையும், இழைத்தான் - (அம்மண்ட பத்தைச் சுற்றிலும்) நிருமித்தான், (விசுவகர்மன்); (எ - று.)

சந்திரனொளி தம்மேற்படுதலில்லாத பொழுதிலும் நீர்சொரியும் இயல் பினவான சந்திரகாந்தக்கற்க ளென அவற்றின்சிறப்பை விளக்கியபடி.மீன்-விண்மீன். வானத்தில் சாதாரணமாக அளவின்றிக் காணப்படுந் தாரகை களேயன்றி, தமது உதய அஸ்தமநசஞ்சாரங்களால் காலவரையறையைப் புலப்படுத்துகிற அசுவினிமுதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களைக் குறித்தற்கு, 'காலமீன்' எனப்பட்டது. தக்ஷப்முனிவனது குமாரிகளாகிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சந்திரன் மணஞ்செய்துகொண்டன னென்பது புராண வரலாறுதலால், 'காலமீனின்வேந்தன்' என்றார். இனி, காலமீன் என் பதற்கு - இருட்பொழுதாகிய அக்காலத்துக்கு உரிய நக்ஷத்திரங்க ளென்று உரைப்பாரு முளர்.

கற்பகவிருக்ஷங்களின் தன்மை நைஷதநூல்களில் விரித்துக் கூறப்படும்; அது வருமாறு:—பத்துவகைக் கற்பகங்களாவன - மத்தியாங்கம், தூரியாங் கம், பூஷணாங்கம், மாலியாங்கம், தீபாங்கம், கிருகாங்கம், ஜ்யோதிரங்கம், போஜநாங்கம், பாஜநாங்கம், வஸ்திராங்கம் என்பன: இவை-முறையே நாநா விதபாநங்களையும், வாத்தியங்களையும், ஆபரணங்களையும், மாலைகளையும், தீபங்களையும், மாடமாளிகை மண்டபாதிகளையும், சந்திராதித்தரொளியினை யடக்கும் ஒளியினையும், பலவகையுணவுகளையும், வேண்டியகலங்களையும், விசித்திரவஸ்திரங்களையுங் கொடுக்கும். இத்தன்மை 'ஏந்தும்' என்ற அடை மொழியாற் குறிக்கப்பட்ட தென்னலாம். (எகசு)

கருஅ.—இராவணன் மண்டபங்காண வருதல்.

[1]ஆணிக்கமை பொற்கை மணிச்சுட ராழி வளைக்குஞ்
சேணுற் றிருள் சீப்பவத் தெய்வ மடந்தை மார்கள்

பூணிற் பொலிவார் புடையேந்திடப் பொங்கு தோளான்
மாணிக்க மானத்திடை மண்டபங் காண வந்தான்.

(இ - ள்.) பூணின் பொலிவார் - (அணிந்துள்ள) ஆபரணங்களுடனே விளங்குபவராகிய, அ தெய்வம் மடந்தைமார்கள் - அந்தத் தேவமாதர்கள், சேண் உற்ற இருள் சீப்ப - வானத்தையளாவிப்பரந்த இருளை ஒழிக்கும் பொருட்டு, ஆணிக்கு அமை பொன் கை-உரையாணிக்கு ஏற்ற [மாற்றுயர்ந்த] பொன்னினுலாகிய ஆபரணங்களை யணிந்த (தங்கள்) கைகளிலே, சுடர் ஆர் மணி விளக்கம் - ஒளிநிறைந்த இரத்தினதீபங்களை, புடை-பக்கங்களில், ஏந்திட-ஏந்திநிற்க,—பொங்கு தோளான் - மிகுதியாய் [இருபதாய்] விளங்குகிற தோள்களையுடையவனுன இராவணன்,—மாணிக்கம் மானத்திடை-மாணிக்க மயமான ஒரு விமானத்தில் (ஏறி), மண்டபம் காண வந்தான் - அம்மண்டபத்தைப்பார்த்தற்கு வந்தான்; (எ - று.)

தெய்வமகளிர்பலர் இருபக்கத்தும் கைவிளக்கேந்தி அவற்றுல் இருளை யகற்றி வழிகாட்ட இராவணன் மாணிக்கவிமானத்தின்மேல் மண்டபங்காண வந்தன னென்பதாம். ஆணிக்கு அமை பொன் - ஆணிப்பொன். பொன் - அணிகலத்துக்குக் கருவியாகுபெயர். உற்றிருள் - விகாரம்; அன்றி, சேண் உற்று - நெடுந்தூரமளவும் ஒளியாற் சென்று, இருள் சீப்ப - இருளையொழிக்க எனினும் அமையும். அகரச்சுட்டு - பிரசித்தியைக் காட்டிற்று. மானம்-விமான மென்ற வடசொல்லின் விகாரம். பி-ம்:—[1]ஆணிக்கனகச்சுடராயிர மார், ஆணிக்கமைபொற்றகட்டின் மணிச்சுடரார். [2]சீப்பன. (எகஎ)

கருக.—இராவணனது பரிசாரகப்பெண்களின் முகவொளி.

அல்லாயிர கோடி யடுக்கிய [1]தொத்த தேனு
நல்லார் [2]முகமா நளிர்வானில வின்ற நாமப்
பல்லாயிர கோடி பணிச்சுட ரின்ற திங்க
ளெல்லா [3]முடனு யிருளோடி யிரிந்த தன்றே.

(இ - ள்.) (அந்த இருட்பொழுது), ஆயிரகோடி அல் அடுக்கியது ஒத்தது ஏனும்-ஆயிரங்கோடி இராத்திரிகளை அடுக்கிவைத்ததுபோன்றிருந்ததா யினும்,—நல்லார் முகம் ஆம்-(அவ்விராவணனுடன் வந்த) அழகிய மகளிர்களுடைய முகங்களாகிய, நளிர் வால் நிலவு என்ற நாமம் பல் ஆயிரகோடி பணி சுடர் என்ற திங்கள் எல்லாம் - குளிர்ந்த வெள்ளிய நிலவொளியை வெளிப்படுத்துவனவும் பெருமைபெற்றனவும் குளிர்ந்தஒளியைத் தருவனவுமான அநேகவாயிரங்கோடி சந்திரமண்டலங்களெல்லாம், உடன் ஆய்-ஒருங்கு சேர்ந்ததனுல்,—இருள் ஓடி இரிந்தது-இருட்டு முன் நிற்கமாட்டாமல் திதறியோடி நிலைகெட்டது; (எ - று.)—அன்றே-ஈற்றசை.

இராவணனைச் சார்ந்த மகளிர்களின் முகங்கள் பூர்ண சந்திரர்கள்போல விளங்கியதனுல், அவற்றினொளியால் இருள் ஒழிந்தது என வருணித்தபடி. இருளின் திணிமையைக் காட்டுதற்கு, 'அல்லாயிர கோடியடுக்கிய தொத்தது' என்றார். பி-ம்:—[1]ஒத்தனும். [2]முகமாய். [3]உடனு. (எகஅ)

கசுஉ.—அம்மண்டபத்தைச் சூழ்ந்த சோலையி லுள்ள
கற்பகவிருக்ஷங்களின் காந்திவிசேடம்.

பொற்புற்றன மாமணி யொன்பதும் பூவி னின்ற
கற்பத் தருவின் கதிர்நாணிழற் கற்றை நாற
வற்பற் றறியப் பகலாக்கிய தால ருக்க
னிற்பத் [1]தெளிகின்றது நீள்சுடர் மேன்மை யன்றே.

(இ - ள்.) பொற்பு உற்றன-அழகு பொருந்தியனவான, மா மணி ஒன்பதும் - சிறந்த நவரத்தினங்களும், பூவின் நின்ற - (தம்மில்) மலர்களாய் அமையப்பெற்றுநின்ற, கற்பத் தருவின்-கற்பகவிருக்ஷங்களினது, கதிர் நாண் நிழல் கற்றை-சூரியனும் வெல்லும்படியான ஒளியின்தொகுதி, நாற-வெளித் தோன்ற, (அவ்வொளி), அல் பற்று அறிய பகல் ஆக்கியது-இருளின்தொடர்ச்சிநீங்கும்படி பகற்பொழுதாக்கிவிட்டது; அருக்கன் நிற்ப தெளிகின்றது நீள் சுடர் மேன்மை அன்றே-சூரியன் உதித்துநிற்குமளவிலே (இருள் நீங்கி) விளக்கமடைவது (அவனது) நீண்ட கிரணங்களின் மேன்மையினு லன்றே?

சூரியன் உதித்துநின்றவளவிலே அவனது நெடுந்தூரத்துஞ் செல்லுந் தன்மையனவான ஆயிரங்கிரணங்களின் மாட்சிமையால் இருள் ஒழிந்து எவ்விடமும் விளக்கமடைகின்றதன்றே? அவ்வாறே அங்கு விசுவகருமனால் நிருமிக்கப்பட்ட கல்பகவிருக்ஷங்கள் விசேஷகாந்தியை யுடையனவாயிருத்தலால் அவற்றினொளி பரவுமளவிலே எங்கும் இருளொழிந்து விளங்கிற் றென்பது கருத்து. 'அருக்கனிற்பத் தெளிகின்றது நீள்சுடர்மேன்மையன்றே?' என்று சூரியனது இயற்கையைத் தெரிவிக்கிற வாக்கியம், எப்படிப்பட்ட இருளையும் ஒழிக்கும் வல்லமை மேலானவொளிக்கு உண்டு என்ற பொதுப் பொருளைவிளக்குதற்குக் கூறியவாறும். சூரியனும் வெட்கமடையும்படியான அவ்வளவு விசேஷகாந்தி கற்பகவிருக்ஷத்துக்கு உண்டென்பதை, நைஷதநூலில் 'சோதிரங்க மென்னுங் கற்பகவிருக்ஷம் சந்திராதித்த ரொளியினை யடக்கும் ஒளியினைக் கொடுக்கும்' எனக் கூறியமைகொண்டும் அறிக. "பொற்பே பொலிவு" என்பது தொல்காப்பியம். மணி ஒன்பது-கோமேதகம், நீலம், பவழம், புஷ்யராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. கற்பதரு என்ற வடமொழித்திரிபு, எதுகைநோக்கி, கற்பத்தருவென வலிமிக்கது. பி ம்:—[1]தெரிக்கின்றது. (எகக)

கசுக.—இராவணன் மண்டபத்தினுட் புகுதல்.

ஊறுசை முதற்பொறி யாவையு மொன்றி னொன்று
தேறு நிலையுற்றதொர் [1]சிந்தையன் செய்கை யோரான்
வேறுய பிறப்பிடை வேட்கை [2]விசித்த நீர்ப்ப
மாறு ருட [3]னுற்றென மண்டபம் வந்து புக்கான்.

(இ - ள்.) ஊறு - ஸ்பர்சமும், ஓசை-சப்தமும், முதல்-முதலிய, பொறி யாவையும்-புலன்களெல்லாம், ஒன்றின் ஒன்று தேறு - ஒன்றுபோலவே மற்

றதுந் தெளிவடையாத, நிலை-நிலைமையை, உற்றது-அடைந்ததான, ஓர் சிந்தையன் - தனிமனத்தையுடையவனும், செய்கை ஓரான்-செய்யவேண்டுவது இன்னதென்று அறியாதவனுமாகிய இராவணன்,—வேட்கை விசித்தது ஈர்ப்ப-ஆசை வலியப்பிடித்துஇழுக்க, வேறு ஆய பிறப்பிடை-அடுத்த பிறவியிலே, மாறு ஓர் உடல் உற்று என - (ஒருயிர்) மற்றோருடலை யடைந்தாற் போல, மண்டபம் வந்து புக்கான் - அந்தமண்டபத்தில் வந்து புகுந்தான்.

ஒருபிறப்பின் இறுதியில்உயிர் உடம்பைவிட்டு நீங்குஞ்சமயத்து யாதொன்றை விரும்பிற்றோ, அவ்வடிவமாக அவ்வுயிர் அடுத்தபிறப்பெடுக்கு மென்பது, நூற்கொள்கை; "அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப்பிறப்பீனும் வித்து" என்ற திருக்குறளி னுரையிற் பரிமேலழகர் 'உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்தவினையும், அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், **அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துஉதிப்ப**, அறிவை மோகம் மறைப்ப, **அவ்வுபிரை அவ்வவா அக்கதிக்கண் கொண்டுசெல்லும்**' என உரைத்தது உணரத்தக்கது. மரணவேதனையால் ஐம்புலவுணர்ச்சியொழிந்து செய்வதறியாத உயிர் அச்சமயத்து அடுத்தஊழ்வினையால் தோன்றிய அவாவின் வசப்பட்டு அவ்வுடம்பினின்று வேறொரு பிறப்பை யடைதல் போல, காமவேதனையால் ஐம்புலவுணர்ச்சியொழிந்து செய்வதறியாத இராவணன் ஆசை வயத்தனாய்த் தான் இருந்த இடத்தினின்று சந்திரகாந்த மண்டபஞ்சென்று சேர்ந்தனன் என்பதாம். முதலிரண்டடிகளும், 'வேட்கை விசித்த ஈர்ப்ப' என்றதும்—உபமானமாகிய உயிருக்கும், உபமேயமாகிய இராவணனுக்கும் பொருந்தும். முன்னிரண்டடியால், இராவணன் காமமோகத்தால் நெட்டுயிர்ப்போடுற்ற பிணமாய் அயர்ந்து நின்றனனென விளங்கும். இராவணனுக்கு 'வேட்கை' என்றது, சந்திரகாந்த மண்டபத்திற் சென்று சேர்ந்தால் தனது தாபந்தணியு மென்ற கருத்து.

முதலடியில், புலன், பொறியெனப்பட்டது: இது-ஒருவகை உபசார வழக்கு. 'ஊறோசைமுதற் பொறிகள்'—ஊறு, ஓசை, நாற்றம், சுவை, ஒளி யென்பன; இவை-முறையே வடமொழியில் ஸ்பர்சம், சப்தம், கந்தம், ரஸம், ரூபம் எனப்படும்: இவை - முறையே மெய், செவி, மூக்கு, வாய், கண் என்னும் பொறிகளின் புலனும். பொறியை இந்திரியமென்றும், புலனை விஷய மென்றுங் கூறுவர் வடநூலார். ஐம்புலன்களுள் ஒன்றேனும் சிறிதும் தெளிவுபெறாது மயங்கிக்கிடந்தமையை நன்குவிளக்குதற்கு, 'ஒன்றிலொன்று தேறுநிலை' எனப்பட்டது. 'ஓர்ந்தை' என்றதனால், அப்பொழுது இராவணனது மனம் யாதோராதரவையும் பெறாதுநின்றமையும், சீதை பக்கலுண்டான மோகமொன்றிலேயே அழுந்தியிட்டமையும் வெளியாம். 'விசித்தது ஈர்ப்ப' என்றது, வினைவசத்தாலுளதாகும் வேட்கை விலக்கவொண்ணாதென்ற தன்மையை விளக்கும். **பி-ம்:**—[1]சிந்தையின். [2]விரிந்தது. [3]புக்கென.

வேறு.

கசூ.—இராவணன் அங்குப் பூம்பள்ளியை யடைதல்.

தண்டலி றவஞ்செய் வோர்[1]கள் [2]வேண்டிய தரவே நல்கு
மண்டல மகர வேலை யமுதொடும் வந்த தென்னப்

பண்டரு சுரும்பு சேரும் பசுமர முயிர்த்த பைம்பொற்
[3]றண்டளிர் மலரிற் செய்த சீதளச் சேக்கை [4]சார்ந்தான்.

(இ - ள்.) தண்டல் இல்-கெடுதலில்லாத, தவம்-தவத்தை செய்வோர்கள்-செய்து மேற்கதியடைந்த தேவர்கள், வேண்டிய-விரும்பியபொருள்களை, தர - (அவர்களுக்குக்) கொடுக்கும்படி, நல்கும் - அன்புகொண்ட, மண்டலம் மகரம் வேலை - வட்டவடிவமானதும் சுறுமீன்கள் சஞ்சரிக்கப்பெற்றதுமான பாற்கடல், அமுதாடும் வந்தது என்ன-தேவாமிருதத்துடனே இங்குவந்தது போலவுள்ள,பண் தரு சுரும்பு சேரும் பசு மரம் உயிர்த்த பைம் பொன் தண் தளிர் மலரின் செய்த சீதளம் சேக்கை-இசைப்பாட்டைப்பாடுகிற வண்டுகள் சேர்ந்துமொய்க்கப்பெற்ற பசியமரங்களால் தரப்பட்ட பசியபொன்னிறமான குளிர்ந்ததளிர்களாலும் பூக்களாலும் அமைக்கப்பட்ட குளிர்ச்சியான படுக்கையை, சார்ந்தான் - (இராவணன்) அடைந்தான்; (எ - று.)

அமிருதத்தோடுவந்த பாற்கடலை அத்தமலர்ப்படுக்கைக்கு உவமைகூறினது,சுத்தமாய்ப்பரந்துமிக்ககுளிர்ச்சியைத் தந்து இனியதாகவல்ல தன்மைக்கென்க. திருப்பாற்கடல்கடைந்தகாலத்தில் அக்கடல் தேவர்கள் விரும்பிய செல்வங்களான கற்பகவிருக்ஷம் காமதேநு சிந்தாமணி முதலிய சுவர்க்கலோகத்து ஐசுவரியங்களைத் தன்னிடத்தினின்று வெளிப்படுத்திக் கொடுத்தமை பற்றி, 'தவஞ்செய்வோர்கள் வேண்டிய தரவே நல்கும் வேலை' எனப்பட்டது. ஈகைக்கு அன்பு இன்றியமையாக்காரணமாதலின், அதனையுடைமை தோன்ற, 'தரவேநல்கும்' என்றார். 'தவஞ்செய்வோர்' என்றது, தேவர்கட்கு ஒருவதுப்பெயர். வேண்டியவர்க்கு வேண்டியபயன்களைத் தவறுமல் அளிக்குந்தன்மைய தாதலால், தவத்துக்கு 'தண்டலில்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது; தவம் அப்பெற்றியதாதலை ''வேண்டிய வேண்டியாங் கெய்துலாற் செய்தவ, மீண்டு முயலப் படும்'' என்ற திருக்குறளினாலும் அறிக. மண்டலம், மகரம் என்பன - கடலுக்கு இயற்கையடைமொழி. சுரும்புக்குப் பண் என்றது, நீங்காரவிவிலியை. பி - ம்:—[1]தாய். [2]வேண்டிய தாயின், வேண்டியதான. [3]தெண். [4]சேர்ந்தான்.

இதுமுதல் ஒன்பது கவிகள் - இப்படலத்தின் கச - ஆம் கவிபோன்ற **அருணீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.** (எஉக)

கசஙக.—அங்ஙந் தென்றற்காற்று வீசுதல்.

நேரிழை மகளிர் கூந்த னிறைநறை வாச நீங்கி
வேரியஞ் சரளச் சோலை வேனிலான் விருந்து செய்ய
வார்கலி யழுவக் தந்த [1]வமிழ்தென வொருவ ராவி
தீரினு முதவற் கொத்த தென்றல்வந் திறுத்த தன்றே.

(இ - ள்.) ஒருவர் ஆவி தீரினும் உதவற்கு ஒத்த தென்றல் - ஒருவரது உயிர் (உடம்பைவிட்டு) நீங்குவதாயினும் (அவ்வுயிரை அங்ஙனம் நீங்காதபடி பாதுகாத்துத்) தரத்தக்க [மிகஇனிய] தென்றற்காற்றானது,—நேர் இழை மகளிர் கூந்தல் நிறை நறை வாசம் நீங்கி-தகுதியான ஆபரணங்களை யணிந்த

மாதர்களது கூந்தலில் நிறைந்துள்ள தேனுடுகூடிய நறுமணத்திற்படிந்து;— வேரி அம் சரளம் சோலை வேனிலான் விருந்து செய்ய ஆர்கலி அழுவம் தந்த அமிழ்து என-பரிமளத்தையுடைய அழகியஇனியசோலையிலே மன்மதனுக்கு விருந்துபசாரஞ்செய்யும்பொருட்டு நிறைந்தஓசையையுடைய கடல் உண்டாக்கித்தந்த தோ ரமிருதம்போல, வந்து இறுத்தது-வந்துசேர்ந்தது; (எ-று.)— அன்றே - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம்.

காமமான்முழுமிய வேறுகாரணங்களால் எவ்வளவுதாபத்தை யடைந்து மிகவருந்தினாலும் அத்தாபம் முழுவதையும் எளிதிற்போக்கி இனிமைசெய்ய வல்லதாம்படி மிகக்குளிர்ந்ததாயுள்ள தென்றற்காற்றென்பார்,மரணவேதனை யையுத் தீர்த்தற்குரியதென்னும்பொருள்பட'ஒருவராவிதீரினு முதவற்கொத்த தென்றல்'என்றார். முதலடியால், அவ்விளங்காற்று மகளிர்கூந்தலிற்சூடியுள்ள மலர்களின் தேனையும் வாசனையையும் கொணர்ந்ததோடு அவ்வுத்தம காந்திமாதரது குழலிலுள்ள இயற்கைநறுமணத்தையும் கொணர்தல்தோன்றும். அத்தென்றல் காமக்கடவுளான மன்மதனுக்கு மிகப்பிரியமாயிருத்தலின், அதனைச்சோலையில் மன்மதனுக்கு விருந்துணவளிக்கக் கடல்தந்த அமிருதம் போலுமென உவமைகூறினர். இனி, இதற்கு - அச்சோலையினிடத்து மன்மதன் (இராவணனுக்கு) விருந்துசெய்தற்பொருட்டுக் கடலினின்று கொணர்ந்த அமிருதம்போல வென்று உரைப்பாரு முளர். வேரி - தேனுமாம். 'ஆர்கலியழுவந்தந்த வமிழ்தென' என்பதற்கு - கடலினூற்சூழப்பட்ட நிலவுலகப் பரப்புச் சித்தஞ்செய்துவந்த அமிருதம்போல வென்றலு மொன்று. தீரினும், உம் - இழிவு சிறப்பு. பி-மி:—[1]மருந்தென. (எஉ)

கசுச.—அத்தென்றலுகீத இராவணன் வருந்துதல்.

சாளரத் தூடு வந்து தவழ்தலுந் தரித்த றேற்ற
னீளரத் தங்கள் [1]சிந்தி நெருப்புக நோக்குங் [2]கண்ணன்
வாழ்மனை புகுந்த தாண்டோர் மாசுணம் வரக்கண் டன்ன
கோளுறக் கொதித்து விம்மி யுழையரைக் கூவிச் சொன்னன்.

(இ - ள்.) நின் அரத்தங்கள் சிந்தி நெருப்பு உக நோக்கும் கண்ணன் - மிக்க இரத்தத்துளிகள் சொரிந்து (அவற்றோடு) நெருப்புப்பொறிகளும் சிதறும்படி கோபித்துப்பார்க்கிற கண்களையுடையவனான இராவணன், சாளரத்து ஊடு வந்து தவழ்தலும் - (அத்தென்றல்) பலகணிவழியாய் (உள்ளே) வந்து மெல்லென உலாவியவளவிலே, தரித்தல் தேற்றான்-(அதனைப்) பொறுக்கமாட்டாதவனாய், வாழ் மனை புகுந்தது ஓர் மாசுணம் வர கண்டு அன்ன கோள் உற ஆண்டு கொதித்து விம்மி-(தான்)வாழும் வீட்டிற்குள் பெரியமலைப் பாம்பு நுழைந்துவர(அதனை)க்கண்டாற்போன்ற கொடுமைபொருந்த அப்பொழுது கொதிப்புற்றுக்கலங்கி, உழையரை கூவி சொன்னன்-தனது அருகிலுள்ள பரிசனங்களை யழைத்து ஒன்றுசொல்பவனானன்; (எ - று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

மாசுணம் - மலைப்பாம்பு. தென்றல் - பொதியமலையில் தோன்றிவருவ தென்று சொல்லப்படுதற்கேற்ப, அதற்கு மலைப்பாம்பு உவமைகூறப்பட்டது. அரத்தம்-ரக்த மென்ற வடசொல்லின் திரிபு. பி-ம்:—[1]சிந்த. [2]நீரான். ()

கசுரு.—இராவணன் வாயில்காவலரை யழைத்துவரச் சொல்லுதல்.

கூவலி னுயிர்த்த சின்னீ ருலகினைக் குப்புற் றென்னத்
தேவரி னொருவ னென்னை யின்னலுஞ் [1]செயத்தக் காயினு
மேவலி னன்றி [2]த்தென்ற [3]லெவ்வழி யெய்திற் றென்னுக்
காவலி னுழையர் தம்மைக் கொணருதிர் கடிதி னென்றான்.

(இ - ள்.) 'கூவலின் - (ஒரு) கிணற்றிலே, உயிர்த்த - தோன்றிய, சில் நீர்-சிறிது நீரானது, உலகினை குப்புற்று என்ன - உலகத்தை முழுத்தினுற் போல, தேவரின் ஒருவன் - தேவர்களில் ஒருவனுனை வாயு, என்னை இன்னலும் செயத்தக்கான் ஓ-என்னைத் துன்பமுஞ் செய்யத்தக்கவனுவனே! ஏவலின் அன்றி-(எனது) கட்டளையினுலல்லாமல், தென்றல் - தென்றற் காற்றானது, எ வழி - எப்படி, எய்திற்று - (இங்கு இப்பொழுது) சேர்ந்தது,' என்னு - என்று சொல்லி,—காவலின் உழையர்தம்மை கொணருதிர் கடிதின் என்றான் - காவற்றொழில் செய்யும் பரிசனங்களை விரைவில் அழைத்துக்கொண்டு வாருங்கள் என்று (தனது அருகிலுள்ள ஏவலாளரை நோக்கி இராவணன்) சொன்னன் ; (எ - று.)

கூவல்=கூபம்; வடசொல். உயிர்த்தல் - வெளிப்படுதல், ஊறுதல். சின்னீர் என்பதில், சில் என்பது - சிறுமைப்பண்பை யுணர்த்திற்று. தனது மிக்க பெருமையும் வாயுவினது மிக்க சிறுமையுந் தோன்ற, 'கிணற்றுநீர் உலகத்தை முழுகடித்தாற்போல ஒரு தேவன் என்னை வருத்துபவனுனன்' என உவமை கூறினன். முதலடி - இல்பொருளுவமை. இன்னலும், உம்-இழிவு சிறப்பு; இறந்தது தழுவிய எச்சமாகக் கொண்டால், அச்சமின்றி எனது எதிரில் அருகில் வந்தல்லாமல் துன்பமுஞ் செய்யத்தக்கவனுயினு னென்று பொருள்படும். தேவர்களை இருதிணையாலுங் கூறலா மாதலால், 'செய்யத்தக்கான்' என்றும், 'எய்திற்று' என்றுங் கூறினன். குப்புறுதல் - கவிந்துகொள்ளுதல். வாயில்காவலரை அழைக்கச்சொன்னது, தனது அனுமதி யின்றி வாயுவை உள்ளேவிட்ட குற்றத்தைப்பற்றி விசாரித்தற் கென்க. பி-ம்:—[1]செய்யத்தக்கான். [2]வந்திங்கு. [3]இவ்வழி, இவ்வழல். ()

கசுசு.—அழைத்து வரப்பெற்ற வாயில்காவலர் இராவணனுக்குச் சமாதானங் கூறல்.

அவ்வழி யுழைய ரோடி யாண்[1]டவர்க் கொணர்த லோடும்
வெவ்வழி [2]யமைந்த செங்கண் வெருவுற நோக்கி வெய்யோன்
செவ்வழி [3]தென்ற லோற்குத் [4]திருத்தினீர் நீர்கொ லென்ன
விவ்வழி யிருந்த காலைத் தடையவற் கில்லை [5]யென்றார்.

(இ - ள்.) அ வழி-அப்பொழுது, உழையர்-ஏவலாளர்கள், ஓடி - விரைந்துசென்று, ஆண்டு அவர் கொணர்தலோடும் - அவ்விடத்து வாயில்காவல்

செய்துநின்றவரை அழைத்துக்கொண்டு வந்தவடனே,—வெய்யோன் - கொடியவனுன இராவணன், வெம் வழி அமைந்த செம் கண்-கொடுமையான தன்மையமைந்த சிவந்த கண்களால், வெருவுஉற நோக்கி-அச்சமுண்டாம்படி பார்த்து,—தென்றலோற்கு நீர்கொல் செவ்வழி திருத்தினீர் என்ன-'தென்றல் வடிவமாக வந்த வாயுதேவனுக்கு நீரோ நேரே வழி விட்டீர்?' என்று வினவ,—இ வழி இருந்த காலை அவற்கு தடைஇல்லை என்றார் - '(நீவிர்) இவ்விடத்திலிருந்தபொழுது அவனுக்குத் தடையில்லையே' என்று கூறினர்.

'இவ்வழியிருந்தகாலைத் தடையவற்கில்லை' என்றது, பழைய வழக்கத்தை யெடுத்துக்கூறியது; இங்ஙனங் கூறியதன் கருத்து - நீவிர் சிங்காரத் தோட்டங்களில் வந்திருக்கிறபொழுது 'தென்றற்காற்றுக்குத் தடைசெய்ய வேண்டா; அவன் அஞ்சாமல் தடையின்றி உள்ளே வந்திடுக' என்று முன்பு ஙங்களுக்குக் கட்டளையிட்டிருத்தலால், இப்பொழுது அவனைத் தடைசெய்யாமல் இங்குவிட்டிட்டோ மென்பது. இனி, இதற்கு - காற்று உள்ளே நுழைந்து வருதற்கு இந்தப் பலகணிவழியிருக்கும்போது வாயில்காவலரான யாம் அவனுக்குத் தடைசெய்யக் கூடியதில்லையேயென்று கருத்துக் கொள்வாரு முளர். காலே=காலம். பி-ம்:—[1]அவற்கொணர்தலோடும், அவர்க்குரைக்கவந்தார், அவர்க்குணர்த்தலோடும். [2]அரக்கர்கோமான் [3]தென்றற்காறு. [4]திருத்தினீரென்கொல், திருத்தினீகொல். [5]என்றான்.

பலஏட்டுப்பிரதிகளில் இங்கே ஒருசெய்யுள் காணப்படுவது வருமாறு:—

வேண்டிய [1]நினைந்து செய்வான் விண்ணவர் வருவ தென்றல்
மாண்டது போலுங் [2]கொள்கை யானுடை வன்மை வல்லே
[3]தேண்டிநீர் திசைகடோறுஞ் சேணுற [4]விசையிற் செல்குற்
றீண்டிவன் றன்னைப் பற்றி யிருஞ்சிறை யிடுதி ரென்றான்.

பி-ம்:—[1]நினைத்துச். [2]என்னே யென்னுடை வலி நீரிப்போ. [3]தேண்டியே. [4]சென்று வல்லே. (எஉசு)

ககூஎ.—இராவணன் ஏவலரை நோக்கி 'மந்திரிகளை யழைக்க' எனல்.

காற்றினேன் றன்னை வாளா முனிதலிற் கண்ட தில்லை
[1]கூற்றுவந் தென்னை யின்னே குறுகுமாற் குறித்த வாற்றல்
வேற்றருங் கருங்கட் சீதை மெய்யருள் புனையே னென்ற
லாற்றலா லடுத்த தெண்ணு மமைச்சரைக் கொணர்தி ரென்றான்.

(இ - ள்.) காற்றினேன்தன்னை - வாயுதேவனை, வாளா முனிதலின் - வீணுக (நான்) கோபிப்பதனுல், கண்டது இல்லை-வரும்பயன் யாதும் இல்லை; குறித்த ஆற்றல்-(நான்)கருதியபடி,வேல் தரும் கரு கண் சீதை மெய் அருள் புனையேன் என்றல்-வேலாயுதம்போன்ற[நீண்டகூரிய]கரியகண்களையுடைய சீதையினது உண்மையான கருணையைப் பெறுதல் செய்யேனுயின், கூற்று இன்னே வந்து என்னை குறுகும்-யமன் இப்பொழுதே வந்து என்னைக் கிட்டுவான்; (ஆதலால், அதன்பொருட்டு);ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்

சரை கொணர்திர் - (தமது) கல்வியறிவின் வல்லமையால் தக்ககாரியத்தை ஆலோசிக்கவல்ல மந்திரிகளே அழைத்துவாருங்கள், என்றான்-என்று (இராவணன் ஏவலாளர்க்குக்) கட்டளையிட்டான்; (எ - று.)—ஆல்-அசை.

குறித்தவாற்றால் என்பதற்கு - யமன்தான் கருதியபடி யென்று உரைத்து, அதனை 'குறுகும்' என்பதனோடு இயைத்தலும் ஒன்று. குறுகும்-கொல்லவரும் என்றபடி. வேல்தரும், தரும்-உவமவுருபு. தன் மனத்தின்படி உருவெளித்தோற்றத்தில் சீதையினது பொய்யருளைப் பெற்றமை பயன்படாமையால், 'மெய்யருள்' என்றான். மெய்யருள்-மனத்தோடு பொருந்திய அருள்; மெய்யையும் அருளையும் என்றலும் ஒன்று. ஆற்றல்-புத்திபலம். **பி - மீ:—** [1]கூற்றும். (எஉசு)

கசுஅ.—ஏவலர் அழைக்க அமைச்சர் விரைந்து வருதல்.

ஏவின சிலதர் ஓடி யெவ்வெனு [1]மளவி லெங்குங்
கூவினர் கூவ லோடுங் குறுகினர் கொடித்[2]திண் டேரர்
[3]மாவினர் [4]சிவிகை மேலர் மும்[5]மதக் [6]களிற்றர் வையத்
தேவரும் வானந் தன்னிற் [7]றேவருஞ் சிந்தை சிந்த.

(இ - ள்.) ஏவின சிலதர் - (இவ்வாறு இராவணனால்) கட்டளையிடப்பட்ட ஏவலாளர்கள், ஏ எனும் அளவில் எங்கும் ஓடி - ஏயென்னுமளவில் [மிகவிரைவில்] பலவிடங்களிலும் ஓடிச்சென்று, கூவினர் - (மந்திரிகளே) அழைத்தார்கள்; கூவலோடும் - அங்ஙனம் அழைத்தவுடனே, (அவர்கள்), கொடி திண் தேரர் - கொடிகட்டிய வலியதேரி லேறினவர்களும், மாவினர்-குதிரைமேலேறினவர்களும், சிவிகை மேலர்-தண்டிகையி லேறினவர்களும், மும் மதம் களிற்றர்-மூவகைமதத்தையுடைய ஆண்யானைமே லேறினவர்களுமாய், வையம் தேவரும் வானந்தன்னில் தேவரும் சிந்தை சிந்த - நிலவுலகத்துத் தேவர்களான முனிவர்களும் வானுலகத்திலுள்ள தேவர்களும் மனங்குலையும்படி, குறுகினர் - (இராவணனிடம்) வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

'முனிவர்க்குத் தேவர்க்கும் என்ன கேடு சூழ்தற்கு இவர்கள் இராவணனிடம் செல்லலாயிற்றே?' என்னும் அச்சத்தால் அம்முனிவர்களும் தேவர்களும் மனமழிந்தன ரென்க. 'ஏயெனுமளவில்' என்றது, ஒருசொல் விழுக்காடு: "இம்மென்னுமுன்னே;" "அம்மென்றால்" என்றாற்போலக் கொள்க. மேலுலகத்தில் தேவர்போலப் பூலோகத்தில் அந்தணர் சிறப்புறுதலால், அவர்கட்கு 'வையத்தேவர்' என்று ஒருபெயராயிற்று; "மேலாத் தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும்" என்ற ஆழ்வாரருளிச்செயலும் காண்க: வையத்து எவரும் எனப் பதம்பிரித்தல் மோனைத்தொடைக்கு ஏற்காது. சிவிகை - ஸிபிகா என்ற வடசொல்லின் திரிபு. எவர் - ஏகாரவிறுவடியாப் பிறந்த பெயர், எஞ்சாமைப்பொருள் காட்டுவது. **பி-மீ:—** [1]தூணையின். [2]திண்டேர்மேல். [3]மாவினிற். [4]சிவிகைதன்மேல். [5]மழை. [6]களிற்றின்மீதில். [7]திசைதொறும். (எஉஎ)

கசூக.—மந்திரிகளுடன் ஆலோசித்து இராவணன் மாரீசனிடஞ்செல்லுதல்.

வந்த[1]மந் திரிய ரோடு [2]மாசற மனத்தி னெண்ணிச்
சிந்தையி [3]னினைந்த செய்யுஞ் செய்கையன் றெளிவி னெஞ்ச
னந்தரஞ் செல்வ தாண்டோர் விமானத்தி லாரு மின்றி
யிந்திய [4]மடக்கி நின்ற மாரீச னிருக்கை சேர்ந்தான்.

(இ - ள்.) சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன்-மனத்தில் நினைத்தசெயல்களை (த் தடையில்லாமற்) செய்துமுடிக்குந் தொழிலையுடையவனும், தெளிவு இல் நெஞ்சன் - (இவ்விஷயத்தில் இன்னதுசெய்யவேண்டுமென்னுந்) துணிவு பிறவாத மனமுடையவனுமான இராவணன்,—வந்த மந்திரியரோடு - (கீழ்க்கூறியபடி) வந்த மந்திரிகளுடனே (சலந்து), மாசு அற - குற்றமில்லாதபடி, மனத்தின் எண்ணி-மனத்திலே ஆலோசித்து,—ஆண்டு - அப்பொழுதே, அந்தரம் செல்வது ஓர் விமானத்தில் - ஆகாயமார்க்கத்திற் பறந்துசெல்லுந்தன்மையதான விமானமொன்றன்மேல்(ஏறி), ஆரும் இன்றி-வேறொருவரும் உடன்இல்லாமல் [தான் ஒன்றியாக], இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் இருக்கை சேர்ந்தான் - (பஞ்ச) இந்திரியங்களையும் அடக்கிக்கொண்டு (தவநிலையில்) நின்ற மாரீசனுடைய இருப்பிடத்தையடைந்தான்; (எ - று.)

மாசு அற - மந்திரிகளுடன் ஆலோசியாமல் தானே மனம்போனபடி செய்தனனென்ற பழிப்புக்கு இடமில்லாதபடியென்க; அல்லது, ஐயந்திரிபுகளாகிய குற்றமில்லாமல் துணிவுபிறக்க எனினுமாம். நினைந்த - பெயர். 'சிந்தையினினைந்த செய்யுஞ் செய்கையன்' என்றது - இராவணனது இயல்பாகவுள்ள ஆற்றலையும், 'தெளிவினெஞ்சன்' என்றது - தற்காலத்தில் அவனுக்குக் காமமோகத்தால் நேர்ந்த கலக்கத்தையுங் காட்டும். சிந்தையினினைந்த செய்யுஞ்செய்கையன் - மனத்தையடக்கும் ஆற்றலில்லாமல் அதுபோனபடி நடப்பவனுமாம். அந்தரஞ்செல்வது ஓர்விமானம்-புஷ்பக மென்னலாம். ஆருமின்றிச் சேர்ந்தா னென இயையும்; ஆருமின்றி இந்தியமடக்கிநின்ற என்று இயைத்து, யாரும் உடனில்லாமல் தனியே தவஞ்செய்துநின்ற என்றுங் கொள்ளலாம்; தவத்துக்கு ஏகாந்தம் இனிது. இந்தியம்=இந்திரியம். இந்தச்செய்யுளினீற்றில் சூர்ப்பணகைப்படலமுற்றும் என்று சிலபிரதிகளில் எழுதப்பெற்று, மேல் மாரீசன்வதைப்படலம் தொடங்குகின்றது.

பி-ம்:—[1]மந்திரிகளோடு, மந்திரிகளோது. [2]வசனமுமனத்தினெண்ணு. [3]நினைந்து. [4]அடங்கநின்ற. (எஅ)

கஎ0.—மாரீசன் இராவணனை எதிர்கொண்டு உபசரித்தல்.

இருந்தமா ரீச [1]னந்த வீரா வணனெய்த லோடும்
பொருந்திய [2]பயத்தன் சிந்தை பொருமுற்று வெருவு கின்றான்
கருந்தட [3]மலையன் னானை யெதிர்கொண்டு கடன்கள் யாவுந்
திருந்திய செய்து செவ்வித் திருமுக நோக்கிச் செப்பும்.

(இ - ள்.) அந்த இராவணன் எய்தலோடும்-அவ்விராவணன் வந்தவளவிலே,—இருந்த மாரீசன் - அங்கிருந்த மாரீசனெனவன், பொருந்திய பயத்தன் - அச்சமடைந்தவனும், சிந்தை பொருமுற்று வெருவுகின்றான் - மனந்திடுக்கிட்டுக் கலங்குகின்றவனுமாய், கரு தட மலை அன்னானை - கரியபெரிய மலைபோன்ற அவ்விராவணனை, எதிர் கொண்டு - எதிர்சென்றழைத்து, கடன்கள் யாவும் திருந்திய செய்து-(அவனுக்குச் செய்யவேண்டிய) கடமைகளாகிய உபசாரங்களையெல்லாம் செவ்வையாகச்செய்து, செவ்வி திரு முகம் நோக்கி - அழகுள்ள (அவ்விராவணனது) முகத்தைப் பார்த்து, செப்பும் - (சிலவார்த்தை) சொல்பவனானன்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவியிற் காண்க.

திருந்திய என்பதற்கு-திருந்த எனப் பொருள்கொண்டு, செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சமெனினும் அமையும். செவ்வி - பொலிவு. இரண்டாமடியினால், அரக்கர்தாமும் அஞ்சும்படியான இராவணனது கொடுமை விளங்கும்; அன்றியும், எப்பொழுதும் சகலபரிவாரங்களோடும் செல்லுந்தன்மையனான இராவணன் தனியே தனதுஇடத்துக்கு வந்தமை நோக்கி மாரீசன் இவனுக்கு என்னநேர்ந்ததோ வென்று மனங்கலங்குபவனுமினானென்க. கருந்தடமலை - வடிவோடு வலிமைக்கு உவமை.

பி-ம்:—[1]வந்த. [2]பயத்தின். [3]மலையினானை. (எஉக)

வேறு.

கஎக.—மாரீசன் இராவணனை 'நீ வந்த காரியம் என்?" என்றல்.

சந்த மலர்த்தண் கற்பக நீழற் றலைவற்கு
மந்தக னுக்கு மஞ்ச வடுக்கு மரசாள்வா
யிந்த வனத்தென் னின்ன லிருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி யென்றான் மருள்கின்றான்.

(இ - ள்.) மருள்கின்றான் - (தன்னிடம் இவன்வந்த காரணம் யாதோவென்று) மயங்குகின்றவனான மாரீசன், (இராவணனை நோக்கி), 'சந்தம் - அழகிய, மலர் - பூக்களையுடைய, தண்-குளிர்ச்சியான, கற்பகம்-கற்பகவிருட்சங்களின், நீழல் - நிழலில் வீற்றிருந்து அரசாளுகிற, தலைவற்கும்-(தேவர்) தலைவனான இந்திரனுக்கும், அந்தகனுக்கும்-யமனுக்கும், அஞ்ச-அச்சஞ்செய்யும்படி, அடுக்கும் - பொருந்திய, அரசு - அரசாட்சியை, ஆள்வாய் - நடத்துபவனே! (நீ இப்பொழுது), இந்த வனத்து-இத்தக்காட்டில், இன்னல்-துன்பந்தருவதான, என் இருக்கைக்கு - எனது இருப்பிடத்துக்கு, எளியோரின் வந்த-எளியவர்கள்போல (ப் பரிவாரமின்றித் தனியே) வந்த, கருத்து-நோக்கம், என் - என்ன? சொல்லுதி - சொல்வாய்', என்றான்-என்றுசொன்னான்.

ஆள்வாய்-விளி; ஆளுகிறவனெனினுமாம். இன்னலிருக்கையென்றது-தழைக்குடிசை [பர்ணசாலை] யை.இந்திரன் கற்பகச்சோலைநிழலிலிருந்து அரசுசெய்தலை, கீழ்ப் பாலகாண்டத்தில் "இன்றளிர்க்கற்பக நறுந்

தேனிடைதுளிக்கு நிழலிருக்கை யிழந்து போந்து'' என்றதனாலும் அறிக. இந்திரனையும் யமனையும் எடுத்துச்சொன்னது, தேவராசனும் அழித்தல்தொழில் நிகழ்த்துபவனு மாதலினென்க; உம்மைகள் - எண்ணுப்பொருளோடு உயர்வுசிறப்புப் பொருள்பட நின்றன.

இதுமுதற் பதினேழு கவிகள் - பெரும்பாலும் மூன்றுவது விளச்சீரும் ஐந்தாவது மாங்காய்ச்சீரும் மற்றையவை மாச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட **கலிநிலைத்துறைகள்.** (எஉ)

களஉ.—இதுமுதல் நான்கு கவிகள் ஒருதொடர்:-இராவணன் கூறும் விடை.

[1]ஆன தனைத்து மாவி தரித்தே னயர்கின்றேன்
போனது பொற்பு மேன்மையு மற்றென் புகழோடும்
யான தனக்கின் றெங்ங னுரைக்கே [2]னினிதென்னு
வான வருக்கு [3]நாண தடுக்கும் வசை [4]மன்னோ.

(இ - ள்.) ஆன தனைத்தும் ஆவி தரித்தேன் - (என்னுல்) இயன்றவளவும் (பிரயாசப்பட்டு) உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தேன்: அயர்கின்றேன்- (இப்பொழுது அதுவும் அரியதாம்படி) தளர்கிறேன்; என் - எனது, பொற்பும் - பொலிவும், மேன்மையும் - பெருமையும், புகழோடும் - கீர்த்தியுடனே, அற்று போனது - ஒழிந்துபோய்விட்டது; அது - அங்ஙனமாதற்குக்காரணமாய்நேர்ந்தசெயலை, யான் உனக்கு இன்று எங்ஙன் இனிது உரைக்கேன் - நான் உனக்கு இப்பொழுது எவ்வாறு இனிமையாகக் கூறுவேன்? என்னு - என்று சொல்லி,—அது - அச்செயல், வானவருக்கும் நாண் அடுக்கும் வசை மன்னோ - தேவர்களுக்கும் (நாம்) இலக்சைப் படும்படியான பழிப்பை யிகாப்பதன்றோ? (எ - று.)

இதுமுதல் நான்கு கவிகள் குளகமாதலால், இக்கவியின் மூன்றுமடியில் 'என்னு' என்ற இறந்தகால வினையெச்சம், களு-ஆங் கவியில் வரும் ''என்றான்'' என்ற முற்றைக் கொண்டு முடியும்.

பொற்பும் மேன்மையும் போனது - ஒருமைப் பன்மை மயக்கம்; தனித்தனி போன தென்க. மற்று என எடுத்து, அசை யெனினுமாம். மற்று என்ன எடுத்து, இன்னும் ஆகவேண்டுவது யாது உளது? ஒன்றுமில்லையே யென்னுங் கருத்துப்பட வுரைப்பினும் அமையும். அன்றியும், பொற்பும் போனது: மேன்மையும் புகழோடு அற்றென் [அற்றேன்]என எடுத்துப் பொருள்கொள்ளுதலும் ஒன்று; இவ்வுரைக்கு, அற்றென் என்பது - 'என்' விகுதிபெற்ற தன்மையொருமை யிறந்தகாலமுற்று. மூன்றுமடி - வாயினுற் கூறவுங்கூடாத கொடுமையுடையது அது என்றவாறு. இனிது உரைக்கேன்- நன்றுகவிவரித்துக் கூறுவேன் என்றபடி. என்னு என்பதை என் நா எனப் பிரித்து, எனது நாவினுல் எவ்வாறு கூறுவேன் என்பாரும் உளர். வானவருக்கும்-நமக்குமுன் நாணமடைகின்றவர்களுக்கும் என்றவாறு. வானவருக்கும் நாணுக்கும் வசை - நமக்கு அஞ்சித் தலைசாய்த்திருக்கிற தேவர்களுக்கும்

நாம் அஞ்சித் தலைசாய்க்கும்படியான நாணத்தை யுண்டாக்குகிற அபகீர்த்தி யாகுமென்க. தனைத்து—தனை - அளவு; அதன்மேல் து - சாரியை, த்- சந்தி. ஆனது அனைத்தும் எனப் பிரித்து, எனக்கு எல்லாம் ஆய்விட்டது என்று உரைப்பர் ஒருசாரார்: அதற்குக் கருத்து - எல்லா நன்மைகளும் போயின என்றும், எல்லாத் தீமைகளும் சேர்ந்தன என்றுமாம். [1]ஆனதனக்கும் ஆவிதரித்தேன் என்ற பாடத்துக்கு-திக்கஜங்களுக்கும் பின்னிடாது உயிர்தாங்கிநின்ற யான் இப்பொழுது இங்ஙனம் தளர்கிறேன் என உரைகொள்வர். **பி-மீ:**—[2]இனியென்ன, இனிதின்ன. [3]நாணம். [4]அம்மா. (எஉக)

கஎசு. வன்மை தரித்தோர் மானுடர் மற்றங் கவர்வாளா
னின்மரு கிக்கு நாசி யிழக்கு நிலை[1]நேர்ந்தா
ரென்மர புக்கு நின்மர புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி [2]யெற்றே புகல்வேலோய்.

(இ - ள்.) வேலோய்-வேலாயுதத்தையுடையவனே! மானுடர் மனிதர்கள், வன்மை தரித்தோர் - வலிமைபூண்டார்கள்; மற்று - மேலும், அவர் - அவர்கள், வாளால் - (தமது) வாளினால், நின் மருகிக்கு நாசி இழக்கும் நிலை- உனது மருமகளான சூர்ப்பணகைக்கு மூக்கையிழந்துவிடும்படியான நிலைமையை, நேர்ந்தார்-செய்தார்கள்; தெரிப்பின்-ஆராய்ந்து கூறுமிடத்து, என் மரபுக்கும்-எனது வம்சத்துக்கும், நின் மரபுக்கும்-உனது வம்சத்துக்கும், இதன் மேல் ஓர் புன்மை-இதனினும் மேலான ஓரிழிவு, இனி வேறு எற்றே-இனி வேறு என்ன இருக்கிறது? புகல் - சொல்வாய்; (எ - று.)—அங்கு - அசை.

இயற்கையில் வலிமையில்லாத மானிடர் புதிதாக வலிமையுடையராகிய தோடு உன்மருமகளது மூக்கையறுக்கும் நிலைமையையும் அடைந்தார்களென்பது, முன்னிரண்டடிகளின் கருத்து. மாரீசன் இராவணனுக்கு மாமன் முறைமை பூண்டவனாதலால், சூர்ப்பணகையை 'நின்மருகி' என்றான். மருகி - இங்கே, உடன் பிறந்தவளது மகள்: ஆகவே, 'நின் மரபு' என்றது - தாய்மரபையும், 'என்மரபு' என்றது - தந்தை மரபையுமாம். தாடகைபுத்திரர்களான சுபாகுமாரீசர்கள் இராவணனது மாதாமகனான சுமாலியை யடுத்து அவனுக்கு மக்கள்முறைமைபூண்டு அதனால் இராவணனுக்கு மாமன்முறைமை யமைந்தன ரென்பது அறிக. எற்று-எது: விளிவடிக் குறிப்புமுற்று. **பி-மீ:**—[1]நேர்ந்தால், வந்தால். [2]உண்டோபுகல், ஒன்றோபுகழ். (எஉஉ)

கஎச. திருகு [1]சினத்தார் முதிர மலைந்தார் சிறியோர்நாள்
[2]பருகின ரென்றுல் [3]வென்ற நலத்தின் பரியன்றே
[4]விருகை சுமந்தா னினிதி னிருந்தா னிகலவேலுன்
மருக ருலந்தா ரொருவன் மலைந்தான் வரிவில்லால்.

(இ - ள்.) ஒருவன் - ஒருமனிதன், வரி வில்லால் - கட்டமைந்த வில்லைக்கொண்டு, திருகு சினத்தார் - (சூர்ப்பணகை மூக்கறுபட்டமையை யறிந்து) முதிர்ந்த கோபங்கொண்டவர்களாய், முதிர மலைந்தார் - மிகுதியாகப்

போர்செய்தவர்களான, சிறியோர்-(எனது) தம்பிமாரின் [கரன் முதலியோரின்], நாள் - ஆயுள்நாளை, பருகினன்-ஒழித்திட்டான், என்றல்—, வென்ற நலத்தின் பழி அன்றே - (இதுவரையிலும்) வெற்றியேகொண்ட (நமது) பெருமைக்குப்பழிப்பன்றே? இகல் வேல் உன் மருகர் உலந்தார் - வலிய வேலாயுதத்தையுடைய உனது மருமக்கள் இவ்வாறு அழிந்தார்கள்; (அங்ஙனம் அழியும்படி அதற்கு யாதொருபரிகாரமுஞ்செய்ய முயலாமையால்), இருகை சுமந்தான் இனிதின் இருந்தான்-(அந்தமனிதனே) இரண்டுகைகளையேதாங்கிச்சுகமாக இருக்கிறான்; (இது என்னே!) (எ - று.)

[1]இருகை சுமந்தா யினிதினிருந்தாய் என்ற பாடத்திற்கு - தமது சுற்றத்தார்க்குத் தீங்குசெய்த பகைவர்க்கு எதிர்செய்யாத கைகள் இருந்தும் பயனில்லை; அவை வீண்பாரம் மாத்திரமே யென்று கருத்துக் கூறுக. இனி, இத்தொடர்க்கு - இரண்டு கைகளையுந் தலைமேற்கொண்டு இனியதவநிலையில் இருந்தாய் என்று உரைப்பாரு முளர். கரன், தூஷணன், திரிசிரஸ் என்பவர் இராவணனுக்குத் தம்பிமுறைமை யுடையவ ராதலால், சிறியோ ரென்றும் உன்மருக ரென்றுங் குறிக்கப்பட்டனர். நாள் பருகுதல் - ஆயுளை யொழித்தல்: உண்ணுதது உண்பதுபோலச் சொல்லப்பட்ட மரபுவழுவமைதி. 'வென்றநலத்தின் பழியன்றே' என்பதற்கு - வெற்றிகொண்ட அவர்களுடைய நன்மையால் நமக்குப் பழியன்றே என்றலும் ஒன்று. சுமந்தாய் - முற்றெச்சம். பி-மீ:—[1]சினத்தான். [2]பருகினர். [3]வென்றிநலத்தில். (எஉ)

கஎடு. வெப்பழி யாதென் [1]னெஞ்ச [2]மூலந்தேன் விளிகின்றே
[3]னெப்பழி வென்றே போர்[4]செய லொல்லே னுடன்வாழுந்
துப்பழி செவ்வாய் வஞ்சியை வௌவத் துணைகொண்டிட்
டிப்பழி [5]நின்னுற் றீரிய வந்தே னிவணென்றான்.

(இ - ள்.) வெப்பு அழியாது - (கீழ்க்கூறியவற்று ளுண்டான) கொதிப்புத்தணியாமல், என் நெஞ்சம் உலந்தேன்-(எனது)மனம் அழியப்பெற்றேன்; விளிகின்றேன் - மரணவேதனைப்படுகிறேன்; (ஆயினும்), ஒப்பு அழிவு என்றே போர் செயல் ஒல்லேன் - (மனிதர்கள்) எனக்கு ஈடில்லையென்ற காரணத்தால்(அவர்களோடு)போர்செய்தற்கு உடன்படுகிறேனில்லை;(மற்று), உடன் வாழும் - அவர்களுடன் வாழ்கிற, துப்பு அழி செம் வாய் வஞ்சியை-பவழமும் ஒப்பாகாமற் கெடும்படியான சிவந்த வாயையுடைய வஞ்சிக்கொடிபோன்ற மெல்லிய பெண்ணை, வௌவ - எடுத்துக்கொண்டு வருதற்கு, துணை கொண்டிட்டு - (உன்னைத்) துணையாகக்கொண்டு, இப் பழி நின்னுல் தீரிய - இந்தப்பழிப்பை உன்னுல் தீர்த்துக்கொள்ள, இவண் வந்தேன் - இவ்விடத்து வந்தேன், என்றான் - என்று (இராவணன் மாரீசனைநோக்கிக்) கூறினான்; (எ - று.)

விளிகின்றேன் என்றது, அமங்களமாக வாயில் வந்ததுமாம். 'ஒப்பு அழிவு என்று' என்றது - எளியவர்களான மனிதர்களைச் சமமாகக்கொண்டு எதிர்த்துப் போர்செய்தல் புகழுக்குக் கேடாமென்று எண்ணி யென்க. 'துப்

பழி' என்பதில், அழிதல்-தோற்றல்; உவமவுருபுமாம். வஞ்சி-உவமவாகுபெயர். தீரிய - செய்யிய வென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; இவ்வினையெச்சம், இங்கே, தீர்க்க எனப் பிறவினைப்பொருளது. இப்பழிதீர்தல் - பழிக்குப்பழிவாங்குதல்; என்னுடன்பிறந்தமகளை அவர்கள் மானபங்கஞ் செய்ததற்கு ஈடாக அவர்களுடன்வாழும் மகளை நான் மானபங்கஞ்செய்தல். **பி-ம்:**—[1]நெஞ்சும். [2]உலர்ந்தேன். [3]ஒப்பிலரென்றே. [4]செய. [5]நின்னில். ()

கஎசு.—அதுகேட்ட மாரீசன் உடன்படாது மறுத்துக் கூறத்தொடங்குதல்.

இச்சொ லனைத்துஞ் சொல்லி யரக்க னெரிகின்ற
கிச்சி [1]னுருக்கிட் டுய்த்தன னென்னைக் [2]கிளராமுன்
கிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தித் [3]தெருமந்தா
னச்ச மகற்றிச் செற்ற மனத்தோ டறைகின்றான்.

(இ - ள்.) எரிகின்ற கிச்சின் - எரிகிற நெருப்பிலே, உருக்கு இட்டு - இரும்பைப் போகட்டு(க் காய்ச்சி), உய்த்தனன் என்ன-(அதனைச்) செலுத்தினாற்போல, அரக்கன் - இராவணன், இ சொல் அனைத்தும் சொல்லி - இப்படிப்பட்ட சொற்களையெல்லாம் கூறி, கிளரா முன் - தூண்டாதமுன்னே [தூண்டியவுடனே யென்றபடி], (மாரீசன்), சிச்சி என தன் மெய் செவி பொத்தி - சீச்சீயென்றுகூறித் தனது உடம்பிலுள்ள காதுகளை மூடிக்கொண்டு, தெருமந்தான் - மனஞ்சுழன்று, (பின்பு), அச்சம் அகற்றி - பயத்தை நீக்கி, செற்றம் மனத்தோடு - கோபங்கொண்ட மனத்துடனே, அறைகின்றான் - (சிலவார்த்தை) சொல்பவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த பதினெருகவிகளிற் காண்க.

இருப்பு நாராசத்தை நெருப்பிலிட்டுக் காய்ச்சி அதனைக் காதினுள்ளே செலுத்தினாற்போல மிகவருத்தந்தரும்படி இராவணன் இவ்வார்த்தைகள் பலவற்றையுங் கூறி மாரீசன்மனத்தைக் கிண்டியெழுப்பத் தொடங்குமளவிலேயென்பது, முதலிரண்டடியின் கருத்து. கிச்சு-க்ருஷாது என்ற வடசொல்லின் திரிபென்பர். உருக்கு - உருகுந்தன்மைய தென்பது பற்றிய காரணக்குறி. கஎ0-ஆங் கவியில் "பொருந்திய பயத்தன் சிந்தைபொருமுற்று வெருவுகின்றான்" என்றதை நோக்கி, இங்கு 'அச்சமகற்றிச் செற்றமனத்தோ டறைகின்றான்' என்றார். **பி - ம்:**—[1]அரக்கிட்டு. [2]கிளர்வான்முன். [3]தெருண்மைந்தன். (எஅ)

கஎஎ.—இதுமுதற் பதினெரு கவிகள் ஒரு தொடர்:—மாரீசன் எதிர்மறுத்துக் கூறும் வார்த்தை.

மன்னு நீகின் வாழ்வை முடித்தாய் மதியற்ற
யுன்னு லன்றீ தூழ்வினை யென்றே யுணர்கின்றேன்
[1]னின்னு வேனு மியானி துரைப்ப னிதமென்னைச்
சொன்னு னன்றே யன்னவ னுக்குத் துணிவெல்லாம்.

(இ - ள்.) மன்னு - அரசனே! நீ இன் வாழ்வை முடித்தாய் - நீ உனது வாழ்க்கையை முடித்துவிட்டாய்; மதி அற்றாய்-அறிவுகெட்டாய்; ஈது-இது, உன்னுல் அன்று-உன்னுலே யுண்டானதன்று; ஊழ்வினை என்றே உணர்கின்றேன்-விதிப்பயனுல் விளைந்ததென்றே எண்ணுகிறேன்; இன்னு(து) எனும்-(நான்) சொல்வது உனக்கு இனிதாகத் தோன்றுதாயினும், இது இதம்-இந்த நன்மையைத் தருஞ்சொல்லே, (உனக்கு), உரைப்பன் - (நான்) கூறுவேன், என்னு - என்றுசொல்லி, (மாரீசன்), அன்னவனுக்கு - அவ்விராவணனுக்கு; துணிவு எல்லாம் - உறுதிதரும் இதமொழிகள் பலவற்றையும், சொன்னுன் - கூறுபவனுனன்; (எ - று.)—அவற்றை அடுத்த பத்துக்கவிகளிற் கூறுகிறார்.

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில், தீமைபுரிந்தொழுகுவார்" என்றபடி பிறர்மனைவியை விரும்புவோர் அறம்பொருளின்பங்களாகிய பயனைச் சிறிதும் அடையமாட்டாமல் பலவகைத்தீமையையே யடைதலால் 'இன்வாழ்வை முடித்தாய்' என்றும், "எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்றபடி பிறனில் விழைவோர் காமமயக்கத்தால் தம்பிழையைச் சிறிதும் அறியாமல் எல்லாப் பெருமையையும் இழத்தலால் 'மதியற்றாய்' என்றுங் கூறினுன். 'உன்னுல் அன்று' என்றது, சகல வேதசாஸ்திரங்களின்பொருளே நன்குஉணர்ந்த புத்திமானனீ கருதும் இயல்பின தன்று இது என்றபடி. [1]'இன்னு நெஞ்ச னேனு முரைப்பலிதம்' என்ற பாடத்திற்கு - நான் (முன்பு) தீயசிந்தை யுடையவனுயிருந்தாலும் (இப்பொழுது) நல்லன கூறுவே னென்றும், நீ சொல்லும் வார்த்தையைக் கேட்டு நான் வருத்தங் கொண்டுள்ளேனுயினும் உனக்கு நன்மையைக் கூறுவேனென்றும் பொருள். துணிவு - உறுதிதருவனவற்றிற்குக் காரியவாகுபெயர். இனி, துணிவு என்பதற்கு-சான்றோர் துணிந்து செய்யத்தக்கதெனக் கொண்ட நல்வினைய மென்றும், தனது நிச்சயமென்றும் பொருள் கொள்ளலாம். முடித்தாய் - விரைவுத் தெளிவும் பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. ஈதும் - வடசொல். அன்றே - தேற்றம். (எஉசு)

கஎஅ. அற்ற கரத்தோ டுன்றலை [1]நீயே யனன்முன்னிற்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
வுற்றுயி ருள்ளே தேய வுலந்தாய் [2]பினையன்றே
[3]பெற்றனை செல்வம் [4]பின்ன திகழ்ந்தாற் பெறலாமோ.

(இ - ள்.) அற்ற-(வாள்கொண்டு) அறுக்கப்பட்ட, உன் கரத்தோடு தலை-உனது கைகளையும் தலைகளையும், அனல் முன்னில்-வேள்வித்தீயினிடத்தில், நீயே—,பற்றினை உய்த்தாய்-கொண்டு செலுத்தி [வேள்விசெய்தும்], பல்பல காலம்-மிகப்பலகாலம், பசிகூர உற்று-பசிமிகும்படி பொருந்தி, உயிர் உள்ளே தேய உலந்தாய் - உயிர் உடலினுள்ளே வாடும்படி வருந்தி [தவஞ்செய்தும்], பினை அன்றே - அதன்பின்பல்லவா, செல்வம் பெற்றனை - மிக்கபாக்கியத்

தைப் பெற்றும்; அது-அந்தப்பாக்கியத்தை, பின்-பின்பு, இகழ்ந்தால்-அலட்சியஞ்செய்து இழந்துவிட்டால், பெறல் ஆமோ-மீண்டும் அடைய முடியுமோ? [முடியாதன்றே என்றபடி]; (எ - று.)

இராவணன் தவஞ்செய்தற் பொருட்டுக் கோகர்ணச்சிரமஞ் சேர்ந்து அங்கு ஓராயிரம் வருஷகாலம் உபவாசமிருந்து தவம்புரிதலும், அதன்முடிவில் தனது தலையொன்றையும் கைகளிரண்டையும் அறுத்து அக்கினியில் ஓமஞ்செய்தலுமாக இப்படி ஒன்பதினாயிரம் வருடத்தில் ஒன்பது தலைகளையும் பதினெட்டுக் கைகளையும் அறுத்து அனலிலிட்டபின் ஆயிரவருஷகாலம் பட்டினியிருந்து அப்பால் மிச்சமாய்நின்ற ஒரு தலையையும் இருகைகளையுந் துணிக்கத் தொடங்கியவளவில், பிரமதேவன் அவனுக்குப் பிரதியக்ஷமாய், அறுபட்ட தலைகளெல்லாம் மீண்டும் முளைத்திடும்படி வரங்கொடுத்து, மற்றும் அவன் வேண்டிய வரங்களெல்லாவற்றையுந் தந்தருளினனென வரலாறு அறிக. இப்படி எவ்வளவோ சிரமப்பட்டு அருந்தவஞ்செய்து நீ பெற்ற இப் பெருஞ்செல்வத்தைப் பிறனில் விழைதலால் எளிதில் இழக்கலாகாது என்று உறுதிகூறினன். நீயே பற்றினையுய்த்தாய் - அறுபட்ட கைகளையும் தலையையும் அறுபடாத கைகளாற் பிடித்துப் போகட்டா யென்றபடி. பி-மீ:- [1]தியேயனன்முன்றில். [2]உழை. [3]பெற்றன. [4]பின்னும். (எஙஎ)

கஎங. திறத்[1]திற ஞலோ செய்தவ முற்றித் திருவுற்றாய்
மறத்திற ஞலோ [2]சொல்லுதி சொல்லாய் மறைவல்லோ
யறத்திற ஞலே யெய்தினை யன்றே வதுநீயும்
புறத்திற ஞலே பின்னு மிழக்கப் புகுவாயோ.

(இ - ள்.) சொல் ஆய் மறை வல்லோய்-சொற்களை ஆராய்ந்தற்கு உரிய வேதங்களில் வல்லவனே! திறம் திறனுலோ-மேலான தருமமார்க்கத்தினுலோ, (அன்றி), மறம் திறனுலோ-அதருமவழியினுலோ,(நீ), செய் தவம் முற்றி திரு உற்றாய் - செய்தற்குரிய தவத்தைச் செய்து முடித்து மேலானபாக்கியத்தை யடைந்தாய்; சொல்லுதி - சொல்வாய்: அறம் திறனுலே எய்தினை அன்றே-தரும மார்க்கத்தினுலேயே (நீ செல்வத்தை) அடைந்தாயன்றே? அது - அச் செல்வத்தை, நீயும்—, புறம் திறனுலே பின்னும் இழக்க புகுவாயோ - (அந்தத்தருமத்தினும்) வேறுபட்டதான அதருமவழியால் மீட்டும் இழந்து விடத் தொடங்குவாயோ? (எ - று.)

இராவணன் வேதங்களையெல்லாம் ஓதியுணர்ந்து அவற்றிற் சிலஒழுங்குகளையுஞ் செய்துள்ளா னென்பது பிரசித்தம்; ஆனதுபற்றி, 'சொல்லாய் மறை வல்லோய்' என விளிக்கப்பட்டான். நீயும் என்ற உயர்வுசிறப்பும்மையும், அப்படிப்பட்ட அறிவுடைமையையே காட்டும். நீ அடைந்த பயன் அறநெறியினு லென்றே உனக்குத் தெரியுமாகையால், அந்நெறிதவறின் அப் பயனுந் தவறுமென உணர்ந்து அந்நெறிதவறுது நிற்பா யென்பான், இவ்வாறு கூறினன். பி - மீ:—[1]திறனுலே. [2]கொல்லுதிகொல்லாம். (எஙஅ)

கஎ0. நாரங் கொண்டார் நாடு [1]கவர்ந்தார் [2]நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொரு வர்க்காய் மனைவாழுந்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தா
னீருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா.

(இ - ள்.) நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் - (தம்மிடத்து) அன்பு கொண்டுள்ளாரது நாட்டைக் கவர்ந்துகொண்டவரும், நடை அல்லா வாரம் கொண்டார் - நீதிநெறிக்கு ஒத்ததல்லாத குடியிறைப்பொருளை வலியவாங்கியவரும், மற்று ஒருவர்க்கு ஆய் மனை வாழும் தாரம் கொண்டார்-வேறொருவர்க்கு உரிமையாய் அவர்வீட்டில் வாழ்கிற மனைவியாளைத் தம்வசப்படுத்திக் கொண்டவரும், என்ற இவர்தம்மை-என்ற இவர்களை, தருமம் தான் ஈரும் - தருமதேவதை தானே அறுத்து அழிக்கும்; கண்டாய் - (இதனை நீ) அறிவாய்; ஐயா - ஐயனே! கண்டகர் உய்ந்தார் எவர் - துஷ்டர்களுள் (நீமையடையாமல்) பிழைத்தவர் யார்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

"நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார்' என்றது-நம்பிக்கைத் துரோகமாகத் தம்மிடத்து அன்பு செய்தாரது நாட்டைக் கொள்ளைகொண்டவர் என்ற வாறு. நடையல்லா வாரம் கொள்ளுதல் - ஆறிலொருகடமைக்கு அதிகம் வாங்குதல்; இனி, இத்தொடர்க்கு-நியாயவழிக்கு மாறுகப் பக்ஷபாதங்கொண்டவர் என்று உரைப்பாரு முளர். கண்டகர் - முட்போன்றவர்; பிறர்க்கு உபத்திரவஞ் செய்பவரென்றபடி. கண்டாய் - தேற்றம். ஐயா வென்றது, அன்புபற்றிய விளி. பிறன்மனை விழைபவர் அறக்கடவுளால் தவறாமல் தண்டிக்கப்படுவ ரென்பதைக் கூறுவான் அவர்க்கு இனமானவர்களையும் எடுத்துக்காட்டினன். பி-ம்:—[1] துறந்தார். [2]நடுவில்லா. (எஉக)

கஎக. அந்தர முற்ற னகலிகை பொற்பா லழிவுற்ற
னிந்திர னெப்பா ரெத்தனை யோர்தா [1]மிழிபுற்றார்
செந்திரு வொப்பா ரெத்தனை யோர்நின் றிருவுண்பார்
மந்திர மற்ற ருற்ற துரைத்தாய் மதியற்றாய்.

(இ - ள்.) அந்தரம் உற்றான்-சுவர்க்கலோகத்தை(த் தனது) உரிமையாக அடைந்துள்ளவனான இந்திரன், அகலிகை பொற்பால் அழிவு உற்றான்-அகலியையினது அழகினால் தீமைபடைந்தான்; இந்திரன் ஒப்பார் எத்தனையோர் தாம் - அவ்விந்திரன்போன்றவர் மற்றும் எவ்வளவுபேர்கள், இழிபு உற்றார் - (பிறர்மனைவிரும்புதலால்) இழிவையடைந்தவர்கள்? செம் திரு ஒப்பார் எத்தனையோர் நின் திரு உண்பார் - செந்நிறமுடைய இலக்குமியையொக்கும் அழகிய மகளிர் எவ்வளவுபேர்கள் உனது அழகை அனுபவிப்பவர்கள்? (அப்படியிருக்க), மந்திரம் அற்றார் உற்றது உரைத்தாய்-ஆலோசனையில்லாதவர்கள் கூறுதற்குஏற்ற வார்த்தையை (நீ) கூறினாய்; (ஆதலால்), மதி அற்றாய் - அறிவுகெட்டாய்; (எ - று.)

அகலிகை - கௌதமமுனிவனது மனைவி; சதகமகாராசாவுக்குப் புரோகிதனுகிய சதானந்தமுனிவனது தாய். பிரமதேவன் பூர்வத்தில் ரூபத்தினும்

குரலிலும் பேதமில்லாமல் ஒருபடிப்படவே பிரஜைகளைப் படைத்துவந்தான்; பின்பு, ஒருவர்க்கொருவர் வேற்றுமையின்றி யிருப்பது நல மன்றெனக் கருதி, முன்படைத்த பிரசைகளுக்கு அந்தந்த அங்கங்களிலுள்ள சிறப்பை யெல்லாம் எடுத்து: அதைக்கொண்டு அழகு மிகுந்த பெண்ணொருத்தியைச் சிருஷ்டித்து, அவளுக்கு அஹல்யையென்றுபெயரிட்டான். ஏனெனில்,— ஹலம் என்றால் விரூபம், அதாவது - கண்ணுக்கு இனியாதது: அதனலுண்டானது - ஹல்யம், அதாவது-அழகின்மை; அதில்லாதவளாதலின் அஹல்யாவென்று காரணப்பெயர் தந்தனன். அப்பொழுது இந்திரன் இம்மேலான பெண்ணுக்குத் தக்க கொழுகன் மேலான தானேயன்றி வேறில்லை யென்று செருக்குற்றிருந்தான்; இங்ஙனம் இந்திரன் பிரமனது சங்கற்பத்திற்கு மாறுக எண்ணிக் கருவித்திருந்தனனதலால், படைத்தற்கடவுள் அவளை அவனுக்குக்கொடாமற் கௌதமமுனிவனிடங்கொடுத்து 'இவளைப் பாதுகாத்துவருக' எனக் கட்டளையிட்டான்; அவ்வாறே அம்முனிவன் வெகுகாலம் பாதுகாத்துப் பின்பு பிதாமகக்கடவுளிடங் கொணர்ந்துவிட்டான்; கௌதமனது மனஞ் சபலப்படாம லிருந்ததையும், அவனது தவநிட்டையையுங் கண்டு, நான்முகக்கடவுள் உகந்து அம்முனிவனுக்கே அவளை மனைவியாக்கினன்; இந்திரனை பொறுமைகொண்டு வேற்றுருவத்தால் அவளைக் கற்பழிக்கக் கருதினன்: இவ்வாறு பலநாளாய்ப் பெருங்காதல் கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுராத்திரியில் கௌதமனுச்சிரமத்துக்கு அருகே வந்து பொழுதுவிடியுங்காலத்துக் கோழிகூவுவதுபோலக் கூவ, அதுகேட்ட முனிவன் சந்தியாகாலஞ் சமீபித்துவிட்டதெனக் கருதி யெழுந்து காலைக் கடன் கழிக்கும்பொருட்டு நீர்நிலைநோக்கிப் புறப்பட்டுச்செல்ல, அப்பொழுது இதுவேசமயமென்று இந்திரன் அம்முனிவனுருக்கொண்டு ஆச்சிரமத்துட் சென்று இவளோடு கலக்கையில், இவளும் 'தன்கணவனல்லன், இந்திரன்' என்று உணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அந்நே ஞானக்கண்ணு லறிந்து உடனே மீண்டுவந்த அம்முனிவன் அவளைக் கருங்கல்வடிவ மாம் படியும், இந்திரனை உடம்புமுழுவதிலும் ஆயிரம் பெண்குறி யடையும்படியுஞ் சபித்து, உடனே அவர்கள் அஞ்சிநடுங்கிப் பலவாறு வேண்டிக் கொண்டதற்கு இரங்கி, முறையே, 'ஸ்ரீராமனது திருவடிப்பொடி படுங்காலத்து இக்கல் வடிவம் நீங்கித் தன்னுருவம் பெறுக' என்றும், 'அப்பெண்குறிகள் பிறர்க்குக் கண்களாகப் புலப்படுக' என்றும் அவர்களுக்கு அநுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவமாய்க் கிடந்த அகலியை, ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திரனோடு மிதிலைக்குச்செல்லும்போது ஸ்ரீராமனது திருவடித்துகள் பட்டமாத்திரத்தில் சாபம்நீங்கி இயற்கையுருவ மடைந்தா னென்பது, **முதலடியின் கதை.** கௌதமன் இந்திரனை ஆண்குறிபிழக்கும்படியும், அகலியையை அரூபியாகஉணவில்லாமற் பலநாள்சாம்பலிலே கிடக்கும்படியுஞ் சபித்தனனென்றும், இந்திரனைப் பகைவன்கையிலே அகப்பட்டுப்பேரவமானமடையும்படி சபித்தனனென்றும், இன்னும் சிறிதுவேறுபடத் தியும் இவ்வாறு நூல்களிற் கூறப்படும்.

இரண்டாமடி, குபேரன் முதலியோரைக் கருதிக் கூறியது. மூன்றாமடி-உன்கருத்துக்கு ஒத்து உன்னுடன் இருந்து இன்பநுகரும் மகளிர் பலர் இருக்கின்றனரே; அங்ஙனமிருக்கவும், நீ திருப்திகொள்ளாமல் இங்ஙனம் மேன்மேல் வீணைசைகொள்ளுதல் பெருங்குற்றமன்றே வென்றவாறு. பி-ம்:—[1]இயல்பற்றார். (எசo)

கஅஉ. செய்தா யேனுந் தீவினை யோடும் பழியல்லா
லெய்தா [1]தெய்தா தெய்தி னிராம னுலகீன்றான்
வைதா லன்ன வாளிகள் கொண்டும் வழியோடுங்
கொய்தா னன்றே கொற்ற முடித்துன் குழுவெல்லாம்.

(இ - ள்.) செய்தாய் ஏனும்-(நீ உன்எண்ணப்படி முயற்சி)செய்தாயானாலும், தீவினையோடும் பழி அல்லால்-(உனக்குப்) பாவமும் பழியும் வருமேயல்லாமல், எய்தாது எய்தாது - (உன் எண்ணம்) கைகூடாது கைகூடாது; எய்தின் - (ஒருகால் உன் எண்ணம்) கைகூடுவதாயின்,—உலகு ஈன்றான் இராமன் - எல்லாவுலகங்களையும் படைத்தவனான இராமன், வைதால் அன்ன வாளிகள் கொண்டு - (முனிவர்கள்) சபித்தாற்போன்ற கொடிய அம்புகளைக் கொண்டு, வழியோடும்-(உனது) சந்ததியுடனே, உன் குழு எல்லாம் - உன் கூட்டத்தையெல்லாம், உம் கொற்றம் முடித்து-உங்களுடைய வலிமையைப் போக்கி, கொய்தான் அன்றே-நிச்சயமாகத் துணித்திடுவானன்றே? (எ-று.)

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும், பிறன்றூர நச்சுவார்ச் சேரா-பிறன்றூர, நச்சுவார்ச் சேரும் பகை பழி பாவமென், றச்சத்தோ டிந் நாற் பொருள்" என்ற நாலடிச்செய்யுள், இக்கவியின் முதலடிக்கு மேற்கோளாகற்பாலது. சீதை உனக்கு உரிமையாகா ளென்பது, 'எய்தாது எய்தாது' என்றதன் கருத்து; அடுக்கு-துணிவை விளக்கும். பிரமரூபியாய் நின்று உலகங்களைப் படைத்தல்செய்யுந் திருமாலின் அவதாரம் இராம னென்ற உண்மையை, 'இராமனுலகீன்றான்' என்றதனால் விளக்கினான். வைதா லன்ன வாளிகள் - முனிவர்சாபம் தீயபயன் விளைத்தலில் தவறுமைபோலத் தவறாது கொடுமை விளக்கும் அம்புக ளென்றபடி; "வைத வைவின் மராமர மேழ்தொளை, யெய்த வெய்தவன்" என இந்நூற் சிறப்புப்பாயிரத்திலும், "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்" எனப் பாலகாண்டத்தில் தாடகைவதைப்படலத்திலும் வந்தமை காண்க. அன்றே - தேற்றம். கொய்தான் - துணிவுபற்றி, எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. 'தீவினையோடும் பழியல்லால் எய்தாது' என்றதனால், இருமையையும் இழப்பா யென்றபடி; மறுமைக்குப் பாவமும், இம்மைக்குப் பழியும் தீமை தருவன. நீ ஒருவன் செய்யுந் தீச்செயலால் உன்னைச் சார்ந்தார் யாவரும் பெருந்தீமையடைய நேருமென்பது, பின்னிரண்டடியினால் விளக்கப்பட்டது. பி - ம்:—[1]எய்தானென்னில். (எசக)

கஅஊ. [1]என்று லென்னே [2]யெண்ணி லியேநீ கரனென்பா
னின்று னீக்கு மேலுள னென்னு நிலையம்மா

[3]தன்ரு னேக்குற் ரூரொடு மாளத் தனுவொன்ரூற்
கொன்ரூன் முற்றுங் கொல்ல மனத்திற் குறிகொண்டான்.

(இ - ள்.) என்ரூல் - (இவ்வாறு நீதி) சொன்னலும், என்னே நீ எண்ணலேயே - ஏனே நீ (சிறிதும் அதனேக்) கருதுகின்ரூயில்லேயே; அம்மா - அந்தோ! நின் தானேக்குமேல் உளன் என்னும் நிலே-உனது சேனேக்குத் தலேவனுகவுள்ளவ னென்னும் நிலேமையையுடைய, கரன் என்பான்-கரனென்பவன், தன் தானேக்கு உற்ரூரொடு மாள - தனது சேனேயிற் பொருந்தினவர்களுடனே இறக்கும்படி, தனு ஒன்ரூல் கொன்ரூன்-ஒரு வில்லேக்கொண்டே கொன்றவனுன இராமன், முற்றும் கொல்ல மனத்தில் குறி கொண்டான் - (அரக்கர்குலம்) முழுவதையும் கொல்லுதற்கு மனத்திற் கருதியவனுனன்.

என்னே, அம்மா என்ற இடைச்சொற்கள்-இரங்கற்பாடு. மூன்ரூமடியில், தானேக்கு - உருபு மயக்கம். தனுவொன்ரூற் கொன்ரூன் - வேரொரு வரும் துணேயில்லாமல் தானொருவனுகவே தனிவில்லாளியாய்க் கொன்றன னென்றவாறு. **பி - ம்:**—[1]என்ரூன். [2]எண்ணலேயோ. [3]தன்ரூனேத்திண்டேரொடும். (எசஉ)

கஉச. வெய்யோர் யாரே வீர விராதன் றுணேவெய்யோ
ரையோ போனு னம்பொடு மும்பர்க் கவனென்ரு
லுய்வார் யாரே [1]நம்மி னெனக்கொண் டுணர்தோறு
நையா நின்றே னீயி துரைத்து நலிவாயோ.

(இ - ள்.) வெய்யோர் - கொடியவர்களுள், வீர விராதன் துணே வெய்யோர் - வீரத்தன்மையுள்ள விராதனவ்வளவு கொடியவர், யாரே - யாவர் உளர்? [எவருமில ரென்றபடி]: அவன்-அவ்விராதன், அம்பொடும் - (இராமனது) அம்பினுல், ஐயோ உம்பர்க்கு போனுன்-அந்தோ (இறந்து) மேலுலகத்திற்குப் போய்விட்டான்! என்ரூல்—, நம்மின் உய்வார் யாரே-நமக்குள் [அரக்கர்களில்] (இராமனம்புக்குத் தப்பிப்) பிழைப்பவர் எவரோ? [எவருமில்லே யென்றபடி]; என கொண்டு உணர்தோறும் - என்று மனத்திற் கொண்டு ஆலோசிக்கும் பொழுதெல்லாம், நையாநின்றேன் - மனந்தளர்கிறேன்: (அங்ஙனமிருக்கையில்), நீ இது உரைத்து நலிவாயோ-நீ இவ்வார்த்தையைச் சொல்லி (மேலும்) வருத்துவாயோ? (எ - று.)

வீர வென்றது, இராவணனே நோக்கிய விளியாகவுமாம். ராமலக்ஷ்மணர்கள் விராதனே வாள்கொண்டு தோள் துணித்தா ராதலால், 'அம்பு' என்றது-ஆயுதமென்ற மாத்திரமாய், இங்கே வாளேக் குறித்தது என்னலாம். நலிவாய் என்றது - இங்கு, பிறவினேப்பொருள் தந்தது; அன்றி, இங்ஙனஞ் சொல்லிக் கெடுவாயோ வெனத் தன்வினேயாகக் கொள்ளுதலும் ஒன்று. விராதன் துணே-விராதனுக்குச் சமானமா யென்க. **பி-ம்:**—[1]நம்மில்வரக். ()

கஉரு. மாண்டார் மாண்டார் நீயினி மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா [1]செய்திடி லுய்வான் விதியுண்டோ

வாண்டா ராண்டா ரெத்தனை [2]யென்கோ வறநோனு
ரீண்டா ரீண்டார் நின்றவ ரெல்லா மிலரன்றே.

(இ - ள்) மாண்டார் மாண்டார்-இறந்தவர்கள் இறந்தார்கள்; இனி—, மாள்வார் தொழில் நீ செய்ய வேண்டா வேண்டா - இறப்பவர்கள் செய்தற் குரிய தொழிலை நீ செய்யவேண்டாம் செய்யவேண்டாம்; செய்திடில் - (அன்றிச்)செய்தால், உய்வான் விதி உண்டோ-பிழைத்தற்கு நல்லூழ் உளதாமோ? [ஆகாது என்றபடி]; ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கோ - (உலகத்தில் ஒருவர்பின் ஒருவராய்)அரசாண்டவர்கள் எவ்வளவு பேரென்று சொல்வேன்! [சொல்லமுடியா தென்றபடி]; (அவர்களுள்ளும்), அறம் நோனார் ஈண்டார் - தருமத்தை அனுட்டியாதவர் விருத்தியடைய மாட்டார்; (அன்றியும்), ஈண்டு ஆர் நின்றவர் - இவ்வுலகத்தில் எவர்தாம் (அழிவடையாது) நிலைத்தவர்? எல்லாம் இலர் அன்றே-அனைவரும் இல்லையாகின்றவரே யன்றே? (எ-று.)

'ஈண்டு ஆர் நின்றவர்? எல்லாம் இலரன்றே' என்றது-யாக்கைநிலையா மையையும், மற்றது-தருமந்தவறினவர் ஆக்கமடையாரென்பதையும் காட்டும். மாண்டார்மாண்டார் என்பதற்கு - மாட்சிமைப்பட்டவர்களும் (தீவினைசெய்ததனால்) இறந்தார்கள் என்று உரைப்பினுமாம். பி-ம்:—[1]செய்கெனின். [2]என்கேனறனுளார். (எசச)

கஅகூ. எம்பிக் கும்மென் னன்னை தனக்கு மிறுதிக்கோ
ரம்புய்க் கும்போர் வில்லி தனக்கு மயனிற்குந்
தம்பிக் கும்[1]மென் ணெண்மை தவிர்ந்தே [2]தளர்வுற்றே
கம்பிக் குன்மென் னெஞ்சவ னென்றே கவல்கின்றேன்.

(இ - ள்.) எம்பிக்கும் - எனது தம்பியான சுபாகுவுக்கும், என் அன்னை தனக்கும்-எனது தாயான தாடகைக்கும், இறுதிக்கு-மரணமுண்டாகும்படி, ஓர் அம்பு உய்க்கும் ஒப்பற்ற அம்பைச் செலுத்திய, போர் வில்லிதனக்கும் - போருக்குரிய வில்வீரனை இராமனுக்கும், அயல் நிற்கும்-அவனருகில் (எப்பொழுதும்) நிற்கிற, தம்பிக்கும் - (அவனது) தம்பியான இலக்குமணனுக்கும், என் ஆண்மை தவிர்ந்து - எனது பராக்கிரமம் அழிந்து, தளர்வுற்று - தளர்ச்சியடைந்து, என் நெஞ்சு கம்பிக்கும்-என்மனம் நடுங்குகின்றது; (ஆதலால்), அவன் என்றே-அத்தன்மையனை இராமனென்ற காரணத்தாலே, கவல்கின்றேன் - கவலைப்படுகின்றேன்; (எ - று.)

எம்பிக்கும்மென், தம்பிக்கும்மென், கம்பிக்கும்மென் என்றவற்றில்—மகரவொற்று விரித்தல். ஆண்மை - பௌருஷம். பி-ம்:—[1]நம். [2]சயநிற்கும்.

கஅள. நின்றுஞ் சென்றும் [1]வாழ்வன யாவு நிலையாவாற்
பொன்றும் [2]மென்னும் மெய்ம்மை [3]யுணர்ந்தாம் புலையாடற்
கொன்றும் முன்னு மென்னுரை கொள்ளா யுயர்செல்வத்
தென்றும் மென்றும் வைகுதி யையா வினியென்றன்.

(இ - ள்.) நின்றும்-(அசையாமல்) நின்றும், சென்றும்-(அசைந்து)சென்றும், வாழ்வன யாவும் - வாழ்பவையாகிய சராசரப்பொருள்களெல்லாம்,

நிலையா - நிலைபெறுதலையாய், பொன்றும் - அழிந்திடும், என்னும் - என்கிற, மெய்ம்மை - உண்மையான இயல்பை, உணர்ந்தாம் - பிரதியக்ஷமாக அறிந்துளோம்; (ஆதலால்), இனி—, ஐயா—! (நீ), புலை ஆடற்கு ஒன்றும் உன்னுய் - இழிவானதொழில் செய்தற்குச் சிறிதும் எண்ணங் கொள்ளாமல், என் உரை கொள்ளாய் - எனது வார்த்தையை அங்கீகரித்து, உயர் செல்வத்து என்றும் என்றும் வைகுதி - சிறந்த செல்வத்திலே நிலைத்து எவ்வெக் காலத்தும் வாழ்வாய், என்முன் - என்று (மாரீசன் இராவணனை நோக்கிக்) கூறினன்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நின்றுவாழ்வன - நிலைத்திணைப்பொருள்கள்; ஸ்தாவரம். சென்றுவாழ்வன-இயங்குதிணைப்பொருள்கள்; ஜங்கமம். புலையாடலென்றது, சீதையைக் கவர்தலை. புலை - 'ஐ'விகுதிபெற்ற பண்புப்பெயர்: ஆகுபெயராய், புன் தொழிலின்மேல் நின்றது. முதலடியொழிந்த மூன்று அடிகளிலும், மகர வொற்று-விரித்தல். **பி-ம்:**—[1]வாழ்பவை. [2]என்றும். [3]உணர்ந்தோம். (எசசு)

வேறு.

கஅஅ.—அதுகேட்டு இராவணன் மாரீசன்மேற் கோபித்தல்.

கங்கைசடை வைத்தவ னெடுங்கயிலை வெற்பொ
ரங்கையி னெடுத்தவென [1]தாண்டொழின் மணித்தோ
ளிங்கொர்மணி தற்[2]கெளிய வென்றவீ யெனத்தன்
வெங்கணெரி யப்புருவ மீதுற [3]விடைத்தான்.

(இ - ள்.) 'கங்கைசடை வைத்தவனெடும்-கங்காநதியை(த் தனது)சடையில் தரித்தவனான சிவபிரானுடனே, கயிலை வெற்பு - கைலாசகிரியை, ஓர் அம்கையின் எடுத்த-ஒரு உள்ளங்கையினாலெடுத்த, எனது - என்னுடைய, ஆண் தொழில் மணி தோள்-பராக்கிரமச் செயலையுடைய அழகிய தோள்கள், இங்கு ஓர் மனிதற்கு எளிய - இப்பொழுது ஒரு மனிதனுக்கு இளைப்பனவாகும், என்றனை-என்றுசொன்னாய்,' என-என்று (மாரீசனைநோக்கிக்)கூறி,-தன் வெம் கண் எரிய-தனது கொடிய கண்கள் (தீப்போல்) எரியவும்,புருவம் மீது உற-புருவங்கள் (நெறித்து) நெற்றியின்மேற் செல்லவும், விடைத்தான்-பெருங்கோபங் கொண்டான்; (எ - று.)

'கங்கைசடைவைத்தவன்' என்றது - சிவபிரானது ஆற்றலையும், 'அவனெடுங் கயிலைவெற்பு ஓரங்கையி னெடுத்த' என்றது - தனது ஆற்றலையுங் குறித்துநின்றன. **பி-ம்:**—[1]ஆடெழில். [2]எளியை. [3]இழித்தான்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - இப்படலத்தின் சதஆங் கவி போன்ற கலிவிருத்தங்கள். (எசஎ)

கஅக.—இதுவும் அது.

நிகழ்ந்ததை நினைந்திலைய னெஞ்சினிலை யஞ்சா
திகழ்ந்தனை யெனக்கிலைய நங்கைமுக மெங்கு
[1]மகழ்ந்தனைய தொப்புற வடைத்தவரை யையா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனெனி தென்முன்.

(இ - ள்.) 'ஐயா—! நிகழ்ந்ததை நினைந்திலை-நடந்தகாரியத்தை(நீ)நினைத்தாயில்லை; அஞ்சாது என் நெஞ்சின் நிலை இகழ்ந்தனை - அச்சமில்லாமல் எனது மனத்தின்உறுதிநிலையை இழித்துப்பேசினாய்; எனக்கு இளைய நங்கை முகம் எங்கும் - எனக்கு இளையபெண்ணாகிய [தங்கையாகிய] சூர்ப்பணகையினுடைய முகம் முழுவதும், அகழ்ந்து அனையது ஒப்பு உற - தோண்டினாற் போலாம்படி, அமைத்தவரை - செய்தவர்களை, புகழ்ந்தனை - புகழ்ந்துபேசினாய்: தனி பிழை இது பொறுத்தனென் - இந்த ஒரு குற்றத்தைப் பொறுத்தேன்,' என்றான்-என்று (மாரீசனைநோக்கி இராவணன்) கூறினான்; (எ-று.)

'தனிப்பிழை' என்பதற்கு - ஒப்பற்ற (பெரும்) பிழை யென்றும் பொருள்கொள்ளலாம். பி-மீ:—[1]அகழ்ந்தவரை. (எசஅ)

ககூ.—இதுமுதல் ஏழு கவிகள் - மாரீசன் மீண்டும் உறுதிமொழி கூறல்.

தன்னை முனிவுற்றதறு கட்டகவி லோனைப்
பின்னை முனிவுற்றிடுமெ னத்தவிர்தல் பேணு
தன்னை [1]முனிவுற்றனகு லத்தைமுனி வுற்று
மென்னை முனிவுற்றிலையி [2]தென்னென விசைத்தான்.

(இ - ள்.) தன்னை முனிவுற்ற - தன்னைக் கோபித்த, தறுகண்-அஞ்சாமையையுடைய, தகவு இலோனை - நடுவுநிலைமையில்லாத இராவணனை, பின்னை முனிவுற்றிடும் என தவிர்தல் பேணுது-மீண்டும் (தன்னைக்) கோபித்திடுவானென் றெண்ணி (அவனுக்கு உறுதிகூறுது) விட்டொழிதற்கு விரும்பாமல், (மாரீசன் இராவணனைநோக்கி), 'உன்னை முனிவுற்று-(நீ) உன்னைக் கோபித்து, உன குலத்தை முனிவுற்றும் - உன்னுடைய குலத்தைக் கோபித்தாய்; (அல்லாமல்), என்னை முனிவுற்றிலை-என்னைக் கோபித்தாயில்லை;இது என் - இது என்னகாரணம்?' என இசைத்தான்-என்றுசொன்னான்: (எ-று.)

நீ கொண்டகோபம் எனக்குஒருதீங்குந்தாராமல் உனக்கும் உன்குலத்துக்குந் தீங்குதருவதாகவே முடியு மென்னுங் கருத்துப்பட இவ்வாறுகூறினான். அரசர் கோபங்கொண்டகாலத்தும் அமைச்சர் அஞ்சி அவர்க்கு நீதி போதித்தலை விட்டிடாமல் இடித்திடித்துக் கட்டுரைகூறவேண்டு மென்ற முறைமையில் மாரீசன் தவறுது நின்றன னென்ற தன்மை, முன்னிரண்டடிகளில் விளக்கப்பட்டது. 'உன' என்பதி லுள்ள அகரம் - ஆறனுருபு.
பி-மீ:—[1]முனிவுற்றனை. [2]இன்றென. (எசக)

ககூக. எடுத்தமலை யேநினையி னீசனிகல் வில்லாய்
வடித்த[1]மலை யேயிது வலித்தியென வாரிப்
பிடித்தமலை நாணிடை [2]பிடித்தொருவன் மேனி
லொடித்தமலை [3]யும்பர்முக டுற்றமலை யன்றே.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) எடுத்த மலையே நினையின் - கைலாயகிரியைப் பெயர்த்தெடுத்ததையே (நீ) ஒருபெருமையாக மதித்தால்,—ஈசன் இகல் வில் ஆய்

வடித்த மலையே இது வலித்தி என-'சிவபிரான் வலியவில்லாய்வளைத்த மலை யேயாகும் இதனை வளைத்திடுவாய்' என்று (சனகமகாராசன்) சொல்ல, ஒரு வன் - ஒப்பற்ற இராமன், மேல் நாள் - முன் ஒருபொழுதில், வாரி பிடித்த மலை - எளிதாகக் கையால் எடுத்துப்பிடித்த மலைபோன்றதும், நாண் இடை பிடித்து ஒடித்த மலை-நாணியின் இடையிலே பற்றியிழுத்து (வளைக்கத்தொ டங்கி) ஒடித்த மலைபோன்றதுமான வில், உம்பர் முகடு உற்ற மலை அன்றே-ஆகாயமுகட்டை அளாவியுள்ளதான மேருமலையே யன்றே? (எ - று.)

கீழ் இராவணன் "கங்கைசடைவைத்தவனெடுங் கயிலைவெற்பு ஓரங்கை யினெடுத்த வெனதாண்டொழின்மணித்தோள்" என்று தான்கைலைமலையைப் பெயர்த்தெடுத்ததைக் குறித்துப் பெருமைபாராட்டியதை மறுத்து, மாரீசன், இராமனுல் எடுத்துவளைக்கத்தொடங்கிமுறிக்கப்பட்ட சிவதனுசின்மகிமையை யெடுத்துக்கூறுவானுய், அவ்வில் எல்லாமலைகளினுஞ் சிறந்ததும் பெரியது மான மகாமேருகிரியன்றே என்றுகூறினன். சிவபிரான் திரிபுரசங்காரஞ்செ ய்தகாலத்தில் அப்பிரானுக்கு மேருமலை வில்லாயிருந்த தன்மை, பிரசித்தம். பிடித்தமலை, ஒடித்தமலை என்றவற்றில், மலை - உவமவாகுபெயர்; பெருமை யும்வலிமையும் பற்றிய உவமை. **பி-ம்:**—[1]மலீ. [2]பிணித்து. [3]அண்டமுகடு. ()

ககூஉ. யாது[1]மறி யாயுரைகொ ளாயிக விராமன்
கோதைபுனை யாமுனுயிர் கொள்ளுபடு மன்றே
பேதை[2]மதி யாலிஃதொர் பெண்ணுருவ [3]மென்றுய்
சீதையுரு வோநிருதர் தீவினை[4]ய [5]தன்றே.

(இ - ள்.) யாதும் அறியாய்-(இராமனது ஆற்றல்முதலியவற்றைக் குறி த்து நீ தானுகச்)சிறிதும் அறியாய்; உரை கொளாய்-(நான் சொன்ன) வார்த் தையைக்கேட்டு அதன்படிநடத்தலுஞ் செய்யாய்; இகல் இராமன் கோதை புனையா முன்-வலிமையுடைய அவ்விராமன்(போருக்குரிய தும்பைப்) பூமா லையைத் தரிக்குமுன்னே [போர் தொடங்குமளவிலே யென்றபடி]; உயிர் கொள்ளுபடும் அன்றே-பகைவருயிர் மிகுதியாகவேண்டியபடிகவரப்படுமன் றே? பேதை மதியால் - மூடபுத்தியால், இஃது ஓர் பெண் உருவம் என்றுய்-இது ஒரு மானுடப்பெண்ணின்வடிவ மென்றுகொண்டாய்; சீதை உருவோ-சீதையினது வடிவமோ, நிருதர் தீவினையது அன்றே - அரக்கர்கள்செய்த பாவத்தின் வடிவமானதன்றே? (எ - று.)

'யாதுமறியா யுரைகொளாய்'என்றதனுல், தானுகவும்அறியாமை சொன் னலுங்கேளாமை என்ற இரண்டுகுறைகளுண்மையை எடுத்துக் காட்டினன். 'கோதை புனையாமுன்' என்பதற்கு-(வில்லில்) நாணியைப் பூட்டுதற்குமுன் என்றும்,முன்கைத்தோற்கட்டைத் தரித்தற்குமுன் என்றும் பொருள்கொள்ள லாம். சீதையுருவோ என்ற ஓகாரம் - தெரிநிலே. அரக்கரின் அழிவுக்கு அது காரணமாகு மென்பான், 'நிருதர்தீவினை யதன்றே?' என்றன். **பி-ம்:**— அறியாது. [2]உருவோவிது வொர்பெண்ணுருவமன்றே. [3]அன்றே. [4]இது. [1]அன்றே.

ககூட. உஞ்சுபிழை யாயுறவி னேடுமென [1]வன்னை
நெஞ்சுபறை போதுமது நீநினைய கில்லா
யஞ்சுமென தாருயி ரறிந்தருகு நின்றூர்
நஞ்சுநுகர் வாரையிது நன்றெனலு நன்றே.

(இ - ள்.) '(நீ சீதையைக்கவர்ந்தால்), உறவினேடும் உஞ்சு பிழையாய்-(உன்)சுற்றத்தாருடனே(நீயும்)தப்பிப்பிழைக்கமாட்டாய்',என உன்னு-என்று எண்ணி, நெஞ்சு பறை போதும்-(எனது) மனம் பறைகொட்டுவதுபோலத் துடிக்கின்றது; எனது ஆர் உயிர் அஞ்சும் - எனது அரியஉயிரும் அஞ்சுகின்றது; அது நீ நினையகில்லாய் - அத்தன்மையை நீ எண்ணுகிறாயில்லை; நஞ்சு நுகர்வாரை-(அறியாமல்) விஷத்தையுண்பவர்களை, அறிந்து அருகு நின்றூர் - அறிந்து அவர்பக்கத்தில் நின்றவர்கள்,இது நன்று எனலும்-இச்செய்கையை நல்லது என்று உடன்பட்டுக்கூறுதலும், நன்றே - நல்லதோ? (எ - று.)

'அறிந்து அருகுநின்றூர் நஞ்சுநுகர்வாரை இதுநன்றெனலும் நன்றே' என்ற உபமானவாக்கியம், ஆராய்ச்சியில்லாமல் தீச்செயல்செய்யத்தொடங்குகிற உன்னை அது தீச்செயலென்று அறிந்து உனது அருகில்நிற்பவனை நான் இச்செயல் நல்லதென்று உடன்பட்டுக்கூறுவது சரியோ? என்ற உபமேயப் பொருளை விளக்குதலால், **பிரிதுமொழிதலென்னும்** அலங்காரம். உஞ்சு உய்ந்து; போலி. உறவு - தொழிலாகுபெயர். நன்றெனலும், உம் - இழிவு சிறப்பு. **பி-மீ:**—[1]உன்னை. (எடுஉ)

ககூச. ஈசன்[1]மூத லாகவிமை யோருலகு மற்றைத்
தேசமுதன் முற்றுமொ ருமைப்பினுயிர் [2]தின்னைக்
கோசிக [3]னளித்தகட வுட்படை கொதிப்போ
டாசில கணிப்பில விராமனரு [4]ணிற்ப.

(இ - ள்.) ஈசன் முதல் ஆக இமையோர் உலகும்-சிவபிரான் முதலாகத் தேவர்களுடைய உலகங்களையும், மற்றை தேசம் முதல் முற்றும்-மற்றை நாடுகள் முதலிய எல்லாவற்றையும்,ஓர் இமைப்பின் உயிர் தின்ன-ஒருமாத்திரைப் பொழுதிலே உயிர்குடிப்பதற்கு,—கொதிப்போடு - (எப்பொழுதும்) உக்கிரமானதன்மையோடு (கூடி); ஆசு இல - (தோல்வியாகிய) குற்ற மில்லாதனவாகிய, கடவுள் படை-தெய்வத்தன்மையுள்ள அஸ்திரங்கள்; கணிப்பு இல - அளவிறந்தவை,—கோசிகன் அளித்த-விசுவாமித்திரமுனிவனுற் கொடுக்கப்பட்டனவாய், இராமன் அருள் நிற்ப - இராமனது கட்டளைநெறியிலே நிற்கின்றன; (எ - று.)

இராமன் தாடகையைக் கொன்றவுடனே தேவர்கள் மகிழ்ச்சியோடு வந்து கட்டளையிட்டபடி விசுவாமித்திரமாமுனி அப்பெருமானுக்குப் பற்பல திவ்வியாஸ்திரங்களை உபதேசித்துக்கொடுக்க, அவையாவும் மிக்கமகிழ்ச்சியுடனே இராமனிடம் வந்து அவன்கட்டளையின்படி நடக்கச் சித்தமாய் நின்றன என்பதை, கீழ்ப்பாலகாண்டத்தில் வேள்விப்படலத்திலும் குலமுறை

கிளத்து படலத்திலும் காண்க. 'மற்றைத் தேச முதல் முற்றும்' என்றது, பூமியையும் பாதாளத்தையுங் குறிக்கும். நிற்ப - முற்று. கோசிகன் - கௌஶிக னென்ற வடசொல்லின் விகாரம்; குசிகனது குலத்திற் பிறந் தவ னென்று பொருள்படும்: குசனே குசிகனெனவும் வழங்கப்படுவன். 'அருள்' என்னுங் காரணம், அதன்காரியமாகிய கட்டளையின்மேல் நின்றது. **பி-ம்:**—[1]முதன்மற்றும். [2]தின்ப. [3]அமைத்த. [4]நிற்க. (எருங்-)

ககூரு. ஆயிரம டற்கையுடை யாணமழு வாளா
லேயெனு [1]முரைக்கு ளுயிர் செற்றவெதி ரில்லோன்
மேயவிறன் முற்றுவரி வெஞ்சிலையி னேடுங்
[2]தாயவன் வலித் [3]தகைமை யாமுறு தகைத்தோ.

(இ - ள்.) அடல் ஆயிரம் கை உடையானை - வலிமையையுடைய ஆயி ரங்கைகளையுடையவனை கார்த்தவீரியார்ச்சுனனை, மழு வாளால் - கோடா லிப்படையால், ஏ எனும் உரைக்குள் - ஏயென்று கூறும் மாத்திரைப் பொழு தினுள்ளே [மிகவிரைவிலே], உயிர் செற்ற - உயிரழித்த, எதிர் இல்லோன் - ஒப்பில்லாதவனை பரசுராமனிடத்தில், மேய - பொருந்திய, விறல் முற்று - வலிமைமுழுவதையும், வரி வெம் சிலையினோடும்-கட்டமைந்த கொடிய (அவ னது)வில்லினுடனே, தாயவன்-(தனக்கு) உரிமையாகக் கவர்ந்துகொண்டவ னென இராமனது, வலி தகைமை - வலிமையின் தன்மை, யாம் உறு தகைத் தோ - நாம் அடையுந் தன்மையதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

சந்திரவம்சத்துப் பிறந்த அரசனும் பல பராக்கிரமங்களிற் சிறந்தவனும் ஆயிரந்தோள்களையுடையவனும் இராவணனை ஒருகால் வென்றிட்டவனுமான கார்த்தவீரியார்ச்சுனன் ஜமதக்நிமுனிவனது ஓமதேனுவைக் கவர்ந்தது கார ணமாக அம்முனிவனது குமாரனென பரசுராமன் அக்கார்த்தவீரியார்ச்சுன னைத் தனது கோடாலிப்படையால் ஆயிரந்தோள்களையுந் துணித்துக் கொன் றிட்டன னென்பது, முன்னிரண்டடியிற் **குறித்த கதை.** அப்படிப்பட்ட ஆற்றலுடைய பரசுராமன், சீதாகலியாணத்தின் பின் தசரதசக்கரவர்த்தி தனது குமாரர்களுடன் மிதிலையினின்று மீண்டுவருகையில், வலியச்சென்று இராமபிரானை யெதிர்த்துத் தன்கையிலுள்ள வில்லை அவன்கையிற் கொடு த்து, 'நீ சிவபிரானது சொத்தைவில்லை யொடித்ததற்குச் செருக்குக் கொள் ளாதே; வலிய இந்த விஷ்ணுதநுசை வாங்: பார்ப்போம்: என்ன, உடனே தசரதராமன் அதனை வளைத்து அம்புதொடுத்து, அவன் வேண்டியபடி அவ னது தவமகிமை முழுவதையும் அந்த அம்புக்கு இலக்காக்கிவிடவே, பரசு ராமன், கர்வபங்கப்பட்டு மீண்டனனென்ற **வரலாறு,** கீழ்ப் பாலகாண்டத் தின் இறுதியிற் கூறப்பட்டது. மழு வாள்-மழுவாகிய வாள் என இருபெய ரொட்டு; வாள் - இங்கே, ஆயுதமென்னு மாத்திரமாய் நின்றது. **உன்னை** வென்றவனை வென்றவனை வென்ற ஆற்றலுடையான் இராமனென இராவ ணனுக்கு மாரீசன் எடுத்துக் காட்டினனென. இச்செய்யுள் அச்சிட்டபிரதி யொன்றிற் காணப்படவில்லை. **பி-ம்:**—[1]இமைப்பினின். [2]தாயகன். [3]தகையை.

சகூசு. வேதனைசெய் காமவிட மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கை சிதைவன்றே
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தே
னீதுரை செய்தே[1]னிதனை யெந்தைதவிர் கென்றான்.

(இ - ள்.) வேதனை செய் - துன்பத்தைச் செய்கிற, காம விடம்-காமமாகிய விஷமானது, மேலிட-அதிகப்பட, மெலிந்தாய்-(நீ)வாட்டமுற்றாய்; (ஆதலால்), தீது உரை செய்தாய்-கொடிய இவ்வார்த்தையைக் கூறினாய்: இனைய செய்கை - இத்தன்மையதான காரியம், சிதைவு அன்றே-அழிவுக்குக்காரணமன்றே? மாதுலனும் ஆய் - (உனக்கு) மாமன்முறை பூண்டவனுமாய், மரபில் முந்தை உற வந்தேன் - (உனது) குலத்தில் முற்படத் தோன்றியவனுமான நான், ஈது உரை செய்தேன் - இந்த உறுதிமொழியைக் கூறினேன்; எந்தை இதனை தவிர்க - அப்பா! இத்தீத்தொழிலை நீ விட்டிடுவாயாக, என்றான் - என்று (மாரீசன் இராவணனுக்கு) அறிவுகூறினான்; (எ - று.)

முந்தையுற-பிராயம்முதிர என்றபடி. இராவணன் கருதிய தீச்செயலை வாயினால்கூறுதற்கும் கூசுவான்போன்று 'இதனை' எனக்குறித்தொழிந்தான். மாதுலன் - வடசொல்; மாதாவி னுடன்பிறந்தவன். **பி-ம்:**—[1] அதனை. ()

சகூள.—இதுமுதல் நான்கு கவிகள் - ஒருதொடர் : அராவணன் மாரீசனைச் சினந்து கூறுவன.

என்னைவுரை [1]யத்தனையு [2]மெத்தனையு மெண்ணச்
சொன்னவனை [3]யேசின வரக்கர்பதி சொன்ன
னன்னையுயிர் செற்றவனை யஞ்சியுறை கின்ற
யுன்னையொரு வற்கொருவ னென்[4]றுணர்கை நன்றே.

(இ - ள்.) என்ன உரை - என்று சொன்ன, அத்தனையும் - (தன்வார்த்தைகளை) எல்லாம், எத்தனையும் எண்ண சொன்னவனை - எவ்வளவாயினும் [சிறிதாயினும்] ஆலோசித்துப் பார்க்கும்படி சொன்னவனை மாரீசனை, எசின-(மனத்தினுல்) இகழ்ந்த, அரக்கர் பதி - ராக்ஷசராசனை இராவணன், சொன்னன்-சொல்பவனைநோக்கி:—அன்னை உயிர் செற்றவனை அஞ்சி உறைகின்றாய் - (உனது) தாயான தாடகையின் உயிரைக் கொன்ற அவ்விராமனுக்கு அஞ்சி வாழ்கிறாய்; உன்னை ஒருவற்கு ஒருவன் என்று உணர்கை நன்றே - உன்னை ஓராண்மகனுக மதிக்கத்தக்க ஒருவ னென்று நினைத்தல் தகுதியோ? [அன்று என்றபடி]; (எ - று.)

அத்தனையும் - அவ்வளவையும். [2]எத்தனையு மெண்ணிச் சொன்னவனை என்ற பாடத்துக்கு - எவ்வளவோ ஆலோசித்துக் கூறினவனை யென்று பொருள். 'ஒருவற்கு ஒருவனென்று உணர்கை' என்பதற்கு-ஒருவனுக்கு உதவி செய்யக்கூடிய ஒருவ னென்று மதித்த லென உரைப்பினும் அமையும்; இதற்கு - அறிவு வீரம் பெருமை முதலியன தனித்தனி பொருந்திய பேரில்

ஒருவனென்று நினைத்தலென உரைப்பாரு முளர். சொன்னவனையே சினவு அரக்கர்பதி யென எடுத்து-இங்ஙனந் தனக்கு உறுதிமொழி கூறினவனையே கோபித்த இராவணன் என்று உரைக்கவும் இடமுண்டு. தன் தாயைக் கொன்றவனுக்கு மாறுசெய்யக் கருதாமல் மானங்கெட்டு வாழ்கிறா யென்பது, மூன்றுமடியின் பொருள். பி-ம்:—[1]இத்தனையும். [3]வைகடல். [4]உணாதல். சிலபிரதியில் 'உன்னை யுறவுக்கொருவனென்றுணரலாமோ' என்று நான்காமடி. (எருசு)

ககூஅ. திக்கய மொளிப்பநிலை தேவர்கெட வானம்
[1]புக்கவ ரிருக்கைபுகை வித்துலகம் யாவுஞ்
சக்கர நடத்துமெனை யோதயர தன்றன்
மக்க[2]ணலி கிற்பரிது [3]நன்றுவலி யன்றே.

(இ - ள்.) திக் கயம் ஒளிப்ப-திக்குயானைகள் அஞ்சி யொளித்துக்கொள்ளும்படியாகவும், தேவர் நிலை கெட-தேவர்கள் நிலையழியும்படியாகவும், வானம் புக்கவர் இருக்கை புகைவித்து - மேலுலகத்தைத் தமது இடமாகக் கொண்ட தேவர்களுடைய இருப்பிடங்களைக் கொளுத்தி)ப் புகையும்படி செய்து, உலகம் யாவும் சக்கரம் நடத்தும் - எல்லாவுலகங்களிலும் (தடையின்றி எனது) ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்துகிற, எனையோ - என்னையோ, தயரதன்தன் மக்கள் நலிகிற்பர்-(மனிதராசனை) தசரதனது பிள்ளைகள் வருத்தும் ஆற்றலுடையவர்? இது நன்று வலி அன்றே - இது நல்ல வல்லமை யன்றே?

'இது நன்று வலியன்றே' என்றது, பரிகாசமாகக் கூறியது. திக்கயம்= திக்கஜமென்ற வடசொல்லின் திரிபு. ஆஜ்ஞையைச்சக்கரமென்றல், கவிசமயம். பி-ம்:—[1]புக்கயன். [2]நலிகிற்பதிது. [3]நன்றுன்மதி. (எருஎ)

ககூக. மூவுல கினுக்குமொரு நாயக முடித்தேதன்
மேவலர் கிடைக்கினிதன் மேலினிய தூண்டோ
வேவல்செய கிற்றியென தாணைவழி யெண்ணிக்
காவல்செ யமைச்சர்கட னீகடவ துண்டோ.

(இ - ள்.) மூ உலகினுக்கும் ஒரு நாயகம் முடித்தேன் - மூன்று உலகங்களுக்குந் தனியரசாட்சியைச் சூடினேன்; (அப்படிப்பட்ட எனக்கு இப்பொழுது), மேவலர் கிடைக்கின்-பகைவர்கள் கிடைத்தால், இதன்மேல் இனியது உண்டோ - இதற்குமேல் மகிழ்ச்சிதருவது வேறும் உளதோ? [இல்லையென்றபடி]; எனது ஆணை வழி எண்ணி-எனது கட்டளையின் தன்மையை ஆலோசித்து, ஏவல் செயகிற்றி-(நான்) ஏவியதொழிலை (நீ) செய்யக்கடவாய்: காவல் செய் அமைச்சர் கடன் - (அரசனுக்குப்) பாதுகாவல் செய்யும் மந்திரிகளது கடமையை [அரச னேவினதைச் செய்தலை], நீ கடவது உண்டோ - நீ கடக்கலாமோ? (எ - று.)

மூவுலகு - திரிலோகம். ஒருநாயகம் - ஏகாதிபத்தியம். முடித்தல்-தரித்தல், அல்லது நிறைவேற்றுதல். ஏவப்பட்ட காரியத்துக்குத் தொழிலாகு

பெயர். நான்காமடிக்கு - அரசனைப் பாதுகாவல்செய்தற்குரிய மந்திரிகள் செய்யவேண்டிய கடமையை நீ செய்யக்கடவது உளதோ? என்று உரைப் பூரு முளர். (எருஅ)

200.மறுத்தனை யெனப்பெறினு நின்னைவடி வாளா
[1]லொறுத்தென மனக்குறை முடிப்பதொழி கல்லேன்
[2]வெறுப்பன கிளத்தலுறு மித்தொழிலி விட்டென்
குறிப்பின்வழி நிற்றியுயிர் கொண்டுழலி னென்ரூன்.

(இ - ள்.) மறுத்தனை என பெறினும் - (நீ எனது எவ்வழி நில்லா மல் அதனை) மறுத்துவிட்டா யாயினும், நின்னை வடி வாளால் ஒறுத்து-உன்னைக் கூரிய வாளினால் வெட்டித் தண்டித்துவிட்டு, என மனம் குறை முடிப் பது-என்மனத்துக்கு இசைந்தகாரியத்தை நிறைவேற்றுதலே, ஒழிகல்லேன்-(நான்) விடமாட்டேன்; (ஆதலால்), உயிர்கொண்டு உழலின் - (நீ) உயிரை வைத்துக்கொண்டு வாழவேண்டுமானால், வெறுப்பன கிளத்தலுறும் இ தொழிலை விட்டு - (நான்) வெறுக்கத்தக்க சொற்களைச் சொல்லுகிற இச்செய் கையை விட்டு, என் குறிப்பின் வழி நிற்றி - எனது எண்ணத்தின்படி நிற் பாய், என்ரூன்-என்று (மாரீசனை நோக்கி இராவணன்) கூறினான்; (எ-று.)

என மனக்குறை முடிப்பது - சீதையைக் கவர்வது. உழலுதல் - திரி தல்; புடைபெயர்தல். நீ மறுப்பதில் யாதுபயனுமில்லை யென்பதை நன்ரூக எடுத்துக் கூறினான். பி-ம்:—[1]ஒறுத்து மனமுற்றது. [2]வெறுத்தனை. (எருக)

வே று.

20க.—அவ்வாவில் மாரீசன் ஆய்ந்து அடங்குதல்.

அரக்கனஃ துரைத்த லோடு மறிந்தன னடங்கி நெஞ்சந்
கருக்கினர் [1]கெடுவ ரன்றே தத்துவ நிலையிற் றன்றே
[2]செருக்கினிற் றீர்து மென்பார் [3]தம்மினூர் செருக்க ரென்னு
வருக்கிய [4]செம்பி னூற்ற நீரென வுரைக்க லுற்ரூன்.

(இ - ள்.) அரக்கன் அஃது உரைத்தலோடும் - இராக்கதராசனை இரா வணன் அவ்வாறுகூறியவளவிலே,—(மாரீசன்),'நெஞ்சம் கருக்கினர் அன்றே கெடுவர் - மனத்திற் செருக்குக் கொண்டவர்கள் அப்பொழுதே அழிந்திடுவார் கள்; தத்துவம் நிலை இற்று அன்றே-உண்மைநிலைமை இத்தன்மையதன்றே? தம்மின் ஆர் செருக்கர் - தமக்குள்ளே நிறைந்த காமக்களிப்புடையவர்கள், செருக்கினில் தீர்தும் என்பார் - அக்களிப்பினால் (யாம்) அழிந்திடுவே மென் றுக் துணிவார்கள்,' என்ரு - என்று கருதி, அறிந்தனன் - (இவன்கட்டளைப் படி நடவாவிட்டால் தனக்குக் கேடுவரு மென்பதை) அறிந்து,உருக்கிய செம் பின் உற்ற நீர் என அடங்கி - உருக்கிய செம்பில் வார்க்கப்பட்ட நீர் (அத னுள்ளே கொதித்து அடங்குதல்) போல(த் தான் உள்ளே கொதிப்புற்று) அடங்கி, உரைக்கல் உற்ரூன்-(சில) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)— அவற்றை, அடுத்த கவியிற் காண்க.

கெடுவரன்றே யென்பதற்கு - கெடுவரன்றே வென்று உரைத்து, அன்றேயென்பதைத் தேற்றமாகக் கொள்ளினுமாம். 'செருக்கினிற் றீர்து மென்பார் தம்மி னூர் செருக்கர்' என்பதற்கு - களிப்பினுல் அழிந்திடுவோ மென்பவர்தாமே தமக்குள் மிக்க களிப்புடையவர் என்று பொருள்கொள்ளினுமாம். இனி, செருக்கினில் தீர்து மென்பார்தம்மின் செருக்கர் ஆர் என்று மாற்றி, அகங்காரத்தால் அழிந்திடுவோ மென்பவர்களினும் அகங்காரிகள் யாவர்? [எவருமில்லை] என்று பொருள் கொள்வாருமுளர். உருக்கிய செம்பின் உற்ற நீரென உரைக்கலுற்றன் என்றே இயைத்து, உருக்கிய செம்பில் நீரைத் தெளித்தாற்போல வெம்மைகொண்ட இராவணனுக்குத் தண்மையாக மாரீசன் கூறத்தொடங்கினனென்று பொருள்கொள்ளுதலும் குறியாம்.

பி-ம்:—[1]கெடுவரென்றல். [2]செருக்கினர்த். [3]தம்மிலோர். [4]செம்பொன்.

இதுமுதல் ஒன்பது கவிகள் - இப்படலத்தின் கச - ஆங் கவிபோன்ற **அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தங்கள்.** (எசுஐ)

உஉ.—மாரீசன் இராவணனுக்கு இரங்கிக்கூறும் வார்த்தை.

உன்வயி னுறுதி நோக்கி யுண்மையி னுணர்த்தி னேன்மற்
றென்வயி [1]னிறுதி நோக்கி யச்சத்தா லிசைத்தே தனல்லே
னன்மையுந் தீமை யன்றே நாசம்வந் துற்ற போது
புன்மையி [2]னின்ற நீராய் செய்வது புகறி யென்றன்.

(இ - ள்.) உன்வயின் உறுதி நோக்கி - உன்பக்கல் நன்மையைக் கருதி, உண்மையின் உணர்த்தினேன்-உண்மையாகத் தெரிவித்தேனேயன்றி, என்வயின் இறுதி நோக்கி அச்சத்தால் இசைத்தேன் அல்லேன் - எனக்கு வருவதொரு தீமையைக் கருதி அதற்கு அஞ்சி அதனைக் கூறினேனல்லேன்; நாசம் வந்து உற்ற போது நன்மையும் தீமை அன்றே-கேடு வந்து சமீபித்த காலத்தில் நல்லதும் தீயதாகத் தோன்றுமன்றே? (அதுதற்க), புன்மையின் நின்ற நீராய்-அற்ப விஷயத்திற் பொருந்திய குணத்தையுடையவனே! செய்வது புகறி-(நான்) செய்யவேண்டுவதைச் சொல்வாய், என்றன் - என்று (மாரீசன் இராவணனை நோக்கிக்) கூறினன்; (எ-று.)—மற்று - வினைமாற்று.

உண்மையின் உணர்த்தினேன்-உள்ளபடி கூறினேன் என்றபடி. நாசம்-விநாசகாலம். 'நாசம் வந்துற்றபோது நன்மையுந் தீமையன்றே' என்ற விடத்து "விநாச காலே விபரீதபுத்தி:" என்ற பழமொழியை உணர்க.

பி - ம்:—[1]உறுதி. [2]உற்ற. (எசுக)

உக.—இராவணன் மாரீசனைநோக்கி 'சீதையைத் தருக' என்றல்.

என்றலு மெழுந்து புல்லி யேறிய வெகுளி [1]நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கு மம்பாற்
[2]பொன்றலி னிராம னம்பாற் பொன்றலே புகழுண் டன்றே
தென்றலைப் [3]பகையைச் செய்த சீதையைத் தருதி யென்றன்.

(இ - ள்.) என்றலும்-என்று (மாரீசன்) கூறியவுடனே, (இராவணன்), எழுந்து புல்லி-எழுந்து (அவனைத்) தழுவிக்கொண்டு, ஏறிய வெகுளி நீங்கி-(அவன்பக்கல்) மிகுதியாகக்கொண்ட கோபந் தணிந்து, (அவனை நோக்கி), 'குன்று என குவிந்த தோளாய்-மலைபோல (வலியதாய் ஒங்கிக் குவிந்துள்ள தோள்களையுடையவனே! மாரன் வேள் கொதிக்கும் அம்பால் பொன்றலின்-(இங்கு இருந்து) மன்மதனது உக்கிரங்கொண்ட அம்புகளினால் இறத்தலினும், இராமன் அம்பால் பொன்றலே - (அங்குச் சென்று நீ சொன்னபடி) இராமனது அம்பினால் இறப்பதே, புகழ் உண்டு அன்றே - கீர்த்தியுள்ளதன்றே? (ஆதலால்), தென்றலை பகைபை செய்த சீதையை தருதி - தென்றற்காற்றினிடத்துப் பகையையுண்டாக்கிய சீதையை (எனக்குக்) கொணர்ந்து கொடுப்பாய்,' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

மாரீசனுக்காரியங்கொள்ளவேண்டுதலின், அவனை 'குன்றெனக்குவிந்த தோளாய்' எனப் புகழ்ந்ததோடு, 'தருதி' என ஒப்போன்வினை கொடுத்துங் கூறினான். மாரவேள் - மாரனுகிய வேளென இருபெயரொட்டு. 'மாரவேள்' என்றது, குமாரவேளை விலக்குதற்கு. தென்றலைப் பகையைச் செய்த சீதை-குளிர்ந்த இளந்தென்றற்காற்று வெய்யதாய் என்னை வருத்துதற்குக் காரணமான சீதை யென்க. எதற்கும் அஞ்சாத இராவணன் மன்மதபாணமொன்றுக்கு அஞ்சினனென்ற தன்மையும், போரிற் பகைவரா லிறத்தல் புகழ் தருவதென்ற தன்மையும் இதில் வெளியாம். **பி-ம்:**—[1]தீக்கிக். [2]பொன்றலில். [3]பகைக்கச். பகையாச். (எகூ)

கூ0ச.—மாரீசன் 'அதற்கு யான் செய்யவேண்டுவது என்?' என்றல்.

ஆண்டையா னனைய கூற வரக்கரோ டிருவ ரோடும்
பூண்டவென் மானந் தீரத் [1]தவவனம் புக்க போழ்திற்
றூண்டிய சரங்கள் பாயத் துணைவர்பட் டுருள வஞ்சி [2]னீண்டையான் சென்று செய்யும் வினையென்கொல் விளம்பு கெ

(இ - ள்.) ஆண்டையான்-அக்கிலேபனுகிய இராவணன், அனைய கூற-அத்தன்மையனவான வார்த்தைகளைச் சொன்னவளவிலே,—(கேட்ட மாரீசன்),—'பூண்ட என் மானம் தீர-(என்தாயைக்கொன்றகாரணத்தால்) யான் இராமனிடங் கொண்ட வைரம் ஒழியும்பொருட்டு, அரக்கர் ஓர் இருவரோடும் - இரண்டுஅரக்கர்களுடனே, தவ வனம் புக்க போழ்தில் - (முனிவர்கள்) தவத்தைச்செய்கிற காட்டிற் பிரவேசித்தகாலத்தில், தூண்டிய சரங்கள் பாய-(இராமன்) எய்த அம்புகள் (தம்மேற்) பாய்ந்ததனால், துணைவர் பட்டு உருள-(என்னுடன் வந்த அரக்கர்) இருவரும் இறந்துவிழுந்துபுரள, அஞ்சி மீண்டபயந்து திரும்பிவந்துவிட்ட, யான் - நான், சென்று செய்யும்-(இப்பொழுது மீண்டும்போய்ச்) செய்யத்தக்க, வினை - தொழில், என்கொல் - யாதோ? விளம்புக - கூறுவாயாக,' என்றான்-என்றுசொன்னான்; (எ - று.)

இப்பாட்டிற் குறித்த செய்தி, தாடகையை இராமன் கொன்றபின் மாரீசன் தனதுதம்பியான சுபாகுமுதலிய அரக்கர்களுடன் சென்று விசுவா

மித்திரனுடைய வேள்விக்கு இடையூறு செய்யத்தொடங்கியபொழுது, இராமனைத்த அம்புகளால் சுபாகுவும் மற்றையரக்கர்களும் இறக்க, அப்பெருமான் பிரயோகித்த வாயவ்யாஸ்திரத்தால் மாரீசன் கடலிலே தள்ளப்பட்டு உயிர் கொண்டுமீண்ட வரலாறு அன்று: அவ்வரலாறு, கீழ் "எம்பிக்கும்மென்னன்னேதனக்கு மிறுதிக்கோ, ரம்புய்க்கும்போர்வில்லி" என்றதனாற் கூறப்பட்டது. மற்று இங்குக் குறித்த செய்தி யாதெனின்,—தன்தாயையுந் தம்பியையும் கொன்று தன்மேலும் அம்புசெலுத்தித் துரத்தியகாரணத்தால் இராமனிடம் பகைகொண்ட மாரீசன், பின்பு இராமன் தண்டகாரணியத்தில் பஞ்சவடியாச்சிரமத்தில் எழுந்தருளியிருந்தபோது, இரண்டுஅரக்கர்களுடன் மான் வேடம்பூண்டு அத்தண்டகவனஞ்சேர்ந்து முனிவர்கள் ஓமஞ்செய்யுமிடங்களையும் நீராடுமிடங்களையும் கிட்டி அவர்களை வருத்திக் கொன்று நின்று கொண்டுவருகையில், இலக்குமணனுடனும் சீதையுடனும் தவவேடங்கொண்டிருந்த இராமனைக் கண்டு,இவன் இப்பொழுது தவவேடம்பூண்டிருத்தலால் என்னைக் கொல்லா னென்றுகருதி அருகிலோடிவந்து தனதுகூரியகொம்புகளினால் இராமனை முட்டிக்கொந்திக் கொலைசெய்ய முயலுமளவில், அப்பெருமான் சினங்கொண்டு சரங்களைத் தொடுத்துவிட்டதனால், இவனுடன்வந்த இரண்டுஅரக்கரும் அம்புபட்டுத் தலையறுப்புண்ண, இவன் தான்மாத்திரம் தப்பியோடியொளித்துத் தவவேடம்பூண்டன னென்ற வரலாறும். மேல் உகஉ-ஆங் கவியில் "முக்காலின் முடிந்திடுவான்" என வருவதும் காண்க. இவ்வரலாறு, வால்மீகிராமாயணத்திலும் கூர்மபுராணத்திலும் பரக்கக்கூறப்பட்டுள்ளது. இக்கவியில் 'துணைவர்' என்றது துணைபாய்உடன்வந்தவரென்னும்பொருளது. பூண்ட என்மானம் தீர - பழிக்குப்பழிவாங்க என்றபடி; இதற்கு - யான்கொண்டுள்ள அகங்காரம் நீங்க என்று பொருளுரைத்து, இதனை 'அஞ்சிமீண்ட' என்பதனோடு இயைப்பாருமுளர்; மானம்-அவமானம் அகங்காரம் என்றும் இருபொருளது. பீ-மீ:—[1]தண்டகம் புக்ககாலத்.

உஎந்.—இராவணன் 'சீதையை வஞ்சித்துக் கவரவேண்டும்' எனல்.

[1]ஆயவ னனைய கூற வரக்கர்கோ னனைய தொய்துன்
முயையா ருயிருண் டானை [2]யாஞ்கொலச் சமைந்து நின்றேறன்
போயையா புணர்ப்ப [3]தென்னை யென்பது பொருந்திற் [4]றன்றே
மாயையால் வஞ்சித் தன்றே வௌவுத லவனை யென்றான்.

(இ - ள்.) ஆயவன் அனைய கூற - மாரீசன் அவ்வார்த்தைகளைச் சொல்ல,—அரக்கர் கோன் - ராக்ஷசராசனை இராவணன், 'ஐய-ஐயனே! உன் தாயை கொய்து ஆர் உயிர் உண்டானை - உனது தாயான தாடகையை எளிதிலே அரியஉயிரை உண்டவனுனை இராமனை, கொல - கொல்லுதற்கு, யான் சமைந்து நின்றேன்-நான் சித்தனாயிருக்கிறேன்; ஐயா போய் புணர்ப்பது என்னை என்பது - 'ஐயனே! போய்ச் செய்யவேண்டுவது என்ன? என்று (நீ உடன்பட்டுக்) கேட்பது, பொருந்திற்று அன்றே - தகுதியேயாம்;

'மாயையால் அவளை வஞ்சித்து வௌவுதல் அன்றே-மாயையினால் அச்சீதையை வஞ்சித்துக் கவர்தலன்றே (செய்யத்தக்கது),' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)—இரண்டிடத்தும் 'அன்றே' என்பது - தேற்றம்.

நொய்து - விரைவிலே யென்றுமாம். நொய்து கொல எனக் கூட்டுதலும் ஒன்று. மூன்றும்அடி - மாரீசனது வினவை இராவணன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டமைகாட்டக் கூறியது. 'மாயையால் அவளை வஞ்சித்து வௌவுதல்' என்பதற்கு-3 மாயையால் அவளை வஞ்சிக்க யான் அவளைக் கவர்தல் என்று பொருள் விரித்துக்கொள்ளலாம்; மேல்வருங் கதை இகழ்ச்சியை நோக்கி. **பி - மி:—** [1]ஆயதாக்கு. [2]கொல்லியான். [3]என்னை. [4]என்றான். (எசுச)

உகசு.—மாரீசன் 'போரில்வென்று சீதையைக் கொள்ளுதலே சிறப்பு' எனல்.

புறத்தினி யுரைப்ப தென்னை புரவலன் றேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத் தாகு
மறத்துள தொக்கு மன்றே யமர்த்தலே வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி [1]மன்ன வென்னமா ரீசன் சொன்னான்.

(இ - ள்.) மன்ன - அரசனே! இனி புறத்து உரைப்பது என்னை - இனி வேறுகச்சிகொல்லவேண்டுவது யாதுளது? புரவலன் தேவிதன்னை - காத்திரும்பிலில்வல்லவனுன இராமனது மனைவியை, திறத்துழி அன்றி - (உனது) வலிமையினுலல்லாமல், வஞ்சித்து எய்துதல் - வஞ்சனை செய்து பெறுவது, சிறுமைத்து ஆகும் - (உன்பெருமைக்குத்) தாழ்வையுண்டாக்குவதாம்; (ஆதலால்), அமர்த்தலே - போரிலே, வென்று - (இராமனைச்) சயித்து, கொண்டு - (சீதையைக்) கைக்கொண்டு, உன் மறம் துறை வளர்த்தி-உனது வீரச்செயலை வளர்ப்பாயாக; அறத்து உளது ஒக்கும் அன்றே - (அங்ஙனஞ் செய்தல்) நீதிசாஸ்திரத்திலுள்ள கொள்கைக்கு ஒத்திருக்குமன்றே? என்ன - என்று, மாரீசன் சொன்னான் - மாரீசன் (இராவணனை நோக்கிக்) கூறினான்.

ஒருவனைப் போரில் வென்று அவனுடைமையைக்கொள்ளுதல் நீதிக்கு ஒத்ததாம்; அன்றியும், போர்வெற்றியால் ஒருமகளை வலியக்கொண்டு மணந்திடுவாயாயின் அது மறநூலின்பத்தின்பாற்படினும் படலாம் என்பது, பின்னிரண்டு அடியின் கருத்து. புரவலன்-அரசர்குலத்தான்; சக்கரவர்த்திகுமாரன். திறத்துழி-உருபுமயக்கம். அறம்-தருமத்தைபுணர்த்தும் நூலுக்குக் காரியவாகுபெயர். அறத்துளதொக்குமன்றே, மறத்துறைவளர்த்தி என்றவற்றுல், இராமனைப் போரில் வென்று சீதையைக் கொள்ளின், அதுஉனது பராக்கிரமச்செயலை விளக்கும்; அன்றி, அறம்போலவுந் தோன்றும் என்று கூறியவாறு. 'புறத்து உரைப்பது என்னை' என்பதற்கு - உன்முன்னிலையன்றிப் புறத்திலே கூறவேண்டுவதில்லை யென்று உரைப்பாரு முளர்.

பி-மி:— [1]மன்னுவை. (எசுடு)

உ0எ.—அதுததுதியன்றென்று இராவணன் காரணங்காட்டல்.

ஆனவ னுரைக்க நக்க வரக்கர்கோ னவரை வெல்லத்
தானையும் வேண்டு மோவென் றடக்கைவா ளுக்க தன்றே
வேனைய நிறக்கிற் ரூனுந் [1]தமியளா யிறக்கு மன்றே
மானவ ளாத லாலே மாயையின் வலித்து மென்ரூன்.

(இ - ள்.) ஆனவன் - (தனக்கு) வேண்டியவனான மாரீசன், உரைக்க - (இவ்வாறு) சொல்ல, நக்க-(அதுகேட்டுச்) சிரித்த, அரக்கர் கோன் - இராவணன்,—'அவரை வெல்ல-அந்தமனிதர்களை வெல்லுதற்கு, தானையும் வேண்டுமோ - சேனையும் (துணை வர) வேண்டுமோ? என் தட கை வாள் தக்கது அன்ரே-எனது பெரியகையிலுள்ள வாளொன்றே (அவர்களைக் கொல்லப்) போதுமானதன்ரே? (ஆயினும்), எனையர் இறக்கில்-தன்னுடனுள்ளவரான இராமலக்ஷ்மணர்கள் இறந்துவிட்டால், மானவள் தானும்-மானுடமகளாகிய அச்சீதையும், தமியள் ஆய் - தனித்திருக்க வேண்டியவளாய், (அக்காரணத்தால்), இறக்கும் அன்றே - இறந்திடுவளன்ரே? ஆதலால் - ஆகையினாலே [அங்ஙனம் இறவாமைப்பொருட்டு என்றபடி], மாயையின் வலித்தும்-மாயையால் (வஞ்சனைசெய்து அவளைக்) கைப்பற்றுவோம்,' என்ரூன் - என்று சொன்னான்; (எ - று.)

மானவள் என்றது, மானவன் என்றதன் பெண்பாலாய் நின்றது; காசியபமுனிவரது மனைவியர்களுள் மனுவென்பாளது மரபில் தோன்றியவளென்று காரணப்பொருள்படும். இனி, மானவ ளென்பதற்கு - மானத்தையுடையவ ளென்றும், மான்போன்ற அவ ளென்றும் பொருள்கொள்ளுதல் தகுதியாம். இராவணன் தான் சிவபிரானிடத்தினின்று சிறந்ததொரு வாளாயுதத்தை வரமாகப் பெற்றிருத்தலால், அதன் சிறப்பைக் கருதி 'தடக்கை வாள் தக்கதன்ரே' என்ரூனென்க. 'மானவளாதலாலே மாயையின் வலித்தும்' என்றது, மானே வஞ்சனையாற் கவர்தல்போல மான்போன்றவளே வஞ்சனையாற் கவர்வோமென்றவாறுமாம். அன்றேயிறக்குமென மொழிமாற்றி, அப்பொழுதே இறப்ப ளென்றலு மொன்று. பி-ம்:—[1]தமியளும். (எசுசு)

உ0அ.—மாரீசன் சிந்தைப்படுதல்.

தேவியைத் தீண்டா முன்ன மிவன்றலை சரத்திற் சிந்திப்
[1]போம்வகை புணர்ப்ப னென்று புந்தியாற் புகல்கின் றேற்கு
[2]மாம்வகை யாயிற் றில்லை யார்விதி [3]விளைவை யோர்வா
ரேவிய [5]செய்வ தல்லா லில்லைவே றென்றென் றெண்ணு.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) தேவியை தீண்டா முன்னம்-இராமன்மனைவியான சீதையை (இவன் நெருங்கித் தொடுதற்குமுன்னமே, இவன் தலை சரத்தின் சிந்திபோம் வகை புனர்ப்பன்-இவனுடையதலைகள் (இராம) பாணத்தாற் சிதறிப் போகும்படி செய்விப்பேன், என்று - என்றுஎண்ணி, புந்தியால் புகல்கின்

றேற்கும் - தந்திரமாகச் சொல்லுகிற எனக்கும், ஆம் வகை ஆயிற்று இல்லை- பிழைக்கத்தக்கவழி உண்டாகவில்லை: விதி வினைவை ஓர்வார் யார் - ஊழ் வினைப்பயனை அறிவார் ஆர்? [எவருமில்லை யென்றபடி]; (இனி, எவிய செய்வது அல்லால் - (இவன்) எவியதொழிலை (நாம்) செய்வதேயல்லாமல், வேறு ஒன்று இல்லை - வேறுருவிதமில்லை, என்று எண்ணு - என்றுகருதி, (எ - று.)—"என்னமாமாயம் யானிங்கியற்றுவது இயம்புகென்றான்" என அடுத்த கவியோடு முடியும்.

சீதையை வஞ்சனையாற் கவர்தல் தகுதியன்று; போர்செய்து ராமலக்ஷ்மணரை வென்றபின் கொள்ளுதலே தகுதி யென்று கீழ் மாரீசன் கூறினது, அங்ஙனம் இராவணன் போர்தொடங்குவனாயின் இராமபாணத்தால் அழிந்திடுவான்; தான் உயிர்பிழைத்திடலாம் என்றகருத்தினாலென இதனால் நன்கு விளங்கும். புந்தி-புத்தி என்ற வடசொல்லின் விகாரம். உம்மை-சிறப்பும்மை. புணர்ப்பன் - தன்மைமுற்று: படர்க்கையாக, இராமன் புணர்ப்பானெனக் கூறுவாருமுளர். பி - மீ:—[1]போவது. [2]ஆவதீதல்லது [3]வினையை வெல்வார். [4]எவது. [5]செய்தல். [6]வேறெண்ணுதென்னு. (எசுஎ)

ஒ0கூ.—மாரீசன் மாயமானதற்கு உடன்படுதல்.

என்னமா மாயம் [1]யானிங் கியற்றுவ தியம்பு [2]கென்றான்
பொன்னின்[3]மா னாகிப் புக்குப் பொன்னேமால் புணர்த்து கென்ன
வன்னது செய்வ னென்னு மாரீச னமைந்து போனான்
மின்னும்வேல் லரக்கர் கோனும் வேறொரு நெறியிற் போனான்.

(இ - ள்.) 'இங்கு - இப்போது, யான் இயற்றுவது என்ன மா மாயம்- நான்செய்யவேண்டிய பெரியமாயை யாது? இயம்புக - சொல்வாயாக,' என்றான்-என்று(மாரீசன்) வினவினான்;(அதற்குஇராவணன்),பொன்னின் மான் ஆகி புக்கு பொன்னே மால் புணர்த்துக என்ன-'(மாயையால் நீ) ஒருபொன் மானாகி (அவர்கள் இருக்குமிடத்துக்குச்) சென்று சீதைக்கு ஆசையை மூட்டு வாயாக' என்று சொல்ல,—மாரீசன்—,அன்னது செய்வென் என்னு அமைந்து போனான் - அதனைச்செய்வேனென்று சம்மதித்துச்சென்றான்: மின்னும் வேல் அரக்கர் கோனும் வேறு ஒரு நெறியின் போனான் - விளங்குகிறவேற் படையையுடைய இராவணனும் வேறொருவழியாற் சென்றான்; (எ - று.)

பொன் - பொன்னிறமானவள்; பொன்போல் அருமையானவள்: திருமகளின் அம்சமானவள். அவள் பொன்னாகலின் அவளைப் பொன்மானாய் மயக்குக என ஒருநயமுந்தோன்றக் கூறினான். இயம்புகென்றான், புணர்த்துகென்ன - தொகுத்தல். பி - மீ:—[1]யான்மற்று. [2]என்ன. [3]மானாகப்புக்கு. ()

வேறு.

ஒக0.—இது - கவிக்கூற்று.

மேனி [1]ளவன்வில் வலிகண் டமையாற்
றூனி கவ[2]மைக் துசமைக் திலனான்

மானு குகியென் றவன்[3]வாய் மொழியாற்
போனுன் மனமுஞ் செயலும் புகல்வாம்.

(இ - ள்.) மேல் நாள் - முன்னுளில், அவன் வில் வலி கண்டமையால்- அவ்விராமபிரானது வில்லின் வலிமையை ஒரு முறைக்கு இருமுறை) அறிந் துள்ளதனுல், தான் ஆக அமைத்து சகமத்திலன்-(மாரீசன்) தானுக (மாயை செய்தற்கு) இயைத்து மான்வடிவமாயினுனில்லை; மான் ஆகுதி என்றவன் வாய் மொழியால் போனுன்-மான்வடிவங்கொள்வா யென்று கட்டளையிட்ட இராவணனது வாயினின்று வந்த வார்த்தையைக் கடக்கமாட்டாமையால் (அங்ஙனஞ் செய்தற்குச்) சென்ற மாரீசனது, மனமும் செயலும்-மனத்தின் நிலைமையையும் செய்கையையும், புகல்வாம்-இனிக் கூறுவோம்; (எ - று.)— அடுத்த கவியில் சிந்தையின் நிலையும், அதற்கு அடுத்த கவிகளில் செயலும் முறையே கூறப்படுதல் காண்க. ஆல் - ஈற்றசை.

மனம்-அதன்நிலைமைக்கு ஆகுபெயர்.'வாய்மொழி'என்றவிடத்து 'வாய்' என வேண்டாதுகூறினர், தீயசொற்கள்பயின்றதனைத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு. பி - ம்:—[1]அவர். [2]நினைந்து. [3]வாள்வலியால்.

இதுமுதல் பதினுறு கவிகள்-பெரும்பாலும் நாற்சீரும் மாச்சீராகிய அள வடிதான்குகொண்ட கலிவிருத்தங்கள். அன்றி,மேனுளவன் வில்வலி கண்ட மையால் என இவ்வாறுபிரித்து, பெரும்பாலும் முதற்சீர் மாங்கனிச்சீரும், இரண்டாவது கூவிளச்சீரும், மூன்றுவது கூவிளங்காய்ச்சீருமாகிய சிந்தடி நான்குகொண்ட வஞ்சிவிருத்தமாகக் கொள்ளினும் இழுக்காது. (எசுக)

உகக.—மாரீசனது மனநிலை.

வெஞ்[1]சுற் றநினைந் தகும்வீ ரைவே
றஞ்சுற் றுமறுக் குறுபாழ் குழிநீர்
[2]நஞ்சுற் றுழிமீ னி[3]னடுக் குறுவா
னெஞ்சுற் றதொர்பெற் றிநினைப் பரிதால்.

(இ-ள்.) (மாயைசெய்தற்கு உடன்பட்டுச் சென்ற மாரீசனது மனமான தது), வெம் சுற்றம் நினைந்து உகும்-(தனது) விருப்பத்துக்குஇடமான சுற்றத் தாரை நினைந்து வருந்தும்: வேறு மற்றும், வீரரை அஞ்சுற்று மறுக்கு உறும்- சுத்தவீரர்களான இராமலக்ஷ்மணர்களுக்கு அஞ்சிச் சுழற்சியடையும்;ஆழ் குழி நீர் நஞ்சு உற்ற உழி மீனின் நடுக்கு உறுவான் - ஆழ்ந்தபள்ளத்திலுள்ள நீர் விஷத்தன்மையையடைந்தபோது (அதிற்பொருந்திய) மீன் நடுங்குவது போல நடுங்குதலுற்ற அந்த மாரீசனது, நெஞ்சு உற்றது ஓர் பெற்றி நினைப்பு அரிது-(இவ்வாறு அவனது) மனம் அடைந்த தொருநிலைமை இத்தன்மைத் தென்று நினைக்கவும் முடியாது; (எ - று.)

மனத்தினுல் நினைத்தற்கும் முடியா தெனவே,வாயினுற்சொல்லமுடியா தென்பது தானே விளங்கும். வெம்மை யென்பது-உரிச்சொல்லாய் விருப்ப

மென்னும் பொருளையும் உணர்த்துதலை "வெம்மைவேண்டல்" என்றதொல் காப்பியத்தால் அறிக. 'வெம்சுற்ற நினைந்துகும்' என்றது - தனது தாயும் தம்பியும் முதலிய அன்புள்ள சுற்றத்தார் முன்பு இராமனுலிறந்ததைச் சிந்தித்து நிலைகுலையு மென்றும், அன்புள்ள தன் சுற்றத்தாரான அரக்கர்பலரை விட்டுத் தான் இப்பொழுது சென்று அழிய வேண்டிய தன்மையைக் கருதி நெகிழு மென்றுங் கருத்துப்படும். மறுக்கு - மறுகு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'ஆழ்குழி நீர் நஞ்சுற்றுழிமீனின் நடுக்குறுவான்' என்பதற்கு-விஷங்கலந்த நீர்நிலையிற் பொருந்திய மீன் அதில் நிற்கவும் அதைவிட்டு நீங்கவும் மாட்டாமல் தடுமாறுவதுபோலத் தடுமாறுவா னென்பது, தேர்ந்த பொருள். பி-மீ:—[1]சுற்றமறுத்துகும். [2]நஞ்சுற்றுறுமீனினடுக்குறுமால். ()

உகூ.—மாரீசன் இராமனுள்ளஇடத்தை யடைதல்.

அக்கா லமும்வேள் வியினன் றிவீணு
டெக்கா லுநலிந் துபொரீ றுபெருன்
முக்கா லின்முடிந் திடுவான் முயல்வான்
புக்கா னவிரா கவன்வை குபுனம்.

(இ - ள்.) வேள்வியின் அன்று-(விசுவாமித்திரனது) யாகம் நடந்த அந்நாளிலும், அ காலமும் - (தண்டகாரணியத்தில் மானுகச்சென்ற) அக்காலத்திலும், இவணேடு - இவ்விராமபிரானுல், நலிந்தும் - வருத்தமடைந்தும், எ காலும் - (இவ்விரண்டு சமயங்களில்) எச்சமயத்திலும், ஓர் ஈறு பெருன்-ஓர் அழிவையடையாதவனுன மாரீசன்,முக்காலின் முடிந்திடுவான் முயல்வான்-மூன்றும்முறையாகிய இப்பொழுது இறந்திட முயல்பவனுய், அ இராகவன் வைகு புனம் புக்கான்-ரகுகுலத்தில் திருவவதரித்தவனுன அவ்விராமபிரான் வசிக்கிற வனத்திற் பிரவேசித்தான்; (எ - று.)

'வேள்வியினன்று' என்பது பின்னும், 'அக்காலமும்' என்றது முன்னுமாக முறைபிறழ வைக்கப்பட்டது, செய்யுளாதலின். 'வேள்வியினன்று' என்பதன்பின் எண்ணும்மை விகாரத்தால் தொக்குநின்றது. இவணேடு என்பதில், ஓடு - ஆலுருபின் பொருளதாய் நின்றது. 'இவணேடு நலிந்தும்' என்பதற்கு - இவ்விராமனே வருத்தத்தொடங்கியு மென்றும் பொருள்கொள்ளலாம். உம்மைகள் மூன்றனுள், முன்னது-எண்ணும்மை; பின்னது-சிறப்பும்மை; மற்றது - முற்று. (எக)

உகூ.—மாரீசன் பொன்மானுருவங்கொண்டு எதிர்வரல்.

தன்மா னமிலா ததயங் கொளிசான்
மின்வா னமுமண் ணும்[1]விளங் குவதீதார்
பொன்மா னுருவங் கொடுபோ யினனு
னன்மா னனீயா டணுநா டுறுவான்.

(இ - ள்.) மானம் இலாத-ஒப்பில்லாத, தயங்கு ஒளி சால்-விளங்குகிற ஒளிமிக்க, தன் மின் - மின்னல்போன்ற தனது தேககாந்தியால், வானமும்

மண்ணும் விளங்குவது-விண்ணுலகமும் மண்ணுலகமும் விளங்கும்படியான, ஓர் பொன் மான் உருவம் - பொன்மயமான ஒரு மானினுருவத்தை, கொடு-(மாயையினுற்)கொண்டு,(மாரீசன்), நல் மான் அனையாள் தனை நாடுறுவான்-சிறந்தமான்போன்றவளான சீதை தன்னைப்பார்த்து விரும்புமாறு, போயினன் - (அருகில் எதிரிற்) சென்றான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நல்ல மான்போன்ற அச்சீதை தன்னை விரும்பும்பொருட்டு மாயையாலாகிய பொன்மான்வடிவங்கொண்டு போலு னென ஒருவகைச்சமத்காரந் தோன்றக் கூறினர். முன் இரண்டுஅடி - பொன்மானின் தேககாந்திச் சிறப்பைக் கூறியது. மானம் - ஸமாந மென்ற வடசொல்லின் திரிபு. மின்-உவமவாகுபெயர்: இனி, 'சால் மின் விண்' என எடுத்து - பெருமைபொருந்திய மின்னலைக்கொண்ட வானமும் மண்ணும் தன்தயங்கொளியால் விளங்குவது என்று உரைப்பினுமாம். பி - ம்:—[1]விளங்கொளிசேர். (எஎஉ)

உகசு.—அந்த மானை மான்கள்பலவுந் தொடர்தல்.

கலைமான் முதலா யினகண் டவெலா
[1]மலைமா னுறுமா சையின்வந் தனவா
[2]னிலையா மனவஞ் சனைநே யமிலா
விலைமா தர்கண்யா ரும்விழுந் தெனவே.

(இ - ள்.) நிலையா மனம் - (எவரிடத்தும்) பற்றுதலில்லாத மனத்தையும், வஞ்சனை - வஞ்சனையையுமுடைய, நேயம் இலா விலை மாதர்கண்-உள்ளன்பில்லாத வேசையர்பக்கல், யாரும் விழுந்து என-காமுகரெல்லோரும் மயங்கிவிழுந்தாற்போல,—கலைமான் முதல் ஆயின கண்ட எலாம்-கலைமான் முதலிய மானினங்களில் (அப்பொன்மானைப்) பார்த்தவை யாவும், அலை மானுறும் ஆசையின் - கடலையொத்த [மிகவும்அதிகமான] ஆசையுடனே, வந்தன-(அப்பொன்மானைத் தொடர்ந்து) வந்தன; (எ-று.)—ஆல்-ஈற்றசை.

விலைமகளிரது வஞ்சனையை அறியாமல் அவர்கள்மேனிமினுக்கையே நோக்கி அவர்களிடத்துச் சாதாரணசனங்கள்பலரும் கண்டவளவில் ஆசை வைத்துச் சேர்தல்போல, அந்தப்பொன்மானினது மாயையை அறியாமல் அதன் உடம்பின்விளக்கத்தையே நோக்கி மான்கள்பலவும் அதனைக் கண்ட மாத்திரத்தில் மிக்கஆசைப்பெருக்கத்துடன் தொடர்ந்தன என்பதாம்; **உவமையணி.** இரண்டாமடிக்கு - (அவ்வனத்திலே) சஞ்சரிக்கிற அம்மானினிடத்து மிக்கஆசையோடு வந்தனவென்றும் பொருள்கொள்ளலாம்; இப்பொருளில், அலைமான் என்றது-விளைத்தொகை. இனி, நிலை ஆம் மனம் வஞ்சனை யென எடுத்து, எப்பொழுதும் நீங்காது நிலைபெற்ற மனவஞ்சனையையுடைய எனப் பொருள்கொள்ளினுமாம். விலைமாதர்-தமதுமெய்யின்பத்தைப் பொருட்டு விலைப்படுத்தும் மகளிர். விழுதல் - இங்கே, விரும்பித் தொடர்தல். தம்மிடத்து ஆசைகொள்ளும் ஆடவரிடத்து விலைமாதர் தாம்

ஆசைகொள்ளாமைபோலத் தன்னிடத்தில் ஆசைகொள்ளும் பிறமான்களிடத்து அப்பொன்மான் ஆசைகொள்ளாமையின், இவ்வுவமை மிகப்பொருந்தும். இக்கவியால், அந்தமாயமானினது விரும்பப்படுந்தன்மை கூறப்பட்டது. பி-ம்:—[1]அலவான். [2]நிலையாமென. (எஎரு)

உகரு.—அப்போழது சீதை மலர்கொய்து வருதல்.

பொய்யா மெனவேவ் துபுறஞ் சொலினு
னையா விடைநோ வநடந் தனளால்
[1]வைதே விதன்வால் வளைமென் கையெனுங்
கொய்யா [2]மலரான் மலர்[3]கொய் குறுவாள்.

(இ - ள்.) வைதேவி-சீதாபிராட்டி,—தன் - தனது, வால் வளை மெல்கை எனும்-சுத்தமானவளையல்களை யணிந்த மெல்லிய கைகளாகிய, கொய்யா மலரால் - பறிக்கப்படாத தாமரை மலர்களால், மலர் கொய்குறுவாள்-(அவ்வனத்திலுள்ள) பூக்களைப் பறித்துக்கொண்டு வருபவளாய்,—பொய்ஆம் என புறம் ஓது சொலினுல்-(இவளுக்குஇடையுண்டென்பது) பொய்யேயாமென்று அயலார் கூறுதற்கு ஏற்ப, இடை நையா நோவ - (தனது) இடை மெலிந்து வருந்த, நடந்தனள்-நடந்துவந்தாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உத்தமவிலக்கணத்தின்படி மிகச்சிறுத்து நுண்ணியதாயுள்ள இடை மெல்லியலாகிய அவள் மலர்கொய்து நடந்துவருகிற இளைப்பினுல் மிகமெலிந்து வருந்துமளவில், இவளுக்கு இடை இல்லையென்று கண்டார்கூறுங் கூற்றுத் தகுதியெனத் தோன்றுமென்பது, முன்னிரண்டடியின் போக்கு. புறம்-புறத்தார்க்கு ஆகுபெயர். வைதேவி = வைதேஹீ: விதேகராசனது குலத்து மகள்; வடமொழித் தத்திதாந்தநாமம். விதேஹனென்பது, ஜனககுலத்திலெவனுன அரசனது பெயர். அவன் ஒருகால் வில்லிஷ்டன்சாபத்தால் தேஹத்தையிழந்தமைபற்றி, விதேஹனெனப் பெயர்பெற்றான். வால்-வெண்மையும், ஒண்மையுமாம். 'கையெனுங் கொய்யாமலர்' என்பதை, 'பாயாவேங்கை,' 'பறவாக் கொக்கு' என்றாற்போலப் பிறகுறிப்பின்பாற் படுத்துக. கொய்யா மலரால் மலர் கொய்வா ளென ஒருவகைச் சமத்காரந் தோன்றக் கூறினர். பி-ம்:—[1]வைதேகி. [2]மலராலலர். [3]கொய்துறுவாள். (எஎச)

உகசு.—சீதை மாயமானைக் காணுதல்.

உண்டா கியகே டுடையார் [1]துயிலா
வெண்டா னு[2]மியைந் தியையா வுருவங்
கண்டா ரெனலாம் வகைகண் டனளாற்
பண்டா ருமுரு விடர்பா டுறுவாள்.

(இ-ள்.) உண்டாகிய கேடு உடையார்-(விரைவில்) தீங்குநேரும்படியான நிலைமையை யடைந்தவர்கள், துயிலா - நித்திரைகொண்டு [துயில்கையில்], எண்தானும் இயைந்து இயையா உருவம் கண்டார் எனல் ஆம் வகை - (ஒரு

பொழுதும்) மனத்தில் தோன்றியமைதலுமில்லாத [விபரீதத்] தோற்றத்தைக் கனக்கண்டாற்போல,—பண்டு ஆரும் உரு இடர் பாடு உறுவாள் - முன்பு எவரும்அடையாத துன்பம் அருகில் நெருங்கப்பெற்றவளான சீதை, கண்டனள் - (அந்த மாயமானைப்) பார்த்தாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

விநாசகாலம் சமீபிக்கப்பெற்றவர் அதற்கு முற்குறியாக இதுவரையில் ஒருநாளும் மனத்தில் நினைத்துப் பார்த்துமிராத விபரீதக் காட்சியைத் தூக்கத்திற் கனவிற்காண்பதுபோல, மிக்கதுன்பத்தை உடனே அடைய வேண்டியவளான சீதை அதற்குமுன்நிகழ்ச்சியாகப் பொய்ம்மானின் தோற்றத்தைப் பார்த்தனளென்பதாம்; **உவமையணி.** எண்டானுமியைந்தியையாவருவம் - மனத்திலெண்ணியமைக்கவும்முடியாதவருவம். உபமானத்தில் 'எண்டானுமியைந்தியையாவருவம்' என்றதனால், உபமேயமாகிய இம்மான் வடிவம் இதுவரையில் என்றும் மனத்தில் நினைத்துப் பார்க்கவும்படாத அதிசயக்காட்சியுடைய தெனத் தோன்றும். உண்டாகிய கேடுடையார் - உளதாகிய போகூழையுடையவர். **பி-ம்:**—[1]துயில்வாய். [2]இலாதியையா. (எஎடு)

உகஎ.—சீதை அந்த மானினிடத்து விருப்பங்கோள்ளல்.

காணு விதுகை தவமென் றுணராள்
பேணு தநலங் கொடுபே ணினளால்
[1]வாணு ளவ்விரா வணன்மா ளுதலால்
வீணு ளினறம் புவிமே வுதலால்.

(இ - ள்.) அ இராவணன் வாழ் நாள் மாளுதலால் - அந்த இராவணன் ஆயுளொழிதலாலும், வீழ் நாளின் அறம் புவி மேவுதலால்-(அவன்) இறந்து விழுந்தவளவில் தருமம் பூமியிற் பொருந்தி நிலைபெறவேண்டுதலாலும்,—(சீதை), காணு-(அந்தமானைக்) கண்டு, இது கைதவம் என்று உணராள்-இது வஞ்சனைவடிவமென்று அறியாதவளாய், பேணுத நலம் கொடு பேணினள் - விரும்பத்தகாத (அதன்) அழகையே (காரணமாகக்) கொண்டு (அதனை) விரும்பினள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சீதை மாயமானிடத்து விருப்பங்கொள்ளுதல் - அவளைத் தனிப்படுத்தி இராவணன் எடுத்துப்போய் அதுகாரணமாக இராமபிரானைற் கொல்லப்பட்டு அழிதற்கும், மிக்ககொடியோனை அவனது அழிவு - உலகத்தில் தருமம்நிலைநிற்றற்கும் காரணமாகுமென்க. காணுதல் - எந்நாளினும் காணப்பட்டிராத இம்மானுருவமெனினும் அமையும். கைதவம் - வடசொல். 'பேணுதநலங் கொடு' என்பதற்கு - பாராட்டத்தகாத ஆசைகொண்டு என்றும் பொருள் கொள்ளலாம். **பி-ம்:**—[1]வாணாள். (எஎக)

உகஅ.—அதனைப்பிடித்துத் தாச்சொல்லும்போதுட்டச் சீதை இராமனிடம் வருதல்.

கெற்றிப் [1]பிறையாண் முனி[2]ன்றிடலு
முற்றிப் பொழிகா தலின்முந் துறுவாள்

பற்றித் [3]தருகென் பெனைனப் பதையா
வெற்றிச் சிலைவீ ரனைமே வினளால்.

(இ - ள்.) நெற்றி பிறையாள் முனம் - இளஞ்சந்திரன்போன்ற நெற்றி யையுடைய சீதையின் எதிரிலே, நின்றிடலும்-(அந்தமான் சென்று) நின்ற வளவிலே,—(அவள்), முற்றி பொழி காதலில் முந்துறுவாள்-நிறைந்துமேல் வழிகிற ஆசைப்பெருக்கில் மிகுபவளாய், பற்றி தருக என்பென் என - (இத னைப்)பிடித்துக்கொடுக்கவேண்டுமென்று சொல்லவே னென்றுகருதி,பதையா-மிகவிரைந்து, வெற்றி சிலை வீரனை மேவினள் - சயத்தைத்தருகிற வில்லை யுடைய வீரனுகிய ஸ்ரீராமனை யடைந்தாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நெற்றிப்பிறை - முன்பின்னுகத்தொக்க உவமைத்தொகை. பி-ம்:—[1]பிறையாளிறை. [2]நின்றிலடல். [3]தருகென்பது. (எஎஎ)

உகக.—அந்தமானுக்குறித்துச் சீதை இராமனிடம் பிரஸ்தாபித்தல்.

ஆணிப் பொனினு கியதாய் கதிராற்
சேணிற் சுடர்கின் றது[1]திண் செவிகான்
மாணிக் கமயத் தொருமா னுளதாற்
காணத் தகுமென் றனள்கை தொழுவாள்.

(இ - ள்.) கை தொழுவாள்-(சீதை இராமனைக்) கைகூப்பிவணங்குபவ ளாய்,—'ஆணி பொனின் ஆகியது - மாற்றுயர்ந்த பொன்னினு லானதும், ஆய் கதிரால் சேணில் சுடர்கின்றது - சிறந்த ஒளியினுல் நெடுந்தூரமளவும் விளங்குகின்றதும், திண் செவி கால்-வலிய காதுகளும் கால்களும், மாணிக்க மயத்து-மாணிக்கத்தினமயமா யிருக்கப்பெற்றதுமாகிய, ஒரு மான்-மானினை ன்று, உளது - வந்துள்ளது; காண தகும் (மிக்க அழகுடைமையால் அது) பார்க்கத்தக்கதாம்,' என்றனள் - என்று சொன்னுள்; (எ - று.)

சேணில் - வானத்தி லெனினுமாம். திண்செவி-நெறித்த காது. காது நெறித்தல், மருண்ட மானின் இயற்கை. ஆல் - ஈற்றசை. பி - ம்:—[1]கண்.

உஉ0.—இராமன் அதனைப்பார்க்க விரும்புதல்.

இம்மா னிலத்தி னிலில் லையெனு
வெம்மா [1]னிதனைச் சிறிதெண் ணல்செயான்
செம்மா னவள்சொற் கொடுதே மலரோ
னம்மா னுமருத் தியனு யினனுல்.

(இ - ள்.) இ மான் இ நிலத்தினில் இல்லை எனு - இப்படிப்பட்ட மான் இந்தவுலகத்தில் இல்லையேயென்று, இதனை - இவ்விஷயத்தை, சிறிது எண் ணல் செயான் - சிறிதும் ஆராய்ச்சி செய்யாதவனும், எம்மான் - எமதுதலைவ னும், தேன்மலரோன்அம்மானும்-தேனையுடையதாமரைமலரில்தோன்றியவ னுன பிரமனது தந்தையாகிய திருமாலின் அவதாரமுமான ஸ்ரீராமனும்,— செம் மான் அவள் சொல் கொடு - செவ்விய மான்போன்ற அச்சீதையினது

சொல்மாத்திரத்தையே கொண்டு, அருத்தியன் ஆயினன் - (அந்தமானினிடத்து) ஆசையுள்ளவனுனன்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

சகலசராசரங்களையும் படைக்கிற பிரமனைப் படைத்த தந்தையானவனும் தையல்சொற் கேட்டு அவள் விருப்பங்கொண்ட பொருளினிடத்துத் தானும் ஆராயாது விருப்பங்கொண்டன னென்றூர். முன்னிரண்டடியால், சிறிதேனும் ஆலோசனை செய்திருந்தால் அதன் உண்மைநிலையை யுணர்தலால் அதனை விரும்பா னென்பது தோன்றும். செம்மானவள் என்றது, மருண்ட பார்வையையுடையவளாதலின்: காணப்பட்ட பொருளின் உண்மையியல்பை உணரவல்லவ ளல்லாதவ ளென்றவாறு. இ நிலம் - தொகுத்தல். இனி, தே மலர் என்றே எடுத்து-தெய்வத்தன்மையுள்ள மலருமாம். இங்கே, மலர்-திருமாலின் உந்தித்தாமரை. தேமலரோ னம்மானும் என்ற உம்மை-உயர்வு சிறப்போடு இறந்தது தழுவிய எச்சம். பி-ம்:—[1]இதனைச். (எஎக)

22க.—அப்பொழுது இலக்குமணன் ஒன்றுகூறத் தொடங்கல்.

ஆண்டங் கிளையோ னுரையா டினனுல்
வேண்டும் மெனலால் [1]விழைவன் றி[2]தெனுன்
பூண்டுஞ் சுபொலங் கொடியோ யதுநாங்
[3]காண்டும் மெனும்வள் ளல்கருத் துணர்வான்.

(இ - ள்.) வேண்டும் எனலால் - (இது எனக்கு) வேண்டு மென்று (தன் மனைவி) கூறுதலால், இது விழைவு அன்று எனுன்-இது விரும்பத்தக்கதன்று என்றுமறுத்துரையாதவனுகி, (அவளைநோக்கி), 'பூண் துஞ்சு பொலம்கொடியோய் - ஆபரணங்கள்தங்கிய பொற்கொடிபோன்றவளே! அது நாம் காண்டும் - அந்தமானை நாம் போய்ப்பார்ப்போம்', எனும்-என்றுகூறுகிற, வள்ளல்-வரையாதருளுந் தன்மையனுன இராமபிரானது, கருத்து - எண்ணத்தை, உணர்வான் - அறிபவனுய்,—இளையோன்-தம்பியான இலக்குமணன்,—ஆண்டு அங்கு உரையாடினன் - அப்பொழுது அவ்விடத்தில் ஒருவார்த்தை சொல்பவனுனன்; (எ-று.)—அதனை அடுத்தகவியிற் காண்க. ஆல்-ஈற்றசை.

தனது உதாரகுணத்தால் இங்ஙனஞ் சீதை சொன்னபடி விரும்பின னென்பது தோன்ற, 'வள்ளல்' என்றூர். 'வள்ளல் கருத்து உணர்வான்' என்பதற்கு-இத்தன்மையான இராமனது திருவுள்ளத்தை யறிந்து என்றும், இராமனது மனப்போக்கின்நிலையை அறியும்பொருட்டு என்றுங் கருத்துக் கொள்ளலாம். பிராட்டியினது திருமேனி பொன்னிறத்தோடு மெல்லியதாய் ஒல்கியொசியுந்தன்மைய தாதலால், 'பொலங்கொடியோய்' என விளிக்கப் பட்டாள். வேண்டும்மெனல், காண்டும்மெனும் - விரித்தல். 'அங்கு' என்பது - அசையுமாம். ஆண் தங்கு இளையோன் எனப்பிரித்து, ஆண்மைநிலை பெற்றுள்ள இலக்குமண னென்று உரைப்பாரு முளர். பி-ம்:—[1]விளைவு. [2]எனுப். [3]காண்டும்மென. (எஅ0)

222.—இலக்குமணன்வார்த்தை: அந்தமான மாயையென்றல்.

காயங் கனகம் மணிகால் செவிவால்
பாயும் முருவோ டிதுபண் பெனலான்
மாயம் மெனலன் றிமனக் கொளவே
யேயும் மிறை [1]மெய்யல வென்றனனால்.

(இ - ள்.) 'கனகம் காயம்-பொன்னிறமான உடம்பும், மணி கால் செவி வால் - மாணிக்கமயமான கால்களும் காதுகளும் வாலும், பாயும் உரு வோடு - பாய்கிற வடிவத்தோடுங் கூடிய, இது - இத்தன்மை, பண்பு - (அந்தமானின்) இயல்பு, எனலால் - என்று (பிராட்டி) கூறுதலால், மாயம் எனல்-(இதனை) மாயைவடிவமென்று எண்ணுக: அன்றி-அவ்வாறல்லாமல், மனம் கொள - (வேறுவகையாக) மனத்திற் கொள்ளுதற்கு [எண்ணுதற்கு], ஏயும்இறை-பொருந்தியதலைவனே!மெய் அல-(இது மெய்ம்மையான தன்று,' என்றனன் - என்று (இலக்குமணன்) கூறினான்; (எ - று.)—ஆல்-அசை.

இங்கு வாலும் உடன்கூறப்பட்டதனால், கீழ் உகக-ஆங் கவியில் "திண் செவிகால்" என்றது, வாலுக்கும் உபலக்ஷணமென்று கொள்ளத்தக்கது. எனல்-வியங்கோள். பி - ம்:—[1]ஐயுறவென்றனனால், ஐயுறவென்றளவே. ()

223.—இதுவும், அடுத்த கவியும் - இராமன் அதனை மறுத்துக்கூறல்.

நில்லா வுலகின் னிலைநேர் மையினால்
வல்லா ருமுணர்ந் திலர்மன் னுயிர்தாம்
பல்லா யிரகோ டிபரந் தளவா
வில்லா தனவில் லையிளங் குமர.

மூன்று கவிகள்—குளகம்.

(இ - ள்.) இள குமரா - இளமையுடையதம்பீ! நேர்மையினால் - ஒழுங் கான அறிவினால், வல்லாரும்-(பலவற்றையும்அறிய) வல்லவர்களும், நில்லா உலகின் நிலை-(ஒருநிலையில்) நில்லாத உலகத்தின் நிலைமையை,உணர்ந்திலர்-(முற்றும்) அறிந்தாரில்லை; மன் உயிர்தாம்-(உலகத்தில்) நிலைபெற்ற பிராணி கள்தாம், பல்ஆயிர கோடி பரந்தள-அநேகம் ஆயிரங்கோடிவகையாகப் பரவி யுள்ளன; ஆல்-ஆதலால், இல்லாதன இல்லை - (உலகத்தில்) இல்லாத பொருள்கள் இல்லை; (எ - று.)

உலகிலுள்ள சராசரங்களுள் எவரும் அறியவொண்ணாதபடி பற்பல வகைகளுள்ளதனால்,அவற்றுள் இது ஓர்அற்புத வடிவமாயிருப்பினுமிருக்கலா மென்றபடி. உலகின்னிலை - விரித்தல். 'நேர்மையினல்வல்லார்' என்றது, விசேஷஞானிகளை. 'மன்னுயிர்தாம்' என்பதில், தாம் என்பது - கட்டுரைச் சுவைபட நின்றது; வாக்கியாலங்கார மென்பர் வடநூலார். ஆல் - விகாரம்.

224. என்னென் று[1]நினைத் ததிழைத் [2]தளகங்
கன்னங் களின்வே றுளகா ணுதுமால்

பொன்னின் [3]ஞெளிமே னிபொருந் தியவே
முன்னங் கள்பிறந் ததறிந் திலேயோ.

(இ - ள்.) உளம் இழைத்து என் என்றுணர்ந்தது-(உனது) மனம்ஆராய்ந்து என்னவென்று கருதிற்று! நம் கன்னங்களின் - நமது காதுகளிலே, வேறு உள காணுதும்-வெவ்வேறு வகையாயுள்ள பொருள்களைக் கேட்டறிகிறோம்; பொன்னின் ஒளி மேனி பொருந்திய ஏழ் அன்னங்கள் பிறந்தது அறிந்திலேயோ-பொன்மயமாய்விளங்குகிற வடிவம்பொருந்திய ஏழுஅன்னப் பறவைகள் தோன்றியதை நீ அறிந்தாயில்லையோ? (எ - று.)—ஆல்-ஈற்றசை.

பரத்துவாசமுனிவனது புத்திரர்களான ஏழுபேர் மாநசசரசின் கரையில் யோகாப்பியாசஞ்செய்கையில் ஒழுக்கக்குறைவினால் வழுவி அவ்யோகம் கைகூடப்பெறாமல் மரணமடைந்து அடுத்தபிறப்பில் குருகூத்திரத்தில் கௌசிகமுனிவனது குமாரர்களாய்த்தோன்றித் தந்தையிறந்தபின் கார்க்க முனிவனுக்குச்சிஷ்யர்களாய் அவனுடைய ஓமதேனுவைப் பாதுகாத்துவருகையில், பசியால் வருந்தி அப்பசுவைக் கொன்றுதின்னப் புகுமளவில், தம்மிலொருவன் கூறிய ஆலோசனையின்படி அப்பசுவைக்கொன்று பிதிருதேவதைகளுக்குச் சிராத்தஞ் செய்து சேஷத்தைத் தாம் உண்டனர்: அவர்கள் குருவின்பசுவைக் கொன்ற தோஷத்தால் சிலஇழிபிறப்புக்களையும், பிதிருசிராத்தஞ்செய்த புண்ணியத்தால் அப்பிறப்புக்களில் பூர்வஜந்மஞானத்தையும் நல்லொழுக்கத்தையும் முடிவில் யோகம்கைகூடி உயர்கதிபுகுதலையும் அடைவாராகி,தசார்ணதேசத்தில் ஏழுவேடர்களாயும், காலஞ்சரகிரியில் ஏழு மிருகங்களாயும், சரத்வீபத்தில் ஏழு சக்கரவாகபக்ஷிகளாயும், மாநசசரசில் பத்மகர்ப்பம் அரவிந்தாக்ஷம் க்ஷீரகர்ப்பம் சுலோசநம் குருபிந்து சுபிந்து ஹேமகர்ப்பம் எனப் பெயர்பெற்றுப் பொன்னிறமாய்விளங்கும் ஏழு அன்னப்பறவைகளாயும், காம்பிலியதேசத்தில் ஏழுசிறந்த மனிதர்களாயும் முறையேபிறந்து, ஒவ்வொருபிறப்பிலும் முற்பிறப்புணர்ச்சியையும் விரதானுஷ்டானத்தையும் யோகசிந்தனையையும் விடாதுசென்று, முடிவில் யோகசித்தியையடைந்து முத்திபெற்றனரென்ற **வரலாறு** இங்குக் கொள்ளத்தக்கது. இதற்கு வேறுவரலாறு கூறுவராயினும் பொருந்துமாயிற் கொள்க.

இங்கே 'காணுதும்'என்றது, கேட்டுள்ளோமென்ற பொருளில் வந்தது; இது, ஒருபுலனை மற்றொருபுலனுக்கூறிய உபசாரவழக்கு; "நாற்றங் கேட்டலுந்தின்ன நயப்பது" என்றாற்போல. **பி - ம்:**—[1]நினைந்தது. [2]உளதாம். [3]குளிர். (எஅ)

உரு.—அவ்வாவிற் சீதை 'அதுபேர்யிவிடுமே' என வருந்தல்.

முறையும் முடிவும் மிலேமெய் யுயிரென்
றிறைவன் னிலையா லெடியம் பினனுற்
பறையுந் துணையன் னதுபன் னெறிபோய்
மறையும் மெனவே மழைவருந் தினளால்.

(இ - ள்.) மொய் உயிர் - (உலகத்தில்) நிறைந்துள்ள பிராணிகளுக்கு, முறையும் - (இப்படித்தானிருக்கவேண்டு மென்னும்)முறைமையும்,முடிவும்-(இவ்வளவுதா னிருக்கவேண்டுமென்னும்) எல்லையும், இலை-இல்லை,என்று—, இறைவன் - (எல்லாவுயிர்க்குந்) தலைவனான இராமன், இளையானெடு - தம்பி யான இலக்குமணனுடனே, இயம்பினன் - கூறினன்: பறையும் துணை-(அங் ஙனம்) கூறுமளவிலே, அன்னது பல் நெறி போய் மறையும் என-'அந்தமான் பலவழிகளிற்போய் மறைந்திடுமே' என்று, எழை வருந்தினள்-(பெண்களுக்கு இயல்பான) பேதைமைக்குணத்தையுடைய பிராட்டி வருந்தினள்; (எ-று.)—

முறையும்முடிவும்மிலை, இறைவன்னிளையான், மறையும்மென என்ற வற்றில், மகர னகர வொற்றுக்கள்-விரித்தல். 'மொய்யுயிர் முறையும்முடி வும்மிலை' என்றது, உலகத்திற் பற்பலவகையாய் அளவிறந்துள்ள சீவகோடி களுள் இப்படியுமொன்று இருத்தல்கூடு மென்றற்குக் கூறியது. இறைவன்-சக்கரவர்த்திகுமாரனுமாம்; இச்சொல்லுக்கு - எல்லாப்பொருள்களிலுந் தங்கு சிறவனென்ற பொருளும் உண்டு. மாயமான்காரணமாக மேல் மிக்க வருத்த மடைதல்பற்றி, இங்கு 'எழை' எனக் குறித்தார்: ''நுண்ணுணர்வின்மை வறுமைஅஃதுடைமை, பண்ணப்பணித்த பெருஞ்செல்வம்'' என்பதும் உணர்க. 'ஆல்' இரண்டும் - ஈற்றசை. (எஅச)

வே று.

22கூ.—இராமன் சென்று அந்தமானைக் காணுதல்.

அனையவள் கருத்தை யுன்னி வஞ்சனைக் குன்ற மன்னன்
புனையிழை காட்ட தென்று போயினன் பொருத சிந்தைக்
கனைகழற் றம்பி பின்பு சென்றனன் கடக்க வொண்ணு
வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த தன்றே.

(இ - ள்.) அனையவள் கருத்தை உன்னி-அங்ஙனம்வருந்திய சீதையின் மனநிலையைத் திருவுள்ளத்திற்கொண்டு, அஞ்சனம் குன்றம் அன்னன்-மைம் மலைபோன்ற இராமபிரான், புனை இழை அது காட்டு என்று - தரித்தஆப ரணங்களையுடையவளே! அந்தமானைக் காட்டுவா யென்று சொல்லி, போயி னன் - (அவள்பின்னே) சென்றான்; பொருத சிந்தை-(அத்தொழிலைப்பார்த் துப்) பொருத மனத்தையுடைய, கனை கழல் தம்பி - ஒலிக்கிற வீரக்கழலை யுடைய இலக்குமணனும்,பின்பு சென்றனன்-(அவர்களின்)பின்னே தொடர் ந்துசென்றான்; (அப்பொழுது), கடக்க ஒண்ணு வினை என வந்து நின்ற மான்-(எவராலும்) விலக்கமுடியாத ஊழ்வினைப்பயன்போல வந்துநின்ற அப் பொன்மானுனது, எதிர் விழித்தது - எதிரிலே காணப்பட்டது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம்.

முன்செய்துநின்ற வினை தவறாமல் வந்து தன்பயனை விளைத்தல்போல மாயமான் வந்து தன்பயனை தீங்கை விளைக்கு மென்பார், இங்ஙனங் கூறி னார். புனையிழை-வினைத்தொகையன்மொழி;அண்மைவிளி, மகடூஉமுன்னிலை.

ஒண்ணு - ஒன்று; மருஉ. விழித்தது - செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய்வினை; அன்றி, மான் எதிரில் நின்று இவர்களை மருண்டுபார்த்தது என உரைத்தலும் பொருந்தும்.

இதுமுதல் பத்தொன்பது கவிகள் - இப்படலத்தின் கச - ஆங் கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (எஅரு)

உஎ.—சீராமன் அந்தமானைக் கொண்டாடுதலும், அதன் முன்காரணமும்.

நோக்கிய மானை நோக்கி [1]நுதியிழை [1]மதியி னொன்றுங்
[3]தூக்கிலை னன்றி தென்று [4]னதன்பொருள் சொல்ல லாகுஞ்
சேக்கையி னரவு நீங்கப் பிறந்தது தேவர் செய்த
பாக்கிய முடைமை யன்றே வன்னது பழுது போமோ.

(இ - ள்.) நோக்கிய மானை நோக்கி-எதிரிலேநாணப்பட்ட அந்தமானைப் பார்த்து, (ஸ்ரீராமன்), நுதி இழை மதியின் ஒன்றும் தூக்கிலன்-நுண்ணிதாக ஆராய்ச்சிசெய்யவல்ல (தனது) முற்றுணர்வினால் ஒன்றையும் ஆலோசியாதவனாய், 'இது நன்று - இந்தமான் நன்றாயுள்ளது', என்றுன்-என்று பாராட்டினான்; அதன் பொருள் - (ஸர்வஜ்ஞனான இராமன்) அவ்வாறு (திரிபுணர்ச்சி கொண்டு மாறுபடக்) கூறியதன் காரணம், சொல்லல் ஆகும்-சொல்லப்படும்:— (என்னெனின்), சேக்கையின் அரவு நீங்கி பிறந்தது-(திருப்பாற்கடலில்) நாகசயனத்தைவிட்டு(த் திருமால் இங்கு இராமனாக) த்திருவவதரித்தமை, தேவர் செய்த பாக்கியம் உடைமை அன்றே - தேவர்கள்செய்த பாக்கியத்தையுடைமையாலன்றோ? அன்னது பழுது போமோ - அந்தப்பாக்கியம் வீண்படுமோ? [படாதென்றபடி]; (எ - று.)

தேவர்கள் செய்த நல்வினைப்பயனால் அவர்கள் பிரார்த்தித்தபடி திருமால் அவர்கட்குப் பகைவரான இராவணாதியரைச் சங்காரித்தற்கு இராமனாகத் தோன்றின ஞானலின், அவர்கள்தவப்பயன் பழுதுபடாதபடி அரக்கர்களைக் கொல்லுதற்கு மூலகாரணமாகப் பிராட்டியைப் பிரியவேண்டி இங்ஙனம் ஆராயாது மேல்நோக்காகக் கூறின னென்பது கருத்து. நோக்கிய - செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை; அன்றி, தம்மை நன்றாகப்பார்த்த மானைத் தான்பார்த்து என்று பொருள்கொள்ளினுமாம். ஆழ்ந்து நோக்கின் எப்படிப்பட்ட மறைபொருளையும் உள்ளதுஉள்ளபடி ஐயந்திரிபற நன்கு அறியவல்ல அறிவு என்பார், 'நுதியிழைமதி' என்றார். நுதி-நுட்பம், கூர்மை. இழைமதி-வினைத்தொகை. இனி, நுதியிழை யென்பதற்கு - நுட்பமாக வேலைசெய்யப்பட்ட ஆபரணங்களையுடையவளேயென்று பொருளுரைப்பினுமாம்; இப்பொருளில், நுதியிழை - பண்புத்தொகையன்மொழி; நுண்ணிதான இழையையுடையா ளென்க: அண்மைவினி. மதி - வடசொல். 'நன்று இது' என்றதூஉ இந்தமான் மாயமானன்று, நல்லமானே யென்றவாறு. சேக்கையினரவு-படுக்கையாகிய ஆதிசேஷன். அன்னது - அத்திருவவதார மெனினுமாம்.

பி - மீ:—[1]நுதியுடை. [2]மதியால். [3]தூக்கலன். [4]அறன், தன். (எஅசு)

உஉஅ.—இரண்டு கவிகள் - ஒருதொடர்: இராமன் இலக்குமண்ணுக்கு அந்தமானின் அழகை யெடுத்துக்காட்டலைத் தெரிவிக்கும்.

என்னெக்கு மென்ன லாகு [1]மிளையவ விதனை நோக்காய்
தன்னெக்கு [2]முவமை யல்லாற் றனையொக்கு முவமை யுண்டோ
பன்னக்க தரள மொக்கும் பசும்புன்மேற் படரு மென்னு
மின்னெக்குஞ் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி.

(இ - ள்.) இளையவ-தம்பி! இதனை நோக்காய்-இந்தமானை உற்றுப்பார்த்திடுவாய்; என் ஒக்கும் என்னல் ஆகும் - (இதற்கு) எந்தப்பொருள் ஒப்பாகுமென்று சொல்லக்கூடும்? உவமை தன் ஒக்கும் அல்லால் - தனக்குத்தானே உவமையாகப் பொருந்துமல்லாமல், தனை ஒக்கும் உவமை உண்டோ - இந்த மானுக்கு ஒப்பாகும் வேறுஉவமைப்பொருள் உள்ளதோ?[இல்லையென்றபடி]; பல் நக்க தரளம் ஒக்கும்-(இதன்)பற்கள் ஒளிவீசுகிற முத்துக்களைப் போன்றுள்ளன;பசு புல் மேல் படரும் மெல் நா-பசிய புல்லின்மீது செல்லுகிற(இதனது) மென்மையான நாக்கு, மின் ஒக்கும் - மின்னலைப் போன்றுள்ளது; மேனி செம் பொன் - இதன்உடம்பு செம்பொன்மயமானதாம்; புள்ளி வெள்ளியின் விளங்கும் - (இதனுடம்பிலுள்ள) புள்ளிகள் வெள்ளிபோல விளங்குகின்றன.

'இதனை நோக்காய்' என்பதற்கு - எதிர்மறையாக, இதனை நீ ஊன்றிப் பார்க்கின்றியில்லையென்றும் பொருள் கொள்ளலாம்.(இவ்வாய்பாட்டுச்சொல் உடன்பாடு எதிர்மறை இரண்டுக்கும் பொதுவாதலை "செய்பாயென்னு முன்னிலை வினைச்சொல், செய்யென் கிளவி யாகிடனுடைத்தே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரைகொண்டும் உணர்க.) என் - எவன் என்ற வினாப்பெயரின் விகாரம். பின்னிரண்டடியிற் கூறியஉவமை, தனித்தனி ஒவ்வோருறுப்பை நோக்கிய தாதலின், முன்னிரண்டடியில் இம்மான் வடிவமுழுவதுக்கும் ஒருவமையில்லை யென்று கூறியதனோடு மாறுகொளக் கூறலாகா தென அறிக. என்னெக்கு மென்னலாகும் இளையவ எனஎடுத்து-என்னை யொப்பவனென்று சொல்லுதற்கு ஏற்ற தம்பியே! என்று உரைப்பாரு முளர். பி -ம்:—[1]இளவலே. [2]என்பது. (எஅள)

உஉக. வரிசிலை மறைவ லோனே மானிதன் வடிவை யுற்ற
வரிவையர் மைந்தர் யாரே யாதரங் கூர்கி லாதா
ருருகிய மனத்த வாகி யூர்வன பறப்ப யாவும்
விரிசுடர் [1]விளக்கங் கண்ட விட்டில்போல் வீழ்வ காணுய்.

(இ - ள்.) வரி சிலை மறை வலோனே-கட்டமைந்த வில்லின்வேதத்தில் வல்லவனே! மான் இதன் வடிவை உற்ற - இந்தமானின்வடிவழகை உற்றுப்பார்த்த, அரிவையர் மைந்தர்-மகளிரிலும் ஆடவரிலும், ஆதரம் கூர்கிலாதார் யாரே-(இதனிடத்து) ஆசைமிகாதவர் எவர்தாம்? [எவருமில்லையென்றபடி]; ஊர்வன-ஊர்ந்துசெல்வனவும், பறப்ப - பறந்துசெல்வனவுமாகிய, யாவும் - எல்லாப்பிராணிகளும், (இதனைக்கண்டு), உருகிய மனத்த ஆகி-(ஆசையால்) உருகின மனத்தை யுடையவையாய், விரி சுடர் விளக்கம் கண்ட விட்டில்

போல்-பரவிய ஒளியையுடைய விளக்கைப் பார்த்த விட்டிற்பறவை (அவ் விளக்கில் விழுந்தன்மை) போல, வீழ்வ - (இதன்மேல்) வந்து விழுவன; காணுய்-(இதனை நீ) பாராய்; (எ - று.)

'மானிதன்வடிவை யுற்ற அரிவையர் மைந்தர் யாரே ஆதரங் கூர்கிலா தார்' என்றது, ஜாநகியும் தானும் இதன்பக்கல் அன்புகூர்ந்தது குற்றமன் றென்று குறிப்பித்தற்குப் போலும். எழுவகைப் பிறப்பினுள் காட்சிப்புல னில்லாத தாவரம் ஒழிய மற்றையாறுவகையில் மேலுலகத்தவரான தேவர் களையும், அருகிலில்லாதனவான நீர்வாழுயிர்களையும் கூறுதுவிட்டு, ஓரின மாகிய விலங்கினிடத்து விலங்கு அன்புவைத்தல் இயல்பேயா மென அதனை யுங் குறியாதொழித்து, மனிதர்கள் ஆசைவைத்தலை முந்தின வாக்கியத்தால் தெரிவித்து, மற்றைப் பறவைகளும் ஊர்வனவும் ஆசைகொள்ளுதலைப் பிந் தின வாக்கியத்தாலெடுத்துக்கூறினர். விட்டில்-விளக்குப்பூச்சி. சிலைமறை-தனுர்வித்தை; சிலைமறைவலோய் என்பதற்கு-வில்தொழிலிலும் வேதங்களி லுந் தேர்ந்தவனே யென்றும் உரைக்கலாம்; "உவள்தரு மறையினெ டொழி வறு கலையும், தவள்மதி புனைய னிகர்முனி தரவே," "ஊனுறு படைபல சிலையொடு பயிலா, வானவர் தனிமுதல் கிலையொடு வளர" எனக் கீழ்ப் பால காண்டத்தில் வந்துள்ளமை யுணர்க. உற்ற-கண்ணுற்ற. அரிவையர் என் றது, இங்கே பருவப்பெயராகாமல் மகளிரென்ற மாத்திரமாய் நின்றது; அப்பருவத்துக்கு வயதெல்லை - இருபதுமுதல் இருபத்தைந்தளவு மென்பர். ஆதரம் - வடசொல். ஊர்வன, பறப்ப பெயர். வீழ்வ-முற்று. வீழ்வ-மிகுதி யாகத் தொடர்வன என்றபடி. மிகவிரும்புதலை 'மேல்விழுதல்' என்னும் வழக்கு, இங்கு உணரற்பாலது. பி-ம்:—[1]விளக்குக்கண்டவிட்டிலின். (எஅஅ)

உகூ.—இலக்குமணன் அந்தமானைப்பற்றிப் பராமுகமாகக் கூறல்.

ஆரிய னனைய கூற வன்னது தன்னை நோக்கிச்
சீரிய தன்றி தென்று சிந்தையிற் [1]தெளிந்த தம்பி
காரிய மென்னை யீண்டுக் கண்டது கனக [2]மாலை
வேரியந் தெரியல் வீர மீள்வதே [3]மேன்மை யென்றுன்.

(இ - ள்.)ஆரியன்-யாவராலும் மேன்மைசெய்யத்தக்கவனை ஸ்ரீராமன், அனைய கூற - அவ்வார்த்தைகளைச் சொல்ல, அன்னதுதன்னை நோக்கி-அந்தமானைப் பார்த்து, இது சீரியது அன்று என்று சிந்தையில் தெளிந்த - இதுசிறந்ததன்றென்று மனத்தில் நன்முயறிந்த, தம்பி - இலக்குமணன்,— 'வேரி அம் தெரியல் வீர-வாசனையையும் அழகையுமுடைய மாலையை யணி ந்த வீரனே! ஈண்டு கண்டது கனகம் ஆனல் - இவ்விடத்தில் காணப்பட்ட மான் பொன்மயமானதானலும், காரியம் என்னை-(அதனல் நமக்கு)ஆகவேண் டியது என்ன? [ஒன்றுமில்லை]; (ஆகையால்), மீள்வதே மேன்மை - (நாம் நமதுஇடத்துக்குத்) திரும்பிச்செல்வதே மேலானகாரியம்', என்றுன்-என்று சொன்னன்; (எ - று.)

ஆர்யன், கார்யம் - வடசொற்கள். அனைய-பெயர். சீரிதன்று-நன்மை விளைப்பதன்று; மாயையாலமைந்தது என்றபடி. கனகம் மானுல் எனப் பிரித்து, இங்குநாம்கண்ட பொன்மானினுற் பயனென்னேயென்று உரைப்பாருமுளர். வேரி - தேனுமாம். தெரியல் - விளங்குவது; தொழிலாகுபெயர்.
பி-ம்:—[1]தெரிந்த. [2]மானேல். [3]கருமம். (எஅக)

உங.—சீதை இராமனை அதைப்பிடித்துத்தருப்படி வேண்டுதல்.

அற்றவன் பகரா முன்ன மகனினு யழகி [1]யாருங்
கொற்றவன் மைந்த [1]மற்றைக் குழைவுடை யுழையை வல்லே
பற்றினை தருதி யாயிற் பதியிடை யவதி யெய்தப்
பெற்றுழி யினிதுண் டாடப் பெறற்கருங் [3]தகைமைத் தென்றுள்.

(இ - ள்.) அற்று அவன் பகரா முன்னம்-அத்தன்மையான வார்த்தையை இலக்குமணன் சொல்லாதமுன்னே [சொல்லுமளவிலே யென்றபடி], அழகியாளும் - கட்டழகியான சீதையும், அகனே-குற்றமற்றவனுன இராம பிரானைப் பார்த்து, 'கொற்றவன் மைந்த-சக்கரவர்த்தித் திருமகனே! குழைவுடை உழையை - (காண்பவர் மனத்துக்கு) உருக்கந்தரவல்ல தன்மையையுடைய இந்த மானை, வல்லே பற்றினை தருதி ஆயின் - விரைவிற் பிடித்துக் கொடுப்பாயானுல், அவதி எய்த பெற்றுழி - (வனவாசஞ் செய்யவேண்டிய பதினுன்கு வருடங்களின்) முடிவெல்லை நேர்ந்தகாலத்தில், பதியிடை (நமது) அயோத்தியாபட்டணத்தில், இனிது உண்டாட-இனிமையாக விளையாடுதற்கு, பெறற்கு அரு தகைமைத்து - (இது) பெறுதற்கரிய தன்மையையுடைய பொருளாம்', என்றுள்-என்று சொன்னுள்; (எ - று.)

இதனை இப்பொழுது நீ பிடித்து எனக்குக் கொடுத்தால், பின்பு நாம் வனவாசம் முடிந்து நகர்செல்லும்போது அங்கு இனிது விளையாடுதற்கு இது உதவும்; அவ்விடத்தில் இப்படிப்பட்டது கிடைப்பது அரிது என்று கூறின ளென்பதாம். அற்று-சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற்பெயர். அழகியாள் என்பதில், 'இ' என்ற பெண்பால் விகுதியோடு 'ஆள்' என்பது-விகுதி மேல் விகுதியாய் நின்ற தென்றுவது, இ - சாரியையென்றுவது கொள்க. ந + அகம் + அன் = அநகன்; ந - எதிர்மறை குறிப்பது, அகம் - தோஷம், அன் - ஆண்பால்விகுதி. அநகனென்றபெயர்-தன் இயல்பினுலும், தனக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களின் தொடர்பினுலும், தீவினைப்பற்றில்லாதவனென்னும் பொருளைத் தரும். மனைவி கணவனைப் பெயர்குறித்து விளியாமல் 'ஆர்யபுத்ர' என விளிக்கும் வடநூல் முறைமைக்கு ஏற்ப 'கொற்றவன் மைந்த' என விளித்தபடி; மனைவிசொற்படி நடந்த அரசனது மகனுதலின், நீயும் என்சொற்படி நடக்கக்கடவா யென்னுங் கருத்துப்பட, இவ்வண்ணம் விளித்தாளுமாம். மற்று, ஐ-அசை: வினைமாற்றுமாம். குழைவுடை உழை-நம்மிடத்து அன்புகாட்டும் மானெனவும் அமையும். வல்லை-இடைச்சொல். வல்லமையையுடையையா யென்று பொருள்கொள்ளின், முன்னிலையொரு

மைக்குறிப்புமுற்றெச்சமாம். அவதி - வடசொல். பெற்றுழி - விகாரம். உண்டாட்டு-மகளிர்விளையாட்டு;விளையாட்டுப் பொதுவுமாம்.பதியிடை-நமதுதங்குமிடத்திலே, அவதிஎய்த பெற்றுழி - (நான் அயோத்தியில் விட்டுவந்த கிளிமுதலியவற்றை நினைத்தலால்) வருத்தமடையப் பெறுங்காலத்தில், இனிது உண்டாட - சந்தோஷமாக விளையாட, பெறற்கு அரு தகைமைத்து - பெறுதற்கரிய தன்மையுடையது இது என்று உரை கூறுவாரு முளர். பி-ம்:— [1]ஆதிக். [2]மற்றிக். [3]தகைத்தது. (எகo)

உகூ.—இராமன் அதனைப்பிடிக்கஉன்பட, இலக்குமணன் தடுத்துக் கூறல்.

ஐயதுண் மருங்கு னங்கை யஃதுரை செய்ய வையன்
[1]செய்வெனென் றணைய நோக்கித் தெளிவுடைச் [2]செம்மல் செப்பும்
வெய்யவல் லரக்கர் வஞ்சம் விரும்பினர் [3]வினையிற் செய்த
கைதவ மானென் றண்ணல் காணுதி கடையி னென்றான்.

(இ - ள்.) ஐயம் நுண் மருங்குல் நங்கை-(உண்டோ இல்லையோ வென்கிற) சந்தேகத்தை விளக்கிற நுண்ணிய இடையையுடைய பெண்மணியான சீதை, அஃது உரைசெய்ய - அவ்வார்த்தையைக் கூறியவளவிலே, ஐயன் - இராமன்,செய்வென் என்று அமைய-(அங்ஙனமே)பிடித்தல்செய்வே னென்று இசைய, நோக்கி - (அதனைப்) பார்த்து, தெளிவு உடை செம்மல் - (இது மாயமானென்று) தெளிதலையுடைய இலக்குமணன், செப்பும் - சொல்வான்: (என்னவென்றெனில்),—'அண்ணல்-அண்ணலே!வெய்ய வல் அரக்கர்-கொடிய வலிய இராக்கதர்கள், வஞ்சம் விரும்பினர்-வஞ்சனை செய்ய விரும்பி, வினையின் செய்த - தந்திரத்தாற்செய்த, கைதவம் மான் என்று - மாயைமான் இதுவென்று, கடையின் காணுதி - முடிவில் காண்பாய்,' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

செம்மல், அண்ணல் - ஆண்பாற் சிறப்புப்பெயர்கள். பி-ம்:—[1]செய்வது. [2]தம்பிசொல்லும். [3]வினையின்செய்கை. (எகூக)

உகூக.—இராமன் 'இதனைப்பிடிச்சுத்தோடங்குதலிற் குற்றமில்லை' எனல்.

மாயமேன் [1]மடியு மன்றே வாளியின் மடிந்த போது
காய்சினத் தவரைக் கொன்று கடன்கழித் தோமு [2]மாதுந்
தூயதேற் பற்றிக் கோடுஞ் சொல்லிய விரண்டி [3]னொன்று
நீயதே யுரைத்தி யென்றான் றேவரை யிடுக்கண் டீர்ப்பான்.

(இ - ள்.) 'மாயம் எல் - (இது நீ சொல்லுகிறபடி) மாயமானாகுமானால், அன்றே வாளியின் மடியும் - அப்பொழுதே (எனது) அம்பினால் (எய்யப்பட்டு இறந்திடும்; மடிந்த போது-(அங்ஙனம்) இறந்தபொழுது, காய் சினத் தவரை கொன்று கடன் கழித்தோமும் ஆதும் - கொதிக்கிற கோபத்தையுடைய அரக்கரைக் கொன்று (நமது) கடமையைத் தீர்த்தவருமாவோம்; (அன்றி), தூயது எல்-(நான் நினைக்கிறபடி)நல்லதன்மையுடையதானால், பற்

றிக்கோடும் - பிடித்துக்கொள்வோம்: சொல்லிய இரண்டின் - கீழ்ச்சொன்ன இரண்டுவகையுள், ஒன்று தீயதே - ஏதேனும் ஒன்று தீயதோ? உரைத்தி - சொல்வாய்,' என்றான்-என்றுசொன்னான்: (யாவனெனில்),—தேவரை இடுக்கண் தீர்ப்பான் - தேவர்களைத் துன்பத்தினின்று நீக்கப் பிறந்தவனான இராமன்; (எ - று.)

தேவர்கட்குத் தீங்குசெய்பவர்களான இராவணாதியரை அழிக்க அவதரித்தவனாதலால், அதன்பொருட்டு, இங்ஙனம் இலக்குமணன்வார்த்தையை மறுத்துக்கூறினனென்பார், 'என்றான் தேவரை யிடுக்கண் தீர்ப்பான்' என்றார். அன்றே - தேற்றமுமாம். கடன் கழித்தல் - அரக்கர்களையழிப்பதாகத் தண்டகாரணியவாசிகளான முனிவர்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்ததை நிறைவேற்றுதல். கடன் கழித்தோமும் என்ற உம்மை - எதிரது தழுவிய எச்சம்; ஆக்கவும்மையின்பாற் படுத்தினுமாம். பி - ம்:—[1]மடிவாம். [2]ஆகும். [3]ஒன்றும். (எகஉ)

உகச.—இலக்குமணன் 'ஆராய்ச்சியின்றி வேட்டையாடச்செல்லல் தகுதியன்று' எனல்.

பின்னின்ற [1]நிலைய ரென்று முணர்கிலம் பிடித்த மாய
மென்[2]னென்றுந் தெளிந்த தேற்றமும் யாவதீ தென்று மோரா
முன்[3]னின்றார் முறையி னின்றார் முனிந்துள [4]வேட்ட முற்றல்
பொன்னின்ற வயிரத்தோளாய் புகழுடைத் தாமன் றென்றான்.

(இ - ள்.) 'பொன் நின்ற-அழகு நிலைபெற்ற, வயிரம் தோளாய்-வச்சிரத்தினம்போலுறுதியாக வுள்ள தோள்களையுடையவனே! பின் நின்றார் இனையர் என்றும் உணர்கிலம்-(இந்தமானே முன்னே எவிவிட்டுப்) பின்னே நின்றவர்கள் இத்தன்மைய ரென்றும் அறிகிறேமில்லை; பிடித்த மாயம் என்னென்றும் தெளிதல் தேற்றம் - (அவர்கள்) கொண்ட மாயை எத்தன்மைத்தென்று நிச்சயித்து அறிந்தோமுமில்லை; ஈது யாவது என்றும் ஓராம்-இந்த மான்யாதென்றும் அறிந்தோமில்லை, (அன்றியும்), முறையில் நின்றார் நீதிவழுவாது நின்றவர்களான, முன் நின்றார்-முன்னுள்ள பெரியோர்களால், முனிந்து உளது - வெறுத்துவிலக்கப்பட்டுள்ள, வேட்டம் - வேட்டையை, முற்றல்-ஆடுதல், புகழ் உடைத்து அன்று ஆம்-கீர்த்திதருவதன்றும்,' என்றான் - என்று கூறினான், (இலக்குமணன்); (எ - று.)

'முன் நின்றார்' என்பதற்கு-முதன்மையாய் நின்ற முனிவர்க ளென்றும், 'பொன்நின்ற' என்பதற்கு-வீரலக்ஷ்மி தங்கப்பெற்றுநின்ற என்றும் பொருள் கொள்ளலாம். வேட்டையாடுதல் புகழுடையதன் றென்று கூறியது, தமது தந்தையான தசரதர் இலக்கின்தன்மையை ஆராயாமல் ஒருமுனிகுமாரனையானெனென்றெண்ணி அம்பெய்து கொன்று அதனால் கொடிய சாபம்பெற்ற வரலாற்றையும், மற்றும் இதுபோன்ற பிறவரலாறுகளையும் உட்கொண்டு என்பர். வேட்டையாடுதல் ஒரோவழியன்றி எப்பொழுதுஞ் செய்தற்பாற்

றன்று என்பது, நூல் துணிபு. இனி:முன்னின்ரூர் முறையினின்ரூர்-முதற் குலத்தாரான அந்தணரது ஒழுக்கத்தைப் பூண்டுகின்றவர், முனிந்தூள-வெறுத்துள்ள, வேட்டம் - வேட்டையை, முற்றல் - ஆடுதல், புகழுடையது அன்று என உரைத்தலும் ஒன்று.தேற்ரும்=தேரும்:பிறவினை தன்வினைப் பொருளது. பி-மீ:—[1]எனையர். [2]என்றுதெரிதல். [3]நின்ற. [4]வேட்டை. (எகூ)

உகடு.—இராமர் அதனை மறுத்துக்கூறல்.

பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாய
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது [1]மென்ற
னகையுடைத் தாகு மன்றே யாதலி [2]னன்றி தென்னத்
தகையுடைத் தம்பிக் கந்நாட் சதுமுகன் ரூதை சொன்னான்.

(இ - ள்.) 'பகை உடை அரக்கர் என்றும்-(எவரிடத்தும்)பகைத்தன்மை யையுடைய இராக்கதர்க ளென்றகாரணத்தாலும், பலர் என்றும்-(அவர்கள்) அநேகரென்ற காரணத்தாலும், பயிலும் மாயம் மிகை உடைத்து என்றும் - (அவர்கள்) செய்யும் மாயை மிகுதியையுடையதென்ற காரணத்தாலும், பூண்ட விரதத்தை விடுதும்என்றல் - (அவர்களைக்கொல்வதாக நாம்) மேற் கொண்டவிரதத்தை விட்டிடுவோமென்று எண்ணுதல்,நகை உடைத்து ஆகும் அன்றே-(இகழ்ந்து) சிரிக்கத்தக்கதன்மையை யுடையதாமன்றே? ஆதலின்-ஆகையால், ஈது நன்று - (இதனைப்பிடிக்கச்செய்யும்) இச்செயல் நல்லது,' என்ன-என்று, தகைஉடை தம்பிக்கு அ நாள் சதுமுகன் தாதை சொன்னான்-தகுதியையுடைய தம்பியான லக்ஷ்மணனுக்கு அப்பொழுது பிரமனது தந்தை யான இராமபிரான் கூறினன்; (எ - று.)

எல்லாப்பிராணிகளையும் படைத்தபிரமனுக்குத் தந்தையானவ னென்று கூறினது, அவற்றின் இயற்கையை உள்ளபடி அறியவல்லவ னென்றற்கு. சதுர்முகன், தாத என்ற வடசொற்கள் திரிந்தன. சதுமுகன் - நான்கு முக முடையவன். பி - மீ:—[1]என்ரூல். [2]நலமேயென்னைத், நன்றீதென்னைத், நலமேதென்னைத், நலனேயென்னைத். (எகூ)

உகூ.—இலக்குமணன் 'நான் சென்று பிடித்துக்கொண்டு வருவேன்' என்றல்.

அடுத்தவு மெண்ணிச் செய்த லண்ணலே யமைதி யன்ரே
[1]விடுத்திதன் பின்னின் ரூர்கள் பலருள ரெனினும் வில்லாற்
ரொடுத்தவெம் பகழி தூவித் தொடர்ந்தனென் விரைந்து சென்று
படுக்குவெ னதுவன் ரூயிற் பற்றினென் கொணர்வெ னென்ரூன்.

(இ - ள்.) 'அண்ணலே-அண்ணல்! அடுத்தவும்-தகுதியான காரியங்களை யும், எண்ணி செய்தல் - முன்பு ஆலோசித்துப் பின்பு செய்வது, அமைதி அன்ரே - ஏற்றதன்ரே? (அது நிற்க), விடுத்து இதன்பின் நின்ரூர்கள் - (இந்த மாயமானை முந்திச்) செலுத்தி இதன்பின்னே நின்ற பகைவர்கள், பலர் உளர் எனினும் - அநேகர் உள்ளாராயினும், வில்லால் தொடுத்த வெம்

R H ROAD. MADRAS -

பகழி தூவி தொடர்ந்தனென் - (என்கையிலுள்ள) வில்லினுல் தொடுக்கப் படுங் கொடிய அம்புகளே மிகுதியாகச் செலுத்திக்கொண்டு தொடர்ந்து, விரைந்து சென்று - விரைவாகப்போய், படுக்குவென் - (அவர்களே நான்) கொல்வேன்; அது அன்று ஆயின்-அங்ஙனம் மாயமானன்றனுல், பற்றி னென் கொணர்வென் - பிடித்துக்கொண்டு வருவேன், என்றன் - என்று (இலக்குமணன்) கூறினன்; (எ - று.)

அதுவன்றாயின்-நிசமான மானாயிருந்தால். பி - ம்:—[1]விடுத்ததன்.

உகஎ.—சீதை இராமனை நோக்கி 'நீ பிடித்துத் தருவாயல்லபோலும்' என்றல்.

ஆயிடை யன்ன மன்னு ளழுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் [1]கிளியினிற் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலு மென்னைச்
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு [2]சிறிப் போனாள்.

(இ - ள்.) அ இடை - அச்சமயத்தில், அன்னம் அன்னாள் - (நடையில்) அன்னப்பேடை போன்றவளான சீதை, மாழ்கி-வருந்தி, அழுது உருத்து அனைய-அமிருதத்தைச் சிந்தினுற் போன்றனவான, செய்ய வாயிடை மழலை இன் சொல்-சிவந்த(தனது) வாயினின்று வரும் இனிய மழலைச்சொற்களை, கிளியினில் குழறி-கிளிகொஞ்சுவது போலக் கொச்சையாகக் கூறுவாளாகி, நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்னை-'நாத! நீயே (இதனைப்) பிடித்து (எனக்கு)க் கொடுக்கமாட்டாய்போலும்' என்று சொல்லி,—சேய்அரி குவளை முத்தம் சிந்துபு - (உத்தம லிலக்கணமாகிய) சிவந்த இரேகைகளையுடைய நீலோற்பலமலர்கள்போன்ற (தன்) கண்களினின்று முத்துப்போன்ற நீர்த்துளிகளைச் சிந்தி, சிறி - வெகுளிகொண்டு, போனாள் - (விலகிப் பர்ண சாலையை நோக்கிச்) சென்றாள்; (எ - று.)

கோபத்தாலும் சோகத்தாலும் அங்குநிற்கக் கால்தரிக்காமல் பிணங்கிச் சென்றன ளென்க. குவளை, முத்தம்-உவமவாகுபெயர்கள். பி-ம்:—[1]கிளியி னும். [2]சிதறி. (எகூ)

உகூஅ.—உடனே இராமன் மானைப் பிடித்தற்குச் செல்லத் தொடங்கல்.

போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன்கொ டாராய்
மானிது நானே பற்றி வல்லையின் [1]வருவெ னன்றே
கானியன் மயிலன் னாளைக் காத்தனை யிருத்தி யென்னு
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய வுற்றான்.

(இ - ள்.) போனவள் புலவி நோக்கி - அங்ஙனஞ்சென்ற சீதையினது பிணக்கைப் பார்த்து,--புரவலன்-காத்தற்றொழிலில் வல்லவனான ஸ்ரீராமன்,-(இலக்குமணனைநோக்கி),'பொலன் கொள் தாராய்-அழகுகொண்ட மாலையை யணிந்தவனே! மான் இது நானே பற்றி வல்லையின் வருவென்-இந்த மானை

நானே (போய்ப்) பிடித்துக்கொண்டு விரைவில் மீளுவேன்; (அதுவரையில்), கான் இயல் மயில் அன்னாள் காத்தனை இருத்தி - வனத்திற் பொருந்திய மயில் போன்றவளான சீதையைக் காத்துக்கொண்டிருப்பாய்', என்னு - என்று சொல்லி, வேல் நகு சரமும் வில்லும் வாங்கினன்-வேல்போற் கூரிய அம்புகளையும் வில்லையும் எடுத்துக்கொண்டு, விரையல் உற்றனன் - விரைந்து செல்லத் தொடங்கினான்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

பொலன் கொள் தாராய் என்பதற்கு-பொன்மயமான ஆரத்தை யணிந்தவனே யென்றும் பொருள்கொள்ளலாம். நானே, ஏ-பிரிநிலை. தன் இயல்பு குன்றுத மயி லென்பார், 'கானியல்மயில்' என்றார். மயில் அன்னாள்-மயில் போலுஞ் சாயலை யுடையாள்; காளமேகத்தைக் கண்டுகளிக்கும் மயில்போல, இராமபிரானது நீலமேனியைக் கண்டு களிப்பவ ளென்றுங் கொள்க. நகு-உவமவுருபு. இரண்டாமடியிறுதியில், நன்றேயெனப் பிரித்து, 'காத்தனை யிருத்தி' என்பதனோடு இயைத்து உரைத்தலும் தகும். 'வாங்கினன்' என்ற சொல்லினூற்றலால். இலக்குமணன் எடுத்துக்கொடுக்க இராமன் கொண்டன னென்பது தோன்றும். பி-ம்:—[1]வருவனின்றே, வருவனீயிக்.

உஉகூ.—அங்ஙனமே இலக்குமணன் சீதையைக் காத்துநிற்றல்.

முன்னமு மகவாய் வந்த [1]மூவரி னொருவன் போனா
னன்னமா சீச னென்றே யயிர்த்தனை [2]னிதனை யையா
வின்னமுங் காண்டி வாழி யேகென விருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து [3]நின்றான்.

(இ - ள்.) 'முன்னமும்-முன்பும், மகவாய் வந்த மூவரின் - (விசுவாமித்திர மாமுனிவனது) யாகசந்தர்ப்பத்தில் வந்த (தாடகையும் சுபாகுமாரீசருமாகிய) மூன்றுஅரக்கருள், ஒருவன்—, போனான் - இறவாமல் தள்ளுண்டு சென்றான்; அன்ன மாரீசன் என்றே இதனை அயிர்த்தனென்-அந்த மாரீசன் தானென்று இந்த மானைக் குறித்துச் சந்தேகிக்கிறேன்; ஐயா-ஐயனே! இன்னமும் காண்டி-பின்பு (நீ) உண்மைகாண்பாய்; ஏகு-செல்வாய்; வாழி-வாழ்வாயாக,' என-என்றுசொல்லி, இரு கை கூப்பி-இரண்டுகைகளையுங் கூப்பித் தொழுது, (இலக்குமணன்), பொன் அனாள் புக்க சாலை-திருமகள் போன்றவளான சீதை புகுந்த பர்ணசாலையை, புறத்து நின்றான் காத்தனன்-வெளியில் நின்றவனாகிக் காவல் செய்திருந்தான்; (எ - று.)

முன்னமும் என்ற உம்மையை எதிரதுதழுவிய எச்சவும்மையாக்கி, அது, பின்பு தண்டகாரணியத்தில் மான்வடிவமாய்வந்த மூன்று அரக்கருள் ஒருவன் தப்பியுய்ந்துசென்றதனைக் குறிப்பதெனக் கொள்க. மகம் - வட சொல். மகவாய், வாய்-ஏழனுருபு. 'இன்னமும் காண்டி' என்பதற்கு-இன்னமும் ஆலோசிப்பாயென்றும் பொருள்கொள்ளலாம். முந்தினபொருளில் உம்மை - அசையும், காண்டியென்பது - முன்னிலைமுற்றும்; இப்பொருளில் உம்மை - இறந்தது தழுவிய எச்சமும், காண்டியென்பது-ஏவல்முற்றுமாம்.

'வாழிய' என்னும் யகரவீற்று வியங்கோள்முற்று, ஈறுகெட்டு 'வாழி' என நின்றது. செல்லுமிடத்தில் அரக்கரால் யாதொருதுன்பமும் தமையனுக்கு நேரிடாதிருக்க வேண்டுமென்று கருதி, 'வாழி' என்றான். சிறியோர் பெரியோரை வாழ்த்துவது தகுதியோவெனின்,—வரம்புகடந்துபொங்கும் பரிவையுடைய பக்தர்கள் அப்படிப்பட்ட அன்பினால் அங்ஙனம் வாழ்த்துதல் மரபா மென்க. பொன் அனுள்-பொன்னின் கிறமானவளுமாம். பி-மீ:— [1]மூரிவேல். [2]இவனை. [3]நின்றே. (எகூஅ)

உசஂ.—இராமன் மானைத் தொடர்தல்.

மந்திரத் திலேயோன் சொன்ன வாய்மொழி[1]மனத்துக் கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் சிகரச் செவ்வித்
சுந்தரத் தோளி னானம் மானினைத் தொடர லுற்றான்.

(இ - ள்.) சிகரம் செவ்வி சுந்தரம் தோளினான் - மலைச்சிகரம் போன்ற இயல்பையுடைய அழகிய தோள்களையுடைய இராமன், மந்திரத்து இலை யோன் சொன்ன வாய் மொழி மனத்து கொள்ளான்-ஆலோசனையுள்ள தம் பியான லக்ஷ்மணன் சொன்ன உண்மையான வார்த்தைகளை மனத்திலேற் றுக் கொள்ளாதவனாய், சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கி - பூர்ண சந்திரனுக்கு உபமானமாதற்கு அமைந்த திருமுகமண்டலத் தையுடைய சீதையினது புலவியைக் கருதி, சிந்துரம் பவளம் செம் வாய் முறுவலன்-சிந்தூரமும் பவழமும் போலச் சிவந்த வாயிற்கொண்ட புன்சிரிப் புடையவனாய், அ மானினை தொடரல் உற்றான்-அந்த மானைத் தொடர்ந்து சென்றான்; (எ - று.)

வாய்மொழி - வாய்மையாகிய மொழி: பண்புத்தொகை; பண்புப்பெயர் ஈறுபோயிற்று. இனி, வாய்க்கும்மொழி [தவறுது பலிக்குஞ்சொல்] என வினைத்தொகையாகப் பொருள்கொள்ளினுமாம்; அன்றி, வாயின்மொழி யென வேற்றுமைத்தொகையாகக் கொள்ளுதலும் ஒன்று. உபமேயத்தினும் உபமானம் சிறந்திருக்கவேண்டுமென்ற அலங்காரநூலார் கொள்கையின்படி சந்திரனினும் பலமடங்கு சிறந்தது பிராட்டியின் திருமுகமென்பார், 'சந்தி ரற்கு உவமைசான்ற வதனத்தாள்' என்றார். சலம்-வடசொல்; கோபம். செவ்வி - பருத்துஉயர்ந்த தோற்றமும், படைக்கலங்களால் அழித்தற்கு அரிய வலிமையும். பி-மீ:—[1]மனத்துட். (எகூக)

உசஃ.—அந்த மான் மிக்க விரைவாயோடுதல்.

மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டி[1]க் குரபத முரத்தைக் கூட்டி
யுதித்தெழு மூதை யுள்ள மென்றிவை யுருவச் செல்லுங்
கதிக்கொரு கல்வி வேறே [2]காட்டிய தொத்த தன்றே.

(இ - ள்.) (அந்த மாயமானுனது), மெல்ல மெல்ல மிதித்தது-(முதலில்) மெள்ளமெள்ள (நிலத்தில்) அடிவைத்து நடந்துகின்று, (பின்பு), வெருவி வெறித்தது-மருண்டு ஆவேசங்கொண்டதாய், செவியை நீட்டி - காதுகளை நெறிப்புறநீட்டிக்கொண்டு, குரபதம் உரத்தை கூட்டி-குளப்படிகளை மார்பிற் சேர்த்துக்கொண்டு, நிலில் குதித்தது-மேலெழும்பிக் குதித்ததாய்,—உதித்து எழும் ஊதை உள்ளம் என்ற இவை உருவசெல்லும் கதிக்கு வேறு ஒருகல்வி காட்டியது ஒத்தது-தோன்றிவீசுகிற காற்றும் மனமும் என்ற இவை (தடையின்றி) நேராக விரைந்துசெல்லும் நடைக்குப் புதிய ஒரு வகையைத் தான் காட்டிக் கற்பித்துக்கொடுக்கலுற்றுற் போன்றது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்; அப்பொழுதே யெனினுமாம்.

வாயுவேக மனோவேகங்களைக் காட்டிலும் வேகமாய் ஓடிற்று அந்தமானென்பது, கருத்து. காற்று விரைந்துசெல்லுந் தன்மை, பிரசித்தம். மனம் நினைத்தவளவில் எவ்வளவு தூரத்திலுள்ள பொருளினிடத்துஞ் சென்று சேர்தலால், அது மிக்கவிரைவுள்ளதெனப்படும். அவ்விரண்டுக்கும் புதிய ஒரு வேக கதியைத் தான் காட்டிக் கற்பிப்பது போன்றிருந்த தென, மானின் மிக்கவிசையை வருணித்தவாறு. முன்னிரண்டடி-தன்மைநவிற்சியணியும், பின்னிரண்டடி - தற்குறிப்பேற்றவணியுமாம். குரபதம்-வடசொல்; குளம்பு களையுடைய கால்; அல்லது, காற்குளம்பு. என்றிவை - விகாரம். பி - ம்:—[1]குரப்பதவுரத்தை. [2]காட்டுவது. (அ००)

உசஉ.—இராமன் மிக்கவிசையோடு அந்தமானைத் தொடர்தல்.

[1]நீட்டினு னுலக மூன்று நின்றெடுத் தளந்த பாத
மீட்டு[2]நா முரைத்தற் கம்மா வேறுமோ ரண்ட முண்டோ
வோட்டினுன் [3]றொடர்ந்த தன்னே யொழிவற நிறைந்த தன்மை
காட்டினு னன்றி யன்றக் கடுமையார் கணிக்கற் பாலார்.

(இ - ள்.) (இராமன் அந்தமானைத் தொடர்தற்பொருட்டு), உலகம் மூன்றும் அளந்த பாதம்-(முன்பு திரிவிக்கிரமாவதாரத்தில்) மூன்று உலகங்களையும் அளந்த (தனது) திருவடிகளை, நின்று எடுத்து நீட்டினுன்-எடுத்துநின்று நீளவைத்தான்; மீட்டும் நாம் உரைத்தற்கு வேறும் ஓர் அண்டம் உண்டோ - (அத் திருவடிகளுக்கு) எட்டாததாய் நாம் சொல்வதற்கு வேறோர் அண்டமும் இருக்கிறதோ? ஓட்டினுன் - (அப்படிப்பட்ட பாதங்களைக் கொண்டு அந்தமானைத்) துரத்தினுன்; தொடர்ந்த தன்னை ஒழிவுஅற நிறைந்த தன்மை காட்டினுன் அன்றி - (அங்ஙனந்துரத்திய அப்பெருமான் மானைத்) தொடர்ந்துசென்ற தனது இடையீடில்லாமல்(எங்கும்)நிறைந்திருக்குந்தன்மையை வெளியிட்டானென்பதல்லாமல், அன்று அ கடுமை கணிக்கல்பாலார் யார்-அப்பொழுதைய அவ்வேகத்தை மதிக்கவல்லவர் யாவர்உளர்? (எ - று.)—அம்மா-வியப்பிடைச் சொல்: இராமனது திருவடிகளின் மிகநீளுந்தன்மையை அநிசயித்தவாறு.

திருமாலின் திருவவதாரமாகிய இராம்பிரான், முன்பு வாமனவதாரத்தில் மகாபலியின் செருக்கை யடக்கும்பொருட்டு நீட்டி உலகத்தையளந்தவை

யும், இவ்வண்டத்தினுள்ளேயன்றிப் பகிரண்டங்களிலும்வியாபித்துச் செல்ல வல்லவையுமாகிய தமதுதிருவடிகளே விசையாக நீட்டிவைத்து, அந்தமான் செல்லுமிடமெல்லாம் அதனைத் தொடர்ந்து சென்றான்; அங்ஙனஞ்சென்ற தன்மையால், அப்பரமன், சிறிதிடமும் சேஷிபாதபடி எங்கும் தான் நிறைந்திருக்குந்தன்மையை வெளிப்பட்டாற்போன்றனன்; அவ்வேகம், எவராலும் நினைக்கவும் முடியாதது என்பதாம். 'நின்று எடுத்து அளந்த பாதம்' என்பதற்கு-முன்புவாமனனுய்நின்று உடனே திரிவிக்கிரமரூபத்தையெடுத்து அளந்த திருவடிக ளென்றும், தான் நின்றவிடத்திலேநின்று எடுத்துஅளந்த திருவடிக ளென்றும் உரைக்கலாம். தன்னை - உருபுமயக்கம். தனது சர்வவியாபித்துவத்தைக்காட்டினனெனன்றது, தற்குறிப்பேற்றம். பி-ம்:—[1]நீட்டினுள். [2]தாளீட்டற்கு, தாளுரைத்தற்கு. [3]தொடர்ந்ததன்னை. (அ0க)

உசஉ.—அந்த மான் ஓடும் வகை.

குன்றிடை யிவரு மேகக் குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடி னகலுந் [1]தாழிற் றிண்டலாந் [2]தகைமைத் தாகு
நின்றதே போல நீங்கு நிதிவழி நேய நீட்டு
மன்றலங் கோதை மாதர் மனமெனப் [3]போயிற்றம்மா.

(இ - ள்.) (அந்த மான்), குன்றிடை இவரும் - மலையில் ஏறும்; மேகம் குழுவிடை குதிக்கும்-மேகக்கூட்டத்தினிடத்தில் துள்ளிப்பாயும்; கூட சென்றிடின் அகலும் - விடாதுஉடன்தொடர்ந்துசென்றால் வெகுதூரம் விலகிஓடிவிடும்; தாழின் திண்டல் ஆம் தகைமைத்து ஆகும்-(தொடர்ந்துசெல்லுதற்குத்) தாமதித்தால் (அருகில்நெருங்கித்) தொடக்கூடியதன்மையுடையதாம்; நின்றதேபோல நீங்கும்-(மீண்டுந்தொடர்ந்துசென்றால்) நின்றற்போல ஓடிப்போய்விடும்; (இங்ஙனஞ்செய்துகொண்டு), நிதிவழி நேயம் நீட்டும் மன்றல் அம் கோதை மாதர் மனம் என-(ஆடவரிடத்தன்றி அவர்தரும்)பொருளினிடத்தே ஆசையை மிகுதியாகச்செய்பவர்களான மணமுள்ள அழகிய கூந்தலையுடைய விலைமகளிரது மனம்போல, போயிற்று - (ஒருவழிநில்லாது கண்டவிடங்களிலெல்லாஞ்) சென்றது; அம்மா - ஆச்சரியம்! (எ - று.)

'நின்றதேபோலநீங்கும்' என்றதுவரையில் தன்மைநவிற்சியணியும், 'விலைமாதர்மனமெனப்போயிற்று' என்றது-உவமையணியுமாம். 'நின்றதே போலநீங்கும்' என்பதை நிதிக்கு இயற்கையடைமொழியாக்கி,நின்றற்போல நீங்கிச்செல்லுத்தன்மையதான செல்வ மென்றலு மொன்று. 'நிதிவழி நேயம் நீட்டும்' என்பதற்கு - கொடுக்கும் பொருளளவுக்கு ஏற்ப அன்பளவைப் பெருக்கிக்காட்டுகிற என்றும் பொருள்கொள்ளலாம். பி-ம்:—[1]தாளில். [2]தகைத்ததாகும். [3]போயதம்மான். (அ0உ)

உசஊ.—இராமன் அதனை மாயமானென்றுகருதுதல்.

காயம்[1]வே ருகிச் செய்யுங் கருமம்வே [2]ருகிற் றன்றே
யேயுமே யென்னின் முன்ன மெண்ணமே யிளவற் குண்டே

யாயு[3]மே லுறுதல் [4]செல்லா மரக்கரா னவர்கள் செய்த
[5]மாயமே யாய தேநான் வருந்திய தென்றுன் வள்ளல்.

(இ - ள்.) 'காயம் வேறு ஆகி செய்யும் கருமம் வேறு ஆகிற்று அன்றே-(இந்தமானின்) வடிவம் வேறுகி இதுசெய்கிறசெயல் வேறுயிற்றன்றே?என்னின் முன்னம் இளவற்கு உண்டு எண்ணமே ஏயுமே-எனக்குமுன்னே என் தம்பிக்கு [லக்ஷ்மணனுக்கு] உண்டான (இது வஞ்சனை யென்ற)எண்ணம் பொருத்தமுடையதே;ஆயும் எல் உறுதல்செல்லாம்-(நமதுமனம் இதனை)ஆராய்ந்திருக்குமானால் (நாம் இப்படி) வந்திருக்கமாட்டோம்; நான் வருந்தியது - (இப்படி) நான் வருத்தமடையக்காரணம், அரக்கர் ஆனவர்கள் செய்த மாயமே ஆயதே - இராக்கதர்கள்செய்த மாயையே யாயிற்றே,' என்றுன் - என்று திருவுள்ளத்திற்கொண்டான், வள்ளல்-வரையாது அருளுந்தன்மையனை இராமபிரான்; (எ - று.)

வடிவத்தில் இயற்கைபோலவும் சாதுபோலவுந் தோன்றித் தொழிலில் செயற்கையும் அசாதுவுமாயிற்று என்பது, முதலடியின் கருத்து. இளவல் - இளமையுடையான்: அல் - பெயர்விகுதி; 'வள்ளல்' என்பது இதுபோன்றதே. 'ஆயுமே லுறுதல் செல்லாம்' என்பதற்கு - (நமது மனம்) ஆராய்ச்சியுள்ளதாகுமானால் இனி நாம் இதனைப்பின்தொடர்தல் செய்வோமல்லோம் என்றும் பொருள்கொள்ளலாம். செல்லாம்-தனித்தன்மைப்பன்மை; உயர்வுப் பன்மையுமாம். 'செல்லாம்' என்றதை நோக்கி, 'என்னின்,' 'நான்' என்றது பன்மையொருமைமயக்கமாம். [3]ஆயுமே லுறுதல் செல்லா வரக்கர் என்று பாடமோதி, ஆயுள் இனிமேற் பொருந்துதலில்லாத [விரைவில் அழிவடையப்போகிற] அரக்கர்க ளென்று உரைப்பாரு முளர். மானைத்தொடர்ந்துவருதலாற் சீதையைப்பிரிந்து தான் வருந்தியாயினும் அரக்கரை யொழித்துத் தேவரைக்காத்து உதவுபவ னுதலால், இராமனை 'வள்ளல்' என்றார். ஆயதே யென்ற ஏகாரம்-இரக்கம். மற்றை ஏகாரங்கள் - தேற்றம். பி-மீ:—[1]வேறுக. [2]ஆயிற்று. [3]ஆயுமே,ஆயுமெய். [4]செல்லாதாதலாலரக்கர். [5]மாயமானுகுமென்ன, மாயமேமானுமென்ன, மாயமேயனையமே நான், மாயமேயாயதேநாம். (அ०கூ)

வே று.

உசசு.—இராமன்மனப்போக்கையறிந்து மாரீசன் தப்பியோடிஉய்ய முயலுதல்.

பற்று வானினி யல்லன் பகழியாற்
செற்று வானிற் [1]செலுத்தலுற் றனென
மற்ற மாய வரக்கன் மனக்கொளா
வுற்ற வேகத்தி னும்பரி னேங்கினன்.

(இ - ள்.) 'இனி பற்றுவான் அல்லன்-இனி (என்னை இராமன்)பிடிக்க முயல்பவனல்லன்; பகழியால் செற்று வானில் செலுத்தல் உற்றுன்-(தனது) அம்பினால் (என்னைக்)கொன்று மேலுலகிற்செலுத்தக் கருதினனு,' என -

என்று, மனம் கொளா-மனத்திற்கொண்டு [எண்ணி], மாயம் அரக்கன்-மாயையையுடைய அவ்விராக்கதன் [மாரீசன்], உற்ற வேகத்தின் உம்பரின் ஓங்கி ஞன்-மிக்க வேகத்துடன் வானத்தில் உயர எழும்பினான்: (எ-று.)—**பி ம்:**—[1]செலுத்துவனென்பதை.

இதுமுதல் பன்னிரண்டு கவிகள்-பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்.** (அ ஏ)

உசசு.—இராமன் அம்பு தொடுத்தல்.

அக்க ணத்தினி லேயனும் வெய்யகன்
சக்க ரத்திற் றகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
புக்க தேயம்புக் கின்னுயிர் போக்கெனை.

(இ - ள்.) அ கணத்தினில் - அந்த கூணத்திலே, ஏயனும் - இராமபிரானும், தன் வெய்ய சக்கரத்தின்-(திருமாலாகிய) தனது (பகைவர்க்குத்) கொடிய சக்கராயுதம்போல, தகைவு அரிது ஆயது - தடுக்கமுடியாததான, ஓர் செக்கர் மேனி பகழி - சிவந்தவடிவமுடைய அம்பொன்றை, புக்க தேயம் புக்கு இன் உயிர் போக்கு எனை - '(இந்த மான்) செல்லுமிடத்தில் (நீ) விடாது தொடர்ந்து சென்று (இதனது) இனிய உயிரை நீக்கிவிடுவாய்' என்று கட்டளையிட்டு, செலுத்தினான் - பிரயோகித்தான்; (எ - று.) (அ ஐ)

உசஎ.—மாரீசன் கதறிக்கொண்டு விழுந்து இறத்தல்.

நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினு
லட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட ழைத்[1]தொரு குன்றென வீழ்ந்தனன்.

(இ - ள்.) நெடு இலை சரம் - நீண்ட கூரிய இலைவடிவாயுள்ள அந்தப் பாணமானது, வஞ்சனை நெஞ்சு உற பட்டது - வஞ்சனையையுடைய (மாரீசனது) இதயத்திலே பொருந்தத் தைத்தது; அப்பொழுதே—, (மாரீசன்), பகு வாயினுல் - பிளவுபெற்ற (தனது) வாயினுல், அட்ட திக்கினும் அப்புறமும் புக-எட்டுத் திக்குக்களிலும் (அவற்றிற்கு) அப்பாலும் ஒலிசெல்லும்படி, விட்டு அழைத்து-(ஹா ஸீதே! லக்ஷ்மண! என்று உரக்கக்) குரலை வெளிவிட்டுக் கூப்பிட்டு, ஒரு குன்று என வீழ்ந்தனன்-ஒரு மலைபோல (தனது இயற்கைப் பெருவடிவத்தோடு) விழுந்தான்; (எ - று.)

தனது குரலைவிட்டு இராமன்குரலைக்கொண்டு, அவன் தனக்குத் தீங்கு நேர்ந்தவிடத்து மனைவியையுந் தம்பியையுங் கூப்பிடுமாறுபோல அவர்களைப் பேர்சொல்லிக்கூப்பிட்டு அரற்றிக்கொண்டு விழுந்த னென்பதாம். இங்ஙனம் கூவினது, இலக்குமணன் சீதையைப் பாதுகாவல் செய்வதை விட்டுப் பிரிந்து இங்கு வந்திடும்பொருட்டென்க. இராமனிடம் தனக்குப் பழமை

யாயுள்ள பகையைத் தீர்த்துக்கொள்ளுதற்கு இது செய்தான். 'வஞ்சனே' என்பதை வஞ்சனது என உருபுமயக்கமாகக் கொண்டு, வஞ்சகனுகிய மாரீசனுடைய என உரைப்பினுமாம். [1]உறுகுன்று என்ற பாடத்துக்கு-பெரிய மலை யென்க. மாரீசன் இயல்பிற் பெருவடிவமுடையா னுதலின், மலைபோல விழுந்தனனென்றார்; அவனை "ஸ²மஹாகாயம்" எனக் கூறியுள்ளார் வால்மீகி பகவானும். 'பகுவாய்' என்ற சொல்லின் ஆற்றலால், இராமன் அந்த மானின் பின்னே செலுத்திய அம்பு அதனுடம்பில் ஊடுருவி வாயளவுந் தூளெத்துக்கொண்டுவந்து அதனைப்பிளந்த தென்னலாம். (அ०சு)

உசுஅ.—அதுகண்டு இராமன் இலக்குமணனைக் குறித்துக் கொண்டாடுதல்.

வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலுஞ்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
யையன் வல்லனென் னுரயிர் [1]வல்லனு
னுய்ய [2]வந்தவன் வல்லனென் றுன்னினான்.

(இ - ள்.) வெய்யவன்-கொடியவனுகிய மாரீசன், தன் உருவொடு **வீழ்** தலும்-தனது நிசரூபத்துடனே கீழேவிழுந்தவளவிலே,—(இராமன்),-செய் யது அன்று என செப்பிய தம்பியை - '(இந்தமான்) நல்லதன்று' என்று (முன்புதெரிந்து) சொன்ன (தனது) தம்பியைக்குறித்து,—'ஐயன் **வல்லன்**-என்னப்பன் வல்லவன்! என் ஆர் உயிர் வல்லன்-எனது அரிய உயிர்போன் றவன் வல்லவன்!! நான் உய்ய வந்தவன் வல்லன்-நான் வாழ்ந்திடும்படி (என்பின்) பிறந்தவன் **வல்லவன்**!!!' என்று—, உன்னினனன்-எண்ணினன்.

மாயையினுலேனும் வேறுவகைச் சக்தியினுலேனும் மாறுவடிவங் கொண்டவர் இறக்கையில் அச்செயற்கைவடிவ மொழிந்து இயற்கைவடி வத்தையே அடைதல், இயல்பு. செய்யது - செம்மையென்னும் பண்பினடி யாப் பிறந்த ஒன்றற்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். தம்பியை 'ஐயன்' என்றது, அன்பு பற்றிய மரபுவழுவமைதி. ஐயன், ஆருயிர், உய்ய வந்தவன் என்பன-ஒரு பொருள்மேல்வந்த பலபெயர்கள்:[நன்-பொது-சசு.] இவை, தனித்தனி வினைகொடுத்துக் கூறப்பட்டன; [நன் - பொது - சக.] இங்ஙனம் 'வல்லன்' எனப் பலமுறை கூறினது, அவ்வல்லமையைக் குறித் துண்டான வியப்பினு லென்க. உயிர்போன்றவனே 'உயிர்' என்றது, உபசாரவழக்கு; எனது உயிர்நிலையாகுபவ னென்றவாறு. 'உயிர்' என்றது, சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாதலால், 'வல்லன்' என்ற உயர்திணைமுற்றைக் கொண்டது. பின்வரும் அபாயத்தை முன்பு உணர்ந்து தெரிவித்து அவ்வபாயத்தை யடையாதபடி தடுத்தலுல், 'உய்ய வந்தவன்' என்றார். **பி-மீ:**—[1]வல்லன்யான். [2]வந்தனன். (அ०எ)

உசுக.—இறந்துவிழுந்த வடிவத்தைப் பார்த்து இராமன் மாரீசனென்றறிதல்.

ஆசை நீளத் தரற்றினன் வீழ்ந்தவந்
நீசன் மேனியை நின்றுட னேக்கினன்

மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவ னென்பதுந் தேறினன்.

(இ - ள்.) ஆசை நீளத்து அரற்றினன் - திக்கு எவ்வளவு நீளமுள்ளதோ அதுவரையிலும் (குரல்கேட்கும்படி) கதறிக்கொண்டு, வீழ்ந்த - விழுந்த, அ ரீசன் மேனியை - கீழ்மகனான அந்த மாரீசனது தேகத்தை, உடன் நின்று நோக்கினன் - உடனே (அருகிற்சென்று) நின்று பார்த்து, (ஸ்ரீராமன்),மாசு இல் மா தவன் வேள்வியின் வந்த மாரீசனே இவன் என்பதும் தேறினன் - குற்றமில்லாத பெருந்தவமுடைய விசுவாமித்திரமுனிவன் யாகஞ் செய்த காலத்தில் அங்கு வந்த மாரீசனேயாவன் இவ்வரக்கன் என்பதையுந் தெரி ந்துகொண்டான்; (எ - று.)

மான்வடிவத்தை அரக்கன் மாயையென்று கீழ் ஓதித் துணர்ந்தவன் இப்பொழுது அம்மாயையைச் செய்த அரக்கன் மாரீசனென்று நிச்சயமாக அறிந்தன னென்க. ஆசை-ஆஸா; வடசொல். ஆசைநீளம் - திக்கும். ஆசை நீளத்து வீழ்ந்த என இயைத்து, திசையெல்லையையளாவிப் பெருவடிவோடு வீழ்ந்த என உரைப்பினுமாம். (அ০அ)

உரு০.—இவன் குரலால் சீதை வருந்துவளோ வென்ற இராமன் சிந்தித்தல்.

[1]உழைத்த வாளி [2]யுரம்புகப் புல்லியோ
னிழைத்த மாயையி னென் [3]குரலாலிசைத்
தழைத்த துண்டது கேட்டயர் வெய்துமான்
மழைக்க [4]ணேழையென் றுள்ளம் வருந்தினன்.

(இ - ள்.) உழைத்த வாளி-வருத்துந்தன்மையதான அம்பு, உரம் புக - (தன்) மார்பில் நுழைந்தவளவிலே, புல்லியோன்-அற்பகுணமுடையவனாகிய அவ்வரக்கன், இழைத்த மாயையின் - (தன்னிடம்) பொருந்திய மாயையால், என் குரலால் இசைத்து அழைத்தது உண்டு - எனதுகுரல்போன்ற குரல் கொண்டு(சீதையையும் லக்ஷ்மணனையும்)கூவி அழைத்ததன்மைஉண்டன்றே? அது கேட்டு - அக்கூக்குரலைக் கேட்டு, மழை கண் ஏழை - மழைபோலக்குளிர்ந்த கண்களையுடையவளும் (மகளிர்க்கு இயல்பான) பேதைமையையுடைய வளுமான சீதை, அயர்வு எய்தும் ஆல் - வருத்தமடைவளே! என்று-என்று கருதி, உள்ளம் வருந்தினன் - (இராமன்) மனம்வருந்தினன்; (எ - று.)

'மழைக்கணேழை' என்றதனால், மழைபோலக் கண்ணீர் சொரிந்து வருந்துவளே யென்றவாறுமாம். "தழைத்த பொன்மூலத் தடங்கடந் தருவி போய்த்தாழப், புழைத்தபோல நீர்நிரந்தரம்பொழிகின்ற பொலிவா, விழைக்கு நுண்ணியமருங்குலா ளிணெடுங் கண்கள், மழைக்க ணென்பது காரணக்குறியென வகுத்தாள்" என வரும் சுந்தரகாண்டச்செய்யுள் இங்கு நோக்கற்பாலது. 'ஏழை' என்றார், உண்மையுணராது மாயமானிடத்து ஆசை கொண்டமைபற்றி. பி-மீ:—[1]புழைத்த. [2]புரம். [3]குரல்போலெடுத்து. [4]மங்கை. (அ০கூ)

உருக.—இலக்குமணன் சீதைக்குத் தேறுதல்சொல்லக்கூடு மென்று இராமன் கருதல்.

மாற்ற [1]மின்னது மாயமா ரீசனென்
றேற்ற முன்னுணர்ந் தா[2]னெனி னென்னுடை
யாற்ற றேரு மறிவின னுதலாற்
றேற்று மாலிலை யோனெனத் தேறினன்.

(இ - ள்.) இளையோன் - தம்பி [லக்ஷ்மணன்],—ஏற்ற முன்-எதிர்வந்த முன்னே[கண்டவளவிலே யென்றபடி],மாயம் மாரீசன் என்று உணர்ந்தான் எனின்-மாயையையுடைய மாரீச னென்று (இந்த மானைக்குறித்து) அறிந்தானுதலால்,—(இப்பொழுதும்), என்னுடை ஆற்றல் தேரும் அறிவினன் ஆதலால்-எனது வலிமையை அறியும் அறிவை யுடையவனுகையால், இன்னது மாற்றம் தேற்றும் - இந்தக் கூக்குரல்வார்த்தையைக் குறித்து (ச் சீதை வருந்தாதபடி அவளை) த் தேற்றுவான், என - என்று எண்ணி, தேறினன் - (இராமன் ஒருவாறு) மனந்தேறுதலையடைந்தான்; (எ - று.)

'எனின்' என்ற சொல் - ஆதலால் என்னுங் கருத்தில் வந்தது: வட மொழியிலும் என்றாலென்று பொருளுள்ள சொல் ஆதலால் என்னுங் கருத்தில்வருதல் காண்க. இக்கவிக்கு வேறுவகையாகப் பதவுரைகூறுவதெல்லாம் கருத்திற் சிறவாமையைக் கண்டுகொள்க. தேற்றுமால்என்பதில், ஆல் - தேற்றம். பி-ம்:—[1]என்னது,என்னிது. [2]இருந்தானெனது, அது காலையின்.

உருஉ.—இராமன் சீதையோடு திரும்புதல்.

[1]மாள்வ தேபொரு ளாகவந் தானலன்
சூழ்வ தோர்பொரு ளுண்டிவன் சொல்லினன்
[2]மூள்வ தேத மதுமுடி யாமுன
மீள்வ தேநல னென்றவன் மீண்டனன்.

(இ-ள்.) மாள்வதே பொருள் ஆக வந்தான் அலன்-(இவன் இவ்விடத்து) இறந்துபோதலையே ஒருபயனுகக் கொண்டு வந்திருக்கமாட்டான்; சூழ்வது ஓர் பொருள் உண்டு-(வஞ்சனையாக) ஆலோசித்துத்தந்திரமாகச்செய்வதொரு காரியம் இருத்தல் வேண்டும்: இவன் சொல்லினுல் ஏதம் மூள்வது - இவன் (கூக்குரலிட்ட)வார்த்தையால் தீமை உண்டாகக்கூடும்; அது முடியா முனம்-அத்தீமை உண்டாகிவிடுதற்கு முன்னமே, மீள்வதே - திரும்பிப் பர்ணசாலை சேர்வதே, நலன் - நன்மைதருவது, என்று - என்று நினைத்துக்கொண்டு, அவன் - இராமபிரான், மீண்டனன் - திரும்பிவருபவனுனான்; (எ - று.)

இவன் சொல்லினுல் சூழ்வது ஓர் பொருள் உண்டு என இயைத்து, இவன் தன்சொல்லினுல் வஞ்சிப்பதொருகாரிய முள்ளது என்றும், இவன் நமது குரல்கொண்டு சொன்னதனுல் ஆலோசிக்கவேண்டிய தொரு காரியம் உள்ளது என்றும் பொருள் கொள்ளலாம். பி-ம்:—[1]மாள்வதோர் தொழி

லாக. [2]தாழ்வதேயெனிற்றையல் வருந்துமால். சிலபிரதிகளில் அடுத்த செய்யுளோடு இப்படலம் முடிகின்றது. (அகக)

• எதிர்பாராதுநேர்ந்த சோகத்தையும் கோபத்தையும் மறந்து தீவழியொழுகச்செய்யும் இயல்பினது காமமென்பதும், மற்றும் அக்காமநோய்தான் "நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்" என்றபடி எவ்வாற்றானுந் தணித்தற்கரிதென்பதும்,வேண்டிய வேண்டியாங்கெய்துவிப்பதான தவத்தைச் செய்து வரம்பெற்றவர் காலத்தையும் மாற்றவல்லவரென்பதும்,இயல்பிற்கொடியவர்களும் ஒருமுறைக்குஇருமுறை ஊறுபட்டாற் பெரியோர்சிறப்பை உணர்ந்து அதனைத் தாம் பிறர்க்கு வற்புறுத்திக் கூறவும் வல்லராவ ரென்பதும், அங்ஙனம் அனுபவமுடையார் சொல்லவுங் கேளார் கேடுகாலங்கிட்டியவ ரென்பதும்,கடவுளும் அவரைச்சார்ந்தவர்களும் அவதாரவிசேஷங்களில் தம்நிலைமையைமறந்தும் அவ்வவற்றிற்கேற்ற குணஞ் செயல்களே மேற்கொண்டுநிற்ப ரென்பதும்,"நுண்ணறிவுடையோர்நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்றபடி மகளிர் எத்துணைத்திறமுடையராயினும் அவர்க்கு அறிவு தடுமாறு மென்பதும், இல்லறத்தில்வாழும் ஆடவர்க்குக் காதலியர்சொல்லைக்கடத்தல் அரி தென்பதும், அங்ஙனந் தையல்சொற்கேட்டு ஒழுகியவர் அத்தையலுந் தாமுந் துயருறுவ ரென்பதும், எவ்வளவு ஆற்றலுடையாரும் தமதுதுணைவர்சொற்கேட்டு ஒழுகாராயின் துன்பமடைவ ரென்பதும் முதலியன இப்படலத்தில் வெளியாம்.

மாரீசன் வதைப்படலம் முற்றிற்று.

அ-ஆவது சடாயு வுயிர் நீத்த படலம்.

இராவணன் பிராட்டியைக் களவுசெய்துஎடுத்துச்செல்லுகையில் சடாயு வென்னுங் கழுகரசு அவனை மறித்துப் போர்செய்து சிதைத்துப் பின்பு தன் உயிரைவிடுத்த செய்தியைக் கூறும் பாக மென்க. ஜடாயு வென்ற வடசொல்லுக்கு-பலமயிர்கள் சேர்த்துத் திரித்த ஜடைபோலப் பலவாய் மிக்குத்திரண்ட ஆயுளுடையவனென்றும்,இறகில் உயிரையுடையவனென்றும்பொருள் கூறுவர். சூரிய சாரதியான அருணனது புத்திரனும், சம்பாதியினது தம்பியுமாகிய இவன், தசரதசக்கரவர்த்திக்குப் பலவுதவிகள்செய்து உயிர்த்தோழனாயிருந்தனன். இவன் பின்பு தசரதகுமாரர்களான இராமலக்ஷ்மணர்களைத் தமது புத்திரர்போலவே பாவித்து அன்புபாராட்ட,அவர்களும் தசரதனினும் வயதுமுதிர்ந்த இவனைத் தமது பெரியதந்தையாகப் பாவித்துவந்தார்க ளாதலால், வைஷ்ணவசம்பிரதாயத்தில், 'பெரிய உடையார்' என்று ஒரு திருநாமம் இவனுக்கு வழங்கும். இவன் இராவணனை எதிர்த்துச் செய்யும் போரில் அடிபட்டு இறகொடிந்து வீழ்ந்தவுடனே இறந்திடாமல் இராமலட்ச

மணர்க்குச் செய்தியை அறிவித்த பின்னரே இறக்கக்கருதிச் சிறிது பொழுது அரிதின் உயிர்தாங்கியிருந்து அச்செய்தியை அவர்கட்குக் கூறியபின்னரே உயிரைவிடுதலால், இப்பகுதிக்கு 'சடாயு வுயிர்நீத்த படலம்' என்று பெயரிட்டார். (விராதன் வதைப் படலம், சரபங்கர் பிறப்புநீங்கு படலம், கரன் வதைப் படலம், மாரீசன் வதைப் படலம், சடாயு வுயிர்நீத்த படலம், சவரி பிறப்புநீங்கு படலம் என இவ்வாறு நூலாசிரியர் படலங்களுக்குத் தக்கவாறு பெயர்நாட்டும் நயம் நன்குமதிக்கற்பாற்று.) இப்படலத்துக்குப் பெயர், **சடாயு மோட்சப் படலம்** என்று சில பிரதிகளிற் காணப்படுவதும், பொருத்தமுடையதே. சில பிரதிகளில் **சடாயு வதைப் படலம்** என்றும், இப்படலத்துக்குப் பெயர் காண்கின்றது.

இப்படலத்தின் கதைச்சுருக்கம்:—இராமன்குரலாற் கதறிய மாரீசனது குரலைக் கேட்டவுடனே அவ்வரக்கன்வஞ்சனையை யுணர்ந்த இலக்குமணன் வாளா இருக்க, அவ்வுண்மை உணராமல், சீதை, இராமனுக்கு அபாயம் நேர்ந்ததென்றே கருதிப் புரண்டழுது அது தீர்த்தற்பொருட்டுத் தன்னைவிட்டுச் செல்லாத இலக்குமணன்மேற் குறைகூறவே, இலக்குமணன் இராமனது பல பராக்கிரமங்களையெடுத்துக்கூறி உண்மையுணர்த்தவும், கேளாமல் சானகி இலக்குமணனைப் பலவாறுபழித்து நெருப்பில் விழுத்தொடங்கலும், அதனை மறுத்து இளையபெருமாள் விடைபெற்று இவர்க்கு என்னுகுமோ வென்று சங்கித்துக்கொண்டே சென்றவுடனே, சீதை தனித்துநின்ற சமயம் பார்த்து இராவணன் சந்நியாசிவடிவங்கொண்டு வந்து அப்பிராட்டியாரால் உபசரிக்கப் பெற்றபின்பு ஒருவரையொருவர் விசாரிக்கையில் அவனை ஒரு முனிவனென்றே கருதியதனால் அவனோடு பேச்சு நிகழ்த்திய சீதை அரக்கர்களையும் அவர்தலைவனான இராவணனையும் குறித்து இழித்துப்பேசலும், அவன் பெருஞ்சினங்கொண்டு மாயவேடந் துறந்து உண்மை யுருவத்தோடு நின்று, உடன்பாடில்லாத பெண்ணைத் தொட்டால் இறுதியுண்டா மென்று தனக்குச் சாபமிருத்தலால் யோசனைதூரம் நிலத்தைப்பேர்த்து அதனுடன் பிராட்டியாரைத் தேரின்மேல் வைத்துச் செல்லுமளவிலே, அவள் கூக்குரலிட்டதைக் கேட்டுச் சடாயு ஓடிவந்து எதிர்த்துப் பெரும்போர் செய்து அவனது துவசம் குண்டலம் கிரீடம் கவசம் வில் சாரதி தேர்க்குதிரைகள் தேர் அம்பறாத்தூணி முதலியவற்றைச் சிதைத்து முடிவில் அவன் எறிந்த தெய்வவாளினால் சிறைதுணிப்புண்டு வீழ, அரக்கன் சீதையைக் கொண்டு போய் இலங்கையில் அசோகவனத்தில் சிம்சுபாமரத்தின் கீழ்க் கொடிய பல அரக்கியர் காவல்செய்ய அவர்நடுவிற் சிறைவைத்திட்டான். இது நிற்க. தமையனுரை நாடிச்சென்ற இளையபெருமாள், அரக்கன் கதறியகுரல் கேட்டலால் சீதைக்கு என்னுகுமோ? என்று விரைந்துவருகிற இராமனைக் கண்டு, தான்வந்ததன் காரணத்தைக்கூறியவுடன், இருவரும் விரைவாய்வந்து பர்ணசாலையை அடைந்து நோக்குதலும் சானகியைக் காணுமல் மனங்கலங்கித் தேடிச்செல்லும்வழியில் முறிந்துகீழ்விழுந்துகிடந்த கொடி வில் கவசம் முத

லியவற்றை நோக்கிக்கொண்டு செல்லுகையில் சடாயு விழுந்துகிடக்கக் கண்டு சோகங்கொண்டு விழுந்துபுலம்ப, குற்றுயிருடன் விழுந்துகிடந்த அவன், நடந்த செய்தியை ஒருவாறு கூறி முடிவில் உயிர்நீத்துப் பரமபத மடைய, இராமபிரான் மிகவும் சோகித்து இலக்குமணனால் தேற்றப்பட்டு அவனுக்குச் சரமகைங்கரியஞ்செய்து முடித்து நின்றவளவிலே சூரியாஸ்த மனமாயிற்று என்பதாம்.

க.—கவிக்கூற்று: பிராட்டியின்செய்தியைக் கூறத்தொடங்குவோ மென்றல்.

சங்க டுத்த தனிக்கடன் மேனியாற்
கங்க டுத்த நிலைமை யறைந்தனங்
கொங்க டுத்த மலர்க்குழற் கொம்பனாட்
கிங்க டுத்த தகைமை யியம்புவாம்.

(இ - ள்.) சங்கு அடுத்த - சங்குகள் பொருந்திய, தனி - ஒப்பற்ற, கடல் - கடல்போன்ற [நீல நிறமான], மேனியாற்கு - திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானுக்கு, அங்கு-அவ்விடத்தில் [மாரீசனைப்பின்தொடர்ந்துசென்ற விடத்தில்], அடுத்த - சேர்ந்த, நிலைமை - தன்மையை, அறைந்தனம்-(நீழ்க்) கூறினேனும்; கொங்கு அடுத்த - நறுமணம் பொருந்திய, மலர் - பூக்களைச் சூடிய, குழல் - கூந்தலையுடைய, கொம்பு அனாட்கு - பூங்கொம்புபோன்ற சீதாதேவிக்கு, இங்கு - இவ்விடத்தில் [பர்ணசாலையில்], அடுத்த - சேர்ந்த, தகைமை - தன்மையை, இயம்புவாம் - (இனிச்) சொல்லுவோம்; (எ - று.)

என்று இங்ஙனம் படலத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறு. 'சங்குஅடுத்த' என்றது - கடலுக்கு, இயற்கையடைமொழி; அன்றி, கழுத்துக்குச் சங்கத்தை உவமை கூறுதற்பொருட்டுக் கடலுக்கு'சங்கடுத்த'என்ற விசேடணங் கொடுத்தன ரென்றலும் ஒன்று: இனி, 'சங்கடுத்த' என்றதை மேனியானுக்கு அடைமொழியாக்கி,திருமாலுக்குரிய பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கத்தின் அம்சமான பரதன் தனக்கு அடுத்தசம்பியாகப்பிறக்கப்பெற்ற என்று உரைப்பாரும் உளர்; அவ்வுரைக்கு, பரதனுக்குத் தமையனுயிருத்தற்கேற்ற தகுதியை யுடையவன் இராம னென்பது கருத்து. அன்றி, திருக்கையிற் சங்கத்தையேந்தியுள்ள திருமாலுக்கு உரிய அடைமொழி, அப்பிரானது திருவவதார விசேடமான இராமனுக்குக்கொடுக்கப்பட்ட தெனினும் இழுக்காது. குழற்கொம்பு - இல்பொருளுவமை. (அகஉ)

உ.—இதுவுங், அடுத்தகவியும்-மாயமானின் கூக்குரல்கேட்ட பிராட்டி வருந்தியது கூறும்.

[1]ஐயிற லத்து முழைதிறந் தேங்கிய
[2]செயிர்த லைக்கொண்ட சொற்செவி சேர்தலுங்
குயிற லத்திடை யுற்றதொர் கொள்கையாள்
வயிற லத்து விழுந்து மயங்கினாள்.

(இ - ள்.) எயிறு அலைத்து-பற்களைக்கடித்துக்கொண்டு, முழை திறந்து-மலைக்குகை போன்ற (தன்)வாயைத் திறந்து, எங்கிய-(மாரீசன்) அழுதுகூக் குரலிட்ட, செயிர் தலைக்கொண்ட சொல் - துன்பத்தை மேற்கொண்ட வார்த்தை, செவி சேர்தலும் - (தனது) காதிற் பட்டவளவிலே,—(சீதை), குயில் தலத்திடை உற்றது ஓர் கொள்கையாள் - ஒரு குயில் (மரத்தினின்று தவறித்) தரையில் விழுந்திட்டாற் போன்ற தன்மையை யுடையவளாய், வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள் - வயிற்றிலடித்துக்கொண்டு (நிலத்திலே) விழுந்து மயக்கமுற்றாள்; (எ - று.)

மாரீசன் இறக்கையில் 'ஹாஸீதே! லக்ஷ்மணா!' என்று இராமன்குரலால் உரக்கக்கத்திய குரலைக்கேட்டு, சீதை, இராமபிரான்தானே அபாயமுற்று அரற்றியதாகக் கருதி வருத்தமுற்றனளென்க. முழை - உவமவாகுபெயர். 'செயிர் தலைக்கொண்ட சொல்' என்றது-அவன் மரணவேதனையோடுகூடிய சொல் என்ற பொருளோடு, மேற் பிராட்டிக்கும் பெருமாளுக்கும் பிரிவுத் துயரமுண்டாக்குதலைப் பொருந்திய சொல்லென்ற பொருளையு முடையது. பி - ம்:—[1]அலைத்த. [2]செயிறலை. (அகரு)

கூ. பிடித்து நல்கிவ் வுழையெனப் பேதையேன்
முடித்த னென்முதல் வாழ்வென மொய் [1]குழல்
கொடிப் படிந்த தெனநெடுங் கோளரா
விடிக்[2]கு டைந்த தெனப்புரண் டேங்கினாள்.

(இ - ள்.) கொடி படிந்தது என - ஒருபூங்கொடி (கொள்கொம்பைவிழுந்து) தரையில் விழுந்ததுபோலவும், நெடு கோள் அரா இடிக்கு உடைந்தது என - நீட்சியையும் வலிமையையு முடைய பாம்பு இடிமுழக்கங்கேட்டுச் சோர்ந்ததுபோலவும், மொய் குழல்-அடர்ந்த கூந்தலையுடைய சீதை,புரண்டு-(தரையிலே) புரளலுற்று,—'இ உழை பிடித்து நல்கு என-இந்த மானைப் பற்றிக்கொடு என்று வேண்டியதனால், பேதையேன் - அறிவிலியாகிய யான், முதல் வாழ்வு முடித்தனன்-எனது முதன்மையாகிய வாழ்க்கையைப் போக்கிக்கொண்டேன்', என - என்றுகூறி, ஏங்கினாள் - அழுதாள்; (எ - று.)

கொழுநனோடு கூடி வாழும் வாழ்க்கையினும் சிறப்புடைய வேறு வாழ்வு குலமகளிர்க்கு இன்றுதலால், அத்தலைமை விளங்க, 'முதல்வாழ்வு' எனப்பட்டது. இனி, வாழ்வு முதல்முடித்தனன் என மொழிமாற்றி, எனது மங்கலவாழ்க்கையை அடியோடேதொலைத்துவிட்டே னென்றதாகப் பொருள் கூறினும் அமையும்.''நுணலுந் தன்வாயாற் கெடும்''என்றாற்போலத் தன் வாய்மொழியால் தனக்குப் பெருங்கேடு விளைத்துக்கொண்டமைபற்றி, 'பேதையேன்' என்று தன்னைத் தானே வெறுத்துக்கூறினாள்; இது-கழிவிரக்கம். மொய்குழல் - வினைத்தொகையன்மொழி. தலைவிரிகோலமாய் அழுதனளென்பது போதர, இங்கு 'மொய்குழல்' என்றன ரென்பர். கொடிய கூக்குரலைக்கேட்டுச் சீதை மிகவருந்துதற்கு, இடியோசைகேட்டு நாகம் நிலைகுலைதல உவமை கூறினர். பி-ம்:—[1]அழல். [2]இடைந்தது. (அகச)

சு.—சீதை இலக்குமணனை வெறுத்துக்கூறல்.

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையா
லிற்று [1]வீழ்ந்தன னென்னவு மென்னைய
னிற்றியோ வினையோ யொருநீ யென்றாள்.

(இ - ள்.) குற்றம் வீந்த குணத்தின் - குற்ற மில்லாத திருக்கலியாண குணங்களையுடைய, எம் கோமகன்-நமது தலைவன், மற்றை வாள் அரக்கன் புரி மாயையால்-எதிரியாகவந்த கொடிய இராக்கதன் செய்த மாயையினால், இற்று வீழ்ந்தனன்-அபாயமடைந்து விழுந்தான், என்னவும்-என்று (அவன் கூக்குரலால்) அறிந்ததின்பும், (கவலைகொண்டு பரிகாரந்தேடாமல்), இளையோய் ஒரு நீ என் அயல் நிற்றியோ-(அப்பெருமானது) தம்பியாய் அவனோடு ஒற்றுமையுடைய நீ எனது அருகிலேயே நிற்கக்கடவையோ? என்றாள் - என்றுசொன்னாள்; (எ - று.)

"ராமஸ்ய தக்ஷிணே பாஹு:" என்னும்படி ஸ்ரீராமனிருந்த காலத்திலெல்லாம் அவனோடு ஒற்றுமை பூண்டுநின்ற நீ யென்பதும், நாடுதுறந்து காடுபுகுந்தவிடத்து நீ ஒருவனெழிய வேறு துணையாய்வந்தவரில்லாமையால் அவனுக்கு அபாயம் நேர்ந்தவிடத்து அதனையறிந்து தடுத்தற்குரிய நீ யென்பதும், வேறுதுணையெவரும் வேண்டாதபடி அஸஹாயசூரனாய்ப் பகைவெல்லும் ஆற்றலையுடைய தனி வீரனை நீ யென்பதும், 'ஒருநீ' என்றதில் தோன்றும். இப்படிப்பட்ட நீ நமது தலைவனை அவனது கூக்குரலைக் கேட்டவுடனே யான் வருத்தமுற்றுப் போலவே வருத்தமுற்று உடனே விரைந்து அவன் சென்றவிடத்துச் சென்று அவனுக்கு நேர்ந்த நிலைமையை உணர்ந்து அத்துயரத்தைப் பரிகரித்தற்கு முயல்வதன்றோ தகுதி? அங்ஙனஞ்செய்யாது கணவனையிழந்து தனியே பரிதபிக்கிற என்னைவிட்டு நீங்காது எனது அருகிலேயே நின்றுகொண்டிருத்தல் தகுதியோ? என்றன ளென்க. 'வாளரக்கன்' என்றது, போர்வல்லா னென்பதைக் காட்டும். மற்றை யென்றது - சுட்டியதற்கு இனமாதலால், அவ்வரக்கன் குற்றம் நிறைந்தகுணக்கேட னென்றதைக் காட்டும்.

தமையன் இப்படிப்பட்ட அவஸ்தையை யடைந்து உன்னைத் துணை வேண்டிக்கூப்பிடவும் தம்பியானநீ அவனைநோக்கிச் செல்லாமல் என்னருகிலேயே நிற்கிறாய்; ஆதலால், அவனுக்குத் தீங்கு நேர்தல் உனக்குச் சம்மதமே போலும்; நீ பங்காளியாதலால் உள்ளத்திற் பகைமைபூண்டு வெளிக்கு வேண்டியவன் போலக்காட்டி அயோத்தியினின்று தனியே தொடர்ந்து வந்ததெல்லாம் இங்ஙனங் கேடு சூழ்தற்கேயோ? அல்லாக்கால், இராமன் அழிகையில் அவனைக் காக்கக்கருதாமற் கவலையற்று என்னைக் காத்துநிற்றல் யாதுபயன் கருதியது? எனது தலைமகனுக்கு அபாயம் நேர்ந்தவிடத்து என்னைப் பெண்டாளக் கருதியே நீ உன்மனையாளை அயோத்தியில் விட்டுத் தனியே தொடர்

ந்துவந்தாய்; நான் உன்னை ஒருபொருளாக மதியேன்; இனி ஒருகணமும் என்முன் நில்லாதே போ; உன்னைருவனே நம்பி உனது பாதுகாவலிலே வைக்கப்பட்டுள்ள நான் யாது செய்யக்கடவேன்! என்றாற்போல வால்மீகி ராமாயணத்தில் விரித்துக் கூறப்பட்ட விஷயங்களெல்லாம் இங்கு 'இற்று வீழ்ந்தன னென்னவு மென்னையல் நிற்றியோ வினையோய் ஒரு நீ' என்ற ஒருசிறுதொடரில் அடங்கி நிற்கிற அமைதி கருதத்தக்கது. இப்படிப்பட்ட ஆழ்பொருளுடைமை பற்றியே, கம்பராமாயணச் செய்யுளை 'கம்பசூத்திரம்' என்பர் அறிவுடையோர். 'குற்றம்வீந்த குணத்தி னெங்கோமகன்' என்று இராமனைக் கூறினதனால், இலக்குமணனை 'நீ குற்றம்நிறைந்தவன், குணக் கேடன், அற்பமதியன்' என்று பழித்தவாறும். பி-ம்:—[1]வீந்தனன். (அகரு)

வேறு.

நி.—இதுமுதல் ஏழு கவிகள் - இலக்குமணன் சீதைதீதுத் தேறுதல்கூறலைத் தெரிவித்தும்.

எண்மையா ருலகினி லிராமற் கேற்றமோர்
திண்மையா ருள[1]ரெனச் செப்பற் பாலிரோ
பெண்மையா லுரைசெயப் பெறுதி ராலென
வுண்மையா னுணையவட் குணரக் கூறினன்.

(இ - ள்.) எண்மை ஆர் உலகினில்-எளிமை பொருந்திய உலகத்திலே, இராமற்கு ஏற்றம் ஓர் திண்மையார் உளர் என - இராமனினும் மேம்பட்ட ஒப்பற்ற வலிமையுடையா ரொருவ ருள்ளா ரென்று, செப்பல் பாலிரோ - சொல்லக்கடவீரோ? பெண்மையால் உரைசெய பெறுதிர் - (அங்ஙனஞ் சிறந்த இராமனுக்கு ஓரரக்கனால் அழிவு நேர்ந்த தென்று உமது) பெண் தன்மையினாலேயே சொல்லத் தலைப்பட்டீர், என-என்று, உண்மையான் அனைய வட்கு உணர கூறினன் - உண்மையை யுணர்ந்த இலக்குமணன் அச்சீதைக்குத் தெரியச் சொல்பவனானன்; (எ - று.)—அதன் விவரம், அடுத்த ஆறு கவிகளில் விளங்கும்.

உலகமுழுவதும் இராமனுக்கு எளியதே யென்பது பட, 'எண்மையா ருலகு' என்றான். இனி, இத்தொடருக்கு - ஒன்று மூன்று ஏழு பதினொன்று என்றாற்போன்ற எண்ணிக்கை பொருந்திய உலக மெனப் பொருள்கொள்வர் ஒரு சாரார். திண்மையார்-பலசாலி. ''நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பேதைமைத்தே'', 'பெண்புத்தி பின்புத்தி' என்ப வாதலால், 'பெண்மையா லுரைசெயப் பெறுதிர்' என்றான். பெண்மையால் - அவனது பேராண்மையை யுணராமையால் என்ற படி. இவ்விடத்து வால்மீகிராமாயணத்தில் 'தகுதியல்லாத வார்த்தையைக் கூறுதல், உலகத்தில் மகளிர்க்கு இயற்கை யாதலால், வியக்கத்தக்கதன்று: அவர்கள் சஞ்சலமான சித்தத்தையும் கொடிய எண்ணத்தையு முடையராய்த் தருமத்தைக்கைவிட்டுப் பிறர்க்குப் பேதஞ் செய்யுந்தன்மையர்' என்றது

உணரத்தக்கது. சீதையும் இராமனும்போலமையங்காமல், இலக்குமணன், பொன் மான் வந்தபொழுதே தொடங்கி அதன் வஞ்சனையை உள்ளபடி உணர்ந்து வந்த சிறப்புத் தோன்ற, அவனுக்கு இங்கு 'உண்மையான்' என்று ஒருபெயர் கூறினர். உண்மையான் - உண்மை கூறுபவனுமாம். இங்கு வால்மீகிராமாயணத்தில் இலக்குமணனே 'ஸத்யவாதீ' என்றதோடு, லக்ஷ்மணன் தன்னைத் தானே 'ந்யாயவாதீ' என்றதாகவும் கூறப்பட்டுள்ளது. இனி, உண்மையால் கூறினன் என மூன்றும்வேற்றுமையாகக் கொண்டு, உண்மையான உறுதி மொழிகளாற் கூறினனென்றலும் ஒன்று. **பி-மீ:**—[1]எனல் செப்பற்பாலதோ.

இதுமுதல் சஅ - கவிகள் - மாரீசன் வதைப்படலத்தின் சு - ஆங் கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (அகசு)

சு. [1]ஏழுமே கடலுல மேழு [2]மேழுமே
சூழுமேழ் மலை[3]யவை தொடர்ந்த சூழல்வாய்
வாழுமே ழைபர்சிறு வலிக்கு வாளமர்
தாழுமே யிராகவன் றனிமை தையலீர்.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தையலீர் - பெண்மைக்குணம் நிறைந்துள்ளவரே! கடல் ஏழுமே-ஏழுகடல்களும், உலகு ஏழும் ஏழுமே - பதினான்கு உலகங்களும், சூழும் ஏழ் மலை-(உலகத்திற்) பொருந்திய ஏழு குலபருவதங்களும், அவை-(ஆகிய) அவற்றை, தொடர்ந்த-பற்றிய, சூழல்வாய் - இடங்களில், வாழும்-வசிக்கிற, ஏழையர்-அற்பர்களுடைய, சிறு வலிக்கு-அற்பபலத்துக்கு, இராகவன் தனிமை - ரகுகுலவீரனான இராமபிரானது தனித்தன்மை, வாள் அமர்-கொடிய போரிலே, தாழுமே - குறையுமோ? [குறையாது என்றபடி]; (எ - று.)

அண்டகோளத்தில் கடல்களிலும் மலைகளிலும் மற்றையிடங்களிலும் எங்கும் வாழும் பிராணிகளெல்லாம் அஸுரராயசூரனான இராமனது ஆற்றலுக்கு முன் மிகவும் எளியனவே யாதலால், துணையின்றித் தனியேசென்ற அவன், போரிற் சிறிதும் தாழ்வடையான் என்பதாம். திக்குவிசயஞ்செய்து பேர்பெற்ற ரகுவினது குலத்தவனென்ற பொருளுள்ள இராகவனென்றதும், வெற்றியைக்காட்டுதற்கே. கடல்கள் உலகங்கள் மலைகள் என்பவற்றின் வலிமைக்கும், அவை பொருந்திய அண்டத்தில் வாழ்பவரது வலிமைக்கும் இராகவன் தனிமை அமரில் தாழாது என்னும் பொருள்பட இக்கவிக்கு உரை கூறுவாருமுளர். முதலடியில் உம்மைகள் - முற்றுப்பொருளன. ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன. தாழுமே என்ற ஏகாரம் - எதிர்மறை. **பி-மீ:**— [1]ஏழுமேழ். [2]ஏழுமேற். [3]இவை. (அகஎ)

எ. பாரென [1]ப்புனலெனப் பவனம் வான்கனற்
பேரெனைத் தவையவன் முனியிற் பேருமால்
காரெனக் கரியவக் கமலக் கண்ணனே
யாரெனக் கருதியிவ் விடரி [2]ஞழ்கின்றீர்.

(இ - ள்.) பார் என - பூமியும், புனல் என - சலமும், பவனம் (என)- காற்றும், வான் (என) - வானமும், கனல் (என)-அக்னியும், (ஆகிய), பேர் - பேரைக்கொண்டவை, எனைத்து - எவ்வளவுஉண்டோ (அவையனைத்தும்), அவன் - அவ்விராமன், முனியின்-கோபித்தவளவில், பேரும் - நிலைகுலையும்; ஆல் - ஆதலால், கார் என கரிய அகமலம் கண்ணனே யார் என கருதி இ இடனின் ஆழ்கின்றீர்-மேகம்போலக் கரியதிருநிறமுடைய புண்டரீகாக்ஷனை அப்பிரானே யாரென்று நினைத்து இந்தத் துன்பக்கடலில் அழுந்துகின்றீர்? ()

ஸர்வஜகத்தனை திருமாலென்று உணராது ஒருமனித னென்றுகொண்டு மயங்கலாகா தென்க. 'ஆழ்கின்றீர்' என்ற வினையை நோக்கி, இடர், கட லெனப்பட்டது. முன்னிரண்டடியால், எம்பெருமான் ஸர்வநியாமகன் [எல்லாவற்றையும் அடக்கி யாளுந்தன்மையன்]என்பது உணர்த்தப்பட்டது. அளவிறந்த ஒப்பற்ற ஆற்றலையுடைய ஐம்பெரும்பூதங்களும் நிலைகுலையலாம் படியான பேராற்ற லுடையானுக்கும் அப்பஞ்ச பூதமயமான உடலையுடைய தோர் உயிரால் ஊறு வரக்கடவதொன்றேறு? என்றவாறு. முதலிரண்டடி யில்வந்த 'என' என்னும் இடைச்சொற்கள் - எண்ணுப்பொருளன. மூன்று மடியில், உவமவுரு: நான்காமடியில், செயவெனெச்சம். [1]கனலெனப்புன லெனப் பகாப்பேரெனத் திசையென என்றபாடத்தில், பகாப்பேர் என்றது- இடைவிடாமற் சஞ்சரிப்பது என்ற பொருளைத் தந்து, வாயுவுக்கு ஒருகார ணக்குறியாம்; ஸதாகதி, ஸமீரணன், பவநன் என்ற வாயுவின் வடமொழிப் பெயர்கள் இப்பொருள்படுவன. பகாப்பேரென்றவிடத்து 'பகர்பேர்' என்று படிப்பின் - மற்றுஞ்சொல்லப்படுகிற பேர்; அதாவது - இங்குக் கூற ப்படாத காற்று என்க. பி ம்:—[2]மூழ்கினீர்.

(அகஅ)

அ. இடைந்து[1]போய் நிசிசரற் கிராம னெவ்வம்வந்
தடைந்தபோ [2]தழைக்குமே யழைக்கு மாமெனின்
மிடைந்தபே ரண்டங்கண் மேல கீழன
வுடைந்து[3]போ மயன்முத லுயிருந் தீயுமால்.

(இ - ள்.) இராமன்—,—நிசிசரற்கு இடைந்து போய்-(ஓர்) அரக்கனுக் குத்தான்) வலியொடுங்கிப்போய், எவ்வம் வந்து அடைந்த போது - (தனக் குத்) துன்பம் வந்து சேர்ந்தபொழுது, அழைக்குமே - (பிறரைத் துணைவிரும் பிக்) கூப்பிடுவனே? [மாட்டான் என்றபடி]; அழைக்கும் ஆம் எனின் - அங் ஙனங்கூப்பிட நேருமாஞல், மிடைந்த பேர் அண்டங்கள் மேல கீழன உடை ந்து போம் - நெருங்கிய பெரிய அண்டங்களெல்லாம் மேல்கீழாய் [தலை கீழாய்] அழிந்துபோம்: அயன் முதல் உயிரும் தீயும்-பிரமன் முதலிய சீவ ராசிகளும் தீந்துபோம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சரீரத்தில் ஆத்மாபோல எல்லாப்பொருளினுள்ளும் அந்தராத்மா வாகி எழுந்தருளியிருக்கிற பரமாத்மாவாய் ஜகச்சரீரகனுயுள்ள அப்பிரா னுக்கு அபாயம் நேர்ந்தால், அவனுக்குச் சரீரமாகவுள்ள அண்டகோடி களுக்கும் சீவகோடிகளுக்கும் அபாயம் நேர்ந்திடுமே: இஃது இல்லாமை

காண்டலால், அஃதும் இன்றென்பது அநுமானப்பிரமாணங் கொண்டு அறியற்பாற் றென்க: என்றது, அவனுக்குத் துன்பம் நேர்ந்தில தென்பதை வற்புறுத்திக்காட்டியவாறு. நிசிசரன் - இரவில் வலிமைகொண்டு சஞ்சரிப்பவன்; இது, அரக்கரியற்கை. இடைந்துபோய் - பின்னிடைந்து தோற்றுப்போய் எனினும் அமையும். படைத்தற்கடவுளாதல்பற்றி, அயனேத்தலுமை யாக எடுத்தார். பி - மீ:—[1]போம். [2]அழைக்குமோவழைக்குமால். [3]போய். ()

கூ. மாற்றமென் பகர்வது மண்ணும் வானமும்
போற்றவன் றிரிபுர மெரித்த புங்கவ
னேற்றிறின் றெய்தவில் [1]லிறுத்த வெம்பிரா
னூற்றலின் [2]மேலுமோ ராற்ற [3]லுண்மையோ.

(இ - ள்.) பகர்வது மாற்றம் என்-(மற்றும் அவனது ஆற்றலைக்குறித்துயான்) சொல்லவேண்டிய வார்த்தை யாது உளது? மண்ணும் வானமும் போற்ற-மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் கொண்டாட, வில் திரிபுரம் எரித்த புங்கவன் - வலிய மூப்புரத்தை யெரித்த சிவபிரான், ஏற்றில் நின்று - நாணேற்றி நின்று, எய்த - அம்பெய்தற்குக் கருவியான, வில் - (அவனது) வில்லை, (உமது விவாககாலத்தில்), இறுத்த - முறித்திட்ட, எம்பிரான் ஆற்றலின் மேலும் - நமது தலைவனான இராமனது வல்லமையைக் காட்டிலும்மேலாக, ஓர் ஆற்றல் உண்மையோ-ஒருவலிமை உளதோ?[இல்லை யென்றபடி;]

இராமனது வலிமையினும் மிக்கதொரு வலிமை உள்ளதென்றல் உண்மையாகுமோ? ஆகாது என்றும் ஈற்றடிக்குப் பொருள்கொள்ளலாம். சிவபிரான் கைக்கொண்டு நாணேற்றிப் பகைவென்ற வலிய படைக்கலம் ராமன்வலிமைக்கு ஆற்றுமல் முறிந்திட்ட தென இராமனது ஆற்றலை எடுத்துக் காட்டியவாறும். இப்படிப்பட்ட ஆற்றலை நீர் கண்கூடாகக் கண்டுள்ளீராதலால் உமக்கு நான் ஒன்றுங் கூறவேண்டுவதில்லை யென்பதுபட 'மாற்றமென் பகர்வது' என முதலிற் கூறினன். மாற்றம் என் பகர்வது - லோகப்பிரசித்தமான அதனைப்பற்றி யாதொன்றுஞ் சொல்லவேண்டுவதில்லை;ஏதேனும் சொல்லின் மிகையா மென்றபடி. புங்கவன் - புருஷசிரேஷ்டன்; அல்லது, ரிஷபத்தையுடையவன். பி-மீ:—[1]இற்றது. [2]அமைவது, வருவது. [3]இன்மையால். (அஉ)

கூ. காவல னீண்டுநீர் கருதிற் றெய்துமேன்
மூவகை யுலகமு முடியு முந்துள
தேவரு முனிவரு முதல செவ்வியோ
ரேவரும் [1]வீவர்கல் லறமு மெஞ்சுமால்.

(இ - ள்.) காவலன் - (உலகமுழுவதையும்) பாதுகாத்தலில் வல்லவனான இராமன், ஈண்டு - இப்பொழுது [அல்லது இவ்விடத்தில்], நீர் கருதிற்று எய்தும் ஏல் - நீர் எண்ணினதை அடைவனேல், மூவகை உலகமும் முடியும் - மூன்றுலோகங்களும் அழியும்; முந்து உள தேவரும் முனிவரும் முதல செவ்வியோர் ஏவரும் வீவர் - முதன்மைப்பட்டதேவர்களும் முனி

வர்களும் முதலிய சிறப்புப்பெற்றோர் யாவரும் இறந்தொழிவர்; நல் அறமும் எஞ்சும் - சிறந்த தருமமும் அழிந்ததாம்; (எ - று.)——ஆல் - ஈற்றசை.

மூவகையுலகமும் முடிதல் முதலியவற்றைக் காணுமையால், இராமன் அபாயமடையாமையைத் தெற்றென உணரலா மென்பது கருத்து. ஜகத் ரக்ஷண ஸமர்த்தனுயுள்ளவன் ஆத்மரக்ஷணத்திலே அஸமர்த்தனுகா னென்பது தோன்ற'காவலன்' என்றும், ''கோமகன் இற்றுவீழ்ந்தனன்'' என்று பிராட்டியார் கருதிச்சொன்னதைத் தான் தன்வாயால் அநுவதித்துக்கூறவும் கூசுவான் போன்று 'நீர்கருதிற்று எய்துமேல்' என்றுங் கூறினன். 'மூந்து' எனத் தனியே எடுத்து 'முடியும்' என்பது முதலிய முற்றுக்களோடு கூட்டினும் அமையும். காவலன் ஈண்டும் என எடுத்து, காத்தற்றொழிற்கு உரியனன இராமன் யாதொருதீங்குமின்றி விரைவில் வந்து சேர்வன் என்று பொருள் கூறுவாரு முளர். உலகம்முதலியன உள்ளனவாதல் இராமனெருவன் உளனுதல்பற்றியே யென்பது,இக்கவியிற் போதரும். பி-ம்:—[1]வீந்துளார். ()

கக. பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
றுரக்க[1]வந் ததுபடத் தொலைந்து சோர்கின்ற
வரக்கனவ் வுரையெடுத் தரற்றி னுனதற்
கிரக்கமுற் றிரங்கலி ரிருத்தி ரீண்டென்றன்.

(இ - ள்.) பரக்க பகர்வது என்-விரிவாகச்சொல்லவேண்டுவது என்ன இருக்கிறது? பண்ணவன் - பெருமையுடையவனுன இராமன், அங்கு - (மாயமாகிய அரக்கனைத் தொடர்ந்துசென்ற) அவ்விடத்தில், பகழி துரக்க - அம்பை எய்ய, வந்த அது பட - வந்த அந்தஅம்பு பட்டதனுல், தொலைந்து சோர்கின்ற - வலிதொலைந்து அழிகிற, அரக்கன்-அவ்விராக்கதன், அ உரை எடுத்து அரற்றினன்-(இராமன்வார்த்தைபோன்ற) அவ்வார்த்தையை(த் தீய சிந்தனையாற்) குரலெடுத்துக் கூவினன்; அதற்கு இரக்கம் உற்று இரங்கலிர் - அதற்காகப் பரிதாபமடைந்து புலம்பாமல், ஈண்டு இருத்திர் - இவ்விடத்தில் [இப்பொழுது] கவலையற்று இருப்பீர், என்றன்-என்று (சீதையை நோக்கி இலக்குமணன்) கூறினன்; (எ - று.)

'தொலைந்துசோர்கின்ற'என்பதைச் சேர்ந்து தொலைகின்றன விருதி பிரித்துக்கூட்டி யுரைப்பாரும் உளர். பி ம்:—[1]அங்கது. (அஉ)

கஉ.—சீதை இலக்குமணனை மீளவும் பழித்தல்.

என்றவ [1]னியம்பலு [2]மெழுந்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்தள்
நின்றநின் னிலையிது நெறியிற் றன்றென
வன்றறு கண்ணினள் [3]வயிர்த்துக் [4]கூறுவாள்.

(இ - ள்.) என்று அவன் இயம்பலும்-என்று இலக்குமணன் கூறியவுடனே, (சீதை), எழுந்த சீற்றத்தள்-பொங்கித்தோன்றிய கோபத்தையுடையவளும்,கொன்று அன இன்னலள்-(தன்னைக்) கொன்றுலைத்த துன்பத்தை

யுடையவளும், கொதிக்கும் உள்ளத்தள் - பதைபதைக்கிற மனத்தையுடைய வளும், வல் தறுகண்ணினள் - கொடிய தறுகண்மையை யுடையவளுமாய், (அவனைநோக்கி), நின்ற நின் நிலை இது தெறியிற்று அன்று என-(பெருமானை நாடிச்செல்லாமற் கவலைபற்று இங்கு) நிற்கிற உனது இந்நிலைமை நீதிமுறை மையுடையதன்று என்று, வயிர்த்து கூறுவாள்-பகைமைபாராட்டிச்சொல்லு பவளாயினள்; (எ - று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

கொன்றன இன்னல் - மரணவேதனைபோன்ற வேதனை. நெறி - சந் மார்க்கம். தறுகண்மை - தாகூணிபம்பாராட்டாத குரூரத்தன்மை. பி-ம்:—[1]உரைத்தலும். [2]எடுத்த. [3]வலித்து. [4]கூறினள். (அஉ)

கூ.—சீதை 'நெருப்பில் விழுந்து இறப்பேன்' என்றல்.

ஒருபகல் பழகினு ருயிரை யீவரால்
பெருமக [1]னுலவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
யெரியிடை "வீழ்ந்துயி ரிறப்பெ னீண்டெனை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) 'ஒருபகல் பழகினர்-ஒருநாள்பழகினவர்களும், உயிரை ஈவர்-(தமது அன்பர்க்குத் துன்பம்நேர்ந்தவிடத்து அதற்காகத் தமது) உயிரையும் இழப்பார்கள்;(அங்ஙனம்இருக்க), நீ-(உடன்பிறந்து நெடுநாள்பழகினவனை) நீ, பெருமகன் உலவுறு பெற்றி கேட்டும் - உனது தமையன் அழிவடைகிற தன்மையைச செவியுற்றும், வெருவலை நின்றனை - அஞ்சாமல் நின்றுகொண் டிருக்கிறாய்;வேறு என்-(எனக்கு) வேறுகதி யாதுளது?இனி-இப்பொழுது, யான்—, எரியிடை வீழ்ந்து ஈண்டு உயிர் இறப்பென் - நெருப்பில்விழுந்து இங்கு உயிரை மாய்த்துக்கொள்வேன்,' எனு-என்றுசொல்லி,—(எ - று.)— "காட்டெரிதொடர்கின்றுடனே" என அடுத்த கவியோடு தொடரும்.

பெருமகன் - மூத்தவன். ஈண்டு - உன்முன்னிலையில். பி - ம்:—[1]உலை வுற்ற. [2]கடிதுபுக்கிறப்பன். (அஉ)

கஎ.—இலக்குமணன் சீதையை வணங்கி விலக்குதல்.

தாமரை வனத்திடைத் தாவு மன்னம்போற்
றூமவெங் காட்டெரி தொடர்கின் றுடனைச்
சேமவிற் குமரனும் விலக்கிச் [1]சீறடிப்
பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுமால்.

(இ - ள்.) தாமரை வனத்திடை தாவும் அன்னம் போல் - செந்தாமரை மலர்க்காட்டில் தாவிச்செல்லுகிற அன்னப்பறவை போல, தூமம் வெம் காடு எரி தொடர்கின்றுள்ளனை-புகையோடுகூடிய வெவ்வியகாட்டுத்தீயில் பாயத் தொடங்குகிற சீதையை, சேமம் வில் குமரனும்-பாதுகாவற்குரிய வில்லை யேந்திய இளமகனான இலக்குமணனும், விலக்கி-தடுத்து, சிறு அடி பூ முகம் நெடு நிலம் புல்லி- அவளுடைய சிறியதிருவடிகளாகிய தாமரைமலர்களுக்கு

நேராகப் பெரியபூமியில் விழுந்து [சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து],சொல்லும்-சொல்லுவான்; (எ - று.)—அச்சொல்லை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

சிவந்த காட்டுத்திக்கு உவமை யாதலால், தாமரை, செந்தாமரைமல ரெனக் கொள்ளப்பட்டது. உபமேயத்தில் தூமத்தைக்கூறியதற்கு ஏற்ப, உபமானத்தில், கரியவண்டுகள் பறத்தல் கொள்க. சேமம் - க்ஷேமம். "நுத லடிநுசுப்பென மூவழிச் சிறுகி" என்றபடி மகளிர்க்குக் கால்சிறுத்திருத்தல் உத்தமலக்கண மாதலால், 'சீறடி' என்றார். [1]சீறடி என்ற பாடத்துக்கு-சீர் பாத மென்க. ஆல் - ஈற்றசை. (அஉ)

கரு.—இலக்குமணன் செல்லவுடன்பட்டுக் கூறித் துணிவுரை.

துஞ்சுவ தென்னைநீர் [1]சொற்ற சொல்லெயா
னஞ்சு வென் மறுக்கிலெ னவலந் [2]தீர்ந்தினி
[3]யிஞ்சிரு [4]மடியனே னேகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) துஞ்சுவது என்னை - (நீர்) இறக்கவேண்டுவது என்ன? நீர் சொற்ற சொல்லை யான் அஞ்சுவென்-நீர் சொன்னவார்த்தைக்கு நான் அஞ்சு கிறேன்; மறுக்கிலென் - (உமது கட்டளையை) மறுக்கமாட்டேன்; அவலம் தீர்ந்து இனி இஞ்சு இரும் - துன்பமொழிந்து இப்பொழுது இவ்விடத் தில் இருப்பீர்; அடியனேன் ஏகுகின்றனென் - அடியேன் செல்லுகிறேன்; வெம் சினம் விதியினை வெல்ல வல்லமோ - கடுங்கோபமுள்ள ஊழ்வினையை வெல்லவல்லமையுடையோமோ (நாம்?) [அல்லோம் என்றபடி]; (எ - று.)

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று; சூழினுந் தான் முந்துறும்" என்றபடி எவ்வாற்றினும் விலக்கவொண்ணாத வலிய வினைப்பயனை வருவது வருக என்பது, ஈற்றடியின் கருத்து. 'வெஞ்சினம்'என்ற அடைமொழியால், விதியென்றது - இங்கே தீவினைப்பயனை உணர்த்தும். அஞ்சுவென் என எதிர்காலத்தாற் கூறியதனால், நீனைக்குந்தோறும் உமதுமொழி அச்சத்தைத் தருவது என்றவாறு. துஞ்சுவது - மங்கலவழக்கு. இங்கு என்பது, இஞ்சு எனத் திரிந்தது; எதுகைநோக்கிய தோர் போலிவழக்கு. **பி-ம்:**—[1]சொன்ன. [2]தீர்ந்திரும். [3]எஞ்சினேன். [4]அடியனே. (அஊ)

கசூ.—இலக்குமணன் விடைபெறுதல்.

போகின்றே னடியனேன் பொருந்தி வந்துகே
டாகின்ற தரசன்ற னணை நீர்மறத்
[1]தேதென்றி ரிருக்கின்றிர் [2]தமியி ரென்றுபின்
வேகின்ற சிந்தையான் [3]விடைகொண் டேகினன்.

(இ - ள்.) அடியனேன் போகின்றேன் - அடியேன் (இதோ) செல்லுகி றேன்; பொருந்தி வந்து கேடு ஆகின்றது - இசைந்துவந்து கெடுதி உண்டா

கப்போகிறது; நீர் அரசன்தன் ஆணை மறுத்து ஏகு என்றிர் - நமது பெருமானதுகட்டளையைக் கடந்து போவென்று நீர் (என்னைச்) சொல்லுகிறீர்; தமியிர் இருக்கின்றிர்-தனியே இருக்கிறீர், என்று-என்றுசொல்லி, பின்-பின்பு, வேகின்ற சிந்தையான் - தபிக்கிற மனமுடையவனுய், விடை கொண்டு ஏகினன் - (இலக்குமணன்) விடைபெற்றுக்கொண்டு சென்றன்; (எ - று.)

அரசன்தன் ஆணை மறுத்து நீர் ஏகு என்றிர்-நுமக்குப் பாதுகாவலாக இராமனுல் நியமிக்கப்பட்டுள்ள என்னை அப்பாதுகாவலாழிந்து விலகிச் செல்லும்படி நியமிக்கிறீர். இலக்குமணன் உண்மையுணருந்தன்மைய னுகலால், 'பொருந்திவந்து கேடுஆகின்றது' என்று வேகின்றசிந்தையனுனன்; அன்றியும், இதற்கு, சீதைசொன்னசொல்லும் ஓர்காரணம். விரைவுந் துணிவும் பற்றி, 'ஆகின்றது' என நிகழ்காலத்தாற் கூறினன். பி-ம்:—[1]ஏகென்றிருக்கின்றீர். [2]தமியள். [3]விடைகொண்டேனெனு. (அஉஎ)

கஎ.—அப்பொழுது இலக்குமணன் அடைந்த சிந்தை.

இருப்பனே லெரியிடை யிறப்ப ராலிவர்
பொருப்பனே யானிடைப் போவெ னேயெனி
னருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
விருப்பனேற் கென்செய லென்று விம்மினன்.

(இ - ள்.) இருப்பன்ஏல்-(நான் செல்லாமல் இங்கே) இருப்பேனுனல், இவர் எரியிடை இறப்பர் - இவர் நெருப்பில் விழுந்து இறப்பார்; பொருப்பு அனையானிடை போவெனே எனின் - மலைபோன்ற இராமனிடஞ்செல்வேனேயானுல், அருப்பம் இல் கேடு வந்து அடையும்-பாதுகாவலில்லாத தீங்கு வந்துநேரும்; ஆர் உயிர் விருப்பனேற்கு என் செயல் - அரிய உயிரினிடத்து விருப்பத்தையுடைய எனக்குச் செய்யலாவது யாது? என்று விம்மினன் - என்றுஎண்ணி ஏங்கினன்; (எ - று.)—ஆல் - அசை.

இங்ஙனம் இருதலைக்கொள்ளியிடைப்பட்ட எறும்புபோல இருபுறத்துள் ஒன்றிலுந் துணிந்துசெல்லமாட்டாமல் துயருறுதலினும் உயிர்துறத்தல் நன்றுயினும் அங்ஙனம்உயிரைமாய்த்துக்கொள்ளாதிருக்கிறேன் அதனிடத்து ஆசையா லெனத் தன்னைத் தான் வெறுத்துக்கூறுவான் 'ஆருயிர் விருப்பனேன்' என்றன். அருப்பம் இல் கேடு - தடையில்லாத கெடுதி; அருப்பம் - அரண்: இனி, எளியகேடென்னும் பொருள்கொள்ளலாம்; அருப்பம் - அருமை. அருப்பம் என்பதை அல்பம் என்ற வடசொல்லின் திரிபாகக் கொண்டு, அற்பமல்லாத பெருங்கேடு என்றலும் ஒன்று. சலியாமை பெருமை முதலியனபற்றி, இராமனுக்கு மலை உவமை. (அஉஅ)

கஅ.—இலக்குமணன் ஏகுவாறு துணிதல்.

அறந்தனு [1]லழிவில தாகி னுக்கலா
மிறந்துபா டிவர்க்குறு [2]மிதனி னிவ்வழி

துறந்துபோ மிதனையே துணிவென் றெல்வினைப்
பிறந்துபோர் திதுபடும் பேதை யேனெனை.

இதுவும், வருங் கவியும் - குளகம்.

(இ - ள்.) அறந்தனுல் அழிவு இலது ஆகின் ஆக்கலாம் - தருமத்தினுல் இயலுமானுல் தீங்கு நேராதபடி செய்யலாம்; தொல் வினை பிறந்து போந்து இது படும் பேதையேன் - பழைய வினையின் பயனுல் சன்மமெடுத்து இங்குவந்து இந்தஅவஸ்தையைப்படுகிற அறிவிலியான நான், இவர்க்கு இறந்துபாடு உறும் இதனின்-இவர்க்கு இறந்துபடுத லுண்டாதற்குக் காரணமாகிற இதனினும் [இங்கு நிற்றலினும], இவ் வழி துறந்து போம் இதனையே துணிவென்-இந்த இடத்தைவிட்டு நீங்கிச்செல்லும் இச்செயலையே செய்யத் துணிவேன், எனு - என்றுகருதி,— (எ - று.)— "என்று அறிவித்து ஏகினுன்" என வருங் கவியோடு தொடர்ந்து முடியும்.

தருமம் காப்பிற் காக்க என்பது, மூதலடியின் பொருள். இறந்துபாடு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். இந்தச் சங்கடத்தினின்று மீளுதற்கு யாதோரறிவுந் தோன்றுமையால், 'பேதையேன்' என்று தன்னை வெறுத்தான். பி-ம்:—[1]அழிவிலாதாகல். [2]இருக்கின். (அஉகூ)

கஉகூ.— 'சடாயு பாதுகாக்கும்' என்றுசொல்லி இலக்குமணன் செல்லல்.

போவது [1]புரிவல்யான் புகுந்த துண்டெனிற்
காவல்செ யெருவையின தலைவன் கண்ணுறு
மாவது காக்குமென் [2]றறிவித் தவ்வழித்
தேவர்செய் தவத்தினுற் செம்ம லேகினுன்.

(இ - ள்.) 'யான் போவது புரிவல் - நான் செல்லுவேன்; புகுந்தது உண்டு எனின் (ஏதேனும் தீங்கு) நேர்ந்தது உண்டானுல், காவல் செய் எருவையின் தலைவன் கண்ணுறும் ஆவது காக்கும் - (நமக்குக்) காவலைச் செய்கின்ற கழுகரசனை சடாயு பார்த்துத் தன்னலியன்றவளவு பாதுகாப்பன்', என்று அறிவித்து - என்று (சீதையை நோக்கிச்) சொல்லி, செம்மல்-பெருமையிற் சிறந்தவனை இலக்குமணன், தேவர் செய் தவத்தினுல் - தேவர்கள் செய்த தவத்தினுலே, அ வழி ஏகினுன் - (இராமன் மானைத்தொடர்ந்து சென்ற) அந்தவழியாகச் சென்றிட்டான்; (எ - று.)

விடைகொண்டுஏகிய இலக்குமணன் கவன்றுகொண்டே சிறிதுதூரஞ் சென்று திரும்பிப்பார்த்து, சடாயுகாப்ப னென்பதைச் சீதைக்குத் தெரிவித்துச்சென்றன னென்க. கீழ்ச் சடாயுகாண்படலத்தில் "நீவிரு நன்னுதல் தானு மிக்காட்டில் வைகுதிர் காக்குவென் யான்" என்று கூறிய சடாயு இவர்களைப் பஞ்சவடியாச்சிரமங் கொண்டு சேர்த்து அருகில் நின்று இவர்க்குப் பாதுகாவல்செய்து வருகையால், 'காவல்செயெருவையின்தலைவன் கண்ணுறும் ஆவது காக்கும்' என்றுன்; இதனை அப்படலத்தின் இறுதியில்

"வார்ப்பொற்கொங்கைமருகியை மக்களே, பேற்பச் சிந்தனையிட்டவ்வரக்கர் தஞ், சீர்ப்பைச் சிக்கறத்தேறினன் சேக்கையிற்,பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான்" என்றதனாலும் அறிக. இலக்குமணன் சீதையைத் தனியேஇருத்திச்செல்லுதல், அச்சமயம்நோக்கி இராவணன்வந்து அவளைக் கவர்ந்துசென்று அதுகாரணமாக இராமபாணத்தால் வேரோடு அழியத் தேவர்கள் துன்பம் நீங்கி இன்பமுறுதற்குக் காரண மாகுதலால், 'தேவர் செய் தவத்தினுற் செம்ம லேகினான்' என்றார். போவதுபுரிதல் - போதலைச் செய்தல். பி-ம்:—[1]புரிவனன். [2]அறிவுற்று. (அஉ)

20 —உடனே இராவணன் சந்நியாசிவேடங்கொண்டு சீதையிடத்து வருவதை இதுமுதல் நான்குகவிகளிற் கூறுகிறார்.

இளையவ னேகலு [1]பிறவு பார்க்கின்ற
வளையெயிற் றிராவணன் வஞ்ச முற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி [2]தவத்தவர் வடிவந் தாங்கினான்.

(இ - ள்.) இளையவன் ஏகலும் - இலக்குமணன் சென்றவளவிலே,—இறவு பார்க்கின்றவளை யெயிறு இராவணன்-(அவன்) நோக்கிச்செல்லுதலை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிற வளைந்த கோரதந்தங்களையுடைய இராவணன், வஞ்சம் முற்றுவான்-(தான்செய்யக்கருதிவந்த) வஞ்சனையைச் செய்துமுடிக் கும்பொருட்டு,—வரி முளை தண்டு ஒரு மூன்றும்-கட்டமைந்த மூங்கில்தண்டு ஒரு மூன்றையும்[திரிதண்டத்தையும்], முப் பகை தளை அரி தவத்தவர் வடி வும் - (காமம் வெகுளி மயக்க மென்னும்) மூன்று உட்பகையாகிய பந்தத்தை யறுத்த தவத்தையுடைய முனிவர்களது வடிவத்தையும் [சந்நியாசிவேஷத் தையும்], தாங்கினன்-தரித்தவனும்,—(எ - று.)—"சூழல்வாய் நணுகினான்" என மேல் உ-ஆம் கவியோடு முடியும்;ஆகவே,அதுவரையில் ஒருதொடராம்.

"நூலே கரகம் முக்கோல் மணையே, ஆயுங் காலை யந்தணர்க் குரிய", "உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலு, நெறிப்படச் சுவலசைஇ" என்றவற்றுல், சந்நியாசிகளுக்குத் திரிதண்டம் உரியதாதல் உணர்க. துறவி கள் முக்கோல்பிடித்தல் முப்பகையையும் வென்றமைக்கு ஓர் அறிகுறியாகு மென்பதுபட 'முளைவரித்தண்டொரு மூன்று முப்பகைத்தளையரி தவத்தவர் வடிவும்' என ஒருங்கு நிறுத்திக்கூறினர். முப்பகை - மண்ணுசை பெண் ணாசை பொன்னாசை யென்னும் ஈஷணைத்ரயங்களுமாம். 'தவத்தவர்வடிவுந் தாங்கினான்' என்றதனால், காஷாயவஸ்திரந்தரித்தல், கையிற் கமண்டலமேந் துதல் முதலியன பெறப்படும். பி-ம்:—[1]இதவு. [2]தவத்தர்தம்வடிவம். (அஊ)

உக. ஊணில னுமென [1]வுலர்ந்த மேனியன்
சேணெறி வந்தசோர் வருத்தச் செய்கையன்
பாணியி [2]னடத்திடைப் படிக்கின் றானென
வீணையி னிசைபட வேதம் பாடுவான்.

(இ - ள்.) ஊண் இலன் ஆம் என உலர்ந்த மேனியன்-உணவொழிந்த வன்போல வற்றிய உடம்பையுடையவனும், சேண் நெறி வந்தது ஓர் வருத்தம் செய்கையன்-நெடுந்தூரம் வழிநடந்து வந்ததனால் ஆகியது போன்றதொரு மிக்கவருத்தத்தின் தோற்றத்தை யுடையவனும், நடத்திடை பாணியின் படிக்கின்றான் என - நடனம்நிகழுமிடத்தில் தாளத்தோடு (இசைப்பாட்டைப்) பொருத்திப் பாடுபவன்போல, வீணையின் இசை பட வேதம் பாடுவான் - வீணைகானம்போன்ற இனியஇசை யெழும்படி சாமகானஞ்செய்பவனுமாய்,—(எ - று.)—சூழல்வாய்நணுகினன் என்க.

கூத்தாடுகையில் தாளவடைவோடு இன்னிசை பாடுதல்,இவன் அடைவு பட வேதம்பாடுதற்கு உவமை. பாணி யென்னுங் கையின் பெயர் - இலக்கணையாய், அது கொண்டு ஒத்தறுத்து இடப்படும் தாளத்தின்மேல் நின்றது; இது - கருவியாகுபெயர். இவன் குறித்து நடந்து வருதலே அடுத்தகவியிற் கூறுகின்றார் ஆதலால், அதற்கு ஏற்ப, உவமையில் 'நடத்திடை' என்றார். காலத்திற்குச் சிறந்தது சாம மாதலால், இங்கு வேதம்-சாமமெனக் கொள்ளப்பட்டது. "சாமகீத மற்று மொன்று சாமி நன்கு பாடினான்" எனச் சிந்தாமணியில் வருவதும் உணர்க. வீணையின் இசைபட என்பதற்கு - வீணையிசையும் ஒப்பாகாது கீழ்ப்படும்படி யென்று பொருள் கொள்ளலும் ஒன்று. பாணியின் என்பதற்கு - பாட்டினை யென்று உரைப்பர் ஒருசாரார். **பி-ம்:**—[1]உலந்த. [2]அளந்திசை, உழந்திடைப். (அநூ)

உஉ. பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்[1]பொதிந் தாமென மிதிக்குஞ் [2]செய்கையன்
காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினன்.

(இ - ள்.) பூ பொதி அவிழ்ந்து அன நடையன் - மலரின் இதழ் (மெல்ல மெல்ல) விரிந்தாற்போன்ற (மெத்தென்ற) நடையை யுடையவனும், பூதலம் தீ பொதிந்து ஆம் என மிதிக்கும் செய்கையன் - பூமியில் நெருப்புச் சிதறியிருந்தால் அவ்விடத்துச் செல்லுதல்போல நன்குபதியாதபடி கால் வைக்குஞ் செய்கையையுடையவனும், காப்பு அரு நடுக்கு உறும் - தடுக்க வொண்ணுத நடுக்கம் மிக்க, காலன் - கால்களையுடையவனும், கையினன் - (அப்படிப்பட்ட) கைகளையுடையவனும், மூப்பு எனும் பருவமும் முனிய முற்றினன் - முதுமையென்னும் பருவத்தானும் வெறுக்கும்படி மிகமுதிர்ந்தவனுமாய்,—(எ - று.)—சூழல்வாய்நணுகினனென்க.

முன்னிரண்டடியிற்கூறிய குறுநடையும், குந்திமிதித்துச்செல்லுதலும்-அந்தணர்க்கு உரிய இயல்பு. தொல்காப்பியப் பொருளதிகார வுரையில், 'தன்மையென்பது - சாதித்தன்மை; அவையாவன - பார்ப்பாரையின் குந்திமிதித்துக் குறுநடை கொண்டு வந்து தோன்றலும், அரசரையின் எடுத்த கழுத்தோடும் அடுத்த மார்போடும் நடந்து சேறலும், இடையரையின் கோற்கையும் கொடுமடியுடையும் விளித்த வீளையும் வெண்பல்லுமாகித்

தோன்றலும் என்று இன்னேரன்ன வழக்கு நோக்கிக்கொள்க' என உரைத்ததுங் காண்க. இங்ஙனம் மிதித்துத் தாவி மெல்லென நடத்தற்குக் காரணம், தரையில் ஊரும் எறும்பு முதலிய சிற்றுயிர்கள் காலிடைப்பட்டு இறக்கலாகா தென்ற கருத்தும், வழியில் ஏதேனும் அசுத்தம் இருப்பின் அது காலிற் படலாகா தென்ற நோக்கமு மென்க. இனி, 'பூப்பொதி யவிழ்ந்தனநடை' என்பதற்கு - மலர்களின் தொகுதி சிந்திஞற்போல ஒன்றற் கொன்று அணுகப் பலஅடியிட்டு நடக்கும் நடை யென்றலுமொன்று. பொதிந்து என்பதைப் பொதிந்தது என்பதன் விகாரமாகவுங் கொள்ளலாம். பின்னிரண்டடியிற் கூறப்பட்டது, மூப்புத்தன்மை. 'காப்பருகடுக்குறும்' என்ற அடைமொழியைக் கைக்குங் கூட்டுக. தனது முற்றிய மூப்பைக் காண்பவர் தன்னைவெறுக்க என்பதே யன்றி அம்மூப்புத்தானும் தன்னை வெறுக்க என்னும் பொருளைத் தருதலால், உம்மை - இறந்தது தழுவிய எச்சம்: இங்ஙனங்கூறிய கற்பனை, மிக்கமுதுமையைக் காட்டும். 'பூப்பொதி யவிழ்ந்தன குடையன்' என்ற பாடத்துக்கு - தாமரைமலர் கட்டவிழ்ந்தாற் போன்ற குடையையுடையவ னென்க; குடையும் ஒருசார் துறவிகட்கு உரியது: "எறித்தருகதிர்தாங்கி யேந்திய குடை நீழ, லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்" என்ற கலித்தொகையையுங் காண்க; ஸ்ரீவால்மீகிபகவானும், 'சத்ரீ' என இராவணசந்நியாசிக்குக் குடையுடைமை கூறியுள்ளார். பி-மீ:—[1]பொதிந்தாலென. [2]சிந்தையான். (அருஞ)

உரு. தாமரை[1]க் கண்ணெடுந் தவத்தின் மாலைய
ஞடையினி ருக்கையன் வளைந்த வாக்கைய
ஞமநூன் மார்பின னணுகி ஞனரோ
தூமனத் தருந்ததி யிருந்த சூழல்வாய்.

(இ - ள்.) தாமரை கண்ணெடு - தாமரை மணிகளால் (ஆகிய), ஏர் தவத்தின் மாலையன் - அழகிய தவத்துக்கு உரிய மாலையைத் தரித்தவனும், ஆமையின் இருக்கையன் - யாமைமணையை யுடன்கொண்டுள்ளவனும், வளைந்த ஆக்கையன் - கூனிவளைந்த உடம்பையுடையவனும், காமம் நூல் மார்பினன்-பெருமைபொருந்திய மூப்புரிநூலைத் தரித்த மார்பையுடையவனு மாய், தூ மனத்து அருந்ததி இருந்த சூழல்வாய் - பரிசுத்தமான மனத்தை யுடைய அருந்ததிபோன்ற கற்பினையுடையளான சீதாதேவி இருந்த பர்ண சாலையினிடத்து, நணுகினனே—சமீபித்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

'நளிநாகம்' என்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பாக 'தாமரைக்கண்' என்றார்; (நளிநம்-தாமரை. அகம்-கண், மணி.) தாமரைக் கண்ணெடு என் பதில், 'ஒடு' உருபு-கருவிப்பொருளது; ("ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்றவிடத்துப் போல.) தவத்தின்மாலை - ஜபமாலையுமாம். இனி, முதலடிக்கு - தாமரைமணிமாலையோடு மற்றும் உயர்ந்த தவத்துக்கு உரிய துளசிமணிமாலை முதலியவற்றையும் உடையவ னென்று உரைகொள்ளுதலும் ஒன்று: இனி, இதற்கு - தாமரைமலர்போன்ற கண்களோடு அழ

கிய தவவொழுங்கையுடையா னென்று உரைத்தல் ஒருவாற்றானுஞ்சிற வாது. "நூலே கரக முக்கோல் மணையே, ஆயுங்காலை யந்தணர்க் குரிய" என்றதனால், மணையும் முந்நூலும் கூறப்பட்டன. அச்சூத்திரவுரையில் 'யாமைமணை' என வுரைத்தது இங்கு உணரத்தக்கது; அது, ஆமை யின் வடிவமமையச்செய்யப்பட்ட பீடம்; வடமொழியில் கூர்மாஸந மெனப் படும்: இது-வைதிக ஆசனங்களுள் ஒன்று. இனி, 'ஆமையினிருக்கையன்' என்பதற்கு - ஆமை தனது தலையையும் கால்களையும் வேண்டுழி அடக்கிக் கொள்ளுதல் போலத் தனது பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் அடக்கிக்கொண்டவ னென்று உரைப்பினும் பொருந்தும். "ஒருமையு ளாமைபோ லைந்தடக்கல்" என்ற குறளின் கருத்துப்பற்றி ஆமை தனது தலை யொன்றுங் கால்நான்குமாகிய ஐந்து உறுப்புக்களையும் இடர்புகுதாமல் அடக் கிக்கொள்ளுதல் போல, ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கிய தோற்றத்தைக் காட்டியவ னென்றலும் ஒன்று. அணுகினன் என்று பிரி த்து உரைத்தல், மோனைத்தொடைக்குச் சிறவாது. அருந்ததி - வசிஷ்டர் மனைவி; இப்பெயர் - இங்கு உவமையாகுபெயராய்ச் சீதையைக் குறித்தது.

இருபதாங்கவியில் திரிதண்டமும், இக்கவியில் தாமரைமணிமாலையும் உபவீதமும் கூறியதனால் இவற்றையுடைய வைவஷ்ணவசந்யாசிவேஷத்தைக் கொண்டு வந்தன னென்பது விளங்கும். வால்மீகிராமாயணத்தில் குடுமி யுடைமையையுங் கூறியுள்ளார். தருமத்தையே பிரதானமாகவுடைய ஜநக ரது குலத்துமகளான சீதைக்கு நம்பிக்கையுண்டாக்கும்பொருட்டு அவள் மதிக்கத்தக்கவிதமான சந்யாசிவேஷத்தையே கொண்டன னென்பர் ஆன் றோர். அங்கிராவென்னும்முனிவர் கூறின யதிலக்ஷணம் இத்தன்மைத்தே. வடமொழி மகாபாரதத்திலும் இங்ஙனமே கூறப்பட்டுள்ளது. "முக்கோலுங் கமண்டலமுஞ் செங்கற்றூசு முந்நூலுஞ் சிகையுமாய் முதிர்ந்து தோன்று, மக்கோல மனைவருங் கைதொழுது நோக்கி" என்ற வில்லிபுத்தூரார் பாரத முங் காண்க. பி - ம்:—[1]மணிதுழாய் தரித்த. (அநுசை)

உ.—இராவணன் பர்ணசாலை வாயிலில் வந்து 'இதில் உள்ளார் யார்?' என்றல்.

தோமறு சாலையின் வாயி றுன்னினு
முமுதல் குழறிட நடுங்கு சொல்லினன்
[1]யாவிரிவ் விருக்கையு ளிருந்து ளீரென்றன்
றேவரும் மருள் [2]கொளத் [3]தெரிந்த மேனியான்.

(இ - ள்.) தேவரும் மருள் கொள தெரிந்த மேனியான் - (தன்னைக் காண்கிற) தேவர்களும் மயங்கும்படி விளங்குகிற (சந்யாசி வடிவத்தைக் கொ ண்டவனான இராவணன், தோம் அறு சாலையின் வாயில் துன்னினனுன்-குற்ற மற்ற அப்பர்ணசாலையின் வாயிலிற் சேர்ந்தவனாய், நா முதல் குழறிட நடுங்கு சொல்லினனுன் - நாக்குஅடியோடுகுளறுதலாலே தடுமாறுகிற சொற்களினால்,

இ இருக்கையுள் இருந்துளீர் யாவிர் என்ருன் - இந்தப்பர்ணசாலைக்குள் இருக்கிறவர் யார்? என்று வினவினான்; (எ - று.)

அத்தழைக்குடிசையின்வாயிலில் வந்து நின்று, யார் இதனுள்ளே இருக்கிறவர்? என்றுகேட்டனனென்பதாம். தோம் - தோஷ மென்ற வட சொல்லின்விகாரம். நாமுதல் என்பதை முதல்நா வென மொழிமாற்றி, அடிநாவெனினும் அமையும். நாக்குழறச் சொல்தடுமாறுதற்குக் காரணம், முற்றிய மூப்பு. [3]திரிந்தமேனியான் என்று பாடமாயின், (மாயையால்) மாறுபட்ட உருவத்தையுடையானெனப் பொருள்படும். பி-ம்:—[1]யாவர். [2]தர.

உரு.—அச்சொற்கேட்டுச் சீதை இராவணனியை எதிர்கொள்ளுதல்.

தோகையு [1]மிவ்வழித் தோமில் சிந்தனை
[2]சேகறு நோன்பினை ரென்னுஞ் [3]சிந்தையாள்
பாகியல் [4]கிளவியாள் பவளக் கொம்பர்[5]போன்
றேகுமி னீண்டென வெதிர்வந் தெய்தினாள்.

(இ - ள்.) தோகையும் - (சாயலிலும் நடையிலும்) மயில்போன்றசீதையும்,—இ வழி - இவ்விடத்துவந்த, தோம் இல் சிந்தனை சேகு அறு நோன்பினர் - குற்றமற்ற மனத்தையும் குற்றமற்ற தவவிரதத்தையு முடைய முனிவர் இவர், என்னும் - என்று எண்ணிய, சிந்தையாள் - மனத்தையுடையவளாய், பாகு இயல் கிளவியாள் - கருப்பஞ்சாற்றுப்பாகுபோன்ற (இனிய) சொற்களையுடையவளாய் [இன்சொற்களால்], ஈண்டு ஏகுமின் என - (வந்த முனிவனைநோக்கி) 'இங்குவாரும்' என்றுசொல்லிக்கொண்டு, பவளம் கொம்பர் போன்று எதிர் வந்து எய்தினாள் - பவழக்கொடிபோன்று அவனெதிரில் வந்து சேர்ந்தாள்; (எ - று.)

[2]சேகுறுநோன்பினர் என்று பாடமாயின், வயிரத்தன்மை பூண்ட [மிக்க உறுதியைக் கொண்ட] விரதநுட்டானமுடையவ ரென்க. நோன்பினர், ஏகுமின் - உயர்வுப்பன்மை. இயல் - உவமவுருபு. கொம்பர் - இறுநிப்போலி. ஈண்டு ஏகும் மின் என்று எடுத்து - (வானத்தினின்று) இங்கு வந்ததொரு மின்னல்போல என்று உரைப்பாருமுளர். பி-ம்:—[1]அவ்வழி. [3]சிந்தையால். [4]கிளவியோர். [5]போல். (அசு)

உசு.—அப்பொழுது இராவணன் சீதையைப் பார்த்தல்.

வெற்பிடை மதமென [1]வியர்க்கு மேனிய
[2]னன்பினற் றிரைபுர னாசை வேலியன்
[3]பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னேக்கினான்.

(இ - ள்.) வெற்பிடை மதம் என வியர்க்கும் மேனியன் - யானையினிடத்து மதசலம்பெருகுவதுபோல வேர்வையொழுகும் உடம்பையுடையவனும், அற்பின் நல் திரை புரள் ஆசை வேலையன் - அன்பாகிய பெரியஅலைகள்

புரளப்பெற்ற ஆசையாகிய கடலிலமிழ்ந்தவனுமாய், (இராவணன்), பொற்பினுக்கு அணியினை - அழகுக்கு அழகாயுள்ளவளும், புகழின் சேக்கையை - கீர்த்திக்குத் தங்குமிடமாயுள்ளவளும், கற்பினுக்கு அரசியை - பதிவிரதா தருமத்துக்குத் தலைவியாயுள்ளவளுமான சீதையை, கண்ணின் நோக்கினன் - (தனது) கண்களாற் பார்த்தான் [பிரதியுபகாரமாய் எதிரிற் கண்டனனென்றபடி]; (எ - று.)

முன்பு அப்பிரதியுபகாரமாகக் கருத்திலுல் நோக்கியதனினும், உருவெளித் தோற்றத்திலுங் கனவிலுங் கண்ட பொய்க்காட்சியினும் வேறுபாடு விளங்க, 'கண்ணினுக்கினான்' என்றன ரென்க. இனி, கண்கள்படைத்தபயன் பெறுமாறு பிராட்டியைத் தரிசித்தனனென்று கருத்துக்கொள்ளினுமாம். வெற்பு-இங்கு, யானைக்கு உவமவாகுபெயர். அன்பு என்பது-அற்பு என மென்றொடர்வன்றொடராயிற்று. ''நன்று பெரிதாகும்'' என்ற தொல்காப்பியத்தை நோக்கி, 'நற்றிரை' என்பதற்கு - பெரிய அலை யென்று உரைக்கப்பட்டது. ஆசைக்கு அன்பு அங்கமாதலால், அவற்றை முறையே கடலும் அலையுமாக உருவகப்படுத்தினுர். முன்னிரண்டடி - அவனது காமதாபத்தைக் காட்டும். 'பொற்பினுக்கணியினை' என்றது முதலிய மூன்றும்-ஒரு பொருளின்மேல் வந்த பலபெயர்கள். இவளழகுக்குமேம்பட்டதோரழகு இல்லையாதலின், 'பொற்பினுக்கு அணி' என்றார். தனது கற்பை எப்பொழுதும் சிறிதும் அழியாதபடி பாதுகாத்துக்கொண்டு அதனுல் தான் பிறந்த குலத்துக்கும் புகுந்த குலத்துக்கும் புகழைத் தருந் தன்மையளென்பது, 'புகழின்சேக்கையை,' 'கற்பினுக்கரசியை' என்ற தொடர்களால் விளங்கும்.

பி-மீ:—[1]வோர்க்கும். [2]அற்பினில். [3]பொற்பினது. (அ.எ)

உள.—சீதையைக்கண்டவாவிலே இராவணன் வேட்கைநோய் மிஞ்சிப்படும் அவத்தையை இதுமுதல் ஆறுகவிகளில் பலவாற்றற்கூறுகிறர்.

[1]தூங்கலில் குயில்கெழு சொல்லி [2]னும்பரி
னேங்கிய வழகினு ளருவங் காண்டலு
மேங்கினன் மனநிலை யாதென் றுன்னுவாம்
வீங்கின மெலிந்தன வீரத் தோள்களே.

(இ - ள்.) தூங்கல் இல் - சோர்தலில்லாத, குயில் கெழு-குயில்போல் விளங்குகிற, சொல்லின்-சொல்லோடு, உம்பரின் ஓங்கிய அழகினுள் - தேவலோகத்து மாதர்களினுஞ் சிறந்த அழகுடையளான சீதையினது, உருவம் - வடிவத்தை, காண்டலும் - பார்த்தவுடனே, ஏங்கினன் - ஏக்கமுற்ற இராவணனது, மனம் நிலை - மனத்தின்நிலைமையை, யாது என்று உன்னுவாம் - எத்தன்மைத்தென்று எண்ணுவோம்? வீரம் தோள்கள் - (அவனது) வலிய புயங்கள், வீங்கின - (அவளைக் கண்டதனுலாகிய ஆனந்தத்தால் முதலிற்) பூரித்தன; மெலிந்தன - (அவளைப்பெறுமையாலாகிய வருத்தத்தால் உடனே) இளைப்புற்றன; (எ - று.)

இப்படி மிக்க காதற்களிப்பையும்விரகவேதனையையும் ஒருங்கே கொண்ட அவன்மனத்தினது சஞ்சலத்தன்மை எண்ணுதற்கும் அரியதென்பது, இதன்தாற்பரியம். [1]தூங்கலினுருவினைச்சொல்லின் என்ற பாடத்துக்கு, தூங்கலின் - (மாயமான்கூக்குரலைக் கேட்ட விசனத்தால்) வாடுதலையுடைய, உருவினை - வடிவத்தின் தன்மையை, சொல்லின் - சொல்லுமிடத்து என்க: விசனமடைந்திருக்குஞ் சமயத்தில் சீதை தேவமாதரினும் மேம்பட்ட அழகுடையளாயிருந்தா ளென்றும், அப்பொழுதே அவள்வடிவத்தைக்கண்ட வளவிலே இராவணன் எக்கமுற்றானென்றுங் கூறியதனால், விசனமுற்ற காலத்தும் மகிழ்ச்சியுறுங்காலத்தும் உள்ள சீதையின் வடிவழகுச்சிறப்பு ஒப்புயர்வற்ற தென்பது தானேவிளங்கும்; மேல் முப்பத்திரண்டாஞ் செய்யுளின் முன்னிரண்டடிகளும் இங்கு நோக்கத்தக்கன. [1]தூங்கலினுருவினை என்ற பாடத்துக்கு-(அழகிற் சிறிதும்) சோர்வில்லாத மேனியையென்று உரைப்பர். உம்பர்-இடவாகுபெயர். பி மீ:—[1]தூங்கலினுருகெழு. [2]உம்பரும்.()

உஅ. புனமயிற் [1]சாயற னெழிலிற் பூநறைச்
சுனைமடுத் துண்டிசை முரலுந் தும்பியி
னினமெனக் களித்துள தென்ப தென்னவன்
மனமெனக் [2]களித்தது கண்ணின் மாலையே.

(இ - ள்.) (அவன்) கண்ணின் மாலை - (சீதையைக்கண்ட) அவ்விராவணது கண்களின் வரிசை,—புனம் மயில் சாயல்தன் எழிலின் - வனத்தில் தன்னிச்சைப்படியுள்ள மயிலினது சாயல் போன்ற சாயலையுடையஅவளது அழகினுல், பூ நறை சுனை மடுத்து உண்டு இசை முரலும் தும்பியின் இனம் என களித்து உளது - மலர்களிலுள்ள தேனின் ஊற்றினிடத்து இறங்கி அதனை நிரம்பப்பருகி இசைபாடுகிற வண்டின்கூட்டம்போலக் களிப்படைந்தது, என்பது என்-என்று சொல்வது என்னசிறப்பு? அவன் மனம் எனகளித்தது - அவனதுமனம் களிப்புற்றதுபோலவே (கண்வரிசையும்)களிப்புற்றது.

அப்பொழுது இராவணன் அடைந்த மகிழ்ச்சிக்களிப்பில் அவன்கண்ணுக்கு அவன்மனத்தை உவமைகூறினுற் கூறலாமேயன்றி மற்றெதுவும் உவமைகூறத்தக்க தன்றென்பது இதன் கருத்து. தன்இயல்புகுன்றுத மயிலென்பார், 'புனமயில்' என்றார். மயிற்சாயல் - உவமைத்தொகையன். மொழி. 'நறைச்சுனை' என்றதனால், தேனின்மிகுதி தோன்றும். இனி, சுனைப்பூ என மொழிமாற்றி, சுனைகளிலுள்ள நீர்ப்பூக்களென்று உரைப்பாருமுளர். பிராட்டியாகிய பூவின் அழகாகிய தேனைப் பருகி வண்டினம்போலக் கண்கள்பலவும் களித்தன வென்க. சூர்ப்பணகை வந்து பிராட்டியின் அழகை யெடுத்துக் கூறியகாலத்து அதனை இராவணன் கருத்தால் நோக்கியபொழுது அவன்மனம் எவ்வாறுகளித்ததோ அவ்வாறே களித்தது அவளை நேரிற்கண்ட கண்களு மென்று ஈற்றடிக்குக் கருத்துக்கூறுவர் ஒருசாரார். கண்கள் இருபதாதலின், 'கண்ணின்மாலை' எனப்பட்டது. பி-மீ:—[1]சாயலின். [2]களித்தன.

(அஞ)

உக. சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண்
மேயவண் மணிநிற மேனி காணுதற்
கேயுமே யிருபதிங் கிமைப்பி லைட்டங்க
ளாயிர மில்லையென் [1]றவலமெய்திஞன்.

(இ - ள்.) சேய் இதழ் தாமரை சேக்கை தீர்ந்து - சிவந்த இதழ்களை யுடைய செந்தாமரை மலராகிய தங்குமிடத்தை விட்டு, இவண் மேயவள் - இவ்விடத்துவந்துள்ள திருமகளாகிய சீதையினது, மணி நிறம் மேனி - இரத்தினகாந்தியையுடைய திருமேனியழகை, காணுதற்கு - பார்த்தற்கு, இங்கு இருபது நாட்டங்கள் ஏயுமே - எனக்குள்ள இருபதுகண்கள் போதுமோ? இமைப்பு இல் நாட்டங்கள் ஆயிரம் இல்லே - (எனக்கு) இமையாத கண்கள் ஆயிரம் இல்லையே' என்று - என்று எண்ணி, அவலம்எய்திஞன் - துன்பத்தையடைந்தான், (இராவணன்); (எ - று.)

''உமையா ளொக்கு மங்கைய ருச்சிக் கரம்வைக்குங், கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணு, ரிமையா நாட்டம் பெற்றில மென்ரு ரிரு கண்ணு, லமையா தென்ரு ரந்தரவானத் தவரெல்லாம்'' என்று பாலகாண்டத்தில் வந்த செய்யுள் இங்குக் காணத்தக்கது. வேதத்திற்கூறியுள்ளபடி ஆயிரங்கண்ணனை புருஷோத்தமனே பிராட்டியழகை முற்றுங் காண்டற்கு உரியா னென்பது இதனுற் போதரும். 'சேயிதழ்த்தாமரைச் சேக்கை தீர்ந்திவண் மேயவள்'—ஸ்ரீவால்மீகிபகவானும் ''பத்மவாஸாமிவஸ்ரியம்'' என்று இவ்வாறே கூறியுள்ளார். மணிநிறமேனி - மாணிக்கமென்னும் இரத்தினம்போலச் செந்நிறமுடைய வடிவமுமாம். ஏகாரம் - எதிர்மறை. ''கண்ணுளார் நுங்காதல ரொழிக காம மீங்கென'' என்ற சிந்தாமணியில் 'ஈங்கு' என்பது - தன்மையிடத்தை யுணர்த்தினுற் போல, இச்செய்யுளில் 'இங்கு' என்பது-தன்மையிடத்தையுணர்த்திற்று; ஆகவே, என்னிடத்து என்று பொருளாம்: நச்சினர்க்கினியர் அச்சிந்தாமணியுரையில் 'ஈங்குத்தன்மையையுணர்த்துதல் ''செலவினு மவரவினும்'' என்னுஞ்சூத்திரத்திற் கூறினும்' என்றதும், ''செலவினும் வரவினும்'' என்ற தொல்காப்பியச் சூத்திர வுரையில் 'ஈங்கு முதலியன-தன்மைக்கண்ணும், ஆங்குமுதலியன - படர்க்கைக்கண்ணும் அடக்கப்பட்டன' என்றதும் அறியற்பாலன. பி - ம்:— [1]அல்லல். (அசo)

ஈo. அரைகடை யிட்டமுக் கோடி யாயுவும்
[1]புரைதபு தவத்தின்யான் படைத்த போதுமே
நிரைவளை [2]முன்கையி னிறைந்த [3]நங்கைதன்
கரையறு நன்னலக் கடற்கென் றுன்னினஞன்.

(இ - ள்.) நிரை வளை முன் கையில்நிறைந்த - வரிசையாக வளையல்கள் முன்னங்கையில் நிரம்பியுள்ள, நங்கைதன் - (இந்தப்) பெண்ணரசியினது, கரை அறு நல் நலம் கடற்கு - கரையில்லாத சிறந்த இன்பமாகிய கட

லில் முற்றும் திளைத்தாடுதற்கு, புரை தபு தவத்தின் யான் படைத்த அரை கடை இட்ட முக்கோடி ஆயுவும் போதுமே - குற்றமற்ற தவத்தையுடைமை யால் நான் பெற்ற மூன்றரைக்கோடியாயுளும் போதுமா? [போதாதன்றே]. என்று உன்னினன் - என்று எண்ணினன்; (எ - று.)

அரைகடையிட்ட முக்கோடி - அரையென்னும் எண்ணைக் கடையில் எழுதப்பெற்ற மூன்றுகோடி யென்க. கோடி, ஆயுஸ் - வடசொற்கள். இராவணன் கைலாசம்பெயர்த்தெடுத்த காலத்தில் சிவபிரானருளால் மூன் றரைக்கோடி ஆயுளைப் பெற்றன னென்பது பிரசித்தம். அதற்குக்காரண மான நல்வினையை 'புரைதபு தவம்' என்று பாராட்டிக்கூறினன்.

இவளது இன்பக்கடலை அனுபவிக்கத் தொடங்குமிடத்து எனது மூன் றரைக்கோடி ஆயுளும் அமையுமா? [அமையாது] என்று பின்வருந் தீங்குக் குச் சூசகமாகும் அமங்கலப்பொருள் இராவணன்வார்த்தையில் அமைந்ததெ னக்கொள்ளுதலும் உண்டு; இனி இராவணனது ஆயுள் அரைக்கோடியி லேயே முடிதல் காண்க. சிவபிரான் முதலில் மூன்றரைக்கோடி கொடுத் ததை உடனே திருமால் அரைக்கோடியாம்படி சூழ்ச்சிசெய்திட்டன னென் பது ஐதிஹ்யம். இராவணன் தான் முன்புவரம்வேண்டிய நான்குகோடியில் இதுவரை அரைக்கோடி கழிந்திட்டதனால், மூன்றரைக்கோடியே கூறினன். **பி - மீ:**—[1]பரை. [2]முன்கையிற்கின்ற. [3]நங்கையின். (அசுக)

ருக. தேவரு மவுணரும் தேவி மாரொடுங்
கூவல்செய் தொழிலினர் குடிமை செய்திட
மூவுல கமுமிவர் முறையி னாளையா
[1]னேவல்செய் துய்குவெ னினியென் றுன்னினன்.

(இ - ள்.) இனி—,தேவரும் - தேவர்களும். அவுணரும் - அசுரர்களும், தேவிமாரொடும் - (தங்கள்தங்கள்) மனைவியருடனே, கூவல் செய் தொழிலி னர் - (வேண்டியபொழுதெல்லாம்) அழைத்துக் கூறப்படும் குற்றேவற்றொ ழில்களைச்செய்யும்வேலைக்காரர்களாய், குடிமை செய்திட-குடியடிமை செய்யு ம்படி [குலத்தோடு அடிமைபூணுமாறு], மூ உலகமும் - மூன்றுலோகங்களை யும், இவர் முறையின் ஆள - இந்தப் பெண்ணரசியார் நீதியாக அரசாள, யான் எவல் செய்து உய்குவென் - நான் (இவர்க்குக்) குற்றேவல்செய்து வாழ்வேன், என்று உன்னினன் - என்றுங் கருதினன்; (எ - று.)

இவரைத் தனதுதானத்தில் அரசியாராக்கி இவர்க்குத் தான் அடிமை பூணுதலே தனது சன்மத்தின் பய னென்று எண்ணின னென்க. குடிமை-பரம்பரையாகச்செய்யும் அடிமை. இவர் - உயர்வுப்பன்மை. **பி மீ:**—[1]எவ லின்வைகுவெ னினியென்றெண்ணினன். (அசுஉ)

ருஉ. உளைவுறு துயர்முகத் தொளியி தாமெனின்
முளையெயி றிலங்கிடு முறுவ லென்படுந்

தூலையவிழ் குழலிவட் கண்டு தந்த[1]வென்
னிலையவட் களிப்பனென் னரசென் றெண்ணினன்.

(இ - ள்.) உலவுஉறு துயர்முகத்து ஒளி இது ஆம்எனின் - வருத்தம் மிக்க துக்கம் சேர்ந்த சமயத்தி லுள்ள முகத்தின் பிரகாசமே இத்துணைச் சிறப்பினதாயிருக்குமென்றால், மூலை எயிறு இலங்கிடும் முறுவல் என்பதும் - (மகிழ்ச்சிசேர்ந்த காலத்துச்) சிறிதுவெளித்தோன்றுகிற பற்கள் விளங்கப் புன்னகைசெய்யும் அழகு எத்தன்மைத்தாமோ! தூலை அவிழ் குழல் இவள் கண்டு தந்த என் இலையவட்கு - (சூடப்பட்ட மலரும்புகள்) கட்டவிழ்த்து மலர்தற்கு இடமான கூந்தலையுடைய இவளை நாடிக்கண்டு எனக்குக் காட்டிக் கொடுத்த என்தங்கையான சூர்ப்பணகைக்கு, என் அரசு அளிப்பென் - எனதுஅரசாட்சியைக் கொடுப்பேன், என்று எண்ணினன் - என்றும் நினைத்தான்; (எ - று.)

கீழ், சீதைக்கு அரசாட்சியைக் கொடுத்துத் தான் அடிமை பூணுதலையே பேறாகக் கருதியவன், உடனே அக்கருத்துமாறி, அச்சீதையின் தன்மையை என்தங்கை அறிந்து வந்து எனக்குக்கூறிய உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக என்னரசை அவளுக்குக் கொடுத்தல் வேண்டுமென்று எண்ணினனென்பதாம். முன்னிரண்டடியில் தண்டாபூபிகாதியாயக் கொண்டு பொருளைப் பாராட்டியது, **தொடர்நிலைச்செய்யுட் பொருட்பே றணியாம்**; இதனை வடநூலார் காவ்யார்த்தாபத்தியலங்கார மென்பர். இராமனுக்கு வருத்தம் சேர்ந்ததாக அறிந்ததனாலாகிய சோகத்தால் சீதை குழல்சோரின்றனளென்பதுபட 'தூலையவிழ்குழல்' என்றதாகவுங் கொள்ளலாம். தூலையவிழ்குழல் இவண் கண்டு எனப்பிரித்து, இம்மாற்றையை இவ்விடத்துக் கண்டு எனினும் அமையும்; இவ்வுரைக்கு, தூலையவிழ்குழல் என்பது - அன்மொழித்தொகையாய், சீதையைக் குறிக்கும். சீதையைத் தான்பெறுதல் நிச்சயமென்ற துணிவினால் 'தந்த' என்றான். **பி-ம்:**—[1]அவ். (அசுஉ)

உஉ.—துறவிவடிவுகொண்ட இராவணனுக்குச் சீதை வருகவென்று உபசாரமொழி கூறல்.

ஆண்டையா னனையன வுன்னி யாசைமேன்
மூண்டெழு சிந்தனை முறையி லோன்றனைக்
காண்டலுங் கண்ணினீர் துடைத்த கற்பினள்
வீண்டெழுந் தருளுமென் [1]றினைய கூறினள்.

(இ - ள்.) ஆண்டையான் - அவ்விடத்தில் வந்தவனை, அனைய உன்னி ஆசைமேல் மூண்டு எழு சிந்தனை முறை இலோன் தனை - அத்தன்மையான விஷயங்களை நினைத்து ஆசைமேன்மேல் அதிகப்பட்டுக்கிளரும் மனத்தையுடைய முறைகேடனை இராவணனை, காண்டலும் - பார்த்தவுடனே, கண்ணின் நீர் துடைத்த கற்பினள் - (தன்)கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தவறுக்கற்பினளான சீதை, (அவனை நோக்கி), ஈண்டு எழுந்தரு

ளும் என்று இனைய கூறினள்-'இங்கே எழுந்தருளுக' என்று இத்தன்மையவான வார்த்தைகளைச் சொன்னாள்; (எ - று.)

கற்பினள்மேல் அவன் ஆசை கொள்ளுதல் தகாதென்பதும், அத்தூராசை சிறிதும்பயனுறு தென்பதும் விளங்க, 'முறையிலோன்' என்றும், 'கற்பினள்' என்றுங் கூறினர். முறையிலோனை, கற்பினள், அவன்கருத்து உணராமையால், சிறந்த வொருமுனிவ னென்றெண்ணி, இயல்பில் உபசரிக்கலுற்றன ளென்க. பி - ம்:—[1]இனிய. (அசச)

கூ.—சீதை தந்த ஆனத்தில் அம்முனிவன் வீற்றிருத்தல்.

[1]ஏத்தின [2]ளெய்தலு மிருத்தி ரீண்டென
வேத்திரத் தாசனம் [3]விதியி னல்கினண்
மாத்திரி கண்டபல் [4]வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையி னிருந்த போழ்தினே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) ஏத்தினள் - (இவ்வாறு) முகமன்கூறிய சீதை, எய்தலும்-(அவன் அருகில்) வந்தவளவிலே, ஈண்டு இருத்தி என - 'இதில் வீற்றிருக்க' என்றுசொல்லி, வேத்திரத்து ஆசனம்-பிரம்பினாற் செய்யப்பட்டதோர் ஆசனத்தை, விதியின் நல்கினள் - முறைப்படி கொடுத்தாள்; (கொடுக்க), மா திரிதண்டு அயல் வைத்த-பெருமைபொருந்திய திரிதண்டத்தை (த் தான் வீற்றிருக்குமிடத்துக்கு)ப் பக்கத்திலே வைத்த, வஞ்சனும் - கபடசந்நியாசியான இராவணனும், பூ தொடர் சாலையின் - அழகுபொருந்திய அப்பர்ணசாலையில், இருந்த போழ்தின் - வீற்றிருந்த சமயத்திலே, (எ - று.)—"மலைகளும் மரங்களும் நடுங்கின" என வரும் கவியோடு முடியும்.

வேத்திராசனம்,முனிவர்க்குரியது. விதி-இல்லறத்துவாழும் குலமகளிர் தமது இருப்பிடத்துக்கு வந்த துறவியை உபசரிக்கும் கிரமம். இல்வாழ்க்கையில்நின்ற புருஷனும் ஸ்திரீயும் ஒருங்கேனும் தனித்தனியேனும் யதிபூசை செய்யவேண்டு மென்பது, நூற்கொள்கை. 'ஆசனம் விதியினல்கினள்' எனவே, அர்க்கிய பாத்திய ஆசமனீயம் முதலியவற்றையுங் கொடுத்தமை பெறப்படும். வஞ்சன் - பொய்வேடத்தான். பூத்தொடர்சாலை - பூமாலைகள் அலங்காரமாகத் தொங்கவிடப்பெற்ற சாலையுமாம். பி - ம:—[1]ஏத்தினள். [2]ஏத்தலும். [3]விருப்பின். [4]வைத்து. (அசடு)

கூரு.—அப்பொழுது சராசரங்கள் அஞ்சிநடுங்கல்.

நடுங்கின மலைகளு மரனு நாவலிற்
தடங்கின பறவையும் விலங்கு மஞ்சின
படங்குறைந் [1]தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணுங் கண்ணினே.

(இ - ள்.) மலைகளும் மரனும் நடுக்கின - (அப்பொழுது) மலைகளும் மரங்களும் நடுக்கமுற்றன; பாதகம் கடு தொழில் அரக்கனே காணும் கண் ணின்-பாவத்துக்குக்காரணமான கொடிய செய்கையையுடைய அவ்விராக் கதனைக்கண்ணிற் கண்டதனால் [கண்டபொழுது], பறவையும் நா அவிந்து அடங்கின-(பலவாறுகூவுந்தன்மையவான) பக்ஷிகளும் (தமது) நாக்கு அட ங்கி ஒடுங்கின; விலங்கும் அஞ்சின - மிருகங்களும் அச்சமுற்றன; பாம்பும் - நாகங்களும், படம் குறைந்து ஒதுங்கின-படமொடுங்கிப் பதுங்கின;(எ - று.)

மலைகள்முதலியவை இவனது கொடுமையை உள்ளபடி உணர்ந்ததனால் இங்ஙனம் குழப்பமடைந்தன வென்க. துஷ்டஜந்துவான பாம்பும் படங் குறைந்து ஒதுங்கின வென்றதனால், இராவணன் அதனினுங் கொடியா னென்பது பெறப்படும். ஏ - மீ:—[1]ஒடுங்கின. (அசசு)

கூசு.—அம்முனி சீதையைநோக்கி 'இப்பர்ணசாலைக்குரியவரியார்?' என்றல்.

இருந்தவன் யாவதிவ் விருக்கை யீங்குறை
[1]யிருந்தவன் [2]யாவனீர் யாரை யென்றலும்
[3]விருந்தின ரிவ்வழி விரகி லாரெனப்
பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினாள்.

(இ - ள்.) இருந்தவன் - (வேத்திராசனத்தில்) வீற்றிருந்த அவ்விராவ ணன், 'இ இருக்கை யாவது - இந்த இருப்பிடம் யாது? ஈங்கு உறை இரு தவன் யாவன்-இவ்விடத்துவசிக்கிற பெரிய தவத்தையுடைய முனிவன் யார்? நீர் யாரை - நீர் யார்?' என்றலும் - என்று வினவியவளவிலே,—பெரு தட கண்ணவள்-மிகப்பெரிய கண்களையுடைய சீதை, இ வழி விருந்தினர் விரகு இலார் எனை - '(இவர்) இவ்விடத்துக்குப் புதியவர் கபடமில்லாதவர்' என்று எண்ணி, பேசல் மேயினாள் - விடைகூறத்தொடங்கினாள்; (எ - று.)

'பெருந்தடங்கண்ணவள் பேசல் மேயினாள்' என்றதனால், அவனை முனி வனென்று கருதியதனால் அவனைக் காண நாணித் தலைவணங்கியில்லாது அவனை நோக்கிப் பேசின னென்பது பெறப்படு மென்பர். இவள்கணவனை 'ஈங்குறையிருந்தவன் யாவன்' என்று ஒருமையால் வினவி இவளை 'நீர் யார்' என உயர்வுப்பன்மையால் வினவியதனால், இவள்பக்கல் தனக்கு உள்ள நன்குமதிப்பையும், அன்புமிகுதியையும் இராவணன் புலப்படுத்தினா னும். இருந்தவன் என வந்த சொல் இரண்டனுள், முன்னது - இரு என் னும் வினைப்பகுதியடியாப் பிறந்த இறந்தகால வினையாலணையும்பெயர்; பின் னது பண்புத்தொகைநிலைத் தொடர்மொழி. யாரையென்பதில், ஐ-சாரியை. விருந்து - புதுமை. விரகிலார் என்பதற்கு - (நம்மை) அறியாதவ ரென்றும் பொருள்கொள்ளலாம்; விரகு-அறிவு. '[3]விருந்தின ரிவ்வழி விரவிலாரென' என்ற பாடத்துக்கு (இப்பொழுது) அதிதியாய்வந்தஇவர் (முன்புஒருபொழு

தும் இங்கு) வந்தில்லாதவர் என்று எண்ணி யென்று உரைக்க. பி-ம்:— [1]அருந். [2]யாவர் நீர், யாவனீ. (அசஎ)

ரூ.எ.—அநந்துச் சீதைவிடைகூறுதல்.

தயரதன் மைல்[1] குலத் தலிவன் றம்பியோ
டுயர்குலத் தன்னைசொ லுச்சி யேந்தினு
[2]னயர்வில தில்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீ ரென்றாள்.

(இ - ள்.) 'பெருமையீர் - பெருமையுள்ளவரே! தயரதன் தொல் குலம் தலிவன் - தசரதசக்கரவர்த்தியினது பழமையான குலத்துக்குத் தலைவராயுள்ளவர், உயர் குலத்து அன்னை சொல் உச்சி ஏந்தினுன் - உயர்ந்தகுலத்திற் பிறந்த (தனது) தாயினது வார்த்தையைத் தலைமேற்கொண்டு, தம்பியோடு- (தம்) தம்பியுடனே, அயர்வு இலது இவ்வழி உறையும்-வருத்தமின்றி இவ்விடத்து இனிதுவசிக்கிறீர்; அன்னவன் பெயரினை தெரிகுதிர் - அவருடைய பெயரை அறிவீர்', என்றாள் - என்றுசொன்னுள், (பிராட்டி); (எ - று.)

கணவன்பெயரைக் கூறலாகா தென்பது முறைமை யாதலால் 'அன்னவன்பெயரினைத் தெரிகுதிர்' என்றாள்: 'அன்னவன்பெயரினைத் தெரிகுதிர் பெருமையீர்' என்றது, தசரதியின்பெயர் முனிவர்கூட்டத்தில் பிரசித்தமாய்த் தெரியு மென்ற கருத்தால். உயர்குலத்துஅன்னைசொல் உச்சி யேந்துதல்-சிறந்த கேகயகுலத்திற் பிறந்த மாற்றுர்தாயான கைகேயியின் கட்டளையைத் தலைமேற்கொண்டு நன்குமதித்தல். தங்களை நாடுதுறந்து காடுசெல்லும்படி செய்தவளே 'உயர்குலத்துஅன்னை' என்று சிறப்பித்துச் சொன்னதனுல், சீதையினது மிக்கநற்குணம் புலப்படும். பெருமை - தவமகிமை. பி - ம்:—[1]குலத்தனையன். [2]அயர்விலன். (அசஅ)

ரூ.அ.—அம்முனிவன் சீதையை 'நீர் யாரிமகள்' என்றல்.

கேட்ட னென் கண்டிலென் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை யொருமுறை நண்ணி னேன்மலர்
வாட்டடங் கண்ணினீர் யாவன் மாமகள்
காட்டிடை யருமபகல் கழிக்கின் றீரென்றான்.

(இ - ள்.) 'கேட்டனென்-(நீர் சொன்ன செய்தியைக்) கேட்டுள்ளேன்; கண்டிலென் - (அவர்களை நான்) கண்டேனில்லே: கெழுவு கங்கை நீர் நாட்டிடை ஒருமுறை நண்ணினேன் - நிறைந்த கங்கையாற்றின் நீர் பாயப்பெற்ற கோசலநாட்டிற்கு ஒருமுறை சென்றுள்ளேன்; காட்டிடை அரு பகல் கழிக்கின்றீர் - வனத்திலே கழித்தற்கரிய நாட்களைக் கழிக்கின்ற, மலர் வாள் தட கண்ணினீர் - கருங்குவளைமலரையும் வாட்படையையும் போன்ற பெரியகண்களையுடைய நீர், யாவன் மா மகள் - யாருடைய திருமகள்?' என்றான் - என்று வினவினன்; (எ - று.)

இனியநகரத்திற் பலவகைச்சுகானுபவத்தோடு கழித்ததற்குரிய இளமைப் பருவத்தைக் கொடிய இவ்வனத்திற் கழிக்கின்றீரே! இது தகுதியோ? என் பது தோன்ற, 'காட்டிடை யரும்பகல் கழிக்கின்றீர்' என்றதாகவுங் கொள் ளலாம். கோசலநாட்டின்எல்லை கங்காநதிவரையிலும் போலும். முன்பு இராவணன் திக்குவிஜயஞ்செய்தகாலத்தில் அயோத்திமாநகர்சேர்ந்து, அங்கு அப்பொழுது அரசாண்ட சூரியகுலத்து அரசனை அநரண்யனைப் போரிற் புடைத்து வீழ்த்திப் பரிகசித்து, அவன்குலத்துப்பிறக்கும் இராமனுற் கொல் லப்படும்படி சாபம்பெற்று மீண்டன னென்றவரலாற்றை உத்தரகாண்டத் திற் காணலாம். கண்ணின் நீர் எனப்பிரித்து, கண்களையுடைய நீரென்று பொருள் கொள்ளினுமாம். 'நீர்யாவன்மாமகள்' - இடவழுவமைதி. (அசுக)

கூகூ—அதற்குச் சீதை விடைகூறுதல்.

அனகமா நெறிபட ரடிக ணும்மலா
னினைவதோர் தெய்வம்வே றிலாத நெஞ்சினன்
[1]சனகன்மா மகள்பெயர் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனண் மறுவில் கற்பினாள்.

(இ - ள்.) 'அனகம் மா நெறி படர் அடிகள்-தோஷமில்லாத சிறந்த சுத் மார்க்கத்தில் ஒழுகுகிற முனிவரே! நும் அலால் நினைவது ஓர் தெய்வம் வேறு இலாத நெஞ்சினன் - (முனிவர்களாகிய) உங்களையே யல்லது வே றொருதெய்வத்தை நினைத்தலில்லாத மனத்தையுடையவனுகிய, சனகன் - சதகமகாராசனது, மா மகள் - மூத்தமகளாவேன் (யான்); பெயர் சனகி - என்பெயர் ஜாநகியென்பது; காகுத்தன் மனைவி யான் - நான் காகுத்தனது மனையாள்', என்றனள்-என்று மறுமொழிசொன்னாள்: மறு இல் கற்பினாள்- குற்றமில்லாத பதிவிரதாதருமத்தையுடையளான சீதை; (எ-று.)

சனகர் பரமஞானிகளான முனிவர்களிடத்துத் தெய்வபக்தியுள்ளவ ராதலாலும், சீதை இராவணனை முனிவனென்றே கருதியதனுலும், 'நும் மலால் நினைவதோர் தெய்வம் வேறிலாத நெஞ்சினன்' என்றாள். நும்மலால் நினைவதோர் தெய்வம் வேறிலாத - உம்மையே தெய்வமாப்பாவிக்கிற என்ற படி. 'மாமகள்' என்றது, இளையமகளான ஊர்மிளையை விலக்குதற்கு; இனி, சிறந்த மக ளென்று உரைத்தல் தற்புகழ்ச்சியாதலாற் சிறவாது. சதக னதுமகளென்னும் பொருள்பற்றித் தத்திதாந்தமாகவந்த ஜாநகியென்ற வட சொல் சனகியென விகாரப்பட்டது. காகுத்ஸ்தன் - வடசொல்; ககுஸ்த னென்னும் அரசனது மரபில் தோன்றியவன்; தத்திதாந்த நாமம். இங்கும் பிராட்டி கொழுநனைப் பெயராற்குறியாது காகுத்தனென வம்சநாமத்தாற் குறித்தமை காண்க. காகுத்த னென்ற திருநாமம், இந்திரனே வாகனமாகக் கொண்டு சென்று அசுரரையழித்து அமரரையளித்த அரசனது மரபின னென்ற சிறப்பை விளக்கும். ந + அகம் = அநகம்: வடமொழிப்புணர்ச்சி. அநகம் ஆம் நெறி யென்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]சனகன்மாமடமகள். ()

சுo.—சீதை இராவணசந்நியாசியை 'நீர் எங்குநின்று வருகிறீர்?' என்றல்

அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருத்தினிர் விளைந்த மூப்பினி
ரிவ்வழி யிருவினை கடக்க வெண்ணினி
ரெவ்வழி நின்று[1]மிங் கெய்தி னீரென்றாள்.

(இ - ள்.) அ வழி அனையன உரைத்த - அவ்விடத்து [அப்பொழுது] அவ்வார்த்தைகளைச் சொன்ன, ஆய் இழை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடையளான சீதை, (அந்த இராவணசந்நியாசியை நோக்கி), 'விளைந்த மூப்பினிர்-முதிர்ந்த முதுமைப்பருவத்தை யுடையவரும், இரு வினை கடக்க எண்ணினிர் - (நல்வினை தீவினை யென்னும்) இருவகை வினைகளையும் வெல்ல நினைத்தவரும் ஆகிய நீர், வெம் வழி வருத்தினிர்-வெவ்விய காட்டுவழியில் நடந்து வருத்தமுற்று, இ வழி - இப்பொழுது, எ வழிகின்றும் இங்கு எய்தினீர்-எவ்விடத்தினின்றும் இவ்விடத்துக்கு வந்தீர்?" என்றாள் - என்று வினவினாள்; (எ - று.)

ஆயிழை - வினைத்தொகை யன்மொழி. இழை - ஆடையுமாம். 'வெவ்வழி வருத்தினிர்' என்பதற்கு - கடிய தவவொழுக்கத்தால் இளைப்புற்றீரென்றும், 'இவ்வழி இருவினை கடக்க வெண்ணினிர்' என்பதற்கு - இத்துறவற வழியால் கருமங்களை யொழிக்கக் கருதினீ ரென்றும் உரைப்பினும் அமையும். "இருள்சே ரிருவினையுஞ் சேரா" என்ற திருக்குறளும், 'நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலான் 'இருவினையுஞ் சேரா' என்று கூறினர்' என்ற அதன் உரையும், இங்கு 'இருவினை கடக்க வெண்ணினிர்' என்றவிடத்து உணரற்பாலன. இனி, இரு வினை-பெரிய வினையுமாம். பி-ம்:—[1]இன்று. ()

சுக.—இதுமுதற் பத்துக் கவிகள் அதற்கு அவன் கூறும்விடை.

இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னன்முகன் மரபிற் றோன்றினு
னந்தரத் தோடுமெவ் வுலகு மாள்கின்றான்
மந்திரந் தருமறை வைகு நாவினான்.

(இ - ள்.) இந்திரற்கு இந்திரன் - (தேவர்கள் தலைவனை) இந்திரனுக்கும் மேம்பட்ட தலைவனும், எழுதல் ஆகலா சுந்தரன் - (சித்திரத்தில்) எழுதுதற்குங் கூடாத அழகியவனும், நான்முகன் மரபில் தோன்றினன் - பிரமனது குலத்திற் பிறந்தவனும், அந்தரத்தோடும் எ உலகும் ஆள்கின்றான் - மேலுலகத்துடனே எல்லாவுலகங்களையும் ஆளுகின்றவனும், மந்திரத்து அருமறை வைகும் நாவினான்-மந்திரங்களோடு கூடிய அருமையான வேதங்கள் தங்கிய நாவையுடையவனுமாய், (ஒருவன் உளன்); (எ - று.)

'இந்திரற்கு இந்திரன்' என்றதில், போகாதி அனுபவங்களில் இந்திரனினும் மேம்பட்டவ னென்ற கருத்தும் விளங்கும். செல்வநுகர்ச்சியும், பே

ழகும், உயர்குடிப்பிறப்பும், அரசாட்சிச் சிறப்பும், கல்விப்பெருமையும் முறையே கூறப்பட்டன. அடுத்தசெய்யுள்களுக்கும் இங்ஙனமே கண்டுகொள்க. செல்வமும் அழகும் மகளிர்மனத்தைக் கவர்தலிற் சிறந்தனவென்று அவற்றை முதலிற் கூறி, அரக்கனென்று இகழ்ந்திடாமைப் பொருட்டுக் குலப்பெருமையை அதன்பின் கூறி, நாடுதுறந்து காடுபுகுந்து திரியும் கொழுநனிடம் வெறுப்படைந்திடுமாறு அவனது சகலலோகஸாம் ராச்சியத்தை அதன்பின் கூறி, இத்தனை சிறப்போடு கல்விச்சிறப்பு முடையானென்பான் இறுதியில் அதனையுங் கூறினன். பிரமகுமாரரான புலஸ்தியனது புத்திரனான விச்சிரவசின் மகன் இராவணனென அறிக. அக்தமென்ற வானத்தின் பெயர் - அங்குள்ள உலகத்துக்கு இடவாகுபெயராம்.

சஉ. ஈசனுண் டிருந்தபே ரிலங்கு மால்வரை
யூகிவே ரொடும்பறித் [1]தெடுக்கு மூற்றத்தா
னைகைகள் சுமந்த[2]பே ரளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினன்.

(இ - ள்.) ஈசன் - சிவபிரான், இருந்த - எழுந்தருளியுள்ள, பேர் இலங்கு மால் வரை - பேர் பிரசித்தமான பெரிய கைலாசகிரியை, ஆண்டு - அக்காலத்தில் [முன்பு ஒருபொழுது], ஊசி வேரொடும் - பிரதானமான வேருடனே [அடியோடு], பறித்து எடுக்கும் - பெயர்த்து எடுத்த, ஊற்றத்தான் - வலிமையையுடையான்; ஐகைகள் சுமந்த - திக்குக்களைத் தாங்கிக்கொண்டிருக்கிற, பேர் அளவு இல் யானைகள் - பெருமையில் அளவில்லாத யானைகளினுடைய, பூசல் செய் மருப்பினை - தாங்கிப் பெரும்போர் செய்த தந்தங்களை, பொடிசெய் - துகளாகச் செய்த, தோளினன் - தோள்களையுடையவன்: (அவன்); (எ - று.)

இக்கவியில் அவனது பேராற்றல் விளங்கும். ஈசன் ஆண்டிருந்த என எடுத்து, சிவபிரான் ஆட்சிகொண்டுள்ள எனினும் அமையும். ஊசிவேர் - நுண்ணிதாய்க் கீழூன்றியுள்ள தலைமைவேர். ஆசைகள் சுமந்த யானை - திக்கஜம். பி-ம்:—[1]உருட்டும். [2]பேரமரியானைகள். (அருஉ)

சஊ. நிற்பவர் கடைத்தலை [1]நிறைந்து [2]தேவரே
சொற்பகு மற்றவன் பெருமை சொல்லுங்காற்
கற்பக முதலிய நிதியங் [3]கையன
[4]பொற்பக மானநீ ரிலங்கைப் பொன்னகர்.

(இ - ள்.) கடைத்தலை நிறைந்து நிற்பவர் - (அவனது) தலைவாயிலில் (எவல்செய்தற்குத்) திரண்டு காத்துநிற்பவர், தேவரே - தேவர்களே; மற்று அவன் பெருமை சொல்லுங்கால் - மற்றும் அவனது பெருமையைச் சொல்லப்புகுமிடத்து, சொல் பகும் - சொற்கள் ஆற்றலின்றி வலிகுறையும்; கற்பகம் முதலிய நிதியம்-கற்பகவிருக்ஷம் முதலிய தேவலோகத்து ஐசுவரியங்களெல்லாம், கையன - (அவனுக்கு) வசப்பட்டுள்ளன; பொற்பு அகம் - (அவ

னது) அழகிய உறைவிடம், மானம் நீர் இலங்கை பொன் நகர்-பெருமையையுடைய கடலினீர் சூழ்ந்த பொன்மயமான இலங்காபுரி; (எ - று.)

தேவர்களினும் மேம்பட்டவன் அவனென்பதும், அவன்பெருமைகூறற்கரி தென்பதும், அவனது தெய்விகச் செல்வமும், அவனது நகரின் பாதுகாப்பும் இதில் வெளியாம். அவன்பெருமையைச் சொல்லுதற்குச் சொற்கள்போதா வாதலால் அவை பின்னிடும் என்பது,இரண்டாமடியின் கருத்து. ஆன நீர் என்றும் எடுக்கலாம்; மிக்கநீ ரென்னும் பொருளது. பி ம்:—[1]நிறைந்த. [2]தேவரைச். [3]காமர்சூழ். [4]பொற்பகமானந்தேர், பொற்பதிமானநீர்,பொற்பதிவிமானந்தேர். (அருச)

சக. [1]ஏனகை திலோத்தமை முதல வேழையர்
வானகந் துறந்துவந் தவன்றன் மாட்சியா
லூனமி லடைப்பைகால் வருட லொண்செருப்
பானவை முதற்றொழி லவர தாகுமே.

(இ - ள்.) அவன்தன் மாட்சியால் - அவனது ஆட்சிப் பெருமையால், வானகம் துறந்து வந்து - (தமது இருப்பிடமான) சுவர்க்கலோகத்தைவிட்டு வந்து, (அவனுக்கு), ஊனம் இல் அடைப்பை - குறைபாடில்லாத அடைப்பையை (எந்துதலும்), கால் வருடல் - கால்பிடித்தலும், ஒள் செருப்பு ஆனவை - ஒள்ளிய செருப்பு (இடுதலும்), முதல் - முதலிய, தொழில்-ஊழியங்கள், ஏல் நகை திலோத்தமை முதல ஏழையர் அவரது ஆகும்-அழகமைந்த புன்சிரிப்பையுடைய திலோத்தமை முதலிய தேவமாதர்களுடையனவாம்.

அழகுமுதலியவற்றிற் சிறந்த அப்சரஸ்ஸ்திரீகளே யெல்லாம்குற்றேவல் கொள்ளுந் தரத்தவ னென அவன்சிறப்பை யெடுத்துக்கூறியவாறு. மேனகையென்ற பெயர் மோனைப்பொருத்தம்நோக்கி எனகை யெனத் திரிந்ததென்னலுமாம். பிரமதேவன் தான் பலகாலாகப் படைத்த பல மகளிரது தேகசௌந்தரியத்தினின்று எள்ளளவு எள்ளளவாகச் சாரத்தை யெடுத்துத் திரட்டி ஒருபெண்ணைப் படைக்க, அந்தச் சிறந்த பெண்ணுக்குத் திலோத்தமையென்பது காரணப்பெயராயிற்று; நிலம் - எள், உத்தமை - மேலானவள். 'ஊனமில்' என்ற அடைமொழியால் அடைப்பையை யேந்தல் முதலியவற்றை இவர்கள் தமக்கு ஓர் குறையாகக் கொள்ளாது பெருமையாகக் கொள்கின்றன ரென்பதும், இக் குற்றேவல் செய்யுஞ் சிறப்பு மற்றையோர்க்குப் பெறுதற்கரியது என்பதும் தோன்றும். 'முதலவேழையர்' என்றது - உருப்பசி, அரம்பை முதலியோரையும், 'முதல்தொழில்' என்றது - உடைவாள்தாங்கல் சாமரைவீசுதல் முதலியவற்றையும் உணர்த்தும்; ''உருப்பசியுடைவா ளெடுத்தனள் தொடர மேனகை வெள்ளடை யுதவச், செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல வரம்பையர் குழாம் புடைசுற்ற'' எனச் சுந்தரகாண்டத்து வருஞ் செய்யுள் ஈண்டுக் கருதத்தக்கது.

பேதையர் மடவார் என்பனபோல, ஏழைய ரென்பது - மகளிர்க்கு இயல்பைவிளக்கும் ஒருபெயர்: இனி, அவர்நிலைமையை நோக்கி இரங்கி 'ஏழையர்' என்றதாகவுங்கொள்ளலாம். அடைப்பை, செருப்பு என்ற பெயர் களின்பின் ஏந்துதல் இடுதல் என்ற ஏற்ற வினைகள் வருவிக்கப்பட்டன. அடைப்பை - வெற்றிலைப்பை; அடை - வெற்றிலையாதலை 'அடைக்காய்' என்பதிலுங் காண்க. 'அவரது' என்று ஒருமையாற் கூறினது: பன்மை யொருமைமயக்கத்தின்பாற்படும்; தனித்தனி அவரதென்க: 'அவரவராகும்' என்று பன்மையாகப் பாடமோதுவாரும் உளர்.வந்து என்ற வினை யெச்சம்- எந்துதல், வருடல், இடுதல் என்ற தொழிற்பெயர்களைக் கொள்ளும்.**பி-ம்:**— [1]மேனகை. இதுவும் அடுத்தசெய்யுளும் பலபிரதிகளிற் காணப்படவில்லை.

சரு. சந்திர னிரவியென் பவர்க டாமவன்
சிந்தனை வழிநிலை திரிவர் தேசுடை
யிந்திரன் முதலிய வமர ரீண்டவன்
கந்தடு கோயிலின் காவ லாளரே.

(இ - ள்.) சந்திரன் இரவி என்பவர்கள் - சந்திரசூரியரென்று சிறப் பித்துச் சொல்லப்படுபவர்கள், அவன் சிந்தனை வழி நிலை திரிவர் - (தங்கள் இயற்கைநிலைமை மாறி) அவனது நினைப்பின்படியே சஞ்சரிப்பார்கள்; தேசு உடை இந்திரன் முதலிய அமரர் - திவ்வியகாந்தியையுடைய இந்திராதி தேவர்கள், ஈண்டு அவன் கம் தடு கோயிலின் காவலாளரே - இவ்வுலகத் தில் அவனது மேகத்தைத்தடுக்கிற [மிகவுயர்ந்த] அரண்மனையின் காவலாட் களாயிருக்கிறார்கள்; (எ - று.)—தாம் - அசை; தேற்றமும், உயர்வுசிறப்பு மாம். ஈற்றேகாரம் - தேற்றம்.

கந்தடுகோயில் என்பதற்கு விண்ணுலகத்தாரை உள்நுழைய வொட் டாது தடுக்கிற இராசமாளிகையென்று உரைப்பாரு முளர். கந்து அடு கோ யில் எனப்பிரித்து, யானைகட்டுந் தறிகள் பொருந்திய அரண்மனை யென் றும், (மதயானைகள்) கட்டுத்தறியை முறிக்கப்பெற்ற அரண்மனையென்றும் உரைத்தலும் உண்டு. தேசு உடை என்பதற்கு - தமக்குஇயல்பாகவுள்ள ஒளி குன்றிய வென்று உரைப்பர் ஒருசாரார். (அருசு)

சசு. பொன்னக ரத்தினும் பொலங்கொ ணுகர்தந்
தொன்னக ரத்தினுந் தொடர்ந்த மாநிலத்
தெந்நக ரத்தினு மினிய வீண்டவ
னன்னக ரத்தன நவையி லாதன.

(இ - ள்.) பொன் நகரத்தினும் - பொன்மயமான சுவர்க்க லோகத் தைக்காட்டிலும், பொலம் கொள் நாகர்தம் தொல் நகரத்தினும் - அழகுகொ ண்ட நாகசாதியாரது பழமையான (பாதாளலோகத்திலுள்ள போகவதி யென்னும்) நகரத்தைக் காட்டிலும், தொடர்ந்த மா நிலத்து எ நகரத்தினும்- (அவ்வுலகங்களால் மேலுங் கீழும்) தொடரப்பட்ட பெரிய பூலோகத்தி

லுள்ள எல்லாநகரங்களைக் காட்டிலும், இனிய - அழகிய, ஈண்டு அவன் நல் நகரத்தன - இவ்வுலகத்திலுள்ள அவனது சிறந்த இலங்காபுரியிலுள்ள பொருள்களெல்லாம், நவை இலாதன-யாதொருகுற்றமுமில்லாதன;(எ - று.)

மூவுலகத்திலுமுள்ள குற்றமற்ற இனிய பொருள்கள்யாவும் இப்பொழுது அவனது இலங்கைநகரத்தில் உள்ளன வென்றும், அவனது இலங்காபுரியிலுள்ள குற்றமற்ற பொருள்கள் மூன்று உலகங்களிலுமுள்ள பொருள்களெல்லாவற்றினும் இனிமையானவை யென்றும் கருத்து. இகழ இச்செய்யுளுக்குப் பதவுரை கூறலுமாம். (அருள)

சஎ. தாளுடை மலருளான் றந்த வந்தமி
ளுளுடை வாழ்க்கைய ளரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன் வாரி வைத்தவெங்
கோளுடைச் சிறையினன் குணங்கண் [1]மேன்மையான்.

(இ - ள்.) தாள் உடை மலர் உளான் தந்த - நாளத்தையுடைய தாமரைமலரில் வாழ்கிற பிரமதேவன் கொடுத்த, அந்தம் இல் நாள் உடை வாழ்க்கையன் - அழிவில்லாத ஆயுள்நாளோடு கூடிய வாழ்வையுடையவன்; நாரி பாகத்தன் வாள் உடை தட கையன் - மனைவியை இடப்பாகத்திற்கொண்ட சிவபிரான் கொடுத்த வாட்படையை யேந்திய பெரிய கையையுடையவன்; வாரி வைத்த வெம் கோள் உடை சிறையினன்-ஒருங்குபிடித்துவைத்த வெவ்விய கிரகங்களைக்கொண்ட சிறைச்சாலையையுடையவன்; குணங்கள் மேன்மையான்-எல்லாக்குணங்களாலும்மேன்மையையுடையவன்,(அவன்);(எ-று.)

தாள் - பூந்தண்டு. மலருளான் தந்த வாழ்க்கை யென இயையும். இராவணன் இளமையில் அரிய பெரிய தவவேள்விகள் புரிந்து எளியமனிதரொருவரொழிய மற்றையெத்தப்பிராணிகளாலும் தான் அழிவுபடாத வரத்தைப் பிரமனிடம் பெற்றன னென்பதையும், கைலையைப்பெயர்த்தெடுத்த காலத்தில் சாமவேத கீதம் பாடிச் சிவபிரானை மகிழ்வித்து அப்பெருமானிடத்தினின்று சந்திரஹாஸமென்னும் வாளைப் பெற்றன னென்பதையும், திக்குவிசயகாலத்தில் சூரியசந்திராதியர் பலரைச் சிறைவைத்துப் பேர்பெற்றன னென்பதையும் உத்தரகாண்டத்திற் பரக்கக்காணலாம். கீழ் மாரீசன் வதைப்படலத்தில் "ஆன்ற, நாளெலாம் புடைதயங்க நாமநீரிலங்கையிற் முன் வாரியிட்ட, கோளெலாங்கிடந்த நெடுஞ்சிறை" என்றது, இங்கு 'வாரி வைத்தவெங்கோளுடைச் சிறை' என்றவிடத்து உணர்த்தற்குரியது. நாரி-பெண்: வடசொல். கோளுக்கு வெம்மை - தமது சஞ்சாரத்தால் அனைத்துயிர்க்கும் ஊழ்வினைப்பயனை நுகர்வித்தல்: இனி, வெம்மையைச் சிறைக்குக் கூட்டினுமாம். பி - ம்:—[1]மேயினன். (அருஅ)

சஅ. வெம்மைதீ ரொழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் [1]றிகைக்குஞ் செவ்விய
[2]னெம்மையோ ரனைவரு [3]மிறைவ ரென்றெணு
மும்மையோர் பெருமையு முற்றும் பெற்றியான்.

(இ - ள்.) (மற்றும் அவன்), வெம்மை தீர் ஒழுக்கினன் - கொடுமை யில்லாத நல்லொழுக்கமுடையவன்; விரிந்த கேள்வியன் - பரந்த நூற்கேள் வியையுடையவன்; செம்மையோன் - நடுவுநிலைமை யுள்ளவன்; மன்மதன் திகைக்கும் செவ்வியன் - காமனுங் கண்டு மதிதடுமாறும்படியான காலப் பருவமுடையவன்; எம்மையோர் அனைவரும் - எவ்வுலகத்தி லுள்ளாரும், இறைவர் என்று எணும் - (தம்தமக்குத்) தலைவரென்று எண்ணப்பெற்ற, மும்மையோர் - திரிமூர்த்திகளுடைய, பெருமையும் - மகிமை முழுவதும், முற்றும்-நிறைந்த, பெற்றியான் - தன்மையை யுடையவன்; (எ-று.)

மன்மத னென்பதில் உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. செம்மை - சற்குணமும், செவ்வி-கட்டழகுமாம். எம்மையோர் என்பதில், 'மை'விகுதி-இடப்பொருளது;இம்மைஅம்மை உம்மை மறுமை என்றவற்றிற் போல. மும்மையோர் - மூவர்; இதில், மை - பகுதிப்பொருள்விகுதி. மும் மையோர் பெருமை - படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்கள். நான்கா மடி - திரிமூர்த்திகளின் பெருமையும் ஒழியும்படியான பெருமையையுடை யவ னென்றும் பொருள்படும். பி - ம்:—[1]திசைக்கும். [2]எம்மனோர். [3]இறைவ ரேயெனும். (அருக)

சகூ. அனைத்துல கினுமழ கமைந்த நங்கைய
ரெனைப்பல ரவன்றன தருளி னிச்சையார்
[1]நினைத்தவ ருருகவு முதவ நோக்கிலன்
மனக்கினி யாளொரு [2]மாதர் நாடுவான்.

(இ - ள்.) அனைத்து உலகினும் - எல்லாவுலகங்களிலுமுள்ள, அழகு அமைந்த நங்கையர் - அழகமைந்த மாதர்கள், எனை பலர் - மிகப்பலர், அவன் தனது அருளின் இச்சையோர்-அவனது அருளைப் பெறுதலில் விரு ப்பமுள்ளவர்கள்; அவர்-அம்மாதர்கள், நினைத்து - (எப்பொழுதும் அவனை யே) சிந்தித்து, உருகவும் - உருகுவதைக் கண்டும், உதவ நோக்கிலன் - (அவர் கட்குத் தனது இன்பத்தைக்) கொடுக்க உடன்படாதவனும், (அவன்), மன க்கு இனியாள் ஒரு மாதர் நாடுவான்-(தன்)மனத்துக்கு இனியவளாகிய ஒரு மங்கையைத் தேடிக்கொண்டிருக்கிறான்; (எ - று.)

எனைப்பலர் - எத்தனையோ பலர்: எனை - எத்தனை யென்பதன் மரூஉ. மனக்கு - அத்துச் சாரியை தொக்கது. "மாதர் காதல்" என்ற தொல்காப் பியத்தின்படி வேட்கையை உணர்த்தும் மாதர் என்ற உரிச்சொல்-ஆகுபெய ராய், விருப்பத்துக்கு உரிய மகளின்மேல் நின்றது; ஆகவே, மாதர் என்ற பெயர் - ஒருமை பன்மை இரண்டிலும் வழங்கு மென்க. இனி, ஈற்றடிக்கு-தன்மனத்துக்கு இனியவளான ஒருபெண்ணினது காதலைத் தான் அபேக்ஷிப் பான் என்று பொருள்கொள்ளினும் அமையும்.பி-ம்:—[1]நினைத்தனர். [2]மாதை.

ரூ0. ஆண்டையா னரசுவீற் றிருந்த வந்நகர்
வேண்டியான் சிலபக [1]லுறைய வேண்டினே

[2]னீண்டனெ னிருந்தவற் பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனெ னென்றனன் விணைய [3]முன்னுவான்.

(இ - ள்.) ஆண்டையான் - அத்தன்மையனுகிய அவன், அரசு வீற்றிருந்த - அரசாட்சிசெய்துகொண்டு மிக்கசிறப்புற்றிருக்கப்பெற்ற, அ நகர் - அந்த இலங்காநகரத்தை, வேண்டி - விரும்பி, யான் - நான், சில பகல் உறைய வேண்டினேன் - சிலகாலம் (அவ்விடத்தில்) வசிக்க அபேட்சித்தவனுய், நீண்டனென் இருந்து-(அங்கு)நெடுங்காலம் இருந்து, (பின்பு), அவன் பிரிந்த நெஞ்சினேன் - அவனைப் பிரிந்த மனமுடையவனுய், மீண்டனென்- இங்குவந்தேன், என்றனன் - என்று சொன்னுன், விணையம் உன்னுவான் - (சீதையைக்கொள்ளுதற்கேற்ற) தந்திரத்தைக் கருதுபவனுன இராவண சந்யாசி; (எ - று.)

'நீர் எங்குநின்று வருகிறீர்?' என்று பிராட்டி கேட்டவினவிற்கு விடைகூறுபவன், அவள்மனத்தை மாறுபடுத்தக் கருதி, தனது சிறப்பைப் பிறன்கூறுமாறுபோலப் பலவாற்ருல் விரித்துக்கூறி 'இலங்கையினின்று வந்தேன்' என்றன னென்க: குணங்கள் மேன்மையாலுன அவனைப் பிரிந்த பிரிவு என் நெஞ்சைக் கவற்றுகின்ற தென்பான் 'அவற்பிரிந்த நெஞ்சினேன்' என்ருன். விணையம் - வஞ்சனைச் சூழ்ச்சி; இதில், அம் - சாரியை. முன்னுவான் எனப் பதம்பிரிப்பினும் இப்பொருளேபடும். 'மீண்டனென்' என்றதனுல் முன் இத்தண்டகாரணியமே தனக்கு இட மென்ருனுமாம். [2]நீண்டனெனிருந்தவர்ப் பிரிந்தநெஞ்சினேன் என்ற பாடம், இலங்கையிற் சிலகாலம் வசிக்க விரும்பிச் சென்றிருந்த யான் பெருந்தவமுடைய (இத்தண்டகாரணிய வாசிகளான) முனிவர்களே நெடுங்காலம் பிரிந்ததனுலாகிய சிந்தையையுடையவனுய் மீண்டு இங்குவந்தே னென்று பொருள்பட்டுச் சிறப்பதை உணர்க. பி - ம்:—[1]உறைதன்மேவினேன். [2]நீண்டகாளிறையவர்ப்பிரியநெஞ்சிலேன், நீண்டனெனிருந்தவற்பிரியநெஞ்சிலேன், நீண்டகாளிருந்தவர்ப் பிரியநெஞ்சிலேன். [3]மூற்றுவான். (அசுக)

நுக.—அழிழியை நோக்கிச் சீதை 'நீவிர் அரக்கநூரில் வாழ்வானேன்' என்றல்.

வேதமும் வேதிய ரருளும் வெஃகலாச்
[1]சேதனே மன்னுயிர் தின்னுந் தீவினைப்
பாதக வரக்கர்தம் பதியின் வைகுதற்
கேதுவென் னுடலமு மிகையென் றெண்ணுவீர்.

(இ - ள்.) உடலமும் மிகை என்று எண்ணுவீர்-(முற்றத் துறத்தலால்) உடம்பையும் மிகுதியென்று நினைகுகுந் தன்மையுள்ளவரே! வேதமும் வேதியர் அருளும் வெஃகலா - வேதங்களையும் அவ்வேதங்கட்குரிய அந்தணர்களது கருணையையும் விரும்பாமல், சேதனே மன் உயிர் தின்னும் தீவினை- உணர்ச்சியுடைய மிக்க பிராணிகளைத் தின்னுகிற கொடிய செய்கையை

யுடைய, பாதகம் அரக்கர்தம் - பாவிகளான இராக்கதர்களது, பதியின் - ஊரில், வைகுதற்கு-(நீர்) தங்குதற்கு, ஏது என்-காரணம் என்ன? (எ - று.)

எல்லாப் பொருளின்கண்ணும் பற்றற்றுப் பிறப்பை யொழித்து முத்தியைப் பெறுதலேயே சன்மமெடுத்ததன் பயனென்று உணர்ந்து அதனை மேற் கொண்ட முனிவர்கள் அம்முத்திபெறும் முயற்சிக்குக் கருவியாய்த் தம்உயிர்க்கு ஆதாரமாய் நின்ற உடம்பையும் அதன் இழிவும் துன்பத்தொடர்பும் நோக்கிப் பாரமென்று கருதி வெறுத்தல் இயல்பாதலால், 'உடலமும் மிகையென்றெண்ணுவீர்'என விளித்தாள். உடலம், அம்-சாரியை: உம் - உயர்வு சிறப்பு.மிகை-அதிகம்; இன்றியமையாததன்றாதது. 'உடலமும் மிகையென்றெண்ணுவீர்'என்றதனால்,மற்றும் இயைபில்லனவற்றின் தொடர்பை மிகையென்றெண்ணுதல் தானே பெறப்படும். இங்கு, "மற்றுந் தொடர்ப்பாடெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க் குடம்பு மிகை" என்ற திருக்குறளும், 'உடம்பு என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்பும் கொள்ளப்படும்: (உருவுடம்பு-ஸ்தூலசரீரம். அருவுடம்பு - சூக்ஷ்மசரீரம்.) அவற்றுள், அருவுடம்பாவது-பத்துவகை இந்திரியவுணர்வோடும், ஐவகைவாயுக்களோடும், காமவினைவிளைவுகளோடுங் கூடிய மனம்: இது நுண்ணுடம் பெனவும் படும்', 'இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது வருதலே யுணர்ந்து இவற்றாலாய கட்டினை இறைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், 'உடம்பும் மிகை'என்றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும்; இதனான், அகப்பற்று விடுதல் கூறப்பட்டது' என்ற அதன் விசேடவுரையும் உணர்தற்குரியன. உயிர் - உடம்புக்கு இலக்கணை. 'சேதனை மன்னுயிர் தின்னும்' என்றது, அரக்கர்கள் உணர்விற்குறைபட்ட விலங்குகளேயே யன்றி அதில் மேம்பட்ட மனிதர்களையுந் தின்னும் இயல்பின ரென்பதைக் காட்டும். 'சேதனை மன்னுயிர்' என்றது, உணர்வில் மேம்பட்ட முனிவர்களது உடல் என்றவாறுமாம்.

பி - ம்:—[1]சேதனமன், சேதனரின். (அசுஉ)

ருஉ. வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர்
[1]புனற்றிரு நாட்டிடைப் புனித ரூர்புக
[2]நினைக்கிலி ரறநெறி நினைக்கி லாதவ
ரினத்திடை வைகினி ரென்செய்தீ ரென்றுள்.

(இ - ள்.) வனத்திடை - காட்டிலே, மாதவர் மருங்கு - மிக்கதவமுடைய முனிவர்கள் பக்கலிலே, வைகலிர் - தங்காதொழிந்தீர்; புனல் திரு நாட்டிடை - நீர்வளமுள்ள சிறந்த நாடுகளிலேயுள்ள, புனிதர் ஊர் - பரிசுத்தகுணமுள்ள நல்லவர்களுடைய ஊரிலே,புக - செல்ல, நினைக்கிலிர் - எண்ணுகின்றீரில்லை; அறம் நெறி நினைக்கிலாதவர் இனத்திடை வைகினிர் - தருமமார்க்கத்தை நினைத்தலுஞ் செய்யாத அரக்கர்களுடைய கூட்டத்தின் நடுவிலே தங்கினீர்; என் செய்தீர் - யாது செய்தீர்? என்றுள் - என்று (பிராட்டி இராவணசந்யாசியை) வினவினாள்; (எ - று.)

'என்செய்தீர்' என்றது-யாதுபயன் சருதி யாதுதொழில்செய்தீரென்ற வினுப்பொருளோடு, நீவிர்செய்தது மிக்க அநீதி யென்பதையும் காட்டும்.
பி - மீ:—[1]புனத்திரு. [2]நினைத்திலிர். (அகூ)

வே று.

ருக.—அதற்கு அம்முனிவன் விடைகூறுதல்.

மங்கையஃ துரைத்தல் கேட்ட வரம்பிலான் [1]மறுவிற் றீர்ந்தாள்
வெங்கண்வா ளரக்க [2]ரென்ன வெருவுவாள் மெய்ம்மை [3]நோக்கித்
திங்கள்வாண் [4]முகத்தி னுயத் [5]தேவரிற் றீய ரல்ல
ரெங்கள்போ லியர்க்கு நல்லார் நிருதரே போலு மென்றான்.

(இ - ள்.) மங்கை அஃது உரைத்தல் - இளம்பருவமுடைய பெண்ணிற் சிறந்த சீதாதேவி அவ்வார்த்தை சொல்லுதலே, கேட்ட—,வரம்பு இலான் - வரம்புகடந்தொழுகுபவனான இராவணமுனிவன், மறுவில் தீர்ந்தாள்-குற்றங்களினின்று நீங்கினவளும், 'வெம் கண் வாள் அரக்கர் - கொடிய கண்களையும் வாட்படையையுமுடைய இராக்கதர்கள்', என்ன என்றுசொல்ல, வெருவுவாள் - (அவர்க்கு) அஞ்சுபவளுமான சீதையின், மெய்ம்மை நோக்கி-உண்மைத்தன்மையைப்பார்த்து, 'திங்கள் வாள் முகத்தினுய் - சந்திரன் போன்ற ஒள்ளியமுகத்தையுடையவளே! நிருதர்-இராக்கதர், அ தேவரின் தீயர் அல்லர் - அந்தத்தேவர்கள் போலக் கொடியவர்களல்லர்; எங்கள் போலியர்க்கு நல்லாரே போலும் - (மற்றும்) எங்கள் போல்வார்க்கு நல்லவரேயாவர்', என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

போலும் - ஒப்பில் போலி; உரையசைமாத்திரமாய் நின்றது. 'தேவரிற்றீயரல்லர்' என்பது - தேவர்களைக்காட்டிலுந் தீயவரல்ல ரென்றும் பொருள்படும். 'எங்கள் போலியர்க்கு நல்லார் நிருதரே போலும்' என்றது, மற்றையோர்திறத்து அவர்கள் கொடியவராயினும் சாதுக்களான எங்கள் திறத்தில் நல்லோராய்நிற்ப ரென்ற வெளிப்படைப்பொருளையும், எங்களுக்கு அரக்கரே நல்லவ ரென்ற உள்ளுறைபொருளையு முடையதாம். [5]தேவரிற்றீயரன்னர்' என்ற பாடத்துக்கு - தேவர்கள்விஷயத்திற் கொடியவர் அவ்வரக்க ரென்க. வெங்கண் - கொடியதன்மையுமாம். [1]மறுவிற்றீர்ந்தார், வெங்கண்வாளரக்கரென்ன வெருவல மெய்ம்மைநோக்கின்' என்ற பாடத்துக்கு - வெங்கண்வாளரக்கர், மறுவில்தீர்ந்தார் - குற்றங்களில்மிக்கவர், என்ன-என்றுஎண்ணி, வெருவலம் - (அவர்க்கு) அஞ்சமாட்டோம்; மெய்ம்மை நோக்கின், எங்கள்போலியர்க்கு நல்லார் நிருதரே போலும் (அவர்கள்) தேவரிற் றீயரல்லர் என்று உரைப்பர்: அன்றி, மறுவிற்றீர்ந்தார் என்ற பாடத்திற்கே,வெங்கண்வாளரக்கர், மறுவில்தீர்ந்தார்-குற்றங்கள்நீங்கியவர், என்ற காரணத்தால் வெருவலம் என்று உரைத்தலுமுண்டு. பி - மீ:—[2]என்று வெருவுவர். [3]நோக்கின். [4]முகத்தினுளே. [5]தேவரிற்றீயரன்றே.

இதுமுதல் இருபது கவிகள் - கீழ்ப்படலத்து கச-ஆங் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (அசுச)

ருச.—சீதை, 'தீயவரைச் சேர்ந்தவரும் தீயவரே' என்றல்.

சேயிழை யன்ன சொல்லத் தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவ ரல்லர் சொல்லிற் றொன்னெறி [1]தொடர்ந்தீ தென்ருண்
மாயவல் லரக்கர் வல்லர் [2]வேண்டுரு வரிக்க வென்ப
தாயவ ளறித றேற்ரு ளாதலி னயலொன் றெண்ணுள்.

(இ - ள்.) அன்ன சொல்ல - அப்படிப்பட்ட சொற்களை (அவ்வரக்க முனி) கூற, சேய் இழை ஆயவள் - செவ்விய ஆபரணங்களையுடைய சீதை யானவள், மாயம் வல் அரக்கர் வேண்டு உரு வரிக்க வல்லர் என்பது அறி தல் தேற்ருள் ஆதலின்-மாயையுடைய கொடிய இராக்கதர்கள் (தாம்)வேண் டிய வடிவத்தை(அம்மாயையாற்)கொள்ளவல்லவரென்பதை(த்தான்)அறியா ளாதலால், அயல் ஒன்று எண்ணுள் - வேருக ஒன்றுங்கருதாதவளாய், 'தீய வர் சேர்தல் செய்தார் தூயவர் அல்லர் - கொடியவரை நட்புச்செய்தவர்கள் தூய்மையுடையவராகார்: சொல்லின் - சொல்லுமிடத்து, தொல் நெறி (தொடர்ந்தோர்-பழைய(அத்தீ)நெறியில் தொடர்புடையவரேயாவர்', என் ருள்-என்றுசொன்னாள்; (எ - று.)

அரக்கன் இங்ஙனம் தான்வல்லமாயையால் முனிவடிவங்கொண்டு வந் தானா னென்று அறியாமல் அவனை மெய்ம்முனிவனென்றே கருதி அவ னிடத்து யாதொரு சங்கையுங் கொண்டிலளாதலின் இங்ஙனங்கூறின ளென்பது கருத்து. "தீயகந்த மூள்ளதொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றற் குத், தீயகந்த மேறுந் திறமதுபோல்—தீய, குணமுடையோர் தங்களுடன் கூடி யிருப்பார்க்குக், குணமதுவேயாஞ் செறிவு கொண்டு", "மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு, மினந்தூய்மை தூவா வரும்" என்பன காண்க. சேயிழை - பண்புத்தொகையன்மொழி. தொன்னெறி தொடர்ந்தோர் - தொன்றுதொட்டு வருகிற நல்லொழுக்கவழியைக் கொண்ட முனிவர்களுள், தீயவரைச் சேர்ந்தவர் தூயவரல்லர் என்று உரைகொள்ளினும் அமையும்: அன்றி, தூயவர் தொன்னெறிதொடர்ந்தோர் தீயவர்ச் சேர்தல் செய்தார் அல்லர் என்று இயைத்து உரைப்பினுமாம். பி-ம்:—[1]தொடர்ந்துசொல்லான். [2]என்பதை மறுவொன்றில்லாள். (அசுடு)

ருரு.—அதற்கு இராவணன் கூறும் சமாதானம்.

அயிர்த்தன ளாகு மென்றே ரையுற வகத்துக் கொண்டான்
பெயர்த்தது தடைக்க வெண்ணிப் பிறிதுறப் [1]பேச லுற்ருன்
[2]மயக்கறு முலச மூன்றின் வாழ்பவர்க் கனைய வல்லோ
ரியற்கையிற் [3]றிரியி னல்லா யெற்றலா நெறி[1]யென் னென்ருன்.

(இ - ள்.) (இராவணன்), அயிர்த்தனள் ஆகும் என்று ஓர் ஐயுறவு அக த்து கொண்டான் - (கீழ்ச் சீதைசொன்னவார்த்தையால் அவள் தன்னைச்)

சங்கித்தனனென்று ஒருசந்தேகத்தைத் தன்மனத்திற்கொண்டு, அது பெயர்த்து துடைக்க எண்ணி - அச்சந்தேகத்தைத் தீர்த்தொழிக்கக் கருதி, பிறிது உற பேசல்உற்றான் - வேறொருவகையாகப் பேசத்தொடங்கினவனுய்,— 'மெய்க்கு அறும் உலகம் மூன்றின் வாழ்பவர்க்கு - தடுமாற்றமில்லாத மூன்று உலகங்களிலும் வாழ்பவர்கட்கெல்லாம், அனைய வல்லோர் இயற்கையின் திரியின் அல்லால் - வல்லமையுடைய அவ்வரக்கர்களது இயல்போடு தழுவி நடந்தா லல்லாமல், இயற்றல் ஆம் நெறி என் - (அதனினும் வேறுக) அனு சரிக்கத்தக்க நல்வழிஎன்ன இருக்கிறது? என்றான்-என்றுசொன்னன்;(எ-று.)

முன்பு 'எங்கட்குநல்லவர் அரக்கரே' என்றவன், அதனுல் தன்னிடத்துச் சீதை சங்கைகொண்டன னென்று கருதி அதனையொழிக்கும்பொருட்டு, 'மிகவலிய அவ்வரக்கரைத் தழுவி நடத்தலே யொழிய எவ்வுலகத்தார்க்கும் வேறுதப்பும்வழி யில்லை' என்று, முன்பு தான்சொன்னதற்குச் சிறிது வேறு பாடாகக் கூறின னென்க. ஐயுறவு - தொகுத்தல். பின்னிரண்டடிகட்கு வேறுவகையுரைப்பது சிறவாது. [2]'மெய்க்கரும்' என்னும் பாடத்துக்கும் பொருள் இதுவே. பி-மீ:—[1]உரைக்கல். [3]நிற்பது. [4]ஏது. (அசுசு)

ருசு.—சீதை, 'இனி இராமனுல் அரக்கர் அழிய உலதுஇன்புறும்' எனறல்.

திறந்தெரி வஞ்ச னச்சொற் செப்பலுஞ் செப்ப மிக்கா
[1]ளறந்தரு வள்ள லீண்டிங் கருந்தவ முயலு நாளுண்
மறந்தலை திரிந்த வாழ்க்கை யரக்கர்தம் [2]வருக்கத் தோடு
மிறந்தனர் முடிவர் பின்ன ரிடரிலை யுலக மென்றான்.

(இ - ள்.) திறம் தெரி வஞ்சன் - (அவளது) மனநிலையை ஊகித்தறியும் வஞ்சகனை அவ்விராவணன், அ சொல் செப்பலும் - அவ்வார்த்தையைக் கூறியவளவிலே, செப்பம் மிக்காள் - நன்மைக்குணம்மிக்கவளான பிராட்டி, 'அறம் தரு வள்ளல் - தருமத்தைவளர்க்குந்தன்மையுள்ள வரையாதருள்பவ னான சக்கரவர்த்தித்திருமகன், ஈண்டு இங்கு அரு தவம் முயலும் நாளுள்- இவ்விடத்தில் இப்பொழுது அரியதவத்தைச் செய்கின்ற நாள்களிலே, மறம் தலை திரிந்த வாழ்க்கை அரக்கர் தம் வருக்கத்தோடும் இறந்தனர் முடிவர்- பாவவழியிற் சஞ்சரிக்கிற வாழ்க்கையையுடைய இராக்கதர்கள் தங்கள்குலத் துடனே மாண்டொழிவார்கள்: பின்னர்-பின்பு, உலகம்-உலகத்துக்கு, இடர் இலை-துன்பமில்லை,' என்றான் - என்றுசொன்னன்; (எ - று.)

மறத்தலையெனற்பாலது, மறந்தலையென மெலிந்தது. துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களால் அதருமத்தைத்தொலைத்துத் தருமத்தை நிலைநிறுத் தும்பொருட்டுத் திருவவதரித்த மூர்த்தியாதலால், 'அறந்தருவள்ளல்' எனப் பட்டான்;"மண்ணிடை யாவ ரிராகவனன்றி மாதவ மறத்தொடும் வளர்த் தார்" எனப் பாலகாண்டத்தில் வந்ததும் உணர்க. தருதல் - வளர்த்தலென் னும்பொருளதாதலை "தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" என்ற விடத்துங் காண்க. பி - மீ:—[1]அறைந்தனள். [2]வருக்கத்தோடு பிறந்தவர் முடிவர்பின்னை. (அசுஎ)

ருஎ.—அதற்கு இராவணன் 'மனிதர் அரக்கரைக் கொல்ல வல்லரோ?' என்றல்.

[1]மானவ ளுரைத்த லோடு மானிட ரரக்கர் தம்மை
மீனென மிளிருங் கண்ணுய் வேரற வெல்வ ரென்னின்
யானையி னினத்தை யெல்லா மிளமுயல் கொல்லும் பின்னு
கூனுகிர் மடங்க [2]லேற்றைக் குருளைமான் கொல்லு மென்றன்.

(இ - ள்) மான் அவள் - மான்போன்ற அச்சீதை, உரைத்தலோடும் - (இவ்வாறு) சொன்னவுடனே, (இராவண சக்கியாசி அவளைநோக்கி), 'மீன் என மிளிரும் கண்ணுய் - கயல்மீன்போலப் பிறழ்ந்து விளங்குகிற கண்களை யுடையவளே! மானிடர் - மனிதர்கள், அரக்கர்தம்மை - இராக்கதர்களை, வேர் அற வெல்வர் என்னின் - அடியோடு அழியும்படி கொன்று வெல்லுவார்க ளென்றல், யானையின் இனத்தை எல்லாம் இள முயல் கொல்லும் - யானைக் கூட்டங்களையெல்லாம் ஒரு சிறுமுயல் கொன்றுவிடும்; பின்னும் - மற்றும், கூன் உகிர் மடங்கல் ஏற்றை குருளை மான் கொல்லும் - வளைந்த நகங்களை யுடைய ஆண்சிங்கங்களை ஒருமான்குட்டி கொன்றுவிடும்,' என்றன் - என்று சொன்னன்; (எ - று.)

என்றது, யானையை முயலும், சிங்கத்தை மானும் கொல்லுதல் அசம் பாவிதமாவதுபோல, அரக்கரை மனிதர் கொல்லுதலும் என்றும் நிகழாது என்பதாம்: இக்கருத்தைப் பரிகாசமாக இங்ஙனங் கூறினன். இங்ஙனங் கூறுவது அணியியலில் **போய்த்தற்குறிப்பணி** யெனப்படும்: வடநூலார் மித்யாத்யவஸிதியென்பர். சீதைக்கு, மான் மருண்ட பார்வையில் மாத்தி ரமேயன்றி வனத்திலிருத்தலாலும் இங்கு உவமையாம். மானவள்-உவமத் தொகைநிலைத்தொடர்; இனி, தனிமொழியாகக்கொண்டு, மானத்தைப் பாதுகாக்கும் நோக்கமுடையவளென்றும் பொருள்கொள்ளலாம்; அன்றி, மானமென்றது-ஊடலில்நிகழும் கோபமுமாம்; இக்காரணத்தால் வடமொழி யில் பெண்களுக்கு 'மானிநீ' என்று ஒருசிறப்புப்பெயர் வழங்குதல் காண்க. அன்றி, மானவனென்று மனிதனுக்குப் பெயருண்மையால், அதன் பெண்பா லாகக்கொண்டு, மானுடமாது என்று உரைத்தலுமொன்று. பாலகாண்டத் தில் "மானவமற்றுங்கேளாய்" என்றவிடத்தில் இராமனே மானவனென்ற தும் காண்க. 'மீனென மிளிருங் கண்ணுய்' என்று விளித்தது, அவளுடைய திருக்கண்ணின் நோக்கழகில் தான் ஈடுபட்ட தன்மையைப் புலப்படுத்தி யவாறு. குருளை - இளமைப்பெயர். பி - ம்:—[1]ஆனவள். [2]ஏற்றின்குழுவை.

ருஅ.—அதற்குச்சீதை 'விராதன் கரன் முதலியோரை இராமன் கொன்றதை நீர் அறியீரோ?' என்றல்.

மின்றிரண் டனைய பங்கி விராதனும் வெகுளி [1]பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்முதற் கணைக்கி லோரும்
பொன்றிய பூச லொன்றுங் கேட்டிலிர் போலு மென்ரு
ளல் [2]றவற் கடித்த தன்னி மழைக்கணீ [3]ரருவி சோர்வாள்.

(இ - ள்.) 'மின் திரண்டு அனைய - மின்னல் திரண்டாற்போல விளங்குகின்ற, பங்கி.- செம்பட்டமயிரையுடைய, விராதனும் - விராதனென்னும் அரக்கனும், வெகுளி பொங்க கன்றிய மனத்து - (சூர்ப்பணகையின் பரிபவத்தைக்கண்டு) கோபம் அதிகப்படத் தபித்த மனத்தையுடைய, வென்றி- வெற்றியுள்ள, கரன்முதல் கணக்கு இலோரும் - கரன்முதலாகிய அளவிறந்த அரக்கர்களும், பொன்றிய - (இராமபிரானால்) இறந்தொழிந்த, பூசல் ஒன்றும் - போர்ச்செய்தியைப்பற்றி ஒருசிறிதும், கேட்டிலிர்போலும் - (நீர்) கேள்விப்பட்டீரில்லைபோலும்,' என்றுள் - என்றுசொன்னாள்: (இங்ஙனம் சொல்லும்பொழுது அப்பிராட்டி), அன்று அவற்கு அடுத்தது உன்னி - அக்காலங்களில் அவ்விராமனுக்கு (அவ்வரக்கர்களால்) நேர்ந்த இடையூறுகளைச் சிந்தித்து, மழை கண் நீர் அருவி சோர்வாள் - மழைப்பெருக்குப்போல(த் தனது) கண்களினின்று நீர்ப்பெருக்கைச் சொரிபவளாளுள்; (எ - று.)

விராதனும் கரன்முதலியோரும் அழிவடைந்த செய்தியைக் கூறும் பொழுது, அவர்களால் முதலிலுண்டான இடையூறுகளைக் கருதிக் கண்ணீர்பெருக்கியது, பெண்களுக்கு இயற்கைக்குணமாகிய மடப்பத்திலு லென்க. இனி, அன்று அவற்கு அடுத்தது உன்னி என்பதற்கு-மான்பின் சென்ற அன்றைத்தினத்தில் அவ்விராமபிரானுக்கு நேர்ந்த துன்பத்தை நினைத்து என்றும் உரைத்து, அன்றைக்கு மாறைத்தொடர்ந்து சென்ற விடத்து இராமனுக்குப் பிராணபாயம்நேர்ந்ததென்று சங்கித்துள்ளா ளாதலால் அதுபற்றிக் கண்ணீர்சொரிந்தன ளென்றல் சிறவாது. **பி - மி:—** [1]பொங்கி. [2]அவர்க்கு. [3]ஆலி. (அசுக)

நுகூ—மற்றும் சீதை 'அரக்கரனைவரும் விரைவில் அழிவர்' என்றல்.

வாளரி வள்ள [1]றன்ன லிலங்கைமா நிருத செல்லாங்
கேளொடு [2]மறியு மாறும் வானவர் கிளரு மாறு
நாளையே காண்டி ரன்றே நவையிலி ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவ மென்றுள்.

(இ - ள்.) 'வாள் அரி வள்ளல்தன்னல் - ஒளியையுடைய சிங்கம்போன்ற இராமபிரானால், இலங்கை மா நிருதர் எல்லாம் - இலங்கையிலுள்ள பெரிய அரக்கர்கள் யாவரும், கேளொடு மறியும் ஆறும் - உறவினத்துடனே அழியும் விதத்தையும், வானவர் கிளரும் ஆறும் - (அதனால்) தேவர்கள் உயர்வடையும் விதத்தையும், நாளையே காண்டிர் அன்றே - நாளைக்கே பார்ப்பீரன்றே! மீள் அரு தருமந்தன்னை - நீங்குதற்கு அரியதான தருமத்தை, பாவம் வெல்லுமோ-பாவம் வென்றுவிடுமோ? நவை இலிர் உணர்கிலீரோ - குற்றமற்ற முனிவராகிய நீர் (இதனை) அறியீரோ?' என்றுள்-என்றுஞ் சொன்னாள், (சீதை); (எ - று.)

'வாளரி' என்பதற்கு-பகைவர்களை வாளினால் அரியுந்தன்மையுள்ள என்றும் பொருள்கொள்ளலாம். வள்ளல் - உதாரகுணமுடையவன். 'நாளை

யே' என்றது, விரைவுதோன்ற. அன்றே - தேற்றம். 'தருமத்தன்னை வெல்லுமோ பாவம்' என்றது-பாவிகளாகிய அரக்கர் நல்லொழுக்கமுடைய முனிவர் முதலியோரை வெல்லும் ஆற்றலுடையராக என்றும் இரார் என்ற வாறு; தருமசொரூபியான ஸ்ரீராமனைப் பாவிகளாகிய அரக்கர் வெல்லமாட்டார் என்றவாறுமாம். கீழ் அம்முனிவன் "மயக்கறு முலக மூன்றின் வாழ்பவர்க்கனைய வல்லோர், இயற்கையிற் றிரியினல்லா லியற்றலாம் நெறியென்" என்றதைக் கண்டித்துக் கூறுவாள், 'நவையிலிருணர்கிலீரோ' என்றாள். பி - மீ:—[1]சொன்னமான்கணம் திருத்தன்னர், சொன்ன வானுயரரக்கராளேர். [2]மடியுமாறும். (அஎ०)

கூ०.—அதுகேட்டு இராவணன் கோபங்கொள்ளுதல்.

[1]தேனிடை யமுத ளாய வன்னமென் [2]சிலசொன் மாலை
தானுடைச் செவிக ளூடு [3]தவழுறத் தளிர்த்து வீங்கு
மூனுடை யுடம்பி னனு முருகெழு மான மூன்ற
மானிடர் வலிய ரென்ற மாற்றத்தாற் சிற்றம் வைத்தான்.

(இ - ள்.) தேனிடை அமுது அளாய அன்ன - தேனிலே அமிருதங் கலந்தவற்றைப் போன்ற, மெல் - மென்மையான, சில சொல் மாலை-(சீதையினது) சில சொற்களின் வரிசை, தான் உடை செவிகளூடு தவழுற - தான் உடைய [தன்னுடைய] காதுகளிலே நுழைய (அதனால்), தளிர்த்து வீங்கும்-புளகித்துப் பூரிக்கின்ற, ஊன் உடை உடம்பினனும் - தசைக்கொழுப் பையுடைய உடம்பையுடையவனான இராவணனும், மானிடர் வலியர் என்ற மாற்றத்தால் - 'மனிதர் [ராமலக்ஷ்மணர்] (அரக்கரினும்) ஆற்றலுடையவர்' என்று (அவள்) சொன்ன வார்த்தையால், உரு கெழு மானம் ஊன்ற உருவம் நிறைந்த [குறைவற்ற] அபிமானம் மேலிட, சிற்றம் வைத்தான் - (அவள்விஷயத்தில் மனத்தில்) கோபங்கொண்டான்; (எ - று.)

சீதையினிடத்துக் காதல்கொண்ட இராவணன், அவளுடைய திருவாய்மலரினின்று வெளிப்படும் மிக இனியசொற்கள் சிலவற்றைக் கேட்டு ஆனந்திக்கக் கருதியவனுப் அவளோடு சம்பாஷணைசெய்ந்நி அப்பொழுது அவள்பேசிய பேச்சுக்களைக் கேட்டுக் களிப்புற்று அதனால் உடல்புளகித்துப் பூரிப்புக்கொள்ளும் நிலையினனாயினும், மானத்தில் நோக்குடையவனுதலால், அவள் 'அரக்கரினும் மனிதர் வலியர்'என்று சொன்ன சொல்லைக் கேட்ட வளவிலே, தன்மானத்திற் கருத்துஊன்றியதனாற் கோபங்கொண்டனனென் பதாம். ஊனுடையுடம்பினன் - ஊனைத்தின்று ஊனைப்பெருக்கும் அரக்கனுகிய மாபாவி யென்றபடி. பி-மீ:--[1]தேனுடன். [2]சின்சொன்மாலை. [3]தவழ்வுற.

கூக.—இதுவும், அடுத்தகவியும் - இராவணனது கோபவார்த்தை.

சீறின னுரைசெய் வானச் [1]சிலையவலிப் புல்லி யோர்கட்
கிறைரு மனிதன் செய்தா னென்றெடுத் தியம்பி னீயேற்

றேறுதி நாளை யேயவ் விருபது [2]திண்டோள் வாடை
வீறிய பொழுது பூளை வீயென வீவ னன்றே.

(இ - ள்.) சீறினன் - (இவ்வாறு அபிமானத்தாற்) கோபங்கொண்டவனை இராவணமுனிவன், உரைசெய்வான் - சொல்வான்:—அ சிலை வலி புல்லியோர்கட்கு - வில்வலிமையில் அற்பராகிய (விராதன்முதலிய) அவ்வரக்கர்களுக்கு, ஒரு மனிதன் - ஒருமனிதனான இராமன், ஈறு செய்தான் - அழிவைச்செய்தான், என்று எடுத்து இயம்பினும் எல் - என்று எடுத்துச் சிறப்பித்துச் சொல்லினையாயின், நாளையே தேறுதி - (அதன்முடிவை) நாளைக்கே நீ கண்டு)தெளிவாய்; அ இருபது திண் தோள் வாடை-(அவ்விராவணனது) வலியஇருபதுதோள்களின்காற்று, வீறிய பொழுது-வீசியடிக்கும் பொழுது, பூளை வீ என பூப்போல, வீவன் அன்றே-(நீ சொன்ன அம்மனிதன்) மிக எளிதில் அழிந்திடுவானன்றோ? (எ - று.)

பூளை - ஓர்செடி; இலவம்பஞ்சுமாம். அன்றே - தேற்றம். பி - ம்:— [1]சிறுவலி, தெறுவலி. [2]திரடோள். (அஎஉ)

கூ உ. மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை யிடிக்க வேண்டி
னீரினைக் கலக்க வேண்டி னெருப்பினை யவிக்க வேண்டிற்
பாரினை [1]யெடுக்க வேண்டிற் [2]பலவினை சிலசொல் [3]லேழா
யாரெனக் கருதிச் சொன்ன யிராவணற் [4]கரிதென் னென்றான்.

(இ - ள்.) சில சொல் ஏழாய் - (மனத்தில்தோன்றுகிறபடி) சிலசொற்களைக் கூறுகிற பேதைமையுடைய பெண்ணே! மேருவை பறிக்க வேண்டின்-மகாமேருகிரியைப் பெயர்த்தெடுக்க விரும்பினாலும், விண்ணினை இடிக்க வேண்டின் - அண்டகோளத்தின் மேல்முகட்டை இடிக்க விரும்பினாலும், நீரினை கலக்க வேண்டின் - கடலின்நீரைக் கலங்கச்செய்ய விரும்பினாலும், நெருப்பினை அவிக்க வேண்டின் - (அக்கடலிடையிலுள்ள) வடவாமுகாக்கினியை அவித்துவிட விரும்பினாலும், பாரினை எடுக்க வேண்டின்-பூமிமுழுதையும் ஒருசேரத் தூக்கியெடுக்க விரும்பினாலும், பல வினை-இவ்வகையான பலபெருந்தொழில்களுள், இராவணற்கு அரிது என் - இராவணனுக்கு முடியாத காரியம் எது? (அங்ஙனமாக), யார் என கருதி சொன்னாய் - (அவனை) யாரென்று நினைத்து எளிமைப்படக்கூறினாய், என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

ஏழாய் - ஏழை யென்பதன் ஈறுதிரிந்த விளி. ஏழாய் + யார் = ஏழாயார்; தனிக்குறிலெச்சாராத யகரம், யகரம்வரக் கெட்டது பலவினை சில சொல் என்றுஎடுத்து, அவ்வகையான பல காரியங்களும் இராவணனுக்குச் சில சொல்லளவிலே நிகழுமென்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும்; இனி, இவ்வகையான பலகாரியங்களிற் சிலவற்றைச்சொல்: அவற்றில் இராவணனுக்கு அரியது யாது? என்றலும் ஒன்று. பி - ம்:—[1]இடக்க. [2]பல சிலவினை. [3]ஏழை. [4]அந்தோ. (அஎக)

கூஉ.—அதற்குச் சீதை கூறத்தக்க சமாதானவார்த்தை.

அரண்டருந் திரடோள் சால வுளவெனி னுற்ற லுண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன்
நிரண்டதோள் [1]வனத்தை யெல்லாஞ் சிறியதோர் பருவந் தன்னி
லிரண்டுதோ ளொருவ னன்றே மழுவினு லெறிந்தா னென்றாள்.

(இ - ள்.) அரண் தரு - பாதுகாவலைச் செய்கிற, திரள் தோள் - திரண்டதோள்கள், சால உள - மிகுதியாகவுள்ளன, எனின் - என்றால், ஆற்றல் உண்டோ - (அதனால்) ஒருவல்லமை உண்டோ? கரண்டம் நீர் இலங்கை வேந்தை - நீர்க்காக்கைகள்வாழப்பெற்ற கடலின்நீர் சூழ்ந்த இலங்காபுரியின் அரசனை இராவணனை, சிறை வைத்த - சிறைச்சாலையில் வைத்த, கழல் கால் வீரன் - வீரக்கழலையணிந்த காலையுடைய வீரனை கார்த்தவீரியார்ச்சுனனது, திரண்ட தோள் வனத்தை எல்லாம் - பலவாய்த்திரண்ட [பருத்த] தோள்களாகிய காடுமுழுவதையும், இரண்டு தோள் ஒருவன் - இரண்டு தோள்களையேயுடைய ஒருமனிதனுகிய பரசுராமன், சிறியது ஓர் பருவத்தன்னில் (தனது)சிறுபிராயத்திலே, மழுவினுல் எறிந்தான் அன்றே-கோடாலிப் படையால் துணித்திட்டானன்றே? என்றாள் - என்றுசொன்னுள்; (எ-று.)

இருபதுதோளுடைமைமாத்திரத்தால், இரண்டுதோள்களையுடைய தசரதராமனினும் இராவணன் வலியவனுகான்; இராவணனது அவ்விருபது தோள்களையும் பிடித்துக்கட்டி அவனைச் சிறைபிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனனது ஆயிரந்தோள்களையும் கோடாலியினுல் துணித்துத்தள்ளிய பரசுராமன் இரண்டுதோள்களையுடையவனே யென்றன ளென்பதாம். கீழ் அவன் 'அவ்விருபதுதிண்தோளவாடை வீறியபொழுது' என்று சிறப்பித்துக் கூறியதைக் கண்டித்தவாறு, இது. "மறிக்குங் கயற்கண்ணி பங்காளன் வாழ் வெள்ளிமால்வரையைப், பறிக்குங் கபடன் பணைப்புயமோ அவன்பைங்கட கஞ், செறிக்கும் புயஞ் செற்ற ஆயிரந்திண்புயமோ அவற்றைத், தறிக்குந் திறமழுவோ அரங்கா சயத்தா ருடைத்தே" என்ற திருவரங்கத்துமாலைச் செய்யுள் இங்கு அறியத்தக்கது.

"மெய்சென்று தாக்கும் வியன்கோலடி தன்மேற், கை சென்றுதாக்குங் கடிது" என்றபடி கை உடலை விரைந்துபாதுகாத்தலால், 'அரண்தரு திரள் தோள்' எனப்பட்டது. கரண்டம் - காரண்டவமென்ற வடசொல்லின் திரிபு. 'தோள்வனம்' என்றது, தோளின்தொகுதி யென்றபடி; "தாமரைக்காடு" என்றற்போல. பி - மீ:—[1]வலத்தை.

இராவணன் திக்குவிசயஞ்செய்து வருகிறபொழுது கார்த்தவீரியார்ச்சுனனது மாகிஷ்மதிநகரத்திற்குச் சென்று போர்செய்ய முயலுகையில், அங்குள்ளார் 'எங்களரசன் தனக்குரிய மாதர்களுடனே போய் நருமதையாற்றில் ஜலக்கிரீடை செய்கின்றன்' என்று சொன்னதனுல், அங்கிருந்து நருமதையாற்றைச் சேர்ந்து அதில்நீராடிக் கரையில் மணலால் சிவலிங்கத்தை

அமைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசிக்கும்பொழுது, அந்தயாற்றில் மேற்கே இறங்கியுள்ள கார்த்தவீரியார்ச்சுனன் தனதுநீர்விளையாட்டுக்கு அந்நீர்ப்பெருக்குப் போதாதென்ற கருத்தால் அந்நீரைத் தனதுஆயிரங்கைகளுள் ஐந்நூற்றினால் தடுத்து நீரை மிகுவித்து மற்றைஐந்நூறுகைகளாற்கொண்டு பலவகைவிளையாட்டுக்கள் நிகழ்த்த அதனால் எதிர்வெள்ளமாகப்பொங்கி வருகிற நீர்ப்பெருக்குத் தனதுசிவலிங்கத்தை நிலைகுலையச் செய்ததனாற் கோபங்கொண்டு இராக்கதசேனையுடனே சென்று அருச்சுனனை எதிர்த்துப் போர்செய்கையில், அவன் தனது ஆயிரங்கைகளுள் இருபதினால் இராவணனது இருபதுகைகளைப் பற்றி மற்றையகைகளால் அவனைப் பலவாறுவருத்திக்கொண்டுபோய்ச் சிறையில் வைத்திட, அதனைவிபீஷணனால்அறிந்த அவன் பாட்டனாராகிய புலஸ்தியமகாமுனிவர் அருச்சுனனிடம் வந்து வேண்டி அவனுக்கு 'ராவணஜித்' என்ற ஒரு பெரும்பெயரைக் கொடுத்து, இராவணனைச் சிறைவிடுவித்துச் சென்றனரென்பதும், இவ்வருச்சுனன் ஒருகாலத்தில் சேனையுடனே வனத்திற்சென்று வேட்டையாடிப் பரசுராமனது தந்தையான ஜமதக்கிமுனிவரது ஆச்சிரமத்தை அடைந்து அவரனுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில் அவரிடமிருந்த ஓமதேனு அவருக்குப் பலவளங்களையும் எளிதிற் சுரந்தளித்தமை கண்டு அதனிடம் ஆசைகொண்டு அப்பசுவை அவரனுமதியில்லாமல் வலியக்கவர்ந்துபோக, அதனையறிந்த அப்பார்க்கவராமர் பெருங்கோபங்கொண்டு ஆயுதங்களுடனே சென்று கார்த்தவீரியார்ச்சுனனுடன் போர்செய்து அவனைப் பதினொரு அக்ஷௌகிணிசேனையுடனே நிலைகுலைத்து அவனது ஆயிரந்தோள்களையுந் தலையையும் தமது கோடாலிப்படையால் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டா ரென்பதும், இங்குக்குறித்த வரலாறுகள். (அஎச)

சூசை.—இராவணன் பெருங்கோபங்கொண்டு மாயத்துறவிவேடத்தை விடுத்தல்.

என்றவ ளுரைத்த லோடு மெரிந்தன நயனந் திக்கிற்
சென்றன திரடோள் வானந் தீண்டின மகுடந் திண்கை
யொன்றொடொன் றடித்த மேகத் துருமென [1]வெயிற்றி னேளி
மென்றன வெகுளி பொங்க விட்டது மாய வேடம்.

(இ-ள்.)என்று அவள் உரைத்தலோடும்-என்றுஅந்தப் பிராட்டிசொன்ன வளவிலே, நயனம்-(இராவணனுடைய) கண்கள், எரிந்தன - (கோபத்தால்) தீஎழப்பெற்றன; திரள் தோள் - திரண்ட தோள்கள், திக்கில் சென்றன - (கோபாவேசத்தாற் புடைபருத்து) திக்குக்களை அளாவி வளர்ந்துசென்றன; மகுடம் - முடிகள், வானம் தீண்டின - (கோபத்தோடெழுந்ததனால்) மேலுலகத்தைத் தொட்டன; திண் கை - வலிய கைகள், ஒன்றொடு ஒன்று அடித்த-ஒன்றோடொன்று அறைந்தன; எயிற்றின் ஒளி - பல்வரிசைகள், மேகத்து உரும் என - மேகத்தினின்றுண்டாகும் இடிமுழக்கம்போலப் பேரொலியுண்டாக, மென்றன - கடித்தன; வெகுளி பொங்க - (இவ்வாறு)

கோபம்மிக, மாய வேடம் விட்டது - (அவன்) மாயையாற் கொண்டிருந்த முனிவேடம் (அவனை) விட்டுநீங்கிற்று; (எ - று.)

ஓளி யென்பது ஒழுங்கென்னும் பொருளதாதலை, பாலகாண்டத்தில் "நிரைமணிக் குல்த்தி னுளி நீள்வகுத்த வோளிமேல், விரவு கைத்தலத்தில்" என்றவிடத்திலுங் காண்க. பி - ம்:—[1]எயிறுதம்மின். (அஎசு)

சுரு.—சீதை சங்கிக்குமாவில் அவள் தன் உருவங்காட்டல்.

இருவினை துறந்த மேலோ [1]ரல்லர்கொ லிவரென் றெண்ணி
யிரிவையு மைய [2]மெய்தா வாரிவன் முனென் றுன்றுந்
தெரிவரு [3]நிலைய ளாகத் தீவிடத் தரவந் தானே
யுருகெழு சீற்றம் பொங்கிப் பணம்விரித் துயர்ந்த தொத்தான்.

(இ - ள்.) அரிவையும் - (அத்துறவிவேடத்துறத்தைக் கண்ட) சீதா பிராட்டியும், 'இவர்—,இரு வினை துறந்த மேலோர் அல்லர்கொல் - (நல் வினை தீவினை யென) இருவகைப்பட்ட வினைகளை ஒழித்த மேன்மையை யுடைய சந்நியாசிகளில் ஒருவரல்லர்போலும்,' என்று எண்ணி - என்று நினைத்து, ஐயம் எய்தா - சந்தேகத்தை யடைந்து, 'இவன் தான் ஆர் என்று - 'இவன்பாவன்?' என்றுசங்கித்து, ஒன்றும் தெரிவு அரு நிலையள் ஆக - சிறி தும்அறியமாட்டாத நிலைமையையுடையவளாக,—(அவ்வளவில் இராவ ணன்), தீ விடத்து அரவம் தானே உரு கெழு சீற்றம் பொங்கி பணம் விரி த்து உயர்ந்ததுஒத்தான் - கொடிய விஷத்தையுடைய ஒருசர்ப்பத்தானே தாபம்மிக்ககோபம் அதிகப்பட்டுப் படத்தைவிரித்துக்கொண்டு மேலெழுந் ததைப் போன்றான்; (எ - று.)

என்றது, பலதலைகளையுடைய பாம்பொன்று சீறித் தனதுபடங்களை விரித்துக்கொண்டு நிமிர்ந்துநின்றாற்போல, இராவணன் கோபித்துத் தனது பத்துத்தலைகளையும் இருபதுகைகளையும் பரப்பி வெளிக்காட்டிக் கொண்டு எழுந்துதிர்ந்தனன் என்பதாம். கீழ் உஙு - ஆங் கவியில் "ஆமையி னிருக்கையன்" என்றதனால், தனதுபத்துத்தலைகளையும் இருபதுகைகளை யும் வேண்டியபடி அடக்கிவந்தமை கூறியவர்,இங்கு அவற்றை வெளிப்படுத் தியமை கூறினர். பி - ம்:—[1]அல்லன்கொலிவன். [2]எய்தியாவர்தாமென் றென்று. [3]நிலையதாக. (அஎசு)

சுஙு.—அப்பொழுது சீதை அஞ்சிநடுநடுங்கிய நிலைமை.

ஆற்றவெந் துயரத் தன்னை யாண்டுற்ற வலக்க [1]ணேக்கி
னேற்றமென் னினைக்க லாகு [2]மெதிரெடுத் தியம்ப லாகு
மாற்றமொன் றில்லை செய்யும் வினையில்லை [3]வரிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற காலத் துயிரெனக் குலைவு கொண்டாள்.

(இ - ள்.) ஆற்ற வெம் துயரத்து அன்னை - (இராமன்விஷயமான சிந் தனையால் முன்னமே) மிகவுங்கொடிய தன்பத்தையுடையளான அச்சீதா

பிராட்டி, ஆண்டு உற்ற-(அதன்மேலும்) அப்பொழுது (இதனால்) அடைந்த, அலக்கண் - துன்பத்தைக்குறித்து, நோக்கின் - கருதினால், எற்றம் என் நினைக்கல் ஆகும்-(அதனினும்) அதிகமாக வேறு எந்தத்துன்பத்தை எண்ண முடியும்? [எதையும் எண்ணமுடியாது என்றபடி]; எதிர் எடுத்து இயம்பல் ஆகும் மாற்றம் ஒன்று இல்லை - அவனெதிரிலே நின்று தைரியத்தோடு எடுத்துச்சொல்லத்தக்கதொரு வார்த்தையு மில்லை; செய்யும் வினை இல்லை - (அவனைவிட்டுத் தப்பிப்போதற்காகச்) செய்யத்தக்கதொரு செயலுமில்லை; (இங்ஙனம் பரிகாரமில்லாமல்), வரிக்கல் ஆகா கூற்றம் வந்து உற்றகாலத்து உயிர் என குலைவுகொண்டாள் - கட்டமுடியாத [தடுக்கவொண்ணாத] யமன் வந்துசேர்ந்தபொழுது உயிர் நடுங்குதல்போல நடுக்கமடைந்தாள்; (எ - று.)

பெருந்துன்பத்தின்மேல் அளவிலாத் துன்பமுற்றவளாய் யாதொன்றையுங் கருதவும்மாட்டாமல் செய்யவும்மாட்டாமல் யமனைக் கண்ட உயிர்போல மிகஅஞ்சி நிலைகுலைந்தன ளென்பதாம். அலக்கண் - சஞ்சலமான கண்; துன்பமுண்டாம்பொழுது கண்கலங்குதலால், அலக்கண் என்று துன்பத்திற்குப் பெயராயிற்று: இது, காரியத்தின்பெயர் காரணத்தின்மேல்நின்ற இலக்கணை. 'ஆகும்' என்பதை முற்றாகக்கொண்டு, 'என் எதிர் எடுத்து இயம்பலாகும்' என்பதற்கு - எந்தத்துன்பத்தை இதற்கு ஒப்பாக எடுத்துச் சொல்லக்கூடும்? என்று உரைத்தலும் ஒன்று. வரிக்கல். கு - சாரியை.

பி - மீ:—[1]நோக்கி. [2]பிறிது. [3]மதிக்கல். (அளஎ)

சூஎ.—இராவணன் சீதையை வெருட்டிப்பேசுதல்.

விண்ணவ ரேவல் செய்ய [1]வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு மானிடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா [2]யுன்றே லுன்னையான் பிசைந்து தின்ன
வெண்ணுவ னெண்ணிற் பின்னை யென்னுயி ரிழப்பெ [3]னென்றான்.

(இ - ள்.) 'விண்ணவர் - தேவர்கள், ஏவல் செய்ய - (எனக்குக்) குற்றேவல்தொழில்களைச் செய்யும்படி, வென்ற - (அவர்களைச்) சயித்துள்ள, என்னது, வீரம் - வல்லமையை, பாராய் - கருதாமல், மண்ணிடை புழுவின் வாழும் மானிடர் வலியர் என்றாய் - பூமியில் புழுக்கள்போல (மிகவும்எளியராய்) வாழ்கிற மனிதர்களோ (என்னினும்) வலிமையுடையவர்களென்று சொன்னாய்; (இங்ஙனஞ்சொன்ன நீ), பெண் என பிழைத்தாய் - பெண்பாலாதலால் உயிர்பிழைத்தாய்; அன்றேல்-அங்ஙனம் அன்றாயின், உன்னை யான் பிசைந்து தின்ன எண்ணுவன்-உன்னை நான் பிசைந்துதின்ன நினைப்பேன்; எண்ணில்-அங்ஙனம் எண்ணினால், பின்னை என் உயிர் இழப்பென்-பின்புனதுயிரை இழந்துவிடுவேன்,'என்றான்-என்றுசொன்னான்;(எ-று.)

தேவர்களுமுட்பட அனைவரையும் வென்ற எனதுபலபராக்கிரமங்களை ஒருபொருள்செய்யாமல் அற்பராகிய மனிதர்களை என்னைவெல்லும்வல்லமையுடையா ரென்று சிறப்பித்துக்கூறி என்னைநிந்தித்த நீ ஒரு பெண்ணைதலி

னல் 'பெண்கொலை பெரும்பாவம்' என்ற கொள்கைபற்றி உன்னை நான் கொல்லாதொழிந்தேன்: அன்றியும், உன்னை நான் பிசைந்துதின்னுமின், நீ இறக்கவே, உன்னிடத்து மிக்ககாதல்கொண்டுள்ள எனது உயிரும் நீங்கி விடுமென்பதுபற்றியும், அவ்வாறுசெய்யக் கருதினேனில்லை யென்றனன் என்பதாம். ஏவல் - ஏவப்படுங்காரியங்களுக்குத் தொழிலாகுபெயர். பாராய் என்பதற்கு - உடன்பாடாக, பார்ப்பாயாக என்றும் பொருள்கூறலாம். 'எண்ணில் பின்னை என்உயிர் இழப்பென்' என்றதை, இனி இராவணனுக்கு வருந் தீங்குக்குஏற்ப அவன்வாயில்வந்த அமங்களவார்த்தை யெனவுங்கொள்ளலாம். **பி - மீ:**—[1]வென்றவன். [2]அல்லை. [3]என்னை. (அஎஅ)

சூஅ. —உடனே இராவணன் அவளைச் சமாதானப்படுத்தித் தன்கருத்தைப் புலப்படுத்தல்.

குலைவுற லன்ன முன்னம் யாரையுங் கும்பி டாவென்
றலமிசை மகுட மென்னத் தனித்தனி யினிது தாங்கி
யலகில்பூ [1]ணமரர் மாத ரடி[2]யிணை யேவல் செய்ய
வுலக[3]மீ ரேழு மாளுஞ் செல்வத்து ளுறைதி யென்றன்.

(இ - ள்.) 'அன்னம் - அன்னப்பறவைபோன்றவளே! குலைவு உறல்-நடுக்கமடையவேண்டா; முன்னம் யாரையும் கும்பிடா - (இதற்குமுன்) எவரையும் வணங்காத, என் - எனது, தலைமிசை-தலைகளின்மேலே, மகுடம் என்ன - கிரீடங்களைத் தாங்குதல்போல, தனித்தனி - தனித்தனியே [ஒவ்வொருதலையிலுமாக], இனிது தாங்கி - (உன்னைக்) களிப்போடு நான் எடுத்துத்தூக்கிவைத்துக்கொண்டு கொண்டாட, அலகு இல் பூண் அமரர் மாதர்-அளவில்லாதஆபரணங்களையுடைய தேவமாதர்கள், அடி இணை ஏவல் செய்ய-(உனது) உபயபாதங்களின்கீழ் நின்று (உனக்குக்) குற்றேவல் தொழில்களைச் செய்ய, உலகம் ஈர் ஏழும் ஆளும் செல்வத்துள் உறைதி-பதினான்குலகங்களையும் பாதுகாக்கிற (எனது) அரசாட்சிச்செல்வத்தில் தலைமை பூண்டு வாழ்வாய்,' என்றன் - என்று சொன்னான்; (எ - ம்.)

என்றது, எனக்குஉரியளாவாய் என்றபடி. அன்னம் - உவமையாகுபெயர்; நடையில் ஒப்புமை. தாங்கியென்பதற்கு, உனதுஅடிகளையென்று செயப்படுபொருள் வருவித்தலுமாம். தாங்கி-தாங்க; எச்சத்திரிபு. **பி-மீ:**—[1]அரம்பை. [2]முறை. [3]ஓர். (அஎக)

சூக. —அதுகேட்டவுடனே சீதை இராவணனை நிந்தித்தல்.

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்
[1]கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக் காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை யொழுக்க [2]நோக்காப் பொங்கெரிப் புனித மீயு
மவியைநாய் வேட்ட தென்ன வென்சொலு யரக்க வென்னு.

இதுவும், அடுத்த கவியும்-குளகம்.

(இ - ள்.) (அதுகேட்ட பிராட்டி),—செவிகளை - (தனது) காதுகளை, தளிர் கையாலே - தளிர்போல்மெல்லிய (தன்) கைகளாலே, சிக்குற சேமம்

செய்தாள் - அழுந்தமூடிக்கொண்டு, (அவனைநோக்கி), 'அரக்க-இராக்கதனே! கவினும் வெஞ்சிலை கை வென்றி காகுத்தன் கற்பினேனை - அழகிய கொடியவில்லையேந்திய கையையும் வெற்றியையுமுடைய இராமபிரான் திறத்திலே கற்புநிலைமையையுடையளான [அவன்மனைவியாகிய] என்னை, புவியிடை ஒழுக்கம் நோக்கா பொங்கு எரி புனிதர் ஈயும் அவியை நாய் வேட்டது என்ன - உலகத்தில் உயர்ந்தோர்க்குரிய ஒழுக்கத்தைக்கருதி வளர்ந்தெரியும் வைதிகாக்கினியிலே பரிசுத்தரான முனிவர்கள் (தேவர்களின்பொருட்டு) இடும் அவிர்ப்பாகத்தை நாய் விரும்பினாற்போல, (விரும்பி), என் சொனாய் - என்னவார்த்தைசொன்னாய்?' என்ன - என்றுசொல்லி,-(எ - று.)—"என்றாள்" என அடுத்த கவியோடு முடியும்.

அப்படிப்பட்ட தீச்சொல்லைக் கேட்டு ஆற்றவெண்ணாமையால், காதுகளைக் கைகளால் உறுதியாகப் பொத்திக்கொண்டாள். எம்பெருமானது கையிலுள்ள வில்முதலிய படைக்கலங்கள் அன்போடு நோக்கும் அடியார்களுக்கு ஆபரணங்கள்போலத் தோன்றி அழகியனவாயிருத்தலையும், பகைமையோடு நோக்கும் எதிரிகளுக்கு ஆயுதங்களாகவே தோன்றி அச்சஞ்செய்தலையும் ஒருங்கே உடைமையால், 'கவினும் வெஞ் சிலை' எனப்பட்டது. நோக்கா ஈயும் என இயையும்; இனி, நோக்கா என்பதை ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சமாகக்கொண்டு, உலகத்து உயர்ந்தோர்க்கு உரிய ஒழுக்கத்தை நோக்காமல், 'என்சொனாய்' என முடிப்பினும் அமையும். அவி - ஹவிஸ்:வடசொல்:மந்திரபூர்வமாக அக்கினியில் ஓமஞ்செய்யப்படும் நெய்முதலிய தேவருணவு. என் சொனாய்-மிகவுந்தகுதியற்ற வார்த்தையைக் கூறினாயென்றபடி. 'என்சொனாய் அரக்க' என்றது, கொடிய அரக்கர்குலத்தானதிலின் இங்ஙனங் கூறினாய்போலும் என்றவாறும். கவினும்-எதிர்காலப் பெயரெச்சம். பி-ம்:—[1]கவியையுங்கடக்கும். [2]நோக்காய். (அஅ0)

எ0.—சீதை இராவணனை அதட்டிப்பேசுதல்.

புன்னுனை நீரி னெய்தாப் போதலே புரிந்து நின்ற
[1]மின்னுயி ரிழத்த லஞ்சி யிற்பிறப் [2]பழித்த [3]லுண்டே
மின்னுயிர்த் துருமிற் சீறும் [4]வெங்கணை விரவா முன்ன
முன்னுயிர்க் குறுதி [5]நோக்கி னெளித்தியா லோடி யென்றாள்.

(இ - ள்.) 'புல் நுனை நீரின் - புல்லின்நுனியில் தங்கியிருக்கிற நீர்த்துளிபோல, நொய்து ஆ போதலே - எளிதாக விரைவில் ஒழிதலையே, புரிந்துநின்ற - இயல்பாகக்கொண்டுநின்ற, இன் உயிர்-இனிய(எனது)உயிரை, இழத்தல் - இழந்துவிடுதற்கு, அஞ்சி-பயப்பட்டு, இல் பிறப்பு அழிதல்-உயர்ந்தகுலத்திற்பிறந்ததற்குஏற்ற ஒழுக்கத்தை(யான்)இழத்தல், உண்டே - உளதாமோ? [ஆகாதென்றபடி]; மின் உயிர்த்து-மின்னல்போன்ற ஒளியை வீசிக்கொண்டு, உருமின் சீறும் - இடிபோல உக்கிரமாய்ச் சீறுந்தன்மையுள்ள, வெங் கணை-வெவ்வியஇராமபாணம்,விரவா முன்னம்-(வந்து உன்மேற்) படுதற்குமுன்னமே, உன் உயிர்க்கு உறுதி நோக்கின் ஓடி ஒளித்தி-உனது உயி

ருக்கு உறுதியை [நிலைப்பேற்றை] ஆலோசிப்பாயாயின் ஓடி யொளித்துக் கொள்வாய்,' என்றுள் - என்றுசொன்னாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உன்கருத்துக்குயான்உடன்படேனாயின் நீ என்னைக்கொன்றிடுவாய் என்பதற்கு அஞ்சி யான் எனது கற்புநிலைகுலையேன் என்பது, முன்னிரண் டடியின் பொருள். புன்னாகநீரின் நொய்தாப்போதலே புரிந்துநின்ற இன் னுயிர்-"புன்னாகமேல் நீர்போல் நிலைபாமை யென்றெண்ணி" என்றார், நாலடியாரிலும். நுனையெனினும், நுனியெனினும் ஒக்கும். நொய்து-நொய்ம் மையென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும் பெயர். எவர்க்கும் உயிரினும் இனியது வேறுஇன்றுதலால், 'இன்னுயிர்' எனப்பட்டது; எனவே, உயிருக்கு இனிமை, இயற்கையடைமொழி யென்க. இற்பிறப்பு - கற்பொழுக்கத்துக்கு இலக்கணை. உண்டே, ஏ - எதிர்மறை. பி-ம்:—[1]என். [2]அழித்தல். [3]உண்டோ. [4]வெஞ்சரம். [5]நோக்கியொளித்தியா லொல்லை. (அஅக)

எக.—'உன்கணவனம்பு என்னை யாதுஞ்செய்யமாட்டாது' என்று இராவணன் கூறுதல்.

சென்றவ ணுரைக்க நின்ற விரக்கமி லரக்க [1]ரேந்த
லுன்றுணைக் கணைவ [2]னம்போ வுயர்திசை சுமந்த வேங்கல்
வென்றிறன் மருப்பி னூற்றன் மடித்தவென் மார்பின் வந்தாற்
குன்றிடை தொடுத்து விட்ட பூங்கணை கொல்ல தென்றான்.

(இ - ள்.) என்று அவள் உரைக்க - என்று அச்சீதாபிராட்டி சொல்ல, நின்ற - கேட்டுநின்ற, இரக்கம் இல் அரக்கர் எந்தல் - இரக்கமில்லாத இராக்கதர்தலைவனான இராவணன், 'உன் துணை கணவன் எய்த அம்போ- உனக்குத்துணையாகிய கணவனான இராமன் எய்யும் அம்போஎன்றால், திசை சுமந்த உயர் ஓங்கல் வல் திறல் மருப்பின் ஆற்றல் மடித்த என் மார்பின் வந்தால் - திக்குக்களைச் சுமந்துநிற்கிற உயர்ந்த யானைகளின் [திக்கஜங் களின்] மிகவும்உறுதியான தந்தங்களின் வலிமையை ஒழியச்செய்த எனது மார்பினிடத்து(ப் பாய)வந்தால்,அது-அந்தஅம்பானது,குன்றிடை தொடுத்து விட்ட பூ கணைகொல்-மலையின்மேல் எய்துவிடப்பட்ட புஷ்பபாணமேயாம் [புஷ்பபாணம்போலப் பயன்பெறுதொழியும்],'என்றான்-என்றுசொன்னான்.

ஒருமலரை அம்பாகக்கொண்டு மலையின்மேல் எய்தால் அதனால் மலை க்கு ஒருசிறிதும் ஊறுபாடு உண்டாகாதவாறுபோல, இராமபாணத்தால் மிக வலியஎன்மார்பில் ஒருசிறிதும்ஊறுபாடுஉண்டாகாது என்றபடி. தன்மார் பின் மிக்கவலிமையை விளக்குதற்கு, திக்குயானைகளின் தந்தத்தை வலி கெடுத்த மார் பென்றான்; என்றது, இவன் திக்குவிசயஞ்செய்த காலத்தில் திக்குயானைகள் இவனை எதிர்த்துத் தமதுவலியகூரியதந்தங்களைக்கொண்டு இவன்மார்பில் தாக்கியபொழுது அத்தந்தங்கள் இவன்மார்பைப்பிளந்து அதனுட்சென்று ஊறுபடுத்தமாட்டாமல் ஒடிபட்ட தன்மையை எடுத்துக்

காட்டியவாறும். 'உன்தூணைக்கணவன்' என்றது, உனக்குத்தூணையான கண வன்; அதாவது-உன்னைப்போலப் பெண்தன்மையுடையான் என்று ஓரிகழ்ச் சிப்பொருளைத் தொனிப்பிக்கும். அம்போ, ஓ-தெரிநிலை. ஓங்கல்-உயர்ச்சியை யுடைய மலைக்குத் தொழிலாகுபெயராய், பின்பு, யானைக்கு உவமையாகு பெய ராதலால், இருமடியாகுபெயர். வன்திறல் - ஒருபொருட்பன்மொழி. கொல்-அசை: தேற்றமுமாம். பி - மீ:—[1]எய்த. [2]அம்பவ். (அஅஉ)

எஉ.—இராவணன் மீண்டும் இன்சொற்கூறிச் சீதையை வணங்குதல்.

அணங்கினுக் [1]கணங்க ணுய்நின் ஞைசநோ யகத்துப் பொங்க
வுணங்கிய வுடம்பி னேனுக் குயிரினை யுதவி யும்பர்க்
கணங்குழைமகளிர்க் கில்லாப் பெரும்பதங் கைக்கொ ளென்னை
வணங்கின னுலகந் தாங்கு மலையினும்வலிய தோளான்.

(இ - ள்.) 'அணங்கினுக்கு அணங்கு அனுய் - திருமகளுக்கும் ஒரு திரு மகள்போலச் சிறந்தவளே! நின் ஆசை நோய் அகத்து பொங்க - உன்னிடத் தேகொண்ட காமமாகிய நோய் என்மனத்தில் மிகுதலால், உணக்கிய உடம் பினேனுக்கு - வாடிய உடம்பையுடைய எனக்கு, உயிரினை உதவி-உயிரைக் கொடுத்து [காமவேதனையால்தான் இறவாதபடி என்விருப்பத்தை நிறைவே ற்றி], உம்பர் கணம் குழை மகளிர்க்கு இல்லா பெரு பதம் கைக்கொள் - மே லுலகத்திலுள்ள பலவாய்த்திரண்ட குழையென்னுங்காதணியையுடைய தேவமாதரனேவர்க்கும் கிடைக்கமாட்டாத மேலான பதவியைப் பெறுவாய்,' என்னு-என்றுசொல்லி, வணங்கினன் - (பிராட்டியின் திருவடிகளில் விழு ந்து) நமஸ்கரித்தான்: (யாவனெனில்), உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளான் - நிலவுலகத்தைத்தாங்குகிற மலையைக்காட்டிலும் வலிமையை யுடைய தோள்களையுடையவனுன இராவணன்; (எ - று.)

"திருவுக்குத் திருவாகிய செல்வா" என்றுற்போல, 'அணங்கினுக்கு அணங்கனுய்' என்றன்: அழகு உத்தமலிலக்கணம் இன்பநலம் முதலியவற் றில் திருமகளினும் மிகவும்மேலானவளே யென்றபடி. இனி, மிக அழகிய மோகினியென்னும் பெண்தெய்வத்துக்கும் அழகுமிகுதியால் மோகத்தை விளைப்பவளேயென்றும், தேவமாதர்க்கும் மேம்பட்ட ஒருதேவமாது போன் றவளே யென்றும் பொருள்கொள்ளலாம். 'உம்பர்க்கணங்குழைமகளிர்க் கில்லாப் பெரும்பதம்' என்றது - எல்லாத்தேவர்களையும் வென்று திரிலோ காதிபத்தியத்தைக் கைக்கொண்ட தனக்கு உரியவளாதலை. பி - மீ:— [1]அணங்கனுளே. [2]எல்லாம். (அஅங)

வேறு.

எங.—அப்பொழுது பிராட்டி அலறிக்கதறல்.

[1]தறைவா யவன்வந் தடிதா முதலுங்
கறைவாள் படவா விகலங் கினள்போ
லிறைவா விளையோ யெனவேங் கினளாற்
[2]பொறைதா னுருவா னதொர்பொற் புடையாள்.

(இ - ள்.) அவன் வந்து தறைவாய் அடி தாழுதலும் - அவ்விராவணன் அருகில்வந்து தரையில்விழுந்து சீதையின்பாதங்களே வணங்கிய வளவிலே, பொறை தான் உரு ஆனது ஓர் பொற்பு உடையாள்-பொறுமையென்பதே உருவுபடைத்திருப்பதான ஒப்பற்ற அழகையுடைய சீதை,—கறை வாள் பட ஆவி கலங்கினள் போல்-(இரத்தத்தோய்ந்த) கறையையுடைய வாளாயுதம் (தன்மேற்) படுதலால் உயிர்நிலை குலையப்பெற்றவள்போல, (நடுநடுங்கி), இறைவா இளையோய் என ஏங்கினள் - 'எனதுதலைவனே! அவனதுதம்பியே!' என்றுவிளித்துப் பரிதாபமாகக் கூவினள்; (எ - று.)

தரா என்னும் வடசொல்லின் திரிபாகிய தரையென்பது, எதுகைநயம் நோக்கித் தறையென விகாரப்பட்டது. பொறை - (உயிரைப்)பொறுப்பது: எனவே, உடம்பாயிற்று: பொறு-பருதி; பொறுத்தல் - சுமத்தல், தரித்தல்; ஐ-கருத்தாப்பொருள்விகுதி; அன்றி, சுமக்கப்படுவதென்ற பொருள்கொண்டு, ஐ-செயப்படுபொருள்விகுதி யெனினுமாம். "பொறையுள்நீங்கியக்கதா முயிரள்" என்று கீழ்ச் சூர்ப்பணகைப்படலத்து வந்துங் காண்க. இனி, மிக்க பொறுமையையுடையளாதல்பற்றி, பிராட்டிக்கு 'பொறை' என்று ஒருபெயர் கூறினரெனக் கொள்ளுதலும் ஒன்று. ஆல்-ஈற்றசை. [2]பொறைதானுயிர் போவதுபோற் புகல்வாள்என்ற பாடத்துக்கு, பொறை தான் உயிர் போவது போல் - உடல் உயிர்நீங்கப்பெற்றாற்போல (மிக்கவேதனையுற்று), புகல்வாள்- மற்றும் புலம்பிக்கூறுபவளானாள் என்க. பி - ம்:—[1]தறைவாயிடை.

இதுமுதல் ஒன்பதுகவிகள் - கீழ்ப்படலத்தின் உகo-ஆங் கவிபோன்ற கலிவிருத்தங்கள். (அசை)

எசு.—இராவணன் சீதையைத் தரையுடனே பெயர்த்தெடுத்தல்.

ஆண்டா [1]யிடைதீ யவனு யிழையைத்
[2]தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னில[4]மோ சனை[5]கீழ் புடையே.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, ஆயிடை - அவ்விடத்தில், தீயவன் - கொடியவனான அவ்விராவணன், ஆயிழையை தீண்டால் எனும் மேல் உரை சிந்தை செயா - பெண்ணைத்தொடாதே யென்று முன்பு தனக்குநேர்ந்துள்ள சாபவார்த்தையை நினைத்து, தூண் தான் எனல் ஆம் உயர் தோள் வலியால் - தூண்களே யென்று (உவமை) சொல்லத்தக்க உயர்ந்த தனதுதோள்களின் வலிமையினால், நிலம் கீழ் புடை யோசனை கீண்டான் - (சீதையிருந்த ஆச்சிரமத்தின்) இடத்தைக் கீழ்ப்புறத்தில் ஒருயோசனைதூரம் பேர்த்தெடுத்தான்; (எ - று.)

இங்குக்குறித்த சாபம் - இராவணன் திக்குவிசயஞ்செய்கையில் தேவலோகத்துக்குச்செல்லப்புறப்பட்டுக் குபேரனது அளகாபுரியினருகிற் செல்லுகையில், குபேரன்மகனான நளகூபரனை நோக்கிச் செல்லும் அவனது

காமக்கிழத்தியான அரம்பையைக் கண்டு காமுற்று அவளை வலியப்பிடித்துக் கற்பழித்தவளவிலே, அவள் வருந்திச் சினந்து இராவணனை நோக்கி 'இனிநீ எந்தமகளிரையேனும் அவருடன்பாடின்றி வலியத்தீண்டின் அவர்களது கற்பின்கனலால் எரிந்தழிவாய்' என்று வைதது மன்றி, அச்செய்திபை அறிந்த நளகூபரனும் 'இனி இராவணன் ஒருவருக்குரியமாதரை வலியத்தீண்டுவானுயின், தலைவெடித்து இறக்கக்கடவன்' என்று சபித்தமை. யோசனை காதம் என்பன-ஒருபொருளன என்பர்; காதத்தினும் யோசனை பேரளவின தென்றலும் உண்டு. நான்காம் அடியினுல், ஒருயோசனை அகலமும்ஆழமும் படப் பெயர்த்தன னெனக் கொள்ளலாம். தீண்டால் - எதிர்மறையொருமையேவல்; இதில் ஆல்-விகுதி. பி-ம்:—[1]ஆசுறு. [2]தீண்டாவயன்மேலுரை, தீண்டானயன்முன்னுரை. [3]செய்வான். [4]யோசனை. [5]கீழொடுமேல். (அஅநி)

எரு.—இராவணன் சீதையைத் தரையோடு எடுத்துத் தேரில் வைத்துக் கொண்டு ஆகாயமார்க்கமாக எழுதல்.

கொண்டா னுயர்தேர் [1]மிசைகோல் வளையாள்
கண்டா டனதா ருயிர்க்கண் டிலளான்
மண்டா னுறுமின் னின்மயங் கினளால்
விண்டான் [2]வழியா வெழுவான் விரைவான்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) உயர் தேர்மிசை கொண்டான் - (அங்ஙனம் பெயர்த்தெடுத்த நிலத்தை) உயர்ந்த தனதுதேரின்மேல் வைத்துக்கொண்டான்; (அச்செயலை), கோல் வளையாள் கண்டாள் - அழகியவளையல்களையணிந்த பிராட்டி பார்த்து, தனது ஆர் உயிர் கண்டிலள் - தனது அரிய உயிரை (உடம்பிலிருக்க)க் காணுதவளாய் [உயிர்நிலைகுலையப்பெற்று என்றபடி], மண் உறுமின் னின் மயங்கினள் - (தனக்குரியஇடமான மேகத்தை விட்டுத்) தரையில் விழுந்ததொரு மின்னற்கொடிபோலத் துவண்டு கலங்கினுள்; (அப்பொழுது இராவணன்), விண் வழி ஆ விரைவான் எழுவான் - ஆகாயமார்க்கமாக விரைவிற்கிளம்பிச் செல்லக் கருதியவனுய்,—(எ - து.)—"விடுதேர்என" என்று அடுத்த கவியோடு தொடரும். 'ஆல்' இரண்டும் - ஈற்றசை. 'தான்' இரண்டும்-அசை.

கோல் - கோல மென்பதன் விகாரம். 'தனது ஆருயிர் கண்டிலள்' என்பதற்கு - தனது அருமையான பிராணநாயகனுகிய இராமபிரானை வரக்கண்டிலாதவளாய் என்றும் பொருள்கூறலாம். மண்உறுமின்-இல்பொருளுவமை. பி-ம்:—[1]அது. [2]வழியாய். (அஅசு)

எசு.—பிராட்டி சோகித்துப் புலம்பலுறல்.

விடுதே ரெனவெங் கனல்வெந் தழியுங்
கொடிபோற் புரள்வாள் குலைவா ளயர்வா

டிடியா விழுவா டியரா [1]லெழுவாள்
[2]கடிதா வறனே யிதுகா வெனுமால்.

(இ - ள்.) தேர் விடு என-'தேரைச்செலுத்து' என்று (இராவணன் தனது தேர்ப்பாகனை நோக்கிக்) கூற, (அதுகேட்டவளவிலே சீதை), வெம் கனல் வெந்து அழியும் கொடி போல் - வெவ்வியதெருப்பில்வீழ்ந்து வெந்து அழிகிற பூங்கொடிபோல, புரள்வாள் - விழுந்து புரளுவாள்; குலைவாள்-நிலை குலைந்து நடுங்குவாள்; அயர்வாள்-சோர்வடைவாள்; துயரால் துடியா விழு வாள்-துன்பத்தால் துடித்து விழுவாள்; எழுவாள் - மீண்டும் எழுந்திருப் பாள்; 'அறனே - தருமதேவதையே! இது - இத்துன்பத்தினின்றும், கடிது ஆ கா - விரைவாக (என்னை)ப் பாதுகாப்பாயாக,' எனும் - என்றுசொல்லி வேண்டுவாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை. பி - ம்:—[1]அழுவாள், [2]கடியா, கடியாய். கடியாம். (அஅஎ)

எஎ.—இதுமுதல் ஐந்துகவிகள் - சீதை பலபொருள்களோநோக்கி இரங்கிக்கூறும் மொழிகள்.

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே [1]நிலைநேடி னர்போ
யுலையா வலியா ருழைநீ ருரையீர்.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மலையே - மலைகளே! மரனே - மரங்களே! மயிலே-மயில் களே! குயிலே - குயில்களே! கலையே - ஆண்மான்களே! பிணையே-பெண் மான்களே! களிறே - ஆண்யானைகளே! பிடியே - பெண்யானைகளே! நிலை யா உயிரே - ஒருநிலைகொள்ளாது நிலைகுலைகிற எனதுயிரே! நீர் - நீங்கள், நிலை நேடினர் போய் - (எனது கணவனர்) இருக்கும்இடத்தை நாடிச்செ ன்று, உலையா வலியாருழை அழியாத வலிமையையுடைய அவரிடத்தில், உரையீர் - (இச்செய்தியைச்) சொல்லுங்கள்; (எ - று.)

இங்ஙனம் தலைவி தலைவனைப் பிரிந்த சோகத்தாற் கேளாதவற்றைக் கேட்பனபோலவும், உணராதவற்றை உணர்வனபோலவும், உரையாதவற் றை உரைப்பனபோலவும் கூறுதற்கு விதி, தொல்காப்பியப்பொருளதிகாரத் தில் "உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல், மறுத்துரைப்பது போல் நெஞ்சமொடு புணர்த்துஞ்,சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச்,செய் யா மரபிற்றொழிற்படுத்தடக்கியும், அவரவ ருறுபிணி தமபோலச் சேர்த்தி யும்,.....இருவர்க்குமுரிய பாற்கிளவி", "ஞாயிறு திங்கள் அறிவே நாணே, கடலே கானல்விலங்கே மரனே, புலம்புறு பொழுதே புள்ளேநெஞ்சே,யவை யல பிறவும் நுவலிய நெறியாற், சொல்லுந போலவுங் கேட்குந போலவும், சொல்லியாங்கமையு மென்மனோர் புலவர்" என்றவற்றில் அடங்கும்; இவ் வாறு வருவன பிறவற்றுக்கும் இது கொள்க.

மரன் - ஈற்றுப்போலி. கலை, களிறு-ஆண்மைப்பெயர்கள். பிணை, பிடி-பெண்மைப்பெயர்கள். "இரலையும் கலையும் புல்வாய்க்கு உரிய", "புல்வாய் நவ்வி உழையே கவரி, சொல்வாய் நாடிற் பிணையெனப்படுமே", "வேழக்கு உரித்தே விதந்து களிறென்றல்", "பிடியென் பெண்பெயர் யானைமேற்றே" என்பன தொல்காப்பியம். [1]நிலை தேறினர் போய் என்றபாடத்திற்கு நிலைமையை அறிந்து சென்று என்றும் பொருள்கொள்ளலாம். 'நேடினர்' என்றது, முன்னிலைக்குப் படர்க்கைவந்த இடவழுவமைதி; நேடினிர் என்பது - வழாநிலையாம். எத்துணைவலிய பகைவரையும் எளிதில் அழிக்கும் ஆற்றலுடையா ரென்பாள், 'உலையாவலியார்' என்றாள்; இது உயர்வுப் பன்மை: இலக்குமணனை உளப்படுத்திய பன்மை யெனக் கொள்ளினுமாம். ()

எஅ. செஞ்சே வகலுர் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகா
ளஞ்சே லெனைநல் குதிரே லடியே
னுஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்.

(இ - ள்.) மஞ்சே - மேகங்களே! பொழிலே - சோலைகளே! வனதே வதைகாள்-காட்டில்உறையுந் தெய்வங்களே! செம்சேவகனுர் நிலை நீர் தெரிவீர் - நல்லவீரத்தன்மையையுடைய எனதுகணவனு ருள்ளவிடத்தை நீங்கள் அறிவீர்கள்ஆதலால், அஞ்சேல் என நல்குதிர் எல்-பயப்படாதே என்று (எனக்கு) அபயவார்த்தைகூறி (எனது நிலைமையை அவர்க்கு)க்கூறியருள்வீராயின், அடியேன் உஞ்சால் அது தான் இழிபோ உரையீர்-(அவர்க்கு)அடியவளாகியநான்(பிழைப்பேன் அங்ஙனம்)பிழைத்தால்அது(உங்கட்குக்)குறைபாடாமோ? [ஆகாது புகழ்த்தரு மன்றே?] சொல்லுங்கள்; (எ - று.)

நிலை - நிலைமையுமாம். உஞ்சால் - போலி. உரையீர் - எனக்குரைத்ததை அவரிடம் கூறுங்க ளெனினுமாம். (அஅக)

எக. [1]நிருதா தியர்வே ரற[2]நீன் முகில்போற்
சரதா ரைகள்[3]வீ சினிர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறுவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ.

(இ - ள்.) வரதா - (வேண்டியவர்க்கு வேண்டிய) வரங்களைத்தந்தருளும் ரகுநாதனே! இளையோய் - (அவனை அநுசரிக்குந்) தம்பியான லக்ஷ்மணனே! நிருத ஆதியர் வேர் அற - அரக்கர்முதலிய கொடியோர்கள் நிர்மூலமாம்படி, நீல் முகில் போல் - கரிய மேகம் போல, சர தாரைகள் வீசினிர் - அம்புமழையைச் சொரிந்துகொண்டு, சார்கிலிரோ-(இங்குவந்து)சேரமாட்டீர்களா? மறு ஏதும் இலா பரதா-குற்றம்யாதுமில்லாத பரதனே! இளையோய்-(அவனை அனுசரிக்குந்) தம்பியான சத்ருக்நனே! பழி பூணுதிரோ - (நீங்கள் இங்குவந்து இந்தஆபத்துக்கு உதவாமல் நாட்டில் வசித்தலால்) பழியை யடைவீர்களோ? (எ - று.)

''வரத னுதித்திட மற்றைய வெளியை'' என்றும், ''வரதனு மிளவலு மென மருவினரே'' என்றும் பாலகாண்டத்தில் இராமபிரானை வரதனென்ற திருநாமத்தாற் குறித்தமை காண்க. தனதுதாயாகிய கைகேயி இராமனை வனம்புகுவித்துத் தனக்குத் தந்த அரசாட்சியை அவள்கருத்தின்படி ஏற்றுக்கொள்ளுதலைத் தவிர்ந்து தவவேடங்கொண்டு வனம்புகுந்து தமைய னுரையடைந்து அரசுகொள்ளும்படி பலவாறுவேண்டி அவர் அதற்குடன் படாது இட்ட கட்டளையினால் மீள்வானுகி அவர்திருவடிநிலையை வேண்டிப் பெற்று முடியிலேந்திச் சென்று இராமபிரானையின்றி அயோத்திசேரவிரும் பாமல் நந்திக்கிராமஞ்சேர்ந்து அங்கு அப்பாதுகைக்குப் பட்டாபிஷேகஞ் செய்து அதன்கீழ்நின்று தான் இராசகாங்காரியம்பார்க்கும் களங்கமற்ற உயர்ந்தவொழுக்கத்தை யுடைய னுதலால், பரதனை 'மறுவேதுமிலா' என்ற அடைமொழி கொடுத்து விளித்தாள். இந்தஅடைமொழியைச் சத்ருக்னனுக்குங் கூட்டலாம்; அவனுக்கு மறுவேதுமில்லாமை - பாகவதசேஷத்வம்; அதாவது-எம்பெருமானுக்கு நேரே அடிமைபூணுதலினும் மேம்பட அவனுக்குஅடியவனான பரதனுக்கு அடிமைபூண்டமை: (வால்மீகிராமாயணத்தில்) சத்ருக்னனுக்கு 'அநக' னென்றஅடைமொழி கொடுத்தவிடத்து இங்ஙனங் கருத்துரைப்பர் பெரியோர். பி - ம்:—[1]திருதாதிபர். [2]நீள், நீர். [3]வீரினர். ()

அ0. கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவா
யோதா துணர்வா ருழையோ டிணைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ.

(இ - ள்.) கோதாவரியே - கோதாவரிநதியே! குளிர்வாய் - (இயல்பிற்) குளிர்ந்திருக்கிறாய்; குழைவாய் - (இயல்பில்) உள்நெகிழ்ச்சியுடையாய்; (ஆகலால்), மாதா அனையாய் - (உயிர்கட்கெல்லாம்) தாய்போன்றுள்ளாய்; மனனே தெளிவாய் - அகந்தெளிந்துள்ளாய்; நீதான் - (இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய) நீயாவது,ஓதாது உணர்வாருழை ஓடினை போய் - சொல்லாமலே (அனைத்தையும்) அறியுந் தன்மையரான [வரம்பிலாவறிவையுடைய] எனதுகணவனுரிடத்து ஓடிச்சென்று, வினையேன் நிலை சொல்லலையோ-(இப்பெருந் துன்பமனுபவித்தற்குக் காரணமான) தீவினையையுடைய எனது நிலைமையைச் சொல்லமாட்டாயோ? (எ-று.)

'மனன்' என்றது, இங்கு, உள்ளிட மென்றமாத்திரமாய் நின்றது. இனி, மனனே ஓதாது தெளிவு ஆய் உணர்வாருழை என்றுஎடுத்து, என் மனக்கருத்தைச் சொல்லாமலே தெளிவாகஅறியும் எனதுநாயகரிடம் என்று உரைத்தலும் பொருந்தும். ''இங்கிதஜ்ஞாஸ்து கோஸலாஃ'' என்றபடி கோசலதேயத்தவர் குறிப்பறிதலிற் சிறந்தவ ராதலால், அவர்கட்குத் தலைவ ரான இராமபிரான் 'ஓதாதுணர்வார்' எனப்பட்டார். இத்தொடர், வேதம் முதலிய எல்லாநூல்களையும் எவரும்ஓதுவிக்கவேண்டிய அவசியமில்லாமல் தாமே இயல்பில் அறியும் முற்றுணர்வுடையா ரென்றும் பொருள்படும். ()

அக. முந்துஞ் சுனைகாண் முழைவா ழரிகா
ளிந்தந் நிலனெடு மெடுத் தகைகந்தா
லேந்துந் தலைபத் துமலைந் [1]துலையச்
சிந்தும் படிகண் டு[2]சிரித் திடுவீர்.

(இ - ள்.) முந்தும் - (என்)எதிரிற்காணப்படுகிற, சுனைகாள் - மலைச் சுனைகளே! முழை வாழ் அரிகாள் - மலைக்குகைகளில் வாழ்கிற சிங்கங்களே! இந்தநிலனெடும் எடுத்த - இந்தத்தரையுடனே (என்னைப்)பெயர்த்தெடுத்த, கை நால்ஐந்தும் - (இவனது) இருபதுகைகளும், தலை பத்தும்-பத்துத்தலை களும், அலைந்து உலைய சிந்தும்படி கண்டு - (எனதுநிலைமையை நீங்கள் ஸ்ரீராமனுக்குத் தெரிவித்து அந்நாயகன் வந்துஎய்யும் அம்புகளால்) வருந்தி யழியச் சிதறும்படிசெய்து, சிரித்திடுவீர் - (அதனைக்கண்டு) இகழ்ச்சிச்சிரிப் புக்கொள்வீராக; (எ - று.)

'முழைவாளரிகாள்' என்ற பாடத்துக்கு - குகையிலுள்ள ஒளியை யுடைய சிங்கங்களே யென்க. பீ-மீ:—[1]உலையாய். [2]சிரிக்கிலிரோ. (அகூ)

வே று.

அஉ.—இராவணன் சீதைவார்த்தையைப் பரிகசித்தல்.

என்றின்ன பலவும் பன்னி யிரியலுற் றரற்று வாளைப் [ன்னைக்
பொன்[1]றுன்னு புணர்மென் கொங்கைப் பொலங்[2]குழை போரி லெ
[3]கொன்றுண்ணை மீட்பர் [4]கொல்லம் மானிடர் [5]கொள்க வென்னு
வன்றிண்கை யெறிந்து நக்கான் வாழ்க்கைநாள் வறிது [6]வீழ்வான்.

(இ - ள்.) என்று இன்ன பலவும் பன்னி - என்றுஇத்தன்மையன வான பலவார்த்தைகளையுஞ் சொல்லி, இரியல் உற்று அரற்றுவாளை - (தன்னிடத்தினின்று) மீளக் கருதிக் கூவுபவளான சீதையை நோக்கி,—வாழ்க் கைநாள் வறிது வீழ்வான்-(தனது)வாழ்நாள் வீணேஅழியப்பெறுபவனான இராவணன்,—'பொன் துன்னு - பொன்னிழையாகிய அணிகலங்கள் நிறை ந்த, புணர் மெல் கொங்கை - நெருங்கியமென்மையானதனங்களையும், பொ லம் குழை-பொன்னிழையாகிய குழையென்னுங்காதணியையு முடையவ ளே! அ மானிடர் - (நீ குறிக்கும்) அந்தமனிதர்கள், போரில் என்னை கொ ன்று—, உன்னை மீட்பர்கொல் - உன்னை மீட்டுக்கொள்ளவல்லரோ? கொ ள்க - (வல்லராயின்) கொள்வாராக,' என்ஞ-என்றுசொல்லி, வல் திண் கை எறிந்து நக்கான்-மிகவலிய (தனது)கைகளை (ஒன்றோடொன்று) அறைந்து பெருஞ்சிரிப்புச் சிரித்தான்; (எ - று.)

"விநாசகாலே விபரீதபுத்தி:" என்றபடி கேடுகாலங்கிட்டியதனாலே இப்படிப்பட்ட தீச்செயலைச் செய்தன னென்பார், 'வன்திண்கையெறிந்து நக்கான் வாழ்க்கைநாள் வறிதுவீழ்வான்' என்றார். சீதையைக் காமுற்ற காதல் கைகூடாமல் விரைவில்இறந்தொழிதலையே அதன்பயனாகப் பெறு

பவ னென்பது, 'வாழ்க்கைகாள் வறிதுவீழ்வான்' என்பதன் கருத்து. வாழ்க் கைகாள் - ஆயுள். பொன்துன்னு என்பதற்கு - பொன்னிறமான சுணங்கு பரவிய என்றுமாம். பி ம்:—[1]துன்னும். [2]குழாய். [3]வென்று. [4]கொல்லாம். [5]கொள்கை. [6]வீழ்ப்பான்.

இதுமுதல் ஏழு கவிகள் - கீழ்ப்படலத்தின் பதினொன்காங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (அகஉ)

அஉ.—சீதை இராவணனைநோக்கி 'நீ வல்லவனுயின் தேரைச்செலுத் தாதே' என்றல்.

வாக்கினு லன்னுன் சொல்ல மாயையால் வஞ்ச மானைன்
றுக்கினு யாக்கி [1]யுன்னை யாருயி ருண்ணுங் கூற்றைப்
போக்கினுப் புகுந்து கொண்டு போகின்றுய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயிற் கடவலுன் றேரை யென்றுள்.

(இ - ள்.) அன்னுன் - அவ்விராவணன், வாக்கினுல் (தனது)வாயால், சொல்ல - (இவ்வகை நிந்தைமொழிகளைக்) கூற,—'பிராட்டி அவனை நோ க்கி), 'மாயையால் - மாயையினுல், வஞ்சம் மான் ஒன்று ஆக்கினுப் - ஒரு பொய்ம்மானைக் கற்பித்தாய்; ஆக்கி - (அங்ஙனம் அதனை) உண்டாக்கி, (அத னைக்கொண்டு), உன்னை ஆர் உயிர் உண்ணும் கூற்றை போக்கினுப் - உனது அருமையானஉயிரைக் கவர்ந்தொழிக்கும் யமன்போலும் இராமபிரானை (இவ்விடத்தைவிட்டு ப் போகச்செய்தாய்; புகுந்து - (அவ்வாறுசெய்து அவ ரில்லாதசமயத்தில்) இங்கு வந்து, கொண்டு போகின்றுய் - (கள்ளன்போல என்னைக்) கவர்ந்துகொண்டு செல்லுகின்றுய்; பொருது நின்னை காக்கும் ஆ காண்டி ஆயின் - (அவரோடு) போர்செய்து உன்னைப்பாதுகாத்துக்கொள் ளும் வகையை அறிவாயானுல், உன் தேரை கடவல் - உனதுதேரைச் செலு த்தாதே,' என்றுள் - என்றுசொன்னுள்; (எ - று.)—பி-ம்:—[1]பின்னும். ()

அஊ.—மற்றும் சீதை இராவணனை நோக்கி 'நீ அச்சந்தாலேயே வஞ்ச னை செய்தாய்' என்றல்.

மீட்டுமொன் றுரைசெய் வா[1]ணீ வீரனல் விரைவின் மற்றுன்
[2]கூட்டரா மரக்கர் தம்மைக் கொன்றுங்கை [3]கொங்கை மூக்கும்
வாட்டினுர் வனத்தி லுள்ளார் மானிட ரென்ற வார்த்தை
கேட்டுமிம் மாயஞ் செய்த தச்சத்தின் கிளர்ச்சி யன்றே.

(இ - ள்.) மீட்டும் ஒன்று உரை செய்வாள் - மறுபடியும் ஒருவார்த்தை சொல்வாள்; (அது வருமாறு:—) 'நீ வீரன் எல் - நீ சூத்தவீரனுனல்,— உன்கூட்டர் ஆம் அரக்கர்தம்மை - உன்னுடைய கூட்டத்தாராகிய இராக் கதர்களை, விரைவின் கொன்று - சிறிதுபொழுதிலே கொன்று, உங்கை கொங்கை மூக்கும் வாட்டினுர் - உன்தங்கையினது கொங்கையையும் மூக் கையும் அறுத்தவர்களாகிய, மானிடர் - மனிதர்கள், வனத்தில் உள்ளார் - காட்டிலிருக்கிறார்கள், என்ற வார்த்தை - என்ற செய்தியை, கேட்டும்- (நீ)கேள்வியுற்றும், இ மாயம் செய்தது-(அவர்களை எதிர்த்துப்பொருது பழி

தீர்க்க முயலாமல்) இந்த வஞ்சனையைச் செய்தது, அச்சத்தின் கிளர்ச்சி அன்றே - (உனக்கு அவர்களிடத்து உள்ள) பயத்தின் மிகுதியினலன்றே'?.

'நீ வீரனேல்' என்றது, நீ வீரனுயின் இதுசெய்யாய் என்று அவனது வீரத்தை ஆட்சேபித்தவாறும். [1]நீவீரனே என்ற பாடத்துக்கு - இங்ஙனம் அச்சத்தால் வஞ்சஞ்செய்த நீயும் ஒருவீரனு! என்று இகழ்ந்ததாகப் பொருள் காண்க. 'உன்கூட்டராமரக்கர்' என்றது, தாடகைமுதல் கரன் இறுதியாக வுள்ளா ரனைவரையுங் குறிக்கும். பி ம்:—[2]கூட்டமாம். [3]மூலயும். (அகூடு)

அடு.—'மனிதரோடு பொருதல் இழிவன்றே?' என்று இராவணன் கூறல்.

மொழிதரு மளவி னவ்வகை கேளிது முரணில் [1]யாக்கை
யிழிதரு மனித ரோடே யான்செரு [2]வேற்ப லென்றல்
விழிதரு நெற்றி யான்றன் வெள்ளிவெற் பெடுத்த தோட்குப்
பழிதரு மதனிற் சாலப் பயன்றரும் வஞ்ச மென்றன்.

(இ - ள்.) மொழி தரும் அளவில் - (இவ்வாறு சீதை) சொன்னவள வி லே, (இராவணன் அவளேநோக்கி),'நங்கை-பெண்களிற்சிறந்தவளே! இது கேள் - (யான்சொல்லும்) இவ்வார்த்தையை நீ கவனித்துக்கேட்பாயாக: முரண் இல் யாக்கை-வலிமையில்லாத உடம்பையுடைய, இழிதரு மனித ரோடே-இழிவான மனிதர்களுடனே, யான் செரு ஏற்பல் என்றல் - நான் எதிர்த்துப் போர் செய்வேனுனல், (அச்செயல்), விழி தரு நெற்றியான்தன் வெள்ளிவெற்பு எடுத்த தோட்கு - (கெருப்புக் கண் பொருந்திய நெற்றியை யுடைய சிவபிரானது வெள்ளிமலையைப் பெயர்த்தெடுத்த (மிகவலிய என் னுடைய) தோள்களுக்கு, பழி தரும் - பழிப்பைத்தருமன்றே? அதனில் - அவ்வாறுபோரையேற்றுப் பழிப்பைப்பெறுவதைக்காட்டிலும், வஞ்சம் - வஞ் சனையே, சால பயன் தரும்-மிகவும் புகழாகியபயனைத் தருவதன்றே?' என் றான்-என்றுசொன்னுன்; (எ - று.)

என்கூட்டத்தாரைக் கொன்று என்தங்கையையும் மானபங்கஞ்செய்த அம்மனிதர்களே யான் எதிர்த்துப் பொருதுஅழிக்கத்தொடங்காமல் அவர் கட்கு இவ்வாறு வஞ்சனையால் தீங்குசெய்யத்தொடங்கிய காரணம்-நீசொல் லுகிறபடி அவர்களிடத்து எனக்கு அச்சமன்று: வலியற்ற மிகவும்எளிய அம்மனிதர்களே எதிராகக்கருதி யான் போர்தொடங்கினுல் மிகவும் அதிக மான எனது தோள்வலிமைக்கு நிந்தையுண்டாகு மென்பதுபற்றியே என் பதாம். வஞ்சனைதான் எனக்குப் பழிவிளைக்காமலே அவர்கட்குத் தீங்கு விளைத்தற்கு ஏற்ற தென்பான் 'சாலப்பயன்தரும் வஞ்சம்' என்றன். பி-ம்:—[1]ஆக்கை. [2]ஏற்பன், எதிர்ப்பன். (அகூடு)

அசு.—சீதை இராவணனை நிந்தித்தல்.

பாலையு மதனைக் கேளாத் தங்குலப் பணைஞர் தம்பாற்
[1]போவது குற்றம் வாளிற் பொருவது நாணம் போலா

மாவது கற்பி னுரை வஞ்சிக்கு மாற்ற லேயா
மேவமென் பழிதா [2]னென்னே யிரக்கமி லரக்கர்க் கென்றுள்.

(இ - ள்.) பாவையும் - சித்திரப்பதுமைபோல்அழகியவளும் கண்மணிப் பாவைபோல் அருமையானவளுமான பிராட்டியும், அதனை கேளா - அவ் வார்த்தையைக் கேட்டு, (இராவணனை நோக்கி), 'தம் குலம் பகைஞர்தம்பால் போவது குற்றம் - தமதுகுலத்துக்குப் பகைவர்களாகவுள்ளவர்களிடத்தில் (போருக்குச்) செல்வது குற்றமும், வாளின் பொருவது நாணம் போலாம்- (அவர்களுடனே) வாளினுற்போர்செய்வது வெட்கமுமாகும்போலும்; கற்பி னுரை வஞ்சிக்கும் ஆற்றலே - பதிவிரதாதருமமுடைய மாதரை வஞ்சனை செய்கின்ற வல்லமையே, ஆவது ஆம் - (குற்றமும் நாணமும் விலக்காமல் நல்லது) ஆகும்போலும்; இரக்கம் இல் அரக்கர்க்கு - இரக்கமில்லாத பாவிக ளான இராக்கதர்க்கு, ஏவம் என் - குற்றந்தான் யாது? பழிதான் என்னை - பழிதான் யாது?' என்றுள் - என்றுசொன்னாள்; (எ - று.)

அவன்சொன்னவார்த்தையின் கருத்தை இவ்வாறுகூறிப் பரிகசித்தன ளென்பதாம். மூன்றுமடிக்கு - வஞ்சனையே செய்துமுடித்தற்கு ஆவதாம் என்றும் பொருள்கொள்ளலாம். பாவை - உவமையாகுபெயர். ஏவம் - எவ்வமென்பதன் விகாரம். பி-மீ:—[1]போவதும். [2]என்னை. (அகவ)

அ — இதுமுதல் ஆறுகவிகள்-தாகம்: அச்சமயத்தில் சடாயு வந்து எதிரிலேகூறும்.

என்னுமவ் வேலை யின்கண் ணெங்கடா போவ [1]தெந்தே
நின்னிலென் றிடித்த சொல்ல னெருப்பிடைப் பரப்புங் கண்ணன்
மின்னென விளங்கும் வீரத் துண்டத்தன் மேரு வென்னும்
பொன்னெடுங் குன்றம் வானின் வருவதே போலு மெய்யான்.

(இ - ள்.) என்னும் அ வேலையின்கண் - என்றுசொல்லுகிற அச்சமயத் திலே,'--எங்கு அடா போவது எங்கே-அடா நீ போகிறது எங்கே?', எங்கே: நில் நில்-'நில்லு நில்லு' என்று இடித்த - இடிமுழக்கம்போல உரத்தகுரலாக அதட்டிக்கூறிய, சொல்லன் - சொற்களையுடையவனும், நெருப்பு இடை பரப்பும் கண்ணன் - கோபாக்கினியைத் தம்மிடத்திலே பரவச்செய்கிற கண் களையுடையவனும், மின் என விளங்கும் வீரம் துண்டத்தன் - மின்னல் போல ஒளிவீசிவிளங்குகிற வலியமூக்கையுடையவனும், மேரு என்னும் பொன் நெடு குன்றம் வானின் வருவதே போலும் மெய்யான் - மேருவென் னும்பொன்மயமான பெரியமலை வானத்திற் பறந்துவந்தாற்போலும் பெரிய உடம்பின் தோற்றத்தையுடையவனுமாய்,—(எ-று.)--'எருவையின்மன்னன் வந்தனன்' என மேல் கூஉ-ஆங் கவியில் முடியும்; அடுத்தசான்குசெய்யுள் களில் வரும் எச்சங்களுக்கும் அதுவே முடிக்குஞ்சொல். பி - மீ:—[1]என்ன.

அஅ. பாழிவன் கிரிக ளெல்லாம் பறித்தெழுந் தொன்றே டொன்று
பூழியி னுதிர விண்ணிற் [1]புடையுறக் கிளர்ந்து பொங்கி
யாழியு மூலகு மொன்று யழிதர முழுதும் வீசு
மூழிவெங் காற்றி தென்ன [2]விருசிறை யூதை மோத.

(இ - ள்.) பாழி வல் கிரிகள் எல்லாம் - பெரியவலியமலைகள்யாவும், புறித்து எழுந்து - நிலைபெயர்க்கப்பட்டு மேலெழுந்து, ஒன்றோடு ஒன்று பூழியின் உதிர-ஒன்றுடன் ஒன்று தாக்குண்டு புழுதிபோலப் பொடியாய்ச் சிந்தும்படியாகவும், விண்ணில் புடை உற கிளர்ந்து பொங்கி - ஆகாயத்தினிடத்திலே அளாவிமோத (க் கடல்) பொங்கியெழுந்து, (அதனால்),ஆழியும் உலகும் ஒன்று ஆய் அழிதர - கடலும் உலகமும் ஒன்றுபட்டதாய் அழியும்படியாகவும், முழுதும் வீசும் - உலகமுழுவதிலும் வீசுகிற, ஊழி வெம் காற்று - கொடியபிரளயகாலத்துப் பிரசண்டமாருதம், இது என்ன - இதுவென்றுசொல்லும்படி, இரு சிறை ஊதை மோத - (தனது) இரண்டுசிறகுகள் அடித்தலா லாகுங் காற்று வீசவும்,—(எ - று.)

சடாயுவின் இருசிறைக்காற்றுக்கு ஊழிக்காற்றை உவமைகூறினர். அக்காலத்தில் உலகமெங்கும் வீசும் பெருங்கொடுங்காற்றினால் மலைகள் நிலை பெயர்ந்து ஒன்றோடுஒன்று தாக்கிச் சிந்திப் பொடிபடுதலும், கடல் மேலெழுந்து பொங்க அதனுள்ளே பூமிமுதலிய உலகங்கள் அகப்பட்டு அழிதலும் இயல்பு. பி-ம்:—[1]புடைத்துகக். [2]இருஞ். (அகூக)

வே று.

அகூ. [1]சாகைவன் றலையொடு மரமுந் [2]தாழமேன்
மேகமும் விண்ணின்மீச் செல்ல மீமிசை
மாகவெங் கலுழனும் வருகின் றனென
நாகமும் படமொளித் தொதுங்கி நையவே.

(இ - ள்.) (தன்சிறகு வீசுங் காற்றினால்),—மரமும்-மரங்களும், சாகை வல் தலையொடு தாழ - கிளைகளோடும் வலியதலைப்புறத்தோடும் பூமியிற் படியவும்,—மேல் மேகமும் - மேலிடத்திலுள்ள மேகங்களும், விண்ணின் மீ செல்ல-வானத்தில் மேன்மேல் ஒதுங்கிப்போய்விடவும், மீ மிசை மாகம் வெம் கலுழன் ஆம் வருகின்றன் என - மிகவும்உயர்வான ஆகாசமார்க்கத்தில் உக்கிரமூர்த்தியான கருடபகவான்தான் வருகின்றனென்று எண்ணி, நாகமும் படம் ஒளித்து ஒதுங்கி நைய - சர்ப்பங்களும் படங்களை ஒடுக்கிக் கொண்டு பதுங்கி வருந்தவும்,—(எ - று.)

சாகை, மாகம், கலுழன் - சாகா, மஹாகம், கருடன் என்ற வடசொற்களின் விகாரம். தலை - உச்சி. மீமிசை - ஒருபொருட்பன்மொழி. கருடன் என்பதற்கு - சிறகுகளாற்பறப்பவ னென்றும், நாகம் என்பதற்கு - மரத்திலும் மலையிலும் வசிப்பதென்றும் காரணப்பொருள்கூறுவர் வடநூலார். பி-ம்:—[1]சாகைவென்றலையொடு. [2]தாழவன், தாழ்வன.

இதுமுதல் நான்கு கவிகள் - கீழ்ப்படலத்தின் சு - ஆங் கவி போன்ற கலிவிருத்தங்கள். (கூ00)

கூ0. [1]யானையும் யாளியு முதல யாவையுங்
[2]காலெடு மரத்தொடு தூறு கல்லிவை
[3]மேனிறைந் திருசிறை வீச்சி னேறலால்
வானமுங் [4]கானமு மாறு கொள்ளவே.

(இ - ள்.) யானையும் யாளியும் முதல யாவையும் - யானைகளும் யாளிகளும் முதலிய எல்லாமிருகங்களும், மரத்தொடு தூறு கல் இவை - மரங்களும் புதர்களும் கற்களும் ஆகியஇவைகளும், காலெடு - அக்காட்டினுடனே, இரு சிறை வீச்சின் மேல் நிறைந்து ஏறலால்-(தனது) இரண்டுசிறகுகள்வீசுங் காற்றின்வேகத்தால் நிலைபெயர்ந்துமேலேறி வானத்தில்நிரம்புதலால், வானமும் கானமும் மாறு கொள்ள-ஆகாயமும் காட்டினிடமும் (ஒன்று மற்றொன்றுக) மாறுடவும்,—(எ - று.)

காட்டிலுள்ள மரம் புதர் கல் விலங்கு முதலிய எல்லாப்பொருள்களும் சிறகின்காற்றால் மேலெழுந்து வானஞ்சேர்ந்து நிறைந்து வானத்தை வெற்றிடமில்லாதபடி செய்தலாலும், அப்பொழுது காடுஉள்ளஇடம் வானம் போல வெற்றிடமாகுதலாலும், வானம் வனமாகவும், வனம் வானமாகவும் மாறியிடஎன்க. முதல - குறிப்புப்பெயரெச்சம். பி-மீ:—[1]ஆனையுமாளியும். [2]காலெனெடு. [3]மேனியிற்நிருசிறைவிசையினெற்றலால். [4]கானமுமாறுகொண்டவே, கானகமென்னலாயவே. (கூ0க)

கூக. உத்தமன் றேவியை [1]யுலகொ டேந்துதேர்
வைத்தனை யேகுவ தெங்கு வானினை
டித்தனை [2]திசையையு மறைப்பெ னீண்டெனப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினன்.

(இ - ள்.) 'உத்தமன் தேவியை - யாவரினும் மேலானவனுன இராமனது மனைவியை, உலகொடு-நிலத்துடனே(எடுத்து), ஓங்கு தேர் வைத்தனை-உயர்ந்த தேரில் வைத்துக்கொண்டாய்: ஏகுவது எங்கு - (நீ) எங்குப் போகமுடியும்? வானினூடு இத்தனை திசையையும் ஈண்டு மறைப்பென்-ஆகாயத்துடன் மற்றையதிக்குக்களெயெல்லாம் இப்பொழுது மறைத்துவிடுவேன்,' எனு-என்றுசொல்லி, பத்திரம் சிறைகளை விரிக்கும்-வலிய(தனது) சிறகுகளைப் பரப்புகிற, பண்பினன்-உயர்குணத்தையுடையவனுமாய்,-(எ-று.)

உத்தமன் - புருஷோத்தமன். பண்பு - சமயத்துக்குத்தக்கபடி அறிந்துநடத்தல்; "பண்பெனப்படுவது பாடுஅறிந்துஒழுகல்" என்பது கலித்தொகை. பண்பினன் - முற்றெச்சம். பி - மீ:—[1]உலங்கொடு. [2]திசையும் யானென்கின்றனெனப்.

கூஉ. வந்தன னெருவையின் மன்னன் மாண்பிலா
னெந்திரத் தேர்[1]செல வொழிக்கு மெண்ணினன்

[2]சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான்.

(இ - ள்.) மாண்பு இலான் - நற்குணநற்செய்கையில்லாதவனுன இராவணனது, எந்திரம் தேர் - யந்திரசக்தியையுடைய தேர், செலவு - செல்லுகலே, ஒழிக்கும்-தடுக்கும் [தடுக்கவேண்டு மென்ற], எண்ணினுன் - கருத்தையுடையவனும், சிந்துரம் கால் சிரம்-சிந்தூரம்போல மிகச்சிவந்த கால்களையும் தலையையும், செக்கர் சூடிய கந்தரம் - செவ்வானத்தின் நிறத்தைக்கொண்ட கழுத்தையுமுடைய, கைலையை - கைலாசகிரியை, நிகர்க்கும் - ஒக்கின்ற, காட்சியான் - (பெரிய வெண்ணிறமான உடம்பின்) தோற்றத்தையுடையவனுமாய், எருவையின் மன்னன் - கழுகுகளுக்கு அரசனுகிய சடாயு, வந்தனன் - (அங்கு எதிரில்) வந்துசேர்ந்தான்; (எ - று.)

வேண்டியபடி வானத்திற் பறந்துசெல்லவல்ல தேரென்பார், 'எந்திரத் தேர்' என்றார்; இனி, எந்திரம் என்பதற்கு - சக்கர மென்று உரைப்பாரும் உளர். கழுகுக்குக் கால்களும் தலையும் மிகச்சிவந்தும், கழுத்துச்சிறிது சிவப்புக்கொண்டும், உடம்பு மிகவெளுத்தும் இருத்தல் இயல்பாதலால், சிந்துரக்கால்சிரஞ்செக்கர்சூடிய கந்தரக்கைலையை உவமை கூறினர்; இது, இல்பொருளுவமை. கந்தரம் - தலையைத்தரிப்பது எனக் காரணப்பொருள் படும் வடசொல். கைலை - வடசொல்திரிபு.

அ எ - ஆங் கவிமுதல் இதுவரையில் ஒருதொடராகவந்த ஆறுகவிகளுக்கும் அடியில்வருமாறு முடிபுகாணலாம்;—(அ எ) என்னும் வேலையின்கண், —துண்டத்தனும் (கூ உ) காட்சியானும் ஆகிய எருவைமன்னன் எண்ணினுனும் (அ எ) சொல்லனும் கண்ணனும் மெய்யானுமாய், (அ அ) இருசிறைஊதை மோத அதனுல் (அக) தாழ, செல்ல, தையை, (கூ ஏ) மாறுகொள்ள, (கூ க) பண்பிழையும் (கூ உ) வந்தனன் என்க. பி - பி:—[1]செலாதொழிக்குமீட்டினுன். [2]சிந்தொடுமதிச்சடைச்செக்கர்சூழ்களக் கந்தரன். (கூ ஏ ரு)

வே று.

கூகு.—சடாயு சீதைக்கு அபயங்கூறல்.

ஆண்டுற் றவணங் கிணையஞ் சிலனுக்
தீண்டுற் றிலனென் றுணர்சிந் தையிலுன்
மூண்டுற் றெழுவெங் கதமுற் றிலனுன்
மீண்டுற் றுரையா டலிமே வினனுல்.

(இ - ள்.) ஆண்டு உற்று - (இவ்வாறு சடாயு) அப்பொழுது அவ்விடத்தில் வந்து,—அ அணங்கினை - பெண்ணிற்சிறந்தவளான அச்சீதாபிராட்டியை (நோக்கி), அஞ்சல் எனு - பயப்படாதேயென்று தைரியஞ்சொல்லி,—தீண்டுற்றிலன் என்று உணர் சிந்தையினுன்-(இராவணன் அவளைத்) தொட்டானில்லையென்று அறிந்த மனத்தையுடையவனும், மூண்டு உற்று எழுவெம் கதம் முற்றிலன் - மூண்டுபொங்கியெழுந்த உக்கிரமானகோபத்தை

முரிச்செய்யாதவனுகி [கோபத்தைச் சிறிதுஅடக்கிக்கொண்டு], மீண்டு உற்று உரை ஆடலே மேவினன் - மறுபடியும் இராவணனே நோக்கி (ச்சில வார்த்தைகளே)ச்சொல்லத்தொடங்கினன்; (எ - று.)—அதனை, அடுத்த ஒன்பதுகவிகளிற் காண்க.

அவ்வணங்கினனென்பது அவணங்கினை யெனத்தொக்கது செய்யுளோசையின்பத்தின்பொருட்டு. உற்றிலன் எனப் பதம்பிரித்தல் மோனைத் தொடைக்குப்பொருந்தாது. கீழ்'எங்கடாபோவது,' 'நில்நில்', 'உத்தமன் தேவியை.....மறைப்பென் ஈண்டு' என்று சிலசொற்கள்சொன்னமைபற்றி 'மீண்டுஉற்று உரையாடலே மேவினன்' என்றார். 'ஆல்' இரண்டும் - அசை.

இதுமுதற் பன்னிரண்டுகவிகள் - கீழ்ப்படலத்தின் உகo-ஆங்கவிபோன்ற கலிவிருத்தங்கள். (கூoச)

கூச.—இதுமுதல் ஒன்பதுகவிகள் - சடாயு இராவணனேநோக்கிக் கூறுங் கோபவார்த்தைகள்.

கெட்டாய் கிளையோ டுநின்வாழ் வையெலாஞ்
சுட்டா யிது[1]வென் னைதொடங் கினைநீ
பட்டா யெனவே கொடுபத் தினியை
[2]விட்டே குதியால் விளிகின் றிலையால்.

பதினொன்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நீ—, கெட்டாய் - கெட்டுப்போனுய்: கிளையோடு நின் வாழ்வை எலாம் சுட்டாய் - உனதுஉறவினத்துடனே உனது வாழ்க்கைமுழுவதையும் எரித்தொழித்தாய்; இது என்ன தொடங்கினை - இத்தன்மையதான தகுதியில்லாச்செயலே என்செய்யத்தொடங்கினுய்? பட்டாய் எனவே கொடு-(நீ)இறந்தா யென்றே எண்ணிக்கொண்டு, பத்தினியை விட்டு ஏகுதி-(இராம பிரானது) மனைவியான பதிவிரதையாகிய சீதாபிராட்டியை விட்டுச்செல்வாய்: (அங்ஙனம்விட்டுச்செல்வையாயின்), விளிகின்றிலை-இறக்கமாட்டாய்; (எ - று.)—ஆல் இரண்டும் - ஈற்றசை.

'கெட்டாய்' என்றது, தீக்குணத் தீச்செயலே அடைந்தா யென்றபடி. உனதுஇச்செயலால் உனது பந்துவர்க்கமும் செல்வவாழ்க்கையும் வாழ்நாளும் தவறுமல் விரைவில் அழிந்தொழியு மென்பார், 'கிளையோடு நின்வாழ்வையெலாஞ் சுட்டாய்' என்றார். 'சுட்டாய்' என்றது, விரைவும் நிச்சயமும் பற்றி எதிர்காலம் இறந்தகாலமாய்வந்த காலவழுவமைதி; 'பட்டாய்' என்பதும் இது. பட்டாய் எனவே கொடு - நீ சீதையைவிட்டுச்செல்லாவிட்டால் தவறுதுவிரைவில் அழிவுதாகவே எண்ணிக்கொண்டு என்றபடி. பத்தீ - வடசொல்; அக்கினிசாக்ஷியாய் விவாகஞ் செய்துகொள்ளப்பட்ட மனைவி. 'விளிகின்றிலை' என்றது, இராமனுல்அழியாய்என்றும், உன்னை நான்கொல்லாதுவிடுவேன் என்றுங்கூறியவாறு. பி-ம்:—[1]என்னை. [2]விட்டாலுனையான் விளிகின்றிலனுல். (கூoடு)

கூரு. பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளை[1]மனக் கொடுநீ
யாதாக [2]நினைத் தனை[3]யெண் ணமிலா
யாதா ரனைக் கினியா ருளரோ.

(இ - ள்.) பேதாய் - அறிவில்லாதவனே! பிழை செய்தனை-(நீ) தவறு செய்துவிட்டாய்; பேர் உலகின் மாதா அனையாளை - பெரியஉலகத்துயிர் கட்கெல்லாம் தாய்போன்றவளான சீதாபிராட்டியை, நீ—, யாது ஆக மனம் கொடு நினைத்தனை - என்னவென்று மனத்தில் நினைத்துக்கொண் டாய்? எண்ணம் இலாய் - ஆலோசனையில்லாதவனே! இனி நினைக்கு ஆதா ரம் யார் உளரோ - இப்படி இராமன்விஷயத்திற் பேரபராதஞ்செய்தபின்பு உனக்குப் பற்றுக்கோடாவார் எவர்தாம் உளரோ? [எவருமில்லை];(எ - று.)

உலகின்மாதா - லோகமாதா. உலகத்திலுள்ள எல்லாவுயிர்களினிடத் தும் மிக்கஅன்புடையவளும், உலகமுழுவதுக்கும் மூலகாரணமான திருமா லின் மனைவியாகிய இலக்குமியினது திருவவதாரமும், அத்திருமாலின் திரு வவதாரமாகிய இராமனுக்கு மனையாளும் ஆதலால், 'பேருலகின்மாதாவனை யாள்' எனப்பட்டாள். மனக்கொடு=மனத்துக்கொடு; அத்துச்சாரியை தொக்கது. உலகத்தில் வேறுஎவரேனும் கோபித்தால் இராமபிரானிடத் துச் சரண்புகுந்து பிழைத்துஉய்தல் கூடும்; சகலலோகநாயகனை அவ்விராம பிரானது கோபத்தின் பயனைத் தடுத்துப் பாதுகாக்கவல்ல ரெவரும் இல்லை யாதலால், அவன்திறத்தில் பெரியஅபராதத்தைச்செய்த நீ யாரைத் துணைக்கொண்டு பிழைத்திடுவாய்? எவரும் உனக்குத்துஞ்சமில்லாமல் இறந் தேவிடுவாய் என்பார், 'ஆதாரம் நினக்கு இனி யார் உளரோ' என்றார். அன் றியும், குற்றமுடையார்மேல் எம்பெருமான் கோபங்கொள்ளுங்கால் புருஷ காரமாய்நின்று இன்சொற்கூறித் தணிவுண்டாக்கி அக்குற்றத்தைப்பொறுப் பிக்கவல்ல பிராட்டிதிறத்திலே அபராதஞ்செய்தனை யாதலால் உனக்கு இனி ஆதாரம் யாருளர்? என்றதாகவும் கொள்ளலாம். இனி யார் உளரோ என்றும் எடுக்கலாம். பி - மீ:—[1]மனத்தொடு. [2]நினைந்தனை. [3]ஏகலடா, ஏகலெடா. (கூஅசு)

கூசு. உய்யா மன்மலிந் தமரா [1]ருயிரை
மெய்யா கவிரா மன்விருந் திடவே
கையா ரமுகந் துகொடக் ககனை
ரையா புதிதுண் டகறிற் றிலையோ.

(இ - ள்) உமர் - உன்இனத்தாராகிய அரக்கர்கள், உய்யாமல் - தப் பிப்பிழைக்கமுடியாதபடி, இராமன்—, மலைந்து-போர்செய்து, ஆர்உயிரை-(அவர்களுடைய) அருமையான உயிரை, மெய் ஆக விருந்து இட-உண்மை யாக விருந்துணவாக அளிக்க, அந்தகனார் - யமதருமராசாவானவர், கை ஆர முகந்து கொடு - கைநிறைய வாரியெடுத்துக்கொண்டு, புதிது உண்

டது - புதுமையாக விருந்துண்டதை, ஐயா அறிந்திலேயோ - (அவ்வரக்கர்க் குத்)தலைவனே! நீ அறிந்தாயில்லையோ? (எ - று.)

அறிந்திருந்தனையாயின், உனதுயிர் ஒழியுமாறு இங்ஙனம் நீ இரா மன்விஷயத்திற் பிழைசெய்திருக்கமாட்டா யென்பார், இங்ஙனங்கூறினர். அளவிறந்த பலஅரக்கர்கள் ஒருமனிதனால் எளிதில்அழிவடைந்தன ரென்பது கேட்டவர் எளிதில்நம்பத்தகாத விஷய மென்ற கருத்தால், அதனைவற்புறுத் தும்பொருட்டு, 'மெய்யாக விருந்திட' என்றார். வெகுகாலமாய் அரக்கருயி ரைத் தொலைக்கமுடியாமல் அவர்கட்கு அஞ்சி இனித்தொலைக்குஞ்சமயம் எப்பொழுது வாய்க்குமோ வென்றுஎண்ணி எதிர்பார்த்திருந்த யமன் இராம னுதவியால் அவர்களுயிரை எடுத்துச்சென்றமையை இங்ஙனங்கூறினர். அந்தகனர் - உயர்வுப்பன்மை, கொடுமை விளக்கும். பி-ம்:—[1]உயிர்தான். ()

கூஎ. கொடுவெங் கரிகொல் லியவந் ததன்மேல்
விடுமுண் டைகடா வவிரும் பினையே
யடுமென் பதுணர்ந் திலையா யினும்வன்
கடுவுண் டுயிரின் னிலை[1]கா ணுதியோ.

(இ-ள்.) கொடு வெம் கரி கொல்லிய வந்ததன்மேல்-(உன்னைக்) கொல் லுதற்குவந்ததாகிய கொடியகோபங்கொண்ட யானையின்மீது விடும் உண்டை கடாவ விரும்பினையே - எடுத்துவீசும் மண்ணுண்டையைச் செலுத்த விரும்பினையே; அடும் என்பது உணர்ந்திலை ஆயினும் - கொல்லுமென்பதை அறியாயாயினும், வல் கடு உண்டு - கொடியவிஷத்தை உண்டு (அதன்பின்), உயிரின் நிலை காணுதியோ - உயிரினது நிலைத்திருத்தலைக் காண்பையோ? [காணமாட்டாய் என்றபடி]; (எ-று.)

தன்மீது கறுக்கொண்டு கொல்லவந்த யானையின்மேல் ஒருவன் மண் ணுண்டையை யெடுத்து வீசினால், அது அவ்யானைக்கு யாதோருறுபாடுஞ் செய்யமாட்டாமல் அதன்கோபத்தை மிகுவித்தலாகிய பயனையே விளைக்கு மாறுபோல, அரக்கர்தலைவனான உன்மீது கோபங்கொண்டு உன்னைக்கொ ல்லவந்த இராமபிரானுக்கு நீ இத்தகுரோகத்தைச் செய்தது அப்பெருமா னுக்குத்தீங்காய்முடியாமல் உன்மீது கோபம்மிகுதற்கே காரணமாய்விளையு மென்பார், 'கொடுவெங்கரிகொல்லியவந்ததன்மேல் விடுமுண்டை கடாவ விரும்பினையே' என்றார்; ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதப்பொருளை ஏற்றிக்கூறி யதனால், இது - **லேசாலங்கார**மெனப்படும். உண்டை = உருண்டை. 'இது கொடியவிஷம்; இதனைஉண்டால் இதுநம்மைக்கொல்லும்' என்று ஒருவன் அறியானெனினும், அவன் கொடுவிடத்தை உண்டால் பின்பு பிழைத்தல் இய லாதவாறுபோல, பிராட்டியைக் கவர்தல் உனதுஅழிவுக்குக்காரணமாமென் பதை நீ அறியாயாயினும் அதனைச்செய்தனையாதலால் உயிர்பிழைக்கமாட் டாய் என்பது, பின்னிரண்டடியின் கருத்து. உயிரின் நிலை - உயிர் உடம்பைவிட்டுப்பிரியாதிருத்தல். ஏகாரம் - இரக்கத்தோடு தேற்றம். ஓகா ரம் - எதிர்மறை. பி-ம்:—[1]காணுதியால். (கூஎ)

கூஅ. எல்லா வுலகங் களுமிந் திரனு
மல்லா தவர்மூ வருமந் தகனும்
புல்வாய் புலி[1]கண் டது[2]போல் வரலால்
[3]வில்லா ளனை[4]வெல் லு[5]மிடுக் கினரோ.

(இ - ள்.) எல்லா உலகங்களும் - மூவுலகங்களிலும் உள்ளார் அனைவரும், இந்திரனும் - (திரிலோகாதிபத்தியான) தேவேந்திரனும், அல்லாதவர் மூவரும் - இவர்களையொழிந்தவராகிய [இவர்களிலும்மேம்பட்ட] திரிமூர்த்திகளும், அந்தகனும்-பிராணிகளை யழித்தலையே தொழித்துபவனை யமனும், புல்வாய் புலி கண்டது போல்வர் அலால் - (இராமலக்ஷ்மணர்களைக் கண்ட வளவில், மான்கள் புலியைக்கண்டாற்போ லாவதே யன்றி, வில்லாளனை வெல்லும் மிடுக்கினரோ - மிகச்சிறந்த வில்வீரனுகிய அவ்விராமபிரானை வெல்லுதற்குரிய வல்லமையுடையரோ? [அல்லர் என்றபடி]; (எ - று.)

"உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே" என்பதுபற்றி, 'எல்லாவுலகங்களும்' என்பதற்கு - உலகத்துப் பெரியோரெல்லாருமென்றும் பொருள் கொள்ளலாம். மூவர் - தொகைக்குறிப்பு; பிரம விஷ்ணு ருத்திரர். அந்தகன் - அழிவுசெய்பவன். புல்வாய் - புல்லைத்தின்னும் வாயையுடையது; வேற்றுமைத்தொகை யன்மொழி: மானுக்குக் காரணவிடுகுறி. போல் வரலால் என்று பதம்பிரித்து உரைத்தல் சிறவாது. பி - மீ:—[1]கண்டன. [2]போல்வது. [3]வில்லாளரை. [4]வெல்ல. [5]மிடுக்குள்ளோர. (கூஅ)

கூக. இம்மைக் குறவோ டெயிறந் தழியும்
வெம்மைத் தொழி[1]லிங் கிதன்[2]மே லிலையா
லம்மைக் கருமா நரகந் தருமா
லெம்மைக் கிதமாக வினைத்தெ னினைநீ.

(இ - ள்.) இம்மைக்கு - இப்பிறப்பில் [இவ்வுலகத்திலே], உறவோடும் இறந்து அழியும் வெம்மை தொழில் - சுற்றத்தாருடனே இறக்கத்தொழிற்குக் காரணமான கொடிய செய்கை, இங்கு இதன்மேல் இலை-இப்பொழுது இங்கு (நீ செய்த) இச்செயலினும் அதிகமானது வேறொன்றுமில்லை; (அன்றியும் நீ செய்த இச்செயல்), அம்மைக்கு - வருபிறப்பிலும் [இறந்தபின்வரும் நிலையில் என்றபடி], அரு மா நரகம் தரும் - மீளுதற்கரிய பெரியநரகத்தைத் தரும்: ஆல்-ஆதலால், இது-இச்செயலை, நீ—, எம்மைக்கு இதம் ஆக எண்ணினை - எப்பிறவிக்கு நன்மைதருவதாக நினைத்தாய்? (எ - று.)

இம்மைக்கு, அம்மைக்கு - உருபுமயக்கம். சீதையைக்கவர்ந்த இச்செயலால், இம்மையில் நீ என்னுலாயினும் ராமலக்ஷ்மணராலாயினும் சுற்றத்தோடு இறந்துதொலைவாய்; அன்றியும், கற்புடைமாதரை வலியக்கவர்ந்த தீவினையால், மறுவுலகத்திலும் நரகத்துன்பம் நுகர்வாய்; ஆதலின், நீ எண்ணிச்செய்த செயல் இருமையிலும் நன்மையை விளைக்காமல் தீமையையே விளைத்திடும் என்பதாம். 'ஆல்'முதலதுதேற்றம். பி-ம்:—[1]இங்கிது. [2]மேவுதி.

கoo. முத்தே வரின்மூ லமுதற் பொருளா
மத்தே வரிம்மா னிடரா தலினை
லெத்தே வரொடெண் ணுவ[1]தெண் ணமிலாப்
பித்தே றினே[2]யா தல்பிழைத் தனையால்.

(இ - ள்) இ மானிடர் - இந்த மனிதர்கள் [ராமலக்ஷ்மணர்], முத் தேவ ரின் மூலம் முதல் பொருள் ஆம் அ தேவர் ஆதலினல்-திரிமூர்த்திகளுள் மற்றை யிருமூர்த்திகளுக்கும் ஆதிகாரணமான தலைமைப்பொருளாகிய அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமானவ ராதலால், எ தேவரொடு எண்ணுவது-(இவர்களை) எந்தத்தேவர்களோடு சமமாகநினைப்பது? எண்ணம் இலா பித்து ஏறினை ஆதல் - ஆலோசித்தற்கு இயலாத பைத்தியம் மிக்கா யாதலால், (நீ), பிழைத்தனை - இக்குற்றஞ்செய்தாய்; (எ - று.)--ஆல் - ஈற்றசை.

முத்தேவரின்மூலமுதற்பொருளாம் அத்தேவர் - "முதலாவார் மூவரே அம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்ஞர், பொய்கையாழ் வாரும். 'எத்தேவரொடு எண்ணுவது' என்றது, இவர்கள் எல்லாத்தேவர்க ளினும் மிகச்சிறந்தவ ரென்றபடி. சாதாரணதேவர்களுக்கு நீ செய்த பல பெரும்பிழைகள்போலத் தேவாதிதேவரான இவர்க்குச் செய்த பிழை மீண் போகாது என்பார், இப்படிக்கூறினர். பித்து - காமமயக்கம். ஆதல் - ஆதலால்; மூன்றும்வேற்றுமைத்தொகை. 'எண்ணமிலாய்' என்ற பாடத்து க்கு-ஆலோசனையில்லாதவனே! என்று பொருள். பி - ம்:—[1]ஆக. (கூகக)

கoக. புரம்பற் றியபோர் விடையோ னருளால்
வரம்பெற் றவுமற் றுளவிஞ் சைகளு
முரம்பெற் றன[1]வா வன[2]வுண் மையிலேனுன்
சரம்பற் றியசா பம்விடுந் தனையே.

(இ - ள்.) புரம் பற்றிய - திரிபுரங்கள்தீப்பற்றியழிதற்குக் காரணமான, போர் - போரைச்செய்த, விடையோன் - விருஷபவாகனத்தையுடைய சிவ பிரானது, அருளால் - கருணையினல், பெற்ற - (நீ) பெற்றனவாகிய, வர மும்-வரங்களும், மற்று உள விஞ்சைகளும்-மற்றும் (நீ)கொண்டுள்ள (மாயை முதலிய) வித்தைகளும், உண்மையிலேனுன் சாபம் பற்றிய சரம் விடும் தனை யே உரம் பெற்றன ஆவன - என்றும்அழியாப்பொருளாகவுள்ள இராம பிரான் வில்லில்தொடுத்த அம்பை எய்யும்வரையிலுமே வலிமைபெற்றன வாவன; (எ - று.)

அப்பெருமான் அம்பெய்தவள்விலே, உனது வரபலமும், மாயாபல மும், மந்திரசக்தியும், மற்றும்அனைத்தும் வலியழிந்திடு மென்பதாம். உண் மையிலேனுன் - வாய்மையையுடையா னென்றுமாம். விருஷம், வித்யா என்ற வடசொற்கள் - விடை, விஞ்சை எனத் திரிந்தன. "முவ்வகையுலகும் ஆள மூன்றரைக்கோடியாண்டும், எவ்வகைப்படையும் வெல்லும் சந்திரவாளும் ஈந்தான்" என்ற உத்தரகாண்டச்செய்யுளால், இராவணன் சிவபிரானிடம் பெற்ற வரங்களே அறிக. பி - ம்:—[1]ஆயினும். [2]உண்மையிலேனே. (கூகஉ)

க02. வானுள் பவன்மைந் தன்[1]வளைத் தவிலான்
ரூனே வரினின்று தடுப் பரிதா
னூனே [2]யவணுய்ப் பெனிந்நன் னுதலிப்
போநீ கடிதென்று புகன் றிடலும்.

(இ - ள்.) வான் ஆள்பவன் மைந்தன் - (முன்பு நிலவுலகத்தை ஆண்டு இப்பொழுது) மேலுலகம்புக்கு அங்குஇன்புறுபவனுகிய சுசரதசக்கரவர்த்தியினது குமாரனை ஸ்ரீராமன், வளைத்த விலான் - வளைத்தவில்லையுடையவனும், தானே வரின் - நேரிலே வந்துவிட்டால், நின்று தடுப்பு அரிது - (அவனுல் உனக்குநேருந் தீங்கை) எதிர்நின்றுதடுத்தல் (எவராலும்) முடியாது; இந் நுதலி நானே அவண் உய்ப்பென் - அழகியநெற்றியையுடையவளான இம் மாதை நானே (முன்இருந்த) அவ்விடத்திற் கொண்டுசேர்ப்பேன்; நீ கடிது போ - நீவிரைவாகஓடிப்போய்விடு, என்று புகன்றிடலும் - என்று (சடாயு இராவணனை நோக்கிச்) சொன்னவளவிலே,—(எ - று.)—''கேட்டான்'' என அடுத்தகவியோடு தொடரும்.

வானுள்பவன்மைந்தன் - சக்கரவர்த்தித்திருமகன்; இது, பரம்பரையால் வந்த ஏற்றத்தை விளக்கும். இராமனிடத்தில் தனக்கு அன்புமிகுதற்குக் காரணம், தனதுகண்பஞ்சுயிருந்து விண்ணுலகடைந்த தசரதசக்கரவர்த்தியின் குமாரனென்ற தொடர்பு ஆதலால், அதுதோன்ற 'வானுள்பவன்மைந்தன்' என்றார். மாயமானைத்தொடர்ந்துசென்றபொழுது வில்லுங்கையுமாகச் சென்றமைபற்றி, 'வளைத்தவிலான்' என்றார்; 'அவண்' என்றது, பஞ்சவடியாச்சிரமத்தை. இனி, 'அவணுய்ப்பென்' என்பதற்கு - இராமனிருக்கிற விடத்திற் சேர்ப்பே னென்றும் பொருள்கொள்ளலாம். நன்னுதல் - பண்புத்தொகை யன்மொழி. அரக்கரனைவரையுந் தொலைப்பதாக முனிவர்க்கு உறுதிமொழிகூறி அதற்கென்று விற்பிடித்துள்ள இராமன் வந்துவிட்டால் உன்னுல் தப்பியுய்யமுடியாது; அன்றி, உன்னைத் தப்பிஉய்யும்படி செய்வித்தலும் எவர்க்கும் அரிதாம்; ஆனதுபற்றி, நீ நேரில் இராமனிடத்துச் சீதையை ஒப்பிக்கவேண்டுமென்று கருதவேண்டா: என்வசத்தில் ஒப்பித்துவிட்டு உய்ந்து ஓடிப்போ: நான் அவளை உரியபடி கொண்டுசேர்த்திடுவேன் என்பார், இங்ஙனங்கூறினர். அச்சத்தால் அதட்டிக் கூறும் வார்த்தை, அவனதுஅனுகூலத்திற்காகக் கூறுவதுபோல இங்ஙனம் கூறப்பட்ட தென்க. பி - மி:—[1]வளைந்த. [2]இவண்.

(ருகூ)

க0ரு.—இதுவும், அடுத்தகவியும் - இராவணன் மறுத்துக்கூறும் வார்த்தைகள்.

கேட்டா னிருதார்க் கிறைகேழ் கிளர்தன்
வாட்டா ரைநெருப் புகவாய் மடியா
வோட்டா யினிநீ யுரைசெய் குகரைக்
காட்டாய் கடிதென் று[1]கனன் றுரையா.

(இ - ள்.) கேட்டான் - (இவ்வாறு சடாயுசொன்ன வார்த்தைகளைக்) கேட்டவனுகிய, நிருதர்க்கு இறை - அரக்கர்கட்குஅரசனுகிய இராவணன், கேழ் கிளர் தன் வாள் தாரை நெருப்பு உக-ஒளிவிளங்குகிற தனதுகொடிய கண்விழிகளினின்று நெருப்புச் சிந்த, வாய் மடியா - (கோபத்தால்) வாயை மடித்துக்கொண்டு, (சடாயுவை நோக்கி), 'ஓட்டாய் - (மேல்மேல் வார்த்தை களை) ஓடவிடாதே; இனி-இப்பொழுது, நீ உரை செய்குரை கடிது காட் டாய் - நீசொல்லுகின்றவர்களை விரைவில் (எனக்குக்) காட்டுவாய்.', என்று கனன்று உரையா-என்று கோபித்துச்சொல்லி,—(எ-று.)—'உரையா' என் பது, மேல் கூடு-ஆம் கவியில் "என்னும்மளவில்" என்பதைக் கொள்ளும்.

வாள் - கொடுமைக்கு இலக்கணை. தாரை - கண்ணின் கருவிழி; தாரா என்ற வடசொல்லின் திரிபு. வாய் மடியா - உதட்டைக் கடித்துக்கொண்டு. ஓட்டாய் - எதிர்மறையொருமையேவல். காட்டாய் - உடன்பாட்டுஒருமை யேவல். ஓட்டாய் என்பதை உடன்பாடாகக்கொண்டு, என்தேரை ஓடவிடு வா யென்றுபொருள்கொண்டு, தேரைத்தடுக்காதே யென்று கருத்துக்கூறுத லும் ஒன்று. இனி, ஓட்டாய் என்பதை, ஓட்டையென்பதன் விளியாகக் கொண்டு, அறிவில்லாதவனே! அல்லது வலியற்றவனே! என்று விளியாகக் கிப் பொருள்படுத்தவும் இடமுண்டு. பி - ம்:—[1]கதழ்ந்துரையா, கதழ்ந் திடலும். (கூகச)

கூ0ச. வரும்[1]புண் டரம்வா ரி[2]யின்மார் புருவிப்
பெரும்புண் டிறவா வகைபே ருதீ
யிரும்புண் [3]டநிர்மீள் கினு[4]மென் னுழையிற்
கரும்புண் டசொன்மீள் கிலள்கா ணுதியால்.

(இ - ள்.) வரும் புண்டரம் - எதிர்த்துவருகிற கழுகே! வாளியின் - (எனது) அம்பினுல், மார்பு உருவி பெரு புண் திறவா வகை-(உனது) மார்பு முழுதும் துளைபட்டுப் பெரியபுண்ணுக விரிந்துபோகாதபடி, நீ—, பேருதி - அப்பாற்செல்வாயாக: இரும்பு உண்ட நிர் மீள்கினும் - காய்ந்தஇரும்பு உட் கொண்ட நீர் (ஒருகால்) மீண்டுவெளிப்படுமாயினும், என் உழையில் கரும்பு உண்ட சொல் மீள்கிலள் - என்னிடத்திலிருக்கிறவளான கருப்பஞ்சாற்றை யொத்த இன்சொற்களையுடையஇப்பெண் மீண்டுசெல்லமாட்டாள்; காணுதி- (இதனை) அறிந்துகொள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

புண்டரம் - அண்மைவிளி. புண்டரமென்பது - கழுகின் பெயராதலை "இருந்த புண்டரமே கங்கம் எருவையே பலவோடு, கருஞ்சிறை யுவனை மைந்தும் கழுகென்ப சகுந்தமும் பேர்" என்றநிகண்டினுலும் அறிக. நீர்என் பது நிர் எனக் குறுக்கல்விகாரமாயிற்று:செய்யுளோசையின்பொருட்டு. பழுக் கப்பழுக்கக் காய்ச்சிய இரும்பில் நீரை வார்த்தால் அது சென்று லயப்பட்டு மீண்டும்வெளிப்படாது; இது மீளாமைக்கு உவமைகூறப்படுதலை, "தீர விரும்புண்ட நீரதுபோல வென்னுருயிரை, யாரப்பருகவெனக்காராவமுதானு யே"என்ற திருவாய்மொழியிலும்,"பாதங்களென்னுயிரைத்,தீரவிரும்புண்ட

நீராக்குமாறு உள்ளஞ் சேர்ந்தனவே" என்ற திருவேங்கடத்தந்தாதியிலும் காண்க. கரும்பு - சாற்றுக்கு ஆகுபெயர். உண்ட - உவமவுருபு. கரும்பு உண்ட - கருப்பஞ்சாற்றின்தன்மையை யுட்கொண்ட என்றலுமாம். கரும் புண்டசொல் - அடையடுத்தசினையாகுபெயர்; இதனை அன்மொழித்தொகை யாக் கொள்ளலாகாது; ஐவகைத்தொகைகளுள் ஒன்றன்மேல் தோன்றுமை யால். பி - ம்:—[1]புண்டரவாளி. [2]உன். [3]நீர். [4]என்னுழையிக். (கூகடு)

வேறு.

கo0. —இதுவும் அடுத்த கவியும்-அதுகேட்டு சீதை மிகவெம்வருந்த, சடாயு அவட்கு உறுதிகூறலைத் தெரிவித்தல்.

என்னும் மளவிற் பயமுன்னி னிரட்டி யெய்த
வன்னம் மயர்கின்றது நோக்கி [1]யரக்கன் யாக்கை
சின்னம் முறுமிப் பொழுதே சிலையாயந்தி [2]நங்கள்
மன்னன் மகன்வந் திலனென் றுவருந் தலைநீ.

(இ - ள்.) என்னும் அளவில் - என்று (இராவணன்) சொன்னவளவி லே, அன்னம் - அன்னப்பறவைபோன்ற சீதாபிராட்டி, பயம் முன்னின் இரட்டி எய்த அயர்கின்றது - முன்னினும்இருமடங்காக அச்சமுண்டாக வருந்துகின்றதை, நோக்கி - (சடாயு) பார்த்து, (அவளைநோக்கி), 'அன்னை - தாயே! அரக்கன் யாக்கை - இந்த இராக்கதனது உடம்பு, இப்பொழுதே---, சின்னம் உறும் - பலதுண்டுகளாதலே (என்னுல்) அடையும்; நங்கள் மன்னன் மகன் - நமதுதலைவனுன தசரதசக்கரவர்த்தியினது குமாரன் [ஸ்ரீராமன்], சிலை ஏந்தி வந்திலன் - வில்லைக் கையிலேந்திக்கொண்டு வந்தானில்லையே, என்று - என்றகாரணத்தால், வருந்தல் - வருந்தாதே; (எ - று.)

சீதையை உளப்படுத்தி,'நங்கள்'எனப்பட்டது; முன்னிலையுளப்பாட்டுத் தன்மைப்பன்மை. அன்னை - அண்மைவிளி; அன்பிஞலும், மரியாதையிஞ லும், அன்னையென விளித்தான். பி-ம்:—[1]அரக்கனுக்கை. [2]எங்கள்.

இதுமுதல் இருபத்தாறு கவிகள் - கீழ்ப்படலத்தின் கூஉ - ஆங் கவி போன்ற கலிநிலைத்துறைகள். (கூகசு)

கoக. முத்துக் கனமீபான் முகத்தாலி முலைக்கண் [1]வீழுத்
[2]தத்துற் றயரே றலைத லபத்தி னேலுங்
கொத்திதாப் பனகொண் டிவன்கொண் டனவென்ற வாசை
பத்திற்கு மின்றே பலியீவது பார்த்தி யென்றான்.

(இ - ள்.) முத்து உக்கன போல்-முத்துக்கள் சிந்தினமைபோல, முகத்து ஆலி முலைக்கண் வீழ - முகத்தினின்று [கண்களிலிருந்து] சிந்துகிற நீர்த் துளிகள் கொங்கைகளிலே விழும்படி, தத்து உற்று அயரேல் - துடிப்பு அடைந்து தளர்வுறுதே; காலபலத்தின் ஏலும் கொத்து ஒப்பன - பனம் பழங்களின்நிறைந்த ஒருகொத்தைப்போல்வனவாகிய, தலை கொண்டு-(இவ

னது பத்துத்)தலைகளைக்கொண்டு, இவன் கொண்டன என்ற ஆசை பத்திற் கும் இன்றே பலி ஈவது-இவன் (வென்று) வசப்படுத்திக் கொண்டவையெ ன்று சொன்ன பத்துத்திக்குக்களுக்கும் இப்பொழுதே (நான்) பலியாகக் கொடுத்தலை, பார்த்தி-பார்ப்பாயாக', என்றன் - என்றுசொன்னான்; (எ-று.)

பனம்பழங்களின் கொத்துப்போல் ஒருநிரையாகஅடர்ந்துள்ள இவ னது பத்துத்தலைகளையும் நான் அறுத்து இவனுல் முன்புவெல்லப்பட்டன வான பத்துத்திக்குக்களுக்கும் இன்று பலிகொடுக்கிறேன்பார்என்றனனென் பதாம். இராவணன்தலைக்குப் பனங்காய்க்கொத்து உவமைகூறப்படுதலை "குலைகொண்ட வீரைந்தலையான்", "இலங்கையார்கோனைப், பானுநேர்சரத் தாற் பனங்கனிபோலப் பருமுடியுதிர" என்ற இடங்களிலுங் காண்க. முகம் - இங்கே கண்ணுக்கு இலக்கணை. தாலபலம் - வடமொழித் தொடர். கொண்டன வென்ற எனப் பதம்பிரித்து, இவன் வென்றுகொண் டனவான என்று உரைகூறினுமாம். ஆசை - ஆஶா என்ற வடசொல் ஆவீறுஐயாயிற்று. ஆசை பத்து - எட்டுத்திக்குக்களோடு மேலும் கீழும். பலி-தேவர்க்குஇடும்உணவு **பீ-ம்:**—[1]வீழ்ந்து. [2]தத்தத்தலையிங்கிவை. (கூஎஎ)

கoஎ.—இதுமுதல் இருபத்திரண்டு கவிகள் சடாயுவுக்கும் இராவணனுக்கும் நடந்த போரைக் கூறும்.

இடிப்பொத்த முழக்கி னிருஞ்சிறை வீசி யெற்றி
மூடிப்பத் திகளோப் படியிட்டு முழங்கு தூண்டங்
கடிப்பக் கடிதுற்றவன் காண்டகு நீண்ட வீணைக்
கொடிப்பற்றி யொடித்துயர் வானவ ராசி கொண்டான்.

(இ - ள்.) மூடி பத்திகளே படி இட்டு முழங்கு தண்டம் கடிப்ப-(இரா வணனது) தலைவரிசையைக் கீழேதள்ளி (அவற்றை)ப்பேரொலிசெய்கிற (தனது)மூக்கினுல் கடிப்பதற்காக, இடிப்பு ஒத்த முழக்கின் இரு சிறை வீசி எற்றி கடிது உற்றவன் - இடிமுழக்கத்தைப்போன்ற பேரொலியுண்டாம் படி பெரிய(தனது) சிறகுகளே வீசியடித்துக்கொண்டு விரைவாகஓடிவந்தவ னை சடாயு,—காண்தகு நீண்ட வீணை கொடி பற்றி ஒடித்து - பார்த்தற் குத்தகுதியான [அழகிய] நீண்ட வீணையின் வடிவத்தை யெழுதிய (அவ்விரா வணனது) தேர்க்கொடியைப் பிடித்துஒடித்து, உயர் வானவர் ஆசி கொண் டான்-(அதனுல்மகிழ்ச்சியுற்றுச் சிறந்த (தேவர்கள்) தன்னைவாழ்த்திக்கூறும் வாழ்த்துக்களைப் பெற்றான்; (எ - று.)

இச்செய்யுளால், இராவணனுக்கு வீணைக்கொடி யென்று தெரிகிறது; மேல் கசுஉ-ஆம் செய்யுளில் "பாகவீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல்" என வருதலுங் காண்க. இராவணன் சங்கீதத்தில் தேர்ந்தவ னுதலால், அதற்குஅறிகுறியாக, சிறந்தஇசைக்கருவியான வீணையின் வடிவைக் கொடியிற்கொண்டனன்போலும். இராவணனது தவசம் மனி ன் தலைவடிவ மெழுதப்பட்ட தென்றுகூறியுள்ளார், ஸ்ரீவால்மீகிபகவான்.

பத்தி, ஆசி-பக்தி; ஆ ஸிஸ் என்ற வடசொற்களின் சிதைவு. வீணை - வீணு வடசொல்: ஆவீறு ஐயாயிற்று. (கூகஅ)

கo0அ. அக்காலை யரக்க [1]னரக்குருக் கன்ன கண்ணன்
னெக்காலமு மின்னதொ ரீடழி வுற்றி லாதா
னக்கா னுலகேழு நடுங்கிட நாக மன்ன
கைக்கார் முகத்தோடு கடைப்புரு வங்கு னித்தான்.

(இ - ள்.) எ காலமும் - முன்பு எந்தக்காலத்திலும், இன்னது ஓர் ஈடு அழிவு - இத்தன்மையானதொரு பெருமைக்கேட்டை, உற்றிலாதான்-அடைந்திராதவனுகிய, அரக்கன் - இராவணன், அ காலை - (இங்ஙனங்கொடி ஓடிபட்ட) அப்பொழுது, அரக்கு உருக்கு அன்ன கண்ணன் - உருக்கியஅரக்கைப்போன்ற [கோபத்தால் மிகசிவந்த] கண்களையுடையவனுய், நக்கான் - (கோபத்தாற்) பெருஞ்சிரிப்புச்சிரித்து[வீராட்டகாசம்பண்ணி], உலகு ஏழும் நடுங்கிட - ஏழுலகங்களும் நடுங்கும்படி, நாகம் அன்ன கை கார்முகத்தோடு கடைப்புருவம் குனித்தான்-மலைபோன்ற (தன்)கைவில்லையும் (தன்)புருவங்களின் நுனியையும் வளைத்தான்; (எ - று.)

கோபத்தாற் புருவத்தைநெறித்துக்கொண்டு கையில்வில்லையேந்தி வளைத்தன னென்பதாம்: இது-உடனிபிரியணி; வடநூலார் ஸ்ரோக்தியென்பர். ஈற்றடியால், புருவவளைவும் வில்வளைவும் ஒன்றுக்கு ஒன்று உபமானமாகுந் தன்மை தொனிக்கும். உலகேழும் நடுங்கிட நக்கான் என்றும் இயைக்கலாம். நாகம் - அசையாதது. பி - மீ:—[1]உருக்கரக்கு. (கூகக)

கo0கூ. சண்டப் பிறைவா ளெயிற்றுன் சரதாரை மாரி
மண்டச் சிறகா லடித்தான் சிலவள்ளு கீராற்
கண்டப் படுத்தான் சிலகாலனுங் காண வுட்குந்
துண்டப் படையாற் சிலதுண்ட துண்டங்கள் கண்டான்.

(இ - ள்.) பிறை - பிறைச்சந்திரன்போல வளைவாகவிளங்குகிற, வாள்-ஒளியையுடைய, சண்டம் எயிற்றுன் - உக்கிரமான வக்கிரதந்தங்களையுடையவனுன இராவணனது [இராவணன்பெய்த], சர தாரை மாரி-அம்புகளின் வரிசையாகிய மழைப்பெருக்கு, மண்ட - (தன்மீது) மிகுதியாய்நெருங்கிவர, (அதுகண்டு சடாயு), சில - (அவற்றுள்) சில அம்புகளை, சிறகால்அடித்தான்-(தன்) சிறகுகளினுல் அடித்துத்தள்ளினன்; சில - சிலஅம்புகளை, வள் உகிரால்-கூரிய(தனது)கால்நகங்களால், கண்டப்படுத்தான்-துண்டுபடுத்தினன்; சில - சிலஅம்புகளை, காலனும் காண உட்கும் துண்டம் படையால் - யமனும் பார்த்தற்கு அஞ்சும்படியான (தனது)மூக்காகிய ஆயுதத்தால், துண்ட துண்டங்கள் கண்டான்-சின்னபின்னமாக்கினன்; (எ-று.)

செய்யுளோசையின்பத்துக்காக, உகிரென்பது உகிரென நீட்டல் விகாரமடைந்தது. (கூ0)

ககo. மீட்டும்மணுகா நெடுவெங்க [1]ணைந்த நாகம்
வாட்டுங் கலுழன் னெனவன்றலை பத்தின் மீது
நீட்டுந் நெடுமூக்கெனு நேமியன் சேம விற்கால்
கோட்டும் மளவின் மணிக்குண்டலங் கொண்டெ ழுந்தான்.

(இ - ள்.) நெடு வெம் கண்-பெரிய கொடிய கண்களையுடைய, அநந்தம் நாகம் - அளவிறந்தபலபாம்புகளை, வாட்டும் - ஒருங்கேவருத்துகிற, கலுழன் என-கருடன்போல, வல் தலை பத்தின்மீதும் நீட்டும்-(இராவணனது) வலிய பத்துத்தலைகளின்மேலும் நீட்டுகிற, நெடு மூக்கு எனும் நேமியன் - நீண்ட (தன்)மூக்காகிய சக்கராயுதத்தையுடையவனும், சேமம் வில்கால் கோட்டும் அளவில் மீட்டும் அணுகா-(தனக்குப்)பாதுகாவலாகவுள்ள (சிறந்த) வில்லின் தண்டத்தை(இராவணன்) வளைக்குமளவிலே மீண்டும் (சடாயு) அவனருகில் நெருங்கி,மணி குண்டலம் கொண்டு எழுந்தான்-(அவன்காதுகளில் அணிந்து ள்ள) இரத்தினகுண்டலங்களைப் பறித்துக்கொண்டு கிளம்பினன்; (எ - று.)

இராவணன்எய்த பலஅம்புகளைச் சிறகுகளினாலும் நகங்களினாலும் மூக் கினாலும் அழித்திட்ட சடாயு, பின்பு அவன் ஒருகால் வில்வளைக்கும்பொழு திற்குள்ளே அவனருகில்வந்து அவனது காதின்குண்டலங்களைப் பறித்துக் கொண்டு சென்றன னென்பதாம். பலபாம்புகள் ஒருங்கே அழியுமாறு கரு டன்வந்தாற்போல, இராவணனது பத்துத்தலைகளின்மேலும் தனது கூரிய மூக்கை நீட்டிக்கொண்டு வந்தன னென்க. 'நெடுவெங்கணநந்தநாகம்' என்ப தற்கு-அளவில்லாத பலகண்களையுடைய பாம்பென்று உரைத்து, பலதலைப் பாம்பென்று கருத்துக்கொள்வாரும் உளர். கீழ் கoஎ-ஆம் கவியில் ''கடி துற்றவன்'' என்றதை நோக்கி, 'மீட்டும் அணுகா' என்றார். கலுழன் - வட சொற்றிரிபு. சேமவில்-தான்சேமித்துவைத்துள்ள வில்லுமாம்; சேமித்தல்-பத்திரமாகப் பாதுகாத்தல். **பி-ம்:**—[1]அநந்தஞ்ஞேம. (கூஉக)

ககக. எழுந்தான் றடமார்பினி லேழினெ டேழு வாளி
யழுந்தாது கழன்றிடப் பெய்தெடுத் தார்த்த ரக்கன்
பொழிந்தான் [2]புகர்வாளிகண் மீளவும் போர்ச்ச டாயு
விழுந்தா னெனை[3]வஞ்சினர் விண்ணவர் வெய்து யிர்த்தார்.

(இ - ள்.) (அவ்வளவிலே), அரக்கன்-இராவணன், ஆர்த்து - ஆரவா ரஞ்செய்துகொண்டு, எழினெடு ஏழு வாளி-பதினான்குபாணங்களை, எடு த்து—,எழுந்தான் தட மார்பினில் - (தனது குண்டலங்களைப் பறித்துக் கொண்டு) மேலெழுந்த சடாயுவினது பரந்தமார்பிலே, அழுந்தாது கழன் றிட-பதிந்துநின்றிடாமல்துளைத்து ஊடுருவி அப்பாற்செல்லும்படி, பெய்து-பிரயோகித்து, மீளவும்-மறுபடியும், புகர் வாளிகள் - ஒளியுள்ள பல அம்பு களை, பொழிந்தான் - சொரிந்தான்; (அதனால்), போர் சடாயு விழுந்தான் என - போர்செய்த சடாயு விழுந்திட்டா னென்று கருதி, விண்ணவர் - தேவர்கள், அஞ்சினர் - அச்சமடைந்து, வெய்து உயிர்த்தார் - உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டார்கள்; (எ - று.)

தவமுமல்விழுவா னென்ற கருத்தில் 'விழுந்தான்' என்றது, தெளிவு பற்றிய காலவழுவமைதி. ஏழினுடைழு - ஏழோடுகூடிய ஏழு **பி - மீ:—** [1]எய்து. [2]சரமாரிகள். [3]விண்ணவரஞ்சினர். (கூஉ)

ககஉ. புண்ணிற் புதுநீர் [1]பொலியப் [2]பொழி புள்ளின் வேந்தன்
மண்ணிற் கரனோடுக லோருதி ரத்தின் வாரி
[3]கண்ணிக் கடலென்று [4]துகர்ந்தது கான்று மீள
விண்ணிற் பொலிகின்றதொர் வெண்ணிற மேக [5]மொத்தா [ன்.

(இ - ள்.) புண்ணின் - (தன் உடம்பில் அம்புகள்பட்டதனாலாகிய) புண்களினின்று, புதுநீர் - புதுமையான இரத்தத்தை, பொலிய பொழி - மிகுதியாகச்சொரிகிற, புள்ளின் வேந்தன் - (கழுகென்னும்) பறவைகளுக்கு அரசனாகிய (வெண்ணிறமுடைய) சடாயு,—மண்ணில் கரனோடு முதலோர் உதிரத்தின் வாரி - தரையிற்பெருகிய கரன்முதலிய அரக்கர்களுடைய இரத்தவெள்ளத்தை, கடல் என்று கண்ணி துகர்ந்தது - கடலென்றுகருதித் (தான்)பருகியதான, ஓர் மேகம் - ஒருமேகமானது, மீள கான்று - (அங்ஙனம் தான் உட்கொண்ட நீரைப் பின்புவெளிச்சொரிந்து, விண்ணின் வெள் நிறம் பொலிகின்றது ஒத்தான் - வானத்தில் வெண்ணிறமாய்விளங்குகின்றதை யொத்திருந்தான்; (எ - று.)

கடலின்நீரை முகந்துஉட்கொண்டு வானத்தில் எழுந்து அதனை மழைநீராகச் சொரிந்து வெண்ணிறமாய் விளங்குதல், மேகத்தின் இயல்பு. இறந்தாரதுஇரத்தத்தைப்பருகும் இயல்புள்ள கழுகரசாகிய சடாயு இப்பொழுது தன்உடம்பிற்புண்களினின்று இரத்தத்தைச் சொரிந்து வானத்தில் வெண்ணிறமாய்விளங்குதற்கு, தரையிற்பெருகிய கரன்முதலியோரது இரத்தவெள்ளத்தைக் கடலென்று கருதிப் பருகியதான ஒருமேகம் பின்பு அதனை மழையாக வெளிச்சொரிந்து வானத்தில் வெண்ணிறமாய் விளங்குதலை உவமைகூறினர். புதுநீர் - புதியசெந்நீர்; இதுவரையிலும் ஒரு பொழுதும் சடாயு புண்பட்டுக் குருதிசொரிந்ததில்லை யென்பது விளங்க, 'புதுநீர்' என்றார். அன்றியும், புதுவெள்ளம் செந்நிறமாயிருத்தல்பற்றி, செந்நீரை 'புதுநீர்' என்றுமாம். கண்ணின், கண்-பெருமை, இன்-சாரியை. இனி, 'கண்ணிற்கடலென்று' என்பதற்கு - கண்ணிற்காணும்பெரிய தோற்றத்தாற் கடலென்றுகருதி யென்றும் உரைக்கலாம். **பி - மீ:—** [1]பொழிய. [2]பொலி. [3]கண்ணிற். கண்ணீர்க். [4]கவர்ந்தது. [5]என்ன. (கூஉ)

ககஊ. ஒத்தா னுடனே யுயிர்த்தா னுருத்தா னவன்மேலுள்
பத்தாடு பச்சின் னெடும்பத்தியிற் றத்தி மூக்காற்
கொத்தா ரகத்தாற் குடையாச் சிறையாற் புடையா
முத்தார மார்பிற் கவசத்தையு மூட்ட றுத்தான்.

(இ - ள்) ஒத்தான் - (கீழ்க்கூறிய) ஒப்புமைபெற்றவனான சடாயு,—உடனே—, உயிர்த்தான் உருத்தான் - பெருமூச்செறிந்து கோபித்து,—

அவன் தோள் பத்தோடு பத்தின் நெடு பத்தியில்-அவ்விராவணனுடைய இரு பது தோள்களின் நீண்டவரிசையிலே, தத்தி - பாய்ந்து, மூக்கால் கொத் தா - மூக்கினுற்கொத்தியும், நகத்தால் குடையா - கால்நகங்களினுற் குடைந் தும், சிறையால் புடையா - சிறகுகளினுல் அடித்தும், முத்து ஆரம் மார்பின் கவசத்தையும் மூட்டு அறுத்தான்-முத்துமாலையையணிந்த மார்பில் தரித்து ள்ள அவன்கவசத்தையும் பொருத்துவாய்அறும்படி செய்தான்; (எ-று.)

கவசத்தையும் மூட்டுஅறுத்தான்-கவசத்தின்பூட்டுகளைத்துணித்தான்.()

ககச. அறுத்தானே யரக்கனு மைம்பதொ டைம்ப தம்பு
செறித்தான் றடமார்பிற் செறித்தலுந் தேவ ரஞ்சி
வெறித்தார் வெறியாமு னிராவணன் வில்லைப் பல்லாற்
பறித்தான் பறவைக்கிறை விண்ணவர் பண்ணை [1]யார்ப்ப

(இ-ள்.) அறுத்தானே - (அவ்வாறு கவசத்தை) மூட்டறுத்த சடாயுவை, அரக்கனும் - இராவணனும், ஐம்பதொடு ஐம்பது அம்பு தட மார்பில் செறித் தான்-நூறுபாணங்களைப் பரந்தமார்பிலே அழுந்தச்செய்தான்; செறித்தலும்- (அங்ஙனம் இராவணன் நூறுபாணங்களைச் சடாயுவின்மார்பிற் பதியச்செ ய்தவளவிலே, தேவர் - தேவர்கள், அஞ்சி வெறித்தார் - (இத்தஅம்புகளினுல் சடாயுவுக்கு என்னஆகுமோ வென்று) பயப்பட்டுத்திகைத்தார்கள்; வெறியா மூன்-(அங்ஙனம்)திகைத்தற்குமுன்னே [உடனே விரைவில் என்றபடி],பற வைக்கு இறை - பறவைகளுக்குஅரசனுகிய அச்சடாயு, விண்ணவர் பண்ணை ஆர்ப்ப-அத்தேவர்களுடைய கூட்டம் ஆரவாரிக்கும்படி, இராவணன் வில்லை பல்லால் பறித்தான் - இராவணனுடைய வில்லை(த்தனது) பற்களினுற் கடித்துப்பிடுங்கினுன்; (எ - று.)

தங்கட்குத்தலைவனுய்த் தங்கள் பகைவரைத் தொலைத்துத் தங்களைப் பாதுகாத்தற்காகவே திருவவதரித்த திருமாலாகிய இராமபிரானுக்கு உற்றுழி யுதவவந்த சடாயுவின் துயர்க்குத் தாம் துயருறுதலும், அச்சடாயுவின்வெற் றிக்குத் தாம் மகிழ்தலும் தேவர்கட்கு இயல்பாயின. 'விண்ணவர் பண்ணை யார்ப்ப' என்பதற்கு - தேவர்களுடைய துந்துபிவாத்தியம் ஆரவாரிக்க என்று பொருளுரைப்பாருமுளர்; அப்பொழுது, வாச்சியப்பெயராகிய பணை யென்பது பண்ணையென விரித்ததென வேண்டும். பி-ம்:—[1]ஆர்க்க. (கூஉடு)

ககடு. எல்லிட்ட வெள்ளிக் கயிலைப்[1]பொருப் பீசனேடு
மல்லிட்ட தோளா லெடுத்தான்கிலை வாயின் வாங்கி
வில்லிட் டியர்ந்த நெடுமேக மெனப்பொ லிந்தான்
சொல்லிட் டவன்றேர்வல்வி யாருளர் சொல்ல வல்லார்.

(இ - ள்.) எல் இட்ட - ஒளிபொருந்திய, வெள்ளி கயிலை பொருப்பு - வெள்ளிமயமான கைலாசமலையை, ஈசனேடு - (அதற்குத்) தலைவனுன சிவ பிரானுடனே, மல் இட்ட தோளால் எடுத்தான்-வலிமைமிக்க (தன்) தோள் களால் எடுத்தவனுன இராவணனது, கிலை - வில்லை, வாயின் வாங்கி -

•

வாயினுற் பறித்துக் கௌவிக்கொண்டு, (சடாயு), வில் இட்டு உயர்ந்த நெடு மேகம் என பொலிந்தான் - இந்திரவில்லைத் தோற்றுவித்துக்கொண்டு வானத்திலெழுந்த பெரியமேகம்போல விளங்கினனன்; அவன் தோள் வலி சொல் இட்டு சொல்ல வல்லார் யார் உளர் - அச்சடாயுவினது புயபலத்தைச் சொற்களைக்கொண்டு சொல்லவல்லவர் எவர்உள்ளார்? (எ - று.)

எவராலுஞ் சொல்ல முடியாத வலிமையுடையான் என்பதாம். 'சொல் லிட்டு' என்பதில், இட்டுஎன்பது - 'கொண்டு' என்பதுபோல மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபின் தன்மையதாய் நின்றது. இங்கே 'தோள்வலி' என்றது - உடல்வலிமை யென்றபடி: சிறப்புப்பெயர், பொதுப்பொருளே உணர்த்திற்று. பி·ம்:—[1]கிரி. (கூஉசு)

ககசு. மீளா நிறத்தாயிரங் கண்ணவன் விண்ணி னூடை
வாளா [1]லறுத்தான் சிலைவாயிடை நின்றும் வாங்கித்
தாளா லிறுத்தான் றழல்வண்ணன் றடக்கை வில்லைத்
தோளா லிறுத்தான் றுணைத்தாதைத னன்பிற் றோழன்.

(இ - ள்.) மீளா நிறத்து - திரும்பாத மார்பையுடைய [என்றும் எவர் க்கும் புறங்கொடாத என்றபடி], ஆயிரம் கண்ணவன்-ஆயிரங்கண்களையுடை யவனான தேவேந்திரன், விண்ணின் ஓட - வானத்தில் தோற்றோடும்படி, வாளால் அறுத்தான் - ஆயுதங்கொண்டு (திக்குவிசயகாலத்தில்அவனை) வருத்தியவனான இராவணனது, சிலை-வில்லை, வாயிடைநின்றும் வாங்கி-(தன்) வாயினின்று வாங்கி, தாளால் இறுத்தான் - கால்களால் ஒடித்திட்டான்: (யாவனெனில்),--தழல் வண்ணன்-நெருப்புப்போலுஞ் செந்நிறமுடைய சிவ பிரானது, தட கை-பெரிய கையில் இருந்ததான, வில்லை - சிவதனுசை, தோளால் இறுத்தான் - (சீதாகலியாணகாலத்தில் சனகமகாராசன்சொன்ன படி கந்யாசுல்கமாகத் தனது)தோள்வலிமையால் ஒடித்திட்டவனான இராம பிரானுக்கு, துணை-உதவிசெய்யவந்தவனும், தாதைதன் அன்பின் தோழன்- அவன்தந்தையான தசரதசக்கரவர்த்தியினது அன்புள்ள தோழனுமான சடாயு; (எ - று.)

சிவன்வில்லைக்கையாலொடித்தவனது தந்தையின் தோழன் இந்திரனை வென்றவனது வில்லைக் காலாலொடித்தானென்று ஒருசமத்காரந் தோன்றக் கூறினர். பி - ம்:—[1]ஒறுத்தான். (கூஉஎ)

ககஎ. ஞாலம் [1]படுப்பான்றன தாற்றலுக் கேற்ற நல்வின்
மூலம் மொடிப்புண்டது கண்டு முனிந்த நெஞ்ச
னூலம் மிடற்றுன்புர மட்டதொ ரம்பு போலுஞ்
சூலம் [2]மெடுத்தா னெறிந்தான்மறந் தோற்றி லாதான்.

(இ - ள்.) ஞாலம் படுப்பான் - உலகத்துக்கு அழிவுசெய்பவனான இரா வணன்,—தனது ஆற்றலுக்கு ஏற்ற நல் வில் - தனதுவலிமைக்குத்தக்க

தான சிறந்த அந்தவில், மூலம் ஒடிப்புண்டது - (சடாயுவினுல்) அடியோடு ஒடிக்கப்பட்டதை, கண்டு - பார்த்து, முனிந்த நெஞ்சன் - கோபித்தமனத்தையுடையவனுகி, மறம் தோற்றிலாதான் - பகைவெல்லும்வீரத்திற் சோர்வுறுதவனும், ஆலம் மிடற்றன் புரம் அட்டது ஓர் அம்பு போலும் சூலம் எடுத்தான் எதிர்தான் - விஷத்தையுண்ட கண்டத்தையுடையவனுன சிவபிரான் திரிபுரத்தை அழித்த (திருமாலின்வடிவமான) ஒப்பற்றதோர்அம்பைப் போன்ற சூலாயுதத்தை யெடுத்து(ச் சடாயுவின்மேல்) எறிந்தான்.

மூலம்மொடிப்புண்டது, ஆலம்மிடற்றன், சூலம்மெடுத்தான் என்றவற்றில், மகரவொற்று-விரித்தல். ஞாலம்மெடுப்பான் என்ற பாடத்துக்கு-உலகத்தைப்பெயர்த்தெடுக்கவல்ல இராவணனெனக; கீழ் கூஉ - ஆங்கவியில் ''பாரினே யெடுக்க வேண்டின் பலவினே சிலசொல் ஏழாய்''என வந்தது காண்க. திரிபுரசங்காரகாலத்தில் திருமால் சிவபிரானுக்கு அம்பாய் நின்று உதவி அப்புரத்தைஅழித்ததை, ''குழனிறவண்ண நின்கூறுகொண்ட, தழனிறவண்ணன் நண்ணுர்நகரம், விழநனிமலிசிலை வளைவுசெய்தங்கு,அழனிற வம்பது வானவனே'' என்ற பெரியாரருளிச்செயலாலும் அறிக. **பி - மீ:**— [1]மடுப்பான். [2]எடுத்தார்த்து. (கூஉஅ)

ககஅ. ஆற்ருல் னிவனென் [1]றுணராதென தாற்றல் காணென்
றேற்ருனெருவைக்கிறை முத்தலை [2]யெஃக பார்பின்
மேற்ருனிதுசெய்பவர் யாரென விண்ணு ளோர்க
டோற்றுது நின்ருர்தம தோள்புடை கொட்டி யார்த்தார்.

(இ - ள்.) எருவைக்கு இறை - கழுகுகளுக்கு அரசனுன சடாயு,—இவன் ஆற்ருன் என்று உணராது-இவன் (இச்சூலத்திற்கு எதிர்நிற்க) வல்லமையில்லாதவ னென்று எண்ணுதபடி, 'எனது ஆற்றல் காண் என்று-'எனதுவலிமையைப் பார்' என்றுசொல்லி, முத்தலை எஃகம் - மூன்றுதலைகளையுடைய அச்சூலாயுதத்தை, மார்பின்மேல் ஏற்ருன் - (தனது மார்பின் மேல் ஏற்றுக்கொண்டான்; (அவ்வளவில்), விண் உளோர்கள் - (அதனைக் கண்ட) வானத்திலுள்ளதேவர்கள், இது செய்பவர் யார் என - இவ்வாறு பகைவனெதிர்ந்த வலியசூலத்தை மார்பில் வலியஏற்றுக்கொள்பவர் வேறு எவர்! [எவருமில்லை] என்று எண்ணி, தோற்ருது நின்ருர் - (இராவணனிடத்துஅச்சத்தால் தங்களுடம்பு) வெளித்தோன்ருதபடி மறைத்துநின்று, தம தோள் புடை கொட்டி ஆர்த்தார் - (களிப்பினுல்) தங்கள் தோள்களைத் தட்டி ஆரவாரஞ்செய்தார்கள்; (எ-று.)—தான் - அசை.

[1]உணராதியென்னுற்றல்காண் என்ற பாடத்துக்கு, உணராதி என்பது-எதிர்மறையொருமையேவலாம். தம, அ - ஆறனுருபு. **பி - மீ:**—[2]எஃகை. ()

ககக. பொன்னேக்கியர் தம்புல னேக்கிய புன்க ணேரு
மின்னேக்கிய ரில்வழி யெய்திய நல்வி ருந்துந்
தன்னேக்கிய நெஞ்சுடை [1]யோகியர் தம்மைச் சார்ந்த
மென்னேக்கியர் நோக்கமு மெனை மீண்ட தவ்வீவல்,

(இ - ள்.) பொன் நோக்கியர்தம் - பொருளினிடத்தே கருத்துடைய வாகளாகிய விலைமாதர்களுடைய, புலன் - ஐம்புலவின்பத்தை, நோக்கிய - கருதியாசைப்பட்ட, புன்கணெஞ்சும் - வறுமையையுடையவர்களும்,—இன் நோக்கியர் இல் வழி-இனியபார்வையையுடைய [நற்குணநற்செய்கையுள்ள] மகளிர் இல்லாதவிடத்தில், எய்திய - சென்றடைந்த, நல் விருந்தும் - நல்ல விருந்தினர்களும்,—தன் நோக்கிய நெஞ்சு உடை - தன்னையே [ஆத்மசொரூபத்தையே] கருதிய மனத்தையுடைய, யோகியர்தம்மை - யோகத்தேர்ச்சியையுடைய முனிவர்களை, சார்ந்த - அடைந்த, மெல் நோக்கியர் நோக்கமும்- மென்மையானபார்வையையுடைய அழகியமாதர்களுடைய ஆசைநோக்கும், ஆம் என - ஒப்பாமென்றுசொல்லும்படி, அ வேல்-(சடாயு மார்பில் ஏற்றுக் கொண்ட) அந்தமுத்தலைவேலானது, மீண்டது-(அவன்மார்பைத்துளைத்த மாட்டாமல் தாக்கித்) திரும்பிவிட்டது; (எ - று.)

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்" என்றபடி ஆடவரை அன்புபற்றி விரும்பாமல் பொருள்பற்றியே விரும்புந்தன்மையரான வேசையரது ஐம்புலவின்பத்தைப் பொருளுடையார் விரும்பிச்சென்றால் பொருள்கொடுத்துத் தம்விருப்பத்தை முடிக்க இயலும்; அன்றி, பொருளில்லாத தரித்திரர்கள் விரும்பி அவ்வேசையர்வீட்டுக்குச் சென்றால் உள்நுழையவும் இடம்பெறாமல் மீள்வதுபோல, வேல் உள்நுழைய இடம்பெறாமல் மீண்டது. "பெருந்தடங்கட் பிறைநுதலார்க் கெலாம், பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும், விருந்து மன்றி விளைவன யாவையே" என்றவாறு அறிவும் நற்குணநற்செய்கையு முடைய மகளிருள்ள வீட்டிற்கு விருந்தினர் சென்றால் அம்மகளிரது கொழுநரான ஆடவர்களால் எதிர்கொண்டுவந்து அழைத்துச் சென்று உரியபடி உபசரிக்கப்படுவர்; அத்தன்மையரான மனைவிய ரில்லாத மனைக்கு விருந்தினர் சென்றால் அங்கு உள்நுழைந்து உணவுகொள்ள இடம்பெறாமல் மீளுதல்போல, வேல் உள்நுழைந்து உடலிற்பற்ற இடம்பெறாது மீண்டது. அழகியகண்ணின்நோக்கத்தையுடைய மாதர்கள் தமது குறிப்புநோக்கைச் சாதாரணசனங்களின்மேற்செலுத்தினால் அந்நோக்குத் தடையின்றிச்சென்று அவர்களுள்ளத்தில் ஊன்றி அவர்க்குத் தம்மிடத்துவிருப்பத்தை விளைத்து அவர்களை வசீகரித்தற்கு வல்லதாம்: அந்நோக்கந்தானே ஆத்மசொரூபத்திலேயே கருத்தை யூன்றுபவரான யோகியர்மேற் செலுத்தப்பட்டால் அவர்களுள்ளத்தில் ஊன்றி அவர்கட்கு வேட்கையைவிளைத்துப் பயன்பெறமாட்டாமைபோல, வேல் மார்பைத்துளைத்து ஊடுருவமாட்டாமல் மீண்டது என்க. **பயனுவமை.**

முதலடியிலும், மூன்றாமடியிலும் உள்ள நோக்கு - கருத்தின் நோக்கம். இரண்டாமடியிலுள்ள நோக்கு-பொதுநோக்கு; அன்றி, விருந்தினரை அன்போடு பார்த்தலுமாம். நான்காமடியிலுள்ள நோக்கு - காமக்குறிப்பை வெளிப்படுத்துகின்ற நோக்கம். காமமாவது - ஒருகாலத்து ஒருபொருளால்

ஐம்புலனும் துகர்தற்சிறப்புடைத்தான இன்ப மாதலால், அதனைக் கருதுதல், 'புலனோக்குதல்' எனப்பட்டது. புன்கண் - துன்பம்; துன்ப மூண்டாம்பொழுது கண்கள் மலர்ச்சியின்றி வாட்டமடைதலால், புன்கண் என்று துன்பத்திற்குப் பெயராயிற்று; புன்கண் - வாடிய கண்: இக்காரியப்பெயர் காரணத்தின்மேல் நின்றது. பொருளின்மை துன்பத்துள்துன்ப மாதலால், வறியவர், 'புன்கணோர்' எனப்பட்டனர். நல்விருந்து - "மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்றபடி இன்முகமும் இன்சொல்லும் உபசாரமும் இல்லாவிடின் வாடி நீங்கும் மெல்லியல்பினரான விருந்தினர். வேறுகாதஅன்புடையிருவர் கூடியல்லது விருந்தோம்புதல் செய்யப்படாமையின், இன்னோக்கியரில்வழி யெய்திய நல்விருந்து பயன்பெறுது மீளும். யமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரதியாகாரம் தாரணை தியாநம் சமாதி என்ற யோகத்தின் அங்கம் எட்டனுள் ஈற்றதாகிய சமாதியின் இலக்கணம் ஆன்மாவாகிய தன்னைத் தான் காணுத லாதலால், அவ்வங்கங்களிற் குறைவில்லாத யோகிய ரென்பதுபட, 'தன்னோக்கிய நெஞ்சுடை யோகியர்' என்றார். யோகியர் - யோகமுடையவர்.

சூலம், முத்தலைவேல் என்பன-ஒருபொருளனவாதலால், இங்கு 'வேல்' எனப்பட்டது; பொதுப்பெயர் சிறப்புப்பொருளின்மேல் நின்றது. இரண்டாமடியில், இல் நோக்கியர் எனப்பிரித்து, இல் நோக்கியர் - (தமதுகருத்தின் வழியே தமதுமனையாள் ஒழுகுதலில்லாமல்) மனையாளின்முகத்தைப் பார்த்து அவள்கருத்தின்படியே தாம் நடப்பவரான பெண்வழிச்செல்வாரது மனையின்கட் சென்ற விருந்தினர் உபசாரம்பெறுது மீளுதல்போல என்று பொருள் கொள்ளினும் அமையும்; திருக்குறளில் பெண்வழிச்சேரலென்ற அதிகாரத்தில் "இல்லாளே யஞ்சுவான் அஞ்சும் மற்றெஞ்ஞான்றும், நல்லார்க்கு நல்ல செயல்," "நட்டார் குறைமுடியார் நன்றூற்றூர்நன்னுதலாள், பெட்டாங் கொழுகுபவர்" என்றவற்றால், பெண்வழிச்செல்வார் தாம்விரும்பியபடி பொருள்கொண்டு விருந்தோம்புதல் முதலிய அறஞ்செய்யமாட்டாமையை அறிக: "இல்லாளே யஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற், புல்லாளன்" என்றார் சிந்தாமணியிலும்; இப்பொருளில், 'இல்நோக்கியர்' என்பதில், இல் - இல்லாள்; இல்என்ற மனையின்பெயர் - இடவாகுபெயராய், அதில் வாழும் மனையாளைக் குறித்தது: இல்வழி யென்பதில், இல் - மனை, வழி - ஏழனுருபு. 'தன்னோக்கிய நெஞ்சுடை' என்ற அடைமொழியால், பொறியுணர்வெல்லாம் புலத்தின்வழாமல் ஒருவழிப்படுத்து மனத்தினை ஒருவழி நிறுத்தி நிறுத்திய அம்மனம் நிலைதிரியாமல் குறித்தபொருளொடு கொளுத்திய யோகியர், பொய் கொலை களவே காமம் பொருள்நசை இவ்வகையைத்தும் அடக்கியவ ராதலால், பிறர் தம்விஷயமாகக் குறிப்புநோக்கங்கொள்ளுதலைத் தாம் நோக்குதலுஞ் செய்யா ரென்பது விளங்கும். [1]யோகியர் தன்மைசார்ந்தஎன்னும் பாடத்துக்கு, யோகியரதுதன்மைபொருந்தின மகளிரது நோக்கம்போல என்று உரைத்து, யோகியர் பரம்பொருளினிடத்தே

யன்றிப் பிறபொருளினிடத்திற் கருத்தைச்செலுத்தாதவாறுபோல,தம்கணவனிடத்தேயன்றிப் பிறரிடத்துத் தம்கருத்தைச் செலுத்தாத கற்புடையமகளிரது நோக்கம் பிறரை எதிர்ப்பட்டவழி அவர்மேற் செல்லாமல் மீளுதல்போல வேல் மீண்டதென்று கருத்துக்கொள்ளுதலும் ஒன்று. (கூஉ)

கஉ0. வேகம்முடன் வேலிழந் தான்படை வேறெ டாமுன்
மாகம் மறையும்படி கீண்ட வயங்கு மான்றேர்ப்
பாகன் றலையைப் பறித்துப் படர்[1]கற்பி னுள்பான்
மோகம் படைத்தா [2]னுலைவெய்த முகத்தெ றிந்தான்.

(இ - ள்.) வேல் இழந்தான் - (இவ்வாறு) சூலத்தைப் பயனின்றிழந்தவனான இராவணன்,வேகம்முடன்-விரைவுடனே, வேறு படை எடா முன்-வேறுஆயுதத்தை எடுக்காதமுன்னமே [எடுத்தற்குமுன்பே], (சடாயு), மாகம் மறையும்படி கீண்ட வயங்கு மான் தேர் பாகன் தலையை பறித்து-பெரியவான மும்மறையும்படி உயர்ந்துள்ளதும் விளங்குகிற குதிரைகள் பூட்டியதுமான அவ்விராவணனது தேரைச் செலுத்துகிற சாரதியினுடைய தலையைக்கொய்து, படர் கற்பினுள்பால் மோகம் படைத்தான் உலைவு எய்த முகத்து எறிந்தான் - மிக்க பதிவிரதாதருமமுடையவளான சீதாபிராட்டியினிடத்து ஆசை மயக்கத்தை யடைந்தவனான இராவணன் வருத்தமடையும்படி அவன்முகத்தின்மேல் (அத்தலையை வீசி) எறிந்தான்; (எ - று,)

வேகம்முடன், மாகம்மறையும்படி என்றவற்றில், மகரவொற்று-விரித்தல். மான், ன் - சாரியை; விலங்கின்பொதுப்பெயர் சிறப்பாய்க் குதிரையின்மேல் நின்றது. பி-ம்.—[1]கற்பினுள்மேல். [2]தொலைவெய்த. (கூஉக)

கஉக. [1]எறிந்தா னதுதீநாக்கி யிராவண னெஞ்சி னுற்ற
லறிந்தான் முனிந்தா ணண்டமெ ராடகத் தண்டு வாங்கிப்
பொறிந்தாங் கெரியின்சிகை பொங்கி யெழப்பு டைத்தான்
மறிந்தா னெருவைக்கிறை மால்வரை போல மண்மேல்.

(இ ள்.) எறிந்தான்-(தனது தேர்ப்பாகனது தலையைப் பறித்துத் தன் முகத்தில்) எறிந்த அச்சடாயுவினது, அது - அச்செயலை, நோக்கி - பார்த்து, இராவணன்—: (அதனால்), நெஞ்சின் ஆற்றல்அறிந்தான் (அவனது) மனத்தின்வலிமையை [உறுதியான தைரியத்தை] அறிந்து, முனிந்து - கோபங்கொண்டு, ஆண்டது ஓர் ஆகம் தண்டு வாங்கி-(முன் பலபோர்களில் தான்) கைக்கொண்டுபயின்று வெற்றிபெற்றதாகிய பொன்மயமான ஒருகதாயுதத்தை எடுத்து, பொறிந்து ஆங்கு எரியின் சிகை பொங்கி எழ - நெருப்புப்பொறிபறந்தாற்போல அக்கினிச்சுவாலை மிக்குஎழும்படி, புடைத்தான் - (அத்தண்டினால் சடாயுவைத்) தாக்கினான்; (அவ்வளவிலே), எருவைக்கு இறை - கழுகுகளுக்கு அரசனுகிய சடாயு, மண்மேல் - தரையின்மேல், மால் வரை போல - பெரிய மலை விழுந்தாற்போல, மறிந்தான் - விழுந்தான்; (எ - று.)

எறிந்தான், ஆண்டது - பெயர்கள். பி-ம்:—[1]எறிந்தான்றனை. (கூஉ)

கஉஉ. மண்மேல் விழுந்தான் விழலோடும் வயங்கு மான்றேர்
கண்மே லொளியுந் [1]தொடராவகை தான்க டாவி
விண்மே லெழுந்தா னெழமெல்லிய லாளும் வெந்தீப்
புண்மே னுழையத் துடிக்கின்றனள் போற்பு ரண்டாள்.

(இ - ள்.) மண்மேல் விழுந்தான் - (இங்ஙனம் தண்டாயுதத்தால் அடிபட்டுச் சடாயு) தரையில் விழுந்தான்; விழலோடும் - (அங்ஙனம்) விழுந்த வளவிலே, (இராவணன்), வயங்கு மான் தேர் - சிறப்புற்றுவிளங்குகிற குதிரைகள்பூட்டிய தனதுதேரை, கண்மேல் ஒளியும் தொடரா வகை-(நெடுந்தூரமளவும் விரைந்துசெல்லுந்தன்மையுள்ள) கண்களின் பார்வையும் பின்பற்றிச்செல்லவொண்ணாதபடி, கடாவி-மிக்கவிரைவாகச் செலுத்திக்கொண்டு, விண்மேல் எழுந்தான் - வானத்திற் கிளம்பினான்; எழ - (அங்ஙனம் தேரை விரைவில்நடத்தி ஆகாயமார்க்கமாகப்) புறப்பட்டவளவிலே, மெல் இயலாளும் - மென்மையானதன்மையையுடையளான சீதாபிராட்டியும், வெம் தீ புண்மேல் நுழைய துடிக்கின்றனள்போல் - புண்ணில் வெவ்வியநெருப்பு நுழைந்ததனால் துடிக்கின்றவள்போல(த் துன்பத்தின்மேல் மிக்கதுன்பமுற்று), புரண்டாள் - விழுந்து புரளலுற்றாள்; (எ - று.)—தான் - அசை.
பி-ம்:—[1]தொடராவிசையில். (கூஙஉ)

கஉங. கொழுந்தே யனையாள் குழைந்தேங்கிய கொள்கை கண்டா
னழுந்தே லவலத்திடை யஞ்சலி [1]யன்ன மென்னை
வெழுந்தா னுயிர்த்தா னடவெங் கினிப்போவ தென்னை
விழுந்தா னவன்றேர்மிசை விண்ணவர் பண்ணை யார்ப்ப.

(இ - ள்.) கொழுந்தே அனையாள் - இளந்தளிரையேயொத்த [மிக்க மென்மையையுடைய] சீதை, குழைந்து ஏங்கிய - வாடிவருந்திய, கொள்கை - செய்கையை, கண்டான் - பார்த்து, (சடாயு), 'அன்னம்-அன்னப்பறவைபோன்றவளே! அவலத்திடை அழுந்தேல் - துன்பத்தில் முழுகவேண்டா: அஞ்சலி-அஞ்சாதிரு,' என்னை - என்று (சீதையை நோக்கிச்) சொல்லி, உயிர்த்தான் எழுந்தான் - பெருமூச்சுவிட்டுக்கொண்டு எழுந்து, அட எங்கு இனி போவது என்னை - 'அடா! இனி நீ தப்பிப்போவது எங்கு?' என்று (இராவணனை நோக்கிக்) கூறி, அவன் தேர்மிசை - அவனுடைய தேரின் மேல், விண்ணவர் பண்ணை ஆர்ப்ப விழுந்தான் - தேவர்களுடைய கூட்டம் (மகிழ்ச்சியால்) ஆரவாரிக்கும்படி பாய்ந்தான்; (எ - று.)

அழுந்தேல், அஞ்சலி - எதிர்மறையொருமையேவல். அன்னம்-உவமையாகுபெயர்; அண்மைவிளி. [1]அன்னை என்ற பாடத்துக்கு - அம்மா! என்று அன்புபற்றி விளித்ததாகக் கொள்க. பண்ணை - மகளிர்கூட்டம்; இச்சிறப்புப்பெயர், இங்குப் பொதுப்பொருளின்மேல் நிற்பதாய், கூட்டமென்றமாத்திரையாயிற்று; இனி, 'விண்ணவர்பண்ணையார்ப்ப' என்பதற்கு-தேவதுந்துபி முழங்க வென்று உரைப்பாரும் உளர். (கூஙச)

கஉச. பாய்ந்தா னவன்பன் மணித்தண்டு பறித்தெ றிந்தா
னேய்ந்தார் கதித்தேர்ப் பரியெட்டினை டெட்டு மெஞ்சித்
தீந்தா சற[1]வீசியத் திண்டிறற் றுண்ட வாளாற்
காய்ந்தான் கவர்ந்தா னுயிர் காலனுங் கைவி திர்த்தான்.

(இ - ள்.) பாய்ந்தான் - (அங்ஙனம் இராவணனதுதேரின்மேற்) பாய்ந்த சடாயு,—அவன் - அவ்விராவணனுடைய, பல் மணி தண்டு - பலஇரத்தினங்கள் பதிக்கப்பெற்ற (பொன்னாலாகிய முற்கூறிய) தண்டாயுதத்தை, பறித்து எறிந்தான் - பிடுங்கி அப்பால் எறிந்துவிட்டு,—எய்த்து ஆர் கதி - பொருந்தியமைந்த வேகத்தையுடைய, தேர் பரி எட்டினைடு எட்டும் - (அவனது) தேரிற்பூட்டிய பதினாறுகுதிரைகளும், எஞ்சி தீந்து ஆசற - ஒடுங்கி அழிந்தொழியும்படி, திண் திறல் அ துண்டம் வாளால் காய்ந்தான் வீசி - மிக்கவலிமையுடைய அந்த(த்தனது) மூக்காகிய வாளினால் கோபங்கொண்டு வீசி, உயிர் கவர்ந்தான்-(அக்குதிரைகளின்) உயிரைக் கவர்ந்திட்டான்; (அதுகண்டு), காலனும் கைவிதிர்த்தான் - யமனும் (அஞ்சிக்) கைநடுக்க முற்றான்; (எ-று.)

அதுகண்டு யமன் கைநடுங்கிய காரணம்-பிராணிகளின் உடலினின்று உயிரைப் பிரிப்பதைத் தொழிலாகவுடைய தான் இக்குதிரைகளின்உயிரைக் கவர்ந்ததாகக் கருதித் தன்மீது இராவணன் கினங்கொண்டு தன்னைத் தண்டிப்பனெவென்ற அச்சம்; அன்றி, தன்னாலாகாத செயலைச் சடாயு செய்த தன்மையைநோக்கிக்கொண்ட அதிசயமுமாம். துண்டவாளால் காய்ந்து வீசிஉயிர்கவர்தல்-வாள்போற்கூரிய மூக்கினாற் குத்திக்கொல்லுதல். ஆசறுதல் - முடிதல்; ஆசறு-ஒருசொல். பி - மி.---[1]வீசியதிண்டிறல். (கூஙு)

கஉரு. திண்டே ரழித்தாங்கவன் றிண்புறஞ் சேர்ந்த தூணி
விண்டான் மறைப்பச் செறிகின்றன வில்லி லாமை
மண்டா ரமர்தான் வழங்காமையின் வச்சை மாக்கள்
பண்டா ரமொக்கின்றன [1]வள்ளுகி ராற்ப றித்தான்.

(இ - ள்.) திண் தேர் அழித்து - (பின்பு சடாயு இராவணனது) வலிய தேரைச் சிதைத்து, ஆங்கு - அதன்பின்பு,—வில் இலாமை-(அவன்கையில்) வில்இல்லாமைபற்றி, மண்டு ஆர் அமர் தான் வழங்காமையின் - கொடிய அருமையான போருக்குத் தான் உதவாமையால், வச்சைமாக்கள் பண்டாரம் ஒக்கின்றன - உலோபிகளுடைய பொக்கசத்தை ஒக்கின்றவையும், விண் தான் மறைப்பசெறிகின்றன-ஆகாயத்தை மறைக்கும்படி உயர்ந்து பொருந்தியுள்ளவையுமாகிய, அவன் திண் புறம் சேர்ந்த தூணி - அவனதுவலிய தோள்களின்புறத்திலே கட்டப்பட்டுள்ள அம்புறாத்தூணிகளை, வள் உகிரால் பறித்தான் - கூரிய கால்நகங்களாற் பிடுங்கியெறிந்தான்; (எ - று.)

வண்மைக்குணமில்லாத லோபிகளுடைய திரவியசாலை ஈதற்கும் நுகர்தற்கும் பொருள் எடுக்கப்படாமல் வாளாகிடத்தல்போல, வில்இல்லாமைபற்

றிப் போரின்பொருட்டு அம்புவடுக்கப்படாது வாளாகிடக்கின்ற புட்டில்க ளென்க. "உடாஅது முண்ணுதுந் தம்முடம்பு செற்றும், கெடாஅதநல்லற முஞ் செய்யார்—கொடாஅது, வைத்தீட்டினு நிழப்பர் வான்றோய் மலோடை, வுய்த்தீட்டுந் தேனீக் கரி" என்றபடி உலோபிகள்செல்வம் இழக்கப்படுதல் போல, இத்தூணீரங்களும் இழக்கப்பட்டன வென்பதுங் காண்க. மாக்க ளெனப்படுவார் - பகுத்துணர்வில்லாமல் ஐம்பொறியுணர்வுமாத்திரத்தையே யுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிட ராதலின், உலோபிகளது இழிவு தோன்ற, 'வச்சைமாக்கள்' என்றார். பாண்டாரம் - வடசொல். விண்டான், தான் - அசை. பி - மி:—[1]பல்லுகிரூற். (கூகூசு)

கஉசு. [1]மாச்சிச்சிரம் பாய்ந்தவன் மார்பினுந் தோள்கண் மேலு
மோச்சிச் சிறகாற் புடைத்தான் [2]கடித்தா னுலையா
[3]மூச்சிற் றவிரா வணனும் முடி[4]சாய்ந் திருந்தான்
போச்சித் தனோ வுங்கின்னுற் றலைனப் புகன்றான்.

(இ - ள்.) (பின்னும் சடாயு), அவன் மார்பினும் தோள்கள் மேலும் - அவ்விராவணனுடைய மார்பின்மேலும் தோள்களின்மேலும், மா சிச்சிரம் பாய்ந்து - மிக்கவிரோதமாகப் பாய்ந்து, சிறகால் ஓச்சி புடைத்தான் - (தன்) சிறகுகளினால் விசையாக எறிந்து அடித்து, கடித்தான் - வாயினாற் கடித்தான்; (அவ்வளவிலே), உலையா - வலியொடுங்கி, மூச்சு இற்ற - உயிர்ப்பு ஒழிந்த [மூர்ச்சையடைந்த என்றபடி], இராவணனும்—, முடி சாய்ந்து இருந்தான் - தலைசாய்ந்திருந்தான்; (அதுகண்டு சடாயு அவனை நோக்கி), 'இத்தனை போலும் - இவ்வளவுதானா ! நின் ஆற்றல் - உனது வல்லமை, போச்சு - போய் விட்டது,' என புகன்றான் - என்று இழித்துக்கூறினான்; (எ - று.)

மாச்சிச்சிரம் - மகாசித்ரம்; சித்ரமென்ற வடசொல்லின் திரிவாகிய சித்திர மென்பது எதுகைநோக்கி, (பித்து - பிச்சு, வைத்த - வைச்ச என்றாற் போல) சிச்சிரமெனத் தகரசகரப்போலி யேற்றது; (வில்லிபுத்தூரார்பாரதத்தில் அத்திரமென்பது அச்சிரமென விகாரப்பட்டு வருதலுங் காண்க.) ஆகவே, மாச்சிச்சிரமென்பதற்கு-காண்பவர் மிகஅதிசயிக்கும்படி யென்று கருத்தாம். 'மாச்சிச்சிரம்பாய்ந்து' என்பதற்கு-பெரிய சிச்சிலிக்குருவிபோலப் பாய்ந்து என்று பொருள்கூறுதலும் பொருந்தும். இசிரம் பாய்ந்து மாச்சு என்று எடுத்து-இந்த (இராவணனது) தலைகளின்மேற் பாய்ந்து (அவற்றை) அடித்து என்பர் ஒருசாரார்; அவ்வுரைக்கு, மாச்சு - மாய்த்து என்பதன் மரூஉ. இனி, 'மாச்சிச்சிரம்' என்பதற்கு - பெருங்கழுகென்று உரைப்பாரும் உளர்; சிச்சிரமென்பது கழுகென்னும் பொருளதாதற்கு மேற்கோள் கிடைத்திலது. [3]மூச்சித்த என்று பாடமோதி, மூர்ச்சித்த வென்பதன் விகாரமென்றலும் ஒன்று. இராவணனும் முடி—மகரவொற்று - விரித்தல். போச்சு-போயிற்று என்பதன் மரூஉ. பி - மி: —[1]மாச்சிச்சிரல்பாய்ந்தனமார்பினுந் தோளின்மேலும், மாச்சித்திரம்பெறப்பாய்ந்தவன்மார்பினுந்தோளின்மேலும். [2]உலையா விழுந்து. [4]சாய்த்து. (கூகூள)

கஉஎ. அவ்வே லியினே முனிந்தான் முனிந்தாற்ற [1]லன்ன
வெவ்வே லரக்கன் விடலாம்படை வேறு காணு
னிவ்வே லியினே யிவனின்னுயி [2]ருண்பெ னென்னுச்
செவ்வே பிழையா நெடுவாளுறை தீர்த்தெ றிந்தான்.

(இ - ள்.) அ வேலியினே - அச்சமயத்திலே, ஆற்றல் அன்ன வெம் வேல் அரக்கன் - வலிமையின்வடிவத்தையேபோன்ற கொடியவேற்படையை யுடைய இராவணன், முனிந்தான் - கோபங்கொண்டான்; முனிந்து - கோபித்து, விடல் ஆம் படை வேறு காணுன்-(அச்சடாயுவின்மேல்) பிரயோகித்தற்குஏற்ற ஆயுதம்வேரொன்றைக் காணுதவனுய்,—இ வேலியினே இவன் இன் உயிர் உண்பென் என்னு - இப்பொழுதே இவனது இனிய உயிரைக் கவர்வே னென்று கருதி, பிழையா நெடு வாள்-(பகைவரைக்கொல்லுதலில்) தவருத நீண்ட தனது (சந்திரகாசமென்னும்) வாளாயுதத்தை, உறை தீர்த்து - உறையினின்று எடுத்து, செவ்வே எறிந்தான் - (அதுகொண்டு) நன்முக [விசையாக] வீசினுன்; (எ - று.)

வேலை - வேலா என்ற வடசொல் திரிந்தது. ஆற்றலன்ன-வலிமையே ஒருவடிவுகொண்டுவந்தாற்போன்ற என்றபடி; இது, அரக்கனுக்கு அடை மொழி;வேலுக்கு அடைமொழியாக்கினும் அமையும். 'ஆற்றலன்ன வெல்வே லரக்கன்' என்பதற்கு—தனதுவலிமைக்கு ஏற்ற கொடியதொரு வேற்படையையுடைய இராவண னென்றலும் ஒன்று. அப்படிப்பட்ட வேல், இராவணனுக்கு மாமனுராகிய மயன் மந்தோதரியின் விவாககாலத்திற் கொடுத்தது. 'ஆற்றலன்ன' என்பதை 'படை' என்பதற்கு அடைமொழியாக்கி, அச்சடாயுவின் வலிமையை அழித்தற்கு ஏற்ற வேரோராயுதத்தைக் காணுதவனுய் என்று பொருள்கொள்ளினும்பொருந்தும். இங்குக்கூறிய வாள், கைலாசம் பெயர்த்தெடுத்தபொழுது இராவணனுக்குச் சிவபிரான் அளித்தது. உறை தீர்த்து - உறைகழற்றி. பி - மீ:—[1]என்ன. [2]உண்பல். (கூஅ)

கஉஅ. வலியின் றலேதோற்றிலன் மாற்றருந் தெய்வ வாளா
னலியுந் தலை[1]யென்றது வன்றியும் வாழ்க்கை நாளு
மெலியுங் கடைசென்றுள தாகலின் விண்ணின் மீவந்தன்
[2]குலிசம் மெறியச் சிறையற்றதொர் குன்றின் வீழ்ந்தான்.

(இ - ள்.) மாற்று அரு - (எவராலுந்) தடுக்கவொண்ணுத, தெய்வம் வாளால்-தெய்வத்தன்மையுள்ள (அந்தச்சிவபிரானது) வாட்படையால், தலை நலியும்-யாவர்தலையும் தவருதழியும்,என்றது அன்றியும்-என்ற அதன்சிறப்பு மல்லாமல், வாழ்க்கை நாளும் மெலியும் கடை சென்று உளது ஆகலின் - தனது ஆயுள்நாளும் குறைவுபடுகிற முடிவை அடைந்துள்ள தாதலால்,—வலியின்தலை தோற்றிலன்-(தனது) வலிமையில் தோல்விபெருதவனுகிய அச் சடாயு, விண்ணின் வேந்தன் குலிசம் எறிய சிறை அற்றது ஓர் குன்றின் - தேவராசனுன இந்திரன் வச்சிராயுதத்தை வீச அதனுற் சிறகற்று விழுவ தொரு மலைபோல, வீழ்ந்தான்-(சிறகு அறுபட்டுக்) கீழ் விழுந்தான்; (எ-று.)

மிக்கவலிமையையுடைய மலை முன்பு இந்திரனது வச்சிராயுதம் பட்ட வளவிலே சிறகுஅறுபட்டு விழுந்தாற்போல, தோலாவலிமையுடைய சடாயு இராவணனது வாள்பட்டவளவிலே சிறகுஅறுபட்டுத் தரையில் விழுந்திட் டான்; அங்ஙனம் விழுந்ததற்குக் காரணம், தடுக்கவொண்ணாத அந்தச் சிவபிரானது வாள் தன்னால் எறியப்படும் எப்பொருளையுந் தவறாமல் அழிக் குந் தாத்தது என்ற அதன் மகிமைமாத்திரமே யன்று; சடாயுவினது வாழ் நாள் முடியும்பருவமையை அடைந்துள்ளமையுமாம் என்பது, இதன் கரு த்து; இங்ஙனங்கூறியது, சடாயுவின் மிக்கவலிமையைச் சிறப்பித்தற்கு. குலிசம்மெறிய—மகரவொற்று விரித்தல். [2]குலியம் என்ற பாடத்துக்கு, வடசொல் விகார மென்க. பி-மீ:—[1]என்றுஞ்சு, அன்றிது. (கூகூ)

கஉகூ.—இதுமுதல் எட்டுக் கவிகள் - சடாயு விழுந்ததைக்கண்ட பிராட்டி பட்ட துயரத்தைக் கூறும்.

விரிந்தார் சிறைகீழுற வீழ்ந்தனன் மண்ணின் விண்மேனி
நிரிந்தா ரிழந்தா டுணையென்ன முனிக்க ணங்கள்
பரிந்தார் படர்விண்டுவி னூட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தா ரதுநோக்கிய சீதை [1]துளக்க முற்றாள்.

(இ - ள்.) விரிந்து ஆர் சிறை-விரிவாகப்பொருந்திய இறகுகள், கீழ் உற-கீழே கிடக்கும்படி, மண்ணின் வீழ்ந்தனன் - (சடாயு) தரையில் விழுந் தான்; (விழுந்தவளவிலே), விண்ணோர் - தேவர்கள், நிரிந்தார் - அஞ்சிஓடி னார்கள்; முனி கணங்கள்-முனிவர்கூட்டத்தார், துணை இழந்தாள் என்ன - (பிராட்டி) துணையையிழந்தா ளென்ற காரணத்தால், படர் பரிந்தார்-துன் பப்பட்டு இரங்கினார்கள்; விண்டுவின் நாட்டவர் - ஸ்ரீமகாவிஷ்ணுவின் நாடாகிய ஸ்ரீவைகுண்டத்தி லுள்ளவர்கள், பைம்பொன் மாரி சொரிந்தார்- பசும்பொன்மயமான புஷ்பவர்ஷத்தைச் சடாயுவின்மேற்) சொரிந்தார் கள்; அது நோக்கிய சீதை துளக்கம் உற்றாள் (சடாயுவிழுந்திட்ட) அச்செய லைக் கண்ட சீதை (உள்ளமும் உடலும்) நடுக்க மடைந்தாள்; (எ - று.)

சிறந்த பாகவதோத்தமனாகிய சடாயுவைப் பரமபதத்துக்கு அழைத் துப்போதற்காக எதிர்கொண்டுவந்த அவ்விஷ்ணுலோகத்தார் உவப்பினால் அவன்மீது பொன்மயமான கற்பகப்பூமாரி சொரிந்தன ரென்க. படர் - சிந்தை. விண்டு - விஷ்ணுஎன்ற வடசொல்லின் சிதைவு. விண்டுவின் நாட்டவர் - நித்தியசூரிகள். பி-மீ:—[1]துணுக்கம். (கூஙூ)

கஙூ. வெள்கும் மரக்கன் னெடுவிண்புக வார்த்து மிக்கான்
றெள்கின் றலையெய்திய மானெனச் சோர்ந்து கைவா
ளுள்குஞ் [1]முயிர்க்கும் முயங்கும்மொரு சார்பு காணாள்
கொள்கொம் பொடியக் கொடிவீழ்ந்தது போற்கு லைந்தாள்.

(இ - ள்.) வெள்கும் அரக்கன் - (கீழ்ச் சடாயுவின் ஆற்றலுக்கு இளைத் ததனால்) வெட்கமடைந்த இராவணன், (அச்சடாயு ஒழிந்தவளவிலே), நெடு

விண் புக ஆர்த்து மிக்கான்-பெரியவானத்திலே (தனது ஒலி) செல்லும்படி ஆரவாரஞ்செய்து பெருமிதம் பாராட்டினான்; தொள்கின்தலை எய்திய மான் என சோர்ந்து கைவாள்-வலியிலகப்பட்ட மான்போலத் தளர்ந்துவருந்துபவளான சீதை, உள்ளும் - (இனி யாதுசெய்வதென்று) சிந்திப்பாள்; உயிர்க்கும் - பெருமூச்சுவிடுவாள்; உயங்கும் - மயங்குவாள்; ஒரு சார்பு காணுள் - யாதேரர் ஆதரவையுங் காணுதவளாய், கொள்கொம்பு ஒடிய கொடி வீழ்ந்தது போல் குலைந்தாள் - ஆதாரமாகப்பற்றிய கொம்பு ஒடிந்துபோகக் கொடி நிலைகுலைந்து விழுந்ததுபோல(ச் சடாயுவின் துணைமையை இழந்ததனால்) கீழ்விழுந்து நிலைகுலைந்தாள்; (எ - று.)

வெள்ளும்அரக்கன் நெடுவிண்புக ஆர்த்து மிக்கான் - சடாயுவின் ஆற்றலுக்குத் தான் இளைத்ததனால் நாணங்கொண்டு தலைகவிழ்ந்த இராவணன் அச்சடாயு விழுந்தவளவிலே நாணந்தீர்ந்து தலைநிமிர்ந்து ஆகாயமெங்கும்முழங்கும்படி பேராரவாரஞ்செய்தன னென்க. தொள்கின் தலை, தலை-ஏழனுருபு; இன்-சாரியை. சார்பு - சாருமிடம்; தஞ்சம்: பற்றுக்கோடு. வெள்ளும்மரக் கன்னெடு, உள்ளும்முயிர்க்கும்முயங்கும்மொரு-விரித்தல். ஏ-மி.—[1]மயங்கும் முயிர்க்கும். (கூஎ)

வேறு.

கூக. வன்றுணை [1]யுளனென வந்த மன்னனும்
பொன்றின னெனக்கினிப் புகலெ னென்கின்ற
லின்றுணை பிரிந்[2]திரிந் தின்ன லெய்திய
வன்றிலம் பெடையென வரற்றி னாளரோ.

(இ - ள்.) வல் துணை உளன் என - வலிய துணையாக இருக்கிறானென்று (யாவரும்) கருதும்படி, வந்த - வந்துஎதிர்த்த, மன்னனும் - கழுகரசனுகிய சடாயுவும், பொன்றினன் - அழிந்தான்; எனக்கு இனி புகல் என்-எனக்கு இனிக் கதியாது? என்கின்றாள் - என்று சிந்திக்கின்றவளாய்,—இன் துணை பிரிந்து இரிந்து இன்னல் எய்திய அன்றில் அம் பெடை என-இனிய (தனது) துணையாகிய சேவலைப் பிரிந்து நீங்கி வருத்தமுற்ற அழகிய அன்றிற்பேடைபோல, அரற்றினாள்-கதறினாள்; (எ-று.)—அரோ-ஈற்றசை.

அன்றில் - வடமொழியில் க்ரௌஞ்ச மெனப்படும் ஒருவகைப்பறவை; எப்பொழுதும் ஆணும் பெண்ணும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் உடனுறைதலும், எப்பொழுதேனும் பிரிந்தால் ஒன்றையொன்று இரண்டு மூன்றுதரம் கத்திக்கூவியழைத்து அதற்குள் தன்துணையைக் கூடாவிடின் இறந்துபடுதலும் இதன் இயல்பு. சேவலைப் பிரிந்து விலகி வருத்தமுற்ற அன்றிற்பேடை தனது சேவலின் வரவுக்காகக் கத்திக் கூவுதல்போல, பிராட்டி தனது கணவனை விளித்துக் கதறின னென்க. புகல் - சரணம்புகுமிடம்; தொழிலாகுபெயர். அன்றிலம்பெடை, அம் - சாரியையுமாம். பெடை-பெண்மைப்பெயர். 'வன்துணை புளனென வந்த' என்பதற்கு-வலியதுணையாக வுள்ளேனென்று சொல்லிக்கொண்டு வந்த என்றும் உரைகூறலாம். உளன் என்

பது - தன்மையொருமைக்கு வருதலே, "உளனு வென்னுயிரை யுண்டு" எனக் கலித்தொகையிலுங் காண்க. பி - மீ:—[1]உளென். [2]இருந்து.

இதுமுதல் இருபது கவிகள் - கீழ்ப்படலத்தின் ஆறுங்கவி போன்ற **கலிவிருத்தங்கள்.** (கூசஉ)

கசுஉ. பின்னவ னுரையினை மறுத்துப் பேதையே
னன்னவன் றனைக்கடி தகற்றி னேன்பொரு
மன்னவன் சிறையற மயங்கி னேன்விதி
யின்னமு மெவ்வினை யியற்று மோவெனை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ன்.) பேதையேன்-அறிவில்லாதவளான நான், பின்னவன் உரையினை மறுத்து-(இராமபிரானது) திருத்தம்பியாகிய இலக்குமணன்சொன்ன வார்த்தையைத்தடுத்து, அன்னவன்தனை கடிது அகற்றினேன் - அவ்விலக்குமணனை விரைவில் (என்னைவிட்டு) நீங்கும்படிசெய்தேன்: பொரு மன்னவன் சிறை அற - (என்னைப் பாதுகாத்தற்காக வந்து) போர்செய்த கழுகரசனாகிய சடாயு (இப்பொழுது) சிறகு அறுபட்டதனால், மயங்கினேன்-(இனி வேறு துணையில்லையே யென்று) திகைப்புற்றேன்; விதி-(எனது) ஊழ்வினையானது, இன்னமும் எ வினை இயற்றுமோ - இன்னமும் எந்தக் கொடுஞ் செயலைச் செய்யுமோ? எனை - என்றுகூறி,—(எ - று.)—"எங்கினாள்" என அடுத்தகவியோடு தொடரும்.

இது, கழிவிரக்கம். பின்னவன் - பின்பிறந்தவன். இச்செய்யுள் சில பிரதிகளி லில்லை. (கூசஙு)

கசுங. அல்லலுற் றறனைவந் தஞ்ச லென்ற[1]விந்
நல்லவன் [2]றோற்பதே நரகன் [3]வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
வில்லையோ வறமென விரங்கி யேங்கினாள்.

(இ - ன்.) அல்லல் உற்றேனை-துன்பமடைந்த என்னை, வந்து அஞ்சல் என்ற-அருகில்வந்து 'அஞ்சாதே' என்றுகூறிய, இ நல்லவன்-நற்குணநற் செய்கையுடையவனான இச்சடாயு, தோற்பதே-தோல்வியடைவதா? நரகன்-(பாவஞ் செய்தலால்) நரகத்தையடைதற்கு உரியவனான இராவணன், வெல்வதே-சயித்துவிடுவதா? வெல்வதும் பாவமோ - பாவந்தானே வெற்றிபெறுவது?வேதம் பொய்க்குமோ-(தருமமே சயமென்று கூறுகிற) வேதமும் பொய்யாய்விடுமோ? அறம் இல்லையோ-தருமம் இல்லையாயிற்றோ? எனை-என்று சொல்லி, இரங்கி - சோகித்து, எங்கினாள் - புலம்பினாள்; (எ - று.)

ஏகாரங்களும், ஓகாரங்களும்-வினாவகையால், தகுதியன்றென்ற கருத்தை விளக்கும். பி - மீ.—[1]விண். [2]தோற்பதோ. [3]வெல்வதோ. (கூசச)

கசுச. நாணிலே னுரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலே யறநெறி நின்று ளோர்க்கெலா

மாணியை யுந்தையர்க் கமைந்த [1]வன்பினைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள்.

(இ - ள்.) நாண் இலேன் உரை கொடு - வெட்கமில்லாதவளான என்னுடைய வார்த்தையினால், நடந்த - (என்னை விட்டுப் பிரிந்து) சென்ற, நம்பி மீர் - சிறந்த ஆண்மக்களே! நீள் நிலை அறம் நெறி நின்றுளோர்க்கு எலாம் ஆணியை - அழிவில்லாது நீண்ட நிலைபேற்றையுடைய தருமமார்க்கத்திலே நிற்கிறவர்களுக்கெல்லாம் உரையாணிபோன்றவனும், உந்தையர்க்கு அமைந்த அன்பினை - உங்கள் தந்தையார்க்குப் பொருந்திய நண்பனுமான சடாயுவை, காணிய - காண்பதற்கு, வம் - வாருங்கள், என - என்றுசொல்லி, கலங்கி விம்மினாள் - கலக்கமுற்று அழுதாள்; (எ - று.)

தகாதகாரியத்தில் முயலும்படி இராமனைத் தான் தூண்டியது மன்றி இல்லக்குமணனையும் தன்னைப்பிரிந்து செல்லும்படி தகுதியில்லாது ஏவியதனால், 'நாணிலேன்' என்று தன்னைத் தானே பழித்துக்கொண்டாள். நாணுவது - செய்யத்தகாதவற்றில் உள்ளமொடுங்குதல்; இலச்சை. கொடு - கொண்டு; விகாரம். பொன்னின்மாற்று இன்னதென்று தனது மாற்றினால் ஐயந்திரிபற நன்குவிளக்கும் உரையாணிப்பொன்போல, தருமமார்க்கத்தில் நடப்பவர்தன்மை இன்னதென்பதைத் தான் நடந்துகாட்டியதனால் நன்கு விளக்கும் சடாயு வென்பார், 'அறநெறிநின்றுளோர்க்கெலாம் ஆணி' என்றார். வம் என்பதை, வாளன்னும்பகுதி மின்னென்னும் விகுதியை ஏற்ற வம்மின் என்ற ஏவற்பன்மைமுற்றின் விகார மென்றுவது, வா என்னும் பகுதி உம் என்னும் விகுதியை ஏற்ற வாரும் என்ற ஏவற்பன்மைமுற்றின் விகார மென்றுவது கொள்க. பி - ம்:—[1]நண்பனை. (கூசுரு)

கடரு. கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
வில்பழி யுண்டது வினையி னேன்வந்த
வில்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள்.

(இ - ள்,) கற்பு அழியாமை-பதிவிரதாதருமம்அழியாமலிருத்தல், என் கடமை ஆயினும்-எனது கடமையே யானாலும்,—பொற்பு அழியா வலம் பொருந்தும் - பொலிவுகெடாத வலிமை பொருந்திய, போர்வலான்-போரில் வல்லவனான (என்கணவனாகிய) இராமபிரானது, வில்-கோதண்டம், பழி யுண்டது-பழியடைந்தது, வினையினேன் வந்த இல் பழியுண்டது - பாவியாகிய நான் பிறந்த [அல்லது புகுந்த] குடிக்குப் பழியை உண்டாக்குவதாம், என்று என்றுசொல்லி, இரங்கி ஏங்கினாள் - சோகித்து அழுதாள்; (எ-று.)

இராமன்மனைவியாகிய யான் உயர்ந்தகுலஸ்திரீகளுக்கு உரிய கடமைப்படி கற்புநிலை குலையாதுநின்றேனாயினும், அழிவில்லாத பல பராக்கிரமங்களையுடையஎன்கணவனான ஸ்ரீராமன் விற்கொண்டு பொருது பகையழித்து வெற்றியும் புகழும் பெறுதற்கு இடமில்லாதபடி அவனை இவ்விடத்தை

விட்டு நீங்கச்செய்தே னுதலால், இக்கொடுஞ்செயல்செய்த யான் பிறந்த குலமும் புகுந்தகுலமும் எனதுசம்பந்தத்தால் பழியையடைந்தேவிடும் என்று புலம்பினளென்க: வலம்=பலம்: வடசொல். இல் - வீடு; குடிக்குமாகு பெயர். இச்செய்யுள் சிலபிரதிகளில் அடுத்தபாடலின்பி னுள்ளது. (கூசசு)

கஙூசு. [1]எல்லியல் விசும்பிடை யிருந்த [2]நேமியாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் [3]கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் [4]பொங்கினாள்.

(இ - ள்.) எல் இயல் - ஒளிபொருந்திய, விசும்பிடை - மேலுலகத்திலே, இருந்த - சென்றிருந்த, நேமியாய் - (தசரத) சக்கரவர்த்தியே! சொல் இயல் - புகழ்பொருந்திய, ஆய் நெறி தொடர்ந்த - ஆராய்ந்த நல்லொழுக்க வழி சேர்ந்த, தோழமை-நட்புக்குரிய, நல் இயல் அரு கடன் - நன்மை பொருந்திய அருமையான கடமையை, கழித்த - செய்துமுடித்த, நம்பியை-உத்தமனான சடாயுவை, புல்லுதியோ - (இப்பொழுது அங்குத்) தழுவிக் கொள்வாயோ? என - என்றுசொல்லி, பொருமி பொங்கினாள் - விம்மிவிம்மி அழுதாள்; (எ - று.)

முன்புயிர்நீத்துப் பரமபதமடைந்த தசரதசக்கரவர்த்தியை நினைத்து விளித்து முன்னிலைப்படுத்திக் கூறியது, இது. உனது நற்றோழனான சடாயு அத்தோழமைக்குரியபடியுனதுமருமகளான என்னைப் பாதுகாக்கத்தொடங்கிப்பொருது அப்போரில் தான் உயிர்நீத்து இவ்வாறு அரியதோழமைக்கடனைச்செய்துமுடித்து மேலுலகத்துக்குச் சென்றன னுதலால், தோழமைக்கடனை நிறைவேற்றிய அருமைக்காக நீயுவந்து அவனை அங்குக்கட்டியணைத்துக்கொள்வையோ? என்றுகூறிப் பிரலாபித்தன ளென்க. [1]எல்லியில் விசும்பு என்ற பாடத்துக்கு - எல்லையற்றதாகிய பரமபத மென்க. அருங்கடன் - பிறராற் செய்தற்கு அரிய கடமை. 'நேமியான் சொல்லிய வறநெறி' என்றும், 'கழித்து நம்பியை' என்றும் பாடம்ஓதி, மேலுலகஞ்சென்ற தசரத சக்கரவர்த்தி கூறியிருந்த தோழமைக்கடனை இங்குக் கழித்து அங்கு அவ்வுத்தமனைச்சேரச் சென்றனையோ? என்று சடாயுவைநோக்கிக் கூறியதாக உரைப்பாரும் உளர். பி - மீ:—[2]நேமியாய் சொல்லியலறநெறி. [3]கழித்து. [4]எங்கினாள். (கூசஎ)

கஙூஎ.—அப்பொழுது இராவணன் சீதையுடனே விரைந்து அப்பாற்செல்லுதல்.

ஏங்குவா [1]டனிமையு மிறகி ழந்தவ
னுங்குறு [1]நிலைமையு மரக்க னேக்கினான்
வாங்கினன் றேரிடை வைத்த மண்ணெடும்
வீங்குதோண் மீக்கொடு விண்ணி னேகினான்.

(இ - ள்.) ஏங்குவாள் தனிமையும் - இவ்வாறுபுலம்புகிற சீதையினது துணையற்ற நிலைமையையும், இறகு இழந்தவன் ஆங்கு உறு நிலைமையும் -

சிறகுகளே யிழந்த சடாயு அவ்விடத்தில் [அப்பொழுது] அடைந்த (பிழைப் பற்ற) நிலைமையையும், நோக்கினான் - பார்த்து, அரக்கன் - இராவணன், (இனித்தடையின்றிச் செல்லலா மென்று கருதி), தேரிடை வைத்த மண்ணை டும் வாங்கினன்-(தனது) தேரின்மேல்வைத்த நிலத்தோடு(சீதையை)எடுத்து, வீங்கு தோள் மீ கொடு-பருத்த(தனது)தோள்களின்மேல் வைத்துக்கொண்டு, விண்ணின் எகினன் - ஆகாயமார்க்கத்திற் சென்றான்; (எ - று.)

கீழ்ச் சடாயு இராவணனது தேர்க்குதிரைகளைக் கொன்று தேரையும் சிதையச்செய்தன னுதலால், இராவணன் தரையோடு சீதையைத் தோளின் மேற்கொண்டு செல்பவனானன். பி - மீ: —[1]தன்மை. (கூசஅ)

கஉ.அ.—அப்பொழுது சீதை மூர்ச்சித்துத் தரையிற் கிடத்தல்.

விண்ணிடை வெய்யவ னேகும் வேகத்தாற்
கண்ணெறு மனமவை [1]சுழலுங் கற்பினை
ஞண்ணிறை யுணர்வழிந் தொன்று மோர்ந்திலண்
மண்ணிடைத் தன்னையு மறந்து சாம்பினாள்.

(இ - ள்.) விண்ணிடை - ஆகாயமார்க்கத்திலே, வெய்யவன் - கொடிய வனான அவ்விராவணன், ஏகும் - செல்லுகிற, வேகத்தால் - விரைவினாலே, கண்ணெறு மனமவை சுழலும் - கண்களும் மனமும் சுழலலுற்ற, கற்பினாள்- பதிவிரதையான சீதை, உள் நிறை உணர்வு அழிந்து-உள்ளத்தில் நிறைந்த அறிவு அழியப்பெற்று, ஒன்றும் ஓர்ந்திலள் - யாதொன்றையும் உணரமாட் டாதவளாய், தன்னையும் மறந்து - தன்னையும் மறந்தவளாய் [மூர்ச்சித்து], மண்ணிடை சாம்பினாள் - நிலத்திற் சோர்ந்துகிடந்தாள்; (எ - று.)

நிறையுணர்வு - வினைத்தொகை. பி - மீ: —[1]சுழன்ற. (கூசஆ)

கஉ.கூ —இராவணன் அப்பாற் செல்லுதலைக் கண்ட சடாயு இரங்கல்.

ஏகின னரக்கனு மெருவை வேந்தனு
மோகவெங் துயர்சிறி தாறி [1]முன்னியே
[2]மாகமே நோக்கினன் வஞ்சன் வல்லையிற்
போகுதல் கண்டுடன் புலர்ந்து சொல்லுவான்.

(இ - ள்.) அரக்கனும் - இராவணனும், ஏகினன் - (இவ்வாறு) சென் றான்; எருவை வேந்தனும் - கழுகரசனான சடாயுவும், மோகம் வெம் துயர் சிறிது ஆறி - மயக்கத்தைத்தந்த கொடிய துன்பத்தினின்று சிறிதுதெளிந்து, முன்னி - (சிறிதுபொழுது) ஆலோசித்துநின்று, மா கமே நோக்கினன் - பெரியவானத்தையேபார்த்து, வஞ்சன் வல்லையில் போகுதல் கண்டு-வஞ்சக னான இராவணன் விரைவிற்செல்லுதலைக் கண்ணுற்று, அகம் புலர்ந்து - மனம்வருந்தி, சொல்லுவான் - சிலசொல்பவனானன்; (எ - று.)—அவற்றை, அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

மோகம் - வடசொல். பி - மீ:—[1]மூர்ச்சியா. [2]மாகமேல். (கூஉ0)

கசஂ.—இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதோடீ: சடாயு இரங்கல்.

வந்திலர் மைந்தர்[1] நம் மருகிக் கெய்திய
வெந்துயர் [2]துடைத்தன னென்னு மெய்ப்புகழ்
[3]தந்திலா விதியினர் தருமம் வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலென் னுங்கொலோ.

(இ - ள்.) மைந்தர் - (எமது) மக்களாகிய இராமலட்சுமணர், வந்திலர் - இன்னும்வந்தார்களில்லை: நம் மருகிக்கு எய்திய வெம் துயர் - எமது மருமகளான சீதைக்கு நேர்ந்த கொடுந்துன்பத்தை, துடைத்தனன் - நீக்கினேன், என்னும் - என்கிற, மெய் புகழ் - உண்மையான கீர்த்தியை, தந்திலா - (எனக்குத்) தந்திடாத, விதியினர் தருமம் வேலியை சிந்தினர் - விதியானது தருமத்தின் வேலியை முறித்துவிட்டது;இனி மேல் செயல் என் ஆம் கொல் ஓ - இனிமேல் விளையுஞ் செயல் யாதோ ? (எ - று.)

தருமம் நிலைநில்லாது தீங்குறுதற்கு விதி காரணமாயிற் றென்பார், 'விதியினர் தருமவேலியைச் சிந்தினர்' என்றார். வேலி - பாதுகாப்பு. தரும வேலி யென்பதற்கு - தருமமாகிய வேலி யென்றலும் ஒன்று. விதியினர் என்று உயர்வுப்பன்மையாற் கூறியது, இழிவை விளக்கும். 'இனிச்செய லென்னுங்கொல்' என்பது - இன்னும் யாதுசெய்தை கிடக்குமோ வென்றும் பொருள்படும். இனி, எனது மருமகளுக்கு நேர்ந்த கொடுந்துன்பத்தை நான் நீக்கினே னென்ற மெய்க்கீர்த்தியை எனக்கு விதி தந்திலது: தருமத்தினது காவலைச் சிதறடித்த அரக்கர்களின்மேல் இனி நான்செய்வதுயாதோ? என்று உரைப்பாரும்உளர். பி - மீ:—[1]தாம். [2]துடைத்தனர். [3]தந்திலர். (கூடுக)

கசஃ. வெற்றிய ருளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் [1]கிங்நிலை [2]புகுதற் பாலதோ
வுற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ.

(இ - ள்.) வெற்றியர் - (இராவணனைக் கொன்று) சயத்தை அடையவல்லவர்களான இராமலக்குமணர், உளர் எனின் - இங்கு உள்ளாராயின், மின்னின் நுண் இடை பொன் தொடிக்கு - மின்னல்போல விளங்குகிற நுட்பமான இடையையும் பொன்னிழையாகிய தொடியென்னும் கைவளையையுமுடைய சீதைக்கு, இ நிலை - இப்படிப்பட்டகொடியநிலைமை, புகுதற்பாலதோ-நேர்தற்கு உரியதோ? [அன்றென்றபடி]; உற்றதை இன்னது என்று உணரகிற்றிலேன் - (இராமலக்குமணர்களுக்கு) நேர்ந்த நிலைமையை இன்னதென்று அறிகின்றிலேன்; சிறு அவை வஞ்சனை - சிறியதாயாகிய கைகேயியினதுவஞ்சனைதான், முடிய செய்ததோ - (இவ்வாறு) முடித்துவிட்டதோ.

'உற்றதை இன்னதென்று உணரகிற்றிலேன்' என்பதற்கு - இப்படி நேர்ந்த தீங்கின் காரணத்தை இன்னதென்று அறியமாட்டிற்றிலே னென்று உரைத்தலும் ஒன்று. பி - மீ: —[1]இன்னல. [2]புகுதப். (கூடுஉ)

கசஉ. பஞ்சணை பாம்பணை யாகப் பள்ளிசே
ரஞ்சன வண்ணனே யிராம னுதலால்
வெஞ்சின வரக்கனுல் வெல்லற் பாலனே
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயைபால்.

(இ - ள்.) பாம்பு அணை - ஆதிசேஷ சயநம், பஞ்சு அணை ஆக - பஞ்சு மெத்தைபோல அமைய, பள்ளி சேர்-(அதனிடத்துப்) படுக்கைகொண்டருளுகிற, அஞ்சன வண்ணனே-மைபோலுங் கரியதிருமுடையவனுன ஸ்ரீமந் நாராயணனே, இராமன் - இராமனுகத் தோன்றியவன், ஆதலால்—, (அவ்விராமன்), வெம் சினம் அரக்கனுல் வெல்லற்பாலனே - கொடியகோபத்தையுடைய இவ்விராக்கதனுல் வெல்லப்படுதற்கு உரியனே?[அல்லன்]; (ஆனது பற்றியே இவ்வரக்கன்), கள்ளம் மாயையால் வஞ்சனை இழைத்தனன்-திருட்டுத்தன்மையுள்ள மாயச்செய்கையால் இவ்வாறு வஞ்சனைசெய்தான்; (எ-று.)

காற்றை உணவாகக்கொள்ளுந் தன்மையுதாகிய பாம்பு காற்றடைத்த மெத்தையின்தன்மை வாய்ந்து பஞ்சுமெத்தைபோல மெத்தென்றமைய என்பது, 'பஞ்சணை பாம்பணையாக' என்பதன் கருத்து. (சுருசு)

கசசு. வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் [1]சிறுவனுந் தீண்ட வஞ்சுமா
லாரியன் றேவியை யரக்க [2]னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால்.

(இ - ள்.) என் சிறுவனும்-எனதுமகனுன இராமனும், அரக்கரை வேர் அற வென்று வெம் பழி தீரும்-(இனி இச்செய்தியை உணர்ந்தபின்பு) இராக்கதர்களே நிர்மூலமாம்படி கொன்று வெற்றிகொண்டு (தனக்குநேர்ந்த கொடிய) இப்பழியைத் தீர்த்துக்கொள்வான்; அரக்கன் - இராவணனும், நல்மலர் பேர் உலகு அளித்தவன் பிழைப்பு இல் சாபத்தால்-சிறந்ததாமரைமலரில்தோன்றிப் பெரியஉலகங்களைப் படைத்தவனுன பிரமதேவனது தவறுதலில்லாத சாபத்தால், ஆரியன் தேவியை தீண்ட அஞ்சும்-சிறந்தவனுன இராமனது மனையாளாகிய சீதையைத் தொடுதற்கு அஞ்சுந்தன்மையன்; (எ-று.)

இராமன் அரக்கரை அழித்துப் பழிதீர்த்துக்கொண்டபின்பு சீதையைக் கைக்கொள்ள யாதொருதடையு மில்லை: பிரமன் தந்த சாபத்திற்கு அஞ்சி இராவணன் அவளைத்தீண்டமாட்டா னுதலின் என்பார், இங்ஙனங்கூறினார். திக்குவிசயஞ்செய்து எதிரற்றவனுன இராவணன் மூவுலகத்துமுள்ள தேவர் அசுரர் கந்தருவர் நாகர் முதலியோருள் அழகுவாய்ந்தமங்கையர்பலரையும் வலியக்கற்பழியாகிக்க, அதுபற்றி வருத்தமுற்ற அம்மங்கையரும் அவரைச் சார்ந்த ஆடவர்களும் அவனது பிரபிதாமகனுன பிரமதேவனைச் சரணமடைந்து அவ்வரக்கனது வரம்புகடந்த ஒழுக்கக்கேட்டைக் கூறி முறையிடவே, அதனையுணர்ந்து[1]அருள்கூர்ந்த நான்முகக்கடவுள்'இனி இராவணன்எந்தமாதரையேனும் வலியக்கற்பழிக்கலுறின் தலைவெடித்து இறந்திடுவன்' என்று

சாபமிட, அதனையறிந்தபின் அவ்வரக்கன் அஞ்சி ஒருவரையறைப்பட்டுநின் றனனெனவரலாறு காண்க. ஆல் - ஈற்றசை. பி-மீ:—[1]சிறுவனே. [2]அம். ()

கசச. [1]பருஞ்சிறை யின்னன பன்னி யுன்னுவா
னருஞ்சிறை யுற்றன ளாமெனு[2]மனம்
பொருஞ்[3]சிறை [4]யிற்றதற் பூவை கற்பெனு
[5]மிருஞ்சிறை யிறுதெனை விடரு நீங்கினன்.

(இ - ள்.) பருஞ் சிறை - பெரியசிறகுகளையுடையசடாயு, இன்னன பன் னி-இத்தன்மையனவான வார்த்தைகளைக் கூறி, அரு சிறை உற்றனள் ஆம் எனு மனம் உன்னுவான்-(பிராட்டி) நீங்குதற்கு அரியசிறைச்சாலையை அடை ந்தாள்போலும் என்று மனத்திற் சிந்திப்பவனுகி,—'பொரும் சிறை இற்ற துவல் - போர்செய்கிற (எனது) சிறகு அழிவடைந்ததாயினும், பூவை கற்பு எனும் இருஞ் சிறை இறுது-நாகணவாய்ப்பறவைபோன்ற [இன்சொற்களை யுடைய] சீதையினது கற்புநிலைமையாகிய பெரிய சிறகு அழிவடையாது, எனை - என்றுஎண்ணி, இடரும் நீங்கினன்-துயரொழிந்தவனுமானன்.

பருஞ்சிறை-பண்புத்தொகை யன்மொழி. அருஞ்சிறையுற்றனளாம் - இராவணனுல் அரியசிறைக்காவலில் வைக்கப்பட்டாள்போலும். பாதுகாத் தல்பற்றி, கற்பு 'சிறை' எனப்பட்டது. 'கற்பெனு மிருஞ்சிறை யிறுது' என்பதற்கு - கற்புநிலையாகிய பெரிய சிறைக்காவல் அழியாதென்று உரைப் பினும் அமையும்; ''சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை'' என்ற திருக்குறளினுல், சிறைக்காவலிலும் மகளிரின் நிறைக் காவல் சிறந்ததாதல் உணர்க: ஆனதுபற்றியே, 'இருஞ்சிறை' எனப்பட்ட தென்க. [2]மனம்பொரிஞ்சிறகிற்றதேல் என்று பாடமோதி, 'மனம்பொரிஞ்சு' என்பதற்கு - மனம்பொரிந்து என்று உரைத்து, இறகுஇற்றதேல் - என்று எடுப்பாரும் உளர்; பொரிஞ்சு - நகரதகரங்களுக்கு ஞகரசகரங்கள் முறையே போலி. இன்னன - பெயர். பி-மீ:—[1]பரிஞ்சிறை. [3]சிறகு. [4]அற்றதேற், இற்றதே. [5]அருதென. (கூருரு)

கசருஃ—சடாயு சோர்ந்து துயில் கோள்பால்.

[1]அஞ்சிறை குருதியா லழிந்து [2]சோர்வுற
வஞ்சியை மீட்கிலே னென்னு மானமுஞ்
செஞ்செவே மக்கள்பாற் சென்ற காதலு
நெஞ்சுறத் துயின்றன னுணர்வு நீங்கலான்.

(இ - ள்.) அம் சிறை-(தனது) அழகிய இறகுகள், குருதியால் - இரத்த ப்பெருக்கால், அழிந்து - அழிவடைந்து, சோர்வுற - தளர்ச்சியடையவும்,— வஞ்சியை மீட்கிலேன் என்னும் மானமும்-வஞ்சிக்கொடிபோல மெல்லியளா கியசீதையைமீட்கமாட்டாதவனுயினேன் என்றுகருதுதலாலாகிற வெட்க மும், மக்கள்பால் செம் செவே சென்ற காதலும் - (தனது) குமாரர்களாகிய இராமலக்குமணர்களிடத்தில் மிகவுஞ்செவ்விதாகப் போய்ப்பொருந்திய அன்

பும், நெஞ்சு உற-மனத்தில் நிறைந்துநிற்கவும், துயின்றனன்-தூக்கமுற்றான்: உணர்வு நீங்கலான் - அறிவுநீங்காதவனான அச்சடாயு; எ - று.)

'உணர்வுநீங்கலான்' என்றது, எப்பொழுதும் நிலைகுலையாத நல்லறிவுடையானென்ற இயல்பை விளக்குவதோடு, இப்பொழுது உயிரொழிந்தில னென்ற செய்தியையும் விளக்கும். [1]அஞ்சிறைக்குருகியாறழிந்து என்று பாடமோதி, அழகியஇறகுகளினின்று இரத்தநதி பெருகி என்று உரைப்பாரும் உளர். வஞ்சி - உவமையாகுபெயர். மானம்-அவமானம்: "மானந்தலை வருவ செய்பவோ" என்றவிடத்திற் போல. செம்செவே = செம்செவ்வே. பி-ம்:—[2]சோரவும். (கூடுசு)

கசசு.—இராவணன் சீதையைக்கொண்டுபோய் அசோகவனத்திற் சிறைவைத்தல்.

வஞ்சியை யரக்கனும் வல்லை கொண்டுபோய்ச்
செஞ்செவே திருவுருத் தீண்ட வஞ்சுவா
னஞ்சிய லரக்கியர் நடுவ ணுயிடைச்
[1]சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தானரோ.

(இ - ள்.) அரக்கனும் - இராவணனும், வஞ்சியை - சீதாபிராட்டியை, வல்லை கொண்டு போய் - விரைவில் எடுத்துக்கொண்டு (இலங்கைக்குச்) சென்று, திரு உரு செம் செவே தீண்ட அஞ்சுவான் - (அப்பிராட்டியின்) திரு மேனியை வலியத்தொடுதற்கு அச்சங்கொண்டவனும், ஆயிடை - அவ்விடத்தில், சிஞ்சுப வனத்திடை-(அசோகவனத்தில்) சிம்சுபாமரத்தின்கீழ், நஞ்சு இயல் அரக்கியர் நடுவண் - விஷத்தின்தன்மைபொருந்திய [கொடிய] இராக்கதமாதர்களின் நடுவிலே, சிறை வைத்தான் - (அவளைக்) காவலில்வைத்திட்டான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

ஆயிடை = அ + இடை. சிஞ்சுபவனம் - வடசொல்திரிபு. பி - ம்:—[1]சிஞ்சுவா. (கூடுஎ)

கசஎ.—இது - கவிக்கூற்று: இலக்குமணன் செய்தியைக் கூறுவேனெனல்.

இந்நிலை யினையவன் செய[1]லி யப்பிணம்
பொன்னிலை மானின்பின் றொடர்ந்து போகிய
மன்னிலை யறிகென மங்கை யேவிய
[2]பின்னவன் றன்னிலை பேசு வாமரோ.

(இ - ள்.) இனையவன் செயல் - இவ்விராவணனது செய்கையை, இ நிலை இயம்பினும் - இத்தன்மையாகக் கூறினேனும்; 'பொன் நிலை மானின்பின் - பொன்மயமாய்ப்பொருந்திய மானின்பின்னே, தொடர்ந்து போகிய - தொடர்ந்துசென்ற, மன் - (நமது) தலைமகனான இராமபிரானுக்கு நேர்ந்த, நிலை-நிலைமையை, அறிக - அறிவாயாக,' என - என்று, மங்கை - இளம்பருவமுடையளான சீதாபிராட்டி, ஏவிய - கட்டளையிட்ட, பின்னவன்தன் - இளையவனான இலக்குமணனது, நிலை - நிலைமையை, பேசுவாம் - இனிக்

கூறுவோம்; (எ - று.)—அதனை மேற் காண்க. அரோ - ஈற்றசை. **பி-ம்:**—[1]இயம்பிஞேம். [2]பின்னிலையவன். (கஞிஅ)

கசஅ.—சீதையின் தனிமைக்காக இலக்குமணன் சிந்தித்தல்.

ஒருமக டனிமையை யுன்னி யுள்ளுறும்
பருவரன் மீதிடப் பதைக்கு நெஞ்சினன்
பெருமகன் றனைத்தனி பிரிந்து [1]பேதுறுந்
[2]திருநகர் தீருமப் பரதன் செய்கையான்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) ஒரு மகள் - ஒப்பற்றவளாகிய சீதாபிராட்டியினது, தனிமையை - தனித்திருக்குந்தன்மையை, உன்னி - நினைத்தலால், உள் உறும் - மனத்திற்பொருந்திய, பருவரல் - துன்பம், மீது இட - அதிகப்பட, பதைக்கும் - துடிக்கின்ற, நெஞ்சினன் - மனத்தையுடையவனும், பெரு மகன் தனை தனி பிரிந்து பேது உறும் - புருஷோத்தமனை இராமபிரானைத் தனியே பிரிந்து வருத்தமுறுகிற, திரு நகர் தீரும் அ பரதன் - சிறந்த அயோத்தியாபுரியை விட்டுநீங்கிய அந்தப்பரதனது, செய்கையான் - செயல்போன்ற செயலை யுடையவனுமாய்,—(எ - று.)—"விரைவிற்செல்கின்றான்" என வருங்கவியோடு தொடரும்.

இராமனை வனத்தினின்று மீட்டு நகர்க்கு அழைத்துக்கொண்டுபோக வேண்டு மென்ற விருப்பத்தோடு அயோத்தியினின்று புறப்பட்டுச் சித்திரகூட பருவதத்துக்கு வந்துசேர்ந்த பரதன் அப்பொழுது மீண்டு நகர்புகுதற்கு உடன்படாத இராமனை அங்கு விட்டுப் பிரிந்து செல்லும்பொழுது அடைந்த கிலேசத்தை, இப்பொழுது இலக்குமணன் சீதையைத் தனியேவிட்டுச் செல்லும்பொழுது அடையுங் கிலேசத்துக்கு உவமைகூறினர். அங்கு இராமனை விட்டுப் பிரிந்து செல்ல மனமிலனுயினும் பரதன் அப்பெருமான்கட்டளையை மறுக்கமாட்டாமற் சென்றமைபோல, இங்குச் சீதையைத் தனியேவிட்டு நீங்கக் கருத்திலனுயினும் இலக்குமணன் அப்பிராட்டியின் கட்டளையைக் கடக்க மாட்டாமற் செல்கின்றன னென்க. பெருமகன் - தமையனுமாம். 'பெரு மகன் தனைத் தனி பிரிந்து பேதுறும்' என்றதைத் திருநகருக்கு அடைமொழி யாக்கி, இராமன்பிரிந்ததனல் வருத்தமுற்ற சீதையைக் காவல்செய்யாது தனியேவிட்டு இராமனைத் தேடிக்கொண்டு வனத்தைநோக்கிச்செல்லும் இலக்குமணன், இராமன்பிரிந்ததனல் வருத்தமுற்ற அயோத்தியாபுரியைக் காவல்செய்யாது தனியேவிட்டு இராமனைத்தேடிக்கொண்டு வனத்தைநோக்கிச்சென்ற பரதனது செய்கையையொக்குஞ்செய்கையையுடையான் என்று உவமைபொருத்தினும் அமையும். **பி-ம்:**—[1]பேதுற்றுத். [2]திருநகர்ச்செல்லும்.

கசகூ.—இலக்குமணன் இராமனைக் காணுதல்.

தெண்டிரைக் கலமென விரைவிற் செல்கின்றான்
புண்டரீ கத்தடங் காடு பூத்தொரு

கொண்டல்வந் [1]திழிந்தன்ன கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினான்.

(இ - ள்.) தெள் திரை கலம் என - தெளிவான அலைகளையுடையதாகிய கடலில் ஓடும் மரக்கலம்போல, விரைவின் செல்கின்றான் - விரைவாகப் போகின்றவனான இலக்குமணன்,—புண்டரீகம் தட காடு பூத்து-பெரிய செந்தாமரை மலர்த் தொகுதி பூக்கப்பெற்று, ஒரு கொண்டல் வந்து இழிந்து அன்ன-நீர்கொண்டதொரு காளமேகம் வந்து இறங்கினாற்போன்ற, கோலத் தான் தனை - திருமேனியழகுடையவனான இராமபிரானை, கண்டனன் - பார்த்து, மனம் என களிக்கும் கண்ணினான் - (தன்) மனம் களிப்புறுதல் போலக் களிப்படையுங் கண்களையுடையவனானான்; (எ - று.)

இராமதரிசனத்தாற் கண்கள் அடைந்த களிப்புக்கு வேறு உவமை கிடைத்தல் அரிதாதல்பற்றி, அதனால் அவன்மனம் களித்தலையே உவமை கூறினார். 'மனமெனக்களிக்குங் கண்ணினான்' என்று உபமானமும் உபமேயமுமாக வைத்துக்கூறினும், மனமும் கண்ணும் ஒருங்கே களிக்கப்பெற்றன னென்பதே கருத்து. இராமனது நீலமேனிக்குக் காளமேகமும், கண் கை கால் வாய் உந்தியாகிய திருவவயவங்களின் அமைப்புக்குச் செந்தாமரை மலர்த்தொகுதியும் உவமை யெனக் காண்க. 'புண்டரீகத்தடங்காடுபூத்து ஒருகொண்டல் வந்து இழிதல்' - இல்பொருளுவமை. மனமெனக் கண்டனன் என்று எடுத்து, இராமனுக்கு யாதொரு தீங்கு மில்லை யென்று தன் மனத்திற் கருதியவாறே யாதொரு தீங்குமின்றி வரக் கண்டனன் என்றலும் ஒன்று. பி - ம்:—[1]இழிந்தெனக். (கூசு0)

கரு0.—இராமன் இலக்குமணனைக் காணுதல்.

துண்ணெனு மவ்வுரை [1]தொடர்ந்த தோகையும்
பெண்ணெனும் பேதைமை மயக்கப் பேதினு
ளுண்ணிறை சோருமென் றாச லாடுமக்
கண்ணனு மிளவலைக் [2]கண்ணுற் றனரரோ.

(இ-ள்.) 'துண் ணெனும்-(கேட்பவர்) அஞ்சித் திடுக்கிடுதற்குக் காரணமான, அ உரை - (மாயமானினது 'ஹாஸீதே லக்ஷ்மண' என்ற) அவ்வார்த்தை, தொடர்ந்த - சென்று செவிபடப்பெற்ற, தோகையும் - மயில்போல் பவளான சீதையும், பெண் எனும் பேதைமை மயக்கம் பேதினால் - (தனது) பெண்மையென்கிற அறியாத்தன்மைக்கு உரிய மயக்கமாகிய வேறுபாட்டினால், உள் நிறை சோரும் மனத்தின் உறுதிநிலை குலைவாள்,' என்று-என்று எண்ணி, ஊசல் ஆடும்-மனத்தடுமாற்றமடைந்துவருந்துகிற, அ கண்ணனும்-கருநிறமுடையவனான அவ்விராமனும், இளவலை கண்ணுற்றான் - தம்பியான இலக்குமணனைப்பார்த்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

கண்ணன் - க்ருஷ்ணன் என்ற வடசொல்லின் சிதைவு; இது அவதாரப்பெயரன்றித் திருமாலுக்கு உரிய பொதுப்பெயராய் இங்கு இராமனுக்கு

வந்தது. இனி, கண்ணனென்பது-கருநிறமுடையானென்பதுபற்றி இராமனுக்கு வந்த காரணப்பெய ரெனினுமாம். இராமனென்ற பெயருக்கு-கருநிற முடையானென்று ஒருபொரு ளுள்ளதனால், கண்ணனென்பது அதன்பரியாயமாகத் தட்டில்லை. பி-மீ:—[1]தொடரத். [2]கண்ணிலேக்கினன். (கூசுக)

வேறு.

கருக.—இலக்குமணன் வருங் காரணத்தை இராமன் ஆலோசித்தல்.

புன்சொற்க டந்த பகுவாய ரக்க னுரைபொய்யை னுது [1]புலர்வாள்
வன்சொற்[2]க டந்து மடமங்கை யேவ நிலைதேர வந்த [3]மருளோ
தன்சொற்க டந்து தளர்கின்ற நெஞ்ச முடையேன் மருங்கு தனியே
யென்சொற் கடந்து மனமுந்த ளர்ந்த விளவீரன் வந்த வியல்பே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) மனமும் தளர்ந்த இள வீரன்-(உடம்போடு) மனமும் தளர்ச்சியடையப்பெற்ற இளையவீரனான இவ்விலக்குமணன், என் சொல் கடந்து-(சீதையைப் பர்ணசாலையிற் பாதுகாத்திருக்கும்படி கட்டளையிட்ட) எனது வார்த்தையை மீறி, தன் சொல் கடந்து தளர்கின்ற நெஞ்சம் உடையேன் மருங்கு-('இது மாயமான். இதனைத்தொடரலாகாது' என்று உண்மையை யுணர்ந்து முந்திக்கூறிய) தனது வார்த்தையைக் கடந்து (இங்குவந்து) சேர்வடைகிற மனத்தையுடையவனான எனது அருகிலே, தனியே வந்த இயல்பு-தனித்துவந்த தன்மையானது,—மட மங்கை - (பெண்களுக்குரிய) பேதைமையுடைய சீதை, புல் சொற்கள் தந்த பகு வாய் அரக்கன் உரை பொய் எனுது-வருத்தந்தருஞ் சொற்களைக் கூறிய பிளவுபட்ட வாயையுடைய மாயமானுய் வந்த இவ்வரக்கனது வார்த்தைகளே வஞ்சனையென்று கருதாமல், புலர்வாள் - வாடுபவளாய், வல் சொற்கள் தந்து ஏவ-கொடிய வார்த்தைகளைக் கூறி வலியஏவியதனால், நிலை தேர வந்த - (எனது) நிலைமையை அறிதற்கு வந்த, மருளோ-விபரீதச்செயலோ? (எ - று.)—"என்று உன்னி" என வருங் கவியோடு தொடரும்.

அரக்கன் - மாரீசன். புன்சொற்கள் - 'ஹா ஸீதே லக்ஷ்மணா' என்று இராமன்குரலால் வஞ்சனையாக விளித்தவை தன் சொல்-இலக்குமணனது சொல். பி-மீ:—[1]புகல்வாள். [2]கடந்த. [3]மருளே.

இதுமுதல் ஏழுகவிகள்-ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாங்காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (கூசுஉ)

கருஉ.—இராமன் இலக்குமணனைத் தழுவி வந்த காரணம் வினவல்.

என்றுன்னி யென்னை விதியார்மு டிப்ப தெனவெண்ணி நின்ற
விறையைப், பொன்றுன்னு விற்கை [1]யிளவீரன் வந்து புனைதாளி
மறைஞ்சு பொழுதின், மின்றுன்னு நூலின் மணிமார்ப முந்த விரை

வோடு புல்லி [2]யுருகா, நின்றுன்னி வந்த நிலை[3]யென்கொ லென்று நெடியோன்வி ளம்ப நொடிவான்.

(இ - ள்.) என்று உன்னி-என்று எண்ணி. விதியார் முடிப்பது என்னை என எண்ணி நின்ற-ஊழ்வினை முடிக்குஞ் செயல் யாதோவென்று சிந்தித்துநின்ற, இறையை-இராமபிரானை, பொன் துன்னு வில் கை இள வீரன்-அழகியதாயமைந்த வில்லையேந்திய கையையுடைய இளைய வீரனை இலக்குமணன், வந்து புனை தாள் இறைஞ்சு பொழுதில் - அருகிற் சார்ந்து அழகிய திருவடிகளில் வணங்கும்பொழுது,—நெடியோன் - தமையனை அவ்விராமன், மின் துன்னு நூலின் மணி மார்பு அழுந்த விரைவோடு புல்லி - மின்னல்போல்வீளங்குகிற பூணூலையுடைய அழகிய தன்மார்பு அழுந்தும்படி விரைவாக (அவ்விலக்குமணனை யெடுத்து) இறுகத்தழுவிக்கொண்டு, உருகாநின்று - (அன்புமிகுதியால்) மனம் உருகப்பெற்றுநின்று, உன்னி வந்த நிலை என் கொல் என்று விளம்ப - 'நீ நினைத்துவந்தவிதம் என்னகாரணத்தால்' என்று வினவ, நொடிவான் - (இலக்குமணன்) விடைகூறுவான்; (எ-று.)—அதனை அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

புனைதாள் - வீரக்கழலையணிந்த பாதமுமாம். மூன்றுமடியில், துன்னு-உவமவுருபு; அன்றி,மின்னலின்தன்மை பொருந்திய முப்புரிநூ லென்றலும் அமையும். நெடியோன் - மூத்தவன்; இனி, திருக்கலியாணகுணகணங்களாற் பெரியவனும், திரிவிக்கிரமாவதாரத்தில் நீண்டுவளர்ந்தவனும், நெடிய விசுவரூபமுடையவனுமாம். உன்னிவந்தநிலை என்கொல் - யாதுகினைத்து எதன்பொருட்டு வந்தாய்? என்றபடி. பி-மீ:—[1]வய. [2]ஒருகால். [3]என்னை. ()

கருத.—இதுவும், அடுத்த கவியும் - இலக்குமணன் தான்வந்த காரணங் கூறல்.

இல்லாநி லத்தி னிசையாத வெஞ்சொ லெழுவஞ்சி [1]யேய [2]முறையால், வல்வாய ரக்க னுரையாகு மென்ன மதியாண்ம றக்க முறுவா,னில்லாது மற்றி தறிபோதி யென்ன நெடியோய் புயத்தின் வலியென், சொல்லான்ம னத்தி னடையாள்சி னத்தின் முனிவோடு நின்று துவள்வாள்.

இதுமுதல் ஆறு கவிகள் - குளகம்.

(இ - ள்.) நிலத்தின் இல்லா - உலகத்தில் இல்லாததும், இசையாத - பொருந்தாததுமான, வெம் சொல் - ('ஹா ஸீதே லக்ஷ்மணா!' என்ற) கடுஞ்சொல், எழ - (திடீரென்று) எழுந்ததாக,—அஞ்சி - (அதுகேட்டு) அச்சங் கொண்டு, ஏவ - (சீதை சென்றுசெய்தியறிந்துவரும்படி எனக்குக்) கட்டளையிட,—(அப்பொழுது யான்), முறையால்-முறைமைப்படி, வல் வாய் அரக்கன் உரை ஆகும் என்ன-'கொடிய வாயையுடைய (மான்வடிவாகிய) இராக்கதனது சொல்லேயாகும் இது' என்றுகூற,—மதியாள் - (அதனை உண்மையென்று) மதியாமல், மறுக்கம் உறுவாள்-கலக்கமடைபவளாய், இது அறிகில்

லாது போதி என்ன-('சென்று) இதன் உண்மையை அறிந்துவா இங்குநில்லா மற் செல்' என்று (மீண்டும் சீதை என்னை) ஏவ,—என் சொல்லால்-(அவள் சொல்லை மறுத்து உனது ஆற்றலை யெடுத்துக்கூறிய) எனது வார்த்தையால், நெடியோய் புயத்தின் வலி - உத்தமனுனை உனது தோள்வலிமையை, மனத்தின் அடையாள்-(தன்) மனத்திற் கொள்ளாதவளாய் [அறிந்துகொள்ளாமல் என்றபடி], சினத்தின் முனிவோடு நின்று துவள்வாள் - கோபமிகுதியோடு நின்று தளர்பவளாய்;--(எ-று.)—"என்று ஓடலோடும்" என வருங்கவியோடு தொடரும். மற்று-அசை; வினைமாற்றுமாம். பி-ம்:—[1]எவ்வம். [2]முறையான்.

கருத. ஏகாது நிற்றி யெனின்யானை ருப்பி னிடைவீழ்வெ னென்று முடுகா, மாகான கத்தி னிடையோட லோடு மனமஞ்சி வஞ்ச வினையேன், போகா[1]தி ருக்கி னிறவாதி ருக்கை புணராளெ னக்கொ டுணரா, வாகா[2]தி றக்கை யறனன்றெ னக்கொ டிவண் வந்த தென்ன வமலன்.

(இ - ள்.) 'ஏகாது நிற்றி எனின்-(நீ இராமனிடத்துக்குச்) செல்லாமல் இங்குநிற்பாயாஞல், யான் நெருப்பினிடை வீழ்வென் - நான் நெருப்பிற் குதித்து உயிர்விடுவேன்,' என்று - என்றுசொல்லி, முடுகா - விரைந்து, மா கானகத்தினிடை - பெரிய காட்டிலே, ஓடலோடும் - (சீயைநாடிச் சீதை) ஓடியவளவிலே, மனம் அஞ்சி - மனத்திற் பயந்து, வஞ்சம் வினையேன் போகாது இருக்கின் இறவாதுஇருக்கை புணராள் என கொடு உணரா-'வஞ் சனைச்செய்கையையுடையனென்று அவளாற்கருதப்பட்ட யான் இவ்விடம் விட்டுப்போகாமலிருந்தால் அவள் இறவாமலிருக்கமாட்டாள்' என்று அறிந்து கொண்டு, இறக்கை ஆகாது அறன் அன்று என கொடு - 'அவள் இறத்தல் தகாது, அது தருமமன்று' என்றும் எண்ணி, இவண் வந்தது - (நான்) இவ்விடத்திற்கு வந்தசெயல் (நிகழ்ந்தது), என்ன - என்று (இலக்குமணன்) சொல்ல, (அதுகேட்டு), அமலன்-குற்றமற்றவனுன இராமபிரான்,--(எ-று.)—"என்று தெருளா" என வருங்கவியோடு தொடரும்.

இறவாதிருக்கைபுணராள் - இறந்தேவிடுவள் என்றபடி. பி-ம்:—[1]நிற் கின். [2]இருக்கை. (கூகு)

கருது.—நடந்த செயலைக்குறித்து இராமன் சிந்தித்தல்.

[1]சாவாதி ருத்த லிலளான தூற்ற [2]தையோ தடுக்க [3]முடியா தாவாவ லக்க ணுறுவாளு ரைத்த பொருளாவ கத்தி [4]னடையா காவாகி லத்தின் வருமேத [5]மற்ற தொழியாது கைக்கொ டகலப் போவார்பி ரிக்க முயல்வார்பு ணர்த்த பொருளாமி தென்று தெருளா.

(இ-ள்.) 'சாவாது இருத்தல் இலள் ஆனது உற்றது-(இவன் சீதையை விட்டுவராதிருப்பின் அவள்) இறவாமலிருக்குந்தன்மையில்லாதவளான நிலைமை நேர்ந்தது; அதையோ தடுக்க முடியாது - (அவள் அடைவதாகச் சொன்ன) மரணத்தைத் தடுத்தலோ (இவன்விட்டுவருதலொழிய வேறொரு

முல்) முடியாதாயிற்று; உரைத்த பொருளோ-(இவன் அவளுக்குத் தேறுதலாகச்) சொன்ன சொற்களின் பொருள்களோ, அலக்கண் உறுவாள் அகத்தின் அடையா-கலக்கமடைந்தஅவளது மனத்திற் பதியவில்லை; ஆ ஆ-அந்தோ அந்தோ !! காவா நிலத்தின் ஏதம் வரும்-பாதுகாவலொழிந்த அவ்விடத்தில் தீங்கு வந்து சேரும்: அது ஒழியாது - அத்தீங்கு வாராதுநீங்காது; இது - (மாயமான்வந்ததுமுதலிய) இச்செய்கை, கை கொடு அகல போவார் பிரிக்க முயல்வார் புணர்த்த பொருள் ஆம் - (சீதையைக்) கைப்பற்றிக்கொண்டு தூரமாகச்செல்லக்கருதியவர்கள் (அவளைவிட்டு எம்இருவரையும்) பிரிக்க யத்தனித்தவராய் (அதற்குஏற்ப)ச் செய்த வஞ்சனைச்சூழ்ச்சியாம்', என்று தெருளா - என்றுநிச்சயித்து,—(எ - று.)—"என" என்று வருங்கவியோடு தொடரும். மற்று - வினைமாற்று.

இலக்குமணன்மேலும்குற்றமில்லை, சீதையின்மேலும்குற்றமில்லை,சீதையைக்கொண்டுசெல்லக்கருதியவர் சீதையைத்தனிப்படுத்துதற்குச்செய்த சூழ்ச்சியால் இங்ஙனம்நிகழ்ந்தது; எங்ஙனமாயினும் சீதைக்குப் பாதுகாவலில்லாமையால் அங்குத்தீங்குநேர்ந்தேவிடும் என்று உணர்ந்தன னென்க. ஆவா - இரக்கக்குறிப்பிடைச்சொல்லடுக்கு. பி - மீ:—[1]சாவானதிற்றலில்லானதுற்றது. [2]அஃதோ. [3]முடியா. [4]அடையாள். [5]உற்றது. (கூசுக)

கநிசூ.—இராமன் இலக்குமணனைநோக்கிச் சிலகூறல்.

வந்தாய்தி றத்தி னுளதன்று குற்ற மடவாண்ம றுக்க முறுவாள்
சிந்தாகு லத்தொ டுரைசெய்த செய்கை யதுதீரு மென்று தெளிவாய்
முந்தேத டுக்க வொழியாதெ டுத்த வினையேன்மு டித்த முடிவா
லந்தோகெ டுத்த தெனவுன்னி யுன்னி யழியாத வுள்ள [1]மழிவான்.

(இ - ள்.) 'வந்தாய் நிறத்தின்-(சீதையைத் தனியேவிட்டு இங்கு) வந்த உன்னிடத்திலே, குற்றம் உளது அன்று - குற்ற மில்லை; 'மடவாள்-பேதைமைக்குணமுடைய சீதை, மறுக்கம் உறுவாள் - (மாயமானே உண்மைமானென்றுகருதித்) தடுமாற்றமடைந்தவளாய், சிந்தா ஆகுலத்தொடு-மனக்கலக்கத்தோடு, உரைசெய்த-சொன்ன, செய்கை-(மானைப்பிடிக்கத்தொடர்தலாகிய) அச்செயலினால், அது - (உன்னுடைய) அத்தக்குற்றம், தீரும்-நீங்கும்,' என்று - என்றுசொல்லி, தெளிவாய்-(மாயமானென்று ஐயமற நீ) தெளிந்து கொண்டு, முந்தே தடுக்க-முன்னமே (என்னைத்) தடைசெய்ய, ஒழியாது - அவ்வாறேவிட்டுநீங்காமல், எடுத்த வினையேன்-தொடங்கிய அச்செய்கையையுடையேனான நான், முடித்த - செய்துதீர்த்த, முடிவால்-முடிவினால், அந்தோ கெடுத்தது-ஐயோ (அச்செயல்)என்னைக்கெடுத்துவிட்டது!' என-என்று (தம்பியைநோக்கிக்) கழிவிரக்கமாகச் சொல்லி, உன்னி உன்னி (அதையே) நினைத்துநினைத்து, அழியாத உள்ளம் அழிவான்-என்றும் அழியாத தனது மனம் அழிபவனும், (எ - று.)—"என்று கடுகி" என வருங் கவியோடு தொடரும்.

தீரும் - எவற்பன்மைமுற்று; இங்கு, உயர்வுப்பன்மையாய் நின்றது. 'அழியாத வுள்ளம்' என்றது, இராமனுக்கு இயல்பாகவுள்ள மிக்க தைரியத்தைக் காட்டும். அழியாதவுள்ளமழிவான் - தொடைமரபு. பி-ம்:—[1]அழியா.

கரிஎ.—இனித் தாமதஞ் செய்யலாகா தென்று இராமன் விரைந்து பர்ணசாலைக்கு மீளுதல்.

[1]பாணிக்க நின்று பயனுவ தென்னை பயில்பூவை யன்ன குயிலைக் காணிற்[2]க ரந்த துயர்தீரு மன்றி யபலில்லை யென்று கடுகிச் சேணுற்ற கன்ற நெறியூடு [3]சென்று சிலைவாளி யன்ன விசைபோ யாணிப்ப சும்பொ னனையாளி ருந்த வவிர்சோலை வல்லை யணுகா.

(இ - ள்.) 'பாணிக்க நின்று பயன் ஆவது என்னை - பொழுதுபோக்கிக் இங்குநிற்றலா லாகும் பயன் யாது? பயில் பூவை அன்ன குயிலை-(இன்சொற் களைக்கூறிப்) பழகிய நாகணவாய்ப்பறவை போன்ற சீதையை, காணின் - கண்டால், கரந்த துயர் தீரும் அன்றி - (நமது மனத்தில்) நேர்ந்த துன்பம் நீங்குமே யல்லாமல், அயல் இல்லை-வேறொருவகையுமில்லை,' என்று-என்று சொல்லி, கடுகி - துரிதப்பட்டு, சேண் உற்று அகன்ற நெறியூடு சென்று - நெடுந்தூரம் பொருந்திப் பரந்துள்ள வழியிலே நடந்து, சிலை வாளி அன்ன விசை போய் - வில்லினின்று எய்யப்பட்ட அம்பின் வேகம்போன்ற வேகத்தோடு சென்று, ஆணி பசும்பொன் அனையாள் இருந்த அவிர் சோலை வல்லை அணுகா - பசிய ஆணிப்பொன்னைப் போன்றவளான சீதை இருந்த விளங்குகிற பஞ்சவடியாச்சிரமத்தை விரைவிற்கிட்டி,—(எ-று.)—"ஓடிவந்தனன்" என வருங் கவியோடுமுடியும்.

குயில்-அதுபோன்ற இன்குரலையுடைய சீதைக்கு உவமையாகுபெயர். ஆணிப்பொன் - மாற்றுயர்ந்த பொன். இராமனது அப்பொழுதைய நடை விரைவுக்கு இராமபாணத்தின்வேகம் உவமைகூறப்பட்ட தென்க. பி-ம்:—[1]பாணித்து. [2]கலந்த. [3]சென்ற. (கூகூஅ)

வேறு.

கரிஅ.—அங்குச்சீதையைக்காணுமல் இராமன் வருந்தல்.

ஓடி [1]வந்தனன் [2]சாலையின் [3]சோலையி னுதவுந்
தோடி வர்ந்தபூந் சுரிகுழ லாடனைக் [4]காணுன்
கூடு தன்னுடை யதுபிரிந் தாருயிர் குறியா
நேடி வந்தது [5]கண்டில தாமென [6]நின்றுன்.

(இ - ள்.) ஓடி வந்தனன் - (இவ்வாறு) விரைந்துஓடிவந்த இராமன்,—சாலையின்-அப்பர்ணசாலையில், சோலையின் உதவும் தோடு இவர்ந்த பூ சுரி குழலாள்தனை-சோலையிலுண்டாகிற இதழ்கள்நெருங்கிய மலர்களைச் சூடிய கடைகுழன்ற கூந்தலை யுடையவளான சீதையை, காணுன்-காணுதவனுய்,—ஆர் உயிர்-அருமையான ஓர் உயிர், தன் உடையது கூடு பிரிந்து - தன்னுடைய தான உடம்பைப் பிரிந்து சென்று, குறியா நேடி வந்து - மீண்டும் (அவ்

வுடம்பைக்) குறிக்கொண்டு தேடிவந்து, அது கண்டிலது ஆம் என - அதனைக் காணப்பெறுது நின்றுற் போல, நின்றுன் - திகைத்து நின்றுன்; (எ-று.)

பிராணநாயகனை இராமனுக்கு உயிரும், சீதைக்கு உடம்பும் உவமையெனக் காண்க. உயிர் உடம்பையின்றியமையாதவாறு போல, இராமன் சீதையையின்றியமையா னென்க. இனி, கூடு-ஓர்உடம்பானது, தன்னுடையது ஆர் உயிர் பிரிந்து தனது அருமையான உயிரைப் பிரிந்து, குறியாதேடி வந்து - (மீண்டும்அதனைக்) குறிக்கொண்டு தேடிவந்து, அது கண்டிலது ஆம் என - அதனைக்காணப்பெறுதவாறுபோல, நின்று னென்று உரைப்பாரும் உளர்; அப்பொழுது, இராமனுக்கு உடம்பும், அவனதுபிராணநாயகியான சீதைக்கு உயிரும் உவமையெனக்காண்க. சோலையிறுதியும் பூவெனஇயையும். **பி - ம்:**—[1]வந்தனர். [2]சாலையிற், சாலையுஞ். [3]சோலையும். [4]காணர். [5]கண்டிலர். [6]நின்றுர்.

இதுமுதல் இருபத்துநான்கு கவிகள் - முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய நெடிலடி நான்கு கொண்ட **கலிநிலைத்துறைகள்.** (கூகூ)

கருகூ.—இதுவும் அது.

கைத்த சிந்தையன் கனங்குழை யணங்கினைக் காணு
துய்த்து [1]வாழ்தர வேறொரு பொருளி[2]லா னுதவ
வைத்த மாநிதி மண்ணெடு [3]மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றுனையும் போன்றுன்.

(இ - ள்.) கனம் குழை அணங்கினை காணுது - கனமான [அல்லது விலையுயர்ந்த]குழையென்னுங் காதணியையுடைய சிறந்தபெண்ணாகிய சீதையைக் காணுமல், கைத்த சிந்தையன்-வெறுத்த மனத்தையுடையனை ஸ்ரீராமன்,—உதவ-(தனக்கு) உதவுதற்காக, வைத்த-(நிலத்திற்) புதைத்துவைத்த, மா நிதி - மிக்க செல்வங்களை, பொய்த்துளோர் - வஞ்சனைச்செய்கையையுடையோர், மண்ணெடு மறைந்தன வாங்கி கொள- (புதைத்துவைத்த) மண்ணோடு மறையும்படி எடுத்துக்கொள்ள, திகைத்து நின்றுன்-திகைப்படைந்து நின்றவனை, உய்த்து வாழ்தர வேறு ஒரு பொருள் இலானையும்-வைத்துக் கொண்டுவாழ்வதற்கு வேறேஒருபொருளு மில்லாதவனையும், போன்றுன்—.

ஒருவன் தனக்குஉள்ளசெல்வமனைத்தையும் பிறர்கவரவொண்ணுது பத்திரப்படுத்தி நிலத்திற்புதைத்துவைக்க, அதனைக் கள்ளர் மண்ணோடு மறைத்துக் கவர்ந்துஎடுத்துக்கொண்டால், அப்புதையலுக்குஉடையவன் கொண்டு வாழ்வதற்கு வேறொருபொருளின்றிக் கலங்குமாறுபோல, சீதை மண்ணுடன் காணுதிருத்தலை நோக்கி இராமன் அவளையின்றிவாழமாட்டானுய்க் கலங்கி நின்றனனென்க. **உவமையணி.** 'நின்றுனையும்போன்றுன்' என்ற உம்மை-கீழ்க்கவியிற்கூறிய உவமையை நோக்கி இறந்ததுதழுவிய எச்சமாய் நின்றது. **பி - ம்:**—[1]வாழ்தற்கு. [2]இலன். [3]மறைத்தனர். (கூஎ)

ககூ.—இதுமுதல் முன்றுகவிகள் - அப்பொழுது உலகத்திலுண்டான துழப்பத்தைக் கூறும்.

மண்சு ழுன்றது மால்வரை சுழன்றது மதியோ
ரெண்சு ழுன்றது சுழன்றதவ் வெறிகட லேழும்
விண்சு ழுன்றது வேதமுஞ் சுழன்றது விரிஞ்சன்
கண்சு ழுன்றது [1]சுழன்றது கதிரொடு மதியும்.

(இ - ள்.) (சர்வாந்தர்யாமியான அந்தப் பகவானுடைய திருவுள்ளம் இவ்வாறு கலங்கித் திகைத்துச்சுழலவே), மண் சுழன்றது-பூமி சுழலலுற்றது; மால் வரை சுழன்றது-பெரிய மலைகள் சுழலலுற்றன; மதியோர் எண் சுழன்றது - திவ்வியஞானமுள்ளவர்களுடைய எண்ணமும் கிலேதிரிந்தது; அ எறி கடல் ஏழும் - அலைவீசுகின்ற அந்த ஏழுசமுத்திரங்களும், சுழன்றது - சுழலலுற்றன; வீண் சுழன்றது-வானமும் சுழலலுற்றது; வேதமும் சுழன்றது - (என்றுமிலேகுலேயாத) வேதங்களும் கிலேகுலேந்தன; விரிஞ்சன் கண் சுழன்றது - (பதினான்குலகங்களுள் மேலுலகமாகிய சத்தியலோகத்தி லுள்ள) பிரமதேவனது கண்களும் சுழலலுற்றன; கதிரொடு மதியும் - சூரியனேடு சந்திரனும், சுழன்றது - சுழலலுற்றது; (எ - று.)

எல்லாப்பொருள்களின் வடிவமாயுள்ள எம்பெருமானது மனம்சுழல வே, அப்பொருள்கள்யாவும் சுழன்றன வென்க. 'அவ்வெறிகடல்' என்பதில், அகரம் - உலகறிசுட்டு. வரை, எண், கடல், வேதம், கண் என்பவை - சாதி யொருமையாதலால், 'சுழன்றது'என்ற ஒருமைமுற்றைக் கொண்டன; கதி ரும் மதியும் தனித்தனி சுழன்றதெனக் கூட்டுக: [1]சுழன்றன எனப் பன் மையாகிய பாடமுங் கொள்ளலாம். (கூஎக)

ககூக. அறத்தைச் சீறுங்கொ லருளேயே சீறுங்கொ லமரர்
திறத்தைச் சீறுங்கொன் முனிவரைச் சீறுங்கொ றீயோர்
மறத்தைச் சீறுங்கொ லென்கொலோ முடிவென்று மறையி
[1]னிறத்தைச் சீறுங்கொ னெடுந்தகை யோனென [2]நடுங்கா.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) நெடு தகையோன் - பெருமைக்குணமுள்ளவனுகிய ஸ்ரீரா மன், அறத்தை சீறும் கொல் - தருமத்தைக் கோபிப்பானே? அருளேயே சீறும் கொல் - கருணையென்னுங் குணத்தையே கோபிப்பானே? அமரர் திறத்தை சீறும் கொல்-தேவர்களுடைய தன்மையைக் கோபிப்பானே? முனி வரை சீறும் கொல்-முனிவர்களைக் கோபிப்பானே? தீயோர் மறத்தை சீறும் கொல் - கொடியஅரக்கர்களுடையகொடுமையைக்கோபிப்பானே? மறையின் நிறத்தை சீறும் கொல் - வேதங்களின் தன்மையைக் கோபிப்பானே? என - என்றும், முடிவு என்கொல்ஓ என்று-(அக்கோபத்தின்) முடிவு யாதாகுமோ? என்றும் கருதி, நடுங்கா-நடுக்கங்கொண்டு,—(எ - று.)—"பொருள்கள் மேல கீழுறக் கீழன மேலுறும் வேலை" என வருங்கவியோடு தொடரும்.

அறமும்அருளும்ஆகிய உயர்குணங்களையுடைய தனக்குத் தீங்கு நேர்ந்ததனாலும், அங்ஙனம் நேர்ந்தபொழுது அவ்வறமும் அருளும் துணைநின்று காத்து அதனை விலக்காதொழிந்ததனாலும், அவற்றைச்சிறுவாளை வென்னுங் களூத்து நிகழ்ந்தது. தேவர்கள் துயரம்தீர்த்தற்பொருட்டாகவே திருவவதரித்து முனிவர்கள்வேண்டுகோட்கு இணங்கி அவர்கட்குப் பகைவர்களான அரக்கர்களை அழித்தற்குச் சித்தஞ்செய்கின்ற தனக்கு நேர்ந்த தீமையை அத்தேவர்களும் முனிவர்களும் தடாதொழிந்தன ரென்ற காரணத்தால், அவர்கள் மீது கோபங்கொள்வாளை வென்ற எண்ண முண்டாயிற்று. 'தியோர்மறத்தைச் சீறுங்கொல்' என்று கருதியதன் காரணம், வெளிப்படை. 'தருமமே வெல்லும்' என்று கூறிய வேதமொழி பொய்த்த தென்று, அதனைச் சீறுவாளை? என்ற நினைப்பு நேர்ந்தது. பி-ம்:—[1]திறத்தை. [2]தியங்கா. (கூஎஉ)

கசூஉ. நீல [1]மேனிய நெடியவன் மனநிலை [2]திரிய
மூல காரணத் தவனெடு முடிவுற முற்றுங்
கால மாமெனக் [3]கடையிடு கணிக்கரும் பொருள்கண்
மேல கீழுறக் [4]கிழன மேலுறும் வேலை.

(இ - ள்.) கடைஇடு - முடிவைக்கொண்ட [மிச்சமில்லாத் என்றபடி], கணிக்க அரு - கணக்கிடுதற்குஅருமையான [அளவிறந்த], பொருள்கள்-உலகத்துப்பொருள்களியாவும்,—நீலம் மேனிய நெடியவன் மனம் நிலை திரிய - நீலநிறமுள்ள திருமேனியையுடைய பெரியோனுகிய இராமனது மனம் நிலைமாறியதனால்,—மூல காரணத்து அவனெடு முடிவுற முற்றும் காலம் ஆம் என - முதற்காரணமாகவுள்ள அவ்வெம்பெருமானது சொரூபத்துடனே லயப்படும்படி அழியுங் கற்பாந்தகாலத்திற் போல, மேல கீழ் உற கீழன மேல் உறும் வேலை-மேலுள்ளவையெல்லாம் கீழாகக் கீழுள்ளவையெல்லாம் மேலாக நிலைதடுமாறுகிற அப்பொழுது, (எ - று.)—"இளையவன் தொழலும்" என அடுத்தகவியோடு தொடரும்.

'மூலகாரணத்தவனெடு முடிவுற முற்றுங் காலமா மென' என்பதற்கு-படைத்தற்கடவுளாதலால் முக்கியகாரணமாகவுள்ள பிரமனுடனே எல்லாப் பொருளும் மிச்சமில்லாமல் அழியும் ஊழிக்காலத்திற்போல என்றும் பொருள் கொள்ளலாம். கணிக்கரு - விகாரம். மேல, கீழன - பெயர்கள். பி-ம்:—[1]மேனிகன். [2]திரியா. [3]கடையிடுங்கணக்கரும். [4]கீழின. (கூஎங)

கசூங. 'சீதையைக் கொண்டுபோனவனைத் தொடர்வோம்' என்று இலக்குமணன் கூறல்.

தேரி னுழியுந் [1]தெரிந்தனந் தீண்டுத லஞ்சிப்
[2]பாரி னேடுகொண் [3]டகழ்ந்ததும் [4]பார்த்தனம் [5]பயனின்
றேருந் தன்மையீ தென்னென்ப தரணிலை தவர்போற்
றூரம் போதன்முன் றொடர்துமென் றிளையவன் [6]றொழலும்.

(இ - ள்.) 'தேரின் ஆழியும் தெரிந்தனம் - தேரினது சக்கரங்கள் (இங்குப்) பதிந்திருத்தலையும் கண்டோம்; தீண்டுதல் அஞ்சி - (பிராட்டியைத்)

தொடுதற்குப்பயந்து, பாரினேடு கொண்டு அகழ்ந்ததும் - தரையுடனே பெயர்த்துக்கொண்டுபோனதையும், பார்த்தனம் - பார்த்தோம்; (இவற்றைப் பார்த்தபின்பும்), உரன் இலாதவர் போல் - வலிமையில்லாதவர்கள்போல, பயன் இன்று ஒரும் தன்மை ஈது-பயனில்லாமல் ஆலோசிக்கின்ற இத்தன்மையை, என் என்பது - என்னவென்றுசொல்வது? தூரம் போதல் முன் தொடர்தும் - (பிராட்டியைத் தரையோடு பெயர்த்தெடுத்துப் போகிறவன்) வெகுதூரம்போய் விடுதற்கு முன்னமே (அவனைத் தேடித்) தொடர்ந்துசெல்லுவோம்,' என்று - என்றுசொல்லி, இளையவன்-இளையபெருமான் [இலக்குமணன்], தொழலும் - வணங்கியவளவிலே,—(எ - று.)—"அமலனும் ஆம் அதேஎன்று" என வருங் கவியோடு தொடரும்.

கொண்டுஅகழ்ந்தது - அகழ்ந்துகொண்டது; விகுதிபிரித்துக் கூட்டல். இன்று-இன்றியென்னும் வினையெச்சம் ஈறுதிரிந்தது; "அன்றி யின்றி யென்ற வினையெஞ்சுகரம், தொடர்பினுள் உகரமாய் வரின்" என்பது விதி. 'தெரிந்தனர்,' 'பார்த்தனர்' என்ற பாடத்துக்கு-'தேரினுழியும்...பார்த்தனர்' என்ற வரையில் கவிக்கூற்றும், 'பயனின்று' என்பது முதல் இலக்குமணன்கூறியதுமாகக் கொள்க. **பி-ம்:**—[1]தெரிந்தனன். [2]பாரினேடும். [3]அகன்றதும். [4]பார்த்தனன். [5]பலன். [6]சொன்னான். (கூஎச)

கசூச.—அதற்கு இராமன் உடன்பட,இருவரும் தேர்ச்சுவட்டின் வழியே செல்லல்.

ஆம தேயினி [1]யமைவ தென் றமலனு மெய்யிற்
ரூம வார்கணைப் புட்டிலு முதலிய தாங்கி
வாம மால்வரை [2]மரனிவை மடிதர வயவர்
பூமி மேலவன் றேர்சென்ற நெடுநெறி போனார்.

(இ - ள்.) அமலனும் - குற்றமற்றவனான ஸ்ரீராமனும், ஆம் அதே இனி அமைவது என்று - 'ஆம் (நீ சொன்ன) அச்செயலே இப்பொழுது செய்யத்தகுவது' என்று உடன்பட்டுக்கூற, (பின்பு), வயவர்-வீரர்களாகிய அவ்விராம லக்ஷ்மணர் இருவரும், தாமம் வார் கணை புட்டிலும் முதலிய மெய்யில் தாங்கி - ஒளியையுடைய நீண்ட அம்பறாத்தூணி முதலியவற்றை உடம்பில் உரியபடி தரித்துக்கொண்டு, வாமம் மால் வரை மரன் இவை மடிதர பூமிமேல் அவன் தேர் சென்ற நெடு நெறி - அழகிய பெரிய மலைகளும் மரங்களும் அழியும்படி பூமியில் அவ்விராவணனது தேர் சென்ற நீண்ட வழியிலே, போனர் - சென்றார்கள்; (எ - று.)

'ஆம்'என்பது-அங்கீகாரப்பொருளது;இனி அமைவது அதே ஆம்என்று மொழிமாற்றி, இனிச்செய்யத்தகுவது நீ சொன்ன அச்செயலேயாமென்று உரைப்பினும் பொருந்தும். புட்டிலும், உம் - அசை. மடிதரச் சென்ற என இயையும். 'என்று' என்பதை என்னவெனச் செயவெனெச்ச மாகத் திரிக்க. அமலன் ஆம்என்ன, வயவர் தாங்கிப் போனர் என முடிபுகாண்க. **பி-ம்:**—[1]ஆவது. [2]மாநிலம் படிவதேவவ்வும், மாநிலம் படிவதேவயவும். ()

கசூரு.—தரையில் தேர்ச்சுவடுமறைந்தமை கண்டு இராமன் திகைத்தல்.

மண்ணின் மேலவன் றேர்சென்ற சுவடெலா மாய்ந்து
விண்ணி னேங்கிய தொருதிலே மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென மனமிகப் புழுங்கி
யெண்ணி னாமினிச் செய்வதென் னிளவலே யென்றான்.

(இ - ள்.) அவன் தேர் மண்ணின்மேல் சென்ற சுவடு எலாம் மாய்ந்து-சீதையைக் கவர்ந்தெடுத்துக்கொண்டவனது தேர் பூமியின்மேற்சென்ற சக்கரங்களின் அடையாளம் மறைபட்டு, ஒரு நிலே விண்ணின் ஓங்கியது-ஓரிடத்தில் (அத்தேர்) வானத்தில் எழுந்ததாகத் தெரிந்தது; (அதனால், இராமன்), மெய் உற வெந்த புண்ணினூடு உறு வேல் என-உடம்பில்தன்மீதுவெந்ததனலாகிய புண்ணினுள்ளே நுழைந்த வேல் போல [தீப்பட்ட புண்ணில் வேல் நுழைந்தாற் போல], மனம் மிக புழுங்கி-மிகவும் மனம்நவித்து, இளவலே இனி நாம் எண்ணி என் செய்வது என்றான் - 'தம்பி! இனி நாம் ஆலோசித்துச் செய்யவேண்டுவது யாது!' என்று (இராமன் இலக்குமணனே நோக்கிக்) கூறினன்; (எ - று.)—புண்ணினூடுஉறுவேல் - துன்பத்தின்மேல் துன்ப முறுதற்கு உவமை. (கூஎசு)

கசூசு.—'தேர்சென்ற தென்திசையை நோக்கிச் செல்வோம்' என்று இலக்குமணன் கூறல்.

தெற்கு நோக்கிய தெனும்பொரு [1]டெரிந்ததத் திண்டேர்
மற்கு நோக்கிய திரள்புயத் தண்ணலே வானம்
விற்கு நோக்கிய [2]பகழியி னெடிதன்று விம்மி
[3]நிற்கு நோக்கிதென் [1]பயத்ததென் றிளையவ னேர்ந்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு), இளையவன் - இலக்குமணன், (இராமனே நோக்கி), 'மற்கு நோக்கிய திரள் புயத்து அண்ணலே-மற்போருக்குஎதிர்பார்த்துள்ள திரண்ட தோள்களேயுடைய பெருமையிற்சிறந்தவனே! அ திண் தேர் தெற்கு நோக்கியது எனும் பொருள் தெரிந்தது-வலிய அத்தேர் தென்திசையை நோக்கிச் சென்றதென்ற உண்மை தெரியலாயிற்று;விற்கு நோக்கிய பகழியின் வானம் நெடிது அன்று - (உனது) வில்லினின்று செல்லும் அம்புக்கு வானம் நீண்டதன்று; விம்மி நிற்கும் நோக்கு இது என் பயத்தது-கலங்கிநிற்கிற இவ்வாலோசனை என்ன பயனைத் தருவது?' என்று நேர்ந்தான் - என்று விடைகூறினன்; (எ - று.)

போரை விரும்பி எதிர்பார்க்கிற தோள்வலிமை யுடையா யென்பான், 'மற்குநோக்கிய திரள்புயத் தண்ணலே' என்றான்: இங்ஙனம் விளித்தது, நீ போர்க்கு அஞ்சுவாயல்லே யெனப் புகழ்ந்து ஊக்கத்தைக் கிளரச்செய்தவாறும். விற்கு - உருபுமயக்கம். 'விற்குநோக்கிய பகழியின் வானம் நெடிதன்று' என்றது - உனது கோதண்டத்தினின்று விசையோடு எய்யப்பட்டு மிக்கவேகமுடைத்தாய் வெகுதூரம் செல்லவல்ல உனது அம்பு, வானத்தில்

அத்தேர் எவ்வளவுதூரத்திற் சென்றாலும் அதனைத் தவறுதுதாக்கியழிக்க வல்லது என்றவாறு; ஆனதுபற்றி, தேர்சென்ற தெற்குத்திசையை நோக்கி வானத்தைப்பார்த்துக்கொண்டே செல்வோ மென்றனும். விம்மிநிற்கும் நோக்கு இது என்பயத்தது - இங்ஙனம் திகைத்துநின்று ஆலோசிப்பதிற் பயனில்லை யென்றபடி. பி-ம்:—[1]தெரிந்தது. [2]பகழியின். [3]நிற்கநோக்கி லென், நிற்கநோக்கியென். [4]பயனென. (கூஎ)

கசுஎ.—அங்ஙனம் தெற்கேசெல்லும் வழியில் வீணைக்கொடி விழுந்து கிடக்கக் காணுதல்.

ஆகு மன்னதே கருமமென் றத்திசை நோக்கி
யேகி யோசனை யிரண்டுசென் றரிடை யெதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல்.

(இ - ள்.) ஆகும் அன்னதே கருமம் என்று - ஆம் அதுவே ஏற்றசெய லென்று (இராமன் கூறி) உடன்பட,—(இருவரும்), அ திசை நோக்கி எகி - அந்தத்தென்திசையை நோக்கிச் சென்று, யோசனை இரண்டு சென்றார்-இர ண்டுயோசனைதூரம்போய், இடை - அவ்விடத்தில், மா கம் மால் வரை கால் பொர மறிந்தது மான - பெரிய வானத்தை யளாவிய பெரிய மலையொன்று ஊழிக்காற்று வீசுதலாற் சாய்ந்துவிழுந்துகிடந்ததுபோல, பார்மேல் கிடந் தது - பூமியில் விழுந்துகிடந்ததாகிய, பாகம் வீணையின் கொடி ஒன்று - துணிபட்ட வீணைவடிவ மெழுதிய துவசமொன்றை, எதிர்ந்தார் - சந்தித் தார்கள்; (எ - று.)

கர்மம், பாகம் - வடசொற்கள். பாகம் - துண்டு. மான - உவமவுருபு. பாகக் கொடி யென இயையும். (கூஎஅ)

கசுஅ.—கண்டு சங்கிக்கையில் இராமன் ஒன்று கூறலுறல்.

கண்டு கண்டக ரோடுமெக் காரிகை பொருட்டா
லண்ட [1]ரதியர்க் காரமர் [2]விளைந்ததென் [3]றயிர்த்தார்
துண்ட [4]வாளினிற் சுடர்க்கொடி துணிந்ததென் றுணராப்
புண்ட ரீகக்கண் [5]புனல்வரப் புரவலன் [6]புகல்வான்.

(இ - ள்.) கண்டு - (அக்கொடியைப்) பார்த்து,—'அ காரிகை பொருட் டால் - அந்தப்பெண்ணின்நிமித்தமாக, கண்டகரோடும்-கொடியபகைவர்களு டனே, அண்டர் ஆதியர்க்கு—தேவர்கள் முதலானவர்களுக்கு, ஆர் அமர் விளைந்தது-அரியபோர் உண்டாயிற்றுப்போலும்,' என்று அயிர்த்தார்-என்று சங்கித்தார்கள்; (அப்பொழுது), புரவலன் - காத்தற்றொழிலில் வல்லவனான ஸ்ரீராமன், 'துண்டம் வாளினில் - (சடாயுவினது) மூக்காகிய வாளினால், சுடர் கொடி - ஒளியையுடைய (பகைவனது) இத்துவசம், துணிந்தது - துணிபட்டது போலும்,' என்று உணரா - என்று ஆலோசித்து, புண்டரீகம் கண் புனல் வர - செந்தாமரைமலர்போன்ற (தனது) கண்களினின்று நீர்

ஒழுக, புகல்வான் - ஒன்றுசொல்பவனைனன்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

கண்டகர் - முட்போன்றவர்; பிறரை வருத்துபவர்: கண்டகம் - முள். காரிகை - அழகியபெண்; சீதை. ஆல் - அசை. துண்டம் - வடசொல்: கண்ணீர்வருதற்குக் காரணம், சடாயுவின் முதிர்ந்தமூப்பையும் தனிமையையும் கருதி யெழுந்த கவலை. காத்தற்கிழமைக்கடவுளான திருமாலின் அம்சமானவன் என்ற பொருளோடு, உலகமுழுதும் ஆண்ட சக்கரவர்த்தியின் மூத்த குமாரனதலால் அவ்வுலகமுழுதாட்சிக்கு உரியவனென்ற கருத்தும், 'புரவலன்' என்ற பெயரில் தோன்றும். பி-மீ:—[1]ஆகிமற்றார். [2]விளைத்தது. [3]அயிர்த்தான். [4]வானியில். [5]அமலனுக்கிளையவன். [6]புகன்றான். (கூஎகூ)

கசுகூ.—சடாயு போர் செய்திருப்பா ரென்று இராமன் கூறல்.

[1]நோக்கி னலைய [2]நொய்திவ ணைய்திய நுந்தை
மூக்கி னலிது முறிந்தமை முடிந்ததான் மொய்ம்பிற்
முக்கி னனடு வடுத்தது தெரிகிலந் தமியன்
யாக்கை [3]தேம்பிடு மெண்ணிரும் பருவங்க ளிறந்தான்.

(இ - ள்.) 'ஐய - தம்பி! நோக்கினால் - (இக்கொடி முறிந்துகிடப்பதைப் பற்றி) ஆலோசித்தால், நொய்து இவண் எய்திய - விரைவில் இங்கு வந்து சேர்ந்த, நுந்தை-நினதுதந்தையான சடாயுவினது, மூக்கினால்—, இது முறிந்தமை முடிந்தது-இக்கொடி முறிபட்டமை நேர்ந்ததுபோலும்: மொய்ம்பின் தாக்கினனன் - (அச்சடாயு) வலிமைகொண்டு தாக்கியிருப்பார்; நடு அடுத்தது தெரிகிலம்-(அவருக்கு) இடையிற் சம்பவித்த நிலைமையை அறிகிறோமில்லை; தமியன் - (அவரோ துணையில்லாது) தனிப்பட்டவர்; யாக்கை தேம்பிடும் - உடல்மெலிகிற,எண் அரு பருவங்கள் இறந்தான்-கணக்கிடுதற்குஅருமையான பிராயங்கள் கழியப்பெற்றவர்,' (என்று இராமன் கூறினன்; (எ - று)—ஆல் - ஈற்றசை.

'தேம்பிடும்' என்ற பெயரெச்சம், 'எண்ணரும்பருவங்களிறந்தான்' என்ற பெயரைக் கொள்ளும். தேம்பிடும் என்றதை முற்றாகக்கொண்டு உரைக்கவும் இடமுண்டு. நொய்து நோக்கினால் என்று எடுத்து, நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் எனினுமாம். பி-மீ:—[1]நோக்கினன். [2]நொய்தின்வந்து. [3]தேம்பிட. (கூஅ0)

கஎ0.—'ஆயின் விரைவிற்கெல்வோம்' என்று இலக்குமணன் கூறல்.

நன்று சாலவு நடுக்கரு மிடுக்கின னுழுஞ்
சென்று கூடலாம் பொழுதெலாந் தடுப்பது திடனால்
வென்று மீட்கினு மீட்குமால் வேறுறை வெண்ணி
நின்று தாழ்ந்தொரு பயனிலை யென்றலு மெடியோன்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) 'சாலவும் நன்று - மிகவும் நலமாயிற்று; நடுக்கு அரு மிடுக்கினன்-(எவராலும்) அசைக்கவொண்ணுத வலிமையையுடையவர் (அச்சடாயு); பொழுது எலாம் தடுப்பது திடன் - இன்றைப்பொழுது முழுவதும் (அவர் பகைவனைச் செல்லவிடாமல்) தடை செய்வது திண்ணம்; நாமும் சென்று கூடல் ஆம் - நாமும் போய் (அவரை)ச் சேரலாம்; வென்று மீட்கினும் மீட்கும்-(அவர்தாமே) பகைவென்று (பிராட்டியை) மீட்டிட்டாலும் மீட்டிடுவர்; வேறு உற எண்ணி நின்று தாழ்ந்து ஒருபயன் இலை - வேறுவிதமாக ஆலோசித்துக்கொண்டு இங்குநின்று காலதாமதஞ்செய்தலால் யாதொருபயனுமில்லை,' என்றலும்-என்று (இளையபெருமாள்) கூறியவளவிலே, நெடியோன்-பெரியோனான இராமபிரான், (எ-று)—''தொடர்வதே நலமாம் என'' என்று வருங்கவியோடு தொடரும். 'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

திடன் - திருடம் என்ற வடசொல்லின் திரிபாகிய திடமென்பதன் இறுதிப்போலி. தாழ்ந்து - தாழ. (கூஅக)

களக.—இராமலக்குமணர் அப்பாற்செல்லுகையில் வில்முறிந்து கிடத்தலைக்காணுதல்.

தொடர்வ தேநல மாமெனப் படிமிசைச் சுற்றிப்
படருங் காலெனக் கறங்கெனச் [1]செல்லுவார் பார்த்தார்
மிடல்கொள் வெஞ்சிலை விண்ணிடு வின்முறிந் தென்னக்
கடலின் மாடுயர் [2]திரையெனக் கிடந்தது கண்டார்.

(இ - ள்.) தொடர்வதே நலம் ஆம் என-அவ்வாறுதொடர்ந்துசெல்வதே நல்லதா மென்றுகூறி (இராமன்) உடன்பட,—படிமிசை சுற்றி படரும் கால் என - பூமிமேற் சுற்றிச் செல்கிற காற்றுப் போலவும், கறங்கு என-காற்றுடி போலவும், செல்லுவார் - விரைந்து செல்லுகிற அவ்விராம லக்குமணர்,—பார்த்தார்-(ஆங்காங்குப்) பார்ப்பவராகி, விண் இடு வில் முறிந்து என்ன - வானத்தில்தோன்றுகிற இந்திரவில் முறிந்துவிழுந்தாற் போலவும், கடலின் மாடு உயர் திரை என - கடலினிடத்து ஓங்கியெழுகிற அலை போலவும், கிடந்தது - (தரையில்) முறிந்து விழுந்துகிடந்ததாகிய, மிடல் கொள் வெம் சிலை - வலிமைகொண்ட கொடியவில் ஒன்றை, கண்டார் - பார்த்தார்கள்; (எ - று.)

ஆங்காங்குச் சுற்றித் தேடிக்கொண்டு விரையச் செல்வதுபற்றி, படிமிசைச்சுற்றிப்படரும் காலையும் கறங்கையும் உவமைகூறினர். நீட்சியும் வளைவும் பற்றிக்கடலின்மாடு உயர்திரையை அவ்வில்லுக்கு உவமைகூறியது கொண்டு, அவ்வில் இரத்தப்பெருக்கில் விழுந்து கிடந்ததென்பது விளங்குமென்பர் ஒருசாரார். பி-ம்:—[1]செல்பவர். [2]கரை. (கூஅஉ)

களஉ.—இராமன் அவ்வில்லின்வலிமையையும், அதைத் துணித்தவனது ஆற்றலையும் வியந்துகூறல்.

சிலைகி டந்ததா லிலக்குவ தேவர்நீர் கடைந்த
மலை[1]கி டந்தென [2]வலியதே வடிவினன் மதியின்

கலேகி டந்தெனக் [3]காட்கிய னிதுகடித் தொடித்தா
னிலேகி டந்தவா நோக்கென நோக்கின னின்ருன்.

(இ - ள்.) 'இலக்குவ-இலக்குமணனே! கிடந்தது கிலே-(இங்குக்)கிடக்கின்ற இவ்வில், தேவர் நீர் கடைந்த மலே கிடந்து என வலியதே-தேவர்கள் பாற்கடலேக்கடைந்த (கருவியாகிய) மந்தரமலே கிடந்தாற்போல வலிமையையுடையதே; வடிவினுல் மதியின் கலே கிடந்து என காட்சியன்-(தனது)உடம்பின் நிறத்தால் சந்திரனதுகலேஇருந்தாற்போன்ற வெள்ளியதோற்றமுடைய வனுன சடாயு, இது கடித்து ஒடித்தான் - இவ்வில்லேப் பல்லாற்கடித்துத் துணித்திட்டனன்போலும்; நிலேகிடந்த ஆ நோக்கு-(அவனது வலிமை) நிலேயாயிருந்த விதத்தை (நீ) ஊன்றிக்கருதுவாய்,' என-என்றுசொல்லி, நோக்கினன் நின்ருன்-(இராமன் தான் அவ்வலிமைநிலேமையைக்குறித்து) ஆலோசித்து நின்ருன்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'நோக்கென நோக்கினனின்ருன்' என்பதற்கு - நோக்குவாயென்று இராமன்கூற இலக்குமணன் நோக்கிநின்ரு னென்றலும் ஒன்று. இனி ஈற்றடிக்கு - வில்லின்நிலேமை இருந்தவிதத்தைப் பா ரென்றுகூறி அவ்வில் லேப்பார்த்துநின்ரு னென்று உரைப்பாரு முளர். நீர் - கடலுக்கு ஆகுபெயர்; இங்கு இலக்கணேயாய், பாற்கடலேக் குறித்தது. கலே-சந்திரன்பங்கு. **பி-ம்:**—[1]கிடந்தன. [2]வலியவேல். [3]காட்சியின். (கூஅட)

களக.—அவர்கள் பின்னுஞ் செல்லுகையில் சூலத்தையும், அம்பறாத்தூணிகளேயும் காணுதல்.

நின்று பின்னரு நெடுநெறி கடந்துற நிமிரச்
சென்று நோக்கினர் திரிசிகைத் [1]திணிநெடுஞ் சூல
[2]மொன்று பல்கணே மழை[3]யுறு புட்டிலோ டிரண்டு
[4]குன்று போலவட் கிடந்தன குறுகின ருற்றூர்.

(இ - ள்.) நின்று - (அவ்வாறு நோக்கி) நின்று, பின்னரும் - பின்பும், நெடு நெறி கடந்து - நீண்ட வழியைக் கடந்து, உற நிமிர சென்று - வெகு தூரம் நேராகப் போய், அவண்-அவ்விடத்தில், திரி சிகை திணி நெடு சூலம் ஒன்று - மூன்று தலேகளேயுடைய வலிய பெரிய ஒருசூலாயுதமும், பல் கணே மழை உறு புட்டில் ஓர் இரண்டு - பலவான அம்புகளின் தொகுதி நிறைந்த தூணீரங்க ளிரண்டும், குன்றுபோல் கிடந்தன - மலேகள்போலக் கிடந்தவற்றை, நோக்கினர் - பார்த்து, குறுகினர் உற்றூர் - (அவற்றைச்) சமீபித்துச் சென்றூர்கள்; (எ - று.)

மழை - தொகுதியென்றமாத்திரமாய்நின்றது; வெள்ளம், காடு என்பனபோல; இனி, பல் கணே மழை யுறு புட்டில் - பல அம்புகளேயுடைய மேகத்தைப போன்ற புட்டி லென்றலும் ஒன்று; மழைபொழிதற்கு நீரை நிறையக்கொண்ட மேகம்போல, மிகுதியாகப் பிரயோகித்தற்குப் பாணங்களே நிறையக்கொண்ட புட்டி லென்றபடி; உறு - உவமவுருபு. **பி-ம்:**—

[1]கதிர். [2]ஒன்றும். [3]உறை புட்டிலோடிரண்டும். [4]குன்றுபோல்வனகிடந்த கண்டதிசயங்கொண்டார். (கூஅச)

கஎச.—அவர்கள் மற்றுஞ்செல்லுகையில் கவசங்கிடக்கக் காணுதல்.

மறித்துஞ் சென்றனர் வானிடை வயங்குற வழங்கி
யெறிக்குஞ் சோதிகள் யாவையுந் தொக்கன [1]வெனலா
நெறிக்கொள் கானக மறைதர நிருதர்கோ னெஞ்சிற்
பறித்து வீசிய கவசமுங் கிடந்தது பார்த்தார்.

(இ - ள்.) மறித்தும் சென்றனர் - மீண்டும் (அப்பாற்) சென்ற இராமலக்குமனர்,—வானிடை வயங்குற வழங்கி எறிக்கும் சோதிகள் யாவையும் தொக்கன எனலாம் - வானத்தில் விளக்கமுண்டாம்படி சஞ்சரித்து ஒளிவீசுகிற (சூரியன் சந்திரன் முதலிய) சுடர்களெல்லாம் ஒருங்குசேர்ந்தன வென்று சொல்லுதற்கு ஏற்றதான, நிருதர் கோன் நெஞ்சில் பறித்து வீசிய கவசம் - இராக்கதராசனான இராவணனது மார்பினின்று (சடாயு) பிடுங்கியெறிந்த கவசம், நெறி கொள் கானகம் மறைதர கிடந்ததும் - செல்லுநெறியைக் கொண்ட காட்டினிடம் மறையும்படி விழுந்துகிடந்ததையும், பார்த்தார்—.

மாற்றுயர்ந்தபொன்னினாற் செய்யப்பட்டு ஒளிநிறைந்தவரத்தினங்களும் பதிக்கப்பட்டுள்ள தாதலால், 'வானிடைவயங்குறவழங்கியெறிக்குஞ் சோதிகள் யாவையுந் தொக்கன வெனலாங் கவசம்' என்றார். 'நெறிக்கொள் கானகம் மறைதரக்கிடந்தது' என்றதனால், அக்கவசத்தினது மிக்க அகற்சி நீட்சிகள் விளங்கும்; அது, இராவணனுடம்பின் பருமையைத் தொனிப்பிக்கும். நெஞ்சு - மார்புக்குத் தானியாகுபெயர். **பி-மீ:**—[1]எனலாய். (கூஅரு)

கஎரு.—குதிரைகளும் சாரதியும் இராத்தவேள்ளாமும் கிடக்கக்கண்டு அவர்கள் சடாயுவிழந்து கிடக்குமிடத்துக்கு அருகில் வருதல்.

கான் கிடந்தது மறைதரக் கால்வயக் கலிமாத்
தான்கி டந்துழி சாரதி கிடந்துழி சார்ந்தா
ரூன்[1]கி டந்தொளி ருதிரமுங் கிடந்துள துலகின்
வான்கி டந்தது [2]போல்பவன் கிடந்துழி வந்தார்.

(இ - ள்.) கான் கிடந்தது மறைதர - காடுஉள்ளஇடம் முழுதும் மறையும்படி, கால் வயம் கலிமா தான் கிடந்த உழி - காற்றுப்போன்ற வேகத்தையுடைய குதிரைகள் விழுந்துகிடந்த இடத்தையும், சாரதி கிடந்த உழி-தேர்ப்பாகன் விழுந்துகிடந்த இடத்தையும், சார்ந்தார் - சேர்ந்தார்கள்; (அவ்விடங்களில்), ஊன் கிடந்து ஒளிர் உதிரமும் கிடந்துளது - தசையோடு பொருந்தி விளங்குகிற இரத்தமும் சிந்திக்கிடந்தது; (பின்பு), உலகின் வான் கிடந்தது போல்பவன் கிடந்த உழி வந்தார் - பூமியில் வானம் விழுந்துகிடந்தாற் போல் பவனைச் சடாயு விழுந்துகிடக்கிற இடத்துக்கு அருகில் வந்தார்கள்; (எ-று.)

வான்-பெருவடிவுக்கு உவமை. மறைதர, தா-துணைவினை. கால் வயம் - கால்களின் வலியவேகமுமாம். கலிமா - கடிவாளம்பூண்ட விலங்கு; எனவே,

குதிரையாயிற்று. கிடந்துழி - தொகுத்தல். 'உலகின் வான்கிடந்தது போல் பவன் கிடந்துழி வந்தார்' என்பதற்கு-பூமியில் கரியவானம் கிடந்தாற் போல் பவனுய் இராவணன் முன்புமூர்ச்சித்துவிழுந்துகிடந்த இடத்துக்கு வந்தார்க ளென்று உரைப்பாரும் உளர். பி-ம்:—[1]கிடந்ததோள். [2]போல்வது, போல்வதே.

கஎசு.—அங்த அவர்கள் குண்டலங்களையும் மற்றும்பல அணிகளையுங் காணுதல்.

கண்ட லங்குதங் கைத்தலம் விதிர்த்தனர் கவினூர்
விண்ட லந்துறந் திறுதியின் விரிகதிர் [1]வெய்யோன்
மண்ட லம்பல [2]மண்ணிடைக் [3]கிடந்தன மணியின்
குண்ட லம்பல குலமணிப் பூண்களின் [4]குவியல்.

(இ - ள்.) இறுதியின் - கற்பாந்தகாலத்திலே, விரி கதிர் வெய்யோன் மண்டலம் பல-வீசுகிற ஒளியையுடைய சூரியமண்டலங்கள் அதிகம், கவின் ஆர் விண் தலம் துறந்து-அழகமைந்த வானத்தினிடத்தை நீங்கி, மண்ணிடை கிடந்து அன-பூமியில் விழுந்துகிடந்தாற் போன்ற, மணியின் குண்டலம் பல-இரத்தினம்பதித்த அதிகம் குண்டலங்களையும், குலம் மணி பூண்களின் குவி யல் - சிறந்த இரத்தினங்கள் பதித்த மற்றும் பலவகை ஆபரணங்களின் தொ குதியையும், கண்டு - (இராமலக்குமணர் அங்குப் பார்த்து, அலங்கு தம் கை த்தலம் விதிர்த்தனர் - அசையுந்தன்மையனவான தங்கள்கைகள் (வியப்பி னல்) நடுங்கப்பெற்றார்கள்; (எ - று.)

குலமணி - உயர்ந்தசாதியிரத்தினம்; குலம் - தொகுதியுமாம். குவியல்-'அல்' விகுதிபெற்ற தொழிற்பெயர். உவமையணி. பி-ம்:—[1]பருதி. [2]மண் மிசை. [3]கிடந்தென. [4]குப்பை. (கூஅஎ)

கஎஎ.—இராமன் தம்பியைநோக்கி 'சடாயுவுடன் பலர் பொருதனர் போலும்' என்றல்.

தோள ணிக்குலம் பலவுள குண்டலத் தொகுதி
வாளி மைப்பன பலவுள மணிமுடி பலவா
னுள வேனத்தையுங் கடந்தனன் றமியனந் தாதை
யாளி [1]போல்பவர் பலருளர் பொருதன ரிளையோய்.

(இ - ள்.) இளையோய்-தம்பி! தோள் அணி குலம் பல உள-தோள்வளை களின் கூட்டம் அதிகம் இருக்கின்றன; வாள் இமைப்பன குண்டலம் தொ குதி பல உள - ஒளிவீசுவனவான குண்டலங்களின் கூட்டம் அதிகம் இருக் கின்றன; மணி முடி பல - இரத்தினகிரீடங்களும் பல இருக்கின்றன: ஆல்-ஆதலால்,—நாள் அனேத்தையும் கடந்தனன் தமியன் நம் தாதை - வெகு காலங்கடந்தவனும் துணையில்லாமல் தனித்தவனு மாகிய நமதுதந்தையான சடாயுவுடன், பொருதனர் - போர்செய்தவர்கள், யாளி போல்பவர் பலர் உளர்-சிங்கம்போன்ற வீரர் பலராதல் வேண்டும்; (எ - று.)

'நாளனைத்தையுங்கடந்தனன்' என்றது, மிகமுதிர்ந்த மூப்புடையவனென்றவாறு. பி - மீ:—[1]ஒப்பவர். (கூஅஅ)

கஎஅ.—அதற்கு இலக்குமணன் 'பொருதவன் இராவணன்போலும்' என்றல்.

திருவி ணுபக ணுரைசெயச் சுமித்திரை சிங்கந்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றுற்
பொருது தாதையை யித்தனை நெறிக்கொடு போனு
ளொருவ னேயவ னிராவண ணுமென வுரைத்தான்.

(இ - ள்.) திருவின் நாயகன்-இலக்குமிக்குக் கணவனுனை [திருமாலின் திருவவதாரமாகிய] இராமபிரான், உரைசெய - (இவ்வாறு) சொல்ல, சுமித்திரை சிங்கம் - சுமித்திராதேவியினது குமாரனுகிய சிங்கம்போன்ற வீரனுன இலக்குமணன், 'தருவின் நீளிய தோள் பல தலை பல என்றுல்-(பலதோளணிகளும் பல கிரீடங்களும் விழுந்துகிடத்தலால்) மரங்கள்போலநீண்டுள்ள தோள்கள் பலவும் தலைகள் பலவும் உள்ளன வென்று விளங்கினுல், பொருது தாதையை இத்தனை நெறி கொடு போனுன் ஒருவனே - போர்செய்து நமது தந்தையானசடாயுவை இவ்வளவுதூரமானவழியிற் கொண்டுசென்றவன் ஒருவனே: அவன் இராவணன் ஆம் - அவன் (இருபது தோள்களையும் பத்துத் தலைகளையு முடைய) இராவண னுதல்கூடும்,' என உரைத்தான் - என்று சொன்னுன்; (எ - று.)

கால்கள்பல வுள்ளன வென்பது விளங்காமல் தோள்களுந் தலைகளும் மாத்திரமே பலவுள்ளன என்று விளங்குதலால், இருபதுதோளையும் பத்துத்தலையையுமுடைய இராவணனொருவனே யென்பது ஊகித்துஉணரப்பட்டது. மகா புத்திமானுன இலக்குமணன், மூக்காலத்துவரலாறுகளையும் உய்த்துணரும் ஆலோசனையிற் சிறந்தலால், இங்ஙனம் உண்மையை அநுமானித்து அறிந்தன னென்க. இராமன் இதனை முன்னர் உணராதது, மனை வியைப்பறிகொடுத்ததனுலான மிக்க கலக்கத்தா லென்க. இங்கே 'திரு' என்றது - திருமகளினது திருவவதாரமாகிய சீதாபிராட்டியை உணர்த்தும். சிங்கம்போன்றவனைச் சிங்கமென்றது, உபசாரவழக்கு. (கூஅக)

கஎக.—இராமன் சடாயுவிழுந்துகிடத்தலைக் காணுதல்.

மடலு ணுட்டிய தா[1]ரிளை யோன்சொலை மதியா
மிடலு ணுட்டங்க ளுயுக நோக்கினன் [2]விரைவா
னுடலு ணுட்டிய குருதிபம் பரவையி னும்பர்க்
கடலு ணுட்டிய [3]வரையெனத் தாதையைக் கண்டான்.

(இ - ள்.) மடல் உள் நாட்டிய தார் இளையோன் - பூவிதழ்கள் தன்னிடத்திலே அமையவைக்கப்பட்டுள்ள மாலையையுடைய இலக்குமணனுடைய, சொலை - சொல்லை, மதியா - நன்குமதித்து, மிடல் உள் நாட்டங்கள் தீ உக நோக்கினன் விரைவான் - வலிமையையுடைய மனமும் கண்களும் கோபாக்

கினியைச் சிந்தும்படி எங்கும் நாடிப்பார்த்துக்கொண்டு விரைந்து செல்பவனை இராமபிரான்,—உடலுள் நாட்டிய குருதி அம் பரவையின் உம்பர் - உடம்பினின்று வெளிப்பட்ட இரத்தவெள்ளத்தின்மேல், கடலுள் நாட்டிய வரை என - கடலில் (மத்தாக) நாட்டிய மந்தரமலையைப் போல, தாதையை - (தனது) தந்தையான சடாயுவை, கண்டான் - பார்த்தான்; (எ - று.)

. இரத்தவெள்ளத்துக்குக் கடலும், சிறகுகள் அற்றுவிழுந்துகிடக்கும் பெரிய சடாயுவின் வடிவத்துக்கு மலையும் உவமை. குருதியம்பரவை யென்பதில், அம் சாரியை. பி-ம்:—[1]இளையோன்றனை. [2]விரைவால். [3]மலையன்ன.()

கஅ0.—இராமன் சடாயுவின்மேல் விழுந்து புலம்பல்.

துள்ளி யோங்குசெந் தாமரைக் [1]கண்கணீர் சொரியத்
தள்ளி யோங்கிய வமலன்தன் றனியுயிர்த் தந்தை
வள்ளி யோன்றிரு மேனியிற் [2]றழனிற வண்ணன்
வெள்ளி யோங்கலி லஞ்சன மலையென வீழ்ந்தான்.

(இ - ள்.) ஓங்கிய அமலன் - (எல்லாப் பொருள்களினும்) உயர்ந்தவனும் குற்றமற்றவனுமான ஸ்ரீராமன்,—துள்ளி ஓங்கு செம் தாமரை கண்கள் நீர் சொரிய தள்ளி - செழிப்புற்று வளர்ந்த செந்தாமரைமலர்போன்ற (தனது) கண்கள் நீர்சொரியும்படி (நீரைப்) பெருக்கிக்கொண்டு, தன் தனி உயிர் தந்தை வள்ளியோன் திரு மேனியில் - ஒப்பற்ற தனது உயிர்போன்ற தந்தையாகிய வண்மைக்குணமுடைய சடாயுவினது உடம்பின்மேல், தழல் நிறம் வண்ணன் வெள்ளி ஓங்கலில் அஞ்சனம் மலை என - நெருப்பினது நிறம் போலுஞ் செந்நிறத்தையுடைய சிவபிரானது வெள்ளிமலையின்மேல் மைம் மலையொன்று படிந்திருந்தாற் போல, வீழ்ந்தான்—; (எ - று.)

வெள்ளிமலை - வெண்ணிறமான பெரிய சடாயுவின்வடிவத்துக்கும், அஞ்சனமலை - கருநிறமுடைய கம்பீரமான இராமபிரானது திருமேனிக்கும் உவமை. சடாயு தன்னையும் கருதாது சமயத்தில் உதவிய உதாரகுணத்தைப் பாராட்டி, அவனுக்கு 'வள்ளியோன்' என்று ஒருபெயர் கூறினர்; துள்ளிச் சொரிய என்று இயைத்து - நீர்த்துளிகளைச் சிந்த வென்று உரைத்தலு மொன்று; அப்பொழுது, துளியென்பது துள்ளியென விரித்தல்விகாரம் பெற்ற தென்க. தழல்நிறவண்ணன் வீற்றிருக்கிற வெள்ளிமலையை உவமை கூறியதனால், சடாயுவினுடம்பு செந்தீர் அரும்பப்பெற்றுள்ளமை தெனிக்குமென்பர். பி-ம்:—[1]நயனங்கள். (கூகக)

கஅக.—இராமன் மூர்ச்சித்துத் தெளிந்து புலம்பலுறுதல்.

உயிர்த்தி லன்னெரு நாழிகை யுணர்வில னெல்லென்
றயிர்த்த தம்பியுக் கங்கையி னெடுத்தன னருவிப்
புயற்க லந்தநீர் தெளித்தலும் புண்டரீ கக்கண்
[1]பெயர்த்துப் பைப்பய வயர்வுதீர்ந் தினையன [2]பேசும்.

(இ - ள்.) ஒரு நாழிகை உயிர்த்திலன்-(அவ்வாறுவிழுந்த இராமபிரான்) ஒருநாழிகைப்பொழுது வரையிலும் சுவாசமில்லாதவனனன்: உணர்வு இலன் கொல் என்று அயிர்த்த தம்பி - உணர்ச்சியிலனுயினனேவென்று ஐயமுற்ற தம்பியாகிய இலக்குமணன், புக்கு - (அருகிற்) சென்று, அம் கையின் எடுத்தனன் - அழகிய (தன்) கைகளால் (இராமனை) எடுத்து அணைத்துக்கொண்டு, புயல் அருவி கலந்த நீர் தெளித்தலும் - மேகத்தினின்று பொழிந்து மலையருவியிற் கலந்ததான தண்ணீரை (இராமன்மேல்) தெளித்தவளவிலே, (இராமன்), புண்டரீகம் கண் பெயர்த்து - தாமரைமலர்போன்ற (தன்) கண்களைத் திறந்து, பைப்பய அயர்வு தீர்ந்து - மெல்லமெல்லச் சோர்வு நீங்கி, இனைய பேசும் - இத்தன்மையனவான வார்த்தைகளைக் கூறுவான்; (எ-று.)—அவற்றை, அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

குளிர்ந்த நீ ரென்றற்கு, 'அருவிப்புயற்கலந்த நீர்' என்றார். **பி-ம்:**—[1]பெயர்த்துடன்பய, வியர்த்துப்பைப்பய. [2]விளம்பும். (கூகூ)

வேறு.

கஅ.—இதுமுதல் ஐந்துகவிகளால் - சடாயுவைக்குறித்து இராமன் புலம்பலைத் தெரிவிக்கும்.

தந்தை தையரைத் தனயர் கொலை[1]நேர்ந்தார்
முந்தை மே யுள்ளார் [2]முடிந்தான் முனை யொருவ
[3]னெந்தை யோ வெற்காக நீயு [4]மிறந்தனை யோ
வந்தோ வினை யே னருங்கூற்ற [5]மானேனே.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தம் தாதையரை - தமது தகப்பன்மாரை, கொலை நேர்ந்தார் - கொலைசெய்தவராகிய, தனயர் - புத்திரர், முந்து ஆரே உள்ளார் - (எனக்கு) முன் எவர் இருக்கிறார்? [எவருமில்லை யென்றபடி]; ஒருவன் - எனது தகப்பனர் [தசரதர்], முனை முடிந்தான் - (என்னைப் பிரிந்ததற்காக) முன்னமே இறந்துள்ளார்; எந்தாயோ - எனது தந்தையே! [சடாயுவே!] எற்கு ஆக நீயும் இறந்தனையோ - எனக்கு உதவிசெய்தற்காக நீயும் இறந்துவிட்டாயோ! அந்தோ - ஐயோ! வினையேன் - பாவியாகிய யான், அரு கூற்றம் ஆனேனே - (தந்தையரிருவர்க்கும்) தடுத்தற்கரிய யமனுயிருந்தேனே!.

எந்தாயோ - புலம்பல்வினி யாதலின், ஓகாரம் வந்தது; "புலம்பின் ஓவும் ஆகும்." **பி - ம்:**—[1]சூழ்ந்தார். [2]முடிந்தானேமுன். [3]எந்தாயே. [4]இறந்தனையால். [5]ஆனேனே.

இதுமுதல் ஒன்பது கவிகள் - நாற்சீரும் காய்ச்சீரும் மாச்சீருமாக விரவிவந்த அளவடி நான்குகொண்ட **தரவு கொச்சகக்கலிப்பாக்கள்**; இவற்றைக் கலிவிருத்தமென்பாரும் உளர். சீர்கள் அளவுமிக்கும் குறைந்தும் வருதலின், கொச்சகமென்றலே சிறப்புடையது. (கூகூ)

கஅஙூ. பின்னுறுவ தோராதே பேதுறுவேன் பெண்பாலா
டன்னுறுவ நீர்ப்பான் றனியுறுவ[1] தோராதே
யுன்னுறவு நீ[2] தீர்த்தா யோருறவு மில்லாதே
னென்னுறுவான் வேண்டி யிடருறுவே[3]னென்றுமே.

(இ - ள்.) என் தாயே - எனது தாய்போன்றவனே! தனி உறுவது ஓராதே-(நீ) ஒருதுணையுமின்றித் தனியே நிற்பதை(ஒரு பொருளாக)க் கருதாமலே,—பின் உறுவது ஓராதே பேதுறுவேன்-பின்வரும்பயனே இன்னதென்று ஆராயாமலே(மாயமானினிடத்து)மயக்கங்கொண்டு சென்ற எனது, பெண்பாலாள்தன் - மனையாளான சீதையின், உறுவல் தீர்ப்பான் - துன்பத்தைத் தீர்த்தற்காக (முயன்று), உன் உறவு நீ தீர்த்தாய் - உனது உறவின்கடமையை நீ தீர்த்துக்கொண்டாய்; ஓர் உறவும் இல்லாதேன் - உறவுக்குரிய கடமையைச் சிறிதும் தீர்த்தலில்லாத யான், என் உறுவான் வேண்டி இடர் உறுவேன் - யாதுபயனே அடைய விரும்பி (இப்பொழுது) கலக்கமுறுகிறேன்? (எ - று.)

எனது உறவுக்குரிய கடமையைச் செலுத்த வகையில்லாத யான் மனக்கலக்கம்மாத்திரத்தை யடைதல் வீண் என்றவாறு. தனியுறுவது ஓராதே உறவு நீ தீர்த்தாயென்க. பி-ம்:—[1]ஓராதேன். [2]தீர்த்தாயோ. [3]எந்தாயே, எந்தாயோ. (கூகச)

கஅஙு. மாண்டேனே யன்றே மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரத மதனை னுயிர்பொறுப்பே
னீண்டேன் மரம்போல [1]நின்றெழிந்த புன்றொழிலேன்
வேண்டேனிம் மாமாயப் புன்பிறவி [2]வேண்டேனே.

(இ - ள்.) மாண்டேனே அன்றே - (இங்ஙனம் நேர்ந்த தீமைகளால் யான்)இறந்தே யிருப்பேனன்றே! (ஏன் இறக்கவில்லையென்றால்),—மறையோர் குறை முடிப்பான் விரதம் பூண்டேன் அதனை உயிர் பொறுப்பேன்-வேதம்வல்லவர்களான முனிவர்களுடைய குறைகளை நீக்குவதாக விரதத்தை மேற்கொண்டுள்ளே னதனால் (இறவாமல் உயிரை அரிதில்) தரித்துள்ளேன்; (அதுவேயன்றி), மரம்போல நீண்டேன் நின்று - மரம்போல நீண்டு வளர்ந்து நின்று, ஒழிந்த - யாதொருபயனையும்பெறாத, புல் தொழிலேன் - தீவினையுடையேனான நான், இ மா மாயம் புல் பிறவி-பெரிய வஞ்சனைகளுக்கு இடமான இழிவுள்ளஇப்பிறப்பை, வேண்டேன் வேண்டேன்-விரும்பேன் விரும்பேன்; (எ - று.)

'நின்றெழிந்த' என்பதை 'நின்று வற்றும்' என்றுற்போலக் கொள்க; நின்றுபயனில்லாத என்றபடி. பி-ம்:—[1]நின்றெழிந்தேன். [2]வேண்டேனுல்.

கஅஙூ. என்றூரம் பற்றுண்ண வென்றூயைச் சான்றூயைக்
கொன்றூனு நின்றூன் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்றூட் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போ னின்றேனே.

(இ - ள்.) என் தாரம் பற்றுண்ண-எனது மனைவி (ஒருவர்கையிற்) பிடி பட்டவளாக, என்றுயை - (அவளைமீட்டற்பொருட்டு) எதிர்த்தவனுன, சான் றேயை - பெரியோனுகியஉன்னை, கொன்றனும் - கொன்றஅப்பகைவனும், நின்றுன் - இறவாது உயிரோடுநின்றுன்; கொலையுண்டு நீ கிடந்தாய் - நீயோ கொல்லப்பட்டுக்கிடக்கின்றுய்; வல் தாள் சிலை ஏந்தி-வலியதண்டத் தையுடைய வில்லைத் தரித்துக்கொண்டும், வாளி கடல் சுமந்து - பாணங் களின் தொகுதியைச் சுமந்துகொண்டும், நின்றேனும் - (எதிர்செய்யமாட் டாது)நின்றவனுன நானும், நெடு மரம் போல் - பெரியமரம்போல, நின் றேன் நின்றேன்-(ஒங்கிவளர்ந்து பயனின்றி) நின்றேன் நின்றேன்; (எ-று.)

பற்றுண்ண - பற்றப்பட; உண் - செயப்பாட்டு வினைப்பொருளுணர்த் தும் விகுதி. என்றுயை - முன்னிலையொருமை இறந்தகாலவினையாலணை யும்பெயர், இரண்டாம்வேற்றுமைவிரி. என்றுயை - ஏற்றுயை; ஏல் - பகுதி. சான்றேயை - முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும்பெயர், இர ண்டாம்வேற்றுமைவிரி. கடல் என்றது, தொகுதியென்றமாத்திரமாய் நின் றது; கீழ் களங - ஆம் கவியில் 'மழை' என்பதுபோல. (கூகூசு)

கஉசு. சொல்லுடையா ரென்போ லினியுளரோ தொல்வினையே
னில்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப்
[1]பல்லுடையா யுன்னைப் படையுடையான் [2]கொன்றகல
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லலோ.

(இ - ள்.) இனி என்போல் சொல் உடையார் உளரோ - இனி என் னைப்போலப் புகழுள்ளவர் (உலகத்தில்) இருக்கின்றனரோ! இறகு உடை யாய் - இறகுகளின்வலிமையையுடையவனே! எண் இலா பல் உடையாய் - அளவற்ற பற்களையுடையவனே! தொல் வினையேன் இல் உடையாள் காண - பழமையான [முற்பிறப்பிற்செய்த] தீவினையையுடைய எனது மனையாள் காண, உன்னை—, படைஉடையான் - ஆயுதவலிமையையுடைய பகைவன், கொன்று அகல - கொன்றிட்டுச்சென்றுவிட, வில் உடையேன் நின்றேன்- வில்லையுடையேனுய் (அதற்குப் பரிகாரஞ்செய்யாது) வீணே சீவித்து நின் றவனுன நான், விறல் உடையேன் அல்லலோ - வீரமுடையேனன்றே.

'சொல்லுடையா ரென்போ லினியுளரோ' என்றது, **பிறதுறிப்பு** வகையால், என்போலப் பழிபூண்டவர் உலகத்தில் எவருமில்லை யென்ற எதிர்மறைப் பொருளைத் தரும்; 'விறலுடையேனல்லலோ' என்பதற்கும் இவ்வாறேகொள்க; அன்றி, சொல் - நிந்தனைச்சொல்லுமாம். முதலடியும், ஈற்றடியும் - தன்னைத்தானே வெறுத்து நிந்தித்துக்கொண்டவாறும். இல் உடையாள் - வீட்டுக்கு உரிமையுடையவள்; இல்லறவாழ்க்கைத்துணைவி. இறகுகளைக்கொண்டும், பற்களைக்கொண்டும் போர்செய்த உன்னை யென் பார், 'இறகுடையாய் எண்ணிலாப்பல்லுடையாய் உன்னை' என்றுர். **பி - மி:**—[1]பல்லுடையான். [2]கொன்றேக. (கூகூஎ)

கஅஎ.—அங்ஙனம் புலம்புகையில் சடாயு சிறிதுழார்சை தெளிதல்.

[1]அன்ன பலபலவும் பன்னி யழுமயங்குந்
[2]தன்னே ரிலாதானுந் தம்பியுமத் தன்மையனை
[3]வுன்னு வுணர்வுசிறி துண்முளைப்பப் [4]புள்ளரசு
[5]மின்னு வுயிர்ப்பா னிருவரையு நோக்கினான்.

(இ - ள்.) தன் நேர் இலாதானும் - தனக்குஒப்புமை தானேயன்றி வேறுஇல்லாதவனை இராமனும், அன்ன பல பலவும் பன்னி அழும் - அத் தன்மையானவார்த்தைகள்பற்பலவற்றையும் மிகுதியாகக்கூறிப்புலம்புவான்; மயங்கும்-மதிமயக்கங்கொள்வான்; தம்பியும் - இளையபெருமாளும், அ தன்மையன் ஆ - அங்ஙனம் அழுதுமயங்கும் நிலைமையையுடையவனாக,—புள் அரசும் - கழுகரசனை சடாயுவும், உள் சிறிது உணர்வு முளைப்ப - உள்ளத் திற் சிறிதுஉணர்ச்சிதோன்ற, உன்னு - நினைப்புற்று, இன்னு உயிர்ப்பான் - துன்பத்தோடு சுவாசம்விடுபவனும், இருவரையும் நோக்கினான் - அவ்விரு வரையும் கண்திறந்துபார்த்தான்; (எ - று.)

அன்ன - அன்ன என்ற சுட்டடியுடன்பாட்டுப் பலவின்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர், எதுகைநயம்நோக்கி நீட்டல் விகாரமுற்றது.
பி - மி:—[1]அன்ன. [2]தன்னெரிலாதானும். [3]முன்னே. [4]புள்ளரசன். [5]இன்னுயிர்ப்பானெய்தான். (கூகூஅ)

கஅஅ.—சடாயு இராமலக்குமணரைக் கண்டதலை மகிழ்தல்.

உற்ற [1]துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
[2]கொற்றவரைக் கண்டான் றனுள்ளங் குளிர்ப்புற்று
னிற்ற [3]விருசிறகு [4]மின்னுயிரு மேழுலகும்
பெற்றனனே [5]யொத்தான் பெயர்த்தென் பழியென்றான்.

(இ - ள்.) உற்றது உணராது - (பின்பு சீதைக்கு) நேர்ந்தநிலைமையை அறியாமல், உயிர் உலைய - உயிர்தடுங்க, வெய்து உயிர்ப்பான் - வெவ்விதா கப் பெருமூச்செறிபவனை சடாயு,--கொற்றவரை கண்டான் - வெற்றியை யுடைய அவ்விராமலக்குமணர்களைப் பார்த்தவனும், (அதனால்), தன் உள்ளம் குளிர்ப்பு உற்றான் - தனதுமனம் (தவிப்பொழிந்து) குளிர்ச்சியடையப்பெற் றவனாகி, இற்ற இரு சிறகும் இன் உயிரும் ஏழு உலகும் பெற்றனனே ஒத் தான்-துணிபட்ட(தனது)இரண்டுசிறகுகளையும் இனியஉயிரையும் ஏழுலகங் களையும் அடைந்தவன்போன்று (மிகமகிழ்ச்சியுற்று), பழி பெயர்த்தேன் என்றான்-பழியை நீக்கிவிட்டே னென்று கருதினான்; (எ-று.)

இராவணன் சீதையையெடுத்துச்சென்ற செய்தியை இப்பொழுது நான் இவர்கட்குத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தலால் என்பழியைத் தீர்த்துக்கொண்டே னென்றும், இனிஇவர்கள் தவறுதுபகைவென்று சீதை யை மீட்பராதலால் அவர்கள் பழியையொழித்தவனுமானே னென்றுங் கரு

கினன். பி - மீ:—[1]உணரா. [2]கொற்றவனே. [3]இருஞ். [4]எழலகுமின்னுயிரும். [5]ஒத்தேன். (கூகக)

கஅகூ.—சடாயு அவர்களை அருகில்அழைத்து உச்சிமோத்தல்.

பாக்கியத்தா லின்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே [1]வம்மினென்று
தாக்கி யரக்கன் மகுடத் தலை[2]துமித்த
மூக்கினு லுச்சி முறை[3]முறையே மோக்கின்றான்.

(இ - ள்.) 'புண்ணியரே - நல்வினையுடையவர்களே! என் பயன் இல் பழி யாக்கை-பயனற்றதும் பழிப்படைந்ததுமான எனது உடம்பை, இன்று போக்குகின்றேன் - இப்பொழுது ஒழிக்கின்றவனை நான், பாக்கியத்தால் கண்ணுற்றேன் - (எனது) நல்வினைப்பயனால் (இப்பொழுது உங்களைப்) பார்க்கப்பெற்றேன்; வம்மின் - வாருங்கள்,' என்று - என்று இன்சொற் கூறி (அவர்களை அருகில் அழைத்துச் சடாயு), அரக்கன் மகுடம் தலை தாக்கி துமித்த மூக்கினால் - இராவணனது கிரீடமணிந்ததலைகளைத் தாக்கித்துணித் திட்ட (தனது) மூக்கினால், உச்சி - (அவர்களுடைய) தலையுச்சியை, முறை முறையே மோக்கின்றான் - மாறிமாறிப் பலமுறைமோந்திடுகின்றவனானன்.

உச்சிமோத்தல் - புத்திரவாத்சலியமுடையார் மிக்கஅன்பினாற் செய் யுஞ்செயல். இராவணனென்று சீதையைத் தான் மீட்டிடாமைபற்றிய கழிவிரக்கத்தால், 'பயனில்பழியாக்கை' என்று தன்னுடம்பைத் தான் வெறுத்துக்கூறினான். 'இன்று' என்பதை 'கண்ணுற்றேன்' என்பதனோடும் கூட்டுக. 'புண்ணியரே' என்றது, எனது நல்வினைப்பயன்போல எதிரில் வந்து வாய்த்தவர்களேயென்று கொண்டாடி விளித்தவாறும். மகுடத்தலை துமித்த - கிரீடங்களைக் கீழேதள்ளித் தலைகளைக் கொத்திய என்க; இனி, இதனை, தலைமகுடந்துமித்தென மொழிமாற்றி, மகுடபங்கஞ்செய்த வென்று உரைத்தலும் ஒன்று. பாக்கியத்தாற்போக்குகின்றேனென்று இயைப்பின், உற்றுழிஉதவலுற்ற போரில் உயிர்போக்க நேர்ந்ததையே பாக்கியமென்ற தாகக் கொள்ளவேண்டும். பி - மீ:—[1]வாருமென்று. [2]தகர்த்த. [3]முறையான்.

கஙo.—சடாயு இரங்கிக்கூறும் வார்த்தை.

வஞ்சனையால் வந்த வரவென்ப தென்னுடைய
[1]நெஞ்சகமே முன்னே நினைவித்த தாலுனை
மஞ்சென் மயிலே யருந்ததியை நீங்கினிரோ
வெஞ்ச லிலாவாற்ற லிருவீரு மென்றுரைத்தான்.

(இ - ள்.) வந்த வரவு - (பொன்மானும் இராவணசந்யாசியும்) வந்த வருகை, வஞ்சனையால் - வஞ்சனைச்சூழ்ச்சியாலாகியது, என்பது - என்கிற விஷயத்தை, என்னுடைய நெஞ்சகமே - எனது மனந்தான், முன்னே நினை வித்தது - முன்னமே நினைக்கும்படிசெய்தது; ஆனாலும் - ஆயினும், எஞ் சல் இலா ஆற்றல் இருவீரும் - குறைவில்லாத வலிமையையுடைய நீங்கள்

இரண்டுபேரும், அம் சொல் மயிலை அருந்ததியை நிங்கினிரோ-அழகியசொற் கிளையுடைய மயில்போன்ற சாயலுள்ளவளும் கற்புநிலையில் அருந்ததிபோன் றவளுமான சீதையைத் தனித்திருக்கவிட்டுப் பிரிந்து போனீர்களோ? என்று உரைத்தான் - என்றுகூறினன், (சடாயு); (எ-று.)

பொன்மான் வந்தபொழுதும், கபடசந்நியாசி வந்தபொழுதும் அவ் வரவு மாயையாலாகிய தென்று கருதினேன்: ஆயினும், நீவிர் இருவீரும் பர்ணசாலையில் இருக்கின்றீ ரென்று எண்ணியிருந்தேன்; இப்படிப் பாது காப்பின்றிச் சீதையைத் தனியேவிட்டு இருவீரும் சென்றீ ரென்று அறிந்தி லேன் என்றன னென்பதாம்; இப்படி அறிந்திருந்தே னாயின் இன்னும்முன் சாக்கிரதைப்பட்டுச் சீதையைப் பாதுகாக்கமுயன்றிருப்பேன் என்பது தாற் பரியம். நினைவித்தது - நினைத்தது என்றபடி; பிறவினை தன்வினைப்பொரு ளில்வந்தது. மயில், அருந்ததி - உவமையாகுபெயர்கள். அருந்ததி - வசிஷ் டர் பத்தினி; கற்புநிலையிற் சிறந்தவள். பி - ம்:—[1]நெஞ்சமேமுன்னம். ()

வேறு.

ககூக.—அப்பொழுது இலக்குமணன், நடந்தசெய்தியைத் தான் அறிந்தவரையிற் கூறுதல்.

என்றவ னியம்பலு மிளைய கோமக
னொன்றுமாண் டுறுபொரு ளொழிவு மாவகை
வன்றிறன் மாயமான் வந்த தாதியா
னின்றது நிகழ்ந்தது [1]நிரப்பி னானரோ.

(இ - ள்.) என்று அவன் இயம்பலும் - என்று அச்சடாயு சொன்னவள விலே, இளைய கோமகன் - தசரதச்சக்கரவர்த்திருமாரர்களான அவ்விருவரில் இளையவனை லக்ஷ்மணன், ஆண்டு உறு பொருள் ஒன்றும் ஒழிவு உறு வகை - அவ்விடத்தில் நிகழ்ந்த செயலொன்றும் விட்டிடாதபடி, வல் திறல் மாயம் மான் வந்தது ஆதி ஆ னின்றது நிகழ்ந்தது-மிக்கவலிமையையுடைய பொய்ம் மான் வந்தது முதலாக நின்ற நிகழ்ச்சியை, நிரப்பினன் - கூறிமுடித்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை. பி - ம்:—[1]நிகழ்த்தினனரோ.

இதுமுதல் எட்டுக்கவிகள் - கீழ்ப்படலத்தின் சு-ஆம் கவி போன்ற கலி விருத்தங்கள். (கஂஂஉ)

ககூஉ.—சடாயு அவரிகட்குத் தேறுதல்வார்த்தை கூறத்தொடங்கல்.

[1]ஆற்றலோ னவ்வுரை யறைய வாணையா
லேற்றுணர்ந் [2]தெண்ணியவ் வெருவை வேந்தனு
மாற்றருந் [3]துயரவர் மனக்கொ ளாவகை
தேற்றுத னன்றென விளைய [4]செப்புவான்.

(இ - ள்.) ஆற்றலோன்-வல்லமையுள்ளவனை இலக்குமணன், ஆணை யால்-(இராமபிரானது) கட்டளையின்படி, அ உரை அறைய-அந்தவார்த்தை

களைச் சொல்ல,—அ எருவை வேந்தனும் - கழுகரசனான அச்சடாயுவும், ஏற்று-(அவ்வார்த்தையைச் செவியால்) ஏற்று [கேட்டு], உணர்ந்து-அறிந்து, எண்ணி - ஆலோசித்து,—'அவர் - அவ்விராமலக்குமணர், மாற்ற அரு துயர் மனம் கொளா வகை - நீக்குதற்கு அரிய துன்பத்தை மனத்திற் கொள்ளாத படி, தேற்றுதல் - தேறுதல்கூறல், நன்று - நல்லது,' என - என்றுகருதி, இனைய-இத்தன்மையவான வார்த்தைகளை, செப்புவான்-சொல்பவனானன்; (எ - று.)—அவற்றை மேற் காண்க.

ஆற்றல் - புத்திபலமுமாம். இனைய - பெயர். பி - ம்:—[1]ஆற்றலானவ் வுரைபகர். [2]எண்ணிய. [3]துயரிவர். [4]செப்பினன். (க००ங)

ககூங.—இதுமுதல் எட்டுக்கவிகள் ஒருதொடர்: சடாயு கூறும் தேறுதல்வார்த்தை.

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதி[1]வய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ.

(இ - ள்.) ஒருவரால் அதிசயம் அமைக்கல் ஆகுமோ-ஒருவரால் புதுமை யைச் செய்யமுடியுமோ?[முடியாது என்றபடி]; துதி அறு பிறவியின் இன்ப துன்பம்தான் - புகழற்ற [பழிக்கத்தக்க] பிறப்பினது சுகதுக்கங்கள், விதி வயம்-ஊழ்வினையின்வசத்தனவாயுள்ளன [ஊழ்வினைப்படி நடப்பன], என் பதை - என்றகொள்கையை, மேல் கொளா விடின் - ஏற்றுக்கொள்ளாவிட் டால், மதி வலியான் விதி வெல்ல வல்லமோ-அறிவின் வலிமையால் ஊழை வெல்லுதற்கு வல்லமையுடையோமோ? [அல்லோம் என்றபடி]; (எ - று.)

வயம் - வஶ மென்ற வடசொல்லின் விகாரம். மேற்கொளாவிடின் அதி சயம ஒருவரால் அமைக்கலாகுமோ வென்று இயைப்பினுமாம். முதலடிக்கு-(ஊழ்வினையைக் கடந்து அதனினும்) மேலாக ஒன்றனைச்செய்தல் ஒருவரா லாகுமோ?[ஆகாது] என்று பொருளுரைக்கவும்படும்; இப்பொருளில் அதிஶ யம்=மிகுதியென்னும்பொருளதான வடசொற்றிரிபு. பி - ம்:—[1]வலியென் பதை. (க००ச)

ககூச. தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
[1]யெரிவுசெய் [2]தொழியுமை திழுதை நீரதால்
பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
யிரிவுசெய் விதியினுக் கரிதுண் டாகுமோ.

(இ - ள்.) தெரிவு உறு - (இங்ஙனம் விதிவசத்தால் வருவதென்று) தெளியப்பட்டதான, துன்பம்—, வந்து ஊன்ற - (ஒருவனுக்கு) வந்துசேர, (அவன்), சிந்தையை எரிவு செய்து - மனத்தைத் தவிக்கவிட்டு, ஒழியுமது - அழிவது, இழுதை நீரது-பேதைமைக்குணமுடையது; உலகு எலாம்-உலகங்களெல்லாம், பிரிவு செய்து-வகுத்து, பெறுவிப்பான் - படைப்பவ

ஞன பிரமனது, தலை-தலையை, அரிவ செய்-அறுத்தல்செய்த, விதியினுர்க்கு-ஊழ்வினைக்கு, அரிது - முடித்தற்கரிய காரியம், உண்டாகுமோ - (ஒன்றேனும்) உள்ளதாமோ? [ஆகாது என்றபடி]; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

மனம் துன்பத்தாற் கலங்கிற்றையில் அதனை மேலும் தாபத்துக்கு உள்ளாக்குதல் தவறு மென்பது, மூன்னிரண்டடியின் கருத்து. 'விதியினுர்' என்பதில் ஆர் என்ற பலர்பால் விகுதி-கொடுமைச்சிறப்பை விளக்க வந்தது. பிரமனது ஐந்துதலைகளுள் ஒன்றைச் சிவபிரான் கையாற் கிள்ளியெடுத்த சரித்திரம், பிரசித்தம். அங்ஙனம் கிள்ளியெடுத்தற்குக் காரணம் - கால விசேஷத்தில் ஐந்துதலைகளைக் கொண்டு விளங்குகிற தன்னைப்போலவே பிரமன் ஐந்துதலைகளையுடையா னென்று அவன்மீதுகொண்ட அழுக்காறு என்று புராணம் கூறும். பி-மீ:—[1]இரிவ. [2]ஒழியுமீது. (கஂஂநி)

ககூரு. அலக்கணு மின்பமு மணுகு [1]நாளிவை
விலக்குவ மென்பது மெய்யிற் றருகுமோ
[2]விலக்கமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் [3]திரந்தது தவத்தின் பாலதோ.

(இ - ள்.) அலக்கணும் - துன்பமும், இன்பமும்—, அணுகும் நாள் - வரும்பொழுது, இவை - அவ்வின்பதுன்பங்களை, விலக்குவம் என்பது-(வர வொட்டாமல்) தடுத்துவிடுவோ மென்பது, மெய்யிற்று ஆகுமோ - உண்மையுடையதாமோ? [ஆகாது என்றபடி]; முப் புரங்களை - திரிபுரத்தை, விலக்க-ஒழித்தற்காக, எய்த - அம்புதொடுத்த, வில்லியார் - வில்லையுடையவரான சிவபிரான், தலை கலத்து இரந்தது - மண்டையோட்டிற் பிச்சையெடுத்தது, தவத்தின்பாலதோ - தவத்திற்குரியதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

கோபங்கொண்டு பிரமனதுதலையொன்றைக் கிள்ளியெடுத்த சிவபிரான் அதன்பயனுகப் பிரமகபாலத்தைக் கையிலேந்திக்கொண்டு பலகாலம் பலவிடத்தும் இரந்துதிரிந்தமை பிரசித்தம்; அதுவும் வினைப்பயனே யென்றூர். மூன்றுமடியில் இலக்கம் எனப்பிரித்து, முப்புரத்தை லட்சியமாகக்கொண்டு எய்த எனினுமாம். இலக்கம்=லக்ஷம்: குறி. பி - மீ:—[1]நாளைவை. [2]இலக்கு, விலக்கு. [3]இரந்ததும். 'தலைக்கலத்துயல்வருதலைவர்க்கன்றியே' என்று சில பிரதிகளில் நான்காமடி. (கஂஂசு)

ககூசு. பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனே விழுங்கி நீங்குமா
லங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால்.

(இ - ள்.) பொங்கு - சீறுகிற, வெம் - கொடிய, கோள் - கொலைத்தொழிலையுடைய, அரா-(இராகுகேது வென்னும்) பாம்பு, விசும்பு பூத்தன வெம் கதிர் செல்வனே-வானத்தில் (பூப்பூத்தாற்போலப்) பரந்துவிளங்குவனவான உஷ்ணகிரணங்களாகிய செல்வத்தையுடையவனை சூரியனை, விழுங்கி நீங்கும் - (ஒவ்வொருசமயத்தில்) முதலில் விழுங்கிப் பின்புவிட்டொழியும்: அம்

கண் மா ஞாலத்தை விளக்கும் - அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை (இருளொழிந்து) விளங்கச்செய்கிற, ஆய் கதிர் - சிறந்த கிரணங்களையுடைய, திங்களும் - சந்திரனும், ஒரு முறை வளரும் தேயும் - (மாதத்தோறும்) ஒரு முறை வளர்வதும் (மீண்டுத்) தேய்வதுமாயிருக்கும்; (எ - று.)

கிரகணகாலங்களில் இராகுகேதுக்களாகிய கரும்பாம்புசெம்பாம்புகள் சூரியசந்திரரைப் பிடித்து விடுதற்குக் காரணம்-பாற்கடல்கடைந்தகாலத்தில் அசுரர்கூட்டத்தைவிட்டுத் தேவகோஷ்டியினிடையிலேபுக்குக் கையேற்று அமிருதம்வாங்கியுண்ட இராகுகேதுவென்னும் அசுரன்மீது அருகிலிருந்த சூரியசந்திரர் திருமாலினிடத்திலே கோள்சொன்னமை; அக்கோட்சொல்லைக் கேட்டுத் திருமால் அவ்வசுரனை அமுதம்மொள்ளும் அஞ்சலியைக்கொண்டு அடிக்கவே, உடல்வேறு தலைவேறான அசுரன் அமுதமுண்டதனால் இறவாமல் அத்திருமாலைவேண்டி வரம்பெற்று அதனால் ஒவ்வொருசமயத்தில் சூரிய சந்திரரைப் பிடித்து நலிகின்றன னென்க. சந்திரன்தேய்தற்குக்காரணம் - தன்மனைவியரான இருபத்தேழுநக்ஷத்திரங்களுள் உரோகிணியிடத்தில்மாத்திரம் சந்திரன் மிக்கஅன்புவைத்தமைபற்றிச் சினந்த அவர்கள்தந்தையாரான தக்ஷமுனிவர் இட்ட சாபத்தால் தேர்ந்த க்ஷயரோகமும், வளர்தற்குக்காரணம் - அச்சந்திரனுற் சரணமடையப்பட்ட சிவபிரான் அச்சாபத்திற்கு மாறாக அவனுக்கு அளித்த வரமுமாம். இங்ஙனம் இரண்டும் வினைப்பயனுதல் காண்க. பூத்தன என்ற பலவின்பாற்பெயர், 'கதிர்' என்ற பால்பகா அஃறிணைப்பெயர்க்கு அடைமொழி. பூத்து அன எனப் பிரித்து, வானம் பூத்தாற்போன்ற கிரணங்களின் செழுமையுடையவனெனினும் அமையும். 'ஆல்' இரண்டும்-ஈற்றசை.

(கஂ०எ)

ககூ. அந்தரம் வருதலு மனைய தீர்தலுஞ்
சுந்தரத் தோளினீர் தொன்மை [1]நீரவான்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
யிந்திர னுற்றன வெண்ண வொண்ணுமோ.

(இ - ள்.) சுந்தரம் தோளினீர் - அழகிய தோள்களை யுடையவர்களே! அந்தரம் வருதலும்-(ஒருவர்க்குத்) தீங்குகள்வந்துசேர்தலும், அனைய தீர்தலும்-அத்தீங்குகள் நீங்குதலும், தொன்மை நீர - தொன்றுதொட்டுவருகிற ஊழ்வினையின் தன்மையனவாம்; மந்திரம் இமையவர் குருவின் வாய்மொழி-ஆலோசனையையுடைய [அல்லது வேதமந்திரங்களையுணர்ந்த] தேவகுருவான பிருகஸ்பதியின் வாயினின்று வந்த சாபவார்த்தையால், இந்திரன் உற்றன - தேவேந்திரன்அடைந்த துன்பங்கள், எண்ண ஒண்ணுமோ-கணக்கிடமுடியுமோ? [முடியா என்றபடி]; (எ-று.)—ஆல் - ஈற்றசை.

இதிற் குறித்த வரலாறு:—மூவுலகத்துக்குந் தலைவனான தேவேந்திரன் ஒருநாள் சுவர்க்கலோகத்தில் தனது சபாமண்டபத்திலே வித்தியாதரர், யக்ஷர், கந்தர்வர், கின்னரர் முதலிய பதினெட்டுவகைத் தேவகணங்களு

தனது பாதங்களை வணங்கவும், முனிவர்கள் புடைசூழ்ந்து வாழ்த்துக்கூறவும், தேவமாதர்கள் ஆடல்பாடலாதி விநோதங்களைச் செய்பவும் மிக்கசிறப்போடு அரசுவீற்றிருக்கையில், தேவகுருவான பிருகஸ்பதி அருகில்வந்து சேர, அவனது வரவைச் செல்வச்செருக்கினால் அறிபாதவனுப் இந்திரன் எழுந்துஉபசரிபாமல் சிங்காசனத்தில் வீற்றிருந்தான் அதுகண்ட குருமனவருத்தத்தோடு அவனேயும் அவனது அரசாட்சியையும் வெறுத்துக்கொண்டே அச்சபையை விட்டுநீங்கி மீண்டுசென்றார். பின்பு அதனையறிந்த தேவராசன் அக்குருவைதேடிச் சென்றபொழுது, அவன் காணவொண்ணாதபடி மாயையால் மறைத்திட்டான். இச்செய்தியையறிந்த அசுரர்கள் 'குருவைஇகழ்ந்ததனால் இந்திரன் இப்பொழுது வலியழிவானதலின், இதுவே அவனையழித்தற்கு ஏற்ற சமயம்' என்று உட்கொண்டுவந்து எதிர்த்துப்போர் செய்ய, இந்திரன் தோற்று முன் நிற்கமாட்டாதவனுப் ஓடிச்சென்று பிரமனைச் சரணமடைந்தவளவிலே, அவன் 'துவஷ்டாவின்மகனான விசுவரூபனை நீ உனக்குக் குருவாகக்கொண்டு வெற்றிபெறுக' என்றான். அவ்வாறே இந்திரன் சென்று விசுவரூபனை வணங்கித் தேவகுருவாக வரித்து, அவன் உபதேசித்த நாராயணகவசமென்ற மந்திரவிசேடத்தின் மகிமையால் அசுரர்களை அழித்து வெற்றியுற்றான். அந்த விசுவரூபன் அசுரமாதினிடம் பிறந்தவனுதலால் அசுரர்கள்பக்கல் அன்புகொண்டவனுப் யாகத்தில் வஞ்சனையாக அசுரர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க, அதுகண்ட இந்திரன் கோபங்கொண்டு அவனைத் தலைதுணித்து அதனால் சேர்ந்த பிரமகத்தி தோஷத்தைத் திருமாலின்அருளாற் போக்கிக்கொண்டான். தன் மகனை இந்திரன்கொன்றதைஉணர்ந்த துவஷ்டா 'இந்திரசத்துரு எழுக' என்று ஒருயாகத்தைச் செய்ய, அவ்வேள்வித்தீயினின்று மகாபல பராக்கிரமசாலியான விருத்திராசுரன் தோன்றித் தேவர்களைப் புடைக்க, இந்திரன் நிருமாலைச் சரணமடைந்து அப்பரமன் அருளியபடி ததீசிமுனிவனது முதுகெலும்பை வச்சிராயுதமாகக்கொண்டு அதனால் அவனைக் கொன்றான். அவனைக்கொன்றதனுலான பிரமகத்திதோஷம் ஒரு சண்டாளஸ்திரீயின் வடிவங்கொண்டு இந்திரனைத் தொடரவே, அவன் அஞ்சியோடி மாநசசரசில் ஒரு தாமரைத்தண்டினுள்ளே வெகுகாலம் மறைந்துநின்றான். பூலோகத்தில் நூறுஅசுவமேதயாகங்களைச் செய்துமுடித்தவனை நகுஷனென்னும்அரசன் அதன்பயனால் அப்பொழுது இந்திரபதவியைஅடைந்து அரசனில்லாததேவலோகத்தை அரசாண்டு, இந்திராணிமேற்கொண்ட காமங்காரணமாக அகத்தியமுனிவனது சாபத்துக்கு இலக்காய் மலைப்பாம்புவடிவங்கொண்டு தரையில் விழுந்திட்டான். இந்திரன் தன்னை அலட்சியஞ்செய்ததனுற் பலவாறு துன்பமுற்று மானபங்கமடைந்த நிலைமையை உணர்ந்த பிருகஸ்பதி பின்பு தேவர்கள் வேண்டுகோளாற் கோபந்தணிந்து அவன்பக்கல் இரக்கத்தோடு சென்று அவனை அழைத்துவந்து திருமாலைக்குறித்து அசுவமேதயாகஞ்செய்விக்க, அதனால், இந்திரன் பிரமகத்திதோஷந் தீரப்பெற்று முன்போலவே சிறப்புற்றுவாழ்வானுயினன் என்பதாம். பி - மீ:—[1]ஆதலால். (கoo அ)

ககூ. தடைக்கரும் பெருவலிச் சம்ப ரப்பெயர்க்
கடைத்தொழி லவுணனூற் குலிசக் கையினன்
படைத்தனன் பழியது பகழி [1]வில்வலாய்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினால்.

(இ - ள்.) பகழி வில் வலாய் - அம்புகளைச்செலுத்துகிற வில்லின் தொழிலில் வல்லவனே! தடைக்கு அரு பெரு வலி - தடுத்தற்கு அரிய மிக்க வலிமையையுடைய, சம்பரன் பெயர் - சம்பரனென்னும் பெயரையுடைய, கடை தொழில் அவுணனால் - இழிவான தொழில்களையுடைய அசுரனால், குலிசம் கையினன் - வச்சிராயுதத்தையேந்திய கையையுடையவனை இந்திரன், பழி படைத்தனன் - (தோற்று அரசாட்சியை இழத்தலாகிய) பழிப்பை அடைந்தான்; அது - அப்பழியை, உந்தை - உங்கள்தந்தையான தசரதன், தன் குவவு தோளினால் - திரட்சியையுடைய தனது தோள்களின் வலிமையால், துடைத்தனன் - நீக்கினன்; (எ - று.)

மாயையில்வல்ல சம்பரனென்னும் அசுரத்தலைவன் இந்திராதிதேவர்களை எதிர்த்துப் பொருது வென்று இந்திரனது அரசாட்சியைக் கவர்ந்து கொள்ள, அரசிழந்த இந்திரன் தசரதனிடம்வந்து குறைகூறலும், தசரதன் சென்று பொருது அழிக்கத்தொடங்குகையில், அவ்வசுரன் மாயையால் மறைந்து ஓடத்தொடங்க, தசரதன் அவனைத்தேடியஇடமெங்கும் அவனை விடாமற் றொடர்ந்துபோய்ப் போர்செய்து அவனை அழித்து அவனது அரசாட்சியைத் தான் கைக்கொண்டு அதனை அன்போடு இந்திரனுக்கு அளித்தனன் என்று வரலாறு உணர்க. சம்பரன் + பெயர் = சம்பரப்பெயர்: "சில விகாரமா முயர்கிணை." பி-ம்:—[1]வில்லின்வாய்த். (கஂஂக)

வேறு.

ககூக. பிள்ளைச்சொற் [1]கிளிய ளைப் பிரிவுற [2]ஞற்ற பெற்றி
தள்ளுற்ற வறமுந் தேவர் துயரமுந் தந்த தேயாற்
கள்ளப்போ ராக்க ரென்னுங் [3]களையினைக் களைந்து வாழ்தி
[4]புள்ளிற்கும் [5]புலனில் பேய்க்குந் தாயன்ன புலவு வேலோய்.

(இ - ள்.) புள்ளிற்கும் - பறவைகளுக்கும், புலன் இல் பேய்க்கும் - அறிவில்லாத பேய்களுக்கும், தாய் அன்ன - (நல்லஉணவை மிகுதியாகஉண்பித்தலில்) தாய்போன்ற, புலவு வேலோய் - புலால்நாற்றத்தையுடைய வேற்படையையுடையவனே! தள்ளுற்ற அறமும் - (அரக்கர்களால்) தள்ளப்பட்ட தருமமும், தேவர் துயரமும் - (அரக்கர்களால்) தேவர்கள் படுகிற துன்பமும், (ஆகிய இவ்விரண்டும்), பிள்ளை சொல் கிளி அனைய - இனிய மழலைச்சொற்களைச் சொல்லுதலில் கிளிப்பிள்ளை போன்றவளான சீதையை, பிரிவுறல் உற்ற - பிரிதலாகிய, பெற்றி - தன்மையை, தந்தது - தந்தன; ஆல் - ஆதலால், கள்ளம் போர் அரக்கர் என்னும் களையினை களைந்து வாழ்தி - வஞ்சனையான போரையுடைய இராக்கதர்க ளென்கிற களைப்பூண்டுகளைக் களைந்தொழித்து வாழ்வாயாக; (எ - று.)

'அரக்கர்களால் தள்ளப்பட்ட தருமம், தான் உய்யவேண்டி, சீதையை இராவணன்கவர்ந்துசெல்லுதலாகிய இந்நிகழ்ச்சியை விளைத்தது;அவ்வாறே, அவ்வரக்கரால் தேவர்கள்படுகிற துன்பம், தான் நீங்கவேண்டிச் சீதையை இராவணன்கவர்ந்துசெல்லுதலாகியஇந்நிகழ்ச்சியை விளைத்தது'என்றது-இந்நிகழ்ச்சி இனி நீ கொடிய அரக்கரைக்கொன்று அவர்களாலகற்றப்பட்ட தருமத்தை நிலைநிறுத்தற்கும், தேவர்களின் துன்பத்தைத்தீர்த்து அவர்களைப் பாதுகாத்தற்கும் காரணமாம் என்றபடி. பயிர்செழித்துவளர்தற்கு இடையூறுள்ள புல்பூண்டுகளாகிய களையைக் களைதல் இன்றியமையாதவாறு போல, சிஷ்டர்கள் செழித்துவளர்தற்குப் பெருந்தடையாகவுள்ள துஷ்டர்களைத் தொலைத்தல் இன்றியமையாதலின், அதனைச்செய்து வாழ்வானென்றார். புலவு வேல் - (பகைவர்) குசைதோய்ந்த வேலெனினுமாம். அடிக்கடி போர்செய்து பகைவர்களைக்கொன்று அவர்களுடலின்குசையைப் பருந்து கழுகு காக்கை முதலிய பறவைகளும் பேய்களும் தின்னவிடுதல்பற்றி, 'புள்ளிற்கும்புலனில் பேய்க்குந் தாயன்ன புலவுவேலோய்' என்று இராமனை விளித்தார். ஊனைத்தின்று ஊனைப்பெருக்குதல் பேதைமை யென்பதுபட, 'புலனில் பேய்' எனப்பட்டது. அறமும் துயரமும் தந்தது-பன்மை யொருமை மயக்கம்; தனித்தனி தந்த தென்க. பி - ம்.—[1]கிளியிருளை. [2]பெற்ற. [3]கலைகளை. [4]புள்ளுக்கும். [5]புலம்பு.

இதுமுதல் முப்பத்தைந்துகவிகள் - கீழ்ப்படலத்தின் கச-ஆங்கவி போன்ற **அரசீராசிரியவிருத்தங்கள்.** (எ0க0)

200. வடிக்கண்ணார் கூந்த லாளை யிராவணன் மண்ணி னோடு
மெடுத்தன னேகு வானெ தெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னவ தெல்லாந் [1]தவத்தரன் றந்த வாளாற்
படுத்தன னிங்கு வீழ்ந்தே னிதுவின்று பட்ட தென்றான்.

(இ - ள்.) வடி கண் வார் கூந்தலாளை - மாவடுவின் உட்பிளவுபோன்ற கண்களையும் நீண்டகூந்தலையுமுடையவளான சீதையை, மண்ணினோடும் எடுத்தனன் எகுவான் - தரையோடு எடுத்துச்செல்பவனை, இராவணனே—, எதிர்த்து-(நான்)எதிர்த்து, எனது ஆற்றல்கொண்டு - எனது வல்லமையால், ஆவது எல்லாம் - இயன்றவரையிலும், தடுத்தனென்-தடுத்தேன்; (முடிவில் அவன்), தவத்து அரன் தந்த வாளால் படுத்தனன் - தவத்தின்பயனாகச் சிவபிரானால் அளிக்கப்பெற்ற வாட்படையால்(என்னை)அழித்தான்; இங்கு வீழ்ந்தேன் - இவ்விடத்தில் (இவ்வாறு) விழுந்தேன்; இது இன்று பட்டது - இச்செய்தி இன்றுநிகழ்ந்தது, என்றான் - என்று (சடாயு) கூறினன்; (எ - று.)

"வடுப்பிள வனைய கண்ணாள்" என்றார் சிந்தாமணியாரும். தவத்துத் தந்த எனஇயையும்; தவத்து அரன் எனஎடுத்து, தவத்தையுடைய சிவபிரானெனினுமாம். ஆவது எல்லாம்-ஒருமைப்பன்மைமயக்கம். எல்லாமென்பது, இங்கே, முழுது மென்னும் பொருளது. எகுவான் இராவணனென்று உருபுபிரித்துக்கூட்டப்பட்டது. பி-ம்:—[1]தவத்தவன்சமைத்த. (எ0க)

ஒ0க.—அதுகேட்டவுடனே இராமன் கோண்ட கோபம்.

கூறின மாற்றஞ் சென்று செவி[1]த்துளை குறுகா முன்ன
மூறின வுதிரஞ் செங்க ணுயிர்த்தன வுயிர்ப்புச் செந்தீ
யேறின புருவ மென்மே லிரிந்தன சுடர்க ளெங்குங்
கீறின தண்ட கோளங் கிழிந்தன கிரிக ளெல்லாம்.

(இ - ள்.) கூறின மாற்றம் - (இங்ஙனம் சடாயு) சொன்ன வார்த்தை, சென்று—, செவி துளை குறுகா முன்னம்-(இராமனது) காதுகளின் துவாரத்திற் சேருமுன்னம் [செவிப்பட்டவுடனே யென்றபடி], செம் கண் உதிரம் ஊறின - (அப்பெருமானது) சிவந்த கண்கள் இரத்தஞ்சொரிந்தன; உயிர்ப்பு செம் தீ உயிர்த்தன - பெருமூச்சுக்கள் சிவந்தநெருப்பை எறிந்தன; புருவம் மெல்மேல் ஏறின-புருவங்கள் மிகுதியாக நெறிப்புற்றன; சுடர்கள் இரிந்தன-(அக்கோபாவேசத்தாற் சூரியன்முதலிய) ஒளிகள் அஞ்சியோடின; அண்ட கோளம் எங்கும் கீறினது - உலகவுருண்டை பலவிடங்களிற் பிளப்புற்றது; கிரிகள் எல்லாம் கிழிந்தன-மலைகள்யாவும் உடைபட்டன; (எ - று.) பி-ம்:— [1]தலம். [2]இழந்தன. (கஅக2)

ஒ0ச.—அப்பொழுது பிரபஞ்சத்திலுண்டான தருமாற்றம்.

மண்ணகந் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன் புனலுங் காலுங் கதிரொடுந் திரியக் காவல்
விண்ணகந் திரிய மேலை விரிஞ்சனுந் திரிய வீர [மேற.
னெண்ணரும் பொருள்க ளெல்லா மென்பது தெரிந்த தன்

(இ - ள்.) மண்அகம் திரிய - பூமி (தனதுநிலையொழிந்து) சுழல, நின்ற மால் வரை திரிய-அசலமாகியபெரிய மலைகள் (தமதுநிலையொழிந்து) சுழல, மற்றை - மற்றும், கண் அகல் புனலும்-இடமகன்ற நீரும் [கடலும்], காலும்-காற்றும், கதிரொடும்-சூரியசந்திரர்களுடனே, திரிய - (தமதுநிலையொழிந்து) சுழல, காவல் விண்அகம் திரிய-(தேவர்களாற்) காக்கப்படுவதான மேலுலகம் (தனதுநிலையொழிந்து) சுழல, மேலை விரிஞ்சனும் திரிய - (எல்லாவுலகங்களுக்கும்) மேலிடத்துள்ள பிரமனும் சுழல, (இங்ஙனம் இராமன் நிலைதிரிந்த வளவிலே யாவும் நிலைதிரிதலால்), வீரன் எண் அரு பொருள்கள் எல்லாம் என்பது தெரிந்தது அன்றே - வீரனான அவ்விராமன்தானே அளவிறந்த பிரபஞ்சப்பொருள்களெல்லாவற்றின் வடிவமாயுமுள்ளான் என்கிற உண்மை நன்கு புலப்பட்டது; (எ - று.)—அன்றே - அன்றோ; தேற்றம். அன்று - அப்பொழுது எனினுமாம்.

அப்பொழுது மண்ணகந்திரிதல்முதலியவற்றின் அநுமானத்தால், 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்றபடி உலகமுழுவதும் எம்பெருமானது சொரூபமாகவேயிருக்கு மியல்பு அறியப்பட்ட தென்க. மேலை - மேன்மைக் குணமுமாம். (கஅகஉ)

௨0௬.—இராமன் கோபாவேசத்தோடு சிலகூறத் தொடங்கல்.

குறித்தவெங் கோபம் யார்மேற் [1]கொள்ளுறுங் கொல்லென் றஞ்சி
வெறித்துநின் றுலக மெலலாம் விம்முறு கின்ற வேலைப்
பொறிப்பிதிர் படலைச் செந்தீப் [2]புகையொடு பொடிப்பப் பொம்மென்
[3]றெறிப்பதோர் முறுவ றோன்ற விராமனு மியம்ப லுற்றான்.

(இ - ள்.)குறித்த வெம் கோபம்-(இவ்வாறு)மனத்திற்கொண்ட கொடிய கோபத்தை, யார்மேல் கொள்ளுறும்கொல் - யார்மேற்செலுத்துவானே? என்று—, அஞ்சி - அச்சங்கொண்டு, உலகம் எல்லாம் - சகலலோகங்களும், வெறித்து நின்று - திகைத்துநின்று, விம்முறுகின்ற வேலை-கலங்குகிற அச் சமயத்தில்,—பொறி பிதிர் படலை செந் தீ - பொறிக்கணங்களின் தொகுதி யையுடைய சிவந்தநெருப்பு, புகையொடு - புகையுடனே, பொடிப்ப - தோன்றியெழவும், எறிப்பது ஓர் முறுவல் பொம்மென்று தோன்ற-ஒளிவீசு வதாகிய ஒருசிரிப்புப் பொம்மென்னுமொலிபட உண்டாகவும், இராமனும்—, இயம்பல் உற்றான்-(சில) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)—அவற்றை, அடுத்த மூன்றுகவிகளிற் காண்க.

படலை=படலம்: வடகொல். பொடிப்ப என்பதற்கு - எதிர்ப்பட்ட பொருள்களை நீறுக்க வென்றுமாம். இங்குக்கூறிய கதை, வீரத்துவழுத்த வெகுளிகதை. பிதிர் - பிதிருந்தன்மையது; பிதிர்தல் - சிதறல். புகுவது புகை யெனக் காரணக்குறி. பி - மி:—[1]கோளுறும். [2]புகையொடும். [3]இரைப்பதோர். (௬0௬ச)

௨0௭.—இதுமுதல் மூன்று கவிகள் - இராமர் கூறும் கோபவார்த்தை.

பெண்டனி பொருத்தி தன்னைப் பேதைவா ளரக்கன் பற்றிக்
கொண்டனை னேக [1]நீயிக் கோளுறக் குலுங்கல் செல்லா
வெண்டிசை [2]யிறுதி யான வுலகங்க ளிவற்றை யின்னே
கண்டவா னவர்க ளோடுங் களையுமா றின்று காண்டி.

காண்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பெண் தனி ஒருத்தி தன்னை - துணைபற்றவளாய்த் தனியே நின்ற ஒருபெண்ணை [சீதையை], பேதை வாள் அரக்கன் - அறிவற்றவனான கொடிய இராக்கதன் [இராவணன்], பற்றி கொண்டனன் எக - கவர்ந்து கொண்டு செல்லுதலாலும், நீ இ கோள் உற - நீ இப்படிப்பட்ட வெதனையை அடைதலாலும், குலுங்கல் செல்லா-(நடுநடுங்கவேண்டியிருக்க அங்ஙனம்)நடு ங்காதுநின்ற, எண் திசை இறுதி ஆன உலகங்கள் இவற்றை-எட்டுத்திக்குக் கள்வரையிலுமுள்ள இவ்வுலகங்களையெல்லாம், கண்ட வானவர்களோடும் - (இச்செயல்களைக்) கண்டும்எதிர்செய்யாதுநின்ற தேவர்களுடனே, இன்னே - இப்பொழுதே, களையும் ஆறு-(நான்) முற்றும் அழித்தொழிக்கும் வகையை, இன்று - இப்பொழுது, காண்டி - (நீ) பார்ப்பாய்; (எ - று.)

'நீ,' 'காண்டி' என்றது, சடாயுவை நோக்கி. வாள் அரக்கன் - வாட் படையையுடைய அரக்கனுமாம். பி-ம்:—[1]நீதிக். [2]உறுதி. (கஅகடு)

உஅடு. தாரகை யுதிரு மாறுந் தனிக்கதிர் பிதிரு மாறும்
பேரகல் வான [1]மெங்கும் பிறங்கெரி பிறக்கு மாறு
நீரொடு நிலனுங் [2]காலு நின்றவுங் கிடந்த யாவும்
[3]வேரொடு மழியு மாறும் விண்ணவர் விளியு மாறும்.

(இ - ள்.) (என்னுல்), தாரகை உதிரும் ஆறும் - நக்ஷத்திரங்கள் உதிரும் வகையையும், தனி கதிர் பிதிரும் ஆறும் - ஒப்பற்றகிரணங்களையுடைய சூரியன் பொடிப்பொடியாய்ச் சிதறும்வகையையும், பேர் அகல் வானம் எங்கும் - பெரிய அகன்ற வானம்முழுவதிலும், பிறங்கு எரி பிறக்கும் ஆறும்-விளங்குகிற தீப்பற்றியெழும்வகையையும், நீரொடு நிலனும் காலும் - நீரும் நிலமும் காற்றும், நின்றவும் - ஒழிந்த நெருப்பும் வானமும்,(ஆகிய பஞ்சபூதங்களும்), கிடந்த யாவும் - (உலகத்திற்) பொருந்திய சராசரவர்க்கமனைத்தும், வேரொடும் அழியும் ஆறும் - அடியோடு அழியும்வகையையும், விண்ணவர் விளியும் ஆறும் - தேவர்கள் அழியும்வகையையும்; (எ - று.)

பேர் அகல் - ஒருபொருட்பன்மொழி. நின்ற, கிடந்த - பெயர்கள். பி - ம்:—[1]எல்லாம். [2]மற்று. [3]வேரொடுமடியுமாறும். (கஅகசு)

உஅசு. இக்கண மொன்றி னின்ற வேழினே டேழு [1]சான்ற
மிக்கன போன்று தோன்று முலகங்கள் [2]விளியு மாறுந்
திக்குடை யண்ட [3]கோளப் புறத்தவுந் திங்கு நீரின்
மொக்குளி னுடையு மாறுங் காணெனை [4]முனியும் வேலை.

(இ - ள்.) நின்ற-நிலைபெற்றுநின்றனவான, மிக்கன போன்று தோன்றும் - மிகவும்பெரியவைபோலக் காணப்படுகிற, எழினேடு ஏழு சான்ற - ஏழோடுகூடிய ஏழு [பதினெண்கு] என்னுந் தொகையமைந்த, உலகங்கள்-உலகங்களெல்லாம், இக்கணம் ஒன்றில் - இத்தஒருகணத்திலே, விளியும் ஆறும் - (என்னுல்) அழியும் வகையையும், திக்குடை - எட்டுத்திக்குக்களையில்லையாகவுடைய, அண்ட கோளம் - இந்த அண்டகோளத்தின், புறத்தவும் - வெளியிலுள்ளவையும் [பகிரண்டங்களிலுள்ள பொருள்களும் என்றபடி], (இக்கணம் ஒன்றில்)-இத்தஒருகணத்திலே, திங்கு - (எனது)கோபத்தால் கரிந்து, நீரின் மொக்குளின்-நீரிலெழுகிற குமிழிபோல, உடையும் ஆறும்-எளிதில்அழியும் வகையையும், காண்-(நீ) பார்த்திடுவாய்; எனை-என்று (சடாயுவை நோக்கிச்) சொல்லி, (இராமன்), முனியும் வேலை - கோபங்கொண்ட சமயத்திலே,—(எ - று.)—"சுடர்க்கடவுள் மறையலுற்றுழி" என வருங் கவியோடு தொடர்ந்து முடியும்.

'இக்கணமொன்றில்' என்பது, 'விளியும்' என்பதனேடன்றி 'உடையும்' என்பதனேடும் எடுத்துக்கூட்டப்பட்டது. இக்கணமொன்றிற் காண் எனினுமிபப்பினும் அமையும். நின்ற, சான்ற, தோன்றும் என்றமூன்றும்-உலகம்

களுக்கு அடைமொழியாம். 'மிக்கனபோன்றுதோன்று முலகங்கள்' என்றது, அவை எனது ஆற்றலுக்குமுன் ஒருபொருளல்ல வென்ற கருத்தைத்தானிப் பிக்கும். பி-மீ:—[1]மேல்கீழ். [2]வீயும். [3]கோளந்திறக்கவுந்தெரித்த. [4]முனித லோடும். (கஙசஎ)

உஙஎ.—அப்பொழுது சூரியன் மறைய யாவும் அஞ்சுதல்.

வெஞ்சுடர்க் கடவுண் மீண்டு மேருவின் மறைய வுற்ற
னெஞ்சலி நிசையி னின்ற யானையு மிரியல் போய
[1]துஞ்சின வுலக மெல்லா [2]மென்பதென் றுணிந்த [3]நெஞ்சி
னஞ்சின னிளைய கோவு மயலுளோர்க் கவதி யுண்டோ.

(இ - ள்.) வெம் சுடர் கடவுள்-வெவ்வியகிரணங்களையுடைய சூரியன், மீண்டு-(அக்கோபத்திற்கு இலக்காகாது) தப்பி உய்ப்பவனுகி, மேருவில் மறை யல் உற்றுன் - மகாமேருமலையிலே மறையத்தொடங்குபவனுனன்; எஞ்சல் இல் - குறைவற்ற, நிசையில்-(எட்டுத்)திக்குகளிலும், நின்ற—, யானையும்-(அஷ்டதிக்) கஜங்களும். இரியல் போய - அஞ்சியோடின; உலகம் எல்லாம் துஞ்சின என்பது என் - உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் மிகவருத்த முற்றன வென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுவ தென்ன! துணிந்த நெஞ் சின் - மிகவுக்கரியகொண்ட மனத்தையுடைய, இளைய கோவும்-இலக்கு மணனும், அஞ்சினன் - அஞ்சினன்றன். (என்றுல்), அயல் உளோர்க்கு அவதி உண்டோ-மற்றுமுள்ளோர்கொண்ட அச்சத்திற்கு ஓரெல்லையுண்டோ? [இல்லையென்றபடி]; (எ - று.)

அப்பொழுது இராமன்கொண்ட கோபாவேசத்தைக் கண்டு எல்லாப் பிராணிகளும் மிகஅஞ்சி இலக்குவனுக்கு வென்ற கருத்தை, மகாதைரியசாலி யான இலக்குமணனும் அஞ்சினன் என்பதுகொண்டு கண்டாபூபிகாகியாயத் தாற் சாதித்தார்; தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. பி - மீ:—[1]துஞ் சினது. [2]என்பது. [3]நெஞ்சன். (கஙசஅ)

உஙஅ.—இதுமுதல் ஐந்துகவிகள்-சடாயு இராமனுக்குக் கூறும் தணிவுரை.

இவ்வழி நிகழும் வேலை [1]யெருவைகட் கிறைவன் யாதுஞ்
செவ்வியோய் முனிபல் வாழி தேவரு முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்னல் வேறுமென் றேழுற் றுய்வா
ரெவ்வலி கொண்டு வெல்வா ரிராவணன் செயலை [2]யென்றுன்.

(இ - ள்.) இவ்வழி நிகழும் வேலை-இவ்வாறுநடக்கும்பொழுது, எருவை கட்கு இறைவன் - கழுகுகளுக்குஅரசனை சடாயு, (இராமனைநோக்கி), 'செவ்வியோய் - சன்மைக்குணமுடையவனே! வாழி - வாழ்வாயாக; யாதும் முனியல் - சிறிதும்கோபங்கொள்ளாதே; வெம் வலி வீர - (பகைவர்க்குக்) கொடிய வலிமையையுடைய வீரனே! தேவரும் முனிவர்தாமும் தேவர்களும் முனிவர்களும், நின்னல் வேறும் என்று ஏழுற்று உய்வார்-உன்னைக்கொண்டு (தம்பகையாகிய அரக்கர்களை) வெல்வோ மென்று கருதி மகிழ்வுற்று உயிர்

வாழ்கின்றார்;(அப்படிப்பட்டவர்கள்), எ வலி கொண்டு இராவணன் செயலே வெல்வார் - வேறு எவ்வகை வலிமையைக்கொண்டு இராவணனதுகொடுஞ் செயலே வென்றிடுவார்?' என்றான் - என்றுகூறினான்; (எ - று.)

இராவணன்முதலிய இராக்கதர்களே வெல்லும் வல்லமை யில்லாராய் மகாவீரனை உன்னைக்கொண்டு வெல்லக்கருதி அதனை எதிர்பார்த்து மகிழ்வு கொண்டு உயிர்வாழ்ந்திருக்கிற தேவர்கள் முதலியோர்மேல், இராவணனுக்கு எதிர்செய்யவில்லையென்று நீ கோபித்தால் அவர்கள் செய்யுமாறு என்னே! அக்கோபங்கொள்ளாதொழி யென்றுகூறி இராமன்கோபத்தைச் சடாயு ஆற்றுபவனைனான். 'செவ்வியோய்' என்றது, இராம என்ற திருநாமத்தின் பொருளைக்கொண்ட விளியாம். ஏமுற்று - ஏமமுற்று; விகாரம். **பி-ம்:**— [1]எருவையர்க்கரசன். [2]என்ன. (கஅகக)

உஅக. நாட்செய்த கமலத் தண்ணை [1]னல்கின நவையி லாற்ற
ரூட்செய்த வீர மென்னிற் கண்டனை சொல்லு முண்டோ
தாட்செய்த [2]கமலத் தானே முதலினர் தலைபத் துள்ளாற்
காட்செய்கின் றார்க ளன்றி யறஞ்செய்கின் றார்கள் [3]யாரே.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நாள் செய்த கமலத்து - அன்றுமலர்ந்த செந்தாமரைமலரில் தோன்றிய, அண்ணல் - தலைவனான பிரமதேவன், நல்கிய - (வரமாகக்) கொடுத்த, நவை இல் ஆற்றல் - அழிவில்லாத வலிமையையுடைய, தோள் - புயங்களினால், செய்த - (இராவணன்) செய்த, வீரம் - வீரச்செயலை, என்னில் கண்டனை - (சிறகறுபட்டுக்கிடக்கிற) என்னிடத்திலே பிரதியக்ஷமாகப் பார்த்தாய்; சொல்லும் உண்டோ-(அதைப்பற்றி) வேறுசொல்லவேண்டுவதும் உளதோ? [இல்லையென்றபடி]: தாள் செய்த கமலத்தானே முதலினர் - நாளத்தோடு கூடிய தாமரைமலரில் தோன்றிய பிரமன் முதலிய தேவர்கள் எல்லோரும், தலை பத்து உள்ளாற்கு ஆள் செய்கின்றார்கள் அன்றி - பத்துத் தலைகளையுடைய இராவணனுக்கு அடிமைத்தொழில் செய்கின்றனரே யல்லாமல், அறம் செய்கின்றார்கள் யாரே - (அவர்களில் தத்தமக்குரிய) தருமங்களை விடாது செய்பவர் எவர்தாம்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

ஆதலின், அவர்கள்மீது நீ சினங்கொள்ளக் காரணமில்லை யென்பதாம். முதலடியை 'என்னில்' என்பதற்கு அடைமொழியாக்கி, பிரமன் தந்தருளிய அழிவற்ற வலிமையையுடைய என்னிடத்திலே (அவ்விராவணன்) தோள் வலிமையாற்செய்த வீரச்செயலைக் கட்புலனுகக் கண்டா யென்று உரைப்பாரும் உளர். **பி - ம்:**—[1]நல்கினன். [2]நளினத்தோனே முதலினர் தலைபத்தோனுக்கு. (கஅஉ)

உகஉ. தெண்டிரை யுலகந் [1]தன்னிற் செறுநர்மாட் டேவல் செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே பிதாவன்றே தேவர் பெற்றி
பண்டுல களந்தோ [2]னல்கப் பாற்கட லமுத [3]மந்தா
ரமுண்டிலர் [4]ராயி னிங்கா னன்னவர்க் குய்த லுண்டோ.

(இ - ள்.) தெள் திரை உலகந்தன்னில் - தெளிவான அலைகளையுடைய (கடல்சூழ்ந்த) உலகத்திலே, பெண்டிரின்-மகளிர் போல [மகளிர் ஆடவர்க்கு அடிமைபூண்டுவாழ்தல்போல],செறுநர்மாட்டு ஏவல் செய்து வாழ்வர்அன்றே-{இந்திரன்முதலியோர் அனைவரும் தம்)பகைவர்களான இராவணன்முதலிய அரக்கர்களிடத்திலே பணிவிடைசெய்து வாழ்கின்றார்களல்லவா; தேவர் பெற்றி இது அன்றே-தேவர்களின் தன்மை இதுவன்றே?(அத்தேவர்கள்), பண்டு உலகு அளந்தோன் பால் கடல் அமுதம் நல்க அ நாள் உண்டிலர் ஆயின்-முன்பு உலகங்களை அளந்துகொண்டவனுக்கு திருமால் திருப்பாற்கடலினின்று தோன்றிய அமுதத்தைக் கொடுத்தருள அந்நாளில் உண்ணாதிருந்தனராயின், இ நாள் அன்னவர்க்கு உய்தல் உண்டோ-இக்காலத்தில் அவர் கட்கு உயிர் பிழைத்திருத்தலும் உளதாமோ? [ஆகாது என்றபடி]; (எ - று.)

முன்பு அமிருதமுண்டதுபற்றித் தேவர்கள் அரக்கரால் இறவாது உயிர் கொண்டு வாழ்கின்றனரே யன்றி வேறில்லை யாதலின், அவர்கள் நீ கோபித்தற்கு உரியரல்ல ரென்றபடி. பண்டு - திரிவிக்கிரமாவதாரத்தில். அந்நாள் - பாற்கடல் கடைந்தபொழுது. 'அன்றே', 'அன்றே' இரண்டும் - தேற்றம். 'இதுவன்றே தேவர்பெற்றி' என்றது, இரங்கிக்கூறியவாறு. பி-மீ:—[1]தன்னுள். [2]தந்த. [3]வாய்கொண்டு. [4]ஆகில். (கoஉக)

உகக. வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி [1]கூட்டிக் கொண்டீ
ரம்பிழை யரிவிற் செங்கை யையன்மீ ராயுங் காலை
யும்பிழை யென்ப தல்லா லுலகஞ்செய் பிழையு முண்டோ.

(இ - ள்.) அம்பு இழை-அம்புதொடுக்கிற, வரி வில்-கட்டமைந்த வில்லையேந்திய, செம் கை - சிவந்த கையையுடைய, ஐயன்மீர் - அருமைமக்களே! வம்பு இழை - கச்சையணிந்த, கொங்கை தனங்களையுடைய, வஞ்சி-வஞ்சிக்கொடிபோல் மெல்லியளான சீதை, வனத்திடை - காட்டிலே, தமியள் வைக - தனித்தவளாய் நிற்ச, கொம்பு இழை மானின் பின் போய்-கொம்புகள் பொருந்திய மானின்பின்னே சென்று, குலம் பழி கூட்டிக்கொண்டீர்; (சீதையையிழந்து உங்கள்)குலத்துக்குப் பழியை உண்டாக்கிக்கொண்டீர்கள்; ஆயும் காலை - ஆராய்ந்துபார்க்குமிடத்து, உம் பிழை என்பது அல்லால் - (இது) உங்கள்குற்றமாகுமே யல்லாமல், உலகம் செய் பிழையும் உண்டோ - (இவ்விஷயத்தில்) உலகத்தார் செய்த குற்றமும் உள்ளதோ?[இல்லை யென்றபடி]; (எ - று.)

வஞ்சி - ஆகுபெயர். 'கொம்பிழைமான்' என்பதற்கு-கொம்புகள் இரத்தினம்பதிக்கப்பெற்ற மானென்று உரைப்பாரும் உளர். ஐயன்மீர்-ஐயன்மார் என்பதன் ஈற்றயல்திரிந்த விளி. மக்களை 'ஐயன்மீர்' என்று விளித்தது, அன்புபற்றிய மரபுவழுவமைதி. பி-மீ:—[1]பூட்டிக்கொண்டீர். (கoஉஉ)

உகஉ. ஆதலான் முனிவா யல்லே யருந்ததி யனைய கற்பிற்
காதலா டுயர நீக்கித் தேவர்தங் கருத்து முற்றி
வேதநூன் முறையின் யாவும் [1]விதியுளி நிறுவி வேறுந்
தீதுள துடைத்தி யென்றான் [2]சேவடிக் கமலஞ் சேர்வான்..

(இ - ள்.) ஆதலால்—, முனிவாய் அல்லே - (நீ) கோபங்கொள்ளா தொழி; அருந்ததி அனைய கற்பின் காதலாள் துயரம் நீக்கி - விசிஷ்டர்பத் தினியான அருந்ததிதேவியை யொத்த தவமுக்கற்புநிலைமையையுடைய உன்மனையாளது துன்பத்தை நீக்கி, தேவர்தம் கருத்து முற்றி-(அரக்கர்களை வேரோடு தொலைத்தலாகிய) தேவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றி, யாவும் - செய்யவேண்டுஞ் செயல்களை யெல்லாம், வேதம் நூல் முறையின் விதியுளி நிறுவி - வேதசாஸ்திரங்களில் ஒழுங்காகக்கூறப்பட்ட விதிப்படி செய்துநிறுத்தி, வேறும் தீது உள துடைத்தி - மற்றுமுள்ள தீமைகளையும் தீர்த்தருள்வாய், என்றான் - என்றுகூறினான், சே அடி கமலம் சேர்வான் - (அவ்வெம்பெருமானது) சிவந்த திருவடித்தாமரைமலர்களைச் சேர்பவனான சடாயு; (எ - று.)

'யாவும்' என்றது உலகாளுதல் வேள்விசெய்தல் முதலியவற்றைக் குறிக்கும். வேறுந்தீதுள துடைத்தல் - மற்றும் உலகத்தில்நிகழும் அக்கிரமச் செயல்களைக் கண்டித்தல்; அச்செயல்கள், சூத்திரகன் தவஞ்செய்தல் போல்வன. சேவடிக்கமலம் சேர்வான் - பரமபதமடையவிருப்பவனென்றபடி. பகைவென்றபின் பிராட்டியை அங்கீகரிக்கத் துடையாதுமில்லை யென்பது விளங்க, 'அருந்ததியனைய கற்பிற் காதலாள்' என்றார். பி-ம்:—[1]விதியுள. [2]தேவர்தமுலகம். (கஉஉ)

உகஊ.—இராமன் உலகத்தார்மேற் கோண்ட கோபந் தணிதல்.

புயனிற வண்ண னுண்டப் புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னைச் சிந்தையிற் [1]றழுவி நின்ற
னயவினி முனிவ தென்னே [2]யரக்கர்தம் வருக்கந் தீர்க்குஞ்
செயலினிச் செயலென் றெண்ணிக் கண்ணிய சீற்றந் தீர்ந்தான்.

(இ - ள்.) புயல் நிறம் வண்ணன்-மேகத்தினது நிறம்போன்ற நிறத்தை யும் குணம்போன்ற குணத்தையு முடையவனான ஸ்ரீராமன், அ புண்ணியன் ஆண்டு புகன்ற சொல்லை - நல்வினையுடையவனான அச்சடாயு அப்பொழுது சொன்ன வார்த்தையை, இது தயரதன் பணி என்ன சிந்தையில் தழுவி நின் றான்-'இது தசரதசக்கரவர்த்தியினது கட்டளையே' என்று(அதனைத்தவறாது ஏற்றுக்கொள்ளுதல்போலத்) தன்மனத்தில் ஏற்றுக்கொண்டுநின்றவனாய்,— 'இனி—,அயல் முனிவது என்னை-பிறரைக் கோபித்தலில் யாதுபயன்? அரக் கர்தம் வருக்கம் தீர்க்கும் செயல் இனி செயல்-இராக்கதர்களை இனத்தோடு அழிக்குந்தொழிலே இனிச்செய்யத்தக்க செயலாகும்,'என்று எண்ணி-என்று நினைத்து, கண்ணிய சீற்றம் தீர்ந்தான் - (உலகத்தார்மேல்)மனத்திற்கருதிய கோபந்தணிந்தான்; (எ - று.)

சடாயுவின்வார்த்தையைத் தந்தைவார்த்தையாகவே பாவித்துத் தலை மேற்கொண்டு நன்குமதித்தனன், பித்ருவாக்யபரிபாலநசீலனை இராமபிரா னெனக. பி - மீ:—[1]தாங்கி. [2]அரக்கரை. (கoஉச)

உகச.—பின்பு சடாயு உயிர்நீத்தல்.

ஆபபி னமலன் ரூனு [1]மையநீ யமைதி யென்ன
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலு முண்டோ
போயதவ் வரக்க னெங்கே புகலெனப் புள்ளின் வேந்த
னேய்வின [2]னுணர்வுந் தேய வுரைத்திலை னுயிருந் தீர்ந்தான்.

(இ - ள்.) ஆபபின் - (இவ்வாறு) ஆனபின்பு [கோபத்தணிந்தபின்பு], அமலன்தானும் - குற்றமற்றவனை இராமபிரானும், (சடாயுவைநோக்கி), 'ஐய-தந்தையே! நீ—, அமைதி என்ன வாயிடை மொழிந்தது அன்றி-(கோ பங்கொள்ளாது) பொறுமையோடிரு என்று (உனது) வாயினுற் சொல்லிய படியே (நான்) நடத்தலல்லாமல், மற்று ஒரு செயலும் உண்டோ - (அதற்கு) மாறுனதொரு செயலும் (நான் செய்தற்கு உரியது) உண்டோ? (இதுநிற்க); அ அரக்கன் போயது எங்கே புகல்-அத்தஇராக்கதன்[இராவணன்] சென்றது எவ்விடத்தில்? (அதனைச்) சொல்வாய்,' என-என்றுசொல்ல, (அவ்வளவிலே), புள்ளின் வேந்தன் - பறவைகளுக்குத் தலைவனுகிய [சிறந்த பறவையான] சடாயு, ஓய்வினன் - தளர்ச்சியையுடையவனுய், உணர்வும் தேய - அறிவும் குறைபட, உரைத்திலன் - (அதற்கு மறுமொழியொன்றும்) கூறமாட்டாதவ னுய், உயிரும் தீர்ந்தான் - உயிரும் நீங்கினனன்; (எ - று.)

எனதுதந்தையாகிய நீ என்னைநோக்கி 'முனிவாயல்லே' என்று திரு வாய் மலர்ந்தருளிய கட்டளையின்படி நான் அமைதிகொண்டிருத்தலே யன்றி அதற்குமாறுன கோபச்செயல்ஒன்றையுஞ் செய்யமாட்டே னென்று தனது உடன்பாட்டைவெளியிடுவான், 'ஐய நீ யமைதியென்ன வாயிடைமொழிந்த தன்றி மற்றொருசெயலுமுண்டோ' என்றுன். [1]ஐயனே! என்ற பாடம்-தந்தை யாகிய நீயென்று பொருள்படும் இங்ஙனம்எம்பெருமானுக்குத் தன்னுலியன்ற வளவும் உதவிய சிறப்புநோக்கி, இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த பறவை வேறொன்றுமில்லை யென்பது பட, 'புள்ளின்வேந்தன்'என்றார். ஓய்வினன்- இந்திரியங்களின் செய்கை ஓய்ந்தவனுய். ஈற்றடியிலுள்ள உம்மைகள் இரண் டும், எச்சப்பொருளன. பி - மீ:—[1]அரச. [2]உணர்வு. (கoஉடு)

உகடு.—சடாயு பரமபதமடைதல்.

சீதங்கொண் மலரு ளோனுந் தேவரு மென்ப தென்னே
வேதங்கள் [1]காண்கி லாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான் [2]படிவங்கொ ணெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும் போக்கிலா வுலகம் புக்கான்.

(இ - ள்.) சீதம் கொள் மலர் உளோனும் - குளிர்ச்சியைக் கொண்ட தாமரைமலரில் தோன்றியவனுன பிரமனும், தேவரும்-மற்றையதேவர்களும்,

(காணுதற்குஅரியவன்), என்பது என்னே-என்பதைப்பற்றிக் கூறவேண்டுவது என்ன ? வேதங்கள் காண்கிலாமை - (பகவானுடையசொரூபத்தை உணர்ந்து வெளியிடுதற் கென்றே அமைந்த)வேதங்களுங் காணமுடியாமல்,வெளிகின்றே - (அவற்றிற்கும் எட்டாது) புறத்தேகின்று, மறையும் - மறைகின்ற சொரூபத்தையுடைய, வீரன் - மகாவீரனை திருமாலினுடைய [இராமபிரானது], பாதங்கள்-திருவடிகளே, கண்ணின் பார்த்தான்-(தனது) கண்களால் (அந்திமதசையிலே) தரிசிக்கப்பெற்ற ஞானத்தின், (சடாயு[1], கெடிய படிவம் கொள் பஞ்ச பூதங்கள் விளியும் காலும் போக்கு இலா உலகம் புக்கான்-பெரிய வடிவத்தைக்கொண்ட (நிலம் நீர் தீ காற்று வான மென்னும்) ஐம் பெரும்பூதங்களும் அழியுங் கற்பாந்தகாலத்திலும் அழிதலில்லாத ஸ்ரீ வைகுண்டலோகத்தை அடைந்தான்; (எ - று.)

"உறுகால்கிளர் பூதமெலா முகினும், மறுகா நெறி" என்றார், சரபங்கர் பிறப்புநீங்குபடலத்தும். பி-ம்:—[1]காண்கிலாதான். [2]படிவங்கள் (கஉஉ)

உகசு.—அப்போழ்து அனைவரும் இரங்கலும், சடாயுவை நன்குமதித்தலும்.

வீடவ னெய்தும் வேலை விரிஞ்சனை முதல மேலோ
ராடவர்க் கரச னேனு [1]தம்பியு மழுது [2]சோரக்
காடமர் மரமு[3]மாவுங் கற்களுங் கரைந்து சாய்ந்த
சேடரும் [4]பாருளோருங் [5]கரஞ்சிரஞ் சேர்த்தா ரன்றே.

(இ - ள்.) அவன் வீடு எய்தும் வேலை-அந்தச்சடாயு (உயிர்நீத்து) முத்தியையடையுஞ் சமயத்தில், ஆடவர்க்கு அரசனேனு - புருஷோத்தமனான இராமனும், தம்பியும்-இளையபெருமாளும், அழுது சோர - புலம்பிமெலிய,—காடு அமர் - காட்டிற் பொருந்திய, மரமும் - மரங்களும், மாவும்-மிருகபட்சிகளும், கற்களும் - மலைகளும், கரைந்து சாய்ந்த - (இரக்கத்தால்) கரைந்து தளர்ந்தன; விரிஞ்சனை முதல மேலோர்-பிரமன்முதலிய மேலுலகத்தார்களும், சேடரும் - (கீழுலகத்தவரான) நாகர்களும், பாருளாரும் - (இடைநிலுள்ளதான) நிலவுலகத்தி லுள்ளாரும், (ஆக மூவுலகத்தோரும்), கரம் சிரம் சேர்த்தார் - (சடாயுவின்பக்கலுண்டான நன்குமதிப்பினால்) கைகளைத் தலை மேற்சேர்த்தார்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

அனைவரும் தலைமேற் கைவைத்துத் திரியங்கரமஸ்காரஞ்செய்தனரென்பதாம். [5]கரஞ்சிரஞ்சேர்த்தவன்றே என்றபாடத்திற்கு - அவரவரின் உள்ளத்தின்முயற்சியின்றியே ஆந்தபரவசத்தால் கைகள் தாமே தலைமேற்குவிந்தனவென்பது விளங்க, 'கரம்சிரஞ் சேர்ந்த' என்று கைகளின் மேல் வைத்துக் கூறினரென்க. இனி, 'கரம் சிரம் சேர்ந்த' என்பதற்கு - சடாயுமரிக்கையில் மக்கள் தேவர் நாகர் அனைவரும் தலையிற்கைவைத்துச் சோகிப்பாராயினர் என்னுங் கருத்துப்பட வுரைத்தலுமுண்டு. எல்லாப்பொருள்களும் எம்பெருமானுடைய சொரூபமேயாதலால், அப்பெருமான் அழுதுசோர்கையில் அப்பொருள்களியாவும் கரைந்து சாய்ந்தன வென்க.மா-விலங்கு சேடர்=சே

ஷர்.விரிஞ்சனே, ஏ-உயர்வுசிறப்பு. பி-ம்:—[1]நம்பியும். [2]சோர்ந்தார். [3]புள்ளும். [4]பாரினேர்க்கும். (கஉஎ)

உகஎ.—பின்பு இராமன் தம்பியைநோக்கிக் கூறிய இரங்கன் மொழி.

அறந்தலே நின்றி லாத [1]வரக்கனி ணண்மை [2]தீர்ந்தேன் [ளாய்
றுறந்தனென் றவஞ் செய்கேனே குறப்பெனே வுயிரைச் சொல்
பிறந்தனென் பெற்று நின்ற பெற்றியாற் பெற்ற தாதை
யிறந்தன னிருந்து ளேன்யா னென்செய்கே னிளவ லென்றான்.

(இ - ள்.) இளவல் - தம்பி! அறம்தலே நின்றிலாத அரக்கனின் ஆண்மை தீர்ந்தேன் - தருமத்தில் நிலைநிற்றலில்லாத அரக்கனுல் ஆண்மையை இழந்த வனுன நான், துறந்தனென் தவம் செய்கேனே - முற்றத்துறந்து தவஞ் செய்வேனே? உயிரை துறப்பெனே - உயிரை விட்டுவிடுவேனே? சொல் லாய் - (இவ்விரண்டில் எதுதக்கது?) சொல்வாய்; பெற்று நின்ற பெற்றியால் - (என்னை மகனுகப்) பெற்றுநின்ற பேற்றினுல், பெற்ற தாதை இறந்தனன் - பெற்றதந்தை இறந்துபோனுன்; பிறந்தனென் யான் இருந்துளேன் - (மகனு கப் பிறந்தவனுன யான் இறவாமல் இருந்துள்ளேன்; என் செய்கேன் - யாது செய்யக்கடவேன்? என்றான் என்றுகூறினுன்; (எ - று.)

கொடிய அரக்கனது வஞ்சனைக்கு உள்ளாகி மனைவியையிழந்து மானங் கெட்டே னென்பான், 'அறந்தலைநின்றிலாத அரக்கனின் ஆண்மைதீர்ந்தேன்' என்றான். 'பெற்றதாதையிறந்தனன்' என்றது - இரட்டுறமொழிதலால், தன் னைப்பிரிந்தஞான் றிமிக்கம் தசரதன் இறந்ததையும், தனதுமனையாளைப் பாது காத்து உதவினமித்தம் சடாயு இறந்ததையும் குறிக்கும். சடாயுவை 'பெற் றதாதை' என்றது, உபசாரம். என்தந்தை எனக்காக இறந்ததனுல், அவன் செய்யும் கடமை தீர்ந்தது: மைந்தனுகிய யான் அவனுக்காக இறவாமல் உயி ர்த்திருந்தலால், யான்செய்யுங் கடமை தீர்ந்திலது என்று பிரலாபித்தன னென்க. பி - ம்.—[1]ஆதினன். [2]வீர்ந்தேன். (கஉஅ)

உகஅ.—இலக்குமணன் 'அரக்கரையழித்தலே செய்தற்பாற்று' என்றல்.

என்றலு மிளைய [1]கோவு மிராமனே யிறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் றன்மை [2]பழியல [3]விளைந்த தொன்றே
நின்றினி நினைவ தென்னே நெருக்கியவ் வரக்கர் தம்மைக்
கொன்றபி னன்றே வெய்ய கொடுந்துயர் குளிப்ப தென்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று (இராமன்) கூறியவளவிலே, இளைய கோவும்-இளையபெருமாளும், இராமனே இறைஞ்சி-அவ்விராமபிரானை வண க்கி, 'வென்றியாய் - வெற்றியை யுடையவனே! யாண்டும்-எப்பொழுதும், விதியின் தன்மை அல விளைந்தது பழி ஒன்றே - ஊழ்வினையின் தன்மை யாலன்றி நேர்ந்ததொரு தீங்கு உண்டோ? இனி நின்று நினைவது என்னே - இனி (க்காலதாமதப்பட்டு) நின்று நினைத்தலில் யாதுபயன்? அ அரக்கர்தம் மை நெருக்கி கொன்ற பின் அன்றே வெய்ய கொடு துயர் குளிப்பது-அந்த

இராக்கதர்களை(ப் போரில்)நெருக்கிக் கொன்றபின்பன்றே வெவ்வியகொடிய துயரத்தில் மூழ்கவேண்டுவது, என்றான் - என்றுகூறினான்; (எ - று.)

ஊழ்வினையாலன்றி வருவதொரு தீங்கு இல்லை யாகையாலும், அவ் வினைப்பயன் தடுக்கவொண்ணா தாதலாலும், கழிவிரக்கத்தோடு சிந்தித்தலிற் பயனில்லை; சீதையை யிழந்ததற்காகவும், சடாயு உயிர்நீத்ததற்காகவும் இரங் குதலினும் முந்திச்செய்யவேண்டுவது, இவற்றிற்குக் காரணமான அவ்வரக் கர்களைக் கொன்று பழிதீர்த்தலே யென்ற னெனக. வெய்ய கொடு - ஒரு பொருட்பன் மொழி. பழி - பழிக்கப்படுவது: தீங்கு. பி-ம்:—[1]கோவல்லிறை வனை. [2]இவன்முதல், பழியில. [3]வினைத்தன்றே. (கஉஉ)

உகக—இதுவும் அது.

எந்தைநீ யியற்பிற் [1]றென்னை [2]யெண்மைய னாகி யேழைச்
சந்தவார் குழலி னாளைத் துறந்தனை தணிதி யேனு
மூந்தையை யுயிர்[3]கொண் டானை யுயி[4]ருண்ணு மூற்ற மில்லாச்
சிந்தையை யாகி நின்று [5]செய்தவஞ் செய்கை யென்றான்.

(இ - ள்.) எந்தை - எனதுதலைவனே! நீ—, எண்மையன் ஆகி - எளிய தன்மையை மேற்கொண்டவனாய், ஏழை சந்தம்வார் குழலினாளை துறந்தனை தணிதி எனும் - (பெண்டிர்க்குரிய) பேதைமைக்குண முடையளான அழ கியநீண்டகூந்தலையுடைய சீதையைக் கைவிட்டுத் தணிவுகொள்வாயாயினும் உந்தையை உயிர்கொண்டானை உயிர் உண்ணும் ஊற்றம் இல்லா சிந்தையை ஆகி நின்று செய்தவம் செய்கை இயம்பிற்று என்னை - உனதுதந்தையைக் கொன்ற அரக்கனைக் கொல்லும் முயற்சி யில்லாத மனத்தையுடையவனாய் நின்று சிறந்ததவத்தைச்செய்தலைக் கூறியது என்னை! என்றான் - என்றும் (இராமனைநோக்கி இலக்குமணன்) கூறினான்; (எ - று.)

சீதையை எடுத்துப்போனதற்காக அவனிடம் உனக்குள்ள காதலால் இராவணனைக் கொல்லவேண்டும்: அங்ஙன் கொல்லுதற்கு நீ துணியாமல் அவளை முற்றும் துறந்துவிடக் கருதினையாயினும், நமதுதந்தையான சடா யுவைக் கொன்றதற்காக அவனிடம் நமக்குள்ள உறவுரிமையாலாவது இராவணனைக் கொல்லவேண்டாவோ? அங்ஙனமுமன்றித் தவத்தை மேற் கொள்வதாகக்கூறியது தகுதியன்றேயென்றன னெனக. 'தமையன் தந்தையோடொப்பான்' என்ற நூற்கொள்கையின்படி, இராமனை இலக்கு மணன் எந்தையென விளித்தான். 'ஏழையென்றது, குழலினுளுக்கு அடை மொழி. நீ எண்மையனாகி - இடவழுவமைதி; 'எண்மையையாகி' என்றிருப் பின், வழாநிலையாம். பி-ம்:—[1]என்னை. [2]எளிமையையாகி. [3]கொண்டானை. [4]கொள்ளும். [5]செய்வதென். (கஉஎ)

220.—இராமன் 'இனிச் சடாயுவுக்குச் சரமக்கிரியை செய்வோம்'என்றல்.

அவ்வழி யிளவல் கூற வறிவனு மயர்வு நீங்கி
யிவ்வழி யினைய [1]வெண்ணி னேழைபைப் பாலதென்னை

R. H. R. C. MADRAS

வெவ்வழி பொழியுங் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை
செவ்வழி யுரிமை [2]யாவுந் [3]திருத்துவஞ் சிறுவ வென்றான்.

(இ - ள்.) இளவல் - இலேயபெருமாள், அவ்வழி கூற - அவ்வாறுசொல்ல, 'அறிவனும்-யாவும்அறியும் முற்றுணர்வுடையவனான இராமபிரானும், இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப்பாலது என்னை-'இப்பொழுது [அல்லது இவ்விடத்தில்] இத்தன்மையனவான சிந்தைகளைச் சிந்தித்திருந்தால் அது அறிவின்மையின்பாற்பட்டதே' என்று தானும் திருவுள்ளத்திற்கொண்டு, அயர்வு நீங்கி-(அதனால்) சோர்வழிந்து, வெம் வழி பொழியும் கண் நீர் விலக்கினன்-கொடியதுன்பங் காரணமாகச் சொரிகிற கண்ணீரை நீக்கினவனாய், (இலக்குமணனைநோக்கி), 'சிறுவ - தம்பி! விளிந்த தாதை - இறந்ததந்தையான சடாயுவுக்கு, உரிமை யாவும் - செய்யவேண்டிய கடமைகளெல்லாவற்றையும், செம் வழி திருத்துவம் - செவ்வியமுறைமையால் திருத்தச்செய்வோம்', என்றான் - என்றுகூறினான்; (எ - று.)

''அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை, யின்மையா வையாதுலகு'', ''நுண்ணுணர் வின்மை வறுமை''என்ப வாதலால், அறிவின்மை 'ஏழைமை' எனப்பட்டது. பி - ம்:—[1]எண்ணல். [2]யானே. [3]திருத்துவன். ()

22க.—இதுமுதல் நான்குகவிகள் - சடாயுவுயிர்த்த இராமன் அந்திமக்கிரியைசெய்தலைக் கூறும்.

இந்தன [1]மெனைய வென்னக் [2]காரகி லீட்டத் தோடுஞ்
சந்தனங் குவித்து வேண்டுந் தருப்பையுந் திருத்திப் பூவுஞ்
சிந்தினன் [3]மணலின் வேதி தீர்த்தர வியற்றித் தெண்ணீர்
தந்தனன் முதை தன்னைத் [4]தடக்கையா னெடுத்துச் சார்வான்.

(இ-ள்.) இந்தனம் எனைய என்ன - விறகுகள் எத்தன்மையன வென்று (காண்பவர்) வியக்கும்படி, கார் அகில் ஈட்டத்தோடும் - கரிய அகிற்கட்டைகளின் கூட்டத்துடனே, சந்தனம் - சந்தனக்கட்டைகளையும், குவித்து-(காய்ந்டமாகக்) கொண்டுவந்துசேர்த்து, வேண்டும் தருப்பையும் திருத்தி - வேண்டியதருப்பைப்புற்களையும் திருத்தமாக அமைத்து, பூவும் சிந்தினன் - மலர்களையும் கொணர்ந்துவைத்து, மணலின் வேதி தீர்த்த இயற்றி - மணலினால் மேடையை அமையச்செய்து, தெள் நீர் தந்தனன் - தெளிவானநீரைக்கொணர்ந்து வைத்துக்கொண்டு,-தாதைதன்னை தட கையான் எடுத்து சார்வான்-(இராமன் தனது)தந்தையான சடாயுவைப் பெரியகைகளால் எடுத்துக்கொண்டு (இந்தனங்குவித்துவேதியமைத்தவிடத்தில்) சேர்பவனானன்; (எ - று.)

அந்திமக்கிரியைசெய்தற்கு வேண்டிய விறகு தருப்பை பூ சந்தனம் தண்ணீர் இவைகளைச் சித்தமாகக் கொணர்ந்து வைத்துக்கொண்டமையும், மணல் மடையமைத்துவைத்தமையும், இதிற் கூறப்பட்டன. பி - ம்:—[1]ஆகவேண்டும். [2]காழகில். [3]அரணிதன்னுற்பிக்கடைந்து, அரணிதன்னில் தீக்கடைந்து, மூலின் வெந்தீத்தருக்கடைந்து, மணலின் வெந்தீத்தருக்கடித்து. [4]தடக்கையீது. (கஉக-உ)

உஉஉ. ஏந்தின னிருகை தன்னு லேற்றின னீமந் தன்மேற்
சாந்தொடு மலரு நீருஞ் சொரிந்தனன் றலையின் [1]சாரல்
காந்தெரி களுல மூட்டிக் கடன்முறை கடவா வண்ண
நேர்ந்தன னிரம்பு நன்னூன் மந்திர நெறியின் வல்லான்.

(இ - ள்.) நிரம்பும் நல் நூல் மந்திரம் நெறியின் வல்லான் - நிறைந்த நல்லசாஸ்திரங்களிற்கூறிய மந்திரங்களின்முறைமையில் வல்லவனான இராம பிரான்,—நீரும் சாந்தொடு மலரும் சொரிந்தனன்-நீரையும் சந்தனத்தையும் புஷ்பங்களையும் (உரியபடி) உபயோகித்து [உயிர்நீத்த உடலுக்குத் திருமஞ்ச னமும் அலங்காரமும் செய்து என்றபடி]. (அவ்வுடலை), இரு கைதன்னுல் ஏந்தினன் ஈமந் தன்மேல் ஏற்றினன்-(தனது) இரண்டு கைகளாலும் எடுத்து (மணல்மேடையில் அமைத்த) அவ்விறகடுக்கின்மேல் இட்டு, தலையின் சாரல் காந்து எரி களுல மூட்டி - தலைப்பக்கத்திலே எரிகிற நெருப்பைப் பற்றவை த்து, கடன் முறை கடவா வண்ணம் நேர்ந்தனன்-மற்றும் (அப்பொழுது)செ ய்யவேண்டிய கடமைகளை முறைதவறுதபடி செய்தான்; (எ - று.)—

பி - மீ:—[1]வைத்து. (கo ரூக)

உஉந. [1]கிளித்தன [2]களித்த மேனி [3]தாமரைக் கெழுவு செம்பூந் துளித்தன வனைய வென்னத் துள்ளிசோர் வெள்ளக் கண்ணன் குளித்தனன் கொண்ட [4]லாற்றைக் குளித்தபின் கொண்ட[5]நன்னீ ரளித்தன னரக்கர்ச் செற்ற சீற்றத்தா னவலங் [6]தீர்ந்தான்.

(இ - ள்.) அரக்கர் செற்ற சீற்றத்தான் அவலம் தீர்ந்தான் - இராக்கதர் களை அழிக்கவேண்டு மென்ற கோபத்தால்(சீதையைபிழந்த)துன்பம் சிறிது தணிந்தவனான இராமபிரான், —கிளித்து அன-கிளியினது நிறத்தை யொத்த [பசுஞ்சாமநிறமுள்ள], களித்த மேனி - செழிப்புற்ற தனதுதிருமேனியிலே, தாமரை கெழுவு செம் பூ துளித்தன அனைய என்ன - செழித்த செந்தாமரை மலர்கள் தேன்துளித்தவற்றைப் போல்வன வென்று சொல்லும்படி, வெள் ளம் துள்ளி சோர் கண்ணன் - நீர்ப்பெருக்கு வழிகிற கண்களையுடையவனும், கொண்டல்-மேகம்போல, ஆறு - நதியிலே, குளித்தனன் - நீராடினான்; குளி த்த பின் - நீராடியெழுந்த பின்பு, கொண்ட நல் நீர் அளித்தனன்-(தன் கை யிற்) கொண்ட நல்லநீரை (ச்சடாயுவுக்கு) தர்ப்பணமாகக் கொடுத்தான்.

கிளியின்நிறமும்,இராமபிரானது திருநிறமும் தம்மில்ஒத்திருத்தல்பற்றி, 'கிளித்தன களித்தமேனி' என்றார். இங்ஙனம் இராமனது திருமேனி நிறத்துக்குக் கிளியினதுநிறம் உவமைகூறப்படுதலை, "நன்கெண்ணி நான் வள ர்த்த சிறு கிளிப்பைதலே, * * * நீன்பசுஞ் சாடநீறத்தன்" என்ற திருவாய் மொழிப்பாசுரங்கொண்டு உணர்க. கிளித்து - கிளியென்ற பெயரின்மேற் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்; 'கைத்து' என்பத போல; து-விகுதி. அன-அன்ன;தொகுத்தல். கண்களுக்குத் தாமரைப்பூவுப் அவைசொரியுங் கண்ணீர்க்குத் தாமரைசொரியுந் தேனும் உவமை. துள்ளி-விரித்தல். **பி - மீ:**—[1]தளிர்த்தன. [2]கிளர்ந்தபச்சை, அனையமேனி. [3]தாமரை கெழுவுஞ் செந்தேன். [4]ஆற்றில். [5]கொண்டல். [6]தீர்ப்பான். (சoஅ)

•

உஉச. மீட்டினி யுரைப்ப தென்னே விரிஞ்சனே முதல மேல்கீழ்
காட்டிய வுயிர்க ளெல்லா மருந்தின களித்த போலாம்
பூட்டிய கைக ளாலப் புள்ளினுக் கரசைக் கொள்கென்
றாட்டிய நன்னீ ரைய னுண்டநீ கொத்த தன்றே.

(இ - ள்.) விரிஞ்சனே முதல - பிரமன்முதலிய, மேல் கீழ் காட்டிய- உயர்ந்தவையாகவும் தாழ்ந்தவையாகவும் குறிக்கப்பட்ட, உயிர்கள் எல்லாம்- ஜீவராசிகள் யாவும், அருந்தின களித்த போல் ஆம் - (இராமன் சடாயுவுக்குச் சலதர்ப்பணங்கொடுத்தவளவிலே தாம்தாம்) உண்டுகளித்தவைபோல ஆயின; அ புள்ளினுக்கு அரசை-பறவைக்குஅரசனை அச்சடாயுவைக்குறித்து, கொள்க என்று - ஏற்றுக்கொள்வாயாக வென்று சொல்லி, பூட்டிய கைகளால்- சேரவைத்த (தனது) கைகளால், ஊட்டிய - உண்பித்த [தர்ப்பணம் கொடுத்த], நல் நீர் - நல்ல அத்தீர்தானது, ஐயன் உண்ட நீர் ஒத்தது அன்றே- இராமபிரானுடைய திருமால் தானேஉட்கொண்ட நீரைப் போன்றதன்றோ! மீட்டு இனி உரைப்பது என்னே - (அந்த வாஸோதக தீர்த்தகத்தின் மகிமையைப்பற்றி) மற்றும்சொல்லவேண்டுவது யாது? (எ - று.)

எம்பெருமான் சிறிதுஉணவை உட்கொண்டவளவிலே, அவ்வெம்பெருமானது சொரூபமான ஜீவராசிகள் தாம்தாம்உண்டனபோல நிறைவுறுதல், இயல்பு; (இதன்ன மகாபாரதத்துத் துர்வாசமுனிச்சருக்கத்து வரலாறு கொண்டும்உணர்க:) சடாயுக்கு இராமன் தர்ப்பணஞ்செய்தவளவிலே, அச்சடாயுவின்உயிரேயன்றி அனைத்துயிரும் உண்டுகளித்தனபோ லானதனால், அந்நீர் ஐயனுண்டநீரைபோற்ற தென்றார். 'மீட்டினியுரைப்பதென்னே' என்றது, அத்தர்ப்பணசலத்தின் மகிமையை நன்குவிளக்குமாறு பாராட்டிக்கூறியது. பூட்டியகைகள் - சேர்ந்கை. அன்றே - தேற்றம். (கஅஉ)

உஉநி.—சூரியாஸ்தமன வருணனை.

பல்வகைத் துறையும் வேதப் பலிக்கடன் பலவு முற்றி
[1]வெல்வகைக் குமர னின்ற வேலியின் வேலி சார்ந்தான் [து
ரெல்வகைக் குலத்தின் வந்தான் றுன்பத்தாற் புனலுந் தோய்ந்
செல்வகைக் குரிய வெல்லாஞ் செய்குவா னென்ன வெய்யோன்.

(இ - ள்.) வெல் வகை குமரன் - வெற்றிபெறும்வகையில்வல்ல சக்கரவர்த்தித்திருமகன், பல்வகை துறையும்,—(பித்ருக்களுக்குறித்துச் செய்யும்) பலவகைச்சடங்குகளையும், வேதம் பலி கடன் பலவும் - மற்றும் வேதவிதிப்படிசெய்தற்குரிய பிண்டபலிமுதலியகடமைகள்பலவற்றையும்;முற்றிநின்ற வேலையின் - முடிந்துநின்ற சமயத்திலே,—வெய்யோன் - சூரியன், தொல் வகை குலத்தின் வந்தான் துன்பத்தால் - தொன்றுதொட்டுவரும் வகையையுடைய (தனது)குலத்திலே தோன்றியவனுன சடாயுவின் மரணங்காரணமாக நேர்ந்த துன்பத்தால், புனலும் தோய்ந்து - (தானும்) நீராடி, செல்

வகைக்கு உரிய எல்லாம் செய்குவான் என்ன-அவன்செல்லுங்கதிக்கு உதவு கிற சடங்குகளேயெல்லாம் செய்யத்தொடங்குபவன்போல,வேலை சார்ந்தான்-மேல்கடலை அடைந்தான்; (எ - று.)

சூரியகுலத்தில் அவதரித்த இராமனுக்குத் தந்தைமுறைபூண்ட சம்பந்தத்தால், சடாயுவைச் சூரியகுலத்திலுதித்தவனாகக் கற்பித்து, 'தொல்வகைக் குலத்தின் வந்தான்' என்றன ரென்க: அன்றியும், காசியபமுனிவனது மனைவிமார் பதின்மூவருள் அதிதியின் குமாரன் சூரியன்; விநதையின்மகனான அருணனது புதல்வன் சடாயு; ஆகவே, சூரியனுக்குச் சடாயு புத்திரனுதல் காண்க. இனி, 'தொல்வகைக்குலத்தின்வந்தான் தன்பத்தால்' என்பதற்கு - தனது குலத்திற் பிறந்தவனான இராமனுக்கு நேர்ந்த மனத்துயரம் காரணமாக என்று உரைத்தல், அத்துணையாய்சிறவாது. சூரியன் கடலில்மூழ்குதற்குக்காரணமாகாததொன்றைக் காரணமாகக் கவி கற்பித்துக்கூறியதனால், **ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி** - மீ:—[1]வில். (கஙஉ சூ)

இப்படலத்திற் கூறிய வரலாற்றில், சீதை இலக்குமணன்விஷயமாகக் கொண்ட கருத்தினாலும், கூறிய சொற்களினாலும், அவற்றின்பயனாக உடனே அடைந்த தீங்கினாலும், 'பெண்புத்தி பின்புத்தி' என்பது நன்குவிளங்கும். அன்றியும், லக்ஷ்மணன்விஷயத்தில் அவள் சொன்ன சொற்கள் அவளுக்கு உடனே தீமைவிளையக்காரணமானமை,'பாகவதாபசாரம்உடனேபெருந்தீங்கு பயக்கும்' என்றஉண்மைநிலையை உணர்த்துதல் காண்க: சடாயுவின் செயலால், பெரியோர் தமதுயிர்கொடுத்தாயினும் தம்மையுற்றாரது துன்பத்தைத் தம்மாலியன்றவளவு தீர்த்தற்குத் துணிவ ரென்பது புலனும். இராமதரிசனத்தால் சடாயுவுக்குப் பரமபதங்கிடைத்தமை, அவ்விராமபிரானே முழுமுதற்கடவுள் என்பதற்குச் சாட்சியாம். இராமன் சடாயுவுக்குத் தீக்கடன் நீர்க்கடன் முதலியன செய்துமுடித்ததனால், அப்பெருமானது செய்ந்நன்றி மறவாப்பெருந்தகைமை வெளியாகின்றது.

முதனூலோடு மாறுபாடு:—'இராவணன், சீதையைக் கைகளால் தொட்டு எடுத்து மடியில் வைத்துக்கொண்டு தேரேறிச் சென்றனன்' என்று ஸ்ரீ வால்மீகி கூறியுள்ளார்.

சடாயுவுயிர்நீத்த படலம் முற்றிற்று.

கூ.—ஆவது அயோமுகிப்படலம்.

அயோமுகியினது சம்பந்தமான படல மென்றுவது, அயோமுகியைப் பற்றிய படல மென்றுவது விரியும். அயோமுகீ என்ற வடமொழிப்பெயர்-இரும்பினாலாகியதுபோன்ற முக முடைய ளென்று பொருள்படும். சடாயுவுக்குக் கிரியைசெய்துமுடித்த இராமபிரான் மிக்கவருத்தத்தோடு தம்பியுடனே சாகங்கியைத்தேடிக்கொண்டு வனத்திற் செல்லுகையில் தாகங்கொண்டு இலக்குமணனைநோக்கி 'தண்ணீர்வேண்டும்' என்ன, அவ்விளையபெரு

மாள் நீர் கொண்டுவருதற்குச் சென்ற வழியிலே, அயோமுகியென்னுங் கொடியஅரக்கி அவ்விலக்குமணன்மேற் காதல்கொண்டு மோகனமந்திரபலத்தால் அப்பெருமானை மயக்கி வலியத் தழுவியெடுத்துச் செல்லுமளவில், மோகம் நீங்கிய லக்ஷ்மணன் அவளுடைய மூக்கைத் துணித்து அவளையகற்றி மீண்ட செய்தி, இப்படலத்திற் கூறப்படுகின்றது.

க.—இராமலக்குமணர் ஓருமலையிற் சேர்தலும், இருள் மீதூதலும்.

அந்திவந் தணுகும் வேலை யவ்வழி [1]யவரு நீங்கிச் [டா
சிந்துரச் [2]சென்னித் தாண்டோர் மைவரைச் சேக்கை [3]கொண்
டிந்திரற் கடங்கல் செல்லா விராக்கத ரெழுந்த தென்ன
வெந்துயர்க் கூற்ற மாய விரியிருள் வீங்கிற் றன்றே.

(இ - ள்.) அந்தி வந்து அணுகும் வேலை - மாலைப்பொழுது வந்து சேரும் வேளையிலே, அவரும் - அவ்விராமலக்குமணரும், அவ்வழி நீங்கி - (சடாயுவுக்குக் கிரியைசெய்துமுடித்த) அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, ஆண்டு - அவ்வனத்திலே, சிந்துரம் சென்னித்து ஓர் மை வரை சேக்கை கொண்டார் - சிந்தூரப்பொடிகள் சிறைந்த சிகரத்தையுடையதாகிய மேகந்தவழும் [பெரிய] மலையொன்றை (ஏகந்தித்து அதனை)த்தங்குமிடமாகக் கொண்டார்கள்; (பின்பு), வெம் துயர்க்கு ஊற்றம் ஆய விரி இருள் - கொடியதுன்பத்துக்கு இடமான பரந்த இருளானது, இந்திரற்கு அடங்கல் செல்லா இராக்கதர் எழுந்தது என்ன - இந்திரனுக்கு அடங்காத கொடிய இராக்கதர்கள் கிளம்பினாற்போல, வீங்கிற்று - மிக்குத்தோன்றிற்று; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

காமோத்தீபகமாகிய இருட்பொழுது சீதையைப்பிரித்த இராமனதுவிரக வேதனையை மிகுவித்தற்குக் காரணமாகு மென்பார், 'வெந்துயர்க்கு ஊற்ற மாய விரிஇருள்' என்றார். 'அவரும்நீங்கிச்சேர்ந்தார்' என்ற உம்மை - கீழ்க்கவியில்வந்த ''வெய்யோன் வேலை சார்ந்தான்'' என்றதை நோக்குதலால், இறந்ததுதழுவிய எச்சப் பொருளது. பின்னிரண்டடி - உவமையணி. வெம் துயர் கூற்றம் ஆயனைப்பிரித்து கொடிய துயரத்தைச்செய்யும் யமன்போன்ற பேரிருள்எனினும் அமையும்; கொடுமைக்கும், கருமைக்கும் உவமை. சிந்துரச்சென்னித்து என்பதற்கு - யானைகள்பொருந்தப்பெற்ற உச்சியையுடையது என்றும் பொருள் கொள்ளலாம்; விந்துரம் - யானை: வடசொல். சென்னித்து - ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். பி - ம்:—[1]அயரும், [2]சென்னிக்காட்டோர், செந்திக்காட்டோர். [3]சேர்ந்தார், சார்ந்தார். (கஎஉஎ)

உ.—இரண்டுகவிகள்-அவர்கள் அவ்விரவில் மிகப்பரிதபித்தலைக் கூறும்.

[1]தினுக வருவி சிந்திக் தெருமர லுறுவ போலக்
கானமு [2]மலையு மெல்லாங் கண்ணினீ ருகுக்குங் [3]கங்குன்
மானமுஞ் சினமுங் காதை மரணமு மைந்தர் சிந்தை
ஞானமுந் துயருந் தம்முண் [4]மலையென நலிந்த வன்றே.

(இ - ள்.) கானமும் மலையும் எல்லாம் - காடுகளும் மலைகளு மாகிய வனைத்தும், தெருமரல் உறுவ போல - (இராமலக்குமணர்க்கு நேர்ந்த துய ரத்திற்காகத் தாம்) சோகித்தலே அடைவனபோல, தேன் அருவி உக சிந்தி கண்ணின் நீர் உருக்கும் - தேன்பெருக்கையும் நீர்ப்பெருக்கையும் வழியும்படி பெருகவிடுதலால் கண்ணீர்சொரிவனவாகத் தோன்றப்பெற்ற, கங்குல் - அந்த இரவிலே,—மானமும் - (சீதையையிழந்ததனாலாகிய) அவமானமும், சினமும் - (இராவணன்மேலுண்டான) கோபமும், தாதை மரணமும்-சடாயு வின்மரணத்தாலாகிய சிந்தையும், துயரும் - (கீழ்க்கூறியகாரணங்களால் உண்டான) மனத்துயரமும், ஞானமும் - (இவற்றைஅடக்கவேண்டுமென்ற) நல்லறிவும், தம்முள் - தமக்குள்ளே, மலை என - மலைகள்போர்செய்தாற் போல, மைத்தர் சிந்தை - இராஜகுமாரர்களாகிய இராமலக்குமணர்களுடைய மனத்திலே, கலித்த - ஒன்றோடொன்று தாக்கி வருத்தின ; (எ - று.)

கானமும் மலையுமெல்லாம் தெருமரலுற்றுக் கண்ணீர்உகுப்பன போலத் தேன்அருவிஉகச்சிந்துங் கங்கு லென்க. மானம், சினம், தாதைமரணம், துயர் இவை மனத்தில்தோன்றுமளவில் தத்துவஞானம் சிறிதுதோன்றி இவற்றை ஒழிக்கத்தொடங்க. மீண்டும் இவை தலையெடுத்து அத்ஞானத்தை அகற்ற; இங்ஙனம் மாறிமாறி மனந் தடுமாற்றமுற்றது என்பது, பின்னிர ண்டடியின்கருத்து. முன்னிரண்டடி - தற்குறிப்பேற்றவணி. காடுகள், மலர்களினின்றும் கூண்டுகளினின்றும் தேனைச் சொரியும். மலைகள், நீரருவியைச் சொரிவன. பி-பி:—[1]தெருமுகமலரினைத் தேடிடுத்திறத்தோர் க்கண்டு. [2]மலர்கள்எல்லாம். [3]காலே. [4]மலர்ந்தன, மலித்தன. (கஎஉஅ)

கூ. மெய்யுற [1]வுணர்வு செல்லா [2]வறிவினை வினையி [3]னூக்கும்
பொய்யுறு பிறவி போலப் போக்கரும் பொங்கு கங்கு
னெய்யுறு நெருப்பின் [4]வீங்கி நிமிர்கர வுயிர்ப்பு நீளக்
கையற வுறுகின் றூரார் காணலாங் கரையிற் [5]றன்றே.

(இ - ள்.) மெய் உற உணர்வு செல்லா அறிவினை - உண்மைபொருந்த அறியமாட்டாத [தத்துவஞானமில்லாத] (ஒருவனுடைய) புத்தியை, வினை யில் தூக்கும் - தீவினைவழியிலே வலியச்செலுத்துகிற, பொய் உறு பிறவி போல-பொய்த்தன்மைகள்பொருந்தியபிறப்புப்போல, போக்கு அரு பொங்கு-நீக்கமுடியாது மேன்மேல்வளர்கின்ற, கங்குல் - அந்தஇரவிலே,—(இராம லக்ஷ்மணர்) உயிர்ப்பு - பெருமூச்சு, நெய் உறு நெருப்பின் வீங்கி நிமிர்கர-நெய்சொரியப்பெற்ற நெருப்புப்போல (மிகஉஷ்ணங்கொண்டு) மிகவும் அதி கப்பட, நீள - நெடுமையாக, கையறவு உறுகின்றூர் - செயலறுதலே [அளவி றந்தசோகத்தை] அடைகின்றவர்களாஞ்சுக்; (அவர்களுற்ற கையறவு), காணல் ஆம் கரையிற்று அன்று - காணுதற்குஉரியமுடிவையுடையதன்று [கரைகாணவொண்ணாதது]; (எ - று.)—ஆல், அன்றே - அசைகள்.

தத்துவஞானமுடையோர்க்கன்றி மற்றையோர்க்கு விடாதுவருகிற பிறப்பு நீக்கமுடியாதவாறுபோல, மனவுறுதியில்லாது வருத்துகிற இவர்க்

கும் சோகம் நீக்கமுடியாதிருந்தது. கையறவு - மூர்ச்சையுமாம்: செயலற்றிருத்தல், தொழிற்பெயர். வினையின் ஊக்கும் எனப் பிரித்துரைப்பினுமாம். சாரமற்றதாயிருந்தும் சாரமுடையதுபோலத் தோன்றி மயக்குதலின், 'பொய்யுறு பிறவி' எனப்பட்டது. கங்குல் நெய்யுறு நெருப்பின் வீங்கி நிமிர்தர என்றுரைத்து, இருள் நெய்சொரிந்த நெருப்புப்போல மேன்மேல் வளர்த்துவருத்த என்று உரைப்பாரு முளர். காணலாங்கையிற்றன்று என் பதற்குக் கங்குலை எழுவாயாகக்கொள்ளின், இணைபிரிந்தவர்களுக்கு விரக வேதனையால் இரவு நீட்டித்துத்தோன்றிவருத்து மாதலால், சீதையைப்பிரிந்த இராமனுக்கு இரவு எல்லோகாணமுடியாததாக, இராமன் படும்வருத்தத்தைக் காணுதலால், இலக்குமணனுக்கும் அவ்விரவு அவ்வாறுபிற்று என்க. பி-மீ: — [1]உணர்தல், அறிவு. [2]அறிவினன். [3]ஊக்குப். [4]மானகிமிர்தர. [5]அன்றே. ()

.

கூ.—இராமபிரான் அவ்விரவழுவதுந் சிறிதுந் துயில்கொள்ளாமை.

யாமது தெரிதற் றேற்று மின்னைகைச் சனகி யென்னுங்
காமரு திருவை நீத்தோ முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல் வீரன் கண்ணினைத் தெரிந்த செய்ய
தாமரை கங்குற் போதுங் [1]சூரிந்திலாத் தன்மை யென்னே.

(இ - ள்.) தேன் மரு தெரியல் வீரன் கண் என தெரிந்த - தேன் பொருந்திய மலர்மாலையை யணிந்த வீரனுகிய இராமபிரானது கண்களென்று சொல்லப்பட்ட, செய்ய தாமரை - செந்தாமரைமலர்கள், கங்குல் போதும் - (குவியவேண்டிய) இராப்பொழுதிலும், குவிந்திலா தன்மை - குவியாதிருக் தலை,—இன் கதை சனகி என்னும் காமரு திருவை நீத்தோ - இனிய புன் சிரிப்பையுடைய சீதையென்னப்பட்ட அழகிய இலக்குமியை இழந்ததனா லோ? முகம் மதி காண்கிலாதோ - (அவளது) முகமாகிய சந்திரனைக்காணுத தனாலோ? என்னே - யாதுகாரணத்தாலோ? யாம் அது தெரிதல் தேற்றும் - நாம் அக்காரணத்தை (இன்னதென்று) அறியமாட்டோம்; (எ - று.)

இது, கவிக்கூற்று. திருவை [செல்வத்தை] இழந்தவன் இரவிற் கண் மூடியுறங்காமைபோல, திருவை [சீதையை] இழந்த இராமனும் அவ்விர வில் கண்மூடித்தூங்கவில்லை; சந்திரனைக் கண்டு குவியுந்தன்மையுள்ள தாம ரை அதனைக்காணுவிடத்துக் குவியாததாலால், இராமனது கண்களாகிய தாமரைகளும் சீதையின்முகமாகிய சந்திரனைக் காணப்பெறுமையாற் குவிய வில்லையென்க. 'கண்ணினைத்தெரிந்த செய்யதாமரை' என்றவுருவகத்தில் 'எனத்தெரிந்த' என்ற சொல்லாற்றலால் கண்ணெனவே கொண்டு அது மூடாததற்கு 'திருவை நீத்தோ' என்றும், தாமரையென்ற உருவகத்திற்கு எற்ப அது குவியாததற்கு 'மதிகாண்கிலாதோ' என்றும் காரணங் கூறின ரென்க: காரணம் துணிந்து சொல்லக்கூடாமையால் யாமது தெரிதறேற் றும்' என்றது. இனி, திருவில்லாதபொழுது பொலிவிழந்து குவிதலும், சந்திரனில்லாத இரவிலும் சிறுபான்மை குவிதலும் தாமரைக்கு இயல்பா

யிருக்க, இது அதற்கு மாறுயிருத்தல்பற்றி, 'யாமதுதெரிதல்தேற்றும்' என்றுரென்பாருமுளர். இவ்வாறன்றி ஒருமனைக்கு உரியளாய் அதனுள் தனியே வாழ்ந்திருந்தவள் திடீரென்று அம்மனையை விட்டு அகன்றால், அம் மனை இரவிலுங் கதவடைக்கப்படாமல் திறந்தபடியே வாளாகிடத்தல் இயல்பாதலால், அத்தன்மையை இங்கே கொண்டு, செந்தாமரைமலர்க்கு உரியளாய் அதில்வாழுந் திருமகளாகிய சீதை நீங்கியதனால் அத்தாமரைமலர் இரவிலுங் குவியாதுகிடந்ததோ என்று சங்கித்துக் கற்பனைகூறின ரென்றலுமுண்டு. இராமனது திருக்கண்ணுக்குத் திருமகள்வாழுஞ் செந்தாமரையை உவமையெடுத்துக்கூறியதனால், அப்பெருமான் பிராட்டியைத் தனது கண்ணினுள்வாழுங் கருமணியாகக் கொண்டு மிகப்பராட்டி வெகுஅருமையாகப் போற்றிவந்தன னென்பது விளங்கும். ஓகாரங்கள் - ஐயப்பொருளன. உம்மை-சிறப்புமை. உருவகவணியும் ஐயவணியும் விரவியன. பி-ம்:— [1]குவியலாத். (கஅசஅ)

நி.—இதுவும்அது.

பெண்ணியற் பிற மன்ன பேரொளி மாட்டி மாட்டு
நண்ணிய பிரிவு செய்த [1]கவையிலா கவையி னுள்ளத்
தெண்ணிய தறித றேற்ற [2]மிமைத்தில விராம னென்னும்
புண்ணியன் கண்ணும் வன்றிறட் டம்பிகண் போன்ற வன்றே.

(இ - ள்.) பெண் இயல் தீபம் அன்ன - பெண்தன்மைபெற்றதொரு விளக்கைப் போன்ற, பேர் எழிலாட்டி மாட்டு-மிக்க அழகையுடையவளான சீதையின் விஷயமாக, நண்ணிய - பொருந்திய, பிரிவு—, செய்த-(தனக்கு) உண்டாக்கிய, கவை இலா கவையின் - இகழ்ச்சியில்லாத பெருங்குற்றத்தினால், (இராமன்), உள்ளத்து எண்ணியது-(தன்மனத்தில் நினைத்ததை,அறிதல் தேற்றும் - (இன்னதென்று யாம்) அறியோம்: இராமன் என்னும் புண்ணியன் கண்ணும் - நல்வினைவடிவாகிய அவ்விராமனது கண்களும், இமைத்தில-மூடியுறங்காதனவாய், வல் தோள் தம்பி கண் போன்ற - வலியதோள்களையுடைய (அவனது) தம்பியாகிய இலக்குமணனது கண்களை யொத்திருந்தன; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

வனஞ்சென்றதுமுதல் மீளுமளவும் பகிலுன்குவருங்காலம் இராமனையும் சீதையையும் துன்பமின்றிக் காப்பதற்காக இலக்குமணன் இரவிலும் கண்மூடாமலிருந்தமைபற்றி, அவனது கண்கள், விரகவேதனையால் துயிலற்றிருந்த இராமனது கண்களுக்கு உவமையாயின வென்க. "அல்லியாண்டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச, வில்லியுன்றிய கையோடும் வெய் துயிர்ப்போடும் வீரன், கல்லியாண்டுயர்ந்த தோளாய் கண்கணீர்சொரியக் கங்குல், லெல்லி காண்பளவு நின்ரு னிமைத்திலனயன மென்ரு ன்" என்ற குகப்படலத்துச் செய்யுளும், "மாலவாய் நியமஞ்செய்து மரபுளியியற்றி வைகல், வேலவாயமிர்தன்னலும் வீரனும் விரித்தகாணல், மாலவாய்ப் பாரின்பாயல் வைகினன் வரிவிலேந்திக், காலவாயளவுந்தம்பி யிமைப்பிலன்

காத்துநின்றான்'' என்ற கங்கைப்படலத்துச்செய்யுளும் ஈண்டுக் காண்டற்கு உரியன. மிக்கஅழகையுடைய சீதைக்கு உலகிலுள்ளபொருளொன்றும் ஒப்பாகாதாதலால், அவ்வழகுமிகுதியை விளக்க, 'பெண்தன்மைகொண்டதொரு விளக்கு'' என இல்பொருளுவமை கூறினர். நவையென்றது - சீதையைப் பிரிந்த வருத்தம். தான் காப்பாற்றவேண்டிய தருமபத்தினியைப் பிரிந்ததனால் வருந்துவது நியாயமேயென்பதை விளக்க, 'நவையிலா' என்ற அடைமொழி அதற்குக்கொடுக்கப்பட்டது. கண்துயிலாமைக்குக் காரணம் உள்ளத்திற்கொண்ட சிந்தனையென்பதை அறிவோமாயினும், அப்பெருமான் அப்பொழுது சிந்தித்தவற்றையெல்லாம் இன்னவென்று அறியோமென்பார், 'உள்ளத்து எண்ணியது அறிதல்தேற்றும்' என்றார். எழிலாட்டி - எழிலை ஆள்பவள். பி - ம்:—[1]நவையினுரவங்கொல்சிந்தை, நவையினுரவர்கள் சிந்தை. [2]இமைப்பில. (கoசக)

கூ.—சந்தி ரோதயம்.

வண்டுளர் கோதைச் சிதை வாண்முகம் [1]பொலிய வானிற்
கண்டனென் [2]என்று வீரற் [3]காங்கொரு காதல் காட்டத்
தண்டமிழ்த் தென்ற லென்னுங் கோளராத் [4]தவழுஞ் சாரல்
விண்டலம் [5]விளக்குஞ் செவ்வி வெண்மதி விரிந்த தன்றே.

(இ - ள்.) 'வண்டு உளர் கோதை சிதை-வண்டுகள் மொய்த்துஒலிக்கிற பூமாலையை யணிந்த சீதையினது, வாள் முகம் - ஒளிபொருந்திய முகத்தை, வானில் - ஆகாயத்தில், பொலிய - விளங்க, கண்டனென் - பார்த்தேன்,' என்று—, வீரற்கு ஒரு காதல் காட்ட - இராமபிரானுக்கு ஒரு ஆசையை உண்டாக்கும்படி—, தண் தமிழ் தென்றல் என்னும் கோள் அரா தவழும் சாரல் - குளிர்ந்தஇனிமையையுடைய தென்றலென்னப்பட்ட கொல்லுந்தன்மையுள்ள பாம்பு தவழ்பெற்ற மலைப்பக்கத்திலே, விண் தலம் விளக்கும் செவ்வி வெள் மதி - ஆகாயதலத்தை விளங்கச்செய்யவல்ல அழகிய வெண்மையான சந்திரன், ஆயகு-(இராமன்வருத்தும்) அச்சமயத்தில், விரிந்தது-உதித்துஒளி வீசி விளங்கிற்று;(எ - று.)—அன்றே - ஈற்றசை.

இனிச் சீதையைக் காணமாட்டோமென்று ஆசையொழிந்திருந்த இராமபிரானுக்கு அவளதுமுகத்தைக்கண்டோமென்று ஓராசையுண்டாம்படி சந்திரன் உதித்தனனென்க. இங்கு மயக்கவணி தொனித்தல் காண்க. பிரிந்தவரை வருத்துகிற காமோத்தீபகப்பொருள்களுள் தென்றலும் ஒன்றுதலால், அதனைக் கோளராவாக உருவகப்படுத்தினர். தமிழ்என்பது - இனிமையென்னும்பொருளதாதலை, ''தமிழ்தழியசாயலவர்'' என்னுஞ் சிந்தாமணியாலும் உணர்க. சாரலில் வெண்மதி விரிந்தது எனவே, மலையின் உயர்ச்சி விளங்கும். வண்டு உளர்கோதைச்சீதை - இயற்கைநறுமணத்தாலும் சூடியமலர்களிஞலாகிய செயற்கைநறுமணத்தாலும் வண்டுகள்மொய்த்து ஆரவாரிக்கப் பெற்ற கூந்தலையுடைய சீதை யெனினுமாம். தமிழ்த் தென்றல் - தமிழ்ப்

பாஷைபோலினிய தென்றல்; தமிழ்நாட்டிலிருந்துவருகிற தென்றல் எனலு மாம். **பி - மீ:**—[1]போல. [2]என்ன. [3]ஆண்டு. [4]தழுவும். [5]விளங்கும். (க0சூ)

எ.—நிலவு இராமனை வருத்துதல்.

களியுடை யனங்கக் கள்வன் கரந்துறை கங்குற் காலம்
வெளிபடுத் துலக [1]மெங்கும் விளக்கிய நிலவின் வெள்ள
நளியிருட் பிழம்பென் றீண்டு நஞ்சொடு கலந்த நாகத்
தூளையெயிற் [2]றூன்ற லுற்ற வாலெனச் சுட்ட தன்றே.

(இ - ள்.)களி உடை அனங்கன் கள்வன் கரந்து உறை கங்குல் காலம் - செருக்கையுடைய மன்மதனுகிய திருடன் ஒளித்துவைக்கிற அவ்விராப்பொழு திலே, உலகம் எங்கும் வெளிபடுத்து விளக்கிய நிலவின் வெள்ளம் - உலகம் முழுவதையும் வெளிப்பட்டுவிளங்கச்செய்த நிலாவின் மிகுதியானது,—நளி இருள் பிழம்பு என்ற ஈண்டு நஞ்சொடு கலந்த - பெரிய இருட்கூட்ட மென் னப்பட்ட நெருங்கிய விஷத்துடன் சேர்ந்த, நாகம் தூளை எயிறு - பாம்பி னது தூளைபொருந்திய விஷப்பல்லில், ஊன்றல் உற்ற-உள்ளிருத்தலைப் பொருந்திய, ஆல் என-விஷம்போல, சுட்டது - (இராமனை)மிக வருத்தியது.

சகலலோகசர்த்தாகிய இராமபிரானையே வருத்துந் சமயம் வாய்த்த தனால், மன்மதன் செருக்குடையவனுயினன். மன்மதனைக்குறிக்கும் 'மதனன்' என்ற வடமொழிப்பெயர்க்குக் களிப்புச்செய்பவனென்று பொருளாதலால், அதுபற்றி 'களியுடையனங்கன்' என்றருளுமாம். அநங்கன் - அங்கம் [சரீரம்] இல்லாதவன். அவனைக் கள்வனுக உருவகப்படுத்தியது, தான் கட்புலனுகாது மறைந்திருந்து பிரிந்தாரை வருத்துதலால். மிக்க நிலாவானது இருளில் முழுகிக்கிடந்த உலகத்தை அதினின்று நீக்கி விளக்கியது என்பது, இரண்டா மடியின் கருத்து. பாம்பு - சந்திரனுக்கும், பாம்பின்பற்கள் - நிலவின் வெள் ளத்திற்கும், நஞ்சு - இருட்பிழம்பிற்கும் உவமை. நளி - பெருமை; உரிச் சொல். என்றீண்டு - தொகுத்தல். [2]ஊறலுற்றவாலெனஎன்ற பாடத்திற்கு - தூளை எயிறு-தொளையையுடைய நச்சுப்பற்களினின்று, ஊறல் உற்ற-சுரத் தல்பொருந்தின, ஆல் என-விஷம்போல என்க: ஆல் - ஆலம் என்பதன் விகாரம். **பி-மீ:**—[1]எல்லாம். [2]ஊன்றலுற்றதாமென. (க0சஉ)

அ.—இதுமுதற் பதினேழுகவிகள் - இராமன்சீதையை நினைத்து வருந்துதலைத் தெரிவிக்கும்.

இடம்படு [1]மானத் துன்ப [2]மிருடரா வெண்ணிற் றீர்ந்தான்
விடம்பரந் தனைய தாய வெண்ணிலா வெதுப்ப வீரன்
படம்பரந் தனைய வல்குற் பால்பரந் தனைய [3]வின்சொற்
றடம்[4]படு கண்ணி னுடன் றனிமையை நினைய லுற்றான்.

(இ - ள்.) வீரன்-இராமபிரான்,—விடம் பரந்து அனையது ஆய வெள் நிலா வெதுப்ப-விஷம்பரவியதுபோன்றதாகிய வெள்ளியநிலாவானது வருத் தவும், இடம் படு மானம் துன்பம் இருள் சர - (இராவணன் சீதையைக் கவர்ந்ததனுலாகிய) பெரிய அவமானத்தினுல் உண்டான துன்பம் அறிவைக்

கெடுக்கவும்,எண்ணின் தீர்ந்தான்-பிறஎண்ணங்களினின்று ஒழிந்தவனுகி,—படம் பரந்து அனைய அல்குல் - பாம்பின்படம்விரிந்தாற்போன்ற அல்குலையும், பால் பரந்து அனைய இன் சொல் - பாலின் இனிமைமிகுந்தாற்போன்ற இனியசொற்களையும், தட படு கண்ணினுள் தன் - மீட்சிபொருந்திய கண்களையு முடையவளாகிய சீதையினது, தனிமையை-(தன்னைப்பிரிந்து) தனிப்பட்டதன்மையைப்பற்றி, நினையல்உற்றான் - நினைப்பவனுனான்; (எ - று.)

மனையாளை மாற்றான்கொண்ட பேரவமானத்தின்பத்தினு லுண்டான அறிவுமயக்கத்தை 'இருள்' என்றார். பால் - அதன் இனிமைக்கு ஆகுபெயர். 'விடம்பரந்தனையதாயவெண்ணிலா' என்றது, மிகவருத்தக் தருங் கொடுமை பற்றி; நிறம்பற்றியன்று. பி - மீ:— [1]மானம். [2]இரண்டும்வந்துற்றபோது. [3]தீஞ்சொற். [4]பெருங். (கஎசச)

வேறு.

கூ. மடித்த வாயன் வயங்கு முயிர்ப்பினன்
றுடித்து வீங்கி யொடுங்குறு தோளினன்
பொடித்த கண்டளிர்ப் பூவொடு மால்கரி
யொடித்த கொம்பனை யாடிறத் துன்னுவான்.

(இ - ள்.) (இராமபிரான்),—மடித்த வாயன்-(வருத்தத்தினலும் கோபத்தினலும்) மடித்த உதட்டையுடையவனும், வயங்கும் உயிர்ப்பினன்-வெளிவிளங்குகிற பெருமூச்சையுடையவனும், துடித்து வீங்கி ஒடுங்குறு தோளினன் - (மனச்சஞ்சலத்தால்) துடித்து (ப் பகைவனையழிக்கவேண்டுமென்ற மனக்கிளர்ச்சியால்) பூரித்து (மனவுறுதியழிந்தமையால்) தளர்ச்சியடைகிற தோள்களையுடையவனுமாகி,—மால் கரி ஒடித்த - பெரிய யானையினுல் ஒடிக்கப்பட்ட,பொடித்த தண் தளிர் பூவொடு கொம்பு அனையாள் திறத்து-வெளித்தோன்றிய குளிர்ந்த தளிரோடும் பூக்களோடுங் கூடிய கொம்பை யொத்தவளாகிய அச்சீதையின் விஷயமாக, உன்னுவான் - நினைப்பவனுனான்;(எ-று.)

மால்கரி - இராவணனுக்கும், கொம்பு - சீதைக்கும், தளிரும் பூவும்-அவளது மேனிநிறத்துக்கும் அவயவங்களுக்கும் உவமை.

இதுமுதற் பத்தொன்பது கவிகள்- மாரீசன்வதைப்படலத்தின் உசந்துங் கவி போன்ற கலிவிருத்தங்கள். (கஎசடு)

கஎ. [1]வாங்கு வில்லன் வரும்வரு மென்றிரு
பாங்கு நீணெறி [2]பார்த்தன லோவெனும்
வீங்கும் வேலை விரிதிரை யாமென
வோங்கி யோங்கி யொடுங்கு முயிர்ப்பினன்.

(இ - ள்.) (இராமபிரான்),— வேலை வீங்கும் விரி திரை ஆம் என - கடலில் மிகுகின்ற பரந்த அலைகள்போல, ஓங்கி ஓங்கி ஒடுங்கும் - உயர்ந்து உயர்ந்து அடங்குகிற, உயிர்ப்பினன் - பெருமூச்சையுடையவனுகி,—வாங்கு வில்லன் வரும் வரும் என்று இரு பாங்கும் நீள் நெறி பார்த்தனலோ எனும்-

(இராவணன்கையில்அகப்பட்டபோது சீதை) வளைத்த வில்லையுடையவனுய் (நம்கணவன்) வருவான்வருவானென்று எண்ணி இரண்டுபக்கங்களிலுமுள்ள நீண்டவழியைப் பார்த்தாளோ?' என்று சிந்திப்பான்; (எ - று.)

வரும்வரும்என்ற அடுக்கு - தன்னைமீட்பதற்கு இராமன்வருவது நிச்சயமென்ற கருத்தை விளக்கிற்று. ஓங்கி ஓங்கி - அடுக்கு, இடைவிடாமைப் பொருளது. பார்த்தனளோ, ஓகாரம் - ஐயத்தோடு இரங்குதற் பொருளது. பெரியகடலில் கிளர்ந்துகிளர்ந்து அடங்கும் அலை, கரிய இராமனிடத்தில் உயர்ந்துஉயர்ந்து தோன்றியொடுங்கும் மூச்சுக்கு உவமையாயிற்று. பி-ம்:— [1]வாங்கும். [2]பார்த்தனையோ. (கo சசு)

கக. [1]என்னி னைந்தில ளென்பது [2]சாலுமோ
மின்னி னைந்த [3]விலங்கு மெயிற்றினு
னின்னி லென்று [4]நெருங்கிய போ[5]தவ
ளென்னி னைந்தன ளோவென வெண்ணுமால்.

(இ - ள்.) 'மின் நினைந்த விலங்கும் எயிற்றினுன் - மின்னல்போன்ற விலகியுள்ள கோரதந்தங்களையுடையஇராவணன், நில்நில் என்று நெருங்கிய போது - (சீதையை நோக்கி) நில்நில்என்றுசொல்லிக்கொண்டு கிட்டியகாலத்தில், அவள் என் நினைந்திலள் என்பது சாலுமோ-அச்சீதை என்னைநினைக்க வில்லை யென்றுசொல்லுவது (அவளதுகுணத்துக்குத்) தகுதியாயிருக்குமோ? [இராது என்றபடி]; (அப்படி அவள்நினைத்து எதிர்பார்த்தும் நான் அவளைக் கிட்டாமையால்), என் நினைந்தனளோ - (என்விஷயத்தைப்பற்றி) யாது நினைந்தனளோ?' என எண்ணும்-என்றுநினைப்பான், (இராமன்); (எ - று.)

கீழ்க்கவியில் தன்னைச்சீதை எதிர்நோக்கியிருப்பாளென்று கருதியதை இக்கவியின்முதலடியால் அவ்வாறு நினையாமலிருப்பது அவள்பெருமைக்குத் தகுதியன்றென்று கருதி வற்புறுத்தினுன். 'என் நினைந்தனளோ' என்றது-உதவவேண்டியகாலத்திலும் தான் வந்துஉதவாமையால், மானுருக்கொண்டு வந்த அரக்கனுல் இராமனுக்கு யாதுதீமைநேர்ந்ததோ வென்று எண்ணிச் சீதை வருந்தியிருப்பாளென்பதை விளக்கும். [1]தன்னினைந்திலள் என்றபாடத்துக்கு-தன் நினைந்திலள் என்பது சாலுமோ - (இராவணன்சமீபித்தபோது அவள்) தனது நிறையொழுக்கத்தைக் கருதினுளில்லை யென்பது தகுதியுடைத்தோ என்று பொருள்; அவள் கற்புநிலைகுலைந்திருப்ப ளென்று எண்ணுவது தகாது என்பது கருத்து: இனி,அப்பாடத்துக்கு, தன்னில் நைந்திலள் என்று பதம்பிரித்து-தன்னிலேதான் வருந்தினுளில்லை யென்று கருதுதல் அடாது என்று உரைப்பாருமுளர். நினைந்த - உவமவுருபு. என் நினைந்தனளோ என்பது - என்னை நினைத்தாளோ என்றும் பொருள்படும். ஆல் - ஈற்றசை. பி - ம்:— [2]சாலுமே. [3]எயிற்றின்விலங்கினுன். [4]நெருக்கிய. [5]அவண். (கo சள)

கஉ. நஞ்சு காலு நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயின் மதியென மட்குவாள்

வெஞ்சி னஞ்செ யரக்கர் தம் வெம்மையை
யஞ்சி னன்கொலென் றையுறு மாலென்பான்.

(இ - ள்.) 'நஞ்சு காலும் நகை நெடு நாகத்தின் வஞ்சம் வாயில் மதி னை மட்குவாள் - விஷத்தைக் கக்குகின்ற பற்களையுடைய (இராகுவென் னும்) பெரிய பாம்பினது கொடுமையுடைய வாயில் (அகப்பட்ட) சந்திரன் போல ஒளிமழுங்குபவளாகிய சீதை,— (நான் வாராததனால்), வெம் சினம் செய் அரக்கர்தம் வெம்மையை அஞ்சினன் கொல் என்று ஐயுறும்-கொடிய கோபத்தையுடைய இராக்கதர்களது கொடுமைக்கு (இராமன்) பயப்பட்டா னோ?' என்று சந்தேகப்படுவாள்,' என்பான் - என்றுசிந்திப்பான், (இராமன்).

இராகுவின்வாய்ப்பட்டமதி, இராவணன்கைப்பட்ட சீதைக்கு உவமை. ஐயுறும் - ஐயமுறும்; தொகுத்தல்: செய்யுமென் முற்று இங்கே பெண் பாலுக்கு வந்தது. கொல்- ஐயம். ஆல்-அசை: தேற்றமுமாம். (கoசஅ)

கூ. பூண்ட மானமும் போக்கருங் காதலுந்
தூண்ட நின்றிடை தோமுறு மாருயிர்
மீண்டு மீண்டு வெதுப்ப வெதும்பினன்
வேண்டு மோவெனக் கின்னமும் வில்லென்பான்.

(இ - ள்.) பூண்ட மானமும் - (தனக்கு) நேரிட்ட அவமானமும், போக்கு அரு காதலும் - நீக்கமுடியாத ஆசையும், தூண்ட - தூண்டுதலினால், இடை நின்று - நடுவிலே அழியாதுநின்று, தோம் உறும்-வருத்தமடைகிற, அரு உயிர் - அரியஉயிரை, மீண்டு மீண்டு வெதுப்ப - (அவை) மாறி மாறி வருத்துவதனால், வெதும்பினன்-மனம்வருந்தினவனாகி, (இராமன்), 'எனக்கு இன்னமும் வில் வேண்டுமோ—?' என்பான் - என்றுசொல்வான்; (எ - று.)

சீதையை யிழந்த அவமானம் ஒருபக்கத்திலும், மீண்டுங்கிடைப்பளோ வென்ற ஆசை மற்றொருபக்கத்திலுமாக மாறிமாறிவருத்த,இடையில்அகப்பட் டுக்கொண்டு போகவும்விற்கவும் மாட்டாமல் தவிக்கும் உயிருடையவனாகி இரா மன் ஒருசெயலுஞ்செய்யமுடியாமல், 'சமயத்திற்பயன்படாத இத்தவில் இனி இருந்து யாதுபயன்?' என வருந்திக்கூறினனென்க. சில ஏட்டுப்பிரதி களில், முதலிரண்டடிகள் மாறிக்கிடக்கின்றன. (கoசகூ)

கச. வில்லை நோக்கி நகுதிரு வீங்குதோட்
கல்லை நோக்கி நகுங்கடைக் கால்வருஞ்
சொல்லை நோக்கித் [1]துணுக்கெனுந் தொன்மறை
யெல்லை நோக்கினர் யாவரு நோக்குவான்.

(இ - ன்.) தொல் மறை எல்லை நோக்கினர் யாவரும் நோக்குவான் - பழமையானவேதத்தின்முடிவை [வேதாந்தத்தை] அறிந்தவர்களெல்லாரா லும் கண்டறியப்படுபவனான இராமபிரான்,—வில்லை நோக்கி நகும் - (தன் கையிலுள்ள) வில்லைப்பார்த்து(ப் பயனற்றதே யென்று) சிரிப்பான்; மிக

வீங்கு தோள் கல்லே நோக்கி நரும் - மிகவும்பருத்துள்ள (தனது) தோள்களாகிய மலைகளைப் பார்த்து (வீணுக்குப்பருத்திருக்கின்றனவே யென்று) சிரிப்பான்; கடைக்கால் வரும் சொல்லே நோக்கி துணுக்கெனும் - (மனைவியைக் காவாதுஇழந்தனனே யென்று தனக்கு) இறுதிக் காலத்து நேரிடுகிற (உலகத்தார்கூறும்) பழிச்சொல்லைச் சிந்தித்துத் திடுக்கிடுவான்; (எ - று.)

வேதாந்திகளுக்கே விஷயமாகிற பரம்பொருளான இராமபிரானே இவ்வாறுவருந்தினனென்று பிரிவின் கொடுமையை விளக்கியவாறு. நகை - இகழ்ச்சிபற்றியது. கல் - ஆகுபெயர். கடைக்கால்-பின்பு என்றபடி. பி - ம்:— [1]துணுக்குறும். (கஅருஅ)

கரு. கூதிர் வாடை வெங் கூற்றினே நோக்கினன்
வேத வேள்வி விதி முறை மேவிய
சீதை யென்வயிற் றீர்ந்தன ளோவெனும்
போத கம்மெனப் பொம்மெ னுயிர்ப்பினன்.

(இ - ள்.) போதகம் என பொம்மென் உயிர்ப்பினன் - யானைபோலப் பொம்மென்றஒலியுடன் விடும் பெருமூச்சையுடையவனும், கூதிர் வாடை வெம் கூற்றினே நோக்கினன் - குளிர்ந்த காற்றுகிய கொடிய யமனை நோக்கி, 'வேதம் விதி முறை வேள்வி மேவிய - வேதவிதிப்படி செய்த சடங்குகளால் மணந்துகொண்ட, சீதை—, என்வயின்-என்னிடத்தினின்றும், தீர்ந்தனள்-நீங்கிவிட்டனள்: ஓ - அந்தோ!' எனும் - என்பான், (இராமன்); (எ - று.)

விரகவேதனையால் அறிவுமழுங்கிக் கிடந்த இராமன், பிரியாதார்க்குக் குளிர்ந்திருக்கவேண்டிய காற்றுக் கொடியயமன்போலக் காமோத்தீபகமாய்த் தன்னைவருத்தியதனால், சீதையின்பிரிவையுணர்ந்தா னென்க. ஓகாரம்-இரக்கம். போதகம்மெனை - விரித்தல். போதகம்-யானைக்கன்று; பருவப்பெயராகாமல் யானையென்றமாத்திரமாய் நின்றது. மூன்றுமடிக்கு - சீதை என்னிடத்தினின்று நீங்கினளோ என்பான் எனினுமாம். பொம்மெனல்-ஒலிக்குறிப்பு.

கசு. நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயா
னென்று ணைக்குல மங்கையொ டேர்ந்திழை
தன்[1]று யர்க்குந் [2]தகவிலை ஞயினே
னன்று நன்றென் வலியென நாணுமால்.

(இ - ள்.) 'நின்று பல் உயிர் காத்தற்கு நேர்ந்த யான் - (மூன்பு தந்தையின் வார்த்தைப்படி அரசனும்) நின்று (உலகத்துப்) பலவுயிர்களையும் பாது காத்தற்கு உடன்பட்ட நான், ஓர் ஏந்து இழை என் தூணை குலம் மங்கை தன் துயர்க்கும் தகவு இலென் ஆயினேன்-அணிந்த ஆபரணங்களையுடைய வளாகிய எனக்குத் துணைவி [மனைவி]யான ஒரு குலஸ்திரீயினது துன்பத்தை நீக்குதற்கும் தகுதியற்றவனாய் விட்டேன்; என் வலி நன்று நன்று - எனது பலம் மிகநன்றாயிருந்தது!' என-என்று, நாணும்-நாணமடைவான், (இராமன்); (எ - று.)

'நின்றுபல்லுயிர்காத்தற்குநோற்ற யான்' என்பதற்கு, (கீழ் அகத்தியப் படலத்தில்) "ஆ ரறத்திலெ டன்றி நின்ற ரவர், வேரறுப்பென் வெருவன் மின் நீர்" என்று இருடிகளே நோக்கி யாவரையுந் தீங்கின்றிக் காப்பதாக வாக்குத்தத்தஞ்செய்த யானென்று பொருள்கூறினும் அமையும். அடுக்கு - இசழ்ச்சிபற்றியது. ஆல்-அசை. பி-ம்:—[1]துயர்க்குத்,துணைக்குச். [2]தகைப்பில.

கஎ. [1]சாயுந் தம்பி திருத்திய தண்டளிர்
தீயு மங்கவை [2]தீர்கெனுஞ் [3]செவ்விருந்
தாயு [4]மாவி புழுங்க வழுங்குமால்
[5]வாயு நெஞ்சும் புலர மயங்குவான்.

(இ - ள்.) வாயும் நெஞ்சும் புலர மயங்குவான்-வாயும் மனமும் வறண்டு போக மயக்கமுற்றவனாகி,—தம்பி திருத்திய தண் தளிர் சாயும் - தம்பியான இலக்குமணன் தேடியமைத்த குளிர்ந்த தளிர்த்தயிலிற் படுப்பான்; அங்கு-அப்பொழுது, தீயும் - (தண்ணுடம்பின் வெம்மைபொறுக்கமாட்டாது) தீந்து போகிற, அவை - அத்தளிர்கள், தீர்க - நீக்கப்படக்கடவன, எனும் - என்று (இலக்குமணனே நோக்கிச்) சொல்வான்; செம் விருந்து ஆயும் - (பிறகு இலக்குமணன் அவ்வாறேநீக்கி வேறு கொணர்ந்து அமைத்த) சிவந்த புதியதளிர்களே (இவையாயினும் இன்பந்தருமோ வென்று மனத்தில்) ஆராய்வான்; ஆவி புழுங்க அழுங்கும் - (அவைகளும் முன்போல வருத்தத் தொடங்கவே) உயிருருகச் சோர்வான், (இராமன்; (எ - று.)—ஆல் - அசை.

தளிர்ப்படுக்கையமைப்பது, சீதாபசாரத்திற்காக. தீயும் என்பதை முற்றுகக்கொள்ளுதலும் ஒன்று. தீர்கெனும் - தொகுத்தல். விருந்து-புதுமை; இங்குப் பண்பாகுபெயர். [3]செல்விருந்தாயும் என்ற பாடத்திற்கு - தன்னை நோக்கி வரக்கடவ விருந்தைக் குறித்து ஆராய்வா னென்று பொருள்: இனித் தன்பக்கல் விருந்தினர் வந்தால் அவர்களைக் கிருகஸ் தாச்சிரமதருமமுறைப்படி மனையியுடனே கூடி உபசரிக்க முடியாதே யென் பதைப்பற்றிச் சிந்திப்பானென்பது கருத்து. பி-ம்:—[1]தீதுற். [2]தீர்த்தலும். [4]ஆவியுநெஞ்சமழுங்கிட. [5]ஓயுமோயுமுயிர்க்குமுயிர்க்குமே. (கஅநுங)

கஅ. பிரிந்த [1]வெதுகொல் பேரறி மானங்கொ
றெரிந்த தில்லை திருமலர்க் கண்ணிமை
பொருந்த வாயிரங் கற்பங்கள் போக்குவா
னிருந்து கண்டிலன் கங்குலி னீறரோ.

(இ - ள்.) திரு மலர் கண் இமை - அழகிய தாமரைமலரையொத்த (தனது) கண் இமைக்கும்பொழுதில், ஆயிரம் கற்பங்கள் பொருந்த போக்கு வான் - பலஊழிகள் கழியப்பெறுபவனான திருமாலினவதாரமான இராம பிரான்,—இருந்து—, கங்குலின் ஈறு கண்டிலன் - இரவின்முடிவைக் கண்; (இந்த மாறுபாட்டிற்குக் காரணம்), பிரிந்த எது கொல் -

(சீதையைப்) பிரிந்த காரணத்தாலோ, பேர் அபிமானம் கொல்-(அவளிடத்துத் தான்கொண்டிருந்த) ஆசைமிகுதியாலோ, தெரிந்தது இல்லை - (எமக்குத்) தெரியாது; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இவ்விரண்டுமே காரண மென்பதை இவ்வாய்பாட்டால் வற்புறுத்தியவாறு. திருமலர்க்கண்ணிமை பொருந்த ஆயிரங் கற்பங்கள் போக்குவான் என்ற இதில், எம்பெருமான் காலங்கடந்தகடவு ளென்பது விளங்கும். இனி, தனது திருக்கண்துயில்கொண்டு விழித்தலால் ஊழிகள் கழியச்செய்பவ னென்றலும் தகுதியே. இனி, கண்ணிமைபொருந்த வாயிரங்கற்பங்கள் போக்குவான் என்பதற்கு - கண்ணிமைக்கும் பொழுதில் ஆயிரங்கற்பங்கள் பொருந்த வருந்திப் பொழுதுபோக்குபவ னென்றுமாம்: இப்பொருளில், பிரிவின் மிக்க துயரத்தால் ஓரிமைப்பொழுதே பலவாயிரம் ஊழிகளுக்கு ஈடாயின வென்க. கற்பம்-பிரமனுயுள். பிரிந்த வேதுகொல் என்று எடுத்து, பிரிந்ததனுலான மனவெப்பத்தினுலோ வென்றும் பொருள்கொள்ளலாம். பேரபிமானங்கொல் - தனது பெருமிதத்தைப்பற்றிய பேரபிமானமோ தெரியவில்லையென்று உரைப்பினுமாம். பி-ம்:—[1]ஏதங்கொல். (கஅருச)

கக. வென்றி வேற்கை யிளவலே [1]மேலெலா
மொன்று போல வுலப்பில நாள்கடா
நின்று காண்டியன் றேநெடுங் கங்குறு
னின்று நீள்வதற் கேதுவெ னென்னுமால்.

(இ - ள்.) வென்றி வேல் கை இளவலே - வெற்றிக்குக் காரணமான வேலை யேந்திய கையையுடைய தம்பியாகிய இலக்குமணனே (நோக்கி), 'ஒன்றுபோல உலப்பு இல நாள்கள் மேல் எலாம் நின்று காண்டி அன்றே - ஒரே மாதிரியாகத் தம்மியல்புகெடாமல் கழிந்த [அளவிறந்த] நாள்களை முன்னெல்லாம் (என்னுடனே) இருந்து பார்த்துள்ளாயன்றே? நெடுங்கங்குல் இன்று நீள்வதற்கு ஏது என் - இராப்பொழுது இன்றுமாத்திரம் நெடியதாய் வளர்வதற்குக் காரணம் யாதோ?' என்னும் - என்றுவினவுவான், (இராமன்,); (எ - று.)—தாம், தான், ஆல் - அசைகள்.

நின்று என்பதற்கு - இராமுழுதும் விழித்திருந்து என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]முன்னெலாம். (கஅருடு)

உ0. நீண்ட மாலை மதியினை [1]நித்தமும்
மீண்டு மீண்டு மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாண்முகம் [2]போதர
வீண்டு சால விளங்கினை யென்னுமால்.

(இ - ள்.) நீண்ட மாலை மதியினை - (விரகிகளுக்கு) நீண்டுகாணப்படுகிற மாலைப்பொழுதில் தோன்றுஞ் சந்திரனை (நோக்கி), 'நித்தமும் மீண்டும் மீண்டும் மெலிந்தனை வெள்குவாய் - (சீதை இங்கு உள்ளமட்டும் அவள்முகத்துக்கு ஒப்பாகவேண்டுமென்னுங் கருத்துடனே) நாடோறும் திரும்பித்திரும்பி

வந்தும் (அவள்முகத்துக்கு ஈடாகமாட்டாமையால்) உடல் தேய்ந்தவனுப் வெட்கங்கொண்ட நீ, ஈண்டு - இப்பொழுது, பூண்ட பூணவள் வாள் முகம் போதர-அணிந்த ஆபரணங்களையுடைய அச்சீதையின் ஒளிபொருந்தியமுகம் கீங்கிப்போனதுபற்றி, சால விளங்கினை - மிகவும்ஒளியுடன்விளங்குகிறாய்,' என்னும் - என்றுசொல்வான், (இராமன்); (எ - று.)—ஆல் - அசை.

கிருஷ்ணபக்ஷத்தில் இயல்பிலே குறையுந்தன்மையுள்ள சந்திரனைச் சீதையின் முகத்துக்கு ஒப்பாகமாட்டாமல் தேய்ந்ததாகக் காரணங் கற்பித்த வாறு; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. சீதையின் முகமண்டலத்துக்குச் சந்திர மண்டலம் சிறிதும் ஒப்பாகாதென்று இராமன் கருதியிருந்தமை இங்கு விளங் கும். இச்செய்யுள் - சந்திரோபாலம்பம் [சந்திரனைப்பழித்தல்]. பி-ம்:— [1]நித்தலும். [2]போதலால். (கஅருசு)

உக. நீணி லாவி னிசை[1]நிறை தன்குலத்
தாணி யாய பழிவர வன்னது
நாணி நாடு கடந்தன னுங்கொலோ
சேணு லாந்தனித் தேரவ னென்னுமால்.

(இ - ள்.) 'சேண் உலாம் தனி தேரவன் - ஆகாயத்திற் செல்லுகின்ற ஒப்பற்றதேரையுடைய சூரியன்,—நீள் நிலாவின் இசை நிறைதன் குலத்து-மிகுந்தநிலாவை யொத்துவிளங்குகிற கீர்த்திநிறைந்த தனதுகுலத்தில்,ஆணி ஆய பழி வர - நீங்காதபிழைபிற்குந்தன்மையதான பெரும்பழி வந்ததனால், அன்னது - அப்பழிக்கு, நாணி - வெட்கமுற்று, நாடு கடந்தனன் ஆம்கொல் ஓ - இந்நாட்டை விட்டு அன்றுபோயினனோ!' என்னும்-என்றுசொல்வான், (இராமன்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சூரியன் தனதுகுலத்துப் பிறந்த இராமனது மனைவியை மாற்றான் கொண்டதனால் நேரிட்ட பழிக்குப் பயந்து வெளிகி மறுபடி வராமல் மறை ந்து விட்டானே வென்று, இரவுநீட்டித்தற்கு ஒருகாரணங்கற்பித்துக் கூறிய வாறு; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. புகழை வெண்ணிறமுடையதாகக் கூறுதல் கவிசமயமாதலால், அதற்கு நிலாவை உவமைகூறினர். உலாம் - உலாவும்; செய்யுமெனைச்சத்தின் ஈற்று உயிர்மெய் சென்றது. சிலஏட்டுப் பிரதிகளில் இச்செய்யுள் அடுத்த செய்யுளின்பின் உள்ளது. பி-ம்:— [1]நின்ற. (கஅருஎ)

உஉ. சுட்ட கங்கு னெடிதெனச் சோர்கின்றான்
முட்[1]ட னைந்த நெடுமுடக் [2]கோனெடு
[3]கட்டி வாளரக் கன்கதி ரோனையு
மிட்ட னன்கொ லிருஞ்சிறை யென்னுமால்.

(இ - ள்.) சுட்ட கங்குல் நெடிது என சோர்கின்றான்-(தன்னை) வருத் திய அவ்விரவு மிகநீண்டதென்று தளர்பவனான இராமன்,—'வாள் அரக்கன்-கொடிய இராக்கதனுகிய இராவணன்;முட்டு அமைந்த நெடு முடக்கோலைடு-

கடிவாளத்தைக் கையிற்கொண்ட [சாரதியாகிய] பெரிய அருணனுடனே, கதிரோனையும்-சூரியனையும், கட்டி-(கயிற்றால்) கட்டி, இரு சிறை இட்டனன் கொல் - பெரிய சிறையில் வைத்திட்டானோ?' என்னும் - என்றுகருதுவான்; (எ - று.)—ஆல் - அசை. **ஏதுத்தற்குறிப்பேற்றவணி.**

சூரியன்சாரதியான அருணன் துடையில்லாதவனுதலால், 'முடக்கோன்' எனப்பட்டான்; இதுபற்றி இவனுக்கு வடமொழியில் 'அநூரு' என்று ஒரு பெயர்; இவன், கருடனது தமையன். காசியப முனிவரது மனைவிமார் பலருள் கத்துரு என்பவள், ஒருகால், ஆகாயமார்க்கத்தே சென்ற உச்சைச்சிரவு மென்னும் வெள்ளைக் குதிரையைக் கருநிறமுடைய தென்று மாறுபாடாகக்கூற, அவள்சகளத்தியான விநதை அதனை மறுத்து வெண்ணிறமுடைய தென்று உள்ளபடி கூறவே, இதுகாரணமாக இருவர்க்கும் மாறுபாடு உண்டாகி 'யாருரை பொய்யாகின்றதோ, அவள் மற்றவட்கு அடிமையாகக் கடவள்' என்று தம்மில் சபதம் நியமித்துக்கொள்ள, உடனே கத்துரு தனது மக்களாகிய கருநாகங்களால் அவ்வெண்பரியை மறைப்பித்துக் காரியதாகக் காட்டி வஞ்சனை வழியால் விநதையைத் தனக்கு அடிமையாக்கி, 'நீ உன்மகனால் தேவலோகத்திலிருந்து அமிருதங் கொணர்ந்து என் மக்களுக்குக் கொடுக்கையில் உனது இவ்வடிமைத்தன்மை பொழியும்' என்று விடைகூற, பின்பு விநதை, தன்கணவனருளால், ஆயிரம் வருஷ காலங் கழித்த பின் பலிக்கும் படியான இரண்டு அண்டங்களைப் பெற்று, அடைகாத்து வருகையில், ஐந்நூறு வருஷங் கழிந்தவாறே ஒருகால் 'பெண்புத்தி பின்புத்தி' ஆதலால் தனது அடிமைத்தனத்தை விரைவில் ஒழித்தலிலே கருத்துக்கொண்டு ஒரு முட்டையை எடுத்து உடைக்க, அதனுள் காலம் நிரம்பாமையால் இடைக்குக் கீழ்ப்பட்ட அவயவங்களில்லாமல் பாதிவடிவமாயிருந்த குமாரனொருவன் தோன்றி, அருணனெனப் பெயர் பூண்டு சூரியனுக்குச் சாரதியாயினனென்ற கதை இங்கு அறியத்தக்கது. பி-ம்:—[1]இழந்த. [2]கோனெடும். [3]கட்ட. (கஅருஅ)

உரு. துடியி னேரிடை [1]தோன்றல ளாமெனிற்
கடிய காரிருட் கங்குலின் கற்பம்போய்
முடியு மாகின் முடியுமிம் மூரிநீர்
நெடிய மாநில மென்ன நினைக்குமால்.

(இ - ள்.) 'துடியின் நேர் இடை - உடுக்கையை யொத்த இடையையுடைய சீதை, தோன்றலள் ஆம் எனின்-காணப்படாவிட்டால்,—கடிய கார் இருள் கங்குலின் கற்பம் போய் முடியும் ஆகில்-கொடிய கரிய இரவுகளுடைய இரவாகிய கற்பமானது கழிந்து விடியுமானால், இ மூரி நீர் நெடிய மா நிலம்-கடலாற்சூழப்பட்ட மிகப்பெரிய இந்தவுலகம், முடியும்-அழிந்துவிடும்,' என்ன நினைக்கும் - என்று நினைப்பான், (இராமன்); (எ - று.)—ஆல் - அசை.

சீதை அகப்படாமலே பொழுது விடிந்தால் இவ்வுலகத்தை நீறுக்கிவிடுவே னென்று இராமன் கோபித்து நினைத்தன னென்க. மூரிநீர் - பண்புத்

தாகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை;பழமையாகிய நீரையுடைய தென விரியும். பீ மீ:—[1]தோன்றுவள். (கஅடுகூ)

உசு: திறத்தி னுதன செய்தவத் தோருற
வொறுத்து ஞாலத் துயிர்[1]தமை யுண்டு'முன்
மறத்தி னுர்கள் வலிந்தனர் வாழ்வரே
லறத்தி னுலினி யாவதெ னென்னுமால்.

(இ - ள்) 'திறத்து - (தங்கள்) வலியினுல், செய் தவத்தோர் இனுதன உற - தவஞ்செய்யும் இருடிகள் துன்பங்களே அடைய, ஒறுத்து - (அவர் களே) வருத்தி, ஞாலத்து உயிர்தமை - உலகத்திலுள்ள உயிர்களே, உண்டு-தின்று, உழல் - திரிகிற, மறத்தினுர்கள் - அதருமத்தையுடைய இராக்கதர் கள், வலிந்தனர் வாழ்வர் எல் - (கற்புடைமாதரைக் கவர்ந்து இப்படி) வலி பெற்று வாழ்வாராஞல், இனிஅறத்தினுல் ஆவது என் - இனிமேல் தருமத் தினுல் ஆகும் பயன் யாதோ?' என்னும் - என்றுசொல்வான்; (எ - று.)

தருமவான்களான முனிவர் முதலியோர் வருந்தவும், அதருமவான் களான அரக்கர்கள் வெற்றியுற்றுவாழவும் நேர்ப்பட்டதனுல், தருமத்துக்குப் பயன் விளையுங் காலமில்லையே யென்று இராமன் வருந்தின னென்க. ஆல் - அசை. பீ-மீ:—[1]தனே. [2]முன். (கஅகூ)

உரு:—இதுவும், அடுத்த கவியும் - மன்மதன்செயலைக் கூறும்.

தேனின் றெய்வத் திருநெடு நாண்சிலைப்
பூநின் றெய்யும் பொருகணை வீரனு
மேனின் றெய்ய விமலனே நோக்கினுன்
[1]ரனுந் தேர்கில னுய்த்[2]தடு மாறுவான்.

(இ - ள்.) தேனின் தெய்வம் திரு நெடு நாண் - வண்டுகளாகிய தெய் வத்தன்மையுள்ள அழகிய நீண்ட நாணியையுடைய, சிலை-(கருப்பு) வில்லில், பொரு கணை பூ நின்று எய்யும் - போர்செய்கின்ற அம்பாகக் கொண்டு மலர் களே எதிர்நின்று தொடுக்கின்ற, வீரனும்-வீரனுகிய மன்மதனும், மேல் எய்ய விமலனே நின்று நோக்கினுன்-இராமன்மேற் பாணப்பிரயோகஞ்செய்யும்படி அவனே உற்றுப்பார்த்தான்; (அவ்வளவில்), தானும்-அவ்விராமனும், தேர் கிலன் ஆய் - ஒன்றுந்தோன்றுமல் அறிவுமயங்கி, தடுமாறுவான் - கலங்கு பவனுனன்: (எ - று.)

விமலன் - குற்றமற்றவன். மன்மதனுக்குக் கரும்பை வில்லாகவும், மலரை அம்புகளாகவும், வண்டுக்கூட்டத்தை நாணுகவும் கூறுதல், கவிமரபு. எப்படிப்பட்டவரையும் வசீகரிக்கவல்ல ஆற்றலுடைமை தோன்ற, நாணுக்கு 'தெய்வம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, காம நூலென்னும் பூவிசேடம் காமனுக்கு வில்லா மென்று தமிழ்நூலிலும், மன் மததந்திரமென்னும் புஷ்பம் மன்மதனுக்கு வில்லா மென்று வடநூலிலுங்

கூறுமாறுபற்றி, இச்செய்யுளின் முதலிரண்டடிக்கு - வண்டொழுங்காகிய திவ்வியமான அழகிய நீண்ட நாணியையுடைய தனதுவில்லாகிய பூவிசேடத்தினின்று தொடுக்கும் போரம்புகளையுடைய மகாவீரனை மன்மதனென்று உரைப்பினும் அமையும்; ''நீறுபடு துட்ட மதன் வேறுருவெடுத் தலரி னீள்சிலை குணித்து வழிதே, னூறுகணை தொட்டு வெளியே சமர் வீளப்பதும்'' என்ற மதுரைக்கலம்பகம் இங்குக்கருதத்தக்கது; மன்மதனது 'புஷ்பதன்வா' என்ற வடமொழிப்பெயரையுங் காண்க: எளிய கருவிகளைக் கொண்டே எங்குந் தவறுது வெற்றிபெறுதல் தோன்ற, மன்மதன் 'வீரன்' எனப்பட்டான். பி-ம்:—[1]தானின்றெய்யலான். [2]தடுமாறினன். (கஅகக)

உசு. உழந்த யோகத் தொருமுதல் கோபத்தா
விழந்த மேனியு மெண்ணி [1]யிரங்கினன்
[2]கெழுந்த கைக்கொரு வன்மை கிடைக்குமேற்
பழந்து யர்க்குப் பரிவுறும் [3]பான்மையால்.

(இ - ள்.) கெழும் தகைக்கு ஒரு வன்மை கிடைக்கும் எல் - (தன்னிடத்திற்) பொருந்திவிளங்குகிற குணத்திற்கு ஒரு உறுதிப்பாடு கிடைக்குமாஞல், (அப்பொழுது), பழ துயர்க்கு பரிவு உறும் பான்மையால்-கீழ்ப்போன துயரத்திற்கு வருந்துகிற உலகவழக்கப்படியே, (மன்மதன்),—உழந்த யோகத்து ஒரு முதல் கோபத்தால் - மிக்குச்செய்த தவத்தையுடைய ஒரு முதற்கடவுளாகிய சிவபிரானது கோபத்தினுல், இழந்த - (முன்பு தான்) இழந்துவிட்ட, மேனியும் - (தனது) சரீரத்தை, எண்ணி-நினைத்து, இரங்கினன் - வருந்தினன்; (எ - று.)

வருத்தமுற்ற ஒருவன், ஓர் உறுதிநிலை பெற்றபோது, தனக்குக்கீழ் நேர்ந்த துயரத்தை நினைத்து வருந்துவதுபோல, அனங்களுகிய மன்மதனும், மகாவீரனை இராமனை வருத்தும் வீரம் இப்பொழுது தனக்கு உண்டாகி நிலைத்தது பற்றி, தான் முன்பு சிவபிரானுல் தோகமிழந்ததை நினைத்து வருந்தின னென்க. மேனியும், உம்மை - இசைநிறை. சிவபிரான் யோக முழந்தது, தன்னையடுத்து வேண்டிய சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் யோகநிலையை யுணர்த்துதற்பொருட்டு.

இனி, கீழ்க்கவியோடு இக்கவியையுஞ் சேர்த்து, வீரன் விமலனை நோக்கி,கெழுந்தகைக்கு ஒருவன்மை கிடைக்குமெனினும் பழந்துயர்க்குப் பரிவுறும் பான்மையால், தான் இழந்த மேனி எண்ணி இரங்கினனுகி, தானுந் தேர்கிலனுய்த் தடுமாறுவான் என ஒரு முடிபாகக் கொண்டு, திரிமூர்த்திகளில் ஒருவனை தவவேடங்கொண்ட சிவபிரான்மேல் முன்பு அம்பெய்து சரீரத்தை யிழந்தோமே; இனி அக்கடவுளரில் ஒருவனுகிய தவவேடமுள்ள இராமனும் வலியற்றவன்போற்காணப்படினும் இவன்மேல் அம்பெய்தால் இவனுல் நமக்கு மற்றும் யாதுதீங்கு நேரிடுமோ வென்று மன்மதனும் அம்பு எய்யமாட்டாது மதிமயங்கித் தடுமாறினு னென்று பொருள்கூறினும்

பொருந்தும்; முன்புசோர்ந்த தளர்வுக்குப் பின்புஒரு வலி கிடைக்குமாயினும் பழைய அத்தளர்வாகிய துன்பத்தை நோக்கி வருந்தும் இயல்பின்படி யென்பது, பின்னிரண்டடியின்பொருள். இனி, சிறந்துவிளங்குகின்ற உத்தம குணங்களையுடைய இவ்விராமமூர்த்திக்கு ஆற்றல் உண்டாமாயின் அப்பொழுது தனக்கு மீண்டும் ஏதேனுந் தீங்குநேருமே யென்பதைக் கருதி இரங்குந்தன்மையால் என்றலும் நேராம். கெழுந்தகை - பண்புத்தொகை, யன்மொழி. **பி-ம்:**—[1]இரங்குவான். [2]அழுந்துவன் றுயராமெனவஞ்சினன். [3]ன்மையான். (கஅசுஉ)

உஎ.—இரவு கழிதல்.

நீல மாய நிறத்த [1]னினைப்பிடைச்
சூல மாகத் தொலைவுறு [2]மெல்லியின்
மூல மாமலர் முன்னவன் முற்றுறுங்
கால மாமெனக் கங்குல் கழிந்ததே.

(இ - ள்.) நீலம் ஆய நிறத்தன் நினைப்பிடை - நீலநிறமுள்ளவனென இராமபிரானது மனத்திலே, (சீதையைப் பிரிந்ததனு லுண்டான துன்பம்), சூலம் ஆக-சூலாயுதம்போல்வருந்த, தொலைவுஉறும் எல்லியின்-(இங்ஙனம்) வருந்துகிற சமயத்திலே,—மூலம் மா மலர் முன்னவன் முற்றுறும் காலம் ஆம் என - (எல்லாவற்றுக்கும்) முதற்காரணமான (எம்பெருமானது) பெரிய நாபித்தாமரைமலரில் தோன்றிய முதற்கடவுளான பிரமன் முடிகின்ற ஊழிக்காலம் கழிந்தாற்போல, கங்குல் கழிந்தது - அத்தப்பேரிரவு நீங்கிற்று.

பிரிவுத்துயரின் கொடுமையை விளக்க, அதனைச் சூலமாக உருவகப் படுத்தினர். மலர்முன்னவன் முற்றுறுங் காலம் - பிரமகற்பம்: இது, இங்கு மிக்கநீட்சிக்கு உவமை கூறப்பட்டது. "அத்திசைமுகனோடு, உத்திக்கமலம் விரிந்தால் விரியும் உகக்கடையில், முத்திக்குவியினுடனே குவிய மிம்மூதண்டமே" ஆதலால், மூலமாமல ரெனப்பட்டது. ஏ - ஈற்றசை. **பி-ம்:**— [1]நினைந்திடை. [2]வேலையின். (கஅசுஊ)

வே று.

உஅ.—இதுவும், அடுத்த கவியும்-இராமன் வருந்துதலைக் கூறும்.

வெள்ளஞ் சிலம்பு பாற்கடலின் விரும்புந் துயிலை வெறுத்[1]தளியுங்
கள்ளுஞ் சிலம்பும் [2]பூங்கோதை கற்பின் கடலிற் படிவாற்குப்
புள்ளுஞ் சிலம்பும் பொழில்சிலம்பும் புனலுஞ் சிலம்பும் புணைகோல
முள்ளுஞ் சிலம்புஞ் [3]சிலம்பாவா னுயிருண் டாகும் வகையுண்டோ.

(இ - ள்.) வெள்ளம் சிலம்பு பால் கடலின் - வெள்ளம் ஒலிக்கப்பெற்ற திருப்பாற்கடலில், விரும்பும் - (தான்) விரும்பிச்செய்யும், துயிலை - யோக நித்திரையை, வெறுத்து - நீக்கிவிட்டு, அளியும் கள்ளும் சிலம்பும் பூ கோதை - வண்டுகளும் தேனும் ஒலிசெய்யப்பெற்ற மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய சீதையினது, கற்பின் கடலில் - கற்பாகிய சமுத்திரத் திலே, படிவாற்கு - அமிழ்ந்துள்ள இராமன் விஷயமாக, புள்ளும் சிலம்பும் -

பறவைகளும் (இரங்கி) ஒலிக்கும்; பொழில் - சோலைகளும், சிலம்பும்—; புனலும் - மலையருவிகளும், சிலம்பும்—; புனை கோலம் - (சீதையினது) அலங்கரித்த உருவமானது, உள்ளும் சிலம்பும் - மனத்தில் தோன்றி வருத்தும்; சிலம்பா - (கண்ணுக்குப்) புலப்படாது: ஆல் - ஆதலால், உயிர் உண்டாகும் வகை உண்டோ - (இராமனுக்கு) உயிர் ஒழியாது தரித்து நிற்கும் வழி உளதோ? [இல்லை]; (எ - று.)

உதயகாலத்தில் இயல்பாக ஒலிக்கும் பறவைகளின் ஒலி முதலியவற்றை, இராமபிரான் விஷயமாக இரங்கியொலித்தனவாகக் குறித்தார். முதலிரண்டடியால், பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரமனை திருமால் இராமனாகத் திருவவதரித்துப் பிராட்டியான சீதையை மணந்தமை விளங்கும். [1]அளிய என்ற பாடத்துக்கு, அன்புசெய்பத்தக்க வென்று பொருளுரைத்து, அதனைச் சீதைக்கு அடைமொழியாக்குக. 'பாற்கடலின் விரும்புத் துயிலை வெறுத்துப் பூங்கோதைகற்பின்கடலிற் படிவாற்கு' என்றதில், இராமன் திருப்பாற்கடலில் திருமகளுடன்கூடி வாழ்தலினும் இங்குச் சீதையுடன் கூடிவாழ்தலே மிகவும் இனியதாகக் கருதின னென்பது தோன்றும். பிராட்டியின் கற்புக்குக் கடலை உவமைகூறியதனால், அதன் மிகுதியும் ஆழ்ச்சியும் எல்லைகாண வொண்ணுமையும் விளங்கும். கோதை - கூந்தலையுடையாளுக்குச் சினையாகுபெயர். பூங்கோதை - பூமாலைபோல்பவ ளெனினுமாம்; உவமையாகுபெயர். [2]பூங்கோதைக்கற்பிற்கடல் என்ற பாடத்துக்கு, பூங்கோதைக்கு அற்பின் கடல் என்று பிரித்து, சீதையினிடத்துக் கடல்போன்ற பேரன்புள்ளவ னென்று பொருள் கொள்க; அற்பு = அன்பு. வினைப்பகுதிகள் வேண்டிய பொருளை விளைக்குமாதலால், சிலம்புதல் என்னும் வினைக்குப் புலப்படுதலென்றும் பொருள் கொள்ளப்பட்டது. பொழில் சிலம்புதல் - சோலைகளிலுள்ள மரங்கள் விடியற்காலத்துக் காற்றுவீசுதலால் அசைந்து ஒலித்தல். சிலம்பா - சிலம்பாது என்பதன் விகாரம்.

இனி, இராமபிரானுக்கு இரவுகழிந்ததை யுணர்த்துமாறு புள்முதலியன ஒலித்தன; புனை கோலம் உள்ளும் - (சீதையினது) அழகிய வடிவத்தையே (இராமன் எப்பொழுதும்) கருதுவான்; சிலம்பும் சிலம்பா - (அவள் எதிர்நின்று கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அவள் நடந்து வருவதற்கு அடையாளமாக அவளுடைய காற்சிலம்புகள் ஒலித்தலேனும் நிகழலாமே அவையும் ஒலித்தில; ஆல் - ஆதலால், இனி இராமன் உயிர்த்திருக்கும்வகை யுள்ளதோ? என்றும் பொருள்கொள்ளலாம். [3]சிலம்பா வேல் என்றபாடத்துக்கு, புனைகோலம் - தான் கொள்ளும் போர்க்கோலத்தை, உள்ளும் - நினைப்பூட்டுகின்ற, சில் அம்பும் - சில அம்புகளும், சிலம்பா எல் - ஒலிசெய்யாவிட்டால் என்று உரைக்க; அப்பொழுது கருத்து:—உதயகாலத்தில் பறவை முதலியன ஒலித்தலும், அம்புகள் ஒலித்துப் போரை நினைப்பூட்டுதலுஞ் செய்யாவிட்டால் இராமன் உயிர்பெற்றிரா னென்பதாம். [1]அளியின் என்ற பாடத்துக்கு-வண்டுகளுடனே யென்க. **பி-ம்:**—[3]சிலம்பாதேல்.

இது முதல் ஐந்து கவிகள் - மாரீசன்வதைப்படலத்தின் ககஉ-ஆங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (கஅசக)

உகூ. மயிலும் பெடையு முடன்[1]றிரிய மானுங் கலையு மருவிவரப்
பயிலும் பிடியுங் கட[2]களியும் வருவ திரிவ பார்க்கின்றான் [கு
குயிலுங் கரும்புஞ் [3]செழுந்தே னனுங் குழலும் யாழுங் கொழும்பா
[4]லமுதுஞ் சுவை'நீத்த மொழியைப் [5]பிரிந்தா லழியாளே.

(இ - ள்.) பெடையும் மயிலும் உடன் திரிய - பெண்மயிலும் ஆண்மயிலும் கூடிக்குலாவித் திரிய (அவற்றையும்), மானும் கலையும் மருவிவர-பெண்மானும் ஆண்மானும் கலந்து பொருந்த (அவற்றையும்), பயிலும் பிடியும் கடகரியும் வருவ திரிவ - (ஒன்றோடொன்று) பழகிவிளையாடும் பெண்யானையும் ஆண்யானையும் (தன் எதிரில்) வந்து திரிய அவற்றையும், பார்க்கின்றான் - பார்க்கின்றவனுகிய இராமன்,—குயிலும் குயிலோசையும், கரும்பும் கருப்பஞ்சாறும், செழுந்தேனும் - செழிப்பான தேனும், குழலும்-வெய்ங்குழலோசையும், யாழும் - வீணையாலியும், கொழும்பாலும் - செழிப்பான சர்க்கரைப் பாகும், அமிழ்தும் அமுதும்-விரும்பியுண்ணப்படுகிற தேவாமிருதமும், (ஆகிய இவை), சுவை நீத்த - (தன் இனிமைக்குமுன் தம்தம்) இனிமை கெடும்படியான, மொழியை - சொல்லையுடைய சீதையை, பிரிந்தால்—, அழியாளே - வருந்தாமலிருப்பளே? [இரான்]; (எ - று.)

மயில்முதலியவை தம்தம் பெடையுடன் கூடிக்குலாவி இராமனுக்குச் சீதையைப்பிரிந்த துயரத்தை மிகுவித்தன வென்க. கடகரி - மதம்பிடித்த யானை. மொழி - அதனையுடையவளுக்கு ஆகுபெயர். குயிலும்...மொழி - குயிலொலி முதலியன இனிமையற்றன வென்னும்படியான சொல்லினிமையையுடைய சீதை யென்க. குயில், கரும்பு, குழல், யாழ் - ஆகுபெயர்கள். பி-ம்:—[1]திரிவ. [2]களிறும். [3]பெருந். [4]அயிரும். [5]தீர்த்த. [6]பிரிந்தான். ()

கூ.—சூரிய்யாதயம்.

முடிநாட் டியகோட் [1]டுதயத்து முற்ற [2]வுற்றான் முதுகங்குல்,
விடிநாட் கண்டுங் கிளிமிழற்று மென்சொற் கேளா வீரற்கண்,டடி
நாட் [3]செந்தா மரையொதுங்கு மன்ன மிலைவாய் யானைத்த, கடி
நாட் [4]கமலத் தெனவவிழ்த்துக் காட்டு வான்பே ரதிர்வெய்யான்.

(இ - ள்.) கதிர் வெய்யோன் - கிரணங்களையுடைய சூரியன்,—முதுகங்குல் விடிநாள் கண்டும் - நீண்ட இரவு விடிந்து பகற்பொழுதானமையைக் கண்டும், கிளி மிழற்றும் மெல் சொல் கேளா - (பேச்சில்) கிளியையொத்த சீதை சொல்லுகிற இனியசொற்களைக் கேளாத, வீரற்கு - இராமனுக்கு, ஆண்டு - அப்பொழுது,— 'யான் அடைத்த கடிநாள் கமலத்து - யான் (முதல்நாளில்) மூடிய வாசனையுள்ள புதிய தாமரைமலரில், அடிநாள் செம் தாமரை ஒதுங்கும் அன்னம் - முற்காலத்திற் செந்தாமரைமலரில் தோன்றிய அன்னப்பறவை போன்ற சீதை, இலள்-(இப்பொழுது) இல்லை,'

என - என்று, அவிழ்த்து காட்டுவான் போல்-மலர்த்திக்காட்டுபவன்போல, முடி நாட்டிய கோடு உதயத்து முற்ற உற்றான் - முடிவைத்ததுபோல விளங்குகிற சிகரத்தையுடைய உதயகிரியில் நன்றாய்த்தோன்றி விளங்கினான். (எ - று.)—ஆல் - அசை.

இயல்பில் தாமரை மலரும்படி உதிக்குஞ் சூரியனே,—முன்னே தாமரையில் வசித்த திருமகளாகிய சீதை இப்பொழுதும் அதில் இருக்கின்றாளோ வென்று இராமனுக்கு உண்டாகக்கூடுஞ் சந்தேகத்தை நீக்கும்பொருட்டுத் தாமரையை மலர்த்திக் காட்டுவதற்காக உதயகிரியில் உதித்தனன்போலு மெனக் காரணங்கற்பித்துக் கூறியதனால், **பயன்தற்குறிப்பேற்றவணி.** முடிகிறீடம். மூன்றாமடி, சீதை இலக்குமியின் அம்சமானவ ளென்பதை விளக்கும். அன்னம் - உவமையாகுபெயர். **பி-ம்:**—[1]உதயத்தின். [2]முற்றா. [3]பைந் தாமரையோங்கும். [4]கமலத்தாட்டிறத்து. (கo சுசு)

சுக. பொழிலே நோக்கும் பொழிலுறையும் புள்ளே நோக்கும் பூங் கொம்பி,னெழிலே நோக்கு மிளமயிலி [1]னியல்பை நோக்கு மியல்பானவ் ள்,குழலே நோக்கிக் கொங்கையிணைக் குவட்டை நோக்கி யக்குவட்டின், றொழிலே நோக்கித் தன்னுடைய தோளே நோக்கி நாள்கழிப்பான்.

(இ - ள்.) (இராமன்), பொழிலே நோக்கும் - (அங்குள்ள) சோலையைப் பார்ப்பான்; பொழில் உறையும் புள்ளே நோக்கும் - அச்சோலையில் வசிக்கிற சக்கரவாகப்பறவைகளைப் பார்ப்பான்; பூ கொம்பின் எழிலே நோக்கும் - பூங் கொம்புகளினது அழகைப் பார்ப்பான்;(அப்படிப் பார்ப்பவன்), இள மயிலின் இயல்பை நோக்கும் இயல்பு ஆனவன் - இளமையுடைய மயிலின் சாயலே யொத்த சாயலையுடைய சீதையினது, குழலே நோக்கி-கூந்தலைக் கருதியும், கொங்கை இணை குவட்டை நோக்கி-மலைகள்போன்ற இரண்டு தனங்களைக் கருதியும், அ குவட்டின் தொழிலே நோக்கி-அத்தனங்களின்மே லெழுதியுள்ள சித்திரங்களைக் கருதியும்,தன்னுடைய தோளே நோக்கி-(அக்கொங்கைகளிற் சேர்த்தற்குரிய) தனது தோள்களைப் பார்த்தும், நாள் கழிப்பான்-பொழுது போக்குபவனானான்; (எ - று.)

சீதையைப் பிரிந்து வருந்தும் இராமன்,பொழிலைப்பார்த்துச் சீதையின் கூந்தலையும், சக்கரவாகப்பறவைகளைப்பார்த்து அவள் தனங்களையும், பூங் கொடிகளின் அழகைப் பார்த்து அவள்தனங்களின்மீது எழுதியுள்ள தொய்யிலையும் நினைத்ததாகக் கூறியதனால், **நினைப்பணி;** இதனை வடநூலார் ஸ்மருதிமதலங்காரம் என்பர். பொழில் - குழலுக்கு இருண்ட கருநிறத்திலும், இணைபிரியாத சக்கரவாகப்பறவையும் பூங்கொம்பும் - இணைக்கொங்கைக்கும் தொய்யிலுக்கும் வடிவத்திலும் உவமை யெனக் காண்க. **இது-முறைநிரனிறை.** 'நாள் கழிப்பான்' என்றது, சீதையைத் தேடுதற்கும் இராவணனைத் தொலைத்தற்கும் விரைந்து முயலாமல் இராமன் இங்ஙனஞ் சிறிதுபொழுது கழிக்கலுற்றா னென்றவாறு;ஆனதுபற்றியே, அடுத்த கவியில் இலக்குமணன் "பொன்னை நாடா தீண்டிருத்தல் பொருளோ" என்பான். **பி-ம்:**—[1]இயலை.

கூஉ.—இராமலக்குமணர் இராவணனுள்ளிடத்தைத் தேடிச் செல்லுதல்.

அன்ன காலை யிளவீர னடியின் வணங்கி நெடியோயப், பொன்னே நாடா தீண்டிருத்தல் பொருளோ வென்னப் புகழோனுஞ், சொன்ன வரக்க னிருக்குமிடந் துருவி யறிந்து தொடர்ந் தென்ன, மின்னுஞ் சிலையார் மலை[1]தொடர்ந்த வெயில்வெங் கானம் போயின ரால்.

(இ - ள்.) அன்ன காலை - அப்பொழுது, இள வீரன் - இளையபெருமாளான இலக்குமணன், அடியின் வணங்கி - (இராமனது) திருவடிகளில் வணங்கி, 'நெடியோய் - பெரியோனே! அ பொன்னே நாடாது ஈண்டு இருத்தல் பொருளோ - அந்தச்சீதையைத் தேடாமல் (இவ்வாறு) இங்கேயே இருப்பது தகுதியோ?' என்ன - என்றுசொல்ல,—புகழோனும்-புகழுடைய இராமபிரானும், 'சொன்ன - (சடாயுவினால்) சொல்லப்பட்ட, அரக்கன் - இராவணன், இருக்கும் இடம் - இருக்கிற இடத்தை, துருவி தொடர்ந்து அறிதும் - தேடிச்சென்று அறிவோம்?' என்ன - என்றுசொல்ல,—(பின்பு), மின்னும் சிலையார் - விளங்குகிற வில்லையுடைய அவ்விருவரும், மலை தொடர்ந்த - மலைகள் தொடர்ச்சியாகப்பொருந்திய, வெயில் வெம் கானம் - வெயிலினால் வெப்பங்கொண்ட காட்டில், போயினர் - சென்றார்கள்; (எ - று.)

மின்னும் சிலை ஆர் என்றுஎடுத்து, மின்னுகின்ற கற்கள் நிறைந்த வென மலைக்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. ஆல்-அசை. **பி-ம்:**— [1]தொடர்துமென. (கஅசுஅ)

வேறு.

கூங.—இராம லட்சுமணர் இராவணனிருக்கையைத்தேடியவண்ணம் பதினேட்டுயோசனைதூரங் கடத்தல்.

ஆசை சுமந்த [1]நெடுங்கரி யன்னர்
பாசிலை துன்று வனம்பல பின்னுக்
காசறு குன்றினை டாறு கடந்தார்
யோசனை யொன்பதை டொன்பது சென்றார்.

(இ - ள்.) ஆசை சுமந்த நெடு கரி அன்னர் - திக்குக்களைத் தாங்குகிற பெரிய யானைகளை [திக்கஜங்களை] ஒத்தவர்களாகிய இராமலக்குமணர்,—பசு இலை துன்று பல வனம் பின் ஆ - பச்சிலைகள் நெருங்கிய பல காடுகள் பின்னுக்கழிய, காசு அறு குன்றினை டு - குற்றமற்ற மலைகளையும், ஆறு - நதிகளையும், கடந்தார் - தாண்டினவர்களாகி, ஒன்பதை டு ஒன்பது யோசனை சென்றார் - பதினெட்டுயோசனைதூரம் நடந்துசென்றார்கள்; (எ - று.)

இனி, முதலடிக்கு -(பகைவனைக் காணவேண்டு மென்ற) ஆசை நிறைந்த இராமலக்ஷ்மண ரென்றும் கூறலாம். [1]'நெடுங்கிரியன்னர்' என்ற பாடத்

துக்கு - குலமலைபோன்றவ ரென்க. பாசிலை-பண்புப்பெயர் ஈறுபோய் ஆதி நீண்டது.

இதுமுதல் மூப்பது கவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (கஅசுக)

கூச.—சீதையைத்தேடிய இராமலட்சுமணர் ஒருசோலையைச்சேர்தல்.

மட்படி செய்த தவத்தினின் வந்த
கட்படி கோதையை நாடினர் காணு
ருட்படி கோப முயிர்ப்பொடு பொங்கப்
புட்படி யுங்குளிர் [1]கார்ப்பொழில் புக்கார்.

(இ - ள்.) (இராமலட்சுமணர்கள்),—மண் படி செய்த தவத்தினின் - பூமி செய்த நல்வினைப்பயனால், வந்த - (அதனிடத்து) அவதரித்த, கள் படி கோதையை - தேன்பொருந்திய மாலையையுடைய சீதையை, நாடினர் காணுர்-தேடிக் காணுதவர்களாய்,—உள் படி கோபம் உயிர்ப்பொடு பொங்க - மனத்திற்பொருந்திய கோபம் பெருமூச்சோடு வெளிப்பட, புள் படியும் குளிர் கார் பொழில் - பறவைகள் தங்கப்பெற்ற குளிர்ந்த பெரியதொரு சோலையில், புக்கார் - புகுந்தார்கள்; (எ - று.)

சீதை பூமிக்குப் பெண்ணுகப் பிறந்தமையால், 'மட்படிசெய்ததவத்தினின்வந்த கட்படிகோதை' என்றார். கார்ப்பொழில் மேகந்தவழுஞ் சோலையுமாம். பி-ம்:—[1]வார்பொழில். (கஅஎ)

கூடு.—சூரியாஸ்தமனம்.

ஆரியர் சிந்தை யலக்க ணறிந்தா
ணரியை யெங்கணு [1]நாடின னுடிப்
பேருல கெங்கு [2]முழன்றனன் பின்னு
[3]மேருவை வெங்கதிர் மீள [4]மறைந்தான்.

(இ - ள்.) வெம் கதிர் - உஷ்ணகிரணங்களையுடைய சூரியன்,—ஆரியர் சிந்தை அலக்கண் அறிந்தான் - அறிவிற் சிறந்த அவ்விராமலக்குமணரது மனத்திலுள்ள துன்பத்தை அறிந்தவனுகி, நாரியை எங்கணும் நாடினன் நாடி-சீதையை எங்கும் நன்ருகத் தேடிப்பார்த்து, பேர் உலகு எங்கும் உழன்றனன் - பெரியபூமிமுழுதும் அலைந்துதிரிந்து, மேருவை பின் ஆ மீள மறைந்தான் - மேருபருவதம் தனக்குப் பின்புறத்திலேயாம்படி அஸ்தமித்தான்; (எ - று.)

சூரியன் மேருவின் இப்புறம் முழுதும் தேடிப்பார்த்தும் சீதைஅகப்படாமையால் அப்புறத்தேனும் உளளோ வென்று தேடிப்பார்க்கச் செல்பவன் போல மறைந்தா னென உத்பிரேக்ஷித்துக் கூறியவாறு. வெங்கதிர் - பண்புத்தொகையன்மொழி. பி-ம்:—[1]நாடினர். [2]உழன்றனர். [3]மேருவின்வெங்கதிரோனும். [4]மிரைந்தான். (கஅஎக)

கூசு.—எங்கும் இருள் முடுதல்.

[1]அரண்டரு குஞ்செறி யஞ்சன புஞ்ச
முரண்டன [2]போலிரு ளெங்கணு மூந்தத்
தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
யிருண்டன மாதிர மெட்டு மிரண்டும்.

(இ - ள்.) அரண் தருகும்-(இவர்களே இவ்விடப்படி எங்கும்போகவொட்டாது தடுத்துக்) காவல்செய்கிற, செறி - நெருங்கிய, அஞ்சன புஞ்சம் - மையின் கூட்டங்கள், முரண்டன போல் - மாறுபாடுகொண்டு எதிர்த்தன போல, எங்கணும் இருள் மூந்த - எல்லாப்பக்கங்களிலும் இருள் மூற்பட்டு நிறைய,—மாதிரம் எட்டும் இரண்டும் - பத்துத்திக்குக்களும், தெருண்ட அறிவு இல்லவர் சிந்தையின் - தெளிந்த அறிவு இல்லாதவருடைய மனம் (அஜ்ஞாகவிருள் நிறையப்பெறுதல்)போல, முந்தி-விரைந்து, இருண்டன.—

பத்துத் திசைகள் - நான்குபெருந்திசைகளும், நான்குகோணத்திசைகளும், கீழும், மேலும். [1]இரண்டருகுஞ் செறியஞ்சனபுஞ்சம் என்ற பாடத்துக்கு, செறி அஞ்சன புஞ்சம் - அடர்ந்த மைத்திரள், இரண்டு அருகும் முரண்டன போல் - இருபுறத்தும் வளைத்துகொண்டாற்போல என்று உரைக்க. பி-மீ:—[2]பேருலகெங்கணுமூந்தித். (கூஎஉ)

கூஎ.—அவ்விருவரும் அங்கு ஓர் பளிக்கறையில் தங்குதல்.

[1]இளிக்கறை யின்சொ லியைந்தன பூவை
கிளிக்கறை யும்[2]பொழில் கிஞ்சுக வேலி
யொளிக்கறை மண்டில மொத்துள [3]தாங்கோர்
பளிக்கறை கண்டதில் வைகல் பயின்றார்.

(இ - ள்.) இளிக்கு - இளியென்னும் இசைக்கு, அறை-(ஒப்புமையாகக்) கூறப்பட்ட, இன் சொல் - இனியசொற்களே, இயைந்தன-உடையனவான, பூவை - நாகணவாய்ப்பறவைகள், கிளிக்கு - கிளிகளுக்கு, அறையும் - (அவ்வினியசொற்களைக்) கற்பித்ததற்கிடமான, பொழில் - (தாம் புகுந்த) அச்சோலையில், கிஞ்சுகம் - முருக்கமரங்களே, வேலி - வேலியாகவுடையதும், ஒளி கறை மண்டிலம் ஒத்து உளது - பிரகாசத்தையும் களங்கத்தையு முடையதான மண்டலத்தை [சந்திரமண்டலத்தை] ஒத்துள்ளதாகிய, ஓர் பளிங்கு அறை - பளிங்குக்கற்களினாலாகிய ஓர் அறையை, கண்டு—, அதில் வைகல் பயின்றார்-அதில் (இராமலக்ஷ்மணர்) தங்குபவராஞர்கள்; (எ - று.)

இளி - எழிசைகளி லொன்று. அறை - உவமவுருபுமாம். ஒளிக்கறை மண்டில மெனவே, சந்திரமண்டல மென்றுயிற்று. ஆங்கு - அசை. பி-மீ:—[1]இளிக்கிறையுஞ். [2]கிளர். [3]அங்கோர். (கூஎஊ)

கஅ.—இராமன் கட்டளைப்படி இலக்குமணன் நீர் கொணரச் செல்லுதல்.

அவ்விடை பெய்திய வண்ண லிராமன்
வெவ்விடை போலிள வீரனை வீர
விவ்விடை [1]நாடினை நீர்கொணர் கென்றான்
றெவ்விடை வில்லவ னுந்தனி சென்றான்.

(இ - ள்.) அ இடை எய்திய - அவ்விடத்தில் தங்கிய, அண்ணல் இராமன் - பெருமையிற்சிறந்த இராமபிரான், வெம் விடை போல் இள வீரனை - வலிய காளைபோன்ற இளையவீரனை இலக்குமணனை (நோக்கி), 'வீர - வீரனே! இ இடை நீர் நாடினை கொணர்க - இவ்விடத்தில் தண்ணீர்தேடிக் கொண்டுவருவாய்,' என்றான்—; (அப்பொழுது), தெவ் இடை வில்லவனும்- பகைவர்கள் பின்னிடுதற்குக் காரணமான வில்லையுடைய இலக்குமணனும், தனி சென்றான் - தனியேபோயினன்; (எ - று.)

வீரனுக்கு விடை - பலத்திலும் நடையிலும் காம்பீரியத்திலும் உவமை. விடை - வ்ருஷமென்ற வடமொழி. தெவ் - பண்பாகுபெயர். பி-ம்:—[1]நாடி நன்னீர். (கஎசை)

கஉ.—இதுமுதல் நான்குகவிகள் - அயோமுகி இலக்குமணனைக் கண்டு காமுற்று அவனெதிரில் வருதலைக் கூறும்.

எங்கணு [1]நாடின னீரிடை காணுன்
சிங்க மெனத்தமி யன்றிரி வானை
யங்க[2]வ னத்து ளயோமுகி [3]பான
வெங்க ணரக்கி விரும்பினள் கண்டாள்.

(இ - ள்.) எங்கணும் நாடினன் நீர் இடை காணுன் - எவ்விடத்தும் தேடியும் நீரை அவ்விடத்திற் காணுதவனுய்,சிங்கம் என தமியன் திரிவானை- சிங்கம்போலத் தனியே திரிகின்ற இலக்குமணனை, அங்கு-அப்பொழுது, அ வனத்துள் - அக்காட்டில், அயோமுகி ஆன வெம் கண் அரக்கி - அயோமுகி யென்னுங் கொடுந்தன்மையுள்ள இராட்சசி, கண்டாள் விரும்பினள்-பார்த்து ஆசைகொண்டாள்; (எ - று.)

சிங்கம் - பலபராக்கிரமங்களுடன் வனத்தில் தனியேதிரிதற்கு உவமை. 'அங்கவ்வனத்துள்' என்பது, அங்கவனத்து ளெனத் தொக்கது. பி-ம்:— [1]நாடிநன்னீர். [2]வனத்தில். [3]என்பாள். (கஎசு)

சஅ. நன்மதி யோர்புகன் மந்திர நாமச்
சொன்மதி யாவர விற்[1]றொடர் கிற்பா
டன்மத னேடுதன் வெம்மை தணிந்தான்
மன்மத னுமிவ னென்னு மனத்தாள்.

(இ - ள்.) நல் மதியோர் புகல் - நல்லறிவுடையவர் கூறுகிற, நாமம் மந்திரம் சொல் - அச்சத்தைத்தரும்படியான மந்திரங்களை, மதியா - மதித்து

அடங்காத, அரவின் - பாம்பு போல, தொடர்கிற்பாள் - (இலக்குமணனைத்) தொடர்ந்துசெல்லும் அயோமுகி,—இவன் மன்மதன் ஆம் என்னும் மனத்தாள் - இவன் (அழகினால்) மன்மதனேயாவ னென்ற எண்ணமுடையவ ளாய், தன் மதனோடு தன் வெம்மை தணிக்தாள் - (அவனிடத்திலுள்ள காதலால் தான் அவனைத் தழுவ எண்ணித்) தனது செருக்கும் கொடுமையும் தணியப்பெற்றாள்; (எ - று.)

தடைக்குஅஞ்சாத பாம்புபோலத் தொடர்பவ ளென்க. இனி, முதலி ரண்டடிக்கு - பெரியோர் சொல்லும் சிறந்த உபதேசமொழிகளைக் கேளாத வளும் பாம்புபோலக் கொடியவளுமான அயோமுகி யென்று பொருள் கூறலும் ஒன்று. நாமம் - நாம் என்னும் உரிச்சொல்லின் விகாரம். மதம் - மதன்; இறுதிப்போலி. பி - ம்:—[1]சுடர்கிற்பாள். (கoஎசு

சுக. அழுந்திய [1]சிந்தை யரக்கி யலக்க
[2]ணெழுந்துயர் [3]காதலின் வந்தெதிர் நின்றாள்
[4]புழுங்குமென் னெஞ்சொடு புல்லுவெ [5]னன்றி
விழுங்கு வெனினென [6]விம்ம லுழன்றாள்.

(இ - ள்.) அழுந்திய - (இலக்குமணனிடத்துப்) பதிந்த, சிந்தை - கருத்தையுடைய, அரக்கி - அயோமுகி,—அலக்கண் எழுந்து உயர் காதலின் - வருத்தம் மிகுதியாகவுண்டாதற்குக்காரணமாகிற ஆசையினால், எதிர் வந்து நின்றாள் - இலக்குமணனெதிரில் வந்துநின்று,—'புழுங்கும் என் நோவொடு புல்லுவென் அன்றி - மனமழிதற்குக் காரணமான எனது ஆசைநோயினால் (இவனைத்) தழுவுவேனே யல்லாமல், விழுங்குவெனினே - கொன்றுதின் பேனோ? [தின்னமாட்டேன்],' என - என்றுஎண்ணி, விம்மல் உழன்றாள் - ஏக்கங்கொண்டு வருந்தினாள்; (எ - று.)

தான் மனிதரைக் கொன்றுதின்னும் அரக்கியாயிருந்தும், இலக்குமணனிடத்துக் காதல்கொண்டு இன்பமனுபவிக்கக்கருதினளாதலின், விழுங்கே னென்றாள். நோவொடு, 'ஓடு'-கருவிப்பொருளில் வந்தது. ஓ - எதிர்மறை. பி - ம்:—[1]சிந்தையளாகி. [2]எழுந்தன. [3]காதலெழுத்தனி. [4]புழுங்குறுநோய் கொடு, புழுங்கியமெய்யொடு, புழுங்குமென்னெஞ்சுகடப். [5]என்கோ. [6]வெம்மையுழந்தாள். (கoஎஎ)

சுஉ. இரந்தனை னெய்திய போ[1]தி சையாது
[2]கரந்தன ணைணனி கொண்டு கடந்தென்
[3]மூரஞ்சினின் மேவி முயங்குவெ [4]னென்று
[5]விரைந்தெதிர் வந்தன ளாயினும் வெய்யாள்.

(இ - ள்) தீயினும் வெய்யாள் - நெருப்பினும் கொடிய அந்தஅயோமுகி,—'இரந்தனன் எய்திய போது - (நான் இவனை) வேண்டிக்கொண்டு நெருங்கும்பொழுது, (இவன்), இசையாது - (என்வேண்டுகோளுக்கு) உடன்படாமல், நனி கரந்தனன் ஏல்-மிகமறுத்துவிடுவனாயினும், கொண்டு-(இவனை)

எடுத்துக்கொண்டு, கடந்து - அப்பாற்சென்று, என் முரஞ்சினில் மேவி - எனது குகையிற் போய், முயங்குவென் - (இவளை) வலியத்தழுவுவேன்,' என்று - என்றுஎண்ணி, விரைந்து எதிர் வந்தனள் - வேகமாக இலக்குமண னெதிரில் வந்தாள்; (எ - று.)

முரஞ்சு - பாறை. மலைக்குகைக்கு, ஆகுபெயர். மேல் ஞஅ - ஆங் கவியில் ''என்முழைதன்னுள் அடைத்து''என வருதலால், இங்குக் குகை யென்று பொருள்கொள்ளுதல் சாலும். பி-ம்:—[1]இயையாது. [2]கரந்தன னென்னிற். [3]உரந்தனின்மேவியுயங்குவென். [4]என்ஞ. [5]விரைந்தனள். ()

சுஙு.—இதுமுதல் ஆறுகவிகள் - அயோமுகியின் தன்மை கூறும்.

[1]உயிர்ப்பி னெருப்புமிழ் கின்றன [2]ளொன்ற
வெயிற்றின் மலைக்குல [3]மென்றினி தூண்ணும்
[4]வயிற்று [5]வயக்கொடு மாசுணம் வீசு
கயிற்றி [6]னிசைத்த முலைக்குழி கண்ணுள்.

ஏழுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உயிர்ப்பின் நெருப்பு உமிழ்கின்றனள் - பெருமூச்சினால் நெருப்பை வெளிப்படுத்துகிறவளும்,—எயிற்றின் - பற்களினால், ஒன்ற-ஒரு சேர, மலை குலம் - யானைக்கூட்டங்களை, மென்று இனிது உண்ணும்-கடித்து நன்றாகஉட்கொள்ளுகிற, வயிறு - வயிற்றையும், வய கொடு மாசுணம் வீசு கயிற்றின் - வலிய கொடிய பெரும்பாம்புகளாகிய நீண்டகயிற்றினால், இசைத்த - சேர்த்துக்கட்டிய, முலை - தனங்களையும், குழி கண்ணுள் - ஆழ்ந்தகண் களையு முடையவளும்,—(எ - று.)

மலை - யானைகளுக்கு உவமையாகுபெயர். வய - வலியுணர்த்தும் உரிச் சொல்; ''வய வலியாகும்'' என்பது தொல்காப்பியம். பி - ம்:—[1]உயிர்ப்பு. [2]போன்ற. [3]எண்ணிலது. [4]வயிற்றள். [5]வலக். [6]கிரைத்த. (கஙஎசு)

சுசு. பற்றிய கோளரி யாளி பணிக்கட்
டெற்றிய பாத சிலம்பு [1]தரித்தா
[2]ளிற்றுக யாவையு [3]மீறுறு மந்நாண்
முற்றிய ஞாயிறு போலு முகத்தாள்.

(இ - ள்.) பற்றிய-(தான்) பிடித்த, கோள் அரி-வலிய சிங்கங்களையும், யாளி - யாளிகளையும், பணிக்கண் தெற்றிய - பாம்பாகிய கயிற்றிற் சேர்த் துக்கட்டிய, பாத சிலம்பு - பாதசரத்தை, தரித்தாள் - அணிந்தவளும்,— யாவையும் இற்று உக ஈறு உறும் அ நாள் - எல்லாப்பொருள்களும் அழிந் தொழியும்படி முடிவுறுகிற அவ்வூழிக்காலத்தில், முற்றிய-உக்கிரங்கொண்ட, ஞாயிறு - சூரியனை, போலும் - ஒத்த, முகத்தாள்-முகத்தையுடையவளும்,— (எ - று.)—பணி=பணீ: படத்தையுடையதெனப் பாம்புக்குக் காரணக் குறி. பி-ம்:—[1]சிலம்ப. [2]எற்றிய. [3]வீவுறும். (கஙஅ)

சகூ. ஆழி வறக்க முகக்க [1]வமைந்த
மூழை யெனப்பொலி மொய்பில வாயாள்
கூழை புறத்து [2]விரிந்ததொர் கொட்பா
லூழி நெருப்பி னுருத்தனை யொப்பாள்.

(இ - ள்.) ஆழி வறக்க முகக்க அமைந்த - கடலும் வற்றிப்போம்படி மொள்ளுவதற்கு அமைந்த, மூழை என பொலி - குகைபோல விளங்குகிற, மொய் பிலம் வாயாள் - வலிய பெரியஉட்டுளையையுடைய வாயையுடைய வளும்,—கூழை புறத்து விரிந்தது ஓர் கொட்பால் - செம்பட்டமயிர் வெளி யேவிரிந்துவிளங்குந்தன்மையால், ஊழி நெருப்பின் உருத்தனை ஒப்பாள் - பிரளயகாலாக்கினியின் வடிவத்தை யொப்பவளும்,—(எ - று.)

மூழை-முழை யென்பதன் கீட்டல். மூழையென்றேகொண்டு, அகப்பை யென்று கூறினுமாம்; மூழை - முகவையுமாம். கூழை - பெண்மயிர். ஊழித் தீயை உவமை கூறியதனால், கூழை என்பதற்கு-செம்பட்டமயிரெனப் பொ ருள்கொள்ளப்பட்டது. கொட்பு - தொழிற்பெயர்; பு - விகுதி. உருத்தனை - உருவை; தன் - சாரியை. இனி, நான்காமடிக்கு - காலாக்கினிருத்திரனைப் போன்றவ ளென்று உரைகூறுவாரும் உளர். பி-ம்:—[1]அமைத்த. [2]விரித்தது.

சகூ. தடி[1]தட வத்[2]தலை பல[3]தழு வத்[4]தா
ணெடிதடை யக்குடர் [5]கெழுமு [6]ணைத்தூண்
[7]படிதட வப்[8]பல பாவ மிசைக்குங்
[9]கடிதட வத்தினி னுருமு கறிபபாள்.

(இ - ள்.) தடி தடவு அதலை பல தழுவ - அளவுகோலால் அளத்தற் குரிய அவ்விடத்தை யொத்த அநேகஇடங்கள் (ஓரடிவைப்பிலே) பொருந் தும்படி, தாள் - (தனது) பாதங்கள், நெடிது அடைய - வெகுதூரம் செல்ல வும், குடர் கெழுமு ணைத்து ஊண் படி தடவ - (தான்தின்னுகின்ற) குடல் களோடுகூடிய கொழுப்பையுடைய மாமிசமாகிய உணவு தரையிற் சிந்தவும், (நடக்கின்றதடையையுடையவளும்),—பல பாவம் இசைக்கும் கடி தடவுத்தி னள் - மிக்கபாவங்களைச்செய்தற்குக்காரணமான அல்குலையுடையவளும்,— உருமு கறிப்பாள் - இடியைப்பொத்த ஓசை யுண்டாம்படி பற்களைக் கடிப்பவ ளும்,—(எ - று.)

அயோமுகி, தனது ஒவ்வோரடிவைப்புக்கும் இடையி லுள்ள இடம் பலகோல்நீளமாம்படி யிருக்கவும், வரும்வேகத்தால் உண்ணும் மாமிசங்கள் தரையிற் பலபடி சிதறவும் நடந்துவந்தன ளென்க. 'உருமு கறிப்பாள்' என் றது, அவள் பற்களைக்கடிக்கும்போது உண்டாகும் ஓசை இடியோசைபோன் றிருத்தலால். கடிதடம் - இடையிடம் அல்லது அல்குல். சிறுபான்மை அத் துச்சாரியையின் அகரம் கெடா தாதலால், கடிதடவத்தினள் என வந்தது. இனி, இப்பாட்டுக்கு—தடி தடவ - இறைச்சித்துண்டுகள் பொருந்தவும், பல தலை தழுவ - அநேகக் தலைகள் பொருந்தவும், தாள் நெடிது அடைய -

கால்கள் மிகுதியாகப் பொருந்தவும், குடர் கெழுமு நிணம் தூண் படி தடவு-குடல்களோடுபொருந்திய கொழுப்புத்திரள் (நீட்சியால்) தரையை அளாவவும், பல பாவம் இசைக்கும் - (இவ்வாறு சின்னபின்னமாக்கி) அநேகம் பிராணிகளைக் கட்டிய, கடிதடவத்தினள் - இடையையுடையவளும், உருமு கறிப்பாள் - இடியைமென்றுதின்னவல்லவளும் என்று உரைப்பாரு முளர். மூன்னேயபொருளில், பாவம் - பாபமென்றவடசொல்லின்திரிபாய், தீவினை யென்றபொருளது. பின்னேயபொருளில், பாவம்-பவத்தை[பிறப்பை]யுடையது: பிராணியென்க. பி-ம்:—[1]தடவி. [2]பலதலே. [3]தழுவி. [4]தான். [5]கெழுவு. [9]நிணத்தாள். [7]அடி. [8]படவரவம், பலவரவம். [9]கடிதடமொத்தவள். (கo அ)

சஎ. [1]இவை [2]யிறை யொப்பன வென்ன விழிப்பா
ளவை[3]குளி ரக்கடி தழலு மெயிற்றுள்
குவைகுலை யக்கடல் [4]குவிய வலைப்பா
ணவையில் புவித்திரு நாண நடப்பாள்.

(இ-ள்.) இவை-இக்கண்கள், இறை ஒப்பன-சிவபிரான்கண்களை யொக்கும், என்ன - என்றுசொல்லும்படி, விழிப்பாள்-விழித்துப்பார்ப்பவளும்,—அவை குளிர - அந்நெருப்புகள் குளிர்ந்தனவென்னும்படி, கடிது அழலும் - மிகவுங்கொடுமைகொண்டுள்ள, எயிற்றுள் - பற்களையுடையவளும்,—குவை குலைய-(மலைகள்)நிலைகுலைந்து அழியும்படியும்,கடல் குவிய-கடல்கள் ஒன்றோடொன்று சேரும்படியும், அலைப்பாள் - வருத்துபவளும்,—நவை இல் புவி திரு நாண நடப்பாள் - குற்றமற்ற பூமிதேவி வெட்கமடையும்படி நடப்பவளும்,—(எ - று.)

சிவபிரானையொத்து நெருப்பு வெளிப்பட விழிப்பவளென்க. உலகத்தில் ஒருவர்செய்தபழி அவ்வினத்தவரையுந் தொடரு மாதலால், மெல்ல நடக்கவேண்டிய பெண்ணினத்தைச் சேர்ந்தவளான அயோமுகியொருத்தி மிகக்கடுமையாக நடந்ததுபற்றிப் பெண்தன்மையுள்ள நமக்கும் பழிவருமே யென்று பூமிதேவி வெட்கமுற்றன ளென்பது, ஈற்றடியின் கருத்து. இனி, நாண - நடைவிசையால் அதிர்ச்சியடைய எனினுமாம். இறுத்தல் - அழித்தலாதலால், இறை - ஊழித்தீயென்பாருமுளர். பி-ம்:—[1]இவர். [2]பிறையொப்பனவெனின திழிப்பாம். [3]கனல. [4]குமுறவுரைப்பாள், குமிறவுரைப்பாள். ()

சஅ. நீளர வச்சரி தாழ்கை நிரைத்தா
[1]ளாளர வப்புலி யார மணைத்தாள்
[2]யாளி யினப்பல தாலி யிசைத்தாள்
கோளரி யைக்கொடு தாழ்குழை யிட்டாள்.

(இ-ள்.)நீள் அரவம் சரி தாழ் கை நிரைத்தாள்-நீண்டபாம்புகளைக் கைவளைகளாகத் தொங்குகின்ற (தன்) கைகளில் வரிசையாக அணிந்தவளும்,—அரவம் ஆள் புலி ஆரம் அணைத்தாள்-கர்ச்சனையையுடைய ஆண்புலிகளை ஆரமாகக்கொண்டு அணிந்தவளும்,—பல யாளியினை தாலி இசைத்தாள்-அநேக யாளிகளைச் சேர்த்துத் தாலியாகக் கட்டிக்கொண்டவளும்,—கோள் அரியை

கொடு தாழ் குழை இட்டாள் - வலிய சிங்கங்களைக்கொண்டு தொங்குகின்ற காதணியாக அணிந்தவளும் ஆகிய அயோமுகி,--(எ-று.)—நின்றன எனை அடுத்த கவியில் முடியும்.

இனி, 'ஆளரவப்புலியாரமணைத்தாள்' என்பதற்கு, ஆள்கின்ற [தாங்குகின்ற] பாம்பாகிய கயிற்றிற் கட்டிய புலியை ஆரமாக அணிந்தவள் என்றும் பொருள்கொள்ளலாம்; இப்பொருளில், அரவம் என்றசொல் - 'அரா' என்பது குறியதன்கீழ் 'ஆ' குறுகி அம்முச்சாரியை பெற்ற தென்க; முன்னைய பொருளில், 'ரவம்' என்ற வடசொல் முதலில் அகரம்பெற்று வந்ததாம்.

பி-மீ:—[1]ஆளிவயப். [2]தாளரியைப். (க0அச)

சகூ.—இலக்குமணன் அயோமுகியைக் காணுதல்.

நின்றன ளாசையி னீர்கலு மூங்கண்
குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாண்
மின்றிரி கின்ற வெயிற்றின் விளக்காற்
கன்றிரு ளிற்றிரி கோளரி கண்டான்.

(இ - ள்.) குன்றி நிகர்ப்ப - (இயற்கைச் செந்நிறத்தாற்) குன்றிமணியை ஒத்திருப்பனவான, ஆசையின் நீர் கலுமும் கண் - காமநோயால் நீர் பெருகுங் கண்களைக்கொண்டு, குளிர்ப்ப விழிப்பாள் - குளிரநோக்குபவளாகி, நின்றனள்—; (அப்பொழுது), கன்று இருளில் திரி கோள் அரி - மிக்க இருட்டில் திரிகின்ற வலியசிங்கம்போன்ற இலக்குமணன், மின் திரிகின்ற எயிற்றின் விளக்கால் - காந்தியை வீசுகின்ற (அவளது) பற்களின் ஒளியாகிய விளக்கொளியினால், கண்டான் - (அவ்வயோமுகியைப்) பார்த்தான்; (எ - று.)—கோளரி - வீரனுக்கு உவமையாகுபெயர். நிகர்ப்ப-பெயர்.

நo.—இலக்குமணன் அவளை அரக்கி யென்று அறிதல்.

பண்டையி னாசி யிழந்து பதைக்குந்
திண்டிற லாளொடு தாடகை சீராள்
கண்டக ராய வரக்கர் கணத்தோ
ரொண்டொடி யாமிவ ளென்ப துணர்ந்தான்.

(இ - ள்.) 'பண்டையில் - முன்பு, நாசி இழந்து பதைக்கும் - மூக்கு முதலிய உறுப்புக்களை யிழந்து வருந்தின, திண் திறலாளொடு-மிக்கவலிமையுடைய சூர்ப்பணகையோடு, தாடகை - தாடகையென்னும் அரக்கியையொத்த, சீராள்-குணத்தையுடையவளான, இவள்—,கண்டகர் ஆய அரக்கர் கணத்து ஓர் ஒள் தொடி ஆம்-துஷ்டர்களாகிய இராக்கதர்கூட்டத்திற் பிறந்த ஒரு பெண்ணுவள்,' என்பது-என்பதை, உணர்ந்தான்-(இவளைக்கண்ட மாத்திரத்தில்) அறிந்தான், (இலக்குமணன்); (எ - று.)

இராவணன் தங்கையான சூர்ப்பணகை இராமலட்சுமணர்களைக் கண்டு காமுற்று மூக்குமுதலிய உறுப்புக்களை யிழந்தமை பிரசித்தம். தாடகை - பதி

ஞயிரம் யானை பலம் கொண்ட அரக்கி; சுபாகு மாரீசர்களின் தாய். இவள் இருடிகளுக்கு மிக்க துன்பஞ் செய்துவந்தமைபால், விசுவாமித்திர முனிவர் வேண்டுகோளின்படி இராமனுற் கொல்லப்பட்டாள். பண்டை-ஐயீற்றுடைக் குற்றியலுகரம். நாசி-நாஹிகா என்னும் வடசொல்லின் சிதைவு. திண் திறல்-ஒருபொருட் பன்மொழி. கண்டகர்-முட்போலக் கொடியவர்; கண்டகம்-முள். ஒண்டொடி-ஒள்ளிய தொடியை யணிந்தவ ளெனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (கo அசு)

நக.—இலக்குமணன் அம்மொழியை 'நீ யார்?' என்று வினவல்.

பாவிய ராமிவர் பண்பிலர் [1]நம்பான்
மேவிய காரணம் [2]வேறிலை யென்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தா
யாவ ளடியுரை செய்கடி தென்றான்.

(இ-ள்.) பண்பு இலர்-நற்குணமில்லாதவரும், பாவியர் ஆம்-பாவிகளும் ஆகிய, இவர்-இவள்போன்ற ராக்ஷதிகள், நம்பால் மேவிய காரணம்-நம்மிடத்தில்விருப்போடுவருதற்கு உரிய காரணம், வேறு இலை (காமவிருப்பமேயன்றி) வேறில்லை, என்பான்-என்று எண்ணினவனாகி,—(இலக்குமணன்), 'மா இயல் கானின்-கொடிய மிருகங்கள் திரிகின்ற இக்காட்டில், வயங்கு இருள்-மிக்க இருட்டில், வந்தாய்-வந்த நீ, யாவள் அடி-யாரடி! கடிது உரை செய்-விரைவாகச் சொல்,' என்றான்-என்று வினவினன்; (எ-று.)

அடி-பெண்விளியைக்காட்டும் இழிவுகுறிக்கும் இடைச்சொல். வந்தாய்-முன்னிலை யொருமை வினையாலணையும் பெயர். பி-ம்:—[1]நண்பால். [2]வேறினி. (கo அஎ)

நஉ.—அவ்வரக்கி தான் வந்த காரணத்தைக் கூறுதல்.

பேசின னங்கவள் பேசுற [1]நாணு
ளூச [2]லுழன்றுழி [3]சிந்தைய ளுந்தா
[4]னேசமி லன்பின ளாயினு நின்பா
லாசையின் வந்த வயோமுகி யென்றாள்.

(இ-ள்.) பேசினன்-(இலக்குமணன் இவ்வாறு) கூறினன்; அங்கு-அப்பொழுது, ஊசல் உழன்று அழி சிந்தையள் அவளும்-(தன்கருத்து முற்றுமோ முற்றாதோ என்று) ஊசலாடி வருத்துகிற மனத்தையுடைய அவ்வரக்கியும், பேசுற நாணுள்-(அவ்வாண்மகனெதிரிற்) பேசுதற்கு நாணமடையாதவளாய், 'நேசம் இல் அன்பினள் ஆயினும்-பழைய நண்பு இல்லாத அன்புடைய வளானாலும் [நான் இதுவரையில் உன்னிடத்தில் அன்போடு பழகாதவளாயிருந்தாலும்], நின்பால்-உன்னிடத்தில், ஆசையின்-காதலினால், வந்த—, அயோமுகி-அயோமுகி யென்னும் பெயருடையேன்,' என்றாள்-என்று கூறினள்; (எ-று.)—தான்-அசை.

'பேதினன்' என்பது, முற்பாட்டின் அநுவாதம். காமநோய்மிகுதியால் அவளுக்கு உயிர் போவதும் வருவதுமாயிருந்தது என்பதும், இரண்டாமடியின் கருத்தாகலாம். நேசமிலன்பின னென்பதை நேசமன்பிலனென விகுதி பிரித்துக் கூட்டி, நான் இயல்பாக மனிதர்களிடத்து நண்பும் அன்பும் இல்லேனுயினும் என்று உரைக்கலாம். பி-மீ:—[1]நாணு. [2]இழந்தழி. [3]சிந்தையி னேடு. [4]நேசமிலன்பிலனுயினும், எசலனன்பினனுமினி. (கo அஅ)

ருங. பின்னு [1]முரைப்பவள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடா[2]முலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தெ
னின்னுயி ரைக்கடி நீகுதி யென்றாள்.

(இ - ள்.) பின்னும் உரைப்பவள்-மேலும் சொல்லுகின்றவளாய், (அவ்வரக்கி),—(இலக்குமணனே நோக்கி), 'பேர் எழில் வீரா - மிக்க அழகையுடைய வீரனே! முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும்-இதற்குமுன்னே ஒருவராலும் தொட்டு அனுபவிக்கப்படாத (எனது) தனங்களுடனே, பொன்னின் மணி தட மார்பு புணர்ந்து - பொன்னிறமான அழகிய பெரிய (உனது) மார்பு பொருந்தத் தழுவி, என் இன் உயிரை கடிது ஈகுதி-எனது இனிய உயிரை விரைவிற் கொடுத்தருள்வாய்,' என்றாள் - என்று வேண்டினாள்; (எ - று.)

என்னை விரைவிற் புணராயாயின் இறந்துபடுவே னென்பது கருத்து. மிகக்கொடிய அரக்கி இலக்குமணனிடத்தில் தாழ்ந்துகூறினமையை விளக்க 'ஈகுதி' என இழிந்தோர் கூற்றினைக் கூறினர். பி - மீ:—[1]உரைத்தனள். [2]முலையோடுன். (கo அக)

ருசு.—அவள் வேண்டுகையை இலக்குமணன் மறுத்தல்.

ஆறிய சிந்தைய ளஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
[1]மாறில வார்கணை யிவ்வுரை வாயிற்
கூறிடி னின்னுடல் கூறிடு மென்றான்.

(இ - ள்.) ஆறிய சிந்தையள் - கொடுமைதணிந்த மனமுடையவளாய், (அவள்), அஃது உரை செய்ய - அவ்வார்த்தையைச் சொல்ல, (உடனே), சீறிய கோள் அரி-கோபங்கொண்ட வலிய சிங்கம் போன்ற இலக்குமணன், கன்கள் சிவந்தான் - (அக்கோபத்தாற்) கண்கள் சிவந்து, 'இ உரை வாயின் கூறிடின் - இப்படிப்பட்ட சொற்களை (நீ மீண்டும்) வாயினாற் சொன்னால், மாறு இல வார் கணை-ஒப்பில்லாத நீண்ட (எனது) அம்பு, நின் உடல் கூறிடும்-உனது உடம்பைத் துண்டாக்கிவிடும்', என்றான்-என்று கூறினன்; (எ - று.)

கோளரி - உவமையாகுபெயர். கோளரி கண்கள் சிவந்தான்-உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாய்முடிந்த திணைவழு

வமைதி. நீ கூறிட்டால் அதற்குஎதிராக என் அய்புங் கூறிடு மெனச் சமத் காரத்தோன்றக் கூறியவாறு. பி-மீ:—[1]மாறிலி. (கo கூo)

நூநு.—இரண்டுகவிகள் - அயோமுகி மீண்டும் இலக்குமணனை வேண்டுதல்.

மற்றவ னவ்வுரை செப்ப மனத்தாற்
செற்றிலள் கைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நீயெனை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடி னின்று [1]பிறந்தனெ னென்றாள்.

(இ - ள்.) அவன் மற்று அ உரை செப்ப-அவ்விலக்குமணன் தன்கருத் துக்குமாறான அவ்வார்த்தையைக் கூற, (அயோமுகி), மனத்தால் செற்றி லள் - மனத்திற் கோபங்கொள்ளாதவளாய், கை துணை சென்னியின் வைத் தாள் - (தனது) இரண்டுகைகளையும் தன்தலைமேல் வைத்துக்கொண்டு [தலை மேற் கைகூப்பி வணங்கி], (இலக்குமணனை நோக்கி), 'கொற்றவ - தலை வனே! நீ—, வந்து - (என்னிடம்) வந்து, எனை - என்னை, உயிர் கொள்ள- உயிர் பெற்றுவாழும்படிசெய்ய, பெற்றிடின் - பெறுவேனுனால், இன்று பிறந்தனென் - இன்றுதான் (நான்) பிறந்த பயன்பெற்றவளாவேன்,' என் றாள் - என்று சொன்னாள்; (எ - று.)

பிறந்து வெகுநாளாயும் பிறப்பெடுத்ததற்குப் பயனாக இலக்குமணனைக் கூடாது காலம்வீணேகழிந்தமையாற் கீழ்ச்சென்ற காலங்களைப் பிறவாத நாளாகவே வைத்து அவனைக் கூடப்பெறும் அந்தநாளையே தான் புதிதாகப் பிறந்தநாளாகக் கருதி, 'இன்றுபிறந்தனென்' என்றாள். இனி, காமநோயால் இறந்ததுபோன்றுள்ள தனதுயிரை இவ்வீரனுடைய சேர்க்கையாலேயே பெறுவதாக இவள் நினைத்தமையால், 'பிழைத்தது புநர்ஜந்மம்' என்றபடி 'இன்று பிறந்தனென்' என்றுமாம். எனை உயிர்கொள்ளுதல் - என்னை அங்கீகரித்தல். உயிர் வாங்கப்பெறுதலென்ற பொருளும், இதில் தொனித்தல் காண்க. பி-மீ:—[1]பிழைத்தனென். (கo கூக)

நூசு. வெங்கத மில்லவள் பின்னரு [1]மேலோ
யிங்கு நறும்புன லுடுதி [2]யென்னி
னங்கையி னலெனை யஞ்சலி யென்றுற்
கங்கையி னீர்கொணர் வென்கடி தென்றாள்.

(இ - ள்.) வெம் கதம் இல்லவள் - கொடுங் கோப மற்றவளாய், (அவ் வயோமுகி),—பின்னரும் - பின்பும், (இலக்குமணனை நோக்கி, 'மேலோய் - சிறந்தவனே! இங்கு நறு புனல் நாடுதி என்னின் - இங்கே நல்லநீரைத் தேடுகிறாயானால், எனை - என்னை [எனக்கு], உன் அம் கையினால் - உனது அழகியகையினால், அஞ்சலி என்றால் - அஞ்சாதேயென்று அபயம்அளித் தால், கங்கையின் நீர் கடிது கொணர்வென் - கங்கையின்நீரையும் வெகு ஷிரைவிற் கொணர்ந்து தருவேன்,' என்றாள்—; (எ - று.)

உன் அருள்பெற்றமாத்திரத்தில் வெகுதூரத்திலுள்ளதும் மிகச்சிறந்ததுமான கங்கையின் நீரையும் கொணர்ந்துதருவதற்கு யான் சித்தமாயிருக்க, நீ என் இப்படி இவ்விரவில் கஷ்டப்படவேண்டும்? என்றுள் என்பதாம். அங்கை என்பதை அகம் கையென்று பிரித்துப் பொருள் கூறுதலும் பொருந்தும். பி-ம்:—[1]வேலோய். [2]நாடுதியேனுன், நாடுதியேலுன். (க0கூ)

நுஎ.—இலக்குமணன் அயோமுகியை அச்சமுறுத்தல்.

சுமித்திரை சேபவள் சொன்னசொ லன்ன
கமித்தில னின்னிரு காதொடு நாசி
துமிப்பதன் [1]முன்பக லென்பது சொல்ல
[2]விமைத்தில ணின்றன ளின்ன நினைந்தாள்.

(இ - ள்.) சுமித்திரை சேய் சுமித்திரையின் புதல்வனுனை இலக்குமணன், அவள் சொன்ன அன்ன சொல் - அவ்வயோமுகி சொல்லிய அவ்வார்த்தைகளை (க் கேட்டு), கமித்திலன் - மனம்பொறுதலனுப், (அவளை நோக்கி), 'நின் இரு காதொடு நாசி துமிப்பதன் முன்பு - உனது இரண்டு காதுகளையும் மூக்கையும் அறுத்தெறிப்பதற்குமுன்னமே, அகல்-இவ்விடம் விட்டு ஓடிப்போ,' என்பதாகச் சொல்ல - என்றவார்த்தையைக் கூற, (அயோமுகி), இமைத்திலள் நின்றனள் - கண்ணிமையாமல் நிலைத்துநின்று, இன்ன நினைந்தாள் - இவைகளை நினைப்பவளானுள்; (எ - று.)—அவற்றை அடுத்த கவியிற் காண்க.

கமித்திலன் - சுமித்திலன். 'காதொடுநாசி' என்றது, தனங்களுக்கும் உபலக்ஷணம். அன்ன, இன்ன - பெயர். பி-ம்:—[1]முன்னகல். [2]இமைப்பற நின்றனளின்னலுழந்தாள். (க0கூ)

நுஅ.—அயோமுகி இலக்குமணனை எடுத்துச்சேல்லக் கருதுதல்.

எடுத்தனென் னேகினென் னென்முழை தன்னு
ளடைத்திவன் [1]வெம்மை யகற்றிய பின்னை
[2]யுடற்படு மாலுட னேயுறு நன்மை
திடத்திது வேநல னென்றயல் சென்றுள்.

(இ - ள்.) 'எடுத்தனென் எகினென்-(நான் இவனை) எடுத்துச்சென்று, என் முழைதன்னுள் அடைத்து இவன் வெம்மை அகற்றிய பின்னை-எனது குகைக்குள் அடைத்துவைத்து இவனது உக்கிரத்தைத் தணித்தபின்பு, உடற்படும் - (இவன்தானே எனதுகருத்துக்கு) இசைவான்; உடனே நன்மை உறும் - உடனே (எனக்கு) நல்ல சுகம் கிடைக்கும்; திடத்து இதுவே நலன்-உறுதியுடைய இச்செயலே நன்மைதருவது', என்று என்றுநினைத்து, அயல் சென்றுள் - (தான் அவ்வாறேசெய்வதற்கு இலக்குமணனது) பக்கத்திற் போனுள்; (எ - று.)—ஆல் - அசை.

'உடன்படும்' என்பது, எதுகைநோக்கி உடற்படு மெனத் திரிந்தது. திடம் - திருடம்: வடசொல்லின் சிதைவு. பின்னை, ஐ - சாரியை. பி-ம்:—[1]மேன்மையடக்கியபின்றை. [2]உடற்படுமாறுடனே யுறைதன்மை. (க0கூ)

நகூ.—அயோழகி இலக்குமணனை எடுத்துச்செல்லுதல்.

மோகனை யென்பது முந்தி முயன்றுண்
மாக நெடுங்கிரி போலியை வவ்வா
வேகின ளும்பரி னிந்துவொ டேகு
மேக மெனும்படி நொய்தினின் வெய்யாள்.

(இ - ள்.) வெய்யாள்-கொடியஅவ்வயோமுகி,—முந்தி-விரைந்து, மோகனை என்பது-மோகத்தையுண்டாக்கும் மாயையைச் செய்வதில்,முயன்றுள்-யத்தனப்பட்டு, மா கம் நெடு கிரி போலியை வவ்வா - பெரிய ஆகாயத்தை யளாவிய உயர்ந்த மலையை யொத்த இலக்குமணனைத் தூக்கிக்கொண்டு,—உம்பரின் - ஆகாயத்தில், இந்துவொடு ஏகும் மேகம் எனும் படி - சந்திரனோடுகூடிச்செல்லுகிற மேக மென்று சொல்லும்படி, நொய்தினின் - விரைவாக, ஏகினள் - சென்றாள்; (எ - று.)

மோகனை, மாகம் - மோஹநா, மஹாகம் என்னும் வடசொற்கள் திரிந்தன. இலக்குமணனுக்கு மலையுவமை, கலங்காநிலைமைக்கு என்க. போலி. இ - பெயர்விகுதி. சந்திரன் - இலக்குமணனுக்கும், மேகம்-அயோமுகிக்கும் உவமை. பி - ம்:—[1]போகலையென்பது முந்துபுகன்றாள். (கoகடு)

சுக.—இலக்குமணனை யெடுத்துச் செல்லும் அயோழகி வருணனை.

மந்தரம் [1]வேலையில் வந்ததும் வானத்
திந்திர னூர்[2]பிடி யென்னலு மாளள்
வெந்திறல் வேல்கொடு சூரடும் வீரச்
சுந்தர னூர்தரு தோகையு மொத்தாள்.

(இ - ள்.) (இலக்குமணனைவவ்விச்செல்லும் அயோமுகி),—மந்தரம் வேலையில் வந்ததும் - சமுத்திரத்தில் வந்துபொருந்தின மந்தரபருவதமும் [மந்தரபருவதம்பொருந்தப்பெற்ற பாற்கடலும் என்றபடி], வானத்து இந்திரன் ஊர் பிடி - தேவலோகத்தில் இந்திரன் ஏறிநடத்துகிற பெண்யானையும், என்னலும் ஆளள் - என்று உவமைகூறத்தக்கவளுமாளள்; (மேலும்), வெம் திறல் வேல் கொடு சூர் அடும் வீரம் சுந்தரன் ஊர் தரு தோகையும்-கொடிய பலத்தையுடைய வேலாயுதத்தால் சூரபதுமனைக்கொன்ற வீரத்தையுடைய அழகிய முருகக்கடவுள் ஏறிநடத்துகிற மயிலையும், ஒத்தாள்—; (எ - று.)

மந்தரத்தை இலக்குமணனுக்கும், பாற்கடலை அயோமுகிக்கும் உவமை கூறினது, பாற்கடலை மந்தரம் கலக்கினதுபோல அரக்கியை இலக்குமணன் கலக்குவிப்பா னென்று குறித்தற்கு. பிடியும், மயிலும் - அயோமுகிக்கு, கீழ்நின்று தாங்குவதில் உவமை. அழகும் சிறப்பும் வலிமையும்பற்றி, இலக்குமணனுக்கு இந்திரனும் முருகனும் ஒப்பாவர். 'இந்திரனூர்பிடி' என்றது, இந்திரனது வாகனமாகிய ஐராவதத்தின் மனைவியான 'அப்பிரமு' என்ற பெண்யானையைக் குறிக்கும். என்னலும், தோகையும், உம்மைகள் - இறந்

தத்துதழுவியஎச்சப்பொருளன. கொடு - மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபாகிய கொண்டு என்பதன் தொகுத்தல். சூர்-சூர னென்பதன் விகாரம். சுப்பிரமணியன் மிக்கஅழகுடையவனுதல்பற்றி, அவனே 'சுந்தரன்' என்றபெயராற் குறித்தார். தோகை - மயிலுக்குச் சினையாகுபெயர். **பி-மீ:**—[1]வந்ததுமான, வந்ததுமானத்து. [2]முகில்.

அசுரேசன்மகளாகிய மாயையென்னும்பெயர்பெற்ற சுரசையென்பவள் காசியபமுனிவரைக் கூடிப் பெற்ற புத்திரர்களாகிய சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் என்ற மூவரும் சிவபிரானேக்குறித்துத் தவமும் வேள்வியுஞ் செய்து அவனருளால் அளவிறந்தவரங்களைப் பெற்று மிகச்செருக்குற்றுத் தமது குருவாகிய சுக்கிரனது தீயஉபதேசத்தால் மற்றும்பலஆயிரம்அசுரர்களுடன் கூடி இந்திரன்முதலிய தேவர்களே யெதிர்த்துப் பொருது வென்று பற்பலவகையாக உலகத்தை வருத்தியவளவிலே, அத்துன்பம் பொறுக்கலாற்றாத தேவர்கள் சிவபிரானைத் தொழுது துதிசெய்து 'உன்னைப்போல ஒருபுத்திரனை யுண்டாக்கி அக்குமாரனால் அசுரர்களையழித்து எங்களைக்காத்தருள்க' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கு இரங்கிக் குமாரக்கடவுளை யுண்டாக்கி அனுப்பியருள, அம்முருகமூர்த்தி, வீரவாகுமுதலிய சிவகுமாரர்களுடனே சென்று போர்புரிந்து அவ்வசுரர்களனைவரையும் அழித்து அமரர்களைக் காத்தருளின னென்பது **'சூரபன்மவீரச் சுந்தரன்'** என்பதில் **அடங்கிய கதை.** சுப்பிரமணியனுல் வேல்கொண்டு பிளக்கப்பட்ட சூரபதுமனது உடம்பின் கூறுஇரண்டும் மயில்வடிவமும் கோழிவடிவமும் பெற்று அக்கடவுளருளால் அப்பிரானுக்கு வாகனமுங் கொடியுமாய் அமைத்தன வென்ற வரலாறும் உணரத்தக்கது. (கஙகசு)

சூக.—அயோமுகி இலக்குமணனைத் தழுவுதல்.

ஆங்கவண் மார்பொடு கையி னடங்கிப்
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
[1]ஓங்க லுரிக்கு முருத்திர னொத்தான்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, அவள் மார்பொடு கையின் அடங்கி- அவளது மார்பிலுள்ளும் கைகளினுள்ளும் அடங்கி, பொலிந்தான்-விளங்கியவனுகிய, பூ கழல் வார் சிலை மீளி - அழகிய வீரக்கழலையணிந்த பெரிய வில்லையுடைய வீரனான இலக்குமணன்,--வீங்கிய வெம் சினம்-மிக்ககொடிய கோபத்தையும், வீழ் மதம் - பெருகுகிற மதத்தையுமுடைய, வெம் போர் - கொடிய போரைச் செய்கிற, ஓங்கல் - யானையை, உரிக்கும் - உரித்துப் போர்த்துக்கொண்ட, உருத்திரன் - சிவபிரானை, ஒத்தான்—; (எ - று.)

அயோமுகியால் இரண்டுகைகளாலும் மார்போடு தன்உடம்புமுழுவதும் மறையும்படி தழுவப்பட்ட இலக்குமணன், உடம்பு முழுதும் மூடும்படி யானைத்தோலைப் போர்த்த சிவபிரானை யொத்தனன் என்க. மீளி - ஆண்பாற்

கிறப்புப்பெயர். ஓங்கல் - உயர்ந்தமலைபோன்ற யானைக்கு இருமடியாகு பெயர். உருத்திரன்-ருத்ரன்; வடசொல். பீ-மீ:—[1]ஓங்கலுரிக்குளுருத்திரன்.

சிவபிரான் யானையுரித்த கதை:—சிவபெருமான், தன்னைமதியாத தாருகவனத்துமுனிவர்களது மனநிலையைப் பரிசோதிக்க நினைத்து ஒருவிட் வுருவங்கொண்டு அவர்கள்வீடுதோறுஞ்சென்று பிக்ஷாடனஞ்செய்து, தன்னை நோக்கிக் காதல்கொண்ட அவர்கள் பத்தினிமார்களது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறுமற் கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபி சாரயாக மொன்று செய்து, அவ்வோமத்தீயினின்று எழுந்த நாகங்கள் பூதங் கள் மான் புலி யானை முயலகன் வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்றுவரும்படிஏவ, சிவபிரான், தன்மேற் சீறிவந்த நாகங்களை ஆபரணங் களாகவும், பூதங்களைத் தனதுகணங்களாகவும் கொண்டு, மானைக் கையில் ஏந்தி, புலியைத் தோலெயுரித்து உடுத்து, யானையினுட் சென்று உடல் பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்டு. முயலகனை முதுகிற்காலா லூன்றி, வெண்டலையைக் கையிற்பற்றிச் சடைமேலணிந்து அவற்றையெல் லாம் பயனிலவாகச் செய்துவிட்டன னென்பதாம். அருந்தவமியற்றிப் பெரு வரம் பெற்ற கஜாசுரனென்பவன், தேவர் முனிவர் முதலியோரை இடை விடாது வருத்தித் துரத்த, அஞ்சியோடின அவர்களது பிரார்த்தனையால் சிவபிரான் தன்னையெதிர்த்துப் போர்செய்யவந்த அவ்வசுரனைக் காலா லுதைத்துத் தள்ளிக்கொன்று அவ்யானையின் தோலெயுரித்துப் போர்த்துக் கொண்டன னென்ற கதையையுங் காண்க. (கoகூஎ)

கூஉ.—இலக்குமணன் வராததுகண்டு இராமன் தேடத்தொடங்குதல்.

இப்படி [1]யேகின ளன்னவ ளிப்பா
லப்பிடை தேடி நடந்த வெனுவித்
துப்புடை மால்வரை தோன்றல னென்னு
[2]வெப்புடை மெய்யுடை வீரன் [3]விரைந்தான்.

(இ - ள்.) அன்னவள்-அவ்வியோமுகி, இ படி ஏகினள்-இவ்வாறு (அவ் விலக்குமணனைத் தழுவியெடுத்துச்) சென்றாள்; (அதுநிற்க): இப்பால்-இவ் விடத்தில்,வெப்பு உடை மெய் உடை வீரன்-தாபத்தைக்கொண்ட மேனியை யுடைய வீரனான இராமபிரான்,—'அப்பு இடை தேடி நடந்த-தண்ணீரைக் காட்டிடத்திலே தேடிச் சென்ற, என் ஆவி - எனது உயிர்போன்ற, துப்பு உடை மால் வரை - வலிமையையுடைய பெரிய மலையையொத்த இலக்கு மணன், தோன்றலன் - இன்னும் வரவில்லை,' என்னு - என்று எண்ணி, விரைந்தான் - (அவனைத் தேடுதற்கு) விரைந்தான்; (எ - று.)

அப்பு-அப் என்னும் வடசொல்லின் விகாரம்; அம்பு என்பதன் வலித்த லாகவுங் கொள்ளலாம். வெப்பு - விரகதாபமும், தாகதாபமும், தம்பியைக் காணுமையாலான தாபமும். வரை - உவமவாகுபெயர். பீ-மீ:—[1]அன்னவ ளேகினள். [2]வெப்பிடை. [3]உரைத்தான். (கoகூஅ)

வேறு.

சூக.—இதுமுதற்பதினேன்து கவிகள் - இராமன் இலக்குமணனைப்பற்றிப் பலவாறு சிந்தித்து வருந்துதலைக் கூறும்.

வெய்தா கியகா னிடைமே வருநீ
ரைதா தலிலே வயலொன் றுளதோ
[1]நொய்தாய் வரவே கமுகொய் திலனு
லெய்தா [2]தொழியா னிதுவென் னைகொலாம்.

பன்னிரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (இலக்குமணன்),—நொய்து ஆய் வர-விரைவாய் வர, வேகமும் நொய்து இலன் - வேகமும் அற்பமாகவுடையவனல்லன்; எய்தாது ஒழியான் - வாராமல் நீங்கத்தக்கவனுமல்லன்: (அப்படியிருக்க, அவன் வராமைக்குக் காரணம்),—வெய்து ஆகிய கானிடை மேவரும் நீர் ஐது ஆதலிலே - வெப்பத்தையுடையதான காட்டிலே பொருந்திய தண்ணீர் அருமையானதனாலேயோ? அயல் ஒன்று உளதோ - வேறு சேர்ந்தசெயல் யாதாயினும் உள்ளதோ? இது என்னை கொல் ஆம் - இது யாதுகாரணம் பற்றியதோ? (எ - று.)

மிக்கவேகமுடையவனும் காரியத்தை முடித்துக்கொள்ளாமல் திரும்பாதவனுமான இலக்குமணன் இத்துணைநேரமாகியும் வராதது, காட்டில் தண்ணீர் கிடையாமையாலோ? வேறு யாது சேர்ந்ததோ? என்னவோ! என்று இராமபிரான் கலக்கமடைந்தனன் என்பதாம். ஆல், ஆம்-அசைகள்.

பி-ம்:—[1]நொய்தாயவலாதவுநொய்தினவால், நொய்தாயவலாதவுநொய்தின் வரல். [2]ஒழிவானிடர்.

இதுமுதற் பதினைறு கவிகள் - மாரீசன் வதைப்படலத்தின் உக0 - ஆங் கவிபோன்ற கலிவிருத்தங்கள். (க0கூ)

சூச. [1]நீர்கண் டனையிவ் வழிநே டிணைபோய்ச்
[2]சார்கொண் டெனவித் துணைசார் கிலனுல்
வார்கொண் டணிகொங் கையையவ் வினர்பாற்
போர்கொண் டனனே பொருளுண் டிதனு.

(இ - ள்.) 'இ வழி நேடினை போய் - (நீ) இவ்வழியில் தேடிச்சென்று, நீர் கண்டனை கொண்டு சார் - தண்ணீரைக் கண்டு எடுத்துக்கொண்டு வா,' என - என்று (நான்) சொல்லியனுப்ப, இ துணை சார்கிலன் - இவ்வளவு நேரமாயும் வரவில்லை; வார் கொண்டு அணி கொங்கையை - கச்சைக் கொண்டு அணிந்துள்ள தனங்களையுடைய சீதையை, வவ்வினர்பால் - கவர்ந்த அரக்கரிடத்தில், பொருள் உண்டு இது எனு - (போர் செய்வதில்) பயனுண்டென்று கருதி, போர் கொண்டனனே - போர்செய்யத் தொடங்கினனோ? (எ - று.)

வார்கொண்டணிகொங்கை - அன்மொழித்தொகை. ஆல் - அசை. பி - மீ:—[1]நீர்கொண்டனனிவ்வழிநேடியனே. [2]சார்கின்றிலன், சார்கென்றனன். (கக0O)

சுரு. அஞ்சொற் கிளியன் னவணங் கினைமுன்
வஞ்சித் தவிரா வணன்வவ் வினனே
நஞ்சிற் [1]கொடியா னடலைத் தொழிலாற்
றுஞ்சுற் றனனே விதியின் றுணைவால்.

(இ - ள்.) அம் சொல் கிளி அன்ன அணங்கினை முன் வஞ்சித்த இரா வணன் வவ்வினனே - அழகிய சொற்களையுடைய கிளிபோன்ற சீதையை முன்னே வஞ்சித்துக்கவர்ந்த இராவணன் (இவனையும்) கவர்ந்துசென்றனனே? நஞ்சின் கொடியான் நடலை தொழிலால் - விஷத்தைக்காட்டிலும் கொடியவனுன அவ் விராவணனது வஞ்சனைத்தொழிலால், விதியின் துணை வால் - ஊழ்வினையின் வலியால், துஞ்சுற்றனனே - இறந்தொழிந்தானே?

அணங்கு - பெண்ணிற்சிறந்தவள். 'ஆல்' இரண்டும் - கருவிப்பொரு ளன. துஞ்சுற்றனன் - மங்கலவழக்கு. இனி, அணங்கினை முன் வஞ்சித்த நஞ்சிற்கொடியானுன இராவணன் நடலைத்தொழிலால் (இவனையும்) வௌ வினனே? (அன்றி) விதியின் துணைவால் (தற்செயலாய்த்) துஞ்சுற்றனனே என்று அன்வயித்துப் பொருள்கூறினுமாம். பி - மீ:—[1]கொடியார். (கக0க)

சுசு. வரிவிற் கையெனு ருயிர்வந் திலனே
றருசொற் கருதே னெருதை யலையான்
[1]பிரிவுற் றனனென் பதொர்பி ழைபெருத்
[2]தெரிவுற் றிடவா வி[3]யிழந் தனனே.

(இ - ள்.) வரி வில் கை என் ஆர் உயிர் வந்திலன் - கட்டமைந்தவில்லை யேந்திய கையையுடைய எனது அரியஉயிர்போன்ற தம்பி வந்தானில்லை; தரு சொல் கருதேன் - (தான்) சொன்னவார்த்தையை மதியாமல், யான் - நான், ஒரு தையலை - ஒப்பற்ற சீதையை, பிரிவு உற்றனென் - பிரியப்பெற்றேன், என்பது ஓர்பீழை-என்ற ஒருதுன்பம், பெருத்து - அதிகப்படுதலால், எரிவு உற்றிட - தாபம்மிக, ஆவி இழந்தனனே - உயிர்நீங்கினனே? (எ - று.)

மாரீசன் மாயப்பொன்மானுய் எதிர்வந்து மயக்கிநிற்கக்கண்டு சீதை அதைப் பிடித்துத்தரவேண்டு மென்று இராமனைக் கேட்டுக்கொண்டபோது, இலக்குமணன் 'இது மாயம், இதனைப்பிடிக்கப் பின்தொடரலாகாது' என்று பலதரங் கூறிவற்புறுத்தியும் கேளாமல் இராமன் அதன்பின்னே தொடர்ந்த தனால், சீதையைப் பிரியநேரிட்டது என்பது, வரலாறு. பீழை - பீடா என்ற வடசொல்லின் திரிபு. உயிர் - உவமவாகுபெயர். ஆல் - அசை. பி - மீ:—[1]பிரிவித்தனனென்றுரு. [2]தெரிவித்திட. [3]இறந்தனனே. (கக0உ)

சுஎ. உண்டா கியகா ரிருளோ [1]டொருவென்
கண்டா னையல்வே றெருகண் ணிலனுல்

புண்டா னுறுநெஞ் சுபுழுங் குறுவே
²னெண்டா னிலெனெங் ஙனநா டுகெனே.

(இ - ள்.) உண்டு ஆகிய கார் இருளோடு - நிறைந்துபொருந்திய பேரிருளில், ஒருவு என் கண் தான் அயல் வேறு ஒரு கண் இலன் - (என்னை விட்டு) நீங்கிய என்கண்ணனை இலக்குமணன் தவிர வேறொருகண்ணை யுடையவனல்லேன்; புண் உறு நெஞ்சு புழுங்குறுவேன்-(இலக்குமணனாகிய கண்ணையிழந்ததனால்) முன்னமே புண்பட்ட மனத்தில் மீண்டும் வருத்தமுறுகிறேன்; எண் தான் இலென் - (மனம் மிகக் கலங்கினதனால் இன்னதென்று எண்ணுகிற)எண்ணமும் அற்றேன்; எங்ஙனம் நாடுகெனே-(அவனை எங்குச்சென்று) எவ்வாறுதேடுவேனோ? (எ - று.)—தான், ஆல் - அசைகள்.

கண்போலவே கூடவிருந்து எவ்வித்தத்திலும் உதவின இலக்குமணனையிழந்த வருத்தத்தால், கண்கள் இருந்தும் பயன்பெறுமை பற்றி, 'அயல் வேறொரு கண் ணிலன்' என்றான். தேடிக்கண்டுபிடித்தற்கு இன்றியமையாதனவான கண்களும் மனமும், அதன்காரியமான எண்ணமும் ஒழிந்ததனால், 'எங்ஙனம் நாடுகெனே' என்று இராமன் வருந்தினான். இருளோடு - உருபுமயக்கம். 'இருளுடு' என்றும் பாடம். எண் - முதனிலைத் தொழிற்பெயர். ஓ-இரக்கம். நாடுகென், ஈற விடைக்கேல எதிர்கால முணர்த்திற்று. ஒருவென் என எடுத்து ஒருவேன் எனினுமாம். பி-ம்:—¹ஒருவன். ²எண்டானினி. (ககஎ)

கூஅ. தள்ளா வினையேன் றனியா ருயிரா
யுள்ளா யொருநீ யுமொளித் தனையோ
பிள்ளாய் பெரியாய் பிழைசெய் தனையால்
¹கொள்ளா வுலகுன் னையிதோ கொடிதே.

(இ - ள்.) தள்ளா வினையேன் - ஒழிக்கமுடியாத விதியை யுடைய எனது, தனி அரு உயிர் ஆய் உள்ளாய் - ஒப்பற்ற அரிய உயிராயுள்ளவனாகிய, ஒரு நீயும் - நீ ஒருத்தனும், ஒளித்தனையோ - மறைந்துவிட்டாயோ? பிள்ளாய் - (பருவத்தில்) இளையவனே! பெரியாய் - (அறிவிற்) பெரியவனே! பிழை செய்தனை - (என்னை இவ்விருளில் தனியே காட்டில் விடுதலாகிற) தவறு செய்தாய்; இதுவோ கொடிது - இத்தவறோ மிகக்கொடிது! உலகு உன்னை கொள்ளா-பெரியோர் உன்செயலை (நன்றென்று) மதியார்; (எ-று.)

'ஒருநீயும்' என்ற உம்மை-கீழ்ச் சிதைபிரிந்ததைத் தழுவுதலால், இறந்ததுதழுவியஎச்சம். "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்றதனால், உலகுஎன்பது-அறிவுடையோர்மேல் நின்றது. இது பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் பால்பகாவஃறிணையாதல்பற்றி, கொள்ளா என்ற அஃறிணைப்பன்மை முடிபை யேற்றது. இது ஓ! கொடிது!! எனினுமாம்; ஓ=அந்தோ. ஆல்-அசை. பி-ம்:—¹கொள்ளாது. (ககஅ)

கூக. பேரா விடர்வந் தனபேர்க் கவலாய்
தீரா விடர்தந் தனைதெவ் வர்தொழும்

வீரா வெனையிங் ஙன்வெறுத் தனையோ
வாராய் புறமித் துணைவை குதியோ.

(இ - ள்.) வந்தன பேரா இடர் பேர்க்க வலாய் - வந்தனவாகிய நீக்க வரிய துன்பங்களே ஒழிக்க வல்லவனே! தீரா இடர் தந்தனை (என்னைப் பிரிந்து) நீங்காத துக்கத்தை (எனக்கு) உண்டாக்கினாய்; தெவ்வர் தொழும் வீரா - பகைவர்களாலும் வணங்கப்படுகிற வீரனே! எனை இங்ஙன் வெறுத் தனையோ - என்னை இக்காட்டிலே இருந்து வருந்த இவ்வாறு வெறுத்து நீங்கினாயோ? வாராய் - இங்குவாராமல், புறம் - வெளியில், இ துணை - இவ்வளவு காலம், வைகுதியோ - தங்கியிருக்கக்கடவையோ? (எ - று.)

வாராய்-எதிர்மறை முன்னிலை யொருமை முற்றெச்சம்; வருவாய் என உடன்பாட்டு ஏவலாக்கி உரைப்பினுமாம். **பி ம்:**—[1]தேவர். (ககஅஞ)

எஅ. என்னைத் தருமெந் தையை[1]யென் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலங் குழையா
டன்னைப் பிரிவே [2]னுளெனு வதுதா
னுன்னைப் பிரியா தவுயிர்ப் பலவோ.

(இ - ள்.) என்னை தரும் எந்தையை - என்னைப்பெற்றெடுத்த தந்தை யையும், என்னையரை - எனதுதாய்மாரையும், பொன்னை பொருகின்ற பொலம் குழையாள்தன்னை-இலக்குமியை யொத்தவளான பொன்னாலாகிய குழையையணிந்த சீதையையும், பிரிவேன் - பிரிந்தேன், உளென் ஆவது-உயிருடையேனாயிருப்பது, உன்னை பிரியாத உயிர்ப்பு அலவோ-உன்னைநீத் தனைப் பிரியாததனா லுளதாகிய உயிர்ப்பினா லல்லவோ? (எ - று.)—தான் - அசை.

இராமன் இலக்குமணனைப் பிரியாமலிருந்தது, மற்றையோரைப் பிரிந்த வருத்தத்தை மறைத்தது என்றபடி; இதனால், இராமன் மற்றையோ ரினும் இலக்குமணனிடத்தில் மிக்க அன்பு கொண்டமை நன்கு விளங்கும். எந்தை - என் தந்தை; என்னை - என் அன்னை; மரூஉ. பிரிவேன் - இயல்பு பற்றி இறந்தகாலம் எதிர்காலமாகக் கூறப்பட்ட காலவழுவமைதி; இது, பெயர். **பி-ம்:**—[1]ஆயரையப். [2]உளதாயது. (ககஅசு)

எக. பொற்றே டிவர்கின் றபொலங் குழையா
டற்றே டிவருந் தவம் புரிவே
னிற்றே டிவருந் தனிரப் பினையோ
வெற்[1]றே டினைவந் தவிளங் கனிறே.

(இ - ள்.) என் தேடினை வந்த இள களிறே - (மாயமானின் வார்த்தை யைக் கேட்டுச் சங்கைகொண்டு)என்னைத் தேடி வந்த இளைய ஆண்யானையை யொத்தவனே! பொன் தோடு இவர்கின்ற பொலம் குழையாள்தன்-பொன் னாலாகிய தோடென்னும் காதணியை யணிந்த சீதையை, தேடி வருந்து - தேடிவருந்துகிற, தவம் புரிவேன்-எளியனான நான், நின் தேடி வருந்த-உன் னையுந்தேடி வருந்தும்படி, நிரப்பினையோ-செய்துவிட்டாயோ? (எ - று.)

பொலங்குழையாள் - பொற்குழையுடையவள்; இங்கு, பெயர்மாத்திர மாய் நின்றது. தன்-சாரியை. எளியவனென்னும் பொருளதாகிய 'தபஸ்வீ' என்ற வடசொல்லின் பொருளைக்கொண்டு,'தவம்புரிவேன்'என்றார். என்னை நீ தேடிவரும்படி நான் மானின்பின்னேசென்றதற்குப் பதிலாக இப்பொழுது நான் உன்னைத்தேடிவரும்படி நீ செய்துவிட்டாய்போலு மென்ற கருத்து, பின்னிரண்டடியில் தொனிக்கும். பி-பி:—[1]தேடிட. (ககஅ)

எஉ. இன்றே யிறவா தொழியே னெமரோ
பொன்றா தொழியார் புகல்வா ருளரோ
வொன்றா கியவுன் கிளையோ ரையெலாங்
கொன்றாய் கொடியா [1]யிதுவுங் குணமோ.

(இ - ள்.) புகல்வார் உளரோ - (நீ இருக்குமிடத்தை எனக்குச்) சொல்வார் உண்டோ? [இல்லை]; (ஆகையால்), இன்றே இறவாது ஒழியேன் - இன்றைக்கே (நான்) இறவாமலிருக்கமாட்டேன்; (நான் இறந்துவிட்டால்), எமரோ பொன்றாது ஒழியார்-எம்மைச் சேர்ந்தவர் யாவரும் இறவாமலிருக்க மாட்டார்; (ஆகையால்),ஒன்று ஆகிய உன் கிளையோரை எலாம் கொன்றாய்-ஒற்றுமைப்பட்ட உனது பந்துக்களே யெல்லாம் ஒருமிக்கக் கொல்பவனுவாய்: கொடியாய் - இவ்வாறு கொடுமையுடையவனே! இதுவும் குணமோ - இதுவும் (உனக்குத்) தகுதியோ? [அன்று என்றபடி]; (எ - று.)

இலக்குமணன் வாராவிட்டால் இராமன் இறந்துபடுவன்; அதனால், உற்றார் யாவரும் ஒழிவர்: இப்படி எல்லோருடைய அழிவுக்கும் காரணமாயிருத்தலால், இலக்குமணன், 'கொடியாய்' என இராமனால் விளிக்கப்பட்டான். இறவாது ஒழியேன், பொன்றாது ஒழியார் - இரண்டு எதிர்மறைகள் ஓர் உடன்பாட்டை வற்புறுத்தின. கொன்றாய் - தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்ட காலவழுவமைதி. இதுவும், உம்மை - இழிவு சிறப்பு. ஓகாரம் மூன்றில், முன்னது - தெரிநிலையும், மற்றவை - எதிர்மறையுமாம். பி-யி:—[1]இவையுன். (ககஅ)

எஊ. மாந்தா முதன்மன் னவர்தம் வழியில்
வேந்தா கைதுறந் தபின்மெய் யுறவோர்
காந்தா மொழியுத் தமியே னுடனே
போந்தா யெனைவிட் டனையோ யியனையோ.

(இ - ள்.) மாந்தா முதல் மன்னவர் தம் வழியில் - மாந்தாதா முதலிய (நம்குலத்து முன்னோராகிய) அரசர்களது முறைப்படி, வேந்து ஆகை-அரசனுதலை, துறந்த பின் - துறந்து (மூத்தவனுகிய நான் காட்டுக்குச் செல்லத்) துணிந்தபின்பு, மெய் உறவோர் தாம் தாம் ஒழிய - உண்மையான சுற்றத்தோர் யாவரும் உடன்வராது நீங்கவும், தமியேனுடனே போந்தாய்-தனியனை என்னுடனே நீ வந்தாய்;(அப்படிப்பட்ட நீயும்),எனை விட்டனை போயினையோ-என்னை விட்டுப் போய்விட்டாயோ? (எ - று.)

'மெய்யுறவோர்' என்றது, தந்தை தாய் முதலிய உள்ளன்புடைய சுற்றத்தாரை; தேகபந்துக்க ளென்ற பொருளில் 'மெய்யுறவோர்' என்றருமாம். மாந்தா - மாந்தாதா என்றவடசொல்லின் விகாரம். சூரியகுலத்துத் தோன்றிய யுவனாசுவனென்பவன் வெகுகாலம் புத்திரனில்லாமலிருந்து வெறுப்படைந்து, ரிஷிகளின் ஆச்சிரமத்தில் திரிந்துகொண்டிருக்க, அவர்கள் இவன் மீது அன்புகொண்டு, புத்திரனுண்டாகுமாறு ஒருயாகஞ் செய்து, அவனது மனைவி உண்ணும்படி மந்திரத்தினால் பரிசுத்தமான ஜலகலசத்தை யாக வேதிகையில் வைத்திருக்க, அதனையுணராத மன்னவன் மிக்க தாகத்தினால் அதைப் பருகிக் கருக்கொள்ள, அக்கருப்பம் முதிர்ந்து, அவ்வரசனுடைய வயிற்றைத் தன் வலக்கட்டைவிரலினால் கிழித்துக்கொண்டு புதல்வனைப் வெளிப்பட்டு ஸ்தன்யமில்லாமையால் அழ, இந்திரன், வெளிப்பட்ட புதல்வனுக்குத் தனது பவித்ரவிரலை '(இக்குழந்தை) மாம் [என்னை] தாதா [தாயாகவைத்து முலையுண்பான்]' என்றுசொல்லிக் கொடுத்தா னதனால், இவன் இப்பெயர் பூண்டான். (ககஅக)

எச. என்னை வுரையா வெழுட்வீ ழுமிருந்
[1]துன்னை வுணர்வோய் வுறுபொன் றலவான்
[2]மின்னை திடியா திருள்வாய் விளைவீ
தென்னை வெனுமென் றணிநா யகனே.

(இ - ள்) என் தனி நாயகன் - எனது ஒப்பற்ற தலைவனை இராமபிரான்,—என்னை உரையா எழும்-என்று கூறி எழுந்திருப்பான்; வீழும்-கீழே விழுவான்; இருந்து உன்னை-இருந்தபடியே நினைத்து, உணர்வு ஒய்வுறும் - அறிவு ஒழியப்பெறுவான்; இருள்வாய்-இப்பேரிருளில், மின்னுது இடியாது-மின்னலும் இடியாமலும், விளைவு ஈது என் ஆ எனும்-விளைந்த இது என்ன! அந்தோ!! என்பான்; ஒன்று அல - (இவ்வாறு அவன் பட்ட துன்பம்) ஒன்றல்ல [பல]; (எ - று.)—ஆல் - அசை: தேற்றமுமாம்.

இது, கவிக்கூற்று. மழைக்கு மின்னலும் இடியும் முற்குறியாகத் தோன்றுவதுபோலத் தம்பியைப் பிரிதலாகிற இப்பேரிடர்க்கு அறிகுறியாக முன்னே யொன்றுங் காணப்படவில்லையே யென்று இராமன் இரங்கினனென்பது, மூன்றுமடியின் கருத்து. 'மின்னுதிடியாது' என்றது, ஓர் வழக்கு. இருள்வாய், வாய் - எழினுருபு. ஆ-'ஹா' என்ற வடசொல்லின் சிதைவு. பி-ம்:—[1]உன்னர். [2]மின்னுவிடியாவிருள்வாய் வினையீது. (ககக0)

எரு. நாடும் பலசூ ழுல்கடோ றுநடந்
தோடும் பெயர்சொல் லியுளோந் துயிர்போய்
வாடும் வகைசோ ருமயங் குறுமா
லாடுங் களிமா மதயா னையனன்.

(இ - ள்.) ஆடும் களி மா மதம் யானை அனன் - போர்செய்தற்கு உரிய செருக்குக்கொண்ட மிக்க மதத்தையுடைய யானையை யொத்தவனுகிய இரா

மன்,—பல சூழல்கள் தோறும் நடந்து நாடும் - (அங்குள்ள) பல இடங்களிலுஞ் சென்று (தம்பியைத்) தேடுவான்; ஓடும் - விரைந்து செல்வான்; பெயர் சொல்லி உளைந்து உயிர் போய் வாடும் வகை சோரும்-(தம்பியின்) பெயரைச் சொல்லி வருந்தி உயிர்ஒழிந்து வாடும்படி தளர்வான்; மயங்குறும் - மயக்க மடைவான்; (எ - று.)—ஆல் - ஆசை. (ககஙக)

எசு. கமையா ளொடுமென் னுயிர்கா வலினின்
றிமையா தவனித் துணைதாழ் வுறுமோ
[1]சுமையா வுலகூ டுழலுற்ற [2]வினேயே
னமையா துகொல்வாழ் வறியே னெனுமால்.

(இ - ள்.) கமையாளொடும் - பொறுமையை யுடையவளான சீதையுடனே, என் உயிர் - எனது உயிரையும், காவலில் - பாதுகாக்குந் தொழிலில், நின்று இமையாதவன்-கண் இமையாது [ஜாக்கிரதையுடன்] நின்ற இலக்குமணன், இ துணை தாழ்வுறுமோ - இவ்வளவுகாலம் தாமதிப்பனே? [தாமதியான்]; சுமை ஆ உலகூடு உழல் தொல் வினேயேன் - பாரமாக இவ்வுலகத்தில் திரிகிற பழவினையை யுடைய எனக்கு, வாழ்வு-(உயிருடன் இன்புற்று) வாழ்தல், அமையாது கொல்-தகாதோ? அறியேன்—, எனும்-என்று சொல்வான்; (எ - று.)—ஆல் - அசை.

கமையாள் - பொறுமை யென்னும் பொருள் கொண்ட கூமா என்ற வடமொழி கமையெனத்திரிந்து 'ஆள்' விகுதிபெற்று அதனையுடையவ ளென்னும் பொருளில் வந்தது. நின்று இமையாதவன் - இமையாது நின்றவன் என விகுதி பிரித்துக் கூட்டுக. 'கமையாளொடு மென்னுயிர்காவலி னின்றிமையாதவன்' என்றது, இவ்வளவுகாலந் தாழ்க்கமாட்டா னென்ற பொருளை விளக்குகின்ற ஸாபிப்பிராய விசேஷண மாதலால், **கருத்துடையடை கோளியணியாம்;** இதனை வடநூலார் **பரிகராங்குரால ங்கார** மென்பர். **பி மீ:**—[1]சுமையால். [2]வினேயேற்கு. (ககஉஉ)

எஎ.—இராமன் தற்கொலைசெய்யத் துணிதல்.

ஆறப்பா லுளதே லவன்முன் னவனுப்பப்
பிறப்பா னுறில்வந் துபிறக் கவெனை
மறப்பால் வடிவாள் கொடுமென் னுயிரைத்
துறப்பா னுறுகின் றதொடர்ச் சியின்வாய்.

இதுமுதல் நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அறம் பால் உளது எல்-நல்வினைப்பகுதி உண்டானால், அவன் முன்னவன் ஆய் பிறப்பான் உறின்-அவனுக்குத் தமையனாய்ப் பிறக்கக் கூடுமானால், வந்து பிறக்க - வந்துபிறக்கட்டுமே, எனை-என்றுசொல்லி, மறம் பால் வடி வாள்கொடு-கொடுமைத்தன்மையுடைய கூரிய வாளைக் கொண்டு, மன் உயிரை - (தனது) நிலைபெறற்றவுயிரை, துறப்பான் உறுகின்ற தொடர் **சியின் வாய்-** (இராமபிரான்) நீக்கிக்கொள்ளத் தொடங்குஞ் சமயத்தில்;—

(எ - று.)—இது, அடுத்தகவியில் "பூசல் செவித்துளையிற் சேர்ந்தார்தலும்" என்றதனோடு முடியும்.

தம்பியும் நானும் மறுபடி சகோதரர்களாகப் பிறக்கும்படி நல்வினை வந்து உதவினால் அப்படியே பிறந்துயிர்வாழ்க்கடவோம் என்று இராமன் உயிர் விடத்துணிந்தன னென்பது, கருத்து. பிறப்பான், துறப்பான் - 'பான்' விகுதிபெற்ற எதிர்காலவினையெச்சங்கள். (ககஙக)

எஅ.—இலக்குமணன் அயோமுகியை அங்கபங்கப்படுத்தல்.

பேர்ந்தா னெடுமா யையினிற் பிரியா
வீர்ந்தா [1]னவளை சிபிடித் திளையோன்
[2]சோர்ந்தா ளிடுபூ சல்செவித் துளையிற்
சேர்ந்தார் தலுமே திருமா றெருளா.

(இ - ள்.) இளையோன் - இளையபெருமாள் [இலக்குமணன்], நெடு மாயையினில் பேர்ந்தான் - (அரக்கியின்) மிக்க மாயையினின்று நீங்கினனன்; பிரியா - (அவ்வாறு) நீங்கி, அவள் நாசி பிடித்து ஈர்த்தான் - அவ்வயோமுகியினது மூக்குமுதலிய உறுப்புக்களைப் பிடித்து அறுத்தான்; சோர்ந்தாள்- (உறுப்பு அறுப்புண்டதனால்) தளர்ந்தவளாகிய அவ்வரக்கி, இடு - கூக்குரலிட்ட, பூசல் - பேரொலி, செவி துளையில் சேர்ந்து ஆர்தலும்-(இராமனது) காதுகளிற் பட்டவுடனே, திருமால் - இராமபிரான், தெருளா - (கலக்கமொழிந்து) மனந்தேறி,—(எ-று.)—இப்பாட்டில்,'தெருளா'என்பது "அங்கியினெடும்படைவாங்கி" என மேல் அ - ஆம் கவியோடு தொடரும்.

'தெருளா' என்பது, அரக்கியின் கூக்குரலைக் கேட்ட இராமபிரான் 'இலக்குமணன் நான் சுட்டிக்காத்தபடி இறவாமல் அரக்கியின் வசப்பட்டுள்ளான்' என்று ஊகித்தறிந்து துயரமொழிந்து அவளைத்தொலைத்து அவனை மீட்பதே தனதுகடமை யென்று துணிவுற்ற னென்பதைக் குறிக்கும். நாசி-காதுகளுக்கும், தனங்களுக்கும் உபலக்ஷணம்; இது, மேல் கூக ஆம் கவியால் விளங்கும். பி-மீ:—[1]நெடு. [2]சோர்ந்தாள். (ககஙச)

வேறு.

எக.—இராமன் அக்குரலால் அரக்கியென்று துணிதல்.

பரற்[1]றரு கானகத் தரக்கர் பல்கழல்
[2]முரற்றரு வெஞ்[3]சம முரல்கின் றுரைதெரி
ருரற்றிய [4]வோசையன் றெருத்தி யூறுபட்
டரற்றிய குரலவ ளரக்கி [5]யேகொலாம்.

(இ - ள்.) (இவ்வொலி),—பரல் தரு கானகத்து - பருக்கைக்கற்கள் நிறைந்த காட்டில், பல் கழல் முரற்று அரு வெம் சமம் முரல்கின்றார் - பல வீரக்கழல்கள் ஒலிக்கப்பெற்ற (செய்தற்கு) அரிய கொடிய போரை மிக்குச் செய்கின்றவர்களாகிய, அரக்கர் - இராக்கதர்கள், எதிர் உரற்றிய - மாறுகச் செய்த, ஓசை அன்று - ஆரவாரமன்று; (இது), ஒருத்தி ஊறு பட்டு அரற்

றிய குரல் - ஒரு பெண் ஆபத்தையடைந்து கதறிய குரலாகும்; அவள் அரக்கியே - அவள் இராட்சசியேயாவள்; (எ - று.)—கொல், ஆம் - அசைகள்.

நள்ளிரவில் நடுக்காட்டில் அரக்கிகள் தவிர வேறொருமகளிரும் வாரா ராதலால், பெண்குரல்கொண்டு அவளை அரக்கியென்றே இராமபிரான் துணிந்தன னென்க. முரல்தரு வெம்சமம் என்றும் பிரிக்கலாம்; பொருள் இதுவே. சமம்-ஸமாமென்ற வடசொல்லின் சிதைவு. உரற்றுதல்-ஒலித்தல். பி-ம்:—[1]தொகு. [2]முரற்றொகு. [3]சமர்முயல்கின்றார். [4]ஓசையின். [5]ஆமெனு.

இதுமுதல் உசை - கவிகள், மாரீசன்வதைப்படலத்தின் சு - ஆங்கவி போன்ற கலிவிருத்தங்கள். (ககஙு)

அ0.—இதுவும் அடுத்த கவியும் - இராமன் ஆக்கினேயாஸ்திரத்தைத் தொடுத்துவிட முயலுதலைத் தெரிவிக்கும்.

அங்கியி னெடும்படை வாங்கி [1]பங்கது
செங்கையிற் கரியவன் றிரிக்கு [2]மெல்லையிற்
பொங்கிரு ளப்புறத் துலகம் புக்கது
கங்குலும் பகலெனப் பொலிந்து காட்டிற்றே.

(இ - ள்.) கரியவன் - கருநிறமுடையவனான இராமபிரான், (இவ்வாறு கருதி), அங்கு - அப்பொழுது, அங்கியின் நெடு படை வாங்கி - அக்கினியினது பெரிய அம்பை [ஆக்நேயாஸ்திரத்தை] எடுத்து, அது-அதனை, செம்கையின் - (தனது) சிவந்த கையினால், திரிக்கும் எல்லையில் - பிரயோகிக்கத் தொடங்கியபொழுது, பொங்கு இருள்-மிக்க இருட்டானது, அபுறத்து உலகம் புக்கது - உலகத்தின் (இப்புறத்தைவிட்டு) அந்தப்பக்கத்தைச் சேர்ந்தது; (அதனால்), கங்குலும் பகல் என பொலிந்து காட்டிற்று-(இங்குள்ள) இரவும் பகல்போல விளக்கமுற்றதாய்த் தோன்றிற்று; (எ - று.)—எ - அசை.

அங்கி - அக்நி என்னும் வடசொல்லின் சிதைவு. அரக்கி இலக்குமணனால் ஊறுபட்டதனாலும், இராக்கதர்க்குப் பலம்மிகுதற்குக் காரணமான இரவாதலாலும், நடுக்காட்டில் ஒன்றியாய்அகப்பட்டுக்கொண்ட இவனுக்கு யாது தீங்குவினையுமோ வென்று சங்கித்து இராமன் ஆக்நேயாஸ்திரத்தைப் பிரயோகிக்க எடுத்தனன். கை சிவந்திருத்தல், உத்தரபுருஷலக்ஷணம். திரிக்கும்எல்லையில்-சுழற்றும்பொழுது என்று உரைப்பாரு முளர். அங்கியினெடும் படை - அக்கினியைத்தெய்வமாகவுடைய சிறந்த அஸ்திரம். அப்புறத்து உலகம்-மேருவின்வடபுற மென்றபடி. இரண்டாம்அடி-தொடைமுரண். பி-ம்:—[1]ஆங்கது. [2]வேலையில். (ககஙூ)

அக. நெடுவரை பொடிபட நிவந்த மாமர
மொடி[1]வுற நிலமக ளுலைய டிங்கெலாஞ்
சடசட வெனுமொலி தழைப்பத் [2]தாக்குமா
மூடுகின [3]னிராமன்வெங் காலின் மும்மையான்.

(இ - ள்.) இராமன்—,—நெடு வரை பொடி பட - பெரிய மலைகள் தூளாகவும், நிவந்த மா மரம் ஒடிவுற - உயர்ந்த பெரிய மரங்கள் ஒடிபடவும்,

நிலமகள் உலைய - பூமிதேவி வருந்தவும், ஊங்கு எலாம் சடசட எனும் ஒலி தழைப்ப - பக்கங்களிலெல்லாம் சடசடவென்ற ஓசை மிகவும்,—வெம் காலின் மும்மையான் - சண்டமாருதத்தினும் மூன்றுமடங்கு அதிகமான வேகமுடையவனுப், தாக்கும் ஆ முடுகினன் - (அவளையெதிர்த்துத்) தாக்கும்படி விரைந்தான்; (எ - று.)

முற்கூறிய நான்கும், ஆக்கினேயாஸ்திரத்தின் தன்மைகள். பொடிபட, ஒடிவுற, உலைய, தழைப்ப - வினைச்செவ்வெண். சடசட - இரட்டைக்கிளவி: ஒலிக்குறிப்பு. வெங்கால் - கொடுங்காற்று; எனவே, சண்டமாருதமாம். ஆ - ஆறு என்பதன் விகாரம். பி-ம்:—[1]பட. [2]தாக்கவும், தாங்குப. [3]முரலும். ()

அஉ.—இதுவும் அடுத்த கவியும்-இலக்குமணன் வந்த இராமனை வருந்தாதே யென்று சொல்லிக் கிட்ட, இராமன் மகிழ்தலைக் கூறும்.

ஒருங்குபார்ந் துலகின்மே லூழிப் பேர்ச்சியுட்
கருங்கடல் வருவதே யனைய [1]காட்சியான்
பெருந்துணைத் தம்முனை நோக்கிப் பின்னவன்
வருந்தலை [2]வருந்தலை வள்ளி யோயெனு.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) ஊழி பேர்ச்சியுள் - ஊழிக்காலம் மாறுஞ் சமயத்தில் [பிரளயகாலத்தில்], உலகின் மேல் - பூமியின்மீது, கரு கடல்-கரிய கடலானது, ஒருங்கு உயர்ந்து - ஒருமிக்கக் கிளம்பி, வருவது - வருவதை, அனைய-ஒத்த, காட்சியான் - தோற்றத்தையுடையவனை, பின்னவன் - இளையபெருமான், பெரு துணை தம் முனை - (தனக்குப்) பெரிய துணைவனென தமையனை, நோக்கி - பார்த்து, 'வள்ளியோய் - ஈகைக்குணமுடையவனே! வருந்தலை வருந்தலை-வருந்தாதே வருந்தாதே,' எனு-என்றுசொல்லி, (எ - று.)—இப் பாட்டில், 'எனு' என்றது, அடுத்தபாட்டில் "என்று கூறுவான்" என்றதனோடு இயையும்.

பிரளயகாலத்தில் பூமியைக் கடல் பொங்கியழித்த மென்பது நூற் கொள்கை. தம்முன் - தனக்கு முன்பிறந்தவன்; முன் - காலவாகுபெயர். வருந்தலை வருந்தலை - அடுக்கு, தேற்றப்பொருளது. வள்ளியோய் - வண்மை யென்னும் பண்பினடியாப்பிறந்த வள்ளியோ னென்பதன் ஈறுதிரிந்த விளி; இ - சாரியை. பி-ம்:—[1]காட்சித்தன். [2]வந்தனன். (ககக அ)

அஊ. வந்தனை னடியமேனன் வருந்தல் வாழிநின்
னந்தமி லுள்ளமென் றறியக் கூறுவான்
சந்தமென் [1]றளிர்புரை சரணஞ் சார்ந்தனன்
[2]சிந்தின நயனம்வந் தனைய செய்கையான்.

(இ - ள்.) 'அடியேனன் வந்தனன்-அடியேன் வந்துவிட்டேன்; நின் அந்தம் இல் உள்ளம் வருந்தல் - உனது முடிவற்ற மனம் வருந்தாதே,' என்று—, அறிய கூறுவான் - விளங்கச்சொல்லிக்கொண்டு, சந்தம் மெல் தளிர்

புரை சரணம் சார்ந்தனன் - அழகிய மெல்லிய தளிரையொத்த (இராமபிரானது) திருவடிகளைச் சேர்ந்தான்; (அதனால் இராமன்), சிந்தின நயனம் வந்து அனைய செய்கையான் - போன கண் மறுபடிவந்தாற் போன்ற செய்கையையுடையவனுனன்; (எ - று.)

வாழி - முன்னிலைபசை; வாழ்க வென்று, மிக்க அன்பால் வாழ்த்தியதுமாம். இலக்குமணனைக் கண்ணுறவே எண்ணியிருந்த இராமன், அவனை யிழந்து மீண்டும்பெற்றதனால், போனகண் வரப்பெற்றவன் போன்றான். இனி, நான்காம் அடிக்கு-இலக்குமணனென்றே கொண்டு பொருள் கூறினும் பொருந்தும். அந்தம்-அந்த மென்ற வடசொல்லின் திரிபு; இருள்என்று பொருள்: இங்கே, அஞ்ஞான மனவிருள். அந்தமில் உள்ளம் - அழிவற்றமனமெனினுமாம். அடியனேன், அன் - சாரியை. பி-ம்:—[1]தாமரைச். [2]சிந்தனை மனமுயிர்வந்த. (ககக)

அசு.-இலக்குமணன் வந்துசேரப்பெற்ற இராமனது நிலைமைபின்வருமாறு.

ஊற்றுறு கண்ணினீ ரொழுக [1]நின்றவ
[2]னேற்றிளங் கன்றினைப் பிரிவுற் [3]றெங்கணு
[4]மாற்றலி னூற்றுவ தரிதி [5]னெய்திய
[6]பாற்றிளம் பான்முலை யாவின் பான்மையான். .

(இ - ள்.) ஊற்று உறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன் - (இலக்குமணனைப் பிரிந்ததனால்) ஊற்றுப்போலக் கண்களினின்று நீர்பெருகும்படியிருந்த இராமன்,—(இலக்குமணனை அடைந்ததனால்),—ஏறு இள கன்றினை பிரிவுற்று - (தனது) இளமையான ஆண்கன்றைப் பிரிந்து, எங்கணும் ஆற்றலின் ஆற்றுவது அரிதின் - எவ்விடத்திலும் (தன்) வல்லமையால் தேறுவது அரிதாயிருந்தபொழுதில், எய்திய - (அக்கன்று) தானேவந்துசேரப்பெற்ற, பால் தரும் பனி முலை இள ஆவின் - பால்நிறைந்து சோர்கின்ற மடியையுடைய பசுவினது, பான்மையான் - தன்மையையுடையவனுனன்; (எ-று.)

சிறப்புப்பற்றி, ஏற்றைக் கூறினர். எங்கணும் ஆற்றலின் ஆற்றுவது அரிதின்-எவ்வாற்றானும் தன்மனைதரியத்தாற் பொறுத்தற்கரிதாயிருந்த நிலைமையில் எனினுமாம். பனிமுலை - வினைத்தொகை. பி-ம்:—[1]நின்றனன். [2]ஈற்றிளம். [3]எங்கிருன்று. [4]ஆற்றலால். [5]எய்திடப். [6]பாற்றும்பனி. ()

அரு.—இராமன் இலக்குமணனை நோக்கி மனநெகிழ்தல்.

தழுவினன் பன்முறை தாரைக் கண்ணினீர்
கழுவின னுண்டவன் கனக மேனியை
வழுவினே யாமென [1]மனக்கொ டேங்கினே
னெழுவென மலியென வியைந்த [2]தோளினுய்.

இதனும், வருங் கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (இராமன் இலக்குமணனை), ஆண்டு-அப்பொழுது, பல் முறை தழுவினன் - பலதரம் கட்டித்தழுவி, அவன் கனகம் மேனியை - அவனது

பொன்னிறமான உடம்பை, தாரை கண்ணின் நீர் கழுவினன் - தாரையாக வடிகிற தன்கண்ணீரினால் கழுவி,—(அவனே நோக்கி). எழு என மலை என இயைந்த தோளினாய் - இரும்புத்தூண்போலவும் மலைபோலவும் பொருந்திய தோள்களையுடையவனே! வழுவினை ஆம் என மனம் கொடு ஏங்கினேன் - (நீ இதுவரையும் வாராததனால்) தவறிப்போய்விட்டாயென்றே கருதி வருந்தினேன்; (எ - று.)

தாரை - தாரா என்ற வடசொல்லின் சிதைவு. கனகமேனி = "சுவண வண்ணன்" என்றார் கீழ் விராதன்வதைப்படலத்தும். பி-மீ:—[1]மனக் கொண்டே னென்றான். [2]தோளினாய். (கஉஉ)

அசு.—நீகழ்ந்ததை இராமர் இலக்குமணனை வினவியறிதல்.

என்னையங் கெய்திய தியப்பு வாயென
வன்னவ [1]னஃதெலா மறியக் கூறலு
மின்னலு முவகையு மிரண்டு மெய்தினன்
றன்னல தொருபொரு டனக்கு [2]மேலிலான்.

(இ - ள்.) அங்கு எய்தியது என்னை இயம்புவாய் - அங்கே நடந்தது யாது? சொல்வாய், என-என்றுகேட்க,—அன்னவன் - அவ்விலக்குமணன், அஃது எல்லாம் அறிய கூறலும்-அதையெல்லாவற்றையும் தெரியும்படி சொன்னவுடன்,—தன் அலது ஒரு பொருள் தனக்கு மேல் இலான்-தானேயல்லாமல் தனக்குமேலாக ஒரு பொருளும் இல்லாதவனான இராமபிரான், இன்னலும் உவகையும் இரண்டும் எய்தினன்-துன்பமும் மகிழ்ச்சியும் ஆகிய இரண்டையும் ஒருங்கே அடைபவனானான்; (எ - று.)

அஃது எலாம் - ஒருமைப் பன்மை மயக்கம். இலக்குமணன் அரக்கியின் வசப்பட்டதனால் வருத்தத்தையும், வென்றுமீண்டதனால் மகிழ்ச்சியையும் இராமன் அடைந்தான். இராமன் தானே எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருளென்பது, நான்காமடியின் கருத்து. பி மீ:—[1]அனை. [2]வேறிலான். (கஉஉ)

அஎ.—இராமன் இலக்குமணனைத் தேற்றுதல்.

ஆய்வுறு பெருங்கட லகத்து [1]ளேயவன்
பாய்திரை வருதொறும் பரிதற் [2]பாலனை
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்ட [3]யா
நோயுறு துயரென [4]துடங்க னென்மையோ.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஆய்வு உறு பெரு கடல் அகத்துள் ஏயவன் - (யாவராலும் அளவற்றதென்று) ஆராயப்படுகிற பெரியகடலின் நடுவில் அகப்பட்டவன், பாய் திரை வருதொறும் பரிதல். பாலன் ஓ - பாய்கிற அலை வரும்பொழுதெல்லாம் வருத்துதற்குரியவனோ? [உரியவனல்லன்]; (அதுபோல), தீ வினை பிறவி வெம் சிறையில் பட்ட யாம் - தீவினையடித்தால் சேர்கிற பிறப்பாகிய கொடியசிறையில் அகப்பட்ட நாம், நோய் உறு துயர் என-வருத்தம்பொருந்

நியதுன்பம் (நேர்ந்ததே) என்று, நுடங்கல்-தளர்தல், நோன்மையோ-பெருமையோ? (எ - று.)

பெருங்கடலுள் அகப்பட்டுக்கொண்டவன் அலைகளுக்காக அஞ்சிவருந்துதல் தகாதவாறுபோல, துன்பமயமான பிறவிச்சிறையில் அகப்பட்டவன் அதில் நேருந்துன்பங்களுக்கு அஞ்சிவருந்துதல் தகாது; ஆதலால், அரக்கியின்கையில் அகப்பட்டுக்கொண்ட துன்பத்திற்கு வருந்தவேண்டா வென்று இராமன் இலக்குமணனைத் தேற்றியவாறு; **எடுத்துக்காட்டுவமையணி.** 'ஓசையினலும் பொருளைத் துணிதல்' என்ற நியாயத்தால், பரிதற்பாலன் என்பதற்கு, வினைவாக்கி எதிர்மறையாகப் பொருள்கொள்ளப்பட்டது; இங்ஙனம் ஓசை வேறுபாட்டினுற் பொருள்கொள்ளுதலை வடநூலார் 'காகு' என்பர். ஆம் - அசை. 'தீவினை' என்றது, இங்கே புண்ணியம் பாவம் இரண்டையுங் குறிக்கும். பிறவிவெஞ்சிறை - உருவகம். ஓ - எதிர்மறை. எயவன், எய் - பகுதி; ய் - இறந்தகால இடைநிலை; பகுதியீற்று யகரம், யகரம்வரக் கெட்டது. **பி-ம்:**—[1]எய்திய, ஆயினர். [2]பாலரோ, பாலதோ. [3]யான். [4]நுடங்கு நோன்மையேன், நுடக்குகொய்ம்மையேன். (ககஉஉ)

அ.—இரண்டு கவிகள் - இராமன் இலக்குமணனைப் புனைந்துகூறுதல்.

மூவகை யமரரு முலக மும்மையு
மேவரும் பகையெனக் காக [1]மேல்வரி
னேவரே கடப்பவ ரெப்பி நீயுளை
யாவதே வலியினி யரணும் வேண்டுமோ.

(இ - ள்.) மூவகை அமரரும் - (பிரமன் விஷ்ணு சிவன் என்ற) மூன்று வகையான தேவர்களும், மும்மை உலகமும் - (மேல் கீழ் நடு என்ற) மூன்றுவகையுலகத்திலுள்ளவர்களும், எனக்கு மேவு அரு பகை ஆக மேல் வரின்-எனக்குக்கிட்டமுடியாத [மிகஅதிகமான] பகைவர்களாக (என்)மேல் எதிர்த்து வந்தாலும், ஏவரே கடப்பவர் - (அவர்களுள் என்னை) யாவர்தாம் வெல்லவல்லவர்? எம்பி - தம்பியே! நீ உளை ஆவதே - நீ (என்பக்கத்தில்) இருக்கிறை யென்ற இவ்வொன்றுமே, வலி - (எனக்கு அவர்களையாவரையும்) வெல்லும் வல்லமையாயிருப்பது; இனி-இனிமேல் [உன்னையன்றி யென்ற படி], அரணும் வேண்டுமோ-(எனக்குப் பிறிதொரு) காவலும் வேண்டுமோ?

"இருமைவகை தெரிந்து" என்னுங் குறளில் 'இருமை' போல, 'மும்மை' என்றது - இங்கே எண்ணின்கண் நின்றது; "தெரிமாண்டமிழ் மும்மைத்தென்னம்பொருப்பன்" என்பதிலும் இது. அரணும், உம்மை - சிறப்பும்மை. **பி-ம்:**—[1]எய்தினும். (ககஉச)

அ. பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழற்
செருவலி வீரநிற் [1]நீரு மல்லது
பருவர லென்வயிற் [2]பயிலற் பாலதோ.

(இ - ள்.) பிரிபவர் யாவரும் பிரிக - (என்னைவிட்டுப்) பிரிகின்றவர்கள் எல்லாரும் பிரியக்கடவர்; வருவன பெரு இடர் யாவையும் வருக - (எனக்கு) வருகின்ற பெருந்துன்பங்கள்யாவும் வரக்கடவன; வார் கழல் செரு வலி வீர - நீண்டவீரக்கழலையும் போர்த்திறமையையுமுடைய வீரனே! பருவரல் - (எனக்குநேரிடுந்) துன்பம், நின் தீரும் அல்லது - உன்னால் நீங்குமே யல்லாமல், என்வயின் பயிலல் பாலதோ - என்னிடத்தில் தங்கி வருத்தும் இயல் புடையதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

"திண்பொரு ளெய்தலாகும் தெவ்வரைச் செகுக்கலாகும், நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகும், ஒண்பொரு ளாவ தையா வுடன் பிறப் பாக்கலாகா, எம்பியை மீங்குப் பெற்றேன் என் னெனக்கு அரிய தென்றான்" என்ற சீவகசிந்தாமணிச்செய்யுள் இங்கே நோக்கத்தக்கது. பி-ம்:—[1]தீரின். [2]பயிற்றல். (ககஉ)

கூ0.—இராமன் இலக்குமணனை நோக்கி அரக்கியைக் கொல்லாமையைப்பற்றி விலக்கல்.

வன்[1]றொழில் வீரபோர் வலிய ரக்கியை
வென்றுபோர் மீண்டனென் னெனவி ளம்பினாய்
புன்றொழி லினையவள் புகன்ற சீற்றத்தால்
கொன்றிலை போலுமாற் கூறு வாயென்றான்.

(இ - ள்.) வல் தொழில் வீர - கொடிய போர்த்தொழிலை யுடைய வீரனே! போர் வலி அரக்கியை போர் வென்று மீண்டனென் என விளம்பினாய் - 'போர்செய்யும் வல்லமையுடைய இராட்சசியைப் போரிற் சயித்துத் திரும்பினேன்' என்றுகூறினாய்; புல் தொழில் அனையவள் - இழிதொழிலை யுடைய அவ்வரக்கி, புகன்ற - (தகாத சொற்களைச்) சொன்னதனாலுண்டாகிய, சீற்றத்தால் - கோபத்தால் [அவள் வார்த்தையாற் கோபங்கொண்டு என்றபடி], கொன்றிலை போலும் - (நீ அவளைக்) கொல்லவில்லைபோலும்; கூறுவாய் - (அதைப்பற்றி நீ) சொல்வாய், என்றான் - என்று விளவினான்.

புகன்ற சீற்றம் - இறந்தகாலப்பெயரெச்சம் காரணப்பொருளது. போலும் - ஒப்பில்போலி. புன்தொழி லனையவள் என்பதற்கு - இழிதொழில்களுக்குத் தாய்போன்றவ ளெனினுமாம்; அனையவள் = அன்னையவள். ஆல் - அசை. பி-ம்:—[1]தீறல். [2]பின். (ககஉ)

கூக.—இலக்குமணன் மறுமொழி கூறல்.

[1]தூளைபடு மூக்கொடு செவித மித்துகத்
தூளைவயி னகிலொடு தடிந்து நீக்கிய
வளவையிற் பூசலிட் டரற்றி னாளென
விளையவன் விளம்பினன் றிருகை கூப்பினான்.

(இ - ள்.) (அவ்வரக்கியினது), தூளைபடு மூக்கொடு - துளைகள் பொருந்திய மூக்கையும், செவி - காதுகளையும், தூளைவயின் அகிலொடு - கட்டுக்குள் அடங்கிய தனங்களையும், தமித்து உக தடிந்து நீக்கிய அளவையில்-துண்டு

பட்டு விழும்படி அரிந்து தள்ளிய பொழுதில், பூசல் இட்டு அரற்றினள் - (அவள்) கூக்குரலிட்டுக் கதறினள், என விளம்பி நின்று - என்று சொல்லி நின்று, இளையவன் - இலக்குமணன், இரு கை கூப்பினன் - (தனது) இரண்டு கைகளையும் கூப்பி (இராமனை) வணங்கினன்; (எ - று.)

மூக்கு முதலியவற்றை அரிந்த செய்தியை இங்கே கூறியதனால், முன்பு இந்தவிவரம் இலக்குமணனைக் கூறப்படவில்லை யென்பது விளங்கும். முன்பு சொன்னது, தொகுத்துச் சுட்டல்; இங்கே, வகுத்துக்காட்டல். தளிர் வயினகில் - சாந - ஆம் கவியைக் காண்க. இச்செய்யுளின் முன்னிரண்டடிகள் 'தொளையுடை மூக்கொடுசெவிகடும்பென, வளையதரத்தொடுமரிந்து மாற்றினன்: என்றும், 'துளையுடைச்செவிகளுந் தொள்ளைமூக்கொடும், வளை விதழ்மலைமுலை யரிந்துமாற்றிய' என்றும், மூன்றுமடி "உளவினள்பூசலிட் டோடினளென" என்றும், பிரதிகளிற் காணப்படுகின்றன. (ககஉஎ)

கூஉ.—இராமன் இலக்குமணனைத் தழுவுதல்.

தொல்லிரு [1]டனைக்கொலத் [2]தொடர்கின் றுளையுங்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினைய்
வல்லை நீ மனுமுதல் மரபி னேயெனப்
புல்லின னுவகையிற் பொருமி விம்முவான்.

(இ-ள்.) உவகையின் பொருமி விம்முவான் - மிக்க மகிழ்ச்சியால் உடல் பூரித்துள்ளவனான இராமபிரான்,—'தொல் இருள்-மிக்க இருட்டில், தனை - உன்னை, கொல - கொல்லுதற்கு, தொடர்கின்றுளையும் - தொடர்ந்து வந்த அரக்கியையும், கொல்லலை - (நீ) கொல்லாமல், நாசியை கொய்து நீக்கினைய்- (அவளது) மூக்குமுதலிய உறுப்புக்களை மாத்திரம் அறுத்துவிட்டாய்; (ஆகையால்), வல்லை நீ-(தருமசாஸ்திரங்களில்) வல்லவனான நீ, மனுமுதல் மரபினை - மனுவை முதலாகக்கொண்ட இவ்வம்சத்திற்கு ஏற்ற முறைமையுடையாய்,' என - என்று சொல்லி, புல்லினன் - (அவனைத்) தழுவினன்; (எ - று.)

பெண்கொலை பெரும்பாதக மாதலால், அதைச் செய்யாது விட்ட இலக்குமணனை இராமன் இவ்வாறம் புகழ்ந்தனன். தொடர்கின்றுளையும், உம்மை-இழிவு சிறப்புப் பொருளது; சூர்ப்பணகையைப் போலவே இவளையும் நாசி முதலிய உறுப்புக்களை அறுத்துத் தள்ளினை யெனக் கீழே கூறுதலால், இறந்தது தழுவிய எச்ச மெனினுமாம். மனு - சூரியனது மகன்; இவனே, இச் சூரியகுலத்து அரசர்க்கெல்லாம் முதல்வன்; வைவசுவதமநு வெனப் பிரசித்தி பெற்றவன். பீ-மீ:—[1]தனில். [2]தொடங்கினளையும். (ககஉஅ)

கூஊ.—இராமலக்குமணர் நீர்பருகி ஒரு மலையில் தங்குதல்.

[1]பேரருந் [2]துயரறப் [3]பேர்ந்து ளோரென
வீரனுந் தம்பியும் [4]விடிவு நோக்குவார்
[5]வாருணம் விடுத்தந்த வான நீருண்டு
சூரணி தாங்கிய கிரியிற் றங்கினர்.

(இ - ள்.) வீரனும் தம்பியும் - இராமனும் இலக்குமணனும்,—பேர் அருதுயர் அற பேர்ந்துளோர் என - நீங்குதற்கு அரிய துன்பத்திலிருந்து நீங்கினவர்க ளென்னும்படி [அரக்கியாலாகிய துன்பம் நீங்கி யென்றபடி], வாருணம் விடுத்து - வாருணாஸ்திரத்தைத் தொடுத்துவிடுத்து, அந்த வானம் நீர் உண்டு - (அதனால்) வானத்தினின்று கிடைத்த நீரைப்பருகி, விடிவு நோக்குவார் - பொழுதுவிடியுங் காலத்தை எதிர்பார்த்தவர்களாய், தாரணி தாங்கிய கிரியில் தங்கினர்-பூமியைத்தாங்குவதான ஒரு (பெரிய) மலையில் தங்கியிருந்தார்கள்; (எ - று.)

வாருணம் - வருண சம்பந்தமானது; வடமொழித் தத்திதாந்த நாமம். வாருணம்நினைந்தனர் வான நீரினால் தாரணித்தங்கொருகிரியில் என்ற பாடத்துக்கு - வருணமந்திரத்தை ஜபித்து அதனாற்கிடைத்த வான நீரையுண்டு களைப்புநீங்கி அங்கே ஒருமலையிலே தங்கினர்க ளென்க: தாரணித்தல் - உடம்பு தரித்தல். பி-மீ:—[1]பேர்வரும். [2]துயரிறைப், துயரிடைப். [3]பேர்த்துளாரென. [4]விடிவு. (ககஉசு)

கூசு.—இராமன் பள்ளிகொள்ளல்.

கல்லகல் வெள்ளிடைக் [1]கான கத்துள
பல்லவ மலர்கொடு படுத்த பாயலி
னெல்லையி றுயரினெ டிருந்து சாய்ந்தனன்
மெல்லடி யிளையவன் வருட வீரனே.

(இ - ள்.) வீரன் - இராமன்,—கல் அகல் வெள்ளிடை - கற்கள் பரந்துள்ள வெளியிடத்தில், கானகத்து உள பல்லவம் மலர் கொடு படுத்த பாயலின் - காடுகளிலுள்ள தளிர்களையும் பூக்களையுங் கொண்டு (இலக்குமணன்) அமைத்த படுக்கையில், எல்லை இல் துயரினெடு இருந்து - அளவற்ற துன்பத்துடனே இருந்து, (பின்பு), மெல் அடி இளையவன் வருட-(தனது) மெல்லிய பாதங்களை இலக்குமணன் தடவிப் பிடிக்க, சாய்ந்தனன் - படுக்கை கொண்டான்; (எ - று.)

வெள்ளிடை - மேல்மறைவில்லாத இடம். பல்லவம் - வடசொல். பி-மீ:—[1]கானகத்தினுள்; கானினுண்மணற். (ககஉ0)

கூரு.—இராமன் விரகவேதனையால் வருந்துதல்.

மயிலிய லிரிந்தபின் மான நோயினு
லயில்வில னொருபொரு ளவல மெய்தலாற்
றுயில்வில னென்பது சொல்லற் பாலதோ
வுயிர்கெடி துயிர்ப்பிடை யூச லாடுவான்.

(இ - ள்.) (இராமன்),—மயில் இயல் பிரிந்த பின் - மயில் போன்ற சாயலையுடைய சீதையைப் பிரிந்த பின்பு, மானம் நோயினால் ஒரு பொருள் அயில்வு இலன் - அவமானமாகிய வியாதியால் ஒரு பொருளையும் உண்ணவில்லை; அவலம் எய்தலால் துயில்வு இலன் - (இவ்வாறு) வருத்தம் மிகுதலால் தூங்கவுமில்லை, என்பது - என்கிற இவ்விஷயம், சொல்லல் பாலதோ-

சொல்லுதற்குத் தகுதியுடையதோ? நெடிது உயிர்ப்பிடை உயிர் ஊசல் ஆடுவான் - பெருமூச்சின் நடுவில் உயிர் ஊசலாடப் பெறுபவனுனன்; (எ - று.)

உயிர்போகும்நிலையிலிருப்பவன் திறத்தில் 'உண்ணவில்லை, உறங்கவில்லை' என்பதைப் பெரிதாக எடுத்துச்சொல்லவேண்டா என்க. பெருமூச்சினுல் உயிர் போவதும் வருவதுமா யிருந்தது என்பது, ஈற்றடியின் கருத்து. மயிலியல் - அன்மொழித்தொகை. (ககஙக)

கூசு.—இதுமுதல் ஐந்து கவிகள் - இராமன் விரகதாபத்தால் வருந்திக்கூறலைத் தெரிவிக்கும்.

மானவண் மெய்யிறை மறக்க லாமையி
னானதே வன்றெனி னரக்கர் மாயமோ
கானக முழுவதுங் கண்ணி னேக்குங்காற்
சானகி யுருவெனத் தோன்றுந் தன்மையே.

ஆறு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கண்ணின் நோக்கும் கால் - (தான் எனது) கண்களாற் பார்க்கும் போது, கானகம் முழுவதும் - காடு முழுவதும், சானகி உரு என தோன்றும் தன்மை - சீதையின் உருவமாகவே (எனக்குக்) காணப்படுந் தன்மை,—மானவள் மெய் இறை மறக்கலாமையின் ஆனதோ - பெருமையுடைய அச்சீதையின் மேனியை (தான்) சிறிதுபொழுதும் மறக்க முடியாமையால் உண்டானதோ? அன்று எனின் - அப்படியல்லாவிட்டால், அரக்கர் மாயமோ - இராக்கதர்கள் செய்த வஞ்சனைத் தொழிலால் உண்டானதோ?

உருவெளித் தோற்றத்தாற் காடுமுழுவதும் சீதையின் உருவமே இராமனுக்குக் காணப்பட்டது; ஆசை முதலியவற்றுல் இடைவிடாது நினைக்கப்பட்ட பொருள் அந்நினைப்பின் மிகுதியால் எங்கும் கட்புலனுகத் தோன்றுதல் இயல்பு. ஜானகி - ஜநகராஜன் மகள்: வடமொழித்தத்திதாந்தம். மானம் - பெருமை; அதையுடையவள், மானவள். இனி, மான்போன்ற அவளென்றலும் ஒன்று. ஓகாரங்கள் - விகற்பப் பொருளன. ஏ - ஈற்றசை. (ககஙஉ)

கூஎ. கருங்குழற் சேயரிக் [1]கண்ணி கற்பினேர்க்
கருங்கல மருங்குவந் திருப்ப வாசையா
லொருங்குறத் தழுவுவா [2]னூறு காண்கிலேன்
மருங்குல்போ லானதோ வடிவு மெல்லவே

(இ - ள்.) கரு குழல் - கரிய கூந்தலையும், சேய் அரி கண்ணி - சிவந்த அரி[ரேகை] பரந்த கண்களையுமுடைய, கற்பினேர்க்கு அரு கலம் - கற்பினையுடைய மகளிர்க்கு அருமையான ஆபரணம்போன்ற சீதை, மருங்கு வந்து இருப்ப - (என்) பக்கத்தில் வந்திருக்க, ஆசையால் - (அவளிடத்து உள்ள) காதலால், ஒருங்கு உற தழுவுவான் - ஒரு சேரத் தழுவும்படி (சென்று), ஊறு காண்கிலேன் - (அவளுடைய) பரிசத்தைக் கண்டேனில்லை; வடிவும் - (அவளது) உருவமும், மருங்குல் போல் மெல்ல ஆனதோ - (அவ

ளது) இடைபோலவே சிறிது சிறிதாகத் தேய்ந்து(முடிவில்)ஒன்று மில்லாத தாய் விட்டதோ? (எ - று.)

உருவெளித்தோற்றத்திற் கண்ட சீதையின் உருவத்தைத் தழுவச் சென்ற இராமனுக்கு அங்கு ஒன்றுங் கிடையாமையால், அவன் வருந்தினன்.. இடுப்பு மிகச் சிறுத்திருத்தல், உத்தமஸ்திரீகளின் லக்ஷணம். அருங்கலம் - ஆகுபெயர். தழுவுவான் - 'வான்' ஈற்று எதிர்கால வினையெச்சம். ஏ - ஈற்றசை. பி-ம்:—[1]கண்ணிற். [2]ஒன்றும். (சகசுஉ)

கூஅ. புண்டரி கப்புது மலரிற் [1]றேன்பொதி
தொண்டையஞ் சேயொளித் துவர்த்த வாயமு
[2]துண்டனெ னீண்டவ ளுழைய ளல்லளால்
கண்டுயி லன்றியுங் கனவுண் டாகுமோ.

(இ - ள்.) புது புண்டரிகம் மலரில் - (அவள் முகமாகிய) அன்று பூத்த தாமரை மலரில், தேன் பொதி - தேன் நிறைந்த, தொண்டை அம் சேய் ஒளி - கொவ்வைப்பழம் போன்ற அழகையும் செந்நிறத்தையுமுடைய, துவர்த்த - (நிறத்தால்) பவழத்தின் தன்மையைக் கொண்ட, வாய் - வாயினது, அமுது - அமிருதத்தை, உண்டனென் - உண்டேன்; ஈண்டு-இங்கு, அவள் உழையள் அல்லள் - அச்சீதை சமீபத்தில் இல்லாதவளாய்விட்டாள்; (முதலிற் பக்கத்திலிருந்தவளாகத் தோன்றி உடனே இல்லாதவளானது கனவென்போ மெனின்),—கண்துயில் அன்றியும் கனவு உண்டாகுமோ - தூக்கமில்லாமலிருக்கையிலும் கனவு உண்டாகுமோ? (எ-று)—ஆல் - அசை.

நான் அவளது வாயமுதை உண்டதாக எனக்குத் தோன்றிற்று; பார்த்தால், அவள் பக்கத்தில் இல்லை; தூக்கமில்லாமையால், இதைக் கனவென்று சொல்லக்கூடவில்லை என்று கருத்து. புண்டரிகப் புதுமலர் - உவமையாகு பெயர். வாயமுது உண்ணல் - அதரபானம். பி-ம்:—[1]தேம். [2]உண்டன னிடையவள். (சகசுச)

கூகூ. மண்ணினும் வானினு மற்றை மூன்றினு
மெண்ணினும் பெரியதோ ரிடர்வந் தெய்தினுற்
றண்ணறுங் கருங்குழற் சனகன் மாமகள்
கண்ணினு [1]நெடியதோ கொடிய கங்குலே.

(இ - ள்.) மண்ணினும் - நிலத்தினும், வானினும் - ஆகாயத்தினும், மற்றை மூன்றினும் மற்ற (நீர் நெருப்புக் காற்று) என்ற மூன்றிலும், [ஆகப் பஞ்சபூதங்களைக் காட்டினும்], எண்ணினும் - எண்ணத்தைக்காட்டினும், பெரியது - பெரியதாகிய, ஓர் இடர் - ஒரு துன்பம், வந்து எய்தினுல் - (எனக்கு) வந்து அடைந்தால்,—கொடிய கங்குல் - கொடிய இரவானது,—தண் நறு கரு குழல் சனகன் மா மகள் கண்ணினும் நெடியதோ-குளிர்ச்சியும் மணமும் கருநிறமுமுள்ள கூந்தலையுடைய சீதையின் கண்களைக்காட்டிலும் நீண்டதாய் விடக்கடவதோ? (எ - று.)—எ - ஈற்றசை.

மிகப்பெரிது என்று காட்டுதற்கு, பஞ்சபூதங்களையும், எண்ணத்தையும் துன்பத்திற்கு உறழ்பொரு வாக்கினர். "எண்பது கோடி நினைந்தெண்ணுவன" ஆதலால், எண்ணம் மிகப்பெரிது என்பது விளங்கும். "கடலினும் பெரிய கண்கள்" என்றபடி சீதையின் கண்கள் மிகப்பெரியன வாத

லால், 'கண்ணினும் நெடியதோ கொடிய கங்குல்' என்றார். **பி-ம்:**—[1]நெடியையோ. (ககஙஙு)

க00. அப்புடை யலங்குமீ [1]னமரு மார்கலி
யுப்[2]புடை யிந்துவென் றுதித்த வூழித்தீ
வெப்புடை [3]விரிகதிர் விரிப்ப மெய்யெலாங்
கொப்புளம் [4]பொடித்ததோ கொதிக்கும் வானமே.

(இ - ள்.) அப்பு உடை - நீரையுடையதும், அலங்கும் மீன் அமரும் - அசைந்துசெல்லுகிற மீன்கள் நிறையப்பெற்றதுமான, ஆர்கலி - கடலில், உப்பு உடை இந்து என்று உதித்த - அழகுடைய சந்திரனென்று பெயர் கொண்டு பிறந்த, ஊழித்தீ - பிரளயாக்கினியானது, வெப்புஉடை விரி கதிர் விரிப்ப - வெப்பத்தையுடைய பரந்த கிரணங்களை வீசுவதனால், கொதிக்கும் வானம் - தாபங்கொண்ட ஆகாசம், மெய் எலாம் கொப்புளம் பொடித்ததோ - உடம்பு முழுவதும் கொப்புளங் கொண்டதோ? (எ - று.)—எ - ஈற்றசை.

நக்ஷத்திரங்களையுடைய ஆகாசத்தை, சந்திரனால் தாபமடைந்து கொப்புளங்கொண்டதாக உத்பிரேக்ஷித்தார். "செப்பிளங்கொங்கைமீர் திங்கட்சுடர் பட்டுக், கொப்புளங்கொண்ட குளிர்வானை - யிப்பொழுது, மீன் பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ, தேன்பொதிந்த வாயாற் றெரிந்து" என்னும் நளவெண்பா இங்குக் காணத்தக்கது. இது சந்திரோபாலம்பநம். உப்பு-அழகு. இந்துவென்றுதித்தவூழித்தீ - **அவநுதியணி.** ஊழித்தீ - பிரளய காலத்தில் கடலினின்று வெளிக்கிளம்பி, உலகத்தை யழிக்கும் வடவாமுகாக்கினி: ஆர்கலி - மிக்க ஓசையுடைய தெனக் கடலுக்கு அன்மொழித்தொகை. **பி-ம்:**—[1]மருவும். [2]இடை. [3]வெங்கதிர்வெதுப்ப. [4]பொடித்தபோல்.(ககஙசு)

க0க.—சூரியோதய வருணனை.

[1]இன்னன வின்னன பன்னி [2]யீடழி
[3]மன்னவர் மன்னவன் மதிம யங்கினு
[4]னன்னது கண்டன னல்கி னனெனத்
[5]துன்னிய செங்கதிர்ச் செல்வன் றோன்றினான்.

(இ - ள்.) இன்னன இன்னன பன்னி - இத்தன்மையான பலவார்த்தைகளைச் சொல்லி, ஈடு அழி - வலியொடுங்குகிற, மன்னவர் மன்னவன் - சக்ரவர்த்தியாகிய இராமன், மதி மயங்கினன் - அறிவுகலங்கினன்: (அப்பொழுது), துன்னிய செம் கதிர் செல்வன் - நிறைந்த சிவந்த கிரணங்களையுடைய சூரியன்,—அன்னது கண்டனன் - (இராமனது) அந்நிலைமையைப் பார்த்து, அல்கினன் என - (நம்குலத்துப்பிறந்த இவன் இப்படி துன்பப்படுகிறானே யென்று) வருந்தினவன்போல, தோன்றினன் - (அவ்வருத்தத்தை யொழித்தற்கு) உதயமானன்; (எ - று.)

சூரியன் இயல்பாகஉதித்ததற்கு வேறு காரணங் கற்பித்துக் கூறியதனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி. **பி-ம்:**—[1]என்ன. [2]இடர்ப்படும். [3]மன்னர்மன்னன் மதலை. [4]அன்ன. [5]துன்னுசெங்கதிர்ச்செல்வனும். (ககஙஎ)

சடாயுவின் கிரியையைச் செய்துமுடித்தபின்பு, இராமலட்சுமணரிருவரும், சீதையை நாடினவர்களாய்த் தென்மேற்குத்திசையாக ஜநஸ்தாநத்திலிருந்து மூன்றுகுரோசதூரம் அப்பாற்சென்று, கிரௌஞ்சாரணிய மென்ற பெருங்கானகத்தைக் கடந்து, மதங்காச்சிரமத்துக்குக் கீழ்த்திசையாக மூன்று குரோசதூரஞ் சென்று, அவ்வாச்சிரமத்தைச் சேர்ந்த ஒருவனத்திலுள்ள குகைக்குச் சமீபத்தில், மிகக்கொடியவளான அயோமுகியென்னும் அரக்கியைக் கண்டனர்; அவளும் அவர்களைக் கிட்டி, இராமனுக்குமுன் செல்லும் இலட்சுமணனை நோக்கித் தனது வேட்கையை யறிவித்துக் கூடிக் கலந்துமகிழும்படி வேண்ட, இலட்சுமணன் சினங்கொண்டு, வாளையெடுத்து அவளது செவி மூக்கு தனம் இவைகளை யறுத்துவிட, அவளும் வந்தவழியே சென்றனளென்று ஸ்ரீவால்மீகிராமாயணம் கூறுகின்றது.

இராமபிரானுக்குத் தம்பியினிடமுள்ள பேரன்பு இப்படலத்தில் நன்கு வெளியாம்.

அயோமுகிப்படலம் முற்றிற்று.

---

60 - ஆவது கவந்தப் படலம்.

இதற்கு, 'அயோமுகிப்படலம்' என்பதுபோலப் பொருள். வயிற்றுக்குள் தலை அடங்கியமைபற்றிக் கவந்தம்போலத் தோற்றமுடையவனாயிருந்தனனால், இவனுக்குக் கவந்தனென்று பெயர். கவந்தம் - கபந்தம் என்ற வடசொல்லின் திரிபு; இதற்கு - தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல் என்று பொருள். அயோமுகியினின்று விடுபட்டபின் இராமலக்ஷ்மணர் சீதையைத் தேடிச் செல்லுகையில் நடுப்பகலாம்போது கவந்தன்வசிக்கும் வனத்தை யடைய, அக்கவந்தன் தனது வழக்கப்படி இரண்டுகைகளையும் நீட்டி அதற்குள் சிக்கிய எல்லாப்பிராணிகளையும் வாரித் தனது வாயினுள் இடத்துணியவே, அதற்குள் அடங்கிய இராமலக்குமணர் சிறிது நேரம் ஆலோசித்துக் கலங்கிப் பிறகு தங்கள் கைவாள்களினால் அவனது இரண்டுதோள்களையும் வெட்டித் தள்ளினமாத்திரத்தில், அவன் சாபத்தினால் நேர்ந்த தனதுகோரரூபம் நீங்கித் திவ்வியசொரூபத்தையடைந்து ஆகாயத்தில் நின்றுகொண்டு இராமபிரானைத் துதித்துத் தனது முற்பிறப்பின்வரலாற்றைக் கூறியதுமன்றி, இராமலக்குமணர் இனிச்செய்யவேண்டிய தொழில்களையும் எடுத்துச் சொல்லிப் போனமை, இப்படலத்திற் கூறப்படுகின்றது. கவந்தன்வதைப்படலம் என்றும், கவந்தன்படலம் என்றும் இப்படலத்தின்பெயர் காணப்படுகின்றது.

க.—இராமலக்குமணர் சீதையைத் தேடிச்செல்லுதல்.

நிலம்பொறை [1]யிலதென நிமிர்ந்த கற்பினு
ணலம்பொறை கூர்தரு மயிலை [2]நாடியே
வலம்புறு பறவையு மழுவ வாமெனப்
புலம்புறு விடியலிற் கடிது போயினர்.

(இ - ள்.) நிலம் பொறை இலது என - பூமிபொறுமையுள்ள தன்று என்று சொல்லும்படி, நிமிர்ந்த - உயர்ந்த, பொறை நலம் கூர்தரு - பொறுமைக்குணம் மிக்கிருக்கிற, மயில்-மயில்போன்ற சாயலையுடைய, கற்பினுளை-

கற்பையுடைய அச்சீதையை,நாடி-தேடியவண்ணம், (இராமலக்குமணர்),—அலம்பு உறு பறவையும் அழுவ ஆம் என புலம்புறு விடியலில் - (இவர்களே நோக்கி) வருத்தங்கொள்ளுகிற பட்சிகளும் அழுகின்றன வென்று சொல்லும் படி ஒலிசெய்கிற விடியற்காலத்தில், கடிது போயினர் - விரைந்து சென்றார்கள்; (எ - று.)

விடியற்காலத்தில் இயல்பாகப் பறவைகள் கூவியொலித்தலை,இவர்களே நோக்கி வருந்தி அழுவனவாகக் குறித்தலால், தன்மைத்தற்குறிப்பேற்றவணி. தன் திறத்துத் தீங்குசெய்தாரை ஒறுக்காது பொறுக்கும் சீதைக்கு, அகழ் வாரையுந் தாங்கும் பூமியை உவமை கூறினர். கற்பு - கணவனையே தெய்வ மென்று உணரும் மேற்கோள். மயில் - உவமையாகுபெயர். இங்கே ஐயுருபு பிரித்துக் கூட்டப்பட்டது. பீ-பி:—[1]எதென. [2]நாடிய. (ககஉ அ)

வேறு.

உ.—இராமலக்குமணர் நடுப்பகலில் கவந்தவனமடைதல்.

ஐயைந் தடுத்த யோசனையி னிரட்டி [1]யடவி புடைபடுத்த
வையந் திரிந்தார் கதிரவனும் வானி னுப்பண் வந்துற்ற
னெய்யுஞ் சிலைக்கை யிருவருஞ்சென் றிருந்தே நீட்டி யெவ்வுயிருங்
கையின் வளைத்து வயிற்றடக்குங் கவந்தன் [2]வனத்தின் கண்ணுற்றார்.

(இ - ள்.) எய்யும் சிலை கை இருவரும்-(அம்பு)எய்தற்குரிய வில்லைப் பிடித்த கையையுடைய இராமலக்குமணர் இருவரும்,—ஐயைந்து அடுத்த யோசனையின் இரட்டி அடவி புடை படுத்த வையம் திரிந்தார் - ஐம்பது யோசனை தூரம் காடுகளாற் சூழப்பட்ட இடத்தில் திரிந்தவர்களாகி,சென்று-போய்,—இருந்தே - (ஓரிடத்திலேயே) இருந்துகொண்டு, நீட்டி - (தனது கைகளை) நெடுந்தூரம்நீளச்செலுத்தி, எ உயிரும் - எல்லாப்பிராணிகளையும், கையின் வளைத்து - கைகளாற் சுற்றி அகப்படுத்தி, வயிறு அடக்கும் - தன் வயிற்றில் மடியச்செய்கிற, கவந்தன் - கவந்தனென்னும் அரக்கனது, வனத்தின் கண் - காட்டினிடத்தில், உற்றார் - சேர்ந்தனர்; (அவ்வளவில்), கதிரவனும் வானின் நாப்பண் வந்து உற்றான் - சூரியனும் ஆகாயத்தின்நடுவில்[உச்சியில்] வந்து சேர்ந்தான்; (எ - று.)

ஐயைந்து ஐந்தாகிய ஐந்து என விரியும்; இருபத்தைந்தென்று பொருள். அதன் இரட்டி - ஐம்பது. "வழங்குமுயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து, விழுங்கும் கவந்தன்" என்பது நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி. பீ-பி:—[1]அளக்கர்புடையுடுத்த. [2]வனத்தைக்.

இச்செய்யுள் - மாரீசன்வதைப்படலத்தின் ககஉ - ஆங் கவி போன்ற அறுசீராசிரியவிருத்தம். (ககஉக)

வேறு.

கூ - ரு.—இவை மூன்றுகவிகளும் - ஒரு தொடர்: அக்கவந்தன்கையில் அகப்பட்டவற்றின் தன்மையைக் கூறும்.

கூ. எறும்பினங் கடையுற யானை யீறுத
லுறுப்புடை யுயிரெலா முலைந்து சாய்ந்தன
[1]வெறிப்புறு நோக்கின வெருவு கின்றன
பறிப்பரு வலையிடைப் பட்ட [2]பான்மைய.

சு. மரபுளி நிறுத்திலன் புரக்கு மாண்பில
னுரனில னொருவனுட் டுயிர்கள் போல்வன
வெருவுவ சிந்துவ [1]குவிவ விம்மலோ
டிரிவன மயங்குவ வியல்பு நோக்கினர்.

ரு. மால்வரை யுருண்டன வருவ மாமரங்
கால்[1]பறிந் திடுவன கான யாறுகண்
மேலுள திசையொடு [2]வெளிக ரப்பன
சூல்[3]முதிர் மேகங்கள் சுருண்டு வீழ்வன.

(இ - ள்.) (கூ) (கவந்தன் கைகளை வீசித் திரட்டினபோது அங்கு அகப்பட்ட), யானையே முதல் எறும்பு இனம் கடை உற - யானையின் இனம் முதலாக எறும்பின் இனம் இறுதியாக (உள்ள), உறுப்பு உடை உயிர் எலாம் - உறுப்புக்களையுடைய எல்லாப்பிராணிகளும்,—உலைந்து சாய்ந்தன - வருந்தியழியுந் தன்மையன; வெறிப்பு உறு நோக்கின வெருவுகின்றன - நடுக்கமுற்ற கருத்தையுடையனவாகி அஞ்சுந்தன்மையன; பறிப்பு அரு வலையிடை பட்ட பான்மைய - நீக்கமுடியாத வலையிற் சிக்கிக்கொண்ட தன்மையை யுடையன; (சு) மரபுளி நிறுத்திலன் - ஒழிமுறைப்படி (குடிகளை) நிலைபெறச் செய்யாதவனும், புரக்கும் மாண்பு இலன் - அரசாளும் மாட்சிமை யற்றவனும், உரன் இலன் - திறமையில்லாதவனு மாகிய, ஒருவன் - ஓர் அரசனது, நாடு - நாட்டிலுள்ள, உயிர்கள் - பிராணிகளை, போல்வன - ஒத்தனவாகி, வெருவுவ - நடுங்குவன; சிந்துவ - சிதறிப்போவன; குவிவ - திரண்டு கூடுவன; விம்மலோடு இரிவன - வருத்தத்தோடு விரைந்து செல்வன; மயங்குவ - (செய்வது அறியாமல்) திகைத்து நிற்பன; (ரு) மால் வரை உருண்டன வருவ - பெரிய மலைகளும் உருண்டு வருவன; மா மரம் கால் பறிந்திடுவன - பெரிய மரங்களும் வேரற்று விழுவன; கானம் யாறுகள் - காட்டாறுகளும், மேல் உள திசையொடு வெளி கரப்பன - (புரண்டுவந்து) மேலிடத்தையும் மற்றத்திசைகளையும் வெற்றிடமில்லாமல் மறைப்பன; சூல் முதிர் மேகங்கள் சுருண்டு வீழ்வன - கருவுற்ற மேகங்களுந் துவண்டு கீழ்விழுவன; (சு) இயல்பு - (இவ்வாறான) தன்மைகளை, நோக்கினர் - (இராமலக்ஷ்மணர்) பார்த்தார்கள்; (எ - று.)

(கூ) பிராணிகளுள் பெரியவுருவத்துக்கு யானையையும், சிறியவுருவத்துக்கு எறும்பையும் எல்லை கூறுவது வழக்கம். உறுப்புடையுயிர் - அங்கத்தைப்

பெற்றுள்ள பிராணன்; எனவே, பிராணி யென்றுயிற்று. எறும்பு, எறுப்பு என மென்றொடர் வன்றொடராயிற்று. இச்செய்யுளில் இறந்தகால நிகழ் காலங்கள் தன்மையையுணர்த்தின. வெறிப்பு உறு நோக்கின - திகைப்பை யடைந்த பார்வையையுடையன எனினுமாம். பி-மீ:—[1]வெறுப்புற. [2]பான்மையே.

(ச) கவந்தன்கைகளின் நடுவில் அகப்பட்டுவருந்தும் பிராணிகளுக்கு, கொடுங்கோல்மன்னன்கீழ் வாழுங் குடிகள் உவமை. மரபுளி நிறுத்துதல் - குடிகள் தங்கள் தங்கள் குலமுறைமை தவறுதிதாழுதும்படி நடத்துதல். மரபுளி, உளி - எழுதுருபு. உரன் - இறுதிப்போலி. இச்செய்யுளில் எதிர்காலங்கள் தன்மையையுணர்த்தின. பி-மீ:—[1]வீவ.

(ஞ) சூல் முதிர் மேகங்கள் - நீர்கொண்ட காளமேகங்கள். மேகங்களுக்குக் கருமுதிர்தல் - நீர்கொண்டு பொழியும் பருவத்தனவாதல். பி-மீ:—[1]கால்பறிந்திறுவன. [2]வெளிகளாவன. [3]முகில்.

இது முதல் இருபத்தைந்து கவிகள் - இப்படலத்தின் முதற்கவி போன்ற கலிவிருத்தங்கள். (ககசo-க-உ)

கூ.—இராமலக்ஷ்மணர் கவந்தன்கையில் அகப்படுதல்.

நாற்றிசைப் பரவையு மிறுதி நாளுறக்
காற்றிசைத் தெழுவெழுந் தலகைக் கால்பரந்
தேற்றிசைத் [1]தூரந்துவந் திடுங்கு கின்றன
போற்[2]றிசை சுற்றிய [3]கரத்துப் புக்குளார்.

(இ - ள்.) இறுதி நாள் உற - யாவும் அழியும் பிரளயகாலம் வந்தமாத்திரத்தில், காற்று இசைத்து எழ - ஊழிக்காற்றுப் பேரொலியுடன் வீசியதனால், நால் திசை பரவையும்-நான்குதிக்குக்களிலு முள்ள கடல்களெல்லாம், எழுந்து - பொங்கி, கால் பரந்து - பரவி, உலகை ஏற்று-உலகத்தை மூடுவதாய், இசை தூரந்து வந்து - ஆரவாரத்தோடு தொடர்ந்து வந்து, இடுங்குகின்றன போல் - நெருங்குகின்றவை போல, திசை சுற்றிய - திக்குக்களை வளைத்த, கரத்து - (அக்கவந்தனது) கைகளினிடையிலே, புக்குளார்-(இராமலக்ஷ்மணர்) அகப்பட்டவராஞர்கள்; (எ - று.)

உலகை மூடி உயிர்களை அழிக்கும் கடல்கள், திக்குக்களை மூடிப் பிராணிகளையழிக்கிற கவந்தன் கைகளுக்கு ஒப்புமை. கால்பரந்து, கால் - தமிழுபசர்க்கம். பி-மீ:—[1]உயர்ந்து. [2]திசைச். [3]கரத்திற். (ககசஉ)

எ.—இராமலக்ஷ்மணர் கவந்தன்கைகளை அரக்கனின்சேனையென்றுகருதி மகிழ்தல்.

தேமொழி திறத்தினு [1]லரக்கன் சேனைவந்
தேமுற வளைந்ததென் றுவகை யெய்தினர்
நேமிமால் [2]வரைவர நெருக்கு கின்றதே
யாமென லாயகைம் மதிட்கு ளாயினர்.

(இ - ள்.) நேமி மால் வரை வர நெருக்குகின்றதே ஆம் எனல் ஆய கை மதிட்குள் ஆயினுர் - சக்கரவாள மென்னும் பெரிய மலே வரவர நெருக்குகின்றது என்னும் படியான (கவந்தனது) கைகளாகிய மதிட்குள் சிக்கிய இராமலக்ஷ்மணர்கள்,—தேன் மொழி திறத்தினுல் - தேன்போன்ற இனிய பேச்சையுடைய சீதையின் நிமித்தம், அரக்கன் சேனே - இராவணனுடைய சேனையானது, வந்து எம் உற வளேந்தது - வந்து காவலாகத் தம்மை வளேந்துகொண்டது, என்று - என்று நினேத்து, உவகை எய்தினுர் - களிப்புக்கொண்டார்கள்; (எ - று.)

இவர்கள் களிப்புற்றது, இப்பொழுதே பகைவன்சேனேயை யழித்துச் சீதையை மீட்குங் காலம் நேர்ந்தது என்ற எண்ணத்தினுல்; போர்நேர்ந்த தென்ற மாத்திரத்தில் மனம்பூரித்தல், சுத்த வீரர்களின் இயல்பு. ஏமுற = ஏமமுற; தொகுத்தல், தேமொழி - அன்மொழித்தொகை. சக்கரவாளமலே - உலகத்தைச் சூழ்ந்துள்ள கடலேச் சுற்றிலும் எல்லேயாக வட்டமாய் அமைந்துள்ளதொரு பெருமலே; அதனே இவன்கைக்கு உவமைகூறியது, வலிய பெரிய தோற்றத்துடன் வளேதலால்; கையை மதிளாக உருவகப்படுத்தியதும், அது பற்றியே. மதில் = மதிள்: போலி. தங்களேச்சுற்றிய கவந்தன்கைகளே, தங்களே வளேந்த இராக்கதர்சேனே யென மயங்கியதனுல், மயக்கவணி. பி-மீ:—[1]அரக்கர். [2]வரையென. (ககசச)

அ.—இது அரக்கர்சேனே யாதலால், அரக்கநரும் அருகிலுள்ளதுபோலும் என்று இராமன் இலக்குமணனுக்குக் கூறுதல்.

இளவலே நோக்கின னிராம னேழையை
யுளேவுசெ யிராவண னுறையு மூருமிவ்
வளேவைய தாகுத லறிதி யையகங்
கிளர்பெருந் துயரமுங் கிண்ட தா[1]மென்றன்.

(இ - ள்.) இராமன்—, இளவலே நோக்கினன் - தம்பியாகிய இலக்குமணனேப் பார்த்து, 'ஐய—! (அரக்கன்சேனே நம்மைச்சூழ்ந்துள்ள தாதலால்), ஏழையை உளேவு செய் இராவணன் உறையும் ஊரும் இ அளவையது ஆகுதல் அறிதி - சீதையை(க்கவர்ந்து)வருத்தின இராவணன் வசிக்கிற ஊரும் இவ்விடத்திலுள்ள தென்பதை அறிவாயாக; (ஆதலால்), நம் கிளர் பெருதுயரமும் கிண்டது ஆம் - நமது வளர்ந்துவருகிற மிக்கதுன்பமும் ஒழிந்ததாகும்,' என்றன் - என்றுகூறினன்; (எ - று.)

இது அரக்கன்சேனே யாதலின், அவனூர் சமீபத்திலேயே இருக்கவேண்டும்; ஆதலால், நாம் அங்குச்சென்று பகைவென்று சீதையை மீட்டுத் துயரை நீக்கிக்கொள்ளலா மென்று இராமன் தம்பியை நோக்கிக் கூறினன். தம்பியை அண்ணன் 'ஐய' என்று விளித்தது, அன்பினுல் வந்த மரபுவழுவமைதி. பி - மீ:—[1]எனை. (ககசடு)

கூ.—'அரக்கச் சேனையன்று' என்று இலக்குமணன் கூறுதல்.

முற்றிய வரக்கர்த முழங்கு தானையே
லெற்றிய முரசொலி யேங்குஞ் [1]சங்கிசை
பெற்றில [2]தாகலிற் பிறிதொன் றுமெனச்
சொற்றன னிளையவன் றொழுது [3]முன்னினன்.

(இ - ள்.) (அதற்கு), இளையவன் - இலக்குமணன், '(நம்மைவளைத்த இது), முற்றிய அரக்கர்தம் முழங்கு தானை எல் - (நம்மைச்) சூழ்ந்துள்ள அரக்கர்களது ஒலிக்கின்ற சேனையாயின், எற்றிய முரசு ஒலி - அடிக்கப் பட்ட முரசவாத்தியங்களின் கோஷமும், சங்கு இசை - சங்குகளின் ஓசையும், எங்கும் - ஒலிக்கும்; பெற்றிலது ஆகலின் - (இது அவ்வோசைகளைப்) பெற்றிராததுபடியினால், பிறிது ஒன்று ஆம்-வேறொன்றேயாம்[சேனையன்று], என தொழுது சொற்றனன்-என்று(இராமனைத்)தொழுது சொல்லி,முன்னினன் - (அதனை இன்னதென்று அறிய) ஆலோசிப்பானானான்; (எ - று.)—
ஏதுவணி. பி - மீ:—[1]சங்கொலி. [2]ஆமெனில். [3]முன்னின்றனன். (ககசசு)

கo.—இலக்குமணன் 'இது பேருதாகமாயிருக்கலாம்' என்று தெரித்தல்.

தெள்ளிய வமுதெழத் தேவர் வாங்கிய
வெள்ளெயிற் றரவந்தான் வேறொர் நாகந்தான்
தள்ளரு வாலொடு தலையி னல்வளைத்
துள்ளுற[1]க் கவர்வதெ பொக்கு மூழியாய்.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) ஊழியாய்-பிரளயத்திலும் அழியாது நிலை நிற்பவனே! தெள்ளிய அமுது எழ - தெளிவான அமிருதம் உண்டாகும்படி, தேவர் வாங்கிய - தேவர்கள் (மந்தரமலையிற்சுற்றி) இழுத்த, வெள் எயிறு அரவம் தான்-வெள்ளிய பற்களையுடைய (வாசுகியென்னும்) பாம்புதானே? (அன்றி), வேறு ஓர் நாகம் தான்-பிறிதொரு பாம்புதானே? தள் அரு வாலோடு தலையினல் வளைத்து உள் உற கவர்வதே ஒக்கும் - தள்ளமுடியாத வாலோடு தலையையுஞ் சேர்த்து வளைத்து (அதனால் நாம்) உள்ளே அகப்பட்டுக்கொள்ளும்படி கவர்வது போலும்; (எ - று.)

'தான்' என்னும் இடைச்சொற்கள்-இங்கே விகற்பப்பொருளன. அசுரரும் கடல்கடைந்திருக்க இங்குத் தேவரைமாத்திரமே கூறினது, தலைமை பற்றி; இது, 'சிறப்புடைப்பொருளைத் தானெடுத்துமொழிதல்' என்னுந் தந்திரவுத்தியாம். பி-பீ:—[1]வளைவதையொத்தது. (ககசஎ)

கக.—இருவரும் கவந்தனெதிரிற் செல்லுதல்.

[1]என்றிவை விளம்பிய விளவல் வாசக
நன்றென [2]நினைந்தன னடந்த நாயக
னொன்றிரண் டியோசனை யுள்புக் கோங்கரு
னின்றென விருந்தவக் கவந்த னெர்சென்றார்.

(இ - ள்.) என்று இவை விளம்பிய - என்று இவ்வாறு கூறிய, இளவல் வாசகம் - தம்பியினது வார்த்தையை, நடந்த நாயகன்-முற்செல்லுகிற இராமன், நன்று என நினைந்தனன்-சரியானதென்று கருதினான்; (உடனே அவ்விருவரும்), ஒன்று இரண்டு யோசனை உள் புக்கு - இரண்டுயோசனைதூரம், உள்ளேசென்று, ஓங்கல் தான் நின்று என இருந்த-மலைகின்றாற்போல இருந்த, அ கவந்தன் - அந்தக்கவந்தனது, நேர்-எதிரில், சென்றார்-போனார்கள்.

ஒன்றிரண்டு - பண்புத்தொகை; ஓரிரண்டு. தான்-அசை ஓங்கல்-உயர்ந்திருப்பதென மலைக்குக் காரணப்பெயர். பி - மீ:—[1]என்றனனியம்பிய. [2]நினைந்திதிர்நடக்கும். (ககசஅ)

கூ.—இதுமுதல் ஒன்பது கவிகள் - கவந்தனது தோற்றத்தைக் கூறும்.

வெயிற்சுட ரிரண்டினை மேரு மால்வரை
[1]குயிற்றிய வாமெனக் கொதிக்குங் கண்ணினன்
[2]னெயிற்றினுக் கிடையிரு காத [3]மீண்டிய
வயிற்றிடை வாயெனு மகர வேலையான்.

(இ - ள்.) வெயில் சுடர் இரண்டினை மேரு மால் வரை குயிற்றிய ஆம் என கொதிக்கும் கண்ணினன் - வெம்மையையுடைய இரண்டு சூரியரைப் பெரியமேருபருவதம்(தன்னிற் பதிக்கப்பெற்ற தென்னும்படி கொதிக்கின்ற கண்களையுடையவனும்,—எயிற்றினுக்கு இடை - பற்கள் ஒவ்வொன்றுக்கும் இடையிலே, இருகாதம் ஈண்டிய-இரண்டுகாததூரம் பொருந்தப்பெற்றதும், வயிற்றிடை - வயிற்றின்நடுவில் உள்ளதுமான, வாய் எனும் - வாயென்னப்பட்ட, மகரம் வேலையான் - சுறுமீன்களையுடைய சமுதிரத்தையுடையவனும்,—(எ - று.)

இல்பொருளுவமை. ஈற்றடி - உருவகம். பரந்தகடல் - அகன்றவாய்க்கும், கடலிலுள்ள சுறுமீன்கள்-வாயிலுள்ள பற்களுக்கும் உவமை. பி - மீ:—[1]குயிற்றியது. [2]எயிற்றிடைக்கு. [3]ஈட்டிய. (ககசகூ)

கூ. ஈண்டிய புலவரோ டவுணர் திண்டிறல்
தீண்டிய நெடுவரைத் தெய்வ மத்தினைப்
பூண்டுயர் வடமிரு [1]புடையும் வாங்கலி
[2]னீண்டெனக் கிடந்தன நிமிர்ந்த கையினன்.

(இ - ள்.) ஈண்டிய புலவரோடு - திரண்டதேவர்களும், அவுணர்-அசுரர்களும், இந்துவை தீண்டிய நெடு வரை தெய்வம் மத்தினை-சந்திரனை அடைதலைக்கொண்ட பெரிய மந்தரமலையாகிய தெய்வத்தன்மையுள்ள மத்தை, பூண்டு - சுற்றி, உயர் வடம்-சிறந்த (வாசுகியென்னும் பாம்பாகிய) கயிற்றை, இரு புடையும் வாங்கலின்-இரண்டுபக்கங்களிலும் இழுத்துக் கடைதலினால், நீண்டு என - (அந்நாகம்) நீண்டாற்போல, கிடந்தன-கிடந்தனவான, நிமிர்ந்த கையினன் - நீண்ட கைகளையுடையவனும்,—(எ - று.)

மந்தரமலை - அவனுடலுக்கும், அதன் இருபுறத்தும் நீண்ட வாசுகியென்னும் பாம்பினுடல் - அவன் கைகளுக்கும் உவமை. நீண்டு - எச்சத்திரிபு. என - உவமவுருபு. கிடந்தன - பலவின்பாற் பெயர். மத்து - மத்தெனும் வடசொல்லின் திரிபு; கடைகருவி. "மத்துமந்தரம் வாசுகிகடைகயிறடைதாண், மெத்துசந்திரன் சுராசுரர் வேறுவேறுள்ள, கொத்திரண்டுபால் வலிப்பவர்" எனப் பாலகாண்டத்திற் கூறினமை காண்க. இனி, இத்துவைத் தீண்டிய நெடுவரை யென்பதற்கு - உயர்ச்சியாற்சந்திர மண்டலத்தையளாவிய மலையென்றலும் ஒன்று. பி - மீ:—[1]புடையின். [2]நீண்டன. (கஎகூ)

கச. தொகைக்கனற் கருமகன் றிருத்தித் தூம்பெனப்
புகைக்கொடி [1]கனலொடு பொடிக்கு மூக்கினன்
பகைத்தகை நெடுங்கடற் பருகும் பாவகன்
சிகைக்கொழுந் [2]தெனவெதிர் தெரியு நாவினன்.

(இ - ள்.) கரு மகன் - கருமானுடைய, தொகை கனல்-மிக்க நெருப்பையுடைய உலக்களத்திலே யுள்ள, திருத்தி - திருத்தியினது, தூம்பு என - துவாரம்போல, கனலொடு - நெருப்பையும், கொடி புகை-(அதற்குக்) கொடியாயிருக்கிற புகையையும், பொடிக்கும் - வெளிப்படுத்துகிற, மூக்கினன் - மூக்கின் துவாரத்தையுடையவனும்,—பகை தகை - பகைமைக்குணமுடைய, நெடு கடல் - பெரிய கடலை, பருகும் - (அதிகப்படவொட்டாமல்) குடித்து ஒருநிலையில் நிற்கச்செய்கிற, பாவகன் - (படபாமுக) அக்கினியினது, சிகை கொழுந்து என-சுவாலையின் கொழுந்து என்னும்படி, எதிர் தெரியும்-(கண்ணுக்கு) எதிரேதெரிகிற, நாவினன் - நாக்கையுடையவனும்,—(எ - று.)

தொகைக்கனல் - உலக்களத்துக்குப் பண்புத்தொகை யன்மொழி. கரு மகன் - இரும்பு வேலை செய்யுங் கம்மாளன். திருத்தி-உலக்களத்துக் கனல் மிக்கு எரியும்படி காற்றையுண்டாக்கத் தோலினாற் செய்யப்பட்ட ஓர் கருவி. கொடி - துவசம். மேல் தோன்றும் கொடிகள் அதற்கு உரிய அரசர்களைத் தூரத்திலுள்ளார்க்கும் புலப்படுத்துவதுபோல, ஆகாயத்தி லெழும்பும் புகையானது அக்கினியைப் புலப்படுத்துவதனால், அதனை அக்கினிக்குக் கொடியாகக்கூறுவது, வழக்கம். திருத்தித் தூம்பு மூக்குத்துவாரத்திற்கு, வடிவத்தில் உவமை. நெருப்புக்கு நீர் மாறுதலால், கடலுக்கு 'பகைத் தகை' என்ற அடைமொழி கொடுத்தார். கடலிடையிலுள்ள படபை யென்னும் பெண் குதிரையின் முகத்திலுள்ள அக்கினியானது, அக்கடலில் விழும் பேராறுகள் முதலியவற்றினாற் கடலில் நீர் மிகவெட்டாதபடி உறிஞ்சி அதனை என்றும் ஒரு நிலையிலே இருக்கச் செய்கின்ற தென்பது, தூற்கொள்கை. பி-மீ:—[1]காலொடு, காலெனப். [2]இதுவெனத்திருகும். (கஎகூக)

கஞ. புரண்டுபாம் பிடைவர வெருவிப் புக்குறை
யரண்டனை நாடியோ ரருவி மால்வரை
முரண்[1]டொகு முழைதுழை முழுவெண் டிங்களை
யிரண்டுகூ [2]றிட்டென விலங்கெ யிற்றினன்.

(இ - ள்.) பாம்பு புரண்டு இடைவர-(இராகுவென்னும்) பாம்பு புரண்டு தன்னிடத்து வருவதனால், வெருவி - அஞ்சி, புக்கு உறை அரண்தனே நாடி-புகுந்து வசித்தற்கு உரிய பாதுகாப்புள்ள இடத்தைத் தேடி, ஓர் அருவி மால் வரை மூரண் கொகு முழை நுழை - அருவிகளையுடைய பெரிய ஒரு மலையினது வலிமை பொருந்திய குகையில் நுழைகிற, வெள் முழு திங்களை-வெண்ணிறமான பூர்ண சந்திரனை, இரண்டு கூறு இட்டு என - இரண்டு கூறுகச் செய்து வைத்தாற்போல, இலங்கு-விளங்குகிற, எயிற்றினன்-கோரப்பற்களையுடையவனும்,—(எ - று.)

மலை - இவனது உடம்பிற்கும், குகை - இவனது வாய்க்கும், கூறிட்ட சந்திரன் - அதிலுள்ள இரண்டு கோரதந்தங்களுக்கும் உவமை; **தற்குறிப் பேற்றவணி.** பி ம்:—[1]தகு. [2]இட்டன. (ககடுஉ)

ககூ. ஓதநீர் மண்ணிவை முதல வோதிய
பூதமோ ரைந்தினிற் பொருந்திற் றன்றியே
வேதநூல் வரன்முறை விதிக்கு [1]மைம்பெரும்
பாதகந் திரண்டுயிர் படைத்த பண்பினன்.

(இ - ள்.) ஓதம் நீர்-குளிர்ச்சியுள்ள நீரும், மண்-பூமியும், இவை முதல-(என்ற) இவை முதலியனவாக, ஓதிய-சொல்லப்பட்ட, பூதம் ஓர் ஐந்தினில்-பஞ்ச பூதங்களிலும், பொருந்திற்று அன்றி - (இவனது உடல்) ஆக்கப்பட்டதல்லாமல்,—வேதம் நூல் வரல் முறை விதிக்கும்-வேதசாஸ்திரங்களிற் கிரமப்படி கூறப்பட்ட, ஐ பெரு பாதகம் - பஞ்சமகா பாதகங்களெல்லாம், திரண்டு ஒருங்கு சேர்ந்து, உயிர் படைத்த - உயிரைப் பெற்ற, பண்பினன் - (உடலின்) தன்மையுடையவனும்,—(எ - று.)

தற்குறிப்பேற்றவணி. உலகத்திலுள்ள பிராணிகளின் குணந்தொழில்கள்போலன்றி இக்கவந்தனது குணந்தொழில்கள் வேறுபட்டுள்ளதனால், உலகத்தாருடைய உடல்கள் பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்டதுபோல இவனது உடல் ஆக்கப்படாமல் பெரும்பாவத்தினாலே ஆக்கப்பட்டதாகக் குறித்தார். உலகத்துப்பிராணிகளின் உடல்கள் பஞ்சபூதங்களினாலும் ஆக்கப்பட்டனவென்பது பிரசித்தம். பஞ்சபூதங்கள் - பிருதிவி, அப், தேயு, வாயு, ஆகாசம்என்பன. முதல - பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். பஞ்சமகாபாதகங்களாவன:—பொய், கொலை, களவு, குடி, பிறர்மனைநயத்தல் என்பன: சிறிது வேறுபடவும் கூறுவர். பி-ம்:—[1]அப். (ககடுஊ)

கஎ. வெய்யவெங் கதிர்களை விழுங்கும் வெவ்வராச்
செய்தொழி [1]லிலதுயில் செவியின் றெழுள்ளையான்
பொய்கிளர் வன்மையிற் புரியும் புன்மையோர்
வைகுறு நரகையு நகும்வ யிற்றினன்.

(இ - ள்.) வெய்ய வெம் கதிர்களை-வெவ்வியதும் விரும்பத்தக்கதுமான கிரணங்களையுடைய சூரியசந்திரர்களை, விழுங்கும் - உட்கொள்ளுகிற, வெம்

அரா - கொடிய (இராகுகேது வென்னும்) பாம்புகள், செய் தொழில் இலை - செய்யுந்தொழில் இல்லாமல், துயில்-தூங்குதற்குரிய, செவியின் தொள்ளை யான் - செவித்தொளைகளை புடையவனும்,—கிளர் வன்மையின்-மிக்கவாடு மையினால், பொய் புரியும் - பொய்முதலிய பாவங்களைச் செய்கிற, புன்மை யோர் - அற்பகுணமுடைய பாவிகள், வைகுறும்-தங்குகிற, நரகையும்-நரகத் தையும், நகும் - (தனக்கு ஒப்பாகாதென்று) பரிகசிக்கும்படியான, வயிற்றி னான் - கொடுவயிற்றையுடையவனும்,—(எ - று.)

'வெய்யவெங்கதிர்கள்' என ஒருதொடராக் கூறினாலும், 'வெய்ய' என் பதைச் சூரியனுக்கும், 'வெம்' என்பதைச் சந்திரனுக்கும் அடைமொழியாக் குக. 'வேவம்' என்பது, "வெம்மை வேண்டல்" என்னுந் தொல்காப்பியத்தின் படி இங்கேவிரும்ப லென்னும் பொருளது. இவனது செவித்தொளைகள் பெரும்பிலம்போன்றுள்ளன வென்பார், இராகுகேதுக்கள் தூங்குதற்கு உரி யனவென்றார். 'பொய்' என்றது-மற்றையபாவங்களுக்கும் உபலக்ஷணம். நரகத் தில் உயிர்கள் வருத்துதலினும் மிகுதியாக இவனது வயிற்றில் கொல்லாது ஒருங்கேவிழுங்கப்பட்ட பிராணிகள் தவிக்கின்றன வென்பது, பின்னிரண் டடியின் கருத்து. இல்லை=இன்றி: முற்றெச்சம். இராமலக்குமணரைக் கவரும் இவ்வரக்கன் சந்திரசூரியரையும் கைப்பற்றி விழுங்கவல்லா னென் பதுபட, இராகுகேதுக்களுக்குச் செய்தொழிலிலை யென்று ரென்னலாம். தொள்ளை=தொளை. தொளை=துளை. பி-மீ:—[1]இல. (ககடுசு)

கஅ. முற்றிய வுயிரெலா முருங்க வாரித்தான்
பற்றிய கரத்தினன் பிணைத்த பண்ணையிற்
றுற்றிய புகுதருந் [1]தோற்றத் தால்யமன்
கொற்றவாய் தற்செயல் குறித்த வாயினன்.

(இ - ள்.) முற்றிய உயிர் எலாம்-சூழவளைக்கப்பட்ட பிராணிகளெல்லா வற்றையும், முருங்க அழியும்படி, வாரி பற்றிய-வாரியெடுத்த, கரத்தினன் - கைகளையுடையவனும், பிணைத்த பண்ணையில் - பருத்துள்ள படகுபோன்ற (தனது) வயிற்றில், துற்றிய - உட்கொள்ள, புகுதரும் - (அப்பிராணிகள்) நெருங்கிப்புகுகிற, தோற்றத்தால் - காட்சியால், யமன் கொற்றம் வாய்தல் செயல் குறித்த - யமனது பட்டணத்தின் வெற்றிபெற்ற வாயிலின் செயலை யொத்த, வாயினன்-வாயையுடையவனும்,—(எ - று.)—தான்-அசை.

யமனது பட்டணத்தின் வாசல் - கவந்தனது வாய்க்கு, வருத்தமனு பவித்தற்பொருட்டு உட்புகுதற்கு உயிர்கள் வந்து நெருங்குதலால் ஒப்புமை. பண்ணைபோல்வதைப் பண்ணை யென்றது,உவமவாகுபெயர். பண்ணை-படகு. துற்றிய - துற்ற: செய்யிய வென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். வாய்தல்=வாயில். பி-மீ:—[1]தோற்றத்தானமன். (ககடுஎ)

ககூ. ஓலமார் கடலென முழங்கு மோதையா
னாலமே யென[1]விருண் டழன்ற வாக்கையா

நீலமா னேமியிற் றலையை நீக்கிய
காலநே மியிற்பெருங் கவந்தக் காட்சியான்.

(இ - ள்.) ஓலம் ஆர் கடல் என முழங்கும் ஓதையான்-ஆரவாரம் மிக்க கடல்போல ஒலிக்கும் பேரொலியுடையவனும்,—ஆலமே என இருண்டு அழன்ற ஆக்கையான்-ஆலாகல விஷந்தா னென்னும்படி கறுத்துக் கொதிப்புக் கொண்ட சரீரமுடையவனும்,—நீலம் மால் - நீலநிறமுடைய திருமால், நேமியின் - (தனது) சக்கராயுதத்தினால், தலையை நீக்கிய-தலையை அறுத்துத் தள்ளப்பெற்ற, காலநேமியின் - காலநேமியென்னும் அசுரன் போல, பெரு கவந்தம் காட்சியான்-பெரிய கவந்தத்தின் தோற்றத்தையுடையவனும்,—(எ-று.)

திருமால் காலநேமியென்னும் அசுரனைக் கடிந்த கதை:—நரசிங்காவதாரஞ் செய்த விஷ்ணுவினால் கொல்லப்பட்ட இரணியனுக்குக் காலநேமி யென்னும் ஓர் மகன் நூறுதலைகளையும் நூறுகைகளையும் உடையவனாயிருந்தான்: அவன், தேவாசுர யுத்தத்தில் முதுகிட்ட அசுரர்கள் பக்கத்தில் வந்து தேவர்கள்யாவரையும் சயித்துச் சத்தியலோகத்திற் சென்று பிரமனைத் தேவர்கள் துதிப்பதுபோல அசுரர்யாவரும் தன்னை வணங்கித் துதிக்கும்படி வீற்றிருந்தான்; பிறகு அவன் செருக்குக்கொண்டு, தன்தகப்பனை [இரணியனை]க் கொன்ற திருமாலினிடத்துச் சென்று பகைமைபாராட்டிப் போர்செய்யத்தொடங்க, உடனே திருமால் தனது சக்கராயுதத்தினால் அவனது நூறுதலைகளையும் நூறுகைகளையும் அறுத்துத்தள்ளிவிட்ட பின்பும், கவந்தரூபமாகிய அவன் அஞ்சாது எதிர்த்துநிற்க, அப்பொழுது திருமாலின் வாகனமாகிய கருடபகவான் அக் காலநேமியைத் தனது மார்பினால் வீழ்த்தினனென்பது. பி-பீ:—[1]அழன்றிருண்ட. (ககருசு)

உ0.—இராமலக்ஷ்மணர் கவந்தனைக் காணுதல்.

தாக்கிய தணப்பில்கா லெறியத் தன்னுடை
மேக்குயர் கொடுமுடி யிழந்த மேருவே
ராக்கையி னிருந்தவன் றன்னை யவ்வழி
நோக்கின ரிருவரு நுணங்கு கேள்வியார்.

(இ - ள்.) தாக்கிய தணப்பு இல் கால் எறிய - மோதுந்தன்மையுள்ள நீங்குதலில்லாத பெருங்காற்று அடித்தலினால், தன்னுடை-தனது, மேக்கு உயர் கொடுமுடி-மிகவுயர்ந்த சிகரங்களை, இழந்த—, மேரு - மேருமலையை, நேர் - ஒத்த, ஆக்கையின்-சரீரத்தோடு, இருந்தவன்தன்னை-இருந்தவனாகிய கவந்தனை, நுணங்கு கேள்வியார் இருவரும் - நுட்பமான நூற்கேள்விகளையுடையவர்களான அவ்விருவரும், அவ்வழி - அவ்விடத்து, நோக்கினர் - பார்த்தார்கள்; (எ - று.)

மேரு கொடுமுடியிழந்தகதை:—முன்னொருகாலத்தில் வாயுதேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் தமக்குள் யார்பலசாலியென்று விவாதமுண்டாக, அதனைப் பரீட்சித்தறியும்பொருட்டு வாயுதேவன் மேருமலையின் சிகரத்தைப்

பெயர்த்துத் தள்ளுவதென்றும், ஆதிசேஷன் அதுபெயரவொட்டாமற் காத்துக்கொள்வ தென்றும் கோட்பாடுண்டாகி, அங்ஙனமே இருவரும் தேவர் முதலியோரின்முன்னிலையில் தம்தம்வலிமையைக் காட்டத்தொடங்கிய போது, ஆதிசேஷன் தனதுஆயிரம்படங்களாலும் மேருமலையின் ஆயிரஞ்சிக ரங்களையும் கவித்துக்கொண்டு பெயரவொட்டாமல் வெகுநேரங் காக்க, பின்பு வாயுதேவன் தன்வலிமையால் அம்மலைச்சிகரங்களில் மூன்றைப் பெயர்த்துக் கொண்டுபோய்த் தென்திசையில் தள்ளிவிட்டனன் என்பதாம். இவனது தலையற்றஉடலுக்கு, சிகரங்களை யெல்லாம் இழந்த மேரு வென்று இல் பொருளுவமை கூறினர். வாயு சதாகதியாதலின், அதற்கு 'தூணப்பில்'என்ற அடைமொழிகொடுக்கப்பட்டது. மேக்கு=மேல். (ககருள)

உக.—இராமலக்ஷ்மணர் கபந்தனுடைய வாயைக் காணுதல்.

நீர்புகு நெடுங்கட [1]லடங்கு நேமிசூழ்
பார்புகு நெடும்பகு வாயைப் [2]பார்த்தனர்
சூர்[3]புக லரியதோ ரரக்கர் தொன்மதி
லூர்புகு வாயிலோ விதுவென் [4]றுன்னினர்.

(இ - ள்.) நீர் புகும் - பேராறுகள் விழப்பெற்ற, நெடு கடல் - பெரிய கடல்கள், அடங்கு - உள்அடங்கப்பெற்ற [கடல்களைச்சுற்றிய], நேமி-சக்கர வாளமலையினுல், சூழ் - சூழப்பட்ட, பார் - பூமி, புகும் - நுழையும்படியான, நெடு பகுவாயை - நீண்ட பிளந்த [திறந்துள்ள] வாயை, பார்த்தனர் - பார்த்து, (அவ்விருவரும்), 'இது —, சூர் புகல் அரியது - தேவர்களாலும் உட்செல்லப்பெறாத, ஓர்-ஒரு, அரக்கர் தொல் மதில் ஊர் புகு வாயிலோ-அரக்கருடைய பழைய மதில்சூழ்ந்த ஊர்க்குட் புகுவதற்கு ஏற்பட்ட வாசலோ?' என்று உன்னினர் - என்று நினைத்தார்; (எ - று.)

பூமியைச் சுற்றிக் கடல்களும், அவற்றைச்சுற்றிச் சக்கரவாள மலையும் இருப்பதாகக் கூறுதல், நூற்கொள்கை. இரண்டாமடி - தொடரீபுயரிவு நவிற்சியணி. சூர் - அச்சமுமாம். வாயில்=இல்வாய்; இலக்கணப்போலி. கடலடங்கும் வாய், பார்புகும்வாய் என இரண்டையும் வாய்க்கு அடைமொழியாக்கினும் அமையும். பி பி:—[1]ஒடுங்கு. [2]பார்த்தனன். [3]புகலாயது. [4]உன்னினன். (ககருஅ)

உஉ.—இலக்குமணன் கபந்தனுடைய பூதவுடலை நெருப்பில் வேகவைத்துக் கவலைகொண்டு இராமனிடம் கூறல்.

அவ்வழி யிளையவ [1]னமர்ந்து [2]நோக்கியே
வெவ்வியை தொருபெரும் பூதம் வில்லலாய்
[3]வவ்வியை தன்கையின் வளைத்து வாய்ப்பிபுக்
செவ்வதெ னிவணைச் செப்பல் சொல்லுவான்.

(இ - ள்.) அவ்வழி - அப்பொழுது, இளையவன் - இளைய பெருமாள்,— அமர்ந்து நோக்கி - உற்றுப்பார்த்து, (பிறகு), (இராமனை நோக்கி), வில் வலாய்-வில்திருழிலில் வல்லவனே! வெவ்வியது ஒரு பெரு பூதம்-கொடிய

தாகிய ஒரு பெரும்பூதமானது, தன் கையின் வலேத்து - தனதுகைகளால் வலேத்து, வவ்விய - கவர்ந்தபிராணிகளே, வாய் பெயும் - வாயிலே போகட்டுக்கொள்ளும்; இவண் செய்வது என் - (இதன்கையிலகப்பட்டுக்கொண்ட நம்மையும் அவ்வாறே வாயிற்போகட்டுக்கொள்ளு மாதலால்) இப்பொழுது, (நாம்) செய்யக்கூடியது யாது?' என - என்று சொல்ல,—செம்மல் - இராம பிரான், சொல்லுவான் - மறுமொழிகூறுபவனனன்; (எ - று.)—அதனை மேற்கவிகளிற் காண்க.

வவ்விய - பலவின்பால் வினையாலணையும் பெயர். செம்மல் - ஆண் பாற்சிறப்புப்பெயர். **பி - ம்:**—[1]அமைந்து. [2]நோக்கிய. [3]வவ்வியே. (ககருங)

உரை.--இதுமுதல் ஐந்துகவிகள்-இராமன் இலக்குமணனை நோக்கிக்கூறுவன.

பாரிட மேயிது பரவை சுற்றுறும்
பாரிட மிதெனப் பரந்த மெய்யது
பாரிடம் [1]வலம்வரப் பரந்த கையது
பாரிடந் தெடுத்தமா [2]வனைய பாழியாய்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பார் இடந்து எடுத்த மா அனைய பாழியாய் - பூமியைக் (கோட்டாற்) குத்தியெடுத்துக் கொணர்ந்த வராகமூர்த்தியை யொத்த பலமுள்ளவனே! பரவை சுற்றுறும் பார்[பரு] இடம் அரிது என பரந்த மெய்யது-கடல் சூழ்ந்த அகன்ற இடமான பூமியும் (இடம்) போதாதென்னும்படி பரந்துள்ள உடம்புடையது: இடம் வலம் வர பரந்த கையது - இடப்பக்கத்திலும் வலப் பக்கத்திலும் பொருந்திய நீண்ட கைகளேயுடையது: (ஆதலால்), இது பாரிடமே - இது பூதந்தான்; பார் - (நீ) பார்ப்பாயாக; (எ - று.)

ஒவ்வொருஅடியிலும் முதலில் சிலஎழுத்துக்கள் ஒருதன்மையனவாய் நின்று பொருள்வேறுபட்டு வந்ததனால், இது-**யமக** மென்னுஞ் சொல்லணி. இரண்டாமடியில், 'பாரிடம்' என்பது - பரு இடமென்று பிரித்து, அகலிட மென்று பொருள்படும்; பண்புத்தொகை; பண்புப்பெயர் ஈறுபோய் இடை யுகரமுங்கெட்டு ஆதிநீண்டது. மா - விலங்கு: இப்பொதுப்பெயர், இங்கே சிறப்பாய்ப் பன்றியைக் குறித்தது.

பாரிடந் தெடுத்த கதை:—ஒருகாலத்திற் பூமியைப் பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால் மகாவராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக் கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்பதாம். இப்பொழுது நடக்கிற சுவேதவராககல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் திருமால் பிரளயப்பெருங்கடலில் மூழ்கியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து ஸ்ரீவராக ரூபத்தைச் செய்தருளிப் பூமியை யெடுத்து வந்தனனென்னும் புராண வரலாறு உண்டு. **பி-ம்:**—[1]அலம்வர. [2]வாயிற்பாழி வாய். (ககசுஎ)

உசு. தோகையும் பிரிந்தன ளெந்தை துஞ்சினன்
வேகவெம் பழிசுமந் தழல வேண்டலே
கைலின் யானினி யிதனுக் காமிட
[1]மேகுதி யீண்டுநின் றிளவ லேயென்றான்.

(இ - ள்.) இளவலே - தம்பீ! தோகையும் பிரிந்தனள் - மயில்போன்ற சாயலையுடைய சீதையும் பிரிந்தாள்; எந்தை துஞ்சினன் - தகப்பன்முறையான சடாயுவும் (அவள்நிமித்தம்) இறந்துவிட்டான்; வேக வெம் பழி சுமந்து உழல வேண்டலேன் - (இவ்வாறு) மனமழியும்படி கொடும்பழியைத் தாங்கி யலைதற்கு விரும்புகின்றேனில்லை; ஆகலின் - ஆதலால், இனி யான் இதனுக்கு ஆமிடம் - இப்பொழுது நான் இப்பூதத்திற்கு நகரப்படும்பொருளாவேன்; ஈண்டு நின்று எகுதி - (நீமாத்திரம்) இங்கிருந்து (தப்பி ஊர்க்குத்) திரும்பிச் செல்வாயாக, என்றான்—; (எ - று.)

தோகை - பெண்ணுக்கு இருமடியாகுபெயர். 'எந்தை துஞ்சினன்' என்றவிடத்து, இறந்தது தழுவிய எச்சப் பொருளொடு உயர்வு சிறப்புப் பொருளதுமான உம்மை விகாரத்தால் தொக்கது. 'எந்தை துஞ்சினன்' என்பதற்குத் தசரதன்மரணத்தைப் பொருளாக்குதல் சிறப்பன்று. துஞ்சினன் - மங்கலவழக்கு. இனி, வேகம் வெம்பழி யென்றும் பிரிக்கலாம்; உக்கிரமான கொடும்பழி: அல்லது, (உலகத்தில்) விரையப்பரவுந்தன்மையதான கொடும்பழி யென்க. இங்கே 'வெம்பழி' என்றது, சீதையையும் சடாயுவையும் இழந்ததை. ஆமிடம் - ஆமிடமென்ற வடமொழியின் திரிபு; நுகரத்தக்க வஸ்து வென்று பொருள். இனி, வடமொழித்திரிபாகவே கொண்டு மாமிசமென்று பொருள்கூறுதலும், ஆம் இடம் என்று தமிழ்மொழியாகப் பிரித்து உரைத்தலும் சிறவா. பி-ம்:--[1]ஏகுவனேகுதியிளவன்மீண்டென்றான்.

உரு. ஈன்றவ ரிடர்படவெம் பிதுன்புறச்
சான்றவர் [1]துயருறப் [2]பழிக்குஞ் [3]சார்வுமாய்த்
தோன்றலி [4]னென்னுயிர் துறந்த போதலா
லூன்றிய பெரும்பழி துடைக்க வொண்ணுமோ.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஈன்றவர் இடர் பட-பெற்றவர்கள் விசனமடையவும், எம்பி துன்பு உற - எனது தம்பிபாகிய நீ வருத்தமடையவும், சான்றவர் துயர் உற - பெரியவர் துன்பமடையவும், பழிக்கும் சார்வும் ஆய் - பழிகளுக்கும் ஆதாரமாய், தோன்றலின் - (யான்) தோன்றியுள்ளதனால், என் உயிர் துறந்த போது அலால் - எனது உயிரை விட்டபோ தல்லாமல் [யான் இறந்தா லன்றி], ஊன்றிய பெரு பழி - நிலைபெற்ற இப்பெரும்பழியை, துடைக்க ஒண்ணுமோ - நீக்குதல் கூடுமோ? [கூடாது என்றபடி]; (எ-று.)

ஈன்றவர்-தந்தையாகிய தசரதனும், தாயாகிய கௌசலை முதலியோரும். அவர்கட்கு இடர், புத்திரரைப்பிரிந்ததனாலானது. எம்பி - முன்னிலைப் படர்க்கை இடவழுவமைதி. துன்பு - வனவாசத்தாலானது. சான்றவர் -

சடாயு: உயர்வுப்பன்மை. ஒண்ணுமோ = ஒன்றுமோ: மரூஉ. பி-பீ:—[1]துயர் பட. [2]பழகுச். [3]சான்றுமாய். [4]இன். (ககசுஉ)

உசு. இல்லியல் புடையபீ ரளித்த வின்சொலாம்
வல்லியவ் வரக்கர்தம் மனையு ளாளெனச்
[1]சொல்லிநன் மலையெனச் சுமந்த [2]தூணியன்
வில்லினென் செல்வெனே மிதிலை வேந்தன்பால்.

(இ - ள்.) மிதிலை வேந்தன்பால் - மிதிலை நகரத்து அரசனுன சனக ராசனிடத்தில்,—'இல் இயல்பு உடைய - இல்லறவாழ்க்கைக்கு உரிய குணத்தையுடைய, நீர் அளித்த-உம்மால் (கன்னிகாதானஞ்செய்து) கொடுக் கப்பட்ட, இன் சொல் ஆம் வல்லி - இனிய சொற்களே யுடையளான பூங் கொடிபோன்ற சீதை, அ அரக்கர்தம் மனை உளாள் - அந்த இராக்கதர்க ளுடைய வீட்டி லிருக்கிறாள்,' என சொல்லி - என்று சொல்லிக்கொண்டு, நல் மலை என சுமந்த தூணியன் - நல்ல மலைபோலத் தாங்கப்பட்ட தூணி யையுடையேனுகியும், வில்லினென் - வில்லையுமுடையேனுகியும், செல் வெனே - போவேனே? (எ - று.)

மனையாளை மாற்றார்கையில் விட்டிட்டு அதற்கு மாறுசெய்யமாட்டா மலே வீரர்க்குரிய சின்னங்களோடும் அம்மனைவியின் பெற்றோர்முன் னிலையிற் செல்வதினும் இழிவுதருவது வேறொன்றில்லை யென்பது கருத்து. இல், வல்லி - ஆகுபெயர்கள். அவ்வரக்கரென்ற சுட்டு, பிரிவித்தியைக் காட் டும். 'மலையெனச்சுமந்த' என்ற அடைமொழியை, வில்லுக்கும் கூட்டுக. மிதியென்னும் அரசனுல் அமைக்கப்பட்ட நகரமாதல்பற்றி, 'மிதிலை' என்று பெயர். நீர் - உயர்வுப்பன்மை. பி-பீ:—[1]சொல்லினன். [2]தோண்மிசை, தூணி யென். (ககசுஙு)

உஎ. தூளயவிழ் கோதையைத் தாங்க [1]லாற்றல
னிளபுரிந் தளித்தன்மே லிவர்ந்த [2]காதல
னுளனென வுரைத்தலி னும்ப ராமென
விளைதனன் முதலின் விளித [3]னன்றென்றன்.

(இ - ள்.) தூளை அவிழ் கோதையை தாங்கல் ஆற்றலன் - (இதழ்கள்) மூறுக்குஅவிழப்பெற்ற பூமாலையை யணிந்த சீதையைக் காப்பாற்றத்திறமை யற்றவனுய், (பறிகொடுத்து), இளை புரிந்து அளித்தல்மேல் இவர்ந்த காத லன் - தம்பியினுல் விரும்பிக்காப்பாற்றப்படுதலில் ஆசைகொண்டவனுய் [மனைவியை யிழந்த சோகத்தினுல் தற்காத்துக் கொள்ளும்வலியும் அற்று], உளன் - இருக்கின்றான், என - என்று, உரைத்தலின் - (பிறராற் குறை வாகச்) சொல்லப்பெறுவதைவிட, உம்பரான் என விளைதல் - (இராமன்) மேலுலகத்திலுள்ளான் [இறந்தான்] என்றுசொல்லப்பெறுதல், நன்று நல் லது, ஆதலின் - ஆகையினுல், விளிதல் நன்று - அவ்வாறு யாவருஞ் சொல் லும்படிநான்) இறந்துவிடுவதே நல்லது என்றான் - என்றுங்கூறினன்.

இளை - இளையோனுக்குப் பண்பாகுபெயர். பி-ம்:—[1]ஆற்றலென். [2]காதலேன். [3]நன்றரோ. (ககசுச)

வேறு.

உஅ.—இதுமுதல் எட்டுக்கவிகள் - இலக்குமணன் மறுமொழி.

ஆண்டா னின்னன பன்னிட வையற் கிளவீர
[1]னீண்டியா னுன்பின் [2]னேகிய பின்னிவ் விடர்வந்து
மூண்டான் முன்னே யாருயி ரோடு முடியாதே
மீண்டே போதற் காமெனி னன்றென் [3]விளையென்றான்.

(இ - ள்.) ஆண்டான் இன்னன பன்னிட - (எம்மை) அடிமையாக வுடையவனான இராமபிரான் இவ்வார்த்தைகளைச் சொல்ல, ஐயற்கு இள வீரன் - அவ்விராமனுக்கு இளையவனாகிய லக்ஷ்மணன், 'ஈண்டு - இந்தக்காட்டில், யான் உன் பின் ஏகிய பின் - நான் உன்பின்னே வந்தபிறகு, இ இடர் வந்து மூண்டால் - இப்படிப்பட்ட பெருந்துன்பம் (உனக்கு) வந்துசேரிட்ட தென்றால், முன்னே - (உனக்கு) முன்னமே, முடியாதே - (நான்) இறந்திடா மலே, ஆர் உயிரோடு மீண்டே போதற்கு ஆம் எனின் - அருமையான உயிருடன் திரும்பிச் செல்வதற்குக் கூடுமாயின், என் வினை - எனது தொழில், நன்று - மிகஅழகிது,' என்றான் - என்று (பரிகசித்துக்) கூறினான்; (எ - று.)

உனக்குப் பணியாளனுக்குக் காட்டுக்கு உன்னுடன் வந்து, நீ ஆபத்தை அடைந்தபோது நான்மாத்திரம் உயிர்தப்பி மீள்வது, எனக்குத் தருமமன்று என்று இலக்குமணன் கூறினன். ஈண்டியான் - குற்றியலிகரம். 'நன்று' என்றது, பிறகுறிப்புவகையால், இகழ்ச்சி குறித்துநின்றது. ஆண்டான் - ஆட்சிகொண்டவன்: தலைவ னென்றபடி; எம்பெருமா னெனக்; இறந்தகால வினையாலணையும்பெயர். ஐயற்கு - இராமனே நோக்கி, என்றான் என்றலும் ஒன்று. பி-ம்:—[1]ஈண்டர். [2]ஏகியதன்பின். [3]விறல்.

இதுமுதல் ஒன்பதுகவிகள் - மாரீசன்வதைப்படலத்தின் களை - ஆங் கவிபோன்ற கலிநிலைத்துறைகள். (ககசுடு)

உகூ. என்ற [1]னென்னுப் பின்னு மிசைப்பா னிடர்தன்னை
வென்ற [2]ரன்றே வீரர்க ளாவார் [3]விரவாரின்
றன்றுப் தந்தை தம்மு னெனுந்தன் மையர்முன்னே
பொன்று னென்று னீங்குவ தன்றே புகழும்மா.

இதுமுதல் ஏழுகவிகள் ஒருதொடர்.

(இ - ள்.) என்றான் - என்றுகூறிய இலக்குமணன்,—'இடர்தன்னை வென்றார் அன்றே வீரர்கள் ஆவார் - துன்பத்தைச் சயித்தவர்களல்லவா வீரர்களாவார்,' என்று - என்றுசொல்லி, பின்னும் இசைப்பான் - மேலும் சொல்லுவான்:—விரவாரின் - சத்துருக்கள்போல,—தன் தாய் தந்தை தம் முன் எனும் தன்மையர் முன்னே பொன்றுன் என்றால் - தனது தாயும்

தகப்பனும் தமையனும் என்ற இத்தன்மையோர்க்கு (ஆபத்துதேர்ந்திடின் அவர்களுக்கு) முன்னே (தான்) இறந்தொழியா னென்று (பிறர்) சொல்லப் பெற்றால், புகழ் நீங்குவது அன்றே - புகழானது நீங்கிவிடுமல்லவோ? (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்.

தமையனானீ இறந்துபடுவதாயிருப்பின் தம்பியாகிய நான் உனக்கு முன்னே இறந்தொழிந்தா லன்றே எனக்குப் புகழ் நிலைநிற்கும் என்பது, பிந்தினவாக்கியத்தின் கருத்து. உண்மையுறவினர்க்கு அடையாளம், தமதுஉற் றார்க்குத் துன்பம்வந்தால் தாமும் கூடத் துன்பமுறுதலேயாம். தமையன் முதலியோர்க்குத் துன்பம் சேர்ந்தவிடத்துத் கண்ணெஞ்ஞெகி அழியாதிருந் தால் அவன் அவர்க்குப் பகைவன் போன்றவனே. இடரை வெல்லுதலா வது-எவ்வளவுதுன்பம் வந்தாலும் மனத்தளர்ச்சி யின்றி யிருத்தல். விரவார்-தன்னெஞ்சு கலவாதவர்; எனவே, பகைவர்: எதிர்மறைவினையாலணையும்பெயர். பி-ம்:—[1]என்னே. [2]அன்றே. [3]மேலாய. (ககசுசு)

கூ0. மானேயன்ன டன்னெஞ்சி தம்முன் [1]வரையாருங்
காளை [2]வைகக் கண்டுயில் [3]கொள்ளா தபல்காத்தற்
[4]காஞ னென்னே யென்றவர் முன்னே [5]யவரின்றிக்
தானே வந்தா [6]னென்றலின் வேறோர் தவறுண்டோ.

(இ - ள்.) மானே அன்னாள் தன்னெஞ்சி - மான்போன்ற பார்வையை யுடைய மனையாளோடு, தம்முன் - (தனது) தமையன், வரை ஆரும் காளை வைக-மலைகள் நிறைந்த காட்டில் வசிக்க, (அவன்தம்பி), கண் துயில் கொள் ளாது அயல் காத்தற்கு ஆனான் - தூங்காமல் பக்கத்திலிருந்து (அவர்களைக்) காப்பதற்கு ஏற்பட்டுள்ளான்; என்னை - (இத்தகைய முறைமை இருந்தபடி) என்! என்றவர் முன்னே - என்றுகூறிப்புகழ்ந்த நாட்டவர்முன்னே, அவர் இன்றி தானே வந்தான் என்றலின் - அத்தமையனும் மனைவியும் இல்லாமல் தான் மாத்திரம் (உயிருடன்திரும்பி) வந்துவிட்டான் என்ற இகழ்ந்து சொல்லப் பெறுதலினும், வேறு ஓர் தவறு உண்டோ - (எனக்கு) வேறொரு குற்ற முள்ளதோ? (எ - று.)

புகழற்றவாழ்க்கை இழுக்குப்பட்டதா மென்றவாறு. பி-ம்:—[1]தனி வைகும். [2]என்ன. [3]கொள்ளான்றனி. [4]ஆனென். [5]அதுவன்றி. [6]என்றபின்.

கூக. என்ற யுன்முன் [1]னேவிய யாவு [2]மிசையின்னல்
[3]பின்ற தெய்திப் பேரிசை யாளற் கழி[4]வுண்டோற்
பொன்ற மூன்னம் பொன்றுதி யென்ற ஞரைபொய்யா
நின்ற லன்றே நிற்பது வாய்மை நிலையம்மா.

(இ - ள்.) என் தாய் - எனதுதாயான சுமித்திரை,—(என்னை நோக்கி), 'உன் முன் ஏவிய யாவும் இசை - உனதுதமையனை இராமன் கட்டளை யிட்டவற்றையெல்லாம் செய்ய உடன்படுவாய்; (அவனுக்கு ஏதாவது துன்

பம் கோரிட்டால் நீயும்), இன்னல் பின்ருது எய்தி-அத்துன்பத்தைப் பின் வாங்காமல் (கூடஇருந்து) அனுபவித்து, பெரு இசையாளற்கு அழிவு உண்டு எல் - பெரும் புகழையுடைய அவ்விராமனுக்கு அழிவுவருமென்று (உனக்குத்) தோன்றினால், பொன்ரு முன்னம் பொன்றுதி-(அவன்) இறப்பதற்கு முன்னே (நீ) இறந்துவிடுவாய்,' என்ருள் - என்று கட்டளையிட்டுள்ளாள் உரை பொய்யா நின்ருல் அன்ரே-அவ்வார்த்தை தவருதபடி (தான்) நிலை நின்ரு லல்லவோ,வாய்மை நிலை நிற்பது-(எனது) சத்தியம் நிலை நிற்பதாகும்? (எ - று.)—அம்மா - அசை.

"பின்னும் பகர்வாள் மகனே யிவன்பின்செல் தம்பி, யென்னும்படியன் றடியாரினி லேவல் செய்தி, மன்னும் நகர்க்கே யிவன் வந்திடின் மா அதன் றேல், முன்னம் முடி யென்றனள் பால்முலைசோர நின்ருள்" என்று கீழ் (அயோத்தியா காண்டத்தில்) சுமித்திரை கூறிய வார்த்தையை இங்கு இலக்குமணன் அநுவதித்துக் கூறினன். இங்கே, சத்திய மென்றது, தாய்சொற்கு உடன்பட்டுவந்த தான் அச்சொற்கடவாது நிற்றலே. பி-ம்:—[1]எனை. [2]வரும். [3]பின்ருசெய்தி. [4]உண்டோ. (ககசுஅ)

கூஉ. எற்பெற் ருளும் யானு மெனைத்தோர் வகையாலு
நிற்[1]பெற் ருட்கு [2]நிற்கு நினைப்புப் பிழையாம
னற்பொற் ருளாய் நல்லவர் பேண நனிநிற்குஞ்
சொற்பெற் ருன்[3]மற் ருருயிர் [4]பேணித் துறவேமால்.

(இ - ள்.) நல்பொன் தோளாய்-அழகிய பொன்னொப்பாணங்களே யணிந்த தோள்களையுடையவனே! என் பெற்ருளும்-என்னைப்பெற்ற சுமித்திரையும், யானும்—, நின் பெற்ருட்கும் - உன்னைப்பெற்ற கௌசலைக்கும், நிற்கும் - உனக்கும், நினைப்பு பிழையாமல் - எண்ணம் மாறுபடாதபடி, எனைத்து ஓர் வகையாலும் - எவ்விதத்திலுலும், நல்லவர் பேண நனி நிற்கும் - நல்லோர் விரும்பும்படி நன்ருக நடந்துநிற்கிறே மென்கிற, சொல்-புகழை, பெற்ருல்-அடைவதாயிருந்தால், மற்று - (அதற்கு) மாருக, அரு உயிர் பேணி - (எங்களது) அருமையான உயிரைப் பாதுகாக்க விரும்பி, துறவேம் - (உங்களை) விட்டு விலகமாட்டோம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உங்களுக்கு மாறுபாடில்லாமல் நடக்கிறே மென்கிற புகழொன்றும் எங்களுக்கு முக்கியமே யன்றி உங்களினின்று தப்பி நீங்கி உயிர் பிழைத்தல் எங்களுக்கு முக்கிய மன்று என்பது கருத்து. மற்று - வினைமாற்றுப் பொருளது. பி-ம்:—[1]பெற்ருர்க்கும், பெற்ருற்கும். [2]நிற்பநினைப்பும் பிழையாமே. [3]அஃது. [4]தம்மைத்துறவாமால். (ககசுக)

கூக. ஓதுங் காலப் பல்பொருண் முற்றுற் ருருவாத
வேதஞ் சொல்லுந் தேவரும் வீயுங் கடைவீயாய்
மாதங் கந்தின் றுய்ந்திவ் வனத்தின் றலைவாழும்
பூதங் கொல்லப் பொன்றுதி [1]போலும் பொருளுண்டோ.

(இ - ள்.) ஓதும் கால் - சொல்லுமிடத்து, அ பல் பொருள் முற்று உற்று - அந்த உலகத்துப் பொருள்களெல்லாம் அழிவடைந்து, ஒருவாத வேதம் சொல்லும் தேவரும் வீயும் - ஒருகாலும் அழிந்து நீங்காத வேதம் புகழ்ந்து கூறுகிற (சாவாமருந்து உண்டதனால் அமரரான) தேவர்களும் இறந்தொழிகிற, கடை - கல்பாந்த காலத்திலும், வீயாய் - அழிவடையாத நீ, மாதங்கம் தின்று உய்ந்து இ வனத்தின்மேல் வாழும் - யானைமுதலிய பிராணிகளெல்லாம் தின்று உயிர்பிழைத்து இந்தவனத்தில் வசிக்கிற, பூதம் - பூதமானது, கொல்ல - கொன்றுவிட, பொன்றுதி போலும் - அழிவாய் போலும்: பொருள் உண்டோ - இதுபோன்ற விஷயமும் (உலகத்தில்) உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

என்றும் அழியாத ஒருவன் அழியுந்தன்மையதான இழிந்த ஒரு பூதத்தினால் உயிரிழப்பது உலகத்தில் நடவாத செயலென்றபடி. இராமனைக் கல்பாந்தத்திலும் அழியாதவனைக் குறித்தது, விஷ்ணுவின் அவதாரமென்பதை அறிவுறுத்துதற்காக. 'மாதங்கம்' என உருவில் பெரியதைக் கூறியது, மற்றைச் சிறிய உருவமுடைய பிராணிகளையும் உளப்படுத்த. போலும் - ஒப்பில் போலி. அ-உலகறிசுட்டு. வீயாய் - பெயர். மாதங்கம் - வடமொழித் தத்திதாந்தநாமம்; மதங்க முனிவரிடத்தினின்று உண்டானதென்று பொருள். பி-ம்:—[1]என்னும். (ககஎ0)

ரூச. கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணுர் கிளர்போரிற்
மோட்டார் கோதைச் சோர்குழ றன்னைத் துவளாமன்
மீட்டா [1]னென்னும் பேரிசை [2]கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டா [3]னென்றபின் மேலும் வசையுண்டோ.

(இ - ள்.) கேட்டார் கொள்ளார் - (இச்செயலைக்) கேட்டவர்கள் (சரியானதென்று) அங்கீகரிக்கமாட்டார்கள்; கண்டவர் பேணுர் - பார்த்தவர்கள் விரும்பமாட்டார்கள்; தோடு ஆர் கோதை சோர் குழல்தன்னை - இதழ்கள் நிறைந்த பூமாலையைச் சூடிய தாழ்ந்த கூந்தலையுடைய சீதையை, துவளாமல் - வருத்தவொட்டாமல், கிளர் போரின் மீட்டான் - மிக்குச்செய்கிற யுத்தத்தினுல் மீட்டுக்கொண்டான், என்னும் - என்று (யாவரும்) பாராட்டிக் கூறுகிற, பெரு இசை - பெரும்புகழை, கொள்ளான் - பெறுமலும், செரு வெல்ல மாட்டான் - போரில் வெல்ல முடியாமலும், மாண்டான் - இறந்தான், என்ற பின்-என்று சொல்லப் பெற்றபின்பு, மேலும் வசை உண்டோ - அதனினும் அதிகமான பழிவேரொன்று உளதோ? [இல்லையென்றபடி].

பழியை நீக்கிக்கொள்ளும்படி இறக்கக்கருதுகிறவனுக்கு, 'இறத்தலாற் பெரும்பழிவிளையுமாதலால், அவ்வாறுயிர்விடுதல் தக்கதன்று' என்றவாறு. சோர்குழல் - அன்மொழித்தொகை. கொள்ளான், மாட்டான்-முற்றெச்சங்கள். பி-ம்:—[1]ஏனும். [2]கொள்ளாய். [3]என்றலின். (ககஎக)

கூடு. தணிக்குந் [1]தன்மைத் தன்றெனி னன்றித் தகைவாளாற்
கணிக்குந் தன்மைத் தல்ல விடத்திற் கனல்பூதம்
பிணிக்குங் கையும் பெய்பில வாயும் பிழையாமற்
றுணிக்கும் வண்ணங் காணுதி துன்பந் துறவென்றான்.

(இ - ள்.) விடத்தின் கனல் பூதம் - விஷம் போலக் கொதிக்கிற இந்தப் பூதமானது, கணிக்கும் தன்மைத்து அல்ல - (ஒருபொருளாக நம்மால்) எண்ணத்தக்கதன்று; இ தகை வாளால் - இத்தச்சிறந்தவாளினால், தணிக்கும் தன்மைத்து அன்று எனின் அன்று - உயிர்நீக்குந்தன்மையுடையதன்று என்போமென்றாலோ அவ்வாறன்று [உயிர்நீக்குந்தன்மையுடையதே]; பிணிக்கும் கையும் - (நம்மை) வளைத்துக்கட்டுகிற (இதனது) கைகளையும், பெய் பிலம் வாயும் - (எல்லாப்பிராணிகளையும்) வாரியுட்கொள்ளுகிற பிலம்போன்ற (இதன்) வாயையும், பிழையாமல் - தவறாமல், துணிக்கும் வண்ணம்-(தான்) வெட்டித்தள்ளும் விதத்தை, காணுதி - பார்ப்பாயாக; துன்பம் தூற மனக் கவலையை ஒழிவாயாக, என்றான்—; (எ - று.)—பி-மி:—[1]தன்மை. (கஎஉ)

கூசு.—இராமலட்சுமணர் கவந்தனிடத்தில் ஒருவரினும் ஒருவர் முற்பட்டுச் செல்லுதல்.

என்ன முன்னை செல்லு மிளங்கோ னிறையோற்கு
முன்னை [1]செல்ல முன்னவ னன்ன னினும்[2]முந்தித்
தன்னை நில்லாத் தம்பி [3]தடுப்பான் பிறரில்லை
[4]யன்னை [5]கண்ட வும்பரும் வெய்துற் றழுதார்கள்.

(இ - ள்.) என்ன முன்னை சொல்லும் - என்று முன்னேகூறிய, இளங்கோ - இலக்குமணன், இறையோற்கு முன்னை செல்ல - (தான் இவ்வளவு சொல்லவும் கேளாமல் உயிர்விடுதற்கு முற்பட்டுச்சென்ற) இராமனுக்கு முன்னே தான் (உயிர்விடுதற்காக) விரைந்துபோக, முன்னவன் அன்னனினும் முந்த - தமையன் தம்பியினும் விரைந்துசெல்ல, தன் நேர் இல்லா தம்பி தடுப்பான் - தனக்கு ஒருவரும் ஒப்பாகப்பெறாத தம்பியான இலக்குமணன் இராமனை (ப் போகவொட்டாது) தடைசெய்பவனுனன்; பிறர் இல்லை - (இவ்வாறு தடுப்பதற்கு) வேறொருவரும் இல்லை; அன்னை - ஐயோ! கண்ட உம்பரும் - பார்த்த தேவர்களும், வெய்து உற்று அழுதார் - தவிப்படைந்து புலம்பினர்கள்; (எ - று.)

தமக்குப்பகையான அரக்கர்களை வேரறுப்பதற்காகவே திருவவதரித்த திருமாலான இராமபிரானுக்கு யாதுதிங்குநேரிடுகிறதோ வென்று அஞ்சித் தேவர்கள் வருந்துபவரானர். அன்னைவென்பது, கவியின் இரக்கம். இறையோன் - கடவுள்; இதற்கு - (யாவர்மனத்திலுந்) தங்குகிறவ னென்று பொருள்; இறுத்தல்-தங்குதல்; இறைமையுடையோன் என்றுமாம்: இறைமை-தலைமை. வெய்து - பெயர். ஆல் - அசை. பி-மி:—[1]செல்லும். [2]முந்தும். [3]தடுத்தான். [4]அந்தாள். [5]கண்டார். (கஎஏ)

வேறு.

கூஎ.—யாரென்று கவந்தன் கேட்க இருவருங் கோபங்கொள்ளுதல்.

இனைய ராகிய விருவரு முகத்திரு கண்போற்
கனையும் வார்கழல் வீரர்சென் றணுகலுங் கவந்தன்
வினையி னெய்திய வீரர்நீர் யாவர்கொ லென்ன
நினையு நெஞ்சின [1]நிமைத்திலர் நின்றனர் நின்றார்.

(இ - ள்.) இனையர் ஆகிய-இப்படிப்பட்டவர்களான, முகத்து இருகண் போல் கனையும் வார் கழல் வீரர் இருவரும்-முகத்திலுள்ள இரண்டுகண்கள் போலச் சிறந்தவர்களான ஒலிக்கின்ற நீண்ட வீரக்கழலை யணிந்த வீரர்கள் இருவரும், சென்று அணுகலும்-போய்க்கிட்டியவுடன்,—கவந்தன்—, வினையின் எய்திய வீரர் நீர் யாவர்கொல் என்ன - தீவினையால் (என்கையிற்) சிக்கிய வீரர்களாகிய நீங்கள் யாவர்? என்று வினவ, (அவ்விருவரும்), நினையும் நெஞ்சினர் - (அவன்கூறிய சொற்களைக்) கருதும்மனமுடையவர்களாகி, உருத்தனர் - கோபித்து, இமைத்திலர் நின்றார்-கண்ணிமையாது அவனெதிரில் விழித்துப்பார்த்துநின்றார்கள்; (எ - று.)

இறக்கத்துணிந்து சென்ற இராமலட்சுமணர்க்கு, 'வீரர்களாயிருந்தும் தீவினையால் என்கையில் அகப்பட்டுக்கொண்டீர்களே, நீங்கள் யாவர்?'என்று கவந்தன் வினவிய கொடுஞ்சொற்கள் மனத்திற் பொத்தவே, கோபமுண்டாயிற்று. இவ்விருவர்க்கும் 'முகத்திருகண்போல்' என்று உவமைகூறியது, "நோக்கல்தான் கண்ணிரண்டுமொன்றையே" என்றவாறு இருவரும் ஒரே கருத்துடைய ரென்பதை விளக்குதற்காகவுமாம். கண்ணிமையாது நின்றது, கோபக்குறி. பி-ம்: —[1]பதைக்கிலரிமைக்கிலர்.

இதுமுதல் ஐந்துகவிகள் - சடாயுவுயிர்நீத்தபடலத்தின் கருஅ-ஆங் கவி போன்ற கலிநிலைத்துறைகள். (ககஎச)

கூஅ.—இராமலட்சுமணர் கவந்தனது தோள்களை வெட்டித்தள்ளுதல்.

அழிந்து ளாரல ரிகழ்ந்தன ரென்னையென் றழன்ருன்
பொழிந்த கோபத்தன் புதுப்பொறி மயிர்ப்புறம் பொடிப்ப
விழுங்கு வேனென [1]வோங்கலும் விண்[2]ணுற வீர
ரெழுந்த தோள்களை வாள்களா லரிந்தன ரிட்டார்.

(இ - ள்.) (கவந்தன்), அழிந்துளார் அலர்-(என்னைக்கண்டபின்பு இவர்கள்) மனங்கலங்காதவர்களாய், என்னை இகழ்ந்தனர்-என்னை இகழ்ந்தார்கள், என்று அழன்ருன்-என்று கொதிப்புக்கொண்டு, பொழிந்த கோபத்தன்-மிக்கு வெளித்தோன்றுங் கோபமுடையவனாய், புது பொறி மயிர் புறம் பொடிப்ப - (அக்கோபத்தினாலுண்டாகிய) புதிய தீப்பொறிகள் ஒவ்வொருமயிர்க்காலிலும் தோன்ற, விழுங்குவேன் என ஓங்கலும் - (நான் இவர்களை) விழுங்கிவிடுவே னென்றுசொல்லிக் கிளம்பியவளவில்,—வீரர் - இராமலட்சுமணர்,

விண் உற எழுந்த தோள்களே - ஆகாயத்தை அளாவ உயர்ந்த (அவனது) தோள்களே, வாள்களால் அரிந்தனர் இட்டார் - (தமது) கைவாள்களினால் வெட்டித்தள்ளினார்கள்; (எ - று.)

தன்னைக்கண்டவுடன் அழித்தொழியாது இராமலட்சுமணர் கண்ணிமையாது உருத்துநின்றதையே கவந்தன், தன்னைத்தாக்கியிழந்ததாகக் கருதினான். 'புதுப்பொறி மயிர்ப்புறம் பொடிப்ப' என்றது, கோபத்தின்மிகுதியைக்கூறியபடி. இராமன் கவந்தனது வலக்கையையும், இலக்குமணன் இடக்கையையுந் துணித்தன ரென்பதை முதனூலால் அறிக. பி - ம்:—[1]வீங்கலும். [2]இற.

(கஎஎடு)

கூ—கைகள்அற்ற கவந்தனது தோற்றம்.

கைக ளற்றுவெங் குருதியா றெழுகிய கவந்தன்
மெய்யின் [2]மேலொடு கீழுறப் பெருகுதி [3]விரவுஞ்
சைய மாநெடுந் தாழ்[4]வரைத் தனிவரை தன்னை
டைய நீங்கிய பேரெழி லுவமைய னனைன்.

(இ - ள்.) கைகள் அற்று-கைகள் அறுபட்டதனால், வெம் குருதி ஆறு-வெவ்விய இரத்தவெள்ளம், மெய்யின்-உடம்பில், மேலொடு கீழ் உற-மேலும் கீழுமாகிப்பொருந்த, எழுகிய - பெருகப்பெற்ற, கவந்தன்—,—மேலொடு கீழுற',—பெருகுதி விரவும் - பெரியநதிகள் பெருகப்பெற்ற, சையம் மாநெடு தாழ் வரை தனி வரைதன்னொடு - கற்கள்நிறைந்த மிகப்பெரிய சாரலையுடைய ஒப்பற்ற [பெரிய] மலையை, ஐயம் நீங்கிய பேர் எழில் உவமையன் ஆனன் - சந்தேகமற்ற மிகத்தகுதியான உபமானமாக வுடையவனானன்.

கவந்தனது உடலுக்கு - மலையும், தோள்கள் அறுபட்டு உடலின்மேல் கீழ் என்ற இரண்டுபக்கங்களிலும் பெருகுகிற இரத்தவெள்ளத்துக்கு மலையின் கீழுமேலும் பெருகுகிற ஆற்றுவெள்ளமும் உவமை. தோளின் இரண்டு பக்கங்களிலும் பெருகுகிற இரத்தவெள்ளத்துக்கு மலையிலிருந்து கிழக்கு மேற்கு என்ற இருபக்கங்களிலும் பெருகுகிற ஆற்றுவெள்ளம் உவமையென்றலும் ஒன்று. சையம்மாவரை-பெரிய ஸஹ்யகிரியுமாம். பி - ம்:—[1]உகு. [2]மேற்கொடுகிழக்குற. [3]இயங்கும். [4]தடத்.

(கஎஎசு)

சுo.—அரக்கவுருவையொழித்துக் கவந்தர் நல்லுருப்பெற்று ஆகாயத்தில் விளங்குதல்.

ஆளு நாயக னங்கையிற் றீண்டிய வதனன்
மூளுஞ் சாபத்தின் [1]முற்றிய தீவினை முடித்தான்
றோளும் வாங்கிய தோமுடை யாக்கைபத் துறவா
நீள நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான்.

(இ - ள்.) ஆளும் நாயகன் அம் கையின் தீண்டிய அதனால் - (யாவரையும்) ஆட்கொள்ளுந் தலைவனான இராமபிரான் (தனது) அழகியகைகளால்

தொட்டதன்மையினுல், (கவந்தன்), மூளும் சாபத்தின் முற்றிய தீவினை முடித்தான் - (தனக்கு) நேர்ந்த சாபவடிவமாய் முதிர்ந்த பாவத்தை ஒழித்த வனுகி, தோளும் வாங்கிய தோம் உடை யாக்கையை துறவா-தோள்அறு பட்ட குற்றம் நிறைந்த (தனது) கோரரூபத்தை விட்டு, நீளம் நீங்கிய பறவையின் - கூட்டை விட்டுவெளிப்பட்ட பறவைபோல, விண் உற நிமிர்ந் தான் - ஆகாயத்திற் பொருந்திவிளங்கினுன்; (எ - று.)

கவந்தனது கோரரூபத்தினின்று வெளிப்பட்டு ஆகாயத்தில் தோன் றின நல்வடிவம், கூட்டைவிட்டு நீங்கிய பறவையை ஒத்தது; உவமையணி. தோம் - தோஷ மென்ற வடசொல்லின் சிதைவு. நீளம் - நீட மென்ற வட சொல் தமிழில் டகரளகரப்போலி பெற்றது. தோளும், உம்மை-இசைநிறை.

கவந்தனது சாபவரலாறு:—முன்பு தனுவென்பவனுக்கு மகனுப்ப பிறந்து விசுவாவசுவென்னும் பெயருடையவனுப் அழகுடன்விளங்கின இவன், கெடுமதியால் அரக்கவுருக்கொண்டு, வனத்தில்வசிக்கிற இருடி களுக்குத் தீங்கு செய்துவருகையில், ஒருநாள் ஸ்தூலசிரஸ்என்னும் முனிவ னது ஆகாரத்தைப் பிடுங்கி அவனுக்குக் கோபமுண்டாம்படி செய்தபோது, அவன் 'இத்தவுருவமே உனக்கு மாருமல் நிலைக்கக்கடவது' என்று சாபமிட, பின்பு இவன் அவரை வேண்டி அவரருளால் 'இராமன் இங்குவந்து உனது தோள்களைத் துணித்து இவ்வுடலைக் கொளுத்தும்போது இவ்வுருவம் நீங் கும்' என்று சாபவிடைதரப்பெற்றவனுப், பிறகு பிரமனை நோக்கி நெடுநாள் தவமியற்றித் தீர்க்காயுளை யடைந்து செருக்குற்று இந்திரனேடு போர் செய்ய, இந்திரன் சினந்து தனது வச்சிராயுதத்தினுல் இவ்வரக்கனது தலை யையும் துடைகளையும் உடலிலடக்கிவிட, இவன் 'பிரமனருளால் நீண்ட ஆயுளையடைந்த நான் உணவின்றி எப்படி வெகுகாலம் பிழைத்திருப்பேன்?' என்று இந்திரனைக்கேட்க, அவ்விந்திரன், யோசனைதூரம் நீண்டகைகளையும் வயிற்றில் கோரப்பற்களையுடைய வாயையும் இவனுக்குத்தந்து 'காட்டில் கிடைக்கிற பிராணிகளைத் திரட்டிச்சேர்த்து விழுங்குவாய்' என்று கட்டளை யிட்டு 'இராமலட்சுமணர் இங்குவந்து உனதுகைகளை வெட்டித்தள்ளும் போது இக்கோரரூபம் ஒழிந்து சுவர்க்கமடைவாய்' என்று சொல்லிப் போயினனென்பதாம். பி-யீ:—[1]முந்திய. (கஎஎ)

சுக.—கவந்தன் ஆகாயத்தில் நின்று இராமனைத் துதிக்கிறுறல்.

விண்ணி னின்றவன் விரிஞ்சனே முதலினர் யார்க்கும்
கண்ணி னின்றவ னிவனெனக் கருத்துற [1]வுணர்ந்தா
[2]னெண்ணி யன்னவன் குணங்களே வாய்திறந் திசைத்தான்
புண்ணி யம்பயக் கின்றுழி யரியதெப் பொருளே.

(இ - ள்.) விண்ணில் நின்றவன் - ஆகாயத்தில் (திவ்விய சொரூபத் தோடு விளங்கி) நின்ற கவந்தன்,—இவன் விரிஞ்சனே முதலினர் யார்க்கும் கண்ணில் நின்றவன் என - இவ்விராமனே பிரமன்முதலிய தேவர்கள் யாவர்

க்கும் (தியானத்தில்) பிரதியக்ஷமாயிருப்பவன்' என்று, கருத்து உற உணர்ந்தான் - மனத்திற் பொருந்த அறிந்து, அன்னவன் குணங்களே எண்ணி வாய்திறந்து இசைத்தான் - அவ்விராமனது குணங்களே மனத்தினுலாராய்ந்து வாயாலே பெயத்துக்கூறித் துதித்தான்; புண்ணியம் பயக்கின்ற உழி - (ஒருவனுக்கு) நல்வினைப்பயன் வந்து அநுகூலித்தபோது, அரியது எ பொருள் - எத்தப்பொருள்தான் பெற முடியாதது? [எல்லாப் பொருளுங் கைகூடும் என்றபடி]; (எ - று.) —கவந்தன் செய்த தோத்திரத்தை, மேல் ஒன்பது கவிகளிற் கூறுகிறார்.

பெரும்பாவங்களைச் செய்துகொண்டிருந்த கவந்தனும் நல்வடிவம்பெற்றுப் பரம்பொருளாகிய இராமனைத் துதிக்கும் பேறு பெற்ரு னென்ற தெப்புப்பொருளே 'புண்ணியம் பயக்கின்றுழி யிய தெப்பொருளே' என்ற பொதுப்பொருள்கொண்டு விளக்கியதனுல், வேற்றுப்பொருள்வைப்பணி. புண்ணியமாவது - பகவானுடைய அநுக்கிரகம். பயக்கின்றுழி-விகாரம். பி-ம்:— [1]உணர்வான். [2]எண்ணில். (கஉஎ)

வேறு.

சுஉ.-இதுமுதல் ஒன்பதுகவிகள்-ஒருதொடர்:கவந்தன்செய்த ஸ்தோத்திரம்.

ஈன்றவனே வெப்பொருளு மெல்லிநீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் தனிப்பயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி [1]யிருவினையேன் சாபத் [2]திடர்துடைத்தாய்.

(இ - ள்.) தோன்றி - (இவ்வு எனக்குதிரில்) வந்து, இரு வினையேன் - மிக்கபாவத்தையுடைய எனது, சாபத்து இடர்-சாபத்தினுல்சேர்ந்த துன்பத்தை, துடைத்தாய் - நீக்கியருளிய நீ,—எ பொருளும் ஈன்றவனே - (உலகத்திலுள்ள) எல்லாப்பொருள்களையும் படைத்தவனே? எல்லே நீர் நல் அறத்தின் சான்றவனே - அழிவில்லாத நல்லதருமத்துக்குச் சாக்ஷியானவனே? தேவர் தவத்தின் தனி பயனே - தேவர்கள்முன்புசெய்துள்ள தவத்தினது ஒப்பற்ற பயனின் சொரூபியானவனே? மூன்று கவடு ய முளைத்து எழுந்த மூலமோ - (பிரமன் விஷ்ணு சிவன் என்ற) மூன்றுபிரிவாகத் தோன்றிக் கிளர்ந்த பரம்பொருளோ? (எ - று.)

இச்செய்யுளிற்கூறிய தன்மைகளெயெல்லாம் உடையவன் இராமனே யென்பதைத் தெரிவித்தற்கு, பலபடியாக விகற்பித்துக்கூறினன். 'நல்லறத்தின்சான்றவன்' என்றதற்கு - உலகத்தில் புண்ணியஞ்செய்கிற உயிர்களுக்கு அந்நல்வினைகளே உள்ளபடி உணர்ந்து அவற்றிற்குஏற்ற பயன்களைத் தவறுமல் ஊட்டுபவ னென்பது கருத்து; இதனுல், தீவினைசெய்யும் உயிர்கட்கும் அவற்றையுணர்ந்து அவற்றின்பயனை இவனேஊட்டுவிப்பா னென்பது போதரும். இவற்ருல், 'அபூர்வமே பயனளிக்கும்' என்னுங் கோட்பாடு மறுக்கப்பட்டது. திருமால் அரக்கர்களைச் சங்காரிக்கத் திருவவதரித்ததனுல், இராமனை 'தேவர் தவத்தின் தனிப்பயன்' என்ருன். ஆதிமூலமான விஷ்

ணுவே படைக்கும் பொருட்டுப் பிரமனுகவும், காக்கும்பொருட்டுத் தானே தன்மையனுகவும், அழிக்கும்பொருட்டுச் சிவனுகவும் இருந்து அவ்வத் தொழில்களே நடத்துகிறுனென்பது, மூன்றுமடியின் கருத்து; "மூவராகிய மூர்த்தியை முதல்மூவர்க்கும் முதல்வன்தன்னே," "ஆக்குமா றயனும் முதலாக்கியவுலகை, காக்குமாறு செங்கண்ணிறைகருணேயங்கடலாம், வீக்குமாறு அரனும் அவைவீந்தகால் மீளப், பூக்குமாமுதல்" என்பன காண்க. கவடு - கிளேப்பிரிவு. மூலம் - அடி. பி ம்:—[1]அரு. [2]துயர்.

இதுமுதற் பதினெரு கவிகள் - காய்ச்சீரும் மாச்சீரும் விளச்சீரும்மாய் விரவிவந்த நாற்சீரடி நான்கு கொண்ட தரவுத் தோச்சகத்தகலிப்பாக்கள்.

சுரு. மூலமேம யில்லா முதல்வனே நீ [1]யெடுத்த
கோலமே யார்க்குந் தெரிவரிய [2]கொள்கைத்தா
லாலமோ வாலி னடையோ வடைக்கிடந்த
பாலனே [3]வாதிப் பரனே பகராய்பே.

(இ - ள்.) மூலமே இல்லா முதல்வனே - (தனக்குமுந்திய) காரணப் பொருள் வேருென்றுமில்லாத முழுமுதற்கடவுளே! நீ எடுத்த கோலம் யார்க்கும் தெரிவு அரிய கொள்கைத்து - நீ கொள்ளும் வடிவம் எவராலும் அறியமுடியாத தன்மையையுடையது; (எங்ஙனமெனின்),—(உன்வடிவம்), ஆலமோ - (பிரளயகாலத்தில் தோன்றும்) ஆலமரமோ? ஆலின் அடையோ-அந்த ஆலமரத்தின் இலேயோ? அடை கிடந்த பாலனே-(அப்பொழுது) அந்த ஆலிலேயிற் பள்ளிகொண்டருளுகிற குழந்தைவடிவான கடவுளோ? ஆதி பரனே - (எல்லாவற்றிற்கும்) மூலமான பரமபதநாதனே? பகராய் - சொல்வாயாக; (எ - று.)—ஆல் - அசை.

யாவும் உண்ணிடத்தினின்று தோன்றினவே யன்றி நீ ஒன்றினின்றுந் தோன்றுதவனென்பது, 'மூலமேயில்லா முதல்வனே' என்பதன் கருத்து. எல்லாம் அழியும் பிரளயகாலத்தில் கடல் பொங்கி உலகங்களேமூடிக்கொள்ள எங்கும் ஜலார்ணவமான அப்பிரளயப் பெருங்கடலிலே ஓர்ஆலமரம் தோன்ற அம்மரத்தின் ஓர் இலேயின்மீது எம்பெருமான் ஒருவனே சராசரங்களேயெல்லாம் ஊறுபடாமல் தனது திருவயிற்றில் அடக்கி வைத்துக்கொண்டு ஒருசிறு குழந்தை வடிவத்துடன் படுத்து யோகநித்திரை செய்தருளுகின்றனனென்பது, நாற்கோணகை. ஈற்றடியில் கோலமே, ஏ-தெரிநிலே. 'நீ முயலுங் கோலமே யார்க்குந் தெரிவரிய கொள்கைத்து' என்று கூறிய கருத்தைப் பின்னிரண்டடிகளேக்கொண்டு சமர்த்திக்கத்தனுல், தொடர்நிலைச்செய்யுட் குறியணி; வடநூலார் காவியலிங்க மென்பர். ஆலம், அம்-சாரியை. பி-ம்:—[1]முயலும். [2]கொள்கையதால், கொள்கையதாம். [3]வேலைப் பரப்போ. (ககஅ0)

சுச. காண்பார்க்குங் காணப் படுபொருட்குங் கண்ணுகிப்
பூண்பாய்போ னிற்றியால் யாதொன்றும் [1]பூணுதாய்
மாண்பா லுலகை வயிற்றிலுளித்து வாய்குதிபா
லாண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ.

(இ- ள்.) காண்பார்க்கும் - (உலகத்தில்) காண்கிறவர்களுக்கும், காணப் படு பொருட்கும் - காணப்படுகிற பொருள்களுக்கும், கண் ஆகி - ஆதாரமா யிருந்து, பூண்பாய் போல் நிற்றி-(எல்லாப்பொருள்களினிடத்தும்) பற்றுள் ளவன்போலத் தோன்றுகிறாய்; (ஆயினும்), யாது ஒன்றும் பூணுதாய்-(அவற் றினின்று) ஈன்மைதீமைகளைச் சிறிதும் பெறுகின்றாயில்லை; மாண்பால் - மிக்குள்ள தெய்வத்திறமையால், உலகை - இவ்வுலகங்களை, வயிறு ஒளித்து- (பிரளயத்தில் அழிந்திடாதபடி உன்) வயிற்றில் அடக்கிவைத்திருந்து [காப் பாற்றி], வாங்குதி-(அப்பிரளயம் நீங்கினவுடனே அவற்றை மீளவும்)வெளிப் படுத்துகிறாய்; (நீ), ஆண்பாலோ—? பெண்பாலோ—? அப்பாலோ - (அந்த இரண்டு மல்லாத) அலியோ? எப்பாலோ - வேறு எத்தப்பகுப்பிற் சேர்ந் தவனோ? (எ - று.)

எம்பெருமான், ஸகல சராசரங்களினிடத்திலும் அந்தர்யாமியாய்ப் பொ ருந்தியிருந்தும், அவற்றின் சம்பந்தமான இருவினைகள் தொடரப் பெறுதவ னென்பது, முன்னிரண்டடியின் கருத்து; "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" என்றதும் இக்கருத்துப்பற்றியே; "யாவையும் யவ ருந்தானு யவரவர் சமயந் தோறுந், தோய்விலன்" என்ற திருவாய்மொழி யையுங் காண்க. இவன் புருஷோத்தம னாகையால், இவனுக்குப் பெண்தன் மையும் அலித்தன்மையும் இல்லாமைபோலவே உலகத்திற் காணப்படும் ஆண்தன்மையும் இல்லை யென்பது, ஈற்றடியின் கருத்து. இப்படி இவன் இம்மூன்றுபாலிலுங் கலவாதவ னென்பதை "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன்," "தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளும், ஆனவர்தாம் ஆண்பெண்ணலியலர்காண்" என்ற பெரியார் பாசுரங்களாலும் அறியலாம். எம்பெருமானோடு ஒவ்வாமைக்குப் பெண் அலிகளோடு ஆண்க ளோடு வாசியில்லை யென்பது இதன் தாற்பரியம்: புருஷோத்தம னென்ற படி. இம்மூன்றுபாலிலுங் கலவாமலும், இன்ன தென்று சொல்லத்துணி யாமலும் இருத்தலால், 'எப்பாலோ' என்றார். பி - ம்:—[1]பூணுதே. (ககஅக)

சரு. ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
[1]யாதியுறு பொருளுக் கப்பாலுண் டாயினுநீ
[2]சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத [3]முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார்.

(இ - ள்.) ஆதி பிரமனும் நீ - (முத்தொழில்களுள்) முதற்றொழிலாகிய படைப்புத்தொழிற்கு உரிய பிரமனும் நீயே; ஆதி பரமனும் நீ-(அப்பிரமனுக் கும்) மூலமான பரம்பொருளும் [திருமாலும்] நீயே; ஆதி உறு பொருளுக்கு அப்பால் உண்டாயினும் நீ - ஆதியென்று கூறப்படுவதற்குமேலாகத் துரியம் துரியாதீதம் என்று ஒன்று உண்டானாலும் அதுவும் நீயே; சொல்லுகின்ற வேதம்-(யாவர் தன்மையையுங்)கூறுகிற வேதமானது, சோதி சுடர் பிழம்பு நீ என்று முறைசெய்தால் - பரஞ்சோதி நீயே யென்று முறையிட்டால்

[முறையிடுதலால் என்றபடி], வேறு உள்ளார்-(தாமே பரம்பொரு ளென்று கூறித் திரியும்) மற்றைக்கடவுளர்கள், வெள்காரோ - (அவ்வாறு சொல்லுதற்கு) வெட்கங்கொள்ளார்களோ? [கொள்ளவேண்டுமேயன்றே?] (எ - று.)

உலகத்தில் ஒளிவடிவமாயுள்ளவையும், அதனால் 'ஜ்யோதிஸ்' என்று சொல்லப்படுபவையு மான ஆத்மாக்க ளெல்லாவற்றுக்குந் தலைவனுகிய பரமாத்மா இவ னுகையால், இவனே 'பரஞ்சோதி' என்று வேதங் கூறும். 'சோதிச்சுடர்ப்பிழம்பு'—பரஞ்சோதி. 'உண்டாயினும்' என்ற உம்மை, அப்பாலொன்றில்லை யென்ற கருத்தை யுட்கொண்டது. சிலபிரதியில் இது அடுத்த பாடலுக்குப்பின். பி-ம்: —[1]ஆதியெனும், ஓதியுறு. [2]சோதிநீ சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று. [3]உரை. (ககஅ)

சசு. எண்டிசையுந் திண்[1]சுவரா வேழேழ் நிலை[7]வகுத்த
வண்டப் பெருங்கோயிற் கெல்லா [3]மழகுடைய
மண்டலங்கண் மூன்றின் [4]மேலென்று மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா.

(இ - ள்.) எண் திசையும் திண் சுவர் ஆ-எட்டுத்திக்குக்களின் எல்லையும் வலிய சுவராக, ஏழ் ஏழ் நிலை வகுத்த-பதினுன்கு நிலைகளாக வகுத்துச் செய்யப்பட்ட, அண்டம் பெரு கோயிற்கு எல்லாம்-அண்டமாகிய பெரிய கோயில் முழுதுக்கும், அழகு உடைய - விளக்கத்தைச் செய்கிற, மண்டலங்கள் மூன்றின்மேல் - (சந்திரமண்டலம் சூரியமண்டலம் நக்ஷத்திரமண்டலம் என்னும்) மூன்று மண்டலங்களுக்கும் மேலே யுள்ள பரமபதத்தில், என்றும் மலராத புண்டரிகம் மொட்டின் பொகுட்டே - எப்பொழுதும் மலராத தாமரையரும்பினுடைய உள்ளேயுள்ள கொட்டையே,புரை-(உனக்குஎப்பொழுதும்)இருப்பிடமாவது; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்.

அண்டம் - பதினுன்கு உலகங்களும் சேர்ந்த (உலக) வருண்டை; அவ்வண்டத்தைக் கோயிலாகவும், திக்குக்களின் எல்லையைச் சுவராகவும், ஒன்றன்மேலொன்றுக அமைந்துள்ள கீழேழுலகம் மேலேழுலகம் என்ற பதினுன்கு உலகங்களையும் அக்கோயிலுக்கு நிலைகளாகவும், மூன்று மண்டலங்களையும் அதற்கு விளக்குக்களாகவும் உருவகப்படுத்தினர். கோயில்-சிறந்த வீடு. ஏழேழ் - உம்மைத்தொகை. எல்லாவுலகங்களுக்கும் மேலுள்ள பரமபதத்தில் திருமாமணிமண்டபத்தில் ஆதிசேஷன்மீதுள்ள தருமாதிபீடத்தின்மேல் பன்னிரண்டு இதழ்களையுடைய தாமரைமலரின் கர்ணிகை [கொட்டை]யில் எம்பெருமான் எழுந்தருளியுள்ளா னென்பது கருத்து; இவ்விஷயத்தை, அர்த்தபஞ்சகம் முதலிய நூல்களிற் பரக்கக்காணலாம். 'என்று மலராத புண்டரிகமொட்டு' என்றது, உலகத்துத்தாமரைமலர்போல ஒரு பொழுதுமலர்தலும் ஒருபொழுது குவிதலுமில்லாமல் எப்பொழுதும் ஒரு தன்மைத்தான செவ்வியுடையது என்பதை விளக்குதற்கு. இனி,என்று மலராத

புண்டரிகம் - சூரியனுல் மலராத தாமரை யெனினுமாம்; என்று - சூரியன்: பெயர்ச்சொல். மூன்றும் அடிக்கு, (சோதிடசாஸ்திரத்திற்கூறியபடி) சந்திரமண்டலம் புதமண்டலம் சுக்கிரமண்டலம் என்ற மூன்றுமண்டலங்களுக்கும் மேலுள்ளதான சூரியமண்டலத்தின் ஒளியால் மலருந்தன்மைய தல்லாத என்றலும் ஒன்று.

எல்லாவுலகங்களுக்கும் மேலுள்ள பரமபதத்தில் எம்பெருமான் வீற்றிருக்கின்ற தாமரையின் கீழுள்ள அழகிய தர்மாதிபீடம், ஆதிசேஷனின், திருமாமணிமண்டபம் என்ற மூன்றையும்'அழகுடையமண்டலங்கள் மூன்று' என்று குறித்ததாக கொள்ளலுமாம்; அண்டப்பெருங்கோயில்க ளெல்லாவற்றிற்கும் (மேல்) அழகுடைய மண்டலங்கள் மூன்று என்க.

இனி, அண்டப்பெருங்கோயிற் கெல்லாம் புரை யென இயைத்து, அண்டங்களாகிய பெரிய கோயில்களுக்கெல்லாம் (உனது காபித்) தாமரை மலரின் உள்ளிடமே உற்பத்திக்தான மென்றுமாம்; "அத்திசைமுகனேனு, உந்திக்கமலம் விரிந்தால் விரியும் உலகமெலாம், முந்திக்குவியி லுடனே குவியும் இம்மூதண்டமே" என்ற திருவரங்கத்துமாலையைக் காண்க; "புறக்குன்று புல்லிதழ் முக்கீர் பிரசம் பொருவில் செம்பொன், னிறக்குன்று கன்னிகை யெண்கிரி தாது நிலமதனுட், பிறக்குந்துகள் முதுமாகணம் காளம் பிரமன் வண்டு, சிறக்குந்திகிரியரன்சேச ருந்திச் செழுமலர்க்கே" என்ற திருவரங்கத்துமாலைச்செய்யுளினுல், எம்பெருமானது திருநாபித்தாமரை மலரின் தன்மை நன்கு விளங்கும்; ஒவ்வொருநாளும் பகலில்மலர்ந்து இரவிற்குவியும் இயல்பினதான தாமரைமலர்போலன்றி, திருவுந்திக்தாமரை ஒரு காலவிசேஷத்திலே மலர்ந்து ஒரு காலவிசேஷத்திலே குவியுந்தன்மைய தாதலால், 'என்றுமலராத புண்டரிகமலர்' எனப்பட்ட தென்க; 'அழகுடைய மண்டலங்கள் மூன்றின்மேல் புண்டரிகமலர்' என்றது - அழகுள்ளனவான சூரியமண்டலம் சந்திரமண்டலம் சுக்கிரமண்டலம் என்னும் இம்மூன்றினும் மிக அழகுபெற்று விளங்குவ தென்றவாறு. பி-ம்:—[1]சுவராய். [2]எடுத்த. [3]உடைத்தாம். [4]மேனின்று. [5]பொருட்டோ. (ககஅஉ)

சுள. மண்பா லமரர் வரம்பாருங் காணுத
வெண்பா னுபர்ந்த வெரிமேயாங்கு நல்வேள்வி
யுண்பாய்நீ யூட்டுவாய் [1]நீ யிரண்டு மொக்கின்ற
பண்பா ரறிவார் [2]பகராய் பரமேட்டி.

(இ - ள்.) பரமேட்டி - (எல்லாவுலகங்களினும்) மேலான பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனே! வரம்பு ஆரும் காணுத எண்பால்-எல்லைகாணமுடியாத எட்டுத்திக்குக்களிலு முள்ள, மண்பால் அமரர் - பூதேவர்களான பிராமணர்களாற் செய்யப்பட்ட,உயர்ந்த எரி ஓங்கு நல் வேள்வி-மிக்கெரிகிற ஓமாக்கினியையுடைய சிறந்த நல்ல யாகங்களில், உண்பாய் - (அவிர்ப்பாகத்தை) ஏற்றுக்கொள்பவனும், நீ ...;ஊட்டுவாய்-(அந்தஅவிர்ப்பாகத்தை) உண்பிக்கிற

வனும் [யஜமானனும்], நீ—; இரண்டும் ஒக்கின்ற பண்பு-(உன்னிடத்து) இவ் விரண்டுதன்மையும் ஒத்திருப்பதை, ஆர் அறிவார்-எவர்தாம் அறியவல்லவர்? பகராய் - சொல்வாயாக; (எ - று.)

பிராமணர் இவ்வுலகத்துத் தேவர்போன்று மேன்மைபெற்று விளங்குதலால், 'மண்பா லமரர்' எனப்பட்டனர்: இது, 'பூசுரர்' என்ற பெயரின் பொருள் கொண்டது. 'அந்தணர் செய்த வேள்வி' என்றது, அரசர்முதலியோர் யாகஞ் செய்தற்கு உரியவராயினும் அந்தணர்களேக்கொண்டே செய்யவேண்டுவது அவசிய மாதலால். எம்பெருமானே, யாகங்களேச்செய்யும் யஜமானனையும் அவிர்ப்பாகத்தைப்பெறுந் தேவர்களையும் வடிவங்கொண்டு நடத்துகின்றனென்பது, மூன்றுமடியின் கருத்து. பரமேஷ்டீ என்பதற்கு—பரமே- (எல்லாவுலகத்தினுஞ்) சிறந்ததாகிய பரமபதத்தில், ஸ்தீ - இருப்பவன் என்பது பொருள். பி-மீ:—[1]என்றிரண்டும். [2]பகர்வாய்பரம்பரனே. இச்செய்யுள், சிலபிரதிகளில் "மாயப்பிறவி" (டுo) என்ற செய்யுளின்பின் உள்ளது.

சுஅ. நிற்கு நெடுநீத்த நீரின் முளேத்தெழுந்த
மொக்குளே போல [1]முளேத்தெழுந்த வண்டங்க
ளொக்க வுயர்ந்துனுளே தோன்றி யொளிக்கின்ற
பக்க மறிதற் கெளிதோ [2]பரம்பரனே.

(இ - ள்.) பரம்பரனே - மிகச்சிறந்தவனே! நிற்கும் நெடு நீத்தம் நீரில்-நிலேபெற்ற பெரிய வெள்ளமாகிய நீரில் [மகார்ணவத்தில்], முளேத்து எழுந்த - தோன்றிய, மொக்குளே போல - நீர்க்குமிழிகள் போல, முளேத்து எழுந்த - தோன்றி வெளிப்பட்ட, அண்டங்கள் - உலகவருண்டைகள், ஒக்க உயர்ந்து உ(ன்)னுளே தோன்றி-(உன்னுடைய சங்கல்பத்தால்) ஒரேதன்மையனவாகச்சிறந்து உன்னிடத்தினின்று (முதலில்) வெளிப்பட்டு, ஒளிக்கின்ற-(இறுதியில் மகாப்பிரளயத்தில் அவை மீண்டும் உன்னிடத்திலே) அடங்கிவிடுகிற, பக்கம் - தன்மை, அறிதற்கு எளிதோ-(ஒருவரால்) அறிதற்குச் சுலபமானதோ? (எ - று.)

எம்பெருமான் முதலில் மகார்ணவத்தை யுண்டாக்கி அதில் ஒரேதன்மையனவான பலகோடி அண்டங்களேத் தனது சங்கல்பத்தாற் படைக்கின்றனனென்றும், பிரளயகாலத்தில் அவற்றைப் பழம்படியே தன்னுள் அடக்கிக் கொள்ளுகின்றனனென்றும் நூற்கொள்கை. "வாரித்தலமுங் குலபூதரங்களும் வானு முள்ளே, பாரித்துவைத்த விவ்வண்டங்களியாவும் படைக்க முன்னுள், வேரிப்பசுந்தண்டுழா யரங்கேசர் விபூதியிலே, மூரிப்புனலிற் குமிழிகள் போல முளேத்தனவே," "சின்னூல் பலபல வாயா லிழைத்துச் சிலம்பிபின்னும், அந்நூலருந்திவிடுவதுபோல வரங்க ரண்டம், பன்னூறு கோடி படைத் தவையாவும் பழம்படியே, மன்னூழிதன்னில் விழுங்குவர் போத மனமகிழ்ந்தே" என்ற திருவரங்கத்துமாலேச்செய்யுள்கள் இங்கு உணர்த்தக்கன. பரம்பரன் என்பதற்கு - (எல்லாத்தேவர்களினும்) மேற்பட்டவர்

களான பிரமன் சிவன் இவர்களுக்கும் மேற்பட்டவன் என்பது பொருள்.
பி-ம்:—[1]முரணிற்ற. [2]பரமேட்டி. (ககஅரு)

சகூ. நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைக
ளுன்செய்கை யன்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
வென்[1]செய்தேன் முன்ன [2]மறஞ்செய்கை யெய்தினர்
பின்[3]செல்வ தில்லாப் பெருஞ்செல்வ நீ[4]தந்தாய்.

(இ - ள்.) நீள் மறைகள் - அநந்தமான வேதங்கள், நின் செய்கை கண்டு நினைந்தனவோ - உனது செய்கைகளைக் கண்டு நினைத்துச்செய்யப்பட்டனவோ? (அன்றி), உன் செய்கை அன்னவை தான் சொன்ன ஒழுக்கினவோ - உனது செய்கைகள்தாம் அவ்வேதங்கள் கூறியபடியே உள்ளனவோ? நீ - அத்தன்மையுடையநீ, மறம் செய்கை எய்தினர் பின் செல்வது இல்லா பெரு செல்வம் - தீவினைசெய்தவர்கள் பின்பு அடையமுடியாத பெருஞ் சிறப்பை, தந்தாய் - (எனக்குக்) கொடுத்தாய்; முன்னம் என் செய்தேன் - (நீ இவ்வாறு எனக்குக் கொடுக்கும்படி) முற்பிறப்பில் நான் என்னநல்வினை செய்துள்ளேன்? [ஒன்றுமில்லையே யென்றபடி]; (எ - று.)

நான் ஓர்உபாயமும் செய்யாதிருக்கையிலும் நீ நிர்ஹேதுகமாக எனக்கு நற்கதியளித்தாய் என்றுகூறிப் புகழ்ந்தானென்பது, பின்னிரண்டடியின் கருத்து. 'மறஞ்செய்கையெய்தினர் பின்செல்வதில்லாப் பெருஞ்செல்வம்' என்றது - இங்கே, சுவர்க்கவின்பம். சருவேசுவரனுடைய செயல்களும் வேதத்தின் பொருளும் ஒத்துள்ளபடியால், இவனதுசெயல்களைநோக்கியே வேதங்கள் செய்யப்பட்டனவோ? அன்றி, வேதங்களிற்கூறியபடி இவன் செய்கிறானே? என்று விகற்பிக்க இடமுண்டாயிற்று. பின்னிரண்டடிகள் முன்னிரண்டடிகளாகவும், முன்னிரண்டடிகள் பின்னிரண்டடிகளாகவும் பின்வரும் பாடபேதத்தோடு காணப்படுகின்றன: பி-ம்:—[1]செய்தனை. [2]இச் செய்கையெய்தினர். [3]செய்வது. [4]பெற்றாய். இச்செய்யுள் சிலபிரதிகளில் சகூ - ஆஞ்செய்யுளின்பின் உள்ளது. (ககஅசு)

ரூ0. மாயப் பிறவி மயனீக்கி [1]மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
[2]பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த [3]வெம்பெருமா
ணையொத்த தென்ன நலனிழைத்த தெனென்றான்.

(இ - ள்.) பேய் ஒத்தேன் - பேய்போன்றனனது, மாயம் பிறவி மயல்-வஞ்சனைக்கு இடமான (சாபத்தால்நேர்ந்த) இராக்கதப் பிறப்பினை யுண்டாகிய குற்றங்களை, நீக்கி - ஒழித்து, மாசு இலா காயத்தை நல்கி - குற்றமற்ற திவ்யசரீரத்தை (எனக்கு)க் கொடுத்து, துயரின் கரை ஏற்றி - (சாபத்தால் நேர்ந்த) துன்பமாகிய கடலினின்று (என்னை) உய்வித்து, பேதை பிணக்கு அறுத்த - அறியாமையாற்கொண்ட (எனது) பகைமையை யொழித்தருளிய, எம்பெருமான் - எமதுதலைவனே! நாய் ஒத்தேன் நான் - நாய்போல் மிக

இழிந்தவனை நான், என்ன நலன் இழைத்தேன்-(இவ்வாறு நீ கிர்ஹேதுக மாகக் கருணைசெய்தற்கு) என்னநல்லுபாயம்செய்தேன்! என்றான்—;(எ-று.)

நான் யாதொருநல்லுபாயமுஞ்செய்யாமல் உன்னிடத்துப்பகைமை யையே பாராட்டவும்,நீ அதனை மனத்திற்கொள்ளாது,எனதுசாபப்பிறப்பை யொழித்து, திவ்வியசரீரத்தைத்தந்து, எனதுதுன்பங்களைநீக்கியருளியது என்ன கிர்ஹேதுகருபையோ! என்று, முற்செய்யுளிற்கூறியதையே மறு படி விவரித்துக்கூறினான். பி - மீ:—[1]மாசில்லா. [2]பேயொத்த. [3]எம்பெருமா, எம்பெருமாஅன். (ககஅஎ)

நுக.—ஆகாயத்தில் திவ்யசரீரத்தோடுநின்ற கவந்தனை இராமன் காணுதல்.

என்றுங் கினியம்பி யின்றறியக் கூறுவெனை
லொன்றுது தேவ ருறுதிக் கெனவுன்னத்
தன்றுபைக் கண்ணுற்ற கன்றனைய தன்மையனைப்
நின்றுனைக் கண்டா னெறிநின்றுர் நேர்நின்றுன்.

(இ - ள்.) என்று ஆங்கு இனிது இயம்பி - (கவந்தன்) இவ்வாறு அப் போது இனிமையான துதிமொழிகளைக் கூறி, 'இன்று-இப்பொழுது, அறிய கூறுவென் எல் - (இனிஉடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி)வெளிப்படை யாகச் சொல்வேனுனல், தேவர் உறுதிக்கு ஒன்றுது - தேவர்களது மன வுறுதிக்குப் பொருந்தாது';என உன்னு-என்று நினைத்து, தன் தாயை கண் ணுற்ற கன்று அயனைதன்மையன் ஆய் நின்றுனை-தனதுதாயைப்பார்த்து மகிழ்ச்சிகொண்ட கன்றுபோன்ற தன்மையுடையவனும் (இராமனைப்பார்த்து மகிழ்ந்து) நின்ற கவந்தனை, நெறிநின்றுர் நேர்நின்றுன்-நல்லொழுக்கநெறி யில்நடப்பவர்க்குப் பிரதியட்சமாகுந்தன்மையனை இராமபிரான், கண் டான்—; (எ - று.)

சீதையைக் கண்டுபிடிக்கும் வழி, அவளைமீட்கும்உபாயம் இவற்றை இராமலக்குமணர்களுக்கு வெளிப்படையாக நான் சொல்லிவிட்டால் உடனே இவர்கள் சென்று எளியவழியில் அவளை மீட்டிடுதல் கூடும்; அவ்வாறு மீட்டு விட்டால், தேவர்கள்கருத்திற்கொண்டுள்ள ராக்ஷஸசங்காரமும், தாங்கள் அடிமை பூணுதலும் இல்லாமற்போய்விடு மென்றுநினைத்துக் கவந்தன் முழு துங்கூறாமல் நிறிதேசொல்வானைக் நின்றுன் என்பதாம். 'நெறிநின்றுர்நேர் நின்றுன்' என்றது, தத்துவஞானிகளுக்கே புலனுதபவ னென்றவாறு.

நுஉ.—இராமன் இலக்குமணனுக்குக் கவந்தனைச் சுட்டிக் காட்ட, அவன் கவந்தனை நீ யாரென்று வினவல்.

பாரா [1]யிளையோனை [2]பட்டவனை வேறையோர்
பேராளன் [3]ரூனை வொளியாங்கு பெற்றியனுய்
[4]நேராத காயத்தி னிற்கின்ற னீயிவனை
யாரா யென [5]வவனை யார்கொலோ நீயென்றுன்.

(இ - ள்.) 'இளையோனே - தம்பியே! ஒளி ஓங்கும் பெற்றியன் ஆய் - ஒளிவிளங்குகிற தன்மையமைந்தவனுய், கோரத-எளிதிற்கிடைக்காத, காயத்தின்-சரீரத்தோடு, நிற்கின்ருன் - நிற்கின்றவன், பட்டவனே - (நம்மால்) இறந்துபட்டவனே? வேறே ஓர் பேர்ஆளன் தானே - வேறேஒரு பெருமை பெற்றவனே? நீ—, இவனை—, பாராய் ஆராய் - பார்த்து ஆராய்வாயாக,' என - என்று (இராமன்) கூற,—(அவ்விலக்குமணனும்), அவனை-(ஆகாயத்தில்நிற்கின்ற) அன்னனே, நீ ஆர்கொல்ஓ - நீ யாவன்?' என்ருன் - என்று விளவினன்; (எ - று.)—ஏ, தான், கொல், ஓ - அசைகள். பி - மீ:—[1]இளையவனே. [2]பட்டவிவன். [3]தானுய். [4]கோரகாயத்தின்மிசை. [5]அவனும். ()

வே று.

நூ.—கவந்தன் தன்வரலாறுகூறுதல்.

சந்தப்[1]பூ ணலங்கல் வீர தனுவெனு நாமத் தேனோர்
கந்தர்ப்பன் சாபத் தாலிக் கடைப்பபி பிறவி கண்டேன்
வந்துற்றீர் மலர்க்கை நீண்ட முன்னுடை [2]வடிவம் பெற்றேற
னெந்தைக்கு மெந்தை [3]நீரே யிசைப்பது கேண்மி னென்ருன்.

(இ - ள்.) சந்தம் பூண் அலங்கல் வீர-அழகிய ஆபரணங்களேயும் மாலையையும் அணிந்த வீரனே! (நான்), தனு எனும் நாமத்தேன் ஓர் கந்தர்ப்பன்-தனுவென்றபெயரையுடைய ஒரு கந்தர்வனேவன்; சாபத்தால் இ கடைப்படு பிறவி கண்டேன் - (ஸ்தூலசிரஸ் என்னும் முனிவனது) சாபத்தினுல் இந்த இழிந்தஇராக்கதப்பிறப்பை யடைந்தேன்; வந்து உற்றீர் மலர் கை நீண்ட முன் உடை வடிவம் பெற்றேறன் - இங்குவந்தடைந்த உங்களுடைய தாமரை மலர்போன்ற கைகள் நீண்டினமாத்திரத்தில் எனது முன்னை பவடிவத்தை அடைந்தேன்; எந்தைக்கும் எந்தை நீர் - எனதுதந்தைக்குத்தந்தைபோன்ற வர்களாகிய நீங்கள், இசைப்பது - (நான்) சொல்வதை, கேண்மின்-கேளுங்கள், என்ருன் - என்று (கவந்தன்) கூறினன்; (எ - று.)—ஏ - அசை.

தனது துன்பம் தீர்தற்கு இவர்கள் காரணமாயிருந்ததனுல், இவர்களே 'எந்தைக்குமெந்தை நீர்' என்று புகழ்ந்தான். கந்தர்ப்பன் - வடமொழித் திரிபு. உற்றீர் - பெயர். பி-மீ:—[1]போர். [2]வடிவு. [3]நீர்யான்.

இதுமுதல் இக்காண்டம்முடியுமளவும் பதினேந்துகவிகள் - மாரீசன் வதைப்படலத்தின் கடை - ஆங்கவி போன்ற **அறுசீராசிரிய விருத்தங்கள்.** ()

நூ.—இரண்டுகவிகள் - கவந்தன் இராமலட்சுமணரைநோக்கி 'உங்களுக்குத்துணை வேண்டும்' என்றலைத் தெரிவிக்கும்.

கணையுளாஞ் சிலைபி னீரைக் காக்குந [1]ரில்லையேனு
மிணையிலா டன்னை காடற் [2]கேயன செய்தற் [3]கேற்கும்
புணையிலா தவற்கு வேலை போக்கரி தன்ன தேபோற்
றுணையிலா தவற்கு [4]மின்னு பகைப்புலந் தொலைத்து நீக்கல்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கணை உலாம் சிலையி னீரை காக்குநர் இல்லையெனும்-அம்புகளை மிகுதியாகத்தொடுத்தற்கு உரிய வில்லை யேந்திய உங்களைப் பாதுகாக்க வல்லதுணைவர் (எவரும்) இல்லையே யானாலும்,—துணை இலாள் தன்னை - ஒப்பில்லாத சீதையை, நாடற்கு - தேடுதற்கு, எயன - பொருந்துந்தொழில் களை, செய்தற்கு—, எற்கும் - (துணைவரால்) இயலும்; புணை இலாதவற்கு வேலைபோக்கு அரிது-தெப்பமில்லாதவனுக்குக் கடலைக்கடந்து போதல் அரி யது: அன்னதே போல் - அதுபோலவே, துணை இலாதவற்கும் பகை புலம் தொலைத்து நீக்கல் இன்னு-துணைபில்லாத ஒருவனுக்கும் சத்துருபக்ஷத்தைத் தொலைத்தொழிப்பது முடியாது; (எ - று.)

ஆதலால், பகையைத் தனியே துணைபின்றியொழிக்கவல்ல நீங்களும் துணை தேடிக்கொள்ளுதல் அவசியம் என்பது கருத்து. [3]ஏற்றும் என்பது பாடமாயின், அது புணைக்கு அடைமொழியாம். 'செய்தற்கு' என்பதற்கு முடிக்குஞ்சொல் வருவிக்கவேண்டும். பி-ம்:—[1]இன்மை. [2]எயின. [4]ஒண்ணு, ஒன்னர், இன்னல். (ககஙக)

ருடு. பழிப்பறு நிலைமை யாண்மை பகர்வதென் பதும பீடத்
துழிப்பெருந் தகைமை சான்ற வந்தண னுயிர்த்த வெல்லா
மழிப்பதற் கொருவ னான வண்ணலு மறிதி ரன்றே
யொழிப்பருந் [1]திறலபூத கணத்தொடு முறையு முண்மை.

(இ - ள்.) பழிப்பு அறு நிலைமை ஆண்மை பகர்வது என் - குற்றமற்ற தன்மையையுடைய (சிவபிரானது) ஆண்தன்மையைப்பற்றிச் சொல்லவேண் டுவது யாது? [மிகப்பிரசித்தமான தன்றே?] பதுமம் பீடத்து உழி பெரு தகை மை சான்ற அந்தணன் உயிர்த்த எல்லாம் அழிப்பதற்கு ஒருவன் ஆனஅண்ண லும் - தாமரைமலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற மிக்கபெருமைபொருந் திய பிரமதேவன் படைத்த எல்லாப்பொருள்களையும் அழிக்க ஏற்பட்ட ஒப் பற்ற அந்தச்சிவபிரானும், ஒழிப்பு அரு திறல பூத கணத்தொடும் உறை யும் உண்மை-நீக்கமுடியாத வலிமையையுடைய பூதகணங்களைத் துணைக் கொண்டு அவற்றுடன்கூடி வசிக்குந் தன்மையை, அறிதிர் அன்றே-(நீங்கள்) அறிவீர்க ளன்றே? (எ - று.)

எத்துணைவல்லார்க்குந் துணைவர் இன்றியமையாதவ ரென்பதற்கு, பேராற்றலையுடைய சிவபிரான் பூதகணங்களைத் துணைக்கொண்டுள்ளமை யைத் திருஷ்டாந்த மெடுத்துக்காட்டினன். திறல - குறிப்புப்பெயரெச்சம். பி-ம்:—[1]திறற்பல். (ககஙஉ)

ருசு.—கவந்தன், சீதையைத்தேட நல்லுபாயஞ்சொல்லுதல்.

ஆயது செய்கை யென்ப தறத்தறை நெறியி னெண்ணித்
தீயவர்ச் சேர்க்கி லாது [1]செவ்வியோர்ச் சேர்த்துச் செய்த
ரூயினு முயிர்க்கு நல்குஞ் சுவரியைத் தலைப்பட் டன்னு
ளோயதோர் [2]நெறியி னெய்தி [3]யிரலையின் குன்ற மேறி.

இதுவும், வருங் கவியும் - குளகம்.

(இ - ள்.) ஆயது செய்கை என்பது - செய்யவேண்டியதான தொழில் இப்படிப்பட்ட தென்பதை, அறம் துறை நெறியின் எண்ணி-தருமமார்க்கத் தின்முறைப்படி ஆலோசித்து, தீயவர் சேர்க்கிலாது-கொடியவரைத் துணை யாகக்கொள்ளாமல், செவ்வியோர் சேர்த்து-நல்லோரைத் துணைக்கொண்டு, செய்தல்-செய்க; (அப்படிசெய்தற்காக), உயிர்க்கு தாயினும் நல்கும் சவரியை தலைப்பட்டு-எல்லாவுயிர்களுக்கும் தாயைப்பார்க்கிலுங் கருணைசெய்கிற சபரி யென்பாளைச் சந்தித்து, அன்னள் ஏயது ஓர் நெறியின் எய்தி-அவள் ஏவுவ தாகிய ஒருவழியிலே சென்று, இரலையின் குன்றம் ஏறி - ருசியமூகபருவதத் தின்மேல் ஏறி,—(எ - று.)—இப்பாட்டில் 'ஏறி' என்பது, ''தழுவி அமர்ந்து நாடுதல் விழுமிது'' என அடுத்த கவியோடு முடியும்.

ருஸ்யமூகம் என்னும் வடமொழிப்பெயர்க்கு-கலைமான்கள் ஒலியாமல் வாழப்பெறும் மலை யென்று பொருள்; அப்பெயர்க்கு ஏற்பகமாக அதில் 'ருஸ் யம்' என்னும் முதல்மொழியின் பொருளைமாத்திரம் எடுத்துக்கொண்டு, அம் மலையை 'இரலையின்குன்றம்' என்று குறித்தார்: இது, நாமைகதேசே நாமக் கிரகணத்தின் பாற்படும்: இரலை-கலைமான்; இன் - சாரியை. ஏயது - ஏவி யது. செய்தல்-'தல்'விகுதிபெற்ற வியங்கோள். ஆயது செய்கை என்பது - செய்யவேண்டிய செய்கையாவது,.....சேர்த்துச்செய்தலாம் என்றும் உரை க்கலாம்; செய்தல் - தொழிற்பெயர். சபரியின் வரலாறு, மேல் விளங்கும். பி-மீ:—[1]செவ்வியோர்ச் சேர்க்குஞ்செய்கை, செவ்வியோர்செய்கை தேர்ந்து. [2]நெறியையெய்தி. [3]இரலையங். (கஉகூ.)

ருஎ. கதிரவன் சிறுவ னனை [1]கனகவா ணிறத்தி னுனை
யெதிரெதிர் தழுவி நட்பி னினிதமர்ந் தவனி னீண்ட
வெதிர்பொருந் தோளி னுளை [2]நாடுதல் விழுமி தென்ரு
னதிர்கழல் வீரர் தாமு மன்னதே [3]யமைவ தானுர்.

(இ - ள்.) கதிரவன் சிறுவன் ஆன கனகம் வாள் நிறத்தினனை-சூரிய னது மகனை பொன்போன்ற ஒளிபொருந்திய வடிவமுடைய சுக்கிரீவனை, எதிர் எதிர் தழுவி-(ஒருவருக்குஒருவர்) அளவளாவித் தழுவிக்கொண்டு, நட் பின் இனிது அமர்ந்து-(அவனுடன்) இனிமையாகச் சினேகஞ்செய்து, அவ னின்-அவனுடையதுணையால், நீண்ட வெதிர் பொரு தோளினுளை நாடுதல்- நீண்ட மூங்கில் போன்ற (பருத்த) தோள்களையுடைய சீதையைத் தேடுதல், விழுமிது - சிறந்தது, என்ரூன் - என்று (கவந்தன்) கூறினன்; அதிர் கழல் வீரர்தாமும் - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த வீரர்களான இராமலக்ஷ்மணர் களும், அன்னதே அமைவது ஆனுர் - அப்படிச்செய்வதையே உடன்பட்டவ ராஞர்கள்; (எ - று.)

சாபத்தாற் பெண்வடிவம்பெற்ற 'ருக்ஷராஜஸ்' என்னும் வாநரராஜனது கழுத்தின் அழகைக் கண்டு காமுற்ற சூரியனுக்கு அப்பெண்குரங்கினிடம்

பிறந்தவன் சுக்கிரீவ னென்று உணர்க. பி-ம்:—[1]கண்கவர். [2]நாடுதிர் விரை வின். [3]அமையுமென்றூர். (ககஙச)

ருஅ.—கவந்தன் செல்ல, இராமலட்சுமணர் அசுரவில் மதங்காச்சிரமம் அடைதல்.

[1]ஆனவன் றொழுது வாழ்த்தி [2]யந்தரத் தெழுந்து போனான்
[3]மானவக் குமரர் தாமு மத்திசை வழிக்கொண் டேகிக்
கானமு மலைபு நீங்கிக் கங்குல்வந் [4]திறுத்த காலை
யானையி [5]னிரட்டை யென்ன மதங்கன திருக்கை சேர்ந்தார்.

(இ - ள்.) ஆனவன் - அவ்வாறான கவந்தன், தொழுது வாழ்த்தி-(இரா மலக்ஷ்மணர்களை) வணங்கி வாழ்த்தி, அந்தரத்து எழுந்து போனான்-ஆகாயத் திற் கிளம்பிப் போய்விட்டான்; மானவர் குமரர் தாமும் - மநுவம்சத்திற்பிற ந்த குமாரர்களான இராமலக்ஷ்மணர்களும், அ திசை வழி கொண்டு ஏகி-(கவந் தன் கூறிய) அத்திக்கின் வழியைப் பற்றிச் சென்று, கானமும் மலையும் நீங்கி-காடுகளையும் மலைகளையுங் கடந்து, கங்குல் வந்து இறுத்த காலை-இரவு வந்த பொழுது, யானையின் இரட்டை என்ன-இரண்டு ஆண்யானைகள் போன்று, மதங்கனது இருக்கை சேர்ந்தார்-மதங்கனென்னும்முனிவனது ஆச்சிரமத்தை அடைந்தார்கள்; (எ - று.)

மாநவர் - வைவசுவதமநுவின் வமிசத்திற் பிறந்தவர்; வடமொழித் தத்தி தாந்தநாமம். மானம் அ குமரர் என்றும் பிரித்துப் பொருள்கூறலாம். இரட் டை - இரண்டு என்னும் மென்றொடர் வன்றொடராய் ஐகாரச்சாரியையை பெற்றது. இருக்கை - இருக்குமிடம்: தொழிலாகுபெயர். வழிக்கொண்டு - பிரயாணப்பட்டு. மதங்காச்சிரமம், பம்பாநதிக்கு மேற்குக்கரைப்பக்கத்தி லுள்ள தென்று முதலூல் கூறும். பி-ம்:—[1]ஆனபின். [3]அந்தரமெழுந்து, அந்தரத்தவனும். [3]மானவன். [4]இறுக்குங்காலை. [5]இரட்டியான. (ககஙரு)

கவந்தப்படலம் முற்றிற்று.

பதினேராவது
சவரி பிறப்பு நீங்கு படலம்.

சவரியென்பவள் தான்வசிக்கும் மதங்காச்சிரமத்துக்கு இராமலக்ஷ்மணர் எழுந்தருளுஞ் செய்தியை முன்னமேஅறிந்து எதிர்நோக்கி அவ்வனத்தி லுள்ள நல்ல கனிகளைச் சேர்த்துவைத்துக்கொண்டிருந்து அவர்கள்அவ்வாச் சிரமத்துக்குளெழுந்தருளியவுடன் அப்பழங்களை அவர்கட்குக் கொடுத்து உப சரித்து இராமபிரானருளால் தனதுபிறப்பையொழித்து நல்லகதியையடைந் ததைக் கூறும் பாகம். சபரீ - வடசொல்: இவள், மதங்கரது சிஷ்யர்களுக்கு உபசாரஞ்செய்துகொண்டு அவ்வாச்சிரமத்திலேயே வசித்துவந்த துறவறம் பூண்ட ஓர் தவப்பெண். கூத்திரியஜாதிஸ்த்ரீயினிடம் வைசியஜாதிபுருஷ

னுக்குப் பிறந்த பிரதிலோமஜாதியார் சபரரெனப்படுவர்; இச்சாதியார் தொழில் - தேன்கொணர்ந்துவிற்றல். சபரனென்பதன் பெண்பால், சபரீ. பிறப்புநீங்குதல் - மீண்டும்பிறவாதபடி முத்திப்பேரின்பத்தையடைதல். இக்காரியம், காரணமான வீடடைதலைக் குறித்தலால், காரணத்தைக்காரியத்தாற்கூறின உபசாரவழக்கு; பிறப்பு நீங்குதற்கு வீடடைதல் காரணம்.

க.—மதங்காச்சிரம வர்ணனை.

கண்ணிய தருதற் கொத்த கற்பக தருவு மென்ன
[1]நண்ணிய நல்குந் [2]தெய்வக் கடிநறுஞ் சோலை [3]ஞால
மெண்ணிய வின்ப மன்றித் துன்பங்க ளில்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கமே [4]போன்ற தன்றே.

(இ - ள்.) கண்ணிய தருதற்கு ஒத்த கற்பக தருவும் என்ன - நினைத்தவைகளைத் தரவல்ல கற்பகவிருட்சம் என்றுசொல்லும்படி, நண்ணிய மனத்திஞல்விரும்பினவற்றை, நல்கும் - கொடுக்கிற, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, கடி நறு சோலை - விளக்கமுள்ள வாசனைவீசுகின்ற (மதங்காச்சிரமத்தின்) சோலையானது,—ஞாலம் எண்ணிய இன்பம் அன்றி - உலகத்தார் மனத்தால்விரும்பிக்கருதுகின்ற இன்பமே யல்லாமல், துன்பங்கள் இல்லை ஆன - துன்பங்களே யில்லாத, புண்ணியம் புரிந்தோர் வைகும் துறக்கமே - நல்வினைசெய்தவர்கள் சென்று சேர்கிற சுவர்க்கலோகத்தையே, போன்றது - ஒத்திருந்தது; (எ - று.)

கற்பகம்போன்ற மரங்களே யுடைமையாலும், இன்பத்தையளித்தலாலும், அச்சோலைக்குச் சுவர்க்கம் உவமையாம். வேண்டியவர்வேண்டியவற்றைக் கொடுக்கிற கல்பகவிருட்சம் ஒன்றையே யுடைய சுவர்க்கத்தினும் மேலாக இச்சோலையில் அத்தன்மைய பல மரங்கள் உள்ளன வென்று வேற்றுமையணி தொனிக்கக் கூறினர். சோலை-மரங்களடர்ந்தஇடம். ஞாலமெண்ணிய துறக்க மெனினுமாம்; சுவர்க்கத்துக்கு 'ஞாலமெண்ணிய' என்ற அடைமொழி கொடுத்தல், கர்மபூமியாகிய மண்ணுலகத்திற் பிறந்தவரே புண்ணியஞ்செய்து சுவர்க்கஞ்சேர்தற்கு உரியவ ராதலா லென்க. கண்ணிய - பெயர். உண்ணிய - செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம். தருவும், உம் - இசைகிறை. ஞாலம் - இடவாகுபெயர். அன்றே - ஈற்றசை.

பி - ம்:—[1]உண்ணிய. [2]சில்லைமுறு. [3]சாரல். [4]போலும். (கஉகூசு)

உ.— இராமன் சவரிக்கு நீடு தேமமிவிசாரித்தல்.

[1]அன்னதா மிருக்கை நண்ணி யாண்டுநின் றுளவில் காலந்
தன்னிய னினைந்து நோற்குஞ் சவரியைத் தலைப்பட் டன்னட்
கின்னுரை யருளித் தீதின் றிருந்தனை போலு மென்றன்
[2]முன்னிலற் கிதுவென் றெண்ண லாவதோர் மூல மில்லான்.

(இ - ள்.) இவற்கு முன் இது என்று எண்ணல் ஆவது ஓர் மூலம் இல்லான் - இவனுக்குமுன் இப்பொருள் உள்ளதென்று எண்ணக்கூடிய ஒரு

முதற்பொருள் [காரணம்] இல்லாத [எல்லாவற்றிக்கும் முதல்வனான] இராம பிரான்,—அன்னது ஆம் இருக்கை நண்ணி - அப்படிப்பட்டதான மதங்காச் சிரமத்தை யடைந்து, ஆண்டுநின்று அளவு இல் காலம் தன்னையே நினைந்து நோற்கும் சவரியை தலைப்பட்டு - அவ்வாச்சிரமத்திலேயே யிருந்துகொண்டு பலகாலமாக (ப் பரம்பொருளான) தன்னையே தியானித்துத் தவஞ்செய்கிற சவரியென்பவளைக் கிட்டி, அன்னட்கு இன் உரை அருளி-அவளுக்கு இனிய வசனங்களைச் சொல்லி, 'தீது இன்று இருந்தனைபோலும்-'நீ யாதொருதுன் பமுமின்றி இருக்கின்றனையா?' என்றான் - என்று கூடமம் விசாரித்தான்.

காரணமென்பது காரியத்துக்கு நியதமாய் முன்நிற்ப தாதலால், அவ் வியற்கை விளங்க, மூலம் என்பதற்கு முன்னிவற் கிதுவென் றெண்ணலா வது' என அடைமொழி கொடுத்தார்; இதனால், இராமனே எல்லாவற்றுக் கும் மூலமான பரம்பொரு ளென்பது விளங்கும். 'தீதின்று' என்பதில், இன்று என்பது - இன்றி யென்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சத்தின் திரிபு; இதனை முற்றெச்சமாகக்கொள்வது நேரென்று சிலர்கொள்கை. 'இருந்தனைபோலும்' என்ற இதில், போலும் என்னும் அசைச்சொல்-ஒசை வேறுபாட்டால் வினைப்பொருளை உணர்த்திநின்றது. பி-மீ:—[1]அன்னவ னிருக்கைநீங்கி. [2]முன்னவற்கிது. (ககஙஎ)

கூ.—சவரி இராமனுக்கு விருந்துசெய்து உபசரித்தல்.

ஆண்டவ ளன்பி னைத்தி யழுதிழி யருவிக் கண்ணாண்
மாண்டதென் மாயப் பாசம் வந்தது வரம்பில் காலம்
பூண்டமா தவத்தின் செல்வம் போயது பிறவி [1]யென்பாள்
வேண்டிய [2]கொணர்ந்து நல்கி விருந்துசெய் திருந்த வேலை.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்) ஆண்டு - அப்பொழுது, அவள் - அந்தச்சவரி, அன்பின் ஏத்தி - பக்தியோடு புகழ்ந்து, அழுது இழி அருவி கண்ணாள் - (ஆனந்த மிகுதியால்) அழுது பெருகுகிற நீரருவிகள் பொருந்திய கண்களையுடைய வளாய், 'என் மாயம் பாசம் மாண்டது - (உன்னைத்தரிசிக்கப்பெற்றதனால்) எனது மாயமான உலகப்பற்று நீங்கியது; வரம்பு இல் காலம் பூண்ட மா தவத்தின் செல்வம் வந்தது - அளவற்றபலகாலமாக யான்மேற்கொண்டு செய்த பெருந்தவத்தின் பயன் சித்தித்தது: பிறவி போயது - பிறப்பு ஒழிந் தது,' என்பாள் - என்றுசொல்லி, வேண்டிய கொணர்ந்து நல்கி விருந்து செய்து இருந்த வேலை - (நல்லவையென்று தான்) விரும்பிச் சேர்த்து வைத்த பழம்முதலியவற்றைக் கொணர்ந்து விருந்துசெய்திருந்த சமயத்தில், —(எ - று.)—இது, ஐந்தாம்பாட்டிலுள்ள "என்ன" என்ற எச்சத்தைக் கொண்டு முடியும்.

இங்குக் கண்ணீர், ஆனந்தத்தின்மிகுதியா லானது. மாண்டது, போய தது-தெளிவுபற்றிய காலவழுவமைதி. இராமன் தன்னிடம் வரும்போது அவனுக்குத்தரவேண்டு மென்று இவள் பல கனிகளை ருசிபார்த்து இனிய

வற்றைத் தேர்ந்து வைத்திருந்தமை தோன்ற, 'வேண்டிய' என்றார். [2]கொணர்ந்துநல்க என்ற பாடத்துக்கு - வேண்டியவற்றைச் சவரி கொணர்ந்து நல்க இராமன் அவ்விருந்துணவை அமுதுசெய்திருந்த பொழுதிலென்க. பி-மீ:--[1]என்றாள். [2]தவத்திலுளுமேவிடங்கொண்டுபுக்காள். (ககஙஅ)

ச.—பிரமன்முதலியோர் தன்னைத் தத்தம்உலகிற்கு வரும்படி அழைத்தன ரென்று சவரி கூறுதல்.

ஈசனுங் கமலத் தோனு மிமையவர் யாரு மெந்தை
வாசவன் முனு மீண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி
யாசறு தவத்திற் கெல்லை யணுகிய நிராமற் காய
பூசனை விரும்பி யெம்பாற் போதுதி யென்று போனார்.

(இ - ள்.) எந்தை - எமதுதலைவனே! ஈசனும் - சிவபிரானும், கமலத்தோனும்-(திருமாலின் உந்திக்) கமலத்தில் தோன்றிய பிரமதேவனும், இமையவர் யாரும் - தேவர்கள் யாவரும், வாசவன்தானும்-இந்திரனும், ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி - இங்கு வந்து மகிழ்ச்சியுடன் (என்னைப்) பார்த்து, 'ஆசு அறு தவத்திற்கு எல்லை அணுகியது-(உனது) குற்றமற்ற தவத்துக்குச் சித்திபெறுங்காலம் நெருங்கிவிட்டது: இராமற்கு ஆய பூசனை விரும்பி - (சிறிதுகாலம் இங்கேயிருந்து இங்குவழுத்தருளப்போகிற) இராமபிரானுக்குத் தக்க உபசாரங்களை விரும்பிச்செய்து, (பிறகு), எம்பால் போதுதி - எமது உலகத்துக்கு வருவாயாக,' என்று - என்றுகூறி, போனர் - சென்றார்கள்; (எ - று.)

இவள் பெருந்தவஞ்செய்தவளாகையால், இவள்வருவது தமக்குப்பெருமை யென்று எண்ணி, பிரமன் முதலியோர் இவளைத் தம் உலகத்துக்கு அழைப்பவராயின ரென்க. இச்செய்தி முதனூலிற்கூறப்படவில்லை; அதில் மதங்கசிஷ்யர்கள் இவளைநோக்கி'லக்ஷ்மணனோடுகூடிய இராமபிரான் வருவர்; அவருக்கு அதிதிபூசைசெய்து பிறகு நல்லுலகமடைவாய்'என்றுகூறினதாகச் சொல்லியிருக்கிறது. (ககஙஙு)

ரு.—சவரி இராமனைப் புகழ, இராமன் அவளைநோக்கி முகமன்கூறுதல்.

இருந்தன னெந்தை நீயீண் டெய்துதி யென்னுந் தன்மை
பொருந்திட வின்று தானென் புண்ணியம் பூத்த [1]தென்ன
வருந்தவத் தரசி தன்னை யன்புற நோக்கி [2]யெங்கள்
வருந்துறு துயரந் [3]தீர்த்தா யம்மனை வாழி [4]யென்றார்.

(இ - ள்.) எந்தை-எமதுதலைவனே! நீ ஈண்டு எய்துதி என்னும் தன்மை பொருந்திட - இங்கே நீ வரப்போகிற யென்ற செய்தி தெரிந்ததனால், இருந்தனன்-(உனது வருகையை எதிர்நோக்கிக்கொண்டு)இருந்தேன்; (அவ்வாறே நீ எழுந்தருளியதனால்), இன்று தான் என் புண்ணியம் பூத்தது - இப்போது

தான் எனது தவம் பலித்தது, என்ன - என்று புகழ்ந்துகூற,—(இராமலக்ஷ்மணர்), அரு தவத்து அரசிதன்னை அன்புஉற நோக்கி-மிக்கதவத்தையுடைய வளான அச்சவரியை அன்போடு பார்த்து, 'அம்மனே - தாயே! எங்கள் வருத்துறு துயரம் தீர்த்தாய் - எங்களது வருத்தம்பொருந்திய வழிநடைத்துன், பத்தை (நீசெய்த உபசாரத்தால்) தீர்த்தாய்; வாழி - வாழ்வாயாக,' என்றார்-என்று கூறினர்கள்; (எ - று.)

இவர்கள் அவளை 'அம்மனே' என்றுகூறியது, அன்புபற்றிய மரபுவழுவமைதி; அவளது உயர்வையுங் காட்டும். வாழி - வாழிய என்னும் வியங்கோள் முற்றின் விகாரம்.பி-பீ:—[1]என்ற. [2]நங்கள். [3]தீர்ப்பாயெம்மனைவாழ்தி. [4]என்றான். (கஉ00)

இப்பாடலின்பின் சிலஏட்டுப்பிரதிகளிற் காணப்படும் பாடலொன்று வருமாறு:—

மாங்கனி காழை யிளங்காய் வாழையின் கனிகளோடு
மாங்கனி யாவதேயென் றருந்திநான் விருப்பி வைத்தேன்
பாங்கினி முழுதுசெய்மி லென்றவள் பரிவி னல்குந்
தேங்கனி யினிது ணுண்டு திருவுள மகிழ்ந்த வீரன்.

கூ.—சவரி அளிக்குருத்துச் சுக்கிரீவனுள்ளவிடத்துக்குச் செல்லும் வழியைக் கூறுதல்.

அனகனு மிளைய கோவு மன்றவ ணுறைந்த பின்றை
விணையறு நோன்பி னுரு மெய்ம்மையி னேக்கி வெய்ய
துணைபரித் தேதிரோன் மைந்த னிருந்தவத் துளக்கில் குன்ற
நினைவரி தாயற் கொத்த நெறியெலா நினைந்து சொன்னாள்.

(இ - ள்.) அனகனும்-குற்றமற்றவனுகிய இராமபிரானும், இளைய கோவும் - இளையபெருமாளான இலக்குமணனும், அன்று அவண் உறைந்த பின்றை - அப்பொழுது அங்கு வசிக்குஞ்சமயத்தில், —விணை அறு நோன்பினும் - தீவினைகள் அழிதற்குக்காரணமான தவத்தையுடையளான சவரியும், மெய்ம்மையின் நோக்கி - [அவர்களை மெய்யன்போடுபார்த்து,—வெய்ய துணை பரி தேரோன் மைந்தன் இருந்த அ துளக்கு இல் குன்றம் - வெப்பமுடையவனும் வேகமாகச்செல்லுங் குதிரைகட்டியதேருடையவனுமான சூரியனது மகனை சுக்ரீவன் வசிக்கிற அழிவற்ற அந்த (ருசியமூகமென்னும்) மலையினது, நினைவு அரிது ஆயற்கு ஒத்த நெறி எலாம் - நினைக்கமுடியாததும் ஆராயத்தக்கதும் [மிகக்கொடியதும்] ஆன வழிமுழுவதையும், நினைந்து சொன்னாள் - ஆலோசித்துச்சொன்னாள்; (எ - று.)

இச்செய்தி முதனூலில் இல்லை; அதில், இவ்விவரத்தையுங் கவந்தனே கூறியதாகவுள்ளது. அகம்-தோஷம்; அது இல்லாதவன்-அகன். துளக்குதுளங்குன்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். (கஉ0க)

எ.—சவரிகூறினவற்றை இராமன் கேட்டல்.

வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றோக
காட்டுறு மறிஞ ரென்ன வன்னவள் கழறிற் றெல்லாங்
கேட்டன னென்ப மன்னே கேள்வியாற் செவிகண் முற்றுந்
தோட்டவ ருணர்வி னுண்ணு முழுதுத்தின் சுவையாய் நின்றான்.

(இ - ள்.) கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர் - கேள்விகளி னால் (தங்கள்) காதுகள் முழுதும் துளைக்கப்பட்டவராகிய பெரியோர், உணர் வின் உண்ணும்-(தங்கள்) தத்துவஞானத்தினால் நுகர்கிற, அமுதத்தின் சுவை ஆய் நின்றான் - அமிருதத்தின் ருசியாயிருக்கின்ற இராமபிரான்,—வீட்டி னுக்கு அமைவது ஆன மெய் நெறி வெளியிற்று ஆக காட்டுறும் அறிஞர் என்ன - மோட்சவுலகத்துக்குப் போவதற்கு உரியதான உண்மைநெறியை வெளிப்படையாக [நன்றாக]த் தெரிவிக்கிற அறிவையுடைய கல்லாசிரியர் போல, அன்னவள் கழறிற்று எல்லாம் - அந்தச்சபரி கூறியவற்றை யெல் லாம், கேட்டனன்—; (எ - று.)—என்ப, மன், ஏ - அசைகள்.

ஒருவர் நற்கதியடைந்து உய்யுமாறு அவர்க்கு நல்லாசிரியர் முத்திமார்க் கத்தைக் கூறுதல்போல, இராமன் சுக்கிரீவனைச்சேர்ந்து தன்கருத்துமுற்றும் படி அவ்விடத்திற்குச்செல்லுமழகை அவனுக்குச் சபரி தெரிவித்தன ளென்பதாம். ''கேட்பினுங் கேளாத தகையவே கேள்வியால், தோட்கப் படாத செவி'' என்ற திருக்குறளும், 'கேள்வியாவது - கேட்கப்படும் நூற் பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்,' 'மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலின், கேள்வியைக் கருவியாக்கிக் கூறினார்; பழைய துளை துளையன்று என்பதாம்' என்ற பரிமேலழகருரைவாக்கியங்களும், 'கேள்வியாற்செவிகள் முற்றுந்தோட்டவர்' என்றவிடத்து உணரத்தக்கன. பெரியோரிடத்துக் கேட்டறிந்த நுண்ணறிவுடையவரே தங்கள் தத்துவ ஞானத்தினால் பரம்பொருளான தன்னைப் பலபடியாலும் இன்பமுற அனுப விக்கப்பெறுபவன் இராம னென்பது, ஈற்றடியின்கருத்து. கழறிற்று எல் லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். நின்றான் - இறந்தகாலவிடைநிலை காலத் தைக் காட்டாது தன்மை யுணர்த்திற்று. (கூ0ஐ)

அ.—சவரி முத்தியடைய, இராமலட்சுமணர் அப்பாற்செல்லுதல்.

பின்னவ [1]ளுழன்று பெற்ற யோகத்தின் பெற்றி யாலே
தன்னுட லுறந்து [2]தானத் தனிமையி னினிது சார்ந்தா
[3]ளன்னது கண்ட வீர ரதிசய [4]மளவின் றெய்திப்
பொன்னடிக் கழல்க ளார்ப்பப் புகன்றமா நெறியிற் போனார்.

(இ - ள்.) பின் - பிறகு, அவள்-அந்தச்சவரி, உழன்று பெற்ற யோகத் தின் பெற்றியாலே - மெய்வருந்திச் செய்து பெற்ற தவத்தின் பயனால், தன் உடல் உறந்து - தனது உடம்பை விட்டு [இறந்து], அ தனிமையின் - ஒப் பற்றதான அந்த முத்தியுலகத்தில், இனிது சார்ந்தாள் - இனிமையாகச்

சென்று சேர்ந்தாள்; அன்னது கண்ட வீரர் - அச்செயலைப் பார்த்துநின்ற இராமலக்ஷ்மணர்கள், அதிசயம் அளவு இன்று எய்தி - ஆச்சரியத்தை மிகுதியாகப் பொருந்தி, அடி பொன் கழல்கள் ஆர்ப்ப - (தங்கள்) திருவடிகளிற் கட்டிய பொன்னாலான வீரக்கழல்கள் ஒலிக்கும்படி, புகன்ற மா நெறியில் போனர் - (சவரியாற்) கூறப்பட்ட பெரிய (காட்டு)வழியிற் போனார்கள்; (எ - று.)—தான் - அசை.

இராமலக்ஷ்மணர்களுக்கு அதிதிபூசைசெய்வதற்குக் காத்திருந்த சவரி அவ்வாறே அவ்விருவர்க்கும் அதனைச் செய்தபின்பு அவர்களாலும் அதிதிபெற்று அக்கினியில் உடலைத்துறந்து தன்போகமகிமையால் நற்கதிபெற்றனளென்று முதனூல் கூறும். பி-ட்:—[1]உழந்து. [2]வானம். [3]அன்னவை. [4]அளவிற்று. (கஉ0ஈ)

கூ.—இராமலட்சுமணர் பட்டைப்போயிகையை யடைதல்.

[1]தண்ணை னுங்கா னுங்குன் றுந்[2]திசைகளுந் தவிரப் போனர்
மண்ணிடை வைக மீறுறும் [3]வரம்பிலா மாக்க ளாடக்
கண்ணிய வினைக ளென்னுங் கட்டழல் [4]கதுவ லாலே
புண்ணிய [5]முருகிற் றன்ன பம்பையாம் பொய்கை புக்கார்.

(இ-ள்.) (இராமலட்சுமணர்), தண் எனும் கானும் குன்றும் திசைகளும் தவிர போனர் - குளிர்ந்துள்ள காடுகளும் மலைகளும் திசைகளும் பின்னுகும்படி [அவற்றைக்கடந்து] சென்றவர்களாய்,—வைகல்தோறும் மண்ணிடை வரம்பு இலா மாக்கள் ஆட-நாடோறும் பூமியிலுள்ள கணக்கில்லாத மனிதர்கள் வந்து நீராடுதலினால், கண்ணிய வினைகள் என்னும் கட்டு அழல் கதுவலாலே - (அவர்களிடத்து) மிக்குள்ள தீவினைகளாகிய பெருந்தீ வெதுப்புதலினாலே, புண்ணியம் உருகிற்று அன்ன - புண்ணியம் உருகினது போலத்தோன்றுகிற, பம்பை ஆம் பொய்கை - பம்பையென்னும் சரசை, புக்கார் - அடைந்தார்கள்; (எ - று.)

உருவகத்தை அங்கமாகக் கொண்டு வந்த தற்குறிப்பேற்றவணி. தன்னில் மூழ்கினோரது பாவத்தைத் தவறுது ஒழிக்கு மென்பது, பின்மூன்றடிகளின் கருத்து. பொய்கை - மானிடராக்காத நீர்நிலை. பி ட்:—[1]தண்ணறுங், தண்ணுறுங். [2]நதிகளும். [3]வரம்பிலாதாடுமாக்கள். [4]கழிதலாலே, அவிதலாலே. [5]மருங்கிற்றன்ன, உருவிற்றன்ன. (கஉ0ச)

சவரி பிறப்புநீங்குபடலம் முற்றிற்று.

ஆரணியகாண்டம்
முற்றுப்பெற்றது.

கம்பராமாயணத்தின்

ஆரணியகாண்டச் செய்யுண் முதற்குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்க
அக்கணத்தவள்-207		அருகுறுபாலின்-434		அற்றசரத்தோடு-483	
அக்கணத்தினில்-527		அருணன்றன்-125		அற்றதாளொடு-315	
அக்காலமும்-505		அருத்தியளனைய-176		அற்றவன்பகரா-517	
அக்காலையரக்க-603		அருந்திறலுலகொரு-82		அற்றவனுரைத்த-398	
அங்கரக்கர்-255		அருமணிச்சாளர-448		அற்றைநிரமென-306	
அங்கியினெடும்-717		அரைகடையிட்ட-552		அறங்கொளாதவர்-329	
அங்கையினரன்-383		அல்லலுற்றேனை-618		அறத்தைச்சீறுங்-634	
அசும்புறுமதகரி-270		அல்லாயிரகோடி-469		அறந்தலைநின்றி-667	
அஞ்சிறைகுருதி-624		அல்லித்தாமரைக்-130		அறந்தவாநெறி-85	
அஞ்சிறையறுபத-310		அல்லிறுத்தன-131		அறந்தனுலழிவி-543	
அஞ்சினள்வஞ்சி-187		அலக்கணுமின்பமு-653		அறப்பாலுளதே-715	
அஞ்சொற்கிளி-710		அலங்கல்வேற்கை-347		அறுத்தானை-606	
அடங்கலில்-334		அலங்காரமென-119		அன்றிடைவஞ்சக்336	
அடுத்தவுமெண்ணி-520		அலக்குமாழி-194		அன்றியுங்கின்-92	
அண்டமுமகிலமு-74		அலமித்தனை-288		அன்றியுமக்கணத்-313	
அணங்கினுக்கணங்-581		அவ்வயினவ்-164		அன்றுமூலமாதியா-46	
அணிவிறிங்க-195		அவ்வயினழக-70		அன்னகாலையங்-424	
அணைமலர்ச்சேக்-444		அவ்வழிச்சிலதர்-436		அன்னகாலையழன்-198	
அத்தலைத்தானைய-304		அவ்வழியனையன-559		அன்னகாலையிள-693	
அதிகரின்முளரிரு-150		அவ்வழியிளவல்-668		அன்னச்செலவிற்-49	
அதிசயமளிப்பதற்-365		அவ்வழியிளையவ-739		அன்னதாகலின்-88	
அதிசயமொருவரா-652		அவ்வழியுழையரோ-474		அன்னதாமிருக்கை-763	
அதிதிதிதி-124		அவ்விடையெய்திய-696		அன்னமாமுனி-7	
அதிரமாநிலத்-208		அவ்வுரைகேட்டட-221		அன்னமாயமேயிலு-45	
அந்தகனுமுட்கிட-334		அவ்வுரைகேட்டவீ-167		அன்னமாயருமறைக-41	
அந்தரம்வருதலு-654		அவ்வுரைகேட்டு-280		அன்னவடன்னை-413	
அந்தரமுற்றுன-485		அவ்வேலையினே-615		அன்னவஞ்சரைத்த-170	
அந்திவந்தணுகும்-673		அவன்வலிபடைத்து-82		அன்னவனடுவுற-305	
அப்புடையலங்குமீ-727		அழிந்தகிந்தைய-191		அன்னவனமைச்-359	
அம்பும்மனலு-458		அழிந்தனதேர்-301		அன்னுபலபலவு-649	
அயிர்த்தனளாகு-568		அழிந்துளாரலர்-748		அன்னுளதுகூற-464	
அயிருறக்கலந்த-432		அழுங்குநாளினென்-243		அனகமாநெறிபடர்-558	
அரக்கனஃதுரைத்-497		அழுதுவாய்குழறி-28		அனகனுமிலையகோ-76	
அரண்டருகுஞ்-695		அழுத்தியசிந்தை-697		அனேத்துலகினும்-564	
அரண்டருதிரடோ-574		அழைத்தார்சில-295		அனேயதோர்-142	
அரவாகிச்சுமத்தி-58		அழையென்றேவ-255		அனேயராகிய-319	
அரிதினெய்தின-330		அளிக்குமெய்யுயிர்-197		அனேயவள்கருத்-513	
அருக்கனன்ன-89		அளியினங்கடந்-445		அனேயவனிறுதியி-75	

அனையின் றுறை-50
ஆக்கரியமூக்கு-227
ஆக்கினேன்மனத்-347
ஆகக்கொங்கையி-199
ஆகுமன்னதே-638
ஆங்கவண்மார்பொ-707
ஆசைசுமந்த-693
ஆசைநீளத்தரற்றி-528
ஆடரம்பை-44
ஆண்டகையரவ்-93
ஆண்டங்கிலேயோ-510
ஆண்டப்பிறை-455
ஆண்டவளன்பி-764
ஆண்டவனீ துை-125
ஆண்டாயிடை-582
ஆண்டானின்னன 743
ஆண்டுற்றவணங்-593
ஆண்டையானரசு-564
ஆண்டையா*கூறை-499
ஆண்டையா*வுன்-554
ஆணிக்கமை-468
ஆணிப்பொனிஞெகி-509
ஆதலான்முனிவா-664
ஆதலினீதுபெற-73
ஆதிநான்முகன்-16
ஆதிப்பிரமனுடீ-753
ஆதியினருக்கனு-262
ஆமதேயினி-636
ஆமாமதுக்கு-465
ஆய்ந்தகங்கபத்திர-326
ஆய்வரும்**நாம-77
ஆய்வரும்**ஆதி-357
ஆய்வளமகளி-309
ஆய்வுறுபெருங்-720
ஆயகாலையின்-288
ஆயசூழலறிய-133
ஆயதுசெய்கை-760
ஆயபினமலனு-665
ஆயவர்கடங்கள்-105
ஆயவனனையகூற-500
ஆயிடையமுதின்-186
ஆயிடையறிஞனு-71
ஆயிடையன்னம்-ஏ21
ஆயிடையெழுந்த-400
ஆயிரகோடியென்-82
ஆயிரமடற்கை-494
ஆயிரமாயிரங்-263
ஆயிரமுகமுள-72
ஆர்த்தானேக்கரசு-212
ஆர்த்தெழுந்*வான-328
ஆர்த்தெழுந்தன-344
ஆரணமறையோ-174
ஆரவளென்னலோ-402
ஆரவாழ்க்கையின்-323
ஆரியர்சிந்தை-694
ஆரியனலையகூற-516
ஆவுக்காயினு-86
ஆழிவறக்க-699
ஆளிகள்பூண்டன-260
ஆளிரண்டுநூறுள-315
ஆளுநாயகனங்-740
ஆற்றலோனவ்-651
ஆற்றலெனத்துயர-576
ஆற்றுராகிற் 439
ஆற்றுளிவ-608
ஆறியிருந்தைய-703
ஆறிலைடாயிர-263
ஆறுபுலனஞ்சினம்-391
ஆன்றகாத-203
ஆன்றமை-269
ஆனதனேத்து-479
ஆனவன்றெழுது-762
ஆனவனுரைக்க-502
இக்கணமொன்றி-660
இங்குநின்றது-346
இங்கொர்மானிடற்-321
இச்சையிற்றுயில்-446
இச்சொலனேத்துஞ்-482
இடம்படுமானத்-678
இடிப்பொத்த-602
இடைந்துபோய்நிசி-538
இத்தனமெனைய-669
இந்திரற்கிந்திரன் 559
இந்திரன்சிலையெ-408
இந்திரன்முதலினோ-265
இந்திரன்மேலதோ- 373
இந்திரனருளின-73
இந்திரனுமரனையனு-216
இந்திரனெனினி-83
இந்நிலையிலையவன்-625
இப்படியேகினள் 708
இப்புவனமுற்று-106
இம்பருற்றிதெய்தி-44
இம்மானிநிலத்தி-509
இம்மைக்குறவோடு-597
இமையவர்தலைவீ-169
இயக்கரிற்-267
இரக்கமென்றொரு-80
இரத்தனனெய்திய-697
இருக்கின்மொழியா-441
இருந்தமாக்கரன்-243
இருந்தமாரீச-477
இருந்தவன்யாவ-556
இருந்தனுலகங்க-368
இருந்தனனெனக்கை-765
இருப்பனேலெரி-543
இருவர்மானிடர்-245
இருவினைதுறந்த-576
இரைக்குநெடுங்-350
இரைத்தமறை-99
இல்லாகிலத்தின்-62
இல்லியல்புடைய-742
இலங்கையில்-3849
இலைகொள்வேலடல்-18
இவ்வுழிங்கழும்-661
இவையிறை-700
இளவலைநோக்கின-732
இளிக்கறையின்-695
இளையவனேகலு-545
இற்றதின்றொடிவ்-21
இற்றிலாமியம்பிலு 43
இறந்தார்பிறந்தா-466
இறுதியைத்தன்வயி-113
இறைவவெண்ணி-132
இன்றேயிறவர-713
இன்னபோதிவ்வழி-353
இன்னனபல-68
இன்னனவின்னன-727
இனியதோர்சாலை-79
இனியொருகற்ப 377
இனையராகிய-748
இனையவாகலின்-282
இனையனவுலகினி 450
ஈசன்முதலாக-493
ஈசனுண்டிருந்த-560
ஈசனுர்கண்ணின்-405
ஈசனுங்கமலத்தோ-765
ஈண்டியபுலவரோடு-734
ஈண்டுறைதி-104
ஈரற்செறி-294
ஈன்றவரிடர்பட-741

நன்றவலேவெப்-751
உஞ்சுபிழையா-493
உடுத்தரோடைய-152
உடைந்தார்களே-295
உண்டாகியகாரிரு-710
உண்டாகியகேடு-507
உண்டெழுந்தவுணர்-25
உத்தமன்றேவியை-592
உந்தையுண்மைய-130
உய்ந்தனரிமைப்பி 99
உய்யாமன்மலேந்து-595
உய்விடத்துதவற்-127
உயரும்விண்ணிடை-209
உயிர்த்திலன்லெரு 645
உயிர்ப்பினெருப்புமி-698
உரத்தினருருமென-264
உரனெரிந்து 217
உருக்கியசுவண-109
உருப்பொடியா-214
உருமொக்கவுலேந்து-456
உருளுடைநேமியால்-83
உரைத்தலும்-117
உரைத்த*கேட்டலு-283
உரைத்த*கேட்டு-87
உலகொருமூன்றுந்-115
உவமைதீங்கிய-91
உழக்குமறைநாவினு 97
உழந்தயோகத்-688
உழைத்தவாளி 529
உளங்கோடலுனெயி-238
ஊவுறுதுயர்முகத் 553
உற்றதுணராது-649
உன்வயினுறுதி 498
ஊக்கித்தாங்கி 206
ஊடறுப்புண்ட-325
ஊணிலவுமென-545
ஊருவிற்றேரன்றிய 367
ஊழியெரியிற்-338
ஊழிவெங்கனல்-200
ஊற்றுமிக்கநீர்-210
ஊற்றுறுகண்ணினீ-719
ஊறுசைமுதற் 470
ஊன்சுடவுணற்கு 182
ஊன்றியதோளினன்-312
ஊன்றும்முணர்வப் 464
எங்கணுநாடின-696
எட்டொடெட்டு-8
எடுத்தமலேயே 491
எடுத்தனெனேகி-705
எண்கையரெழுகை-267
எண்டகுமிலையவ-146
எண்டிசையுந்திண்-754
எண்மையாருலகி-536
எத்தாயுலகியாவை-55
எத்திரத்தடக்தேர்-342
எத்தைதீயிலம்பிற்-668
எம்பிக்குமென்-489
எய்தகாலமு-332
எய்தார்பலர் 296
எய்தியமுனிவரை-80
எயிறலேத்து-533
எயிறுடையரக்கி-158
எரியின்வார்கணை-24
எல்லாவுலகங்களு-597
எல்லாவுலகிற்கு-56
எல்லிட்டவெள்ளிக்-606
எல்லியல்லிசும்-619
எவன்செய-151
எழுதருமேனியாய்-173
எழுந்தனரெய்தின-78
எழுந்தனரிருக்கை-418
எழுந்தான்றட-604
எழுந்துநின்று-248
எழுவதோரிசை-121
எழுவரொடெழு-268
எழுவுறுகாதலா-138
எழுவினைமலேயெ-381
எற்பெற்றுளும்-745
எற்றுவம்பிடித்-252
எறிந்தாரென-292
எறிந்தானதுநோக்-611
எறும்பினுக்கடையு-730
என்வயினுற்ற-401
என்றமுனியை-103
என்றலுமிளையதோ-667
என்றலுமிளையவீ-277
என்றலுமெழுந்து-498
என்றவண்மே-239
என்றவளுரைக்க-580
என்றவளுரைத்த-575
என்றவணியம்பலு-651
என்றவணியம்பலு-540
என்றாங் பம்-758
என்றுயுன்முன்-744
என்றுரம்பற்றுண்-647
என்றுலென்னே-487
என்றுளகன்று - 466
என்றுனென்னுப்-743
என்றுனெனலுங் - 461
என்றுனைவிளம்பி - 733
என்றுன்னபலப - 220
என்றுன்னபலவும் - 587
என்றுன்னவிளம்பிடு-58
என்றுனேய - 384
என்றுசொல்ல - 128
என்றுதானுந்தன் - 324
என்றுபினு - 165
என்றுரைசெயா - 397
என்றுரைத்தவெரு-127
என்றுணன்னியென் - 628
என்னப்பன்னி - 440
என்னமாமாயம் - 503
என்னலுமிருது - 429
என்னலோடும் - 251
என்னவுரையத்த - 495
என்னுமுன்னே - 747
என்னுவுரையா - 714
என்னிலேந்திலள்-680
என்னும்மளவிற் - 601
என்னுமவ்வேலெயி - 590
என்னுமாத்திரத்திற 284
என்னுமாத்திரத்தே-340
என்னென்றுநினை - 511
என்னேந்தரும்-712
என்னேயங்கெய்திய-720
என்னேயெயிறாவ - 374
என்னெஞ்சுமென்-515
எனப்பலகினைப்பி - 116
எனைமிங்திருன் - 323
எனைன்றனதறி - 28
எனைதுநின்றி - 630
எனியினி - 108
எனினனரக்கனு - 621
எனுவாடனிலையு-620
எனுத்தினனெய்தலு 555
எனுதுவாய்மை - 253
எனுதினனிருகை-670
எனவின்வன்மை-449
எனினிலுதோடி - 476
எழிருதேரும் - 301
எழுமேகடலுல - 537

ஏழையுமிளவலு - 69
ஏற்றநெடுங் - 240
ஏற்றவளவரிசிலை - 224
ஏற்றிநாணிமையா-342
ஏற்றியநுதலின - 314
ஏற்றினமார்த்தன-260
ஏறுசேவகன் - 23
ஏனகைதிலோத்த - 561
ஏனையுயிராமுல - 100
ஐந்துமைந்து-88
ஐயநுண்மருங்குன - 518
ஐயைந்தடுத்த - 729
ஒத்தானுடனே - 605
ஒப்பிறையும்பெறல - 42
ஒருகாலத்துலகேழு-219
ஒருங்குயர்ந்து-718
ஒருபகல்பழகினு - 541
ஒரு மகடனிமையை-626
ஒருவனேவுலகமூன்-177
ஒள்ளிதுணுணர்வு-186
ஒளிறுவேற்கரற் - 255
ஒற்றுமூக்கினை - 209
ஒன்முகிமூலத் - 65
ஒன்றுநோக்கலர் - 246
ஒன்றுபத்துநூறு-286
ஒங்குமரனேங்கி - 107
ஒங்குயர்நெடு - 113
ஒங்கொளிவாளின - 305
ஓடிவந்தனன் - 632
ஓதநீர்மண்ணிவை - 736
ஓதிமமொதுங்கக்-141
ஓதுங்காலப் - 745
ஓமராமரை - 22
ஓயாதமலரயனே-37
ஓலமார்கடலென - 737
கங்கைசடைவைத்த-490
கங்கையேமுதலிய-367
கச்சும்வாளுந்-318
கடுங்கரனெனப்-336
கடுத்துநிமிர்கராங்-33
கண்டலங்குதங்-643
கண்டனன்கனகத்-279
கண்டனனிராமனை-100
கண்டாமவையாயிர-59
கண்டுகண்டகரோடு-638
கண்டுநின்று-340
கண்டுநோக்கருங்-247
கண்ணியதருதற்-763
கணத்தின்மேனின்-316
கணையுமாஞ்சிலையி-759
கதிரவன்-761
கமையாளொடு-715
கரக்கருங்கடுந்-77
கரக்கவந்தகாம 44
கரந்திலனிலக்கண-156
கரனையுமறந்தான்-415
கருங்கழற்காலன-436
கருங்குழற்சேயரிக்-725
கருமலிசெம்மலை-115
கருவிமாவொடு-286
கரையறுதிருநகர்-378
கல்லகல்வெள்ளி-724
கல்லீரும்படைத்-219
கலைகளின்பெருந்-302
கலைமான்முதலாயி-506
கலையுமாமதியே-193
கவந்தபந்தங்கள்-289
கவரிவெண்குடை-307
கழலினர்தாரினர்-265
கள்ளமாயவாழ்வை-43
கள்ளவமர்-338
கள்ளுடைவள்ளமு-379
களியுடையனங்கக்-678
களிறுதேர்பரி-329
கற்பழியாமை-619
கற்றையஞ்சடைய-147
கன்னக்கனியும்-454
கன்னிவிளவாழை-107
கனல்வருகடுஞ்சினத் 76
கனிகளின்மலரின் 425
காடுகொண்டகார் 237
காடுதுன்றி-257
காண்பார்க்குங்-752
காணுமனநொந்தக-60
காணுவிதுகைதவ-508
காந்தம்மமுதின்று 468
காந்தர்ப்பமென்ப-178
காம்பறியுந்தோளா 237
காமரமுரலு-493
காமனென்பவனேயு-114
காயங்கனகம் 511
காயம்வேறுகிச்-525
காவலனீண்டுநீர்-539
காவற்றிண்-228
காவியோகயலோ-201
காவேமைந்தரதீ-16
காற்றினேயும்புனலி-213
காற்றினேன்றன்-475
கான்கிடந்தது-642
கானமதினிடை-218
கானிடையடைந்து-387
கானினுயர்-161
கிளித்தனகளித்த-670
குஞ்சரங்குதிரை-266
குடபாலின்முனேத்-452
குண்டலமுதலிய-366
குந்தமுங்குலிசமு-262
குப்புறற்கரியமாக்-153
குமரர்நீரிவண்-6
குரவங்குவி-48
குருகிமாமழை-281
குலத்தாலு-230
குலவுறலன்னமு-578
குழையுறுமதியம்-278
குற்றமின்றத-535
குறித்தவெங்கோப-659
குன்றிடையிருரு-525
குன்றுதுன்றின-11
கூதிர்வந்தடைந்த-428
கூதிர்வாடை-682
கூலத்தாருலகமெல்-430
கூவலினுயிர்த்த-474
கூறினமாற்றஞ்-658
கெட்டாய்கிளையோ-594
கேட்டனனென்கண்-557
கேட்டனன்னுரை-247
கேட்டார்கொள்ளா-746
கேட்டானிருதர்க்-599
கேட்டுவந்த-131
கேடகத்தடக்கைய-307
கைக்கரியன்னவன்-310
கைகள்வாளொடு-287
கைகளற்று-749
கைகளாற்றன்-196
கைகொள்கால-47
கைத்தசிந்தையன்-633
கொடிதழைகவிகை-267
கொடியொடுகொடு 306
கொடுத்தவில்லை-341
கொடுவெங்கரி-596
கொண்டானுயர்தே-583

கொம்பொத்தனநால்-58
கொல்லாமாயங்க-236
கொலைதுமித்தியர்-207
கொழுந்தேயனேயா-612
கொற்றமதுமுற்றிய-395
கொன்றைதுன்று-423
கோதாவரியே-586
கோபமுமறனு-414
கோளிருநான்கிலே-112
சங்கடுத்த-533
சண்டப்பிறைவாள்-603
சண்டவெங்கடுங்க-308
சந்தப்பூணலங்கல்-759
சந்தமலர்த்தண்-478
சந்திரனிரவி-562
சாகைவன்றலே-591
சாயுந்தம்பி-683
சாரவந்தெதிர்-15
சாவாதிருத்தல்-630
சாளரத்தூடு-473
சிங்கையினுறைபவ-147
சிலேடிடந்ததால்-640
சிவனுமலர்த்-231
சிற்றிடைச்சீதை-415
சிறுகாலையிலா-57
சிலொண்மலரு-665
சீதினனுரைசெய் 572
சுட்டகங்கு 685
சுமித்திரைசேயவள்-705
சுவணவண்ணலெறு-26
சுற்றுறநோக்கினர்-300
சூரறுத்தவனுஞ்-86
சூரொடுங்கயிறுணிந்-21
சூலம்வாண்மழுத்-249
சூலமற்றன-285
சூலமும்பாசமுந்-265
சூலமேமுதலிய-364
சூழ்ந்ததார்நெடும்-311
செங்கணங்கவரவின்-13
செங்கணெனி-337
செங்கயல்போற்-223
செஞ்சுடர்ச்செறி-9
செஞ்சேவகனுர்-585
செந்தாமரைக்கண்-462
செப்புறற்குரியவர்-374
செம்பராகம்படச் 144
செம்புகாட்டிய-322
செம்மாமலரா-51
செய்தனர்கண்மா-388
செய்தாயேனுந்-487
செருக்கடை-105
செவ்வேலவர்-49
செவிகளேத்தளிர்-578
செற்றவாளுழுவை-13
செற்றிக்கதிரி-53
செறுத்திறுதியிற்-337
சென்றதேரையுஞ்-330
சேணுயர்நெறிமு 361
சேணுறநீண்டு 171
சேயிதழ்த்தாமரை-552
சேயிழையன்ன 568
சொரிந்தபல்படை-289
சொல்லுடையாரெ-648
சொல்லென்றென்-399
சொற்பங்கமுற-112
சொற்பிறந்தார்க்கி-376
சொற்பொருபெரு 56
சொற்றுந்தமன்-57
சொன்னநான்முகன்-90
சொன்னுணிருதர்க்-451
ஞாலம்படுப்பான்-697
தக்கன்மனைவயிற்று-122
தங்குதிண்கரிய-12
தங்கையுமவ்வழி-370
தடிதடவத் 699
தடைக்கரும்பிபருவ-656
தண்டகவனத்-103
தண்டலிறவஞ்-471
தண்ணெனுங்-768
தணிக்குந்தன்மைத்-747
தத்துறுசிற்றையர் 376
தந்தாதையரை 646
தம்பிதலே-333
தயரதன்மெல்குல 557
தயிருடைக்குமத்தித-120
தரங்களினமைத்து-148
தராவலயநேமியுழ-394
தருவதுவிதியே-412
தலையளித்த-235
தலைசிந்தின 299
தலையின்மாசுணந்-259
தழுவினெடுத்தன 117
தழுவினன்பன்மு-719
தள்ளாவினையேன்-711
தள்ளுறுமுயிரினர்-443
தலையலிழ்கோதை-742
தறியினீங்கிய-257
தறைவாயவன்-581
தன்மானமிலாத-505
தன்னைமுனிவுற்ற-491
தன்னெடுந்தொடர்-189
தனியிருந்தனள்-205
தாக்கியதணப்பில்-738
தாங்கிநின்ற-343
தாடகைக்கொடியா-192
தாதுகொண்டசித-421
தாதுண்சடிலத்-453
தாதைகூறலுந்-129
தாமரைக்கண்ணெ-547
தாமரைவனத்தி-541
தாமிருந்த-222
தாமுறுகாமத்தன்-171
தாய்தன்னே-38
தாயுநீங்கருந்-128
தாரகையுதிரு-660
தாருடைத்தானை-400
தாவியாதுதீதெனு 421
தாளிடையற்றன-306
தாளுடைமலருளா-563
தாளுயர்தாமரைத்-149
தானவரேமுதலோ-123
தானின்றயனின்-51
தானுநுவ-335
திக்கயமொளிப்ப-196
திக்குறுஞ்செறி-5
திங்களோவன்றிது-450
திசைசுட்டிய 52
திசையும்வானவரு-20
திசையுறுகரிகளோ-360
திண்டேரழித்தாங்க-613
திரிசிராவெனு 316
திருகுசினத்தார்-480
திருவிஞயகனுரை-644
திறத்திறனுலோ-484
திறத்திருதன-687
திறற்றெரிவஞ்சன்-569
தீதில்வரைசை-164
தீயுருவ-338
தீர்வித்திரி-52
துஞ்சுவதென்னே-542
துடித்தனகடக்கரி-335

துடியினேரிடை-686
துண்ணெனுமவ்வு-627
துமிலப்போர்வல்-251
துருவியோடின-326
துவசமார்தொல்லம-60
துள்ளியோங்கு-645
துளைபடுமூக்கொடு-722
தூறப்பதேதெதாழிலா-35
தூங்கலில்குயில்கெ-550
தூடணன்விடு-327
தூடணன்றிரிதா-269
தூண்டுன்ற-46
தூய்மையனிருங்-111
தூயகடனீரடிதி-95
தூயவன்பணியா-168
தூரவட்ட-331
தூரியக்குரலின்-273
தூரியசரமெலாக்-312
தூளியின்படலை-274
தெண்டிரைக்கலமெ 626
தெண்டிரையுலகக்-662
தெரிகணைமூழ்கலிற்-309
தெரிந்தறிதோக்கின-77
தெரிவுறுதுன்பம்-652
தெவ்வுலகத்தும்-406
தெள்ளியவமுதெழ-733
தெற்குநோக்கியநு-637
தேடுதலுற்ற-46
தென்றிசைநமன்ற-386
தேட்டந்தான்-224
தேமொழிதிறத்திறு-731
தேயாகின்றாய் 438
தேர்த்தவல்கு-411
தேர்பூண்டன-297
தேரழிந்தவ்வழி-313
தேரினத்துவன்றி-260
தேரிஞ்ஞியுந்-635
தேவர்கடமைத்தின-82
தேவர்தானவர்-129
தேவராற்றெழ-332
தேவருமவுணருந்-553
தேவருமுனிவரு-74
தேவியைத்தீண்டா-502
தேவுகாதல்-47
தேனிடைய மூதளா-572
தேனின்றெய்வத்-687
தேனுகவருவி-673
தேனுடைய-215
தொகைக்கனற்-735
தொடர்வதேநலமா-640
தொடிதுணிந்தன-285
தொடையமை நெடு-155
தொல்லிருடனேக்-723
தோகையும்பிரிந்த-741
தோகைபுலிவ்வழித்-549
தோமறுசாலேயின்-548
தோய்ந்தும்பொருள-62
தோளணிக்குலம்-643
தோளிரண்டும்-29
தோளேயே சொல்-406
தோன்றலுக்தோன்-371
தோன்றனீ முனியிற்-87
தோன்றியதோன்ற-278
தோன்றுமால்வரை-328
நகையாலேமூக்கிழ-217
நஞ்சுகாலு-680
நஞ்சுறுபிரிவினை-447
நடந்தனர்காலதுட்-109
நடந்தநன்னிரு-325
நடுங்கினமலைகளு-555
நயங்கிளர்நானைந-365
நரைதிரை-226
நல்லதேதினைத்தா-92
நற்கலமதியுற-154
நறைமலர்த்தாதுக்-362
நன்மதியோர்புகன்-696
நன்றுசாலவு-639
நன்றுசொல்லினிர்-250
நாகத்தனி-296
நாட்செய்த-662
நாடறியாத்துயரி-234
நாடும்பல-714
நாண்மதிக்கல்லது-448
நாணினின்ற-442
நாணிலேனுரைகொ-618
நாந்தகவுழவரை-380
நாரங்கொண்டார்-485
நாரமுண்டெழுந்த-431
நாழிநைவதிர்-64
நானங்கொணளின-139
நாற்றிசைப்பரவை-731
நாறியகையணி-155
நான்முகனவர்க்கு-82
நிகழ்ந்ததைநினைந்-490
நிந்தனையரக்கி-173
நிருதர்தமருளு-180
நிருதாதியர்-585
நில்லமடஇயெனக்-205
நில்லாவுலகினி-511
நில்லுநில்லுமென-15
நிலம்பொறையில-728
நிலமிசைவிசும்பி-271
நிலையிலாவுலகினி-350
நிலையெடுத்து-210
நிவந்தசேனையர்-85
நிற்குநெடுநீத்த-756
நிற்பவர்கடைத்த-560
நின்செய்கைகண்டு-757
நின்றவனை-101
நின்றனளாசையி-701
நின்றனளிருந்தவ-158
நின்றுனைதிர்-54
நின்றிலனவனை-190
நின்றுஞ்சென்று-489
நின்றுபல்லுயிர்-682
நின்றுபின்னரு-641
நின்னுலியைநீதி-55
நீட்டிலுலைக-524
நீண்டமாலை-684
நீணிலாவின்-685
நீத்தமும்பரவையு-156
நீயாதிபரம்பரமு-37
நீர்கண்டனை-709
நீர்புகுநெடுங்கட-739
நீலச்சிகரக்கிரி-451
நீலமாமணி-143
நீலமாயகிறத்த-689
நீலமேனிய-635
நீளரவச்-700
நூக்கலாகலாதகாத-420
நூபுரமுமேகலையு-162
நூறியசரமெலா-302
நெட்டிலைச்சரம்-527
நெடுவரைபொடி-717
நெய்ந்நிலைய-382
நெற்றிப்பிறையா-508
நெறிக்கொண்மாத-275
நெறித்தாரை-235
நேரிழைமகளிர்-472
நோக்கியமானை-514
நோக்கினுலைய-639

பகையுடையரக்கர்-520
பங்கயச்செல்வியை-159
பஞ்சணைபாம்பணை-623
பஞ்சியொளிர்-160
பட்டதன்கையு-31
படைத்தலைத்தலை-303
படைப்பெருந்தலை-300
படையொடாடவர்க-10
பண்டவுணர்-94
பண்டேயுலகேழி-460
பண்டையவயன்-76
பண்டையிஞ்சியி-701
பண்புறநெடிதுநோ-183
பணந்தாழல்குற்-437
பம்புசெக்கரெரி-12
பரக்கவென்பகர்வ-540
பரங்கிடந்தமாதிரஞ்-422
பரவலருங்-118
பரற்றருகானகத்-716
பராவருங்கதிர்க-433
பராவருவித்தியாதர்-177
பருஞ்சிறையின்ன-624
பருவத்தால்வாடை-426
பல்லாயிரமாமணி-53
பல்லாயிரமிருள்-291
பல்வகைத்துறையு-671
பழிப்பறுநிலைமை-760
பற்றியகோளரி-698
பற்றுவானினி-526
பன்னகாதிபர்-11
பன்னலாமென்று-39
பனிநின்றபெரும்பிற-36
பாக்கியத்தாலின்-650
பாகத்திலொருவன்-409
பாணிக்கநின்று-632
பாய்ந்தானவன்-613
பாராயிளையோனே-758
பாரிடமெயிது-740
பாரெனப்புனலெ-537
பாவியராமிவர்-702
பாவையுமதனைக்-589
பாழிவன்கிரிகள்-591
பிடித்தூர்ல்கிவ்-534
பிடியெலாமதம்-282
பிரகரநெடுந்திசைப்-359
பிரிந்தவேதுகொல்-683
பிரிபவர்யாவரு-721
பிள்ளைச்சொற்-656
பிள்ளைபோற்பேச்சி-410
பின்னருமும்பர்-131
பின்னவளுழுன்று-767
பின்னவனுரையி-618
பின்னின்முரினைய-519
பின்னுமுரைப்பவ-703
பின்னுறுவதோரா-647
பின்னேயேதுமுதவு-27
புக்கபின்போயதெ-189
புக்குவாளரி-10
புகல்புகுந்திலரேற்-84
புடைகொண்டெழு-459
புண்டரிகப்புது-726
புண்டுளக்கியன 9
புண்ணிலடைப்பொழி-29
புண்ணிற்புதுநீர் 605
புயனிறவண்ண-664
புரண்டுபாய்பிடைவ-735
புரந்தரன்முதலிய-114
புரம்பற்றிய-598
புலிதானே-211
புலியினதளுடையா-354
புவியினுக்கணியா-135
புறங்காணவகங்காண-34
புறத்தினியுரைப்ப-501
புன்சொற்கடந்த-628
புன்னுனைநீரினெய்-579
புனமயிற்சாயற 551
புனைந்திருளூரிஞ்சு-446
பூண்டமானமும்-681
பூண்டிப்பிணியான்-461
பூதமத்தனையும்-14
பூப்பொதியவிழ்ந்த 546
பூவராவுவேற் 321
பூவிலோன்-165
பூவினுல்வேய்ந்து-419
பூவெலாம்பொடி-194
பெண்டனியொருத்-659
பெண்ணியற்றீப-676
பெண்பாலுருநான்-463
பெரிதுநன்றப்-132
பெருங்குலாவுறு 238
பேசலனிருந்த-172
பேசினனங்கவள்-702
பேடிப்போர்வல்-225
பேதாய்பிழைசெய்-595
பேதியாது-2
பேய்முகப்பிணி-19
பேயேறினை-299
பேர்த்தனெடுமா-716
பேரருந்துயரப்-723
பேராவிடர்-711
பேரியோசை-256
பேருழையராக 163
பொங்குவெங்கோ-653
பொத்துறவுடற் 397
பொய்ந்நின்றநெஞ் 462
பொய்யாமெனவோ-507
பொருக்கெனநோக்-372
பொருதிறத்தானை 184
பொருந்தவமலன்-102
பொருவரியசமயங்க-39
பொலந்தாரினர் 293
பொழிலேநோக்கும் 692
பொற்புடையரக்கி-188
பொற்புற்றனமாம 470
பொற்றலைமரகதப்-380
பொற்றோடிவர்கின்-712
பொறியிலைஞ்நி-31
பொன்மயமான 418
பொன்னகரத்தினு-562
பொன்னுருவப் 232
பொன்னேப்போ-185
பொன்னெழுகு-161
பொன்னேந்தியர்-608
போக்கினிரென்-230
போகின்றனடிய 542
போர்ப்பெரும்பணை-256
போரிலான்புரந்தர-375
போலதுபுரிவல்யா-544
போனவள்புலவி-521
போனவனகலே-69
மங்கையஃதுரைத்-567
மங்கையர்திறத்-358
மஞ்சொக்கு-404
மட்படிசெய்த 694
மடலுணட்டிய 644
மடித்தபிலவாய்-387
மடித்தவாயன்-679
மண்சுழன்றது 634
மண்டியோடினர்-318
மண்ணகந்திரிய 658
மண்ணின்மேலவன்-637

மண்ணினும்வானி-726
மண்ணிலேக்கரு-246
மண்பாலமரர்-755
மண்மேல்விழுந்தா-612
மண்மேலன-293
மணந்தபேரன்பரை-442
மதநல்யானை-30
மந்தரம்வேலையில்-706
மந்திரத்திலேயோ-523
மயிலியல்பிரிந்த-724
மயிலுடைச்சாயலா-416
மயிலும்பெடையு-691
மரங்கள்போனெடு-254
மரபுளி றிறுத்திலன்-730
மரன்படர்கான - 276
மரனேயுநெடுங் - 216
மருடருங்களி - 290
மருந்தனேயதங்கை - 395
மருப்பிறுமதக் - 266
மருவினிய - 126
மருவொன்றுகூந்த-182
மருளுநிவந்த - 459
மலைகளுமரங்க - 75
மலையேமரனே - 584
மழுக்களு மயில்களு-261
மழுவும்வாளுநம் - 254
மழைபுரையுங் - 123
மற்றவனவ்வுரை - 704
மறக்கமுற்றுதன - 117
மறித்துஞ்சென்ற-642
மறுத்தனெனைப் - 497
மறைவலானெதிர்-91
மன்மதனேயொப்பர்-389
மன்னுநீரின் - 482
மனத்தலைவருங் - 382
மாங்கனிதாழை - 766
மாச்சிச்சிரம் - 614
மாண்டகற்புடை - 202
மாண்டார் மாண்டா-488
மாண்டேனேயன்-647
மாணிக்கம்பனசம் - 424
மாதயாவுடைய - 27
மாதவத்தொழுகலெ - 81
மாதிரத்திறுதி - 428
மாந்தாமுதன் - 713
மாப்போரிற் - 229
மாயப்பிறவி - 757
மாயமேன்மடியும - 518
மார்ருளரேயிருவர் - 393
மாரியாக்கிய - 288
மால்பொத்தின - 298
மால்வரை யுருண்ட-730
மாள்வதேபொருளா-530
மாற்றமின்னது - 530
மாற்றமென்பகர்வ - 539
மானவண்மெய்யி - 725
மானவளுரைத்த - 570
மானுவுலகந்தனின்-53
மானிடனெருவன் - 280
மானிறவிசும்பி - 110
மானேயன்னுடன் - 744
மானேயனேயாளொ - 59
மிதித்ததுமெல்ல - 523
மின்றிரண்டனைய - 570
மின்னிலங்திரிந்த-435
மின்னின்றசிலைய - 274
மின்னுடைவேத்திர-363
மீட்டினியுரைப்ப - 671
மீட்டும்மணுகாநெடு-604
மீட்டுமொன்றுரை - 588
மீளருஞ்செருவின் - 276
மீளாநிறத்தாயிரங் - 607
மீன்கொண்டகொ-412
முடிநாட்டியகோட்-691
முடிப்பெனின்மெரு-339
முடையுடைவாயிலி-371
முத்திருத்தியவ்-4
முத்துக்கனபோ-601
முத்தேவரின்-598
முந்துஞ்சுனைகாண்-587
முந்துவான்முகடு 25
முந்துவெள்ளிமலை-14
முன்கொருகருமலை-110
முருடிரண்டு-258
முருடீர்ந்துருட்டற் 455
முழங்கினபெரும்-303
முழவினில்வீணையி-378
முற்றியவரக்கர்த-733
முற்றியவுயிரெலா-737
முறையும்முடிவும்-512
முன்னமுமகவாய்-522
முனிவர்வந்து-345
முனிவரோடுடையர்-179
மூசரவுசூடு-96
மூடினதிருட்படலை-385
மூத்தமொன்றின் 346
மூன்முறுவலனி-223
மூலமேயில்லா-752
மூவகையமரரு-721
மூவகையுலகினு 357
மூவுலகினுக்கு-496
மூளுமுளதாய-396
மெய்யுறவுணர்வு-674
மெய்யைத்தான்-41
மெய்வரத்தினன்-24
மேகமென்றுருத்தி-361
மேருவைப்பறிக்க-572
மேவாதவரில்லை-63
மேஞுளவன்வில்-503
மொய்த்தமுட்டனது-23
மொழிதருமளவினை-589
மோகனேயென்பது-706
யாதுமறியாயுரை-492
யாமதுதெரித்றேற்-675
யான்வருமமைதியி-72
யானேயும் யாளியு-592
யோகமுறுபேருயிர்-96
வச்சையாமெனும்-320
வஞ்சகக்கொடிய-18
வஞ்சனைக்கொடு-200
வஞ்சனையால்வந்த-650
வஞ்சியையரக்கனும் 625
வட்டமிட்ட-22
வடுக்கண்வார்-657
வண்டலங்குநுதற்-353
வண்டுளர்கோதை-677
வண்டுறைகமலச்-138
வந்ததுசேனை-271
வந்தமந்திரியரோடு-477
வந்தனனெருவையி-592
வந்தனெனடியனே-718
வந்தனைமுனிந்தலை-389
வந்தாய்திறத்தின்-631
வந்தானெடுவானு-467
வந்தானைமுகநோக்-220
வந்திலர்மைந்தர்-622
வந்துகார்மழை-197
வந்துநோக்கினள்-204
வம்பிழைகொங்கை-663
வரமரக்கன்-344
வரிசிலைமறைவலோ-515

வரிசிலையுழவனு-71
வரிவிற்கை-710
வருகதேரெனு-248
வரும்புண்டரம்-600
வருமிவண்மாயம்-185
வல்லியக்குழாங் 259
வல்லியம்பலதிரி-81
வல்லைவரம்பில்லாத-66
வலக்கைவீழ்தலு-343
வலங்கொள்போர்-311
வலஞ்செய்திந்த-45
வலியின்றலை-615
வழியுங்கூறி-93
வளைந்தகாலையில்-284
வளையெயிற்றவர்க-188
வற்கலையர்வார்கழல-390
வன்பணைமரமுந்-427
வன்மைதரித்தோர்-480
வன்றுணையுளனெ-617
வன்றொழில்வீர-722
வனத்திடைமாதவர்-566
வனந்துகள்பட்டன-270
வனைகழல்வரிசிலை-113
வாக்கிற்கொப்ப-244
வாக்கினுலன்னுன்-588
வாங்கிவாளொடு-253
வாங்குவில்லன்-679
வாணிலைமருங்குலா-152
வாமமாமதி-198
வாய்புலர்ந்தழிந்த-273
வார்ப்பொற்கொங்-133
வாழுமறை-104
வாளரிவள்ளறன்னு-571
வாளின்வனம்-335
வாளின்வாய்களை-281
வாளுலாமுழுமணி-356
வான்காப்போர்-228
வான்றனில்வரைக்-157
வானத்தன-292
வானுள்பவன்-599
வானிற்பொலி-50
வானுறைவந்த-425
விடரகங்களும்-89
விடியல்காண்டலி-203
விடுதேரென-583
விண்டாரேயல்லா 231
விண்ணருள-163
விண்ணவரேவல்-577
விண்ணளவிட-264
விண்ணிடையிம்பர்-181
விண்ணிடைவெய்ய-621
விண்ணினின்றவ-750
விண்ணினினிலத்தி-98
விண்ணினீங்கிய-345
விதியதுவலியினுனு-417
வீராவருங்-343
வீரிந்தவலயங்கண்-386
வீரிந்தாயகூந்தலா-221
வீரிந்தார்சிறை-616
வீரிந்துறைதுறை-445
வில்லியறடக்கை-142
வில்லிழந்தனென-314
வில்லிழந்தேன-302
வில்லினர்வாளின-268
வில்லேதாக்கிநகு-681
வில்லொக்குநுத-407
விலகிடுநிழலினன்-70
விழுமியதுசொற்ற-106
விள்ளாதுசெறிந்தி-456
வின்மலிவல்லவன்-149
வினவியகாலையின்-116
வீட்டிவாளவுணு-111
வீட்டினுக்கமைவ-767
வீடவனெய்தும்வே-666
வீரன்மேனி-199
வீரனஃது-169
வீரனுஞ்சிறிது-17
வெங்கதமில்லவள்-704
வெஞ்சினத்தரக்க-432
வெஞ்சுடர்க்கடவு-661
வெஞ்சுற்றங்கொந்து-504
வெப்பழியாதென்-481
வெப்பழியாநெடு-233
வெம்படைகிருதர்-304
வெம்புகோபக்-249
வெம்புவிற்கை-46
வெம்மைதீரொழுக்-563
வெய்தாகிய-709
வெய்யதோர்காரண-145
வெய்யவன்றனுரு-528
வெய்யவெங்கதிர்க-736
வெய்யோர்யாரே-488
வெயிற்சுடரிரண்டி-734
வெருட்டியெழுங்-124
வெல்வானசையால்-54
வெள்ளும்மரக்கன்-616
வெள்ளஞ்சிலம்பு-689
வெள்ளியங்கிரியிடை-82
வெற்பிடைமத 549
வெற்றிகூறிய-339
வெற்றியருளரெனி-622
வென்றிவேற்கை-684
வேகமுடன்-611
வேண்டியதினைந்து-475
வேண்டினவேண்டி-78
வேதங்களைறகின்ற-32
வேதமும்வேதிய-565
வேதனைசெய்-495
வேதியர்கள்-102
வேந்தன்விண்-129
வேந்தன்வியவு-84
வேய்ந்தவாளொடு-317
வேரறவரக்கரை-623
வேலேத்தலேவந்தொ-457
வைகும்வைகலின்-90

கம்பராமாயணத்து

ஆரணியகாண்டத்தின் அரும்பதவ்கராதி முதலியன.*

அகத்தவர் - பரமபதத்திலுள்ளவர்: விராத-50

அகத்தியன், அகத்-26, 32: அகத்தியன் இராமனுக்கு வில் முதலியன அளித்தவன், அகத்-55: சுண்டிகையிற் காவிரி கொணர்ந்தவன், அகத்-46: அகத்தியன் தந்தவாள் புவன மூன்றும் ஒருதட்டிலிட்டால் ஒப்புவரவிற்று, அகத்-56: அகத்தியன் தமிழாலுலகையளந்தவன், அகத்-36: தேவர்வேண்டக்கடலைப் பருகி மீண்டுமிழ்ந்தவன், அகத்-37: வாதாவி காயமுண்டு உலகினிடரைக்களைந்தவன், அகத்-38: விந்தியமலையை யடக்கியவன், அகத்-39: அகத்தியனருளே இமையோரும் தவமுற்றும் நெடியோரினெடியோரும் பெருமை, அகத்-50

அகத்துறை - அகப்பொருளிலக்கணத்துறை, இடமுள்ளளநீராடுதுறை, சூர்ப்ப-1

அகந்திசைத்தல், சூர்ப்ப-59

அகநிலை-மனநிலை, சரப 33

அகம்பன், கல்விச்செல்வியான்: தீநிமித்தங்களைக் கரனுக்குஎடுத்துக்கூறியவன், கரன்-69

அகம்புலர்தல்-மனம்வருந்துதல், சடாயுவு-139

அகலிகை, மாரீச-181

அகறி, விராத-21

அகிலமுமுண்டவன், சரப-44

அங்கண்-அவ்விடத்து, சரப-1

அங்கவலயம், விராத-16

அங்கியின்படையா லிருளப்புறத்தகலுதல், அயோமு-80

அச்சமென்பது உயிர்க்குத்துணையாகாது, கரன்-142

அச்சு-இரிசு, கரன்-78

அசனி, மாரீச-27

அசும்பு-நீரூற்று; × மதம்: கரன்-53

அசைதல்-கலங்குதல், விராத-27

அசைவு - நடுக்கம், தளர்ச்சியுமாம், கரன் - 57

அஞ்சலித்தல் - கைகுவித்தல், சடாயுகா-31

அஞ்சனக்கிரியனுன், விராத-25

அஞ்சனபுஞ்சம், அயோமு-36

அஞ்சனமேகம், சூர்ப்ப-84

அஞ்சொன்மயில், சடாயுவு-190

அட்டதுக்கு, மாரீச-247

அடக்கமென்பதுஇன்னாது, மாரீச-17

அடங்கிவாழாச்சிறியோர் அடாதபொருளே இடையே யிழத்தல், மாரீச-117

அடர்தல்-நெருங்குதல், சூர்ப்ப-103

அடல்-வலிமை, சூர்ப்ப-117

அடவி-காடு, கவந்த-2

அடி-பாதம், கரன்-77

அடிப்பொடிநெருப்புச்சிதறுதல், சூர்பப-105

அடிப்பொடியும் இரந்துஏற்கிலாப்புரந்தரன், சூர்ப்ப-25

அடிபணிவது, சூர்ப்ப-2

அடிபதைத்தல் - கால்களையுதறுதல், சூர்ப்ப-97

அடியிணைபடியிற்றேய்தல், சூர்ப்ப-59

அடுக்கியவடுக்கல், கரன்-156

அடுத்தல்-பொருந்துதல், சடாயுவு-1

அடைத்தல்-மூடுதல், அயோமு-30

அடைப்பை, சடாயுவு-44

* இங்குக் காட்டப்படுபவை - படலப்பெயரின் முதற்குறிப்பும், படலச் செய்யுள்களி னெண்ணும்.

அடைய-முழுவதும், விராத-10
அண்டசத் தருந்துயிறுறந்தவையன், சூர்ப்ப-11
அண்டசம் - முட்டையிலிருந்துஉண்டாவது: இங்கே, பாம்பு, சூர்ப்ப-11
அண்டம் கடவுள்பக்கல்தோன்றியொளிக்கும், கவந்த-48
அண்ணல், சூர்ப்ப-6
அணங்குதல்-வருந்திப்பெறுதல்; அழகுடையதாதல், விராத-16
அணவு-அணுகூலித்தல்: அணவு என்றுமாம்: சூர்ப்ப-77
அணி-ஆபரணம், சூர்ப்ப-24
அணுகுதல், விராத-61
அணை-பஞ்சுமெத்தை, மாரீச-121
அத்திரி, விராத-2
அத்திரிமுக்குறும்பெறிந்து தவவினையையுடையவன், விராத-3
அதர்-வழி, கரன்-62
அதருமத்தால் இந்திரனிழிவையடைந்தது, மாரீச-181
அதவம்-நெய்த்துடுப்பு, விராத-45
அதள்-தோல், விராத-15
அதிகம், சூர்ப்ப-17
அதிசயம்அளிப்பதற்குக் கற்பகதரு முதலியன முறைமுறை தின்று நீட்டும், மாரீச-19
அதிதி முப்பத்துமுக்கோடி விண்ணேரைப் பெற்றாள், சடாயுகா-25
அந்தகற்களிப்பது, கரன்-56
அந்தகன் இராமன் விருந்திட உமருயிரையுண்டது, சடாயுவ-96
அந்தகன்மனந்தளர, விராத-8
அந்தகன்றாது × நாணிலி (சூர்ப்பணகை); கரன்-14
அந்தகனடிதொழுது ஆணைக்குஅடங்குதல், கரன்-41
அந்தகாரம், மாரீச-138
அந்தணர்தொழில், மாதவத்தொழுகுதல்முதலியன: அரக்கரால் தண்டகவனத்துமுனிவர் மாதவத்தொழுகல் முதலியவற்றினின்று நீங்கினமை, அகத்-14
அந்தணர்பாவை, சூர்ப்ப-49
அந்தணன், மாரீச-28
அந்தம்-முடிவெல்லை, விராத-28
அந்தமிலுயர்பதம்-பரமபதம், சரப-41
அந்தரம்-தீமை, மாரீச-28, ஆகாயம், மாரீச-169
அந்தோ, சூர்ப்ப-115
அந்தோகெடுத்தது, சடாயுவ-156
அநங்கபாணம், மாரீச-93
அநங்கன், சூர்ப்ப-13
அநங்கனுக்குத்தப்ப ஒளிக்கலாமிடமில்லை, சூர்ப்ப-79
அநங்கனுருவந்தேயக்கற்பித்த காரணம், மாரீச-71
அப்பு-நீர், அயோமு-100
அப்புறத்தண்டம், மாரீச-29
அபயம், அகத்-16
அபிமானம்-ஆசை, அயோமு-18
அம்பரம்-ஆகாயம்,விராத-65, கர-127
அம்பு-ஆயுதம், மாரீச-184
அம்பு மனவுறுழையாவந்தகாரம், மாரீச-142
அம்மனே, சூர்ப்ப-116
அம்மா, மாரீச-61
அமரர், விராத-4, சூர்ப்ப-103
அமரர் இராவணற்குக் கமிறுக்குங்குடி, சூர்ப்ப-124
அமரர்மன்னன், கரன்-44
அமரும்-அடங்கிய, குறுகிய, அகத்-38
அமளி-படுக்கை, மாரீச-124
அமுதுருத்தனையமழலை, மாரீச-237
அமுதுண்ணினும் பொன்றுவென், சூர்ப்ப-28
அமைத்தல்-உபசரித்தல், அகத்-49
அமைதல்-சம்மதித்தல், மாரீச-209
அமைதி-இடம், விராத-2: பொழுது, சரப-39: சுகம், அகத்-26: தன்மை, சூர்ப்ப-42
அயர்த்தல்-தளர்தல், மாரீச-172
அயல்-பக்கம், சூர்ப்ப-37
அயல்படி-அருகானஇடம், சரப-3
அயன்-பிரமன், விராத-18
அயன்பண்டையன், அகத்-3
அயன்முதலோர் போவதுகருதும் நெறி-மோட்சநெறி, சரப-43
அயிர்-நுண்மணல், சடாயுகா-23
அயிர்த்தல்-சந்தேகித்தல், சடாயுகா-9
அயிருறக்கலந்தநீர், மாரீச-107
அயில்-கூர்மை, விராத - 32: வேல், சூர்ப்ப-37
அயில்தொகை-மிக்ககூர்மை, விராத 6

அயில்வு-ஊண், அயோமு-95
அயோத்தி, சடாயுகா-36
அயோமுகி தாடகையையுஞ் சூர்ப்பணகையையுமொத்தவள், அயோமு-50: அயோமுகியின் றன்மை, அயோமு-43 - 48
அரக்கர்சேனையாற் பறவைகளும் விலங்குகளும் அஞ்சியோடுதல், கரன் - 58: அரக்கர் ஒருதொடையாக(இராமன்மேல்) அம்புவிடுதல் × கணமுகில்கல்மழைவிடுதல், கரன்-89: அரக்கர்க்குமுன்முதல்மூவரின்செயல், அகத் - 14இல்-5-6: அரக்கர்கண்மணி கருடனும் அஞ்சப்பெற்றவற்றைக் காகமும்கவர்ந்த, கரன்-88: அரக்கர்குலந்தொலைத்து நகர்புகுவேம், சூர்ப்ப - 136: அரக்கர்குலம் தேவருமிரியக்கூற்றுமுட்குங்குலம், சூர்ப்ப - 100: அரக்கர்சினம் உருமைச்சுடும், அகத் - 45: அரக்கர்சேனை இராமனைவளைத்தல் × மடங்கலை வேழம்வளைத்தல், கரன்-75: அரக்கர்தம் வருக்கந்தீர்க்குஞ் செல், சடாயுவு - 213: அரக்கர் ராய்த் தம்முடைக் கவந்தநாடகங் காணுதல், கரன் - 121
அரக்கர்பொரத்திரளுதல் × ஓங்கிய மலையெலாமொருமாடு தொகுதல், கரன்-29
அரக்கர்முதலிய குறித்தார்யாவரையும் கோறும், சூர்ப்ப-137
அரக்கர்வருந்திசையின் முந்துற்றிருக்கைகன்று, அகத் 54
அரக்கர்வழியைத் தொடர்ந்துநடப்பதே கதி, சடாயுவு-55 [யுவு-54
அரக்கர்வேண்டுருவரிக்கவல்லர், சடா
அரக்கர் வேதமும்வேதியரருளும்வெஃகலர், சடாயுவு-51
அரக்கரிற்சிலர் மரர்கூட்டத்தவராகி, தங்கள்தோள்களை ஒருபக்கத்துப் பேயும் மற்றொருபக்கத்து நாயுங் கொள்ள நகையுறுதல், கரன்-122
அரக்கரிற்சிலர் உம்பரெய்தி யிருவினை நீங்கியவராகி இராமன் தனிமைக்கு வருந்துதல், கரன்-123
அரக்கரின்றிஎங்கும் அமரரைக்காணுமை, அகத்-14இல்-4
அரக்கரை மானுயர்மணத்தல் பொருத்தமன்று, சூர்ப்ப-51
அரக்கனுள்ளம் × வெயிலுடைநாளி லுற்றவெண்ணெய், மாரீச-85
அரக்குருக்கன்ன கண்ணன், சடாயுவு-108
அரங்கு, விராத-64
அரசு-ராச்சியம், சடாயுகா-38
அரண்டருகுதல் - காவல்செய்தல், அயோமு-36
அரம்பை,விராத-64: அருணன்மனைவி, சடாயு கா-29
அரவக்கோளிரண்டுசுடரையும்தொடர்தல் × விராதன் இராமலட்சுமணர்களை(ப்பிடிக்க)த்தொடர்தல், விராத - 43
அரவம்-பாம்பு, அயோமு 48
அரவிந்தமலர், சூர்ப்ப-59
அரவிந்தராகம், மாரீச-96
அரவுசூடுமுதலோன், அகத்-40
அரற்றுகையில் குலத்திற்கேற்பெயரெலாங் கூறுதல், சூர்ப்ப-100
அரற்றுஞ்சூர்ப்பணகை × அந்தகனுணையாற்றழங்கும்பேரி, கரன்-2
அரற்றுதல்-புலம்புதல், சடாயுகா-20: ஆரவாரித்தல், சூர்ப்ப-47
அரனையும் வெற்றிகொண்ட காமன், மாரீச 83
அராச் சூரியனைவிழுங்குதல், சடாயுவு-196
அராவணை, விராத-31
அரிசியும்மலரும் மங்கலமாச்சிந்துதல் மாரீச-21
அரிமா, விராத-6
அரியேறு × இராமன், சரப-23
அருக்கன், சடாயுகா-2: × சுதீக்கணமுனிவன்: அகத்-28
அருக்கனு மஞ்சுமுஞ் சோதிய படை, கரன-36
அருட்டை, சடாயுகா-29
அருடிரண்டவரக்கன், கரன்-28
அருடீர்ந்தநெஞ்சிற்கரிது, மாரீச -139
அருணன், சடாயுகா - 8
அருணன்மனைவி அரம்பை, சடாயுகா-29
அருணைக்கம், விராத-50

அருத்தியள்-ஆசையுள்ளவள், வேண்டு பவளெனினுமாம்: சூர்ப்ப-51
அருந்ததிக்கற்பு, சூர்ப்ப-50, 65
அருப்பம்-பாதுகாவல், அருமை, அல் பம், சடாயுவு-17
அருவித்திரள் × தேன்: அகத்-35
அருவிப் புயற்கலந்தநீர்தெளித்தலும் அயர்வுதீர்தல், சடாயுவு-181
அருள்-தயை, விருப்பம், அகத்-54
அருள்தருந்திறத்தறன், கரன் 88
அருள்வரவழுதல், சரப-33
அரைகடையிட்டமுக்கோடி., சடா யுவு-30
அல்-இருள், சடாயுகா-8: மாரீச-130
அல்லல்-துன்பம், அகத்-10
அல்லாண்டான் × தோல்வியடைந்த அரசன், மாரீச-118
அல்லித்தாமரை, சடாயு கா-41
அல்லிபுல்லுமலரண்ணம் × சீதை: விராத-20
அலக்கண்-துன்பம், சடாயுவு 66, 155, கரன்-59
அலகு-அளவு, சடாயுகா-14
அலகை × வரை, கரன்-154
அலங்கல்-(வெற்றி)மாலை, கரன்-51
அலங்காரம், சடாயுகா-22
அலங்குதல் - பொருந்துதல், சடா யுகா-2: அசைந்துபெருகுதல், சூர் ப்ப-3: அசைந்துசெல்லுதல், அயோ மு - 100: அசைந்துமொய்த்தல், மாரீச-3
அலச - வருந்த, சூர்ப்ப - 18: துவள, சூர்ப்ப-66
அலம்பு-வருத்தம், கவந்த-1
அலம்புதல்-ஒலித்தல், விராத-16
அலமாத்தல்-மனங்கலங்கிச் சுழலுதல், விராத-39
அலைத்தல்-அலைவீசுதல், வருத்துதல், சூர்ப்ப-75
அலைமானுறும் ஆசை, மாரீச-214
அவசம், சரப-26
அவஞ்செய்தல்-வீண்படுதல், சூர்ப்-18
அவதி-முடிவானவெல்லை, சூர்ப்ப-36: மாரீச 231, சடாயுவு-207
அவம்-வீண், அகத்-31
அவர்க்கேயத்தரம் நன்மையவர்க்கிலை யுனக்கே: மாரீச-75
அவனி-பூமி, சூர்ப்ப-19
அவுணர், சரப-29
அழகன், சரப-35
அழகிற்கவதியுண்டோ, சூர்ப்ப-36
அழல்-காமத்தீ, சூர்ப்ப-79
அழுங்குதல்-அழிதல், சூர்ப்ப-2: தளர் தல், விராத-41
அழுந்துதல்-பதிதல், அயோமு-41
அழுவத்தீ-பரந்தகெருப்பு, சரப-37
அழுவம்-பரப்பு, கரன்-52
அள்ளியப்புதல், சூர்ப்ப-78
அளவு-வரை, சரப-35
அளி-வண்டு, அயோமு-28
அளியினம், மாரீச-122
அற்பம்-இழிவானது, சரப-18
அற்புத்திரைபுரளாசைவேலை, சடா யுவு-26
அறத்தினுலினியாவதென், அயோ முகி-24
அறத்தலைழிவிலதாகினுங்கலாம், சடா யுவு-18
அறநெறிநினைக்கிலாதவரிடை வைகினீர், சடாயுவு-52
அறமில்லையோ, சடாயுவு-133
அறவுரைசெவியினுதவல், சரப-35
அறவோர், விராத-40
அறனன்றிவலியதுண்டாமோ, கர ன்-88
அறியாதான்போல வறிந்தவெலாஞ் சொல்வான், சரப-26
அறியாயோநீயென்னை, சூர்ப்ப-117
அறிவில்லவர்சிந்தை × இருண்டமாதி ரம், அயோமுகி-36
அறிவிலியரக்கன், சடாயு கா-10
அறிவினுக்குஅறிவு, விராத-1
அறுகுறை குருதிமீத்தோன்ற ஆடு கின்றவை × உலவை எரிகதுவச் சூடுகொண்டவை, கரன்-81
அறுத்தல்-போக்குதல், விராத-71
அறுபதம் கீடத்தைத்தன்மயமாக்குதல் × இராமன் அரக்கரைத்தன்பகழி யால் தேவராக்குதல், கரன்-125
அறைய-மோத, மாரீச-15
அன்பு-பக்தி, விராத-47
அன்பெலும் விடமுண்டாரை யாற்ற லாம் மருந்துமுண்டோ, மாரீச-100
அன்றில்செந்தலையது, சூர்ப்ப-76

அன்றிலுல்வலியெஞ்சுதல், சூர்ப்ப-76
அன்னம்×சீதை, சடாயு கா-42
அன்னம்முதலியன இராவணனிடத்து அச்சத்தால் மூங்கையர்போன்ற, மாரீச-98
அன்னமாய்மறையறைதல், விராத-60
அன்னமுந்தம்பியும் வீரனேப்பாதங் கழுவுதல், கரன்-188
அன்னமெனவருதல், சூர்ப்ப-31
அன்னவூர்தியாதியான அந்தணர்க்கு நின்னலாலருந்தெய்வமின்று, விராத-56
அன்னு=அன்ன, சடாயுவு 187
அன்னைசொலுச்சியேந்துதல், சடாயுவு-37
அன்னேயெய் அன்பினர் இராமலட்சுமணர், விராத-40
அனகமாநெறி, சடாயுவு-39
அனசூயை, விராத-5
அனந்தர்-நித்திரை, மாரீச-42
அனல்-நெருப்பு, விராத-8
அனல்வருகானகம், அகத்-4
அனிகம்-சேனை, கரன்-30
அனுக்கவருந்தும்படி, சூர்ப்ப-31
அஃன-அக்கினி, சரப-5
அனைத்துலகத்து நங்கையரும் அவனருளினிச்சையோர், சடாயுவு-49
ஆக-அங்கீகாரச்சொல், சூர்ப்ப-142
ஆகம்-உடல், சூர்ப்ப-71.மனம்: (ஆகத்தெழுகனல் கண்வழியுருதல்), கரன்-97
ஆசறவொழியுமாறு, கரன்-192
ஆசறுதல்-முடிதல், சரப-30
ஆசி, அகத்-35
ஆசை-திக்கு, விராத-28, ('ஆசைபத்திற்கும்', சடாயுவு-106
ஆசைசுமந்தநெடுங்கிரியன்ஞ், அயோமு-33
ஆசைதீளத்தரற்றுதல் - திக்கினெல்லையிற்கேட்கும்படி கத்துதல், மாரீச-249
ஆசைமருந்து, சூர்ப்ப-85
ஆசைமூக்கிஞெடிமுடிதல், கரன்-191
ஆசையால்நொந்தழுங்குதல்,மாரீச-92
ஆடகக்கோயில், மாரீச-88
ஆடகத்தசும்பு-பொற்கலசம், கரன்-53
ஆடகம்-பொன், கரன்-119
ஆடல்-லீலை, மாரீச-121, கரன்-152
ஆடவர்-வீரர், விராத-10
ஆடவர்க்கரசன் - புருஷோத்தமன், சடாயுவு-216, சூர்ப்ப-73
ஆடையால் மூக்கையும் வாயையுஞ் சுற்றிமூடுதல், மாரீச-17
ஆண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ, கவந்த-44
ஆணைதன்-புருஷோத்தமன், சரப-25
ஆணிக்கமைபொன், மாரீச-158
ஆணிப்பசும்பொனனேயாள், சடாயுவு-157
ஆணிப்பொன், மாரீச-96
ஆணியாயபழி, அயோமு-21
ஆத்த-கட்டப்பட்ட, கரன்-17
ஆதரித்து-விரும்பி, அகத்-34
ஆதரிப்பான்-விரும்புவான், கரன்-136
ஆதனேன், விராத-71
ஆதிநாதன், விராத-1
ஆதிநான்முகன், விராத-22
ஆதியுறுபொருளுக்கப்பாலுண்டாயினுநீ, கவந்த-45
ஆமதேயினியமைவது, சடாயுவு-164
டம - நுகரத்தக்கபொருள், கவந்த 24
ஆமையினிருக்கை-கூர்மாசனம், சடாயுவு-23
ஆய்மணி-ஆராய்ந்தெடுத்தஇரத்தினம், மாரீச-6
ஆய்மை-ஆராய்ச்சி, சடாயுகா-5
ஆய்வருதல் - மேன்மேல் மிக்குவளர்தல், அகத்-5
ஆய்வு-விவேகம், சூர்ப்ப-41
ஆயிடை-அப்போது, சரப-37
ஆயிரங்கண்ணவன், சடாயுவு-116
ஆயு-வாழ்நாள், சடாயுவு-30
ஆர்-அரம், மாரீச-31
ஆர்கலி×சேனை, கரன்-25
ஆர்த்தல் - ஆரவாரித்தல், சூர்ப்ப-103
ஆர்ப்பு-ஆரவாரம், கரன்-11
ஆர்வம்-காதல், சூர்ப்ப-86
ஆரணமறையோன்-விஸ்ரவஸ், சூர்ப்ப-50
ஆரம்நவமணிபதித்துள்ளது × திகிரி நவக்கிரகங்களேயாளுதலுடையது, சடாயுகா-7
ஆரியக்கூத்து, மாரீச-22

ஆரியமுனிவர், சூர்ப்ப-43
ஆரியர், அயோமு-35
ஆருயிர்விருப்பனேன், சடாயுவு-17
ஆலகாலத்திரண்டன்ன வாக்கையர், கரன்-11
ஆலத்தினும் வெய்யன், மாரீச-132
ஆலம்-ஆலமரம், கவந்த - 43: விஷமென்றபொருளில்ஹாலாஹலமென்ற வடசொல்லின்சிதைவு: ஆலமென இங்ஙனமே ஒருவடசொல்லுண்டென்றலும் ஒன்று: விராத-20
ஆலமும்வெளிதெனுநிறம், கரன்-42
ஆலி-நீர்த்துளி, (முத்துக்கனபோன் முகத்தாலி...வீழ) சடாயுவு-106
ஆவது-முடிவு, கரன்-76
ஆவற்பேரன்பு, சூர்ப்ப-127
ஆவா, சடாயுவு-155
ஆவி யோயினுமாசையோயாமை, சூர்ப்ப-87
ஆன்-சக்ரவர்த்தி, தசரதன்; சடாயுகா-15
ஆழியுழவன்-சக்கரவர்த்தி, அகத்-53
ஆறக்க மூக்க வமைந்த மூழை ✕ வாய், அயோமு-45
ஆளியின் துப்பினுய், கரன்-63
ஆற்றல்-வல்லமை, சூர்ப்ப-106
ஆன்ற சிறந்த, சடாயுகா-29
ஆன்று-நிறைந்து, கரன்-52
ஆனேறு-ரிஷபம்; ✕ இராமன். சரப-23
ஆனேக்கரசு-ஐராவதம், சூர்ப்ப-103
இகல்-போர், விராத-19
இகல்போரிசை - போர்வென்றபெருங் கீர்த்தி, சரப-8
இச்சை-விருப்பம், மாரீச-125
இசை ✕ கிலா, அயோமு-21
இசைசொற்பங்கமுறநிமிர்தல், சடாயுகா-8
இசைதல்-ஒன்றோடொன்று இணங்கியிருத்தல், சரப-36
இசைதுரந்து வருதல்-ஆரவாரத்தோடு தொடர்ந்துவருதல், கவந்த-6
இசைபெருகத்தீவிழுவது, சடாகா-24
இஞ்சு-இங்கு: போலி, சடாயுவு-15
இட்டுத்தீர்தல் - விட்டுநீங்குதல், அகத்-5
இடம்-இடப்பக்கம், விராத-21, உபாயம், அகத்-6
இடம்படுமானம்-பேரவமானம், அயோமு-8
இடிப்பொத்த முயக்கினிருஞ்சிறை, சடாயுவு-107
இடுக்கணீக்குபவன் இராமனே, அகத்-15
இடை ✕ மின்: விராத-40
டகண்டிலமல்லா வுருவுந்தெரிந்தாம், மாரீச-144
இடைந்து - வலிமையிற் பின்வாங்கி, சடாயுவு-8
இடையிடுதல்-இடையிடையே வைத்தல், விராத-12
இதம், மாரீச-177
இதழ்-அதரம், சூர்ப்ப-21
இதழின்மீதிடும்பல்லினர், கரன்-50
இதழுரிதல்-பூவிதழ்மலர்தல், மாரீச-124
இந்தனம்-விறகு, சடாயுவு-221
இந்தியமடக்கிநின்ற மாரீசன், மாரீச-169
இந்திரற்காயிரகயனம், சூர்ப்ப - 12: இந்திரன் அரக்கரேயின சென்னியிற்கொள்ளுவான், அகத்-15: இந்திரன் நூறுயாகங்கள் செய்தவன், சரப-5: இந்திரன் பிருகற்பதிசாபத்தாற் பல தீங்குகளையடைந்தது, சடாயுவு-197
இந்திரன்முதலியோர் இராவணற்கடிமைசெய்துகொண்டு பெண்டிரின் வாழ்வர், சடாயுவு-210
இந்திரன்முதலோர் சிமுதலியோரைப்பெறுதல், மாரீச-75
இந்திரனதுதோத்திரம், சரப-27-31
இந்திரனதுவருணனே, சரப-3-13
இந்திரனுயிரங்கண்ணன், சரப-2
இந்திரனேப்பொருது போர்தொலைத்து வெரிந்பார்த்தவன், சூர்ப்ப-103
இந்து ✕ நுதல்; சூர்ப்ப-91
இந்துகாந்தம், சூர்ப்ப-80
இந்துரான்னுதல்-சீதை, அகத்-26
இந்துவிற்பொலிகின்ற இராமன், கரன்-157
இபத்தொகுதி, கரன்-30
இம்பர்-இவ்வுலகம், விராத-65
இமைப்பிலர்-தேவர், அகத்-44

இமையோர், அகத்-53
இமையோரிறை, சரப-24
இயக்கர், சூர்ப்ப-137
இயையுமேலிழைப்பல், சூர்ப்ப-44
இரக்கமென்றொருபொருள், அகத்-12
இரட்டி, விராத-6
இரத்தவேரி, கரன்-83
இரதம் × திரள்புளினம், கரன்-94
இரலையின்குன்றம், கவந்தப்-56
இரவலர், சடாயுகா-21
இராகவன் தனிமைவாளமரிற்றழுமே, சடாயுவு-6
இராமசரங்களின் செயல், கரன்-81, 82, 83
இராமசரத்தின்செயற்சிறப்பு, கரன்-167
இராமன் × மரக்கலம், அகத்-6: × மேகத்தின் கொழுந்து, அகத்-9
இராமலக்ஷ்மணர் × யானையினிரட்டை, கவந்த-58, இராமலட்சுமணர்க்குச் சடாயுவைக்கண்டது இறந்த தந்தை மீண்டுவரக்கண்டதைப்போலுதல், சடாயுகா-31, இராமலக்ஷ்மணரின் சிறப்பு இராவணனிடம் சூர்ப்பணகைசொல்வது, மாரீச-52. இராமலட்சுமணரின் திருமேனியழகும் சிறப்பும், சடாயுகா-13-15

இராமன் அஞ்சனவண்ணனே, சடாயுவு - 142: புண்டரீகத்தடங்காடுபூத்துக் கொண்டலொன்றுவந்திழிந்தன்ன கோலத்தான், சடாயுவு - 149: மேகவுருவன், விராத-24: மன்மதன் முதலியோரல்லன், சூர்ப்ப-12: அறம்நிறுத்த அராவணைதுறந்து தரைநின்றவன், விராத-31: அரக்கர் சினக்கானவனலையிக்கும் வானமழை, அகத்-45: அரக்கர் விடவேர் முதலறுப்பான் வந்தமருத்துவன், அகத்-44: அரக்கர் குலந்தொலைப்பான் றோன்றினன், சூர்ப்ப-135: கலைகளின் பெருங்கடல் கடந்தகல்வியான், கரன்-109: சிவன்முதலோர் ஒன்றுகூடினின்றன்னவுருவோன், சூர்ப்ப - 132, இராமன் அகத்தியனைச்சேர்தல் யாவர்க்கும்தன்று, அகத்-34

இராமன் அரக்கர்சேனையுட்டோன்றுதல் × இருளிடைவிளக்குதோன்றுதல், கரன்-114
இராமன் அனிகவெஞ்சமத்தேகத் தனித்திருந்ததையல் × உயிர்போகத் தான்தனித்திருந்தவுடல், கரன்-187
இராமன் 'எம்பெருமான் இறைவ' என்று சடாயுவை விளித்தல், சடாயுகா-34, 45
இராமன்கண் துயிலில்லா மையால் தம்பி கண்போலுதல், அயோமு-5
இராமன்கரம் × திசையோம்புமானையின்கரம், சூர்ப்ப-14
இராமன்கரம் கற்பகமரத்தையும் மலையையும் ஒவ்வாமைக்குக்காரணம், சூர்ப்ப-14
இராமன் கரஞ்தியோரொழிந்தபின் விளங்குதல் × பனிபோக்கியபின் கதிரோன் விளங்குதல், கரன-186
இராமன்கரைந்துசோரச் சேடரும் பாருளோருங் கரஞ்சிரஞ்சேர்த்தல், சடாயுவு-216
இராமன்கலங்கியபோது உலகிலுண்டான குழப்பம், சடாயுவு-160-162
இராமன் கோபாவேசத்தோடு கூறிய மொழி, சடாயுவு-203-206
இராமன் சடாயுவுக்காகப்புலம்பல், சடாயுவு-182-186
இராமன்சினமும் பிரபஞ்சத்தின்தடுமாற்றமும். சடாயுவு-201-202
இராமன் சீதையைதேடி வருந்துதல், அயோமு-8-24
இராமன்செய்தபரிகாசம், சூர்ப்ப-61
இராமன் தண்டகவனமுனிவர்க்குஅபயமளித்தல், அகத்-17
இராமன் தந்தைமுதலியோரைப்பிரிந்தும் உளனாவது இலக்குமணனைப் பிரியாதஉயிர்ப்பு, அயோமு-70
இராமன்திருமேனியொளி சூரியனொளியினும்மிக்கது, சூர்ப்ப-20
இராமன்தோள்-நீலமலையைநிகர்க்கும்: கன்மலையும்பொன்மலையும் அத்தோள்கட்குவமமாகா, சூர்ப்ப-15 × மந்தரம். சொரிந்தஅம்பு × மழை, கரன்-181

இராமன்பிறந்தகின்பயன் அரக்கர் வலிதொலைத்தல், அகத்-19
இராமன் மானைத்தொடர்ந்தவிசைவருணனை, மாரீச-242
இராமன்முகம் தாமரைப்பூவையொவ்வா: மதி கதிர்தேய்தலும் மறுவுடையதுமாதலால் அதுவும் ஒவ்வா, சூர்ப்ப-17
இராமன்முன் (பொரத்) தூடணன் வருதல் × கூற்றெதிராவிசெல்லுதல், கரன்-157
இராமன்முனியிற் பஞ்சபூதங்களும் பேரும், சடாயுவு-7
இராமன் மேல்அரக்கர் (பொருமாறு) திரண்டுவருதல் × சூரியன்மேல் இருள்திரண்டுவருதல், கரன்-28
இராமன்வந்தது அமரர்யாவரொடும் எவ்வுலகும் வந்ததாகும், விராத-4
இராமன்வருகையால் அத்திரிமுனிவன் தமதிலாம் வரவுகந்தனைய தன்மையன், விராத-4
இராமன் வனம்புகுந்ததனால் வேந்தன் வீதல் முதலியன நிகழினும் முனிவர்க்குதவ வழியுள்ளதனால் புண்ணியமே, அகத்-18
இராமன் வில் அம்புதொடுக்க வளைக்கையிலிறுதல், கரன்-175
இராமன்வில்லொன்றிற் கடிகைமூன்றில் கரன்முதல்வீரர் விண்ணிலேறினர், மாரீச-64
இராமன் றுங்கவரைப்புயத்தினிடைக் கிடந்த பேராசை, மாரீச-1
இராமனதுகோபத்தால் இலக்குமணனும் அஞ்சுதல், சடாயுவு-207
இராமனதுவடிவம்×குவளைக்காணத் திடையிடைமலர்ந்துநின்ற கமலம், சூர்ப்ப-6
இராமனழகு அணிகலனால் மேற்படாது×மணிக்கரசு வேறொருமணியால் விளங்காது, சூர்ப்ப-24
இராமனுதியர் தண்டகவனத்துமுனிவராச்சிரமங்களிற் பத்துவருடங்கள் கழித்தமை, அகத்-26
இராமனால் இமைப்பிலர் உய்த்தனர், தவத்தோர்உயிர்த்தனர், அந்தணரறத்தினெறிநின்றனர், அகத்-44
எவ்வம் வந்தழைப்பின் மேல் கீழ்ண்டங்கள் உடைந்து போம், சடாயுவு-8
இராமனுக்குப் புவனமூன்றுமேயன்றி மூப்பதுகோடியென்றபோதும் எதிரல, அகத்-24
இராமனுக்குரியசீதையை இராவணன் விரும்புதல்×எளியிற்புனிதரீயமவியை நாய்வேட்டல், சடாயுவு-69
இராமனுக்கேற்றமோர் திண்மையாரிலர், சடாயுவு-5
இராமனுஞ்சீதையும்கமலத்துக்கடவுள் உலகமூன்றிலிருந்திறத்தார்க்குஞ்செய்தவரம்புஇவரிருவர்:சூர்ப்ப-61
இராமனும் அகத்தியனும் பரஸ்பரம் கூறியமுகமன், அகத்-49-51
இராமனைக்கண்ட(நல்லுணர்வுபெற்ற) கவந்தன் × தாயைக்கண்ணுற்ற கன்று, கவந்த-51
இராமனைச்சூழ்ந்த சேனைத்தலைவர் (மாண்டுபிரிதல் × கதிர்முழுவியஊர் பிரிதல், கரன்-99
இராமனைச் சேனைத்தலைவர்வளைத்தல் × சிவபெருமானை முப்புரர் வளைத்தல், கரன்-97
இராமனைச் சேனையோடும் வளைத்த கரன் × இத்தலைவளைக்கும் எழிலிக்குலம், கரன்-163
இராமனைப்பிரிந்தசீதை × துணைபிரிந்தவன்றிற்பெடை, சடாயுவு-131
இராமனைவளைத்து அரக்கர் கணைமுதலியபடைகள் சொரிதல்×மலையை வளைத்தனவாய் மேகம்தூய தாரைகள்சொரிதல், கரன்-85 [191
இராமனைதடித்தவில் மேருமலை, மாரீச-
இராவணன், சரப-13
இராவணன் கண்ணியர்கண்ணின்வெள்ளத்திருந்தனன், மாரீச-23
இராவணன்கைப்பட்டசீதை×இராகுவின் வாய்ப்பட்டமதி,அயோமு-12
இராவணன்கொண்ட சன்னியாசிவேடம், சடாயுவு-20-23
இராவணன சூர்ப்பணகையினுறுப்பு அறுபட்டதற்காகத் தன்னைப்பழித்தல், மாரீச-58-61
இராவணன் சூர்ப்பணகையுறுப்பறுபட்டிருப்பதுகண்டு இது யாவர்செயலெனல், மாரீச-49

இராவணன்தன் பெருமை, மாரீச - 198, 199
இராவணன் மகுடத்தலைதுணித்தல்X மலைதுமித்தல், சூர்ப்ப-96
இராவணன்மார்பில்விடும் வாளி X குன்றிடைவிட்டபுங்கணை, சடாயுவு-71
இராவணன் மாரீசன்மேற்கோபித்தல், மாரீச-189
இராவணன் வேள்விதவங்களால் செல்வம்பெற்றமை, மாரீச-178
இராவணன்றேற்றம், சடாயுவு-41
இராவணனடியில்வந்துவிழுந்த சூர்ப்பணகை X குன்றினடிவந்து படிகொண்டல், மாரீச 45
இராவணனடியிற் சூர்ப்பணகை விழுகையில் மூவுலகத்துமுண்டான குழப்பம், மாரீச-46-48
இராவணனருளர், சூர்ப்ப-126
இராவணனுல்வணங்கப்பெற்ற சீதை X கறைவாள்பட ஆவிகலங்கினவள், சடாயுவு-73
இராவணனுற்கவர்ந்து செல்லப்பெற்ற சீதை சடாயுவீழ்ந்ததுகண்டு புலம்பல், சடாயுவு-129-137
இராவணனிடத்துவியர்வை X வெற்பிடைமதம்: சடாயுவு-26
இராவணனுக்குஞ் சடாயுவுக்கும் நடந்த போர், சடாயுவு-107-128
இராவணனுரங்குடைந்த வனங்கவாளிX மரங்குடைந்தவண்டு, மாரீச-93
இராவணனுள்ளதுணுல் இலங்கையில் விலங்கும் சூர்ப்பணகையைப்போன்ற துன்பமெய்தாமை, மாரீச-44
இராவணனெறிந்தசூலம் மீளுதல் X வேசையரின்பம் விரும்பிய வறியவரும், மனைவியில்லாவீட்டிற்குவந்த விருந்தும், யோகியரைச்சார்ந்தமகளிரின்நோக்கமும் மீளுதல், சடாயுவு-119
இராவணனைச் சிறைவைத்த வீரன் தோள்வனத்தை இரண்டுதோளொருவனன்றேமழுவினுலெறிந்தான், சடாயுவு-63
இருக்கு, மாரீச-117 [15
இருகூறிட்டதிங்கள்X எயிறு, கவந்தன்
இருகோளுஞ்சிறைவைத்தான், சூர்ப்ப-140
இருசிறையூதை X ஊழிவெங்காற்று, சடாயுவு-88
இருட்பிழம்புX நஞ்சு, அயோமு-7
இருது, மாரீச-99
இருதுயாவையுமகற்றுதல், மாரீச-102
இருதுவொன்றுமில்லாவிடம் துறக்கம்போலுதல், மாரீச-103
இருந்தையெனக்கனலும் காமப்பிணிக்கு மருந்து, சூர்ப்ப-118
இரும்புண்டநீர் மீளாது, சடாயுவு-104
இருவர்மானிடர்...மன்மதன்மேனியர் அறநிறுத்து நினைப்பினர், நிருதரை வேரறக்கொன்று நீக்குதுமென்றுணர் கொள்கையார், கரன்-4,5
இருவினையைத் திருவடியாற்றுடைத்தல், விராத-61
இருள் X அரக்கரால்தோன்றியதன்பம், இரவிX இராமன்: அகத்-16
இருள்X இராக்கதர், அயோமு-1
இருள் காலக்கனல் கார்விடமுண்டு கறுத்ததுபோலும், மாரீச-141
இருள்ஞாலம்விழுங்கல், மாரீச-140
இருளின்வருணனை, மாரீச-138
இருளேப்பழித்தல், மாரீச-140-141
இரைத்தல்-பொங்கியெழுதல், அகத்-23
இல்லாதனவில்லையுலகில், மாரீச-223
இலக்கணம்-லக்ஷணம், சடாயுகா-14
இலக்குமணன் X பரதன், சடாயுவு-148
இலக்குமணன் இராமன்றன்மையையெடுத்துக்காட்டிச் சீதைக்குத்தேறுதல்கூறுதல், சடாயுவு-5-11
இலக்குமணன் இராமனுக்குக் கண், அயோமு 67
இலக்குமணன் நீர்கொணருமாறு ஏவப்பெற்று அயோமுகியால் விரைந்துவாராமையால் பலவாறு சிந்தித்தல், அயோமு-63-76
இலக்குமணன் வந்தது X சிந்தியகண்வந்தது, அயோமு-83
இலக்குமணனுல் பிரிவு இடர்யாவும் தீருமெனல், அயோமு-89
இலக்குமணனைக் கவர்ந்துசெல்லும் அயோமுகி X இந்துவொடேகும்

மேகம், மந்தரம் பாற்கடலில்வந்தது, • இந்திரனூர்பிடி: அயோமு-59, 60
இலக்குவன், மாரீச-57
இலங்கைமாநிருதரெல்லாங்கேளொடு மறிதல், சடாயுவு-59
இலங்கையர் கோ, கரன்-7
இவ்-இவை, சரப-28
இவண், விராத-4
)வர்தல் - வீசிவிளங்குதல், சரப - 8: அணிதல், அயோமு-71
)வர்ந்த-நெருங்கிய, சடாயுவு-158
)ழுது-நெய், மாரீச-123
இழுதைச்சொல்-பொய்ம்மொழி, மாரீச-71
இழுதைநீரது - பேதைமைத்தன்மையது, சடாயுவு-194
இழுதையர்-வஞ்சகர், பொய்யர், அறிவிலர், கரன்-88
இழைத்தல்-அணிதல், பொருந்துதல், தொடுத்தல், சடாயுவு-211: செய்தல், சூர்ப்ப-94
இழைபுரையுந்தாம்பிரை, (இழை - அணிகலம். சடாயுகா-27
இளமை, சூர்ப்ப-48
இளவல், சரப-34
இளி-ஓரிசை, அயோமு-37
இளை-காரியபன்மனைவியருள்ஒருத்தி, சடாயுகா-29: இளையவன், கவந்த-27
இளையவட்கரசு அளிப்பென், சடாயுவு-32
இளையவன், சூர்ப்ப-67
இளையாலே அருளிலன், சூர்ப்ப-132
இற்பிறப்பழிதல்-ஒழுக்கங் குன்றுதல், சடாயுவு-70
இற்றவர் தலையிற்றனவென்றுஅறிதல் தேற்றலராய்ச் சரங்கோத்துவாங்குவார், கரன்-118
இற்றைலாம், விராத-62
இறக்கம்-மரணம், சடாயுகா-19
இறங்குதல் - விட்டிட்டு நீங்குதல், விராத-50
இறத்தல்-ஒழிதல், மாரீச-59
இறந்தார் பிறந்தாரெனவுயிர்பெற்ற மன்னன், மாரீச-155
இறந்துபாடு: சடாயுவு-18
இறந்துபோகினும் புல்லர்வலிதொலையாவிடின்நன்று, அகத்-19
இறவுபார்க்கின்றவிராவணன்,(இறவு-நீங்கிச்செல்லுதல்.) சடாயுவு-20
இறுத்தல்-முடித்தல், சடாயுகா-43
இறுதல்-ஒடிபடுதல், கரன்-44
இறுதி-மரணம், சடாயுகா-10
)செய்பகல் - உலகமழியுங்காலம், சரப-41
இறுதியிற்புவனிக்கியவெழுநி, கரன்-171
இறை-சிறிது, சூர்ப்ப-37: குலவன், கரன்-16
இறைஞ்சினர், விராத-3
இன்சுவை-சிருங்காரரசம், மாரீச-42
இன்பதுன்பம்-நல்ளத்தோடியைந்தவை, மாரீச-100
இன்னபோ இவ்வழி கோக்குமென்பதை யுன்னலர் கருதலுஞ்சுமந்துஞ்சியர் விருந்தையர், மாரீச-8
இன்னல்-துன்பம், அகத்-1
இன்னல்காத்து-துன்பம்வைட்டாமல்தடுத்து, அகத்-25
இன்னலிருக்கை - தழைக்குடிசை, மாரீச-171
இன்னலிருக்கை, விராத-68
இனியர், சூர்ப்ப-55
இனியவர், அகத்-1
ஈசற்குக்கண்மூன்று, சூர்ப்ப-12
ஈசன்-பரமசிவன், அகத்-40 [108
ஈடழிவு - பெருமைக்கேடு, சடாயுவு-
ஈண்டு, சூர்ப்ப-43
ஈதுயார், மாரீச 31
ஈமம், சடாயுவு-222
ஈர்தல்-பிளத்தல், சூர்ப்ப-113: வெட்டுதல், மாரீச-139
ஈரம்-குளிர்ச்சி, மாரீச-105, சூர்ப்ப-80
ஈரல்Xகமலம், கரன்-94 [-68
ஈரேழுலகுபாலுஞ் செல்வம், சடாயுவு
ஈறுறுநாண் முற்றியஞாயிறு போலுமுகம், அயோமு 44
உருதல்-இறந்துவிழுதல், விராத-9
உச்சவீரன், கரன்-139
உட்கி-அஞ்சி, சூர்ப்ப-73
உட்குதல்-அஞ்சுதல், கரன்-57
உடம்பில் இரத்தம்பொழிய விண்ணில் தோன்றுஞ் சடாயு X உதிரவாரிகட

லென்று நுகர்ந்துகான்றுவிண்ணிற் பொலிகின்ற மேகம், சடாயுவு-112
உடலமுமிகை, சடாயுவு-51
உடலிரண்டுக்குயிரொன்றுளனென், சடாயுகா-32
உடற்படும் - சம்மதிப்பான், அயோமு-58
உடற்பொறையாம் பீழை, சடாயுகா-32
உடற்றுதல்-(பிறவுயிரை) வருத்துதல், கரன்-49
உடன்று - கோபங்கொண்டு, சூர்ப்ப-121
உடுத்தநீராடையள்-பூமிதேவி, சூர்ப்ப-19
உடுபதிXகுடை, சடாயுகா-21, மாரீச-114
உடைதல்-உறுதிநிலை கெடுதல், கரன்-95
உடைமை-சொத்து, சடாயுகா-14
உடையிடம்-உடைமையாகக் கருதுகிறவிடம், சரப-33
உடைவான், கரன்-62
உண்டாட்டம்-விளையாட்டு, சூர்ப்ப-51
உண்டாட, மாரீச-231
உண்டாடுதல் - இன்பமனுப மாரீச-79
உண்மையான் - இலக்குமணன், சடாயுவு-5
உணங்குதல் - பதைத்தல், சூர்ப்ப-58: வாடுதல், சடாயு-72
உணர்வுக்குணர்வு, சரப-27
உணர்வுசெல்லாவறிவினை வினையினுக்கும்பிறவி, அயோமு-3
உணர்வுசோர்வு, விராத-34
உத்தமன், சரப-29
உதயகாலவருணனை, மாரீச-117-129
உதயம்-ஒருமலை, அயோமு-30
உதவுதல் - தருதல், சடாயுவு - 158: துணைசெய்தல், சடாயுகா-34
உதவுந்துணை, விராத-40
உதிரப்பொய்கைக்கு, ஈரல் கமலம், கரி முதலை, இரதம் புனிதம், குடர் பாசடை, கரன்-94
உதிரம்Xசெச்சை, விராத-9: X அருவிமாலை, கரன்-79
உதிரமாரி, சூர்ப்ப-97
உதிரியாறுஉவரியைப்புதுக்கினகரன்-120
உந்தி-விட்டு, விராத-22
உந்தியினுலகளித்தான், சூர்ப்ப-12
உந்துதல்-தள்ளுதல், விராத-42
உந்தை, சடாயுகா-40
உப்பு-அழகு (உப்புடையிந்து) அயோமு-100
உம்பர்க்கரசு, சரப-22
உம்பருக்கரசன்-தேவேந்திரன், விராத-13
உய்விடம்-துன்பம்நேருங்காலம், சடாயுகா-34
உயங்கும்-மயங்கும், சடாயுவு-130
உயர்குலத்துத் தோன்றினோர் ஒப்பழியச்செய்கில்லார், சூர்ப்ப-134
உயிர்க்குறுதிநோக்கின் கணவிரவாமுன் ஓடியொளித்தி, சடாயுவு-70
உயிர்காணுதல் - மரணதசையினின்று நீங்குதல், சூர்ப்ப-50
உயிர்கான்று - பெருமூச்சுவிட்டு, சூர்ப்ப-79
உயிர்கிடக்க உடம்பை விசும்பேற்றினோர் உணர்விறந்த கூற்றனோர், சடாயுகா-23
உயிர்த்தல்-உயிர்பெறுதல், அகத்-43: படைத்தல், கவந்த-55
உயிர்த்துணைவர், மாரீச-121
உயிர்ப்பினெருப்பு, அயோமு-43
உயிர்ப்பு Xதிரை, அயோமு-10
உயிர்ப்பு நெய்யுறுநெருப்பின் வீங்குதல், அயோமு-3
உயிர்விம்முதல் - பெருமூச்செறிதல், மாரீச-48
உயிருளைதல்-உயிர்வருந்துதல், சூர்ப்ப-73
உரகர் யமனைக்கண்ட நரகர்போல் நடுங்குதல், மாரீச-11
உரங்களானடர்த்தார், கரன்-20
உரம்-வலிமை, சூர்ப்ப-14
உரவோன், கரன்-20
உரற்றுதல்-ஒலித்தல், அயோமு-79
உரற-ஒலிக்க, விராத-24
உரறுதல்-பேரொலிசெய்தல், கரன்-39
உரி-தோல், விராத-15
உரிதல்-கழற்றுதல், சரப-36

உருக்கள்-உடல்கள், கரன்-126
உருக்கியசுவணம் X உதயத்துச்சிசேர் சூரியன், சடாயுகா-2
உருக்கியசெம்பினுற்றநீர் X உள்ளே கொதித்துத்தானேயடங்கிய மாரீசன், மாரீச 201
உருக்கு-உயர்ந்த இரும்பு, மாரீச-176
உருகியது-கரைந்தது, சூர்ப்ப-95
உருகெழுசீற்றம், (உரு-தாபம்.) சடாயுவு 65
உருட்டல்-புரட்டல்
உருடிரண்டெழுந்தேரொலி, கரன்-28
உருத்தெரிதல்-மிக்கெரிதல், சூர்ப்ப-112
உரும் X குரல், விராத-18
உருமெனவுரறுதல், கரன்-39
உருவநாறும் வான்சுடர் - வடிவத்தினின்று தோன்றுகின்றபளபளப்பு, சூர்ப்ப 58
உருவுதல்-உறையினின்று வெளியெடுத்தல், விராத 35
உருவெளித்தோற்றத்துச்சீதையை இராவணன் தன்நோயைப்பொருது சீதைவந்தாளெனல், மாரீச-146
உருவெளித்தோற்றம் தோன்னெறித்து, மாரீச-151
உருளுடைநேமி, அகத்-16
உரைகடந்தான், சூர்ப்ப-123
உலகம் துறக்கம்போல் தோன்றுதல், மாரீச-102
உலகமுழுதுள்ள வீரர்த்தலையையறுத்தாலும் தங்கையறுப்பிழந்ததனால் இழந்த மானம் மீண்டுபெறமுடியாது, மாரீச-59
உலகமோதும்வழக்கு, அகத்-41
உலகியாவையு மெவ்வுயிருந்தான. சரப-15
உலகின்வான்கிடந்தது போல்பவன், சடாயுவு-175
உலகு நாழி: அண்டம் அளவுகருவி; நான்முகன் அளப்பவன், சரப-29
உலகுமூன்றையு முடைமையாக்குறு மிலக்கணம், சடாயுகா-14
உலகெலாமுலையச்சிரித்தல், கரன்-74
உலப்பு-அழிவு, கரன்-46
உலவை-உலர்ந்தமரம், அகத்-4
உலை-உலக்களம், கரன்-102
உலைதல்-சஞ்சரித்தல், மாரீச-136
உலைத்துசாய்தல் - நடுங்கித்தளர்தல், கரன்-112
உலையுற்றவேலை வாளை வென்றகண்ணர், மாரீச-72
உலையுறுதீயெனவுயிர்த்தல்,சூர்ப்ப-99
உலவு-திங்கு, மாரீச-2
உலவுறுதல்-துன்பமடைதல், அகத்-39 [36
உவகைவேலையேழுலகெய்தல், அகத்-
உவணவண்ணன் அறஞ்சிவணதன்ன சிறையினன், விராத 38 (உவணவண்ணன்-கருடன்)
உவமைநீங்கியதோன்றல், அகத் 31
உழக்குதல்-வருத்திப்பழகுதல், அகத்-41
உழலுதல் - அலைதல், அயோமு-35: முயன்றுசெய்தல், மாரீச-2
உழுவை-புலி, விராத-10
உழுவை, அரி X சேனைத்தலைவர்: (சிற்றத்திலுவமை:) கரன்-49
உழை-இடம். சூர்ப்ப 36
உழைத்தல்-மிகவருந்துதல், கரன்-95: வருத்தந்தன்மையைப் பெற்றிருத்தல், மாரீச-250
உழையர் - அருகிலுள்ளஏவலாளர், கரன-23
உழையள்-அருகிலிருப்பவள்,சூர்ப்ப 5
உள்குதல்-நினைத்தல், சடாயுவு-130
உள்ளத்தின்பெற்றி, சூர்ப்ப 47
உள்ளத்துறைகுவான், சடாயுகா 45
உள்ளுறுதல்-மனத்திற்பொருந்துதல், சடாயுவு-148
உளங்கோடலிழைத்தாள், சூர்ப்ப-140
ழுத்தல்-மனம்ஆராய்தல், மாரீச-225
உளர்தல்-ஒலித்தல், அயோமு-6
உளுக்குதல்-உடல்நெளித்தல், அசைந்துசெல்லுதல், கரன் - 87: சிதைதல், விராத-25
உளை-பிடரிமயிர், கரன்-157
உளைந்த-வருந்திவிழுந்தன, கரன்-76
உளைவன-துன்பந்தருவன, சூர்ப்ப-67
உளைவு - வருத்தம், கவந்த-8: சடாயுவு 120
உற்பாதம்-பகலில்விண்ணின்றுநட்சத்திரம்விழுதல் முதலியன:விராத-28

உற்ற-உவமவுருபு, விராத-13
உறக்கமுற்றுணவுணர்வுநீங்குதல், சடாயுகா-19
உறவு, சூர்ப்ப-38
உறுவல்-துன்பம், சடாயுவு-183
உறுவதுதெரிவோர் - எதிர்காலவரலாறுணர்ந்தவர், சரப-43
உறையுள், சரப-34
உன்னருள்சுமந்ததனால் அனைத்துலகும்வென்றனன், அகத்-50
உன்னருளெய்தியஎன்னின் தவம்முற்றினாரியாருளர், அகத்-30
உன்னி - நினைத்து, சடாயுகா - 10, சூர்ப்ப-23
- எண்ணிக்கணக்கிடுதல், கரன்-38
ஊக்கி-வலிமைகொண்டு, சூர்ப்ப-94
ஊங்கில்-ஊன்றநோக்கினால், சூர்ப்ப-53
ஊசல் - தடுமாறுகின்ற கருத்து, சூர்ப்ப-47
ஊசிவேர், சடாயுவு-42
ஊடல், விராத-64
ஊதை-காற்று, சடாயுவு-88
ஊதை யுள்ளமுருவச் செல்லுங் கதி, மாரீச-241
ஊர்-பரிவேஷம், சரப-9
ஊர்க்குருவி, சடாயுகா-27
ஊருவிற்றோன்றியவுருப்பசி, மாரீச-22
ஊழ்வினையீது, மாரீச-177
ஊழி-வெகுகாலம், விராத-65
ஊழிநெருப்பு × புறத்துவிரிகூழையளான அயோமுகி, அயோமு-45
ஊழிப்பேர்ச்சியுள்கருங்கடல்வருவது, அயோமு-82
ஊழிமுதல்வன், விராத-41
ஊழியெறிகால்ஓங்கல் × கணைகளால் நூறப்பெற்றுஅற்ற ஆழிபுரவியாள், கரன்-105
ஊழிவெங்கனலுற்றவள் × காமத்தீயிலகப்பட்ட சூர்ப்பணகை,சூர்ப்ப-85
ஊற்றம்-ஊன்றுகோல், ஆதாரம், மாரீச - 66: முயற்சி, சடாயுவு-219: ஊற்றவலிமை, சூர்ப்ப-27
ஊறினசேனை - வலிமைபொருந்தியசேனை, கரன்-38
ஊறு-ஸ்பர்ஶம், மாரீச-161: அயோமு-97
ஊன்-மாமிசம், அகத்-45
ஊன்விடுதல் - உடலைவிட்டிடுதல்,
ஊன்றல்-உள்ளிருத்தல், அயோமு-7
ஊன்றினகண்ணைப் பறிக்கமுடியாமை, சூர்ப்ப-27
ஊன்றினர்-நிலைநின்றவர், கரன்-154
ஊனுடையிவன், கரன்-68
எஃகம்அற்றுவிழுதல் × பகலேநெடுமீன் விண்ணிடை நின்றுவிழுதல், விராத-28
எங்கடாபோவது, சடாயுவு-87
எஞ்சித்தீதல் - ஒடுங்கியழிதல், சடாயுவு-124
எஞ்சித்தீர்தல் - குறைந்தழிதல், விராத-23
எஞ்சுதல் குறைதல், சூர்ப்ப 76
எண்-மனம், விராத-44
எண்கையரெழுகையர், கரன்-46
எண்டகுகுணம்-எண்ணத்தக்க குணம், அஷ்டகுணமுமாம், அகத்-51
எண்டிசையுஞ்சுவர், கவந்த்-46
எண்ணருளுதல் - திருவுள்ளத்திலருள் புரிதல், சூர்ப்ப-35
எண்ணிச்செய்தலமைதி, மாரீச-236
எண்பிறங்குதல் - மனத்தில் நீங்காதுவிளங்குதல், சூர்ப்ப-60
எண்மை எளிமை, சடாயுவு-5
எண்மையன் - எளியதன்மையைமேற்கொண்டவன், சடாயுவு-219
எதிர்கிடைத்தல் - எதிரேகிட்டுதல், கரன்-110
எதிர்கொண்டு, சரப-14
எதிர்தல் எதிர்செல்லுதல், கரன்-171
எதிர்விலங்குதல் - குறுக்காகநிற்றல், விராத-19
எதிர்விழித்தல்-எதிரே காணப்படுதல், மாரீச 226
எதிருற்ற எதிர்த்துச்செய்த, விராத-9
எந்திரத்தேர், சடாயுவு-92
எந்திரம் - சக்கரம், பொறியுமாம்: கரன்-181
எம்பிரியூளையாவதேவலி, அயோமு-88
எம்மடிமைத்தொழினன்று, கரன்-12
எம்மான், மாரீச-220

எம்மையோரனைவரும் - எவ்வுலகத்தவ ரும்; சடாயுவு-48
எமரின்யார்தவமுயன்றனர், விராத-4
எய்வு-மெலிவு, விராத-35
எயிற்றினேந்துதல், விராத-58
எயிறலைத்தல்-பற்களைக்கடித்தல், சடா யுவு-2
எயிறிற்றபின் அராவழன்றதனைய வா ற்றலான், கரன்-184
எயிறுடையரக்கி, சூர்ப்ப-29
எரி × ஓதி, சூர்ப்ப-93
எரிக்கடவுள், மாரீச-18
எரிதல்-வினங்குதல், விராத-13
எரிபுகுதல், சரப 38
எரிமுகத்தினீந்தநெய், மாரீச-117
எரியோன்-சிவபெருமான், சரப-31
எருவை, சடாயுகா-33
எருவைக்குறை × மாலவரை, சடா யுவு-121
எருவையின்றலைவன், சடாயுவு 19
எல் - சூரியன், சரப-13: சூர்ப்ப-22: சூரியனொளி, கரன்- 108: ஒளி, சடாயுவு-115
எல்லி-இருள்: ('எல்லியங்குவனோ') சூர் ப்ப-6
எல்லொன்றுகமலம் × கண், மாரீச-64
எவ்வம்-துன்பம், சடாயுவு-8
எழில்-கிளர்ச்சி, கரன்-43
எழிலி-மேகம், கரன்-163
எழு × கை, கரன்-19
எழுகுரல், மாரீச-36
எழுதருமேனி, சூர்ப்ப-48
எழுதுபாவையனையாள், விராத-41
எற்ற-மோத, விராத-31
எறித்தல்-ஒளிவீசுதல், சடாயுவு-203
எறிதல்-பகையழித்தல், கரன்-52
எறுழ்வலி, சடாயுகா-10
என்குரலாலிசைத்தழைத்தது, மாரீ ச-250
என்குறிப்பின்வழிநிற்றி, மாரீச-200
என்றுமில்லதோரழுகுரல், மாரீச-36
என்னும் - எவ்வளவும், சிறிதும்; சரப-15
என் னில்லிடைவந் தருந்தவ முடித்த னே, அகத்-49
என்னுயிரென்பதுமது, சூர்ப்ப-131
என்னைக்கரந்திலர், சடாயுகா-12
என்னைமகனைப்பெற்றதனற், சடாயு விறந்தான், சடாயுவு-217
என்னையே-வியப்புப்பொருளது, மா ரீச-30
எனதாணைவழி யேவல்செய், மாரீச - 199
எனின்-ஆதலால், மாரீச-251
எக்கம்-துன்பம், சடாயுகா-19
எகியவின்னலர், அகத்-23
எகினுய்-மங்கலவழக்கு, சடாயுகா-21 ('நடந்தனே'சடாயுகா-22 என்பதும்

எங்கி-இரங்கி, சூர்ப்ப-3
எண்-நிலைமை, சூர்ப்ப-46
எத்தவம் புரியவீகலான் பொருள்காத் தவன்புகழ் × தேயுங்கற்பு.சூர்ப்ப-26
எத்து-தோத்திரம், அகத்-11
எத்துதல்-துதித்தல், சரப-32
எத்துவாய்மையிராமன், கரன்-17
எதமூள்வது-மாரீச-252
எதி-படைக்கலம், விராத-22, கரன் -36
எது-காரணம், அயோமு-18
எந்துதல்-பெருமை, அகத்-18: மலை × தோள், சூர்ப்ப-54
எந்துதல்-தாங்குதல், சடாயுகா-37
எமுற்று-மகிழ்ந்து, சடாயுவு-208
எமுற-களிப்படைய, சூர்ப்ப-22
எமுறுதல்-களிப்படைதல், அகத்-34
எமுறுமுயிர், (எம்=ஏமம்: இன்பம்) சூர்ப்ப-45
எயினுமளவு, மாரீச-168
எவமென் பழிதரனென்னே, சடாயு வு-86
எவரும், சரப-43
எழுமெட்டுமானமுகத்தர், கரன்-46
எழுலகினுக்குமாருநாயகன, கரன்- 173
எழுலகு, அகத்-53
எழேழ்நிலைவகுத்த வண்டப்பெருங் கோயிற்கும் அழகுசெய்யும் மண்ட லங்கண் மூன்றின்மேற் புண்டரிக மொட்டு, கவந்த-46
எழை-பெண், சீதை: சரப 34
எழைமைதுடைத்தல்- அறியாமையை ப்போக்குதல், சூர்ப்ப-35
எழையர்-அற்பர், சடாயுவு-6

ஏற்ற-உணர்த்த, மாரீச-128
ஏற்றமுன்-எதிர்வந்தமுன், கண்ணிற் பட்டவுடனே, மாரீச-251
ஏற்றியநுதலன் - நெறித்தநெற்றியன், கரன்-132
ஏறியசெவ்வி-மிக்கஅழகு, சூர்ப்ப-24
ஏறுசேவகன், விராத-32
ஏறுதல் மேம்பாடடைதல், கரன்-40: மிக்குவருதல், கரன்-101
ஏறுநெறி-சன்மார்க்கம், மாரீச-55
ஏன்ற-எதிர்த்த, அகத் 24
ஏன்ரூய் - எதிர்த்தவனுனீ, சடாயுவு-185
ஏனகைதிலோத்தமை, சடாயுவு-44
ஏனம்-பன்றி, கரன்-32
ஏனமாய்மண்ணிடந்தான். விராத-60
ஐது-அருமை, அயோமு-63
ஐந்திணைநெறி - ஐந்திணைகளினிலக்கணம், ஐவகைநிலங்களின்வழி, சூர்பப-1
ஐம்பெரும்பாதகந்திரண்டுயிர்படைத்த பண்பிலுன் கவந்தன், கவந்த-16
ஐய-வியக்கத்தக்க, சூர்ப்ப-78
ஐயுண்மருங்குல், மாரீச-232
ஐயன்வல்ல னென்னுருயிர்வல்லன், மாரீச-248
ஐயோபோனுன், மாரீச-184
ஐராவதத்தின்மேலுள்ளஇந்திரன் × வெள்ளிமலைமீதுள்ள அண்ணல், விராத-6
ஐராவதம் வெண்ணிறமுள்ளது, சரப-6
ஒசிகொம்பு×சீதை, விராத-39
ஒதுங்குதல் - ஒடுங்குதல், மாரீச-93: தோன்றுதல், அயோமு-30
ஒப்பிறையும் பெறலரியவொருவன், விராத-61
ஒப்பு - சமமென்றுகொண்டு தொழில் செய்வது, மாரீச-175
ஒருங்குறநோக்குதல்-ஒருமுகமாகப்பார்த்தல், சூர்ப்ப-2
ஒருங்கும்உணர்வோர் - தத்துவஞானிகள், விராத-31
ஒருபகல்பழகினு ருயிரையீவர், சடாயுவு-13
ஒருமை-ஒற்றுமை, கரன்-43
ஒருவருஞ்செல்வம், சூர்ப்ப-56
ஒருவற்கொருவன் - ஆண்மகன், மாரீச-197
ஒருவன் இருநூறுஆளெனச் செருமுயல்வான், கரன்-134
ஒருவுதல்-நீக்குதல், சரப-43
ஒரேந்திழைதன்னுயர்க்குத் தகவிலேன், அயோமு-16
ஒல்-விரைவு,சூர்ப்ப-93:ஒலி,கரன்-30
ஒல்லை-விரைவு, சூர்ப்ப-27
ஒலியேறு-பேரொலி, விராத-24
ஒளிர்-விளக்கம், சூர்ப்ப-31
ஒளிர்தல்-விளங்குதல், விராத-9
ஒளிறுதல்-விளங்குதல், கரன்-155
ஒளிறுவேல், கரன்-21
ற்றுதல், சூர்ப்ப-99
ஒறுத்தல்-வருத்துதல், விராத-71
ஓக்கல்-மலை, கரன்-105: யானை, இருமடியாகுபெயர்,கரன்-23: குவியல், மாரீச-7
ஓங்குயர்வரை, சடாயு கா-9 [-183
ஓச்சுதல்-உயரவெடுத்து வீசுதல்,கரன்
ஓசைபிறத்தல், கரன்-24
ஓசையால் அத்திசைகுறித்துப்பார்த்தல், சூர்ப்ப-34
ஓட்டந்தாள், சூர்ப்ப-121
ஓட்டாய் - (வார்த்தையை) ஓடவிடாதே, அல்லது அறிவில்லாதவனே: வலியற்றவனே: சடாயுவு 103
ஓடியஅரக்கரைத் தூடணன் எதிர்த்தையெனுங்கூறுதல், கரன்-142 147
ஓடை, விராத-13
ஓதாதுணர்வார் - குறிப்பினுலறிபவர், சடாயுவு-80
ஓதிமம் சீதையின் நடையை யொவ்வாது, சூர்ப்ப-5
ஓதை-ஓசை, சரப-21
ஓந்தி, சடாயுகா-28
ஓம்புதல்-பாதுகாத்தல், அகத்-16
ஓமராமர், விராத-31
ஓய்வு-வலியழிவு, சூர்ப்ப-107: இளைப்பாறுகை, கரன்-58
ஓயாத-ஒழிவில்லாத, விராத-53
ஓலம்-ஆரவாரம், கவந்த-19
ஓவியம்×நிகைப்படைந்த சூர்ப்பணகை, சூர்ப்ப-27
ஓவில்வாழ்த்தொலி × கடன்முழக்கு, கரன்-161

ஒளி-வரிசை, சடாயுவு-64
கங்கபத்திரம் - ஓர்வகையம்பு, கரன்-151
கங்கம்-கழுகு, கரன்-170
கங்கு-இருள், விராத-14
கங்குலன்ன கரன், கரன்-190
கங்குற்முரம், மாரீச-118
கங்கைமுதலியகடவுட்கன்னியர், மாரீச-21
கச்சை, கரன்-150
கசேந்திரமோட்சகதை, விராத-49
கஞ்சம்-தாமரை, சூர்ப்ப-31
கஞ்சுகி = கஞ்சுகம்; கவசம், சரப-10
கஞலுதல்-சொலித்தல், சடாயுவு-222
கட்டம்-துன்பம், விராத-46
கட்டிய-பிடுங்கப்பெற்ற, கட்டப்பெற்ற, கரன்-162
கட்டு-உறுதிநிலை, சரப-8
கட்டுரை, கரன்-68
கடம்-யானையின் கன்னம், மாரீச-122
கடல்-தொகுதி (வானிக்கடல்), சடாயுவு-185
கடலகத்துள்ளவன்திரைக்குப் பரிதற்பாலனல்லன் × பிறவிச்சிறைப் பட்டவர் நோயுறு துயரெனநுட்கல் தோன்மையன்று, அயோமு-87
கடவுதல்-செலுத்துதல், விராத-30
கடவுள் அறங்காக்கக்கறங்கெனத்திரிபவன், விராத-50
கடவுள் தீயாரினுளித்து, விராத-54
கடவுள் பிறவிகடக்கும் புணை, விராத-52
கடவுள் பூதங்களிலுறைந்தாலும்அவற்றிற்கும் ஆதாரமாயிருத்தலால் அவைபொறுக்கும், விராத-48
கடவுளடியனவே மதம், விராத-54
கடவுளாகிய உலகின்முழ் எப்பொருளும் அறிவான், விராத-55
கடவுளின்பாதம் உலகெல்லாம் விரிந்திடின் அவனுருவம் எப்படியோ, விராத-48
கடவுளுக்கு இறப்பும் பிறப்பும் விளையாட்டு, விராத-51
கடவுளுக்குப்பகைநண்பில்லையாயினும் அடைந்தாரையளிப்பன், சரப-28
டவுளுக்குப்பெருமாயைவிளையாட்டு, விராத-54
கடவுளுக்கு முதலிடையோடிறில்லை' முன்னில்லை பின்னில்லை. சரப-28
கடிகமழ்சாலை, சூர்ப்ப-57
கடிதடம்-அல்குல், அயோமு-46
கடு-விஷம், மாரீச - 135: × கொடிய சேஷைத்தலைவர், கரன்-96
கடுகுதல்-விரைதல், சூர்ப்ப-93
கடுவுண்டுயிரின்னிலைகாணுதல், சடாயுவு-97
கடைக்கால்-இறுதிக்காலம்.
கடைகுழன்றிடைநெறிகுஞ்சி, சூர்ப்ப-23
கடையிட்ட, விராத-18
கடையிலாஞானம், சரப-26
கடையுறுதல்-முடிவடைதல், சரப-35
கண் × மாழை, பானல், வேல், காவி, மாரீச-93: வாள்: சரப-12: தாமரை, சரப-24
கண்கள் கஞ்சத்தினளவிற்றேனுங்கடலினும்பெரிய, மாரீச-70
கண்கள் புண்துளங்கியனஅனல்பொங்குதல், விராத-8
கண்களினின்று நீர்வடிதல் × குவளையினின்றுதேன்வடிதல், மாரீச-120
கண்குன்றிகிர்ப்ப, அயோமு-49
கண்(சோகதோகபங்களால்)நீரும்நெருப்புங்காலுதல் × காரிடை மாரியுருமின் கனலொடு பிறத்தல்,மாரீச-65
கண்டகர்-துஷ்டர், மாரீச-180: கரன்-124
கண்டது-விரும்பியன், மாரீச-167
கண்டம்-கழுத்து.துண்டம்,கரன்-185, விராத-28
கண்டார்காதலிக்கும் அழகு விடம்,சூர்ப்ப-131
கண்ணன்-இராமன், சடாயுகா-41
கண்ணிடைஒளி-கண்கூசும்ஒளி, சூர்ப்ப-57
கண்ணிமைத்தல்- அச்சக்குறி, கரன்-112
கண்ணிமைபொருந்த ஆயிரங்கற்பங்கள் போக்குவான் கங்குலினீறுகண்டிலன், அயோமு-18
கண்ணினீரிருஞ்முகங்கழுவுதல், சடாயுகா-28
ருங் காட்சியாள், கரன்-6

கண்ணீர்குருதியோடு நிலத்தைச்சேரு க்குதல், சூர்ப்ப-115
கண்ணீர்நிலனுறப்புலர்கின்றுள், கர ன்-64
கண்ணீருகுத்தல் × (கானந்) தேனுகுத் தல், (மலை) அருவிசிந்துதல், அயோ மு-2
கண்ணீளியவல்ல நெடிதுமார்பு, சூர்ப் ப-16
கண்ணுதல்-செய்யநினைத்தல், சூர்ப்ப- 140: கருதுதல், சடாயுவு-213
கண்ணெனைத்தெரிந்தசெந்தாமரை கங் குற்போதுங் குவிந்திலாமை,அயோ முகி-4
கண்ணேட்டம், மாரீச-139
கண்பனிசோர, சூர்ப்ப-3
கண்பால்-கண்ணெதிர், மாரீச-150
கண்மலர்கானிற்படர்கண்வண்டு, சரப- 4
கண்மனமெனக்களித்தல்,சடாயுவு-28
கண்மேலொளிதொடர்தல், சடாயுவு- 122
கண்வளராய் - கண்வளர்பவனே! சர ப-28
கணவரைத்தழுவியமனைவி × பிணைக ளைத்தழுவியபவளவல்லி, மாரீச - 121
கணம்-கூட்டம், சடாயுகா-28
கணிச்சி-மழுவாயுதம், அகத்-41
கணிதம், விராத-18
கணிதமாக்கள்-காலக்கணக்கர், மாரீச- 129
கணை-அம்பு, விராத-32: × எரி, விரா த-34
கணைத்தூணி, அகத்-20
கணை தீயுருவ, கால்விசைய, செவ்வியு டன் வெவ்வாயின, கரன்-172
கத்துரு, சடாயுகா-29
கதம்-கோபம், விராத-21
கதழ்தல்-மூளுதல், கரன்-81
கதழ்வம்-அக்கினி, விராத-45
கதழெரி-உக்கிரமானஅக்கினி,சரப-42
கதி-நடை, விராத-36
கதியுறுபொறி - விரைவுபொருந்திய இந்திரியம், மாரீச-86
கதிர் × செம்மணி, சரப-10
கதிர்வாள், சூர்ப்ப-96
கதிரவன்கலங்கிநீங்க விண்டனினின் ற கரன், கரன்-67
கதிரவன்சிறுவனுன கனகவாணிறத்தி னுன், கவந்த 57
கதிரிளங்கொங்கை, சூர்ப்ப-78
கதிரினுயகன், சூர்ப்ப-20
கதுவ-பற்ற, விராத-21
கதுவுதல் - சுவுதல், சென்றுபற்று தல, சரப-24
கந்தம் நறுமணம், சூர்ப்ப-91
கந்தர்ப்பர், கரன்-47
கப்பணப்படை, கரன்-35
கபந்தஸ்தோத்திரம், கவந்த-42-50
கம்-மேகம், சடாயுவு-45
கம்பம்-கட்டுத்தறி, நடுக்கம், சரப-22
கம்பித்தல் நடுங்குதல், மாரீச-186
கமண்டலு, அகத்-48
கமித்தல்-பொறுத்தல், அயோமு-57
கமையாள்-பொறுமையையுடையவள், அயோமு-76
கயம்-குளம், மாரீச-18
கரக்கருங்கொடுந்தாழில் - வெளிப்ப டையாகச்செயகின்ற கொடுந்தா ழில், அகத்-6
கரங்கிடந்தகொம்பொடிதல், மாரீச-93
கரண்டம்-நீர்க்காக்கை, சடாயுவு-63
கரத்தல் மறுத்தல், அயோமு-42
கரதூடணர், சூர்ப்ப-113
கரபத்திரம்-வாள், மாரீச-133
கரம்-கை, விராத-29
கரமிறுத்தல்-கப்பங்கட்டுதல், சூர்ப்ப- 124
கரவல்-ஒளித்தல், சடாயுகா-21
கரன், மாரீச - 183: கரன் அரனே அரியோஅயனேஎனும் ஆற்றலான், சூர்ப்ப-107: காற்றினிலுங் கனலி னிலுங் கொடியான், சூர்ப்ப-143: சங்கரற்குந்தப்பருந்தன்மையான், கரன் - 22: கரன் குருதியோதமதி லுள்ளான் × மந்தரம் நெடுங்கடலி னிடையுள்ளது, கரன்-169: கரன் தேரைச் சேனைவீரர்சூழ்ந்திருத்தல், × மேருவைக் கடல்சூழ்ந்திருத்தல், கரன் - 52: கரன்யுத்தம், கரன் - 162-185
கராம்-முதலை, விராத-49
கரி, விராத-6

கரிகொல்லிய வந்ததன்மீதுண்டை கடாவுதல், சடாயுவு-97
கருஞாயிறு × இராமன், சரப-24
கருணைக்கெல்லாகிலயம், சரப-27
கருத்து-கருதப்படும்பொருள், அகத்-42
கருப்பூரத்திலும் பஞ்சுத்திரியிலும் பற்றவைத்து விளக்கங்காட்டுதல், ... ரீச-18
கரும்புண்டசொல், சடாயுவு-104
கருமகன்-கருமான், கவந்த-14
கருமம்மூவகை, கரன்-56
கருமேகத்துவில் × இந்திரனதுமேனியில் நவரத்தினங்களுமிழைத்துப் பலநிறத்தனவாய் விளங்கும் ஆபரணம், சரப-11
கருவறுத்தல், சூர்ப்ப-111
கருவி-படைக்கலம், கரன்-150
கருவிமா - கல்லணைபூண்டகுதிரை, கரன்-79
கரையறுதிரு, மாரீச-35 [ப்ப-124
கரையிறந்தோர் - அளவற்றவர், சூர்
கல்லீரும்படை, சூர்ப்ப-113
கல்லென்றவொலி, மாரீச-64[ன்-174
கல்வி - சடாயுகா-5: மந்திரபலம், கர
கலம் விரைவிற்செல்வதில் இலக்குணனுக்கு உவமை, சடாயுவு-148
கலாம்-கலகம், கோபம், சூர்ப்ப 141
கலிகாலம், விராத 14
கலிமா-குதிரை, சடாயுவு-175
கலுழன், சடாயுகா-10, சடாயுவு-89
கலை-கதிர், சூர்ப்ப-22: ஆடை, மாரீச-41
கலைதல்-நிலைகுலைதல், சூர்ப்ப-22
கவசம், சரப-26
கவந்தபந்தக்களிநடம், அகத்-20
கவந்தபந்தம், (பந்தம்-பிருந்தம்: கூட்டமென்றுபொருளுள்ள வடசொல்) கரன்-87
கவந்தமாடுபவை × அரம்பையர் நாடகத்தொழிலினை நடித்துக்காட்டுவன, கரன்-119
கவந்தன் கண்கள் × மேருமால்வரையிற் சுயிற்றிய வெயிற்சுடரிரண்டு, கவந்த-12
கவந்தன்கை × யுகாந்தகாலக்கடல், கவந்த - 6: × மந்தரமலையைச் சுற்றிய வாசுகியாகிய கடைகயிறு, கவந்த-13
கவந்தன்சாபவரலாறு, கவந்த-40
கவந்தன்தன்வரலாறு, கவந்த-53
கவந்தன்மூக்கு × கருமகன் தூருத்தித் தூம்பு, கவந்த-14
கவரியுங்குடையும் × நுரை, கரன்-120
கவன்றனன், சரப-25
கவி-செய்யுள், அகத்-41
கவிகை-குடை, கரன்-48
கவிஞுஞ்சிலை, சடாயுவு-69
கழல்-பாதம், விராத-42
கழல் அரக்கராதியோர் மகுடநண்ணலால் தேயுந்தோறும் ஒளிமிகுதல், மாரீச-6
கழிந்துபோதல்-இறந்துபடுதல், கரன்-9
கழு-சூலாயுதம், விராத-6
கழுகின்வேந்து, சடாயுகா-1
கழுது-பேய், கரன்-87
கழை, சடாயுகா-29
கள்-மது, மாரீச-98
கள்வள்ளம் தும்பி உள்ளம் என்பன ஒருவழிகிட்டுதல், மாரீச-37
கள்வி, சூர்ப்ப-68
கள்ளமாயவாழ்வு, விராத-63
கள்ளமாயை, சடாயுவு-142
கள்ளவாசகம், சூர்ப்ப-69
களங்கோடல், சூர்ப்ப-140
களி-களிப்பு, கரன்-88
களிகள் × யானைகள், மாரீச-122
களித்தசெழிப்புற்ற, சடாயுவு-223
களித்தன-மகிழ்ந்துகூத்தாடின, கரன்-87
களிறு, விராத-10
களைகண்-பற்றுக்கோடு, ஆதரவு, சடாயுகா-34
கற்பகம் × கை, கரன்-17
கற்பகம் கொடைக்குணமுடையது, சடாயுகா-21
கற்பகமுயிர்த்தகாமவல்லி, சூர்ப்ப-33
கற்பகதருகண்ணியதருதற்கு ஒத்தது, சவரி-1
கற்பங்கள் பகல்போலக் கடிதுசெல்லக்கண்டுளான், சடாயுகா-8
கற்பம்-பிரமனுயுள், சரப-18
கற்பமைந்தார் தம்பெருமை தாம் கழறூர், சூர்ப்ப-127 [135
கற்பழியாமையென்கடமை, சடாயுவு-

கற்பாறை, அகத்-2
கற்பிணுள்பால் மோகம்படைத்தான், சடாயுவு-120
கற்பினுக்கணியினை யிராவணனுக்குதல், சடாயுவு-26
கற்பு, விராத-5
கற்பெனுமிருஞ்சிறை பூவைக்கு இரு[சரப-3
தது, சடாயுவு-144
கற்றை-திரட்சி, விராத-15: தொகுதி,
கறந்தாலெனநீர்தருதல், மாரீச 155
கறி-உணவுக்குத் துணையாகத்தின்னும் பண்டவகை, சூர்ப்ப-74
கறை-கோபம், மாரீச-136
கன்மனத்தி, சூர்ப்ப-69
கன்றி-மனம்வெதும்பி, விராத-3
கன்றைப்பிரிந்தஆ X இலக்குவனைப் பிரிந்த இராமன், அயோமு-84
கன்னக்கனிதல், மாரீச-137
கன்னங்களின் காணுதல் - காதுகளிலுற் கேட்டறிதல், மாரீச-224
கனகமிதுவாலுற் காரியமென், மாரீச-230
கனந்தலைவருங்குழல், மாரீச-42
கனம் - திணிவு, மாரீச-142: மேகம், கரன்-54: சிறப்பு, சடாயுகா-16
கனலிலழியுங்கொடி X இராவணன் கையிலகப்பட்டு அவன் கடிதுதேர் விடுஎன்றுசொல்லக்கேட்ட சீதை, சடாயுவு-76
கனலி, சூர்ப்ப-58
கனலுறுதல் - தீயிடையகப்படுதல், சூர்ப்ப-85
கனவினுமூடறீர்ந்திலர், மாரீச-119
கனைகடல், சடாயுகா-17
காகுத்தன், கரன்-91, சடாயுவு-38
காசிபன் தக்கன்புதல்வியர்பதின்மூவரைமணந்தான், சடாயுகா-25
காசினி - பூமி, சரப-24
காட்சி-தோற்றம், சடாயுகா-15
காட்டெரியிற் றெடருஞ்சிதைX தாமரைவனத்திடைத்தாவுமன்னம், சடாயுவு-14
காடை, சடாயுகா-27
காதல்-வருத்துகை, விராத-72: காமநோய், சூர்ப்ப-89
காதல்வடிவினனுடன்வாழ்வதே வாழ்வு, சூர்ப்ப-90
காதலி-மனைவி, சரப-42
காதலித்து, விராத-18
காதலிற்கலந்தசிதை, சூர்ப்ப-54
காந்தம்-சந்திரகாந்தம், மாரீச-157
காந்தர்ப்பம்- மறைகள்வகுத்தகூட்டம், சூர்ப்ப-54
காந்துதல்-கருகுதல், சூர்ப்ப-80:வெதும்புதல், சடாயுகா-37
காப்பு-தடுத்தல், சடாயுவு-22
காம்பறியுந்தோளாள், சூர்ப்ப-139
காமக்குணம், மாரீச-113
காமத்தாற் குளிக்கும்நீருங் கொதிக்கும், சூர்ப்ப-79
காமத்தீச் சீலத்தாலவிக்கப்படுவதன்றிச் செய்யலாவதுஉண்டோ, மாரீச-104
காமதாபம்X மொய்கொள்தீ, சூர்ப்ப-[78
காமநோய் X மதியிலிசெய்தகீமை, (வளர்தலிலுவமம்.) மாரீச 86
காமநோய் (அறிவைக்) கரக்கும், விராத-66
காமம் அனல்போல மெய்யிடைத்திண்டகிற்பது, சூர்ப்ப-88
காமமாவது, சடாயுவு-119
காமரம்-ஓர்பண்ணி, மாரீச-69
காமவல்லியாங்கண்ணி, சூர்ப்ப-39
காமவிடம், மாரீச-196
காமன் இராமலட்சுமணரின் கழற்பொடிக்கும்ஒவ்வான், சடாயுகா-13
காமனுக்குஅஞ்சினவள் நாகம் வாழ்முழைசேர்தல், சூர்ப்ப-81
காமனென்றொருவன் செய்யும் வன்மை, சூர்ப்ப 45
காயம்-உடல், அகத்-38, கவந்த-52
காயம்வேறுகிக்கருமமும்வேறுதல், மாரீச-244
காயெரி, சரப-37
காயெரியனையகள்ளவுள்ளத்தாள், சூர்ப்ப-65
கார்த்தவீரியனைப் பரசுராமன்வென்றவரலாறு, மாரீச-195
கார்முகத்தோடு கடைப்புருவங் குனித்தான், சடாயுவு-108
கார்முகம்-வில், கரன்-132: X நாகம், சடாயுவு-105
காரிழைதல் X கணைகள்சிந்துதல், கரன்-131

கால்-காற்று, பாதம், கரன்-33
கால்கிளர்தல் - காற்றிஞற்பொங்கியெழுதல், கரன்-25
கால்பறிந்திடுதல் - வேரற்றுவிழுதல், கவந்த-5
கால்வருடல், சடாயுவ-44
காலக்கூற்று, சூர்ப்ப-104
காலநேமியைத் திருமால் தலைகீக்கிய கதை, கவந்த-19
காலபாசம், கரன்-11
காலமீனின் வேந்தன், மாரீச-157
காலவேற்கரன், சூர்ப்ப-97
காலன் கடிகைகூறுதல், மாரீச-17
காலனுங் காலனென்றுயிர்க்குங்காட்சி, கரன்-42
காலிஞல்மண்ணளவிடுவலத்தர், கரன்-40
காலனும் உயிர்கவர்ந்து (கிரமமிருதியால்) மெய்ம்மறத்தல், கரன்-154
காலெனக்கறங்கெனச் செல்லுமார், சடாயுவ-171
காலேத்தீபம்✕அன்பரைப் பிரிந்துறை குலப்பேதைமார் (ஒளியிழத்தலினுவமம்), மாரீச-123
காவதம், சடாயுகா-1
காவல்-பாதுகாப்பு, மாரீச-129
காவல்செயமைச்சர் கடனீகடவதுண்டோ, மாரீச-199
காவலினின்றிமையாதவன், அயோமு-76
காவற்றிண்கற்பு, சூர்ப்ப-127
காவி-நீலோற்பலம், மாரீச-92
காவியோ கயலோவெனுங் கண், பப-87
காவிரி, அகத்-46
காளிமை-கறுப்புநிறம், விராத-14
காளீயர், சடாயுகா-16
காற்றினுல்பூதமெலாமுருகும், சரப-120
காற்றினுனென், மாரீச-167
காற்றுமுதலியவற்றைப் பணிகொள்ளுதல், சூர்ப்ப-104
கான்-நறுமணம், சூர்ப்ப-33
கான்று-வெளிச்சொரிந்து, சடாயுவ-112
கானவனல்✕அரக்கர்கினம், அகத்-45
கானிறச்சேயொளி விசும்பொளிமறையக் கதுவ என்று தளிரேயியைப் பினுமம்:பிறிதின்நுணம்போறலணி: சடாயுகா-4 [ரீச-176
கிச்சு-நெருப்பு:க்ருஷ்ணு-வடசொல்:மா
கிட்டஇடுதல் - நெருங்கக்கோத்தல், விராத-6 [ன்-98
கிடைத்தல்-எதிர்த்து நெருங்குதல், கர
கிம்புரி-தந்தத்தின்பூண், விராத-13
கிரியின்மேற்றத்தான், சூர்ப்ப-16
கிரி வாதவிசையிற் பஞ்சுபட்டதுபடுதல், விராத-7
கிரீடத்தைச்சூழ்ந்தபட்டம் ✕ சூரிய ஊசுசூழ்ந்தபரிவேடம், சரப-9
கிலிஞ்சன், விராத-67
கிளர்தல்-விளங்குதல், மிகுதல், சரப-20, 21
கிளித்தனகளித்தமேனி, சடாயுவ-223
கிளியனுன், சடாயுவ-199
கிஷ்கு-சுற்றம், சூர்ப்ப-11
கின்னரர் இராவணனைச்சுரைசோக்கி ஆண்டு ஒருவன்மொழிபகரினும் நடுங்குஞ்சிந்தையர், மாரீச-10
குஞ்சரம்...கரடி நாய் வேங்கையாளி மூசுத்தர், கரன்-45
குஞ்சி✕மழைத்தொங்கல், சூர்ப்ப-23: ✕அழல், கரன்-43
குடபால், மாரீச-124
குடிமை-குடியடிமை, பரம்பரையாகச் செய்யுமடிமை, சடாயுவ-31
குடை✕சந்திரன், சூர்ப்ப-108
குடைசந்திரனினும் வெள்ளியது, சுவர்க்கம்போலின்பம்பயப்பது, சரப-7
குண்டலம்✕இரவிமண்டலங்கள் பன்னிரண்டு நாவிரண்டாகிப் பொலிவனை, மாரீச-3
குண்டிகை, அகத்-46
குந்தம்-சிறியஈட்டி, கரன்-35
குப்புறல்-கடத்தல், சூர்ப்ப-21
குபேரன், சூர்ப்ப-53 [ப-9
குபேரன்சேவலொன்துணைவன்-சூர்ப்
கும்பகருணனேப்போலெல்லீரு முறங்குதிரோ, சூர்ப்ப-114
கும்பர்✕நெற்றி, விராத-13
குமரர், விராத-3
குயம், மாரீச-89
குயிலுங்கரும்புஞ்செழுந்தேனும் யாழும் குழலும் கொழும்பாகும் அழுதஞ் சுவைநீத்தமொழி, அயோமு-29

குயிறொடர்குதலே, சூர்ப்ப-29
குரகதம், கரன்-78
குரபதமுரத்தைக் கூட்டிச்செல்லல், மாரீச-241
குரவம்,சபர-1
குரிசில்வீரன், அகத்-9
குரு-பிருகற்பதி, சடாயுவு-197
குருதிச்சேற்றுவெள்ளம், சூர்ப்ப-100
குருதிப்பரவையினும்பர்ச்சடாயுXகடலுண்டிட்டியமலே, சடாயுவு-179
குருதிப்புனரியுட்டினியுங்கரன்றேர் X வங்கம், கரன்-170
குருதியாற்றுக்கு நிருதருடல் கரை, கரன்-83
குருதியாறெழுகு மவிராதன்Xஅருவி பாயுமலை, விராத-34
குருவிந்தம், மாரீச-96
குரோதவசை, சடாயுகா-29
குலக்கிரி, மாரீச-46
குலப்பழி, சடாயுவு-211
குலம்-கிறப்பு, மாரீச-20
குலம்வெரொடுமடங்குதல் - வம்சநாசமாதல், மாரீச-56
குலிசத்தவன்-இந்திரன், சூர்ப்ப-132
குலிசம்-வச்சிரப்படை, கரன்-35
குலிசம்மெறியச்சிறையற்றகுன்று Xவானிளறிய வீழ்ந்த சடாயு, சடாயுவு-128
குலுங்குதல், விராத-8
குலையம்-பூமி, சூர்ப்ப-113
குவளைமலர்த்தாமரை X முகத்திற்கண், மாரீச-115
குழு-திரள், கரன்-61
குழுகினை, கரன்-33
குழை-காதணி, அயோமு-48
குழைபடுதல்-குண்டலமாதல், விராத-9
குழைவு-மனவுருக்கம், மாரீச-231
குளங்கோடல் - இரத்தவெள்ளமாகச் செய்தல், சூர்ப்ப-140
குளித்தல்-மூழ்குதல், கரன்-87
குளிப்ப-மூழ்கும்படி, சூர்ப்ப-26
குளிர்ப்பு, மாரீச-104
குளிறுதல்-கர்ச்சித்தல், கரன்-21
குற்றம்வீந்தகுணம், சடாயுவு-4
குறிகொள்ளுதல்-ஒருபொருளாகமதித்தல், கரன்-27
குறுகல்-சமீபித்தல், விராத-43
குறுங்கண்மலே, விராத-3
குறை-செய்யவேண்டியசெயல், அகத்-32
குறைத்தல்-அழித்தல், கரன்-152
குறைதல்-சிறுமைப்படுதல்,மாரீச-153: அழிதல், விராத-8
குனி-வளைவு, அகத்-1
குனிக்க-அஞ்ச, கரன்-180
குனிசிலே, விராத-2
கூகை-கோட்டான், சடாயுகா-27
கூட்டு-தொடர்ச்சி, கரன்-117
கூடு-உடல், விராத 64
கூதிர், மாரீச-101
கூதிர்வாடை, அயோமு-15
கூந்தல்Xகொன்றைக்காய், மாரீச 94
கூலம்-(கடற்)சரை, மாரீச-104
கூவல்-அழைத்துக்கூறப்படுங் குற்றேவல், சடாயுவு-31
கூழை-மயிர், அயோமு-45
கூற்றம்உற்றகாலத்துக் குலவு கொள்ளும் உயிர் X இராவணனைக்கண்டு நடுங்குஞ்சீதை, சடாயுவு-66
கூற்றினைவிருந்தூட்டுதல், சடாயுகா-6
கூறுதல்-சொல்லுதல், கூறுசெய்தல், அயோமு-54
கூறுசெய்து-துண்டித்து, கரன்-107
கெட்டாய் வாழ்சைச்சுட்டாய், சடாயுவு-94
கெழுந்தகை - பொருந்திவிளங்குகிற குணம், அயோமு 26
கெழுவு-நிறைவு, சடாயுவு-38
கேடினர், கரன்-8
கேடுகாலம்கிட்டுகையில் விபரீதக்காட்சி களைவில்தோன்றுதல்Xதீங்குறப் போகின்றசீதை பொன்மானைக்காணல், மாரீச-216
கேண்மை முறைமை, சடாயுகா-1
கேள்-ஒற்றுமை, சூர்ப்ப-16
கேள்வி, சடாயுகா-5
கேள்விச்சுடர், மாரீச-139
கேள்வியாற் செவிகண் முற்றுந்தோட்டவர், சபரி-7
கைகூப்பிநிற்றல், கரன்-64
கைத்து-வெறுத்து, சூர்ப்ப-128
கைதரல்-துணைசெய்தல், அகத்-7
கைதவம், மாரீச-217
கைம்மதில், கவந்த-7

கைம்மலை × சுறவம், கரன்-120
கைம்மாறு, சரப-28
கையறவு - செயலறுகை, அயோமு-3: துன்பம், சூர்ப்ப-107
கையிலகலுதல் - கைவிட்டுப்போதல், மாரீச-44
கையின்வளைத்து உயிர்வாரி வாயி னிட்டுண்கை, கரன் 46
கையெறிந்துருகுதல், சடாயுவு-82
கையெனும்மலரால் மலர் கொய்குறு வாள், மாரீச- 215 [99
கையைகிலத்தினிலெற்றுதல், சூர்ப்ப-
கைலை × சடாயு, சடாயுவு 92
கைலையெடுத்தவரலாறு, மாரீச-12
கைவிடில், சடாயுகா 34
கைவிதிர்த்தல், சடாயுவு-120
கொங்கு நறுமணம், சடாயுவு 1
கொங்கை × நேமிவாளம், சூர்ப்ப - 4: × செம்பொன் குலிகச்செப்பு, மா ரீச-68
கொங்கையிணை செங்கையின்மலைதல், மாரீச-43
கொச்சைமாந்தர், கரன்-142
கொட்பு-தன்மை, அயோமு-45
கொடாதவன் புகழ்தேய்தல், சூர்ப்ப -26
கொடிஞ்சு-தேருறுப்பு, கரன்-149
கொடிமுதலியனமிடைதலால் உலகு வெயிலிழத்தல், கரன்-48
கொடிமுக்கு, சூர்ப்ப-119, 120
கொடியாடுதல் × அலகையாடுதல், கர ன்-26 [19
கொடுந்தொழில் × உருமேறு, விராத
கொண்டனிறத்தினன், கரன்-179
கொண்டார் - மணஞ்செய்துகொண்ட வர், சூரபப-131
கொத்துதல்-குத்துதல், சடாயுவு-113
கொதித்தல்-கோபங்கொள்ளுதல், சூர் பப-77
கொதிப்பு-உக்கிரம், கரன்-107
கொம்பு-சீதை, சரப 1 [55
கொலைமிசை, மிசை-ஏழனுருபு, கரன்-
கொவ்வைச்செவ்விவாய், சூர்ப்ப-29
கொழு-உழுபடை, கரன்-147
கொழுந்து-இளந்தளிர், சடாயுவு-123
கொள்கை கோட்பாடு, கரன்-13: தன் மை, விராத-4
கொள்கொம் பொடியக் கொடிவீழ்தல் × சடாயுவீழச் சீதைவிழுதல், சடா யுவு-130
கொள்ளை-செழிப்பு, மாரீச-120
கொள்ளைபோகின்றசெல்வம், மாரீச-77
கொன்றனவின்னல், சடாயுவு-12
கொன்றைக்காய் × கூந்தல், மாரீச 94
கோங்கு, சரப-1
கோசலநாட்டிலிராவணன் ஒருமுறை வந்துள்ளானென்பது, சடாயுவு - 38
கோசலம் கங்கைநீர்கெழுவுநாடு, சடா யுவு-38
கோசிகனளித்தபடைகள் இராமனரு ளினிற்பன, மாரீச-194
கோட்டுதல்-வளைத்தல், கரன்-109
கோடணை-ஆரவாரம், கரன்-51
கோடு-மலைச்சிகரம், அயோமு-30: தந் தம், கரன்-149
கோத்துவாங்குதல்-தொடுத்துஎய்தல், கரன் 118
கோதாவரி × சான்றோர்கவி, சடாயு கா-1, சூர்ப்ப-1
கோதாவரி இராமனுதியர் செல்கை யில் அலையெழுந்து அடங்குதல் அன்னரைக்கண்டு அடிபணிவது ம்பாலும, சூர்ப்ப-2
கோதாவரிக்குக் கமலம்முகமும், குவ ளை கண்களும், திரை கரமும், சூர்ப் ப-2
கோதாவரியைச் சீதை தன்கிலையை இராமனுக்குத் தெரிவிக்குமாறுவே ண்டுதல், சடாயுவு-80
கோதை - நாண்: விராத-24: கூந்தல், விராத-39: பூமாலை, விராத்சட்டை, மாரீச-192
கோபக்கனல், கரன்-9
கோபம்முதலிய சீதையின்விஷயமான காமநோயாற் பற்றுநீங்குதல் × பா பம் நின்றிடத்துத் தருமம்நில்லாது நீங்குதல், மாரீச-82
கோமகன்-அரசகுமாரன், சூர்ப்ப 34
கோயில்-அரண்மனை, சடாயுவு-45
கோரவெங்கண், விராத-19
கோல் - தடி, கரன் - 35: = கோலம்-அழகு, சடாயுவு-75

கோல்திரித்தல் பாடுதல் ஆடுதல், மகிழ்ச்சியின் செயல், அகத்-23
கோல்வளை, கரன்-142
கோள்-கிரகம், விராத-12: சடாயுகா-7: உயிரைக்கொள்ளுதல், விராத-10: கொடுமை, மாரீச - 164, வேதனை, சடாயுவ-204: ஒளிகொண்டிருக்குந்தன்மை, சரப-22
கோள்களே வாரிச்சிறை வைத்தவன், சடாயுவ-47
கோள்கிடந்தசிறை × ஆரம், மாரீச-5
கோளரி, கரன்-21
கோளரிமா × ராமன், கரன்-21
கோளின்வனக்குழு - கொல்லுதலையுடைய அழகியகூட்டம், (வனம்-அழகு), கரன்-166
சக்கரத்திற்றகைவரிதாயபகழி, மாரீச-249
சகிதேவி × மலராள், சரப-6
சஞ்சலம், மாரீச-106
சடசடவொலி, அயோமு-81
சடசடவொலி மரங்களுந்தூறுந்தாளி லகப்பட்டுஒடிவதனல் தோன்றியது, கரன்-59
சடாயு × மேரு, சடாயுகா-87: சம்பாதியின்தம்பி, சடாயுகா - 30: கலைதுணிந்தகேள்வியன், சடாயுகா-5: சேவடிக்கமலஞ்சேர் பவன், சடாயுவ - 212: திருமால் முதலிய பலதேவர்களையும் கண்ணிற்கண்டவன், சடாயுகா-12-13: தயரதனுக்குஆவி, சடாயுகா-23: நடுக்கருமிடுக்கினன், சடாயுவ-170: மதியன் கலைகிடந்தெனக் காட்சியன், சடாயுவ-172
சடாயு இராமலட்சுமணர்க்காக எளிதுகாது உயிர்வைத்துக்கொண்டிருத்தல், சடாயுகா-36
சடாயு இராமலட்சுமணரைக்கண்டதாற் பெருமகிழ்வுறுதல், சடாயுவ-188
சடாயு கோபந்தணியுமாறு கூறியமொழி, சடாயுவ-208
சடாயு சீதையைக்கவர்ந்துசென்றமைக்கு இரங்கல், சடாயுவ-140-144
சடாயு தசரதனிறந்ததுகுறித்துப் புலம்பல், சடாயுகா-21-23
சடாயுமொழியை இது தசரதன்பணியென்னச் சிந்தையில் தழுவுதல், சடாயுவ-213
சடாயுவிழ விண்டுவிஞட்டவர் பொன்மாரிசொரிதல், சடாயுவ-129
சடாயுவின்உடற்பாரத்தால் மலை பூமியிற்புதைத்து தாழ்வுறுவது, சடாயுகா 9
சடாயுவின்கதிவன்மை, சடாயுகா-30
சடாயுவின்குணங்கள், சடாயுகா-5
சடாயுவின்கோபவார்த்தை, சடாயுவ-94-102
சடாயுவின் தேறுதல்வார்த்தை, சடாயுவ-193-200
சடாயுவின் மூக்குநகம்என்பவற்றினொளி, சந்திரவொளி × சடாயுகா-3
சடாயுவின்மேல் இராமன்விழுதல் × வெள்ளியோங்கலில்வீழ்ந்த அஞ்சனமலை, சடாயுவ 180
சடாயுவின்வருணனை, சடாயுகா-2-8
சடாயுவின்றுண்டம் × இந்திரயானையின்றோட்டி, சடாயுகா-6
சடாயுவுக்கு இராமபிரான் அந்திமகிரியை செய்தல், சடாயுவ-221-224
சடிலத்தலை - சடாபாரத்தைக்கொண்டசிரசு, மாரீச-135
சடைமுடியினர், சடாயுகா-11
சடையாப்புனையாவிடின் தையலாரயிருடையும், சூர்ப்ப-23
சண்டம் - உக்கிரம், சடாயு-109
சண்டவெங்கடு - ஒருபொருட் பன்மொழி.
சதமகனேத்தலையிலிடுதல், சூர்ப்ப-111
சதுமுகன்முதை, மாரீச-225
சந்தம்-அழகு, மாரீச-171: சடாயுவ-219
சந்தமென்றளிர், மாரீச-91
சந்தி - சந்தியாவந்தனம், சூர்ப்ப-91
சந்திரகாந்தம், மாரீச-155
சந்திரமௌலியென்பதிற் பொருந்தியவரலாறு, மாரீச-28
சந்திரன் × இராவணன் மேலுய்த்ததிகிரி, மாரீச-108
சந்திரன் அரக்கனகர்மீதுபோக அஞ்சி ஒதுங்கிச்செல்பவன், மாரீச-106
சந்திரோதயவருணனை, அயோமு-6
சந்திரோபாலம்பநம், மாரீச-114, 115

சந்து - சந்தனம், விராத-5
சம்பரன் × மத்து:உடைத்தலிலுவமை: சடாயுகா-23
சம்பரனுல் இந்திரன்பழிபடைத்ததும் தயரதனுல் அதுநீங்கியதும், சடாயுவு-198
சம்பாதி. சடாயுக்கள் அருணன்புத்திரர், சடாயுகா-29
சமயத்தோர் - மதத்தவர், விராத-52
சமயம் - மதம், விராத-57
சமீரணன்-வாயு, மாரீசன்-15
சமைந்தது - பலித்தது, சூர்ப்ப-92
சயந்தனம் - தேர், கரன்-53
சரண்வழங்க, அகத்-36
சரத்தின்தானையால் அணிகளாக நேர்தாங்கினன், கரன்-115
சரதாரைமாரி, சடாயுவு-109
சரம், கரன்-35
சரம் × தையலார்விழி: (கொடுமையில் உவமை), கரன்-82
சரவுங்கன், சரப-1
சரளச்சோலை - இனியசோலை, சூர்ப்ப-71
சரளம் - இனிமை, மாரீச-163
சரன், கரன்-62
சராசரம், சடாயுகா 26
சரி - கைவளை, அயோமு-48
சரிந்து - நிலைகுலைந்து, மாரீச-42
சலஞ்சலம், விராத-16
சலம் - தணியாதமுழுநிர்த்தவயிரம், சூர்ப்ப-70, 143: மனப்பிணக்கு, மாரீச-240
சலிக்கும் - வருத்துகின்ற, மாரீச-108
சவரி தாயினு முயிர்க்கு நல்குபவள், கவந்த-56
சவியுறத்தெளிதல் - செவ்வைபொருந்தத் தெளிவுறுதல், சூர்ப்ப-1
சவை - சபை, சூர்ப்ப-108
சன்னவீரம்-வெற்றிமாலை, விராத-12
சனகன்பொன், விராத-5
சனகி, சடாயுவு-39
சாகை - கிளை, சடாயுவு-89
சாதித்தல்-கொல்லுதல், வெல்லுதல்; விராத-22
சாபம்-வில், கரன்-35: சடாயுவு-101
சாம்புதல் - சோர்ந்துகிடத்தல், சடாயுவு-138
சாமரை இசைகட்டியனபோலும்' சரப-8
காயல், மாரீச-85
சார்பு - தஞ்சம், சடாயுவு-130
சார-சேர்க, சூர்ப்ப-53
சாரதி, சடாயுவு-175
- மண்டலாகாரமான கதி, விராத-37
சாலகடங்கடர்மரபு, சூர்ப்ப 50
சாலம்-ஆச்சாமரம்,மாரீச-96:தொகுதி, கரன்-42
சாலி - செந்நெல், கரன்-149
சாலை-குடிசை, அகத்-10, சூர்ப்ப-7
சாலைகாத்தனன் புறத்துநின்றுழுன், மாரீச-239
சாவரம், மாரீச-157
சான்றவன், கவந்த-42
சான்று - திருவிடாந்தம், கரன்-128
சானகி, அயோமு-96
சிக்கு - ஐயம், சடாயுகா-48
சிகரம், விராத-9
சிகை, சுவாலை ("அனலின்சிகை") கரன்-93: ("எரியின்சிகை") சடாயுவு-121: ஒளி, சடாயுகா-2
சிங்கமெனத் தமியன் றிரிவான், அயோமு 39
சிங்காமை - அழியாமை, சரப-29
சித்திரம்=சித்ரம்: விநோதம்; அல்லது, சித்சிலிக்குருவி, சடாயுவு-126
சிதிரம்-பின்பனிக்காலம், மாரீச-99
சிந்தபவனம், சடாயுவு-146
சித்தர், மாரீச-9
சித்திரம்-அழகு, விராத-2
சிதைவு-அழிவு, அகத்-54
தல, சடாயுகா-48 [156
சிந்தாவினை - மனத்தொழில், மாரீச-
சிந்துரச்செண்ணிவரை, அயோமு-1
சிந்துரம் - யானை, கரன் - 107: மலை, கரன-102
ல்- அதுவேகருத்தாயிருத்தல், அகத்-15
சிந்தையினுறைபவன்-மன்மதன், சூர்பப-12
சிரத்தினிற் பணத்திலோர் - நாகர், மாரீச-72
சிரம் × மலை, கரன்-39

சில்லலோதி, சூர்ப்ப-93
சிலதர்-ஏவலாளர், மாரீச-112
சிலம்புதல் - ஒலித்தல், அயோமு-28: புலப்படுதல், அயோமு-28
சிலவரக்கர் கரிவயிற்றிற் புண்டிறந்த மூழையிற் புகுதலும், கவந்தத்தை நீ கண்டிலேனெனப் புகலென மண்டலும், கரன்-140
சிலேமறை, மாரீச-229
சிலையினெலியால் உருமுமறுக்குங்கொள்ளுதல், கரன்-57 [158
சிலையுடைமலை × தூடணன், கரன்-
சிலையுழவன், சரப-38
சிலைவலி, சடாயுகா-14
சிலைவாளியன்னவிசை, சடாயுவு-157
சிவணது-வடிவெடுத்தது, விராத-38
சிவதனுசைமுறித்த எம்பிரானுற்ற லின்மே லோராற்ற லுண்டோ, சடாயுவு-9
சிவபிரானும் பூதகணத்தோடுமுறை தல் தூணேவேண்டுமென்பதைக்காட்டும், கவந்த-55
சிவபெருமான் தலைக்கலத்திரந்தது, சடாயுவு-195
சிவபெருமான்விஷத்தைக்கொண்டது போலவே பிறைச்சந்திரனையுங் கொண்டதற்குக் காரணம மாரீச-135
சிவல்-கவுதாரி, சடாயுகா-27
சிவன் ஆற்றலேற்றுப்பொருப்பிலுன், மாரீச-31
சிவன்தடக்கைவாள் கொண்டவரலாறு, சூர்ப்ப-104
சிவன்முதலியோர் பாகம்முதலியவற்றில் மனைவியரைவைத்தல், மாரீச-76
சிற்பம்-சிறுமை, (பண்புப்பெயர்) சடாயுகா-8: சித்திரம், (“தொழின்மாய் சிற்பங்களின்”) சரப-18
சிற்றவை, சடாயுகா-39, 40
சிற்றவைவஞ்சனை முடியச்செய்தது, சடாயுவு-141
சிற்றிடைச்சீதை, மாரீச-84
சிறகாற்றழுவுதல், சடாயுகா-32
சிறகுவிரித்திருக்குஞ்சடாயு × பரந்த கிரணங்களையுடைய பாலசூரியன், சடாயுகா-2
சிறப்பு-மரியாதை, சரப-14
சிறுர்கண்மேற் போர்செயிற் றேவர் சிரிப்பர், கரன்-13
சிறிது-குறைவானது, சூர்ப்ப-101
சிறியோர்-தம்பியர், மாரீச-174
சிறுகட்செம்முகக்கார், கரன்-33
சிறுமை-தாழ்வு, மாரீச-206
சிறை-இறகு, சடாயுகா-2
சின்னம்-துணிவுற்றது, கரன்-177
சின்னம்முறும் - துண்டமாகும், சடாயுவு-105
சின்னெறி, அகத்-27
சினத்தின்முனிவு-கோபமிகுதி, சடாயுவு-153
சினம் × கனல், அகத்-4
சினவாள், விராத-35
சீதநீர் பொதிந்தமென்சேக்கை, மாரீச-90
சீதம்-குளிர்ச்சி, மாரீச-91
சீதமுஞ்சுடுமோ, மாரீச-102
சீதை அரக்கரென்னுங்கான்சுட மூளைத்த கனலி, சூர்ப்ப-58
சீதை அன்றவற்கடுத்துண்ணிக் கண்ணீர்சோர்தல், சடாயுவு-58
சீதை இராவணனுற் கவரப்பெற்றுப் பலபொருள்களையும்நோக்கி இரங்கிக்கூறுவன, சடாயுவு-77-81
சீதைதந்த ஆசனத்தில் இராவணன் வீற்றிருக்கையில் சராசரம் அஞ்சி நடுங்குதல், சடாயுவு-35
சீதை தேவர்பெற்ற வரத்தால் மண்ணிடை வந்தவள், சூர்ப்ப-57
சீதையின்பிரிவுக்குக்காரணம், தேவர்கள்துயரமும்அரக்கர்தள்ளுற்ற அறமும்: சடாயுவு-199
சீதையினிடம் இராவணசன்னியாசி கூறிய தற்பெருமை, சடாயுவு-41-50
சீதையை இராவணன்கவர்ந்தது உம்பிழை உலகஞ்செய்பிழையன்று, சடாயுவு-211
சீதையை எடுத்துச்செல்ல இராவணன் தறையோடுபெயர்த்தல், சடாயுவு-74
சீதையைக்கவரும் இத்தொழில் இம்மைக்கும் அம்மைக்குந்தீமைதரும், சடாயுவு-99

சீதையைக்காணுதஇராமன் × பிரிந்த வுயிர் கண்டிலதான கூடு,சடாயுவு-158
சீதையைப் பர்ணசாலையிற் காணுத இராமன் × வைத்தமாதிரி கொள்ளத் திகைத்துநின்றமுன், சடாயுவு-159
சீதையொடும்போகும்இராமன் × மின் னெடுநடந்துசெல்லும் மேகம், சூர்ப்ப-69
சீதையோடு இராவணன்மனம் ஒற்று மைப்பட்டதனால் அது வேறுமுன் றையும்நினைக்கலாகாமை,மாரீச-84
சீதைவருணனை, மாரீச-68-80
சீர்-சமனிலை, அகத் 40
சீர்ப்பு-சிறப்பு, சடாயுகா-48
சீறடி, பல்லவம் பஞ்சியனுங்கக் கஞ் சம்போலநிமிரும், சூர்ப்ப-31
சுடர்-கிரணம், சடாயுகா-2
சுடர்வாய்வாளி, விராத-21
சுடரின்தொகை, சரப-11
சுதீக்கணன், அகத்-27
சுதை, சடாயுகா-29 [108
சுந்தரி,சூர்ப்ப-49: தேவமாதர், சூர்ப்ப-
சும்மை=சுமை, மிகுதி: சடாயுகா-8
சுமந்த-தரித்த, விராத-5
சுமித்திரைசிங்கம், சடாயுவு-178
சுமையுறுசெல்வம்,(சுமை-மிகுதி.) சூர்ப்ப-42
சுரபி, சடாயுகா-29
சுருதிப்பெருங்கடல், சரப-26
சுலாம்-சூழ்ந்திருக்கும், விராத 8
சுவடு-அடையாளம், சடாயுவு-165
சுவணம்-பொன், சடாயுகா-2
சுவணவண்ணன் - இலட்சுமணன், விராத-38
சுவல்-முதுகு, கரன்-120
சுற்றி-உடுத்தி, விராத-15
சூறுக்கொள, மாரீச-49 [149
சூடு-நெற்பயிரின் தலைப்புறம், கரன்-
சூடுகொள்ளுதல்-எரிதல், கரன்-71
சூர்=ஸுரர், தேவர், கவந்த-21
சூர்ப்பணகை × மூங்கில்தந்தீ: தான் தொடர்குலத்தைத் தானே தொலைத்தலில்உவமை, கரன்-66
சூர்ப்பணகை இராமலக்குமணரால் அங்கபங்கம்நேர்ந்தமைகூறல், மாரீச-50
சூர்ப்பணகை இராவணனுடன்பிறந்த நோயனுள், சூர்ப்ப-8
சூர்ப்பணகைஉண்டாடும்வண்ணம்இராமனைத்தருதியென்றல், மாரீச-79
சூர்ப்பணகை சீதையையடக்கியென்றல், சூர்ப்ப-63
சூர்ப்பணகை தன் மூக்கரிந்ததை நன்மையாக்கிக்கூறுதல், சூர்ப்ப-130, 131, 133
சூர்ப்பணகை தன்னைப்பழித்தல், கரன்-191
சூர்ப்பணகைமுதலியோர் தோன்றிய வரலாறு, சூர்ப்ப-39
சூர்ப்பணகை மூக்கறுப்புண்டதனால் துயரமுறுதல், சூர்ப்ப-98
சூர்ப்பணகை மூக்குமுதலியன அறுப் புண்டதுபற்றிப் பலர் பலவடி சங் கித்தல், மாரீச 25-34
சூர்ப்பணகை மூக்குமுதலியன அறுப்பு ண்டுபுலம்பல், சூர்ப்ப-101-113
சூர்ப்பணகை யிராவணர்களின் சம்பா ஷணை, மாரீச-148-152
சூர்ப்பணகை தாருகைம்பத் துளிவினோ ந்துமெய்யினுள், உம்பர்முதலியோர் க்கு இறுதியீட்டுவாள்,வெய்யதோர் காரணத்தினால் வனத்தில் தனி வைகுபவள், இவ்வுலகெலாம் நொ ய்தினுழையும்தோன்மையாள், சூர்ப்ப 9, 10
சூர்ப்பணகைவடதிசைவாயிலின்வந்து தோன்றினள், மாரீச-25
சூர்ப்பணகை வானின்றிழிவது × கன் னியெழில் மேகலையுண்டதோ என்பவற்றைக்கொண்டமின் விண் ணிழிவது, சூர்ப்ப-32
சூரறுத்தவன் முருகக்கடவுள், அகத்-22
சூரன், சூர்ப்ப-120
சூரியகிரணம் × உருக்கியசெம்பொன், மாரீச-117
சூரியசந்திரர் × இராமலட்சுமணர், விராத-37
சூரியன் மேருபின்னுகமறைதல், அயோமு-35
சூரியனைற்போக்கப்படும்இருளும் வெயி லும் கிரணமும் × உறையும் வாளும் கையும், சரப-36

சூரியாத்தமனவருணனை, சடாயுவ-225
சூரியோதயவருணனை, அயோமு-30: [த-29: சரப-36
சூரொடுங்கயில், (சூர் - தேவர்.) விரா
சூல்-கரு, கவந்த-5 [அகத்-2
சூழல் - சுற்றிடம், அகத்-57: இடம், சூளுற்ற - சபதஞ்செய்த, சித்தாந்தஞ் செய்தென்றபடி; சரப-31
சூளுறவு-சபதம், மாரீச-55
சூறை-சுழல்காற்று: × சூர்ப்பணகை, கரன்-192
செக்கர் - செவ்வானம், விராத - 9, சூர்ப்ப-71
செக்கர்சூடிய கந்தரம், (கந்தரம் - கழுத்து.) சடாயுவ-92
செங்கணுதிரமூறுதல், சடாயுவ-201
செச்சை-சந்தனக்குழம்பு, விராத-9
செஞ்செவே, சடாயுவ-145, 146
செந்நெல் வாலியுடையது, அகத்-58
செந்நெல் சூடாறுப்புண்டவை × கழுத்தறுப்புண்ட துரகங்கள், கரன்-149
செந்நெறி - செம்மையானநெறி, நல்வழி; சரப-26
செப்பம்-நன்மை, சடாயுவ 56 [ப்ப-9
செம்பராகம்படச்செறிந்தகூந்தல், சூர்
செம்புகாட்டியகண்ணினை பாலெனத் தெளிந்தீர், கரன்-145
செம்மயிர்ச்சாலம், கரன்-42
செம்மயிர்விரிந்தகருந்தலை, கரன்-82, 86, 91, 92
செம்மல் - புதல்வன், சடாயுகா - 8, கரன்-177
செம்மலை-செந்நிறமலை, சடாயுகா-15
செய்கை-செய்யத்தக்கவுபசாரம், அகத்-29
செய்கைசெவ்விதன்று, சூர்ப்ப 40
செய்திரு-மோட்சலக்ஷ்மி, சரப-38
செய்வினை-கைத்தொழில், மாரீச-156
செயிர்-துன்பம், சடாயுவ-2: குற்றம், சடாயுகா-23
செயிர்த்து-அயிர்த்து, சடாயுகா-10
செருக்கர், மாரீச-201
செருக்கு - கருவம், அகத் 28: உற்சாகம், கரன்-39
செருப்படியிற் பொடியெவ்வா மானிடர், சூர்ப்ப-105
செருப்பெறுத்தினவுறுதோள், கரன், 44
செருவம்-போர், விராத-9
செலசரம், சடாயுகா-28
செலவு-நடை, சரப-3
செவ்வழி-செவ்வியமுறை, சடாயுவ-220
செவ்வி-அழகு, சூர்ப்ப-2, மாரீச-170
செவ்வியோர்-சிறப்புப்பெற்றவர், சடாயுவ-10
செவிஅரிபுக்குமுழங்குவது, விராத-9
செவிகளைக் கைகளாலே சேமஞ்செய்தல், சடாயுவ-69
செவி கால் மாணிக்கமயத்து ஆணிப் பொனிலுகிய மான், மாரீச-219
செவித்துளை, சடாயுவ-201
செற்ற-அழித்த, கொன்ற: விராத-15
செற்றம்-கோபம், மாரீச-176
செற்றுவலியடக்கிவென்று, மாரீச-12
செற்றுதல்-பதித்தல், சரப-10
செறிகழல், சடாயுகா-10
செறுத்தல்-உக்கிரங்கொள்ளுதல், கரன்-171
செறுநர்-பகைவர், சடாயுவ-210
சென்னி துண்டமறி வைத்தவன் × அகத்தியன்: அகத்-51
சென்னியிற் கொள்ளுதல்-சிரஸாவஹித்தல், அகத்-15
சேக்கை-கூடு, சடாயுகா-48
சேக்கையிற்பார்ப்பைப்பார்க்கும் பார்வை × இராமலட்சுமணரைநோக்குஞ் சடாயு, சடாயுகா-48
சேக்கையினரவு நீங்கிப் பிறந்தது தேவர்செய்பாக்கியம், மாரீச-227
சேகு-குற்றம், சடாயுவ 25
சேடன், மாரீச-46
சேடி-வேலைக்காரி, மாரீச-69
சேண்-நெடுந்தூரம், சூர்ப்ப 20: ஆகாசம், அயோமு-21
சேணுயர்நெறி - மேல்லுலகத்துவழங்குவதாய்ச்சிறந்த சங்கீதமார்க்கம், மாரீச-13
சேணுறநீண்டு...நாணுவிதம் புரண்டிருண்டவாட்கண், சூர்ப்ப-46
சேதனை-உணர்ச்சி, சடாயுவ-51
சேதாம்பல் × சிறியோர், மாரீச-117
சேந்து-செந்நிறமாகி, மாரீச-24

ஃசமவிற்குமரன், சடாயுவு-14
ஃசய்மையினேக்குறுகிறுகட்சடாயு × மந்திரத்தறிஞன், சடாயுகா-5
ஃசெயரிக்குவளே முத்தஞ் சிந்துதல், மாரீச-237
ஃசெயோய் - செவ்வியநிறமுள்ளவளே, தூரத்திலுள்ளவளே, சூர்ப்ப-38
ஃசெலேயால்வாய்புகைத்தல் அடக்கத் தின்செயல், மாரீச-17
ஃசவகம்-வீரம், கரன்-74
ஃசவடிகள்நோவ, சரப-28
ஃசவல்-பறவையாண், சூர்ப்ப-76
ஃசவல்பிடியுண்டஅன்னம் × கணவன் விராதனுற் கொண்டுபோகப்பெற்ற சீதை, விராத-39
சேவலோன் - சிவன் (சே - இடபம்): சூர்ப்ப-39
சேற்ற வளே தன் கணவனருகிருப்பச் சூற்றவளே கினந்திருகி நீருழக்குந் துறைகெழுநீர்வளநாடு, சூர்ப்ப-122
சேனவளேகையில் இராமன்வில்வளே ந்தது-உடனவிற்கியணி, கரன்-76
சேனவீரர்வருணனே, கரன்-39-46
சையம் × கவந்தன், கவந்த-39
சொரிதல்-வழிதல், விராத 34
சொல்-புகழ், சடாயுவு-136
சொல்லின முடிக்குறுந் துணிவின் நெஞ்சு, கரன்-50
சொல்லுமல்லே, விராத-20
சொல்லொக்கும் பொருளொவ்வா, மாரீச-74
சொற்கலே × தூணி,(தொலேவின்மையி லுவமம்.) மாரீச-54
சொற்பிறந்தார், மாரீச-32
சொற்பொருட்பின்வருநிலேயணி, கரன்-77, 78, 84
சோதி-ஒளி, சூர்ப்ப-20
சோதிச்சுடர்ப்பிழம்பு, கவந்த-45
சோதிவெள்ளம்-ஒளியின்மிகுதி, சூர்ப்ப-58
சோர்விலாள்-பின்வாங்காதவள், சூர்பப-41
சோரிநீர்சொரிதல், சூர்ப்ப-99
சோரியிலுழ்ந்ததேர், கரன்-127
ஞாலம்-பூமி, சடாயுகா-37: கரன்-11
ஞாலம்படுப்பான்-இராவணன், சடாயுவு-117
ஞாளிகள்-நாய்கள், கரன்-31
ஞானக்கல்லில் நெடுநாளிட்டரைத்தும் அறியாதபொருள், அகத்-43
ஞானத்தால்மாயவாழ்வுவிள்ளல், விராத-63
ஞானமின்றேற் காமத்தைக்கடக்கலா மோ, மாரீச-84
தக்கணுக்குரும்பதின்மர்மகளிர், சடாயுகா-25

தகவு-தகுதி, அகத்-17: நடுவுநிலேமை, மாரீச-190
தகை - பெருமை, அகத்-21: சூர்ப்ப-118: தகுதி, மாரீச-235
தகைமை-தன்மை, சடாயுவு-1
தகையவலிய, சூர்ப்ப-135
தகையோர்-அழகுடையோர், சூர்ப்ப-62
தகைவு-தடுத்தல், மாரீச-249
தச்ச-தைத்த, கரன்-139 -2
தச்சன்புலனெலாந்தெரிப்பது, மாரீச
தசரதன், சடாயுகா-17
தசைத்தோல் - தசையோடு சம்பந்தப் பட்ட தோல், கரன்-165
தஞ்சு-அடைக்கலப்பொருள், கரன்-125: ஆதாரம், மாரீச-126
தடம்-தடாகம், அகத்-2: ஆற்றங்கரை, சூர்ப்ப-91
தடி-இறைசசித்துண்டு, அளவுகோல், அயோமு-46
தடிதல்-கொல்லுதல், கரன்-121
தடிந்த, சடாயுகா-23
தண்கதிரோன்-சந்திரன், சரப-7
தண்டகமுனிவர் அரக்கரால்லேப்புண் ணக்காரணம், அகத்-8
தண்டகவனத்து முனிவர் அரக்கரால் நேர்ந்தகுன்பத்தை முறையிடுதல், அகத்-11-14
தண்டகவனத்துமுனிவர் அரக்கரால் வாடியவர் இராமனேக்கண்டதனுல் உவத்தல் × அவல்வருகானகத்து உலவை அழுதளாவிய புனல்வர வுயிர்வருதல், அகத்-4
தண்டகவனத்துமுனிவர் அரக்கரென் கடலிடை யாழ்கையில் இராமன் மரக்கலம் போல் அங்குவந்தான், அகத்-6

தண்டகவனத்துமுனிவர் இராமனைக் கண்டதனால் மகிழ்தல், அகத்-4
தண்டகவனம், விராத-5, அகத்-3, 51
தண்டல்-கெடுதல், மாரீச-162
தண்டேந்தியகரதலத்தண்ணல்-யமன், மாரீச-11
தண்டொருமூன்று முப்பகைத்தலையிரிதவத்தவர்வடிவு, சடாயுவு-20
தண்ணகர், சடாயுகா-35
தண்ணென்றெழுக்கம்-குளிர்ச்சியான நல்லொழுக்கம், குளிர்ச்சியாய்ப்பெருகுந்தன்மை, சூர்ப்ப-1
தணப்பு-நீங்குதல், கவந்த-20
தத்தி-பாய்ந்து, சடாயுவு-113
தத்துவத்தின்தகைமூர்த்தி, விராத-52
தத்துவநிலையிற்று, மாரீச-201
தத்துறுதல்-தவித்திடுதல், மாரீச-61. துடிப்படைதல், சடாயுவு-106
ததும்பிட-அசைய, மாரீச-42
தந்தம்பறியுண்ட கரி சீறும், கரன்-162
தம்கச்சும் வாளுமே கால்தொடர்ந்து ஈர்க்க அச்சத்தினு லரக்கரழிதல், கரன்-139
தம்பியர்-கரன்முதலோர், மாரீச-65
தமிழ் என்றுமுளதியம்பியிசைகொண்டான், அகத்-47 [முகி-6
தமிழ்த்தென்றல், ×கோளரா, அயோதயமுகனுர். சூர்ப்ப-125
தயாவு, மாரீச-126
தயாவுடையகணவன், விராத-39
தரங்கம்×தேர், கரன்-25
தரம்-உத்தமவிலக்கணம், சூர்ப்ப-14
தராவலயம், மாரீச-57
தருக்கினர்கெடுவர், மாரீச-201
தருக்கு-களிப்பு, அகத்-54: கர்வம், கரன்-39
தருணம்-இளமை, சடாயுகா-30
தருமத்தின்றனிமூர்த்தி, விராத-53
தருமந்தன்னைப் பாவம் கொல்லுமோ, சடாயுவு-59
தருமம் நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார் முதலியோரையீரும், மாரீச-180
தருமமெனநினைந்தவெலா முதவுந்தச்சன், மாரீச-2
தரை-பூமி, சூர்ப்ப-136
தலஞ்சார்த்துதல், கரன்-19
தலை-தலைமை, நுனி, கரன்-113
தலைக்கொண்டு-சிரசாவகித்து, சடாயுகா-40 [126
தலைகாத்தல்-தலைப்பித்தல், சூர்ப்ப-
தலைத்தானை-சிறந்தசேனை, கரன்-113
தலைநிற்றல்-மேற்கொண்டுநடத்தல், சூர்ப்ப-41
தலைபத்தின்மீதுநீட்டும்மூக்கெனுநேமியன் × அனந்தநாகம்வாட்டும் கருடன், சடாயுவு-110
தலைமலையெனவீழ்த்தல், கரன்-86
தலையிற்றுங்கிய கை, மாரீச-24
தலையெடுத்துவிழியாமை, சூர்ப்ப-101
தவ்வாது-குவியாமல், சரப-2
தவஞ்சிறப்புதவ நல்லறிவு கைதரல், அகத்-7
தவஞ்செயத் தவஞ்செய்த தவமென், சூரபப-18
தவத்துறைநீங்கியது அரக்கர்வருத்தி நெறியலா நெறிதுரத்தலால், அகத்-12
தவம், விராத-2
தவம்ஆயிரம்முகம், சரப-40
தவம் தக்கினேயாதல், அகத்-31
தவம்பூண்டும் பொறையால் வெகுளியை நீக்குதல், அகத்-8
தவம் வேண்டின வேண்டினர்க்களிக்கும், அகத்-8
தவமன்றிவேறொன்று செய்யத்தக்கதன்று, மாரீச-133
தவமுற்றித்திருவுறுதல், மாரீச-179
தவளக்கங்கணம், விராத-16
தவா-நீங்காத, அகத்-19
தழல்வண்ணன்வில்லெக்தோளாலிறுத்தான், சடாயுவு-116 [41
தழலுருவுகொண்டனையமேனி, கரன்-
தழலெடுத்தான்-சிவன், சூர்ப்ப-101
தழற்புரைசுடர்க்கடவுடந்தமிழ், அகத்-41
தழிவந்து-தழுவிவந்து, கரன்-99
தழுவிச்சுமந்து-சேர்த்துப்பிடித்துத் தாங்கி, விராத-36
தழுவுகாதலன், சடாயுகா-18
தழுவுதல்-குறித்த இலக்கைத்தவறுது சார்தல், கரன்-19
தழை-மயிற்பீலிக்குடை, கரன்-48: ×சிறை, சடாயுகா-27

கழைந்துதவழ்தல்-செழித்துப்பொருந்துதல், விராத-14
கள்ளுறுதல்-துவளுதல், மாரீச-37
களம்-இதழ், சூர்ப்ப-16
களிர்த்துவீங்குதல் - புளகித்துப்பூரித்தல், சடாயுவு-60
களிர்ப்படுக்கை, அயோமு-17
களிரைப்போலடியினுள், சூர்ப்ப-62
களை-கட்டு, அயோமு-91
கறி-தூண், மாரீச-156
கறுகண்-அஞ்சாமை, மாரீச-190: கொடியகண், கரன்-42
கறுகண்மை - கண்ணோட்டமில்லாதகுரூரகுணம், சடாயுவு-12
கன்மயம், கரன்-125
கன்னலதொரு பொருடனக்குமேலிலான், அயோமு-86
கன்னேயேநினைந்து நோற்குஞ் சவரி, சவரி-2
கன்னெக்குமுவமை, மாரீச-228
மை, கரன் - 177: முத்தியுலகு, சவரி-8 [ச-26
கனியவள்வரத்தரிக்கவல்லரோ, மாரீ
கனியுறவது-கனிமையாக இருப்பது, சடாயுவு-183
கனுவென்பவள் தானவரைப்பெற்றுள், சடாயுகா-26
கனேயொக்கு முவமை, மாரீச-228
காக்கொலி, கரன்-28
காடகை அல்லிறுத்தண்ணவள், சடாயுகா-43
காடகை சூர்ப்பணகையன்னே தன்னே நல்கியமுறையள், சூர்ப்ப-135
காடகைமார்பிடை இராமனம்பு ஓடுதல் × சூர்ப்பணகையின் மார்பில் மன்மதன் கணேயோடுதல், சூர்ப்ப-73
காது-மகரந்தப்பொடி, மாரீச-91
காதுகொண்டபோது, மாரீச-91
காதையரைக் கொலேநேர்ந்த தனயர், சடாயுவு-182
காதையை இத்தனேநெறிக்கொடுபோனும் இராவணனும், சடாயுவு-178
காபதர்கள் நிலேயெடுத்துத் திரிதல், சூர்ப்ப-100
காபதர் கானில்மறைந்துறைபவர், சூர்ப்ப-107
காம்பிரை, சடாயுகா-29
காம்பெற்றபதம்பெறலரிதோவிராத-, 51
காமம்-ஒளி, மாரீச-156 சடாயு-164
காமரைக்கண்-காமரைமணிசடாயுவு-23
காமரைக்கண்ணன், கரன்-18
காமரைக்கணெம்பெருமான், விராத-50
காமரைக்கைக்நோவ, சரப-29
காமரைத்தையல் சேடியாங் கரமுமல்லள், மாரீச-69
காமரையின்பகைஞன், மாரீச-113
காமரைவனேயம், மாரீச-105
காய்வரக்கண்டகன்று × இராமன்வரக்கண்ட கண்டகவனத்துமுனிவர், அகத்-5
கார்-மாலே. சூர்ப்ப-50: அணிவகுப்பு, கரன்-127: மலர்ச்சி, மாலேயென்றே கொள்ளினுமாம்: (கார்தந்தகமலத்தாள்), மாரீச - 78: குதிரைச்சேனே, கரன்-33
காரகை-நட்சத்திரம், விராத-12
காரம்-மனேவி, மாரீச-180
காரை-கூர்நுனி, சூர்ப்ப-137: கருவிழி, சடாயுவு-103: கரன்-85
காரைக்குருதி, சூர்ப்ப-115
காலபலத்தினேலுங்கொத்து × இராவணன்றலே, சாடயுவு-106
காவித்தல் = ஸ்தாபித்தல், நிலேப்படுத்தல், மாரீச-92
காழ்வு-காமதம், சூர்ப்ப-92
காள்-நாளம், சடாயுவு-47, 209
கானவர், சரப-8
கானுருவுகொண்ட தருமம், கரன்-167
கானே-சேனே, மாரீச-207
திக்கசங்களேட்டும் ஆதிசேஷனும்ஆதிகூர்மமும் பூமியைத்தாங்குவன, கரன்-159
திக்கின்மா, சூர்ப்ப-39
திக்கு, விராத-3
-துருவமண்டலம், சடாயுகா-7
திங்கள்விமானத்தின்மேலது, மாரீச-112
திங்களும் வளர்தலுந்தேய்தலுமாதல், சடாயுவு-196

திங்களோடுங்க வராவினைகொணர்தல், சூர்ப்ப-77

திசைக்களிற்றின் மருப்பொடியவடர்த்த பொற்றூள், மாரீச-3

திசைகட்டியகரி, சரப-8

திசைமா, விராத-27

திசைமுற்றியகரி, (முற்றுதல்-எல்லையிலிருத்தல்), கரன்-91

திசையனேத்துமெய்த கைவந்தது, மாரீச-51

திசையானேதிக்கைத்தாங்குவது, விராத-3

திசையானே மருப்பொடியத் தோள் நிமிர்த்தவன், சூர்ப்ப-105

திசைவானவர், விராத-27

திண், விராத-14

திண்டிறல், சடாயுகா-3

திணி மை-செறிந்தமை, மாரீச-143

அறுபத்தாறுகோடி அசுரரைப் பெற்றூள், சடாயுகா-25

கைப்படை, விராத-26

திரிசிரசின்போர், கரன்-110-135

திரிசிரா, கரன்-51

திரிசிராவெனும்பேரழிதல், கரன்-131

திரித்தல்-சுழற்றுதல், விராத-26

திரிதண்டு, சடாயுவு-34

திரிபுந்தியுணராநெறி-தத்துவஞானம், விராத-47

திரு - செல்வம், சரப - 26: பொலிவு, கரன்-79

திருகுசினம்-முதிர்ந்தகோபம், மாரீச-174

திருகுதல்-மிகுதல், கரன்-104

திருகுறுதல்-முறுக்குண்டாதல், சூர்ப்ப-93: முறுக்கியிருத்தல், விராத-15

திருமனத்தாய், சடாயுகா-23

திருமால்அப்புறையுள்துறந்து இராமனுயணுகினான், விராத-61

திருமால்அயன்முதலானுர்க்குமுதற்றூதை, விராத-52

திருமால் கடல்கடைந்தது, சரப-29

திருமால்குணம் அளத்தற்கரியது-சரப-29

திருமால் சுருதிப்பொருளின் சொற்பொருள் கற்பித்தவன்; களினத்து நான்முகனைத் தந்தான், சரப-29: நல்லறநெறியிலுய்த்தவன்; திருவளிப்பவன், வீடளிப்பவன், தேவரைபலபடியாகின்று காப்பவன், சரப 26: துன்னுரைச்செற்றவன், சரப-26: நிலமகளே யரவமுதலியனவாகிச் சுமத்தல்முதலியனசெய்வன், விராத-58: பாரிடந்ததை, கவந்த-23: புத்தேளிர் இருவினையு முடையார்போலிருந்தவமியற்ற ஒருவினையு மில்லான்போ லுறங்குபவ, விராத-57: யாகாக்கினியாய் நெய்யுண்பவன்: அன்பர் கருதியதுவஞ் சேவடியினன், விராத-45

திருமாலின்பெயரை உணர்குர்உறுபேறே நெடிது, சரப-44

திருமாலைக் கண்டவர் உறுபொருள் கருதுவதுளிதோ, சரப-44

திருமுதல், மாரீச-136

திருமேனிக் கன்பிழைத்தபிழை, சூர்ப்ப-115 [விராத-61

திருவடி × துப்பு, (நிறத்தில்உவமை.)

திருவடிநிலை-ஆதிசேஷனின் அமிசம், கரன்-159

திருவடிநிலையைப் பூமியைத்தாங்கும்படி யனுப்பியவன், கரன்-159

திருவுடம்பலசோதற்றல் எவன்செய, சூர்ப்ப-18

திருவுறையுமணிமார்ப, விராத-57

திரைப்பரவைப்பேரகழித்திண்ணகர் - இலங்கை, மாரீச-1

திவசம-காள, சரட-26

திறத்திறன் - மேலானதருமமார்க்கம், மாரீச-179

திறம்-வலி, அயோமு-24

தின்று தீயதேடுதல், விராத-69

தீங்குவருவதுந் தீர்வதுந்தன்மை நீர, சடாயுவு-197

தீநிமித்தங்கள் - குருதிமாமழைசொரிதல், பரிதியை யூர்வளைப்புண்ணுதல், கொடிமிசைக் காக்கைக் கணங்கள் பொருதுவீழ்தல், வாளின்வாய்களே ஈக்கள்மொய்த்தல், வயவர் தோளும் நாட்டமும் இடந்துடித்தல், குதிரை போருக்குகின்ற நிலையில் தூங்கிவீழ்தல், ஞாளியுடன் நரிக்குலம் விரவி ஊளையிடுதல், பிடிமதம்பெருக்கக் களிறு தந்தமொடியப்பெறுதல், பூகம் பழுண்டாதல்,

இடிவீழ்தல், பெருந்திசையெரிதல், முழுமாலேபுலால் நாறுதல், கரன்-70-72

தீப் புண்மேல்நுழையத் துடித்தல், சடாயுவு-122 [ரீச-95

தீபமாலே பொன்னனுரெடுத்தல், மா

தீபமொன்று மற்றொன்றை யுற்று இரண்டுமாயெரிதல் × காமமும் அதனுலான தாபமும் இரண்டும் ஆருயிரிற் கலத்தல், மாரீச.82

தீமருந்து, மாரீச-91

தீயசிமித்தம், கரன்-69 [சூர்ப்ப-67

தீயரோடுவரும் வீலேயாட்டுத் தீமை,

தீயவர்ச் சேர்தல்செய்தார் தூயவரல் லர், சடாயுவு-54

தீர்வு-ஒழிவு, சரப-9

தீரவாழ்க்கை, கரன்-147

தீவினேதீய நோற்றல், சூர்ப்ப-41

துஞ்சுவது-இறப்பது, சடாயுவு 15

துடைத்தல்-போக்குதல்,சடாயுவு-212

துண்டதுண்டம்-சின்னபின்னம்,சடாயுவு-109

துண்டம் - பறவைமூக்கு, சடாயுவு - 107, 109

துண்டமதி-பிறைச்சந்திரன், அகத்-51

துண்டமாக்குதல்-அறுத்தல், கரன்-7

துண்ணெனுமவ்வுரை, சடாயுவு-150

துணிதல் - துண்டாதல், விராத-28, கரன் - 78

துணிபட, கரன் - 86

துணிவு - உறுதிதருவன, பெரியோர் துணிந்து செய்யத்தக்கதெனக்கொண்டவிஷயம், நிச்சயம், மாரீச-177

துணுக்கம், கரன்-52, 57

துணுக்கமுற்று - அச்சங்கொண்டு, கரன்-176 [83

க்கெனல் - திடுக்கிடல், சூர்ப்பக்கை மதவேழக் குழுவனுர், கரன்-27

துணையிலாதவர்க்குப் பகைப்புலம்தொலேத்து நீக்கலரிது ×புணையிலாதவர்க்குவேலேபோக்காரிது, கவந்த 54

துப்பழிசெவ்வாய், மாரீச-175

துப்பின்கொம்பர்-சீதை, மாரீச-142

துப்பு - பவழம், வலிமை: சூர்ப்ப-21: ×இதழ்,

தும்புரு, மாரீச-12

தும்புருத்தன், விராத-65

தும்மித்தல் - வெட்டுதல், கரன் - 151: துண்டித்தல், அயோமு-57

தும்மித்து-ஒழித்து, வெட்டி, சூர்ப்ப-96

தும்மிலம் பேராரவாரம், கரன்-15

துயக்கு-சோர்வு, கரன்-47

துயர்க்கூற்றமாயவிருள், அயோமு-1

துயர்குளிக்தல் - துயரில்மூழ்குதல், சடாயுவு-218

துயர்விளவு, அகத்-11

துயரஞ்சித் தொடர்கிலாத்தொல்குடி, சூர்ப்ப 98

துயல்வருதல் - தொங்கியசைதல், விராத-10

துரக்க-விரைந்துதொடர, விராத-66: செலுத்த, அகத்-12

துரகம் கழுத்தறுப்புண்டவை ×செக்கெல் சூடறுப்புண்டவை,கரன்-149

துருத்திபோலுயிர்த்துயிர்த்து, மாரீச-91

துருவி-தேடி, அயோமு-32

துவசமாரமர், சரப-26

துவர்த்தல் - பவழத்தின்தன்மையைக் கொள்ளுதல், அயோமு-98

துவளாமல்-வருந்தாமல், கவந்த-34

துவன்ற-நெருங்கிய, விராத-2

துவன்றி-நெருங்கி, மாரீச-97

துவன்றினை, கரன்-33

துவைத்தல்-அடித்தல், மாரீச-17

துழனி-ஆரவாரம், விராத-12

துழாயலங்கல், விராத-58

துளக்கம்-நடுக்கம், சடாயுவு-129

துளங்குதல்-ஒளிசெய்தல், நடுங்குதல், விராத-8

தூற்றுதல்-உட்கொள்ளுதல்,கவந்த-18

தூறுகமுற்றுன், சடாயுகா-19

தூறை-இடம், சரப-5: வழி,மாரீச-123

தூன்பம்வந்தூன்றச் சிந்தையெரிவுயுவு-194

தூன்றி-அடர்ந்து, கரன்-26

தூன்றுதல் - நெருங்குதல், அயோமு - 33, விராத-11

தூன்னர்-பகைவர், சரப-26

தூன்னுதல்-பொருந்துதல், சரப-32

தூனி-மனத்துள்ள கறு, சூர்ப்ப-92

தூனைதல்-விரைதல், கரன்-141

தூக்குதல்-ஆராய்தல், மாரீச-217
தூங்குதல் - (கட்டப்பட்டுத்) தொங்குதல், கரன்-182
தூசு-வஸ்திரம், விராத-5
தூடணன், கரன்-51, 137
தூண் X தோள், சரப-25
தூண்டுதல்-வளர்தல், அகத்-52
தூணி - அம்புக்கூடு, கரன் - 182
தூத்துன்னியஎதி, கரன்-36
தூப்போலுச்சுவையுடைய கனி, சூர்ப்ப-128
தூம்பு-துவாரம், கவந்த 14
தூம்பெனத்தெரிந்தமூக்கு, கரன்-1
தூமனத்தருந்ததி, சடாயுவு-23
தூய்மையன், சடாயுகா-5
தூயவன், சூர்ப்ப-41
தூர்க்கும், சூர்ப்ப-75
தூரம், சடாயுவு-163 [57
தூரியக்குரல்-வாச்சியமுழக்கம், கரன்-தூவி, சூர்ப்ப-2
தூளியான சூரியனதுபசும்பரிப்பொற் றேர்வெண்மைமேயின, கரன்-53
தூளியின்வருணனே, கரன்-53, 54
தூறு-புதர், கரன்-58, சடாயுவு-90
தெங்கு, மாரீச - 96
தெட்ட-தெளிவான, சரப-8
தெய்வப்பொன்னி, அகத்-58 [யுகா-2
தெரிப்புறுதல்-விளங்கச்செய்தல், சடா
தெரியல்-மாலை, சூர்ப்ப-106
தெருமரல்-துன்பம், அயோமு-2
தெருள்-உண்மைப்பொருள், தெளிந்த அறிவு, மாரீச-128
தெருளுதல் - ஐயமறத்தெரிந்துகொள்ளுதல், மாரீச-143
தெருளுறமெய்ப்பொருள்தெரிந்திலார் X மருளொடுதெருளுறு நிலையமங்கையர், மாரீச-128
தெவ்வர்தொழும்வீரர், அயோமு-69
தெவ்விடைவில்லவன், அயோமு-38
தெவ்வுரையென் றேருலகு மில்லாத சீற்றத்தான், சூர்ப்ப-117
தெழித்தார் - அதட்டியாரவாரித்தார், கரன்-98 [மாரீச-160
தெளிகின்றது - விளக்கமடைவது,
தெளிவு-தெளிந்தவறிவு, சரப-37
தெளிவுடைச்செம்மல்-இலக்குமணன், மாரீச-232
தெற்றுதல்-கடித்தல், கரன்-104: சேர்த்துக்கட்டுதல், அயோமு-44
தெறுத்தல்-உயிர்களையழித்தல், விராத-71
தெறுதல்-அழித்தல், சூர்ப்ப-88
தென்றலழல்மிகுதல், சூர்ப்ப-82
தென்றலைப் பகையைச் செய்த தீமை, மாரீச-203
தென்னம், மாரீச-96
தேசம்-நாடு, மாரீச-194
தேட்டம்-தேடுவது, சூர்ப்ப-121
தேம்பிடுதல்-மெலிதல், சடாயுவு-169
தேம்புனல், மாரீச-14
தேமலரோனம்மான்-இராமன், மாரீச-220
தேமறை, அகத்-23
தேய்தலாலொளிர்தல், சடாயுகா-6
தேர் X தரங்கம், கரன்-25
தேர்கட்கு ஆளி, அரி வேங்கை, ஞாளி, நரி, கூளி, எற்றினம், ஏனம்,பாறு, கழுதை என்ற இவற்றைப்பூட்டுதல், கரன்-31, 32
தேர்சென்றசுவடு, சடாயுவு-165
தேர்துடித்தல் - தேர்முறிந்துவிழுதல், கரன்-165
தேரின்சேனை, கரன்-24
தேவமாதர் இராவணனுக்குச் செருப்புத்தூக்குதல்முதலிய தொழில்செய்வார், சடாயுவு-44
தேவர்க்குந்தொழுந்தேவ ராகுபவர் ஆ அந்தணர் முதலியவர் பொருட்டு உயிரையீந்தவர், அகத் - 21
தேவர்தலைவர், கரன்-24
தேவரும்மருள்கொளத்தெரியும்மேனி, சடாயுவு-24 [233
தேவரையிடுக்கண்டீர்ப்பான், மாரீச -
தேவரோடு கற்றறிந்துளிரே ஓடுதற்கு, கரன்-143
தேவி, விராத-41
தேவிமார், சடாயுவு-31
தேள் X புருவம், விராத-43
தேன்-வண்டு, அயோமு-25
தேனின்மொழி, சூர்ப்ப-33
தேனு-பசு, சடாயுகா-26
தைத்தல், கரன்-20
தையலார், சூர்ப்ப-23 [கரன்-82
தையலார்விழியெனக் கொடியசரம்,

தொகை-கூட்டம், சரப-31
தொங்கல் - ஓர்வகைமாலை, சரப-12: குஞ்சம், கரன்-48: கீழிறங்கியவரிசை, சூர்ப்ப-23
தொடக்கறுத்தோர்சுற்றம், சரப-27
தொடக்குதல் - மாட்டிக்கொள்ளுதல், கரன்-137 [மு-77
தொடர்ச்சி-சந்தர்ப்பம், வேளை, அயோ
தொடர்தல்-செல்லுதல், விராத-20
தொடுதல்-பிடித்தல், விராத-6
தொடை-ஒழுங்காகத் தொடர்ச்சிப்படுதல், சூர்ப்ப-23: தொடர்ச்சி, கரன்-89
தொடையல்மாலையில் ஆடவர்கள் அரிகள் உழுவை முதலியவை அரவாற் கட்டப்பட்டிருப்பது, விராத-10
தொண்டை-கொவ்வைப்பழம், அயோமு-98
தொலைத்தல்-வலியழித்தல், சூர்ப்ப-36
தொழுந்தொறுமாசிசொல்லுதல், அகத்-9
தொள்கு-வலை, சடாயுவு-130
தொளை யெயிறு கார்விடம் வழிதல், சூர்ப்ப-72
தோகை, சூர்ப்ப-92
தோகையர், மாரீச-26
தோகையர்கள்-மகளிர், சரப-4
தோட்டநுங்கு X தொளையுறுமூக்கு, கரன்-8
தோடு பூவிதழ், சடாயுகா-44
தோம்-குற்றம், விராத-66
தோமரம் - இருப்புலக்கை, எறியீட்டி, பேரீட்டி, கரன் - 11, 34
தோய்=தோய்ந்து: விராத-38
தோய்தல்-பதிதல்: சூர்ப்ப-59
தோய்ந்தும் பொருளனைத்துந்தோயாதுநின்றசுடர், சரப-27
தோள் X உதயமால்வரை, மாரீச - 3: X எழு, மலை, மாரீச-40: X சிகரம், கரன் - 44: X சுடர்மணித்தடம், (தடம் - மணற்குன்று.) சூர்ப்ப-4: X தண்டு, விராத-36: X மரங்கள், கரன் - 20: X தேவரைத் தேவரைத்த வம்மி, கரன்-74
தோள்அமர் வேண்டியிரைத்துவீங்குவன, கரன்-74
தோள்பார்த்தல், தன்வலிமைச்செருக்குத்தோன்ற, சூர்ப்ப-109
தோள்புடைகொட்டியார்த்தல், சடாயுவு-118
தோள் பொறைத்துயர்தீர்தல், அகத்-20
தோள்வளை, விராத-13
தோள்வளை, வெற்றித்திருவின் நகைபோலும்: தற்குறிப்பேற்றம்.
தோள்வாடை, சடாயுவு-61
தோளினைத்தின்னுகின்ற சேரம்பு, கரன்-63
தோளெலாம் X படிசுமந்த வரவின்படகினை, மாரீச-5
தோற்றவர் பகைவர்க்குத் தேய்வுவந்திற்றபோது வலியஅவரைத் தெறச்செல்லுதல் X இராவணனே இந்துவருத்துதல், மாரீச-107
தோற்றினமாத்திரத்துலகு சூழ்வரும்பாறு, (தோற்றுதல்-கருத்துண்டாதல்.) கரன்-32
தோன்றல்-வீரன், கரன்-51
நகில்-தனம், அயோமு-91
நகுதல்-ஒளிவீசுதல், மாரீச-228
நகை-பல், அயோமு-12, விராத-2
நங்கைமனம்புகப் புன்மைபூணுதல், மாரீச-87
நச்சுதல்-விரும்புதல், சூர்ப்ப-68
நசை-விருப்பம், சூர்ப்ப-110
நஞ்சம் X வஞ்சமகள், சூர்ப்ப-31
நஞ்சுநக்கினள்போலநடுங்குதல், சூர்ப்ப-86
நஞ்சுநுகர்வாரையிதுநன்றெனலு நன்றே, மாரீச-193
நஞ்சுறுபிரிவு, மாரீச-126
நடத்திடைப் பாணியின் படிக்கின்ற தெனை வீணையினிசைபட வேதம் பாடுவான், சடாயுவு-21
நடை-நீதிநெறி, மாரீச-180
நதம்-யாறு, விராத-45
நந்தாத-கெடாத, சரப-16
நம்பன், விராத-47
நமன், கரன்-52
நயப்பு-அன்பு, கரன்-47
நயனநீரை உவகையாற்பொழிதல், அகத்-46
நயனம் X ஆர்கலிநஞ்சு, கரன்-45
நரகன்வெல்வதே, சடாயுவு-133
நரகையும்நகும்வயிறு, கவந்த 17

நரன், சூர்ப்ப-109
நல்கி-உபசரித்து, அகத்-10
நல்குதல்-கொடுத்தல், அகத்-56
நல்கும்-அன்புகொள்ளும், மாரீச-162
நல்லவன்ரோற்பதே, சடாயுவ-133
நல்லாசிரியர் ஒருவர்க்கு முத்திமார்க்கத்தைப்போதித்தல் X சவரி இராமனுக்கு செல்வழிதெரித்தல், சவரி-7
நல்லாண்மகள்-நல்லாளாகியமகள், சூர்பப-88
நலிஞ்சுதின்னுதல், விராத-67
நவ்விநயனம், மாரீச-89
நவ்வியின் விழியவள்-சீதை, சரப-35
நல்வியினெதுங்கி, சூர்ப்ப-37
நவக்கிரகம் X நவமணி, சடாயுகா-7
நவஞ்செய்தல்-புதுமைவிளைத்தல், சூர்பப-18
நவமை-புதுமை, அகத்-31
நவை-குற்றம், சரப-29
நவையிலாநவை, அயோமு-5
நளி-பெருமை, மாரீச-15
நளிர்-குளிர்ச்சி, மாரீச-159
நளினநாட்டத்தான், சூர்ப்ப-18
நளினப்பள்ளி, சூர்ப்ப-4
நறை - தேன், மாரீச - 163, சடாயுவ-28
நறைச்சுனைமடுத்துண்டு - தேனூற்றிலிறங்கிப்பருகி, சடாயுவ-28
நன்றுவரவென்று பலநல்லுரைபகர்தல், அகத்-47
நன்னுதல்-அழகியநெற்றி, சூர்ப்ப-44
நனந்தலை-அகன்றஇடம், மாரீச-42
நாXசிகைக்கொழுந்து, கவந்த-14
நாக்கரிதல், சூர்ப்ப-125
நாக்குXமின், மாரீச-238
நாகம் - மலை, கரன் - 97: பாதாளம், யானை:("நாகமது நாகமுறநாகமெனநின்றான்") அகத் - 39: புன்னைமரம், மாரீ - 96
நாகம்படமொளித்தல், சடாயுவ-89
நாகம் பளிங்கு, மாரீச-96
நாகரிகர்-கண்ணோட்டமுடையவர், சூர்பப-125
நாகருலகு, சூர்ப்ப-36
நாசம்வந்துற்றபோதுநன்மையுந்தீமையன்றே, மாரீச-202
நாசி - மூக்கு, மாரீச - 58, சூர்ப்ப 130
நாட்கொள்ளுதல், சூர்ப்ப-96
நாட்டங்கடீயுக நோக்குதல், சடாயுவ-179
நாட்டங்களாயிரமில்லையென்றவலமெய்தல், சடாயுவ-29
நாட்டம்-கண், சூர்ப்ப-16, கரன்-8
நாட்டமெரியுமிழ, சூர்ப்ப-121
நாட்டல்-குறித்தல், மாரீச-4
நாடறியாத்துயில், சூர்ப்ப-135
நாணுளும், சரப-25
நாணெலிவருணனே, விராத-24
நாந்தகவுழவர், மாரீச-38
நாப்பண்-நடு, மாரீச-97, கவந்த-2
நாமம் - பெயர், அகத் - 5: பெருமை, மாரீச-159
நாமவாளெயிறு, சூர்ப்ப-81
நாமவேல், விராத-67
நாரதன், சரப-4
நாரதன் வாணிபோல வீணையினரம் பிடைவிளைத்த தேமறை செவியின் வார்த்தல், மாரீச-13
நாரம்-அன்பு, மாரீச-180. நீர், மாரீச-105
நாரி-பெண், அயோமு-35
நாவிநாறுநுதி, மாரீச-89
நாள் - சிறப்புடைய நட்சத்திரம், மாரீச-5
நாள்செய்தல்-அன்றுமலர்தல் ("நாட்செய்தகமலம்") சடாயுவ-209
நாள்நின்றுளதனுல் பொன்றுதுளனுயினன், மாரீச-154
நாளம் பூவின்காம்பு, சூர்ப்ப-4
நாளனைத்தையுங்கடந்தனன் - வெகுபிராயமானவன், சடாயுவ-177
நாளினூல்-சோதிடசாத்திரம், மாரீச - 129
நாளுலந்தழிதல் - ஆயுள்நாள்ஒழிந்துபடுதல், கரன்-63
நாற்கொம்புக்கரி, சரப-22
நாறுதல்-ஒழுகுதல், சரப-12: வெளித்தோன்றுதல், சூர்ப்ப-24
நான்மறையின்கனி, சரப-24
நான்முகன், சரப-15
நான்முகன் நரைதிரையொன்றில்லாதான், சூர்ப்ப-124

ஞானசாரமுண்டிருந்த சீதசந்தனட மாரீச-105
ஞானநெய், மாரீச-18
திகர்த்தல்-ஒத்தல், சூர்ப்ப-14
திச்சயம்மெனுங் கவசம், கரன்-142
திசிஇருளேக்கவ்வியிருப்பது, சரப-35
திசிசரர், கரன்-93
திணச்சேறு, கரன்-154
திணம், விராத-20
திந்தனை, சூர்ப்ப-49
திமித்தம், சூர்ப்ப-97
திமிர்த்தல்-தோன்றிவளர்த்தல், விராத-1: எழும்புதல், விராத - 38: செருக்கு மிகுதல், விராத-49
திரந்த-திறைந்த, மாரீச-69
திரந்தரம்-இடைவிடாமல், அடிக்கடி என்றபடி: சடாயுகா-12
திரப்புதல் - கூறுமுடித்தல், சடாயுவ-191: செய்திடல், அயோமு-70
திரம்பிய மதி, மூன்நாளினிளம்பிறை யாகி முளைத்தது, மாரீச-133
திருத்தம்-கூத்து, அகத்-23
திருதர், அகத்-52
திருதன், விராத-29
திருதி, சூர்ப்ப-138
திரை-வரிசை, மாரீச-5
திரைத்த-வரிசையான, அகத்-43
திலாக்கற்றைXவெள்ளியுருக்கு, மாரீச-109 [ச-110
திலாமின்னலந்திரிதல்போலும், மாரீ
திலை-ஆழம், சரப-2
திலையறிதல் - திலையுடையனாகவறிதல், விராத-55
திலையா-தடைப்பட்டுநிற்காமல், விராத-34 [22
திலையாததிலை-சஞ்சலநிலை, சடாயுகா-
திலையில்லாத்தீவினை - திலையில்லாமையையுணராமையால் நேருந்தீவினை, சரப-30
திவத்தல்-உயர்வுறுதல், அகத்-20
திழல்-ஒளி, சரப-36
திழலுறுபூண், கரன்-43
திறுவுதல்-கேட்டல், சரப-37
திறை-உறுதிநிலை, சடாயுவ-150
தின்வரவு தீதில்வரவாக, சூர்ப்ப-38
தின்னருளைத்தவத்திற்கெளிது, அகத்-32
தினைப்பின-எண்ணங்கள், சடாயுகா-16 [த்-29
தீ எய்த யான் செய்த தெத்தவம், அக
தீசம்-தாழ்வு, அகத்-40
தீசன், மாரீச- 249
தீடதிமிர்தல்-நீண்டுபடர்தல், கரன்-26
தீத்தநீரின்முளைத்தெழுந்த அண்டங்கள் X நீரின்மொக்குள், கவந்த-48
தீத்தமும்பரவையும் குறுகக் கோத்த அன்பு, சூர்ப்ப-26
தீத்து-விட்டு, சடாயுகா-21
தீதிநெடுந்தவம், சரப-15
தீர்-பால், சரப-29
தீர்த்த-திறத்தையுடைய, விராத-61
தீர்மை-அன்பு, சடாயுகா-33
தீரம்-தீர், சூர்ப்ப-95
தீருண்டு, சூர்ப்ப-5
தீல்-நீலம், சடாயுகா-4
தீலச்சிகரக்கிரியன்னவன், மாரீச-132
தீலம் பூகம், மாரீச - 96
தீலமணி X திருவேங்தன்திறம், சூர்ப்ப-8
தீலமாயதிறத்தன், அயோமு-27
தீவி-அரைவஸ்திரம், விராத-15
தீள்சுடர்மேன்மை அற்பற்றழியப்பகலாக்கியது, மாரீச-160
தீளம்-பறவைக்கூடு, கவந்த 40: நீட்சி, சூர்ப்ப-4
தீன்முகில்போற் சரதாரைகள் வீசுதல், சடாயுவ-79
நுகர்தல்-உண்ணுதல், அகத்-45
நுங்க-விழுங்க, சூர்ப்ப-77
நுடங்கிட-துவள, விராத-40
நுடங்குதல்-தளர்தல், அயோமு-87
நுணங்குகேள்வியார், கவந்த-20
நுதியிழைமதி - நுண்ணிதாக ஆராயவல்ல புத்தி, மாரீச-227
நுரை Xகவரி,வெண்குடை,,கரன்-120
நுறுங்க-பொடியாக, கரன்-107
நுன்னே, கரன்-3
நுனித்தல்-நுட்பமாகவறிதல், மாரீச-2
நூனை-நுனி: சடாயுவ-70
நூக்கி-தள்ளி, சூர்ப்ப-94
நூபுரம்மேகலை நூலிற்கோத்தஆரம், கூந்தலில்வண்டு ஆகியஇவை பூசலிடுதல், சூர்ப்ப-34
நூறுதல் - அழித்தல்: கரன் - 107

தூண்மந்திரநெறியின்வல்லான், சடா யுவு-222
நெஞ்சு-மார்பு, கரன்-139: இதயத்தா னம், மாரீச-247
நெடியநம்பி-தேவாதிதேவன், திரிவிக் கிரமன், புருஷோத்தமன், அண் ணன், சூர்ப்ப-4
நெடுங்கஞ்சுகம்-நிலையங்கி,மாரீச-16
நெடுமரம்போனின்றேன், சடாயுவு - 185
நெய்ந்நிலையவேல், மாரீச-41
நெரிதல்-நிதைதல், சூர்ப்ப-109: வளை தல், மாரீச-109
நெருநல்-நேற்று, சூர்ப்ப-118
நெருப்பினன்-சிவன், மாரீச-31
நெல்லெலாஞ் சுரந்தளிக்கும் நீர்நாடு, சூர்ப்ப-138
நெல்வால்-சிறிதளவுக்கு எடுத்துக்காட் டும் அளவை, சரப-13
நெளிப்புற, கரன்-29
நெற்றிப்பிறையாள், மாரீச 218
நெறி-நீதி, பதவி, சரப 15, 16
நெறித்தாரை-நல்லொழுக்கவழி, சூர் ப்ப-137
நெறிநின்றூர், விராத-56
நெறிபிழைத்தார் - துன்மார்க்கர், அரக் கர், கரன்-179
நெறிமுறை-உலகவழக்கம், விராத-53
நேடி-தேடி, சடாயுவு-158
நேமி-திருமால், அகத்-22
நேமிப்புள்Xகிறைநீங்கினர் (பிரிவினை விடுவித்த பகற்பொழுதாகையில் களித்தலில் உவமம்.) மாரீச-126
நேமிபொறுத்தவன், சரப-9
நேமிமால்வரை X கவந்தன்கை, கவ ந்த-7
நேமியான்-திருமால், சடாயுகா-12
நேமியாஞ்சிறைறற்று நீரினுன், மாரீ ச-31
நேமியுழவன், மாரீச-57
நேமிவாளம் X நயனம், (இரட்டையா யிருப்பதில் உவமை.) சூர்ப்ப-4
நேர்-ஒப்பு, சூர்ப்ப-36
நேர்தல்-நிறைதல், சரப - 23: விடை கூறுதல், சடாயுவு-166: உடன்படு தல்-வாக்களித்தல், கரன்-61: சேர் தல், கரன்-189
நேர்மின்-வாருங்கள், கரன்-18
நேர்மை-ஒழுங்கு, மாரீச-223
நேரா-சேர்ந்து, அகத்-40: சித்தமாகி, கரன்-60
நேரிழை, சூர்ப்ப-4
நேரிழையார் நிலத்திலும் விசும்பிலும் என்னேப்போன்றவளே வல்லீருளி ரேற்சொல்வீர், சூர்ப்ப - 129
நேருநர்-எதிர்ப்பவர், மாரீச-41
நொடி, கரன்-23
நொடித்தல் - விடைகூறுதல், சடா யுவு-152
நொடிவரை, சூர்ப்ப-130
நொய்தின் - எளிதாக அல்லதுவிரை வாக, சூர்ப்ப-94
நொய்து - அற்பமானது, மாரீச - 51: விரைவு, அயோமு-63
நொய்யள்-இழிகுணமுடையவன், சூர் ப்ப-46
நொறில்-விரைவு, கரன்-160
நோக்கருகாரிகையாள், கரன்-7
நோக்கு,சடாயுவு-119: அழகு,கரன்-6
நோக்குதல்-உவமவுருபு, சூர்ப்ப-91
நோய்Xஅரக்கி, கரன்-56
நோய் மாயப்பற்றறுபெற்றியோர்க்கும் உற்றருநியையது, உடனுறைந்தே உயிர்களே யந்தகற்களிப்பது, கர ன்-56
நோன்பு-தவம், சடாயுகா-11
நோன்மை-பெருமை, அயோமு-87
பக்கமின்னுமேரு, விராத-9
பகலவன்குலமைந்தன் இராமன்,அகத்- 17
பகலும்இமைகணீங்காதுதியிலும் கண் X பிச்சையுமிடுதுமென்று கருதா வச்சையர் நெடுமனேவாயில், மாரீச- 125
பகலோன்Xவில்லாளன், (ஒளிர்தலில் உவமை.) கரன்-89
பகழி, மாரீச-245
பகைஞர், விராத-26
பகைஞர்தம்பாற்போவதுகுற்றம், சடா யுவு-86
பகைவன்பெற்ற கீர்த்திவருத்துதல், மாரீச-110
பங்கம்-தோல்வி: அழிவு; வடசொல்: சடாயுகா-8

பங்கயச்செல்வி-திருமகள், சூர்ப்ப-30
பங்கயம், மாரீச-76
பங்கி-மயிர், சடாயுவு-58
பச்சையம்புரவித்தேரது செங்கதிர், மாரீச-131
பசி தின்றும்விளியாதுவிரிதல், விராத-11
பசும்பரி, கரன்-53
பஞ்சரக்கிளி, விராத-25
பஞ்சவடிவருணனை, அகத்-57, 58
பட்டதன்மையுணர்தல் - பூர்வஜ்ஞானம், விராத-46
படர்தல்-செல்லுதல், விராத-38
படலை-தொகுதி, சடாயுவு-203
படி-பூமி, விராத-7: ஒப்பு, சூர்ப்ப-90
படிந்தன-விழுந்தன, கரன்-117
படியுறுதல்-அமைதல், கரன்-48
படிவம்-வடிவம், விராத-48: தன்மை, சூர்ப்ப-7
படுதல்-நிகழ்தல், சடாயுவு-200
படை-ஆயுதம், விராத-10
படைக்குநர்சிறுமை, சூர்ப்ப-60
படைக்கணர்-மாதர், மாரீச-145
படைக்கைவீரர் X வல்லியக்குழாங்கள், மழையினீட்டம், இபத்தொகுதி, ஒங்கல், கரன்-30
படைத்தல்-தம்முடையவாகப் பெறுதல், கரன-103
பண்டாரம்-பொக்கசம், சடாயுவு-125
பண்டு, விராத-36
பண்டை, சூர்ப்ப-136
பண்ணை-சேணமும், படகும்: கரன்-120: படகு, கவந்த - 18: திரள் (விண்ணவர்பண்ணை), சடாயுவு - 114, 123
பண்புற-தகுதியாக, சூர்ப்ப-60
பணம்-படம், சடாயுகா-28
பணமணி, விராத-11
பணி-பாம்பு, அயோமு-44
பணிகொள்ளுதல்-ஏவல் கொள்ளுதல், சூர்ப்ப-111
பணித்தல்-சொல்லுதல், அகத்-17
பணிலம்-சங்கு, கரன்-32
பணை-பருமை, சூர்ப்ப-77
பணைமுழக்கம் X கடலின்முழக்கம், கரன-25
பத்தி-வரிசை, கரன்-80:சடாயுவு-107
பத்திரச்சிறை-வலியசிறை, சடாயுவு-91 [அம்பு, கரன்-80
பத்திரம் - இலை, மங்களம், விராத-2:
பத்தினியைவிட்டேகுதி, சடாயுவு-94
பதாகை-பெருங்கொடி, கரன்-48
பதிஞல்வரரக்கர் படக்கைகலேமேலுற அரற்றுதலோடும் ஓடுகின்ற சூர்ப்பணகைXகளிறெலாம்படக் கைகலே மேலுறப் பிளிறியோடும் பிடி, கரன்-21
பதிஞன்குசேனைத்தலைவர், கரன்-37
பதைத்தல்-விரைதல், மாரீச 218: திடுக்கிடுதல், சூர்ப்ப-66
பந்தம்-கட்டுப்படுத்தும்ஓர்படை, கரன்-35:=ப்ருந்தம்: தொகுதி, அகத்-20
பந்தமாவினை, கரன்-56
பம்புதல்-பரவுதல், விராத-13
பயத்தல்-பெறுதல், சடாயுகா-26
பயன்படாமாந்தர் வாயில்சேர்பாணர் X (பகலில்) இதழ்திறக்கலாமலரிற் பாயுந்தும்பி, மாரீச-127
பரங்கிடந்தமாதிரம், மாரீச-93
பரம்-பரம்பொருள், விராத-49: மேன்மை, சூர்ப்ப-25: பாரம், விராத-3
பரம்பரம், விராத-54
பரம்பொருளின்ஞரென்று தொல்லை முதன்முனிவர் சூளுற்றது சரப-31
பரம்பொருளே துணியமாட்டாமை மாயவினையினுல், சரப-31
பரம்முருக்குதல்-மிகுதியாக அழித்தல், கரன்-185
பரமபதத்தின்தன்மை, சரப-20
பரமபதம் பூதங்கள் விளியுநாளும் போக்கிலாவுலகம், சடாயுவு-215
பரவல்-புகழ்தல், சடாயுகா-21
பரற்றருகானம், அயோமு-79
பராவுதல்-துதித்தல், சூர்ப்ப-52:சொல்லுதல், சூர்ப்ப-52
பரிசு-இயல்பு, சூர்ப்ப-143
பரிதல் - இரங்குதல், கரன்-136: மிகுதல், மாரீச-79
பரிதி-சூரியன், சூர்ப்ப-71
பருஞ்சிறை-சடாயு: (பருந்தினத்திற் கழுகுஞ்சேர்ந்ததனுல் சடாயுவை இவ்வாறு கூறியதென்றும், பருந்திறை யென்பதன்போலியென்றும் ஒருசாரார் கூறுவர்.) சடாயுவு-144

பருப்பதம் வேரொடும் எடுத்து விசைத்துவிடுதல், விராத-29
பருவச்சோலை, சூர்ப்ப-7
பருவம்-காலம், மாரீச-99, 103
பருவரல்-துன்பம், சடாயுவு-148
பருவரன்மயக்கு, சூர்ப்ப-99
பல்தோன்றும்பருவாய், சூர்ப்ப-138
பல்லம்-ஒருவகைப்பாணம், கரன்-77
பல்லவம், தளிர், சூர்ப்ப - 31: அயோமு - 94
பல்லாண்டிசைத்தல், சூர்ப்ப-108
பல்லாயிரமிருள்-மிக்கவிருள், கரன்-89
பலி, சடாயுவு-106
பலிபூணுதல்-பலியிடப்படுதல், கரன்-99
பவர்-நெருங்கிய, கரன்-120
பவளக்கொம்பர்Xசீதை, சடாயுவு-25
பழமொழி-தொன்று தொட்டுவழங்கிவரும்மொழி, சூர்ப்ப - 139: முன்கூறிய வார்த்தை, கரன்-61
பழி-நிந்தனை, சூர்ப்ப-103
பழிப்பு, சூர்ப்ப-25
பழிபடுபிறவி-அரக்கஜந்மம், சூர்ப்ப-52
பழுதறுபெண்மை, சூர்ப்ப-48
பழுது-அழிவு, கரன்-88
பழுமரம், விராத-2
பழுவம் - சோலை, விராத-2: அகத்-2: தொகுதி, சூர்ப்ப-3
பளிக்கறை, அயோமு-37
பற்று-தொடர்பு, மாரீச-82
பற்றுதல்-நெருப்புமூண்டெரிதல், சடாயுவு-101
பறத்தல்-விரைந்துநடத்தல், கரன்-137
பறவை நாஅவித்தடங்குதல், சடாயுவு-35
பறித்தல்-இழுத்தல், கரன்-138: பிடுங்குதல், விராத-12
பறைதல்-சொல்லுதல், மாரீச-225
பறைபோதும்-பறையடிப்பதுபோலத் தூடிக்கும், மாரீச-193
பன்னகாதிபர், விராத-12
பன்னல்-துதித்தல், விராத-56
பன்னி - பத்தி: விராத-5: கற்புடைய பெண், சூர்ப்ப-52
பனி - அச்சம், விராத-52: குளிர்ச்சி, சூர்ப்ப - 7: பனிக்கட்டி அல்லது பனிநீர், சூர்ப்ப-77
பனிவருங்கான், மாரீச-34
பனியெரிந்தால் வேனிலே விளம்பலாமோ, மாரீச-100
பாக்கியம்-பேறு, மாரீச-227, சடாயுவு-189, சூர்ப்ப-130
பாக்குமரத்தின் மணிவடஞ்சுற்றி ஊசலாடுதல், மாரீச-39
பாகனேயசொல்லி, அகத்-59
பாகியல்கிளவி, சடாயுவு-25
பாங்கர்-பக்கம், சூர்ப்ப-7
பாசம், கரன்-16
பாசிலை, அயோமு-33
பாடகத்தரம்பையர், கரன்-119
பாடமுறுதல்-பளபளவென்று ஒளிசெய்தல், சரப-11
பாடவம்-திறமை, (வடசொல்.) சூர்ப்ப-73: கரன்-51
பாடுபட-கெம்பீரமாக, வருத்தமுண்டாக: விராத-17
பாண்-பாட்டு, மாரீச-127
பாணி - கை, மாரீச-13: தாளவொழுக்கு, மாரீச - 22: நீரோட்டம், மாரீச-96
பாணிக்க - பொழுதுபோக்க, சடாயுவு-157
பாபம் நின்றிடத்துத் தருமம்மில்லா, மாரீச-82
பாம்பணை பஞ்சணை, சடாயுவு-142
பாம்பறியும் பாம்பினகால், சூர்ப்ப - 139
பாம்பின்பெருமை சிறுமைக்கொருபெற்றி குறைந்ததுண்டோXதிங்களோடு இச்சிறுமின்பிறை நீமை குறைந்ததில்லே, மாரீச-136
பாம்பு படங்குறைந்து ஒடுங்குதல், சடாயுவு-35
பார்-தரை, கரன்-99
பார்ப்பு-குஞ்சு, சடாயுகா-48
பாரவெஞ்சிலை, விராத-23
பாரிடம்-பூதம், கவந்த-23
பால்பரந்தனையவின்சொல், அயோமு-8
பாலகில்லர், அகத்-3
பாலம்-பிண்டிபாலம், கரன்-35
பாலையாழ் பழித்த சொல், மாரீச-95
பாவம்-பிராணி, அயோமு-46
பாவமோவெல்வது, சடாயுவு-133

பாவியூா,மாரீச-89:எண்ணி, சூர்ப்ப-30
பாவியாதபோது இலாத-எண்ணுதவே ஊயிராத, மாரீச-93
பாவியேன், சூர்ப்ப 111
பாவியேனையும் பார்க்குங்கொல், சூர்ப்ப-87
பாவை, விராத-25
பாழ்வயிற்றலகை, கரன்-154
பாழி-வலிமை, மாரீச-93: பெருமை, சடாயுவு-88
பாறு-பருந்து, சடாயுகா-27
பானல்-கருநெய்தல், மாரீச-92
பானிறவளரி, மாரீச-97
பிடித்தருநடை, (பிடி - பெண்யானை.) சூர்ப்ப-19 [156
பிணக்காட்டி லிறங்கு மேறும், கரன்-
பிணி முதற்பாசம், மாரீச-103
பிணியிற்பேர்தல் - நோயிலகப்படுதல், சூர்ப்ப-83
பிதிர்த்தார்-சொரிந்தார், கரன்-98
பிதிர்தல் - சிந்துதல், சடாயுவு-203,பிதிர்பொறிப்படலையென்றுமாறுக.
பிரகரம்-தண்டனை, மாரீச-11
பிரமரீடனியாயம், கரன்-125
பிரமலோகம் எல்லாவுலகிற்குமுயர்ந்தது, சரப-17
பிரமலோகம் சிறப்பம்போல் வீவது, சரப-18
பிரமலோகம்முதலியன பெற்றும் பெறுகில்ல தொர் பெற்றியது, சரப-19
பிரமன்சாபத்தால் அரக்கன் சீதையைத் தீண்ட வஞ்சுவானெனல், சடாயுவு-143
பிரமன்முதலோர் தலைபத்தாற் காட்செய்கின்றூர், சடாயுவு-209
பிரிக்கமுயல்வார் புணர்த்த பொருளிது, சடாயுவு-155
பிரையுறுபால் × இயற்கைநிலை தடுமாறியசொல், மாரீச-35
பிலனிற்பெரியவாய், விராத-11
பிழிதல்-வடிதல், அகத்-35
பிள்ளை-இளங்குழந்தை. மாரீச-77
பிள்ளைச்சொல் - மழலைச்சொல், சடாயுவு-199
பிறங்குதல்-விளங்குதல், அகத்-35
பிறவி × பெருஞ்சிறை, அகத்-7
பிறவிக்கட்டம் - பிறவித்துன்பம் விராத-46
பிறவிக்கடல்கடத்தல், விராத-61
பிறவிபனிக்கின்றது, விராத-52
பிறவிமயல், கவந்த-50
பிறவிவேண்டேன், சடாயுவு-184
பிறவினைத் தன்வினைப்பொருளது, சடாயுவு-190
பிறழ்தல் - மிகுதல், சரப-3: விளங்குதல், விராத - 16: வேறுபடுதல், விராத-1
பிறழ்ந்தொளிர்தல் - ஒளிவீசிவிளங்குதல், சூர்ப்ப-32
பிறிது-மற்றொன்று,சூர்ப்ப-36: உடல், சரப-30
பிறிதுற - வேறொருவகையாக, சடாயுவு-55
பிறிவு-நீங்குதல், விராத-47
பிறைச்சந்திரனை, வடவாவனல் விடவாளெயிறு வாளுருவிக்கொடு தோன்றிய மாலையெனல், மாரீச-134
பிறைமுகச்சரம், கரன்-151
பின்றுதல் - பின்னிடுதல், செல்லச்செல்ல வழி தொலையாதிருத்தல், விராத 11
பின்னமாய் ஒன்றுதல், விராத-60
பின்னவன்-தம்பி, சடாயுவு-132
பின்னுதல்-கலத்தல், சரப-3
பின்னுறுவது - பின்னேநேருந் தீப்பயன், சடாயுவு-183
பின்னை-பின்பிறந்தவள், சூர்ப்ப-39
புகர்-ஒளி, சடாயுவு-111
புகல்-தங்கியிருக்கும்இடம்,சூர்ப்ப-118
புகல்புகுதல்-சரணடைதல், அகத்-17
புகலுதல்-விசாலமுதல், ஆசைகொள்ளுதல், சூர்ப்ப 47
புகலுறுவிதி-நேரிடவேண்டிய முறை, சரப-40
புகழ்நிறுவிப் பொன்னுலகம் புக்காதை, சடாயுகா-31
புகுந்த-நடந்தவை, வினையாலணையும் பெயர்: சடாயுகா-37
புகையும்நெஞ்சு, கரன்-60
புகைவித்தல், மாரீச-198
புங்கவர்-சிறந்தோர், அகத்-14.இல்-3
புங்கவன், சடாயுவு-9.
புட்டில்-தூணீரம், அகத்-55

புடைத்து-வீசி, கரன்-110
புடைபடுத்தல் - சூழப்பெறுதல், கலி
நத-2
புடைவிம்முதல்-பக்கங்களில் விளங்
கப்பெறுதல், அகத்-57
புண்டரம்-கழுகு, சடாயுவ-104
புண்டரீகம் × நயனம், அகத்-46
புண்ணீடைப்பொழிபுனல், விராத-44
புண்ணியம்பயக்கின்றழி எப்பொரு
ளாயினது, கலித்-41
புண்ணிற்புதுநீர் பொலியப்பொழிதல்,
சடாயுவ-112
புணர்ப்பது - சூழ்ச்சியுடன் செய்யவே
ண்டுவது, மாரீச - 205
புணர - சேர, சூர்ப்ப-77
புத்தேளிர், விராத-57
புதல்வி, சூர்ப்ப-39
புதியதோர்முறுவல், சூர்ப்ப-5
புயங்கம், சடாயுகா-28
புரட்டின, கரன்-153
புரந்த-காத்த, சூர்ப்ப-50
புரந்தரன், சரப-32
புரந்தரனேச்சிறையிடுவித்த மருகன்,
சூர்ப்ப-112
புரம்-உடம்பு, × இருள், கரன்-88
புரவி - குதிரை, விராத-10: கரன்-50
புரளுஞ்சீதை × படிந்தகொடி, இடிக்
குடைந்தஅரா, சடாயுவ-3
புரிதல்-சுற்றிப்பிடித்தல், சூர்ப்ப-94
புருவக்கார்முகக்கருந்தடங்கண்ணியா,
மாரீச-23
புரை-இடம், கலித்-46 [வு-30
புரை தபு தவம்.(புரை-குற்றம்.)சடாயு
புல் பூமிதேவிக்கு இராமனடித்தலங்
தீண்டலாற் பொடித்த மயிர்போ
லும, சூரப-19
புல்லர்-இழிந்தோர், அகத்-19
புல்லி-தழுவி, மாரீச-203
புல்லிடையழகையகுத்தல், சூர்ப்ப -
125
புல்லிறுத்தது - வனத்தையடைந்தது,
சடாயுகா-43
புல்லுதல் - சேர்தல், சூர்ப்ப-23: தழு
விக்கொள்ளுதல், சடாயுவ-136
புல்லொழுக்கை அகலப்போடு, (கலப்
போடு-நீங்குமாறுவிட்டிடு.) சூர்ப்ப-
135
புல்வாய்புலிகாணுதல், சடாயுவ-98
புலம்-அறிவு, வயல்: சூர்ப்ப 1
புலமை-ஞானக்கண், சரப-33
புலர்தல் - வாடுதல், சடாயுவ-151
புலவர் - தேவர், சடாயுகா-11, 12
புலவி-பிணக்கு, மாரீச-238: ஊடல்,
மாரீச-4
புலன் - ஐம்பொறியின்பம், சடாயுவ-
119: பொறி, மாரீச-55: நூலறிவு,
மாரீச-2
புலித்தோலுடுத்த கதை, மாரீச-4
புலி புறத்ததாக் குட்டி கோட்படாது,
சூர்ப்ப-102
புலியினதள் - புலித்தோல், மாரீச-4
புலை - இழிவானதொழில், மாரீச-187
புனைமூன்று, அகத்-24
புனி, அகத்-30
புனித்திரு - பூமிதேவி, அயோமு-47
புழு × மானிடர், சடாயுவ 67
புழுங்கி - கோபித்து, விராத-29
புழுங்கியெழுதல் - கோபித்தெழுதல்,
விராத-14
புழுங்குதல் - மனமவிதல், அகத் - 6:
அயோமு - 41: வெதும்புதல், சூர்
ப்ப-27, 77
புழை - துவாரம், சூர்ப்ப-133
புள்ளி வெள்ளி, மாரீச-228
புள்ளின்வேந்தன் - சடாயு, சடாயுவ-
214
புள்ளினுக்கரசைக் கொள்கென ஊட்டி
யநீர், சடாயுவ-224
பூசுதல்=புழைதல், தூபபடுதல்: க
ரன்-76
புறங்காத்தல் - பாதுகாத்தல், சூர்ப்ப-
128
புறத்தவர் - மற்றையுலகத்தவர், விரா
த-50
புறத்திறன் - அதருமவழி, மாரீச-179
புறம் - முதுகு, சடாயுவ-125
புறன் - வெளி, சரப-23
புன்கணீரர் - வறியவர், சடாயுவ-119
புன்மையினின்ற நீராய், மாரீச-202
புன்னீனீர் × நொய்தாப் போதல்புரி
யும் இன்னுயிர், சடாயுவ-70
புனல், அகத்-1 [69
புனிதன்-பரிசுத்தன், சரப-1, சூர்ப்ப
பூணுதல் - அணிதல், சடாயுகா-11

பூ - பொலிவு, கரன் - 129: கூர்மை, சட்டூயுகா-38
பூசல் - போர், ஒன்றேடொன்றுமோ துகை, ('பூசல்வண்டு') சூர்ப்ப-47: பேராரவாரம், அயோமு-91
பூசலிடு மோசை - ஆரவாரஞ் செய்யு மொலி, சூர்ப்ப-34
பூசையின்வாயிலே மறுகுங் கிளி × வி ராதன்கைப்பட்ட சீதை: விராத-25
பூண்டவிரதத்தை விடுதுமென்றல் ந கையுடைத்து, மாரீச-235
பூண்டனை, கரன்-31
பூண்பாய்போனிற்றியால் யாதொன்று ம் பூணுதாய், கவந்த-44
பூத்தது - பயனேத்தந்தது, (இன்று தானென்புண்ணியம் பூத்தது), சவ ரி-5
பூதம் - பிராணி: பஞ்சபூதமுமாம், வி ராத - 18: நிலம் முதலிய ஐந்து, விராத-48
பூதலந்தீப்பொதிந்ததாமென மிதிக்கு ஞ் செய்கை, சடாயுவு-22
பூநின் றெய்யும் வீரன், அயோமு-25
பூப்பொதியவிழ்ந்தன நடையன், ச டாயுவு-22
பூப்போலும்மெல்லியல், சூர்ப்ப-128
பூவிலோன் - பிரமன், சூர்ப்ப-39
பூவின்மாரிபொழிந்தன, மாரீச-88
பூவிஞற் செய்தவமாலி, மாரீச-89
பூவுலாவு பூவை, விராத-72
பூவெலாம்பொடியாகக் காவெலா மொ டித்தல், சூர்ப்ப-76
பூவை, சூர்ப்ப-32
பூவை கிளிக்குஇன்சொல் அறையும் பொழில், அயோமு-37
பூழி - புழுதி, சடாயுவு-88
பூளீயெனவீவன், சடாயுவு-61
பெட்பு - விருப்பம், விராத-26
பெட்புறு - பெருமைமிக்க, ஆசைமிக் க, கரன்-24
பெண்ணிடையரசி - சீதை, சூர்ப்ப-57
பெண்ணெனநினைந்தான், சூர்ப்ப 93
பெண்ணெனப்பிழைத்தாய், சடாயுவு-67
பெண்ணெனும் பேதைமைக்குரிய மய ங்கம், சடாயுவு-150
பெண்பிறந்தேன், சூர்ப்ப-98
பெண்பிறந்தேனுக்குக் கண்டகண் பிற பொருளிற்செல்லா என்றுல் என்ப தும் பிறருக்கு ? கருத்தினனீதே, சூர்ப்ப-60
பெண்மையாலுரைசெய்தல், சடாயு வு-5
பெய்வளைத்தோளி, சூர்ப்ப-44
பெய்வளையணங்கு, சடாயுகா-42
பெயர்த்தும் - மீண்டும், சூர்ப்ப-13
பெயராயிரத்தாழியான் - பாதம்நினைவி னிருந்த கமலக்கண்ணன், கரன்-15
பெருஞானம் - ஐயந்திரிபில்லாத உ ண்மையுணர்வு, அகத்-24
பெருந்துறை - பெருமைபொருந்திய இடம், சடாயுகா-46
பெருந்தெய்வ முன்னலாலுண்டென் றல் உயர்ந்துளோ ரொழுக்கன்று, விராத-56
பெருமகன் - தமையன், சடாயுவு-13: புருஷோத்தமன், சடாயுவு-148
பெற்றி-தன்மை, விராத-47
பேடிப்போர் வல்லரக்கர், சூர்ப்ப-123
பேதவுருவம்- பலவகைப்பட்டவுருவம், விராத-1
பேதியாது - தன்மைவேறுபடாமல், விராத-1
பேது-வேறுபாடு, சடாயுவு-150
பேதுற்று-பேதமுற்று,கலங்கி,சரப-31
பேதையவள், சூர்ப்ப-38
பேதையேன், சடாயுவு-3
பேய்முகப்பிணி-பசி, விராத-26
பேர்தல்-இருந்தஇடத்தைவிட்டு அப் பாற்செல்லுதல், சடாயுவு-104
பேரினம்-பெரியகூட்டம், கரன்-33
பேழ்வாய், சூர்ப்ப 58
பைப்பய, அகத்-27
பொங்குகொடுமை, விராத-14
பொங்குதல்-விளங்குதல், சரப-18
பொடி-புழுதி, விராத-39
பொடித்தல் - சிலிர்த்தல், சூர்ப்ப-19: வெளிச்சிந்துதல், கரன் - 106: வெ ளித் தோன்றுதல், சடாயுவு - 203: அயோமு -9
பொத்துதல் - புதைத்தல், விராத-44: நிறைதல், துளைத்தல், மறைத்தல், மூடுதல், ஒத்தல், கரன்-100

பொதியவிழ்தல்-மூலக்குவிரிதல், சூர்ப்ப-17
பொதும்பர்-உள்ளிடம், ('பளிக்கறைப் பொதும்பர்'.)சூர்ப்ப-71
பொதுமுகம் - பட்சபாதமில்லாத நடுநிலை, விராத-50
பொம்மென்முழக்கம், கரன்-25
பொம்மெனல் - ஒலிக்குறிப்பு ('பொம்மென்றெறிப்பதோர்முறுவல்')சடாயுவ-203
பொம்மெனுயிர்ப்பு, அயோமு-15
பொய்க்கரிகூறிய வஞ்சன் கொடுஞ் சொல்போல் இராமன்பகழி குலம் வேரறவீழ்த்தின, கரன்-124
பொய்தார்-விளையாட்டாகப்போர்புரிக்தார், கரன்-98
பொய்நிலைமருங்கினர், மாரீச-41
பொய்ப்பகை, சடாயுகா-21
பொய்ம்மகள், சூர்ப்ப-47
பொருக்கென-திடீரென்று, மாரீச-27
பொருதிறத்தான்-இராமன், சூர்ப்ப-61
பொருப்பனையான், சடாயுவ-17
பொருமிப்பொங்குதல் - விம்மிவிம்மியழுதல், சடாயுவ-136
பொருமிவிம்முதல் - விம்மிவிம்மியழுதல், மாரீச-40
பொருமுற்று-திடுக்கிட்டு, மாரீச-170
பொருவரியதிருமனம், சூர்ப்ப-116
பொருவு-ஒப்பு, விராத-42
பொருள்-பெருங்காரியம், விராத-42: பயன், சூர்ப்ப-128
பொல்லாதாள், சூர்ப்ப-121
பொலிஞ்ச, விராத-67
பொலிய, விராத-10
பொழிந்தெழுதல் - பொங்கியெழுதல்-9
பொழுதொடுகாளும் வாளாகழிந்தன சூர்ப்ப 48
பொற்கலேநோற்றில, வற்கலேநோற்றன, சூர்ப்ப-22
பொற்பறை-அழகழிந்தவள், மாரீச-32
பொற்பு - பொலிவு, விராத 23, சூர்ப்ப-68
பொற்றலைமரகதப்பூகம், மாரீச-39
பொற்றை-மலை, கரன்-134
பொற்றொடி, சடாயுவ-141
பொறி-புலன், மாரீச-161: நல்லறிவு, ஞ்சேந்திரியம், யந்திரம், சூர்ப்ப-139
பொறிதல் - நெருப்புப்பொறிபறத்தல், சடாயுவ-121
பொறிப்படலை - பொறியின்திரள், சடாயுவ-203
பொறிமயிர்ப்புறம்பொடித்தல், கவந்த-38
பொறியிலைன்றி யயல்சென்று திரிபுந்தி, விராத-47
பொறை-உடம்பு, ('பொறையினீங்கியுக்கதாமுயிரள்'.) சூர்ப்ப-70
பொறைக்குணமுடையது பூமி, சடாயுகா-21
பொறைநலம் - பொறுமைக்குணம், கவந்த-1
பொன்-பிருகஸ்பதி, மாரீச-16: அழகு, மாரீச-234: பூந்தாது,('பொன்றினிசரளம்'.) சூர்ப்ப 71
பொன்மயமானதங்கை, மாரீச-87
பொன்மானுருவத்துக் கலேமான் முதலாயின வருதல் × விலேமாதர்கண்ணாரும்விழுதல், மாரீச-214
பொன்றுத அழியாத, சரப-14
பொன்றுன்னும் படி - அழகுபொருந்திய பூமி, சூர்ப்ப-144
பொன்னடைபுனைந்தான் - திருமால், மாரீச-4
பொன்னுர்சடை, சரப-14
பொன்னியனலாயஆறு, அகத்-58
பொன்னிறவிளந்தளிர், சூர்ப்ப-82
பொன்னின்மானுகிப் பொன்னேமால் புணர்த்திக, மாரீச-209
பொன்னுருவக்கழல், சூர்ப்ப-133
பொன்னுலகம், சடாயுகா-31
பொன்னேபோலொளிரும் மேனியுடன் பூவைப்பூ வண்ணத்தான் இராமன், சூர்ப்ப-62
பொன்னெழுகுபூதாமரை: (பொன்-தாது:) சூர்ப்ப-32
பொன்னெளியன்னமேழ்பிறந்த வரலாறு, மாரீச 224
பொன்னெளிர்நெடுமுடி, சரப-32
பொன்னேக்கியர் - பொன்னிற்கருத்துடையவர், வேசையர்: சடாயுவ-119
போக்கரும்பிறவி × கங்குல், அயோமு

போக்கினியரிது, சூர்ப்ப 28
போக்கு - சுடத்தல், கவந்த-54
போடு, சூர்ப்ப-135
போத-வர, சூர்ப்ப-38
போதகம்-யானைக்குட்டி, அயோமு-15
போதகம் இராமன் நடையை யொவ்வாது; (போதகம்-பத்துப்பிராயத்து யானைக்குட்டி.) சூர்ப்ப-5
போதா-பெருநாரை, அகத்-58
போது-மணநாறுசோலை, அகத்-48
போர்-தாக்குகை, கரன்-192
போர்வலான்விற்பழியுண்டது, சடாயுவு-135
போரிற்செறிந்தஅரக்கர் × தீயேறு, அரியேறு, முகிலேறு, கரன்-101
போழ்த்தது, சூர்ப்ப-35 [சூர்ப்ப-80
போன்றபொருளேக்கண்டும் ஈடுபாடு,
பொன்றிறம்-பொன்னிறம், சடாயுகா-4
மகரவேலைகாவலன் - வருணன், மாரீச-14
மகவாய்-யாகத்தில், மாரீச-239 [ப-44
மகளிர்சிந்தை யறிதற்கொவ்வா, சூர்ப்
மகளிர் தாமுறுகாமம்தாமேயுரைப்பது ஆவதன்று சூர்ப்ப 45
மகிழ்வு,சரப-33
மங்குபாதகம்-அழிதற்குக் காரணமான பாவம்,விராத-14
மங்குல்-மேகம், மாரீச-24
மங்கைமருங்குல் × வல்லி:சூர்ப்ப-6
மங்கைமார்களேக் கொங்கைமார்பிடைப்புல்லுதிரோ, கரன்-144
மங்கையர்திறத்துமாற்றங்கூறினுந்தங்களேயெனத் தாழுஞ் சென்னியர், மாரீச-9
மங்கையைமறந்திலாதான் கரன்சாவு முதலியவற்றை மறத்தல்,மாரீச-83
மஞ்சிடைவயங்கித்தோன்றும் பவளவல்லி × இராமனைத்தழுவியசீதை, சூர்ப்ப 66
மஞ்சுசுற்றியகிரி, விராத-7
மஞ்சேபொழிலே, சடாயுவு-78
மஞ்ஞையனைருதல், சூர்ப்ப 31 [12
மட்குதல்-ஒளிமழுங்குதல், அயோமு-
மட்படிசெய்த தவத்தின்வந்தகோதை, அயோமு-34
மடங்கல், கரன்-75
மடலுணட்டிய தார், சடாயுவு-179
மடுத்தல்-ஊன்றவைத்தல், கரன்-147
மண்டபத்தின் வருணனே, மாரீச-2
மண்டலம்பல × குண்டலம்பல, சடாயுவு-176
மண்டுதல்-நெருங்குதல், சடாயுவு-109
மண்ணிடைமணியின்வந்த வஞ்சி, சூர்ப்ப-57
மண்பாலவர் நம்மை மாயைவிளைப்பவர்கொல், மாரீச-150
மணத்தல்-விவாகஞ்செய்துகொள்ளல், சூர்ப்ப-51 [டாயுவு-221
மணலின்வேதி- தீர்த்தரவியற்றுதல், ச
மணி-அழகு, அகத்-2 [80
மணிக்கந்து-நீலரத்தினக்கல், சூர்ப்ப-
மணிக்கரம், சூர்ப்ப-14
மணிக்குடர், கரன்-165 [171
மணிகண்டர் - சிவபெருமான், கரன்-
மணியான்பது, மாரீச-160
மத்து, சடாயுவு-23
மதங்காக்கிரமம் × துறக்கம், சவரி-1
மதமா-யானை, விராத-6: × குன்று, விராத-11
மதவெற்பு, விராத-18
மதன்-வலிமை, மாரீச-52,53, 54,55: செருக்கு, அயோமு-40
மதி-சந்திரன், கல்விகேள்விகளிஞலாகிய அறிவோடு இயற்கையறிவு, சூர்ப்ப-75, சடாயுகா-5, 29
மதி இருகுண்டலங்கொண்டு நீலச்சுருளோடும்தோன்றும், மாரீச-143
மதியுமவாடையுங் கண்டுணராவகை நாகம்வாழ் முழையிற்சேர்தல், சூர்ப்ப-81
மதுகை-வலிமை, சடாயுகா-11
மந்தரகிரி × சடாயு, சடாயுகா-3
மந்தரம்பாற்கடலில்வந்தது,அயோ-60
மந்திரத்தளாய்ந்து செவ்வியள்தோன்றினுள், சூர்ப்ப-30
மந்திரத்தமிஞன் × சேய்மையிலேக்குறு சடாயு, சடாயுகா-5
மந்திர நாமச் சொன் மதியாவரவு, அயோமு-49
மயிர் × செக்கர், எரி, விராத-13
மயிர்ச்சுருள்-சுருட்டைமயிர், விராத-7
மயிலுடைச்சாயலாலேக் கவருமுன்னமே இதயச்சிறையில் வைத்தான், மாரீச-85

மயிரூடரியலி, சூர்ப்ப-29
மரகதத்தின்மலை, சூர்ப்ப-114
மரபு-முறைமை, அகத்-41: பழையசங் கேதம், கரன்-177
மரம்போலநீண்டேன், சடாயுவு-184
மரவம்-குங்குமமரம், சரப-1
மராமரம், விராத-31
மரு-மணம், அகத்-28
மருகர், மாரீச-174
மருகி, சடாயுகா-48
மருங்கிலாதவள், சூர்ப்ப-141
மருந்தனைய தங்கை, மாரீச-58
மருவல்-அருகிற்செல்லுதல், சூர்ப்ப-29
மருவுதல்-கலத்தல், சடாயுகா-32
மருவொன்று கூந்தலாள், (மரு-மணம்) சூர்ப்ப-59
மருள்-அச்சம், சடாயுகா-28: மோகம், மாரீச-143: விபரீதச்செயல், சடாயுவு-151: மாயை, கரன்-88
மலர்ச்சேக்கை, மாரீச-121
மலர்மகள் × சீதை, சடாயுகா-14
மலைக்குலம், சூர்ப்ப-75
மலைத்தல்-எதிர்த்தழித்தல், ஒன்றுஞ் செய்யவொட்டாது திகைத்துநிற்கச்செய்தல், சூர்ப்ப-75
மலைதல் - போர்செய்தல், அகத் - 52: சூர்ப்ப-15
மலைமிசைமலையினம் வருதல் × மலைத்தலைமிசை அரக்கர்தாவிச்செல்லுதல், கரன்-55
மலையெடுத்தமலை, சூர்ப்ப-101
மழுவலாளன்-சிவன், சடாயுகா-12
மழுவாளிக்குஅளித்த ஐயத்தால் வையத்தார் ஐயத்தவிர்ந்தார், விராத-59
மழை-தொகுதி, "பல்கணைமழை" × குழல், சடாயுகா-27
மழைக்க ணிணைழை, மாரீச-250
மழையைக் காற்றழித்தல் × விகாரமுகத்தைப் பகழியாலறுத்தல், கரன்-132
மற்பொருவு-மற்போர்செய்கின்ற, ராத-35
மற்றை - வினைமாற்றஐ - சாரியை, சூர்ப்ப-4
மற்றொருமனமு முண்டோ, மாரீச-84
மறக்கமுற்றுதல்-மறந்து தவறக்கூடுதல், சடாயுகா-19
மறத்துறை-வீரச்செயல், மாரீச-206
மறம் - கொடுமை, கரன்-131: சௌரியம், விராத-29
மறமோடுதல்-கொடுந்தன்மை நீங்குதல், விராத-34
மறவோன்-மனவுறுதி யுடையவன், சரப-39
மறித்தல் - தோற்றொழிதல் சூர்ப்ப-137
மறிந்தார்-மீண்டுவந்தவர், கரன்-90
மறு-காமம் முதலிய ஆறுகுற்றம், சடாயுகா-5
மறுக்கம் - மனக்குழப்பம், கலக்கம், அகத்-5, 6, சடாயுவு-153
மறுகாநெறி-அழியாப்பதவி, சரப-20
மறுகுதல்-மனங்குழம்புதல், விராத-25
மறுத்தால் என்வாளாலொறுத்து மனக்குறைமுடிப்பேன், மாரீச-200
மறுவேதுமில்லாப்பரதன், சடாயுவு-79
மறைகளின்பொருளும் பரம்பொருளின்செயலும் ஒத்திருக்கும், கவந்த-49
மறைநான்கினுடியைந்தபிற - ஆறு அங்கங்களும், மீமாஞ்சை, நியாயம், புராணம், தருமசாஸ்திரம் முதலியனவும், அகத்-43
மறையுழவன், சரப-38
மறை யெல்லைநோக்கினர்யாவருநோக்கலுறுன், அயோமு-14
மனத்தையும்தீய்க்கும், மாரீச - 130
மனத்துவருங் கனவினின்சுவை, மாரீச-42
மன்மதன், அயோமு-40
மன்மதன் இராவணனே நலிவதோர் வலத்தனுறுன், மாரீச-87
மன்மதன், இழந்தமேனிக்கிரங்குதல், அயோமு-26
மன்மதன் சடையவன்கண்ணிற் காய்தலா லிற்றவன் நல்லுருப்பெற்றனன், சூர்ப்ப-13
மனமதன புவனமூன்றையும் மலர்க்கணையாலுயிர் வாங்குபவன், சூர்ப்ப-131
மன்மதனுக்குத் திங்கள்குடையும், தென்றல் தேருமாகும், சூர்ப்ப-74
மன்றல்பொருதல் - வாசனைவீசுதல், சரப-12

மன்றீ-வெளியிடம், கரன்-168
மனப்படவுரைவழங்குதல், சடாயுகா-16
மனமெனக்களிக்குங்கண், சடாயுவு - 149
மனுமுதல் மரபினேஞ், அயோமு-92
மனைவியில்லாவீட்டினின்றுவந்த விருந்து மீளுதல், சடாயுவு-119
மாகம்-பேராகாசம், கரன்-97
மாசுண்டது, சூர்ப்ப-110
மாசுணம் - பெரும்பாம்பு, விராத-15, மாரீச-164
மாசுணந்தலையில்தாங்கியதாரணி, கரன்-29
மாட்சி-பெருமை, சூர்ப்ப-24
மாடு-பக்கம், கரன்-152
மாண்டுருதல்-இறந்தழிதல், ச[illegible]-52
மாத்திரை-அளவு, கரன்-10
மாதங்கம்-யானை, கவந்த-33
மாதர், சடாயுவு-49
மாதர்புலவியினும்வணங்காத மகுடநிரை, மாரீச-4
மாதாவனையாளை யாதாக நினைத்தனை, சடாயுவு-95
மாந்தர், அகத்-18
மாந்தாமுதன்மன்னவர், அயோமு-73
மாந்துதல்-உள்ளழிதல், சூர்ப்ப-75
மாயங்கள்குறித்தனவே கொள்ளலாம், சூர்ப்ப-138
மாயப்பாசம்மாண்டது, சவரி 3
மாயமான் × கடக்கவொண்ணுவினை, மாரீச-226
மாயவினை, சரப-31
மாயவேடம், சடாயுவு-64
மாயைகவற்றுதல், மாரீச-150
மார்பின்மாலை × திருமாலின் திருமார்விற்றிரு, விராத-9
மாரர், மாரீச-56
மாரவேளம்பிற்பொன்றலி னிராமனம் பாற்பொன்றல் புகழ், மாரீச-203
மாரன்வாளி × தென்றல், மாரீச-94
மாரனுகியவுணுக்கு மதி கறியாகும், சூர்ப்ப-74
மாரி × கணை, (இடைவிடாது சொரிதலில்உவமை), கரன்-83
மாரிமேகம் - மழைபொழியும்மேகம், கரன்-24
மாரீசன் அரக்கர்மரபில் மூத்தையுறவந்தவன், மாரீச 196
மாரீசன் இராவணனுக்குச்செய்த இதோபதேசம், மாரீச-177-178
மாரீசன் இராவணனுக்குமாதுலன், மாரீச-196
மாரீசன் துணைவரிருவரோடு தவவனம் புக்கபோழ்தில் அத்துணைவர் சரங்கள் பட்டுருவிமாண்டனர், மாரீச-204
மாரீசன் முக்காலின் முடிந்திடுவான் மூயல்வான், மாரீச-210
மாரீசனன்னையிர்செற்றவன் இராமன், மாரீச-197
மாரீசனேயிவன், மாரீச-249
மாருதம், சூர்ப்ப-77
மாருதவேலான்றிட வீழ்தல்.சூர்ப்ப-74
மால்-கருநிறம், சடாயுகா-4: பெருமை, மதமயக்கம், விராத-10
மால்கரியொடித்த கொம்பு - சீதை, அயோமு-9
மால்வரைமறிந்தது × பாகவீணையின் கொடி, சடாயுவு-167
மாலை-வரிசை, சடாயுவு-28: தொகுதி, சரப-13 [இல் 2
மாவலி-மிக்கபலமுள்ளவன், அகத்-14-
மாழை-மாவடு, மாரீச-92
மாள்வதேபொருளாக வந்தானலன், மாரீச-252
மாள்வார்தொழில் செய்யவேண்டா, மாரீச-185
மாற்றவலைக்கண்டால் மனம்அழலாதோ, சூர்ப்ப-122
மாற்றூர்செல்வங்கண்டழிந்தால் வெற்றியாகவற்றோ, மாரீச-115
மாறுமாறு-மாற்றிமாற்றி, விராத-32
மான்-குதிரை, சடாயுவு-120: × முனிவர்: அகத்-13
மானம் அவமானம், சூர்ப்ப-111, மாரீச-204, சடாயுவு-145: அகங்காரம், மனவைரம், மாரீச-204: ஒப்பு, மாரீச - 213: நாணம், சடாயுகா - 26: × விமானம், மாரீச-158
மானம் நினம் தாதைமரணம் மைந்தர் சிந்தை ஞானம் மலையெனநலிதல், அயோமு-2 [தல், சடாயுவு-60
மானமூன்றுதல் - அபிமானம்மேலிடு

மானவக்குமரர், கவந்த-58
மானவள், மாரீச 207: ×மாகிநீ: சடாயுவு-57: அயோமு-96
மாலு-ஒத்திராத, சரப-12
மானிடர்ஊனுடையுடம்புடைமையோருவமையொவ்வார், மாரீச-50
மானிடரான இவர்கள் மூலமுதற் பொருளாமத்தேவர், சடாயுவு-100
மானிடரிருவரென்னுது, சூர்ப்ப-137
மானிடற்கெளியவோதோள், கரன்-74
மானின்விழி, சூர்ப்ப-33
மானின்வேகம், மாரீச-241
மானுடவர்மருங்கே வலியொடுங்கிய தோ, சூர்ப்ப-106
மானுயர்-மனிதர், சூர்ப்ப-51
மானுரிமார்பு, சரப-39
மாலுடும்வகை, மாரீச-243
மிகை-குற்றம் சூர்ப்ப-130
மிச்சில்-எஞ்சிநின்றது, சடாயுகா-6
மிடல்-வலிமை, விராத-6, சடாயு-179
மிடுக்கு, சூர்ப்ப-75
மிடைதல் - நெருங்குதல், கரன்-36
மிதித்தல்-மிகுதியாகக் கிளர்தல், நீர் மேலமிழாது தோன்றுதல், கரன்-84
மிதிலை, சூர்ப்ப-69, கவந்த-26
மிழற்றுதல், அயோமு-30
மின்வயின் மருங்குலும், வெய்வயின் மென்றோளும்பொன்வயின்மேனியுங்கொண்டாள்-சீதை, மாரீச-67
மின்னுதிடியா திருள்வாய் விடிவீது, அயோமு-74
மின்னின்றசில, கரன்-60
மீ-மேலே, மாரீச-108
மீண்டு-மறுபடியும், சடாயுவு-93
மீவிதானம்-மேற்கட்டி, கரன்-48
மீளாக்கவசம்-அபேத்தியகவசம், கரன்-62
மீளிகள் - வலியவை, கரன்-31
மீளிமொய்ம்பினர்-வலிய தோளையுடையவர், கரன்-59
மீளிமொய்ம்பு - வலிபதோள், விராத-43
மீன்ஆழ்குழிநீர் நஞ்சுற்றுழி நடுக்குறும், மாரீச-211 [மாரீச-79
மீன்கொண்ட கொடியினர்-மன்மதன், மீன்வரு கொடியவன், சரப-39
மீனேடுகடுத்துயர்கண், சரப-12
மீனேடு மலர்வேற்றுமையின்மை, மாரீச-97
முக்குறும்பு, விராத-3
முகட்டுமுன்றில்-உச்சியிடம், சடாயுகா-3
முகத்தல்-எடுத்தல், விராத-20
முகம்-எதிராக, ('சீறடிப்பூமுகம்', சடாயுவு-14
முச்சிகைக்கழு, கரன்-19
முசலம்-உலக்கை, கரன்-78
முசுண்டி, கரன்-34
முட்டிய-தாக்கிய, கரன்-143
முட்டு-கடிவாளம், அயோமு-22
முட்டைதச்சதனில் வந்த முதன்முன்னவன், விராத-46
முடக்கோன்-அருணன், அயோமு-22
முடித்தல்-அபாயமுண்டாம்படி முதிர வெளியிடுதல், கரன்-12
முடிதுன்றுகழல், சரப-5
முடுகுதல்-விரைந்துநடத்தல், விராத-7
முடை-துர்க்கந்தம், மாரீச-25
முடைத்த-துர்க்கந்தமுள்ள, கரன்-103
முண்டர்-மழித்ததலையர், அகத்-3
முத்தம்-நீர், சடாயுகா-33: ×முகூர்த்தம், கரன்-189
முத்தலைக்கழு, கரன்-34
முத்தலைக்குரிசில்-திரிசிரா, கரன்-113
முத்தலையில், விராத-6
முத்து ×நகை, விராத-2 [3
முதல்வாழ்வுமுடித்தனென், சடாயுவு-
முதற்றேவர், விராத-52
முதிர்பகை, சூர்ப்ப-55
முதிரமலைதல்-மிகுதியாகப் பொருதல், மாரீச-174
முந்துதல்-சிறத்தல், விராத-17: முந்தி வெளிப்படுதல், கரன்-13
முந்துறுதல்-முற்படுதல், அகத்-45
முன்தை-முன்னே, கரன்-171
முப்பகை, சடாயுவு-20
முப்புரஞ்செற்றகதை, சூர்ப்ப-39
முப்புரமெரித்த கணை அகத்தியன் இராமனுக்குரல்கியது, அகத்-59
முப்புறத்துலகம், மாரீச-29
மும்மதம், சரப-6
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான், சடாயுவு-48

முரஞ்சு, அயோமு-42
முரண் - வலிமை, விராத-23: வலி, சூர்ப்ப 94
முரணுதல் - மாறுபடுதல், விராத-17, அயோமு-36
முரலுதல்-மொய்த்தொலித்தல், இசை யுண்டாகவொலித்தல், சூர்ப்ப-34
முரற்றுதல்-ஒலித்தல், அயோமு-79
முரிந்துருமணி, மாரீச-15
முருங்கியதணல் - யாவுமழியும் நெருப்பு, மாரீச-111
முருங்குதல்-நிலையழிதல், சூர்ப்ப-78, கவந்த-18
முருடு - வாச்சியவிசேஷம், கரன்-28: விறகு, மாரீச-139
மூலிகொண்டிடைவணங்குதல், சூர்ப்ப-35
முழங்குதல-ஒலியெழுப்புதல், கரன்-23
முழீக்கொள்ளுதல் - முழுகடிக்கப்படுதல், கரன்-3 [34
முழுக்களும்✕முழுக்கஅள்ளும், கரன்-
முழுதுணர்முனிவர், சூர்ப்ப-48
முழுமுகத்திருகயன் முத்திஞலி, மாரீச-40
முழுமுதல்வன்-திருமால், அகத்-55
முழைதிறந்து - குகைபோன்றவாயைத்திறந்து, சடாயுவு-2
முழையின்வாளரி, கரன்-23
முள்-அம்பு, விராத-33
மூலை-மூங்கில், சடாயுவு-20: இருப்பு மூலை, தண்டாயுதம், கரன்-78
மூலைத்தல்-தோன்றுதல், கவந்த-48
மூற்றல்-செய்தல், மாரீச-234
மூற்றிப்பொழிகாதல்-முதிர்ந்துவெளிப்படுகின்ற விருப்பம், மாரீச-218
மூற்றியஆடல் - மிகுதியானஆட்டம், மாரீச-39
மூற்றுதல்-பூர்ணமாதல், சரப-19: செய்துமுடித்தல், எல்லையிலிருத்தல் கரன்-16,91, முடியச்செய்தல்,சூர்ப்ப- 48: வளைத்தல், கவந்த-18
மூற்றும்மூற்றி - மிகவும்முதிர்ந்து, மாரீச-139
மூற்றுற-எங்கும், கரன்-111
மூறிந்தவில் ✕ விண்ணிடுவில், கடலின்திரை, சடாயுவு-171
முறுவல்-புன்சிரிப்பு, விராத-23
முறையிட்டு, மாரீச-25
முறையிலோன், சடாயுவு-33
முன்னி-நோக்கி, முன்னெடுத்து, சூர்ப்ப-37
முன்னிலையில் தன்மைவருதல் - காமையுறையுநங்கை யிவரென நெருநடந்தவரோ நாமென்ன, சூர்ப்ப-119
முனிசிங்கைதொடரப்போதல், அகத்-59
முனிதல்-வெறுத்தல், மாரீச-234
முனிவன், விராத-3
முனிவு-வெறுப்பு, மாரீச-39
மூனை-போர், கரன்-143
மூனைவன்-முன்னவன், சரப-5
மூங்கிஞலுச்சி மோத்தல், சடாயுவு-189
மூசுதல்-நெருங்குதல், அகத்-40
மூட்டு-பொருத்து, சடாயுவு-113
மூடுதல்-நிறைந்திருத்தல், சூர்ப்ப-89
மூதிளவளர்தல், அகத்-14
மூப்பெனும் பருவமு முனிய முற்றிஞன், சடாயுவு-22
மூரன்முறுவல் - சிரிப்பு, சூர்ப்ப-120
மூரி-பெருமை, கரன்-94
மூரிநீர்-கடல், அயோமு-23
மூலகாரணத்தவனெனும் முடிவுறமுற்றுங்காலம், சடாயுவு-162
மூலத்துவென்று, சரப-30
மூலநாசம்-வேரோடழிவு, சூர்ப்ப-8
மூலம்-அடி, கரன்-67
மூலமில்லான், கவந்த-2
மூலமேயில்லாமுதல்வன், கவந்த-43
மூவகையுலக முதல்வ ருதவியபரிசு✕தேவருமவுணரும்முதலிலோர் திசைதூவிய நறுமலர்க்குப்பை, மாரீச-7
மூவர் ஊழியினுஞ்சலியாதவர், சூர்ப்ப-102
மூவாமை-இளமை, சரப-28
மூவுலகத்துமுள்ள நவையிலாதனலங்கையின்டத்தன, சடாயுவு - 46
மூன்றுகவடாய்முளைத்தெழுந்தமூலம், கவந்த-42
மெய் - மனம், மாரீச-92

மெய்க்கணி, சடாயுகா-21
மெய்கொள்வேதமெய்யர், விராத-73
மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய்கண்ணன், சூர்ப்ப-35
மெய்புகத்துன்னுங்கஞ்சுகம், மாரீச-16
மெய்ம்மை, சடாயுகா-17
மெய்யிலாள் - உண்மை யில்லாதவள், சூர்ப்ப-43
மெல்லியலார்போல நிலத்தில் வீழ்ந்தழுதல், சடாயுகா-24
மெல்லுருவு, சூர்ப்ப-36
மெலிதல் - குறைவுபடுதல், சடாயுவு-128
மென்றன - கடித்தன, சடாயுவு-64
மேக்குயருமூக்கு, (மேக்கு - மேல்) சூர்ப்ப-130
மேகத்தினேகிகர்வில்லி - இராமன், கரன்-97
மேகநிறவண்ணன், அகத்-59
மேகம்முடித்த தீயினுல் புழுங்குநாகம் ✕இலக்குமணனு லுறுப்பு அறுப்பு சூர்ப்பணகை, கரன்-2
மேகமுதிரமாரி பெய்தல் உற்பாதம், சூர்ப்ப-97
மேரு, விராத-27 [20
மேருகொடுமுடியிழந்ததை, கவந்த-
மேருமலை ✕ சிந்துசோரியொடுள்ள அரக்கன், விராத-37
மேருவினெற்றி முற்றியிரவி✕சடாயு சிரசிற் சூடிய முடி, சடாயுகா-7
மேருவைப் பறிக்கவேண்டின் இராவணற்கரிதென், சடாயுவு-62
மேலுறுதல் - தொடர்ந்து செல்லுதல், மாரீச-244
மேவலர் - பகைவர், மாரீச-199
மேவாதவர் - பகைவர், சரப-28
மேவினர் - நண்பினர், சரப-28 [104
மேனிநெய்யின்றி யெரிந்தது, மாரீச-மைக்கருங்குழலாள், சூர்ப்ப-70
மைந்தர், அகத்-28
மையல்வேதனை - காமநோய், மாரீச-101
மொய் - வலிமை, சூர்ப்ப-78
மொய்கொள்சோலை, விராத-73
மொய்த்த - நெருங்கிய, விராத-33:மிகுதியாய்த்தோன்றிய, சடாயுகா-31
மொய்த்தல் - நெருங்குதல், விராத-2
மொய்ப்பு - நெருங்கிச்சூழ்கை, சரன்-187
மொய்ம்பு - வலிமை, சடாயுகா-30
மொழிந்தகாமக்கடுங்கனல், சூர்ப்ப-72
மோகத்துக்கோர்முடிவுமுண்டோ, சூர்ப்ப-84
மோகவெந்துயர், சடாயுவு-139
மோகனை - மோகத்தை யுண்டாக்கும் மாயை, அயோமு-59
மோய் - தாய், சூர்ப்ப 50
மோனர், அகத்-3
மௌலி, சடாயுகா-7
யாய்-தாய், அகத்-18 [-68
யாரையுங் கும்பிடா மகுடம், சடாயுவு
யாவருநேர் கலாப் பெண்ணினேனுக்குடையாள், கரன்-6
யாவரும் யாவும்வீயும், மாரீச-140
யாவும் பொன்றும், மாரீச-187
யாளிவட்டவெங்கண்ணையுடையதாய், வரைவாழ்வது, விராத-6
யானை முதலியவற்றை விரலிடையிலடுக்கிக் கையுதவுவாயினுல்மென்றுன்னல், விராத-11
யானையினத்தை முயல்கொல்லும் ✕ மானிட ரரக்கர்தம்மை வெல்வர்: சடாயுவு-57
யானையுரிக்கு முருத்திரன் ✕ அயோமுகியால் தழுவப்பெற்ற இலக்குமணன், அயோமு-62 [39
யோகமுறுபேருயிர்-யோகியர், அகத்-யோகி, மாரீச-103
யோகியர் தன்னேக்கியநெஞ்சுடையர், சடாயுவு-119
யோகியரைச் சார்ந்த மகளிர் நோக்கம் பயனின்றி மீளுதல், சடாயுவு-119
வகிர்தல்-வெட்டியெடுத்தல், விராத-45
வகை-ஒழுங்கு, விராத-6
வச்சை-பழிப்பு, (வசையென்பதன் விகாரம) கரன-142
வச்சைமாக்கள் பண்டாரம்✕எய்யவில்லில்லாமல் வெறுமனேகிடக்குந்தூணி, சடாயுவு-125 (வச்சை-உலோபம்.)
வச்சையர், மாரீச-125
வசை - பழி, பழிப்பு, சூர்ப்ப - 110
வஞ்சகம், விராத - 25

வஞ்சமகள் × வஞ்சி, நஞ்சம்: சூர்ப்ப-31
வஞ்சி-மாது, உவமவாகுபெயர், × மாரீச-175: × வஞ்சமகள், சூர்ப்ப-31
வஞ்சிபோல்வாள், சூர்ப்ப-57
வஞ்சியன்ன மின்னிடை, சூர்ப்ப-66
வட்டமிடுதல்-சூழ்ந்துவருதல், விராத-30
வட்டவெண்டிசை, கரன்-159
வடவாவனல், மாரீச-134
வடித்த-வலேத்த, மாரீச - 191
வடித்தல்-தேர்தல், சூர்ப்ப-56
வடிம்ப - நுனி, கரன் - 60
வடு × கண், சடாயுவு - 250
வண்டு நாண், அயோமு - 25
வண்ணம் - அழகு, சூர்ப்ப - 35
வந்தஇல் பழியுண்டது, சடாயுவு-135
வந்தனை, மாரீச - 53
வந்து - அசை, விராத - 37
வம், சடாயுவு - 134
வய - வலி, விராத - 8
வயங்குதல் - விளங்குதல், விராத - 7
வயம் - வேகம், சடாயுவு - 175
வயவர் - வீரர், சடாயுவு - 164
வயிரக்கட்டமைந்த வாளி, விராத-30
வயிரப்படை - வச்சிராயுதம், சரப-14
வயிரம் - பகை, கரன் - 171
வயிறலைத்தல்-வயிற்றிலடித்துக் கொள்ளுதல், சூர்ப்ப - 115
வயிறுதகர்த்தல் - வயிற்றிலடித்துக் கொள்ளல், கரன்-190 [-25
வயிறு வாய்த்தல் - ஈனுதல், சடாயுகா
வயினதேயன், சடாயுகா - 27
வரதன் - இராமன், அகத் - 36
வரம்பிலான் - கட்டுக்கடங்காதவன், சடாயுவு - 53
வரம்பு - எல்லை, சரப - 31
வரவமுதுண்ணல், அயோமு - 98
வரவெதிர் கொள்ளுதல், சரப-33
வரன்முறை - சாஸ்திரவிதி, சரப-37
வரிக்கல்-கட்டுதல், சடாயுவு - 66
வரிசிலை, சூர்ப்ப - 56
வரித்தல்-மேற்கொள்ளல், சடாயுவு5-4
வருக்கம் - இனம், சடாயுவு-56:கூட்டம், அகத்-54
வருடம்-ஆண்டிற்குரியதேவதை, சடாயுகா - 26
வருணம் - சாதி, சடாயுகா - 30
வருணன்விஷ்ணுதனுசை இராமபிரான் கைகீட்டுகையிற் கொடுத்தல்,கரன் - 178
வருவது வருநாளன்றிவந்து கைகூடவற்றே, மாரீச - 80
வரைகளினும் மிக்கவலி, விராத - 27
வரைகளேழ், விராத-27 [-16
வரைசூழ்ந்தன்ன தோற்றத்தர், கரன்
வரையளித்த மாடம், சூர்ப்ப-136
வல்லி-கொடிபோன்றவள், சடாயுகா-28
வல்லியம்-புலி, × அரக்கர்: அகத்-14
வல்லே - விரைவு, சடாயுகா - 41
வலம் - பலம், கரன் - 93
வலம் குறித்தன கொணர்தக்கது, சூர்ப்ப - 129
வலயம் - ஒருபடை, கரன்-35
வலி - கொடுமேோவு, சூர்ப்ப-102
வலிகிடைக்கையில் முன்னிழந்தவலிமைக்கு இரங்குதல், அயோமு-26
வலித்தல் - துணிதல், அகத்-44: கைப்பற்றுதல், மாரீச - 207
வலித்தார் - வலியப்போர்செய்தவர், கரன் - 90
வலியவோ தோளினீண், சடாயுகா-81
வலியன் - மனத்திட்பமுடையான், சூர்ப்ப - 79
வலியான் - வலிமையை யுடையவன், சூர்ப்ப - 102
வலியோர் எளியோரை மன்றிடைநலிந்து கொன்றனர் நுகர்ந்தபொருளழிதல் × அரக்கர்குலம் கடிது இராமசரத்தாலழிதல், கரன் -168
வலையிலெய்தியமான் × இராவணனிடம் அகப்பட்டசீதை, சடாயுவு-130
வழிக்கொண்டு - பயணப்பட்டு, கவந்த -58
வழிதல் - வடிதல், சூர்ப்ப-72
வழுவிலா வாய்மை, சூர்ப்ப-3
வழுவு - குறைவு, அகத்-55
வழுவுதல்-நீங்குதல், சடாயுகா-20
வள்ளம் - கிண்ணம், மாரீச - 37
வள்ளல், சடாயுகா - 40
வள்ளலீங் கருந்தவமுயலுநாளுள் அரக்கர் வருக்கத்தோடுமுடிவர், சடாயுவு-56

வள்ளியோன், கரன் - 56
வற்கலை, சூர்ப்ப - 22
வறள்பட, கரன் - 152
வனதேவதைகாள், சடாயுவு - 78
வனம் - அடர்ந்த வலியதொகுதி, கரன் - 166
வனிதையர் மழலை X கிள்ளைச் சொல், மாரீச - 98
வனைதல் - கட்டுதல், சடாயுகா - 11: அழகுசெய்தல், மாரீச-124
வாகை-வென்றோர்சூடும்மாலை, கரன்-36
வாசம்-நறுமணம், சூர்ப்ப 2
வாசவனம், சரப 1
வாசவாடைவீசு, மாரீச-90
வாடைவந்தபசும்பனி, மாரீச-99
வாணி-சரசுவதிதேவி, மாரீச-13
வாணிலைமருங்குலான், சூர்ப்ப-20
வாணுதல், சடாயுகா-42
வாதவேகம்-காற்றின்வேகம், விராத-7
வாமம்-அழகு, சூர்ப்ப-81
வாய் X முழை, கரன்-135
வாய்குழறி, விராத-41
வாய்தல்-வாயில், கவந்த-18
வாய்மடிதல் - நுனிக்கூர்மழுங்குதல், சரப-13
வாய்மை, சடாயுகா-5
வாய்வெரீஇ - வாய்குழறச்சொல்லி, அகத்-5
வாயிடையிதழ்-காதின்மேலிடம், மாரீச-66
வார்-கச்சு, சடாயுகா-48: கீட்சி, கரன்-131
வார்விசிக்கருவியோர் - மத்தளக்காரர், மாரீச-22
வாரணம்-யானை, விராத-49
வாரணவுரித்தொகுதி, விராத-15
வாரம் - குடியிறைப்பொருள், மாரீச-180
வாரிகலுழ்தல் - நீர்பெருகப்பெறுதல், மாரீச-44
வாருணம், அயோமு-93
வால்-தூய்மை, விராத-3
வாலறிவான்-தத்துவஞானி, சரப-17
வாலுளை, கரன்-75
வாழ்க்கைகாள்-ஆயுள்காள், சடாயுவு-128
வாளரி, விராத-10
வாளிக்குழு, அகத்-55
வாளிணை X இருகண், சூர்ப்ப-32
வாளிப்புட்டில், கரன்-60
வாளிபெய்புட்டில், கரன்-18
வாளிற்பொருவதுநாணம், சடாயுவு-86
வாளொடு வாள் தேய்த்தலா லுகும் பொறி, கரன்-27
வான்-தேவலோகம், சரப-4
வான்காப்போர்முதலிய மூவரில் காத்தற்குரியார் இல்லை, சூர்ப்ப-126
வானநாடு-அந்தரம், கரன்-131
வானமுங் கானமு மாறுகொள்ளல், சடாயுவு-90
வானவர்தலைவன்-ஸ்ரீராமன், சரப 33
வானவரேத்தியவொலி X கோத்தவே லெங்குரல், கரன்-189
வாஞ்டியர், சரப-12
வானின்றபெரும்பதம் - சுவர்க்கம், சரப-7
வாணுறநிவந்த மணிமரம், மாரீச-97
விகற்பம்-மாறுபாடு, விராத-44
விகற்பவுலகு - பலவகைப்பட்டவுலகு, அகத்-42
விசித்தல்-கட்டுதல், விராத-13
விசிரவசின்வரலாறு, சூர்ப்ப-50
விசிறும்-வீசியுதவுகின்ற, விராத-33
விசை-வலி, சரப-8
விசையம், விராத-27
விஞ்சைவேந்தர், மாரீச-8
விட்டமலையே பட்டு உடலூருதல், விராத-30
விடநுங்கியகண்ணுடையார், மாரீச-144
விடமேறுவது, சூர்ப்ப-72
விடர், அகத்-27
விடியல் காண்டலி னுயிர் கண்டாள், சூர்ப்ப-90
விடிவு-வருத்தந்தீரும்வகை, மாரீச-153
விடுகாது, சூர்ப்ப 120
விடைத்தல் - கோபங்கொள்ளுதல், மாரீச-188
விடைகொண்டு-அநுமதிபெற்று, சடாயுவு-16
விடைத்து-சினங்கொண்டு, கரன்-103

விடைதருக, சரப-37
விடைபோலிளவீரன், அயோமு-38
விண்-வானம், விராத-8
விண்டார் - மனம்வேறுபட்டவர், சூர் பப-131
ஈடடவா X சித்தியசூரிகள், சடாயுவு-129
விண்ணருளவந்தவமுதம், சூர்ப்ப-35
விண்ணவர், விராத-12
விண்ணவர்தருவும் விஞ்சையர்நாகமும் சுரந்ததேனே மேகமென்றுருத்தி கொண்டு சீகரமாகச்சிந்துதல், மாரீச-14
விண்ணிடைப்படர்தல் - இறத்தல், விராத-44
விண்ணு, சூர்ப்ப-55
விண்ணேறுதல், சடாயுகா-34
விண்மேலோடுகின்றஅம்பு விண்மேலோடும் உயிர்களைத் தொடர்வனவொத்த, கரன் 81
வித்தகன்-வல்லமையுடையவன்:வித்தன்என்ற வடசொற்றிரிபு, சரப-9
யாதர் X வித்தியாதரர்: சூர்ப்ப-52
விதி-நல்லூழ், மாரீச-86
விதித்தல்-உண்டாக்குதல், விராத-59
விதிமுறை, சடாயுகா-29
விதியார் முடிப்பதென்னே, சடாயுவு-152
விதியின்தன்மையாற் பழி வினைதல், சடாயுவு 218
விதியின்னமும் எவ்வினையியற்றுமோ, சடாயுவு-132
விதியினர் சருமவேலியைச்சிந்தினர், துயர்துடைத்தனனென்னும் மெய்ப் புகழ்த்தந்திலார், சடாயுவு-140
விதியினல்நேரும் இன்பதுன்பங்கள் விலக்கமுடியாதன, சடாயுவு-195
விதியினைவெல்லவல்லமோ, சடாயுவு-15
விதியேதருவது, மாரீச-80 [208
விதிவினைவை யோர்வாரார், மாரீச-
விந்தை, சடாயுகா-29
விம்மல்-ஏக்கம், அயோமு-41
விம்மி - கலங்கி, மாரீச-99, 164,சடாயுவு-166
விம்மினள் - அழுதாள், சடாயுவு-134
விம்முதல்-எழுந்துசொலித்தல், ("விம்முதீ.") மாரீச-91
விம்முறுதல்-கலங்குதல்,சடாயுவு-203
விமானம், விராத-12
வியம்-சிறப்பு, மாரீச-18
வியல்-பெரிய, மாரீச-106
வியாளம்-பாம்பு, சடாயுகா-28
விரகிலார்-அறியாதவர், (விரகு - அறிவு, கபடமுமாம்.) சடாயுவு-36
விராதன், மாரீச-184
விராதன் ஒன்றேகால்இலட்சம்யானை வலியுள்ளவன், விராத-18
விராதன் கரன்முதலிய கணக்கிலர் பொன்றியபூசல், சடாயுவு-57
விராதன் தன்தோளிற்பொத்தியகணை X முள்ளம்பன்றியுடலிலுள்ளமுள், விராத-33
விராதன்றிறல், விராத-17
விராதன்துதி, விராத-48-61
விராதன் நஞ்சு வெற்புருவுபெற்று நடந்தாற்போன்றவன், விராத-7
விராதன் வெள்ளிமலை பொன்மலைகளைக் கழல்களால் பந்துகளாகத் தள்ளி அவற்றினூடு படர்பவன், விராத-17
விராதனது அரவிடை விமான மிடையிட்டுக் கோளுந்தாரகைகளுந்தொடுத்த வெற்றிமாலை பன்னகாதிபரின் பணமணி பறித்து அவைபருத்தது போலும், விராத-12
விராதனதுகச்சு-திக்கஜங்களின் மணிக்கூட்டங்கள் கோக்கப்பட்டுள்ள மலைப்பாம்பு, விராத-15
விராதனதுவரலாறு, விராத-64-69
விராதனுற் றூக்கிச்செல்லப்படும் இராமலட்சுமணரின் வருணனை, விராத - 37, X 38
விராதனுக்கு, ஜராவதத்தின்ஓடை செற்றிப்பட்டமும், அதன்கிம்புரிவாகுவலயமுமாம், விராத-13: புலித்தோல்மேலாடையும், யானைத்தோல் அரையாடையும், விராத - 15
விரிஞ்சன், விராத - 46
விரிஞ்சன் முதலினோர்யார்க்குங் கண்ணினின்றவன், கவந்த - 41
விரிஞ்சன்முதலோர் தெரிகிலாவாதி நாதன், விராத - 1

விரிஞ்சுறப்பற்றியவெம்பிறவி, அகத்-7
விரித்ததலையும் பெருகியசோரியுமாய்ச் சூர்ப்பணகை மிசைவிழப்பெற்ற கரன் X செக்கர்மேல் விரிந்தமேகம், கரன் - 1
விரியாதமலர் X நங்கைமாரின் அனந்தர்நெடுங்கண், மாரீச - 124
விருந்தினர் - புதியராய்வந்தவர், சடாயுவு - 36
விருந்து, அகத் - 31
விரை - வாசனை, சரப - 43
வில்லி, அவன்றம்பிஇவர்கட்கு ஆவி தனர்ந்தேன், மாரீச - 186
வில்லிட்டுயர்மேகம் X இராவணனுடைய வில்லைக் கவ்வியுள்ள சடாயு, சடாயுவு - 115
வில்லியல் தடக்கை, சூர்ப்ப - 6
வில்லியல்மொய்ம்பு-தனுசுபொருந்திய புசம், அகத் - 13
வில்லெனக்கின்னமும் வேண்டுமோ வென்னுதல், அயோமு - 13
விலக்கிடுதல் - வீசுதல், சரப - 36
விலங்கல் - மலை, விராத-8: X தோள், சடாயுகா - 31, கரன் - 67
விலங்கானே ஞதலிஞல் விலங்கினேன், சடாயுகா - 22
விழா - மகிழ்ச்சி, மாரீச-79
விழித்தல் - பார்வைக்குஇலக்காதல், கரன் - 44
விழிதருநெற்றியான், சடாயுவு - 85
விழுத்தி, விராத - 32 [36
விழுத்தழிதல்-பெருகிவழிதல், விராத-
விழிவழியிரத்தம் போந்துக, கரன்-22
விழைவன்று - விரும்பத்தக்கதன்று, மாரீச - 221
விளக்கங்கண்டவிட்டில் X பொன்மானேக்கண்டஊர்வனபறப்ப யாவும், மாரீச - 229
விளக்கம் - தீபம், மாரீச - 123
விளித்தல் - பேரொலிசெய்தல், சூர்ப்ப - 79: அடங்குதல், விராத - 11
விளைகாமம்,சூர்ப்ப - 33
விளையாடல், விராத - 41 [110
விற்கால் - தநுர்த்தண்டம், சடாயுவு-
விறல்-வெற்றி, பராக்கிரமம், சரப-39 வீரம், சடாயுவு - 186
வினவுதல், சடாயுகா - 17
ங் கட்டழல்கதவல்லாலேபுண்ணியமுருகிற்று, கவந்த - 9
வினையம் - தொழில், சூர்ப்ப-55: கரன் - 141: தந்திரம், சடாயுவு - 50
வினையிற்செய்த கைதவம், மாரீச-232
வீங்கிய - மிக்க, அயோமு - 61
வீங்குதல்-மிகுதல், சூர்ப்ப-6: கரன்-58
வீச்சு-வீசுங்காற்று, சடாயுவு-90
வீட்டி, சடாயுகா-6
வீடு - மோட்சம், விடுதலை, சரப - 26: அகத்-7, 73
வீடுதல் - அழிதல், சூர்ப்ப - 123
வீணுள் - இறந்துபடுங்காலம், மாரீச-217
வீணைக்கொடி, சடாயுவு - 107, 167
வீய - இறக்க, அகத் - 18
வீரத்தோள்கள் வீங்கி மெலிந்தன, சடாயுவு - 27
வீரபட்டம் X யானையின் நுதலணிபட்டம், கரன் - 159
வீரராவார் இடர்தன்னைவென்றூரன்றேரே, கவந்த - 29
வீரவெஞ்சிலையினோர், விராத - 19
வீரன்-இராமன் விராத-23, சூர்ப்ப - 43, 83, வீரத்தன்மையையுடையவன்,சடாயுகா-9
வீரனெண்ணரும் பொருள், சடாயுவு-202
வீரனேல்,இம்மாயஞ்செய்தல் அச்சத்தின்கிளர்ச்சியன்றே, சடாயுவு-84
வீறுதல் - வீசியடித்தல், சடாயுவு -61
வெங்கண்-வெவ்வியதன்மை, விராத-16: கொடுந்தன்மை, சூர்ப்ப-79
வெங்கதிர் - சூரியன், அயோமு - 35
வெட்ட, கரன் - 138
வெதிர் - மூங்கில் (வெதிர் பொருந்தோளினள்), கவந்த - 57
வெதுப்புதல்-வருத்தல், அயோமு-13, மிகத்தபித்தல், சூர்ப்ப - 80
வெதும்புதல் - வாடுதல், அகத் - 4
வெந்து - தவித்து, சூர்ப்ப - 77
வெப்பழியா வெருளி (வெப்பு - உக்கிரத்தன்மை), சூர்ப்ப - 134
வெப்பு - கொதிப்பு, மாரீச-175
வெம்புவிற்கைவீர, விராத-65
வெம்மா-யானை, சரப-6

வெம்மை-உக்கிரம், அயோமு 58
வெய்யபோறையில் வெண்ணெய் × கா மாக்கினியில் வெந்தழிகிற சூர்ப்ப ணகையின்கொங்கை, சூர்ப்ப-78
வெய்யவள், சூர்ப்ப-83
வெயில்கதிர் சூரியன், விராத-8
வெயிலயில் (வெயில்-ஒளி), கரன்-89
வெரிந்பார்த்தல், சூர்ப்ப-103
வெருட்டுதல், சடாயுகா-28
வெருவுதல், அகத்-22, கரன்-11, மா ரீச-170 [சூர்ப்ப-40
வெவ்வுருவமைந்தோன் - ராவணன்,
வெள்குதல்-நாணுறுதல், சூர்ப்ப-83
வெள்ளி-சுக்கிராசாரியன், மாரீச-16
வெள்ளிமலையெடுத்தகரவலோன், சூர் ப்ப-39
வெள்ளியமுறுவன்முத்தம், சூர்ப்ப-64
வெள்ளொக்குருத்து - வெண்மையான இளவொளி, சூர்ப்ப-41
வெளி-ஒளி, சரப-28
வெளிறு-வெண்மைநிறம், கரன்-155
வெற்றவிண், விராத-28
வெற்றியருளரெனின் இந்நிலைபுகுதற் பாலதோ, சடாயுவ-141
வெறி-தோபாவேசம், சூர்ப்ப-137
வெறித்தல் - திகைப்படைதல், சடா யுவ-114, 203
வெறிப்பு-நடுக்கம், கவந்த-3
வெறுப்பனகிளத்தலுறு மித்தொழிலே விடு, மாரீச-200
வேகத்தாற் கண்ணெடுமனமுஞ்சுழலு தல், சடாயுவ-138
வேகவலி-உக்கிரமானபலம், விராத-34
வேகின்றசிந்தையான், சடாயுவ-16
வேசையரின்பம் விரும்பியவறியர், ச டாயுவ-119
வேட்கை வேரூயபிறப்பிடை விசித்த தீர்ப்ப மாரேருடல், மாரீச-161
வேட்டமுற்றல் புகழுடைத்தன்று, மாரீச-234
வேண்டாதார், சூர்ப்ப 131
வேத்திரக்கையர், மாரீச-16
வேத்திரத்தாசனம், சடாயுவ 34
வேதங்காண்கிலா வீரன் பாதங்கள் கண்ணிற்பார்த்தான், சடாயுவ-215
வேதத்தினறிவைவென்றான், சூர்ப்ப-53
வேதநூல் தொன்மைதான் வேண்ட நின்றது, விராத-70
வேதநூன்முறையின் விதியுளி நிறு வித்தீதுளதுடைத்து,சடாயுவ-212
வேதப்பலிக்கடன், சடாயுவ-225
வேதம் அபௌருஷேயம், சரப-42, ஓதியுணர்தொறுமுணர்ச்சி யுதவும், விராத-1
வேதமுதல்-இராமன், சூர்ப்ப-38
வேதமுமறிவருமிகுபொருள், சரப-42
வேதனை, கரன்-36
வேதியர், விராத-1
வேதியர்வேதமொழிகூறிக் குண்டிகை நீர்வீசி மலர்தூவுதல், அகத்-48
வேதுகொள்ளுதல், மாரீச-91
வேய்-ஒற்று, கரன்-58
வேய்செறிகானம், அகத்-27
வேய்தல்-கொண்டிருத்தல், கரன்-138
வேயிடைதோளினுள், சூர்ப்ப-65
வேர்த்தானை-மூலபலம், சூர்ப்ப-103
வேரறவெல்லுதல், சடாயுவ-141
வேரறுத்தல், அகத்-22
வேரி-பரிமளம், மாரீச-163
வேரொடுத்துணித்துவீழ்த்தல், கரன்-124
வேல்கடைக்கணியா, சூர்ப்ப-142
வேலை-பொழுது, சரப 2
வேலைபருகுங்குதிரை, வாய்முகத்தி டை நிமிருந் தீ, விராத 26
வேலையும் வானையும் கொழுவென மடு த்துழுதிரோ, கரன்-147
வேள்வியுண்பாயூட்டுவாய்நீ, கவந்த 47
வேறு-மற்றும், மாரீச-211
வேனகுசரம், மாரீச-238
வேனில்-வசந்தருது, மாரீச-99
வை-கூர்மை, கரன்-113
வைகல்-பகல், விராத-73
வைத்தமண்ணெடும் தோள்மீக்கொடு இராவணனேகினான்,சடாயுவ-137
வைதாலன்ன வாளி, மாரீச - 182
வைதேவி, மாரீச - 215
வையசங்காவலன்மதலை சக்கரவர்த்தி த்திருமகன், அகத் - 11
வையத்தேவர், மாரீச - 168
வைஷ்ணவவில் மூவுலகும் அகத்திய னும் வழிபடஇருப்பது, அகத்-55
வௌவுதல், மாரீச - 205

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை, 19 - தென்னண்டைமாடவீதி, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திலும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர், 17 - தேரிசிங் கப் பெருமாள் கோயில்தெரு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திலும் கிடைக்கும்.

		ரூ.	அ.
கம்பராமாயணம்:— உரையுடன்			
பாலகாண்டம்	...	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம்	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம்	...	5	0
யுத்தகாண்டம் (2 - வால்யூம்)	...	10	0
பத்துப்பாட்டு:—			
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையுடன்	...	0	4
பொருநராற்றுப்படை ,,	...	0	3
சிறுபாணாற்றுப்படை ,,	...	0	4
முல்லைப்பாட்டு ,,	...	0	3
நெடுநல்வாடை ,,	...	0	3
பட்டினப்பாலை ,,	...	0	5
சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை ,,	...	0	3
நாலடியார் உரையுடன்	...	2	0
நன்னூற்காண்டிகையுரை	...	1	8
விஷ்ணுபாரதம்:—			
சபாபருவம் உரையுடன்	...	3	0
உத்தியோகபருவம் ,,	...	2	8
சல்லிய சௌப்திகபருவங்கள் ,,	...	1	8
திரைமீட்சிச் சருக்கம் ,,	...	1	0
திருப்பாவை உரையுடன்	...	0	6
சரசுவதியந்தாதி உரையுடன்	...	0	3
சடகோபரந்தாதி	...	0	12
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்	...	0	10
அழகர்கலம்பகம் உரையுடன்	...	0	10
மதுரைக்கலம்பகம் உரையுடன்	...	0	10
அஷ்டப்ரபந்தம் விரிவுரைவுடன்	...	3	8
திருக்கருவைக் கலித்துறையந்தாதி உரையுடன்	...	0	8
திருக்கருவை வெண்பாவந்தாதி	...	0	8
நாலாயிரதிவ்யப்ரபந்தம்	...	3	8
தனித்தனியாயிரம் ஒரு ரூபாய்வீதம்			
நித்யானுசந்தானம்	...	0	10
திருமந்த்ரார்த்தம்	...	1	8
குருபரம்பராப்ரபாவம் ஆயிரப்படி	...	3	0
யதீந்த்ரப்ரவணப்ரபாவம்	...	1	0
ஸ்தோத்ரபாடம்	...	0	6
பகவத் விஷயம் 10 - வால்யூம்	...	50	0
வசனம்:—			
உதயணன் சா	...	0	12
சந்திராபீட சரிதை	...	0	5

ஆர். ஜி. பிரஸ், ஜி. டி, மதராஸ்.